
# வாழ்வியல் வசந்தங்கள்






பருத்தியூர்

## பால வயிரவநாதன்



மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.



RangaRakes

Tamilnavarasam.com

## விற்பனையாகும் இதர நூல்கள்!

**அறிஞர் மொழி - Wisemen's Saying**

| | |
|---|---|
| அறிஞர்களின் சிலேடைப் பேச்சுக்கள் | 19.00 |
| தமிழ்ப் புலவர்களின் சுவையான சொல் விளையாட்டுக்கள் | 19.00 |
| இரசிக்கத் தகுந்த கேலிகளும் கிண்டல்களும் | 18.00 |
| ஆத்தியும், கொன்றையும் அவற்றுக்கேற்ற குறளும் | 21.00 |
| பிறவிப் பயன் பெறச் சான்றோர் வாக்கு | 20.00 |

**பொன்மொழி - Quotation**

| | |
|---|---|
| அறிஞர்களின் பொன்மொழிகள் | 15.00 |
| உலகப் பொன்மொழிகளும் பொருத்தமான கதைகளும் | 26.00 |
| மாணவ - மாணவியருக்கான பொன்மொழிகள் | 22.00 |
| மனதைப் பக்குவப்படுத்தும் மாமேதை பொன்மொழிகள் | 30.00 |
| பொன்மொழிக் கதைகள் | 32.00 |
| அர்த்தமுள்ள அரபிப் பொன்மொழிகள் | 35.00 |
| பொன்மொழிக் களஞ்சியம் | 36.00 |
| உலக மேதைகளின் உன்னதப் பொன்மொழிகள் | 29.00 |

**மேற்கோள் - Quotable Quote**

| | |
|---|---|
| சிறந்த ஆங்கில மேற்கோள்கள் | 30.00 |
| ஆன்மீகப் பெரியோர்களின் பொன்மொழிகள் | 19.00 |
| மேதைகளின் பொன்மொழிகள் | 21.00 |
| பேரறிவாளர்களின் பொன் மொழிகள் | 29.00 |

**பழமொழி - Proverb**

| | |
|---|---|
| பணமொழிகள் | 11.50 |
| உலகப் பழமொழிகள் - பாகம்-1 | 32.00 |
| பசும்பொன் மற்றும் இராமநாதபுர மாவட்டப் பழமொழிகள் | 20.00 |
| புதுமொழிகள் | 13.00 |

**பொது அறிவு - General Knowledge**

| | |
|---|---|
| ஜெனரல் நாலெட்ஜ் (பொது அறிவு விஷயங்கள்) பாகம்-1 | |
| பாகம்-2 | 77.00 |
| பள்ளிப் பிள்ளைகளுக்கான பொது அறிவு விஷயங்கள் பாகம்-1 | 46.00 |
| பாகம்-2 | |
| சொற்களும் சுவையான விளக்கங்களும் | 20.00 |
| நெற்றியடி விஷயங்கள் | 40.00 |
| நெற்றியடி விஷயங்கள் பாகம் - 2 | 55.00 |
| அதிசயம் ஆனால் உண்மை - அ.குப்புசாமி | 36.00 |
| உலக நாடுகளும் விவரங்களும் | 130.00 |
| இந்தியாவைப் பற்றிய வினா - விடைகள் | 40.00 |




# வாழ்வியல் வசந்தங்கள்

## பலவீனங்கள் பலமாகுமா?



உங்கள் பலவீனங்களால் இன்னும் ஒருவர் பலமடைய அனுமதிக்காதீர்கள். ஒருவர் பலவீனத்தில் உரம் தேடுபவர்கள் நிச்சயமாக, அவர் சம்பந்தப்பட்ட மற்றவருக்கு உதவுபவராக இருக்கமாட்டார். ஒருவரது ஆற்றாமை மற்றையோர்க்குத் தெம்பூட்டுபவையாக அமைவது எவ்வளவு பரிதாபகரமானது!

இதில் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், எமது பலவீனத்தை நாம் கண்டு கொள்ளாமல் இருப்பதுதான். சரி, அதை அறிந்த ஒருவர் நம்மீது கொண்ட அக்கறையுடன் சுட்டிக் காட்டினாலும் நாம் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதில்லை.

இதுவும் ஒரு ஆணவ முனைப்புத் தானன்றி வேறில்லை. மாறாக -

RangaRakes Tamilnavarasam.com

அவர் மீது நாம் கோபித்துக்கொள்ளுகின்றோம்; அவர் உறவே தேவையில்லை எனத் துண்டித்துக்கொள்ளக்கூட ஆயத்தமாக இருக்கின்றோம். உதட்டில் சிரித்து, உள்ளுக்குள் கறுவிக் கொள்கிறோம். வீட்டில் நெருங்கிய உறவினர்கள், ஏன் - பெற்றோர் மனைவி, பிள்ளைகள் ஏதும் சரி என அறிந்து கூறினாலுங்கூட, கேட்கத் தயாராக இருக்கின்றோமா? இல்லையே...

உண்மைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாதவரை பிரச்சினைகளும் தொடர்ந்து வந்து கொண்டுதானிருக்கும்.

எமக்குள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்வதில் என்ன குறைவு வந்துவிடப் போகிறது?

பலவீனம் என்கின்ற குணாம்சம் பொதுவானது.

இது பல்வேறு வடிவங்களில் ஒவ்வொருவரிடமும் ஒட்டிக் கொண்டிருக்கும். இது இருக்கும் சிலர் அதனைத் தமது பலமாகக் கருதி தவறாக பெருமிதப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு பொய்யான மயக்கமின்றி வேறென்ன?

''எனக்கு கோபம் வந்தால், எல்லோரையும் தொலைத்து விடுவேன் தொலைத்து. என்னை என்னவென்று நினைத்துவிட்டீர்கள்'' என்று ஆரம்பித்துக் கொச்சையான பாஷைகளில் சிலர் திட்டுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இவர்களுக்கு மனதுள் ஒரு மமதை.

> எங்களது பலவீனங்களை, நாங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். உண்மைகளை ஏற்றுக் கொள்ளாதவரை பிரச்சினைகள் தொடரவே செய்யும், பலவீனங்களை உணர்ந்தாலே போதும். அப்புறம் நாம் படிப்படியாக அதனில் இருந்து மீண்டுவிட முடியும். எமக்குள்ள குறைபாடுகள், பலவீனங்களை சதா நினைந்து மேலும் குறைபாடு உள்ள மனிதராகப் பலமிழந்து போகக்கூடாது. மனதை மடக்கும் சிந்தனைகளுக்கு இடமளிக்காது, தடைகளை உடைப்பதே வெற்றிக்கு வழி.



'எனது கோபம்' என்கிற ஆயுதம், என்னமாய் வேலை செய்கிறது! எனக்கு, எல்லோரும் பயப்படுகின்றார்கள். என்னைவிட்டால், வேறு யார் இருக்கிறார்கள், எனத்தவறாக, தமது பலவீனமான கோப உணர்வை தம் அதீத சக்தியாக எண்ணி, தம்மைத்தாமே மெச்சிக் கொள்ளுகிறார்கள். இதேபோல் -

'பயம்' என்கிற பலவீனம்;

சஞ்சலம் என்கிற பலவீனம் (இது மனக்குழப்பத்துடன் கூடியது);

சபலம் என்கிற பலவீனம்;

சலனம் என்கிற பலவீனம் -

இவை போன்ற தேவையற்ற குணாம்சங்கள், பல கிளைகளாக விரிவடைந்து, தனி மனிதனைத் துவம்சம் செய்கின்றன.

இதன் பாதிப்போ சூழ இருப்பவர்களை வேதனைக்குள்ளாக்குகின்றது. இவைகளை இல்லாமல் செய்வது என்பதே மனிதனுக்குள்ள தலையாய பிரச்சனையாகும்.

தேவையற்ற பலவீனங்கள்கூட ஒரு மாறாத தலைவலியாக சுமையாக, அவனை அமுக்கிவிடும். இந்த நிலையை மற்றவர்கள் ஆயுதமாக்கி, அவனை மடக்கி வென்று விடுகிறார்கள்.

எனவே நாம் எம்மைப் பற்றிப் புரிந்து கொள்ளவேண்டும். பிறர் எம்மைப் பற்றிக் கூறும்போது, இது சரியா? பிழையா? என நாம் எம்மையே கேட்டு, எம்முள் எம்மைப் பற்றிய ஒரு சுய விமர்சனத்தை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். அவர்கள் சொன்னது சரி எனப்பட்டுவிட்டால், அதை அப்படியே வெட்கப்படாமல் ஏற்றுக் கொண்டு, எம்மை நாம் மாற்றி அமைக்க முயலவேண்டும்.

RangaRakes Tamilnavarasam.com

இத்தகைய ஏற்றுக் கொள்ளும் இயல்பினை வளர்க்க, உகந்த மனப்பக்குவத்தினை படிப்படியாகப் பெற்றேயாக வேண்டும். இது கொஞ்சம் சிரமமானதுதான் என்றாலும் எம்மால் முடியாத ஒன்றில்லை.

நாம் போற்றும் பெரியார்கள், மகான்கள் பலரும் சாதாரண மனிதர்களாக இருந்தே, மகான்கள் ஆனார்கள். அவர்களிடமும் குறைபாடுகள் இல்லாமல் இருந்ததில்லை.

எனினும் - அனுபவ ஞானம், பொறுமை, ஆழமான அறிவுத் தெளிவு, உண்மைகளை ஏற்கும் பண்பு, புலனடக்கம் போன்ற இயல்புகளால் தம்மிடமுள்ள குறைபாடுகளை உடைத்தெறிந்தனர்.

ஒரு மாபெரும் தத்துவஞானியைப் பார்த்த சோதிடர் ஒருவர் 'நீர் காம வயப்பட்ட மனிதராக இருந்தீர்' எனக்கூறிய போது, பக்கத்தில் இருந்த சீடர்கள் கோபம் கொண்டனர். அதைக் கண்ட ஞானி, அவர்களை அமைதிப்படுத்தி, வெகு சாந்தமாக, சகலரையும் நோக்கினார். பின் சோதிடரைப் பார்த்து, 'நீங்கள் கூறியது மிகவும் சரியானதே. நான் இவ்வியல்பினை என் கூரிய அறிவினால் வென்றுவிட்டேன்' என்று கூறினாராம். இந்த ஒப்புக் கொள்ளும் மனப்பக்குவம், ஞானிகளுக்கே உரித்தான தனிச் சிறப்பாகும். இத்தகைய ஞானிகள் பலவீனங்களைப் புரிந்து கொண்டவர்கள் மட்டுமல்ல; அனுபவ ரீதியாக உணர்ந்து, தெளிந்தும் கொண்டவர்கள். இதனால்தான் அவர்கள், எவரையும் மன்னிக்கும் இயல்பினையும் கொண்டிருந்தனர்.

ஆனால் நாமோ, எம்முள் குறைகளை வைத்துக்கொண்டு மற்றவர் மீது காட்டுதல் செய்கின்றோம். இதனால் நாம் தப்பிக்கப் போவதுமில்லை. ஏன் எனில் எமக்கு நாமே பொய் உரைத்தல் முடியாது.



ஆயினும் எமக்குள்ள குறைபாடுகள் பலவீனங்களை மட்டும் சதா நினைந்து மேலும் குறைபாடுள்ள மனிதனாக, பலமிழந்து போகக்கூடாது. இவைகளை மீறி, தடைகளைத் தாண்டி, வெற்றிப்பாதையுடன் கூடிய முன்னேற்றத்துடன் நடைபோட வேண்டும். மனதை மடக்கும் சிந்தனைகளுக்கு இடமளித்தல் கூடாது.

எம்மை நாம் வசப்படுத்திக் கொள்ளப் பழகவேண்டும். எம்மை மீறி நாம் எச்செயலையும் ஆக்க இடமளிக்கக்கூடாது.


விதியைச் சொல்லித் தப்பித்துக் கொள்ளவும் கூடாது. குருட்டுச் சமாதானங்கள், அர்த்தமற்ற விதண்டாவாதங்கள், சதா நம்பிக்கையீனமான மனோபாவங்கள், இவை யாவும் செயல் திறன்மிக்க மனிதர்க்கு அழகுமல்ல.

நாம் ஒவ்வொருவருமே செயல் திறன் மிக்க வீரர்களே. இது சாத்தியமாக முடியாத ஒன்றல்ல. இதில் என்ன சந்தேகம் வேண்டியிருக்கின்றது?

தினக்குரல் - 06.08.2000

RangaRakes Tamilnavarasam.com

# அனுசரித்துப் போதல் அடங்கிப்போதல் அல்ல



அனுசரித்துப் போதல் என்பது அடங்கிப் போதல் அல்ல. இது விட்டுக் கொடுத்தலின் வெளிப்பாடு. விட்டுக் கொடுத்தல் என்பது ஒரு விடயத்தில் மற்றையோருக்கு நாம் செய்யும் உபகாரங்கள் என்று கூடச் சொல்லலாம். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்கள், கொள்கைகள் இருக்கும். கொள்கை, கோட்பாடுகளைக்கூட தமக்கென வகுக்க ஒருவருக்கு உரிமையுண்டு. இது ஒருவனுடைய உள்ளார்ந்த சுதந்திரம். ஒருவனுடைய நினைப்பில் நாம் தலையிட முடியுமா? அவன் நினைப்பதை நாம் கண்டு கொண்டுவிடத்தான் இயலுமா? ஆனால் ஒவ்வொருவனும் தான் நினைப்பதை எண்ணியவண்ணம் வெளிப்படுத்தல் என்பது நடைமுறை சாத்தியமும் இல்லை. அப்படியே வெளிப்படுத்தப் புகுந்தாலும் வேறு பற்பல பிரச்சனைகள் பூதாகாரமாக வெடித்துவிடவும் கூடும். எனவே நாம் நினைத்ததை உடன் நடத்திவிட முடியாத சூழ்நிலையை நாம் வாழும் சமூகம் உருவாக்கிவிட்டது. இதன் சரி, பிழைகளை ஆராய்தல் என்பது ஆய்விற்குரிய வேறு விடயமாகும்.



உண்மை நிலைதான் என்ன? எம்மால் ஏன் எதையுமே நினைத்தபடி செய்ய முடியாது.

உலகில் உள்ள சட்டதிட்டங்கள், சமூகங்களுக்கிடையேயான நெறிமுறைகள், கட்டுப்பாட்டு வரையறைகள், ஒழுக்க நெறியுடன் இயைந்த இதர அம்சங்கள் அனைத்துடனும் பின்னிப்பிணைந்து வாழுகின்றோம். இதுவே உலகியல் வாழ்வுமுறை. இவை அனைத்திற்கும் ஈடு கொடுத்தே மனிதன் வாழ்ந்தாக வேண்டும். அவன் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற விதத்தில் தன்னை ஆக்கிக்கொள்கின்றான். சமூகம் இன்றேல் அவன் இல்லை; அவனால் தனித்து இயங்க முடியாது.

முதலில் தனிமனிதன்; பின்னர் குடும்பம்; பின்னர் தன் கிராமம், நகரம், நாடு, உலகம் - என அவன் வியாபித்து, தன்னைப் பரந்த உலகிற்கு இட்டுச் செல்கின்றான்.

எனவே அவனது விருப்பு, வெறுப்புக்கள் அனைத்துமே ஒன்றுக்கொன்று இணைந்துபட்டுத் தொடர்புகளை வலுப்படுத்துகின்றன. அவனது, விருப்பு, வெறுப்பு, கடமைகள் போன்றவை உலகியலுடன் தொடர்புற்றனவையாகவே அமைந்தும் விடுகின்றன.

எனவே நாம் சூழ்நிலைக்கேற்ற விதத்தில் எம்மை நாம் மாற்றியேயாக வேண்டும். இம்மாற்றங்கள் யாவும் எமக்குத் தெரிந்தும், புலனாகாதவாறும் எம்மை மாற்றியமைக்கும். இது ஒரு

முரண்பாட்டிலும், உடன்பாடாக **வாழ்வதுதானே வாழ்க்கை**. எதிர்ப்பினை எதிர் கொண்டு, பக்குவமாக **வாழ்வதில்தானே** சுவாரஸ்யம் இருக்கிறது. நாம் இன்னுமொருவர் கருத்துக்கள் சரியானதாக இருக்கும்போது அதன்படியும் செயலாற்றும்போது ஒரு மாறுபட்ட அனுபவத்தையும் பெறலாம். பல்வேறுபட்ட சிந்தனைகளைக் கேட்டு அறிந்து பாகுபடுத்திச் செம்மையாக்க, நாம் எம்மை பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும்.

RangaRakes

Tamilnavarasam.com

நியதியாகிவிட்டது. நாம், எமக்காக மட்டுமின்றி ஏனையோருக்காகவும், அனுசரித்துப் போகும் இயல்பு விரிவடைந்து கொண்டே செல்கின்றது. எனவே முதலில் நாம் மனிதன், குடும்பம், சமூகங்களுக்கிடையே உள்ள அனுசரித்தல் போக்கினைப் பார்ப்போம்.

சின்னச்சின்ன விடயங்களில்கூட நாம் விட்டுக் கொடுக்கத் தயங்குகின்றோம். சிலவேளை இதுவும் ஒரு ஆணவத்தின் முனைப்பால் எழுந்த இயல்போ எனவும் சந்தேகம் கொள்ள வைக்கின்றது. நாம் சந்திக்கும் ஒவ்வொரு நபரும் இப்படியே இருந்துவிட்டால் உலகம் இயங்குமா என்ன? எனவே சுமுகமான ஒரு செயல்முறைக்கு, பணி செய்தலுக்கு இந்த அனுசரிக்கும் போக்கில் இன்றியமையாத் தன்மையினை நாம் நன்கு புரிந்து கொள்ளலாம்.

சாதாரணமாக மனிதர் ஒவ்வொருவருக்கும் குண இயல்புகள், நடத்தைகள் தனித்தனியானவை. ஒரே குடும்ப அங்கத்தவர்களிடமே குண இயல்புகள் ஒருவர்க்கொருவர் வித்தியாசமாக இருக்கும். ஆயினும் இந்த வித்தியாசமான இயல்புகளுக்கும் - அப்பால் நின்று, யாம் இணைந்து, வாழ்ந்து வருகின்றோம் என்றால் எமக்குள்ள பிணைப்பின் வலிமையை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அன்பு கொண்டவர்களுக்காக நாம் எமது விருப்பங்களைத் துறந்து விட்டுக்கொடுத்து வாழ்ந்து வருகின்றோம் என்பதுதான் உண்மை.

மிகவும் அற்பமான விஷயங்களுக்காகவே ஆரவாரம் செய்து மனஸ்தாபப்படுவது சரியா? கணவன் மனைவி, பிள்ளைகளுடன் ஏற்படும் சிறு சிறு விஷயங்களில், யார் சொல்வதை யார் கேட்பது, என்பதுபோல் செயல்பட்டு வீட்டில் நிம்மதியைக் கெடுத்துக் கொள்கிறார்கள். இதன் பாதிப்பு அனைவரின் எதிர்காலத்தையே குழப்பிவிடுகின்றது. பிள்ளைகளின் கல்வி ஒழுக்க நெறி, வீட்டில் ஏற்படும் பொருளாதார பற்றாக்குறை



என்று எல்லாமே சரிந்து விடுகின்றன. மற்றவர்களின் நகைப்பிற்கும் இதுபோன்ற குடும்பங்கள் ஆளாகின்றன. சிலர் இது விடயங்களில் நடந்துகொள்ளும் விதமே சற்று வித்தியாசமானதும், விசனத்திற்குமுரியது. அதாவது,

இவர்கள் ஏனையோர் விட்டுக்கொடுத்து நடந்துகொள்வதனை தமது பலமாக எண்ணி விடுகின்றனர். தமக்குப் பணிந்தே எல்லாமே நடக்கிறது. **தம்மை** அசைக்க முடியாது எனத் தப்பான அபிப்பிராயத்தை தம் மனதுள் விதைத்து விடுகின்றனர். உண்மையில் எத்தகைய **அதிகாரத்தில்** உள்ளவர்களாலும் சக உறுப்பினர்களின் **உதவுதல்** இன்றிச் செயற்பட முடியாது.

அதிகாரங்கள் என்பதன் மூலம், **கட்டளையிட்டுச்** செயலாற்றுதல் என்பது எல்லாத் தருணத்திலும் சரிப்பட்டு வராது. கருமங்களை இயல்பாக, எளிதாகச் செய்யவேண்டும். இதற்கு ஒருவர்க்கொருவர் சிரமங்களை மறந்து செயல்படவேண்டும். இதனைப் புரிந்துணர்வுடன் செய்யவேண்டும்.

புரிந்துணர்வு என்பது எமது செயற்பாடுகளுக்கு பிரதான அம்சமாகும். சிலர் புரிந்துணர்வு என்பதைக் ''**கண்டு** கொள்ளாமல் விடுவது'' என அர்த்தம் கொள்கின்றனர். **இது** சரியல்ல. தவறுகளைக் கண்டு கொள்ளாமல் **இருக்கமுடியாது**. அற்ப தவறுகளைப் பெரிதுபடுத்தாது, மன்**னித்தல்** என்பதே கண்டு கொள்ளாமல் விடுவது என எடுத்துக்**கொள்**ளலாம். நாம் பல வருடங்களாக ஒருவருடன் பழகும்போது அவரின் குண இயல்புகளை ஓரளவு புரிந்**து** கொள்கின்றோம். சிலரைப் பூரணமாகவும், இன்னும் சிலரை **ஓரளவும்**, பலரை அறவே புரிந்து கொள்ள முடியாமலும் **இருந்து விடுகின்**றோம். பலர் இத்தகைய ஆராய்தலைத் தவிர்த்து **விடுகின்**றனர். இந்த விஷயம் எமது குணாம்சத்திற்கும் உரிய, பொரு**த்த**மான விடயமாகும். அதாவது, எம்மை எல்லோரும் **தெளிந்து**, புரிந்து விட்டார்களா என்பதே

RangaRakes

Tamilnavarasam.com

அதுவாகும். சிலர் தம்மைப்பற்றி இனம்காட்டிக் கொள்வதில்லை. இன்னும் சிலர் எல்லா இயல்புகளையும் தம்முள் புதைத்து வைத்துக் கொண்டு, வெளியில் வேறு ஒரு வடிவத்தில் நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள். இன்னும் சிலர் தமது ஒரு வடிவத்தை மட்டும் காட்டிக்கொள்வார்கள்.

மொத்தத்தில், பூரணமாக எல்லோரும், எல்லாச் சந்தர்ப்பத்திலும் தம்மைத் துலக்கப்படுத்தல் என்பது கிடையாது. ஏதோ ஒரு விஷயத்தில் தம்மைப் பகிரங்கப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர். இந்த நேரத்தில் இத்தகைய சந்தர்ப்பங்களில், நாம் ஒருவர்கொருவர் கூடிய மட்டும் புரிந்துணர்வுடன் வாழப்பழக வேண்டும்.


முரண்பாட்டிலும், உடன்பாடாக வாழ்வதுதானே வாழ்க்கை! எதிர்ப்பினை எதிர்கொண்டு, பக்குவமாக வாழ்வதில்தானே சுவாரஸ்யம் இருக்கின்றது.

ஒரு உண்மையினைத் தெரிந்துகொள்வோம். நாம் இன்னுமொருவர் கருத்துக்களை அது சரியானதாகப்பட்டால் செவிமடுத்து, அதன்படியும் செயலாற்றும்போது ஒரு மாறுபட்ட அனுபவத்தினைப் பெறலாம். ஒரே வித வழிகளால் அன்றி, பல்வேறுபட்ட சிந்தனைகளை அறிந்து கேட்டு, பாகுபடுத்தி, செம்மையாக்கி ஒரு வழியில் செல்லும்போது, புது வாழ்வியல் போதனை கிட்டுகின்றது. இப்படியின்றி, வேறு முறைகளைக் கைக்கொண்டு அலுவல் ஒன்றினைச் செய்தாலும்கூட வரும் அனுகூலங்கள், சிக்கல்களை முகம் கொடுக்கத் தயாராகவும் வேண்டும். எப்படியிருப்பினும் சமூக நடைமுறைகளினால் ஏற்படும் அனுபவங்களினால் நாம் அனுசரித்துப் போகும் மனப்பக்குவத்தினை அடைந்தே தீரவேண்டும்.

*தினக்குரல் 13.08.2000*



# பாராட்டுதல் ஒரு சுக அனுபவம்



எம்மோடிணைந்த எவராயினும் சரி, அன்றி எம்மைச் சாராதவர்கள், சிறு பணிகள் செய்வோர், எளியோர் என எவ்வகையினராயினும் சரி - அவர் தம் பணி, 'நன்று' எனப்பட்டால் உடன் பாராட்டக் கற்றுக் கொள்ளுங்கள். பாராட்டுதல் என்பது உடன் கிடைக்கின்ற வெகுமதி. அத்துடன் எமது பாராட்டுதல் என்பது மனப்பூர்வமாக அமைதல் வேண்டும்.

வெறும் உதட்டளவில் பாராட்டுதல் தகாது. பாராட்டும் பண்பு எம் உள்ளத்தின் விசாலத்தைக் காட்டி நிற்கின்றது. எவரையும் நாம் அவர்கள் எம்மிலும் உயர்ந்தவர்கள் என்ற நோக்கில் அணுகும்போது, எமது மமதை, அகங்காரம், ஆணவம் அருகிவிட ஏதுவாகின்றது.

பிறரின் செயலைப் பாராட்டுவதால் எமக்கு ஒன்றும் குறைவு வந்துவிடப் போவதில்லை. மாறாக, அவர்கள், எமது பாராட்டினால் பெறும் மனப்பூரிப்பினால் எம்மைப் பற்றி, ஒரு நல்ல நோக்கை, அபிப்பிராயத்தை உண்டாக்கி விடுகின்றது. அத்துடன், எமக்கு அவர்கள் ஏதோ ஒரு வகையில் உதவி செய்யவேண்டும்

RangaRakes Tamilnavarasam.com

என்கின்ற எண்ணங்களையும் மனதில் உதயமாக்கி விடுகின்றது. ஆயினும், நாம் உதவி பெறும் நோக்கில் மட்டும் நாம் புகழும் பழக்கத்தைக் கொண்டிருத்தல் கூடாது.

இது ஒரு அப்பட்டமான சுயநல இயல்பாகிவிடும். வெறும் புகழ்ச்சி, பொய்யான முகமன் கூறுதல், அவர்களிடம் உதவி பெறும் நோக்கில், தவறுகளை மறைத்து வேண்டுமென்றே பாராட்டுதல், பாராட்டும் மாண்புடன் பொருந்தியமையாது.

ஒருவர் பற்றிய சிறப்பம்சங்களைத் தெரிந்து கொண்ட பிறகும், அதுபற்றி நாம் கண்டு கொள்ளாமல் இருப்பது, அது ஒரு விதத்தில் பொறாமை, ஆற்றாமையின் வெளிப்பாடு அன்றிப் பிறிதில்லை என அறிதல் வேண்டும்.

ஒருவரின் வளர்ச்சியினை முடக்கி வைப்பதே ஒரு துரோகம் என்று கூறலாம். பாராட்டாமல் விடுவதுகூட அவர்கள் வளர்ச்சியை வேண்டும் என்றே தடுப்பது போலாகிவிடும். நாம் அறிந்தவரை எத்தனையோ, சாதனை செய்ய வல்லோர்கள், தகுந்த ஊக்குவிப்பு இன்றி குடத்துள் விளக்குபோல் அமிழ்ந்து தெரியாது போய் விடுகின்றனர்.

நாம் பிறரைப் பாராட்டத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை. திறமைசாலிகளை, முன்னேற விரும்புபவர்களைத் தூற்றாமல் இருப்பதே மேலானதாகும். சிலவேளை நாம் ஒருவரைக் கடிந்து கொள்ளாமல் இருப்பதே ஒரு ஆரோக்கியமான அம்சமாகிவிடும்.

> ஒருவர் பற்றிய சிறப்பம்சங்களைத் தெரிந்து கொண்டு, அதுபற்றி நாம் கண்டு கொள்ளாமல் இருப்பது, அது ஒரு விதத்தில் பொறாமை, ஆற்றாமையின் வெளிப்பாடு அன்றிப் பிறிதில்லை. ஒருவரின் வளர்ச்சியை முடக்க நினைப்பது போலவும் கருத இடமுண்டு. பாராட்டுதல் ஒரு ஊக்குவித்தல் மட்டுமல்ல, பாராட்டுப் பெறுபவர் எங்களால் சந்தோஷப்படுகின்றார் என்கின்ற மனநிறைவும், எமக்குக் கிட்டுமல்லவா?



அண்மையில் நான் ஒரு நவீன முகாமைத்துவம் என்கிற நூலைப் படித்தபோது, ஒரு முக்கிய விடயத்தினைப் பற்றித் தெரிந்து கொண்டேன். ஒரு முகாமைத்துவத்தின் சிறப்பம்சம் அதில் வலியுறுத்திக் கூறப்பட்டிருந்தது. பணியாட்கள், தம்பணிகளை, ஒரு நிறுவனத்தில் செய்கின்றனர். அவர்களது முக்கிய எதிர்பார்ப்பு என்ன என, விபரங்களைச் சேகரித்து ஆய்வு செய்தனர். முடிவு சற்றும் எதிர்பார்க்காத அளவில் இருந்தது. எல்லோருமே சம்பள உயர்வு வேண்டும், குடியிருக்க குடிமனை வேண்டும், போனஸ் அது, இதுவென எக்கச்சக்கமான கோரிக்கைகளையே எதிர்பார்த்திருந்தனர். மிகப் பெரும்பான்மையான ஊழியர்கள், எமக்கு, எமக்குரிய சேவையினைக் கௌரவிக்கவேண்டும். **அதாவது** எமது பணியினை நிறுவனம் தகுந்த மெச்சுரை வழங்கியும், பாராட்டுதல்களை வழங்கியும் அங்கீகாரம் செய்யவேண்டும். எமக்கு உள்ள திருப்தி, எம்மை நிறுவனம் தோழமையுடன் நடாத்த வேண்டும் என்பதனையே வலியுறுத்தியிருந்தனர். சம்பள உயர்வு போன்ற இதர கோரிக்கைகளை இரண்டாம் மூன்றாம் பட்சக் கோரிக்கையாகக் கொண்டிருந்தனர்.

இதில் கவனிக்கத்தக்கது என்னவெனில் ஒருவரது வேலைகள் பற்றி அநாவசிய ஆராய்வு செய்து, குறைந்த பட்சமான வேலை உயர்வு வழங்குவதென்பதே ஒரு அடிமைத்தனமானது என்றும், அத்துடன் இதுவும் ஒரு மறைமுக அடக்குமுறைப் போக்குமாகும் எனவும் ஊழியர்கள் கருதுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டது. கடமை என்கிற பெயரில் ஒருவரைக் கணிப்பீடு செய்வதைப் பலரும் வெறுக்கின்றார்கள். ஆனால் திறமையுள்ள போது பாராட்டாமல் விடுவதையும் கண்டு வேதனையும், விரக்தியுமடைகின்றார்கள். குற்றம் காணுதலைப் பொதுவாக எவருமே விரும்புவதில்லை.

நாம் ஒருவருக்குச் செய்யும் மரியாதை என்பது, அவரது சேவையைப் பாராட்டுவது என்பதே இந்த ஆய்வின் முடிவாகும்.

RangaRakes Tamilnavarasam.com

அத்துடன் ஒருவரின் ஆத்மாவைத் தொட்டு நிற்பது வெறும் பணம் அல்ல. அன்பார்ந்த பரிவுடன் கூடிய பாராட்டுதல்களேயாகும்.

இந்தக் கலையினை ஒருவர் பூரணமாக உணரும் பட்சத்தில், அவரால் கூடுதலான சேவையினை சமூகத்திற்கு அளிக்கமுடியும். மனவிசாலமுள்ளவர்களால் மட்டுமே, ஏனையோரை மனதாரப் பாராட்டவும் முடியும். எம்மிலும் பெரியவன் யார் என நினைத்தலும் கூடாது. அத்துடன் நாம் காணும் மிகச் சாமான்ய சாதாரண மனிதர்களை, அவர்கள் உள் பொதிந்த நல்ல சமாச்சாரங்களைப் பார்த்த மாத்திரம் கணித்துவிடவும் முடியாது. வெளிப்பார்வைக்கு மிகச் சாதாரணமாகத் தோன்றுபவர் மிகவும் திறமையுள்ளவர்களாக இருக்கவும் கூடும். எனவே நாம் கண்டபடி எடைபோட்டு ஒருவரைத் தாழ்வாக நினைப்பது பேதமையாகும். அதேபோல் கனவான்கள் போல் படாடோபமாக இருப்பவரின் வெளிப்பூச்சினை நிஜமென நம்புதலும் ஆகாது. எங்கள் திறமையை மட்டும் வைத்துக்கொண்டு அல்லது அதனிலும் உயர்ந்த ஒருவரின் திறமையை மையமாக வைத்து எளியோரைக் கணிப்பீடு செய்தல் சரியானதல்ல.

மேடையில் ஒருவர் பிரசங்கம் செய்யும்போது, ''அட இவர் என்ன பிரசங்கம் பண்ணுகிறார். கிருபானந்த வாரியார் சுவாமி மாதிரி பிரசங்கம் செய்வாரா'' எனக் கேட்கக்கூடாது. ஒப்பீடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும் அல்லவா? எல்லாச் சந்தர்ப்பத்திலும் இது ஏற்றுக்கொள்ள முடியுமா? சரிப்பட்டு வருமா? சாதாரண போட்டிகளில்கூட நடுவர்கள் தோற்றுப் போனவர்களைப் பாராட்டுவதில்லையா? வெல்பவர் மட்டும் திறமையானவர்கள் அல்ல. திறமையுள்ளவர்கள், திறமைகளை நோக்கிப் போய்க் கொண்டிருப்பவர்கள், முயற்சிகளை அதற்காகச் செய்பவர்கள், யாவருமே கௌரவிக்கப்படவேண்டியவர்களாவர்.

சிறு குழந்தைகள் கூடப் பெரியவர்கள் தங்களை மெச்ச வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்; இது இயல்பு. நாம் அவர்களைச் சதா கடிந்துகொண்டால் என்ன நடக்கும்? அவை எம்மை வெறுக்கும்; நல்ல குண இயல்புகளை மாற்றியமைக்கும்; காலப்போக்கில் அவை சிடுமூஞ்சிகளாக, சமூகத்தையே வெறுக்கவும் ஆரம்பிக்கலாம். எதிர்மறையான காரியங்களிலேயே ஈடுபடவும் முனையலாம்.



எனவே நாம், வாய் மூடி மௌனிகளாக இருக்காமல், தக்க தருணத்தில் புகழவேண்டிய சமயத்தில் புகழவேண்டும். நாம், பிடிவாதமாக இதற்கு எதிர்மாறாக நடக்க ஆரம்பித்தால், செருக்குப் பிடித்தவன் என்கின்ற அவப் பெயரை எடுப்பதுடன், எமக்கு நண்பர்கள் தொகை குறைந்து நாம் தனிமைப்பட்டே விடுவோம். சமூக உறவு பாதிப்படைந்தால் எமது நிலை என்ன? இத்தகைய துரதிருஷ்டசாலிகளையும் நாம் சமூகத்தில் பார்க்கின்றோம். அன்புணர்ச்சிதான் பாராட்டும் பண்பை வளர்க்க வல்லது.

எனவே நல்லவைகளை ஏற்றுக்கொள்ளுங்கள். அவைகளை மனதாரப் பாராட்டி மகிழுங்கள். உங்களுக்கு ஒன்றும் குறைந்து விடாது. மாறாக உங்கள் ஆத்மா விரிவடைந்து சுகானுபவம் பெறுவீர்கள். மற்றவர் பெறும் மகிழ்வு, படிப்படியாக உங்களையும் சார்ந்து பற்றிக்கொள்ளும். இதன் பயன்களை உங்கள் கண்முன்னே காண்பீர்கள் உண்மை!

*தினக்குரல் 20.08.2000*

RangaRakes
Tamilnavarasam.com



# அழகு என்பது...

அழகாக இருப்பது எப்படி? இது பலருக்குமே புரிய இயலாத, பாரிய பிரச்சனையாகப்படுகிறது. பலரும், அழகாக இருப்பது என்பதே ஒரு கௌரவம் என்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். கொஞ்சம் அழகு குறைந்துவிட்டால், வித்தியாசமாக வேறு பார்க்கின்றார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால், சற்று அழகாகத் தெரிபவர்கள்கூட, தமது அழகு பற்றிய ஐயத்தினால் இது விடயத்தில் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கின்றனர். இதை மேம்படுத்த, இதற்கான நடவடிக்கைகளில் வெகு மும்முரமாக இறங்குகின்றனர். பொதுவாக இம்முயற்சிகள் உலகம் பூராவும், வெகு சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. இதற்காக உலகம் செலவு செய்யும் தொகை கணக்கிட்டுச் சொல்லவும் முடியாது. 'அழகு' எல்லோரையும் ஆட்டி வைக்கின்றது. இதில் ஆண், பெண் என்ற பேதமும் கிடையாது.

உண்மையில் இந்த அழகு என்பதுதான் என்ன?

ஒருவர்க்கு, அழகு எனத் தெரிவது, மற்றவர்க்கு அழகாய் இருப்பதும் இல்லை. சிலருக்கு எல்லாமே அழகாகவும், இன்னும் சிலருக்கு எல்லாமே அவலட்சணமாகவும் தோன்றும். கொஞ்சம்



பேருக்கோ, தாமும், தமக்கு வேண்டியவர்களும் மட்டுமே அழகாகப் புலப்படுவார்கள். மற்றவர்கள் எப்படியிருந்த போதும், அவர்களைக் கண்டு கொள்ளமாட்டார்கள்.

ஒழுங்காக இருப்பது எதுவோ அதுவே அழகு.

ஒழுங்கற்ற எதிலும் அழகை நாம் காண முடியாது. மனித நடத்தைகள் கூட அப்படியானவையே. மனிதர்களின் அழகு விடயத்தில், இரண்டு பிரதான விடயங்கள் சம்பந்தப்படுகின்றன. அவை, புறத்தோற்ற அழகு, அக அழகு, இதய சுத்தி, இனிய பேச்சு, நல்ல நடத்தைகள், பழகும் பண்புகள் போன்ற குணாம்சங்கள், எவரையும் ஈர்க்கும் தன்மை வாய்ந்தன. இப்படி அமைபவர்களிடமிருந்தே வெறும் புற அழகுப் பார்வைகள் அடிபட்டுப் போய்விடுகின்றன.

ஒருவனின் ஆத்மா தூய்மையடையும்போது பெறப்படும் தேஜஸ், அனைவரையும் வசீகரிக்கும் வல்லமையுடையது. அகம் சிறக்காதுவிடின், புறம் சிறக்காது. இதையே அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பர் பெரியோர். நீங்கள் ஒன்றைச் சற்று உன்னிப்பாகக் கவனித்துப் பாருங்கள். அழகற்றவன் என நீங்கள் எண்ணும் சிலரைத் தேர்ந்தெடுங்கள். அவர்களுடன் நீங்கள் பழகிப் பாருங்கள். காலப்போக்கில் நீங்கள் அவர்கள் அழகு தொடர்பாக கொண்டிருந்த நோக்கு, இல்லாது போய்விடும். அது பற்றி சிந்தனை எப்படி மறைந்து போயிற்று என வியப்புமடைவீர்கள். ஒருவரது பழகும் தன்மை, போக்கு என்பவைகளால் நாம் காணும் வெறும் புறத்தோற்ற எண்ணங்கள், எமக்கு ஒரு போதனையாகவும்

> ஒழுங்காக இருப்பது எதுவோ அது அழகு. ஒழுங்கற்ற எதிலும் அழகை நாம் காணமுடியாது. மனித நடத்தைகள்கூட அப்படியானவையே. நன்நடத்தை உள்ளவர்களுடன் பழகும்போது, புற அழகு, தோற்றம் எமக்குப் பெரிதாகத் தோன்றாது. ஆனால் நடத்தைப் பிசகுள்ளவர்கள் எத்தனை அழகுள்ளவர்களாயிருப்பினும், எமக்கு நாளடைவில் அவர்கள் மீது அருவருப்பே தோன்றும்.

RangaRakes Tamilnavarasam.com

புலப்பட ஆரம்பிக்கும். பார்த்த மாத்திரத்தே எழும் எண்ணங்கள்கூட முடிவில் தற்காலிக எண்ணங்களாகி விடுகின்றனவே.

கனிவான பேச்சுக்கள், பிறருக்கு உதவும் பண்புகள், பரந்த நோக்கு ஆகியன எமக்குப் பிடித்துப்போகும்போது, அவர்கள் அழகு நிறைந்த மகா புருஷராகவும் தெரிய ஆரம்பிப்பார். பழகும் விதமே எமது தவறான பார்வையை மாற்றி விடுகிறது. பெண்கள் விஷயத்திற்கும் இது பொருந்தும். பல அழகான ஆண்கள், அழகில்லாத பெண்களை எப்படி மணந்து கொள்கின்றார்கள் என வியப்பு அடைகின்றனர். வெறும் பணம் மட்டும், மனதை மாற்றி விடுவதில்லை. குடும்பத்திற்கேற்ற குணாம்சத்தை அவர்களுடன் பழகிய விதத்தில் தெரிந்துகொண்டும், கேள்விப்பட்டுமே சரியான இம்முடிவினை எடுத்து விடுகின்றனர். இதில் வியப்படைய எதுவுமில்லை.

சரி அடுத்த விடயத்திற்கும் வருவோம். அழகான சிலரிடம் பழகிப்பாருங்கள். அவர்களில் சிலரின் நடத்தைகள், பழகும் இயல்புகளை உற்று நோக்குங்கள். சிலரிடம் உள்ள ஆணவம், திமிரான பேச்சுக்கள், தம்மைப் பற்றிய மிதமிஞ்சிய பொருந்தாத எண்ணங்களைப் பார்த்தால், எமக்கு அருவருப்புத்தான் தோன்றும். வெறும் அழகையே ரசிக்கும் நாம், ''அட போயும் போயும் இவர்களிடமா நாம் மயங்கிப்போனோம், என்ன மனிதர் இவர்? இப்படிப் பேசுகிறாரே, பழகுகிறாரே'' என எண்ணிக் கொள்வோம். அவர் மீது கொண்ட எண்ணம், அறவே மாறி நீங்களாகவே அவரிடமிருந்து விலக ஆரம்பிப்பீர்கள். இக்கருத்து, தவறான குணங்கள் உள்ளவர்களுக்கே பொருந்திவரும்.

ஆயினும் எடுத்த எடுப்பிலேயே புற அழகில் மயங்கிப் போதல் மனித இயல்பே. கவர்ச்சி, ஈர்ப்பு போன்றவை காந்தமென கவர்ந்தே விடுகின்றன.



அறிவுநிலை கொண்டு சிந்திப்பவர்கள் மிகச்சிலரேயாவர். அதற்காக, அழகாய் உள்ளவர்கள் எல்லோருமே கெட்டவர்களாகவும், அழகற்றவர்கள் எல்லோருமே நல்லவர்கள் எனவும் அர்த்தம் கொள்ளமுடியாது.

இதயங்களை ஆகர்ஷிக்க, வல்லமை கொண்டவர்கள் அகத்தூய்மை கொண்ட நல்லோராகவேயிருக்கின்றனர். நாங்கள் விரும்பும் எல்லோருமே எமக்கு, வசீகரம் மிக்கவராகத் தெரிகின்றனர். தனது உயிர் நண்பனை, உற்ற உறவினர்களை, தாயை, சகோதரியை எவர்தான், அழகை நோக்கிய பார்வையிலே பார்க்கின்றார்கள்? இல்லையே. எமக்கு உகந்தவர்கள், எப்படிப்பட்ட தோற்றத்தில் இருந்தால்தான் என்ன?

மதத்தலைவர்கள், நாடு போற்றும் அரசியல் தலைவர்கள், விஞ்ஞான மேதைகள், கவிஞர்கள், கலைஞர்கள் - இவர்கள் வசீகரிக்கப்படுவது, வெறும் அழகினால் மட்டும் அல்ல. பிறரிடம் துலங்காத சிறப்பாம்சம், தெய்வீகம் இவர்களுள்ளே நிறைந்துள்ளது. இவை சாமான்யமான விடயமும் அல்ல.

சதா புன்முறுவலுடன், மனப்பாரமின்றி இருக்கப் பழகுங்கள். எவருடனும் கோபதாபம், காழ்ப்புணர்வுகளை நீக்குங்கள். அன்பு, கருணை, ஜீவகாருண்யம் இவைகளை நாம் காணும் சகல ஜீவராசிகளுடனும் செலுத்துங்கள்.


உலகத்தை ரசியுங்கள்; வீண் எரிச்சல், புகைச்சல் கொள்ளாதீர்கள். அப்பொழுது பாருங்கள் -

எமக்குள்ளே உருவாகும் களிப்பு எம்மைப் பிறரால் வசீகரிக்கச் செய்யும், அழகினை ஏற்படுத்திவிடும். இதுவே உண்மை அழகு.

தினக்குரல்

RangaRakes Tamilnavarasam.com

# நம்பிக்கையும், நம்பிக்கையின்மையும்



மனிதன் தனக்குத்தான் விசுவாசம் மிக்கவனாக இருக்கவேண்டும். ஆனால், இவனோ, தனக்குத்தானே காயத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றான். தானே தன்னை நம்பாத போக்கு, சமூகத்தைக் கண்டு நொந்து கொள்ளுதல், எதற்குமே எரிச்சல் படுதல், அலுத்துக் கொள்ளுதல், எதற்கெடுத்தாலும் ஆதங்கப்பட்டுக் கொள்ளுதல்.

இத்தகைய விடயங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, வெந்து தன்னைத்தானே, புண்படுத்திக்கொண்டு நம்பிக்கை யீனத்திற்கு அடிமையாகி விடுகின்றான். நம்பிக்கை யின்மை என்பது வந்துவிட்டாலே எல்லாமே இழக்கப்பட்டு விட்டது போன்ற மனப்பான்மை, அல்லது உணர்வு நம்மை ஆட்டிப்படைக்க ஆரம்பித்துவிடும்.

பலருக்குத் தம்மீது நம்பிக்கை இருக்காது. ஆனால் தம்மைச் சுற்றிவர எப்படிப்பட்ட குணாம்சங்கள் உள்ளவராயினும் சரி, அவர்கள் ஆற்றலை உணராமலேயே அவர்களை உடன் நம்பி விடுவார்கள். தன்னைவிடப் பக்கத்திலிருப்பவர் அதிபுத்திசாலிகள் என நினைந்து விடுவார்கள். எந்தவித அச்சமோ, கூச்சமோ இன்றி அவர்கள் தயவை நாடிவிடுவார்கள். இதன் சரி, பிழை பற்றிச் சிந்திக்கக் கால அவகாசத்திற்குக் காத்திருப்பதில்லை. அவர்கள் சொல்லைச் சிரமேற்கொண்டு உடன் அடுத்த நடவடிக்கையில் ஈடுபட்டு விடுவார்கள்.



இன்னும் சிலரோ,

தம்மையும் நம்புவதில்லை, பிறரையும் நம்புவதில்லை.

இது அவர்கள் தமது ஆத்மாவிற்கு இழைக்கும் துரோகமாகும். தம் அறிவினையும் உள் உணர்வினையும் மதிக்காத செயல் இது. அறிவினிற்கே கடிவாளம் போடுகின்ற அர்த்தமற்ற இயல்புமாகும்.

எம்மை நாம் தூய்மைப்படுத்தாதவரை, பிரச்சினைகள் ஏதோ ஒரு வழியில், துரத்திக் கொண்டுதான் இருக்கும். நாம் இருக்கும் வரை, அதாவது வாழும்வரை, நடக்கும் செயல்களில் பலர் எம்முடன் பங்கு கொண்டே வருவார்கள்.

ஆயினும், எனது வாழ்விற்கு, நானே கதாநாயகன். இதை ஒவ்வொருவரும் நினைவு கொள்ளவேண்டும். உங்கள் வாழ்வை நீங்கள், நிலையாக, ஸ்திரமாக வைத்திடுங்கள். வாழ்வு முறைகளை நியாய பூர்வமாக வைத்திடுங்கள். இவை போதும்.

நன்மை, தீமை இணைந்ததே வாழ்க்கை. சிலரை நாம் பார்க்கின்றோம். இவர்கள் வாழுவதே பிறருக்குத் தெரியாது. மிக்க அமைதியாகவும், பிறர்க்குத் தீங்கு புரியாமலும், பிறர் விடயங்களில் அநாவசியமாகத் தலையிடாமலும் வாழ்ந்து விடுகின்றார்கள்.

**நீங்கள் நேர்மையாக வாழ்ந்தாலே உலகம் தானாக உங்களைப் புரிந்துவிடும், இந்த உண்மை நிலைதான், உங்கள் மீது வைக்கின்ற ''நம்பிக்கை'' என்பதாகும். நீங்கள் சரியாக நடந்துகொண்டால் மக்களை நோக்கி நீங்கள் செல்லுமுன், உங்கள் திசைநோக்கி அவர்கள் வருவார்கள், இதற்காக வீண் சிரமமோ, பிரசாரமோ தேவையில்லை.**

RangaRakes
Tamilnavarasam.com

அந்தரங்கமாக வாழ்ந்து, முடிந்து விடுவது என்பது, யதார்த்தமாகச் சரிபட்டு வராது. மன விரக்திக்கும், சலசலப்பிற்கும் ஆளாகாமல், வாழுதல் என்பதே சிரமத்திற்குரியவொன்றாக இருக்கின்றது. ஏனெனில், நாம் மனிதர். சடங்கள் அல்ல.

கண்டதைப் பார்த்துக் குதூகலிப்பதும், சற்றுப் பொருந்தாத சங்கதிகள் நடந்துவிட்டால், சஞ்சலப்படுவதும் மனித இயல்புதான்.

உண்மையில், பலர் வாழ்க்கையின் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் திராணியற்று, அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக மௌனித்துக் கொண்டிருக்கின்றார்கள். சமூகத்தைச் சாராமல் விலகி நிற்பதால், இவர்கள் அந்நியப்பட்டே விடுகின்றார்கள். இந்த வாழ்வு முறை சரியானதா?

பிறரைத் தூக்கி விடாதவனும், தன்னை மட்டுமே நோக்குபவனும், தூக்கி எறியப்படுவதை உலகம் கண்டு கொண்டிருக்கின்றது. எத்தகையானவர்கள், வாழ்ந்து, மாய்ந்து போனாலும் உலக இயக்கம், நின்று போகப் போவதில்லை. எத்தகையான இயல்புள்ளவர்களையும், சுமந்து, அது தன் பாட்டிற்குச் சுற்றிக் கொண்டேயிருக்கின்றது.

ஆயினும்,

மனித மாண்புகள் மாயும்போதுதானே, சமூகப் பிரளயமே வெடிக்கிறது. ஒரு எல்லைவரைதானே இயற்கைகூடப் பொறுத்துக்கொள்கின்றது. இயற்கைகூட, மனித இனத்தை அடிக்கடி எச்சரிக்கை செய்துகொண்டுதான் இருக்கின்றது.

மக்கள் ஒருவர்க்கொருவர் ஆதாரமானவர்கள். ஒருவரில் ஒருவர் நம்பிக்கையும், உறவுகளும் வைக்கப்படவேண்டியவர்கள்.

எம்முடன் மட்டும், இந்த வையகம் முடிந்துவிடப் போவதில்லை. தொடர்ந்தும், உயிரோட்டத்துடன் ஜீவித்துக் கொண்டு இருக்க வேண்டியது.



இந்த இயற்கை எமக்கு, நல்லவைகளையும், ஆற்றலையும் நல்க எவ்வளவு சந்தர்ப்பங்களை அளித்துக் கொண்டிருக்கின்றது. அவை அளிக்கும் பலதரப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்றையாவது பற்றிக்கொண்டாலே போதும். அது எம்மை வளர்த்து, உயர்த்திவிடும்.

நம்பிக்கையுடன் நாம் தேடும் ஆதாரம், நியாயமாகவும் ஏற்றுக் கொள்ளக்கூடியனவையாகவும் அமைதல் வேண்டும். தெளிந்த சிந்தனையுடன், கூடிய செயல்களே ஆற்றலை வளர்க்கக்கூடிய, திண்ணிய நெஞ்சுரத்தினை உருவாக்கும். ஒருவன் தனக்காக, தன்னிடம் காட்டும் விசுவாசம் போன்றே. உலகிற்கும், உண்மையான விசுவாசியாக காட்ட அச்சப்படக்கூடாது. நீங்கள் நேர்மையாக வாழ்ந்தாலே உலகம் தானாக உங்களைப் புரிந்து கொண்டு விடும். இந்த உண்மை நிலைதான், உலகம் உங்கள் மீது வைக்கின்ற ‘நம்பிக்கை’ என்பதாகும். நீங்கள் சரியாக நடந்துகொண்டால், மக்களை நோக்கி நீங்கள் செல்லுமுன் உங்கள் திசை நோக்கி அவர்கள் வருவார்கள். இதற்காக வீண் சிரமமோ, பிரசாரமோ தேவையில்லை.

தனிமனித வாழ்வுகூட முழு உலகையே பாதிக்கின்ற அம்சமானபடியினால், பிறருக்காக, நாம் புனிதர்களாக வாழத் தலைப்படுவது முக்கியமாகப்படுகின்றது. எம்மோடு மட்டும் இந்தப் பூமி இல்லை. அதை நம்புங்கள். தனி ஒருவனின் சக்தி மட்டும் விரயமானால் என்ன என்று மட்டும் கருதிவிடல் வேண்டாம்.

நம்பிக்கையின்மையால், சக்தியை முடக்கிக் கொள்ளல், இந்த உலகு, எமக்கு இட்ட கட்டளையினை மீறுகின்ற செயலுமாகும்.

அடிமனதை அசைக்கமுடியாத வலுவுடையதாக்கிக் கொள்ளுங்கள். விசையால், உந்தப்பட்ட அம்பு தன் செயலை

RangaRakes Tamilnavarasam.com

முடித்துவிட்டே ஓயும். மனிதன் மட்டும், புறப்பட்ட பாதையை விடுத்து, உடன் முடங்கித் திரும்புதல் சரியானதா என்ன? வாழ்க்கை யாத்திரை இனிமையானது. நம்பிக்கையானது. இடர்கள் மேல் நடப்பதுகூட இனிமையானதே. ஏனெனில் அதை உறுதியுடன், வெல்லும்போதுள்ள மகிழ்வினை அனுபவிக்கும் போது, எமக்கு நன்கு புலப்படுத்தி விடுகின்றதே.

*தினக்குரல் - 17.09.2000*



# உண்மை சாஸ்வதமானது



சிலர் சர்வ சாதாரணமாகப் பொய் பேசுவார்கள். கேட்டால், 'அது வெறும் பகிடிக்காகப் பேசினேன்' என்பார்கள். அதன் பாதிப்பு அவர்களுக்குப் புரிவதில்லை. பொய், புளுகு, கேலி இவற்றிற்குரிய வேறுபாடுகளை இவர்கள் உணர்கின்றார்களில்லை. எத்தனையோ உபதேசங்கள், நீதிக்கதைகளைக் கேட்டும், அறிந்தும்கூட பொய் பேசும் கொள்கையில் பலரும் தீவிரமாக இருக்கின்றார்கள். பொய் பேசுவதற்குச் சந்தர்ப்ப சூழ்நிலைகளைச் சாக்காகக் காரணம் வேறு காட்டுகின்றார்கள்.

உலகில் பொய் பேசாதவன் எவனுமே இல்லை என்று, தர்க்கித்து, தம்பக்கம் நியாயம் கற்பிக்கின்றவர்கள் தொகைதான் கூடி வருகின்றது. அதாவது பொய் பேசுவதுகூட இயல்பான, இயற்கை நியதி என்று சொல்லாமல் சொல்லி விடுகின்றார்கள். அரிச்சந்திரன் போன்ற பழைய கால நீதிக்கதைகளே வெறும் கற்பனை என்று விதண்டாவாதம் செய்பவர்களை என்ன செய்வது?

உண்மையில், இந்தக் கதைகள் ஏன் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றன என்பதை, இவர்கள் அறியாதவர்கள் அல்லர். உண்மையின் தாத்பரியத்தை எடுத்தியம்பும்போது, அதை ஏற்றுக்

RangaRakes Tamilnavarasam.com

கொள்ள குருட்டுத்தனமான, மறுத்துரைக்கும் பண்பு, சமூக சீர்திருத்தத்திற்கு ஆரோக்கியமானதுமல்ல. இந்தப் பழக்கம் உண்மை நிலையில் இருந்து வாழ மறுத்து, தப்பித்துக் கொள்ளும் ஒரு வழியாகக் கருதி விடுகின்றார்கள்.

இதற்காக, உண்மை உறைந்து போவதுமில்லை. உண்மையில் உண்மை பேசுவது ஒன்றும் சிரமமான செயல் அல்ல. இது ஒரு கடினமான செயல் என்று பயப்படுதல், தம் மனதை அழுக்கடையச் செய்தல், அல்லது அதை முற்றாகவே சிதைத்து விடுதல் என்பதே பொருத்தமான கூற்றாகும்.

உண்மை பேசுதலை ஒரு பழக்கமாகக் கொண்டு வாழ்ந்தால், அதனைப்போல இலகுவான மார்க்கம் எதுவுமில்லை. எல்லாமே பழக்கத்தில்தான் தங்கியுள்ளது. நடைமுறையில் இதனைக் கைக்கொண்டு வந்தால், இதன் தாத்பரியம் நன்கு உணரப்படுவதுடன், எம்முள் ஒரு ஜீவசக்தி உருவாகிக் கொண்டு வருவதையும் உணருவீர்கள்.

மாறாக, பொய்யுரைத்தலையே தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் காலப்போக்கில் உண்மை என்பதை என்னவென்றே அறியாத சூனிய இருட்டுக்குள் உட்தள்ளப்படுவதையும் அதில் இருந்து மீளமுடியாத அதன் கோர நாக்கில் சுவைக்கப்படுகின்ற அவலத்தையும் உணர ஆரம்பிப்பர். இது ஒரு பொறி. மீண்டு வர நினைப்பதற்குள், எல்லாமே சிலவேளை முடிந்து, வாழ்க்கை பூஜ்யமாகிவிடும்.

பட்டால்தான் புரியும் என்பார்கள்.

> உண்மை பேசுதலை ஒரு பழக்கமாகக் கொண்டு வாழ்ந்தால், அதனைப் போல இலகுவான மார்க்கம் எதுவுமில்லை. எல்லாமே பழக்கத்தில்தான் தங்கியுள்ளது. நடைமுறையில் இதனைக் கைக்கொண்டு வந்தால் இதன் தாத்பரியம் நன்கு உணரப்படுவதுடன். எம்முள் ஒரு ஜீவ சக்தி உருவாகிக்கொண்டு வருவதையும் உணர்வீர்கள்.



சிலர் கூறுவார்கள், ‘சத்தியம்’ என்பது கேட்க நன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால் அதைக் கடைப்பிடிக்க முடியவில்லையே என்கிறார்கள்.

சந்தர்ப்பவசத்தால், தம் இயலாமையின் பொருட்டு, ஒருவர் பேசும் வார்த்தைகள் வேறு; சாதாரணமாக, உண்மை பேசுவதற்கு எந்தவித இடைஞ்சலும் இல்லாதவிடத்து ஒருவர் அதைப் பேசாது, உண்மையை மறைத்துப் பொய் பேசுவது எவ்வளவு அநாகரிகமானது? பொய் பேசுவதற்கு ஒருவர் வெட்கப்படவேண்டும். அத்துடன் ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் பேசி நடிக்கவும் வேண்டியிருக்கின்றதே. இது எமது உயிர்க்கு கருமை பூசுவதாகும். இது நிம்மதியை நாசமாக்குவதுடன், எம்மைப் பிறர் சதா சந்தேகக் கண்களுடன் பார்ப்பது போலாகிவிடும். இந்த நிலை தொடர்ந்தால், நாம் சொன்ன வீணான பொய்களினால், வெட்கம், பயம், கோபம் (யாராவது திரும்பத் திரும்ப சந்தேகமுடன் வினா தொடுக்கும்போது) என்பன எம்மை வியாபிக்க ஆரம்பிக்கும். உளவியல் ரீதியாக நாம் ஆய்வு செய்தால், ஒருவனுடைய மனம் பொதுவாக உண்மைகளையே பேசும். அத்துடன் அது, உண்மையையே பேசு எனக் கட்டளையிட்டுக்கொண்டேயிருக்கும்.

மறுபுறத்தில், நாம் பலவீனமான நிலையில் இருக்கும்போது அந்தக் கட்டளையை ஏற்க மறுத்து விடுகின்றோம். இந்த நிலை மிகவும் மோசமானதும், அநாகரிக நிலைக்கு இட்டுச் செல்வதுமாகும்.

மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்படல் என்பது இஃதேயாகும். உண்மையே பேசுவது என்கின்ற லட்சியத்தில் இருக்கும்வரை, பொய்மைக்காக, மனப்போராட்டத்தில் அமுங்கிப் போதல் என்பதே நிகழாதுவிடும். கொழும்பு தமிழ்ச் சங்க

உண்மை பேசி வாழும்போது சில நடைமுறைச் சிக்கல்கள் வரத்தான் செய்யும். ஆனால் இது தற்காலிகமானதே. நூற்றுக்கு

RangaRakes Tamilnavarasam.com

நூறு சரிவர, சத்திய நெறியில் வாழுகின்றவர்களது, பெருமைகளை, உலகம் சற்றுத் தாமதமாகவே புரிந்து கொள்ளுகின்றது. புரிந்து கொண்டதும் தீய சக்திகள் எதுவும் அவர்களை அண்டமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். சோதனைகளும், வேதனைகளும் சத்தியவான்களுக்குத் தற்காலிகம் என்பது போலவே, வெற்றிகளும், களிப்புகளும் பொய்மைவாதிகளுக்கு தற்காலிகமானதேயாகும். இவர்கள், விடுபட முடியாத தோல்விகளால், அவமானமும் அல்லல்களும் பட்டே தீருவர்.

உண்மை பேசி வாழும் வாழ்வு சாஸ்வதமானது. இதில் கிடைக்கும் மன நிறைவும் சாஸ்வதமானது. ஏன் எனில் இறைவன் இயற்கை மூலம் ஒரு முடிவான வரைவிலக்கணம் வகுத்துள்ளான். அந்நியதிக்கு மீறி எந்நிகழ்வும் நடந்துவிட முடியாது. அந்த மாபெரும் உன்னத வரைவிலக்கணம் உண்மை ஒன்றேதான். இதற்கு மாறுபாடான வடிவங்கள் கிடையவே கிடையாது. ஏனெனில், எப்படித்தான் ஆடி, ஓடி, இஷ்டப்படி நடந்தாலும் ஈற்றில் வெல்லுவது 'உண்மை'தான்.

இதனைத்தான் சகல மதங்களுமே வலியுறுத்தி வருகின்றன. மதங்களூடாக பேசப்படுகின்ற கதைகள், வரலாறுகள் யாவுமே சத்திய வாழ்வு, அதன் மேம்பாடு பற்றி, மக்களுக்கு அடித்துக் கூறுவதாகவே அமைந்துள்ளன. இவை கற்பனையோ, உண்மைச் சம்பவங்களோ என்பதல்ல பிரச்சனை. உண்மை பற்றியும், அதற்கெதிரான போராட்டங்கள் எப்படி துவசமாகின்றன என்பது பற்றித்தானே சொல்லுகின்றன. இவைகளை நாம் வாசிப்பதுடன் சரி, ஏற்று கிரகிக்கின்றோமா என்பதுதான் சிந்திக்க வேண்டியுள்ளது.

குழந்தைப் பிராயத்திலிருந்தே பெரியவர்கள், உண்மை வெளிப்பாட்டின் சக்தியை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். கதைகள் மூலம், பெரியார்கள் வரலாறுகள் மூலம் பக்குவமாகக் கூறி, அவர்கள் அடி மனதில் இது பற்றிய



அசைக்க முடியாத ஓர் உணர்வினை விதைத்தும் விடல்வேண்டும். இந்த நம்பிக்கை விதை வேரோடிவிட்டாலோ, அவர்கள் பெறும் தூய்மை உள்ளத்தினை, எதிர்காலத்தில் எந்தத் தீய சக்தியுமே களங்கப்படுத்திவிட முடியாது.

அண்ணல் மாகத்மா காந்தியடிகளுக்கு, 'அரிச்சந்திரன்' கதை எப்படி அவர் இளவயது மனதில் நிரந்தரமாக இடம்பிடித்து, அவரை மகாத்மாவாக மாற்றியது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். தொட்டில் குழந்தையிடமும் தூய விடயங்களைப் பேசுங்கள்.

குழந்தைகள் ஆரம்பத்திலே பொய், புளுகு அவர்கள் உரைப்பதை நீங்கள் ரசிக்காமல், அன்போடு பேசி, நல்லனவற்றையே சொல்லிக் கொடுங்கள். தவிர்க்க வேண்டிய குணாதிசயங்களைத் தவிர்க்க வேண்டியது பொறுப்பு வாய்ந்த பெரியோர் கடமையாகும். பழக்க தோஷம் பொல்லாதது. இதன் பிடியில் இருந்து மெள்ள மெள்ள விலக எத்தனித்தேயாக வேண்டும். தவறு என்று தெரிந்த பின்னரும் அதைத் தழுவுதல் சரியா?

உண்மைதான் பேசமுடியும், உண்மையாகத்தான் வாழ முடியும். உண்மையைத்தான் நேசிக்கமுடியும். இது விடயத்தில் முடியாது என்று கூறிவிடல் வேண்டா.

தினக்குரல் 24-09-2000

RangaRakes Tamilnavarasam.com



# சுய பாதுகாப்பு

**த**ன்னைத்தானே தற்காத்துக் கொள்வதற்கு ஒருவன் உரிமையுடையவனாகின்றான். இது பிறர் நலம் பேணா வெறும் சுயநலம் அன்று. இவையிரண்டிற்கும் நிரம்ப வித்தியாசங்கள் உண்டு. தனது நலனை மட்டுமே ஒரே குறிக்கோளாகக் கொண்டுள்ள சுயநலத்தினால் பிறர் பாதிக்கப்படக்கூடிய ஏதுநிலையும் உருவாகலாம்.

சிலர், பிறர் மீதும், சமூகத்தின் சகல மட்டங்கள் மீதும் உள்ள அதீத ஆர்வம் காரணமாக, தம்மையே மறந்து, அதில் ஈடுபடும்போது, உதவிகளை நல்கும் போது இவர்கள் சங்கடங்களுக்கும் ஆளாகின்றனர். ஒருவன் பிறர்க்கு உதவும்போதுகூட, அவன் ஸ்திரமான நிலையில் இருக்கவேண்டியுள்ளது என்பதையே இது காட்டுகின்றது.

பிரச்சினைகளைக் கையாளுமுன், அதற்குத் தகுந்தவிதத்தில் முகம் கொடுக்கத் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும். ஒருவன் நிலை



உயர்வடைதல் என்பதுகூட, அவன் பிறரை உயர்வடையச் செய்வதற்காகவே என்று அறிக.

ஆளுமைகளை வளர்த்துக்கொள்வது என்பது அந்நியர்களை, மாற்றார்களை மடக்குதலுக்கு அல்ல. இது சுயநலத்திற்குட்பட்ட செயலன்றி வேறில்லை.

பொதுவான ஒரு நல்லியல்பு என்பது எம்மால் யாராவது பெறத்தக்க சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே. இதனால் எம் ஆன்மா வளப்படும். இது பலம்மிக்கதாக அமைய எம்மைத் திட சிந்தை மிக்கவர்களாக மாற்றிக் கொள்ளவும் வேண்டும்.

சாதாரண நிலையில் உள்ள எவருமே தன்னால் இயன்ற பங்களிப்பை சமூகத்திற்கு நல்க விழைவது வரவேற்கக் கூடியதேயாகும். எனினும் பலம் மிக்க ஒரு பிரச்சனையை நாம் கையாளும்போதுதான், எமது பரிமாணம், **சக்தி** எமக்கே புலனாகின்றது. இதன் பொருட்டு காரிய சித்தியானால் மகிழ்வும், மாறாக, சற்றுப் பின்னடைவாகப் போனால் ஏமாற்றம், தடுமாற்றம் ஆகியனவும் தோன்றி நம்மை வலுவிழக்கச் செய்கின்றன. தொடர்ந்தும் வெற்றிகலளயே எதிர்பார்த்துக் கொண்டிருப்பதனால், ஏமாற்றங்களை நாம் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

> மனவளம், உடல் வளம் ஆகிய இரண்டுமே சமூகத்திற்கான, உழைத்தலுக்கு அவசியம் தேவைப்படுகின்றது. உடல் வலுவை மட்டும் நம்பி, வளமற்ற சிந்தனைகளின்றி வாழ முடியாது. இதேபோல், எத்தனையோ புத்தி ஜீவிகளும் நல்லவர்களும் தகுந்த ஆரோக்கிய வாழ்வு முறைகளின்றி குறுகிய காலத்தினுள் வாழ்க்கையை சிதைத்துவிட்டார்கள்.

RangaRakes
Tamilnavarasam.com

தோல்விகளால் ஏற்பட்ட வடுக்களை, ஏற்பதை விடுத்து, அதை மேலும் குத்தி, புண்ணாக்கிப் புரையோடச் செய்வதே சாமானிய மாந்தர்களின் வழக்கமாகிவிட்டது. வெற்றியும் சரி தோல்வியும் சரி வாழ்வில் நிகழக்கூடிய சம்பவங்கள் என்பதே உண்மை. இவைகளில் புதுமையோ, ஏதோ நடக்கக்கூடாததோ ஒன்றும் இல்லை. தோல்விகளால் ஏற்படும் பாதிப்புக்களைக் களைய எம்மை நாம் பாதுகாக்கும் உபாயங்களை கற்றுக் கொள்ளவேண்டும். இவைகள் வழி தவறிய, துன்மார்க்க தந்திரங்களாக அமைந்துவிடாதபடி வழிமுறைகளைத் தேடிக் கொள்வதும் அவசியமாகும்.

மனவளம், உடல் வளம், (வலிமை) ஆகிய இரண்டுமே, சமூகத்திற்கான உழைத்தலுக்கு அவசியம் தேவைப்படுகிறது. உடல் வலிமையற்று இருந்தால், மனவளம் இருந்தாலும் உழைக்க முடியாது. அதுபோலவே, வெறும் உடல் வலுவை மட்டுமே நம்பியும் வளமற்ற சிந்தனைகளின்றிக் கருமமாற்ற முடியுமா? பிறர் முன் எடுத்துக்காட்டாக வாழத்தான் முடியுமா? எத்தனையோ புத்தி ஜீவிகள் குறுகிய காலத்திலேயே தம் வாழ்க்கையையே முடித்து விடுகின்றனர். தமது உடலைத் தகுந்த முறையில் போணாது விடுவதுகூட, ஒரு விதத்தில் தற்கொலை செய்வதற்கு ஒப்பானதே.

கலைஞர்கள், எழுத்தாளர்களை இந்த இடத்தில் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. போதைவயப்பட்டும், கட்டு மீறிய நெறி தவறிய வாழ்க்கை முறையாலும், தாம் பின் தள்ளப்படுவதை உணராத பல படைப்பாளிகள் அநியாயமாய் அழிந்து விடுகின்றனர். இவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாதவர்கள். உலகிற்கு மேலும் பல உருப்படியான ஆக்கங்களை அளிக்கமுடியாது, நடு வழியில் மறைந்து செல்பவர்கள். அத்துடன், தமது பிழைப்பிற்காக, இவர்களை



அணுகும் பிரபலங்களும் இவர்களைத் தம் தீய வழியில் இணைத்துக் கொள்வதனால் மேலும் அவர்கள் ஆபத்தை அணைத்து அணைந்துவிடுகின்றனர். இதனால் உண்மையான கலைஞன் வெந்து போவதும், அவர்களுடன் கூட இருந்தவர்கள் அவர்கள் நிலை கண்டதும் உடன் தொலைந்து போவதும் நாம் அறிந்தவொன்று.

எல்லாவற்றையுமே அறிந்த கலைஞர்களே இப்படியாக இருந்தால் சாமான்ய மனிதர்களின் நிலை என்ன? அனுபவ பாடங்களால் நாம் பல உண்மைகளை அறிந்து கொண்டு வருகின்றோம்.

ஆயினும், எமது அனுபவங்களாலும், பிறர் அனுபவங்களாலும் ஒவ்வொருவர் கொடுக்கும் விலையோ, மிக மிகப் பெரிது. துன்பங்களை வாங்கி இன்பங்களைச் செலவு செய்கின்றோம்.

அல்லது, ஒரு சிறிய லாபத்தை அல்லது மகிழ்வை அடைய, பெரிய சுமைகளை ஏற்கவேண்டியும் இருக்கின்றது.

நல் நெறிகள்தான் ஒருவனைத் தற்காத்துக் கொள்கின்றது. வரையறைக்குட்பட்ட வாழ்வு, வரம்பு மிகுந்த உரிமைகள், இவைகளை மனிதன் தன் சுய கட்டுப்பாட்டிற்காக அமைத்துக்கொண்டால், அவனுக்கு எந்தத் தொந்தரவும் அவனை அண்டாது. சுதந்திரமாகவும், நெகிழ்ச்சித் தன்மையுடனும், சந்தோஷமுடனும், அச்சமின்றியும் வாழ இந்தக் கட்டுப்பாட்டு நெறி கட்டாயம் தேவையாகின்றது. இவை சிறை அல்ல. வலுவான சட்டங்கள் இவைகளின் கட்டுப்பாடுகள் மனித நாகரீகத்தைச் சிதைவுறாது வைக்க, என்றோ உருவாக்கப்பட்டவையாகும். நாம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் மனித இனம். சாதாரண வாழ்வு நெறி பற்றித்

RangaRakes Tamilnavarasam.com

தர்க்கிப்பதில் அர்த்தமில்லை. வாழ்வியல் உரிமை பேணப்படும் போதுதானே, தனி மனிதனின் பாதுகாப்பும் வலுப்படுகின்றது. இது அனைவர்க்கும் பொதுவானதே.

ஒருவன் தன்னை வளப்படுத்திக் கொள்வதில் உள்ள நியாய பூர்வ உரிமைகள், அனைவரும், அவ்வண்ணமே பெறுவதில் தங்கியுள்ளது. ஒருவருக்குக் கிட்டுவது, ஏனையோருக்கும் உரிமையானதே.

தனிமனிதர்கள் ஒவ்வொருவருமே பலப்பட வேண்டியவர்களே. இதுதான் அவர்களுக்குரிய பெரும்பாதுகாப்பு. எனவே, சுய பாதுகாப்பு, ஒட்டு மொத்த உலகமே பலம் பெறும் ஒன்றாகிவிடுகின்றது.

*தினக்குரல் - 08.10.2000*



# விசித்திரமான மனங்கள்



எம்முன்னே எத்தனையோ விசித்திரமான மனிதர்கள், பல்வேறுபட்ட வித்தியாசமான குணாதிசயங்களுடன் உலாவி வருவதை நாம் காண்கின்றோம். அவர்களில் ஒருவராக நாமும் இருக்கலாம். எங்கள் நடத்தைகள் பற்றிப் பிறர்தான் சொல்லவேண்டும். பிறருக்குப் பிரச்சனையில்லாது விடின், யார் யார் எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். எவரும் கண்டு கொள்ளமாட்டார்கள்.

ஆனால், பிறர் சுதந்திரத்தில் மூக்கை நுழைத்துக் கொள்ளும்போதுதானே பிரச்சினைகளே உருவாகின்றன. நல்லபடி வாழ்வது என்பது, முதலில் நாம் பிறருக்கு உபத்திரவம் கொடுக்காமல் இருப்பதுதான். அத்துடன் உலகிற்கு நாம் செய்கின்ற தொண்டுகள், சேவைகள் என்பவைகளைப் பொறுத்துத் தனித்துவமான உன்னதமான இடத்தை பெற்றவர்களாகி விடுகின்றோம். பெரிய பணி, சிறிய தொண்டு எனப் பேதம் கருதாது, அந்த நேரத்து அத்தியாவசியம் கருதி எமக்குரிய பணியை முடித்துவிடல் வேண்டும். நன்மைகளைச் செய்யத் தெரியாமல் இருப்பது பேதமை. ஆயினும் நன்மை செய்ய முடியாதுபோயினும், தீமையாவது செய்யாது இருத்தல் உத்தமமானதன்றோ? இதனையே சுவாமி விவேகானந்தரும் கூறினார். தீமைகள் செய்யாதவன்

RangaRakes Tamilnavarasam.com

ஈற்றில் நன்மைகளையே சமூகத்திற்கு வழங்க ஆரம்பித்து விடுகின்றான்.

கல்வி, செல்வம் என்று எதைத்தேட முனைந்தாலும், நாம் முன்னேறவேண்டும் என்கின்ற பேரவா எம்முள் எழுவது இயற்கையே. இதைத் தடை போட முடியாது. தடைபோடவும் கூடாது. என்றாலும் இதனைப் பெறுதற்காக, ஏனையோரை வருத்துதல், வஞ்சனை புரிதல் கூடாது. எல்லோரது நலன்களுமே பேணப்படல் வேண்டும் என்பதே பிரதானமானதாகும்.

இன்று நடப்பதுதான் என்ன? ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வதன் மூலம்தான் நன்மைகள் பல கிட்டுமென தப்பான ஒரு எண்ணத்தினை அநேகர் விதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் சிலருக்கு சில அனுகூலங்கள், தற்செயலாக நடந்துவிட்டால், அதுவே ஒரு வழியாகக் கொண்டு விடுகின்றார்கள். இவர்கள் இதன் தாக்கத்தினைக் காலம் கடந்தேனும் கட்டாயம் பெறுவார்கள்.

ஒவ்வொரு தாக்கத்திற்கும் ஒரு சம எதிர்த்தாக்கம் இருக்கும். இது ஒரு விஞ்ஞான ரீதியான தத்துவமாகும். என்றாலும் வாழ்க்கைக்குகூட இது பொருந்தி நிற்கும். செய்கின்ற வினைக்கும் எதிர்மறை வினை உண்டு. அதாவது, பாவம் செய்தவன் தப்பித்துக்கொள்ள முடியாது. நன்மைகள் செய்தவர்களும் அதன் பெறுபேறுகளை அடைந்தே தீருவர்.

சிலரைப் பாருங்கள், பெரிய தனவந்தராக இருப்பார். பிறரிடம் இல்லாத பல பொருட்களை வாங்கிக் குவித்து

> தனிமனித நடத்தைகள் அனைத்தும் இணைந்தே உலகை இயக்குகின்றன. எனவே நாம் எம்மைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. எமது இயல்புகளை வளமாக்கிக் கொள்வோம். நாம் எமது கழகத்தின் பிரச்சனைகளை, குறைபாடுகளை அறியாமல் இருக்கக்கூடாது. எதிலும் விலகி இருத்தல் தகாது.



வைத்திருப்பார். ஆயினும் ஒரு ஏழையின் வாழ்வை, அவன் அனுபவிப்பதைக் கண்டால் பொறுக்காது. அவன் ஒரு சாதாரணமான பொருளை வைத்திருப்பதைக் கண்டாலும், ''அடடா இது எனக்குத் தெரியாமல் போயிற்றே, என்னிடம் இல்லாத ஒரு அற்புதமான பொருளை இவன் எப்படி வைத்துக் கொள்ளமுடியும் என அங்கலாய்ப்பதுடன் நின்றுவிடாது, அதை எப்படிப் பிடுங்கிவிடுவது எனத் திட்டம் வேறு தீட்ட ஆரம்பிப்பான். உண்மையில், அவனிடம் உள்ள பொருள்போல் பல மடங்கு பொருள்கள் குவிந்திருக்கும். ஏன் அதனைவிடப் பெறுமதி வாய்ந்த சிறப்பானவைகளையும் வைத்திருப்பான். இருந்தும் என்ன, அவனிடம் உள்ள அவா அவனை விழுங்கிவிடும். எல்லாம் எனக்குத்தான் வேண்டும் என்கின்ற ஆசையுடன் கூடிய மமதை அவனை ஆட்டுகின்றது.

ஆசைப்படுவது மனித இயல்பு. என்றாலும் பிறர் பொருள்மேல் ஆசைப்படுவதும், அதன் பொருட்டுப் பொறாமையுறுவதும் ஒழுக்கக் கேடான நடத்தையல்லவோ? இதன் பெறு பேறுதான் என்ன? தன்னிடம் உள்ள செல்வத்தினாற் பெறும் சுகங்களையே, தன் மித மிஞ்சிய அங்கலாய்ப்பினால் துறந்து விடுகின்றான். சதா காலமும், காழ்ப்பும், கரிப்புணர்வுமாய் அவஸ்தையுற்று, தன் இதயத்தை எரித்துக் கொள்கின்றான்.

இவைகள் எல்லாம் மனத்தூய்மை இழந்தவர்கள் தாமாகவே தேடிக் கொள்கின்ற வினைதானன்றி வேறில்லை. ஆயிரம் சேலை வாங்கி, விதவிதமாக உடுத்தி வரும் பெண்கள் சாதாரண சேலை கட்டிவரும், இன்னொருத்தியைக் கண்டு ஆசைப்படுவது சாதாரண நிகழ்ச்சி. சாதாரணமாகவே இதை எடுத்துக்கொண்டால் சரி. இதன் பொருட்டு மனதை அல்லாடவிடுவதுதான் சகித்துக்கொள்ள [illegible]

உடலுக்கு ஏற்பட்டு விடுகின்ற நோய் மட்டும்தான் நோயல்ல. தேவையற்ற விடயத்திற்காக தம் இயல்பை

RangaRakes Tamilnavarasam.com

நடத்தைகளை மாற்றிக் குழம்புவதுகூட ஒரு மனோ வியாதியன்றி வேறென்ன? இவர்கள் தம் நிலை அறியாத மனோ வியாதிக்காரர்களே. இந்த இயல்புகளைக் களைவது எங்ஙனம்?

மனதைப் பரந்த அளவில் விரிவாக்கிக் கொள்ளல் வேண்டும். எல்லார்க்கும் எல்லாமே வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

நான் மனிதன், அடுத்தவனும் மனிதன், அவனுக்கும் தேவைகள் ஆசைகள், விருப்பு, வெறுப்புக்கள் உண்டு என உணருதல் வேண்டும்.

மற்றவர்களுக்கு வரும் இன்ப, துன்பம் தனக்கும் வரும் என அறிந்துகொள்ள வேண்டும்.

சரியானதை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனம், அறிவு என்பது எல்லோர்க்குமே பொதுவான ஒன்றேயாகும். எனவே சரியானதைச் சிந்திக்க இங்கு ஒருவரும் தடைபோட மாட்டார்கள். நாமாகவே, வேண்டுமென்றே கெட்டுவிட, நாமே எம்மை அனுமதிக்க முடியுமா?

நான்தான், எனக்கு மட்டுமேதான் என எப்படி நாம் எண்ணமுடியும்? இப்படியே ஒவ்வொருவரும் எண்ணினால் தாக்கப்படுவதும், நாம் எல்லோருமே தான் - இதில் ஐயம் எதுவுமில்லை.

சற்றே எண்ணிப் பாருங்கள்.

தனிமனித நடத்தைகள் அனைத்தும் இணைந்து உலகை இயக்குகின்றது. எனவே நாம் எம்மைக் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. எமது இயல்புகளை வளமாக்கிக் கொள்வோம். பிரச்சினைகள் எழாது. அது போதும்.

*தினக்குரல் 1.10.2000*



# காதலைப் புரிந்தவன் மௌனமாகின்றான்



**கா**தல் இல்லாத வாழ்வே இல்லை என்கின்றார்கள். கனிந்த இதயங்களும், உயிர்ச் சுவாசங்களும் ஒருமித்துப் பரஸ்பரம் தூய அப்பழுக்கற்ற பரிமாற்ற சங்கமமே காதல் என்று பேசுகிறார்கள். காதலின் மென்மையும் உண்மையும் அது வருடிக் கொடுக்கின்ற இனிமை நினைவுகளும் உறவுகளும் என்றுமே சாஸ்வதமாக நிலைக்க வைக்கும் இயல்புடையது. பேராற்றலும் அசாத்திய துணிச்சலும், இனம், வயது, தகுதி இவைகளுக்கு அப்பால் நின்று மேலும் பல குண இயல்புகளை மிக அழுத்தமாகவே உணர்த்தி நிற்கும். இது ஒரு சாரார்க்கு மட்டும் இனிமையான சுகந்த உணர்வும் அல்ல. இதன் ஆட்சிக்கு எல்லோருமே கட்டுப்பட்டேயாக வேண்டுமென்கின்ற நிலை.

தவிர்க்க விரும்பாத இனிய வலை.

சொர்க்கத்தின் சாவி.

வாழ்வின் அர்த்தத்தினைக் காட்டும் வேதம்.

அத்துடன்,

RangaRakes Tamilnavarasam.com

எமக்கே தெரியாமல், வந்து உட்கார்ந்து கொள்ளும் விசித்திர விருந்தாளி. ஏற்றத்தாழ்வு, மொழி, இனம் என்கின்ற எதையுமே ஏறெடுத்துப் பார்க்காது வந்து ஒட்டிக் கொள்ளும் விந்தை உணர்வை என்னென்பது?

காதலைப் புரிந்தவன் மௌனமாகின்றான்; புரிந்து தெளிந்தவன் ஞானிகின்றான்; தெளிவற்றவன் சோர்ந்து தன் வயமிழக்கின்றான்.

காதலைப் பேசுவதைவிட, அதை அனுபவிப்பதே இனிமையானது. காதல் பற்றிச் சப்தமிடுபவன், அதைக் கண்டு கொண்டதும் மௌனித்து அதனுடன் சங்கமமாகி விடுகின்றான்.

இது எழிலான உயிர். உயிர் உருவம் பெறுவதுங்கூட உண்மைக் காதலூடாகத்தான். இதன் மெல்லிய காந்த அலைகளை மீட்டி ரசிப்பதில் காணும் சுகானுபவத்தினைப் பற்றித்தானே ஆயிரம், ஆயிரம் காதல் பூக்களை விரித்து இந்தக் கவிஞர்கள் தம்முடைய சிந்தையூடாகச் சுகவாசத்தை அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதன் சுகானுபவ இனிமைக்கு எல்லை இல்லை. இதன் சிரஞ்சீவித்தன்மை பவித்திரமானது.

இந்தப்பூமிக்கும், ஜீவன்களுக்கும் உள்ள தொடர்புகள் இருக்கும்வரை இந்த அன்பு நிலை அறுபடவே முடியா ஒரு உன்னத நிலையாக இயற்கை அமைத்துவிட்டது. மனிதன் முதல் சகல ஜீவராசிகளும், ஒன்று மற்றையதற்கு ஆதாரமாகவே ஜனிக்கின்றன. தனிமை வேதனை தகிக்கக்கூடியது. தனித்து

> காதலின் முடிவு எத்தகையதாயினும், அதனுள் பிரவேசிப்பது, காதலுக்கு ஏற்பட்ட வெற்றியேயன்றி வேறில்லை. காதல் ஒருவரின் முரட்டுச் சுபாவம், வக்கிர புத்திகளை இல்லாதொழித்து, அவரை மென்மையான உணர்வுகளுக்கு, உரித்தாக்குகின்றது. அதே சமயம் கோழைகளைக்கூட உலகையே உருட்டச் செய்யும் பலசாலியாக்கவும் செய்கிறதே! காதல் மென்மையானது மட்டுமல்ல. எம்மை ஆகர்ஷிக்கும், கம்பீரமானதும்கூட.



வாழுதல் பொருந்தாத ஒன்று. யாருடனுமாவது ஈடுபாட்டுடன் பழகாமல் இருக்கமுடியுமா? கணவன், மனைவி, நண்பர், சுற்றம், உறவு என்று ஒரு துணையை நாம் தேடிக் கொண்டிருக்கின்றோம். படிக்கலாம், பார்க்கலாம், கேட்கலாம் இவைகளை நாம் செய்யாமலும் இருந்துவிட முடியும். இவைகளோடிணைந்த எத்தனை கர்மாக்களை செய்தாலும் மனதும் உடலும் ஸ்பரிசிக்காது, உயிரினம் உலவுவது கடினமானதே.

இந்த ஸ்பரிசத்திற்காகத்தானே உயிர் ஏங்குகின்றது. வெறுமை பூச்சில் ஒளிந்து கொண்டிருப்பவனும், முடிவில் தன்னையும் மீறிய காதல் உணர்வினால், உள்ளத்திற்கு உள்ளதைச் சொல்ல வேண்டியவனாகின்றான். இது ஒன்றும் தப்பு இல்லை. என்றாலும்கூட,

காதல், இருட்டுக்குள் ஒளிவது அல்ல, உள் மன வெளியில், ஒளியோடு உலா வருவது. இதற்குள் பூட்டியபடி இருப்பவர்க்கு, புற உலகு பற்றித் தெரியாது. இதன் தாக்கம் அத்தகையது.

ஆத்மாக்கள் பேச மொழி வேண்டியதில்லை. மொழியில்லாத பரிபாஷையில் பேசப்படும் போது செயற்கைத் தனமில்லை. இது உணர்வு அலைகளின் மோதலால் ஏற்படும் மென் அசைவுகள். குறிப்பிட்ட அலை வரிசையில்தானே வானொலியில் இசை வருகிறது. காதலும் அத்தகையதே.

இது சம உணர்வுகளின் சங்கமம். உண்மையான, தெளிவான ஸ்வரங்கள் உண்டானால் அபஸ்வரங்கள் கிடைக்க வழியில்லை. அபஸ்வரங்கள் இசை ஆகாது; அவை வசை.

இவைகளை நாம் வெறும் உதாரணமாக எடுத்து இயம்புவதும், புகழ்வதும், யதார்த்த வாழ்வில் காதலைக் கத்தரிக்கும் செயல்களையே செய்வதும், காதலைக் கொச்சைப்படுத்தும் செயல்களாகும். எனினும் இது சமூகத்தின் நியதியுமாகிவிட்டது.

RangaRakes
Tamilnavarasam.com

பொருந்தாத காதலினால், அதன் சீரழிவினால் நிஜக்காதல்களும் நிர்க்கதிக்குள்ளாக்கப்படுகின்றன. எங்கோ ஓரிரு சமாச்சாரங்களை, கதைகளை நாமாக உருவகித்து, காதல் பற்றிப் புதுப்புது அர்த்தங்களைப் புனைந்து கொள்கின்றோம். இதன் தூய்மை பற்றி எந்த அளவில் அளந்துவிட்டோம்?

தாய்மை, அன்பு இவைகளை உணர்த்துவதற்குத்தானே கடவுள்களுக்கே, ஆண் பெண் உருவம் இட்டு அம்மை, அப்பனாக வணங்கியும் வருகின்றோம். இறைவனைத் தலைவனாகவும், இறைவியைத் தலைவியாகவும் வழிபடுதல் செய்கின்றோம்.

காலங்களின் மாற்றத்திற்கு காதலை மாற்றியமைக்க முடியாது. இது கனவும் அல்ல. நினைவில் நிறுத்தி ஜீவித்துக் கொண்டேயிருக்கும். வற்றாத புது ஊற்று. பழமையும், புதுமையும் காதலுக்கு ஒன்றேதான். இது வாழ்ந்து கொண்டிருக்கும்போதும் இனிமேலும், இது பேசப்பட்டுக் கொண்டேயிருக்கும். தன் வலிமையை, தன் குன்றாத இளமைப் பொலிவுடனேயே இனம் காட்டிக் கொண்டிருக்கின்றது. முடிவுள்ள பொருளுக்கு மட்டுமே வரைவிலக்கணம் கூறி வகைப்படுத்தவும் முடியும். முடிவில்லா விடயங்களை எதற்குள் அடக்குவது?

காதலித்தவனைக் கேட்டுப் பாருங்கள். அவன் தன்னைவிட ஜெயித்தவன் எவனும் இல்லை என்பான். இதில் தோற்றவனைக் கேளுங்கள். தன்போல் இழந்தவன் எவனுமில்லை என்பான். ஆனால் ஒன்று - காதலைப் பெற்றுக் கொண்ட விடயத்தில், இருவருமே வென்று விட்டவர்கள்தான். காதலின் முடிவு எத்தகையதாயினும், அதனுள் பிரவேசிப்பது காதலுக்கு ஏற்பட்ட வெற்றியேயன்றி வேறில்லை. காதலியின் சுண்டு விரலின் அசைவு அவன் இதயத்தின் அசைவாகத் தோன்றுவது, பிறருக்குப் பார்த்தால் நகைப்பாக இருக்கலாம். அந்த சுண்டு விரல் சொர்க்க அனுபவம், அவனது மெல்லிய உணர்வுகளுக்கு, அவன் இதயச் சுவர்களின் மென்மைக்கு ஓர் உதாரணம். இங்கு இவனின்



முரட்டுச் சுபாவமும், வக்கிர புத்திகளும், எங்கே போய்ச் சரணடைந்துவிட்டன?

காதல் பல சமயங்களில், பலசாலிகள், புத்திசாலிகளைக்கூடப் பலமிழக்கச் செய்யும் என்றாலும் கோழைகளைக்கூட உலகை உருட்டித் தள்ளும் வீரன் ஆக்குகின்றது என்றும் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம்.

வியாக்கியானங்கள், கண்டனங்கள், விமர்சனங்கள், வரைவிலக்கணங்கள் என்று பலதரப்பட்ட வடிவங்களில் பேசப்பட்டு வருகின்றபோதிலும் கூட, இவைகளுக்கு அப்பால் நின்று, தனித்துவமான ஒரு வடிவத்தினைக் காதல் எமக்குக் காட்டி நிற்கின்றமையை நாம் மறுத்து விடமுடியாது.

காதல் வாழ்வு என்பது, திருமணத்தின் முன்பு மட்டும், பழகுவது பேசுவது, ஒன்றாக வலம் வருவது என்று தப்புக் கணக்குப் போட்டு விடுகின்றார்கள். காதலிக்காமல், திருமணம் செய்தவர்களுக்கு இது பற்றி ஒன்றுமே தெரியாத மாதிரி சிலர் பேசுகின்றார்கள். ஒருவர் முகத்தை மற்றவர்கள் பார்க்காமலேயே, திருமண பந்த மூலம் இணைந்து, கருத்தொருமித்த காதல் தம்பதியர்களாக, பன்னெடுங்காலம் வாழ்ந்து வரும் எத்தனை பேர்களைக் கண்டு வருகின்றோம். காலத்தை வென்றது காதல் அல்லவோ! அன்றியும் காதலித்துத் திருமணம் செய்த பின்னர் முரண்படுவது காதலையே களங்கப்படுத்துவது போல் அமைகின்றதல்லவா? தற்காலத்தில் இந்த அவல வாழ்வைத்தானே பலர் வாழ்ந்து வருகின்றனர். இதனால்தானே, சமூகத்தில் காதல் பற்றிய நம்பிக்கையீனமும் ஏற்பட்டுவிடுகின்றது. பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டுத் திருமணம் செய்தவர்கள் ஒருவரை ஒருவர், முதன் முதலாக அறியப்படுவதும், உணரப்படுவதுங்கூட ஓர் இனிய சுகானுபவமான, விந்தைக் காதல் உணர்வினைப் பெறுவதேயாகும்.

RangaRakes Tamilnavarasam.com

'திருமண வாழ்விற்கும், காதல் முன் அனுபவம்தான் எதற்கு? வயது முதிர்ந்தாலும், காதல் இளமையாக இருப்பதும், அதே சமயம், காதலின் பரிமாணம் பெரிதாக வலுப்படுவதுமே உண்மையானதாகும். தெய்வீகப் பிணைப்பு, பூர்வ ஜென்ம இணைப்பு என்றும் நாம் சொல்லுகின்றோம். இருந்தும்கூட, இன்று -

காதலின் தாத்பரியத்தினைப் பற்றிக் கதைப்பவர்கள், எழுதுபவர்கள் எல்லோருமே, திருமணத்திற்கு முன்பு ஏற்பட்ட அனுபவங்களையே, பக்கம் பக்கமாக எழுதுகின்றார்கள், கவிதை வடிக்கின்றார்கள். திருமணத்தின் பின்பு, ஏன் குழந்தை குட்டி, பேரப் பிள்ளைகளைக் கண்ட பின்னர்கூட இது தொடர்ந்து வளர்ந்து, பின்னிப் பிணைவதை நாம் அறியாதவர்களா என்ன? இதன் பெருமை பற்றி அறிய, தர்க்கிக்க இது ஒன்றும் உரை கல்லில் தேய்த்துப் பார்க்கக்கூடிய பொருள் அல்ல.

உதாரணங்களுக்காகக் கூறப்படும் பழங்கதைகள், தற்கால உண்மைச் சம்பவங்கள் எல்லாமே ஓர் எடுத்துக்காட்டு மட்டுமே. மற்றப்படி இது ஜீவித்துக்கொண்டேயிருக்கும் சத்திய சொரூபம்தான். ஒவ்வொரு ஜீவனிலும், வீட்டிலும், நாட்டிலும், ஏன் உலகு பூராவுமே ஒளியூட்டிக் கொண்டிருக்கின்றது.

ஜனனம், மரணங்களில் இதன் உண்மையும், வலிமையும் புலப்படுகின்றன. உயிர்ப் பிறப்புக்கள், பாசம் மிக்க இவைகளின் இழப்புக்கள் மூலம் உள்ளத்து வேதனை, பிரிவுத் துயர்கள் எல்லாமே, காதலின் வேர் எவ்வளவு ஆழமானது. இதன் ஆணிவேரின் அந்தமே காணமுடியாதது என்பதை எமக்கு உணர்த்தும்.

பாசத்தினால் பலவீனமும் அடைகின்றோம், பலமுமடைகின்றோம். ஆனால் இவையின்றி உலகம் இயங்குமா?



இன்பம், துன்பம் இணைந்த கலவைத் அதுவாக அழுத்தும்; அதுவாக இழுக்கும், அதுவாக விழுத்தும்.

காதலில் கரைவது, நனவு வாழ்வில் மட்டுமல்ல, கனவு வாழ்வில்கூட ஒரு நிஜத்தைக் காட்டி நிற்கின்றதே? கனவில் மீண்டு விழிப்பு வந்த பின்புகூட காதல் கனவை இரைமீட்கவே நினைக்கச் செய்வதிலிருந்து, காதலின் கம்பீரம் புரிகின்றது. தாய் அன்பு, சேய் அன்பு, நண்பர் உறவு, உறவுகளின் இணைப்பு எல்லாமே பரந்துபட்ட அன்புணர்வின் வெளிப்பாடுகளே. சகல பிறப்பிற்கும், உயிர்ப்பிற்கும், உந்து சக்தி, மகா சக்தி காதலே யன்றி பிறிதில்லை. உயிர்கள் ஓதும் பொது வேதமும் இதுவே.

*தினக்குரல் 15.10.2000*

RangaRakes Tamilnavarasam.com

# தெரியாமை வேறு அறியாமை வேறு



தெரியாமை அல்லது தெரிந்துகொள்ளாமை என்பதும், அறியாமை என்பதும் வெவ்வேறான விஷயங்களாகும். இவைகளுக்கிடையே சில ஒற்றுமைகள் இருப்பதனால், சற்று கருத்து மயக்கம் ஏற்படலாம். தெரியாமை என்பதைவிட, அறியாமை எம்மை மிகவும் பாதிப்படையச் செய்துவிடும். தெரியாமையில் இருந்து நாம் மீண்டுவிடலாம். ஆனால் படித்தவர்கள் பண்புடையவர்கள்கூட அறியாமையில் இருந்து மீளப் பிரியப்படுவதில்லை. முற்போக்குச் சிந்தனையாளர்கள் என்று கூறிக் கொள்பவர்களும், பிற்போக்குவாதிகள் என வர்ணிக்கப்படுபவர்கள், மிதவாதிகள், தீவிரவாதிகள் என்று விமர்சிக்கப்படுபவர்களுங்கூட அறியாமை வலையில் ஆழமாகப் பிடிபட்டு, புதைந்தே விடுகின்றார்கள். எமக்குத்தான் எல்லாமே தெரியும் என எண்ணும் எண்ணம், ஏதோ வகையில் மனதுள் சில வேளை புகுந்தும் விடுகிறதே.

நாம் அறிந்தவரைதான் எல்லாமே சரி என நமது மனது ஏன் கட்டளையிடுகிறது? இது தன்னம்பிக்கையா? தன் முனைப்பா? அல்லது ஆணவமா?

எல்லோருக்கும், எல்லாமே, எல்லாச் சந்தர்ப்பத்திலும் சரிவரத் தெரிந்து கொண்டிருப்பது நடைமுறைச்



சாத்தியமாயிருக்காது அல்லவா? தெரிந்தேயாக வேண்டுமென்கின்ற கட்டாயமும் இல்லை. கண்ட விஷயங்களையும், மூளையில் செலுத்தவே பிரியப்படுகின்றார்கள். அவசியமானதும், அவசரமுமான தேவைகளையே மனிதன் கற்றுக்கொள்ள ஆசைப்படுகின்றான். உலகம் என்கின்ற பரந்த பரப்பில் எதனை நாம் முழுமையாகப் படித்துத் தேறுவது?

எதனைப்பற்றியும் நாம் ஆழமாகப் படிக்க முற்படும்போதுதான் எமது அறியாமையின் ஆழம் நமக்கே, நன்கு புரிந்து விடுகிறது. அதன் கனம், பரிமாணம் இவைகளைக் கண்டதும் அசந்து போய் விடுகின்றோம். அட இதுநாள் வரை இதுபற்றிப் புலனாகாமல் போயிற்றே என மலைத்துத் தடுமாறுகின்றோம். இந்நிலையில், நாம் புரியாத சங்கதிகளைப் பற்றி, மிகவும் புரிந்து கொண்ட மாதிரி பிரசங்கம் பண்ணுகின்றோம். புரியாத விஷயங்களைப்பற்றிப் பேசுவதே சுவாரஸ்யமாக இருக்கின்றது. யாராவது தெரிந்தவர்கள் அதுபற்றி - அதன் நிஜம் பற்றிப் பேசினாலோ, நாம் விட்டுவிடுவதில்லை. யாரையாவது, தம் போன்றவர்களைத் துணைக்குச் சேர்த்துக் கொண்டும், உண்மையைச் சொன்னவன் வாயை அடைக்க முயற்சி செய்கின்றோம். இந்த அறியாமை எவ்வளவு சாதுர்யமாக, முட்டாள் தனங்களைச் செய்கின்றது தெரியுமா? எமது அறியாமையை சரி என நிரூபிப்பதில் உள்ள சந்தோஷத்திற்கு எல்லைதான் ஏது? அறியாமை உணர்வு அந்த நேரத்தில் எமக்கு, சரியானது என்ற பொய்த் தோற்றத்தைக் காட்டி எம்மை ஜெயித்து, உண்மையை அடைத்து விடுகின்றது.

> அறியாமை மனிதன் மனங்களை இறுக்க மூடி உண்மையை வெளிக்கொண்டு வராமல் இருக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்கின்றது. நோயின் தாக்கத்தை நோயாளியே புரியாமல் செய்து விடுகின்ற திறமை இதற்கு உண்டு. தன்னைச் சார்ந்தவர்களைத் தன்னிலைக்கு வரச் செய்கின்றது. ஆற்றலை அற்றுப்போகச் செய்துவிடுகிறது. படிக்காத பாமரர்களை மட்டுமல்ல, அறியாமை எவரையுமே ஈர்க்கும் சக்தி பெற்றது.

RangaRakes
Tamilnavarasam.com

ஆனால்,

அறியாமை நிறைவானதல்ல, அது இறந்துவிடும். என்றைக்கோ உண்மை வெளிப்படும்போது நாம் கூச்சப்பட்டு குறுகி, எம் நிலையை அறிந்ததும் அதிர்ச்சியடைந்தே தீருவோம். இந்த அறியாமையின் பாதிப்பினால் நாம் படும் சிரமங்கள் கொஞ்சமா என்ன?

நாம் கட்டாயமாக அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் நிரம்பவுமுண்டு. எதனையுமே ஆராயாது, 'ஆமாம்' போடுவதும் சும்மா... சும்மா ஏற்கவொண்ணா கருத்துக்களை, யாரோ வேண்டப்பட்டவர்கள். தெரிவித்ததற்காக ஏற்பதும், பழைய கருத்துக்களே சரியானது, புதிய கருத்துக்கள் போலியானது என்று பிடிவாதம் பிடிப்பதும், அல்லது புதியனவைகளே இறுதியான முடிவு, பழைய விஷயங்கள் உதறி எறிய வேண்டியவை எனக் கருதிக்கொண்டு இருக்கின்றவரை அறியாமையும் எம்மைவிட்டு விலகமாட்டாது. கல்வித்துறையும், நாகரீக வளர்ச்சியும் மேலோங்கும் இன்றைய காலகட்டத்தில் கூட, இதன் வீச்சு வீழ்ச்சியடையாமல் இருப்பது வேதனைக்குரியதே.

ஒரு சங்கதியைத் தற்செயலாகத் தெரியாமல் இருக்கலாம். ஆயினும் அதைத் தெரிந்துகொண்டதும் எம்மைத் திருத்தி விடுகின்றோம். உதாரணமாக சமையல் பாகம் ஒன்று ஒருவர்க்குத் தெரியவில்லை. அதை இன்னொருவர் சரியாகச் சொல்லிக் கொடுக்கின்றார். அத்தோடு தெரியாமை என்கின்ற பிரச்சனை தீர்ந்து விடுகின்றது. ஆனால் இந்த அறியாமை அப்படியா என்ன?

மனிதர் பலரை இறுக மூடி, உண்மையை வெளிக்கொண்டு வர முடியாது செய்ய பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது. நோயின் தாக்கத்தை நோயாளியே புரியாமல் செய்துவிடுகிற திறமை இதற்கு உண்டு. இதுவுங்கூட தன் வசமிழந்த நடவடிக்கையாகவே ஆகிவிடுகின்றது. அத்துடன்



தன்னைச் சார்ந்தவர்களையும் தனது நிலைக்கு கொண்டு வர முயற்சியும் செய்கின்றது.

ஆராயும் தன்மையற்று, சொன்னவற்றையே திரும்பவும் உபதேசம் போல் சொல்லி விடுவதும், அறிவை மேல் படிக்குச் செல்லவைக்க இஷ்டமின்றி, அறிவு விழித்தால் ஆபத்து எனத் தன்னை மீறி நினைந்து கொள்வதும், அச்சப்படுதலும், அறியாமையின் ஆபத்தான செயற்பாடுகளாகும். அறிவு என்கின்ற மயக்கமற்ற ஆயுதத்தைத் தவிர, அறியாமை சூன்யத்தை உடைக்கும் வலிமை பிறிதொன்றிற்கும் கிடையவே கிடையாது.

இன்று நாம் செய்தித்தாள்களைப் படிக்கும்போது மலைப்புத்தான் ஏற்படுகின்றது. உலகில் கொந்தளிப்பு நிலைதான் நிரந்தர அலையாகிவிட்டது. தனி மனிதர்களின் நடத்தைகள் ஒன்றுகூடி உலகை உருக்குகின்றது; உலுக்குகின்றது. அறிவை இவர்கள் எங்கே அடமானம் வைத்துவிட்டார்கள். அறிவின் பயன் அற்றுப் போய்விட்டதா? அறிவு இருந்தும் அதனைப் பயன்படுத்தாமல் விடுவது அறியாமையை விட அசிங்கமானது. எல்லாமே தெரிந்தும்கூட, மனிதப் பயனை மனிதப் பெறுமதியை, அறியாது அறிவிலியாக நடப்பது அறியாமையன்றி வேறென்ன? இன்று பலரும் தூங்குவதாகப் பாசாங்கு செய்கின்றார்கள் போல் தெரிகின்றது. இது தங்களைத் தாங்களே ஏமாற்றுவதாகவே படுகின்றது. உண்மையைச் சந்திக்கத் திராணியற்றவர்கள், உறக்கத்தை வலிய நாடுகின்றனர். இதன் பலாபலன்கள்தான் என்ன?

ஆற்றல் இழப்பு, அவமானம், பரிகாசத்திற்கு ஆளாகுதல், பிறரின் ஆட்சிக்குட்படல், நல்ல வாய்ப்புக்களை இழத்தல், தெளிவின்மை, இதனால் ஏற்படும் சோர்வு.

இத்யாதி தாக்கங்கள் எப்படி வருத்துகின்றது என்பதை அறிந்து கொள்ளத்தான் வேண்டும். விடுபட முடியாத

RangaRakes Tamilnavarasam.com

தொல்லைகள் என எதுவும் இல்லை. அறியாமைகூட ஒரு தொல்லைதானே. விடுபட்டேயாக வேண்டுமென்கின்ற உணர்வு வேண்டும். பழமை பற்றிய அதீத கற்பனை உணர்வுகள், அவை பற்றி மாறான எண்ணங்களைத் தமக்குள் வேறுபாடாக உருவகிக்கின்ற தன்மைகள் கூட அறியாமையை வளர்க்கவல்லன. இந்தப் பழமை சித்தாந்தங்கள் உண்மைகளின் தவறு அல்ல. முரண்பாடான கருத்துக்களைத் தெளிவற்று நோக்குவதும், பழமையை அதன் இயல்புக்கமைய நோக்கத் தெரியாத தன்மையுமேயாகும். பழமையினர் உண்மையினை உணர்ந்து கொள்வதுபோலவே, புதுமை உலகின் கருத்துக்களையும் சம அளவில் கிரகித்து ஏற்றுக் கொள்ளப் பழகவேண்டும். முரண்பாடுகள் தெளிவின்மையாலேயே அவதரிக்கின்றன. தெளிவானதும் முரண்பாடுகள் உடன்பாடாகி, சமநோக்குப் பெறுகின்றன.

செம்மையானவைகளைத் தேர்ந்தெடுப்பதிலேயே எமது புத்திசாலித்தனம் அடங்கியிருக்கின்றது. எவரும் எப்படியும் பேசிக் கொள்ளட்டும். சமூக நிலைப்பாடு என்ன? இந்தக் கருத்துக்கள் யதார்த்த செயல்முறைக்கு ஏற்றவையா? என நாம் எம்முடனேயே, எம் மனதுடனேயே பேசி, ஒரு முடிவிற்கு வரவேண்டும். அதே சமயம் மிகச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் பெரிதாக மூளையைப் போட்டு உடைக்கவேண்டிய அவசியமும் இல்லை.

கருத்துக்களைப் பரிமாற்றம் செய்யும்போது படிக்கும்போது, சமூகத்தில் சகஜமாகப் பழகும்போது, பழகும் மனிதர் எத்தகைய தரத்தினராய் இருந்தாலும்கூட எமக்குப் பல தகவல்கள் கிடைக்கின்றன. மாற்றுக் கருத்துக்கள் அறியும்போது, பல விடயங்கள் வெளிச்சமாகிவிடுகின்றன. எமக்குத் தேவை, பலதரப்பட்ட புதிய உண்மைதரும் விடயங்களைப் பெறுதலேயாகும். இங்கு நாம், மொழி, இன, மத உணர்வுகளைக் கடந்து ஒரு சமநிலையில் உள்ள நடுத்தர ஆத்மாவாக நின்று



உள்ளதை உள்ளபடி அறியமுனையும் புத்தி ஜீவியாக உருவாகுதலேயாகும்.

இந்த நிலைக்கு நாம் எம்மை உருவாக்காதவரை அறியாமை எம்மைவிட்டு விலக வாய்ப்பேயில்லை. நாம் இதனை விரட்ட முயற்சி செய்யப் போவதுமில்லை. நிதர்சனமானவைகள் என்றுமே உள்ளவைகளை உள்ளபடியே காட்டி நிற்கும் தன்மை வாய்ந்தனவையாகும். எமது புத்திசாலித்தனங்கள் பணம், காசு தேடுவதும், புத்தகங்களை மொத்தமாகப் படிப்பதில் மட்டுமல்ல. தெளிவு, நிதானம், தூய்மை யோடிணைந்த மயக்கமற்ற அறிவிலுமே தங்கியுள்ளன. இவை கிடைத்தால் அறியாமை நீங்கி அர்த்தமற்றதாகிவிடும். உலகம் பூர்ணமயமாகிவிடும்.

தினக்குரல் 22.10.2000

RangaRakes Tamilnavarasam.com

# மனிதத்துவ மாண்பு



**ம**ன்னிப்பதற்கும், தமக்குச் செய்த தவறுகளை அறவே மறந்துவிடுகின்ற பண்பினிற்கும் எல்லையேயில்லை. கொடை வழங்கல் என்பது பணம், பொருளை மட்டுமல்ல, உயிர்களிடம் காட்டும் பாசமும், பரிவும்கூட கொடை வழங்கலேதான் என்பதை நாம் அறிந்துகொள்ளல் வேண்டும். இது இறைவனின் குணம். மனிதன் இந்த வழியில் நிற்பதனால், இறைவனின் பேரருளைப் பெற்றவனாகின்றான். சாதாரண இயல்புகளில் இருந்து உயர்ந்து வாழ்ந்து காட்டும் பண்பு, தெய்வீகமானது என்றுதானே பெரியோர்கள் கூறுகின்றனர். தெய்வத்தன்மையான வாழ்வு, நாம் செய்யும் நல்ல காரியங்களிலும், களங்கமற்ற சிறப்பான எண்ணங்களிலும் தங்கியுள்ளது.

மனப்பயிற்சி மூலம், மனதைப் பக்குவப்படுத்த முயலவேண்டும். இது சற்று சிரமமாகத் தோன்றினாலும்கூட, சின்னச்சின்ன மனித பலவீனங்களை அறிந்து அதனைக் களைய முனையவேண்டும். எமக்குச் சிறிதாகத் தோன்றும் சின்னத் தவறுகள்கூட எங்கள் உள்ளத்து உறுதியையே, நாளா வட்டத்தில் குலைத்துவிட வல்லது என்பதை உணரவேண்டும். எல்லாமே எமக்குச் சாதகமாக அமையவேண்டும் என நாம்



எதிர்பார்க்கின்றோம். இதற்குத் தடை ஏற்பட்டதும், நாம் எந்த வழியிலாவது, இவைகளைச் சரி செய்யாது, சிறிய தவறுகள்தானே என எம்மையே சமாதானம் செய்தபடி கருமமாற்ற ஆரம்பித்து விடுகின்றோம். கடைசியில் இந்த மனப்பான்மை நம்மைக் குற்றவாளியாகவே ஆக்கிவிடவும் கூடும்.

புலன் வழி செல்வதால் எம் சிந்தையிலும் செயலிலும் என்ன திறமை வந்து விடப்போகின்றது. சுய கட்டுப்பாடு இழத்தல் மூலம் ஒருவன் தன்னையே இழக்கின்றான். என்னதான் கல்வி கற்றாலும்கூட கட்டுப்பாடு இல்லா சிந்தையாலும், செயலாலும் என்ன பிரயோசனம் வந்துவிடப் போகின்றது?

ஆற்றல், வெளிப்பாடு என்பதே புலன் அடக்கம் மூலமே பெறப்படுகின்றது. எமது ஜீவ சக்திகள் சதா அலைந்து மோதும் எண்ணங்களால் சிதறடிக்கப்படுகின்றன. நற்சிந்தனையுடன் உள்ளத்தை உரமாயும், அதே சமயம் நற்கருமங்களை ஆற்றும் திறனில் நெகிழ்ச்சித் தன்மையுடனும், சீரான, சம நோக்கு நிலையிலும் வைத்துக்கொள்ள முனையவேண்டும்.

மனோபலமும் வைராக்கியக் கொள்கைகளும் சத்திய உணர்வுடன் புறப்படவேண்டும். அடிப்படையிலே மனிதன் வாழ்வில் இப்படித்தான் வாழ வேண்டுமென ஒரு ஆழமான அத்திவாரத்தை உருவாக்க முனைதல் மூலமே இவைகள் சாத்தியமாகும்.

> மனப்பயிற்சி மூலம் மனதைப்பக்குவப்படுத்த முயலவேண்டும், இது சற்றுச் சிரமமாகத் தோன்றினாலும்கூட சின்னச் சின்ன மனிதப் பலவீனங்களை அறிந்து அதனைக் களைய முனைதல் வேண்டும், எமக்குச் சிறிதாகத் தோன்றும் சின்னத் தவறுகள்கூட எங்கள் உள்ளத்து உறுதியையே, நாளாவட்டத்தில் குலைத்துவிட வல்லது என்பதை உணரவேண்டும். பழக்கங்களே எம்மை வழி நடத்துகின்றன, இந்த வழியை நாம்தானே தீர்மானிக்கவேண்டும்.

RangaRakes Tamilnavarasam.com

விதைக்கும் விதை தரமானதாகவும் அது முளைப்பதற்கு ஏற்றதாயும் இருத்தல் அவசியம். அது முளைப்பதற்கான சூழலை உருவாக்கவேண்டும். நீர், ஒளி, காற்று இவைகள் அதற்கு அத்தியாவசியமானது. இதுபோலவே, மனம் என்கின்ற விருட்சம் செழித்து வளர வேண்டுமாயின், ஒழுக்கம், இறையுணர்வு, கட்டுப்பாடு என்கின்ற மூல மருந்துகளை நாம் பயன்படுத்துதல் சாலச் சிறந்தது அல்லவா? நல்லவைகளை மட்டும் இனங்காணல், நல்ல நூல்களைக் கற்றுக் கொள்ளுதல், சிறப்பான வார்த்தைகளையே பேசுதல், கேட்டல், சிந்தித்தலை நாம் தேடி எம் வசமாக்குதல் வேண்டும்.

பழக்கங்கள் எம்மை வழி நடத்திச் செல்கின்றன. இந்த வழியை நாம்தானே தீர்மானிக்க வேண்டும். விதைத்த விதை எதுவோ அதன் பெயர் கொண்டே விருட்சம் உருவாகும். ஒன்று இருக்கப் பிறிதொன்று உருவாகுமா? எந்தக் கருமங்கள் செய்தாலும்கூட வழங்கப்படும் தீர்ப்பு அதன் வழிதான் இருக்கும். செய்கைகளை மீறி பலா பலன்கள் அமைந்துவிடப் போவதில்லை. இயற்கை வகுத்த கட்டுப்பாடு உடைந்தால் ஆபத்துதானே. வாழ்வை எம் பக்கம் சரியானதாக அமைக்க, தெளிவான, சரியான நோக்கங்களையே நமதாக்கிக் கொள்வோம்.

மனிதப் பண்புகள், மாண்புகள் இடத்திற்கு இடம் மாறுபட்டவையல்ல. இவை உலகிற்கே பொதுவானவை. எவருமே இது விடயத்தில் விலகி வாழ முடியாது. உலகின் எந்த மூலையில் வாழும் மக்களுக்கும் அன்பும், பாசமும், நல் நெறிகளும் பொதுவான ஒன்றுதானே? வாழும் தேசங்களின் தூரங்கள் மனிதப் பிணைப்பை, களைந்து விடமுடியுமா? உலகை ஒட்டுமொத்தமாக இணைப்பது, மக்களிடையேயுள்ள பவித்திரமான, கனிவான எண்ணங்கள்தான். செல்வம், செல்வாக்குகள் எல்லாம் அடுத்தபடியானவைகளேயாகும். மாறாக, இவை குன்றினால், உலக நல்லியக்கம், நாசகாரச் சக்தி வயப்பட்டுவிடும்.



எல்லாமே மனிதப் பண்புகளில்தானே தங்கி இந்த உலகு இயங்குகின்றது. நன்மையும், தீமையும் மனித மனங்களால்தானே உருவாகி, பூமியைப் புயலாகவும், தென்றலாகவும் மாற்றி விடுகின்றது. எல்லாமே எமக்கு வேண்டும், அது அனைத்தும் மற்றவனுக்கும் வேண்டும். உனக்குக் கிடைப்பது எனக்கும் வேண்டும்.

பொது நலன் மீதான அக்கறையும் அதன் செயற்பாட்டினால் பெறும் நன்மைகளும், இறுதியில் எம்மையே வந்தடைவதைக் காணுவீர்கள். எனவே எமது பரந்துபட்ட, அன்பின் வெளிப்பாடான கருமங்களினால் சிரமங்கள்தான் தோன்றும் என எண்ணவேண்டாம்.

மனிதத்துவ மாண்பு செத்து விடவில்லை. செத்துவிட்டால் இந்த ஜெகம் அழிந்துவிடும். இதை அரணாக நின்று காவல் செய்வது யார்? வேறு யாரும் கிடையாது; நாமேதான்!

தினக்குரல் 29.10.2000

RangaRakes Tamilnavarasam.com

# முடிவு எடுத்தல்



'முடிவு எடுத்தல்' என்பது, எமது வாழ்வில், அன்றாடம் எழும் பிரச்சினைகளில் வந்து கொண்டேயிருக்கின்றது. எப்படி முடிவு எடுப்பது, என்பதில் அடையும் சஞ்சலங்களுக்கு அளவேயில்லை.

பிரச்சினைகளைத் தீர ஆராயாமை, தெளிவின்மை, தாமதமாகச் செயலாற்றும் போக்கு, பலவிதமான சிந்தனைகளால், பல்வேறு முடிவுகளால் குழம்புதல், சம்பந்தமில்லாத எல்லா விடயங்களிலும் தலையிடுதல், தெரியாத விஷயங்களில் ஈடுபடல் - இவை போன்ற காரணங்களால் சிக்கல்படுகின்றவர்கள் எந்த ஒரு முடிவுக்கும் வர சிரமப்படுவார்கள்.

இதனால் வாழ்வின் பெரும்பகுதி வீண் விரயமாவதுடன், அடுத்தவருக்கும் தீராத தலைவலியை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு தனிமனிதனின் முடிவு அவனை மட்டுமா பாதிக்கின்றது? இல்லையில்லை! அவனைச் சார்ந்தவர்களையும், ஏன் சிலவேளை ஒன்றுக்குமே சம்பந்தமில்லாதவர்களையுமே குழப்பியடித்து விடுகின்றது. நல்ல முடிவுகளை எடுப்பவர்களுக்கு இந்தப் பிரச்சினைகள் எழுவதேயில்லை.



பொதுவாக தீர்மானம் செய்து கொள்வதில் பலருக்குமேயுள்ள குறைபாடு என்னவெனில், தங்களது திறமைகளைக் கண்டு கொள்ளாமையேயாகும். அத்துடன் சிலர் விடயத்தில் ஆண்கள், தங்களைப் பற்றிய வெறும் கற்பனைப் பெருமிதத்தினை உண்டாக்கிக் கொள்பவர்களாகவும் இருக்கின்றனர். ஒரு சிறிய விஷயத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டு, பகட்டாக ஆரவாரம் செய்வதனால், அவர்களது தீர்மானங்களை, அவர்களே ரசித்து மெச்சிக் கொள்ளுவார்கள். இன்னும் சிலர் பிறருடைய விருப்பு, வெறுப்புக்களைக் கேட்டு, அவர்கள் கொள்கைகளுக்கு ஆட்பட்டு அத்துடன், தமது எண்ணங்களையும் அதனுடன் இணைத்து குழம்பிப்போய் விடுவார்கள்.

விசுவாசமான நண்பர்கள், கற்றறிந்த பெரியோர், நாம் கேட்கும் விடயங்களில் அனுபவம் மிக்கவர்கள் - இவர்களது ஆலோசனைகளைக் கேட்டறிவதில் தவறில்லை. ஆனால் மனிதன் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைத்த பின்னரே, பிறரை அணுகமுனைதல் வேண்டும்.

தன் திறமையில், தன் முயற்சியில், தன் இதய சுத்தியில், முதலில் நம்பிக்கை வைக்கவேண்டும். கல்வியறிவும், பொதுத்துறையில் திறமையும் கொண்டவர்கூட, சின்னச் சின்ன விஷயங்களுக்குக்கூட முடிவு எடுக்கத் திணறி யார், யாரிடமோ போய்ச் சரணடைகின்றனர். காலையில் என்ன உணவு உண்ணலாம். பஸ்ஸில் போகலாமா, புகையிரதத்தில் போகலாமா?

> தனது திறமையில், தனது முயற்சியில், **தனது** இதய **சுத்தியில்** நம்பிக்கை வைத்தல் வேண்டும், தன்னை நம்பாமல், பிறரை மட்டும் நம்புபவர்களால் சிறந்த முடிவுகளை ஒருபோதும் எடுக்கமுடியாது, பிறர் உதவி ஆலோசனைகளை பெறுவது தவறில்லை. ஆனால் எதிலுமே சந்தேகம், கவனம், சஞ்சலம் இவைகளை நெஞ்சிலே பாயவிட்டால், முடிவு எடுத்தலில் முட்டுக்கட்டை ஏற்படும். செயல்களைத் துணிச்சலுடன் எதிர்நோக்கத் தயாராகுங்கள்.

RangaRakes
Tamilnavarasam.com

என்ன உடை உடுத்தலாம்? என்பதில்கூட அதிகம் யோசிக்கிறவர்களும் இருக்கிறார்கள்.

பெரிய காரியங்களைச் செய்ய முற்படும்போது, தெளிவு பெறுதல் என்பது இலேசுப்பட்ட காரியமல்ல என அச்சப்படுதல் இயல்பே. பலம் பொருந்தியவர்கள் கூட ஐயமும், அச்சமும் அடைந்தால் எவ்வளவு ஆபத்து தெரியுமா? எனவே தெளிந்த மனோநிலையில் திடமான முடிவு எடுக்கும் ஆற்றலை வளர்க்கவேண்டும். முடியும் என எண்ணியே, முயல ஆரம்பித்தலே ஆரோக்கியமாகும்.

அண்மையில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றைப் பார்த்தேன். ஒரு வயதேயுடைய ஒரு குழந்தையைத் தந்தை நீச்சல் குளத்தில் விட்டு விடுகின்றார். சற்று நேரத்தில் அக்குழந்தை தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, மிக அழகாக நீச்சலடிக்கத் தொடங்கிவிட்டது. அந்தக் குழந்தை தன்னைத்தானே நம்பியதும் துணிச்சல் வந்துவிட்டது.

நாம் அதிகமாகப் படிக்க, படிக்க, சம்பவங்கள், செய்திகளைப் பார்க்க, கேட்க சந்தேகங்களே வலுத்தவண்ணமிருக்கின்றன. கல்வியும் அனுபவங்களும் சந்தேகங்களையும், அச்சங்களையும் நீக்குவதற்கே பயன்படல் வேண்டும். பலதரப்பட்ட காரியங்கள் தொடர்பான ஆலோசனைகளை, செயற்பாடுகளை எந்த வடிவிலும் அறிந்து கொள்ளலாம். ஆயினும் எடுக்கின்ற முடிவுகள் ஒன்றாகவும், வலுவானதாகவும் அமைதல் வேண்டும். உடன் பயன் தராத செயல்களை நிதானமுடன் செய்து கொள்ளலாம். முடிவு எடுத்த பின்னர் செயல் தீவிரமாக இருக்கவேண்டும் என்பதில் குறியாக இருத்தல் அவசியமானதாகும். செயலில் தொய்வு ஏற்படும்போதுதான் உற்சாகம் குன்றி மேலே அதனைக் கொண்டு செல்லவிடாது மனம் தடுக்கின்றது. இந்த நிலைக்கு ஆளாகாது தப்பிப்பதில்தான் மனிதனின் விசேட திறமைகளே இருக்கின்றது.



இது மனதின் ஸ்திரத்தில் தங்கியுள்ளது. இதை ஒரு பயிற்சியாக நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஓரிரு செயலில் நாம் ஈடுபட்டு தெளிவும், வெற்றியும் கண்டுவிட்டால், அப்புறம் நம் மனம், ஒருபோதும் கண்டபடி அலையமாட்டாது. எம் கட்டளைக்கு அது கட்டுப்படும்.

செயலில் இறங்கும்போது ஆரம்பத்தில் ஏற்படும் கணப்பொழுது சலனங்களைப் பொருட்படுத்தாதுவிட்டால், அப்புறம் எது வந்தாலும் கருமங்களிலேயே எம்புலன் செல்லும். இதனை நாம் எமது நெஞ்சில் நிலையாக இருத்திக்கொள்ள வேண்டும்.

செயல் உருப்பெறும் போது ஏற்படும் ஆனந்தம், நிறைவு என்பது வார்த்தைகளில் கூற முடியாது... எமது முயற்சியில் நாம் பெறும் பயன், பிறர் உதவியுடன் பெறுவதால் ஏற்படும் மகிழ்ச்சியை விடப் பன்மடங்கானதே என்பதை அறிந்துகொள்வோம். கூடியவரை நாமே எமது சொந்த அலுவல்களைச் சொந்தப் புத்தியில் செய்து கொள்ளப் பழகுவோம். எங்கள் சக்தியில், திறமையில் நாமே அவ நம்பிக்கை கொண்டுவிட்டால், பிறர் எம்மை என்ன நிலையில் நோக்குவார்கள் என்பதனைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். எமது சக்திக்கு எட்டியபடி, எமக்குள்ளேயே எமது செயல்களை ஆய்வு செய்யப் பழகுவோம். பிறரிடமும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். கூடியவரை சாதாரண விஷயங்களில் இருந்து முடிவுகளை நீங்களே எடுக்க முயன்று பாருங்கள். ஆலோசனை பெறுதல் தவறு அல்ல. ஆனால், முடிவு எடுத்த பின்னர் செயலாற்றுகை ஆரம்பித்த பின்னர், எந்தவித சஞ்சலம், சலனம், சந்தேகம் எதனையும் உங்கள் நெஞ்சினில் பாய அனுமதிக்காதீர்கள். இதனால் அடைவது - துணிச்சலான வெற்றிக்கான வழிதான் என்பதில் சந்தேகம் என்ன இருக்கின்றது?

தினக்குரல் 12.11.2000

RangaRakes Tamilnavarasam.com

# வெற்றி பெற வழி சமைப்போம்



ஒருவர் அடைந்த வெற்றிகளைப் பார்த்ததுமே, அது வெறும் குருட்டு அதிர்ஷ்டத்தால் விளைந்தது எனச் சிலவேளை கூறிவிடுகின்றோம். மனதில் எழுந்த மாத்திரத்தே, ஆராயாது கூறிவிடுவது எமது அறியாமையாக இருக்கலாம், சிலவேளை பொறாமையாகக் கூட இருக்கலாம். ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொருவர் வெற்றிக்குப் பின்னாலும், வெற்றி பெற்றோரின், பிரத்தியேக சக்தி இருப்பது புலனாகும். ஏதோ ஒரு வகையில் வெற்றி வாய்ப்புக்களை அள்ளிக் குவிப்பவர்கள், ஏனையவர்கள் செய்து வருகின்ற செய்கையினின்றும் மாறுபாடாகவும், அதே சமயம் குறிக்கோளில் குறியானவர்களாகவும், தன் முனைப்புடன் செயல் புரிபவர்களாகவே இருக்கின்றனர். எல்லாச் சிறப்பான செய்கைகளையுமே குருட்டு அதிர்ஷ்டம் என்று கூறிவிட முடியுமா என்ன?

திறமைமிக்க மனோதிடம், ஆளுமைப் பண்பு, தனித்துவப் பண்பை, உள்ளபடியே காட்டும் செயல் - இவற்றின் மூலம் வெற்றிகளைப் பெறும் கலையை, அறிந்து கொண்டவர்கள், சாதுர்யமாகவும் மெச்சும் வண்ணமும் அடைந்துவிடுகின்றனர். உலகத் தலைவர்கள், மாபெரும் கலைஞர்கள், மக்கள் போற்றும்



ஆன்மீகவாதிகள் போன்றோரின் வாழ்வு முறையைக் கூர்ந்து படித்தால் இவை புலனாகும். ஆனால் இவர்கள் போலவே ஏன் நாம் வரமுடியாதா எனச் சந்தேகத்துடன் அங்கலாய்க்கின்றனர். உண்மையில், அவர்கள் பின்பற்றி வந்த வாழ்வியல் ஒழுங்கு முறைமை, ஆர்வம், பற்றுதல், இலட்சிய வேட்கை பற்றி நாம் தெளிவாக அறிந்துணராமல், அவர்போல் ஏன் வரமுடியாது என்று மட்டும் நினைப்பதால் அர்த்தமில்லை.

மனித சக்தி மகத்தானது; சொல்லில் இயம்புதற்கரியது. நம்முடையை ஆற்றலை வெளிப்படுத்துகின்ற கலையை அறிந்துகொண்டால் வெற்றி நிச்சயமானதே.

ஆயினும், சுய கட்டுப்பாடு, ஆளுமையை நாம்தான் வளர்த்து வர வேண்டும். இன்னும் ஒருவர் வந்து உதவுவர் என்பது இரண்டாம் பட்ச அம்சமேயாகும். ஒருவரை ஊக்குவித்தல் மட்டுமே செய்யமுடியும். ஆற்றலை வளர்த்தலும், சாதனை செய்வதை நோக்கிப் பயணிப்பதும் எமக்குரிய கடமையாகவே கருதவேண்டும். சிறிய பொறியில் இருந்து பெரு நெருப்பு உருவாகுதல் போலவே, உருப்பெறும் ஆற்றல் வெளிப்பாடு, சாதனையாக மாறும்.

பொதுவாக தனிமனிதனின் ஆற்றல்கள், அவனுக்குள்ளேயே வளர்ந்து வரவேண்டும். ஒழுக்கம், கட்டுப்பாட்டு எல்லைகளை அறிந்து அதன் பிரகாரம் தம்மைப் பூரணப்படுத்த முனைய வேண்டும். வரையறை மீறிய எச்செயலும், வெற்றி வாய்ப்பினை அளிக்காது. ஒழுக்க

திறமைமிக்க மனோதிடம், ஆளுமைப் பண்பு, தனித்துவப்பண்பை உள்ளபடியே காட்டும் பண்பு, ஆர்வம், இலட்சிய வேட்கை, வாழ்வியல் ஒழுங்கு முறைமை போன்றவைகளால் 'முன்னேறியவர்கள்' பற்றி சரியாகப் புரிந்துகொள்ளாமல், வெறுமனே நாம் அவர்களைப்போல் ஏன் வரமுடியவில்லை என நினைப்பது அர்த்தமற்ற ஒன்றாகும். போராடாமல், கஷ்டப்படாமல், வெற்றிகள் சும்மா கிட்டுமா?

RangaRakes Tamilnavarasam.com

கட்டுப்பாடுகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தால், ஏதோ ஒரு வழியில் புதிய திருப்பமாக நல்லவழி நிச்சயம் பிறக்கும்.

எவருமே எள்ளி நகையாடும் வண்ணம் மனிதன் படைக்கப்படவில்லை. எமது அறியாமையினால், பிறருக்கு நாம் பிழையான தீர்ப்புக்களைக் கூற, அதற்குத் தகுந்தாற்போல், ஆதாரங்களையும் சோடிக்கின்றோம். எளிமையாகத் தோற்றம் கொண்டவர்கள் தாழ்ந்தோரில்லை. அவ்வண்ணமே வெளிப்பார்வைக்கு செயற்கைத் தன்மையாக பெரியவனாகத் தன்னைக் காட்டிக் கொண்டவன் உயர்ந்தவனும் ஆகான். நாம் பார்க்கும் பார்வை எச்சமயத்திலும் சரியாக இருப்பதுமில்லை.

எனக்குத் தெரிந்த நண்பர் கூறிய தகவல் இது. தம்முடன் ஒன்றாகப் படித்த நண்பர் ஒருவர், கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தான். வகுப்பில் சக மாணவர்கள் பலரும் அவனைக் கேலி பேசினர். அவனோ மிகவும் அமைதியானவன். கல்வியில் நாட்டமின்றி இருந்தபோதிலும் ஒழுக்கத்தில் சிறந்தவன். இவனிடம் உள்ள சிறப்பு என்னவெனில் குறித்த நேரத்தில் பாடசாலைக்கு வந்துவிடுவான். பாடசாலைக்கு லீவு போடுவது என்பது கிடையவே கிடையாது. எச்சந்தர்ப்பத்திலும், மழையோ, காற்றோ பாடசாலைக்கு ஆஜராகிவிடுவான். இது அவனது இயல்பான குணாம்சமாகும். பாடசாலையில் ஒரு தடவை ஆண்டுவிழா நடைபெற்றது. பாடசாலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பரிசில்களும், பாராட்டுதல்களும் அளிக்கப்பட்டன. அப்போது இந்த மாணவனைச் சக தோழர்கள் கேலியுடன் நோக்கிப் பார்த்தனர். அப்போது திடீரென கல்லூரி அதிபர் ஒரு அறிவித்தல் கொடுத்தார். இந்த ஆண்டின் சிறந்த பண்புள்ள ஒழுக்கமிக்கோருக்கான பரிசிலும் கொடுப்பதாகத் தெரிவித்து, அதற்கான காரணத்தையும் கூறினார். நேரம் தவறாது பாடசாலைக்கு வருகை தருவதுடன் எவருடனும், பழகும் விதத்தில் உள்ள குணாம்சங்களை விதந்துரைத்து, அவனை அழைத்து பிரதம



கல்வி அதிகாரி மூலம் பரிசில் பெற அழைத்தார். அங்கு எல்லோரும் மௌனமாகினர். இவர் விடயத்தில் பின்னர் ஆச்சரியம் கலந்த உண்மை. பல ஆண்டுகளின் பின் தான் தெரியவந்தது.

தலைநகரின் மாபெரும் வர்த்தகராக அந்த மாணவர் உருவாகியிருந்தார். சமூக நலப் பணிகளிலும் அவரே முன்னின்று உழைத்தார். அத்துடன் கல்வித்துறைக்கும் பெரும் பங்காற்றி பெயரும், பெறற்கரிய பேறுகள் பலவும் பெற்றார். அவரது இந்த வெற்றிக்கு என்ன காரணம் என நான் சொல்லாமலே உங்களுக்குப் புரியும். குறித்த நேரத்திற்குக் கடமைக்குச் செல்லும் மனப்பாங்கு, ஏனையோரின் கேலிச் சொற்களைச் செவி மடுக்காமை, தமக்கேயுள்ள ஒழுக்கத்தின் பேரில் உள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையும், அதன்படி ஒழுகி வந்தமையுமே இவரது இந்த வெற்றிக்கு மூல காரணங்களாகும். கல்வியில் தான் பின் தங்கியுள்ளது பற்றிய குறைபாட்டினைக் கருத்தில் கொள்ளாது, தமக்குரிய இதர திறமைகளை வளர்த்துக் கொண்டமையே இவரது வெற்றியின் இரகசியமாகும்.

எல்லோருக்குமே சிற்சில குறைபாடுகள் இருந்தாலும்கூட, தமக்கு விருப்பமான துறையினைத் தேர்வு செய்து கொள்ளவேண்டும். பிடிக்காத - மூளையில் செல்லாத கருமங்களுக்காக, மூளையை உடைக்க வேண்டிய அவசியமில்லை. இந்த விரும்பாத செயல் எமது ஆற்றலை முடக்கிவிடும். தவிர சவாலாகச் சில கருமங்களையும் ஆற்ற வேண்டியுள்ளது. அதற்கு நாம் அடிப்படையான நோக்கங்கள், கருமங்களில் தெளிவுடன் இருக்கவேண்டும். அப்படியாயின்தான் சவால்களைச் சமாளிக்கமுடியும்.

அங்கவீனர்களாக இருப்போர்கூட தங்கள் ஆற்றல்களை, ஆர்வத்துடன் வெளிப்படுத்தி வருவதனை நீங்கள் அறிவீர்கள். ஒரு உறுப்பு உடலில் செயல் இழந்திருந்தாலும்கூட, ஏனைய தம் உறுப்புக்களைக் கூர்மையாகப் பயன்படுத்தி, தங்கள் திறமையை

RangaRakes Tamilnavarasam.com

மிகப் பிரமிக்கும் வண்ணம் வெளிப்படுத்துகின்றனர். கண் இழந்தவர்கள்கூட, பல்கலைக்கழக பட்டதாரிகளாகவும், பட்ட மேல்படிப்பு படிப்பவர்களாகவும் இருப்பதை நாம் அறிவோம்.

இப்படியிருக்க, தேக ஆரோக்கியமுள்ளவர்கள் சும்மா செயலற்று இருப்பது சரியாகுமா? கொஞ்சம் சிந்தித்தால் எமது பலம் எத்தகையது என உணரலாம். மனதை எந்த வேளையிலும் துடிப்புள்ளதாக வைத்துக்கொள்வதன் மூலமே எதையாவது செய்துவிட வேண்டும் என்கிற ஆர்வம் ஏற்பட வழிபிறக்கும்.

தவிர, சிலருக்கு சோம்பித்திரிதல், உறங்குதல் இனிய பொழுதுபோக்கு ஆகிவிட்டது. இதனால் படும் சுமைகளைக் காலம் அவர்களுக்கும் போதித்துவிட்டே செல்லும்.

உறுதியை உள் மனதுள் செலுத்து.

அறிவு இருக்கும்வரை அச்சமின்றிச் செயல்படு. உடலும், உள்ளமும் முழுமையாக இறைவன் படைத்தது.

விரைந்து செயல்படுக; வெற்றி பெறுக!

தினக்குரல் 19.11.2000



# முதுமை ஆற்றாமையல்ல



முதுமையுற்றதும் பலர் முடங்கிப் போகின்றார்கள், அல்லாது விடின் முடக்கி வைக்கப்படுகின்றார்கள். முதுமை முடங்கி விடுவதற்கல்ல. இந்தச் சமூகத்தை மேலும் நெம்புகோலாக நிமிர்த்துவதற்காக.

முதுமை ஒரு ஆற்றாமையுமல்ல. முதுமை ஒரு இயற்கை நிகழ்வு. இதில் வருத்தப்படுவதற்கு ஒன்றும் இல்லை. முதுமை ஆற்றாமை, தள்ளாமையாகவே கணிக்கப்பட்டுவிட்டது. சமூகம் நெகிழ்வுற்று இந்த நிலையைத் தடுக்கவேண்டும். நோயுற்றுப் படுப்பது என்பது வேறு. ஆனால் முதியவர்களைக் கட்டிப் போடுவது போல் நடாத்துவதென்பது ஒப்புக்கொள்ள முடியாதவொன்று. மிகவும் கௌரவத்துடனும், நல்ல நடத்தையுடனும் வாழ்ந்தவர்களும் கூட, ஏன் கல்வி கேள்விகளில் ஞானமுற்று இருந்தவர்கள் கூட நாமே ஆச்சரியப்படும் வண்ணம், அநாதைகள் போல் முடங்கி, அடங்கி நொடிந்து கேட்பாரற்றுக் கிடப்பதை நாம் கண்டுகொண்டுதானிருக்கின்றோம்.

வயது முதிர்வு அடைவதைக் காட்டிலும், மனம் முதுமையடைந்து அல்லலப்படுவது ஆபத்தானது. அட இவரா

RangaRakes Tamilnavarasam.com

இப்படி, இவர் நடந்து வரும்போதே, நாம் எதிரே வரவே பயப்படுவோமே! இவருக்கு என்ன நடந்துவிட்டது எனப் பலர், முதிய சிலர் பற்றி ஆதங்கத்துடன் கவலையுடன் கதைப்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். முதுமை என்பது புதிதான ஒன்றா?

அல்லாது விடின் வரக்கூடாத ஒரு விஷயமா என்ன? என்ன கோளாறு இந்தச் சமூகத்திற்கு? முதுமை என்பதே ஒரு நோய் எனப்பலரும் முடிவு கட்டிவிட்டார்கள்.

உழைக்கும் காலத்தில் அவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய செயல்களையும், தியாகங்களையும் எப்படி மறந்துபோய் விடுகின்றார்கள்? சில வீடுகளில் நீங்கள் அவதானித்திருப்பீர்கள், கணவனை விட மனைவி வயது மட்டும் குறைவாக இருப்பார். ஆயினும் அவர்கூடச் சற்று வயது கூடிய கணவனை இழிவுபடுத்தி, உதாசீனம் செய்வார். 'சும்மா தொண தொணக்காதீர்கள். வயசு வந்தால் சும்மா வாயை மூடிக்கொண்டு கிடக்க வேண்டியதுதானே' என்பார்.

சும்மா இருப்பது என்பது லேசுப்பட்ட காரியமா என்ன? சதா ஓடி ஆடிய கை, கால்களைக் கட்டிப் போடுதல் ஆகுமா? சரி, அவர்கள் தான் ஏதோ, தெரிந்தும் தெரியாமல் பேசினால் கண்டு கொள்ளாமல் இருந்தால் என்ன என்று கருதுவதில்லை. அவர்களால் உச்சரிக்கப்படும், ஆகாத வார்த்தைகள் கூர்மையாகச் செவிக்கு ஏறும். உறைக்கும்! அப்புறம் வயது வந்தவர்களுக்குச் சதா மன உளைச்சல் இன்றி வேறென்ன?

> மனம் பலவீனப் படும்போது தள்ளாமை வந்துவிடுகின்றது. இளம் வயதில் இயங்காத சோம்பேறியும், முதுமை வயப்பட்டவனேயாவான். வயதைக் காட்டி மட்டும் முதுமை எனக் கூறவிடமுடியாது. இளவயதிலேயே முடங்கி இருப்பவனைவிட, முதுமையில் இயங்குபவன் இளைஞன் போன்றவனே. எல்லோருமே நீண்டகாலம், வாழ ஆசைப்படுகின்றார்கள். ஆனால் கிழவர்களாக வர விரும்புவதில்லை.



எங்கோ வாசித்தது ஞாபகத்துக்கு வருகிறது. எல்லோருமே நீண்ட காலத்திற்கு வாழ ஆசைப்படுகிறார்கள், ஆனால் கிழவர்களாக வர விரும்புவதில்லை. செயல்களைச் சிந்தனைகளை இளமையாக வைத்துக் கொள்ளும்வரை, முதுமை நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது.

மனம் பலவீனப்படும்போது தள்ளாமை வந்துவிடுகிறது. இளம் வயதில் இயங்காத சோம்பேறியும் முதுமை வயப்பட்டவனேயாவான்.

எனவே வெறும் வயதைக் காரணம் காட்டி முதுமை பற்றிப் பேச முடியாது.

இளவயதில், வீட்டிற்கும், நாட்டிற்கும், ஏன் தனக்கும் கூட ஆகாதவனால் என்ன பயன் வந்துவிடப் போகிறது.

செயல்தான் முக்கியமானது. எந்த வயதிலும் செயல் வீரனாக திகழமுடியும். வயது முதிர்ந்தவர்கள்கூட இளைஞர்போல் கரும மாற்றுவதை நீங்கள் பார்ப்பதில்லையா?

முதுமை அனுபவஞானத்தை உண்டாக்குவதனால், இள வயதுள்ளவர்களுக்கு, பெரியவர்களின் ஆலோசனை தேவைப்பட்டேயாக வேண்டும். இளையவர்களாலேயே எல்லாம் முடியுமென்றால் அனுபவ ஞானம் என்பதே அர்த்தமில்லாத பேச்சாகிவிடுமே. இன்று நாம் உலகில் பார்த்துக் கொண்டிருக்கின்ற பெரும் தலைவர்கள் பெரும்பாலும் முதிர்ந்த வயதுக்காரர்கள்தான்.

கால ஓட்டத்திற்கேற்றவாறு மனிதர்கள் புதுப்புது விஷயங்களை கற்றுக்கொண்டு வருகிறார்கள். நாம் தினம் தினம் படிக்கின்ற அத்தனை விடயங்களுக்குமே ஆதாரம் எல்லாமே, முன்பு சொல்லி வைத்த உண்மைகளின் ஆதாரங்களேயாகும். இவைகளை அனுபவம், அறிவுகூடிய பெரியவர்கள்தான் சொல்லித் தந்தார்கள். இன்னமும் சொல்லிக்கொடுத்தும் வருகின்றார்கள்.

RangaRakes Tamilnavarasam.com

கலை, கலாசாரம், மதம், அரசியல் எதுவுமே படிப்படியாக இவர்கள் போதித்து எம்மால் அறியப்பட்டவையாகும்.

ஆரம்ப காலத்தில், குடும்ப நலன் கருதி சற்றுக் கண்டிப்பாக ஒருவர் இருந்திருக்கலாம். அநேக வீடுகளில், இந்த பழைய கதைகளை மனதில் வைத்துப் பழி தீர்ப்பது போல், பிள்ளைகள் நடந்து கொள்கின்றார்கள். தங்கள் முன்னேற்றத்திற்காக, அவர் எத்தகைய தியாகங்களைச் செய்திருப்பார் என ஒரு கணமாவது சிந்திக்கத் தயாராக இருப்பதில்லை. உண்மையில் பெற்றோர் சிற்சில தவறுகள் செய்திருக்கலாம். அதற்காக அவர் இயலாமையில் இருக்கும்போது, பழைய கதைகளைத் தூக்கிப் பிடித்துப் பேசி, மனசை நோகடித்து வதைக்கலாமா?

அவர்கள் கட்டிய வீட்டிலேயே, அவர்கள் சிறை வைக்கப்படுகின்றார்கள். இது என்ன கொடுமை.

ஒரு பெரியவர் ஒருவர் தான் கட்டிய வீட்டிலேயே மின் விசிறியைப் போட்டுவிட்டு படுத்திருந்தார். அங்கு வந்த அவரது மருமகள், உமக்கு இப்போ கட்டாயம் மின் விசிறி வேண்டுமா என்ன? என்று கேலியாகக் கூறி அதை உடன் அணைத்துவிட்டுச் சென்றார். இத்தனைக்கும் அவர் தன் இளைப்பாற்றுகை சம்பளத்திலேயே வாழ்பவர். பெருத்த செல்வாக்குடன் வாழ்ந்தவர். அவரது தள்ளாமை இவர் மருமகளை இப்படிப் பேச வைத்தது. மனச் சாட்சியற்ற எத்தனையோ பேர் இப்படித்தான் நடந்து கொள்கின்றார்கள். இது நான் கண்ட உண்மைச் சம்பவம்தான்.

நாம் நடந்துகொள்ளும் விதங்களால்தான், முதியவர்களின் ஆரோக்கியமே தங்கியுள்ளது. உதாசீனமான போக்கு, குத்தலான பேச்சு, உடல் ஆரோக்கியம் பற்றிய பாராமுகம் எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களைப் பாரமாக அவர்கள் முன்பாகவே எடுத்துரைப்பது இத்தகைய நடத்தைகள், அவர்கள் மூச்சை உடன் நிறுத்தி அவர்களை மயானத்திற்கே இட்டுச் சென்றுவிடும்.



இவர்களின் மனக்கொதிப்பில், அந்த வீட்டில் உள்ளவர்கள் நிம்மதி காணவும் முடியாது.

செய்தவர் மனம் குன்றினால், எந்த நல்வினையை நாம் செய்த போதும், அது சித்திக்கப் போவதில்லை. மிகவும் முன்னேறிய மேற்கத்திய நாடுகள்தான் இது விடயத்தில் மிக மோசமாக நடந்துகொள்கின்றன.

முதுமையின் ஏக்கங்கள், இளமைக்குத் தெரிவதில்லையே ஏன்? மேலை நாடுகளில் பிள்ளைகள், பெற்றோரை வயோதிபர் இல்லங்களில் கொண்டு சேர்ப்பதும், வருடத்தில் பெற்றோர் தினங்களில் மட்டும் போய் வாழ்த்துக் கூறுவதும், வேடிக்கையான வேதனைதான். நேரே போக நேரம் இல்லையென்று கூறி, வெறும் வாழ்த்து மட்டையை மட்டும் தபாலில் அனுப்பவர்கள்கூட இருக்கின்றார்கள். தனக்கும் இந்த நிலைவரும் என அந்தப் பிள்ளைகள் நினைப்பதில்லை.

நாம் இளவயதிலேயே, நமது பிள்ளைகளும் பெரியவர்களை மதிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்கள் செய்த பணி, தியாகங்களை எடுத்துச் சொல்லி வளர்க்கவேண்டும். பெற்றோர் தினம், முதியோர் தினம் என எமக்கு அறிவுறுத்தத்தானே உலகம் பல விழாக்களை எடுத்து வருகின்றது.

நாகரீக உலகில் அநாகரீகமாக முதியவர்கள் விடயத்தில் நடந்து கொள்பவர்களைப் பார்க்கும்போது அருவருப்புத் தோன்றுகின்றது. மனித நேயமில்லா பண்பினால், உலக முன்னேற்றம் பற்றிப் பேச முடியுமா? அன்பில்லா இதயங்கள் உள்ள அவனியில் ஜீவிதம் செய்தலே இதயத்தை உறுத்தும் செயலாகும்.

முதுமைக்கு முன்னுரிமை கொடுத்தால்தான், அவர்கள் ஆசியும் கிடைத்து அவனி சிறக்கும்.

RangaRakes
Tamilnavarasam.com



# அச்சமின்மையும் அறிவார்ந்த செயற்பாடும்

**வ**ரப்போகும் மரணத்தை எண்ணி இருக்கின்ற வினாடிகளில் பலர் மரணித்துக் கொண்டிருக்கின்றார்கள். மரணம் என்பது எப்பொழுதும் வரும் ஒரு சாதாரண நிகழ்ச்சிதான். எனினும் இதனை ஜீரணித்துக்கொள்ள இந்த மனம் ஒப்புக் கொள்கிறது இல்லை. பலாத்காரமாக ஆண்டவன் உயிரைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு போவதுபோன்ற ஒரு கோபம், அவனிடத்தில் ஏற்பட்டு வருகின்றது. இருக்கின்ற கடைசி வினாடிவரை துணிச்சலுடனும், மகிழ்ச்சியுடனும் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கவேண்டும். இது எல்லோருக்குமே முடிகின்ற காரியமா என்ன? நடக்கிறது நடக்கும் என்றால் வேதாந்தமா பேசுகிறாய் என்பார்கள்.

இயற்கையில் இருந்து விடுபட்டு வாழ முடியாது. மரணம்கூட அப்படித்தான். சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால், இதில் பயப்பட ஒன்றுமில்லை என்று புரிந்து கொள்ளலாம். ஆனால் இந்த மனோபக்குவம் எல்லோருக்குமே வந்துவிடுமா என்ன?

எல்லோருமே ஏதோ ஒரு சமயத்தில் நீதியைப் பேசிவிட்டு அதற்கு முரணாக, எம்மையும் மீறிச் செயல்படுகின்றோம். சங்கடப்படுத்திக் கொண்டிருக்கின்ற சாவை, அறிந்தும்



சாவதானமாகத் தப்பும், தவறும் தினமும் செய்து கொண்டுதானிருக்கின்றோம்.

எம்மால் பிறர் செய்யும் துன்பங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அவை அற்பமாக இருந்தாலும்கூட எமது வெறுப்புணர்ச்சி பன்மடங்காகி பழிதீர்க்க முயல்கின்றோம். இவைகளைத் தாண்டி, சிக்கல் இன்றி வாழ்க்கையை மகிழ்வுடன் கழித்தல் என்பதே ஒரு பெரும் சாவலாகிவிட்டது.

அச்சம் நீங்கிய திறந்த மனது மகிழ்வான வாழ்விற்கு முதல் படியாகும். பாரமின்றி நெஞ்சை வைத்துக் கொள்ளவேண்டும். வீணான நினைவுகளால் அனுதினம் அல்லல்படுகின்றோம். நினைவுகளை அழிக்க முடிவதில்லை. துன்ப நினைவுகளும், வேண்டாத கற்பனைகளும் மட்டுமே ஆழமாகப் பதிந்து போக, சந்தோஷங்களும், நற்சிந்தனைகளும் உடன் தொட்டு மறைவதுமேன்? நல்ல விடயங்களை மட்டும் இதயத்தில் பூட்டி வைத்து, தேவையற்ற குப்பைகளைத் துரத்தி பிடிப்பது எங்ஙனம்?

கேட்பதை, பேசுவதை, பிறரிடம் பழகுவதை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டாலே போதும். தொடர்ந்தும் நாம் தூய்மையற்ற பேச்சுக்களைக் கேட்டாலோ, அந்த பாஷைகள் எம்மை அறியாமலேயே தொற்றிக் கொண்டுவிடும். இப்படியேதான் பிறரிடம் பழகுதலுமாகும். நல்லவர்கள், பெரியோர்களிடம் மட்டுமே பழகவேண்டும் என்று சிறு வயதிலிருந்தே எமக்குச் சொல்லித் தந்திருக்கின்றார்கள். அப்படியாயின் ஏனையோரை ஒதுக்கிவிடுவதா என்கின்ற கேள்வியும் எழுகின்றது.

**உலகினை உய்விக்க வந்த தீர்க்கதரிசிகள் அச்ச உணர்வின்றி உபதேசித்தனர். ஆனால் பாவிகள் இவர்களைக் கண்டு பயந்தனர். ஒளி வந்தால் இருள் விலகுதல் இயல்பு. நியாயங்களைக் காணநேர்ந்தால் அநீதி அரண்டுவிடும். போலிவேடம் புரண்டுவிடும். உண்மையாக வாழ்பவனை அச்சம் ஆக்கிரமிக்காது.**

RangaRakes

Tamilnavarasam.com

ஒதுக்கப்பட்டவர்கள் என்று ஒருவருமேயில்லை. எத்தகைய குணாம்சங்களைக் கொண்டவர்களையும் சமூகம் ஒதுக்குவது தகாது. அவர்களுக்குள்ள பிரச்சனைகளை, அதன் தாக்கத்தை நாம் தெரிந்துகொள்ள முயலவேண்டும். எல்லோரையுமே சமூகத்திற்கு உகந்தவர்களாக மாற்றுவதே, சமூகத்திற்கு உள்ள முதல் பணியாக இருந்தால், தேவையற்ற ஆத்மாக்கள் என எவருமே இருக்கமாட்டார்கள். குற்றமிழைத்தவர்களை ஒதுக்கி வைத்துவிடுவதால், அவர்கள் மட்டுமல்ல, சமூகமும் ஒதுங்கி விடுகின்றது. சமூகத்திற்கு என ஒரு பொறுப்பு உள்ளது அது வெறுப்பினை உமிழ்வது அல்ல. அரவணைத்துச் சமூகத்தில், ஏற்றவர்களாக, ஏற்றுக்கொள்ள வைக்க முயற்சி செய்தலே உகந்ததாகும்.

எல்லாமே நிலையானது என்கின்ற தப்பான எண்ணம் கொண்டிருப்பவர்கள், செய்கின்ற தப்புகளுக்குத் தீனி போடுபவர்கள்தான். இந்த குறுகிய வட்டத்திலிருந்து வெளிவர பலர் விரும்புவதுமில்லை. இவர்கள் பொய்யான இந்த முகமூடி வாழ்வு உடைபடும் என அச்சப்பட்டுக் கொள்பவர்கள். திறந்த மனதுடன் செயல்படுபவனுக்கு, அச்சம் விலகிய எதனையும் ஏற்கின்ற துணிவும், சத்தியத்தின் சேவைகளை முன்னெடுத்துச் செல்லும் பக்குவநிலையும் தானே வந்து விடுகின்றது. இவர்கள் இயற்கையின் பாதிப்புக்களை ஏற்பார்கள். பொய்யான கற்பனை வாதங்களைக் கண்டிப்பார்கள். எவரையுமே சமமாக நோக்குவார்கள். பாவங்களை எதிர்க்க - பொசுக்கப் பயம் கொள்ள மாட்டார்கள்.

மனிதர்கள் அசுத்தப்படாமல் வாழ உலகம் எத்தனை வழிவகைகளைச் சொல்லிக்கொடுத்து வருகின்றது. வழிபாடுகள் என்றும், அனுஷ்டானங்கள், கிரியைகள் என்றும் மனப்பக்குவத்திற்காக வழி, வழியாக பல நூற்றாண்டுகளாக ஓதிக் கொடுத்தும்கூட, இவை வெறும் ஆசாரத்துடன் நின்று விடுகின்றன. பொய்மை, நீதியற்ற வாழ்விற்கு முடிவு எடு, இந்த அநீதியான இயல்பிற்கு மட்டும் அச்சப்பட்டு, உன்னைத் தூய்மை



செய் என்பதை மக்கள் ஏற்காதவரை, உலகம் தெளிவற்றதாகேவே போய்விடும்.

பாவம் புரிய, அஞ்சாமல் இருப்பதே வீரம் என்றாகிவிட்டது. ஆணவத்துடன் உலா வருவதே வரவேற்கத்தக்க வீரமாகிவிட்டது. தீமைகளைப் பாவங்களை எதிர்ப்பவர்கள் வாழத் தெரியாதவர்கள் போல் பார்க்கின்றார்கள். எத்தனையோ நபர்கள் நன்மைகள் செய்வதைக் காட்டிலும், தீமைகளைச் செய்வதில் உற்சாகம் காட்டுகிறார்கள். இவர்கள் தீமை செய்யுமுன் 'அறிவு' வந்து தடுக்குமெனப் பயந்து உடன் கெடுதல் செய்வதில் முனைப்பாக இருக்கின்றார்கள். தாங்கள் கொடுக்கின்ற தண்டனை வீரம் என்று வீராப்பு வேறு பேசுகிறார்கள். இவைகளை நாம் ஆராய்ந்து பார்த்தால், இவர்கள் நல்ல செயல், நன் நடத்தைகள், நேர்மை இவைகளின் மேல் குரோதமும், பயமும் கொண்டவர்களாகவே இருப்பர். பாவ காரியங்களைத் தடுப்பவர்களை இவர்களுக்குப் பிடிக்காது.

உலகினை உய்விக்க வந்த தீர்க்கதரிசிகள் அச்ச உணர்வின்றி உபதேசித்தனர். ஆனால் பாவிகள் இவர்களைக் கண்டு பயந்தனர். ஒளி வந்தால் இருள் விலகுதல் இயல்பு. நியாயங்களைக் கண்டால் அநீதி அரண்டு விடும். போலி வேடம் புரண்டுவிடும். நேர்மை நோக்கும், நிதான புத்தியும் இருக்கும்வரை அச்சத்திற்கு இங்கு இடமேயில்லை. உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்றான் பாரதி. எதையும் ஏற்கின்ற பக்குவத்தை நாம் பெற்றேயாக வேண்டும். ஏன் எனில் நாம் இயற்கையுடன் இணைந்தவர்கள். அதன் ஓட்டத்திற்குட்பட்டவர்கள். தெரிந்துகொண்டு தெளிந்தால், பயமற்ற சீரிய வாழ்வுதானே?

தினக்குரல் 05.11.2000

RangaRakes Tamilnavarasam.com



# பாலுணர்வும் பண்பும்

கிளர்வினையூட்டுவதும், இன்பகரமானதும், அதே சமயம், பிரச்சனைக்குரிய சமாச்சாரமாக, இன்றுவரை பாலுணர்வு என்பது தலையாய இடத்திலேயே உள்ளது. உலகில் உயிர்கள் தோன்றியவுடனேயே பாலுணர்வு என்கின்ற இந்தத் தகிக்கும் தாகம் கூடவே எழுந்துவிட்டது. இது ஒன்றும் கேவலமானதோ, அருவருக்கத்தக்கதோ அல்ல. இது உடலுடனும், மனதுடனும் சங்கமிக்கும் அத்தியாவசிய தேவையாக உள்ளது.

ஆயினும், ஒரு எல்லைக்குள், ஒழுக்க வரம்பிற்குள், சமூக நியதிக்குள் உள்ள கலாசார வட்டத்தினுள் இருக்கின்றவரை, ஆபத்தில்லாத பாலியல் என்கின்ற செக்ஸ் இனிமையானதுதான்.

கட்டுப்பாட்டினைக் கடக்கும்போதுதான், சச்சரவு, பழிப்பு, இழிநிலை என்பன சூழ்ந்து கொள்கின்றன. காதல் வாழ்வின் ஆரம்பமே பாலுணர்வில்தானே முளைவிடுகின்றது. உடல் கூற்று நிபுணர்கள் இதனையே வலியுறுத்துகின்றனர் என்றாலும் காதல் தெய்வீகமானது, பவித்திரமானது, பூர்வ ஜென்ம பந்தம் அது, இது என்றும் இதன் புனிதம் பற்றிப் பேசப்படுகின்றது.

ஈர்ப்பு இன்றிக் காதல் வந்துவிடுமா என்ன?



இது அழகுடன் மட்டும் சம்பந்தப்பட்டதுமல்ல. மேலும் ஆண், பெண் ஈர்ப்பிற்குப் பற்பல காரணம் கூறுகின்றார்கள். இது இறைவனால் இணைக்கப்பட்ட பிணைப்பு. இறைவனால் கொடுக்கப்பட்ட வரம் என்றவாறுதான் இதன் தாத்பரியமும் துலங்குகின்றது.

கலைஞர்களும், கவிஞர்களுமே தம் பங்கிற்கு காதல், காமம் பற்றி அக்குவேறு, ஆணிவேறாகவும் பிரித்து, அறுவை சிகிச்சை புரிந்து, அதனுள் என்ன இருக்கின்றது என ஆராய்ந்து தத்தம் கண்டுபிடிப்புக்களை, முடிவுகளை கவிதையாகவும் காவியமாகவும் வடித்து விடுகின்றார்கள். ஆயினும் எல்லோரும் சேர்ந்து ஒரு பொது முடிவினை சொல்ல முடியாது திணறினாலும்கூட, அடிப்படையான விஷயத்தில் ஒத்துப் போகின்றார்கள். காதலுடன் இணைந்தது காமம் எனினும், வாழ்வின் இளவயதின், இறுக்கமான பிணைப்பினை காமமும் கூடவே பிணைந்துவிடுகின்றது.

எனினும், காதலும், காமமும் கொச்சைப்படுத்தக்கூடிய ஒன்றுமல்ல. அனுபவமும், முதிர்ச்சியான அறிவு நிலையும்கூடி விடுகின்றபோது காமம் கழன்று காதல் பிணைப்பு இறுதிவரை துணை நிற்கின்றது.

இதுதான் உண்மை.

எனினும், காதல் வாழ்வை, வாழ்வுப் பிணைப்பின், பாலுணர்வுதானே ஆதாரமாக ஆரம்பித்து வைக்கின்றது?

> ஒரு எல்லைக்குள், ஒழுக்கவரம்புக்குள், சமூக நியதிக்குள் உள்ள கலாசார வட்டத்தினுள் இருக்கின்றவரை, ஆபத்தில்லாத பாலியல் என்கின்ற 'செக்ஸ்' இனிமையானதுதான். கட்டுப்பாட்டினைக் கடக்கும்போதுதான், பாலுணர்வே பழித்தலுக்கு ஆளாகின்றது. உண்மையில் கட்டுப்பாடான பாலியல் உறவுகூட ரசனையுடன் கூடிய ஒரு கட்டுப்பாட்டு நெறிதான். தன் ஆத்மாவிற்கும், உடலுக்கும் தீங்கிழைக்காமல் இந்நெறி காக்கப்படல் வேண்டும்.

RangaRakes
Tamilnavarasam.com

எப்படியிருப்பினும், இது பற்றிப் பேசினால் மட்டும் பலர் முகம் சுழிக்கின்றனர். பாலுணர்வு வயப்பட்டு இதன் ஆட்சியில்லாமலா இந்த உலகம் உதயமானது?

இது வெறும் களிப்பூட்டலுக்காக மட்டுமல்ல; வாழ்வுக்கொரு அர்த்தத்தையே, இவ்வுணர்வு சொல்லிக் கொடுக்கவில்லையா? நாம் ஆசைகளைத் துறந்த ஆத்மாக்களைப் பற்றி இந்த இடத்தில் பேசுவது பொருத்தமானதும் அல்ல. சாமான்ய மனித நிலையில் இருந்து இதுபற்றிச் சிந்திப்போம்.

உலகம் எப்படியும் இயங்க வேண்டியுள்ளது. அதுவும் சுறுசுறுப்பாக இயங்கவேண்டும். ஜனனம், மரணம் சாஸ்வதமானதே. மரணம் தொடர்ந்து செல்லச் செல்ல ஜனனங்களும் அறிமுகம் செய்து கொள்ளுகின்றன. எனவே ஏதோ ஒரு வழியில் இந்த நிகழ்வுகளைத் தடை போடமுடியாது. இவை மனிதனுக்கு மட்டுமே பொருந்துவன அல்ல. சகல ஜீவராசிகளுமே ஆண் பெண் உறவை நாடி ஒன்றை ஒன்று எப்படியோ கண்டு கொண்டு இணைகின்றன. தாவரம், செடி, கொடிகூட இதற்கு விதிவிலக்கல்ல. தாவரங்கள் தம் இனத்தைப் பெருக்க, தன் பூவினுள் மகரந்தச் சேர்க்கை நடத்த எத்தனை உத்திகளைக் கையாளுகின்றன? இவை இதனை யாரிடம் போய் கற்றுக் கொண்டன? இயற்கை என்கின்ற ஆசான், சொல்லாமல், சொல்லித் தருகின்ற காரியங்கள்தான் எத்தனை? வயது வந்த பின் நாம் இது பற்றிச் சொல்லிக் கொடுக்கவா வேண்டும்?

ஆயினும், தற்போது, இளவயதினருக்கு பாலுணர்வு (செக்ஸ்) பற்றிய அறிவை ஊட்டவேண்டுமென உலகில் உள்ள அரசுகள் நினைத்து, அதுபற்றிய அறிவையும் தெளிய வைக்கப் பற்பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஒரு கட்டுப்பாடான சமூகத்தினை உருவாக்குதல் என்பதே இதன் நோக்கமாகும்.



எந்தவிதமான உதவியுமின்றி வெறும் மந்திரங்களாக மனிதன் வாழமுடியாது. சரி, தவறு பற்றியும் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

இயற்கையான அறிவு கிடைப்பினும்கூட, பலர் அதை மீறி மனம் போனவழி, கட்டுப்பாடற்ற விதத்தில் புறச்சூழலாலும் உந்தப்பட்டு சீரழிவதை நாம் கண்டு வருகின்றோம். முன்பு எல்லாம் இதுபற்றிய அறிவு மூடப்பட்டேயிருந்து வந்திருந்தது எனக் கூறுவதை நாம் ஏற்க முடியாதுள்ளது.

பொது இடங்கள், கோவில்கள், ஏடுகளில் எல்லாம் காதல், காமம், பாலியல் பற்றி குறிப்பிடப்படாமல் இல்லை. வாத்ஸாயனரும், கொக்கோக முனிவரும் இன்று பிறந்தவரில்லை. கஜீராஹோ, எல்லோரா சிற்பங்கள் இன்றா வடித்தெடுக்கப்பட்டன? இவை கூறும் உண்மைகளும், தத்ரூப வடிவங்களும் பிரமிக்கத்தக்கவையே. இவை பற்றிய ஏராளமான விளக்கங்கள் எல்லாம் உலகிற்கு எப்போதோ கிடைத்துவிட்டன. சிற்பங்கள், சிலைகள் கலை நுட்பத்துடன் காதல் உணர்வைத் தட்டி எழுப்பவில்லையா? இதில் என்ன தப்பு?

எல்லாமே ஒரு காரணத்தினால்தானே மனிதன் இவைகளை ரசனையுடன் படைத்து வைத்தான். இப்போது மட்டும் ஏன் செய்யக்கூடாத தவறுகள் போல், அருவருப்புடன் நோக்குகின்றனர். இவை எல்லாம் இதனால் மறைந்துவிடுமா என்ன? அடுத்து இவைபற்றிய தெளிவான அறிவை, நோக்கை எப்படி இளவயதினருக்கு ஊட்டவேண்டும் என்பதில் கூட பிரச்சினைகள் உள்ளன. இது ஒன்றும் புதுமையான விஷயமில்லை என்று கூறிக்கொண்டு, விகற்பமின்றி, சர்வ சாதாரணமாக லட்ஜையின்றி, சங்கோஜமின்றிச் சொல்லிக் கொடுத்துவிடக்கூடிய சங்கதிகளுமல்ல. மிகவும் பக்குவமாக, அவர்களைத் தீயவழிக்கு இட்டுச் செல்லாதிருக்கும் விதத்தில் புரியும்படி சொல்லிக்

RangaRakes
Tamilnavarasam.com

கொடுக்கவேண்டும். அவர்களிடம் தெளிவு பிறந்துவிட்டால், பிரச்சினைகள் எழ வாய்ப்பில்லை.

அண்மையில், பள்ளிக்கூட மாணவர்களுக்கு, சமூக நல நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டிருந்த, பாலியல், உடல் கூறு தொடர்பான நூலைப் படித்தேன். இதை படித்த சில மாணவர்கள், மாணவிகளைக் கிண்டலடித்ததாக அறிந்தும் கொண்டேன். நல்ல ஒரு விஷயத்தினை அழகாக, தெளிவாக எழுதியிருந்தும் கூடச் சிலர் அதன் நோக்கத்தை அறியாது கீழ்த்தரமாக நடந்து கொள்ளுகின்றனர். இதனை ஆசிரியர்கள்தான் மாணவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

மேற்கத்திய நாகரீகம் எம் கலாசாரத்தைப் பொறுத்தவரை, மிகவும் வித்தியாசமான ஒன்று என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. எதையுமே பகிரங்கப்படுத்தல் என்பதில் மேலை நாட்டவர்கள் சிரத்தையாக இருக்கின்றனர். இதற்காக இவர்கள் தமது உடலைக்கூட அம்பலப்படுத்திக் கூத்தாடுவதை சிறந்த நாகரிகம் என ஏற்றுக் கொள்ளமுடியுமா? பண்பாடு என்பது ஒழுக்க நெறியுடன் ஒன்றிணைந்தது. கற்பு நெறியுடன் வாழ்தல் மட்டும் ஒழுக்க நெறியல்ல. உண்மையாக வாழுதல், உலகிற்கு உதவுதல், சேவை என்பனவும் ஒழுக்க நெறியுடன் பிணைக்கப்பட்டவையேயாகும். இதற்காக, மேற்கத்திய நாட்டினர், அனைவருமே, எம்மவரைவிடக் குறைவுபட்டவர்கள் அல்லர். ஒழுக்க நெறியில் அவர்களும் முதன்மையானவர்களே.

எனினும்,

இவர்கள் குடும்ப உறவு நிலை, ஒரு குறைபாடாகவுள்ள போதும், இதுவும்கூட கால வோட்டத்தில், இக்குறைபாடுகள், எமது கலாசாரங்களைப் புரிந்து கொள்வதன் மூலம் சீராகலாம். வரம்பு மீறிய பாலியல் தொடர்புகள், அதீத நாட்டங்கள், வசதி வாய்ப்புக்களால் இவர்கள் குடும்பங்களில் குழப்பம் ஏற்பட்டு,



ஒருவரை ஒருவர் திருத்தமுடியாத சூழ்நிலையில் தன்னிச்சையாக நடந்து வருகின்றனர். தங்கள் கலாசார பாரம்பரியத்தில் ஆரம்பத்தில் இருந்தே ஒரு அசைக்கமுடியாத சமூகக் கட்டுப்பாட்டினை இது விடயத்தில் ஸ்தாபிக்கத் தவறியமையே ஒரு காரணமாகக் கூறலாம். பாசப் பிணைப்புக்கள் அங்கே அருகி வருவதற்கும் கூட யந்திரமயமான வாழ்வோடு கூடிய, உடல் இச்சைக்கு மட்டுமே முதன்மை கொடுக்கின்ற இயல்பும் பிரதான காரணம் என்பதில் சந்தேகமும் இல்லை. குடும்பத்தினைவிட நாட்டை நேசிக்கின்ற ஒரு விசாலமான மனப்பாங்கு இவர்களிடமிருந்து நாம் கற்கவேண்டிய ஒரு நெறியாகும். எனினும் இவர்கள் வாழ்ந்து வரும் சூழ்நிலைகள், வசதி, வாய்ப்புக்கள் குடும்ப கட்டுக்கோப்பினைப் பாராமுகமாக, அல்லது திசை திருப்பிவிடும் மனோநிலைக்கு இட்டுச் செல்லுகின்றது. இதனால் விரக்தியுற்று, இங்கே ஓடி வருகின்றனர். அகவாழ்வையும் புறவாழ்வையும் நன்கு புரிந்துகொண்ட நம்மவர்கள் குடும்ப வாழ்வில் பெரும்பாலும் சந்தோஷமாகவே வாழ்ந்து வருவதை நாம் மறுக்க முடியாது.

தமக்குரிய கடமைகளையும், தமக்குரிய உடல் தேவைகளையும் தெரிந்து வைக்காதுவிடின் வாழ்வின் முறைகளே திசை திரும்பிவிடும்.

புலன் வழி செல்லல், அதீத ஆசைகள், உடனே அனுபவித்துப் பார்த்துவிடல் வேண்டும் என்கின்ற வேட்கை, கூடா நட்பு, எப்படி இருக்கும் என, துர்நடத்தைகளையே ஆய்வு செய்யும் மனப்பாங்கு, மிதமிஞ்சிய கற்பனை, படிக்கக்கூடாத பார்க்கக்கூடாத உணர்ச்சிகளை அலைக்கழிக்கும் விடயங்களையே நோக்குதல் போன்ற செயல்கள் பாலுணர்வினைத் தூண்டி தப்பான காரியங்களில் மனிதனை அடிமைப்படுத்திச் சிறுமைப்படுத்தியே விடுகின்றன.

RangaRakes
Tamilnavarasam.com

தூயமென்மையான காதலும், காமமும் இணையும் போதுதான் களங்கம் கற்பிக்க முடியாத கூடல் சங்கமமாகின்றது. இந்த இரண்டும் அற்ற சேர்க்கை பவித்திரமானதும் அல்ல. காதல் இல்லாத கூடல் வெறும் சடங்குகளின் சந்திப்புத்தான். காதல் இல்லாத தம்பதிகள்தானே இடை நடுவில் கலைந்து போகின்றார்கள். தூய காதலுக்கு இளமை, முதுமையில்லை. மாறாக முதுமை வரும்போதுதானே, கணவன் மனைவியரிடம் ஐக்கியம் வலுப்படுகின்றது? ஆரம்ப காலத்தில் வெறும் இனக்கவர்ச்சியால் உந்தப்பட்டவர்கள்கூட இறுதியில், காலம் என்கின்ற இயற்கை நிகழ்வின் ஆட்சியினால், வெறும் பாலியலுக்கும் அப்பாற்பட்ட, தூய வாழ்வின் முழுமையை நுகர்ந்து கொள்கின்றார்கள். இந்த வாழ்வில் ஒரு புதுமை என்னவெனில், முதுமையின் பின் இளமையான அன்பு பரிணமிப்பதுதான். இத்தகைய நிறைவாழ்வை வாழ்பவர்களைக் காலம் ஒன்றும் செய்துவிட முடிவதில்லை. மாறாக முதுமையிலும் உளவியல் ரீதியாக, சுகவாசிகளாகவே ஜீவித்துக் கொண்டுமிருக்கின்றார்கள்.

வெறும், பாலியல் வாழ்வே வாழ்வு என வாழ்ந்து வருபவர்களின் அவல வாழ்வைக் கண்டபின்னும் இதுபற்றிச் சிந்திக்காதுவிடுவது பேதமையன்றோ! ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதானே எமது ஒழுக்கக் கோட்பாடு. இதனை மீறி வாழ்ந்து வந்தமையினால் இறைவன் கொடுத்த சாபங்களை மக்களில் பலர் அனுபவித்து வருகின்றனர். எயிட்ஸ் என்றும், வேறும் பலவித பாலியல் நோய்களால், தீர்க்க முடியாத தொல்லைகளை விலைக்கு வாங்கி, விடுபடமுடியா முடிவினைத் தேடிக்கொள்கின்றார்கள். இந்த அவல நிலை தேவைதானா?

இறைவன் படைத்தல் என்கின்ற செயலில் எதை நினைத்தானோ அதன் பொருட்டு மனிதனையும், சகல ஜீவராசிகளையும், உணர்வுகளுக்குள் பூட்டி, தான் கருதியதன்



பிரகாரம் ஜகத்தினைத் தினம் தினம் புதுப்பித்துக் கொண்டிருக்கின்றான்.

எனவே,

இயக்கும் இறையின், சித்தத்தினை குறை காணமுடியுமோ? படைப்பின் ரகசியம், பரமரகசியமாயினும் கூட ரகசிய உணர்வுடனேயே பாதுகாக்கப்படுவதே சிறப்பானதும், புனிதமானதுமாகும். இரகசியமில்லாத, உறவில் இன்பமில்லை. ஆண், பெண் உறவினைப் பகிரங்கப்படுத்துதல் என்பது கூட ரசனையற்றதேயாகும்.

ரகசியப்படுத்தப்படவேண்டியவை, பாதுகாக்கப்பட வேண்டியனவையேயாம். ஆனால் இவை வெட்கப்படத் தக்கவையல்ல. இவைகளின் தூய்மை வெட்டவெளியில் காயப்படுத்தப்படக்கூடாது. செக்ஸ் என்கின்ற ஆண், பெண் உறவுகளைக் கொச்சைப்படுத்துதல் என்பது, இதனைக் கண்டபடி திசைகள் தோறும் உலாவரச் செய்யும் செயலால் ஏற்பட்டதேயாகும்.

இத்தகைய தவறான செய்கையினால் காலப்போக்கில் இந்த உறவின் மீதும், இதன் தனித்துவ புனிததன்மை மீதும் சலிப்பு ஏற்பட்டுவிடலாம். இதனால் ஏற்படும் விளைவுகள் கூடப் பாரதூரமாக அமைகின்றது. விரக்தி, தோல்வி, தனிமையுணர்வு ஆகியன மனதைக் கசக்கிவிடும். பொருட்களின் தேவைகள் என்பதுகூட அவைகளைத் தகுந்த தருணத்தில் பாவிக்கும் விதத்தையும் சூழ்நிலையையும் பொறுத்ததே. சின்ன வயதில் இத்தகைய உறவுகளினால் ஏற்படும், கசப்பான நிகழ்வினால், பிஞ்சில் பழுத்த காயாய் வாழ்வே சப்பென்று போய்விடுகின்றதே. இந்த நிலை தொடரக்கூடாது என்றுதானே, பெரியோர்கள் எவ்வளவோ பாடம் புகட்டிக்கொண்டு வருகின்றார்கள். சமூகத்தில் உள்ள சகல தரத்தினரையும், இயல்பான மிதமான சகவாழ்விற்குத் தயார்ப்படுத்தலே, எல்லோருக்குமே உரிய முக்கிய பொறுப்புமாகும்.

RangaRakes Tamilnavarasam.com

உண்மையில் கட்டுப்பாடான பாலியல் உறவுகூட ரசனையுடன் கூடிய ஒரு கட்டுப்பாட்டு நெறிதான். ஆனால், ஒழுக்கமும் எவரையும் பாதிக்காமலும், தன் ஆத்மாவிற்குத் துரோகம் செய்யாமலும் அமையவேண்டும். இது மானுடத் தேவையாதலால், பண்பு பேணல் மேலோங்கி நிற்றலும் முதன்மையுறுகின்றது. பண்பு காக்கா எச்செயல்களுமே துன்பம் சுமக்கின்ற ஈனச் செயல்களே.

தினக்குரல் - 26-11-2000



# நட்பு



தமக்கு நண்பர்கள் எவருமே கிடையது எனச் சிலர் பெருமையுடன் கூறிக் கொள்கின்றார்கள். இது, இவர்கள் பிறர் மீதும், தம்மீதும் கொண்டுள்ள நம்பிக்கையீனமான போக்கும், ஒருவித மமதையான குணவியல்புகளின் வெளிப்பாடுமேயாகும்.

ஒருவர் துணையின்றி இன்னொருவர் வாழுதல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதே. தன்னிடத்தே நம்பிக்கை கொள்ளாதவன், பிறரிடத்தே எப்படி நம்பிக்கையுடன் பழகமுடியும்?

எதையுமே எதிர்பார்த்துத்தான் நட்பு உருவாகவேண்டும் என்பதில்லை. நட்பு அன்பின் அடித்தளத்திலே சமைக்கப்பட்டுள்ளது. உண்மை நட்பு கொண்டவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம், பரஸ்பர தூய அன்பினை மட்டும். இதில் இருந்து பிறக்கும், ஆறுதல், பரிவு, பிணைப்பு என்பதனைத்தான். எனவே பொருள், பண்டத்தினை மட்டுமே மையமாக நட்பு உருவாதல் என்பதுகூட போலித்தனமானதே.

மனதில் உள்ள இறுக்கம் குறைந்து, அதனால் ஆறுதல் பெறும் மார்க்கத்தினை நட்பைப் பெற்றவர்கள் தேடிக் கொள்ளுகின்றனர். எனவே துன்பம் தொலையும், வடிகாலாக அமைய நல்ல நண்பர் சகவாசம் தேவைப்படுகின்றது.

RangaRakes Tamilnavarasam.com

எதையும் சார்ந்திருத்தல் என்பது தவிர்க்கமுடியாத வாழ்வு முறையாகிவிட்டது. எத்தனையோ பேர் சும்மா சுற்றியிருந்த போதும்கூட சமயத்தில் துணை செய்ய, உதவி நல்க நல்ல நண்பர்களை நாம் இனங்காண வேண்டியவர்களாயிருக்கின்றோம். இது ஒரு சிரமமான காரியம்தான்.

எல்லோருமே தம்மை நல்லவனாகவே கருதிக் கொள்கின்றார்கள். தங்களின் செயல், நடத்தைகளை சரி எனவே நம்புகின்றார்கள்.

தம்மை ரகசியமாக வைத்துக்கொள்பவர்கள், தம்மீதே மட்டும் அக்கறை செலுத்துபவர்கள், பிறர் ரகசியங்களை அறிய ஆவலாக இருப்பார்கள். இதற்காகவே தமது நேரங்களைக் கழிக்கச் சித்தமாயிருப்பார்கள். இவர்கள் மற்றவரிடம் இருந்து பெறுதல், என்பதிலேயே கரிசனமாக இருப்பர். இவர்கள்கூட, தங்கள் திறந்த மனதுக்கு ஒருவருமே நிகரில்லை, என்னைப்போல என்னுடன் ஒத்துழைத்து நடக்க நல்ல மனுஷர் எவருமே இல்லையே என ஏக்கத்துடன் நடிப்பர்.

நல்ல சினேகிதராக நாம் இருக்கத் தயாரானால்தான் நல்ல நண்பர்கள் எமக்குக் கிடைப்பார்கள். எல்லோரையும் நாம் பார்க்கின்றோம். நாம் பார்க்கும் தோற்றத்தில் தம்மை உயர்ந்தவர்களாகவே காட்டிக் கொள்வார்கள். ஒருவனைப்பற்றிக் குறைகள், கோள்களைக் கூறினாலே தமக்கு வேண்டியவர்களின் நட்பை மிக இலகுவாகத் தேடலாம் எனவும் சிலர் கருதுகின்றனர்.

> மனதில் உள்ள இறுக்கம் குறைந்து அதனால் ஆறுதல் பெறும் மார்க்கத்தினை நட்பைப் பெற்றவர்கள் தேடிக்கொள்கின்றார்கள், எனவே துன்பம் தொலையும் வடிகாலாக அமைய நல்ல நண்பர் சகவாசம் தேவைப்படுகிறது. நல்ல சினேகிதர்களாக நாம் இருக்கத் தயாரானால், நல்ல நண்பர்கள் எமக்குக் கிடைப்பார்கள். வலிமை, வசதியுள்ளவர்களைக் காக்கா பிடிப்பதே தமது நட்பில் சாதனை படைப்பதாகச் சிலர் கருதிக்கொண்டிருக்கின்றார்கள்.



நூலகம்

ஒருவருக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என வைத்துக்கொள்ளுவோம். அவர்கள் மூலம் ஏதாவது அனுகூலம் பெற நினைக்கும் ஒருவர், இருவரிடமும் இவர்கள் குறைகள் பற்றியே அவர், சொன்னார் இவர் சொன்னார் எனக் கூறி குரோதத்தை பெற்றுத் தமக்கு வேண்டிய நன்மைகளை பெற்றுக்கொள்வதில் எவ்வளவு சமார்த்தியத்தை சிலர் கையாளுகின்றார்கள் தெரியுமா? வலிமை, வசதியுள்ளவர்களைக் காக்காய் பிடிப்பதே தமது நட்பின் சாதனை என்று கருதுபவர்களும் உள்ளார்கள்.

பண்பாடற்ற விதத்தில் கோள்களைக் கூறுபவன், அதனைக் கேட்பவர்கள் நட்பினில் என்ன தூய்மை இருக்கப்போகின்றது?

நட்புறவை உருவாக்குதல், வளர்த்தல், வலுப்படுத்தல் என்பது இன்னுமொரு சாராரை வலுவிழக்கச் செய்தலோ அன்றி அவர்களைக் கவிழ்ப்பதற்காகவோ அமைதல் தகாது. சுயநல சிந்தனைப் போக்குடையவர்களுக்கு, இது வெறும் லாபகரமான ஒரு தொழில் முயற்சியாகவே தென்படுகின்றது. இவர்கள் பெறுகின்ற சினேகிதர்கள்கூட கைகழுவிவிட்டு விடுவர் என்பதே உண்மையுமாகும்.

பலர், பலருடன் கூடி வம்பளக்கும்போது, நேரில் கதைக்கத் தெம்பில்லாமல், தம்முடன் உரையாடிக் கொண்டிருந்தவரைத் தவிர, தமக்குப் பிடிக்காதவர்களை விமர்சனம் செய்கின்றனர். இவர்கள் அனைவருமே ஒருவருக்குத் தெரியாமல் ஒவ்வொருவராக இவர்களைக் காணாத வேளைகளில் மற்றவர்களை மட்டம் தட்டிப் பேசி தங்கள் சினேகிதத்தினை வளர்த்துக் கொள்ளுகின்றனர். இது ஒருவர் மீது மற்றவர் சேறு பூசும் செயலைப் போன்றதுடன் தங்களைத் தாமே ஏமாற்றிக் கொள்வதுமாகும். சாதாரண குறுகிய மனித பலவீனம் உள்ளவர்கள் சிறந்த நண்பர்களாக இருக்கத் தகுதியற்றவர்களாவர்.

RangaRakes Tamilnavarasam.com

ஆயினும்,

சிறிதளவாவது விட்டுக்கொடுத்து, மனிதநேயமுடன் நடந்துகொள்ள ஆரம்பித்தால் அகம்பாவம், தன்னை மிஞ்சி ஒருவருமே இல்லை என்கின்ற நினைப்புக்கள், குற்றம் காணும் மனப்பான்மை, தமது நோக்கத்திற்காகவே ஒருவரை அண்டிக்கொள்ளும் இயல்புகள், சதா சந்தேக மனப்பான்மை, பொறாமை, காழ்ப்பு போன்ற இயல்புகள் நட்புறும் இயல்பினைப் பாதிக்கின்ற குணவியல்புகளாகும்.

என்னதான் நாம் ஜாக்கிரதையாக இருந்தாலும்கூட நண்பர்களிடத்தே அபிப்பிராய பேதங்கள் வரத்தான் செய்யும். எந்த நேரத்திலும் மனித மனோ நிலைகள், ஒரே நிலையில் இருக்கமுடியாது. இந்த நிலையைக் கடந்து, வாழப் பழகவேண்டும். மனதைப் பக்குவப்படுத்தி, ஒரே சீரான இயல்பினை உருவாக்கி, ஏனையோருடன் பழகத் தெரிந்து கொள்ளல் வேண்டும். இது கொஞ்சம் சிரமமாயினும்கூடப் பிறருக்கு எமது மன அழுத்தத்தைத் திணிக்காமல் இருக்கச் செய்தல் என்பது ஒரு பிரதான பண்பு என்பதை நாம் மறக்கக்கூடாது. அவர்கள் எங்களிடம் இருந்து எதிர்பார்ப்பது எங்களது நச்சரிப்புக்களையோ உறுத்தல் தரும் பேச்சுக்கள் ஏச்சுக்களையோ, குதர்க்க வாதங்களையோ அல்ல என உணர்ந்து கொள்ளுங்கள். பிரச்சினைகளுக்கான தெளிவினைப் பிறர் உதவி மூலம் கேட்டு, ஆலோசனைகளைக் கேட்டால் ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை. இதற்காக ஒரு படி இறங்கி வந்து ஆலோசனை கேட்பதால், உண்மை நண்பர் கரிசனையாகப் பரிவாக அதை நோக்குவதால், மேன்மேலும் இருவரிடையே பிணைப்புத்தான் வலுவடையும். விருப்பமில்லாதோரிடம் பேசுவதால் பிரயோசனமில்லை. இதனால் அவர்கள் கேலி பேசுவதும், இவர்கள் துன்பத்தினால் மன வேதனை பெறுதலுமே மிச்சமாகும்.

எனவே தூயநட்பை நாம் தேடியேயாக வேண்டும்.



ஏற்றத்தாழ்வு, ஜாதி, சமய வேறுபாடுகள் அனைத்தும் எல்லோரையுமே பாதிக்கின்றது. இது ஒரு தீராத நோய் என எல்லோருமே கூறி வந்தாலும்கூட இதிலிருந்து விடுபட பலரும் தயாராவதில்லை.

பணக்காரன் ஒருவன் பரம ஏழையுடன் நட்புக்கொள்ளத் தயாராவதில்லை. சினிமாக்களிலும் கதைகளிலுமே இதைப் பார்த்திருக்கலாம். காசு உள்ளவன், தன் சொந்தச் சகோதரர்கள் ஏழை என்றாலும் அண்டுகின்றானா? தன் போன்ற ஒருவனுடனேயே அவன் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளுகின்றான். உயர் பதவியில் உள்ளவன் தன் நிலையிலும் பல படி கீழேயுள்ள பணியாட்களுடனேயா சினேகம் வைத்துக் கொண்டிருக்கின்றான்? இவை நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்து வருகின்றதா?

தனது நிலைக்கும் கீழ் நிலையில் உள்ள ஒருவன் தனது நண்பர் என்று சொல்லவே தயங்குகின்றான்.

இந்த நிலையில், இந்த ஏற்றத்தாழ்வு நிலைகளைத் தகர்த்து நட்பு என்ற உன்னத உறவுகள் உருவாகும் என எதிர்பார்ப்பது கூடச் சிரமமானதாகவிருக்கின்றது.

இதனிடையே, படித்தவன் படிக்காதவன், சாதி சமய ஏற்றத்தாழ்வு போன்ற குறுக்கீடுகள் வேறு இந்த உன்னத உறவைப் பாதிக்கச் செய்கின்றன. என்றாலும் இவைகளை உடைத்துக் கொண்டு, ஒருவர் மீது ஒருவர் சினேகிதம் பாராட்டி நட்பை வளத்தாலும்கூட சமூகம் இதற்கு வரவேற்புக் கொடுத்தல் என்பதே பெரிய சவாலாக உள்ளது.

தங்கள் தரத்துடன், தங்கள் வர்க்கத்துடன் மட்டும் தொடர்பு வைத்துக்கொள்வதனால், பரந்த இந்த உலகம், என்ன ஒருமைப்பாட்டினைக் கண்டுவிடப் போகின்றது. குறுகிய வட்ட நேயப்பாடு என்பதே ஒரு ஏமாற்று வேலைபோல் ஆகாதா?

RangaRakes Tamilnavarasam.com

பாகுபாடற்ற நிலை தெய்வீகமானது. ஆயினும், இதுபற்றி கேட்க, வாசிக்கத்தான் இனிமையாக உள்ளது. இவை நிஜவாழ்வினில் ஏற்றுக்கொள்ளும் நிலை எப்போது வரப்போகின்றது?

தெய்வீக அன்பினுள் நுழைந்து, நட்பினை இறுகப் பற்றி, உலகிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வந்தவர்கள், வாழுபவர்களைக் கூட நாம் கண்டிருக்கின்றோம். வெவ்வேறான திசைகளில், கருத்துக்களில் முரண்பாடானவர்கள்கூட நட்பைத் தங்களுக்குள் வளர்த்து வருவதை நாம் அறிவோம்.

நல்ல மனங்களின் முன் திரை எதற்கு?

அவரவர்க்குரிய கருத்துக்கள், கொள்கைகள் எல்லாம் சிநேகிதர்களாக இருந்துகொள்ளத் தடைகளுமல்ல. ஒவ்வொருவர் கருத்துக்களுக்காக மோதிக்கொண்டு நட்பை உடைத்துக் கொள்ள வேண்டிய அவசியமும் கிடையாது.


எங்களைச் சுற்றியுள்ள போலியான சில சமூக திரைகளில் நாம் மறைந்து கொள்ளத் தேவையுமில்லை. இவைகளை உணர்ந்து உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டால் நல்ல உறவுகள் எம்மை நாடிவரும். மன்னிக்காத மனமும், அடக்கவொண்ணா சினமும், அகங்காரமும், பொறாமையும் அடி மனதில் குடியமர்ந்து கொண்டால், நாம் சிரிப்பது, மகிழ்வது எல்லாமே நடிப்பு அன்றிப் பிறிதில்லை. இதைத்தான் சிலர் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

விட்டுக் கொடுக்காதவனுக்கு, நட்புக் கிட்டுவதில்லை. எட்ட நிற்பவனுக்கும் நட்புத் தொடுவதில்லை. கிட்டே வந்து, மானுடத்தை நேசிப்பவனுக்கோ கண்ணில் பட்டவர்கள் எல்லோருமே ஒட்டி உறவாடும் நல்ல நண்பர்களே.

தினகுரல் 10.12.2000



# குற்றம் காணுதல்



எங்களில் பலர் வித்தியாசமான அல்லது தவறான நபர்களைப் பற்றிப் பேசும்போது, தங்களுக்குப் பிடிக்காதவர்களையே உதாரணம் காட்டிப் பேசிக்கொள்வார்கள். அத்துடன் நிற்காது, அவர்களுடன் தொடர்புடைய குடும்ப உறுப்பினர்கள், அவர் சார்ந்த ஊர், ஊர் மக்கள் போன்றவர்களை சர்வசாதாரணமாகக் கொச்சைப்படுத்திப் பேசிவிடுவார்கள்.

உண்மையில் இது விடயங்களில், விவகாரங்களில், எம்மையறியாமலே அதி சுவாரஸ்யமாக ஈடுபாட்டுடன் கதைத்து விடுவோம். எங்களால் விமர்சிக்கப்படுபவர்களைவிட நாம்கூட அதைவிட பலவீனம் உள்ளவர்களாகவோ, தவறுகள் உடையவர்களாகவோ இருந்து விடுவதுமுண்டு.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும், ஒவ்வொரு சமூகத்திற்கும் தனிப்பட்ட குணாதிசயங்கள், பழக்கவழக்கங்கள் பிரத்தியேகமாக அமைந்தும் இருக்கின்றன. இவை தனித்துவமானவை. ஏன் பிரதேச ரீதியாகவும் கூட சில வித்தியாசமான வாழ்வுமுறைகளும் உண்டு.

RangaRakes Tamilnavarasam.com

எமக்குரிய ஒழுக்க, கலை, கலாசார விடயங்களில் தனித்துவம் பேணப்படுவது போலவே ஏனைய சமூகங்களுக்கும் உண்டு. இதை நாம் ஏற்றுக்கொண்டு, அதற்குக் கௌரவம் அளிக்கவேண்டும்.

மாறாக எமக்கு மட்டுமே, ஒரு தனித்துவமான பண்புகள் உண்டு. ஏனைய சமூகங்களுக்கு அது இல்லை என விதண்டாவாதம் பேச முடியுமா?

ஒரே ஊரிலேயே, ஒவ்வொரு குடும்பங்களுக்கிடையே வேறுபாடான அம்சமான குண நலன்கள் இருக்கத்தான் செய்யும். எமது செயல்களைத் தவிர பிறர் செயல்கள் எமக்கு நகைப்பூட்டுவனவாக நாம் கருத முடியாது. ஒரே பலவீனம் எல்லோரையும் பிடித்திருந்தாலும்கூட மற்றவரைப் பற்றிக் கிண்டலடித்து, அலசி ஆராய்தல் சரியானதல்ல.

இந்தச் செயல் குற்றம் காணுதல் என்ற இயல்புடன் பொருந்தியதே. குடும்பத்தில் மாமியார், மருமகள் பிரச்சினைகளைப் பாருங்கள். மாமியார் முன்னர் செய்த எந்தச் செயல்களை, மருமகள் வந்து புதிதாகச் செய்துவிட்டார். தனது, கணவருடன் ஈடுபாடாகவும், நெருக்கமாகவும் உரிமை எடுத்து இதே மாமியார், தானும் கல்யாணமான பின்னர் நடந்து கொள்ளவில்லையா? மருமகள் மட்டும், தனது மகனுடன் இப்படி நடந்துகொண்டால், புருஷனை மடக்கிப் போட்டுவிட்டாளே

சதா நச்சரிப்புக்கள் போன்ற கண்டிப்பு, குறை கூறுதலைப் பழக்கமாக்கிக் கொள்ளுதல், சமூகத்தில் இருந்து எம்மை விலக்கி வைத்து விடுமன்றோ? புத்திமதிகளைக்கூடச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாதிரித்தான் கூறுதல் வேண்டும். சந்தர்ப்பம் அறியாமல் இலவச ஆலோசனைகள்-புத்திமதிகளை உபதேசித்தல் எல்லா நேரத்திலும் சரிப்பட்டு வராது. இவை உற்ற துணையையே உதறும் செயலாக மாறிவிடும்.



என்னைப் பிள்ளையுடன் பிரிக்கச் சூழ்ச்சி செய்கின்றாளே எனப் புலம்பிக் குதித்துக் கொதித்தெழுகின்றாள்.

இந்தப் பொறாமையுணர்வு, அதிகாரப் போட்டியாக மாறி மருமகளுடன் குற்றம் காணும் இயல்பினை உருவாக்குகின்றது. எம்மைப் பிடிக்காதவர்களிடம் மட்டுமல்ல. சாதாரண சாமானியவர்களிடம் கூட இந்தக் கசப்பான கைங்கர்யத்தினை பலரும் செய்து வருகின்றனர். பழக்க சகவாசத்தில் சிலர் குறை காணுதல் என்பதைக் கைக்கொண்டு, காலப்போக்கில் அவர்களின் மனதில் நிரந்தரமாகவே இந்த நோய் பீடித்து அவர்களை அரித்து விடுகிறது. நல்ல செயல்கள்கூட எல்லாம் பொல்லாதவையாகத் தோற்றம் காட்டி விடுகின்றன.

அது மிகவும் கொடிய ஒரு நிலை. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறமாயிருக்கும் அல்லவா? இந்தக் குற்றம் காணும் நோய், அதிகார வர்க்கத்தில் போய் ஒட்டிக்கொண்டால் இதன் தாக்கம் பற்றி இயம்பவே முடியாததாகிவிடும்.

கல்விக்கூடத்தில்கூட கல்வி கற்பிக்கும் ஆசான்கள் சிலர் வேண்டுமென்றே, சில தமக்குப் பிடிக்காத மாணவர்கள் மீது வஞ்சம் தீர்க்கும் விதத்தில் தவறுகளை மிகைப்படுத்தி விடுவதால், ஒரு மாணவ சமூகமே பெரும்பாதிப்புக்குள்ளாகி விடுகின்றது. பேசிப் பிணக்குகளைத் தீர்ப்பதை விடுத்து, தப்புக்களையே, தொடர்ந்தும் அறிவுரை என்ற பெயரில் எச்சரிக்கை செய்வதால், மாணவர்கள் எரிச்சலடைந்து அதன் தாக்கத்தால், கல்வியிலேயே கோபமடைந்து விடுவதுபோல் நடந்து கொள்ளுகின்றார்கள். ஆனால் தனி நபர்கள் மீது கொண்ட வெறுப்பு தம் வாழ்வின் அடித்தளத்தையே, தகர்க்கும் விதமாக மாணவர்களும் நடந்துகொள்வது, மிகவும் பரிதாபத்திற்குரிய விஷயமாகும்.

RangaRakes
Tamilnavarasam.com

இந்த விடயத்தில் ஒரு முக்கியமான விஷயத்தினை நாம் மனதில் இருத்திக் கொள்ளுதல் நல்லது. நமது எதிரிகளின் விமர்சனங்களுக்கு காது கொடுக்காமல் இருப்பதைக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். நாம் அநாவசிய விஷயங்களைத் தூக்கிப் பிடிக்கும்போது, எதிரிகள் உற்சாகமடைந்து விடுகின்றனர். ஆத்திரப்பட வைப்பதை, அவர்கள் நோக்கமாக வைத்திருக்கும் போது, நாமும் அவர்களின் வழிச் செல்வது, உத்தமமானது அல்லவே.

தங்களை மேன்மைப்படுத்துவது என்பது இன்னும் ஒருவரைச் சிறுமைப்படுத்துவதேயாகும் எனச் சிலர் தப்பாகக் கருதுவதும் குற்றம் காணும் இயல்பினை வலுப்படுத்தும் காரணியாக அமைந்துவிட்டது.

மேலும் குற்றம் காணும் இயல்பினைப் பின்வரும் காரணிகளே மேலும் வலுப்படுத்துகின்றன.

போட்டி, பொறாமை மனப்பான்மை, தம்மை மட்டுமே நினைப்பதும், தங்களைப் பற்றிய எண்ணமே அலாதியானது, மேன்மையானது என்ற தவறான கருத்தினை உள்ளத்தில் புதைத்து வைத்திருத்தல், எதிரில் உள்ளவர்களின் தகைமை, பெருமைகளைப் புரிந்துகொள்ளாமை, தங்களுக்கு மட்டுமே எல்லாமே தெரியும் என்கின்ற தன் முனைப்பு, அளவுக்கு மீறிய செல்வாக்குகள் பணபலம், ஆட்பலம், பதவி பலம் சமூகத்தில் இவர்கள் எதிர்பார்த்த அந்தஸ்து கிடைக்காமையும், அப்படி ஏதாவது அந்தஸ்து கிடைத்துவிட்டால் அதனைக் காப்பாற்றிக் கொள்ள தவறான உத்திகளைப் பயன்படுத்தல், பிறர் செய்கின்ற நல்ல காரியங்களையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இன்மை, அதிகாரங்களை விட்டுக் கொடுக்காத மனப்பான்மை, போன்ற காரணங்களில் ஏதாவது ஒரு காரணியை கடைப்பிடித்தாலே, இந்தப் பலவீனத்திற்கு ஆளாகி, ஒரு மன நோயாளி நிலைக்கே



தள்ளப்பட்டு விடுவர். கண்டபடி பிழை சொல்லிக் கொண்டிருப்பவர்களுடன் ஜீவிக்கத்தான் முடியுமா?

விசுவாச உணர்வுடன் அன்பாக அக்கறையுடன், நன்மைகளேயே குறிக்கோளாகச் செய்கின்ற பணிகளுக்கும், புத்திமதி உரைத்தலுக்கும், இந்தப் பொருந்தாத குற்றங்காணும் இயல்பும் முற்றிலும் முரணானதேயாகும். அது வேறு இது வேறு. நல்லவைகளை உணர்த்துதல் குற்றம் காணுதல் அன்று. இரண்டையும் நாம் இனம் காணாது குழம்பக்கூடாது. ஒருவரை ஒருவர் நற்பயன்பெறச் செய்ய, பரஸ்பரம் தவறுகளைச் சுட்டிக்காட்டும் உரிமையுமுண்டு. சொல்பவர்க்கும், அதைக் கேட்டவர்க்கும் உள்ள உறவு, நெருக்கம் போன்றவைகளுடன் இது தொடர்புபட்டது. சொல்லுபவருக்கு ஏற்ற பொறுப்பு, பக்குவமும், கேட்பவர் அதை ஏற்றுக் கொள்ளும் மனவளம் இயல்பு கொண்டவராக இருக்காதவரை இதனால் எந்தப் பிரயோசனமும் வந்துவிடப் போவதில்லை.

தாய், தகப்பன், தங்கள் பிள்ளைகளைக் கடிந்து கொள்ளுதல், குரு சிஷ்யன் உறவு நிமித்தம் கண்டித்தல், நண்பர்களிடையே உள்ள உரிமையுடனான கண்டிப்புக்கள், அத்துடன் உறவினர்கள், வேண்டப்பட்டவர்கள் தம்மிடையே அன்பான உரிமையுணர்வுடன் கூடிய வார்த்தைப் பிரயோகங்கள் போன்றவைகளை ஏற்கக்கூடியவைகளை, ஏற்க வேண்டியவர்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். கணவன், மனைவியிடையே பரஸ்பரம் குற்றம் காணாது, விட்டுக்கொடுத்து, ஏற்கவேண்டிய கருத்துக்களைப் பக்குவமாக எடுத்துரைப்பதில் தவறு என்ன வந்துவிடப் போகின்றது.

சதா நச்சரிப்புக்கள் போன்ற கண்டிப்பு, குறை கூறுதலை பழக்கமாக்கிக் கொள்ளுதல், சமூகத்தில் இருந்து எங்களை விலக்கி வைத்து விடுமன்றோ. புத்திமதிகளைக் கூடச் சந்தர்ப்பத்திற்குத்

RangaRakes
Tamilnavarasam.com

தகுந்த மாதிரித்தான் கூறுதல் வேண்டும். சந்தர்ப்பம் அறியாமல், இலவச ஆலோசனைகள், புத்திமதி உபதேசித்தல் என்பது எல்லா நேரத்திலும் சரிப்பட்டு வருமா? இதனால் பிறருக்கு ஏன், பிள்ளைகளுக்கே எரிச்சல்தான் வரும்.

சகலருக்குமே சுயபுத்தி உண்டு. எனினும் தெரியாத நுட்பமான சங்கதிகளை எமது அனுபவ வாயிலாக, பொருத்தமான இடத்தில் பிரயோகிக்க வேண்டும்.

வயது, அனுபவம் உள்ளவர்களுடன் பேசும்போது, பதவி, செல்வாக்கு உள்ளவருடன் பழகும்போது, வலிமையுள்ளவர்களுடன், துஷ்டர்களுடன் கதைக்கும்போது, புதிதாக காணும் ஒருவருடன் பழகும்போது, எம்மைப் பிடிக்காத நபர்களுடன் உரையாடும்போது, ஒரு குடும்பத்தைப்பற்றி, அவர்கள் சார்ந்த சமூகம் பற்றி எமக்கு ஒன்றுமே தெரியாமல், பொது இடங்களில் பத்துப் பேர் பேசிக்கொண்டு இருக்கும்போது, எமக்குப் பரிச்சயம் இல்லாதவர்களே வந்து உரையாடும்போது, நாம் சர்வ ஜாக்கிரதையுடன் பேசுதல் வேண்டும். அப்போது நாம் கண்டபடி குற்றங் குறைகளை கூறிவைத்தல் ஆபத்தாகவே முடியும்.

எந்த விஷயத்தினைக் கையாளும்போதும் அதில் ஒரு கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். எங்கள் நியாயங்களை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிலை நிறுத்த முயலக்கூடாது. இதனாலேயே பிறர் தவறுகளை நாம் தேவையற்ற விதத்தில் சொல்லப்போய், பிரச்சினைகளில் மாட்டிவிடுகின்றோம். பிறருக்குரிய உரிமைகளை எமது உபதேசங்களினால் தகர்க்க முயலாதீர்கள். அவர்களையும் சிந்திக்க விடுங்கள். இவைகளை நாம் பொறுப்புணர்வுடன் அவர்களுக்குரிய ஆற்றலை மதித்து, கௌரவித்தல் மூலமே செயற்படுத்த முடியும். உங்கள் செயல் வழிகாட்டியாக அமையவேண்டுமே ஒழிய, வழி மறித்தலாக அமையக்கூடாது.

RangaRakes



வரையறைக்குட்பட்ட எமது கருத்துக்களைப் பகிர்தல் முறை, அன்புடன் கூடிய எமது ஆலோசனைகளை கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் பகிர்ந்து கொண்டால் பிறரும் எமக்கு வழங்கவேண்டிய கௌரவம், மரியாதைகளைத் தாராளமாகவே வழங்குவார்கள். மற்றபடி,

குற்றங் காணுதல் என்பது, உற்ற துணைவர்களையே உதறிடும் செயலாகும். எம்மைச் சுற்றிச் சூன்யத்தையே வரவழைக்கும் செயலுமாகும். ஆகாத பழக்கத்தை அகற்றுதல் சிறப்புத்தானே!

தினக்குரல் - 17.12.2000

Tamilnavarasam.com



# தியாகம்

**தா**ங்கள் சிரிப்பதற்காகப் பிறர் அழுவதை எதிர்பார்க்கின்ற ரசித்து மகிழ்கின்றவர்கள் உள்ள இந்த உலகில் நாம், தியாகம் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். தன்னலமற்ற தியாக உணர்வுள்ளவர்களால்தான், இந்த வையகம் வீழ்ந்துவிடாது, உயர்ந்து உயிரோட்டமாக இருந்து வருகின்றது.

தனிமனிதனுக்காக, முழு சமூகத்திற்காக, பரந்துபட்ட பூமிக்காக, தனக்கு வரவேண்டிய, நன்மைகளை இன்பங்களை விட்டுக் கொடுப்பதுதானே, தியாகம் என்கின்ற தூய வழியாக அமைகின்றது. இவைகளை விட்டுக் கொடுப்பது என்பது, சாமான்ய விஷயம் என்று கூறிவிட முடியுமா? இது அர்ப்பண சிந்தையால் எழுந்த இயல்பு. தியாகத்தின் மூலம் ஒருவர் பெறும் மன நிறைவுதான், அவருக்குக் கிட்டுகின்ற பெரும் பயனாகும். இவர்கள் தமக்கு வரவேண்டிய வாய்ப்புக்கள், வரவுகளைப் பற்றிச் சிந்திப்பது கிடையாது. அத்தகைய சிந்தனைகளை உருவாக்கும் எண்ணங்களை வேரோடு அடிமனதில் இருந்து அகற்றியும் விடுகின்றார்கள். பெரும் தலைவர்களான, தியாக சீலர்கள் செய்துவிட்டுப்போன சேவையின் பயனைத்தான் நாம் இன்று அறுவடை செய்துகொண்டு இருக்கின்றோம். எனவே, இனிவரும் தலைமுறையினருக்கு நாங்கள் என்ன செய்துவிட்டோம், அல்லது



செய்யப் போகின்றோம் என நாம் எம்மையே கேட்டுக் கொள்வோமாக. பயன்களை மட்டுமே பெறுதல் எமது வேலையா? நாங்கள் பெற்றுக்கொண்ட பயனுக்காக, உலகிற்கு என்ன பிரதி உபகாரம் செய்துவிடப் போகின்றோம்?

எல்லா விஷயங்களையும் நாம் சொல்லிக் கொடுத்து, கற்க வேண்டுமா என்ன? உலகோடு ஒன்றி வாழும்போது இங்கு நடக்கும் நடப்புகளை உணர்ந்து செயற்படுகின்றோம். பசித்தால் சாப்பிடுகின்றோம், தாகமாக இருந்தால் நீர் அருந்துகின்றோம். இவைகளைச் சொல்லிக் கொடுப்பதில்லை. இதற்கெல்லாம் அனுபவம் தேவையுமில்லை. இதேபோல்தான் பிறருக்காக நாம், அர்ப்பணிப்புடன் சேவை செய்தலை, சாதாரண நடைமுறைக் கருமமாகச் செய்யவேண்டும். துன்பங்களை ஏற்காத தியாகமில்லை. ஆண்டாண்டு காலமாகவே வாழ்ந்துவிட்டுப் போனவர்கள் சுலபமாக எதனையும் சாதித்துவிட்டுச் செல்லவில்லை.

எமது உழைப்பு, எமது ஈகையாக மாற வேண்டும். தியாகம் என்பதே ஈகைதான். வேண்டப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, விலங்கினங்கள், பறவைகள் என்கின்ற அனைத்து உயிரினங்களாகட்டும், இவைகளுக்கான நியாயபூர்வமான தேவைகள் கிட்ட நாமும் ஒரு கருவியாக இருந்து செயல்படுவோமாக. எமக்கென ஓர் இடத்தினை நாம் ஆற்றுகின்ற தொண்டு செய்தல் மூலமே பெற்றுக்கொள்ள முடியும். கற்றுக் கொள்வதும், பணம், புகழ் பெறுவதும் இன்றியமையாதவைகள்

> தனி மனிதனுக்காக, முழுச் சமூகத்திற்காக, பரந்துபட்ட பூமிக்காக தனக்கு வரவேண்டிய நன்மைகளை இன்பங்களை விட்டுக் கொடுப்பதுதானே தியாகம் என்கின்ற தூய வழியாக அமைகிறது, இவைகளை விட்டுக்கொடுப்பது என்பது சாமான்ய விடயமா என்ன? இத்தியாக மனப்பான்மை தனிமனிதனுக்கு மட்டுமல்ல நாடுகளுக்கும்தான், சுரண்டும் நோக்குடன் நாடுகள் தம்மை வளர்க்காது, உலகம் முழுமையும் தியாக உணர்வுடன் வளர்க்க முற்படல் வேண்டும்.

RangaRakes
Tamilnavarasam.com

என்பதில் சந்தேகமில்லை. அத்துடன் எங்களுடன் மட்டும் நின்று கொள்ளாது, குடும்பம், நண்பர்கள், உறவினர் தேவைகளும் என விரிவடையும்போது மனிதன் எல்லோர் பொருட்டும் சேவை செய்ய, உழைக்க வேண்டிய பொறுப்புக்குள்ளாகின்றான்.

இந்தப் பின்னலுடன் மனிதன் வாழும்போது, இவன் சார்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான். செடி கொடி, ஜீவராசிகள் அனைத்துமே வாழத்தான் அவதரித்தன. இவைகளின் ஜீவியம் ஒன்றுடன் ஒன்று பிணைந்து, சார்ந்து இருப்பதனால், ஒன்றின் துன்பத்தில் இருந்து மற்றையது தப்பிக்கமுடியாது. இதை நாம் உணர்ந்தால் போதும், தியாக சிந்தனை தானாய் மலரும். எமக்காகவே எல்லாம் ஆக்கப்பட்டன. இவைகளின் உயர்ச்சி, மலர்வு, வாழ்வினால்தான் வையகம் வாழுதலும் சாத்தியமாகும் என நினைத்தல் வேண்டும்.

இலக்கியங்களிலும், நாடகம், சினிமாக்களிலும் காணுகின்ற பாத்திரங்களில் தியாக உணர்வின் பிரதிபலிப்பைக் கண்டு மனம் நெகிழ்ந்து கண்ணீர் மல்குகின்றோம். இவைகளில் இருந்து எமது அனைவரின் நெஞ்சங்களிலும் இயல்பான பச்சாதாபங்கள் இரக்க, ஈர உணர்வுகள் இருப்பது உண்மையேதான் என்றாலும், யதார்த்த நிலையில் மாறுபாடாகச் செயல்படுவது விந்தையேயாகும். தியாகம் செய்ய, கொடை வழங்க, உடன் மனம் தயாராவதில்லை.

நம்ப முடியாமல் எத்தனையோ காரியங்கள் நடக்கின்றன. நல்ல பெரிய காரியங்களை, இப்படிக்கூட நடக்கின்றதா என நாம் நினைந்து ஆச்சரியப்படுகின்றோம். பெரியோர் வாழ்க்கையைப் பற்றி நாம் படிக்கும்போது இவைகளைப் புரிந்து கொள்ளலாம். இத்தகைய அருஞ்செயல்களைச் செய்தமையினால்தான், அவர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். செயற்கரியன செய்வோர், பெரியோர், இவைகளை இவர்கள் கஷ்டமுறாது செய்து முடிக்கவில்லை. தியாக உணர்வின்றி, உழைத்தல் இன்றி இறைவனிடம் போய் இறைஞ்சி வரம் கேட்பதில் என்ன வந்து



விடப்போகின்றது. உண்மையில் சொல்லப்போனால் தியாக சேவைதான் இறைவனிடம் பெறும் வரத்தினைவிட மன நிறைவுடன், பெறும் பெரும் பேறாகும். இந்த உள்ளத்தை அருளுமாறு இறைவனிடம் வரம் கேட்பதே உத்தமமானது. தியாகிகள், பிறர்க்கு இல்லை என்று கூற வைக்காத உதவும் நிலையினைத் தா இறைவா எனவே வேண்டுதல் செய்தனர்.

தியாகம் புரிந்தவர் தன்னையே கொடுத்தவர் ஆகின்றார். இவை மனம், வாக்கு, காயத்தினை முழுமையாக அர்ப்பணம் செய்வதேயாகும். இங்கு பிரதிபலன் என்ற பேச்சிற்கே இடமில்லை. ஆயினும் நாம் தொழில் மூலம் ஆற்றும் சேவைக்கான, செல்வங்களைக்கூட தகுந்த வழியிலேயே பிறர் பயனடையுமாறு கொடுத்துதவுதல் வேண்டும்.

கசிவான மனதுள்ள பண்பாளர்கள் தாம் விரும்பும் பொருளைக் கூட, அது பிறருக்கு உதவும் எனின் உடன் இழக்கச் சித்தமாய் விடுவார்கள். பணம், பொருள் ஆகட்டும், ஏன் காதலைத் தானாகட்டும் உடன் பாசத்தின் நிமித்தம், மனிதாபிமானத்தின் பொருட்டு அளித்துவிடுவதுடன், அதன் பொருட்டு வலிந்து இன்னல்களையும் தேடிக்கொண்டு விடுகின்றனர்.

இன்னும் ஒரு சாரார், தமக்கு இஷ்டமானதை மட்டும் வைத்துக்கொண்டு, தேவையற்றதை கட்டிக் காத்துக் கொண்டிருக்காமல் பிறருக்கு அது தேவை என்றால் கொடுத்து விடுவார்கள்.

இப்படி இருக்க, நம்மிடம் வந்து ஒருவர் நன்மை பெறுகின்றார் என்ற திருப்தியானது, எமக்கு ஏற்படும் இழப்பினால் ஏற்படும் துன்பத்தினையே தோன்றாமல் செய்யும் ஆற்றல் மிக்கது எனத் தெரிந்து கொள்ளுங்கள். பிறரது துன்பங்களில், பெறும் குரூரத் தன்மையான இன்பம், தாம் அடைந்த வெற்றி எனச் சிலர் கருதுவது மடமையிலும் மடமையின்றி வேறென்ன? இந்த

RangaRakes Tamilnavarasam.com

அலுவல்களைத்தானே உலகின் நாடுகள்கூடச் செய்து கொண்டிருக்கின்றன? ஒரு நாட்டிற்கு இடுக்கண் புரிவதும், அந்தத் தொல்லை தாங்காது, இடுக்கண் செய்த நாட்டிடமே வலிமை குறைந்த நாடுகள் போய் சரணடைந்து மண்டியிடுவதும் எவ்வளவு பரிதாபமான நிகழ்ச்சிகள்! தனிமனிதனுக்கு மட்டுமா தியாக உணர்வு தேவைப்படுகின்றது. ஏன் நாடுகள், வல்லரசுகள்கூட தியாக உணர்வுடன் செயல்பட்டால் என்ன? தங்கள் நலன் மட்டுமே பேணப்பட்டால் தியாகமாகுமா? உலகிற்கு உதவுதல் போல் காட்டி நிற்பதும், சூழ்ச்சி செய்வதும் தியாகம் செய்தலையே கொச்சைப்படுத்தல் போல் ஆகாதா? வேதனை என்னவெனில்-

வேறுவழியின்றி இந்த நாடுகளைக் கூடத் தியாகபூமி என்று சொல்ல வேண்டியிருக்கின்றது. செல்வம், வலிமையினால் எல்லாவற்றையுமே வெல்ல முடியுமா? இவைகள் சும்மா இருந்தாலே போதாதா? தியாக உள்ளத்துடன் கூடிய தலைமைத்துவத்தினால்தானே இந்த அவல நிலைமாறும். உலக கவலைகளும் போகும்.

தியாகத்தின் பரிமாணத்தினைப் புரிந்து கொள்ளுவோம். இது வெறும் பெயர் சம்பாதிக்கும் கருவியல்ல. அறத்தின் உருவம் தியாகம். மதங்கள் அனைத்தின் வேதமும் அதுவே!

தினக்குரல் - சிறப்பிதழ் 01.01.2001



# உலகை உருவாக்கித் தரவல்ல உயர் சக்தி கல்விதான்



**க**ல்வி தொடர்பாக, நம்மவரில் பலர் இப்போது பேசுகின்ற பேச்சுக்களைக் கேட்க, எரிச்சலும் திகைப்புமாக இருக்கின்றது.

படிப்பு என்ன ஐயா, படிப்பு, படித்து என்ன கிழிச்சுவிடப் போகிறீர்கள். முதலில் நாலு காசு சம்பாதிக்கிற வழியைப் பாருங்கள். உழைக்கின்றவனுக்குத்தான் இப்போ மதிப்பு. இப்போ படித்தவனைவிட, படிக்காதவன் எதில் குறைந்துவிட்டான். சொல்லப்போனால் அவர்கள் தானே கூடச் சம்பாதிக்கின்றார்கள்.

இப்படிச் சொல்லுகின்றவர் தொகை நாளுக்கு நாள்கூடிக் கொண்டுதான் வருகின்றது. இப்படிச் சொல்பவர்களின் வார்த்தைகள் வெறும் விதண்டாவாதம் மட்டுமல்ல, அறியாமையின் உச்சக் கட்டப் பேச்சாகவும், ஏன், சற்றுத் தாழ்வு மனப்பான்மையால் எழுந்த ஆதங்கமான பேச்சுக்களேயாகும்.

கல்வியினால் பெறப்பட்ட சகல சலுகைகளையுமே அனுபவித்துக்கொண்டு, இப்படியான தவறான எண்ணங்களை கொண்டிருப்பது, எதிர்காலத்தில் ஆபத்தான பின் விளைவுகளைத் தோற்றுவிக்கலாம். கல்விதான் எமக்கு அடிப்படைத் தேவையான காலகட்டத்தில், நவ யுகத்தின் புத்தாயிரமாம் ஆண்டின்

RangaRakes Tamilnavarasam.com

தொடக்கத்திலேயே பிழையான கருத்துக்களை அகத்துள் புகுத்துதல் பாரதூரமான செயலேயன்றி வேறென்ன?

இன்றைய நாட்டின் சூழ்நிலைகள், காரணமாக சில நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் பணத்தின் தேவையை நன்கு அறிந்தமையினாலும், வெளிநாடுகளில், உடல் உழைப்பின் மூலம் மேலதிக பணங்களை அனுப்பிக் கொண்டிருப்பதனாலும் கல்வி, சம்பளம் குறைந்த அரச, தனியார் தொழில் தொடர்பாக, மாறான அபிப்பிராயம் தோன்ற ஆரம்பித்துவிட்டன. தவிர, தனியார் தொழில் மூலமும், சுய வியாபார மூலமும் கல்வி இன்றியே உழைத்துவிட முடியும் என நம்புகின்றார்கள்.

அப்படியாயின் உண்மை நிலை என்ன? கல்வி இன்றியே நம்மால் சீவித்து விடமுடியுமா? அரசியல் சூழ்நிலைகளால் ஏற்படும் மாற்றங்கள், நிகழ்வுகள் நிரந்தரமானதா? இப்படியே ஏதாவது பணம் புரட்டும் தொழில்தான் வாழ்க்கையா? சிந்திப்போம்.

சொல்லப்போனால் இத்தவறான கருத்துக்கள் யாவும் ஒரு ஆற்றாமையின் வெளிப்பாடாகவே இருக்கின்றது. முன்னேறி வரும் இந்த உலக ஓட்டத்திற்கு ஈடு கொடுக்கும் விதத்தில் நாமும் மாறித்தான் ஆகவேண்டும். கல்வி தொழில் நுட்பம் போன்றவைகளின் அபரிமிதமான வளர்ச்சியுடன் போட்டி போடாமல் நாம் வாழ்ந்துவிட முடியாது. ஐந்து வயதுப் பிள்ளைகள்கூடக் கணனி வயப்பட்டுவிட்டனர். நேற்றைய சந்ததியினரின் மூளை ஓட்டத்திலும் பார்க்க, தற்போதைய தலைமுறை படு வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

> இன ரீதியான, மொழி ரீதியான பிரச்சனைகளால் கல்வி மேம்பாடுகளில் ஒரு சாரார் பாதிப்படைந்து வருவது கவலை தரும் விடயமாகும். ஆயினும் இத்தடையினை மீறி எழும் கல்வி கற்பதான எழுச்சி மிகவும் அதிசயிக்க வைத்துள்ளது. ஒரு துறையில் புறக்கணிக்கப்படும் இவர்கள் தமது முயற்சியினால், தாம் விரும்பிய ஏதோ ஒரு துறையில் கல்வி கற்றுப் பிரகாசிப்பதை எவருமே தடுத்துவிட முடியாது. கல்விகூட ஒரு தாகம்தான்.



மக்கள் தொகை அதிகரிப்பு, பொருளாதார போட்டி, இவைகள் கூடி வரும்போது, நாம் நினைத்ததைப் பெற, கடும் முயற்சி எடுத்தாகவேண்டிய கட்டாய சூழ்நிலை வந்துவிட்டது. எப்பாடுபட்டாவது கல்வி கற்றால்தான், சமூக அந்தஸ்து, பதவி கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையுடன், கடும் உழைப்புடன் மாணவ சமூகம் பெரும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தொழில் வாய்ப்புக்கள் எவ்வளவுதான் கூடிக்கொண்டே வந்தாலும் கூடப் போட்டி போடுபவர்களின் எண்ணிக்கை, அதைவிடக் கூடிக் கொண்டே செல்கின்றது.

எனவே,

தகைமைகள், தகுதிகளை அரசுகளும், நிறுவனங்களும் மிகைப்படுத்திக்கொண்டே செல்கின்றன. இருந்தும் என்ன, இந்தப் பிரச்சனைகள் தீர்ந்தபாடில்லை. இவை ஆக்கபூர்வமாக, ஆய்ந்து, புது புது முயற்சிகளை திட்டங்களை உருவாக்கியும் வருகின்றன. கல்வியையும், அதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியையும் முழுமையாகப் பெற இவை போராடி வருகின்றன.

இப்படியிருக்க - சிலர் விடயம் புரியாமல், கண்டபடி எழுந்த மாதிரி, கல்வி கற்பது பற்றி வீண் வியாக்கியானம் செய்து விடுகின்றார்கள்.

ஆயினும் கூட மாணவ சமூகத்தில் படிப்பின் வேகம் கூடி வருவது, மனதுக்கு ஆறுதல் அளிக்கும் விஷயமாக இருக்கின்றது.

தொழில் செய்பவர்களுக்கு அதாவது உடல் ரீதியாகக் கஷ்டப்பட்டு உழைப்பவர்களுக்கு மேற்கத்திய நாடுகளில் பாரபட்சம் காட்டப்படாமல் வேதனம் மிகையாக வழங்கப்படுவது உண்மையே. கல்வி கற்றவர்களைவிட கல்வி கற்காதவர்கள் உடலால் வருந்தி உழைத்து மேலதிகமாக சம்பாதிப்பது

RangaRakes

Tamilnavarasam.com

வரவேற்கத்தக்க அம்சமானதுதான். இது தொடர்பாக வெளிநாட்டில் கல்வி பயின்ற பேராசிரியர் ஒருவர், தங்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்களைவிட சில மாணவர்கள்கூட, மிகவும் கஷ்டப்பட்டு சம்பாதித்து கொள்வதைத்தான் பார்த்ததாகத் தெரிவித்தார். ஆயினும் இத்தகைய கடின உழைப்பு எவ்வளவு காலத்திற்குச் செய்ய முடியும். இதே வாய்ப்பு தொடர்ந்து நிரந்தரமாக இருக்குமா என்பது கேள்விக்குறியேயாகும். தொழில் ரீதியாக மனிதர்களை வேறுபடுத்திப் பார்க்கும் இயல்பு அங்கு கிடையவே கிடையாது. எமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று, அதிகமாக உழைத்து அனுப்பும்போது, அங்குள்ள உண்மை நிலை, மெய் வருத்தம், உளவியல் ரீதியான மனக்கொந்தளிப்பு, ஆதங்கம் இவைகளை உணராது, பணத்தை மட்டுமே மையமாக வைத்து கல்வியை கொச்சைப் படுத்துதல் நியாயமானதுதானோ?

கல்வி கற்றல் என்பது வெறும் உழைப்பது, பதவி வகிப்பது என்பதுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. இது தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து செல்வது. நாம் கல்வி பயில்வது இவற்றுடன் மட்டும் நின்று விடுவது அன்று. எமக்குப் பின்னே ஒரு சந்ததியினர், நாங்கள் தமக்கு என்ன வழங்கப்போகின்றோம் என்பதை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். கல்வியறிவற்ற ஒரு சமூகம் உருவாவது ஒரு பரம்பரைக்கு நாம் செய்யும் நீடித்த தவறாகக் கருதப்படும்.

எனவே, தற்காலிக நிவாரணங்களுக்காக கல்வியின் அத்தியாவசியத் தன்மையை உணராது போவது, ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்றல்ல.

ஏன் எனில், கிடைப்பதைக் கொண்டு வாழ்ந்தால் சரி என்றில்லாமல், எதிர்கால சந்ததிக்கான வழக்கங்களை, காரணங்கள் கூறி மழுப்பாமல் கல்விக்கான பாதைகளை சீராக வழி சமைக்கவேண்டும். ஒரு பிள்ளை படிக்காது விடுதல் என்பதே, ஒரு பரம்பரை படிக்காமல் போவது போலாகும் என அறிக.



கல்விக்கான பாதைகள் எவ்வளவோ உண்டு. நாம் அறிந்தவரை, மிகவும் புத்திசாலியான ஊக்கமுள்ள பிள்ளைகள், பல்கலைக்கழக அனுமதி கிட்டவில்லை என சோர்ந்து போகாது, தமக்குப் பிடித்த ஒரு துறையைத் தெரிந்தெடுத்துப் பலரும் வியக்க அதில் பயின்று தேர்ந்து, நல்ல நிலைக்கு வந்து விடுகின்றனர். கற்காமல் விடுவதற்குக் காரணம் சொல்லக்கூடாது.

தியாக உணர்வுள்ள பெற்றோர்கள் எவர் எது சொன்னாலும், சமூக அந்தஸ்து, உயர்நிலை நோக்குக் கருதி தம் பிள்ளைகளை பலத்த சிரமத்தின் மத்தியில் பயிற்றுவித்தலை நாம் காணுகின்றோம்.

அரசியல் சூழ்நிலைகள், பொருளாதார கஷ்டங்கள் காரணமாக கல்வி நிலை பாதிப்படைவது சகிக்க முடியாத மன வேதனை தரும் விஷயம்தான். ஆயினும், இதன் பொருட்டு நாம் சோர்ந்துவிட முடியுமா?

இனரீதியான, மொழி ரீதியான பிரச்சினைகளால் கல்வி மேம்பாடுகள் குறுகுவது போலவே தென்படுகின்றன. எவ்வளவு படித்தாலும் தொழில் கிடைக்கவில்லையே என்கின்ற ஏக்கம், ஆதங்கம் எம்மை அரிக்கின்றது. ஆயினும் இவைகள் எல்லாவற்றையும் மீறி, எழும் எழுச்சி கல்வி மீதான முட்டுக்கட்டைகளை உடைத்தெறிந்தே தீரும். ஒரு துறையில் புறக்கணிக்கப்படும் மாணவர்கள், வேறு ஏதோ ஒரு கல்வித்துறையில் பிரகாசித்து வருவதே இக்கருத்துக்கு முன் உதாரணங்களாகும். கல்வி கூட ஒரு தாகம்தான். கல்வியினுள் நுழைந்துவிட்டால், இந்த உணர்வு அதிகரித்துக்கொண்டே போகுமே ஒழிய, குறைவுபடாது.

கல்வி முறைகளில் தேர்வு செய்யும் முறையில்கூட உலகம் இப்போது முழுமையாக மாறிவிட்டது. நாம் முன்னர் அத்தியாவசியமாகத் தேவையில்லை என நினைத்திருந்த

RangaRakes
Tamilnavarasam.com

கல்வித்துறைகள் பல, இப்போது பலருமே விரும்புகின்ற துறைகளாகிவிட்டன. உதாரணமாக, நுண்கலைகள் கவின் கலைகள், சமயத்துறைகளில் போதிய தகுதியானவர்களைக் கண்டு பிடிப்பதே சிரமமாயிருக்கின்றது. எனவே இதன் அத்தியாவசியத்தை உணர்ந்து, தற்போது இவைகளை ஆர்வமுடன் பலர் பயில்வதனை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. காலத்திற்கு ஏற்றவாறு கல்வி கற்பவர்களும் மாற வேண்டியுள்ளது. விருப்பமான துறைகளைத் தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

கல்விக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், நுண்கலைக்கல்லூரிகள் பலவும் மாணவர் தொகைக்கேற்ப பல்கிப் பெருகி வருகின்றனர். இங்கு காலத்திற்கு ஏற்றாற்போல் பலவித கற்கை நெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் கல்வி மறுமலர்ச்சியின் அடையாளங்கள் அல்லவா?

இன்று மாணவ சமூகத்திடையேயுள்ள விரக்திக்கு முக்கிய காரணம், எதிர்காலத்தில் தமது கல்விக்கு ஏற்ற தொழில் வாய்ப்பு கிட்டுமோ இல்லையோ என்ற அச்சமும் ஒரு காரணமாகும். இன்று நடைமுறையில் நாம் காண்பது என்ன படித்த படிப்பிற்கும், செய்யும் தொழிலுக்கும் பெரும்பாலும் சம்பந்தமேயிருப்பதில்லை. தொழில் வாய்ப்புக்கள் குன்றியதால் அகப்பட்ட தொழிலை ஏற்றுக் கொள்கின்றார்கள். இதனால் காலப்போக்கில் தாம் கற்ற கல்வியையே மறந்து விடுகின்றனர். இதனால் இவ்வளவு காலமும் படித்த படிப்பு, காலம், முயற்சிகள்கூட வீணாக்கப்படுவதுபோல் தோன்றுகின்றது. எவராயினும் தமது கல்வி மூலம் பெற்ற பயனைப் பிறருக்கு சமூகத்திற்கு வழங்காதுவிடின், என்ன பயன்? அன்றியும் தாம் பயின்ற கல்வியுடன் தொடர்பில்லாத தொழிலைச் செய்வதனால், செய்கின்ற தொழிலில்கூட பூரண திருப்தியின்மையும், ஈடுபாடு இன்மையும் தோன்றுகின்றது. இதனால் தாம் செய்யும் கடமையில் முழுமையுறாது, தொழில்



நிறுவனத்திற்கோ, ஏன் அரசாங்கத்திற்கோ ஒருவிதத்தில் பாரமாகிவிடுகின்றனர்.

தொழில் புரிதல் என்பது பூரண மன நிறைவுடன் ஆற்றவேண்டிய ஒன்றாகும். இன்றும் கூட எமது நாட்டில் கல்வியில் முறை பூரணமானது, திருப்திகரமானது என்று கூறிவிட முடியுமா? காலத்தின் அவசியத்திற்குத் தகுந்த விதத்தில் கல்விச் சீரமைப்பு அமைதல் வேண்டும். நாம் இன்னமும் மூன்றாம் மண்டல நாடுகளிடையே, பின் தங்கியோரில் முன் வரிசையில் அமரவே போட்டி போடுவதுபோல் நடப்பதாக சில சமயம் தோன்றுகிறது. நவீன தொழில் நுட்பம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் இன்றி எந்த நாடுமே உருப்பட முடியாது.

கல்வித்துறைகளில் பாகுபாடு இல்லை. சகல துறைகளுமே ஒவ்வொரு விடயத்தில், தனித்துவமான பெருமைக்குரியனவே என்றாலும், மிக அவசியமற்ற சில கல்வித் துறைகளுக்கு கோடிக்கணக்கான நிதிகளை செலவழிப்பதனால், முன்னேற்றமடைந்த நாடுகளுடன், கல்வி வளர்ச்சியில் போட்டி போட முடியாதுள்ளது. காலத்துடன் இயைந்த கல்விச் சீர்திருத்தங்களை நாம் கண்டு கொள்ளவேண்டும். பல்கலைக் கழகங்களில் எத்தனை ஆயிர பட்டதாரிகள் உருவாகின்றனர் என்பது பெரிதல்ல. இவர்களில் எத்தனை பேர் சமூகத்திற்கும், நாட்டிற்கும் பூரணமாகப் பிரயோசனப்படுத்தப்படுகின்றார்கள் என்பதே முக்கியமானதாகும். இவர்களைப் பூரணமாகப் பிரயோசனப்படுத்தாமையினால், சாதாரணமான தரத்தில் உள்ள படித்தவர்களின் பங்களிப்பினைவிட, இவர்களின் சேவை மிகவும் குறைபட்டதாகவே அமையலாம்.

இன்று கல்வியில் முன்னேற்றமடைந்துவிட்டதாக பெருமிதமடைந்தாலும்கூட தொழில்முறை பாகுபாட்டு நோக்கு எம்மை மிகவும் பாதிப்படையச் செய்துள்ளது. குறிப்பிட்ட ஒரு கல்வித்துறைக்கு உள்ள கிராக்கி, அல்லது மவுசு இன்னொரு

RangaRakes Tamilnavarasam.com

துறைக்கு இருப்பதில்லை. தொழில் ரீதியாக, அறிவையே அளவிடும் அறியாமையின் விளைவுதான் இது. பலராலும் சிலாகிக்கப்படும் தொழிலை ஒருவர் செய்தால் மற்றத் தொழில் செய்பவர்கள் சற்று மட்டமானவர்கள் எனக் கருதுகின்றார்கள். எல்லோரும்தான் கௌரவமான தொழில் கிடைக்கப்படுகின்றார்கள். இதில் என்ன உயர்வு, தாழ்வு வேண்டிக் கிடக்கின்றது. ஒரு கௌரவமான தொழிலுக்குள்கூட எத்தனை சதவீதம் பெரிசு, சிறிசு பார்க்கிறார்கள். இது ஒரு படு பிற்போக்குத்தனமான நினைப்பு அன்றி வேறென்ன? புதிதாக எதைத்தேடிக் கற்றாலும் அது கல்விதானே? இன்று கணனித்துறை, நவீன இலத்திரனியல் என்றெல்லாம் புதிது புதிதான கல்வியில் சாதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. நாமோ எமக்குத் தெரிந்த ஓரிரு தொழிலை மட்டும் கூறி அதுதான் உயர்ந்தது, மற்றதைப் படிப்பதால் பிரயோசனமே இல்லை என்று பிறர் கூறுவதை நம்பியும் விடுகின்றோம்.

கல்வித்துறையில் மட்டுமல்ல, ஏனைய பல விஷயங்களில் நாம் பாகுபாட்டோடு, முரண்பாடான, தவறான சிந்தனைகளை வளர்த்து வருகின்றோம். வளர்ச்சியடைந்த நாடுகளில் இத்தகைய சிந்தனை இல்லை என்றே கூறவேண்டும். முக்கியமாக,

இன்று எமது நாட்டில் நிலவுகின்ற சாதிப் பாகுபாட்டினைக்கூட கல்வி ஒன்றினால் மட்டுமே தீர்த்து வைத்துவிடமுடியும். ஒருவன் சமூகத்தில் பெரும் கல்விமான் ஆக வந்துவிட்டால், எவருமே தயங்காது அவரிடம் சென்று அவரிடம் கிடைக்கும் கல்விச் செல்வத்தை அள்ளத்தான் முனைவார்கள். அப்போது எவருமே சாதிப் பாகுபாட்டினைக் கிஞ்சித்தும் நோக்குவது கிடையாது. அத்துடன் கல்வி கற்ற எவரையுமே மிக்க கௌரமாகவே எவருமே நோக்குவர். இன்று கல்வியினால், உயர் பதவி பெற்றவர்கள், எந்த தரத்தினராயினும்கூட அவர்கள் நிலையினை தரம் மதித்து, தக்க மரியாதையுடனேயே சமூகம் தலை



வணங்குகின்றது. திறமைகளை வளர்த்துக்கொண்டால் மட்டுமே சாதியில் பின் தள்ளப்பட்டு, இம்சிக்கப்படுபவர்களின் தரம்கூடி உயர் நிலை அடையமுடியும். ஒருவர் திறமைக்கும் ஆற்றலுக்கும் மடங்காதவர் இருக்கமுடியாது. ஜாதிக் கொடுமையிலும் கூடத் தமது கல்வியறிவினால் இந்த சமூக ஏற்றத்தாழ்வு விலங்குகளை உடைத்து எறிந்த அறிஞர்கள், மேதைகள், எழுத்தாளர்கள், கலைஞர்களை நாம் கண்டுகொள்ளவில்லையா? இவை எல்லாமே கல்வியினால் பெற்ற உயர் வெற்றியன்றிப் பிறிதல்ல. கல்வி, சாதிப் பாகுபடுகளைச் சங்கரிக்கும்.

ஒரு ஒழுக்கமுள்ள கட்டுக்கோப்பான சமூகம், அது நாட்டிற்கு ஆற்றவேண்டிய பயன் அளப்பரியது. இதை உருவாக்கித் தரவல்ல ஆணிவேரை பலமுள்ளதாக்கச் செய்வதே, இந்த உலகிற்குச் செய்யும் பேருபகாரமுமாகும். உலகை உருவாக்கித்தரவல்ல ஆணிவேர் கல்விதான். இதில் இருந்து உருவாகும் விருட்சத்தில் பயனடையப் போவது முழு உலகமுமேயாகும். எமக்கு மட்டுமே கல்வி என்று எண்ணாது, சகலருக்குமே இது போய்ச்சேர வேண்டும். பின் தள்ளப்பட்ட மக்கள், எளிய மக்கள் என்று உலகு ஒதுக்காது, அனைவருக்குமான கல்வியூட்டல் மூலமே பரந்துபட்ட பூமி, ஒளியூட்டப்பட்ட புண்ணிய பூமியாக மாறும். கல்வி ஒருவரிடம் மட்டுமே முடங்கும் பொருள் அல்ல. ஒருவரிடம் பெற்ற கல்வி ஒளி ஒரு கோடி பேரைச் சென்றடையும் தன்மை வாய்ந்தது. பலகோடி செல்வத்தை ஈந்து விடுவதிலும் பார்க்க, சிறு குடிலில் வாடும் ஒரு ஏழைக்குக் கல்விச் செல்வத்தை அள்ளிக்கொடுக்க முடிவு செய்தல் கோடிப் பெருமையன்றோ.

தினகரன் 03.06.2001

RangaRakes
Tamilnavarasam.com

# மனநோயாளரை மனிதராக நடாத்துவோம்



வெளி உலகில், அதிபுத்திசாலிகள் போல் நடித்துக் கொண்டு, ஆனால் செய்கின்ற காரியங்களில் முற்றிலும் முரணான முறையில் செயல்படுபவர்களைக் காட்டிலும், சித்த சுவாதீனமுள்ள நோயாளிகள் ஒன்றும் பிரச்சனைக்குரியவர்கள் அல்லர். இவர்கள் சமூகத்திற்கு குற்றம் இழைக்க அவதரித்தவர்களோ அன்றி தேவையற்ற பிரகிருதிகள் என உதாசீனப்படுத்தப்பட வேண்டியவர்களும் அல்லர். சட்ட விரோதச் செயல்களில், கொடூர குற்றங்களைச் செய்பவர்களில் பலர் இன்று, சித்த சுவாதீன முகமூடியை அணிந்து சாதுரியமாகத் தப்பித்துக் கொள்வதுதான் இன்று கேள்விப்படுகின்ற சங்கதிகளாகிவிட்டன.

ஆனால் -

இன்று மனநோயாளிகளின் அதிகரிப்பிற்கு சமூகமே ஒரு காரணமாகிவிட்டதும் மறுப்பதற்கில்லை. இவர்கள் மீது இரக்கப்பட்டு, அனுசரித்துப் போகின்றோமா? இவர்களைப் போஷிக்கின்ற, பராமரிக்கின்ற பொறுப்புக்களில் இருந்து சமூகம் விடுபட நினைப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது.

ஏன் எனில்,



சித்த சுவாதீனம் என்பது ஒரு நோய்.

எல்லாமே நிரந்தரமானது, என எண்ணி நம்முன்னே காணும் பரிதாபத்திற்குரியவர்களைப் பார்த்து நகைத்தல் அழகாமோ? எந்த நிலையும் எவர்க்கும் வரலாம். எந்த நிலையும் மாறுதலடையலாம். இது இயற்கை நியதி. இவை புதிதான கருத்துமன்று.

நாட்டில் நடக்கின்ற நடப்புக்களைப் பார்த்தால், மனநோயாளிகளாகக் கண்ணுக்குத் தெரிபவர்களைவிடக் கண்ணுக்குப் புலப்படாத நோயாளிகள்தான் அதிகமாக இருக்கின்றார்கள். இவர்கள் சாதாரணமாக உலவுகின்ற மக்களைக் கூடத் தமது நடிப்பாற்றலாலால் மேலும் குழப்பியடித்து வருகின்றனர்.

உண்மையான நோயாளிகளைப் பூரணமான மனிதர்களாக மாற்றிவிடலாம். வெளியில் நடிப்புடன் உலா வரும் இவர்களைக் கண்டு கொள்வது எங்ஙனம்? இனம் காண்பதே கஷ்டம்தான்

எதிர்பார்த்த பயன் கிட்டாமை, விபத்துக்கள், பரம்பரை, போன்ற காரணங்களினால் மனநிலை பாதிப்படைவதாகக் கூறப்படுகின்றன. இத்துடன் சமூக அழுத்தங்கள் அரசியல் பிரச்சனைகளால் ஏற்படும் குழப்பங்கள், யுத்த சூழ்நிலைகள், பிரிவுத்துயர்கள் போன்றவைகளும் ஏனைய பிரதான காரணியாக அமைகின்றன. எவ்வித வயது வித்தியாசமுமின்றி இந்நோய்க்களாகுபவர்கள் நிலைபற்றி மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் நோக்கல் வேண்டும். இது என்ன

> மனநோயாளிகளைக் கேலி செய்வதும் ஒரு வகையில் மனித உரிமை மீறலேயாகும், எல்லாமே நிரந்தரமானது என எண்ணி நம்முன்னே காணும் பரிதாபத்திற்குரியவர்களைப் பார்த்து நகைத்தல் அழகாமோ? எந்த நிலையும் எவர்க்கும் வரலாம் - எந்த நிலையும் மாறுதலடையலாம், இது இயற்கை நியதி இவை புதிதான கருத்துமன்று.

RangaRakes Tamilnavarasam.com

குணமாக்க இயலாத ஒன்றா? எத்தனையோ பேர், அதிசயிக்கும் வண்ணம் குணமாகி, தங்கள் கடமைகளைச் செய்வதை நாம் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றோம்.

அப்படியிருக்க,

தெருவில் செல்லும் மனநோயாளிகளைக் கண்டால், கல் எறிவதும் கேலி பேசுவதுமாக, அவர்கள் உள்ளத்தையும் உடலையும் வருத்தலாமா? அவர்கள் இடுகின்ற கூக்குரல், கத்தல் எப்படி, வருத்துபவர்களுக்குச் சுகானுபவமாகின்றதோ தெரியவில்லை.

ஒன்று மட்டும் உண்மை!

மனம் வருந்தியழும், மனநோயாளியின் அழுகைக்குரல் இறைவனைப் போய் அடையும். வருத்துபவர்கள், வருத்தமடைவார்கள்.

சிலர் செய்கின்ற செய்கையாலும், சேஷ்டைகளாலும் சாதாரண மனிதனே முட்டாளாகிப் புத்தி பேதலித்து விடுகிறான். அப்படியிருக்க சற்று வித்தியாசமான நிலையில் உள்ளவர்களை மேன்மேலும் கிண்டலடித்து அவர்களைக் கோமாளியாக்கி, முடிவில், சித்த சுவாதீனமான நிலைக்கே தள்ளியும் விடுகிறார்கள். ஒருவன் சற்று ஏமாளியானால் போதும், அவனை வதைத்தே விடுகிறார்கள்.

மனநோயாளிகளைக் கேலி செய்யும் விதமான செயல்களைப் பத்திரிகைகள், சினிமாக்கள் நிறுத்தி விடவேண்டும். இதுவும் கூட ஒரு மனித உரிமை மீறல் செயலாகவேபடுகின்றது. பெரிய மூளைசாலிகளே கூட மித மிஞ்சிய உழைப்பு, ஓய்வு இன்மையால் சித்தம் பாதிப்புக்குள்ளாகும்போது, சாமான்ய மனிதர் எம்மாத்திரம்?



குடும்பத்தில் ஒருவருக்கு மனநிலை பாதிப்படைந்தால் ஒட்டு மொத்தமாக, அந்த குடும்ப உறுப்பினர்களை நிந்தனை செய்து உதாசீனமாக ஒதுக்கி விடுகின்றனர். இவர்கள் தக்க பராமரிப்பின்றி வீதிக்குத் தள்ளப்படுகின்றனர். இவர்களுக்கு குணமாகும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதில்லை. நோயாளி தன் நிலையில் இருந்து விடுபட நினைந்தாலும், சமூகம் அளிக்கின்ற அகௌரவம், அவனை மீண்டும் நோயாளி நிலைக்கே திருப்பி அனுப்பி விடுகிறது. தனிமை, விரக்தியால் அவன் சித்திர வதைக்கும் மேலான மன உழைச்சலுக்கு ஆளாகின்றான். மேலும்,

மனநோயாளிகளை, தகுந்த சிகிச்சையளிக்காமல், மந்திரம், மாயம் என்கின்ற சடங்குகளுக்குட்படுத்தி மேன்மேலும், அவன் மனதை ரணப்படுத்தி விடுகின்றனரே. பூரண சுகமடைந்த நோயாளியைக்கூட கடந்த கால வாழ்வை நினைவூட்டுவதன் மூலம், அவனைப் படுகுழியில் தள்ளுகின்ற நடவடிக்கை ஒருபுறமிருக்க,

குணமடையாத இத்தகைய மனநோயாளிகளைப் பாசம், பற்றுதல் காரணமாகப் பெற்றோர், உற்றோர் திருமணபந்தத்தில் இணைத்து விடுவதனால், ஏற்படும் விபரீதங்கள் சொல்லும் தரமன்று. நோய் மாறிவிடும் என நினைத்துப் பரீட்சார்த்த நடவடிக்கையில் இறங்கி விடுவது, ஒரு சுயநலப் போக்குமட்டுமன்றி, குடும்பத்தையும், சமூகத்தையுமே பாதிப்புக்குள்ளாக்கும் ஒரு நடவடிக்கையுமாகும். இன்றும், நாகரீகமடைந்த காலத்தில் கூட, வைத்திய ஆலோசனையின்றி இது போன்ற சம்பவங்கள், நடைபெறுவதை அறிந்திருக்கின்றோம். தமக்கு வேண்டியவர்களுக்கு நன்மை செய்கின்றோம் என எண்ணி, நோயாளியையும், அவரைத் திருமணம் செய்பவரையும், ஏன் சுற்றி நிற்பவர்களையும், அமைதியின்மைக்கு ஆளாக்குதலை இவர்கள் உணர்கின்றார்கள் இல்லை. இதில் மிகவும் வேதனை தரும் விஷயம் என்னவெனில்,

RangaRakes Tamilnavarasam.com

மனநிலை பாதிப்படைந்தவர்களுக்கு குழந்தைகள் பிறந்து. அதனால் அக்குழந்தைகள் கூட நல்ல பராமரிப்பின்றி அவஸ்தைப்படுகின்ற நிகழ்வுகளைக் கண்டும், கேள்விப்பட்டுமிருக்கின்றோம்.

சாதாரண நிலையில் உள்ள குடும்பங்களில் கூடப் பெற்றோர் பிள்ளைகளை கண்மூடித்தனமாக தண்டனை என்கின்ற பெயரில் தாக்குவதும், ஏசுவதும் கூடப், பிஞ்சு உள்ளங்களைப் பாதிப்படையச் செய்கின்றமையினை அறிதல் வேண்டும். அத்துடன் பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய பாசம், செல்லம் கொடுத்து வளர்ப்பதனால் கூடச் சில பின்விளைவுகள் ஏற்பட்டு விடுகின்றது.

கடுமையான கண்டிப்புக்கள், எல்லைமீறிய செல்லங் கொடுத்தல், இத்தகைய வளர்ப்புக்களால் பிள்ளைகள், பயத்தினாலும் சுதந்திர உணர்வு அற்ற நிலையில் சிந்தித்தலை, தாமே முடிவு எடுக்கும் ஆற்றலை இழக்கக்கூடும்.

இதுபோலவே, கூடிய செல்லம் கொடுத்து வளர்ப்பதால், எவரையுமே சார்ந்திருக்கும் பழக்கமும், துன்பங்களுக்கு முகம் கொடுக்கப்பயப்படும் போக்கும் அதிகமாகி, ஈற்றில் சமூக தெளிவு, சுழிவுகளை அறியாதவர்களாகி விடுகின்றனர். இந்த இரு சாரார் மூலம் வளர்க்கப்படும் பிள்ளைகள் சமூகத்தில், மற்றவர்கள் போல் இயங்க முடியாது, சோதனைகளுக்கு ஆளாகும் போது, தோல்வி மனப்பான்மை, தன்னம்பிக்கை இன்மையினால் துவண்டு, மனோநிலை பாதிப்படையும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

எனவே,

வளரும் சமூகத்தில், உதயமாகும் சிறார்களுக்கு, மனோ வளர்ச்சி, பக்குவ நிலையைப் பேண, இறை தியானம், பக்தி, பிரார்த்தனை போன்ற நற்பழக்கங்களைப் போதிக்க வேண்டும்.



இள வயது. தெளிந்த மனநிலையில் உள்ளது. இதே உணர்வுடன், இந்தப் பழக்கங்களை நாம் ஊட்டி வளர்த்தால், எதிர்காலத்தில் இவர்கள் அப்பழுக்கற்ற தூய நெறியாளனாகத் திகழுவார்கள் என்பது திண்ணம்.

தீய நண்பர்கள் சேர்க்கை, போதை வஸ்த்துக்கள் பாவனை போன்றவைகளால் இன்று இளம் சமூகத்தின் ஒரு பிரிவினர், முடங்கி ஒரு மனநோயாளியின் நிலைக்கே தள்ளப்பட்டு விட்டார்கள். பொருளாதார வசதி குன்றிய நாடுகள் என்று இல்லாமல் செல்வம் கொழிக்கும் நாடுகளில் கூட இன்று மன இயல்பு பாதித்தவர்கள் தொகை கூடித்தான் வருகின்றது. எந்த வர்க்கத்தையும் மனநோய் விட்டு வைப்பதில்லை. ஒவ்வொரு சமூக நடத்தைகளின் இயல்புக்கேற்ப காரணங்கள் மாறுபடும்.

நிம்மதி எல்லோருக்குமே வேண்டப்படும் ஒன்றாகும். எந்த நிலையில் பிறந்தாலும், நிம்மதியைப் பெற்றுவிட முடியும். இங்கு அந்தஸ்து, குல, ஜாதி பேதமில்லை. நிம்மதியை பெறும் விதத்தைக் கண்டறிதலே பிரதானமாகும்.

ஏதோ ஒரு விதத்தில் மனம் சஞ்சலப்படுகின்றது. வேண்டப்பட்டவர் மரணிக்கின்றார், காதல் அஸ்தமனங்கள் சொத்துக்கள் அழிதல், விபத்துக்கள், போன்றவையினால் பாதிப்படைதல், இடப்பெயர்வுகள், யுத்த சூழ்நிலைகளால் மனம் பேதலித்தல், பரீட்சைகளில் தோல்வி, வேலையின்மை, பொருளாதார கஷ்டம், அந்தஸ்து இன்மை, பீதி மிகையான சத்தங்கள், மற்றவர் மீது எல்லை மீறிய பொறாமை, அதிர்ச்சி போன்ற இன்னல்களை அனுபவிக்கும் போதுதான் அதன் தாக்கம் எத்தகையது என்பதை மனிதன் அறிகின்றான். இவைகளில் ஏதாவது ஒரு காரணத்தால் தாக்கப்படாமல் எவர் இருக்கின்றார்கள். எல்லோருமே எல்லாவற்றிற்குமே கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? கிடைப்பதைக் கொண்டு திருப்திப்படுவதுதானே வாழ்க்கை. இதையறிந்தால் மனிதவாழ்வில் பிரச்சனைகள் ஏது?

RangaRakes Tamilnavarasam.com

தங்களுக்கு மட்டுமே, கஷ்டங்கள் தொடருவதாக நினைப்பதா என்ன பயன் வந்துவிடப் போகின்றது.

கவலை இருக்கின்றது என்று கூறிக்கொண்டே கவலைப்படுகிறார்கள். இது மேலும் ஒரு புதிய கவலையை உண் பண்ணுவதாகவே அமையும்.

கவலைகளைத் தோழமை ஆக்க முயலவேண்டாம் கவலைகள் களையப்படவேண்டியவைதான், தூக்கிச் சுமக் வேண்டியவைகள் அல்ல.

மனத்தாக்கத்தினால் பாதிப்படைந்த எவருக்கும், ஆறுதல் அளித்தல் எம் கடன். சாதாரண நிலையில் உள்ள மனிதர்களே, தவறு இழைக்கும் போது, மன இயல்பு பாதிப்படைந்தவன், செய்கின்ற செயலுக்கு. நாம் முகம் சுளிப்பதும், என் நகையாடுவதும், அவர்களை ஒறுத்தலும், நியாயமான செயலாக அமைந்திடுமா? மன வளமுடன் வாழ்தல் என்பதே, மனிதனாக வாழ முனைதல் என்பதாம். விசாலமான சிந்தனைகள்தான் மனிதனை மண்ணுக்குரியவன் ஆக்குகின்றது. நாம் பிறர்க்கு வழங்கும் ஆறுதல்களால், தேறுதல்களால், பிறர் பயன் பெறுதல் என்பது எமக்கு நாம் வழங்கும் மன அமைதி என்று அறிவோம். மனநோயாளர்க்கும் உணர்வு உண்டு. மனிதர்தான் இவர்கள்; கனிவோடு நோக்குவோம், தனிமைப்படுத்தி, அவர்களை வாழ்வை வெறுமைப்படுத்த வேண்டாம்.

தினகரன் - 17.06.2001





# மன்னித்தல் தெய்வீகம்

இது ஒரு உண்மையான நிகழ்ச்சியாகும். உங்களுக்கு நம்பமுடியாத சம்பவமாகவும் இருக்கும். ஒருவனுக்கு தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனால் அவனது தீய செய்கையின் பொருட்டு அவனது உறவினர்கள் அவனை வெறுத்து, சிறைச்சாலையில் சென்று பார்க்கவே மறுத்து விட்டனர். எவருமே அற்ற நிலையில் இவன் தனித்துப் போனான். சிறையில் தன்னந்தனியனாக, உறவினர், நண்பர்களை நினைந்து வாடினான். என்னதான் தான் தப்புச் செய்தாலும் கூடப் பெயரளவில் கூட தன்னை விசாரிக்காத கொடுமையை அவன் அனுபவித்தான். தனக்குத் தூக்குத் தண்டனை விதித்ததனால் ஏற்பட்ட மனத்துயர், விரக்தி என்பனவற்றை விட, எவருமே தன்னை வெறுத்துப் பார்க்கக் கூடாத நிலை ஏற்பட்டதை நினைந்தே மேலும் துயரமடைந்தான்.

இவனது பரிதாப நிலையை அறிந்த, இவனால் கொலையுண்டவரின் பிள்ளைகள் எப்படியோ அறிந்து கொண்டனர். அந்தக் குடும்பம் வசதிபடைத்த, கௌரவமான, தெய்வ பக்தியுள்ள குடும்பமாகும். இவர்கள் சிறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று அவனைச் சென்று பார்த்தனர். தமது தகப்பனாரைக்

RangaRakes Tamilnavarasam.com

கொன்றவனை, நீதிமுன் நிறுத்திப் பிள்ளைகள், அவனு மரணதண்டனை வழங்க முயற்சி செய்து, வெற்றி கண்டாலும் தம் பொருட்டு ஒரு உயிர் தூக்கில் தொங்கப் போவதைக் கண் பச்சாதாப நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்தப் பிள்ளைகள் தீ பக்தியுணர்வு மிக்கவர்கள். ஆதலினால், சிறைச்சாலைக் சென்று அவனுக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லித் தேற்றி

இதயத்தில் அன்புகொண்டவர்களுக்கு மன்னிக்கு இயல்பு தானாகவே வந்து விடுகின்றது. மன்னித்தலுக் எல்லையே இல்லை என்றார் பெரியோர். இறைவன் எம்ம மன்னிக்கும் போது, நாம் எம்மைச் சார்ந்த உயிர்களை, இறைவ பொருட்டு மன்னித்தால் என்ன?

சிறைச்சாலைக்குச் சென்றவர்கள், அந்தக் கைதிக் விசேட உணவு வழங்க ஏற்பாடுகளைச் செய்தன இவர்களுடைய பண்பையும், மன்னிக்கும் இயல்பையும் கண் இக்கைதி, கண்ணீர் விட்டுக் கதறினான். தன் செய்கைக்கா மனப்பூர்வமாக வருந்தியதுடன், தான் இவர்கள் அளித்த ஆறுத மூலம் தன் துன்பத்தினை மறந்து, வரப்போகும் தண்டனை கூட உளமார ஏற்றுக் கொள்ளும் பக்குவநிலையை, அவன் பேச்சின் மூலம் ஏனையோர் அறிந்தனர். இச்சம்பவத்தினால், கை கொலையுண்டவர்களின் பிள்ளைகளும், மன அழுத்தங்களி இருந்து விடுபட்டனர். ஒருவர் துன்பத்தில் இன்னும் ஒருவர் சுக காண முடியாது.

குற்றங்களுக்குத் தண்டனை வழங்குதல் கூட ஒரு வித கருணையினால் எழுந்த செயலாகவே அமைதல் நன்று. கொடுக்கப்படும் தண்டனை அவனைத் திருத்தவே பயன்பட வேண்டும் என்று மனதார நினைவு கொள்ள வேண்டும். இறைவன் அன்பின் நிமித்தமே உயிர்களுக்கு. நற்பேறு பெற தண்டனை வழங்குகின்றன வெறும் உணர்ச்சிக்கு ஆளாகி தண்டனை வழங்கப்படல் ஆகாது. நிகழ்வின் உண்மைத் தன்மையை ஆராய்ந்தே தண்டனை வழங்கப்பட வேண்டும். மன்னித்தல் மூலமும், குற்றமிழைத்தவன், மனச்சாட்சி மூலம் திருந்தி விடுகிறான்.



சாதாரண மனித இயல்பிற்கு மேலான மன்னிப்பு வழங்கும் இயல்பினால் மனிதன் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகின்றான். இத்தகைய செயல்களை எல்லோராலும் செய்ய முடியாதுதான். இதற்கு மனப்பக்குவம் வேண்டும். கோபம் வருவது எமக்குள் சாதாரண இயல்புதான். ஆயினும், கோபம் கொள்வதால், இன்னும் ஒருவரைத் தண்டித்தேயாக வேண்டும் என்கின்ற எண்ணம், வெறும் பழிதீர்த்தலாக அமையலாமா? குற்றங்களுக்குத் தண்டனை வழங்குதல் கூட ஒருவித கருணையினால் எழுந்த செயலாக அமைதல் நன்று. கொடுக்கப்படும் தண்டனை இவனைத் திருத்தவே பயன்படவேண்டும் என்று மனதார நினைவு கொள்ள வேண்டும்.

பெற்றோர் குழந்தைகளைத் தண்டித்தல், ஆசிரியர் மாணவர்களைத் தண்டித்தல், குற்றவாளிகளை நீதிமன்றம் தண்டித்தல், அதிகாரிகள் பணியாளர்களைத் தண்டித்தல், இவை போன்றவை நல்ல நோக்கிற்காக அமைவதில் எந்தவிதத் தவறும் கிடையாது.

எனினும், தண்டனையை ஏற்கின்ற மனப்பக்குவம் எல்லோருக்குமே, வருவதில்லை. எதற்காக இத்தண்டனை என்கிறானே. ஒருவன் தான் செய்த தவறைக் கூட, தம்மால் பாதிப்புக்குள்ளானவரே பெரிய மனதுடன் மன்னிப்பது சாமானிய செயல் அல்ல. ஆனால்,

முழுச் சமூகத்திற்குமே, பாதிப்பு அடையச் செய்பவர்களை, சமூகம் மன்னித்தல் என்ற நோக்கில் பார்க்கச் சிரமப் படுகின்றது.

இன்று சிறு, சிறு குற்றங்களுக்குக் கூட மன்னிப்பு வழங்கி, அரவணைக்காமையினால், பலர் சமூக விரோதிகளாகி விட்டனர்.

நாம், நல்ல நண்ப ர்களையும், உற்றார், உறவினர்கள் அன்பையும் பெற்றேயாக வேண்டும். விட்டுக் கொடுத்தல் என்பதே, மன்னித்தலின் ஒரு பிரிவு என்றாலும், சிறு குற்றங்களை

RangaRakes Tamilnavarasam.com

மன்னிப்பது என்பதும், அவைகளைச் செய்யத் தூண்டுவதாக அமையக் கூடாது.

எங்கள் உணர்ச்சிகளுக்கு மட்டுமே கௌரவம் கொடுத்து வாழ்வதால் ஒரு பலனுமில்லை. எமக்குச் சாதகமாக அமையாத விஷயங்களுக்காக, மற்றவர் விஷயங்களைப் பெரிதுபடுத்தி நாம் அவர்களுக்குத் தண்டனை வழங்கலாமா?

மனித நேயம் என்பதே, எம்மீது பிறர் எப்படி அன்பு செலுத்த வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களோ, அவ்வண்ணமே, நீங்களும் பரஸ்பரம் அன்பைச் செலுத்துவதாகும். இவை தூண்டுதல் இன்றிச் சாதாரணமாக, சகல மனிதர்களையுமே நேசிக்கும் ஒரு செயலேயாகும்.

ஒருவர் மீது ஒருவர் சார்ந்து வாழ்தல் என்பது, அன்பைச் செலுத்துதல் மூலமே சாத்தியப்படும். அன்பு, காருண்யம் இல்லாதவர்கள், தனிமைப்பட்டுப் போவார்கள். இந்தச் சிறைவாழ்க்கை, உள்ளத்தைத் தகர்ப்பதுடன் சமூகத்தையே வெறுப்பாக நோக்கத் தலைப்படும். சமூகத்தை உதறி, அதனிடம் குற்றங்களையே காண்பவர்கள், வசீகரம், பொலிவிழந்து, ஒருவித மனநோயாளர் நிலைக்கே தள்ளப்படுகின்றனர். அன்புடன் வாழ்வதில் தானே அர்த்தம் உண்டு. ஒருவர் உள்ளத்தைப் புண்ணாக்குபவர்கள், அவர்களை மட்டுமல்ல தம்மையே ஒரு குற்றவாளியாக்கிவிடுகிறார்கள். பிழைகளையே தூக்கிப் பிடிப்பதனால் அண்டைநாடுகளுக்கிடையேயும் இத்தகைய சச்சரவுகள் மன்னிக்கும் இயல்பு மறைந்த வண்ணமிருக்கின்றன.

ஒவ்வொருவரும், தமது தவறுகளையே மறைக்கின்றனர். ஆனால் பிறர் தவறுகளை மன்னிக்கத் தயாராகயில்லை. தனிமனிதன், சமூகம், பிரதேசங்கள், நாடுகள், இவை அனைத்துமே மன்னித்தல் என்கின்ற பொதுவான சாத்வீக கொள்கையினைக் கடைப்பிடித்தேயாக வேண்டும். முழு உலகிற்குமே மனிதன் சொந்தமானவன் என்கின்ற நிலைவருதல் வேண்டும். ஒருவரில்



மற்றவர் உளமார்ந்த ஈடுபாடு, கருணை கொள்ள வேண்டும். கோபம், காழ்ப்பு, சுயநலம், ஆசை இன்றேல் இவை சாத்தியமாகும். இவைகளைப் போக்குதல் எளிதான காரியம், அல்ல. என்றாலும், இதன் தகிப்பை படிப்படியாகப் போக்கியேயாக வேண்டும். மானுட மாண்பு மேலோங்க வேண்டும் எனில், உலக நன்மைகளின் பொருட்டு, ஒவ்வொருவருமே தன்னை விடப் பிறரை நேசிக்கக் கற்றுக் கொண்டேயாக வேண்டும். அப்படியாயின், மன்னித்தல் என்கின்ற மாண்பு எம்மை வந்தடைந்தே தீரும்.

வீரகேசரி

RangaRakes Tamilnavarasam.com

# அன்புடன் பேசிப் பழகுக



ஐயா, அவரிடம் மட்டும் பேச்சுக் கொடுத்து விடாதீர்கள். மனுஷன், வள்ளென்று எரிந்து விழுவார்; எடுத்தெறிந்து பேசிவிடுவார். எதற்கும் நீங்கள் சற்று ஜாக்கிரதையாகவே இருங்கள்!

இப்படியாகச் சிலர் வியாக்கியானம், செய்து அச்சப்பட்டுப் பேசுவதை நாம் கேட்டு வருகின்றோம். நல்ல வார்த்தைகளைப் பேசுவதையும், முகத்தைச் சதா சந்தோஷமாக வைத்துக் கொள்வதையும் நாம் பழக்கமாக வைத்துக் கொள்ளல் வேண்டும். முகத்தைச் சந்தோஷமாக வைத்துக் கொள்வதே, சிலருக்குச் சிரமமான காரியமாக இருக்கின்றது. நாம் பேசும் போது நல்ல வார்த்தைகளைப் பேசுவதுடன் நின்றுவிடாது, முகத்தினை மலர வைத்துப் புன்முறுவலுடன் தோற்றமளிக்க எம்மை ஆக்கிச் கொள்ளவும் வேண்டும்.

சுடு சொல் பேசுதல் என்பது தமது கௌரவத்தினை மேம்படுத்துகின்றது எனச் சிலர் தப்புக் கணக்குப் போடுகின்றனர். தாங்கள் உரையாடும் பாங்கினைத் தாமே மெச்சிக் கொள்வதும்,



எனக்கு வரும் கோபத்தில் என்ன பேசுவேன் என்பதும் தெரியாது என சத்தமிடுபவர்களையும் நாம் அறிவோம்.

அடக்கு முறைப் பேச்சுக்கள், மனதை நெருடும் வக்கிரப் பேச்சுக்கள், ஒருவரின் குறைகளை அம்பலப்படுத்திக் கதைத்தல், தனது கருத்துக்களையே மிகைப்படுத்தி உரத்திக் கத்துதல், பொய்களை, உண்மை போல அடித்துப் பேசுதல், எதிரில் இருப்பவர் தகுதி, தராதரம் உணராது உரத்துக் கத்துதல், குரலை வேண்டும் என்றே மாற்றி, தொனியைக் கடுமையாக்குதல், இத்தகைய குணாதிசயங்களைக் கொண்டவர்களைக் காணும் போது, சராசரி மனிதன் அச்சமடைவதில் வியப்பில்லை. இதனால் இவர்கள் அடைகின்ற பயன்தான் என்ன?

எரிச்சல், ஆத்திரம், இவர்களிடமிருந்து விலக வேண்டும் என்கின்ற எண்ணம் இவைகள் தான் உடன் தோன்ற ஆரம்பிக்கும்.

ஒருவர் என்னதான் பணம், பொருள் பதவி பெற்றாலும் கூட, பழகும் விதத்தில் தான் பெற்ற செல்வங்களை மேன்மைப் படுத்திக் கொள்கின்றனர் என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும். ஆண்டவனால் கிடைத்த செல்வங்களை நாம் நன்கு அனுபவிக்க வேண்டுமேயானால், பெரியோர், மற்றையோரின் அன்பும், ஆசியும் எங்களுக்குக் கிடைத்தேயாக வேண்டும். இன்னும் ஒருவரை பகைத்தோ, எரிச்சலூட்டும் வார்த்தைகளைப் பேசி பேசியே, நாம் களிப்படைந்து விட முடியாது எனத் தெரிந்து கொள்வோம்.

வாழ்வின் அர்த்தமே, நாம் பிறருடன் பண்பாடாகப் பழகுதலேயாகும். அன்புடன் பழகுதல் என்பதே தனிக் கலையாகும்.

> இதயத்தில் கனிவைக் கொண்டு மக்களை நோக்கியமையினாலேயே சாதாரண மனிதனாகத் தோன்றியவர்கள், மகான்களாக மாறினார்கள். சாதாரண நிலையில் உள்ளவர்கள் பிரபல்யமான அரசியல் தலைவர்களாக மாறியமைக்கான மூலகாரணமே கனிவான – தெளிவான தூய்மையான பேச்சுக்களும் நன்னடத்தைகளுமேயாகும்.

RangaRakes
Tamilnavarasam.com

ஏன் என்றால், மிகவும் நல்ல மனிதராக வாழ்ந்து, பேருதவி, புரிந்தவர்கள் கூட தமது வார்த்தைப் பிரயோகங்களினால் கெட்ட பெயர் பெற்றுவிடுகின்றனர். இன்னும் சிலர் பேச்சு மட்டும் இனிமையாக இருக்கும் செயல் எதிர்மறையாக இருக்கும். இவர்கள் சக மனிதர்ளால் சீக்கிரம் இனம் காணப்பட்டு விடுவார்கள் நற்செய்கை புரிகின்றவர்கள், தங்கள் உடல், உளச் சிரமங்களினால் கூடாத வார்த்தைப் பிரயோகங்களைப் பேசுவதைத் தவிர்த்தால் அவர்கள் மகான்களாகி விடுவர் என்பதில் சந்தேகமில்லை.

எல்லோருமே, எல்லோருக்குமே ஏதோ ஒரு வகையில் நல்லன செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். மிகுந்த சிரமத்துடன், எத்தனை நன்மைகள் செய்தாலும் கூட, ஒரே ஒரு வார்த்தைப் பிரயோகமே, அத்தனை நன்மைகளையும், சின்னா பின்னப்படுத்தி விடுமன்றோ.

எனவே, எந்த வேளையிலும் எமது உள்ளத்தில் உளைச்சல், கோப உணர்வுகளைத் தவிர்த்தேயாக வேண்டும். விசுவாசமாக அன்பு செலுத்துதல், கருணையுடன், பிறர் துன்பங்களை அணுகுதல், போன்ற செய்கையினால் எமது உள்ளமும் படிப்படியாகப் பக்குவப்பட ஆரம்பிக்கும். இச்செய்கைகளே மானுட சமூகத்திற்கேற்ற வாழ்வியலுக்கான அணுகுமுறையுமாகும். தீய நடவடிக்கை, பேச்சுக்களால் நாம் எதையும் கற்றுவிட முடியாது, சாதித்து விடவும் முடியாது.

அன்புக்காக ஏங்காத ஜீவன்களே இல்லை. பிறர் எம்முடன் எதிர்பார்ப்பதே இதனைத்தான். வாய் பேசாத ஜீவராசிகள் கூட அன்புக்குக் கட்டுப்பட்டேயிருக்கின்றன. பறவைகள் மிருகங்கள் கூட தமது இனத்தைக் கனிவுடனேயே நோக்குகின்றன. வெளிப்படையாய் அன்பைக் காட்ட முனையாதவர்கள் கூட உள்ளூர அதனையே நாடுகின்றனர்.

தமது வாழ்வில் ஏற்பட்ட பாதிப்பு, தொல்லைகளினால் பேச்சுக்கள், பழகும் முறைகள் ஒருவரிடம் மாற்றமடைகின்றன.



இதைப் புரிந்து கொள்ளாமல் நாமும் அவரிடமிருந்து விலகி, அவர் வழிச் செல்லுதல் முறையல்ல.

அத்துடன்,

ஒரு சாராரிடம் பெற்ற தோல்வி அனுபவங்களால், ஒட்டுமொத்த சமூகமே இப்படித்தான் எனத் தப்புக் கணக்குப் போடுவதாலேயே, பலர் சமூகத்திற்கு முரணான மனிதர்களாகத் தென்படுகின்றார்கள். இத்தகையவர்களுடன், நாம் குரோதம் கொள்ளாது நட்புறவை வளர்த்துக் கொண்டேயாக வேண்டும். இதயம் கசியும் போதுதான் அன்பின் பரிணாமம், ஆற்றல் என்பனவற்றையும் புரிந்து கொள்கின்றோம். மனதை விசாலமாக்கக் கனிவுடன் பேச ஆரம்பிப்போம்.

பழக்கம் என்பது நல்ல செய்கைகளை நாம் செய்வதாகவே அமைதல் வேண்டும். பிறருடன் பேசுதல், பழகுதல் என்பதனைச் சிறுகுழந்தைகளுக்கும் கற்றுக் கொடுக்கவும் வேண்டும். இது இவர்களது எதிர்கால வாழ்வையும் சிறப்படைய வைக்கும். இதயத்தில் எவ்வித விகற்பமின்றியும், பரஸ்பர நல்லுறவை மட்டுமே பகிர்ந்து, சொற்களைத் தூய்மையாகப் பேசிக் கொள்வோமாக.

இதயத்தில் கனிவைக் கொண்டு மக்களை நோக்கியமையினாலேயே, சாதாரண மனிதனாகத் தோன்றியவர்கள் மகான்களாக மாறினார்கள். சாதாரண நிலையில் உள்ளவர்கள் பிரபல்யமான அரசியல் தலைவர்களாக மாறியமைக்கான மூலகாரணமே கனிவான, தெளிவான தூய்மையான பேச்சுக்களும் நன்நடத்தைகளுமேயாகும். அன்பாகப் பேசுவதால் செலவு ஒன்றும் ஏற்பட்டு விடப் போவதில்லை.

மாறாக,

மக்கள் நன்மதிப்பும், ஆதரவும் என்கின்ற லாபமுமே எமக்குக் கிட்டுகின்றது.

RangaRakes

Tamilnavarasam.com

பேசுமுன் சற்றுச் சிந்திப்போமாக. ஏவி விடப்பட்ட சொல் சிதறல்களைப் பொறுக்கி எடுத்து விட முடியாது. இவை மற்றவர்களின் இதயங்களில் நிரந்தரமாகவே தங்கி விடுகின்றன. பேசப்படும் பேச்சிற்கும், சிந்தனைக்கும் தொடர்பின்றிப் பேசுவதிலும் பார்க்க பேசாது மௌனிப்பதுவே சாலச்சிறந்ததாகும். இடம், பொருள், அறியாது, மனதினை அடக்காது தான் தோன்றித் தனமாகப் பேசுவதனால் ஏற்படும், விபரீதங்களை நாம் அறிவோம். எமது கருத்துக்களையே பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனச் சண்டித்தனம் புரிவதும், இதனால், எம்மைச் சுற்றி இருப்பவர்கள் எம்மை ஏளனமாகவும், அருவருப்புமாக நோக்குவதை தெரிந்தும், பிடிவாதம் பிடிப்பதனால் என்ன கௌரவம் கிடைத்து விடப் போகிறது? நாம் நன்கு பேசத் தெரியாமல் விடுவதால், எங்களின் உண்மையான கருத்துக்கள் கூடச் செத்து விடுகின்றன. அழகாகவும் அமைதியாகவும் பேசுதல் சிரமமான பணி என எண்ண வேண்டும்.

*வீரகேசரி 19.6.2002*





# பிள்ளைகளும் ஒழுக்கமும்

பிள்ளைகளை எப்படி ஒழுங்காகவும் கட்டுப்பாட்டுடனும் வளர்ப்பது என்றே பெரும்பாலான பெற்றோர்கள் அங்கலாய்ப்புடன் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலில் அவர்கள் ஒழுங்கான பெற்றோர்களாக பிள்ளைகள் முன் வாழ்ந்து காட்ட வேண்டும்.

எல்லோருமே பிள்ளைகளிடத்தில் அன்பாக இருங்கள் என்றுதானே சொல்கிறார்கள். நாங்களும் அப்படியே, கொஞ்சம் செல்லம் கொடுத்து வந்தோம். இப்போது பாருங்கள், பிள்ளைகள் எல்லாம் கெட்டு குட்டிச்சுவராகி விட்டனவே என்று சிலரும், மற்றும் ஒரு சாராரோ,

''நாங்கள் பிள்ளைகள், கண்ட, கண்ட கெட்ட பழக்கங்கள், பழகக் கூடாது. தீய நண்பர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்ளக் கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் கொஞ்சம் கண்டிப்பாக இருந்தோம். இப்போது என்னடா என்றால் பையன் வரம்பு மீறி எங்கள் பேச்சைக் கேட்காமல் ஏதேதோ செய்து வருகின்றானே. அவனிடம் பேசவே பயமாக இருக்கின்றது. எப்படி இருந்தவன் இப்படி ஆகிவிட்டானே'' என்று புலம்புவதையும் நாம் கேட்டு வருகின்றோம்.

RangaRakes Tamilnavarasam.com

கண்டிப்பு, அன்பு, பரிவு, கரிசனையான கண்டிப்பு, இவற்றை நன்கு தெரிந்து கொண்டே, பெற்றோர்கள் பிள்ளைகளுடன் பழக வேண்டியுள்ளது. சந்தர்ப்பங்களுக்கேற்ப, இவர்களது மன இயல்பு, நோக்கங்களைப் புரிந்து கொண்டு, கண்டிக்க வேண்டியுள்ளது. எந்த நேரத்திலும் வெறும் கோபங்களையோ அன்றி மிதமிஞ்சிய செல்லத்துடனோ, பிள்ளைகளை வளர்த்து விட முடியாது.

தவிர, தற்போதைய நவயுகத்தில், பெற்றோர் - குழந்தைகளின் போக்குகளும், முழுமையாக மாற்றமடைந்துள்ளன.

மிதமிஞ்சிய சுதந்திர உணர்வு, பெற்றோரிடமும், ஏனைய வயதுவந்த பெரியோர்களிடத்தே பயமின்மை, ஒழுக்கக் கேட்டைத் தூண்டவல்ல, புத்தகங்களை வாசித்தல், அத்துடன், திரைப்படங்கள், தொலைக்காட்சிகளில் அதீத ஈடுபாட்டுடன் பார்ப்பதனால் ஏற்படும் விளைவுகள், மேற்கத்தைய கலாசாரங்களைப் பற்றி, தவறாகப் புரிந்து கொள்ளல், அங்குள்ள சிறப்பான அம்சங்களை விடுத்து, தேவையற்ற விடயங்களை மட்டுமே மனதுள் பதித்து வைத்தல்,

சிறுவயதில் இருந்தே மத, நம்பிக்கையை வளர்க்காது இருத்தல், கலாசார சிறப்பியல்புகளை அறிவுறுத்தப்படாதிருத்தல், ஒழுக்கத்தை முதன்மைப்படுத்தாது, பணம், கல்வி தேடலை மட்டும் கைக் கொள்ள வைத்தல், நடைமுறை வாழ்வில், பொது விடயங்கள், வைபவங்கள், கழக நிகழ்வுகளில் பங்கு

> தவறுகளை ஒத்துக் கொள்ளும் பக்குவத்தினை நாம் சிறார்களுக்கும் போதிக்க வேண்டும், செய்த தவறுகளைத் திருத்த வேண்டும், ஆரம்பத்திலேயே பிழையான வழியில் தவறுகளை மறைத்து விடக் கற்றுக் கொடுக்கலாமா? பொய், களவு செய்யும் பழக்கத்தினை அறவே களைய வேண்டும், பிறருடைய சிறு துரும்பையேனும் வீட்டிற்குக் கொண்டுவரும் பழக்கத்தின் ஆரம்பத்திலே இல்லாமல் செய்யவும் வேண்டும், பாவ கருமங்களில் பயத்தை ஏற்படுத்தி தெய்வ நம்பிக்கையை ஊட்டல் வேண்டும்.



கொள்ளாதிருத்தல், தனிமைப்பட்டே வாழ நினைத்தல், வாழும் சூழ்நிலையை உருவாக்குதல்,

இத்தகைய காரணங்களினால் எதிர்கால இளைய சமூகம், முரணான வாழ்வு முறைகளைத் தாம் உணர்ந்து கொள்ளாமலேயே, கெட்டழிந்து போகின்றது.

பிள்ளைகள் என்ன கருத்துகின்றார் என்பதே எமக்குப் புரியவில்லை. கொஞ்சம் நாங்கள் கூடுதலாகக் கண்டித்தால், தற்கொலை செய்து விடுவதாக வேறு மிரட்டுகிறார்கள் என ஒருவர் புலம்பினார். பிள்ளைகளுக்காகப் பெற்றோரா அல்லது பெற்றோருக்காகப் பிள்ளைகளா என்பதுபோல் எதிரும் புதிருமாக வாழ்வது எப்படி?

உரிமை எடுத்துக் கொள்ளுதல் என்பதின் அர்த்தம் தான் என்ன? பெற்றோர், பிள்ளைகளிடத்தும், பிள்ளைகள் பெற்றோரிடத்தும் மிதமிஞ்சிய உரிமைகள், சலுகைகளை, அல்லது ஏதாவது தேவைகளை எதிர்பார்க்கின்றனர். இவைகள் நடைமுறைக்குச் சாத்தியப்படாவிட்டால் தொல்லைகளே மிஞ்சும். தமது பெற்றோரின் நிலையை இவர்கள் உணர வேண்டும். அதே வேளை, பிள்ளைகளின் எதிர்பார்ப்புகளைப் பூரணமாக உதாசீனம் செய்து விடக்கூடாது. முடிந்தவரை தமது பிள்ளைகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றியேயாக வேண்டும். பிறரிடம் பிள்ளைகள் உதவிகோருதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

பெற்றோர் இருந்தும், அவர்களால் செயலாற்ற வசதி வாய்ப்புக்கள் இருந்தும், பிறரிடம் போய் பிள்ளைகள் உதவி கோருதல், சமூகத்தில் அவர்கள் ஒருபாரமாகக் கருதப்படுவதுடன், ஈற்றில் தாய், தகப்பன் உறவில் ஒரு நிரந்தர விரிசல், அல்லது இடைவெளி ஏற்படச் சாத்தியம் உண்டு. அத்தியாவசிய தேவையான கல்வி, உணவு, உடை ஆகியனவிற்குப் பெற்றோர் செய்கின்ற தியாக உழைப்பினை, இவர்கள் உணர வேண்டும். தமது பிரயத்தனங்களைப் பூரணமாக மறைத்து தமது குழந்தைகளுக்குக் கணக்கற்ற பணச் செலவினைச் செய்வதனால்,

RangaRakes Tamilnavarasam.com

பணம் பற்றிய பிரச்சனைகளே இவர்களுக்குப் புரிவதில்லை. ஈற்றில் திடீர் எனப் பொருளாதாரச் சிக்கல் ஏதோ ஒரு தருணத்தில் வரும் போதுதான், எற்கனவே சந்தோஷங்களையே அனுபவித்து வந்த பிள்ளைகள், வீட்டின் நிலையை ஜீரணிக்க இயலாது, முரண்பட்ட வாழ்வை நோக்கிச் செல்வதும், தாய் தகப்பனாரை அவமதிப்பதுமான செயலும் செய்துவிடுகின்றனர்.

குழந்தைகள் வளர்ந்து வரும்போதே வசதிகளை மட்டுமே நோக்கும் நாம், அவர்கள் வளரும் சூழல் பற்றித் தெரிந்து கொள்ள முயற்சி செய்வதில்லை. புறச் சூழல் மட்டுமல்ல, வீட்டின் உள்ளேயே ஆரோக்கியமான மன வளர்ச்சி சந்தோஷங்களை உருவாக்க வல்ல சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமல்லவா?

சதா கணவன், மனைவியிடையே சண்டை சச்சரவுகள், வீட்டுப் பெரியவர்களிடையே உள்ள குடி, கெட்டவார்த்தை பேசுதல் போன்ற செயல்களைக் கண்ணுற்றால், வளரும் பிள்ளைகள் எதிர் காலம் என்னாவது. அத்துடன் வெறும் பொழுது போக்கிற்காக, வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பதும், வீட்டிற்கு வருகின்ற அந்நியர்களின் தீயபழக்கங்கள் சிலவற்றை, குழந்தைகள் ஒரு நாகரீகமாக நோக்கி பழகுதலும் தவிர்க்கப்பட வேண்டியவையே.

குழந்தைகள் சிறு வயதில் இருந்தே அவரவர் வயதொத்த, நல் இயல்புள்ள ஏனைய குழந்தைகளுடன் பழக விடலாம். சில பிள்ளைகள் தம்மிலும் பார்க்க வயது முதிர்ந்தவர்களுடன், பழகி பெரியவர்கள் போல் பேசுவதைக் கண்டிருப்போம். சில வேளை, அவை வீணான வார்த்தைப் பிரயோகங்களையே, இந்த பழகும் இயல்பினால் கற்றுக் கொண்டு விடுகின்றன. குழந்தைகள் நல்ல பண்புகளையும், தீய பண்புகளையும் இந்தச் சமூகத்தின் மூலமே கற்றுக் கொள்கின்றன. எனவே, வீடு மட்டுமல்ல, அனைத்து சமூக உறுப்பினர்களுமே ஒவ்வொரு பிள்ளைகளையும், நற்பிரஜையாக்க உருவாக்குவதற்குக் கடமைப்பட்டவர்கள். எனது பிள்ளை மட்டுமே ஒழுக்கமானது எனச் சுய திருப்திப்பட்டு பிறர் குழந்தைகள் நலனை அந்நியத்தனமாக நோக்குதலும் நாகரீகமன்று.



கல்விக்கூடங்கள், சமூக நல நிறுவனங்கள் ஆகியனவற்றின் பங்களிப்பானது, எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்கும் விடயங்களின் பெரும் பொறுப்பினை வகிக்கின்றது. பாடசாலைகளில் ஆசிரியர்கள் பண்பைப் போதிப்பதிலேயே சிரத்தை எடுக்க வேண்டும். ஒரு மாணவனை ஒழுங்கானவனாக மாற்றினாலே போதும் அவன் கல்வியில் தானாகவே நாட்டம் கொண்டவனாக வந்து விடுகின்றான். மனக்கட்டுப்பாடு இன்றேல் கல்வி மூளையில் பதிந்து விடுமா? நல் நெறி இன்றேல் மனக் கட்டுப்பாடு, சிரத்தை எப்படி வந்துவிடப் போகிறது? அத்துடன் இன்னும் ஒருவிடயத்தினைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். பாடசாலையில், மாணவர்கள் குறைபாடுகளைப் பற்றி ஆசிரியர்கள் பெற்றோரிடம் கூறினால், பெரும்பாலான பெற்றோர் அதனை ஏற்றுக் கொள்வதேயில்லை. சகல பெற்றோருமே இத்தகைய இயல்பு கொண்டவர்கள் அல்லர். பொதுவாக, பிள்ளைகள் தமது குற்றங்களை மறைத்துப் பொய் பேசும் போது, அதையே சரி எனக் கொண்டு, வாதாடும் பலரை நாங்கள் கண்டிருக்கின்றோம். தவறுகளை ஒப்புக்கொள்ளும் பக்குவத்தினை நாம் சிறார்களுக்குப் போதிக்கவேண்டும்; செய்த தவறுகளைத் திருத்தவேண்டும்.

மத நம்பிக்கையில் மனிதன் அதீத நம்பிக்கை வைத்திருக்கின்றான். இந்த நம்பிக்கையினை உளமார ஏற்கும் போது, பாவங்களுக்கு அஞ்சும் பண்பும் அவனிடம் வளர்கிறது. எல்லா மதங்களுமே பாவமான காரியங்களை விலக்குமாறே வலியுறுத்துகின்றன. மத உணர்வுடன், இவை வலியுறுத்தப்பட்டு மனிதனின் உள்ளத்தில் வேரோடவிட்டால், செய்யத் தகாத செயல்களை கடவுளுக்குப் பயந்து விலக்கியே விடுகின்றான். இறை அச்சம் என்பது கூட ஒரு மனச்சாட்சிக்குட்பட்ட ஒரு சத்திய வெளிப்பாடேயாகும். அந்த உண்மையுணர்வை, எவ்வாறு சிறார்களுக்கு ஊட்டுவது என்பதை நாம் கண்டு கொண்டால் நற்பிரஜைகளை உருவாக்குதல் என்பதே சிரமமான பிரச்சினை அல்ல.

RangaRakes

Tamilnavarasam.com

பாவ சிந்தனைகளை அறுக்கவே மத வழிபாடு துணையாயின. எனவே தெய்வ நம்பிக்கை என்பது குருட்டு நம்பிக்கை என்கின்ற அர்த்தமற்ற பேச்சை விடுத்து, எம் முன்னோர்கள் வகுத்த வழிப்படி, தெய்வ நம்பிக்கையுள்ள ஒரு சமூகத்தின் இளஞ் சிறார்கள் மூலம் உருவாக்க முனைய வேண்டாமா? தெய்வ சிந்தனையுள்ளவன், பண்பாடாக வாழ்பவனாகவே இருக்கின்றான். வெறும் நாத்தீக வாதம் பேசுவதால் பெரிதாகப் பயன் ஒன்றும் வரவே மாட்டாது. பாவம் புரிதலை, எண்ணுதலைத் தடுக்க மத நம்பிக்கை உதவுகின்றது என்பதை மறுக்க முடியுமா? தெய்வ நம்பிக்கையீனம் என்பது ஒரு முற்போக்கான சிந்தனை என்று தப்புக் கணக்குப் போடவும் கூடாது.

பக்தி, இறையுணர்வு மனதைப் பக்குவப்படுத்துவதால், சிறுவயதிலேயே மதக் கல்வியை ஊட்டுதல் அவசியமாகும். இதனால் பணிவு என்கின்ற பண்பு தானாகவே வந்துவிடுகின்றது. இறைவழிபாட்டின் மூலமே பணிவும், உயிர்களை நேசிக்கும் குணமும் இணைந்து வருகின்றன.

ஒவ்வொரு வீடும் கோவிலாக மாற வேண்டும். அப்போதுதான் மாசற்ற மாணிக்கங்களாக இளம் தலைமுறைகள் உருவாகும்.

சீரிய சிந்தனை, பரந்த நோக்கு, ஒழுக்கமே உயிர் என்பதில் நம்பிக்கை, இவைகளின் அடிப்படையில், உலகில் ஒவ்வொருவமே, அனைத்துச் சிறார்களுமே உருவாக்கப்படுதல் வேண்டும். முழு உலகும் ஒவ்வொரு குழந்தைகளின் நலனிலும் அக்கறை கொள்ள வேண்டும்.

அனைத்துப் பிள்ளைகளுமே எமது வருங்கால உலகை வாழவைக்கும் சொத்துக்கள் இதை மறக்க வேண்டாம்.

வீரகேசரி



# மனையாள் இணையில்லா சொத்து



ஜீவியப்பரியந்தம், ஜீவனோடிணைந்து நிற்கின்றவளும், அகத்திற்கு அகல்விளக்காகவும், குலம் தழைக்கச் செய்கின்ற தலைமகளாகவும் துலங்கும் தூய்மையான, தாய்மைச் சின்னம் மனைவி எனில் அது மிகையாகுமா? இவள் உயிர்க்கு உருக்கொடுக்கும் தாய் மட்டுமல்ல, அனைத்து நலன்களும் எமைச் சேர வைக்கும், படைத்ததலின் பாரிய பங்காளி. இவள் சிரித்தால் நிம்மதி மனம் கரித்தால் அதோ கதி! சினந்து கொள்ளாதவரை, துன்பங்கள், சுமைகள் அல்ல. அன்பால் ஆக்கிரமிப்பவள், நொந்தால் நோய்கள் கோடி. இன்பம் வழங்குதற்காய், துன்பங்களை ஏந்துபவள் தாயாக நற்சினேகிதனாய், ஆலோசகராய் அனைத்துமாய் இருப்பவள்.

நாட்டின் பெரும் தலைவர்கள் கூட தம் மனைவியர் தயவினால்தான், தாம் உணர்வு கண்டதாகப் பெருமையாக மனம் திறந்து பேசுகின்றனர். வீட்டு அரசிகள் தான் நாட்டிற்கு அரசர்களை ஆக்கித் தருகின்றார்கள். உள்ளத்தின் ஆழமும், ஆளுமையும், மனைவியின் செயல்களை மாட்சிமைப்படுத்துகின்றன.

RangaRakes
Tamilnavarasam.com

எனவே,

மனைவியின், பற்றுதல் இன்றி இருந்தால் வாழ்வே இற்றுப் போய் விடுகிறது. எச் செயலிலும் இவளது செல்வாக்கு உட்பிரவேசித்தல் இன்றி நடைபெறுவதாக இல்லை.

தன் தூய அன்பினால், எத்தகைய பிணைப்பை, வளர்த்து வளைத்துக் கட்டி வைத்திருக்கின்றாள்?

அடங்காத முரட்டுத்தனமான, வரட்டு வேதாந்தம் பேசும் கொழுநனைக் கூட, மலராக, மென்மையாகத் தன் கரங்களில் பூட்டி வைத்து விடுகிறாளே? வாழ்வதற்கு லாயக்கற்றவர் என்று பேசப்பட்டவர்களைக் கூட, உலகமே மதிக்கத்தக்க பொக்கிஷங்களாக மாற்றியமைத்த கதைகளை நாமறிவோம்.

தனது பாசத்தாலும், பரிவாலும், ஊக்கத்தாலும், ஆக்கத்திறத்தாலும் தன்னோடிணைந்து குடும்பத்திற்கு மனைவி எனப்பட்டவள் ஆற்றும் சேவைகள் அவள் குடும்பத்துடன் நின்று விடுவதில்லை. இதன் நன்மைக்கு முழு சமூகத்திற்கும் சென்றடைந்துவிடுகின்றன.

ஒவ்வொருவரின் வீடும் நிம்மதியாக இருந்தால் தானே சமூகமும் இருக்க முடியும்? எனவே வீட்டிற்கு நிம்மதி கொடுக்கச் செய்யும் பெரும்பங்கு பெண்மையின் அன்புப் பிம்பமான மனைவியின் பங்களிப்புத்தான் எவ்வளவு பவித்திரமானது தெரியுமா? வீடுகள் சரியில்லாமல் விட்டால் நாடுகள் சுடுகாடுகள் தானே?

> ஒவ்வொரு வீடும் நிம்மதியாக இருந்தால் தான் சமூகம் அமைதியாக இருக்க முடியும். எனவே வீட்டுக்கு நிம்மதி கொடுக்கச் செய்யும் பெண்மையின் அன்புப் பிம்பமாகிய மனைவியின் பங்களிப்புத்தான், சேவைகள்தான் எவ்வளவு பவித்திரமானது? வீடுகள் சரியில்லாது விட்டால் நாடுகளே சுடுகாடுகள் தான்.



எனவே நிம்மதியின் ஆதார சுருதி இல்லத்தரசிகள் அல்லவோ. பத்தாம் பசலித்தனமான, வரட்டுக் கௌரவம் பேசுவதும், பழமை கலாசாரம் பற்றி தவறான கருத்துக்களை வைத்துக்கொள்ளுவதும் ஆண்மையின் அடையாளம் என எண்ணுதலும், பெண்மையைக் கௌரவிக்காமையே பெரும் கௌரவம் என எண்ணிக் கொள்பவர்கள்கூட ஒருவிதத்தில் மன நோயாளிகள்தான். தங்களைப்பற்றிய மிதமிஞ்சிய தன் முனைப்பு கொண்டவர்கள் சரியானவைகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை.

மனைவியரை அசிங்கப்படுத்தி, நடாத்துபவர்களிடம் பேசிப்பாருங்கள் - அவர்களின் வக்கிர புத்தி அடிமனதில் வேரூன்றி நிற்பதால் வெளி உலகில் வேஷம் பூணும் தன்மை புரியும்.

நாகரீக சமூகத்தில், எவரையும் வைது கொள்வதற்கும், வதைப்பதற்கும் உரிமை வழங்கப்படவில்லை.

ஏன், நம்மையே நாம் வதை செய்வதற்கும், உயிரைப்போக்குவதற்கும் கூட உரிமை கிடையாது. இப்படியிருக்க, மனைவியை வதைக்கின்ற ஆத்மாக்கள் கூட தப்பித்துக் கொண்டிருக்கின்ற குற்றவாளிகளேயாவர். ஆனாலும், இந்த நிலையைக்கூட இவள் சகித்துக் கொண்டிருக்கிறாள். வரம்பு மீறிய பொறுமையும், எல்லையில்லா அன்புணர்வுமே இதற்குக் காரணமாகும்.

இதனால்தானோ என்னவோ, வாலிப வயதில் மிடுக்காக நடந்து இடர் புரிந்தவர்கள் காலம் கடந்த பின்னர் ஞானம் வந்ததும் மனையாள் பற்றிய மதிப்பு அறிந்து, அவள் தயவின், அன்பின் தீட்சண்யத்தினைப் புரிந்து கொள்கின்றனர்.

இன்னும் சிலரோ, இருக்கும்வரை மனைவியின் பெருமையை உணராது, அவள் இறந்ததும், கண்கெட்டபின் சூர்ய நமஸ்காரம் என்பதுபோல் அவளையே எண்ணி, எண்ணி மாய்ந்து

RangaRakes Tamilnavarasam.com

போகின்றனர். இருக்கின்ற பொக்கிஷத்தை, இருந்தபோது அதன் பெறுமதியை உணராது, அது தொலைந்ததும் புலம்புவதில் பயனேது?

எனினும், வாழ்வின் சூட்சுமத்தை அறிந்த தம்பதிகள் இறுதிவரை ஒருவர்க்கொருவர், விட்டுக் கொடுத்து இல்லற சுகத்தின் இனிமைதனை இறுதி மூச்சுவரை நுகர்ந்து, இறந்த பின்பும் துலங்கி நிற்கின்றனர். இவர்கள் வாழ்ந்து காட்டிய பாதையில்தான் பின்வருகின்ற சந்ததிகளும், இதுதான் குடும்பம், உறவு என்று தெரிந்து கொள்கின்றனர்.

இதனாலேயே, கணவன், மனைவி இரு சாராரும் இணைந்து வாழுகின்ற வாழ்வுமுறைகள், நிறைவுகளை நோக்கியே முன் செல்லவேண்டும். சோதனை, வேதனைகளால் உறவுகளை நெருடி அதற்கு அடிமையாகி ஒருவர்க்கு ஒருவர் முரண்டு பிடிப்பது மனம் வழி செல்வதுபோலாகும். துன்பம் துயர் வரும்போதுதானே பிரச்சனைகளைத் தாங்குகின்ற தைரியமும் வரவேண்டும்.

மனைவியின் செயல்திறன் இங்குதான், ஆக்கபூர்வமாக இருத்தல் வேண்டும். ஆரோக்கியமான, மன விசாலம் இல்லாத இல்லத்தலைவியால், குடும்ப நிர்வாகத்தைச் சீராகச் செய்ய முடியாது.

பிறர் வாழுகின்ற வசதிகள், செல்வச் செழிப்புக்களை தமது குடும்ப நிலையுடன் ஒப்புநோக்கி வாழத் தலைப்படக்கூடாது. இதனால்தான், கணவன் மனைவியரிடையே ஆரம்ப உரசல் தோன்ற ஆரம்பிக்கின்றது.

அத்துடன், எதிலும் மிதமிஞ்சிய எதிர்பார்ப்புக்கள், ஆசைகள், அபிலாசைகள், கண்மூடித்தனமான நாகரீக மோகம், தனது குடும்பத்தைவிட இதர குடும்பங்களே மேலானது என எண்ணுகின்ற தாழ்வு நோக்கு, இருக்கின்ற நல்ல வசதிகளிலேயே திருப்தியுறாமை, வசதிகளை மேலும் வளப்படுத்த விரும்பாமை,.



சோம்பல், எதற்குமே ஏங்குதல், இல்லாத பொருள்களுக்காக நச்சரித்தல், இவை போன்ற நடவடிக்கைகள் வீட்டின் நிம்மதியை குலைத்துவிடும்.

வெளிப்படையாகக் கூறாதுவிட்டாலும்கூட கணவன்மார்கள் தம்மைவிட, மனைவியிடமே நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இருவரிடையேயும், யார் பெரியவர் என்கின்ற விவாதங்களை முடக்கி விடவேண்டும்.

மனைவி என்பவள் இந்த எண்ணத்தைத் துறந்தேயாக வேண்டும். ஏன் எனில், மனைவியைத் திட்டுபவர்கள்கூட அவள் தயவின்றி நிம்மதியாக வாழ்ந்துவிட முடியாது. எனவே கணவன் ஆத்திரத்தில், முற்கோபத்தில் பேசுகின்ற பேச்சுக்களைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை. அவன் இதயத்தில் ஆழமாகப் பதிந்துள்ள அன்பை, காதலைப் புரிந்துகொள்ளவும் வேண்டும்.

இதுபோலவே, மனைவியின் தியாக உள்ளத்தை, சேவையை, உழைப்பை கணவன் புரிந்து வைத்திருக்க வேண்டும். சிலர் இதை உணர்ந்தாலும் வெளிக்காட்ட விரும்புவதில்லை. தயக்கம் காட்டுகின்றார்கள். இதனை வெளிப்படுத்தினால், ஏதும் கௌரவம் குறைந்துவிடுமோ அல்லது, அவன் தன்னையே சார்ந்திருப்பதாக எண்ணி, வீம்புடன், கணவனான தன்னை மதிக்கமாட்டாள் எனவும் கருதிவிடுகின்றான். உண்மையான அன்பின் முன் வீம்புக்கும் வீராப்புக்கும் இடமேயில்லை. சில கணவன்மார்களுக்கோ மனைவியிடம், பிள்ளைகளிடம் அன்பை உணர்த்தும் விதம் தெரியாமல் இருக்கலாம். இவைகளை மனைவி எனப்பட்டவளே புரிந்து சமாளித்து வாழப் பழகவேண்டும். இவைகள் வேண்டும் என்றே ஒருவரால் செய்யும் தவறும் அல்ல. எல்லோருக்குமே சாதுரியமாகவும், இயல்பாகவும் பழக, பேச வராது. இதனால் தப்பபிப்பிராயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நல்ல குடும்ப உறுப்பினர்கூட இந்தப் புரிந்துணர்வின்மையால், பாதிப்படைந்திருக்கிறார்கள். காலங்கள் மாறிக்

RangaRakes
Tamilnavarasam.com

கொண்டேயிருந்தாலும்கூட, உலகம் எங்கணும் உள்ள கணவன், மனைவி பரஸ்பர உறவு இருந்து கொண்டேயிருக்கும். மேற்கத்திய நாடுகளில் நாம் கணவன் - மனைவி பிணக்குகள், குடும்ப அமைதியின்மை பற்றித் தெரிந்திருக்கின்றோம்.

ஆனால்,


எல்லா நாடுகளிலேயும், குடும்ப பிணைப்பு விடயத்தில் எம்மைவிட ஏனைய நாட்டவர்கள் குறைந்துபட்டது எனக் கருத முடியாது. அங்கும் குடும்ப பிணைப்பு, பாசம் இறுக்கமானதாகவே இருக்கின்றது. எங்கும் இவர்கள் வாழ்ந்து கொண்டு தானிருக்கின்றார்கள். கூடாத விஷயங்களை மட்டுமே பேசிக் கொண்டிருக்க வேண்டுமா? யப்பான் நாட்டுப் பெண்களே, குடும்பத் தலைவியரில் முதன்மை ஸ்தானத்தில் இருப்பதாக, அண்மையில், சஞ்சிகை ஒன்று நடாத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவர்கள் நாட்டிற்கும், வீட்டிற்கும் ஆற்றும் சேவை அளப்பரியது. எனவே, இல்லத்தரசிகளின் பெருமை, அந்தந்த நாட்டின் வளங்களின் மூலமும் தெரிந்து கொள்ள முடியும் அல்லவா?

சிறந்த மனைவி தன் நன்நடத்தை நெறியினால் சமூகத்திலும் நேசிக்கப்பட்டே வருகின்றாள்.

இவள் ஒரு அழகிய வீணை. இதை மீட்டும் விதத்திலேயே இதன் தன்மையும், இனிமையும் இருக்கின்றது. கருவியும் இசைப்பவனும் ஒன்று சேர சங்கமிக்கும்போதுதானே சுகஸ்வரம் உதயமாகின்றது. நல்ல மனைவி, குடும்பத்தின் தலைவி! தியாக சிந்தையே இவளது குணங்கள், இணையில்லா மனையாள் வாய்த்தால் இனிமைக்குக் குறைவேது? இல்லாமையை, இல்லாதொழிக்கும் இவள் செயலால், நல்லன அனைத்தும் தானாய் வரும். ஏன் எனில், பெண்மையின் பேராற்றல் வடிவமே தாயும், தாரமும்தானே?



# தனிப்பட்ட வாழ்க்கையும் சமூக எதிர்பார்ப்புக்களும்



**தா**ங்கள் செய்யும் தப்பான காரியங்களுக்கெல்லாம், அது தனிப்பட்ட விடயம், அதில் எவருமே தலையிட முடியாது என்று, ஒரு பொய்யான முக மூடிகளைத் தமக்குத்தாமே போட்டுத் தப்பித்துக்கொள்ள முனைபவர்களை நாம் அறிவோம். நாட்டின் தலைவர்களும், பொது நல அமைப்புக்களில் உயர் பொறுப்புக்களில் உள்ளவர்கள், அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள் இப்படி அந்தரங்கமான விடயம், தனிப்பட்ட விடயங்கள் என்று கூறி எப்படியும் நடந்து கொள்ளலாமா? இப்படியே சாக்குப் போக்காகவும், புத்திசாலித்தனம் என நினைத்துச் சமாளித்து, தங்களை ஒளித்து, வெளியே வேடம் புனைந்தால், இந்த உலகம் உருப்படுமா? கழகத்தையும் முழுநாட்டையும், தனிமனித நடத்தை நெறிகள் கூடப் பாதிக்கச் சந்தர்ப்பம் உண்டு. எனவே தலைமைத்துவத்தில் உள்ளவர்களிடம், மக்கள் அந்தரங்கங்களை எதிர்பார்க்கமாட்டார்கள்; சகித்துக் கொள்ளவும் மாட்டார்கள். இவர்களை மக்கள் புனிதர்களாக நோக்கும்போது, இவர்கள் வெளிப்படையான தூய்மை நிறைந்தவர்களாகவே இருக்க உலகம் எதிர்பார்க்கின்றது.

RangaRakes
Tamilnavarasam.com

ஒரு குடும்பத்தில் கணவனுக்கு என்று ஒரு தனிப்பட்ட வாழ்க்கையும், அந்தரங்கங்களும், மனைவிக்கும் இதே போலவே அமைந்தால் குடும்பங்களில் குழப்பம்தானே மிஞ்சும்? தங்கள் பலவீனங்களை மறைக்கவே இப்படியாக நடந்து கொள்கின்றார்கள். ஆனால் நடப்பது என்ன? இவை வெளித்தெரியும் போது, ஒரு பூகம்பமே வெடிக்கின்றது. இதனால் அல்லலும், அவமானமும் படுகின்றனர்.

எனவே எவருமே தூய்மையாக, வாழ்வை அமைக்க முற்பட்டால் இந்தப் பிரச்சினைகளுக்கு இடமில்லை.

ஆயினும்,

தனிமனித வாழ்வில், தற்செயலாக நடந்த தவறுகள், தோல்விகள், எதிர்பாராத சம்பவங்கள் போன்றவைகளைப் பாரதூரமான விஷயங்களாக, பலவீனமான, அந்தரங்கங்களாகக் கருதிவிட முடியாது.

ஒவ்வொருவருக்கும் எனத் தனித்தனி ஆசைகள், அபிலாசைகள், விருப்பு, வெறுப்பு, ரசனை உணர்வுகள் இருக்கும். இது ஒவ்வொருவரினதும் தனிமனித சுதந்திரமாகும். இவை இன்னும் ஒருவரது சுதந்திரங்க்ளில் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும். எமக்குப் பிடிப்பது, பிறருக்குப் பிடிக்காமலும் போகலாம். அவர்களுக்கு இசைவானது எமக்குப் பொருந்தாமலும் இருக்கலாம். நாம் எல்லோரது கருத்துக்கள், செயலுடன் இசைந்து போவது என்பதும் சங்கடமான விஷயமே. எங்கள் தனிப்பட்ட விஷயங்களை எல்லோருக்குமே சொல்லிப் பகிர்ந்து கொள்ளவும் முடியாது. இவை கூச்சப்படத்

> **கீர்த்தி** மிக்க திறமைசாலிகள்கூட ஆரம்பகால அந்தரங்கங்கள் நீண்ட காலங்களின் பின்னர், அவை வெளித்தெரிந்த பின்னர் அல்லலுறுகின்றனர். இதனால் இவர்களது அப்பெருஞ்சேவையை உலகம் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கின்றது.



தக்கனவாகவும், பிறருக்குச் சங்கடங்களை உண்டு பண்ணத்தக்கதானவையாகக் கூட இருக்கலாம். சில விஷயங்களை வெளிப்படுத்தலைத் தவிர்த்தே ஆக வேண்டியுள்ளது.

ஒருவர் தம்மிடையே, கருதும் தவிர்க்க விரும்பும் விடயங்களை நாம் துருவித் துருவி ஆராய்தல் என்பது நாகரீகமற்ற செயலேயாகும். எமக்குப் பிரச்சனையில்லாத விஷயத்தையும், எமக்கே தேவையில்லாத சங்கதிகளையும் நாம் ஆராயலாமா? இதைக் கண்டுகொள்ள நினைத்து என்ன ஆகப்போகின்றது. சில நேரங்களில் பொருந்தாத விஷயங்களில் ஆராய்ச்சி செய்து, புதினம் பிடுங்குவதால், தேவையற்ற மனச்சஞ்சலமும், மனஸ்தாபங்களும் கூட எழ வாய்ப்பு இருக்கின்றது என அறிந்து கொள்ளவேண்டும்.

எமக்குத் தனிப்பட்ட எம்மைப் பாதிக்கின்ற விஷயங்களில் மட்டும், நாம் அனேக கலாச்சாரங்களைத் துருவித் துருவி ஆராய வேண்டியிருக்கின்றது. எங்கள் வாழ்க்கைப் பிரச்சினை என்றால் கண்டு கொள்ளாமல் இருக்கமுடியாது. உங்கள் பிள்ளைக்குத் திருமணம் செய்யவிருக்க ஏற்படும் சந்தர்ப்பங்களில், நீங்கள் சர்வ ஜாக்கிரதையாகவே செயல்படுவீர்கள். உங்கள் பிள்ளைக்கு ஏற்ற வரன் அமைய நீங்கள் சர்வ உரிமையும் எடுத்துக்கொண்டு அவர்கள் குணநலனை ஏதோ வழிமுறையில் கண்டு கொண்டேயாக வேண்டும். ஆணுக்கோ, பெண்ணுக்கோ, தனிப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினைகள், நடத்தைகள், குடும்ப கௌரவம் போன்றவைகள் இங்கு சீர்தூக்கிப் பார்க்கப்படுகின்றது. இது விடயத்தில் இவர்கள் தனிப்பட்ட விடயங்கள் என்று கூறி எதையுமே ஒதுக்கி வைத்து, கல்யாணம் நடந்தால் சரி என எந்தப் பெற்றோரும் கருதிவிடமாட்டார்கள்.

அருவருக்கத்தக்க தீய ஒழுக்கங்கள், அதை தனிப்பட்ட அந்தரங்கம் என எண்ணி, சமூகம் இவைகளை ஏற்றுக் கொள்வதில்லை. சமூகம் மன்னிக்கக்கூடியவைகளை மட்டுமே மன்னித்துவிடுகின்றது.

RangaRakes Tamilnavarasam.com

சமூக நலனுக்காக ஒருவர் சில காரியங்களை மறைத்து வைத்திருக்கலாம். இவை நோக்கத்தின் தன்மைகளைப் பொறுத்ததாகும். அரச பதவிகளில் உள்ளவர்கள், பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு இவை பொருந்தும். சில குடும்ப நலனுக்கு ஊறு விளைவிக்கும் விஷயங்களை, அதனால் தேவையற்ற வீண் விவகாரங்கள் வரும் என உணர்ந்தால், மறைக்கப்பட்ட வேண்டிய சங்கதிகள் மறைக்கப்பட்டேயாக வேண்டும்.

அலுவலக மேலதிகாரிகள் தமது ஊழியர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய விஷயங்களைத் தெரியப்படுத்தியே யாகவேண்டும். ஆயினும் சில நிர்வாக செயல்களை அந்தரங்கமாக வைத்துக்கொள்ளும் சந்தர்ப்பங்களுமுண்டு. எல்லா காரியங்களையுமே மூடி மறைத்தால் நிர்வாகம் நடந்து விட முடியுமா? குழப்பங்களும், சந்தேகங்களுமே மிஞ்சும்.

அரசுத் தலைவர்க்குச் சொந்தமாக அந்தரங்கங்களும் தனிப்பட்ட பிறர் விரும்பாத நடத்தைகளும் வெளித் தெரியும்போது ஆட்சியே ஆட்டம் காணுகின்றது. அரச நிர்வாகங்கள்கூட மக்கள் ஆணை மூலம் பெறப்பட்டதாகையினால் அவர்களைப் பாதிக்கும் எச்செயலையும், அரசுகள் செய்துவிட முடியாது. கடமையும், தனிப்பட்ட வாழ்க்கையும் இணைகின்ற போதுதான் சிக்கல்கள் உருவாகிவிடுகின்றன.

புத்திசாலித்தனம், அனுபவம், தைரியம், இவை மூலம், நாம் பொது வாழ்வில் இந்த இரண்டு விசயங்களையும் கையாளும் விதத்திலேயே சுமுகமான பிரச்சினைகளைப் பெரிதாக்காது தீர்த்துக் கொள்ளமுடியும்.

நெறி பிறழா வாழ்வுமுறையைக் கடைப் பிடிப்பவர்களுக்கு எந்த விஷயங்களுமே, பெரிய பிரச்சனைகளாகப் புலப்படமாட்டாது. துரதிருஷ்டவசமாக, இன்று உலகில் கீர்த்தி மிக்கவர்கள், பெரியவர்கள் எனப் பேசப்படுபவர்கள் கூட பற்பல



சிக்கல்களுக்குள் மாட்டிக்கொண்டு விடுகின்றார்கள். இதில் பரிதாபம் என்னவெனில் மிகவும் திறமைசாலிகள்கூட ஆரம்பகால அந்தரங்கங்களால், நீண்ட காலங்களின் பின்னர் இவை வெளிவந்த பின்னர் அல்லலுறுகின்றார்கள். இதனால் இவர்களது அளப்பெருஞ்சேவைகளையே உலகம் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது.

எனவே, சின்ன வயதிலிருந்தே பண்பான வாழ்வுமுறையை நாம் கடைப்பிடித்து ஒழுகியேயாக வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையைத் தூய்மை நிறைந்ததாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை, இத்தகையின் மூலம் படித்துக்கொள்ளலாம். ஒருவர் நடத்தைகளை உலகம் கண்மூடியபடி கண்காணிக்கவில்லை என எண்ணுதல் தவறாகும். இவை என்றாவது ஒரு நாள் வெளிச்சத்திற்கு வந்தே தீரும்.

எவ்வளவு நாள் நல்லவைகளை நாம் செய்துகொண்டாலும்கூட அடிப்படையான எமது குணாதிசயங்களில் குற்றங்கள் இருந்தால், எமது சேவைபற்றிய நம்பிக்கையே பிறரிடமிருந்து தகர்ந்து போகின்றது.

ஆரம்பகாலம் முதலே, அதாவது நாம் உருவாக்கும் பொழுதிலேயே, தூய்மைப் பண்பு, நேர்மை, முதலான நெறிகளின் அத்திவாரத்திலேயே வாழ்வைக்கட்டியெழுப்பவேண்டும்.

எமக்கென உரித்தான சின்னச் சின்னக் காரியங்களில் பிறர் தலையீடு தேவையில்லை. இதனால் எமது தனித்துவமும், சுதந்திரமாக இயங்கும் உரிமை, திறமை, துணிவு என்பன பாதிக்கப்படவும் கூடும். சத்தியத்திலும், தார்மீக ரீதியிலும் எம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளவும், அதிலேயே பரிபூரணமாக ஈடுபாட்டுடன் செயலாற்றவும் உரிமைகளும், வழிகளும் உண்டு. இது ஆன்ம சுத்தியுடன் கூடிய பவித்திரமான செயலுமாகும். இது பற்றிப் பிறர் வீணான குறுக்கீடு செய்தலால் லாபம் ஒன்றும் கிடையாது. எமது தூயவழிப் பயணங்களில் ஏற்படும் குறுக்கீடுகள்

RangaRakes
Tamilnavarasam.com

யாவும், சத்திய சோதனையாக வந்து சென்றாலும், எமது சரியான வாழ்வுமுறை முடிவில் வெற்றியையும், துணிவையும், நன்மைகளையுமே ஈட்டித்தரும் என்பதில் சந்தேகமில்லை. ஒருவரைச் சீண்டும் காரியங்களால் மனம் புண்படுமாறு செய்யக்கூடாது. யாராவது அப்படிச் செய்தால், அதைக் கண்டு கொள்ளாமல் விடுவதே அவர்களுக்குக் கொடுக்கும் பதிலடியாகும். நாம் கவலைப்படுவதையிட்டுப் பிறர் நகைப்பதற்கோ, ஏளனம் செய்வதற்கோ இடமளித்தல் கூடாது. தேவையற்ற தலையீடுகளும் விசாரணைகளும் தானே துன்பங்களை வரவழைத்து விடுகின்றன.

சுதந்திரத்தைக் கௌரவிக்கின்ற சமூகம், அது அனைவருக்கும் கிடைப்பதை ஆட்சேபிக்கக்கூடாது. தனிமனிதனின் வாழ்வை விமர்சனம் செய்யுமுன் அதன் சரி, பிழைகளை அறிதல் வேண்டும். அதன் பாதிப்புக்களை உணரவேண்டும். ஒருவன வாழ்விற்கும், தனிப்பட்ட எண்ணங்களுக்கும் மதிப்பு அளிக்க கற்றுக்கொள்ள வேண்டும். இது அவசியமான, மற்றவர் உணர்விற்கு கௌரவம் கொடுக்கும் செயலுமாகும்.

ஒவ்வொருவருக்குமே தத்தமது வாழ்வு அமைத்தல் முறை சரியானதாகவே படும். அவர்களது வாழ்வுமுறை எமக்குப் பொருந்தாதுவிடின், அவரகள் மீது எமது வாழ்வு முறைகளைத் திணிக்க முடியாது. அவர்களால் ஏதும் பிரச்சினைகள் எழாதுவிடின், நாம் எதற்கு உபதேசம் செய்ய முயலவேண்டும்? எமக்கு என எத்தனை எத்தனையோ கருமங்கள் நிரம்ப கிடக்கின்றன. எங்களை, நாமே இன்னமும் பூரணமாகக் கண்டு கொள்ள முடியவில்லை. இந்த லட்சணத்தில் வலிந்து, எம்மனதை கலைக்கும், கெடுக்கும் சங்கதிகளில் சிக்கிக் கொள்ளலாமா?

பிறருக்கு எரிச்சலூட்டும் செயலால், பாதிக்கப்படப்போவது நாமேதான். ஒவ்வொருவருடனும் பழகும்போதும், ஒரு எல்லையை வகுத்துக் கொள்ளவேண்டும். பிள்ளைகள், கணவன்



மனைவி, நண்பர்கள், உறவினர்கள் முகம் தெரியாதவர்கள், படித்தவர்கள், பாமரர்கள் ஒவ்வொருவருடனும், எமது ஈடுபாடு எத்தகையது, அவர்கள் எம்மை எப்படி மதிக்கின்றார்கள், எங்கள் தொடர்பின் வலிமை எத்தகையது, என்பதைத் தெரிந்து அளவோடு பழகுவதையும், புத்திமதிகள் சொல்வதையும், வைத்துக் கொள்ளவேண்டும். எத்தகைய நெருக்கமானவர்களுடனும்கூட, எமது உரிமை எடுக்கும் தன்மையை நாம் தான் அளவீடு செய்தல் வேண்டும். அவர்களது தனிப்பட்ட வாழ்வு, அந்தரங்கம், உரிமைகளில் நாம் பிரவேசிக்கும் போது சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நல்ல நினைப்புகளை நாம் வைத்துக் கொண்டிருக்கும்வரை எல்லா தரப்பு மக்களும் எம்மை நேசிக்கத் தொடங்கிவிடுவர். நாம் பழகும் விதத்திலேயே, எங்கள் பண்புகளும் பளிச்சிடும். இதை உணர்ந்து நடப்போம்.

✧

RangaRakes
Tamilnavarasam.com



# அவசரம் அநாவசியம்

அவசரப் புத்திக்காரர்களுக்கு நிதானமாகச் சிந்திப்பதற்கே போதிய அவகாசம் கிடைப்பதில்லை. இவர்கள் தமது செயல்களைப்பற்றிச் சிந்திக்காமல், ஏதோ வெட்டி விழுத்துவதாகச் செயல்பட்டு, வீண் வம்புகளை விலைக்கு வாங்கி அவமானப்பட்டும் போகிறார்கள். இன்னும் சிலர் அவசரபுத்திச் செயல்பாடுகளைத் தாமே மெச்சிக் கொள்ளுவார்கள். அது எந்த வடிவத்தில் வந்தாலும்கூடக் கவலைப்பட்டுக் கொள்ளமாட்டார்கள். செய்யும் செயல்களின் பூரணத்துவத்தை புரியாதவர்களுடன் பேசிப் பயனில்லை என்பது போலவே தோன்றும்.

இவையெல்லாம் ஒரு அசட்டுக் காரியமாகவே இருக்கின்றதெனினும் பலரை இந்தப் பழக்கத்திலிருந்து விடுவிக்க முடிகிறதில்லை. இவர்கள், தம்மையும், தம்மைச் சுற்றியிருப்பவர்களையும் மன அழுத்தத்திற்கு ஆளாக்குவதில் திருப்திப் பட்டுக்கொள்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றும்.



இத்தகையவர்கள் முழுமையாக காரியத்தைச் செய்து முடிக்க மாட்டார்கள். அத்துடன், சுதந்திரமாக, மனம் லயிப்புடன் காரியமாற்றத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளவும் மாட்டார்கள்.

எதையும் நிதானத்துடன் செய் என்று பெரியோர்கள் கூறுவார்கள். நிதான புத்தி, நிதானமான செயல்கள் என்பது மந்தமான, சோம்பலான வேலை எனக் கருதல் வேண்டாம். ஒரு செயலைச் சிறப்பாகவும், நிதானமாகவும், அதே வேளை கூடிய அளவு கணிக்கப்பட்ட, தன் சக்திக்கு உகந்த வேகத்துடன் ஆற்றல் வேண்டும்.

- அநாவசிய தாமதங்கள்
- முன்கூட்டியே செய்யும் செயல்பற்றிய தெளிவின்மை.
- எடுத்த கருமத்தைக் கண்டு பயப்படுதல்.
- எடுத்த கருமத்தின் அளவைக் கண்டு, மிதமிஞ்சிக் கற்பனை செய்தல்.
- ஒருவருமே, இந்தச் செயலைச் செய்யமாட்டார்கள். தான் மட்டுமே இதைச் செய்யப் போகின்றேன் எனக் கர்வம் கொள்ளுதல்.
- படிப்படியாகக் கருமங்களைச் செய்யாது விடுத்து, ஒரேயடியாக அசட்டுத் துணிச்சலுடன் ஈடுபட முனைதல்.
- பொறுப்பான, பாரிய கருமங்களை லேசாக எடுப்பதும், லேசான காரியங்களை, கடுமையான வழிமுறைகளில் சிரமத்துடன் செய்ய முற்படுதல். (பனங்கிழங்கை ஆப்புக்கொண்டு கிழிப்பது போல் என்பர்)

> அவசரப்புத்திக்காரர்கள் தம்மை மட்டுமல்ல, தம்மைச் சுற்றி இருப்பவர்களையும் மன அழுத்தத்திற்கு ஆளாக்குகின்றார்கள். **இத்தகையவர்கள்** முழுமையாகக் காரியத்தை செய்து முடிக்க மாட்டார்கள்.

RangaRakes

Tamilnavarasam.com

- அநாவசிய பதட்டங்கள்.
- கண்டவர்களின், வீணான உபதேசங்களை நம்புதல்.
- அனுபவம் இல்லாதோரிடம் ஆலோசனை கேட்டல்.
- விஷயம் தெரிந்தவர்களுடன் கேட்கக் கூச்சப்படல்.
- செய் கருமங்களைக் குறித்த நேரத்தில் செய்யாதுவிடல்.
- பின் விளைவுகளை ஆராயாது விடல்.

இவை போன்ற பலவீனங்கள் அவசர புத்திக்காரர்களை ஆட்டிப் படைக்கின்றது. இவர்கள் தம்மையும் நம்புவதில்லை, பிறரையும் முழுமையாக நம்புவதில்லை.

எழுந்த வேகத்தில் செயல்படுதல் சிறப்பு அல்ல. கருமங்கள் ஒவ்வொன்றும், படிப்படியாகத் திட்டமிட்டபடி ஆரம்பித்தல் அவசியமாகும். எமக்குள் ஒரு வரைபடத்தை உருவாக்கி, அதனை எப்படியும் செய்து முடிப்பேன் எனக் கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டும்.

மிகச் சாதாரண விடயங்களுக்கு ஆராய்ச்சி செய்தல் அவசியமல்ல. அது கருமங்களைத் தாமதத்துக்குள் ஆளாக்கிப் பெரிது படுத்திவிடும். வேளையை ஆரம்பிக்குமுன் சற்று சிந்தித்தால் என்ன குறைந்தா விடுவோம்?

பேருந்தில் ஏறிவிட்டு, போகின்ற இடத்தைப்பற்றிச் சிந்திக்கலாமா? பெயர் பலகையைப் பார்க்காமலேயே, பேருந்தில் பாய்ந்து ஏறலாமா? அப்படி ஏறிவிட்டுக்கூட, நடத்துனரிடம் தான் ஏறியது சரி என்று வாதிடக்கூடாது. அவசர சங்கதிகள் இப்படித்தான் நடக்கின்றது.

தெரிந்த விஷயங்கள்கூட எமது அவரச புத்தியில் தெரியாமல் போய் விடுகிறது. கற்ற கல்வியும், அனுபவங்களும் கூட இந்தப் பலவீனத்தினால், நம் காலை வாரிவிடுகின்றன.



பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள், விண்ணப்பத்தை சரியாக கை ஒப்பத்தை இடமறப்பதும், அப்படியே சரியாக எழுதி, முகவரி எழுதாமலே சாதாரண தபாலில், சும்மா அனுப்பி விடுவதும்கூட நடப்பதுண்டு. எதிலும் நிதானம் தப்பி அவசரப்பட்டால், ஆகப்போவது என்ன? பரீட்சை மண்டபத்தில் மிகையான அவசரத்திலும், மனதை நிதானமுடன் வைத்துக் கொள்ளாமலும் செல்லும் மாணவர்கள், மிக எளிதான வினாக்களைக்கூட எழுத மறப்பதை நாம் அறிகின்றோம் அல்லவா?

திருத்தமுடியாத தவறான பலவீனங்கள் எதுவுமில்லை. இவை குற்றங்கள் அல்ல. பலவீனங்களை எண்ணியே மனம் மேலும் பலவீனப்பட்டு விடக்கூடாது. நாம் எமது பலவீனத்தை உணர ஆரம்பித்ததுமே, இவைகளை மெல்ல மெல்லக் களைய முனையவேண்டும்.

சற்று நிதானமாகச் சிந்தியுங்கள். மனம் குழம்ப வேண்டாம். பதட்டமின்றிக் கருமங்களை ஆற்றத் தொடங்கிவிடுவீர்கள். செய்கின்ற செயலில் வெற்றியை ஈட்டத் தொடங்கிவிடுவீர்கள். ஆரம்பத்திலேயே குழறுபடிகளுடன் செயலாற்ற முனைந்தால், எமது சிந்தனை வசமிழந்து, தப்பும் தவறுமாகக் கருமமாற்றத் தொடங்கிவிடும். பிறர் எமது, செயல்களால், அவஸ்தைப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இந்த உலகில் எமது கருமம் மட்டுமே நடந்து கொண்டிருக்கவில்லை. ஒவ்வொருவரும், தத்தமது பணிகளில் கண்ணும் கருத்துமாக உள்ளனர். அவரவர்க்கு அவரவர் பணி உயர்ந்தது.

எனவே,

கோடிக்கணக்கான மக்கள் அலுவல்களில், உங்களது அலுவலும் ஒன்று என எண்ணுங்கள். எனவே மற்றவர் செயல்களுக்கும் மதிப்பளிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்.

RangaRakes Tamilnavarasam.com

எமது வேலை மட்டுமே இந்த உலகில் நடப்பதில்லை. நாம் நிதானமாகச் செயல்பட்டால், எமது கருமங்களும் பூரணத்துவம் பெறும். அது ஏனையவர்களையும் பாதிப்படையச் செய்யாது. தேவையற்ற அவசரங்கள், அநாவசியமானவைகள். சிலவேளை அநாகரிகமாகவும் பிறருக்குக் காட்டும். செயல்களின் வெற்றிக்கு இவை உதவாது. அவசிய பணிகளை, கட்டுப்பாடான வேகத்துடன் செய்வோம்.

எம்மை மீறிய உணர்வுடன் கூடிய கருமங்கள் சுய கட்டுப்பாட்டை மீறிவிட வாய்ப்பு உண்டு. துரிதமான பணி என்பது, அவசரம், அவசரமாக கண்டபடி ஆற்றும் செயல் அல்ல; ஆற்றலும், கட்டுப்பாடும் தான் வேகமுடன் பணியாற்ற எம்மை வழிநடத்தும்.

கட்டுப்பாடு இன்றேல், வேகமுடன் செயலாற்ற முடியாது.


மோட்டார் வண்டி வேகமாகச் செலுத்த வேண்டியவருக்கு நிதான புத்தியும் திறமையும் வேண்டும். அத்துடன், வாகனத்தினை உடன் கட்டுப்படுத்த வாகனத்தின் இயந்திரத்தில் சகல அம்சங்களும், 'பிறேக்'கும் தகுந்த முறையில் செயல்படவேண்டும்.

இவை போலத்தான் எமது கருமங்களின் செயல்பாடுகளை வழிநடத்துதலுமாகும்.

சகல கருமங்களையும் மெதுவாக ஆற்ற முடியாது. அதுபோலவே, சகல வேலைகளையும் வேகமாகச் செய்ய முடியாது. அளவறிந்து தேவைகளின் பரிமாணம் அறிந்து, உகந்தபடி பணியாற்றுவோமாக.



# நடிப்பும் நிஜமும்



நாம் சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாதிரி, நடிக்கவும் வேண்டியிருக்கின்றது. இது போலியானதா அல்லது உண்மையானதா என்பது வேறு விடயம். நாங்கள், மற்றவர்கள் மனம் கோணக்கூடாதே என்பதற்காக நடிக்க வேண்டியிருக்கின்றதே. எல்லோருமே இந்த விஷயத்தில் இந்தக் காரியத்தை விரும்பியோ விரும்பாமலோ செய்து கொண்டிருக்கின்றார்கள்.

எல்லா நியாய அநியாயங்களையுமே தட்டிக்கேட்க முடிகிறது இல்லை. நாம் நினைத்ததை, மனதில் பட்டதைக் கொட்டித் தீர்த்துவிட முடியாது. நாம் ஒவ்வொருவருமே நினைத்தபடியே, எங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துதல் முடிகின்ற காரியமா என்ன? அப்படியே நான் சகலத்தையுமே சொல்லித் தீர்த்தால், இந்த உலகம் அமைதியாக இருந்துவிட முடியுமா? அனைத்து சங்கதிகளையும், பிறருக்கு அது உண்மையாக இருந்தாலும் சொல்ல முடியாத நிலையில்தான் அனைவருமே இருக்கின்றோம்.

உண்மைகளைக்கூட சந்தர்ப்பம் அறிந்தே சொல்ல வேண்டியிருக்கின்றது.

ஆனால் உண்மை வெளிச்சத்திற்கு வரும்வரை பொய்தான் ஆட்சி புரிகின்றது. நல்ல விஷயங்களைத் தெளிவாகப் பக்குவமாக எடுத்துரைக்க வேண்டும்.

RangaRakes Tamilnavarasam.com

உண்மையை உள்ளபடி சொல்லுவதற்கும், அதைச் சொல்லவேண்டிய வழிகளில் சொல்வதற்கும் நிதானமும், தெளிவும் வேண்டியிருக்கின்றது.

ஆனால், நன்மை செய்யப் புறப்பட்டவர்கள், அதை நடிப்பாகச் செய்யத் தலைப்படக்கூடாது. நன்மையை அடைவதற்காக, தீய செயல்களை ஆதாரமாக்கக் கூடாது.

தமக்கு நியாயம் கற்பிக்க, வேண்டாத குற்றங்களைக் கூட சரி, என்று வாதிடுபவர்கள் தொகை கூடுவதனாலேயே குற்றவாளிகள் தொகையும் கூடிக்கொண்டே செல்கின்றது. சமாதானம் பேசி சமாளிப்பது. உண்மைகளை மறைப்பது என்பது உடனடியாகவே தெரிந்து விடுகிறது. என்றாலும் இதை தவறு இழைப்பவர்கள் ஒத்துக் கொள்ளுவதில்லை.

பிறரிடம் இருந்து மட்டும் உண்மைகளை எதிர்பார்க்கும் நாம், உண்மையாக வாழ முனைதல் அவசியமல்லவா? எமது ரகசியங்களைப் பூட்டி வைக்கும் நாம், பிறர் ரகசியங்களை ஆராயத் தலைப்படலாமா?

எப்படியாயினும்,

ஒருவர் தனிப்பட்ட சங்கதிகளை ஆராயாது இருப்பது நல்லதுதான். ஆயினும் ஒருவருடைய பண்பு, இயல்புகள் திரிபு பட்டு, கெட்டழிந்து செல்லுமிடத்தும், பிறர் அதைக்கண்டு பேசாதிருக்க முடியுமா?

> உண்மை வெளிச்சத்திற்கு வரும்வரை பொய்தான் ஆட்சி புரிகிறது. பிறரிடமிருந்து மட்டும் உண்மைகளை எதிர்பார்க்கும் நாம், நாமும் உண்மையாக வாழ முனைதல் அவசியமான ஒன்றல்லவா? எமது இரகசியங்களைப் பூட்டி வைக்கும் நாம் பிறர் இரகசியங்களை ஆராயத் தலைப்படலாமா?



எனினும், பிறர் விஷயங்களில் புகுந்து கொள்ளுதல் நாகரீகமன்று. இதனாலேயேதான், இறைவன், பிறர் மனதில் உள்ள ரகசியங்களை மற்றையோர் அறியாவண்ணம் பூட்டி வைத்திருக்கின்றானோ என எண்ணத் தோன்றுகின்றது.

இதனாலேயே தான் நாம் எல்லோரிடமும் சகஜமாகப் பழக முடிகிறது. ஒருவர்க்கொருவர் என்ன எண்ணம் கொண்டாலும் சரி, உலகம் இயங்குவதற்கு, மனத்திரை அவசியமாகின்றதே.

என்றாலும், சில வேளைகளில், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், ஒருவர் பற்றிய எண்ணக் கிடக்கைகள், மற்றவர்க்கும் தெரிய வரும்போது நடைபெறும் அவலங்களைக் காணும்போதுதான் பிரச்சினைகள் எல்லாமே வெளிவருவதில் உள்ள தாக்கங்கள் எமக்குப் புலப்படுகின்றன.

கணவன் மனைவிக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும், நண்பர்கள் தமக்கிடையேயும் கூடச் சில விஷயங்களை மனதில் பூட்டி வைப்பதே சரிபோலப் படுகின்றது. சில ரகசியங்கள், அம்பலமாவதால், அவை மரணத்தில் முடிகின்ற கதைகளை, நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள்.

நாம், தொண்டு செய்கின்றோம் எனக் கூறிக்கொண்டு பிறர் காரியங்களில் மூக்கை நுழைக்கக்கூடாது. கண்டிப்பதற்கும் திருத்துவதற்கும், உண்மையை வெளிக்கொண்டு வருவதற்கும் கூடச் சில வழிமுறைகள் உண்டு.

சாதாரண வாழ்வில் நாம் சில விஷயங்களைச் செய்து முடிப்பதற்காக, எம்மை நாம் மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கின்றது. இதில் தப்புக் கிடையாது. அலுவலகத்தில் மேலதிகாரி தன் பணியாட்களைக் கடிந்து கொள்கின்றார். அப்போது அந்தப் பணியாள் பணிவோடு அதைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார். உண்மையைச் சொல்லப்போனால், அவன்

RangaRakes Tamilnavarasam.com

உள் மனது, அவ் அதிகாரியைத் திட்டித் தீர்த்துக்கொண்டிருக்கும். இருப்பினும், அதை வெளியே காட்டிக் கொள்ளாது, சிரித்து, மழுப்பி சரி... ஐயா, சரி... ஐயா... நீங்கள் சொல்வதுதான் சரி... என்று ஒத்து ஊதி, சமாளித்து வெளியே வந்துவிடுகின்றார். இந்த நேரத்தில் தன் மனதில் பட்டதைக் கூறினால், அவ்வதிகாரி அதை ஏற்பாரா... அதை ஏற்கும் மனநிலையில் இருப்பாரா? சரி... சரி பின்னர் பார்ப்போம் என நடித்துச் சமாளிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இப்படி எதிரும், புதிருமாகச் சண்டை போட்டால் காரியமாகுமோ? யார் அல்லல் படுவார்கள்?

குழந்தை அழுகிறது; வீட்டில் சுவாரசியமாக நாவல் படித்துக் கொண்டிருக்கும், தாய் உடனடியாக ஓடிவந்து அதனைச் சமாதானப்படுத்துகிறாள். தனது அலுவல் பாதித்ததினால் ஏற்பட்ட கோபத்தை உடன் வெளிப்படுத்த முடியுமா? உடன் தன் கோபத்தை எண்ணத்தை மறைத்துச் சிரித்து ஏதேதோ, செல்லக் கதைகளைக் கூறி குழந்தை அழுகையை நிறுத்தி விடுகின்றாள்.

எமது உணர்ச்சிகளை எல்லா இடங்களிலும் உடன் வெளிப்படுத்திவிட முடியுமா? நாம் பொய்மை கலவாத நடிப்பு நடிக்க வேண்டியிருக்கின்றது. வஞ்சகம், காழ்ப்பு உணர்வுடன் கலந்த நடிப்பு ஏமாற்றுகின்ற வேலையே தவிர வேறில்லை.

எங்களால் முடியாத கருமங்களைச் செய்யமுடியும் எனக் கூறுதல் கூடாது. எல்லாம் தெரிந்தவர்கள் போல் பாசாங்கு செய்பவர்களாலேயே, சமூகம் அல்லல்படுகின்றது. தெரியாததைத் தெரிந்ததாக காட்டிக்கொள்பவர்களும், அதனையே நம்பிப் பலர் நட்டாற்றில் கைவிடப்படுவதையும், மேலான கஷ்டம் அனுபவிப்பதனையும், நடைமுறை வாழ்வில் கண்டிருப்பீர்கள்.

பொய்மையான ஏமாற்றுக்காரர்களைவிட, ஏமாறுபவர்களே அதிக தவறு விடுகின்றார்கள். ஏமாற்றுபவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பதே மிகப் பெரிய தவறு ஆகும். சுய லாபத்திற்காக



ஒருவரைத் தகுதிக்கு மீறி இந்திரன் என்றும், சந்திரன் என்றும் முகமன் கூறுவதையும், அதனைப் பாராட்டுப் பெறுபவர் தலையாட்டி அங்கீகாரம் கொடுத்து ஏற்றுக் கொள்ளுவதும், எவ்வளவு கீழ்த்தரமான வேலை! சுமுகமான இயல்பு வாழ்விற்காகவும், பிறரையும், சமூக பொது நலன்களைப் பாதிக்காமலும், அனுசரித்துப் போவதற்காக, எம்மை நாம் மாற்றிக் கொள்ளுதல் அவசியமாகின்றது. செயற்கைத்தனமான, வேண்டுமென்றே செய்யப்படும் செய்கைகள் எந்த நேரத்திற்குமே பொருந்தி வராது. இதனை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

போலியான வாழ்வு வாழ்ந்து, நடிப்பவர்கள் செய்யும் காரியங்களால், நிஜமான மனிதர்கள்கூட, நம் கண்முன் மறைந்து போய் விடுகின்றனர். அத்துடன் விபரம் தெரியாது நடிப்பவர்கள், அகப்பட்டுக் கொண்டதும், அவர்களின் உண்மை வாழ்வைக்கூடச் சமூகம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கிவிடும். நடிப்பு நிஜமல்ல எனத் தெரிய வரும்போது, அவனது நிஜங்கள்கூட அஸ்தமித்து விடுகின்றன. இது ஒரு பரிதாப நிலை. நல்லவர்கள் போலியாக நடிக்கமாட்டார்கள். சந்தர்ப்பவசமாக நடிக்க முற்பட்டாலும் அகப்பட்டுக் கொள்கின்றார்கள். உண்மையான தொண்டு செய்யாத அரசியல்வாதிகளும், பொதுநல வாதிகளும் தம்மை மறைத்துவைத்துக் கொள்ளும் கலையினால் நிஜங்களைப் பொசுக்கிவிடலாம் என எண்ணுகின்றார்கள். ஆயினும், அவன் விரித்த வலையில் அவனே சிக்கும்போதுதானே சமூகம் விழிப்படைகின்றது. உலகம் பல சந்தர்ப்பங்களில், சரியானவைகளைக் கண்டுகொள்ள, நீண்ட கால அவகாசத்தை எடுத்துக் கொள்கின்றது.

நிஜங்களை மட்டும் நம்பி வாழ்கின்றவர்களுக்குத் தொல்லைகளும் தோல்விகளும் இல்லை. தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்ளப் பொய்களிடம் புகலிடம் தேடாதீர்கள். நீண்ட கால வெற்றிகளைப் பெற குறுகிய கால நன்மை தரும்

RangaRakes Tamilnavarasam.com

பொய்மைகள், எமது ஆத்மாவை அலைக்கழிக்கும். எமக்கு நாம் சொல்லும் பொய்களே மிகவும் கொடூரமானவை. இந்தப் பொய்கள் உள் இருந்தே அரித்து உருக்குலைக்கும். புறத் தாக்கங்களைவிட, அகத்துள் நடக்கும் போராட்டங்கள் வலுவானவையாகவும், தாங்கிக் கொள்ள இயலாதவையாகவும் இருக்கின்றன.

உண்மையைச் சொல்லப் போனால், எமது பொய்மைகளால் பிறரைவிட நாங்களே தகிக்கப்படுவோம்.

நிஜங்களே எமக்குச் சொந்தங்கள் என்போம்.




RangaRakes Tamilnavarasam.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | எனது உரை | v |
| | வாழ்த்துரை | x |
| | வாழ்த்துரை | xii |
| | அணிந்துரை | xiv |
| | மதிப்புரை | xix |
| 1. | இளமை | 1 |
| 2. | அம்மா | 9 |
| 3. | சுயசிந்தனை | 19 |
| 4. | சிக்கனம், ஒரு வருமானம் | 26 |
| 5. | எல்லோரும் நம்மவரே | 34 |
| 6. | மனம் முறிந்தால், மணமுறிவா? | 42 |
| 7. | புறம் கூறுதல், அறம் ஒறுத்தலாகும் | 55 |
| 8. | காலம் தவறாத பணிகள் | 61 |
| 9. | சந்தேகம் | 70 |
| 10. | தட்டிக்கேட்டல் | 78 |
| 11. | திறந்த இதயம், நிறைந்த வாழ்வு | 84 |
| 12. | கடன் | 91 |
| 13. | முக்காலங்கள் | 99 |
| 14. | பொறுமை, நிதானம் | 106 |
| 15. | வாக்குக் கொடுத்தல் | 114 |
| 16. | எதிர்மறை எண்ணங்கள் | 121 |
| 17. | சொர்க்கம் எங்கே? | 128 |
| 18. | பலத்தினை வழங்குதல் | 134 |
| 19. | எல்லை மீறாத உரிமைகள் | 140 |
| 20. | இங்கிதத்தைச் சொந்தமாக்குங்கள் | 147 |
| 21. | சட்டம் - கட்டுப்பாடான சமூக கோட்டையைச் சமைக்கும் | 154 |




# எனது உரை



**வா**ழ்க்கை சுவாரஸ்யமானது. உண்மையாக வாழ்ந்து பார்ப்பவனுக்கு இதன் அனுபவம் நன்கு புரியும்.

நீங்கள் சந்தோஷமாக இருப்பதற்கு உங்களுக்கு உங்களது அனுமதி முதற்கண் தேவைப்படுகின்றது. ஐம்புலன்கள் வாயிலாகத் தேடும் இன்ப, துன்ப அனுபவம் மட்டுமே வாழ்க்கையா? எல்லாவற்றுக்கும் மேலாக அறிவு நிலை ஒன்று இருக்கின்றதல்லவா! அறிவு நிலைகொண்டு சிந்தித்தால் வாழ்க்கை இயல்பானதும் சாதாரணமானதும் ஆகும்.

நீங்கள் உங்கள் சொந்த பிரச்சினைகளை வைத்தே உலகை ஆராய்ந்து வருகின்றீர்கள். உலக நோக்கை மற்றவன் மனநிலையில் இருந்தும் இதனைப் பார்த்தால் அன்பு, கருணை, பாசம், நடுவுநிலைமை தானாகவே வந்துவிடுகின்றன.

எங்களுக்குள் அனைவருள்ளும் ஒரு நல்ல மனிதன் இருந்து கொண்டேயிருக்கின்றான். அவனைக் கட்டிவைப்பது முறையல்ல. எங்கள் அறிவுநிலை கொண்டு அவனைச் சுதந்திரமாக உலாவர அனுமதியுங்கள்.

RangaRakes Tamilnavarasam.com

திணைக்கள அனுபவங்கள், அறிமுகங்கள் நிறையவே இருப்பதால் அறிவு பூர்வமான ஆக்கங்கள் பலவற்றை எதிர்பார்க்கலாம்.

இந்நூல், இளைஞர்களுக்கும் குறிப்பாக கல்லூரி மாணவர்களுக்கும் பெரிதும் பயன்தரக் கூடுமென நம்புகின்றேன்.


பருத்தியூர் பால. வயிரவநாதனின் படைப்பாக்கப் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

**உடுவை எஸ். தில்லை நடராசு**
மேலதிகச் செயலாளர்,
கல்வி அமைச்சு,
இணுவை, கொழும்பு.



# வாழ்வியல் வசந்தங்கள்

## ( பாகம் – II )




இளமை சுதந்திரமான இயந்திரம். இதற்கு ஆசை, அபிலாசைகள் ஏராளம். அனைத்துப் பிரிவினரிடையேயும் இருந்து அன்பை மட்டும் எதிர்பார்க்கும் குணமும் தாராளம். இளையவர்களின் துணிச்சல்களை ஆணவமாகக் கருதவேண்டாம். இது இவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட வரப்பிரசாதம். சகல உயிர்களுமே இளமையில் அழகும், மெருகும் கொண்டவை. இளமையின் வேகத்தை உற்சாகத்தின் உலகம் நன்கு பயன்படுத்தி கொள்ளவேண்டும்.

---

இளமை எழிலானது, வலுவானது, பொலிவானது, ஆரோக்கியமானது. இதன் அழகில் சொக்கித்துப் போகாதவர் யார்? புதியன எதுவுமே அழகுதான்.

RangaRakes
Tamilnavarasam.com

புதிதாகப் பூத்த பூக்கள்,

புதுப்புனல், புதிய ஊற்று நீர், புதுமழை.

மெல்லன அரும்பும், புல் நுனி துளிர்ப்பு,

அத்துடன்,

குருத்தாக விரிந்து, சிரிக்கும் குழந்தை, குமரியின் கண்கள், புது மனைவியின் புன்னகை, புதிதான காதலியின் ஸ்பரிசம்.

இன்னும்;

இளஞ்சூரிய வெப்பம், இளம் தென்றல் காற்று, மூன்றாம் பிறை.

மேலும்,

புத்தம் புதிதாய்ப் பறித்த கனிகள், அன்றே சமைத்த அறுசுவை உணவுகள்.

புதிதான வாகனம், போட்டுக்கொள்ளும் நலுங்காத உடைகள், இத்தனையுடன் கூட மேலும் எத்தனை எத்தனையோ...

இளமை எப்பொழுதுமே மிடுக்கும், வனப்புமானதே.

முதுமை கொண்டோரும், கழிந்த இளமையை நினைந்து உருகுகின்றார்கள். சற்றே மனம் சங்கடப்பட்டாலும், தம்முன்னே தவழும் குழந்தையைக் கண்டு, தாங்களும் குழந்தைகள் ஆகின்றார்கள். இளைய தலைமுறைகளின் குறும்புகளைப் பார்த்து, பெரியவர்கள் இறும்பூதெய்துகின்றார்கள்.

RangaRakes



வயது முதிர்ந்த தம்பதியிடையே வற்றாத அன்பு இருந்தால், என்றும் அவர்கள் இளமையைப் பரிமாறிக் கொள்ளுபவர்களாகவே ஆகிவிடுகின்றனர்.

இளமை, அழகாக அசையும்; துள்ளு நடை பயிலும்; தானும் ஆடும்; பிறரையும் ஆட்டுவிக்கும். தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் சுறுசுறுப்பானவர்களாக மாற்றும்.

இளமை சுதந்திரமான யந்திரம்.

ஆனால் இதற்கு ஆசை. அபிலாசைகள் ஏராளம். அனைத்துப் பிரிவினரிடையேயும் அன்பை எதிர்பார்க்கும் ஆர்வம் தாராளம்.

இயற்கை எவர்க்கும் என எண்ணாது, அனைத்திற்குமே தானே வாரி வழங்குகின்றது. இளமையானது குறுகிய எண்ணங்களைக் குறைத்தே விடுகின்றது.

இளையவர்கள் தன்னலமற்று, நிமிர்ந்து நடப்பதைக் கண்டு ஆணவம் எனச் சொல்வதுதான் மடத்தனமானது.

சின்னவர்களைக் கண்டு பெருமைப்படவேண்டும்; பொறாமைப்படலாமா?

இந்த வாழ்க்கை அழிந்து போவதில்லை. பதிவுகள் என்றுமே நிரந்தரமானவை.

எண்ணங்களில் இளமை கொஞ்சினால், எதுதான் முதுமை? செயலில் புத்துணர்ச்சியையும், புதுமைகளையும் எந்த வயதிலும் கண்டு கொள்ளலாம்.

Tamilnavarasam.com

இந்தக் காலத்துப் பையன்கள் ஆவேசம் கொண்டவர்கள் என்று கூறுகின்றார்கள். முதிர்ந்த சிலர் மூச்சுமுட்டப் பேசி, ஓய்ந்தபோதும், இவர்கள் தோள் கொடுக்கத் தயாராகி வருவதைக் கண்டு வரவேற்க வேண்டுமல்லவா? புதிய சிந்தனை செய்து, புது வாழ்வினை வாழத் திடசங்கற்பம் செய்து, அவ்வண்ணமே உலகையும், வாழ்விக்கப் புறப்பட்ட சிங்கங்களை நாம் தங்கம் எனப் போற்றி, ஊக்கம் நல்க வேண்டுமல்லவா?

வறுத்தெடுத்த கரு மனம் கொண்ட, வக்கிர புத்தி கொண்டோர், எதற்கெடுத்தாலும் நல்லவற்றைக் கூடப் பொல்லாதனவாகப் புனைகதை கூறுதல் சிறுமைக் குணமென்பதில் என்ன ஐயா, ஐயம் உண்டு?

வேகமும் தாகமும் கொண்டு உற்சாகமாகப் புறப்பட்ட இளம் தலைமுறைகள் புதிய பூமியை மீண்டும் மீண்டும் பிறக்கச் செய்ய வல்லவர்கள். இருக்கின்ற பூமிக்குள்ளே புதிய பூமிகளைப் பூக்கச் செய்வது இவர்கள் கடமையாகிவிட்டது.

கோழிக்குஞ்சின் குதூகலத்தைத்தான் சின்னக் குழந்தைக்கும் இறைவன் கொடுத்தான்.

குட்டி நாய் குதிபோட்டு ஓடி, வாலாட்டும் சந்தோஷ மிதப்பினைத்தான் சின்னக் குழந்தையும் கையசைத்து, வாயசைத்து சிரித்துக் காட்டுகின்றது.

எனவே இறைவன்,

எல்லோருக்கும் இளமை சந்தோஷங்களை ஒன்றாகத்தான் ஈந்தான்.



அவன் ஒரே நோக்காகவே பார்க்கின்றான்.

இவை ரசிக்கத்தக்கவை; பொதுவானவை. இளமையே பொதுமைதான். எந்த நாட்டு இளைஞனும் தன் சுய வெளிப்பாடுகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றான். ஏன் ஆட்சிகளையே மாற்றிக் கொண்டிருக்கின்றான். மக்கள் தொகையில் கணிசமான சதவிகிதம் இவர்கள் ஆட்சிக்குட்பட்டதே. எனவே மாற்றத்தை உண்டாக்கவும், மாற்றத்தையே மாற்றியமைக்கவும் இவர்களால் முடியும். செய்து கொண்டும் இருக்கின்றார்கள். இவர்கள் கொடுப்பதை உலகம் ஏற்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றது. ஏன், மக்கள் பெற்றுக் கொண்டு மிருக்கிறார்கள். நாம் நினைக்க முடியாத அளவிற்கு களையோடும், புதுப்பொலிவோடும், பொலிந்து வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். இவர்கள் சுகங்களை வழங்குவதைவிட, உலகிற்காகவும் தம் குடும்பங்களுக்காகவும் பெரும் துன்பங்களையும் ஏந்துபவர்களாகவும் இருக்கின்றார்கள்.

பண்டைய சிந்தனைகளைப் படிப்பதும், பெரியோரை மதிப்பதும் இன்றைய தேவையாக உள்ளது. இதனை உணர்ந்தாலே போதும். பழமையின் தாத்பரியத்தினைத் தனதாக்குவதுடன் அதனுள்ளே தனது சொந்த சிந்தனைகளையும் உட்புகுத்தினால் உலகம் புது வடிவம் பெறுமல்லவா? இதில் என்ன சந்தேகம்?

உழைப்பதும், வழங்குதலும் புதிய சமுதாயத்தினால் முடித்து வைக்கக்கூடிய காரியங்களே.

இளைஞர்களுக்குள்ளே பேதங்களைக் களையும் பணியினை பெரியோர் செய்யவேண்டும். இளைய சமூகம்

RangaRakes Tamilnavarasam.com

கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்குள் மோதுவது, அவர்கள் பலத்தை, கல்வியை முளையிலேயே கருக வைக்குமல்லவா?

பெரியோர்கள், தங்கள் மூலம் பெற்ற இனங்களைக் குறை பேசாது, ஏதாவது உருப்படியாக நல்லன செய்தலே சிறப்பானதாகும். குறை காண்பது தங்களைத்தாமே தாக்கும் செயல். எல்லாமே பரிணாம வளர்ச்சி என்று கூறுபவர்கள், சின்னவர்கள் செயலைச் சினந்து நோக்கலாமா?

வளர்ந்து வரும் சமூகத்தைப் பார்த்து பழங்கதைகளை மட்டும் சொல்லிக்கொண்டா இருப்பது? எடுத்ததற்கெல்லாம், 'அந்தக்காலத்தில்...' என்று இனிமேலும் பேசலாமா?

அந்தக் காலத்துச் சொந்தக்காரர்கள் பேசுபவர்களே, கொஞ்சகாலத்தில் இளைஞர்களும் அந்தக் காலத்தவர்களாக ஆகப் போகின்றவர்கள். எனவே எந்தக் காலம் மட்டும் இனிமேல் பேசிக் கொண்டிருக்கப் போகின்றீர்கள்? காலத்தின் தேவைகளுக்கேற்ப உலகம் மாற்றமடைந்து வருகின்றது. மாறியே ஆகவேண்டியே சூழ்நிலை.

வளர்ச்சி என்பது கூட, முன்னைய காலத்தினைக் கிண்டலடிப்பது அல்ல. அதன் தொன்மைச் சிறப்பைத் தோண்டி எடுத்து.... ஏற்பதுமாகும். உண்மையில், வளர்ச்சிகளின் 'மூலம்' ஒன்றுதான். 'அ' என்றுமே 'அ' ஆகவே இருக்கும். இது மாறுவதில்லை. அதன் தொடர்ச்சியான சிந்தனைகள் தொடர்ந்தாலும், ஆரம்ப ஞானத்தின் அடிப்படையிலேயே புதுமைகள் புலப்பட ஆரம்பிக்கின்றன.



எனவே, முதியோர் இளையவர்கள் பற்றி பயம் கொள்ளத் தேவையில்லை. நல்லதுக்கென ஏற்றுக்கொள்ள வேண்டியதே.

புதிய பாதையில், புதியவர்கள் செல்லும்போது, நாமும்கூடச் செல்லுவோமே. பெரியோர்கள் பாதம் பதிந்த சுவடுகளிலேயே இளைஞர்கள் தங்கள் தடங்களை இட்டுச் சென்று கொண்டிருக்கின்றார்கள். புதுமைகள் எத்தனை செய்தாலும் அது பழமையின் சின்னத்தினை அடியொற்றியே அமைந்ததாகி விடுகின்றது. புதுமை, பழமைக்கு முற்று முழுதுமான எதிர்மறை அல்ல. பார்வைக்கு எல்லாமே மாற்றமாகவே புலப்பட்டாலும் உருமாற்றங்கள் 'கரு'வைப் பாதிக்காமல் இருந்தாலேயே உலகை அது சென்றடைய முடியும். அதுவே ஆக்க சக்திக்கும் இடவல்லது.

பரந்த உலகம், விரிந்த எண்ணங்களுக்குள் ஆட்படவேண்டும். புதுமைகள் படைக்கப்படுதலை எல்லோருமே எதிர்பார்க்கின்றார்கள்.

முறுக்கேறிய நெஞ்சத்துடன் எழுந்து, கொள்கைப் பிடிப்பினை அழுந்தப் பற்றினால் அதன் ஆளுமைக்கு நிகர் ஏது? துணிவு, இளைஞர்களுக்குச் சொந்தம். வெற்றியை நோக்கிச் செல்லும் இளம் சந்ததியர்களாலேயே பயமின்றி பயணங்களை மேற்கொள்ள முடியும்.

அடுத்த வேளைக்கு நான் என்ன செய்ய எனத் தன்னை மட்டுமே கருதாது, சுயநலமற்ற தீர்க்க சிந்தனையுடன் செயல்படும் செயல்திறன் இள ரத்தங்களுக்கே உரித்தான, விசாலமான குணநலனுமாகும்.

RangaRakes Tamilnavarasam.com

எந்த நீண்ட பயணங்களும் செயல் திறனால் பாதை குறுகியதாகிவிடுமன்றோ! பயம் என்பது இல்ல. வயதில் தானே பெரும் சுமைகளையே, வெறும் தூசு என எண்ணும் இயல்பு வருகின்றது!

யேசு கிறிஸ்துநாதர், முகம்மது நபிநாயகம், போன்றவர்களும், சம்பந்தர், மெய்கண்ட தேவர், மகா அலெக்சாந்தர், விவேகானந்தர், பாரதியார் என எல்லோருமே இளமையிலே உலகினை ஆட்கொண்டவர்கள்.

சாதனைக்கும், திறமைக்கும் எல்லைகள் உண்டா?

கருவிலேயே நல்லவற்றைகளையே நினைந்து பெற்றெடுக்கும் பெற்றவர்கள் அற்புதமான சிற்பங்களை உவந்தளித்து, நானிலத்தை மேலோங்கச் செய்கின்றார்கள்.

உலகம், பராயம் பார்ப்பதில்லை.

இங்கு எல்லோரும் கரம் கோர்த்து உலகை வலுமிக்கதாக மாற்றவேண்டும். இளமை அதற்குத் துணைபோகும். திறமைக்கு அணைபோட முடியுமா?

இது தொடர்ந்து வளர்ந்துகொண்டே...

வளர்ந்துகொண்டே...

✷

*- வீரகேசரி, 25-2-2005*





# அம்மா

*ஆயிரம் கோடி வாத்தியங்களின் இசை வெள்ளமும், அத்தனை சங்கீத வித்துவான்களின் குரல் இசையும் அம்மா, எங்களை அழைக்கும்போது அழைக்கப்படும் குரல் முன் நிகராகிப்போமா? உலகின் அழகுகள் எல்லாம் திரண்டுவரினும்கூட ஒவ்வொருவனுக்கும், தனது தாய்தான் அதிகூடிய கொள்ளை அழகுடைய தேவதையாகத் தெரிகின்றாள். இவள் இதயசத்தம் ஓய்வதில்லை. இதன் சத்தமூடாகவே இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கின்றது இந்த உலகம்.*

## 'அம்மா'

இந்தச் சொல்லை நீங்கள் உச்சரித்ததும் ஒரு வினாடி, உங்களுக்கு ஏற்படுகின்ற உணர்வு அலைகளைச் சற்றே அனுபவித்துவிட்டுச் சொல்லுங்கள். எப்படிப்பட்ட துடிப்புடன் ஆகர்ஷிக்கவல்ல ஈர்ப்புச் சக்தி உங்கள்

RangaRakes Tamilnavarasam.com

இதயத்துள் ஊடுருவி நாதம் எழுப்புவதை அறிந்துகொள்ள வில்லையா?

என்னே அற்புதம்...!

'அம்மா' என்ற சொல்லிற்கு இத்தனை காத்திரமான, இன்பம் தரும் பாசமான அழுத்தமா? மனிதனுக்குத் தெரியும் - முதல் முகம் இவள் அறிமுகத்துடன் ஆரம்பம். சூரியக் குடும்பத்தில் உள்ள கிரகங்களுக்கிடையேயும், அண்டசராசரத்து நட்சத்திரங்களுக்கிடையேயான ஈர்ப்பு விசையிலும் பார்க்க இந்தச் சின்னஞ்சிறு பாசப் பிழம்பின் முன் இவற்றின் ஈர்ப்புக்கள் எம்மாத்திரம்? அம்மா என்கின்ற விசையின் சக்திதானே இந்தப் புவியின் சக்தி. இந்தப் பாசப் பிணைப்பின்றி வாழ்வின் அர்த்தம்தான் ஏது? தாயற்ற குழந்தைகளும் கண்காணாத தாயின் அன்பு நினைப்பிலேயே வாழ்ந்து வருவது பெரிய அதிசயம்தான்.

இவள் மணிவயிற்றில் மிதந்து, உருண்டு, உதைத்துப் பிரசவிக்கப்பட்டதால் ஏற்பட்ட பிணைப்பு, மனிதன் மரணமடையும்வரை, அவள் ஈந்த நினைப்புடனேயே சஞ்சரிக்கின்றானே!

ஆயிரம் கோடி வாத்தியங்களின் இசை வெள்ளமும், அத்தனை சங்கீத வித்வான்களின் குரல் இசையும் அம்மா என அழைக்கும் குரல் அழைப்பின் முன் நிகராகுமா? இந்த அழைப்பு சிறு குழந்தைகளுக்கு மட்டுமல்ல, எமக்கும் சுகமானது, இதமானது, பரிவானது, கரிசனம் கூடியது.

உலகின் அழகுகள் எல்லாம் திரண்டுவரினுங்கூட ஒவ்வொருவனுக்கும் தன் தாய்தான் அதிகூடிய கொள்ளை அழகுள்ள தேவதையாகத் தெரிகின்றாள்.



இவள் இதயம் அமைதியான படுசுத்தம். எனவே எல்லோருக்குமே தூய்மையின் திலகமாகத் தென்படுகின்றாள்.

பணத்தினைக் கருதாது, கண்டபடி திரியும் பிள்ளையைக்கூட ஓடோடி வந்து அரவணைக்கும் தன்மை வேறு எவர்க்கு வரும்? தான் பெற்றெடுத்த அனைத்துமே தாய்க்குப் பொக்கிஷங்களே.

தாய்மையைப் பொறுத்தவரை புராதன காலம், புதுமைக்காலம் என்ற வேறுபாடில்லை. அத்துடன் சகல ஜீவராசிகளும் தாய் அன்பை ஈந்தவண்ணமேயுள்ளன. வனத்துச் சிங்கம், புலிகளும், பறவை இனங்களும் கூட 'தாய்' நிலையில் இருந்து தன் குட்டிகளையும், குஞ்சுகளையும் பாதுகாத்துக் கொண்டுதான் இருக்கின்றன. எக்காலத்திலும் தாய் அன்பு நிரந்தரம்.

அது அப்படியே... அப்படியே... என்றும் மாறாமலேயே.

இன்னும், நாம் தெரிந்து கொள்ளவேண்டியது, பெண்கள் எல்லோருமே 'அம்மா'க்களே.

பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர், பெண்கள் அனைவரையுமே அன்னையாக வழிபட்டார். இன்றைக்கும் தமிழ்நாட்டில் சின்னஞ்சிறு பெண் குழந்தையைப் பெரியவர்கள் 'அம்மா' என்றுதான் அழைக்கின்றனர். இப்படி நாம் அழைக்கின்றபோது ஒரு தூய்மையான அன்பு பளிச்சிடுகின்றது. அத்துடன் இதைக் கேட்கின்ற அனைத்து பெண்களும் கனிவுமயமாகி தம்மைச் சுற்றி உள்ளவர்களை உறவுகளாக, நிர்மலமான தாய்மையின் உணர்வுடன் நோக்குகின்றனர். வழங்குபவள் தாய். இவள் இல்லை என்று

RangaRakes Tamilnavarasam.com

உரையாது, ஈந்து வருவதாலேயே பிறர்க்கும் எவர்க்கும் தனிமை என்கின்ற தவிப்பு இல்லாமல் போகின்றது.

சிலர் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். 'ஐயாவை விடுங்கள், அம்மாவிடம் கேட்போம்' என்பார்கள். வீட்டில் என்ன நடக்கின்றது? சின்னச் சின்ன விஷயங்களில் இருந்து காதல் சமாச்சாரம் வரை யாரிடம் மனம் விட்டுப் பேச முடிகின்றது. சமயத்தில் அந்தரங்க விஷயங்களைத் தாயாரிடம் கூறாமல் யாரிடம் போய்ச் சொல்ல முடியும்? அம்மா அடைக்கலம் கொடுக்கும் கலங்கரை விளக்காக இருக்கின்றபடியால்தான் எந்த மன உளைச்சலிலும் இவள் இருக்கும் தைரியத்தில் எதுவும் எம்மை அண்டாது. அத்தனை கரைச்சலையும் களைந்துவிடும் பலம் உண்டு என எண்ணுகின்றோம்.

அன்னை என்கின்ற மாதா உலகத்தவத்தின் உருப்பொருள். உலகம் இவளால் உருண்டு கொண்டு இருக்கின்றது. பிரசவங்களைச் செய்வதால் மட்டுமல்ல. கரிசனமாக வளர்ப்பதால், கனிவுடன் முழு மனிதனை ஆக்கித் தருவதனாலுமாகும். பெண்களைத் தெய்வமாக வழிபட்டது எமது சமூகமாகும். ஒவ்வொரு நாட்டிலும் சமூகத்திலும்கூடப் பெண்களைத் தெய்வமாக வழிபாடு செய்கின்ற முறைமையுண்டு. இங்கு ஒவ்வொரு பிரதேசங்களிலேயும் பாசத்தின், கருணையின் சின்னங்களாகவே போற்றப்பட்டு வந்தனர்.

மனித இனத்தை முழுமையாக சிருஷ்டிப்பதாலும் அதன் இயக்கத்தை நடாத்துபவளாக இருப்பதனாலும் அனைத்து மாந்தருமே பெண்மைக்கு முதலிடம் அளித்தனர்.



அன்னையர் தினம் என்று ஒருநாள் ஒதுக்கினால் போதுமா? தினம், தினம் இவர்கள் வழிபாட்டிற்குரிய தெய்வங்கள் அல்லவா? முந்தைய காலங்களில் தம் தாய், தந்தையரை வீழ்ந்து நமஸ்கரித்த பின்னரே அடுத்த கடமையில் ஈடுபட்டு வந்தனர். இன்றைக்கு இந்தப் பழக்கம் அவ்வளவாக இல்லை. அண்மையில் தொலைக்காட்சியில் ஒரு விளம்பரப்படத்தில் மனதைத் தொடும் காட்சியைப் பார்த்தேன். ஒரு பிள்ளை பாடசாலைக்குப் புறப்படுமுன் தனது தாய், தந்தையரை வீழ்ந்து வழிபடுகின்றான். அந்த நினைவு, பிள்ளையின் தகப்பனுக்கு உடன் வரவில்லை.

தனது மகன் செய்கையினால் மிகவும் வெட்கப்பட்டுத் தன் நிலையறிந்து, மகன் செய்தது போலவே தனது தாய், தகப்பனாரின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக் கடமைக்குச் செல்லுகின்றான். இன்றைக்கும், சிங்களச் சமூகத்தினில் பெரும்பான்மையானவர்கள் எந்தக் காரியத்திற்குச் செல்லுமுன்னரும் காலையில் முதற்கருமமாகத் தாய், தந்தையரை வழிபட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டு வருகின்றார்கள்.

ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு உயிரையும் ஆதரிக்கும்போது அவள் தாய் ஆகின்றாள். திருமணமாகாத பெண்களும், குழந்தைகளைப் பெறாத பெண்களும், தமது குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், இயற்கையாகவே தன்னை அர்ப்பணித்துச் சேவைகள் செய்வதனால் இவர்களும் 'அம்மா' என்றே அழைக்கப்படுகின்றனர். பெண்களுக்கே உரிய நல் இயல்பே அனைவரையும் ஆதரித்தல்தானே. ஆண்டவன் செய்கின்ற அலுவல்களை இவர்கள் ஆண்டவன்

RangaRakes Tamilnavarasam.com

பிரதிநிதிகளாகச் செய்து விடுகின்றனர். எல்லா இடங்களிலும், எப்போதும் கடவுளைக் கண்டுகொள்ள முடியாது. எனவே தாயாரைப் படைத்தான் இறைவன் என்பது ஒப்பற்ற பொன்மொழியாகும். இவர்கள் முழுமையாகத் தம்மை உலகிற்கே அர்ப்பணிப்பதால், மாதரசிகள் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். நாடும், தேசமும் இன்றியே 'அரசிகள்' என்ற சொல் பெண்களுக்கு மட்டும்தானே உள்ளது.

திருமண பந்தம் மட்டும்தான் ஒருத்தியை 'அம்மா' ஆக்குவதில்லை. இன்று லட்சக்கணக்கான, இலட்சிய வேட்கை கொண்ட, சமூக மேம்பாட்டாளர் பெண்களாயிருந்தும் தம்மை முழுமையாக உலகிற்கு அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் ஒரு குடும்பத்திற்காகவல்ல பல குடும்பங்களுக்காக - ஏன் முழு நாட்டிற்காகக்கூட சேவைகளைச் சுமக்கின்றார்கள். இது அவர்களுக்கு இனிய சுமைதான். வீட்டில் செய்த சேவைகளே இறுதியில் நாட்டிற்கும் செய்வதனால் தலைவி என்கின்ற நிலைக்கும் வருகின்றார்கள். அன்னை தெரஸா செய்த சேவைகளை உலகம் அறிந்ததே. அவர் உலகிற்கே தாயானார். அரசியலில் இருந்தபோதும், சகலருமே ஏற்றுக் கொண்ட இந்திராகாந்தி, அன்னை இந்திரா என்றே அழைக்கப்பட்டார். பெண்களுக்கே உரித்தான பண்புகளுடன், துணிச்சலும் இணைந்து பெருமைக்குரிய பெண்மணியானார். என்னதான் பெண்கள் உயர் பதவி வகித்தபோதிலும் 'அம்மா' என்கின்ற ஸ்தானத்திலேயே தொடர்ந்தும் இருப்பதையே பெருமையாகக் கொள்கின்றனர்.

தாய்மையில் என்றுமே சோதனைகள் வரத்தான் செய்யும். இருந்தும்கூட இதனால் இவர்கள் மனம் சோர்வு

RangaRakes



அடைவது கிடையாது. தனக்கு வாழ்வில் துன்பம் வருகின்றது என்று அறிந்தும்கூட அதனைச் சவாலாக ஏற்கின்ற பக்குவம் ஏற்படாது போனால், குடும்பங்களின் நிலை என்னவாகும். எதையும் எதிர்கொள்வதனாலேயே தாய் தாங்குபவளாக மாறுகின்றாள். கெட்டலையும் கணவன், புத்திகெட்ட பிள்ளைகள் என்பதனால் புறக்கணிக்காமல் இதயபூர்வமாக மன்னிப்பு அளிப்பதுடன் ஏற்றிப் போற்றி அவர்களை சமூகத்தில் வைக்க எத்தகைய இன்னல்களை, அவஸ்தைகளைப் படுகின்றாள்? உழைக்கின்ற கணவன் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போக, ஒவ்வொரு பிள்ளைகளும், ஒருவர் மாறி ஒருவராகத் தங்களுக்குரியதைக் கேட்க, கணவனுக்கும், பிள்ளைகளுக்குமாகவே வாழ்ந்து தன்னை கவனிக்காது தேக நிலை உணராது உழைக்கும் உத்தமிகள் அல்லவா? பணக்கார வர்க்கங்களின் நிலையினை விடுத்து, ஏனையவர்களின் குடும்பங்களின் தாய்மார்கள், பொருளாதார நெருக்கடியால், பிள்ளைகளை, கணவனை, கணவனைச் சார்ந்தோரைக் கவனிப்பதாலேயே உடல் நலம் கெட்டு உருக்குலைந்தே தேய்ந்து போகின்றார்கள். கற்பூரம் போல என்பார்களே, அது மாதிரி.

ஒரு நாளைக்கு மட்டும் அம்மா படுத்துவிட்டால் வீடுகளில் உள்ளவர்கள் படும் அவஸ்தைகளைப் பாருங்கள். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது எப்படி? கணவனை வேலைக்கு அனுப்புவது எப்படி? அத்துடன் வீடு வீடாகவா இருக்கின்றது? இவை சாதாரண காட்சிகள். தனது அச்சில் சுழலும் ஜீவன்களுக்காக தன் ஜீவனைப்பற்றிச் சிந்திக்காத தியாக தீபம் இந்த 'அம்மா' அல்லவோ?

Tamilnavarasam.com

அம்மா...!

நீ, எங்களைப் பத்து மாதம் சுமந்து பெற்றுவிட்டதும் உன் வேலையை முடித்துவிடவில்லை. ஒவ்வொரு வினாடிப் பொழுதும், எங்கள் விடிவிற்காய் உயிர் துடிப்புகளை அத்தனையையும் ஈந்து வருகின்றாய். எங்கள் வாழ்க்கை வரைபவள் நீ! நான் எங்கே இருக்கின்றேன், என்ன செய்யப் போகின்றேன் என்பது உன் உயிர் மூச்சோடு கலந்த எண்ணமாயிருக்கின்றபடியால், உன் எண்ணங்களின் வலுவினாலேயே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உன் முந்தானைச் சுற்றி வந்து கொண்டிருக்கும் சிறு குழந்தைகளாகவே இந்த வயது கடந்தும்கூட எங்களை நோக்குகின்றாய்.

உன் மடிமீது படுக்கும்போது, பறந்துபோகும் துன்பங்களால் நாம் ஆறுதல் பெறுகின்றோம். அந்த நினைவின் பசுமைகள் என்றும் நிலையான நினைவலைகளாகவே தொடர்ந்தும் இருப்பதனால் உன் மடிமீது நாம் கண்ட சுகங்களின் பயனை உன் நிழல் மீது குளுமை பெற்றவர்களாகவே இன்றும் இருக்கின்றோம். என்ன வயதுதான் எங்களுக்கு ஆயிடினும், உனை நினைந்தால் கண்கள் ஏன் கேட்காமல் குளமாகின்றன?

உன்னை நினைந்து தூங்குவது, நீ கனவில் வந்து என் கேசம் தடவ வேண்டும் என்பதற்காகவே. ஆயிரம் யானை பலத்திற்கும் மேலான பலம் உன் கருணைக் கண்களால் எமக்குக் கிடைக்கும். இந்தப் பாசமிகு பார்வை, பரிவான நோக்கு, என்னைக் குளுமைப்படுத்தி புதிய மனிதனாக மாற்றுகின்றது.

எந்த மனிதனையும் கேட்டுப் பாருங்கள்.

RangaRakes



'ஏழு ஜென்மங்கள் உனக்கு உண்டு. எனில், நீ என்ன வரம் கேட்பாய்' என்றால், அம்மா... உன் மடி மீதுதான் - உன் வயிற்றிலேயே தொடர்ந்தும் பிறந்து கொண்டேயிருக்க வேண்டும் என்றுதான் கூறுவார்கள். ஏன் எனில் எவர்க்குமே அவர்களது தாயின் அன்புதான் ஏனையவர்களது அன்பைவிட மேலானது எனக் கருதுகின்றனர். பணக்கார அம்மா வயிற்றில் பிறக்கவேண்டும் எனச் சொல்லமாட்டான். தான் வாழ்ந்த காலத்தில் தன்னை வளர்த்த தாய்தான் ஒருவனுக்கு உயர்ந்தவளாய் அமைகின்றாள். எந்த நிலையில் உள்ளவர்களுக்கும் இது விடயத்தில் மேல் வர்க்கம் நோக்கி மனம் பாய்வதில்லை. பிச்சைக்காரியின் குழந்தைக்கு அதன் தாய்தானே பெரிதான புதையலாகத் தெரியும்?

உலகை வெறுத்த ஞானிகள்கூடத் தாயின் பிரிவினைத் தாங்க முடியாதவர்களாகின்றனர். எவ்வளவுதான் ஞானம் பெற்றாலும்கூட அன்னையை இழந்ததும் சோர்ந்து விடுகின்றனர். பட்டினத்தார் போன்ற ஞானிகளே, தாயின் பிரிவினால் கதறி அழுததைப் படிக்கும்போது நெஞ்சமே நெகிழும். எல்லாமே பொய் என்பவர்கள், மெய்யான அன்பு அன்னையிடமே இருப்பதனாலேயே அன்னையின் இழப்பினைத் தாங்கும் சக்தியை இழந்தவர்களாகின்றனர். எனினும் தாய் எனும் தேவதை மறைவதில்லை.

தினம், தினம் தாய்மார்கள் உதயமாகிக் கொண்டிருப்பதாலேயே உலகமும் விழிப்புடன் இருக்கின்றது. புதுப்புது ஜீவன்கள் குதித்து எழுந்து கொண்டிருக்கின்றன. உழைப்பை, விழிப்பை, தெம்பை,

Tamilnavarasam.com

அன்பை அளிப்பதற்காகத் தன்னைத் தேய்த்து வாசனையூட்டும் சந்தனக் கட்டையாகின்றாள். நாம் உறங்க, தான் விழித்தபடி இருக்கின்றாள். நாங்கள் வளர, இவள் உரமாகின்றாள்.

எனினும், மறையாத நித்திய வாழ்வு நல்கும் சிரஞ்சீவியாக இவள் சேவை இருப்பதனால், அம்மா எனும் உறவு மறையாத நிறைவுதான். வேராகவும், விழுதாகவும் தாங்கும் தாய் கண்ணீர் விடுதல் என்பதே உலகம் உதிர்க்கும் உதிரமும் ஆகும். தூங்காவிழிகளில் கண்ணீர் வருதல் கூடாது. இவளது எண்ணங்கள், கற்பனைகளைப் பிள்ளைகள் நிறைவேற்றல் வேண்டும். தனக்காக அன்றி, உலகில் உத்தமர்களாகப் பிள்ளைகள் உருவாகுதலையே ஒவ்வொரு தாய்மாரும் எதிர்பார்க்கின்றனர்.


அவள் தியாகத்தின் விலை - நற்பிரஜைகள் உருவாக்கப்படுதலே. அம்மாக்களுக்குப் பல வடிவங்கள் - தாயாக, தங்கையாக, தாரமாக, இன்னமும் நம் கண்முன்னே காணும் அனைத்துப் பெண்களுமே இவளது சொரூபங்களே.

தாய்மையைப் போற்றுதல் நம் கடன். ஒவ்வொரு பெண்ணையும் நாம் மதிப்பளித்துக் கௌரவப்படுத்துவது என்பதே அம்மாவின் வடிவில் இவர்களைப் பார்ப்பதனால் என்பதை உணர்வோமாக.

✷

*- வீரகேசரி. 25-2-2005*






*சொல்லிக் கொடுத்தால் மட்டும் கருமங்களை ஆற்றும் நிலையில் இருக்கக் கூடாது. சுயசிந்தனை இல்லாவிட்டால், வெறும் ஜடமாகவே வாழ்ந்துவிட வேண்டியதுதான். சிந்தனை செய்த மகோன்னத புருஷர்களாலேயே, உலகம் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. எண்ணங்களை வளரவிடல் வேண்டும். முடக்கப்பட்ட எண்ணங்களால் மனித அறிவு வளம் வற்றி உலகை உயிர்ப்பின்றி வாழாமல் செய்துவிடும். சுயசிந்தனை வளமின்றி விஞ்ஞானமோ, மெய்ஞானமோ வளர்வதற்கு இடமேயில்லை.*

---

**சு**யசிந்தனை மனிதனின் எண்ணங்களின் வளர்ச்சியை நோக்கிச் செல்வது ஆகும். அவன் தன்னைப் பற்றியும், புற உலகு பற்றியும் ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளான். எண்ணங்களைக் குவித்துப்

RangaRakes Tamilnavarasam.com

புது மெருகேற்றி சிந்தனை செய்தல் ஆறு அறிவு படைத்த மனிதனின் சிறப்பு இயல்பாகும். சுயசிந்தனை செய்வதற்கு என்ன தகுதி இருக்கவேண்டும் என்பதில்லை. முதலில் அவன் சிந்தனைக்குட்படுத்தவல்ல மனிதனாக இருக்கவேண்டும். படித்தவன், பாமரன், பணம் படைத்தவன், இல்லாதவன், ஜாதி பேதங்கள் சிந்தனை செய்வதற்குத் தேவையில்லை. "நீ என்ன படித்தவனா பெரிதாகப் பேச வந்துவிட்டாய்" என்று கூறுதல் அழகல்ல.

சிந்திப்பதுதானே மனித சுதந்திரம் என்று பேச்சளவில் கூறிவிட்டு சிந்தித்தவற்றைச் சொன்னால் தண்டனை என்றால் என்ன நியாயம்? மனிதன் தூர நோக்குடன் புதிய புதிய எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டியவனாகின்றான். பிறர் மூளையை மட்டும் நம்பி வாழாமல் நடைமுறை வாழ்வுக்கு இயல்பாகவும், அதே நேரம் ஒரே மாதிரியான நீண்ட வழிமுறைகளில் காலம், காலமாகச் சமூகம் நடை பயில்வதனைத் தடுத்து நிறுத்தவும் வேண்டியுள்ளது.

எத்தனை கோடி மக்கள் வாழுகின்றார்கள்! அத்தனை பேரும் சிந்தனா சக்தியை ஒருமுகப் படுத்துகின்றார்களா? சொல்லிக் கொடுத்தால் மட்டுமே கருமம் ஆற்ற வேண்டிய நிலையில் உள்ளோம். சொல்லிக் கொடுத்ததையே கேட்டு மனப்பாடம் செய்து பரீட்சை எழுதினால் அது ஒருவனது ஆக்கத்திறனை வலுப்படுத்திவிடுமா? ஒரு சாதாரண ஐந்நூறு ரூபாய் பெருமானம் உள்ள ஒலிப்பதிவுக் கருவி செய்யும் வேலையை மட்டும் ஒரு ஆறறிவு படைத்த மனிதன்



செய்ய வேண்டுமா? இதனால்தான் இன்று நுண்ணறிவு, உளவியல் தொடர்பான பாடநெறிகளை போதித்துப் பரீட்சை வைக்கின்றார்கள்.

உருவகித்தல், கற்பனை செய்தல் என்பது குழந்தைகளால் கூட முடியும் என்கின்றனர். வளர்ந்து வரும் மனிதன் தன் இயல்புக்கேற்ப பரிணாம வளர்ச்சியாகத் தொடர்ந்தும் சிந்தனை ஆற்றலை வளர்த்தும் வந்தால், உலகியல் புதிர்கள் எத்தனையோ விடுபட்டுப் போகும். படைப்பாளிகள், சிந்தனைகளைப் பிறர் மூலம் பெற்றும் கூடத் தமது சுய சிந்தனை மூலமே அதனை வளப்படுத்திக் கொண்டனர்.

விஞ்ஞானிகளும், ஞானிகளும், கலா விற்பன்னர்களும் சுயசிந்தனை வெளிப்பாட்டினை உருவாக்காமல் போனால் உலகம் வெறும் சடமாகத்தான் சுற்றிக் கொண்டிருக்கும். சாதாரணமான வாழ்க்கை முறைகளைச் சற்றே பாருங்கள்.

கணவன் மனைவியைச் சிந்திக்க விடுவதில்லை. அல்லது மனைவி கணவனைச் சிந்திக்க அனுமதிப்பதில்லை. ஆசிரியர்கள் எல்லோருமே தாங்கள் சொன்னதையே, செய்யச் சொல்கின்றார்கள். சாதாரண ஊழியன் சொல்லும் கருத்தை உயர் அதிகாரி கேட்பதில்லை. 'நான் சொல்வதைச் செய். அதுதான் உன் வேலை' என்று கூறுவார்கள். எங்குமே மேலான ஆதிக்க நோக்கு அல்லது வேறு வழிகளில் காரியம் ஆற்றுதலுக்குப் பயம் என்கின்ற காரணங்களினால் எத்தனையோ நல்ல அறிவாளிகள், மேலும் தங்கள் கருத்தை, எண்ணங்களின்

RangaRakes Tamilnavarasam.com

மேலான வெளிப்பாட்டினைச் சொல்லமுடியாமல் சோர்ந்தே போகின்றனர்.

கண்டுபிடித்தவனைக் கண்டுகொள்ளாத உலகம் கால ஓட்டத்தில் அவன் இல்லாதபோது, தலையில் வைத்துக் கொண்டாடுகின்றது. எனவே சுயசிந்தனை மூலம், நல்ல கருத்துகளைப் பிரசவிக்கின்ற கர்த்தாக்கள் எதற்கும் சோர்வடையக் கூடாது.

கிரேக்க ஞானி சாக்கிரடீஸ் கூறினார். 'உன்னையே நீ எண்ணிப்பார். அவன் சொன்னான், இவன் சொன்னான் என்று கூறாதே.' நீ என்ன எண்ணுகின்றாய்? எப்பேர்ப்பட்ட கூரிய சிந்தனை இது. நாம் கற்கும் நூலை வெறுமனே வாசித்து, மூளைக்குள் அடைப்பது மட்டுமா அறிவு? இல்லவே இல்லை. எக்கருத்தைப் பற்றியும் எடுத்து ஆராய்ந்து பார். பத்துப்பேருடன் இவை பற்றி உரையாடு, சிந்தனையைச் செதுக்கு, உலகோடு உறவாடி உன் அறிவை உராய்ந்து உண்மைகளைக் கண்டுபிடி. இதுவன்றோ தேடல். தேடல்தானே சுயசிந்தனைக்கு மூலாதாரம். கனவுகளை மறக்கக்கூடாது. கனவுகளைத் தேடி நனவாக்க முயல பெரும் வேட்டையில் ஈடுபடு.

சதா பறந்து கொண்டிருக்கும் உணர்வலைகளை முழுமையாக்கி - ஒன்றாக்கி எதுபற்றி நீ ஆராய எண்ணுகின்றாயோ அதில் மட்டும் புலனைச் செலுத்தி சிந்தனைக்குள்ளேயே உன்னை ஐக்கியமாக்கு. மனதால் முடியாதது எதுதான் உண்டு. மனம் தெளிவாக இருக்கும்வரை சுயசிந்தனைகளை பெருக்குவது எளிதானதே.



இன்று உலகில், வெறும் கண்காட்சிக்காக சிந்தனை வளம் முடக்கப்படுகின்றது. ஆரவாரமான உலகில் எப்படியாவது நுழைந்து நாலு காசு சம்பாதிப்பதற்காக எதையுமே வர்த்தகமாக்குவதால் நல்ல காரியங்களை எண்ணாமல் மனங்கள் அலைந்து கொண்டிருக்கின்றன. ஊடகங்கள்கூட நல்ல விஷயங்களை மூடி மறைக்கின்றன. கீழ்த்தரமான காட்சிகளை - செய்திகளைக் கடதாசியில் காட்டியவர்கள். படங்களாகவே உயிராக உலவவிட்டு விடுகின்றனர். சின்ன வயதினரையே குற்றம் காண்பவர்கள் மலிந்த உலகில் வயது போனவர்களே எதிர்காலத்திற்கேற்ற நல்ல எண்ணங்களை எழில் வண்ணங்களாகப் படைக்கத் தவறிவிடுகின்றனர்.

ஆராய்ந்து அவஸ்தைப்படுவதிலும் இருப்பதை அனுபவிப்பது மேல் என்றாகிவிட்டது. புதிய உலகில் புதுமை காணும் கலையில் மேற்கு உலகத்தினர் மிஞ்சிவிட்டார்கள் என்கின்றோம். இன்றைக்குத் தரமான இலக்கியங்கள், சினிமாக்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்று எதனை எடுத்தாலும், நாம் அவர்களுக்கு ஈடாக இல்லை என்ற குறை உண்டு. அவர்கள் புதிதாகச் சிந்தனை செய்கின்றார்கள். படைக்கின்றார்கள். ஒவ்வொரு படைப்பாளியின் சிந்திப்பிற்கும் கௌரவம் அளிக்கப்படுகின்றது. இங்கே என்ன நடக்கின்றன? அரைத்த மாவையே அரைக்கின்றார்கள். ஒரே மாவில் பலவித வடிவ பலகாரங்கள் அவ்வளவே. தற்சமயம், புதிய கோணத்தில் ஆராய்ந்த ஒரு விஷயம் என்றால் அது நிச்சயமாக, மேற்கத்தையவர்களைப் பார்த்து நகலை

RangaRakes Tamilnavarasam.com

எடுத்ததாகவே இருக்கின்றது. உதாரணமாக, ஒரு ஆங்கிலப்பாட்டினை எத்தனைவிதமாக நம்மவர்கள் நகல் எடுத்து தமது என உரிமை பாராட்டுகின்றார்கள்? இப்படியிருக்க,


ஏனைய துறைகள் பற்றிக்கேட்கவே வேண்டாம். சர்வதேச விருதுகளான நோபல், ஒஸ்கார் பரிசு போன்றவை எம்மால் பெறப்பட முடியாதவை அல்ல. இன்றைக்கு விஞ்ஞான, தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் நாம் முன்னேறி இருந்தாலும்கூட, ஏனைய நாட்டினருடன் சரி நிகராகப் போட்டியிடவேண்டும். நிச்சயமாக நம்மால் முடியும். நாம் சிந்திக்கும் சமூகத்தை வந்தனை செய்து வாழவைக்க வேண்டும்.

கேள்விப்பட்டேன், யாரோ சொன்னார்கள், அவன் அப்படிப் பேசினான் என்ற பேச்சுகளை விடுத்து, உண்மைகளை நோக்கி முன்னே ஓடி வருவோம். எங்கள் கிரகிப்புக்களை நற்சிந்தனை சார்ந்தவையாக அமைத்துக் கொள்வோம். ஞானம் ஒருவனைச் சிந்தனாவாதி யாக்குகின்றது என்பர். ஞானம் எங்கே இருக்கின்றது. அதுகூட உன்னுள்தான். அதனை வெளிப்படுத்திக் காட்டு. உன்னோடு பேசு. உலகத்தைத் தேடு. ஒளி பொருந்திய உலகில் இல்லாதது எதுவும் இல்லை. இருப்பதை உணராமல், முயற்சி செய்யாமல் எல்லாமே இல்லை என்று பேசிவிட முடியுமா? கையடக்கக் கருவியில், உலகை அளக்கும் மனிதன் தன்னை அளக்காமல் விட்டுவிடுதல் துரதிருஷ்டமன்றோ?



விஞ்ஞானமோ, மெய்ஞ்ஞானமோ சுயசிந்தனை வெளிப்பாடுகள்தானே எதனையும் புரிய வைக்கின்றது. அக வாழ்க்கை, புற வாழ்க்கை எதற்குமே சுயசிந்தனைதான் எங்களைச் சுத்திகரிக்கின்றது. நாங்களாக எதனையும் தேடிக்கொள்வதில் உள்ள நிறைவே தனியான திருப்தியன்றோ? இது ஒளியூட்டும் இதயத்தை உருவாக்கும். சிந்தனை வளத்தினை நமது சொந்த பலமாக்குவோம்.

RangaRakes Tamilnavarasam.com




*நிகழ்காலத்தின் சிக்கன மூலமான வருமானங்கள்தான், எதிர்காலத்தின் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது. எல்லா காலத்திலும் ஒரே மாதிரியாக உழைத்துவிட முடியாது. வாழுகின்ற காலமே உழைக்கின்ற காலமாகக் கொண்டு, சிக்கனமாக வாழும் முறையைக் கடைப்பிடித்தேயாக வேண்டும். நாம் பாவிக்கும் பொருட்களைவிட வீணடிக்கும் பொருட்களே மிகையாக உள்ளன. இது உலக பொருளாதாரத்திற்கே ஊறு விளைவிப்பதாகும். சிக்கன வாழ்வு என்பது கௌரவக் குறைச்சலான வாழ்வு என்கின்ற மனோபாவம் மாறுதல் வேண்டும்.*

சிக்கனம் என்பது தேவையான செலவுகளைச் செய்வதற்கும், ஈகைக்கும் எதிரான செயல்பாடு அல்ல. தேவையற்ற அநாவசிய செலவுகளைத் தவிர்த்து, ஆக்கபூர்வமான செலவுகளை மட்டுமே செய்தலாகும். சிக்கனம் என்பது சேமிப்பு மட்டுமல்ல. சொல்லப்போனால்,



இது ஒரு வருமானமும் ஆகும். சிக்கன வாழ்வு மூலம் பெறப்படும் பணமோ, அன்றி பொருளோ தக்க சமயத்தில் பிறருக்கு வழங்கப்படுமாயின், இது ஈகையாகவும் பொருள்படுகின்றது. எனவே,

கட்டுப்பாடான சிக்கன வாழ்வுமுறை எமக்கு மட்டுமல்ல, சூழ இருப்போருக்கும் உதவுவதாக அமைந்தால் சிறப்பானதாகும். தனக்கும் தனது தேவைக்கு மட்டும் செலவுகளைக் கட்டுப்படுத்தினாலும்கூட, முடிவில் இன்னும் ஒரு சாராரை இவை தாக்காதுவிட்டால், சிக்கனம் சிறப்பானதேயாகும். செலவு செய்தல் என்பது, வாழ்வில் சாதாரண நடைமுறைதான். உலகில் பொருட்களும், பணங்களும் ஓர் இடத்தில் நிற்கமுடியாது. இவற்றைப் பெறுவதில் உள்ள சிரமங்களை நாம் அறிவோம். எனவே பெற்ற பொருட்கள், பணங்களைச் செலவு செய்யும் போதுதான் மனிதன் அவதானத்துடன் இருக்க வேண்டியவனாகின்றான்.

உடலாலும், உள்ளத்தாலும் பங்கம் ஏற்படாதவாறு, சிக்கனமாக வாழ்வது என்பதே ஒரு பெரும் கலையாகும். முயற்சிகள் அனைத்துமே சிறந்த வகையில் பேணப்பட வேண்டுமல்லவா? துவாரம் உள்ள பாத்திரத்தில் நீரை ஊற்றலாமா? ஆற்றிலே புளியைக் கரைக்கலாமா? மனித முயற்சிகள் பயனற்ற வகையில் செலவு செய்யப்படுதல் உலகிற்கு உவப்பானது அல்ல. கஷ்டப்பட்டு உழைத்துக் கண்டபடி செலவு செய்தல் கெட்டிக்காரத்தனமா - இல்லை முட்டாள்தனமான வீம்பு வேலைதானே?

எப்படியும் அனுபவித்துவிட வேண்டும்; கஷ்டப்பட்டதன் பயன் அனுபவித்தலே என்று ஒரு சாரார்

RangaRakes Tamilnavarasam.com

கூறலாம். ஆனால் அனுபவித்ததன் பின் நடக்கும் சங்கதிகளுக்கு யார் பொறுப்பாளி? இருப்பதை வகுத்துப் பிரித்து, உள்ளத்திற்கேற்ப தானும், தன்னைச் சார்ந்தவர்களும் வாழுவதே வாழ்க்கை. இருக்கும் செல்வத்தில் சிறு தொகையேயாயினும் சேமித்தலுக்காக ஒதுக்குதல் மனிதனின் கட்டாயக் கடமையாக வேண்டும். மனித முயற்சியின் பயன் என்பதே, வாழும் முறையில்தான் தங்கி உள்ளது. கண்டபடி செலவு செய்தலால் பொருள் நஷ்டம் மட்டுமல்ல, மனதுக்கும் கஷ்டம்தான். இதன் பலாபலனாக, உடல் நலன் மட்டுமல்ல, மற்றவரிடம் எதிர்பார்த்துக் கையேந்தும் அவலநிலைக்கும் ஆளாக வேண்டிவருமன்றோ.

சாதாரணமான ஒரு ஏழை கூட நல்லவிதமாக தன் வருமானத்திற்கேற்ப ஆசைகளைச் சுருக்கி, தேவைகளைக் குறைத்து வாழும்போது, வசதி படைத்தவர்களும், நடுத்தர வர்க்கத்தினர் மட்டும் ஏன் பொருத்தமான வாழ்க்கை வாழ முடியாது? எதிர்காலத்தில் காசு கிடைக்கும் என்கின்ற எதிர்பார்ப்பினால், இருக்கின்ற பொருளைத் தொலைத்து பின் வருத்தப்படுவது அறிவீனமாகும். நிகழ்காலத்தின் வருமானங்கள்தான் வருங்கால சிக்கலற்ற வாழ்வைத் தீர்மானிக்க உதவுகின்றன. எல்லா நேரங்களிலேயும் உழைப்பு நிரந்தரமானதல்ல. புரிந்து கொள்ளுவோம்.

பிறர் தருவார்கள் என நம்பி ஏமாறுபவர்களே ஏராளமாக உள்ளனர். தவிர, பெற்ற பிள்ளைகூட கடனை அடைப்பான் எனக் கருதிக் கடன் கேட்கலாமா? உங்களால் முடிந்தது உங்கள் உழைப்பு மட்டுமே. பிறர் மூலம் கிடைக்கும் உதவிகள் எந்த நேரத்திலும் கிடைத்துவிடாது.



எனவே சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு இருப்பதைக் கொண்டு வாழுவதுடன் மிச்சம் பிடித்து வாழ்ந்தால் எதற்காகவும் அச்சம் வந்துவிடாது அன்றோ?

மனிதருக்குக் கையில் காசு இருந்தால்தானே மனோபலம் வருகின்றது. ஒரு வினாடிப் பொழுதுதான் ஆகட்டும். தகுந்த நேரத்தில் ஒரு சல்லிக்காசு தேவைக்கு இல்லாதுவிட்டால் எப்படித் தவித்துப் போகின்றோம்? இருக்கின்றபோது பொருட்களின் அருமை எங்கே தெரிகின்றது? ஒவ்வொரு தனிமனித வருமானம், செலவுகள், நாட்டின் தேசிய வருமானத்தையே பாதிப்படையச் செய்யும் என்பது பொருளாதார வல்லுனர்களின் கூற்றாகும்.

இன்று அரசாங்கங்கள் செலவினங்களைக் குறைத்தல் பற்றி அவ்வப்போது அறிவித்தல்களை - சுற்றறிக்கைகள் மூலம் விடுத்த வண்ணமேயுள்ளன.

மின்சார பாவனையில்,
நீர் வழங்கலில்,
உணவுப் பொருள் விநியோகத்தில்,
அரசு சொத்துக்களின் பாவனையில்,
இயற்கைப் பொருள்களின் பயன்பாடுகளில்,

என்றவாறே பல்வேறு விஷயங்களில் மக்கள் வீண் விரயம் செய்யாது, சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர் என்றாலும் இவற்றை யார் பொருட்படுத்துகின்றார்கள்? ஒரு வாளி தண்ணீரை ஊற்றினால் குடியா மூழ்கிவிடும்? அரைமணித்தியாலம் மின் குமிழ் பற்றினால் என்ன குறைந்துவிடும்? ஒரு துண்டு பாணை வீசினால் பஞ்சமா வந்துவிடும் என்று கேட்கும்

RangaRakes Tamilnavarasam.com

நபர்களும் இருக்கவே இருக்கின்றார்கள். சிறுதுளிகள் சேர்ந்து வெள்ளம் வருவதை அறிந்தும்கூட கண்டபடி நடந்து கொள்வது நாட்டைத் தற்கொலைக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கை அன்றோ?

நாட்டின் கணிசமான சதவிகிதம் உணவுப் பொருட்களும், ஏனைய பாவனைப் பொருட்களும் வீணாக விரயமாகுதல் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. சொல்லப்போனால், கூடிய விரைவில் பாவிக்கின்ற பொருட்களைவிட, வீணடிக்கும் பொருட்களே அதிகமாகிவிடும் போலிருக்கின்றது. கழிவுப் பொருட்களையே உரமாக்கியும், சேதனப் பொருளாக்கி வேறுவிதமான பாவனைப் பொருட்களாக்கவும் மாற்ற ஒவ்வொரு நாடுகளும் முயற்சிக்கின்றன.

தகுந்த விநியோக முறை இன்மையால் இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், உணவுப் பொருட்கள் என எத்தனை கோடி பெறுமானமான பணம் வீணடிக்கப்படுகின்றது தெரியுமா? இவை மக்களைச் சென்றடையாமையினால் யாருக்கு நஷ்டம்? ஏதோ வழியில் முடிவில் இந்தச் செலவினங்கள் பொதுமக்கள் தலையில் தானே விழுந்து விடுகின்றது.

சும்மா சுற்றித் திரியும் வாகனங்கள், அலுவலக நேரம் கடந்தும் சுற்றும் மின் விசிறிகள், மாதக்கணக்காக வீதி திருத்த கொட்டிக் கிடந்து வீணாகும் மணல் குவியல்கள், கேட்பாரற்றுப் பொது இடங்களில் வீணாகும் அரச சொத்துக்கள் இவை எமது நாட்டின் ஊதாரித்தனமான செலவினங்களின் வெளிப்பாடுகள். இவற்றைக் கண்டு



கொள்ளாமல் விடுவதன் பலாபலன்களை ஒவ்வொரு வரவு - செலவுத்திட்ட வாசிப்பின்போதும் நாம் கண்டு கொள்ளலாம். மேலே சொல்லப்பட்ட உதாரணங்கள் மிகச்சில பகுதிகளேயாகும். இன்னும் எத்தனை எத்தனையோ மனதை வருத்தும் அநியாயக் காட்சிகளைத் தினசரி பார்க்கின்றோம் அல்லவா? பணக்காரர் சிக்கனமின்றி வாழ்வதால், அது ஏழைகளை ஈற்றில் வருத்துவதை இவர்கள் ஏன் இன்னமும் உணர்வது இல்லை. எனினும் வசதி படைத்தவர்களில் பலர் தமது கடந்த காலத்தை மறக்காதும் வாழ்ந்து வருகின்றனர்.

நான் ஒருமுறை ஒரு செல்வந்தர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். இவர்கள் பிறருக்கு உதவுவதிலும், வந்தோரை விருந்தோம்பி வரவேற்பதிலும் சிறந்தவர்கள். அன்று அவர்கள் வீட்டில் தங்கியிருந்தபோது, முகம் கழுவுவதற்காகக் குளியல் அறைக்குச் செல்ல நேர்ந்தது. அந்த அறையின் சவர்க்காரம் வைக்கும் பெட்டியில் கரையாத ஈயப் பேப்பரினால் ஒட்டி வைக்கப்பட்டிருந்தது. சவர்க்காரம் ஈரலிப்பாக இருக்கும்போது. கடதாசியை ஒட்டினால் அது வலுவாக அழுந்தப் பிடித்துவிடும். சவர்க்காரத்தின் ஒரு பகுதியால் மட்டுமே பூசிப்பாவிக்குமாறு செய்திருந்தனர். அநாவசியமாகச் சவர்க்காரம் கரைவதைக் கட்டுப்படுத்தவே இந்த உத்தியாகும். நான் வியந்து போனேன். இவ்வளவு வசதிகள் இருந்தும், இவர்கள் ஏன் இப்படிச் செய்யவேண்டும்? இந்தச் சிக்கன முறையினால் சவர்க்காரம் கரைந்து போகின்ற விரயம் ஓரளவு தடுக்கப்படுமல்லவா? இது ஒன்றும் கேலிக்குரிய சமாச்சாரமல்ல.

RangaRakes Tamilnavarasam.com

ஒரு வருடத்தில் பாவிக்கப்படும் சவர்க்காரங்களில் இந்த முறையைக் கையாண்டால் எத்தனையோ சவர்க்காரங்கள் மீதப்படும் தெரியுமா? இந்த விஷயம் புத்திசாலித்தனமாக இருந்தும்கூட எம்மில் எத்தனை பேர் இந்த முறையைத் தெரிந்தும் கையாளப் போகின்றார்கள். அவசியமான இடத்தில் பொருளைச் செலவு செய்வதில் நஷ்டமில்லை. அநாவசியமான செலவுகள்தான் அநியாய விரயமாகின்றன.

வறுமைக்கு மூலகாரணமே உழைப்புக் குறைவு என்றும், தொழில் இன்மை என்றும் காரணம் கூறிக் கொள்கின்றனர். இருக்கின்ற பொருளைக் கரைக்காது செலவினைச் சுருக்குவதாலேயே வறுமையின் தாக்கம் ஒருவருக்கும் இருக்காது என்பதனை உணர்வார்களாக.

சிக்கன வாழ்வு பற்றிச் சொல்லிக் கொண்டு இருப்பதிலும் பார்க்க, நடைமுறையில் செய்து காட்டவேண்டும். மகாத்மா காந்தியடிகள் இதன் வழியே நடந்தும் காட்டினார். செல்வம் இருந்தால் செலவு செய்து காட்டி, மேன்மைப் பட்டம் சூட்டிக் கொள்ளவேண்டும் என எவரும் எண்ணினால் அதைவிடத் தப்பான அபிப்பிராயம் வேறில்லை. தனக்காகச் செய்யப்படும் மேலதிக செலவுகளால் பிறர் ஏன் பெருமைப்படப் போகின்றார்கள்? தனக்கு அது பெருமை என எண்ணும்போது, பிறர் அது கண்டு நகையாடுவரே அன்றி வேறில்லை. தவிர, இந்த நடவடிக்கையினால் சிலர் பொறாமை கொண்டு, அநாவசிய தொல்லைகளுக்கும் ஆளாக்குவார்கள். ஒருவரைப் பொறாமை உணர்வுக்கு ஆளாக்கும் செயலில்




ஈடுபடுத்துவதற்காகவே, அந்தஸ்தை உயர்த்திக்காட்டிச் செலவு செய்வது புத்திசாலித்தனமானதா?

செலவைக் குறைத்து வாழ்வதுகூட தியாகம்தான். ஏன் எனில் தம் ஆசைகளைக் கண்டபடி பெருக்காது, மனக்கட்டுப்பாட்டுடன் வாழ்வது ஒரு சமூக நலன் கருதிய வாழ்வாகவே அமைந்து விடுகின்றது.

எனவே,

சிக்கனம் தூய்மையான எண்ணங்களை விரிவடையச் செய்கின்றது. பிறர் படும் கஷ்டங்களை உணரச் செய்கின்றது. இல்லாதவன், இருப்பவன் எல்லோருக்கும் ஒரு சமநிலை வாழ்வு முறையை இது அமைக்கின்றதல்லவா? மாபெரும் மன்னர்கள்கூட சாதாரண மனிதர் போல வாழ்ந்து காட்டியதாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. காசை வைத்துக் கொண்டு கூரையில்லா வீட்டில் வாழவேண்டியதில்லை. இது உலோபித்தனமாகும். உலோபித்தனம், கஞ்சத்தனம் என்பதற்கும், சிக்கனம் என்பதற்கும் சம்பந்தமேயில்லை. தனக்கும் பிறர்க்கும் உதவாமை கஞ்சத்தனம், கருமித்தனம் என்பார்கள். ஆனால் சிக்கனம் என்பது, தனக்காகத் தான் வாழும் சமூகத்திற்காக, நாட்டிற்காக வாழுகின்ற ஒழுக்க அறநெறியாகும். நாங்கள் எங்களுக்காகவும், பிறருக்காகவும், அனுசரணையாக - கருணை கொண்டு வாழ வேண்டும். இதற்காக, தேவைக்காக மட்டுமே செலவு செய்து வாழ்தலே சிறப்பு.

RangaRakes Tamilnavarasam.com




நாம் காணும் எல்லோரையுமே எமது சொந்த இனமாகக் கொள்வோமாக. பூமித்தாய் பெற்று எடுத்த மக்கள் செல்வம் அவளது சொத்து. எனவே இவளது பிள்ளைகளிடையே தொடர்புகள் நிரம்பவும் உண்டு. பூமியின் உயிர்கள் அன்னிய முகங்கள் என்பது ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஏற்றத்தாழ்வுகள், சுயநலன்களினால் மனிதன் கூறுபடுவதை அனுமதிக்கவும் கூடாது. மனித உணர்வுகளை மதித்தால் இந்த விதமான கீழ்நோக்கான எண்ணங்கள் எழவே எழாது. சகலரது இன்ப துன்பங்களையும் பகிர்ந்து கொள்ளும் மனோநிலை வந்தால், பார்க்கும் அனைவருமே நல்லவர்களாகவே தெரிவார்கள்.

---

தெரிந்தவர்களைக் கண்டால் மட்டும் முகம்மலரச் சிரிப்பதும் புன்முறுவல் பூப்பதும், ஆனால்



தெரியாதவர்களைக் கண்டால் வேண்டப்படாதவர்களாகக் கருதுவதுபோல முகத்தை ‘உம்’ என்று வைத்தபடி வன்மம் கொண்டவர் போல் மனிதத் தன்மையற்ற பாவனையில் நடந்து கொள்ளலாமா?

எந்த முகங்களுமே அந்நியங்கள் அல்ல.

எவரையுமே எங்கள் சொந்த இனங்களாகக் கருதுவோமாக.

பூமி மாதாவிற்கு நான் மட்டும் குழந்தை அல்ல. அவள் பெற்று எடுத்தவைதான் இந்த மக்கள் பெருவெள்ளம். எனவே பூமியின் உயிர்கள் அந்நிய முகங்களே அல்ல. பிரபஞ்சத்தில் ஒன்றுக்கொன்று, நீரால், நெருப்பால், காற்றால், நிலத்தால் ஏதோ ஒரு வழியில் தொடர்புபட்டே இருக்கின்றோம் - என்றாலும் நாம் ஒரு இணைப்போடு பிணைக்கப்பட்டும், பிரிந்து வாழவே ஆசைப்படுபவர்களாக இருக்கின்றோம்.

அறிந்தவனுக்கு ஒரு நீதி. நன்கு தெரிந்தவனுக்கு ஒரு நீதி. உறவினர், தம் பிள்ளைகளுக்கு என பிறிதொரு கருத்துமாகவே கொண்டு மனிதன் வாழப் பழகிவிட்டான். உலகம் எங்களை ஒன்றாகவே நோக்குகின்றது. ஒவ்வொருவருக்கும் இது பாதகம், ஓரவஞ்சனை செய்வதில்லை. காற்று, வெயில், நிலம் என்பவைகளை அனுபவிக்கும் மனிதன் தன் அறிவிற்கு ஏற்பவும், சந்தர்ப்ப சூழ்நிலை, அதிர்ஷ்டம் என்று ஏதேதோ காரணங்களைக் காட்டியும் வாழ்ந்து வருகின்றான்.

கடவுள் தந்த எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு, ஏற்றத்தாழ்வு சுயநலங்களை மட்டும் தனக்குள் பூட்டி

RangaRakes Tamilnavarasam.com

வைத்துப் பிரகாசம் பெற எண்ணுவது முறைதானா? தனக்கு நல்லது வந்தால் மட்டும் சிரிக்கின்றான். தனக்கு ஏற்ற, தெரிந்தவர்களைக் கண்டால் மட்டும் மனம் திறந்து புன்னகைக்கின்றான். எல்லோரையும் சரிசமனாக எங்கே பார்க்கின்றான்?

பாமரத்தன்மை என்பது, படிக்காமையால் மட்டும் வந்து விடுவதன்று. மனித உணர்வுகளை மதிக்காமலும் இது உட்கார்ந்து கொள்கின்றது. அதிகம் படித்துவிட்டு சடமாக இருப்பது புத்திஜீவித்தன்மையா? அதைவிட எவரையும் முழுமையாக ஈர்ப்பவனே மேலான மனிதனாகின்றான். உத்தமமான, சலனமற்ற நன்னோக்குடையவனே மனிதன். மற்றவன் சூன்யமானவன்.

எந்தவிதத்திலும் உங்களுடன் தொடர்பு இல்லாத ஒருவனை நீங்கள் காணுகின்றீர்கள். அவன் முகவாட்டத்தின் மூலம் அவன் நெஞ்சின் நோவை அறிந்துவிட்டீர்கள். நல்லது, இனி அந்த வினாடி அதே விநாடித் துளிகள் கருணைமிகு எண்ணங்களால் அவனை நோக்கிப் பாருங்கள். அவன் தனிமை தொலைந்து உங்கள் மூலம் ஓர் இனிய அனுபவம் பெறுவதை அறிவீர்கள். நீங்கள் கொடுப்பது பொருள் அல்ல. அருள்மிகுந்த அன்பினைத்தான். இந்த அனுபவத்தினை நேரிடையாகவே பெறச் சந்தர்ப்பங்களை நீங்கள் பெற்றும் இருப்பீர்கள். அநேகமான வேளைகளில், இத்தகையவர்களைக் கண்டுகொள்ளாத சந்தர்ப்பங்களே மிக அதிகமாகும்.

அல்லாவிடில், இத்தகைய துன்பம் கொண்டோரைப் பார்த்து நகைப்பவர்களையும் கண்டிருப்பீர்கள். ஒரு



மனிதனின் விழிநீரைத் துடைத்தல் என்பது, அவன் வாழ்வை விழிப்படைய உதவுவது போலாகும் என எண்ணுக. நாங்கள் மட்டும் காணும் திருப்தியைவிடப் பிறர் திருப்தியில் நாங்கள் பெறும் திருப்தியே வலுவானதாகும். 'இந்த உதவிக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்' என வாழ்த்தும்போது ஏற்படும் நிறைவு. உங்களின் செயலாற்றுகைக்குக் கிடைத்த நற்சான்றிதழாகும். அதுவும், வலிமையில்லாத நலிந்தவர்களுக்கு எம்மால் இயன்றவைகளை வழங்கும்போது ஏற்படும் நிறைவே தனியான இனிய அனுபவமாகும்.

வீணான கற்பனைகளாலும் விடாது துரத்துகின்ற துன்ப அலைகளாலும், சஞ்சலமடைந்தவர்களும் ஏதோ ஒரு ஆறுதல் கிடைக்கவேண்டும் எனவே அங்கலாய்க்கின்றனர். இன்று சோகங்களால் பலமிழந்தவர்களுக்கு என்ன விதத்தில் ஆறுதல் அளிக்கலாம் என்பதே பெரிய பிரச்சனையாகும். எல்லோருமே ஆன்மீகவாதிகளாக முடியாது. ஒருவன் கண்ணீரைத் துடைக்கும் பணியில் எத்தனை பேர் ஆர்வமாக இருக்கின்றார்கள். துன்பம் வந்ததுமே எல்லோரும் தனிமைப்பட்டுப் போகின்றார்கள். திருமண வீட்டிற்கு, பட்டும் நகையுமாக ஜொலிக்கச் செல்கின்ற மக்கள், ஆட்டபாட்டங்கள், கேலிகள், ஆரவாரங்களில் மூழ்கி சந்தோஷமடைந்ததும் அவர்கள் பணி நிறைவேறி முடிகின்றது. அதன் பின்னர் என்ன நடக்கின்றது?

அதே வீட்டில் ஒருவன் கஷ்டம் – துன்பம் வந்த பின்னர் எத்தனை விதமானவர்கள் அவர்கள் துன்பங்களில்

RangaRakes Tamilnavarasam.com

பங்கு எடுக்கின்றார்கள்? தேறுதல் கொடுக்கின்றார்கள். மரணச் சடங்கில் ஒரு அம்மாள் இப்படி அழுதாள், 'நீங்கள் எல்லோருமே இன்று போய் விடுவீர்கள். நாளை எனக்கு எவர் ஆறுதல் சொல்லப் போகின்றார்கள்.' இது எவ்வளவு யதார்த்தமான பேச்சு? கேளிக்கைகளில் பங்கு கொண்டவர்கள் ஒரு நாழிகைப் பொழுதும் துன்பங்களைத் தாங்கச் சம்மதிப்பதில்லை. ஏன்? தனக்கு வேண்டப்பட்டவனையே நோக்கத் தயங்குபவன், தனக்குத் தெரியாதவனிடம் கருணை கொள்வான் என எப்படி எண்ணமுடியும்?

மேலைநாட்டு மக்களின் பல பண்புகளைக்கண்டு நாம் கட்டாயம் பின்பற்றியே ஆகவேண்டும். அறிந்தவரோ, அறியாதவரோ எவரேயாயினும் காலை, நண்பகல், மாலை, இரவு என எந்த நேரங்களில் கண்டு கொண்டாலும், 'காலை வந்தனம்' அல்லது அந்த அந்த நேரங்களுக்கு ஏற்பச் சிரித்த முகத்துடன் அந்த நேரத்திற்கான வந்தனங்களைச் சொல்லுவார்கள். பதிலுக்கு மற்றவரும் அதே பாணியில் நன்றி கூறி வந்தனம் கூறிவிடுவார்கள். நம்மவர்கள் இப்படிக் கூறாமல்விட்டால், அவர்கள், இவர் ஊருக்குப் புதிது என இனம் கண்டுவிடுவார்கள். ஏன் எனில், மேலை நாடுகளில் வேலை பார்க்கும் இடங்கள், பொது இடங்கள், வீதிகளில் கூட ஒருவரைக் கண்டுவிட்டால் முகம்மலர இரண்டு சொல் சொல்லியே தமது காரியங்களைச் செய்வார்கள்.

தெரியாத எவரையாவது நாம் கண்டு கொள்ளுகின்றோமா? எவராவது எமக்காகச் செய்கின்ற காரியங்களுக்கு உடனுக்குடன் நன்றி கூறுகின்றோமா?



எதிரில் வரும் ஒருவன் சிரிக்கும்போது, புன்முறுவல் பூக்கும்போது, எமக்குள் ஒரு மலர்ச்சி தோன்றும் அல்லவா? எதிரில் வருபவர் எதிரிகள் அல்ல. அவர்கள் முகம் மலர்ந்தால் எம் அகம் மலரும் அல்லவா? சரி, உங்களுக்கு வேண்டாதவரே ஆகட்டும். கொஞ்சம் புன்முறுவல் பூத்தால் என்ன? அவர்களது கோப, தாப, இறுக்க இயல்பு தளர்ந்து போகாதா என்ன? உள்ளத்தை இறுக்கப் பூட்டி என்ன பயன்? அதை அன்பு என்ற திறவுகோலினால் திறந்து வைத்தால் என்ன? உடைக்க முடியாத உள்ளத்தைக்கூட கனிவான அன்பு கொண்டு உடைப்பதே அறிவாகும். கனிவு அற்றவன், உடலில் பிணி இல்லாதுவிட்டாலுங் கூட சமூகத்திற்கு அவன் குணம் மாறாத பிணிதான்.

நாம் காலையில் இருந்து மாலைவரை எவ்வளவு மனிதர்களைச் சந்திக்கின்றோம். இவர்கள் எத்தனை எத்தனை பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு திரிகின்றார்கள். அப்போது நாம் அவர்களது பிரச்சனை என்ன என்றே தெரியாமல், கண்டபடி நடந்து கொள்ளலாமா? காலையில் நீங்கள் வீட்டை விட்டுப் புறப்படுகின்றீர்கள். எதிரில் பலர் வருகின்றார்கள். அவர்களில் சிலரை உங்களுக்குப் பிடிக்காமலும் இருக்கலாம், பிடித்தும் இருக்கலாம். நீங்களும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டி உள்ளதால், பல அழுத்தங்களுடன் புறப்பட்டு வந்துகொண்டு இருந்தாலும்கூட எதிரில் வருபவரிடம் உங்கள் கோபதாபம், புழுக்கங்கள், விரக்தி, வேதனை, காழ்ப்பு உணர்ச்சிகளைத் திணிக்க முயலலாமா?

சரி,

RangaRakes Tamilnavarasam.com

இந்த நேரத்தில் எதிரே வருபவர் உங்களிடம் பாய்ந்தால் முகம் கோண நடப்பதை நீங்கள் விரும்புவீர்களா? அல்லது அனுமதிப்பீர்களா? சொல்லுங்கள். உங்களுக்கு ஒரு நீதியும் சமூகத்தின் பால் ஒரு நீதியையும் எதிர்பார்க்கலாமா?

"அதிர்ஷ்டமற்றவன் பார்த்துவிட்டான். எல்லாமே போச்சு" என்பார்கள். இதே கருத்தைப் பிறர் உங்கள் மீது வைப்பதை நீங்கள் விரும்புவீர்களா? மனத்தில் உள்ளதைக் கண்களால் பார்க்க முடியாத காரணத்தால் நாம் தப்பித்துப் போய் விடுகின்றோம். அல்லாது விடின், மனிதன் ஒவ்வொருவரின் வக்கிரபுத்திகள், கபட எண்ணங்கள் எல்லாமே தெரிந்துபோனால் உலகமே ஒரு நொடியில் ரணகளமாகிவிடுமே? கண்ணுக்குத் தெரியாத குணங்களை எமக்கு மட்டுமே எடைபோடும் திறன் இருப்பதாக வேறு கருதுகின்றோம். இதனால் சதா மற்றவர்களிடம் இருந்து மட்டுமே நியாயங்களை எதிர்பார்த்து எங்கள் நியாயங்களைத் துறந்துவிடத் தயாராக இருக்கின்றோம்.

காரியத்திற்காகச் சிரிக்கும் மனிதன் நேசிப்பதற்காகச் சிரிப்பதில்லை. 'மலரனைய உணர்வுடன் மனம் வீசவேண்டும் இறைவா!' எனப் பெரியோர் எண்ணுவார்கள். நாம் மலரின் மென்மையாகவும் எதிரில் உள்ளவர்களுக்கு வாசனைகளைத் தெளிப்பவர்களாகவும் இருப்போமாக. இரக்கம் பகிரப்பட்டால் ஆண்டவன் பொக்கிஷம் எமக்காகப் பகிர்ந்தளிக்கப்படும். இதயங்களைப் பூட்டி வைத்து ஆண்டவனிடம் கையேந்தலாமா? கொடுக்காமல் கை ஏந்தல் சிறப்பாகுமா?



பார்ப்பவர் அனைவரையும் ஒன்றாக நோக்க அவர்களை உங்களுக்குள் பரிச்சயமாக்க முயலுங்கள். தினசரி நல்ல நல்ல நண்பர்களைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். தினம் தினம் எத்தனை பேரிடம் முகச் சுளிப்பினை ஏற்படுத்தி இருப்பதைவிடக் கேவலமான நிலைமை வேறென்ன உண்டு? நேரிய, பரிசுத்த பார்வை மூலம் உங்கள் உள்ளேயும் ஒரு வெளிச்சம் உருவாகும். அது பிறரால் எமக்கு வழங்கப்படும் பிரதிபலிப்பான ஒளியேயாகும்.

இதில் எந்தக் களங்கமும் கிடையாது.

இதனைப் பரிபூரணமாக நம்பலாம்.

✷

RangaRakes

Tamilnavarasam.com




*பூட்டிய இதயங்களுடன் உடல்கள் மட்டும் இணைந்து கொள்வது திருமணபந்தம் அல்ல. கனமான இதயங்களால் இனிமையான திருமண வாழ்வை ரசிக்க முடியாது. அன்பை எதிர்பார்க்கின்ற கணவனுக்கு அதனைத் தாராளமாக வழங்கவும் அதேபோல அன்பே உருவான மனைவிக்கு உரிய கௌரவம் கொடுத்து என்றைக்கும் மாறாத காதலைப் பகிர்ந்துகொள்வதே உன்னதமான இல்வாழ்வு நெறியாகும். விட்டுக் கொடுப்புடன் நேயமுடன் ஜீவிக்கப்பழகினால், வாழ்நாள் முழுவதுமே சந்தோஷகரமான வாழ்க்கைதான். இந்த வாழ்வு இவர்களின் எதிர்காலத்தின் சந்ததியினரையும் வழி நடத்தும்.*

மனம் முறிந்தால் மணமுறிவா? வாழ்வாங்கு வாழ்வதற்காக இணைந்து கொண்ட தம்பதிகள் தமக்கிடையே உள்ள பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள வழி தேடாமல் திருமண பந்தத்தினையே உடைத்தெறிந்து



கொள்வது சாதாரணமான விஷயமல்ல. திருமணம் என்பது ஆண் - பெண் சுதந்திரமாகச் சிந்தை ஒன்றாகச் சந்தோஷமாக ஜீவிப்பதற்கே. இதில் யார் பெரியவர், சிறியவர் என்கின்ற எண்ணங்கள் ஆரம்பமானதுமே குரோதங்களும் சூழ்ந்துவர ஆரம்பிக்கின்றன.

திருமணம் என்பதே ஒருமனமாக இணைதலே அன்றி பிரிவதற்கு ஆதாரங்களைத் தேடுதல் அல்ல. எனினும், நியாயபூர்வமான பிரச்சனைகள் இருசாராரிடையேயும் தோன்றவே செய்யலாம். இவை மனங்கள் மட்டும் சார்ந்தவையன்று. உடற்கூறுபட்ட பிரச்சினைகளாகவும் இருக்கலாம். உற்றார், உறவினர், தாய், தகப்பன், மாமன், மாமிகளால் தோன்றுகின்ற விவகாரங்களை வைத்து மட்டும் விவாகரத்துக் கேட்கலாமா?

வாழ்வதற்குப் பொருளாதாரம் இன்றியமையாதது. கல்யாணமானவுடன் தோன்றாத பொருளாதாரப் பிரச்சினைகளும் இதர சாதாரண விடயங்கள்கூட, நாள் ஆக ஆக இவை பூதாகாரமாகத் தோன்றுகின்றதே? மனங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை - கோளாறுகளை - உள்ளக் கிடக்கைகளை ஆண், பெண் இருவருமே பேசித் தீர்க்கமுடியும். அல்லாதுவிடின்,

பெற்றோர், தமக்கு நம்பிக்கையானவர்கள் எனச் சிலர் மூலமாகவேனும் மனம்விட்டு பேசிவிட முடியும். இன்று பொதுவாகப் பூட்டிய உள்ளங்களோடு, உடல் மட்டுமே இணைந்து கொள்வதால் தவறுகள் மேலும் ரணங்களாகின்றன. உறுத்தல் இல்லாமல் இன்பம் துய்த்தலே முறையாகும். கனமான இதயங்களால்

RangaRakes Tamilnavarasam.com

இனிமையான திருமண வாழ்வை ரசிக்கமுடியாது. உடல் ஆரோக்கியம் காரணமான பிரச்சினைகளால் கல்யாண வாழ்வில் கரைச்சல் வரலாம். எனினும் தற்கால நவீன மருத்துவ உலகில் இவை எல்லாம் தீர்த்துக்கொள்ளக் கூடியவைதான்.

கணவனும், மனைவியும் எந்தவிதமான மனஸ்தாபங்களும் இல்லாமல், இருக்கும்போதும், கூடவே வந்து போகின்ற உறவுகளும், ஏன் நெருங்கிய உறவினர்களுங்கூட கரிசனையாக நடப்பதுபோல் நடந்து, குடும்பத்தில் விரிசல்களை உண்டாக்கிவிடுகின்றனர். நிர்மலமான சிந்தனையுடன் வாழ்கின்ற தம்பதியினரிடம் அநாவசியமான சந்தேகங்களையும், வீண் ஆசைகள், கோபங்களை ஊட்டி விடுவதாலேயே கணிசமான குடும்பங்கள் நடுத்தெருவிற்கு வந்து அவமானப்பட்டுப் போகின்றன. கணவன், மனைவியும் தம்மை எவர் நேசிக்கின்றார்கள், எவர் கழுத்தை அறுக்கின்றார்கள் என்கின்ற வேறுபாட்டை உணராமல் போகின்றார்கள். மனைவியைக் கணவன் நம்பாமலும், கணவனை மனைவி நம்பாமலும் வாழ்ந்தால், பிறர் பேச்சு இவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடத்தான் செய்யும். நம்பிக்கை கொண்டு வாழ்ந்தால் எவரும் ஒருவருக்கு ஒருவர் துரோகம் செய்ய எண்ணுவார்களா? பலவீனமான கரவு என்கின்ற காரணி உறுதியான தம்பதிகளைத் தாக்க முடியாது. நோய்கூட பலம் இழந்தவனைத்தானே பலமாகத் தொற்றிக்கொண்டு தாக்குகின்றது?

'எனக்கு இவரோடு வாழப்பிடிக்கவில்லை. ஒத்துப்போகாத, விட்டுப்போகாத மனுஷனிடம் என்ன



வாழ்க்கை வேண்டிக் கிடக்கின்றது' என மனைவியும், 'அடங்கிப் போகாத இவளுடன் என்ன வாழ்க்கை? தினம் தினம் பிறந்த வீட்டுப் புராணத்தை எவ்வளவு காலம்தான் கேட்பது' என்கின்ற கணவனும் பேசும் பேச்சுக்களை நாம் அறிந்திருக்கின்றோம். அதீதமான அன்பைப் பொழியும் பெண், தனது கணவன் தன் மீது மட்டும் அன்பைக் காட்டவேண்டும் என எதிர்பார்க்கின்றாள். இன்றைக்கு, விவாகரத்துக் கேட்கும் பெரும்பாலான பெண்கள் கூறும் காரணம் இதுதான். 'எனது கணவருக்கு என்மீது கரிசனை இல்லை' என்பதுதான். ஆனால் கணவன் என்பவன் இதை ஒத்துக்கொள்ளமாட்டான். அன்பைக் காட்டத்தவறிய, அதே சமயம் அதனைத் தெரிவிக்கத் தெரியாத அப்பாவிகளுங்கூட இருக்கத்தான் செய்கின்றனர்.

அன்பை எதிர்பார்க்கின்ற கணவனுக்கு அதனைத் தாராளமாக வழங்கவும், அதே சமயம் அன்பே உருவான பெண்ணுக்கு ஆண்மகன் மாறாத காதலைப் பகிர்ந்து கொண்டும் வாழ்ந்தால் என்ன? இன்னும் சில வயது முதிர்ந்த பெண்கள் கூறுவார்கள். "இந்த வயதிலும் இவர் என்ன வாலிபர் மாதிரி நடந்து கொள்கிறாரே" என்பார்கள். இளவயதில் ஆடிப்பாடி, ஓடி உல்லாசமாக வாழ்கின்ற காலம் மட்டும்தான் காதல் வாழ்க்கையா? உடல் தளர்ந்தாலும் அன்பு வற்றாத நிலையில் கணவன், மனைவி காதலோடு வாழ்வது, பரிகசிக்கக் கூடிய ஒன்றல்ல. வாலிப வயதில் கட்டிப்புரண்டு விட்டு, வயது வந்ததும், ஒருவர் கரத்தை மற்றவர் தொட அருவருப்பதும், வெட்கப்படுவதும் ஒரு வாழ்வா? குழந்தை குட்டிகள் என்கின்ற வாரிசுகள் வந்ததும், கணவன் - மனைவி

RangaRakes Tamilnavarasam.com

நெருக்கம், ஸ்பரிஸ உணர்வு, அருகிக் காதல் ஸ்தம்பிதமாகிவிடுதல் சரியாகுமா?

இன்றைய உலகில் நடப்பது என்ன? ஏழெட்டுப் பிள்ளைகளைப் பெற்று, ஏன் பேரப்பிள்ளைகளைக் கண்டுங் கூட விவாகரத்துக் கேட்கின்றார்கள். அல்லது பிரிந்து வாழ்கின்றார்கள். அப்படியாயின் இவர்கள் இதுநாள்வரை வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தம்தான் என்ன? எல்லாமே போலியானதா? இவர்கள் இப்படி வாழுவது, தமது சமூகத்திற்கே வாழ்க்கை பற்றிய துர்ப்போதனையினைக் கற்பிக்க முனைவதாகும்.

எல்லோரும் இன்று சொல்லுகின்றார்கள். இன்று மணமுறிவுகளுக்குக் காரணம், மேலைத்தேய நாகரீகமான பழக்க வழக்கங்களே என்கின்றார்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையைக் கட்டி அமைக்கத் தவறிவிட்டு, ஏன் மேலை நாட்டு நாகரீகத்தினை மட்டும் காரணம் காட்டுகின்றீர்கள்? அவர்கள் எப்படியாவது வாழ்ந்துவிட்டுப் போகட்டும். அதற்காக, அவர்கள் காட்டும் காரணத்தை நீங்கள் ஏற்க வேண்டுமா?

விட்டுக் கொடுக்காத தன்மை,
எல்லை மீறிய சுதந்திரங்களை எதிர்பார்த்தல்,
ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு அங்கலாய்த்தல்,
சீதனப் பிரச்சினை,
பொருளாதார நெருக்கடிகள் -

போன்ற பிரதான அம்சங்கள் மணமுறிவினை ஏற்படுத்தினாலுங்கூட நியாயபூர்வமான விடயங்களும்,



விவாகரத்துப் பெற போதிய காரணங்களாக அமைந்து விடுகின்றன. திருமண வாழ்வில் சில ஆண்களால் பெண்கள் மட்டும் பாதிப்பு அடைவதில்லை. ஆண்கள் கூடச் சில பெண்களால் பாதிப்பு அடையக்கூடும். முறை தவறிய ஆண்கள், குணங்கெட்ட பெண்கள் இன்று பலர் இருக்கத்தான் செய்கின்றார்கள். குடித்து, வெறித்து மனைவியைத் துன்புறுத்தி, குடும்பத்தைக் கவனிக்காமல் சொத்துக்களைச் சேதாரமாக்கிக் கண்டவள் பின்னால் சுற்றுபவனோடு எத்தனைக் காலத்திற்குத்தான் பொறுத்து வாழ முடியும்? தவிர குடும்பத்தைக் கவனிக்காமல் விட்டாலும் பரவாயில்லை. மனைவி கஷ்டப்பட்டு உழைக்க, அதனையும் சுரண்டி கண்டபடி அவதூறுகளை அள்ளி வீசுகின்ற உலுத்தர்களுடன் பெயரளவிற்குக் கணவன் மனைவியாக வாழமுடியுமா? சீதனத்திற்காக, சீதேவியைத் துரத்துபவர்களை என்ன செய்வது?

கணவனை மதிக்காமல், பிள்ளைகளையும் பார்க்காது, நாகரீக மோகத்திற்கு ஆட்பட்டு, கற்பு நெறியில் இருந்து தவறிய பெண்களின் நடிப்புப் பேச்சுக்காக ஒருவன் தன் வாழ்க்கையையே பணயம் வைக்க முடியுமா? பெண்ணடிமை கொள்ள நினைக்கும் பித்தர்களுடனும் பெண்மைக்கே களங்கமாக இருக்கும் அசிங்கங்களுடனும் வாழ நினைப்பதுகூட அவமானமாகும். கலாசாரத்திற்கு ஒவ்வாத நடத்தை நெறியுள்ளவர்களை மீண்டும் நல்ல வழிக்குக் கொண்டுவர பெரிய போராட்டமே செய்ய வேண்டியுள்ளது. சிலர் இது விடயத்தில் பட்ட அனுபவங்கள் மூலம் திருந்தியும் விடுகின்றார்கள். ஒரு சிலர் மட்டும் திருந்த மாட்டேன் என அடம்பிடித்து அழிகின்றார்கள்.

RangaRakes Tamilnavarasam.com

ஆண், பெண் இருசாராரும் தங்கள் குறை, நிறைகளை மதிப்பீடு செய்யத் தவறுவதாலேயே குழப்பங்கள் வருகின்றன. பண்பாடுகளில் நம்பிக்கை கொண்டவர்கள், தாம் வாழுகின்ற முறைமைகள் பற்றியும் எடை போடத் தெரிந்தவர்களாவர். தாம் வாழுகின்ற சமூக கலாசாரத்தின் பால் ஈடுபாடு இன்றித் தாமாகவே பிற நாட்டுக் கலாசாரங்களில் வீழ்ந்து பின்னர், தமது சமூகம் பற்றியே தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகின்றனர். இன்று கீழைத்தேய சமூகப் பிணைப்பு, குடும்ப இணைப்பு போன்ற பாசமிகு வாழ்க்கையை அந்நிய நாடுகளே வியந்து நோக்க, நாமோ, எமது வசதிக்காக - ஆடம்பர வாழ்விற்காக - குடும்ப வாழ்வு முறைகளையே மாற்றிக் கொள்ளத் தயாராகிவிட்டோம். இணைவதும், பிரிவதும் ஒரு சாதாரண நிகழ்வாக - சம்பவமாக அவர்கள் கொள்கின்றார்கள். இந்த அவசரபுத்தி வாழ்வு அஸ்தமனமாகிவிடுகின்றபோது, வெறும் யந்திரமாக உழைத்து வாழ்ந்தாலும் நிம்மதி கிட்டிவிடுமா? வீடு, வீடாக இல்லாதபோது, நாடு பற்றி எப்படிச் சிந்திக்க முடியும்? அழிவு பற்றியே எண்ணங்கள் ஓடும். வீட்டில் சண்டை போடுகின்றவன் வெளியில் சிரிக்கமுடியுமா?

மேலைநாடுகளின் வாழ்க்கை முறை வேறானது. அங்கு குடும்பம் வேறு, கடமை வேறு. அவர்கள் இரண்டையும் பொருத்திப் பார்ப்பது இல்லை. எங்களால் அப்படி வாழ முடிவதில்லை. அங்கே ஒருவன் தினம் ஒரு புது வாழ்வு அமைக்கின்றான். ஆனால் அவன் தனது வேலைகளை மறுபக்கம் பார்த்துக் கொண்டு இருக்கின்றான். தற்காலிகமான இந்தச் சந்தோஷங்கள் நிரந்தரமானது இல்லை என்று எண்ணுவதாலேயே இன்று



எங்கள் குடும்பப் பிணைப்பின் சூட்சுமங்களை அறிய ஆவல்படுகின்றான். பார்க்கப்போனால், கொஞ்ச காலங்களில் நாங்கள் அவர்களாகவும், அவர்கள் நாங்களாகவும் மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

விவாகரத்து விஷயத்தில், காதலித்துத் திருமணம் செய்தவர்கள் மட்டுமல்ல, பெற்றோர் பேசி முடித்து வைத்த திருமணங்கள்கூட, முறிந்துபோகின்றன. எனவே மணமுறிவிற்கு, திருமணம் செய்யும் முறைகளை மட்டும் காரணம் காட்டிவிட முடியாது. ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தமக்கு இசைவாகவே ஒவ்வொருவரும் நடக்க வேண்டுமென்கின்ற, எல்லைமீறிய அவாவினால் தம்மிடையே இசைந்து போக மறுக்கின்றார்கள். கொஞ்சமாவது அனுசரணை உணர்வுடன் விட்டுக் கொடுத்துப் போக மறுக்கின்ற நாகரீகத்தை சில ஆண்களும், சில பெண்களும் விரும்பமாட்டார்கள். மிகச்சிலர் நாகரீகத்தின் உச்சிக்கே சென்று வாழத் தலைப்படுகின்றனர். சாமான்ய உலகில் நாம் கொஞ்சம் நகர்ப்புற வாழ்க்கையையும் புரிந்துதானே ஆகவேண்டும். இதில் வேடிக்கை என்னவெனில், பட்டிக்காட்டுத்தனமாக வாழாதே என்று சொல்லி, சும்மா இருந்த மனைவியை நாகரீக மோகத்தினுள் திணித்து, பின்னர் அவனுக்கே வினையாகி, முடிவில் விவாகபந்தமே வேண்டாம் என்கின்ற அளவிற்கு வாழ்க்கை வீணாகி விடுவதுண்டு. இதேபோலவே, சாதாரண வாழ்க்கை வாழ்ந்து வந்த கணவனை அடுத்தவர்களைப் பார்த்து, அவனையும் நடக்கச் செய்து முடிவில், மனைவியையே மறந்து, சகல

RangaRakes Tamilnavarasam.com

கெட்ட சகவாசங்களையும் கைக்கொள்ளுபவர்களையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆழமான அன்பும் பரிசுத்தமான மனமும் இருந்தால், தம்பதியினரிடையே ஏற்படும் நம்பிக்கை உணர்வை எந்தச் சக்தியாலும் தகர்த்துவிட முடியாது! தாங்கள் நினைத்தபடியே வாழ்ந்து, விடாப்பிடியாகக் கெட்டு அழிவதில் என்ன லாபம் இருக்கின்றது?

இது ஒரு உண்மைக் கதை. கொஞ்சம் கேளுங்கள். எனக்குத் தெரிந்த ஒரு நண்பருக்குப் பெற்றோர் பேசித் திருமணம் செய்து வைத்தார்கள். இவர்களுக்குப் பெண் குழந்தை பிறந்து எட்டு ஆண்டுகள் இப்போது முடிவடைந்துவிட்டன. குழந்தைக்கு நாலு வயது நடந்து கொண்டிருக்கும்போது நண்பரின் மனைவி விவாகரத்துக் கோரினார். மனைவி இயல்பாகவே நாகரீக மோகத்திற்கு ஆட்பட்டவர். கணவனின் சம்மதம் கிடைக்காமையினால் கொஞ்சகாலம் விவாகரத்துக் கிடைக்காமல் காலம் இழுபட்டாலும் இறுதியில் மனைவியின் பலத்த வற்புறுத்தல் காரணமாக விவாகரத்திற்கு அவர் சம்மதிக்க, விவாகரத்தும் கிடைத்தது. அதன் பின்னர், அவர் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து குழந்தைகளையும் பெற்றுக் கொண்டு நல்ல வசதியாக வாழ்ந்து வருகின்றார்.

இவர்கள் பிரச்சனையில் சமரசம் செய்து தோற்ற ஒரு நண்பரை, ஏற்கனவே விவாகரத்துப் பெற்ற நண்பரின் மனைவி சந்தித்தார். அந்தப் பெண் கண்ணீருடன் சொன்னார்: 'இப்படி, நான் முட்டாள்தனமாக அவசரப் பட்டுவிட்டேன். அவர் மறுத்துங்கூட நான்தான் விவாகரத்துப்



பெற முனைந்தேன். நான்தான் அறிவிழந்துவிட்டேன். அந்த நேரத்தில் இவர் எனக்கு நாலைந்து அடி அடித்துத் திட்டித் திருத்தி இருக்கலாம். எனது செயலைக் கண்டிக்க வேண்டிய முறையில் கண்டிக்கத் தவறிவிட்டார். இன்று நான் தனித்துவிட்டேன். எனது பெண் பிள்ளையும் வளர்ந்து வருகின்றாள். எனது பிள்ளைக்கு இவர் வாரி, வழங்கி வந்தாலும் இனிமேல் நான் எப்படி ஒன்றாக வாழமுடியும்? அவர் ஏற்கனவே எனது தவற்றினால் திருமணம் செய்து பிள்ளைகளையும் பெற்றுவிட்டார். எனது எதிர்காலம் என்ன? ஒரு தகப்பன் துணையின்றி வாழ வேண்டி ஆகிவிட்டதே?' என்றார். அவசரபுத்தியுடைய பெண்கள் இத்தகைய வாழ்க்கையை அறிந்தேயாகவேண்டும்.

## விவாக விலக்கு வாழ்க்கையின் இழப்பு அல்லவா?

ஒரு சுமாரான தோற்றமுள்ள மனைவியைப் பற்றி ஒருவர் பெருமையாக இப்படிச் சொன்னார். 'இந்த உலகில் எனது மனைவிதான் அழகானவள், சிறந்தவள். இவளைப் போல் ஒருத்தியும் இல்லை' என்றதும் நான் சிரித்தேன். அவர் தொடர்ந்தார். 'ஏன் என்றால், நான் அவளை விரும்புகின்றேன். மனதார நேசிக்கின்றேன். என்னைப் புரிந்தவள், என்மீது பாசம் கொண்டவள். எனவே என் மனைவிதான் அழகாகவும் நல்லவளாகவும் தெரிகின்றாள்' என்றார்.

'உண்மை அன்பு, பாசம் உள்ளத்தில் மேலோங்கினால், காதல் மனைவி கட்டழகிதான். ஆரவாரமான அழகிகள் குணம் நிரம்பியவர்களாக

RangaRakes Tamilnavarasam.com

இருந்தால் சரி, இல்லாவிட்டால், வாழ்க்கை என்னாவது? ஆணும், பெண்ணும் சுய ஆதிக்க உணர்வுடன் வாழ நினைப்பதும், தங்கள் நிலைதான் உயர்வானது என்றும் கருதி வாழ்ந்தால், எக்காரணங் கொண்டும் இவர்களிடையே பிணைப்பு ஏற்படாது. ஒருவரிடம் ஒருவர் அக்கறை செலுத்தினால்தான் அவர்களுக்கிடையே கௌரவமான, எண்ணங்கள் பரிமாறப்படும். என்னுள் அவள், அவளுள் நான் என்கின்ற உணர்வுகூட, இவர்கள் மற்றவர் மீது செலுத்தும் அக்கறையிலேயே தங்கி உள்ளது. இங்கு மமதைகள் மாயமாக அடிபட்டு மாய்ந்து போகும்.

பிரிந்துபோனவர்கள் பிரச்சினைகள், பிரிந்தவுடன் முடிந்து விடுவதில்லை. இது அவர்களது குடும்பங்கள் சார்ந்த குழப்பமான பிரச்சினையாகி, தொடர்ந்து தலைமுறை, தலைமுறைக்கான தீராத நோயாகப் பரவி விடுகின்றது. இவை மானப்பிரச்சினையாகி அவமானப்பட்டுப் போகின்றனர். குடும்பங்களைப் பிரிக்க முற்பட்டவர்கள், இவர்கள் பிரிந்த பின்னர் கேலி பேசுவார்களே ஒழிய, தங்களின் அடாத செயலுக்கு ஆதாரமாக மேன்மேலும் இவர்கள் பற்றி குற்றங்களையே, சேற்றை வாரி வீசுதல் போல் வீசுவார்கள்.

'எல்லாமே தலை எழுத்து' என்று விலைமதிப்புள்ள குடும்ப வாழ்வைக் குழப்பலாமா? ஏதாவது குடும்பங்களில் குழப்பங்கள் ஏற்பட்டால், காலங்கள் நாளடைவில் குற்றங்களை மறந்துபோகச் செய்துவிடும். இதனாலேயே குடும்ப நீதிமன்றங்களில் விவாகரத்து வழக்குகளில் உடனடியாக விவாக விலக்குச் செய்து தீர்ப்பு வழங்கி விடுவதில்லை. இவர்களுக்குப் புத்திமதி கூறி, போதிய கால



அவகாசங்கள் வழங்குகின்றார்கள். என்ன வினோதம் என்றால் மெத்தப் படித்தவர்கள் கூடச் சாதாரண பிரச்சினைகளை நீதிமன்றங்களின் முன்கொண்டு வருவதாகும். உலகிற்குப் புத்திமதி கூறத்தக்க வல்லவர்களே, குடும்பப் பிணக்கை அணைக்க முடியாமல் நீதிமன்றத் தீர்ப்பிற்காகக் காத்திருப்பதும், வாழ்க்கையைக் கிழித்துக் கூறாக்க நாள் கேட்டு நிற்பதும் எவ்வளவு பரிதாபம் தெரியுமா?

இன்று குடும்பப் பிணக்குகளைக் கோமாளித்தனமாகச் சித்திரிக்கும் திரைப்படங்களும், கதைகளும், படிப்படியாகப் பார்ப்பவர் மனதில் குடும்பம் என்கின்ற உன்னதமான அமைப்பு பற்றிய மாறுபாடான கருத்தைத் தோற்றுவித்துவிடுகின்றன. கற்பு, ஒழுக்கம் பற்றி கண்டபடி கதை எழுதுகின்றார்கள். சில கதைகளில் குடும்பங்களில் 'மன்னித்தல்' என்ற வார்த்தைக்கே அர்த்தம் இன்றி, பகை, பழிவாங்கல்தான் சரியான பாதையாகச் சித்திரிக்கப்படுகின்றது. குடும்பப் பிணைப்பை, கணவன் - மனைவி உறவைப் பலமாக்கச் செய்ய, புதிய தம்பதியினருக்கு நல்ல வரைபடத்தினை முன் வைக்க வேண்டும் அல்லவா?

பிரிவதுதான் தீர்வு என்றால், காலப்போக்கில் உங்கள் மனங்கூட உங்களைவிட்டுப் பிரிந்து, உங்களை வேற்று மனிதனாக்கி நிர்வாணமாக்கும். இந்தத் தனிமைப் பிணி எங்களை இயங்க வைக்க விடாது. மனதைத் தொலையவிட்டால், நீங்கள் பாலைவனத்தில் மிதக்கும் 'தூசு' ஆவீர்கள். மனசு இனிமையாக இருந்தால்தான் எம்மைச் சுற்றி வசந்தங்கள் வட்டமிடும். புதுப் புஷ்பங்கள்

RangaRakes Tamilnavarasam.com


முத்தமிடும். குடும்பத்தை விட்டால் எல்லாமே விலகிச் செல்லும். மாயமான, சூன்ய வலையில் விழுதல் போன்ற உணர்வு ஏற்படுவதுடன், பலவீனமான, பய உணர்விற்கும் ஆளாவோம். உலகியல் ஈடுபாட்டிற்கு குடும்பப் பிணைப்பு மிகவும் அவசியமாகின்றது.

திருமண உறவின் மூலம், துணைகள் ஏற்படுகின்றன. எங்கு போய் வந்தாலும் வீட்டினுள் வந்து ஆறுதல் தேடவே அனைவரும் விரும்புவர். அது கிட்டாத போது என்னதான் வாழ்க்கை என்றாகி விடுகின்றது. சமூக ஏன், உலக வளர்ச்சிக்குக்கூட ஆண், பெண் இருபாலரின் ஒன்றிணைந்த குடும்ப வாழ்வு ஒரு வலுவான சக்திதான் என்பதில் சந்தேகமில்லை.

பரஸ்பர அன்புப் பரிமாற்றம் - இதனால் ஒருவர்க்கொருவர் ஏற்றத்தாழ்வு அற்ற முற்று முழுதான பிரிக்கவொண்ணா ஆண், பெண் உறவு திவ்யமானதொன்றாகும். புரிந்துணர்வும், விட்டுக் கொடுத்தலும் அன்பினை ஈந்து கொள்வதால் மட்டுமே சாத்தியப்படும். இந்த அடிப்படை விஷயம் இல்லாதவிடத்து நான், எனக்கு என்கின்ற கீழ்த்தரமான, சங்கட நிலைக்கு ஆளாகிச் சீரழிய வேண்டியதுதான்.

திருமணத்தில் ஆரம்பமாகும் பந்தம் ஜீவன்கள் பிரிந்தாலும் இந்த அன்பு வாழ்க்கை, பதிவுகளாகப் பதிவு செய்யப்பட்டு வரப்போகும் சந்ததிக்கு ஆசான்களாக, வாழ்வியல் பற்றி சொல்லிக் கொண்டேயிருக்கும்.






எவரையுமே பகைமையுணர்வுடன் நோக்கலாகாது. புறம் கூறுதல் என்பதே எமது உள்ளத்தின் மறைமுகமான வக்கிரபுத்திதான். நல்ல நோக்கத்துடன் ஒருவருக்குப் புத்தி சொல்லுபவன் புறம் கூறமாட்டான். நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத்திறனும் இல்லாதவர்களே கண்டபடி பேசி கண்டபடி நடந்து கொள்வர். ஒருவர் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை, நாம் பேசும் புறம் கூறுதலினால் அந்த எண்ணம் சிதைவடைந்து விடுமன்றோ? ஒருவர் மனங்களை நோகடிப்பதில், எமக்கு என்ன சந்தோஷம் வந்துவிடப் போகின்றது.

புறங்கூறுதல் அறம் ஒறுத்தலாகும். மனத்தினை உறுத்துவதும்கூட. இது ஈனச்செயல் மட்டுமின்றி கோழைத்தனமான கொடுஞ்செயலுமாகும். நெஞ்சில் கறையும், பிறரிடம் சதா குறைகளைத் தேடுவதும் இவர்களின் பணி. முகத்திற்கு நேரே பேச

RangaRakes Tamilnavarasam.com

அச்சப்படுபவர்கள் முதுகுக்குப் பின்னால் முக்காடிட்டுப் பேசலாமா? பூனை கண்களை மூடி திருட்டுத்தனம் செய்தல் போல, தமது குருட்டுச் செயல்களை ஏனையவர்கள் தெரியாமல் இருக்கின்றார்கள் என மனப்பால் குடிக்கின்றனர். இவர்கள் பிறரிடமிருந்து காலப்போக்கில் காலாவதியாகிவிடுவது மட்டுமல்ல. தனிமைப்பட்டு தவித்துச் சிறுமைப்பட்டுப் போகின்றார்கள்.

"இன்று யார் யாரையோ எங்கள் முன்னிலையில் திட்டுகின்றனர். நாளை, வேறு நபர்கள் முன்னிலையில் எங்களையும் இதே மாதிரிப் பேசமாட்டார் என்பது என்ன நிச்சயம்" என்று புறம் கூறுபவர் பற்றி பலர் பேசிக் கொள்ளுவார்கள். எந்தவிதமான காரணமுமின்றி கூடச் சிலர் புறம் கூறுவது அதிசயமான ஒன்றேயாகும். மனதில் பழைய பகை, கோப, தாபம் ஒருபுறமிருக்க, எந்த விதத்திலேயும் சம்பந்தப்படாதவர்களை முகமறியாது பகையுணர்வுடன் ஏசலாகுமா?

பொறாமை, வஞ்சக உணர்வு, இயலாமை, காழ்ப்புணர்ச்சி போன்ற காரணங்களால் மட்டுமல்ல; சிலர் பொழுதுபோக்கிற்காகவும் கண்டபடி பேசித் திரிவார்கள். எந்தவிதமான கோபமும் இன்றி வாயில் வந்த வார்த்தைகளைக் கொட்டுவது இவர்களது சுபாவம். இவர்களிடம் பக்குவமாகப் பேசி இத்தகைய குறைபாடுகளைக் களைந்துவிட முடியும்.

"அதோ போகின்றானே அவனை எனக்குத் தெரியாதா? என்னிடம் கைநீட்டிப் பிழைத்தவன்தானே. இப்போ என்ன பெரிய மனுஷன் ஆகிவிட்டானா?" என்று கண்டபடி புளுகுவார்கள். இவர்கள் கூற்றில் உண்மை



இருக்காது. பிறரிடம் மேலானவர்களாகக் காட்டுவதற்கு இப்படிப் பேசுவார்கள். சிலவேளை ஏதாவது அற்ப உதவிகளை யாருக்காவது செய்துவிட்டு, அதன் பிரதிபலன் தமக்குக் கிட்டாதுவிட்டால் இப்படிப் பேசித் தீர்ப்பார்கள்.

எனவே, உதவி பெறுபவர்களிடம் அவதானமாக இருக்காதுவிட்டால், இத்தகைய எதிர் விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடலாம். அத்துடன் எவர் மூலம் என்ன பயன்களைப் பெற்றாலும் அவர்கள் திருப்திப்படும் வண்ணம் ஏதாவது நல்ல வார்த்தைகளையோ, அல்லது சமயம் வரும்போது திருப்பி நல்ல உதவிகளையோ செய்துவிட்டால், இத்தகைய அவதூறுகளை எவரும் சந்திக்க நேராது அல்லவா? குணம் அறிந்து கொள்ளாது உதவி கோரக்கூடாது.

ஒருவர் பற்றிய விமர்சனங்களைக் கண்டபடி தூவிவிட்டு, சம்பந்தப்பட்டவர் ஏதேச்சையாக எதிர்ப்பட்டதுமே அவர் முன் சாஸ்டாங்கமாக விழுந்துவிடுதல் சிலரது அருங்கலையாக இருக்கின்றது. "உங்களைத் தெரியாதா எனக்கு! கண்ட நாய்கள் குரைக்கும். நீங்கள் பயப்பட வேண்டாம் ஐயா, நான் இருக்கின்றேன்" என்று கூறுபவர்கள், தம்மையே கேவலப்படுத்துபவர்கள் ஆவர். நன்றிக்குரிய பிராணியையே, தவறாக உதாரணம் காட்டுவது, நன்றி கெட்டதனமாக நடப்பது; ஒன்றும் இவர்களுக்குப் புதிதல்ல. மனம் வக்கரித்துப் போனவர்களிடம் பெரும் குணம் கொண்ட இயல்பை எதிர்பார்க்கலாமா? ஆதாயம் தேடுபவர்கள், ஆதாயம் பெற்றும் கூட நாராசமாகப் பேசினால் சமூகத்தில் சரி ஆசனம் இவர்களுக்கு எப்படிக் கிடைக்கும்?

RangaRakes Tamilnavarasam.com

அடிமனதில் வஞ்சனையுடன் மறைமுக அம்புகளைப் பாய்ச்சுபவர்கள், எந்தப்பக்கமும் சேர்த்துக் கொள்ளப்படாத அந்தரத்தில் தொங்கும் நிலைக்கே ஆளாவர்.

சரி, அடுத்த விஷயத்திற்கு வருவோம். எல்லோராலும் எல்லாமே சாதிக்கமுடியும் என்கின்ற சிந்தனைகளை வளர்க்காதுபோனால், இயலாமை என்கின்ற வீண் பிரமைக்கே உட்படுகின்றனர். இதற்கு என்ன ஔடதம்? யாரையாவது திட்டினால் தமக்குத் தீட்டுப்போய் விடும் என்பதுபோல நடந்தால் வெற்றி கிட்டிவிடுமா? மாறாக ஆதங்கமும், மனக்குழப்பம் மட்டும்தானே மிஞ்சுகின்றன? தங்களது செய்கையினால் ஏனையவர் மனம் வெதும்பவேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். இதன் முதற்படியாக ஏதாவது குற்றச்சாட்டு வதந்திகளை விதைக்க முற்படுகின்றார்கள். இதனைச் சட்டை செய்யாமல் போனால் இவர்களுக்கு அறவே பிடிக்காது. தங்கள் வார்த்தைகளால் மற்றவர்கள் சோர்வு அடைய வேண்டும், துன்பப்படவேண்டும் என மனதார விரும்புகின்றார்கள். என்ன விந்தை மனிதர்கள்!

என்றாலும்கூட, பெரியோர்கள் இவர்களைக் கூட மன்னித்து விடுகின்றனர். ஒருவர் மீது வீசப்படும் வார்த்தைகளுக்கு, வீசுபவனே சொந்தக்காரனாவான். அதனை ஏற்காமல் விட்டாலும் சரி, கேட்டுத் துன்பப்பட்டாலும் சரி - வார்த்தைப் பிரயோகங்களுக்கு, பிரயோகித்தவனே பொறுப்பானவன். இனிய வார்த்தை இதயத்திற்குத் தெம்பூட்டும்; அன்பு ஊட்டும். கண்டபடி பேசுபவன் தனது இதயத்தைத் தானே துண்டாடுகின்றான். எனவே புறம்



கூறுபவர் பேச்சிற்காக நாம் வருத்தப்படுதல் அறிவீனமாகும். எந்த வகையிலும் காரணப்படாமல், ஒருவர் கூற்றிற்காக மட்டும் வருந்துதல் என்பது துன்பத்தைத் தேடிக் கொள்வது போலாகும் அல்லவா?

நீங்கள் முன்னேறுவது சிலருக்குப் பிடிக்காமல் போகலாம். ஒருவரை அடித்து வீழ்த்துவதிலும் பார்க்க, வார்த்தைகளுக்கே வலிமை அதிகம் என்பார்கள். இந்த உத்தியை அறிந்தவர்கள் வெகு சாமர்த்தியமாகக் கையாளும் தந்திரமாகக் கூடப் புறஞ்சொல் பயன்படுத்தப்படுகின்றது. எப்படியும் தங்களைப்பற்றி வெளியே சொல்லவேண்டாம் என்று கூறிவிட்டே, ரகசியம் சொல்வதுபோலக் குறைகளை அடுக்கி விடுகின்றனர். ஆதாரம் பற்றி ஆதாயம் தேடும் இந்த ஆத்மாக்கள் சிந்திக்க வேண்டியதுமில்லை. சோடனை வார்த்தைகளைச் சுதந்திரமாகப் புனைவார்கள். இதில் குறிப்பிட வேண்டியது ஒன்று உண்டு. இத்தகைய கதைகளைச் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொள்ளப் பிரியப்படுபவர்களின் தொகையும் மிக அதிகமாக இருக்கின்றது. ஒருவர் மீது அபாண்டங்களை அள்ளிவீசச் சந்தர்ப்பம் பார்ப்பவர்களுக்கு இத்தகையோரின் நடவடிக்கைகள் ரொம்பவும் பிடிக்கும். எனவே இதுபற்றி எவரும் அலட்டிக் கொள்ளாமல் இருப்பதே புத்திசாலித்தனமானதாகும்.

இன்னும் ஒரு விஷயம், சிலர் உண்மையாகவே தமக்கு ஒருவர் மீது ஏற்பட்ட பாதிப்பு காரணமாக உணர்ச்சிவயப்பட்டு யாரிடமாவது சொல்லி முறையிடும் சந்தர்ப்பங்களும் வருவதுண்டு. இதனை நாம் புறந்தள்ளிவிட முடியாது. எப்படியும் இத்தகைய

RangaRakes Tamilnavarasam.com


பிரச்சனைகளை சமாதான உணர்வுடன்தான் தீர்த்துக் கொள்ளவேண்டும். நியாயபூர்வமான ஒருவரின் மனத்தாங்கல்களை களைய முனைதல் மனிதநேயமாகும். அதுவும் எங்கள் மீது தவறுகள் அல்லது தப்பு அபிப்பிராயங்கள் ஏற்பட வாய்ப்புகள் அளித்தலாகாது. ஒருவரின் புறம் கூறும் தன்மைக்கு நாங்கள் காரணமாக - கருவியாக இருக்கக்கூடாது. ஒருவரின் கோபத்தை அதிகரிக்கச் செய்வதற்கு முனைதல் என்பது எங்களுக்கு நாமே இட்டுக்கொள்ளும் சாபமாகவும் அமையலாம். ஏன் எனில் நியாயபூர்வமாக ஒருவன் கோபப்பட்டு அதனை அவன் வெளிக்காட்டாது, உள்ளுக்குள் கோபிக்க வைத்தா குதூகலம் அடைவது? தனக்குள் கோபம் கொள்வதை ஆரம்பத்திலேயே இல்லாதொழிக்கச் செய்வதே வல்லவனின் திறமையாகும். கோபம், பொறாமை, ஆற்றாமைதானே எந்தப் பிரச்சனைகளையும் உருவாக்குகின்ற மூலாதாரமாகின்றன.

எனவே, தவறான செய்கைகளை இனங்கண்டு களைவதே சமூகக் கடப்பாடாகும். நடப்பதனைப் பார்ப்பதுவே எமது தொழிலாகக் கூடாது. எவரையும் பகைத்தோ, எவரையும் விலக்கி வைத்தோ சமூகம் வாழ நினைக்கக் கூடாது. எதிர் எதிரே எதையும் கண்டு பேச, எதிர்கொள்ளத் துணிச்சலையே துணிவாக்குவோம்.

துணிச்சல் மிக்க எவரும் புறம் சொல்லமாட்டார்கள். சமூகத்தை மதித்தவர்களாகவே இருப்பர்.

✵






*நேரங்களை வீணடித்தல் கடமைகளைச் சாகடித்தலேயாகும். பிரபஞ்ச இயக்கம் ஒரு கணப்பொழுது காலதாமதமானால் என்ன விளைவு ஏற்படும் தெரியுமா? வாழ்க்கையிலும் நாம் தொலைக்கும் காலங்கள் எங்களை அலங்கோலமாக மாற்றிவிடும். திட்டமிட்டுக் குறித்த நேரங்களில் குறித்த அலுவல்களைக் கவனிப்பவர்கள் வாழ்க்கையிலும் வெற்றி பெற்றுவிடுகின்றார்கள். நாம் செய்யும் கால விரயங்கள் உலகத்தையே பாதிப்புக்குள்ளாக்கும் என்பதனைப் புரிந்து கொள்ளுங்கள்.*

வீட்டிற்குள் நீங்கள் அவசரம், அவசரமாக நுழைகின்றீர்கள். உங்களை அங்கு, வண்ணமயமான அழைப்பிதழ் ஒன்று வரவேற்கின்றது. எடுத்து விரித்துப் படிக்கின்றீர்கள். உங்களுக்கு வேண்டப்பட்ட பிரமுகர் ஒருவரினால் அனுப்பப்பட்ட வரவேற்பு அழைப்பு இதழாகும். முன்பக்கத்திலேயே கூட்ட ஆரம்பம்

RangaRakes Tamilnavarasam.com

அன்றைய தினத்தில் உள்ளதாகவும், தொடங்கும் நேரம் சரியாக ஐந்து மணி ஒரு நிமிடம் எனத் துல்லியமாகக் காட்டப்பட்டதுடன், அழைப்பிதழின் அடியில் கூட்டம் சரியான நேரத்தில் ஆரம்பமாக உள்ளதால் அன்பர்கள் முன்னதாகவே வந்து ஆசனத்தில் அமருமாறும் எச்சரிக்கை விடுவதுபோல் ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. உடனே நீங்கள் என்ன செய்வீர்கள்?

அரக்கப்பறக்க, வீட்டிற்கு வந்த கையோடு கூட்டம் நடைபெறும் மண்டபத்திற்குச் செல்கின்றீர்கள். அங்கே உங்களுக்கு எரிச்சலும், மன உளைச்சலுமான காட்சிகளைக் காணுகின்றீர்கள். கூட்டத்திற்கு எவருமே வந்து சேரவில்லை. ஏன் கூட்ட அமைப்பாளர்கள் எவருமே அங்கு இல்லை. ஒலி பெருக்கி அலுவல்களைக் கவனிப்பவர் மட்டும், அசட்டுச் சிரிப்புடன் உங்களை வரவேற்பதுபோல் பார்த்து அப்பால் போய்விடுகின்றார்.

இன்றைக்கு, பொதுவாகப் பெரும்பான்மையான நிகழ்ச்சிகள் இந்த லட்சணத்தில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சற்று நேரத்தில் பொதுமக்கள் சேர்ந்தும் கூடத் தலைவர் இன்னமும் வந்து சேரவில்லை. அப்படி, இப்படி எனக் கதைபேசி ஒருவாறாகக் கூட்டம் ஆறேகால் மணிக்கு ஆரம்பிக்கின்றது.

சரி, இனி எமக்கு ஏற்பட்ட நேரவிரயம் பற்றி ஆராய்வோம். கூட்டத்திற்கு அன்று கிட்டத்தட்ட ஐந்நூறு பேர் வந்திருப்பார்கள். குறைந்தது சராசரியாக ஆளுக்கு அரைமணித்தியாலங்கள் நேர தாமதத்தால் ஏற்பட்ட நேர விரயங்கள் இருநூற்று ஐம்பது மணித்தியாலங்கள் ஆகும்.



இவை செலவழிந்தது செலவழிந்ததுதான். இவைகளை ஈடு செய்யவே முடியாது. இந்த நேரத்தை அநியாயமாகக் கௌவியவர்கள், இதற்கு என்ன பதில் சொல்லுவார்கள்? இதுபற்றி ஏதேனும் தெரிந்தும் மீண்டும் மீண்டும் இந்தத் தவறினைத்தான் செய்து கொண்டும் இருப்பர். நேரத்தை வீணடித்தல் கடமைகளைச் சாகடித்தலாகும்.

கோடிக்கணக்கானவர்கள் வாழுகின்ற இந்தப் பூமியில் தலைக்கு ஒருவர், சில செக்கன்கள் தங்களது நேரத்தினைப் பின்னடிப்பார்களேயானால், எத்தனை தூரம் இவர்கள் வாழ்க்கை பின்னால் தள்ளப்பட நேரிடும் என்பதை உணர்வோமாக. தனி ஒருவனின் கால இழப்புக்கள், விலை கூறமுடியாத சொத்து இழப்பிற்கும் மேலானவையே. இழக்கப்படும் மொத்த நேரங்களைக் கணக்கீடு செய்கின்றபோது, இந்தப் பூமி அநாவசியமாக இவர்களைத் தூக்கிக்கொண்டு ஏன்தான் கஷ்டப்படுகின்றதோ என எண்ணத்தோன்றும். 'ஏன் பூமிக்குப் பாரமாக இருக்கின்றாய்' என சொல்லப்படுவதை நாங்கள் கேட்பது இல்லையா?

சூரியனைச் சுற்றி வருகின்ற கிரகங்களும், துணைக் கோள்களும் ஒரு குறித்த நேரப் பிரகாரமே ஈர்ப்புச் சக்தியினால் சுற்றி வருகின்றன. இந்தப் பிரபஞ்சம் பூராவுமே இந்த மாதிரியே, ஒரு இம்மியளவு பிசகாமல் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைகள் ஒன்றுக்கொன்று பராக்குப்பார்த்து, ஒரு செக்கன் காலதாமதம் செய்தால், கண் இமைப்பொழுதில் என்ன நடக்கும்? கிரகங்கள் மோதுவதை கற்பனை செய்து பார்க்க, மனித மூளைக்கு என்ன சக்தி இருக்கின்றது?

RangaRakes Tamilnavarasam.com

இயற்கை நிகழ்வுகள் எல்லாமே சரிவர, எமக்கு இசைவாக நடக்கவேண்டும் என எண்ணும் நாங்கள், ஏன் சரியாக, முறையாக, செயல்களை ஆற்றுதற்குப் பின்னடிக்கின்றோம்? விதைகள் முளைப்பதும், வளருவதும், பருவகால மாற்றத்திற்கேற்ப பூச்சி, புழு, பறவை இனங்கள்கூட சரியான நேரக் கணக்கீட்டின்படியே ஒழுகி வருகின்றன. இவை முறை தப்பி வாழுவதுமில்லை. நாங்கள் மட்டும் பதினெட்டு வயதில் செய்ய வேண்டியவற்றை, பத்து வருடம் பிந்திச் செய்தால் என்ன, என எண்ணலாமா?

சாதாரணமாக, கல்யாண வைபவங்களில்கூட என்ன நடக்கின்றது. திருமணத்திற்கு முகூர்த்தம் வைக்கின்றார்கள். எந்தக் கருமங்களையும், அந்த அந்த நேரத்தில் செய்ய வேண்டும் என்பதற்காக நேரங்களை ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால் எம்மவர்கள், வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளான, திருமணங்களில் கூட முகூர்த்தம் பிந்தியே சகலதும் சகட்டுமேனிக்கு நடக்கின்றது. ஆசாரத்தை மதிப்பவர்களே, நேரத்தை நினைப்பதில்லை. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் வெட்டுக்கிளி, பறவைகள் கூட சரியான நேரத்தில் தங்கள் இடத்தைச் சென்றடைகின்றன. மனிதன் மட்டும், தூங்கி எழுந்து சென்றுபோன பேருந்தினை இனிமேல் நாளை பிடிக்கலாம் என்று கூறி மறுபடி புரண்டு படுக்கின்றான். என்ன ஐயா இந்த மனுஷன்?

குறித்த நேரத்தில் காரியம் நடக்காமல் பாதிப்படைந்தவர்கள், அடுத்தவரைக் குறை கூறுவார்கள். ஆனால் இதே தவற்றினைத் தங்களே செய்வதுதான்



வேடிக்கையானதாகும். இன்னும் ஒரு சாரார் இருக்கின்றார்கள். தங்களது கருமத்தில் மட்டும் குறியாக கருமங்களைச் சரியான நேரத்தில் செய்து முடித்து விடுவார்கள். ஆனால் பிறர் விஷயம் என்று வரும்போது மட்டும், ஏனோதானோ என எண்ணி ஒழுங்கைக் கடைப்பிடிக்க மாட்டார்கள். இவர்கள் பிறரது காலங்களை மதிக்காமல் விடுவதால், தமக்கு என்ன விரயம் வந்துவிட்டது என எண்ணினாலும், இவரை நம்பியவர்களுக்கும், அவரோடிணைந்த மற்றையவர்களுக்கும் ஏற்பட்ட சிரமங்களுக்கு யார் பொறுப்பு கூறுவது இன்று தனிமனிதனின் தாமதங்களே பலரையுமே பாதிக்கின்றது.

முகாமையாளர் தனது நிறுவனத்திற்கு ஒழுங்காகக் குறித்த நேரத்திற்கு வரத் தவறினால் நிர்வாக யந்திரம் சீராக ஓடுமா? பணியாளர்கள் அனைவருமே அவரையே பின்பற்றி நடந்தால், யார், யாரைக் கண்டிப்பது? சேவைப் பெறுமான நஷ்டங்கள், உடனடியாகத் தெரிவதில்லை. நேரத்தை வீணடித்துப் பின்னர் வேலை குவிந்துவிட்டது எனக்கூறும் அலுவலர்களின் காரணங்களை ஏற்க முடியாது. வீட்டிற்கும், நாட்டிற்கும், எல்லாவற்றிற்குமே காலத்திற்கேற்ற, குறித்த செயல்கள் ஒழுங்காகவே செய்யப்பட வேண்டும். அலுவலக வேலை நேரத்திற்கு ஒதுக்கிய நேரத்தில், வேறு கருமங்கள் பார்க்க நேர்ந்தால் ஒழுங்குகளே செயல் இழந்துவிடும்.

இதேபோலவே, வீட்டில் மனைவி, மக்களுக்காக ஒதுக்கிய நேரத்தில் அவர்களுக்குரிய பணிகளையே செய்ய வேண்டும். இன்று பல குடும்பங்கள் குழம்பிப் போவதற்கு, சதா குடும்பங்களைப் பாராது அலுவலகப்

RangaRakes Tamilnavarasam.com

பணியுடன் இதர பணிகளில் மூழ்குவதும் ஒரு காரணமாகும். அன்பிற்காக ஏங்கும் மனைவி, பிள்ளைகளுக்கு அதனை வழங்காமலும், அதேபோல குடும்பத்தைக் கவனிக்க முடியாமல் இதர சமூகப் பணிகளில் மட்டும் ஈடுபடும் பெண்களால் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் கதைகளில் படித்திருக்கின்றோம்.

திட்டமிட்டபடி கருமங்களை ஆற்றுவதற்காகவே தொழில் அதிபர்கள், அரசியல்வாதிகள் போன்றோர் தமக்கென உதவியாளர்களை வைத்துக் கொள்கின்றார்கள். இன்ன நேரத்தில் இன்ன வேலைகளைச் செய்து முடிக்க இவர்கள் தகுந்த முறையில் வழிகாட்டுகின்றார்கள். நேர அட்டவணை மூலம் அலுவல்கள் சீராக்கப்படுகின்றன. ஒரு விமானம் பறந்து கொண்டிருக்கின்றது. அதன் இயந்திரத்திற்கு விமானி கட்டளையிடுமாற்போல் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். இயந்திர உள் உறுப்புக்களும், வினாடி பிசகாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தவிர, விமானிக்குத் தரையில் இருந்து கட்டளையிடும் செயலகம் மூலமும், பொருத்தமான கட்டளைகள் இடப்பட்டவண்ணம் இருக்கின்றன. இவைகள் யாவும் ஒழுங்காக இருந்தால்தான் விமானம் சீராகப் பறக்கும்; பயணமும் சிரமமின்றி நடக்கும்.

இதுபோலத்தான், உலக இயக்கமும். நாங்கள் எமக்கென கால அட்டவணைகளை உருவாக்க வேண்டும். நாங்கள் மட்டுமல்ல, எங்களைச் சார்ந்தவர்களும் அருகே இருக்கின்றார்கள். இசைவாக, ஒருமித்துச் செயல்கள் நடந்தால்தான் நினைத்த கருமங்கள் நன்றாக நடக்கும்.



நேரப் பெறுமதியை அறிந்தவர்களே மேதைகள் ஆனார்கள். காலத்தைக் கரைத்தவர்கள், கலங்கிக் கரைந்து போவார்கள். குறித்த காலத்திற்கேற்ப பயிரை பராமரிக்காதுவிட்டால் பட்டுப்போகும். எங்களை நாம் பராமரிப்பது என்பது, காலதாமதமின்றியும், குறித்த நேரத்தில் குறித்த பணியினை ஆற்றுவதிலும் தங்கி இருக்கின்றது.

குறித்த வேலையை ஏன் செய்யவில்லை என்றால் ஐயய்யோ... நான் மறந்துவிட்டேன் என்கின்றார்கள். மறதிக்காரர்கள் தங்களுக்கென குறிப்பேடுகளை வைத்துக் கொண்டால் என்ன? சிலர் தமது கையோடு சின்னக் குறிப்புப் புத்தகம் வைத்திருப்பார்கள். நேர சூசியைச் சின்னவர்கள்தான் வைத்திருக்க வேண்டும் என்பதில்லை. மறதி, வயது வந்தவர்களுக்கே வரக்கூடியது என்பதால், இவர்கள்தான் உடனுக்குடன் செய்யவேண்டிய வேலைகளை என்ன நேரத்தில் செய்யவேண்டும் எனக் குறிப்பு எடுத்து வைக்க வேண்டும். நேரப் பெறுமதியை உணர்ந்து கொண்டால், சில நல்ல நடைமுறைகளைக் கடைப்பிடித்தே ஆகவேண்டும். சொன்ன சொல் பிரகாரம் உங்கள் மூலம் பெறப்படும் சேவைகள், நீங்கள் செய்யும் சேவையினைவிட இரண்டு மடங்கு மனநிறைவினைத் தரவல்லது. இதன் பொருட்டு ஏற்படும் திருப்தி நன்மைகளைப் பெற்றுக் கொள்பவரைவிட, நன்மையளிக்கின்ற உங்களுக்கே கூடுதலாகக் கிடைக்கும் என்பதையறிக.

நீங்கள் ஒரு செயலை முடிக்கக் காத்துக் கிடப்பதும், இதேபோல் நீங்கள் மற்றையோரைக் காக்க வைப்பதும்

RangaRakes Tamilnavarasam.com

கூடாது. குறித்த நேரத்தில் பிரசன்னமாயிருந்து பூர்த்தியாக்கப்படும் கருமங்கள், எங்கள் எதிர்பார்ப்புகளை விட மேலதிகமானதாகவே இருக்கும். எமக்குப் பின்னே ஆயிரம் வேலைகள் இருக்கின்றன. அனைத்துமே உங்கள் மூலம் பயன்பெற உரித்துடையவை. எனவே எதனையுமே தட்டிக்கழிக்காமல் இருக்க வேண்டுமேயானால், இருக்கின்ற வேலைகளை, உடனுக்குடன் குறித்த நேரத்தில் ஆரம்பித்து விடுங்கள். இதுதான் ஆரோக்கியமான நடைமுறைக்கு வழிசமைக்கும். ஒருவனுக்கு நேரடியாகச் செய்யும் கெடுதலைவிட, மறைமுகமாக எங்கள் மூலம் கிடைக்கும் பயன்பாடுகளைக் காலதாமதத்தின் மூலம் முடக்குவதே மிக மோசமானதாகும். இழுத்தடித்தல், பொழுதுகளைப் பூச்சியமாக்கும் செயல். இது கடவுளின் உள்ளத்தையே குடைந்து கோபங்காண வைக்கும்.

சமூகத்தில் ஒருவரால், ஒருவர் பாதிப்படையலாமா? ஒருவன் தனக்குத்தான் தீங்கு செய்வதும், ஒருவகையில் சமூகத்திற்குச் செய்யும் தீங்கு போலத்தான் கருதப்பட வேண்டும். நேர விரயம் என்கின்ற விஷயத்தில்கூட, எமது சௌகரியத்திற்காக செய்கின்ற காலதாமதங்கள், நேரத்தின் அவசியத்தன்மை பற்றியே சிந்திக்க வைப்பன, இவை எமக்கு மட்டும் செய்கின்ற தீமைகள் அல்ல. மாறாக நீங்கள் வாழுகின்ற சமூகத்தின்பால், உங்களின் அக்கறையின்மையின் வெளிப்பாடாகும். இது எங்கே கொண்டு சென்றுவிடும்? நீங்கள் வேண்டப்படாதவராக ஒதுக்கப்படவும், நம்பிக்கைக்குரியவர் அல்லாத நபராகக் கணிக்கப்பட்டும் விடுவீர்கள். காலத்தை மதிப்போம்,




நேரங்கள் கடக்கும்போது, அவை உரியமுறையில் எங்களால் செலவு செய்யப்படுகின்றதா எனக் கணிப்பீடு செய்வோம். நேரங்கள் போகும்போது முன்னேற்றங்களும் கூடவே வளர்த்துக் கொண்டே போகுதல் வேண்டுமன்றோ?

ஆற்றல்கள் அனைத்தும் கழிக்கும் நேரங்களில் முழுவதிலும் செய்கின்ற முழு வீச்சான அர்ப்பணிப்பான பணியில் தங்கியுள்ளது.

நேரத்தில் செய்யப்படுவது, காலத்தைத் துதிப்பது போலாகும்.

✷

RangaRakes Tamilnavarasam.com




*அதிகூடிய நம்பிக்கையிலேயே சிறுகீறல் விழுந்தால் போதும். அதனூடாக சந்தேகம் உள் நுழைந்து விடுகின்றது. நாடுகளுக்கிடையே பூசல்கள், இனங்களுக்கிடையே இடிபாடுகள் அனைத்துமே சந்தேகங்களுடாகவே பிரசவமாகின்றன. அறிவின் மூலம் சந்தேகங்களில் இருந்துவிடுபடல் வேண்டும். சூழ்ச்சி, கெடுதல் போன்ற எண்ணங்கள் அறவே இல்லாத போது சந்தேகங்கள் ஏன் தோன்றப் போகின்றது? மனிதன், மனிதனை மதிக்கவேண்டும். பரஸ்பரம் நம்பிக்கையுடையவனாக வாழவேண்டும்.*

---

**ச**ந்தேகங்கள், பல சரித்திரங்களையே திசை திருப்பியிருக்கின்றன. பல இலக்கியங்கள் உருவாகக் கருப்பொருளாகவும் அமைந்திருக்கின்றன. குடும்பங்களில், குழப்பத்தையும், நேயங்கொண்டோரிடம் கோபப்பட



வைக்கவும், பாசங்கொண்டவர்களையே பேசாமல் செய்கின்ற வேலைகளையும் சந்தேகமானது சர்வ சாதாரணமாகச் செய்துவிடுகின்றது.

அதிகூடிய நம்பிக்கையின் மீது சிறு கீறல் விழுந்தாலே போதும். சந்தேகம் அதனூடாக நுழைந்து கொள்கிறது. சலனமற்ற நீரில் சிறு கல்லைப் போட்டாலும் பல அலைகள் எழுவதில்லையா? அதுபோலத்தான்; ஆனால் சலனமற்ற நீர் சற்று நேரத்தில் நிர்மலமாகிவிடும். மனம், மாறுபட்டால் என்னென்னவெல்லாம் மாறிவிடுகின்றது.

நாடுகளுக்கிடையே பூசல், இனங்களுக்கிடையே இடிபாடு என விஸ்தாரணமான விஷயங்களில் சந்தேகம் தன் பலத்தை நிரூபிக்கின்றது. ஒரு குடும்பத்தில் ஆரம்பித்து, அது சிலவேளை சமூகப் பாதிப்பாகும் சங்கடங்களும், சந்தேகங்களால் நிகழ்வதுண்டு. சந்தேகம் கொள்ளும் இயல்பு முடிவில்லாத, முடிவாகவும் போவதுண்டு. உண்மை துலங்கும்வரை இதன் ஆதிக்கத்திலிருந்து விடுபடவே முடியாது.

அறிவாளிக்கும் கற்ற கல்வியில் சந்தேகம்.

அரசியல்வாதிக்குத் தன்னை ஆதரித்த மக்கள் மீதும் சந்தேகம்.

மக்களுக்கோ, தாம் வாக்களித்துத் தெரிவு செய்த தலைவர்கள் மீது சந்தேகம். அதிகாரிகளுக்கு, ஊழியர்கள் மீதும், ஊழியர்களுக்கு நிர்வாகத்தின் மீதும் எனச் சந்தேகங்களின் எல்லை நீளமானது. ஏன் எல்லையில்லாதது என்றும் கூறலாம்.

RangaRakes Tamilnavarasam.com

எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகும்போது அதிகவுடிய பாசம், சற்று வித்தியாசமாகத் தடம் புரளும்போது, தமக்கிடையே பிறரிடையே ஒட்டுதல் இல்லாமல் புரிந்துணர்வு இல்லாதபோது எனப் பலதரப்பட்ட காரணங்களால் சந்தேகம் கிளைவிட்டு வளரலாம். ஒரு சிறு கரும்புள்ளியானது விஸ்வரூபமாகி முழுமையுமே கரு நிறமாகிப் போகும்.

தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு என இது எங்கும் பரந்துபட்ட குணாதிசயமாக இருப்பதனால் இது விடயத்தில் மிகுந்த அவதானம் தேவைப்படுகின்றது.

வெளிப்படையாகப் பேசாமல் செயல்களை மூடி மறைப்பதால், உள் ஒன்றும் புறம் ஒன்றுமாக நடந்து கொள்வதனால், தனிமனிதன் பிறர் பார்வைக்குச் சந்தேகம் கொள்ள வைக்கும் ஆன்மாவாகக் கணிக்கப்படுகின்றான். பிறர் பார்வைக்கு ஒருவர் சற்று வித்தியாசமாகப் புதிரானவர்களாகத் தோன்றும்போது கூடச் சாதாரணமானவர்கள் இவர்களைச் சந்தேகக் கண் கொண்டு நோக்க ஆரம்பிக்கின்றார்கள்.

காவல்துறையினர் சந்தேகக் கண் கொண்டு குற்றவாளிகளை நோக்காதுவிட்டால் காரியமாற்ற முடியுமா? சந்தேகப்படுவதனாலும் சாதகமான பயன் கிடைக்கும். எதையும் நம்பிவிடுவதால் குற்றவாளிகளும், சமூக விரோதிகளும் சமூக விசுவாசிகள் போல் தோற்றம் காட்டி நிற்பர் அன்றோ. நடிக்கும்போது எப்படியும், உண்மை, பொய் எதுவெனப் புரிந்து விடுகின்றது. எனவே ஐயப்பாடுகள்கூட நம்மை உஷாரடையச் செய்து விடுகின்றன. அதே சமயம் வீணான முடிவுகள் விபரீதமாகியும் விடும்.



எனினும், சந்தேகத்தினைச் சந்தர்ப்பமாகவும், சந்தர்ப்பவாதமாகவும் ஆக்கிக் கொள்ளக்கூடாது. சில விரும்பத்தகாத நிகழ்வுகள் நடந்துவிடும் என்கின்ற அச்சத்தினால், சந்தேக நினைப்புகளை மூடி மறைத்தாலும்கூட, இது சுதந்திரமாகவும், யந்திர கதியுடனும், அதே சமயம் மர்மமாகவும் வளருகின்றது. முதலில் குடும்ப விஷயத்திற்கு வருவோம்.

எந்த விஷயத்தினையும் ஆரம்பத்திலேயே தீர்த்துவிடாமல் அதனை மென்மேலும் வளரவிடக்கூடாது. கணவன், மனைவியிடையேயுள்ள மனஸ்தாபங்கள், காதலர்களிடையேயான கசப்பான சிறு சிறு விஷயங்கள், மிகச்சிறிய ஊடல்களாக ஆரம்பித்து பின்னர் வளர்ந்து, அழிக்கமுடியாத விரிசல்களாகி, சந்தேக மனோ நிலையை நிரந்தரமானதாக்கிவிடும். தற்காலிகமான காரிய சித்திக்காக எதனையும் மூடி மறைத்தால் முடிவு உடைந்து நொருங்கிய கண்ணாடி ஆகிவிடும்.

சந்தேகம் தொட ஆரம்பித்ததும் எப்போதோ முடிவடைந்த பிரச்சினைகள்கூட, மீண்டும் உயிர் பெற்று அதனைப்பற்றியே இருசாராரும் விவாதிக்கத் தலைப்படுகின்றனர். ஒரு தடவை ஏற்பட்ட ஐயங்கள் பல கதைகளை உருவாக்கிக் கொள்கின்றன. “இப்போ எதற்குப் பழங்கதைகள்” எனப் பலர், பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயல்வதை நாம் காணுகின்றோம்.

ஏற்கனவே, மன்னிக்கப்பட்டவைகள், வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, வடுவாக

RangaRakes Tamilnavarasam.com

மன்னிக்கும் நினைப்பே அற்ற நிலைக்கு சந்தேக அரக்கன் மனிதரை வைத்துவிடும்.

மறைத்து வைக்கப்படுபவை சந்தேகத்துக்குரிய மூலப் பொருளாகின்றன.

பல பெற்றோர், பிள்ளைகள் விடயத்தில் ஒளிவு மறைவாகச் செயல்படுவதால், அவர்களின் மனோநிலை பாதிப்படைகின்றன. வீட்டின் நிலவரம் பற்றி ஒரு தகவல்களையும் வெளிப்படுத்துவதில்லை. பிள்ளைகள் கவலைப்படுவார்களே என்ற நியாயபூர்வமான எண்ணம் ஒரு புறம் இருக்க, வயது வந்த பிள்ளைகள் எதனையும் கண்டுகொள்ளாமல் செய்து விடுவது அவர்களது அனுபவ ஞானத்தை வளர்க்காமலும் ஆக்கிவிடுகின்றது. பெற்றோரின் எதனையும் மறைத்து வைக்கும் இயல்பு அவர்கள் மீது பிள்ளைகள் நம்பிக்கை வைக்கவே சிரமப்படவேண்டியுள்ளது. எல்லாமே பிள்ளைகளுக்கு என்று ஆனபோது இதில் மறைக்க என்ன வேண்டியுள்ளது? எனினும் சொல்லக்கூடாதவை என்கின்ற, மனதை நெருட வைக்கும் கதைகளைச் சொல்லாமல் இருப்பது தவிர்க்கப்பட வேண்டியவைதான்.

நல்ல விஷயங்களை மறைத்து வைப்பதனால் அவை இறந்துபோகின்றன. சரியான விஷயங்களில், வீண் சந்தேகம் கொண்டுவிட்டால் எல்லாமே தவறாகி, எடுக்கும் முடிவும் பிழையாகிவிடும்.

இரண்டு நாடுகளிடையே பிணக்குகளை ஏற்படுத்த, வல்லரசு நாடுகள் தமக்கு ஆதாயம் தேட, சந்தேக உணர்வுகளை அந்த நாடுகளிடையே துளிர்க்கச்



செய்கின்றன. அதற்கான நடவடிக்கைக்குத் தூபமிட்டு, அவைகளை மோதவிட்டு லாபம் சம்பாதிக்கின்றன. இதை மக்கள் உணர்ந்தும் சம்பந்தப்பட்ட நாடுகள் பெரிதும் உணர்வதாகத் தெரியவில்லை. இவை யுத்தமாக வெடித்து, அழிந்த பின்னர்தான் உண்மை உணர்ந்து சமாதானம் பேச முனைகின்றன. இதில் வேடிக்கை என்னவெனில், சந்தேகத்தை விதைக்கும் நாடுகளே சமாதானம் செய்து வைக்க முனையும் நடிப்பான நடவடிக்கைகள்தான்.

இன்று நாடுகளுக்கிடையேயும் இனங்களுக்குள்ளேயும், சந்தேகங்கள் வளர்ந்துவிட்டன. பல சந்தேகங்கள் நியாயபூர்வமானவையும், உண்மையானவையும்கூட. எனினும் இவை தீர்க்கப்படக் கூடியவைகள்தான். இனங்கள், மதங்கள், மொழிகள் எனப் பலதரப் பட்டவைகளிடையே சமரசம் காண்பதே சாலச் சிறப்பானது. மக்கள், பலதரப்பட்ட பிரிவுகளுக்குட்படினும், உலகின் முன் மனிதர்கள் ஒரே பிறப்புக்கள்தான். சுயநலமிகளின் குழப்ப நடவடிக்கைகளை மனித இனம் புரிந்து கொள்ளவேண்டும். சாதாரண கிராமங்களில்கூட, சாதிப்பாகுபாட்டை வளர்க்க ஒவ்வொரு சாரார் இடையே சந்தேகங்களை வளர்த்து விடுகின்றனர். ஒரு குடும்பப் பிணக்குகூட ஒரு பிரதேச உணர்வாக வளர்ந்து பெரும் சண்டையாக முடிவடைகின்றது.

மாணவன் சந்தேகம் கொண்டால் படிப்பில் நிறைவு காணமுடியுமா? சந்தேகம் வரவும் வேண்டும். அதனைத் தீர்த்துக் கொள்ளவும் வேண்டும். அதுபோலத்தான், முழு வாழ்க்கையிலும் சந்தேகங்கள் தவிர்க்க முடியாதவை. எனினும் தீர்க்கக் கூடியவையே. தொழிற் போட்டிகளில் உட்பூசல், அரசியல் உட்பூசல், மதங்களுக்கிடையே,

RangaRakes Tamilnavarasam.com

இனங்களுக்கிடையே உட்பூசல் போன்ற சகல தீய சக்திகளையும், வெற்றிகரமாக நகர்த்தும் கலையை மனிதன் கற்றுக் கொண்டுவிட்டான். என்னதான் ஆன்மீகம் பற்றிப் பேசினாலும், குரோதங்களை சந்தேகங்களை உருவாக்குவதே மேல் என கீழ்த்தரமாக எண்ணுகின்றான். அன்னி யோன்னியமானவர்களை, அவஸ்தைப்பட வைப்பதில் என்ன நன்மை இருக்கின்றதோ தெரியவில்லை.

தற்செயலாக நடக்கும் சம்பவங்களே புது வியாக்கியானமாக்கப்படுவதும், அவை திட்டமிட்டுச் செய்யப்படுவதாக உருவகிக்கப்படுவதால். இருசாரார் மோதுவது சர்வசாதாரணமாகி விட்டது. இந்த உண்மைகளை எப்போது மனிதன் உணரப்போகின்றான்? சூழ்ச்சிகள் சந்தேகத்தை வலுப்படுத்தும். மனிதன் தன்னைத்தானே குழப்புவதிலும் சூழ்ச்சிகளினால் தன்னை வெப்பமடையச் செய்கின்றான். ஒழுக்க நெறியும் துணிவும், பிறரிடத்தே பரிவுடன் கூடிய நம்பிக்கையும் கொண்டால் பிறர் மீது இருந்து புறப்படும் எதிர்க்கணைகள் களையப்பட்டு விடுமே.

சமூகத்தின் மீதான கரிசனை உணர்வுகள் மேலோங்க வேண்டும். உங்கள் மீது உங்களுக்குள்ள ஆதிக்கம் உறுதியாக்கப்படல் வேண்டும். உங்களுக்கு நீங்கள் கட்டளையிடுங்கள். தவிர, இத்தகைய உறுதியுடன் வாழ்தலுக்குத் தூய்மையான வாழ்வு முறையின்றிச் சாத்தியமில்லை. இந்த முறைமையின்படி எம்மை ஆக்கிக்கொண்டால், எத்தரப்பினரும் எம்மீது எந்தவிதமான சந்தேகங்கள், காழ்ப்புகளைக் கொள்ள முடியவே முடியாதுவிடும். இவர்கள் மீது சந்தேகம், கதவு தட்ட




அஞ்சும். இதயம் முழுவதும் தெளிவு நிறைந்தால் அதனூடாக உட்புகுந்து கொள்ள தூய்மை சாரா உணர்வுகளுக்கு அனுமதியே கிடைக்காது அல்லவா?

எனவே, அறிவின் மூலம் தெரிந்துகொள்வோம். ஆதாரமற்ற சந்தேகங்களை விரட்டிவிடுவோம். நல்லதை நினைக்கும்போது பொல்லாதவை போய்விடும். சந்தேகமும் அப்படியே.

✪

RangaRakes Tamilnavarasam.com




*சரியான பாதையில் செல்கின்றவன் துணிச்சலுடன் தட்டிக் கேட்கின்றான். கண் எதிரே காணும் அநியாயங்களைக் காணாமல், கண்டுகொள்ளாமல் விடுவது என்பது, செய்யப்படும் அநீதிகளைவிட அக்கிரமான செயலாகும் என்பார்கள். நடக்கும் அநியாயங்கள் உடனே எம்மைப் பாதிக்கவில்லை எனக்கருதி மௌனமாக இருந்தால் ஏதோ ஒரு மறுதிசையில் இதன் விளைவுகளை நாம் கண்டு கொண்டு அனுபவித்தேயாக வேண்டும்.*

தட்டிக்கேட்டால் முட்டப்பகை என்றும், எட்ட நின்று விலகிச் செல்வதே புத்திசாலித்தனம் எனவும் நினைத்துக் கொள்கின்றோம். தட்டிக்கேட்டல் என்பது, ஒருவர் மனத்தைக் கறுக்க வைத்து வெறுப்பேற்றும் பணியல்ல. நியாயபூர்வ விஷயங்களுக்காக, நியாயங்கள், நேர்மைகளுக்கு முரணாகச் செயல்படுபவர்களை அதைச் செய்யாமல் தடுக்கும் சமூகப் பணியேயாகும். தனக்காக மட்டுமின்றி,



பிறருடைய நன்மைகளுக்கும் குரல் கொடுப்பது போலாகும். ஏனையவர்கள் முன், எங்களுக்கு எல்லாமே தெரியும் என்ற நோக்குடனும், ஒரு வீரனாகக் காட்டுவதற்காக மட்டும் இந்தத் தட்டிக்கேட்கும் செயல் அமையக்கூடாது.

விளம்பர நோக்கோடு, தம்மை உயர்ந்தோராகவும், தலைவராகவும் காட்டும் தந்திரோபாயமாக இச்செயல் காட்டப்படுவதுண்டு. சரியான காரியங்களுக்காக மட்டும் சமூகத்தின்பால் பிரியப்பட்டு, நியாயம் கேட்டேயாக வேண்டும். உண்மைகளைத் திரிபுபடக் கூறுபவர்கள் எப்படியும் பேசுவார்கள். இவர்கள் மீட்டு, மீட்டுச் சொல்லும் வார்த்தைகளுக்குள் கட்டுண்டு போனவர்கள், நியாயம் கேட்க மாட்டார்கள். இவர்கள் மத்தியில் நியாயம் கேட்க, தட்டிப் பேசினால் அது எடுபடவே சிரமமாகின்றது. இம்மயக்க நிலைக்கு உட்படுத்துபவர்கள் சாதுர்யமான துன்மார்க்கர்கள்.

சமூக வழக்கங்கள் சமயக் கோட்பாடுகள் விடயத்தில் தேவையில்லாமல் நுழைந்து, சரியான பாதைக்கு வழிகாட்டுகின்றேன் எனக்கூறி பாரம்பரிய கலை, கலாசாரம், நெறிமுறைகளையே உடைத்தெறியும் கைங்கரியத்தினைச் செய்ய முற்படுபவர்களை முளையிலேயே களை பிடுங்குவதுபோல் கிள்ளி எறிய வேண்டும்.

பேசுமுன் யோசிக்கவேண்டும். கண்டதையும் கதைக்கக்கூடாது.

உண்மையிலேயே மூடப் பழக்க வழக்கங்கள் எங்கேயும் உண்டுதான். எனினும் இதனுள், சரி, பிழை எது என ஆராய வேண்டுமல்லவா? தவறுகளைச் சுட்டிக்காட்டவே முற்போக்குச் சிந்தனையாளர்கள், ஞானிகள்

RangaRakes Tamilnavarasam.com

உருவாகினர். இவர்கள் சுட்டிக் காட்டியவிதம் தனித்துவமானது. உபதேசங்களைக் கையாண்ட முறையில் சாத்வீகத்தினைக் கையாண்டார்கள். முரட்டுத்தனம், வரட்டுப் பிடிவாதம் மூலம் எதையும் சாதித்துவிட முடியாது. சாத்வீகத் தன்மையுடன் மக்களை அணுகியமையினாலேயே சமய உணர்வுகள் ஆன்மீக நெறிகள் இன்னமும் அருகிப்போகாமல், நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

தெரிந்தோ, தெரியாமலோ நாம் விரும்பத்தகாத செயல்களைச் செய்து விடுகின்றோம். அத்துடன் அருவருக்கத்தக்க செயல்களும் எம்முன் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, எம்மையும் திருத்தி, பிறர் செயல்களையும் சுட்டிக் காட்டவேண்டியவர்களா யுள்ளோம். வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதுகூட அச்செயல்களை அனுமதிப்பது போலாகவும் ஆகிவிடும். தீமைகளைப் பார்த்துச் சும்மா இருப்பதே மிகப்பெரிய பாவமாகும் எனப் பெரியோர் கூறுவர்.

"அநியாயங்கள் மத்தியில் வாழப் பழகிவிட்டோம். இனி என்ன செய்வது?" என்கின்றார்கள். தட்டிக்கேட்டால் விட்டுவிடுவார்களா? தட்டிக்கேட்டால் தலைபோகும், விட்டு விடுவோம் என்றும் பேசுகின்றார்கள். யேசு கிறிஸ்துநாதருக்கு என்ன நடந்தது? இந்த வாதம் சரிதான். இப்படியே பேசினால் உலகில் எதனைத்தான் சாதிக்க முடியும்? தவிர இதன் பலாபலன் எம்மை வந்தடையும் போதுதானே விழிப்படைந்து வேதனைப்படுகின்றீர்கள்.

உடனே உங்களைத் தீமைகள் தாக்காதவரை தப்பித்துப் போனதாகக் கருதவேண்டாம். பின் விளைவாக,



நாம் வேடிக்கைப் பொருளாகி, வீணர்களாகத் தூக்கி எறியப்படும் நிலைக்கும் உள்ளாக்கப்படலாம். அந்த, அந்த நேரங்களில் போலிகளுக்குப் பலத்த அடி கொடுக்காது விட்டால், அவை காலங்கடந்த சமாச்சாரங்களாகி எம்மைத் தருணத்தில் விழுங்கிவிடும். நோய் மறைந்திருந்து தாக்குவதுபோல, எமக்குத் தெரிந்த இயலுமான, எதிர்ப்புகளைப் தொடுக்க வேண்டிய சமயம் தொடுத்தேயாக வேண்டும். மௌனம், பயம் சிலவேளை எம்மை வெறுமைப்படுத்திவிடும். மனத்தை மென்மையாக்கும் மௌனமும், பயத்தினால் ஏற்படும் மௌனமும் வெவ்வேறானவை.

எங்கள் முன் எவன் செத்தால் என்ன. எமது கருமங்களில் மட்டும் நாம் கண்ணாயிருப்போம் என்ற கருத்து சமூக விரோதக் கருத்தே. ஒருவனைத் தாக்குவது என்பது, பிறர் என்னை என்ன செய்யமுடியும் என்ற ஆணவ முனைப்பாய் அமைந்துவிட்டது. இறப்பர் பந்தினை அமுக்கும் போது அது மறுபக்கம் பிதுங்கும். சற்றுக்கூட அமுக்கினால் உடைந்தே போகும். சமூகத்தில் கூடப் பிரச்சினைகளை அமுக்கும் போது எதிர் விளைவுகள் தோன்ற ஆரம்பிக்கும். வாய் பேசாமல் இருப்பவர்களை வதைத்தால் அவர்கள் தட்டிக் கேட்பதுடன் நிறுத்தமாட்டார்கள், மோதி உதைத்தும் விடுவார்கள். தட்டிக் கேட்பது ஒருவனை ஒடுக்குவது அல்ல. அவன் மீது குற்றம் கண்டு பகைத்தலும் அல்ல. அதட்டி, வெறுத்தலும் அல்ல.

கேட்கவேண்டிய முறையில் கேட்கவேண்டும் என்பார்கள். ஒரு குழந்தையில் நமக்கு காரியம்

RangaRakes Tamilnavarasam.com

ஆகவேண்டும் என்றால், அதனைத் தட்டிக் கொடுத்துக் கேட்கவேண்டும். தட்டிக் கேட்டல் தட்டிக் கொடுத்துக் கேட்டல், இரண்டுமே வெவ்வேறான அணுகுமுறைகளாகும்.

அத்துடன்,

தட்டிக் கொடுத்தும், இதயத்தைத் தொடும்படியாக அணுகுவதாலே பல பிரச்சனைகள் தீர்ந்துபோகின்றன. அன்பு, ஆதரவு, கனிவு இவைகள் காரியங்களைச் சாதிக்கும் கருவிகளாகும். கோபமாக இன்றி, ஆரம்ப நிலையிலேயே தட்டிக் கொடுத்துப் பேசுவது கஷ்டமானதல்ல. முரட்டு ஆசாமிகள் எடுத்த எடுப்பில் எதையும் பேசுவார்கள், செய்வார்கள். நாம்தான் சற்று நிதானமுடன் செயல்படவேண்டும். சாதாரணமானவர்களே, சில சமயம் முரட்டுத்தனங்களுக்குச் சூழ்நிலை காரணமாக ஆளாகும்போது, இயற்கையில் முரட்டுச் சுபாவம் உள்ளவர்களிடம் சாதுர்யமாகவே பழக வேண்டியுள்ளது. கோப உணர்வுடன், கோபம் மோதினால் குழப்பமே. ஆனால் நிதானத்தை கோப உணர்வுகள் சந்தித்தால், நிதானம் நிலைபெற்று வென்றுவிடும்.

பெரும்பான்மையினர் கூடி நின்று, தவறுகளைச் சரி எனக் கொள்ளும்போது உண்மை ஊமையாகின்றது. இந்த நிலை கல்வியற்ற சமூகத்திடையே மட்டுமல்ல, கற்றறிந்த சமூகத்திடையேயும் உள்ளது. பெரும்பான்மையான, தவறான கருத்துக்களும் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இத்தகையோர் மத்தியில் உண்மைகளைச் சுட்டிக் காட்டும்போது துணிச்சலுடன் கூடிய நிதானம் தேவைப்படுகின்றது. அத்துடன் புரிய வைக்கக் கால அவகாசமும் தேவைப்படுகின்றது. காலம் எப்போதாவது ஒருநாள் உண்மைகளை உணர்த்தும். அதற்காக, நாம் செய்யும் பணியைக் காலதாமதம் செய்தல் கூடாது. ஆமாம் சாமி போடும் பரிதாபச் சனங்களைக் காப்பாற்றவேண்டும்.




மிகவும் சிரத்தையுடன் கட்டி எழுப்பப்பட்ட சமூகம் உடைந்துபோக அனுமதிக்கலாகாது. பதவி, அந்தஸ்து மூலம் நியாயங்களுக்குத் தடைபோடச் சம்மதிக்கக் கூடாது. இன்று, அரசியல், சமய நிறுவன அமைப்புகளில் இருப்பவர்களில், ஒரு சிலர் பதவி அந்தஸ்து நிலையில் இருந்து சூறையாடுதலும், அதை மறைக்கப் பக்கத்தில் உள்ளவர்க்குக் கிள்ளிக் கொடுத்து, வாயடைக்கச் செய்வதுமாயிருக்கின்றார்கள். தட்டிக் கேட்பவர்களை முட்டாள் ஆக்கி அடக்கியும் விடுகின்றனர்.

சமூக நீதி கோருதல், மனிதனுக்குச் சுபாவமானதாக இருக்கவேண்டும். நாம் எதனையும் அணுகும் விதத்தில் அணுக எம்மைத் தயார்ப்படுத்தவேண்டும். எடுத்த எடுப்பிலேயே துஷ்டர்கள் விடயத்தில் தலையிடும்போது, எங்கள் மீதான நியாயத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்தபின்னரே நிதானமாகப் பேசவேண்டும். கொள்கைகளில் அழுத்தம் இல்லாது போனால், நீங்கள் எதிராளிகளின் வசப்பட்டு உண்மைகளையுங்கூட உதறிவிடும் நிலைக்குள்ளாவீர்கள். தெரிந்து கொள்ளுங்கள்.

நியாயங்களை, மற்றவர்கள் ஏற்கும் நிலையை உருவாக்குவதே எங்கள் சாமர்த்தியமாக அமைய வேண்டும். நியாயங்களுக்கான போராட்டங்கள் உடன் பயன் அளிக்காதுவிட்டாலும்கூட, இதற்கான முயற்சிகள் என்றுமே திருப்தி அளிப்பவை. சாதாரண வாழ்வைவிட சாதித்து எழுவதே மேல்.

RangaRakes

Tamilnavarasam.com




*சின்ன மூளைதான் ஆனால் சிங்காரமானது. இதனைப் போஷிப்பதற்காக, நல்ல நல்ல தகவல்களை அதனுள் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். எண்ணங்களில் வலு இருக்குமேயானால் மயில் இறகைக் கொண்டே மலையை இழுக்க, வளைக்கமுடியும். மனிதன் எதற்கும் அஞ்சுதல் கூடாது. இதயம் மென்மையாகவும், வன்மையாகவும் இருக்கவேண்டும். "ஒரு தனிமனிதனில் புலம்பல் உலகின் விசும்பல்" எனக் கருதித் துன்பம் உற்றோரைத் தூக்கிவிடல் எம் பணியாகக் கொள்ளவேண்டும்.*

---

இந்த மூளைக்கு நாங்கள் கொடுக்கின்ற உணவு பற்றாது என்றுதான் கூறவேண்டும். ஆனால் தேவையற்ற, சத்து அற்ற தீனிகளைத் திணித்து விடுகின்றோம். கவலை, ஏக்கம், விரக்தி, மயக்கம், கோபம், மமதை என்றவாறு பலதரப்பட்ட, மனிதனுக்கு அறவே ஒவ்வாத பலவற்றை



பக்குவமாக ஊட்டி விடுகின்றோம். பிறகு என்ன நடக்கும்? இவைகளை ஜீரணிக்க முடியாத நாம் ஜீவனற்ற வாழ்விற்கே விலை போகின்றோம்.

சின்ன மூளைதான். ஆனால் சிங்காரமானது. எனவே, இதனைப் போஷிப்பதற்காக, நல்ல நல்ல தகவல்களைப் பதிவு செய்ய முனைய வேண்டுமல்லவா? எமக்கே தெரியாதவாறு, எம்முன் உள்ள பல தகவல்களை நாம் கிரகித்துக் கொள்ளுகின்றோம். நாம் விரும்பியும், விரும்பாமலும்கூட கேட்கின்ற – உணருகின்ற விஷயங்கள் ஏராளம். தூக்கத்தில்கூட நாம் சில காட்சிகளைக் காண்பதில்லையா? எப்பவோ பார்த்த காட்சிகள், நிகழ்வுகள் அனைத்துமே ஒரு திரைப்படம்போல் உருவாகுதல் அல்லவா?

எனவே,

நாங்கள் நல்ல விஷயங்களுக்கு மட்டுமே எம்புலன்களைத் திருப்பப் பயிற்சி எடுக்கவேண்டும். உலகில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இவற்றுள் குற்றவியல் சம்பந்தமானவைகளை மட்டும் சிலர் படித்துச் சந்தோஷப்படுகின்றனர். இன்னும் சிலர் பாலியல் தொடர்பான செய்திகள், ரகசியங்களை, ரகசியமாகவும், பரகசியமாகவும் படித்தும், புத்தகங்கள், திரைப்படங்களைப் பார்த்தும் திருப்திபட்டதுடன் மனதைச் சபல சிந்தனைக்குட் படுத்தியும் விடுகின்றனர். கேட்டால் எல்லாமே தெரிய வேண்டியதுதானே என்பார்கள்.

ஆன்மீக சிந்தனைக்குரிய செய்திகள், அரசியலுக்குரிய விஷயங்கள், விஞ்ஞான, கலை, இலக்கிய

RangaRakes
Tamilnavarasam.com

விடயங்கள் என நல்ல தகவல்களுக்கா இங்கு பஞ்சமில்லை? இப்படியிருக்க, காம, குரோத, கோப, துர்நடத்தை போன்ற செயல்களைத் தூண்டும் வகையிலான கதைகளை - தகவல்களை மிகையாக அறிய முற்படுதல் சரியானதுதானா?

நல்லது, கெட்டதுகளைக் கண்டுகொள்ளாதுவிட்டால் வாழ்க்கைபற்றி தெரிந்து போகாது. உண்மைதான். ஆனால் இவைகளைப் பற்றிய செயல்களை ஆழமாகப் பார்த்து லயிப்பதில்தானே எமது எண்ணங்களுக்கு ஊறு ஏற்படுகின்றது. இதயத்தைத் தெளிந்த நீரோடை போல வைத்துக் கொள்ளல் வேண்டும். இதனுள் தீயது என்ற கல் கொண்டு எறிந்து குழம்பவிடக்கூடாது. நல்லதைச் சொல்லும்போதும், கேட்கும் போதும் நற்சிந்தனை இயல்பாக உருவாவது அசைக்கமுடியாத பெரியோரின் கருத்தாகும்.

கவர்ச்சியான காரியங்களிலேயே இளையவர்கள் மட்டுமல்ல, முதியவர்களும் முனைப்பான நாட்டங்களைக் கொண்டிருக்கின்றனர். ஒருவரை ஈர்த்து எடுப்பதற்காக, பரபரப்பானது, சுவையானது என்ற பெயரில் கண்ட கண்ட சமாச்சாரங்களை வர்த்தக நோக்கோடு கொடுக்க பல சாதனங்கள் வந்துவிட்டன. இவைகள் நூல்களாக, பத்திரிகைகளாக, தொலைக்காட்சிகளாக ஒவ்வொரு வினாடிகளும் புதுப்புது வடிவங்களில் தயாராகி நமக்குத் தந்து கொண்டிருக்கின்றன.

இவைகளுள் எது சரி, எது பிழை என்று எண்ணுமுன்னரே இவைகள் எமது மூளைக்குள் நுழைந்து



எங்களைச் சிறைப்பிடித்துத் தங்கள் ஆட்சிக்குள் வீழ்த்தி விடுகின்றன. சிந்திக்கச் செய்யாமல் இருக்கும் சூட்சும வித்தைகளை தந்திரமாக, வர்த்தக நோக்குடன் பரப்புவதால் மனிதனின் பணம் - குணம் மட்டுமல்ல, ஒட்டு மொத்த கலாசார அழிவிற்கும் இட்டுச் செல்கின்றது.

சேற்றுக்குள்ளே, எண்ணெய் கழிவும் புகுந்து, கூழானதுபோல, ஏற்கனவே நொந்துபோன மனித மனம், துன்பம் தரவல்ல, இன்பத்தினைப் போக்கிற்காகக் காட்டி நிற்கும் மயக்கப் பிரச்சாரத்தில் மூழ்கிவிடுவது துன்பமோ பெரும் துன்பம்.

இளமையின் ஜொவனமாக, அன்று மலர்ந்த ரோஜா போல், இதயத்தை உலரவிடாமல் என்றும் புதிதாக புதுமணத்துடன் வைக்க வேண்டியது எமது பொறுப்பாகும். நல்ல நல்ல எண்ணங்களை உட்செலுத்துதலே இதற்குரிய வழியாகும். இதயங்களைச் சுத்தப்படுத்துதல் என்பது. அதனைத் திறந்து வைத்திருப்பது. புனிதமான இதயத்துள் அன்புதான் அகப்படும். இதயக்கதவு பூட்டப்பட்டால், கண்ட குணங்களும் கன்னம் வைத்துத் திருடன் உட்புகுதல் போல புகுந்து கொள்ளும். நல்ல உபதேசங்கள், சாத்வீகத் தன்மையினை உண்டாக்கும்.

நல்ல அறிவு, மெய்ஞ்ஞானம், இவைகளை எமை ஈன்ற உலகிற்கு முன்னோர் ஈந்து சென்றமை போலவே இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் சான்றோரும் செய்த வண்ணமுள்ளனர். செயல் இழந்த மின்கலத்திற்கு, மின் வலுவூட்ட மின்சாரம் பாய்ச்சப்படுதல் போலவே, இவர்களும் பணிகளைத் தொடர்ந்த வண்ணமுள்ளனர்.

RangaRakes Tamilnavarasam.com

உயரப்போய்க் கொண்டிருக்கும் மனிதன் உருண்டு, பின், நின்ற இடத்திற்கும் கீழே விழுவது கூடாது. அறிவுக்கு வேலை கொடுக்க, சுதந்திரமான சிந்தனை துணைபுரிகின்றது. ஆரவாரத்தன்மையான பேச்சுக்கள், பிரச்சாரங்கள் சிந்தனைகளைக் கூறுபோடவல்லன. மென்மையான, கனிவுப் போக்கிலான எண்ணங்களை நாடுவது சிரமமானது என சிந்திக்கத் தொடங்கினால், அராஜக உணர்வுகள் உட்கார்ந்து கொள்வதில் என்ன தடை ஏற்பட்டுவிடப் போகின்றது.

அறிவு, ஞானம் உடனே ஊட்டப்படக்கூடியது அல்ல, எனினும் இதனைப் பெறுவதற்கு மூளையைத் திறந்து வைக்கின்ற சக்தியை எமக்கு இறைவன் அளித்துள்ளான். கொடுக்கவேண்டிய நல்விருந்தைப் புசிக்க அது தயாராக உள்ளது.

மூளை வேறு, இதயம் வேறு என்று கூறுகின்றார்கள். எமது இதயம் நன்கு வேலை செய்தாலே, மூளை என்ன, முழு உறுப்புகளுமே சரிவர இயங்கமுடியும். ஆனால் மூளை செய்யும் வேலைத்திறனுக்குரிய பெயர் இதயத்திற்கே முழுமையாகக் கிடைக்கின்றது. மனிதர்களின் நற்பண்புகள், ஆளுமைகளை விருத்தி செய்யும் பேராற்றல் மூளை மூலம் கிடைக்கும்போது எமது மனமும் முழுமையடைகின்றது. ஒருவன் திருப்திப்பட்டுக் கொள்ளும் போது, தன் நெஞ்சைத் தொட்டுக் கொள்ளுகின்றான்.

மனம் அமைதியான நிலையில்தான் இதயம் நல் ஓசையுடன் சீராக இயங்குகின்றது. அதன் இனிய ஒலிநயம், எம் இயக்கத்தையே வழி நடத்துகின்றது. இதன் ஒவ்வொரு



துடிப்பிலும் அவனி அசைந்து கொண்டிருக்கின்றது. ஒட்டு மொத்த இதயங்களுமே ஒன்றாக, நன்றாக, நல்லதை எண்ணிக்கொண்டால் பெரும் அலையே உருவாகி மனித கனவுகளை நனவாக்கும்.

எண்ணங்களில் வலு இருக்குமேயானால் மயில் இறகைக் கொண்டே மலையை இழுக்கமுடியும், வளைக்க முடியும். எங்கோ தொலைவில் உள்ள உறவுகளை இங்கே இருந்துகொண்டு எண்ணும்போது அதன் தாக்கத்தினை அவர்கள் புரிந்துகொள்வது இல்லையா? தன் இடைவிடா எண்ணங்களின் வலிமையினால், கடலினுள் உள்ள ஆமை கரையில் உள்ள தன் முட்டைகளைப் பொரித்து வெளிவரச் செய்வதில்லையா? நினைப்பே வலுவானது. உண்மைக் காதலின் எண்ணங்கள், உறுதி அதன் வெற்றியில் முழுமையாகின்றது. குழந்தைகள் விழுவது பற்றிப் பயப்படுவதில்லை. அவர்களின் தீவிர முயற்சி அவர்களை நடக்கவும் ஓடவும் செய்கின்றது. அவர்களின் பிஞ்சு இதயத்திற்கே, அஞ்சாமை, துணிவு எண்ணங்கள் அவர்களை வழிநடத்தும்போது, பெரியவர்கள் திடமாக இருப்பதில் என்ன தடை வேண்டிக் கிடக்கின்றது.

உருப்படாதவன் என்று எவரையும் கருதக்கூடாது. அவனுள் உள்ள திறமையை எப்படி வெளிக்கொண்டுவர முடியும் என எண்ணுங்கள். எமது நினைப்புகள் என்றும் எங்களை மட்டும் சுழன்று கொண்டிருக்கக்கூடாது. எடுத்த எடுப்பில், எவர் இதயத்தையும் கீறி அறுவை சிகிச்சை செய்வது போல் விமர்சனம் செய்யவேண்டாம். இதயம் இரும்பைவிட உறுதியானது. ஆயினும் மலர்கூட இதன் மென்மைக்கு ஈடு இல்லை. சின்ன வார்த்தை போதும்,


RangaRakes Tamilnavarasam.com

உரம் கொண்ட உறுதியுள்ள மனிதனைத் திறன் அற்றதாகிவிடும். அவன் பலவீனங்களைக் குடையாது, அவனை முழுமையாக்க நாம் என்ன செய்யவேண்டும் என எண்ணவேண்டும். 'தனி மனிதனின் புலம்பல். உலகின் விசும்பல்.' தட்டிக் கேட்டு உட்கார வைப்போம். அல்லாதுவிடின் தள்ளிவிடாமல் இருப்பது சிறப்பே. எண்ணங்களுக்கு வலுவூட்டுதல் எமக்கு மட்டுமல்ல பிறருக்குமே என உணர்வோமாக. எனவே இதயங்களைத் திறந்து கொள்ளுவோம். உலக உறவும் நிறைந்து கொள்ளும். பலம் இறைவனின் கொடையாக வழங்கப்படும்.

✷

*- வீரகேசரி 2-4-2005*






தனிமனிதனின் உழைப்பும், தியாகமும் குறைந்து வருவதனால், நாடு இன்று கடனாளியாகி வருகின்றது. தனது சொந்த வாழ்விலேயே உழைக்க கஷ்டப்பட்டுக் கடன்கேட்டே வாழுபவர்கள் நாட்டின் நலன்பற்றிக் கவலைப்படமாட்டார்கள். உண்மையான பரிதாபத்திற்குரியவர்கள். நியாயபூர்வமாக கடன் கேட்கும் போது, தவறான வழியில் வாழ்பவர்களின் போக்குக் காரணமாக, ஏனையோர் கஷ்டமுறுபவர்களையே சந்தேகம் கொண்டு நோக்குகின்றனர். வரவுக்கேற்ற செலவு செய்தலே 'கடன்' என்கின்ற தொல்லையில் இருந்து மீள ஒரே வழியாகும். வாழ்க்கைச் செலவினம் கூடும்போது, வரவை அதிகரிக்கப் புதிய உபாயங்களைக் கண்டறிய வேண்டும்.

---

**கா**லன் தேடி வந்து கதவைத் தட்டினாலும் கலக்கம் கொள்ளாதவர்கள், கடன்காரர் வந்து கதவைத் தட்டினால்

RangaRakes Tamilnavarasam.com

அச்சமுற்றுக் கதவடைப்புச் செய்ய முற்படுகின்றார்கள். கடன்காரரைக் கண்டாலே வெறுப்படைந்து போகின்றார்கள். கடன் கொடுப்பதும் கொடுத்த கடனைக் கேட்பதும் கல்லில் நார் உரிப்பது போலத்தான். விருப்பமுடன் கடன் கொடுக்கப் பலரும் விரும்புவதில்லை. அதேபோல், கொடுத்த வாக்குப் பிரகாரம், கொடுத்த கடனைத் திருப்பி ஒப்படைக்க எத்தனை பேர் தயாராக இருக்கின்றார்கள்?

எனினும், நல்லவர்கள் நாணயமானவர்களுக்கு இந்தக் கூற்றுப் பொருந்தாது. கடன் பெறுதல் என்பது ஒரு வெட்கக்கேடான செயலா? அரசாங்கங்கள் கடன் வாங்குவதில்லையா? அவை பொதுமக்களுக்குக் கடன் கொடுப்பதில்லையா? பெரிய, பெரிய நிறுவனங்கள் கடன்பட்டால்தான் இயங்கமுடியும் என்கின்ற நிலையை பொருளாதார நிபுணர்களே ஒத்துக் கொள்ளுகின்றார்கள். பல புதிய திட்டங்களைச் செயல்படுத்த, ஏனைய நிறுவனங்களுடன் போட்டி போட, எதிர்பாராத நெருக்கடிகளைச் சமாளிக்க, இப்படிப் பலவாறான காரணங்களுக்காகக் கடன்படுதல் கூட ஒரு உடன்பாடான கௌரவமாக மேற்கொள்ளப்படும் நடைமுறைகளாகிவிட்டன. ஒவ்வொருவரின் தகுதிகளுக்கேற்ப, கடன் தொகைகள்தான் மாறுபாடடையும்.

சில்லறைக்கடன், சீட்டுக்கடன், காப்பி, மிளகாய் பொடிக் கடன் என்றவற்றுடன் கைமாற்றுக்கடன் என்று கூறுவதற்குட்படுகின்ற பலதரப்பட்ட கடன்வகைகள் உண்டு.

'அண்ணை, மின்சார, நீர் வரி கட்டவேண்டும். கட்டாவிட்டால் வெட்டி விடுவார்கள்' என்றும் 'பிள்ளைக்குப்



புத்தகம் தவணைக்காசு உடனே செலுத்தாதுவிட்டால், படிப்பே பாழாகிவிடும்' என்றும் நெஞ்சத்தைத் தொடும் வசனங்களைப் பேசிவிட்டுக் கடன்கேட்கும் முறைகளுமுண்டு. ஆயினும், உண்மையான நபர்களுடன், பொய்யான காரணங்கள் கூறும் கனவான்களும் கலந்து விடுவதனால், கடன்களை, எவர் நியாயபூர்வமாகக் கேட்கிறார்கள் என்பது தெரியாமல் போய்விடுகின்றதே. சரியான முறையில் வாழத்தெரியாமல் கடனோடு வாழ்வது முறையா? சிக்கன வாழ்வு இன்றேல் சீரழிவுதானே? இன்னும் ஒருசாரார் இருக்கின்றார்கள்.

சில்லறைக் கடன்கேட்டால் அது கௌரவக் குறைவு என எண்ணி மொத்தமான ஒரு தொகையைக் கேட்டுக் கறந்துவிடுவார்கள்.

இன்னும் சிலரோ,

நூறு ரூபாய் கேட்பார்கள். அதைப் பெற்றதும் செலவு செய்யமாட்டார்கள். உடனே சொன்ன தவணைக்கு முன்னரே அதைத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். அடுத்த தடவை அவரிடமே வந்து ஐந்நூறு ரூபாய் கடன் கேட்டு, அதனையும் மேற்சொன்னதன்படியே திருப்பிக் கொடுத்து விடுவார்கள். அடுத்த மூன்றாம் தடவையோ இவர்கள் முழுதாகப் பத்தாயிரம் ரூபாய் கேட்டால், கொடுப்பவர் அவரிடம் உள்ள நம்பிக்கையில், பூரணமாக மதித்துப் பணத்தைக் கொடுத்துவிடுவார். அப்புறமென்ன? பணம் கொடுத்தவரிடம் திருப்பிக் கொடுக்க அவர் என்ன முட்டாளா? சின்ன மீனைப் போட்டுத் திமிங்கிலங்களையே கௌவுகின்ற அசகாய சூரர்கள் இவர்கள்?

RangaRakes Tamilnavarasam.com

இத்தகைய கதைகளை நீங்கள் கேட்டு இருக்கலாம்.

ஆயினும், மிகவும் நெருக்கடிக்குள்ளானவர்கள் பணம் பெறுவதற்காக கடனைவிட, வட்டிக்குப் பெறலாம் என எண்ணி, முடிவில் இருக்கின்ற நகை, நட்டு, காணிகளை அப்படியே வட்டியும் முதலுமாகத் தொலைத்த கதைகள் ஏராளம்.

இதனால்தான் அரசாங்கங்கள் நியாயபூர்வமாக, வங்கிகள் மூலமாகவும் அரச ஊழியர்களுக்குக் கடன் வழங்குதலைத் தனது அமைச்சினூடாகவும் வழங்குகின்றது.

குடும்ப சூழ்நிலை, எதிர்பாராத செலவுகள், கடன் தொல்லையில் இருந்து மீள மீண்டும் கடன் கேட்டல், டாம்பீக வாழ்வு, இத்தகைய காரணங்களுடன் மேலும் பல காரணங்களுடன் ஏழை, எளியவர்களுடன் நடுத்தர, மேல் மட்ட வர்க்கத்தினரும் அல்லாடுகின்றனர்.

மிகவும் வசதியாக வாழ்ந்துவிட்டு, பின்னர் ஏதோ சில காரணங்களால் நலிவுற்றதும், அந்தப் பழைய வாழ்வில் இருந்து மீள வழி தெரியாமல், கடன்படும் பலர், ஏனையவர்களிடம் கையேந்தும் போது பரிகாசத்திற்கும், அவமதிப்பிற்கும் ஆளாகின்றார்கள். வசதியாக வாழ்ந்த காலத்தில் சிக்கனத்தையும் சேமிப்பையும் பற்றி தெரிந்திருந்தும், அதை உதாசீனம் செய்தமையின் பலாபலன்களைப் பிறர் மனம் புண்படுமளவுப் பேசும்போதுதான் புரிந்து கொள்ளுகின்றார்கள். உறவுக்குப் பகை கடன் என்பார்கள். ஒருவரிடம் வைத்திருக்கும் உண்மையான, அபிமானம், மதிப்பை அவரிடம் நீங்கள் உதவியாக எதைக்



கேட்டாலும், வரும் பிரதிபலிப்பின் மூலம் புரிந்து கொள்ளலாம். பணம் மட்டும் கடன் அல்ல. உடன் எந்த உதவியை எவர் செய்தாலும் அதுவும்கூட ஒருவிதத்தில் கடன்தான்.

பணம், பொருள் கொடுக்காது விட்டாலும் பரவாயில்லை. வேறு உபகாரமூலமாவது, எதையாவது செய்து துன்பம் துடைத்தல் மேலான அறம் ஆகும்.

பசிக்காகக் கடன் கேட்பவர் தொகையைவிட, பகட்டிற்காக இதனைக் கேட்பவரே அதிகம். 'கடன்' கூச்சத்திற்கு அச்சப்படுவதில்லை. தமது உழைப்பை ஈந்து கொள்ளாது, பிறர் உழைப்பினைக் கடன் மூலம் கவருதல் கவலைக்குரியது. இது சோம்பேறிகளின் சுரண்டல் சுபாவம்.

கல்வி, தொழில் சம்பந்தப்பட்ட பல இன்றியமையாத விஷயங்கள், இவைகளால் ஏற்படுகின்ற பணப் பிரச்சினைகள் பொதுவானவை. இவைகளை எவரும் தட்டிக் கழிக்க முடியாது. எனவே சமயமறிந்து உதவுதல் எல்லோரது கடமையுமாகும். எமது தகுதிக்கமைய உதவுதல் நல்லதே.

படிப்புக்குப் பணம் தேவைப்படுவதும், விவசாய வேலைக்குப் பசளை வாங்கக் காசு அவசியமாகப் படுவதுமான பல தரப்பட்ட திடீர் செலவுகள் எல்லோரையுமே தாக்கலாம். திடீர்த் திருமணங்கள், பயணங்கள், காணி, நிலப் பிரச்சினைகள், நீதிமன்ற விவகாரங்கள் எனப் பலவகையான செலவினங்கள் வரும்போதுதான் எங்களது இயலாமையின் தாக்கம் புலப்படுகின்றது. என்ன செய்யலாம் என்கின்ற ஏக்கமும் தொட்டு விடுகின்றது. யாரிடம் போய்க்

RangaRakes Tamilnavarasam.com

கேட்பது? யார் காலில் விழுவது? துன்பங்கள், பிரச்சினைகளை முன்னரே அறியும் திறன் இருந்தும், அதனைப் பொருட்படுத்தாமல் விடுவதன் தாக்கம் எவ்வளவு மோசமானது?

இருக்கும்போதே எங்களைப் பலப்படுத்துவதும், வரும் முன் காப்பதற்கான உபாயங்களைக் கையாளத் தெரிந்திருப்பதுமே அவசியமானதாகும். அரசு வங்கிகள், நிறுவனங்களின் சேவைகளை முழுமையாகப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ளுதலும் வேண்டும்.

இன்று பலர் கடன் கொடுத்துவிட்டு கடன் பெற்றவனைக் கண்டு பயப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டால், 'நான் என்ன சும்மாவா கேட்டேன். கடன்தானே கேட்டேன். இப்ப வசதியில்லை. கட்டாயம் தருவேன்' என்று சர்வ சாதாரணமாகத் தமது பழைய சம்பவங்களை அறவே மறந்து பேசுவார்கள். சிலருக்குத் தொழிலே அடுத்தவனை மிதிப்பதாகும். கொடுத்தவனைக் கெடுப்பதும் துடுக்குத் தனமன்றி வேறென்ன? மேலும் இப்படியும் சிலர், கடையில் சாமான்களைக் கடனுக்குக் கொடுப்பார்கள். அவர்களுக்குப் பணத்தை மீள அறவிடும் கலை நன்கு தெரியும். கடனுக்கு வாங்கிய பொருட்களை விலை கூடுதலாக விற்றுவிட்டுப் பின்னர் பலர் முன்னிலையில் கொடுத்த கடனைக் கேட்டுப் பணத்தை வெகு சாமர்த்தியமாகப் பறித்து விடுவார்கள்.

தமது சிரமங்களுடன் பிறர் உழைப்பின் உயர்வினையும் பெரிதென . மதிப்பவர்கள்



நாணயமானவர்கள். ஈகை என்பது ஒருவர்க்கு உவந்து அளிப்பது, துன்பம் நேருங்கால், சமயமறிந்து, கடனுக்குக் கொடுப்பதுகூட ஈகைதான். சிலர் சொல்லுவார்கள் 'இப்படி கடன் வாங்குவதைவிடப் பிச்சை எடுக்கலாம்' என்பர்.

கடன் பெறுதல் கூடச் சிலசமயம் பிச்சை எடுத்தலாக உருமாறுகின்றது. கொடுத்தலைத் தடுத்தலும், கொடுக்காமல் விடுவதைவிட மோசமானதே. தருணத்தில், தயவுடன் உதவுதல், ஆண்டவன் கட்டளையிட்ட செயல் போல் ஆவதுடன் அவரது அருள் கொடையை நாமும் பெற்றவர்களாவோம். 'கொடுக்கும் போது நாம் அருளைப் பெற்றவர்களாவோம்.'

வழங்கும் பொருளின் பெறுமதி பெரிதல்ல. உயிர்காக்கும் மருந்து நூறு ரூபாய் என்றால், உயிரின் பெறுமதி நூறு ரூபாய் அல்ல. அடிப்படையில் எந்த லட்சியமும் இல்லாமல், ஊதாரித்தனமானவர்களை விட்டு விடுவோம். பிரச்சனைக்குரியவர்களைத் தெரிந்து உதவிகள் செய்வோம்.

இன்று, தனிமனிதனின் உழைப்பும், தியாகமும் இன்மையால், நாடு கடனாளியாகிவிட்டது என்று, எல்லா நாட்டு அரசாங்கங்களும் சமாதானம் கூறிச் சமாளிக்கின்றன. ஆனால் சுரண்டல் புத்தியுள்ள அரசியல்வாதிகளிடம் நாடுகள் சிக்குண்டு அனைத்து வளங்களும் முடங்கி அழிக்கப்படும் அவலத்தை எங்கே போய்ச் சொல்வது? கடன் வாங்காமலே பிழைக்கும் வித்தை அரசியலுக்குப் பொருந்தலாம். இருக்கின்ற சொத்துக்களை விற்றுக் கடன்பட்டு ஒருவனிடம் கொடுக்க, அவன் எந்தவித

RangaRakes
Tamilnavarasam.com

விவஸ்தையும் இல்லாமல் கார், பங்களா என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இவர்களிடம் காசு கொடுத்தவன் கிட்டே போகவே அஞ்சுவது மிகவும் வேதனையும், அருவருக்கத்தக்கதுமாகும்.

"லட்சத்தைக் கொடுத்துவிட்டேன். அலட்சியமாய் அவனைப் பேசமுடியுமா? சற்று இசகு, பிசகாக ஏசினால், அவன் என்ன அநியாயமும் செய்துவிடுவானே" என்று புலம்புபவர்களை நீங்கள் பார்ப்பதில்லையா?

தவித்த முயலை அடிப்பது சாமர்த்தியமல்ல. நரகம்கூட இவர்களைக் கண்டு அருவருக்கும்.

பிறருக்கு ஏற்படும் சோதனைகள், எங்களுக்கான சந்தர்ப்பங்கள் அல்ல.

உள்ளதை வைத்து, திட்டமிட்டு வாழ்வதை விடுத்து, அடுத்தவனைப் பார்த்து அனைத்தையும் இழப்பது அறிவுடைமையன்று. நலிந்தவனுக்கு உவந்து உதவுதலும் எம் கடனாகும். செய்யக்கூடியதைச் செய்யவேண்டியது மனிதாபிமானம்.

எனினும், கடன் மனதை ஒடித்துவிடுவதால் கூடியவரை வரவுக்கேற்ற செலவு, சிக்கன, சீரான வாழ்க்கைமுறை சரியாக எம்மை வழிநடத்தும். அறிக!

✳ விகேசரி 10-04-2005






*காலங்கள் விழிப்போடு இருப்பவை. இவை ஓடிக் கொண்டேயிருப்பவை. காலத்தின் ஓட்டத்தை வீணடிக்காது வாழ்ந்தால் அது யோகம். இதை வீணாக்கினால் நாம் பரிதாபகரமானவர்களாவோம். 'காலம்' எம்மைப் பார்த்துச் சிரிக்கும்படியாக வாழக்கூடாது. நாம் சேவை செய்யும்போது காலங்கள் களிப்படைகின்றன. காலங்கள்தோறும் மனிதன் வாழ்ந்த வாழ்வு முறைகள், அழிக்கப்படாத எதிர்காலத்திற்கான பதிவுகளாக நோக்கப்படும்.*

---

முக்காலங்கள் பற்றி மெய்ஞ்ஞானிகள் ஞானமார்க்கம் மூலமும், விஞ்ஞானிகள் விஞ்ஞான அறிவு மூலமாக நிறுவிக்கொண்டு வருகின்றார்கள். விஞ்ஞானிகள் தமது கண்டுபிடிப்புகளின் பின்னர் மக்களுக்குத் தகவல்களைத் தெரிவிக்கின்றனர். ஆனால் எமக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்த

RangaRakes Tamilnavarasam.com

மெய்ஞ்ஞானிகள் கூறிய தகவல்கள், தற்போதுதான் விஞ்ஞானிகளால் நிறுவப்பட்டு வருகின்றன. உலகில் என்ன நடந்தன, நடக்கப்போகும் என்பனவைகளை ஆன்மீகவாதிகள் கூறும்போது அவைகளை நம்பாதவர்கள், விஞ்ஞானம் இவைகளை நிறுவியபோது நம்புகின்றார்கள். இவைகள் பற்றிய அறிவு ஆன்ம ஞானிகளுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று? எல்லா விடயங்களுக்கும் சிலசமயம் உகந்த பதில் சொல்லிக்கொள்ள முடியாமல் இருக்கின்றது.

உண்மையில் காலங்கள் என்பது என்ன?

நிகழ்காலம் என்பது மட்டும் நிஜம்தானா?

இறந்த காலம் என்பது முடிந்துபோன காலமா?

எதிர்காலம் என்பது கண்டுகொள்ள முடியாதபடியால் வெறும் எதிர்பார்ப்பு மட்டும்தானா?

எப்படி ஆகும் எனத் தெரிந்து கொள்ளமுடியாத கற்பனைக் காலமா இது?

ஆனால்,

காலங்கள் தோறும் நடக்கும் சம்பவங்கள் அழிந்து போகக்கூடியவை அல்ல.

இவை நிஜமானவை; சரித்திரங்களை உண்டு பண்ணியவை; தற்போதைய சம்பவங்கள் எதிர்கால சரித்திரங்களாகக் கூடியவை.

இறந்த காலம் சொன்ன அனுபவங்கள், நிகழ்காலத்திற்கான வழிகாட்டல்களாக அமைந்து



விடுகின்றன. எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டியவை, நிகழ்காலத் திட்டமிடல் மூலம் வழிவகுக்கப்படுகின்றன.

எதிர்காலம் என்பது, எமது சந்ததிக்காகச் செய்யப்படும் செயல்கள், சேவைகள் என்பதுடன் சற்று மேல் நோக்கிய பார்வையுடன் சிந்தித்தால் இது தியாகமாகவும் சொல்லலாம். எனவே தற்போது நாம் செய்கின்ற கருமங்கள், எல்லாமே இப்போது உண்மையாகச் செய்யப்படுவது போலவே, இறந்த காலத்தில் செய்யப்பட்டவையும் உண்மையாகவே செய்யப்பட்ட செயல்களே. சொல்லப்போனால் இறந்தகாலம் என்பது அப்போதைய நிகழ்காலச் செயல்களேயாகும்.

எனவே, இதன்படியே நாம் எதிர்காலத்தை வெறும் கற்பனையாகக் கருதாது, அது என்ன எதிர்காலம், கண்ணுக்குத் தெரியாத காலம் என வரட்டுப் பிடிவாதமாக வாழக் கூடாது. இந்தப் போக்கு எமது அறிவை மேலே செல்லவிடாமல் செய்கின்ற ஒரு தடையாகவும் அமையக்கூடும். பிடிவாதமாக நாம் எம்மை முடக்கக்கூடாது. இந்நிலை எமக்கு நாமே விதிக்கும் அடக்குமுறையும்கூட.

அறிவை அடக்குதல் அடாத செயலாகும்.

நடப்பது மட்டும்தான் வாழ்க்கையா? எங்கள் மூதாதையர் தந்த செல்வங்களை அனுபவித்துக்கொண்டே, முரணாக நடப்பது ஏற்கக்கூடியதன்று. நம் முன்னோர்கள் என்ன என்ன சாதித்தார்கள் என்பதை உணர்ந்து, நாமும் நிகழ்காலத்தினை எதிர்காலத்திற்காகத் தியாகம் செய்தேயாக வேண்டும்.

RangaRakes Tamilnavarasam.com

காலத் தாயின் மூன்று பிள்ளைகள்தான் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன.

நாங்கள் தேடும் உழைப்பின் மூலம் புகழ், செல்வம் எல்லாமே காலம் எனும் தாயாருக்கே உரித்தானது. யுகங்கள் தோறும் உலகம் வாழ, முக்காலமும் மனிதர்க்கும், சகல உயிர்க்கும், ஏன் இயற்கைப் படைப்புக்கள் அனைத்திற்குமே எல்லோரும் தங்கள் பங்களிப்பினைக் கொடுக்கவேண்டும்.

நேற்று இன்றாகி அது நாளையாகின்றது.

கெட்ட காரிங்கள் நேற்று நடந்திருந்தால் விடுபடவும், தவறானவை அது எதிர்காலத்தைப் பாதிக்குமென அறிந்தால் அதனைத் தடுத்துவிடவும். நாம் நிகழ்காலத்தை வலுமிக்கதாக ஆக்க வேண்டியுள்ளது.

தோல்விகள் நேற்று நடந்திருந்தால் இன்று நாம் அதன் வழி செல்லமாட்டோம். புதுப்புதுவிதமாகச் சரியானபடி அமைக்க நாம் திட்டமிட்டேயாக வேண்டியவர்களாக உள்ளோம்.

'எப்படியாவது வாழ்ந்தால் சரி' என்று வாழ்வதிலும் கரைச்சல் இல்லை என்றால், மற்றவர்கள் இந்த வழியைக் கைக்கொள்ள நீங்கள் அனுமதிப்பீர்களா? சோம்பல்காரரின் தூங்கல் கதைகளை சில அப்பாவிகள் நம்பி விடுவதுண்டு. செத்தபின்பு மனிதன் வாழவில்லை. எனவே எதிர்காலமே இல்லை என்பார்கள். செய்த சேவைகள் சாவதில்லை. தனக்காக வாழ்ந்தவனுக்கே மரணம், பிறர்க்காக வாழ்ந்தால் அது யோகம்.

காலங்கள் விழிப்போடு இருப்பவை.



'ஓடிக் கொண்டேயிருக்கும் காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல், சேவை செய்' என்றுதான் நன்மார்க்க சிந்தனையாளர்கள் சொல்லுகின்றார்கள்.

காலம் சிரிக்கும்படியாக வாழக்கூடாது. அப்படி வாழ்ந்தால் காலம் எங்களை உருத்தெரியாமல் அழித்துவிடும். சேவை செய்யும்போது காலம் களிப்படையும். அதே வேளை முடங்கிக் கிடப்பவரை உடைத்து நொருக்கி விடும்.

நாம் இன்று விதைக்கும் விதை, நாளை எல்லோருக்கும் அது மரமாக வளரும்போது பயன் தருகின்றது. இன்றைய விருட்சம் நேற்று எம்முன்னவர் இட்டவிதை. விருட்சத்தின் பயன்பாடுகளைப் பறவைக் கூட்டமும், விலங்குகளும் எல்லா உயிர்களோடிணைந்து மனிதர்களும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இதன் நிழல் எல்லோருக்குமே சொந்தமானது.

இங்கு கட்டப்படும் குருவிக்கூட்டைப் பார்த்து நீ சந்தோஷப்பட்டால் உனக்கு மாளிகை இனாமாக இறைவனால் வழங்கப்படும். கனிகளைக் குரங்குகளும், வௌவால்களும், காக்கைகளும் உண்ண உரிமை கொடு. உன் வீட்டு வாயிலில் கூடை கூடையாகச் செல்வங்களை, நீ கேட்காமலேயே இறைவன் கொட்டுவான். செல்வங்கள் எல்லாக் காலத்திலும் எல்லோருக்குமே சொந்தமானவை. நாம் பிறர்க்கு வழங்க இஷ்டமின்றி ஆண்டவனின் அனுமதியின்றிப் பிடுங்கிக் கொள்ளுகின்றோம்.

காலம் இதனைக் கண்டுகொள்ளாமல் இல்லை. தகுந்த தண்டனை வழங்கிவிடும். இறைவன் நின்று

RangaRakes Tamilnavarasam.com

அறுப்பான் என்பதன் பொருள்கூடக் காலம் கொடுக்கின்ற தண்டனையை வைத்துத்தான் கூறப்பட்டது போலும்.

காலக் கண்கள் விசாலமானவை.

எனவே,

தூசியளவு செயல்களையும் இது கண்டு விடுகின்றது.

ஒவ்வொரு வினாடிப் பொழுதுமே அற்புதமானவை... இது சென்றால் பிடித்துவிட முடியாத மாய வஸ்து.

நாம் இழக்கின்ற ஒரு வினாடிப் பொழுதில், யார் யாரோ எத்தலன எத்தனையோ விஷயங்களைச் சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு வினாடி கோடிக்கும் மேலானது.

நமக்கு மட்டும் வினாடிகள் வீணடிக்கப்பட அனுமதித்தல் அநியாயமானது. ஒவ்வொருவரும், நேரங்களில் கருமங்களை நன்றாகச் சிருஷ்டிக்கும்போது பார்வையாளராக, 'அவன் அதிர்ஷ்டம் அப்படி' என விமர்சனம் செய்யக்கூடாது.

பொழுதுகள் அமிர்தமானவை. இதனை உரிய முறையில் பயன்படுத்தினால் சாகாவரம் பெற்றவர்கள் ஆவோம்.

பொழுதுகள் உலரக்கூடாது. இது வாழ்தலுக்கு வகையாக அமைய வேண்டும்.

அழிக்கமுடியாத காலங்கள் எங்கள் காலடியில் இருக்கும்போது நாம் அதனைக் கண்டுகொள்ளாது விட்டால்



அது ஓடிப்போகும். பின்னர் முதுமை தொட்ட பின்பு உடல் கெட்டபின்பு, காலத்தைச் சபிப்பது. இறைவனின் கோபத்தையே வரவழைப்பது போலாகும்.

எனவே,

எக்காலத்திலுமே, காலம் வழங்கும் கொடைகளை சேவைகள் மூலம் பெற்று 'இக்காலத்தில் நன்றாக வாழ்ந்தோம் நாம்' என்று பெருமை கொள்ள வாழ்தலே வாழ்வு.

முக்காலங்களுமே, இப்பரந்த பூமிக்கு உகந்ததாக ஆக்க நேற்று நன்றாகவே, இன்றும் செழிப்பாக, நாளையும் நல்லதாகவே வாழ்வோம் எனத் திடம் கொள்வோமாக.

✷

*- வீரகேசரி, 12.3.2005*

RangaRakes Tamilnavarasam.com




*பொறுமையின்மை, பிறரிடம் இருந்து வெறுப்பையும் சம்பாதித்துக் கொடுத்துவிடுகிறது. எங்களது வேலை மட்டும்தான், உலகில் ஒவ்வொருவனுக்கும் அவனுக்கென்று பணிகள் குவிந்து இருக்கின்றது. எமது பணிகளை மட்டுமே முதன்மைப்படுத்தி, அவசரப்படுத்த முனையும்போது, பொறுமையின்மை எம்மிடையே தலைதூக்குகின்றது. மற்றவர்களின் மன இயல்பைப் புரிந்து, நாம் பொறுமை, நிதானத்துடன் செயல்படுதல் வேண்டும். இந்தப் பொறுமை காக்கும் இயல்பினை நல்பழக்கமாகக் கொண்டேயாக வேண்டும்.*

---

எனது நண்பர் ஒருவர் அவசரம், அவசரமாக என்னிடம் தேடி வந்தார். வந்தவர் சொன்னார், 'என்னால் பொறுமையாக எதனையும் செய்ய முடியவில்லை, பேச முடியவில்லை. நான் நிதானமாக இயங்க என்ன வழி?' இவ்வாறு கேட்கவும் நான் மௌனமானேன்.



கேட்கக்கூடாத ஒருவரிடம் இக்கேள்வியைக் கேட்டுவிட்டாரே என எண்ணிக்கொண்டேன்.

நண்பரோ, திடீரெனப் பாய்ந்தார்.

'எவ்வளவு நேரம் நான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன், நீர் உமது பாட்டிற்குச் சும்மா இருக்கின்றீர். நான் என்ன வேலை மினக்கட்டு உம்மிடம் கதை கேட்க வந்தேனா? நான் உம்மிடம் வந்ததே வீண்... என் நேரம் அநியாயமாகப் போய்விட்டது....' எனப் பொரிந்து தள்ளினார்.

அவரால் ஒரு அரை நிமிடநேரம் பொறுக்க முடியவில்லை. இவரிடம் எப்படிப் பேசிப் புரிய வைப்பது?

உண்மையிலேயே பொறுமை, நிதானம் என்றால் என்ன?

எமக்கு வேளைவரும் என எண்ணிக் காத்திருப்பதா?

தீமைகள், அநீதிகளைக் கண்டும் அமைதி காப்பதா?

எமக்குள்ள பங்கு எப்போதும் கிடைத்தே தீரும் என எண்ணிக் கண்களை மூடிக்கொண்டு சும்மா இருப்பதா..?

கதைத்தால் வீண் வம்பு; சற்றுப் பொறுப்போம் அல்லது எமக்காக யாரேனும் பரிந்து பேசி, எமக்கான உரிமைகளை, அவர்கள் பாதுகாத்துக் கொடுப்பார்கள் என எண்ணுதலா?

அல்லது,

RangaRakes Tamilnavarasam.com

விட்டுக் கொடுத்தலே பொறுமையானது, நிதானமானது, அன்பின் வெளிப்பாடு என ஒதுங்கிக் கொள்ளுதலா?

பயந்தாங்கொள்ளித்தனத்தின் வெளிப்பாடா?

இப்படிப் பலதரப்பட்ட காரணங்களுக்காகப் பொறுமையைக் கையாளமுடியும். நியாயமான காரணங்களுக்காக மட்டும் பொறுமை காட்டுதல் என்பதே சரியான செயலாகும்.

கோழைத்தனம் பொறுமையல்ல. இது ஆற்றாமை. நல்லவர்கள்கூட ஆற்றாமையால் அவதிப்படுவதுண்டு.

நெஞ்சில் உரமின்றி வஞ்சனை செய்வோர்க்கும் சிறிது பொறுமை காட்டித் திருந்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கி விடுதல் நன்மை பயக்க வழிவகுக்கலாம். ஒருவரின் பொறுமையை அவரின் கோழைத்தனமாகத் தப்பு அபிப்பிராயம் கொள்வதும், பின்னர் பொறுமை கொண்டவர் போர் வெறி கொண்டால் அதனை அடக்க முடியாமல், எதிரிகள் திணறுவதும் நாம் காணும் காட்சிகள். அடித்தால்தான் அடங்குவது சிலரது போக்காகும். வஞ்சகர் பிறர் அமைதியைக் கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை.

எந்த இடத்தில் எப்படிப் பொறுமை காப்பது என்பதே பெரிய விஷயமாகும். 'பொறுத்தார் பூமி ஆள்வர்' என்கின்றனர்.

அனுகூலமாக, எதுவும் நடக்கவேண்டுமேயாயின், பின் விளைவுகள் பற்றி முன்னரேயே யூகித்துக் கொள்ளவேண்டும்.



பொறுமை என்பதே நாம் அடுத்தவன் சிந்திக்கக் கொடுக்கின்ற கால அவகாசமாகும். காலம் ஒருவனைக் கனியவைக்கும்.

அடுத்தவன் எனக்காகச் சற்று ஒதுங்குகின்றானே என்பதனால் பல இக்கட்டான, தீர்க்க முடியாத பிரச்சினைகள் மலையை மசிய வைப்பதுபோல் அசைந்து விலகி விடுகின்றன.

பொறுமை ஒரு தனித்துவமான பண்புதான்.

நல்ல முடிவினைத் தரவல்ல மிகச் சின்ன விஷயங்கள்கூட பொறுமையின்மையால் சிக்கலடைந்து விடுகின்றன.

ஓவியன் ஒருவன் சித்திரம் வரைகின்றான். அல்லது சிற்பி ஒருவன் சிற்பம் செதுக்குகின்றான். இவை இரண்டு தொழிலுமே பொறுமையுடன் கையாளவேண்டிய கலைகளாகும். உதாரணமாகச் சிற்பத்தின் சகல வேலைகளுமே பூர்த்தியடைந்த பின்னர், ஏதோ சற்றுக் குழப்பமடைந்து 'கண்' வைக்கச் சென்றவன் உளியை அவசரமாக ஓங்கி அடித்தால் சிற்பம் என்னாவது? அதேபோல ஓவியன், சித்திரம் தீட்டி முடிந்ததும், சற்றே பொறுமை இழந்து கருமை நிறத்தைக் கண்டபடி தீட்டிவிட்டால் சித்திரமே குழம்பிவிடுமே. வாழ்க்கை கூட இப்படித்தான்.

இது அழகாகத் தீட்டப்பட வேண்டியவை.

மெத்தென்ற, மென்மையான பூக்கள், அதைத் தொட்டு உருளும் மழைத்துளிகள், பஞ்சு போன்ற பனிக்

RangaRakes Tamilnavarasam.com

கற்றைகள், பச்சைப் பசேலென்ற பசுமை காட்டும் மரங்கள், மலைகள், மடு, காடு, கடல், நீண்ட பாதைகள். அத்துடன் மனிதர்கள். விலங்குகள். இத்தனையும் கொண்ட இயற்கைக் கொடைகளால் நிரம்பிய உலகத்தை ஆண்டவன் அவசர அவசரமாகப் படைக்கவில்லை. எத்தனை கோடி ஆண்டுகளின் முன்னர், நெருப்புக்கோளமாகப் பிரபஞ்சத்திலிருந்து வெளிவந்த பூமிப்பந்து இப்படி உருமாறி இத்தகைய அழகுச் சோலைகளாக மாற எத்தனை ஆண்டுகள் பிடித்திருக்கும். எண்ணிப்பார்க்க வேண்டும்.

அடுத்தவன் ஓடுகின்றானே என்பதற்காக அவனைக் காரணமின்றி முந்த நினைத்து, பொறுமையின்றி ஓடினால் இடறி விழ வேண்டியதுதான். சரி ஏதோ வேகத்தில் முந்தி வந்ததும், பின்னால் இருப்பவனைக் கண்டு, தன் முயற்சி வென்றதாகக் கருதிச் சந்தோஷப்படுவதுகூட ஒரு அற்பமான விஷயம்தான். நிதானமின்றி விரைவது சரியானதா?

நாம் விரைவாகச் செயல்படவேண்டும். இது கருமத்தின் தன்மையைப் பொறுத்தது. பொறுமை, காரணத்துடன் கூடிய விரைவிற்கு விரோதியல்ல. சொல்லப்போனால், எம்மைச் சுதாகரித்து நிதானமாகச் செயல்படும்போது, செயல்களில் வேகம் தானாகவே வந்து விடுகின்றது. அவசர புத்திக்காரனைவிட நிதான புத்திக்காரன் முழுமையான அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றான்.

பொறுமை, காரியங்களை ஆரோக்கியமாக நடத்தி முடிக்கின்ற உபாயமாகும். பொறுமையானவர்களால் வேலைகளைத் திட்டமிட்டபடி ஆற்ற முடிகின்றது.



நீண்ட கால வெற்றிக்கு, சில மணித்தியால, நிமிட பொறுமைகள் நல்ல வழிகளை அமைக்கின்றன.

அதேவேளை,

பொறுமையின்மை பிறரிடம் வெறுப்பை ஏற்படுத்தும் சாத்தியத்தினையும் ஏற்படுத்துவதுடன், மற்றவர்களின் ஒத்துழைப்பின்மையால் கருமங்கள் எதிர்பார்த்தபடி அமையாது சில கணப்பொழுதில் பொடிப்பொடியாகவும் அமைய வழிகோலுகின்றது.

எங்களை ஒரு சுறுசுறுப்பானவர் என்று காட்டுவதற்காகவே சற்று மிகையாக இயங்கிக் கொள்வதால் பிறர் கணிப்பிற்கு உட்பட்டு, பலவீனங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் நிலைக்குத் தள்ளப்படுவோம். எங்களைப் பற்றிய வெளிப்படுத்துகைகள் சரியானவையாகவே அமையவேண்டும். ஏனையவர் பார்வைக்குப் படுபவையாக அமைவதில் என்ன லாபம்? அசட்டுத் துணிச்சலும், ஆரவாரமும் பொறுமைக்கு எதிரானவை.

என்ன கருமங்களைச் செய்து கொண்டிருந்தாலும் முழுமையான வேலைகளின் அளவு எப்படியோ தெரிந்துவிடத்தான் செய்யும்.

சிலர் பரீட்சைக்கு விழுந்து விழுந்து படிப்பதாகத் தோற்றம் காட்டுவார்கள். எனினும், பரீட்சை முடிவுகள் அவர்கள் தோற்றத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும்.

நிதானமாக, ஆரவாரமின்றிப் படிப்பவன் முழு வெற்றியையும் பெற்று விடுகின்றான். வித்தை பெறும் பக்குவம் நிதானத்தில் நிறைந்துள்ளது.

RangaRakes
Tamilnavarasam.com

தியானம், மூச்சுப்பயிற்சி, மென்மையான இசையை இரசித்தல், நல்ல நூல்களை ஆறுதலாக வாசித்தல் போன்றவைகளினால், நிதானமும் பொறுமையும் கிடைப்பதாகச் சொல்லப்படுகின்றன. பதட்டமின்றி இருப்பதே நல்ல பயிற்சியில் தங்கியுள்ளது. பொறுமை காத்துப் பழகினால் தேக ஆரோக்கியமும் வலுவாகி விடுமல்லவா?

நேரம் குறித்து, அதன்படி நடந்தால் தாமதமின்றி எதனையும் செய்ய முடியும். இதனால் அவசரம் என்ற பிரச்சினைகளுக்கே இடமில்லை. நேரம் பிந்துவதாலேயே கோபமும், ஆவேசமான போக்கும் எம்மைத் தாக்குகின்றன. நேர காலத்தின் முன்னரே எழும்பிக் கொள்ளும் பழக்கத்தை முதலில் கடைப்பிடிப்பது மிகவும் சிறப்பானதாகும். பிந்தி எழும்பினால், அன்றைய காரியங்கள் அனைத்துமே பிந்திவிடும். நாம் பிந்தி வந்து, பிறர் மீது பாய்வது, பின்னர் அவசரம், அவசரமாகக் கருமங்களைத் தாறுமாறாகச் செய்து முடிக்க விழைவது எவ்வளவு சிக்கலானது தெரியுமா? எமது தாக்கத்தைப் பிறர் மீது அழுத்துவது கூடாது.

நல்ல ஓய்வு, நிதானமாக மனிதனைச் சிந்திக்க வைக்க உதவுகின்றது. சரியானபடி கருமங்களைச் செய்து முடிக்கும்போதுதான் நேரமும் மீதப்படுகின்றது. எனவே ஓய்விற்கான நேரம் கிடைப்பதனால் தேக ஆரோக்கியமுடன், அடுத்த செயலுக்கும் எம்மைத் தயாராக வைக்கும் இயல்பும் எமக்குச் சிரமம் இன்றி வந்து விடுகின்றது. மேற்படி நாம் நடந்துகொள்ளாதுவிடின் அவசர புத்திக்கே நாம் அடிமையாவோம். அத்துடன் நேரங்களும்




நாசமாக்கப்படுகின்றன. கோபங்கள் சேர பிறகென்ன? கஷ்டங்கள்தான். பொறுமை இன்மையின் உற்ற நண்பன் கோபம்தானே?

நேர்முகப் பரீட்சைக்குச் செல்லுவதற்காக முண்டியடித்து பஸ்ஸில் ஏற, விழுந்து காயப்பட்டுப் பரீட்சையைக் கோட்டை விடுவதும் அலுவலகத்தில் ஒரு கடிதத்தைத் தேட ஒன்பது கடிதங்களைத் தொலைப்பதும், வாகனங்கள் முந்தி ஓட, ஒன்றை ஒன்று விரட்டி மோதி விபத்துக்குள்ளாக்குவதும் இன்றைய சாதாரண சமாச்சாரங்கள். இதில் வேதனை தருவது என்னவெனில், ஒருவரது பொறுமையின்மையால் பலர் வீணாகப் பலியாவதுதான். இதனால் ஒவ்வொரு வினாடிப் பொழுதும் ஒருவரோ பலரோ பாதிக்கப்பட்டே வருகின்றனர். கடமை செய்ய நல்ல கருவி பொறுமை. வேகத்தை வேளை அறிந்து செய்வோம்.

பொறுமை காத்தலால் பிறர் உங்கள் மீது அபிமானம் கொள்வதுடன் உங்களை நீங்களே நேசிப்பவர்களாகவும் மாறுவீர்கள். எங்களது நற்செயல்கள் பிறருக்கு வழங்கல்களாக அமைதல் வேண்டும்.

பொறுமைகூட அருமையான வழங்கலே.

RangaRakes Tamilnavarasam.com




*சுற்றி இருப்பவர்களைத் திருப்திப்படுத்த நீங்கள் பொய், புளுகு பேசுபவர்களாக மாறக்கூடாது. மற்றவர்கள் பூரணமான எங்களிடம் விசுவாசமாக இருக்க வேண்டுமேயானால், நாம் வாக்கு நாணயமானவர்களாக இருக்கவேண்டும். எமது பொய்யான வாக்குறுதிகள் பிறரைக் காயப்படுத்தக் கூடாது. பொய்யான வாக்குறுதிகளால் மக்கள் படும் அவஸ்தைகளைக் கண்டு கொண்டிருக்கின்றோம். செய்யக்கூடியவைகளைச் செய்து காட்டவேண்டும். நல்லதைச் செய்பவர்கள் கண்டபடி வாக்குக் கொடுக்க மாட்டார்கள்.*

---

**வா**க்குக் கொடுத்தல் விளையாட்டு அல்ல. இது வினையாகி உயிரையே அணைப்பது போலாகியும் விடும்.

இவை நாம் தெரிந்துகொண்டவைகள்தான்.



முடியாத காரியத்தை முடியும் எனக்கூறி ஏமாற்றுதல் கொடுமையான குற்றம்.

பிறரைத் திருப்திப்படுத்துவதற்காகச் சொல்லப்படும் இந்தப் பொல்லாத பொய்யுரைகள் பாதிக்கப்பட்டவரின் பெரும் சாபத்தையே கொடுக்கின்றது.

வாக்குக் கொடுத்துப் போக்குக் காட்டுதல் போக்கிரித்தனமென்றே சமூகம் சொல்கின்றது.

அரிச்சந்திரன், வாக்குக்கொடுத்து பின்னர் அவன் கண்ட சோதனைகளைப் படித்துவிட்டுப் பொருமி அழுகின்றவர்களில் எத்தனை பேர் சத்தியத்தின் அர்த்தப்படி வாழுகின்றார்கள்?

இன்று வாக்குக் கொடுப்பதுகூட வேடிக்கையாகப் போய்விட்டதே. கொஞ்சம் கடைத் தெருவில் போய் பாருங்கள்!

பொருட்களை விற்கும் வியாபாரி எத்தனை விதமான உறுதிமொழிகளை அள்ளி வீசுகின்றான், இவை இறைவனையே அசரவைக்கும் சொற்களாகும். தகரத்தைத் தங்கமாக்கும் இந்த வித்தையில் படைத்தவனே மயங்கி மடங்கிவிடுவான். இது வெறும் சொற்திறமை மட்டுமல்ல, பிறரை மட்டம் தட்ட அவர்கள் பயின்ற, பயின்று கொண்டிருக்கின்ற வித்தைகளுமாகும். வாக்குத் தவறுபவர்கள் - இவர்கள் தமக்குத்தாமே ஆத்ம விரோதிகள்.

பிறர் ஆத்மாவைச் சூடேற்றும் சோம்பல் புத்திக்குச் சொந்தக்காரர்கள். பிறரது இயலாமை, தெரிந்து கொள்ளாமை என்கின்ற விஷயத்தைச் சாதகமாக்கி ஒரு

RangaRakes Tamilnavarasam.com

நிராயுதபாணியையே கொலை செய்வது போன்ற கொடுமைக்காரருமாவர்.

ஒரு விதத்தில் பார்த்தால் தாம் வாழ பிறரது மனங்களை உடைப்பவர், கெடுப்பவர் கொலைக் குற்றவாளியைவிட மோசமானவர்களாகப் படுகின்றது.

உடலைச் சிதைப்பதைவிட நம்பியவர் மனதைச் சிதைப்பது சகிக்க முடியாததாகும்.

சாத்தான்கள் சுவாமி வேடம் போடுவது ஒன்றும் புதிது அல்ல என்றாலும், தெரிந்தவர்கள் சில அவசிய தேவைகளின் பொருட்டு வேறு வழியின்றிப் பிறர் பேச்சை நம்புவதுமுண்டு.

எங்கள் திறமைகளை ஆரம்பத்தில் ஏமாற்றுப் பேர்வழிகள் கொஞ்சம் பரீட்சித்துப் பார்ப்பார்கள். தங்கள் வித்தை பலிப்பதாகக் கண்டுவிட்டால் போதும், அப்புறம் ஆளைக் காலி பண்ணிவிடுவார்கள்.

காசுக்காகத் தெய்வத்தையே காசாக்கும் கூட்டம் இருந்துகொண்டுதான் இருக்கும். என்ன கஷ்டம் பாருங்கள்! வாக்குக் கொடுத்து வேதனைப்படுத்துபவர்கள் தங்கள் சாமர்த்தியத்தால் தலைவர்களாகவே வந்து விடுகிறார்கள்.

அரசியல்வாதிகளைப் பாருங்கள்.

இவர்கள் ஒருவருக்கு மட்டுமா வாக்குறுதிகளை வழங்குகிறார்கள்? ஒட்டுமொத்தமாக, முழு நாட்டு மக்களுக்குமே உறுதிமொழி பகன்று நாட்டை இறுதி யாத்திரைக்கே இட்டுச் செல்கின்றார்களே.



விளக்கில் விழும் விட்டில் பூச்சிகள் போல, மக்கள் தெரிந்தும், புரிந்தும் மீண்டும் மீண்டும் விழுந்து புழுவாக மடிகின்றார்களே.

இவர்கள் அதிகாரம் பெற்ற பொய்யுரையாளர்கள்.

பொய்யுரையாளரின் சக்தி நாட்டையே கவ்வி ஏப்பமிடுவதிலிருந்து அதன் பாரிய செயல் திறன் புரிகின்றதல்லவா?

எங்கள் திருப்திக்காக, எங்கள் தேவைக்காக, எங்கள் அமைதிக்காக பொய்யான வாக்குறுதிகளை, கட்டாயமாக நம்பவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி விடுகின்றோமே.

'நம்ப நட, நம்பி நடவாதே' என்பார் சான்றோர். துன்பப்படுபவர்கள் அதில் இருந்து விடுபட ஒருவரின் உதவியை நாடுதல் இயல்பேயாகும். பலவீனமாக இருக்கும் ஒருவனை பம்பரமாகச் சுற்றவைத்து களைப்படையச் செய்தல் முறையா? பாதிப்படைந்தவன் பரிதாப நிலைக்கு ஆளாகுவதால் இறுதியில் சலிப்பு, வெறுப்பு, கோபம், ஏக்கம், சோகம் என வலைப் பின்னலாகவே அதனுள் சிக்குண்டு போகின்றான். இந்த நிலையினால் நல்ல ஆரோக்கியமானவர்கள் கூட, மற்றவன் கண்டு கொள்ளமுடியாத அளவிற்கு மாற்றமடைந்து போகின்றான்.

சிலவேளை, நல்லவர்கள் கூடப் பொல்லாதவர்களாக உருமாறும் சாத்தியமும் ஏற்படலாம். ஒரு வல்லமையுள்ள பொறியியலாளர் என்னிடம் சொன்னார், 'நான் என்ன படித்தும் என்ன பயன்? என்னிடம் தொழில் செய்த ஒரு

RangaRakes Tamilnavarasam.com

சாதாரண சிற்றூழியன், என்னைத் தன் பேச்சால் மடக்கி என் தொழிலுக்கே கெட்ட பெயர் ஏற்படுத்திவிட்டானே' என்றார். நான் கூறினேன், 'நீங்கள் மனம் உடைந்து போகவேண்டாம். செய்யும் தொழிலுக்கும் உங்கள் தோல்விக்கும் சம்பந்தமில்லை. பேச்சுக்கலை மூலம் அவன் ஏமாற்றிவிட்டான். அதனை அவன் தவறான வழியில் குருவிடமே உரைத்துப் பார்த்துவிட்டான். நீங்கள் சற்று ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்' என்றேன். எத்தகைய படித்தவர்களை, மேதாவிகளைக் கூட சர்வ சாதாரணமாகப் பேசியே நம்ப வைக்கின்றார்களே.

காதலன், காதலியிடம் சொல்கின்ற உறுதிமொழிகள்; அதேபோல் காதலி காதலனுக்குச் சொல்லிக் கொள்ளும் உறுதிமொழிகள்; மன்னர்கள் எழுதி வைத்த கல்வெட்டுக்கள் போது செதுக்கி வைத்துப் பின்னர் மறுத்து வெறுத்து ஒதுங்குதல் ஒன்றும் புதுமையில்லை.

இவர்கள் போலியை வேலியாகப் போடுபவர்கள். தாலிகட்டுமுன் தயங்காமல் சொல்லப்படும் சொற்கள் வெற்று வேட்டுக்கள்.

ஆனால் இவர்கள் தம் வாழ்க்கையைத் தாமாகவே வீழ்த்துபவர்களுமாவர். வேலையில்லாமல் திரியும் அப்பாவிக்கு வேலை கொடுப்பேன் எனச் சொல்லுவதும், வெளிநாடு அனுப்ப கொடு பணம் எனக் கேட்டுப் பறித்து உரித்து ஓட விரட்டுவதும், நாம் காணும் அன்றாட அவலம்.

இதனால் எத்தனை குடும்பங்கள் சாவை சந்தித்து விட்டன? காணியை விற்றுப் பூமியை விற்று, இருந்த நகை நட்டை விற்றுச் சேர்த்த காசை கண்டவன் கையில் கொடுத்து, இறுதியில் இருப்பதையும் இழந்து கையேந்தும் நிலை என்ன கொடுமை. அட கடவுளே?



விசா இல்லாமலே விமானம் ஏற்றுவேன் என்று உறுதி பேசி கொள்கலனில் அவனை ஏற்றி, அடைத்து, உயிரைக் கசக்கி, ஒரு வழியில் கடலில் எறிவதும் பொய் மொழியை நம்பியதன் விளைவு அல்லவோ?

காரியம் ஆகுமுன்தான் பொய்கள் பந்தல் போடும். காரியம் முடிந்ததும் பொய் நிர்வாணமாகும். ஆயினும் இதனால் அல்லல்பட்டவன் துயரை மீட்டுக் கொடுக்க முடியுமா?

பெற்ற பிள்ளைகளுக்குக்கூட முடியாத செயலுக்காகப் பொய் பேசல் வேண்டாம். அப்பா எனக்கு அதுவேண்டும், இதுவேண்டும் எனக் கேட்டால், பொறுமையாகப் புரிகின்ற விதத்தில் உண்மையைப் புகட்டுங்கள். உங்கள் பொய்யுரைகள், வாக்குகள் அவர்களை ஏமாற்றத்துக்குள்ளாக்க நீங்கள் காரணமாக இருக்க வேண்டாம்.

காலப்போக்கில், ஒருவனைத் திருப்திப்படுத்த கண்ட கண்ட உறுதிகளை வழங்குவதும், அதைக் களைவதும், உங்கள் பிள்ளையின் சொந்தக் குணமாகி விடுமன்றோ? முடிந்ததை மட்டும் கூறவேண்டும். முடியாததை விலக்கி விடவேண்டும். முடியாத காரியத்தில் வெட்கம் என்ன இருக்கின்றது? எங்கள் இயலாமையை மறைக்கச் சொல்லப்படும், செயல், சொற்கள் கூட எமது இயலாமையைத் தொடர்ந்து வெளிப்படுத்திய வண்ணமேயிருக்கும்.

RangaRakes Tamilnavarasam.com

ஒரு தவறை மறைக்க ஓராயிரம் தவறுகளா?

எங்கள் அந்தஸ்தைக் காப்பாற்றப் போடும் வேடம் எத்தனை நாளைக்குப் பொருந்தும்?

இவை சாமர்த்தியம் அல்ல. சந்தர்ப்பத்தில் செய்யும் தவறுகள். மற்றவன் சிரிக்கவும், கேலி பேசவும், அவமதிக்கவும் செய்ய நாமே அனுமதிப்பது என்பதே வெட்கக்கேடான விஷயம்.

எங்கள் பெருமையை, பலத்தினை, உண்மையான செயலினைக் காப்பாற்ற, போற்றப்பட வேண்டுமேயாயின் கொடுத்த வாக்குகளைக் காப்பாற்றவேண்டும்.

கண்டபடி சிந்தித்து முடிவு எடுக்காமல் உறுதியுரைகள் கூற வேண்டாம். முடிந்த அளவு சொல்லாமலேயே பிறருக்கு உதவி செய்து முடித்தலே சாலவும் சிறந்ததாகும்.


சுற்றி இருப்போரைத் திருப்திப்படுத்த நீங்கள் பொய் பேசுபவராக, புளுகுபவர்களாக மாறிவிடவேண்டாம்.

சுயகௌரவத்தைக் காப்பாற்றுவது என்பதே, மற்றவர்கள் எங்களிடம் பூரண விசுவாசம் மிக்கவர்களாக எண்ண நாங்கள் அவ்வண்ணம் வாக்கு நாணயம் உள்ளவர்களாக இருப்பதேயாகும்.

✷

*- வீரகேசரி, 19-3-2005*






*ஒரு விஷயத்தில் இறங்கு முன்பு அது சரிப்பட்டு வராது என்று எண்ணிவிடலாமா? நல்லதையே எண்ண வேண்டும். என்றாலும் ஒரு கருமத்தில் நல்லது எது, கெட்டது எது என்று தெரிந்து கொண்டேயாக வேண்டும். புத்திசாலிகளாகக் காட்டுவதற்காகவே சிலர் எதிர்மறையான கருத்துகளைக் கூறிக் கொண்டே இருப்பார்கள். இதனை நாம் பொருட்படுத்தாமல் சரியான பாதையில் நல்ல குறிக்கோள்களுடன் சென்று கொண்டே இருக்க வேண்டியதுதான்.*

எனது நண்பர் ஒருவர் சற்று வித்தியாசமானவர். இவரது பேச்சுக்கள் வேடிக்கையாகவும் சில சமயங்களில் எரிச்சலூட்டுவனவாகவும் இருக்கும். காலையிலேயே வாசகசாலைக்குச் சென்றுவிடுவார். அனைத்துப் பத்திரிகைகளையும் மொத்தமாகப் படித்துவிடுவார். பொதுவாகப் பத்திரிகையில் வரும் பரபரப்புச் செய்திகள்

RangaRakes Tamilnavarasam.com

பற்றி எங்களுக்குத் தெரியும்தானே. குற்றவியல் செய்திகளைத்தானே குறைவில்லாமல் குதூகலத்துடன் பிரசுரிக்கின்றன!

இவரிடம் சென்று பத்திரிகைச் செய்திகள் பற்றி கேட்டால்தான் பிரச்சினையே உருவாகும். ஏன்தான் கேட்டோம் என்று ஆகிவிடும்.

'ஐயா, என்ன செய்தி இது. கேட்கவே ஆத்திரம் பற்றிக் கொண்டு வருகிறது. ஒரு பெண்ணை இப்படியா கற்பழித்துக் கொலை பண்ணுவார்கள். படுபாவி, படுபாவி...' என நான் வயிற்றெரிச்சலுடன் சொன்னதுதான் தாமதம். மனிதர் வரிந்து கட்டிக்கொண்டு பொரிந்து தள்ளுவா. 'இப்படி தம்பி... சும்மா இரும், உமக்கு எல்லாமே தெரியுமா? சரி பிழை சொல்லுகின்றீர்களே, அவனிடம் என்ன தப்பு கண்டீர்? அவன், அவளை ஏமாற்றியிருப்பான். அவன் தீவிரமாகக் காதலித்திருப்பான். இவள் இவனை ஏமாற்றி டிமிக்கி விட்டிருப்பாள். இவன் ஏதோ ஆத்திரத்தில் கொலை செய்திருப்பான்...' அவர் இப்படிக் கூற நான் குறுக்கிட்டு,

'அப்படிப் பேசப்படாது– கொலை செய்திருக்கின்றான். அப்புறம் கற்பழித்தும் இருக்கின்றானே.'

'சரி கொலை செய்திருக்கிறான் என்கின்றீர். அவள் விரும்பியே அவனுடனும் தொடர்பு வைத்துப் பின்னர் வாய்த் தர்க்கத்தில் கொலை நடந்திருக்கலாம்.'

'அப்படியென்றால் அவன் செய்தது தவறு இல்லையா?'

'இல்லையில்லை. சாரணம் இல்லாமல் காரியம் இல்லை. கொலை செய்தவன் சும்மா செய்யமாட்டான்.'



இவ்வாறு எதிர்மறை எண்ணங்கள் கொண்டவர்களிடம் ஜீவிப்பதே கொஞ்சம் கஷ்டம்தான். எதற்கெடுத்தாலும் எதிர்மறையாகவே சிந்தித்து, வரப்போகின்ற நல்ல வரவுகளைத் துறந்து போகின்றனர்.

இதே எண்ணங்கள் கொண்ட கணவன், மனைவி இணைந்தால் வாழ்க்கை என்ன ஆகும்? சிந்திக்கவே கஷ்டமாக இருக்கின்றது. 'நல்லதையே நினை' என்று பேசிக்கொண்டே, தீமைகள் தங்களை அணைத்துக் கொள்ளுவதாக நினைத்தே பலர் ஜீவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு விஷயத்தில் இறங்குமுன், அது சரிப்பட்டு வராது என்று கருதிவிட்டால் எப்படி முயற்சி பலிக்கும்?

ஆயினும், மிகப்பெரிய விஷயங்களை கைக்கொள்ளுமுன் எம்முன் உள்ள இடர்ப்பாடுகளைத் தெரிந்தேயாக வேண்டும்.

எப்போதுமே சார்பு நிலையில் சிந்தித்தாலும் கஷ்டங்கள் எதிர்பாராமல் வருவதை, வந்த பின்னர் சகித்துக் கொள்ளமுடியாது.

தீர ஆராய்தல் என்பது எதிர்மறைச் சிந்தனையல்ல.

எதிர்மறைச் சிந்தனையாளர்கள் பலர் தம்மைப் புரட்சிகரமான சிந்தனையாளராகவும் காட்ட முற்படுகின்றனர். தவறாகக் கருத்துகளைப் பற்றி விவாதம் செய்து, அது சரி என்று கூறுவது, அது புரட்சிக் கருத்து அல்ல, புரட்டுக் கருத்தேயாகும்.

சார்பாகச் சிந்திப்பதும், எதிர்மறையாக, பொருந்தாது கருதுவதும் தீர்க்கமற்ற முடிவாக விடிவைத் தராது.

RangaRakes Tamilnavarasam.com

நடுநிலை உணர்வுடன் முடிவு செய்து வாழுதலே பொருத்தமானதாகும்.

எமக்குச் சார்பான நிலையில் நின்று கொண்டு நாம் பிரச்சினைகளை அணுகமுடியுமா? சில வேளைகளில் எல்லாமே சரியாகவும், சில சமயம் எல்லாமே பிழையாகவும் தோன்றுகின்றதே? அரசாங்கங்கள் ஒவ்வொரு காலப்பகுதியிலும் மாற்றமடைகின்றது. இன்றைக்கு இருக்கும் அரசு நாளைக்கு இல்லை.

என்றாலும், மக்கள் ஒரே நிலையில் நின்று கொண்டு ஆட்சிகளை மாற்றிவிடுகின்றனர். ஒவ்வொரு அரசாங்கத்தையும் மக்கள் தெரிவு, செய்து கொஞ்சகாலத்தின் பின்னர்தான் முரண்பாடாக அரசுகள் நடக்கும்போது வேறுவிதமாகச் சிந்திக்க ஆரம்பிக்கின்றார்கள்.

இங்குதான் தனிமனிதர்களினதும் ஒட்டு மொத்தமான மக்கள் அனைவரினதும் நிலையும் ஒருமித்த கருத்தாக எண்ணங்கள் முளைவிடுகின்றன. இதில் உண்மை என்னவெனில்,

ஒவ்வொரு தடவையும், மக்கள் சிந்தனை ஒரே நிலையில் முடிவு எடுக்கின்றது. இங்கு நாம் எதிர்க் கட்சிகளைப் பற்றி அதிகம் கவனம் எடுக்க வேண்டியதில்லை. பெரும்பான்மை மக்களின் சார்பு சிந்தனை, ஒருவயப்படுகின்றது. அந்த நேரத்தில் அந்த நிலையில் மக்கள் நிலைப்பாடு ஏற்கக்கூடியதே.

எனினும், தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் பிரச்சினைகள் வரும்போது மட்டும் ஏன் சிக்கல் எழுகின்றது?



அப்போது மட்டும் ஏன், மனிதன் பயப்பட்டு தனக்கு ஆரோக்கியம் இல்லாத முடிவுகளுக்கு ஆட்படுகின்றான்? கூட்டாக எடுக்கின்ற முடிவுகள் ஒன்றாகவும், தனித்து எடுக்கும் முடிவுகளுக்குத் தயங்குபவனாகவும் இருக்கின்றானே.

தமக்குச் சாதகமான விஷயங்கள் முரண்பாடாக அமையுமிடத்து, அதுவும் தொடர்ந்து அவனுக்கு எல்லா விஷயங்களிலுமே பாதகமாக அமைந்துவிட்டால், சமூகத்தின் சகல நடப்புகளையும் எதிர்மறையாகக் கருதத் தலைப்படுதல் வேதனைக்குரியதே.

எல்லா விஷயங்களிலும் பொருத்தமில்லாமல் பேசுபவர்களை அவதானித்தால், அவர் வாழ்க்கையில் அடிபட்டவராக, நொந்து போனவராக இருக்கக்கூடும்.

ஆனால்,

எதிர்மறைப் பேச்சு என்பது ஆரோக்கியம் என்று கருதுபவர்களுக்கு மேற்சொன்ன விஷயம் பொருந்தாது.

புத்திஜீவிகளாகக் காட்டிக் கொள்ளுவதற்காகவே பலர் சித்தத்தைக் குட்டை குழப்பும் இவர்களை கவனத்திற்கு எடுக்கவேண்டாம்.

சின்னச் சின்ன விஷயங்களுக்கு பொய்மையான மெருகூட்டி அதனை விஸ்வரூபமாக்குபவர்கள் மனச்சாட்சிக்கு மரண அடி கொடுப்பவர்களே. தவறாக நடந்து கொள்ளுகின்ற எதிர்மறை எண்ணமுடையவர்கள் மத்தியில் மிகவும் வேடிக்கையான நல்ல மனிதர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்களுடன் அவதானமாக

RangaRakes Tamilnavarasam.com

புத்திசாலித்தனமாக நடந்தால் நல்லபடி இவர்களைப் பயன்படுத்த முடியும்.

எனது நண்பர் ஒருவர் நல்லத் புத்திசாலி. அவர் ஒரு தனவந்தரிடம் உதவி கேட்டு, அதில் வெற்றி கண்டும் விட்டார். எப்படி என்று நான் கேட்டேன். அவர் சொன்னார். 'நான் ஒரு நிதியுதவிக்காகச் சென்றேன். முன் ஏற்பாடாக நண்பர் ஒருவரை எனக்குப் பின்னே வருமாறு கேட்டுக் கொண்டேன். நான் ஏற்பாடு செய்த நண்பரோ ஒன்றும் தெரியாதவர் போல, அந்த தனவந்தர் முன் சென்று... இந்த நிதியுதவி எனக்குப் பிடிக்காது என்று கதை கொடுத்தார். அவ்வளவுதான், எதற்குமே எதிர்வாதம் செய்யும் தனவந்தர் கோபாவேசப்பட்டு 'என்ன அப்படிப் பேசுகின்றீர். நல்லதற்கு உதவவேண்டும். அப்புறம் மனிதனாகப் பிறந்து என்ன பயன்' என்று அவர் கேட்கவும், சமயம் பார்த்து நண்பர் பக்குவமாகத் தான் வந்த காரியத்தினைச் சொல்லவும், அப்புறம் என்ன? காரியம் முழுவெற்றி!'

சில விஷயங்களை இப்படிக்கூடக் கையாள வேண்டியுள்ளது.

கோவிலைத் திருத்திப் புனருத்தாரணம் செய்வோமா என்று கேட்டால், இருக்கின்ற கோவிலில் போய் வழிபடு என்பார்கள்.

சரி, கோவிலைக் கட்டுவோமா என்றால், பழையதைப் புதுப்பிப்போம் என்பார்கள்.

பிள்ளைகளை பல்கலைக்கழகம் அனுப்ப வழி செய்வோம் என்றால் பல்கலைக்கழகம் களேபர பூமி, அங்கே விட்டால் பிள்ளைக் குட்டிச்சுவர் என்று



சொல்லுவார்கள். சரி, பிள்ளைகளுக்கு எதற்குக் கல்வி என்றால் கட்டாயக் கல்வி அவசியம் என்று பேசி விடுவார்கள்.

எனவே இத்தகையோரிடம், அணுகும் முறைகளை சற்று வித்தியாசமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

புத்திக்கும் வார்த்தைக்கும் தொடர்பேயின்றி, மின்சாரம் பாய்ச்சுவதுபோல் பிறரைச் சுருண்டு விழச் செய்து விதண்டாவாதம் செய்வதால் நாம் மிரண்டுவிடாது, சமூகத்தில் இவர்களையும் இணைத்துக் கொள்ளவே முயற்சிக்க வேண்டும்.

எல்லோரும் ஒரே தரத்தில் வாழ்ந்துவிட முடியுமா?

என்றாலுங்கூட எதிர்மறைச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை உதறிவிடக்கூடாது.

இதனால் சில நல்ல புத்திசாலிகளைக்கூட நாம் இழந்தவர்கள் ஆவோம்.

சரியானது கசந்தாலும் அது காரிய சித்திக்கு உகந்தது என்றால் ஏற்கத்தானே வேண்டும்.

எனவே மனதை நெருடும் சில பேச்சுகளால் நாங்கள் ஒடிந்துவிடக் கூடாது.


சற்று நிதானமாக யோசிப்போம். நல்ல கருத்துகளை மட்டுமே எமது மனம் ஏற்றுக்கொள்ளும்.

எதிர்மறைச் சிந்தனைகளும், ஒத்த சிந்தனைகளும் நல்ல வழிகாட்டலுக்கே என அறிந்துகொள்வோம்.

✷

*- தினக்குரல்*

RangaRakes Tamilnavarasam.com




பாவம் செய்தலைத் தடுக்கவே 'சொர்க்கம்' என்பது சிருஷ்டிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எந்தச் சூழ்நிலையிலும் மனம் அழிக்கப்படாமல், விகாரப்படாமல் வாழும் வாழ்வு தான் சொர்க்கமாகும். பரந்த மனம், எதனையும் உணர்ந்து கொள்ளும் நிறைந்தகுணம் இருந்திட்டால் கோடி, கோடி சொர்க்கமாக வாழ்வு இனித்திடும்.

---

சொர்க்கம் என்ற சொல்லே சந்தோஷமிக்கதாகும். வயதில் முதிர்ந்தவர்கள் கூட, தங்கள் இளமை மீளளிக்கப்பட்டு அங்கே புகுந்துகொண்டால் என்ன என்று அங்கலாய்த்துக் கற்பனையில் வலம்வர ஆரம்பிப்பார்கள். சிற்றின்ப சமாச்சாரம் மிக அதிகமாக உள்ளதென நம்பிக் கொள்கின்றார்கள்.



அநேகமாக மதங்களில் கூட இதுபற்றிப் பேசப்படுகின்றது. சந்தோஷமாகச் சுகமாக இருக்க யாருக்கு இஷ்டமில்லாமல் இருக்கிறது? ஆனால்,

பாவம் செய்தலைத் தடுக்கவேதான் சொர்க்கம் சிருஷ்டிக்கப்பட்டது என எண்ணத் தோன்றுகின்றது. இதுதான் உண்மையும் கூட. தீமைகளை ஒடுக்கவும், நன்மை செய்வதற்காகப் புண்ணியம் என்ற பெயரில் அதனை முதன்மைப்படுத்தவுமே சொர்க்கம் நல்லவர்களுக்காக ஆக்கப்பட்டது என்று அறிக.

இது இருக்கின்றதோ, இல்லையோ என்பது ஒரு புறம் இருக்கட்டும். சொர்க்கம் என்பதன் அர்த்தம் என்ன? சுகபோக வாழ்வுதான் இதன் பொருளா?

செயற்கையாக இது இன்று உருவாக்கப்படுகின்றது. பணம் பத்தும் பண்ணும் என்கிறார்கள். மாயா உலகவாசமே உத்தரவாதமானது என எண்ணி, காசைக் கண்டபடி செலவு செய்து, சொர்க்கத்தின் சுவை அறிந்து கொள்ள முற்படுகின்றனர்.

இந்த நவ உலகில் பாவ புண்ணியம் பற்றி இதனுள் புகுந்த பின்னர் பேச மனம் வராது. இங்கு மனம்கூட மரணிக்கும் சம்பவங்களே அதிகமானது. கடவுள் படைத்த உலகைவிட மனிதன் படைத்த மாய உலகு பெறுமதி மிக்கதாகக் கருதுகின்றார்கள்.

மனிதன், மனிதனுக்கே கொடுக்கும் போலி வெகுமதிகளும் உத்தரவாதங்களுமாக இவைகளைக் கணிக்கலாம்.

RangaRakes
Tamilnavarasam.com

சகல பழக்கங்களும் படைத்தவன் அனுமதி பெறத் தேவையில்லை. ஏன் என்றால் தீமைகள் செய்ய கடவுள் அனுமதிப்பதும் இல்லை. கெட்டது செய்வதற்கும் கூடக் கடவுளைக் கூப்பிடும் காலம்.

இதனாலேயே, ஆடம்பரப் பகட்டு, போலி வாழ்வுகூட ஆண்டவன் கொடுத்தான் என அவரையே சாட்சிக்கு அழைக்கின்றார்கள். தங்களின் இந்தப் பொய் வாழ்வு புதைந்து போன பின்புகூட போற்றிய இறைவனைத் .தூற்றிக் கொள்கின்றார்கள்.

இவர்களில் பலருக்கு ஆன்மீகம் பற்றித் தெரிந்தும்கூடத் தற்காலிக வருமானங்களுக்காக இருக்கின்ற இதயத்தை விற்று விடுகின்றார்கள். அல்லல்களை அரவணைப்பவர்களை ஆண்டவன் என்ன செய்யமுடியும்?

இதில் வேதனையானது, மெத்தவும் படித்தவர்கள்கூடப் பொருத்தமான முகமூடி அணிந்து பொய்த்தனங்களை மிக அழுத்தமாகப் பிடித்து வெளுப்பான மனிதராக வெளியுலா வருவதுதான்.

எனினும், இன்று ஆடம்பரமான வாழ்வில் மேலைத்தேசம், கீழைத் தேசம் என்கின்ற வேறுபாடே இல்லாமல் போய்விட்டது. இதில் எந்த நாட்டினருமே சகட்டுமேனிக்கு, பகட்டு வலையில் விழுந்து, தம்மை வலுவிழக்கச் செய்யவே பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர்.

கெட்டு அலைவதிலும் கூடத் தீவிரம் காட்டுவது வேடிக்கையாக இல்லையா?

RangaRakes



இறந்தபின் என்ன நடக்குமென உத்தரவாதம் இல்லை. நல்லது, கெட்டதை இங்கேயே பார்த்துக் கொள்வோம் என்றும் சிலர் கூறுகிறார்கள். நல்லதையும், தீயதையும் நாமே பார்த்துக் கொள்வோம் என்று கூறி, ஆனால் செய்வது அனைத்துமே முரண்பாடாக, தமக்கு இசைவாக ஆக்கி சொர்க்க மாளிகை எங்கே என்று முகவரி தேடி மூச்சுமுட்ட ஓடுகிறார்கள். இது என்ன புத்திசாலித்தனமோ புரியவில்லை.

நல்ல நடத்தையில் வாழ்தலே சுகம் என்கின்ற உணர்வை விடுத்து, பிறர் முறைகேடாக நடந்து கொள்வதனைப் பார்த்து ஒழுகும் அக்கறையினால் கைக்கு எட்டிய சுகங்களே கிட்டாமல் போய்விடுகின்றன. இது துர்ப்பாக்கியமேயன்றி வேறென்ன? மறுபிறப்பு, இந்தப் பிறப்பு என எண்ணாது எந்த நிலையிலும் சரியானது எதுவென உணர்ந்து, தீமைகளுக்கு அஞ்சி வாழுதலே நிலையான சொர்க்க வாழ்வு ஆகும்.

மாய உணர்வுகள் மயக்கும்போது பாவம் என்பதே வெறும் கற்பனை என எண்ணத்தோன்றும்.

எதைச் செய்தாலும் கேட்கக் கடவுள் எங்கே என்றும் நினைக்கின்றார்கள்.

கடவுள் என்பதே, 'உண்மை' என்பதுடன், 'நன்மை' என்பதன் மொத்த வடிவம் "கடவுளே" என மனதாரப் புரிந்துகொண்டால், பாவ உணர்வுக்கு நாம் உட்படுவோமா?

எங்களைப் பார்க்கிலும் மேலானவர்கள் யார் என இறுமாப்புடன் இருப்பவர்கள் இறுதி யாத்திரைக் காலம் வரை சம்பாதிப்பது பண மூட்டைகளை அல்ல. பாவ

Tamilnavarasam.com

மூட்டைகள்தான். தேவையின்றிப் பாரமான வாழ்வு வாழ்ந்தே பயனற்று இறந்துபோனவர்கள். இருக்கும் இடத்தை வைத்து சொர்க்கம் சிருஷ்டிக்கப்படுவதில்லை. ஓலைக் குடிசையிலும்கூட உலகம் வியக்கம் வண்ணம் வாழமுடியும். ஞானிகள், மேதைகள் உல்லாச விடுதியில் உட்கார்ந்து கொண்டு உபதேசம் செய்யவில்லை.

எந்த நிலையில் இருந்தாலும்கூட நல்லமுறையில் வாழ்ந்து வந்தால் அந்த இடம் கடவுள் வாழ்வதற்கு உகந்த இடம்தான்.

பொருந்தாத இடங்களில் அட்டகாசமாக ஜீவித்தாலும் அது யாசகம் செய்தலை விடக் கேவலமானது.

இருக்கும் இடங்களில் யோக்கியர் சூழ இருந்தால் அது ஆரோக்கியமான சூழல்தான்.

வறட்சியான மனநிலையில் வாழ்ந்துகொண்டு பளிங்குத் தரையிலும், மலர் வனத்திலும், பாதம் பதித்தாலும்கூட முட்புதர், கொடும் வெயில், கடும் குளிர், உறைபனியில் இருப்பதைவிட மோசமானதேயாகும்.

தீய வழிகளில் சுதந்திரத்திற்கான பாதை மூடப்படுகின்றன. சுதந்திரமாகச் சுவாசிக்க முடியாத வாழ்வும் ஒரு வாழ்வா?

களங்கமேயில்லா ஏழை ஒருவன் தலையில் மழை நீர் சொட்டச் சொட்ட, சேற்று நீர் உடலை மெல்லத் தட்ட, வெற்று உடம்புடன் மார்பு சிலிர்த்திட, அடுத்த வேளைக்கு என்ன என்று தெரியாமலும்கூட சுதந்திரமாக இனிமையாகச் சிரிக்கின்றானே! அவன் இருக்கும் இடம் புண்ணிய பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.



ஏழைகள் கூடும் இடத்தை அவர்கள் வாழ நல்ல இடமாக அமைத்தாலே, அமைக்க எண்ணங்கொண்டாலே அவர்கள் சொர்க்கத்தில் நிரந்தர குடிஉரிமை பெறத் தகுதியுடையவராவர்.

தனக்காக வாழ்ந்து தனக்கெனப் புது இடம் அமைத்தும், அதற்கும் மேலாக புதிய பூமி எங்கே பிறக்கின்றது அதில் புகுந்து கொள்ள என எண்ணி எண்ணியே புதையல் தேடுவதும், ஓடி ஓடி, அலைந்து களைத்து, இறுதியில் முன்னர் கால்கள் இருந்த இடத்திலும், சொர்க்கம் இருக்கும் என எண்ணாத மனிதரை என் செய்ய?

'சொர்க்கம்' மேலே அல்ல. கீழே, எம்முன்னே, எமக்குள்ளே என அறிக. இதன் அடிப்படையிலேதான், எம் முன்னோர்கள் நன்மைக்கு வழிகாட்டும் அறவாழ்வை வலியுறுத்தினர். நாங்கள் தேடும் அனைத்துமே மனித குலத்தின் மத்தியில் அவர்கள் உத்தமமான அரவணைப்பிலும் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டுமன்றோ?

கற்பனையிலாவது சொர்க்கம் சிருஷ்டிக்கப்பட்டாலும் அது ஏன் அப்படி மக்களுக்காகக் கூறப்பட்டது என அறிவோமாக.

பரந்த மனம், எதையும் உணர்ந்துகொள்ளும் நிறைந்த குணம் இருந்திட்டால், கோடி சொர்க்கமும் இதன்முன் ஈடுகொடுக்குமா?

*- தினக்குரல்*

RangaRakes Tamilnavarasam.com




*எங்கள் ஐம்புலன்களின் இயல்பான தொழில்களைச் சரிவரச் செய்ய நாம் அனுமதிப்பதில்லை. எங்கள் பலத்தை நாமே உணர்ந்து கொள்வதுமில்லை. சிந்தனைகளை விரியச் செய்ய சிலவேளைகளில் நாம் சம்மதிப்பதுமில்லை. ஒரே சிந்தையுடன், மனதைக் குவித்துப் பலத்தை கையில் ஏந்திப் பெரும் பாறையைக் கூடத் தகர்க்கின்றார்களே. மனிதனால் எல்லாமே முடியும். எம்மை நாம் வசப்படுத்த வேண்டும். மனமும், உடலும்கூட இணைந்து செயல்பட்டால் பலம் பன்மடங்காகிவிடும்.*

---

பலத்தை சகலருக்குமே, சமனாகவே இறைவன் தந்துள்ளான். குருவிக்கும் கூடுகட்டும் திறன் வைத்தான். நாங்கள் கட்டும் மாளிகையைவிடக் குருவிக்கூடு வெகு சிரத்தையாக அமைக்கப்படுகின்றது. அது அதன் பலத்திற்கேற்ப வாழ்க்கை இயற்கையாக உருவாக்கப்படு கின்றது.



எனவே, உண்மையாகவும் சரியாகவும் வாழச் சிரமப்பட வேண்டியுள்ளது எனக் கூறுதல் ஏற்கக்கூடியதல்ல. நிரந்தரமானதைப் புரிந்துகொள்ளாமல் விடுதல் சிறந்தது அல்ல.

சத்திய வாழ்வில் சங்கடங்களைத் தவிர்த்தல் மனிதர் கடமையாகும்.

மகாத்மா காந்தி இதனையேதான், சத்திய சோதனை என்ற தமது நூலில் நுட்பமாக விவரித்துள்ளார்.

மனித பலம் இதனூடாகப் புரிகின்றது. எங்கள் ஐம்புலன்களின் இயல்பான தொழில்களைச் சரியாகச் செய்ய நாம் அனுமதிப்பதில்லை.

நல்லதைச் செய்யவும், அதையே நினைப்பதையும், நல்ல சொற்களை உரைக்கவும் மட்டும் நாம் காலத்தினை செலவழிப்பதில்லை.

எமக்குச் சாதகமானவைகளை மட்டுமே உண்மைகளாகக் கருதுவதால், எங்கள் பலத்தை முழுமையாகப் பிரயோகம் செய்ய முடியாமல் போய்விடுகிறது.

சிந்தனைகளை விரியச் செய்ய நாம் சில வேளைகளில் சம்மதிப்பதில்லை. உதாரணமாக,

இலகுவான, சரியான ஒருவழி கட்டாயமாக இருக்கும். உடன் அது மூளைக்கு எட்டவில்லை என்றால், பரபரப்புக்குள்ளாகி இது சரிவராது என்று சொல்லி விடுகின்றோம். இதனை வாயால் சொல்வதுடன்

RangaRakes Tamilnavarasam.com

நின்றுவிடாது, மூளைக்கும் கூட முழுவதுமாய்ச் செதுக்கி விடுகின்றோமே?

இது எவ்வளவு தப்பானது தெரியுமா?

எடுத்தவுடன் சில காரியங்களைச் செய்ய முடியாதுவிடினும் நிதானமாக அதை நிறைவேற்றலாம். எனக்கும் என்னைச் சார்ந்த சிலருக்குமே என எண்ணும்போது எமது பலமான செயல்கள் பலமிழந்து போகின்றன.

ஒரு பிரபல தனியார் நிறுவனம் நஷ்டத்தில் போய்க் கொண்டிருந்தது. அதன் ஸ்தாபகர், மிகவும் பிரயாசைப்பட்டு நிறுவிய நிறுவனம். அடிமட்டத் தொழிலாளியாக இருந்து அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. அவரது நிறுவனம் அவர் கண்முன்னே நஷ்டத்தில் ஏன் இயங்குகின்றது என்று ஆராய்ந்தார். தமது நிறுவனத்தைத் தனது பேரனிடம் ஏற்கனவே ஒப்படைத்ததால் நிர்வாகத்தில் அவர் தலையிடாமல் விட்டுவிட்டார்.

எனவே, அவர் இதுவிடயமாக ஆராய சுதந்திரமான ஒரு ஆலோசகர் ஒருவரை நியமித்தார். அவர் தமது நியமனத்தை ஏற்குமுன், போட்ட நிபந்தனைக்கு ஸ்தாபகர் கட்டுப்பட்டுக் கொண்டார். ஆலோசகரின் அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டது:

'நிறுவனத்தில் இயக்கம் முழுமையாகச் செயல்படவில்லை. நிறுவனச் செயல்பாடுகள் திறமைசாலிகளிடம் ஒப்படைக்கப்படவில்லை. உறவுக்காரர்களுக்கே கொடுக்கப்பட்ட பதவிகளைப் பறித்து புத்திசாலிகளான அனுபவஸ்தர்களிடம் கொடுங்கள். பதவிகளைக் கொடுப்பதை விடுத்துப் பணத்தைக் கொடுத்து வீட்டுக்கு அனுப்புங்கள். நிர்வாகம் வேறு, உறவுக்காரர் வேறு.' இப்படியாக ஆதார பூர்வமாக அறிக்கை தொடர்ந்தது.



இவ்வாறான செயல்கள் எல்லோரர் வாழ்க்கைக்கும் பொருந்தும். பொருந்தாதவர்கள் புகுந்துகொண்டால், வாழ்க்கையே சரிந்துவிடும். சிலரைச் சரிக்கட்ட வேண்டும் என்பதற்காக, ஒழுங்காக நடக்கும் அமைப்புகளே கூட நிலைகுலைந்து போகின்றன.

வேண்டப்பட்டவர்களுக்காகவே வழங்கப்படும் உதவிகளால் பொதுநலனும் பாதிக்கப்படுகின்றன.

சுயநலன்கூடச் சூதாட்டத் தோல்விகளாக முடிந்துவிடும். பலருக்காக வாழ்பவன் பாராட்டப்படுகின்றான்.

பொதுநலனுக்காகவே உழைக்கும்போதுதான் ஆத்மாவும் பலம்பெறுகின்றது. உடல் பலம் என்பது பற்றிக் கவனிக்காது ஆத்ம பலம் பெற்றவர்கள் உலகிற்குப் பயன்களைப் பெற்றுத் தந்த வண்ணமாகவே இருக்கின்றார்கள்.

அவர்கள் இறந்த பின்னரும்கூட உயிர் துறந்தவராகக் கருதப்படுவதில்லை. அவர்கள் உழைப்பினால் உலகம் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

எடை குறைந்த மனிதர், ஆங்கிலேயரிடம் பிடிபட்ட நாட்டை தன் ஆத்ம பலத்தினால் திருப்பி எடுக்கவில்லையா?

ஒருவரின் பலப் பிரயோகம் எந்தளவிற்கு உயிரூட்டப்படுகின்றது பார்த்தீர்களா?

RangaRakes Tamilnavarasam.com

சரி ஆத்ம பலத்தை விட்டுவிட்டு உடல்பலம் பற்றிப் பார்ப்போம்.

கொஞ்ச காலத்தின் முன்பு, அண்மையில் காலமான மட்டக்களப்பு சாண்டோ ஶ்ரீதாஸ் அவர்களைச் சந்தித்தேன். இவர் உடல்பலத்துடன், ஆன்ம பலத்திற்காகவும் தியானம், யோகம் செய்பவர் என அறிந்தேன். அழகிய தோற்றம் கொண்டவர்.

நான் அவரைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கின்றேன். அன்றுதான் முதன்முதலாகப் பார்த்தேன். நான் நினைத்ததற்கு மாறாக அவர் தோற்றம் இருந்தது. ரொம்பவும் கனிவான தோற்றம். பணிவு அத்துடன் அன்பு அவர் முகத்தில் பிரகாசித்தது. பொதுவாகச் சாண்டோ என்பவர்கள் முரட்டு ஆசாமிகளாகவே தோற்றமளிப்பர்.

இவரா இப்படி என நான் அசந்துபோனேன். நான் கேட்டேன், 'எப்படி ஐயா, இத்தனை உடலைத் தாக்கும் வேலைகளைச் செய்து காட்டுகிறீர்கள். இரும்பை வளைக்கிறீர்கள், பாறாங்கல்லை மார்பினில் உடைக்கச் செய்கிறீர்கள், பார ஊர்திகளை நெஞ்சில் ஏற்றுகிறீர்கள்' என்றேன். அவர் சொன்னார், 'மனதை ஒருமுகப்படுத்தினால் பலம் தானாகவே வரும். இதற்கு உடற்பயிற்சியுடன், மனப்பயிற்சி, மன ஒடுக்கம் தேவை. இவைகள் இல்லாதவரை எமது பலம் ஒருமுகப்படாது. சித்தம் சிதைந்தால் பலம் விரயமாகும்' என்ற கருத்துப்பட உரைத்தார். இதே கருத்தையே, கராட்டே கலையில் தேர்ச்சி பெற்ற முதல்தர ஆசிரியரும் கூறினார்.



ஒரே மனதுடன் மனதைக் குவித்து பலத்தை கையில் ஏற்றி கருங்கல்லில் பதித்தாலே அது பட்டென உடைந்துவிடுகின்றது. நான் சந்தேகத்துடன் அவர் கைகளைப் பார்த்துத் தடவிக் கொண்டேன். அது சாதாரண கைதான். பிரத்தியேகமான சிருஷ்டியில்லை. உடற்பயிற்சியும், மனப்பயிற்சியும் அதனை ஒடுக்கும் தன்மையுமே இவர்கள் பலத்திற்கான முழுக்காரணமுமாகும்.

எனவே உடலும் மனமும் கூட இணைந்தால் பலம் பன்மடங்காகின்றது. அந்த மனம் செம்மையாக இருக்கவேண்டும்.

மனசு செம்மையாக இல்லாதுவிட்டால் உடல்பலம் சமூகத்திற்கு முடக்கப்பட்ட ஒன்றாகவே கருதப்படும்.

கடல் போன்ற இதயமும், உடல் பொடியாகப் போகும்வரை அது அடுத்தவருக்கே என்ற மனப்பாங்கும் இருக்கும் வரை, எங்கள் பலம் விரயமாகப் போவதில்லை.

சேருமிடத்தில்தான் எதுவும் சேரவேண்டும். எவையுமே உலகிற்கு உகந்ததாக்கப்படல் வேண்டும். கோடிக்கணக்கான மக்களின் பலம் ஒட்டுமொத்தமாக ஒருமுகப்பட்டால், உலகம் ஒரே ஆட்சிக்குள், அன்புக்குள் அகப்பட்டுவிடும். இதுவும் சாத்தியப்படக்கூடியதே.

✵

*- தினக்குரல்*

RangaRakes
Tamilnavarasam.com




*நாம் கேட்காமலே எடுத்துக் கொள்கின்ற உரிமைகள் சில வேளைகளில் அத்துமீறல்களாகிவிடுகின்றன. அன்பாக எடுத்துக் கொள்ளும் உரிமைகள் பிறரை அவஸ்தைக்கு இட்டுச் செல்லக்கூடாது. மற்றவரைச் சிந்திக்க விடவேண்டும். எல்லாவற்றிற்கும் நாமே தலையீடு செய்வது, பிறரது சுதந்திரத்தைப் பறிப்பது போலாகும். உரிமைகளை எடுப்பது தப்பு இல்லை. இவை பரஸ்பரம் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமல்லவா? அத்துடன் அவர்களின் நலன்களையும் பாதிப்பதாக அமையக்கூடாது.*

---

நாம் ஒருவர் மீது எடுத்துக் கொள்ளுகின்ற உரிமைகள் விடயத்தில் ஒரு எல்லையை வகுத்துக் கொள்ளல் வேண்டும். பிள்ளைகள், நண்பர்கள் விடயத்தில் மட்டுமல்ல, தமது மனைவி, பெற்றோர் விடயத்திலும் கூட எல்லை மீறிய உரிமைகளை எடுத்தால் தொல்லைகள் எதிர்பார்க்காமலேயே அல்லல்படுத்திவிடும்.



நாங்கள் கேட்காமலேயே எடுத்துக் கொள்ளுகின்ற உரிமைகளால், அவர்களது தனிப்பட்ட வாழ்க்கைக்குள் நாம் அத்துமீறிப் பிரவேசிக்கின்றவர்களாகின்றோம். பெற்ற பிள்ளைகளுக்கே தெரியாமல் பெற்றோர் திருமணத்திற்கு முடிவு எடுப்பதும், ஒருவரின் தனிப்பட்ட நிலவரம் புரியாமல், நண்பர் என்று உரிமை கொண்டு தேவையற்ற கஷ்டங்களை விலைகொடுத்து வாங்குவதும், சாதாரணமாக நேரிடையாகவும் கதைகள் வாயிலாகவும் கேட்கின்ற அனுபவபூர்வமான உண்மைகள்.

அன்பாக எடுத்துக் கொள்ளும் உரிமைகள் கூட அவர்களது உரிமைகளைப் பறிப்பது போல் அமையக்கூடாது. இது நாகரீகமற்ற செயல் மட்டுமல்ல தங்களால்தான் எதுவும் நடக்கும் என்கின்ற செருக்கான இயல்பாகவும் மாறிவிடும். பாசத்தின் முன் எடுக்கின்ற நடவடிக்கைகள் கூட மிகக் கொடுமையான முடிவுக்கு இட்டுச் செல்வதை நாம் அறிந்திருக்கின்றோம். ஒருவர் தனது அறிவுக்குட்பட்ட, வயது வந்து முதிர்ச்சியடைந்த நிலையில் பெரியவர்கள், தம்மிஷ்டத்திற்கு உரிமையை எடுத்து எல்லா விஷயங்களிலும் தலையீடு செய்தால் வெறுப்பு, கோபம் ஏற்படும். இதனைச் சிலர் வெளிக்காட்டாது போகலாம். ஆனால் உண்மை இதுதான்.

சின்ன வயதிலிருந்தே சிந்திக்கவிடாத பெற்றோர் அன்பு என்ற பெயரில் அதிகாரமாக உரிமைகளைப் பறிப்பது, அவர்கள் சிந்தனைகளையே நிந்திப்பது போலாகாதா?

சின்னவர்கள் முதிர்ச்சியடையப் பெரியவர்கள் சிலர் சம்மதிப்பதில்லை. திருமணமான பிள்ளையைக் கூட,

RangaRakes Tamilnavarasam.com

பாசத்தின் நிமித்தம் பேதலிக்க வைத்து உலகைப் புரியாமல் செய்து விடுகின்றனர்.

ஒருவனை நல்ல வழியில் நடாத்த வேண்டும் என்பதற்காக தாமே வலியச் சென்று, தமக்குத் தெரிந்த வழிமுறைகளைக் கூறுவது எல்லா நிலையிலும் பொருந்துமா?

எம்மீது அன்பு செலுத்துபவர் விடயங்களில் கூட கவனத்துடனும் கண்ணியத்துடனும் பழகவேண்டும். ஒருவர் இதயத்தை அழுத்துவது போல் எங்கள் நடவடிக்கைகள் அமையக் கூடாது.

எமது செயல்கள் பிறர் நன்மைகளுக்காகவே செயல்படுவதாக அமைந்தாலும் கூட, எங்கள் வழங்கல்கள் மற்றயோர்க்கு பாரங்களாக இருக்கலாமா?

நீங்கள், உங்களிடம் அன்புகாட்டும் நாயைத் தடவிக் கொடுத்தால் அது நன்றியுடன் தனது வாலை ஆட்டிக் காட்டும். அட... நான் வளர்க்கும் நாய் தானே என்று எண்ணி அதன் வாலை இழுத்துப் பாருங்கள். என்ன நடக்கும்? அது திரும்பி உங்களையே கௌவப் பார்க்கும். இதுபோலத்தான், நாமும் பிறரை நேசித்துப் பின்னர், உரிமை என்கின்ற தோரணையில் எரிச்சலூட்டும் காரியங்களில் ஈடுபட்டால் அவர்களே எங்களிடம் தமது எதிர்ப்பினைக் காட்ட முனைவர். இது யதார்த்தபூர்வமான உண்மை. இதனைப் புரிந்து கொள்ளாத குடும்பங்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமா?

எங்களைச் சுற்றியுள்ள அன்பு, பாசம், காதல் இவைகளைக் காப்பாற்றியேயாக வேண்டும். உறவுகள்



அறுந்து போக, கண்டபடி உரிமையைப் பிரயோகம் செய்யலாமா? ஓடும், புளியம் பழமும் போல வாழ நாம் ஒன்றும் ஞானிகள் அல்ல. இயல்பாக வாழ வேண்டும். அதேவேளை அத்துமீறலாக உரிமை எடுத்தலைக் கட்டுப்படுத்தவும் வேண்டும்.

மற்றவர்களுக்கு தாங்கள் மட்டுமே சலுகைகளை, உரிமைகளை வழங்க வேண்டும் என எண்ணுபவர்கள், தங்களுக்கு ஏனையவர்கள் இப்படி நடப்பதை அனுமதிப்பார்களா?

முன்னைய காலங்களின் பழக்க, வழக்க, ஒழுக்க நெறிகள், கட்டுப்பாடுகள் இன்றை காலத்தில் இல்லை என்கின்றார்கள். மேலை நாடுகளில் வயது வந்த இளைஞர்களை மட்டுமல்ல, சின்னஞ்சிறிய குழந்தைகளைக் கூட கண்டிக்க முடியாதுள்ளது. சாதாரண கண்டிப்புகள் கூடத் தண்டனை என அர்த்தப்படுகின்றது. வெளிநாட்டில் உள்ள அன்பர் ஒருவர் என்னிடம் ஒரு சம்பவத்தைக் கூறினார்.

'ஒரு தடவை காலை தமது வீட்டிற்குத் திடீரெனப் பொலீசார் வந்து கதவைத் தட்டினார்கள். கேட்டபோது பக்கத்து வீட்டு முதியவர், 'நீங்கள் உங்கள் குழந்தையைத் திட்டி இம்சைப்படுத்துகின்றீர்களாம், உண்மையா' என்று கேட்டார். நீங்கள் இதனை எனது குழந்தையிடமே கேளுங்கள் என்றேன்.'

நல்ல வேளை எனது குழந்தை சிரித்தபடி, 'அப்படி ஒன்றுமேயில்லை. எனக்கு அப்பா, அம்மாவை ரொம்பப் பிடிக்கும்' என்றபடியே ஓடிவந்து என்னைக் கட்டியணைத்தது.

RangaRakes Tamilnavarasam.com

பொலீசார், 'மன்னிக்க வேண்டும்' என்று கூறி நகர்ந்து விட்டார்கள். தற்செயலாக, சில சந்தர்ப்பங்களில் எங்கள் பிள்ளைகளைக் கடுமையாகப் பேசுவதை ஒரு மனித உரிமை மீறல்களாகக் கருதி, அந்த முதியவர் பொலீசாருக்குத் தகவல் கொடுத்துவிட்டார். எனவே,

மேற்கத்திய கலாசாரத்தில் சாதாரணமான நிலையில் கூட உரிமை எடுத்தல் என்பதே சாத்தியமற்ற செயலாகும். பிழைக்கு புத்தி சொல்லக் கூடப் பெற்றோருக்கு உரிமையில்லை. இது வேதனைக்குரிய நெருடலான, ஏன் சற்று நகைப்புக்குமுரிய விஷயம்தான். எந்த நிலையில் நாம் எமக்கு வேண்டப்பட்டவர்கள் விஷயத்தில் தலையிட முடியும் என்பதுகூடப் புரியாமல் இருக்கின்றது.

"என் மீது உரிமை எடுத்துப் பழகுவதில்லை. வெறும் சடம்போலவே இருக்கின்றார். அன்பைக் கூட சரியாகக் காட்டுவதில்லை" என்று ஒரு பெண், தனது கணவனை விவாகரத்துக் கேட்டு வழக்குத் தொடர்ந்தபோது இவ்வாறு கூறினாள். கணவனும், மனைவியும் உரிமை கொண்டு பழகுவதை எமது கலாசாரம் அனுமதிக்கின்றது. எனினும் இவை புரியாதபோது, பிரச்சினை எழும்பும்போது, சற்று அவதானம் தேவைப்படுகின்றதே.

'நீ எதற்காகத் திருமணம் செய்ய ஆசைப்படுகின்றாய்' என்று ஒருத்தியைப், பத்திரிகையாளர் கேட்ட போது, அந்தப் பெண் கூறினாள்; "என்னை ஆக்கிரமிக்க, என்னைத் தன் அன்பில் அடக்க, என் இஷ்டம்போல் நான் வாழுவதைத் தடுக்க எனக்கு ஒரு உண்மையான ஆண் துணை தேவை" என்றாள். இது



ஒரு பெண்மையினை அவள் இழிவுபடுத்தக் கூறியது அல்ல. தனக்கு அன்பு காட்ட தனது இன்ப - துன்பங்களை அவன் தோள்மேல் போட அவள் ஏங்கும் ஏக்கமேயன்றிப் பிறிதல்ல.

காதல், அன்புக்கு முன்பு அதிகாரமும், ஆணவமும் எம்மாத்திரம்? பிறரைப் புரிந்து, தன்னையும் புரிந்து, எளிமையாக, கடுமைப் போக்கு இன்றி வாழுதலே ஒரு பெரும் கலையல்லவா?

தொடர்ந்து குற்றவியல் வழக்குகளில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களும், ஊதாரித்தனமாக ஊர் சுற்றுபவர்களும் கூட தமது செயல்களுக்குப் பெற்றோரே காரணம் எனக் கூறிவிடுகின்றனர். தங்களைக் கண்டிக்காமல் அவர்கள் விட்டுவிட்டதாகக் கூறுகின்றனர்.

அளவுக்கதிமாக உரிமைகள் வழங்கப்பட்டதாகக் கூறப்படுவதற்கும், உரிமைகளில் தலையிடுவதற்கும் இடையே உள்ள முரண்பாடுகளை நோக்குமிடத்து, சுதந்திரத்தின் பங்குதான் என்ன என்று கேட்கத் தோன்றுகின்றதல்லவா? உண்மை என்னவெனில்,

ஒவ்வொருவருடைய தன்மைகளுக்கேற்ப எமது நடைமுறைகளை மாற்றி அமைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்நடைமுறைகள் கூட நாட்டிற்கு நாடு வேறுபாடாக இருக்கின்றது. இவை தாம் பிறந்து வளர்ந்த நாட்டின் கலாசாரத்திற்கும் கூடச் சவால் விடுகின்றன.

இதன் பொருட்டு, 'பல பெற்றோர்கள் பிள்ளைகள் தம் தாய் நாட்டிலேயே கல்வி கற்க வேண்டும்; வளர்ந்து

RangaRakes Tamilnavarasam.com

நல்ல நிலையில் கட்டுப்பாடாக உருவாக வேண்டுமெனப் பிரியப்படுகின்றனர். இச்செய்தியை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.

தனது விடயத்தில் தலையிட்ட மகள் தமது பெற்றோருக்கு எதிராக பொலீசில் புகார் கொடுத்தார். பெற்றோர் பின்னர் மகளுடன் சமரசமாகி, தந்திரமாக மகளைத் தாய் நாட்டிற்கு அழைத்து வந்தனர். பின்னர் மகளை, அவரது பேத்தியாருடன் ஒப்படைத்து திரும்பிச் சென்றுவிட்டனர். குழந்தைகளின் உரிமையில் கூடப் பெற்றோர் தலையிட முடியாமைக்கு இச்சம்பவம் ஒரு நல்ல சான்றேயாகும்.

எனினும்,


நாகரீக வளர்ச்சியுற்ற உலகில் நாம் வாழ்ந்துதான் ஆக வேண்டும். எதிர்த்திசைப் பயணங்களில் அறிவின் முதிர்ச்சி பெற்றவர்கள் தோற்றுப் போய்விடுகின்றனர். பாசம் கூட இங்கு எடுபடுவதில்லை. சாதுரியமாகச் சமாளிக்க வேண்டியுள்ளது. சோர்ந்து போகத் தேவையில்லை. கொஞ்சம் அவதானம் தேவை; அவ்வளவுதான். உரிமைகளைக் கையாளுதல் கூட அத்தகையதே. எவரது இதயங்களையும் இடிக்கக் கூடாது. மாறாக, எல்லோரது இதயங்களும், புரிந்துணர்வுடன் தொடுக்கப்படல் வேண்டும்.

அன்பு உரிமை, பெரும் நன்மைதான்; புரிந்து கொள்வோம்.

✳

*- தினக்குரல், 10.04.2005*






*சற்றுமே சங்கோஜமின்றி, இங்கிரமின்றிப் பேசுபவர்களைக் கண்டால் தூர ஓடிவிட்டால் என்ன என்று எண்ணத் தோன்றுகின்றது. சமூகம் எங்களிடம், நாம் சமூகமாகப் பழகுதலையே எதிர்பார்க்கின்றது. இங்கிதமின்றிப் பழகுபவனை ஒருவருமே நேசிக்க மாட்டார்கள். நாம் சாதாரண நிலையில் இருந்தபடியே உலகைப் பார்க்க வேண்டும். வித்தியாசமான மனிதராக நடந்து கொள்ளக்கூடாது.*

---

பசியோடு இருக்கும் கூட்டத்தின் முன் பழங்கதைகள் பேசக்கூடாது. திருமண வீட்டிற்கு வந்து மரண வீட்டுச் சம்பவங்கள் பற்றி தருணமறியாது கதைக்கக் கூடாது. பரீட்சைக்குப் படிக்கும் மாணவன்முன், 'இது விஷப் பரீட்சை. படித்து என்ன கிழிக்கப் போகிறாய்' எனத் தர்க்கிக்கக் கூடாது.

RangaRakes Tamilnavarasam.com

சற்றுமே சங்கோஜமின்றி பிறரைச் சங்கடப்படுத்துகின்ற இங்கிதமற்றுப் பேசுபவர்களைக் கண்டால் தூர ஓடிவிட்டால் என்ன என்று எண்ணத் தோன்றும்.

சமூகத்தில் ஒருவரைப் பற்றி பிறர் எந்த நிலையில் அவரை வைத்திருக்கின்றார்கள் என்கின்ற கருத்தை அவர்களுடைய 'இங்கிதம்' என்கின்ற இயல்பினூடாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். மிகவும் நல்ல இயல்பினராகவும், உதவி புரிவதில் மிக விசாலமான மனத்தினராக இருந்தாலும் கூட இங்கிதமாகப் பேச, பழகத் தெரியாதுவிடின் இவர்கள் நாகரீகம் தெரியாத, அசூசைப் பிரகிருதிகளாகப் பிரகடனப்படுத்தப்படுவார்கள். கொஞ்சம் பொறுமையாக, நிதானமாகப் பழகப் பழகி கொண்டால், இங்கித இயல்பு தங்கு தடையின்றி வெளிக் கொணரப்படுமென அறிக.

இது போலியான, முகஸ்துதிக்கான குண இயல்பு அல்ல.

சமூகம் எங்களிடம், நாம் சுமூகமாகப் பழகுதலை எதிர்பார்க்கின்றது. நாம் எத்தகைய மன அழுத்தத்தில் இருக்கின்றபோதும் எம்முன்னே வருகின்ற நபர்களிடம் எங்கள் மனக் கொதிப்பினைக் காட்டுதல் எவ்வகையிலும் சரியானது அல்ல. எந்த நேரத்திலும் நாம் கொஞ்சம் அனுசரணையாகவும் நிதானமாகவும் எம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டால், தானாகவே மென்மையான சுபாவம் எமக்கு வசப்பட்டுவிடும்.



எந்த நேரத்திலும் இங்கிதமாகப் பழக முடியும் கனிவான நடத்தையினாலேயே காரியங்களை சரியாக நடத்த முடியும். பிறர் மனதைப் புரியாமல், எங்களையறியாமலேயே எந்த நேரத்தில் எப்படிப் பேசுவது எனத் தெரியாமல் சில பிரச்சனைக்குள் புகுந்தும் விடுகின்றோம். 'இடத்துக்குப் பொருத்தமாக உணரச் செய் எனப் பெரியோர் கூறுவர்.' சரியானபடி பேச முடியாது போனால் மௌனித்து விடுதலே மேலானது. எமக்குத் தொடர்பில்லாத புதிய இடத்தில் புகுந்து நியாயம் பேசுவது கூட இங்கிதமில்லாத செயல்தான். பல நேரங்களில் ஒருவரது குறைகளை அவர் எதிரிலேயே பிறர் முன்னிலையில், அவர் நெஞ்சம் புண்படும்படி பேசுகின்றோம். குறைகளைச் சொல்லித் திருத்தவும் ஒரு வழிமுறையுண்டு. தெரிந்து கொள்வோமாக!

பிறர் காரியங்கள், நடத்தைகள், பேசும் பாங்கினை உற்று நோக்கும் நாம் எங்கள் விஷயத்தில் அலட்சியமாக இருந்துவிடலாமா? பெற்ற மகன் பெரிய இடத்தில் வேலை செய்கின்ற போதும் கூட நீங்கள் அவரைக் காணப்போகும் போது, அட மகனே... என்று திடீரென உள் நுழையக்கூடாது. அந்தச் சமயம் அவர் உங்கள் மகன் என்றாலும், அவர் தொழிலுக்குரிய அதிகாரி. தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் நண்பர்கள், உறவினர் எனத் எத்தகைய தரங்களில் எவர் இருப்பினும், எங்கள் நடத்தைகளால் அவர்களைச் சங்கடப்படுத்தக் கூடாது. தனிப்பட்ட ரீதியில் பழகுதல் என்பது வேறு விஷயம்.

'இந்த மனுஷனுடன் பேசினால் இருக்கின்ற தலையீடு மேலும் கூடிவிடும்' என்று பலர் பேசுவதைக்

RangaRakes Tamilnavarasam.com

கேட்டிருக்கின்றோம். அந்த மனுஷன் நாங்களாக இருக்கக் கூடாது. நல்லபடி நயமாக நடந்தால், ஒருவன் பிறரால் தெம்பூட்டப்படுகின்றான். எல்லோரும் ரசிக்கின்றபடி நடந்தால் எவரையும் அன்பால் அசைக்க முடியும்.

நாம், வேண்டப்பட்டவர்களுக்கு ஒரு உதவியை செய்ய முடியாத சந்தர்ப்பங்களும் உருவாகலாம். சொல்ல வேண்டிய முறையில் சொன்னால் அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள். முகத்தில் அடிப்பது போல் என்னால் இது முடியாது என்று சொல்வதிலும், பார்க்கச் செய்ய முடியாமைக்கான காரணத்தையும் முடிந்தால் கூறி, அவர்களது கோரிக்கை தொடர்பான சாதக - பாதகங்களையும் கூறலாம். பிறர் அகத்தை அதட்டும் தொனியில் பேசுவது, முன்னர் நீங்கள் அவர்களுக்குச் செய்த உதவிகளைக் கூட, அவர்களை மறக்கடிக்கச் செய்வது போலாகும். நல்லவர்கள் பொல்லாப்புக் கேட்பது கூட இவ்விட நடத்தைகளாலேயாகும்.

ஏனையோரின் தவறுகளை, அவர்கள் பற்றி அவதூறாகப் பேசப்படுவதைச் சுட்டிக் காட்டுவதற்கும் பல வழிகள் உண்டு. எமக்கு நாமே மேதாவிப்பட்டம் சூட்டிக் கொண்டு பஞ்சாயத்துப் பேசலாமா? எங்கள் தோரணை கலந்த வார்த்தைகள் பிறர் பார்வையில் வறட்சியாக, வீண் முரட்டுப் பேச்சாகி மூச்சிழந்துவிடும். சிக்கலான விஷயங்களை, நாசூக்காகப் பேசி, உட்புகுத்தல் வேண்டும். பதட்டப்படாமல் பக்குவமாகப் பேசு என்பார்கள்.

மிகவும் துன்பமான விஷயத்தையும், சந்தோஷகரமான செய்தியையும் ஒரே தொனியில் சொல்லிவிட முடியுமா?



சொல்ல வேண்டிய சங்கதிகளைப் பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டுமாயின் இங்கிதமாக, நாசூக்காகப் பேசியாக வேண்டும். இங்கு அதிகாரமும் ஆணவ நடத்தையும் செல்லுபடியாகாது.

மிகவும் உயர்ந்த மட்டத்தில் உள்ளவர்களின் வெற்றிக்குக் கூட இயல்பாகப் பழகும் தன்மைதான் பிரதான காரணமாக அமைகின்றது. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவர்களின் தரம் தருணத்தில் அவர்களது காலை வாரிவிடும். பொதுவாகப் பாமர மக்கள் நகரத்தில் வந்து, அப்பாவித்தனமாகப் பேசுவதைக் கிண்டலடிக்கும் காட்சிகளை நாம் திரைப்படங்களில் பார்த்திருக்கின்றோம். அவர்களது இயல்பான சில பழக்கங்களை நாம் புரிந்து கொண்டால் இது எமக்குத் தவறாகத் தெரியாது. வெளி உலக நடப்புகள் பற்றி இவர்கள் அதிகம் புரியாமல் இருந்தாலும்கூட மனிதாபிமானத்தில் இவர்கள் மேலானவர்களே. எனவே,

நாம் கண்டு கொண்டிருக்கின்ற நபர்களுக்கேற்ப கதைத்துப் பேச தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். எங்கள் முன் சற்று இசகுபிசகாகப் பேச முற்பட்டால் எங்கள் வார்த்தைப் பிரயோகங்களால் நாமும் அவர்களைப் புண்படவைத்தால் ஒன்றும் பயன் கிடைக்கப்போவதுமில்லை. கைக்கு வரவேண்டிய நன்மைகள் எங்கள் கனிவான, இங்கிதமான மொழிகளிலேயே தங்கியுள்ளன. வார்த்தைகள் கூட வற்றாத செல்வங்கள் என்பதை அறிவோமாக.

RangaRakes Tamilnavarasam.com

எள்ளி நகையாடும் பழக்கம் கூட மெள்ள மெள்ள மனிதர்களிடம் இருந்து அந்நியப்படுத்திவிடும். புரிந்து கொள்வோம்.

பத்துப் பேர் எங்களை மதிக்க வேண்டும் என்கின்றோம். தனித்திறமைகளை நாம் எப்படி வளர்த்துக் கொண்டாலும் கூட பிறரிடம் அது செல்வாக்குப் பெற வேண்டும். உங்கள் திறமைகளில் ஏதாவது சிறுபகுதி மக்களுக்குப் பயன் பெற வேண்டாமா? இங்கித இயல்பினைச் சொந்தமாக்குங்கள். உங்களைச் சுற்றிப் பத்துப் பேர் சூழ்ந்து கொள்வார்கள். கொஞ்சம் பரீட்சித்துப் பாருங்கள்.

எம்மை நாமே மெச்சி, பிறரைக் கண்டு கொள்ளாமல் விடுவது எங்கள் வளர்ச்சியை நாங்களே அறுத்துக் கொள்ளும் செயலாகும். பணமும், பகட்டுமே எங்களைச் சுற்றி நின்றால் போதும் என்று கருதுபவர்களிடம் இங்கிதமான சுபாவத்தினை சுவீகரிக்க இயலுமா?

முதலில், நாங்கள் இயல்பான, சாதாரண நிலையில் எங்களை வைத்துக் கொள்ள வேண்டும். எமது பார்வை மக்களோடு இசைவாகக் கொள்ள வேண்டும். பேசுகின்ற சில நிமிடத்துளிகளிலாவது எங்கள் பிரச்சனைகளை அப்புறப்படுத்திவிட்டு வருகின்ற நபர்களை முதன்மைப்படுத்துவோம். உங்களோடு நீங்கள் பேச எவ்வளவோ நேரம் இருக்கின்றது. தனித்திருக்கும் போது, மனதை விழிக்க வைத்து உங்களுக்கு உள்ள சகல பிரச்சினைகளையும் உரித்தெடுக்க முயற்சி செய்யலாமே. எங்களைப் பற்றி எமக்குள்ள பார்வைகளை நிதானமாக,



சரியாக வைத்துக் கொள்வோம். அப்போதுதான் எங்கள் மனது கனிவாகும். கனிவான மனது இருந்தால் செயல்கள் இங்கிதமாக மிளிரும்.

பிறர் சந்தோஷங்களுக்காகவே நாங்கள் பிறந்தோம் என அடிக்கடி நினைவு கொண்டால் ஆத்மார்த்தமாக எமக்குள்ளே ஒரு பூரிப்பினைப் பெற்றவர்களாவோம்.

எனவே, சந்தோஷப் பறவைக்கு இங்கிதச் சிறகுகளைப் பூட்டுவோம்.

– தினக்குரல்

RangaRakes Tamilnavarasam.com




*ஒவ்வொருவருமே, தமக்குச் சாதகமான சட்டங்களை வகுத்து வாழ முடியாது. சட்டத்தை நாமே கையில் எடுக்கவும் கூடாது. நாடுகளிடையே பேணப்படும் சட்டதிட்டங்கள் பொதுவானவையாக இருப்பதனாலேயே, அங்கு ஒழுங்குமுறைகளும் கடைப்பிடிக்க இலகுவாகின்றது. நீதியான சட்டங்களின் நன்மைகள் எல்லோருக்குமே கிட்ட வேண்டும். நியாய, நீதியாக எல்லோருமே வாழ்ந்து வந்தால் நீதிமன்றங்கள் தான் எதற்கு?*

---

மக்கள் குற்றமிழைக்காது சட்டப்படி நடந்து கொள்வதை உறுதி செய்யவும், இயற்றப்பட்ட சட்ட விதிகளை மீறாதபடி கண்காணிக்கவுமே சட்டத்துறை உருவாயிற்று. ஆனால், இன்று சட்டத்தில் எத்தனை ஓட்டைகள் உண்டு. எப்படி செய்த குற்றங்களில் இருந்து தப்பித்துக் கொள்ள அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என மூளைசாலிகள் யோசித்துக் கொண்டும் செயலாற்றிக்



கொண்டும் அதில் வெற்றி கண்டும் வருகின்றார்கள். சாதாரண பாமரன் இந்தத் தில்லுமுல்லு வேலைகள் பற்றி அறிந்திருக்க மாட்டான். படித்தவர்கள்தான் இந்தக் கைங்கரியத்தைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். குற்றம் இழைத்தவர்களும், சில சுரண்டல் பேர்களும் காசு கையில் வந்தவுடன் இந்தச் சட்டம் பயின்றவர்களிடம் போய் சரணடைந்து, சேர்த்து வைத்திருந்தவைகளைக் கொட்டி அளக்கின்றார்கள்.

மொத்தத்தில், அறிவு பெறுதல் அநியாய முயற்சிக்காகவா என்று கேட்கத் தோன்றுகின்றது. இவை எல்லாம் நல்லதற்குத்தானா? சட்டங்கள் இயற்றப்படும் போதே, அவற்றின் பலவீன அம்சங்களைத்தான் இவர்கள் தேடுவார்களே ஒழிய, நீதி நிலைநாட்டப்பட வேண்டியமையின் அவசியத்தை உணரத் தலைப்படுவது கிடையாது. ஆதாயம் பெற அநியாயங்களுக்கு ஆட்படலாமா? சட்டம் என்பது நீதியை நிலைநாட்டல் என்பதற்காகவேயன்றி வேறு எந்த உள்நோக்கங்களுக்காகவுமானதல்ல. அது நீதியின் பாதுகாப்புக் கவசம். உலகை ஒழுங்காக இயங்கவைக்கும் சாதனம்.

ஒவ்வொரு நாட்டின் அரசும் தனது வசதிக்கேற்பவும், தேச வழமைக்கேற்பவும் சட்டங்களை அமைத்துக் கொள்கின்றது. அனைத்து அரசுகளுமே சமனான, ஒத்த நோக்குடைய நீதியான எண்ணங்களைப் பிரதிபலிப்பன எனச் சொல்லிவிட முடியாது. தமக்குச் சரியானது எனச் சொல்லி அதன்படி ஒழுகுமாறு மக்கள் கேட்கப்படுகின்றார்கள்.

நீதி அமைப்பு மாறும்போதுதான் ஒழுக்கம், சமூகக் கட்டமைப்பு என்பன சிதைவுறுகின்றன. எப்படியும் வழக்குப்

RangaRakes Tamilnavarasam.com

பேசி ஜெயித்து விடலாம் என்கின்ற மனோநிலை குற்றமிழைப்பவர்களை மட்டுமல்ல, சாதாரணமான, நியாயப்படி நடக்கும் சிலரது மனோநிலையையும் சலனமடையச் செய்கின்றது. இனத்திற்கு இனம், மொழிக்கு மொழி, ஏன் ஜாதிக்கு ஜாதி என்கின்ற பாகுபாட்டிலேயே நீதியமைப்பு, சட்டங்கள் உலகம் பூராவும் உருவாக ஆரம்பித்துவிட்டன. வெளிப்பார்வைக்கு மட்டும் இந்தப் பாகுபாடுகள் தோன்றாமல் பூசி மெழுகிவிடப்படுகின்றன. சாதிப் பாகுபாட்டு பட்டியலே இந்தியாவில் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். உயர்வகுப்பு சாதியினரின் ஒடுக்குமுறையினால் இவை எல்லாம் உருவாயின எனச் சொல்லப்படுகின்றது. சாதி அடிப்படையில் கட்சிகள் அமைக்கப்படுவதும், மன்றங்கள் திறக்கப்படுவதும் அங்கு சர்வ சாதாரணமாகிவிட்டன. ஒத்தநோக்கு, ஒருமைப்பாடு என்கின்ற பார்வை, பேச்சு எல்லாமே ஒரு கண்துடைப்பு போலவே படுகின்றது. இவை எல்லாம் நடைமுறைக்கு ஒத்துவராது என்று மக்களில் பலர் கருதுகின்றார்கள்.

மக்கள் தொகை கூடக்கூடப் பிரச்சனைகளும் கூடும். பல்வேறு குழுக்கள் பிரிந்து தத்தமக்கு என பல்வேறுபட்ட அமைப்புகளை உருவாக்குகின்றன. இவை கொஞ்சம் செல்வாக்குப் பெற்றுவிட்டதுமே சலுகைகள், பதவிகளைக் கைப்பற்றி ஆட்சியில் இடம் பிடிக்க முனைகின்றன. இவை ஆரம்பத்தில் மெதுவாகத் தலையை நுழைத்து, பின்னர் வலுவாகக் கால் ஊன்றி மிக அந்தரங்கமான, நுணுக்கமான சட்டவிரோத, தில்லுமுல்லுகளில் ஈடுபட்டு நாடுகளையே குட்டிச் சுவராக்குகின்றன. மக்களுக்கு இவை தெரிவதில்லை. கிளர்ச்சியூட்டும், போதையூட்டும் பேச்சுக்களால் மக்களை ஆவேசப்படுத்தி, நினைத்த



காரியங்களை நிறைவேற்றிக் கொள்கின்றன. இவர்கள் மீது எந்தவித சட்ட நடவடிக்கைகளுமே எடுக்க முடிவதில்லை. எடுத்தாலும்கூட எப்படியோ தப்பிக் கொண்டு விடுகின்றன. ஆட்சியில் உள்ளவர்களுக்கு அநியாயம் புரிகின்றவர்களது தயவு தேவைப்படும் வரை எந்த நாட்டிலுமே சட்டத்தினைப் பூரணமாக அமுல்படுத்திவிட முடியுமா? சாதாரண பாமரன் பத்து ரூபாய் திருடினால் பத்து மாதம் சிறைக்குப் போகின்றான். ஆனால் செல்வாக்குள்ளவர்கள் கோடி கோடியாய்க் கொள்ளையடித்தாலும் சிறையில் கம்பி எண்ணிக் கொண்டா இருக்கின்றார்கள்? சட்டம் இந்த அநியாயத்தைப் பார்த்து மௌனமாகக் கண்ணீர் விடுவதைத் தவிர, வேறு என்ன செய்ய முடியும் என எண்ணத் தோன்றுகிறதல்லவா?

சட்டம் குற்றங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டு விடுவதில்லை. சகல குற்றச் செயல்களுக்குமே கடுமையான தண்டனைகள் உண்டு. குற்றமிழைக்கும் பெரிய திமிங்கலங்களை விடுத்து, குஞ்சு மீன்களை பிடிப்பதுதான் எங்குமே நடைபெறுகின்றது. இந்தச் செயல் சட்டத்தின் குற்றம் அல்ல. சட்டவிரோதப் பெருஞ்சாளிகளைச் சுற்றி மக்கள் சுற்றுவதைத் தவிர்ப்பதன் மூலமே, சட்டத்தை மக்கள் காப்பாற்ற முடியும்.

நீதிமன்றத்தில் நிறுத்தப்படும் குற்றவாளிகள் பற்றி நீதிமன்றமே முடிவு எடுக்கின்றது. இங்கு இருசாராரின் நியாயங்கள் கேட்கப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றன. எனினும், ஒருவன் நிச்சயமாகக் குற்றம் செய்தவன் என அறிந்தும்கூட அவர் பொருட்டு ஒருவர் வாதாடுவதும், அதற்காக இல்லாத பொல்லாத பழிகளை மற்றவர்மீது

RangaRakes Tamilnavarasam.com

சுமத்திப் பேசுவதும் என்ன நியாயமோ தெரியவில்லை. இச் செயல் நீதிக்கே விடுக்கப்படும் சவால் போல் அல்லவா படுகின்றது? அண்ணல் மகாத்மா காந்தியடிகள் தமது வழக்கறிஞர் தொழிலையே தமது நேர்மையுடன் பொருந்திவராது எனத் தோன்றியதால் கைவிட்டு விட்டார் என்பதை அனைவருமே அறிவர். நீதியை மட்டுமே வலியுறுத்தும் வழக்கறிஞர்களின் மதிநுட்பம், வாதத்திறமைகள் தப்புச் செய்தவன் தப்பித்துக் கொள்ளவே வழி செய்வதாக அமையலாமா? குற்றங்கள் மறைப்பதற்கும், மறுக்கப்படுவதற்கும் நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதில்லை. இவை புனித ஸ்தலங்கள் போல் கணிக்கப்படுகின்றன. விசாரணைகள் என்பது, செய்த குற்றங்களில் இருந்து விடுபடுவதற்கல்ல. குற்றவாளிகள் குறுக்கு வழியில் தப்பித்துக் கொள்வதற்குமல்ல. சட்டவாதிகளின் அங்கிகளுக்குள் நீதியும் ஒளிந்து கொள்ளக் கூடாது. வசதி படைத்தவன் சட்டத்தை இசைவாக்கினால் இல்லாதவன் நீதியை எங்கே தேடி ஓடுவது? குற்றங்களைக் கண்டுபிடித்தலும் அவைகளை இல்லாதொழித்தலும், குற்றங்களுக்கான தண்டனை பெறச் செய்தலுமே நீதித் துறையின் முழுக் கடமையும் பொறுப்புமாகும். மக்களின் பங்களிப்பு இன்றி இவைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றி விடமுடியுமா என்ன?

எல்லோருமே தமக்கும், தமது குழுக்கள், கட்சிகளுக்கும் எனத் தனித்தனியே சட்டங்களை இயற்ற முடியாது. எனவே முழு நாடுமே தமக்கு என பொதுச் சட்டங்களை உருவாக்கி, நீதியை ஒருமுகப்படுத்துகின்றன. ஒரே பாதையில் செல்லும் பயணமே இலகுவானதும், சரியானதுமாகும். எனவே, சட்டத்தின் பயன் சகலருக்குமே



கிட்ட வேண்டும். சட்டத்துறை என்பதே பெரிய இடத்துச் சமாச்சாரத்திற்கு என நினைத்து, பாமரர்களுக்கு அதன் பயன்கிட்டாது போய்விடக்கூடாது. சாதாரண நடுத்தர, வறிய குடும்பத்தைச் சேர்ந்த சகலருமே இதுபற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்வதுடன், இவை தொடர்பான கற்கை நெறியிலும் பிரவேசிக்க வேண்டும். முன்னர் எல்லாம் வசதி படைத்தவர்கள் மட்டுமே சட்டக்கல்வி பயின்று வந்தார்கள். இதனால் இவர்களிடம் ஒரு மேலாதிக்க நிலை இருந்து வந்திருந்தது. இவர்களே அரசியலில் குதித்து எழுச்சி பெற்றார்கள்.

ஏற்கனவே எளியவர்களை நசுக்கி, ஒடுக்கிவிடும் சுபாவம் உள்ளவர்களிடம் சட்ட அறிவு கிடைத்தால் கேட்கவா வேண்டும்? ஊரில் உள்ள மக்களிடையே கலவரங்களைத் தூண்டிவிடவும் இந்தக் குட்டைக் குழப்பும் காரியங்களால் தங்கள் சொத்துக்களைப் பெருக்கவுமே வழி அமைத்துக் கொண்டனர். இப்படிப்பட்ட ஒரு சிலர் அரசியலில் புகுந்து கொண்டதாலேயே நிலைமை மேலும் மோசமடைவதாக அமைந்தது எனலாம். இது உலகம் முழுவதிலுமே நடைபெற்ற, நடந்து கொண்டிருக்கும் சங்கதிகள்தான். மக்களிடமிருந்த தலைமைப் பொறுப்புகளைத் தாமே பிடுங்கி எடுக்க சட்ட ஞானத்தை ஆயுதமாகப் பயன்படுத்தியும் கொண்டனர்.

ஆனால், இந்த நடைமுறை ஏமாற்றுவேலைகள் தற்காலச் சூழலில் பொருந்திவரப் போவதில்லை. இன்னும் சகல தரப்பு மக்களுமே சட்டத்துறையில் நாட்டமுற்று, கல்விகற்று முன்னணிக்கு வந்துவிட்டனர். எளிதாகவே தமக்குரிய சட்ட ஆலோசனைத் தேவைகளைப் பெற்று வருகின்றனர். பெரிய குடும்பத்துப் பின்னணியில்தான்

RangaRakes Tamilnavarasam.com

சட்டம் படிக்க, தெரிய முடியும் என்ற நிலை இல்லை. ஆயினும், சட்டம் பற்றிய முழு விழிப்பு இன்னமும் பெறப்படல் வேண்டும். இதன் மூலம் பெறப்படும் பூரண பயன்பாட்டை இவர்கள் அடைதல் வேண்டும். நீதியில் மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். நாங்கள் நீதியாக ஒழுகாதவரை, பிறர் மீது நீதியை எதிர்பார்த்துவிட முடியுமா? ஒவ்வொரு தனிமனிதனும் நீதியை மதித்து ஒழுக வேண்டும்.

எப்படியும் வாழ்ந்து, எப்படியும் ஜெயித்து விடுவோம் என்று எண்ணாது, சட்ட வரையறுக்குள், ஒழுக்க வரம்பிற்குள் வாழுதல் வேண்டும். ஒழுக்கம் என்பதே சட்டம் காட்டும் வழிதானே? ஒழுக்கத்தை வலியுறுத்தி, கட்டுப்பாட்டின் கழக நெறியை உருவாக்கத்தானே சட்டம் உருவானது. இது மக்களை வருத்த அல்ல. அன்றியும் மக்களை அடிமைப்படுத்தவும், அச்சுறுத்தவும் அல்ல. தனிமனித சுதந்திரங்களையோ, சமூகச் சுதந்திரங்களையோ சட்டம் பறிப்பது என்ற பேச்சிற்கே இடமிருக்கக் கூடாது. இதன் பார்வை நேரியது; கூரியது. சரியாக நடந்து கொள்பவர்கள் இதைக் கண்டு அச்சமடைவதில்லை. உப்பைத் தின்றவன்தான் தண்ணீர் குடிப்பான். முழு உலகுமே நீதியின் வழி சென்றால் நீதிமன்றங்கள், காவல் துறைதான் எதற்கு?

சட்டம் - கட்டுப்பாடான சமூகக் கோட்டையைச் சமைக்கும். சட்டத்தை மதிக்கத் தெரிந்தவரை, கட்டுப்பாடுகளும் வாழ்க்கை நெறிமுறைகளும் திசை தொலைந்து அலைவதில்லை.

✱

- *தினகரன்*

RangaRakes Tamilnavarasam.com

# உண்மை சாஸ்வதமானது

பருத்தியூர் பால. வயிரவநாதன்

*வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 01*

*சிந்தனைக் கட்டுரைகள்*

RangaRakes

Tamilnavarasam.com

# பொருளடக்கம்


1. பலவீனங்கள் பலமாகுமா? ........ 17
2. அனுசரித்து போதல் அடங்கிப் போதல் அல்ல! . 22
3. பாராட்டுதல் ஒரு சுக அனுபவம் ........ 27
4. அழகு என்பது ........ 32
5. நம்பிக்கையும் நம்பிக்கையின்மையும் ........ 36
6. உண்மை சாஸ்வதமானது ........ 41
7. சுய பாதுகாப்பு ........ 46
8. விசித்திரமான மனங்கள் ........ 51
9. காதலைப் புரிந்தவன் மௌனமாகின்றான் ........ 55
10. தெரியாமை வேறு அறியாமை வேறு ........ 62
11. மனிதத்துவ மாண்பு ........ 68
12. முடிவு எடுத்தல் ........ 72
13. வெற்றி பெற வழி சமைப்போம் ........ 76
14. முதுமை ஆற்றாமையல்ல ........ 81
15. அச்சமின்மையும் அறிவார்ந்த செயற்பாடும் ........ 86
16. பாலுணர்வும் பண்பும் ........ 90
17. நட்பு ........ 99
18. குற்றம் காணுதல் ........ 105
19. தியாகம் ........ 112
20. உலகை உருவாக்கித் தரவல்ல உயர்சக்தி கல்விதான் 117
21. மனநோயாளரை மனிதராக நடாத்துவோம் ........ 126
22. மன்னித்தல் தெய்வீகம் ........ 133
23. அன்புடன் பேசிப் பழகுக ........ 138
24. பிள்ளைகளும் ஒழுக்கமும் ........ 143
25. மனையாள் இணையில்லா சொத்து ........ 149
26. தனிப்பட்ட வாழ்க்கையும் சமூக எதிர்பார்ப்புகளும் 155
27. அவசரம் அநாவசியம் ........ 162
28. நடிப்பும் நிஜமும் ........ 167




# வாழ்வியல் வசந்தங்கள்

## பலவீனங்கள் பலமாகுமா?



உங்கள் பலவீனங்களால் இன்னும் ஒருவர் பலமடைய அனுமதிக்காதீர்கள். ஒருவர் பலவீனத்தில் உரம் தேடுபவர்கள் நிச்சயமாக, அவர் சம்பந்தப்பட்ட மற்றவருக்கு உதவுபவராக இருக்கமாட்டார். ஒருவரது ஆற்றாமை மற்றையோர்க்குத் தெம்பூட்டுபவையாக அமைவது எவ்வளவு பரிதாபகரமானது!

இதில் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில், எமது பலவீனத்தை நாம் கண்டு கொள்ளாமல் இருப்பதுதான். சரி, அதை அறிந்த ஒருவர் நம்மீது கொண்ட அக்கறையுடன் சுட்டிக் காட்டினாலும் நாம் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதில்லை.

இதுவும் ஒரு ஆணவ முனைப்புத் தானன்றி வேறில்லை.

(-மாறாக -

RangaRakes

Tamilnavarasam.com

அவர் மீது நாம் கோபித்துக்கொள்ளுகின்றோம்; அவர் உறவே தேவையில்லை எனத் துண்டித்துக்கொள்ளக்கூட ஆயத்தமாக இருக்கின்றோம். உதட்டில் சிரித்து, உள்ளுக்குள் கறுவிக் கொள்கிறோம். வீட்டில் நெருங்கிய உறவினர்கள், ஏன் - பெற்றோர் மனைவி, பிள்ளைகள் ஏதும் சரி என அறிந்து கூறினாலுங்கூட, கேட்கத் தயாராக இருக்கின்றோமா? இல்லையே...

உண்மைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாதவரை பிரச்சினைகளும் தொடர்ந்து வந்து கொண்டுதானிருக்கும்.

எமக்குள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்வதில் என்ன குறைவு வந்துவிடப் போகிறது?

பலவீனம் என்கின்ற குணாம்சம் பொதுவானது.

இது பல்வேறு வடிவங்களில் ஒவ்வொருவரிடமும் ஒட்டிக் கொண்டிருக்கும். இது இருக்கும் சிலர் அதனைத் தமது பலமாகக் கருதி தவறாக பெருமிதப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு பொய்யான மயக்கமின்றி வேறென்ன?

“எனக்கு கோபம் வந்தால், எல்லோரையும் தொலைத்து விடுவேன் தொலைத்து. என்னை என்னவென்று நினைத்துவிட்டீர்கள்” என்று ஆரம்பித்துக் கொச்சையான பாஷைகளில் சிலர் திட்டுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இவர்களுக்கு மனதுள் ஒரு மமதை.

> எங்களது பலவீனங்களை, நாங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். உண்மைகளை ஏற்றுக் கொள்ளாதவரை பிரச்சினைகள் தொடரவே செய்யும். பலவீனங்களை உணர்ந்தாலே போதும். அப்புறம் நாம் படிப்படியாக அதனில் இருந்து மீண்டுவிட முடியும். எமக்குள்ள குறைபாடுகள், பலவீனங்களை சதா நினைந்து மேலும் குறைபாடு உள்ள மனிதராகப் பலமிழந்து போகக்கூடாது. மனதை மடக்கும் சிந்தனைகளுக்கு இடமளிக்காது, தடைகளை உடைப்பதே வெற்றிக்கு வழி.



‘எனது கோபம்’ என்கிற ஆயுதம், என்னமாய் வேலை செய்கிறது! எனக்கு, எல்லோரும் பயப்படுகின்றார்கள். என்னைவிட்டால், வேறு யார் இருக்கிறார்கள், எனத்தவறாக, தமது பலவீனமான கோப உணர்வை தம் அதீத சக்தியாக எண்ணி, தம்மைத்தாமே மெச்சிக் கொள்ளுகிறார்கள். இதேபோல் -

‘பயம்’ என்கிற பலவீனம்;

சஞ்சலம் என்கிற பலவீனம் (இது மனக்குழப்பத்துடன் கூடியது);

சபலம் என்கிற பலவீனம்;

சலனம் என்கிற பலவீனம் -

இவை போன்ற தேவையற்ற குணாம்சங்கள், பல கிளைகளாக விரிவடைந்து, தனி மனிதனைத் துவம்சம் செய்கின்றன.

இதன் பாதிப்போ சூழ இருப்பவர்களை வேதனைக்குள்ளாக்குகின்றது. இவைகளை இல்லாமல் செய்வது என்பதே மனிதனுக்குள்ள தலையாய பிரச்சனையாகும்.

தேவையற்ற பலவீனங்கள்கூட ஒரு மாறாத தலைவலியாக சுமையாக, அவனை அமுக்கிவிடும். இந்த நிலையை மற்றவர்கள் ஆயுதமாக்கி, அவனை மடக்கி வென்று விடுகிறார்கள்.

எனவே நாம் எம்மைப் பற்றிப் புரிந்து கொள்ளவேண்டும். பிறர் எம்மைப் பற்றிக் கூறும்போது, இது சரியா? பிழையா? என நாம் எம்மையே கேட்டு, எம்முள் எம்மைப் பற்றிய ஒரு சுய விமர்சனத்தை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். அவர்கள் சொன்னது சரி எனப்பட்டுவிட்டால், அதை அப்படியே வெட்கப்படாமல் ஏற்றுக் கொண்டு, எம்மை நாம் மாற்றி அமைக்க முயலவேண்டும்.

RangaRakes Tamilnavarasam.com

இத்தகைய ஏற்றுக் கொள்ளும் இயல்பினை வளர்க்க, உகந்த மனப்பக்குவத்தினை படிப்படியாகப் பெற்றேயாக வேண்டும். இது கொஞ்சம் சிரமமானதுதான் என்றாலும் எம்மால் முடியாத ஒன்றில்லை.

நாம் போற்றும் பெரியார்கள், மகான்கள் பலரும் சாதாரண மனிதர்களாக இருந்தே, மகான்கள் ஆனார்கள். அவர்களிடமும் குறைபாடுகள் இல்லாமல் இருந்ததில்லை.

எனினும் - அனுபவ ஞானம், பொறுமை, ஆழமான அறிவுத் தெளிவு, உண்மைகளை ஏற்கும் பண்பு, புலனடக்கம் போன்ற இயல்புகளால் தம்மிடமுள்ள குறைபாடுகளை உடைத்தெறிந்தனர்.

ஒரு மாபெரும் தத்துவஞானியைப் பார்த்த சோதிடர் ஒருவர் 'நீர் காம வயப்பட்ட மனிதராக இருந்தீர்' எனக்கூறிய போது, பக்கத்தில் இருந்த சீடர்கள் கோபம் கொண்டனர். அதைக் கண்ட ஞானி, அவர்களை அமைதிப்படுத்தி, வெகு சாந்தமாக, சகலரையும் நோக்கினார். பின் சோதிடரைப் பார்த்து, 'நீங்கள் கூறியது மிகவும் சரியானதே. நான் இவ்வியல்பினை என் கூரிய அறிவினால் வென்றுவிட்டேன்' என்று கூறினாராம். இந்த ஒப்புக் கொள்ளும் மனப்பக்குவம், ஞானிகளுக்கே உரித்தான தனிச் சிறப்பாகும். இத்தகைய ஞானிகள் பலவீனங்களைப் புரிந்து கொண்டவர்கள் மட்டுமல்ல; அனுபவ ரீதியாக உணர்ந்து, தெளிந்தும் கொண்டவர்கள். இதனால்தான் அவர்கள், எவரையும் மன்னிக்கும் இயல்பினையும் கொண்டிருந்தனர்.

ஆனால் நாமோ, எம்முள் குறைகளை வைத்துக்கொண்டு மற்றவர் மீது காட்டுதல் செய்கின்றோம். இதனால் நாம் தப்பிக்கப் போவதுமில்லை. ஏன் எனில் எமக்கு நாமே பொய் உரைத்தல் முடியாது.



ஆயினும் எமக்குள்ள குறைபாடுகள் பலவீனங்களை மட்டும் சதா நினைந்து மேலும் குறைபாடுள்ள மனிதனாக, பலமிழந்து போகக்கூடாது. இவைகளை மீறி, தடைகளைத் தாண்டி, வெற்றிப்பாதையுடன் கூடிய முன்னேற்றத்துடன் நடைபோட வேண்டும். மனதை மடக்கும் சிந்தனைகளுக்கு இடமளித்தல் கூடாது.

எம்மை நாம் வசப்படுத்திக் கொள்ளப் பழகவேண்டும். எம்மை மீறி நாம் எச்செயலையும் ஆக்க இடமளிக்கக்கூடாது.


விதியைச் சொல்லித் தப்பித்துக் கொள்ளவும் கூடாது. குருட்டுச் சமாதானங்கள், அர்த்தமற்ற விதண்டாவாதங்கள், சதா நம்பிக்கையீனமான மனோபாவங்கள், இவை யாவும் செயல் திறன்மிக்க மனிதர்க்கு அழகுமல்ல.

நாம் ஒவ்வொருவருமே செயல் திறன் மிக்க வீரர்களே. இது சாத்தியமாக முடியாத ஒன்றல்ல. இதில் என்ன சந்தேகம் வேண்டியிருக்கின்றது?

*தினக்குரல் - 06.08.2000*

RangaRakes Tamilnavarasam.com

# அனுசரித்துப் போதல் அடங்கிப்போதல் அல்ல



அனுசரித்துப் போதல் என்பது அடங்கிப் போதல் அல்ல. இது விட்டுக் கொடுத்தலின் வெளிப்பாடு. விட்டுக் கொடுத்தல் என்பது ஒரு விடயத்தில் மற்றையோருக்கு நாம் செய்யும் உபகாரங்கள் என்று கூடச் சொல்லலாம். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்கள், கொள்கைகள் இருக்கும். கொள்கை, கோட்பாடுகளைக்கூட தமக்கென வகுக்க ஒருவருக்கு உரிமையுண்டு. இது ஒருவனுடைய உள்ளார்ந்த சுதந்திரம். ஒருவனுடைய நினைப்பில் நாம் தலையிட முடியுமா? அவன் நினைப்பதை நாம் கண்டு கொண்டுவிடத்தான் இயலுமா? ஆனால் ஒவ்வொருவனும் தான் நினைப்பதை எண்ணியவண்ணம் வெளிப்படுத்தல் என்பது நடைமுறை சாத்தியமும் இல்லை. அப்படியே வெளிப்படுத்தப் புகுந்தாலும் வேறு பற்பல பிரச்சனைகள் பூதாகாரமாக வெடித்துவிடவும் கூடும். எனவே நாம் நினைத்ததை உடன் நடத்திவிட முடியாத சூழ்நிலையை நாம் வாழும் சமூகம் உருவாக்கிவிட்டது. இதன் சரி, பிழைகளை ஆராய்தல் என்பது ஆய்விற்குரிய வேறு விடயமாகும்.



உண்மை நிலைதான் என்ன? எம்மால் ஏன் எதையுமே நினைத்தபடி செய்ய முடியாது.

உலகில் உள்ள சட்டதிட்டங்கள், சமூகங்களுக்கிடையேயான நெறிமுறைகள், கட்டுப்பாட்டு வரையறைகள், ஒழுக்க நெறியுடன் இயைந்த இதர அம்சங்கள் அனைத்துடனும் பின்னிப்பிணைந்து வாழுகின்றோம். இதுவே உலகியல் வாழ்வுமுறை. இவை அனைத்திற்கும் ஈடு கொடுத்தே மனிதன் வாழ்ந்தாக வேண்டும். அவன் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற விதத்தில் தன்னை ஆக்கிக்கொள்கின்றான். சமூகம் இன்றேல் அவன் இல்லை; அவனால் தனித்து இயங்க முடியாது.

முதலில் தனிமனிதன்; பின்னர் குடும்பம்; பின்னர் தன் கிராமம், நகரம், நாடு, உலகம் - என அவன் வியாபித்து, தன்னைப் பரந்த உலகிற்கு இட்டுச் செல்கின்றான்.

எனவே அவனது விருப்பு, வெறுப்புக்கள் அனைத்துமே ஒன்றுக்கொன்று இணைந்துபட்டுத் தொடர்புகளை வலுப்படுத்துகின்றன. அவனது, விருப்பு, வெறுப்பு, கடமைகள் போன்றவை உலகியலுடன் தொடர்புற்றனவையாகவே அமைந்தும் விடுகின்றன.

எனவே நாம் சூழ்நிலைக்கேற்ற விதத்தில் எம்மை நாம் மாற்றியேயாக வேண்டும். இம்மாற்றங்கள் யாவும் எமக்குத் தெரிந்தும், புலனாகாதவாறும் எம்மை மாற்றியமைக்கும். இது ஒரு

> முரண்பாட்டிலும், உடன்பாடாக வாழ்வதுதானே வாழ்க்கை. எதிர்ப்பினை எதிர் கொண்டு, பக்குவமாக வாழ்வதில்தானே சுவாரஸ்யம் இருக்கிறது. நாம் இன்னுமொருவர் கருத்துக்கள் சரியானதாக இருக்கும்போது அதன்படியும் செயலாற்றும்போது ஒரு மாறுபட்ட அனுபவத்தையும் பெறலாம். பல்வேறுபட்ட சிந்தனைகளைக் கேட்டு அறிந்து பாகுபடுத்திச் செம்மையாக்க, நாம் எம்மை பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும்.

RangaRakes
Tamilnavarasam.com

நியதியாகிவிட்டது. நாம், எமக்காக மட்டுமின்றி ஏனையோருக்காகவும், அனுசரித்துப் போகும் இயல்பு விரிவடைந்து கொண்டே செல்கின்றது. எனவே முதலில் நாம் மனிதன், குடும்பம், சமூகங்களுக்கிடையே உள்ள அனுசரித்தல் போக்கினைப் பார்ப்போம்.

சின்னச்சின்ன விடயங்களில்கூட நாம் விட்டுக் கொடுக்கத் தயங்குகின்றோம். சிலவேளை இதுவும் ஒரு ஆணவத்தின் முனைப்பால் எழுந்த இயல்போ எனவும் சந்தேகம் கொள்ள வைக்கின்றது. நாம் சந்திக்கும் ஒவ்வொரு நபரும் இப்படியே இருந்துவிட்டால் உலகம் இயங்குமா என்ன? எனவே சுமுகமான ஒரு செயல்முறைக்கு, பணி செய்தலுக்கு இந்த அனுசரிக்கும் போக்கில் இன்றியமையாத் தன்மையினை நாம் நன்கு புரிந்து கொள்ளலாம்.

சாதாரணமாக மனிதர் ஒவ்வொருவருக்கும் குண இயல்புகள், நடத்தைகள் தனித்தனியானவை. ஒரே குடும்ப அங்கத்தவர்களிடமே குண இயல்புகள் ஒருவர்க்கொருவர் வித்தியாசமாக இருக்கும். ஆயினும் இந்த வித்தியாசமான இயல்புகளுக்கும் - அப்பால் நின்று, யாம் இணைந்து, வாழ்ந்து வருகின்றோம் என்றால் எமக்குள்ள பிணைப்பின் வலிமையை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அன்பு கொண்டவர்களுக்காக நாம் எமது விருப்பங்களைத் துறந்து விட்டுக்கொடுத்து வாழ்ந்து வருகின்றோம் என்பதுதான் உண்மை.

மிகவும் அற்பமான விஷயங்களுக்காகவே ஆரவாரம் செய்து மனஸ்தாபப்படுவது சரியா? கணவன் மனைவி, பிள்ளைகளுடன் ஏற்படும் சிறு சிறு விஷயங்களில், யார் சொல்வதை யார் கேட்பது, என்பதுபோல் செயல்பட்டு வீட்டில் நிம்மதியைக் கெடுத்துக் கொள்கிறார்கள். இதன் பாதிப்பு அனைவரின் எதிர்காலத்தையே குழப்பிவிடுகின்றது. பிள்ளைகளின் கல்வி ஒழுக்க நெறி, வீட்டில் ஏற்படும் பொருளாதார பற்றாக்குறை



என்று எல்லாமே சரிந்து விடுகின்றன. மற்றவர்களின் நகைப்பிற்கும் இதுபோன்ற குடும்பங்கள் ஆளாகின்றன. சிலர் இது விடயங்களில் நடந்துகொள்ளும் விதமே சற்று வித்தியாசமானதும், விசனத்திற்குமுரியது. அதாவது,

இவர்கள் ஏனையோர் விட்டுக்கொடுத்து நடந்துகொள்வதனை தமது பலமாக எண்ணி விடுகின்றனர். தமக்குப் பணிந்தே எல்லாமே நடக்கிறது. தம்மை அசைக்க முடியாது எனத் தப்பான அபிப்பிராயத்தை தம் மனதுள் விதைத்து விடுகின்றனர். உண்மையில் எத்தகைய அதிகாரத்தில் உள்ளவர்களாலும் சக உறுப்பினர்களின் உதவுதல் இன்றிச் செயற்பட முடியாது.

அதிகாரங்கள் என்பதன் மூலம், கட்டளையிட்டுச் செயலாற்றுதல் என்பது எல்லாத் தருணத்திலும் சரிப்பட்டு வராது. கருமங்களை இயல்பாக, எளிதாகச் செய்யவேண்டும். இதற்கு ஒருவர்க்கொருவர் சிரமங்களை மறந்து செயல்படவேண்டும். இதனைப் புரிந்துணர்வுடன் செய்யவேண்டும்.

புரிந்துணர்வு என்பது எமது செயற்பாடுகளுக்கு பிரதான அம்சமாகும். சிலர் புரிந்துணர்வு என்பதைக் ''கண்டு கொள்ளாமல் விடுவது'' என அர்த்தம் கொள்கின்றனர். இது சரியல்ல. தவறுகளைக் கண்டு கொள்ளாமல் இருக்கமுடியாது. அற்ப தவறுகளைப் பெரிதுபடுத்தாது, மன்னித்தல் என்பதே கண்டு கொள்ளாமல் விடுவது என எடுத்துக்கொள்ளலாம். நாம் பல வருடங்களாக ஒருவருடன் பழகும்போது அவரின் குண இயல்புகளை ஓரளவு புரிந்து கொள்கின்றோம். சிலரைப் பூரணமாகவும், இன்னும் சிலரை ஓரளவும், பலரை அறவே புரிந்து கொள்ள முடியாமலும் இருந்து விடுகின்றோம். பலர் இத்தகைய ஆராய்தலைத் தவிர்த்து விடுகின்றனர். இந்த விஷயம் எமது குணாம்சத்திற்கும் உரிய, பொருத்தமான விடயமாகும். அதாவது, எம்மை எல்லோரும் தெளிந்து, புரிந்து விட்டார்களா என்பதே

RangaRakes Tamilnavarasam.com

அதுவாகும். சிலர் தம்மைப்பற்றி இனம்காட்டிக் கொள்வதில்லை. இன்னும் சிலர் எல்லா இயல்புகளையும் தம்முள் புதைத்து வைத்துக் கொண்டு, வெளியில் வேறு ஒரு வடிவத்தில் நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள். இன்னும் சிலர் தமது ஒரு வடிவத்தை மட்டும் காட்டிக்கொள்வார்கள்.

மொத்தத்தில், பூரணமாக எல்லோரும், எல்லாச் சந்தர்ப்பத்திலும் தம்மைத் துலக்கப்படுத்தல் என்பது கிடையாது. ஏதோ ஒரு விஷயத்தில் தம்மைப் பகிரங்கப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றனர். இந்த நேரத்தில் இத்தகைய சந்தர்ப்பங்களில், நாம் ஒருவர்கொருவர் கூடிய மட்டும் புரிந்துணர்வுடன் வாழப்பழக வேண்டும்.

முரண்பாட்டிலும், உடன்பாடாக வாழ்வதுதானே வாழ்க்கை! எதிர்ப்பினை எதிர்கொண்டு, பக்குவமாக வாழ்வதில்தானே சுவாரஸ்யம் இருக்கின்றது.

ஒரு உண்மையினைத் தெரிந்துகொள்வோம். நாம் இன்னுமொருவர் கருத்துக்களை அது சரியானதாகப்பட்டால் செவிமடுத்து, அதன்படியும் செயலாற்றும்போது ஒரு மாறுபட்ட அனுபவத்தினைப் பெறலாம். ஒரே வித வழிகளால் அன்றி, பல்வேறுபட்ட சிந்தனைகளை அறிந்து கேட்டு, பாகுபடுத்தி, செம்மையாக்கி ஒரு வழியில் செல்லும்போது, புது வாழ்வியல் போதனை கிட்டுகின்றது. இப்படியின்றி, வேறு முறைகளைக் கைக்கொண்டு அலுவல் ஒன்றினைச் செய்தாலும்கூட வரும் அனுகூலங்கள், சிக்கல்களை முகம் கொடுக்கத் தயாராகவும் வேண்டும். எப்படியிருப்பினும் சமூக நடைமுறைகளினால் ஏற்படும் அனுபவங்களினால் நாம் அனுசரித்துப் போகும் மனப்பக்குவத்தினை அடைந்தே தீரவேண்டும்.

*தினக்குரல் 13.08.2000*



# பாராட்டுதல் ஒரு சுக அனுபவம்



எம்மோடிணைந்த எவராயினும் சரி, அன்றி எம்மைச் சாராதவர்கள், சிறு பணிகள் செய்வோர், எளியோர் என எவ்வகையினராயினும் சரி - அவர் தம் பணி, 'நன்று' எனப்பட்டால் உடன் பாராட்டக் கற்றுக் கொள்ளுங்கள். பாராட்டுதல் என்பது உடன் கிடைக்கின்ற வெகுமதி. அத்துடன் எமது பாராட்டுதல் என்பது மனப்பூர்வமாக அமைதல் வேண்டும்.

வெறும் உதட்டளவில் பாராட்டுதல் தகாது. பாராட்டும் பண்பு எம் உள்ளத்தின் விசாலத்தைக் காட்டி நிற்கின்றது. எவரையும் நாம் அவர்கள் எம்மிலும் உயர்ந்தவர்கள் என்ற நோக்கில் அணுகும்போது, எமது மமதை, அகங்காரம், ஆணவம் அருகிவிட ஏதுவாகின்றது.

பிறரின் செயலைப் பாராட்டுவதால் எமக்கு ஒன்றும் குறைவு வந்துவிடப் போவதில்லை. மாறாக, அவர்கள், எமது பாராட்டினால் பெறும் மனப்பூரிப்பினால் எம்மைப் பற்றி, ஒரு நலல நோக்கை, அபிப்பிராயத்தை உண்டாக்கி விடுகின்றது. அத்துடன், எமக்கு அவர்கள் ஏதோ ஒரு வகையில் உதவி செய்யவேண்டும்

RangaRakes Tamilnavarasam.com

என்கின்ற எண்ணங்களையும் மனதில் உதயமாக்கி விடுகின்றது. ஆயினும், நாம் உதவி பெறும் நோக்கில் மட்டும் நாம் புகழும் பழக்கத்தைக் கொண்டிருத்தல் கூடாது.

இது ஒரு அப்பட்டமான சுயநல இயல்பாகிவிடும். வெறும் புகழ்ச்சி, பொய்யான முகமன் கூறுதல், அவர்களிடம் உதவி பெறும் நோக்கில், தவறுகளை மறைத்து வேண்டுமென்றே பாராட்டுதல், பாராட்டும் மாண்புடன் பொருந்தியமையாது.

ஒருவர் பற்றிய சிறப்பம்சங்களைத் தெரிந்து கொண்ட பிறகும், அதுபற்றி நாம் கண்டு கொள்ளாமல் இருப்பது. அது ஒரு விதத்தில் பொறாமை, ஆற்றாமையின் வெளிப்பாடு அன்றிப் பிறிதில்லை என அறிதல் வேண்டும்.

ஒருவரின் வளர்ச்சியினை முடக்கி வைப்பதே ஒரு துரோகம் என்று கூறலாம். பாராட்டாமல் விடுவதுகூட அவர்கள் வளர்ச்சியை வேண்டும் என்றே தடுப்பது போலாகிவிடும். நாம் அறிந்தவரை எத்தனையோ, சாதனை செய்ய வல்லோர்கள், தகுந்த ஊக்குவிப்பு இன்றி குடத்துள் விளக்குபோல் அமிழ்ந்து தெரியாது போய் விடுகின்றனர்.

நாம் பிறரைப் பாராட்டத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை. திறமைசாலிகளை, முன்னேற விரும்புபவர்களைத் தூற்றாமல் இருப்பதே மேலானதாகும். சிலவேளை நாம் ஒருவரைக் கடிந்து கொள்ளாமல் இருப்பதே ஒரு ஆரோக்கியமான அம்சமாகிவிடும்.

> ஒருவர் பற்றிய சிறப்பம்சங்களைத் தெரிந்து கொண்டு, அதுபற்றி நாம் கண்டு கொள்ளாமல் இருப்பது, அது ஒரு விதத்தில் பொறாமை, ஆற்றாமையின் வெளிப்பாடு அன்றிப் பிறிதில்லை. ஒருவரின் வளர்ச்சியை முடக்க நினைப்பது போலவும் கருத இடமுண்டு. பாராட்டுதல் ஒரு ஊக்குவித்தல் மட்டுமல்ல, பாராட்டுப் பெறுபவர் எங்களால் சந்தோஷப்படுகின்றார் என்கின்ற மனநிறைவும், எமக்குக் கிட்டுமல்லவா?



அண்மையில் நான் ஒரு நவீன முகாமைத்துவம் என்கிற நூலைப் படித்தபோது, ஒரு முக்கிய விடயத்தினைப் பற்றித் தெரிந்து கொண்டேன். ஒரு முகாமைத்துவத்தின் சிறப்பம்சம் அதில் வலியுறுத்திக் கூறப்பட்டிருந்தது. பணியாட்கள், தம்பணிகளை, ஒரு நிறுவனத்தில் செய்கின்றனர். அவர்களது முக்கிய எதிர்பார்ப்பு என்ன என, விபரங்களைச் சேகரித்து ஆய்வு செய்தனர். முடிவு சற்றும் எதிர்பார்க்காத அளவில் இருந்தது. எல்லோருமே சம்பள உயர்வு வேண்டும், குடியிருக்க குடிமனை வேண்டும், போனஸ் அது, இதுவென எக்கச்சக்கமான கோரிக்கைகளையே எதிர்பார்த்திருந்தனர். மிகப் பெரும்பான்மையான ஊழியர்கள், எமக்கு, எமக்குரிய சேவையினைக் கௌரவிக்கவேண்டும். அதாவது எமது பணியினை நிறுவனம் தகுந்த மெச்சுரை வழங்கியும், பாராட்டுதல்களை வழங்கியும் அங்கீகாரம் செய்யவேண்டும். எமக்கு உள்ள திருப்தி, எம்மை நிறுவனம் தோழமையுடன் நடாத்த வேண்டும் என்பதனையே வலியுறுத்தியிருந்தனர். சம்பள உயர்வு போன்ற இதர கோரிக்கைகளை இரண்டாம் மூன்றாம் பட்சக் கோரிக்கையாகக் கொண்டிருந்தனர்.

இதில் கவனிக்கத்தக்கது என்னவெனில் ஒருவரது வேலைகள் பற்றி அநாவசிய ஆராய்வு செய்து, குறைந்த பட்சமான வேலை உயர்வு வழங்குவதென்பதே ஒரு அடிமைத்தனமானது என்றும், அத்துடன் இதுவும் ஒரு மறைமுக அடக்குமுறைப் போக்குமாகும் எனவும் ஊழியர்கள் கருதுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டது. கடமை என்கிற பெயரில் ஒருவரைக் கணிப்பீடு செய்வதைப் பலரும் வெறுக்கின்றார்கள். ஆனால் திறமையுள்ள போது பாராட்டாமல் விடுவதையும் கண்டு வேதனையும், விரக்தியுமடைகின்றார்கள். குற்றம் காணுதலைப் பொதுவாக எவருமே விரும்புவதில்லை.

நாம் ஒருவருக்குச் செய்யும் மரியாதை என்பது, அவரது சேவையைப் பாராட்டுவது என்பதே இந்த ஆய்வின் முடிவாகும்.

RangaRakes Tamilnavarasam.com

அத்துடன் ஒருவரின் ஆத்மாவைத் தொட்டு நிற்பது வெறும் பணம் அல்ல. அன்பார்ந்த பரிவுடன் கூடிய பாராட்டுதல்களேயாகும்.

இந்தக் கலையினை ஒருவர் பூரணமாக உணரும் பட்சத்தில், அவரால் கூடுதலான சேவையினை சமூகத்திற்கு அளிக்கமுடியும். மனவிசாலமுள்ளவர்களால் மட்டுமே, ஏனையோரை மனதாரப் பாராட்டவும் முடியும். எம்மிலும் பெரியவன் யார் என நினைத்தலும் கூடாது. அத்துடன் நாம் காணும் மிகச் சாமான்ய சாதாரண மனிதர்களை, அவர்கள் உள் பொதிந்த நல்ல சமாச்சாரங்களைப் பார்த்த மாத்திரம் கணித்துவிடவும் முடியாது. வெளிப்பார்வைக்கு மிகச் சாதாரணமாகத் தோன்றுபவர் மிகவும் திறமையுள்ளவர்களாக இருக்கவும் கூடும். எனவே நாம் கண்டபடி எடைபோட்டு ஒருவரைத் தாழ்வாக நினைப்பது பேதமையாகும். அதேபோல் கனவான்கள் போல் படாடோபமாக இருப்பவரின் வெளிப்பூச்சினை நிஜமென நம்புதலும் ஆகாது. எங்கள் திறமையை மட்டும் வைத்துக்கொண்டு அல்லது அதனிலும் உயர்ந்த ஒருவரின் திறமையை மையமாக வைத்து ஏனியோரைக் கணிப்பீடு செய்தல் சரியானதல்ல.

மேடையில் ஒருவர் பிரசங்கம் செய்யும்போது, ``அட இவர் என்ன பிரசங்கம் பண்ணுகிறார். கிருபானந்த வாரியார் சுவாமி மாதிரி பிரசங்கம் செய்வாரா'' எனக் கேட்கக்கூடாது. ஒப்பீடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும் அல்லவா? எல்லாச் சந்தர்ப்பத்திலும் இது ஏற்றுக்கொள்ள முடியுமா? சரிப்பட்டு வருமா? சாதாரண போட்டிகளில்கூட நடுவர்கள் தோற்றுப் போனவர்களைப் பாராட்டுவதில்லையா? வெல்பவர் மட்டும் திறமையானவர்கள் அல்ல. திறமையுள்ளவர்கள், திறமைகளை நோக்கிப் போய்க் கொண்டிருப்பவர்கள், முயற்சிகளை அதற்காகச் செய்பவர்கள், யாவருமே கௌரவிக்கப்படவேண்டியவர்களாவர்.

சிறு குழந்தைகள் கூடப் பெரியவர்கள் தங்களை மெச்ச வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்; இது இயல்பு. நாம் அவர்களைச்



சதா கடிந்துகொண்டால் என்ன நடக்கும்? அவை எம்மை வெறுக்கும்; நல்ல குண இயல்புகளை மாற்றியமைக்கும்; காலப்போக்கில் அவை சிடுமூஞ்சிகளாக, சமூகத்தையே வெறுக்கவும் ஆரம்பிக்கலாம். எதிர்மறையான காரியங்களிலேயே ஈடுபடவும் முனையலாம்.

எனவே நாம், வாய் மூடி மௌனிகளாக இருக்காமல், தக்க தருணத்தில் புகழவேண்டிய சமயத்தில் புகழவேண்டும். நாம், பிடிவாதமாக இதற்கு எதிர்மாறாக நடக்க ஆரம்பித்தால், செருக்குப் பிடித்தவன் என்கின்ற அவப் பெயரை எடுப்பதுடன், எமக்கு நண்பர்கள் தொகை குறைந்து நாம் தனிமைப்பட்டே விடுவோம். சமூக உறவு பாதிப்படைந்தால் எமது நிலை என்ன? இத்தகைய துரதிருஷ்டசாலிகளையும் நாம் சமூகத்தில் பார்க்கின்றோம். அன்புணர்ச்சிதான் பாராட்டும் பண்பை வளர்க்க வல்லது.

எனவே நல்லவைகளை ஏற்றுக்கொள்ளுங்கள் அவைகளை மனதாரப் பாராட்டி மகிழுங்கள். உங்களுக்கு ஒன்றும் குறைந்து விடாது. மாறாக உங்கள் ஆத்மா விரிவடைந்து சுகானுபவம் பெறுவீர்கள். மற்றவர் பெறும் மகிழ்வு, படிப்படியாக உங்களையும் சார்ந்து பற்றிக்கொள்ளும். இதன் பயன்களை உங்கள் கண்முன்னே காண்பீர்கள் உண்மை!

தினக்குரல் 20.08.2000

RangaRakes Tamilnavarasam.com



# அழகு என்பது...

அழகாக இருப்பது எப்படி? இது பலருக்குமே புரிய இயலாத, பாரிய பிரச்சனையாகப்படுகிறது. பலரும், அழகாக இருப்பது என்பதே ஒரு கௌரவம் என்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். கொஞ்சம் அழகு குறைந்துவிட்டால், வித்தியாசமாக வேறு பார்க்கின்றார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால், சற்று அழகாகத் தெரிபவர்கள்கூட, தமது அழகு பற்றிய ஐயத்தினால் இது விடயத்தில் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கின்றனர். இதை மேம்படுத்த, இதற்கான நடவடிக்கைகளில் வெகு மும்முரமாக இறங்குகின்றனர். பொதுவாக இம்முயற்சிகள் உலகம் பூராவும், வெகு சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. இதற்காக உலகம் செலவு செய்யும் தொகை கணக்கிட்டுச் சொல்லவும் முடியாது. 'அழகு' எல்லோரையும் ஆட்டி வைக்கின்றது. இதில் ஆண், பெண் என்ற பேதமும் கிடையாது.

உண்மையில் இந்த அழகு என்பதுதான் என்ன?

ஒருவர்க்கு, அழகு எனத் தெரிவது, மற்றவர்க்கு அழகாய் இருப்பதும் இல்லை. சிலருக்கு எல்லாமே அழகாகவும், இன்னும் சிலருக்கு எல்லாமே அவலட்சணமாகவும் தோன்றும். கொஞ்சம்



பேருக்கோ, தாமும், தமக்கு வேண்டியவர்களும் மட்டுமே அழகாகப் புலப்படுவார்கள். மற்றவர்கள் எப்படியிருந்த போதும், அவர்களைக் கண்டு கொள்ளமாட்டார்கள்.

ஒழுங்காக இருப்பது எதுவோ அதுவே அழகு.

ஒழுங்கற்ற எதிலும் அழகை நாம் காண முடியாது. மனித நடத்தைகள் கூட அப்படியானவையே. மனிதர்களின் அழகு விடயத்தில், இரண்டு பிரதான விடயங்கள் சம்பந்தப்படுகின்றன. அவை, புறத்தோற்ற அழகு, அக அழகு, இதய சுத்தி, இனிய பேச்சு, நல்ல நடத்தைகள், பழகும் பண்புகள் போன்ற குணாம்சங்கள், எவரையும் ஈர்க்கும் தன்மை வாய்ந்தன. இப்படி அமைபவர்களிடமிருந்தே வெறும் புற அழகுப் பார்வைகள் அடிபட்டுப் போய்விடுகின்றன.

ஒருவனின் ஆத்மா தூய்மையடையும்போது பெறப்படும் தேஜஸ், அனைவரையும் வசீகரிக்கும் வல்லமையுடையது. அகம் சிறக்காதுவிடின், புறம் சிறக்காது. இதையே அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பர் பெரியோர். நீங்கள் ஒன்றைச் சற்று உன்னிப்பாகக் கவனித்துப் பாருங்கள். அழகற்றவன் என நீங்கள் எண்ணும் சிலரைத் தேர்ந்தெடுங்கள். அவர்களுடன் நீங்கள் பழகிப் பாருங்கள். காலப்போக்கில் நீங்கள் அவர்கள் அழகு தொடர்பாக கொண்டிருந்த நோக்கு, இல்லாது போய்விடும். அது பற்றி சிந்தனை எப்படி மறைந்து போயிற்று என வியப்புமடைவீர்கள். ஒருவரது பழகும் தன்மை, போக்கு என்பவைகளால் நாம் காணும் வெறும் புறத்தோற்ற எண்ணங்கள், எமக்கு ஒரு போதனையாகவும்

> ஒழுங்காக இருப்பது எதுவோ அது அழகு. ஒழுங்கற்ற எதிலும் அழகை நாம் காணமுடியாது. மனித நடத்தைகள்கூட அப்படியானவையே. நன்நடத்தை உள்ளவர்களுடன் பழகும்போது, புற அழகு, தோற்றம் எமக்குப் பெரிதாகத் தோன்றாது. ஆனால் நடத்தைப் பிசகுள்ளவர்கள் எத்தனை அழகுள்ளவர்களாயிருப்பினும், எமக்கு நாளடைவில் அவாகள் மீது அருவருப்பே தோன்றும்.

RangaRakes Tamilnavarasam.com

புலப்பட ஆரம்பிக்கும். பார்த்த மாத்திரத்தே எழும் எண்ணங்கள்கூட முடிவில் தற்காலிக எண்ணங்களாகி விடுகின்றனவே.

கனிவான பேச்சுக்கள், பிறருக்கு உதவும் பண்புகள், பரந்த நோக்கு ஆகியன எமக்குப் பிடித்துப்போகும்போது, அவர்கள் அழகு நிறைந்த மகா புருஷராகவும் தெரிய ஆரம்பிப்பார். பழகும் விதமே எமது தவறான பார்வையை மாற்றி விடுகிறது. பெண்கள் விஷயத்திற்கும் இது பொருந்தும். பல அழகான ஆண்கள், அழகில்லாத பெண்களை எப்படி மணந்து கொள்கின்றார்கள் என வியப்பு அடைகின்றனர். வெறும் பணம் மட்டும், மனதை மாற்றி விடுவதில்லை. குடும்பத்திற்கேற்ற குணாம்சத்தை அவர்களுடன் பழகிய விதத்தில் தெரிந்துகொண்டும், கேள்விப்பட்டுமே சரியான இம்முடிவினை எடுத்து விடுகின்றனர். இதில் வியப்படைய எதுவுமில்லை.

சரி அடுத்த விடயத்திற்கும் வருவோம். அழகான சிலரிடம் பழகிப்பாருங்கள். அவர்களில் சிலரின் நடத்தைகள், பழகும் இயல்புகளை உற்று நோக்குங்கள். சிலரிடம் உள்ள ஆணவம், திமிரான பேச்சுக்கள், தம்மைப் பற்றிய மிதமிஞ்சிய பொருந்தாத எண்ணங்களைப் பார்த்தால், எமக்கு அருவருப்புத்தான் தோன்றும். வெறும் அழகையே ரசிக்கும் நாம், ''அட போயும் போயும் இவர்களிடமா நாம் மயங்கிப்போனோம், என்ன மனிதர் இவர்? இப்படிப் பேசுகிறாரே, பழகுகிறாரே'' என எண்ணிக் கொள்வோம். அவர் மீது கொண்ட எண்ணம், அறவே மாறி நீங்களாகவே அவரிடமிருந்து விலக ஆரம்பிப்பீர்கள். இக்கருத்து, தவறான குணங்கள் உள்ளவர்களுக்கே பொருந்திவரும்.

ஆயினும் எடுத்த எடுப்பிலேயே புற அழகில் மயங்கிப் போதல் மனித இயல்பே. கவர்ச்சி, ஈர்ப்பு போன்றவை காந்தமென கவர்ந்தே விடுகின்றன.



அறிவுநிலை கொண்டு சிந்திப்பவர்கள் மிகச்சிலரேயாவர். அதற்காக, அழகாய் உள்ளவர்கள் எல்லோருமே கெட்டவர்களாகவும், அழகற்றவர்கள் எல்லோருமே நல்லவர்கள் எனவும் அர்த்தம் கொள்ளமுடியாது.

இதயங்களை ஆகர்ஷிக்க, வல்லமை கொண்டவர்கள் அகத்தூய்மை கொண்ட நல்லோராகவேயிருக்கின்றனர். நாங்கள் விரும்பும் எல்லோருமே எமக்கு, வசீகரம் மிக்கவராகத் தெரிகின்றனர். தனது உயிர் நண்பனை, உற்ற உறவினர்களை, தாயை, சகோதரியை எவர்தான், அழகை நோக்கிய பார்வையிலே பார்க்கின்றார்கள்? இல்லையே. எமக்கு உகந்தவர்கள், எப்படிப்பட்ட தோற்றத்தில் இருந்தால்தான் என்ன?

மதத்தலைவர்கள், நாடு போற்றும் அரசியல் தலைவர்கள், விஞ்ஞான மேதைகள், கவிஞர்கள், கலைஞர்கள் - இவர்கள் வசீகரிக்கப்படுவது, வெறும் அழகினால் மட்டும் அல்ல. பிறரிடம் துலங்காத சிறப்பாம்சம், தெய்வீகம் இவர்களுள்ளே நிறைந்துள்ளது. இவை சாமான்யமான விடயமும் அல்ல.

சதா புன்முறுவலுடன், மனப்பாரமின்றி இருக்கப் பழகுங்கள். எவருடனும் கோபதாபம், காழ்ப்புணர்வுகளை நீக்குங்கள். அன்பு, கருணை, ஜீவகாருண்யம் இவைகளை நாம் காணும் சகல ஜீவராசிகளுடனும் செலுத்துங்கள்.

உலகத்தை ரசியுங்கள்; வீண் எரிச்சல், புகைச்சல் கொள்ளாதீர்கள். அப்பொழுது பாருங்கள் -

எமக்குள்ளே உருவாகும் களிப்பு எம்மைப் பிறரால் வசீகரிக்கச் செய்யும், அழகினை ஏற்படுத்திவிடும். இதுவே உண்மை அழகு.

தினக்குரல்

RangaRakes Tamilnavarasam.com

# நம்பிக்கையும், நம்பிக்கையின்மையும்



மனிதன் தனக்குத்தான் விசுவாசம் மிக்கவனாக இருக்கவேண்டும். ஆனால், இவனோ, தனக்குத்தானே காயத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றான். தானே தன்னை நம்பாத போக்கு, சமூகத்தைக் கண்டு நொந்து கொள்ளுதல், எதற்குமே எரிச்சல் படுதல், அலுத்துக் கொள்ளுதல், எதற்கெடுத்தாலும் ஆதங்கப்பட்டுக் கொள்ளுதல்.

இத்தகைய விடயங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, வெந்து தன்னைத்தானே, புண்படுத்திக்கொண்டு நம்பிக்கை யீனத்திற்கு அடிமையாகி விடுகின்றான். நம்பிக்கை யின்மை என்பது வந்துவிட்டாலே எல்லாமே இழக்கப்பட்டு விட்டது போன்ற மனப்பான்மை, அல்லது உணர்வு நம்மை ஆட்டிப்படைக்க ஆரம்பித்துவிடும்.

பலருக்குத் தம்மீது நம்பிக்கை இருக்காது. ஆனால் தம்மைச் சுற்றிவர எப்படிப்பட்ட குணாம்சங்கள் உள்ளவராயினும் சரி, அவர்கள் ஆற்றலை உணராமலேயே அவர்களை உடன் நம்பி விடுவார்கள். தன்னைவிடப் பக்கத்திலிருப்பவர் அதிபுத்திசாலிகள் என நினைந்து விடுவார்கள். எந்தவித அச்சமோ, கூச்சமோ இன்றி அவர்கள் தயவை நாடிவிடுவார்கள். இதன் சரி, பிழை பற்றிச்

RangaRakes



சிந்திக்கக் கால அவகாசத்திற்குக் காத்திருப்பதில்லை. அவர்கள் சொல்லைச் சிரமேற்கொண்டு உடன் அடுத்த நடவடிக்கையில் ஈடுபட்டு விடுவார்கள்.

இன்னும் சிலரோ,

தம்மையும் நம்புவதில்லை, பிறரையும் நம்புவதில்லை.

இது அவர்கள் தமது ஆத்மாவிற்கு இழைக்கும் துரோகமாகும். தம் அறிவினையும் உள் உணர்வினையும் மதிக்காத செயல் இது. அறிவினிற்கே கடிவாளம் போடுகின்ற அர்த்தமற்ற இயல்புமாகும்.

எம்மை நாம் தூய்மைப்படுத்தாதவரை, பிரச்சினைகள் ஏதோ ஒரு வழியில், துரத்திக் கொண்டுதான் இருக்கும். நாம் இருக்கும் வரை, அதாவது வாழும்வரை, நடக்கும் செயல்களில் பலர் எம்முடன் பங்கு கொண்டே வருவார்கள்.

ஆயினும், எனது வாழ்விற்கு, நானே கதாநாயகன். இதை ஒவ்வொருவரும் நினைவு கொள்ளவேண்டும். உங்கள் வாழ்வை நீங்கள், நிலையாக, ஸ்திரமாக வைத்திடுங்கள். வாழ்வு முறைகளை நியாய பூர்வமாக வைத்திடுங்கள். இவை போதும்.

நன்மை, தீமை இணைந்ததே வாழ்க்கை. சிலரை நாம பார்க்கின்றோம். இவர்கள் வாழுவதே பிறருக்குத் தெரியாது. மிக்க அமைதியாகவும், பிறர்க்குத் தீங்கு புரியாமலும், பிறர் விடயங்களில் அநாவசியமாகத் தலையிடாமலும் வாழ்ந்து விடுகின்றார்கள்.

நீங்கள் நேர்மையாக வாழ்ந்தாலே உலகம் தானாக உங்களைப் புரிந்துவிடும். இந்த உண்மை நிலைதான், உங்கள் மீது வைக்கின்ற "நம்பிக்கை" என்பதாகும். நீங்கள் சரியாக நடந்துகொண்டால் மக்களை நோக்கி நீங்கள் செல்லுமுன், உங்கள் திசைநோக்கி அவர்கள் வருவார்கள், இதற்காக வீண் சிரமமோ, பிரசாரமோ தேவையில்லை.

Tamilnavarasam.com

அந்தரங்கமாக வாழ்ந்து, முடிந்து விடுவது என்பது, யதார்த்தமாகச் சரிபட்டு வராது. மன விரக்திக்கும், சலசலப்பிற்கும் ஆளாகாமல், வாழுதல் என்பதே சிரமத்திற்குரியவொன்றாக இருக்கின்றது. ஏனெனில், நாம் மனிதர். சடங்கள் அல்ல.

கண்டதைப் பார்த்துக் குதூகலிப்பதும், சற்றுப் பொருந்தாத சங்கதிகள் நடந்துவிட்டால், சஞ்சலப்படுவதும் மனித இயல்புதான்.

உண்மையில், பலர் வாழ்க்கையின் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் திராணியற்று, அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக மௌனித்துக் கொண்டிருக்கின்றார்கள். சமூகத்தைச் சாராமல் விலகி நிற்பதால், இவர்கள் அந்நியப்பட்டே விடுகின்றார்கள். இந்த வாழ்வு முறை சரியானதா?

பிறரைத் தூக்கி விடாதவனும், தன்னை மட்டுமே நோக்குபவனும், தூக்கி எறியப்படுவதை உலகம் கண்டு கொண்டிருக்கின்றது. எத்தகையானவர்கள், வாழ்ந்து, மாய்ந்து போனாலும் உலக இயக்கம், நின்று போகப் போவதில்லை. எத்தகையான இயல்புள்ளவர்களையும், சுமந்து, அது தன் பாட்டிற்குச் சுற்றிக் கொண்டேயிருக்கின்றது.

ஆயினும்,

மனித மாண்புகள் மாயும்போதுதானே, சமூகப் பிரளயமே வெடிக்கிறது. ஒரு எல்லைவரைதானே இயற்கைகூடப் பொறுத்துக்கொள்கின்றது. இயற்கைகூட, மனித இனத்தை அடிக்கடி எச்சரிக்கை செய்துகொண்டுதான் இருக்கின்றது.

மக்கள் ஒருவர்க்கொருவர் ஆதாரமானவர்கள். ஒருவரில் ஒருவர் நம்பிக்கையும், உறவுகளும் வைக்கப்படவேண்டியவர்கள்.

எம்முடன் மட்டும், இந்த வையகம் முடிந்துவிடப் போவதில்லை. தொடர்ந்தும், உயிரோட்டத்துடன் ஜீவித்துக் கொண்டு இருக்க வேண்டியது.



இந்த இயற்கை எமக்கு, நல்லவைகளையும், ஆற்றலையும் நல்க எவ்வளவு சந்தர்ப்பங்களை அளித்துக் கொண்டிருக்கின்றது. அவை அளிக்கும் பலதரப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்றையாவது பற்றிக்கொண்டாலே போதும். அது எம்மை வளர்த்து, உயர்த்திவிடும்.

நம்பிக்கையுடன் நாம் தேடும் ஆதாரம், நியாயமாகவும் ஏற்றுக் கொள்ளக்கூடியனவையாகவும் அமைதல் வேண்டும். தெளிந்த சிந்தனையுடன், கூடிய செயல்களே ஆற்றலை வளர்க்கக்கூடிய, திண்ணிய நெஞ்சுரத்தினை உருவாக்கும். ஒருவன் தனக்காக, தன்னிடம் காட்டும் விசுவாசம் போன்றே உலகிற்கும். உண்மையான விசுவாசியாக காட்ட அச்சப்படக்கூடாது. நீங்கள் நேர்மையாக வாழ்ந்தாலே உலகம் தானாக உங்களைப் புரிந்து கொண்டு விடும். இந்த உண்மை நிலைதான், உலகம் உங்கள் மீது வைக்கின்ற 'நம்பிக்கை' என்பதாகும். நீங்கள் சரியாக நடந்துகொண்டால், மக்களை நோக்கி நீங்கள் செல்லுமுன் உங்கள் திசை நோக்கி அவர்கள் வருவார்கள். இதற்காக வீண் சிரமமோ, பிரசாரமோ தேவையில்லை.

தனிமனித வாழ்வுகூட முழு உலகையே பாதிக்கின்ற அமசமானபடியினால், பிறருக்காக, நாம் புனிதர்களாக வாழத் தலைப்படுவது முக்கியமாகப்படுகின்றது. எம்மோடு மட்டும் இந்தப் பூமி இல்லை. அதை நம்புங்கள். தனி ஒருவனின் சக்தி மட்டும் விரயமானால் என்ன என்று மட்டும் கருதிவிடல் வேண்டாம்.

நம்பிக்கையின்மையால், சக்தியை முடக்கிக் கொள்ளல், இந்த உலகு, எமக்கு இட்ட கட்டளையினை மீறுகின்ற செயலுமாகும்.

அடிமனதை அசைக்கமுடியாத வலுவுடையதாக்கிக் கொள்ளுங்கள். விசையால், உந்தப்பட்ட அம்பு தன் செயலை

RangaRakes Tamilnavarasam.com

முடித்துவிட்டே ஓயும். மனிதன் மீட்டும், புறப்பட்ட பாதையை விடுத்து, உடன் முடங்கித் திரும்புதல் சரியானதா என்ன? வாழ்க்கை யாத்திரை இனிமையானது. நம்பிக்கையானது. இடர்கள் மேல் நடப்பதுகூட இனிமையானதே. ஏனெனில் அதை உறுதியுடன், வெல்லும்போதுள்ள மகிழ்வினை அனுபவிக்கும் போது, எமக்கு நன்கு புலப்படுத்தி விடுகின்றதே.

*தினக்குரல் - 17.09.2000*





# உண்மை சாஸ்வதமானது

சிலர் சர்வ சாதாரணமாகப் பொய் பேசுவார்கள். கேட்டால், 'அது வெறும் பகிடிக்காகப் பேசினேன்' என்பார்கள். அதன் பாதிப்பு அவர்களுக்குப் புரிவதில்லை. பொய், புளுகு, கேலி இவற்றிற்குரிய வேறுபாடுகளை இவர்கள் உணர்கின்றார்களில்லை. எத்தனையோ உபதேசங்கள், நீதிக்கதைகளைக் கேட்டும், அறிந்தும்கூட பொய் பேசும் கொள்கையில் பலரும் தீவிரமாக இருக்கின்றார்கள். பொய் பேசுவதற்குச் சந்தர்ப்ப சூழ்நிலைகளைச் சாக்காகக் காரணம் வேறு காட்டுகின்றார்கள்.

உலகில் பொய் பேசாதவன் எவனுமே இல்லை என்று, தர்க்கித்து, தம்பக்கம் நியாயம் கற்பிக்கின்றவர்கள் தொகைதான் கூடி வருகின்றது. அதாவது பொய் பேசுவதுகூட இயல்பான, இயற்கை நியதி என்று சொல்லாமல் சொல்லி விடுகின்றார்கள். அரிச்சந்திரன் போன்ற பழைய கால நீதிக்கதைகளே வெறும் கற்பனை என்று விதண்டாவாதம் செய்பவர்களை என்ன செய்வது?

உண்மையில், இந்தக் கதைகள் ஏன் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றன என்பதை, இவர்கள் அறியாதவர்கள் அல்லர். உண்மையின் தாத்பரியத்தை எடுத்தியம்பும்போது, அதை ஏற்றுக்

RangaRakes
Tamilnavarasam.com

கொள்ள குருட்டுத்தனமான, மறுத்துரைக்கும் பண்பு, சமூக சீர்திருத்தத்திற்கு ஆரோக்கியமானதுமல்ல. இந்தப் பழக்கம் உண்மை நிலையில் இருந்து வாழ மறுத்து, தப்பித்துக் கொள்ளும் ஒரு வழியாகக் கருதி விடுகின்றார்கள்.

இதற்காக, உண்மை உறைந்து போவதுமில்லை. உண்மையில் உண்மை பேசுவது ஒன்றும் சிரமமான செயல் அல்ல. இது ஒரு கடினமான செயல் என்று பயப்படுதல், தம் மனதை அழுக்கடையச் செய்தல், அல்லது அதை முற்றாகவே சிதைத்து விடுதல் என்பதே பொருத்தமான கூற்றாகும்.

உண்மை பேசுதலை ஒரு பழக்கமாகக் கொண்டு வாழ்ந்தால், அதனைப்போல இலகுவான மார்க்கம் எதுவுமில்லை. எல்லாமே பழக்கத்தில்தான் தங்கியுள்ளது. நடைமுறையில் இதனைக் கைக்கொண்டு வந்தால், இதன் தாத்பரியம் நன்கு உணரப்படுவதுடன், எம்முள் ஒரு ஜீவசக்தி உருவாகிக் கொண்டு வருவதையும் உணருவீர்கள்.

மாறாக, பொய்யுரைத்தலையே தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் காலப்போக்கில் உண்மை என்பதை என்னவென்றே அறியாத சூனிய இருட்டுக்குள் உட்தள்ளப்படுவதையும் அதில் இருந்து மீளமுடியாத அதன் கோர நாக்கில் சுவைக்கப்படுகின்ற அவலத்தையும் உணர ஆரம்பிப்பர். இது ஒரு பொறி. மீண்டு வர நினைப்பதற்குள், எல்லாமே சிலவேளை முடிந்து, வாழ்க்கை பூஜ்யமாகிவிடும்.

பட்டால்தான் புரியும் என்பார்கள்.

> உண்மை பேசுதலை ஒரு பழக்கமாகக் கொண்டு வாழ்ந்தால், அதனைப் போல இலகுவான மார்க்கம் எதுவுமில்லை. எல்லாமே பழக்கத்தில்தான் தங்கியுள்ளது. நடைமுறையில் இதனைக் கைக்கொண்டு வந்தால் இதன் தாத்பரியம் நன்கு உணரப்படுவதுடன். எம்முள் ஒரு ஜீவ சக்தி உருவாகிக்கொண்டு வருவதையும் உணர்வீர்கள்.

RangaRakes



சிலர் கூறுவார்கள், 'சத்தியம்' என்பது கேட்க நன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால் அதைக் கடைப்பிடிக்க முடியவில்லையே என்கிறார்கள்.

சந்தர்ப்பவசத்தால், தம் இயலாமையின் பொருட்டு, ஒருவர் பேசும் வார்த்தைகள் வேறு; சாதாரணமாக, உண்மை பேசுவதற்கு எந்தவித இடைஞ்சலும் இல்லாதவிடத்து ஒருவர் அதைப் பேசாது, உண்மையை மறைத்துப் பொய் பேசுவது எவ்வளவு அநாகரிகமானது? பொய் பேசுவதற்கு ஒருவர் வெட்கப்படவேண்டும். அத்துடன் ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் பேசி நடிக்கவும் வேண்டியிருக்கின்றதே. இது எமது உயிர்க்கு கருமை பூசுவதாகும். இது நிம்மதியை நாசமாக்குவதுடன், எம்மைப் பிறர் சதா சந்தேகக் கண்களுடன் பார்ப்பது போலாகிவிடும். இந்த நிலை தொடர்ந்தால், நாம் சொன்ன வீணான பொய்களினால், வெட்கம், பயம், கோபம் (யாராவது திரும்பத் திரும்ப சந்தேகமுடன் வினா தொடுக்கும்போது) என்பன எம்மை வியாபிக்க ஆரம்பிக்கும். உளவியல் ரீதியாக நாம் ஆய்வு செய்தால், ஒருவனுடைய மனம் பொதுவாக உண்மைகளையே பேசும். அத்துடன் அது, உண்மையையே பேசு எனக் கட்டளையிட்டுக்கொண்டேயிருக்கும்.

மறுபுறத்தில், நாம் பலவீனமான நிலையில் இருக்கும்போது அந்தக் கட்டளையை ஏற்க மறுத்து விடுகின்றோம். இந்த நிலை மிகவும் மோசமானதும், அநாகரிக நிலைக்கு இட்டுச் செல்வதுமாகும்.

மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்படல் என்பது இஃதேயாகும். உண்மையே பேசுவது என்கின்ற லட்சியத்தில் இருக்கும்வரை, பொய்மைக்காக, மனப்போராட்டத்தில் அமுங்கிப் போதல் என்பதே நிகழாதுவிடும்.

உண்மை பேசி வாழும்போது சில நடைமுறைச் சிக்கல்கள் வரத்தான் செய்யும். ஆனால் இது தற்காலிகமானதே. நூற்றுக்கு

Tamilnavarasam.com

நூறு சரிவர, சத்திய நெறியில் வாழுகின்றவர்களது, பெருமைகளை, உலகம் சற்றுத் தாமதமாகவே புரிந்து கொள்ளுகின்றது. புரிந்து கொண்டதும் தீய சக்திகள் எதுவும் அவர்களை அண்டமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். சோதனைகளும், வேதனைகளும் சத்தியவான்களுக்குத் தற்காலிகம் என்பது போலவே, வெற்றிகளும், களிப்புகளும் பொய்மைவாதிகளுக்கு தற்காலிகமானதேயாகும். இவர்கள், விடுபட முடியாத தோல்விகளால், அவமானமும் அல்லல்களும் பட்டே தீருவர்.

உண்மை பேசி வாழும் வாழ்வு சாஸ்வதமானது. இதில் கிடைக்கும் மன நிறைவும் சாஸ்வதமானது. ஏன் எனில் இறைவன் இயற்கை மூலம் ஒரு முடிவான வரைவிலக்கணம் வகுத்துள்ளான். அந்த அந்நியதிக்கு மீறி எந்நிகழ்வும் நடந்துவிட முடியாது. அந்த மாபெரும் உன்னத வரைவிலக்கணம் உண்மை ஒன்றேதான். இதற்கு மாறுபாடான வடிவங்கள் கிடையவே கிடையாது. ஏனெனில், எப்படித்தான் ஆடி, ஓடி, இஷ்டப்படி நடந்தாலும் ஈற்றில் வெல்லுவது 'உண்மை' தான்.

இதனைத்தான் சகல மதங்களுமே வலியுறுத்தி வருகின்றன. மதங்களூடாக பேசப்படுகின்ற கதைகள், வரலாறுகள் யாவுமே சத்திய வாழ்வு, அதன் மேம்பாடு பற்றி, மக்களுக்கு அடித்துக் கூறுவதாகவே அமைந்துள்ளன. இவை கற்பனையோ, உண்மைச் சம்பவங்களோ என்பதல்ல பிரச்சனை. உண்மை பற்றியும், அதற்கெதிரான போராட்டங்கள் எப்படி துவசமாகின்றன என்பது பற்றித்தானே சொல்லுகின்றன. இவைகளை நாம் வாசிப்பதுடன் சரி, ஏற்று கிரகிக்கின்றோமா என்பதுதான் சிந்திக்க வேண்டியுள்ளது.

குழந்தைப் பிராயத்திலிருந்தே பெரியவர்கள், உண்மை வெளிப்பாட்டின் சக்தியை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். கதைகள் மூலம், பெரியார்கள் வரலாறுகள் மூலம் பக்குவமாகக் கூறி, அவர்கள் அடி மனதில் இது பற்றிய

RangaRakes



அசைக்க முடியாத ஓர் உணர்வினை விதைத்தும் விடல்வேண்டும். இந்த நம்பிக்கை விதை வேரோடிவிட்டாலோ, அவர்கள் வெறும் தூய்மை உள்ளத்தினை, எதிர்காலத்தில் எந்தத் தீய சக்தியுமே களங்கப்படுத்திவிட முடியாது.

அண்ணல் மாகத்மா காந்தியடிகளுக்கு, 'அரிச்சந்திரன்' கதை எப்படி அவர் இளவயது மனதில் நிரந்தரமாக இடம்பிடித்து, அவரை மகாத்மாவாக மாற்றியது என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். தொட்டில் குழந்தையிடமும் தூய விடயங்களைப் பேசுங்கள்.

குழந்தைகள் ஆரம்பத்திலே பொய், புளுகு அவர்கள் உரைப்பதை நீங்கள் ரசிக்காமல், அன்போடு பேசி, நல்லனவற்றையே சொல்லிக் கொடுங்கள். தவிர்க்க வேண்டிய குணாதிசயங்களைத் தவிர்க்க வேண்டியது பொறுப்பு வாய்ந்த பெரியோர் கடமையாகும். பழக்க தோஷம் பொல்லாதது. இதன் பிடியில் இருந்து மெள்ள மெள்ள விலக எத்தனித்தேயாக வேண்டும். தவறு என்று தெரிந்த பின்னரும் அதைத் தழுவுதல் சரியா?

உண்மைதான் பேசமுடியும், உண்மையாகத்தான் வாழ முடியும். உண்மையைத்தான் நேசிக்கமுடியும். இது விடயத்தில் முடியாது என்று கூறிவிடல் வேண்டா.

தினக்குரல் 24-09-2000

Tamilnavarasam.com



# சுய பாதுகாப்பு

**த**ன்னைத்தானே தற்காத்துக் கொள்வதற்கு ஒருவன் உரிமையுடையவனாகின்றான். இது பிறர் நலம் பேணா வெறும் சுயநலம் அன்று. இவையிரண்டிற்கும் நிரம்ப வித்தியாசங்கள் உண்டு. தனது நலனை மட்டுமே ஒரே குறிக்கோளாகக் கொண்டுள்ள சுயநலத்தினால் பிறர் பாதிக்கப்படக்கூடிய ஏதுநிலையும் உருவாகலாம்.

சிலர், பிறர் மீதும், சமூகத்தின் சகல மட்டங்கள் மீதும் உள்ள அதீத ஆர்வம் காரணமாக, தம்மையே மறந்து, அதில் ஈடுபடும்போது, உதவிகளை நல்கும் போது இவர்கள் சங்கடங்களுக்கும் ஆளாகின்றனர். ஒருவன் பிறர்க்கு உதவும்போதுகூட, அவன் ஸ்திரமான நிலையில் இருக்கவேண்டியுள்ளது என்பதையே இது காட்டுகின்றது.

பிரச்சினைகளைக் கையாளுமுன், அதற்குத் தகுந்தவிதத்தில் முகம் கொடுக்கத் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும். ஒருவன் நிலை



உயர்வடைதல் என்பதுகூட, அவன் பிறரை உயர்வடையச் செய்வதற்காகவே என்று அறிக.

ஆளுமைகளை வளர்த்துக்கொள்வது என்பது அந்நியர்களை, மாற்றார்களை மடக்குதலுக்கு அல்ல. இது சுயநலத்திற்குட்பட்ட செயலன்றி வேறில்லை.

பொதுவான ஒரு நல்லியல்பு என்பது எம்மால் யாராவது பெறத்தக்க சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே. இதனால் எம் ஆன்மா வளப்படும். இது பலம்மிக்கதாக அமைய எம்மைத் திட சிந்தை மிக்கவர்களாக மாற்றிக் கொள்ளவும் வேண்டும்.

சாதாரண நிலையில் உள்ள எவருமே தன்னால் இயன்ற பங்களிப்பை சமூகத்திற்கு நல்க விழைவது வரவேற்கக் கூடியதேயாகும். எனினும் பலம் மிக்க ஒரு பிரச்சனையை நாம் கையாளும்போதுதான், எமது பரிமாணம், சக்தி எமக்கே புலனாகின்றது. இதன் பொருட்டு காரிய சித்தியானால் மகிழ்வும், மாறாக, சற்றுப் பின்னடைவாகப் போனால் ஏமாற்றம், தடுமாற்றம் ஆகியனவும் தோன்றி நம்மை வலுவிழக்கச் செய்கின்றன. தொடர்ந்தும் வெற்றிகளையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பதனால், ஏமாற்றங்களை நாம் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

மனவளம், உடல் வளம் ஆகிய இரண்டுமே சமூகத்திற்கான, உழைத்தலுக்கு அவசியம் தேவைப்படுகின்றது. உடல் வலுவை மட்டும் நம்பி, வளமற்ற சிந்தனைகளின்றி வாழ முடியாது. இதேபோல், எத்தனையோ புத்தி ஜீவிகளும் நல்லவர்களும் தகுந்த ஆரோக்கிய வாழ்வு முறைகளின்றி குறுகிய காலத்தினுள் வாழ்க்கையை சிதைத்துவிட்டார்கள்.

RangaRakes Tamilnavarasam.com

தோல்விகளால் ஏற்பட்ட வடுக்களை, ஏற்பதை விடுத்து, அதை மேலும் குத்தி, புண்ணாக்கிப் புரையோடச் செய்வதே சாமானிய மாந்தர்களின் வழக்கமாகிவிட்டது. வெற்றியும் சரி தோல்வியும் சரி வாழ்வில் நிகழக்கூடிய சம்பவங்கள் என்பதே உண்மை. இவைகளில் புதுமையோ, ஏதோ நடக்கக்கூடாததோ ஒன்றும் இல்லை. தோல்விகளால் ஏற்படும் பாதிப்புக்களைக் களைய எம்மை நாம் பாதுகாக்கும் உபாயங்களை கற்றுக் கொள்ளவேண்டும். இவைகள் வழி தவறிய, துன்மார்க்க தந்திரங்களாக அமைந்துவிடாதபடி வழிமுறைகளைத் தேடிக் கொள்வதும் அவசியமாகும்.

மனவளம், உடல் வளம், (வலிமை) ஆகிய இரண்டுமே, சமூகத்திற்கான உழைத்தலுக்கு அவசியம் தேவைப்படுகிறது. உடல் வலிமையற்று இருந்தால், மனவளம் இருந்தாலும் உழைக்க முடியாது. அதுபோலவே, வெறும் உடல் வலுவை மட்டுமே நம்பியும் வளமற்ற சிந்தனைகளின்றிக் கருமமாற்ற முடியுமா? பிறர் முன் எடுத்துக்காட்டாக வாழத்தான் முடியுமா? எத்தனையோ புத்தி ஜீவிகள் குறுகிய காலத்திலேயே தம் வாழ்க்கையையே முடித்து விடுகின்றனர். தமது உடலைத் தகுந்த முறையில் போணாது விடுவதுகூட, ஒரு விதத்தில் தற்கொலை செய்வதற்கு ஒப்பானதே.

கலைஞர்கள், எழுத்தாளர்களை இந்த இடத்தில் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. போதைவயப்பட்டும், கட்டு மீறிய நெறி தவறிய வாழ்க்கை முறையாலும், தாம் பின் தள்ளப்படுவதை உணராத பல படைப்பாளிகள் அநியாயமாய் அழிந்து விடுகின்றனர். இவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாதவர்கள். உலகிற்கு மேலும் பல உருப்படியான ஆக்கங்களை அளிக்கமுடியாது, நடு வழியில் மறைந்து செல்பவர்கள். அத்துடன், தமது பிழைப்பிற்காக, இவர்களை



அணுகும் பிரபலங்களும் இவர்களைத் தம் தீய வழியில் இணைத்துக் கொள்வதனால். மேலும் அவர்கள் ஆபத்தை அணைத்து அணைந்துவிடுகின்றனர். இதனால் உண்மையான கலைஞன் வெந்து போவதும், அவர்களுடன் கூட இருந்தவர்கள் அவர்கள் நிலை கண்டதும் உடன் தொலைந்து போவதும் நாம் அறிந்தவொன்று.

எல்லாவற்றையுமே அறிந்த கலைஞர்களே இப்படியாக இருந்தால் சாமான்ய மனிதர்களின் நிலை என்ன? அனுபவ பாடங்களால் நாம் பல உண்மைகளை அறிந்து கொண்டு வருகின்றோம்.

ஆயினும், எமது அனுபவங்களாலும், பிறர் அனுபவங்களாலும் ஒவ்வொருவர் கொடுக்கும் விலையோ, மிக மிகப் பெரிது. துன்பங்களை வாங்கி இன்பங்களைச் செலவு செய்கின்றோம்.

அல்லது, ஒரு சிறிய லாபத்தை அல்லது மகிழ்வை அடைய, பெரிய சுமைகளை ஏற்கவேண்டியும் இருக்கின்றது.

நல் நெறிகள்தான் ஒருவனைத் தற்காத்துக் கொள்கின்றது. வரையறைக்குட்பட்ட வாழ்வு, வரம்பு மிகுந்த உரிமைகள், இவைகளை மனிதன் தன் சுய கட்டுப்பாட்டிற்காக அமைத்துக்கொண்டால், அவனுக்கு எந்தத் தொந்தரவும் அவனை அண்டாது. சுதந்திரமாகவும், நெகிழ்ச்சித் தன்மையுடனும், சந்தோஷமுடனும், அச்சமின்றியும் வாழ இந்தக் கட்டுப்பாட்டு நெறி கட்டாயம் தேவையாகின்றது. இவை சிறை அல்ல. வலுவான சட்டங்கள் இவைகளின் கட்டுப்பாடுகள் மனித நாகரீகத்தைச் சிதைவுறாது வைக்க, என்றோ உருவாக்கப்பட்டவையாகும். நாம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் மனித இனம். சாதாரண வாழ்வு நெறி பற்றித்

RangaRakes Tamilnavarasam.com

தர்க்கிப்பதில் அர்த்தமில்லை. வாழ்வியல் உரிமை பேணப்படும் போதுதானே, தனி மனிதனின் பாதுகாப்பும் வலுப்படுகின்றது. இது அனைவர்க்கும் பொதுவானதே.

ஒருவன் தன்னை வளப்படுத்திக் கொள்வதில் உள்ள நியாய பூர்வ உரிமைகள், அனைவரும், அவ்வண்ணமே பெறுவதில் தங்கியுள்ளது. ஒருவருக்குக் கிட்டுவது, ஏனையோருக்கும் உரிமையானதே.

தனிமனிதர்கள் ஒவ்வொருவருமே பலப்பட வேண்டியவர்களே. இதுதான் அவர்களுக்குரிய பெரும்பாதுகாப்பு. எனவே, சுய பாதுகாப்பு, ஒட்டு மொத்த உலகமே பலம் பெறும் ஒன்றாகிவிடுகின்றது.

*தினக்குரல் - 08.10.2000*



# விசித்திரமான மனங்கள்



எம்முன்னே எத்தனையோ விசித்திரமான மனிதர்கள், பல்வேறுபட்ட வித்தியாசமான குணாதிசயங்களுடன் உலாவி வருவதை நாம் காண்கின்றோம். அவர்களில் ஒருவராக நாமும் இருக்கலாம். எங்கள் நடத்தைகள் பற்றிப் பிறர்தான் சொல்லவேண்டும். பிறருக்குப் பிரச்சனையில்லாது விடின், யார் யார் எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். எவரும் கண்டு கொள்ளமாட்டார்கள்.

ஆனால், பிறர் சுதந்திரத்தில் மூக்கை நுழைத்துக் கொள்ளும்போதுதானே பிரச்சினைகளே உருவாகின்றன. நல்லபடி வாழ்வது என்பது, முதலில் நாம் பிறருக்கு உபத்திரவம் கொடுக்காமல் இருப்பதுதான். அத்துடன் உலகிற்கு நாம் செய்கின்ற தொண்டுகள், சேவைகள் என்பவைகளைப் பொறுத்துத் தனித்துவமான உன்னதமான இடத்தை பெற்றவர்களாகி விடுகின்றோம். பெரிய பணி, சிறிய தொண்டு எனப் பேதம் கருதாது, அந்த நேரத்து அத்தியாவசியம் கருதி எமக்குரிய பணியை முடித்துவிடல் வேண்டும். நன்மைகளைச் செய்யத் தெரியாமல் இருப்பது பேதமை. ஆயினும் நன்மை செய்ய முடியாதுபோயினும், தீமையாவது செய்யாது இருத்தல் உத்தமமானதன்றோ? இதனையே சுவாமி விவேகானந்தரும் கூறினார். தீமைகள் செய்யாதவன்

RangaRakes Tamilnavarasam.com

ஈற்றில் நன்மைகளையே சமூகத்திற்கு வழங்க ஆரம்பித்து விடுகின்றான்.

கல்வி, செல்வம் என்று எதைத்தேட முனைந்தாலும், நாம் முன்னேறவேண்டும் என்கின்ற பேரவா எம்முள் எழுவது இயற்கையே. இதைத் தடை போட முடியாது. தடைபோடவும் கூடாது. என்றாலும் இதனைப் பெறுதற்காக, ஏனையோரை வருத்துதல், வஞ்சனை புரிதல் கூடாது. எல்லோரது நலன்களுமே பேணப்படல் வேண்டும் என்பதே பிரதானமானதாகும்.

இன்று நடப்பதுதான் என்ன? ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்வதன் மூலம்தான் நன்மைகள் பல கிட்டுமென தப்பான ஒரு எண்ணத்தினை அநேகர் விதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் சிலருக்கு சில அனுகூலங்கள், தற்செயலாக நடந்துவிட்டால், அதுவே ஒரு வழியாகக் கொண்டு விடுகின்றார்கள். இவர்கள் இதன் தாக்கத்தினைக் காலம் கடந்தேனும் கட்டாயம் பெறுவார்கள்.

ஒவ்வொரு தாக்கத்திற்கும் ஒரு சம எதிர்த்தாக்கம் இருக்கும். இது ஒரு விஞ்ஞான ரீதியான தத்துவமாகும். என்றாலும் வாழ்க்கைக்குகூட இது பொருந்தி நிற்கும். செய்கின்ற வினைக்கும் எதிர்மறை வினை உண்டு. அதாவது, பாவம் செய்தவன் தப்பித்துக்கொள்ள முடியாது. நன்மைகள் செய்தவர்களும் அதன் பெறுபேறுகளை அடைந்தே தீருவர்.

சிலரைப் பாருங்கள், பெரிய தனவந்தராக இருப்பார். பிறரிடம் இல்லாத பல பொருட்களை வாங்கிக் குவித்து

> தனிமனித நடத்தைகள் அனைத்தும் இணைந்தே உலகை இயக்குகின்றன. எனவே நாம் எம்மைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. எமது இயல்புகளை வளமாக்கிக் கொள்வோம். நாம் எமது கழகத்தின் பிரச்சனைகளை, குறைபாடுகளை அறியாமல் இருக்கக்கூடாது. எதிலும் விலகி இருத்தல் தகாது.



வைத்திருப்பார். ஆயினும் ஒரு ஏழையின் வாழ்வை, அவன் அனுபவிப்பதைக் கண்டால் பொறுக்காது. அவன் ஒரு சாதாரணமான பொருளை வைத்திருப்பதைக் கண்டாலும், "அடடா இது எனக்குத் தெரியாமல் போயிற்றே, என்னிடம் இல்லாத ஒரு அற்புதமான பொருளை இவன் எப்படி வைத்துக் கொள்ளமுடியும் என அங்கலாய்ப்பதுடன் நின்றுவிடாது, அதை எப்படிப் பிடுங்கிவிடுவது எனத் திட்டம் வேறு தீட்ட ஆரம்பிப்பான். உண்மையில், அவனிடம் உள்ள பொருள்போல் பல மடங்கு பொருள்கள் குவிந்திருக்கும். ஏன் அதனைவிடப் பெறுமதி வாய்ந்த சிறப்பானவைகளையும் வைத்திருப்பான். இருந்தும் என்ன, அவனிடம் உள்ள அவா அவனை விழுங்கிவிடும். எல்லாம் எனக்குத்தான் வேண்டும் என்கின்ற ஆசையுடன் கூடிய மமதை அவனை ஆட்டுகின்றது.

ஆசைப்படுவது மனித இயல்பு. என்றாலும் பிறர் பொருள்மேல் ஆசைப்படுவதும், அதன் பொருட்டுப் பொறாமையுறுவதும் ஒழுக்கக் கேடான நடத்தையல்லவோ? இதன் பெறு பேறுதான் என்ன? தன்னிடம் உள்ள செல்வத்தினாற் பெறும் சுகங்களையே, தன் மித மிஞ்சிய அங்கலாய்ப்பினால் துறந்து விடுகின்றான். சதா காலமும், காழ்ப்பும், கரிப்புணர்வுமாய் அவஸ்தையுற்று, தன் இதயத்தை எரித்துக் கொள்கின்றான்.

இவைகள் எல்லாம் மனத்தூய்மை இழந்தவர்கள் தாமாகவே தேடிக் கொள்கின்ற வினைதானன்றி வேறில்லை. ஆயிரம் சேலை வாங்கி, விதவிதமாக உடுத்தி வரும் பெண்கள் சாதாரண சேலை கட்டிவரும், இன்னொருத்தியைக் கண்டு ஆசைப்படுவது சாதாரண நிகழ்ச்சி. சாதாரணமாகவே இதை எடுத்துக்கொண்டால் சரி. இதன் பொருட்டு மனதை அல்லாடவிடுவதுதான் சகித்துக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

உடலுக்கு ஏற்பட்டு விடுகின்ற நோய் மட்டும்தான் நோயல்ல. தேவையற்ற விடயத்திற்காக, தம் இயல்பை,

RangaRakes Tamilnavarasam.com

நடத்தைகளை மாற்றிக் குழம்புவதுகூட ஒரு மனோ வியாதியன்றி வேறென்ன? இவர்கள் தம் நிலை அறியாத மனோ வியாதிக்காரர்களே. இந்த இயல்புகளைக் களைவது எங்ஙனம்?

மனதைப் பரந்த அளவில் விரிவாக்கிக் கொள்ளல் வேண்டும். எல்லார்க்கும் எல்லாமே வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

நான் மனிதன், அடுத்தவனும் மனிதன். அவனுக்கும் தேவைகள் ஆசைகள், விருப்பு, வெறுப்புக்கள் உண்டு என உணருதல் வேண்டும்.

மற்றவர்களுக்கு வரும் இன்ப, துன்பம் தனக்கும் வரும் என அறிந்துகொள்ள வேண்டும்.

சரியானதை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனம், அறிவு என்பது எல்லோர்க்குமே பொதுவான ஒன்றேயாகும். எனவே சரியானதைச் சிந்திக்க இங்கு ஒருவரும் தடைபோட மாட்டார்கள். நாமாகவே, வேண்டுமென்றே கெட்டுவிட, நாமே எம்மை அனுமதிக்க முடியுமா?

நான்தான், எனக்கு மட்டுமேதான் என எப்படி நாம் எண்ணமுடியும்? இப்படியே ஒவ்வொருவரும் எண்ணினால் தாக்கப்படுவதும், நாம் எல்லோருமே தான் - இதில் ஐயம் எதுவுமில்லை.

சற்றே எண்ணிப் பாருங்கள்.

தனிமனித நடத்தைகள் அனைத்தும் இணைந்து உலகை இயக்குகின்றது. எனவே நாம் எம்மைக் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. எமது இயல்புகளை வளமாக்கிக் கொள்வோம். பிரச்சினைகள் எழாது. அது போதும்.

*தினக்குரல் 1.10.2000*



# காதலைப் புரிந்தவன் மௌனமாகின்றான்



**கா**தல் இல்லாத வாழ்வே இல்லை என்கின்றார்கள். கனிந்த இதயங்களும், உயிர்ச் சுவாசங்களும் ஒருமித்துப் பரஸ்பரம் தூய அப்பழுக்கற்ற பரிமாற்ற சங்கமமே காதல் என்று பேசுகிறார்கள். காதலின் மென்மையும் உண்மையும் அது வருடிக் கொடுக்கின்ற இனிமை நினைவுகளும் உறவுகளும் என்றுமே சாஸ்வதமாக நிலைக்க வைக்கும் இயல்புடையது. பேராற்றலும் அசாத்திய துணிச்சலும், இனம், வயது, தகுதி இவைகளுக்கு அப்பால் நின்று மேலும் பல குண இயல்புகளை மிக அழுத்தமாகவே உணர்த்தி நிற்கும். இது ஒரு சாரார்க்கு மட்டும் இனிமையான சுகந்த உணர்வும் அல்ல. இதன் ஆட்சிக்கு எல்லோருமே கட்டுப்பட்டேயாக வேண்டுமென்கின்ற நிலை.

தவிர்க்க விரும்பாத இனிய வலை.

சொர்க்கத்தின் சாவி.

வாழ்வின் அர்த்தத்தினைக் காட்டும் வேதம்.

அத்துடன்,

RangaRakes
Tamilnavarasam.com

எமக்கே தெரியாமல், வந்து உட்கார்ந்து கொள்ளும் விசித்திர விருந்தாளி. ஏற்றத்தாழ்வு, மொழி, இனம் என்கின்ற எதையுமே ஏறெடுத்துப் பார்க்காது வந்து ஒட்டிக் கொள்ளும் விந்தை உணர்வை என்னென்பது?

காதலைப் புரிந்தவன் மௌனமாகின்றான்; புரிந்து தெளிந்தவன் ஞானிகின்றான்; தெளிவற்றவன் சோர்ந்து தன் வயமிழக்கின்றான்.

காதலைப் பேசுவதைவிட, அதை அனுபவிப்பதே இனிமையானது. காதல் பற்றிச் சப்தமிடுபவன், அதைக் கண்டு கொண்டதும் மௌனித்து அதனுடன் சங்கமமாகி விடுகின்றான்.

இது எழிலான உயிர். உயிர் உருவம் பெறுவதுங்கூட உண்மைக் காதலூடாகத்தான். இதன் மெல்லிய காந்த அலைகளை மீட்டி ரசிப்பதில் காணும் சுகானுபவத்தினைப் பற்றித்தானே ஆயிரம், ஆயிரம் காதல் பூக்களை விரித்து இந்தக் கவிஞர்கள் தம்முடைய சிந்தையூடாகச் சுகவாசத்தை அள்ளித் தெளித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதன் சுகானுபவ இனிமைக்கு எல்லை இல்லை. இதன் சிரஞ்சீவித்தன்மை பவித்திரமானது.

இந்தப்பூமிக்கும், ஜீவன்களுக்கும் உள்ள தொடர்புகள் இருக்கும்வரை இந்த அன்பு நிலை அறுபடவே முடியா ஒரு உன்னத நிலையாக இயற்கை அமைத்துவிட்டது. மனிதன் முதல் சகல ஜீவராசிகளும், ஒன்று மற்றையதற்கு ஆதாரமாகவே ஜனிக்கின்றன. தனிமை வேதனை தகிக்கக்கூடியது. தனித்து

> காதலின் முடிவு எத்தகையதாயினும், அதனுள் பிரவேசிப்பது, காதலுக்கு ஏற்பட்ட வெற்றியேயன்றி வேறில்லை. காதல் ஒருவரின் முரட்டுச் சுபாவம், வக்கிர புத்திகளை இல்லாதொழித்து, அவரை மென்மையான உணர்வுகளுக்கு, உரித்தாக்குகின்றது. அதே சமயம் கோழைகளைக்கூட உலகையே உருட்டச் செய்யும் பலசாலியாக்கவும் செய்கிறதே! காதல் மென்மையானது மட்டுமல்ல. எம்மை ஆகர்ஷிக்கும், கம்பீரமானதும்கூட...



வாழுதல் பொருந்தாத ஒன்று. யாருடனுமாவது ஈடுபாட்டுடன் பழகாமல் இருக்கமுடியுமா? கணவன், மனைவி, நண்பர், சுற்றம், உறவு என்று ஒரு துணையை நாம் தேடிக் கொண்டிருக்கின்றோம். படிக்கலாம், பார்க்கலாம், கேட்கலாம் இவைகளை நாம் செய்யாமலும் இருந்துவிட முடியும். இவைகளோடிணைந்த எத்தனை கர்மாக்களை செய்தாலும் மனதும் உடலும் ஸ்பரிசிக்காது, உயிரினம் உலவுவது கடினமானதே.

இந்த ஸ்பரிசத்திற்காகத்தானே உயிர் ஏங்குகின்றது. வெறுமை பூச்சில் ஒளிந்து கொண்டிருப்பவனும், முடிவில் தன்னையும் மீறிய காதல் உணர்வினால், உள்ளத்திற்கு உள்ளதைச் சொல்ல வேண்டியவனாகின்றான். இது ஒன்றும் தப்பு இல்லை. என்றாலும்கூட,

காதல், இருட்டுக்குள் ஒளிவது அல்ல, உள் மன வெளியில், ஒளியோடு உலா வருவது. இதற்குள் பூட்டியபடி இருப்பவர்க்கு, புற உலகு பற்றித் தெரியாது. இதன் தாக்கம் அத்தகையது.

ஆத்மாக்கள் பேச மொழி வேண்டியதில்லை. மொழியில்லாத பரிபாஷையில் பேசப்படும் போது செயற்கைத் தனமில்லை. இது உணர்வு அலைகளின் மோதலால் ஏற்படும் மென் அசைவுகள். குறிப்பிட்ட அலை வரிசையில்தானே வானொலியில் இசை வருகிறது. காதலும் அத்தகையதே.

இது சம உணர்வுகளின் சங்கமம். உண்மையான, தெளிவான ஸ்வரங்கள் உண்டானால் அபஸ்வரங்கள் கிடைக்க வழியில்லை. அபஸ்வரங்கள் இசை ஆகாது; அவை வசை.

இவைகளை நாம் வெறும் உதாரணமாக எடுத்து இயம்புவதும், புகழ்வதும், யதார்த்த வாழ்வில் காதலைக் கத்தரிக்கும் செயல்களையே செய்வதும், காதலைக் கொச்சைப்படுத்தும் செயல்களாகும். எனினும் இது சமூகத்தின் நியதியுமாகிவிட்டது.

RangaRakes Tamilnavarasam.com

பொருந்தாத காதலினால், அதன் சீரழிவினால் நிஜக்காதல்களும் நிர்க்கதிக்குள்ளாக்கப்படுகின்றன. எங்கோ ஓரிரு சமாச்சாரங்களை, கதைகளை நாமாக உருவகித்து, காதல் பற்றிப் புதுப்புது அர்த்தங்களைப் புனைந்து கொள்கின்றோம். இதன் தூய்மை பற்றி எந்த அளவில் அளந்துவிட்டோம்?

தாய்மை, அன்பு இவைகளை உணர்த்துவதற்குத்தானே கடவுள்களுக்கே, ஆண் பெண் உருவம் இட்டு அம்மை, அப்பனாக வணங்கியும் வருகின்றோம். இறைவனைத் தலைவனாகவும், இறைவியைத் தலைவியாகவும் வழிப்படுதல் செய்கின்றோம்.

காலங்களின் மாற்றத்திற்கு காதலை மாற்றியமைக்க முடியாது. இது கனவும் அல்ல. நினைவில் நிறுத்தி ஜீவித்துக் கொண்டேயிருக்கும். வற்றாத புது ஊற்று. பழமையும், புதுமையும் காதலுக்கு ஒன்றேதான். இது வாழ்ந்து கொண்டிருக்கும்போதும் இனிமேலும், இது பேசப்பட்டுக் கொண்டேயிருக்கும். தன் வலிமையை, தன் குன்றாத இளமைப் பொலிவுடனேயே இனம் காட்டிக் கொண்டிருக்கின்றது. முடிவுள்ள பொருளுக்கு மட்டுமே வரைவிலக்கணம் கூறி வகைப்படுத்தவும் முடியும். முடிவில்லா விடயங்களை எதற்குள் அடக்குவது?

காதலித்தவனைக் கேட்டுப் பாருங்கள். அவன் தன்னைவிட ஜெயித்தவன் எவனும் இல்லை என்பான். இதில் தோற்றவனைக் கேளுங்கள். தன்போல் இழந்தவன் எவனுமில்லை என்பான். ஆனால் ஒன்று - காதலைப் பெற்றுக் கொண்ட விடயத்தில், இருவருமே வென்று விட்டவர்கள்தான். காதலின் முடிவு எத்தகையதாயினும், அதனுள் பிரவேசிப்பது காதலுக்கு ஏற்பட்ட வெற்றியேயன்றி வேறில்லை. காதலியின் சுண்டு விரலின் அசைவு அவன் இதயத்தின் அசைவாகத் தோன்றுவது, பிறருக்குப் பார்த்தால் நகைப்பாக இருக்கலாம். அந்த சுண்டு விரல் சொர்க்க அனுபவம், அவனது மெல்லிய உணர்வுகளுக்கு, அவன் இதயச் சுவர்களின் மென்மைக்கு ஓர் உதாரணம். இங்கு இவனின்



முரட்டுச் சுபாவமும், வக்கிர புத்திகளும், எங்கே போய்ச் சரணடைந்துவிட்டன?

காதல் பல சமயங்களில், பலசாலிகள், புத்திசாலிகளைக்கூடப் பலமிழக்கச் செய்யும் என்றாலும் கோழைகளைக்கூட உலகை உருட்டித் தள்ளும் வீரன் ஆக்குகின்றது என்றும் பலர் சொல்லக் கேட்டிருக்கின்றோம்.

வியாக்கியானங்கள், கண்டனங்கள், விமர்சனங்கள், வரைவிலக்கணங்கள் என்று பலதரப்பட்ட வடிவங்களில் பேசப்பட்டு வருகின்றபோதிலும் கூட, இவைகளுக்கு அப்பால் நின்று, தனித்துவமான ஒரு வடிவத்தினைக் காதல் எமக்குக் காட்டி நிற்கின்றமையை நாம் மறுத்து விடமுடியாது.

காதல் வாழ்வு என்பது, திருமணத்தின் முன்பு மட்டும், பழகுவது பேசுவது, ஒன்றாக வலம் வருவது என்று தப்புக் கணக்குப் போட்டு விடுகின்றார்கள். காதலிக்காமல், திருமணம் செய்தவர்களுக்கு இது பற்றி ஒன்றுமே தெரியாத மாதிரி சிலர் பேசுகின்றார்கள். ஒருவர் முகத்தை மற்றவர்கள் பார்க்காமலேயே, திருமண பந்த மூலம் இணைந்து, கருத்தொருமித்த காதல் தம்பதியர்களாக, பன்னெடுங்காலம் வாழ்ந்து வரும் எத்தனை பேர்களைக் கண்டு வருகின்றோம். காலத்தை வென்றது காதல் அல்லவோ! அன்றியும் காதலித்துத் திருமணம் செய்த பின்னர் முரண்படுவது காதலையே களங்கப்படுத்துவது போல் அமைகின்றதல்லவா? தற்காலத்தில் இந்த அவல வாழ்வைத்தானே பலர் வாழ்ந்து வருகின்றனர். இதனால்தானே, சமூகத்தில் காதல் பற்றிய நம்பிக்கையீனமும் ஏற்பட்டுவிடுகின்றது. பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டுத் திருமணம் செய்தவர்கள் ஒருவரை ஒருவர், முதன் முதலாக அறியப்படுவதும், உணரப்படுவதுங்கூட ஓர் இனிய சுகானுபவமான, விந்தைக் காதல் உணர்வினைப் பெறுவதேயாகும்.

RangaRakes Tamilnavarasam.com

'திருமண வாழ்விற்கும், காதல் முன் அனுபவம்தான் எதற்கு? வயது முதிர்ந்தாலும், காதல் இளமையாக இருப்பதும், அதே சமயம், காதலின் பரிமாணம் பெரிதாக வலுப்படுவதுமே உண்மையானதாகும். தெய்வீகப் பிணைப்பு, பூர்வ ஜென்ம இணைப்பு என்றும் நாம் சொல்லுகின்றோம். இருந்தும்கூட, இன்று -

காதலின் தாத்பரியத்தினைப் பற்றிக் கதைப்பவர்கள், எழுதுபவர்கள் எல்லோருமே, திருமணத்திற்கு முன்பு ஏற்பட்ட அனுபவங்களையே, பக்கம் பக்கமாக எழுதுகின்றார்கள், கவிதை வடிக்கின்றார்கள். திருமணத்தின் பின்பு, ஏன் குழந்தை குட்டி, பேரப் பிள்ளைகளைக் கண்ட பின்னர்கூட இது தொடர்ந்து வளர்ந்து, பின்னிப் பிணைவதை நாம் அறியாதவர்களா என்ன? இதன் பெருமை பற்றி அறிய, தர்க்கிக்க இது ஒன்றும் உரை கல்லில் தேய்த்துப் பார்க்கக்கூடிய பொருள் அல்ல.

உதாரணங்களுக்காகக் கூறப்படும் பழங்கதைகள், தற்கால உண்மைச் சம்பவங்கள் எல்லாமே ஓர் எடுத்துக்காட்டு மட்டுமே. மற்றப்படி இது ஜீவித்துக்கொண்டேயிருக்கும் சத்திய சொரூபம்தான். ஒவ்வொரு ஜீவனிலும், வீட்டிலும், நாட்டிலும், என் உலகு பூராவுமே ஒளியூட்டிக் கொண்டிருக்கின்றது.

ஜனனம், மரணங்களில் இதன் உண்மையும், வலிமையும் புலப்படுகின்றன. உயிர்ப் பிறப்புக்கள், பாசம் மிக்க இவைகளின் இழப்புக்கள் மூலம் உள்ளத்து வேதனை, பிரிவுத் துயர்கள் எல்லாமே, காதலின் வேர் எவ்வளவு ஆழமானது. இதன் ஆணிவேரின் அந்தமே காணமுடியாதது என்பதை எமக்கு உணர்த்தும்.

பாசத்தினால் பலவீனமும் அடைகின்றோம், பலமுமடைகின்றோம். ஆனால் இவையின்றி உலகம் இயங்குமா?



இன்பம், துன்பம் இணைந்த கலவைத் அதுவாக அமுத்தும்; அதுவாக இழுக்கும், அதுவாக விழுத்தும்.

காதலில் கரைவது, நனவு வாழ்வில் மட்டுமல்ல, கனவு வாழ்வில்கூட ஒரு நிஜத்தைக் காட்டி நிற்கின்றதே? கனவில் மீண்டு விழிப்பு வந்த பின்புகூட காதல் கனவை இரைமீட்கவே நினைக்கச் செய்வதிலிருந்து, காதலின் கம்பீரம் புரிகின்றது. தாய் அன்பு, சேய் அன்பு, நண்பர் உறவு, உறவுகளின் இணைப்பு எல்லாமே பரந்துபட்ட அன்புணர்வின் வெளிப்பாடுகளே. சகல பிறப்பிற்கும், உயிர்ப்பிற்கும், உந்து சக்தி, மகா சக்தி காதலே யன்றி பிறிதில்லை. உயிர்கள் ஓதும் பொது வேதமும் இதுவே.

*தினகுரல் 15.10.2000*

RangaRakes Tamilnavarasam.com

# தெரியாமை வேறு அறியாமை வேறு



தெரியாமை அல்லது தெரிந்துகொள்ளாமை என்பதும், அறியாமை என்பதும் வெவ்வேறான விஷயங்களாகும். இவைகளுக்கிடையே சில ஒற்றுமைகள் இருப்பதனால், சற்று கருத்து மயக்கம் ஏற்படலாம். தெரியாமை என்பதைவிட, அறியாமை எம்மை மிகவும் பாதிப்படையச் செய்துவிடும். தெரியாமையில் இருந்து நாம் மீண்டுவிடலாம். ஆனால் படித்தவர்கள் பண்புடையவர்கள்கூட அறியாமையில் இருந்து மீளப் பிரியப்படுவதில்லை. முற்போக்குச் சிந்தனையாளர்கள் என்று கூறிக் கொள்பவர்களும், பிற்போக்குவாதிகள் என வர்ணிக்கப்படுபவர்கள், மிதவாதிகள், தீவிரவாதிகள் என்று விமர்சிக்கப்படுபவர்களுங்கூட அறியாமை வலையில் ஆழமாகப் பிடிபட்டு, புதைந்தே விடுகின்றார்கள். எமக்குத்தான் எல்லாமே தெரியும் என எண்ணும் எண்ணம், ஏதோ வகையில் மனதுள் சில வேளை புகுந்தும் விடுகிறதே.

நாம் அறிந்தவரைதான் எல்லாமே சரி என நமது மனது ஏன் கட்டளையிடுகிறது? இது தன்னம்பிக்கையா? தன் முனைப்பா? அல்லது ஆணவமா?

எல்லோருக்கும், எல்லாமே, எல்லாச் சந்தர்ப்பத்திலும் சரிவரத் தெரிந்து கொண்டிருப்பது நடைமுறைச்



சாத்தியமாயிருக்காது அல்லவா? தெரிந்தேயாக வேண்டுமென்கின்ற கட்டாயமும் இல்லை. கண்ட விஷயங்களையும், மூளையில் செலுத்தவே பிரியப்படுகின்றார்கள். அவசியமானதும், அவசரமுமான தேவைகளையே மனிதன் கற்றுக்கொள்ள ஆசைப்படுகின்றான். உலகம் என்கின்ற பரந்த பரப்பில் எதனை நாம் முழுமையாகப் படித்துத் தேறுவது?

எதனைப்பற்றியும் நாம் ஆழமாகப் படிக்க முற்படும்போதுதான் எமது அறியாமையின் ஆழம் நமக்கே, நன்கு புரிந்து விடுகிறது. அதன் கனம், பரிமாணம் இவைகளைக் கண்டதும் அசந்து போய் விடுகின்றோம். அட இதுநாள் வரை இதுபற்றிப் புலனாகாமல் போயிற்றே என மலைத்துத் தடுமாறுகின்றோம். இந்நிலையில், நாம் புரியாத சங்கதிகளைப் பற்றி, மிகவும் புரிந்து கொண்ட மாதிரி பிரசங்கம் பண்ணுகின்றோம். புரியாத விஷயங்களைப்பற்றிப் பேசுவதே சுவாரஸ்யமாக இருக்கின்றது. யாராவது தெரிந்தவர்கள் அதுபற்றி - அதன் நிஜம் பற்றிப் பேசினாலோ, நாம் விட்டுவிடுவதில்லை. யாரையாவது, தம் போன்றவர்களைத் துணைக்குச் சேர்த்துக் கொண்டும், உண்மையைச் சொன்னவன் வாயை அடைக்க முயற்சி செய்கின்றோம். இந்த அறியாமை எவ்வளவு சாதுர்யமாக, முட்டாள் தனங்களைச் செய்கின்றது தெரியுமா? எமது அறியாமையை சரி என நிரூபிப்பதில் உள்ள சந்தோஷத்திற்கு எல்லைதான் ஏது? அறியாமை உணர்வு அந்த நேரத்தில் எமக்கு, சரியானது என்ற பொய்த் தோற்றத்தைக் காட்டி எம்மை ஜெயித்து, உண்மையை அடைத்து விடுகின்றது.

> அறியாமை மனிதன் மனங்களை இறுக்க மூடி உண்மையை வெளிக்கொண்டு வராமல் இருக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்கின்றது. நோயின் தாக்கத்தை நோயாளியே புரியாமல் செய்து விடுகின்ற திறமை இதற்கு உண்டு. தன்னைச் சார்ந்தவர்களைத் தன்னிலைக்கு வரச் செய்கின்றது. ஆற்றலை அற்றுப்போகச் செய்துவிடுகிறது. படிக்காத பாமரர்களை மட்டுமல்ல, அறியாமை எவரையுமே ஈர்க்கும் சக்தி பெற்றது.

RangaRakes
Tamilnavarasam.com

ஆனால்,

அறியாமை நிறைவானதல்ல, அது இறந்துவிடும். என்றைக்கோ உண்மை வெளிப்படும்போது நாம் கூச்சப்பட்டு குறுகி, எம் நிலையை அறிந்ததும் அதிர்ச்சியடைந்தே தீருவோம். இந்த அறியாமையின் பாதிப்பினால் நாம் படும் சிரமங்கள் கொஞ்சமா என்ன?

நாம் கட்டாயமாக அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் நிரம்பவுமுண்டு. எதனையுமே ஆராயாது. 'ஆமாம்' போடுவதும் சும்மா... சும்மா ஏற்கவொண்ணா கருத்துக்களை, யாரோ வேண்டப்பட்டவர்கள். தெரிவித்ததற்காக ஏற்பதும், பழைய கருத்துக்களே சரியானது, புதிய கருத்துக்கள் போலியானது என்று பிடிவாதம் பிடிப்பதும், அல்லது புதியனவைகளே இறுதியான முடிவு, பழைய விஷயங்கள் உதறி எறிய வேண்டியவை எனக் கருதிக்கொண்டு இருக்கின்றவரை அறியாமையும் எம்மைவிட்டு விலகமாட்டாது. கல்வித்துறையும், நாகரீக வளர்ச்சியும் மேலோங்கும் இன்றைய காலகட்டத்தில் கூட, இதன் வீச்சு வீழ்ச்சியடையாமல் இருப்பது வேதனைக்குரியதே.

ஒரு சங்கதியைத் தற்செயலாகத் தெரியாமல் இருக்கலாம். ஆயினும் அதைத் தெரிந்துகொண்டதும் எம்மைத் திருத்தி விடுகின்றோம். உதாரணமாக சமையல் பாகம் ஒன்று ஒருவர்க்குத் தெரியவில்லை. அதை இன்னொருவர் சரியாகச் சொல்லிக் கொடுக்கின்றார். அத்தோடு தெரியாமை என்கின்ற பிரச்சனை தீர்ந்து விடுகின்றது. ஆனால் இந்த அறியாமை அப்படியா என்ன?

மனிதர் பலரை இறுக மூடி, உண்மையை வெளிக்கொண்டு வர முடியாது செய்ய பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது. நோயின் தாக்கத்தை நோயாளியே புரியாமல் செய்துவிடுகிற திறமை இதற்கு உண்டு. இதுவுங்கூட தன் வசமிழந்த நடவடிக்கையாகவே ஆகிவிடுகின்றது. அத்துடன்



தன்னைச் சார்ந்தவர்களையும் தனது நிலைக்கு கொண்டு வர முயற்சியும் செய்கின்றது.

ஆராயும் தன்மையற்று, சொன்னவற்றையே திரும்பவும் உபதேசம் போல் சொல்லி விடுவதும், அறிவை மேல் படிக்குச் செல்லவைக்க இஷ்டமின்றி, அறிவு விழித்தால் ஆபத்து எனத் தன்னை மீறி நினைந்து கொள்வதும், அச்சப்படுதலும், அறியாமையின் ஆபத்தான செயற்பாடுகளாகும். அறிவு என்கின்ற மயக்கமற்ற ஆயுதத்தைத் தவிர, அறியாமை சூன்யத்தை உடைக்கும் வலிமை பிறிதொன்றிற்கும் கிடையவே கிடையாது.

இன்று நாம் செய்தித்தாள்களைப் படிக்கும்போது மலைப்புத்தான் ஏற்படுகின்றது. உலகில் கொந்தளிப்பு நிலைதான் நிரந்தர அலையாகிவிட்டது. தனி மனிதர்களின் நடத்தைகள் ஒன்றுகூடி உலகை உருக்குகின்றது; உலுக்குகின்றது. அறிவை இவர்கள் எங்கே அடமானம் வைத்துவிட்டார்கள். அறிவின் பயன் அற்றுப் போய்விட்டதா? அறிவு இருந்தும் அதனைப் பயன்படுத்தாமல் விடுவது அறியாமையை விட அசிங்கமானது. எல்லாமே தெரிந்தும்கூட, மனிதப் பயனை மனிதப் பெறுமதியை, அறியாது அறிவிலியாக நடப்பது அறியாமையன்றி வேறென்ன? இன்று பலரும் தூங்குவதாகப் பாசாங்கு செய்கின்றார்கள் போல் தெரிகின்றது. இது தங்களைத் தாங்களே ஏமாற்றுவதாகவே படுகின்றது. உண்மையைச் சந்திக்கத் திராணியற்றவர்கள், உறக்கத்தை வலிய நாடுகின்றனர். இதன் பலாபலன்கள்தான் என்ன?

ஆற்றல் இழப்பு, அவமானம், பரிகாசத்திற்கு ஆளாகுதல், பிறரின் ஆட்சிக்குட்படல், நல்ல வாய்ப்புக்களை இழத்தல், தெளிவின்மை, இதனால் ஏற்படும் சோர்வு.

இத்யாதி தாக்கங்கள் எப்படி வருத்துகின்றது என்பதை அறிந்து கொள்ளத்தான் வேண்டும். விடுபட முடியாத

RangaRakes Tamilnavarasam.com

தொல்லைகள் என எதுவும் இல்லை. அறியாமைகூட ஒரு தொல்லைதானே. விடுபட்டேயாக வேண்டுமென்கின்ற உணர்வு வேண்டும். பழமை பற்றிய அதீத கற்பனை உணர்வுகள், அவை பற்றி மாறான எண்ணங்களைத் தமக்குள் வேறுபாடாக உருவகிக்கின்ற தன்மைகள் கூட அறியாமையை வளர்க்கவல்லன. இந்தப் பழமை சித்தாந்தங்கள் உண்மைகளின் தவறு அல்ல. முரண்பாடான கருத்துக்களைத் தெளிவற்று நோக்குவதும், பழமையை அதன் இயல்புக்கமைய நோக்கத் தெரியாத தன்மையுமேயாகும். பழமையினர் உண்மையினை உணர்ந்து கொள்வதுபோலவே, புதுமை உலகின் கருத்துக்களையும் சம அளவில் கிரகித்து ஏற்றுக் கொள்ளப் பழகவேண்டும். முரண்பாடுகள் தெளிவின்மையாலேயே அவதரிக்கின்றன. தெளிவானதும் முரண்பாடுகள் உடன்பாடாகி, சமநோக்குப் பெறுகின்றன.

செம்மையானவைகளைத் தேர்ந்தெடுப்பதிலேயே எமது புத்திசாலித்தனம் அடங்கியிருக்கின்றது. எவரும் எப்படியும் பேசிக் கொள்ளட்டும். சமூக நிலைப்பாடு என்ன? இந்தக் கருத்துக்கள் யதார்த்த செயல்முறைக்கு ஏற்றவையா? என நாம் எம்முடனேயே, எம் மனதுடனேயே பேசி, ஒரு முடிவிற்கு வரவேண்டும். அதே சமயம் மிகச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் பெரிதாக மூளையைப் போட்டு உடைக்கவேண்டிய அவசியமும் இல்லை.

கருத்துக்களைப் பரிமாற்றம் செய்யும்போது படிக்கும்போது, சமூகத்தில் சகஜமாகப் பழகும்போது, பழகும் மனிதர் எத்தகைய தரத்தினராய் இருந்தாலும்கூட எமக்குப் பல தகவல்கள் கிடைக்கின்றன. மாற்றுக் கருத்துக்கள் அறியும்போது, பல விடயங்கள் வெளிச்சமாகிவிடுகின்றன. எமக்குத் தேவை, பலதரப்பட்ட புதிய உண்மைதரும் விடயங்களைப் பெறுதலேயாகும். இங்கு நாம், மொழி, இன, மத உணர்வுகளைக் கடந்து ஒரு சமநிலையில் உள்ள நடுத்தர ஆத்மாவாக நின்று




உள்ளதை உள்ளபடி அறியமுனையும் புத்தி ஜீவியாக உருவாகுதலேயாகும்.

இந்த நிலைக்கு நாம் எம்மை உருவாக்காதவரை அறியாமை எம்மைவிட்டு விலக வாய்ப்பேயில்லை. நாம் இதனை விரட்ட முயற்சி செய்யப் போவதுமில்லை. நிதர்சனமானவைகள் என்றுமே உள்ளவைகளை உள்ளபடியே காட்டி நிற்கும் தன்மை வாய்ந்தனவையாகும். எமது புத்திசாலித்தனங்கள் பணம், காசு தேடுவதும், புத்தகங்களை மொத்தமாகப் படிப்பதில் மட்டுமல்ல. தெளிவு, நிதானம், தூய்மை யோடிணைந்த மயக்கமற்ற அறிவிலுமே தங்கியுள்ளன. இவை கிடைத்தால் அறியாமை நீங்கி அர்த்தமற்றதாகிவிடும். உலகம் பூர்ணமயமாகிவிடும்.

*தினக்குரல் 22.10.2000*

RangaRakes Tamilnavarasam.com

# மனிதத்துவ மாண்பு



மன்னிப்பதற்கும், தமக்குச் செய்த தவறுகளை அறவே மறந்துவிடுகின்ற பண்பினிற்கும் எல்லையேயில்லை. கொடை வழங்கல் என்பது பணம், பொருளை மட்டுமல்ல, உயிர்களிடம் காட்டும் பாசமும், பரிவும்கூட கொடை வழங்கலேதான் என்பதை நாம் அறிந்துகொள்ளல் வேண்டும். இது இறைவனின் குணம். மனிதன் இந்த வழியில் நிற்பதனால், இறைவனின் பேரருளைப் பெற்றவனாகின்றான். சாதாரண இயல்புகளில் இருந்து உயர்ந்து வாழ்ந்து காட்டும் பண்பு, தெய்வீகமானது என்றுதானே பெரியோர்கள் கூறுகின்றனர். தெய்வத்தன்மையான வாழ்வு, நாம் செய்யும் நல்ல காரியங்களிலும், களங்கமற்ற சிறப்பான எண்ணங்களிலும் தங்கியுள்ளது.

மனப்பயிற்சி மூலம், மனதைப் பக்குவப்படுத்த முயலவேண்டும். இது சற்று சிரமமாகத் தோன்றினாலும்கூட, சின்னச்சின்ன மனித பலவீனங்களை அறிந்து அதனைக் களைய முனையவேண்டும். எமக்குச் சிறிதாகத் தோன்றும் சின்னத் தவறுகள்கூட எங்கள் உள்ளத்து உறுதியையே, நாளா வட்டத்தில் குலைத்துவிட வல்லது என்பதை உணரவேண்டும். எல்லாமே எமக்குச் சாதகமாக அமையவேண்டும் என நாம்



எதிர்பார்க்கின்றோம். இதற்குத் தடை ஏற்பட்டதும், நாம் எந்த வழியிலாவது, இவைகளைச் சரி செய்யாது, சிறிய தவறுகள்தானே என எம்மையே சமாதானம் செய்தபடி கருமமாற்ற ஆரம்பித்து விடுகின்றோம். கடைசியில் இந்த மனப்பான்மை நம்மைக் குற்றவாளியாகவே ஆக்கிவிடவும் கூடும்.

புலன் வழி செல்வதால் எம் சிந்தையிலும் செயலிலும் என்ன திறமை வந்து விடப்போகின்றது. சுய கட்டுப்பாடு இழத்தல் மூலம் ஒருவன் தன்னையே இழக்கின்றான். என்னதான் கல்வி கற்றாலும்கூட கட்டுப்பாடு இல்லா சிந்தையாலும், செயலாலும் என்ன பிரயோசனம் வந்துவிடப் போகின்றது?

ஆற்றல், வெளிப்பாடு என்பதே புலன் அடக்கம் மூலமே பெறப்படுகின்றது. எமது ஜீவ சக்திகள் சதா அலைந்து மோதும் எண்ணங்களால் சிதறடிக்கப்படுகின்றன. நற்சிந்தனையுடன் உள்ளத்தை உரமாயும், அதே சமயம் நற்கருமங்களை ஆற்றும் திறனில் நெகிழ்ச்சித் தன்மையுடனும், சீரான, சம நோக்கு நிலையிலும் வைத்துக்கொள்ள முனையவேண்டும்.

மனோபலமும் வைராக்கியக் கொள்கைகளும் சத்திய உணர்வுடன் புறப்படவேண்டும். அடிப்படையிலே மனிதன் வாழ்வில் இப்படித்தான் வாழ வேண்டுமென ஒரு ஆழமான அத்திவாரத்தை உருவாக்க முனைதல் மூலமே இவைகள் சாத்தியமாகும்.

> மனப்பயிற்சி மூலம் மனதைப்பக்குவப்படுத்த முயலவேண்டும், இது சற்றுச் சிரமமாகத் தோன்றினாலும்கூட சின்னச் சின்ன மனிதப் பலவீனங்களை அறிந்து அதனைக் களைய முனைதல் வேண்டும். எமக்குச் சிறிதாகத் தோன்றும் சின்னத் தவறுகள்கூட எங்கள் உள்ளத்து உறுதியையே, நாளாவட்டத்தில் குலைத்துவிட வல்லது என்பதை உணரவேண்டும். பழக்கங்களே எம்மை வழி நடத்துகின்றன, இந்த வழியை நாம்தானே தீர்மானிக்கவேண்டும்.

RangaRakes
Tamilnavarasam.com

விதைக்கும் விதை தரமானதாகவும் அது முளைப்பதற்கு ஏற்றதாயும் இருத்தல் அவசியம். அது முளைப்பதற்கான சூழலை உருவாக்கவேண்டும். நீர், ஒளி, காற்று இவைகள் அதற்கு அத்தியாவசியமானது. இதுபோலவே, மனம் என்கின்ற விருட்சம் செழித்து வளர வேண்டுமாயின், ஒழுக்கம், இறையுணர்வு, கட்டுப்பாடு என்கின்ற மூல மருந்துகளை நாம் பயன்படுத்துதல் சாலச் சிறந்தது அல்லவா? நல்லவைகளை மட்டும் இனங்காணல், நல்ல நூல்களைக் கற்றுக் கொள்ளுதல், சிறப்பான வார்த்தைகளையே பேசுதல், கேட்டல், சிந்தித்தலை நாம் தேடி எம் வசமாக்குதல் வேண்டும்.

பழக்கங்கள் எம்மை வழி நடத்திச் செல்கின்றன. இந்த வழியை நாம்தானே தீர்மானிக்க வேண்டும். விதைத்த விதை எதுவோ அதன் பெயர் கொண்டே விருட்சம் உருவாகும். ஒன்று இருக்கப் பிறிதொன்று உருவாகுமா? எந்தக் கருமங்கள் செய்தாலும்கூட வழங்கப்படும் தீர்ப்பு அதன் வழிதான் இருக்கும். செய்கைகளை மீறி பலா பலன்கள் அமைந்துவிடப் போவதில்லை. இயற்கை வகுத்த கட்டுப்பாடு உடைந்தால் ஆபத்துதானே. வாழ்வை எம் பக்கம் சரியானதாக அமைக்க, தெளிவான, சரியான நோக்கங்களையே நமதாக்கிக் கொள்வோம்.

மனிதப் பண்புகள், மாண்புகள் இடத்திற்கு இடம் மாறுபட்டவையல்ல. இவை உலகிற்கே பொதுவானவை. எவருமே இது விடயத்தில் விலகி வாழ முடியாது. உலகின் எந்த மூலையில் வாழும் மக்களுக்கும் அன்பும், பாசமும், நல் நெறிகளும் பொதுவான ஒன்றுதானே? வாழும் தேசங்களின் தூரங்கள் மனிதப் பிணைப்பை, களைந்து விடமுடியுமா? உலகை ஒட்டுமொத்தமாக இணைப்பது, மக்களிடையேயுள்ள பவித்திரமான, கனிவான எண்ணங்கள்தான். செல்வம், செல்வாக்குகள் எல்லாம் அடுத்தபடியானவைகளேயாகும். மாறாக, இவை குன்றினால், உலக நல்லியக்கம், நாசகாரச் சக்தி வயப்பட்டுவிடும்.



எல்லாமே மனிதப் பண்புகளில்தானே தங்கி இந்த உலகு இயங்குகின்றது. நன்மையும், தீமையும் மனித மனங்களால்தானே உருவாகி, பூமியைப் புயலாகவும், தென்றலாகவும் மாற்றி விடுகின்றது. எல்லாமே எமக்கு வேண்டும், அது அனைத்தும் மற்றவனுக்கும் வேண்டும். உனக்குக் கிடைப்பது எனக்கும் வேண்டும்.

பொது நலன் மீதான அக்கறையும் அதன் செயற்பாட்டினால் பெறும் நன்மைகளும், இறுதியில் எம்மையே வந்தடைவதைக் காணுவீர்கள். எனவே எமது பரந்துபட்ட, அன்பின் வெளிப்பாடான கருமங்களினால் சிரமங்கள்தான் தோன்றும் என எண்ணவேண்டாம்.

மனிதத்துவ மாண்பு செத்து விடவில்லை. செத்துவிட்டால் இந்த ஜெகம் அழிந்துவிடும். இதை அரணாக நின்று காவல் செய்வது யார்? வேறு யாரும் கிடையாது; நாமேதான்!

*தினக்குரல் 29.10.2000*

✦

RangaRakes Tamilnavarasam.com

# முடிவு எடுத்தல்



முடிவு எடுத்தல் என்பது, எமது வாழ்வில், அன்றாடம் எழும் பிரச்சினைகளில் வந்து கொண்டேயிருக்கின்றது. எப்படி முடிவு எடுப்பது, என்பதில் அடையும் சஞ்சலங்களுக்கு அளவேயில்லை.

பிரச்சினைகளைத் தீர ஆராயாமை, தெளிவின்மை, தாமதமாகச் செயலாற்றும் போக்கு, பலவிதமான சிந்தனைகளால், பல்வேறு முடிவுகளால் குழம்புதல், சம்பந்தமில்லாத எல்லா விடயங்களிலும் தலையிடுதல், தெரியாத விஷயங்களில் ஈடுபடல் - இவை போன்ற காரணங்களால் சிக்கல்படுகின்றவர்கள் எந்த ஒரு முடிவுக்கும் வர சிரமப்படுவார்கள்.

இதனால் வாழ்வின் பெரும்பகுதி வீண் விரயமாவதுடன், அடுத்தவருக்கும் தீராத தலைவலியை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு தனிமனிதனின் முடிவு அவனை மட்டுமா பாதிக்கின்றது? இல்லையில்லை! அவனைச் சார்ந்தவர்களையும், ஏன் சிலவேளை ஒன்றுக்குமே சம்பந்தமில்லாதவர்களையுமே குழப்பியடித்து விடுகின்றது. நல்ல முடிவுகளை எடுப்பவர்களுக்கு இந்தப் பிரச்சினைகள் எழுவதேயில்லை.



பொதுவாக தீர்மானம் செய்து கொள்வதில பலருக்குமேயுள்ள குறைபாடு என்னவெனில், தங்களது திறமைகளைக் கண்டு கொள்ளாமையேயாகும். அத்துடன் சிலர் விடயத்தில் ஆண்கள், தங்களைப் பற்றிய வெறும் கற்பனைப் பெருமிதத்தினை உண்டாக்கிக் கொள்பவர்களாகவும் இருக்கின்றனர். ஒரு சிறிய விஷயத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டு, பகட்டாக ஆரவாரம் செய்வதனால், அவர்களது தீர்மானங்களை, அவர்களே ரசித்து மெச்சிக் கொள்ளுவார்கள். இன்னும் சிலர் பிறருடைய விருப்பு, வெறுப்புக்களைக் கேட்டு, அவர்கள் கொள்கைகளுக்கு ஆட்பட்டு அத்துடன், தமது எண்ணங்களையும் அதனுடன் இணைத்து குழம்பிப்போய் விடுவார்கள்.

விசுவாசமான நண்பர்கள், கற்றறிந்த பெரியோர், நாம் கேட்கும் விடயங்களில் அனுபவம் மிக்கவர்கள் - இவர்களது ஆலோசனைகளைக் கேட்டறிவதில் தவறில்லை. ஆனால் மனிதன் முதலில் தன்னிடம் நம்பிக்கை வைத்த பின்னரே, பிறரை அணுகமுனைதல் வேண்டும்.

தன் திறமையில், தன் முயற்சியில், தன் இதய சுத்தியில், முதலில் நம்பிக்கை வைக்கவேண்டும். கல்வியறிவும், பொதுத்துறையில் திறமையும் கொண்டவர்கூட, சின்னச் சின்ன விஷயங்களுக்குக்கூட முடிவு எடுக்கத் திணறி யார், யாரிடமோ போய்ச் சரணடைகின்றனர். காலையில் என்ன உணவு உண்ணலாம். பஸ்ஸில் போகலாமா, புகையிரதத்தில் போகலாமா?

> தனது திறமையில், தனது முயற்சியில், தனது இதய சுத்தியில் நம்பிக்கை வைத்தல் வேண்டும், தன்னை நம்பாமல், பிறரை மட்டும் நம்புபவர்களால் சிறந்த முடிவுகளை ஒருபோதும் எடுக்கமுடியாது. பிறர் உதவி ஆலோசனைகளை பெறுவது தவறில்லை. ஆனால் எதிலுமே சந்தேகம், கவனம், சஞ்சலம் இவைகளை நெஞ்சிலே பாயவிட்டால், முடிவு எடுத்தலில் முட்டுக்கட்டை ஏற்படும். செயல்களைத் துணிச்சலுடன் எதிர்நோக்கத் தயாராகுங்கள்.

RangaRakes Tamilnavarasam.com

என்ன உடை உடுத்தலாம்? என்பதில்கூட அதிகம் யோசிக்கிறவர்களும் இருக்கிறார்கள்.

பெரிய காரியங்களைச் செய்ய முற்படும்போது, தெளிவு பெறுதல் என்பது இலேசுப்பட்ட காரியமல்ல் என அச்சப்படுதல் இயல்பே. பலம் பொருந்தியவர்கள் கூட ஐயமும், அச்சமும் அடைந்தால் எவ்வளவு ஆபத்து தெரியுமா? எனவே தெளிந்த மனோநிலையில் திடமான முடிவு எடுக்கும் ஆற்றலை வளர்க்கவேண்டும். முடியும் என எண்ணியே, முயல ஆரம்பித்தலே ஆரோக்கியமாகும்.

அண்மையில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றைப் பார்த்தேன். ஒரு வயதேயுடைய ஒரு குழந்தையைத் தந்தை நீச்சல் குளத்தில் விட்டு விடுகின்றார். சற்று நேரத்தில் அக்குழந்தை தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, மிக அழகாக நீச்சலடிக்கத் தொடங்கிவிட்டது. அந்தக் குழந்தை தன்னைத்தானே நம்பியதும் துணிச்சல் வந்துவிட்டது.

நாம் அதிகமாகப் படிக்க, படிக்க, சம்பவங்கள், செய்திகளைப் பார்க்க, கேட்க சந்தேகங்களே வலுத்தவண்ணமிருக்கின்றன. கல்வியும் அனுபவங்களும் சந்தேகங்களையும், அச்சங்களையும் நீக்குவதற்கே பயன்படல் வேண்டும். பலதரப்பட்ட காரியங்கள் தொடர்பான ஆலோசனைகளை, செயற்பாடுகளை எந்த வடிவிலும் அறிந்து கொள்ளலாம். ஆயினும் எடுக்கின்ற முடிவுகள் ஒன்றாகவும், வலுவானதாகவும் அமைதல் வேண்டும். உடன் பயன் தராத செயல்களை நிதானமுடன் செய்து கொள்ளலாம். முடிவு எடுத்த பின்னர் செயல் தீவிரமாக இருக்கவேண்டும் என்பதில் குறியாக இருத்தல் அவசியமானதாகும். செயலில் தொய்வு ஏற்படும்போதுதான் உற்சாகம் குன்றி மேலே அதனைக் கொண்டு செல்லவிடாது மனம் தடுக்கின்றது. இந்த நிலைக்கு ஆளாகாது தப்பிப்பதில்தான் மனிதனின் விசேட திறமைகளே இருக்கின்றது.



இது மனதின் ஸ்திரத்தில் தங்கியுள்ளது. இதை ஒரு பயிற்சியாக நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஓரிரு செயலில் நாம் ஈடுபட்டு தெளிவும், வெற்றியும் கண்டுவிட்டால், அப்புறம் நம் மனம், ஒருபோதும் கண்டபடி அலையமாட்டாது. எம் கட்டளைக்கு அது கட்டுப்படும்.

செயலில் இறங்கும்போது ஆரம்பத்தில் ஏற்படும் கணப்பொழுது சலனங்களைப் பொருட்படுத்தாதுவிட்டால், அப்புறம் எது வந்தாலும் கருமங்களிலேயே எம்புலன் செல்லும். இதனை நாம் எமது நெஞ்சில் நிலையாக இருத்திக்கொள்ள வேண்டும்.

செயல் உருப்பெறும் போது ஏற்படும் ஆனந்தம், நிறைவு என்பது வார்த்தைகளில் கூற முடியாது... எமது முயற்சியில் நாம் பெறும் பயன், பிறர் உதவியுடன் பெறுவதால் ஏற்படும் மகிழ்ச்சியை விடப் பன்மடங்கானதே என்பதை அறிந்துகொள்வோம். கூடியவரை நாமே எமது சொந்த அலுவல்களைச் சொந்தப் புத்தியில் செய்து கொள்ளப் பழகுவோம். எங்கள் சக்தியில், திறமையில் நாமே அவ நம்பிக்கை கொண்டுவிட்டால், பிறர் எம்மை என்ன நிலையில் நோக்குவார்கள் என்பதனைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். எமது சக்திக்கு எட்டியபடி, எமக்குள்ளேயே எமது செயல்களை ஆய்வு செய்யப் பழகுவோம். பிறரிடமும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். கூடியவரை சாதாரண விஷயங்களில் இருந்து முடிவுகளை நீங்களே எடுக்க முயன்று பாருங்கள். ஆலோசனை பெறுதல் தவறு அல்ல. ஆனால், முடிவு எடுத்த பின்னர் செயலாற்றுகை ஆரம்பித்த பின்னர், எந்தவித சஞ்சலம், சலனம், சந்தேகம் எதனையும் உங்கள் நெஞ்சினில் பாய அனுமதிக்காதீர்கள். இதனால் அடைவது - துணிச்சலான வெற்றிக்கான வழிதான் என்பதில் சந்தேகம் என்ன இருக்கின்றது?

*தினக்குரல் 12.11.2000*

RangaRakes Tamilnavarasam.com

# வெற்றி பெற வழி சமைப்போம்



ஒருவர் அடைந்த வெற்றிகளைப் பார்த்ததுமே, அது வெறும் குருட்டு அதிர்ஷ்டத்தால் விளைந்தது எனச் சிலவேளை கூறிவிடுகின்றோம். மனதில் எழுந்த மாத்திரத்தே, ஆராயாது கூறிவிடுவது எமது அறியாமையாக இருக்கலாம், சிலவேளை பொறாமையாகக் கூட இருக்கலாம். ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொருவர் வெற்றிக்குப் பின்னாலும், வெற்றி பெற்றோரின், பிரத்தியேக சக்தி இருப்பது புலனாகும். ஏதோ ஒரு வகையில் வெற்றி வாய்ப்புக்களை அள்ளிக் குவிப்பவர்கள், ஏனையவர்கள் செய்து வருகின்ற செய்கையினின்றும் மாறுபாடாகவும், அதே சமயம் குறிக்கோளில் குறியானவர்களாகவும், தன் முனைப்புடன் செயல் புரிபவர்களாகவே இருக்கின்றனர். எல்லாச் சிறப்பான செய்கைகளையுமே குருட்டு அதிர்ஷ்டம் என்று கூறிவிட முடியுமா என்ன?

திறமைமிக்க மனோதிடம், ஆளுமைப் பண்பு, தனித்துவப் பண்பை, உள்ளபடியே காட்டும் செயல் - இவற்றின் மூலம் வெற்றிகளைப் பெறும் கலையை, அறிந்து கொண்டவர்கள், சாதுர்யமாகவும் மெச்சும் வண்ணமும் அடைந்துவிடுகின்றனர். உலகத் தலைவர்கள், மாபெரும் கலைஞர்கள், மக்கள் போற்றும்

RangaRakes



ஆன்மீகவாதிகள் போன்றோரின் வாழ்வு முறையைக் கூர்ந்து படித்தால் இவை புலனாகும். ஆனால் இவர்கள் போலவே ஏன் நாம் வரமுடியாதா எனச் சந்தேகத்துடன் அங்கலாய்க்கின்றனர். உண்மையில், அவர்கள் பின்பற்றி வந்த வாழ்வியல் ஒழுங்கு முறைமை, ஆர்வம், பற்றுதல், இலட்சிய வேட்கை பற்றி நாம் தெளிவாக அறிந்துணராமல், அவர்போல் ஏன் வரமுடியாது என்று மட்டும் நினைப்பதால் அர்த்தமில்லை.

மனித சக்தி மகத்தானது; சொல்லில் இயம்புதற்கரியது. நம்முடைய ஆற்றலை வெளிப்படுத்துகின்ற கலையை அறிந்துகொண்டால் வெற்றி நிச்சயமானதே.

ஆயினும், சுய கட்டுப்பாடு, ஆளுமையை நாம்தான் வளர்த்து வர வேண்டும். இன்னும் ஒருவர் வந்து உதவுவர் என்பது இரண்டாம் பட்ச அம்சமேயாகும். ஒருவரை ஊக்குவித்தல் மட்டுமே செய்யமுடியும். ஆற்றலை வளர்த்தலும், சாதனை செய்வதை நோக்கிப் பயணிப்பதும் எமக்குரிய கடமையாகவே கருதவேண்டும். சிறிய பொறியில் இருந்து பெரு நெருப்பு உருவாகுதல் போலவே, உருப்பெறும் ஆற்றல் வெளிப்பாடு, சாதனையாக மாறும்.

பொதுவாக தனிமனிதனின் ஆற்றல்கள், அவனுக்குள்ளேயே வளர்ந்து வரவேண்டும். ஒழுக்கம், கட்டுப்பாட்டு எல்லைகளை அறிந்து அதன் பிரகாரம் தம்மைப் பூரணப்படுத்த முனைய வேண்டும். வரையறை மீறிய எச்செயலும், வெற்றி வாய்ப்பினை அளிக்காது. ஒழுக்க

> திறமைமிக்க மனோதிடம், ஆளுமைப் பண்பு, தனித்துவப்பண்பை உள்ளபடியே காட்டும் பண்பு, ஆர்வம், இலட்சிய வேட்கை, வாழ்வியல் ஒழுங்கு முறைமை போன்றவைகளால் 'முன்னேறியவர்கள்' பற்றி சரியாகப் புரிந்துகொள்ளாமல், வெறுமனே நாம் அவர்களைப்போல் ஏன் வரமுடியவில்லை என நினைப்பது அர்த்தமற்ற ஒன்றாகும். போராடாமல், கஷ்டப்படாமல், வெற்றிகள் சும்மா கிட்டுமா?

Tamilnavarasam.com

கட்டுப்பாடுகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தால், ஏதோ ஒரு வழியில் புதிய திருப்பமாக நல்லவழி நிச்சயம் பிறக்கும்.

எவருமே எள்ளி நகையாடும் வண்ணம் மனிதன் படைக்கப்படவில்லை. எமது அறியாமையினால், பிறருக்கு நாம் பிழையான தீர்ப்புக்களைக் கூற, அதற்குத் தகுந்தாற்போல், ஆதாரங்களையும் சோடிக்கின்றோம். எளிமையாகத் தோற்றம் கொண்டவர்கள் தாழ்ந்தோரில்லை. அவ்வண்ணமே வெளிப்பார்வைக்கு செயற்கைத் தன்மையாக பெரியவனாகத் தன்னைக் காட்டிக் கொண்டவன் உயர்ந்தவனும் ஆகான். நாம் பார்க்கும் பார்வை எச்சமயத்திலும் சரியாக இருப்பதுமில்லை.

எனக்குத் தெரிந்த நண்பர் கூறிய தகவல் இது. தம்முடன் ஒன்றாகப் படித்த நண்பர் ஒருவர், கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தான். வகுப்பில் சக மாணவர்கள் பலரும் அவனைக் கேலி பேசினர். அவனோ மிகவும் அமைதியானவன். கல்வியில் நாட்டமின்றி இருந்தபோதிலும் ஒழுக்கத்தில் சிறந்தவன். இவனிடம் உள்ள சிறப்பு என்னவெனில் குறித்த நேரத்தில் பாடசாலைக்கு வந்துவிடுவான். பாடசாலைக்கு லீவு போடுவது என்பது கிடையவே கிடையாது. எச்சந்தர்ப்பத்திலும், மழையோ, காற்றோ பாடசாலைக்கு ஆஜராகிவிடுவான். இது அவனது இயல்பான குணாம்சமாகும். பாடசாலையில் ஒரு தடவை ஆண்டுவிழா நடைபெற்றது. பாடசாலையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பரிசில்களும், பாராட்டுதல்களும் அளிக்கப்பட்டன. அப்போது இந்த மாணவனைச் சக தோழர்கள் கேலியுடன் நோக்கிப் பார்த்தனர். அப்போது திடீரென கல்லூரி அதிபர் ஒரு அறிவித்தல் கொடுத்தார். இந்த ஆண்டின் சிறந்த பண்புள்ள ஒழுக்கமிக்கோருக்கான பரிசிலும் கொடுப்பதாகத் தெரிவித்து, அதற்கான காரணத்தையும் கூறினார். நேரம் தவறாது பாடசாலைக்கு வருகை தருவதுடன் எவருடனும், பழகும் விதத்தில் உள்ள குணாம்சங்களை விதந்துரைத்து, அவனை அழைத்து பிரதம



கல்வி அதிகாரி மூலம் பரிசில் பெற அழைத்தார். அங்கு எல்லோரும் மௌனமாகினர். இவர் விடயத்தில் பின்னர் ஆச்சரியம் கலந்த உண்மை. பல ஆண்டுகளின் பின் தான் தெரியவந்தது.

தலைநகரின் மாபெரும் வர்த்தகராக அந்த மாணவர் உருவாகியிருந்தார். சமூக நலப் பணிகளிலும் அவரே முன்னின்று உழைத்தார். அத்துடன் கல்வித்துறைக்கும் பெரும் பங்காற்றி பெயரும், பெறற்கரிய பேறுகள் பலவும் பெற்றார். அவரது இந்த வெற்றிக்கு என்ன காரணம் என நான் சொல்லாமலே உங்களுக்குப் புரியும். குறித்த நேரத்திற்குக் கடமைக்குச் செல்லும் மனப்பாங்கு, ஏனையோரின் கேலிச் சொற்களைச் செவி மடுக்காமை, தமக்கேயுள்ள ஒழுக்கத்தின் பேரில் உள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையும், அதன்படி ஒழுகி வந்தமையுமே இவரது இந்த வெற்றிக்கு மூல காரணங்களாகும். கல்வியில் தான் பின் தங்கியுள்ளது பற்றிய குறைபாட்டினைக் கருத்தில் கொள்ளாது, தமக்குரிய இதர திறமைகளை வளர்த்துக் கொண்டமையே இவரது வெற்றியின் இரகசியமாகும்.

எல்லோருக்குமே சிற்சில குறைபாடுகள் இருந்தாலும்கூட, தமக்கு விருப்பமான துறையினைத் தேர்வு செய்து கொள்ளவேண்டும். பிடிக்காத - மூளையில் செல்லாத கருமங்களுக்காக, மூளையை உடைக்க வேண்டிய அவசியமில்லை. இந்த விரும்பாத செயல் எமது ஆற்றலை முடக்கிவிடும். தவிர சவாலாகச் சில கருமங்களையும் ஆற்ற வேண்டியுள்ளது. அதற்கு நாம் அடிப்படையான நோக்கங்கள், கருமங்களில் தெளிவுடன் இருக்கவேண்டும். அப்படியாயின்தான் சவால்களைச் சமாளிக்கமுடியும்.

அங்கவீனர்களாக இருப்போர்கூட தங்கள் ஆற்றல்களை, ஆர்வத்துடன் வெளிப்படுத்தி வருவதனை நீங்கள் அறிவீர்கள். ஒரு உறுப்பு உடலில் செயல் இழந்திருந்தாலும்கூட, ஏனைய தம் உறுப்புக்களைக் கூர்மையாகப் பயன்படுத்தி, தங்கள் திறமையை

RangaRakes Tamilnavarasam.com

பிகப் பிரமிக்கும் வண்ணம் வெளிப்படுத்துகின்றனர். கண் இழந்தவர்கள்கூட, பல்கலைக்கழக பட்டதாரிகளாகவும், பட்ட மேல்படிப்பு படிப்பவர்களாகவும் இருப்பதை நாம் அறிவோம்.

இப்படியிருக்க, தேக ஆரோக்கியமுள்ளவர்கள் சும்மா செயலற்று இருப்பது சரியாகுமா? கொஞ்சம் சிந்தித்தால் எமது பலம் எத்தகையது என உணரலாம். மனதை எந்த வேளையிலும் துடிப்புள்ளதாக வைத்துக்கொள்வதன் மூலமே ஏதையாவது செய்துவிட வேண்டும் என்கிற ஆர்வம் ஏற்பட வழிபிறக்கும்.

தவிர, சிலருக்கு சோம்பித்திரிதல், உறங்குதல் இனிய பொழுதுபோக்கு ஆகிவிட்டது. இதனால் படும் சுமைகளைக் காலம் அவர்களுக்கும் போதித்துவிட்டே செல்லும்.

உறுதியை உள் மனதுள் செலுத்து.

அறிவு இருக்கும்வரை அச்சமின்றிச் செயல்படு. உடலும், உள்ளமும் முழுமையாக இறைவன் படைத்தது.

விரைந்து செயல்படுக; வெற்றி பெறுக!

தினக்குரல் 19.11.2000



# முதுமை ஆற்றாமையல்ல



முதுமையுற்றதும் பலர் முடங்கிப் போகின்றார்கள், அல்லாது விடின் முடக்கி வைக்கப்படுகின்றார்கள். முதுமை முடங்கி விடுவதற்கல்ல. இந்தச் சமூகத்தை மேலும் நெம்புகோலாக நிமிர்த்துவதற்காக.

முதுமை ஒரு ஆற்றாமையுமல்ல. முதுமை ஒரு இயற்கை நிகழ்வு. இதில் வருத்தப்படுவதற்கு ஒன்றும் இல்லை. முதுமை ஆற்றாமை, தள்ளாமையாகவே கணிக்கப்பட்டுவிட்டது. சமூகம் நெகிழ்வுற்று இந்த நிலையைத் தடுக்கவேண்டும். நோயுற்றுப் படுப்பது என்பது வேறு. ஆனால் முதியவர்களைக் கட்டிப் போடுவது போல் நடாத்துவதென்பது ஒப்புக்கொள்ள முடியாதவொன்று. மிகவும் கெளரவத்துடனும், நல்ல நடத்தையுடனும் வாழ்ந்தவர்களும் கூட, ஏன் கல்வி கேள்விகளில் ஞானமுற்று இருந்தவர்கள் கூட நாமே ஆச்சரியப்படும் வண்ணம், அநாதைகள் போல் முடங்கி, அடங்கி நொடிந்து கேட்பாரற்றுக் கிடப்பதை நாம் கண்டுகொண்டுதானிருக்கின்றோம்.

வயது முதிர்வு அடைவதைக் காட்டிலும், மனம் முதுமையடைந்து அல்லல்படுவது ஆபத்தானது. அட இவரா

RangaRakes
Tamilnavarasam.com

இப்படி, இவர் நடந்து வரும்போதே, நாம் எதிரே வரவே பயப்படுவோமே! இவருக்கு என்ன நடந்துவிட்டது எனப் பலர், முதிய சிலர் பற்றி ஆதங்கத்துடன் கவலையுடன் கதைப்பதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். முதுமை என்பது புதிதான ஒன்றா?

அல்லாது விடின் வரக்கூடாத ஒரு விஷயமா என்ன? என்ன கோளாறு இந்தச் சமூகத்திற்கு? முதுமை என்பதே ஒரு நோய் எனப்பலரும் முடிவு கட்டிவிட்டார்கள்.

உழைக்கும் காலத்தில் அவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய செயல்களையும், தியாகங்களையும் எப்படி மறந்துபோய் விடுகின்றார்கள்? சில வீடுகளில் நீங்கள் அவதானித்திருப்பீர்கள், கணவனை விட மனைவி வயது மட்டும் குறைவாக இருப்பார். ஆயினும் அவர்கூடச் சற்று வயது கூடிய கணவனை இழிவுபடுத்தி, உதாசீனம் செய்வார். 'சும்மா தொண தொணக்காதீர்கள். வயசு வந்தால் சும்மா வாயை மூடிக்கொண்டு கிடக்க வேண்டியதுதானே' என்பார்.

சும்மா இருப்பது என்பது லேசுப்பட்ட காரியமா என்ன? சதா ஓடி ஆடிய கை, கால்களைக் கட்டிப் போடுதல் ஆகுமா? சரி, அவர்கள் தான் ஏதோ, தெரிந்தும் தெரியாமல் பேசினால் கண்டு கொள்ளாமல் இருந்தால் என்ன என்று கருதுவதில்லை. அவர்களால் உச்சரிக்கப்படும், ஆகாத வார்த்தைகள் கூர்மையாகச் செவிக்கு ஏறும். உறைக்கும்! அப்புறம் வயது வந்தவர்களுக்குச் சதா மன உளைச்சல் இன்றி வேறென்ன?

> மனம் பலவீனப் படும்போது தள்ளாமை வந்துவிடுகின்றது. இளம் வயதில் இயங்காத சோம்பேறியும், முதுமை வயப்பட்டவனேயாவான். வயதைக் காட்டி மட்டும் முதுமை எனக் கூறவிடமுடியாது. இளவயதிலேயே முடங்கி இருப்பவனைவிட, முதுமையில் இயங்குபவன் **இளைஞன் போன்றவனே.** எல்லோருமே **நீண்டகாலம்**, வாழ ஆசைப்படுகின்றார்கள். ஆனால் கிழவர்களாக வர விரும்புவதில்லை.



எங்கோ வாசித்தது ஞாபகத்திற்கு வருகிறது. எல்லோருமே நீண்ட காலத்திற்கு வாழ ஆசைப்படுகிறார்கள், ஆனால் கிழவர்களாக வர விரும்புவதில்லை. செயல்களைச் சிந்தனைகளை இளமையாக வைத்துக் கொள்ளும்வரை, முதுமை நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது.

மனம் பலவீனப்படும்போது தள்ளாமை வந்துவிடுகிறது. இளம் வயதில் இயங்காத சோம்பேறியும் முதுமை வயப்பட்டவனேயாவான்.

எனவே வெறும் வயதைக் காரணம் காட்டி முதுமை பற்றிப் பேச முடியாது.

இளவயதில், வீட்டிற்கும், நாட்டிற்கும், ஏன் தனக்கும் கூட ஆகாதவனால் என்ன பயன் வந்துவிடப் போகிறது.

செயல்தான் முக்கியமானது. எந்த வயதிலும் செயல் வீரனாக திகழமுடியும். வயது முதிர்ந்தவர்கள்கூட இளைஞர்போல் கரும மாற்றுவதை நீங்கள் பார்ப்பதில்லையா?

முதுமை அனுபவஞானத்தை உண்டாக்குவதனால், இள வயதுள்ளவர்களுக்கு, பெரியவர்களின் ஆலோசனை தேவைப்பட்டேயாக வேண்டும். இளையவர்களாலேயே எல்லாம் முடியுமென்றால் அனுபவ ஞானம் என்பதே அர்த்தமில்லாத பேச்சாகிவிடுமே. இன்று நாம் உலகில் பார்த்துக் கொண்டிருக்கின்ற பெரும் தலைவர்கள் பெரும்பாலும் முதிர்ந்த வயதுக்காரர்கள்தான்.

கால ஓட்டத்திற்கேற்றவாறு மனிதர்கள் புதுப்புது விஷயங்களை கற்றுக்கொண்டு வருகிறார்கள். நாம் தினம் தினம் படிக்கின்ற அத்தனை விடயங்களுக்குமே ஆதாரம் எல்லாமே, முன்பு சொல்லி வைத்த உண்மைகளின் ஆதாரங்களேயாகும். இவைகளை அனுபவம், அறிவுகூடிய பெரியவர்கள்தான் சொல்லித் தந்தார்கள். இன்னமும் சொல்லிக்கொடுத்தும் வருகின்றார்கள்.

RangaRakes

Tamilnavarasam.com

கலை, கலாசாரம், மதம், அரசியல் எதுவுமே படிப்படியாக இவர்கள் போதித்து எம்மால் அறியப்பட்டவையாகும்.

ஆரம்ப காலத்தில், குடும்ப நலன் கருதி சற்றுக் கண்டிப்பாக ஒருவர் இருந்திருக்கலாம். அநேக வீடுகளில், இந்த பழைய கதைகளை மனதில் வைத்துப் பழி தீர்ப்பது போல், பிள்ளைகள் நடந்து கொள்கின்றார்கள். தங்கள் முன்னேற்றத்திற்காக, அவர் எத்தகைய தியாகங்களைச் செய்திருப்பார் என ஒரு கணமாவது சிந்திக்கத் தயாராக இருப்பதில்லை. உண்மையில் பெற்றோர் சிற்சில தவறுகள் செய்திருக்கலாம். அதற்காக அவர் இயலாமையில் இருக்கும்போது, பழைய கதைகளைத் தூக்கிப் பிடித்துப் பேசி, மனசை நோகடித்து வதைக்கலாமா?

அவர்கள் கட்டிய வீட்டிலேயே, அவர்கள் சிறை வைக்கப்படுகின்றார்கள். இது என்ன கொடுமை.

ஒரு பெரியவர் ஒருவர் தான் கட்டிய வீட்டிலேயே மின் விசிறியைப் போட்டுவிட்டு படுத்திருந்தார். அங்கு வந்த அவரது மருமகள், உமக்கு இப்போ கட்டாயம் மின் விசிறி வேண்டுமா என்ன? என்று கேலியாகக் கூறி அதை உடன் அணைத்துவிட்டுச் சென்றார். இத்தனைக்கும் அவர் தன் இளைப்பாற்றுகை சம்பளத்திலேயே வாழ்பவர். பெருத்த செல்வாக்குடன் வாழ்ந்தவர். அவரது தள்ளாமை இவர் மருமகளை இப்படிப் பேச வைத்தது. மனச் சாட்சியற்ற எத்தனையோ பேர் இப்படித்தான் நடந்து கொள்கின்றார்கள். இது நான் கண்ட உண்மைச் சம்பவம்தான்.

நாம் நடந்துகொள்ளும் விதங்களால்தான், முதியவர்களின் ஆரோக்கியமே தங்கியுள்ளது. உதாசீனமான போக்கு, குத்தலான பேச்சு, உடல் ஆரோக்கியம் பற்றிய பாராமுகம் எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களைப் பாரமாக அவர்கள் முன்பாகவே எடுத்துரைப்பது இத்தகைய நடத்தைகள், அவர்கள் மூச்சை உடன் நிறுத்தி அவர்களை மயானத்திற்கே இட்டுச் சென்றுவிடும்.



இவர்களின் மனக்கொதிப்பில், அந்த வீட்டில் உள்ளவர்கள் நிம்மதி காணவும் முடியாது.

செய்தவர் மனம் குன்றினால், எந்த நல்வினையை நாம் செய்த போதும், அது சித்திக்கப் போவதில்லை. மிகவும் முன்னேறிய மேற்கத்திய நாடுகள்தான் இது விடயத்தில் மிக மோசமாக நடந்துகொள்கின்றன.

முதுமையின் ஏக்கங்கள், இளமைக்குத் தெரிவதில்லையே ஏன்? மேலை நாடுகளில் பிள்ளைகள், பெற்றோரை வயோதிபர் இல்லங்களில் கொண்டு சேர்ப்பதும், வருடத்தில் பெற்றோர் தினங்களில் மட்டும் போய் வாழ்த்துக் கூறுவதும், வேடிக்கையான வேதனைதான். நேரே போக நேரம் இல்லையென்று கூறி, வெறும் வாழ்த்து மட்டையை மட்டும் தபாலில் அனுப்பவர்கள்கூட இருக்கின்றார்கள். தனக்கும் இந்த நிலைவரும் என அந்தப் பிள்ளைகள் நினைப்பதில்லை.

நாம் இளவயதிலேயே, நமது பிள்ளைகளும் பெரியவர்களை மதிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்கள் செய்த பணி, தியாகங்களை எடுத்துச் சொல்லி வளர்க்கவேண்டும். பெற்றோர் தினம், முதியோர் தினம் என எமக்கு அறிவுறுத்தத்தானே உலகம் பல விழாக்களை எடுத்து வருகின்றது.

நாகரீக உலகில் அநாகரீகமாக முதியவர்கள் விடயத்தில் நடந்து கொள்பவர்களைப் பார்க்கும்போது அருவருப்புத் தோன்றுகின்றது. மனித நேயமில்லா பண்பினால், உலக முன்னேற்றம் பற்றிப் பேச முடியுமா? அன்பில்லா இதயங்கள் உள்ள அவனியில் ஜீவிதம் செய்தலே இதயத்தை உறுத்தும் செயலாகும்.

முதுமைக்கு முன்னுரிமை கொடுத்தால்தான், அவர்கள் ஆசியும் கிடைத்து அவனி சிறக்கும்.

RangaRakes Tamilnavarasam.com



# அச்சமின்மையும் அறிவார்ந்த செயற்பாடும்

**வ**ரப்போகும் மரணத்தை எண்ணி இருக்கின்ற வினாடிகளில் பலர் மரணித்துக் கொண்டிருக்கின்றார்கள். மரணம் என்பது எப்பொழுதும் வரும் ஒரு சாதாரண நிகழ்ச்சிதான். எனினும் இதனை ஜீரணித்துக்கொள்ள இந்த மனம் ஒப்புக் கொள்கிறது இல்லை. பலாத்காரமாக ஆண்டவன் உயிரைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு போவதுபோன்ற ஒரு கோபம், அவனிடத்தில் ஏற்பட்டு வருகின்றது. இருக்கின்ற கடைசி வினாடிவரை துணிச்சலுடனும், மகிழ்ச்சியுடனும் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கவேண்டும். இது எல்லோருக்குமே முடிகின்ற காரியமா என்ன? நடக்கிறது நடக்கும் என்றால் வேதாந்தமா பேசுகிறாய் என்பார்கள்.

இயற்கையில் இருந்து விடுபட்டு வாழ முடியாது. மரணம்கூட அப்படித்தான். சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால், இதில் பயப்பட ஒன்றுமில்லை என்று புரிந்து கொள்ளலாம். ஆனால் இந்த மனோபக்குவம் எல்லோருக்குமே வந்துவிடுமா என்ன?

எல்லோருமே ஏதோ ஒரு சமயத்தில் நீதியைப் பேசிவிட்டு அதற்கு முரணாக, எம்மையும் மீறிச் செயல்படுகின்றோம். சங்கடப்படுத்திக் கொண்டிருக்கின்ற சாவை, அறிந்தும்



சாவதானமாகத் தப்பும், தவறும் தினமும் செய்து கொண்டுதானிருக்கின்றோம்.

எம்மால் பிறர் செய்யும் துன்பங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அவை அற்பமாக இருந்தாலும்கூட எமது வெறுப்புணர்ச்சி பன்மடங்காகி பழிதீர்க்க முயல்கின்றோம். இவைகளைத் தாண்டி, சிக்கல் இன்றி வாழ்க்கையை மகிழ்வுடன் கழித்தல் என்பதே ஒரு பெரும் சாவலாகிவிட்டது.

அச்சம் நீங்கிய திறந்த மனது மகிழ்வான வாழ்விற்கு முதல் படியாகும். பாரமின்றி நெஞ்சை வைத்துக் கொள்ளவேண்டும். வீணான நினைவுகளால் அனுதினம் அல்லல்படுகின்றோம். நினைவுகளை அழிக்க முடிவதில்லை. துன்ப நினைவுகளும், வேண்டாத கற்பனைகளும் மட்டுமே ஆழமாகப் பதிந்து போக, சந்தோஷங்களும், நற்சிந்தனைகளும் உடன் தொட்டு மறைவதுமேன்? நல்ல விடயங்களை மட்டும் இதயத்தில் பூட்டி வைத்து, தேவையற்ற குப்பைகளைத் துரத்தி பிடிப்பது எங்ஙனம்?

கேட்பதை, பேசுவதை, பிறரிடம் பழகுவதை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டாலே போதும். தொடர்ந்தும் நாம் தூய்மையற்ற பேச்சுக்களைக் கேட்டாலோ, அந்த பாஷைகள் எம்மை அறியாமலேயே தொற்றிக் கொண்டுவிடும். இப்படியேதான் பிறரிடம் பழகுதலுமாகும். நல்லவர்கள், பெரியோர்களிடம் மட்டுமே பழகவேண்டும் என்று சிறு வயதிலிருந்தே எமக்குச் சொல்லித் தந்திருக்கின்றார்கள். அப்படியாயின் ஏனையோரை ஒதுக்கிவிடுவதா என்கின்ற கேள்வியும் எழுகின்றது.

> உலகினை உய்விக்க வந்த தீர்க்கதரிசிகள் அச்ச உணர்வின்றி உபதேசித்தனர். ஆனால் பாவிகள் இவர்களைக் கண்டு பயந்தனர். ஒளி வந்தால் இருள் விலகுதல் இயல்பு. நியாயங்களைக் காணநேர்ந்தால் **அநீதி அரண்டுவிடும்**. போலிவேடம் புரண்டுவிடும். உண்மையாக **வாழ்பவனை அச்சம் ஆக்கிரமிக்காது.**

RangaRakes Tamilnavarasam.com

ஒதுக்கப்பட்டவர்கள் என்று ஒருவருமேயில்லை. எத்தகைய குணாம்சங்களைக் கொண்டவர்களையும் சமூகம் ஒதுக்குவது தகாது. அவர்களுக்குள்ள பிரச்சனைகளை, அதன் தாக்கத்தை நாம் தெரிந்துகொள்ள முயலவேண்டும். எல்லோரையுமே சமூகத்திற்கு உகந்தவர்களாக மாற்றுவதே, சமூகத்திற்கு உள்ள முதல் பணியாக இருந்தால், தேவையற்ற ஆத்மாக்கள் என எவருமே இருக்கமாட்டார்கள். குற்றமிழைத்தவர்களை ஒதுக்கி வைத்துவிடுவதால், அவர்கள் மட்டுமல்ல, சமூகமும் ஒதுங்கி விடுகின்றது. சமூகத்திற்கு என ஒரு பொறுப்பு உள்ளது அது வெறுப்பினை உமிழ்வது அல்ல. அரவணைத்துச் சமூகத்தில், ஏற்றவர்களாக, ஏற்றுக்கொள்ள வைக்க முயற்சி செய்தலே உகந்ததாகும்.

எல்லாமே நிலையானது என்கின்ற தப்பான எண்ணம் கொண்டிருப்பவர்கள், செய்கின்ற தப்புக்களுக்குத் தீனி போடுபவர்கள்தான். இந்த குறுகிய வட்டத்திலிருந்து வெளிவர பலர் விரும்புவதுமில்லை. இவர்கள் பொய்யான இந்த முகமூடி வாழ்வு உடைபடும் என அச்சப்பட்டுக் கொள்பவர்கள். திறந்த மனதுடன் செயல்படுபவனுக்கு, அச்சம் விலகிய எதனையும் ஏற்கின்ற துணிவும், சத்தியத்தின் சேவைகளை முன்னெடுத்துச் செல்லும் பக்குவநிலையும் தானே வந்து விடுகின்றது. இவர்கள் இயற்கையின் பாதிப்புக்களை ஏற்பார்கள். பொய்யான கற்பனை வாதங்களைக் கண்டிப்பார்கள். எவரையுமே சமமாக நோக்குவார்கள். பாவங்களை எதிர்க்க - பொசுக்கப் பயம் கொள்ள மாட்டார்கள்.

மனிதர்கள் அசுத்தப்படாமல் வாழ உலகம் எத்தனை வழிவகைகளைச் சொல்லிக்கொடுத்து வருகின்றது. வழிபாடுகள் என்றும், அனுஷ்டானங்கள், கிரியைகள் என்றும் மனப்பக்குவத்திற்காக வழி, வழியாக பல நூற்றாண்டுகளாக ஓதிக் கொடுத்தும்கூட, இவை வெறும் ஆசாரத்துடன் நின்று விடுகின்றன. பொய்மை, நீதியற்ற வாழ்விற்கு முடிவு எடு. இந்த அநீதியான இயல்பிற்கு மட்டும் அச்சப்பட்டு, உன்னைத் தூய்மை செய் என்பதை மக்கள் ஏற்காதவரை, உலகம் தெளிவற்றதாகேவே போய்விடும்.



பாவம் புரிய, அஞ்சாமல் இருப்பதே வீரம் என்றாகிவிட்டது. ஆணவத்துடன் உலா வருவதே வரவேற்கத்தக்க வீரமாகிவிட்டது. தீமைகளைப் பாவங்களை எதிர்ப்பவர்கள் வாழத் தெரியாதவர்கள் போல் பார்க்கின்றார்கள். எத்தனையோ நபர்கள் நன்மைகள் செய்வதைக் காட்டிலும், தீமைகளைச் செய்வதில் உற்சாகம் காட்டுகிறார்கள். இவர்கள் தீமை செய்யுமுன் 'அறிவு' வந்து தடுக்குமெனப் பயந்து உடன் கெடுதல் செய்வதில் முனைப்பாக இருக்கின்றார்கள். தாங்கள் கொடுக்கின்ற தண்டனை வீரம் என்று வீராப்பு வேறு பேசுகிறார்கள். இவைகளை நாம் ஆராய்ந்து பார்த்தால், இவர்கள் நல்ல செயல், நன் நடத்தைகள், நேர்மை இவைகளின் மேல் குரோதமும், பயமும் கொண்டவர்களாகவே இருப்பர். பாவ காரியங்களைத் தடுப்பவர்களை இவர்களுக்குப் பிடிக்காது.

உலகினை உய்விக்க வந்த தீர்க்கதரிசிகள் அச்ச உணர்வின்றி உபதேசித்தனர். ஆனால் பாவிகள் இவர்களைக் கண்டு பயந்தனர். ஒளி வந்தால் இருள் விலகுதல் இயல்பு. நியாயங்களைக் கண்டால் அநீதி அரண்டு விடும். போலி வேடம் புரண்டுவிடும். நேர்மை நோக்கும், நிதான புத்தியும் இருக்கும்வரை அச்சத்திற்கு இங்கு இடமேயில்லை. உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்றான் பாரதி. எதையும் ஏற்கின்ற பக்குவத்தை நாம் பெற்றேயாக வேண்டும். ஏன் எனில் நாம் இயற்கையுடன் இணைந்தவர்கள். அதன் ஓட்டத்திற்குட்பட்டவர்கள். தெரிந்துகொண்டு தெளிந்தால், பயமற்ற சீரிய வாழ்வுதானே?

தினக்குரல் 05.11.2000

RangaRakes Tamilnavarasam.com



# பாலுணர்வும் பண்பும்

**கி**ளர்வினையூட்டுவதும், இன்பகரமானதும், அதே சமயம், பிரச்சனைக்குரிய சமாச்சாரமாக, இன்றுவரை பாலுணர்வு என்பது தலையாய இடத்திலேயே உள்ளது. உலகில் உயிர்கள் தோன்றியவுடனேயே பாலுணர்வு என்கின்ற இந்தத் தகிக்கும் தாகம் கூடவே எழுந்துவிட்டது. இது ஒன்றும் கேவலமானதோ, அருவருக்கத்தக்கதோ அல்ல. இது உடலுடனும், மனதுடனும் சங்கமிக்கும் அத்தியாவசிய தேவையாக உள்ளது.

ஆயினும், ஒரு எல்லைக்குள், ஒழுக்க வரம்பிற்குள், சமூக நியதிக்குள் உள்ள கலாசார வட்டத்தினுள் இருக்கின்றவரை, ஆபத்தில்லாத பாலியல் என்கின்ற செக்ஸ் இனிமையானதுதான்.

கட்டுப்பாட்டினைக் கடக்கும்போதுதான், சச்சரவு, பழிப்பு, இழிநிலை என்பன சூழ்ந்து கொள்கின்றன. காதல் வாழ்வின் ஆரம்பமே பாலுணர்வில்தானே முளைவிடுகின்றது. உடல் கூற்று நிப்புணர்கள் இதனையே வலியுறுத்துகின்றனர் என்றாலும் காதல் தெய்வீகமானது, பவித்திரமானது, பூர்வ ஜென்ம பந்தம் அது, இது என்றும் இதன் புனிதம் பற்றிப் பேசப்படுகின்றது.

ஈர்ப்பு இன்றிக் காதல் வந்துவிடுமா என்ன?

RangaRakes



இது அழகுடன் மட்டும் சம்பந்தப்பட்டதுமல்ல. மேலும் ஆண், பெண் ஈர்ப்பிற்குப் பற்பல காரணம் கூறுகின்றார்கள். இது இறைவனால் இணைக்கப்பட்ட பிணைப்பு. இறைவனால் கொடுக்கப்பட்ட வரம் என்றவாறுதான் இதன் தாத்பரியமும் துலங்குகின்றது.

கலைஞர்களும், கவிஞர்களுமே தம் பங்கிற்கு காதல், காமம் பற்றி அக்குவேறு, ஆணிவேறாகவும் பிரித்து, அறுவை சிகிச்சை புரிந்து, அதனுள் என்ன இருக்கின்றது என ஆராய்ந்து தத்தம் கண்டுபிடிப்புக்களை, முடிவுகளை கவிதையாகவும் காவியமாகவும் வடித்து விடுகின்றார்கள். ஆயினும் எல்லோரும் சேர்ந்து ஒரு பொது முடிவினை சொல்ல முடியாது திணறினாலும்கூட, அடிப்படையான விஷயத்தில் ஒத்துப் போகின்றார்கள். காதலுடன் இணைந்தது காமம் எனினும், வாழ்வின் இளவயதின், இறுக்கமான பிணைப்பினை காமமும் கூடவே பிணைந்துவிடுகின்றது.

எனினும், காதலும், காமமும் கொச்சைப்படுத்தக்கூடிய ஒன்றுமல்ல. அனுபவமும், முதிர்ச்சியான அறிவு நிலையும்கூடி விடுகின்றபோது காமம் கழன்று காதல் பிணைப்பு இறுதிவரை துணை நிற்கின்றது.

இதுதான் உண்மை.

எனினும், காதல் வாழ்வை, வாழ்வுப் பிணைப்பின், பாலுணர்வுதானே ஆதாரமாக ஆரம்பித்து வைக்கின்றது?

> ஒரு எல்லைக்குள், ஒழுக்கவரம்புக்குள், சமூக நியதிக்குள் உள்ள கலாசார வட்டத்தினுள் இருக்கின்றவரை, ஆபத்தில்லாத பாலியல் என்கின்ற 'செக்ஸ்' இனிமையானதுதான். கட்டுப்பாட்டினைக் கடக்கும்போதுதான், பாலுணர்வே பழித்தலுக்கு ஆளாகின்றது. உண்மையில் கட்டுப்பாடான பாலியல் உறவுகூட ரசனையுடன் கூடிய ஒரு கட்டுப்பாட்டு நெறிதான். தன் ஆத்மாவிற்கும், உடலுக்கும் தீங்கிழைக்காமல் இந்நெறி காக்கப்படல் வேண்டும்.

Tamilnavarasam.com

எப்படியிருப்பினும், இது பற்றிப் பேசினால் மட்டும் பலர் முகம் சுழிக்கின்றனர். பாலுணர்வு வயப்பட்டு இதன் ஆட்சியில்லாமலா இந்த உலகம் உதயமானது?

இது வெறும் களிப்பூட்டலுக்காக மட்டுமல்ல; வாழ்வுக்கொரு அர்த்தத்தையே, இவ்வுணர்வு சொல்லிக் கொடுக்கவில்லையா? நாம் ஆசைகளைத் துறந்த ஆத்மாக்களைப் பற்றி இந்த இடத்தில் பேசுவது பொருத்தமானதும் அல்ல. சாமான்ய மனித நிலையில் இருந்து இதுபற்றிச் சிந்திப்போம்.

உலகம் எப்படியும் இயங்க வேண்டியுள்ளது. அதுவும் சுறுசுறுப்பாக இயங்கவேண்டும். ஜனனம், மரணம் சாஸ்வதமானதே. மரணம் தொடர்ந்து செல்லச் செல்ல ஜனனங்களும் அறிமுகம் செய்து கொள்ளுகின்றன. எனவே ஏதோ ஒரு வழியில் இந்த நிகழ்வுகளைத் தடை போடமுடியாது. இவை மனிதனுக்கு மட்டுமே பொருந்துவன அல்ல. சகல ஜீவராசிகளுமே ஆண் பெண் உறவை நாடி ஒன்றை ஒன்று எப்படியோ கண்டு கொண்டு இணைகின்றன. தாவரம், செடி, கொடிகூட இதற்கு விதிவிலக்கல்ல. தாவரங்கள் தம் இனத்தைப் பெருக்க, தன் பூவினுள் மகரந்தச் சேர்க்கை நடத்த எத்தனை உத்திகளைக் கையாளுகின்றன? இவை இதனை யாரிடம் போய் கற்றுக் கொண்டன? இயற்கை என்கின்ற ஆசான், சொல்லாமல், சொல்லித் தருகின்ற காரியங்கள்தான் எத்தனை? வயது வந்த பின் நாம் இது பற்றிச் சொல்லிக் கொடுக்கவா வேண்டும்?

ஆயினும், தற்போது, இளவயதினருக்கு பாலுணர்வு (செக்ஸ்) பற்றிய அறிவை ஊட்டவேண்டுமென உலகில் உள்ள அரசுகள் நினைத்து, அதுபற்றிய அறிவையும் தெளிய வைக்கப் பற்பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஒரு கட்டுப்பாடான சமூகத்தினை உருவாக்குதல் என்பதே இதன் நோக்கமாகும்.



எந்தவிதமான உதவியுமின்றி வெறும் மந்திரங்களாக மனிதன் வாழமுடியாது. சரி, தவறு பற்றியும் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

இயற்கையான அறிவு கிடைப்பினும்கூட, பலர் அதை மீறி மனம் போனவழி, கட்டுப்பாடற்ற விதத்தில் புறச்சூழலாலும் உந்தப்பட்டு சீரழிவதை நாம் கண்டு வருகின்றோம். முன்பு எல்லாம் இதுபற்றிய அறிவு மூடப்பட்டேயிருந்து வந்திருந்தது எனக் கூறுவதை நாம் ஏற்க முடியாதுள்ளது.

பொது இடங்கள், கோவில்கள், ஏடுகளில் எல்லாம் காதல், காமம், பாலியல் பற்றி குறிப்பிடப்படாமல் இல்லை. வாத்ஸாயனரும், கொக்கோக முனிவரும் இன்று பிறந்தவரில்லை. கஜீராஹோ, எல்லோரா சிற்பங்கள் இன்றா வடித்தெடுக்கப்பட்டன? இவை கூறும் உண்மைகளும், தத்ரூப வடிவங்களும் பிரமிக்கத்தக்கவையே. இவை பற்றிய ஏராளமான விளக்கங்கள் எல்லாம் உலகிற்கு எப்போதோ கிடைத்துவிட்டன. சிற்பங்கள், சிலைகள் கலை நுட்பத்துடன் காதல் உணர்வைத் தட்டி எழுப்பவில்லையா? இதில் என்ன தப்பு?

எல்லாமே ஒரு காரணத்தினால்தானே மனிதன் இவைகளை ரசனையுடன் படைத்து வைத்தான். இப்போது மட்டும் ஏன் செய்யக்கூடாத தவறுகள் போல், அருவருப்புடன் நோக்குகின்றனர். இவை எல்லாம் இதனால் மறைந்துவிடுமா என்ன? அடுத்து இவைபற்றிய தெளிவான அறிவை, நோக்கை எப்படி இளவயதினருக்கு ஊட்டவேண்டும் என்பதில் கூட பிரச்சினைகள் உள்ளன. இது ஒன்றும் புதுமையான விஷயமில்லை என்று கூறிக்கொண்டு, விகற்பமின்றி, சர்வ சாதாரணமாக லட்ஜையின்றி, சங்கோஜமின்றிச் சொல்லிக் கொடுத்துவிடக்கூடிய சங்கதிகளுமல்ல. மிகவும் பக்குவமாக, அவர்களைத் தீயவழிக்கு இட்டுச் செல்லாதிருக்கும் விதத்தில் புரியும்படி சொல்லிக்

RangaRakes
Tamilnavarasam.com

கொடுக்கவேண்டும். அவர்களிடம் தெளிவு பிறந்துவிட்டால், பிரச்சினைகள் எழ வாய்ப்பில்லை.

அண்மையில், பள்ளிக்கூட மாணவர்களுக்கு, சமூக நல நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டிருந்த, பாலியல், உடல் கூறு தொடர்பான நூலைப் படித்தேன். இதை படித்த சில மாணவர்கள், மாணவிகளைக் கிண்டலடித்ததாக அறிந்தும் கொண்டேன். நல்ல ஒரு விஷயத்தினை அழகாக, தெளிவாக எழுதியிருந்தும் கூடச் சிலர் அதன் நோக்கத்தை அறியாது கீழ்த்தரமாக நடந்து கொள்ளுகின்றனர். இதனை ஆசிரியர்கள்தான் மாணவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

மேற்கத்திய நாகரீகம் எம் கலாசாரத்தைப் பொறுத்தவரை, மிகவும் வித்தியாசமான ஒன்று என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. எதையுமே பகிரங்கப்படுத்தல் என்பதில் மேலை நாட்டவர்கள் சிரத்தையாக இருக்கின்றனர். இதற்காக இவர்கள் தமது உடலைக்கூட அம்பலப்படுத்திக் கூத்தாடுவதை சிறந்த நாகரிகம் என ஏற்றுக் கொள்ளமுடியுமா? பண்பாடு என்பது ஒழுக்க நெறியுடன் ஒன்றிணைந்தது. கற்பு நெறியுடன் வாழ்தல் மட்டும் ஒழுக்க நெறியல்ல. உண்மையாக வாழுதல், உலகிற்கு உதவுதல், சேவை என்பனவும் ஒழுக்க நெறியுடன் பிணைக்கப்பட்டவையேயாகும். இதற்காக, மேற்கத்திய நாட்டினர், அனைவருமே, எம்மவரைவிடக் குறைவுபட்டவர்கள் அல்லர். ஒழுக்க நெறியில் அவர்களும் முதன்மையானவர்களே.

எனினும்,

இவர்கள் குடும்ப உறவு நிலை, ஒரு குறைபாடாகவுள்ள போதும், இதுவும்கூட கால வோட்டத்தில், இக்குறைபாடுகள், எமது கலாசாரங்களைப் புரிந்து கொள்வதன் மூலம் சீராகலாம். வரம்பு மீறிய பாலியல் தொடர்புகள், அதீத நாட்டங்கள், வசதி வாய்ப்புக்களால் இவர்கள் குடும்பங்களில் குழப்பம் ஏற்பட்டு,



ஒருவரை ஒருவர் திருத்தமுடியாத சூழ்நிலையில் தன்னிச்சையாக நடந்து வருகின்றனர். தங்கள் கலாசார பாரம்பரியத்தில் ஆரம்பத்தில் இருந்தே ஒரு அசைக்கமுடியாத சமூகக் கட்டுப்பாட்டினை இது விடயத்தில் ஸ்தாபிக்கத் தவறியமையே ஒரு காரணமாகக் கூறலாம். பாசப் பிணைப்புக்கள் அங்கே அருகி வருவதற்கும் கூட யந்திரமயமான வாழ்வோடு கூடிய, உடல் இச்சைக்கு மட்டுமே முதன்மை கொடுக்கின்ற இயல்பும் பிரதான காரணம் என்பதில் சந்தேகமும் இல்லை. குடும்பத்தினைவிட நாட்டை நேசிக்கின்ற ஒரு விசாலமான மனப்பாங்கு இவர்களிடமிருந்து நாம் கற்கவேண்டிய ஒரு நெறியாகும். எனினும் இவர்கள் வாழ்ந்து வரும் சூழ்நிலைகள், வசதி, வாய்ப்புக்கள் குடும்ப கட்டுக்கோப்பினைப் பாராமுகமாக, அல்லது திசை திருப்பிவிடும் மனோநிலைக்கு இட்டுச் செல்லுகின்றது. இதனால் விரக்தியுற்று, இங்கே ஓடி வருகின்றனர். அகவாழ்வையும் புறவாழ்வையும் நன்கு புரிந்துகொண்ட நம்மவர்கள் குடும்ப வாழ்வில் பெரும்பாலும் சந்தோஷமாகவே வாழ்ந்து வருவதை நாம் மறுக்க முடியாது.

தமக்குரிய கடமைகளையும், தமக்குரிய உடல் தேவைகளையும் தெரிந்து வைக்காதுவிடின் வாழ்வின் முறைகளே திசை திரும்பிவிடும்.

புலன் வழி செல்லல், அதீத ஆசைகள், உடனே அனுபவித்துப் பார்த்துவிடல் வேண்டும் என்கின்ற வேட்கை, கூடா நட்பு, எப்படி இருக்கும் என, துர்நடத்தைகளையே ஆய்வு செய்யும் மனப்பாங்கு, மிதமிஞ்சிய கற்பனை, படிக்கக்கூடாத பார்க்கக்கூடாத உணர்ச்சிகளை அலைக்கழிக்கும் விடயங்களையே நோக்குதல் போன்ற செயல்கள் பாலுணர்வினைத் தூண்டி தப்பான காரியங்களில் மனிதனை அடிமைப்படுத்திச் சிறுமைப்படுத்தியே விடுகின்றன.

RangaRakes Tamilnavarasam.com

தூயமென்மையான காதலும், காமமும் இணையும் போதுதான் களங்கம் கற்பிக்க முடியாத கூடல் சங்கமமாகின்றது. இந்த இரண்டும் அற்ற சேர்க்கை பவித்திரமானதும் அல்ல. காதல் இல்லாத கூடல் வெறும் சடங்குகளின் சந்திப்புத்தான். காதல் இல்லாத தம்பதிகள்தானே இடை நடுவில் கலைந்து போகின்றார்கள். தூய காதலுக்கு இளமை, முதுமையில்லை. மாறாக முதுமை வரும்போதுதானே, கணவன் மனைவியரிடம் ஐக்கியம் வலுப்படுகின்றது? ஆரம்ப காலத்தில் வெறும் இனக்கவர்ச்சியால் உந்தப்பட்டவர்கள்கூட இறுதியில், காலம் என்கின்ற இயற்கை நிகழ்வின் ஆட்சியினால், வெறும் பாலியலுக்கும் அப்பாற்பட்ட, தூய வாழ்வின் முழுமையை நுகர்ந்து கொள்கின்றார்கள். இந்த வாழ்வில் ஒரு புதுமை என்னவெனில், முதுமையின் பின் இளமையான அன்பு பரிணமிப்பதுதான். இத்தகைய நிறைவாழ்வை வாழ்பவர்களைக் காலம் ஒன்றும் செய்துவிட முடிவதில்லை. மாறாக முதுமையிலும் உளவியல் ரீதியாக, சுகவாசிகளாகவே ஜீவித்துக் கொண்டுமிருக்கின்றார்கள்.

வெறும், பாலியல் வாழ்வே வாழ்வு என வாழ்ந்து வருபவர்களின் அவல வாழ்வைக் கண்டபின்னும் இதுபற்றிச் சிந்திக்காதுவிடுவது பேதமையன்றோ! ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதானே எமது ஒழுக்கக் கோட்பாடு. இதனை மீறி வாழ்ந்து வந்தமையினால் இறைவன் கொடுத்த சாபங்களை மக்களில் பலர் அனுபவித்து வருகின்றனர். எயிட்ஸ் என்றும், வேறும் பலவித பாலியல் நோய்களால், தீர்க்க முடியாத தொல்லைகளை விலைக்கு வாங்கி, விடுபடமுடியா முடிவினைத் தேடிக்கொள்கின்றார்கள். இந்த அவல நிலை தேவைதானா?

இறைவன் படைத்தல் என்கின்ற செயலில் எதை நினைத்தானோ அதன் பொருட்டு மனிதனையும், சகல ஜீவராசிகளையும், உணர்வுகளுக்குள் பூட்டி, தான் கருதியதன்



பிரகாரம் ஜகத்தினைத் தினம் தினம் புதுப்பித்துக் கொண்டிருக்கின்றான்.

எனவே,

இயக்கும் இறையின், சித்தத்தினை குறை காணமுடியுமோ? படைப்பின் ரகசியம், பரமரகசியமாயினும் கூட ரகசிய உணர்வுடனேயே பாதுகாக்கப்படுவதே சிறப்பானதும், புனிதமானதுமாகும். இரகசியமில்லாத, உறவில் இன்பமில்லை. ஆண், பெண் உறவினைப் பகிரங்கப்படுத்துதல் என்பது கூட ரசனையற்றதேயாகும்.

ரகசியப்படுத்தப்படவேண்டியவை, பாதுகாக்கப்பட வேண்டியனவையேயாம். ஆனால் இவை வெட்கப்படத் தக்கவையல்ல. இவைகளின் தூய்மை வெட்டவெளியில் காயப்படுத்தப்படக்கூடாது. செக்ஸ் என்கின்ற ஆண், பெண் உறவுகளைக் கொச்சைப்படுத்துதல் என்பது, இதனைக் கண்டபடி திசைகள் தோறும் உலாவரச் செய்யும் செயலால் ஏற்பட்டதேயாகும்.

இத்தகைய தவறான செய்கையினால் காலப்போக்கில் இந்த உறவின் மீதும், இதன் தனித்துவ புனிதத்தன்மை மீதும் சலிப்பு ஏற்பட்டுவிடலாம். இதனால் ஏற்படும் விளைவுகள் கூடப் பாரதூரமாக அமைகின்றது. விரக்தி, தோல்வி, தனிமையுணர்வு ஆகியன மனதைக் கசக்கிவிடும். பொருட்களின் தேவைகள் என்பதுகூட அவைகளைத் தகுந்த தருணத்தில் பாவிக்கும் விதத்தையும் சூழ்நிலையையும் பொறுத்ததே. சின்ன வயதில் இத்தகைய உறவுகளினால் ஏற்படும், கசப்பான நிகழ்வினால், பிஞ்சில் பழுத்த காயாய் வாழ்வே சப்பென்று போய்விடுகின்றதே. இந்த நிலை தொடரக்கூடாது என்றுதானே, பெரியோர்கள் எவ்வளவோ பாடம் புகட்டிக்கொண்டு வருகின்றார்கள். சமூகத்தில் உள்ள சகல தரத்தினரையும், இயல்பான மிதமான சகவாழ்விற்குத் தயார்ப்படுத்தலே, எல்லோருக்குமே உரிய முக்கிய பொறுப்புமாகும்.

RangaRakes
Tamilnavarasam.com

உண்மையில் கட்டுப்பாடான பாலியல் உறவுகூட ரசனையுடன் கூடிய ஒரு கட்டுப்பாட்டு நெறிதான். ஆனால், ஒழுக்கமும் எவரையும் பாதிக்காமலும், தன் ஆத்மாவிற்குத் துரோகம் செய்யாமலும் அமையவேண்டும். இது மானுடத் தேவையாதலால், பண்பு பேணல் மேலோங்கி நிற்றலும் முதன்மையுறுகின்றது. பண்பு காக்கா எச்செயல்களுமே துன்பம் சுமக்கின்ற ஈனச் செயல்களே.

*தினக்குரல் - 26-11-2000*





# நட்பு

தமக்கு நண்பர்கள் எவருமே கிடையாது எனச் சிலர் பெருமையுடன் கூறிக் கொள்கின்றார்கள். இது, இவர்கள் பிறர் மீதும், தம்மீதும் கொண்டுள்ள நம்பிக்கையீனமான போக்கும், ஒருவித மமதையான குணவியல்புகளின் வெளிப்பாடுமேயாகும்.

ஒருவர் துணையின்றி இன்னொருவர் வாழுதல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதே. தன்னிடத்தே நம்பிக்கை கொள்ளாதவன், பிறரிடத்தே எப்படி நம்பிக்கையுடன் பழகமுடியும்?

எதையுமே எதிர்பார்த்துத்தான் நட்பு உருவாகவேண்டும் என்பதில்லை. நட்பு அன்பின் அடித்தளத்திலே சமைக்கப்பட்டுள்ளது. உண்மை நட்பு கொண்டவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம், பரஸ்பர தூய அன்பினை மட்டும். இதில் இருந்து பிறக்கும், ஆறுதல், பரிவு, பிணைப்பு என்பதனைத்தான். எனவே பொருள், பண்டத்தினை மட்டுமே மையமாக நட்பு உருவாதல் என்பதுகூட போலித்தனமானதே.

மனதில் உள்ள இறுக்கம் குறைந்து, அதனால் ஆறுதல் பெறும் மார்க்கத்தினை நட்பைப் பெற்றவர்கள் தேடிக் கொள்ளுகின்றனர். எனவே துன்பம் தொலையும், வடிகாலாக அமைய நல்ல நண்பர் சகவாசம் தேவைப்படுகின்றது.

RangaRakes Tamilnavarasam.com

எதையும் சார்ந்திருத்தல் என்பது தவிர்க்கமுடியாத வாழ்வு முறையாகிவிட்டது. எத்தனையோ பேர் சும்மா சுற்றியிருந்த போதும்கூட சமயத்தில் துணை செய்ய, உதவி நல்க நல்ல நண்பர்களை நாம் இனங்காண வேண்டியவர்களாயிருக்கின்றோம். இது ஒரு சிரமமான காரியம்தான்.

எல்லோருமே தம்மை நல்லவனாகவே கருதிக் கொள்கின்றார்கள். தங்களின் செயல், நடத்தைகளை சரி எனவே நம்புகின்றார்கள்.

தம்மை ரகசியமாக வைத்துக்கொள்பவர்கள், தம்மீதே மட்டும் அக்கறை செலுத்துபவர்கள், பிறர் ரகசியங்களை அறிய ஆவலாக இருப்பார்கள். இதற்காகவே தமது நேரங்களைக் கழிக்கச் சித்தமாயிருப்பார்கள். இவர்கள் மற்றவரிடம் இருந்து பெறுதல், என்பதிலேயே கரிசனமாக இருப்பர். இவர்கள்கூட, தங்கள் திறந்த மனதுக்கு ஒருவருமே நிகரில்லை, என்னைப்போல என்னுடன் ஒத்துழைத்து நடக்க நல்ல மனுஷர் எவருமே இல்லையே என ஏக்கத்துடன் நடிப்பர்.

நல்ல சினேகிதராக நாம் இருக்கத் தயாரானால்தான் நல்ல நண்பர்கள் எமக்குக் கிடைப்பார்கள். எல்லோரையும் நாம் பார்க்கின்றோம். நாம் பார்க்கும் தோற்றத்தில் தம்மை உயர்ந்தவர்களாகவே காட்டிக் கொள்வார்கள். ஒருவனைப்பற்றிக் குறைகள், கோள்களைக் கூறினாலே தமக்கு வேண்டியவர்களின் நட்பை மிக இலகுவாகத் தேடலாம் எனவும் சிலர் கருதுகின்றனர்.

> மனதில் உள்ள இறுக்கம் குறைந்து அதனால் ஆறுதல் பெறும் மார்க்கத்தினை நட்பைப் பெற்றவர்கள் தேடிக்கொள்கின்றார்கள், எனவே துன்பம் தொலையும் வடிகாலாக அமைய நல்ல நண்பர் சகவாசம் தேவைப்படுகிறது. நல்ல சினேகிதர்களாக நாம் இருக்கத் தயாரானால், நல்ல நண்பர்கள் எமக்குக் கிடைப்பார்கள். வலிமை, வசதியுள்ளவர்களைக் காக்கா பிடிப்பதே தமது நட்பில் சாதனை படைப்பதாகச் சிலர் கருதிக்கொண்டிருக்கின்றார்கள்.

RangaRakes



ஒருவருக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை என வைத்துக்கொள்ளுவோம். அவர்கள் மூலம் ஏதாவது அனுகூலம் பெற நினைக்கும் ஒருவர், இருவரிடமும் இவர்கள் குறைகள் பற்றியே அவர், சொன்னார் இவர் சொன்னார் எனக் கூறி குரோதத்தை பெற்றுத் தமக்கு வேண்டிய நன்மைகளை பெற்றுக்கொள்வதில் எவ்வளவு சமார்த்தியத்தை சிலர் கையாளுகின்றார்கள் தெரியுமா? வலிமை, வசதியுள்ளவர்களைக் காக்காய் பிடிப்பதே தமது நட்பின் சாதனை என்று கருதுபவர்களும் உள்ளார்கள்.

பண்பாடற்ற விதத்தில் கோள்களைக் கூறுபவன், அதனைக் கேட்பவர்கள் நட்பினில் என்ன தூய்மை இருக்கப்போகின்றது?

நட்புறவை உருவாக்குதல், 'வளர்த்தல், வலுப்படுத்தல் என்பது இன்னுமொரு சாராரை வலுவிழக்கச் செய்தலோ அன்றி அவர்களைக் கவிழ்ப்பதற்காகவோ அமைதல் தகாது. சுயநல சிந்தனைப் போக்குடையவர்களுக்கு, இது வெறும் லாபகரமான ஒரு தொழில் முயற்சியாகவே தென்படுகின்றது. இவர்கள் பெறுகின்ற சினேகிதர்கள்கூட கைகழுவிவிட்டு விடுவர் என்பதே உண்மையுமாகும்.

பலர், பலருடன் கூடி வம்பளக்கும்போது, நேரில் கதைக்கத் தெம்பில்லாமல், தம்முடன் உரையாடிக் கொண்டிருந்தவரைத் தவிர, தமக்குப் பிடிக்காதவர்களை விமர்சனம் செய்கின்றனர். இவர்கள் அனைவருமே ஒருவருக்குத் தெரியாமல் ஒவ்வொருவராக இவர்களைக் காணாத வேளைகளில் மற்றவர்களை மட்டம் தட்டிப் பேசி தங்கள் சினேகிதத்தினை வளர்த்துக் கொள்ளுகின்றனர். இது ஒருவர் மீது மற்றவர் சேறு பூசும் செயலைப் போன்றதுடன் தங்களைத் தாமே ஏமாற்றிக் கொள்வதுமாகும். சாதாரண குறுகிய மனித பலவீனம் உள்ளவர்கள் சிறந்த நண்பர்களாக இருக்கத் தகுதியற்றவர்களாவர்.

Tamilnavarasam.com

ஆயினும்,

சிறிதளவாவது விட்டுக்கொடுத்து, மனிதநேயமுடன் நடந்துகொள்ள ஆரம்பித்தால் அகம்பாவம், தன்னை மிஞ்சி ஒருவருமே இல்லை என்கின்ற நினைப்புக்கள், குற்றம் காணும் மனப்பான்மை, தமது நோக்கத்திற்காகவே ஒருவரை அண்டிக்கொள்ளும் இயல்புகள், சதா சந்தேக மனப்பான்மை, பொறாமை, காழ்ப்பு போன்ற இயல்புகள் நட்புறும் இயல்பினைப் பாதிக்கின்ற குணவியல்புகளாகும்.

என்னதான் நாம் ஜாக்கிரதையாக இருந்தாலும்கூட நண்பர்களிடத்தே அபிப்பிராய பேதங்கள் வரத்தான் செய்யும். எந்த நேரத்திலும் மனித மனோ நிலைகள், ஒரே நிலையில் இருக்கமுடியாது. இந்த நிலையைக் கடந்து, வாழப் பழகவேண்டும். மனதைப் பக்குவப்படுத்தி, ஒரே சீரான இயல்பினை உருவாக்கி, ஏனையோருடன் பழகத் தெரிந்து கொள்ளல் வேண்டும். இது கொஞ்சம் சிரமமாயினும்கூடப் பிறருக்கு எமது மன அழுத்தத்தைத் திணிக்காமல் இருக்கச் செய்தல் என்பது ஒரு பிரதான பண்பு என்பதை நாம் மறக்கக்கூடாது. அவர்கள் எங்களிடம் இருந்து எதிர்பார்ப்பது எங்களது நச்சரிப்புக்களையோ உறுத்தல் தரும் பேச்சுக்கள் ஏச்சுக்களையோ, குதர்க்க வாதங்களையோ அல்ல என உணர்ந்து கொள்ளுங்கள். பிரச்சினைகளுக்கான தெளிவினைப் பிறர் உதவி மூலம் கேட்டு, ஆலோசனைகளைக் கேட்டால் ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை. இதற்காக ஒரு படி இறங்கி வந்து ஆலோசனை கேட்பதால், உண்மை நண்பர் கரிசனையாகப் பரிவாக அதை நோக்குவதால், மேன்மேலும் இருவரிடையே பிணைப்புத்தான் வலுவடையும். விருப்பமில்லாதோரிடம் பேசுவதால் பிரயோசனமில்லை. இதனால் அவர்கள் கேலி பேசுவதும், இவர்கள் துன்பத்தினால் மன வேதனை பெறுதலுமே மிச்சமாகும்.

எனவே தூயநட்பை நாம் தேடியேயாக வேண்டும்.



ஏற்றத்தாழ்வு, ஜாதி, சமய வேறுபாடுகள் அனைத்தும் எல்லோரையுமே பாதிக்கின்றது. இது ஒரு தீராத நோய் என எல்லோருமே கூறி வந்தாலும்கூட இதிலிருந்து விடுபட பலரும் தயாராவதில்லை.

பணக்காரன் ஒருவன் பரம ஏழையுடன் நட்புக்கொள்ளத் தயாராவதில்லை. சினிமாக்களிலும் கதைகளிலுமே இதைப் பார்த்திருக்கலாம். காசு உள்ளவன், தன் சொந்தச் சகோதரர்கள் ஏழை என்றாலும் அண்டுகின்றானா? தன் போன்ற ஒருவனுடனேயே அவன் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளுகின்றான். உயர் பதவியில் உள்ளவன் தன் நிலையிலும் பல படி கீழேயுள்ள பணியாட்களுடனேயா சினேகம் வைத்துக் கொண்டிருக்கின்றான்? இவை நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்து வருகின்றதா?

தனது நிலைக்கும் கீழ் நிலையில் உள்ள ஒருவன் தனது நண்பர் என்று சொல்லவே தயங்குகின்றான்.

இந்த நிலையில், இந்த ஏற்றத்தாழ்வு நிலைகளைத் தகர்த்து நட்பு என்ற உன்னத உறவுகள் உருவாகும் என எதிர்பார்ப்பது கூடச் சிரமமானதாகவிருக்கின்றது.

இதனிடையே, படித்தவன் படிக்காதவன், சாதி சமய ஏற்றத்தாழ்வு போன்ற குறுக்கீடுகள் வேறு இந்த உன்னத உறவைப் பாதிக்கச் செய்கின்றன. என்றாலும் இவைகளை உடைத்துக் கொண்டு, ஒருவர் மீது ஒருவர் சினேகிதம் பாராட்டி நட்பை வளத்தாலும்கூட சமூகம் இதற்கு வரவேற்புக் கொடுத்தல் என்பதே பெரிய சவாலாக உள்ளது.

தங்கள் தரத்துடன், தங்கள் வர்க்கத்துடன் மட்டும் தொடர்பு வைத்துக்கொள்வதனால், பரந்த இந்த உலகம், என்ன ஒருமைப்பாட்டினைக் கண்டுவிடப் போகின்றது. குறுகிய வட்ட நேயப்பாடு என்பதே ஒரு ஏமாற்று வேலைபோல் ஆகாதா?

RangaRakes Tamilnavarasam.com

பாகுபாடற்ற நிலை தெய்வீகமானது. ஆயினும், இதுபற்றி கேட்க, வாசிக்கத்தான் இனிமையாக உள்ளது. இவை நிஜவாழ்வினில் ஏற்றுக்கொள்ளும் நிலை எப்போது வரப்போகின்றது?

தெய்வீக அன்பினுள் நுழைந்து, நட்பினை இறுகப் பற்றி, உலகிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வந்தவர்கள், வாழுபவர்களைக் கூட நாம் கண்டிருக்கின்றோம். வெவ்வேறான திசைகளில், கருத்துக்களில் முரண்பாடானவர்கள்கூட நட்பைத் தங்களுக்குள் வளர்த்து வருவதை நாம் அறிவோம்.

நல்ல மனங்களின் முன் திரை எதற்கு?

அவரவர்க்குரிய கருத்துக்கள், கொள்கைகள் எல்லாம் சினேகிதர்களாக இருந்துகொள்ளத் தடைகளுமல்ல. ஒவ்வொருவர் கருத்துக்களுக்காக மோதிக்கொண்டு நட்பை உடைத்துக் கொள்ள வேண்டிய அவசியமும் கிடையாது.

எங்களைச் சுற்றியுள்ள போலியான சில சமூக திரைகளில் நாம் மறைந்து கொள்ளத் தேவையுமில்லை. இவைகளை உணர்ந்து உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டால் நல்ல உறவுகள் எம்மை நாடிவரும். மன்னிக்காத மனமும், அடக்கவொண்ணா சினமும், அகங்காரமும், பொறாமையும் அடி மனதில் குடியமர்ந்து கொண்டால், நாம் சிரிப்பது, மகிழ்வது எல்லாமே நடிப்பு அன்றிப் பிறிதில்லை. இதைத்தான் சிலர் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

விட்டுக் கொடுக்காதவனுக்கு, நட்புக் கிட்டுவதில்லை. எட்ட நிற்பவனுக்கும் நட்புத் தொடுவதில்லை. கிட்டே வந்து, மானுடத்தை நேசிப்பவனுக்கோ கண்ணில் பட்டவர்கள் எல்லோருமே ஒட்டி உறவாடும் நல்ல நண்பர்களே.

தினகுரல் 10.12.2000





# குற்றம் காணுதல்

எங்களில் பலர் வித்தியாசமான அல்லது தவறான நபர்களைப் பற்றிப் பேசும்போது, தங்களுக்குப் பிடிக்காதவர்களையே உதாரணம் காட்டிப் பேசிக்கொள்வார்கள். அத்துடன் நிற்காது, அவர்களுடன் தொடர்புடைய குடும்ப உறுப்பினர்கள், அவர் சார்ந்த ஊர், ஊர் மக்கள் போன்றவர்களை சர்வசாதாரணமாகக் கொச்சைப்படுத்திப் பேசிவிடுவார்கள்.

உண்மையில் இது விடயங்களில், விவகாரங்களில், எம்மையறியாமலே அதி சுவாரஸ்யமாக ஈடுபாட்டுடன் கதைத்து விடுவோம். எங்களால் விமர்சிக்கப்படுபவர்களைவிட நாம்கூட அதைவிட பலவீனம் உள்ளவர்களாகவோ, தவறுகள் உடையவர்களாகவோ இருந்து விடுவதுமுண்டு.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும், ஒவ்வொரு சமூகத்திற்கும் தனிப்பட்ட குணாதிசயங்கள், பழக்கவழக்கங்கள் பிரத்தியேகமாக அமைந்தும் இருக்கின்றன. இவை தனித்துவமானவை. ஏன் பிரதேச ரீதியாகவும் கூட சில வித்தியாசமான வாழ்வுமுறைகளும் உண்டு.

RangaRakes
Tamilnavarasam.com

எமக்குரிய ஒழுக்க, கலை, கலாசார விடயங்களில் தனித்துவம் பேணப்படுவது போலவே ஏனைய சமூகங்களுக்கும் உண்டு. இதை நாம் ஏற்றுக்கொண்டு, அதற்குக் கௌரவம் அளிக்கவேண்டும்.

மாறாக எமக்கு மட்டுமே, ஒரு தனித்துவமான பண்புகள் உண்டு. ஏனைய சமூகங்களுக்கு அது இல்லை என விதண்டாவாதம் பேச முடியுமா?

ஒரே ஊரிலேயே, ஒவ்வொரு குடும்பங்களுக்கிடையே வேறுபாடான அம்சமான குண நலன்கள் இருக்கத்தான் செய்யும். எமது செயல்களைத் தவிர பிறர் செயல்கள் எமக்கு நகைப்பூட்டுவனவாக நாம் கருத முடியாது. ஒரே பலவீனம் எல்லோரையும் பிடித்திருந்தாலும்கூட மற்றவரைப் பற்றிக் கிண்டலடித்து, அலசி ஆராய்தல் சரியானதல்ல.

இந்தச் செயல் குற்றம் காணுதல் என்ற இயல்புடன் பொருந்தியதே. குடும்பத்தில் மாமியார், மருமகள் பிரச்சினைகளைப் பாருங்கள். மாமியார் முன்னர் செய்த எந்தச் செயல்களை, மருமகள் வந்து புதிதாகச் செய்துவிட்டார். தனது, கணவருடன் ஈடுபாடாகவும், நெருக்கமாகவும் உரிமை எடுத்து இதே மாமியார், தானும் கல்யாணமான பின்னர் நடந்து கொள்ளவில்லையா? மருமகள் மட்டும், தனது மகனுடன் இப்படி நடந்துகொண்டால், புருஷனை மடக்கிப் போட்டுவிட்டாளே

> சதா நச்சரிப்புக்கள் போன்ற கண்டிப்பு, குறை கூறுதலைப் பழக்கமாக்கிக் கொள்ளுதல், சமூகத்தில் இருந்து எம்மை விலக்கி வைத்து விடுமன்றோ? புத்திமதிகளைக்கூடச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாதிரித்தான் கூறுதல் வேண்டும். சந்தர்ப்பம் அறியாமல் இலவச ஆலோசனைகள்- புத்திமதிகளை உபதேசித்தல் எல்லா நேரத்திலும் சரிப்பட்டு வராது. இவை உற்ற துணையையே உதறும் செயலாக மாறிவிடும்.



என்னைப் பிள்ளையுடன் பிரிக்கச் சூழ்ச்சி செய்கின்றாளே எனப் புலம்பிக் குதித்துக் கொதித்தெழுகின்றாள்.

இந்தப் பொறாமையுணர்வு, அதிகாரப் போட்டியாக மாறி மருமகளுடன் குற்றம் காணும் இயல்பினை உருவாக்குகின்றது. எம்மைப் பிடிக்காதவர்களிடம் மட்டுமல்ல. சாதாரண சாமானியவர்களிடம் கூட இந்தக் கசப்பான கைங்கர்யத்தினை பலரும் செய்து வருகின்றனர். பழக்க சகவாசத்தில் சிலர் குறை காணுதல் என்பதைக் கைக்கொண்டு, காலப்போக்கில் அவர்களின் மனதில் நிரந்தரமாகவே இந்த நோய் பீடித்து அவர்களை அரித்து விடுகிறது. நல்ல செயல்கள்கூட எல்லாம் பொல்லாதவையாகத் தோற்றம் காட்டி விடுகின்றன.

அது மிகவும் கொடிய ஒரு நிலை. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறமாயிருக்கும் அல்லவா? இந்தக் குற்றம் காணும் நோய், அதிகார வர்க்கத்தில் போய் ஒட்டிக்கொண்டால் இதன் தாக்கம் பற்றி இயம்பவே முடியாததாகிவிடும்.

கல்விக்கூடத்தில்கூட கல்வி கற்பிக்கும் ஆசான்கள் சிலர் வேண்டுமென்றே, சில தமக்குப் பிடிக்காத மாணவர்கள் மீது வஞ்சம் தீர்க்கும் விதத்தில் தவறுகளை மிகைப்படுத்தி விடுவதால், ஒரு மாணவ சமூகமே பெரும்பாதிப்புக்குள்ளாகி விடுகின்றது. பேசிப் பிணக்குகளைத் தீர்ப்பதை விடுத்து, தப்புக்களையே, தொடர்ந்தும் அறிவுரை என்ற பெயரில் எச்சரிக்கை செய்வதால், மாணவர்கள் எரிச்சலடைந்து அதன் தாக்கத்தால், கல்வியிலேயே கோபமடைந்து விடுவதுபோல் நடந்து கொள்ளுகின்றார்கள். ஆனால் தனி நபர்கள் மீது கொண்ட வெறுப்பு தம் வாழ்வின் அடித்தளத்தையே, தகர்க்கும் விதமாக மாணவர்களும் நடந்துகொள்வது, மிகவும் பரிதாபத்திற்குரிய விஷயமாகும்.

RangaRakes Tamilnavarasam.com

இந்த விடயத்தில் ஒரு முக்கியமான விஷயத்தினை நாம் மனதில் இருத்திக் கொள்ளுதல் நல்லது. நமது எதிரிகளின் விமர்சனங்களுக்கு காது கொடுக்காமல் இருப்பதைக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். நாம் அநாவசிய விஷயங்களைத் தூக்கிப் பிடிக்கும்போது, எதிரிகள் உற்சாகமடைந்து விடுகின்றனர். ஆத்திரப்பட வைப்பதை, அவர்கள் நோக்கமாக வைத்திருக்கும் போது, நாமும் அவர்களின் வழிச் செல்வது, உத்தமமானது அல்லவே.

தங்களை மேன்மைப்படுத்துவது என்பது இன்னும் ஒருவரைச் சிறுமைப்படுத்துவதேயாகும் எனச் சிலர் தப்பாகக் கருதுவதும் குற்றம் காணும் இயல்பினை வலுப்படுத்தும் காரணியாக அமைந்துவிட்டது.

மேலும் குற்றம் காணும் இயல்பினைப் பின்வரும் காரணிகளே மேலும் வலுப்படுத்துகின்றன.

போட்டி, பொறாமை மனப்பான்மை, தம்மை மட்டுமே நினைப்பதும், தங்களைப் பற்றிய எண்ணமே அலாதியானது, மேன்மையானது என்ற தவறான கருத்தினை உள்ளத்தில் புதைத்து வைத்திருத்தல், எதிரில் உள்ளவர்களின் தகைமை, பெருமைகளைப் புரிந்துகொள்ளாமை, தங்களுக்கு மட்டுமே எல்லாமே தெரியும் என்கின்ற தன் முனைப்பு, அளவுக்கு மீறிய செல்வாக்குகள் பணபலம், ஆட்பலம், பதவி பலம் சமூகத்தில் இவர்கள் எதிர்பார்த்த அந்தஸ்து கிடைக்காமையும், அப்படி ஏதாவது அந்தஸ்து கிடைத்துவிட்டால் அதனைக் காப்பாற்றிக் கொள்ள தவறான உத்திகளைப் பயன்படுத்தல், பிறர் செய்கின்ற நல்ல காரியங்களையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இன்மை, அதிகாரங்களை விட்டுக் கொடுக்காத மனப்பான்மை, போன்ற காரணங்களில் ஏதாவது ஒரு காரணியை கடைப்பிடித்தாலே, இந்தப் பலவீனத்திற்கு ஆளாகி, ஒரு மன நோயாளி நிலைக்கே



தள்ளப்பட்டு விடுவர். கண்டபடி பிழை சொல்லிக் கொண்டிருப்பவர்களுடன் ஜீவிக்கத்தான் முடியுமா?

விசுவாச உணர்வுடன் அன்பாக அக்கறையுடன், நன்மைகளேயே குறிக்கோளாகச் செய்கின்ற பணிகளுக்கும், புத்திமதி உரைத்தலுக்கும், இந்தப் பொருந்தாத குற்றங்காணும் இயல்பும் முற்றிலும் முரணானதேயாகும். அது வேறு இது வேறு. நல்லவைகளை உணர்த்துதல் குற்றம் காணுதல் அன்று. இரண்டையும் நாம் இனம் காணாது குழம்பக்கூடாது. ஒருவரை ஒருவர் நற்பயன்பெறச் செய்ய, பரஸ்பரம் தவறுகளைச் சுட்டிக்காட்டும் உரிமையுமுண்டு. சொல்பவர்க்கும், அதைக் கேட்டவர்க்கும் உள்ள உறவு, நெருக்கம் போன்றவைகளுடன் இது தொடர்புபட்டது. சொல்லுபவருக்கு ஏற்ற பொறுப்பு, பக்குவமும், கேட்பவர் அதை ஏற்றுக் கொள்ளும் மனவளம் இயல்பு கொண்டவராக இருக்காதவரை இதனால் எந்தப் பிரயோசனமும் வந்துவிடப் போவதில்லை.

தாய், தகப்பன், தங்கள் பிள்ளைகளைக் கடிந்து கொள்ளுதல், குரு சிஷ்யன் உறவு நிமித்தம் கண்டித்தல், நண்பர்களிடையே உள்ள உரிமையுடனான கண்டிப்புக்கள், அத்துடன் உறவினர்கள், வேண்டப்பட்டவர்கள் தம்மிடையே அன்பான உரிமையுணர்வுடன் கூடிய வார்த்தைப் பிரயோகங்கள் போன்றவைகளை ஏற்கக்கூடியவைகளை, ஏற்க வேண்டியவர்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். கணவன், மனைவியிடையே பரஸ்பரம் குற்றம் காணாது, விட்டுக்கொடுத்து, ஏற்கவேண்டிய கருத்துக்களைப் பக்குவமாக எடுத்துரைப்பதில் தவறு என்ன வந்துவிடப் போகின்றது.

சதா நச்சரிப்புக்கள் போன்ற கண்டிப்பு, குறை கூறுதலை பழக்கமாக்கிக் கொள்ளுதல், சமூகத்தில் இருந்து எங்களை விலக்கி வைத்து விடுமன்றோ. புத்திமதிகளைக் கூடச் சந்தர்ப்பத்திற்குத்

RangaRakes Tamilnavarasam.com

தகுந்த மாதிரித்தான் கூறுதல் வேண்டும். சந்தர்ப்பம் அறியாமல், இலவச ஆலோசனைகள், புத்திமதி உபதேசித்தல் என்பது எல்லா நேரத்திலும் சரிப்பட்டு வருமா? இதனால் பிறருக்கு ஏன், பிள்ளைகளுக்கே எரிச்சல்தான் வரும்.

சகலருக்குமே சுயபுத்தி உண்டு. எனினும் தெரியாத நுட்பமான சங்கதிகளை எமது அனுபவ வாயிலாக, பொருத்தமான இடத்தில் பிரயோகிக்க வேண்டும்.

வயது, அனுபவம் உள்ளவர்களுடன் பேசும்போது, பதவி, செல்வாக்கு உள்ளவருடன் பழகும்போது, வலிமையுள்ளவர்களுடன், துஷ்டர்களுடன் கதைக்கும்போது, புதிதாக காணும் ஒருவருடன் பழகும்போது, எம்மைப் பிடிக்காத நபர்களுடன் உரையாடும்போது, ஒரு குடும்பத்தைப்பற்றி, அவர்கள் சார்ந்த சமூகம் பற்றி எமக்கு ஒன்றுமே தெரியாமல், பொது இடங்களில் பத்துப் பேர் பேசிக்கொண்டு இருக்கும்போது, எமக்குப் பரிச்சயம் இல்லாதவர்களே வந்து உரையாடும்போது, நாம் சர்வ ஜாக்கிரதையுடன் பேசுதல் வேண்டும். அப்போது நாம் கண்டபடி குற்றங் குறைகளை கூறிவைத்தல் ஆபத்தாகவே முடியும்.

எந்த விஷயத்தினைக் கையாளும்போதும் அதில் ஒரு கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். எங்கள் நியாயங்களை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிலை நிறுத்த முயலக்கூடாது. இதனாலேயே பிறர் தவறுகளை நாம் தேவையற்ற விதத்தில் சொல்லப்போய், பிரச்சினைகளில் மாட்டிவிடுகின்றோம். பிறருக்குரிய உரிமைகளை எமது உபதேசங்களினால் தகர்க்க முயலாதீர்கள். அவர்களையும் சிந்திக்க விடுங்கள். இவைகளை நாம் பொறுப்புணர்வுடன் அவர்களுக்குரிய ஆற்றலை மதித்து, கௌரவித்தல் மூலமே செயற்படுத்த முடியும். உங்கள் செயல் வழிகாட்டியாக அமையவேண்டுமே ஒழிய, வழி மறித்தலாக அமையக்கூடாது.



வரையறைக்குட்பட்ட எமது கருத்துக்களைப் பகிர்தல் முறை, அன்புடன் கூடிய எமது ஆலோசனைகளை கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் பகிர்ந்து கொண்டால் பிறரும் எமக்கு வழங்கவேண்டிய கௌரவம், மரியாதைகளைத் தாராளமாகவே வழங்குவார்கள். மற்றபடி,

குற்றங் காணுதல் என்பது, உற்ற துணைவர்களையே உதறிடும் செயலாகும். எம்மைச் சுற்றிச் சூன்யத்தையே வரவழைக்கும் செயலுமாகும். ஆகாத பழக்கத்தை அகற்றுதல் சிறப்புத்தானே!

தினக்குரல் - 17.12.2000

✦

RangaRakes Tamilnavarasam.com

# தியாகம்



நாங்கள் சிரிப்பதற்காகப் பிறர் அழுவதை எதிர்பார்க்கின்ற – ரசித்து மகிழ்கின்றவர்கள் உள்ள இந்த உலகில் நாம், தியாகம் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். தன்னலமற்ற தியாக உணர்வுள்ளவர்களால்தான், இந்த வையகம் வீழ்ந்துவிடாது, உயர்ந்து உயிரோட்டமாக இருந்து வருகின்றது.

தனிமனிதனுக்காக, முழு சமூகத்திற்காக, பரந்துபட்ட பூமிக்காக, தனக்கு வரவேண்டிய, நன்மைகளை இன்பங்களை விட்டுக் கொடுப்பதுதானே, தியாகம் என்கின்ற தூய வழியாக அமைகின்றது. இவைகளை விட்டுக் கொடுப்பது என்பது, சாமான்ய விஷயம் என்று கூறிவிட முடியுமா? இது அர்ப்பண சிந்தையால் எழுந்த இயல்பு. தியாகத்தின் மூலம் ஒருவர் பெறும் மன நிறைவுதான், அவருக்குக் கிட்டுகின்ற பெரும் பயனாகும். இவர்கள் தமக்கு வரவேண்டிய வாய்ப்புக்கள், வரவுகளைப் பற்றிச் சிந்திப்பது கிடையாது. அத்தகைய சிந்தனைகளை உருவாக்கும் எண்ணங்களை வேரோடு அடிமனதில் இருந்து அகற்றியும் விடுகின்றார்கள். பெரும் தலைவர்களான, தியாக சீலர்கள் செய்துவிட்டுப்போன சேவையின் பயனைத்தான் நாம் இன்று அறுவடை செய்துகொண்டு இருக்கின்றோம். எனவே, இனிவரும் தலைமுறையினருக்கு நாங்கள் என்ன செய்துவிட்டோம், அல்லது



செய்யப் போகின்றோம் என நாம் எம்மையே கேட்டுக் கொள்வோமாக. பயன்களை மட்டுமே பெறுதல் எமது வேலையா? நாங்கள் பெற்றுக்கொண்ட பயனுக்காக, உலகிற்கு என்ன பிரதி உபகாரம் செய்துவிடப் போகின்றோம்?

எல்லா விஷயங்களையும் நாம் சொல்லிக் கொடுத்து, கற்க வேண்டுமா என்ன? உலகோடு ஒன்றி வாழும்போது இங்கு நடக்கும் நடப்புகளை உணர்ந்து செயற்படுகின்றோம். பசித்தால் சாப்பிடுகின்றோம், தாகமாக இருந்தால் நீர் அருந்துகின்றோம். இவைகளைச் சொல்லிக் கொடுப்பதில்லை. இதற்கெல்லாம் அனுபவம் தேவையுமில்லை. இதேபோல்தான் பிறருக்காக நாம், அர்ப்பணிப்புடன் சேவை செய்தலை, சாதாரண நடைமுறைக் கருமமாகச் செய்யவேண்டும். துன்பங்களை ஏற்காத தியாகமில்லை. ஆண்டாண்டு காலமாகவே வாழ்ந்துவிட்டுப் போனவர்கள் சுலபமாக எதனையும் சாதித்துவிட்டுச் செல்லவில்லை.

எமது உழைப்பு, எமது ஈகையாக மாற வேண்டும். தியாகம் என்பதே ஈகைதான். வேண்ட்ப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, விலங்கினங்கள், பறவைகள் என்கின்ற அனைத்து உயிரினங்களாகட்டும், இவைகளுக்கான நியாயபூர்வமான தேவைகள் கிட்ட நாமும் ஒரு கருவியாக இருந்து செயல்படுவோமாக. எமக்கென ஓர் இடத்தினை நாம் ஆற்றுகின்ற தொண்டு செய்தல் மூலமே பெற்றுக்கொள்ள முடியும். கற்றுக் கொள்வதும், பணம், புகழ் பெறுவதும் இன்றியமையாதவைகள்

> தனி மனிதனுக்காக, முழுச் சமூகத்திற்காக, பரந்துபட்ட பூமிக்காக தனக்கு வரவேண்டிய நன்மைகளை இன்பங்களை விட்டுக் கொடுப்பதுதானே தியாகம் என்கின்ற தூய வழியாக அமைகிறது. இவைகளை விட்டுக்கொடுப்பது என்பது சாமான்ய விடயமா என்ன? இத்தியாக மனப்பான்மை தனிமனிதனுக்கு மட்டுமல்ல நாடுகளுக்கும்தான், சுரண்டும் நோக்குடன் நாடுகள் தம்மை வளர்க்காது. உலகம் முழுமையும் தியாக உணர்வுடன் வளர்க்க முற்படல் வேண்டும்.

RangaRakes
Tamilnavarasam.com

என்பதில் சந்தேகமில்லை. அத்துடன் எங்களுடன் மட்டும் நின்று கொள்ளாது, குடும்பம், நண்பர்கள், உறவினர் தேவைகளும் என விரிவடையும்போது மனிதன் எல்லோர் பொருட்டும் சேவை செய்ய, உழைக்க வேண்டிய பொறுப்புக்குள்ளாகின்றான்.

இந்தப் பின்னலுடன் மனிதன் வாழும்போது, இவன் சார்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான். செடி கொடி, ஜீவராசிகள் அனைத்துமே வாழத்தான் அவதரித்தன. இவைகளின் ஜீவியம் ஒன்றுடன் ஒன்று பிணைந்து, சார்ந்து இருப்பதனால், ஒன்றின் துன்பத்தில் இருந்து மற்றையது தப்பிக்கமுடியாது. இதை நாம் உணர்ந்தால் போதும், தியாக சிந்தனை தானாய் மலரும். எமக்காகவே எல்லாம் ஆக்கப்பட்டன. இவைகளின் உயர்ச்சி, மலர்வு, வாழ்வினால்தான் வையகம் வாழுதலும் சாத்தியமாகும் என நினைத்தல் வேண்டும்.

இலக்கியங்களிலும், நாடகம், சினிமாக்களிலும் காணுகின்ற பாத்திரங்களில் தியாக உணர்வின் பிரதிபலிப்பைக் கண்டு மனம் நெகிழ்ந்து கண்ணீர் மல்குகின்றோம். இவைகளில் இருந்து எமது அனைவரின் நெஞ்சங்களிலும் இயல்பான பச்சாதாபங்கள் இரக்க, ஈர உணர்வுகள் இருப்பது உண்மையேதான் என்றாலும், யதார்த்த நிலையில் மாறுபாடாகச் செயல்படுவது விந்தையேயாகும். தியாகம் செய்ய, கொடை வழங்க, உடன் மனம் தயாராவதில்லை.

நம்ப முடியாமல் எத்தனையோ காரியங்கள் நடக்கின்றன. நல்ல பெரிய காரியங்களை, இப்படிக்கூட நடக்கின்றதா என நாம் நினைந்து ஆச்சரியப்படுகின்றோம். பெரியோர் வாழ்க்கையைப் பற்றி நாம் படிக்கும்போது இவைகளைப் புரிந்து கொள்ளலாம். இத்தகைய அருஞ்செயல்களைச் செய்தமையினால்தான், அவர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். செயற்கரியன செய்வோர், பெரியோர், இவைகளை இவர்கள் கஷ்டமுறாது செய்து முடிக்கவில்லை. தியாக உணர்வின்றி, உழைத்தல் இன்றி இறைவனிடம் போய் இறைஞ்சி வரம் கேட்பதில் என்ன வந்து



விடப்போகின்றது. உண்மையில் சொல்லப்போனால் தியாக சேவைதான் இறைவனிடம் பெறும் வரத்தினைவிட மன நிறைவுடன், பெறும் பெரும் பேறாகும். இந்த உள்ளத்தை அருளுமாறு இறைவனிடம் வரம் கேட்பதே உத்தமமானது. தியாகிகள், பிறர்க்கு இல்லை என்று கூற வைக்காத உதவும் நிலையினைத் தா இறைவா எனவே வேண்டுதல் செய்தனர்.

தியாகம் புரிந்தவர் தன்னையே கொடுத்தவர் ஆகின்றார். இவை மனம், வாக்கு, காயத்தினை முழுமையாக அர்ப்பணம் செய்வதேயாகும். இங்கு பிரதிபலன் என்ற பேச்சிற்கே இடமில்லை. ஆயினும் நாம் தொழில் மூலம் ஆற்றும் சேவைக்கான, செல்வங்களைக்கூட தகுந்த வழியிலேயே பிறர் பயனடையுமாறு கொடுத்துதவுதல் வேண்டும்.

கசிவான மனதுள்ள பண்பாளர்கள் தாம் விரும்பும் பொருளைக் கூட, அது பிறருக்கு உதவும் எனின் உடன் இழக்கச் சித்தமாய் விடுவார்கள். பணம், பொருள் ஆகட்டும், ஏன் காதலைத் தானாகட்டும் உடன் பாசத்தின் நிமித்தம், மனிதாபிமானத்தின் பொருட்டு அளித்துவிடுவதுடன், அதன் பொருட்டு வலிந்து இன்னல்களையும் தேடிக்கொண்டு விடுகின்றனர்.

இன்னும் ஒரு சாரார், தமக்கு இஷ்டமானதை மட்டும் வைத்துக்கொண்டு, தேவையற்றதை கட்டிக் காத்துக் கொண்டிருக்காமல் பிறருக்கு அது தேவை என்றால் கொடுத்து விடுவார்கள்.

இப்படி இருக்க, நம்மிடம் வந்து ஒருவர் நன்மை பெறுகின்றார் என்ற திருப்தியானது, எமக்கு ஏற்படும் இழப்பினால் ஏற்படும் துன்பத்தினையே தோன்றாமல் செய்யும் ஆற்றல் மிக்கது எனத் தெரிந்து கொள்ளுங்கள். பிறரது துன்பங்களில், பெறும் குரூரத் தன்மையான இன்பம், தாம் அடைந்த வெற்றி எனச் சிலர் கருதுவது மடமையிலும் மடமையின்றி வேறென்ன? இந்த

RangaRakes Tamilnavarasam.com

அலுவல்களைத்தானே உலகின் நாடுகள்கூடச் செய்து கொண்டிருக்கின்றன? ஒரு நாட்டிற்கு இடுக்கண் புரிவதும், அந்தத் தொல்லை தாங்காது, இடுக்கண் செய்த நாட்டிடமே வலிமை குறைந்த நாடுகள் போய் சரணடைந்து மண்டியிடுவதும் எவ்வளவு பரிதாபமான நிகழ்ச்சிகள்! தனிமனிதனுக்கு மட்டுமா தியாக உணர்வு தேவைப்படுகின்றது. ஏன் நாடுகள், வல்லரசுகள்கூட தியாக உணர்வுடன் செயல்பட்டால் என்ன? தங்கள் நலன் மட்டுமே பேணப்பட்டால் தியாகமாகுமா? உலகிற்கு உதவுதல் போல் காட்டி நிற்பதும், சூழ்ச்சி செய்வதும் தியாகம் செய்தலையே கொச்சைப்படுத்தல் போல் ஆகாதா? வேதனை என்னவெனில்-

வேறுவழியின்றி இந்த நாடுகளைக் கூடத் தியாகபூமி என்று சொல்ல வேண்டியிருக்கின்றது. செல்வம், வலிமையினால் எல்லாவற்றையுமே வெல்ல முடியுமா? இவைகள் சும்மா இருந்தாலே போதாதா? தியாக உள்ளத்துடன் கூடிய தலைமைத்துவத்தினால்தானே இந்த அவல நிலைமாறும். உலக கவலைகளும் போகும்.

தியாகத்தின் பரிமாணத்தினைப் புரிந்து கொள்ளுவோம். இது வெறும் பெயர் சம்பாதிக்கும் கருவியல்ல. அறத்தின் உருவம் தியாகம். மதங்கள் அனைத்தின் வேதமும் அதுவே!

தினக்குரல் - சிறப்பிதழ் 01.01.2001



# உலகை உருவாக்கித் தரவல்ல உயர் சக்தி கல்விதான்



கல்வி தொடர்பாக, நம்மவரில் பலர் இப்போது பேசுகின்ற பேச்சுக்களைக் கேட்க, எரிச்சலும் திகைப்புமாக இருக்கின்றது.

படிப்பு என்ன ஐயா, படிப்பு, படித்து என்ன கிழிச்சுவிடப் போகிறீர்கள். முதலில் நாலு காசு சம்பாதிக்கிற வழியைப் பாருங்கள். உழைக்கின்றவனுக்குத்தான் இப்போ மதிப்பு. இப்போ படித்தவனைவிட, படிக்காதவன் எதில் குறைந்துவிட்டான். சொல்லப்போனால் அவர்கள் தானே கூடச் சம்பாதிக்கின்றார்கள்.

இப்படிச் சொல்லுகின்றவர் தொகை நாளுக்கு நாள்கூடிக் கொண்டுதான் வருகின்றது. இப்படிச் சொல்பவர்களின் வார்த்தைகள் வெறும் விதண்டாவாதம் மட்டுமல்ல, அறியாமையின் உச்சக் கட்டப் பேச்சாகவும், ஏன், சற்றுத் தாழ்வு மனப்பான்மையால் எழுந்த ஆதங்கமான பேச்சுக்களேயாகும்.

கல்வியினால் பெறப்பட்ட சகல சலுகைகளையுமே அனுபவித்துக்கொண்டு, இப்படியான தவறான எண்ணங்களை கொண்டிருப்பது, எதிர்காலத்தில் ஆபத்தான பின் விளைவுகளைத் தோற்றுவிக்கலாம். கல்விதான் எமக்கு அடிப்படைத் தேவையான காலகட்டத்தில், நவ யுகத்தின் புத்தாயிரமாம் ஆண்டின்

RangaRakes
Tamilnavarasam.com

தொடக்கத்திலேயே பிழையான கருத்துக்களை அகத்துள் புகுத்துதல் பாரதூரமான செயலேயன்றி வேறென்ன?

இன்றைய நாட்டின் சூழ்நிலைகள், காரணமாக சில நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள் பணத்தின் தேவையை நன்கு அறிந்தமையினாலும், வெளிநாடுகளில், உடல் உழைப்பின் மூலம் மேலதிக பணங்களை அனுப்பிக் கொண்டிருப்பதனாலும் கல்வி, சம்பளம் குறைந்த அரச, தனியார் தொழில் தொடர்பாக. மாறான அபிப்பிராயம் தோன்ற ஆரம்பித்துவிட்டன. தவிர, தனியார் தொழில் மூலமும், சுய வியாபார மூலமும் கல்வி இன்றியே உழைத்துவிட முடியும் என நம்புகின்றார்கள்.

அப்படியாயின் உண்மை நிலை என்ன? கல்வி இன்றியே நம்மால் சீவித்து விடமுடியுமா? அரசியல் சூழ்நிலைகளால் ஏற்படும் மாற்றங்கள், நிகழ்வுகள் நிரந்தரமானதா? இப்படியே ஏதாவது பணம் புரட்டும் தொழில்தான் வாழ்க்கையா? சிந்திப்போம்.

சொல்லப்போனால் இத்தவறான கருத்துக்கள் யாவும் ஒரு ஆற்றாமையின் வெளிப்பாடாகவே இருக்கின்றது. முன்னேறி வரும் இந்த உலக ஓட்டத்திற்கு ஈடு கொடுக்கும் விதத்தில் நாமும் மாறித்தான் ஆகவேண்டும். கல்வி தொழில் நுட்பம் போன்றவைகளின் அபரிமிதமான வளர்ச்சியுடன் போட்டி போடாமல் நாம் வாழ்ந்துவிட முடியாது. ஐந்து வயதுப் பிள்ளைகள்கூடக் கணனி வயப்பட்டுவிட்டனர். நேற்றைய சந்ததியினரின் மூளை ஓட்டத்திலும் பார்க்க, தற்போதைய தலைமுறை படு வேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

> இன ரீதியான, மொழி ரீதியான பிரச்சனைகளால் கல்வி மேம்பாடுகளில் ஒரு சாரார் பாதிப்படைந்து வருவது கவலை தரும் விடயமாகும். ஆயினும் இத்தடையினை மீறி எழும் கல்வி கற்பதான எழுச்சி மிகவும் அதிசயிக்க வைத்துள்ளது. ஒரு துறையில் புறக்கணிக்கப்படும் இவர்கள் தமது முயற்சியினால், தாம் விரும்பிய ஏதோ ஒரு துறையில் கல்வி கற்றுப் பிரகாசிப்பதை எவருமே தடுத்துவிட முடியாது. கல்விகூட ஒரு தாகம்தான்.



மக்கள் தொகை அதிகரிப்பு, பொருளாதார போட்டி, இவைகள் கூடி வரும்போது, நாம் நினைத்ததைப் பெற, கடும் முயற்சி எடுத்தாகவேண்டிய கட்டாய சூழ்நிலை வந்துவிட்டது. எப்பாடுபட்டாவது கல்வி கற்றால்தான், சமூக அந்தஸ்து, பதவி கிடைக்கும் என்கின்ற நம்பிக்கையுடன், கடும் உழைப்புடன் மாணவ சமூகம் பெரும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

தொழில் வாய்ப்புக்கள் எவ்வளவுதான் கூடிக்கொண்டே வந்தாலும் கூடப் போட்டி போடுபவர்களின் எண்ணிக்கை, அதைவிடக் கூடிக் கொண்டே செல்கின்றது.

எனவே,

தகைமைகள், தகுதிகளை அரசுகளும், நிறுவனங்களும் மிகைப்படுத்திக்கொண்டே செல்கின்றன. இருந்தும் என்ன, இந்தப் பிரச்சனைகள் தீர்ந்தபாடில்லை. இவை ஆக்கபூர்வமாக, ஆய்ந்து, புது புது முயற்சிகளை திட்டங்களை உருவாக்கியும் வருகின்றன. கல்வியையும், அதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியையும் முழுமையாகப் பெற இவை போராடி வருகின்றன.

இப்படியிருக்க - சிலர் விடயம் புரியாமல், கண்டபடி எழுந்த மாதிரி, கல்வி கற்பது பற்றி வீண் வியாக்கியானம் செய்து விடுகின்றார்கள்.

ஆயினும் கூட மாணவ சமூகத்தில் படிப்பின் வேகம் கூடி வருவது, மனதுக்கு ஆறுதல் அளிக்கும் விஷயமாக இருக்கின்றது.

தொழில் செய்பவர்களுக்கு அதாவது உடல் ரீதியாகக் கஷ்டப்பட்டு உழைப்பவர்களுக்கு மேற்கத்திய நாடுகளில் பாரபட்சம் காட்டப்படாமல் வேதனம் மிகையாக வழங்கப்படுவது உண்மையே. கல்வி கற்றவர்களைவிட கல்வி கற்காதவர்கள் உடலால் வருந்தி உழைத்து மேலதிகமாக சம்பாதிப்பது

RangaRakes Tamilnavarasam.com

வரவேற்கத்தக்க அம்சமானதுதான். இது தொடர்பாக வெளிநாட்டில் கல்வி பயின்ற பேராசிரியர் ஒருவர், தங்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்களைவிட சில மாணவர்கள்கூட, மிகவும் கஷ்டப்பட்டு சம்பாதித்து கொள்வதைத்தான் பார்த்ததாகத் தெரிவித்தார். ஆயினும் இத்தகைய கடின உழைப்பு எவ்வளவு காலத்திற்குச் செய்ய முடியும். இதே வாய்ப்பு தொடர்ந்து நிரந்தரமாக இருக்குமா என்பது கேள்விக்குறியேயாகும். தொழில் ரீதியாக மனிதர்களை வேறுபடுத்திப் பார்க்கும் இயல்பு அங்கு கிடையவே கிடையாது. எமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று, அதிகமாக உழைத்து அனுப்பும்போது, அங்குள்ள உண்மை நிலை, மெய் வருத்தம், உளவியல் ரீதியான மனக்கொந்தளிப்பு, ஆதங்கம் இவைகளை உணராது, பணத்தை மட்டுமே மையமாக வைத்து கல்வியை கொச்சைப் படுத்துதல் நியாயமானதுதானோ?

கல்வி கற்றல் என்பது வெறும் உழைப்பது, பதவி வகிப்பது என்பதுடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. இது தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து செல்வது. நாம் கல்வி பயில்வது இவற்றுடன் மட்டும் நின்று விடுவது அன்று. எமக்குப் பின்னே ஒரு சந்ததியினர், நாங்கள் தமக்கு என்ன வழங்கப்போகின்றோம் என்பதை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். கல்வியறிவற்ற ஒரு சமூகம் உருவாவது ஒரு பரம்பரைக்கு நாம் செய்யும் நீடித்த தவறாகக் கருதப்படும்.

எனவே, தற்காலிக நிவாரணங்களுக்காக கல்வியின் அத்தியாவசியத் தன்மையை உணராது போவது. ஏற்றுக் கொள்ளத்தக்க ஒன்றல்ல.

ஏன் எனில், கிடைப்பதைக் கொண்டு வாழ்ந்தால் சரி என்றில்லாமல், எதிர்கால சந்ததிக்கான வழக்க்ங்களை, காரணங்கள் கூறி மழுப்பாமல் கல்விக்கான பாதைகளை சீராக வழி சமைக்கவேண்டும். ஒரு பிள்ளை படிக்காது விடுதல் என்பதே. ஒரு பரம்பரை படிக்காமல் போவது போலாகும் என அறிக.



கல்விக்கான பாதைகள் எவ்வளவோ உண்டு. நாம் அறிந்தவரை, மிகவும் புத்திசாலியான ஊக்கமுள்ள பிள்ளைகள், பல்கலைக்கழக அனுமதி கிட்டவில்லை என சோர்ந்து போகாது, தமக்குப் பிடித்த ஒரு துறையைத் தெரிந்தெடுத்துப் பலரும் வியக்க அதில் பயின்று தேர்ந்து, நல்ல நிலைக்கு வந்து விடுகின்றனர். கற்காமல் விடுவதற்குக் காரணம் சொல்லக்கூடாது.

தியாக உணர்வுள்ள பெற்றோர்கள் எவர் எது சொன்னாலும், சமூக அந்தஸ்து, உயர்நிலை நோக்குக் கருதி தம் பிள்ளைகளை பலத்த சிரமத்தின் மத்தியில் பயிற்றுவித்தலை நாம் காணுகின்றோம்.

அரசியல் சூழ்நிலைகள், பொருளாதார கஷ்டங்கள் காரணமாக கல்வி நிலை பாதிப்படைவது சகிக்க முடியாத மன வேதனை தரும் விஷயம்தான். ஆயினும், இதன் பொருட்டு நாம் சோர்ந்துவிட முடியுமா?

இனரீதியான, மொழி ரீதியான பிரச்சினைகளால் கல்வி மேம்பாடுகள் குறுகுவது போலவே தென்படுகின்றன. எவ்வளவு படித்தாலும் தொழில் கிடைக்கவில்லையே என்கின்ற ஏக்கம், ஆதங்கம் எம்மை அரிக்கின்றது. ஆயினும் இவைகள் எல்லாவற்றையும் மீறி, எழும் எழுச்சி கல்வி மீதான முட்டுக்கட்டைகளை உடைத்தெறிந்தே தீரும். ஒரு துறையில் புறக்கணிக்கப்படும் மாணவர்கள், வேறு ஏதோ ஒரு கல்வித்துறையில் பிரகாசித்து வருவதே இக்கருத்துக்கு முன் உதாரணங்களாகும். கல்வி கூட ஒரு தாகம்தான். கல்வியினுள் நுழைந்துவிட்டால், இந்த உணர்வு அதிகரித்துக்கொண்டே போகுமே ஒழிய, குறைவுபடாது.

கல்வி முறைகளில் தேர்வு செய்யும் முறையில்கூட உலகம் இப்போது முழுமையாக மாறிவிட்டது. நாம் முன்னர் அத்தியாவசியமாகத் தேவையில்லை என நினைத்திருந்த

RangaRakes
Tamilnavarasam.com

கல்வித்துறைகள் பல, இப்போது பலருமே விரும்புகின்ற துறைகளாகிவிட்டன. உதாரணமாக, நுண்கலைகள் கவின் கலைகள், சமயத்துறைகளில் போதிய தகுதியானவர்களைக் கண்டு பிடிப்பதே சிரமமாயிருக்கின்றது. எனவே இதன் அத்தியாவசியத்தை உணர்ந்து, தற்போது இவைகளை ஆர்வமுடன் பலர் பயில்வதனை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. காலத்திற்கு ஏற்றவாறு கல்வி கற்பவர்களும் மாற வேண்டியுள்ளது. விருப்பமான துறைகளைத் தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

கல்விக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், நுண்கலைக்கல்லூரிகள் பலவும் மாணவர் தொகைக்கேற்ப பல்கிப் பெருகி வருகின்றனர். இங்கு காலத்திற்கு ஏற்றாற்போல் பலவித கற்கை நெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் கல்வி மறுமலர்ச்சியின் அடையாளங்கள் அல்லவா?

இன்று மாணவ சமூகத்திடையேயுள்ள விரக்திக்கு முக்கிய காரணம், எதிர்காலத்தில் தமது கல்விக்கு ஏற்ற தொழில் வாய்ப்பு கிட்டுமோ இல்லையோ என்ற அச்சமும் ஒரு காரணமாகும். இன்று நடைமுறையில் நாம் காண்பது என்ன படித்த படிப்பிற்கும், செய்யும் தொழிலுக்கும் பெரும்பாலும் சம்பந்தமேயிருப்பதில்லை. தொழில் வாய்ப்புக்கள் குன்றியதால் அகப்பட்ட தொழிலை ஏற்றுக் கொள்கின்றார்கள். இதனால் காலப்போக்கில் தாம் கற்ற கல்வியையே மறந்து விடுகின்றனர். இதனால் இவ்வளவு காலமும் படித்த படிப்பு, காலம், முயற்சிகள்கூட வீணாக்கப்படுவதுபோல் தோன்றுகின்றது. எவராயினும் தமது கல்வி மூலம் பெற்ற பயனைப் பிறருக்கு சமூகத்திற்கு வழங்காதுவிடின், என்ன பயன்? அன்றியும் தாம் பயின்ற கல்வியுடன் தொடர்பில்லாத தொழிலைச் செய்வதனால், செய்கின்ற தொழிலில்கூட பூரண திருப்தியின்மையும், ஈடுபாடு இன்மையும் தோன்றுகின்றது. இதனால் தாம் செய்யும் கடமையில் முழுமையுறாது, தொழில்



நிறுவனத்திற்கோ, ஏன் அரசாங்கத்திற்கோ ஒருவிதத்தில் பாரமாகிவிடுகின்றனர்.

தொழில் புரிதல் என்பது பூரண மன நிறைவுடன் ஆற்றவேண்டிய ஒன்றாகும். இன்றும் கூட எமது நாட்டில் கல்வியில் முறை பூரணமானது, திருப்திகரமானது என்று கூறிவிட முடியுமா? காலத்தின் அவசியத்திற்குத் தகுந்த விதத்தில் கல்விச் சீரமைப்பு அமைதல் வேண்டும். நாம் இன்னமும் மூன்றாம் மண்டல நாடுகளிடையே, பின் தங்கியோரில் முன் வரிசையில் அமரவே போட்டி போடுவதுபோல் நடப்பதாக சில சமயம் தோன்றுகிறது. நவீன தொழில் நுட்பம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் இன்றி எந்த நாடுமே உருப்பட முடியாது.

கல்வித்துறைகளில் பாகுபாடு இல்லை. சகல துறைகளுமே ஒவ்வொரு விடயத்தில், தனித்துவமான பெருமைக்குரியனவே என்றாலும், மிக அவசியமற்ற சில கல்வித் துறைகளுக்கு கோடிக்கணக்கான நிதிகளை செலவழிப்பதனால், முன்னேற்றமடைந்த நாடுகளுடன், கல்வி வளர்ச்சியில் போட்டி போட முடியாதுள்ளது. காலத்துடன் இயைந்த கல்விச் சீர்திருத்தங்களை நாம் கண்டு கொள்ளவேண்டும். பல்கலைக் கழகங்களில் எத்தனை ஆயிர பட்டதாரிகள் உருவாகின்றனர் என்பது பெரிதல்ல. இவர்களில் எத்தனை பேர் சமூகத்திற்கும், நாட்டிற்கும் பூரணமாகப் பிரயோசனப்படுத்தப்படுகின்றார்கள் என்பதே முக்கியமானதாகும். இவர்களைப் பூரணமாகப் பிரயோசனப்படுத்தாமையினால், சாதாரணமான தரத்தில் உள்ள படித்தவர்களின் பங்களிப்பினைவிட, இவர்களின் சேவை மிகவும் குறைபட்டதாகவே அமையலாம்.

இன்று கல்வியில் முன்னேற்றமடைந்துவிட்டதாக பெருமிதமடைந்தாலும்கூட தொழில்முறை பாகுபாட்டு நோக்கு எம்மை மிகவும் பாதிப்படையச் செய்துள்ளது. குறிப்பிட்ட ஒரு கல்வித்துறைக்கு உள்ள கிராக்கி, அல்லது மவுசு இன்னொரு

RangaRakes Tamilnavarasam.com

துறைக்கு இருப்பதில்லை. தொழில் ரீதியாக, அறிவையே அளவிடும் அறியாமையின் விளைவுதான் இது. பலராலும் சிலாகிக்கப்படும் தொழிலை ஒருவர் செய்தால் மற்றத் தொழில் செய்பவர்கள் சற்று மட்டமானவர்கள் எனக் கருதுகின்றார்கள். எல்லோரும்தான் கௌரவமான தொழில் கிடைக்கப்படுகின்றார்கள். இதில் என்ன உயர்வு, தாழ்வு வேண்டிக் கிடக்கின்றது. ஒரு கௌரவமான தொழிலுக்குள்கூட எத்தனை சதவீதம் பெரிசு, சிறிசு பார்க்கிறார்கள். இது ஒரு படு பிற்போக்குத்தனமான நினைப்பு அன்றி வேறென்ன? புதிதாக எதைத்தேடிக் கற்றாலும் அது கல்விதானே? இன்று கணனித்துறை, நவீன இலத்திரனியல் என்றெல்லாம் புதிது புதிதான கல்வியில் சாதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. நாமோ எமக்குத் தெரிந்த ஓரிரு தொழிலை மட்டும் கூறி அதுதான் உயர்ந்தது, மற்றதைப் படிப்பதால் பிரயோசனமே இல்லை என்று பிறர் கூறுவதை நம்பியும் விடுகின்றோம்.

கல்வித்துறையில் மட்டுமல்ல, ஏனைய பல விஷயங்களில் நாம் பாகுபாட்டோடு, முரண்பாடான, தவறான சிந்தனைகளை வளர்த்து வருகின்றோம். வளர்ச்சியடைந்த நாடுகளில் இத்தகைய சிந்தனை இல்லை என்றே கூறவேண்டும். முக்கியமாக,

இன்று எமது நாட்டில் நிலவுகின்ற சாதிப் பாகுபாட்டினைக்கூட கல்வி ஒன்றினால் மட்டுமே தீர்த்து வைத்துவிடமுடியும். ஒருவன் சமூகத்தில் பெரும் கல்விமான் ஆக வந்துவிட்டால், எவருமே தயங்காது அவரிடம் சென்று அவரிடம் கிடைக்கும் கல்விச் செல்வத்தை அள்ளத்தான் முனைவார்கள். அப்போது எவருமே சாதிப் பாகுபாட்டினைக் கிஞ்சித்தும் நோக்குவது கிடையாது. அத்துடன் கல்வி கற்ற எவரையுமே மிக்க கௌரமாகவே எவருமே நோக்குவர். இன்று கல்வியினால், உயர் பதவி பெற்றவர்கள், எந்த தரத்தினராயினும்கூட அவர்கள் நிலையினை தரம் மதித்து, தக்க மரியாதையுடனேயே சமூகம் தலை





வணங்குகின்றது. திறமைகளை வளர்த்துக்கொண்டால் மட்டுமே சாதியில் பின் தள்ளப்பட்டு, இம்சிக்கப்படுபவர்களின் தரம்கூடி உயர் நிலை அடையமுடியும். ஒருவர் திறமைக்கும் ஆற்றலுக்கும் மடங்காதவர் இருக்கமுடியாது. ஜாதிக் கொடுமையிலும் கூடத் தமது கல்வியறிவினால் இந்த சமூக ஏற்றத்தாழ்வு விலங்குகளை உடைத்து எறிந்த அறிஞர்கள், மேதைகள், எழுத்தாளர்கள், கலைஞர்களை நாம் கண்டுகொள்ளவில்லையா? இவை எல்லாமே கல்வியினால் பெற்ற உயர் வெற்றியன்றிப் பிறிதல்ல. கல்வி, சாதிப் பாகுபடுகளைச் சங்கரிக்கும்.

ஒரு ஒழுக்கமுள்ள கட்டுக்கோப்பான சமூகம், அது நாட்டிற்கு ஆற்றவேண்டிய பயன் அளப்பரியது. இதை உருவாக்கித் தரவல்ல ஆணிவேரை பலமுள்ளதாக்கச் செய்வதே, இந்த உலகிற்குச் செய்யும் பேருபகாரமுமாகும். உலகை உருவாக்கித்தரவல்ல ஆணிவேர் கல்விதான். இதில் இருந்து உருவாகும் விருட்சத்தில் பயனடையப் போவது முழு உலகமுமேயாகும். எமக்கு மட்டுமே கல்வி என்று எண்ணாது, சகலருக்குமே இது போய்ச்சேர வேண்டும். பின் தள்ளப்பட்ட மக்கள், எளிய மக்கள் என்று உலகு ஒதுக்காது, அனைவருக்குமான கல்வியூட்டல் மூலமே பரந்துபட்ட பூமி, ஒளியூட்டப்பட்ட புண்ணிய பூமியாக மாறும். கல்வி ஒருவரிடம் மட்டுமே முடங்கும் பொருள் அல்ல. ஒருவரிடம் பெற்ற கல்வி ஒளி ஒரு கோடி பேரைச் சென்றடையும் தன்மை வாய்ந்தது. பலகோடி செல்வத்தை ஈந்து விடுவதிலும் பார்க்க, சிறு குடிலில் வாடும் ஒரு ஏழைக்குக் கல்விச் செல்வத்தை அள்ளிக்கொடுக்க முடிவு செய்தல் கோடிப் பெருமையன்றோ.

*தினகரன் 03.06.2001*

# மனநோயாளரை மனிதராக நடாத்துவோம்



வெளி உலகில், அதிபுத்திசாலிகள் போல் நடித்துக் கொண்டு, ஆனால் செய்கின்ற காரியங்களில் முற்றிலும் முரணான முறையில் செயல்படுபவர்களைக் காட்டிலும், சித்த சுவாதீனமுள்ள நோயாளிகள் ஒன்றும் பிரச்சனைக்குரியவர்கள் அல்லர். இவர்கள் சமூகத்திற்கு குற்றம் இழைக்க அவதரித்தவர்களோ அன்றி தேவையற்ற பிரகிருதிகள் என உதாசீனப்படுத்தப்பட வேண்டியவர்களும் அல்லர். சட்ட விரோதச் செயல்களில், கொடூர குற்றங்களைச் செய்பவர்களில் பலர் இன்று, சித்த சுவாதீன முகமூடியை அணிந்து சாதுரியமாகத் தப்பித்துக் கொள்வதுதான் இன்று கேள்விப்படுகின்ற சங்கதிகளாகிவிட்டன.

ஆனால் -

இன்று மனநோயாளிகளின் அதிகரிப்பிற்கு சமூகமே ஒரு காரணமாகிவிட்டதும் மறுப்பதற்கில்லை. இவர்கள் மீது இரக்கப்பட்டு, அனுசரித்துப் போகின்றோமா? இவர்களைப் போஷிக்கின்ற, பராமரிக்கின்ற பொறுப்புக்களில் இருந்து சமூகம் விடுபட நினைப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது.

ஏன் எனில்,



சித்த சுவாதீனம் என்பது ஒரு நோய்.

எல்லாமே நிரந்தரமானது, என எண்ணி நம்முன்னே காணும் பரிதாபத்திற்குரியவர்களைப் பார்த்து நகைத்தல் அழகாமோ? எந்த நிலையும் எவர்க்கும் வரலாம். எந்த நிலையும் மாறுதலடையலாம். இது இயற்கை நியதி. இவை புதிதான கருத்துமன்று.

நாட்டில் நடக்கின்ற நடப்புக்களைப் பார்த்தால், மனநோயாளிகளாகக் கண்ணுக்குத் தெரிபவர்களைவிடக் கண்ணுக்குப் புலப்படாத நோயாளிகள்தான் அதிகமாக இருக்கின்றார்கள். இவர்கள் சாதாரணமாக உலவுகின்ற மக்களைக் கூடத் தமது நடிப்பாற்றலாலால் மேலும் குழப்பியடித்து வருகின்றனர்.

உண்மையான நோயாளிகளைப் பூரணமான மனிதர்களாக மாற்றிவிடலாம். வெளியில் நடிப்புடன் உலா வரும் இவர்களைக் கண்டு கொள்வது எங்ஙனம்? இனம் காண்பதே கஷ்டம்தான்

எதிர்பார்த்த பயன் கிட்டாமை, விபத்துக்கள், பரம்பரை, போன்ற காரணங்களினால் மனநிலை பாதிப்படைவதாகக் கூறப்படுகின்றன. இத்துடன் சமூக அழுத்தங்கள் அரசியல் பிரச்சனைகளால் ஏற்படும் குழப்பங்கள், யுத்த சூழ்நிலைகள், பிரிவுத்துயர்கள் போன்றவைகளும் ஏனைய பிரதான காரணியாக அமைகின்றன. எவ்வித வயது வித்தியாசமுமின்றி இந்நோய்க்களாகுபவர்கள் நிலைபற்றி மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் நோக்கல் வேண்டும். இது என்ன

> மனநோயாளிகளைக் கேலி செய்வதும் ஒரு வகையில் மனித உரிமை மீறலேயாகும். எல்லாமே நிரந்தரமானது என எண்ணி நம்முன்னே காணும் பரிதாபத்திற்குரியவர்களைப் பார்த்து நகைத்தல் அழகாமோ? எந்த நிலையும் எவர்க்கும் வரலாம் - எந்த நிலையும் மாறுதலடையலாம், இது இயற்கை நியதி இவை புதிதான கருத்துமன்று.

RangaRakes Tamilnavarasam.com

குணமாக்க இயலாத ஒன்றா? எத்தனையோ பேர், அதிசயிக்கும் வண்ணம் குணமாகி, தங்கள் கடமைகளைச் செய்வதை நாம் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றோம்.

அப்படியிருக்க,

தெருவில் செல்லும் மனநோயாளிகளைக் கண்டால், கல் எறிவதும் கேலி பேசுவதுமாக, அவர்கள் உள்ளத்தையும் உடலையும் வருத்தலாமா? அவர்கள் இடுகின்ற கூக்குரல், கத்தல் எப்படி, வருத்துபவர்களுக்குச் சுகானுபவமாகின்றதோ தெரியவில்லை.

ஒன்று மட்டும் உண்மை!

மனம் வருந்தியழும், மனநோயாளியின் அழுகைக்குரல் இறைவனைப் போய் அடையும். வருத்துபவர்கள், வருத்தமடைவார்கள்.

சிலர் செய்கின்ற செய்கையாலும், சேஷ்டைகளாலும் சாதாரண மனிதனே முட்டாளாகிப் புத்தி பேதலித்து விடுகிறான். அப்படியிருக்க சற்று வித்தியாசமான நிலையில் உள்ளவர்களை மேன்மேலும் கிண்டலடித்து அவர்களைக் கோமாளியாக்கி, முடிவில், சித்த சுவாதீனமான நிலைக்கே தள்ளியும் விடுகிறார்கள். ஒருவன் சற்று ஏமாளியானால் போதும், அவனை வதைத்தே விடுகிறார்கள்.

மனநோயாளிகளைக் கேலி செய்யும் விதமான செயல்களைப் பத்திரிகைகள், சினிமாக்கள் நிறுத்தி விடவேண்டும். இதுவும் கூட ஒரு மனித உரிமை மீறல் செயலாகவேபடுகின்றது. பெரிய மூளைசாலிகளே கூட மித மிஞ்சிய உழைப்பு, ஓய்வு இன்மையால் சித்தம் பாதிப்புக்குள்ளாகும்போது, சாமான்ய மனிதர் எம்மாத்திரம்?



குடும்பத்தில் ஒருவருக்கு மனநிலை பாதிப்படைந்தால் ஒட்டு மொத்தமாக, அந்த குடும்ப உறுப்பினர்களை நிந்தனை செய்து உதாசீனமாக ஒதுக்கி விடுகின்றனர். இவர்கள் தக்க பராமரிப்பின்றி வீதிக்குத் தள்ளப்படுகின்றனர். இவர்களுக்கு குணமாகும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதில்லை. நோயாளி தன் நிலையில் இருந்து விடுபட நினைந்தாலும், சமூகம் அளிக்கின்ற அகௌரவம், அவனை மீண்டும் நோயாளி நிலைக்கே திருப்பி அனுப்பி விடுகிறது. தனிமை, விரக்தியால் அவன் சித்திர வதைக்கும் மேலான மன உழைச்சலுக்கு ஆளாகின்றான். மேலும்,

மனநோயாளிகளை, தகுந்த சிகிச்சையளிக்காமல், மந்திரம், மாயம் என்கின்ற சடங்குகளுக்குட்படுத்தி மேன்மேலும், அவன் மனதை ரணப்படுத்தி விடுகின்றனரே. பூரண சுகமடைந்த நோயாளியைக்கூட கடந்த கால வாழ்வை நினைவூட்டுவதன் மூலம், அவனைப் படுகுழியில் தள்ளுகின்ற நடவடிக்கை ஒருபுறமிருக்க,

குணமடையாத இத்தகைய மனநோயாளிகளைப் பாசம், பற்றுதல் காரணமாகப் பெற்றோர், உற்றோர் திருமணபந்தத்தில் இணைத்து விடுவதனால், ஏற்படும் விபரீதங்கள் சொல்லும் தரமன்று. நோய் மாறிவிடும் என நினைத்துப் பரீட்சார்த்த நடவடிக்கையில் இறங்கி விடுவது, ஒரு சுயநலப் போக்குமட்டுமன்றி, குடும்பத்தையும், சமூகத்தையுமே பாதிப்புக்குள்ளாக்கும் ஒரு நடவடிக்கையுமாகும். இன்றும், நாகரீகமடைந்த காலத்தில் கூட, வைத்திய ஆலோசனையின்றி இது போன்ற சம்பவங்கள், நடைபெறுவதை அறிந்திருக்கின்றோம். தமக்கு வேண்டியவர்களுக்கு நன்மை செய்கின்றோம் என எண்ணி, நோயாளியையும், அவரைத் திருமணம் செய்பவரையும், ஏன் சுற்றி நிற்பவர்களையும், அமைதியின்மைக்கு ஆளாக்குதலை இவர்கள் உணர்கின்றார்கள் இல்லை. இதில் மிகவும் வேதனை தரும் விஷயம் என்னவெனில்,

RangaRakes Tamilnavarasam.com

மனநிலை பாதிப்படைமந்தவர்களுக்கு குழந்தைகள் பிறந்து, அதனால் அக்குழந்தைகள் கூட நல்ல பராமரிப்பின்றி அவஸ்தைப்படுகின்ற நிகழ்வுகளைக் கண்டும், கேள்விப்பட்டுமிருக்கின்றோம்.

சாதாரண நிலையில் உள்ள குடும்பங்களில் கூடப் பெற்றோர் பிள்ளைகளை கண்மூடித்தனமாக தண்டனை என்கின்ற பெயரில் தாக்குவதும், ஏசுவதும் கூடப், பிஞ்சு உள்ளங்களைப் பாதிப்படையச் செய்கின்றமையினை அறிதல் வேண்டும். அத்துடன் பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய பாசம், செல்லம் கொடுத்து வளர்ப்பதனால் கூடச் சில பின்விளைவுகள் ஏற்பட்டு விடுகின்றது.

கடுமையான கண்டிப்புக்கள், எல்லைமீறிய செல்லங் கொடுத்தல், இத்தகைய வளர்ப்புக்களால் பிள்ளைகள், பயத்தினாலும் சுதந்திர உணர்வு அற்ற நிலையில் சிந்தித்தலை, தாமே முடிவு எடுக்கும் ஆற்றலை இழக்கக்கூடும்.

இதுபோலவே, கூடிய செல்லம் கொடுத்து வளர்ப்பதால், எவரையுமே சார்ந்திருக்கும் பழக்கமும், துன்பங்களுக்கு முகம் கொடுக்கப்பயப்படும் போக்கும் அதிகமாகி, ஈற்றில் சமூக நெளிவு, சுழிவுகளை அறியாதவர்களாகி விடுகின்றனர். இந்த இரு சாரார் மூலம் வளர்க்கப்படும் பிள்ளைகள் சமூகத்தில், மற்றவர்கள் போல் இயங்க முடியாது, சோதனைகளுக்கு ஆளாகும் போது, தோல்வி மனப்பான்மை, தன்னம்பிக்கை இன்மையினால் துவண்டு, மனோநிலை பாதிப்படையும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

எனவே,

வளரும் சமூகத்தில், உதயமாகும் சிறார்களுக்கு, மனோ வளர்ச்சி, பக்குவ நிலையைப் பேண, இறை தியானம், பக்தி, பிரார்த்தனை போன்ற நற்பழக்கங்களைப் போதிக்க வேண்டும்.



இள வயது, தெளிந்த மனநிலையில் உள்ளது. இதே உணர்வுடன், இந்தப் பழக்கங்களை நாம் ஊட்டி வளர்த்தால், எதிர்காலத்தில் இவர்கள் அப்பழுக்கற்ற தூய நெறியாளனாகத் திகழுவார்கள் என்பது திண்ணம்.

தீய நண்பர்கள் சேர்க்கை, போதை வஸ்த்துக்கள் பாவனை போன்றவைகளால் இன்று இளம் சமூகத்தின் ஒரு பிரிவினர், முடங்கி ஒரு மனநோயாளியின் நிலைக்கே தள்ளப்பட்டு விட்டார்கள். பொருளாதார வசதி குன்றிய நாடுகள் என்று இல்லாமல் செல்வம் கொழிக்கும் நாடுகளில் கூட இன்று மன இயல்பு பாதித்தவர்கள் தொகை கூடித்தான் வருகின்றது. எந்த வர்க்கத்தையும் மனநோய் விட்டு வைப்பதில்லை. ஒவ்வொரு சமூக நடத்தைகளின் இயல்புக்கேற்ப காரணங்கள் மாறுபடும்.

நிம்மதி எல்லோருக்குமே வேண்டப்படும் ஒன்றாகும். எந்த நிலையில் பிறந்தாலும், நிம்மதியைப் பெற்றுவிட முடியும். இங்கு அந்தஸ்து, குல, ஜாதி பேதமில்லை. நிம்மதியை பெறும் விதத்தைக் கண்டறிதலே பிரதானமாகும்.

ஏதோ ஒரு விதத்தில் மனம் சஞ்சலப்படுகின்றது. வேண்டப்பட்டவர் மரணிக்கின்றார், காதல் அஸ்தமனங்கள் சொத்துக்கள் அழிதல், விபத்துக்கள், போன்றவையினால் பாதிப்படைதல், இடப்பெயர்வுகள், யுத்த சூழ்நிலைகளால் மனம் பேதலித்தல், பரீட்சைகளில் தோல்வி, வேலையின்மை, பொருளாதார கஷ்டம், அந்தஸ்து இன்மை, பீதி மிகையான சத்தங்கள், மற்றவர் மீது எல்லை மீறிய பொறாமை, அதிர்ச்சி போன்ற இன்னல்களை அனுபவிக்கும் போதுதான் அதன் தாக்கம் எத்தகையது என்பதை மனிதன் அறிகின்றான். இவைகளில் ஏதாவது ஒரு காரணத்தால் தாக்கப்படாமல் எவர் இருக்கின்றார்கள். எல்லோருமே எல்லாவற்றிற்குமே கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியுமா? கிடைப்பதைக் கொண்டு திருப்திப்படுவதுதானே வாழ்க்கை. இதையறிந்தால் மனிதவாழ்வில் பிரச்சனைகள் ஏது?

RangaRakes Tamilnavarasam.com

தங்களுக்கு மட்டுமே, கஷ்டங்கள் தொடருவதாக நினைப்பதால் என்ன 'பயன் வந்துவிடப் போகின்றது.

கவலை இருக்கின்றது என்று கூறிக்கொண்டே கவலைப்படுகிறார்கள். இது மேலும் ஒரு புதிய கவலையை உண்டு பண்ணுவதாகவே அமையும்.

கவலைகளைத் தோழமை ஆக்க முயலவேண்டாம். கவலைகள் களையப்படவேண்டியவைதான், தூக்கிச் சுமக்க வேண்டியவைகள் அல்ல.

மனத்தாக்கத்தினால் பாதிப்படைந்த எவருக்கும், ஆறுதல் அளித்தல் எம் கடன். சாதாரண நிலையில் உள்ள மனிதர்களே, தவறு இழைக்கும் போது, மன இயல்பு பாதிப்படைந்தவன், செய்கின்ற செயலுக்கு, நாம் முகம் சுளிப்பதும், எள்ளி நகையாடுவதும், அவர்களை ஒறுத்தலும், நியாயமான செயலாக அமைந்திடுமா? மன வளமுடன் வாழ்தல் என்பதே, மனிதனாக வாழ முனைதல் என்பதாம். விசாலமான சிந்தனைகள்தான் மனிதனை மண்ணுக்குரியவன் ஆக்குகின்றது. நாம் பிறர்க்கு வழங்கும் ஆறுதல்களால், தேறுதல்களால், பிறர் பயன் பெறுதல் என்பது எமக்கு நாம் வழங்கும் மன அமைதி என்று அறிவோம். மனநோயாளர்க்கும் உணர்வு உண்டு. மனிதர்தான் இவர்கள்; கனிவோடு நோக்குவோம், தனிமைப்படுத்தி, அவர்களை வாழ்வை வெறுமைப்படுத்த வேண்டாம்.

தினகரன் - 17.06.2001





# மன்னித்தல் தெய்வீகம்

இது ஒரு உண்மையான நிகழ்ச்சியாகும். உங்களுக்கு நம்பமுடியாத சம்பவமாகவும் இருக்கும். ஒருவனுக்கு தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பு, வழங்கப்பட்டது. இதனால் அவனது தீய செய்கையின் பொருட்டு அவனது உறவினர்கள் அவனை வெறுத்து, சிறைச்சாலையில் சென்று பார்க்கவே மறுத்து விட்டனர். எவருமே அற்ற நிலையில் இவன் தனித்துப் போனான். சிறையில் தன்னந்தனியனாக, உறவினர், நண்பர்களை நினைந்து வாடினான். என்னதான் தான் தப்புச் செய்தாலும் கூடப் பெயரளவில் கூட தன்னை விசாரிக்காத கொடுமையை அவன் அனுபவித்தான். தனக்குத் தூக்குத் தண்டனை விதித்ததனால் ஏற்பட்ட மனத்துயர், விரக்தி என்பனவற்றை விட, எவருமே தன்னை வெறுத்துப் பார்க்கக் கூடாத நிலை ஏற்பட்டதை நினைந்தே மேலும் துயரமடைந்தான்.

இவனது பரிதாப நிலையை அறிந்த, இவனால் கொலையுண்டவரின் பிள்ளைகள் எப்படியோ அறிந்து கொண்டனர். அந்தக் குடும்பம் வசதிபடைத்த, கௌரவமான, தெய்வ பக்தியுள்ள குடும்பமாகும். இவர்கள் சிறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று அவனைச் சென்று பார்த்தனர். தமது தகப்பனாரைக்

RangaRakes
Tamilnavarasam.com

கொன்றவனை, நீதிமுன் நிறுத்திப் பிள்ளைகள், அவனுக்கு மரணதண்டனை வழங்க முயற்சி செய்து, வெற்றி கண்டாலும் கூட தம் பொருட்டு ஒரு உயிர் தூக்கில் தொங்கப் போவதைக் கண்டு, பச்சாதாப நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்தப் பிள்ளைகள் தீவிர பக்தியுணர்வு மிக்கவர்கள். ஆதலினால், சிறைச்சாலைக்குச் சென்று அவனுக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லித் தேற்றினர்.

இதயத்தில் அன்புகொண்டவர்களுக்கு மன்னிக்கும் இயல்பு தானாகவே வந்து விடுகின்றது. மன்னித்தலுக்கு எல்லையே இல்லை என்றார் பெரியோர். இறைவன் எம்மை மன்னிக்கும் போது, நாம் எம்மைச் சார்ந்த உயிர்களை, இறைவன் பொருட்டு மன்னித்தால் என்ன?

சிறைச்சாலைக்குச் சென்றவர்கள், அந்தக் கைதிக்கு விசேட உணவு வழங்க ஏற்பாடுகளைச் செய்தனர். இவர்களுடைய பண்பையும், மன்னிக்கும் இயல்பையும் கண்ட இக்கைதி, கண்ணீர் விட்டுக் கதறினான். தன் செய்கைக்காக, மனப்பூர்வமாக வருந்தியதுடன், தான் இவர்கள் அளித்த ஆறுதல் மூலம் தன் துன்பத்தினை மறந்து, வரப்போகும் தண்டனையைக் கூட உளமார ஏற்றுக் கொள்ளும் பக்குவநிலையை, அவன், பேச்சின் மூலம் ஏனையோர் அறிந்தனர். இச்சம்பவத்தினால், கைதி கொலையுண்டவர்களின் பிள்ளைகளும், மன அழுத்தங்களில் இருந்து விடுபட்டனர். ஒருவர் துன்பத்தில் இன்னும் ஒருவர் சுகம் காண முடியாது.

குற்றங்களுக்குத் தண்டனை வழங்குதல் கூட ஒரு வித கருணையினால் எழுந்த செயலாகவே அமைதல் நன்று. கொடுக்கப்படும் தண்டனை அவனைத் திருத்தவே பயன்பட வேண்டும் என்று மனதார நினைவு கொள்ள வேண்டும். இறைவன் அன்பின் நிமித்தமே உயிர்களுக்கு. நற்பேறு பெற தண்டனை வழங்குகின்றன வெறும் உணர்ச்சிக்கு ஆளாகி தண்டனை வழங்கப்படல் ஆகாது. நிகழ்வின் உண்மைத் தன்மையை ஆராய்ந்தே தண்டனை வழங்கப்பட வேண்டும். மன்னித்தல் மூலமும், குற்றமிழைத்தவன், மனச்சாட்சி மூலம் திருந்தி விடுகிறான்.



சாதாரண மனித இயல்பிற்கு மேலான மன்னிப்பு வழங்கும் இயல்பினால் மனிதன் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகின்றான். இத்தகைய செயல்களை எல்லோராலும் செய்ய முடியாதுதான். இதற்கு மனப்பக்குவம் வேண்டும். கோபம் வருவது எமக்குள் சாதாரண இயல்புதான். ஆயினும், கோபம் கொள்வதால், இன்னும் ஒருவரைத் தண்டித்தேயாக வேண்டும் என்கின்ற எண்ணம், வெறும் பழிதீர்த்தலாக அமையலாமா? குற்றங்களுக்குத் தண்டனை வழங்குதல் கூட ஒருவித கருணையினால் எழுந்த செயலாக அமைதல் நன்று. கொடுக்கப்படும் தண்டனை இவனைத் திருத்தவே பயன்படவேண்டும் என்று மனதார நினைவு கொள்ள வேண்டும்.

பெற்றோர் குழந்தைகளைத் தண்டித்தல், ஆசிரியர் மாணவர்களைத் தண்டித்தல், குற்றவாளிகளை நீதிமன்றம் தண்டித்தல், அதிகாரிகள் பணியாளர்களைத் தண்டித்தல், இவை போன்றவை நல்ல நோக்கிற்காக அமைவதில் எந்தவிதத் தவறும் கிடையாது.

எனினும், தண்டனையை ஏற்கின்ற மனப்பக்குவம் எல்லோருக்குமே, வருவதில்லை. எதற்காக இத்தண்டனை என்கிறானே. ஒருவன் தான் செய்த தவறைக் கூட, தம்மால் பாதிப்புக்குள்ளானவரே பெரிய மனதுடன் மன்னிப்பது சாமானிய செயல் அல்ல. ஆனால்,

முழுச் சமூகத்திற்குமே, பாதிப்பு அடையச் செய்பவர்களை, சமூகம் மன்னித்தல் என்ற நோக்கில் பார்க்கச் சிரமப் படுகின்றது.

இன்று சிறு, சிறு குற்றங்களுக்குக் கூட மன்னிப்பு வழங்கி, அரவணைக்காமையினால், பலர் சமூக விரோதிகளாகி விட்டனர்.

நாம், நல்ல நண்ப ர்களையும், உற்றார், உறவினர்கள் அன்பையும் பெற்றேயாக வேண்டும். விட்டுக் கொடுத்தல் என்பதே, மன்னித்தலின் ஒரு பிரிவு என்றாலும், சிறு குற்றங்களை

RangaRakes

Tamilnavarasam.com

மன்னிப்பது என்பதும், அவைகளைச் செய்யத் தூண்டுவதாக அமையக் கூடாது.

எங்கள் உணர்ச்சிகளுக்கு மட்டுமே கௌரவம் கொடுத்து வாழ்வதால் ஒரு பலனுமில்லை. எமக்குச் சாதகமாக அமையாத விஷயங்களுக்காக, மற்றவர் விஷயங்களைப் பெரிதுபடுத்தி நாம் அவர்களுக்குத் தண்டனை வழங்கலாமா?

மனித நேயம் என்பதே, எம்மீது பிறர் எப்படி அன்பு செலுத்த வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களோ, அவ்வண்ணமே, நீங்களும் பரஸ்பரம் அன்பைச் செலுத்துவதாகும். இவை தூண்டுதல் இன்றிச் சாதாரணமாக, சகல மனிதர்களையுமே நேசிக்கும் ஒரு செயலேயாகும்.

ஒருவர் மீது ஒருவர் சார்ந்து வாழ்தல் என்பது, அன்பைச் செலுத்துதல் மூலமே சாத்தியப்படும். அன்பு, காருண்யம் இல்லாதவர்கள், தனிமைப்பட்டுப் போவார்கள். இந்தச் சிறைவாழ்க்கை, உள்ளத்தைத் தகர்ப்பதுடன் சமூகத்தையே வெறுப்பாக நோக்கத் தலைப்படும். சமூகத்தை உதறி, அதனிடம் குற்றங்களையே காண்பவர்கள், வசீகரம், பொலிவிழந்து, ஒருவித மனநோயாளர் நிலைக்கே தள்ளப்படுகின்றனர். அன்புடன் வாழ்வதில் தானே அர்த்தம் உண்டு. ஒருவர் உள்ளத்தைப் புண்ணாக்குபவர்கள், அவர்களை மட்டுமல்ல தம்மையே ஒரு குற்றவாளியாக்கிவிடுகிறார்கள். பிழைகளையே தூக்கிப் பிடிப்பதனால் அண்டைநாடுகளுக்கிடையேயும் இத்தகைய சச்சரவுகள் மன்னிக்கும் இயல்பு மறைந்த வண்ணமிருக்கின்றன.

ஒவ்வொருவரும், தமது தவறுகளையே மறைக்கின்றனர். ஆனால் பிறர் தவறுகளை மன்னிக்கத் தயாராகயில்லை. தனிமனிதன், சமூகம், பிரதேசங்கள், நாடுகள், இவை அனைத்துமே மன்னித்தல் என்கின்ற பொதுவான சாத்வீக கொள்கையினைக் கடைப்பிடித்தேயாக வேண்டும். முழு உலகிற்குமே மனிதன் சொந்தமானவன் என்கின்ற நிலைவருதல் வேண்டும். ஒருவரில்



மற்றவர் உளமார்ந்த ஈடுபாடு, கருணை கொள்ள வேண்டும். கோபம், காழ்ப்பு, சுயநலம், ஆசை இன்றேல் இவை சாத்தியமாகும். இவைகளைப் போக்குதல் எளிதான காரியம், அல்ல. என்றாலும், இதன் தகிப்பை படிப்படியாகப் போக்கியேயாக வேண்டும். மானுட மாண்பு மேலோங்க வேண்டும் எனில், உலக நன்மைகளின் பொருட்டு, ஒவ்வொருவருமே தன்னை விடப் பிறரை நேசிக்கக் கற்றுக் கொண்டேயாக வேண்டும். அப்படியாயின், மன்னித்தல் என்கின்ற மாண்பு எம்மை வந்தடைந்தே தீரும்.

*வீரகேசரி*

RangaRakes
Tamilnavarasam.com

# அன்புடன் பேசிப் பழகுக



ஐயா, அவரிடம் மட்டும் பேச்சுக் கொடுத்து விடாதீர்கள். மனுஷன், வள்ளென்று எரிந்து விழுவார்; எடுத்தெறிந்து பேசிவிடுவார். எதற்கும் நீங்கள் சற்று ஜாக்கிரதையாகவே இருங்கள்!

இப்படியாகச் சிலர் வியாக்கியானம், செய்து அச்சப்பட்டுப் பேசுவதை நாம் கேட்டு வருகின்றோம். நல்ல வார்த்தைகளைப் பேசுவதையும், முகத்தைச் சதா சந்தோஷமாக வைத்துக் கொள்வதையும் நாம் பழக்கமாக வைத்துக் கொள்ளல் வேண்டும். முகத்தைச் சந்தோஷமாக வைத்துக் கொள்வதே, சிலருக்குச் சிரமமான காரியமாக இருக்கின்றது. நாம் பேசும் போது நல்ல வார்த்தைகளைப் பேசுவதுடன் நின்றுவிடாது, முகத்தினை மலர வைத்துப் புன்முறுவலுடன் தோற்றமளிக்க எம்மை ஆக்கிக் கொள்ளவும் வேண்டும்.

சுடு சொல் பேசுதல் என்பது தமது கௌரவத்தினை மேம்படுத்துகின்றது எனச் சிலர் தப்புக் கணக்குப் போடுகின்றனர். தாங்கள் உரையாடும் பாங்கினைத் தாமே மெச்சிக் கொள்வதும்,



எனக்கு வரும் கோபத்தில் என்ன பேசுவேன் என்பதும் தெரியாது என சத்தமிடுபவர்களையும் நாம் அறிவோம்.

அடக்கு முறைப் பேச்சுக்கள், மனதை நெருடும் வக்கிரப் பேச்சுக்கள், ஒருவரின் குறைகளை அம்பலப்படுத்திக் கதைத்தல், தனது கருத்துக்களையே மிகைப்படுத்தி உரத்திக் கத்துதல், பொய்களை, உண்மை போல அடித்துப் பேசுதல், எதிரில் இருப்பவர் தகுதி, தராதரம் உணராது உரத்துக் கத்துதல், குரலை வேண்டும் என்றே மாற்றி, தொனியைக் கடுமையாக்குதல், இத்தகைய குணாதிசயங்களைக் கொண்டவர்களைக் காணும் போது, சராசரி மனிதன் அச்சமடைவதில் வியப்பில்லை. இதனால் இவர்கள் அடைகின்ற பயன்தான் என்ன?

எரிச்சல், ஆத்திரம், இவர்களிடமிருந்து விலக வேண்டும் என்கின்ற எண்ணம் இவைகள் தான் உடன் தோன்ற ஆரம்பிக்கும்.

ஒருவர் என்னதான் பணம், பொருள் பதவி பெற்றாலும் கூட, பழகும் விதத்தில் தான் பெற்ற செல்வங்களை மேன்மைப் படுத்திக் கொள்கின்றனர் என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும். ஆண்டவனால் கிடைத்த செல்வங்களை நாம் நன்கு அனுபவிக்க வேண்டுமேயானால், பெரியோர், மற்றையோரின் அன்பும், ஆசியும் எங்களுக்குக் கிடைத்தேயாக வேண்டும். இன்னும் ஒருவரை பகைத்தோ, எரிச்சலூட்டும் வார்த்தைகளைப் பேசி பேசியே, நாம் களிப்படைந்து விட முடியாது எனத் தெரிந்து கொள்வோம்.

வாழ்வின் அர்த்தமே, நாம் பிறருடன் பண்பாடாகப் பழகுதலேயாகும். அன்புடன் பழகுதல் என்பதே தனிக் கலையாகும்.

> இதயத்தில் கனிவைக் கொண்டு மக்களை நோக்கியமையினாலேயே சாதாரண மனிதனாகத் தோன்றியவர்கள், மகான்களாக மாறினார்கள். சாதாரண நிலையில் உள்ளவர்கள் பிரபல்யமான அரசியல் தலைவர்களாக மாறியமைக்கான மூலகாரணமே கனிவான - தெளிவான தூய்மையான பேச்சுக்களும் நன்னடத்தைகளுமேயாகும்.

RangaRakes Tamilnavarasam.com

ஏன் என்றால், மிகவும் நல்ல மனிதராக வாழ்ந்து, பேருதவி, புரிந்தவர்கள் கூட தமது வார்த்தைப் பிரயோகங்களினால் கெட்ட பெயர் பெற்றுவிடுகின்றனர். இன்னும் சிலர் பேச்சு மட்டும் இனிமையாக இருக்கும் செயல் எதிர்மறையாக இருக்கும். இவர்கள் சக மனிதர்களால் சீக்கிரம் இனம் காணப்பட்டு விடுவார்கள் நற்செய்கை புரிகின்றவர்கள், தங்கள் உடல், உளச் சிரமங்களினால் கூடாத வார்த்தைப் பிரயோகங்களைப் பேசுவதைத் தவிர்த்தால் அவர்கள் மகான்களாகி விடுவர் என்பதில் சந்தேகமில்லை.

எல்லோருமே, எல்லோருக்குமே ஏதோ ஒரு வகையில் நல்லன செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள். மிகுந்த சிரமத்துடன், எத்தனை நன்மைகள் செய்தாலும் கூட, ஒரே ஒரு வார்த்தைப் பிரயோகமே, அத்தனை நன்மைகளையும், சின்னா பின்னப்படுத்தி விடுமன்றோ.

எனவே, எந்த வேளையிலும் எமது உள்ளத்தில் உளைச்சல், கோப உணர்வுகளைத் தவிர்த்தேயாக வேண்டும். விசுவாசமாக அன்பு செலுத்துதல், கருணையுடன், பிறர் துன்பங்களை அணுகுதல், போன்ற செய்கையினால் எமது உள்ளமும் படிப்படியாகப் பக்குவப்பட ஆரம்பிக்கும். இச்செய்கைகளே மானுட சமூகத்திற்கேற்ற வாழ்வியலுக்கான அணுகுமுறையுமாகும். தீய நடவடிக்கை, பேச்சுக்களால் நாம் எதையும் கற்றுவிட முடியாது, சாதித்து விடவும் முடியாது.

அன்புக்காக ஏங்காத ஜீவன்களே இல்லை. பிறர் எம்முடன் எதிர்பார்ப்பதே இதனைத்தான். வாய் பேசாத ஜீவராசிகள் கூட அன்புக்குக் கட்டுப்பட்டேயிருக்கின்றன. பறவைகள் மிருகங்கள் கூட தமது இனத்தைக் கனிவுடனேயே நோக்குகின்றன. வெளிப்படையாய் அன்பைக் காட்ட முனையாதவர்கள் கூட உள்ளூர அதனையே நாடுகின்றனர்.

தமது வாழ்வில் ஏற்பட்ட பாதிப்பு, தொல்லைகளினால் பேச்சுக்கள், பழகும் முறைகள் ஒருவரிடம் மாற்றமடைகின்றன.



இதைப் புரிந்து கொள்ளாமல் நாமும் அவரிடமிருந்து விலகி, அவர் வழிச் செல்லுதல் முறையல்ல.

அத்துடன்,

ஒரு சாராரிடம் பெற்ற தோல்வி அனுபவங்களால், ஒட்டுமொத்த சமூகமே இப்படித்தான் எனத் தப்புக் கணக்குப் போடுவதாலேயே, பலர் சமூகத்திற்கு முரணான மனிதர்களாகத் தென்படுகின்றார்கள். இத்தகையவர்களுடன், நாம் குரோதம் கொள்ளாது நட்புறவை வளர்த்துக் கொண்டேயாக வேண்டும். இதயம் கசியும் போதுதான் அன்பின் பரிணாமம், ஆற்றல் என்பனவற்றையும் புரிந்து கொள்கின்றோம். மனதை விசாலமாக்கக் கனிவுடன் பேச ஆரம்பிப்போம்.

பழக்கம் என்பது நல்ல செய்கைகளை நாம் செய்வதாகவே அமைதல் வேண்டும். பிறருடன் பேசுதல், பழகுதல் என்பதனைச் சிறுகுழந்தைகளுக்கும் கற்றுக் கொடுக்கவும் வேண்டும். இது இவர்களது எதிர்கால வாழ்வையும் சிறப்படையச் வைக்கும். இதயத்தில் எவ்வித விகற்பமின்றியும், பரஸ்பர நல்லுறவை மட்டுமே பகிர்ந்து, சொற்களைத் தூய்மையாகப் பேசிக் கொள்வோமாக.

இதயத்தில் கனிவைக் கொண்டு மக்களை நோக்கியமையினாலேயே, சாதாரண மனிதனாகத் தோன்றியவர்கள் மகான்களாக மாறினார்கள். சாதாரண நிலையில் உள்ளவர்கள் பிரபல்யமான அரசியல் தலைவர்களாக மாறியமைக்கான மூலகாரணமே கனிவான, தெளிவான தூய்மையான பேச்சுக்களும் நன்நடத்தைகளுமேயாகும். அன்பாகப் பேசுவதால் செலவு ஒன்றும் ஏற்பட்டு விடப் போவதில்லை.

மாறாக,

மக்கள் நன்மதிப்பும், ஆதரவும் என்கின்ற லாபமுமே எமக்குக் கிட்டுகின்றது.

RangaRakes
Tamilnavarasam.com

பேசுமுன் சற்றுச் சிந்திப்போமாக. ஏவி விடப்பட்ட சொல் சிதறல்களைப் பொறுக்கி எடுத்து விட முடியாது. இவை மற்றவர்களின் இதயங்களில் நிரந்தரமாகவே தங்கி விடுகின்றன. பேசப்படும் பேச்சிற்கும், சிந்தனைக்கும் தொடர்பின்றிப் பேசுவதிலும் பார்க்க பேசாது மௌனிப்பதுவே சாலச்சிறந்ததாகும். இடம், பொருள், அறியாது, மனதினை அடக்காது தான் தோன்றித் தனமாகப் பேசுவதனால் ஏற்படும், விபரீதங்களை நாம் அறிவோம். எமது கருத்துக்களையே பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனச் சண்டித்தனம் புரிவதும், இதனால், எம்மைச் சுற்றி இருப்பவர்கள் எம்மை ஏளனமாகவும், அருவருப்புமாக நோக்குவதை தெரிந்தும், பிடிவாதம் பிடிப்பதனால் என்ன கௌரவம் கிடைத்து விடப் போகிறது? நாம் நன்கு பேசத் தெரியாமல் விடுவதால், எங்களின் உண்மையான கருத்துக்கள் கூடச் செத்து விடுகின்றன. அழகாகவும் அமைதியாகவும் பேசுதல் சிரமமான பணி என எண்ண வேண்டும்.

*வீரகேசரி 19.6.2002*





# பிள்ளைகளும் ஒழுக்கமும்

பிள்ளைகளை எப்படி ஒழுங்காகவும் கட்டுப்பாட்டுடனும் வளர்ப்பது என்றே பெரும்பாலான பெற்றோர்கள் அங்கலாய்ப்புடன் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலில் அவர்கள் ஒழுங்கான பெற்றோர்களாக பிள்ளைகள் முன் வாழ்ந்து காட்ட வேண்டும்.

எல்லோருமே பிள்ளைகளிடத்தில் அன்பாக இருங்கள் என்றுதானே சொல்கிறார்கள். நாங்களும் அப்படியே, கொஞ்சம் செல்லம் கொடுத்து வந்தோம். இப்போது பாருங்கள், பிள்ளைகள் எல்லாம் கெட்டு குட்டிச்சுவராகி விட்டனவே என்று சிலரும், மற்றும் ஒரு சாராரோ,

''நாங்கள் பிள்ளைகள், கண்ட, கண்ட கெட்ட பழக்கங்கள், பழகக் கூடாது. தீய நண்பர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்ளக் கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் கொஞ்சம் கண்டிப்பாக இருந்தோம். இப்போது என்னடா என்றால் பையன் வரம்பு மீறி எங்கள் பேச்சைக் கேட்காமல் ஏதேதோ செய்து வருகின்றானே. அவனிடம் பேசவே பயமாக இருக்கின்றது. எப்படி இருந்தவன் இப்படி ஆகிவிட்டானே'' என்று புலம்புவதையும் நாம் கேட்டு வருகின்றோம்.

RangaRakes Tamilnavarasam.com

கண்டிப்பு, அன்பு, பரிவு, கரிசனையான கண்டிப்பு, இவற்றை நன்கு தெரிந்து கொண்டே, பெற்றோர்கள் பிள்ளைகளுடன் பழக வேண்டியுள்ளது. சந்தர்ப்பங்களுக்கேற்ப, இவர்களது மன இயல்பு, நோக்கங்களைப் புரிந்து கொண்டு, கண்டிக்க வேண்டியுள்ளது. எந்த நேரத்திலும் வெறும் கோபங்களையோ அன்றி மிதமிஞ்சிய செல்லத்துடனோ, பிள்ளைகளை வளர்த்து விட முடியாது.

தவிர, தற்போதைய நவயுகத்தில், பெற்றோர் - குழந்தைகளின் போக்குகளும், முழுமையாக மாற்றமடைந்துள்ளன.

மிதமிஞ்சிய சுதந்திர உணர்வு, பெற்றோரிடமும், ஏனைய வயதுவந்த பெரியோர்களிடத்தே பயமின்மை, ஒழுக்கக் கேட்டைத் தூண்டவல்ல, புத்தகங்களை வாசித்தல், அத்துடன், திரைப்படங்கள், தொலைக்காட்சிகளில் அதீத ஈடுபாட்டுடன் பார்ப்பதனால் ஏற்படும் விளைவுகள், மேற்கத்தைய கலாசாரங்களைப் பற்றி, தவறாகப் புரிந்து கொள்ளல், அங்குள்ள சிறப்பான அம்சங்களை விடுத்து, தேவையற்ற விடயங்களை மட்டுமே மனதுள் பதித்து வைத்தல்,

சிறுவயதில் இருந்தே மத, நம்பிக்கையை வளர்க்காது இருத்தல், கலாசார சிறப்பியல்புகளை அறிவுறுத்தப்படாதிருத்தல், ஒழுக்கத்தை முதன்மைப்படுத்தாது, பணம், கல்வி தேடலை மட்டும் கைக் கொள்ள வைத்தல், நடைமுறை வாழ்வில், பொது விடயங்கள், வைபவங்கள், கழக நிகழ்வுகளில் பங்கு

தவறுகளை ஒத்துக் கொள்ளும் பக்குவத்தினை நாம் சிறார்களுக்கும் போதிக்க வேண்டும். செய்த தவறுகளைத் திருத்த வேண்டும். ஆரம்பத்திலேயே பிழையான வழியில் தவறுகளை மறைத்து விடக் கற்றுக் கொடுக்கலாமா? பொய், களவு செய்யும் பழக்கத்தினை அறவே களைய வேண்டும். பிறருடைய சிறு துரும்பையேனும் வீட்டிற்குக் கொண்டுவரும் பழக்கத்தின் ஆரம்பத்திலே இல்லாமல் செய்யவும் வேண்டும். பாவ கருமங்களில் பயத்தை ஏற்படுத்தி தெய்வ நம்பிக்கையை ஊட்டல் வேண்டும்.



கொள்ளாதிருத்தல், தனிமைப்பட்டே வாழ நினைத்தல், வாழும் சூழ்நிலையை உருவாக்குதல்,

இத்தகைய காரணங்களினால் எதிர்கால இளைய சமூகம், முரணான வாழ்வு முறைகளைத் தாம் உணர்ந்து கொள்ளாமலேயே, கெட்டழிந்து போகின்றது.

பிள்ளைகள் என்ன கருத்துகின்றார் என்பதே எமக்குப் புரியவில்லை. கொஞ்சம் நாங்கள் கூடுதலாகக் கண்டித்தால், தற்கொலை செய்து விடுவதாக வேறு மிரட்டுகிறார்கள் என ஒருவர் புலம்பினார். பிள்ளைகளுக்காகப் பெற்றோரா அல்லது பெற்றோருக்காகப் பிள்ளைகளா என்பதுபோல் எதிரும் புதிருமாக வாழ்வது எப்படி?

உரிமை எடுத்துக் கொள்ளுதல் என்பதின் அர்த்தம் தான் என்ன? பெற்றோர், பிள்ளைகளிடத்தும், பிள்ளைகள் பெற்றோரிடத்தும் மிதமிஞ்சிய உரிமைகள், சலுகைகளை, அல்லது ஏதாவது தேவைகளை எதிர்பார்க்கின்றனர். இவைகள் நடைமுறைக்குச் சாத்தியப்படாவிட்டால் தொல்லைகளே மிஞ்சும். தமது பெற்றோரின் நிலையை இவர்கள் உணர வேண்டும். அதே வேளை, பிள்ளைகளின் எதிர்பார்ப்புகளைப் பூரணமாக உதாசீனம் செய்து விடக்கூடாது. முடிந்தவரை தமது பிள்ளைகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றியேயாக வேண்டும். பிறரிடம் பிள்ளைகள் உதவிகோருதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

பெற்றோர் இருந்தும், அவர்களால் செயலாற்ற வசதி வாய்ப்புக்கள் இருந்தும், பிறரிடம் போய் பிள்ளைகள் உதவி கோருதல், சமூகத்தில் அவர்கள் ஒருபாரமாகக் கருதப்படுவதுடன், ஈற்றில் தாய், தகப்பன் உறவில் ஒரு நிரந்தர விரிசல், அல்லது இடைவெளி ஏற்படச் சாத்தியம் உண்டு. அத்தியாவசிய தேவையான கல்வி, உணவு, உடை ஆகியனவிற்குப் பெற்றோர் செய்கின்ற தியாக உழைப்பினை, இவர்கள் உணர வேண்டும். தமது பிரயத்தனங்களைப் பூரணமாக மறைத்து தமது குழந்தைகளுக்குக் கணக்கற்ற பணச் செலவினைச் செய்வதனால்,

RangaRakes Tamilnavarasam.com

பணம் பற்றிய பிரச்சனைகளே இவர்களுக்குப் புரிவதில்லை. ஈற்றில் திடீர் எனப் பொருளாதாரச் சிக்கல் ஏதோ ஒரு தருணத்தில் வரும் போதுதான், எற்கனவே சந்தோஷங்களையே அனுபவித்து வந்த பிள்ளைகள், வீட்டின் நிலையை ஜீரணிக்க இயலாது, முரண்பட்ட வாழ்வை நோக்கிச் செல்வதும், தாய் தகப்பனாரை அவமதிப்பதுமான செயலும் செய்துவிடுகின்றனர்.

குழந்தைகள் வளர்ந்து வரும்போதே வசதிகளை மட்டுமே நோக்கும் நாம், அவர்கள் வளரும் சூழல் பற்றித் தெரிந்து கொள்ள முயற்சி செய்வதில்லை. புறச் சூழல் மட்டுமல்ல, வீட்டின் உள்ளேயே ஆரோக்கியமான மன வளர்ச்சி சந்தோஷங்களை உருவாக்க வல்ல சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமல்லவா?

சதா கணவன், மனைவியிடையே சண்டை சச்சரவுகள், வீட்டுப் பெரியவர்களிடையே உள்ள குடி, கெட்டவார்த்தை பேசுதல் போன்ற செயல்களைக் கண்ணுற்றால், வளரும் பிள்ளைகள் எதிர் காலம் என்னாவது. அத்துடன் வெறும் பொழுது போக்கிற்காக, வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பதும், வீட்டிற்கு வருகின்ற அந்நியர்களின் தீயபழக்கங்கள் சிலவற்றை, குழந்தைகள் ஒரு நாகரீகமாக நோக்கி பழகுதலும் தவிர்க்கப்பட வேண்டியவையே.

குழந்தைகள் சிறு வயதில் இருந்தே அவரவர் வயதொத்த, நல் இயல்புள்ள ஏனைய குழந்தைகளுடன் பழக விடலாம். சில பிள்ளைகள் தம்மிலும் பார்க்க வயது முதிர்ந்தவர்களுடன், பழகி பெரியவர்கள் போல் பேசுவதைக் கண்டிருப்போம். சில வேளை, அவை வீணான வார்த்தைப் பிரயோகங்களையே, இந்த பழகும் இயல்பினால் கற்றுக் கொண்டு விடுகின்றன. குழந்தைகள் நல்ல பண்புகளையும், தீய பண்புகளையும் இந்தச் சமூகத்தின் மூலமே கற்றுக் கொள்கின்றன. எனவே, வீடு மட்டுமல்ல, அனைத்து சமூக உறுப்பினர்களுமே ஒவ்வொரு பிள்ளைகளையும், நற்பிரஜையாக்க உருவாக்குவதற்குக் கடமைப்பட்டவர்கள். எனது பிள்ளை மட்டுமே ஒழுக்கமானது எனச் சுய திருப்திப்பட்டு பிறர் குழந்தைகள் நலனை அந்நியத்தனமாக நோக்குதலும் நாகரீகமன்று.



கல்விக்கூடங்கள், சமூக நல நிறுவனங்கள் ஆகியனவற்றின் பங்களிப்பானது, எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்கும் விடயங்களின் பெரும் பொறுப்பினை வகிக்கின்றது. பாடசாலைகளில் ஆசிரியர்கள் பண்பைப் போதிப்பதிலேயே சிரத்தை எடுக்க வேண்டும். ஒரு மாணவனை ஒழுங்கானவனாக மாற்றினாலே போதும் அவன் கல்வியில் தானாகவே நாட்டம் கொண்டவனாக வந்து விடுகின்றான். மனக்கட்டுப்பாடு இன்றேல் கல்வி மூளையில் பதிந்து விடுமா? நல் நெறி இன்றேல் மனக் கட்டுப்பாடு, சிரத்தை எப்படி வந்துவிடப் போகிறது? அத்துடன் இன்னும் ஒருவிடயத்தினைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். பாடசாலையில், மாணவர்கள் குறைபாடுகளைப் பற்றி ஆசிரியர்கள் பெற்றோரிடம் கூறினால், பெரும்பாலான பெற்றோர் அதனை ஏற்றுக் கொள்வதேயில்லை. சகல பெற்றோருமே இத்தகைய இயல்பு கொண்டவர்கள் அல்லர். பொதுவாக, பிள்ளைகள் தமது குற்றங்களை மறைத்துப் பொய் பேசும் போது, அதையே சரி எனக் கொண்டு, வாதாடும் பலரை நாங்கள் கண்டிருக்கின்றோம். தவறுகளை ஒப்புக்கொள்ளும் பக்குவத்தினை நாம் சிறார்களுக்குப் போதிக்கவேண்டும்; செய்த தவறுகளைத் திருத்தவேண்டும்.

மத நம்பிக்கையில் மனிதன் அதீத நம்பிக்கை வைத்திருக்கின்றான். இந்த நம்பிக்கையினை உளமார ஏற்கும் போது, பாவங்களுக்கு அஞ்சும் பண்பும் அவனிடம் வளர்கிறது. எல்லா மதங்களுமே பாவமான காரியங்களை விலக்குமாறே வலியுறுத்துகின்றன. மத உணர்வுடன், இவை வலியுறுத்தப்பட்டு மனிதனின் உள்ளத்தில் வேரோடவிட்டால், செய்யத் தகாத செயல்களை கடவுளுக்குப் பயந்து விலக்கியே விடுகின்றான். இறை அச்சம் என்பது கூட ஒரு மனச்சாட்சிக்குட்பட்ட ஒரு சத்திய வெளிப்பாடேயாகும். அந்த உண்மையுணர்வை, எவ்வாறு சிறார்களுக்கு ஊட்டுவது என்பதை நாம் கண்டு கொண்டால் நற்பிரஜைகளை உருவாக்குதல் என்பதே சிரமமான பிரச்சினை அல்ல.

RangaRakes Tamilnavarasam.com

பாவ சிந்தனைகளை அறுக்கவே மத வழிபாடு துணையாயின. எனவே தெய்வ நம்பிக்கை என்பது குருட்டு நம்பிக்கை என்கின்ற அர்த்தமற்ற பேச்சை விடுத்து, எம் முன்னோர்கள் வகுத்த வழிப்படி, தெய்வ நம்பிக்கையுள்ள ஒரு சமூகத்தின் இளஞ் சிறார்கள் மூலம் உருவாக்க முனைய வேண்டாமா? தெய்வ சிந்தனையுள்ளவன், பண்பாடாக வாழ்பவனாகவே இருக்கின்றான். வெறும் நாத்தீக வாதம் பேசுவதால் பெரிதாகப் பயன் ஒன்றும் வரவே மாட்டாது. பாவம் புரிதலை, எண்ணுதலைத் தடுக்க மத நம்பிக்கை உதவுகின்றது என்பதை மறுக்க முடியுமா? தெய்வ நம்பிக்கையீனம் என்பது ஒரு முற்போக்கான சிந்தனை என்று தப்புக் கணக்குப் போடவும் கூடாது.

பக்தி, இறையுணர்வு மனதைப் பக்குவப்படுத்துவதால், சிறுவயதிலேயே மதக் கல்வியை ஊட்டுதல் அவசியமாகும். இதனால் பணிவு என்கின்ற பண்பு தானாகவே வந்துவிடுகின்றது. இறைவழிபாட்டின் மூலமே பணிவும், உயிர்களை நேசிக்கும் குணமும் இணைந்து வருகின்றன.

ஒவ்வொரு வீடும் கோவிலாக மாற வேண்டும். அப்போதுதான் மாசற்ற மாணிக்கங்களாக இளம் தலைமுறைகள் உருவாகும்.

சீரிய சிந்தனை, பரந்த நோக்கு, ஒழுக்கமே உயிர் என்பதில் நம்பிக்கை, இவைகளின் அடிப்படையில், உலகில் ஒவ்வொருவமே, அனைத்துச் சிறார்களுமே உருவாக்கப்படுதல் வேண்டும். முழு உலகும் ஒவ்வொரு குழந்தைகளின் நலனிலும் அக்கறை கொள்ள வேண்டும்.

அனைத்துப் பிள்ளைகளுமே எமது வருங்கால உலகை வாழவைக்கும் சொத்துக்கள் இதை மறக்க வேண்டாம்.

வீரகேசரி



# மனையாள் இணையில்லா சொத்து



ஜீவியப்பரியந்தம், ஜீவனோடிணைந்து நிற்கின்றவளும், அகத்திற்கு அகல்விளக்காகவும், குலம் தழைக்கச் செய்கின்ற தலைமகளாகவும் துலங்கும் தூய்மையான, தாய்மைச் சின்னம் மனைவி எனில் அது மிகையாகுமா? இவள் உயிர்க்கு உருக்கொடுக்கும் தாய் மட்டுமல்ல, அனைத்து நலன்களும் எமைச் சேர வைக்கும், படைத்ததலின் பாரிய பங்காளி. இவள் சிரித்தால் நிம்மதி மனம் கரித்தால் அதோ கதி! சினந்து கொள்ளாதவரை, துன்பங்கள், சுமைகள் அல்ல. அன்பால் ஆக்கிரமிப்பவள், நொந்தால் நோய்கள் கோடி. இன்பம் வழங்குதற்காய், துன்பங்களை ஏந்துபவள் தாயாக நற்சினேகிதனாய், ஆலோசகராய் அனைத்துமாய் இருப்பவள்.

நாட்டின் பெரும் தலைவர்கள் கூட தம் மனைவியர் தயவினால்தான், தாம் உணர்வு கண்டதாகப் பெருமையாக மனம் திறந்து பேசுகின்றனர். வீட்டு அரசிகள் தான் நாட்டிற்கு அரசர்களை ஆக்கித் தருகின்றார்கள். உள்ளத்தின் ஆழமும், ஆளுமையும், மனைவியின் செயல்களை மாட்சிமைப்படுத்துகின்றன.

RangaRakes Tamilnavarasam.com

எனவே,

மனைவியின், பற்றுதல் இன்றி இருந்தால் வாழ்வே இற்றுப் போய் விடுகிறது. எச் செயலிலும் இவளது செல்வாக்கு உட்பிரவேசித்தல் இன்றி நடைபெறுவதாக இல்லை.

தன் தூய அன்பினால், எத்தகைய பிணைப்பை, வளர்த்து வளைத்துக் கட்டி வைத்திருக்கின்றாள்?

அடங்காத முரட்டுத்தனமான, வரட்டு வேதாந்தம் பேசும் கொழுநனைக் கூட, மலராக, மென்மையாகத் தன் கரங்களில் பூட்டி வைத்து விடுகிறாளே? வாழ்வதற்கு லாயக்கற்றவர் என்று பேசப்பட்டவர்களைக் கூட, உலகமே மதிக்கத்தக்க பொக்கிஷங்களாக மாற்றியமைத்த கதைகளை நாமறிவோம்.

தனது பாசத்தாலும், பரிவாலும், ஊக்கத்தாலும், ஆக்கத்திறத்தாலும் தன்னோடிணைந்து குடும்பத்திற்கு மனைவி எனப்பட்டவள் ஆற்றும் சேவைகள் அவள் குடும்பத்துடன் நின்று விடுவதில்லை. இதன் நன்மைக்கு முழு சமூகத்திற்கும் சென்றடைந்துவிடுகின்றன.

ஒவ்வொருவரின் வீடும் நிம்மதியாக இருந்தால் தானே சமூகமும் இருக்க முடியும்? எனவே வீட்டிற்கு நிம்மதி கொடுக்கச் செய்யும் பெரும்பங்கு பெண்மையின் அன்புப் பிம்பமான மனைவியின் பங்களிப்புத்தான் எவ்வளவு பவித்திரமானது தெரியுமா? வீடுகள் சரியில்லாமல் விட்டால் நாடுகள் சுடுகாடுகள் தானே?

> ஒவ்வொரு வீடும் நிம்மதியாக இருந்தால் தான் சமூகம் அமைதியாக இருக்க முடியும். எனவே வீட்டுக்கு நிம்மதி கொடுக்கச் செய்யும் பெண்மையின் அன்புப் பிம்பமாகிய மனைவியின் பங்களிப்புத்தான், சேவைகள்தான் எவ்வளவு பவித்திரமானது? வீடுகள் சரியில்லாது விட்டால் நாடுகளே சுடுகாடுகள் தான்.



எனவே நிம்மதியின் ஆதார சுருதி இல்லத்தரசிகள் அல்லவோ. பத்தாம் பசலித்தனமான, வரட்டுக் கௌரவம் பேசுவதும், பழமை கலாசாரம் பற்றி தவறான கருத்துக்களை வைத்துக்கொள்ளுவதும் ஆண்மையின் அடையாளம் என எண்ணுதலும், பெண்மையைக் கௌரவிக்காமையே பெரும் கௌரவம் என எண்ணிக் கொள்பவர்கள்கூட ஒருவிதத்தில் மன நோயாளிகள்தான். தங்களைப்பற்றிய மிதமிஞ்சிய தன் முனைப்பு கொண்டவர்கள் சரியானவைகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை.

மனைவியரை அசிங்கப்படுத்தி, நடாத்துபவர்களிடம் பேசிப்பாருங்கள் - அவர்களின் வக்கிர புத்தி அடிமனதில் வேரூன்றி நிற்பதால் வெளி உலகில் வேஷம் பூணும் தன்மை புரியும்.

நாகரீக சமூகத்தில், எவரையும் வைது கொள்வதற்கும், வதைப்பதற்கும் உரிமை வழங்கப்படவில்லை.

ஏன், நம்மையே நாம் வதை செய்வதற்கும், உயிரைப்போக்குவதற்கும் கூட உரிமை கிடையாது. இப்படியிருக்க, மனைவியை வதைக்கின்ற ஆத்மாக்கள் கூட தப்பித்துக் கொண்டிருக்கின்ற குற்றவாளிகளேயாவர். ஆனாலும், இந்த நிலையைக்கூட இவள் சகித்துக் கொண்டிருக்கிறாள். வரம்பு மீறிய பொறுமையும், எல்லையில்லா அன்புணர்வுமே இதற்குக் காரணமாகும்.

இதனால்தானோ என்னவோ, வாலிப வயதில் மிடுக்காக நடந்து இடர் புரிந்தவர்கள் காலம் கடந்த பின்னர் ஞானம் வந்ததும் மனையாள் பற்றிய மதிப்பு அறிந்து, அவள் தயவின், அன்பின் தீட்சண்யத்தினைப் புரிந்து கொள்கின்றனர்.

இன்னும் சிலரோ, இருக்கும்வரை மனைவியின் பெருமையை உணராது, அவள் இறந்ததும், கண்கெட்டபின் சூர்ய நமஸ்காரம் என்பதுபோல் அவளையே எண்ணி, எண்ணி மாய்ந்து

RangaRakes Tamilnavarasam.com

போகின்றனர். இருக்கின்ற பொக்கிஷத்தை, இருந்தபோது அதன் பெறுமதியை உணராது, அது தொலைந்ததும் புலம்புவதில் பயனேது?

எனினும், வாழ்வின் சூட்சுமத்தை அறிந்த தம்பதிகள் இறுதிவரை ஒருவர்க்கொருவர், விட்டுக் கொடுத்து இல்லற சுகத்தின் இனிமைதனை இறுதி மூச்சுவரை நுகர்ந்து, இறந்த பின்பும் துலங்கி நிற்கின்றனர். இவர்கள் வாழ்ந்து காட்டிய பாதையில்தான் பின்வருகின்ற சந்ததிகளும், இதுதான் குடும்பம், உறவு என்று தெரிந்து கொள்கின்றனர்.

இதனாலேயே, கணவன், மனைவி இரு சாராரும் இணைந்து வாழுகின்ற வாழ்வுமுறைகள், நிறைவுகளை நோக்கியே முன் செல்லவேண்டும். சோதனை, வேதனைகளால் உறவுகளை நெருடி அதற்கு அடிமையாகி ஒருவர்க்கு ஒருவர் முரண்டு பிடிப்பது மனம் வழி செல்வதுபோலாகும். துன்பம் துயர் வரும்போதுதானே பிரச்சனைகளைத் தாங்குகின்ற தைரியமும் வரவேண்டும்.

மனைவியின் செயல்திறன் இங்குதான், ஆக்கபூர்வமாக இருத்தல் வேண்டும். ஆரோக்கியமான, மன விசாலம் இல்லாத இல்லத்தலைவியால், குடும்ப நிர்வாகத்தைச் சீராகச் செய்ய முடியாது.

பிறர் வாழுகின்ற வசதிகள், செல்வச் செழிப்புக்களை தமது குடும்ப நிலையுடன் ஒப்புநோக்கி வாழத் தலைப்படக்கூடாது. இதனால்தான், கணவன் மனைவியரிடையே ஆரம்ப உரசல் தோன்ற ஆரம்பிக்கின்றது.

அத்துடன், எதிலும் மிதமிஞ்சிய எதிர்பார்ப்புக்கள், ஆசைகள், அபிலாசைகள், கண்மூடித்தனமான நாகரீக மோகம், தனது குடும்பத்தைவிட இதர குடும்பங்களே மேலானது என எண்ணுகின்ற தாழ்வு நோக்கு, இருக்கின்ற நல்ல வசதிகளிலேயே திருப்தியுறாமை, வசதிகளை மேலும் வளப்படுத்த விரும்பாமை,



சோம்பல், எதற்குமே ஏங்குதல், இல்லாத பொருள்களுக்காக நச்சரித்தல், இவை போன்ற நடவடிக்கைகள் வீட்டின் நிம்மதியை குலைத்துவிடும்.

வெளிப்படையாகக் கூறாதுவிட்டாலும்கூட கணவன்மார்கள் தம்மைவிட, மனைவியிடமே நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இருவரிடையேயும், யார் பெரியவர் என்கின்ற விவாதங்களை முடக்கி விடவேண்டும்.

மனைவி என்பவள் இந்த எண்ணத்தைத் துறந்தேயாக வேண்டும். ஏன் எனில், மனைவியைத் திட்டுபவர்கள்கூட அவள் தயவின்றி நிம்மதியாக வாழ்ந்துவிட முடியாது. எனவே கணவன் ஆத்திரத்தில், முற்கோபத்தில் பேசுகின்ற பேச்சுக்களைப் பெரிதுபடுத்தத் தேவையில்லை. அவன் இதயத்தில் ஆழமாகப் பதிந்துள்ள அன்பை, காதலைப் புரிந்துகொள்ளவும் வேண்டும்.

இதுபோலவே, மனைவியின் தியாக உள்ளத்தை, சேவையை, உழைப்பை கணவன் புரிந்து வைத்திருக்க வேண்டும். சிலர் இதை உணர்ந்தாலும் வெளிக்காட்ட விரும்புவதில்லை. தயக்கம் காட்டுகின்றார்கள். இதனை வெளிப்படுத்தினால், ஏதும் கௌரவம் குறைந்துவிடுமோ அல்லது, அவன் தன்னையே சார்ந்திருப்பதாக எண்ணி, வீம்புடன், கணவனான தன்னை மதிக்கமாட்டாள் எனவும் கருதிவிடுகின்றான். உண்மையான அன்பின் முன் வீம்புக்கும் வீராப்புக்கும் இடமேயில்லை. சில கணவன்மார்களுக்கோ மனைவியிடம், பிள்ளைகளிடம் அன்பை உணர்த்தும் விதம் தெரியாமல் இருக்கலாம். இவைகளை மனைவி எனப்பட்டவளே புரிந்து சமாளித்து வாழப் பழகவேண்டும். இவைகள் வேண்டும் என்றே ஒருவரால் செய்யும் தவறும் அல்ல. எல்லோருக்குமே சாதுரியமாகவும், இயல்பாகவும் பழக, பேச வராது. இதனால் தப்பபிப்பிராயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். நல்ல குடும்ப உறுப்பினர்கூட இந்தப் புரிந்துணர்வின்மையால், பாதிப்படைந்திருக்கிறார்கள். காலங்கள் மாறிக்

RangaRakes
Tamilnavarasam.com

கொண்டேயிருந்தாலும்கூட, உலகம் எங்கணும் உள்ள கணவன், மனைவி பரஸ்பர உறவு இருந்து கொண்டேயிருக்கும். மேற்கத்திய நாடுகளில் நாம் கணவன் - மனைவி பிணக்குகள், குடும்ப அமைதியின்மை பற்றித் தெரிந்திருக்கின்றோம்.

ஆனால்,


எல்லா நாடுகளிலேயும், குடும்ப பிணைப்பு விடயத்தில் எம்மைவிட ஏனைய நாட்டவர்கள் குறைந்துபட்டது எனக் கருத முடியாது. அங்கும் குடும்ப பிணைப்பு, பாசம் இறுக்கமானதாகவே இருக்கின்றது. எங்கும் இவர்கள் வாழ்ந்து கொண்டு தானிருக்கின்றார்கள். கூடாத விஷயங்களை மட்டுமே பேசிக் கொண்டிருக்க வேண்டுமா? யப்பான் நாட்டுப் பெண்களே, குடும்பத் தலைவியரில் முதன்மை ஸ்தானத்தில் இருப்பதாக, அண்மையில், சஞ்சிகை ஒன்று நடாத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவர்கள் நாட்டிற்கும், வீட்டிற்கும் ஆற்றும் சேவை அளப்பரியது. எனவே, இல்லத்தரசிகளின் பெருமை, அந்தந்த நாட்டின் வளங்களின் மூலமும் தெரிந்து கொள்ள முடியும் அல்லவா?

சிறந்த மனைவி தன் நன்நடத்தை நெறியினால் சமூகத்திலும் நேசிக்கப்பட்டே வருகின்றாள்.

இவள் ஒரு அழகிய வீணை. இதை மீட்டும் விதத்திலேயே இதன் தன்மையும், இனிமையும் இருக்கின்றது. கருவியும் இசைப்பவனும் ஒன்று சேர சங்கமிக்கும்போதுதானே சுகஸ்வரம் உதயமாகின்றது. நல்ல மனைவி, குடும்பத்தின் தலைவி! தியாக சிந்தையே இவளது குணங்கள், இணையில்லா மனையாள் வாய்த்தால் இனிமைக்குக் குறைவேது? இல்லாமையை, இல்லாதொழிக்கும் இவள் செயலால், நல்லன அனைத்தும் தானாய் வரும். ஏன் எனில், பெண்மையின் பேராற்றல் வடிவமே தாயும், தாரமும்தானே?



# தனிப்பட்ட வாழ்க்கையும் சமூக எதிர்பார்ப்புக்களும்



தாங்கள் செய்யும் தப்பான காரியங்களுக்கெல்லாம், அது தனிப்பட்ட விடயம், அதில் எவருமே தலையிட முடியாது என்று, ஒரு பொய்யான முக மூடிகளைத் தமக்குத்தாமே போட்டுத் தப்பித்துக்கொள்ள முனைபவர்களை நாம் அறிவோம். நாட்டின் தலைவர்களும், பொது நல அமைப்புக்களில் உயர் பொறுப்புக்களில் உள்ளவர்கள், அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள் இப்படி அந்தரங்கமான விடயம், தனிப்பட்ட விடயங்கள் என்று கூறி எப்படியும் நடந்து கொள்ளலாமா? இப்படியே சாக்குப் போக்காகவும், புத்திசாலித்தனம் என நினைத்துச் சமாளித்து, தங்களை ஒளித்து, வெளியே வேடம் புனைந்தால், இந்த உலகம் உருப்படுமா? கழகத்தையும் முழுநாட்டையும், தனிமனித நடத்தை நெறிகள் கூடப் பாதிக்கச் சந்தர்ப்பம் உண்டு. எனவே தலைமைத்துவத்தில் உள்ளவர்களிடம், மக்கள் அந்தரங்கங்களை எதிர்பார்க்கமாட்டார்கள்; சகித்துக் கொள்ளவும் மாட்டார்கள். இவர்களை மக்கள் புனிதர்களாக நோக்கும்போது, இவர்கள் வெளிப்படையான தூய்மை நிறைந்தவர்களாகவே இருக்க உலகம் எதிர்பார்க்கின்றது.

RangaRakes Tamilnavarasam.com

ஒரு குடும்பத்தில் கணவனுக்கு என்று ஒரு தனிப்பட்ட வாழ்க்கையும், அந்தரங்கங்களும், மனைவிக்கும் இதே போலவே அமைந்தால் குடும்பங்களில் குழப்பம்தானே மிஞ்சும்? தங்கள் பலவீனங்களை மறைக்கவே இப்படியாக நடந்து கொள்கின்றார்கள். ஆனால் நடப்பது என்ன? இவை வெளித்தெரியும் போது, ஒரு பூகம்பமே வெடிக்கின்றது. இதனால் அல்லலும், அவமானமும் படுகின்றனர்.

எனவே எவருமே தூய்மையாக, வாழ்வை அமைக்க முற்பட்டால் இந்தப் பிரச்சினைகளுக்கு இடமில்லை.

ஆயினும்,

தனிமனித வாழ்வில், தற்செயலாக நடந்த தவறுகள், தோல்விகள், எதிர்பாராத சம்பவங்கள் போன்றவைகளைப் பாரதூரமான விஷயங்களாக, பலவீனமான, அந்தரங்கங்களாகக் கருதிவிட முடியாது.

ஒவ்வொருவருக்கும் எனத் தனித்தனி ஆசைகள், அபிலாசைகள், விருப்பு, வெறுப்பு, ரசனை உணர்வுகள் இருக்கும். இது ஒவ்வொருவரினதும் தனிமனித சுதந்திரமாகும். இவை இன்னும் ஒருவரது சுதந்திரங்களில் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும். எமக்குப் பிடிப்பது, பிறருக்குப் பிடிக்காமலும் போகலாம். அவர்களுக்கு இசைவானது எமக்குப் பொருந்தாமலும் இருக்கலாம். நாம் எல்லோரது கருத்துக்கள், செயலுடன் இசைந்து போவது என்பதும் சங்கடமான விஷயமே. எங்கள் தனிப்பட்ட விஷயங்களை எல்லோருக்குமே சொல்லிப் பகிர்ந்து கொள்ளவும் முடியாது. இவை கூச்சப்படத்

> கீர்த்தி மிக்க திறமைசாலிகள்கூட ஆரம்பகால அந்தரங்கங்கள் நீண்ட காலங்களின் பின்னர், அவை வெளித்தெரிந்த பின்னர் அல்லலுறுகின்றனர். இதனால் இவர்களது அப்பெருஞ்சேவையை உலகம் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கின்றது.



தக்கனவாகவும், பிறருக்குச் சங்கடங்களை உண்டு பண்ணத்தக்கதானவையாகக் கூட இருக்கலாம். சில விஷயங்களை வெளிப்படுத்தலைத் தவிர்த்தே ஆக வேண்டியுள்ளது.

ஒருவர் தம்மிடையே, கருதும் தவிர்க்க விரும்பும் விடயங்களை நாம் துருவித் துருவி ஆராய்தல் என்பது நாகரீகமற்ற செயலேயாகும். எமக்குப் பிரச்சனையில்லாத விஷயத்தையும், எமக்கே தேவையில்லாத சங்கதிகளையும் நாம் ஆராயலாமா? இதைக் கண்டுகொள்ள நினைத்து என்ன ஆகப்போகின்றது. சில நேரங்களில் பொருந்தாத விஷயங்களில் ஆராய்ச்சி செய்து, புதினம் பிடுங்குவதால், தேவையற்ற மனச்சஞ்சலமும், மனஸ்தாபங்களும் கூட எழ வாய்ப்பு இருக்கின்றது என அறிந்து கொள்ளவேண்டும்.

எமக்குத் தனிப்பட்ட எம்மைப் பாதிக்கின்ற விஷயங்களில் மட்டும், நாம் அனேக கலாச்சாரங்களைத் துருவித் துருவி ஆராய வேண்டியிருக்கின்றது. எங்கள் வாழ்க்கைப் பிரச்சினை என்றால் கண்டு கொள்ளாமல் இருக்கமுடியாது. உங்கள் பிள்ளைக்குத் திருமணம் செய்யவிருக்க ஏற்படும் சந்தர்ப்பங்களில், நீங்கள் சர்வ ஜாக்கிரதையாகவே செயல்படுவீர்கள். உங்கள் பிள்ளைக்கு ஏற்ற வரன் அமைய நீங்கள் சர்வ உரிமையும் எடுத்துக்கொண்டு அவர்கள் குணநலனை ஏதோ வழிமுறையில் கண்டு கொண்டேயாக வேண்டும். ஆணுக்கோ, பெண்ணுக்கோ, தனிப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினைகள், நடத்தைகள், குடும்ப கௌரவம் போன்றவைகள் இங்கு சீர்தூக்கிப் பார்க்கப்படுகின்றது. இது விடயத்தில் இவர்கள் தனிப்பட்ட விடயங்கள் என்று கூறி எதையுமே ஒதுக்கி வைத்து, கல்யாணம் நடந்தால் சரி என எந்தப் பெற்றோரும் கருதிவிடமாட்டார்கள்.

அருவருக்கத்தக்க தீய ஒழுக்கங்கள், அதை தனிப்பட்ட அந்தரங்கம் என எண்ணி, சமூகம் இவைகளை ஏற்றுக் கொள்வதில்லை. சமூகம் மன்னிக்கக்கூடியவைகளை மட்டுமே மன்னித்துவிடுகின்றது.

RangaRakes Tamilnavarasam.com

சமூக நலனுக்காக ஒருவர் சில காரியங்களை மறைத்து வைத்திருக்கலாம். இவை நோக்கத்தின் தன்மைகளைப் பொறுத்ததாகும். அரச பதவிகளில் உள்ளவர்கள், பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு இவை பொருந்தும். சில குடும்ப நலனுக்கு ஊறு விளைவிக்கும் விஷயங்களை, அதனால் தேவையற்ற வீண் விவகாரங்கள் வரும் என உணர்ந்தால், மறைக்கப்பட்ட வேண்டிய சங்கதிகள் மறைக்கப்பட்டேயாக வேண்டும்.

அலுவலக மேலதிகாரிகள் தமது ஊழியர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய விஷயங்களைத் தெரியப்படுத்தியே யாகவேண்டும். ஆயினும் சில நிர்வாக செயல்களை அந்தரங்கமாக வைத்துக்கொள்ளும் சந்தர்ப்பங்களுமுண்டு. எல்லா காரியங்களையுமே மூடி மறைத்தால் நிர்வாகம் நடந்து விட முடியுமா? குழப்பங்களும், சந்தேகங்களுமே மிஞ்சும்.

அரசுத் தலைவர்க்குச் சொந்தமாக அந்தரங்கங்களும் தனிப்பட்ட பிறர் விரும்பாத நடத்தைகளும் வெளித் தெரியும்போது ஆட்சியே ஆட்டம் காணுகின்றது. அரச நிர்வாகங்கள்கூட மக்கள் ஆணை மூலம் பெறப்பட்டதாகையினால் அவர்களைப் பாதிக்கும் எச்செயலையும், அரசுகள் செய்துவிட முடியாது. கடமையும், தனிப்பட்ட வாழ்க்கையும் இணைகின்ற போதுதான் சிக்கல்கள் உருவாகிவிடுகின்றன.

புத்திசாலித்தனம், அனுபவம், தைரியம், இவை மூலம், நாம் பொது வாழ்வில் இந்த இரண்டு விசயங்களையும் கையாளும் விதத்திலேயே சுமுகமான பிரச்சினைகளைப் பெரிதாக்காது தீர்த்துக் கொள்ளமுடியும்.

நெறி பிறழா வாழ்வுமுறையைக் கடைப் பிடிப்பவர்களுக்கு எந்த விஷயங்களுமே, பெரிய பிரச்சனைகளாகப் புலப்படமாட்டாது. துரதிருஷ்டவசமாக, இன்று உலகில் கீர்த்தி மிக்கவர்கள், பெரியவர்கள் எனப் பேசப்படுபவர்கள் கூட பற்பல



சிக்கல்களுக்குள் மாட்டிக்கொண்டு விடுகின்றார்கள். இதில் பரிதாபம் என்னவெனில் மிகவும் திறமைசாலிகள்கூட ஆரம்பகால அந்தரங்கங்களால், நீண்ட காலங்களின் பின்னர் இவை வெளிவந்த பின்னர் அல்லலுறுகின்றார்கள். இதனால் இவர்களது அளப்பெருஞ்சேவைகளையே உலகம் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது.

எனவே, சின்ன வயதிலிருந்தே பண்பான வாழ்வுமுறையை நாம் கடைப்பிடித்து ஒழுகியேயாக வேண்டும். தனிப்பட்ட வாழ்க்கையைத் தூய்மை நிறைந்ததாக வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை, இத்தகையின் மூலம் படித்துக்கொள்ளலாம். ஒருவர் நடத்தைகளை உலகம் கண்மூடியபடி கண்காணிக்கவில்லை என எண்ணுதல் தவறாகும். இவை என்றாவது ஒரு நாள் வெளிச்சத்திற்கு வந்தே தீரும்.

எவ்வளவு நாள் நல்லவைகளை நாம் செய்துகொண்டாலும்கூட அடிப்படையான எமது குணாதிசயங்களில் குற்றங்கள் இருந்தால், எமது சேவைபற்றிய நம்பிக்கையே பிறரிடமிருந்து தகர்ந்து போகின்றது.

ஆரம்பகாலம் முதலே, அதாவது நாம் உருவாக்கும் பொழுதிலேயே, தூய்மைப் பண்பு, நேர்மை, முதலான நெறிகளின் அத்திவாரத்திலேயே வாழ்வைக்கட்டியெழுப்பவேண்டும்.

எமக்கென உரித்தான சின்னச் சின்னக் காரியங்களில் பிறர் தலையீடு தேவையில்லை. இதனால் எமது தனித்துவமும், சுதந்திரமாக இயங்கும் உரிமை, திறமை, துணிவு என்பன பாதிக்கப்படவும் கூடும். சத்தியத்திலும், தார்மீக ரீதியிலும் எம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளவும், அதிலேயே பரிபூரணமாக ஈடுபாட்டுடன் செயலாற்றவும் உரிமைகளும், வழிகளும் உண்டு. இது ஆன்ம சுத்தியுடன் கூடிய பவித்திரமான செயலுமாகும். இது பற்றிப் பிறர் வீணான குறுக்கீடு செய்தலால் லாபம் ஒன்றும் கிடையாது. எமது தூயவழிப் பயணங்களில் ஏற்படும் குறுக்கீடுகள்

RangaRakes Tamilnavarasam.com

யாவும், சத்திய சோதனையாக வந்து சென்றாலும், எமது சரியான வாழ்வுமுறை முடிவில் வெற்றியையும், துணிவையும், நன்மைகளையுமே ஈட்டித்தரும் என்பதில் சந்தேகமில்லை. ஒருவரைச் சீண்டும் காரியங்களால் மனம் புண்படுமாறு செய்யக்கூடாது. யாராவது அப்படிச் செய்தால், அதைக் கண்டு கொள்ளாமல் விடுவதே அவர்களுக்குக் கொடுக்கும் பதிலடியாகும். நாம் கவலைப்படுவதையிட்டுப் பிறர் நகைப்பதற்கோ, ஏளனம் செய்வதற்கோ இடமளித்தல் கூடாது. தேவையற்ற தலையீடுகளும் விசாரணைகளும் தானே துன்பங்களை வரவழைத்து விடுகின்றன.

சுதந்திரத்தைக் கௌரவிக்கின்ற சமூகம், அது அனைவருக்கும் கிடைப்பதை ஆட்சேபிக்கக்கூடாது. தனிமனிதனின் வாழ்வை விமர்சனம் செய்யுமுன் அதன் சரி, பிழைகளை அறிதல் வேண்டும். அதன் பாதிப்புக்களை உணரவேண்டும். ஒருவன வாழ்விற்கும், தனிப்பட்ட எண்ணங்களுக்கும் மதிப்பு அளிக்க கற்றுக்கொள்ள வேண்டும். இது அவசியமான, மற்றவர் உணர்விற்கு கௌரவம் கொடுக்கும் செயலுமாகும்.

ஒவ்வொருவருக்குமே தத்தமது வாழ்வு அமைத்தல் முறை சரியானதாகவே படும். அவர்களது வாழ்வுமுறை எமக்குப் பொருந்தாதுவிடின், அவரகள் மீது எமது வாழ்வு முறைகளைத் திணிக்க முடியாது. அவர்களால் ஏதும் பிரச்சினைகள் எழாதுவிடின், நாம் எதற்கு உபதேசம் செய்ய முயலவேண்டும்? எமக்கு என எத்தனை எத்தனையோ கருமங்கள் நிரம்ப கிடக்கின்றன. எங்களை, நாமே இன்னமும் பூரணமாகக் கண்டு கொள்ள முடியவில்லை. இந்த லட்சணத்தில் வலிந்து, எம்மனதை கலைக்கும், கெடுக்கும் சங்கதிகளில் சிக்கிக் கொள்ளலாமா?

பிறருக்கு எரிச்சலூட்டும் செயலால், பாதிக்கப்படப்போவது நாமேதான். ஒவ்வொருவருடனும் பழகும்போதும், ஒரு எல்லையை வகுத்துக் கொள்ளவேண்டும். பிள்ளைகள், கணவன்



மனைவி, நண்பர்கள், உறவினர்கள் முகம் தெரியாதவர்கள், படித்தவர்கள், பாமரர்கள் ஒவ்வொருவருடனும், எமது ஈடுபாடு எத்தகையது, அவர்கள் எம்மை எப்படி மதிக்கின்றார்கள், எங்கள் தொடர்பின் வலிமை எத்தகையது, என்பதைத் தெரிந்து அளவோடு பழகுவதையும், புத்திமதிகள் சொல்வதையும், வைத்துக் கொள்ளவேண்டும். எத்தகைய நெருக்கமானவர்களுடனும்கூட, எமது உரிமை எடுக்கும் தன்மையை நாம் தான் அளவீடு செய்தல் வேண்டும். அவர்களது தனிப்பட்ட வாழ்வு, அந்தரங்கம், உரிமைகளில் நாம் பிரவேசிக்கும் போது சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நல்ல நினைப்புகளை நாம் வைத்துக் கொண்டிருக்கும்வரை எல்லா தரப்பு மக்களும் எம்மை நேசிக்கத் தொடங்கிவிடுவர். நாம் பழகும் விதத்திலேயே, எங்கள் பண்புகளும் பளிச்சிடும். இதை உணர்ந்து நடப்போம்.

RangaRakes Tamilnavarasam.com



# அவசரம் அநாவசியம்

அவசரப் புத்திக்காரர்களுக்கு நிதானமாகச் சிந்திப்பதற்கே போதிய அவகாசம் கிடைப்பதில்லை. இவர்கள் தமது செயல்களைப்பற்றிச் சிந்திக்காமல், ஏதோ வெட்டி விழுத்துவதாகச் செயல்பட்டு, வீண் வம்புகளை விலைக்கு வாங்கி அவமானப்பட்டும் போகிறார்கள். இன்னும் சிலர் அவசரபுத்திச் செயல்பாடுகளைத் தாமே மெச்சிக் கொள்ளுவார்கள். அது எந்த வடிவத்தில் வந்தாலும்கூடக் கவலைப்பட்டுக் கொள்ளமாட்டார்கள். செய்யும் செயல்களின் பூரணத்துவத்தை புரியாதவர்களுடன் பேசிப் பயனில்லை என்பது போலவே தோன்றும்.

இவையெல்லாம் ஒரு அசட்டுக் காரியமாகவே இருக்கின்றதெனினும் பலரை இந்தப் பழக்கத்திலிருந்து விடுவிக்க முடிகிறதில்லை. இவர்கள், தம்மையும், தம்மைச் சுற்றியிருப்பவர்களையும் மன அழுத்தத்திற்கு ஆளாக்குவதில் திருப்திப் பட்டுக்கொள்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றும்.



இத்தகையவர்கள் முழுமையாக காரியத்தைச் செய்து முடிக்க மாட்டார்கள். அத்துடன், சுதந்திரமாக, மனம் லயிப்புடன் காரியமாற்றத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளவும் மாட்டார்கள்.

எதையும் நிதானத்துடன் செய் என்று பெரியோர்கள் கூறுவார்கள். நிதான புத்தி, நிதானமான செயல்கள் என்பது மந்தமான, சோம்பலான வேலை எனக் கருதல் வேண்டாம். ஒரு செயலைச் சிறப்பாகவும், நிதானமாகவும், அதே வேளை கூடிய அளவு கணிக்கப்பட்ட, தன் சக்திக்கு உகந்த வேகத்துடன் ஆற்றல் வேண்டும்.

- அநாவசிய தாமதங்கள்
- முன்கூட்டியே செய்யும் செயல்பற்றிய தெளிவின்மை.
- எடுத்த கருமத்தைக் கண்டு பயப்படுதல்.
- எடுத்த கருமத்தின் அளவைக் கண்டு, மிதமிஞ்சிக் கற்பனை செய்தல்.
- ஒருவருமே, இந்தச் செயலைச் செய்யமாட்டார்கள். தான் மட்டுமே இதைச் செய்யப் போகின்றேன் எனக் கர்வம் கொள்ளுதல்.
- படிப்படியாகக் கருமங்களைச் செய்யாது விடுத்து, ஒரேயடியாக அசட்டுத் துணிச்சலுடன் ஈடுபட முனைதல்.
- பொறுப்பான, பாரிய கருமங்களை லேசாக எடுப்பதும், லேசான காரியங்களை, கடுமையான வழிமுறைகளில் சிரமத்துடன் செய்ய முற்படுதல். (பனங்கிழங்கை ஆப்புக்கொண்டு கிழிப்பது போல் என்பர்)

> அவசரப்புத்திக்காரர்கள் தம்மை மட்டுமல்ல, தம்மைச் சுற்றி இருப்பவர்களையும் மன அழுத்தத்திற்கு ஆளாக்குகின்றார்கள். இத்தகையவர்கள் முழுமையாகக் காரியத்தை செய்து முடிக்க மாட்டார்கள்.

RangaRakes Tamilnavarasam.com

- அநாவசிய பதட்டங்கள்.
- கண்டவர்களின், வீணான உபதேசங்களை நம்புதல்.
- அனுபவம் இல்லாதோரிடம் ஆலோசனை கேட்டல்.
- விஷயம் தெரிந்தவர்களுடன் கேட்கக் கூச்சப்படல்.
- செய் கருமங்களைக் குறித்த நேரத்தில் செய்யாதுவிடல்.
- பின் விளைவுகளை ஆராயாது விடல்.

இவை போன்ற பலவீனங்கள் அவசர புத்திக்காரர்களை ஆட்டிப் படைக்கின்றது. இவர்கள் தம்மையும் நம்புவதில்லை, பிறரையும் முழுமையாக நம்புவதில்லை.

எழுந்த வேகத்தில் செயல்படுதல் சிறப்பு அல்ல. கருமங்கள் ஒவ்வொன்றும், படிப்படியாகத் திட்டமிட்டபடி ஆரம்பித்தல் அவசியமாகும். எமக்குள் ஒரு வரைபடத்தை உருவாக்கி, அதனை எப்படியும் செய்து முடிப்பேன் எனக் கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டும்.

மிகச் சாதாரண விடயங்களுக்கு ஆராய்ச்சி செய்தல் அவசியமல்ல. அது கருமங்களைத் தாமதத்துக்குள் ஆளாக்கிப் பெரிது படுத்திவிடும். வேளையை ஆரம்பிக்குமுன் சற்று சிந்தித்தால் என்ன குறைந்தா விடுவோம்?

பேருந்தில் ஏறிவிட்டு, போகின்ற இடத்தைப்பற்றிச் சிந்திக்கலாமா? பெயர் பலகையைப் பார்க்காமலேயே, பேருந்தில் பாய்ந்து ஏறலாமா? அப்படி ஏறிவிட்டுக்கூட, நடத்துனரிடம் தான் ஏறியது சரி என்று வாதிடக்கூடாது. அவசர சங்கதிகள் இப்படித்தான் நடக்கின்றது.

தெரிந்த விஷயங்கள்கூட எமது அவரச புத்தியில் தெரியாமல் போய் விடுகிறது. கற்ற கல்வியும், அனுபவங்களும் கூட இந்தப் பலவீனத்தினால், நம் காலை வாரிவிடுகின்றன.



பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள், விண்ணப்பத்தை சரியாக கை ஒப்பத்தை இடமறப்பதும், அப்படியே சரியாக எழுதி, முகவரி எழுதாமலே சாதாரண தபாலில், சும்மா அனுப்பி விடுவதும்கூட நடப்பதுண்டு. எதிலும் நிதானம் தப்பி அவசரப்பட்டால், ஆகப்போவது என்ன? பரீட்சை மண்டபத்தில் மிகையான அவசரத்திலும், மனதை நிதானமுடன் வைத்துக் கொள்ளாமலும் செல்லும் மாணவர்கள், மிக எளிதான வினாக்களைக்கூட எழுத மறப்பதை நாம் அறிகின்றோம் அல்லவா?

திருத்தமுடியாத தவறான பலவீனங்கள் எதுவுமில்லை. இவை குற்றங்கள் அல்ல. பலவீனங்களை எண்ணியே மனம் மேலும் பலவீனப்பட்டு விடக்கூடாது. நாம் எமது பலவீனத்தை உணர ஆரம்பித்ததுமே, இவைகளை மெல்ல மெல்லக் களைய முனையவேண்டும்.

சற்று நிதானமாகச் சிந்தியுங்கள். மனம் குழம்ப வேண்டாம். பதட்டமின்றிக் கருமங்களை ஆற்றத் தொடங்கிவிடுவீர்கள். செய்கின்ற செயலில் வெற்றியை ஈட்டத் தொடங்கிவிடுவீர்கள். ஆரம்பத்திலேயே குழறுபடிகளுடன் செயலாற்ற முனைந்தால், எமது சிந்தனை வசமிழந்து, தப்பும் தவறுமாகக் கருமமாற்றத் தொடங்கிவிடும். பிறர் எமது, செயல்களால், அவஸ்தைப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இந்த உலகில் எமது கருமம் மட்டுமே நடந்து கொண்டிருக்கவில்லை. ஒவ்வொருவரும், தத்தமது பணிகளில் கண்ணும் கருத்துமாக உள்ளனர். அவரவர்க்கு அவரவர் பணி உயர்ந்தது.

எனவே,

கோடிக்கணக்கான மக்கள் அலுவல்களில், உங்களது அலுவலும் ஒன்று என எண்ணுங்கள். எனவே மற்றவர் செயல்களுக்கும் மதிப்பளிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்.

RangaRakes
Tamilnavarasam.com

எமது வேலை மட்டுமே இந்த உலகில் நடப்பதில்லை. நாம் நிதானமாகச் செயல்பட்டால், எமது கருமங்களும் பூரணத்துவம் பெறும். அது ஏனையவர்களையும் பாதிப்படையச் செய்யாது. தேவையற்ற அவசரங்கள், அநாவசியமானவைகள். சிலவேளை அநாகரிகமாகவும் பிறருக்குக் காட்டும். செயல்களின் வெற்றிக்கு இவை உதவாது. அவசிய பணிகளை, கட்டுப்பாடான வேகத்துடன் செய்வோம்.

எம்மை மீறிய உணர்வுடன் கூடிய கருமங்கள் சுய கட்டுப்பாட்டை மீறிவிட வாய்ப்பு உண்டு. துரிதமான பணி என்பது, அவசரம், அவசரமாக கண்டபடி ஆற்றும் செயல் அல்ல; ஆற்றலும், கட்டுப்பாடும் தான் வேகமுடன் பணியாற்ற எம்மை வழிநடத்தும்.

கட்டுப்பாடு இன்றேல், வேகமுடன் செயலாற்ற முடியாது.


மோட்டார் வண்டி வேகமாகச் செலுத்த வேண்டியவருக்கு நிதான புத்தியும் திறமையும் வேண்டும். அத்துடன், வாகனத்தினை உடன் கட்டுப்படுத்த வாகனத்தின் இயந்திரத்தில் சகல அம்சங்களும், 'பிறேக்'கும் தகுந்த முறையில் செயல்படவேண்டும்.

இவை போலத்தான் எமது கருமங்களின் செயல்பாடுகளை வழிநடத்துதலுமாகும்.

சகல கருமங்களையும் மெதுவாக ஆற்ற முடியாது. அதுபோலவே, சகல வேலைகளையும் வேகமாகச் செய்ய முடியாது. அளவறிந்து தேவைகளின் பரிமாணம் அறிந்து, உகந்தபடி பணியாற்றுவோமாக.



# நடிப்பும் நிஜமும்



நாம் சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாதிரி, நடிக்கவும் வேண்டியிருக்கின்றது. இது போலியானதா அல்லது உண்மையானதா என்பது வேறு விடயம். நாங்கள், மற்றவர்கள் மனம் கோணக்கூடாதே என்பதற்காக நடிக்க வேண்டியிருக்கின்றதே. எல்லோருமே இந்த விஷயத்தில் இந்தக் காரியத்தை விரும்பியோ விரும்பாமலோ செய்து கொண்டிருக்கின்றார்கள்.

எல்லா நியாய அநியாயங்களையுமே தட்டிக்கேட்க முடிகிறது இல்லை. நாம் நினைத்ததை, மனதில் பட்டதைக் கொட்டித் தீர்த்துவிட முடியாது. நாம் ஒவ்வொருவருமே நினைத்தபடியே, எங்கள் எண்ணங்களை வெளிப்படுத்துதல் முடிகின்ற காரியமா என்ன? அப்படியே நான் சகலத்தையுமே சொல்லித் தீர்த்தால், இந்த உலகம் அமைதியாக இருந்துவிட முடியுமா? அனைத்து சங்கதிகளையும், பிறருக்கு அது உண்மையாக இருந்தாலும் சொல்ல முடியாத நிலையில்தான் அனைவருமே இருக்கின்றோம்.

உண்மைகளைக்கூட சந்தர்ப்பம் அறிந்தே சொல்ல வேண்டியிருக்கின்றது.

ஆனால் உண்மை வெளிச்சத்திற்கு வரும்வரை பொய்தான் ஆட்சி புரிகின்றது. நல்ல விஷயங்களைத் தெளிவாகப் பக்குவமாக எடுத்துரைக்க வேண்டும்.

RangaRakes Tamilnavarasam.com

உண்மையை உள்ளபடி சொல்லுவதற்கும், அதைச் சொல்லவேண்டிய வழிகளில் சொல்வதற்கும் நிதானமும், தெளிவும் வேண்டியிருக்கின்றது.

ஆனால், நன்மை செய்யப் புறப்பட்டவர்கள், அதை நடிப்பாகச் செய்யத் தலைப்படக்கூடாது. நன்மையை அடைவதற்காக, தீய செயல்களை ஆதாரமாக்கக் கூடாது.

தமக்கு நியாயம் கற்பிக்க, வேண்டாத குற்றங்களைக் கூட சரி, என்று வாதிடுபவர்கள் தொகை கூடுவதனாலேயே குற்றவாளிகள் தொகையும் கூடிக்கொண்டே செல்கின்றது. சமாதானம் பேசி சமாளிப்பது. உண்மைகளை மறைப்பது என்பது உடனடியாகவே தெரிந்து விடுகிறது. என்றாலும் இதை தவறு இழைப்பவர்கள் ஒத்துக் கொள்ளுவதில்லை.

பிறரிடம் இருந்து மட்டும் உண்மைகளை எதிர்பார்க்கும் நாம், உண்மையாக வாழ முனைதல் அவசியமல்லவா? எமது ரகசியங்களைப் பூட்டி வைக்கும் நாம், பிறர் ரகசியங்களை ஆராயத் தலைப்படலாமா?

எப்படியாயினும்,

ஒருவர் தனிப்பட்ட சங்கதிகளை ஆராயாது இருப்பது நல்லதுதான். ஆயினும் ஒருவருடைய பண்பு, இயல்புகள் திரிபு பட்டு, கெட்டழிந்து செல்லுமிடத்தும், பிறர் அதைக்கண்டு பேசாதிருக்க முடியுமா?

> உண்மை வெளிச்சத்திற்கு வரும்வரை பொய்தான் ஆட்சி புரிகிறது. பிறரிடமிருந்து மட்டும் உண்மைகளை எதிர்பார்க்கும் நாம், நாமும் உண்மையாக வாழ முனைதல் அவசியமான ஒன்றல்லவா? எமது இரகசியங்களைப் பூட்டி வைக்கும் நாம் பிறர் இரகசியங்களை ஆராயத் தலைப்படலாமா?



எனினும், பிறர் விஷயங்களில் புகுந்து கொள்ளுதல் நாகரீகமன்று. இதனாலேயேதான், இறைவன், பிறர் மனதில் உள்ள ரகசியங்களை மற்றையோர் அறியாவண்ணம் பூட்டி வைத்திருக்கின்றானோ என எண்ணத் தோன்றுகின்றது.

இதனாலேயே தான் நாம் எல்லோரிடமும் சகஜமாகப் பழக முடிகிறது. ஒருவர்க்கொருவர் என்ன எண்ணம் கொண்டாலும் சரி, உலகம் இயங்குவதற்கு, மனத்திரை அவசியமாகின்றதே.

என்றாலும், சில வேளைகளில், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், ஒருவர் பற்றிய எண்ணக் கிடக்கைகள், மற்றவர்க்கும் தெரிய வரும்போது நடைபெறும் அவலங்களைக் காணும்போதுதான் பிரச்சினைகள் எல்லாமே வெளிவருவதில் உள்ள தாக்கங்கள் எமக்குப் புலப்படுகின்றன.

கணவன் மனைவிக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும், நண்பர்கள் தமக்கிடையேயும் கூடச் சில விஷயங்களை மனதில் பூட்டி வைப்பதே சரிபோலப் படுகின்றது. சில ரகசியங்கள், அம்பலமாவதால், அவை மரணத்தில் முடிகின்ற கதைகளை, நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள்.

நாம், தொண்டு செய்கின்றோம் எனக் கூறிக்கொண்டு பிறர் காரியங்களில் மூக்கை நுழைக்கக்கூடாது. கண்டிப்பதற்கும் திருத்துவதற்கும், உண்மையை வெளிக்கொண்டு வருவதற்கும் கூடச் சில வழிமுறைகள் உண்டு.

சாதாரண வாழ்வில் நாம் சில விஷயங்களைச் செய்து முடிப்பதற்காக, எம்மை நாம் மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கின்றது. இதில் தப்புக் கிடையாது. அலுவலகத்தில் மேலதிகாரி தன் பணியாட்களைக் கடிந்து கொள்கின்றார். அப்போது அந்தப் பணியாள் பணிவோடு அதைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார். உண்மையச் சொல்லப்போனால், அவன்

RangaRakes Tamilnavarasam.com

உள் மனது, அவ் அதிகாரியைத் திட்டித் தீர்த்துக்கொண்டிருக்கும். இருப்பினும், அதை வெளியே காட்டிக் கொள்ளாது, சிரித்து, மழுப்பி சரி... ஐயா, சரி... ஐயா... நீங்கள் சொல்வதுதான் சரி... என்று ஒத்து ஊதி, சமாளித்து வெளியே வந்துவிடுகின்றார். இந்த நேரத்தில் தன் மனதில் பட்டதைக் கூறினால், அவ்வதிகாரி அதை ஏற்பாரா... அதை ஏற்கும் மனநிலையில் இருப்பாரா? சரி... சரி பின்னர் பார்ப்போம் என நடித்துச் சமாளிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இப்படி எதிரும், புதிருமாகச் சண்டை போட்டால் காரியமாகுமோ? யார் அல்லல் படுவார்கள்?

குழந்தை அழுகிறது; வீட்டில் சுவாரசியமாக நாவல் படித்துக் கொண்டிருக்கும், தாய் உடனடியாக ஓடிவந்து அதனைச் சமாதானப்படுத்துகிறாள். தனது அலுவல் பாதித்ததினால் ஏற்பட்ட கோபத்தை உடன் வெளிப்படுத்த முடியுமா? உடன் தன் கோபத்தை எண்ணத்தை மறைத்துச் சிரித்து ஏதேதோ, செல்லக் கதைகளைக் கூறி குழந்தை அழுகையை நிறுத்தி விடுகின்றாள்.

எமது உணர்ச்சிகளை எல்லா இடங்களிலும் உடன் வெளிப்படுத்திவிட முடியுமா? நாம் பொய்மை கலவாத நடிப்பு நடிக்க வேண்டியிருக்கின்றது. வஞ்சகம், காழ்ப்பு உணர்வுடன் கலந்த நடிப்பு ஏமாற்றுகின்ற வேலையே தவிர வேறில்லை.

எங்களால் முடியாத கருமங்களைச் செய்யமுடியும் எனக் கூறுதல் கூடாது. எல்லாம் தெரிந்தவர்கள் போல் பாசாங்கு செய்பவர்களாலேயே, சமூகம் அல்லல்படுகின்றது. தெரியாததைத் தெரிந்ததாக காட்டிக்கொள்பவர்களும், அதனையே நம்பிப் பலர் நட்டாற்றில் கைவிடப்படுவதையும், மேலான கஷ்டம் அனுபவிப்பதனையும், நடைமுறை வாழ்வில் கண்டிருப்பீர்கள்.

பொய்மையான ஏமாற்றுக்காரர்களைவிட, ஏமாறுபவர்களே அதிக தவறு விடுகின்றார்கள். ஏமாற்றுபவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பதே மிகப் பெரிய தவறு ஆகும். சுய லாபத்திற்காக



ஒருவரைத் தகுதிக்கு மீறி இந்திரன் என்றும், சந்திரன் என்றும் முகமன் கூறுவதையும், அதனைப் பாராட்டுப் பெறுபவர் தலையாட்டி அங்கீகாரம் கொடுத்து ஏற்றுக் கொள்ளுவதும், எவ்வளவு கீழ்த்தரமான வேலை! சுமுகமான இயல்பு வாழ்விற்காகவும், பிறரையும், சமூக பொது நலன்களைப் பாதிக்காமலும், அனுசரித்துப் போவதற்காக, எம்மை நாம் மாற்றிக் கொள்ளுதல் அவசியமாகின்றது. செயற்கைத்தனமான, வேண்டுமென்றே செய்யப்படும் செய்கைகள் எந்த நேரத்திற்குமே பொருந்தி வராது. இதனை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

போலியான வாழ்வு வாழ்ந்து, நடிப்பவர்கள் செய்யும் காரியங்களால், நிஜமான மனிதர்கள்கூட, நம் கண்முன் மறைந்து போய் விடுகின்றனர். அத்துடன் விபரம் தெரியாது நடிப்பவர்கள், அகப்பட்டுக் கொண்டதும், அவர்களின் உண்மை வாழ்வைக்கூடச் சமூகம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கிவிடும். நடிப்பு நிஜமல்ல எனத் தெரிய வரும்போது, அவனது நிஜங்கள்கூட அஸ்தமித்து விடுகின்றன. இது ஒரு பரிதாப நிலை. நல்லவர்கள் போலியாக நடிக்கமாட்டார்கள். சந்தர்ப்பவசமாக நடிக்க முற்பட்டாலும் அகப்பட்டுக் கொள்கின்றார்கள். உண்மையான தொண்டு செய்யாத அரசியல்வாதிகளும், பொதுநல வாதிகளும் தம்மை மறைத்துவைத்துக் கொள்ளும் கலையினால் நிஜங்களைப் பொசுக்கிவிடலாம் என எண்ணுகின்றார்கள். ஆயினும், அவன் விரித்த வலையில் அவனே சிக்கும்போதுதானே சமூகம் விழிப்படைகின்றது. உலகம் பல சந்தர்ப்பங்களில், சரியானவைகளைக் கண்டுகொள்ள, நீண்ட கால அவகாசத்தை எடுத்துக் கொள்கின்றது.

நிஜங்களை மட்டும் நம்பி வாழ்கின்றவர்களுக்குத் தொல்லைகளும் தோல்விகளும் இல்லை. தற்காலிகமாகத் தப்பித்துக் கொள்ளப் பொய்களிடம் புகலிடம் தேடாதீர்கள். நீண்ட கால வெற்றிகளைப் பெற குறுகிய கால நன்மை தரும்

RangaRakes Tamilnavarasam.com

பொய்மைகள், எமது ஆத்மாவை அலைக்கழிக்கும். எமக்கு நாம் சொல்லும் பொய்களே மிகவும் கொடூரமானவை. இந்தப் பொய்கள் உள் இருந்தே அரித்து உருக்குலைக்கும். புறத் தாக்கங்களைவிட, அகத்துள் நடக்கும் போராட்டங்கள் வலுவானவையாகவும், தாங்கிக் கொள்ள இயலாதவையாகவும் இருக்கின்றன.

உண்மையைச் சொல்லப் போனால், எமது பொய்மைகளால் பிறரைவிட நாங்களே தகிக்கப்படுவோம்.

நிஜங்களே எமக்குச் சொந்தங்கள் என்போம்.



RangaRakes Tamilnavarasam.com

# அம்மா

பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

*வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 02*


*சிந்தனைக் கட்டுரைகள்*

RangaRakes

Tamilnavarasam.com

# வாழ்வியல் வசந்தங்கள்

## ( பாகம் – II )




இளமை சுதந்திரமான இயந்திரம். இதற்கு ஆசை, அபிலாசைகள் ஏராளம். அனைத்துப் பிரிவினரிடையேயும் இருந்து அன்பை மட்டும் எதிர்பார்க்கும் குணமும் தாராளம். இளையவர்களின் துணிச்சல்களை ஆணவமாகக் கருதவேண்டாம். இது இவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட வரப்பிரசாதம். சகல உயிர்களுமே இளமையில் அழகும், மெருகும் கொண்டவை. இளமையின் வேகத்தை உற்சாகத்தின் உலகம் நன்கு பயன்படுத்தி கொள்ளவேண்டும்.

---

இளமை எழிலானது, வலுவானது, பொலிவானது, ஆரோக்கியமானது. இதன் அழகில் சொக்கித்துப் போகாதவர் யார்? புதியன எதுவுமே அழகுதான்.

RangaRakes

Tamilnavarasam.com

புதிதாகப் பூத்த பூக்கள்,

புதுப்புனல், புதிய ஊற்று நீர், புதுமழை.

மெல்லன அரும்பும், புல் நுனி துளிர்ப்பு,

அத்துடன்,

குருத்தாக விரிந்து, சிரிக்கும் குழந்தை, குமரியின் கண்கள், புது மனைவியின் புன்னகை, புதிதான காதலியின் ஸ்பரிசம்.

இன்னும்;

இளஞ்சூரிய வெப்பம், இளம் தென்றல் காற்று, மூன்றாம் பிறை.

மேலும்,

புத்தம் புதிதாய்ப் பறித்த கனிகள், அன்றே சமைத்த அறுசுவை உணவுகள்.

புதிதான வாகனம், போட்டுக்கொள்ளும் நலுங்காத உடைகள், இத்தனையுடன் கூட மேலும் எத்தனை எத்தனையோ...

இளமை எப்பொழுதுமே மிடுக்கும், வனப்புமானதே.

முதுமை கொண்டோரும், கழிந்த இளமையை நினைந்து உருகுகின்றார்கள். சற்றே மனம் சங்கடப்பட்டாலும், தம்முன்னே தவழும் குழந்தையைக் கண்டு, தாங்களும் குழந்தைகள் ஆகின்றார்கள். இளைய தலைமுறைகளின் குறும்புகளைப் பார்த்து, பெரியவர்கள் இறும்பூதெய்துகின்றார்கள்.



வயது முதிர்ந்த தம்பதியிடையே வற்றாத அன்பு இருந்தால், என்றும் அவர்கள் இளமையைப் பரிமாறிக் கொள்ளுபவர்களாகவே ஆகிவிடுகின்றனர்.

இளமை, அழகாக அசையும்; துள்ளு நடை பயிலும்; தானும் ஆடும்; பிறரையும் ஆட்டுவிக்கும். தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் சுறுசுறுப்பானவர்களாக மாற்றும்.

இளமை சுதந்திரமான யந்திரம்.

ஆனால் இதற்கு ஆசை. அபிலாசைகள் ஏராளம். அனைத்துப் பிரிவினரிடையேயும் அன்பை எதிர்பார்க்கும் ஆர்வம் தாராளம்.

இயற்கை எவர்க்கும் என எண்ணாது, அனைத்திற்குமே தானே வாரி வழங்குகின்றது. இளமையானது குறுகிய எண்ணங்களைக் குறைத்தே விடுகின்றது.

இளையவர்கள் தன்னலமற்று, நிமிர்ந்து நடப்பதைக் கண்டு ஆணவம் எனச் சொல்வதுதான் மடத்தனமானது.

சின்னவர்களைக் கண்டு பெருமைப்படவேண்டும்; பொறாமைப்படலாமா?

இந்த வாழ்க்கை அழிந்து போவதில்லை. பதிவுகள் என்றுமே நிரந்தரமானவை.

எண்ணங்களில் இளமை கொஞ்சினால், எதுதான் முதுமை? செயலில் புத்துணர்ச்சியையும், புதுமைகளையும் எந்த வயதிலும் கண்டு கொள்ளலாம்.

RangaRakes Tamilnavarasam.com

இந்தக் காலத்துப் பையன்கள் ஆவேசம் கொண்டவர்கள் என்று கூறுகின்றார்கள். முதிர்ந்த சிலர் மூச்சுமுட்டப் பேசி, ஓய்ந்தபோதும், இவர்கள் தோள் கொடுக்கத் தயாராகி வருவதைக் கண்டு வரவேற்க வேண்டுமல்லவா? புதிய சிந்தனை செய்து, புது வாழ்வினை வாழத் திடசங்கற்பம் செய்து, அவ்வண்ணமே உலகையும், வாழ்விக்கப் புறப்பட்ட சிங்கங்களை நாம் தங்கம் எனப் போற்றி, ஊக்கம் நல்க வேண்டுமல்லவா?

வறுத்தெடுத்த கரு மனம் கொண்ட, வக்கிர புத்தி கொண்டோர், எதற்கெடுத்தாலும் நல்லவற்றைக் கூடப் பொல்லாதனவாகப் புனைகதை கூறுதல் சிறுமைக் குணமென்பதில் என்ன ஐயா, ஐயம் உண்டு?

வேகமும் தாகமும் கொண்டு உற்சாகமாகப் புறப்பட்ட இளம் தலைமுறைகள் புதிய பூமியை மீண்டும் மீண்டும் பிறக்கச் செய்ய வல்லவர்கள். இருக்கின்ற பூமிக்குள்ளே புதிய பூமிகளைப் பூக்கச் செய்வது இவர்கள் கடமையாகிவிட்டது.

கோழிக்குஞ்சின் குதூகலத்தைத்தான் சின்னக் குழந்தைக்கும் இறைவன் கொடுத்தான்.

குட்டி நாய் குதிபோட்டு ஓடி, வாலாட்டும் சந்தோஷ மிதப்பினைத்தான் சின்னக் குழந்தையும் கையசைத்து, வாயசைத்து சிரித்துக் காட்டுகின்றது.

எனவே இறைவன்,

எல்லோருக்கும் இளமை சந்தோஷங்களை ஒன்றாகத்தான் ஈந்தான்.



அவன் ஒரே நோக்காகவே பார்க்கின்றான்.

இவை ரசிக்கத்தக்கவை; பொதுவானவை. இளமையே பொதுமைதான். எந்த நாட்டு இளைஞனும் தன் சுய வெளிப்பாடுகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றான். ஏன் ஆட்சிகளையே மாற்றிக் கொண்டிருக்கின்றான். மக்கள் தொகையில் கணிசமான சதவிகிதம் இவர்கள் ஆட்சிக்குட்பட்டதே. எனவே மாற்றத்தை உண்டாக்கவும், மாற்றத்தையே மாற்றியமைக்கவும் இவர்களால் முடியும். செய்து கொண்டும் இருக்கின்றார்கள். இவர்கள் கொடுப்பதை உலகம் ஏற்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றது. ஏன், மக்கள் பெற்றுக் கொண்டு மிருக்கிறார்கள். நாம் நினைக்க முடியாத அளவிற்கு களையோடும், புதுப்பொலிவோடும், பொலிந்து வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். இவர்கள் சுகங்களை வழங்குவதைவிட, உலகிற்காகவும் தம் குடும்பங்களுக்காகவும் பெரும் துன்பங்களையும் ஏந்துபவர்களாகவும் இருக்கின்றார்கள்.

பண்டைய சிந்தனைகளைப் படிப்பதும், பெரியோரை மதிப்பதும் இன்றைய தேவையாக உள்ளது. இதனை உணர்ந்தாலே போதும். பழமையின் தாத்பரியத்தினைத் தனதாக்குவதுடன் அதனுள்ளே தனது சொந்த சிந்தனைகளையும் உட்புகுத்தினால் உலகம் புது வடிவம் பெறுமல்லவா? இதில் என்ன சந்தேகம்?

உழைப்பதும், வழங்குதலும் புதிய சமுதாயத்தினால் முடித்து வைக்கக்கூடிய காரியங்களே.

இளைஞர்களுக்குள்ளே பேதங்களைக் களையும் பணியினை பெரியோர் செய்யவேண்டும். இளைய சமூகம்

RangaRakes Tamilnavarasam.com

கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்குள் மோதுவது, அவர்கள் பலத்தை, கல்வியை முளையிலேயே கருக வைக்குமல்லவா?

பெரியோர்கள், தங்கள் மூலம் பெற்ற இனங்களைக் குறை பேசாது, ஏதாவது உருப்படியாக நல்லன செய்தலே சிறப்பானதாகும். குறை காண்பது தங்களைத்தாமே தாக்கும் செயல். எல்லாமே பரிணாம வளர்ச்சி என்று கூறுபவர்கள், சின்னவர்கள் செயலைச் சினந்து நோக்கலாமா?

வளர்ந்து வரும் சமூகத்தைப் பார்த்து பழங்கதைகளை மட்டும் சொல்லிக்கொண்டா இருப்பது? எடுத்ததற்கெல்லாம், 'அந்தக்காலத்தில்...' என்று இனிமேலும் பேசலாமா?

அந்தக் காலத்துச் சொந்தக்காரர்கள் பேசுபவர்களே, கொஞ்சகாலத்தில் இளைஞர்களும் அந்தக் காலத்தவர்களாக ஆகப் போகின்றவர்கள். எனவே எந்தக் காலம் மட்டும் இனிமேல் பேசிக் கொண்டிருக்கப் போகின்றீர்கள்? காலத்தின் தேவைகளுக்கேற்ப உலகம் மாற்றமடைந்து வருகின்றது. மாறியே ஆகவேண்டியே சூழ்நிலை.

வளர்ச்சி என்பது கூட, முன்னைய காலத்தினைக் கிண்டலடிப்பது அல்ல. அதன் தொன்மைச் சிறப்பைத் தோண்டி எடுத்து.... ஏற்பதுமாகும். உண்மையில், வளர்ச்சிகளின் 'மூலம்' ஒன்றுதான். 'அ' என்றுமே 'அ' ஆகவே இருக்கும். இது மாறுவதில்லை. அதன் தொடர்ச்சியான சிந்தனைகள் தொடர்ந்தாலும், ஆரம்ப ஞானத்தின் அடிப்படையிலேயே புதுமைகள் புலப்பட ஆரம்பிக்கின்றன.



எனவே, முதியோர் இளையவர்கள் பற்றி பயம் கொள்ளத் தேவையில்லை. நல்லதுக்கென ஏற்றுக்கொள்ள வேண்டியதே.

புதிய பாதையில், புதியவர்கள் செல்லும்போது, நாமும்கூடச் செல்லுவோமே. பெரியோர்கள் பாதம் பதிந்த சுவடுகளிலேயே இளைஞர்கள் தங்கள் தடங்களை இட்டுச் சென்று கொண்டிருக்கின்றார்கள். புதுமைகள் எத்தனை செய்தாலும் அது பழமையின் சின்னத்தினை அடியொற்றியே அமைந்ததாகி விடுகின்றது. புதுமை, பழமைக்கு முற்று முழுதுமான எதிர்மறை அல்ல. பார்வைக்கு எல்லாமே மாற்றமாகவே புலப்பட்டாலும் உருமாற்றங்கள் 'கரு'வைப் பாதிக்காமல் இருந்தாலேயே உலகை அது சென்றடைய முடியும். அதுவே ஆக்க சக்திக்கும் இடவல்லது.

பரந்த உலகம், விரிந்த எண்ணங்களுக்குள் ஆட்படவேண்டும். புதுமைகள் படைக்கப்படுதலை எல்லோருமே எதிர்பார்க்கின்றார்கள்.

முறுக்கேறிய நெஞ்சத்துடன் எழுந்து, கொள்கைப் பிடிப்பினை அழுந்தப் பற்றினால் அதன் ஆளுமைக்கு நிகர் ஏது? துணிவு, இளைஞர்களுக்குச் சொந்தம். வெற்றியை நோக்கிச் செல்லும் இளம் சந்ததியர்களாலேயே பயமின்றி பயணங்களை மேற்கொள்ள முடியும்.

அடுத்த வேளைக்கு நான் என்ன செய்ய எனத் தன்னை மட்டுமே கருதாது, சுயநலமற்ற தீர்க்க சிந்தனையுடன் செயல்படும் செயல்திறன் இள ரத்தங்களுக்கே உரித்தான, விசாலமான குணநலனுமாகும்.

RangaRakes Tamilnavarasam.com

எந்த நீண்ட பயணங்களும் செயல் திறனால் பாதை குறுகியதாகிவிடுமன்றோ! பயம் என்பது இல்ல. வயதில் தானே பெரும் சுமைகளையே, வெறும் தூசு என எண்ணும் இயல்பு வருகின்றது!

யேசு கிறிஸ்துநாதர், முகம்மது நபிநாயகம், போன்றவர்களும், சம்பந்தர், மெய்கண்ட தேவர், மகா அலெக்சாந்தர், விவேகானந்தர், பாரதியார் என எல்லோருமே இளமையிலே உலகினை ஆட்கொண்டவர்கள்.

சாதனைக்கும், திறமைக்கும் எல்லைகள் உண்டா?

கருவிலேயே நல்லவற்றைகளையே நினைந்து பெற்றெடுக்கும் பெற்றவர்கள் அற்புதமான சிற்பங்களை உவந்தளித்து, நானிலத்தை மேலோங்கச் செய்கின்றார்கள்.

உலகம், பராயம் பார்ப்பதில்லை.

இங்கு எல்லோரும் கரம் கோர்த்து உலகை வலுமிக்கதாக மாற்றவேண்டும். இளமை அதற்குத் துணைபோகும். திறமைக்கு அணைபோட முடியுமா?

இது தொடர்ந்து வளர்ந்துகொண்டே...

வளர்ந்துகொண்டே...

✷

*- வீரகேசரி, 25-2-2005*






*ஆயிரம் கோடி வாத்தியங்களின் இசை வெள்ளமும், அத்தனை சங்கீத வித்துவான்களின் குரல் இசையும் அம்மா, எங்களை அழைக்கும்போது அழைக்கப்படும் குரல் முன் நிகராகிப்போமா? உலகின் அழகுகள் எல்லாம் திரண்டுவரினும்கூட ஒவ்வொருவனுக்கும், தனது தாய்தான் அதிகூடிய கொள்ளை அழகுடைய தேவதையாகத் தெரிகின்றாள். இவள் இதயசத்தம் ஓய்வதில்லை. இதன் சத்தமூடாகவே இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கின்றது இந்த உலகம்.*

---

## 'அம்மா'

இந்தச் சொல்லை நீங்கள் உச்சரித்ததும் ஒரு வினாடி, உங்களுக்கு ஏற்படுகின்ற உணர்வு அலைகளைச் சற்றே அனுபவித்துவிட்டுச் சொல்லுங்கள். எப்படிப்பட்ட துடிப்புடன் ஆகர்ஷிக்கவல்ல ஈர்ப்புச் சக்தி உங்கள்

RangaRakes
Tamilnavarasam.com

இதயத்துள் ஊடுருவி நாதம் எழுப்புவதை அறிந்துகொள்ள வில்லையா?

என்னே அற்புதம்...!

'அம்மா' என்ற சொல்லிற்கு இத்தனை காத்திரமான, இன்பம் தரும் பாசமான அழுத்தமா? மனிதனுக்குத் தெரியும் - முதல் முகம் இவள் அறிமுகத்துடன் ஆரம்பம். சூரியக் குடும்பத்தில் உள்ள கிரகங்களுக்கிடையேயும், அண்டசராசரத்து நட்சத்திரங்களுக்கிடையேயான ஈர்ப்பு விசையிலும் பார்க்க இந்தச் சின்னஞ்சிறு பாசப் பிழம்பின் முன் இவற்றின் ஈர்ப்புக்கள் எம்மாத்திரம்? அம்மா என்கின்ற விசையின் சக்திதானே இந்தப் புவியின் சக்தி. இந்தப் பாசப் பிணைப்பின்றி வாழ்வின் அர்த்தம்தான் ஏது? தாயற்ற குழந்தைகளும் கண்காணாத தாயின் அன்பு நினைப்பிலேயே வாழ்ந்து வருவது பெரிய அதிசயம்தான்.

இவள் மணிவயிற்றில் மிதந்து, உருண்டு, உதைத்துப் பிரசவிக்கப்பட்டதால் ஏற்பட்ட பிணைப்பு, மனிதன் மரணமடையும்வரை, அவள் ஈந்த நினைப்புடனேயே சஞ்சரிக்கின்றானே!

ஆயிரம் கோடி வாத்தியங்களின் இசை வெள்ளமும், அத்தனை சங்கீத வித்வான்களின் குரல் இசையும் அம்மா என அழைக்கும் குரல் அழைப்பின் முன் நிகராகுமா? இந்த அழைப்பு சிறு குழந்தைகளுக்கு மட்டுமல்ல, எமக்கும் சுகமானது, இதமானது, பரிவானது, கரிசனம் கூடியது.

உலகின் அழகுகள் எல்லாம் திரண்டுவரினுங்கூட ஒவ்வொருவனுக்கும் தன் தாய்தான் அதிகூடிய கொள்ளை அழகுள்ள தேவதையாகத் தெரிகின்றாள்.



இவள் இதயம் அமைதியான படுசுத்தம். எனவே எல்லோருக்குமே தூய்மையின் திலகமாகத் தென்படுகின்றாள்.

பணத்தினைக் கருதாது, கண்டபடி திரியும் பிள்ளையைக்கூட ஓடோடி வந்து அரவணைக்கும் தன்மை வேறு எவர்க்கு வரும்? தான் பெற்றெடுத்த அனைத்துமே தாய்க்குப் பொக்கிஷங்களே.

தாய்மையைப் பொறுத்தவரை புராதன காலம், புதுமைக்காலம் என்ற வேறுபாடில்லை. அத்துடன் சகல ஜீவராசிகளும் தாய் அன்பை ஈந்தவண்ணமேயுள்ளன. வனத்துச் சிங்கம், புலிகளும், பறவை இனங்களும் கூட 'தாய்' நிலையில் இருந்து தன் குட்டிகளையும், குஞ்சுகளையும் பாதுகாத்துக் கொண்டுதான் இருக்கின்றன. எக்காலத்திலும் தாய் அன்பு நிரந்தரம்.

அது அப்படியே... அப்படியே... என்றும் மாறாமலேயே.

இன்னும், நாம் தெரிந்து கொள்ளவேண்டியது, பெண்கள் எல்லோருமே 'அம்மா'க்களே.

பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர், பெண்கள் அனைவரையுமே அன்னையாக வழிபட்டார். இன்றைக்கும் தமிழ்நாட்டில் சின்னஞ்சிறு பெண் குழந்தையைப் பெரியவர்கள் 'அம்மா' என்றுதான் அழைக்கின்றனர். இப்படி நாம் அழைக்கின்றபோது ஒரு தூய்மையான அன்பு பளிச்சிடுகின்றது. அத்துடன் இதைக் கேட்கின்ற அனைத்து பெண்களும் கனிவுமயமாகி தம்மைச் சுற்றி உள்ளவர்களை உறவுகளாக, நிர்மலமான தாய்மையின் உணர்வுடன் நோக்குகின்றனர். வழங்குபவள் தாய். இவள் இல்லை என்று

RangaRakes Tamilnavarasam.com

உரையாது, ஈந்து வருவதாலேயே பிறக்கும் எவர்க்கும் தனிமை என்கின்ற தவிப்பு இல்லாமல் போகின்றது.

சிலர் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். 'ஐயாவை விடுங்கள், அம்மாவிடம் கேட்போம்' என்பார்கள். வீட்டில் என்ன நடக்கின்றது? சின்னச் சின்ன விஷயங்களில் இருந்து காதல் சமாச்சாரம் வரை யாரிடம் மனம் விட்டுப் பேச முடிகின்றது. சமயத்தில் அந்தரங்க விஷயங்களைத் தாயாரிடம் கூறாமல் யாரிடம் போய்ச் சொல்ல முடியும்? அம்மா அடைக்கலம் கொடுக்கும் கலங்கரை விளக்காக இருக்கின்றபடியால்தான் எந்த மன உளைச்சலிலும் இவள் இருக்கும் ஸ்தரியத்தில் எதுவும் எம்மை அண்டாது. அத்தனை கரைச்சலையும் களைந்துவிடும் பலம் உண்டு என எண்ணுகின்றோம்.

அன்னை என்கின்ற மாதா உலகத்தவத்தின் உருப்பொருள். உலகம் இவளால் உருண்டு கொண்டு இருக்கின்றது. பிரசவங்களைச் செய்வதால் மட்டுமல்ல. கரிசனமாக வளர்ப்பதால், கனிவுடன் முழு மனிதனை ஆக்கித் தருவதனாலுமாகும். பெண்களைத் தெய்வமாக வழிபட்டது எமது சமூகமாகும். ஒவ்வொரு நாட்டிலும் சமூகத்திலும்கூடப் பெண்களைத் தெய்வமாக வழிபாடு செய்கின்ற முறைமையுண்டு. இங்கு ஒவ்வொரு பிரதேசங்களிலேயும் பாசத்தின், கருணையின் சின்னங்களாகவே போற்றப்பட்டு வந்தனர்.

மனித இனத்தை முழுமையாக சிருஷ்டிப்பதாலும் அதன் இயக்கத்தை நடாத்துபவளாக இருப்பதனாலும் அனைத்து மாந்தருமே பெண்மைக்கு முதலிடம் அளித்தனர்.



அன்னையர் தினம் என்று ஒருநாள் ஒதுக்கினால் போதுமா? தினம், தினம் இவர்கள் வழிபாட்டிற்குரிய தெய்வங்கள் அல்லவா? முந்தைய காலங்களில் தம் தாய், தந்தையரை வீழ்ந்து நமஸ்கரித்த பின்னரே அடுத்த கடமையில் ஈடுபட்டு வந்தனர். இன்றைக்கு இந்தப் பழக்கம் அவ்வளவாக இல்லை. அண்மையில் தொலைக்காட்சியில் ஒரு விளம்பரப்படத்தில் மனதைத் தொடும் காட்சியைப் பார்த்தேன். ஒரு பிள்ளை பாடசாலைக்குப் புறப்படுமுன் தனது தாய், தந்தையரை வீழ்ந்து வழிபடுகின்றான். அந்த நினைவு, பிள்ளையின் தகப்பனுக்கு உடன் வரவில்லை.

தனது மகன் செய்கையினால் மிகவும் வெட்கப்பட்டுத் தன் நிலையறிந்து, மகன் செய்தது போலவே தனது தாய், தகப்பனாரின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக் கடமைக்குச் செல்லுகின்றான். இன்றைக்கும், சிங்களச் சமூகத்தினரில் பெரும்பான்மையானவர்கள் எந்தக் காரியத்திற்குச் செல்லுமுன்னரும் காலையில் முதற்கருமமாகத் தாய், தந்தையரை வழிபட்டுச் செல்வதை வழக்கமாகக் கொண்டு வருகின்றார்கள்.

ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு உயிரையும் ஆதரிக்கும்போது அவள் தாய் ஆகின்றாள். திருமணமாகாத பெண்களும், குழந்தைகளைப் பெறாத பெண்களும், தமது குடும்பத்திற்கும், சமூகத்திற்கும், இயற்கையாகவே தன்னை அர்ப்பணித்துச் சேவைகள் செய்வதனால் இவர்களும் 'அம்மா' என்றே அழைக்கப்படுகின்றனர். பெண்களுக்கே உரிய நல் இயல்பே அனைவரையும் ஆதரித்தல்தானே. ஆண்டவன் செய்கின்ற அலுவல்களை இவர்கள் ஆண்டவன்

RangaRakes Tamilnavarasam.com

பிரதிநிதிகளாகச் செய்து விடுகின்றனர். எல்லா இடங்களிலும், எப்போதும் கடவுளைக் கண்டுகொள்ள முடியாது. எனவே தாயாரைப் படைத்தான் இறைவன் என்பது ஒப்பற்ற பொன்மொழியாகும். இவர்கள் முழுமையாகத் தம்மை உலகிற்கே அர்ப்பணிப்பதால், மாதரசிகள் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். நாடும், தேசமும் இன்றியே 'அரசிகள்' என்ற சொல் பெண்களுக்கு மட்டும்தானே உள்ளது.

திருமண பந்தம் மட்டும்தான் ஒருத்தியை 'அம்மா' ஆக்குவதில்லை. இன்று லட்சக்கணக்கான, இலட்சிய வேட்கை கொண்ட, சமூக மேம்பாட்டாளர் பெண்களாயிருந்தும் தம்மை முழுமையாக உலகிற்கு அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் ஒரு குடும்பத்திற்காகவல்ல பல குடும்பங்களுக்காக - ஏன் முழு நாட்டிற்காகக்கூட சேவைகளைச் சுமக்கின்றார்கள். இது அவர்களுக்கு இனிய சுமைதான். வீட்டில் செய்த சேவைகளே இறுதியில் நாட்டிற்கும் செய்வதனால் தலைவி என்கின்ற நிலைக்கும் வருகின்றார்கள். அன்னை தெரஸா செய்த சேவைகளை உலகம் அறிந்ததே. அவர் உலகிற்கே தாயானார். அரசியலில் இருந்தபோதும், சகலருமே ஏற்றுக் கொண்ட இந்திராகாந்தி, அன்னை இந்திரா என்றே அழைக்கப்பட்டார். பெண்களுக்கே உரித்தான பண்புகளுடன், துணிச்சலும் இணைந்து பெருமைக்குரிய பெண்மணியானார். என்னதான் பெண்கள் உயர் பதவி வகித்தபோதிலும் 'அம்மா' என்கின்ற ஸ்தானத்திலேயே தொடர்ந்தும் இருப்பதையே பெருமையாகக் கொள்கின்றனர்.

தாய்மையில் என்றுமே சோதனைகள் வரத்தான் செய்யும். இருந்தும்கூட இதனால் இவர்கள் மனம் சோர்வு



அடைவது கிடையாது. தனக்கு வாழ்வில் துன்பம் வருகின்றது என்று அறிந்தும்கூட அதனைச் சவாலாக ஏற்கின்ற பக்குவம் ஏற்படாது போனால், குடும்பங்களின் நிலை என்னவாகும். எதையும் எதிர்கொள்வதனாலேயே தாய் தாங்குபவளாக மாறுகின்றாள். கெட்டலையும் கணவன், புத்திகெட்ட பிள்ளைகள் என்பதனால் புறக்கணிக்காமல் இதயபூர்வமாக மன்னிப்பு அளிப்பதுடன் ஏற்றிப் போற்றி அவர்களை சமூகத்தில் வைக்க எத்தகைய இன்னல்களை, அவஸ்தைகளைப் படுகின்றாள்? உழைக்கின்ற கணவன் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போக, ஒவ்வொரு பிள்ளைகளும், ஒருவர் மாறி ஒருவராகத் தங்களுக்குரியதைக் கேட்க, கணவனுக்கும், பிள்ளைகளுக்குமாகவே வாழ்ந்து தன்னை கவனிக்காது தேக நிலை உணராது உழைக்கும் உத்தமிகள் அல்லவா? பணக்கார வர்க்கங்களின் நிலையினை விடுத்து, ஏனையவர்களின் குடும்பங்களின் தாய்மார்கள், பொருளாதார நெருக்கடியால், பிள்ளைகளை, கணவனை, கணவனைச் சார்ந்தோரைக் கவனிப்பதாலேயே உடல் நலம் கெட்டு உருக்குலைந்தே தேய்ந்து போகின்றார்கள். கற்பூரம் போல என்பார்களே, அது மாதிரி.

ஒரு நாளைக்கு மட்டும் அம்மா படுத்துவிட்டால் வீடுகளில் உள்ளவர்கள் படும் அவஸ்தைகளைப் பாருங்கள். பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவது எப்படி? கணவனை வேலைக்கு அனுப்புவது எப்படி? அத்துடன் வீடு வீடாகவா இருக்கின்றது? இவை சாதாரண காட்சிகள். தனது அச்சில் சுழலும் ஜீவன்களுக்காக தன் ஜீவனைப்பற்றிச் சிந்திக்காத தியாக தீபம் இந்த 'அம்மா' அல்லவோ?

RangaRakes Tamilnavarasam.com

அம்மா...!

நீ, எங்களைப் பத்து மாதம் சுமந்து பெற்றுவிட்டதும் உன் வேலையை முடித்துவிடவில்லை. ஒவ்வொரு வினாடிப் பொழுதும், எங்கள் விடிவிற்காய் உயிர் துடிப்புகளை அத்தனையையும் ஈந்து வருகின்றாய். எங்கள் வாழ்க்கை வரைபவள் நீ! நான் எங்கே இருக்கின்றேன், என்ன செய்யப் போகின்றேன் என்பது உன் உயிர் மூச்சோடு கலந்த எண்ணமாயிருக்கின்றபடியால், உன் எண்ணங்களின் வலுவினாலேயே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உன் முந்தானைச் சுற்றி வந்து கொண்டிருக்கும் சிறு குழந்தைகளாகவே இந்த வயது கடந்தும்கூட எங்களை நோக்குகின்றாய்.

உன் மடிமீது படுக்கும்போது, பறந்துபோகும் துன்பங்களால் நாம் ஆறுதல் பெறுகின்றோம். அந்த நினைவின் பசுமைகள் என்றும் நிலையான நினைவலைகளாகவே தொடர்ந்தும் இருப்பதனால் உன் மடிமீது நாம் கண்ட சுகங்களின் பயனை உன் நிழல் மீது குளுமை பெற்றவர்களாகவே இன்றும் இருக்கின்றோம். என்ன வயதுதான் எங்களுக்கு ஆயிடினும், உனை நினைந்தால் கண்கள் ஏன் கேட்காமல் குளமாகின்றன?

உன்னை நினைந்து தூங்குவது, நீ கனவில் வந்து என் கேசம் தடவ வேண்டும் என்பதற்காகவே. ஆயிரம் யானை பலத்திற்கும் மேலான பலம் உன் கருணைக் கண்களால் எமக்குக் கிடைக்கும். இந்தப் பாசமிகு பார்வை, பரிவான நோக்கு, என்னைக் குளுமைப்படுத்தி புதிய மனிதனாக மாற்றுகின்றது.

எந்த மனிதனையும் கேட்டுப் பாருங்கள்.



'ஏழு ஜென்மங்கள் உனக்கு உண்டு. எனில், நீ என்ன வரம் கேட்பாய்' என்றால், அம்மா... உன் மடி மீதுதான் - உன் வயிற்றிலேயே தொடர்ந்தும் பிறந்து கொண்டேயிருக்க வேண்டும் என்றுதான் கூறுவார்கள். ஏன் எனில் எவர்க்குமே அவர்களது தாயின் அன்புதான் ஏனையவர்களது அன்பைவிட மேலானது எனக் கருதுகின்றனர். பணக்கார அம்மா வயிற்றில் பிறக்கவேண்டும் எனச் சொல்லமாட்டான். தான் வாழ்ந்த காலத்தில் தன்னை வளர்த்த தாய்தான் ஒருவனுக்கு உயர்ந்தவளாய் அமைகின்றாள். எந்த நிலையில் உள்ளவர்களுக்கும் இது விடயத்தில் மேல் வர்க்கம் நோக்கி மனம் பாய்வதில்லை. பிச்சைக்காரியின் குழந்தைக்கு அதன் தாய்தானே பெரிதான புதையலாகத் தெரியும்?

உலகை வெறுத்த ஞானிகள்கூடத் தாயின் பிரிவினைத் தாங்க முடியாதவர்களாகின்றனர். எவ்வளவுதான் ஞானம் பெற்றாலும்கூட அன்னையை இழந்ததும் சோர்ந்து விடுகின்றனர். பட்டினத்தார் போன்ற ஞானிகளே, தாயின் பிரிவினால் கதறி அழுததைப் படிக்கும்போது நெஞ்சமே நெகிழும். எல்லாமே பொய் என்பவர்கள், மெய்யான அன்பு அன்னையிடமே இருப்பதனாலேயே அன்னையின் இழப்பினைத் தாங்கும் சக்தியை இழந்தவர்களாகின்றனர். எனினும் தாய் எனும் தேவதை மறைவதில்லை.

தினம், தினம் தாய்மார்கள் உதயமாகிக் கொண்டிருப்பதாலேயே உலகமும் விழிப்புடன் இருக்கின்றது. புதுப்புது ஜீவன்கள் குதித்து எழுந்து கொண்டிருக்கின்றன. உழைப்பை, விழிப்பை, தெம்பை,

RangaRakes Tamilnavarasam.com

அன்பை அளிப்பதற்காகத் தன்னைத் தேய்த்து வாசனையூட்டும் சந்தனக் கட்டையாகின்றாள். நாம் உறங்க, தான் விழித்தபடி இருக்கின்றாள். நாங்கள் வளர, இவள் உரமாகின்றாள்.

எனினும், மறையாத நித்திய வாழ்வு நல்கும் சிரஞ்சீவியாக இவள் சேவை இருப்பதனால், அம்மா எனும் உறவு மறையாத நிறைவுதான். வேராகவும், விழுதாகவும் தாங்கும் தாய் கண்ணீர் விடுதல் என்பதே உலகம் உதிர்க்கும் உதிரமும் ஆகும். தூங்காவிழிகளில் கண்ணீர் வருதல் கூடாது. இவளது எண்ணங்கள், கற்பனைகளைப் பிள்ளைகள் நிறைவேற்றல் வேண்டும். தனக்காக அன்றி, உலகில் உத்தமர்களாகப் பிள்ளைகள் உருவாகுதலையே ஒவ்வொரு தாய்மாரும் எதிர்பார்க்கின்றனர்.


அவள் தியாகத்தின் விலை - நற்பிரஜைகள் உருவாக்கப்படுதலே. அம்மாக்களுக்குப் பல வடிவங்கள் - தாயாக, தங்கையாக, தாரமாக, இன்னமும் நம் கண்முன்னே காணும் அனைத்துப் பெண்களுமே இவளது சொரூபங்களே.

தாய்மையைப் போற்றுதல் நம் கடன். ஒவ்வொரு பெண்ணையும் நாம் மதிப்பளித்துக் கௌரவப்படுத்துவது என்பதே அம்மாவின் வடிவில் இவர்களைப் பார்ப்பதனால் என்பதை உணர்வோமாக.

*

*- வீரகேசரி. 25-2-2005*






*சொல்லிக் கொடுத்தால் மட்டும் கருமங்களை ஆற்றும் நிலையில் இருக்கக் கூடாது. சுயசிந்தனை இல்லாவிட்டால், வெறும் ஜடமாகவே வாழ்ந்துவிட வேண்டியதுதான். சிந்தனை செய்த மகோன்னத புருஷர்களாலேயே, உலகம் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. எண்ணங்களை வளரவிடல் வேண்டும். முடக்கப்பட்ட எண்ணங்களால் மனித அறிவு வளம் வற்றி உலகை உயிர்ப்பின்றி வாழாமல் செய்துவிடும். சுயசிந்தனை வளமின்றி விஞ்ஞானமோ, மெய்ஞ்ஞானமோ வளர்வதற்கு இடமேயில்லை.*

சுயசிந்தனை மனிதனின் எண்ணங்களின் வளர்ச்சியை நோக்கிச் செல்வது ஆகும். அவன் தன்னைப் பற்றியும், புற உலகு பற்றியும் ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளான். எண்ணங்களைக் குவித்துப்

RangaRakes Tamilnavarasam.com

புது மெருகேற்றி சிந்தனை செய்தல் ஆறு அறிவு படைத்த மனிதனின் சிறப்பு இயல்பாகும். சுயசிந்தனை செய்வதற்கு என்ன தகுதி இருக்கவேண்டும் என்பதில்லை. முதலில் அவன் சிந்தனைக்குட்படுத்தவல்ல மனிதனாக இருக்கவேண்டும். படித்தவன், பாமரன், பணம் படைத்தவன், இல்லாதவன், ஜாதி பேதங்கள் சிந்தனை செய்வதற்குத் தேவையில்லை. "நீ என்ன படித்தவனா பெரிதாகப் பேச வந்துவிட்டாய்" என்று கூறுதல் அழகல்ல.

சிந்திப்பதுதானே மனித சுதந்திரம் என்று பேச்சளவில் கூறிவிட்டு சிந்தித்தவற்றைச் சொன்னால் தண்டனை என்றால் என்ன நியாயம்? மனிதன் தூர நோக்குடன் புதிய புதிய எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டியவனாகின்றான். பிறர் மூளையை மட்டும் நம்பி வாழாமல் நடைமுறை வாழ்வுக்கு இயல்பாகவும், அதே நேரம் ஒரே மாதிரியான நீண்ட வழிமுறைகளில் காலம், காலமாகச் சமூகம் நடை பயில்வதனைத் தடுத்து நிறுத்தவும் வேண்டியுள்ளது.

எத்தனை கோடி மக்கள் வாழுகின்றார்கள்! அத்தனை பேரும் சிந்தனா சக்தியை ஒருமுகப் படுத்துகின்றார்களா? சொல்லிக் கொடுத்தால் மட்டுமே கருமம் ஆற்ற வேண்டிய நிலையில் உள்ளோம். சொல்லிக் கொடுத்ததையே கேட்டு மனப்பாடம் செய்து பரீட்சை எழுதினால் அது ஒருவனது ஆக்கத்திறனை வலுப்படுத்திவிடுமா? ஒரு சாதாரண ஐந்நூறு ரூபாய் பெருமானம் உள்ள ஒலிப்பதிவுக் கருவி செய்யும் வேலையை மட்டும் ஒரு ஆறறிவு படைத்த மனிதன்



செய்ய வேண்டுமா? இதனால்தான் இன்று நுண்ணறிவு, உளவியல் தொடர்பான பாடநெறிகளை போதித்துப் பரீட்சை வைக்கின்றார்கள்.

உருவகித்தல், கற்பனை செய்தல் என்பது குழந்தைகளால் கூட முடியும் என்கின்றனர். வளர்ந்து வரும் மனிதன் தன் இயல்புக்கேற்ப பரிணாம வளர்ச்சியாகத் தொடர்ந்தும் சிந்தனை ஆற்றலை வளர்த்தும் வந்தால், உலகியல் புதிர்கள் எத்தனையோ விடுபட்டுப் போகும். படைப்பாளிகள், சிந்தனைகளைப் பிறர் மூலம் பெற்றும் கூடத் தமது சுய சிந்தனை மூலமே அதனை வளப்படுத்திக் கொண்டனர்.

விஞ்ஞானிகளும், ஞானிகளும், கலா விற்பன்னர்களும் சுயசிந்தனை வெளிப்பாட்டினை உருவாக்காமல் போனால் உலகம் வெறும் சடமாகத்தான் சுற்றிக் கொண்டிருக்கும். சாதாரணமான வாழ்க்கை முறைகளைச் சற்றே பாருங்கள்.

கணவன் மனைவியைச் சிந்திக்க விடுவதில்லை. அல்லது மனைவி கணவனைச் சிந்திக்க அனுமதிப்பதில்லை. ஆசிரியர்கள் எல்லோருமே தாங்கள் சொன்னதையே, செய்யச் சொல்கின்றார்கள். சாதாரண ஊழியன் சொல்லும் கருத்தை உயர் அதிகாரி கேட்பதில்லை. 'நான் சொல்வதைச் செய். அதுதான் உன் வேலை' என்று கூறுவார்கள். எங்குமே மேலான ஆதிக்க நோக்கு அல்லது வேறு வழிகளில் காரியம் ஆற்றுதலுக்குப் பயம் என்கின்ற காரணங்களினால் எத்தனையோ நல்ல அறிவாளிகள், மேலும் தங்கள் கருத்தை, எண்ணங்களின்

RangaRakes Tamilnavarasam.com

மேலான வெளிப்பாட்டினைச் சொல்லமுடியாமல் சோர்ந்தே போகின்றனர்.

கண்டுபிடித்தவனைக் கண்டுகொள்ளாத உலகம் கால ஓட்டத்தில் அவன் இல்லாதபோது, தலையில் வைத்துக் கொண்டாடுகின்றது. எனவே சுயசிந்தனை மூலம், நல்ல கருத்துகளைப் பிரசவிக்கின்ற கர்த்தாக்கள் எதற்கும் சோர்வடையக் கூடாது.

கிரேக்க ஞானி சாக்கிரடீஸ் கூறினார். 'உன்னையே நீ எண்ணிப்பார். அவன் சொன்னான், இவன் சொன்னான் என்று கூறாதே.' நீ என்ன எண்ணுகின்றாய்? எப்பேர்ப்பட்ட கூரிய சிந்தனை இது. நாம் கற்கும் நூலை வெறுமனே வாசித்து, மூளைக்குள் அடைப்பது மட்டுமா அறிவு? இல்லவே இல்லை. எக்கருத்தைப் பற்றியும் எடுத்து ஆராய்ந்து பார். பத்துப்பேருடன் இவை பற்றி உரையாடு, சிந்தனையைச் செதுக்கு, உலகோடு உறவாடி உன் அறிவை உராய்ந்து உண்மைகளைக் கண்டுபிடி. இதுவன்றோ தேடல். தேடல்தானே சுயசிந்தனைக்கு மூலாதாரம். கனவுகளை மறக்கக்கூடாது. கனவுகளைத் தேடி நனவாக்க முயல பெரும் வேட்டையில் ஈடுபடு.

சதா பறந்து கொண்டிருக்கும் உணர்வலைகளை முழுமையாக்கி - ஒன்றாக்கி எதுபற்றி நீ ஆராய எண்ணுகின்றாயோ அதில் மட்டும் புலனைச் செலுத்தி சிந்தனைக்குள்ளேயே உன்னை ஐக்கியமாக்கு. மனதால் முடியாதது எதுதான் உண்டு. மனம் தெளிவாக இருக்கும்வரை சுயசிந்தனைகளை பெருக்குவது எளிதானதே.



இன்று உலகில், வெறும் கண்காட்சிக்காக சிந்தனை வளம் முடக்கப்படுகின்றது. ஆரவாரமான உலகில் எப்படியாவது நுழைந்து நாலு காசு சம்பாதிப்பதற்காக எதையுமே வர்த்தகமாக்குவதால் நல்ல காரியங்களை எண்ணாமல் மனங்கள் அலைந்து கொண்டிருக்கின்றன. ஊடகங்கள்கூட நல்ல விஷயங்களை மூடி மறைக்கின்றன. கீழ்த்தரமான காட்சிகளை - செய்திகளைக் கடதாசியில் காட்டியவர்கள். படங்களாகவே உயிராக உலவவிட்டு விடுகின்றனர். சின்ன வயதினரையே குற்றம் காண்பவர்கள் மலிந்த உலகில் வயது போனவர்களே எதிர்காலத்திற்கேற்ற நல்ல எண்ணங்களை எழில் வண்ணங்களாகப் படைக்கத் தவறிவிடுகின்றனர்.

ஆராய்ந்து அவஸ்தைப்படுவதிலும் இருப்பதை அனுபவிப்பது மேல் என்றாகிவிட்டது. புதிய உலகில் புதுமை காணும் கலையில் மேற்கு உலகத்தினர் மிஞ்சிவிட்டார்கள் என்கின்றோம். இன்றைக்குத் தரமான இலக்கியங்கள், சினிமாக்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்று எதனை எடுத்தாலும், நாம் அவர்களுக்கு ஈடாக இல்லை என்ற குறை உண்டு. அவர்கள் புதிதாகச் சிந்தனை செய்கின்றார்கள். படைக்கின்றார்கள். ஒவ்வொரு படைப்பாளியின் சிந்திப்பிற்கும் கௌரவம் அளிக்கப்படுகின்றது. இங்கே என்ன நடக்கின்றன? அரைத்த மாவையே அரைக்கின்றார்கள். ஒரே மாவில் பலவித வடிவ பலகாரங்கள் அவ்வளவே. தற்சமயம், புதிய கோணத்தில் ஆராய்ந்த ஒரு விஷயம் என்றால் அது நிச்சயமாக, மேற்கத்தையவர்களைப் பார்த்து நகலை

RangaRakes Tamilnavarasam.com

எடுத்ததாகவே இருக்கின்றது. உதாரணமாக, ஒரு ஆங்கிலப்பாட்டினை எத்தனைவிதமாக நம்மவர்கள் நகல் எடுத்து தமது என உரிமை பாராட்டுகின்றார்கள்? இப்படியிருக்க,

ஏனைய துறைகள் பற்றிக்கேட்கவே வேண்டாம். சர்வதேச விருதுகளான நோபல், ஒஸ்கார் பரிசு போன்றவை எம்மால் பெறப்பட முடியாதவை அல்ல. இன்றைக்கு விஞ்ஞான, தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளில் நாம் முன்னேறி இருந்தாலும்கூட, ஏனைய நாட்டினருடன் சரி நிகராகப் போட்டியிடவேண்டும். நிச்சயமாக நம்மால் முடியும். நாம் சிந்திக்கும் சமூகத்தை வந்தனை செய்து வாழவைக்க வேண்டும்.


கேள்விப்பட்டேன், யாரோ சொன்னார்கள், அவன் அப்படிப் பேசினான் என்ற பேச்சுகளை விடுத்து, உண்மைகளை நோக்கி முன்னே ஓடி வருவோம். எங்கள் கிரகிப்புக்களை நற்சிந்தனை சார்ந்தவையாக அமைத்துக் கொள்வோம். ஞானம் ஒருவனைச் சிந்தனாவாதி யாக்குகின்றது என்பர். ஞானம் எங்கே இருக்கின்றது. அதுகூட உன்னுள்தான். அதனை வெளிப்படுத்திக் காட்டு. உன்னோடு பேசு. உலகத்தைத் தேடு. ஒளி பொருந்திய உலகில் இல்லாதது எதுவும் இல்லை. இருப்பதை உணராமல், முயற்சி செய்யாமல் எல்லாமே இல்லை என்று பேசிவிட முடியுமா? கையடக்கக் கருவியில், உலகை அளக்கும் மனிதன் தன்னை அளக்காமல் விட்டுவிடுதல் துரதிருஷ்டமன்றோ?



விஞ்ஞானமோ, மெய்ஞ்ஞானமோ சுயசிந்தனை வெளிப்பாடுகள்தானே எதனையும் புரிய வைக்கின்றது. அக வாழ்க்கை, புற வாழ்க்கை எதற்குமே சுயசிந்தனைதான் எங்களைச் சுத்திகரிக்கின்றது. நாங்களாக எதனையும் தேடிக்கொள்வதில் உள்ள நிறைவே தனியான திருப்தியன்றோ? இது ஒளியூட்டும் இதயத்தை உருவாக்கும். சிந்தனை வளத்தினை நமது சொந்த பலமாக்குவோம்.

✵ தினக்குரல் 22-05-2005

RangaRakes Tamilnavarasam.com




*நிகழ்காலத்தின் சிக்கன மூலமான வருமானங்கள்தான், எதிர்காலத்தின் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது. எல்லா காலத்திலும் ஒரே மாதிரியாக உழைத்துவிட முடியாது. வாழுகின்ற காலமே உழைக்கின்ற காலமாகக் கொண்டு, சிக்கனமாக வாழும் முறையைக் கடைப்பிடித்தேயாக வேண்டும். நாம் பாவிக்கும் பொருட்களைவிட வீணடிக்கும் பொருட்களே மிகையாக உள்ளன. இது உலக பொருளாதாரத்திற்கே ஊறு விளைவிப்பதாகும். சிக்கன வாழ்வு என்பது கௌரவக் குறைச்சலான வாழ்வு என்கின்ற மனோபாவம் மாறுதல் வேண்டும்.*

---

**சி**க்கனம் என்பது தேவையான செலவுகளைச் செய்வதற்கும், ஈகைக்கும் எதிரான செயல்பாடு அல்ல. தேவையற்ற அநாவசிய செலவுகளைத் தவிர்த்து, ஆக்கபூர்வமான செலவுகளை மட்டுமே செய்தலாகும். சிக்கனம் என்பது சேமிப்பு மட்டுமல்ல. சொல்லப்போனால்,



இது ஒரு வருமானமும் ஆகும். சிக்கன வாழ்வு மூலம் பெறப்படும் பணமோ, அன்றி பொருளோ தக்க சமயத்தில் பிறருக்கு வழங்கப்படுமாயின், இது ஈகையாகவும் பொருள்படுகின்றது. எனவே,

கட்டுப்பாடான சிக்கன வாழ்வுமுறை எமக்கு மட்டுமல்ல, சூழ இருப்போருக்கும் உதவுவதாக அமைந்தால் சிறப்பானதாகும். தனக்கும் தனது தேவைக்கு மட்டும் செலவுகளைக் கட்டுப்படுத்தினாலும்கூட, முடிவில் இன்னும் ஒரு சாராரை இவை தாக்காதுவிட்டால், சிக்கனம் சிறப்பானதேயாகும். செலவு செய்தல் என்பது, வாழ்வில் சாதாரண நடைமுறைதான். உலகில் பொருட்களும், பணங்களும் ஓர் இடத்தில் நிற்கமுடியாது. இவற்றைப் பெறுவதில் உள்ள சிரமங்களை நாம் அறிவோம். எனவே பெற்ற பொருட்கள், பணங்களைச் செலவு செய்யும் போதுதான் மனிதன் அவதானத்துடன் இருக்க வேண்டியவனாகின்றான்.

உடலாலும், உள்ளத்தாலும் பங்கம் ஏற்படாதவாறு, சிக்கனமாக வாழ்வது என்பதே ஒரு பெரும் கலையாகும். முயற்சிகள் அனைத்துமே சிறந்த வகையில் பேணப்பட வேண்டுமல்லவா? துவாரம் உள்ள பாத்திரத்தில் நீரை ஊற்றலாமா? ஆற்றிலே புளியைக் கரைக்கலாமா? மனித முயற்சிகள் பயனற்ற வகையில் செலவு செய்யப்படுதல் உலகிற்கு உவப்பானது அல்ல. கஷ்டப்பட்டு உழைத்துக் கண்டபடி செலவு செய்தல் கெட்டிக்காரத்தனமா – இல்லை முட்டாள்தனமான வீம்பு வேலைதானே?

எப்படியும் அனுபவித்துவிட வேண்டும்; கஷ்டப்பட்டதன் பயன் அனுபவித்தலே என்று ஒரு சாரார்

RangaRakes Tamilnavarasam.com

கூறலாம். ஆனால் அனுபவித்ததன் பின் நடக்கும் சங்கதிகளுக்கு யார் பொறுப்பாளி? இருப்பதை வகுத்துப் பிரித்து, உள்ளத்திற்கேற்ப தானும், தன்னைச் சார்ந்தவர்களும் வாழுவதே வாழ்க்கை. இருக்கும் செல்வத்தில் சிறு தொகையேயாயினும் சேமித்தலுக்காக ஒதுக்குதல் மனிதனின் கட்டாயக் கடமையாக வேண்டும். மனித முயற்சியின் பயன் என்பதே, வாழும் முறையில்தான் தங்கி உள்ளது. கண்டபடி செலவு செய்தலால் பொருள் நஷ்டம் மட்டுமல்ல, மனதுக்கும் கஷ்டம்தான். இதன் பலாபலனாக, உடல் நலன் மட்டுமல்ல, மற்றவரிடம் எதிர்பார்த்துக் கையேந்தும் அவலநிலைக்கும் ஆளாக வேண்டிவருமன்றோ.

சாதாரணமான ஒரு ஏழை கூட நல்லவிதமாக தன் வருமானத்திற்கேற்ப ஆசைகளைச் சுருக்கி, தேவைகளைக் குறைத்து வாழும்போது, வசதி படைத்தவர்களும், நடுத்தர வர்க்கத்தினர் மட்டும் ஏன் பொருத்தமான வாழ்க்கை வாழ முடியாது? எதிர்காலத்தில் காசு கிடைக்கும் என்கின்ற எதிர்பார்ப்பினால், இருக்கின்ற பொருளைத் தொலைத்து பின் வருத்தப்படுவது அறிவீனமாகும். நிகழ்காலத்தின் வருமானங்கள்தான் வருங்கால சிக்கலற்ற வாழ்வைத் தீர்மானிக்க உதவுகின்றன. எல்லா நேரங்களிலேயும் உழைப்பு நிரந்தரமானதல்ல. புரிந்து கொள்ளுவோம்.

பிறர் தருவார்கள் என நம்பி ஏமாறுபவர்களே ஏராளமாக உள்ளனர். தவிர, பெற்ற பிள்ளைகூட கடனை அடைப்பான் எனக் கருதிக் கடன் கேட்கலாமா? உங்களால் முடிந்தது உங்கள் உழைப்பு மட்டுமே. பிறர் மூலம் கிடைக்கும் உதவிகள் எந்த நேரத்திலும் கிடைத்துவிடாது.



எனவே சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு இருப்பதைக் கொண்டு வாழுவதுடன் மிச்சம் பிடித்து வாழ்ந்தால் எதற்காகவும் அச்சம் வந்துவிடாது அன்றோ?

மனிதருக்குக் கையில் காசு இருந்தால்தானே மனோபலம் வருகின்றது. ஒரு வினாடிப் பொழுதுதான் ஆகட்டும். தகுந்த நேரத்தில் ஒரு சல்லிக்காசு தேவைக்கு இல்லாதுவிட்டால் எப்படித் தவித்துப் போகின்றோம்? இருக்கின்றபோது பொருட்களின் அருமை எங்கே தெரிகின்றது? ஒவ்வொரு தனிமனித வருமானம், செலவுகள், நாட்டின் தேசிய வருமானத்தையே பாதிப்படையச் செய்யும் என்பது பொருளாதார வல்லுனர்களின் கூற்றாகும்.

இன்று அரசாங்கங்கள் செலவினங்களைக் குறைத்தல் பற்றி அவ்வப்போது அறிவித்தல்களை - சுற்றறிக்கைகள் மூலம் விடுத்த வண்ணமேயுள்ளன.

மின்சார பாவனையில்,<br>
நீர் வழங்கலில்,<br>
உணவுப் பொருள் விநியோகத்தில்,<br>
அரசு சொத்துக்களின் பாவனையில்,<br>
இயற்கைப் பொருள்களின் பயன்பாடுகளில்,

என்றவாறே பல்வேறு விஷயங்களில் மக்கள் வீண் விரயம் செய்யாது, சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர் என்றாலும் இவற்றை யார் பொருட்படுத்துகின்றார்கள்? ஒரு வாளி தண்ணீரை ஊற்றினால் குடியா மூழ்கிவிடும்? அரைமணித்தியாலம் மின் குமிழ் பற்றினால் என்ன குறைந்துவிடும்? ஒரு துண்டு பாணை வீசினால் பஞ்சமா வந்துவிடும் என்று கேட்கும்

RangaRakes Tamilnavarasam.com

நபர்களும் இருக்கவே இருக்கின்றார்கள். சிறுதுளிகள் சேர்ந்து வெள்ளம் வருவதை அறிந்தும்கூட கண்டபடி நடந்து கொள்வது நாட்டைத் தற்கொலைக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கை அன்றோ?

நாட்டின் கணிசமான சதவிகிதம் உணவுப் பொருட்களும், ஏனைய பாவனைப் பொருட்களும் வீணாக விரயமாகுதல் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. சொல்லப்போனால், கூடிய விரைவில் பாவிக்கின்ற பொருட்களைவிட, வீணடிக்கும் பொருட்களே அதிகமாகிவிடும் போலிருக்கின்றது. கழிவுப் பொருட்களையே உரமாக்கியும், சேதனப் பொருளாக்கி வேறுவிதமான பாவனைப் பொருட்களாக்கவும் மாற்ற ஒவ்வொரு நாடுகளும் முயற்சிக்கின்றன.

தகுந்த விநியோக முறை இன்மையால் இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், உணவுப் பொருட்கள் என எத்தனை கோடி பெறுமானமான பணம் வீணடிக்கப்படுகின்றது தெரியுமா? இவை மக்களைச் சென்றடையாமையினால் யாருக்கு நஷ்டம்? ஏதோ வழியில் முடிவில் இந்தச் செலவினங்கள் பொதுமக்கள் தலையில் தானே விழுந்து விடுகின்றது.

சும்மா சுற்றித் திரியும் வாகனங்கள், அலுவலக நேரம் கடந்தும் சுற்றும் மின் விசிறிகள், மாதக்கணக்காக வீதி திருத்த கொட்டிக் கிடந்து வீணாகும் மணல் குவியல்கள், கேட்பாரற்றுப் பொது இடங்களில் வீணாகும் அரச சொத்துக்கள் இவை எமது நாட்டின் ஊதாரித்தனமான செலவினங்களின் வெளிப்பாடுகள். இவற்றைக் கண்டு



கொள்ளாமல் விடுவதன் பலாபலன்களை ஒவ்வொரு வரவு - செலவுத்திட்ட வாசிப்பின்போதும் நாம் கண்டு கொள்ளலாம். மேலே சொல்லப்பட்ட உதாரணங்கள் மிகச்சில பகுதிகளேயாகும். இன்னும் எத்தனை எத்தனையோ மனதை வருத்தும் அநியாயக் காட்சிகளைத் தினசரி பார்க்கின்றோம் அல்லவா? பணக்காரர் சிக்கனமின்றி வாழ்வதால், அது ஏழைகளை ஈற்றில் வருத்துவதை இவர்கள் ஏன் இன்னமும் உணர்வது இல்லை. எனினும் வசதி படைத்தவர்களில் பலர் தமது கடந்த காலத்தை மறக்காதும் வாழ்ந்து வருகின்றனர்.

நான் ஒருமுறை ஒரு செல்வந்தர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். இவர்கள் பிறருக்கு உதவுவதிலும், வந்தோரை விருந்தோம்பி வரவேற்பதிலும் சிறந்தவர்கள். அன்று அவர்கள் வீட்டில் தங்கியிருந்தபோது, முகம் கழுவுவதற்காகக் குளியல் அறைக்குச் செல்ல நேர்ந்தது. அந்த அறையின் சவர்க்காரம் வைக்கும் பெட்டியில் கரையாத ஈயப் பேப்பரினால் ஒட்டி வைக்கப்பட்டிருந்தது. சவர்க்காரம் ஈரலிப்பாக இருக்கும்போது. கடதாசியை ஒட்டினால் அது வலுவாக அழுந்தப் பிடித்துவிடும். சவர்க்காரத்தின் ஒரு பகுதியால் மட்டுமே பூசிப்பாவிக்குமாறு செய்திருந்தனர். அநாவசியமாகச் சவர்க்காரம் கரைவதைக் கட்டுப்படுத்தவே இந்த உத்தியாகும். நான் வியந்து போனேன். இவ்வளவு வசதிகள் இருந்தும், இவர்கள் ஏன் இப்படிச் செய்யவேண்டும்? இந்தச் சிக்கன முறையினால் சவர்க்காரம் கரைந்து போகின்ற விரயம் ஓரளவு தடுக்கப்படுமல்லவா? இது ஒன்றும் கேலிக்குரிய சமாச்சாரமல்ல.

RangaRakes
Tamilnavarasam.com

ஒரு வருடத்தில் பாவிக்கப்படும் சவர்க்காரங்களில் இந்த முறையைக் கையாண்டால் எத்தனையோ சவர்க்காரங்கள் மீதப்படும் தெரியுமா? இந்த விஷயம் புத்திசாலித்தனமாக இருந்தும்கூட எம்மில் எத்தனை பேர் இந்த முறையைத் தெரிந்தும் கையாளப் போகின்றார்கள். அவசியமான இடத்தில் பொருளைச் செலவு செய்வதில் நஷ்டமில்லை. அநாவசியமான செலவுகள்தான் அநியாய விரயமாகின்றன.

வறுமைக்கு மூலகாரணமே உழைப்புக் குறைவு என்றும், தொழில் இன்மை என்றும் காரணம் கூறிக் கொள்கின்றனர். இருக்கின்ற பொருளைக் கரைக்காது செலவினைச் சுருக்குவதாலேயே வறுமையின் தாக்கம் ஒருவருக்கும் இருக்காது என்பதனை உணர்வார்களாக.

சிக்கன வாழ்வு பற்றிச் சொல்லிக் கொண்டு இருப்பதிலும் பார்க்க, நடைமுறையில் செய்து காட்டவேண்டும். மகாத்மா காந்தியடிகள் இதன் வழியே நடந்தும் காட்டினார். செல்வம் இருந்தால் செலவு செய்து காட்டி, மேன்மைப் பட்டம் சூட்டிக் கொள்ளவேண்டும் என எவரும் எண்ணினால் அதைவிடத் தப்பான அபிப்பிராயம் வேறில்லை. தனக்காகச் செய்யப்படும் மேலதிக செலவுகளால் பிறர் ஏன் பெருமைப்படப் போகின்றார்கள்? தனக்கு அது பெருமை என எண்ணும்போது, பிறர் அது கண்டு நகையாடுவரே அன்றி வேறில்லை. தவிர, இந்த நடவடிக்கையினால் சிலர் பொறாமை கொண்டு, அநாவசிய தொல்லைகளுக்கும் ஆளாக்குவார்கள். ஒருவரைப் பொறாமை உணர்வுக்கு ஆளாக்கும் செயலில்



ஈடுபடுத்துவதற்காகவே, அந்தஸ்தை உயர்த்திக்காட்டிச் செலவு செய்வது புத்திசாலித்தனமானதா?


செலவைக் குறைத்து வாழ்வதுகூட தியாகம்தான். ஏன் எனில் தம் ஆசைகளைக் கண்டபடி பெருக்காது, மனக்கட்டுப்பாட்டுடன் வாழ்வது ஒரு சமூக நலன் கருதிய வாழ்வாகவே அமைந்து விடுகின்றது.

எனவே,

சிக்கனம் தூய்மையான எண்ணங்களை விரிவடையச் செய்கின்றது. பிறர் படும் கஷ்டங்களை உணரச் செய்கின்றது. இல்லாதவன், இருப்பவன் எல்லோருக்கும் ஒரு சமநிலை வாழ்வு முறையை இது அமைக்கின்றதல்லவா? மாபெரும் மன்னர்கள்கூட சாதாரண மனிதர் போல வாழ்ந்து காட்டியதாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. காசை வைத்துக் கொண்டு கூரையில்லா வீட்டில் வாழவேண்டியதில்லை. இது உலோபித்தனமாகும். உலோபித்தனம், கஞ்சத்தனம் என்பதற்கும், சிக்கனம் என்பதற்கும் சம்பந்தமேயில்லை. தனக்கும் பிறர்க்கும் உதவாமை, கஞ்சத்தனம், கருமித்தனம் என்பார்கள். ஆனால் சிக்கனம் என்பது, தனக்காகத் தான் வாழும் சமூகத்திற்காக, நாட்டிற்காக வாழுகின்ற ஒழுக்க அறநெறியாகும். நாங்கள் எங்களுக்காகவும், பிறருக்காகவும், அனுசரணையாக - கருணை கொண்டு வாழ வேண்டும். இதற்காக, தேவைக்காக மட்டுமே செலவு செய்து வாழ்தலே சிறப்பு.

வீரகேசரி 17.06.2005

RangaRakes
Tamilnavarasam.com




நாம் காணும் எல்லோரையுமே எமது சொந்த இனமாகக் கொள்வோமாக. பூமித்தாய் பெற்று எடுத்த மக்கள் செல்வம் அவளது சொத்து. எனவே இவளது பிள்ளைகளிடையே தொடர்புகள் நிரம்பவும் உண்டு. பூமியின் உயிர்கள் அன்னிய முகங்கள் என்பது ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஏற்றத்தாழ்வுகள், சுயநலன்களினால் மனிதன் கூறுபடுவதை அனுமதிக்கவும் கூடாது. மனித உணர்வுகளை மதித்தால் இந்த விதமான கீழ்நோக்கான எண்ணங்கள் எழவே எழாது. சகலரது இன்ப துன்பங்களையும் பகிர்ந்து கொள்ளும் மனோநிலை வந்தால், பார்க்கும் அனைவருமே நல்லவர்களாகவே தெரிவார்கள்.

தெரிந்தவர்களைக் கண்டால் மட்டும் முகம்மலரச் சிரிப்பதும் புன்முறுவல் பூப்பதும், ஆனால்



தெரியாதவர்களைக் கண்டால் வேண்டப்படாதவர்களாகக் கருதுவதுபோல முகத்தை 'உம்' என்று வைத்தபடி வன்மம் கொண்டவர் போல் மனிதத் தன்மையற்ற பாவனையில் நடந்து கொள்ளலாமா?

எந்த முகங்களுமே அந்நியங்கள் அல்ல.

எவரையுமே எங்கள் சொந்த இனங்களாகக் கருதுவோமாக.

பூமி மாதாவிற்கு நான் மட்டும் குழந்தை அல்ல. அவள் பெற்று எடுத்தவைதான் இந்த மக்கள் பெருவெள்ளம். எனவே பூமியின் உயிர்கள் அந்நிய முகங்களே அல்ல. பிரபஞ்சத்தில் ஒன்றுக்கொன்று, நீரால், நெருப்பால், காற்றால், நிலத்தால் ஏதோ ஒரு வழியில் தொடர்புபட்டே இருக்கின்றோம் - என்றாலும் நாம் ஒரு இணைப்போடு பிணைக்கப்பட்டும், பிரிந்து வாழவே ஆசைப்படுபவர்களாக இருக்கின்றோம்.

அறிந்தவனுக்கு ஒரு நீதி. நன்கு தெரிந்தவனுக்கு ஒரு நீதி. உறவினர், தம் பிள்ளைகளுக்கு என பிறிதொரு கருத்துமாகவே கொண்டு மனிதன் வாழப் பழகிவிட்டான். உலகம் எங்களை ஒன்றாகவே நோக்குகின்றது. ஒவ்வொருவருக்கும் இது பாதகம், ஓரவஞ்சனை செய்வதில்லை. காற்று, வெயில், நிலம் என்பவைகளை அனுபவிக்கும் மனிதன் தன் அறிவிற்கு ஏற்பவும், சந்தர்ப்ப சூழ்நிலை, அதிர்ஷ்டம் என்று ஏதேதோ காரணங்களைக் காட்டியும் வாழ்ந்து வருகின்றான்.

கடவுள் தந்த எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு ஏற்றத்தாழ்வு சுயநலங்களை மட்டும் தனக்குள் பூட்டி

RangaRakes
Tamilnavarasam.com

வைத்துப் பிரகாசம் பெற எண்ணுவது முறைதானா? தனக்கு நல்லது வந்தால் மட்டும் சிரிக்கின்றான். தனக்கு ஏற்ற, தெரிந்தவர்களைக் கண்டால் மட்டும் மனம் திறந்து புன்னகைக்கின்றான். ஏல்லோரையும் சரிசமனாக எங்கே பார்க்கின்றான்?

பாமரத்தன்மை என்பது, படிக்காமையால் மட்டும் வந்து விடுவதன்று. மனித உணர்வுகளை மதிக்காமலும் இது உட்கார்ந்து கொள்கின்றது. அதிகம் படித்துவிட்டு சடமாக இருப்பது புத்திஜீவித்தன்மையா? அதைவிட எவரையும் முழுமையாக ஈர்ப்பவனே மேலான மனிதனாகின்றான். உத்தமமான, சலனமற்ற நன்னோக்குடையவனே மனிதன். மற்றவன் சூன்யமானவன்.

எந்தவிதத்திலும் உங்களுடன் தொடர்பு இல்லாத ஒருவனை நீங்கள் காணுகின்றீர்கள். அவன் முகவாட்டத்தின் மூலம் அவன் நெஞ்சின் நோவை அறிந்துவிட்டீர்கள். நல்லது, இனி அந்த வினாடி அதே விநாடித் துளிகள் கருணைமிகு எண்ணங்களால் அவனை நோக்கிப் பாருங்கள். அவன் தனிமை தொலைந்து உங்கள் மூலம் ஓர் இனிய அனுபவம் பெறுவதை அறிவீர்கள். நீங்கள் கொடுப்பது பொருள் அல்ல. அருள்மிகுந்த அன்பினைத்தான். இந்த அனுபவத்தினை நேரிடையாகவே பெறச் சந்தர்ப்பங்களை நீங்கள் பெற்றும் இருப்பீர்கள். அநேகமான வேளைகளில், இத்தகையவர்களைக் கண்டுகொள்ளாத சந்தர்ப்பங்களே மிக அதிகமாகும்.

அல்லாவிடில், இத்தகைய துன்பம் கொண்டோரைப் பார்த்து நகைப்பவர்களையும் கண்டிருப்பீர்கள். ஒரு



மனிதனின் விழிநீரைத் துடைத்தல் என்பது, அவன் வாழ்வை விழிப்படைய உதவுவது போலாகும் என எண்ணுக. நாங்கள் மட்டும் காணும் திருப்தியைவிடப் பிறர் திருப்தியில் நாங்கள் பெறும் திருப்தியே வலுவானதாகும். 'இந்த உதவிக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்' என வாழ்த்தும்போது ஏற்படும் நிறைவு. உங்களின் செயலாற்றுகைக்குக் கிடைத்த நற்சான்றிதழாகும். அதுவும், வலிமையில்லாத நலிந்தவர்களுக்கு எம்மால் இயன்றவைகளை வழங்கும்போது ஏற்படும் நிறைவே தனியான இனிய அனுபவமாகும்.

வீணான கற்பனைகளாலும் விடாது துரத்துகின்ற துன்ப அலைகளாலும், சஞ்சலமடைந்தவர்களும் ஏதோ ஒரு ஆறுதல் கிடைக்கவேண்டும் எனவே அங்கலாய்க்கின்றனர். இன்று சோகங்களால் பலமிழந்தவர்களுக்கு என்ன விதத்தில் ஆறுதல் அளிக்கலாம் என்பதே பெரிய பிரச்சனையாகும். எல்லோருமே ஆன்மீகவாதிகளாக முடியாது. ஒருவன் கண்ணீரைத் துடைக்கும் பணியில் எத்தனை பேர் ஆர்வமாக இருக்கின்றார்கள். துன்பம் வந்ததுமே எல்லோரும் தனிமைப்பட்டுப் போகின்றார்கள். திருமண வீட்டிற்கு, பட்டும் நகையுமாக ஜொலிக்கச் செல்கின்ற மக்கள், ஆட்டபாட்டங்கள், கேலிகள், ஆரவாரங்களில் மூழ்கி சந்தோஷமடைந்ததும் அவர்கள் பணி நிறைவேறி முடிகின்றது. அதன் பின்னர் என்ன நடக்கின்றது?

அதே வீட்டில் ஒருவன் கஷ்டம் - துன்பம் வந்த பின்னர் எத்தனை விதமானவர்கள் அவர்கள் துன்பங்களில்

RangaRakes Tamilnavarasam.com

பங்கு எடுக்கின்றார்கள்? தேறுதல் கொடுக்கின்றார்கள். மரணச் சடங்கில் ஒரு அம்மாள் இப்படி அழுதாள், 'நீங்கள் எல்லோருமே இன்று போய் விடுவீர்கள். நாளை எனக்கு எவர் ஆறுதல் சொல்லப் போகின்றார்கள்.' இது எவ்வளவு யதார்த்தமான பேச்சு? கேளிக்கைகளில் பங்கு கொண்டவர்கள் ஒரு நாழிகைப் பொழுதும் துன்பங்களைத் தாங்கச் சம்மதிப்பதில்லை. ஏன்? தனக்கு வேண்டப்பட்டவனையே நோக்கத் தயங்குபவன், தனக்குத் தெரியாதவனிடம் கருணை கொள்வான் என எப்படி எண்ணமுடியும்?

மேலைநாட்டு மக்களின் பல பண்புகளைக்கண்டு நாம் கட்டாயம் பின்பற்றியே ஆகவேண்டும். அறிந்தவரோ, அறியாதவரோ எவரேயாயினும் காலை, நண்பகல், மாலை, இரவு என எந்த நேரங்களில் கண்டு கொண்டாலும், 'காலை வந்தனம்' அல்லது அந்த அந்த நேரங்களுக்கு ஏற்பச் சிரித்த முகத்துடன் அந்த நேரத்திற்கான வந்தனங்களைச் சொல்லுவார்கள். பதிலுக்கு மற்றவரும் அதே பாணியில் நன்றி கூறி வந்தனம் கூறிவிடுவார்கள். நம்மவர்கள் இப்படிக் கூறாமல்விட்டால், அவர்கள், இவர் ஊருக்குப் புதிது என இனம் கண்டுவிடுவார்கள். ஏன் எனில், மேலை நாடுகளில் வேலை பார்க்கும் இடங்கள், பொது இடங்கள், வீதிகளில் கூட ஒருவரைக் கண்டுவிட்டால் முகம்மலர இரண்டு சொல் சொல்லியே தமது காரியங்களைச் செய்வார்கள்.

தெரியாத எவரையாவது நாம் கண்டு கொள்ளுகின்றோமா? எவராவது எமக்காகச் செய்கின்ற காரியங்களுக்கு உடனுக்குடன் நன்றி கூறுகின்றோமா?



எதிரில் வரும் ஒருவன் சிரிக்கும்போது, புன்முறுவல் பூக்கும்போது, எமக்குள் ஒரு மலர்ச்சி தோன்றும் அல்லவா? எதிரில் வருபவர் எதிரிகள் அல்ல. அவர்கள் முகம் மலர்ந்தால் எம் அகம் மலரும் அல்லவா? சரி, உங்களுக்கு வேண்டாதவரே ஆகட்டும். கொஞ்சம் புன்முறுவல் பூத்தால் என்ன? அவர்களது கோப, தாப, இறுக்க இயல்பு தளர்ந்து போகாதா என்ன? உள்ளத்தை இறுக்கப் பூட்டி என்ன பயன்? அதை அன்பு என்ற திறவுகோலினால் திறந்து வைத்தால் என்ன? உடைக்க முடியாத உள்ளத்தைக்கூட கனிவான அன்பு கொண்டு உடைப்பதே அறிவாகும். கனிவு அற்றவன், உடலில் பிணி இல்லாதுவிட்டாலுங் கூட சமூகத்திற்கு அவன் குணம் மாறாத பிணிதான்.

நாம் காலையில் இருந்து மாலைவரை எவ்வளவு மனிதர்களைச் சந்திக்கின்றோம். இவர்கள் எத்தனை எத்தனை பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு திரிகின்றார்கள். அப்போது நாம் அவர்களது பிரச்சனை என்ன என்றே தெரியாமல், கண்டபடி நடந்து கொள்ளலாமா? காலையில் நீங்கள் வீட்டை விட்டுப் புறப்படுகின்றீர்கள். எதிரில் பலர் வருகின்றார்கள். அவர்களில் சிலரை உங்களுக்குப் பிடிக்காமலும் இருக்கலாம், பிடித்தும் இருக்கலாம். நீங்களும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டி உள்ளதால், பல அழுத்தங்களுடன் புறப்பட்டு வந்துகொண்டு இருந்தாலும்கூட எதிரில் வருபவரிடம் உங்கள் கோபதாபம், புழுக்கங்கள், விரக்தி, வேதனை, காழ்ப்பு உணர்ச்சிகளைத் திணிக்க முயலலாமா?

சரி,

RangaRakes Tamilnavarasam.com

இந்த நேரத்தில் எதிரே வருபவர் உங்களிடம் பாய்ந்தால் முகம் கோண நடப்பதை நீங்கள் விரும்புவீர்களா? அல்லது அனுமதிப்பீர்களா? சொல்லுங்கள். உங்களுக்கு ஒரு நீதியும் சமூகத்தின் பால் ஒரு நீதியையும் எதிர்பார்க்கலாமா?

"அதிர்ஷ்டமற்றவன் பார்த்துவிட்டான். எல்லாமே போச்சு" என்பார்கள். இதே கருத்தைப் பிறர் உங்கள் மீது வைப்பதை நீங்கள் விரும்புவீர்களா? மனத்தில் உள்ளதைக் கண்களால் பார்க்க முடியாத காரணத்தால் நாம் தப்பித்துப் போய் விடுகின்றோம். அல்லாது விடின், மனிதன் ஒவ்வொருவரின் வக்கிரபுத்திகள், கபட எண்ணங்கள் எல்லாமே தெரிந்துபோனால் உலகமே ஒரு நொடியில் ரணகளமாகிவிடுமே? கண்ணுக்குத் தெரியாத குணங்களை எமக்கு மட்டுமே எடைபோடும் திறன் இருப்பதாக வேறு கருதுகின்றோம். இதனால் சதா மற்றவர்களிடம் இருந்து மட்டுமே நியாயங்களை எதிர்பார்த்து எங்கள் நியாயங்களைத் துறந்துவிடத் தயாராக இருக்கின்றோம்.

காரியத்திற்காகச் சிரிக்கும் மனிதன் நேசிப்பதற்காகச் சிரிப்பதில்லை. 'மலரனைய உணர்வுடன் மனம் வீசவேண்டும் இறைவா!' எனப் பெரியோர் எண்ணுவார்கள். நாம் மலரின் மென்மையாகவும் எதிரில் உள்ளவர்களுக்கு வாசனைகளைத் தெளிப்பவர்களாகவும் இருப்போமாக. இரக்கம் பகிரப்பட்டால் ஆண்டவன் பொக்கிஷம் எமக்காகப் பகிர்ந்தளிக்கப்படும். இதயங்களைப் பூட்டி வைத்து ஆண்டவனிடம் கையேந்தலாமா? கொடுக்காமல் கை ஏந்தல் சிறப்பாகுமா?



பார்ப்பவர் அனைவரையும் ஒன்றாக நோக்க அவர்களை உங்களுக்குள் பரிச்சயமாக்க முயலுங்கள். தினசரி நல்ல நல்ல நண்பர்களைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். தினம் தினம் எத்தனை பேரிடம் முகச் சுளிப்பினை ஏற்படுத்தி இருப்பதைவிடக் கேவலமான நிலைமை வேறென்ன உண்டு? நேரிய, பரிசுத்த பார்வை மூலம் உங்கள் உள்ளேயும் ஒரு வெளிச்சம் உருவாகும். அது பிறரால் எமக்கு வழங்கப்படும் பிரதிபலிப்பான ஒளியேயாகும்.

இதில் எந்தக் களங்கமும் கிடையாது.

இதனைப் பரிபூரணமாக நம்பலாம்.

✳ வீரகேசரி 13.05.2005

RangaRakes Tamilnavarasam.com




*பூட்டிய இதயங்களுடன் உடல்கள் மட்டும் இணைந்து கொள்வது திருமணபந்தம் அல்ல. கனமான இதயங்களால் இனிமையான திருமண வாழ்வை ரசிக்க முடியாது. அன்பை எதிர்பார்க்கின்ற கணவனுக்கு அதனைத் தாராளமாக வழங்கவும் அதேபோல அன்பே உருவான மனைவிக்கு உரிய கௌரவம் கொடுத்து என்றைக்கும் மாறாத காதலைப் பகிர்ந்துகொள்வதே உன்னதமான இல்வாழ்வு நெறியாகும். விட்டுக் கொடுப்புடன் நேயமுடன் ஜீவிக்கப்பழகினால், வாழ்நாள் முழுவதுமே சந்தோஷகரமான வாழ்க்கைதான். இந்த வாழ்வு இவர்களின் எதிர்காலத்தின் சந்ததியினரையும் வழி நடத்தும்.*

---

**ம**னம் முறிந்தால் மணமுறிவா? வாழ்வாங்கு வாழ்வதற்காக இணைந்து கொண்ட தம்பதிகள் தமக்கிடையே உள்ள பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள வழி தேடாமல் திருமண பந்தத்தினையே உடைத்தெறிந்து



கொள்வது சாதாரணமான விஷயமல்ல. திருமணம் என்பது ஆண் - பெண் சுதந்திரமாகச் சிந்தை ஒன்றாகச் சந்தோஷமாக ஜீவிப்பதற்கே. இதில் யார் பெரியவர், சிறியவர் என்கின்ற எண்ணங்கள் ஆரம்பமானதுமே குரோதங்களும் சூழ்ந்துவர ஆரம்பிக்கின்றன.

திருமணம் என்பதே ஒருமனமாக இணைதலே அன்றி பிரிவதற்கு ஆதாரங்களைத் தேடுதல் அல்ல. எனினும், நியாயபூர்வமான பிரச்சனைகள் இருசாராரிடையேயும் தோன்றவே செய்யலாம். இவை மனங்கள் மட்டும் சார்ந்தவையன்று. உடற்கூறுபட்ட பிரச்சினைகளாகவும் இருக்கலாம். உற்றார், உறவினர், தாய், தகப்பன், மாமன், மாமிகளால் தோன்றுகின்ற விவகாரங்களை வைத்து மட்டும் விவாகரத்துக் கேட்கலாமா?

வாழ்வதற்குப் பொருளாதாரம் இன்றியமையாதது. கல்யாணமானவுடன் தோன்றாத பொருளாதாரப் பிரச்சினைகளும் இதர சாதாரண விடயங்கள்கூட, நாள் ஆக ஆக இவை பூதாகாரமாகத் தோன்றுகின்றதே? மனங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை - கோளாறுகளை - உள்ளக் கிடக்கைகளை ஆண், பெண் இருவருமே பேசித் தீர்க்கமுடியும். அல்லாதுவிடின்,

பெற்றோர், தமக்கு நம்பிக்கையானவர்கள் எனச் சிலர் மூலமாகவேனும் மனம்விட்டு பேசிவிட முடியும். இன்று பொதுவாகப் பூட்டிய உள்ளங்களோடு, உடல் மட்டுமே இணைந்து கொள்வதால் தவறுகள் மேலும் ரணங்களாகின்றன. உறுத்தல் இல்லாமல் இன்பம் துய்த்தலே முறையாகும். கனமான இதயங்களால்

RangaRakes Tamilnavarasam.com

இனிமையான திருமண வாழ்வை ரசிக்கமுடியாது. உடல் ஆரோக்கியம் காரணமான பிரச்சினைகளால் கல்யாண வாழ்வில் கரைச்சல் வரலாம். எனினும் தற்கால நவீன மருத்துவ உலகில் இவை எல்லாம் தீர்த்துக்கொள்ளக் கூடியவைதான்.

கணவனும், மனைவியும் எந்தவிதமான மனஸ்தாபங்களும் இல்லாமல், இருக்கும்போதும், கூடவே வந்து போகின்ற உறவுகளும், ஏன் நெருங்கிய உறவினர்களுங்கூட கரிசனையாக நடப்பதுபோல் நடந்து, குடும்பத்தில் விரிசல்களை உண்டாக்கிவிடுகின்றனர். நிர்மலமான சிந்தனையுடன் வாழ்கின்ற தம்பதியினரிடம் அநாவசியமான சந்தேகங்களையும், வீண் ஆசைகள், கோபங்களை ஊட்டி விடுவதாலேயே கணிசமான குடும்பங்கள் நடுத்தெருவிற்கு வந்து அவமானப்பட்டுப் போகின்றன. கணவன், மனைவியும் தம்மை எவர் நேசிக்கின்றார்கள், எவர் கழுத்தை அறுக்கின்றார்கள் என்கின்ற வேறுபாட்டை உணராமல் போகின்றார்கள். மனைவியைக் கணவன் நம்பாமலும், கணவனை மனைவி நம்பாமலும் வாழ்ந்தால், பிறர் பேச்சு இவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடத்தான் செய்யும். நம்பிக்கை கொண்டு வாழ்ந்தால் எவரும் ஒருவருக்கு ஒருவர் துரோகம் செய்ய எண்ணுவார்களா? பலவீனமான கரவு என்கின்ற காரணி உறுதியான தம்பதிகளைத் தாக்க முடியாது. நோய்கூட பலம் இழந்தவனைத்தானே பலமாகத் தொற்றிக்கொண்டு தாக்குகின்றது?

'எனக்கு இவரோடு வாழப்பிடிக்கவில்லை. ஒத்துப்போகாத, விட்டுப்போகாத மனுஷனிடம் என்ன



வாழ்க்கை வேண்டிக் கிடக்கின்றது' என மனைவியும், 'அடங்கிப் போகாத இவளுடன் என்ன வாழ்க்கை? தினம் தினம் பிறந்த வீட்டுப் புராணத்தை எவ்வளவு காலம்தான் கேட்பது' என்கின்ற கணவனும் பேசும் பேச்சுக்களை நாம் அறிந்திருக்கின்றோம். அதீதமான அன்பைப் பொழியும் பெண், தனது கணவன் தன் மீது மட்டும் அன்பைக் காட்டவேண்டும் என எதிர்பார்க்கின்றாள். இன்றைக்கு, விவாகரத்துக் கேட்கும் பெரும்பாலான பெண்கள் கூறும் காரணம் இதுதான். 'எனது கணவருக்கு என்மீது கரிசனை இல்லை' என்பதுதான். ஆனால் கணவன் என்பவன் இதை ஒத்துக்கொள்ளமாட்டான். அன்பைக் காட்டத்தவறிய, அதே சமயம் அதனைத் தெரிவிக்கத் தெரியாத அப்பாவிகளுங்கூட இருக்கத்தான் செய்கின்றனர்.

அன்பை எதிர்பார்க்கின்ற கணவனுக்கு அதனைத் தாராளமாக வழங்கவும், அதே சமயம் அன்பே உருவான பெண்ணுக்கு ஆண்மகன் மாறாத காதலைப் பகிர்ந்து கொண்டும் வாழ்ந்தால் என்ன? இன்னும் சில வயது முதிர்ந்த பெண்கள் கூறுவார்கள். "இந்த வயதிலும் இவர் என்ன வாலிபர் மாதிரி நடந்து கொள்கிறாரே" என்பார்கள். இளவயதில் ஆடிப்பாடி, ஓடி உல்லாசமாக வாழ்கின்ற காலம் மட்டும்தான் காதல் வாழ்க்கையா? உடல் தளர்ந்தாலும் அன்பு வற்றாத நிலையில் கணவன், மனைவி காதலோடு வாழ்வது, பரிகசிக்கக் கூடிய ஒன்றல்ல. வாலிப வயதில் கட்டிப்புரண்டு விட்டு, வயது வந்ததும், ஒருவர் கரத்தை மற்றவர் தொட அருவருப்பதும், வெட்கப்படுவதும் ஒரு வாழ்வா? குழந்தை குட்டிகள் என்கின்ற வாரிசுகள் வந்ததும், கணவன் - மனைவி

RangaRakes Tamilnavarasam.com

நெருக்கம், ஸ்பரிஸ உணர்வு, அருகிக் காதல் ஸ்தம்பிதமாகிவிடுதல் சரியாகுமா?

இன்றைய உலகில் நடப்பது என்ன? ஏழெட்டுப் பிள்ளைகளைப் பெற்று, ஏன் பேரப்பிள்ளைகளைக் கண்டுங் கூட விவாகரத்துக் கேட்கின்றார்கள். அல்லது பிரிந்து வாழ்கின்றார்கள். அப்படியாயின் இவர்கள் இதுநாள்வரை வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தம்தான் என்ன? எல்லாமே போலியானதா? இவர்கள் இப்படி வாழுவது, தமது சமூகத்திற்கே வாழ்க்கை பற்றிய துர்ப்போதனையினைக் கற்பிக்க முனைவதாகும்.

எல்லோரும் இன்று சொல்லுகின்றார்கள். இன்று மணமுறிவுகளுக்குக் காரணம், மேலைத்தேய நாகரீகமான பழக்க வழக்கங்களே என்கின்றார்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையைக் கட்டி அமைக்கத் தவறிவிட்டு, ஏன் மேலை நாட்டு நாகரீகத்தினை மட்டும் காரணம் காட்டுகின்றீர்கள்? அவர்கள் எப்படியாவது வாழ்ந்துவிட்டுப் போகட்டும். அதற்காக, அவர்கள் காட்டும் காரணத்தை நீங்கள் ஏற்க வேண்டுமா?

விட்டுக் கொடுக்காத தன்மை,
எல்லை மீறிய சுதந்திரங்களை எதிர்பார்த்தல்,
ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு அங்கலாய்த்தல்,
சீதனப் பிரச்சினை,
பொருளாதார நெருக்கடிகள் -

போன்ற பிரதான அம்சங்கள் மணமுறிவினை ஏற்படுத்தினாலுங்கூட நியாயபூர்வமான விடயங்களும்,



விவாகரத்துப் பெற போதிய காரணங்களாக அமைந்து விடுகின்றன. திருமண வாழ்வில் சில ஆண்களால் பெண்கள் மட்டும் பாதிப்பு அடைவதில்லை. ஆண்கள் கூடச் சில பெண்களால் பாதிப்பு அடையக்கூடும். முறை தவறிய ஆண்கள், குணங்கெட்ட பெண்கள் இன்று பலர் இருக்கத்தான் செய்கின்றார்கள். குடித்து, வெறித்து மனைவியைத் துன்புறுத்தி, குடும்பத்தைக் கவனிக்காமல் சொத்துக்களைச் சேதாரமாக்கிக் கண்டவள் பின்னால் சுற்றுபவனோடு எத்தனைக் காலத்திற்குத்தான் பொறுத்து வாழ முடியும்? தவிர குடும்பத்தைக் கவனிக்காமல் விட்டாலும் பரவாயில்லை. மனைவி கஷ்டப்பட்டு உழைக்க, அதனையும் சுரண்டி கண்டபடி அவதூறுகளை அள்ளி வீசுகின்ற உலுத்தர்களுடன் பெயரளவிற்குக் கணவன் மனைவியாக வாழமுடியுமா? சீதனத்திற்காக, சீதேவியைத் துரத்துபவர்களை என்ன செய்வது?

கணவனை மதிக்காமல், பிள்ளைகளையும் பார்க்காது, நாகரீக மோகத்திற்கு ஆட்பட்டு, கற்பு நெறியில் இருந்து தவறிய பெண்களின் நடிப்புப் பேச்சுக்காக ஒருவன் தன் வாழ்க்கையையே பணயம் வைக்க முடியுமா? பெண்ணடிமை கொள்ள நினைக்கும் பித்தர்களுடனும் பெண்மைக்கே களங்கமாக இருக்கும் அசிங்கங்களுடனும் வாழ நினைப்பதுகூட அவமானமாகும். கலாசாரத்திற்கு ஒவ்வாத நடத்தை நெறியுள்ளவர்களை மீண்டும் நல்ல வழிக்குக் கொண்டுவர பெரிய போராட்டமே செய்ய வேண்டியுள்ளது. சிலர் இது விடயத்தில் பட்ட அனுபவங்கள் மூலம் திருந்தியும் விடுகின்றார்கள். ஒரு சிலர் மட்டும் திருந்த மாட்டேன் என அடம்பிடித்து அழிகின்றார்கள்.

RangaRakes Tamilnavarasam.com

ஆண், பெண் இருசாராரும் தங்கள் குறை, நிறைகளை மதிப்பீடு செய்யத் தவறுவதாலேயே குழப்பங்கள் வருகின்றன. பண்பாடுகளில் நம்பிக்கை கொண்டவர்கள், தாம் வாழுகின்ற முறைமைகள் பற்றியும் எடை போடத் தெரிந்தவர்களாவர். தாம் வாழுகின்ற சமூக கலாசாரத்தின் பால் ஈடுபாடு இன்றித் தாமாகவே பிற நாட்டுக் கலாசாரங்களில் வீழ்ந்து பின்னர், தமது சமூகம் பற்றியே தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகின்றனர். இன்று கீழைத்தேய சமூகப் பிணைப்பு, குடும்ப இணைப்பு போன்ற பாசமிகு வாழ்க்கையை அந்நிய நாடுகளே வியந்து நோக்க, நாமோ, எமது வசதிக்காக – ஆடம்பர வாழ்விற்காக – குடும்ப வாழ்வு முறைகளையே மாற்றிக் கொள்ளத் தயாராகிவிட்டோம். இணைவதும், பிரிவதும் ஒரு சாதாரண நிகழ்வாக – சம்பவமாக அவர்கள் கொள்கின்றார்கள். இந்த அவசரபுத்தி வாழ்வு அஸ்தமனமாகிவிடுகின்றபோது, வெறும் யந்திரமாக உழைத்து வாழ்ந்தாலும் நிம்மதி கிட்டிவிடுமா? வீடு, வீடாக இல்லாதபோது, நாடு பற்றி எப்படிச் சிந்திக்க முடியும்? அழிவு பற்றியே எண்ணங்கள் ஓடும். வீட்டில் சண்டை போடுகின்றவன் வெளியில் சிரிக்கமுடியுமா?

மேலைநாடுகளின் வாழ்க்கை முறை வேறானது. அங்கு குடும்பம் வேறு, கடமை வேறு. அவர்கள் இரண்டையும் பொருத்திப் பார்ப்பது இல்லை. எங்களால் அப்படி வாழ முடிவதில்லை. அங்கே ஒருவன் தினம் ஒரு புது வாழ்வு அமைக்கின்றான். ஆனால் அவன் தனது வேலைகளை மறுபக்கம் பார்த்துக் கொண்டு இருக்கின்றான். தற்காலிகமான இந்தச் சந்தோஷங்கள் நிரந்தரமானது இல்லை என்று எண்ணுவதாலேயே இன்று



எங்கள் குடும்பப் பிணைப்பின் சூட்சுமங்களை அறிய ஆவல்படுகின்றான். பார்க்கப்போனால், கொஞ்ச காலங்களில் நாங்கள் அவர்களாகவும், அவர்கள் நாங்களாகவும் மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

விவாகரத்து விஷயத்தில், காதலித்துத் திருமணம் செய்தவர்கள் மட்டுமல்ல, பெற்றோர் பேசி முடித்து வைத்த திருமணங்கள்கூட, முறிந்துபோகின்றன. எனவே மணமுறிவிற்கு, திருமணம் செய்யும் முறைகளை மட்டும் காரணம் காட்டிவிட முடியாது. ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தமக்கு இசைவாகவே ஒவ்வொருவரும் நடக்க வேண்டுமென்கின்ற, எல்லைமீறிய அவாவினால் தம்மிடையே இசைந்து போக மறுக்கின்றார்கள். கொஞ்சமாவது அனுசரணை உணர்வுடன் விட்டுக் கொடுத்துப் போக மறுக்கின்ற நாகரீகத்தை சில ஆண்களும், சில பெண்களும் விரும்பமாட்டார்கள். மிகச்சிலர் நாகரீகத்தின் உச்சிக்கே சென்று வாழத் தலைப்படுகின்றனர். சாமான்ய உலகில் நாம் கொஞ்சம் நகர்ப்புற வாழ்க்கையையும் புரிந்துதானே ஆகவேண்டும். இதில் வேடிக்கை என்னவெனில், பட்டிக்காட்டுத்தனமாக வாழாதே என்று சொல்லி, சும்மா இருந்த மனைவியை நாகரீக மோகத்தினுள் திணித்து, பின்னர் அவனுக்கே வினையாகி, முடிவில் விவாகபந்தமே வேண்டாம் என்கின்ற அளவிற்கு வாழ்க்கை வீணாகி விடுவதுண்டு. இதேபோலவே, சாதாரண வாழ்க்கை வாழ்ந்து வந்த கணவனை அடுத்தவர்களைப் பார்த்து, அவனையும் நடக்கச் செய்து முடிவில், மனைவியையே மறந்து, சகல

RangaRakes Tamilnavarasam.com

கெட்ட சகவாசங்களையும் கைக்கொள்ளுபவர்களையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆழமான அன்பும் பரிசுத்தமான மனமும் இருந்தால், தம்பதியினரிடையே ஏற்படும் நம்பிக்கை உணர்வை எந்தச் சக்தியாலும் தகர்த்துவிட முடியாது! தாங்கள் நினைத்தபடியே வாழ்ந்து, விடாப்பிடியாகக் கெட்டு அழிவதில் என்ன லாபம் இருக்கின்றது?

இது ஒரு உண்மைக் கதை. கொஞ்சம் கேளுங்கள். எனக்குத் தெரிந்த ஒரு நண்பருக்குப் பெற்றோர் பேசித் திருமணம் செய்து வைத்தார்கள். இவர்களுக்குப் பெண் குழந்தை பிறந்து எட்டு ஆண்டுகள் இப்போது முடிவடைந்துவிட்டன. குழந்தைக்கு நாலு வயது நடந்து கொண்டிருக்கும்போது நண்பரின் மனைவி விவாகரத்துக் கோரினார். மனைவி இயல்பாகவே நாகரீக மோகத்திற்கு ஆட்பட்டவர். கணவனின் சம்மதம் கிடைக்காமையினால் கொஞ்சகாலம் விவாகரத்துக் கிடைக்காமல் காலம் இழுபட்டாலும் இறுதியில் மனைவியின் பலத்த வற்புறுத்தல் காரணமாக விவாகரத்திற்கு அவர் சம்மதிக்க, விவாகரத்தும் கிடைத்தது. அதன் பின்னர், அவர் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து குழந்தைகளையும் பெற்றுக் கொண்டு நல்ல வசதியாக வாழ்ந்து வருகின்றார்.

இவர்கள் பிரச்சனையில் சமரசம் செய்து தோற்ற ஒரு நண்பரை, ஏற்கனவே விவாகரத்துப் பெற்ற நண்பரின் மனைவி சந்தித்தார். அந்தப் பெண் கண்ணீருடன் சொன்னார்: 'இப்படி, நான் முட்டாள்தனமாக அவசரப் பட்டுவிட்டேன். அவர் மறுத்துங்கூட நான்தான் விவாகரத்துப் பெற முனைந்தேன். நான்தான் அறிவிழந்துவிட்டேன். அந்த நேரத்தில் இவர் எனக்கு நாலைந்து அடி அடித்துத் திட்டித் திருத்தி இருக்கலாம். எனது செயலைக் கண்டிக்க வேண்டிய முறையில் கண்டிக்கத் தவறிவிட்டார். இன்று நான் தனித்துவிட்டேன். எனது பெண் பிள்ளையும் வளர்ந்து வருகின்றாள். எனது பிள்ளைக்கு இவர் வாரி, வழங்கி வந்தாலும் இனிமேல் நான் எப்படி ஒன்றாக வாழமுடியும்? அவர் ஏற்கனவே எனது தவற்றினால் திருமணம் செய்து பிள்ளைகளையும் பெற்றுவிட்டார். எனது எதிர்காலம் என்ன? ஒரு தகப்பன் துணையின்றி வாழ வேண்டி ஆகிவிட்டதே?' என்றார். அவசரபுத்தியுடைய பெண்கள் இத்தகைய வாழ்க்கையை அறிந்தேயாகவேண்டும்.



## விவாக விலக்கு வாழ்க்கையின் இழப்பு அல்லவா?

ஒரு சுமாரான தோற்றமுள்ள மனைவியைப் பற்றி ஒருவர் பெருமையாக இப்படிச் சொன்னார். 'இந்த உலகில் எனது மனைவிதான் அழகானவள், சிறந்தவள். இவளைப் போல் ஒருத்தியும் இல்லை' என்றதும் நான் சிரித்தேன். அவர் தொடர்ந்தார். 'ஏன் என்றால், நான் அவளை விரும்புகின்றேன். மனதார நேசிக்கின்றேன். என்னைப் புரிந்தவள், என்மீது பாசம் கொண்டவள். எனவே என் மனைவிதான் அழகாகவும் நல்லவளாகவும் தெரிகின்றாள்' என்றார்.

'உண்மை அன்பு, பாசம் உள்ளத்தில் மேலோங்கினால், காதல் மனைவி கட்டழகிதான். ஆரவாரமான அழகிகள் குணம் நிரம்பியவர்களாக

RangaRakes Tamilnavarasam.com

இருந்தால் சரி, இல்லாவிட்டால், வாழ்க்கை என்னாவது? ஆணும், பெண்ணும் சுய ஆதிக்க உணர்வுடன் வாழ நினைப்பதும், தங்கள் நிலைதான் உயர்வானது என்றும் கருதி வாழ்ந்தால், எக்காரணங் கொண்டும் இவர்களிடையே பிணைப்பு ஏற்படாது. ஒருவரிடம் ஒருவர் அக்கறை செலுத்தினால்தான் அவர்களுக்கிடையே கௌரவமான, எண்ணங்கள் பரிமாறப்படும். என்னுள் அவள், அவளுள் நான் என்கின்ற உணர்வுகூட, இவர்கள் மற்றவர் மீது செலுத்தும் அக்கறையிலேயே தங்கி உள்ளது. இங்கு மமதைகள் மாயமாக அடிபட்டு மாய்ந்து போகும்.

பிரிந்துபோனவர்கள் பிரச்சினைகள், பிரிந்தவுடன் முடிந்து விடுவதில்லை. இது அவர்களது குடும்பங்கள் சார்ந்த குழப்பமான பிரச்சினையாகி, தொடர்ந்து தலைமுறை, தலைமுறைக்கான தீராத நோயாகப் பரவி விடுகின்றது. இவை மானப்பிரச்சினையாகி அவமானப்பட்டுப் போகின்றனர். குடும்பங்களைப் பிரிக்க முற்பட்டவர்கள், இவர்கள் பிரிந்த பின்னர் கேலி பேசுவார்களே ஒழிய, தங்களின் அடாத செயலுக்கு ஆதாரமாக மேன்மேலும் இவர்கள் பற்றி குற்றங்களையே, சேற்றை வாரி வீசுதல் போல் வீசுவார்கள்.

'எல்லாமே தலை எழுத்து' என்று விலைமதிப்புள்ள குடும்ப வாழ்வைக் குழப்பலாமா? ஏதாவது குடும்பங்களில் குழப்பங்கள் ஏற்பட்டால், காலங்கள் நாளடைவில் குற்றங்களை மறந்துபோகச் செய்துவிடும். இதனாலேயே குடும்ப நீதிமன்றங்களில் விவாகரத்து வழக்குகளில் உடனடியாக விவாக விலக்குச் செய்து தீர்ப்பு வழங்கி விடுவதில்லை. இவர்களுக்குப் புத்திமதி கூறி, போதிய கால



அவகாசங்கள் வழங்குகின்றார்கள். என்ன விநோதம் என்றால் மெத்தப் படித்தவர்கள் கூடச் சாதாரண பிரச்சினைகளை நீதிமன்றங்களின் முன்கொண்டு வருவதாகும். உலகிற்குப் புத்திமதி கூறத்தக்க வல்லவர்களே, குடும்பப் பிணக்கை அணைக்க முடியாமல் நீதிமன்றத் தீர்ப்பிற்காகக் காத்திருப்பதும், வாழ்க்கையைக் கிழித்துக் கூறாக்க நாள் கேட்டு நிற்பதும் எவ்வளவு பரிதாபம் தெரியுமா?

இன்று குடும்பப் பிணக்குகளைக் கோமாளித்தனமாகச் சித்திரிக்கும் திரைப்படங்களும், கதைகளும், படிப்படியாகப் பார்ப்பவர் மனதில் குடும்பம் என்கின்ற உன்னதமான அமைப்பு பற்றிய மாறுபாடான கருத்தைத் தோற்றுவித்துவிடுகின்றன. கற்பு, ஒழுக்கம் பற்றி கண்டபடி கதை எழுதுகின்றார்கள். சில கதைகளில் குடும்பங்களில் 'மன்னித்தல்' என்ற வார்த்தைக்கே அர்த்தம் இன்றி, பகை, பழிவாங்கல்தான் சரியான பாதையாகச் சித்திரிக்கப்படுகின்றது. குடும்பப் பிணைப்பை, கணவன் - மனைவி உறவைப் பலமாக்கச் செய்ய, புதிய தம்பதியினருக்கு நல்ல வரைபடத்தினை முன் வைக்க வேண்டும் அல்லவா?

பிரிவதுதான் தீர்வு என்றால், காலப்போக்கில் உங்கள் மனங்கூட உங்களைவிட்டுப் பிரிந்து, உங்களை வேற்று மனிதனாக்கி நிர்வாணமாக்கும். இந்தத் தனிமைப் பிணி எங்களை இயங்க வைக்க விடாது. மனதைத் தொலையவிட்டால், நீங்கள் பாலைவனத்தில் மிதக்கும் 'தூசு' ஆவீர்கள். மனசு இனிமையாக இருந்தால்தான் எம்மைச் சுற்றி வசந்தங்கள் வட்டமிடும். புதுப் புஷ்பங்கள்

RangaRakes Tamilnavarasam.com

முத்தமிடும். குடும்பத்தை விட்டால் எல்லாமே விலகிச் செல்லும். மாயமான, சூன்ய வலையில் விழுதல் போன்ற உணர்வு ஏற்படுவதுடன், பலவீனமான, பய உணர்விற்கும் ஆளாவோம். உலகியல் ஈடுபாட்டிற்கு குடும்பப் பிணைப்பு மிகவும் அவசியமாகின்றது.


திருமண உறவின் மூலம், துணைகள் ஏற்படுகின்றன. எங்கு போய் வந்தாலும் வீட்டினுள் வந்து ஆறுதல் தேடவே அனைவரும் விரும்புவர். அது கிட்டாத போது என்னதான் வாழ்க்கை என்றாகி விடுகின்றது. சமூக ஏன், உலக வளர்ச்சிக்குக்கூட ஆண், பெண் இருபாலரின் ஒன்றிணைந்த குடும்ப வாழ்வு ஒரு வலுவான சக்திதான் என்பதில் சந்தேகமில்லை.

பரஸ்பர அன்புப் பரிமாற்றம் - இதனால் ஒருவர்க்கொருவர் ஏற்றத்தாழ்வு அற்ற முற்று முழுதான பிரிக்கவொண்ணா ஆண், பெண் உறவு திவ்யமானதொன்றாகும். புரிந்துணர்வும், விட்டுக் கொடுத்தலும் அன்பினை ஈந்து கொள்வதால் மட்டுமே சாத்தியப்படும். இந்த அடிப்படை விஷயம் இல்லாதவிடத்து நான், எனக்கு என்கின்ற கீழ்த்தரமான, சங்கட நிலைக்கு ஆளாகிச் சீரழிய வேண்டியதுதான்.

திருமணத்தில் ஆரம்பமாகும் பந்தம் ஜீவன்கள் பிரிந்தாலும் இந்த அன்பு வாழ்க்கை, பதிவுகளாகப் பதிவு செய்யப்பட்டு வரப்போகும் சந்ததிக்கு ஆசான்களாக, வாழ்வியல் பற்றி சொல்லிக் கொண்டேயிருக்கும்.

✵ தினக்குரல் 12.06.2005
19.06.2005






எவரையுமே பகைமையுணர்வுடன் நோக்கலாகாது. புறம் கூறுதல் என்பதே எமது உள்ளத்தின் மறைமுகமான வக்கிரபுத்திதான். நல்ல நோக்கத்துடன் ஒருவருக்குப் புத்தி சொல்லுபவன் புறம் கூறமாட்டான். நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத்திறனும் இல்லாதவர்களே கண்டபடி பேசி கண்டபடி நடந்து கொள்வர். ஒருவர் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை, நாம் பேசும் புறம் கூறுதலினால் அந்த எண்ணம் சிதைவடைந்து விடுமன்றோ? ஒருவர் மனங்களை நோகடிப்பதில், எமக்கு என்ன சந்தோஷம் வந்துவிடப் போகின்றது.

புறங்கூறுதல் அறம் ஒறுத்தலாகும். மனத்தினை உறுத்துவதும்கூட. இது ஈனச்செயல் மட்டுமின்றி கோழைத்தனமான கொடுஞ்செயலுமாகும். நெஞ்சில் கறையும், பிறரிடம் சதா குறைகளைத் தேடுவதும் இவர்களின் பணி. முகத்திற்கு நேரே பேச

RangaRakes Tamilnavarasam.com

அச்சப்படுபவர்கள் முதுகுக்குப் பின்னால் முக்காடிட்டுப் பேசலாமா? பூனை கண்களை மூடி திருட்டுத்தனம் செய்தல் போல, தமது குருட்டுச் செயல்களை ஏனையவர்கள் தெரியாமல் இருக்கின்றார்கள் என மனப்பால் குடிக்கின்றனர். இவர்கள் பிறரிடமிருந்து காலப்போக்கில் காலாவதியாகிவிடுவது மட்டுமல்ல. தனிமைப்பட்டு தவித்துச் சிறுமைப்பட்டுப் போகின்றார்கள்.

"இன்று யார் யாரையோ எங்கள் முன்னிலையில் திட்டுகின்றனர். நாளை, வேறு நபர்கள் முன்னிலையில் எங்களையும் இதே மாதிரிப் பேசமாட்டார் என்பது என்ன நிச்சயம்" என்று புறம் கூறுபவர் பற்றி பலர் பேசிக் கொள்ளுவார்கள். எந்தவிதமான காரணமுமின்றி கூடச் சிலர் புறம் கூறுவது அதிசயமான ஒன்றேயாகும். மனதில் பழைய பகை, கோப, தாபம் ஒருபுறமிருக்க, எந்த விதத்திலேயும் சம்பந்தப்படாதவர்களை முகமறியாது பகையுணர்வுடன் ஏசலாகுமா?

பொறாமை, வஞ்சக உணர்வு, இயலாமை, காழ்ப்புணர்ச்சி போன்ற காரணங்களால் மட்டுமல்ல; சிலர் பொழுதுபோக்கிற்காகவும் கண்டபடி பேசித் திரிவார்கள். எந்தவிதமான கோபமும் இன்றி வாயில் வந்த வார்த்தைகளைக் கொட்டுவது இவர்களது சுபாவம். இவர்களிடம் பக்குவமாகப் பேசி இத்தகைய குறைபாடுகளைக் களைந்துவிட முடியும்.

"அதோ போகின்றானே அவனை எனக்குத் தெரியாதா? என்னிடம் கைநீட்டிப் பிழைத்தவன்தானே. இப்போ என்ன பெரிய மனுஷன் ஆகிவிட்டானா?" என்று கண்டபடி புளுகுவார்கள். இவர்கள் கூற்றில் உண்மை



இருக்காது. பிறரிடம் மேலானவர்களாகக் காட்டுவதற்கு இப்படிப் பேசுவார்கள். சிலவேளை ஏதாவது அற்ப உதவிகளை யாருக்காவது செய்துவிட்டு, அதன் பிரதிபலன் தமக்குக் கிட்டாதுவிட்டால் இப்படிப் பேசித் தீர்ப்பார்கள்.

எனவே, உதவி பெறுபவர்களிடம் அவதானமாக இருக்காதுவிட்டால், இத்தகைய எதிர் விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடலாம். அத்துடன் எவர் மூலம் என்ன பயன்களைப் பெற்றாலும் அவர்கள் திருப்திப்படும் வண்ணம் ஏதாவது நல்ல வார்த்தைகளையோ, அல்லது சமயம் வரும்போது திருப்பி நல்ல உதவிகளையோ செய்துவிட்டால், இத்தகைய அவதூறுகளை எவரும் சந்திக்க நேராது அல்லவா? குணம் அறிந்து கொள்ளாது உதவி கோரக்கூடாது.

ஒருவர் பற்றிய விமர்சனங்களைக் கண்டபடி தூவிவிட்டு, சம்பந்தப்பட்டவர் ஏதேச்சையாக எதிர்ப்பட்டதுமே அவர் முன் சாஸ்டாங்கமாக விழுந்துவிடுதல் சிலரது அருங்கலையாக இருக்கின்றது. "உங்களைத் தெரியாதா எனக்கு! கண்ட நாய்கள் குரைக்கும். நீங்கள் பயப்பட வேண்டாம் ஐயா, நான் இருக்கின்றேன்" என்று கூறுபவர்கள், தம்மையே கேவலப்படுத்துபவர்கள் ஆவர். நன்றிக்குரிய பிராணியையே, தவறாக உதாரணம் காட்டுவது, நன்றி கெட்டதனமாக நடப்பது ஒன்றும் இவர்களுக்குப் புதிதல்ல. மனம் வக்கரித்துப் போனவர்களிடம் பெரும் குணம் கொண்ட இயல்பை எதிர்பார்க்கலாமா? ஆதாயம் தேடுபவர்கள், ஆதாயம் பெற்றும் கூட நாராசமாகப் பேசினால் சமூகத்தில் சரி ஆசனம் இவர்களுக்கு எப்படிக் கிடைக்கும்?

RangaRakes Tamilnavarasam.com

அடிமனதில் வஞ்சனையுடன் மறைமுக அம்புகளைப் பாய்ச்சுபவர்கள், எந்தப்பக்கமும் சேர்த்துக் கொள்ளப்படாத அந்தரத்தில் தொங்கும் நிலைக்கே ஆளாவர்.

சரி, அடுத்த விஷயத்திற்கு வருவோம். எல்லோராலும் எல்லாமே சாதிக்கமுடியும் என்கின்ற சிந்தனைகளை வளர்க்காதுபோனால், இயலாமை என்கின்ற வீண் பிரமைக்கே உட்படுகின்றனர். இதற்கு என்ன ஔடதம்? யாரையாவது திட்டினால் தமக்குத் தீட்டுப்போய் விடும் என்பதுபோல நடந்தால் வெற்றி கிட்டிவிடுமா? மாறாக ஆதங்கமும், மனக்குழப்பம் மட்டும்தானே மிஞ்சுகின்றன? தங்களது செய்கையினால் ஏனையவர் மனம் வெதும்பவேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். இதன் முதற்படியாக ஏதாவது குற்றச்சாட்டு வதந்திகளை விதைக்க முற்படுகின்றார்கள். இதனைச் சட்டை செய்யாமல் போனால் இவர்களுக்கு அறவே பிடிக்காது. தங்கள் வார்த்தைகளால் மற்றவர்கள் சோர்வு அடைய வேண்டும், துன்பப்படவேண்டும் என மனதார விரும்புகின்றார்கள். என்ன விந்தை மனிதர்கள்!

என்றாலும்கூட, பெரியோர்கள் இவர்களைக் கூட மன்னித்து விடுகின்றனர். ஒருவர் மீது வீசப்படும் வார்த்தைகளுக்கு, வீசுபவனே சொந்தக்காரனாவான். அதனை ஏற்காமல் விட்டாலும் சரி, கேட்டுத் துன்பப்பட்டாலும் சரி - வார்த்தைப் பிரயோகங்களுக்கு, பிரயோகித்தவனே பொறுப்பானவன். இனிய வார்த்தை இதயத்திற்குத் தெம்பூட்டும்; அன்பு ஊட்டும். கண்டபடி பேசுபவன் தனது இதயத்தைத் தானே துண்டாடுகின்றான். எனவே புறம்

RangaRakes



கூறுபவர் பேச்சிற்காக நாம் வருத்தப்படுதல் அறிவீனமாகும். எந்த வகையிலும் காரணப்படாமல், ஒருவர் கூற்றிற்காக மட்டும் வருந்துதல் என்பது துன்பத்தைத் தேடிக் கொள்வது போலாகும் அல்லவா?

நீங்கள் முன்னேறுவது சிலருக்குப் பிடிக்காமல் போகலாம். ஒருவரை அடித்து வீழ்த்துவதிலும் பார்க்க, வார்த்தைகளுக்கே வலிமை அதிகம் என்பார்கள். இந்த உத்தியை அறிந்தவர்கள் வெகு சாமர்த்தியமாகக் கையாளும் தந்திரமாகக் கூடப் புறஞ்சொல் பயன்படுத்தப்படுகின்றது. எப்படியும் தங்களைப்பற்றி வெளியே சொல்லவேண்டாம் என்று கூறிவிட்டே, ரகசியம் சொல்வதுபோலக் குறைகளை அடுக்கி விடுகின்றனர். ஆதாரம் பற்றி ஆதாயம் தேடும் இந்த ஆத்மாக்கள் சிந்திக்க வேண்டியதுமில்லை. சோடனை வார்த்தைகளைச் சுதந்திரமாகப் புனைவார்கள். இதில் குறிப்பிட வேண்டியது ஒன்று உண்டு. இத்தகைய கதைகளைச் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொள்ளப் பிரியப்படுபவர்களின் தொகையும் மிக அதிகமாக இருக்கின்றது. ஒருவர் மீது அபாண்டங்களை அள்ளிவீசச் சந்தர்ப்பம் பார்ப்பவர்களுக்கு இத்தகையோரின் நடவடிக்கைகள் ரொம்பவும் பிடிக்கும். எனவே இதுபற்றி எவரும் அலட்டிக் கொள்ளாமல் இருப்பதே புத்திசாலித்தனமானதாகும்.

இன்னும் ஒரு விஷயம், சிலர் உண்மையாகவே தமக்கு ஒருவர் மீது ஏற்பட்ட பாதிப்பு காரணமாக உணர்ச்சிவயப்பட்டு யாரிடமாவது சொல்லி முறையிடும் சந்தர்ப்பங்களும் வருவதுண்டு. இதனை நாம் புறந்தள்ளிவிட முடியாது. எப்படியும் இத்தகைய

Tamilnavarasam.com


பிரச்சனைகளை சமாதான உணர்வுடன்தான் தீர்த்துக் கொள்ளவேண்டும். நியாயபூர்வமான ஒருவரின் மனத்தாங்கல்களை களைய முனைதல் மனிதநேயமாகும். அதுவும் எங்கள் மீது தவறுகள் அல்லது தப்பு அபிப்பிராயங்கள் ஏற்பட வாய்ப்புகள் அளித்தலாகாது. ஒருவரின் புறம் கூறும் தன்மைக்கு நாங்கள் காரணமாக - கருவியாக இருக்கக்கூடாது. ஒருவரின் கோபத்தை அதிகரிக்கச் செய்வதற்கு முனைதல் என்பது எங்களுக்கு நாமே இட்டுக்கொள்ளும் சாபமாகவும் அமையலாம். ஏன் எனில் நியாயபூர்வமாக ஒருவன் கோபப்பட்டு அதனை அவன் வெளிக்காட்டாது, உள்ளுக்குள் கோபிக்க வைத்தா குதூகலம் அடைவது? தனக்குள் கோபம் கொள்வதை ஆரம்பத்திலேயே இல்லாதொழிக்கச் செய்வதே வல்லவனின் திறமையாகும். கோபம், பொறாமை, ஆற்றாமைதானே எந்தப் பிரச்சனைகளையும் உருவாக்குகின்ற மூலாதாரமாகின்றன.

எனவே, தவறான செய்கைகளை இனங்கண்டு களைவதே சமூகக் கடப்பாடாகும். நடப்பதனைப் பார்ப்பதுவே எமது தொழிலாகக் கூடாது. எவரையும் பகைத்தோ, எவரையும் விலக்கி வைத்தோ சமூகம் வாழ நினைக்கக் கூடாது. எதிர் எதிரே எதையும் கண்டு பேச, எதிர்கொள்ளத் துணிச்சலையே துணிவாக்குவோம்.

துணிச்சல் மிக்க எவரும் புறம் சொல்லமாட்டார்கள். சமூகத்தை மதித்தவர்களாகவே இருப்பர்.

✵ வீரகேசரி 27.05.2005






*நேரங்களை வீணடித்தல் கடமைகளைச் சாகடித்தலேயாகும். பிரபஞ்ச இயக்கம் ஒரு கணப்பொழுது காலதாமதமானால் என்ன விளைவு ஏற்படும் தெரியுமா? வாழ்க்கையிலும் நாம் தொலைக்கும் காலங்கள் எங்களை அலங்கோலமாக மாற்றிவிடும். திட்டமிட்டுக் குறித்த நேரங்களில் குறித்த அலுவல்களைக் கவனிப்பவர்கள் வாழ்க்கையிலும் வெற்றி பெற்றுவிடுகின்றார்கள். நாம் செய்யும் கால விரயங்கள் உலகத்தையே பாதிப்புக்குள்ளாக்கும் என்பதனைப் புரிந்து கொள்ளுங்கள்.*

வீட்டிற்குள் நீங்கள் அவசரம், அவசரமாக நுழைகின்றீர்கள். உங்களை அங்கு, வண்ணமயமான அழைப்பிதழ் ஒன்று வரவேற்கின்றது. எடுத்து விரித்துப் படிக்கின்றீர்கள். உங்களுக்கு வேண்டப்பட்ட பிரமுகர் ஒருவரினால் அனுப்பப்பட்ட வரவேற்பு அழைப்பு இதழாகும். முன்பக்கத்திலேயே கூட்ட ஆரம்பம்

RangaRakes Tamilnavarasam.com

அன்றைய தினத்தில் உள்ளதாகவும், தொடங்கும் நேரம் சரியாக ஐந்து மணி ஒரு நிமிடம் எனத் துல்லியமாகக் காட்டப்பட்டதுடன், அழைப்பிதழின் அடியில் கூட்டம் சரியான நேரத்தில் ஆரம்பமாக உள்ளதால் அன்பர்கள் முன்னதாகவே வந்து ஆசனத்தில் அமருமாறும் எச்சரிக்கை விடுவதுபோல் ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. உடனே நீங்கள் என்ன செய்வீர்கள்?

அரக்கப்பறக்க, வீட்டிற்கு வந்த கையோடு கூட்டம் நடைபெறும் மண்டபத்திற்குச் செல்கின்றீர்கள். அங்கே உங்களுக்கு எரிச்சலும், மன உளைச்சலுமான காட்சிகளைக் காணுகின்றீர்கள். கூட்டத்திற்கு எவருமே வந்து சேரவில்லை. ஏன் கூட்ட அமைப்பாளர்கள் எவருமே அங்கு இல்லை. ஒலி பெருக்கி அலுவல்களைக் கவனிப்பவர் மட்டும், அசட்டுச் சிரிப்புடன் உங்களை வரவேற்பதுபோல் பார்த்து அப்பால் போய்விடுகின்றார்.

இன்றைக்கு, பொதுவாகப் பெரும்பான்மையான நிகழ்ச்சிகள் இந்த லட்சணத்தில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சற்று நேரத்தில் பொதுமக்கள் சேர்ந்தும் கூடத் தலைவர் இன்னமும் வந்து சேரவில்லை. அப்படி, இப்படி எனக் கதைபேசி ஒருவாறாகக் கூட்டம் ஆறேகால் மணிக்கு ஆரம்பிக்கின்றது.

சரி, இனி எமக்கு ஏற்பட்ட நேரவிரயம் பற்றி ஆராய்வோம். கூட்டத்திற்கு அன்று கிட்டத்தட்ட ஐந்நூறு பேர் வந்திருப்பார்கள். குறைந்தது சராசரியாக ஆளுக்கு அரைமணித்தியாலங்கள் நேர தாமதத்தால் ஏற்பட்ட நேர விரயங்கள் இருநூற்று ஐம்பது மணித்தியாலங்கள் ஆகும்.



இவை செலவழிந்தது செலவழிந்ததுதான். இவைகளை ஈடு செய்யவே முடியாது. இந்த நேரத்தை அநியாயமாகக் களவியவர்கள், இதற்கு என்ன பதில் சொல்லுவார்கள்? இதுபற்றி ஏதேனும் தெரிந்தும் மீண்டும் மீண்டும் இந்தத் தவறினைத்தான் செய்து கொண்டும் இருப்பர். நேரத்தை வீணடித்தல் கடமைகளைச் சாகடித்தலாகும்.

கோடிக்கணக்கானவர்கள் வாழுகின்ற இந்தப் பூமியில் தலைக்கு ஒருவர், சில செக்கன்கள் தங்களது நேரத்தினைப் பின்னடிப்பார்களேயானால், எத்தனை தூரம் இவர்கள் வாழ்க்கை பின்னால் தள்ளப்பட நேரிடும் என்பதை உணர்வோமாக. தனி ஒருவனின் கால இழப்புக்கள், விலை கூறமுடியாத சொத்து இழப்பிற்கும் மேலானவையே. இழக்கப்படும் மொத்த நேரங்களைக் கணக்கீடு செய்கின்றபோது, இந்தப் பூமி அநாவசியமாக இவர்களைத் தூக்கிக்கொண்டு ஏன்தான் கஷ்டப்படுகின்றதோ என எண்ணத்தோன்றும். ‘ஏன் பூமிக்குப் பாரமாக இருக்கின்றாய்’ என சொல்லப்படுவதை நாங்கள் கேட்பது இல்லையா?

சூரியனைச் சுற்றி வருகின்ற கிரகங்களும், துணைக் கோள்களும் ஒரு குறித்த நேரப் பிரகாரமே ஈர்ப்புச் சக்தியினால் சுற்றி வருகின்றன. இந்தப் பிரபஞ்சம் பூராவுமே இந்த மாதிரியே, ஒரு இம்மியளவு பிசகாமல் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைகள் ஒன்றுக்கொன்று பராக்குப்பார்த்து, ஒரு செக்கன் காலதாமதம் செய்தால், கண் இமைப்பொழுதில் என்ன நடக்கும்? கிரகங்கள் மோதுவதை கற்பனை செய்து பார்க்க, மனித மூளைக்கு என்ன சக்தி இருக்கின்றது?

RangaRakes Tamilnavarasam.com

இயற்கை நிகழ்வுகள் எல்லாமே சரிவர, எமக்கு இசைவாக நடக்கவேண்டும் என எண்ணும் நாங்கள், ஏன் சரியாக, முறையாக, செயல்களை ஆற்றுதற்குப் பின்னடிக்கின்றோம்? விதைகள் முளைப்பதும், வளருவதும், பருவகால மாற்றத்திற்கேற்ப பூச்சி, புழு, பறவை இனங்கள்கூட சரியான நேரக் கணக்கீட்டின்படியே ஒழுகி வருகின்றன. இவை முறை தப்பி வாழுவதுமில்லை. நாங்கள் மட்டும் பதினெட்டு வயதில் செய்ய வேண்டியவற்றை, பத்து வருடம் பிந்திச் செய்தால் என்ன, என எண்ணலாமா?

சாதாரணமாக, கல்யாண வைபவங்களில்கூட என்ன நடக்கின்றது. திருமணத்திற்கு முகூர்த்தம் வைக்கின்றார்கள். எந்தக் கருமங்களையும், அந்த அந்த நேரத்தில் செய்ய வேண்டும் என்பதற்காக நேரங்களை ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால் எம்மவர்கள், வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளான, திருமணங்களில் கூட முகூர்த்தம் பிந்தியே சகலதும் சகட்டுமேனிக்கு நடக்கின்றது. ஆசாரத்தை மதிப்பவர்களே, நேரத்தை நினைப்பதில்லை. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் வெட்டுக்கிளி, பறவைகள் கூட சரியான நேரத்தில் தங்கள் இடத்தைச் சென்றடைகின்றன. மனிதன் மட்டும், தூங்கி எழுந்து சென்றுபோன பேருந்தினை இனிமேல் நாளை பிடிக்கலாம் என்று கூறி மறுபடி புரண்டு படுக்கின்றான். என்ன ஐயா இந்த மனுஷன்?

குறித்த நேரத்தில் காரியம் நடக்காமல் பாதிப்படைந்தவர்கள், அடுத்தவரைக் குறை கூறுவார்கள். ஆனால் இதே தவற்றினைத் தங்களே செய்வதுதான்



வேடிக்கையானதாகும். இன்னும் ஒரு சாரார் இருக்கின்றார்கள். தங்களது கருமத்தில் மட்டும் குறியாக கருமங்களைச் சரியான நேரத்தில் செய்து முடித்து விடுவார்கள். ஆனால் பிறர் விஷயம் என்று வரும்போது மட்டும், ஏனோதானோ என எண்ணி ஒழுங்கைக் கடைப்பிடிக்க மாட்டார்கள். இவர்கள் பிறரது காலங்களை மதிக்காமல் விடுவதால், தமக்கு என்ன விரயம் வந்துவிட்டது என எண்ணினாலும், இவரை நம்பியவர்களுக்கும், அவரோடிணைந்த மற்றையவர்களுக்கும் ஏற்பட்ட சிரமங்களுக்கு யார் பொறுப்பு கூறுவது இன்று தனிமனிதனின் தாமதங்களே பலரையுமே பாதிக்கின்றது.

முகாமையாளர் தனது நிறுவனத்திற்கு ஒழுங்காகக் குறித்த நேரத்திற்கு வரத் தவறினால் நிர்வாக யந்திரம் சீராக ஓடுமா? பணியாளர்கள் அனைவருமே அவரையே பின்பற்றி நடந்தால், யார், யாரைக் கண்டிப்பது? சேவைப் பெறுமான நஷ்டங்கள், உடனடியாகத் தெரிவதில்லை. நேரத்தை வீணடித்துப் பின்னர் வேலை குவிந்துவிட்டது எனக்கூறும் அலுவலர்களின் காரணங்களை ஏற்க முடியாது. வீட்டிற்கும், நாட்டிற்கும், எல்லாவற்றிற்குமே காலத்திற்கேற்ற, குறித்த செயல்கள் ஒழுங்காகவே செய்யப்பட வேண்டும். அலுவலக வேலை நேரத்திற்கு ஒதுக்கிய நேரத்தில், வேறு கருமங்கள் பார்க்க நேர்ந்தால் ஒழுங்குகளே செயல் இழந்துவிடும்.

இதேபோலவே, வீட்டில் மனைவி, மக்களுக்காக ஒதுக்கிய நேரத்தில் அவர்களுக்குரிய பணிகளையே செய்ய வேண்டும். இன்று பல குடும்பங்கள் குழம்பிப் போவதற்கு, சதா குடும்பங்களைப் பாராது அலுவலகப்

RangaRakes Tamilnavarasam.com

பணியுடன் இதர பணிகளில் மூழ்குவதும் ஒரு காரணமாகும். அன்பிற்காக ஏங்கும் மனைவி, பிள்ளைகளுக்கு அதனை வழங்காமலும், அதேபோல குடும்பத்தைக் கவனிக்க முடியாமல் இதர சமூகப் பணிகளில் மட்டும் ஈடுபடும் பெண்களால் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் கதைகளில் படித்திருக்கின்றோம்.

திட்டமிட்டபடி கருமங்களை ஆற்றுவதற்காகவே தொழில் அதிபர்கள், அரசியல்வாதிகள் போன்றோர் தமக்கென உதவியாளர்களை வைத்துக் கொள்கின்றார்கள். இன்ன நேரத்தில் இன்ன வேலைகளைச் செய்து முடிக்க இவர்கள் தகுந்த முறையில் வழிகாட்டுகின்றார்கள். நேர அட்டவணை மூலம் அலுவல்கள் சீராக்கப்படுகின்றன. ஒரு விமானம் பறந்து கொண்டிருக்கின்றது. அதன் இயந்திரத்திற்கு விமானி கட்டளையிடுமாற்போல் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். இயந்திர உள் உறுப்புக்களும், வினாடி பிசகாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தவிர, விமானிக்குத் தரையில் இருந்து கட்டளையிடும் செயலகம் மூலமும், பொருத்தமான கட்டளைகள் இடப்பட்டவண்ணம் இருக்கின்றன. இவைகள் யாவும் ஒழுங்காக இருந்தால்தான் விமானம் சீராகப் பறக்கும்; பயணமும் சிரமமின்றி நடக்கும்.

இதுபோலத்தான், உலக இயக்கமும். நாங்கள் எமக்கென கால அட்டவணைகளை உருவாக்க வேண்டும். நாங்கள் மட்டுமல்ல, எங்களைச் சார்ந்தவர்களும் அருகே இருக்கின்றார்கள். இசைவாக, ஒருமித்துச் செயல்கள் நடந்தால்தான் நினைத்த கருமங்கள் நன்றாக நடக்கும்.

RangaRakes



நேரப் பெறுமதியை அறிந்தவர்களே மேதைகள் ஆனார்கள். காலத்தைக் கரைத்தவர்கள், கலங்கிக் கரைந்து போவார்கள். குறித்த காலத்திற்கேற்ப பயிரை பராமரிக்காதுவிட்டால் பட்டுப்போகும். எங்களை நாம் பராமரிப்பது என்பது, காலதாமதமின்றியும், குறித்த நேரத்தில் குறித்த பணியினை ஆற்றுவதிலும் தங்கி இருக்கின்றது.

குறித்த வேலையை ஏன் செய்யவில்லை என்றால் ஐயய்யோ... நான் மறந்துவிட்டேன் என்கின்றார்கள். மறதிக்காரர்கள் தங்களுக்கென குறிப்பேடுகளை வைத்துக் கொண்டால் என்ன? சிலர் தமது கையோடு சின்னக் குறிப்புப் புத்தகம் வைத்திருப்பார்கள். நேர சூசியைச் சின்னவர்கள்தான் வைத்திருக்க வேண்டும் என்பதில்லை. மறதி, வயது வந்தவர்களுக்கே வரக்கூடியது என்பதால், இவர்கள்தான் உடனுக்குடன் செய்யவேண்டிய வேலைகளை என்ன நேரத்தில் செய்யவேண்டும் எனக் குறிப்பு எடுத்து வைக்க வேண்டும். நேரப் பெறுமதியை உணர்ந்து கொண்டால், சில நல்ல நடைமுறைகளைக் கடைப்பிடித்தே ஆகவேண்டும். சொன்ன சொல் பிரகாரம் உங்கள் மூலம் பெறப்படும் சேவைகள், நீங்கள் செய்யும் சேவையினைவிட இரண்டு மடங்கு மனநிறைவினைத் தரவல்லது. இதன் பொருட்டு ஏற்படும் திருப்தி நன்மைகளைப் பெற்றுக் கொள்பவரைவிட, நன்மையளிக்கின்ற உங்களுக்கே கூடுதலாகக் கிடைக்கும் என்பதையறிக.

நீங்கள் ஒரு செயலை முடிக்கக் காத்துக் கிடப்பதும், இதேபோல் நீங்கள் மற்றையோரைக் காக்க வைப்பதும்

Tamilnavarasam.com

கூடாது. குறித்த நேரத்தில் பிரசன்னமாயிருந்து பூர்த்தியாக்கப்படும் கருமங்கள், எங்கள் எதிர்பார்ப்புகளை விட மேலதிகமானதாகவே இருக்கும். எமக்குப் பின்னே ஆயிரம் வேலைகள் இருக்கின்றன. அனைத்துமே உங்கள் மூலம் பயன்பெற உரித்துடையவை. எனவே எதனையுமே தட்டிக்கழிக்காமல் இருக்க வேண்டுமேயானால், இருக்கின்ற வேலைகளை, உடனுக்குடன் குறித்த நேரத்தில் ஆரம்பித்து விடுங்கள். இதுதான் ஆரோக்கியமான நடைமுறைக்கு வழிசமைக்கும். ஒருவனுக்கு நேரடியாகச் செய்யும் கெடுதலைவிட, மறைமுகமாக எங்கள் மூலம் கிடைக்கும் பயன்பாடுகளைக் காலதாமதத்தின் மூலம் முடக்குவதே மிக மோசமானதாகும். இழுத்தடித்தல், பொழுதுகளைப் பூச்சியமாக்கும் செயல். இது கடவுளின் உள்ளத்தையே குடைந்து கோபங்காண வைக்கும்.

சமூகத்தில் ஒருவரால், ஒருவர் பாதிப்படையலாமா? ஒருவன் தனக்குத்தான் தீங்கு செய்வதும், ஒருவகையில் சமூகத்திற்குச் செய்யும் தீங்கு போலத்தான் கருதப்பட வேண்டும். நேர விரயம் என்கின்ற விஷயத்தில்கூட, எமது சௌகரியத்திற்காக செய்கின்ற காலதாமதங்கள், நேரத்தின் அவசியத்தன்மை பற்றியே சிந்திக்க வைப்பன, இவை எமக்கு மட்டும் செய்கின்ற தீமைகள் அல்ல. மாறாக நீங்கள் வாழுகின்ற சமூகத்தின்பால், உங்களின் அக்கறையின்மையின் வெளிப்பாடாகும். இது எங்கே கொண்டு சென்றுவிடும்? நீங்கள் வேண்டப்படாதவராக ஒதுக்கப்படவும், நம்பிக்கைக்குரியவர் அல்லாத நபராகக் கணிக்கப்பட்டும் விடுவீர்கள். காலத்தை மதிப்போம், நேரங்கள் கடக்கும்போது, அவை உரியமுறையில் எங்களால் செலவு செய்யப்படுகின்றதா எனக் கணிப்பீடு செய்வோம். நேரங்கள் போகும்போது முன்னேற்றங்களும் கூடவே வளர்த்துக் கொண்டே போகுதல் வேண்டுமன்றோ?



ஆற்றல்கள் அனைத்தும் கழிக்கும் நேரங்களில் முழுவதிலும் செய்கின்ற முழு வீச்சான அர்ப்பணிப்பான பணியில் தங்கியுள்ளது.

நேரத்தில் செய்யப்படுவது, காலத்தைத் துதிப்பது போலாகும்.

✷ தினக்குரல் 03.07.2005

RangaRakes Tamilnavarasam.com




*அதிகூடிய நம்பிக்கையிலேயே சிறுகீறல் விழுந்தால் போதும். அதனூடாக சந்தேகம் உள் நுழைந்து விடுகின்றது. நாடுகளுக்கிடையே பூசல்கள், இனங்களுக்கிடையே இடிபாடுகள் அனைத்துமே சந்தேகங்களுடாகவே பிரசவமாகின்றன. அறிவின் மூலம் சந்தேகங்களில் இருந்துவிடுபடல் வேண்டும். சூழ்ச்சி, கெடுதல் போன்ற எண்ணங்கள் அறவே இல்லாத போது சந்தேகங்கள் ஏன் தோன்றப் போகின்றது? மனிதன், மனிதனை மதிக்கவேண்டும். பரஸ்பரம் நம்பிக்கையுடையவனாக வாழவேண்டும்.*

சந்தேகங்கள், பல சரித்திரங்களையே திசை திருப்பியிருக்கின்றன. பல இலக்கியங்கள் உருவாகக் கருப்பொருளாகவும் அமைந்திருக்கின்றன. குடும்பங்களில், குழப்பத்தையும், நேயங்கொண்டோரிடம் கோபப்பட



வைக்கவும், பாசங்கொண்டவர்களையே பேசாமல் செய்கின்ற வேலைகளையும் சந்தேகமானது சர்வ சாதாரணமாகச் செய்துவிடுகின்றது.

அதிகூடிய நம்பிக்கையின் மீது சிறு கீறல் விழுந்தாலே போதும். சந்தேகம் அதனூடாக நுழைந்து கொள்கிறது. சலனமற்ற நீரில் சிறு கல்லைப் போட்டாலும் பல அலைகள் எழுவதில்லையா? அதுபோலத்தான்; ஆனால் சலனமற்ற நீர் சற்று நேரத்தில் நிர்மலமாகிவிடும். மனம், மாறுபட்டால் என்னென்னவெல்லாம் மாறிவிடுகின்றது.

நாடுகளுக்கிடையே பூசல், இனங்களுக்கிடையே இடிபாடு என விஸ்தாரணமான விஷயங்களில் சந்தேகம் தன் பலத்தை நிரூபிக்கின்றது. ஒரு குடும்பத்தில் ஆரம்பித்து, அது சிலவேளை சமூகப் பாதிப்பாகும் சங்கடங்களும், சந்தேகங்களால் நிகழ்வதுண்டு. சந்தேகம் கொள்ளும் இயல்பு முடிவில்லாத, முடிவாகவும் போவதுண்டு. உண்மை துலங்கும்வரை இதன் ஆதிக்கத்திலிருந்து விடுபடவே முடியாது.

அறிவாளிக்கும் கற்ற கல்வியில் சந்தேகம்.

அரசியல்வாதிக்குத் தன்னை ஆதரித்த மக்கள் மீதும் சந்தேகம்.

மக்களுக்கோ, தாம் வாக்களித்துத் தெரிவு செய்த தலைவர்கள் மீது சந்தேகம். அதிகாரிகளுக்கு, ஊழியர்கள் மீதும், ஊழியர்களுக்கு நிர்வாகத்தின் மீதும் எனச் சந்தேகங்களின் எல்லை நீளமானது. ஏன் எல்லையில்லாதது என்றும் கூறலாம்.

RangaRakes Tamilnavarasam.com

எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகும்போது அதிகவழய பாசம், சற்று வித்தியாசமாகத் தடம் புரளும்போது, தமக்கிடையே பிறரிடையே ஒட்டுதல் இல்லாமல் புரிந்துணர்வு இல்லாதபோது எனப் பலதரப்பட்ட காரணங்களால் சந்தேகம் கிளைவிட்டு வளரலாம். ஒரு சிறு கரும்புள்ளியானது விஸ்வரூபமாகி முழுமையுமே கரு நிறமாகிப் போகும்.

தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு என இது எங்கும் பரந்துபட்ட குணாதிசயமாக இருப்பதனால் இது விடயத்தில் மிகுந்த அவதானம் தேவைப்படுகின்றது.

வெளிப்படையாகப் பேசாமல் செயல்களை மூடி மறைப்பதால், உள் ஒன்றும் புறம் ஒன்றுமாக நடந்து கொள்வதனால், தனிமனிதன் பிறர் பார்வைக்குச் சந்தேகம் கொள்ள வைக்கும் ஆன்மாவாகக் கணிக்கப்படுகின்றான். பிறர் பார்வைக்கு ஒருவர் சற்று வித்தியாசமாகப் புதிரானவர்களாகத் தோன்றும்போது கூடச் சாதாரணமானவர்கள் இவர்களைச் சந்தேகக் கண் கொண்டு நோக்க ஆரம்பிக்கின்றார்கள்.

காவல்துறையினர் சந்தேகக் கண் கொண்டு குற்றவாளிகளை நோக்காதுவிட்டால் காரியமாற்ற முடியுமா? சந்தேகப்படுவதனாலும் சாதகமான பயன் கிடைக்கும். எதையும் நம்பிவிடுவதால் குற்றவாளிகளும், சமூக விரோதிகளும் சமூக விசுவாசிகள் போல் தோற்றம் காட்டி நிற்பர் அன்றோ. நடிக்கும்போது எப்படியும், உண்மை, பொய் எதுவெனப் புரிந்து விடுகின்றது. எனவே ஐயப்பாடுகள்கூட நம்மை உஷாரடையச் செய்து விடுகின்றன. அதே சமயம் வீணான முடிவுகள் விபரீதமாகியும் விடும்.



எனினும், சந்தேகத்தினைச் சந்தர்ப்பமாகவும், சந்தர்ப்பவாதமாகவும் ஆக்கிக் கொள்ளக்கூடாது. சில விரும்பத்தகாத நிகழ்வுகள் நடந்துவிடும் என்கின்ற அச்சத்தினால், சந்தேக நினைப்புகளை மூடி மறைத்தாலும்கூட, இது சுதந்திரமாகவும், யந்திர கதியுடனும், அதே சமயம் மர்மமாகவும் வளருகின்றது. முதலில் குடும்ப விஷயத்திற்கு வருவோம்.

எந்த விஷயத்தினையும் ஆரம்பத்திலேயே தீர்த்துவிடாமல் அதனை மென்மேலும் வளரவிடக்கூடாது. கணவன், மனைவியிடையேயுள்ள மனஸ்தாபங்கள், காதலர்களிடையேயான கசப்பான சிறு சிறு விஷயங்கள், மிகச்சிறிய ஊடல்களாக ஆரம்பித்து பின்னர் வளர்ந்து, அழிக்கமுடியாத விரிசல்களாகி, சந்தேக மனோ நிலையை நிரந்தரமானதாக்கிவிடும். தற்காலிகமான காரிய சித்திக்காக எதனையும் மூடி மறைத்தால் முடிவு உடைந்து நொருங்கிய கண்ணாடி ஆகிவிடும்.

சந்தேகம் தொட ஆரம்பித்ததும் எப்போதோ முடிவடைந்த பிரச்சினைகள்கூட, மீண்டும் உயிர் பெற்று அதனைப்பற்றியே இருசாராரும் விவாதிக்கத் தலைப்படுகின்றனர். ஒரு தடவை ஏற்பட்ட ஐயங்கள் பல கதைகளை உருவாக்கிக் கொள்கின்றன. “இப்போ எதற்குப் பழங்கதைகள்” எனப் பலர், பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயல்வதை நாம் காணுகின்றோம்.

ஏற்கனவே, மன்னிக்கப்பட்டவைகள், வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, வடுவாக

RangaRakes Tamilnavarasam.com

மன்னிக்கும் நினைப்பே அற்ற நிலைக்கு சந்தேக அரக்கன் மனிதரை வைத்துவிடும்.

மறைத்து வைக்கப்படுபவை சந்தேகத்துக்குரிய மூலப் பொருளாகின்றன.

பல பெற்றோர், பிள்ளைகள் விடயத்தில் ஒளிவு மறைவாகச் செயல்படுவதால், அவர்களின் மனோநிலை பாதிப்படைகின்றன. வீட்டின் நிலவரம் பற்றி ஒரு தகவல்களையும் வெளிப்படுத்துவதில்லை. பிள்ளைகள் கவலைப்படுவார்களே என்ற நியாயபூர்வமான எண்ணம் ஒரு புறம் இருக்க, வயது வந்த பிள்ளைகள் எதனையும் கண்டுகொள்ளாமல் செய்து விடுவது அவர்களது அனுபவ ஞானத்தை வளர்க்காமலும் ஆக்கிவிடுகின்றது. பெற்றோரின் எதனையும் மறைத்து வைக்கும் இயல்பு அவர்கள் மீது பிள்ளைகள் நம்பிக்கை வைக்கவே சிரமப்படவேண்டியுள்ளது. எல்லாமே பிள்ளைகளுக்கு என்று ஆனபோது இதில் மறைக்க என்ன வேண்டியுள்ளது? எனினும் சொல்லக்கூடாதவை என்கின்ற, மனதை நெருட வைக்கும் கதைகளைச் சொல்லாமல் இருப்பது தவிர்க்கப்பட வேண்டியவைதான்.

நல்ல விஷயங்களை மறைத்து வைப்பதனால் அவை இறந்துபோகின்றன. சரியான விஷயங்களில், வீண் சந்தேகம் கொண்டுவிட்டால் எல்லாமே தவறாகி, எடுக்கும் முடிவும் பிழையாகிவிடும்.

இரண்டு நாடுகளிடையே பிணக்குகளை ஏற்படுத்த, வல்லரசு நாடுகள் தமக்கு ஆதாயம் தேட, சந்தேக உணர்வுகளை அந்த நாடுகளிடையே துளிர்க்கச்



செய்கின்றன. அதற்கான நடவடிக்கைக்குத் தூபமிட்டு, அவைகளை மோதவிட்டு லாபம் சம்பாதிக்கின்றன. இதை மக்கள் உணர்ந்தும் சம்பந்தப்பட்ட நாடுகள் பெரிதும் உணர்வதாகத் தெரியவில்லை. இவை யுத்தமாக வெடித்து, அழிந்த பின்னர்தான் உண்மை உணர்ந்து சமாதானம் பேச முனைகின்றன. இதில் வேடிக்கை என்னவெனில், சந்தேகத்தை விதைக்கும் நாடுகளே சமாதானம் செய்து வைக்க முனையும் நடிப்பான நடவடிக்கைகள்தான்.

இன்று நாடுகளுக்கிடையேயும் இனங்களுக்குள்ளேயும், சந்தேகங்கள் வளர்ந்துவிட்டன. பல சந்தேகங்கள் நியாயபூர்வமானவையும், உண்மையானவையும்கூட. எனினும் இவை தீர்க்கப்படக் கூடியவைகள்தான். இனங்கள், மதங்கள், மொழிகள் எனப் பலதரப் பட்டவைகளிடையே சமரசம் காண்பதே சாலச் சிறப்பானது. மக்கள், பலதரப்பட்ட பிரிவுகளுக்குட்படினும், உலகின் முன் மனிதர்கள் ஒரே பிறப்புக்கள்தான். சுயநலமிகளின் குழப்ப நடவடிக்கைகளை மனித இனம் புரிந்து கொள்ளவேண்டும். சாதாரண கிராமங்களில்கூட, சாதிப்பாகுபாட்டை வளர்க்க ஒவ்வொரு சாரார் இடையே சந்தேகங்களை வளர்த்து விடுகின்றனர். ஒரு குடும்பப் பிணக்குகூட ஒரு பிரதேச உணர்வாக வளர்ந்து பெரும் சண்டையாக முடிவடைகின்றது.

மாணவன் சந்தேகம் கொண்டால் படிப்பில் நிறைவு காணமுடியுமா? சந்தேகம் வரவும் வேண்டும். அதனைத் தீர்த்துக் கொள்ளவும் வேண்டும். அதுபோலத்தான், முழு வாழ்க்கையிலும் சந்தேகங்கள் தவிர்க்க முடியாதவை. எனினும் தீர்க்கக் கூடியவையே. தொழிற் போட்டிகளில் உட்பூசல், அரசியல் உட்பூசல், மதங்களுக்கிடையே,

RangaRakes Tamilnavarasam.com

இனங்களுக்கிடையே உட்பூசல் போன்ற சகல தீய சக்திகளையும், வெற்றிகரமாக நகர்த்தும் கலையை மனிதன் கற்றுக் கொண்டுவிட்டான். என்னதான் ஆன்மீகம் பற்றிப் பேசினாலும், குரோதங்களை சந்தேகங்களை உருவாக்குவதே மேல் என கீழ்த்தரமாக எண்ணுகின்றான். அன்னி யோன்னியமானவர்களை, அவஸ்தைப்பட வைப்பதில் என்ன நன்மை இருக்கின்றதோ தெரியவில்லை.

தற்செயலாக நடக்கும் சம்பவங்களே புது வியாக்கியானமாக்கப்படுவதும், அவை திட்டமிட்டுச் செய்யப்படுவதாக உருவகிக்கப்படுவதால். இருசாரார் மோதுவது சர்வசாதாரணமாகி விட்டது. இந்த உண்மைகளை எப்போது மனிதன் உணரப்போகின்றான்? சூழ்ச்சிகள் சந்தேகத்தை வலுப்படுத்தும். மனிதன் தன்னைத்தானே குழப்புவதிலும் சூழ்ச்சிகளினால் தன்னை வெப்பமடையச் செய்கின்றான். ஒழுக்க நெறியும் துணிவும், பிறரிடத்தே பரிவுடன் கூடிய நம்பிக்கையும் கொண்டால் பிறர் மீது இருந்து புறப்படும் எதிர்க்கணைகள் களையப்பட்டு விடுமே.

சமூகத்தின் மீதான கரிசனை உணர்வுகள் மேலோங்க வேண்டும். உங்கள் மீது உங்களுக்குள்ள ஆதிக்கம் உறுதியாக்கப்படல் வேண்டும். உங்களுக்கு நீங்கள் கட்டளையிடுங்கள். தவிர, இத்தகைய உறுதியுடன் வாழ்தலுக்குத் தூய்மையான வாழ்வு முறையின்றிச் சாத்தியமில்லை. இந்த முறைமையின்படி எம்மை ஆக்கிக்கொண்டால், எத்தரப்பினரும் எம்மீது எந்தவிதமான சந்தேகங்கள், காழ்ப்புகளைக் கொள்ள முடியவே முடியாதுவிடும். இவர்கள் மீது சந்தேகம், கதவு தட்ட




அஞ்சும். இதயம் முழுவதும் தெளிவு நிறைந்தால் அதனூடாக உட்புகுந்து கொள்ள தூய்மை சாரா உணர்வுகளுக்கு அனுமதியே கிடைக்காது அல்லவா?

எனவே, அறிவின் மூலம் தெரிந்துகொள்வோம். ஆதாரமற்ற சந்தேகங்களை விரட்டிவிடுவோம். நல்லதை நினைக்கும்போது பொல்லாதவை போய்விடும். சந்தேகமும் அப்படியே.

✪ வீரகேசரி 30.04.2005

RangaRakes Tamilnavarasam.com




*சரியான பாதையில் செல்கின்றவன் துணிச்சலுடன் தட்டிக் கேட்கின்றான். கண் எதிரே காணும் அநியாயங்களைக் காணாமல், கண்டுகொள்ளாமல் விடுவது என்பது, செய்யப்படும் அநீதிகளைவிட அக்கிரமான செயலாகும் என்பார்கள். நடக்கும் அநியாயங்கள் உடனே எம்மைப் பாதிக்கவில்லை எனக்கருதி மௌனமாக இருந்தால் ஏதோ ஒரு மறுதிசையில் இதன் விளைவுகளை நாம் கண்டு கொண்டு அனுபவித்தேயாக வேண்டும்.*

தட்டிக்கேட்டால் முட்டப்பகை என்றும், எட்ட நின்று விலகிச் செல்வதே புத்திசாலித்தனம் எனவும் நினைத்துக் கொள்கின்றோம். தட்டிக்கேட்டல் என்பது, ஒருவர் மனத்தைக் கறுக்க வைத்து வெறுப்பேற்றும் பணியல்ல. நியாயபூர்வ விஷயங்களுக்காக, நியாயங்கள், நேர்மைகளுக்கு முரணாகச் செயல்படுபவர்களை அதைச் செய்யாமல் தடுக்கும் சமூகப் பணியேயாகும். தனக்காக மட்டுமின்றி,



பிறருடைய நன்மைகளுக்கும் குரல் கொடுப்பது போலாகும். ஏனையவர்கள் முன், எங்களுக்கு எல்லாமே தெரியும் என்ற நோக்குடனும், ஒரு வீரனாகக் காட்டுவதற்காக மட்டும் இந்தத் தட்டிக்கேட்கும் செயல் அமையக்கூடாது.

விளம்பர நோக்கோடு, தம்மை உயர்ந்தோராகவும், தலைவராகவும் காட்டும் தந்திரோபாயமாக இச்செயல் காட்டப்படுவதுண்டு. சரியான காரியங்களுக்காக மட்டும் சமூகத்தின்பால் பிரியப்பட்டு, நியாயம் கேட்டேயாக வேண்டும். உண்மைகளைத் திரிபுபடக் கூறுபவர்கள் எப்படியும் பேசுவார்கள். இவர்கள் மீட்டு, மீட்டுச் சொல்லும் வார்த்தைகளுக்குள் கட்டுண்டு போனவர்கள், நியாயம் கேட்க மாட்டார்கள். இவர்கள் மத்தியில் நியாயம் கேட்க, தட்டிப் பேசினால் அது எடுபடவே சிரமமாகின்றது. இம்மயக்க நிலைக்கு உட்படுத்துபவர்கள் சாதுர்யமான துன்மார்க்கர்கள்.

சமூக வழக்கங்கள் சமயக் கோட்பாடுகள் விடயத்தில் தேவையில்லாமல் நுழைந்து, சரியான பாதைக்கு வழிகாட்டுகின்றேன் எனக்கூறி பாரம்பரிய கலை, கலாசாரம், நெறிமுறைகளையே உடைத்தெறியும் கைங்கரியத்தினைச் செய்ய முற்படுபவர்களை முளையிலேயே களை பிடுங்குவதுபோல் கிள்ளி எறிய வேண்டும்.

பேசுமுன் யோசிக்கவேண்டும். கண்டதையும் கதைக்கக்கூடாது.

உண்மையிலேயே மூடப் பழக்க வழக்கங்கள் எங்கேயும் உண்டுதான். எனினும் இதனுள், சரி, பிழை எது என ஆராய வேண்டுமல்லவா? தவறுகளைச் சுட்டிக்காட்டவே முற்போக்குச் சிந்தனையாளர்கள், ஞானிகள்

RangaRakes Tamilnavarasam.com

உருவாகினர். இவர்கள் சுட்டிக் காட்டியவிதம் தனித்துவமானது. உபதேசங்களைக் கையாண்ட முறையில் சாத்வீகத்தினைக் கையாண்டார்கள். முரட்டுத்தனம், வரட்டுப் பிடிவாதம் மூலம் எதையும் சாதித்துவிட முடியாது. சாத்வீகத் தன்மையுடன் மக்களை அணுகியமையினாலேயே சமய உணர்வுகள் ஆன்மீக நெறிகள் இன்னமும் அருகிப்போகாமல், நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

தெரிந்தோ, தெரியாமலோ நாம் விரும்பத்தகாத செயல்களைச் செய்து விடுகின்றோம். அத்துடன் அருவருக்கத்தக்க செயல்களும் எம்முன் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, எம்மையும் திருத்தி, பிறர் செயல்களையும் சுட்டிக் காட்டவேண்டியவர்களா யுள்ளோம். வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதுகூட அச்செயல்களை அனுமதிப்பது போலாகவும் ஆகிவிடும். தீமைகளைப் பார்த்துச் சும்மா இருப்பதே மிகப்பெரிய பாவமாகும் எனப் பெரியோர் கூறுவர்.

“அநியாயங்கள் மத்தியில் வாழப் பழகிவிட்டோம். இனி என்ன செய்வது?'' என்கின்றார்கள். தட்டிக்கேட்டால் விட்டுவிடுவார்களா? தட்டிக்கேட்டால் தலைபோகும், விட்டு விடுவோம் என்றும் பேசுகின்றார்கள். யேசு கிறிஸ்துநாதருக்கு என்ன நடந்தது? இந்த வாதம் சரிதான். இப்படியே பேசினால் உலகில் எதனைத்தான் சாதிக்க முடியும்? தவிர இதன் பலாபலன் எம்மை வந்தடையும் போதுதானே விழிப்படைந்து வேதனைப்படுகின்றீர்கள்.

உடனே உங்களைத் தீமைகள் தாக்காதவரை தப்பித்துப் போனதாகக் கருதவேண்டாம். பின் விளைவாக, நாம் வேடிக்கைப் பொருளாகி, வீணர்களாகத் தூக்கி எறியப்படும் நிலைக்கும் உள்ளாக்கப்படலாம். அந்த, அந்த நேரங்களில் போலிகளுக்குப் பலத்த அடி கொடுக்காது விட்டால், அவை காலங்கடந்த சமாச்சாரங்களாகி எம்மைத் தருணத்தில் விழுங்கிவிடும். நோய் மறைந்திருந்து தாக்குவதுபோல, எமக்குத் தெரிந்த இயலுமான, எதிர்ப்புகளைப் தொடுக்க வேண்டிய சமயம் தொடுத்தேயாக வேண்டும். மௌனம், பயம் சிலவேளை எம்மை வெறுமைப்படுத்திவிடும். மனத்தை மென்மையாக்கும் மௌனமும், பயத்தினால் ஏற்படும் மௌனமும் வெவ்வேறானவை.

எங்கள் முன் எவன் செத்தால் என்ன. எமது கருமங்களில் மட்டும் நாம் கண்ணாயிருப்போம் என்ற கருத்து சமூக விரோதக் கருத்தே. ஒருவனைத் தாக்குவது என்பது, பிறர் என்னை என்ன செய்யமுடியும் என்ற ஆணவ முனைப்பாய் அமைந்துவிட்டது. இறப்பர் பந்தினை அமுக்கும் போது அது மறுபக்கம் பிதுங்கும். சற்றுக்கூட அமுக்கினால் உடைந்தே போகும். சமூகத்தில் கூடப் பிரச்சினைகளை அமுக்கும் போது எதிர் விளைவுகள் தோன்ற ஆரம்பிக்கும். வாய் பேசாமல் இருப்பவர்களை வதைத்தால் அவர்கள் தட்டிக் கேட்பதுடன் நிறுத்தமாட்டார்கள், மோதி உதைத்தும் விடுவார்கள். தட்டிக் கேட்பது ஒருவனை ஒடுக்குவது அல்ல. அவன் மீது குற்றம் கண்டு பகைத்தலும் அல்ல. அதட்டி, வெறுத்தலும் அல்ல.

கேட்கவேண்டிய முறையில் கேட்கவேண்டும் என்பார்கள். ஒரு குழந்தையில் நமக்கு காரியம்



RangaRakes
Tamilnavarasam.com

ஆகவேண்டும் என்றால், அதனைத் தட்டிக் கொடுத்துக் கேட்கவேண்டும். தட்டிக் கேட்டல் தட்டிக் கொடுத்துக் கேட்டல், இரண்டுமே வெவ்வேறான அணுகுமுறைகளாகும்.

அத்துடன்,

தட்டிக் கொடுத்தும், இதயத்தைத் தொடும்படியாக அணுகுவதாலே பல பிரச்சனைகள் தீர்ந்துபோகின்றன. அன்பு, ஆதரவு, கனிவு இவைகள் காரியங்களைச் சாதிக்கும் கருவிகளாகும். கோபமாக இன்றி, ஆரம்ப நிலையிலேயே தட்டிக் கொடுத்துப் பேசுவது கஷ்டமானதல்ல. முரட்டு ஆசாமிகள் எடுத்த எடுப்பில் எதையும் பேசுவார்கள், செய்வார்கள். நாம்தான் சற்று நிதானமுடன் செயல்படவேண்டும். சாதாரணமானவர்களே, சில சமயம் முரட்டுத்தனங்களுக்குச் சூழ்நிலை காரணமாக ஆளாகும்போது, இயற்கையில் முரட்டுச் சுபாவம் உள்ளவர்களிடம் சாதுர்யமாகவே பழக வேண்டியுள்ளது. கோப உணர்வுடன், கோபம் மோதினால் குழப்பமே. ஆனால் நிதானத்தை கோப உணர்வுகள் சந்தித்தால், நிதானம் நிலைபெற்று வென்றுவிடும்.

பெரும்பான்மையினர் கூடி நின்று, தவறுகளைச் சரி எனக் கொள்ளும்போது உண்மை ஊமையாகின்றது. இந்த நிலை கல்வியற்ற சமூகத்திடையே மட்டுமல்ல, கற்றறிந்த சமூகத்திடையேயும் உள்ளது. பெரும்பான்மையான, தவறான கருத்துக்களும் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இத்தகையோர் மத்தியில் உண்மைகளைச் சுட்டிக் காட்டும்போது துணிச்சலுடன் கூடிய நிதானம் தேவைப்படுகின்றது. அத்துடன் புரிய வைக்கக் கால அவகாசமும் தேவைப்படுகின்றது. காலம் எப்போதாவது ஒருநாள் உண்மைகளை உணர்த்தும். அதற்காக, நாம் செய்யும் பணியைக் காலதாமதம் செய்தல் கூடாது. ஆமாம் சாமி போடும் பரிதாபச் சனங்களைக் காப்பாற்றவேண்டும்.




மிகவும் சிரத்தையுடன் கட்டி எழுப்பப்பட்ட சமூகம் உடைந்துபோக அனுமதிக்கலாகாது. பதவி, அந்தஸ்து மூலம் நியாயங்களுக்குத் தடைபோடச் சம்மதிக்கக் கூடாது. இன்று, அரசியல், சமய நிறுவன அமைப்புகளில் இருப்பவர்களில், ஒரு சிலர் பதவி அந்தஸ்து நிலையில் இருந்து சூறையாடுதலும், அதை மறைக்கப் பக்கத்தில் உள்ளவர்க்குக் கிள்ளிக் கொடுத்து, வாயடைக்கச் செய்வதுமாயிருக்கின்றார்கள். தட்டிக் கேட்பவர்களை முட்டாள் ஆக்கி அடக்கியும் விடுகின்றனர்.

சமூக நீதி கோருதல், மனிதனுக்குச் சுபாவமானதாக இருக்கவேண்டும். நாம் எதனையும் அணுகும் விதத்தில் அணுக எம்மைத் தயார்ப்படுத்தவேண்டும். எடுத்த எடுப்பிலேயே துஷ்டர்கள் விடயத்தில் தலையிடும்போது, எங்கள் மீதான நியாயத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்தபின்னரே நிதானமாகப் பேசவேண்டும். கொள்கைகளில் அழுத்தம் இல்லாது போனால், நீங்கள் எதிராளிகளின் வசப்பட்டு உண்மைகளையுங்கூட உதறிவிடும் நிலைக்குள்ளாவீர்கள். தெரிந்து கொள்ளுங்கள்.

நியாயங்களை, மற்றவர்கள் ஏற்கும் நிலையை உருவாக்குவதே எங்கள் சாமர்த்தியமாக அமைய வேண்டும். நியாயங்களுக்கான போராட்டங்கள் உடன் பயன் அளிக்காதுவிட்டாலும்கூட, இதற்கான முயற்சிகள் என்றுமே திருப்தி அளிப்பவை. சாதாரண வாழ்வைவிட சாதித்து எழுவதே மேல்.

தினக்குரல் 17.07.2005

RangaRakes Tamilnavarasam.com




*சின்ன மூளைதான் ஆனால் சிங்காரமானது. இதனைப் போஷிப்பதற்காக, நல்ல நல்ல தகவல்களை அதனுள் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். எண்ணங்களில் வலு இருக்குமேயானால் மயில் இறகைக் கொண்டே மலையை இழுக்க, வளைக்கமுடியும். மனிதன் எதற்கும் அஞ்சுதல் கூடாது. இதயம் மென்மையாகவும், வன்மையாகவும் இருக்கவேண்டும். "ஒரு தனிமனிதனில் புலம்பல் உலகின் விசும்பல்" எனக் கருதித் துன்பம் உற்றோரைத் தூக்கிவிடல் எம் பணியாகக் கொள்ளவேண்டும்.*

---

இந்த மூளைக்கு நாங்கள் கொடுக்கின்ற உணவு பற்றாது என்றுதான் கூறவேண்டும். ஆனால் தேவையற்ற, சத்து அற்ற தீனிகளைத் திணித்து விடுகின்றோம். கவலை, ஏக்கம், விரக்தி, மயக்கம், கோபம், மமதை என்றவாறு பலதரப்பட்ட, மனிதனுக்கு அறவே ஒவ்வாத பலவற்றை



பக்குவமாக ஊட்டி விடுகின்றோம். பிறகு என்ன நடக்கும்? இவைகளை ஜீரணிக்க முடியாத நாம் ஜீவனற்ற வாழ்விற்கே விலை போகின்றோம்.

சின்ன மூளைதான். ஆனால் சிங்காரமானது. எனவே, இதனைப் போஷிப்பதற்காக, நல்ல நல்ல தகவல்களைப் பதிவு செய்ய முனைய வேண்டுமல்லவா? எமக்கே தெரியாதவாறு, எம்முன் உள்ள பல தகவல்களை நாம் கிரகித்துக் கொள்ளுகின்றோம். நாம் விரும்பியும், விரும்பாமலும்கூட கேட்கின்ற - உணருகின்ற விஷயங்கள் ஏராளம். தூக்கத்தில்கூட நாம் சில காட்சிகளைக் காண்பதில்லையா? எப்பவோ பார்த்த காட்சிகள், நிகழ்வுகள் அனைத்துமே ஒரு திரைப்படம்போல் உருவாகுதல் அல்லவா?

எனவே,

நாங்கள் நல்ல விஷயங்களுக்கு மட்டுமே எம்புலன்களைத் திருப்பப் பயிற்சி எடுக்கவேண்டும். உலகில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடக்கின்றன. இவற்றுள் குற்றவியல் சம்பந்தமானவைகளை மட்டும் சிலர் படித்துச் சந்தோஷப்படுகின்றனர். இன்னும் சிலர் பாலியல் தொடர்பான செய்திகள், ரகசியங்களை, ரகசியமாகவும், பரகசியமாகவும் படித்தும், புத்தகங்கள், திரைப்படங்களைப் பார்த்தும் திருப்திபட்டதுடன் மனதைச் சபல சிந்தனைக்குட் படுத்தியும் விடுகின்றனர். கேட்டால் எல்லாமே தெரிய வேண்டியதுதானே என்பார்கள்.

ஆன்மீக சிந்தனைக்குரிய செய்திகள், அரசியலுக்குரிய விஷயங்கள், விஞ்ஞான, கலை, இலக்கிய

RangaRakes Tamilnavarasam.com

விடயங்கள் என நல்ல தகவல்களுக்கா இங்கு பஞ்சமில்லை? இப்படியிருக்க, காம, குரோத, கோப, துர்நடத்தை போன்ற செயல்களைத் தூண்டும் வகையிலான கதைகளை - தகவல்களை மிகையாக அறிய முற்படுதல் சரியானதுதானா?

நல்லது, கெட்டதுகளைக் கண்டுகொள்ளாதுவிட்டால் வாழ்க்கைபற்றி தெரிந்து போகாது. உண்மைதான். ஆனால் இவைகளைப் பற்றிய செயல்களை ஆழமாகப் பார்த்து லயிப்பதில்தானே எமது எண்ணங்களுக்கு ஊறு ஏற்படுகின்றது. இதயத்தைத் தெளிந்த நீரோடை போல வைத்துக் கொள்ளல் வேண்டும். இதனுள் தீயது என்ற கல் கொண்டு எறிந்து குழம்பவிடக்கூடாது. நல்லதைச் சொல்லும்போதும், கேட்கும் போதும் நற்சிந்தனை இயல்பாக உருவாவது அசைக்கமுடியாத பெரியோரின் கருத்தாகும்.

கவர்ச்சியான காரியங்களிலேயே இளையவர்கள் மட்டுமல்ல, முதியவர்களும் முனைப்பான நாட்டங்களைக் கொண்டிருக்கின்றனர். ஒருவரை ஈர்த்து எடுப்பதற்காக, பரபரப்பானது, சுவையானது என்ற பெயரில் கண்ட கண்ட சமாச்சாரங்களை வர்த்தக நோக்கோடு கொடுக்க பல சாதனங்கள் வந்துவிட்டன. இவைகள் நூல்களாக, பத்திரிகைகளாக, தொலைக்காட்சிகளாக ஒவ்வொரு வினாடிகளும் புதுப்புது வடிவங்களில் தயாராகி நமக்குத் தந்து கொண்டிருக்கின்றன.

இவைகளுள் எது சரி, எது பிழை என்று எண்ணுமுன்னரே இவைகள் எமது மூளைக்குள் நுழைந்து



எங்களைச் சிறைப்பிடித்துத் தங்கள் ஆட்சிக்குள் வீழ்த்தி விடுகின்றன. சிந்திக்கச் செய்யாமல் இருக்கும் சூட்சும வித்தைகளை தந்திரமாக, வர்த்தக நோக்குடன் பரப்புவதால் மனிதனின் பணம் - குணம் மட்டுமல்ல, ஒட்டு மொத்த கலாசார அழிவிற்கும் இட்டுச் செல்கின்றது.

சேற்றுக்குள்ளே, எண்ணெய் கழிவும் புகுந்து, கூழானதுபோல, ஏற்கனவே நொந்துபோன மனித மனம், துன்பம் தரவல்ல, இன்பத்தினைப் போக்கிற்காகக் காட்டி நிற்கும் மயக்கப் பிரச்சாரத்தில் மூழ்கிவிடுவது துன்பமோ பெரும் துன்பம்.

இளமையின் ஜொவனமாக, அன்று மலர்ந்த ரோஜா போல், இதயத்தை உலரவிடாமல் என்றும் புதிதாக புதுமணத்துடன் வைக்க வேண்டியது எமது பொறுப்பாகும். நல்ல நல்ல எண்ணங்களை உட்செலுத்துதலே இதற்குரிய வழியாகும். இதயங்களைச் சுத்தப்படுத்துதல் என்பது. அதனைத் திறந்து வைத்திருப்பது. புனிதமான இதயத்துள் அன்புதான் அகப்படும். இதயக்கதவு பூட்டப்பட்டால், கண்ட குணங்களும் கன்னம் வைத்துத் திருடன் உட்புகுதல் போல புகுந்து கொள்ளும். நல்ல உபதேசங்கள், சாத்வீகத் தன்மையினை உண்டாக்கும்.

நல்ல அறிவு, மெய்ஞ்ஞானம், இவைகளை எமை ஈன்ற உலகிற்கு முன்னோர் ஈந்து சென்றமை போலவே இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் சான்றோரும் செய்த வண்ணமுள்ளனர். செயல் இழந்த மின்கலத்திற்கு, மின் வலுவூட்ட மின்சாரம் பாய்ச்சப்படுதல் போலவே, இவர்களும் பணிகளைத் தொடர்ந்த வண்ணமுள்ளனர்.

RangaRakes Tamilnavarasam.com

உயரப்போய்க் கொண்டிருக்கும் மனிதன் உருண்டு, பின், நின்ற இடத்திற்கும் கீழே விழுவது கூடாது. அறிவுக்கு வேலை கொடுக்க, சுதந்திரமான சிந்தனை துணைபுரிகின்றது. ஆரவாரத்தன்மையான பேச்சுக்கள், பிரச்சாரங்கள் சிந்தனைகளைக் கூறுபோடவல்லன. மென்மையான, கனிவுப் போக்கிலான எண்ணங்களை நாடுவது சிரமமானது என சிந்திக்கத் தொடங்கினால், அராஜக உணர்வுகள் உட்கார்ந்து கொள்வதில் என்ன தடை ஏற்பட்டுவிடப் போகின்றது.

அறிவு, ஞானம் உடனே ஊட்டப்படக்கூடியது அல்ல. எனினும் இதனைப் பெறுவதற்கு மூளையைத் திறந்து வைக்கின்ற சக்தியை எமக்கு இறைவன் அளித்துள்ளான். கொடுக்கவேண்டிய நல்விருந்தைப் புசிக்க அது தயாராக உள்ளது.

மூளை வேறு, இதயம் வேறு என்று கூறுகின்றார்கள். எமது இதயம் நன்கு வேலை செய்தாலே. மூளை என்ன, முழு உறுப்புகளுமே சரிவர இயங்கமுடியும். ஆனால் மூளை செய்யும் வேலைத்திறனுக்குரிய பெயர் இதயத்திற்கே முழுமையாகக் கிடைக்கின்றது. மனிதர்களின் நற்பண்புகள், ஆளுமைகளை விருத்தி செய்யும் பேராற்றல் மூளை மூலம் கிடைக்கும்போது எமது மனமும் முழுமையடைகின்றது. ஒருவன் திருப்திப்பட்டுக் கொள்ளும் போது, தன் நெஞ்சைத் தொட்டுக் கொள்ளுகின்றான்.

மனம் அமைதியான நிலையில்தான் இதயம் நல் ஓசையுடன் சீராக இயங்குகின்றது. அதன் இனிய ஒலிநயம், எம் இயக்கத்தையே வழி நடத்துகின்றது. இதன் ஒவ்வொரு



துடிப்பிலும் அவனி அசைந்து கொண்டிருக்கின்றது. ஒட்டு மொத்த இதயங்களுமே ஒன்றாக, நன்றாக, நல்லதை எண்ணிக்கொண்டால் பெரும் அலையே உருவாகி மனித கனவுகளை நனவாக்கும்.

எண்ணங்களில் வலு இருக்குமேயானால் மயில் இறகைக் கொண்டே மலையை இழுக்கமுடியும், வளைக்க முடியும். எங்கோ தொலைவில் உள்ள உறவுகளை இங்கே இருந்துகொண்டு எண்ணும்போது அதன் தாக்கத்தினை அவர்கள் புரிந்துகொள்வது இல்லையா? தன் இடைவிடா எண்ணங்களின் வலிமையினால், கடலினுள் உள்ள ஆமை கரையில் உள்ள தன் முட்டைகளைப் பொரித்து வெளிவரச் செய்வதில்லையா? நினைப்பே வலுவானது. உண்மைக் காதலின் எண்ணங்கள், உறுதி அதன் வெற்றியில் முழுமையாகின்றது. குழந்தைகள் விழுவது பற்றிப் பயப்படுவதில்லை. அவர்களின் தீவிர முயற்சி அவர்களை நடக்கவும் ஓடவும் செய்கின்றது. அவர்களின் பிஞ்சு இதயத்திற்கே, அஞ்சாமை, துணிவு எண்ணங்கள் அவர்களை வழிநடத்தும்போது, பெரியவர்கள் திடமாக இருப்பதில் என்ன தடை வேண்டிக் கிடக்கின்றது.

உருப்படாதவன் என்று எவரையும் கருதக்கூடாது. அவனுள் உள்ள திறமையை எப்படி வெளிக்கொண்டுவர முடியும் என எண்ணுங்கள். எமது நினைப்புகள் என்றும் எங்களை மட்டும் சுழன்று கொண்டிருக்கக்கூடாது. எடுத்த எடுப்பில், எவர் இதயத்தையும் கீறி அறுவை சிகிச்சை செய்வது போல் விமர்சனம் செய்யவேண்டாம். இதயம் இரும்பைவிட உறுதியானது. ஆயினும் மலர்கூட இதன் மென்மைக்கு ஈடு இல்லை. சின்ன வார்த்தை போதும்,


RangaRakes Tamilnavarasam.com

உரம் கொண்ட உறுதியுள்ள மனிதனைத் திறன் அற்றதாகிவிடும். அவன் பலவீனங்களைக் குடையாது, அவனை முழுமையாக்க நாம் என்ன செய்யவேண்டும் என எண்ணவேண்டும். 'தனி மனிதனின் புலம்பல். உலகின் விசும்பல்.' தட்டிக் கேட்டு உட்கார வைப்போம். அல்லாதுவிடின் தள்ளிவிடாமல் இருப்பது சிறப்பே. எண்ணங்களுக்கு வலுவூட்டுதல் எமக்கு மட்டுமல்ல பிறருக்குமே என உணர்வோமாக. எனவே இதயங்களைத் திறந்து கொள்ளுவோம். உலக உறவும் நிறைந்து கொள்ளும். பலம் இறைவனின் கொடையாக வழங்கப்படும்.

✳

*- வீரகேசரி 2-4-2005*






*தனிமனிதனின் உழைப்பும், தியாகமும் குறைந்து வருவதனால், நாடு இன்று கடனாளியாகி வருகின்றது. தனது சொந்த வாழ்விலேயே உழைக்க கஷ்டப்பட்டுக் கடன்கேட்டே வாழுபவர்கள் நாட்டின் நலன்பற்றிக் கவலைப்படமாட்டார்கள். உண்மையான பரிதாபத்திற்குரியவர்கள். நியாயபூர்வமாக கடன் கேட்கும் போது, தவறான வழியில் வாழ்பவர்களின் போக்குக் காரணமாக, ஏனையோர் கஷ்டமுறுபவர்களையே சந்தேகம் கொண்டு நோக்குகின்றனர். வரவுக்கேற்ற செலவு செய்தலே 'கடன்' என்கின்ற தொல்லையில் இருந்து மீள ஓரே வழியாகும். வாழ்க்கைச் செலவினம் கூடும்போது, வரவை அதிகரிக்கப் புதிய உபாயங்களைக் கண்டறிய வேண்டும்.*

---

**கா**லன் தேடி வந்து கதவைத் தட்டினாலும் கலக்கம் கொள்ளாதவர்கள், கடன்காரர் வந்து கதவைத் தட்டினால்

RangaRakes
Tamilnavarasam.com

அச்சமுற்றுக் கதவடைப்புச் செய்ய முற்படுகின்றார்கள். கடன்காரரைக் கண்டாலே வெறுப்படைந்து போகின்றார்கள். கடன் கொடுப்பதும் கொடுத்த கடனைக் கேட்பதும் கல்லில் நார் உரிப்பது போலத்தான். விருப்பமுடன் கடன் கொடுக்கப் பலரும் விரும்புவதில்லை. அதேபோல், கொடுத்த வாக்குப் பிரகாரம், கொடுத்த கடனைத் திருப்பி ஒப்படைக்க எத்தனை பேர் தயாராக இருக்கின்றார்கள்?

எனினும், நல்லவர்கள் நாணயமானவர்களுக்கு இந்தக் கூற்றுப் பொருந்தாது. கடன் பெறுதல் என்பது ஒரு வெட்கக்கேடான செயலா? அரசாங்கங்கள் கடன் வாங்குவதில்லையா? அவை பொதுமக்களுக்குக் கடன் கொடுப்பதில்லையா? பெரிய, பெரிய நிறுவனங்கள் கடன்பட்டால்தான் இயங்கமுடியும் என்கின்ற நிலையை பொருளாதார நிபுணர்களே ஒத்துக் கொள்ளுகின்றார்கள். பல புதிய திட்டங்களைச் செயல்படுத்த, ஏனைய நிறுவனங்களுடன் போட்டி போட, எதிர்பாராத நெருக்கடிகளைச் சமாளிக்க, இப்படிப் பலவாறான காரணங்களுக்காகக் கடன்படுதல் கூட ஒரு உடன்பாடான கௌரவமாக மேற்கொள்ளப்படும் நடைமுறைகளாகிவிட்டன. ஒவ்வொருவரின் தகுதிகளுக்கேற்ப, கடன் தொகைகள்தான் மாறுபாடடையும்.

சில்லறைக்கடன், சீட்டுக்கடன், காப்பி, மிளகாய் பொடிக் கடன் என்றவற்றுடன் கைமாற்றுக்கடன் என்று கூறுவதற்குட்படுகின்ற பலதரப்பட்ட கடன்வகைகள் உண்டு.

'அண்ணை, மின்சார, நீர் வரி கட்டவேண்டும். கட்டாவிட்டால் வெட்டி விடுவார்கள்' என்றும் 'பிள்ளைக்குப் புத்தகம் தவணைக்காசு உடனே செலுத்தாதுவிட்டால், படிப்பே பாழாகிவிடும்' என்றும் நெஞ்சத்தைத் தொடும் வசனங்களைப் பேசிவிட்டுக் கடன்கேட்கும் முறைகளுமுண்டு. ஆயினும், உண்மையான நபர்களுடன், பொய்யான காரணங்கள் கூறும் கனவான்களும் கலந்து விடுவதனால், கடன்களை, எவர் நியாயபூர்வமாகக் கேட்கிறார்கள் என்பது தெரியாமல் போய்விடுகின்றதே. சரியான முறையில் வாழத்தெரியாமல் கடனோடு வாழ்வது முறையா? சிக்கன வாழ்வு இன்றேல் சீரழிவுதானே? இன்னும் ஒருசாரார் இருக்கின்றார்கள்.



சில்லறைக் கடன்கேட்டால் அது கௌரவக் குறைவு என எண்ணி மொத்தமான ஒரு தொகையைக் கேட்டுக் கறந்துவிடுவார்கள்.

இன்னும் சிலரோ,

நூறு ரூபாய் கேட்பார்கள். அதைப் பெற்றதும் செலவு செய்யமாட்டார்கள். உடனே சொன்ன தவணைக்கு முன்னரே அதைத் திருப்பிக் கொடுத்து விடுவார்கள். அடுத்த தடவை அவரிடமே வந்து ஐந்நூறு ரூபாய் கடன் கேட்டு, அதனையும் மேற்சொன்னதன்படியே திருப்பிக் கொடுத்து விடுவார்கள். அடுத்த மூன்றாம் தடவையோ இவர்கள் முழுதாகப் பத்தாயிரம் ரூபாய் கேட்டால், கொடுப்பவர் அவரிடம் உள்ள நம்பிக்கையில், பூரணமாக மதித்துப் பணத்தைக் கொடுத்துவிடுவார். அப்புறமென்ன? பணம் கொடுத்தவரிடம் திருப்பிக் கொடுக்க அவர் என்ன முட்டாளா? சின்ன மீனைப் போட்டுத் திமிங்கிலங்களையே கௌவுகின்ற அசகாய சூரர்கள் இவர்கள்?

RangaRakes
Tamilnavarasam.com

இத்தகைய கதைகளை நீங்கள் கேட்டு இருக்கலாம்.

ஆயினும், மிகவும் நெருக்கடிக்குள்ளானவர்கள் பணம் பெறுவதற்காக கடனைவிட, வட்டிக்குப் பெறலாம் என எண்ணி, முடிவில் இருக்கின்ற நகை, நட்டு, காணிகளை அப்படியே வட்டியும் முதலுமாகத் தொலைத்த கதைகள் ஏராளம்.

இதனால்தான் அரசாங்கங்கள் நியாயபூர்வமாக, வங்கிகள் மூலமாகவும் அரச ஊழியர்களுக்குக் கடன் வழங்குதலைத் தனது அமைச்சினூடாகவும் வழங்குகின்றது.

குடும்ப சூழ்நிலை, எதிர்பாராத செலவுகள், கடன் தொல்லையில் இருந்து மீள மீண்டும் கடன் கேட்டல், டாம்பீக வாழ்வு, இத்தகைய காரணங்களுடன் மேலும் பல காரணங்களுடன் ஏழை, எளியவர்களுடன் நடுத்தர, மேல் மட்ட வர்க்கத்தினரும் அல்லாடுகின்றனர்.

மிகவும் வசதியாக வாழ்ந்துவிட்டு, பின்னர் ஏதோ சில காரணங்களால் நலிவுற்றதும், அந்தப் பழைய வாழ்வில் இருந்து மீள வழி தெரியாமல், கடன்படும் பலர், ஏனையவர்களிடம் கையேந்தும் போது பரிகாசத்திற்கும், அவமதிப்பிற்கும் ஆளாகின்றார்கள். வசதியாக வாழ்ந்த காலத்தில் சிக்கனத்தையும் சேமிப்பையும் பற்றி தெரிந்திருந்தும், அதை உதாசீனம் செய்தமையின் பலாபலன்களைப் பிறர் மனம் புண்படுமளவுப் பேசும்போதுதான் புரிந்து கொள்ளுகின்றார்கள். உறவுக்குப் பகை கடன் என்பார்கள். ஒருவரிடம் வைத்திருக்கும் உண்மையான, அபிமானம், மதிப்பை அவரிடம் நீங்கள் உதவியாக எதைக்



கேட்டாலும், வரும் பிரதிபலிப்பின் மூலம் புரிந்து கொள்ளலாம். பணம் மட்டும் கடன் அல்ல. உடன் எந்த உதவியை எவர் செய்தாலும் அதுவும்கூட ஒருவிதத்தில் கடன்தான்.

பணம், பொருள் கொடுக்காது விட்டாலும் பரவாயில்லை. வேறு உபகாரமூலமாவது, எதையாவது செய்து துன்பம் துடைத்தல் மேலான அறம் ஆகும்.

பசிக்காகக் கடன் கேட்பவர் தொகையைவிட, பகட்டிற்காக இதனைக் கேட்பவரே அதிகம். 'கடன்' கூச்சத்திற்கு அச்சப்படுவதில்லை. தமது உழைப்பை ஈந்து கொள்ளாது, பிறர் உழைப்பினைக் கடன் மூலம் கவருதல் கவலைக்குரியது. இது சோம்பேறிகளின் சுரண்டல் சுபாவம்.

கல்வி, தொழில் சம்பந்தப்பட்ட பல இன்றியமையாத விஷயங்கள், இவைகளால் ஏற்படுகின்ற பணப் பிரச்சினைகள் பொதுவானவை. இவைகளை எவரும் தட்டிக் கழிக்க முடியாது. எனவே சமயமறிந்து உதவுதல் எல்லோரது கடமையுமாகும். எமது தகுதிக்கமைய உதவுதல் நல்லதே.

படிப்புக்குப் பணம் தேவைப்படுவதும், விவசாய வேலைக்குப் பசளை வாங்கக் காசு அவசியமாகப் படுவதுமான பல தரப்பட்ட திடீர் செலவுகள் எல்லோரையுமே தாக்கலாம். திடீர்த் திருமணங்கள், பயணங்கள், காணி, நிலப் பிரச்சினைகள், நீதிமன்ற விவகாரங்கள் எனப் பலவகையான செலவினங்கள் வரும்போதுதான் எங்களது இயலாமையின் தாக்கம் புலப்படுகின்றது. என்ன செய்யலாம் என்கின்ற ஏக்கமும் தொட்டு விடுகின்றது. யாரிடம் போய்க்

RangaRakes Tamilnavarasam.com

கேட்பது? யார் காலில் விழுவது? துன்பங்கள், பிரச்சினைகளை முன்னரே அறியும் திறன் இருந்தும், அதனைப் பொருட்படுத்தாமல் விடுவதன் தாக்கம் எவ்வளவு மோசமானது?

இருக்கும்போதே எங்களைப் பலப்படுத்துவதும், வரும் முன் காப்பதற்கான உபாயங்களைக் கையாளத் தெரிந்திருப்பதுமே அவசியமானதாகும். அரசு வங்கிகள், நிறுவனங்களின் சேவைகளை முழுமையாகப் பயன்படுத்தத் தெரிந்து கொள்ளுதலும் வேண்டும்.

இன்று பலர் கடன் கொடுத்துவிட்டு கடன் பெற்றவனைக் கண்டு பயப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டால், 'நான் என்ன சும்மாவா கேட்டேன். கடன்தானே கேட்டேன். இப்ப வசதியில்லை. கட்டாயம் தருவேன்' என்று சர்வ சாதாரணமாகத் தமது பழைய சம்பவங்களை அறவே மறந்து பேசுவார்கள். சிலருக்குத் தொழிலே அடுத்தவனை மிதிப்பதாகும். கொடுத்தவனைக் கெடுப்பதும் துடுக்குத் தனமன்றி வேறென்ன? மேலும் இப்படியும் சிலர், கடையில் சாமான்களைக் கடனுக்குக் கொடுப்பார்கள். அவர்களுக்குப் பணத்தை மீள அறவிடும் கலை நன்கு தெரியும். கடனுக்கு வாங்கிய பொருட்களை விலை கூடுதலாக விற்றுவிட்டுப் பின்னர் பலர் முன்னிலையில் கொடுத்த கடனைக் கேட்டுப் பணத்தை வெகு சாமர்த்தியமாகப் பறித்து விடுவார்கள்.

தமது சிரமங்களுடன் பிறர் உழைப்பின் உயர்வினையும் பெரிதென மதிப்பவர்கள்



நாணயமானவர்கள். ஈகை என்பது ஒருவர்க்கு உவந்து அளிப்பது, துன்பம் நேருங்கால், சமயமறிந்து, கடனுக்குக் கொடுப்பதுகூட ஈகைதான். சிலர் சொல்லுவார்கள் 'இப்படி கடன் வாங்குவதைவிடப் பிச்சை எடுக்கலாம்' என்பர்.

கடன் பெறுதல் கூடச் சிலசமயம் பிச்சை எடுத்தலாக உருமாறுகின்றது. கொடுத்தலைத் தடுத்தலும், கொடுக்காமல் விடுவதைவிட மோசமானதே. தருணத்தில், தயவுடன் உதவுதல், ஆண்டவன் கட்டளையிட்ட செயல் போல் ஆவதுடன் அவரது அருள் கொடையை நாமும் பெற்றவர்களாவோம். 'கொடுக்கும் போது நாம் அருளைப் பெற்றவர்களாவோம்.'

வழங்கும் பொருளின் பெறுமதி பெரிதல்ல. உயிர்காக்கும் மருந்து நூறு ரூபாய் என்றால், உயிரின் பெறுமதி நூறு ரூபாய் அல்ல. அடிப்படையில் எந்த லட்சியமும் இல்லாமல், ஊதாரித்தனமானவர்களை விட்டு விடுவோம். பிரச்சனைக்குரியவர்களைத் தெரிந்து உதவிகள் செய்வோம்.

இன்று, தனிமனிதனின் உழைப்பும், தியாகமும் இன்மையால், நாடு கடனாளியாகிவிட்டது என்று, எல்லா நாட்டு அரசாங்கங்களும் சமாதானம் கூறிச் சமாளிக்கின்றன. ஆனால் சுரண்டல் புத்தியுள்ள அரசியல்வாதிகளிடம் நாடுகள் சிக்குண்டு அனைத்து வளங்களும் முடங்கி அழிக்கப்படும் அவலத்தை எங்கே போய்ச் சொல்வது? கடன் வாங்காமலே பிழைக்கும் வித்தை அரசியலுக்குப் பொருந்தலாம். இருக்கின்ற சொத்துக்களை விற்றுக் கடன்பட்டு ஒருவனிடம் கொடுக்க, அவன் எந்தவித

RangaRakes Tamilnavarasam.com

விவஸ்தையும் இல்லாமல் கார், பங்களா என்று வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இவர்களிடம் காசு கொடுத்தவன் கிட்டே போகவே அஞ்சுவது மிகவும் வேதனையும், அருவருக்கத்தக்கதுமாகும்.

"லட்சத்தைக் கொடுத்துவிட்டேன். அலட்சியமாய் அவனைப் பேசமுடியுமா? சற்று இசகு, பிசகாக ஏசினால், அவன் என்ன அநியாயமும் செய்துவிடுவானே" என்று புலம்புபவர்களை நீங்கள் பார்ப்பதில்லையா?

தவித்த முயலை அடிப்பது சாமர்த்தியமல்ல. நரகம்கூட இவர்களைக் கண்டு அருவருக்கும்.

பிறருக்கு ஏற்படும் சோதனைகள், எங்களுக்கான சந்தர்ப்பங்கள் அல்ல.

உள்ளதை வைத்து, திட்டமிட்டு வாழ்வதை விடுத்து, அடுத்தவனைப் பார்த்து அனைத்தையும் இழப்பது அறிவுடைமையன்று. நலிந்தவனுக்கு உவந்து உதவுதலும் எம் கடனாகும். செய்யக்கூடியதைச் செய்யவேண்டியது மனிதாபிமானம்.

எனினும், கடன் மனதை ஒடித்துவிடுவதால் கூடியவரை வரவுக்கேற்ற செலவு, சிக்கன, சீரான வாழ்க்கைமுறை சரியாக எம்மை வழிநடத்தும். அறிக!

✷ வீரகேசரி 10.04.2005






காலங்கள் விழிப்போடு இருப்பவை. இவை ஓடிக் கொண்டேயிருப்பவை. காலத்தின் ஓட்டத்தை வீணடிக்காது வாழ்ந்தால் அது யோகம். இதை வீணாக்கினால் நாம் பரிதாபகரமானவர்களாவோம். 'காலம்' எம்மைப் பார்த்துச் சிரிக்கும்படியாக வாழக்கூடாது. நாம் சேவை செய்யும்போது காலங்கள் களிப்படைகின்றன. காலங்கள்தோறும் மனிதன் வாழ்ந்த வாழ்வு முறைகள், அழிக்கப்படாத எதிர்காலத்திற்கான பதிவுகளாக நோக்கப்படும்.

முக்காலங்கள் பற்றி மெய்ஞ்ஞானிகள் ஞானமார்க்கம் மூலமும், விஞ்ஞானிகள் விஞ்ஞான அறிவு மூலமாக நிறுவிக்கொண்டு வருகின்றார்கள். விஞ்ஞானிகள் தமது கண்டுபிடிப்புகளின் பின்னர் மக்களுக்குத் தகவல்களைத் தெரிவிக்கின்றனர். ஆனால் எமக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்த

RangaRakes Tamilnavarasam.com

மெய்ஞ்ஞானிகள் கூறிய தகவல்கள், தற்போதுதான் விஞ்ஞானிகளால் நிறுவப்பட்டு வருகின்றன. உலகில் என்ன நடந்தன, நடக்கப்போகும் என்பனவைகளை ஆன்மீகவாதிகள் கூறும்போது அவைகளை நம்பாதவர்கள், விஞ்ஞானம் இவைகளை நிறுவியபோது நம்புகின்றார்கள். இவைகள் பற்றிய அறிவு ஆன்ம ஞானிகளுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று? எல்லா விடயங்களுக்கும் சிலசமயம் உகந்த பதில் சொல்லிக்கொள்ள முடியாமல் இருக்கின்றது.

உண்மையில் காலங்கள் என்பது என்ன?

நிகழ்காலம் என்பது மட்டும் நிஜம்தானா?

இறந்த காலம் என்பது முடிந்துபோன காலமா?

எதிர்காலம் என்பது கண்டுகொள்ள முடியாதபடியால் வெறும் எதிர்பார்ப்பு மட்டும்தானா?

எப்படி ஆகும் எனத் தெரிந்து கொள்ளமுடியாத கற்பனைக் காலமா இது?

ஆனால்,

காலங்கள் தோறும் நடக்கும் சம்பவங்கள் அழிந்து போகக்கூடியவை அல்ல.

இவை நிஜமானவை; சரித்திரங்களை உண்டு பண்ணியவை; தற்போதைய சம்பவங்கள் எதிர்கால சரித்திரங்களாகக் கூடியவை.

இறந்த காலம் சொன்ன அனுபவங்கள், நிகழ்காலத்திற்கான வழிகாட்டல்களாக அமைந்து



விடுகின்றன. எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டியவை, நிகழ்காலத் திட்டமிடல் மூலம் வழிவகுக்கப்படுகின்றன.

எதிர்காலம் என்பது, எமது சந்ததிக்காகச் செய்யப்படும் செயல்கள், சேவைகள் என்பதுடன் சற்று மேல் நோக்கிய பார்வையுடன் சிந்தித்தால் இது தியாகமாகவும் சொல்லலாம். எனவே தற்போது நாம் செய்கின்ற கருமங்கள், எல்லாமே இப்போது உண்மையாகச் செய்யப்படுவது போலவே, இறந்த காலத்தில் செய்யப்பட்டவையும் உண்மையாகவே செய்யப்பட்ட செயல்களே. சொல்லப்போனால் இறந்தகாலம் என்பது அப்போதைய நிகழ்காலச் செயல்களேயாகும்.

எனவே, இதன்படியே நாம் எதிர்காலத்தை வெறும் கற்பனையாகக் கருதாது, அது என்ன எதிர்காலம், கண்ணுக்குத் தெரியாத காலம் என வரட்டுப் பிடிவாதமாக வாழக் கூடாது. இந்தப் போக்கு எமது அறிவை மேலே செல்லவிடாமல் செய்கின்ற ஒரு தடையாகவும் அமையக்கூடும். பிடிவாதமாக நாம் எம்மை முடக்கக்கூடாது. இந்நிலை எமக்கு நாமே விதிக்கும் அடக்குமுறையும்கூட.

அறிவை அடக்குதல் அடாத செயலாகும்.

நடப்பது மட்டும்தான் வாழ்க்கையா? எங்கள் மூதாதையர் தந்த செல்வங்களை அனுபவித்துக்கொண்டே, முரணாக நடப்பது ஏற்கக்கூடியதன்று. நம் முன்னோர்கள் என்ன என்ன சாதித்தார்கள் என்பதை உணர்ந்து, நாமும் நிகழ்காலத்தினை எதிர்காலத்திற்காகத் தியாகம் செய்தேயாக வேண்டும்.

RangaRakes Tamilnavarasam.com

காலத் தாயின் மூன்று பிள்ளைகள்தான் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன.

நாங்கள் தேடும் உழைப்பின் மூலம் புகழ், செல்வம் எல்லாமே காலம் எனும் தாயாருக்கே உரித்தானது. யுகங்கள் தோறும் உலகம் வாழ, முக்காலமும் மனிதர்க்கும், சகல உயிர்க்கும், ஏன் இயற்கைப் படைப்புக்கள் அனைத்திற்குமே எல்லோரும் தங்கள் பங்களிப்பினைக் கொடுக்கவேண்டும்.

நேற்று இன்றாகி அது நாளையாகின்றது.

கெட்ட காரிங்கள் நேற்று நடந்திருந்தால் விடுபடவும், தவறானவை அது எதிர்காலத்தைப் பாதிக்குமென அறிந்தால் அதனைத் தடுத்துவிடவும். நாம் நிகழ்காலத்தை வலுமிக்கதாக ஆக்க வேண்டியுள்ளது.

தோல்விகள் நேற்று நடந்திருந்தால் இன்று நாம் அதன் வழி செல்லமாட்டோம். புதுப்புதுவிதமாகச் சரியானபடி அமைக்க நாம் திட்டமிட்டேயாக வேண்டியவர்களாக உள்ளோம்.

'எப்படியாவது வாழ்ந்தால் சரி' என்று வாழ்வதிலும் கரைச்சல் இல்லை என்றால், மற்றவர்கள் இந்த வழியைக் கைக்கொள்ள நீங்கள் அனுமதிப்பீர்களா? சோம்பல்காரரின் தூங்கல் கதைகளை சில அப்பாவிகள் நம்பி விடுவதுண்டு. செத்தபின்பு மனிதன் வாழவில்லை. எனவே எதிர்காலமே இல்லை என்பார்கள். செய்த சேவைகள் சாவதில்லை. தனக்காக வாழ்ந்தவனுக்கே மரணம், பிறர்க்காக வாழ்ந்தால் அது யோகம்.

காலங்கள் விழிப்போடு இருப்பவை.



'ஓடிக் கொண்டேயிருக்கும் காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல், சேவை செய்' என்றுதான் நன்மார்க்க சிந்தனையாளர்கள் சொல்லுகின்றார்கள்.

காலம் சிரிக்கும்படியாக வாழக்கூடாது. அப்படி வாழ்ந்தால் காலம் எங்களை உருத்தெரியாமல் அழித்துவிடும். சேவை செய்யும்போது காலம் களிப்படையும். அதே வேளை முடங்கிக் கிடப்பவரை உடைத்து நொருக்கி விடும்.

நாம் இன்று விதைக்கும் விதை, நாளை எல்லோருக்கும் அது மரமாக வளரும்போது பயன் தருகின்றது. இன்றைய விருட்சம் நேற்று எம்முன்னவர் இட்டவிதை. விருட்சத்தின் பயன்பாடுகளைப் பறவைக் கூட்டமும், விலங்குகளும் எல்லா உயிர்களோடிணைந்து மனிதர்களும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இதன் நிழல் எல்லோருக்குமே சொந்தமானது.

இங்கு கட்டப்படும் குருவிக்கூட்டைப் பார்த்து நீ சந்தோஷப்பட்டால் உனக்கு மாளிகை இனாமாக இறைவனால் வழங்கப்படும். கனிகளைக் குரங்குகளும், வௌவால்களும், காக்கைகளும் உண்ண உரிமை கொடு. உன் வீட்டு வாயிலில் கூடை கூடையாகச் செல்வங்களை, நீ கேட்காமலேயே இறைவன் கொட்டுவான். செல்வங்கள் எல்லாக் காலத்திலும் எல்லோருக்குமே சொந்தமானவை. நாம் பிறர்க்கு வழங்க இஷ்டமின்றி ஆண்டவனின் அனுமதியின்றிப் பிடுங்கிக் கொள்ளுகின்றோம்.

காலம் இதனைக் கண்டுகொள்ளாமல் இல்லை. தகுந்த தண்டனை வழங்கிவிடும். இறைவன் நின்று

RangaRakes Tamilnavarasam.com

அறுப்பான் என்பதன் பொருள்கூடக் காலம் கொடுக்கின்ற தண்டனையை வைத்துத்தான் கூறப்பட்டது போலும்.

காலக் கண்கள் விசாலமானவை.

எனவே,

தூசியளவு செயல்களையும் இது கண்டு விடுகின்றது.

ஒவ்வொரு வினாடிப் பொழுதுமே அற்புதமானவை... இது சென்றால் பிடித்துவிட முடியாத மாய வஸ்து.

நாம் இழக்கின்ற ஒரு வினாடிப் பொழுதில், யார் யாரோ எத்தனை எத்தனையோ விஷயங்களைச் சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு வினாடி கோடிக்கும் மேலானது.

நமக்கு மட்டும் வினாடிகள் வீணடிக்கப்பட அனுமதித்தல் அநியாயமானது. ஒவ்வொருவரும், நேரங்களில் கருமங்களை நன்றாகச் சிருஷ்டிக்கும்போது பார்வையாளராக, 'அவன் அதிர்ஷ்டம் அப்படி' என விமர்சனம் செய்யக்கூடாது.

பொழுதுகள் அமிர்தமானவை. இதனை உரிய முறையில் பயன்படுத்தினால் சாகாவரம் பெற்றவர்கள் ஆவோம்.

பொழுதுகள் உலரக்கூடாது. இது வாழ்தலுக்கு வகையாக அமைய வேண்டும்.

அழிக்கமுடியாத காலங்கள் எங்கள் காலடியில் இருக்கும்போது நாம் அதனைக் கண்டுகொள்ளாது விட்டால்



அது ஓடிப்போகும். பின்னர் முதுமை தொட்ட பின்பு உடல் கெட்டபின்பு, காலத்தைச் சபிப்பது. இறைவனின் கோபத்தையே வரவழைப்பது போலாகும்.

எனவே,

எக்காலத்திலுமே, காலம் வழங்கும் கொடைகளை சேவைகள் மூலம் பெற்று 'இக்காலத்தில் நன்றாக வாழ்ந்தோம் நாம்' என்று பெருமை கொள்ள வாழ்தலே வாழ்வு.

முக்காலங்களுமே, இப்பரந்த பூமிக்கு உகந்ததாக ஆக்க நேற்று நன்றாகவே, இன்றும் செழிப்பாக, நாளையும் நல்லதாகவே வாழ்வோம் எனத் திடம் கொள்வோமாக.

✵

*- வீரகேசரி, 12.3.2005*

RangaRakes Tamilnavarasam.com




பொறுமையின்மை, பிறரிடம் இருந்து வெறுப்பையும் சம்பாதித்துக் கொடுத்துவிடுகிறது. எங்களது வேலை மட்டும்தான், உலகில் ஒவ்வொருவனுக்கும் அவனுக்கென்று பணிகள் குவிந்து இருக்கின்றது. எமது பணிகளை மட்டுமே முதன்மைப்படுத்தி, அவசரப்படுத்த முனையும்போது, பொறுமையின்மை எம்மிடையே தலைதூக்குகின்றது. மற்றவர்களின் மன இயல்பைப் புரிந்து, நாம் பொறுமை, நிதானத்துடன் செயல்படுதல் வேண்டும். இந்தப் பொறுமை காக்கும் இயல்பினை நல்பழக்கமாகக் கொண்டேயாக வேண்டும்.

---

எனது நண்பர் ஒருவர் அவசரம், அவசரமாக என்னிடம் தேடி வந்தார். வந்தவர் சொன்னார், 'என்னால் பொறுமையாக எதனையும் செய்ய முடியவில்லை, பேச முடியவில்லை. நான் நிதானமாக இயங்க என்ன வழி?' இவ்வாறு கேட்கவும் நான் மௌனமானேன்.

RangaRakes



கேட்கக்கூடாத ஒருவரிடம் இக்கேள்வியைக் கேட்டுவிட்டாரே என எண்ணிக்கொண்டேன்.

நண்பரோ, திடீரெனப் பாய்ந்தார்.

'எவ்வளவு நேரம் நான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன், நீர் உமது பாட்டிற்குச் சும்மா இருக்கின்றீர். நான் என்ன வேலை மினக்கட்டு உம்மிடம் கதை கேட்க வந்தேனா? நான் உம்மிடம் வந்ததே வீண்... என் நேரம் அநியாயமாகப் போய்விட்டது....' எனப் பொரிந்து தள்ளினார்.

அவரால் ஒரு அரை நிமிடநேரம் பொறுக்க முடியவில்லை. இவரிடம் எப்படிப் பேசிப் புரிய வைப்பது?

உண்மையிலேயே பொறுமை, நிதானம் என்றால் என்ன?

எமக்கு வேளைவரும் என எண்ணிக் காத்திருப்பதா?

தீமைகள், அநீதிகளைக் கண்டும் அமைதி காப்பதா?

எமக்குள்ள பங்கு எப்போதும் கிடைத்தே தீரும் என எண்ணிக் கண்களை மூடிக்கொண்டு சும்மா இருப்பதா..?

கதைத்தால் வீண் வம்பு; சற்றுப் பொறுப்போம் அல்லது எமக்காக யாரேனும் பரிந்து பேசி, எமக்கான உரிமைகளை, அவர்கள் பாதுகாத்துக் கொடுப்பார்கள் என எண்ணுதலா?

அல்லது,

Tamilnavarasam.com

விட்டுக் கொடுத்தலே பொறுமையானது, நிதானமானது, அன்பின் வெளிப்பாடு என ஒதுங்கிக் கொள்ளுதலா?

பயந்தாங்கொள்ளித்தனத்தின் வெளிப்பாடா?

இப்படிப் பலதரப்பட்ட காரணங்களுக்காகப் பொறுமையைக் கையாளமுடியும். நியாயமான காரணங்களுக்காக மட்டும் பொறுமை காட்டுதல் என்பதே சரியான செயலாகும்.

கோழைத்தனம் பொறுமையல்ல. இது ஆற்றாமை. நல்லவர்கள்கூட ஆற்றாமையால் அவதிப்படுவதுண்டு.

நெஞ்சில் உரமின்றி வஞ்சனை செய்வோர்க்கும் சிறிது பொறுமை காட்டித் திருந்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கி விடுதல் நன்மை பயக்க வழிவகுக்கலாம். ஒருவரின் பொறுமையை அவரின் கோழைத்தனமாகத் தப்பு அபிப்பிராயம் கொள்வதும், பின்னர் பொறுமை கொண்டவர் போர் வெறி கொண்டால் அதனை அடக்க முடியாமல், எதிரிகள் திணறுவதும் நாம் காணும் காட்சிகள். அடித்தால்தான் அடங்குவது சிலரது போக்காகும். வஞ்சகர் பிறர் அமைதியைக் கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை.

எந்த இடத்தில் எப்படிப் பொறுமை காப்பது என்பதே பெரிய விஷயமாகும். 'பொறுத்தார் பூமி ஆள்வர்' என்கின்றனர்.

அனுகூலமாக, எதுவும் நடக்கவேண்டுமேயாயின், பின் விளைவுகள் பற்றி முன்னரேயே யூகித்துக் கொள்ளவேண்டும்.



பொறுமை என்பதே நாம் அடுத்தவன் சிந்திக்கக் கொடுக்கின்ற கால அவகாசமாகும். காலம் ஒருவனைக் கனியவைக்கும்.

அடுத்தவன் எனக்காகச் சற்று ஒதுங்குகின்றானே என்பதனால் பல இக்கட்டான, தீர்க்க முடியாத பிரச்சினைகள் மலையை மசிய வைப்பதுபோல் அசைந்து விலகி விடுகின்றன.

பொறுமை ஒரு தனித்துவமான பண்புதான்.

நல்ல முடிவினைத் தரவல்ல மிகச் சின்ன விஷயங்கள்கூட பொறுமையின்மையால் சிக்கலடைந்து விடுகின்றன.

ஓவியன் ஒருவன் சித்திரம் வரைகின்றான். அல்லது சிற்பி ஒருவன் சிற்பம் செதுக்குகின்றான். இவை இரண்டு தொழிலுமே பொறுமையுடன் கையாளவேண்டிய கலைகளாகும். உதாரணமாகச் சிற்பத்தின் சகல வேலைகளுமே பூர்த்தியடைந்த பின்னர், ஏதோ சற்றுக் குழப்பமடைந்து 'கண்' வைக்கச் சென்றவன் உளியை அவசரமாக ஓங்கி அடித்தால் சிற்பம் என்னாவது? அதேபோல ஓவியன், சித்திரம் தீட்டி முடிந்ததும், சற்றே பொறுமை இழந்து கருமை நிறத்தைக் கண்டபடி தீட்டிவிட்டால் சித்திரமே குழம்பிவிடுமே. வாழ்க்கை கூட இப்படித்தான்.

இது அழகாகத் தீட்டப்பட வேண்டியவை.

மெத்தென்ற, மென்மையான பூக்கள், அதைத் தொட்டு உருளும் மழைத்துளிகள், பஞ்சு போன்ற பனிக்

RangaRakes Tamilnavarasam.com

கற்றைகள், பச்சைப் பசேலென்ற பசுமை காட்டும் மரங்கள், மலைகள், மடு, காடு, கடல், நீண்ட பாதைகள். அத்துடன் மனிதர்கள். விலங்குகள். இத்தனையும் கொண்ட இயற்கைக் கொடைகளால் நிரம்பிய உலகத்தை ஆண்டவன் அவசர அவசரமாகப் படைக்கவில்லை. எத்தனை கோடி ஆண்டுகளின் முன்னர், நெருப்புக்கோளமாகப் பிரபஞ்சத்திலிருந்து வெளிவந்த பூமிப்பந்து இப்படி உருமாறி இத்தகைய அழகுச் சோலைகளாக மாற எத்தனை ஆண்டுகள் பிடித்திருக்கும். எண்ணிப்பார்க்க வேண்டும்.

அடுத்தவன் ஓடுகின்றானே என்பதற்காக அவனைக் காரணமின்றி முந்த நினைத்து, பொறுமையின்றி ஓடினால் இடறி விழ வேண்டியதுதான். சரி ஏதோ வேகத்தில் முந்தி வந்ததும், பின்னால் இருப்பவனைக் கண்டு, தன் முயற்சி வென்றதாகக் கருதிச் சந்தோஷப்படுவதுகூட ஒரு அற்பமான விஷயம்தான். நிதானமின்றி விரைவது சரியானதா?

நாம் விரைவாகச் செயல்படவேண்டும். இது கருமத்தின் தன்மையைப் பொறுத்தது. பொறுமை, காரணத்துடன் கூடிய விரைவிற்கு விரோதியல்ல. சொல்லப்போனால், எம்மைச் சுதாகரித்து நிதானமாகச் செயல்படும்போது, செயல்களில் வேகம் தானாகவே வந்து விடுகின்றது. அவசர புத்திக்காரனைவிட நிதான புத்திக்காரன் முழுமையான அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றான்.

பொறுமை, காரியங்களை ஆரோக்கியமாக நடத்தி முடிக்கின்ற உபாயமாகும். பொறுமையானவர்களால் வேலைகளைத் திட்டமிட்டபடி ஆற்ற முடிகின்றது.



நீண்ட கால வெற்றிக்கு, சில மணித்தியால, நிமிட பொறுமைகள் நல்ல வழிகளை அமைக்கின்றன.

அதேவேளை,

பொறுமையின்மை பிறரிடம் வெறுப்பை ஏற்படுத்தும் சாத்தியத்தினையும் ஏற்படுத்துவதுடன், மற்றவர்களின் ஒத்துழைப்பின்மையால் கருமங்கள் எதிர்பார்த்தபடி அமையாது சில கணப்பொழுதில் பொடிப்பொடியாகவும் அமைய வழிகோலுகின்றது.

எங்களை ஒரு சுறுசுறுப்பானவர் என்று காட்டுவதற்காகவே சற்று மிகையாக இயங்கிக் கொள்வதால் பிறர் கணிப்பிற்கு உட்பட்டு, பலவீனங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் நிலைக்குத் தள்ளப்படுவோம். எங்களைப் பற்றிய வெளிப்படுத்துகைகள் சரியானவையாகவே அமையவேண்டும். ஏனையவர் பார்வைக்குப் படுபவையாக அமைவதில் என்ன லாபம்? அசட்டுத் துணிச்சலும், ஆரவாரமும் பொறுமைக்கு எதிரானவை.

என்ன கருமங்களைச் செய்து கொண்டிருந்தாலும் முழுமையான வேலைகளின் அளவு எப்படியோ தெரிந்துவிடத்தான் செய்யும்.

சிலர் பரீட்சைக்கு விழுந்து விழுந்து படிப்பதாகத் தோற்றம் காட்டுவார்கள். எனினும், பரீட்சை முடிவுகள் அவர்கள் தோற்றத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும்.

நிதானமாக, ஆரவாரமின்றிப் படிப்பவன் முழு வெற்றியையும் பெற்று விடுகின்றான். வித்தை பெறும் பக்குவம் நிதானத்தில் நிறைந்துள்ளது.

RangaRakes Tamilnavarasam.com

தியானம், மூச்சுப்பயிற்சி, மென்மையான இசையை இரசித்தல், நல்ல நூல்களை ஆறுதலாக வாசித்தல் போன்றவைகளினால், நிதானமும் பொறுமையும் கிடைப்பதாகச் சொல்லப்படுகின்றன. பதட்டமின்றி இருப்பதே நல்ல பயிற்சியில் தங்கியுள்ளது. பொறுமை காத்துப் பழகினால் தேக ஆரோக்கியமும் வலுவாகி விடுமல்லவா?

நேரம் குறித்து, அதன்படி நடந்தால் தாமதமின்றி எதனையும் செய்ய முடியும். இதனால் அவசரம் என்ற பிரச்சினைகளுக்கே இடமில்லை. நேரம் பிந்துவதாலேயே கோபமும், ஆவேசமான போக்கும் எம்மைத் தாக்குகின்றன. நேர காலத்தின் முன்னரே எழும்பிக் கொள்ளும் பழக்கத்தை முதலில் கடைப்பிடிப்பது மிகவும் சிறப்பானதாகும். பிந்தி எழும்பினால், அன்றைய காரியங்கள் அனைத்துமே பிந்திவிடும். நாம் பிந்தி வந்து, பிறர் மீது பாய்வது, பின்னர் அவசரம், அவசரமாகக் கருமங்களைத் தாறுமாறாகச் செய்து முடிக்க விழைவது எவ்வளவு சிக்கலானது தெரியுமா? எமது தாக்கத்தைப் பிறர் மீது அழுத்துவது கூடாது.

நல்ல ஓய்வு, நிதானமாக மனிதனைச் சிந்திக்க வைக்க உதவுகின்றது. சரியானபடி கருமங்களைச் செய்து முடிக்கும்போதுதான் நேரமும் மீதப்படுகின்றது. எனவே ஓய்விற்கான நேரம் கிடைப்பதனால் தேக ஆரோக்கியமுடன், அடுத்த செயலுக்கும் எம்மைத் தயாராக வைக்கும் இயல்பும் எமக்குச் சிரமம் இன்றி வந்து விடுகின்றது. மேற்படி நாம் நடந்துகொள்ளாதுவிடின் அவசர புத்திக்கே நாம் அடிமையாவோம். அத்துடன் நேரங்களும்



நாசமாக்கப்படுகின்றன. கோபங்கள் சேர பிறகென்ன? கஷ்டங்கள்தான். பொறுமை இன்மையின் உற்ற நண்பன் கோபம்தானே?


நேர்முகப் பரீட்சைக்குச் செல்லுவதற்காக முண்டியடித்து பஸ்ஸில் ஏற, விழுந்து காயப்பட்டுப் பரீட்சையைக் கோட்டை விடுவதும் அலுவலகத்தில் ஒரு கடிதத்தைத் தேட ஒன்பது கடிதங்களைத் தொலைப்பதும், வாகனங்கள் முந்தி ஓட, ஒன்றை ஒன்று விரட்டி மோதி விபத்துக்குள்ளாக்குவதும் இன்றைய சாதாரண சமாச்சாரங்கள். இதில் வேதனை தருவது என்னவெனில், ஒருவரது பொறுமையின்மையால் பலர் வீணாகப் பலியாவதுதான். இதனால் ஒவ்வொரு வினாடிப் பொழுதும் ஒருவரோ பலரோ பாதிக்கப்பட்டே வருகின்றனர். கடமை செய்ய நல்ல கருவி பொறுமை. வேகத்தை வேளை அறிந்து செய்வோம்.

பொறுமை காத்தலால் பிறர் உங்கள் மீது அபிமானம் கொள்வதுடன் உங்களை நீங்களே நேசிப்பவர்களாகவும் மாறுவீர்கள். எங்களது நற்செயல்கள் பிறருக்கு வழங்கல்களாக அமைதல் வேண்டும்.

பொறுமைகூட அருமையான வழங்கலே.

✵ வீரகேசரி 23.04.2005

RangaRakes Tamilnavarasam.com




*சுற்றி இருப்பவர்களைத் திருப்திப்படுத்த நீங்கள் பொய், புளுகு பேசுபவர்களாக மாறக்கூடாது. மற்றவர்கள் பூரணமான எங்களிடம் விசுவாசமாக இருக்க வேண்டுமேயானால், நாம் வாக்கு நாணயமானவர்களாக இருக்கவேண்டும். எமது பொய்யான வாக்குறுதிகள் பிறரைக் காயப்படுத்தக் கூடாது. பொய்யான வாக்குறுதிகளால் மக்கள் படும் அவஸ்தைகளைக் கண்டு கொண்டிருக்கின்றோம். செய்யக்கூடியவைகளைச் செய்து காட்டவேண்டும். நல்லதைச் செய்பவர்கள் கண்டபடி வாக்குக் கொடுக்க மாட்டார்கள்.*

---

**வா**க்குக் கொடுத்தல் விளையாட்டு அல்ல. இது வினையாகி உயிரையே அணைப்பது போலாகியும் விடும்.

இவை நாம் தெரிந்துகொண்டவைகள்தான்.



முடியாத காரியத்தை முடியும் எனக்கூறி ஏமாற்றுதல் கொடுமையான குற்றம்.

பிறரைத் திருப்திப்படுத்துவதற்காகச் சொல்லப்படும் இந்தப் பொல்லாத பொய்யுரைகள் பாதிக்கப்பட்டவரின் பெரும் சாபத்தையே கொடுக்கின்றது.

வாக்குக் கொடுத்துப் போக்குக் காட்டுதல் போக்கிரித்தனமென்றே சமூகம் சொல்கின்றது.

அரிச்சந்திரன், வாக்குக்கொடுத்து பின்னர் அவன் கண்ட சோதனைகளைப் படித்துவிட்டுப் பொருமி அழுகின்றவர்களில் எத்தனை பேர் சத்தியத்தின் அர்த்தப்படி வாழுகின்றார்கள்?

இன்று வாக்குக் கொடுப்பதுகூட வேடிக்கையாகப் போய்விட்டதே. கொஞ்சம் கடைத் தெருவில் போய் பாருங்கள்!

பொருட்களை விற்கும் வியாபாரி எத்தனை விதமான உறுதிமொழிகளை அள்ளி வீசுகின்றான், இவை இறைவனையே அசரவைக்கும் சொற்களாகும். தகரத்தைத் தங்கமாக்கும் இந்த வித்தையில் படைத்தவனே மயங்கி மடங்கிவிடுவான். இது வெறும் சொற்திறமை மட்டுமல்ல, பிறரை மட்டம் தட்ட அவர்கள் பயின்ற, பயின்று கொண்டிருக்கின்ற வித்தைகளுமாகும். வாக்குத் தவறுபவர்கள் - இவர்கள் தமக்குத்தாமே ஆத்ம விரோதிகள்.

பிறர் ஆத்மாவைச் சூடேற்றும் சோம்பல் புத்திக்குச் சொந்தக்காரர்கள். பிறரது இயலாமை, தெரிந்து கொள்ளாமை என்கின்ற விஷயத்தைச் சாதகமாக்கி ஒரு

RangaRakes Tamilnavarasam.com

நிராயுதபாணியையே கொலை செய்வது போன்ற கொடுமைக்காரருமாவர்.

ஒரு விதத்தில் பார்த்தால் தாம் வாழ பிறரது மனங்களை உடைப்பவர், கெடுப்பவர் கொலைக் குற்றவாளியைவிட மோசமானவர்களாகப் படுகின்றது.

உடலைச் சிதைப்பதைவிட நம்பியவர் மனதைச் சிதைப்பது சகிக்க முடியாததாகும்.

சாத்தான்கள் சுவாமி வேடம் போடுவது ஒன்றும் புதிது அல்ல என்றாலும், தெரிந்தவர்கள் சில அவசிய தேவைகளின் பொருட்டு வேறு வழியின்றிப் பிறர் பேச்சை நம்புவதுமுண்டு.

எங்கள் திறமைகளை ஆரம்பத்தில் ஏமாற்றுப் பேர்வழிகள் கொஞ்சம் பரீட்சித்துப் பார்ப்பார்கள். தங்கள் வித்தை பலிப்பதாகக் கண்டுவிட்டால் போதும், அப்புறம் ஆளைக் காலி பண்ணிவிடுவார்கள்.

காசுக்காகத் தெய்வத்தையே காசாக்கும் கூட்டம் இருந்துகொண்டுதான் இருக்கும். என்ன கஷ்டம் பாருங்கள்! வாக்குக் கொடுத்து வேதனைப்படுத்துபவர்கள் தங்கள் சாமர்த்தியத்தால் தலைவர்களாகவே வந்து விடுகிறார்கள்.

அரசியல்வாதிகளைப் பாருங்கள்.

இவர்கள் ஒருவருக்கு மட்டுமா வாக்குறுதிகளை வழங்குகிறார்கள்? ஒட்டுமொத்தமாக, முழு நாட்டு மக்களுக்குமே உறுதிமொழி பகன்று நாட்டை இறுதி யாத்திரைக்கே இட்டுச் செல்கின்றார்களே.



விளக்கில் விழும் விட்டில் பூச்சிகள் போல, மக்கள் தெரிந்தும், புரிந்தும் மீண்டும் மீண்டும் விழுந்து புழுவாக மடிகின்றார்களே.

இவர்கள் அதிகாரம் பெற்ற பொய்யுரையாளர்கள்.

பொய்யுரையாளரின் சக்தி நாட்டையே கவ்வி ஏப்பமிடுவதிலிருந்து அதன் பாரிய செயல் திறன் புரிகின்றதல்லவா?

எங்கள் திருப்திக்காக, எங்கள் தேவைக்காக, எங்கள் அமைதிக்காக பொய்யான வாக்குறுதிகளை, கட்டாயமாக நம்பவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி விடுகின்றோமே.

‘நம்ப நட, நம்பி நடவாதே’ என்பார் சான்றோர். துன்பப்படுபவர்கள் அதில் இருந்து விடுபட ஒருவரின் உதவியை நாடுதல் இயல்பேயாகும். பலவீனமாக இருக்கும் ஒருவனை பம்பரமாகச் சுற்றவைத்து களைப்படையச் செய்தல் முறையா? பாதிப்படைந்தவன் பரிதாப நிலைக்கு ஆளாகுவதால் இறுதியில் சலிப்பு, வெறுப்பு, கோபம், ஏக்கம், சோகம் என வலைப் பின்னலாகவே அதனுள் சிக்குண்டு போகின்றான். இந்த நிலையினால் நல்ல ஆரோக்கியமானவர்கள் கூட, மற்றவன் கண்டு கொள்ளமுடியாத அளவிற்கு மாற்றமடைந்து போகின்றான்.

சிலவேளை, நல்லவர்கள் கூடப் பொல்லாதவர்களாக உருமாறும் சாத்தியமும் ஏற்படலாம். ஒரு வல்லமையுள்ள பொறியியலாளர் என்னிடம் சொன்னார், ‘நான் என்ன படித்தும் என்ன பயன்? என்னிடம் தொழில் செய்த ஒரு

RangaRakes
Tamilnavarasam.com

சாதாரண சிற்றூழியன், என்னைத் தன் பேச்சால் மடக்கி என் தொழிலுக்கே கெட்ட பெயர் ஏற்படுத்திவிட்டானே' என்றார். நான் கூறினேன், 'நீங்கள் மனம் உடைந்து போகவேண்டாம். செய்யும் தொழிலுக்கும் உங்கள் தோல்விக்கும் சம்பந்தமில்லை. பேச்சுக்கலை மூலம் அவன் ஏமாற்றிவிட்டான். அதனை அவன் தவறான வழியில் குருவிடமே உரைத்துப் பார்த்துவிட்டான். நீங்கள் சற்று ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்' என்றேன். எத்தகைய படித்தவர்களை, மேதாவிகளைக் கூட சர்வ சாதாரணமாகப் பேசியே நம்ப வைக்கின்றார்களே.

காதலன், காதலியிடம் சொல்கின்ற உறுதிமொழிகள்; அதேபோல் காதலி காதலனுக்குச் சொல்லிக் கொள்ளும் உறுதிமொழிகள்; மன்னர்கள் எழுதி வைத்த கல்வெட்டுக்கள் போது செதுக்கி வைத்துப் பின்னர் மறுத்து வெறுத்து ஒதுங்குதல் ஒன்றும் புதுமையில்லை.

இவர்கள் போலியை வேலியாகப் போடுபவர்கள். தாலிகட்டுமுன் தயங்காமல் சொல்லப்படும் சொற்கள் வெற்று வேட்டுக்கள்.

ஆனால் இவர்கள் தம் வாழ்க்கையைத் தாமாகவே வீழ்த்துபவர்களுமாவர். வேலையில்லாமல் திரியும் அப்பாவிக்கு வேலை கொடுப்பேன் எனச் சொல்லுவதும், வெளிநாடு அனுப்ப கொடு பணம் எனக் கேட்டுப் பறித்து உரித்து ஓட விரட்டுவதும், நாம் காணும் அன்றாட அவலம்.

இதனால் எத்தனை குடும்பங்கள் சாவை சந்தித்து விட்டன? காணியை விற்றுப் பூமியை விற்று, இருந்த நகை நட்டை விற்றுச் சேர்த்த காசை கண்டவன் கையில்



கொடுத்து, இறுதியில் இருப்பதையும் இழந்து கையேந்தும் நிலை என்ன கொடுமை. அட கடவுளே?

விசா இல்லாமலே விமானம் ஏற்றுவேன் என்று உறுதி பேசி கொள்கலனில் அவனை ஏற்றி, அடைத்து, உயிரைக் கசக்கி, ஒரு வழியில் கடலில் எறிவதும் பொய் மொழியை நம்பியதன் விளைவு அல்லவோ?

காரியம் ஆகுமுன்தான் பொய்கள் பந்தல் போடும். காரியம் முடிந்ததும் பொய் நிர்வாணமாகும். ஆயினும் இதனால் அல்லல்பட்டவன் துயரை மீட்டுக் கொடுக்க முடியுமா?

பெற்ற பிள்ளைகளுக்குக்கூட முடியாத செயலுக்காகப் பொய் பேசல் வேண்டாம். அப்பா எனக்கு அதுவேண்டும், இதுவேண்டும் எனக் கேட்டால், பொறுமையாகப் புரிகின்ற விதத்தில் உண்மையைப் புகட்டுங்கள். உங்கள் பொய்யுரைகள், வாக்குகள் அவர்களை ஏமாற்றத்துக்குள்ளாக்க நீங்கள் காரணமாக இருக்க வேண்டாம்.

காலப்போக்கில், ஒருவனைத் திருப்திப்படுத்த கண்ட கண்ட உறுதிகளை வழங்குவதும், அதைக் களைவதும், உங்கள் பிள்ளையின் சொந்தக் குணமாகி விடுமன்றோ? முடிந்ததை மட்டும் கூறவேண்டும். முடியாததை விலக்கி விடவேண்டும். முடியாத காரியத்தில் வெட்கம் என்ன இருக்கின்றது? எங்கள் இயலாமையை மறைக்கச் சொல்லப்படும், செயல், சொற்கள் கூட எமது இயலாமையைத் தொடர்ந்து வெளிப்படுத்திய வண்ணமேயிருக்கும்.

RangaRakes Tamilnavarasam.com

ஒரு தவறை மறைக்க ஓராயிரம் தவறுகளா?

எங்கள் அந்தஸ்தைக் காப்பாற்றப் போடும் வேடம் எத்தனை நாளைக்குப் பொருந்தும்?

இவை சாமர்த்தியம் அல்ல. சந்தர்ப்பத்தில் செய்யும் தவறுகள். மற்றவன் சிரிக்கவும், கேலி பேசவும், அவமதிக்கவும் செய்ய நாமே அனுமதிப்பது என்பதே வெட்கக்கேடான விஷயம்.

எங்கள் பெருமையை, பலத்தினை, உண்மையான செயலினைக் காப்பாற்ற, போற்றப்பட வேண்டுமேயாயின் கொடுத்த வாக்குகளைக் காப்பாற்றவேண்டும்.

கண்டபடி சிந்தித்து முடிவு எடுக்காமல் உறுதியுரைகள் கூற வேண்டாம். முடிந்த அளவு சொல்லாமலேயே பிறருக்கு உதவி செய்து முடித்தலே சாலவும் சிறந்ததாகும்.


சுற்றி இருப்போரைத் திருப்திப்படுத்த நீங்கள் பொய் பேசுபவராக, புளுகுபவர்களாக மாறிவிடவேண்டாம்.

சுயகௌரவத்தைக் காப்பாற்றுவது என்பதே, மற்றவர்கள் எங்களிடம் பூரண விசுவாசம் மிக்கவர்களாக எண்ண நாங்கள் அவ்வண்ணம் வாக்கு நாணயம் உள்ளவர்களாக இருப்பதேயாகும்.

✷

*- வீரகேசரி, 19-3-2005*






*ஒரு விஷயத்தில் இறங்கு முன்பு அது சரிப்பட்டு வராது என்று எண்ணிவிடலாமா? நல்லதையே எண்ண வேண்டும். என்றாலும் ஒரு கருமத்தில் நல்லது எது, கெட்டது எது என்று தெரிந்து கொண்டேயாக வேண்டும். புத்திசாலிகளாகக் காட்டுவதற்காகவே சிலர் எதிர்மறையான கருத்துகளைக் கூறிக் கொண்டே இருப்பார்கள். இதனை நாம் பொருட்படுத்தாமல் சரியான பாதையில் நல்ல குறிக்கோள்களுடன் சென்று கொண்டே இருக்க வேண்டியதுதான்.*

---

எனது நண்பர் ஒருவர் சற்று வித்தியாசமானவர். இவரது பேச்சுக்கள் வேடிக்கையாகவும் சில சமயங்களில் எரிச்சலூட்டுவனவாகவும் இருக்கும். காலையிலேயே வாசகசாலைக்குச் சென்றுவிடுவார். அனைத்துப் பத்திரிகைகளையும் மொத்தமாகப் படித்துவிடுவார். பொதுவாகப் பத்திரிகையில் வரும் பரபரப்புச் செய்திகள்

RangaRakes Tamilnavarasam.com

பற்றி எங்களுக்குத் தெரியும்தானே. குற்றவியல் செய்திகளைத்தானே குறைவில்லாமல் குதூகலத்துடன் பிரசுரிக்கின்றன!

இவரிடம் சென்று பத்திரிகைச் செய்திகள் பற்றி கேட்டால்தான் பிரச்சினையே உருவாகும். ஏன்தான் கேட்டோம் என்று ஆகிவிடும்.

'ஐயா, என்ன செய்தி இது. கேட்கவே ஆத்திரம் பற்றிக் கொண்டு வருகிறது. ஒரு பெண்ணை இப்படியா கற்பழித்துக் கொலை பண்ணுவார்கள். படுபாவி, படுபாவி...' என நான் வயிற்றெரிச்சலுடன் சொன்னதுதான் தாமதம். மனிதர் வரிந்து கட்டிக்கொண்டு பொரிந்து தள்ளுவா. 'இப்படி தம்பி... சும்மா இரும், உமக்கு எல்லாமே தெரியுமா? சரி பிழை சொல்லுகின்றீர்களே, அவனிடம் என்ன தப்பு கண்டீர்? அவன், அவளை ஏமாற்றியிருப்பான். அவன் தீவிரமாகக் காதலித்திருப்பான். இவள் இவனை ஏமாற்றி டிமிக்கி விட்டிருப்பாள். இவன் ஏதோ ஆத்திரத்தில் கொலை செய்திருப்பான்...' அவர் இப்படிக் கூற நான் குறுக்கிட்டு,

'அப்படிப் பேசப்படாது- கொலை செய்திருக்கின்றான். அப்புறம் கற்பழித்தும் இருக்கின்றானே.'

'சரி கொலை செய்திருக்கிறான் என்கின்றீர். அவள் விரும்பியே அவனுடனும் தொடர்பு வைத்துப் பின்னர் வாய்த் தர்க்கத்தில் கொலை நடந்திருக்கலாம்.'

'அப்படியென்றால் அவன் செய்தது தவறு இல்லையா?'

'இல்லையில்லை. சாரணம் இல்லாமல் காரியம் இல்லை. கொலை செய்தவன் சும்மா செய்யமாட்டான்.'



இவ்வாறு எதிர்மறை எண்ணங்கள் கொண்டவர்களிடம் ஜீவிப்பதே கொஞ்சம் கஷ்டம்தான். எதற்கெடுத்தாலும் எதிர்மறையாகவே சிந்தித்து, வரப்போகின்ற நல்ல வரவுகளைத் துறந்து போகின்றனர்.

இதே எண்ணங்கள் கொண்ட கணவன், மனைவி இணைந்தால் வாழ்க்கை என்ன ஆகும்? சிந்திக்கவே கஷ்டமாக இருக்கின்றது. 'நல்லதையே நினை' என்று பேசிக்கொண்டே, தீமைகள் தங்களை அணைத்துக் கொள்ளுவதாக நினைத்தே பலர் ஜீவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒரு விஷயத்தில் இறங்குமுன், அது சரிப்பட்டு வராது என்று கருதிவிட்டால் எப்படி முயற்சி பலிக்கும்?

ஆயினும், மிகப்பெரிய விஷயங்களை கைக்கொள்ளுமுன் எம்முன் உள்ள இடர்ப்பாடுகளைத் தெரிந்தேயாக வேண்டும்.

எப்போதுமே சார்பு நிலையில் சிந்தித்தாலும் கஷ்டங்கள் எதிர்பாராமல் வருவதை, வந்த பின்னர் சகித்துக் கொள்ளமுடியாது.

தீர ஆராய்தல் என்பது எதிர்மறைச் சிந்தனையல்ல.

எதிர்மறைச் சிந்தனையாளர்கள் பலர் தம்மைப் புரட்சிகரமான சிந்தனையாளராகவும் காட்ட முற்படுகின்றனர். தவறாகக் கருத்துகளைப் பற்றி விவாதம் செய்து, அது சரி என்று கூறுவது, அது புரட்சிக் கருத்து அல்ல, புரட்டுக் கருத்தேயாகும்.

சார்பாகச் சிந்திப்பதும், எதிர்மறையாக, பொருந்தாது கருதுவதும் தீர்க்கமற்ற முடிவாக விடிவைத் தராது.

RangaRakes Tamilnavarasam.com

நடுநிலை உணர்வுடன் முடிவு செய்து வாழுதலே பொருத்தமானதாகும்.

எமக்குச் சார்பான நிலையில் நின்று கொண்டு நாம் பிரச்சினைகளை அணுகமுடியுமா? சில வேளைகளில் எல்லாமே சரியாகவும், சில சமயம் எல்லாமே பிழையாகவும் தோன்றுகின்றதே? அரசாங்கங்கள் ஒவ்வொரு காலப்பகுதியிலும் மாற்றமடைகின்றது. இன்றைக்கு இருக்கும் அரசு நாளைக்கு இல்லை.

என்றாலும், மக்கள் ஒரே நிலையில் நின்று கொண்டு ஆட்சிகளை மாற்றிவிடுகின்றனர். ஒவ்வொரு அரசாங்கத்தையும் மக்கள் தெரிவு, செய்து கொஞ்சகாலத்தின் பின்னர்தான் முரண்பாடாக அரசுகள் நடக்கும்போது வேறுவிதமாகச் சிந்திக்க ஆரம்பிக்கின்றார்கள்.

இங்குதான் தனிமனிதர்களினதும் ஒட்டு மொத்தமான மக்கள் அனைவரினதும் நிலையும் ஒருமித்த கருத்தாக எண்ணங்கள் முளைவிடுகின்றன. இதில் உண்மை என்னவெனில்,

ஒவ்வொரு தடவையும், மக்கள் சிந்தனை ஒரே நிலையில் முடிவு எடுக்கின்றது. இங்கு நாம் எதிர்க் கட்சிகளைப் பற்றி அதிகம் கவனம் எடுக்க வேண்டியதில்லை. பெரும்பான்மை மக்களின் சார்பு சிந்தனை, ஒருவயப்படுகின்றது. அந்த நேரத்தில் அந்த நிலையில் மக்கள் நிலைப்பாடு ஏற்கக்கூடியதே.

எனினும், தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் பிரச்சினைகள் வரும்போது மட்டும் ஏன் சிக்கல் எழுகின்றது?



அப்போது மட்டும் ஏன், மனிதன் பயப்பட்டு தனக்கு ஆரோக்கியம் இல்லாத முடிவுகளுக்கு ஆட்படுகின்றான்? கூட்டாக எடுக்கின்ற முடிவுகள் ஒன்றாகவும், தனித்து எடுக்கும் முடிவுகளுக்குத் தயங்குபவனாகவும் இருக்கின்றானே.

தமக்குச் சாதகமான விஷயங்கள் முரண்பாடாக அமையுமிடத்து, அதுவும் தொடர்ந்து அவனுக்கு எல்லா விஷயங்களிலுமே பாதகமாக அமைந்துவிட்டால், சமூகத்தின் சகல நடப்புகளையும் எதிர்மறையாகக் கருதத் தலைப்படுதல் வேதனைக்குரியதே.

எல்லா விஷயங்களிலும் பொருத்தமில்லாமல் பேசுபவர்களை அவதானித்தால், அவர் வாழ்க்கையில் அடிபட்டவராக, நொந்து போனவராக இருக்கக்கூடும்.

ஆனால்,

எதிர்மறைப் பேச்சு என்பது ஆரோக்கியம் என்று கருதுபவர்களுக்கு மேற்சொன்ன விஷயம் பொருந்தாது.

புத்திஜீவிகளாகக் காட்டிக் கொள்ளுவதற்காகவே பலர் சித்தத்தைக் குட்டை குழப்பும் இவர்களை கவனத்திற்கு எடுக்கவேண்டாம்.

சின்னச் சின்ன விஷயங்களுக்கு பொய்மையான மெருகூட்டி அதனை விஸ்வரூபமாக்குபவர்கள் மனச்சாட்சிக்கு மரண அடி கொடுப்பவர்களே. தவறாக நடந்து கொள்ளுகின்ற எதிர்மறை எண்ணமுடையவர்கள் மத்தியில் மிகவும் வேடிக்கையான நல்ல மனிதர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்களுடன் அவதானமாக

RangaRakes Tamilnavarasam.com

புத்திசாலித்தனமாக நடந்தால் நல்லபடி இவர்களைப் பயன்படுத்த முடியும்.

எனது நண்பர் ஒருவர் நல்லத் புத்திசாலி. அவர் ஒரு தனவந்தரிடம் உதவி கேட்டு, அதில் வெற்றி கண்டும் விட்டார். எப்படி என்று நான் கேட்டேன். அவர் சொன்னார். 'நான் ஒரு நிதியுதவிக்காகச் சென்றேன். முன் ஏற்பாடாக நண்பர் ஒருவரை எனக்குப் பின்னே வருமாறு கேட்டுக் கொண்டேன். நான் ஏற்பாடு செய்த நண்பரோ ஒன்றும் தெரியாதவர் போல, அந்த தனவந்தர் முன் சென்று... இந்த நிதியுதவி எனக்குப் பிடிக்காது என்று கதை கொடுத்தார். அவ்வளவுதான், எதற்குமே எதிர்வாதம் செய்யும் தனவந்தர் கோபாவேசப்பட்டு 'என்ன அப்படிப் பேசுகின்றீர். நல்லதற்கு உதவவேண்டும். அப்புறம் மனிதனாகப் பிறந்து என்ன பயன்' என்று அவர் கேட்கவும், சமயம் பார்த்து நண்பர் பக்குவமாகத் தான் வந்த காரியத்தினைச் சொல்லவும், அப்புறம் என்ன? காரியம் முழுவெற்றி!'

சில விஷயங்களை இப்படிக்கூடக் கையாள வேண்டியுள்ளது.

கோவிலைத் திருத்திப் புனருத்தாரணம் செய்வோமா என்று கேட்டால், இருக்கின்ற கோவிலில் போய் வழிபடு என்பார்கள்.

சரி, கோவிலைக் கட்டுவோமா என்றால், பழையதைப் புதுப்பிப்போம் என்பார்கள்.

பிள்ளைகளை பல்கலைக்கழகம் அனுப்ப வழி செய்வோம் என்றால் பல்கலைக்கழகம் களேபர பூமி, அங்கே விட்டால் பிள்ளைக் குட்டிச்சுவர் என்று சொல்லுவார்கள். சரி, பிள்ளைகளுக்கு எதற்குக் கல்வி என்றால் கட்டாயக் கல்வி அவசியம் என்று பேசி விடுவார்கள்.



எனவே இத்தகையோரிடம், அணுகும் முறைகளை சற்று வித்தியாசமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

புத்திக்கும் வார்த்தைக்கும் தொடர்பேயின்றி, மின்சாரம் பாய்ச்சுவதுபோல் பிறரைச் சுருண்டு விழச் செய்து விதண்டாவாதம் செய்வதால் நாம் மிரண்டுவிடாது, சமூகத்தில் இவர்களையும் இணைத்துக் கொள்ளவே முயற்சிக்க வேண்டும்.

எல்லோரும் ஒரே தரத்தில் வாழ்ந்துவிட முடியுமா?

என்றாலுங்கூட எதிர்மறைச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை உதறிவிடக்கூடாது.

இதனால் சில நல்ல புத்திசாலிகளைக்கூட நாம் இழந்தவர்கள் ஆவோம்.

சரியானது கசந்தாலும் அது காரிய சித்திக்கு உகந்தது என்றால் ஏற்கத்தானே வேண்டும்.

எனவே மனதை நெருடும் சில பேச்சுகளால் நாங்கள் ஒடிந்துவிடக் கூடாது.

சற்று நிதானமாக யோசிப்போம். நல்ல கருத்துகளை மட்டுமே எமது மனம் ஏற்றுக்கொள்ளும்.

எதிர்மறைச் சிந்தனைகளும், ஒத்த சிந்தனைகளும் நல்ல வழிகாட்டலுக்கே என அறிந்துகொள்வோம்.

✷

*- தினக்குரல்*

RangaRakes Tamilnavarasam.com



# சொர்க்கம் எங்கே?

*பாவம் செய்தலைத் தடுக்கவே 'சொர்க்கம்' என்பது சிருஷ்டிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எந்தச் சூழ்நிலையிலும் மனம் அழிக்கப்படாமல், விகாரப்படாமல் வாழும் வாழ்வு தான் சொர்க்கமாகும். பரந்த மனம், எதனையும் உணர்ந்து கொள்ளும் நிறைந்தகுணம் இருந்திட்டால் கோடி, கோடி சொர்க்கமாக வாழ்வு இனித்திடும்.*

---

சொர்க்கம் என்ற சொல்லே சந்தோஷமிக்கதாகும். வயதில் முதிர்ந்தவர்கள் கூட, தங்கள் இளமை மீளளிக்கப்பட்டு அங்கே புகுந்துகொண்டால் என்ன என்று அங்கலாய்த்துக் கற்பனையில் வலம்வர ஆரம்பிப்பார்கள். சிற்றின்ப சமாச்சாரம் மிக அதிகமாக உள்ளதென நம்பிக் கொள்கின்றார்கள்.



அநேகமாக மதங்களில் கூட இதுபற்றிப் பேசப்படுகின்றது. சந்தோஷமாகச் சுகமாக இருக்க யாருக்கு இஷ்டமில்லாமல் இருக்கிறது? ஆனால்,

பாவம் செய்தலைத் தடுக்கவேதான் சொர்க்கம் சிருஷ்டிக்கப்பட்டது என எண்ணத் தோன்றுகின்றது. இதுதான் உண்மையும் கூட. தீமைகளை ஒடுக்கவும், நன்மை செய்வதற்காகப் புண்ணியம் என்ற பெயரில் அதனை முதன்மைப்படுத்தவுமே சொர்க்கம் நல்லவர்களுக்காக ஆக்கப்பட்டது என்று அறிக.

இது இருக்கின்றதோ, இல்லையோ என்பது ஒரு புறம் இருக்கட்டும். சொர்க்கம் என்பதன் அர்த்தம் என்ன? சுகபோக வாழ்வுதான் இதன் பொருளா?

செயற்கையாக இது இன்று உருவாக்கப்படுகின்றது. பணம் பத்தும் பண்ணும் என்கிறார்கள். மாயா உலகவாசமே உத்தரவாதமானது என எண்ணி, காசைக் கண்டபடி செலவு செய்து, சொர்க்கத்தின் சுவை அறிந்து கொள்ள முற்படுகின்றனர்.

இந்த நவ உலகில் பாவ புண்ணியம் பற்றி இதனுள் புகுந்த பின்னர் பேச மனம் வராது. இங்கு மனம்கூட மரணிக்கும் சம்பவங்களே அதிகமானது. கடவுள் படைத்த உலகைவிட மனிதன் படைத்த மாய உலகு பெறுமதி மிக்கதாகக் கருதுகின்றார்கள்.

மனிதன், மனிதனுக்கே கொடுக்கும் போலி வெகுமதிகளும் உத்தரவாதங்களுமாக இவைகளைக் கணிக்கலாம்.

RangaRakes Tamilnavarasam.com

சகல பழக்கங்களும் படைத்தவன் அனுமதி பெறத் தேவையில்லை. ஏன் என்றால் தீமைகள் செய்ய கடவுள் அனுமதிப்பதும் இல்லை. கெட்டது செய்வதற்கும் கூடக் கடவுளைக் கூப்பிடும் காலம்.

இதனாலேயே, ஆடம்பரப் பகட்டு, போலி வாழ்வுகூட ஆண்டவன் கொடுத்தான் என அவரையே சாட்சிக்கு அழைக்கின்றார்கள். தங்களின் இந்தப் பொய் வாழ்வு புதைந்து போன பின்புகூட போற்றிய இறைவனைத் .தூற்றிக் கொள்கின்றார்கள்.

இவர்களில் பலருக்கு ஆன்மீகம் பற்றித் தெரிந்தும்கூடத் தற்காலிக வருமானங்களுக்காக இருக்கின்ற இதயத்தை விற்று விடுகின்றார்கள். அல்லல்களை அரவணைப்பவர்களை ஆண்டவன் என்ன செய்யமுடியும்?

இதில் வேதனையானது, மெத்தவும் படித்தவர்கள்கூடப் பொருத்தமான முகமூடி அணிந்து பொய்த்தனங்களை மிக அழுத்தமாகப் பிடித்து வெளுப்பான மனிதராக வெளியுலா வருவதுதான்.

எனினும், இன்று ஆடம்பரமான வாழ்வில் மேலைத்தேசம், கீழைத் தேசம் என்கின்ற வேறுபாடே இல்லாமல் போய்விட்டது. இதில் எந்த நாட்டினருமே சகட்டுமேனிக்கு, பகட்டு வலையில் விழுந்து, தம்மை வலுவிழக்கச் செய்யவே பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர்.

கெட்டு அலைவதிலும் கூடத் தீவிரம் காட்டுவது வேடிக்கையாக இல்லையா?



இறந்தபின் என்ன நடக்குமென உத்தரவாதம் இல்லை. நல்லது, கெட்டதை இங்கேயே பார்த்துக் கொள்வோம் என்றும் சிலர் கூறுகிறார்கள். நல்லதையும், தீயதையும் நாமே பார்த்துக் கொள்வோம் என்று கூறி, ஆனால் செய்வது அனைத்துமே முரண்பாடாக, தமக்கு இசைவாக ஆக்கி சொர்க்க மாளிகை எங்கே என்று முகவரி தேடி மூச்சுமுட்ட ஓடுகிறார்கள். இது என்ன புத்திசாலித்தனமோ புரியவில்லை.

நல்ல நடத்தையில் வாழ்தலே சுகம் என்கின்ற உணர்வை விடுத்து, பிறர் முறைகேடாக நடந்து கொள்வதனைப் பார்த்து ஒழுகும் அக்கறையினால் கைக்கு எட்டிய சுகங்களே கிட்டாமல் போய்விடுகின்றன. இது துர்ப்பாக்கியமேயன்றி வேறென்ன? மறுபிறப்பு, இந்தப் பிறப்பு என எண்ணாது எந்த நிலையிலும் சரியானது எதுவென உணர்ந்து, தீமைகளுக்கு அஞ்சி வாழுதலே நிலையான சொர்க்க வாழ்வு ஆகும்.

மாய உணர்வுகள் மயக்கும்போது பாவம் என்பதே வெறும் கற்பனை என எண்ணத்தோன்றும்.

எதைச் செய்தாலும் கேட்கக் கடவுள் எங்கே என்றும் நினைக்கின்றார்கள்.

கடவுள் என்பதே, 'உண்மை' என்பதுடன், 'நன்மை' என்பதன் மொத்த வடிவம் "கடவுளே" என மனதாரப் புரிந்துகொண்டால், பாவ உணர்வுக்கு நாம் உட்படுவோமா?

எங்களைப் பார்க்கிலும் மேலானவர்கள் யார் என இறுமாப்புடன் இருப்பவர்கள் இறுதி யாத்திரைக் காலம் வரை சம்பாதிப்பது பண மூட்டைகளை அல்ல. பாவ

RangaRakes Tamilnavarasam.com

மூட்டைகள்தான். தேவையின்றிப் பாரமான வாழ்வு வாழ்ந்தே பயனற்று இறந்துபோனவர்கள். இருக்கும் இடத்தை வைத்து சொர்க்கம் சிருஷ்டிக்கப்படுவதில்லை. ஓலைக் குடிசையிலும்கூட உலகம் வியக்கும் வண்ணம் வாழமுடியும். ஞானிகள், மேதைகள் உல்லாச விடுதியில் உட்கார்ந்து கொண்டு உபதேசம் செய்யவில்லை.

எந்த நிலையில் இருந்தாலும்கூட நல்லமுறையில் வாழ்ந்து வந்தால் அந்த இடம் கடவுள் வாழ்வதற்கு உகந்த இடம்தான்.

பொருந்தாத இடங்களில் அட்டகாசமாக ஜீவித்தாலும் அது யாசகம் செய்தலை விடக் கேவலமானது.

இருக்கும் இடங்களில் யோக்கியர் சூழ இருந்தால் அது ஆரோக்கியமான சூழல்தான்.

வறட்சியான மனநிலையில் வாழ்ந்துகொண்டு பளிங்குத் தரையிலும், மலர் வனத்திலும், பாதம் பதித்தாலும்கூட முட்புதர், கொடும் வெயில், கடும் குளிர், உறைபனியில் இருப்பதைவிட மோசமானதேயாகும்.

தீய வழிகளில் சுதந்திரத்திற்கான பாதை மூடப்படுகின்றன. சுதந்திரமாகச் சுவாசிக்க முடியாத வாழ்வும் ஒரு வாழ்வா?

களங்கமேயில்லா ஏழை ஒருவன் தலையில் மழை நீர் சொட்டச் சொட்ட, சேற்று நீர் உடலை மெல்லத் தட்ட, வெற்று உடம்புடன் மார்பு சிலிர்த்திட, அடுத்த வேளைக்கு என்ன என்று தெரியாமலும்கூட சுதந்திரமாக இனிமையாகச் சிரிக்கின்றானே! அவன் இருக்கும் இடம் புண்ணிய பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.



ஏழைகள் கூடும் இடத்தை அவர்கள் வாழ நல்ல இடமாக அமைத்தாலே, அமைக்க எண்ணங்கொண்டாலே அவர்கள் சொர்க்கத்தில் நிரந்தர குடிஉரிமை பெறத் தகுதியுடையவராவர்.

தனக்காக வாழ்ந்து தனக்கெனப் புது இடம் அமைத்தும், அதற்கும் மேலாக புதிய பூமி எங்கே பிறக்கின்றது அதில் புகுந்து கொள்ள என எண்ணி எண்ணியே புதையல் தேடுவதும், ஓடி ஓடி, அலைந்து களைத்து, இறுதியில் முன்னர் கால்கள் இருந்த இடத்திலும், சொர்க்கம் இருக்கும் என எண்ணாத மனிதரை என் செய்ய?

'சொர்க்கம்' மேலே அல்ல. கீழே, எம்முன்னே, எமக்குள்ளே என அறிக. இதன் அடிப்படையிலேதான், எம் முன்னோர்கள் நன்மைக்கு வழிகாட்டும் அறவாழ்வை வலியுறுத்தினர். நாங்கள் தேடும் அனைத்துமே மனித குலத்தின் மத்தியில் அவர்கள் உத்தமமான அரவணைப்பிலும் கிடைக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டுமன்றோ?

கற்பனையிலாவது சொர்க்கம் சிருஷ்டிக்கப்பட்டாலும் அது ஏன் அப்படி மக்களுக்காகக் கூறப்பட்டது என அறிவோமாக.

பரந்த மனம், எதையும் உணர்ந்துகொள்ளும் நிறைந்த குணம் இருந்திட்டால், கோடி சொர்க்கமும் இதன்முன் ஈடுகொடுக்குமா?

✳

*- தினக்குரல்*

RangaRakes Tamilnavarasam.com




*எங்கள் ஐம்புலன்களின் இயல்பான தொழில்களைச் சரிவரச் செய்ய நாம் அனுமதிப்பதில்லை. எங்கள் பலத்தை நாமே உணர்ந்து கொள்வதுமில்லை. சிந்தனைகளை விரியச் செய்ய சிலவேளைகளில் நாம் சம்மதிப்பதுமில்லை. ஒரே சிந்தையுடன், மனதைக் குவித்துப் பலத்தை கையில் ஏந்திப் பெரும் பாறையைக் கூடத் தகர்க்கின்றார்களே. மனிதனால் எல்லாமே முடியும். எம்மை நாம் வசப்படுத்த வேண்டும். மனமும், உடலும்கூட இணைந்து செயல்பட்டால் பலம் பன்மடங்காகிவிடும்.*

பலத்தை சகலருக்குமே, சமனாகவே இறைவன் தந்துள்ளான். குருவிக்கும் கூடுகட்டும் திறன் வைத்தான். நாங்கள் கட்டும் மாளிகையைவிடக் குருவிக்கூடு வெகு சிரத்தையாக அமைக்கப்படுகின்றது. அது அதன் பலத்திற்கேற்ப வாழ்க்கை இயற்கையாக உருவாக்கப்படுகின்றது.



எனவே, உண்மையாகவும் சரியாகவும் வாழச் சிரமப்பட வேண்டியுள்ளது எனக் கூறுதல் ஏற்கக்கூடியதல்ல. நிரந்தரமானதைப் புரிந்துகொள்ளாமல் விடுதல் சிறந்தது அல்ல.

சத்திய வாழ்வில் சங்கடங்களைத் தவிர்த்தல் மனிதர் கடமையாகும்.

மகாத்மா காந்தி இதனையேதான், சத்திய சோதனை என்ற தமது நூலில் நுட்பமாக விவரித்துள்ளார்.

மனித பலம் இதனூடாகப் புரிகின்றது. எங்கள் ஐம்புலன்களின் இயல்பான தொழில்களைச் சரியாகச் செய்ய நாம் அனுமதிப்பதில்லை.

நல்லதைச் செய்யவும், அதையே நினைப்பதையும், நல்ல சொற்களை உரைக்கவும் மட்டும் நாம் காலத்தினை செலவழிப்பதில்லை.

எமக்குச் சாதகமானவைகளை மட்டுமே உண்மைகளாகக் கருதுவதால், எங்கள் பலத்தை முழுமையாகப் பிரயோகம் செய்ய முடியாமல் போய்விடுகிறது.

சிந்தனைகளை விரியச் செய்ய நாம் சில வேளைகளில் சம்மதிப்பதில்லை. உதாரணமாக,

இலகுவான, சரியான ஒருவழி கட்டாயமாக இருக்கும். உடன் அது மூளைக்கு எட்டவில்லை என்றால், பரபரப்புக்குள்ளாகி இது சரிவராது என்று சொல்லி விடுகின்றோம். இதனை வாயால் சொல்வதுடன்

RangaRakes Tamilnavarasam.com

நின்றுவிடாது, மூளைக்கும் கூட முழுவதுமாய்ச் செதுக்கி விடுகின்றோமே?

இது எவ்வளவு தப்பானது தெரியுமா?

எடுத்தவுடன் சில காரியங்களைச் செய்ய முடியாதுவிடினும் நிதானமாக அதை நிறைவேற்றலாம். எனக்கும் என்னைச் சார்ந்த சிலருக்குமே என எண்ணும்போது எமது பலமான செயல்கள் பலமிழந்து போகின்றன.

ஒரு பிரபல தனியார் நிறுவனம் நஷ்டத்தில் போய்க் கொண்டிருந்தது. அதன் ஸ்தாபகர், மிகவும் பிரயாசைப்பட்டு நிறுவிய நிறுவனம். அடிமட்டத் தொழிலாளியாக இருந்து அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. அவரது நிறுவனம் அவர் கண்முன்னே நஷ்டத்தில் ஏன் இயங்குகின்றது என்று ஆராய்ந்தார். தமது நிறுவனத்தைத் தனது பேரனிடம் ஏற்கனவே ஒப்படைத்ததால் நிர்வாகத்தில் அவர் தலையிடாமல் விட்டுவிட்டார்.

எனவே, அவர் இதுவிடயமாக ஆராய சுதந்திரமான ஒரு ஆலோசகர் ஒருவரை நியமித்தார். அவர் தமது நியமனத்தை ஏற்குமுன், போட்ட நிபந்தனைக்கு ஸ்தாபகர் கட்டுப்பட்டுக் கொண்டார். ஆலோசகரின் அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டது:

'நிறுவனத்தில் இயக்கம் முழுமையாகச் செயல்படவில்லை. நிறுவனச் செயல்பாடுகள் திறமைசாலிகளிடம் ஒப்படைக்கப்படவில்லை. உறவுக்காரர்களுக்கே கொடுக்கப்பட்ட பதவிகளைப் பறித்து புத்திசாலிகளான அனுபவஸ்தர்களிடம் கொடுங்கள்.



பதவிகளைக் கொடுப்பதை விடுத்துப் பணத்தைக் கொடுத்து வீட்டுக்கு அனுப்புங்கள். நிர்வாகம் வேறு, உறவுக்காரர் வேறு.' இப்படியாக ஆதார பூர்வமாக அறிக்கை தொடர்ந்தது.

இவ்வாறான செயல்கள் எல்லோரர் வாழ்க்கைக்கும் பொருந்தும். பொருந்தாதவர்கள் புகுந்துகொண்டால், வாழ்க்கையே சரிந்துவிடும். சிலரைச் சரிக்கட்ட வேண்டும் என்பதற்காக, ஒழுங்காக நடக்கும் அமைப்புகளே கூட நிலைகுலைந்து போகின்றன.

வேண்டப்பட்டவர்களுக்காகவே வழங்கப்படும் உதவிகளால் பொதுநலனும் பாதிக்கப்படுகின்றன.

சுயநலன்கூடச் சூதாட்டத் தோல்விகளாக முடிந்துவிடும். பலருக்காக வாழ்பவன் பாராட்டப்படுகின்றான்.

பொதுநலனுக்காகவே உழைக்கும்போதுதான் ஆத்மாவும் பலம்பெறுகின்றது. உடல் பலம் என்பது பற்றிக் கவனிக்காது ஆத்ம பலம் பெற்றவர்கள் உலகிற்குப் பயன்களைப் பெற்றுத் தந்த வண்ணமாகவே இருக்கின்றார்கள்.

அவர்கள் இறந்த பின்னரும்கூட உயிர் துறந்தவராகக் கருதப்படுவதில்லை. அவர்கள் உழைப்பினால் உலகம் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

எடை குறைந்த மனிதர், ஆங்கிலேயரிடம் பிடிபட்ட நாட்டை தன் ஆத்ம பலத்தினால் திருப்பி எடுக்கவில்லையா?

ஒருவரின் பலப் பிரயோகம் எந்தளவிற்கு உயிரூட்டப்படுகின்றது பார்த்தீர்களா?

RangaRakes Tamilnavarasam.com

சரி ஆத்ம பலத்தை விட்டுவிட்டு உடல்பலம் பற்றிப் பார்ப்போம்.

கொஞ்ச காலத்தின் முன்பு, அண்மையில் காலமான மட்டக்களப்பு சாண்டோ ஸ்ரீதாஸ் அவர்களைச் சந்தித்தேன். இவர் உடல்பலத்துடன், ஆன்ம பலத்திற்காகவும் தியானம், யோகம் செய்பவர் என அறிந்தேன். அழகிய தோற்றம் கொண்டவர்.

நான் அவரைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கின்றேன். அன்றுதான் முதன்முதலாகப் பார்த்தேன். நான் நினைத்ததற்கு மாறாக அவர் தோற்றம் இருந்தது. ரொம்பவும் கனிவான தோற்றம். பணிவு அத்துடன் அன்பு அவர் முகத்தில் பிரகாசித்தது. பொதுவாகச் சாண்டோ என்பவர்கள் முரட்டு ஆசாமிகளாகவே தோற்றமளிப்பர்.

இவரா இப்படி என நான் அசந்துபோனேன். நான் கேட்டேன், 'எப்படி ஐயா, இத்தனை உடலைத் தாக்கும் வேலைகளைச் செய்து காட்டுகிறீர்கள். இரும்பை வளைக்கிறீர்கள், பாறாங்கல்லை மார்பினில் உடைக்கச் செய்கிறீர்கள், பார ஊர்திகளை நெஞ்சில் ஏற்றுகிறீர்கள்' என்றேன். அவர் சொன்னார், 'மனதை ஒருமுகப்படுத்தினால் பலம் தானாகவே வரும். இதற்கு உடற்பயிற்சியுடன், மனப்பயிற்சி, மன ஒடுக்கம் தேவை. இவைகள் இல்லாதவரை எமது பலம் ஒருமுகப்படாது. சித்தம் சிதைந்தால் பலம் விரயமாகும்' என்ற கருத்துப்பட உரைத்தார். இதே கருத்தையே, கராட்டே கலையில் தேர்ச்சி பெற்ற முதல்தர ஆசிரியரும் கூறினார்.



ஒரே மனதுடன் மனதைக் குவித்து பலத்தை கையில் ஏற்றி கருங்கல்லில் பதித்தாலே அது பட்டென உடைந்துவிடுகின்றது. நான் சந்தேகத்துடன் அவர் கைகளைப் பார்த்துத் தடவிக் கொண்டேன். அது சாதாரண கைதான். பிரத்தியேகமான சிருஷ்டியில்லை. உடற்பயிற்சியும், மனப்பயிற்சியும் அதனை ஒடுக்கும் தன்மையுமே இவர்கள் பலத்திற்கான முழுக்காரணமுமாகும்.

எனவே உடலும் மனமும் கூட இணைந்தால் பலம் பன்மடங்காகின்றது. அந்த மனம் செம்மையாக இருக்கவேண்டும்.

மனசு செம்மையாக இல்லாதுவிட்டால் உடல்பலம் சமூகத்திற்கு முடக்கப்பட்ட ஒன்றாகவே கருதப்படும்.

கடல் போன்ற இதயமும், உடல் பொடியாகப் போகும்வரை அது அடுத்தவருக்கே என்ற மனப்பாங்கும் இருக்கும் வரை, எங்கள் பலம் விரயமாகப் போவதில்லை.

சேருமிடத்தில்தான் எதுவும் சேரவேண்டும். எவையுமே உலகிற்கு உகந்ததாக்கப்படல் வேண்டும். கோடிக்கணக்கான மக்களின் பலம் ஒட்டுமொத்தமாக ஒருமுகப்பட்டால், உலகம் ஒரே ஆட்சிக்குள், அன்புக்குள் அகப்பட்டுவிடும். இதுவும் சாத்தியப்படக்கூடியதே.

✳

– *தினக்குரல்*

RangaRakes Tamilnavarasam.com




*நாம் கேட்காமலே எடுத்துக் கொள்கின்ற உரிமைகள் சில வேளைகளில் அத்துமீறல்களாகிவிடுகின்றன. அன்பாக எடுத்துக் கொள்ளும் உரிமைகள் பிறரை அவஸ்தைக்கு இட்டுச் செல்லக்கூடாது. மற்றவரைச் சிந்திக்க விடவேண்டும். எல்லாவற்றிற்கும் நாமே தலையீடு செய்வது, பிறரது சுதந்திரத்தைப் பறிப்பது போலாகும். உரிமைகளை எடுப்பது தப்பு இல்லை. இவை பரஸ்பரம் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமல்லவா? அத்துடன் அவர்களின் நலன்களையும் பாதிப்பதாக அமையக்கூடாது.*

**நா**ம் ஒருவர் மீது எடுத்துக் கொள்ளுகின்ற உரிமைகள் விடயத்தில் ஒரு எல்லையை வகுத்துக் கொள்ளல் வேண்டும். பிள்ளைகள், நண்பர்கள் விடயத்தில் மட்டுமல்ல, தமது மனைவி, பெற்றோர் விடயத்திலும் கூட எல்லை மீறிய உரிமைகளை எடுத்தால் தொல்லைகள் எதிர்பார்க்காமலேயே அல்லல்படுத்திவிடும்.



நாங்கள் கேட்காமலேயே எடுத்துக் கொள்ளுகின்ற உரிமைகளால், அவர்களது தனிப்பட்ட வாழ்க்கைக்குள் நாம் அத்துமீறிப் பிரவேசிக்கின்றவர்களாகின்றோம். பெற்ற பிள்ளைகளுக்கே தெரியாமல் பெற்றோர் திருமணத்திற்கு முடிவு எடுப்பதும், ஒருவரின் தனிப்பட்ட நிலவரம் புரியாமல், நண்பர் என்று உரிமை கொண்டு தேவையற்ற கஷ்டங்களை விலைகொடுத்து வாங்குவதும், சாதாரணமாக நேரிடையாகவும் கதைகள் வாயிலாகவும் கேட்கின்ற அனுபவபூர்வமான உண்மைகள்.

அன்பாக எடுத்துக் கொள்ளும் உரிமைகள் கூட அவர்களது உரிமைகளைப் பறிப்பது போல் அமையக்கூடாது. இது நாகரீகமற்ற செயல் மட்டுமல்ல தங்களால்தான் எதுவும் நடக்கும் என்கின்ற செருக்கான இயல்பாகவும் மாறிவிடும். பாசத்தின் முன் எடுக்கின்ற நடவடிக்கைகள் கூட மிகக் கொடுமையான முடிவுக்கு இட்டுச் செல்வதை நாம் அறிந்திருக்கின்றோம். ஒருவர் தனது அறிவுக்குட்பட்ட, வயது வந்து முதிர்ச்சியடைந்த நிலையில் பெரியவர்கள், தம்மிஷ்டத்திற்கு உரிமையை எடுத்து எல்லா விஷயங்களிலும் தலையீடு செய்தால் வெறுப்பு, கோபம் ஏற்படும். இதனைச் சிலர் வெளிக்காட்டாது போகலாம். ஆனால் உண்மை இதுதான்.

சின்ன வயதிலிருந்தே சிந்திக்கவிடாத பெற்றோர் அன்பு என்ற பெயரில் அதிகாரமாக உரிமைகளைப் பறிப்பது, அவர்கள் சிந்தனைகளையே நிந்திப்பது போலாகாதா?

சின்னவர்கள் முதிர்ச்சியடையப் பெரியவர்கள் சிலர் சம்மதிப்பதில்லை. திருமணமான பிள்ளையைக் கூட,

RangaRakes Tamilnavarasam.com

பாசத்தின் நிமித்தம் பேதலிக்க வைத்து உலகைப் புரியாமல் செய்து விடுகின்றனர்.

ஒருவனை நல்ல வழியில் நடாத்த வேண்டும் என்பதற்காக தாமே வலியச் சென்று, தமக்குத் தெரிந்த வழிமுறைகளைக் கூறுவது எல்லா நிலையிலும் பொருந்துமா?

எம்மீது அன்பு செலுத்துபவர் விடயங்களில் கூட கவனத்துடனும் கண்ணியத்துடனும் பழகவேண்டும். ஒருவர் இதயத்தை அழுத்துவது போல் எங்கள் நடவடிக்கைகள் அமையக் கூடாது.

எமது செயல்கள் பிறர் நன்மைகளுக்காகவே செயல்படுவதாக அமைந்தாலும் கூட, எங்கள் வழங்கல்கள் மற்றயோர்க்கு பாரங்களாக இருக்கலாமா?

நீங்கள், உங்களிடம் அன்புகாட்டும் நாயைத் தடவிக் கொடுத்தால் அது நன்றியுடன் தனது வாலை ஆட்டிக் காட்டும். அட... நான் வளர்க்கும் நாய் தானே என்று எண்ணி அதன் வாலை இழுத்துப் பாருங்கள். என்ன நடக்கும்? அது திரும்பி உங்களையே கௌவப் பார்க்கும். இதுபோலத்தான், நாமும் பிறரை நேசித்துப் பின்னர், உரிமை என்கின்ற தோரணையில் எரிச்சலூட்டும் காரியங்களில் ஈடுபட்டால் அவர்களே எங்களிடம் தமது எதிர்ப்பினைக் காட்ட முனைவர். இது யதார்த்தபூர்வமான உண்மை. இதனைப் புரிந்து கொள்ளாத குடும்பங்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமா?

எங்களைச் சுற்றியுள்ள அன்பு, பாசம், காதல் இவைகளைக் காப்பாற்றியேயாக வேண்டும். உறவுகள்



அறுந்து போக, கண்டபடி உரிமையைப் பிரயோகம் செய்யலாமா? ஓடும், புளியம் பழமும் போல வாழ நாம் ஒன்றும் ஞானிகள் அல்ல. இயல்பாக வாழ வேண்டும். அதேவேளை அத்துமீறலாக உரிமை எடுத்தலைக் கட்டுப்படுத்தவும் வேண்டும்.

மற்றவர்களுக்கு தாங்கள் மட்டுமே சலுகைகளை, உரிமைகளை வழங்க வேண்டும் என எண்ணுபவர்கள், தங்களுக்கு ஏனையவர்கள் இப்படி நடப்பதை அனுமதிப்பார்களா?

முன்னைய காலங்களின் பழக்க, வழக்க, ஒழுக்க நெறிகள், கட்டுப்பாடுகள் இன்றை காலத்தில் இல்லை என்கின்றார்கள். மேலை நாடுகளில் வயது வந்த இளைஞர்களை மட்டுமல்ல, சின்னஞ்சிறிய குழந்தைகளைக் கூட கண்டிக்க முடியாதுள்ளது. சாதாரண கண்டிப்புகள் கூடத் தண்டனை என அர்த்தப்படுகின்றது. வெளிநாட்டில் உள்ள அன்பர் ஒருவர் என்னிடம் ஒரு சம்பவத்தைக் கூறினார்.

'ஒரு தடவை காலை தமது வீட்டிற்குத் திடீரெனப் பொலீசார் வந்து கதவைத் தட்டினார்கள். கேட்டபோது பக்கத்து வீட்டு முதியவர், 'நீங்கள் உங்கள் குழந்தையைத் திட்டி இம்சைப்படுத்துகின்றீர்களாம், உண்மையா' என்று கேட்டார். நீங்கள் இதனை எனது குழந்தையிடமே கேளுங்கள் என்றேன்.'

நல்ல வேளை எனது குழந்தை சிரித்தபடி, 'அப்படி ஒன்றுமேயில்லை. எனக்கு அப்பா, அம்மாவை ரொம்பப் பிடிக்கும்' என்றபடியே ஓடிவந்து என்னைக் கட்டியணைத்தது.

RangaRakes

Tamilnavarasam.com

பொலீசார், 'மன்னிக்க வேண்டும்' என்று கூறி நகர்ந்து விட்டார்கள். தற்செயலாக, சில சந்தர்ப்பங்களில் எங்கள் பிள்ளைகளைக் கடுமையாகப் பேசுவதை ஒரு மனித உரிமை மீறல்களாகக் கருதி, அந்த முதியவர் பொலீசாருக்குத் தகவல் கொடுத்துவிட்டார். எனவே,

மேற்கத்திய கலாசாரத்தில் சாதாரணமான நிலையில் கூட உரிமை எடுத்தல் என்பதே சாத்தியமற்ற செயலாகும். பிழைக்கு புத்தி சொல்லக் கூடப் பெற்றோருக்கு உரிமையில்லை. இது வேதனைக்குரிய நெருடலான, ஏன் சற்று நகைப்புக்குமுரிய விஷயம்தான். எந்த நிலையில் நாம் எமக்கு வேண்டப்பட்டவர்கள் விஷயத்தில் தலையிட முடியும் என்பதுகூடப் புரியாமல் இருக்கின்றது.

"என் மீது உரிமை எடுத்துப் பழகுவதில்லை. வெறும் சடம்போலவே இருக்கின்றார். அன்பைக் கூட சரியாகக் காட்டுவதில்லை" என்று ஒரு பெண், தனது கணவனை விவாகரத்துக் கேட்டு வழக்குத் தொடர்ந்தபோது இவ்வாறு கூறினாள். கணவனும், மனைவியும் உரிமை கொண்டு பழகுவதை எமது கலாசாரம் அனுமதிக்கின்றது. எனினும் இவை புரியாதபோது, பிரச்சினை எழும்பும்போது, சற்று அவதானம் தேவைப்படுகின்றதே.

'நீ எதற்காகத் திருமணம் செய்ய ஆசைப்படுகின்றாய்' என்று ஒருத்தியைப், பத்திரிகையாளர் கேட்ட போது, அந்தப் பெண் கூறினாள்; "என்னை ஆக்கிரமிக்க, என்னைத் தன் அன்பில் அடக்க, என் இஷ்டம்போல் நான் வாழுவதைத் தடுக்க எனக்கு ஒரு உண்மையான ஆண் துணை தேவை" என்றாள். இது



ஒரு பெண்மையினை அவள் இழிவுபடுத்தக் கூறியது அல்ல. தனக்கு அன்பு காட்ட தனது இன்ப - துன்பங்களை அவன் தோள்மேல் போட அவள் ஏங்கும் ஏக்கமேயன்றிப் பிறிதல்ல.

காதல், அன்புக்கு முன்பு அதிகாரமும், ஆணவமும் எம்மாத்திரம்? பிறரைப் புரிந்து, தன்னையும் புரிந்து, எளிமையாக, கடுமைப் போக்கு இன்றி வாழுதலே ஒரு பெரும் கலையல்லவா?

தொடர்ந்து குற்றவியல் வழக்குகளில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களும், ஊதாரித்தனமாக ஊர் சுற்றுபவர்களும் கூட தமது செயல்களுக்குப் பெற்றோரே காரணம் எனக் கூறிவிடுகின்றனர். தங்களைக் கண்டிக்காமல் அவர்கள் விட்டுவிட்டதாகக் கூறுகின்றனர்.

அளவுக்கதிமாக உரிமைகள் வழங்கப்பட்டதாகக் கூறப்படுவதற்கும், உரிமைகளில் தலையிடுவதற்கும் இடையே உள்ள முரண்பாடுகளை நோக்குமிடத்து, சுதந்திரத்தின் பங்குதான் என்ன என்று கேட்கத் தோன்றுகின்றதல்லவா? உண்மை என்னவெனில்,

ஒவ்வொருவருடைய தன்மைகளுக்கேற்ப எமது நடைமுறைகளை மாற்றி அமைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்நடைமுறைகள் கூட நாட்டிற்கு நாடு வேறுபாடாக இருக்கின்றது. இவை தாம் பிறந்து வளர்ந்த நாட்டின் கலாசாரத்திற்கும் கூடச் சவால் விடுகின்றன.

இதன் பொருட்டு, 'பல பெற்றோர்கள் பிள்ளைகள் தம் தாய் நாட்டிலேயே கல்வி கற்க வேண்டும்; வளர்ந்து

RangaRakes Tamilnavarasam.com

நல்ல நிலையில் கட்டுப்பாடாக உருவாக வேண்டுமெனப் பிரியப்படுகின்றனர். இச்செய்தியை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.

தனது விடயத்தில் தலையிட்ட மகள் தமது பெற்றோருக்கு எதிராக பொலீசில் புகார் கொடுத்தார். பெற்றோர் பின்னர் மகளுடன் சமரசமாகி, தந்திரமாக மகளைத் தாய் நாட்டிற்கு அழைத்து வந்தனர். பின்னர் மகளை, அவரது பேத்தியாருடன் ஒப்படைத்து திரும்பிச் சென்றுவிட்டனர். குழந்தைகளின் உரிமையில் கூடப் பெற்றோர் தலையிட முடியாமைக்கு இச்சம்பவம் ஒரு நல்ல சான்றேயாகும்.

எனினும்,


நாகரீக வளர்ச்சியுற்ற உலகில் நாம் வாழ்ந்துதான் ஆக வேண்டும். எதிர்த்திசைப் பயணங்களில் அறிவின் முதிர்ச்சி பெற்றவர்கள் தோற்றுப் போய்விடுகின்றனர். பாசம் கூட இங்கு எடுபடுவதில்லை. சாதுரியமாகச் சமாளிக்க வேண்டியுள்ளது. சோர்ந்து போகத் தேவையில்லை. கொஞ்சம் அவதானம் தேவை; அவ்வளவுதான். உரிமைகளைக் கையாளுதல் கூட அத்தகையதே. எவரது இதயங்களையும் இடிக்கக் கூடாது. மாறாக, எல்லோரது இதயங்களும், புரிந்துணர்வுடன் தொடுக்கப்படல் வேண்டும்.

அன்பு உரிமை, பெரும் நன்மைதான்; புரிந்து கொள்வோம்.

✷

*- தினக்குரல், 10.04.2005*






*சற்றுமே சங்கோஜமின்றி, இங்கிரமின்றிப் பேசுபவர்களைக் கண்டால் தூர ஓடிவிட்டால் என்ன என்று எண்ணத் தோன்றுகின்றது. சமூகம் எங்களிடம், நாம் சமூகமாகப் பழகுதலையே எதிர்பார்க்கின்றது. இங்கிதமின்றிப் பழகுபவனை ஒருவருமே நேசிக்க மாட்டார்கள். நாம் சாதாரண நிலையில் இருந்தபடியே உலகைப் பார்க்க வேண்டும். வித்தியாசமான மனிதராக நடந்து கொள்ளக்கூடாது.*

---

பசியோடு இருக்கும் கூட்டத்தின் முன் பழங்கதைகள் பேசக்கூடாது. திருமண வீட்டிற்கு வந்து மரண வீட்டுச் சம்பவங்கள் பற்றி தருணமறியாது கதைக்கக் கூடாது. பரீட்சைக்குப் படிக்கும் மாணவன்முன், 'இது விஷப் பரீட்சை. படித்து என்ன கிழிக்கப் போகிறாய்' எனத் தர்க்கிக்கக் கூடாது.

RangaRakes Tamilnavarasam.com

சற்றுமே சங்கோஜமின்றி பிறரைச் சங்கடப்படுத்துகின்ற இங்கிதமற்றுப் பேசுபவர்களைக் கண்டால் தூர ஓடிவிட்டால் என்ன என்று எண்ணத் தோன்றும்.

சமூகத்தில் ஒருவரைப் பற்றி பிறர் எந்த நிலையில் அவரை வைத்திருக்கின்றார்கள் என்கின்ற கருத்தை அவர்களுடைய 'இங்கிதம்' என்கின்ற இயல்பினூடாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். மிகவும் நல்ல இயல்பினராகவும், உதவி புரிவதில் மிக விசாலமான மனத்தினராக இருந்தாலும் கூட இங்கிதமாகப் பேச, பழகத் தெரியாதுவிடின் இவர்கள் நாகரீகம் தெரியாத, அசூசைப் பிரகிருதிகளாகப் பிரகடனப்படுத்தப்படுவார்கள். கொஞ்சம் பொறுமையாக, நிதானமாகப் பழகப் பழகி கொண்டால், இங்கித இயல்பு தங்கு தடையின்றி வெளிக் கொணரப்படுமென அறிக.

இது போலியான, முகஸ்துதிக்கான குண இயல்பு அல்ல.

சமூகம் எங்களிடம், நாம் சமூகமாகப் பழகுதலை எதிர்பார்க்கின்றது. நாம் எத்தகைய மன அழுத்தத்தில் இருக்கின்றபோதும் எம்முன்னே வருகின்ற நபர்களிடம் எங்கள் மனக் கொதிப்பினைக் காட்டுதல் எவ்வகையிலும் சரியானது அல்ல. எந்த நேரத்திலும் நாம் கொஞ்சம் அனுசரணையாகவும் நிதானமாகவும் எம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டால், தானாகவே மென்மையான சுபாவம் எமக்கு வசப்பட்டுவிடும்.





எந்த நேரத்திலும் இங்கிதமாகப் பழக முடியும் கனிவான நடத்தையினாலேயே காரியங்களை சரியாக நடத்த முடியும். பிறர் மனதைப் புரியாமல், எங்களையறியாமலேயே எந்த நேரத்தில் எப்படிப் பேசுவது எனத் தெரியாமல் சில பிரச்சனைக்குள் புகுந்தும் விடுகின்றோம். 'இடத்துக்குப் பொருத்தமாக உணரச் செய் எனப் பெரியோர் கூறுவர். சரியானபடி பேச முடியாது போனால் மௌனித்து விடுதலே மேலானது. எமக்குத் தொடர்பில்லாத புதிய இடத்தில் புகுந்து நியாயம் பேசுவது கூட இங்கிதமில்லாத செயல்தான். பல நேரங்களில் ஒருவரது குறைகளை அவர் எதிரிலேயே பிறர் முன்னிலையில், அவர் நெஞ்சம் புண்படும்படி பேசுகின்றோம். குறைகளைச் சொல்லித் திருத்தவும் ஒரு வழிமுறையுண்டு. தெரிந்து கொள்வோமாக!

பிறர் காரியங்கள், நடத்தைகள், பேசும் பாங்கினை உற்று நோக்கும் நாம் எங்கள் விஷயத்தில் அலட்சியமாக இருந்துவிடலாமா? பெற்ற மகன் பெரிய இடத்தில் வேலை செய்கின்ற போதும் கூட நீங்கள் அவரைக் காணப்போகும் போது, அட மகனே... என்று திடீரென உள் நுழையக்கூடாது. அந்தச் சமயம் அவர் உங்கள் மகன் என்றாலும், அவர் தொழிலுக்குரிய அதிகாரி. தெரிந்து கொள்ள வேண்டும். உங்கள் நண்பர்கள், உறவினர் எனத் எத்தகைய தரங்களில் எவர் இருப்பினும், எங்கள் நடத்தைகளால் அவர்களைச் சங்கடப்படுத்தக் கூடாது. தனிப்பட்ட ரீதியில் பழகுதல் என்பது வேறு விஷயம்.

'இந்த மனுஷனுடன் பேசினால் இருக்கின்ற தலையீடு மேலும் கூடிவிடும்' என்று பலர் பேசுவதைக்

கேட்டிருக்கின்றோம். அந்த மனுஷன் நாங்களாக இருக்கக் கூடாது. நல்லபடி நயமாக நடந்தால், ஒருவன் பிறரால் தெம்பூட்டப்படுகின்றான். எல்லோரும் ரசிக்கின்றபடி நடந்தால் எவரையும் அன்பால் அசைக்க முடியும்.

நாம், வேண்டப்பட்டவர்களுக்கு ஒரு உதவியை செய்ய முடியாத சந்தர்ப்பங்களும் உருவாகலாம். சொல்ல வேண்டிய முறையில் சொன்னால் அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள். முகத்தில் அடிப்பது போல் என்னால் இது முடியாது என்று சொல்வதிலும், பார்க்கச் செய்ய முடியாமைக்கான காரணத்தையும் முடிந்தால் கூறி, அவர்களது கோரிக்கை தொடர்பான சாதக - பாதகங்களையும் கூறலாம். பிறர் அகத்தை அதட்டும் தொனியில் பேசுவது, முன்னர் நீங்கள் அவர்களுக்குச் செய்த உதவிகளைக் கூட, அவர்களை மறக்கடிக்கச் செய்வது போலாகும். நல்லவர்கள் பொல்லாப்புக் கேட்பது கூட இவ்விட நடத்தைகளாலேயாகும்.

ஏனையோரின் தவறுகளை, அவர்கள் பற்றி அவதூறாகப் பேசப்படுவதைச் சுட்டிக் காட்டுவதற்கும் பல வழிகள் உண்டு. எமக்கு நாமே மேதாவிப்பட்டம் சூட்டிக் கொண்டு பஞ்சாயத்துப் பேசலாமா? எங்கள் தோரணை கலந்த வார்த்தைகள் பிறர் பார்வையில் வறட்சியாக, வீண் முரட்டுப் பேச்சாகி மூச்சிழந்துவிடும். சிக்கலான விஷயங்களை, நாசூக்காகப் பேசி, உட்புகுத்தல் வேண்டும். பதட்டப்படாமல் பக்குவமாகப் பேசு என்பார்கள்.

மிகவும் துன்பமான விஷயத்தையும், சந்தோஷகரமான செய்தியையும் ஒரே தொனியில் சொல்லிவிட முடியுமா?



சொல்ல வேண்டிய சங்கதிகளைப் பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டுமாயின் இங்கிதமாக, நாசூக்காகப் பேசியாக வேண்டும். இங்கு அதிகாரமும் ஆணவ நடத்தையும் செல்லுபடியாகாது.

மிகவும் உயர்ந்த மட்டத்தில் உள்ளவர்களின் வெற்றிக்குக் கூட இயல்பாகப் பழகும் தன்மைதான் பிரதான காரணமாக அமைகின்றது. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவர்களின் தரம் தருணத்தில் அவர்களது காலை வாரிவிடும். பொதுவாகப் பாமர மக்கள் நகரத்தில் வந்து, அப்பாவித்தனமாகப் பேசுவதைக் கிண்டலடிக்கும் காட்சிகளை நாம் திரைப்படங்களில் பார்த்திருக்கின்றோம். அவர்களது இயல்பான சில பழக்கங்களை நாம் புரிந்து கொண்டால் இது எமக்குத் தவறாகத் தெரியாது. வெளி உலக நடப்புகள் பற்றி இவர்கள் அதிகம் புரியாமல் இருந்தாலும்கூட மனிதாபிமானத்தில் இவர்கள் மேலானவர்களே. எனவே,

நாம் கண்டு கொண்டிருக்கின்ற நபர்களுக்கேற்ப கதைத்துப் பேச தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும். எங்கள் முன் சற்று இசகுபிசகாகப் பேச முற்பட்டால் எங்கள் வார்த்தைப் பிரயோகங்களால் நாமும் அவர்களைப் புண்படவைத்தால் ஒன்றும் பயன் கிடைக்கப்போவதுமில்லை. கைக்கு வரவேண்டிய நன்மைகள் எங்கள் கனிவான, இங்கிதமான மொழிகளிலேயே தங்கியுள்ளன. வார்த்தைகள் கூட வற்றாத செல்வங்கள் என்பதை அறிவோமாக.

RangaRakes Tamilnavarasam.com

எள்ளி நகையாடும் பழக்கம் கூட மெள்ள மெள்ள மனிதர்களிடம் இருந்து அந்நியப்படுத்திவிடும். புரிந்து கொள்வோம்.

பத்துப் பேர் எங்களை மதிக்க வேண்டும் என்கின்றோம். தனித்திறமைகளை நாம் எப்படி வளர்த்துக் கொண்டாலும் கூட பிறரிடம் அது செல்வாக்குப் பெற வேண்டும். உங்கள் திறமைகளில் ஏதாவது சிறுபகுதி மக்களுக்குப் பயன் பெற வேண்டாமா? இங்கித இயல்பினைச் சொந்தமாக்குங்கள். உங்களைச் சுற்றிப் பத்துப் பேர் சூழ்ந்து கொள்வார்கள். கொஞ்சம் பரீட்சித்துப் பாருங்கள்.

எம்மை நாமே மெச்சி, பிறரைக் கண்டு கொள்ளாமல் விடுவது எங்கள் வளர்ச்சியை நாங்களே அறுத்துக் கொள்ளும் செயலாகும். பணமும், பகட்டுமே எங்களைச் சுற்றி நின்றால் போதும் என்று கருதுபவர்களிடம் இங்கிதமான சுபாவத்தினை சுவீகரிக்க இயலுமா?

முதலில், நாங்கள் இயல்பான, சாதாரண நிலையில் எங்களை வைத்துக் கொள்ள வேண்டும். எமது பார்வை மக்களோடு இசைவாகக் கொள்ள வேண்டும். பேசுகின்ற சில நிமிடத்துளிகளிலாவது எங்கள் பிரச்சனைகளை அப்புறப்படுத்திவிட்டு வருகின்ற நபர்களை முதன்மைப்படுத்துவோம். உங்களோடு நீங்கள் பேச எவ்வளவோ நேரம் இருக்கின்றது. தனித்திருக்கும் போது, மனதை விழிக்க வைத்து உங்களுக்கு உள்ள சகல பிரச்சினைகளையும் உரித்தெடுக்க முயற்சி செய்யலாமே. எங்களைப் பற்றி எமக்குள்ள பார்வைகளை நிதானமாக,



சரியாக வைத்துக் கொள்வோம். அப்போதுதான் எங்கள் மனது கனிவாகும். கனிவான மனது இருந்தால் செயல்கள் இங்கிதமாக மிளிரும்.

பிறர் சந்தோஷங்களுக்காகவே நாங்கள் பிறந்தோம் என அடிக்கடி நினைவு கொண்டால் ஆத்மார்த்தமாக எமக்குள்ளே ஒரு பூரிப்பினைப் பெற்றவர்களாவோம்.

எனவே, சந்தோஷப் பறவைக்கு இங்கிதச் சிறகுகளைப் பூட்டுவோம்.

– தினக்குரல்

RangaRakes Tamilnavarasam.com



# சட்டம் - கட்டுப்பாடான சமூகக் கோட்டையைச் சமைக்கும்!

*ஒவ்வொருவருமே, தமக்குச் சாதகமான சட்டங்களை வகுத்து வாழ முடியாது. சட்டத்தை நாமே கையில் எடுக்கவும் கூடாது. நாடுகளிடையே பேணப்படும் சட்டதிட்டங்கள் பொதுவானவையாக இருப்பதனாலேயே, அங்கு ஒழுங்குமுறைகளும் கடைப்பிடிக்க இலகுவாகின்றது. நீதியான சட்டங்களின் நன்மைகள் எல்லோருக்குமே கிட்ட வேண்டும். நியாய, நீதியாக எல்லோருமே வாழ்ந்து வந்தால் நீதிமன்றங்கள் தான் எதற்கு?*

---

மக்கள் குற்றமிழைக்காது சட்டப்படி நடந்து கொள்வதை உறுதி செய்யவும், இயற்றப்பட்ட சட்ட விதிகளை மீறாதபடி க்ண்காணிக்கவுமே சட்டத்துறை உருவாயிற்று. ஆனால், இன்று சட்டத்தில் எத்தனை ஓட்டைகள் உண்டு. எப்படி செய்த குற்றங்களில் இருந்து தப்பித்துக் கொள்ள அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என மூளைசாலிகள் யோசித்துக் கொண்டும் செயலாற்றிக்



கொண்டும் அதில் வெற்றி கண்டும் வருகின்றார்கள். சாதாரண பாமரன் இந்தத் தில்லுமுல்லு வேலைகள் பற்றி அறிந்திருக்க மாட்டான். படித்தவர்கள்தான் இந்தக் கைங்கரியத்தைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். குற்றம் இழைத்தவர்களும், சில சுரண்டல் பேர்களும் காசு கையில் வந்தவுடன் இந்தச் சட்டம் பயின்றவர்களிடம் போய் சரணடைந்து, சேர்த்து வைத்திருந்தவைகளைக் கொட்டி அளக்கின்றார்கள்.

மொத்தத்தில், அறிவு பெறுதல் அநியாய முயற்சிக்காகவா என்று கேட்கத் தோன்றுகின்றது. இவை எல்லாம் நல்லதற்குத்தானா? சட்டங்கள் இயற்றப்படும் போதே, அவற்றின் பலவீன அம்சங்களைத்தான் இவர்கள் தேடுவார்களே ஒழிய, நீதி நிலைநாட்டப்பட வேண்டியமையின் அவசியத்தை உணரத் தலைப்படுவது கிடையாது. ஆதாயம் பெற அநியாயங்களுக்கு ஆட்படலாமா? சட்டம் என்பது நீதியை நிலைநாட்டல் என்பதற்காகவேயன்றி வேறு எந்த உள்நோக்கங்களுக்காகவுமானதல்ல. அது நீதியின் பாதுகாப்புக் கவசம். உலகை ஒழுங்காக இயங்கவைக்கும் சாதனம்.

ஒவ்வொரு நாட்டின் அரசும் தனது வசதிக்கேற்பவும், தேச வழமைக்கேற்பவும் சட்டங்களை அமைத்துக் கொள்கின்றது. அனைத்து அரசுகளுமே சமனான, ஒத்த நோக்குடைய நீதியான எண்ணங்களைப் பிரதிபலிப்பன எனச் சொல்லிவிட முடியாது. தமக்குச் சரியானது எனச் சொல்லி அதன்படி ஒழுகுமாறு மக்கள் கேட்கப்படுகின்றார்கள்.

நீதி அமைப்பு மாறும்போதுதான் ஒழுக்கம், சமூகக் கட்டமைப்பு என்பன சிதைவுறுகின்றன. எப்படியும் வழக்குப்

RangaRakes Tamilnavarasam.com

பேசி ஜெயித்து விடலாம் என்கின்ற மனோநிலை குற்றமிழைப்பவர்களை மட்டுமல்ல, சாதாரணமான, நியாயப்படி நடக்கும் சிலரது மனோநிலையையும் சலனமடையச் செய்கின்றது. இனத்திற்கு இனம், மொழிக்கு மொழி, ஏன் ஜாதிக்கு ஜாதி என்கின்ற பாகுபாட்டிலேயே நீதியமைப்பு, சட்டங்கள் உலகம் பூராவும் உருவாக ஆரம்பித்துவிட்டன. வெளிப்பார்வைக்கு மட்டும் இந்தப் பாகுபாடுகள் தோன்றாமல் பூசி மெழுகிவிடப்படுகின்றன. சாதிப் பாகுபாட்டு பட்டியலே இந்தியாவில் இருப்பதை நீங்கள் அறிவீர்கள். உயர்வகுப்பு சாதியினரின் ஒடுக்குமுறையினால் இவை எல்லாம் உருவாயின எனச் சொல்லப்படுகின்றது. சாதி அடிப்படையில் கட்சிகள் அமைக்கப்படுவதும், மன்றங்கள் திறக்கப்படுவதும் அங்கு சர்வ சாதாரணமாகிவிட்டன. ஒத்தநோக்கு, ஒருமைப்பாடு என்கின்ற பார்வை, பேச்சு எல்லாமே ஒரு கண்துடைப்பு போலவே படுகின்றது. இவை எல்லாம் நடைமுறைக்கு ஒத்துவராது என்று மக்களில் பலர் கருதுகின்றார்கள்.

மக்கள் தொகை கூடக்கூடப் பிரச்சனைகளும் கூடும். பல்வேறு குழுக்கள் பிரிந்து தத்தமக்கு என பல்வேறுபட்ட அமைப்புகளை உருவாக்குகின்றன. இவை கொஞ்சம் செல்வாக்குப் பெற்றுவிட்டதுமே சலுகைகள், பதவிகளைக் கைப்பற்றி ஆட்சியில் இடம் பிடிக்க முனைகின்றன. இவை ஆரம்பத்தில் மெதுவாகத் தலையை நுழைத்து, பின்னர் வலுவாகக் கால் ஊன்றி மிக அந்தரங்கமான, நுணுக்கமான சட்டவிரோத, தில்லுமுல்லுகளில் ஈடுபட்டு நாடுகளையே குட்டிச் சுவராக்குகின்றன. மக்களுக்கு இவை தெரிவதில்லை. கிளர்ச்சியூட்டும், போதையூட்டும் பேச்சுக்களால் மக்களை ஆவேசப்படுத்தி, நினைத்த



காரியங்களை நிறைவேற்றிக் கொள்கின்றன. இவர்கள் மீது எந்தவித சட்ட நடவடிக்கைகளுமே எடுக்க முடிவதில்லை. எடுத்தாலும்கூட எப்படியோ தப்பிக் கொண்டு விடுகின்றன. ஆட்சியில் உள்ளவர்களுக்கு அநியாயம் புரிகின்றவர்களது தயவு தேவைப்படும் வரை எந்த நாட்டிலுமே சட்டத்தினைப் பூரணமாக அமுல்படுத்திவிட முடியுமா? சாதாரண பாமரன் பத்து ரூபாய் திருடினால் பத்து மாதம் சிறைக்குப் போகின்றான். ஆனால் செல்வாக்குள்ளவர்கள் கோடி கோடியாய்க் கொள்ளையடித்தாலும் சிறையில் கம்பி எண்ணிக் கொண்டா இருக்கின்றார்கள்? சட்டம் இந்த அநியாயத்தைப் பார்த்து மௌனமாகக் கண்ணீர் விடுவதைத் தவிர, வேறு என்ன செய்ய முடியும் என எண்ணத் தோன்றுகிறதல்லவா?

சட்டம் குற்றங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டு விடுவதில்லை. சகல குற்றச் செயல்களுக்குமே கடுமையான தண்டனைகள் உண்டு. குற்றமிழைக்கும் பெரிய திமிங்கலங்களை விடுத்து, குஞ்சு மீன்களை பிடிப்பதுதான் எங்குமே நடைபெறுகின்றது. இந்தச் செயல் சட்டத்தின் குற்றம் அல்ல. சட்டவிரோதப் பெருஞ்சாளிகளைச் சுற்றி மக்கள் சுற்றுவதைத் தவிர்ப்பதன் மூலமே, சட்டத்தை மக்கள் காப்பாற்ற முடியும்.

நீதிமன்றத்தில் நிறுத்தப்படும் குற்றவாளிகள் பற்றி நீதிமன்றமே முடிவு எடுக்கின்றது. இங்கு இருசாராரின் நியாயங்கள் கேட்கப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றன. எனினும், ஒருவன் நிச்சயமாகக் குற்றம் செய்தவன் என அறிந்தும்கூட அவர் பொருட்டு ஒருவர் வாதாடுவதும், அதற்காக இல்லாத பொல்லாத பழிகளை மற்றவர்மீது

RangaRakes Tamilnavarasam.com

சுமத்திப் பேசுவதும் என்ன நியாயமோ தெரியவில்லை. இச் செயல் நீதிக்கே விடுக்கப்படும் சவால் போல் அல்லவா படுகின்றது? அண்ணல் மகாத்மா காந்தியடிகள் தமது வழக்கறிஞர் தொழிலையே தமது நேர்மையுடன் பொருந்திவராது எனத் தோன்றியதால் கைவிட்டு விட்டார் என்பதை அனைவருமே அறிவர். நீதியை மட்டுமே வலியுறுத்தும் வழக்கறிஞர்களின் மதிநுட்பம், வாதத்திறமைகள் தப்புச் செய்தவன் தப்பித்துக் கொள்ளவே வழி செய்வதாக அமையலாமா? குற்றங்கள் மறைப்பதற்கும், மறுக்கப்படுவதற்கும் நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதில்லை. இவை புனித ஸ்தலங்கள் போல் கணிக்கப்படுகின்றன. விசாரணைகள் என்பது, செய்த குற்றங்களில் இருந்து விடுபடுவதற்கல்ல. குற்றவாளிகள் குறுக்கு வழியில் தப்பித்துக் கொள்வதற்குமல்ல. சட்டவாதிகளின் அங்கிகளுக்குள் நீதியும் ஒளிந்து கொள்ளக் கூடாது. வசதி படைத்தவன் சட்டத்தை இசைவாக்கினால் இல்லாதவன் நீதியை எங்கே தேடி ஓடுவது? குற்றங்களைக் கண்டுபிடித்தலும் அவைகளை இல்லாதொழித்தலும், குற்றங்களுக்கான தண்டனை பெறச் செய்தலுமே நீதித் துறையின் முழுக் கடமையும் பொறுப்புமாகும். மக்களின் பங்களிப்பு இன்றி இவைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றி விடமுடியுமா என்ன?

எல்லோருமே தமக்கும், தமது குழுக்கள், கட்சிகளுக்கும் எனத் தனித்தனியே சட்டங்களை இயற்ற முடியாது. எனவே முழு நாடுமே தமக்கு என பொதுச் சட்டங்களை உருவாக்கி, நீதியை ஒருமுகப்படுத்துகின்றன. ஒரே பாதையில் செல்லும் பயணமே இலகுவானதும், சரியானதுமாகும். எனவே, சட்டத்தின் பயன் சகலருக்குமே



கிட்ட வேண்டும். சட்டத்துறை என்பதே பெரிய இடத்துச் சமாச்சாரத்திற்கு என நினைத்து, பாமரர்களுக்கு அதன் பயன்கிட்டாது போய்விடக்கூடாது. சாதாரண நடுத்தர, வறிய குடும்பத்தைச் சேர்ந்த சகலருமே இதுபற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்வதுடன், இவை தொடர்பான கற்கை நெறியிலும் பிரவேசிக்க வேண்டும். முன்னர் எல்லாம் வசதி படைத்தவர்கள் மட்டுமே சட்டக்கல்வி பயின்று வந்தார்கள். இதனால் இவர்களிடம் ஒரு மேலாதிக்க நிலை இருந்து வந்திருந்தது. இவர்களே அரசியலில் குதித்து எழுச்சி பெற்றார்கள்.

ஏற்கனவே எளியவர்களை நசுக்கி, ஒடுக்கிவிடும் சுபாவம் உள்ளவர்களிடம் சட்ட அறிவு கிடைத்தால் கேட்கவா வேண்டும்? ஊரில் உள்ள மக்களிடையே கலவரங்களைத் தூண்டிவிடவும் இந்தக் குட்டைக் குழப்பும் காரியங்களால் தங்கள் சொத்துக்களைப் பெருக்கவுமே வழி அமைத்துக் கொண்டனர். இப்படிப்பட்ட ஒரு சிலர் அரசியலில் புகுந்து கொண்டதாலேயே நிலைமை மேலும் மோசமடைவதாக அமைந்தது எனலாம். இது உலகம் முழுவதிலுமே நடைபெற்ற, நடந்து கொண்டிருக்கும் சங்கதிகள்தான். மக்களிடமிருந்த தலைமைப் பொறுப்புகளைத் தாமே பிடுங்கி எடுக்க சட்ட ஞானத்தை ஆயுதமாகப் பயன்படுத்தியும் கொண்டனர்.

ஆனால், இந்த நடைமுறை ஏமாற்றுவேலைகள் தற்காலச் சூழலில் பொருந்திவரப் போவதில்லை. இன்னும் சகல தரப்பு மக்களுமே சட்டத்துறையில் நாட்டமுற்று, கல்விகற்று முன்னணிக்கு வந்துவிட்டனர். எளிதாகவே தமக்குரிய சட்ட ஆலோசனைத் தேவைகளைப் பெற்று வருகின்றனர். பெரிய குடும்பத்துப் பின்னணியில்தான்

RangaRakes Tamilnavarasam.com

சட்டம் படிக்க, தெரிய முடியும் என்ற நிலை இல்லை. ஆயினும், சட்டம் பற்றிய முழு விழிப்பு இன்னமும் பெறப்படல் வேண்டும். இதன் மூலம் பெறப்படும் பூரண பயன்பாட்டை இவர்கள் அடைதல் வேண்டும். நீதியில் மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். நாங்கள் நீதியாக ஒழுகாதவரை, பிறர் மீது நீதியை எதிர்பார்த்துவிட முடியுமா? ஒவ்வொரு தனிமனிதனும் நீதியை மதித்து ஒழுக வேண்டும்.

எப்படியும் வாழ்ந்து, எப்படியும் ஜெயித்து விடுவோம் என்று எண்ணாது, சட்ட வரையறுக்குள், ஒழுக்க வரம்பிற்குள் வாழுதல் வேண்டும். ஒழுக்கம் என்பதே சட்டம் காட்டும் வழிதானே? ஒழுக்கத்தை வலியுறுத்தி, கட்டுப்பாட்டின் கழக நெறியை உருவாக்கத்தானே சட்டம் உருவானது. இது மக்களை வருத்த அல்ல. அன்றியும் மக்களை அடிமைப்படுத்தவும், அச்சுறுத்தவும் அல்ல. தனிமனித சுதந்திரங்களையோ, சமூகச் சுதந்திரங்களையோ சட்டம் பறிப்பது என்ற பேச்சிற்கே இடமிருக்கக் கூடாது. இதன் பார்வை நேரியது; கூரியது. சரியாக நடந்து கொள்பவர்கள் இதைக் கண்டு அச்சமடைவதில்லை. உப்பைத் தின்றவன்தான் தண்ணீர் குடிப்பான். முழு உலகுமே நீதியின் வழி சென்றால் நீதிமன்றங்கள், காவல் துறைதான் எதற்கு?

சட்டம் - கட்டுப்பாடான சமூகக் கோட்டையைச் சமைக்கும். சட்டத்தை மதிக்கத் தெரிந்தவரை, கட்டுப்பாடுகளும் வாழ்க்கை நெறிமுறைகளும் திசை தொலைந்து அலைவதில்லை.

✷

*- தினகரன்*

RangaRakes Tamilnavarasam.com

# சுயதரிசனம்

பருத்தியூர் பால. வயிரவநாதன்

*வாழ்வியல் வசந்தங்கள் – பாகம் 03*

*சிந்தனைக் கட்டுரைகள்*

RangaRakes

Tamilnavarasam.com

# பொருளடக்கம்


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01) | அந்தரங்கங்களும் சுதந்திர உணர்வுகளும் | 23 |
| 02) | விருப்பங்களும் அவற்றின் விளைவுகளும் | 32 |
| 03) | விரக்தியை விரட்டு! | 42 |
| 04) | கனவுகள், அதன் பாதிப்புக்கள் | 51 |
| 05) | கண்ணீர் | 62 |
| 06) | விழிப்புடன் களிப்போடு உழை | 74 |
| 07) | சுயதரிசனம் | 80 |
| 08) | அன்பு நிலையும் துறவு நிலையும் | 88 |
| 09) | நல்ல பொழுது போக்கு வாழ்க்கைக்கு உவப்பு. | 96 |
| 10) | இல்லங்கள் ஆலயங்களாக வேண்டும். | 108 |
| 11) | வேற்றுமை உணர்வு | 114 |
| 12) | எச்சரிக்கை உணர்வு | 120 |
| 13) | தன்னை ஆட்சிப்படுத்தல் | 125 |
| 14) | பொய்மையாளர்கள் | 130 |
| 15) | இன்சொல் பேசினால் இல்லம் சிறக்கும் | 135 |
| 16) | அனுபவங்கள் தரும் அர்த்தங்களைப் புரிந்து கொள்க! | 141 |








# அந்தரங்கங்களும் சுதந்திர உணர்வுகளும்

எங்களது அந்தரங்கங்களால் நாமே, எமக்குள் அச்சுறுத்தப் படுதல் கொடிய சிறைவாழ்வு. சமூக நலன் கருதி மறைக்கப்பட வேண்டிய விஷயங்கள் மறைக்கப்பட்டேயாக வேண்டும். நல்லவர் ஒருவர் வாழ்வில் தற்செயலாக ஏற்பட்ட அச்சுறுத்தலான, கௌரவக் குறைவான விஷயங்களை அம்பலமாக்குவது போல வஞ்சக எண்ணம் வேறில்லை. இதயத்தில் பாரமற்ற நிலை தான் சுதந்திரம். மறக்க வேண்டியதை மறப்பதே புத்திசாலித்தனம். தேவையற்ற விஷயங்களில் நாட்டமுற்றுப் பிரச்சினைகளை வாங்குவது வெளியில் சொல்ல வொண்ணா, தன்னைத்தான் கட்டிவைத்துக் குழம்பிப் புலம்பும் நிலையை உருவாக்கும்.

தமது அந்தரங்களால் தமக்குள் தாமே அச்சுறுத் தப்படுவதும், துன்பப்பட்டு மனம் வெதும்புவதும், சிறை வாழ்வு போன்ற நிறைவற்ற வெற்று வாழ்வேயாகும்.



RangaRakes

Tamilnavarasam.com

சொல்லப்படக்கூடாத விஷயங்களுக்குள் ஆளாகுதல், இதனால் ஏற்படும் குற்ற உணர்வுகள், பிறர் நகைப்புகளுக்கு ஆளாக நேரிடும் என்கின்ற அச்ச உணர்வுகள் என்பன மென்மையான உணர்வு உள்ளவர்களை நிச்சயம் பாதித்தே தீரும்.

அந்தரங்கங்களின் சொந்தக்காரராக இருந்தால் தினம் தினம் ஏன் கணப்பொழுதும் கூட, ஜாக்கிரதை உணர்வு தேவைப்படுவதாகவே கருதுகிறார்கள். இந்நிலையை எவர்தான் விரும்புவார்கள்? சுதந்திர மனோ நிலையில், சந்தோஷ நிலையில் வாழத்தான் எல்லா உயிர்களும் விரும்புகின்றன.

எனினும், தங்களை மேலானவர்களாகக் காட்டிக் கொள்வதற்காகச் சிலர் தமக்குப் பல விஷயங்கள், பிறருக்கும் மேலாகத் தெரியும் எனச் சொல்லிக் கொள்வதும் உண்டு.

இவர்கள் தாங்கள் பல அந்தரங்கங்களைக் காப்பாற்றுவதாகக் கூறி தமது தராதரத்தினை தாங்களே மெச்சிக் கொள்வார்கள். இது தங்களுக்குத் தாங்களே வழங்கும் நற்சான்றிதழ் போன்றதாகும். உண்மையாகவே சமூக நலன் கருதி இரகசியங்களை வெளிப்படுத்தாதவர்கள் வெளியே சொல்லிக் கொண்டு திரியமாட்டார்கள். சும்மா வாயை வைத்திருக்காமல் ஏதாவது உளறி வைத்து உருப்படாமல் போன பிரகிருதிகள் எம் மத்தியில் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். நாட்டு நடப்புத் தெரியாமல் பேசித்திரியக்கூடாது.





"நான் என்ன சொன்னேன்? இதில் என்ன இரகசியம்? செய்தித்தாளில் சொன்னதைத்தான் சொன்னேன். என்னைக் கைது செய்து காவல் துறையினர் கொடுமைப் படுத்திவிட்டார்களே" எனப் பின்னர் புலம்பி என்ன பயன்?

- சில பரகசியமான சம்பவங்களையும் எமக்குள் இரகசியமாக வைத்திருக்க வேண்டியுள்ளது. பத்திரிகையில் ஹேஸ்யம் என்று சொல்லும் சங்கதிகளை முச்சந்தியில் முந்திய, பிந்திய செய்திகளாக நாம் சொல்லித் திரிந்தால் தப்பு எம்மீது என்றே புரிந்து கொள்க!
- எல்லா விஷயங்களையும் எல்லோரிடத்திலும், எப்பொழுதும் சொல்லமுடியாது. அறிக!
- புரியாத விஷயங்களையும், புரிந்த விஷயங்களையும் இடம், பொருள், அறியாது பேச முடியாது. தெரிந்து கொள்க!
- பிடியாத ஒரு விஷயத்தை நாம் ஒருவரிடம் திணிக்க முயன்றால் அது முடிவில்லாப் போராகிவிடும்.
- அந்தரங்கம் எனக் கருதும் ஒரு விஷயத்தை நீங்கள் அந்த விஷயத்தில் பிடிக்காத ஒருவரிடம் விமர்சிக்கப் புறப்பட்டால் வரும் விபரீதத்தை நீங்களே ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். வேண்டாமே, வீணான வினைகள்!
- உங்களுக்கு ஒரு விஷயத்தைப் பிடித்து இருக்கலாம். உதாரணமாக, நீங்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்து மாற்றுக் கட்சிக்காரர்களிடம் போய்,



RangaRakes
Tamilnavarasam.com

அவர்கள் சார்ந்த உள்கட்சி அந்தரங்கங்களை எடுத்த எடுப்பிலேயே சொல்ல முனைந்தால் என்ன ஆகும்?

- நீங்கள் சொல்வதை பிறர் ஏற்காதவரை உங்கள் கருத்துக்கள் அவர்களுக்குப் பொய்யாகவே கருதப் படும். எனவே நாம் ஜாக்கிரதை உணர்வுடன் இது விஷயத்தில் பழக, பேச வேண்டியவர்களாக இருக்கின் றோம். புரிந்துகொள்ளுங்கள்.

நல்ல, நயம் பயக்கக்கூடிய விடயத்தில் நாம் சில உண்மைகளைக் கூறியே ஆக வேண்டியுள்ளது. எனவே போலியான முகமூடி அணிந்தவர்களின் இரகசியங்களை உடைத்தெறிந்து உண்மைகளை வெளிப்படுத்தியேயாக வேண்டும். எமது நல்ல முயற்சிக்காக தகுந்த ஆதாரங்க ளைத் தேடாமல் பொல்லாதவர்களுடன் போரிட முடியுமா? போரிடல் என்பது சண்டையிடல் அல்ல! உண்மைகளை வலியுறுத்தல் ஆகும். இது ஆயுத, உடல் வலிமைகளை விட வலுவானது என முதலில் உணர்வோமாக.

எல்லோருக்குமே ஒவ்வொரு பிரச்சினைகள் இருக்கும். இவை என்றும் புதுமைகள் அல்ல! நகைப்புக்கு இடமானவை அல்ல.

நல்ல, கௌரவமான ஒருவரைப் பேதலிக்க வைத்து வேடிக்கை பார்க்க வைக்கவும் ஒரு கூட்டம் இருக்கும். எதைச் செய்தால் ஒருவனை வீழ்த்தலாம் என அங்கலாய்க்கும். அவர்கள் முதலில் நாடுவது தமக்குப் பிரியப்படாத அப்பாவி





களின் அந்தரங்கங்களைச் சேகரிப்பது தான். பலவீனமான இடத்தில் அடித்தால் சுருண்டு விடுவார்கள் என்கின்ற வித்தை அறிந்து மற்றவரைப் பஸ்பமாக்கும் அஸ்திரங் களைப் பிரயோகிப்பார்கள்.

எனவே, எந்த தேவையற்ற குழப்பங்களில் இருந்து நாம் சுதந்திரமாக விடுபட முனைதல் வேண்டும். எமக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் இருந்து வெற்று மனிதராக விடுபட்டு உலாவருதல் வேண்டும்.

உங்கள் சரித்திரம் பொய்மையற்ற தூய்மையான தாக, கருமையற்ற வெண்மை நிறைந்ததாக இருந்தால் மாற்றான் உரைக்கும் வஞ்சக குற்றச்சாட்டுக்கள் அர்த்த மற்றவையாகி, அவமானக் குற்றச்சாட்டுக்கள் வெறுமான மற்றவையாகி, அவற்றில் இருந்து விடுதலைக் குள்ளாகி விடும்.

சந்தர்ப்பவசமாக ஒருவர் செய்த குற்றங்களை மறைக்க முயல்வதாலேயே அந்தரங்கம் அவருக்குள்ளேயே பெரும் தீனிபோட்டு வளர்க்கப்படுகின்றது. சமூகத்தின் முன் எமது தவறுகளை ஒப்புக்கொள்கின்ற துணிவு வந்துவிட்டால் எமக்குள்ள குறையை எவரும் குத்திக் குதறிக் கொண்டிருக்க முடியுமா?

எங்கள் தவறுகளுக்கான வருத்தம் உண்மையா னதாக, நெஞ்சினைத் தொடுவதாக, வஞ்சக உணர்வின்றிச்



RangaRakes

Tamilnavarasam.com

சத்திய தரிசனத்தினைத் தொட்டுக் கொள்வதாக நீங்களே உணர்ந்தால் எதிரி எம்மிடம் ஒன்றுமே இல்லை என அறிந்து விலகிவிடுவான். அதனை விடுத்து, நீங்கள் பயந்து விலகி ஓட, மற்றவர் துரத்த, நீங்கள் ஓட..... முடிவில்லாமல் ஓட முடியாது இறுதியில் விழுந்து விட, பிறர் கைகொட்டிச் சிரிக்கும் நிலைவர வேண்டுமா? சொல்லுங்கள்.

- நீங்கள் நிமிர்ந்து நின்றால் எதிர்ப்பவன் ஓடிவிடுவது நிச்சயமே!
- தெளிவான நிலையில் தேக்கமாக எந்த அச்சமும் குடியிருப்பதில்லை. பூரணத்தினுள், எதுவும் புகுந்து விட முடியுமா? வெற்றுப்பாத்திரத்தினுள் கண்டதை யும் போடலாம். அறிவும், ஆற்றலும், அன்பும், பரிவும் நிறைந்த பூரணமானவனிடம் வேறு குறைகளும், தாக்கங்களும் உட்புகுந்து கொள்வது இயலுகின்ற காரியமா?
- சமூக நலனுக்குட்பட்ட அந்தரங்கங்கள் எனில் காப்பாற்றுங்கள்.

உதாரணமாக இரு சமூகங்களிடையே பிணக்குத் தோன்றி விட்டால் ஒருவர் சொன்ன வார்த்தைகளை மற்றவரிடம் சொல்லக்கூடாது அல்லவா? யாராவது தெரியாது சொன்ன பேச்சுக்களை நாம் பதிவு செய்து அதை அப்படியே சொல்லிக் கொண்டு திரியலாமா? எனவே, சில விஷயங்களை வெளியே நிச்சயமாகச் சொல்லவே கூடாது. குடும்ப உறுப்பினர்கள், கணவன் - மனைவி, நண்பர்களி





டையே நடந்து முடிந்த சம்பவங்களை யாராவது மீட்டு, வெளியே தெரியாமல் இருந்த கசப்பான விடயங்களை அம்பலப்படுத்துவது தம்மைத் தாமே அலங்கோலமாக நிர்வாணப்படுத்துவதற்கு ஒப்பானதாகும்.

கொச்சையான, தகாத பேச்சுக்களைவிட இனிமை யாக உரையாடி ஒருவரைக் கெடுக்க நினைப்பது அடுக்காத செயல். உண்மை என்னவெனில் இவர்களின் இதயத்து அந்தரங்கமே அசுத்தமானது. இதன் வெளிப்பாடுகளே மாற்றானின் அந்தரங்கங்களை வெளிப்படுத்தி அவர்களின் மனதினை மாறுபாடாக வைக்க முனைதலாகும்.

எனவே, எம் எதிரே இருப்பவர்களின் இதயசுத்தியை அவர்கள் எம்மில் கொண்டுள்ள அக்கறையின் மூலம் உணர வேண்டும்.

நன்மையளிக்க வரும் நல்லவர்களைப் புரிந்து கொள்ள வேண்டும். பிறரின் கெட்ட நோக்கங்களை அம்பலப்படுத்தும் உத்தமர்களையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இல்லாதுவிடின், நல்லவர்களின் நோக்கங்களையும் புரிந்து கொள்ளாது, புல்லர்களின் புகலிடமே கதி எனப் புகுந்து கலங்கி வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம் அல்லவா? கொஞ்சம் சிந்தித்தால், இலவச புத்திமதி சொல்லப் புறப்படும் சில துன்மார்க்கர்கள், பிறர்



RangaRakes

Tamilnavarasam.com

அந்தரங்கங்களினூடே ஆதாயம் பெறுபவர்களாகவே இருக்கின்றார்கள்.என்பதைப் புரிந்து கொள்ள முடியும் ஏன் அதனை வைத்துப் பிழைப்பவர்களாகவும் காலப்போக்கில் கண்டுகொள்ள முடியும்.

சுதந்திரமாக இயங்குபவன் அந்தரங்கங்களுக்கு ஆளாவதுமில்லை.தமது அந்தரங்கங்களினால் தாக்க முற்றுக் கலங்கித் தவிப்பவர்கள், யாரிடமாவது போய், தங்கள் பிரச்சினைகளைக் கொட்டித் தீர்க்க வேண்டும் என்றும் சொல்லப்படுவதுண்டு. இதனால் மன அழுத்தம் இழக்கப்பட்டவர்களாகி, சுமை களைந்தவர்களாகின்றார்கள்.

ஆனால்,எமது குறைகளை,பிரச்சினை சரியானவர் களிடமே கூறவேண்டும். எங்கள் துன்பங்களில் குளிர் காய்பவர்களிடம், விபரம் புரியாது போய் பேசக் கூடாது. எமது அறியாமை காரணமாக மற்றவர்களைப் புரியாமல் கண்டபடி கண்டவர்களிடம் உபதேசம் கேட்பதன் விபரீத விளைவு சொல்ல முடியாத பின்விளைவாகிவிடும்.

மனப்பாரங்கள் இறக்கிவைக்கப்படல் வேண்டும். வல்லவர்கள், நல்லவர்கள், அறிவு பகரும் துறைசார் உளவள ஆலோசகர்கள் இருக்கின்றார்கள். எமது அந்தரங்கங்களை துல்லியமாக ஆராய்ந்து ஆலோசனை நல்குவர். அனுபவ ஞானம் உள்ளோரை அணுகுவது நன்று. எதனையும் பிறரிடம் பறைசாற்றாதவர்களிடம் பிரச்சினை களைப் பற்றி ஆலோசனை கேட்க வேண்டும். புரிந்து நடப்போம்.





நல்ல நண்பர்கள், வேண்டப்பட்டவர்கள் ஆகியோ ரைத் தேடி நட்புறவு கொள்பவர்களுக்குப் பிரச்சினைகள் எல்லாமே சுலபமாகத் தீர்ந்து போகின்றன. எல்லாமே எமக்குத் தெரியும் என்கின்ற இறுமாப்பில் அனைத்துப் பிரச்சினைகளையும், அந்தரங்கங்களையும், மனதுக்குள் இறுகப்பூட்டி இயலாத ஒரு நிலைக்குள் நாமே எம்மைத் தள்ளிவிடலாமா?


அந்தரங்கங்கள் பற்றிய உறுத்தல் உணர்வுகள் அகற்றப்பட்டேயாக வேண்டும். இல்லாது விட்டால் வெட்ட வெளியில்கூட சிறைக்குள் மாட்டுப்பட்ட நிலையில் தான் வாழவேண்டும். இந்நிலை தேவைதானா? வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
18.12.2005



RangaRakes

Tamilnavarasam.com



# விருப்பங்களும் அவற்றின் விளைவுகளும்

எமது விருப்பங்கள் எங்களுக்குரியவை ஆயினும் நாம் பிறரிடம் எமது விருப்புக்களைத் திணித்தல் தகாது. சுயகட்டுப்பாடு, நேர்மை, உழைப்பினால் மட்டுமே எமது தேவைகள் நிறைவேற்றப்படல் வேண்டும். எமக்கு ஏற்படும் இழப்புக்களால் பிறர் நன்மையடைந்தால் அது கூட ஆன்மதிருப்தி தான். ஆனால் எங்களையும் காப்பாற்றி மற்றவர்களுக்கும் உதவி புரிவதற்காக தெளிந்த மனோநிலையில் போராட வேண்டியுள்ளது. செய்கருமங்களின் பின்விளைவு கருதாமல் இயங்குதலுக்கு நியாயம் கற்பிக்க முடியாது. உதவுதலுக்கு மன உறுதி வேண்டும். நெறிதவறியோர் விருப்பங்களுக்கு உதவி செய்யற்க!

விருப்பம் என்பது ஒருவரின் தனித்துவ உரிமை. மனித மன இயல்பு. இருப்பினும் இதனைத் தெரிவிப்பதிலும் செயற்படுத்துவதிலும் முரண்பாடுகள், உடன்பாடுகள் ஏற்படுவது இயற்கை.





ஒருவரது நியாய பூர்வமான விருப்பங்களினால் கூட பிரச்சினைகள் உருவாகலாம். கருத்துச் சுதந்திரம் போலவே விருப்பங்களைப் பெறுவதிலும் உரிமையுண்டு என்று பலரும் எதிர்பார்ப்பது சகஜமே!

ஆனால், பிறரைப் பாதிக்கின்ற, நடைமுறைச் சாத்திய மற்ற விஷயங்களில் நாம் நினைத்தவாறு கருமங்களாற்ற முடியாது. பொதுவாகப் பிரச்சினைகளற்ற விருப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படலாம். கட்டுப்பாடற்ற கண்ட, கண்ட எதிர்பார்ப்புகள் வீணான எதிர்விளைவுகளை வரவேற்பன வாகவே அமையும்.

எங்களது கருத்துக்களை பிறரிடம் திணிக்க முயலும் போதுதானே பகைமையும் வெறுப்பும் உருவாகின்றன? சில சமயம் கருத்துப் பரிமாற்றங்கள் மூலம் அனைத்துத் தரப்பி னர்களின் உள்ளவாறான நினைப்புக்களை அறிந்து கொள்ள வேண்டியவர்களாகவுமுள்ளோம்.

எமது தனிப்பட்ட பழக்க வழக்கங்களுடன் சமூக இயல்புகளையும் நாம் ஒப்பு நோக்க வேண்டியவர்களே!

கல்வி,கலாசாரம் போன்ற முக்கியமான விஷயங் களில் மனிதனின் சுயவிருப்பங்கள் ஆட்சி புரிகின்றன. விரும்பாத கல்வித்துறையில் பிள்ளைகளைக் கற்கச் செய்யத் தூண்டுதல், ஒருவர் சார்ந்த கலாசார ஈடுபாட்டை மாற்றிய மைக்க எத்தனித்தல் போன்ற செயல்களினால் தனிமனித



RangaRakes

Tamilnavarasam.com

விருப்பங்களைக் கூறுபோட முனைவதாகக் கொள்ள முடியும். இந்தத் தவறான நடைமுறைகளை தமக்கான பொறுப்பு எனவும் சேவைகள் எனவும் வாதாடுவது அபத்தம்.

இவை எல்லாமே வெளிப்படையான விடயங்கள். ஆனால், அறிவுக்கும் புலனாகாத எத்தனை காரியங்களை நாம் மற்றவரின் ஆசை, அபிலாசைகளைத் துரத்தி மூடி விடும்படி செய்துவிடுகின்றோம் தெரியுமா? சின்னச் சின்ன விடயங்கள்தான். ஆனால், பிறர் வெறுப்பைச் சம்பாதிக்க இவை எல்லாமே பாரிய விடயங்களே!

உதாரணமாக, ஒருவருக்குப் பிடிக்காத உணவை நாம் புகட்ட எத்தனிக்கலாமா? தினசரி சைவ உணவு உண்பவனைக் கேலிசெய்து அசைவ உணவைச் சாப்பிடச் சொல்லலாமா? இவை, இந்த முயற்சிகள் ஒருவரது ஆழ் மனதினுள் பதிந்துள்ள கலாசாரப் பதிவுகளாக இருக்கும். இன்னும் சொல்லப் போனால் ஒரு வீட்டில் புலால் உணவை அவர்கள் புசித்தாலும் ஒருவர் மட்டும் இயல்பாகவே சைவ உணவில் நாட்டம் அற்றவராக இருக்க முடியும். எனவே இவை போன்ற செயல்களால் எங்கள் விருப்பங்களை மற்றவரிடம் புகுத்தி விடக்கூடாது அல்லவா?

உழைக்கின்ற விடயத்தில் ஒவ்வொருவருக்கும் நாட்டம் வெவ்வேறாக இருக்கின்றது. தான் விரும்பாத துறைகளில் நுழைபவர்கள் போதிய நாட்டம் இன்மையால்





தொடர்ந்து முன்னேற முடியாத முட்டுக் கட்டைகளைத் தங்களுக்குள் இட்டுக்கொள்கின்றனர்.

பிடிக்காத கல்வித் துறையை பெற்றோர் தெரிவுசெய்து பிள்ளைகளுக்கு அளிக்க முற்பட்டால் ஏற்படும் சிரமங்களை நாம் அன்றாட நிகழ்வுகள் ஊடாகக் கண்டிருப்போம். தொடர்ந்து கல்வியைத் திறமையாகக் கற்க இயலாது மனத் தளர்வுற்று எதிர்காலத்தினையே கருவறுத்துவிடுவதை பெற்றோர்கள் காலம் கடந்து உணர்ந்தும் எவ்வித பிரயோசனமும் ஏற்பட்டு விடாது.

மத விவகாரங்களும் இதே போலத்தான். எந்த மதத்தினரும் தாம் சார்ந்த மதத்தினை கௌரவப்படுத்துவது போல, ஏனைய மதங்களுக்கும் மதிப்பு அளித்தால் மதப்பிரச்சினைகள் உருவாகிவிடுமா? மதக் கலவரங்கள் வெடிப்பதனால் அதனூடாக தொடர்புள்ள சமயங்களும், மத உணர்வுகளும் சிதைக்கப்படுவது கண்கூடாக இருந்தும் கண்மூடித்தனமாக இருப்பது வெறுப்பைத் தரும் வேதனை!

எதனையும் அனுசரிக்கும் மனப்பாங்கினைக் கொண்டவர்கள் பிறர் செல்லும் திசைகளையும் அறிந்து அவ்வண்ணம் செயலாற்ற வல்லவர்களாகின்றனர். நாம் செல்லும் வழி எமக்குப் பிரதானமானது அதுபோலவே ஏனையவர்களும் தமக்கேற்றவாறான பாதைகளை உருவாக்கிவிடுகின்றனர். சில சமயம் எங்கள் வழி சுலபமாகவும், ஏனையவர்களின் வழி இலகுவானதாக



RangaRakes

Tamilnavarasam.com

இன்றிச் சிக்கலானதாகவும் இருக்கலாம். நண்பர்களிடையே யாகட்டும்,கணவன்-மனைவியினிடையேயாகட்டும், குறிப் பறிந்தும்உரையாடியும்விருப்பங்களுக்கு வழிசமைக்க வேண்டும்.

இதேபோல், எங்களது தெரிவிலும் பார்க்க மற்றவர்கள் தெரிவு சிறப்பாக இருக்கலாம் அல்லவா? எனவே எடுத்த எடுப்பிலேயே எங்கள் விருப்பு பற்றியே விமர்சிப்பதை, எமது ஊடுருவல்களைத் தவிர்த்தேயாக வேண்டும்.

நல்ல விடயங்களைக் கற்றுக் கொள்ள சிலவேளை நாம் பழகிய பழக்கங் களைக் கூட மாற்றியமைத்திட அல்லது கைவிட வேண்டியுள்ளது. இதற்கான மனப்பக்குவத்தை ஏற்படுத்தினால் நல்லது. உள்ளதை உள்ளவாறு ஏற்பது நல்ல முடிவுதான். எம்மை மீறி எதுவும் நடக்கக்கூடாது என்றுதான் மனம் ஏங்குகின்றது. எங்களாலேயே நடக்க வேண்டும் என்பது எல்லா நேரமும் சரிவரப் பொருந்தி வருமா?

மாற்றாரின் விருப்பத்திற்காகவும் தேவைகளுக்கு மாக நாமாகவே முன்வந்து செய்கின்ற கருமங்கள் தியாகமாகின்றன. எங்கள் இழப்புக்களால் பிறர் அடையும் நன்மைகள், நாம் அளித்திடும் கொடைகள் என்பனவே "தியாகம்" எனப்படுகிறது. எனினும், வெகுமதிகளோ அன்றிக் கொடைகளோ மனஉளைச்சலுக்கு இடம்தராது, திடசிந்தனையுடனான வழங்கலாக, பிறரை மேன்மைப்





படுத்துவதாக, சந்தோஷ உணர்வுடன் அளிப்பதே தியாகத்தின் உள்ளார்ந்த வெளிப்பாடு ஆகும்.

இதனால் இழப்புக்கள் கூட, நாம் அடைகின்ற 'மன நிறைவு' எனப்படுவதால், நாம் இழப்பதில் ஒன்றுமே இல்லை என்றாகி விடுகின்றன. ஏனெனில், நாம் கொடுப்பதால் ஒரு நிறைவைப் பெற்றுக்கொண்டமையினால் இழப்பு என்கின்ற ஒன்று நிகழவில்லை எனத் திருப்திப்பட்டுக் கொள்கின்றோம் அல்லவா?

உனக்காக என்றில்லாமல் பிறர்க்கும் எதனையும் வழங்கிடு தோழா என்றே எல்லா கவிஞர்களுமே பாடிக் கொண்டிருக்கின்றார்கள். மக்களுக்கான நியாயபூர்வமான தேவைகளை உன்னால் முடிந்தால் இயன்றளவு விருப்பத் துடன் செய் என்றுதான் சகல சாஸ்திரங்களும், வேதங் களும் வேண்டிக் கேட்கின்றன. சாதனையாக இதனை நாம் செய்ய முனைந்தால் என்ன?

சாகாத சத்தியங்களின் விருப்பம் என்ன? பெறப் போகும் நன்மைகளை, வரவுகளை, இன்பங்களை உண்மையின் அடிப்படையில் தேடிக்கொள். இதில் கிடைப்பவை நிரந்தர வைப்புக்கள். பணவைப்பை விட நெஞ்சத்தில் வைத்துக் கொள்ளும் சத்தியம் நிரந்தர மானது. இதன் விஸ்வரூப வெளிப்பாடு, எம்மை நோக்குப வரையும் பிரகாசிக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது. கொடுப்பவருக்கு ஏது ஐயா வருத்தம்? கொடுக்கின்றவனின் விருப்பம் மிகுந்த இதயம் வற்றாத புதையல்.



RangaRakes
Tamilnavarasam.com

தவறான விருப்பங்களுக்கு பெற்றோர் இறுக்கமான தடை உத்தரவு போடும் போது பிள்ளைகள் தமக்குள்ள சுதந்திரம் பற்றிப் பேசுகிறார்கள். பிள்ளைகளுக்குத் தகுந்த முறையில் உண்மைகளை உணர்த்துகின்ற பக்குவம் இருந்தால் தான் அவர்களது நிலையினை உணரவைக்கவும் இயலும். இன்றுள்ள சூழ்நிலையில் எவருடனும் பேசிப் புரியவைக்க முடியாத நிலையில் இருக்கின்றோமே எனப் பலரும் கூறுவதைக் கேட்கின்றோம்.

குறிப்பாக இளம் வயதில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் பராயத்தவர்களுக்கு உலக யதார்த்த உண்மை நிலை புரியாமல் இருக்கலாம். விரும்பிய வண்ணம் எதனையும் செய்ய முடியும் எனக் கூறிக் கொண்டும் இருப்பார்கள். இதன்பொருட்டு வயது வந்தவர்கள் கோபம் கொண்டுவிட இயலுமா?

திருமண விடயங்கள், சொத்து விடயங்களில் பெரியவர்களின் முடிவுகளைச் சில சமயம் இளையவர்கள் பொருட்படுத்துவதில்லை. முக்கியமாக காதல் திருமணமாகட்டும், இல்லாதுவிட்டால் பெற்றோர் நிச்சயிக்கும் திருமணமாகட்டும், பெற்றோரும் பிள்ளைகளும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து நடக்கும் போக்கினைக் கையாள வேண்டியுள்ளது.

எல்லாக் காதல் விவகாரங்களுமே ஏற்றுக்கொள்ளக் கூடியவை அல்ல. பல்வேறு பிரச்சினைகள் எழ வாய்ப்பு





உண்டு. சில, திருமணங்களில் அவை நிறைவு பெற்ற பின்னர்தானே பிரச்சினைகள் முளைக்க ஆரம்பிக்கின்றன?

காதல் விவகாரங்களில் பெற்றோர் கூறும் காரணங்கள் பிழையாகவும் தோன்றலாம். இந்த இடத்தில்தான் ஒவ்வொருவரின் விருப்பு, வெறுப்புக்களைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. வாழ்க்கைப் பிரச்சினையில் தீர்வு காணுமுன்னர் சிந்திக்க வேண்டியது இரு சாராரின் பொறுப்பாகும். பெற்றோர் தங்களின் பேச்சினைக் கேட்டே யாக வேண்டும் என எண்ணுவது அவர்களது பாசத்தோடு இணைந்த உரிமைதான். பாசத்தின் மீதான உரிமைகள் பலவந்தமாவது கொடிய வேதனை.

எனினும், விருப்பம் கொண்ட காதலான இதயங்களை சர்ப்பம் போல் தீண்டி வதைப்பது முறைதானா? இந்தச் சம்பவங்கள் அடிக்கடி கேட்டுச் சலித்த விஷயங்கள் என்றாலும் இந்தச் சங்கதிகள் தான் பரிதாபமாகப் பேசப்படுவதும், சுவாரஸ்யமாகப் பார்க்கப்படுவது மான காட்சிகளாகும். இவை இன்றைய பிரச்சினைகள் மட்டுமல்ல, காலம் காலமாகத் தொடர்கின்ற வாலிப காலத்து நெருடல்கள், மிரட்டி உருட்டும் கல கலத்த முழக்கங்கள்.

வாழ்க்கைப் பந்தல் கட்டப்படுவதே இன்ப, துன்பங்கள், விருப்பு, வெறுப்பு, வேதனை, சாதனைகளோடிணைந்த கலப்பினால் அல்லவோ? அறுசுவைகளுள் கசப்பு, உறைப்பு, துவர்ப்புக் கூடச் சுவைகள் என்றே



RangaRakes

Tamilnavarasam.com

சொல்லப்படுகின்றன. வாழ்க்கையில் துன்பங்களையும்கூட ஏற்கக்கூடிய அம்சங்களாகக் கொள்வோமாக!

அத்தனை பேரின் விருப்பங்களும், விருப்பம் அல்லாதனவும் ஒன்றாகிவிடா. ஆனால் மக்கள் இதுபற்றி இறுக்கமான முடிவுகளுடன் இருக்கத் தயாரில்லை. அப்படி இருந்துவிட்டால் உலகம் நிறுத்தப்பட்டுவிடுமே. இதுமாதிரி இங்கு நடக்கிறதா? ஒருவர் தடுத்தாலும் உலக இயக்கம் நடக்காமல் இருக்குமா?

ஏதோ ஒரு சக்தியால் மக்கள் வேற்றுமை பொருந்திய கருத்துக்களுடனும் ஒருமித்து வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். இந்த அணைப்பு ஒரு வினாடி அறுந்தாலே போதும், சுக்கு நூறாகிப் போகும் இந்த வையகம். ஆனால், இது நிகழமாட்டாது. இது தெய்வ முடிச்சு. ஏற்றுக் கொள்ள முடியாத நல்ல விடயங்களும் உள்ளன. தூற்றி, வையக்கூடிய கெட்டவை களும் இருக்கின்றன. எதையும் பார்க்கிறது எம் தாயாகிய பூமி.

வக்கிர புத்திகள் வேரறுக்கப்படும் வேளை புதிதான பிரச்சினைகள் உருவாகுவதும், அவையும் களைந்து எறியப்பட மாற்றுக் கருத்துக்களும், நல்ல போதனைகள், நெறிகள் வளர்ந்து வருவதும் மாற்ற முடியாத இயற்கை நிகழ்வுகள்தான்.






விருப்பங்களை நோக்கி மனிதன் நடக்கின்றான். இடையூறுகளை விரும்பி அவன் ஏற்பதுமில்லை. எனினும் மனிதன் வாழும் முயற்சியில் பின்வாங்கப் போவதுமில்லை. என்னே இயற்கையின் சிறப்பு? உங்களது விருப்பங்களால், ஏனையவர்கள் பயன், நயம், சுகம் பெறுவார்களாக! வாழ்வின் அர்த்தம் இதுதானே!

தேவைகளை நோக்கி ஓடுவதும் விரும்புவதும் தவறே இல்லை. இவை இன்றி எப்படி ஐயா வாழ்வது? நெறி தவறாத நிலையில் நல்லதை விரும்புவோம். அதை அடையப் போராடுவோம். கிடைத்ததை ஏற்போம். கிடைக்காதவிடத்து மனம் தளர்ந்து விடமாட்டோம். நல்லவைகளை எடுக்கத் தடைகளை உடைப்போம். வாருங்கள்! வாருங்கள் அன்பான நெஞ்சங்களே!

தினக்குரல்<br>ஞாயிறு மஞ்சரி<br>29.01.2006



RangaRakes
Tamilnavarasam.com



# விரக்தியை விரட்டு!

துன்பங்களே தினசரி தரிசனமானால் விரக்தி வீராப்புடன் எழும். எனினும் இன்ப, துன்பங்கள் எல்லாமே முடிவானவை அல்ல என்று திடமாக எண்ணினால் விரக்திகரைந்துவிடும். தோல்வி வருகின்றதே என ஆரம்பத்திலேயே கருதினால், வெற்றியைத் தன் மனதில் இருந்தே விடைகொடுத்து வழியனுப்புகின்றவனாகின்றான். சாதிக்க எண்ணி முழுமையாகச் செயல்படுபவனுக்கு ஏது விரக்தி? விஷக் கிருமிகளின் ஆக்கிரமிப்பைவிட மனச்சோர்வின் படையெடுப்பு ஆபத்தானது. விரக்தி பெருநோய். உற்சாகமான எண்ணங்கள், செயல்கள் இதனை விரட்டியழிக்கும்.

அடுத்தடுத்துத் தொடுத்துக் கொள்ளும் தோல்விகளாலும் எதிலுமே நிறைவற்ற குறைகளைக் காணுவதனை இயல்பாக்கியோர்க்கும் விரக்தி கருக்கொள்வது சகஜமே!

நல்ல மனோநிலையில் உள்ள மாந்தர்களுக்கும் துன்பமே தினசரி தரிசனம் என்றால் என்ன செய்வது?





விரக்தியின் உச்சத்திற்கே சென்று தெளிவடைந்த ஞானிகளும் உள்ளனர். விரக்தியில் அழிந்துபோன சாமானியர்களும் ஏராளம்.

எனவே, பிரச்சினைகளைக் கையாள்வதில் தான் மனிதன் எழுச்சி தங்கியுள்ளது. துன்பங்களில் அமிழ்வதும், எழுவதும் அவரவர் ஆத்ம சக்தியைப் பொறுத்த விடயம் என்பர் பெரியோர்.

தோல்விகளும், வெற்றிகளும் புதுமையான அம்சங்களேயல்ல. இதைச் சாதாரண சங்கதி என்று அதில் சம்பந்தப்படாதவர் கூறலாம். தாங்கிக் கொள்ள முடியா மனோ நிலையில் சின்னத் தோல்வியும் எமக்கு வந்தால் அது மலை எனவே திகழ்வது இயல்பே. ஏன் தற்கொலை போன்ற தகாத முடிவு எடுப்பவர்களும் உளர்.

- தோல்வி வருகின்றதே எனக் காரியங்களில் இருந்து நழுவுகின்றவன் வெற்றியின் ஆரம்பத்திலேயே ஒதுங்குகின்றவன் ஆவான்.
- "முன்னேற்றம் என்பதே ஒரு முழு மூச்சுடனான வேகம்". என உணர்க! உணர்க!

இங்கு பின்னடைவான நோக்கிற்கே இடமில்லை. வெற்றி விளிம்பைத் தொட்டு விட்டிட எத்தனிக்காமலே அந்த எண்ணத்தையே முளைவிட விரும்பாது விட்டால் நாம் ஜெயிக்க முயலவில்லையே என எப்படி ஆதங்கப்பட முடியும்?



RangaRakes
Tamilnavarasam.com

மிகவும் பெரிதாகச் சாதித்தவர்கள் விரக்தி பற்றிய சிந்தனையை ஒதுக்கியவர்களாகவே தெளிந்து காணப்படு கின்றனர். ஆனால் அவர்களிடையே பேசிப் பார்த்தால் "அடடா நான் இன்னும் கொஞ்சம் செய்திருக்கலாம். உடனடியாகவே செய்தேயாக வேண்டும்." என்று எண்ணியதுடன் மறுவினாடியே முனைப்பான பணிகளில் ஈடுபட்டு விடுவார்கள்.

இன்னும் ஒரு விடயம். "என்னிலும் பார்க்க அந்தஸ்தில் குறைந்தவனாக இருந்தவன், என் கண்முன்னே உயர்ந்து விட்டானே இனி என்பாடு அதோகதிதான். நான் அவனிலும் பார்க்கத் தாழ்ந்து போய்விட்டேனே" என்று பொறாமை காரணமாக விரக்தியுடன் பேசுபவர்களை என்ன செய்வது?

தனக்கு நேர்ந்த அவலங்கள், துன்பங்களுக்காகச் சோர்வடைவது மனித இயல்பு. ஆனால் பிறர் வளர்ச்சி கண்டு பொருமுவது விரக்தியல்ல: அது தன்னைத்தானே நொருக்கி அழிப்பது போலாகும் என்று அறிக.

சுய முயற்சியுடன் முன்னேறியவன் தன் தகுதி பற்றி தானே அறிந்தவனுமாவான். முன்னேறாமல் வெறும் கற்பனையுடன் உழைப்பின்றி வாழ்பவன் ஒரு கால கட்டத்தில் தனது வெறுமை நிலை கண்டு குறுகி, சிதறி ஒதுக்கப்பட்டே விடுவான். இந்நிலை தவிர்க்கக்கூடிய ஒன்றேதான். "முடியும் வரை முயலாதவன் மனிதனே யில்லை".





நாட்டில் மிக உச்ச அந்தஸ்தில் உள்ள ஜனாதிபதி ஒருவர் தனது நண்பரிடம் அலுத்துக் கொண்டாராம் இப்படி! "எனக்கு இனி பதவி உயர்வே இல்லையே! இனி என்ன செய்வது"? என்றாராம். பதவிகளைத் தேடிக் கொண்டே யிருந்தவர் அது கிடைத்துக் கொண்டேயிருந்தும், முடிவில் அது,ஒரு எல்லைக்கு மேல் உழைப்பின் மேலுள்ள ஆர்வம் காரணமாக ஒரு அங்கலாய்ப்பாகவே மாறிவிட்டது. எனினும் உழைக்காமல் பெரிய பதவிகளும் பரிசளிக்கப்படுவது மில்லை. உழைப்பவன் ஓய்வடைய விரும்புவதுமில்லை என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

இத்தகையவர்கள் தமது அலுவல்களைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பார்களே ஒழிய விரக்தியான பேச்சுக்களால் சலிப்படையப் போவதில்லை. ஏனெனில் அவர்களுக்கு அந்தப் பேச்சு பேசுவதற்கான சிந்தனையோ, நேரமோ கிடைப்பதில்லை.

இயங்கும் ஆத்மாக்கள் படுத்துக் கிடப்பதில்லை. படுத்துக் கிடப்பவனுக்கு எடுக்கும் கருமங்கள் முறிந்து போகும். தொடர்ந்து படித்துக் கொண்டிருப்பவர்களிடம் கேட்டுப்பாருங்கள், "படிப்பதில் உங்களுக்கு சலிப்பு ஏற்படவில்லையா?" என்றால், "படிக்காமல் விட்டால் தான் சலிப்பும், அலுப்பும்" என்பார்கள்.

விரும்பும் தொழிலைச் செய்தால் விரக்தி ஏற்படாது. விரும்பாத காரியங்கள், பிறரால் திணிக்கப்படும் வேலைகள்,



RangaRakes

Tamilnavarasam.com

தெரியாத வேலைகள், அனுபவமில்லாத கருமங்கள் பிறரின் அவதூறுகள் என்பன மன உழைச்சலைத் தருவதுடன் விரக்தியை நோக்கிய பாதைக்கு வழி சமைக்கும்.

பிறருக்குச் செய்யும் வேலையில் அவதானம் வேண்டும். இத்தகைய பணிகளால் ஏற்படும் சாதக, பாதகங்களை நாம் ஏற்றேயாக வேண்டும். பொதுவாக இப்பணியினை மேற்கொண்டு அதனால் பயனேதும் கிட்டாதுபோனால் தென்படும் கண்டனங்கள், அவமானங்கள் சிலவேளை துன்பத்தையும் தலைவலியையும் ஏற்படுத்தி விடுமன்றோ?

தேவையற்றுச் சுமக்கும் துன்பங்கள் விஷக்கிருமிகள் போல உடலையும், உள்ளத்தையும் பாதிப்புக்குள்ளாக்கி விடுகின்றன.

அழையா விருந்தாளிபோல், நோய்கள் நுழைவது போல் தேவையற்று வலுக்கட்டாயமாக ஏற்படும் கஷ்ட நஷ்டங்களால் விரக்தி கொள்பவர்களே ஏராளமாக இருக்கின்றார்கள்.

என்னதான் உதவும் கரங்களாக நாம் இருந்தாலும் கூட சமயத்தில் எங்களை நாம் காப்பாற்றிக் கொள்ளவும் தெரிந்து கொள்ள வேண்டும். இன்று பிரச்சினைகளைப் பிறர் தலையில் தள்ளிவிட்டு சும்மா இருப்பவர்களும் இருக்கத் தான் செய்கின்றனர். இவர்களை இனம் கண்டு கொள்வோ மாக.





வேளைக்குச் செய்யாத கருமங்களால் நாம் வீணர் களாகவும், கோழைகளாகவும் மாற வாய்ப்பு உண்டு. சும்மா இருந்தால் மனமும் மரத்துவிடும். அப்புறம் திடீர் என விழித்துக் கொண்டு "அடடா நான் எல்லா விடயங் களையும் கோட்டை விட்டு விட்டேனே" என்று சொல்லிக் கொண் டேயிருக்கும்போது காரியம் எல்லாமே காலாவதியாகிப் போய்விடும்.

மனம் சலிப்படைந்தால் எமது ஆற்றல்களை இனம் காணமுடியாதவர்களாகி விடுவோம். இது மிகவும் ஆபத்தான நிலையாகும். உள்ளே இருக்கும் ஆற்றலை வெளிப்படுத்தியே தீரவேண்டும்.

ஆற்றல்களைப் பூட்டி வைத்தல் உயிரோடு சடலமாக உலாவருதல் போன்றதாகும். துன்பங்களையே நேசிப்ப வர்கள் இருக்கின்றார்கள். சதாகாலமும் புலம்பித் திரிபவர் களுடன் உறவு வைத்தால் காலப்போக்கில் நீங்களும் இவர்கள் பேசுவது போல் ஆகிவிடலாம். அவர்களைத் திருத்தி நல்எண்ணங்களைப் புகுத்த இயலுமாயின் நல்லது அல்லது, நீங்கள் அவரை விட்டுச் செல்வது உகந்தது.

எனவே, பலவீனமான மனதை வீரமூட்டாத கோழைப் பேச்சு பேசுபவர்களிடம் தோழமை வேண்டாம். ஆனால் இயலாமையின் காரணமாகத் துன்பத்தில் உழல்பவர் களைத் தூக்கி விடுக!



RangaRakes

Tamilnavarasam.com

வஞ்சனை எண்ணங்களுடன் விரக்தியூட்ட நினைக்க முயல்பவர்களுடன் விலகி நில்லுங்கள். தங்களது துன்பங்கள் அவை எம் மூலம் விலகும் என எண்ணும் அப்பாவி ஜீவன்களுக்காக சொல், செயல், எண்ணங்களால் அவர்களுக்கு வலுவூட்டுங்கள்!

உங்களை நீங்கள் நம்பினால் விரக்தி எண்ணங்கள் வந்துவிடுமோ? மரணம் வந்துவிடுமோ? என்று பயம் கொண்டு விரக்தியடையும் சாதாரணமானவர்களும், நோயாளிகளும் இருக்கின்றார்கள். "மரணம் ஒரு வினாடி வாழ்வு பல கோடி" என உணர்ந்தால் சாவு பற்றி உணராது, தன் உழைப்பு, உறுதி, திடமான நம்பிக்கையுடன் போராடி வெற்றி காண்பது எளிதான காரியமாகிவிடுமன்றோ?

- அழுதே பொழுது கழியக் கூடாது.

- எழுவதற்கும், வாழ்வதற்குமே வாழ்வு.

மறக்க வேண்டியதை மறந்தேயாக வேண்டும். மனதில் நிறுத்தி வைக்க வேண்டியதை நிறுத்தி வைத்தேயாக வேண்டும். ஒரு முறை மனம் நொருங்கிப் பல முறை இறந்தவர்களாகக் கூடாது. கனமான இதயத்தை இலேசாக்க வேண்டும். பெரும் பிரச்சினைக்குள்ளானவன் கூடச் சிரித்துக் கொண்டேயிருக்க, கடுகளவு கஷ்டங்களைக் கண்டால் விரக்தியுற்றுக் கலங்கலாமா?





எதிர்ப்புகள், ஏமாற்றங்கள் எல்லாம் பூமியில் சகஜம். எதையும் தாங்குதல் எம் நிலை எனக் கருதி, உங்களை எதற்கும் தயார் நிலையில் வைத்துக் கொள்ளுங்கள்.

நடக்காதது நடந்து விட்டதே எனக் கலங்குதல் வேண்டாம். எல்லா விஷயங்களும் நடந்து கொண்டேயிருக்கின்றன. நல்லது பொல்லாதது என்று பேதமற்று சகலதும் நடைபெறுகின்றன. எனவே ஏற்கும் பக்குவம் உருவானால், விரக்தி எண்ணம் கருகும்.

ஒரு வழி அடைபட்டால் மறுவழி பிறக்கும் என்பர். வாழ்வதற்குப் பல வழிகள். கோழைகளுக்கே வழிகள் அடைக்கப்படுகின்றன.

தனிப்பாதை உருவாக்கிப் புதுவழி சமைப்பவன் பல யுகங்களைப் படைப்பவனாகின்றான். ஏனெனில் அவன் வைத்த வழியில் பலர் பிரியத்துடன் பயணம் செய்வதாலாகும். பல சந்ததிகளும் இவனால் பயன் பெறுகின்றன. நீங்கள் புதிய வழிகளை, புதுமைகளை படைக்க வல்லவர்களே! விரக்தியில் வேதனைப்பட உருவானவர்கள் அல்லர். தெளிவான இதயத்தில், கழிவான சிந்தனைகள் புகுந்துவிடாது. இங்கு கனிவும், காருண்யமும் நிறைந்து கொள்வதால் எதுவுமே சுலபமாகவும், சீக்கிரமாகவும் கிடைத்துவிடுகின்றது.



RangaRakes


Tamilnavarasam.com

துணிவும், தயவான எண்ணமும் கொண்டோருக்கே தீட்சண்யமான பார்வையும், நோக்கும் இருக்கும். இவர்களிடம் விரக்தி விலகி ஓடிப்போகும். உங்கள் உறுதியை நம்புங்கள். அது உங்களுடன் ஒட்டிக் கொள்ள விரும்பும் போது பற்றிக் கொள்ளுங்கள். இதனால், விரக்தி எண்ணம் வேருடன் அறுபடும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
24.07.2005







# கனவுகள் அதன் பாதிப்புகள்

நிகழ்வாகவே தோற்றம் காட்டும் கனவு எமது மனதின் ஆழத்தின் அதிர்வுகளை வெளிப்படுத்துகின்றது எனச் சொல்கின்றார்கள். கனவுகளுக்கு பலன் தேடி அல்லல் படுபவர்கள் ஏராளம். உடல் தூய்மை, இறை சிந்தனையுடன் உறக்கத்துக்குச் செல்லுங்கள். கனவுகளால் ஏங்குவதை விடுத்து, நனவு வாழ்வில் உண்மையானவனாக வாழ்வதே ஆரோக்கியமானது. நல்லதையே எண்ணுங்கள், ஒவ்வாத சிந்தனைகளால் மனம் பேதலிக்கும். கனவுகளாய் வந்து வாட்டும். இயற்கை எம்மை அசைத்துக் கொண்டிருக்கின்றது. அதுபோல் நல்ல கனவுகளை நிஜமாக்க, எம்மை நாம் வசப்படுத்தி உயர்வடைவோம்.

கனவுகள் நெஞ்சத்தில் புதைந்திருந்தே புறப்படுகின்றன என்றும் இவை அடிமனதின் ஆழத்தின் அதிர்வுகளாகவும், மென்அசைவுகளாகவும் கிளர்ந்தெழுந்து விடுமெனவும் கூறப்படுகின்றன. சில பொழுது இவை சிறு சலனமாகவும், பின்பு சீறிப்பாய்ந்து எம்மை மிரட்டு பவையாகவும் அமைந்து விடுகின்றன.



RangaRakes Tamilnavarasam.com

எது எப்படியோ கனவு காணுகின்ற நேரம், அது வாழ்வின் நிஜங்களாகவே போக்குக்காட்டி எம்மை மயக்க வைக்கின்றன. "வாழ்வே கனவு" என்றும் கூறப்படுவதுண்டு கனவுகூட வாழ்வின் நிகழ்வாகத் தோற்றம் காட்டுவது விந்தைதானே.

எனினும், இன்றைய பொழுதுகள் கூட சில வேளை எமக்கு நாளை மறந்தே போகின்றன. மறைந்த நினைவுகள் அழிந்து போன ஒன்றா? உண்மையில் அழிந்த பொழுது களே கலைந்த வாழ்வாகும். நல்ல பொழுதாக அமைந்தால் தான் வாழ்வில் நினைவுகளும் வாழ்க்கையும் நல்லன வையாக, ஜீவன் உள்ளவையாக ஏன் என்றுமே சாஸ்வதமாகப் போற்று தற்குரிய தாகவே இருக்கும்.

மனதிற்குப் பிடிக்காதவைகள் அழிந்தும் போகும். சில வேளைகளில் அவையே பற்றிக்கொண்டு எம்மை ஆட்டும். மறக்காத நினைவுகளைக் கனவு கற்றுக் கொண்டு விடுகின்றது. அவ்வப்போது எம்மைச் சீண்டி வேடிக்கை காட்டுவதுண்டு. நல்லவைகளை நினைத்தால் எமக்கு இஷ்டமாக இருக்கும். எமக்கு இஷ்டப்படாதவைகளை நினைத்தால் நிச்சயம் கஷ்டந்தான்.

என்றாலும், மனித மனம் எதை எதையோ, தேவை யில்லாதவைகளையும் தேடுகின்றது. மறக்க வேண்டியதை மறக்கவும், நினைக்க வேண்டியதை நினைக்கவும் முடிந் தால் எவ்வளவு ரம்மியமான வாழ்க்கை அமையும்...?





நடக்கக்கூடாத சம்பவங்களை நாம் மீட்கத் தவறினாலும், கனவுகள் வந்து தொந்தரவு செய்கின்றனவே?

ஆனாலும், நாம் நினைத்துப் பார்க்கவொண்ணா காட்சிகளையும் நாம் கனவில் கண்டு கொண்டிருக் கின்றோம்.

சம்பந்தமேயில்லாத காட்சிகள், வாழ்க்கையில் ஒரு தடவை கூடப் போயிருக்க முடியாத இடங்கள், பிரதேசங் கள், முன்பின் கண்டிராத மனித முகங்கள், மிருகங்கள், பட்சிகள்.. என இன்னும் எத்தனை எத்தனையோ?

எதிரிகள் எனக் கருதாத மனிதர்கள் சிலசமயம் எதிரிகள் போல எம்மைத் தாக்க வரும் பயங்கரவாதி களாகத் தெரிவதும், நல்லவர்கள் பொல்லாதவர் களாகவும், பொல்லாதவர்கள் நல்லவர்களாகவும் கனவு இராஜ்ஜி யத்தில் காணுகின்ற தரிசனங்கள் சிலவாகும்.

ஏழை ஒருவன் குபேரன் போல கனவிலாவது தன்னைக் காண்கின்ற நேரத்தில் திருப்தியடைகின்றான். கனவு கலைந்த பின்பு உண்மையில் அவன் அடைவது பரிதாபமான சலிப்பு. ஆனால், கனவில் கூட துன்பங்களைக் கண்டு சகிக்காத பெரிய மனிதர்கள் நனவு வாழ்க்கையில் சாதாரண மனிதனின் அவல நிலைக்கு இரங்காதிருப்பது விந்தையே! ஒரு சிறு வினாடி கனவில் தான் பணமின்றித் துன்பமுற்றால் போதும், என்ன அவஸ்தைப்படுகின்றான்?



RangaRakes
Tamilnavarasam.com

விழித்து எழுந்தாலும் கூட தான் கண்ட கனவு குறித்து ஏங்குகின்றான்.

ஹேற....... மனிதா..........!!

துன்பங்களைக் காட்டும் கனவு மூலமாவது நீ நல்ல பாடங்களைக் கற்க வேண்டாமா? கனவின் பலன் ஏதாவது நல்லது நடக்குமா என ஏங்குகின்றாய். ஆனால், எந்தச் சந்தர்ப்பத்திலும் உனது செய்கைகளின் சாதக பாதகங் களைச் சொப்பனம் மூலமாவது உணர்ந்திருக்கின்றாயா?

மனச்சாட்சியை இறைவனின் குரல் என்பார்கள். மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்து கொள்பவர்கள் பலர் சொப்பனத்தின் மூலம் அரண்டு,மிரண்டு திருந்தினர் எனக் கதைகள் மூலம் கேட்டிருப்பீர்கள்.

எல்லாம் நாங்கள் சொல்வது, செய்வதே சரி என விதண்டா வாதம் பேசி நடந்து கொள்பவர்களுக்கு இயற்கை எந்த ரூபத்தில் எச்சரிக்கை செய்தாலும் திருந்தப் போவதில்லை. சொப்பனங்கள்கூட சிலசமயம் இயற்கை தந்த எச்சரிக்கை உணர்வாகக் காட்டி நிற்கின்றன.

தேக ஆரோக்கியம் குன்றும் போதும் கூட, அதாவது மன அழுத்தம் போன்ற காரணிகள் உடலை வருத்தும் போது கூட அடிக்கடி மன உளைச்சலினால் கூடாத கனவுகள் தென்படலாம்.





நல்ல எண்ணங்களை மனதில் தேக்கினால் உடல் ஆரோக்கியமாகும் என்று பெரியோர்கள் புகல்வர். எம்மைச் சுற்றிய சூழல் புனிதமாகச் சுகந்தமாக இருத்தல் வேண்டும். படுக்கைக்குப்போகும் முன் எமது உடலைச் சுத்தமாகவும், உறங்கும் இடத்தினை நல்ல வாசனை கமழவும் அமைக்க வேண்டும்.

கனவு பற்றிய ஓர் ஆய்வு இது. ஒருவரது படுக்கையில் அவர் நன்கு முகர்ந்து கொள்ள நல்ல வாசன மலர்கள் வைக்கப்பட்டன. அன்று அவர் உறங்கும் போது, பூங்கா ஒன்றில் உலா வருவதுபோல் கனவு கண்டாராம்.

மனதினை இலேசாக வைத்திருக்கப் பழகவேண்டும். தினசரி தியானம், நல்ல ஓய்வு, உடற்பயிற்சி, அமைதியான சிந்தனை, கோபம் வராமல் எம்மைப் பார்த்துக் கொள்ளுதல், மன அழுத்தம் தரும் விடயங்களில் புலன்களைச் செலுத் தாமல் விடுதல், ஓய்வு நேரங்களில் சந்தோஷகரமான சுற்றுலா, இத்தகைய அனுபவபூர்வமான செய்கைகளில் நீங்கள் ஈடுபட்டேயாக வேண்டும்.

மிக முக்கியமான விடயம் ஒன்று!

எமது இதயம் சீராக, மூச்சு இதமாக உட்சென்று வெளிவர வேண்டும். மூச்சுப் பயிற்சி போன்ற விஷயங்கள் இன்று நாடெங்கும் பல நிறுவனங்களால் பயிற்றுவிக்கப் படுகின்றன. யோகாப்பியாசம், தேகப்பயிற்சி போன்றவை எமது உடலை இலேசாக வைத்திருக்க உதவுகின்றன.



RangaRakes

Tamilnavarasam.com

- கலங்கிய எண்ணங்கள்,
- காழ்ப்புணர்வுகள்,
- கட்டுப்பாடற்ற வாழ்க்கை,
- குடிப்பழக்கம்,
- கோபம்,

போன்றவை கனவிலும் எம்மை நிம்மதியாக இருக்க விடமாட்டா.

ஆழ்ந்த தூக்கமே அமைதிக்கான வழி என்பர். இதற்கான வழிகள் பல உண்டு. எவையுமே நாம், நல்லவை என்றால் அவற்றை கடைப்பிடிக்காமல் நொந்து கொள்வதில் அர்த்தம் இல்லை.

வெறும் மூடக் கொள்கைகளையும், சொப்பனங்க ளையும் மையமாக வைத்து, அர்த்தங்களைத் தேடுவதில் என்ன பயன் வந்து விடப்போகின்றது?

ஆழ்மனதில் உள்ள சில அருவருப்பான எண்ணங் கள் கனவுலகில் வெளிப்பட்டு மனிதர்களைக் குடைந்து எடுப்பதுமுண்டு.

"நானா.... இப்படி, எனக்கு ஏன் இந்தக் காட்சிகள் தோன்ற வேண்டும்?" எனப் பலர் பொருமுவதுமுண்டு. நனவில் தோன்றி மறையும் சில காட்சிகள் எம்மையறி யாமலே எம் மனதில் பதிந்தும் விடலாம்.





ஏனெனில் தொடர்ந்தும் சில தேவையற்ற காட்சிகள் கனவு மூலம் காணப்பட்டால் உஷாரடைந்த சிலர் மனோத த்துவ வைத்தியர்கள் மூலம் சிகிச்சை பெற்று நல்ல பயன் களைப் பெற்றிருக்கிறார்கள்.

ஒரு பொழுதிலும் குடிப்பழக்கம் இல்லாதவர்கள் தாம் மது அருந்துவதாகவும் அல்லது கண்ணில் படாத ஒரு பெண்ணுடன் தொடர்பு கொள்வதாகவும் கூறுவதுண்டு. மனதின் சலனங்களால் வளைக்கப்பட்டவர்கள் சிலசமயம் அவர்களை அறியாமலே அவஸ்தைக்குள்ளாக நேரிடலாம்.

"நான் எவ்வளவோ தடவை மறக்க எண்ணுகின்றேன், முடியவில்லை. அவள் தினம் தினம் கனவில் வந்து தொல்லை தருகின்றாள்" என்றும் கூறுபவர்கள் இருக்கின் றார்கள்.

இன்னும் சிலர், தமக்குப் பிடித்தமான நடிகர், நடிகை களையோ அல்லது வேறு எவரையோ நினைத்து கனவி லாவது தெரியமாட்டார்களா எனப் புலம்புவார்கள். வயது வந்த இளைஞர், யுவதிகள் மட்டுமல்லாது வயது சென்ற முதியவர்கள் கூட இந்த பலவீனங்களின் பிடியில் வலிய அமிழ்வதுமுண்டு.

ஒன்றைத் தெரிந்து கொண்டேயாக வேண்டும். மனதை அழிக்கும் ஒவ்வாத எண்ணங்கள், வக்கிர சிந்தனை கள் கத்தரிக்கப்பட்டேயாக வேண்டும்.



RangaRakes Tamilnavarasam.com

வாலிப வயதில் மனது அலைபாயும். வாஸ்தவம் தான். ஆனால் அறிவு, அதன் ஓட்டத்தை நாமாக வலிய அடைந்திடல் கூடாது. புலன்வழி சென்றால் நிகழ்வது என்ன? பிறர் இகழ்ச்சிதான் மிஞ்சும். அதுமட்டுமல்ல, எதிர்காலம் இருள் காலமாகிவிடுமே?

சொப்பனத்தின் தாக்கம் எம்மை விழிப்படையச் செய்வதாக இருந்தால் பரவாயில்லை. அதுவே எமக்கு விகாரமானாதாக இருப்பின் எவ்வித குழப்பமுமின்றி அந்தக் கனவை ஒதுக்கி விடுங்கள். யாராவது உங்களிடம் வந்து அதற்கு இதுதான் பலன், இதுதான் நடக்கப் போகின்றது என்று சொல்லிப் பயமுறுத்த இடமளிக்க வேண்டாம்.

ஏனெனில், பயம் கொண்டாலே நடக்காதவை எல்லாம் நடந்தவையாகப் பிரமை வயப்பட்டு, சித்தத்தை சிதற விட்டவர்களாவோம்.

கனவுகள் சுதந்திரமானவை!

இவை மனிதனின் அந்தரங்கங்களுக்குள் கூச்சமின்றி நுழைந்து, புலப்படாத செய்திகளை ஒளிப்படம் போல் காட்டிவிடுகின்றன. திரைப்படங்கள், மாயத்தோற்றம் போல் விம்பங்களைக் காட்டி எம்மை நம்பவைக்கின்றன. சொப்பனங்களும் அப்படியே!

எமது வாழ்க்கையையே உண்மை போலவும் கற்பனை போலவும் காட்சிகளாக்கி புலன்களையே புலம்





பெயர வைக்கின்றன. திரைப்படங்கள் பல அலுப்பூட்டும், அதிர்ச்சி தரும், வெறுப்பேற்றும், வேதனை தரும். அதே சமயம் இதுவே குளிர்ச்சியூட்டும், கிளுகிளுப்பூட்டும், கற்பனையை வரவழைக்கும், காதலை உண்டு பண்ணும், புரியாத பாஷைகளைப் பேசவைக்கும், மனதில் பூப் பூக்க வைக்கும், புது மனிதமாக்கும். சொப்பனங்களும் அப்படியே! நல்லதும் செய்யும், நல்லன அல்லாதனவும் செய்யலாம். கண்ட கனவுகளை மனதிற்கு உகந்தவாறு வியாக்கியானம் செய்வதும் மனித இயல்பே! இவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை நோக்குவோம்.

திரைப்படம் இருளில் காட்டப்படுகின்றது. விழித்திருந்த படியே பார்க்கின்றோம். உறங்கியபடியே சொப்பனங்களை இலவசமாகப் பார்க்கின்றோம். இரண்டு நிகழ்வுகளும் இருளில் உலாவருகின்றன.

அப்புறம், பகல்கனவு என்பது என்ன? இரவில் தானா பார்க்கின்றார்கள் என கேட்கலாம். கண்கள் மூடினால் பகல்பொழுதும், இரவுப்பொழுதும் ஒன்றுதான்.

பகல் பொழுதில்கூட, இருளினுள் ஊாட விரும்பும் ஆத்மாக்கள் தான் அதிகம்.

கனவுக்கு எதிர்ப்பதம் நனவு எனப்படுகின்றது. ஆனால், நனவு நிகழ்வுடன் கனவு தொடர்புபட்டதால் முற்று முழுதாக இவையிரண்டும் முரண்பட்டவையாகக்



RangaRakes
Tamilnavarasam.com

கருதமுடியுமா? அத்துடன் கனவுகள் மூலம் கதைகள் புனையப்படுவதும் கண்டுபிடிப்புகள் துலங்கப்படுவதும் ஏற்கனவே சொல்லப்பட்ட செய்திகள்.

இந்தக் காரணங்களினால் சொப்பனங்கள் நித்தியம் என்றும் வாதிடமுடியுமா? மனித மனம் மாயமானது. இது பல வேடங்களைத் தரித்து நிற்கும். அது தன் வெளிப் பாடுகளை பலவிதமான வழிகளில் புலப்படுத்துகின்றது. இதன் வழி சரியானதாகவும் இருக்கும். தவறானதாகவும் இருக்கும்.

ஆனால், மனச்சாட்சி என்பது உள் இருந்தவாறே ஒலிக்கும். எமக்கு மட்டுமே கேட்கின்ற உண்மை பேசும்.இது எமது தூய நண்பன். இதனை நாம் உதாசீனம் செய்த லாகாது.

மனத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாகக் காணப்படும் சொப்பனங்கள் எமக்கு ஏதாவது நல்ல செய்திகளை வெளியிட்டால் சிந்திப்போம். உணர்வோம். தெளிவடை வோம்.

இதுதவிர, கனவினால் மனம் ஒடிவதும் சதா இது பற்றிக் குழம்புவதை வழக்கமாகக் கொள்வது அறிவீனம். தெளிவுடன் இருப்பவர்களை சொப்பனங்கள் சோர்வடையச் செய்வதேயில்லை.





எனவே, எதிர்காலத்தை வளமாக்கவும், நினைத்தவை களைச் செயலாக்கவும் கற்பனையேயானாலும் நன்மை பயக்கக் கூடிய, பிறருக்கு இம்சை விளைவிக்காத, உலகிற்கு ஒளியேற்றக் கூடிய விடயங்களில் புலன்களைப் புகுத்துங்கள்!

இதன் விளைவாக நல்ல கற்பனைகள் கனவாகத் தெரிந்தாலும் சுலபமாக வாழ்வதோடு இயைபுபட்டு இவை நிச்சயிக்கப்பட்ட முன்னேற்றங்களாக வலுவூட்டப்படும்.

நல்ல முன்னேற்றங்களுக்காகக் கனவு காணுவதில் ஏது தப்பு? எதிர்பாராமல் எல்லாமே கிடைத்துவிடும் என எண்ணாது, எதிர்கால நிகழ்விற்காக இன்றே அது பற்றிய எண்ணங்களை உற்பத்தி செய்வீர்களாக. நல்ல கனவுகளை நிஜங்களாக்க முனையாதவர்கள் வெற்றி பெற்றவர்களைக் கண்ட பின்னராவது நினைத்ததை முடிக்கலாம் என எண்ணினால் என்ன கேடு வந்துவிடப் போகின்றது?

பிறர் வளர்ச்சியைக் காண்பது அவர்கள் பற்றிப் படிப்பதற்கேயின்றி எமக்கு எதுவும் கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவதற்கில்லை.இயற்கை ஏதோ ஒருசில காரணங்களுக்காவே எம்மை அசைத்துக் கொண்டிருக் கின்றது.

கனவுகள், நினைவுகள், தோற்றங்கள், மாற்றங்கள் எல்லாமே மனித வாழ்வில் இழையோடிய வண்ணம் வந்து போய்க் கொண்டேயிருக்கும். தெரிந்து, தெளிவது எம் கடன்,

தினக்குரல்<br>
ஞாயிறு மஞ்சரி<br>
02.10.2005



RangaRakes

Tamilnavarasam.com



# கண்ணீர்

கண்ணீர், துன்பங்களின் பாரங்களை இறக்கி வைக்கும் தூய அருவி. மலை போன்ற மனசையும் கரைக்கும் கண்ணீர், பல கதைகள் பேசும். நல்லோர் உதிக்கும் கண்ணீர் உலகை அசைக்கும். போலி அழுகை புரட்டர்களின் வேலை. பொய்யான கண்ணீர் வெட்ட வெளிக்கு, வெள்ளையடிக்கும் செயல்.மனித நேயம் கொண்டவரின் இரக்கம் மேவிய விழிநீர் சத்தியத்தின் வெளிப்பாடு. அழ வேண்டியவைக்கு அழவேண்டும். துன்பங்களை நெஞ்சினுள் புதைப்பது தகாது. கலங்கித் தொடர்ந்தும் அழாமல், எழுந்து இயங்குக! உப்புக் கண்ணீர் கரைசல் மாபெரும் உஷ்ணத் திராவகம்.

உணர்வின் கசிவினால் உருவாகும் கண்ணீர்க் கரைசல் வெறும் உப்புத் திராவகம் அல்ல, இது, மலையையும் கரைக்கும்.





மலர் போன்ற மென்மையானவர்களை இரும்பாக்கி வலுவூட்டும். நெஞ்சங்களை இசைவாக்கி வசமாக்கும். எவரையும் மசியவைத்து வசியப்படுத்தும் வஸ்து இது.

துன்பங்களின் பாரங்களை இறக்கி வைக்கும் தூய அருவி. இசைக் கருவிகளால் நெகிழாதவன், உதிர்க்கும் கண்ணீரில் துவண்டே போவான். இதன் சக்தி அசாதாரண மானதே.

கண்ணீரின் வலிமையைப் பற்றி கூறாத சரித்திரங்கள் உண்டோ? உகுக்கப்படும் கண்ணீரின் உண்மைத் தன்மையில் தான் அதன் வலிமை தங்கியிருக்கின்றது. போலியாக அழுகிறவர்களும் காரியம் சாதிக்கின்றார்கள் தான்.

ஆயினும், நியாயபூர்வமான ஒரு ஏழையின் அழுகை, கற்பரசிகளின் கண்ணீர், விதவைகளின் ஏக்கம் தோய்ந்த உஷ்ண கண்ணீர், செந்நீரைவிட உக்கிர மானவையே.

விழிநீரை உகுத்தபடியே செய்கருமங்களை மறந்து விட்டால் பயன்கள் கிடைக்காது போய்விடுவதுண்டு. ஆற்றாமை யினாலும், ஆத்திரத்தினாலும் வஞ்சம் கொட்டி அழுவதனால் உடல் சோர்வும், மன உழைச்சலும்தான் மிஞ்சும்.

பிரிவுத்துயர் என்கின்ற விஷயத்தில் எல்லோருமே தம்நிலை மறந்துதான் போகின்றனர். மரணம் மட்டும் பிரிவு



RangaRakes
Tamilnavarasam.com

அல்ல. காதலர் பிரிவு, நண்பர்கள் பிரிவு, உறவினர் பிரிந்து போதல் போன்ற விலகிச் செல்கின்ற நிகழ்வுகள் கூட மனதில் பாரங்களைப் பதிக்கின்ற சங்கதிகள்தான்.

பேரன்பு கொண்ட காதலர்கள் சந்தர்ப்பவசத்தால் பிரிந்து செல்லுதல் மரணத்தை விடச் சோகமானது என்று சொல்வார்கள். இவை பற்றியே கவிஞர்கள் பல காவியங்க ளையே சிருஷ்டித்து விட்டார்கள்.

சீதாப்பிராட்டியின் கண்ணீர், கண்ணகியின் வழிந் தோடிய விழிநீர், மண்டோதரியின் சோகம் போன்றவற்றைக் காட்டும் காவியங்களை மட்டும் நாம் படித்திருக்கலாம். ஆனால் உலகம் முழுவதிலும் உள்ள சகல நாடுகளில், இனங்களில், மதங்களில் இன்னமும் பேசப்பட்டுள்ள கதைகளும், காவியங்களும் எண்ணிலடங்காதவை அல்லவா?

நீதியின் முன் அழும்போது அது இறைவனாற் கேட்கப்பட்டு நியாயம் கிடைத்தே தீரும். போலி அழுகை புரட்டர்களின் வேலை. காருண்யம் மிக்கவர்களை நம்பவைத்துக் காரியம் பார்ப்பவர்களின் கைங்கரியம். கோழைத்தனமான கோணங்கித்தனம் தான்.

பொய்யாகக் கண்ணீர் சிந்தினால் மெய்யாகவே வேதனையில் வீழ்வர். அப்போது இத்தகையவர்களுக்கு கண்ணீர்தான் நிரந்தரமான உறவும் ஆகிவிடும். உணர்வார்களா?





பொய்யான கண்ணீர் வெட்ட வெளிக்கு வெள்ளை யடிக்க முயற்சிக்கும் கருமம் போன்றது. இத்தகைவர்கள் காலத்தை விரயமாக்கிக் காணாமல் போய் விடுவார்கள். புரிந்து கொள்வார்களா?

அழுவது கோழைத்தனம் என்றும் கூறுபவர்கள் இருக்கின்றார்கள். எடுத்ததெற்கெல்லாம் அழக்கூடாது. தொட்டதற்கெல்லாம் துன்பப் படக்கூடாது. எட்டாத பிரச்சினைகளை வீணாகத் தொட முயற்சிக்கக்கூடாது. எம்மிடையே திணிக்கப்படும் பிரச்சினைகளை முகம் கொடுத்து தீர்த்து வைக்க திடசங்கற்பம் பூணுவோம்.

அழாதவன் மனிதனேயில்லை என்பவரும் உண்டு. இரக்க சுபாவம் மனிதனின் அக உணர்வுடன் ஒன்றியது. இரக்கப்பட வேண்டியவைகளுக்கு இரங்குதல் பலவீனம் என்றும் இல்லை. துன்பப்படுபவர்களைக் கண்டும், பிறர் சோகங்களைக் கண்டும், நாம் கண்ணீர் சிந்துதல் எமது மானுடத்தனத்தை, மனிதாபிமானத்தை துல்லியமாகத் தெரியப்படுத்துதல் என்பதே, இது இயல்பான விஷயம் தான். இங்கு நடிப்பு, நாடகம் என்று ஒன்றுமேயில்லை.

உண்மையான மனித நேயம் மிக்கவனது இரக்கம் கண்ணீராக உருவானால், அதன் வெளிப்பாடு மிகவும் சத்தியத்தின் புறப்பாடாக இறைவனின் வாசலை அது தட்டித் திறக்கும்.



RangaRakes
Tamilnavarasam.com

எனினும் சிலருக்கு அழுகை வரவே வராது. ஆயினும் அவர்கள் இதயத்துள் அழுது தீர்ப்பவர்களாக இருக்கின்றார்கள். இவன் என்ன கல் நெஞ்சக்காரனாக இருக்கின்றானே எனச் சிலர், விமர்சனம் செய்வதுண்டு. இத்தகைய அழமுடியாதவர்களில் அனேகருக்கு நோய்கள் உருவாகி அல்லல்ப்படுவதாக மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

அழவேண்டியவற்றிற்கு அழுதே தீர வேண்டும். கண்ணீர் மனப்பாரங்களைத் தீர்க்கும். இது மருத்துவர்களின் கருத்தேயாகும். தவிர அழுவதன் மூலம் உடல் ரீதியான சில மாற்றங்கள் ஏற்படுவதாகவும், அதனால் உளவியல் ரீதியில் துன்பங்களில் இருந்து விடுபட்ட உணர்வு பெறப்படுமென சொல்லப்படுவதுடன் உடலில் ஏற்படுகின்ற பௌதீக மாற்றங்கள் கூட மனித உடற்கூற்றிற்கு உகந்ததாகவே காணப்படுகின்றன என மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால், மிதமிஞ்சிய சோகம் நீடிப்பதாலும், கண்ணீர் வற்றும் அளவிற்கு மனதை வருத்திக் கொண்டால் இந்த உடல் தாங்குமா?

அழ வேண்டிய நிலையில் உள்ளவர்கள் அழாமல் விடுவதனால் ஏற்படும் பாதகமான விளைவுகள் மன நோயாக, இருதய நோயாக ஆவதுடன் உயிர் போகின்ற விஷயமாகி விடுகின்றதே.

ஆயினும், அழுபவன் கோழை என்று சர்வ சாதரணமாகச் சிலர் சொல்லிவிடுகின்றனர். இந்த விமர்சனம் அழ வேண்டிய நிலையில் உள்ள பரிதாபத்திற்குரியவருக்குப்





பொருந்தாது. தலையிடியும், காய்ச்சலும் தனக்கு தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள்.

சோகம், சுகம் எதுவுமே உணர்வு பூர்வமான அனுபவங்கள். நுகர்வதை, உணர்வதை வார்த்தைகைகளால் பேச முடியாது. சில நேரங்களில் நாம் எம்மை வைத்துப், பிறர் நிலையை நோக்க வேண்டும். சில சமயம் பிறர் நிலையைப் பார்த்து எமது நிலையை உணர வேண்டும்.

மன வலிமை, பக்குவ நிலை என்பன எல்லாம் எமது முயற்சியாலும் உருவாக்கிக்கொள்ள வேண்டும். இயற்கையாகவே மன வலிமை பெற்றவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆத்மீக வழியில் நாட்டம் உள்ளவர்கள் எளிதான சில பயிற்சிகள் மூலம் சிந்தனையை ஒரு மனதாக்கி மனதினை அலைய விடாது திடமாக இருக்கிறார்கள். ஆத்மீகத்தில் நம்பிக்கையற்றவர்கள் திடசிந்தனையற்றவர்களாக இருக்க மாட்டார்கள் என்றில்லை.

மனதை இலேசாக்க, ஆனால் எதனையும் எதிர் கொள்ளும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். முற்போக்கான நாத்தீகவாதம் பேசுபவர்கள், சிந்திப்பவர்கள் பலர் சமூக நல்லுணர்வுடன் மக்களுடன் பழகி, பேசி வருவதானால் இவர்கள் தங்கள் ஆற்றல்களைத் தாம் வழங்கும் சேவை மூலம் வலுவூட்டிக் கொள்கிறார்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

புறப்பார்வைக்கு வீரம் பொதிந்த வீரனாகக் காட்டி நின்று நெஞ்சினைச் சோரவைத்தால் நிச்சயம் கண்டதற்கும் கலங்கிக் கொண்டேயிருக்க வேண்டியது தான்.

சுதந்திரமான மன உணர்வுடன் இருப்பவர்களைத் துன்பம் எளிதில் சீண்டுவதில்லை. எல்லாமே யதார்த்தம், உண்மையானவை. இன்பமும் உண்மை அதன் பின்னே வரும் துன்பமும் உண்மை. எல்லாவற்றுக்கும் மேலாக எதுவுமே நிரந்தரம் என்பதும் இல்லை என்று நோக்கும் மனிதர்கள் சுதந்திரமாக, சந்தோஷமாகச் சீவிக்கிறார்கள். உங்கள் முன்னே அப்படி இருக்கும் பாக்கியவான்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றீர்கள்.

ஜனனம், மரணம் சாஸ்வதம் தானே! இதில் என்ன சலனம்? சஞ்சலம்? இது வரட்டு வேதாந்தம் இல்லை. முற்று முழுதுமான உண்மைதானே!

எனவே,

அழுவது, கலங்குவது இயற்கையே எனினும் இந்நிலையினுள் புதைந்து, அள்ளுண்டு போகலாமோ? எப்படியும் சீவிக்க வேண்டும். முழுமையான வாழ்வு காண வேண்டும்.

துன்பம் கண்டு எல்லோருமே அழுது கண்ணீர் சிந்தினால் உலக இயக்கம் எப்படி நடக்கும்? வீட்டின் தலைவன் வருந்தி அழுது வேலை செய்யாது இருக்க





முடியுமா? வாழ்க்கைக் கடலில் மிதப்பது அறிவு.அதனுள் மூழ்கி மூச்சடைத்து உழல்வது சரிவு. சந்தோஷமாக நீந்திக் கரை சேர்வதே சிறப்பான நிகழ்வு ஆகும்.

மற்றவருக்காக கரிசனை கொண்டு கருணை சுரந்தால் உலகில் கண்ணீர் சிந்துவோர் தொகை அருகி விடும். ஞானிகளும், மகான்களும் ஒருபோதும் தமக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே என ஏங்கி அழுததில்லை. உலகை எண்ணி உள்ளுக்குள் வெந்திருக்கின்றார்கள். இந்த மெய்மையின் வெளிப்பாட்டினால் தான் மனோ சக்தியினால் தான் தமது அருளை உயிர்களுக்கு வாரி வழங்கினார்கள். புத்தர், இயேசு, நபி பெருமான் ஆகியோர் பிறர் சோகம் துடைக்க அருவியென அருளுரை பகர்ந்தனர். மனிதன் சந்தோஷமாக இருக்கவே பிறந்தவன் என்பதில் சந்தேகமே வேண்டாம்.

கீழ்க்கண்டவற்றினை வலியுறுத்தி நெஞ்சினில் நிறுத்துவோமாக! சோகத்திற்காக சோகப்பட்டு இருக்கும் சுகங்களை இழக்க வேண்டாம். ஒரு சிறு துன்பத்திற்காக பெரிதாக வருகின்ற இன்பத்தினைத் தொலைக்கத் துணிய வேண்டாம். இதனை ஒரு எச்சரிக்கையாகக் கொண்டாலும் நல்லது.

இருளுக்குப் பயந்து கரும் சேற்றுக்குள் புகுந்து விடாதே மனிதா! என்றே கூறக் தோன்றுகின்றது. இவை ஒரு புறம் இருக்க, நினைத்தபடியே பணம், பதவி, புகழ்



RangaRakes
Tamilnavarasam.com

கிடைக்கவில்லையே என ஏங்குகின்றவர்கள் அதுபற்றியே பிரலாபிக்கின்றவர்கள் நிலை சற்று வித்தியாசமானது.

உழைக்காமல் வருந்துவது தகாது. ஒன்றுமே செய்யாது கிடைக்காதது பற்றிப் பேசவே முடியாது. உழைத்து உயர்ந்தவன் நிலை அறியாது சும்மா குமுறுவது கவலைகளைக் கேட்டு வாங்குவது போலத்தான் என தெரிந்து கொள்க.

என்றாலும் கூட, செய்த உழைப்பிற்கேற்ப பலன் கிட்டாதுவிட்டால் துன்பம் கிட்டே வந்து ஒட்டிக் கொள்வது இயல்புதான். இவை எல்லாமே சோதனை, தற்காலிகமானவை எனக் கருதித் தொடர்ந்து இயங்குதலே சிறப்பாகும். ஏனெனில் வேதனையான அனுபவங்கள் கூட புதிதான வெற்றிகளுக்கு வழிசமைக்கின்றன.

அடிபட்டு விழுந்தாலும் எழுந்து ஓடுவதையே வழக்கமாக்கிக் கொள்ளவேண்டியுள்ளது. கொஞ்சம் அழுங்கள், விழிநீரைத் துடைத்துக் கொள்ளுங்கள். பின்பு இயங்குங்கள், தொடர்ந்தும் இயங்கியபடியே இயங்குங்கள். கண்ணீர் வருகின்றதா பார்ப்போம்...?

கருணையின் நிமித்தம் ஒருவர் செய்கின்ற உதவிகளை எத்தனை நாட்களுக்கு எதிர்பார்க்க இயலும்? சொல்லுங்கள்! வாய்க்குள் உணவு ஊட்டப்படுவது





எத்தனை நாட்களுக்கு? விழுந்த பிள்ளை எழுந்து ஓடாமலா இருக்கின்றது?

நாமே நமக்கு இம்சைகள் செய்யலாமா? கண்ணில் கண்ணீர் தொடர்ந்து வராமல் அதுவற்றிய பின்பு நிகழ்வது என்ன? இதயம் சுருண்டுவிட மனிதன் முடமாகி விடுகிறானே?

கண்ணீருக்கு விடை கொடுப்போம்! துன்பம் அதனுடன் தொலைந்தே போகும்! ஆரோக்கிய மனதுடன் வாழ்வது எப்படி என்று எத்தனையோ எத்தனையோ ஆய்வுகள் நடத்தப்பட்டு விட்டன.

என்ன துன்பம் நிகழ்ந்தாலும் சற்றே உங்களை சுதாகரித்துக் கொள்ள முயன்று பாருங்கள். இறைவனிடம் மட்டும் உங்கள் பாவங்களை ஒப்படைத்து விடு என்று ஆன்மீகவாதிகள் சொல்வார்கள். அவ்வண்ணமே மனதை மௌனமாக்கி அதனை இறைவனிடம் ஒப்படைத்து விட்டால் நீங்கள் சுமைகளற்ற உள்ளம் கொண்டவர்களாவீர்கள். அமைதியை வேண்டி கொஞ்சம் முயன்று பாருங்கள். நல்லதே!

உடல் தூய்மை, சுற்றுப்புறத் தூய்மைகளே ஒருவனைப் பெரிதும் பாதிக்கின்ற அம்சங்களாகும். நல்ல தூய்மையான உடைகளை அணியுங்கள், நல்ல காற்றோட்டமான இடங்களை நாடுங்கள் நல்ல நண்பர்களைத்



RangaRakes
Tamilnavarasam.com

தேடுங்கள் மனப் பாரங்கள் நீங்கும். சந்தோஷமான பேச்சுக் களைக் கேட்க வேண்டும். நல்லவர்கள், வல்லவர்களுடன் பழக வேண்டும். இவர்களுடன் அனுபவங்களைக் பகிர்ந்து கொள்ள வேண்டும். சிறந்த நூல்கள், நல்ல சங்கீதம், எளிமையான கவிதைகள் தெம்பூட்டும். இவற்றை மனதில் பதித்தேயாக வேண்டும். சதா அழுகையை உண்டு பண்ணும் கதைகளை, திரைப்படங்களைப் பார்ப்பதைத் தவிர்ப்பது சிரமமான காரியமல்ல.

அண்மைய உளவள மருத்துவ ஆய்வு ஒன்றின் தகவல்கள் அதிர்ச்சியாக இருந்தன. துன்பியல் திரைப் படங்கள், தொலைக்காட்சி நாடகங்களை இரவில் பார்த்து இரவில் உறக்கம் கொள்பவர்கள விடிந்ததும் சோகமயப் பட்டே எழுந்து கொள்கிறார்களாம். இந்நிலையில் வீட்டு வேலைகள் ஒழுங்காக நடக்குமா? சதா நோய் நொடிகள், முக்கியமாக இதய நோயானது ஊடுருவிவிட இந்தப் போலியான சோக திரைப்படங்களும், நாடகங்களுமே காரணம் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

மேலும்,

- நல்ல சந்தோஷமான பொழுது போக்குகள்
- வெளியிடங்களுக்கான சுற்றுலா
- விரும்பாத நபர்களுடன் பழகுவதைத் தவித்தல்
- குழந்தைகளுடன் பழகுதல்
- அன்பான கரிசனை உள்ளவர்களிடம் மட்டும் மனம் விட்டுப் பழகுதல்






போன்ற அம்சங்கள் எங்களை சதா சுந்தர புருஷர் களாக்கி சந்தோஷமாக வைத்திருக்கும் காரணிகளாகும். கண்ணீரை, துன்பங்களை விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை.

கலங்காத மனம் இருந்தால் விலங்கான துன்பம் விடைபெற்று ஓடும். கண்ணீரைக் காணாத பெரும் பேற்றை நாம் எய்தல் வேண்டும். வெறு மையை, வேதனையை விலை கொடுத்து வாங்குவது அழகல்ல. தினசரி பொழுதுகள் புலர்வது, சிரித்து, மகிழ்ந்து அனைத்து ஜீவன்களுடன் உறவாடுவதற்கேயாம். நிச்சய மாக அழுவதற்கு அல்லவேயல்ல!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
25.12.2005



RangaRakes
Tamilnavarasam.com



# விழிப்புடன், களிப்போடு உழை!

செய்கின்ற வேலைகளைச் சந்தோஷமாகவே செய்யவேண்டும். உடன் செய்யும் கருமங்கள் எம்மை ஊக்கப்படுத்துவதுடன், எதிர்பார்த்ததற்கும் மேலான பல மடங்கான பயன்களையும் தரும். செய்யாத பணிக்கான காலங்கள் செத்துப்போன காலங்கள். விழித்து எழாத காலத்தில் படுத்துக்கொண்டால் பழுதான பண்டமாகி போவார்கள். புதிய சிந்தனையுடன் புதியன படைத்தல் எம்கடன். சின்ன ஏணியால் சந்திரனை பிடிக்க முடியாது. சின்ன மூளையால் வான் வெளியைத் துழாவி அண்டங்களைப் பிடிக்கமுடியும். விழித்து இயங்கினால் சோர்வும் துன்பமும் இல்லவேயில்லை.

கொடுத்து வைத்தது இதுதான் என்று அடுத்த கருமத்தைத் துளியும் கருதாது படுத்துக் கிடப்பது நல்ல நடத்தையா? சும்மா இருப்பது இம்மானிலத்தில் தன்மானக் குறைச்சலான அவமானம் என எண்ணல் வேண்டும் அல்லவா? அடுத்த கால நடவடிக்கைக்கான செயல்களை, என்றோ ஆரம்பிக்க வேண்டிய பணிகளை, இன்றுகூடச்





செய்யாமல் இருப்பது துடிப்பான உலகை முடக்க வைக்க முயல்வது போலத்தான் எனக்கருதுக!

ஒவ்வொருவர் பணிகளுமே உலகிற்கு வேண்டிய முதன்மைப் பணிகள்தான். உலக ஆற்றலை வளப்படுத்த, ஒவ்வொரு சீவன்களுமே இயங்கியேயாக வேண்டும்.

நல்ல இயக்கத்தில் எம்மை உட்படுத்த விளையும் போது, மனதில் தயக்கம், சுணக்கம் கிஞ்சித்தும் கூடாது. செய்யாத பணிக்கான காலங்கள் செத்து மடிந்த காலங்கள்! உயிர் போனால் மட்டுமா மரணம்? வலு இருந்தும் இயங்காது போனால் அதுவும் மரணமே. திசை தெரியாது சுற்றுவதை விடுத்து ஒரே திசையில் ஓங்கி நட. ஒரு வழி புரியும்.

பிறர் மீது சாட்டுதலும், காரணங்கூறித் தப்புதலும் பணிகளை ஒதுக்கி அதனை படுக்க வைப்பது போலாகும். குனிந்து, நிமிரக் கஷ்டப்பட்டால் படுத்துக் கிடத்தி வைக்க ஆட்களைத் தேடவேண்டி வரும். “காலங்கள்” விழிப்பாக எம்மை உற்று நோக்குகின்றன. உனது காலத்தில் உனக்காகவும், இந்த உலகிற்காகவும், ஏதாவது செய்து கொண்டே இரு என்று அது சொல்வதை உணருங்கள்.

விழிக்க வேண்டிய காலத்தில் படுக்க நினைத்தால் முடிவில் பழுதான பண்டமாகிப் போவோம். வெளுப்பான, தூய ஆடைக்குள் புகுந்து கொள்ளுமுன் உன் உடலைத்



RangaRakes Tamilnavarasam.com

தூய்மையாக்கு. உலகினில் நீ உலா வர ஆசைப்பட்டால் உழைத்த பின், அதற்குள் நுழை.

- புதிய சிந்தனை
- புதியன படைத்தல்

ஆற்றலை வெளிப்படுத்தும் முயற்சி செய்யாதவன், பணிகளின் பரிணாமம் பற்றிப் பேசவே பயப்படுகின்றான். செய்கின்றவனுக்கு ஏது அச்சம்? தொடர்ந்து செய்ப வனுக்குப் பணிகள் சிறிதாகப்படுகின்றன.

எனினும், செய்கின்ற அலுவல்களைச் சீரமைக்காது செய்வது எதிர்பார்த்த நன்மைகளை அளிப்பதில்லை. வெறுமனே கஷ்டப்படுகின்றேன், பயன் இல்லை என்று கூறுபவர்கள் பலர் இருக்கின்றார்கள்.

சுறுசுறுப்பு என்பது தொடர்ந்து இயங்குவது மட்டு மல்ல. அது பயன்தரக் கூடியதாகவும் அமைய வேண்டும் என்பதாகும்.

வேண்டாத கருமங்களைத் தொடர்ந்து செய்தால் அதனால் ஏற்படும் சோர்வினால் வெறுப்புத்தான் மிஞ்சும். நல்ல திறமையானவர்கள் கூட திட்டமிடாத, ஒழுங்கமைப் பற்ற கருமங்களால் சோர்ந்து வீணாகிப் போகவும் நேரிடுகின்றது.

- நல்ல ஆலோசனைகள்
- பயிற்சிகள்





- அனுபவ ஞானம்
- காலம், சூழ்நிலைக்கேற்ற உதவிகள்

இவை மூலம் நாம் செய்கின்ற சின்ன முயற்சிகள் கூடப் பெரும் பயனைத் தரவல்லன. பெரும் கல்லை உருட்ட சிறு நெம்புகோல் உதவி செய்வதில்லையா? எதனையும் அறிவுடன் இணைந்த அனுபவ ஞானம் மூலம் பெற எம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

“வித்தை” என்பார்களே என்ன அது? ஒரு கருமத்தை எளிதாகச் சரியாகப் பயில்வதற்கான வழி வித்தையாகின்றது. இதனை அனுபவங்கள் மூலமும், குரு மூலமும், நூல்கள் வாயிலாகவும் பெறுங்கள் என்று சான்றோர் கூறுவர். “குரு இல்லா வித்தை பாழ்” என்று கூறுவதை நாம் அறிவோம்.

முறைப்படி கற்காமல், குருவின் வழி காட்டல் இன்றி ஒருவர் சிரசாசனம் என்று கூறி தலைகீழாக நிற்கப் போய், கழுத்தில் ஏற்பட்ட மிகக் கடுமையான விபத்து பற்றி அறிந்த போது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. எல்லாமே தெரியும் என எண்ணுவது விபரீதமாகவும் போய் விடுகின்றது.

குறைந்த நேரத்தில் கூடுதல் பணி. அதுவும் நிறைந்த பணியாக அமைய வேண்டும். அல்லல் படாமலும் உழைக்க முடியும். வேலைகளைப் பழுவில்லாமல் செய்யும் முறையே ஒரு வித்தையாகின்றது. முரண்டு பிடித்துத் துன்பப்பட்டு அரண்டு பயந்து வேலை செய்யக்கூடாது. அது சந்தோஷமாக இருக்குமா?



RangaRakes
Tamilnavarasam.com

சந்தோஷமாக வேலை செய்யவேண்டும். இதுவும் ஒரு கலைதான். மகிழ்ச்சியுடன்தான் சிற்பி சிற்பம் செதுக்க வேண்டும். அழுது வடிந்து செய்தால் கருமம் சிறக்குமா? அது சிறுக்கும்.

மனத்தின் உறுத்தலுடன் உழைத்தால் வாழ்க்கையே வெறுக்கும். மனதினை ஒரு நிலைப்படுத்திச் சிரத்தையுடன் பணிபுரிந்தால் துன்பங்கள் தொலைந்தே போகின்றன. நான் எனக்காக மட்டுமல்ல இந்த உலகிற்காகவும் உழைக்கின் றேன் என்று உங்களுக்குள் சொல்லிக் கொள்ளுங்கள்.

அந்த நினைப்பே உங்களை உரமாக்கி வலு ஊட்டும். உங்களைப் பரந்த மன இயல்புள்ள சிந்தனையாளனாக்கும். மன உளைச்சலும் சோர்வும் எமது ஆயுள் மீதே அருவருப் பையூட்டும். “வாழ்ந்து என்ன கண்டு கொண்டேன்?” என்று சிந்திக்காத மன நிலையில் வாழ வேண்டும். வெறுப்பு உணர்வுகள் எங்களைக் கருமமாற்றவே விடமாட்டா. இந்த நோயில் இருந்து விடுபட்டேயாக வேண்டும்.

வானத்தின் மேலே என்ன இருக்கின்றது என ஆராய முற்படும் நாம் வெறும் கூரை மீது ஏறினால் போதும் எனச் சிந்திக்கலாமோ? சின்ன ஏணியில் சந்திரனைப் பிடிக்க முடியாது. சின்ன மூளையினால் அது முடியும். அதனை முதலில் நாடுங்கள். அது போதும்.

வானத்தின் மீது பறக்க புதிய சிறகுகளை நாம்தான் உருவாக்க வேண்டும். ஒட்டுண்ணி வாழ்வு மனிதனுக்கு





ஆகாது. துன்பங்களால் வெட்டுண்டபோதும் எழும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. ஆற்றல் வெளிப்பாடுகள் கட்டி வைக்கக்கூடிய வையல்ல.

அவிழ்படாத முடிச்சுக்கள் வாழ்க்கையில் இருக்கக் கூடாது. பல்திசை ஆற்றலுக்குப் பல்திசைப் பார்வைகளை விரிவாக்குவோம். எம்மைச் சுற்றி என்ன நிகழ்கின்றது என்பதைத் தெரியாமல் விடுவது சுத்த அபத்தமானது.


“விழித்தல்” என்பது கண்களால் பார்ப்பது மட்டுமா? நம் இதயத்தினால், உணர்வுகளால் உலகை உற்று நோக்கிக் கருமமாற்றப் புறப்படுதல் என்பதுமாகும். கண்ணுக்கு மட்டும் பார்க்கும் சக்தி என்பது மட்டுமல்ல பரந்து நோக்கவல்ல எம் இதயத்திற்கும் நிரம்ப ஆற்றல்கள் உண்டு.

துணிச்சலுள்ள எழுச்சிமிக்க எம் ஆளுமை உணர் வில் பெருநம்பிக்கை கொண்டு எழுந்து நிற்பதுவே உண்மையான விழிப்பு நிலையாகும். இந்நிலையில் சோர்வு இல்லை, துன்பம் இல்லை, தோல்விகள் துளிகூட இல்லவேயில்லை. எமக்குப் பலன் இதுதான் என எண்ணி இனிமேலும் சொல்லவே கூடாது. இது இறைவனை நிந்திப்பதாகவேபடும். அப்படிச் சொல்லாதீர்கள்!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
01.01.2006



RangaRakes
Tamilnavarasam.com



# சுய தரிசனம்

தன்னையுணராமல் தரணியைக் காண்பது எப்படி? தங்களைப் பற்றிய சுயதரிசனம் இன்மையால் பெரும் தாக்கங்களை மனிதன் அனுபவிக்கின்றான். உண்மைகளை ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்காதவரை, பொய்மை களுடன் அந்நியோன்யமான உறவு கொண்டால் நிறைவேயின்றி நொருங்க வேண்டியதே! பொய்மையாளர் தம் நிழலுக்கே அஞ்சி ஓடி ஓடி ஏமாறுவர். இத்தகையவர்கள் தமது மனத்துடன் பேசவே அச்சப்படுவர். நல்லவர், தம்மையுணர்ந்தவர்களே இறை பக்தர்களுமாவர். இறைவனைப் பக்தர்கள் அபிஷேகம் செய்வதுபோல் இறைவன் பக்தர்களைத் தன் கருணையினால் அபிஷேகிக்கின்றான்.

சுயதரிசனம் நிஜதரிசனமாக இருக்க வேண்டும்.

மனிதர்கள் தம்மைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்ள சம்மதிக்காமையினால் மிகப்பெரிய தாக்கங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். மனிதன் தன்னைத் தான் தெரிந்து கொள்ளக் கடமைப் பட்டவன். தங்களது உண்மைத் தன்மையை விடுத்து





வெறும் கற்பனையாகவே உருவகிக்கும் போக்குடையவர் கள் ஒரு வகையாகவும், யதார்த்தத் தன்மையினைப் புரிந்து கொண்டு தமது நிலையை உணர்ந்து வாழ்பவர்கள் ஒரு வகையாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மித மிஞ்சிய மேலாதிக்க மனோபாவத்துடன் உலகில் தமது நிலையை மட்டுமே முதன்மைப்படுத்தும் இயல்புடையவர்களுக்கு ஏனையவர்களின் கஷ்ட நஷ்டங் களை அறிய ஆவல்படுவது கிடையவே கிடையாது. ஆற அமர நிதானமாகச் சிந்திப்பவன் மற்றவனை முந்துவது மட்டுமே முதல் வேலை என்று கருதவும் மாட்டான்.

எமது செயல்களில் தூய்மைத் தன்மையினால் மட்டுமே முதன்மை அந்தஸ்துகளின் உதயங்கள் சந்தடி யின்றிக் கிடைத்துவிடுகின்றன. வாழ்நாளின் ஒவ்வொரு வினாடிப் பொழுதிலுமே மேல் நோக்கிய சிந்தனையுடனான பயணங்களில் இணைந்து செல்ல வேண்டியவர்களாக எம்மைப் புதிய பார்வையுடன் மாற்றியும் தூய்மையூட்டிக் கொள்பவர்களாகவும் திகழவேண்டும்.

நான் யார்? எனது நிலை என்ன? சமூகத்தின்பால் எனது பங்களிப்புகள் என்ன? முன்னைய எனது நிலைகளில் இருந்தும் நான் மாறுபாடாக இயங்குகின்றேனா? எனது மாற்றங்கள் ஒவ்வொன்றுமே என்னை மட்டுமன்றி எனது சுயநலத்திற்கும் அப்பால் பொது நலத்தின் முன்னேற்றத் தினை வலுப்படுத்துவனவாக உள்ளவையா? எனது



RangaRakes

Tamilnavarasam.com

சிந்தனைகளில் திரிபுகள் ஏற்பட்டு அதன் நிமித்தம் மாறுபாடான, கோளாறான பாதையில் செல்கின்றேனா? ஏனையவர்களின் உள் உறுத்தல்களுக்கு ஆளாகின்றேனா? மேற்கண்ட கேள்விகளை நாம் எம்மிடம் கேட்டால் எமக்குள் எம்மைப் பற்றிய ஒரு நிலையான சிறந்த உருவம் புலப்பட்டே தீரும்.

குழப்பமான, மிகவும் சிக்கலான பாதையில் செல்வ தன் முழுக்காரணமும் நாம் எங்களிடமே பொய் பேசுவத னால் தான் நிகழுகின்றது என்று முதல் உணர வேண்டும். தனக்கே பொய் உரைப்பவன் பிறருக்கு உண்மை கூறுவதையும் ஒழுக்கமான வாழ்வுடன் வாழவும் முனைய மாட்டான். என்னோடு நான் பேச கூச்சப்படவோ அச்சப் படவோ கூடாது. தவறு இழைக்கும்போது மனதுக்குள் தூசிகள் அழிக்கப்படாமல் ஒட்டிக்கொள்கின்றன. நாம் இதனை ஒப்புக்கொண்டு நிவர்த்திக்க முனையும் போது நீரில் கழுவப்படும் அழுக்காக விலகி மனம் வெளுக்கின்றது.

தவறு இழைப்பவன் தனது முகத்தின் முன் மூச்சு விடவே கூச்சப்படுகின்றான். நிறைவான தூய சுயதரிசனம் கிடைக்க எமக்கு நாம் விசுவாசம் மிக்கவராகவும் எம்மை நேசிப்பவராகவும் பிறர் மீது காழ்ப்பு, குரோத எண்ணம் அற்றவர்களாகவும் நம்மை மாற்றிக் கொள்ளவேண்டும்.

தன்னையே விரும்பாமல் இதனையுமே விரக்திக் கண்ணோட்டத்தில் உற்று நோக்கினால் எப்படி களிப்பு





எம்மை எட்டிப்பார்க்க முடியும்? இயல்பாகவே எதனையும் ஏற்றுப் பழகினால் பிறருடன் பழகுதலே குதூகலத்தைக் கூட்டித்தரும்.

உனது ஆத்மா போல்தான் உன்னைச் சுற்றியுள்ள ஆன்மாக்களுக்கும் இன்ப துன்ப நுகர்வுகள்,நியாய பூர்வமான ஆசை, அபிலாஷைகள் உண்டு. அதனைக் ஏற்றுக் கொண்டு பிறர் எண்ணங்களுக்கும் கறை பூச முயல வேண்டாம். தன்னிலை புரிந்தவன் எதனையும் ஏற்றுக் கொள்ளக் கற்றுக்கொண்டு விடுகின்றான்.

ஆத்ம தரிசனம் என்பது ஞானிகளின் நிலை என்று கூறுவர். இறைவனை அவன் அன்பை உணரத் தலைப்பட விழையும்போதே ஆன்ம சிந்தனை உருப்பெற ஆரம்பிக் கின்றது. இறை ஒளியினால் உணர்த்தப் பெறுதலே "ஆத்மா" தன்னைத்தான் தரிசிக்க உதவும் ஆத்ம தரிசனமா கின்றது.

எந்த மதத்தினைச் சேர்ந்தவர்களாயினும் கூட தாம் சார்ந்த இறை அனுபவங்களுக்கான தூய வாழ்வு வாழும் போது சுயதரிசனத்தைத் தீர்க்கமாகப் பெற்று விடுகின்றனர்.

எனினும், உண்மையாக வாழுகின்ற எல்லோருமே மத வேறுபாடுகளுக்கு அப்பால் நிலை நின்று ஆன்ம விழிப்பை பெற்றுவிடுகின்றனர். மனிதப் பெறுமதியை உறுத்தும் விதமாக நடக்கும் பிரகிருதிகள் தங்களை அறிந்து



RangaRakes
Tamilnavarasam.com

கொள்ளாமல் விடுவதுடன் சமூகம் பற்றிய பொய்யான விளக்கத்துடனேயே, அகங்கார சிந்தனையுடன் மக்கி உடைய வேண்டியவர்களாகின்றனர்.

எனினும், பலர் தமது வாழ்நாளின் எடை குறை வடையும் போது தான் இறைவனைத் தேடப் புறப்பட்டு விடுகின்றார்கள். அது மட்டுமல்ல, யாராவது பரிவுடன் இசைவுடன் கரிசனையுடன் தம்மை நோக்குகின்றார்களா வென அங்கலாய்ப்புடன் எதிர்நோக்குகின்றனர். வாழ்வின் நோக் கம், அதன் யதார்த்தத்தன்மை, இது இப்படித்தான் என்ற உணர்வுகள் எல்லாமே தமக்கென ஏதாவது உறுத்தல்கள், நெருக்கடிகள் வரும் போது தான் தெரிகின்றது.

புரிகின்ற விடயங்களைப் புரிந்து கொண்டாலே தனது நிலை என்ன என்று சொல்லாமலே உணரப்படுகின்றது. பொய்யான தகவல்களை எம் நெஞ்சத்திற்குப் பரிமாறக் கூடாது. எமது ஆத்மாவிற்கு வழங்கப்படும் தவறான தகவல்கள்கூட இறை நிந்தனையாவே கருதப்படும் என உணர்வோம்! ஆன்மாவின் தூய்மையையே இறைவன் எதிர்பார்க்கின்றான். கடவுளின் எதிர்பார்ப்புகளைச் சிதற விடுவதற்கு முனைதல், பொய்மைக்கே தலைவணங்கி தெய்வத்தையே "மாயம்" என எண்ணும் அவலநிலைக்கே உட்படுத்துவதாகும்.





பலருக்குத் தமது மனதுடன் பேசக் கூடத் தெம்பு இல்லாமல் இருக்கின்றது. தவறு இழைப்பவனுக்கு, அவனது மனசே எதிரியாகி விடுவதால் அவனுக்கு அவன் இதயமும், அவனது உருவமும்கூட அந்நியம் போல் எதிரியாகிவிடுவது வியப்பு அல்ல. மனதை விரோதித்துச் சந்தோஷமாக வாழ முடியுமா? இவர்களால் தம்மைப் பற்றி உண்மையான தேடலை சுவீகரித்து விட முடியாது.

தனது நிழலைக் கண்டு அச்சப்படுபவர் எப்படித் தனக்கு அப்பால் நின்று பிறருக்கு நிழல் தந்து உதவ முடியும்? எமக்குரிய பணிகள் கடமைகளைச் செவ்வனே செய்து முடிக்கும் போது தான், ஏனையவர்களை வீணே வருந்தி உதவிக்கு அழைக்காத நிலை வருகின்றது. பொதுவாகக் கண்டபடி மற்றவரைச் சாந்திருக்கும் மனோ நிலை உருவானதுமே, தமது உண்மை நிலை பற்றி எண்ணமே மறந்துவிடும் மன இயல்பு மனிதனுக்கு வந்து விடுகின்றது. இது மிகவும் துர்ப்பாக்கிய நிலையாகும். குழந்தை பிறரை எதிர்பார்க்காமலே சுயமாக நடக்கக் கற்றுக் கொள்ள முயல்கின்றது. அந்நேரத்தில், யாராவது அதன் சுதந்திரத்தைக் குலைக்குமாற்போல், நடந்து கொண்டால் கோபப்பட்டு விடுகின்றது.

சுயமாக இயங்குவதுபோல் ஆனந்தம் வேறு என்ன இருக்கின்றது? மனித வலு அளவிடப்பட முடியாதது. எனினும் அதனை வலுப்படுத்த முனையாதவரை அதன் செயல் முடக்கப்படாததாகவே கருதப்படுகின்றது.



RangaRakes

Tamilnavarasam.com

தன்னம்பிக்கை, ஊக்கம், விடாமுயற்சி மூலமே எங்கள் செயல்திறன் அதிர்வூட்டப்படுகின்றது. தொடர்ந்து செல்லும் செயலூக்கம் மூலமே எங்கள் திறன் பற்றிய அளவினை நாம் அறிந்து கொள்ளவும் முடிகின்றது.

எனவே, செயலூக்கம் கொண்ட மனிதனாலேயே தன்னுடைய நிலை பற்றிய தெளிவைப் புரிந்து கொள்ளவும முடிகின்றது. நல்ல கற்பனைகளை உருவாக்குவதற்குக் கூட தூய செயல் ஆக்கம் தேவைப்படுகின்றது. சோம்பேறிகளால் சிறப்பாகச் சிந்திக்கவும் முடியாது. சொகுசு, டாம்பீக வாழ்வு பற்றிய எண்ணங்கள் மட்டும் மனதிற்குத் தெளிவை உண்டு பண்ணா. இந்த எண்ணங்கள் மேலும் மேலும் சுயநலத்தின்பால் வேட்கை கொள்ளவே வைக்கின்றன.

சுயநலவாதிகள் சுயசிந்தனை விழிப்பு உருவாக்கத் திற்கு அப்பாற்பட்டவர்கள். நல்ல கருமங்களை உருவாக்குபவன் மற்றவர் தெரிவுகளையும் ஏற்கும் மனப்பக்குவம் பெற்றவனாகின்றான். இறைவனைப் பக்தர்கள் அபிஷேகம் செய்வதுபோல் நல்லோர், பெரியோர் களை இறைவன் தன் கருணையினால் அபிஷேக்கின்றான். நல்ல விடயங்களுக்கு மட்டுமே நாம் எல்லோரையும் பங்கு தாரர்களாக்குவோம். பரந்த நோக்கு உள்ள உள்ளங்களை தெய்வம் பார்க்கின்றது. உலகம் சிரம் தாழ்த்தி வணங்கு வதே இவர்கள் தூய தொண்டிற்காகவன்றோ!

சும்மா இருப்பவன் உலகிற்குத் தீமை செய்யாத வனாக இருக்கலாம். எனினும் உலகிற்கு தீமை செய்யாத





வர்கள், சும்மா இருந்தாலும் தமது சமூக பங்களிப்பினை நல்கியேயாக வேண்டியவர்களாவர். சமுகத்துடன் உள் இருந்தே விலகி ஒட்டாமல் வாழ்வது எவ்வளவு காலத்திற்குச் சாத்தியமாகிவிடும்?

ஞானிகளாக மகான்களாக உள்ளவர்களால் மட்டுமே நிஜ தரிசனம் பெற்று உண்மைகளைக் கண்டறிந்து மேன் மையுடைய நெறி பிறழா வாழ்க்கை வாழ முடியும் என்று எல்லோரும் கூறலாம். ஆனால், சாமான்ய மனிதர்கள் எல்லோருமே உண்மை நெறியுடன் வாழ முனைந்தாலே போதும். அவர்களைத் தேடி சகல வெற்றிகளும் புகழும் கூடவே அணி திரண்டு வந்துவிடும். உலகின்முன் எல்லோருமே சமன் என்றே தெய்வமே கருதுகின்றது. உனது நல் நடத்தைகளே உன்னை வழி நடத்தும், இதன் பொருட்டு வாழ்வதற்கான அறிவு, சிந்தனை, உனக்கு உண்டு அல்லவா? இவற்றைச் சிரத்தையுடன் ஏற்று வாழ்வது மனிதனின் முழுப் பொறுப்பு மாகின்றது.

எங்கள் வல்லமைகளை புரிந்து கொள்வதுடன் எமக்கான இடர்கள் எங்கே தொடங்குகின்றன என்பதையும் தெரிந்து கொள்வோமாக! அச்சமும், கூச்சமும் இன்றி எங்களை ஆராய்ந்து தவறுகளை அறுக்க முயற்சிப்போம். ‘சுயதரிசனம்’ அப்போது தான் நிதர்சனமாக எம்மை விழிப்படைய வைக்கும், புது மனிதனாக்கும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
19.02.2006



RangaRakes
Tamilnavarasam.com



# அன்பு நிலையும், துறவு நிலையும்

சாமான்ய மனிதனிடமும் தெய்வீகமான குணாம்சங்கள் அடங்கியுள்ளன. அவன் தனது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் உழைக்கும் போதே, முழு உலகிற்குமே உழைத்தவனாகின்றான். அன்பு செலுத்தும்போது அவன் இறை கருணையைப் பெற்றவனுமாகின்றான். எதனையும் வழங்கும் இயல்பு, துணிபு, துறவு நிலைக்கேயானது. தமது உயிரைத் துச்சமென கருதும் தியாகிகள் துறவு நிலைக்கு ஒப்பானவர்கள். "துறவு" என்பது சகலதையும் துறத்தல் அல்ல. சகல உயிர்க்கும் அன்பை வழங்கலுமாகும். அன்பை, கருணையை வெறுக்க இயலாது. பிரதி பயன் கருதாது உயிர்களை நேசித்தலே மேலான "துறவு".

அன்பு என்பது தூய எண்ணத்துடன் கூடிய "வழங்கல்" ஆகும். இதன் மூலம் பெறுதல் என்கிற விடயமும் அடங்கியுள்ளது. கொடுத்தல், எடுத்துக் கொள்ளுதல் என்கின்ற தூய பரிமாற்றம் "அன்பு" என்கின்ற ஒரு சொல்லிற்குள் அடங்கிவிடுகின்றது. இந்தப் பரிமாற்றத்





தினுள் அடங்கியுள்ள மகாசக்தி பற்றியே காலம் தோறும் சொல்லியாகிவிட்டது.

எனினும் துறவிகள், ஞானிகளால் வழங்கப்படும் அன்பு, கருணை பற்றியே எங்களால் பேசப்பட்டு வருகின்றது. ஆசைகளைத் துறந்தவர்களால் மட்டுமே எல்லையற்ற அன்பினை வழங்கமுடியும் என்று கூறுவது உண்மை தானா?

ஆசை மிகுந்தவர்கள் தங்களைப் பற்றியே சிந்திக்கின்றார்கள். இவர்களிடம் பொதுநலப்போக்கு என்பதே கிடையாது என்று வாதிடுவது சரிதானா?

சமான்ய மனிதர்களிடமும் தெய்வீக குணாம்சங்கள் அடங்கியுள்ளன என்பதை நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். ஒருவன் தனது குடும்பத்திற்குச் செய்கின்ற சேவை கூட முடிவில் உலகத்திற்காகச் செய்கின்ற சேவையாகி விடும். ஏன் எனில், ஒரு நற்பிரஜை ஒரு குடும்பத்தில் இருந்து தான் உருவாக முடியும். பெற்றோர் பிள்ளைகளிடம் காட்டும் அன்பு, பரிவு ஆகியவைகளுடன் ஒழுக்க நெறியையும் ஊட்டினால் பிள்ளைகள் உலகின் பெரும் சொத்துக்களாக உருமாறுவதில் என்ன சந்தேகம்?

அன்பினை ஈந்து கொள்வதில் சாதாரண மனிதர்களுக்குச் சந்தேகம் என்பதே இருக்கக் கூடாது. "நீ என்ன பெரிய சுவாமியா, அவனிடம் போய் பரிதாபப்படுகின்றாய்?"



RangaRakes

Tamilnavarasam.com

என்று குதர்க்க வாதம் செய்பவர்களும் இருக்கின்றார்கள். சாதாரணமானவர்கள் தெய்வ நிலைக்கு உயர்வடைய முடியாது என எந்தச் சாஸ்திரங்களும் சொன்னது கிடையாது. மனப்பக்குவம் என்பது தினப் பொழுதுகளில் செய்கின்ற கருமங்களூடாக ஏற்படுகின்ற ஒரு பரிணாம வளர்ச்சியேயாகும்.

திடீர் என ஞானிகள் உருவாகிவிட முடியாது. கால ஓட்டத்தில் பார்க்கும் காட்சிகள், உலக நடை முறைகள்,இங்கு நடக்கும் கெடுபிடிகள், கேட்பாரற்று சிதைந்துள்ள வாழ்வியல் முறைகளினால் ஏற்பட்ட தாக்கங்களால் குழப்பமான நிலை தோன்றிடினும் முடிவில் தெளிவு காண்பவனே ஞானியாக துறவியாகக் கோலம் பூணுகின்றான். எனினும், இவற்றை நாம் உலக நடத்தைகளால் ஏற்பட்ட வெறுப்பினால்தான் என்றும் கூறிவிட முடியாது.

தெளிவு காண்பவர்கள் வெறுப்பினைக் கடந்தவர்கள். உண்மையை நேசிப்பவன் உலகை உமிழ்ந்து எறியவும் மாட்டான். துன்பமே தெரியாத இன்ப வாழ்வையே நுகர்ந்தவர்கள் கூட யாவற்றையும் துறந்து, நிறைந்த பேறு பெற்ற ஞானிகளாவர். ஆயினும் இவர்கள் மக்களைத் துறந்து ஒதுக்கியமை கிடையவே கிடையாது.

இந்த அற்புத உலகத்தை ஆண்டவன் சிருஷ்டி செய்தான். எனவே, பொய்யான உலகம் என்று பேசி வாழ்வை மாயத்திரைபோட்டு மூடி விட முடியாது.





இருக்கின்ற உலகினுள் உண்மையைத் தேடுபவன் மனிதன். நாம் நிலவுக்குப் பயந்து பரதேசம் போக முடியுமா? தனது ஆத்மாவைத் தூய்மையுடன் நேசிப்பவன் பிறர் ஆத்மாக்களை தூற்ற முடியாது.

அன்பு செலுத்துபவன் மனிதன். கருணை செய்பவர் கடவுள் என்பார்கள். காரிய சித்திக்காக மட்டும் நோக்கப் படுபவைகள் இதயத்துடன் ஒட்டாத, முளைக்காத விதை களாகவே கருதப்படும்.

பசை இருந்தால் தான் ஒட்டிக்கொள்ளும் ஜீவன் களும் உண்டு. தன்னலமற்ற உணர்வுகள் எமது உள்ளத் தில் பரிணமிக்க ஆரம்பித்ததுமே நாம் துறவு நிலைக்கு உயர்த்தப்பட்டவர்களாகி விடுகின்றோம்.

சாதாரண சின்னஞ் சிறுவர் கூட உயிரைத் துச்சமெனக் கருதி தீயினுள், நீரினுள் புகுந்து பிற உயிர்களைக் காப்பாற்றுகின்ற செய்திகளைப் படித்திருக்கின்றோம்.

சரீரத்தைப் படைத்தமை என்பது வெறுமனே முட்டி மோதுவதற்காகவல்ல. பிறர் பாரத்தை ஏற்று கொடூரத்தைக் களைவதற்குமேயாகும். இந்நிலை கூடத் துறவு நிலைக்கு ஒத்ததேயாகும்.

துறவு என்பது எல்லாவற்றையும் துறத்தல் அல்ல. உயிர்களைக் காருண்யத்துடன் அணைத்தலேயாகும்.



RangaRakes
Tamilnavarasam.com

ஆசாபாசங்களுடன் கூடிய இந்த உலக வாழ்க்கையில் ஏற்படும் எத்தகைய சவால்களையுமே அன்பு எத்துணை சாதுர்யமாக வெற்றி காண்கின்றது தெரியுமா?

வெளிப்பார்வைக்கு அரசர்களைப்போல் தோற்றம் கொண்டிருப்பவர்கள் கூட, மனதளவில் துறவு நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதேசமயம் மக்களின் பலவீனத்தினுள் புகுந்து நின்று எளிமை வேடம் கொண்டு வளமாக வாழுகின்ற புல்லர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்களின் ஆடம்பரத்தினை அறிந்தும் கூட மீண்டும், மீண்டும் விட்டில் பூச்சிகளாக விழுகின்ற மனிதர்களுக்குக் காலம்தான் ஞானம் ஊட்டல் வேண்டும்.

வெறும் தோற்றத்தினால் மட்டும் வாழ்க்கையை நாம் மாற்றி விடமுடியாது. உள்ளுக்குள் உளுத்துப்போன மனதை வைத்து வெளுப்பாகக் காட்ட நினைப்பது, கனவுக் காட்சிகளைக் கட்டி வைக்கும் முயற்சி போன்றதேயாம்.

அருமையான வாழ்வு வாழாத, தேடாத துறவுக் கோலம் புரையோடும் புண்ணுக்குப் பூச்சூடுவது போலத் தான். நல்ல துறவிகளின் வாழ்வை, போதனைகளை, சாதனைகளை நாம் படிக்க வேண்டும். வெறும் உடம்போடு வெற்றுக் கால்களுடன் நெடுந்தூரம் பயணம் செய்து மரத்தடியிலும், கட்டாந்தரையிலும், காடு பாலை வனத்திலும் படுத்து மக்களோடு கலந்து நயவுரை பகன்றதை, அறவுரை ஊட்டியதை நாம் நெஞ்சில் நிறுத்த வேண்டும்.





இன்றுள்ள பெரும் பொக்கிஷங்களான உண்மைமிகு வேத நூல்களை ஆக்கியோர் மானுட வாழ்வில் நுழைந்து அவர்களுடன் கலந்து அவர்கள் மூலம் பெற்ற அனுபவ பூர்வமான கருத்துக் கருவூலங்களையே தந்துள்ளனர். அதனையே நாம் இன்னும் படித்துக் கொண்டிருக்கின்றோம்.

யதார்த்த பூர்வமான வாழ்க்கையில் தான் உண்மை நிலைத்து இருக்கும். நடக்காத விடயங்களில் புலனைச் செலுத்தி வாழ்க்கையைப் பயமுறுத்துபவர்களின் வழியில் நாம் செல்லக் கூடாது. உண்மையான இயல்பான வாழ்வில் நாம் இணைந்து கொள்ளவேண்டும்.

தெளிந்த நீரோடைபோல் நாம் துலங்குவதற்கு களங்கமில்லாத அன்பினை இதயத்தினுள் இருத்து வோமாக! சாதாரணமானவன் என்கிற நிலையிலேயே நாம் இருத்தல் வேண்டுமா?

வளர்ச்சி என்பது பொருளீட்டுவதிலும், கல்வியறிவைப் பெறுவதிலும் மட்டுமல்ல, எவை எவற்றில் எம்மால் சமூகத்திற்கு அன்பினை மிகையாக வழங்கி வருகின்றோமோ, அவை ஊடாக மேற்கொள்ளப்படுவதே உண்மையான வளர்ச்சியாகும். இது அன்பு நிலையான துறவு நிலைதான்.

பாரிய இந்த நெஞ்சினுள் கொள்ள முடியாதது ஒன்றுமேயில்லை. ஆனால், இதனுள் பிரவேசிக்கக் கூடியது



RangaRakes
Tamilnavarasam.com

சடப்பொருள் அல்ல. மெய்யாகப் பிரவாகித்து ஓடும் அன்பு ஒன்றுதான். அது வற்றுவது இல்லை, மாறாக வழங்க வழங்கப் பெருகுவதுமாகும்

தென்றலின் மேலான குளிர் அருவியினதும் மலர் அணைப்பினதும் மேம்பட்ட தன்மையான ஆத்மாவை என்றுமே ஸ்பரிசிக்கின்ற சிரஞ்சீவித்தன்மையுள்ள அன்பு நிலை தவிர்ந்த வேறெதற்குமே இந்த உன்னதத் தன்மை கிடைத்திடுமா?

கால வரையறைக்குள் வாழ்ந்து போகின்றவன் மனிதன். இருக்கின்ற வாய்ப்புக்களை இழக்கக்கூடாது. நடிப்புத்தான் வாழ்க்கை என்று சொல்வதை விடுத்து, நடிப்பது போல் வாழ்வதே பொய்மை என உணர்ந்து, மெய்யான சீவியத்திற்கு சுவையூட்ட முன்வரல் வேண்டும். சரியாக வாழ்பவனுக்கு ஏது ஐயா நடிப்பு?

உண்மையைப் படிப்பதற்கும், அவ்வண்ணம் வாழ் வதற்குமே எடுத்த பிறவி இது. அதைவிடுத்து சோர்வூட்டும், சொற்களைக் கோர்த்துப்பேசி உப்புச்சப்பின்றி வாழ முயற்சிக்க வேண்டாம். பரந்த உலகம், செறிந்து வாழும் மக்களே "திவ்ய வடிவங்கள்"! எம்மைச் சுற்றி எத்தனை எத்தனை பாசப்பிணைப்புக்கள்!

இவர்களை, இவர்கள் புனிதத்தன்மையினை நம்புங் கள். தீர்காயுசு என்பது வாழும் நாளின் நீளத்தில் அல்ல.





வாழ்ந்து கொண்ட நாட்களில் ஈந்தளித்த அளவில்லா அன்பினை ஊட்டிய காலங்களே என அறிக! உணர்க! தெளிக! அன்பு நிறைந்தவன் சொற்ப காலம் வாழ்ந்தாலும் அவன் நீண்ட காலமும் தொடர்ந்து அவதாரம் எடுத்துக் கொண்டவனாகவே கருதப்படுவான்.

அன்பு நிலையோடு இணைந்தவன், துறவு என்கின்ற நிறைந்த நிலையுடன் சங்கமித்தவனேயாவான். எல்லா மனிதனும் இந்நிலைக்கு வரவேண்டும். வரவேண்டும்!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
26.02.2006



RangaRakes
Tamilnavarasam.com



# நல்ல பொழுது போக்கு வாழ்க்கைக்கு உவப்பு

தொடர்ந்து கருமமாற்றுகையினால் ஏற்படும் அயர்ச்சியைப் போக்க மனிதனுக்கு ஓய்வு தேவையாகின்றது.பொழுதுகளை வீணாகப் போக்குவதைவிட, மனதிற்கும் உடலிற்கும் வாழ்க்கைக்கும் உவப்பானவையாக அமைத்தல் வேண்டும். பலர் பொழுது போக்காகக் கற்றுக்கொண்ட கலை, தொழில் நுட்ப விஷயங்கள் அவர்களுக்கு பணவரவுகளையும் அளித்து வருகின்றன். காலத்தை அவமாகக் கழிப்பது வாழ்க்கையை அழிக்க முயல்வது போலாகும். பொழுதுகளை "போக்குவது" என்றில்லாமல், அதனைத் திறம்பட "ஆக்குதல்" என்பதே நல்லது.

பொழுதுபோக்கு என்பது அழுது வடிவதற்கு அல்ல. எழுந்து உயிர்ப்புடன் புதுத் துளிர்ப்புடன் சுறுசுறுப்பான வர்களாக எம்மை மாற்றிக் கொள்வதற்கேயாகும். நல்ல பொழுது போக்குகளை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.



சுய

உடலுக்கும் உள்ளத்திற்கும் தெம்பூட்டும் முயற்சி
ளை தெரிந்து கொள்ளல் அவசியமாகின்றது. விரக்தி,
னைகள் உள்ளத்தே ஊடுருவிக் கொள்ளாமல் தவிர்க்க
பாழுதுகளைச் சிறப்பாகச் சிருஷ்டிப்போமாக!

தொடர்ச்சியான வேலைப்பளு, அயர்ச்சியையும் வெறுப்பினையும் உண்டுபண்ணும். அதுமட்டுமல்ல பிரச்சினைகள் பலவும் வந்து மோதும்போது, மனசு இனம்புரியாத அந்தகாரத்தினுள் மூழ்க எத்தனிக்கின்றது. இவை எல்லாமே மனித வாழ்வில் சராசரியான நிகழ்வுகளே.

எனினும், மகிழ்வுடன் வாழவா வழி இல்லை? ஆயினும் எமது நோக்குகள் பிறரை வருத்தாமல் தன்னையும் தன் குடும்பத்தையும் மட்டுமின்றி முழுச் சமூகத்தையுமே சந்தோஷமாக்க விழைந்தால் அதைவிட எமது பிறப்பின் பெரும்பயன் வேறென்ன இருக்கப் போகின்றது?

மற்றவரை வெறுப்பூட்டி எங்கள் பொழுதுகளைக் கழிக்கக் கூடாது. இன்று வீதிகளில், பொது இடங்களில் நிகழ்வதைப் பாருங்கள். தமது பொழுது போக்கிற்காக மற்றவர்களை வேதனைப்படுத்துகின்ற பாதகக் காட்சிகளைத் தானே அடிக்கடி காணுகின்றோம்?

ஒருவரை மகிழ்வூட்டி, எங்கள் காலத்தைக் கழித்தால் வாழ்விற்கு அர்த்தம் உண்டு. நல்லது செய்யத்தானே



RangaRakes
Tamilnavarasam.com

எத்தனையோ வழிகள் உண்டு அல்லவா? விடுமுறை நாட்களில் என்ன செய்கின்றீர்கள் என்று கேட்டால் "சும்மா இருக்கின்றேன்" என்பதிலும் பார்க்க இரண்டொரு நபர்களின் நலனிற்காக என்றாலும் நம்மால் முடிந்தது என்று சின்னத் தொண்டாவது செய்தால் என்ன?

ஆடம்பரமாக, அட்டகாசமாக, செலவு செய்தால் மட்டுமே சந்தோஷமாக இருக்க முடியும் என்றே பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். நாம் எமது எண்ணங்களை ஆரம்பத்தில் இருந்தே ஒரு கட்டுப்பாடான வரையறைக்கு உட்படுத்தியாக வேண்டும். செலவு செய்துதான் சந்தோஷங்களை வாங்க வேண்டும் என்கின்ற தீவிர எண்ணத்தைக் கைவிட்டேயாக வேண்டும்.

எனினும் இருக்கின்ற வசதிக்குள் நாம் செலவு செய்வதில் தவறேயில்லை. இன்று மக்களை மருட்டும் பொழுதுபோக்கு அம்சங்கள் மலிந்து விட்டன. ஆனால் இதன்பொருட்டு பணம் மட்டுல்ல தேக சுகம் கூடப் பாதிப்படையும், இதைப் பலரும் உணர்வதில்லை.

விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியினாலும் மேலைத்தேச கலாசாரக் கலப்பினாலும் ஒருவர் கடமையின் நிமித்தம் செய்கின்ற கால அளவைவிட பொழுது போக்கிற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பினுள் மூழ்கும் காலமே மேலாகி விட்டது. இதனை மறுக்க முடியுமா?





சோம்பேறிகளுக்குப் பொழுதுபோக்குக்கென்ற ஒரு எல்லை வரையறை, காலவரையறை கிடையவே கிடையாது. சும்மா சுழல்பவனுக்குப் பொழுதுகள் செயலற்றுக் கழிக்கப்படும். கடமையை உணராமல் கண்டபடி திரிபவனுக்கு காலம் என்றுமே கடந்து, நிறுத்தப்பட்டதாகவே கருதப்படும்.

கடமையுணராது உச்சி வெயில் நேரம் என்றில்லை, கொட்டும் மழையிலும் கடற்கரையிலும் பொது இடங்களிலும் புரளுகின்றவர்கள் புழுக்களிலும் கீழானவர்கள். சாதாரண ஓரறிவு ஜீவன்கள்கூட வாழ்வை ஓட்ட, செயலற்றுக் கிடப்பதுண்டா, யாரோ உழைத்த காசை செலவு செய்து காலத்தை ஓட்டுபவர்கள்கூட எனக்குப் பொழுது போக வில்லை என்று சொன்னால் சிரிப்பு வராதா?

இன்னும் ஒரு சாரார் வீட்டில் இருந்து கொண்டு வேலைக்கே போகமாட்டார்கள். ஆனால், நேரம் கிடைக்க வில்லை என்று வீம்பு பேசுவார்கள். மிகவும் வேதனையான விடயம் என்னவெனில், இளைய சமூகத்தினருக்கு நேரப் பயன்பாட்டினை முதியவர்கள் கற்றுக் கொடுக்காமல் விடுவதேயாகும். இருக்கும் காலம் கொஞ்சம் தான். நாம் எல்லோரும் எமது காலத்தில் இவற்றை எல்லாம் அனுபவித்தோமா? எமது பிள்ளைகளாவது அனுபவிக் கட்டுமே என்று காலத்தைக் கரைக்கக் கற்றுக் கொடுக்கின் றார்கள். பொழுது போக்குகளால் கூட சம்பாதிக்கின்ற கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும்.



RangaRakes Tamilnavarasam.com

ஓய்வு நேரத்தில் கலையார்வம் மிகுந்த பலர் செய்கின்ற கருமங்களைப் பாருங்கள். உடலுக்கும் உள்ளத்திற்கும் உவகையூட்டும் விதத்தில் தமது கலைத் திறனை வெளிப்படுத்திச் சாதனைகளையே படைக்கின்றார்கள். இன்று பல இசை மேதைகள், நடிகர்கள், ஓவியர்கள் அநேகர் தங்கள் சொந்தத் தொழில் வேறாக இருந்தும்கூட பொழுதுபோக்கிற்காகச் செலவிடும் நேரத்தையே கலை வெளிப்பாடுகளுக்காகப் பயன்படுத்தி தமது திறமைகளை வளர்த்திருக்கின்றார்கள்.

இத்தகைய சிருஷ்டி கர்த்தாக்கள், தங்களையும் உலகத்தையும் ஆனந்தமயமாக்குவதே தமது குறிக் கோளாக மாற்றி வருவதை நாம் அறிவோம். இவர்களுக்கும் புகழ்மட்டுமல்ல பணமும் கூட வருகின்றதல்லவா? வீட்டில் குடும்பத் தலைவன், தலைவியர் நல்ல பொழுது போக்கு களில் ஈடுபட்டால் சின்னவர்களுக்கு நாம் எதற்காக சொல்லிக் கொடுக்க வேண்டும்? அவர்களாகவே இவற்றைப் பார்த்துப் பழகி விடுவார்களே!

பெரிய கலைஞர்களின் வாரிசுகளைக் கேட்டுப் பாருங்கள். நீங்கள் எப்படி முன்னேறிப் பெரிய கலைஞராக உருவாக முடிந்தது என்று கேட்டால் "வீட்டில் அப்பா, அம்மாவைப் பார்த்தேன், பொழுது போக்காக நானும் கற்றுக் கொண்டேன், அப்புறம் படிப்படியாக எல்லாமே தானாக வந்தது. அதன் பின்னர் முறைப்படி படித்தே முழு நேரக் கலைஞரானேன்" என்பார்கள்.





சாதாரண வாழ்க்கையில் நாம் ஒரு தொழில் செய்கின்றோம். வருமானமும் பெறுகின்றோம். இந்தக்கால பொருளா தாரப் பிரச்சினையான சூழ்நிலையில் நாம் ஏதோ ஒரு வகையில் எமது தனிப்பட்ட திறமை காரணமாகப் பிறருக்கு உதவுவதுடன் கொஞ்சம் பொருளீட்டினால் அது எவ்வளவு மன நிறைவைத் தரும் தெரியுமா?

எனினும் பொழுதுபோக்குகள் உடலை வருத்துவன வதாக அமையக்கூடாது. மன அமைதிக்கும் உடல் ஆரோக் கியத்திற்கும் ஓய்வு தேவைப்படுகின்றது. இந்த ஓய்வு தேவைப்படும்போது உடலை வருத்தினால் ஓய்வு என்பதற்கு அர்த்தமேயில்லாது போய்விடும்.

ஓய்வாக இருந்து கொண்டே நல்ல விதமாகப் பொழுதைப் போக்க முடியும் அல்லவா? பலரும் நல்ல நூலை படிக்கின்றார்கள். நல்ல இசையை ரசிக்கின்றார்கள். அத்துடன் பலர் தமது அன்பான நண்பர்கள் உறவினர் களுடன் பொழுதைப் போக்குகின்றனர். அதுகூட நிறைவான திருப்தி அல்லவோ?

பொழுதுபோக்கு அம்சங்கள் எல்லோருக்குமே ஒத்தவையாக இருக்க முடியாது. வயதுக்கு ஏற்றவாறு ரசனைகளும் மாறுபாடடைகின்றன. அத்துடன் ஆண், பெண் இரு சாராரின் விருப்பங்களும் ஒன்றாக இருப்ப தில்லை. பொழுதுபோக்கிற்காக புடவைக் கடைக்குள், நகைக் கடைக்குள் புகுந்து விலை கேட்டு நேரத்தை வீணடிக்க



RangaRakes

Tamilnavarasam.com

மனைவிக்கு பிடிக்கும். ஆனால் சம்பந்தப்பட்ட கணவருக்கு இது பிடிக்குமா?

சின்னப் பையன்கள், நவீன கணினி மூலமான விளையாட்டுக்களில் ஆர்வமுடன் ஈடுபட்டுக் கொண்டிருப் பார்கள். அந்த நேரம் அவர்களது அப்பாவிற்கு இது பிடிக்காதிருக்கலாம். இளைஞருக்குத் துள்ளாட்டப் பாடல் பிடிக்கும். வயது போன முதியவர்களுக்கு ஆன்மீக பேச்சு, பக்திப் பாடல் பிடிக்கும்.

இதற்காக இளைஞர்கள் தாத்தாமார்களைக் கேலி பண்ணலாமா? ஒவ்வொருவரின் ரசனைகளுக்கும் நாம் மதிப்பளிக்க வேண்டும். மற்றவர்களின் விருப்பங்களை நாம் தடைபோட வேண்டும் என்பதில்லை. சதா ஒரு விடயத்தில் மூழ்காமல் குறித்த காலத்தில் செய்ய வேண்டியவைகளைச் செய்வதற்கு அனுமதி கொடுத்தேயாக வேண்டும். எமக்குச் சிரமமாக இருப்பின் அவர்கள் வழியில் செல்லாமல் விலகுதல் சிறப்பானதாகும்.

காலத்திற்கேற்றாற்போல் பக்குவமாக வாழப் பழக வேண்டும். சிறுவன் ஒருவன் தொலைக்காட்சியில் சுவாரஸ்யமாக ஓய்வு வேளையில் சிறுவர் நிகழ்ச்சியைக் (கார்ட்டூன்) கண்டு களித்துக் கொண்டிருக்கின்றான். அந்த நேரம் அவனது அம்மா திடீரென தொலைக்காட்சி நிகழ்ச்சியை நிறுத்தினால் எப்படி அவனது மனோநிலை இருக்கும்?





எனவே, நாம் ஓய்வு நேரத்தில் கிடைக்கும் சந்தோஷங்களைப் பறிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட முனைதல் தகாத காரியமாகும். இதேசமயம், இன்னும் ஒரு விடயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

- ◆ வேலை நேரத்தில் வேலை
- ◆ ஓய்வு நேரத்தில் ஓய்வு
- ◆ ஓய்வு நேரத்தில் இதமூட்டும் பொழுதுபோக்கு.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஒன்றுக்கொன்று அவைகளைக் குழப்பிக் கொள்ளாமல் பார்த்துக் கொண்டேயாக வேண்டும். பொழுதுபோக்கு காலங்களில் ஏற்படுகின்ற மன அமைதி எமக்குப் பல சிந்தனைகளை உருவாக்குகின்றது. ஓர் அமைதியான சூழலிலேயே ஒரு சிருஷ்டி கர்த்தா உருவாகின்றான். குழப்பமும், வேலைப் பளுவும் சூழ்ந்தால் எவனால் சிந்திக்க, மூளைக்கு அனுமதி வழங்க முடியும்? கிரகித்தல், உண்மைகளை ஏற்றுக் கொள்ளுதல், பரந்த ஞானத்தை உள்வாங்குதல் போன்ற விஷயங்களை நாம் அமைதியாக இருந்தே பெற்றுக் கொள்ள முடியும்.

எனினும் நாம் இந்த நுட்பமான விடயங்களை சாதாரண வேலை நேரங்களில் உள்வாங்குதல் என்பது இலகுவானது அல்ல. பொழுதுபோக்குக்கான காலங்களை நாம் ஒதுக்கிக் கொள்ளும் போது, அந்தக் கால வேலைகள் சிந்திக்கும் சுரங்கத்தினுள் எம்மையிட்டுச் செல்கின்றன.



RangaRakes

Tamilnavarasam.com

உடல் உழைப்பு வேறு, மன உழைப்பு வேறு. மனம் கூட உழைக்கின்றது. அறிவு பெறப்படுவது எங்ஙனம்? மூளை உழைக்காமல் அறிவு பெறப்படுமா? உடல் உழைப்பினால் சிந்தனையும் வளம் பெறுகின்றது. சிந்தனையினால் அறிவு முழுமையடைகிறது. அறிவு பெறப்படுகின்றது.

உடல் ஆரோக்கியம்மூலம் தான் மூளை உறுப்புக் கள் வளம் பெறுகின்றன. நல்ல சுகதேகியால் சீராகச் சிந்திக்க முடிகின்றது. நோய்வாய்ப்பட்டால் என்னதான் செய்ய முடிகின்றது? எனவேதான், பெரியோர்கள் சின்ன வயதில் சிரமப்பட்டு உழை, படி என்று எல்லாம் சொல்கின் றார்கள். உடலை வருத்தி உழைத்துப் பெற்ற நிம்மதி நிரந்த ரமானது அல்லவா? இதன் மூலம் பெற்ற அமைதியான நிலையில் பெற்ற அறிவு எவ்வளவு பவித்திரமானது.

மனிதனுக்கு உழைப்பும் தேவை. ஓய்வும் தேவை என்பது எவ்வளவு உண்மை தெரியுமா? இவை வாழ்வில் சுழன்று, சுழன்று வரும் சந்தோஷ சம்பவங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எமக்குப் பிடித்தமான விதத்தில் பொழுதுகள் கழிக்கப்பட வேண்டும். விருப்பமில்லா விடயத்தில் நாம் பொழுதைக் கழித்தால், அதனால் மன அழுத்தம்தான் மிஞ்சும். அத்துடன் ஏற்படும் பிரதிபலிப் பாகக் கோபம், எரிச்சல்தான் கூட வருகின்றது. இது தேவைதானா?

அத்துடன் எங்கள் பொழுதுபோக்கிற்காகப் பிறரைச் சிரமப்படுத்தவும் கூடாது. உங்களுக்கு சீட்டாட்டம் பிடிக்





கலாம். அதற்காக உமது நண்பரை வலுக்கட்டாய மாகச் சீட்டாட்டத்திற்கு அழைக்கலாமா? மனைவி, கணவன் இருபாலாரும் ஒத்த நோக்கில் ஓய்வு நேரத்தினைப் பயன்படுத்தல் நல்லதுதானே. எல்லோருமே விட்டுக் கொடுத்துப் பொழுதுபோக்கு நிகழ்வில் ஈடுபடுதல் சிறப்பானது. இல்லாவிட்டால் சந்தோஷமான ஓய்வு நேரம், மனப்பூசல் வேளையாக வேதனை நிறைந்து போகும்.

ஒரு மேடையில் அல்லது ஒரு தொலைக்காட்சியில் ஒரு காட்சிதான் தோன்றும். அவரவர் தமக்கு இஷ்டமான தைத்தான் பார்க்க வேண்டும் என்று அடம் பிடிக்கலாமா? மற்றவர் களிப்பில் நாம் மனம் நிறைவு பெற்றால் வாழ்வில் ஏது ஐயா குறை?

சந்தோஷகரமான வேளைகளில் வேறு தொல்லை தரும் விஷயங்களைப் புகுத்துதல் கூடாது. குடும்பம் ஒன்று உல்லாசமாக பயணம் செய்கின்றது. வழியில் கணவனும் மனைவியும் பழைய மனஸ்தாபங்களை, தமது குடும்ப உறவுகளின் சரி பிழைகளைப் பற்றிக் கண்டபடி கதைக்க லாமா? இதனால் வந்த நோக்கமே திசை மாறுகின்றது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் கால நேரம் உண்டு. சந்தோஷகரமான இடங்களில் எல்லா பிரச்சினைகளுமே கரைந்து போக வேண்டும். அவை நினைப்பூட்டும் கேந்திர நிலையங்களாக மாறிவிடக் கூடாது. சகதிக்குள்ளேயே மனதைச் சஞ்சரிக்க விட்டு விட்டு சஞ்சாரம் போனால் மட்டும் நிம்மதி கிட்டிவிடுமா?



RangaRakes

Tamilnavarasam.com

நண்பர்களிடையே பேதங்கள் இருந்தாலும்கூட மன அமைதியான நேரங்களில் தன் முனைப்பு நோக்கின்றி அவர்களைச் சந்தித்துப் பிரச்சினைகளைக் களைய முடியும். வேலைப்பளு, மன அழுத்தமான நேரங்களில் பேதங்கள், குரோதங்களைக் களைய முடியாது அல்லவா? பொது நிகழ்ச்சிகள், வைபவங்கள் எல்லாம் ஏன் நிகழ்த்தப் படுகின்றன என்பதை முதலில் உணர வேண்டும். பரஸ்பரம் அன்பு, ஆதரவு, நேயங்களை வளர்த்துக் கொள்ள இந்த நேரங்களை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தப் பொழுதுகளால் மனிதனுக்கு தனிமை, வெறுமை உணர்வுகள் கூடத் தவிர்க்கப்படுகின்றன அல்லவா?

உலக நடப்புக்கள், கலை, கலாசார அறிவுகளை பொது நிகழ்ச்சிகள் மூலம்தான் நாம் மிக இலகுவாகத் தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்தக் கூத்து, கும்மாளம், பேச்சு எனக்குப் பிடிப்பதில்லை. நேர விரயம் தான் மிச்சம் என்றும் பலர் கூறுவதுண்டு. என்றாலும் நல்ல நிகழ்ச்சிகளுக்குச் செல்வதால் ஒன்றும் கெட்டுப் போக மாட்டோம். நல்ல பெரியோர் உறவு, நல்ல நண்பர்களைப் புதிதாகக் கண்டுகொள்வதுடன் பல நாட்கள் காணாத பலரைக்கூட இந்த நேரங்களில் கண்டுகொள்ள முடியும்.

மனிதன் ஜடமாக வாழ்ந்து விட முடியாது. காலங்கள் எமக்காக நிலையாய் தரித்திருப்பதில்லை. அது ஓடியபடியே புதுப்புது வடிவங்களைப் படைத்தபடியே மேன்மேலும் தேடியபடி ஓடும். எனவே நாம் செய்கின்ற செயல்களின்





பயன்பாடுகள், எதிர் விளைவுகளைப் புரிந்துகொள்ள வேண்டியவர்களாவோம். வாழ்க்கை, அலுப்பூட்டுவதாக அமைய நாம் இடம் கொடுத்தல் ஆகாது. எமது பணிகளின் அளவு குன்றியிருந்தால் அதனை எவரிடத்தில் இருந்தும் கேட்டுக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும். எமது பொழுதுகள் வீணாக்கப்படுகின்றனவா என்பதை அறிவதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

நல்ல பொழுதுகளை அமைத்தவன் நலிந்து போன தில்லை. பொழுதுகளை கஷ்டப்பட்டுக் கழிக்கக் கூடாது. அவை குழப்பமின்றி இஷ்டமுடன் வீணடித்தலின்றி அமைய வேண்டும். நல்ல பொழுதுபோக்கு என்பதே வாழ்க்கை என்னும் விருட்சத்தில் கிளைகளை, உரமூட்டும் விழுது களை அமைக்கும் நன் முயற்சியாக அமைத்தலேயாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
12.03.2006



RangaRakes
Tamilnavarasam.com



# இல்லங்கள் ஆலயங்களாக வேண்டும்

வழிபாடுகள் செய்யும் ஆலயங்கள் மனிதர்களுக்கு எவ்வளவு முக்கியமானவையோ, அவ்வாறே வாழ்விடமான இல்லங்களும் புனிதாமாகப் பேணப்பட வேண்டும். பலர் இணைந்து வாழும் இல்லம் இறைவன் விரும்பும் வதிவிடம் தான். சின்ன வயதிலிருந்தே எமது பழக்க வழக்கம், ஒழுக்கம், பண்பாடுகள் இங்கிருந்து தான் உற்பத்தியாகின்றன. எல்லோருமே தத்தமது வீடுகளை, சுற்றுப்புறங்களை தூய்மை நிறைந்ததாக ஆக்கினால் இவர்கள் இருப்பிடம் இறைவன் கருவறை போல் நிறைந்து ஒளியூட்டும். இல்லங்கள் எல்லாமே அறப்பணியாற்றும் இடங்களாக மிளிர்ந்தால், அவை எல்லாமே ஆலயங்கள் போல் தூய்மைமிக்கதாய் ஆன்மாவிற்கு அமைதியூட்டும்.

ஆலயங்கள் எங்கள் வாழ்வோடு இணைந்து நின்று எமக்கு நிம்மதியைத் தருகின்றன. ஒவ்வொரு வருக்கும். தங்கள் சார்ந்த மதங்களின் வழிபாட்டு ஸ்தலங்கள் இன்றி யமையாதனவாகும்.





எங்கள் ஆன்மாவிற்கு அமைதியைத்தரும், அதனால், நல்லனயாவும் இனிதே நிகழ்ந்து விடும் என எண்ணியே ஆலயங்களுக்குச் செல்கின்றோம். ஆலயங் களின் புனிதத் தன்மையினை உணர்ந்து அங்கு மக்கள் சென்று வழிபாடு செய்யும் அதேவேளை, நோக்கம் புரியாது ஆன்ம துரோகம் செய்யும் ஆத்மாக்களை என்ன வென்பது?

வழிபாடு செய்யும் கோயில்கள் மனிதர்களுக்கு எவ்வளவு புனிதமானதோ, அவ்வாறே எமது வாழ்விடமாகிய இல்லங்களும் புனிதமாகப் பேணப்பட வேண்டிய ஒன் றாகும். "காயமே கோயில்" எனப்படும் போது, பலர் இணைந்த நல்ல இல்லம் இறைவன் விரும்பும் வதிவிடம் தான்.!

தனி ஒரு மனிதனின் பண்பு, அவன் வாழும் வீட்டில் இருந்தே பிறக்கிறது. "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பார்கள். சின்ன வயதில் எமது பழக்க வழக்கம், ஒழுக்கம் ஆகியன இங்கிருந்து தான் உற்பத்தியாகின்றன.

எனவே எம்முடன் கூட இருக்கின்றவர்கள், தங்களை நல்ல முறையில் வளப்படுத்தாமல் தான் தோன்றித்தன மாக வாழக்கூடாது. தமக்கு சார்பாகவே சட்டங்கள் இயற்ற முடியாது .

எமக்குப் பின்னால் எதிர்காலத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதை அறிந்து கொள்ள புத்தம் புதிய



RangaRakes
Tamilnavarasam.com

வார்ப்புக்கள் எங்களை நாடி நிற்கின்றன, நீங்கள் சொல்வதை இன்று செய்து கொண்டிருப்பவற்றை அவர்கள் மிக உன்னிப்பாகக் கவனித்த வண்ணமுள்ளனர்.

எங்களையே நம்பி எங்கள் சொற்களையே தினம், தினம் செவிமடுக்கும் இந்த புது மலர்களுக்கு இயல்பாகவே உள்ள அழகு, வாசனைகளைப் பெரியவர்கள் களங்கப்படுத்தலாகாது.

அவர்களுக்கு நல்ல காட்சிகளையே காட்சிப் படுத்துங்கள். நல்ல சொற்களை, நயம்மிகு கருத்துக்களை மட்டுமே ஊட்டுதல் எமது கடமை. வெள்ளை உள்ளங்களுக்கு வெளிச்ச மூட்டுதல் எமது பணி.

ஆன்மாவை வயப்படுத்தி, இறைவனோடு ஐக்கியப் படுத்துகின்ற இடமாகக் கோயிலை நாம் கருதுகின்றோம். ஆனால் வீடுதான் எமது ஆரம்ப பல்கலைக்கழகமாக, இளம் வயதிலேயே நல்ல செயற்திறனைக் கூர்மையாக்குவதற்கும் மிகவும் பழக்கப்படும் இடமாகவுள்ளது.

எமது சின்னஞ் சிறிய வீடு, பரந்த உலகை அறிய, புது உலகை கிருஷ்டிக்க உதவும் ஒரு "கேந்திர நிலையம்" என்றால் அது மிகையல்ல. தாய், தந்தையர் எனும் ஆசான்களே முதன்மைக் குருவாக விளங்குகின்றனர். மாதா, பிதா, குரு, தெய்வம் என வரிசைப்படுத்தி முதலிடம் கொடுத்து முதன்மைப்படுத்திய முன்னோர்





கள், எமது குருவுக்கு முன்னோடிகளாகத் தாய், தந்தையை வைத்துக் கௌரவப்படுத்தினர்.

உலகைக் காட்டிய முதல் ஆசான்கள் பெற்றோர்கள் தான். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமது அருஞ் செல்வங்கள் தவழும் இடத்தைப் புனிதமாகப் பேண வேண்டியது ஒரு மாபெரும் பொறுப்பாகும்.

நற்பிரஜைகளை உருவாக்குதலே மாபெரும் தவம், கோயிலுக்குச் சென்று வேண்டுதல்கள் செய்கின்றோம். எமக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று கடவுளிடம் உரிமையுடன் எதை எதையோ கேட்ட வண்ணம் இருக்கின்றோம்.

எல்லோரும் தத்தமது வீடுகளில் மட்டுமின்றித் தங்களைச் சூழ்ந்துள்ள சூழல்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஜீவன்களின் நலன்களில் அக்கறை கொண்டாலே, அவர்கள் "இருப்பிடம்" இறைவன் "கருவறை" போல் நிறைந்த ஒளியூட்டி நிற்கும்.

நல்ல முறையில் வாழ்ந்து காட்டாதவர்களால், எப்படி நற்பிரஜைகளை உருவாக்க முடியம்? சில பெற்றோர்களைப் பார்க்கும் போது, அவர்களிடம் இருந்து விலகி வாழ்வதே, பிள்ளைகளின் எதிர் காலத்திற்கு உகந்தது போல் தோன்றுகின்றது.



RangaRakes

Tamilnavarasam.com

இயல்பாகவே நற் குணமுடைய பிள்ளைகளை பெற்றோரில் சிலர் தவறான வழியில் கொண்டு செல்கின்றனர். வசதி வாய்ப்புகள் உள்ள பலர், தமது பிள்ளைகள் மிக எளிமையாக வாழ அனுமதிப்பதில்லை.

மேலும், பிறருடன் பிள்ளைகளை சகஜமாக பழக விடுவதில்லை. மேலாதிக்க உணர்வினையூட்டுவார்கள். எளிமையானவர்களை, இழிந்தவர்கள், தங்களிலும் அந் தஸ்து குறைந்தவர்கள் எனச் சொல்லிச் சொல்லியே வளர்ப்பார்கள்.

பரந்த மனப்பான்மையுடன் குழந்தைகளை வளர்க்க வேண்டியது பெற்றோரின் நற் பண்பாக அமைதல் வேண்டும். தெய்வ பக்தி, பெரியோர்களிடம் பணிவாகப் பழகுதல், இன்சொல் போன்ற நற்பழக்கங்களை பக்குவமாகக் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

கோயில்களில் அடியார்களுக்கு பிரசாதம், உணவு அளித்தல் போன்ற தர்ம காரியங்கள் நடப்பது நாம் அறிந்த ஒன்றேயாம். ஈகை, எளியோர்க்கு உதவுதல்களை எம் முன்னோர்கள் ஆலயங்களினூடாக செய்தனர். இப்பணி, இல்லங்களிலும் செய்யப்படல் வேண்டும்.

இத்தகைய அறப்பணிகளைச் செய்வதால் உண்டாகும் திருப்தி எல்லையற்றது. ஏழைகளுக்கு உண வளித்தல் அவர்களின் கல்விப் பணிக்காக, இல்லறத்தார்,



தங்களால் இயன்றளவு உதவுதலால், சமூகப்பணிகளைக் கூட தாம் வாழுகின்ற மனைகள் மூலம் செய்வதனால், வை ஆலயப்பணி போல் சாலச் சிறந்தனவல்லவோ!


வீணான ஆடம்பரங்களுக்கும், பகட்டான வாழ்க்கை முறைக்குள்ளும் அமிழ்ந்து விடாது செய் கருமங்களை நேரிய வழியில் செய்தால் அதுவே இறை பணியாகி விடும். இப்பொழுதினில் செய்வதே மேல். அடுத்து வரும் காலத்திற்காக ஒத்தி வைக்கும் செயல் வீண்.

இந்த உலகில் ஒருவருமே தமக்கு எவருமே இல்லை என்ற உணர்வில் வாழக் கூடாது. “அதோ இந்த வீடு உள்ளது. இவர்கள் எமக்கு ஆறுதல் அளிப்பார்கள்” எனுமாறு நம்பிக்கை ஊட்டுக. புனிதமாக்குக! எல்லோரது இல்லங்களுமே அனைவருக்கும் ஆதரவு நல்குவனவாக இருப்பின் அங்குள்ள அங்கத்தவர்களுக்கும் கடவுள் பேராத ரவு வழங்கியபடி இருப்பார். உங்கள் இல்லம் கோயிலாகி விடும்.

தினகரன்
வார மஞ்சரி
20 .02.2011



RangaRakes Tamilnavarasam.com



# வேற்றுமை உணர்வு

வேற்றுமையால் ஏதுபயன் ? அதனால் மமதை மிகுதியாகும்
பிறர் நலன் பேணுவதே முற்றிலும் நன்று.
உயர்வு தாழ்வு எண்ணத்தால் மனம் தாழ்வுறும்.
வியத்தகு வாழ்விற்கு மயக்கும் பேதம் எதற்கு?

வேற்றுமை உணர்வு மிகையாகும் போது மமதை கூடவே கோலோச்ச ஆரம்பித்து விடுகிறது.

என்னை விட உயர்ந்தவன் எவன் எனும் அகங்காரம் உருக் கொள்ளும் போது தனக்குத் தானே வீழ்ச்சிக்கு வித்திட்டுக் கொள்கின்றான். வேற்றுமையால் பயன் இல்லை, துயர் தான்! ஆயினும் ஆண்டவர் எல்லா உயிர்





களையும் ஏன் வெவ்வேறாகப் படைத்தான்? அப்படியாயின் அவர் உருவாக்கிய உருக்கள் பேதத்தைக் காட்டவா, மோதிக் கொள்ளவா என எண்ணினால் அது சரியா?

கடவுள் படைப்பில் ஐயம் கொள்வது எமது சித்தத் திற்குத் தேவையற்றது. ஆராயப் பொருத்தமற்றது. எல்லை யற்ற இறையையும் மனித வலைக்குள் அடக்க முடியுமா? எல்லா உயிர்களையும் ஒரே மாதிரிப் படைத்தால் என்ன நடக்கும்? சற்று சிந்திப்போம்!

சகல உயிர்களையும் மனிதர்களாகவே படைத்து, வேறு எந்த விருட்சங்களோ, அல்லது விலங்குகள், கடல் வாழ் ஜந்துக்கள், சிற்றுயிர்கள் இல்லாது விட்டால், நாம் ஜீவிதம் செய்வது எப்படிச் சாத்தியமாகும்? உண்ண உணவு உறைவிடம் எது தான் கிடைக்கும்? ஏனெனில் மனிதனைத் தவிர எதுவுமே படைக்கப்பட்டிருக்காதே.

அதே போல் ,வெறும் தாவரங்கள், மிருகங்களை அல்லது வேறு உயிரினங்களைத் தனித் தனியே, முழுதாகப் படைத்து விட்டால் எந்தக் காரியங்கள் தான் நடக்கும்?

எனவே, கடவுளின் சிருஷ்டி ஒவ்வொன்றிலும் நாம் புரிந்து கொள்ள வியலாத பல்கோடி அர்த்தங்கள் மறை பொருளாகப் புதைந்திருக்கும்.



RangaRakes
Tamilnavarasam.com

உருவங்களில், செயல்களில் அவற்றின் அளவுகளில் விஸ்தீரணத்தில், வண்ணங்களில் எனப் பலவாறாக எமது கண்ணுக்குப் புலனாயும் புலனாகாதவாறும் வேறுபாடாகப் படைக்கப்படுகின்றன. இவற்றின் காரண காரியங்களை எவருமே பூரணமாகப் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் எல்லாமே , எதோ ஒரு வகையில் ஒன்றோடு ஒன்று சார்ந்து இருப்பது மட்டும் உண்மை.

எனவே நாம் இறை படைப்பில் வேற்றுமைகளைப் பார்த்து, அவற்றை ஒதுக்குவதும் , வெறுப்பது தகாது.

மனித இனம் ஒன்றுக் கொன்று உருவில் சிறிது மாற்றமாக இருப்பினும், முழுமையான தோற்றம் ஒன்றே. இரண்டு கைகள், கால்கள், ஒரு சிரசு மாதிரியானவைகளே.

ஆயினும்,

நடத்தைகள் பலவிதம். மனிதன் அவனாகவே உருவாக்கிய வேற்றுமைகளோ பல்லாயிரம், நாடுகள் பல, அங்கு வாழும் மக்களுக்குள்ளும் பேதம் பல. இனம்,சாதி, சமயம், மொழி, கலாசரம் என எல்லமே வெவ்வேறானவை. ஒரே எண்ணங்களுடன் எல்லோரும் வாழ்கின்றார்களா? அதுவும் இல்லை.

ஒவ்வொரு பிரஜையும் தனக்குரிய மொழி, சாதி, சமய கலாசாரமே மேலானது என எண்ணிக் கொள் கின்றார்கள்.





அது மட்டுமல்ல வெளியே 'ஒன்றே குலம்' எமக்கு ஏது பேதம் என்பார்கள். ஆனால் தம்மோடு இணைந்து கொண்டவர்களிடமே "எங்கள் முன் பேச இவன் யார்?" எனக் கேட்பார்கள்.

தங்கள் சமூகமே பெரிது என்று பேசுபவர்கள், தனிப் பட்ட முறையில், தமது குடும்பமே மிகவும் உயர்ந்தது, செல்வாக்குள்ளது எனப்பேதம் காட்டுவார்கள்.

விரிந்த தேசத்தில் பல முன்னேற்றங்கள் பன்மடங்கு பெருகினாலும், தமக்குள் வேற்றுமைகளைப் பற்றி நிற்பதில் மனிதன் பிடிவாதமாகவே இருக்கிறான்.

எல்லாமே எனக்கு, எனது என்கின்ற தான் சார்ந்த எண்ணங்களை முதன்மைப்படுத்துவதை விடுத்துப் பொதுமைப் பண்பில் தன்னை இணைக்கத் தயங்கு கின்றான் மனிதன்.

ஆத்மீக நேயம் பற்றி விலாவாரியாக நாம் பேசுகின் றோம். ஆனால் அது சொல்லும் அன்பின் இறுக்கத்தைப் புரிந்து கொள்ள மறுக்கின்றோம். இது மனிதன் ஆண் டாண்டு காலமாகவே தனது பரம்பரை வாயிலாக அமுக்கி, அதனைப் பேணிக் காத்த அதீத பற்றுதலின் அடையாள மாகிவிட்டது.



RangaRakes
Tamilnavarasam.com

எல்லாம்கடந்த நிலையில், "ஒன்றுமே தேவையில்லை" எனச் சொல்லும் சாமிமார்களும், எல்லா பற்றுதல்களையும் குவித்து அத்துடன் சொத்து சுகங்களையும், படை பட்டாளம் போன்ற பக்த கோடிகளையும் வைத்துக்கொண்டு பற்றுதல் வேண்டாம் என பறை சாற்றுகின்றார்கள். என்ன கொடிய நடிப்பு இது!

எனவே பரந்த மனத்தை நாம் பெற்றிட நாமே எம்மை பக்குவப்படுத்தியாக வேண்டும். நாம் கற்கும் அறப் போதனைகளில் ஒரு வரியையாவது செயல் மூலம் காட்டும் மனவலிமையினை தருமாறு இறைவனிடம் கேட்க வேண்டும்.

நாளைய நல்ல விடியலை இன்றைய நல்ல செயல்களே உருவாக்கும்.எனவே என்றும் பேதமையில்லா அன்பு பாராட்டும் குணங்களே எதிர் காலத்தில் சகல உயிர்களையும் எம்மை நோக்கி அரவணைத்திட வழிகோலும்.

எமக்குள் ஓர் உருவம் நல்லதையே சொல்லிக் கொண்டிருக்கின்றது. அதை நாம் கேட்கத் தயாராக இல்லை. உபதேசங்கள் கேட்கப் பிடித்தமானதாக இருக்கின்றன. ஆனால் கடைப்பிடிக்கச் சந்தர்ப்பங்களைத் தட்டிக் கழிக்கின்றோம்.





சில சமயம் அவை எமக்குப் பிடிப்பதுமில்லை. எமக்குள் இருக்கும் அகங்காரம் ஒன்றைக் கேட்கும். அதனை மறுதலித்தும் காரியமாற்றும்.

"ஒற்றமையாக வாழ்வாய் ! அது நல்லதற்கே"என்று எமக்குப் புரியாதா? ஆனால் வலியற்றவனுடன் மோதிப் பழகி,அவனுடன் தோழமை கொள்வதைத் தவிர்க்கின்றோம்.


சகல துன்பங்களுக்கும் ஏக காரணம் மனிதன் ஒற்றுமையாக இருக்கப் பிரியப்படாமல் இருப்பதுதான். வேற்றுமைகளால் விளைவது எதுவுமேயில்லை. சாத்தியமான நல்ல காரியங்களையும் குரோதம் குலைத்துவிடும்.

எவரும் தங்கள் தனிப்பட்ட தனித்துவங்களை இழக்க முடியாது. வேறுபட்ட மாந்தர்களுடன் இணங்குவதால் தனித்துவங்களை நாம் இழந்துவிடுவோம் என அச்சப்படத் தேவையில்லை, இறுக்கமான அன்பு தனித்துவத்தையும் பாதுகாக்கும். அது வேற்றுமையில் ஒற்றுமையையும் உண்டு பண்ணவல்லதுமாகும்.

தினகரன்
ஞாயிறு மஞ்சரி
திகதி 11-09-2011



RangaRakes
Tamilnavarasam.com



# எச்சரிக்கை உணர்வு

> எச்சரிக்கையின்மையால் அச்சமூட்டும் விளைவு வரும்.
> நிச்சயப்படுத்தாமல் கருமங்கள் செய்ய வேண்டாம்.
> இச்சைப்பட்டு ஆராயாமல் கெட்டு, நொந்து
> இச்சமூகத்தில் சாதிக்க முடியாது, யோசித்து இயங்கு!

மேலதிக அவாவும், பொறுமை இன்மையும் எச்சரிக்கை உணர்வை வலுவிழக்கச் செய்து விடும். எதனையும் உடன் பெற்றுக் கொள்ள ஆசைப்படுபவர்கள், பின் விளைவுகளைப் பற்றி எண்ணிக் கொள்ளக் கால அவகாசத்தை தமது மனதிடம் கோருவதேயில்லை.

எச்சரிக்கையின்மையால் செய் கருமம் பாழாகக் கூடும். மனம் சோர்வடைந்து போகும். சின்னஞ் சிறிய





ஜந்துக்கள் கூட தம்மைப் பாதுகாத்துக்கொள்ள சர்வ ஜாக்கிரதையுடன் செயல்படுகின்றன.

கரப்பான் பூச்சியை துரத்தியடிக்க எம்மால் பல சமயம் முடிவதில்லை. சாதுரியமாக படுவேகமாக அவை ஓடிச் சந்து பொந்து இடுக்குகளில் நுழைந்து கொள்கின்றன. அவை எந்நேரமும் தமக்கு எதுவும் நிகழும் என்பதால் தம்மை சுதாகரித்த நிலையிலேயே வாழ்ந்து காட்டுகின்றன. இதுவும் இறைசெயல்.

ஆனால் ஆறறிவு மானுடன் என்ன செய்கின்றான்? எந்த வித ஆய்வும் இன்றி கஷ்டப்பட்டு உழைத்த காசை, ஊர் பேர் தெரியாத முகவரியற்றவர்களிடம் முதலீடு செய்கின்றான்.

வெளிநாடு செல்ல மிகக் குறைந்த கட்டணம் என எவர் சொன்னாலும் அவர்கள் பின்னே ஓடிக்காசையும், காலத்தையும் கரைத்த மனுசர்கள் எத்தனை எத்தனை பேர்? சும்மா இரந்து, ஏய்த்துப் பிழைக்கும் சமூக விரோதிகளுக்கு நிதியுதவி செய்வதே ஏமாளிகளின் தலையாய வேலையாகி விட்டது மிகப் பெரும் புத்திசாலிகளாகத் தங்களை வெளியே காட்டிக் கொள்பவர்களே அடிக்கடி ஏமாந்து போகின்றார்கள்.

ஆனால் தற்காலத்து சிறுசுகளை இலகுவில் ஏமாற்றி விட முடியாது. அவர்கள் எதற்கும் எச்சரிக்கையுடன்



RangaRakes Tamilnavarasam.com

இருக்கின்றார்கள். பச்சாதாபமாகப் பேசினாலும் இலகுவில் மசிந்து விடமாட்டார்கள். எச்சரிக்கை உணர்வு பெரியவர் களை விடக் குழந்தைகளிடமே அதிகமாக இருக்க வேண்டி யுள்ளது.

குழந்தைகள் ஒன்றாகப் பந்து விளையாடிக் கொண் டிருந்தனர். விளையாட்டில் குழந்தைகள் ஆர்வமுடனும், உற்சாகத்துடனும் பந்தை வீசியடித்து விளையாடும் போது, பந்து மைதானத்தினருகே உள்ள வீட்டினுள் விழுந்து விட்டது. பந்து விழுந்த திசையை நோக்கி ஓடிய குழந்தை பந்து விழுந்த வீட்டின் முன்னே போன போது வீட்டினுள் இருந்த ஒருவர் பந்தை எடுத்தபடி வெளியே வந்தார். குழந்தையைக் கண்டதும் விடயத்தைப் புரிந்து கொண்டார். குழந்தையை நோக்கி "பந்து வேண்டுமா ? அப்படியானால் இங்கே... வா... இந்தப் பந்தை உனக்குத் தந்து விடுகின்றேன்". என்றார். அவர் இப்படிச் சொன்னதுமே குழந்தை அவரைக் குறும்புடன் உற்று நோக்கியது "மாட்டேன் இந்தப் பந்தும் வேண்டாம்.. ஒன்றும் வேண்டாம் வேண்டாம் போ... போ.." என்றவாறே ஓடியே போய் தனது நண்பர்களுடன் இணைந்து கொண்டது.

அந்நியர்கள் என்றாலே தங்களைச் குழந்தைகள் சுதாகரித்துக் கொள்கின்றனர், அந்நியர்கள் என்ற உணர்வு வந்ததுமே அவர்களுடன் உடனே இணைய மறுக்கின் றனர்,ஆனால் வயது வந்தவர்கள் என்ன செய்கின்றார்கள்? எவரையும் உடனே நம்பிவிடுகின்றார்கள்.





பாடுபட்டு வளர்த்துப் படிப்பித்து ஆளாக்கிய செல்வ மகள், யாரோ, எவனோ, ஊர் பெயர் தெரியாத வனைக் கண்டதுமே காதல் கொண்டு அடுத்த சில நாட்களிலேயே வீட்டை விட்டேகி விடுவதும், பின்னர் அவனைத் திருமணம் செய்து பின்னர் ஏமாற்றப்பட்டுச் சிக்கிச் சீரழிந்த நாராகி முடிவில் நைந்து, நொந்து பெற்றோரிடமே சரணடைவதும் நாம் கேள்விப்படுகின்ற சில காட்சிகளில் ஒன்று தான்.

எதையுமே சிந்திக்காது ஆசைப்படுவதன் பின் விளைவுகளை உணராத பலர் அதனை முன் வினைப் பயன் என்று வேறு சமாதானம் சொல்லுவார்கள். எந்தத் தவறையும் ஒப்புக் கொள்வதே தங்கள் தன்மானத்திற்கே இழுக்கு என எண்ணபவர்கள், தங்கள் மனத்தையே மறுதலிக்க வைக்க எண்ணும் குறுமதியாளர்கள்.

பெறுமதி மிக்க காலத்தினை சிறு மணித்துளியின் கவனக்குறைவினால் விரயம் செய்வது வருத்தத்திற்குரியது. நெருக்கடிகளைக் காரணம் காட்டுபவர்கள், பிறர் நெருக்கு தல்களுக்குள் தள்ளப்படுபவர்கள், எதையும் சிந்திக்க முடியாத நிலைக்குள் உட்படுகின்றார்கள்.

எல்லா நிலையிலும் மனத்தை ஒரு நிலையில் வைக்க இயலாமல் இருக்கின்றது. வெளியில் இருந்து பார்ப்பவர்கள் எதையும் பேசலாம், ஆனால் ஒருவர் மனம் சலனப்படும் போது சோதனைகளை வெல்வது எப்படி? இதுவே பெரிய வினாவாக உள்ளது.



RangaRakes
Tamilnavarasam.com

எங்களை நாம் என்றும் ஸ்திர நிலையிலேயே வைத்துக் கொண்டேயாக வேண்டும். எல்லோரையும் நம்பித்தான் ஆக வேண்டும் என்பதில்லை ஆனால் கேட்க வேண்டிய உபதேசங்கள்,அறிவுரைகளை எடுத்த எடுப்பில் நிராகரிக்கவும் கூடாது.

உண்மையான நோக்குடைய உங்களை நேசிக்கும் அனுபவம் மிகுந்தவர்களிடம் ஆலோசனைகளைக் கேட்க வேண்டும். ஆனால் அனுகூலம் தருபனவற்றைத் தெரிவு செய்ய அறிவிற்கு வேலை கொடுப்பீர்களாக. உங்களால் முடிந்தவரை உங்கள் பலத்தில் நம்பிக்கை கொண்டு வாழ்க்கையின் பாதைகளை நீங்களே சமைப்பீர்களாக!

எங்கள் வாழ்க்கைக்கு நாங்களே தலைமகன் என்பதனை எக்கணமும் மறக்கலாகாது. உங்கள் வாழ்வின் தலைமைத்துவத்தை நீங்களே நிராகரிக்க உங்களுக்கு நீங்களே கட்டளையிட்டுக் கொள்ள வேண்டாம், நல்லன வற்றில் தீவிரமாக இருங்கள், தீயனவற்றில் எச்சரிக்கை. இப்படி இருந்தால் ஏது பயம்?

தினகரன்
வாரமஞ்சரி
04-09-2011







# தன்னை ஆட்சிப்படுத்தல்

" தன்னை நிலைப்படுத்தினால்
உன்னில் பலம் பெருகும்!
மனம் திண்மையானால்
என்ன துன்பமும் எய்திடாது!

தங்களது பலத்தை வளர்ப்பதை விடுத்து அதனைக் கரைப்பதிலேயே முனைப்பாக இருக்கும் பிரகிருதிகள், சுருதியில்லா சங்கீதம் போல் வாழ்வின் வளத்தைக் சுருக்கிச் சீரழிக்கின்றார்கள்.

எல்லா வசதிகளையும் தம்மிடம் வைத்துக் கொண்டு, இம்மியளவும் சந்தோஷமில்லாமல், பயந்து நெளிந்து ஏன் இவர்கள் வாழ்கின்றார்கள்?



RangaRakes
Tamilnavarasam.com

சுய பலத்தில் நம்பிக்கை கொள்ளாது, பிறர் அறிவை மட்டும் அல்லது அவர்களின் துணையை மட்டும் பெரிதென எண்ணித் தங்களை நம்பாமல் ஜீவனம் செய்வதில் எப்படித் திருப்திப்பட்டு வாழ இயலும்?

கடையில் போய் பொருட்களைத் தெரிந்து எடுக்க, பேருந்தில் தனித்துப் பயணம் செய்ய, பத்துப் பேருடன் நிமிர்ந்து பேசத்தைரியம் இல்லாத நபர்களை நீங்கள் கண்டதில்லையா?

எதற்கெடுத்தாலும், தனது மனைவியிடம் கேட்க வேண்டும் எனச் சொல்பவர்கள், தனது நண்பர்களிடம் கேட்டுச் சொல்கின்றேன் என்பவர்கள் ஒரு வினாடிகூட, தங்களது கருத்து என்ன எனத் தங்களுடன் உள் நிற்கும் மூளையிடம் கேட்பதாயில்லை

பிறரிடம் ஆலோசனை கேட்கக் கூடாது என்பதில்லை. பிறர் கருத்தையும் உள் வாங்கி, தனது அறிவுடன் பகுப்பாய்வு செய்து அதனைச் செயலுருவில் கொணராது எடுத்த எடுப்பிலேயே ஒரே பக்கமாகப் பிறர் அறிவுடன் சார்ந்திருப்பது சரிதானா?

தன் புத்தியை நம்பாதவர்கள் முதலில் ஒன்றினை உணர்தல் வேண்டும். எம்முன்னே இருக்கும் நபர்கள் எல்லோருமே எங்கள் மீது அக்கறையுள்ளவர்களா? இவர்களில் சிலர் மறை முகமான எதிரிகளாகவும்





இருக்கலாம், அல்லாது விடின் உலக ஞானத்தில் போதிய அனுபவம் இல்லாதவர்களாகவும் இருக்கலாம். இவை பற்றி எந்தவித எச்சரிக்கை உணர்வின்றி இயங்குதல் ஆபத்தானதேயாம்.

நீங்கள் செய்யும் காரியங்களின் விபரீதத்தை உங்களுக்கு ஒவ்வாதவர்கள் ரசிப்பார்கள். உங்கள் பிரச்சினைகளை அவர்கள் விருப்புடன் செவிமடுப்பதனால் அவை ஆறுதலாகப் படலாம். இதுவும் ஓர் அறிவு மயக்க நிலை என்பதைக் மறந்துவிடக் கூடாது.

எதற்கும் உணர்ச்சி வசப்படாமல் நிதானமாகச் செயற்பட்டால் உங்களது பிரச்சனைகளுக்கான தீர்வை எட்டுவதில் தெளிவு காண்பதுடன் சுய அறிவின் ஆதிக்க சிந்தனையும் வலுப்படும். ஆனால் இதில் ஆணவச் செருக்கு உள்நுழைய இடமளித்தலாகாது பெரியோர் சகவாசம், நல்ல அறிவுசார் நூல்களைப் படித்துணர்தல்,ஒழுக்கமான நண்பர்களுடன் பகை கொள்ளாதிருத்தல் போன்ற இக் குறிப்புக்களை நோக்குக. அத்துடன்,

- ◆ மமதையின்றி பலதரப்பினருடனும் பழகுதல்
- ◆ சமூகத்தின் மீதான அக்கறை.
- ◆ கல்வி , பொருளாதார வசதிகள் கிடைத்தமையினால்,



RangaRakes

Tamilnavarasam.com

தமது முடிவைப் பிறர் ஏற்க வேண்டும் என்கின்ற எண்ணத்தை எக்கணமும் கொள்ளாதிருத்தல்.

இவற்றை எமது உள்ளத்தில் நிரந்தரமாக நிறுத்தி னால் சுய ஆளுமை, சுய அறிவுடனான நம்பிக்கை அதிகரிக்கும்

சுய அறிவு விருத்திற்குப் படித்தால் மட்டும் போதாது. இன்று கல்வி கற்ற பலரும் துணிச்சலுடன் செயல் புரிகின்றார்களா என்பதே சந்தேகத்திற்குரியது.

பல்வேறு பிரச்சினைகளுடன் மோதுண்டு மோது ண்டு அதிலிருந்து மீண்டு புறப்படும் போதே மனிதன் எழுச்சி கொண்ட வீரனாக, அனுபவ ஆளுமையுடன் எழுகின்றான்.

புத்தகத்தை மட்டும் அசை போடுவதால் மனதின் விசை அதிகரிக்காது. துன்பங்களையும் ஏற்று இடர்களை தமது அனுபவ அறிவால் எறிந்தாலே மற்றவர்களுக்கு உதவி நல்கும் திறன் கை கூடும்.

ஒன்றுமே தெரியாது, துன்பமே புரியாது, இன்பங்க ளின் சூட்சுமம் உணராது விடின். எது பற்றியும் ஒருவர் பெருமை கொள்ளுதல் தகாது.

சாதனைகளைப் படைக்க பெரிய பெரிய பிரச்சினை





களே பேருதவி புரிகின்றன. மேலும் ஒருவன் சுயமாகப் பெற்ற சாதனைகளுடன் தான் மட்டும் பயனடையாது, அது ஒரு சமூகம் அல்லது தான் சார்ந்த உலகிற்கான வெற்றி எனக் கருதினால் தன் முனைப்பு விலகி மேலதிக ஆளுமைகளை அவன் தனக்குள் உருவாக்குபவனாகிறான்.

எங்களது எந்த ஒரு காரிய சித்திக்கும் மூலவேர் எங்கள் சுயபலம்தான். குழந்தையாக இருக்கம் வரை தாய் தனது குழந்தைக்குப் பாலூட்டிப் பின்னர் படிப்படியாக உணவு ஊட்டுவாள். வயது அதிகரிக்க அதிகரிக்க அவனே வளர்ந்து தன்னையும்,தாய் தந்தையாரையும், சமூகத்தை யும் போஷிக்கும் வல்லவனாகின்றான். இது உலக நியதி.

சோம்பல், அறியாமையுடன் வாழ்ந்தால் பலத்தை எப்படிப் பற்றிப்பிடிக்க முடியும்? முதலில் எம்மை நாம் ஆட்சிப்படுத்துவோம். மனிதன் தனது வளர்ச்சியை மட்டுமே நோக்க வேண்டுமேயொழிய, தளர்ச்சிக்கான வழியை அல்ல.

நல்ல வழியில், தீரமுடன் வாழ்வது முடியாத செயலு மல்ல, எங்களை நாம் அங்கீகரிப்போமாக! இதனால் சிந்தனை, செயல் முன்னேற்றமடையும்.

தினகரன்
வார மஞ்சரி
16-10-2011



RangaRakes Tamilnavarasam.com



# பொய்மையாளர்கள்

பொய்மையாளர்கள் முன் போக வேண்டாம்.
வாய்மைச் சிறப்பின்றி ஏது நல் வாழ்வு?
தேய்ந்து உருக்குலையாமல் நாம்,
வான் மேல் உயர்வதே நீதியான வாழ்வு.

பொய் பேசுவதையே பிரதான கொள்கையாகக் கொண்டுள்ள பொய்மையாளர்கள் சமூக நோயாளர்களா கவே கருதப்படுவர்.

உடல் நோயிலும் கொடிய உள நோயைத் தாராள மாகக் கொடுக்கும் கொடியவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு





சந்தர்ப்பத்தில் சிற்சில பொய்களைப் பேசுவது தவிர்க்க முடியாத வொன்றாக உள்ளதெனச் சொல்லுகின்றார்கள்.

ஆனால் எந்த விதமான கெடுதல்களையும் செய்யாத மனிதரிடம் பொய் பேசியே மோதி வேடிக்கை பார்க்கும் நண்பர்கள் செயலை என்ன என்பது?

பொய்யுரைக்காமல் எவரும் வாழ முடியாதா? உண்மை பேசுவது அவ்வளவு கஷ்டமாகவா இருக்கின்றது?

வாய்மை பற்றி வாய் கிழியக் கத்தும் பல ஆசாட பூதிகள், அது, தனக்காக அல்ல, பிறர் பொருட்டேயாகும் என்பது போலவே நடந்து கொள்கின்றார்கள்

ஒருவர் பொய் பேசாமல் இருப்பது போல மேலான செய்கை பிறிதில்லை.

அதே சமயம் ஒருவர் பேசுவது உண்மையானதா, அல்லது திரிபுபட்டதா என அறியாமல் விடுவதே சுத்த அறிவீனமானதேயாம்.

உண்மையாக வாழும் நல்லவர்கள்கூட எவரையும் களங்கமின்றி நோக்குவதால் சில சமயம் ஏமாளியாகி விடுவதுமுண்டு.

நல்லவர்களாக எம்முன் ஜீவிக்கும் எல்லோருமே



RangaRakes
Tamilnavarasam.com

வல்லவர்களாகவும் புல்லர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் திறமையடையோராகவும் இருக்க வேண்டும்.

இன்று நல்ல ஜீவன்கள் கூட கண்டவர் கூற்றையும் நம்பிப்படும் அவஸ்தைகளை நாம் கண்டு கொண்டிரு க்கின் றோம். கொடும் கூற்றுவனை விடக் கொடியவர்கள் தான் பொய்மையாளர்கள். வாய்மை பற்றியே தெரிந்து கொள்ளாதவர்கள் செய்யும் செயலில் வறியவர்கள் என்றால் அது மிகையல்ல!

கொடிய வார்த்தைகளைத் செந்தணலாக உதிர்வ தும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சுய நல நோக்குடன் வார்த்தை ஜாலம் புரிவதும் வாய்மைக்கு விரோதமானவை.

வாழ்க்கையின் நெளிவு சுழிவுகளைக் கண்டறிய வேண்டும் என்று பெரியவர்கள் புகல்வார்கள். ஆனால் துன்மார்ககர்கள் நெளிவு, சுழிவு என்பதற்கு வேறுவிதமான அர்த்தங்களையே கற்பித்து விடுகின்றார்கள்.

செய்யும் அடாவடித்தனங்களில் இருந்து சட்டத்தின் ஓட்டைகள் வாயிலாக தப்பிப்பது எப்படி? சனங்களை ஏமாற்றும் அதே வேளை அதுவே சரியான கொள்கை என அவர்களை நம்பச் செய்வது போன்ற கைங்கரியங்களை எவ்விதம் புகுந்து விளையாடிச் செய்வது என்ற கலை தான் நெளிவு, சுழிவு என்பதன் முழு அர்த்தம் என அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்.





பொய்யைச் சரளமாகப் பேசினால் சகல துஷ்டத்த னங்களும் கூட வரும். ஒரு பொய் சொன்னால் ஓராயிரம் துன்பங்களைச் சுமக்க வேண்டிவரும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சொன்ன சொல்லைக் காப்பாற்றுதல் என்பது சொன்ன பொய்யான சொற்களைத் தொடர்ந்து காப்பாற்றியேயாக வேண்டுமென்பதற்காகவே என முடிவுறா நிலையில் மாறுபாடாகப் பேசித் தீர்க்கின்றார்கள்.

மகிழ்ச்சி நிரந்தரமாக அமைந்திட வேண்டும் என எண்ணுபவர்கள் தவறான வாழ்க்கையைத் தேடி ஓட மாட்டார்கள். எதாவது சின்னச் சின்ன பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு மனம்மறுத்திட, உதடு பிசகி தவறான வழியில் நடந்தால், இறுதியில் எதிர்பார்க்கும் சந்தோஷங்கள் எட்டாக்கனியாகிவிடும்.

நல்லவை நடந்திடவும் பொறுமை காத்திட வேண்டும். துன்பங்கள் துரத்துகின்றன எனவே அதிலிருந்து விலகிட பொய்யில் சரணடைவதில், என்ன நியாயம் இருக்கின்றது ஐயா?

மகிழ்ச்சிக்கான வழி வாய்மையுடன் இணைந்ததே என்பதைப் புரிந்தால் எல்லோருமே எம்மை நேசிப்பதுடன் உலகமே எமக்கு இன்பமயமாகிப் போய்விடுமன்றோ!

மானுட நேயம் என்பது எக்கணமும் எம்மால் எவருக்கும் ஊறு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதுடன் இன்



RangaRakes
Tamilnavarasam.com

சொல்லாலும் நாம் செய்யும் செயலாலும் அனைவரையும் அரவணைப்பதுமாகும்.

உயிர்களிடம் பரிவு உள்ளவன் செப்பிடும் வார்த்தைகளின் உண்மைத் தன்மையே பிறரை அவர்பால் வசியப்படுத்துவதுடன் அவர்கள் செய்யும் பணியையும் உற்சாக மேற்றுகின்றது.

வாழ்க்கை வெறும் அதிசயமல்ல, இயல்பாக வாழ்ந்தால் அதுவே நமது வசமாகும் மிக எளிய வழி நல்லபடி நம்மை நாம் ஆக்குவது தான்.

தவறான வழிகள் எம்மைச் சஞ்சலப்படுத்துகின்றன. எதற்கு இந்த வீண் வம்பு?

இது தவறு என உணர்ந்தாலே போதும், நல்ல பண்புகள் உடன் பற்றிக்கொள்ளும். நாவைச் சுத்தப் படுத்தினால் வார்த்தைகளின் சுவை பன்மடங்காகும். பரிமளித்து இதயத்தை இனிமையாகும் .

தினகரன்
வாரமஞ்சரி
20-09-2011







# இன்சொல் பேசினால் இல்லம் சிறக்கும்

காற்றுப் புக முடியாத சூன்ய பிரதேசங்களிலும் நல்ல வார்த்தைகள் உட் சென்று அவ்விடத்தினைப் புனிதமாக்கும். அகங்காரப் பேச்சுக்களால் இல்லம் அமங்கலமாகி விடும். இன்றைய வாழ்விற்கும், நாளைய வாழ்விற்கும் இல்லம் சிறப்பிடமாக அமைந்திட வேண்டுமேயானால் என்றும் இனிமை பொங்கப் பேசிடுக! குடும்ப உறவு கூறாகக் காரணம், கணவன் மனைவியிடம் எழுகின்ற வாய்த்தர்க்கமே தான். நல்ல மனமும், வசீகரப் பேச்சும், உங்களிடம் காணப்பட்டால் என்றும் அழகு உங்கள் பக்கத்திலேயே சுற்றி நிற்கும் .

வீட்டுக்குள் சீற்றத்துடன் பேசி வந்தால், வீடே நாற்றமாகி விடும். சீற்றமுடனான பேச்சுக்கள் காற்றையே அசிங்கம் படுத்திவிடும்.

கணவனும், மனைவியும் சற்றேனும் சளைக்காமல், விட்டுக் கொடுக்காமல், கொடும் பகைவனைப் போல்,



RangaRakes

Tamilnavarasam.com

கோபத்தையே ஆயுதமாக்கினால் மனை இனிமையை இழந்து போகும்.

கொஞ்சம் கறைபடிந்த உடைகளே கண்ணுக்குப் பெரிதாய் தோன்றுகின்றன, குடும்பத்தின் குரோதங்களை மற்றவர்கள் கண்டு கொள்ளாமல் இருப்பார்களா? எங்களுக்குத் தெரியாத எங்களது தவறுகள். மற்றவர்களுக்குப் பட்டவர்த்தனமாகத் தெரிந்து விடுகின்றன.

குழந்தை குட்டிகளுடன் இணைந்து வாழ என்றும் மனத்தில் சினத்தை அடக்குக! கல்விக் கூடங்களில் படிக்க முடியாத அனுபவப் பாடங்கள் வீட்டில் இருந்தே ஆரம்பிக்கின்றன. சமூகத்தில் ஆற்றும் எமது நடத்தைகள், இல்லத்தில் நாம் வாழும் முறைமையில் பிரசவிக்க ப்படுகின்றன.

பெற்றோர்கள் வரும் கால சந்ததியினருக்கு உணவு, உறைவிடம் கொடுத்தால் மட்டும் போதுமா? எப்படி அன்புடன் பழகுவது, அனுசரிப்பது என்பதைச் சொல்லிக் கொடுக்காமல் விட்டால் எந்தச் செல்வங்களை வழங்கினாலும் அவற்றினால் ஏது பயன்?

பெரிய அந்தஸ்துக்கள், பதவியுடன் இருக்கும் ஒருவருடைய இல்லத்திற்கு யாராவது வந்த வேளையில் அவரது மனைவி, பிள்ளைகள் சற்றும் சங்கோஜமின்றி வார்த்தைகளில் உஷ்ணமேற்றி வீட்டுக்காரருடன் பேசினால் வந்தவர்கள் என்ன கருதுவார்கள்? இவர் மீது வைத்துள்ள மதிப்பு அர்த்தமற்றதாகிவிடுமென்றோ!





இன்று சில வீடுகளில் உள்ள மனிதர்களின் நிலை இத்தகையதே. மனதை வசப்படுத்தி அடக்க முடியாமல், பிறர் கவனம் பற்றிக் கிஞ்சிந்தித்தும் பொருட்படுத்தாமல். இஷ்டம் போல் உசாவி வருகின்றார்கள். குடும்பத்தில் கோபம் இருந்தால், அது சாபமிட்ட வீடாகி விடும்.

வெம்மையான மனதைக் குளுமையூட்டி என்றும் சாந்தமுடன் வைத்துக் கொள்ள வேண்டும். நல்ல பழக்கங்களே நாகரீகமாக வாழ வகை செய்யும். புத்தகத்தில் இவற்றைப் படிக்கத் தேவையேயில்லை.

அன்பு என்பதே இயல்பாக மலர்வது. தனது துன்பங்களை மட்டுமல்ல, பிறர் துன்பங்களையும் களைவதும் இதுவேயாம்.

அன்பான குடும்பம் வறுமையிலும் செம்மையாகவே வாழும். ஒரு சோற்றுப் பருக்கையாயினும் ஒன்பாதாகப் பகிர்ந்துண்பவனே மனிதன். கோடி பணவரவிலும், நாடும் நல்லவர் சேர்க்கை அன்பான அறவழிக்குள் இட்டுச் செல்லும் வல்லமையுள்ளது.

காற்றுப் புகமுடியாத சூன்ய பிரதேசத்திலும் நல்ல வார்த்தைகள் உட்சென்று அவ்விடத்தைப் புனிதமாக்கும். நல்ல மனதுடன் நடந்தால், வீடு குதூகலம் என்னும் பெருவிருந்து தான்.

தாரத்தை மதிக்காத கணவனும், கணவனைக் கண்டு கொள்ளாத மனைவியும், குடும்ப வாழ்வில் உருப்பட முடியுமா?



RangaRakes

Tamilnavarasam.com

அகங்காரப் பேச்சுக்களால் வீடு அமங்கலமாகும். கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்காமல் கோபத்தை அணிகல னாக்கினால், மனம் பிணியாகும். உணர்வார்களா?

இன்றைய வாழ்விற்கும், நாளைய வாழ்விற்காகவும் அமைந்துள்ள ஆரம்பப் பயிற்சிப் பாடசாலை வீடு தான். நல்ல வாழ்வைச் சிருஷ்டிக்கும் கோவில் இதுவே என்பதால் என்றும் இதனைத் தூய்மையுடன் பேணுதல் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களின் பெரும் பங்கு அல்லவா?

குடும்ப உறவுகள் சீர் கெடுவதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தால், இதில் முக்கியமானது, கணவன், மனைவியிடையே ஏற்படுகின்ற வாய்த்தர்க்கம் தான்.

சாதாரணமாக ஒருவரோடு ஒருவர் ஹாஸ்யமாகப் பேசிக் கொள்வார்கள். ஏதாவது ஒரு வார்த்தை தெரியாத்த னமாகச் சொல்லி விட்டால், அது போதும். சண்டை செய்யத் தயாராகி விடுகின்றார்கள்.

எங்கோ, ஆரம்பித்து எங்கோ போய் முடியும் துன்ப குளியல்கள் எதற்கு? வார்த்தைகளில் கட்டுப்பாடு இன்றேல் முட்டாள் தனமான முடிவுகள் ஏற்பட்டுவிடும். பத்துப் பேர் முன்னிலையில் பேசுவதற்கு முன் யோசிக்க வேண்டும். தனது தோழியர்கள் முன் கணவன், வேடிக்கையாகச் சொன்ன வார்த்தைகளை மறந்து விடாமல், அதனையே பூதாகரமான விடயமாகப் பெருக்கி, எதிர் வாதம் செய்து





கணவனை அவமானப்படுத்துவது போல பேசினால், என்ன தான் முடிவு நிகழும்?

இரு மனங்கள் முரண்படக் கூடாது. எவர்க்கும் தன் மானம் பெரிது. சின்ன நாய்க்குட்டியையும் சீண்டக் கூடாது. அது முதலில் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளும். அப்புறம் கடிக்கும். குடும்பத்திலும் இதே போல் தான் நடக்கின்றது.

என்றும், எப்பொழுதும் இன் சொல் பேசுதல், இன்பமான குடும்பத்தில், நித்திய மலர்ச்சியை உண்டு பண்ணும். அழவைத்து வேடிக்கை பார்க்கக் கூடாது.

நாம் உன் நோக்கமின்றிச் செய்யும் சின்னச் சின்னச் சமாச்சாரங்களின் வெளிப்பாடுகள் மற்றவர் களுக்குப் பாரிய மனச் சிதைவுகளை உண்டு பண்ணலாம்.

ஒருவர் நெஞ்சத்து உணர்வுகளை இன்னும் ஒருவர் உடனே புரிந்து கொள்ள முடியாது. ஆனால் சாதாரணமாக எவருடனும் மிக இயல்பாக அன்புடன், பரிவுடன், பேசினாலே போதும், மற்றவர் நிலை பற்றி எமக்கு வேறு எதற்கு ஆராய்வு? வேண்டுமென்றே அவர்களைச் சஞ்சலப்படுத்தவெ எதுவுமே செய்தலாகாது.

எமது பேச்சில் தூய்மைத் தன்மை பேணப்படல் வேண்டும். அடுத்தவர் இயல்புகள் பற்றி வீண் விவாதங்கள் எதற்கு?

எல்லோரும் விரும்புவது அன்பான பேச்சுக்களைத்



RangaRakes


Tamilnavarasam.com

தான். உங்கள் கடுகடுத்த பேச்சினால், முறைப்பான பார்வையினால் எந்தவித பயனும் ஏற்படப் போவதில்லை. அழகாக நல்ல மனதுடன் பேசுங்கள். அப்புறம் உங்களைச் சுற்றி எத்தனை எத்தனையோ இதயங்கள் குவிந்து நிற்கும் பாருங்கள் !

தினகரன்
வார மஞ்சரி
27.03.2011







—La e con ele, el; la o con la erre, or; la d con la e, de...

# அனுபவங்கள் தரும் அர்த்தங்களைப் புரிந்துகொள்க!

எல்லோருடைய அனுபவங்களுமே, அவரவர்களுக்கு அற்புதமானவைகயே. எவருடைய அனுபவங்களும், ஏற்கக் கூடியதாயின் அதனை ஏற்றுக் கொள்க! பணம், பதவியில் உள்ளவர்கள் எதைச் சொன்னாலும் அதனை வேதவாக்காகக் கொண்டால் உண்மைகளை மறுப்பவர்களு மாவீர்கள், நல்ல விஷயங்களை அனுபவரீதியாக நீங்கள் கண்டால் அதனால் மற்றவர்களும் நலம் பெறச் செய்வதே அழகு. துஷ்டர் என அறிந்தும் அவர்களிடம் ஆலோசனைகளைப் பெறுதல் அறிவீனம். வெற்றிகளால், மதியிழக்கலாகாது, தோல்விகளூடாகப் பெறும் அனுபவங்களின் அர்த்தங்களையும் புரிந்து கொள்க! கசப்பான அனுபவங்களூடாகவும் எதிர்காலக் காரிய சித்திகளை நிச்சயம் பெற முடியும் .

எந்தத் தராதரத்தை உள்ளவர், எவராயினும் அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் எல்லாமே, அவரவரைப் பொறுத்தவரை அவை அவருக்குப் பெறுமதி வாய்ந்தவைகளே!



RangaRakes Tamilnavarasam.com

ஏற்கக் கூடிய நல்ல பயனுள்ள அனுபவங்களை மட்டும் கிரகித்து, ஏற்ற பயனை ஒரு பாடமாகக் கொள்ள வேண்டும். யாராவது தமது அனுபவங்களைச் சொன்னால் நாம் அவர்களை ஏளனமாக நோக்கிக் கிண்டல் பண்ணக் கூடாது.

ஒருவரின் தராதரத்தை வைத்து அனுபவங்கள் உற்பத்தியாவதில்லை. நான் பெற்ற அனுபவமே பெறுமதி யானது என விவாதம் செய்வது கேலிக்குரிய செயல்.

இன்னும் சிலர் இருப்பார்கள், யாராவது அந்தஸ்தில், பணபலத்தில் தங்களை விட மேல் மட்டத்தில் இருந்தால், அவர்கள் எதனைச் சொன்னாலும் அதுவே வேதம் எனச் சொல்லித் திரிவார்கள். அவர்கள் வார்த்தை களை, ஒரு நல்ல அனுபவபூர்வமான பேச்சு எனச் சொல்லி உள்ளப் புளகாங்கிதம் அடையுமாற் போல் பேசுவார்கள்

பலர் தங்கள் அனுபவங்களுடன் மிகப் பெரிய கற்பனைக் கதைகளையும் புனைந்து நல்ல பொழுது போக்கான கதையாகச் சொல்லிக் கொள்வார்கள். இந்தக் கதைகள் வெறும் புளுகு எனப் பலரும் சொல்ல முனைந் தாலும், அவர் மனம் புண்படும் எனக் கருதி வெளிப்படை யாகச் சொல்ல மாட்டார்கள்.

எல்லாக் குழந்தைகள் முன்பும் எமது அனுபவக் கதைகள் எடுபடாது. சற்றே பொய் கலந்திருந்தாலும்





குழந்தைகள் அதனைக் கண்டு பிடித்துப் பகிரங்கப்படுத்தி விடுவார்கள்.

வாழ்க்கை அனுபவம் என்பது வெறும் கேலிக் குரியது அல்ல. சில சமயம் வேடிக்கையான சுவரஸ்யமான சம்பவங்களும் எமக்கு ஏற்பட்டு விடுவதுண்டு. ஆனால் எல்லா விடயங்களுமே மனதைத் தொட்டு விடுவதுமில்லை. பலவற்றையும் மறந்தும் விடுகின்றோம்.

சில நல்ல பசுமையான நினைவுகளை மட்டுமல்ல, வேண்டாத துன்ப மூட்டும் நினைவுகளையும், சுமந்து திரிகின்றோம். எனினும் நாம் மனதை விட்டு மறந்து விட வேண்டும் என எண்ணுபவை பலவும் எம்மைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு, எம்மை சிறைப்பிடித்து விடுகின்றனவே என்ன செய்ய?

எனவே நாம் துன்பப்படும் அனுபவங்களூடாகவும் எமது வாழ்வை செப்பமூட்டும் வழி எதுவோ, அதன் பாதையில் எமது மனோ பலமூடாக எங்களை நாம் பலப்படுத்தியே தீர வேண்டும்.

தோல்வியினால் ஏற்பட்ட அனுபவங்கள் தான் பலரையும் தலைவர்களாக்கியமையை நாம் அறிவோம். ஒரு விஞ்ஞானி ஒரே தடவையில் தனது பரிசோதனை களில், வெற்றி பெறுவதில்லை.

எங்கோ ஓரிரு வெற்றிகள் சில சமயம் திடீர் என ஓர் அற்புத நிகழ்வாகக்கிட்டி நிகழ்ந்து விடலாம். எனவே



RangaRakes
Tamilnavarasam.com

என்றுமே நாம் திடீர் என நிகழும் அதிசயங்களை நம்பி எமது காலத்தை ஓட்டுவதைப் போல் அறிவிலித்தனம் வேறு ஏது?

அதிஷ்ட லாபச்சீட்டை வாங்கி விட்டு அதை நம்பி கடன் வாங்கக் கையை நீட்டக் கூடாது. ஒருவரின் பயன் தரும் அனுபவங்களைக் கருத்தில் கொள்ளாமல் பரீட்சாத்த மாகக் காரியமாற்றுவதால். ஏற்படும் பின் விளைவுகள் ஆபத்தானவை. படித்தவர்கள் கூடச் சில சமயங்களில் இது விடயத்தில் முட்டாள்களாக செயற்படுவதுண்டு.

ஒருவரிடம் நாங்கள் பெறும் பணம் ,சொத்துக்களை விட நல்ல அனுபவங்களை ஒருவரிடம் எந்தவித மமதையு மின்றி கேட்டறிந்து அதன் மூலம் பயன் பெறுவதே மிக உன்னதமானதாகும். அனுபவ ஞானம் கூட எம்முடன் இருந்து எம்மை வழி நடத்தும்.

ஆயினும் நாம் ஒரு ஆலோசனையை கண்டவர்க ளிடமும் கேட்டுவிட முடியாது. ஒரு சிலருக்கு, மற்றவர் "நான் சந்தோஷகரமாக இருக்கின்றேன்" எனச் சொன்னாலே அறவே பிடிக்காது.

எனவே

"ஐயா, நான் சிறு வியாபாரம் செய்து பிழைக்க விரும்புகின்றேன். உங்கள் அனுபவங்களைச் சொல்லி எனக்கு உதவி புரியுங்கள்" என எல்லோரிடமும் கேட்டு விட முடியாது.





நாம் கேட்கக் கூடியவரிடம் தான் கேட்க வேண்டும் ஏதோ கொஞ்சம் தெரிந்தவராயிற்றே என அவர்களிடம் போய் ஆலோசனை கேட்க முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக அனுபவங்களைக் கேட்டு அறிந்து, நிறைவைப் பெற முயற்சி செய்யுங்கள்.

நாம் பிறருக்குக் கொடுக்கும் "மகிழ்ச்சி" எதுவெனில், எமது நல்ல அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து அவர்களுக்கு மேலான நல் வாழ்வை அமைப்பதற்கான முறைகளை, சூழல்களை உருவாக்குவதேயாகும்.

நல்ல விஷயத்தைத் தெரிந்தால் அதை மற்றவர் களுக்குச் சொல்லாமல், தெரியவிடாமல் மறைப்பது போல தெய்வத்துக்குப் பிடிக்காத செயல் வேறில்லை. நல்லதை மறைப்பது மானுட நாகரீகமும் அல்ல. நாம் ஒரு நல்ல உலகப் பிரஜையாக இருக்க வேண்டுமானால், பொதுமை யான நற் பண்புகளில் துலங்க, முனைப்புடன் இயங்க வேண்டும்.

எந்த இனத்தவராயினும், எந்த நாட்டினைச் சார்ந்த வராயினும் சரி அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய நல்ல விஷயங்களை உடன் கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவர், அவர் யாராக இருப்பினும் கூட அவர் எமக்கு அனுபவபூர்வமான தகவல்களைச் சொல்லுமிடத்து செவி மடுத்துக் கேளுங்கள்.



RangaRakes

Tamilnavarasam.com

சங்கோஜமும், காழ்ப்புணர்வும், மேலாதிக்க உணர்வுகளும், பிறர் அனுபவ மொழிகளை கேட்கத் தடை செய்கின்றன. நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பலதும் இருக்க, வேண்டா விஷயங்கள் எமக்கு எதற்கு?

தினகரன்
வார மஞ்சரி
03 .04.2011



RangaRakes
Tamilnavarasam.com

# கோழைகளாய் வாழுவதோ...?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

*வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 04*

*சிந்தனைக் கட்டுரைகள்*

RangaRakes Tamilnavarasam.com

### நூலாசிரியர் பருத்தியூர் பால. வயிரவநாதன் எழுதி வெளியிட்ட "வாழ்வியல் வசந்தங்கள்" நூற் தொகுதிகள்

1. உண்மை சாஸ்வதமானது - பாகம் - 01
2. அம்மா - பாகம் - 02
3. சுயதரிசனம் - பாகம் - 03
4. கோழைகளாய் வாழுவதோ? - பாகம் - 04
5. ஞானம் - பாகம் - 05
6. கணப்பொழுதேயாயினும் யுகப்பொழுதில் சாதனை செய்! - பாகம் - 06
7. சும்மா இருத்தல் - பாகம் - 07
8. உண்மைகள் உலருவதில்லை! - பாகம் - 08
9. உண்னோடு நீ பேசு! - பாகம் - 09
10. நான் நானே தான்! - பாகம் - 10
11. வெறுமை - பாகம் - 11
12. காதலும் கடமையும் - பாகம் - 12
13. அக ஒளி - பாகம் - 13
14. உன்னை நீ முந்து! - பாகம் - 14
15. சுயபச்சாதாபம் - பாகம் - 15
16. மௌனம் - பாகம் - 16
17. மரணத்தின் பின் வாழ்வு - பாகம் - 17
18. சிந்தனை வரிகள் - பாகம் - 18



# பொருளடக்கம்


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1) | அவமானப்படுத்துதல் அத்து மீறலே! | 16 |
| 2) | பொறாமையெனும் பெரும் தீ | 24 |
| 3) | கோழைகளாய் வாழுவதோ? | 32 |
| 4) | எழுச்சி | 40 |
| 5) | வீழ்ச்சி | 49 |
| 6) | இல்லறம் | 58 |
| 7) | உண்மை | 69 |
| 8) | பொய் | 78 |
| 9) | விதைத்தல் | 87 |
| 10) | ஜனனம் | 98 |
| 11) | மரணம் | 107 |
| 12) | கடன் | 117 |
| 13) | சலிப்பு | 129 |
| 14) | ஆற்றலை வளர்ப்பதே வாழ்க்கை | 135 |
| 15) | கணவன் மனைவி பொருத்தம் என்பது என்ன? | 140 |
| 16) | அயலாரோடு மனஸ்தாபம் கொள்ளற்க! | 145 |




RangaRakes

Tamilnavarasam.com



# அவமானப்படுத்துதல் அத்துமீறலே!

ஒருவரை நிந்தனை செய்தல், அவர்கள் அந்தராத்மாவையே, துன்பமேற்றும்,ஆணவச் செயல். எவர் மனத்தையும், கொய்து காயப்படுத்த ஒருவருக்கும் எந்த அதிகாரமும் கிடையாது. அவமானப் படுத்துபவன், அவமானப்பட்டுப் போவான். வலிமை கூடியவன், வலிமை குறைந்தவனை இம்சித்தால் இறைவனே பொறுமையிழந்து விடுவான். செருக்குற்றவர்கள், தாமே உயர்ந்தவர் என்று எண்ணினால் உலகின் வெறுப்பினுள் நுழைந்து கொள்ள வேண்டியதே! எதிர்மறை எண்ணங்களுடன், தரக்குறைவாக நடப்பது, தன்னையே இழிவாக்கும், கோழைத்தனம்.

அவமானப்படுத்துதல் ஒருவருக்கு வழங்கப்படக்கூடிய கொடிய தண்டனை என்றே கருதப்பட வேண்டும். எவரையும் கேவலப்படுத்தி நிந்தனை செய்ய எவருக்குமே அதிகாரம் கிடையாது. தமக்கு பிடிக்காதவர்களை பிறர் மூலம் அவமானப்படுத்த எத்தனித்தல் போல் மாபாதகம் வேறில்லை.





தாமாகவே வலிந்து எடுத்துக்கொண்ட அதிகாரமாகவே அவமானப்படுத்துதலை நாம் கருத வேண்டியுள்ளது. தனிமனித உணர்வுகளைப் புண்படுத்துதல் என்பது ஒரு மனித உரிமை மீறல் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அவமானப்படுத்தப்பட்டு விட்டால் நீதிமன்றில் நியாயம் கேட்பவரும் உண்டு.

வலிமை கூடியவன் எப்படியும் பேசலாம். ஊறு விளைவிக்கலாம். அதனைப் பார்த்தபடியும் நொந்தபடியும் இருக்க வேண்டியதே அடுத்தவன் கடமை என்பதல்ல. தவறு, குற்றங்களுக்கான தண்டனை வழங்கல் என்பவை பொதுவான வேறு விடயங்கள்.

நீதித்துறை, அரச நிறுவனங்கள், பொது அமைப்புக்களில் மக்கள் மனங்கள் கசக்கப்படுவது கண்கூடு. இதில் விசனப்படுவதில் வியப்பென்ன இருக்கிறது?

பதவி வகிப்பவர்களும், அவர்களோடு இணைந்தவர்களும் பக்குவமாக நடப்பது எப்படி என்று தெரியாமல் அகங்காரத்துடன் தீங்கான வார்த்தைகளைக் கண்டபடி உதிர்த்தபடியும், நடைமுறைக்கு ஒவ்வாத வழியிலும் நடந்தால் பாதிக்கப்பட்டவன் அவமான உணர்வினால் மனம் சஞ்சலமடைவது எத்தகைய துன்பம் என்பது இவர்களுக்குப் புரியுமா?



RangaRakes

Tamilnavarasam.com

அவமானம் என்பது அவரவர்க்கு வந்தால் தான் புரியும். செய்யாத தவறுக்காக அவமானப்படுவது பரிதாபம்! ஆனால் தவறு செய்தவன் கூட பிறரால் அவமானப்பட்ட பொழுது "ஐய்யய்யோ எனக்கு இப்படி ஆகிவிட்டதே...?" எனப் பொருமுகிறான்.

செய்த செயலுக்கு மனம் வருந்தியாக வேண்டும். ஆனால் அதைவிடக் கிடைக்கும் அவமானம் எவ்வளவு பெரிய தண்டனை தெரியுமா? ஒருவர் செய்கின்ற தவறுகளுக்காகப் பழிதீர்க்கும் வண்ணம் அவமானப்படுத்தும் படலம் தொடர் கதைகளாக விரிகின்றது. "அவன் மட்டும் இப்படிச் செய்யலாம், நான் என்ன இழிச்ச வாயனா..?" என்றவாறு தமது வல்லமையை அவர்கள் தமது எதிரிகள் மீது பாய்ச்சுவதிலேயே காலத்தைச் செலவளித்தால் என்ன நன்மை கிடைத்துவிடப் போகின்றது?

இன்னும் சிலர் ஒன்றுமே பேச மாட்டார்கள். யாராவது எதையாவது சொல்லி அவமானப்படுத்தினால், வேறு வழிகளில் மௌனமாகக் குழிபறிக்க ஆரம்பித்து விடுவார்கள். "ஆழமறியாமல் காலைவிடாதே" என்பார்கள். சில பேர்வழிகள் தம்முன் தோன்றுபவர்கள் எல்லோரையுமே துச்சமாகப் பார்த்து, அச்சமின்றி, வார்த்தைகளால் அர்ச்சிப்பார்கள். பின்னர் அந்த நபர் யார் என அறிந்ததும் சாஸ்டாங்கமாக விழுந்து விடுவார்கள். இவை எல்லாம் தேவைதானா? எல்லோரிடமும் சகஜமாகப் பழகினால் சௌஜன்ய உறவு வந்துவிடுமல்லவா?





பார்க்கின்ற நபர்களை, அவர்களின் பேச்சுக்களை நாம் ஏன் எதிர்மறைக் கோணத்தில் நோக்க வேண்டும்? எல்லாவற்றிற்கும் ஒவ்வொரு அர்த்தம் கற்பித்து கண்டபடி உளறுவது கேலிக்குரியதாகும். பத்துப் பேர் எங்களைச் சண்டைப் பிரியன் என்றழைப்பது சந்தோஷமான, கௌரவமான விஷயமல்ல. "அந்த மனுஷனுடன் பேசினால் மரியாதைக் குறைவாகக் கதைப்பான்" என்று உங்களைப் பார்த்து ஒருவன் விலகி ஓடினால் எப்படி இருக்கும்?

நாங்கள் பேசுவது பிறருக்குச் சில வேளை புரியாமல் இருக்கலாம். கேட்பவர்கள் உங்களைப் பற்றி விமர்சனங்களைச் சொன்னால் கேட்டு வைப்பது நல்லது. அதற்காகக் கண்டபடி பேசும் குதர்க்கக்காரர்கள் விஷயத்தில் எச்சரிக்கை அவசியமானதே!

நெஞ்சம் இரும்பு அல்ல, கொஞ்சம் ஈரமின்றிய பேச்சுக் கேட்டால் உருகித் தளர்ந்துவிடும். வெஞ்சொல் பேச வேண்டாம் என்று பரிதாபமாகக் கெஞ்சினாலும், தம் பக்கத்து நியாயங்களை நிலைநாட்ட ஆக்ரோஷமான, உஷ்ணமான வார்த்தைகளைச் சிலர் பேசித் தீர்த்தே விடுவார்கள்.

"பன்னீர் தெளிக்காது விட்டாலும் பரவாயில்லை. வெந்நீர் கொட்டாமல் விட்டாலே போதும்" என்றே மனிதர் சிலரது பேச்சைக் கேட்டால் தோன்றும்.



RangaRakes Tamilnavarasam.com

இன்று அரசியலில் என்ன நடக்கிறது? தங்கள் பற்றிய அரசியல் விஷயங்களைப் பேசத் தெரியாத இந்த அரசியல்வாதிகள், பிற மாற்றுக் கட்சிகளை அவதூறு செய்வதால் நியாயம் பெற்றுவிடுவதாகக் கருதுகிறார்கள்.

இதில் என்ன துரதிஷ்டம் என்றால் கண்டபடி பேசுபவர்களுக்கே கைதட்டல் கிடைக்கிறது. காலப்போக்கில் இத்தகையோர்தான் பிரசாரப் பீரங்கி என்றும் வர்ணிக்கப் படுகிறார்கள்.

சொற் கொடையாளர் எனப் போற்றப்படுபவர்கள் நீதி, நியாயங்களுக்கு ஆட்பட்டவர்கள். இவர்களின் உவமானங் களை. உபதேசங்களைக் கேட்க எத்தனையோ மனிதர்கள் காத்துக் கிடக்கின்றார்கள்.

ஒருவனை அடிப்பதும், இம்சிப்பதும், அவமானப் படுத்துவதும் எல்லாமே கோரத் திருப்பதியடையும் சுபாவங்களேயாகும். எவரையும் அனுசரிப்பவன் அவமானப் படுத்தவே மாட்டான்.

கோபாவேசத்தில் ஒருவனைக் கோபப்படுத்துபவன் சொல்வதறியாமலே ஜாதி, சமயங்களை இழுத்துப் பேசும் போது, அது சமூகப் பிரச்சினையாகி விடுகிறது. இன்று எத்தனையோ பத்திரிகைச் செய்திகளைப் படித்திருப்பீர்கள். அடி, தடி, கொலைக்கான மூல காரணமே ஒருவரை அல்லது அவரது குடும்பத்தை தாழ்வாக அவமதித்ததாகவே இருக்கிறது. எத் தாக்கத்துக்கு எதிர் தாக்கம் உண்டு.





கட்சியின் தலைவர்கள் கூட ஜாதி, சமய, மொழி பற்றிப் பேசும் போது சில மதத் தலைவர்களும் வரிந்து கட்டி பேசுகின்றார்கள். இது வருத்தத்துக்குரியது . இந்த உண்மை ஏன் சிலருக்குப் புரியாமல் போகிறது?

நானே உயர்ந்தவன் என எண்ணுபவர்கள் அந்த எண்ணத்தை தம்முள்ளே வைத்திருக்க வேண்டியதே! அதற்காகப் பிறருடன் ஒப்பீடு செய்து பார்ப்பதும் பேசுவதும் சமூகப் பார்வைக்கு சாபத்தின் வடுவாகவே நோக்கப்படும். ஏன் வம்பு எனத் தன்பாட்டில் சும்மா போகிறவனுடன் சீண்டக்கூடாது. சிலர் வலிய வினைதேடியே அவமானப் பட்டுப் போவது பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாகவும் சிரிப்பூட்டுவதவாகவும் அமையலாம்.

வல்லரசு நாடுகளே வலிய வம்புக்குப் போவதும், சீண்டுவதுமாக இருக்கின்ற போது சாதாரண பொருளா தாரத்தில் நலிவுற்ற நாடுகள் தம்முள் உராய்ந்து கொள்வது தேய்ந்து போவதற்குத்தான் என அறிக. வல்லரசு நாடுகளுக் கிடையேயான அவதூற்றுதல்கள், நடவடிக் கைகள், எல்லையின்றி நீண்டு சென்றால் வல்லமையற்ற நாடுகளே அமுக்கப்படுவது உறுதி.

இருப்பினும், இந்த நடவடிக்கைகள் யுத்தத்தை விரும்பும் பைத்தியக்காரத்தனமின்றி வேறென்ன?



RangaRakes
Tamilnavarasam.com

அர்த்த சாஸ்திரத்தை எழுதிய சாணக்கியன் தான் அவமானப்பட்டதால் எழுந்த மாறாச் சினம் காரணமாக வீறு கொண்டு தன்னை அவமதித்தவர்களை வேருடன் மிதித்து அழித்தான்.

திரௌபதி தன்னை ஏளனம் செய்து அவமானப்ப டுத்தியதாகக் கருதிய துரியோதனன், திரௌபதியை பழிக்கு ப்பழி தீர்க்க, மானபங்கப்படுத்த விழைந்து வீழ்பட்டதை மகாபாரதம் கூறும். இவை வெறும் சரித்திரங்கள், புராண இதிகாசங்கள் அல்ல, சிந்தனைக்குள் செலுத்த வேண்டிய அரிய விஷயங்கள்.

அவமானப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்புகள் உடன் நிகழாதுவிட்டாலும் அது மீண்டும் பற்றி வாட்டி வதைக்கும். எல்லோரிடமும் அன்பைப் பகிர்ந்து கொள்பவனு க்கு எத்தகைய இடையூறுகளும் எழ வாய்ப்பில்லை. எமது பார்வை ஒரே மாதிரியாக, நெஞ்சில் வஞ்சகமில்லாமல், கரிசனை மிக்கதாக அமைந்தால் தூற்றுதல், அவமானப் படுத்தல் போன்ற எண்ணம் கருக்கொள்ளுமா? ஏற்கனவே தப்பான எண்ணம் கொண்டவர்களாலேயே மற்றவர்களை உதாசீனம் செய்து கொள்ள முடியும். சிலவேளை சந்தர்ப்ப சூழ்நிலைகள் கூட மனிதரை மாற்றி விடுகிறது.

நிலைமைகளைப் புரிந்து கொள்ள புத்திக்கு அவகாசம் கொடுப்போம். எங்கள் மீது ஒருவர் வைத்துள்ள நன்மதிப்பை நாசம் செய்ய அனுமதிக்கக் கூடாது. ஏனைய





வர்களிடம் நல்ல எதிர்பார்ப்புகளை நாம் எதிர்பார்ப்பது போலவே, மற்றவர்கள் எம்மிடம் நல்ல அனுகூலங்களை எதிர்பார்க்கின்றனர்.

உணர்ச்சி வசப்பட்டுத் தன்நிலை மறப்பதும், பாதிப்பு க்குள்ளாவதும், பின்பு வருந்துவதும் ஒரு சராசரி நிலை அந் நிலையில் இருந்து நாம் மீள வேண்டும்.

- மனிதன் உயர்ந்தவன்
- மாசக்தி உடையவன்

இந்தச் சக்தி கோபப்படுவதில், சலனமடைவதில் வீண் விரயமாக்கப்படக் கூடாது.

எங்கள் மீது தகுந்த காரணம் இன்றி ஒருவர் மனம் சலிப்படைதல், வெறுப்படைதல் போன்றவை நிறுத்தப்பட வேண்டும் என்றே விரும்புகின்றோம். காழ்ப்புகள், கரிய சிந்தனைக்கே வழிவகுக்கும். எங்கள் மூலம் பிறர் மன உறுத்தல்களை அனுபவிக்கக் கூடாது.

வெறுப்படைய வைப்பதும், வேதனைப்பட வைப்பதும் மானுட இலட்சணங்கள் அல்ல வர்ண ஒளிப்படம் போல் பிரகாசமாக, துல்லியமாக, நெஞ்சினை வைத்துக் கொள்வோம். மனம் செழிப்பாக இருப்பவனால் தான், களிப் பானவைகளை உருவாக்கவும், தானும் களிப்பேரு வகை முடியும்.

தினக்குரல் ஞாயிறு மஞ்சரி - 25.11.2005



RangaRakes

Tamilnavarasam.com



# பொறாமையெனும் பெரும் தீ

பொறாமையைத் தொட்டவரை அதுவே பற்றியெரிக்கும். ஆயிரம் கோடி சூரியர்களின் உஷ்ணத்தைவிட பொறாமைக்குணத்தின் உஷ்ணம் பொறாமை கொண்டோரின் ஆன்மாவையே பொசுக்கிவிடும். சுயநலம், தாழ்வு மனப்பான்மை, குரோதம், தோல்வி ஆகியன பொறாமை உருவாக முக்கிய காரணிகள். ஆதிக்க உணர்வு, ஆணவம், மற்றவர்களை மடக்க எண்ணுகின்றது. இதுவும் காழ்ப்பின் ஒரு வடிவமாகும். எல்லோரும் வாழவேண்டும் என்று எண்ணுபவர்களை தீயநோக்கு தாக்குவதில்லை. நேரிடையான எதிரிகளை விட பொறாமையால், மறை முகமாக பிறரை அறுக்க வருபவர்கள் வெறுக்கத்தக்கவர்கள்.

ஆயிரம் கோடி சூரியர்களின் உஷ்ணத்தைவிடவும், பஸ்பமாக்கும் திறன், சிறுமைக் குணத்தில் முதன்மை கொண்ட பொறாமைக்கே உரித்தானதாகும்.

பொறாமை காரணமாக, மற்றவர்களுக்கு, துன்ப மூட்டித் திருப்தி காணலாம் என எண்ணுவது, தனக்குத்





தானே, தீமூட்டிக் கொள்வது போலாகும். இது தொட்டவரைப் பற்றிக் கொள்ளும். மற்றவர் வளர்ச்சியில், குரோதம் கொள் வதில் குறியாய் இருந்து கொள்ளும்.

துர்ச்சிந்தனைகளுக்கு மூல காரணமாகவும் கற்றவர் களைக்கூட சில வேளை மதிமயக்கத்திற்குட்படுத்த வல்லதாகவும் உள்ள மோசமான மூலகாரணி இது.

கதைகளிலும், காப்பியங்களிலும், இதுபற்றியே பேசப்படு கின்றது. ஒரு கதை நகர்வதற்குப் பாத்திரங்களில் வரும் அருவருக்கத்தக்க கதாபாத்திரங்களுக்கு அரசனாகப் பொறாமைதான் பொருத்தப்படுகின்றது. எந்த நாட்டின் வரலாற்றுக் கதைகளிலும் இதன் ஆட்சியில்லாத பாத்திரங்களே கிடையாது.

துன்பங்களுக்கு நாயகமாகவும் சரித்திரங்களை வளைத்து ஒடிக்கும் கருவியாகவும் பொறாமையின் வலு, இலகுவாக உட்சென்று ஒட்டிக் கொள்ளுகின்றது.

வில்லனின் வில்லங்கங்கள் இல்லாமல் கதைகள் தொடருமா? இன்பதுன்ப சம்பவங்கள் இழையோடாவிட்டால் நாவலின் விறுவிறுப்பும், சுவாரஸ்யமும் தொடர்ந்திடுமா?

ஆனால், மனிதன் திருந்த வேண்டும், திருந்தியே ஆக வேண்டும் என்பதன் பொருட்டே தீவினையாளர்கள் பற்றியும் அவர்தம் பொறாமையின் குணாம்சங்கள் பற்றியும்



RangaRakes
Tamilnavarasam.com

காலத்திற்குக் காலம் எழுதப்படும் எழுத்துக்கள் எமக்கு விழிப்பை ஏற்படுத்துவதற்காகவே படைக்கப்படுகின்றன.

- தனக்குக் கிட்டாதது பிறர்க்குக் கிட்டினால் அல்லது மேலும் எடுக்கும் காரியம் தொடர்ந்து தோல்வி ஏற்பட்டதால் ஏற்படும் வன்மம்
- தன்னைவிட மற்றவர்கள் உயர்ந்து விடக்கூடாதே என்கின்ற சுயநல நோக்கு, தாழ்வு மனப்பான்மை,
- முன்னேற்றமடைய தீவிர விருப்பு இன்மை, உழைப்புக் காட்டாமை, தனக்கு மட்டுமே தோல்விகள் வருகின்றன எண்ணிக்கொள்ளுதல்
- எந்த விஷயத்தை பெரிதாக எண்ணி, அதனைச் செய்து முடிக்காமல் விடுகின்ற இயலாத்தன்மை.

இத்தகைய பல்வேறு காரணங்கள், பொறாமையுடன் தோழமை கொள்ள ஏதுவான அம்சங்களாகும்.

இது தன்னைச் சார்ந்தோரைச் சுருட்டி மூளைக்கு வேலை வைக்காமல் செய்யும் கைங்கரியத்தைக் கன கச்சிதமாகச் செய்து விடுகின்றது.பொறாமை கொண்டு பிதற்றுபவர்களுடன் பேசிப்பாருங்கள். தமது சிந்தனையைப் பாவிக்காமலே பேசுவார்கள். சில வினாடித் துளிகள் கூட மற்றவர் நிலை, மனோ நிலைகளைப் புரிந்துகொள்ளப் பிரியப்படவே மாட்டார்கள்.





தனது தோல்வி, துன்பம் இவையெல்லாமே பிறராலேயே வந்தவை எனக் கற்பனை பண்ணிவிடுவார்கள். அல்லது வேண்டுமென்றே அவதூறாகப் பேசி வன்மம் வளர்த்தும் விடுவர்.

பின்னர், இதன் காரணமாகப் பொறாமைப்படுவதுடன் நின்றுவிடாது தாங்கள் விரும்பாத நபர்களுக்கெதிரான செயல்களையும் செய்ய முயன்று விடுவர்.

பொறாமை காரணமான மனதின் தூண்டலினால் தானே சதி வேலைகள் நடக்கின்றன?

தனிமனிதன் வாழ்வில்,
சமூகங்களுக்கிடையில்,
எங்குதான் பொறாமையின் ஆட்சி இல்லாதிருக்கின்றது? அழிவு வேலைகளின் ஆரம்பமே பொறாமை தானே?

ஆழ்ந்து நோக்கினால் பொறாமைப்பட்டவன் சிறுமைப்பட்டுச் சீரழிந்த கதைகளைத்தான் நடைமுறை நிகழ்வுகளில் கண்டிருப்பீர்கள். இதனையே கதைகளாகவும், திரைப்படங்களாகவும் காட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

வல்லரசுகளின் ஆதிக்க உணர்வு பொறாமையில் தான், அரும்பி, முளைவிட்டு பின்னர் மாபெரும் யுத்தமாகவே வெடிக்கின்றது. இங்கு நாம் கவனிக்க வேண்டிய



RangaRakes
Tamilnavarasam.com

ஒன்றிருக்கின்றது. பொறாமையின் கோரப்பிடியினுள் சம்பந்தப்படாத ஜீவன்கள்கூட இவ்விளை வுகளுக்குள்சிக்கி அழிந்து போவது தான் வேதனைக்கு ரியதாகிவிட்டது.

இரண்டு குடும்பங்களை எடுப்போம். இந்தக் குடும்பத் தலைவர்களின் மோதல்கள் அங்குள்ள சின்னஞ் சிறிசுகளைப் பாதிப்பதில்லையா?

இவர்களின் பாதையில் செல்லும் பிள்ளைகள் பெற்றோரின் வழியில்தானே செல்லுகின்றன?

சாதாரண விஷயங்களுக்குக் கூட மனிதன் மனதை அலட்டிக் கொள்வது விசித்திரமாக இருக்கின்றதைக் காணலாம். இத்தகையோர் கண்டதையும் சொல்வார்கள். “கடையில் சாமான் வாங்கப்போனேன். நான் கேட்ட சாமான் தீர்ந்து போய்விட்டது. நாளை வாருங்கள் எனக் கடைக்காரன் சொல்லுகின்றான். ஆனால் எதிர்வீட்டுக்காரன் மட்டும், அதனை வாங்கி விட்டான். “ஹும்.... என் நிலை இப்படி!” என்பார்கள்.

இந்தப் பேச்சில் ஒன்று மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். அவர் தனக்குக் கிடைக்காததையிட்டு மட்டும் கவலைப்படவில்லை. அதே பொருள் எதிர்வீட்டுக்காரனுக்குக் கிடைத்ததைத் தான் அவரால் பொறுத்துக் கொள்ள முடிய வில்லை.



RangaRakes



ஆனால், இதே பொருளை அவர் அடுத்த கடை களில் போய் வாங்க முயற்சி செய்திருக்கலாம். ஆனால் அவர் இந்த முயற்சியில் ஈடுபடவே மாட்டார்.

சதா பொறாமை உணர்வு காரணமாகப் பிறர் மீது குற்றம் காணுவதும், சலிப்பான வார்த்தைப் பிரயோகம் செய்வதுமே தமது, பிழைப்பாக கொள்பவர்கள், இந்த நடத்தைகள் பிழையானது என எப்போது உணர்வார்கள்? இன்னமும் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் இருக்கின்றது.

சிலர் மௌனமாகவே பொறாமைப்பட்டு, உள்ளுக் குள்ளேயே வெந்து அவிந்து கொள்ளுவார்கள். இவர்கள் அடுத்து என்ன செய்யப்போகிறார்கள் என்பதே ஒருவ ருக்கும் தெரிந்துவிடாது.

இன்னும் ஒரு சிலர் தமது பொறாமையின் வெளிப் பாடுகளை வெளிப்படையாகவே சொல்லிக் காட்டி விடுவார்கள்.

“போ... போ.... உனக்கு என்ன தெரியும், ஏதோ குதிக்காதே... நீ எல்லாம் பேசவந்துவிட்டாயே பெரிதாக....” என்று, இழிவாக, கஷ்டப்பட்டு முன்னேறிய நபர்களையே கன்னா, பின்னா என்று வார்த்தைகளால், வறுத்தெடுப் பார்கள்.



Tamilnavarasam.com

எது எப்படியோ, காழ்ப்புணர்வு கொண்டவர்களிடம் இருந்து தப்பிப்பதில் எங்கள் புத்தியை, நிதானத்தை நாம் துணையாகக் கொண்டேயாக வேண்டும்.

சாதுரியமாக வார்த்தையாடுவதும், நல்லவர்கள் போல நடிப்பதும், மற்றவர்களை எரிச்சலடைய வைக்க முயல்வதும் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு வார்த்தைகளை மாற்றிக் கொள்ளுவதும் போன்ற செயல்களில் அப்பாவித் தனத்தினையும் நடிப்பாகப் புகுத்திக் கொள்ளுகின்ற, பொறாமைக்காரப் புல்லுருவிகளை, நல்லவர்கள் இனம் கண்டேயாக வேண்டும்.

ஒருவனைக் கெடுக்க வேண்டுமென எண்ணிக் கங்கணம் கட்டுபவர்கள் செய்கின்ற சாதுரியமான கபடவேலைகளை, சமூகத்தில் எல்லோருமே பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள்.

மொட்டைக் கடதாசி, பொய்யான முறைப்பாடுகள், அவதூறுபரப்பும் காரியங்களில் ஈடுபடுதல் போன்ற மோசமான நடவடிக்கைகளைச் சட்டத்துறை சார்ந்தவர்கள் கண்டு காணாமல் இருப்பது கவலைக்குரியது. அநாமதேயக் கடிதத்திற்காகத் திருமணம் தடைப்படுவதும், வேலை வாய்ப்புக்கள் மோசடியாகத் தடைப்படுவதும் அன்றாடம் நாம் காணும் அவல, அவஸ்தைச் சம்பவங்கள்.

சரி... சரி.. விட்டுத்தள்ளுங்கள், யாரோ ஒரு பொறாமைக்காரன் செய்த சதி எனத்தூக்கி எறிய இந்தச்





சமூகத்திற்கு மனசே இல்லையா என ஏங்கத்தோன்று கின்றது அல்லவா?

காலம்தோறும் நடந்து வருகின்ற இந்த பொறாமை, வன்முறைகளைக் கிள்ளி எறியாதவரை சமூகமும், நாமும் உருப்படமுடியுமா?

எல்லோரும் வல்லவராய் நல்லவராய், உறவாடி, உரிமையுடன் பழக, சுதந்திரமாகச் ஜீவிக்கத்தான் இந்தப் பூமி உதயமானது. இங்கு மனித மனங்கள் புதைக்கப் படலாகா. ஒருவரை மற்றவர் கெடுக்க நினைக்ககூடாது. அடுத்தவன் வாழாதவரை நாம் வாழ்ந்து விடமுடியாது. விலக்கி வைக்கப்பட வேண்டிய துர்க்குணங்கள் நிர்மூல மாக்கப்படவேண்டியவை தான்.

எவன் ஒருவனும் மற்றவனால் பாதிப்புக்குள்ளா னதாக கேள்விப்படுவதே கூடாது.

அந்த நல்ல நிலை வரும், வரவேண்டும் என நாம் பூரணமாக நம்புவோமாக. எவரினதும் நெஞ்சம் புண்படா மல், புண்படுத்தப்படாமல் வாழ்ந்தால், வாழ்வித்தால் பொறாமை, கூறாமல் விடைபெறும்.


கூர்மதி

(கல்வி அமைச்சு ஆண்டுமலர் 2006)



RangaRakes

Tamilnavarasam.com



# கோழைகளாய் வாழுவதோ...?

துணிச்சல் உள்ளவன் எதனையும் பெறுதற்குத் தகுதியுள்ளவன். கோழைகளே வாழ்க்கையில் ஏழைகள். இவர்கள் தம் பயத்தினால், வருகின்ற வரவுகளையே துரத்தும் நபராகிவிடுவார்கள். மனத்தை வளமாக்கினால், துணிச்சல்தானே வரும். உடல் பலத்தை விட மனோபலம், எதனையும் செய்து முடிக்கவல்லது. கோழைகளுடன் தோழமை கொள்ளற்க! பயந்தவன் தன்னை மட்டுமல்ல, தனது குடும்பத்தையும் காப்பாற்றும் தைரியத்தை இழந்தவனாகின்றான். பருந்து பறக்க அஞ்சினால் கோழிக்குஞ்சு கூட அதனை ஏறி மிதிக்கும். பாம்பு சீறப் பயந்தால், மண்புழு, அதன்மீது புரண்டு அமுக்கும். கோழையால் நீண்டநாள் வாழ்வதை விட, வீரனாய் ஒருகணம் வாழ்ந்தால் மேன்மை.

கோழைகள், வாழ்க்கையில் ஏழைகள். மனமும், உடலும், பயத்தினால் பதறினால், எந்தச் செல்வமும் இருந்து என்ன ஆகப்போகின்றது?

துணிச்சல் உள்ளவன் எல்லாம் பெற்றவன் ஆகிவிடுகின்றான். துணிச்சல் அற்றவன் என்ன இருந்தாலும் அனைத்தையும் இழந்தவன் போல் ஆகின்றான்.





வருவது வரட்டும் என்கின்ற உணர்வு வருகின்ற போது, எதனையும் எதிர்கொண்டு அதனை எய்தும் திருப்தி தானாவே ஏற்பட்டுவிடுகின்றது.

திருப்தியின்மை என்கின்ற நோக்கு வர ஆரம்பிக்கும் போதே பயமும், தோல்வி உணர்வும், மனிதனை மெது மெதுவாக தொற்றி ஒட்டிக் கொள்ள ஆரம்பிக்கின்றன.

இன்னது என்றே தெரியாத ஒரு அர்த்தமற்ற உணர்வு கூடச் சில சமயம் தென்படுவதாகச் சிலர் சொல்வதுண்டு. உடலில் சற்று வலிமை குன்றினாலும் கூட, தெளிவின்மையும், சோர்வுடன் கூடிவர துணிச்சலற்ற தன்மையும் ஆணி அடித்தால் போல நிரந்தரமாக ஒட்டிக் கொண்டு விடும்.

எனவே, துணிவுடன் வாழ உடலும், மனமும் கூட ஒத்துழைக்க வேண்டும்.

தேக நிலையைக்கூட, மனத் திண்மையினால் பலமாக்க முடியும். எனவே எமக்கு அடிப்படையில் மனோ வலிமை ஸ்திரமாகஅமைய வேண்டும். கோழைகள் வாழுவதில்லை. அழுது தன்னையும் தேய்த்து, சுற்ற இருப்பவர்களின் மனோபலத்தையும் அழிக்க முயல்பவன் ஆகின்றான்.



RangaRakes

Tamilnavarasam.com

சலிப்பு, அலுப்பு அற்று வாழ முயலவேண்டும். மனிதனுள்ளே ஒரு மாபெரும் சக்தி புதைந்துள்ளது. அதனை ஒருதரம், தட்டி எழுப்பி, உசுப்பிவிட்டால் போதும், அதன் விஸ்வரூபம் பற்றி அவனே அறிந்தால் ஆச்சரியப்பட்டுப் போவான்

பலர் சொல்லக் கேட்டிருப்பீர்கள் "நானே நினைக்க வில்லை. எப்படி இதனைச் செய்து முடிப்பேன் என்று" என்பார்கள். கோழைகளாய் இருப்பவன் தன்னை உணர்ந்தாலே போதும். அவன் மீண்டும் எழுவான். அந்த நேரம் இவன் சாமான்ய நிலையில் இருக்கமாட்டான். அவனுள்ளே கிளர்ந்து எழும் மாபெரும் சக்தி அவனை முழுமனிதனாக உருமாற்றிவிடும். மனிதனின் நம்பிக்கை அசுர சக்தி தான்.

திரைப்படங்களில், கதைகளில், அடிபட்டவன் எழுவதைக் கண்டிருப்பீர்கள். இவை வெறும் கற்பனையாகத் தோன்றினாலும் யதார்த்தத்தில் இத்தகைய அதிசய நிகழ்வுகள் இடம் பெறும் சந்தர்ப்பங்களும் உண்டு.

"என்னால் முடியும்" என்று தனக்குத்தானே கட்டளை இடாது விட்டால், எந்தக்காரியத்தையும் திருப்திகரமாகச் செய்யமுடியாது. பிறரின் முட்டுக்கட்டை போடுகின்ற, தகாத உபதேச மொழிகளைக் கேட்கக் கூடாது. செய்யக்கூடிய நல்ல செய்கைகளுக்குக்கூட, புத்திமதிகள் என்ற சாக்கில் கச்சிதமாகத் தடைக்கற்களைப் புதைத்துவிட





சிலர் முயல்வதுண்டு. உங்கள் அறிவோடு, வீரத்தை, துணிவினை இணைத்து விட்டால் பயம் என்பதே பயனற்றுச் செயலற்று ஓடிவிடுமன்றோ?

பிரச்சனைகளில் இருந்து தப்பிக்க கோழைத்தன மாக, விலகியவர்கள் கூட, தாம் புத்திசாலித்தனமாக தப்பித்ததாகக் கூறிக் கொள்வதுண்டு. உண்மையில் இவர் கள் தமது அந்தராத்மாவில் அடைபட்டு அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்ற அனுதாபத்திற்குரியவர்களே.

கோழைத்தனம் என்பது, தீமைகளை எதிர்த்துப் போராடாமல் இருப்பது மட்டுமல்ல, தன்னையே கட்டி வைத்துக் கொள்ளுகின்ற மாபெரும் துன்பியல் நடவடிக்கை யுமாகும்.

நியாயபூர்வமான விஷயங்களுக்குப் பயப்படுவது நல்லது. அதை விடுத்து, தவறான கருமங்களுக்காகத் துணிவு என்கின்ற பெயரில் நெஞ்சை உயர்த்தக் கூடாது. இது கல் வரும் திசையில் தலையைக் காட்டுவது போல இருக்கும்.

பிறர் நியாயங்களுக்காகப் போராடுவது பேராபத்து என்பவர்கள் தமது நலம் சம்பந்தப்பட்டதாயின் பிறர் உதவிகளை இவர்கள் கோரத் தயங்குவதில்லையே? இது சுயநலம் மட்டுமல்ல, கயமையின் அப்பட்டமான வெளிப் பாடு. உண்மையான ஒருவனுக்கு வேதனையான



RangaRakes

Tamilnavarasam.com

அனுபவம் என்ன தெரியுமா? கோழை ஒருவனுடன் பழக சீவிக்க நேர்வதுதான்.

குடும்பத்தைக் கோழை காப்பாற்றமாட்டான். எல்லா வற்றிற்கும் காரணம் சொல்லுவான். முடியாது போனால் பிரச்சினை என்று சொல்லிக் குடித்து, வெறித்து அழிந்தே போகின்றான். பிரச்சினையை மறக்கக் குடிக்கின்றேன் என்று கூறுபவர்கள் துணிச்சலானவர்களா?

காட்டிக் கொடுப்பவனும் கோழை ஆகின்றான், தன்னைக் காப்பாற்றுவதாக எண்ணித் தனது ஆன்மாவை அடகு வைக்கின்றான். பெறும் லாபம் இதனால் ஒன்றுமே இல்லை. தற்காலிக நன்மை ஒரு வேளை கிட்டலாம். முடிவில் பெறப்போவது துன்பமே தான். துன்பமே தான்.

பயம் ஆட்டுவிக்கும் போது சூழ நிற்கும் பாதிப் புக்கள், புலன்களுக்குப் புலப்படாது போகின்றன. தனக்கும் தனக்கு வேண்டப்பட்டவர்களுக்கும் மட்டுமே தனது வலிமையை பிரயோகிப்பவன் தன் சுயநலம் போக்கினால் தனக்கு வேண்டப்பட்டவர்களாலேயே அவமதிப்புக்கு உள்ளாக்கப்படவும் கூடும்.

எங்கள் துணிவு, வலிமை, திறமை அனைவருக்குமே உபயோகப்படுவனவாக இல்லாதுவிட்டால் என்ன பயன் உலகிற்கு ஏற்பட்டு விடப்போகின்றது?





ஒருவன் பத்துப் பேருடன் சேர்ந்து ஒரு பயணம் செய்யும் போது வரும் ஆபத்தில் தன்னை மட்டும் காப் பாற்றுகின்றான். அவனால் எல்லோரையுமே காப்பாற்ற முடியும். ஆனால் அவன் ஏது வம்பு என்று விட்டு விடுகின்றான்.

முடிவு, அவன் தனி வழிப்பயணம் செய்ய முடியாது திணறி வழியில் பிறிதொரு தொல்லையில் அகப்பட்டு இறக் கின்றான். எங்களையும், எங்களோடு இருப்பவர் களையும் போஷிக்க வேண்டும். சகலரையும், எங்கள் வலிமை கொண்டு காப்பாற்றியேயாக வேண்டும்.

ஒரு கண்ணுக்கு வலி ஏற்பட்டால் மற்றக் கண் சும்மா இருப்பதில்லை. கலங்கி அழுதுவிடும். மனிதன் செல்லும் பாதைகளை அவன்தான் உருவாக்க வேண்டும். நடக்கும் போதே, கால்கள் சுளுக்குப் பிடிக்கும் என எண்ணினால் அடுத்த அடியைத் தொடுக்க முடியுமா? படிக்கும் போதே முடிவு கஷ்டம் என்று எண்ணினால் முதல் பக்கமே சுருண்டு படுத்துவிடும்.

காதலிக்கப் புறப்பட்டவன் காதலியின், அத்தை பையனுக்குப் பயப்பட்டால் கல்யாணம் என்பதே காததூரம் தான். பணம் தேடப் புறப்பட்டவன் கணநேரத்துத் துன்பங்க ளுக்குப் பயந்தால் செல்வம் சேர்க்கும் ஆசை பலமிழந்து போய்விடும். முட்டையை உடைத்துவரக் குஞ்சு



RangaRakes
Tamilnavarasam.com

அஞ்சுவதில்லை. கழுகு பறக்க அஞ்சினால் கோழிக்குஞ்சு கூட அதனைக் கடித்துக் குதறும்.

கோழைகள் தயாரிக்கும் வேலி, ஊதினால் உதிர்ந்துவிடும். இவர்கள் வதியும் வீடு தென்றலிலும் தவிடு பொடியாகும். இவர்கள் விடும் மூச்சுக்கூட இவர்கள் செவிக்கு இடி முழக்கமென ஒலி, ஒலித்துப் பெரும் பயமுறுத்தும்.

தனக்குத் தானே பயப்படுதல் இவர்கள் விரும்பி எடுத்த தொழிலாகும். இந்த லட்சணத்தில், பக்கத்தில் நிற்பவனைப் பார்த்தே பயப்படுவதில், புதுமை என்ன இருக்கப் போகின்றது?

பயப்படுபவன் சந்தேகப்படுகின்றான். சுகங்களைத் தூக்கி எறிகின்றான். மற்றவனையும், தன்போல மாற்ற முயற்சிக்கின்றான். இவனிடம் இருப்பதே ஒரு நோய் என எண்ணாமல் இவனுடன் ஐக்கியப்பட நேர்ந்தால் அதனைவிடப் பரிதாபம் வேறில்லை.

எதற்குமே "ஐயய்......யோ.... கவனம்... பார்த்துச் செய்ய வேண்டும். கஷ்டமாக இருக்கும்" என்று பேசிக் கொண்டேயிருந்தால் காரியங்கள் கோணலாகி விடுமல்லவா? சும்மா படுத்து இருப்பவனுக்கு யமன் வரும் திசையைக் காட்டும் அறிவிலிகள் இவர்கள்!.






கற்பனை உலகில் பயம் என்கின்ற கோழைத் தனமான குகையில் முடங்கியிருக்கும் ஜீவன்கள் உலகின் பாரங்கள். ஓரிருவினாடி வாழும் விட்டில் பூச்சிகள் கூட அச்சமின்றிச் சிறகடித்துப் பறக்கின்றன.

நீண்ட பகல்கள், நீண்ட இரவுகள், முழுநாட்கள், வருடங்கள் பலப்பல. இந்த காலக் கணக்கில், ஒளிந்து நிற்காமல் விலகி ஓடாமல், நேராக நிமிர்ந்து நில்லுங்கள், துணிந்து செல்லுங்கள். இதுதான் வாழ்க்கை. கோழைகளாய் வாழ்வது குதூகலம் அல்ல. தாளம்போட்டு வாழ்ந்து தப்பிக்க முடியாது. சரி எனப்பட்டதைச் செய்யுங்கள். தவறே இல்லை. துணிவு எம்மை வழிநடத்தவல்லது. எழுவதற்காகவே எம்மை இறைவன் படைத்தான் என எண்ணுமின். கண்டவன் காலில் விழுந்து அழுவதற்கு அல்லவேயல்ல!

வீரகேசரி
02.08.2005



RangaRakes Tamilnavarasam.com



# எழுச்சி

"எழுச்சிமிக்க சமூகம்" என்பது ஒவ்வொரு தனிமனிதனதும் உழைப்பு, விடாமுயற்சியால், உன்னத நிலைக்கு வரப்பட்டதேயாகும். மன எழுச்சியுடன் இயங்குதலானது, நல்ல பணிகளைச் சிறப்பாகச் செய்தலாகும். குரோதம், தன்னலம், கொண்ட சமூகம், விழிப்புநிலை அடைவதேது? உணர்ச்சிவசப்படுவதால் மட்டும் சமூக சீர்கேடுகளைத் தகர்க்க முடியாது. காரிய சித்திக்கு மனப்பக்குவம் அவசியம். மனித நீதி, சட்டம், ஒழுங்கு முறைகளாலேயே சமூகம் முழு அமைதி யினைக் காண முடியும்.

மனத்தினாலும், உடல் நிலையினாலும், ஒருவர் தளர்ச்சியுற்றால் எழுச்சியுடன் தான் சார்ந்த சமூகத்திற்கும், தனக்கும் உழைத்தல் அரிது.

"எழுச்சி" என்பது தனி ஒரு மனிதன் மட்டுமல்ல, முழு சமூகமும் எழுச்சி பெற்று விடுதல் என்பதுமாம். எழுச்சிமிக்க சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனின் முழுப் பங்களிப்பும் ஆற்றுகைப்படுத்தலால் அது உலகிற்கே,





பொதுவானதாய் ஏதோ ஒரு வழியில் சென்றடைந்து விடுகின்றது. உழவன் உண்டாக்கும் நெல், அவனுக்கு மட்டுமல்ல, அது எல்லோருக்கும் சென்றடைகின்றது. மேலும், உலகில் எங்கோ ஒரு மூலையில் ஒருவன் சிரமத்துடன் உருவாக்கும் பொருள் எங்களுக்குக் கிடைக்கின்றது.

உற்பத்தி செய்பவர்களே, தங்களது வலு என்ன எனத் தெரியாமலேயே வாழ்ந்துவருகின்றனர். பல மனிதர்கள் ஒன்றிணைந்து செய்யும் காரியத்தினால் பெறப்படும் அதிகூடிய சக்தியினால் அபரிமிதமான நற்பயன் கிட்டினால் அது மானுட இணைப்பினால் ஏற்பட்ட மிகப் பெரும் வலிமையன்றோ!

எமது மனம் என்றும் திண்மையாக இருந்திடல் வேண்டும். எமது உடல் நிலையைப் பொறுத்தவரை, அது நாம் சொல்லியவாறு செயற்படும் விதமாய் அமைந்திட வேண்டும். அதற்கேற்ப நாம், எம்மை வயப்படுத்துதல் அவசியமும் கூட. மனப்பக்குவம் இன்றேல் தேகம், பிறரிடம் யாசகம் எனும் உதவியைக் கேட்க நேரிடும். மனமும், தேகமும், ஒத்திசைவின்றி இருந்தால் எண்ணியவை. எண்ணியபடி காரியங்களை உற்சாகமாய், வெற்றிகரமாய் முடித்திடல் இயலாது போய்விடும். தெரிந்துகொள்க!

மேலும், மனஎழுச்சியுடன் இயங்குதலானது மேலான நல்ல பணிகளை மட்டும் செய்வதற்காக மட்டும் தான். கண்டபடி, வாழ்வதற்கும் இன்னும் ஒரு சமூகத்திற்கும்



RangaRakes

Tamilnavarasam.com

மதத்திற்கும் எதிராக, மொழியுணர்விற்குக் களங்கமேற்ப டுத்துதலுக்கும், "எழுச்சி" என்ற சொற்பதத்தைப் பாவிப்பது அநியாயமானதாகும்.

குரோதம் மிகுதியால் நெஞ்சில் வஞ்சகம் கொண்டோர் முழுமூச்சுடன் செயல்படுதலை "எழுச்சி" மிக்க செயல் என்று சொல்லிப் பாராட்டும் பொய்மையா ளர்களின் பூமியாக இது மாறக்கூடாது என்பதற்காகவே நன்நூல்களைச் சான்றோர் ஆக்கிவைத்தார்கள். மக்கள் எழுச்சிகளைத் தவறாகப் பயன்படுத்தல் அநாகரிகமானது.

உணர்ச்சி மிகுதியினால் நாம், எம்மை மறந்தும், சில காரியங்களைச் செய்து விடுகின்றோம். நற்காரியங்களைச் செய்வதற்கும்கூட நாம், எம்மை மறந்து இயங்கிட முடியாது. எந்தக் காரியத்தைச் செய்து முடிப்பதற்கும் ஒரு வரைமுறையுண்டு. இன்று இளைஞர்கள் பலர், சமூக அநீதிகளை எதிர்ப்பதாகக் கூறி, உணர்ச்சி வசப்பட்டு, இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். தக்க தலைமைத் துவத்தை, ஏற்றிடத் தயாராகவுமில்லை. எல்லாமே தமக்குத் தெரியுமாற் போல் தாமே தமக்கு ஏற்றால் போல் காரியங் களை நிறைவேற்றத் துடியாய் துடிக்கின்றார்கள். இத்தகைய இளைஞர்களின் எண்ணங்கள் சிறப்பாக இருந்தாலும் கூடத் தமது மன எழுச்சியைத் தக்க முறையில் பிரயோகிக்க முடியாது, மயங்கித் தெளிவற்றுப் போகும் நிலைக்கும் தள்ளப்படும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டு விடுகின்றன.





உணர்ச்சிகரமான, உணர்வின் வெளிப்பாடுகள், சட்டம், மனிதநீதி, ஒழுங்கு இவற்றுக்குப் புறம்பாக அமைந்துவிடலாகாது. எந்தப் பிரச்சினையையும் அறிவு பூர்வமா கவும், உணர்வு பூர்வமாகவும், தெளிந்தொழுகுதல் சாலச் சிறந்தது. கட்டுப்பாடு, கண்ணியம், நல்ல நடத்தை நெறிகள், சத்தியத்தின் மீது அதீத பற்றுதல்கள் உள்ளவர்கள் மட்டுமே செய்யும் பணியை உத்வேகத்துடன் ஆற்றமுடியும்.

தேச விடுதலை, ஒடுக்கப்பட்டவர்களுக்காகப் போராடு தல், தாம் சார்ந்த சமய நல் நோக்கங்களுக்காகப் பணி யாற்றுதல், பொதுப்பணிகள் போன்ற இன்னோரன்ன காரியங்களைச் செய்த தலைவர்கள், மகான்கள் மனப்பக்கு வத்தைத் தமக்குள் ஆக்கிவைத்த முறைமையை மக்களு க்கும் ஊட்டிச் சென்றார்கள். மக்களை வசப்படுத்தல் சாமான்ய காரியங்களுமல்ல. ஆனால் துரதிருஷ்டவசமாக மக்கள் நல் எழுச்சிகள் கூட திரிபுவாதிகளால், சுயநலச் சோம் பேறிகளால் தடம் புரள்வது அன்னை பூமியை அதிர்ச்சியும் வேதனையுமடையச் செய்யும் செயல்.

மாணவர்கள் கல்வி கற்பதையே முதற்பணியாகக் கொள்ள வேண்டும். அவ்வண்ணமே, ஒரு தொழிலாளி அவர் செய்யும் வேலையானது எத்தன்மையாயினும் முகம் சுளித்தல் இன்றி அதனைச் செய்ய வேண்டும். எவரெவர்கள் எத்தகைய உயர் பதவி, வசதிகளைக் கொண்டிருந்தாலும் அவர்கள் அனைவரும் உலகிற்காக,



RangaRakes
Tamilnavarasam.com

உழைக்கப் பிறந்த முழுநேர ஊழியர்களேயாவர். இதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம். எனவே, எழுச்சிமிக்க நல்உலகிற்காக நாம் அனைவருமே, உழைக்க வேண்டிய சமபங்காளிகளாவோம்.

சோம்பல், எதிலும் பாராமுகம், பற்றுதல் இன்மை, துன்பம், சோகம் ஆகியன பற்றி நின்றால் எமது இயக்கம் ஸ்தம்பிக்கும். கல்வி மட்டும் கற்பதனால் ஒருவன் சுறுசுறுப் புள்ளவனாக, மாறிவிட முடியாது. குடும்ப, சமூகநல விடயங்களில் அக்கறையின்றேல் எல்லாமே அனர்த்த மாகிவிடும்.

"வாழ்க்கையே இருட்டாக இருக்கின்றது" என்று சிலர் சொல்வதுண்டு. தங்களைப் பூட்டி வைத்து விழிகளைமட்டும், திறந்துவைத்து உலகத்தைப் பார்த்தால் உலகம் அழுவ தைப் போல் தான் இருக்கும். தூய்மையற்றவையையே பார்ப்பதும், கேட்கத்தகாதவையையே கேட்பதுமாகவும், சொல்லக் கூடாத வார்த்தைகளைப் பேசப்பிரியப்பட்டுப் பேசுவதாகவும் இருந்தால் மன எழுச்சி நிலை நிலை குலைந்து விடுமல்லவா?

தேடியது எல்லாமே கிடைத்தாலும் நிம்மதி கிடைப் பதில்லை. ஒன்றுமே கிடைக்காது விட்டாலும் வாழ்ந்து என்ன பயன் என்று கேட்கத் தோன்றுகின்றது என முன்னுக் குப்பின் முரணாகச் சிந்திப்பதும், பேசுவதும் மனித இயல்பு. தன்னை மட்டுமே சிந்தித்துச் சிந்தித்து சுய நலத்துடன்





வாழ்ந்து கொண்டு பரந்த நிம்மதியைத் துடிப்பான கிளர்வுகளை எங்ஙனம் எதிர்பார்க்க முடியும்?

தாம் செய்வது தவறு எனத் தெரிந்தும், தாங்கள் எண்ணிய தப்பான செய்கை மிகவும் விபரீதமானது எனத் தெரிந்தும் தங்களுக்கு சாதகமான பயன் அல்லது சமிக்ஞை கிடைக்காது விட்டால் கடவுளை நொந்து கொள்வதுடன், தம்மைச் சுற்றியுள்ள மனிதர்களுடன் கோபம், குரோதம் கொள்ளும் மனிதர்கள் இருக்கின்றார்கள். இந்த லட்சணத் தில் இவர்களிடம், எந்த முன்னேற்றம், வேகம் புறப்பட்டு விடப்போகின்றது ஐயா?

ஆர்வத்துடன் செய்யும் நற் பணியினால் அன்றி நாம் எந்த முன்னேற்றங்களையுமே கண்டு விடமுடியாது. தொடர்ந்து இயங்கிக் கொண்டேயிருப்பவர்களுக்கு அடுத்து வரும் பிரச்சினைகள் பற்றி என்ன கவலை வந்து விடப் போகின்றது? இவர்கள் என்றுமே, இயங்கியபடியே... இயங்கியபடியே...!! இவர்களுக்கு பிரச்சினைகள் யாவும் விலகியபடியே வழிவிட வெற்றிகள் யாவும் குவிந்தபடியே... குவிந்தபடியே...!!. எழுச்சிமிகு எண்ணங்களுடன் உடலை வளைத்து கருமங்களைச் செய்பவர்களுக்கு தர்மங்கள் தக்க துணை செய்யும். இது இயற்கை விதி. உணர்க!

இன்பங்கள் தான் உடன் கழிந்து விடுகின்றன என்பார்கள். விடுமுறைநாட்கள் என்ன வேகமாய் ஓடிவிட்டன. வேலை நாட்கள் ஏன் மந்தகதியில் செல்கின்றன எனப் பலர் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

விருப்பமுடன் வேலை செய்தால் அல்லது, பொழுதைப் போக்கினால் காலம் எவ்வளவு சந்தோஷமாகக் கழிந்து விடுகின்றது. நாம் எமது கடமைகளைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டால் காலம் நகர்வது தெரியாது. துளி வினாடிகளும் சொர்க்கம் போல் இருக்கும். தூங்கு மூஞ்சிகளுக்கு எழுச்சியான கருமங்களின் தரம் அல்லது பெறுமானம் அறவே புரியாது.

துன்பங்களைப் பெரும் துன்பங்களாகவும், சந்தோஷ மாகக் காலத்தைக் கழிக்கும் சந்தர்ப்பங்களில், இனிவரப் போவது, துன்பங்களாகவே இருக்குமோ எனவும் எண்ணிக் கொண்டு இருப்பவர்களும் இருக்கின்றார்கள்.

"உங்களுக்கு என்னகுறை? பிள்ளைகள் எல்லோ ருமே, வேலைக்குச் சென்று கை நிறையச் சம்பாதிக்கின் றார்கள். அவர்களுக்குக் கல்யாணம் செய்து முடித்து விட்டீர்கள். இனி என்ன குறை?" என்று கேட்டால் "அதை ஏன் கேட்கின்றீர்கள்? இனி இந்த சந்தோஷங்களை எல்லாம் அனுபவிக்க நான் நீண்டநாட்கள் வாழுவேனா?" என்று ஆதங்கத்துடனும் கவலையுடனும் பேசும் மனிதர் களை என்ன என்று சொல்ல?

நல்லதை அனுபவித்தும் கூட கடவுளைக் குறை சொல்பவர்களும் இருக்கின்றார்கள். இல்லாத காலத்தில் கடவுளை வேண்டி அழுபவர்கள் எல்லாமே கிடைத்ததும், கடவுளிடம், என்ன குறைகளைக் கண்டுபிடிக்கலாம் எனக்





கணக்குப் பண்ணும் கோணங்கிகள் குவலயத்தில் உண்டு, பிழைகளையே தேடுபவர்களுக்குத் திருப்தி ஏது?

தானாகவே குனிந்து, நெளிந்து கோணங்கித்தனமாக நடக்கப் பிரியப்படுபவன், நாளடைவில், அவன் நடையே அதுவாகிவிடும். இவன் எழும்ப மாட்டான் குனிந்தபடி குறுகிப் போவான். மனித நடத்தைகளில் எழுச்சி காணப் படாது விட்டால் வீழ்ச்சி நிச்சயம் . இந்நிலை தவிர்க்க ப்படல் வேண்டும்.

எதையுமே எதிர்நோக்கியபடி ஆயத்த நிலையில் உஷாராக வாழவேண்டும். ஆனால், அதன் பொருட்டுக் கண்டபடி வீணான கற்பனைகளில் மூழ்கிப்போகக் கூடாது.

தான் மட்டும் சுகங்களை அனுபவித்துக் கொண்டு தனக்கு ஏதாவது சின்ன இடர்கள் வந்து விட்டால் மட்டும் இந்த முழு உலகமே தன்னைத் தாங்கவில்லையே எனத் திட்டுபவர் களுக்காக நாம் பரிதாபப்படுவது, அவர்களை மென்மேலும், வளர்ச்சியை நோக்கிய திசைக்கு இட்டுச் செல்லாது.

எழுச்சியுடன் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு, வாழ்க்கையில் வந்துபோன அனுபவங்களே துணை செய்கின்றன. சாமான்யனாக வாழ்ந்தவர்களே, சாம்ராஜ் ஜங்களை நிறுவினார்கள் எனப் படித்திருக்கின்றோம். தீட்சண்யமான உலக பார்வையுடனும், தெளிந்த சிந்தனை



RangaRakes
Tamilnavarasam.com

களுடன் மக்களை அவர்கள் நேசித்த முறைமையும் தான் இத்துணை வளர்ச்சிகளுக்கு இட்டுச் சென்றன.


நாம் என்னதான் முயற்சி செய்து எங்களை முன் னேற்றினாலும் கூட, ஓரிரு பொழுதுகளாவது மற்றவர் களுக்காக இரங்கி அவர்கள் துன்பங்களைத் துடைத்தா லன்றி, எந்த வெற்றியையும், மன நிம்மதிகளையும் முழுமையாகப் பெற்றுவிட முடியாது.

நாம் எழுந்து நிற்கும் போது பிறரையும் எம்முடன் சேர்த்துக் கொள்வோமாக! நாம் வீர நடையுடன் செயல் படும் போது அடுத்தவன் கரங்களையும் வலுவேற்றுவோ மாக! எழுச்சியான வாழ்வு அமைய, உலகு உய்ய அனைத் துக் கரங்களையும் ஒருங்கே இறுகப்பற்றிக் கொள்ளுங்கள்.

தினகரன்
எழுகதிர்
13-09-2010







# வீழ்ச்சி

அகத்தில், கருமையினை உள்நுழைத்து புறத்தே, தம்மை மினுக்கித் தனக்கும் உலகிற்கும் ஒவ்வாமல் வாழ்வது, வீழ்ச்சியை நோக்கிய பாதையில் எவ்வித தயக்கமின்றிச் செல்வதாகும். சமூக பிரக்ஞையுள்ளவன், வீழ்ச்சியடையப் போவதில்லை. உழைப்பது மட்டும் வாழ்க்கையல்ல. அது யந்திரத்தனமானது. மானுட நல் இயல்புடன் கூடி சமூகத்துடன் இணைந்து வாழ்வதே வாழ்க்கை. உழைப்புடன், நெஞ்சத்தையும், பஞ்சு போல் ஆக்குக!. வாழ்க்கையில் "வீழ்ச்சி என்பது வீழ்வது மட்டுமல்ல அதன் மூலமான அனுபவம் வளர்ந்து செல்ல உதவும் உத்வேக மாத்திரையும் கூட.

உலகத்திற்கு, ஒவ்வாததும், தனக்குத்தான் எவ் விதத்திலுமே பயன் படாததுமாக வாழ்வது ஒருவரை வீழ்ச்சிப் பாதையில் விரைந்து இட்டுச் செல்லும்.

உலகில் நாம் ஒரு கௌரவமான பிரஜை என்று, சொல்வதன் அர்த்தம் எங்களால் மற்றவர்கள் பெறும் பயன்பாடுகள் எத்தகைய உயர்வானவை என்பதனைப் பொறுத்ததாகும்.



RangaRakes
Tamilnavarasam.com

தம்மை மட்டும் மினுக்கி வெளியில் ஒரு வாழ்வும், செயலளவில் சாத்தான்களுடன் கூட்டணி அமைத்து அந்த உறவை, சாதுர்யமாகப் பிறர் அறியாமல் மனிதர்களுக்குத் துன்பங்களையே வெகுமதி போல் அளிப்பதும் ஒருவன் வீழ்ச்சியை மட்டுமே விரும்பி ஏற்கும் போக்காகும்.

சமூக பிரக்ஞையுள்ள பொதுநலவாதி வீழ்ச்சியடையப் போவதில்லை. ஏன் எனில் இவர்களைத் தாங்கிக் கொள்ள உலகம் தன் கைகளை ஏந்தித் தயார் நிலையில் உள்ளது.

உழைப்பு மட்டுமே ஒரு நாட்டை உயர்த்தி விடும் என்று சொல்ல முடியுமா? அழகான இயந்திரங்களுடன் மட்டும் நாம் வாழ்ந்து விடமுடியாது. உழைப்பு என்பது உடலையும், மனத்தையும் இணைத்துப் பக்குவப்படுத்த வேண்டும். எங்கள் மனத்தினை பக்குவப்படுத்தாமல் வெறும் பணத்தை மட்டுமே வெளியீடு செய்யும் உழைப்பு உதவாது. இன்று பலர் பணத்தைப் பெறுவதற்காக உழைத்து, உழைத்து ஓடாய் போகின்றார்கள். மனத்தினைச் செழுமைப் படுத்தாமல் குடும்பத்தைச், சமூகத்தைக் குளுமை யேற்றாமல் வாழும் வாழ்வு, ஒருவாழ்வா?

எனவே, உழைப்புடன் சேர்த்து எங்களது நெஞ்சத்தையும் பஞ்சுபோல் மென்மையாக்கி, உலகிற்கு இசைவாக மாற்றினால் வாழ்வில், வீழ்ச்சி என்பது ஏது? தங்களுக்கு வேண்டப்படாதவர்கள் செய்கின்ற நல்ல காரியங்களை





ஏற்காமல் அவர்களின் நற்செயல்களையே பாவச் செயல் எனத் தனிநபர் விமர்சனம் செய்து வருபவர்கள் சிலரால் இந்த உலகு களங்கப்படக் கூடாது என்பதில் முனைப்பாக இருந்து நற்காரியங்கள் புரிந்தால் "வீழ்ச்சி" என்பது உலகிற்கு வந்திடுமோ?

மனம் வீழ்ச்சியடைவது போல் வேறு எந்த தண்டனையையும் நாம் பெரிதாகக் கருதிடல் இயலாது. பரிபூரண விருப்புடனான தியாகம், ஈகை, ஆன்மீக நாட்டம் எல்லாமே எம்மை ஆட்கொண்டால் உள்ளம் வியாபகமடையும்.

உலக சரித்திரத்தில் ஒவ்வொரு நாட்டின் வீழ்ச்சி பற்றிப் படிக்கும் போது அவை பற்பல உண்மைகளை எமக்குப் போதிக்கும். நெப்போலியன் ஒரு மாவீரன் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அதேபோல், ஹிட்லரின் திறமைகள், ஆளுமை, புத்திசாலித்தனம்பற்றி எவருமே குறைவாக எடைபோட முடியாது.

ஆயினும், இவர்களின் "ஆதிக்கம்" எப்படி வீழ்ச்சியடைந்தது என்பதை நாம் படித்திருக்கின்றோம். ஒருவரது திறமைகள், சூழ்ச்சிகள் எல்லாமே "உண்மை" விஸ்வரூபம் எடுக்கும் போது, அதன் முன் ஈடுகொடுக்காது வீழ்ச்சியடைந்து போகின்றது. இது இயற்கையின் மேலான விதி. உணர்க! படு பிற்போக்கான கொள்கைகளைக் கூட, அதிகார தோரணையில் பேசுகின்றவர்கள் இருக்கின்றார்கள். தேவலமான நிலையை உணராமல் இருப்பதைக் கூட



RangaRakes Tamilnavarasam.com

அதுவே, பூரணமான நிலை என்று கருதுபவர்களும் இருக்கத்தான், செய்கின்றார்கள்.

"முடியாது" என்பதை வலிந்து ஏற்றுக் கொள்பவன் எழுந்து நடமாடுவது எப்படி ஐயா? நாங்கள் செய்ய முடியாததை இறைவன் எங்கள் மூலம் செய்து முடிப்பான் என்பதை, எத்தனை பேர் உளமாற நம்புகின்றார்கள்? அப்படி நம்பியவர்க்கு வீழ்ச்சி இல்லை.

நியாயங்களை நிறுத்த முயற்சிப்பவனும் அதனைத் துறந்தவர்களும், அதனைத் தமக்காக தாழ்த்தி, நிறுத்திப் பார்க்க முனைபவர்களும் மனத்தால் அழிந்தவர்களே. வெறும் உயிர்வாழ்வு மட்டும் வாழ்வு அல்ல.

நேர்மைக்கும் அதன் கூரிய பார்வைக்கு மதிப்பளிப்பதுமே உயிர்வாழ்வு. கடவுளுடன் பேச இஷ்டப்பட்டதைச், செய்ய முனைகின்றோமா? " நாம் ஏன் அந்த மனிதனைப் போல் இல்லை, நான் அவரை விடச் சிறப்பாக இயங்குகின்றேனே எனக்கு என்ன குறை, என்றுமே வசதி, வாய்ப்புக்கள் ஏன் தேடி வருவதில்லை?" என்று சொல்கின்றவர்கள், நல்ல சந்தர்ப்பங்களை இறைவன் கொடுக்க முன்வரும் போது தூக்கத்திற்குச் செல்கின்றார்கள். சந்தர்ப்பங்களைப் பாவிக்காதவன் வீழ்ச்சிக்கான வழியை தானே ஏற்படுத்திக் கொள்கின்றான்.

வீழ்ச்சியடைந்தவர்கள் எழும்பக்கூடாது என்பது





எங்குமே சொல்லப்பட்டது அல்ல. மாறாக, "வீழ்ச்சி" என்பது வளர்ந்து செல்வதற்கான ஓர் உத்வேக மாத்திரை எனக் கொண்டு எழுவீர்களாக! மயக்க நிலையில் அறுவை சிகிச்சை செய்தபின் நோயாளி, அந்த நிலையிலேயே படுத்திருக்க விரும்புவதில்லை. படுத்தது போதும், எல்லாமே வெற்றிகரமாக முடிவடைந்து விட்டது என மனத் தெம்புடன் எழுவதுதானே சரியானது. வீழ்ச்சியைக் காரணம் காட்டி முயற்சியின்றி தனது கை, கால், அவயங்களை சுயமுடிச்சு இட்டு முடங்குதல் தான் வளர்ச்சிக்குத் தடை!

வீழ்ச்சியடைந்து விட்டேன் என தைரியம்குன்றுவது, மரணத்தினைவிடக் கேவலமானது. தனக்காக மட்டும் பணியாற்றுவதும், அதன் பயனாக வாழ்வது மட்டுமே இன்பம் எனக் கொள்வதும், மற்றவர்க்காக, ஏதாவது செய்வது என்றும் துன்பமானது, தமது உடலை வருத்துவது மானது, என்றும் கொள்பவர்களுக்கு தாழ்வு நிலை அசுரத்தனமாக வளர்ந்து கொள்ளும்.

கீழ்ப்படிதலும், இறை விசுவாசமும் இல்லாமல் வாழ்வதும் கூட ஒரு கட்டுப்பாடு அற்ற வாழ்வே. பெரியோர்கள், ஆசான்களுக்குக் கட்டுப்படுதல், கீழ்ப்படிதல் என்பதே ஒரு அடக்குமுறை என்றும் எண்ணிக் கொள்பவர்கள் இருக்கின்றார்கள். ஒருவரை ஒருவர் ஆளுதல், அடக்குதல் என்பதில் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப அர்த்தங்கள் மாறுபாடு அடையலாம்.



RangaRakes

Tamilnavarasam.com

அன்புடன் ஆட்கொள்தல், அதிகாரத்துடன் அடக்குதல், ஒரு தேவைகளைப் பெறுவதற்காக அடங்கிப் போதல் எனப் பலவாறு மனித நடத்தைகள், மாறுபாடு அடைகின்றன. ஆனால் செப்பனுடன் வாழ்வை நாம் வாழ வேண்டும் என்பதைத் தீர்மானமாக எண்ணிக் கொண்டால் கட்டுப்பாடு, பணிவு எல்லாமே, எமது விசால மனத்தினைக் காட்டிநிற்கும் உயர் பண்புகளாகிவிடும். தேவைகளைப் பெறுதலுக்காகவே பலர் நடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் விசுவாசிகள் போலவும் பணிவானவர்களாகவும் தம்மைக் காட்டிக்கொள்கின்றார்கள்.

வீடுகளில் கணவன், மனைவி, பிள்ளைகள்கூடச் சில சந்தர்ப்பங்களில் பணிந்து நடப்பது, கீழ்ப்படிவதுபோல் தோற்றம் காட்டுகின்றார்கள்.உண்மையான பணிவு என்பது, அடக்குமுறைக்கு உட்பட்டதுமல்ல. ஒருவன் ஸ்திரமாக, வீழ்ச்சியற்ற நிலையில் வாழ, பணிவு கீழ்படிதல், விசுவாசம் இன்றியமையாதவைதான். உணர்வோம், தோழர்காள்!

இன்று பலரும் தங்களது பிரச்சினைகளை வெளிக் கொணராமலும் அவற்றைத் தமக்குள்ளேயே பூட்டிவைத்து, மறுகிக், குறுகி வைத்துக் கொள்வதனாலும் இதன் பொருட்டு சமூகத்தின் மீது, அல்லது தனிப்பட்ட ஒருவர் மீதோ எதிர்மறை எண்ணங்களை உருவாக்கிக் கொள்கின்றார்கள். இதனால் ஏற்படும் தப்பு அபிப்பிராயங்கள் மிகவும் அதிகமாகும்.





மேலும், சிலர் வேண்டுமென்றே, எதிர்மறை உணர்வுகளை வளர்த்துக் கொள்வதில் ஆர்வமாக இருக்கின்றார்கள். இந்த நிலையும் ஒருவரை வீழ்ச்சி நிலைக்குஇட்டுச் செல்லலாம். எதனையும் நாம் புரிந்து தெளிந்துகொள்ளப் பரஸ்பரம், திறந்த மனதுடன் உரையாடலாம். அதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். குடும்ப உறவுகளிடமே பேச முடியாத விஷயம் என்ன இருக்கப் போகின்றது? குரோதம் வளர்வதால் என்ன அனுகூலம் வந்துவிடப் போகின்றது? கொஞ்சம் சிந்திப்போம்! பிரச்சினைகளை தங்களுக்குள் அமுக்கி வைத்துக் கொண்டு, தமக்கு நீதி கிடைக்கவில்லை என்று சப்தமிடுவதால் ஏதுபயன்?

பாலைவனத்து மனதுடன் பசுமையான எண்ணங்களை எப்படி வளர்க்க முடியும்? கொஞ்சம் காற்று எம்மீது ஸ்பரிசிக்க இருட்டு அறையினுள் இருந்து காற்று அற்ற பிரதேசத்தில் இருந்து உங்களை வெளியேற்ற, விடுவிக்க உங்களது பரிபூரண அனுமதியுடன் வெளியே வாருங்கள்!

முதற்கண், நீங்கள், உங்களால் வரவேற்கப்படுவீர்களாக! பூச்சிகளும், வானத்தில் மின்னும் நட்சத்திரங்களும், பிராணிகளின் சங்கீத சப்தங்களும், மனிதகரங்களும், அணைந்து ஸ்பரிக்கக்காத்துக் கிடக்கின்றன. இயற்கை என்றும் எமக்கு விரோதமானவை அல்ல. அது மரம், செடி கொடியாக இருக்கலாம். அல்லது ஊர்வன, பறப்பன விலங்கினமாக இருக்கலாம். வானமும், நிலமும்,



RangaRakes
Tamilnayarasam.com

நீர்ப்பரப்புகளும் மனித தேவைகளுக்கும், அனைத்து உயிர்களுக்குமானவை, என்பதால் நாம் எதனையுமே எதிர் மறையாக எண்ணுதல் நகைப்பிற்குரியது.

காரணத்துடன்தான் எல்லாமே படைக்கப்பட்டன என்கின்ற சூட்சுமத்தினை நாம் தெரிந்து கொண்டாலே போதும். எமக்கு வாழ்க்கை என்பது ஒரு புதிரேயல்ல. உணர்க!

தெரியாததைத் தொடர்ந்தும், தெரியாமலே நாம் வைத்திருக்க முயல்வதுதான் மனிதப் புதிர்! மனிதன் வேதனைக்குரிய எண்ணங்களை வலிந்து தன் மூளையில் புகுத்தினால் அவன் உயர்ந்து எழுவது எங்ஙனம்? தாழ்வு நிலையை நாம் தெரிந்து கொள்ளாமல் விடுதலே பெரும் தவறு.

நாம் நியாயங்களைக் கேட்காமல், மௌனியாயிருக் கின்றோம். கேட்க வேண்டிய நேரத்தில், அல்லது எதற்கா வது, தகுந்த பதில் தெரிந்தும் சொல்லாமல், வேண்டு மென்றே மௌனம் சாதிக்கின்றோம். ஒருவருக்கு, நல்ல விஷயங்களை அல்லது கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டியவற்றை சொல்லி விட்டால் அவர்கள் அனுகூலம் பெற்றுவிடுவார்கள் என்று வஞ்சகக் காழ்ப்பு உணர்வு தோன்றினால் அதனால் ஏற்படும் வீழ்ச்சியை எப்படித் தடுக்க முடியும்?





எவரது வளர்ச்சியையும் மனதளவில் கூட ஏற்காமல் பாவசிந்தனைகளையே தொடர்ந்தும் வளர்ப்பவர்களும் மற்றவர்க்குச் சேரவேண்டிய கொடுப்பனவுகளைச் சேர விடாது தடுப்பவர்கள், அல்லது அபகரிப்பவர்களும் வீழ்ச்சி யடைந்து கொள்ள விரும்பும் ஆத்மாக்களாகவே ஆகி விரும்பி அழிபவர்களமாவர்.

இன்பத்துடன் வாழ எண்ணுதல் ஒருவரின் விரும்பப சுதந்திரம். அது நியாய பூர்வமானதாக இருக்க வேண்டும். இன்பமாக இருப்பதால் அவர்கள் துன்பங்களைத் தொட்டு விட வேண்டும் என்பதுமில்லை. துன்பத்தைத் தருவது இன்பத்தின் வேலையும் அல்ல.

எல்லாமே மனுஷதர்ம நீதிப்படி, அதாவது இறைவன் அவனுக்கு அளித்த நல்அறிவுப் பிரகாரம் நடந்து கொண்டால், வீழ்ச்சி நிலை எவர்க்கும் வந்துவிடாது. "அது நிச்சயம்".

தினகரன்
எழுகதிர்
27-09-2010



RangaRakes
Tamilnavarasam.com



# இல்லறம்

நல்லவைற்றையே என்றும் செய்தல் அறம். இல்லறம் அதற்குத் துணைசெய்யும். கணவன், மனைவி இணைந்தே, புது உலகம் உருவாகின்றது. இல்லறத்தின் சிறப்பு நிகழ்காலத்தையும், வருங்காலத்தில் வனப்பையும் சீராக்க வேண்டும். அன்புடன் இல் வாழ்வு எல்லோருமே அமைத்துக் கொண்டால் உலகம் முழுவதும் ஒரே குடும்பமாக மாறும். கணவன் மனைவி, தன்முனைப்பின்றி ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வதே சிறப்பிற்கு முதல் காரணியாகும். ஒவ்வொருவரினதும் குடும்பநலனும், உலக ஷேமத்திற்கே உரியதாகும்.

அறம் செய்தல்என்பது நல்லனவற்றை,விருப்புடன் என்றும் செய்தல் எனச் சொல்லலாம்.மனிதர்கள் எல்லோருமே,அறநெறியைக் கடைப்பிடித்து ஒழுகினால் சமூக நீதியில் அவர்தம் சுதந்திர சுபீட்ச வாழ்வில் பங்கம் ஏற்படமாட்டாது. நல்ல இல்லங்கள் அறம் வளர்க்கும் சொர்க்கபூமியாகும். எவராயினும் தான்சார்ந்த தொழில், சமூக தர்மம்,குடும்பவாழ்வு,அறப்பண்புகளில் விலகிட முனைதல் தகாது.





இந்த அற வாழ்வை சிறப்புற வாழ்வதற்கு இல்லறமே, நற்துணையாய் இருக்கின்றது. ஏனெனில் நாம் அனைவருமே, ஒரு இல்லத்தில் பிறந்து, வளர்ந்து, உயர்ந்தவர்களாகின்றோம். எனவே, எமது நிரந்தர வாழ்விடத்தில் இருந்தே நற்பண்புகளைக் கற்பவர்களாக, அதன்படி ஒழுகுபவர்களாக இருக்க வேண்டியுள்ளோம்.

சிறந்த இல்லறத்தை, அதன் தர்மப்படி வாழுகின்ற, கணவன், மனைவி இவ்வுலகில் உத்தம நாயகன், நாயகியாகின்றார்கள். ஒவ்வொரு குடும்பத்லைவனும், தலைவியும், உலகின் சீரிய வாழ்விற்கு ஏதோஒரு விதத்தில், பெரும் நன்மைகளைச் செய்த வண்ணமாயிருக்கின்றனர்.

ஒரு இல்லத்தின் சிறப்பு, எமது வாழ்வுப் பயணத்தில் நிகழ்காலத்திற்கும், வருங்காலத்திற்கும் சிறப்புறத் துலங்க வழிசமைக்கின்றது.

மகிழ்ச்சியுடன் வாழாதவன் பிறர்க்கு மகிழ்வை உண்டாக்க மாட்டான். எந்நேரமும், துன்பங்களுடன், தூங்கி எழுபவன், எப்படி மற்றவர்களுக்குக், "களிப்பு" என்றால், என்னவெனச் சொல்லித்தர முடியும், சொல்லுங்கள்? எனவே, ஒரு வீட்டில், கணவன் மனைவி, பரஸ்பரம் அன்புடன், புரிந்துணர்வுடன் வாழ்ந்து வந்தால் என்றும் இல்லம் களிகூரும். அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைச் செல்வங்களும், தமது பெற்றோர்போலவே என்றும் மகிழ்வாகச் சுறுசுறுப்பாக இயங்கி இவ் வையகத்திற்கு ஒப்பற்ற நற்சேவைகளையே வழங்கிவருவர்.



RangaRakes

Tamilnavarasam.com

இல்லத்தின் முதல் முக்கிய பாத்திரமாக விளங்குபவள் மனைவியாவாள். கணவன் வீட்டின் "தலைவன்" எனச் சொல்லப்பட்டாலும் நடைமுறை வாழ்வில் "அம்மா" எனும் தலைவியைச் சாரந்தே ஒரு குடும்பமானது, அவள் அன்பின் பாசத்தின் ஆதாரத்துடன் அவளது அரவணைப்புடன் சுகமாய் சீவிக்கின்றது. உழைக்கின்ற கணவனின் வரும்படிக்கேற்ப சிக்கனத்தை கடைப்பிடித்து தன் குழந்தைகளை மட்டுமன்றி கணவனையே, ஒரு பிள்ளையாகக் கருதியே பேணுவதன் மூலம், பெற்ற தாயின் இடத்தில் மனைவி வாழ்ந்து ஒளியூட்டுகின்றாள் அல்லவா?

நல்ல மனைவியை அடைந்தவனுக்கு எந்தப் பிரச்சனையும் அவன் தனது தலையில் சுமத்தப்படுவதில்லை. எல்லாவற்றையுமே, மனைவியானவள் தன்னிடமே உரிமையுடன் எடுத்துக் கொள்வதால் இல்லத் தலைவன் சுதந்திரமாக வாழ்ந்து குடும்பத்திற்குப் பொருள் ஈட்டுகின்றான்.

இன்று கணவன், மனைவியர் இருவருமே, தொழிலுக்காக அரச, தனியார் துறைகளுடன், தனிப்பட்ட முறையிலும் சுய தொழிலை மேற்கொள்ள வேண்டியவராகின்றனர்.

பெண் அடிமைத்தனம் பற்றி இன்றும் பேசப்படுகின்றது. ஆனால் காலம் காலமாக இருந்து வந்த பத்தாம் பசலித்தனங்களில் இருந்து விடுபட இன்னமும் சில சமூகங்கள் தயாராக இல்லை. எனினும், காலச் சுழற்சி, பொருளாதார நெருக்கடிகள் நெருக்கி, நொருக்கினால்,





வீட்டினுள் அடைபடாமல் பெண்கள் தங்கள் குடும்பச் சுமைகளைத் தீர்க்கக் கட்டாயம் கல்வி கற்று வேலை தேட வேண்டியவராகின்றனர். முன்பெல்லாம் பெண்கள் வீட்டில் தான் இருக்க வேண்டும். இன்று அப்படிச் சொல்ல முடியாமல் பிள்ளைகள் கருத்துக்களை ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டனர். வீட்டில் திருமணப் பேச்சு எடுக்கு முன்னரே பெண் படித்து இருக்கின்றாளா? என்ன வேலை செய்கின்றாள்? என்றே கேட்கின்றார்கள்.

சமூக மாற்றங்களுக்கு ஏற்ப இல்லங்களும் மாறுகின்றன. உலகின் தேவைகளை அறியாமல் வீட்டில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் பழைய காலத்து குலத் தொழிலை மட்டும் செய்து வாழமுடியும் என எதிர்பார்க்க முடியுமா? ஒவ்வொரு இல்லமும் சிறக்க நல் ஒழுக்கம் பேணப்படல் வேண்டும்.

மத நம்பிக்கைகள் நல் ஒழுக்கத்தைக் கட்டாயமாக்கின்றன. பாவங்கள் என்றால் என்ன என்று மதங்கள் எல்லாமே வலியுறுத்துகின்றன.

மதச்சடங்குகள் ஒழுங்கான வாழ்வு முறைகள், சுகாதாரத்துடன் வாழும் வழி முறைகளைச் செம்மையாக உரைக்கின்றன. தெய்வபக்தி, குருபக்தி இல்லாத இல்லம், தான்தோன்றித்தனமான வழிகளில் செல்கின்றது. ஆயினும் உண்மை நெறியில் வாழ்பவர்கள், எந்தக் கொள்கையைப் பின்பற்றினாலும் அதுவே இறைவன் விரும்பும் பாதையுமாகும்.



RangaRakes

Tamilnavarasam.com

குடும்பம் என்றவுடன் அது கணவன், மனைவி மட்டுமே சார்ந்தது அல்ல. அவர்களது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழும் உறவினர்களும், அதில் பின்னப்பட்டு விடுகின்றனர். முற்காலத்தில் கூட ஒரு குடும்பத்தில் உள்ள மொத்த உறுப்பினர்களுமே சேர்ந்து உழைத்து வந்தார்கள். பெண்கள் எல்லோரும் வயல் வரப்புகளில் மெய்வருந்தக் கஷ்டப்பட்டார்கள். முதியோர்கள், ஆலோசனை வழங்குப வர்களாகச் செயற்பட்டார்கள். முன்னர் வயல்களில் தொழில் செய்தமையை எவருமே எதிர்த்ததில்லை. கேலி பேசியதுமில்லை. ஆனால், தற்போதைய, உலகில் தொழில் என்பது பற்பல ரூபங்களாக வடிவமைக்கப்பட்டு விட்டன. எனவே, இல்லத்தின் அங்கத்தினர் அனைவருமே ஆண், பெண், வேறுபாடின்றி உழைப்பது புதிதான ஒரு விஷயமே அல்ல. வெளியுலக தொழில்கள் ஆண்களுக்கு மட்டுமே உரிமையானவையும் அல்ல.

பற்பல வசதிகள் பெருகிவிட்ட இக்காலத்தில் நாம் எல்லோருமே அவற்றை நாடுவது இயல்பு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ வசதிகளை எதிர்பார்த்து தங்களை மாற்றிய மைத்தும் வருகின்றனர். வசதிகள் மட்டும், ஒருவனை வாழ்வின் உயரத்தில் நிறுத்திவிடாது. நல்ல கல்வியூட்டல் மூலமே நல்ல தொழிலைத் தேட முடிகின்றது. இல்லத்தில் உள்ள கணவன் மனைவி இன்று தமது குழந்தைகளுக் காகச் செய்யும் தியாகம் மேலான உழைப்பு வியப்பிற் குரியது. இவற்றுக்கு, விலைநிர்ணயம் செய்ய இயலாது. ஓய்வின்றி உழைத்தால் மட்டுமே பிள்ளைகளுக்கு நல்ல





கல்வியூட்ட முடியும். நல்ல உணவு அளிக்க முடியும். இது தற்கால உலக நியதி.

முன்பு குடில்களில் வாழ்ந்த வாழ்வு முறை இன்று இல்லை. தனது பிரதேசத்தில் மட்டும் கல்விகற்ற காலம் இப்போது இல்லை. உலகம் பூராவும் மக்கள் சுற்றிப் பறந்து படிக்கின்றார்கள், உழைக்கின்றார்கள். எனவே, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நாம் என்னென்னவோ பாடுபட வேண்டியுள்ளது.

முன்பெல்லாம் குடும்பங்கள், கூட்டுக் குடும்பங்களா செயல்பட்டன. கணவன், மனைவி, மாமன், மாமி என்றெல் லாம், இணைந்து ஒரே வீட்டில் வசித்துவந்தனர். முதியோ ரின் தலைமையை ஏற்று அவர்கள் சொற்களே வேதவாக் காக அமைந்தன. அனுசரித்து இயங்குவது அவர்களுக்கு இயல்பான வாழ்க்கை நெறியாயிற்று. குடும்ப உறவு இன்றேல் இல்லறம், நல்லறம் அன்று. குடும்ப உறவு நிலைக்குப் பொறுமை, சகிப்புத்தன்மை தாராளமாக எம்முள் தங்கி நிலை பெறுதல் வேண்டும்.

ஆனால், இன்று எமது வீடுகளில் இப்படியாக வாழ்ந்து விடமுடிவதில்லை. வாழும் முறை, மனப்பக்குவம் எல்லாமே துறந்து, வெவ்வேறு கலாசாரக் கலப்பினால் தங்கள் தங்கள் கலாசார பாரம்பரியங்களையே மறந்து போய்க் கிடக்கின்றார்கள். அனுசரித்துப்போவதே சிரமமாக இருக்கின்றது. விருந்தோம்பல் பண்பு பற்றி நாம் எமது



RangaRakes

Tamilnavarasam.com

இலக்கியங்களில் நிரம்பப்படித்திருக்கின்றோம். சில சமயங்களில் எங்களை எத்தனை நபர்கள், பெரிதும் அறிமுகம் இன்றியே உபசரித்தார்கள் என்பதை உணர்ந்தால் அன்புடன் பிறரைப்பேணும் பண்புவரும்.

ஒரு இல்லறத்தான் தன்னை நாடிவருவோரை இன்முகத்துடன், வரவேற்று உபசரித்து நல்விருந்தோம்புவான். தனது உடன் பிறப்பு, பெற்றோரகளும் உற்றோரையோ மறந்துவிடும் மனிதர் நிறைந்த உலகமாகி விட்டது. ஒருவரை உபசரித்தல், அவர் நலத்தை ஒப்புக்காகக் கேட்டல், வெறும் கௌரவம், வீண் பெருமை பாராட்டுதலுக்காகவே வாழுதல், வெட்கப்பட வேண்டிய விஷயங்களன்றோ!

ஆரம்ப காலத்தில் இளமையில் யார், யாரிடமோ, கடமைப்பட்டு வாழ்ந்தவர்கள், உழைத்து, நாலு காசு சம்பாதித்ததும் தனித்து, தனக்கென வாழத் தலைப்படுகின்றார்கள். முன்பு இருந்த நிலையை மறப்பது உண்மைகளையே மறப்பது போலவேயாகும்.

சின்ன வயதிலேயே பெற்றோர் அன்பு, பாசத்தின் வலிமையினை உணர்வு ரீதியாக பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்க்க வேண்டும். பாசப்பிணைப்பின் உன்னதத்தை வெளியே உள்ள நல்ல குடும்பப் பாரம்பரியங்களில் சிறப்பாக வாழும் முறைமைகளைப பார்த்துப் பிள்ளைகளுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். வசதியற்றவர்களைத் தமது "உறவுகள்" என்று, பிள்ளைகளுக்குச் சொல்லித்தராத பெற்றோர்களும் இருக்கின்றார்கள்.





மிகவும் அறியாமையானதும் வெட்கப்பட வேண்டியதுமான விஷயம், இன்று பல குடும்பங்களில் உள்ள பிள்ளைகளுக்குத், தமது பாட்டன், பூட்டன்மார் நாமங்களைத்தெரியாது என்பது தான். சொந்தமாமன், மாமி, அவர்களின் பிள்ளைகளை அறவே "முகங்கள்" தெரியாமல் முழு முக்காடு போட்டு வளர்த்து வருகின்றார்கள். தங்களை உறவினர்கள் தெரிந்து கொண்டால் ஏதாவது ஐந்து, பத்துப் பெறத் தம்மை நாடி வந்து விடுவார்களோ எனப் பயப்படுகின்றார்கள் எனவும் கருதலாம்.

ஆனால், ஆதியில் மிகவசதியாக இருந்து தங்கள் பிள்ளைகள் குடும்பத்தை மறந்து வாழ்ந்து தமது இரத்த உறவுகளை உதாசீனம் செய்தவர்கள் தங்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் அபரிமிருதமான வளர்ச்சி கண்டு பிரமித்துப் போகின்றார்கள். ஏன் சில சமயங்களில் கூசாமல் அவர்களிடம் சென்று கைநீட்டவும் செய்கின்றார்கள். "என்ன உலகம் இது" எனக்கேட்கத் தோன்றுகின்றதல்லவா?

எனவே, இல்லறத்தை, நல்லறமாகக் கைக்கொண்டவர்கள், செய்யும் நற்பணிகள், உதவி புரியும் நல் எண்ணங்கள், அவர்கள் எதிர்காலத்தின் உயர்விற்காக ஏற்ற மிகு பயன்களை கொடுத்தேயாகும் என்பதனை அறியாதவர்களே புரியாத பொய்யான போலிக் கௌரவத்துடன் நடித்து வாழ்ந்து தனித்து எல்லோராலும் கைவிடப்பட்ட ஆத்மாக்களாகின்றனர்.



RangaRakes

Tamilnavarasam.com

பிள்ளைகளைப் பெற்றோர் ஓர் யந்திரத் தன்மையுடன் வளர்த்து வருவதைக் கண்டு கொண்டிருக்கின்றோம். குழந்தைகள் விளையாடி மகிழ பலவித விளையாட்டுப் பொருட்களை வாங்கி வீட்டில் நிரப்புகின்றார்கள். ஆனால் குழந்தைகளை சுதந்திரமாக விளையாடவிடச் சம்மதிப்ப தேயில்லை. "என்ன, எந்த நேரமும் விளையாட்டு. என்ன வேண்டிக்கிடக்கின்றது? பொம்மைகளை உடைக்கி ன்றாயே...., கை, கால்களில் பட்டுக்காயம் ஏற்பட்டால் என்ன ஆவது.. சரி... சரி விளையாடியது போதும்.." எனச் சொல்லுவதுடன் நின்று விடாது, அந்த மூன்று நான்கு வயது நிரம்பாத குழந்தையைத் தர, தர என இழுத்து ப்போய், படி, படி எனவேறு நச்சரித்துக் கொடுமை ப்படுத்துகின் றார்கள். இது தேவையற்ற நடத்தையல்லவா?

சும்மா வீம்புக்காக வீடு நிரம்பப் பிள்ளைகளுக்குப் பொருட்களை வாங்கிக் குவிப்பதும் அவைகளைத் தொடவிடாமல் தடுப்பதும் என்ன கொடுமை ஐயா?

மேலும், பல வீடுகளில் பொழுது போக்கு சாதன ங்களை, அழகாக அடுக்கி வைத்திருப்பார்கள். ஆனால் அவற்றை இயக்கி ஆனந்தப்படவே மாட்டார்கள். குளிருக் குப் போர்த்துமாற் போல், அவைகளை, மூடிக்கட்டிவைத்துக் கொள்வார்கள்.

- அனுபவிக்க வேண்டிய வயதில், நியாபூர்வமான விடயங்களை அனுபவித்திட அனுமதியளியுங்கள்!





- பொறாமை, அவா, கோபங்களைக் களைந்திட ஏற்ற மதியுரைகளைப் பக்குவமாக குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பீராக! துஷ்ட பழக்கங்கள் களையப்பட அன்பு தானாகவே பரிணமிக்கும்.
- ஓடியாடி, விளையாட அனுமதிக்கும் நீங்கள், அவர்களுக்குக் குறித்த நேரத்தில் குறித்த கருமங்களைச் செய்துவரப் பழக்கி விடுங்கள்.
- நன்றியுணர்வுடன் இணைந்து, தோழமையுடன் பழக வாய்ப்பளியுங்கள்!

இல்லறம் பேணுதல் என்பது, எமது பண்பாட்டிற்கு மட்டுமேயானது என உரிமை கொண்டாடிப் பேசுதல் பேதமை. மனித நாகரீகம் எல்லா மக்களுக்குமான உயர்ச்சி தான். பழைமையை மட்டும் பேசுவதாலும், புதுமைக்கு இடம் கொடாது மல்லுக்கட்டிப் பேசுதலாலும் எமது வீடுகளில் என்ன முன்னேற்றம் வந்து விடப்போகின்றது?

ஒவ்வொரு மனிதனும், தன்னை உணராது, தனக்கு என மக்களில் இருந்து வேறான முகத்தைப் பூட்டி வாழ்ந்திட முடியாது. தன்னைத் தரிசித்து, உணர்ந்தாலே மற்றவர் குறைகளைப் பார்க்கும் குணமே குலைந்துவிடும். ஏன் எனில் எல்லா தவறுகளுக்கும், அல்லது சின்னச் சிறு, சிறு தவறுகளுக்கும், நாமே சொந்தக்காரர்களாக இருக்கின் றோம்.

நாங்கள், வீட்டின் ஒரு தனி அங்கமாக, அந்தரங்கமாக



RangaRakes

Tamilnavarasam.com

வாழுவதால் எமது தனி மனித குணாம்சங்கள்தான் இந்தப் பரந்த பூமியையும் பெரிதாகப் பாதிக்கும். வீடு வேறு நாடு வேறு அல்லவேயல்ல. "நான் ஒரு சிறு தவறு விட்டுவிட்டேன் அதனால் என்ன படுபாதகம் வந்து விட்டது" எனச் செய்த தவறுக்கு சமாதானம் செய்யற்க!

வீடுகள் தோறும், மகிழ்வு உட்புகுந்தால் அது இந்த உலகிற்கான நல்வரவு. எங்களைப் போலவே எல்லோருமே தங்கள் குடும்பங்களுடன் சந்தோஷமாக, சௌக்கியமாகக் கௌரவமுடன் வாழ இறைவனிடம் வேண்டுதல் செய்திடுக! இல்லங்களின் நல் ஒளிசேர்தல் என்பது அங்கு வாழும் இதயங்களின் நல் எண்ணங்களின் பிணைப்பேயாகும். அறிவோமாக!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
14-12-2008







# உண்மை

உண்மை என்றும் நிரந்தரமானது. உண்மை திரிபு அற்றது. அநீதிகளுடன் வாழ்பவர்கள் அதுவே தமது "நீதி" என்று எண்ணிவிடுகின்றனர். பொய்யர்களுடன் புகலிடம் தேடுவது, ஓநாய்கள் வாழ்வதற்கு, ஆடுகளை வலிந்து கொடுப்பதுபோலாகும். நல்லோர் சொல் பலிக்கும். பொய்யர்கள் உண்மைத் தீயினுள், பொசுங்கிப் போவார்கள். உண்மையெனும் மாமலையினை, "பொய்" கொண்டு தேய்த்து அழிக்க முடியாது. கஷ்டப்பட்டுப் பொய்மையாக வாழ்வதை விடுத்து, மிக இயல்பாக உண்மையுடன் வாழ்வதே மேன்மை. "உண்மை" சாதனை செய்யும்.

உள்ளதை, உள்ளபடி காட்டி நிற்பது உண்மையாகும். உண்மையின் கூற்றுக்கள் நிரந்தரமானவை பக்கச்சார்பு அற்றவை அழிவற்றவை. உண்மைகளைத் திரிவுபடுத்த முடியாது. அப்படியே, திரிபுபடுத்தும், முயற்சியில் ஈடுபடுவோர், முடிவில் தோற்றுப் போய் விடுவார்கள்.எனினும், உண்மையுடன் வாழ்பவர்களைச் சிலர் ஏமாளிகள், பிழைக்கத் தெரியாதவர்கள் என்றும் கேலியுடன் பேசுவதுண்டு. ஆனால், உண்மையுடன் வாழுவதே சிரமமானது என்று சொன்னால் அது தவறான



RangaRakes
Tamilnavarasam.com

கருத்துத்தான். ஏனெனில் எல்லோருமே சத்திய வழியில் வாழ்ந்து வந்தால் ஒருவரை, ஒருவர் ஏய்த்துப் பிழைக்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை.

எனவே, எல்லோருமே சரியானபடி செவ்வனே வாழ்ந் தால் ஏது சிரமம்? ஆனால், நடைமுறையில் அப்படி யார் வாழுகின்றார்கள்? ஒருவன் தன்னை ஏமாற்றுகின்றான் என்றால், அதிலிருந்து தப்பித்துக் கொள்ள மற்றவன் அவனைப் பழி தீர்க்கவும், அவனை விடத் தானே முந்தி விடவேண்டும் என்பதற்காக, தானும் நீதிக்குப் புறம்பான காரியங்களைச் செய்ய எத்தனிக்கின்றான். உண்மை, சத்தியம், நியாயம் என்று சொல்லப்படுபவை எல்லாமே, நீதியுடன் இணைந்தவை தான். காலம், காலமாக நீதி பற்றி எமக்கு அறிவூட்டப்படுகின்றது. நீதி நெறியில், இருந்து பிறழ்ந்தால், அழிவு நிச்சயம் என்று அறிந்தும், தற்காலிக சுகம்தேடும் மானுடர், சத்தியவாழ்வை மறந்து நிற்கின் றார்கள்.

அநீதிகளுடன் வாழ்கின்றவர்கள் அவை எல்லாமே, பழக்கமாகவிட்டால் முடிவில் அதுவே உண்மையானது என நம்பி விடுகின்றார்கள். இந்த அவலக் கட்டுக்குள் இருந்து அவனி விடுபடல் வேண்டும். நல்லதைச் சொன்னால் கேலியுடன் நோக்கும் காலம் களையப்படல் வேண்டும்.

ஓநாய்கள் வாழ்வதற்காக ஆடுகளை வலிந்து கொடுக்கும் மனிதர் சிலர் வளர்ந்து வருகின்றனர். தீமைக்





குத் தீனி போடுவதால் ஆதாயத்தை அதிகமாக நோக்கலாம் என்று எண்ணி தன்னைத்தான் காட்டிக் கொடுத்து ஆன்மாவில் அசுத்தத்தைத் தானாகவே தேய்த்துக்கொள் கின்றார்கள். கொடுமை! உண்மையைத் தேடி ஓடி அலையத்தேவையே இல்லை. தன்னைத்தான் முழுமை யாக்கி உருப்பெற, உண்மையை மட்டும் ஏற்றுக்கொள்ளும் தெளிவு ஏற்படின் எமது செயல்கள் அனைத்தும் உண்மையை அன்றி வேறு எதனையும் ஏற்கமாட்டாது. இந்த உன்னத நிலையை எமக்குள்ளேயே நிலை நிறுத்தினால் துணிவு, உற்சாகம், கம்பீரம் எல்லாமே திரண்டு நின்று சரியான பாதையை விட்டு விலகாத நிலை தோன்றி விடும்.

உண்மை பேசுபவன் வாய்மை, தூய்மை பெறுவ தனால், அவன் சொற்கள் வலிதாகி விடுகின்றன. அதற்கு முன் மறுபேச்சு, குதர்க்கம், எதிர்வாதம் எதுவுமே செயலற்று விடுகின்றன. நல்லவர்கள், சொல்பலிக்கும் என்பார்கள். இதயம் விஸ்தாரமானால், தேவையற்ற கஷ்டங்கள் தூர ஓடும், தூர்ந்தும் போகும்.

குறுக்கு வழி சம்பாத்தியக்காரர்களின் திடீர் உயர்ச்சி கண்டு சாதாரண மக்கள் குழம்பிப்போவதுண்டு. "அவரைப் பாருங்கள், எந்தவித படிப்பும் இல்லை, வேலையும் இல்லை, ஆனால் எப்படித் திடீர் எனக் கோடீஸ்வரன் ஆகிவிட்டான். எல்லாம் அதிஷ்டம் ஐயா! எல்லோரும் எப்படியோ சம்பாதித்து முன்னேறிவிட்டார்கள். நாங்கள்



RangaRakes
Tamilnavarasam.com

எவ்வளவு கஷ்டப்பட்டும் உண்மையாக உழைத்துப் பயனில்லாமல் போய் இப்படிக் கஷ்டப்படுகின்றோம். எல்லாமே "விதி" என்கின்றார்கள்.

இப்படியாக மனம் நொந்து முடிவில் இத்தகைய சிலர் தகாத வழியில் தம் எண்ணங்களை மாற்றியமைத்துக் கெட்டழிந்து போவதுமுண்டு.உண்மையின் சாஸ்வதத் தன்மையை இத்தகையவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு கொள்வதற்கு நல்ல வல்ல, ஆளுமைமிக்க பெரியோர்களின் உபன்யாசம், கருத்துரை களைக் கேட்க வேண்டும். ஆழமாக, சமூக நலன்களை வலியுறுத்தும் கலை நிகழ்வுகளை மட்டும் கேட்டுப் பார்க்கப் பழகவேண்டும்.

வாழ்க்கை என்பது ஒரு பக்கத்தினுள் அடக்கப்படும் விளம்பரமோ அல்லது பல நூறு பக்கம், பக்கமாகச் சொல்லி முடிக்கக்கூடிய நாவல் இலக்கியமோ அல்ல. இது பல விடயங்களைத் தொட்டுநிற்பது. எல்லாவற்றையும், பூரணமாகச்சொல்லி முடிக்கவியலாது.

ஆனால், உண்மை, நேர்மை, உழைப்பு, பக்தி, அன்பு இவற்றுடன் இணைந்த வாழ்க்கையில் முழுதுமாய் வியாபித்திருப்பது இன்பம்... பேரின்பம்.. வாழ்நாள் முடியும் வரையும் அதன் பின்னரும் மற்றோரால் வியந்துபாராட்டக் கூடியதும் இந்த உண்மையான வாழ்க்கை முறைமைகள் தான். இதை உணராமல் சரியான வாழ்வை அமைக்க





முரண்பட்ட திசையில் வாழ்ந்தால் துன்பங்களைத் தவிர வேறு எதனையும் பெற்றுக் கொள்ள முடியவே முடியாது.

தனி ஒரு மனிதன் தூய வழியில் நடந்து பெற்ற பல் ஆயிரம் சாதனைகள் பல்கோடி மாந்தரை விழித்தெழச் செய்து இயங்கவைக்கும்.

பல நாடுகளின் விடுதலைப்போராட்டங்களில் ஈடுபட்ட தியாகிகள் கட்டிவைக்கப்பட்டு, அடித்து உதைபட்டுச், சிறை வாசம் அனுபவித்தும் கூடக் கொண்ட கொள்கையில் இருந்தும் தமது அறநெறியில் இருந்தும் பிறழ்திடாமல் வாழ்வாங்கு வாழ்ந்து, தூய்மை வாழ்வு இதுவென நிரூபிக்காதிருந்தால் உலகம் இன்னமும் உள்ளதை உள்ளபடி உணராமலேயே தலைகீழாய் மாறியிருக்கும். தெரிந்து கொள்க! இன்னமும் பலரினதும் தனி மனித சாதனைகளால் நாம் பயன் பெற்று வாழ்வதை மறுக்க முடியுமா? ஒருவர் உள்ளத்தில் ஒளியுண்டானால் அவரிடம் இருந்து அபமிருதமான, சக்தி புறப்படுவதாகவே ஆன்மீகம் எமக்குச் சொல்கின்றது. எத்தரத்தாருக்கும் நியாயம், நீதி பொதுவானது. கடவுளைத் திட்டுபவர்களும் சரி, இறைவனை நம்புகின்றவர்களும் சரி, "வாய்மையே வெல்லும்" என்பதை மனதார நம்பி அவ்வண்ணம் ஒழுகினால் அவர்கள் தெய்வத்துடன் நெருங்கியவர்களாகி விடுவார்கள். இன்று எம்மில் பலரும் தங்களுக்கான நீதி, நியாயம் எதுவெனப் புரியாது தம் பிரச்சினைத் தீர்க்க நீதிமன்றங்களுக்கு உடனடியாகப் போகின்றார்கள். பேசித்



RangaRakes
Tamilnavarasam.com

தீர்க்க வேண்டிய சாதாரண விஷயங்களுக்காக யாரோ, எவரோ ஒரு நியாயவாதியிடம் பணம் கொடுத்துப் பிரச்சினைகளைத் தீவிரமாக வளர்க்கின்றார்கள்.

சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டியவை பொது மன்றங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டால் குரோதம்தான் மிஞ்சும். தங்கள் பக்கத்து உண்மைகளை நிரூபிப்பதற்காகப் பொய்யான தகவல்களைக் கூட, அறியாமையால், வழங்கி விடுகின்றார்கள். உண்மைக்கு ஒரு முகம்தான். எனவே, ஒரு முறை சொல்லப்பட்ட உண்மைகளை பல விதமான, கற்பனைகள் இழைந்த, பொய்மையான சோடனை வார்த்தைகளால் மறைத்து விடமுடியாது.

பல உண்மையான வழக்குகள், பொய்மையாளர்களால் திசை திருப்பப்படுகின்றன. இவையெல்லாம், சமூகத்தில், நாம் பார்க்கும் பகிரங்க மோசடிகள் "காலம்" என்கின்ற நீதிபதி கொடுக்கும் தண்டனைகள், காலன் வழங்கும் தண்டனையை விட உக்கிரமானவை. எனவே நல்லவர்கள் மனம் கசந்து குமைந்து நீதிக்காக இரந்து அழுவதற்கு கடவுள் "காலம்" மூலம் தக்க பதில் வழங்குவார்.

உண்மை என்பதே, மிகப் பெரும் மலையைவிட உயர்ந்தது, வலியது. அதனை நமது, நகம் கொண்டு சுரண்டித் தேய்க்க இயலாது. சிலர் இந்த அறியாமையான காரியத்தையே தினம் தினம், செய்து தாமே தேய்ந்தழிகின்றனர்.





சரியான வழி, தொந்தரவானது அல்ல. சூரியப் பிரகாச ஒளியோடு, தெளிந்த அறிவோடு, எவ்வளவு நீண்ட பயணங்கள் என்றாலும் அது மனோரம்யமான சந்தோஷம் தரக்கூடியதே!

காற்றே இல்லாமல், மூச்சு முட்டத், துர்நாற்றத்துடன், பலத்த இரைச்சல்களுடன், காதுகுடைய, உடலில் நீர் சிந்த பத்து அடிப்பாதையைக் கடக்குமுன் எமது பிராணன் போய்விடும். இது தேவைதானா?

நாம் நல்லபடி வாழ மிகுந்த கஷ்டப்பட வேண்டும் என்றே கருதிவிடுகின்றோம். ஆனால் நியாயமான வரும்படிகள் காலம் தாழ்த்திக் கிடைத்தாலும், அவை நிரந்தரமானவை. அவசரப்பட்டுச் செல்லும் தகாத நடவடிக்கையை விட பொறுமையாக "தூய்மை" போற்றி வாழ்பவன் பாக்கியவான். உணர்க! அறியாமை, ஆணவம் மிதமிஞ்சிய ஆசைகள் எல்லாமே எம்மையறியாமலேயே நிஜங்களை வேறாகக் காட்டி விடுகின்ற துரதிருஷ்டங்களே!

மேலான ஆசைகளை வென்றவர்களுக்கு, உண்மையாக வாழ்வது ஒரு மிக இயல்பான வாழ்வு முறைதான். தானாகவே மகிழ்வு இவர்களுள், உறைவிடமாக நின்று ஒட்டிக்கொள்கின்றது. கண்ணுக்கு முன் களி நடனம் புரியும் சந்தோஷமானவைகளை, நாம் ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கின்றோம் என்பதே எமக்குப் புரிவதில்லை. மாறாக ஆரவாரம், அடங்காத வேட்கைமிகு எண்ணங்களுள்



RangaRakes Tamilnavarasam.com

புகுந்ததும், களிப்பூட்டும் நெஞ்சத்தை, உற்சாகப்படுத்தும் உணர்வுகளைப் புறந்தள்ளுகின்றோமே, அது ஏன்?

மனிதர்க்கு உண்மை பற்றிச் சொன்னால் புரிகிறது இல்லை. பட்டால் தான் புரியும். வேதனை மூலம் நிஜங்களைக் காண்பதற்கு முன்னர், ஆரம்பத்திலேயே நல்லவற்றுடன் உறவு பூண்பது எவ்வளவு லாபகரமானது காலவிரயமற்றது எனத்தெரிந்து கொள்வோமாக! உண்மையை ஆராதிக்காதவன் பிச்சைக்காரத்தனமான வாழ்க்கையைத் தான் தேடுகின்றான். ஏன் எனில், அவன் தான் வாழ்ந்து கொள்ளப் பாவங்களிடம் சென்று கை ஏந்துகின்றான். களவு எடுக்கும் மார்க்கத்தைக் கோருகின்றான். எப்படி ஏமாற்றுவது என்று ஆராய்ந்து தேடுவதில், காலத்தைக் கரைக்கின்றான். அறியாமை, தெளிவின்மையுடன், கீழ் நோக்கி ஓடும் முறையானது, பள்ளத்தில் விழுந்து கொள்ளும் கற்களின் வேகத்தை விட அதிவேகமானது. இந்த வேகத்தினால் ஒரு நொடிப் பொழுதில் நீண்ட பொழுது வாழ்க்கை, பனி எனக் கரைந்து விடுகின்றது.

சிலரிடம் பேசுவதைவிட நாம், ஒரு வெற்றிடத்திற்கு உபதேசம் செய்யலாம். எப்படிக் கத்தினாலும் கேட்காத ஜன்மங்களுடன் எதனைச் சொல்வது? நல்ல சிந்தனைகளை,வெளியே வெறும் வெளியில் சொன்னாலும் பரவாயில்லை. எமது இதயம் துப்பரவாகும்.

பிரபஞ்ச வெளியில் இரண்டறக் கலந்து, நல்லோர்





செவிகளில் ஏற்றி ஒளியூட்ட. எத்தனை ஞானிகள், சித்தர்கள் சிந்தனையாளர்கள், யோகிகள், தீர்க்கதரிசிகள் உபதேசம் செய்தார்கள், செய்து கொண்டேயிருக்கின் றார்கள். உண்மையைப் பேசு, அதன்படி ஒழுகு, வாய்மையே நல்வாழ்வு என்று நாம் படித்ததில்லையா?

கல்வி, கலை, கலாசாரம் என்பவை எல்லாமே மேலான நல் அறத்த வலியுறுத்தலுக்கானவை தான். சொல்லுதற்கரிய நல் உபதேசங்களைச் செவிமடுத்தலும் அதனைப் பிறர்க்குத் தெரியப்படுத்தலும், அவ்வண்ணம் வாழ்ந்து காட்டுதலுமே மேலான மானுட தர்மம். எக்கணத்திலும், எம்மை நோக்குபவர்களை, நாம் கவர்ந்து, களிப்பூட்டுபவர்களாக இருக்க வேண்டும். நீங்கள், உண்மையானவர்களாக இருந்து பாருங்கள். எல்லா உறவுகளும் தேடிவரும். சத்தியத்தைத் தேடும் மனிதர்களுடன் பழகுதலே பேரின்பம்.

நல்ல நேயங்கள், நல்ல இதயங்களைக் கொண்டவர்களுடன் மட்டும் உறவு வைத்திருந்தால், என்றும் எமது நெஞ்சம் லேசாக, நிம்மதியாக அமைதியுடன் மிதப்பதாக உணருவீர்கள். உண்மை மட்டுமே ஸ்திரமான சுகங்களை அள்ளித்தரும் இயல்பினதாகும். நல்ல அனுபவபூர்வமான, நிதர்சனமான நல்லோர் தீர்ப்பு இதுவே தான்.

தினக்குரல்
(ஞாயிறு)
30.11.2008



RangaRakes Tamilnavarasam.com



# பொய்

பொய், நீதி, நியாயங்களைச் சேய்மைப்படுத்தி வைக்கும். பொய்யும், புரட்டும், வாழ்க்கையை உருட்டி, வீழ்த்தும். இது ஆன்மவிரோத மாகையால், இதனை நம்பி உய்ந்தவரில்லை. பொய் என்பது பேசுவதில் மட்டுமானதல்ல. நெறிதவறிய வாழ்வு வாழ்ந்தாலும் அது பொய்மையானதே. பொய் தோல்விக்கு வித்து. பொய்மைக்குப் பல முகங்கள். எல்லாமே அசிங்கங்கள், கேவலங்கள். உண்மை ஒளியை நெஞ்சினுள் செலுத்தினால், மாயப்பொய் அவிந்து தொலையும். பொய்மையானவர்கள் செயல்கள் கண்டும் மௌனிப்பவர்கள், அறவாழ்விற்கு அப்பாற்பட்டவர்களே!

உண்மைக்கு, எதிர்மறையானதும் ஆன்ம விரோதமானதும், ஏமாற்றங்கள், தோல்விகளையே உண்டு பண்ணக் கூடியதும், "பொய்" என்கின்ற பொய்மையாகும். பொய்யும், புரட்டும் வாழ்க்கையை மிரட்டி, உருட்டி வீழ்த்தும்.

பொய்யை நம்பி வாழ்ந்து உய்ந்தவர் எவரும்





இல்லை. ஆனால் இதனையே சரணடைந்தவர்கள், எய்தும் தற்காலிகமான இன்பங்களை விட சுமக்கும் துன்பங்களோ பல்கோடி பிறப்புகளுக்கே வழிசமைக்கும். செய்கின்ற அனைத்துப் பாவங்களுக்கும் மூலகாரணமே பொய்யான வாழ்க்கை முறைதான். "பொய்" என்பது பேசுவதில் மட்டு மல்ல, தவறான முறையில் வாழ்ந்தாலும் அது பொய்யான வாழ்வு தான் உணர்க!

நல்ல, தூய உறுதிமிக்கவர்களுக்கு எத்தகைய இடர்வரினும் கட்டுப்பாடு, தூய்மை தானாய் துலங்கி நிற்கும். கட்டுப்பாடுகளுடன் வாழ்கின்றவன் தனக்கு எஜமானனாக வாழ்கின்றான்.

பொய்யுடன் புரள்பவர்கள் சொல்கின்ற பொய்மையையும் வேண்டாத நடத்தைப் பிறழ்வுகளையும், மிகத் தீவிரமாகவே மற்றவர்களுக்கும் அதனையே செய்யத் தூண்டுபவர்களாக இருக்கின்றார்கள். தங்களுக்குப் பிடித்தமானவர்கள் செய் கின்ற தவறுகளை சில சமயம் தெரியாமல் இருக்கின் றார்கள். ஆனால் பல சமயங்களில் தவறான செயல்களைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள். தெரிந்தாலும் அதனைப் புறம்தள்ளி விடுகின்றனர். இன்னமும் சொல்லப் போனால் அதனை முழுமையாக அங்கீகரித்து அதுவே சரியானது எனவும் வாதிடுகின்றனர். இந்தக் கேவலநிலை தவறானது என யாராவது சொல்லப் போனால் அவர்களிடம் குரோதம், சினம் கொள்கின்றனர்.



RangaRakes
Tamilnavarasam.com

பொய்மையின், ஆளுமைக்குள் பிரவேசிப்பதை, உண்மை நிலையில் இருந்து படிப்படியாகப் பிறழ்வதைக் கண்டு கொள்ளாமல் பொய் எனும் மாயவலைச் சதிக்குள் ஆட்பட்டு உழல்வதைவிட அசிங்கமான துர்நடத்தை வேறேதும் இல்லை. பொய்க்குப் பலமுகங்கள் என்பார்கள். நாம் படித்த புராணக்கதைகளில் அரக்கர்கள், இராட்சதர்கள் எனப்பல பாத்திரங்கள் வருவதுண்டு. இவர்கள் பல விதமான வடிவங்களை எடுப்பார்கள். நல்லவர்களை வதைப்பார்கள். முடிவில் இவர்கள் உருத்தெரியாமல், செத்துப் போவார்கள். "பொய்" என்பது இதுவெனக் காட்டப்பட்ட உபதேசம் புனைகதைகள் இவையேதான்! உணர்க.

இதேபோல, "பொய்" என்கின்ற துர்க்குணம் பல வடிவங்களை எடுக்கும். மனிதர்களை மயக்கி, வாட்டி வதைக்கும். இதன் உண்மை நிலை உணர்ந்தவர்கள் தப்பித்துப் போவார்கள். மாட்டிக் கொண்டவர்கள் அல்லல் பட்டு அவதியுற வேண்டியதே!

துன்பங்களின் வேர்களைப் பொய்மையாளர்கள் விரும்பி உற்பத்தி செய்கின்றார்கள். இதில் இருந்து எழும் விஷ விருட்சங்கள் கயமை, மேலாதிக்கம், அத்துமீறல், குரோதம், தீராப்பகை போன்ற துர்க்குணங்களைப் பெற்றுத் தள்ளுகின்றன. இந்த விருட்சத்து விஷப்பழங்களும் காய்களும் குலைகளும், மாந்தர்கள் வெயிலில் இருந்து தப்பித்துக் கொள்ளவோ பசிக்கு உணவாகவோ பயன்படப் போவதில்லை. மாறாக, தீராத துன்பங்கள், ஆயுளை





அரிக்கும் வருத்தங்கள், பிணிகளையே வலிந்து வரவழைக்கும். எந்த மனிதனும் நீண்ட ஆயுளுடன், வாழ்ந்து பிறர்க்குத் தொல்லைகள் கொடுத்து தனது ஆன்மாவையும் அழுக்கடையச் செய்வதை விட இருக்கும் சொற்ப காலத்தில் பொய்மையே இல்லாத வாழ்வுடன் வாழ்ந்தால் அவன் கோடானகோடி காலங்கள் வாழ்ந்து சாதித்த நற்பேறு பெற்றவனாகி விடுகின்றான்.

மனிதன் எப்படி வாழவேண்டும் என்கின்ற இறை கட்டளை எதுவோ, அதுவிடயத்தில் அவர்கள் இன்றும் என்றும் ஜாக்கிரதையாக இருக்கக் கடமைப்பட்டவர்களாவர்.

அடுத்தவனைக் களைப்படையச் செய்து, அதன் மூலம் அவன்மேல் ஏறிநின்று தாக்க, சாதிக்க எண்ணுதல் சுத்த கோழைத்தனமானது. தவறான வழியில் ஒருவரை அடித்து விழுத்துவதில் என்ன வீரம் உண்டு? பொய்யாக, போக்கிரித்தனமான வாழ்பவர்கள் தெருவில் போகின்றவர்களைக் கண்டால், சும்மா இருக்க மாட்டார்கள். வலிந்து சண்டைக்கு இழுத்து சுரண்டிக் கொள்வார்கள். அல்லது இனிக்க, இனிக்கப் பேசியே கவிழ்த்தும் விடுவார்கள்.

தம்மைச் சுற்றி நல் "நெறி" என்ற வேலியே இல்லாத பொய்யர்கள் அடுத்தவன் கோட்டையை வெறும் பேச்சினால் பஸ்மமாக்குவது விந்தைதான். எந்தப் பொய்யனும் வீரனாக முடியாது. ஆனால், உடலில் மெலிந்து உள்ளத்தில் ஒளி ஏற்றி வாழ்பவன் எவருமே சாதிக்க முடியாத வலிமைமிகு



RangaRakes

Tamilnavarasam.com

செயல்களை வெகு சாமர்த்தியமாக இலகுவாகச் செய்து முடிக்கின்றான்.

"நீ, உனது அல்லன். உனக்கு நீ உரிமையானவனும் அல்லன். எல்லாமே இறைவனுக்கு, அவனுடையது", என்கின்ற எண்ணம் பரிணமித்தால் பொய்பேசி, பொய்யவன்னாகவாழ்ந்திட மனம் சித்தமாயிருக்காது. எனக்கு, எனக்கேயானது என்ற தன்முனைப்பு வந்ததுமே தவறு, குற்றம் புரிதல், பொய் வேஷங்கள் எல்லாமே எனது நியாயத்திற்கு உரியவை என மனிதன்எண்ணிடத் தலைப்படுகின்றான்.

இறைவன் கூட மனிதனிடம் பல வரங்களைக் கேட்கின்றான். "நீ பொய்யுடன் வாழாதே! உண்மையானவனாக வாழ்வாயாக! அன்புடன், எல்லோரையும் நேசிப்பாயாக! எக்கணமும், தீங்குசெய்தலையும், தீங்கு செய்யத் தூண்டும் தீய சிந்தைகளையும் அகற்றுவாயாக"! என்று தான் கேட்கின்றான். அவன் எந்தமுறையில் கேட்கின்றான்?

ஓ.... அது உங்கள் மனமூடாகப் பேசுகின்றான். மனச்சாட்சியினூடாக. கேட்காத ஒலியூடாக, உள் உணர்வாக உண்மைகளை மட்டும் சொல்லிக் கொண்டேயிருப்பான் நாம் எமது மனச்சாட்சிப்படி, நடக்கின்றோமா? எமக்குப் பிடிக்காமல் விட்டால் நல்ல சொற்களைக் கூட நாம் கேட்பதில்லை. எமக்கு எமது சுயநலத்திற்கு எது உவப்பானது என்று தான் எதிர்பார்க்கின்றோம்.





எங்களிடம் உள்ள உபயோகமற்ற, பொருட்களை, எவர் தலையிலாவது கட்டி விட எண்ணுகின்றோம். சிலர் அவற்றை கூட இலவசமாகக் கொடுக்கத்தயாரில்லை. அவைகளில்கூட ஏதாவது காசைப் புரட்டலாமா எனச் சிந்திக்கின்றனர். இந்த நிலையில் நல்ல நிலையில் உள்ள எந்தப் பொருளையும் இல்லாதவனுக்கு எப்படிக் கொடுப்பான்? இறைவன் படைப்புக்கள் எல்லாமே தமக்குரியன என,எண்ணுபவர்க்குத் தான,தர்மம் சிரமமானதே!

நாம் கடவுளிடம் பொன், பொருள், பதவி, புகழைத் தான் கேட்கின்றோம். "எமக்கு நற்சிந்தனையூட்டுவாயாக! ஆசைகளைக் களைவாயாக! என்றுமே, பொய் புகலாதவனாக இருக்கும் மன உறுதியைக் கொடு! தேவா எனக் கேட்கின்றோமா?" கேட்க வேண்டியவை எவ்வளவோ இருக்கும் போது, உலக இன்பங்களை மட்டும் இரந்து கேட்கின்றோம். இந்த உயிருக்கு உகந்த பெரும் பேறு எதுவென எண்ணுவதில்லை. பொய்மை கலவாத உண்மை வாழ்வுதான் சாஸ்வதமான அழியாத ஒன்று என்று நாம் அறிந்ததுமே எமக்கு எல்லாமே பூரணமாகக் கிடைத்து விடும்.

நாம் கடவுளிடம் கேட்க எதற்குக் கூச்சப்படல் வேண்டும்? கேவலம் ஓர் அற்பமான பொருள் ஒன்று வேண்டுவதற்காக, வியாபாரியிடம் இரந்து கேட்கின்றோம். "ஐயா, நீங்கள் கேட்கும் பொருள் தற்போது, எம்மிடம் இல்லை. அரிதானது" என்று வியாபாரி சந்தர்ப்பம், தேவை



RangaRakes Tamilnavarasam.com

யறிந்து பொய் பேசுகின்றார். ஆனால், நாமோ எமது காசைக் கொடுத்து பிச்சை கேட்பது போல் இரந்து கேட்கின்றோம். "ஹே! மனிதா... கண்ட கண்ட பொருளுக்காக, உனது அற்ப ஆசைகளுக்காக, யார் யாரோ காலில் விழுந்து, இரந்து பிச்சை கேட்கின்றாயே? எல்லாம் வல்ல இறைவனிடம் உனது குறைகளைக் கேட்க மட்டும் என்ன வெட்கம் வேண்டிக் கிடக்கின்றது? நீ, அவரிடம் சென்று கேட்காத நிலைதான் வெட்கத்துக்குரியது. தெரிந்து கொள் தோழனே!"

டயோஜினில் என்ற ஞானியிடம் மகா அலெக்ஸாந்தர் வந்தான். "நீங்கள், பெரிய ஞானியாமே? என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்" என்று கர்வமாகக் கேட்டான். உலகம் முழுவதும் சுற்றிப் போராடிப் போராடி, பல் ஆயிரம் உயிர்களைக் கொன்று குவித்து பல நாடுகளைக் கைப்பற்றியதால் தானே பெரிய வீரன் என்கின்ற மமதையில் அப்படிப் பேசினான்.

அவன் பேச்சைக் கேட்ட டயோஜினிஸ் சொன்னார். "நீ, ரொம்பவும் கஷ்டப்பட்டு, நாடுகளை வென்றாய். ஆனால் நான் என்னையே வென்று நிற்கின்றேன்" என்றார். ஆமாம், தன்னை வென்றவன், தன் புலனை அடக்கியாண்டவனே மாபெரும் வீரன் தன்னை வெல்லுதல் என்பது தன் புலனடக்கத்தின் மூலம் ஆசைகளை.ஆணவத்தை, பொய்மைகளை வேருடன் களைதலாகும்.என்னதான் நாம் பெரும் பதவி, புகழ், செல்வங்களைப் பெற்றிட்டாலும்





தன்னை ஆளாதவன் மனிதனே இல்லை என்றே எல்லா மதங்களும் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அன்பு எனும் ஓரே கூரையின் கீழ் நாம் அனைவரும் ஒருமித்து இருப்போமாக! இந்த எண்ணமே எமது பொய்மையான சிந்தனைகளைப் புறம் தள்ளி விடுகின்றன.

வரட்சிக்காலத்தில், வரண்டு கிடக்கும் நீர் நிலைகளுக்குப் பெரு மழை பொழிந்தாலே அது நனைந்து நிரம்பும். ஒரு செம்பு நீர் இறைத்தால் அது நிரம்பாது. பொய்மையாக வாழ்ந்து சேர்த்த பாவங்களைக் கழுவ ஒரு சில நற்காரியங்களை வெறும் புகழுக்காகச் செய்து புண்ணியம் சேர்க்க முடியாது. எம்மிடமிருந்து அன்பு மழை பொழிந்தால் உள்ளம் நிரம்பும்! எல்லாமே நல்லதாய் நடக்கும்! தனக்குக் கிடைக்காத எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்தே ஏங்குகின்றான். அவற்றை எப்படிப் பெறுவது என்கின்ற உபாயத்தை தெரிந்து கொள்ள முனைவதேயில்லை.

எமது வாழ்விற்கு வள மூட்டவல்லது எது எனத் தெரிந்து கொள்ள வேண்டாமா? எனக்கு மிகவும் அயலவனாய், ஏன் எமக்குள்ளேயே இருக்கின்ற, எல்லாம் வல்ல ஏக இறைவனை விடுத்து நாம் பற்பல தெளிவற்றவர்களிடம் சென்று நல்ல பாதை எதுவென கேட்கின்றோம். சுயதேவைகளை மட்டும் பெரிதென நம்புகின்றவர்கள் தங்கள் மனம் விரியாத நிலையினால் இறைவனிடம் செல்லப் பிரியப்படுவதில்லை. இன்னும், பலர் கடவுளைச் சரணடையக்கூட வெட்கப்படுகின்றார்கள்.



RangaRakes Tamilnavarasam.com


நோயைக் குணப்படுத்த அந்த நோய்களைக் குணப்படுத்தவல்ல வைத்திய நிபுணர்களையே நாடுகின் றோம். இன்று பலரும், உண்மை விளக்கம் பெற பற் பல மார்க்கங்களுக்குள் புகுந்து கொள்வதும், பின்னர் விலகி ஓடுவதுமாக இருக்கின்றார்கள். ஆனால், பொய்மையை விலக்கினாலே போதும், எல்லா நன்மைகளும் தானே குவிந்துகொள்ளும் என்கின்ற அடிப்படை உண்மையினைத் தெரிந்தும், தெரியாமல் நடிக்கின்றார்கள். அறியாமையாலும் தவித்துத் திகைத்து ஏங்குகின்றார்கள்.

இருளுக்குள் ஒளி ஏற்றினால் எல்லாமே துலங்கும். ஏற்றப்படும் ஒளி நிரந்தரமாக, நித்திய சுகங்களை உண்டு பண்ணும். பொய்மையற்ற உணர்வு எனும் ஒளியே அந்த உண்மை வாழ்வை எமக்கு அளிக்கும்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
07.12.2008







# விதைத்தல்

தங்களை நிருபிப்பதற்காகக் காலங்களை விரயமாக்கிக் கொண்டிருப்பவர்கள், சரியான பாதையில் பயணித்தாலே உலகம் அவர்களை ஏற்றுக்கொண்டுவிடும். எங்களை மட்டும், சுற்றிச் சுற்றி வாழ்வது வாழ்வல்ல. நல்லதையே, நெஞ்சில் விதைத்தவனுக்கு, உலகமே அவனுக்குரித்தாகி விடுகின்றது. தன்னை நிலை நிறுத்துதல் என்பது, தன்பிழை உணர்ந்து பிறர் நிலைகளையும் மதிப்பளிப்பதாகும். அன்பினை விதைத்தவன் “இறை கருணை” எனும் நறுங்கனிகளை அறுவடை செய்கின்றான். சுயநலம் இன்றேல் சுயபலம் வரும்.

நாம் எதனை விதைக்கின்றோமோ அதுவே அது சார்ந்தவையாக, உருப்பெறுகின்றது. நாம் எதனைத் தேர்ந்து எடுத்தால் சிறப்பானது எனக் கொள்வதில் குழம்பாது, நல்லதையே என்றும் நினைத்து வந்தால் அதுவே, அந்த எண்ணமே, சரியான பாதையைக் காட்டிக் கொண்டே செல்லும்.

சீரிய சிந்தனைகள் எமக்கு ஆன்ம வலுவை



RangaRakes
Tamilnavarasam.com

ஏற்படுத்துவதுடன் எம் உள்ளே அவை நின்று, ஒளியேற்று வதால் சலனம்,சஞ்சலம் பஸ்மீகரமாகி விடுகின்றன. நல்ல ஒரு மனிதரை நாடுங்கள். உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பாருங்கள். அவர் தமது அற்புத சக்தியால், நொடியில் உங்கள் இயல்பு அறிந்து நல் மார்க்கத்தைச் சொல்லி விடுவார். எந்நேரமும் நற்சிந்தைகளைச் சொந்தமாக்கிய வர்கள் தூவும் உபதேச நல்விதைகள் கேட்போர் நெஞ்சத்தில் ஆழமாக வேரூன்றி, மணம் கொழிக்கும் மா விருட்சமாகி வாழ்வை அதிசயிக்கும் வண்ணம் நற்பயன் களை ஈட்டித் தந்துவிடும்.

ஆனால், இன்று பலரும் தம்மை மட்டும் நிலை நிறுத்தும், ஆர்வமிகுதியால் எதையுமே கேட்டு உணரச் சித்தமின்றி மந்த கதியில் இயங்கிக் கொண்டிருக்கின் றார்கள். தங்களை நிரூபிப்பதற்காகவே வாழ்வின் காலங்களை விரயமாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். தங்கள் பாதை சரியானதுதானா, அன்றி தவறானதா என்பதுபற்றிக், கருதிப்பார்க்க நேரமின்றித் தம்மைத் தாமே சுற்றிச் சுற்றிக் களைத்தே போய் விடுகின்றார்கள்.

சுய விமர்சனங்களைத் தமக்குள் செய்யாமலும் தன்னை அறிவதற்கே பயந்து ஒதுக்கி கெட்டுப்போவதற்கு தாங்களே ஒரு காரணம் என்பதைப் புரிந்து கொள்ளாமல் திகைத்தும் நிற்கின்றார்கள். இது ஒரு "வீம்பு" நிலைதான். அடுத்தவனுக்கு ஒன்றுமே தெரியாது என எண்ணுதலும் அதே சமயம் ஒருவர் பேச்சிற்கே முன் உரிமை கொடுப்பதே





சரியானது என்பதும் ஒரே தாக்கத்தை ஏற்படுத்துகின்ற மாபெரும் தவறுகள் தான். உணர்க!

தன்னை நிலை நிறுத்துதல் என்பது தன்குறைகளை ஏற்றுக் கொள்வதும் அதை மீண்டும் செய்யாது இருப்பதும், பிறர் நிலைகளை மதிப்பதுமாகும். பிறரது சுய உணர் வினுள் நாம் புகுந்து விளையாடக் கூடாது. ஆனால், அவர்கள் நல் உணர்வினை ஏற்று அவர்கள் பாதையில் செல்லத் தடை செய்யாமல் இருந்தாலே நாம் மேல் நோக்கிய வசீகரமான எண்ணம் கொண்ட மாமனிதராகி விடுவோம்.

பிறரது நல்ல கருத்துக்களை அடைத்து நிற்பது போல் கொடும் வினை வேறில்லை. இந்த எண்ணமே, நச்சு விதையை தமக்குள் செழிப்புடன் வளரவிடும் கொடூரச் செயல் அல்லவா?

எங்களுக்குள் நாம் பல மனிதர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். சில தோற்றங்கள் விநோத மானவை. சில அருவருப்பானவை. இன்னும் உருவகங்கள் சில நல்லவையாகவும் இருக்கின்றன. இவற்றுக்குள் எதை நம்புவது, எதனைக் கைவிடுவது என்பதில் ஏற்படும் விட சிக்கல்கள், எங்களைப் பக்குவப்படுத்தவிடாமல் சிக்கல் களுக்குள் ஆளாக்கியும் விடுகின்றன. நாங்களாகவே தேவை யற்ற கருத்து மோதல்களை உருவாக்கச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதில் முனைப்பாக இருப்பதுபோல் துன்பங்கள் வேறு ஏது ஐயா?



RangaRakes

Tamilnavarasam.com

எதன் பொருட்டு வாழ்கின்றோம், இந்த வாழ்வின் அர்த்தம்தான் என்ன என எண்ணி முடிவில் நாம் வாழ்வது எங்கள் நலனுக்காகவே என்பதைத் தான் பலரும் தங்கள் முடிவாகக் கொண்டு இயங்குகின்றார்கள். எனினும், விரக்தி மேலிட்டவர்கள் தமக்காகவும் வாழாமல் பிறர்க்காகவும் வாழ எத்தனிக்காமல் சீரழிந்து போகின்றார்கள்.

சுயநலன் இன்றி வாழ முடிவதில்லை. வாழ்வைச் சுபீட்சமாக வாழ தன்னை நேசிக்காமல் வாழ்ந்து விட முடியாது. ஆயினும் தனது ஷேமத்தைக் கருதி வாழ்ப வர்கள் பல விடயங்களை விநோதமாகப் பார்க்கும் இயல்பினராய் போவது சமூக அக்கறையீனம் என்பதைத் தவிர வேறில்லை.

சுயபலம் என்பதைப் பலரும் அது வெறும் உடல் பலம் எனக்கருதி விடுகின்றார்கள். எனவே, இளமைக் காலத்தில் முறுக்கேறிய உடல்வாகுடன் வலிந்து சண்டைக்கு இழுத்து மோதி, இம்சைப்படுத்தி, தாம் நினைத்ததை அடைய முடியும் எனக் கருதி அநியாய வழியில் முரண்பட்டு வாழ்ந்தே கெட்டழிகின்றார்கள். ஆன்ம பலம் என்பதே மேலானது என்கின்ற உண்மையை உணராது விட்டால், அழிந்து போகும் உடலை மட்டும் நம்பி மனிதனை மனிதன் மதிக்காது வாழ்வதாகவே அமைந்துவிடும். உணர்வோமாக!

இந்தத் தவறான போக்கினால் ஆன்மாவை அசுத்தப் படுத்துகின்றவர்கள் வருங்காலத்து வாழ்வின் தூய்மைத்





தன்மை எது என அறிவதற்கே லாயக்கற்று துன்பத்தை விதைக்கும் பாதகமான பிரகிருதியாகின்றனர். மாயமான, கீழ்த்தரமான, தந்திரோபாயங்களால் எம் உயிர்க்கு உறு துணையான ஞானம், விவேகம் என எதையுமே பெற்றுவிட முடியுமா? ஒருவனை அறிவிலியாக்குவதால் அல்லது ஒருவரை நோகடித்துப் பலமிழக்கச் செய்து சமூகத்திற்குத் தவறான கருத்துக்களைச் செலுத்துவதால் ஏற்படும் எதிர்விளைவுகளின் உஷ்ணமான வேகத்துக்கு இவர்களால் தாக்குப் பிடிக்கவே முடியாது.

சமய, இலக்கியங்களில் நாம் படிப்பதை வெறும், சாமான்ய விஷயமாக எடுக்கக் கூடாது. அவை, சுவாரஸ்யமான பொழுதுபோக்கான கதைகள் எனக் கொள்ளாதிருக்கவும். நாம் தெய்வத்திற்கு விரோதமான, தீய சக்திகளைப் படித்திருக்கின்றோம். அவை, அழிந்து போவது எப்படி என்றும் படித்திருக்கின்றோம். படித்த மாத்திரத்தே பக்திப் பரவசமாகும். மக்கள், செயலளவில் முரணான வாழ்வைக் கொண்டிருப்பது விசித்திரமாக இருக்கின்றது. ஒருவரது உள் உணர்வுகள் தூய்மையோடு இருக்கும்போது பிற தீய சக்திகளின் ஆக்கிரமிப்பு வக்கரித்துப் போய்விடும்.

மனிதன் தான் பெறும் வெற்றிகளில் மயங்கிப் போகின்றான். செல்வத்தைக் கண்டதும் மருண்டு நிற்கின்றான். பெரும் கல்வியைக் கற்றதும் வித்துவக் கிறுக்கில் தன்னை இழக்கின்றான். எதையுமே, சமநிலையில் நோக்கும் திறன் அற்றுப்போனால் எதையும் செய்து விடலாம்



RangaRakes
Tamilnavarasam.com

எனத் தனக்குத்தானே தீர்ப்புச் சொல்லிவிடுகின்றான். இந்த நிலை வந்துவிடாது மனத்தைப் பக்குவப்படுத்தாது விட்டால் சுய கட்டுப்பாட்டை இழந்து சாமான்ய நிலைக்குக் கீழ்பட்ட மாந்தராகி விடுவோம்.

நல்லனவற்றையே ஏற்பதும் அவற்றின் பிரகாரம் ஒழுகுவதுமே மேலான மானுட கலாசாரமாகும். இந்த வழி மதம், மொழி, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இவற்றில் இருந்து பிறழ்பவன் தீமைகளைத் தன் வாழ்வில் வலிந்து அழைப்பதால் சாதாரண சோதனைகளுக்கே முகம் கொடுக்காத பலவீனன் ஆகிவிடுகின்றான்.

ஆனால் ஒன்றை மட்டும் உணர்ந்திடுக தோழர்களே! துன்பங்கள் தீயவர்களுக்காக மட்டும் வருவதில்லை. நல்ல மனிதர்களுக்கும் துன்பம் தொடர்ந்துவரும். ஆனால் இவர்கள் பாவங்களை விதைக்காமல் இருந்தும் கூட இயற்கை கஷ்டங்களை இஷ்டப்படி கொடுத்து விடுகின்றது. இந்த நிலையைப் படிப்படியாகக் களையும் திடசிந்தனையை இறைவன் அவனாகவே உள் நின்று உணர்த்தி விழிப்பூட்டி விடுவான். எனவே, மானுட நேயம் கொண்ட வள்ளல் பெருமக்களின் துன்பங்களுக்கும் தீவினையாளர்களின் துன்பங்களுக்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. மனச்சாட்சியின்றி வாழ்பவர்கள் எதனையும் வக்கிர புத்தியுடன் ஏற்றுக்கொள்வதனால் அவ்வண்ணம் செயல்படுவதனால் "பாவம்" என்பதே புனிதமான செயல் என ஏற்றுக்கொண்டு விடுகின்றனர்.





கெட்டுப் போவதற்காகச் சந்தோஷப்படுபவர்களும் உண்டு.

இறைவன் எத்தனை கோடி மனிதர்களைப் படைத்தாலும் கூட, அவர்களுள் ஒரே ஒரு புனிதர் மலர்ந்தெழுந்தாலே அவர் சிருஷ்டியின் அர்த்தம் எமக்குப் புரிந்து விடும். ஏன் எனில், ஒரு புனிதர், ஞானி என ஒருவரே போதும், சகல ஜீவன்களையும் உயிர்ப்புடன் எழச் செய்வதற்கு என உணர்க! தனி ஒரு தீர்க்கதரிசி பூமிப்பந்தை நிமிர்த்த வல்ல நெம்பு கோலாகிவிடுகின்றார். இத்தகைய அவதாரபுருடர்கள் காலத்திற்குக் காலம் தோன்றிய வண்ணம் இருக்கின்றார்கள். அத்துடன், இந்தப் புண்ணிய சீலர்களே பாவங்களை விதைத்த பாவாத்மாக்களை தம் ஞானத்தின் மூலம் அருட்பார்வை மூலம்,விழித்தெழச் செய்கின்றார்கள்.

உரத்துச் சொல்லும் பொய்களினால் உண்மைகள் கறுத்துப் போவதில்லை. எல்லா கெட்டவர்களும் சேர்ந்து ஒரு பரந்த சாம்ராஜ்யத்தை அமைத்தாலும் அது ஒரு நொடிப்பொழுதில் சுக்கு நூறாகிக் கவிழ்ந்து போகும். தங்கள் நலனை மட்டும் மையப்படுத்தி வாழ்பவர்களால் வையகத்தை வாழச் செய்து விடமுடியாது.

ஆன்மா அழிவதில்லை என்று சொல்வதானது, ஒருவன் செய்த நலன்கள் மட்டும்தான் அவன் காலத்தின் பின்னரும் வாழும் என்பதாகவும் கொள்ளலாம். இருக்கும் போதே எந்த நன்மைகளையும் செய்யாமல் உயிரற்ற உடலாக வாழ்வதைக் காட்டிலும் வாழும் கொஞ்சகாலத்தில் நல்லதையே உரமாக வழங்கி தன் உடல், பொருள் என



RangaRakes

Tamilnavarasam.com

அர்ப்பணிக்கும் மனிதனின் ஆன்மா செத்துவிட்டாகச் சொல்வது மெத்தப் பிழையல்லவா?

ஒரு பெரிய செல்வந்தர் தமது வாகனத்தில் நீண்ட தூரம் பயணித்துக் கொண்டிருக்கின்றார். திடீர் என வழியில் நோய்வாய்ப்படுகின்றார். நிலைமை மோசமானதாக உணர்ந்ததுமே கூட வந்தவர்கள் ஒரு தனியார் வைத்தியசாலைக்குக், கொண்டு செல்கின்றனர். அங்கே இவருக்குரிய அவசரமான மருந்து இன்மையால் வெளியே உள்ள மருந்தகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அங்குள்ள வைத்தியர்கள் கூறுகின்றனர். கூட வந்தவர்களும் உடனடியாக அருகே உள்ள மருந்த கத்தில் கேட்ட மருந்தைப்பெற்று வைத்தியசாலையில் கொடுத்ததும் வைத்தியம் நடைபெறுகின்றது. ஆனால், அந்தச் செல்வந்தரோ, எவருமே எதிர்பாராதவாறு இறந்து விடுகின்றார். அவருக்கு வைத்தியம், செய்த வைத்தியர் களுக்கோ பெரும் அதிர்ச்சி எப்படி அவர் இறந்து போனார்? அவருக்குரிய சிகிச்சைகளைச் சரியாகத்தானே செய்தோம். ஆராய்ந்து பார்க்கின்றார்கள்.

வைத்தியர்கள் ஆராய்ந்து பார்த்தபோதுதான் உண்மை விஷயம் தெரியவருகின்றது. மருந்தகத்தில் வாங்கிய மருந்து போலியானது. காவல் துறைக்குத் தகவல் பறக்கின்றது. விசாரணைகள் நடக்கின்றன. முடிவில் அவர்கள் புலனாய்வில் கண்டறிந்த உண்மை என்ன வென்று தெரியுமா? மேற்படி, போலியான மருந்தை விற்பனை செய்த நபருடன் தொடர்பு கொண்டபோது அந்த





மோசடி யில், முக்கியமான நபர் வேறுயாருமில்லை. திடீர் என இறந்துபோன அதே நபரே தான். தவறான வழியில் சொத்துச் சேர்க்கப் போலியான மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்த பாவம் அவரது உயிரையே குடித்து விட்டது. செய்த வினையில் இருந்து தப்பிக்க முடியுமா?

பெற்ற தாய்க்கு, தகப்பனுக்கு, உற்ற உறவுகளுக்கு எதுவும் செய்யாது, ஆடம்பரமாக வெளியுலகில் சுற்றித் திரிபவர்கள் இறுதிக்காலத்தில் படும் அவஸ்தைகளை நீங்கள் கண்டு கொண்டிருப்பீர்கள். பொதுச் சொத்துக்களை அபகரித்தும் மக்கள் வழிபடும் கோவில்கள், நிறுவனங்களில் சாதுர்யமாக நிர்வாகத்தைக் கைப்பற்றிச் செல்வந்தரான வர்கள் முடிவில் மக்களால் ஒதுக்கப்பட்டு நைந்து, நொடிந்து கேட்பாரற்ற சீவன்களாக அவமானப்பட்ட வாழ்வுடன் வாழும் மனிதர்களை பலரும் அறிந்தே இருப்பார்கள்.

நாம் உண்ணும் உணவிற்கு ஏற்பவே ஜீரணம் நடந்து கொண்டிருக்கும். ஒவ்வாத உணவே வேதனை. ஒவ்வாத தீவினை ஆன்ம நாசம். நாம் நேற்றுச் செய்த பாவங்களை இன்றைக்காவது ஒத்துக் கொண்டால் நல்லது. திருந்தி நடக்க வாய்ப்பு உண்டு. சாகும் நாள் வரை தவறுகளை ஒப்புக் கொள்ளாமல் கேவல வாழ்வு வாழவேண்டுமோ?

முன்வினைப்பயன், அதுவே எமக்குக் கிடைக்கும் என்கின்றார்கள். அது இருக்க இப்போது நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதைக் கேட்போமாக!



RangaRakes
Tamilnavarasam.com

உங்களைப்பற்றி நீங்கள் அக்கறை கொள்வதென்பது நல்ல செயல்களை மட்டும் செய்வதில் கவனம் வையுங்கள்! என்பதாகும். மற்றப்படி கண்டபடி அகௌரவம் தரும், செயல்களால் உங்களை வளர்ப்பது அல்ல. நெருப்பு இன்றி சமையல் செய்ய இயலாது. அன்பான நற்செயல்கள் இன்றேல் ஆன்மாவை வளர்த்து ஒளி ஏற்ற முடியாது. அற்பர் சகவாசமும் ஆணவ முனைப்பும் நற் செயலைச் செய்ய விடா. இந்த வழிமுறையில் வாழ்ந்தால் நற்பேறு கிடையாது. வாழ்க்கையே கூறுபோட்டதாய் அமையும்.

நாம் வெளி உலகில் எங்கே, எங்கே சஞ்சரிக்கின்றோம் என்பதல்ல. எமது இல்லத்தில், எமது அயலவர்கள், உற்றார் உறவுகளுடன் எப்படி அன்பைப் பகிர்ந்து உண்மையாக வாழுகின்றோமா என்பதை நாம் எமக்குள் கேட்க வேண்டும்.

எங்கள் உள்ளத்து இயல்பினை எமக்கு வெளியே உள்ள உலகம் தெரிந்து கொள்ள வாய்ப்பிருக்கின்றது. எனவே எமது பார்வைகளைச் சரி செய்து கொள்வோமாக! நாம் எல்லாவற்றிற்கும் பிறரைச் சாக்காகச் சொல்லிச் சொல்லியே பல பாவங்களைச் செய்யக் காரணம் தேடுகின்றோம். உண்மையில் தன்னையும், தன்னுள் உள்ள உண்மைத் தன்மையையும் மட்டும் விசுவாசிப்பவனே நல்ல மனிதன். பிறரை மதிக்காமல் அவர்களிடம் குறைகூறி அல்லது எவர்களிடமாவது பெற்றுவிடுவதே சாதுர்யமானது என எண்ணுவதே யாசகம் பெறும் நிலை தான். எதையுமே





கேட்காதவன் சுயமரியாதையுள்ளவன். மாபெரும் செல்வந்தனுக்கும் மேலானவன்.

இத்தகைய பரந்த வாய்மைமிக்க ஒழுக்கமுள்ளவர்கள் தீவினைக்கு அஞ்சுபவர்களாவர். அன்பான "செயல்" எனும் ஆயுதத்தினால் நல்வினைகளையே விதைத்து உலகிற்கு நல்லவை வழங்கும் விருட்சங்களை உற்பத்தி செய்பவர்களுமாவர். அன்பான விதைகளை விதைத்தவன் இறை கருணை என்கின்ற நறும் கனிகளுக்கு உரித்தானவனாகின்றான்

தினக்குரல்
(ஞாயிறு)
23.11.2008.



RangaRakes Tamilnavarasam.com



# ஜனனம்

இந்தப்பூமியில் உள்ள சகலதுமே நிலம், நீர், காற்று, ஒளி, வான் ஆகியவைகளிலிருந்து உற்பத்தியானவை. நிலத்தில் பிறந்த மனிதன் அங்கேயே மறைந்து மீண்டும் ஜனனமாவதால் பூமிக்கு எந்தப்பாரமும் கிடையாது. மனிதனதும், ஏனைய உயிர்களினதும் தேவைகளுக்கு ஏற்ப அனைத்தும் முழுமையாகக் கிடைக்காமைக்குக் காரணங்கள் பலவுண்டு. பிரபஞ்சத்தில் இருந்து பிரசவிக்கப்பட்ட உலகத்தின் மக்கள், தங்களது ஜனனம் மட்டுமே மேன்மையானது எனக்கருதி, ஏனைய உயிர்களை வதைப்பதும், தம்மிடையே பொருதுவதும் இறையோன் படைப்பினையே உணராத தன்மையேயாகும். ஜனனங்களால் பண்பான மக்கள் கிடைத்தாலே மேதினி மாட்சிமை காணும்.

இந்த ஜகம், உயிர்ப்புடன் இயங்க ஜனனங்கள் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. எத்தனை கோடி பிறப்புக்கள் நடந்தாலும்கூட அவற்றால், இந்தப் புவிக்குப்பாரம் என்று சொல்லிட முடியுமா?

ஏன் எனில், இந்தப் பூமியில் இருக்கின்ற எல்லாமே நிலம், நீர், காற்று, ஒளி, வான் என்பவையூடாகவே உற்பத்தி





யாகின்றன. இங்கேயே ஜனிப்பதும், பின்னர் புதுப்புது அவயங்களுடன், வடிவுடன் பிறந்தும் கூட தம் தேகங்களை விட்டு உயிர் துறப்பதும் இயற்கை நிகழ்வுகளேயாம். இந்த மாபெரும் பிரபஞ்சத்தில் இருந்து, உலகம் பிரசவிக்கப் பட்டது. நாம் இங்கிருந்தே சகலதையும் பெற்றோம், இன்னமும் பெற்ற வண்ணமுள்ளோம்.

ஒரு பொருளில் இருந்தே பல வடிவங்களுடன் வேறு சிறு, சிறுதுகள்களாக உருமாறி, உருமாறித் தோன்றி னாலும் கூட, மூலக்கூறுகள், அணுக்கள் அழிவதேயில்லை. எந்த ஒரு மூலகத்தையும் நாமாக உருவாக்கவும் முடியாது. அழிக்கவும் முடியாது. இது விஞ்ஞான உண்மைத் தத்துவம் மட்டுமல்ல, இதனையே, ஆன்மீகமும் தத்துவ ஞானமும் வலியுறுத்துகின்றன. சடத்தில் இருந்து சக்தி தோன்றுவதும், சடத்தை அழிக்க முடியாது என்பதும் ஆன்மீக தத்துவ உட்பொருளாகும்.

எனவே தான் எமது பூமியில் எத்தனை கோடி, ஜனன ங்கள் நடந்தாலும் கூட அவற்றால் இந்த மண்ணுக்கு எந்தப்பாரமும் இல்லை. ஒரு தேகம் அழிந்தாலும் அதில் உள்ள அணுப்பொருட்கள் வேறு ஒரு வடிவுடன் இந்த உலகுடன் கலந்தே விடுகின்றன. எனினும், பூமிக்கு மக்கள் பெருக்கத்தினால் பெரும் பாரம் வந்துவிட்டது என்று ஏன் நாம் சொல்லிக் கொள்கின்றோம்? மக்கட் பெருக்கத்திற்கு அமைவாக நாம் எமது மண்ணின் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதேயில்லை என்கின்ற உண்மையை நாம் புரிந்து கொள்ளவேயில்லை.



RangaRakes
Tamilnavarasam.com

மனிதனுக்குத் தேவையான உணவு, நீர்,உடை, இருப்பிட வசதிகளை நாம் பூரணமாகப் பெற்றிட என்ன, என்ன செய்கின்றோம்? இருக்கின்ற இயற்கை வளத்தினைப் பாதுகாத்தாலே போதும். எத்தனை கோடி மக்களையும் இந்தப் பூமி சந்தோஷமாகத் தாங்கிச் சுழலும்.

ஆனால், இன்று நாம், மக்கள் தொகையினைக் காரணம் காட்டி உலகம் பொருளாதார வசதியில் நலிவுற்ற தாகச் சொல்லிக் கொள்கின்றோம். இருக்கின்ற எல்லா உயிர்களையும், வளங்களையும், செம்மையாகப் பாதுகாத் துக் கொள்கின்றோமா? கடலினுள் கோடானு கோடி உயிர் கள் வாழ்கின்றன. உலகின் முக்கால் பங்கு நீர் சூழ்ந்தும் கால்பங்கு மட்டுமே நிலமாக இருந்தாலும்கூட நிலத்தில் வாழும் மாந்தர்க்கு நல்ல அறிவை ஆண்டவன் அளித்தான். ஆனால் அவனோ சர்வ உலகத்து ஜீவன்களையும் ஆக்க வும், அழிக்கவும் தன்னால் இயலும் என்று இறுமாப்புடன் வாழ்கின்றான்.

கால்பங்கு நிலத்தில் வாழும் மனிதர்கள் முக்கால் பங்கு நீரில் வாழும் கோடானுகோடி உயிரினத்தை இம்சை செய்வது இறைவன் வழங்கிய ஜனனங்களை அவமதிக்கும் செயல். நோக்குக! ஏன் எனில் இன்று நிலம் மட்டும் கவனிப் பாரற்றுக் கிடப்பதில்லை. கடல் வளமும் நன்கு பராமரிக்கப் படுவதில்லை. நாமாகவே உண்டாக்கிக் கொள்ளும் பிரச்சினைகளுடன் வெளியில் இருந்துவரும் தேவையற்ற தொல்லைகளால் மனிதப் பிறப்பின் உண்மையான சந்தோஷங்களை இழந்து வருகின்றோம்.





யுத்தங்கள் இயற்கை அனர்த்தங்களால் உயிர் இழப்புக்கள் நடக்கின்றன. யுத்தங்கள் மனிதரால் தோற்று விக்கப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வும் சிதைக்கப்படுவதுடன் அவனுடன் அவன் சரித்திரமுமே மூடப்பட்டு விடுகின்றது.

ஓர் உயிர் அநாவசியமாக இழக்கப்படுவது எத்தனை, எத்தனை பிறப்புக்களை அறுக்கவைக்கும் தேவையற்ற முயற்சி அல்லவா? மேலும் ஒருவர் குடும்ப பந்தத்தில் இல்லாதவரேயாயினும் அவர் இல்லாதவிடத்து அவரில் தங்கி இருப்போரால் எவ்வளவு அனுகூலங்கள் தடுக்கப் படுகின்றன தெரியுமா? எனவே, உலகத்தில் புதியன பூக்க, உற்பத்தியாக்க எல்லோருக்குமே சமபங்கு உண்டு. ஒரு பிறப்பு என்பது சாமான்ய விஷயமா என்ன? இதுபோலவே ஒருவன் மரணிப்பதை, சாதாரணமாக எம்மால் எடுத்துக் கொள்ள இயலுமோ? எல்லாமே இயற்கை, இதன்பொருட்டு என்ன மயக்கம், துன்பம் என்று வாயளவில்தான் எம்மால் சொல்லிட முடியுமே தவிர யதார்த்தத்தில் இந்த நிகழ்வுகள் எல்லாமே அற்புதம் அற்புதமே!

எல்லா தாய்மார்களும் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் குழந்தையைப் பெற்றுக்கொள்கின்றனர். ஆனால், நாம் விலங்குகள் அல்லது பறவை போன்ற இதர ஜீவன்களின் பிரசவ வேதனைகள் பற்றிச் சற்றேனும் கிஞ்சித்தும், நினைந்தது உண்டா?அப்படி எண்ணியிருந்தால் நாம் நிச்சயமாக அனைத்து ஜீவன்களி பிறப்பின் தாற்பரியத்தை



RangaRakes
Tamilnavarasam.com

உணர்ந்தவர்களாவோம். ஒருகோழி மிகச் சிரமத்துடனேயே முட்டையிட்டுக் கொள்கின்றது. எண்ணிப் பார்க்குக!.

ஒரு மனிதன் பிறக்கின்றான் என்றால் அவன் மட்டும் தான் பிறக்கின்றானா? அவனுடன் கூட, எத்தனை உயிர்க் கலங்கள் உருவாகின்றன. அவனுடன் இணைந்தே அவை வளருகின்றன. அவனுள் இருந்து அவை தம்மை வளர்க்கின்றன. மனிதனுக்குத், தெரியாமலேயே, மனிதன் வேறு, வேறு உயிர்களைத் தன்னுள் வளரத் துணை நிற்கின்றான். என்ன அற்புத நிகழ்வுகள்? ஐயனே!

மனித உயிர்களுக்கு உகந்த பக்ரீரியா போன்ற உயிர் வர்க்கங்களுடன் நோய்க்கிருமிகளும் கூட உருவாவது, நல்லதும் கெட்டதும் எமக்குள்ளேயே இருக்கின்றன என்பதைக் காட்டுவதாகவே அமைகின்றதல்லவா? ஆயினும், கெட்ட கிருமிகளை மனிதன் தன்அறிவால் அழித்துவிடுகின்றான். ஆனால் கெட்ட தனது சிந்தனைகளை எந்த அமிலத்தாலும் அழித்துவிட அவனால் முடியுமா?

நல்ல நோக்கங்களே எம் வாழ்வைத் தீர்மானிக்கின்றன. நல்ல நோக்கங்களே எம் அந்தரங்க ஆத்மாவை உள்ளேயும், வெளியேயும் அரங்கேற்றுகின்றன. உண்மை, அன்பு, அமைதி, விழிப்புணர்வு எம்மை முழுமனிதனாக்கும் போது இறைவனால் உண்டாக்கப்படும் பிறப்பின் ரகசியங்களைப் பூரணமாகத் தெரிந்து கொள்ளும் ஞானத்தையும் பெற்றுவிட முடியும்.





இன்று பிறந்தோம், நேற்றும் பிறந்தோம், ஏன் நாளையும் பிறக்கப் போகின்றோம். ஆனால், நாம் மட்டுமல்ல, கூடப் பல்கோடி இதர உயிர் வர்க்கங்களும் தான்.

ஆயினும் எமது பிறப்பிற்கு என்ன கௌரவத்தினை ஏற்படுத்தினோம் என்று நாம் எம்மைக் கேட்டுக்கொண்டோமா? மானுடப் பிறவி எடுத்த நாம் எம் மூலம் எத்தனை ஜீவன்களை வாழவைத்துக் கொண்டிருக்கின்றோம்?. பசித்தோனுக்குத், தினசரி அல்லது வசதி கிடைத்த வேளையிலாவது ஒரு பிடி அரிசி வழங்கச் சித்தம் கொள்கின்றோமா? உண்மையில் எல்லா மனிதர்களுக்கும் தானம் செய்ய விருப்பம் இருந்தும் கூட அதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ளாமையே உண்மையாகும்.

மனிதப் பிறவியை மட்டும் நாம் மேன்மைப்படுத்துகின்றோம். ஆனால் ஏக இறைவன்தான் எல்லா ஜனனங்களையும், தன் ஆசீர்வாதத்தால் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றான். அப்படியிருக்க அவன் சித்தத்திற்கு விரோதமாக மனிதன் மனிதனை மட்டுமே கௌரவிப்பதில் என்ன நியாயம் உண்டு? முடிந்த வரை எம்மை நாடும் சகல உயிர்களையும் அன்புடன் நோக்குதல் எல்லா பிறப்புக்களையும் கௌரவப்படுத்தும் செயல். ஆனால், நாம் சாதாரணமான நல்ல விஷயங்களையே மூளையில் ஏற்றிக் கொள்வதாயில்லை.



RangaRakes

Tamilnavarasam.com

"கர்ப்பிணிப்பெண்ணுக்கு இருக்கை கொடு" என்று பேரூந்தில் விளம்பரம் ஒட்ட வேண்டியுள்ளது. "முதியோரை மதி" என்று அடிக்கடி, உபதேசம் சொல்ல வேண்டியுள்ளது. இறையோன் ஆஞ்ஞைப் படி நாம் வாழத்தலைப்பட்டால் அனைத்து உயிர்களுமே எமது உடைமையாகும். இது போலத் திருப்தி தருவது வேறு எது உளதோ?

செல்வங்களைச் சேகரித்தலைவிட, மனித மனங்களைச் சேகரியுங்கள். அதுவே செல்வத்துள், பெருஞ் செல்வமாகும். இன்று நாம் இருக்க வேண்டிய இடத்தில் இருந்து வாழ்வதுமில்லை. ஏற்கனவே இருந்து, கொண்டோரும் நல்ல இடத்தில் தொடர்ந்து வாழமுடிவதுமில்லை. சஞ்சல, சபல புத்தியை மட்டும் நிரந்தரமாக்கி இறை அற்புதங்களை நுகர மறுக்கும், அந்தகார, ஆன்மா வாக்கிட எம்மை நாமே உட்படுத்துகின்றோம். இதனா லேயே மனிதப் பிறப்புக்களை மதித்திட மறுப்பதும், தனது உயிர்மட்டுமே உன்னதமானது, எமக்கு மட்டுமே இன்பங்கள் பூரணமாகக் கிடைக்க வேண்டும் என்று நினைப்பதுடன் தனது வலிகள் துன்பங்களே மிக மிக அதிகமானது. என்னை மட்டும் இதிலிருந்து விடுபடத் தூக்கிவிடுங்கள் என எதிர்பார்க்கின்றான்.

இறைவனால் தரப்பட்ட இயற்கையைப் பூரணமாக ரசித்து, அனுபவித்தாலே போதும். எல்லா நிரந்தர, சந்தோஷங்களையும் எம்முன் உண்டு பண்ணி விடலாம் அல்லவா?





- இந்த உலகம் அழகானது.
- இயற்கை, அதன் வனப்பு எமக்கானது.
- காலை நேரச் சூரிய உதயம், அது மறையும் தோற்றம்
- பெரிய மலைகள், எம்மைச் சுற்றி வருடும் காற்று!
- புதுப்புது உயிரினம், எம்முடன் பேசவிழைகின்றன!

இவற்றுடன் பேசுமாறு, இறைவன் கட்டளையிட்டுள்ளான். தாராளமாக இந்த ஜனனங்களை நாம் ஏற்போமாக! இந்த வளங்கள் அனைத்திற்குள்ளும் உயிர்கள்!. இவை என்றுமே எப்போதுமே புதிது, புதிதாக ஜனித்தபடி ஜனித்தபடியே!

"ஹே.. மானுடா, நீ, இன்னமும் கூட உன்னைப்பற்றி மட்டும் நினைப்பது எப்படி? கொஞ்சம் இந்த அகன்ற பரந்த உலகை உற்று நோக்கு! உன்னுள், ஏராளமான கற்பனைக்கு எட்டாத மகிழ்ச்சிப் பிரவாகம் ஒட்டு மொத்தமாகப் பரிணமிக்கும். அதனுள் நீ புகுந்து விளையாடு! இறை அற்புதத்தினைத் தேடி ரசிப்பதைவிட வேறென்ன வேலை உனக்கு?

பிறப்பு இன்றேல் எதுதான் நிகழும்? "ஜனனம்" அது இறை சித்தம். அதனை நாம் போற்றுவோம். ஜனனம்,



RangaRakes
Tamilnavarasam.com

முன்பு நிகழ்தாலும் இன்று நடந்து கொண்டிருந்தாலும், இனி மேலும் நடக்கவிருந்தாலும், அது என்றும் புதியது. புதியதே யாம்.

எனவே, வருகின்ற புதிய ஜீவன்களை வரவேற்போம்.

நாம் காணும் புதிய ஜீவன்களை எம்மால் இயன்றவரை போஷிப் போமாக! மேலும் இவைகளின் ஷேமங்களுக்காக இறைவனைப் பிரார்த்தனை செய்வதே மேலானது.

மரணத்திற்கே சவால் விடும் பிறப்புக்களால் உலகமே இறந்து போகாமல் என்றும் ஜிவிதமாய் இருக்கின்றமையினை உணர்வோமாக!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
26.10.2008







# மரணம்

மூச்சு அடங்குதல் மட்டும் மரணம் அல்ல. மூச்சுடன் இயங்கும் காலத்தில், நல்வழியில் இயங்காமல் வாழ்வதும், உயிரற்ற வாழ்வுதான். செத்தபின் என்ன நிகழும் என்றே தெரியாத, மரணம் பற்றி அச்சமடைதல், தேவையற்றது. மரணத்தின் பின், சம்பாதித்த அனைத்தையுமே விட்டுவிட்டுச் செல்வதால், மிகையான ஆசைகளால், தேட்டங்களால் ஏதுபயன்? மரணம் இன்றேல், புதியபூமி உதயமாகாது. ஒரு கண மரணத்திற்காக, பல்கோடி கணங்களைப் பயத்துடன் கழிப்பதே வெட்கப்பட வேண்டிய அறியாமை. இருக்கும் காலத்தில் சாதனை செய்தவன் மரணத்தை வென்ற சிரஞ்சீவி.

மரணம் வரும் தருணத்தில் மனிதனின் சர்வ அங்கமும் ஒடுங்கும். இந்த வேளையில்தான் தனது நிலை பற்றி, இயலாமை பற்றி உலக வாழ்வின் அநித்தியம்பற்றி ஏங்குகின்றான்.

மரணம் என்பதே, இறைவனால் வகுக்கப்பட்ட நியதியாக இருப்பினும்கூட நாம் எமக்கு மட்டுமே மரணம்



RangaRakes
Tamilnavarasam.com

வருவதாகக் கருதிக் கலவரப்படுகின்றோம். மூச்சு, அடங்குதல்தான் மரணம் அல்ல, மூச்சுடன் நல்லவழியில் இயங்காமல் வாழ்வதும் மரணம் தான்.

உண்மையில், நாம் ஆழமாகச் சிந்தித்தால் உடலை விட்டு உயிர் பிரிவது பற்றி கவலைப்படுவது அர்த்தம் இல்லாததாகவே படும். ஒருவர் இறப்பது என்பது முடிந்த முடிவு. எல்லோரும் இந்த உலகிலே நிரந்தரமாக இருப்பதாக வைத்துக் கொண்டால் என்ன நடக்கும்? கொஞ்சம் கற்பனை பண்ணிப்பாருங்கள்!

எல்லா வயோதிபர்களுமே தங்கள் பதவிகளை விட்டு விலக மாட்டார்கள். ஆட்சியில் இருப்பவர்களில் இளைய முகங்களைக் காணவேமுடியாது. தெருவில் நடந்துபோக முடியாது. ஒரே நெரிசல். கடலுக்கு மேலே, நிலம் வைத்து மேடை போட வேண்டும். வதிவிடங்களை எப்படி அமைந்தாலும் அடங்காது. உணவு, தண்ணீர் பிரச்சினைகளை எப்படிக் கையாளமுடியும்? வீடுகளில் வயோதிபர்களின் ஆளுமைகளும் கூடவே, அவர்களின் அட்டகாசமும் இளையவர்களுடன் சதா மோதல்களும் கூடிக்கொண்டே போகும். உண்மையில் நாம் மரணம் என்கின்ற துணையின் அவசியத்தை, அதன் நோக்கங்களை மேற்கண்ட கற்பனை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இறை அற்புதங்கள் எல்லாமே சாமான்யமான விஷயங்களே அல்ல. எல்லாமே இங்கு சரியாகச் செம்மை





யாகவே நடந்து கொண்டிருக்கின்றன. ஜனனமும், மரணமும் சாஸ்வதமே. இரண்டு நிகழ்வுகளுமே தொடர்ந்து நடந்து கொண்டு இருக்காது போனால் நாம் எங்ஙனம் இயங்க முடியும்? சமநிலை இயக்கம் பூமியை ஒழுங்காகச் சுழல வைக்கும். எனவே, மரணம் பற்றி நாம் மயங்கி, ஏங்குவது எங்கள் மதியீனம் தான்.

உண்மையில் இயற்கை எவ்வித பாகுபாடும் செய்வதேயில்லை. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்கின்ற பாகுபாட்டுடன் பிறப்பு, இறப்புக்கள் வருவது மில்லை. விரும்பி ஒருவர் ஓர் இடத்தில் வசதியான குடும்பத்தில் பிறந்துவிட முடியுமா? ஒருவர் தனக்குத் தான் இவ்வளவு தான் ஆயுள் காலம் என வகுத்திட முடியுமா? இஷ்டப்படி உயிரை மாய்த்திட விதி விடுவதுமில்லை. கஷ்டமான வாழ்க்கையேயாயினும் போராடி வாழ்ந்து தான் ஆக வேண்டும்.

மரணம் பற்றி நாம் அச்சப்பட வேண்டியது இல்லை. ஏன் எனில் நாம் செத்தபின்னர் என்னதான் தெரியப் போகின்றது? நாம் என்ன பிறவி எடுப்போம் என்பது பற்றி ஏன் வீணாகக் கற்பனை செய்ய வேண்டும்? செத்தவர்கள் மீண்டும் வந்து இதுபற்றிப் பேசியதுமில்லை. இருக்கும் போதே நல்ல காரியங்களைச் செய்பவர்களுக்கு இந்த மாதிரிப் பேசவே நேரம் இருக்காது. எமக்குள்ள கடமைகளைச் சரிவரச் செய்யும் போது வாழ்வின் சந்தோஷங்களுக்கான கதவுகள் தானாகவே திறந்து கொள்கின்றன.



RangaRakes Tamilnavarasam.com

பாவம் என்றால் என்ன, புண்ணியம் என்றால் என்ன என்று சிலர் கேட்பதுண்டு. உண்மையில் தீய காரியங்கள் எதனையுமே செய்யாதே என்று எல்லா மதங்களுமே எச்சரிக்கை செய்கின்றன. கெட்ட காரியங்களைச் செய்தால் கெட்டு அழிவாய். அது இறைவனுக்கே அடுக்காது. பாவங்கள், எது என்று ஆன்மீகவாதிகள் எம்மை நோக்கி எச்சரிக்கைகளைச் சொல்லாது போனால், சாமான்ய மக்கள் திருந்தி வாழாமல் போய் விடலாம் அல்லவா?

மனிதனைத் தவிர ஏனைய உயிரினங்கள் பண்பு, கலை, கலாசாரம் என்று சொல்லி வாழ்வதுமில்லை. அவைகள் அப்படி வாழ வேண்டிய தேவையுமில்லை. அவை தாம் வாழும் காலத்தில், வாழ்ந்து இறந்து போகின்றன. ஆனால் அவற்றின் சிருஷ்டிகள் எல்லாமே இந்த உலகின் இயக்கத்திற்கு அத்தியாவசியமானவை தான். காரணம் இன்றிக் காரியங்களை இறைவன் செய்வதில்லை.

சாவைப் பற்றிய பயம் மனிதனை மட்டுமே கூடுதலாக ஆட்டுகின்றன. ஆனால் விலங்குகள், பறவை, நுண் உயிர்கள், தமக்கு ஆபத்து வரும் வேளை மட்டுமே எங்காவது ஓடி ஒளிந்து கொள்ள இடம்தேடுகின்றன. நோய்களும், விபத்துக்களும், யுத்தங்களும் எம்மை நோக்கிய சவால்களாக இருந்தாலும் இந்தப் பேரழிவுகள் எல்லாமே மனிதனுடன் கூடவே அனைத்து உயிரினங்களையுமே பாதிப்புக்குள்ளாக்கி விடுகின்றன.





ஆனால், மனிதரில் பெரும் பகுதியினர் இருக்கின்ற காலத்தில் மகிழ்ச்சியுடன் இருக்கும்போதே தமது இந்த வாழ்க்கையே சாஸ்வதம் என எண்ணிக் கண்டபடி நடக்கின்றனர். இதில் வேடிக்கை என்னவெனில் பஞ்சமா பாதகம் செய்தவர்கள் கூடத் தமது இறுதிக்காலத்தில் மரணப்படுக்கையில், "கடவுளே நான் யாருக்கு என்ன செய்தேன், என்னை ஏன் வதைத்துத் துன்புறுத்துகின்றாய்" என்கின்றார்கள். மிகப்பாரதூரமான கொலைக்குற்றம் செய்து, தூக்குத்தண்டனை பெற்று, வாழ்நாட்களை எண்ணிக் கொண்டிருப்பவர்களின் கடைசிக் காலங்கள் பற்றிப் படித்தபோது, மிகவும் திகைப்பாக இருந்தது.

அவர்களில் சிலர் மௌனமாக, எவருடனும் பேசாது இருந்தனர். ஆனால், பலரும் தமக்கு சாவு வரப்போகின்றதே என்று தினசரி அழுது கண்ணீர்விட்டு ஏங்கி, சித்தப் பிரமை பிடித்தவர்கள் போல் செயலற்று இருந்தார்கள். ஒரு சிலர் தமக்கு இந்தத் தண்டனை கிடைத்தது ஓரளவு சரி என்றும் ஆனால், இறப்பதற்குத் தாங்கள் அச்சம் அடைவதாகச் சொன்னதாகவும் சொல்லப்பட்டது. ஆனால், துணிச்சலுடன் சாவை எதிர்கொள்ளத் தயாரானவர்கள் மிகக் குறைவு தான்.

தமது மிடுக்கான வயதில், அல்லது ஆணவமான வாழ்வு வாழ்ந்த காலத்தில் செய்த படுபாதகமான கொலையால் பாதிக்கப்பட்டவன் அவன் கொலை செய்யப்படும் போது அலறிய அலறலை பொருட்படுத்தாமலும், இந்தக்



RangaRakes

Tamilnavarasam.com

கொலையால் கொலையுண்டவர்களின் குடும்பத்துக்கு ஏற்பட்ட நிலைமையைக் கிஞ்சித்தும் எண்ணாதவர்கள் தமக்கு எனத் துயர் வரும் போது எப்படிக் கலங்கித் துடிக்கின்றார்கள், பார்த்தீர்களா?

ஆனால் பொது சேவை, நலன்களுக்காகத் தமது நலனைக் கவனிக்காது உழைப்பவர்களுக்குத் தமது தேக அசௌகரியங்கள் பற்றித் தெரிவதேயில்லை. மகாத்மா காந்தியடிகள் போன்ற புனிதர்கள் அச்சம் கொள்ளாது தமது அறப்போராட்டத்தை முன்னெடுத்தனர். துப்பாக்கியால் சுடப்பட்டபோதும் கூட தமது மரணத்தறுவாயில் இறை நாமம் சொல்லியபடியே தான் உயிர்நீத்தார் அவர். நாட்டிற் காக, தம் உயிரை பரித்தியாகம் செய்பவர்களுக்கு மரண பயம் வராது.

அச்சமின்றி வாழ்பவர்க்கு மரணம் துச்சம். தினம் தினம் பயந்து நடுங்கி வாழ்பவர்கள், அனுதினம் செத்துச் செத்து வாழ்ந்து காலத்தையோட்டுகின்றார்கள். மிகையான எதிர்பார்ப்புகள், உலக இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்கின்ற ஆவல்கள் எல்லாம் மனிதனின் தவிர்க்க முடியாத ஆசைகள்தான். ஆனால் இவற்றை மனிதன் முறையா கப்பெற்று அனுபவிக்கும் போது அவன் மனம் விசால மாகின்றது. சகல இன்பங்களையும் தன் சொந்த முயற்சி யால் அறவழியில் ஆண்டு அனுபவித்தவன் வாழ்க்கையின் நிலையாமையை தனது பரந்த அறிவினால், அனுபவத்தி னால் பெற்றுக் கொள்கின்றான்.





கஷ்டப்பட்டு உழைத்துத், தனது குடும்பத்திற்கும், உலகிற்கும் வழங்கியவன் திருப்தி நிலைஅடைகின்றான். முற்காலத்தில் மன்னர்கள் கூடத் தமக்குரிய கடமைகளைப் பூரணமாக முடித்தபின்னர் கிரஹஸ்த வாழ்வு முறையை விட்டுச் சந்நியாசம் சென்றுவிடுவதாகப் படித்திருக் கின்றோம். மனிதன் தன் வாழ்நாளின் பராயங்களின் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு சாதனைகளைப் புரிய வேண்டியவனாகின்றான். எல்லாம் நிறைந்த திருப்தியான வாழ்க்கையை மனிதன் காண்பது சாமன்யமானது அல்ல.

ஆனால், ஆன்மீக நாட்டம், ஒழுக்கம், பரந்த நோக்கு இவற்றை நாம் தெய்வ வழிபாடு, தியானம்மூலம் பெற்றாக வேண்டும். தினசரி உண்டு, உறங்கி, விழித்து, மீண்டும் யந்திர கதியில் வாழ்ந்து ஒரு சராசரி மனிதனாகச் சாகக் கூடாது. இந்த உலகிற்கு ஏதாவது நன்மைகள் செய்யாமல் உயிர் நீத்துவிடுவது ஒரு சிறப்பான வாழ்வாக அமையாது.

மரணத்தை எண்ணி, ஏங்கி இருக்கின்ற வாழ்வின் சந்தோஷங்களை இழக்கலாமா? ஒரு நண்பர் தனது அனுபவம் ஒன்றினைச் சொன்னார். "சாவு என்ன ஐயா.... சாவு.. இது ஒன்றும் புதுமையேயல்ல. எனக்கு அறுவை சிகிச்சை செய்ய வைத்தியசாலையில் குடும்பத்தினர் கொண்டு சேர்ப்பித்தார்கள்.

அறுவை சிகிச்சை ஆரம்பிக்க முன்னர் ஒரு ஊசியை எனக்கு வைத்தியர் ஏற்றினார். எனக்கு ஒன்றுமே தெரிய



RangaRakes
Tamilnavarasam.com

வில்லை. நினைவினை நான் இழந்தேன். கண்விழித்துப் பார்த்தபோது வைத்தியசாலையின் நோயாளர் பாராமரிப்பு அறையில் இருந்தேன். எனக்கு சற்றுமுன் என்ன நடந்தது என்றே தெரியவில்லை. இப்போது சொல்லுங்கள், மனிதன் இறப்பது என்பது இப்படித்தானே இருக்கும். கண் மூடினால் என்ன ஐயா தெரியும்" என்றார்.

உண்மைதான், இவருடைய அனுபவங்கள் போல் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் மட்டுமல்ல, விபத்துக்களில் சிக்கிக் காயப்பட்டு உயிர் பிழைத்தவர்களும் அறிந்து உணர்ந்திருப்பார்கள்.

"மரணம்" என்பது கண் துயில்வது போலத்தான். "ஜனனம்" மனிதன் மறுபடி கண் விழிப்பதுபோல் அல்லவா?

மிருகங்கள், பறவைகள் என அனைத்து உயிரினங் களின் எண்ணங்களை நாம் கண்டு கொள்ள முடியாது. அவற்றின் அசைவுகள், சப்தங்கள் மூலம் நாமாக எதனை யோ கருதுகின்றோம். ஆயினும் ஒன்றினைப் புரிந்து கொள்ளலாம் இவற்றுக்கு, மனிதன் போல் பெரிதான எதிர்பார்ப்புக்கள் ஒன்றுமேயில்லை. ஒருநாள் வாழ்ந்து உயிர் நீங்கிப்போகும் சிறிய உயிர்களிலிருந்து பெரும் தோற்றம் கொண்ட விலங்குகள் எல்லாமே தமது எதிர்காலம் அந்திம காலம் பற்றி அழுது தீர்ப்பதில்லை. மனிதர்க்கு அறிவு சிந்தனை கூடச் சில சமயம் திரிந்து சிரமத்தைக் கொடுக் கின்றதோ என எண்ண வேண்டியுள்ளது. இந்த உலக வாழ்வு மாயமானது, அழிந்து





விடும் என்று அறிந்தும் கூட வேட்கை, அவா, ஆசைகள் சாவு பற்றி மனதை அலைபாய விடுகின்றான்.

வெறும் கனவுகளுடன் காலத்தை ஓட்டாது, நனவு நிலையில் நிஜத்தை நோக்காமல் இருப்பது அர்த்தமற்றது என்பதை ஏன் உணராமல் இருக்கின்றான்? இறைவன் கொடுத்த உயிர்களை இன்று மனிதன் பறிக்க எண்ணுகின் றான். கேட்டால்பல காரணங்களைச் சொல்கின்றான். விதியைப் பற்றிவாய் வலிக்கப்பேசுபவன், இயற்கையான நிகழ்வுகள் தனக்கும்தனக்கு வேண்டியவர்களுக்கும் பாதகமாக அமைந்து விட்டால் அரற்றுகின்றானே அது ஏன்? புரியவில்லை.

எத்தனை கதைகள், ஆன்மீக நூல்கள், நிஜமாக நடந்த சம்பவங்கள் எல்லாவற்றையுமே நாம் படித்தும் கூடத் துன்பங்கள் வந்ததும் சுய உணர்வினை இழந்து விடுகின் றோமே!

இந்த உலகில் தனியொரு மனிதனின் இழப்புக்கூட முழு உலகிற்குமான பேரிழப்பேயாகும். அவன் ஏழையா கவோ, அல்லது செல்வந்தனாக, படித்தவன், படிக்காத வனாக இருப்பினும் எமக்கு எம் எல்லோருக்குமே, வேண்டப்பட்டவனாகவே கருதுவோமாக!

ஆனால் இன்று நடப்பது என்ன மனித உயிர்களுக்கு மதிப்பே இல்லாமல் போய் விட்டது. துர்மரணங்கள், கொலைகள், இனப் படுகொலைகள், யுத்தம் எனக் கேட் பாரற்றுப் பூமி தத்தளிக்கின்றது. நாம் இந்த மரணங்களை வெல்ல வேண்டும், நிச்சயமாக நாம் மரணத்தை ஜெயிக்க



RangaRakes
Tamilnavarasam.com

முடியும். மரணத்தை நீண்ட வருடகாலம் ஒத்திவைக்க முடியும். அதன் வலுவை அழிக்கவும் முடியும்.

நல்லவர்கள் செத்தும் சாவதில்லை. மரணத்தை வெற்றி கொள்ளப் பின்வரும் உபாயங்கள் எமக்கு வழிசமைக்கும்.

- பத்தி / ஆன்மீக ஈடுபாடு
- மௌனம்
- அன்புடைமை
- தேக ஆரோக்கியம்
- புலனடக்கம்
- நிம்மதி

மேற்சொன்ன வழிகளில் நாம் எமது வாழ்வை அமைத்துக் கொண்டால் எமக்கு இறை ஆசியுடன், கிடைத்தற்கரிய பெரும் அருட்செல்வம், பொருட்செல்வம் என்று எல்லாமே கிட்டுவதுடன் மரணபயம் என்பதே முழுமையாக அற்றுப்போய் விடும். ஒரே தடவை ஏற்படும் மரணத்திற்காக மனம் கலங்கி,வெதும்பி தற்காலிகமாகச் செத்து எழுவது அழகேயல்ல. என்றும் நாம் நித்திய வாழ்வுடன் வாழ மக்கள் இதயங்களை வெல்ல வேண்டும். சிரஞ்சீவித் தன்மையுடன் சீவிக்கலாம் என்பதன் அர்த்தம் இது தான்!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
02.11.2008







# கடன்

கடன்படுதல் உள்ளம் மடிந்த நிலை. இலவசமாக எதைக் கொடுத்தாலும் ஏற்பதும் ஒருவகையில் கடன்தான். சேமிப்பவனுக்கு கடன் தொல்லைகளில்லை. எதிர்பாராத நிலைகளில் மனிதர் உதவிகோருதல் தவறு அல்ல. உழைப்பு, பொறுமை, தியாகம் போன்ற இயல்புடன் இயங்கினால் பிறர் துன்பங்களைக் களையும் சுபாவமும் தன்னம்பிக்கை யாவுமே கூடிவரும். சோம்பல், அதீக ஆசைகள் கடன்படுதலை விஸ்தீரணமாக்கிவிடும்.

“கடன்” படுதல் என்பதே, எமது மனதிற்கு உடன் பாடானது அல்ல. மனதிற்குச் சங்கோஜத்துடன் உடல் குறுகி இலவசமாகக் கேட்கும் பாவனையில் கடன்படுதல் உள்ளம் மடிந்த நிலைதான். ஒருவரிடம் பணம் பொருள் மட்டுமல்ல, இதர உதவிகளைப் பெறுதலும் கடன் தான்.

ஆனால், பெற்றோர், ஆசிரியர்களிடம் பெற்றகடன் ஈடு செய்ய வொண்ணாப் பெருங்கடன். எனினும், எந்தவித விவஸ்தையுமின்றிச், சர்வசாதாரணமாக முழு உரிமையை



RangaRakes
Tamilnavarasam.com

யும் எடுத்துக்கொண்டு “ஒருபத்தாயிரம் ரூபாய் தருகின்றாயா, நாளைக்குத் தருகின்றேன். இன்றைக்கு எனக்கு வருமதியாகவுள்ள லட்ச ரூபாய் இன்னமும் வந்து சேரவில்லை, சரி.... சரி எனக்கு அவசரமாகப் பணம் தேவை தாருங்கள்” என்று டாம்பீகமாகவும் ஏதோ கொடுத்து வைத்த பணத்தைத் திருப்பிக் கேட்பது போல் லஜ்ஜையின்றிக் கடன் கேட்பவர்கள் பலர் எம்முன் நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

தெருவில் ஒரு பெரியவர், தமது நண்பருடன் வெகு சுவாரஸ்யமாகப் பேசியபடியே வந்துகொண்டிருந்தார். வழியில் எதிர்ப்பட்ட நபர் ஒருவரைக் கண்டதும் எதிர்த்திசையில் நோக்கியவாறு பேசியதை விடுத்து திரும்பிப் பயந்தபடி நடந்து மறைந்து விட்டார்.

மறுநாள் அவரது நண்பர் பெரியவரைக் கண்டதும், “என்ன அந்த ஆளைப்பார்த்ததும் ஓடி மறைந்து நழுவி விட்டீர்களே.... என்ன விஷயம்... அந்த ஆளிடம் ஏதாவது கடன், கிடன் வாங்கி விட்டீர்களா...? எனக்கேட்டதும் “ஐய...யோ... நானா.... நானாவது அந்த மனிதரிடம் கடன் வாங்குவதாவது, அவருக்குத்தான் நான் பல மாதங்களுக்கு முன்பு இரக்கப்பட்டு ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தேன்... அன்றிலிருந்து அந்த மனிதர் எனக்குக் கடனைத் திருப்பித் தரவேயில்லை. ஒருநாள் கடன்பட்ட காசைத் திருப்பித் தாருங்கள் என்றேன். அவரோ... தான் கடனைத் திருப்பித் தராமைக்காக ஒரு பெரிய சோக புராணத்தையே எடுத்து





விட்டார். அது மட்டுமல்ல.... என்னிடம் இப்போது காசைக் கேட்பது என்ன நியாயம் ஐயா? , என்று திருப்பிக்கேட்டார் அவர்” என்றார்அந்தப் பெரியவர் அதைக் கேட்ட நண்பருக்கோ பொறுக்கவில்லை.... “அடடா அப்புறம்” என்று கேட்டார்.

“என்னை அந்த நபர் வழியில் கண்டால் போதும் என்னை நிறுத்தித் தர்ம உபதேசம் செய்ய ஆரம்பிப்பார், ஏழைகள் படும் துயர்களை, தனது குடும்ப நிலவரங்களை, மணிக்கணக்காகச் சொல்ல ஆரம்பித்து தான் எப்போதுமே ஒரு கடனாளி இல்லவேயில்லை. தன் நிலைமை அப்படி என்று கூறி, என்னை வறுத்தெடுத்துவிடுவார். இவரிடம் தப்பிப்பதே எப்படி என்று ஆகிவிட்டது. இந்த மனுஷன் தயவு செய்து கடனைத் திருப்பித்தராமல் விட்டாலும், பரவாயில்லை, என்னை இம்சிக்காமல் இருந்தாலே போதும் ஐயா...” எனப் பரிதாபமாக என்னிடம் அந்த மனிதர் புலம்பித்தீர்த்தார்.

மிகவும் சாமர்த்தியமாகப் பணத்தைக் கடன் என்கின்ற பெயரில் சுருட்டுகின்ற சில பேர்வழிகளில், இவர்களைப் போன்றவர்கள் பற்றியும் தெரிந்திருப்பீர்கள். யாராவது வசதியுள்ள ஒருவரிடம் போவார்கள், எப்படியோ சாமர்த்தியமாகப் பேசி ஆரம்பத்தில் ஒரு சிறுதொகைக் கடனாகப் பெறுவார்கள். ஆனால் வாங்கிய பணத்தைச் செலவு செய்யாமல் அதை அடுத்த நாளே திருப்பிக் கொடுத்து விடுவார்.



RangaRakes
Tamilnavarasam.com

கொஞ்ச நாளில் இதே நபர் முன்னர் கடன் கொடுத்த வரிடம் இதே பாணியில் கேட்கும் பணத்தில் கொஞ்சம் மேலதிகமாகவே கேட்பார். முன்னர் அவர் நடந்து கொண்ட விதத்தால் ஏற்பட்ட நம்பிக்கை காரணமாக அவர் கேட்ட தொகையைக் கொடுக்க, பணத்தினைப் பெற்றவர், முன்னர் செய்தவாறே, அதே பணத்தை முழு நோட்டுகளாக, மாற்றியமைத்து தனது செய்கையைக் கண்டு பிடிக்காத வாறு திருப்பி ஒப்படைத்துவிடுவார்.

அப்புறம் என்ன நடக்கும் தெரியுமா? இந்தக் தடவை மிக அதிகமான தொகையைச் சாதுர்யமாகப் பெற்றபின்பு, அவர் அந்த ஊரில் இருந்தே தலை மறைவாகிவிடுவார். இப்படிக் கடன் கேட்கப் பலயுக்திகள் உண்டு. இல்லாத பொல்லாத பொய்யுரைப்பார்கள். நல்ல ஆரோக்கியமாக இருக்கும் மாமன், மாமி இறந்துவிட்டதாகவும் பிள்ளை களுக்குப் பரீட்சைக்குப் பணம்கட்ட, வைத்தியச் செலவு களுக்கு எனப் பல தரப்பட்ட பொய்களை உற்பத்தி செய்து பணத்தை ஏப்பமிடுவார்கள் கேட்டால் சுவையான, ரசனை யுடன் பல கதைகளைச் சொல்லி கேட்பவர்களின் மனத்தை மருட்டிச் சுருட்டியே விடுவார்கள். எதிரே இருப்பவர்களை உணர்ச்சிப் பிழம்பாக்கிக் காரியத்தை வெற்றிகரமாக நடாத்திவரும் இத்தகைய எத்தர்களால் நியாயமாக, அத்தியாவசிய தேவைகளுக்குக் கூடத் தம்மை அண்மிக்கும் நண்பர்களுக்கே உதவி புரியப் பலரும் பயப்படுகின்றார்.

“என்ன ஐயா... பெரிய கடன், இதைக்கேட்க, நான்





ஏன் வெட்கப்பட வேண்டும்? அரசாங்கமும் தான் கடன் கேட்கின்றது. பெரிய, பெரிய கோடீஸ்வரர்கள் கூடக் கோடிக் கணக்காகக் கடன்படாமலா சீவிக்கின்றார்கள்?. நான் ஏதோ கொஞ்சம் கடன் பட்டால் என்ன கேலி பேச வேண்டிக் கிடக் கின்றது?” என்றும் சொல்பவர்கள் உண்டு.

கடன்படுதல் என்பது, மிகவும் கேவலமான ஒன்று மல்ல. மிகுந்த பொருளாதார நெருக்கடிக்குள் உலகத்தின் பல நாடுகளும் மிகுந்த, சிரமத்தினுள் அமிழ்ந்திருக்கின்றன. அங்கு வாழும் மக்களில் பெரும் தொகையினர் நிதி நெருக் கடியினுள், வறுமையினால் அல்லலுறுவது நாம் அறிந்ததே. அரசாங்கமும், பொது நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் எல்லாமே சேமிப்புப்பற்றியே வலியுறுத்துகின்றன. வரவுக்கு மிஞ்சிச் செலவுகள் அதிகரித்து விட்டன. ஒருவர் இன்னும் ஒருவரை ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நம்பி வாழ வேண்டிய நிலை. இது தவிர்க்க இயலாது.

இந்த லட்சணத்தில், சேமிப்பினைச் சொல்லும் வங்கி கள் மக்களுக்கு கடன் கேட்கும், கொடுக்கும் வழிகளைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. எப்படியாவது, மக்களிடம் எப்படிச் சம்பாதிப்பது என்பதில் உலகின் எல்லா நாட்டு அரசாங்கங்கள், வங்கிகள், அரச, தனியார் நிறுவனங்கள் எல்லாமே போட்டி போட்டவாறே சாமர்த்தியமான திட்டங் களை வகுத்துச் செயற்படுகின்றன.

இன்று வங்கிகள் கடன் அட்டை (கிறடிற்காட்) மூலம்



RangaRakes Tamilnavarasam.com

பலரையும் அவை நிரந்தர கடனாளிகளாக்கி விடுகின்றன. பணம் படைத்தவர்களுக்கு கடன் அட்டை மூலம் எந்தவித பிரச்சினைகளும் எழப்போவதில்லை. ஆனால் சாதாரண நடுத்தர வர்க்கத்தினர் எந்தவித கட்டுப்பாடுமின்றி ஆசைப் பட்டதைக் கடன் அட்டைகள் மூலம் வாங்கிப் பின் கடனை அடைப்பதற்கு படும் அவஸ்தைகள் சொல்லும் தரமன்று.

ஆனால், வங்கிகள், நிதி நிறுவனங்கள் வீடுகள் கட்டுவதற்கும், வாகனங்கள் வாங்குவதற்கும், கடன் உதவி செய்கின்றன.சாதாரண நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள், மிக எளிமையான சிக்கனமான வீடு அமைப்பதாயின் இத்தகைய வீட்டுக்கடன் திட்டங்கள் பேருதவி புரிகின்றன. இது தொடர்பாக வீட்டுக்கடன் பெற்றவர்கள் சொல்லும் கருத்து பின்வருமாறு கூறப்படுகின்றது.

"கொழும்பு போன்ற தலைநகரங்களில், வீட்டு வாடகைக்காகக் கொடுக்கப்படும், பல ஆயிரம் தொகையை விட வீட்டுக் கடன் மூலம் பெறப்படும் தொகைக்கான மாதாந்த அறவீடுகள் அதிகமாவை என்று சொல்வதற்கில்லை. பெறுகின்ற கடனால், சொந்த வீடு கிடைக்கின்றது. மாதா மாதம் கொடுக்கும் வாடகைப் பணம் போல் வங்கிகளுக்கு மேலதிகமாகச் சிறுதொகை செலுத்தினாலே போதுமானது"

எனினும், அரசாங்கம் கொடுக்கும் ஆதனக் கடன்களைத் துர்ப்பிரயோகம் செய்யும் பிரகிருதிகளும் இருக்கின்





றார்கள். சொந்தமாகப் பணம் இருப்பவர்கள் கூட கடன் உதவி பெற்று அதனை நிரந்தர வைப்பீடு செய்வார்கள். எடுக்கும் கடனுக்கான, மாதாந்த அறவீட்டினைச் செலுத்தி கடன் நிலுவை முதிர்வு எய்தியதும் அவர்கள் இட்ட பணம் முழுவட்டியுடன் கிடைத்து விடுகின்றது. பணம் படைத்தவர்களுக்கு, இந்த வழிமுறைகள் மூலம் தங்களின் நிதி வளத்தை வலுப்படுத்திக் கொள்ளவும் முடிகின்றது.

மிகவும் புத்திசாலித்தனமான உழைப்பையே நம்பி வாழ்ந்த ஒருவர் எப்படி கடன் பெற்று உயர்ந்தார் என்கின்ற சுவாரஸ்யமான கதையினைச் சொல்கின்றேன். குறித்த ஒரு வியாபார நிறுவனத்தில் தொழில் பயிற்சி பெற்ற வாலிபர் நல்ல தொழில் அனுபவம் பெற்றுக் கொண்டார். அவர் தாம் பெற்ற தொழில் அனுபவமூடாக, ஒரு சிறுவியாபாரத்தை செய்ய முடிவு செய்து கொண்டார். தொழில் செய்ய அவரிடம் நிதி வளம் இல்லை. எனவே, தமக்கு நெருக்கமான நண்பரை அணுகி அவரிடம் ஒரு லட்சம் ரூபாய் கடனுதவி பெற்றுக் கொண்டார்.

கடன் பெற்றவர் அதனை உடனடியாகவே ஒரு வங்கியில் நிரந்தர வைப்பில் இட்டுப் பின்பு வைப்பீடு செய்த பணத்தையே பிணையாக வைத்து எண்பது ஆயிரம் பெற்றுக் கொண்டார். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், நிரந்தர வைப்பின் மூலம் அவருக்கான வட்டியில்மாற்றம் ஏற்படாது. எடுத்த பணத்தைத் அவர் கொஞ்சம், கொஞ்சமாகச் செலுத்தி விடவேண்டும்.



RangaRakes Tamilnavarasam.com

பணத்தைப் பெற்றவர் வியாபாரத்தை ஆரம்பித்தார். வியாபாரம் அவரது உண்மையான உழைப்பினால் உயர்ந்தது. பெற்ற கடனைத் தமக்குத் தந்தவருக்கு மாதம், மாதம் செலுத்தியதுடன் வங்கிக் கடனையும் செலுத்தியபடி வந்தார். காலப் போக்கில், அவர் தனது முழுக்கடனையும் தீர்த்து விட்டார். குறித்த வங்கியில் இட்ட வைப்புப் பணம் முழுவட்டியுடன் கிடைத்து விட்டது. இந்த விதமான விடயங்களில் தன்னம்பிக்கையுடன் உழைக்கும் நபர்களால் மட்டுமே இவ்வண்ணம் சாதிக்க முடியும்.

பெற்ற கடனை உரிய முறையில் செலவு செய்ய வேண்டும். கடன்பட்டு எடுத்து கௌரவமாக வாழ எண்ணுதல் கேலிக்குரியது. போலிக்கௌரவத்திற்கு அடிமைப்படுவதும், குடித்துக் கும்மாளம் போடுவதற்காகக் கடன் எடுப்பதும் கடவுளுக்குப் பொறுக்காத போக்கிரித்தனமல்லவா? எந்த ஒரு மனிதரும் தமது எதிர்கால வாழ்வு ஆதாரங்களை வலுப்படுத்தாமல், பின் விளைவுகளைக் கவனிக்காமல் வாழ்வது மிகப்பெரிய துன்பங்களை வலிந்து ஏற்றுக் கொள்வது போலாகும்.

ஓய்வூதியம் பெறவுள்ள அரச ஊழியர்களுக்கான வசதிகளைப் போலவே தனியார் துறையில் தொழில் புரிபவர்கள், சாதாரண தொழிலாளர்களுக்குமான சேமிப்புத் திட்டங்கள் வங்கிகளில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. குறித்த காலங்களில், வைப்பீடு செய்யப்படும் பணம் வயது முதிர்ந்த காலத்தில், மாதாந்த ஓய்வூதியம் பெறும்





அரசாங்க அலுவலர்கள் போல் இவர்களும் பெற்றுக் கொள்ளுமாற் போல் பல நல்ல, பெறுமதியுள்ள திட்டங்கள் உருவாகிவிட்டன. இவை மிகவும் சுலபமாகக் கையாளத் தக்கவிதத்தில் ஏற்பட்டுள்ளன.

பல தனியார்துறை ஊழியர்கள் பலரும் தங்கள் ஓய்வு பெறும் காலத்தில் கிடைக்கும்,ஊழியர் சேமலாப நிதியினை தமக்கென வைத்துக் கொள்ளாது, தங்கள் பிள்ளைகளின் திருமணம், விசேட வைபவங்களுக்கு செலவு செய்த பின்பு கடைசிக் காலத்திற்கு, எந்த வித ஆதாரமும் இன்றி அவஸ்தையான வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.எவரும் மற்றவர்களை நம்பி எவ்வளவு காலத்திற்குக் காலத்தை யோட்ட முடியும்? பெற்ற பிள்ளைகளைக் கூட முழுமையாக நம்புவது கூடச் சுயகௌரவத்தைப் பாதிப்பதாகவே பலரும் எண்ணுகின்றார்கள்.

உண்மையில், பல பெற்றோர்களின் முன் யோசனையற்ற தன்மையினால் கைப்பொருள் இழந்து, பெற்ற பிள்ளைகளால் உதறி எறியப்பட்டு முதியோர் இல்லத்தில் வைக்கப்படும் அவலம் அநாவசியம்! மிகவும் கௌரவமாக, வாழ்ந்த காலத்திலேயே எதிர்காலம்பற்றிச் சிந்திக்காமல் வாழ்வது என்பது தற்போதைய சமூக அமைப்பில் மன்னிக்க வியலாத குற்றம்தான்.

தேக அசௌகரியம், நோய்,நொடி என்று வந்தால் ஏற்படுகின்ற செலவுகள் எம்மை மலைக்க வைக்கின்றன.



RangaRakes
Tamilnavarasam.com

எல்லாமே வரும், ஆனால் அதன்பொருட்டு நாம் எமது மனதை வதைத்து வாழவேண்டுமென்கின்ற அவசியமும் இல்லை. என்னிடம் எல்லாமே இருக்கின்றது என்னும் படியான நிதி வளத்தை உருவாக்கியே தீரவேண்டும். எம்மால் முடிந்த மிக எளிமையான வாழ்விற்குத் தேவையான பண வசதியைத் தேடாமல், தற்போதைய சூழலிலேயே உருவாக்காமல் இருப்பது எதிர்காலத்தில் மன உளைச்சலுடன் எமது ஆன்மாவையே துன்புறுத்தும் காரியத்தை நாமாகவே வலிந்து ஏற்படுத்தும் நடவடிக்கை தான், நோக்குக!

இன்று பத்திரிகைகளில் கடன் தொல்லைகளால் ஏற்படும் அவலங்களைப் படித்திருப்பீர்கள். தனது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியவர்கள் தாங்கள் பெற்ற கடன் தொல்லைகளைத் தீர்க்கச் சுலபமான வழி தற்கொலை என்று முடிவெடுத்து விடுகின்றார்கள். தற்கொலை செய்வதால் கடன்பிரச்சினை முடிவடைவதுமில்லை. மாறாகக் குடும்பத்தை நடுவழியில் கைவிட்ட பெரும்பழி தான் அவருக்குக் கிடைக்கின்றது. கடன்காரனாகச் சாவதைவிட இழிவான அவப்பெயர் வேறு என்ன உண்டு?

எவரிடமும் கடன்கேட்காமல் கொஞ்சம் பணத்தை யாவது சிறுகச் சிறுகச் சேமிக்க முடியாது என்று எவரும் சொல்ல முடியாது. நான் கடன் பெற்றவன் அல்லன். நான் எல்லோருக்குமே பணம், பொருள் கொடுத்தவன் என்பதில் பெருமை கொள்வீராக!





- நீங்கள், உங்கள் காலில், சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்க பெற்ற பதவி மட்டும் காரணமல்ல, நீங்கள் பெருக்கிக் கொண்டிருக்கும், சேமிப்பும் மூல காரணமாக அமைய வேண்டும்.

- எந்த வேளையிலும், எத்தகைய இடர்வரினும், உங்களைப் பலப்படுத்திக் கொள்ள எவரிடமும், கை நீட்டாத நிலையை உருவாக்குங்கள். கடன் கேட்பவர்களைக் கண்டால் விலகி ஓடும் நிலையை விடக் கேவலமானது வேறில்லை.

- அதீத ஆசைகளுக்கு அடிமைப்பட வேண்டாம். உள்ளதைக் கொண்டு செப்பமாக வாழ்வீர்களாக! பிறருக்காக நீங்கள் உங்களை இழக்க வேண்டாம்.

வீட்டில் கணவனின் வருமானத்தினை மனைவி, பிள்ளைகள் அறிந்து அதன்படி வாழ முனைந்து கொள்ளாது விட்டால் இல்லத்தில் அமைதி வந்திடுமா? எதிர் வீட்டுக்காரர்களின் வாழ்க்கை முறையுடன் ஒப்பீடு செய்து தாமும் அவ்வண்ணமே வாழ எண்ணிக் குடும்பத்தலைவனை ஓயாமல் நச்சரித்துக் கணவனை நித்திய கடனாளி ஆக்குவது எவ்வளவு கொடுமையானது?

எப்படியாவது கடன் இன்றிவாழ குறுக்குவழியாக வஞ்சம், ஏமாற்று வழிகளை நாடும் பேர்வழிகளும் உளர். பிள்ளைகளின் கல்வி, விவாகம் போன்ற விஷயங்களில் குடும்பத்தலைவன் படும் சிரமங்கள் எவ்வளவு இருந்தாலும்



RangaRakes Tamilnavarasam.com

அவற்றில் இருந்து மீளுவது திட்டமிட்ட வாழ்வு முறையில் தான் தங்கியுள்ளது. பிரச்சனைகள் தீர வாயால் சொல்வது சுலபம். ஆனால் இவற்றை யதார்த்தத்தில் தீர்த்து கொள்வது சிரமானதுதான்.

காலத்தை விரயமாக்காமல் உழைப்பு, பொறுமை, தியாகம், விடா முயற்சியினால் மனிதன் தன்னைப் பலப் படுத்தியாக வேண்டும். எமது சுமையை நாமே சுமக்க வேண்டியுள்ளது. எமக்காக பொறுப்புக்களை நாம் உழைக்கும் காலத்தில் நாம்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். சுகதேகியாக உழைக்கும் திறன் இருந்தும் மற்றவர்களை நம்பி வாழ எண்ணுதல் கண்ணியமல்ல. இதுவே பழக்கமாக்கினால் சமூகத்தில் அவன் தலை நிமிர்ந்து வாழ இயலுமா? ஒருவனது உழைப்பை இலவச மாகக் கேட்பதும், யார் மீதாவது பொறுப்பை சுமத்துவதும் கூட ஒரு தன்னலமான திருட்டுப் புத்திதான்.

நித்திய கடன்காரர்களாக எப்படி நிம்மதியாக வாழ இயலும்? எங்களுக்கான கொள்ளளவை நாம் அறிந்து கொள்வோம். எங்கள் நிதி ஆதாரங்களைப் பலமேற் றுவோம்! உழைக்கும் காலத்தில் நிரம்ப உழைப்போம்! அப்புறம் என்ன, "கடன்" என்ற சொல்லே, உடைந்து நொருங்கும்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
21.09.2008







# சலிப்பு

வாழ்க்கை என்பது தேய்மானமல்ல.
உழைத்து நல்லலோராய் வாழ்ந்தால் என்றும்
விலை சொல்ல வொண்ணா பெறுமானம்
வல்ல மனிதா! சலிப்பின்றி வாழ்ந்து காட்டு!

சலிப்பு உணர்வு தலை தூக்கினால் செயல்களில் வீழ்ச்சி ஏற்பட்டு விடும். தொடர்ச்சியாக ஒரே காரியத்தை திரும்பத் திரும்பச் செய்யும் போது சலிப்பு ஏற்படுவது இயற்கை.

எனினும் எக் காரியத்தையும் விருப்பமின்றிச் செய்தால், சலிப்பு எளிதில் பற்றும். சிலர் ஒரு சின்ன காரியத்தைச் செய்யு முன் இதனை எப்படிச் செய்வேன், இது மிகப் பெரிய காரியமாயிற்றே என்று சலிப்புடன்



RangaRakes
Tamilnavarasam.com

சொல்வதையே பழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள்.

தனிப்பட்ட பிரச்சினைகளால் மனிதன் அவதியுறும் போது எந்த காரியத்திலும் லயிப்பு ஏற்பட்டுவிட இயலாது. அமைதியற்ற விதத்தில் இருந்து விடுபட முதற்கண் முயற்சி செய்ய வேண்டும்.

தன்னால் செய்யப்பட வேண்டிய கடமையுணர்வினைப் பின் தள்ளி உடன் தேவையற்ற விடயங்களுள் மனத்தினை உட்செலுத்தினால்எதுவிதபயனும்ஏற்பட்டுவிட போவதில்லை.

- தேகஅசௌகரியம்
- குடும்ப சுமை
- மற்றவர் முன்னேற்றங்களைக் கண்டு காழ்ப்பு அடைதல்
- தாழ்வுச் சிக்கல்

போன்ற காரணங்களால் மனம் சலிப்படைகின்றது. என்றும் மகிழ்ச்சியான இயல்புண்டயோருக்கு இந்நிலை ஏற்பட்டு விடாது.

எப்போதும் பிறருடன் தம்மை ஒப்பீடு செய்து கொள்வதால் பயன் ஏதுமில்லை. இதனால் சில சமயங்களில் ஆற்றாமை பொறாமையுணர்வு தான் உள்ளத்தை ஆட்டியபடியே இருக்கும்.





"அட... என்ன வாழ்வு இது...? எப்படி உழைத்தாலும் பயனில்லை. வரவுக்கு மிஞ்சிய செலவு பெருகின்றது அவனவன் எப்படி எப்படியெல்லாம் வாழுகின்றான்.என்று தான் எனது பிரச்சனை தீர்ந்துவிப் போகின்றதோ!" என நடுத்தர வர்க்கத்தினர் புலம்புவதை நாம் கேட்டிருக்கின்றோம்.

இவர்களின் கூற்றுக்கள் சில சரியாகவும் இருக்கலாம். அவ்வளவு தூரம் இன்று பொருளாதாரச் சுமைகள் மனிதர்களை விரட்டி வீழ்த்தினால் சலிப்பு ஏற்படாதா என்ன...,?

தொடர்ச்சியான தோல்விகள் ஒருவரை தாழ்வுச் சிக்கல்களுள் நிறுத்தி விடலாம். இது மிகவும் பரிதாபத்திற்குரியது. எழுச்சி மிகு எண்ணங்களை உள்ளத்தில் நிலை நிறுத்துவதே இந்த நிலையிலிருந்து மீள்வதற்கான ஒரே வழியாகும்.

துன்பமிகு எந்நிலையிலும் மீண்டு வர வேண்டியது கட்டாய நிலை என்பதையும் உணர வேண்டியுள்ளது. எப்படியும் இந்த உலகில் வாழ்ந்து எமக்குரிய கடமைகளை நாம் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

முடங்கினால் காரியங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது எங்ஙனம்? கலங்குவது மனித சுபாவம். ஆயினும்



RangaRakes

Tamilnavarasam.com

எந்தவித துன்பமூட்டல் உணர்வுகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளி உண்டு.

ஏதாவது அற்புதங்களை எதிர் நோக்கிக் காத்திருப்பதை விட இப்பொழுதே எழுந்தியங்குவதே அற்புதத்திலும் பேரதிசயமான காரியங்களை ஒப்பேற்று வதற்கான ஏற்ற நல் வழியாகும்.

கற்பனையுடன் சீவிப்பதை விட காரியமாற்றுவது எப்பொழுதும் சிறப்பானதாகும். நிச்சயமற்றதில் புலனைச் செலுத்துவதை விட இயலக்கூடிய விடயங்களில் அதி தீவிர மாகப் புலனைச் செலுத்தினால் நினைத்தவை ஈடேறும். சலிப்பு, அலுப்பு தொட்டு விடாது விலகும்.

அவசர அவசரமாகத் தீர்மான முடிவு எடுக்காமல் செயல்களைச் செய்தால் அது பன்மடங்கு கஷ்டப்படும் நிலைக்கு எம்மை உட்படுத்தி விடுகின்றது. இது மனிதன் தானாகவே உருவாக்கும் அர்த்தமற்ற செயலாகும்.

எமது செயலைக் கரிசனையுடன் செய்யும் போது ஏற்படும் அனுகூலங்கள் எமக்கு வழங்கப்படும் நீதியு மாகும்.

இதனால் கலகலப்பான? சலிப்பேயற்ற, நிரந்தர மான களிப்பூட்டும், எழுச்சி பெறும் வல்லமையினையும் பெற்று விடுகின்றோம்.





எழிலார்ந்த பூங்காவில் சஞ்சாரம் செய்துகொண்டே அந்தரங்க இருள் பற்றி மனதினுள் உருப்பெருக்கி எண்ணுவர்கள் வாழ்வில் மலர்ச்சி முகிழ்வது எப்படி?

ஆரம்பத்தில் வருகின்ற இடர்கள் யதார்த்தமான நிகழ்வு என ஏன்தான் பலரும் உணர்வதேயில்லை? எல்லாமே எளிதாக இருந்தால் பெறுகின்ற " வருமதி "களின் பெருமை அருமைபற்றித் தெரியாமலே போய் விடும்.

நாமாக முயற்சி செய்து பயிரிட்டு அதன் மூலம் பெறும் காய், கனிகளைச் சுவைப்பது போல் சந்தோஷம் வேறு ஏது உள்ளது?

எனவே சலிப்பற்று முயன்று பெறும் சுகம் அலா தியானது

சின்ன சின்னச் செடிகளுக்கு நீரூற்றி, பராமரித்து அது பூக்களைச் சொரியும் போது எமது மனம் பெறும் நெஞ்சத்து நிறைவை காசுக்குக் கடைத்தெருவில் வாங்கும் மலர்கள் மூலம் பெற்று விட முடியுமா?

அனுபவங்களைப் பெறுவதே மகிழ்ச்சியூட்ட வல்லது என்பதை உணர்ந்து கொள்க! சோம்பேறிகளே அடிக்கடி மனம் சோர்ந்து சலிப்பான வார்த்தைகளைக் கோர்வை யாக வெளியிடுகின்றார்கள்.



RangaRakes Tamilnavarasam.com

மனம் வெண்மையாக இருக்க வேண்டுமே தவிர வெளிறி இருத்தலாகாது. நல்லதே என்றும் நடக்க வேண்டும் என எண்ணும் மாந்தர் வல்லமை சேர்ந்திட சலிப்பு உணர்வை தூர வீசி எறிந்தால் ஏது சோர்வு, துன்பம் ஏற்பட்டு போகின்றது?

"எமது தூது"
வார மலர்
09-09-2011







# ஆற்றலை வளர்ப்பதே வாழ்க்கை

> சேற்றைத் தாண்டி செந்தாமரை மலரும்.
> தூற்றுதல் தொல்லைகளால் துவளாது எழுக!
> நேற்றைய பொழுதிலும் இன்றைய வரவிலும்
> நாளைய உலகை ஆக்கிடு தோழா!

எல்லா வரவுகளுக்கும் எல்லா விதமான இழப்புகளுக்கும் தயாராக இருத்தல் வேண்டும் கிடைக்கும் வரவுகளுக்காகப் பெருமிதம் கொள்வதோ, இழப்புக்களுக்காகச் சிறுமைப்பட்டு விட்டோம் எனக் கருதுவதோ தவறு.

எல்லாமே இயல்பு, உண்மையான இயல்பு நிலைகளே தத்துவமாகின்றன. எனவே எதனுள்ளும் அமுங்கி



RangaRakes
Tamilnavarasam.com

யிருக்கும், சுதந்திரமற்ற நிலை எமக்கு வேண்டாம். ஒருவன் தனக்குள்ளும் புறதாக்கங்களுக்கும் உட்புகுந்து கொள்ளும் போதுதான் "அடிமை" நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.

எதுவுமே கிடைக்கும் என்பதில் உறுதியாக இருப்பவர்கள் தோற்றுப் போனதுமில்லை. எதனையுமே நாமாக வரவழைக்கும் வரை எதுவும் வந்து விடுவது மில்லை. ஆனால், எதிர்பாராத விளைவுகள் எம்மை ஆட்கொள்ளும் போது தான் பரிதாப நிலை எமக்கே என எண்ணிக் கொள்கின்றோம். இந்தப் பலவீனத்திலிருந்து எப்படி விலகுவது?

உள்ளவை, உள்ளபடியே இருக்கின்றன என்பதைப் புரியாத வரை தெளிவென்பதேது? சத்தியத்தையும் அதனைச் சார்ந்த சங்கதிகளையும் புறம் தள்ளினால் மாயமான எண்ண வலைக்குள் அமிழ்ந்திருப்பதே இன்பமாகத் தோன்றும்.

உண்மை இயல்புகள் கூட சில சமயம் புறதாக்கங்களால் சுமையாகத் தோன்றலாம். சூது, வாது, பொய், வஞ்சகம், காழ்ப்பு, சூழ்ச்சி, கடும் பகை, விதண்டாவாதம் எல்லாமே தெய்வ தண்டனைக்குரியன.

சந்தோஷம் எனும் குளிர் அருவியில் எங்ஙனம் ஜலக்கிரீடை செய்வது? கடும் குளிர் காலத்தில் குளிப்பது கஷ்டம். இதற்காக கம்பளி போர்வையைச் சுற்றியபடி தண்ணீருடன் சங்கமமாக எண்ணுவது அறிவீனம்.





குளிராக இருக்கின்றதே எனக் கருதாது உடைகளை தூக்கி எறிந்து கொஞ்சம் நீரில் நனைந்து கொண்டால் மீண்டும் ... மீண்டும் கொஞ்சம் தொடர்ந்து நீருடன் இணைந்து கொண்டால் ஆஹா.... அதுவே சந்தோஷம்! இது போல், சற்றே கஷ்டமானவைகளுடன் போராடினால் அவை விலகிப் போகும். உண்மையான இதமூட்டும் ரசனைகள், தெம்பு, தானாகத் தொற்றி நின்று புதுப் பலத்தை உண்டு பண்ணும்.

முயற்சியினுள் மூழ்காதவர்கள் காலப் போக்கில் தங்களாலேயே தாங்கள் இகழப்படும் துர்ப்பாக்கிய அனுபவங்களைப் பெறுவார்கள்.

உடல் பாரத்தை விட மனப்பாரமே அதிகமாக அழுத்துகின்றது இரண்டையுமே துண்டிக்க முடியுமா? கொஞ்சமாகவேனும் குறைக்க முயற்சி செய்க!

கண்ணாடியில் நாம் பார்ப்பது எமது முகத்தை மட்டும் தான். நெஞ்சுக்குள் நெருடுபவை எவருக்கும் புரியுமா? இது விலகும் வரை முகத்திற்கு வெளிச்சம் வராது. துன்பத்துடன் தங்கள் முகத்தை தரிசிப்பதற்கே பலரும் விரும்புவதில்லை.

அழகான முகம் தெரிய மனதில் சோகம் சுரண்டப்பட வேண்டும் என்பதைவிட அவை பூரணமாகத் துடைக்கப்படல் வேண்டும். தற்காலிகமாக மெல்லிய



RangaRakes

Tamilnavarasam.com

கீறல்களாகக் கவலைகளைத் தேய்த்து எடுத்தாலும் முழுமையாகப் போகாத வரை அவை மீண்டும், மீண்டும் சிரசு கொய்யப்பட்டும் உயிர்த்தெழும் அசுரன் போல விழித்தெழும். சுழற்றி எறிக தோழர்களே!

வாழப் பிறந்த பின்னர் அனல் எனப் புழுங்குதல் இழிவு. எந்த நேரமும் விழுந்து விடுவோம் என்கின்ற நிலை அழகு அல்ல. பூமியில் பரந்து வளர்வது மட்டுமல்ல, ஆழமாக வேர் ஊன்றுவதே தாவரங்களின் எண்ணமா யிருக்கின்றன.

இவை நல்ல காற்றை, ஒளியை, நீரை நின்ற நிலை யில் உறிஞ்சியெடுக்கின்றன. ஹே....மனிதா ஓடவும், நிற்கவும், படுக்கவும் பின்பு ஓடி ஆடவும் திறன் கொண்ட வர்கள் நாம் அல்லவா? அசைகின்றவன் ஆற்றல் மிகுந்த வன். ஒலியை, ஒளியைவிட வேகமாகச் செயல்படுக!

ஒரு பொழுதிலும் ஓராயிரம் சாதனை செய்! இயங்காதவன் அடிமை நிலையில் உள்ளவன். ஆயினும் அதனை விடக் கேவலமான நிலையில் உள்ளவன் என்றே கூறலாம். ஆற்றல் இருந்தும் செயலற்றவர்கள் பற்றியே கூறுகின்றேன். இவர்கள் நூறு ஆண்டுக்கு ஜீவனம் செய்தும் ஏதுபயன்? வலு இழந்தவர்கள், பலமிழந்த முதியோர்கள் என எவரையும் எங்கள் உற்சாக வார்த்தை களால், அரவணைப்பினால் செயலில் ஆர்வம் கொண்டவர் களாக்க முடியும்.





ஆற்றல் வாய்ந்தவர்களிடம் தன் வலிமையைக் காட் டக் கூற்றுவனும் அஞ்சுவான். பலம் மிக்க மனமே, எந்த ஈலையும் நீக்கும் நல் மருந்து.

எந்த நேரத்திலும் எந்த இடர் வரும் சூழலிலும் மனம் புழுக்கமடைய இடம் கொடுத்தால் இடர் தான் தேடி வரும்.

எளிதாகக் கிடைத்து விடும் என்பதற்காக அவை எம்மைத் தேடி வருவதில்லை

உடன் அதனை நாடிக் காப்பாற்றுவதே புத்திசாலித் தனமானது. பலரின் துன்பங்களுக்கும் முதல் காரணம் எளிதான அனுகூலங்களை சுபலமாக இழந்து விடுவது தான்.

எமது ஆயுள் காலத்தில் ஒவ்வொரு மணித்துளியு டன் எமது பாரிய முயற்சிகள் இணைந்திருக்க வேண்டும் இவை இந்த யுகத்திற்கான சாதனையாக அமைந்து விடும். காரியம் ஆற்ற ஆயுளின் நீளம் கூடிய படியே இருக்கும். சாதனை புரிபவருக்கு என்றும் தீர்க்காயுசு.

தினக்குரல்
நிறப்பிரிகை
01-03-2012



RangaRakes

Tamilnavarasam.com





# கணவன் மனைவி பொருத்தம் என்பது என்ன?

கணவன் மனைவியிடையே குடும்ப வாழ்வு நல் எண்ணங்களுடன், தெளிந்த நீரோடைபோல் அமைதல் வேண்டும். இரு மனங்கள் இரண்டறக் கலந்த கணவன் மனைவி உறவு நன் மக்களை பெறுவது மட்டுமல்ல, உலகை உய்விக்கச் சமுக நலனிலும் அக்கறை செலுத்த வேண்டும். மனப் பொருத்தம் என்பது, ஒருவரை ஒருவர் புரிந்துணர்வுடன், செயல்படுத்துவதாகும். இந்தப் பொருத்தம் என்றும் நற்காரியங்களுடன் ஒன்றித்து நிற்கவும் வேண்டும். கணவன் , மனைவி சதா முரண் பாடுகளுடன் வாழ்ந்தால், குடும்ப உறவு மட்டுமல்ல, இவர்களுக்குச் சமுகத்தின் மீதான அக்கறையும் அருகிவிடும். நல்ல குடும்பம் எதையும் சாதிக்கும், வேதனைகளைச் சாதனைகளாக மாற்றும்.

திருமண பந்தத்தில் ஆண், பெண் இருவரும் இணைவது ஏன் என்பது பற்றி எமது முன்னோர்கள், அவர்கள் படைத்த இலக்கியங்கள், சமயங்கள் வாயிலாக நாம் பலவிதமான உண்மைக் கருத்துக்களைப் படித்திருக்கின்றோம்.





கணவன், மனைவி இருவருமே ஒருவருக்கொருவர், ஆதாரமாக இருந்து குழந்தைகளைப் பெற்று வளர்த்துப் போஷிப்பது மட்டும் தான் திருமண பந்தத்தின் முழு நோக்கமும் ஆகுமா?

"சாடிக் கேற்ற மூடி" என்று எம்மில் சிலர் கணவன், மனைவி பொருத்தம் பற்றிச் சொல்லிக் கொள்வார்கள் கணவன் ஒருவன் சகல நற்குணங்கள் பொருந்தியவனாகவும், மனைவியும் அவ்வண்ணமே அமைந்திருந்தால் அது நல்ல ஜோடிப் பொருத்தம் தான்.

கணவனும் அழகன், அவனுக்கு வாய்த்த மனைவியும் அழகி, என்றால் அது கூட நல்ல அழகுப் பொருத்தம் தான்!

ஆனால், கணவன், மனைவி இருவருமே நல்ல குணங்களைத் தழுவாது, சமூகத்திற்கு ஒவ்வாது வாழ்ந்தால். அவர்களை பொருத்தமான ஜோடி என்று சொல்ல முடியுமா? வேண்டுமென்றால் கேலிக்காகச் சமூகம் அப்படிச் சொல்லிக் கொள்ளும்.

துர்ப்பழக்கம், சமூக விரோதப் போக்குகளுடன் இணைபவர்கள் நல்ல பங்காளிகளயாக இருக்க மாட்டார்கள். இவர்கள் எக்கணமும் ஒருவரை ஒருவர் விரோதித்துக்கொள்ளலாம். மனதுக்குள் ஒன்றும் வெளியே வேறு நினைப்புடனும் சதா வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.



RangaRakes

Tamilnavarasam.com

வெறும் சுய நலம் ஒன்று தான் ஒரே குறிக் கோளாகும்.

எனவே, கணவன் , மனைவி பொருத்தம் என்பது நல்ல குணங்களுடன் சங்கமிக்கும் இணைப்பாக அமைய வேண்டும்.

கணவன் சில சமயங்களில் தவறான மாறுபாடான வழிகளில் சென்றால் மனைவி அவனை, அன்புடன் நல்ல வழியில் திருப்ப முனைய வேண்டும். அவ்வண்ணமே, மனைவியின் செயலில் தவறுகள் இருந்தால் கணவன் முரண்படாமல், பக்குவமாகச் சொல்லி நல்வழிப்படுத்த வேண்டும்.

கணவன் மீது மனைவியும், மனைவி மீது கணவனும் விசுவாசம் கொண்டு விட்டால். ஒருவர் பேச்சை இன்னும் ஒருவர் கேட்டே தீருவார்கள். மனம் ஒத்த தம்பதிகள் தமக்குள் விட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தாலும், நல்லனவற்றைச் செவி மடுப்பதிலும் எவ்வித தயக்கமும் காட்டவே மாட்டார்கள். ஆன்மார்த்த ரீதியில் ஒன்றுபட்ட நற் தம்பதிகள் ஒருவருக்கு ஒருவர் ஒரே சிந்தனையினையே அதே கணத்தில் எண்ணுவார்கள்.

எனவே, கணவன் மனைவியர் குடும்ப வாழ்வு எவ்விதமான சிக்கலின்றி தெளிந்த நீரோடை போல செல்ல நல்ல மனங்கள் ஒரு நிலைப்பட வேண்டும்.





ஒரு குடும்பம் சதா பிரச்சினைகளுடன் வாழ்வதற்கு என்ன காரணம் என்கின்ற விடயத்தினை ஆராய்ந்தால் , ஒருவர் கருத்தை மற்றவர் ஏற்றுக் கொள்வதுமில்லை, அவைகளை நிராகரிப்பதுடன், ஒருவரை ஒருவர் தூஷிப்பது மாகும். இந்நிலை மிகவும் ஆபத்தானது.

நல்ல விஷயங்களில் ஒன்றுபடுதல் வேண்டும். நல்லன இல்லாத விஷயங்களைத் தூக்கி எறிதல் வேண்டும். புருஷனின் கெட்ட நடத்தைகளைக் கண்டும் காணாதது போல் இருப்பது மட்டுமல்ல, எப்படியாவது இவர் பணம் சம்பாதித்துத் தன்னையும், தங்கள் பிள்ளைகளையும் நன்கு பராமரித்தால் சரி என எண்ணுவது போல் மடமைத்தனம் வேறு என்ன உண்டு?

“கால் காசு என்றாலும் நேர்மையாக உழைத்து வாழ்வோம், எல்லோரிடமும் அன்புடன் வாழுவோம், வன்மம் பாராட்ட வேண்டாம்” எனக் கேட்டுக் கணவனைத் திருத்த முனைந்தால் அவளது எண்ணம் ஈடேறியே தீரும். திடமான எண்ணங்களுடன், நல்லதை மட்டுமே எண்ணுபவர்களின் போராட்டங்கள் தோற்றதுண்டா?

அதீதமான கற்பனைகளையும், ஆலோசனைகளையும் வளர்த்து அவை நிறைவேறாது போனால் இல்லத்தரசி, இல்லத் தலைவனுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கலாகாது.



RangaRakes
Tamilnavarasam.com

எண்ணங்கள் நிறைவேற தங்கள் குடும்பம் மோலோங்க இரு சாராரும் உழைக்க வேண்டும். அரசாங்க வேதனம் தங்கள் குடும்பச் செலவுக்குப் போதுமானதாக இல்லை என்பதனால், மனைவியும், கணவனும் இணைந்து மண்ணை நம்பி தோட்டம், வயல் என்று ஓடியாடி உழைத்து நல்ல விவசாயம் மூலம், பெரும் வருமானம் பெற்ற தம்பதியினரை நாம் பார்த்திருகின்றோம். ஆரம்பத்தில் மிக சாதாரணமாகத் தொடக்கப்பட்ட தொழில் படிப்படியாக இருவர் முயற்சியால் விஸ்தீரணமாகி உயர்ந்த கதைகளை நீங்கள் கேட்ப தில்லையா?

மனைவி தொட்டதெல்லாம் துலங்கும் என்று அவளைப் பாராட்டும் கணவனை நாம் பார்த்திருக்கின்றோம். இது தான் கணவன், மனைவி உறவும், அதன் அபரிதமான வளர்ச்சியுமாகும்.

குடும்ப உறவு அந்நியோன்யமாகவும், அதே வேளை எதிர் காலத்தை நன்கு சிருஷ்டிக்க வல்லதாகவும் இருக்க வேண்டும். முன்னேற ஒரே வழி, சரியான் வழியில் ஒரே பார்வையில் கை கோர்த்து இணைந்து நடப்பது தான். ஒருவரைத் தமது பக்கம் மட்டும் வளைத்து மற்றவர் பார்வையை மறைத்து ஒருவரை ஒருவர் ஒடுக்குவது அல்ல, "கருத்து ஒருமித்தல்" என்பது நல்ல கருத்துக்களுடன் ஒன்றிப்பது மட்டும் தான்.

தினகுரல் ஞாயிறு மஞ்சரி
09 .01.2011







# அயலாரோடு மனஸ்தாபம் கொள்ளற்க!

நாங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் வாழும் மனையில் அன்பும், சாந்தியும் குடிகொள்ள வேண்டும். அத்துடன் நாம் எமது வீட்டின் அருகேயுள்ள அயலவர்களுடனும் நட்புடன் பழகவும் வேண்டும். எவரையும் வெறுத்து நோக்காது, அரவணைக்கும் பண்பை வளர்த்தால், எமக்கு பகை எனும் துன்பம் நிகழ்ந்து விடாது. எம்மைச் சுற்றிப் பல்வேறு குணாம்சங்களுடன் பலரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நல்லவர்களும், கெட்டவர்களும் சூழ்ந்த உலகில் நாம் மனம் தழும்பாமல் சர்வ ஜாக்கிரதையுடன் சீவிக்க வேண்டும். கண்டபடி வார்த்தை பேசி, முரண்பாடுகளை வளர்த்தால் ஏது பயன்? பக்கத்து வீட்டுகாரனுடன் பகைத்தால், நிம்மதி போவதுடன் பொழுதுகள் தீய்ந்தும் போகும். அன்பை பரஸ்பரம் பகிர்ந்தால் சந்தோஷம் என்றும் சாஸ்வதம்!

இல்லங்கள் தோறும் அமைதியும், அன்பும் குடிகொண்டாலே இங்கு சந்தோஷங்கள் களிநடனம் புரியும். ஒவ்வொருவரும் தமது இல்லங்களில் மட்டுமே அன்பை, ஆதரவைப் பகிர்ந்தால் மட்டும் போதுமா?



RangaRakes
Tamilnavarasam.com

அயலவர்கள் மற்றும் சுற்றத்தினர் அனைவரிடமும் தங்கள் அன்பை வெளிப்படுத்துதல் அத்தியவசியமாகின்றது.

அதிலும் முக்கியமாக அண்டை வீட்டார்களுடன் குரோதம் கொள்வது ஆகவே ஆகாது. இது மிகவும் பாரதூரமான பின் விளைவுகளுக்குள் இட்டுச் சென்று விடும்.

நாம் சாதாரண விஷயமாக எடுத்துக் கொண்ட சின்னக் கோபங்களைக் கூட, சிலர் பெரிதாக எடுத்துப் பழி தீர்த்துக்கொள்ள எத்தனிக்கலாம். நாம் அன்பினால் எதனையுமே வென்று கொள்ள முடியும். இதனைப் புரிந்து கொள்ள இதோ ஒரு படிப்பினையூட்டும் சின்னக் கதை!

இப்படியான சம்பவங்களை நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். ஏன் சில சமயம் நீங்களே கண்டும் இருக்கலாம். நல்லவர்களும், பொல்லாதவர்களும் வாழும் பூமி இது.

ஒரு நல்ல குடும்பத் தலைவன் , தலைவி இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவளுக்குத் திருமண வயதாகிவிட்டது. பையன் கல்லூரியில் படித்து வருகின்றான்.

ஒரு நாள் இவர்கள் வீட்டு வளவினுள், பக்கத்து





வீட்டாரின் ஆடுகள் புகுந்து அங்குள்ள தோட்டத்தை மேய்ந்து விட்டது . இதனால் ஆத்திர முற்ற இந்த மனிதர், அடுத்த வீட்டுக்காரியையும், அவரது ஆடுகளையும் திட்டித் துரத்தி விட்டார்.

இவர் திட்டியதை பக்கத்து வீட்டுக்காரப் பெண்மணி கேட்டதும் சண்டமாருதம் கொண்டு வெகுண்டெழுந்தார். முடிவு இரு வீட்டாருக்கு மிடையே வாக்கு வாதம். சாதாரணமாக எழுந்து. அது முற்றி நீண்ட சச்சரவுக் குள்ளாகி, எப்படியோ அக்கம் பக்கத்தார்கள் வந்து சமரசம் செய்து வைத்தார்கள்.

இந்தச் சம்பவம் நடந்து ஓரிரு மாதங்கள் கடந்தன. இரு வீட்டாரும் ஏற்கனவே ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதை நிறுத்திக் கொண்டனர். கொஞ்ச நாளில் இருசாராருமே அமைதியாகவே இருந்தார்கள்.

இந்தக் கால இடைவெளியின் பின்னர் முன்னர் குறிப்பிட்ட குடும்பத்தினரின் மகளுக்குத் திருமணப் பேச்சு நடந்தது. மணமகன் வீட்டாருக்கும் பெண்ணைப் பிடித்துப் போக உடனே சம்மதம் தெரிவித்துத் திருமண நாள் நிச்சயம் செய்வதாக உறுதி கூறி சென்றனர்.

மணமகன் வீட்டார் பெண்ணைப் பார்த்துச் சென்ற சில வாரங்களின் பின்னரும் பதில் ஏதும் தெரிவிக்கவில்லை. இதனால் மிக்க ஆவலுடன் அவர்களுடன்



RangaRakes

Tamilnavarasam.com

தொடர்பு கொண்டு தாமதத்திற்கான காரணம் கேட்டனர். அப்போது அவர்கள் சொன்ன பதில் இவர்களுக்கு பேரதிர்ச்சியைத் தந்தது. என்ன நடந்து விட்டது, சந்தோஷமாகத்தானே சென்றார்கள். இடையில் என்ன மன மாற்றம்? குழம்பினார்கள்.

"உங்கள் குடும்பத்தில் சம்பந்தம் வைக்கத் தற்போது இஷ்டமில்லை. கொஞ்சக் கால அவகாசம் எமக்குத் தேவை தப்பாக எடுத்துக் கொள்ள வேண்டாம்" என்பதே அவர்கள் சொன்ன பதிலாகும். இவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை தமது நண்பர்கள், உறவினர்களுடன் கலந்து ஆலோசனை செய்தார்கள் ஏன், எதற்காக இவர்கள் மன மாற்றம் கொண்டார்கள் என்று ஒருவருக்குமே புரியவில்லை.

ஆயினும் இதன் விபரம் இவர்கள் உறவுக்காரர் ஒருவர் மூலம் புரிந்தது. ஏற்கனவே பக்கத்து வீட்டுக்காரர் இவர்கள் மீது கொண்ட பகை காரணமாக மணமகன் வீட்டாருக்கு ஏதோ தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தி விட்டார்கள். எனவும், மேலும் அவர்களுக்கும் மணமகன் வீட்டார்க்கும் ஏற்கனவே பழக்கம் இருந்தது எனவும் நம்பத் தகுந்த விதத்தில் தகவல்கள் கிடைத்து விட்டது. பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? எனினும் கொஞ்ச நாள் போகட்டும் பார்க்கலாம் என மனைவியைச் சமாதானப்படுத்தினார் கணவர்.





இந்தச் சமாச்சாரம் நிகழ்ந்து ஒரு மாதம் கழிந்தது. திடீர் என சற்று வித்தியாசமாக பக்கத்து வீட்டில் இருந்து ஏதோ ஆரவாரமும், அழுகுரலும் கேட்டது. அவரால் பொறுக்க முடியவில்லை. ஒரே எட்டில் வீட்டின் வெளிப்புறமிருந்து பார்த்தார்.

"ஐயோ என்ன நடந்தது...? விழுந்து கிடக்கிறாரே..!! நெஞ்சு வலிக்கிறது... வலிக்கிறது.... என்று சொல்லிக் கஷ்டப்படுகின்றாரே... என்ன செய்கிறது ஐயோ...!!" என்றபடி அந்த வீட்டுக்கார பெண்மணி கத்திக் குழறினார். அவர்களின் பிள்ளைகள் பேந்தப் பேந்த விழித்தபடி செய்வதறியாமல் தவிர்த்தார்கள்.

இதற்கிடையில் இச்சம்பவத்தைக் கண்ட பக்கத்து வீட்டுக்காரரின் மனைவி "என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், உடனே போய் எங்காவது ஒரு கார் பிடித்து வாருங்கள்." எனச் சொல்லி அவர்கள் வீட்டினுள் சென்றார். அவர் ஓரிரு நிமிடங்களுக்குள் ஒரு வாகனத்துடன் வந்தார். பக்கத்தில் உள்ள பிள்ளைகளின் உதவியுடன் வந்த வாகனத்தில் உடனே அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார். உரிய நேர சிகிச்சையின் பயனாய் அவர் உயிர் பிழைத்துக் கொண்டார். இந்த பக்கத்து வீட்டுக்காரப் பெண்மணிக்கு இவர்களைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது பேச வார்த்தைகளே வரவில்லை.

அன்று மாலை வைத்தியசாலைக்குச் சென்றவரைக் குணமாகிய மனிதர் பார்த்ததுமே கண்கலங்கியபடி சொன்னார்.



RangaRakes
Tamilnavarasam.com

"நாங்கள் தெரியாத்தனமாக ஓர் அற்ப விஷயத்துக்காக மனஸ்தாபப்பட்டுக் கொண்டோம், அதனால் மிகக் கீழ்த்தரமான காரியம் செய்து ஒரு குமர் காரியத்தைக் கெடுக்க எத்தனித்து, அதை பெரிய காரியம் என எண்ணி விட்டேன். ஆனால் எல்லாம் தெரிந்த நீங்கள், எங்கள் பகைமையை மறந்து மனிதாபினமாக என்னை காப்பாற்றி விட்டீர்கள்" என்றவர் "இப்பவே நான் உடனே நீங்கள் திருமணம் பேசிய எனது நண்பர் வீட்டுக்குப் போய் உண்மைகளைச் சொல்ல வேணும்" என்றார்.

ஒரு சின்ன விஷயத்துக்காக தம் வசம் இழந்து அடுத்த வீட்டுக்காரருடன் கண்ட படி முரட்டுத்தனமாகப் பேசும் போது, அதன் எதிர் விளைவுகளைப் பற்றி எண்ணாமல் நியாயங்களைப் பேசும் போது தங்களை மறந்து உணர்ச்சிகளுக்கு அடிமையாதல் ஆகாது.

அன்பர்களே!

மேலே சொல்லப்பட்டவை வெறும் கதையல்ல! யதார்த்த பூர்வமான அனுபவப்பதிவுகள்.! இந்த உலகில் நல்லவர்களும் இருப்பார்கள், அல்லாதன செய்பவர்களும் இருப்பார்கள். தீயவர்களைத் தூயவர்களாக மாற்ற முனைவோமாக!

எங்கள் குடும்ப உறவுகள் மட்டுமே உறவுகள் அல்ல. எம்மைச் சார்ந்த, சாராத அனைவருமே எமக்கு வேண்டியவர்களே!





கணவன், மனைவி இருசாராருமே செய்யும் நல்ல காரியங்களுக்கு பரஸ்பரம் ஊக்கமளிக்க வேண்டும். தகாத காரியங்களைத் தடுக்க முனைதல் வேண்டும்.

கணவன்,மனைவி இருவருமே தங்கள் குடும்பங்களில் சில சமயங்களில் சதாரண விஷயங்களில் ஏற்படும் கருத்து முரண்பாடுகளை எவ்வளவு சீக்கிரம் மறந்து போகிறார்களோ அவ்வண்ணமே எமக்கு உறவே இல்லாத ஏனையோர். செய்யும் தவறுகளைத் தூக்கிப்பிடித்துப் பேசக் கூடாது.

சில சமயங்களில் எம்மை சுற்றி என்ன நடக்கின்றது என எமக்குப் புரியாமல் இருக்கின்றது. இது ஒன்றும் ஆச்சரியமும் அல்ல. கண்டபடி வாயாடுதலால் நாம் சில வேளை படுகின்ற அவஸ்தைகள் கொஞ்சம் நஞ்சமா?

எமது பக்கத்தில் நியாயம் இருக்கும். அதை அடுத்தவனுடன் சண்டை போட்டா நிரூபிக்க வேண்டும்?

எக்காலத்திலும் எமது மன அமைதிக்குப் பங்கம் விளைவிக்காது நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். மனஸ்தாபப்படுவதால் ஏது பயன்? லாவகமாகப் பிரச்சனைகள் கையாளப்படல் வேண்டும். மனதை உறுத்தி , வருத்தி எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு எட்ட முடியவே முடியாது. பொறுமை, நிதானம் அவசியம். இதனாலேயே குடும்பம் நித்ய சந்தோஷமடையும். இல்லத்திற்குள்ளேயும், வெளியேயும் இந்த நல்ல இயல்பை கடைப்பிடிப்போமாக!



RangaRakes

Tamilnavarasam.com

"மளஸ்தாபம்" எமது ஸ்திர நிலையை இழுக்க வைக்க முனையும். அமைதி குறைந்தால் உடல் உறுதி குறையும் பிறர்மீது பகை வலுக்கும். கோபம் வரும் போது மமதையை நீக்கி, பரஸ்பரம் பேசி தோழமை கொள்ளுதலே நல்லது. இதனால் விலை மதிக்க இயலாத நிலைத்த உறவு மேலோங்கும் வேறென்ன வேண்டும் நமக்கு?

தினக்குரல்
நிறப்பிரிகை
08-03-2012



RangaRakes Tamilnavarasam.com

# ஞானம்

பருத்தியூர் பால. வயிரவநாதன்

*வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 05*

*சிந்தனைக் கட்டுரைகள்*

RangaRakes


Tamilnavarasam.com

# பொருளடக்கம்


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01) | திருடுதல் | 23 |
| 02) | ஞானம் | 34 |
| 03) | நகைச்சுவை | 45 |
| 04) | தற்பெருமை | 56 |
| 05) | ரசனை | 66 |
| 06) | தனித்துவம் | 78 |
| 07) | உங்களை விரும்புங்கள் ! | 85 |
| 08) | மறதி | 99 |
| 09) | மனிதன் தான் உயர்ந்தவனா? | 111 |
| 10) | சிறார்களின் நலனை பாதிக்கும் விடயங்கள் (ஒரு பார்வை) | 122 |
| 11) | காலப் பெறுமதியைக் கண்டு கொள்க! | 130 |
| 12) | தெரிதலும், தெளிதலும் | 136 |
| 13) | அஞ்சேல், அஞ்சேல் | 142 |
| 14) | முதியோரும், இளையோரும் | 148 |





# திருடுதல்

செல்வத்தை வஞ்சகமாக, மறைமுகமாகக், கவர்ந்தெடுப்பது மட்டும், திருட்டு அல்ல. பிறர் பொழுதுகளை வீணாகக் கவர்வதும் திருட்டுத் தான். காலங்களை அனாவசியமாகக் கரைப்பது, எங்களை அறியாமலும், அறிந்தும் எங்களையே களவு கொடுப்பது போலாகும். புலன்களை நல்வழியில் திருப்புவது மேலான செல்வத்தை ஈட்டுவதாகும். தவறானவழியில் கீர்த்திகளைச் சேகரிக்க விரும்புபவர்கள் திருடுதலைவிடக் கேவலமான காரியத்தைச் செய்பவர்களாவர். திருடுதலால் முடிவில்லா மனநெருடல் தான் பற்றி நிற்கும்.

மறைவாகவும், வஞ்சகமாகவும் பொருட்கள் உடமைகள், பணம் முதலியவைகள் திருடப்படுவதனால் பாதிப் படைந்தவர்களுக்கு ஏற்படும் நீங்காத மன நெருடல்கள் சொல்லும் தரமன்று!

ஆனால், ஒருவரது பொருட்கள், பணங்களைத் திருடுவது மட்டுமே "திருட்டு" என்று சொல்லிவிட இயலாது.



RangaRakes

Tamilnavarasam.com

ஒருவர், அவசரம் அவசரமாக, ஒரு காரியத்திற்குச் சென்று கொண்டிருக்கின்றார். வழியில் அவரை இடைமறித்த நபர் ஒருவர் அநாவசியமாக அவரிடம் பேச்சைக் கொடுத்து, வளர்த்து அவரது பொழுதைக் கரைத்து, முடிவில் அந்த அப்பாவி மனுஷனின் பொழுதை அவப்பொழுதாக்கி பொன்னிலும் மேலான பொழுதைப் பழுதாக்கிய நபரான வர், பொழுதை திருடிய குற்றவாளியாகிவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

சொத்துக்கு மேலானதாம், எமது பொன்போன்ற பொழுதுகள். அதனை நாம் வீணே கழிப்பதும் இன்னும் ஒருவர் அதை வீணாக்குதலும் மன்னிக்க இயலாத திருட்டுக் குற்றம் எனக்கருதுவோமாக!

இன்று கோடானகோடி மக்கள் தமது பொழுதுகளைத் திருட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதில் வேடிக்கையும், வியப்பும் பரிதாபத்திற்குரியதுமான விஷயம் என்னவெனில், தமது "காலங்கள்" திருட்டுப் போவதை தெரியாமலும், தெரிந்தும்கூட, அதைத் தொலைத்து வீணாக்குவதும் என்ன கொடுமை ஐயா? காலம்பூராவும், உழைக்கின்ற தொழிலாள வர்க்கத்தின் உழைப்பைச் சுரண்டுவதும் பொழுதை மட்டுமல்ல, அவனை மனிதனாக மதிக்காது அவனது உரிமைகளையும் பறிக்கும் நரித்தன மான, வெறிச்செயல்.

தேவையற்ற கருத்துக்களையும் தமது கலாசார பாரம்





பரியங்களுக்கு முரண்பாடான காட்சிகளை நாம் திரைப் படங்கள், தொலைக்காட்சிகளுடான ரசனையுடன் கண்டு களித்து வருகின்றோம். ரசனைஎன்று எண்ணி சஞ்சிகைகள், பத்திரிகைகளில் விரசமான செய்திகளை கண்ணைக் கவரும் வண்ணப் படங்களுடாக பார்த்துக் கொண்டு இருக் கின்றோம். எமது புலனைத் திசைதிருப்பி விடும் எச் செயலும் காலத்தைக் கரைத்து திருட்டுக் கொடுக்கும் செயல் அன்றி வேறென்ன?

காலவிரயம் பற்றி நாம் பெரிதாக அலட்டிக் கொள்ளா மல் விடுவது போல் தப்புக்கள் வேறில்லை. நோக்குக!

பொழுதுபோக்குகள் என்பது மாந்தர்க்கு அத்தியாவசி யமானது தான். ஆனால் எமது பொழுது போக்குகளுடாக மேலான ஆதாயங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த அனுபவங்கள் நாம் தேடும் பணத்திற்கும் பார்க்கப் பெறுமதிமிக்கது. இதுகூட ஒரு நல்ல சேமிப்பு ஆகும்.

மேடையில் ஒருவர் பேசிக் கொண்டிருக்கின்றார். நாம் ஒரு நிகழ்ச்சிக்குப் போவது என்பது, எமக்கு அதன் மூலம் ஏதாவது புதிய விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவேயாம். சொல்ல வேண்டிய விஷயத்தை விட்டு, இன்று அநேகர் கூட்டத்தில் இருக்கும், நூற்றுக்கணக் கான மக்களின் நேரத்தை அவர்களுக்குத் தெரியாமலேயே கவர்ந்தால் அதுபோல ஒரு அநாகரிகமான வேலை வேறு என்ன இருக்கப் போகின்றது?



RangaRakes Tamilnavarasam.com

இன்று சிலர் தேவையற்ற பேச்சுக்களைப் பேசுவதும், புளுகுவதும் அதனை நம்பும்படி நச்சரித்து, மக்களை ஏற்கச்செய்து பொழுதுகளைக் கரைத்தும் மோசடிகள் செய்கின்றார்கள். இந்த விஷயங்களுக்காக நாம் எவர்க்கும் தண்டனை வழங்கமுடியாது, என்பதனால் இத்தகைய, பிரகிருதிகள் கண்டபடி உளறிக் கொட்டித் தீர்ப்பதும், அதனையே ஒரு திறமையான செயல் என்று தம்மைத் தாமே ஏமாற்றித் திருப்திப்படுதலும், நகைப்பிற்குரியதே!

மிகவும், சாதுர்யமாகத், தவறான கொள்கைகளையே விடாப்பிடியாகவும், மக்களை ஏமாற்றி வாக்குகளைச் சேகரிக்கும் சில அரசியல்வாதிகள் போலத் திருடர்கள், ஏமாற்றும் எத்தர்கள் வேறுயாரும் இல்லை. இவர்களை, மக்களிடம் வாக்குகளைக், கொள்ளையடிப்பதானது, அவர்களின் உரிமைகளைத் தந்திரமாக, மோசடியாகக் கவருவதாகவே கருதப்படும்.

மக்களின் இந்த அறியாமை காரணமாக இவர்கள் படும் துன்பங்களும் எண்ணிலடங்காது. ஒரு அரசியல்வாதி செய்யும் அராஜகம், ஒட்டு மொத்தச் சமூகத்தையே, அல்லாட வைக்கும். ஆனால் இவர்களோ, பெற்ற பணம், சொத்துக்களை வெளி நாட்டு வங்கிகளில் இட்டு மக்களின் நலனையே முழுமையாக ஏப்பமிடுகின்றனர். இத்தகையவர்கள் எல்லோருமே ஒரு சமூக நோய்தான். ஆனால், அரசியல்வாதிகள் மட்டுமல்ல, பலபெரும் நிதி நிறுவனங்கள், தொண்டு அமைப்புக்களில் உள்ள பெரிய





புள்ளிகளும் சமூகத்தையே மட்டம் தட்டி வாழத் தலைப்படுகின்றனர். குறுகிய காலத்தில், தமது பணத்தின் மூலம் பெரும் லாபம் சம்பாதிக்கலாம் என்று எண்ணிப் பல தனிநபர் வங்கிகளில் முதலீடு செய்வதும், பின்னர் அந்த வங்கியே, இமைப்பொழுதில் முடங்கிச் சாவதும் நாம் அறிந்ததே!

இத்தகைய ஏமாற்றுப் பேர்வழிகளிடம் சிக்குண்டு, பிரலாபிக்கும் ஏமாந்த மக்களின் அவலக் கதைகளை நாம் பலதடவைகள் தொலைக்காட்சிகளில் கண்டும் பத்திரிகைகளில் படித்துமிருக்கின்றோம். எதிர்பாராத நம்பமுடியாத வரவுகள் வரும்போது இவை எங்ஙனம் எப்படிச் சாத்தியமாகும் என ஒருபொழுதாவது, மக்கள் சிந்தித்தால் என்ன?

கிராம மக்கள் பலர் கஷ்டப்பட்டு உழைத்துச் சேமித்த காசை தங்கள் ஊரில் அல்லது தெரிந்தவர்களிடம், சீட்டுக் கட்டுவதும், பின்னர் அவர்கள் இதனால் ஏமாற்றப் படுவதும் நாம் அறிந்த ஒன்றுதான். இன்னும் ஒரு நபரை வருத்தி எந்த ஒரு நபருமே உருப்பட்டதாக வரலாறு இல்லை.

ஒரு ரூபாய் திருடினாலும் சரி, ஒரு கோடி திருடினாலும் சரி, குற்றம் குற்றமே என்பார்கள் ஆனால் இன்று நடப்பது என்ன, ஒரு ரூபாய் திருடியவன் அகப்பட்டுக் கொள்கின்றான். ஒரு கோடி ரூபாய் ஏய்த்தவன் மிகத் தந்திரமாகப் பெரிய வழக்குரைஞரை ஏற்பாடு செய்து



RangaRakes

Tamilnavarasam.com

சட்டத்தின் கண்ணில், மண்ணைத் தூவி அதனையே மட்டம் தட்டிவிடுகின்றான்.

ஒரு ஏழை,தென்னம் தோப்பில் புகுந்து இளநீர் திருடுகின்றான். அவன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுத் தண்டனை பெற்றுவிடுகின்றான். ஆனால் தென்னம் தோப்பின் சொந்தக்காரனாக இருப்பவனோ, முன்னர் அதே தோப்பை ஏற்கனவே இன்னும் ஒருவரிடம், அநியாயமாகக் கைப்பற்றி ஏப்பமிட்ட சொத்தாகவும் இருந்தும், அதே தோப்பில் ஓரிரு இளநீரைக் களவாடிய ஏழையைப் பிடித்துத் தண்டனை கொடுப்பது எவ்வளவு வக்கிரமான புத்தியல்லவா? பெரிய தவறுகளைச் செய்தவர்கள்கூடச் சின்னத் தவறுகள் செய்தவர்களை மன்னிக்கத் தயாராக இல்லாமல் இருப்பது சரிதானா?

இன்று, அரபு நாடுகளில் சிறு களவு செய்தவர்களாயினும், பெரும் குற்றம் செய்தவர்களுக்கும் கொடுக்கும், தண்டனைகள் மிகவும் பயங்கரமானதாக இருக்கும். களவு செய்தவனின் கரத்தையே கொய்துவிடுகின்றார்கள். அங்கு இத்தகைய கொடும் தண்டனைகள் விதிக்கப்படுவதனால் திருட்டுக்குற்றங்கள் மிகவும்குறைவாகவே காணப்படுகின்றன.

இன்று பல நாடுகளிலேயும் உள்ள அரசியல் தலைமைகள், தமது தகாத செயல்களால் தங்களால் ஏற்பட்ட பெரும் சுமைகளை அடுத்துவரும் அரசுகளில்





சாதுர்யமாகச் சுமத்தித் தப்பித்துக் கொள்கின்றன. இதில் மிக சுவாரஸ்யமான விஷயம் என்னவெனில், ஒரு அரசாங்கம் மிகப்பெரிய ஒரு திட்டத்தைத் தயாரித்து அதனை நிறைவேற்றி முடிக்கும், தறுவாயில் அந்த அரசு கவிழ்ந்துவிட அடுத்துவரும் அரசு ஆட்சிபீடமேறும்.

முன்னர், இருந்த அரசு செய்த பணிக்கும், புதிதாக வந்த அரசிற்கும் எந்தவொரு சம்பந்தமும் கிடையவே கிடையாது. ஆனால் அவர்கள் செய்த திட்டத்திற்கு முழு உரிமை கோருவதுடன், ஆரம்பம் முதல் இன்றுவரை தாமே அதனைச் செய்து முடித்ததாகக் கூறி, மக்களை நம்பவைத்து, திட்ட நிறைவை ஒரு வெற்றி விழாவாகக் கொண்டாடி மகிழ்வார்கள். இது போன்ற அநாகரிகமான, "திருட்டு" நடவடிக்கை வேறு என்ன? யாரோ எழுதிய கதையைத் தனது கதையாகச் சொல்லித் திரைப்படம் தயாரிக்கும் தயாரிப்பாளர்களின் மோசமான வேலை போன்றது தான், நான் முன்னர் கூறிய ஏமாற்று நடவடிக்கைகளாகும்.

இன்று காசு கொடுத்து பெரிய புலமைக்குச் சொந்தக்காரராக முனைபவர்கள் பலர் இருக்கின்றார்கள். ஒருவன் எழுதியதை, களவாகத் திருடுவது ஒருவரின், வித்துவத்தையே திருடுகின்ற செயல் அல்லவா? யாரோ ஒருவரைக் கவிதை எழுதச் சொல்லி, அதைவாங்கி அதை நானே எழுதினேன், என்று மேடையில் பாடலாமா? சொந்த முயற்சியில்தான் ஒருவன் துலங்கமுடியும். அடுத்தவன்



RangaRakes
Tamilnavarasam.com

ஆக்கிய எந்த விஷயத்தையுமே எடுத்துத் தனதே அது வெனச் சொல்ல எவர்க்கும் அதிகாரம் இல்லை.

ஒருவருக்குச் சேரவேண்டிய "கீர்த்தி"களைச் சேர விடாது, அவை தமக்கேயானது என்று கூறிக் கவருவதும் கூட களவாடும் தன்மையானது தான்.

பரீட்சையில் தவறான முறையில் புள்ளிகளைப் பெறு கின்றவர்கள். ஆனால் அதன் மூலம் நல்ல பதவியையும் பெற்று விடுகின்றனர். மிகவும் கஷ்டப்பட்டுப் படித்தும் கூட வேறு மாணவர்கள் குறித்த புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்க தப்பான வழியில் புள்ளிகள் பெற்று பதவி பெற்றவர்களால் நஷ்டப்படுவது உண்மையாக உழைத்த வர்கள் அல்லவா?

சிறிது, சிறிதாகச் சேகரித்த செல்வத்தை நொடிப் பொழுதில் அபகரிக்கும் போது மனம் அடையும் துயரின் அளவு சொல்லிடமுடியாது. பட்டப்பகலில் ஒருவர் கொள்ளையன் ஒருவனால் வழிமறிக்கப்பட்டுத் தாக்கப் பட்டுக் கொள்ளையடிக்கப்படும் போது, வழியில் நிற்பவர்கள் வேடிக்கை பார்க்கின்றார்கள், விமர்சிக்கின்றார்கள். எவராவது, அதனைத் தடுக்க வருவதும் மிகக்குறைவான நபர்களாகவே இருக்கின்றார்கள். பேருந்தில், கைப்பையைத் திருடும் நபர்களைக் கையும் மெய்யுமாகத் தான் பிடித்த போதும் அங்கு நின்ற பொதுமக்களோ, அல்லது பேருந்தின் சாரதி, நடத்துனர்களோ ஒன்றும் வாளாதிருந்தனர். என்று





ஒருவர் என்னிடம் புலம்பினர். இந்த இலட்சணத்தில், ஒரு பயணி "ஏன் ஐயா... நீங்கள் பேருந்தில் காசு, பணத்தைக் கொண்டு வருகின்றீர்கள். நீங்கள் சத்தமிடுவதால், எங்களுக்குத்தான் பிரச்சனை என்றார்.

இது என்ன கொடுமையான விமர்சனம்? காசு, பணத்தை பேரூந்தில் கொண்டுவராமல் விமானத்தில் அல்லது, தனியாக வாகனத்திலேயே கொண்டுவரமுடியும்? நகை, பெரும் பணங்களை மிக அவதானமுடன், எடுத்துவர வேண்டும் என்பது தெரிந்ததே! ஆனால், பணத்தைத் தொலைத்துத் தவிக்கும் நபர்களிடம் வந்து கண்டபடி அவர்கள் மனம் புண்படும்படி பேசலாமா? அவர்களின் பணம் கையாடப்பட்டால் இப்படி இன்னும் ஒருவர் விமர்சனம் செய்வதை அவர் அனுமதிப்பாரா?அவரவர் துன்பங்களை அவரவர் அனுபவித்தால்தான் அதன் வலி வேதனைகள் புரியும்.

மக்களின் மௌனமும் பாராமுகமும் பல சமூக அத்துமீறல்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ உடந்தை போலாகி விட்டது. காவல்துறையினரின் கட்டுப்பாடான, நீதியான அணுகு முறைகள் குன்றினால், அராஜகம், வன் முறைகளே நாட்டில் தாண்டவமாடும்.

போலி ஆவணங்களைத் தயாரித்தல், சட்டவிரோத மான பொருட்கடத்தல்கள், போலி கடவுச் சீட்டுகளை மாற்றியமைக்கும் மோசடிகள் எல்லாமே இன்று சர்வதேச,



RangaRakes Tamilnavarasam.com

தேசிய தொழில்போல் ஆகிவிட்டன. சட்டம் இதனைத் தனது இரும்புக்கரம் கொண்டு அடக்கியேயாக வேண்டும். சமூகத்தின் மிகப் பிரபல்யமாக இருக்கும் பேர்வழிகள் தாங்கள் சம்பாதித்து சடுதியில் உயர வேண்டும் என்பதற் காக போதைவஸ்து தயாரித்தல், கடத்துதல் போன்ற கொடிய அபாயகரமான தொழில்களை வெற்றிகரமாகச் செய்து வருகின்றனர். சமூகத்தைக் கெடுக்கின்ற எல்லாச் செயல்களுமே மறைமுகமாகச் செய்யப்படுவதால் இவை கள் யாவும் மக்கள் நலனையே கொள்ளையடித்துக் குதறி விடும் வேலைதானே?

எந்த ஒரு ஜீவனுக்கும் கெடுதல் செய்பவர்கள், கெட்ட ழிந்து போகின்றார்கள். தமது நாட்டு நலனுக்காக இன்னும் ஒரு வறிய நாட்டைச் சுரண்டுவதும் போர்களைத் தூண்டு வதும் ஒருபெரிய கொள்ளையடித்தல் செயல்தான்.

ஆனால், துரோகம் செய்து கொண்டு வேதம் ஓதும் நாடுகளை இயற்கை ஒருபோதும் மன்னிப்பதேயில்லை. இதை நாம் சரித்திரபூர்வமாகப்படித்து உணர்ந்திரு க்கின்றோம். யப்பான் நாட்டை அழிக்க அணுகுண்டுகள் இரண்டைப் பொழிந்ததால் யப்பான் பூரணமாக அழிந்து தொலைந்து விடவில்லை. மாறாக அது இன்று மேலோங்கி வளர்ந்து விட்டது. தமது நாட்டில் நோய்கள் பரவுதல், வெள்ளம் பெருக்கெடுத்தல், காட்டுதீ, நிலநடுக்கங்கள், பயங்கர விபத்துக்கள் ஏன் அடிக்கடி நடக்கின்றன என்பதை அந்த நாட்டின் தலைமைகள் உணருதல் வேண்டும்





நியாயம், நீதி பிறழ்தலால் எந்த அனுகூலமும் எவர்க்கும் கிடைத்துவிடப்போவதில்லை. கெட்டழிவதற்கு முண்டியடித்து முன்னே செல்லலாமா?

அனைத்து உலக மக்களின் நலன்களையும் சமூக, நாடு, கண்டங்கள் எனப் பாகுபாட்டு உணர்வுடன் நோக்கல் ஆகாது. முறையற்ற விதத்தில் எவர் எதனைக் கவர்ந்தாலும் அது அவர்களுக்கு“உரிமை”யானதுஎன்று சொல்ல முடியுமா? இச் செயல் இந்த உலகத்தின், அனைத்து மனித உரிமைகள், அவர்தம் சொத்துக்களையும் அபகரித்த அபகீர்த்தியான திருட்டுக் குற்றங்கள் என்பதை மறுக்க முடியாது.

இதேபோல், தனிஒருவரின், அல்லது இனங்களின் சுதந்திரத்தை அபகரிப்பதும், தலையீடு செய்வதும் சகிக்க வொண்ணா மனித மனங்களைத் தகிக்கவைக்கும் காரியங்களே!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
12.08.2008



RangaRakes
Tamilnavarasam.com



# ஞானம்

அறிவின் முதிர்வாயும், அதனிலும் மேலானதாம் "ஞானம்". அறிவு நிலையில் மனிதன் சந்தேகங்களை உருவாக்குகின்றான். ஞானம், சந்தேகமற்ற உண்மைநிலை. இகத்திலும் பரத்திலும் முக்கியமானவை அனைத்தையும் இறைவன் அளித்தவண்ணமிருக்கின்றான். இன்ப, துன்பத்தினுள் ஆட்பட்டுப் பக்குவ நிலையில் தெளிந்தவன் ஞானி. இறைவனும் ஆன்மாவும் கொண்ட வாத்ஸயத்தினால் ஆன்மாவிற்குப் பேரின்ப ஞானம் கிட்டும். இறை பிரேமையின்றி சந்தோஷியாக முடியாது. எளிமையும் பரிபூரண அன்புப் பரிமாற்றங்களும் ஆன்ம விழிப்பூட்டலுக்கு இட்டுச் செல்லும்.

மோனத்தில் நின்று, புலன்கள் அடக்கி வென்று, ஒப்பிலா ஞானத்தைப் பெற்று உயர்ந்த அருள் ஞான வள்ளல்கள். தாம் பெற்ற அகண்ட ஞானத்தின் வாயிலாக இந்த உலகத்தையும் பிரபஞ்சத்தினையும் என்றுமே உய்வித்த வண்ணமாயுள்ளனர்.





அறிவின் முதிர்வாயும் அதனிலும் மேலானதாம் "ஞானம்" என்று சொல்லப்படுகின்றது. அறிவது அறிவு. அறிதலுடன், உள் உணர்வினையூட்டி ஆன்மா ஒளி பெறச் செய்தலே ஞானம் என்று கூறுகின்றார்கள். அறிவு நிலையில் சந்தேகங்களை மனிதன் உருவாக்குகின்றான். ஆனால் "ஞானம்" என்கின்ற அதி உன்னத நிலை வரப்பெற்றால் சந்தேகம் கடந்த உண்மைநிலை உருவாகின்றது.

ஞானிகள் என்றும் எளிமையானவர்கள் ஆயினும், நாம் உலக டாம்பீகத்தினுள் மூழ்கிக்கிடப்பதும் அற்ப மாயா உலகில் எம்மை மறந்து திளைத்து வாழ்கின்றோம் என்பதே ஆன்மீகவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு சொல்லப்பட்டு வருகின்ற வார்த்தைதகளுமாகும். எனினும் இந்த உலகி னில் வாழ்ந்து காட்டுவது எப்படி என்றும் எமக்குச் சொல்லித் தந்தார்கள்.

பக்திமார்க்கம்,அன்பு,தயவு எல்லாமே மானுடத்தை எளிமையான வாழ்வு முறைகளால் செப்பனுடன் வழி சமைக்கின்றன. ஞானம் பெற்ற ஞானிகள் அன்பு எனும் திவ்ய உணர்வுடன் இணைந்து பேரின்ப நிறைவினைக் கண்டவர்கள் இவர்களாவர்.

எளிமையானவர்களால் தான் வலிமையான காரியங் களைச் செய்யமுடிகின்றன. ஞானம் பெற்றவர்கள் சகல வல்லமை கொண்ட போதிலும் கூட பிச்சையேற்றுத் தவ மின்றி வாழ்ந்து காட்டினர். எதனையும் உருவாக்கு



RangaRakes
Tamilnavarasam.com

தலுக்கும், அருள் வழங்குவதற்கும், தங்களிடம் உள்ள சக்தியை இறைவன் மூலம் கொடுக்கும் திறன் கொண்டவர்கள். இகத்திலும் பரத்திலும் எது முக்கியமானதோ அதுவே இறைவன் கொடையுமாகின்றது. முக்கியத் துவம் எனப்படுவது, அறிவு, ஞானம் என்பதனால், அதனையே தேடியவர்கள், அதுவேயாகின்றனர்.

உலக வாழ்வில் நாம் சகலதும் பெற்றிட அறிவு மட்டுமல்லாது, பெற்றிடும் அறிவின் மேலாம் பக்தியும், பண்பும், எமது ஆன்மாவை விழிப்பூட்டுபனவாய் அமைகின்றது. துன்பங்களைப் பறிப்பவனும், இன்பங்களை அளிப்பவனுமாகிய கடவுள் மாந்தர்க்கு, அவர் தம் அறிவு முதிர்ச்சி அனுபவம், நற்பண்பு, பக்குவ நிலைக்கு வந்தபின் "ஞானம்" என்கின்ற மிக அற்புதப் பெருங்கொடையினை நல்கின்றான்.

இறைவனும், ஆன்மாவும் ஒருவர்க்கொருவர் கொண்டுள்ள வாத்ஸல்யமானது, ஆன்மாவிற்குப் பேரின்ப ஞானத்தினை அளிப்பதுடன், அவன் சந்நிதியில் இரண்டறக் கலந்து கொள்ளச் செய்கின்றது. இறைவன் மீது ஆன்மா கொள்ளும் பிரேமை ஈர்ப்பினால் இறைஞானம் தானாக உதயமாகின்றது.

ஆன்ம ஞானம் எல்லா மதத்திற்குமே பொதுவானது. எல்லா மதங்களில் இருந்தும் ஞானிகள் தோன்றினார்கள். இன்னமும் தோன்றிக் கொண்டேயிருக்கின்றார்கள். ஆண்டவன் பார்வையில் எல்லோரும் ஒன்றே என்பது, இந்த





மண்ணின் மீது அனைத்து சாதி, சமயத்திலிருந்து அவதரித்த மகான்களில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றதல்லவா?

புத்தர், யேசு, நபி நாயகம், நாயன்மார், ஆழ்வார்கள் ரமணமகரிஷி, சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற அருளாளர்கள் எமக்கு கடவுளாகவே காட்சி நல்கி எம்மை வழிநடாத்துகின்றனர். இந்த ஞானவான்கள் திரு அவதாரம் எடுக்காது விட்டால் இந்தப் பூமி தன் சமநிலையை இழந்து தத்தளித்துத் தவித்துப் போய் விடுமன்றோ!

லௌகீய வாழ்வில் பொன்னும், பொருளும் சதமல்ல. மேலான இறை அருள், அன்புதான் மெய்யானது என ஞானிகள் உணர்ந்தமையினால் தான் அவர்கள் வைரத்தை, பொன்குவியல்களை, கற்களையும் கூட ஒன்றாக நோக்கினர். இந்தப் பிரபஞ்சத்தில் இருந்துதானே எல்லாமே வந்தன? எனவே எல்லாமே இறைவன் படைப்பு, எல்லாமே ஒன்று என்ற உணர்வு மேலோங்கியமையினால் எதனையுமே பெரிது என அதன்மீது அதீத பிரேமை, வெறுப்பு என்ற எண்ணமின்றி நிர்ச் சிந்தையுடன் வாழ்ந்து காட்டினர். இவர்கள் வாழ்ந்த ஞான வாழ்க்கைச் சம்பவங்களை நிறையப் படித்திருக்கின்றோம். எனினும், நாம் எமது சிற்றறிவினால் இன்னமும் பூரண தெளிவின்றித் தடுமாறுகின்றோம்.

எமது பொது அறிவினாலும், விஞ்ஞானக் கண்டு



RangaRakes
Tamilnavarasam.com

பிடிப்புக்களாலும் மெய்ஞானத்திற்கு விளக்கம் சொல்ல முடியுமா? மேலோட்டமான அறிவினால் எழும் சந்தேகங்கள், என்றுமே சந்தேகங்களாக நிலைத்து நிற்கின்றன.

மகா அலெக்ஸாந்தர், இந்தியாவில் புகுந்து பல இடங்களை வெற்றி கொண்டான். அவன் செல்லும் வழியில் ஒரு துறவி மரத்தின் கீழ் அமர்ந்த வண்ணமிருந்தார். அவர் மன்னரைக் கண்டு கொள்ளவில்லை. அலெக்ஸாந்தர மிகுந்த கர்வமுடன் "நான் வந்திருக்கின்றேன், தெரியவில்லையா... நான், யார்.. என்று புரியவில்லையா என்றான். துறவியோ புன்னகையுடன் "அது சரி நீ, யார்?..." என்று கேட்க, அவனோ நான் மாமன்னன் மகா அலெக்ஸாந்தர் என்றான். "அதுசரி.... நீ என்ன செய்கின்றாய்..." என்று துறவி கேட்க, "நான் இந்த உலக நாடுகள் அனைத்தையும் கைப்பற்றி வருகின்றேன்" என்றான். "கைப்பற்றி முடிந்ததும், என்ன செய்யப் போகின்றாய்..." என்று துறவி கேட்க, அதன்பின்னர் நான் நிம்மதியாகப் படுத்துறங்குவேன் என்றான்.

"அட..டா... இதைத்தானே நான் செய்கின்றேன். நான் எந்த நாட்டையும் கைப்பற்றவில்லை. பெரும் போர் செய்து மனித உயிர்களைக் கொன்று நாடுகளை வெல்லவும் இல்லை. ஆனால் நீயோ எவ்வளவோ இம்சைகள் பட்டுக் கஷ்டமுற்றுப் பெரும் பிரயாசைப்பட்டா, நிம்மதியாக படுக்கப் போகின்றாய்? நானோ, எதுவுமே செய்யாது நிம்மதியாய் நிர்ச்சிந்தையால் வாழ்கின்றேன்" என்றார்.





மாமன்னன் அலெக்ஸாந்தர் வாயடைத்து அந்த மகானைப் பணிந்தான். உண்மை ஞானம் பெற்ற ஞானிகளின் இயல்பு இது தான்.ஆன்ம வசீகரம் இன்றி ஞானம் வந்திடாது. நாம் எம்மை, எம் ஆன்மாவைக் கட்டுப்படுத்திச் சுய வசீகரத்தினுள் ஆட்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று ஆன்ம விமோசனம் பெறப் போகின்றேன், எனச் சொல்லி, படோடபகாரமாகத் தோன்றியுள்ளவர்களின் காலடியில் வீழ்ந்து கிடக்கின்றார்கள். ஞானம் பெறுதல் என்பது, பல்பொருள் அங்காடிகளில் விற்கும் பொருள் அல்ல. "ஞானம், நித்யசந்தோஷம் வழங்குகின்றேன்", எனச் சொல்லும் சுவாமிகள் போன்றவர்கள், வாழும் வாழ்க்கை முறைக்கும், பேசும் உபதேசங்களுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கின்றதா?

இலட்சக் கணக்கான ரூபாய்களை இவர்களிடம் கொட்டிக் கொடுக்கின்றார்கள். இவர்களைக் காணக் கட்டணம் செலுத்த வேண்டும்.தங்கக் கட்டில், பல்லக்குகளில் தாவுகின்றார்கள்.இவர்களின் பக்தர்கள் இவர்களைத் தூக்கி அலைகின்றார்கள் வாழும் அரண்மனை, ஒரு வல்லரசு நாட்டின் தலைவனால் கூடக் கற்பனை செய்ய முடியாது. ஆள், அடிமை, ஆர்ப்பாட்டம், ஒரே ராஜபோக வாழ்க்கை தான்! இந்த வாழ்க்கை வாழுபவர்களுக்கு "ஞானம்" ஏன் என்று கேட்காது ஓடிப்போகுமன்றோ!

ஞானம் பெற்ற வள்ளங்கள், ஈகையாளர்கள், அவர்கள்,



RangaRakes
Tamilnavarasam.com

மக்களிடம் நிதியுதவிகள், காணி, நிலம் கேட்கவில்லை. அளவிட வியலாத பேராற்றல்களையும்,மன அமைதியை யும் கொடுத்தார்கள். மக்களிடம் கைநீட்டி சுகமான சீவியம் செய்பவர்கள் எப்படி சித்தத்தில் ஒளியூட்டும் ஞானத்தை நல்கிட முடியும் நண்பர்களே! கொஞ்சம் சிந்தியுங்கள்.

கடவுளை நம்பாமல் எந்தவித ஆன்ம பலம் அற்ற மனிதர்களை நம்புவது கடவுளையே மறப்பது போல் இழி நிலைவேறு ஏதுமில்லை. மனிதர் எல்லோருக்குமே அறிவு உண்டு. சிந்தனைகளைப் புனிதமான உணர்வுடன் அதனை வியாபகப்படுத்தினால் மாபெரும் சக்தி கிளர்ந்து எழுந்து நல்லறிவூட்டுவதுடன் இறையுணர்வின் உண்மைத் தன்மை எதுவெனத்தானாகவே புரிய வைத்துவிடும்.

புனிதமான சூழலும், நல்லோர் வார்த்தைகள், உபதே சங்கள், அவர்தம் நேயங்கள் எமக்குள் ஞான ஒளியைப் பாய்ச்சி நிற்கும். சித்தத்தைத் தூய்மையாக்கினால், அத்தன் எனும் ஏக இறைவன் உள் உறைவது நிச்சயம்.

“வரம்” என்பதன் அர்த்தம் மிக உயர்ந்தவற்றுள் உயர்ந்தது என்பதாகும். இந்த உலக வாழ்விற்கு உவப் பான, நிலம், பணம் முதலானவற்றையே இறைவனிடம் மக்கள் வரம் எனக் கேட்கின்றார்கள். ஆனால், நிரந்தர மில்லாத பொருள் வரம் அல்ல. ஆன்மாவிற்கு நித்ய அமைதி வேண்டுவதே “மாவரம்” ஆகும். இந்த நித்ய அமைதி கண்டவர்களே ஞானிகளாவர். அழிவற்ற ஒன்று





தானே எமக்கு வேண்டும். எனவே ஆன்ம ஞானமே, இறையுடன் அவர் ஒளியோடு ஒளியாய் கலந்த மேலான இன்பம்.

துறவிகள் தனித்திருந்து தவமியற்றியதாகப் படித்திருக்கின்றோம். உலக வாழ்வில் இருந்து விடுபட்டு அவர்கள் தனிமையில் தவமியற்றினாலும் கூட அவர்கள் உலக ஷேமத்திற்காகத் தங்கள் தவ வலிமையினைப் பிரயோகித்தனர்.

நீரும், ஆகாரமும் இன்றியே பல ஆண்டுகளாக நிலத்தில், நீரினுள் இருந்தும் தவமியற்றினர். இந்தப் பிரபஞ்சத்தினுள் உள்ள பஞ்ச பூதங்களில் இருந்து தமது தேகத்திற்கான சக்தியைப் பெற்றனர். அது மட்டுமல்ல அவர்கள் இருந்த இடங்கள் எல்லாமே புண்ணிய பூமியாகின. அவர்கள் இருந்த மரம் கூடப் புனிதப் பேறு பெற்றதேயாகும். புத்தர் அரச மரத்தின் கீழ் இருந்து தவமியற்றி ஞானம் பெற்றதால் அரச மரம் பெரும் பேறு பெற்றது.

ஞானிகளில் இருந்து புறப்படும் ஞான அலைகள் முழு உலகை மட்டுமல்ல, முழு பிரபஞ்சத்தையுமே ஆட் கொண்டு விடுகின்றது. உலகமே அவர்களின் முன் மண்டி யிட்டு வணங்குகின்றது. இந்த அற்புத புருடர்கள் வாழ்ந் தமை எமக்காக, நாம் பூரணத்துவம் காண்பதற்கான வழி காட்டலுக்கானதேயாம். ஞானக் கதிர்வீச்சு எங்கள்



RangaRakes
Tamilnavarasam.com

பாவத்தைப் போக்கி உண்மைத் தேடலுக்கான பாதையை வகுப்பதுமாகும்.

அந்தகார மமதை எனும் மாய இருளுக்குள். மதி மயங்கிக் கிடப்பவர்க்கு சாதாரண கைவிளக்கினால் ஒளிகாட்டவியலாது. ஆன்ம ஞானிகளில் உள் இருந்து வரும் ஞான ஒளிதான் வழிகாட்டவல்லது. எந்த விதமான சிந்தனையுமற்று ஓர் மரத்தில் கீழ் இருந்து வரும் துறவிகள், யாரையும் சீண்டுவதில்லை. ஆனால் அவர்கள் எம் இதயத்தை தட்டி விடும்போது அதன் அதிர்வுகள். ஒப்பில்லா இனிய ஓசையாகி, ஞானசங்கீதம் எமக்குள் உருவா கின்றன.

பாகுபாடான எண்ணம் இன்றி எல்லோரையும் ஒரே தன்மையாகப் பார்க்கும் ஞானிகளை பெரும் சக்கரவர்த் திகள் பலரும், உயர்வான இடத்தில் வைத்துப் போற்றினர். ஆயினும் இந்தக் கௌரவத்திற்காக எளியோரை அவர்கள் மன்னருக்குரிய நிலைக்கும் கீழாக நோக்கியது கிடையவே கிடையாது. இந்தப் பக்குவநிலை அற்புதமானது. இது இறை நற்கருணை!

ஒரு துறவி, பேசாமல் சும்மா ஒரு இடத்தில் இருந்த போது, வழியில் தன் பெரும் படையுடன் வந்த அரசன் அவர் தன்னைக் கண்டும் காணாதது போல் இருந்ததால் ஆத்திர மடைந்தான்."என்ன சுவாமிகளே... என்னைக் கண்டும் காணாதவர் மாதிரி உட்கார்ந்திருக்கின்றீர்களே, நீர் என்ன





பெரிய ஆளா..." என்று கேட்டான். அதற்குத் துறவியாரோ மிக அமைதியாக, நீங்கள் நிற்கின்றீர்கள், நாங்கள் அமர்ந்திருக்கின்றோம். யார் பெரியவர் என்று நீங்களே உணர்வீர்களாக! என்றார். மன்னன் மௌனமானான்.

எந்தவிதமான எதிர்பார்ப்புகளுடன், வாழாதவர்கள் எவர்க்கும் ஏன் அஞ்சப் போகின்றார்கள்? ஒருவரிடம், ஏதாவது உதவிகளைக் கோரும் போதுதான் நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாகின்றோம். துறவிக்கு வேந்தனும் துரும்பு என்பார்கள். கொடுப்பவன் இரக்க வேண்டியதில்லை. அருள் சுரக்க அருள்பவர். ஒருவருக்கும் அச்சப்படவோ அன்றித் தலைகுனிய வேண்டிய தேவைகளுமில்லை.

இத்தகைய ஆன்ம வள்ளல்கள் மனம் குளிர்ந்தால் பூமி குளிர்மையேறும். எந்தவித சலனமற்று இருக்கும் ஞானிகளை நாடுவதற்கும்கூட எமக்கான சந்தர்ப்பங்களை இறைவன் உருவாக்கியே தீருவான். எமது வாழ்வின் ஒழுக் கங்களை, மானுடர்களுக்குமான மாண்புகளை உள்ளபடி உணர்ந்தாலே எமது நெஞ்சம் தானாகவே கனிந்து கொள்ளும்.

இன்று இன்னமும் பல ஆன்மீக ஞானிகள் பல சமூக நலப்பணிகளை தமது அமைப்புக்கள் மூலம்,வியப்பூட்டும் வண்ணம் அற்புதமாகச் செய்து வருகின்றனர்.கல்விக் கூடங்கள், வைத்தியசாலைகள், கிராமிய தொண்டு



RangaRakes

Tamilnavarasam.com

நிறுவனங்கள் எனப் பல தரப்பட்ட நிறுவனங்களை பணிகளை எந்த வித லாப நோக்கின்றி அருட்பணியாற்றி வருகின்றனர். மிகப்பெரிய பல்கலைக் கழகங்களையே இவர்கள் ஸ்தாபித்து நடாத்தியும் வருகின்றனர்.


துறவிகள் மக்களில் இருந்து விலகி வாழ்பவர்கள் அல்லர், என்பதை மெய்ப்பிக்கும் வகையாக ஆன்மீக நிறுவனங்களை இவர்கள் நடாத்தி மக்கள் பணிகளைச் செய்துவருவதானது அரசாங்கத்தின் பெரும் சுமைகளையே குறைப்பது மாகும். இறைஞானம் சேவைகளுடனும் இணைந்துபட்டதேயாம். அரசாண்ட பெருமன்னர்களில் இருந்து சாதாரண குடிமகன் வரை தன் ஆன்மாவை தூய்மையேற்ற வேண்டியவனாகின்றான்.

ஆசாபாசங்களுக்கும், லௌகீய, வாழ்வின் அழுத்தங் களுக்கும் உட்படாது அதே சமயம், சாமானியமாக வாழ்ந்து கொண்டிருக்கும் சகல ஜீவன்களுக்குமான ஆன்ம விழிப்பி ற்குமாக தம்மையே ஆகுதியாக்கும் "ஞானம்" பெற்ற ஞானச் சுடரான அருளாளர்கள் என்றும் மரணமில்லாப் பெரு வாழ்வுடன் எம்முடன் ஜீவித்து ஒளியூட்டி வருகின்றார்கள். எங்கள் காலத்திற்கு முன் வாழ்ந்த ஞானிகளும், நித்ய சிரஞ்சீவிகளாகவே ஜீவிப்பதும் புதுமையானது அல்ல வேயல்ல!.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
05.08.2008







# நகைச்சுவை

அறுசுவை உடலுக்கானது. நகைச்சுவை, உள்ளத்திற்கும் உடலுக்குமானது. ஹாஸ்யத்தில் சிரிப்பை மட்டுமன்றிச் சிந்தனையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். விகாரமான, மனதை நோகடிக்கும் கேலிப் பேச்சுக்கள் நகைச்சுவையல்ல. அங்கவீனர்கள், மனநோயாளர்களை நகைச் சுவையாக ரசித்துக் கிண்டலடிப்பது கேவலமான செய்கை. நகைச்சுவையாளர்களை நோக்கியே மக்கள் செல்கின்றார்கள். மனதினுள் பாரம் நீங்கச் சிரித்து மகிழ்வதே சிறப்பு. சோர்வின்றிச் செயலாற்றச் சிரித்து மகிழ்வோம்.

நகைச்சுவை சுவைகளுக்குள் மிகச் சிறந்ததாகும். அறுசுவை உணவு உடலுக்கானது. நகைச்சுவை, எம் உடலுக்கும், உள்ளத்திற்கும் இசைவானதாகும். எந்த ஒரு துன்பத்தினையும், தாங்க முடியாத மனிதமனம், நகைச்சுவைப் பேச்சுக்களைக் கேட்ட மாத்திரத்தே தம்மை மறந்தே சிரித்து மகிழ்ந்து தேற்றிக் கொள்ளச் செய்கின்றதே!



RangaRakes
Tamilnavarasam.com

மேலும், ரசனையுடன் நாம் நகைத்தலால் ஆயுள் நீடிக்கும். துயரங்கள், துவம்சமாகும்.

நகைச்சுவை ரசனை இன்றி வாழும் வாழ்வு, உப்புச் சப்பின்றிப் போய்விடும். உயிரப்புடனும், சுறுசுறுப்புடனும், நாம் வாழச் "சிரிப்பு" அவசியமாகின்றது. தேக ஆரோக் கியமே வாழ்க்கைக்கு நிரந்தர தேவையாகையினால் இந்தப் பணியை நகைச்சுவை எமக்கு அளிக்கின்றது.

நல்ல நகைச்சுவைக் கதைகள், துணுக்குகள், நடிப்புக் காட்சிகளை நாம் காண்கின்றபோது, எமது மனது களிப்பில் ஆழ்ந்து விடுவதால் அது லேசாக அமைதியாகி விடுகின்றது. "வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போய் விடும்" என்பார்கள்.

நகைச்சுவைகள், சிரிப்பூட்டுவதுடன் நின்றுவிடாது. சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைதல் வேண்டும். மிகப் பிரபலமான நகைச்சுவை நடிகர்களாகவிருந்த சார்லிசப்ளின், பொப்ஹோப் போன்ற மேல்நாட்டு திரைப்பட நடிகர்களும், கலைவாணர் என்-எஸ்-கிருஷ்ணன், டி-கே-துரைராஜா, கே- நாகேஷ் தங்கவேலு, சந்திரபாபு போன்ற தென்னிந்தியத் திரைப்பட நடிகர்கள் சிரிப்புடன் சிந்த னைக் கருத்துக்களையும் அள்ளித்தந்தவர்கள். அக் காலத்தில் இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது இத்தகைய நகைச்சுவை நடிகர்கள் சமூக விழிப்புணர் வுகளை ஏற்படுத்தி வந்தனர்.





நகைச்சுவையாளர்கள், ஒரு சமூக மருத்துவர்கள். அத்துடன் ஆன்மீகவாதிகள் மக்கள் இதயங்களைச் சுத்திகரிப்பது போலவே சத்தான இனிய கருத்துக்களைக கூட நகைச்சுவை ததும்ப மிக இலகுவில் மக்கள் நெஞ்சங் களைத் தொடுமாற்போல் பேசி வந்தார்கள். இவர்கள்சேவை ஒரு தெய்வீகக் கொடையுமாகும். இத்தகையவர்களை மக்கள் பார்த்த மாத்திரத்தே சந்தோஷமுடன் கை கொட்டிச் சிரிப்பதுடன் அவர்களைத், தம்முள் ஒருவராகவே ஏற்றுக் கொண்டனர். மிக எளிமையாக வாழ்ந்து மக்களோடு மக்களாக அவர்கள் பிரச்சனைகள், துன்பங்களை அறிந்து துன்பங்களை மறக்கும் வித்தைகள் மூலம் "உளவளச் சிகிச்சை" செய்தார்கள் என்றே கூறுதல் வேண்டும்.

ஒருவரைச் சிரிப்பூட்டுவது சாதாரண விடயம் அல்ல. மனிதர் ஒருவரைப் புண்படும்படி பேசினாலே போதும். அவருக்கு உள்ளம் சுக்குநூறாக உடைந்து விடுகின்றது. அதே நேரம் புண்பட்ட மனதுடன் வரும் ஒருவரைத் தம் பக்கம் இழுந்து அவர்கள் பண்படும் வண்ணம் இன் சுவைப் பேச்சினால் மனம் களிக்கச் செய்தல் மிக அற்புதமான கடமையல்லவோ!

ஒரு வைபவம் ஆரம்பமாகஇருந்தது. வைபவம் ஆரம்பமாக முன்பு வெளியே ஒரு மரத்தடியில் மெலிந்த தோற்றமுடைய ஒரு இளைஞரைச் சுற்றி, இளைஞர்கள், யுவதிகள், சுற்றி நின்று கொண்டிருந்தனர். இவர்கள் அனை வருமே அந்த இளைஞர் பேசுவதையே மிக ஆர்வமுடன் கேட்டுக் கொண்டிருந்தனர். இளைஞன் பேசும் ஒவ்வொரு



RangaRakes Tamilnavarasam.com

வார்த்தைக்கும், எல்லோருமே சிரித்துக் கொண்டேயிருந் தனர். அவனை வாஞ்சையுடன் நோக்கி அவனையே வைத்த விழி விலகாதிருந்தனர். சொல்லப் போனால் அந்தச் சுற்றுப்புறமே ஒரே மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து போயி ருந்தது. அவனது நகைச்சுவைப் பேச்சு எல்லோரையுமே கட்டிப் போட்டிருந்தது.

சற்றுநேரத்தில் அந்த இளைஞன் "சரி... சரி நேரமாகி விட்டது. வாருங்கள் நிகழ்ச்சிக்குப் போவோம்" என்று அழைத்ததும் அனைவருமே அவனைப் பிரியமனமின்றி அவனைத் தழுவி விடை பெற்றனர். மேலும், ஒருவரைக் கவர்ந்திழுக்க வெளி அழகுத் தோற்றம் அவசியமேயல்ல. சமூகத்தில் ஒரு நகைச்சுவையாளர் ஒருவருக்குக் கிடைக்கும் கௌரவமே மேற்படி நிகழ்ச்சியாகும்.

முற்காலத்தில் அரச சபையில் மந்திரி பிரதானிகள் அனைவரும் உள்ள இடத்தில் தங்கள் வேலைப்பளு, மன அழுத்தங்களை விலக்க அரண்மனை விதூஷகர்கள் (விகட கவி) நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தங்கள் மதிநுட்பத் தினுடனான, சாதுர்யமான பேச்சுக்களால், அனைவரையும் மகிழ்வித்தனர். இவர்கள் அரசர்களுக்குப் புரியாத பல பிரச்சனைகளைத் தீர்த்தும் வைத்தனர். ஒரு நீதிபதி போல் செயல்பட்டு வந்தார்கள்.

விஜய நகரத்தை ஆண்ட கிருஷ்ணதேவராய மன்ன ரிடம் தெனாலி இராமன் என்கின்ற விகடகவி இருந்தார்.





தெனாலி இராமன் கதைகள் உலகின் மிகப் பிரபலமான நகைச்சுவை, நீதிக்கதைகளுமாகும்.மேலும் டெல்லியின் அக்பர் பாதுஷாவின் அரண்மனையைப் பீர்பால் என்கின்ற மாபெரும் நகைச் சுவையாளர் இருந்து அரசரின் பேரபிமானத்திற்குரியவரானார். பீர்பால் கதைகளும் மிகப் பிரபலமானதே. மேலும் முல்லா நசுருதீன் கதைகள் சமூகத்தின் உள்ள மானுட பலவீனங்களை, மனித மன இயல்பினைக் லேசாகக் குத்திகாட்டி சிரிப்புடன் சிந்தனை யைத் தூண்டுவனவாகும். இவைகளைக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிப் படிக்கின்றார்கள்.

தவறான முறையில் விரசமான இரட்டை அர்த்தத் துடன் பேசுவது நகைச்சுவை ஆகாது.இந்நடவடிக்கைகள் குழந்தைகள் மனதைத் திசைதிருப்பிவிடும்.ஆயினும் மமதையுடன் நடந்து கொள்பவர்களைச் சவுக்கடி போல் நகைச்சுவையாகப் பேசித் தமது பிழைகளை உணரச் செய்பவர்களின் திறமைகள் தனித்துவமானது.

ஒரு குறுகிய ஒற்றையடிப் பாதை. ஒரு முரட்டு ஆசாமி அவ் வழியே சென்று கொண்டிருக்கின்றார். அவர் எதிரே ஒருவர் வந்து கொண்டிருந்தார். ஒருவர் வழிவிட்டாலே மற்றவர் பாதையைக் கடக்க முடியும். முரட்டு மனிதரோ எதிரில் வருபவரை மட்டம் தட்டும் நோக்குடன் "நான் முட்டாள்களுக்கு வழிவிடுவதில்லை" என்றார். ஆனால் அதைக் கேட்டவரோ புன்முறுவலுடன், அவரைப் பார்த்து "நான் வழிவிடுவதுண்டு" எனச் சொல்லிப் பாதையை விட்டு



RangaRakes Tamilnavarasam.com

விலகி வழிவிட்டார். கர்வமுடன் பேசியவருக்கு அசடு வழிந்திருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

உலகின் பல அறிஞர்கள் ஞானிகள், ஆன்மீக வாதிகள் பலருமே நகைச்சுவை உணர்வு மிக்கவர்களாக இருந்தார்கள். பெர்னாட்ஷா என்கின்ற பிரபலமான தத்துவ ஞானியிடம் ஒரு அழகி வந்தாள். "ஐயா, எனது அழகும், உங்கள் அறிவுடன் கூடிய ஒரு குழந்தை பிறந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். எனவே என்னைத் தாங்கள் திருமணம் செய்தால் என்ன" என்று கேட்டாள். அவளது பேச்சைக் கேட்ட பெர்னாட்ஷா அவர்களோ "வாஸ்தவம் தான், ஆனால் ஒன்று, சிலவேளை எனது உருவமும் உனது அறிவும் உள்ள குழந்தை எமக்குக் கிடைத்தால். எப்படியாக இருக்கும்" எனத் திரும்பக் கேட்டார்.

சுவாமி இராமகிருஷ்ணர் கூறிய பல நீதிக்கதைகள் அற்புதமானவை. அவற்றுள் ஒன்று, ஒரு ஞானிமுன் ஒரு துறவி வந்து சொன்னார். "நான் பல ஆண்டு காலங்கள் தவம் இயற்றிப் பல அற்புதமான சித்துக்களைப் பெற்றுள்ளேன்" என்றார். "என்ன என்ன சித்துக்களைப் பெற்றுள்ளீர்" என்று ஞானி கேட்க, நான் நீரின் மேல் நடந்து அதோ தெரியும் அந்த ஆற்றைக் கடந்துவிடுவேன் என்றார். அது கேட்ட ஞானியோ, சிரித்தபடி, "அடடா.... இந்த ஆற்றைக் கடந்துபோக, நீரில் நடக்க, அதற்காகவா இத்தனை வருடங்கள், தவமிருந்து இந்தச் சித்துக்களைக் கற்றீர்கள். ஆற்றைக் கடப்பதற்கு ஒரு அணா போதுமே படகுக்காரன்





கொண்டு சேர்ப்பித்து விடுவானே" என்றார்.

இந்தக் கதையில் எவ்வளவு தத்துவங்கள் இருக்கின்றன. எமது தவம் எமக்கு மட்டுமல்ல, யாவருக்குமே நன்கு பயன்பாடு உள்ளதாக அமைய வேண்டும். நல்ல செயல் செய்வதுகூட ஒரு மாதவம்தான். சில மாணவர்கள் தமது தவறுகளைச் சாமர்த்தியமாக மறைத்துப் பேசுவார்கள். ஒரு மாணவன் தன்னுடைய ஆசிரியரிடம் கேட்டான்". ஐயா.... ஒருவன் செய்யாத தவறுக்காகத் தண்டனை அவனுக்கு வழங்கப்படலாமா என்று கேட்க, ஆசிரியரோ,...." கூடவே கூடாது..." என்று சொல்லவும், அவனோ "ஐயா.... இன்று நான் வீட்டுக் கணக்கைச் செய்யவில்லை" என்றான். ஆசிரியரோ திகைத்துப் போனார்.

குடும்பத்தினுள் நடக்கும் நகைச்சுவை, நீதிமன்ற நகைச்சுவை, பாடசாலைகளில் பேசும் கேலி, கிண்டல்கள், மருத்துவமனை, பொது இடங்களில் நடந்து கொண்டிருக்கும், உரையாடல்களை சுவாரஸ்யமான, துணுக்குகளாக நாம் படிக்கும்போது எம்மையே, மறந்து விடுகின்றோம்.

திருடன் ஒருவன் வீட்டினுள் புகுந்து கணவன் மனைவியைக் கட்டிவிட்டு வீட்டில் உள்ள பொருட்களை எடுத்துக் கொண்டு செல்லு முன் கணவன் திருடனை அழைக்கின்றான். சரி போனால் போகின்றது, அழைக்கின்றாரே என்று அவருக்குக் கிட்ட வந்து "என்ன வேண்டும்?"



RangaRakes

Tamilnavarasam.com

எனக்கேட்க, "ரொம்ப நன்றி... ரொம்ப... நன்றி" என்கின்றார். "என்ன... ஐயா நன்றி நான் திருடியதற்கா நன்றி" என்றார். அதற்கு அந்த நபரோ...." "ஒன்றுமில்லை, எனது. மனைவி வாயை என்னாலேயே கட்ட முடியவில்லை. ஆனால் நீ, இவளது வாயைத் திறக்க முடியாமல் கட்டி விட்டாய். மேலும் இவளின் மோசமான சமையலை எவ்வளவு ஆர்வமாகச் சாப்பிட்டு மீதியை உனது வீட்டிற்கும் எடுத்துக் கொண்டு செல்கின்றாய். உனது ரசனையை, வீரத்தை என்ன என்பது? ரொம்ப நன்றி அப்பனே" என்ற துமே திருடனுக்கு வாய் அடைத்துவிட்டது. இன்னும் ஒரு துணுக்கு இதோ.

"உலகில் சந்தோஷமானவர்கள் யார்" என்று, ஒருவர் கேட்க மற்றவர் சொன்னார் "இன்னமும் இந்த உலகில் பிறக்காதவர்களும் ஏற்கனவே இந்த உலகில் இருந்து விடைபெற்றுச் சென்றவர்களும் தான்" என்றார். உண்மையில் நாம் எல்லோருமே நல்ல ரசனை உணர்வுள்ளவர்களாக இருந்தால் தான் இந்த உலகை நன்கு அனுபவித்து ரசிக்க முடியும்.

எந்த விஷயங்களையும், மிகவும் பாரதூரமாகக் கருதாமல் அவைகளை சந்தோஷமான, சிரிப்பூட்டும் விஷயமாக நோக்கினால் வாழ்வு மிகவும் இயல்பாகி விடுமல்லவா? எவரையும், எதிரியாக நோக்காமல் எவர் மனதையும் புண்படுத்தாமலும் வாழ்வதில் என்ன ஐயா, சிரமம் உள்ளது?





கேலிப் பேச்சுக்கள் என்கின்ற ரீதியில் திரைப்படங்கள், சஞ்சிகைகளில்ஒரு குறிப்பிட்ட சமூகத்தை, குலத்தை அல்லது செய்யும் தொழிலைக் கொச்சைப்படுவது, மிகவும் கண்ணியக் குறைவான செயலாகும். அதை விட வருந்த தக்க விஷயம் என்னவெனில், அங்கவீனர்களை அவமானப் படுத்திக் கிண்டலடிப்பதாகும். மக்கள் இத்தகையவர் களைக் கேலி செய்யும்போது சிரித்து மகிழ்வது கொடுமையிலும் கொடுமை ஐயா! ஒருவரைத் தாழ்த்து வதும், அவர்கள் அவமானப்படும்போது சிரிப்பதும் ஆணவச் செருக்கு அன்றோ! ஒருவர் விழும்போது ஏறிமிதிக்கலாமா?

ஒரு ஹாஸ்ய நடிகர் மற்றவர்களைச் சிரிப்பூட்டுவதற் காகத் தனது உடலை வருத்துகின்ற நிலை ஏற்படுவதுண்டு. சர்க்கஸ் நிகழ்ச்சி ஒன்றில் ஒரு கோமாளி அங்க சேஷ்டை களைச் செய்யும் போது தடுக்கி ஏணியில் இருந்து வீழ்ந்துவிட்டான். அதுவே ஒரு நகைச்சுவை எனக் கருதி மக்கள் விழுந்து, விழுந்து சிரிக்கலாயினர். நிகழ்ச்சி முடிவில் அவரது சர்க்கஸ் குழு நண்பர்கள், "என்ன விழுந்து விட்டீர் களே பலமாக அடிபட்டு விட்டதா" என்று அனுதாபத்துடன் கேட்டார்கள்.

அதற்கு அவரோ, "மக்கள், குழந்தைகள் சிரித்து மகிழ வேண்டுமாயின் நான் எத்தனை தடவைகளும் என் உடலை வருத்துவதற்குத் தயார்" என்றார். சனங்களைச் சிரிக்கச் செய்ய தங்கள் உடலை அஷ்ட கோணலாக



RangaRakes

Tamilnavarasam.com

வளைப்பதும் முகத்தை மேனியை விகாரமாக்கிச் சிரிப்பை வரவழைக்க இவர்கள் செய்யும் முயற்சி உண்மையில் வியப்புக்குரியது. தங்கள் அழகை மாறுபாடாக்கி விழுவதும், உருளுவதும், அடிவாங்குவதும் அதனையே மக்கள் முன் காட்டிட மன உறுதியும் வேண்டுமல்லவா? வெறும், பணத்திற்காகத்தான் இப்படிச் செய்கின்றார்கள் எனச் சொன்னாலும் படும் அசௌகரியங்கள் பற்றியும் நாம் உணரவேண்டும்.

சமூகத்தில் நாம் பலவிதமான பலவீனங்களுடன் வாழ்ந்து வருகின்றோம். இவைகளை ஒருவர் நாசூக்காக எமக்குச் சொன்னால் எம்மால் அதனை ஏற்க முடிகின்றது. சிரிப்பூட்டும் வண்ணம் சிலர் சொல்லும் செய்திகள் எம்மைத் திருந்தி வாழவும் வழிசமைக்கின்றது.

நகைச்சுவைக் கதைகளில் திரைப்படங்களில் தப்புச் செய்பவர்கள் அதை மறைக்கச் சொல்லும் பொய்யான நகைச்சுவைக் காரணங்களை, நடிப்புக்களை, ரசிக்கும் படியாகச் சொல்லும் போது உண்மையில் இவைகளைப் படிப்பவர்கள், பார்ப்பவர்கள் நிச்சயமாகத் திருந்தியே விடுவார்கள்.

நீதிமன்றத்தில் திருடனைப் பார்த்து நீதிபதி எதற்காக நீ, பொது இடத்தில் வைத்திருந்த பொருட்களைத் திருடினாய் என்று கேட்கத் திருடனோ "ஐயா, நேற்று இரவு கோவிலில், பிரசங்கம் செய்தவர் இந்த உலகம்





பொதுவானது, இது எல்லோருக்குமே சொந்தமானது அவைகளை உங்கள் சொத்துக்கள் போலக் கருதுங்கள் என்றார். அப்படி இருக்க நான் நீங்கள் சொன்ன பொருளை எடுத்தது தப்பாகுமா"' என்று கேட்டான். இப்படிச் செய்த தவறுக்கும் நியாயம் சொல்லும் மனிதர்களும் இருக்கின் றார்கள்.

குழந்தைகளை மகிழ்வூட்ட கார்ட்டூன் (கேலிச் சித்திரங்கள்) காட்டப்படுகின்றன ஸ்பெயின் நாட்டில் மன அழுத்தத்தைக் குறைக்கச் சிரிப்புச் சிகிச்சை முறை கையாளப்படுகின்றன. நகைச்சுவை மன்றங்கள் எல்லா நாடுகளிலும் இன்று இயங்கி மக்கள் மனச்சுமை மன அழுத்தங்களைக் குறைக்க அறிவுரைகளை நகைச்சுவை யூடாக வழங்குகின்றன.

குழந்தைகள் ஆரோக்கியமாக வளர அவர்கள் சிரித்து மகிழ வேண்டும். இதனால் இரத்தோட்டம் சீராகின்றது. நாம் தினசரி வாய்விட்டுச்சிரிப்பதை ஒரு வழக்கமாகக் கொள்ள வேண்டும். முற்காலத்தில் கூத்துக்கள், நாடகங் களில் நகைச்சுவைக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டே வந்தன. இந்த முறையிலே அவை இன்னமும், கலை, நிகழ்ச்சிகளில் பின்பற்றப்படுகின்றன. விரக்தியை நீக்கி மனத்துக்குச் சக்தியூட்டும் நகைச்சுவை ஆச்சரிய மூட்டும் ஔடதமாகும்.

தினக்குரல்

ஞாயிறு மஞ்சரி , 19.08.2008



RangaRakes
Tamilnavarasam.com



# தற்பெருமை

தற்பெருமை பேசுதல், காலத்தையும் செயல்களையும் விரயமாக்கும். மனதில் அகந்தையுண்டானால் புதியன படைக்க மனம் மறுக்கும். தமக்குமட்டும் எல்லாமே தெரியும், மற்றவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என எண்ணினால் ஒன்றையும் கற்றுவிட முடியாது. பணம், புகழ் கூடிவரும் போது பணிவு கனிவுடன் பற்றி நிற்க வேண்டும். நாம் சார்ந்த மதம் மொழி நாடுகள் மட்டுமே மேன்மையானது, ஏனையவை எவையுமே புனிதமற்றது என எண்ணுதல் பேதமை பொருந்திய தற்பெருமை தான். உளவளத்தை வளர்க்க தற்பெருமையை அகற்ற வேண்டும்.

தற்பெருமை அகந்தையில் உற்பத்தியாகின்றது. தங்களை விட மற்றவர்க்கு ஏது தகுதி என்கின்ற சற்றேனும் சிந்திக்காத இயல்பினால் நேரம் கிடைக்கும் போதெல்லாம் தங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பது கேட்பவர் செவிகளை மரத்துப் போகச் செய்யும் செயல் தான். மேலும், தங்களைப் பற்றிய விளம்பரங்களை தங்கள் மேலான அலுவல்களாகக் கொண்டியங்கும் பேர்வழிகளும் இருக்கின்றார்கள்.





நல்ல தகுதிகள், திறமையுள்ளவர்களுக்குப் பேச நேரம் இருக்காது. ஆனால் திறமையுள்ளவர்களின் கீர்த்தியை முடக்கும் கனவான்களும் இருக்கின்றார்கள். எந்தவித விசேட தகுதிகளும் இல்லாதவர்கள் ஜம்பமாகப் பேசுவார்கள். தாங்கள் செய்கின்ற சின்னப் பணிகளையும் பிரமாதப்படுத்திச் சொல்வார்கள்

"இன்று நான் சந்தைக்குப் போனேன். என்னைக் கண்டதுமே எல்லா வியாபாரிகளும் வந்து "என்ன வேண்டும் ஐயா" என்று கேட்டார்கள். நான் கேட்குமுன்னரே தட்டுப்பாடான சாமான்களை எல்லாம் தந்துவிட்டார்கள். "உங்களால் இதுவெல்லாம் முடியுமா" என்று சொல்லிக் கொள்வார். கடையில் சென்று காசைக் கொடுத்தால் எல்லாமே கிடைத்து விடுகின்றது. ஏதோ தனக்காகத்தான் கடைதிறந்து வைப்பது போல் பிரமாதமாக எதற்குப் பொய் பகர வேண்டும்?

இன்னும் சிலர் "நான் மட்டும் என்னைப் பற்றிச் சொல்வதேயில்லை. என்னுடைய தகுதிக்கு நான் எவ்வளவோ சொல்லலாம்", என்று சொல்லத் தொடங்குபவர் தொடர்ந்து சுயபுராணம் பாடத்தொடங்கினால் மனிதர் நிறுத்தவே மாட்டார். இதுவெல்லாம் தற்புகழ்ச்சி என்று அவருக்கே புரியாதா? சபை நடுவில் எப்படியாவது ஏறினால் சரி என்று மேடையில் ஏறி அவமானப்படும் மனுஷர்களை நீங்கள் பார்த்ததில்லையா? தெரியாத்தனமாக ஒருவரிடம் ஒரு விஷயத்தைப் பேசச் சொல்லி மேடையில் ஏற்றினால்



RangaRakes

Tamilnavarasam.com

போதும் அவர் மேடையில் தரப்பட்ட விஷயத்தை விட்டுவிட்டுத் தம்மைப் பற்றியும், தன் குடும்ப பெருமை களைப் பற்றியுமே விலாவாரியாகப் பேசி சனங்களின் பொறுமையைக் குத்திக் குதறியே விடுவார்.

தற்பெருமைக்காரர்கள் அடுத்தவர் மன இயல்பு களைப், புரிவதேயில்லை. ஒன்றுமே தெரியாமல் புரியாமல் வாய் ஒன்றினாலே எல்லாவற்றையுமே சாதிக்கலாம் என்று எண்ணி மற்றவர்க்குப் போதனை செய்யும் பிரகிருதிகள் தங்களுக்கான அருகதை என்ன எனப் புரிந்துகொள்ளச் சம்மதமளிப்பதேயில்லை. மேலும், தந்திரசாலிகள் தங்க ளைப்பற்றி விளம்பரம் செய்யும் உத்திகளே வியப்பாக இருக்கும்.

சமூகப் பிரபலங்களுடாகத் தங்களை எப்படியாவது பாராட்டும்படி செய்வதற்காக அவர்களுக்காகப் பெரும் விழா எடுப்பார்கள். அவர்கள் அதற்குப் பிரதியுபகாரமாக தங்களை உச்ச நிலைக்கு வைக்க முயற்சி செய்பவர்களைப் பாராட்டித் தீர்ப்பார்கள். ஆனால், குறுக்குவழியில் பாராட்டைப் பெற்ற அதே நபரோ "ஐயய்.... யோ.... எனக்கு இந்தப் பாராட்டுதல்கள் எல்லாம் பிடிக்கவே பிடிக்காது. நான் ஒரு சாமானியன், என்னைப் பாராட்டிப் பேசுகின்றார்கள். எனக்கு எந்தத் தகுதியுமே இல்லை" என்று அடக்கமாகக் கூறி நடிப்பார்.

உண்மையில், தகுதியுள்ளவனுக்கே பாராட்டுதல்கள்,





புகழ் கீர்த்தி சொந்தமாவதற்கு அருகதையுண்டு. இன்று இந்த உலகில் கீர்த்தி மிக்க சான்றோர் மேடையில் வெளியுலகில் கண்டபடி தோன்றக் கூச்சப்படுகின்றார்கள். மின்மினிப் பூச்சிகள் எல்லாமே சூரியன் முன் சவால் விடுகின்றன. நாக்கிழிப் புழு (மண்புழு) "நாகபாம்புக்கு என்ன பலம்" உண்டு என்று கேட்பதுபோல் அறிவிலிகள் ஆரவாரத்துடன் சுயபுராணம் ஓதுகின்றனார். மிகவும் வேதனையான விஷயம் என்னவெனில், மிகத் திறமைசாலி களை ஓரம்கட்டி விடுவதனால் தாங்கள் மேன்மையடை யலாம் என்று சிலர்தப்புக்கணக்குப் போடுகின்றார்கள். வேண்டப்பட்ட வர்களை மேடையில் ஏற்றித் துதிபாடுவதும் வல்லவர்கள், நல்ல பெரியோர்களை கண்டு கொள்ளாமல் தரம்தாழ்த்தச் சதிநடவடிக்கையில் ஈடுபடுவதும் கொடுமை.

தீட்டிய மரத்திலேயே கூர் பார்ப்பதுபோல் நடந்து கொள்பவர்களை நீங்கள் அறிந்திருக்கலாம். ஒரு பிரபல மான பயில்வான், தனக்கு நிகரானவர் ஒருவருமே இல்லை எனச் சவால் விட்டான். தன்னை தனது குருவினால் கூட ஜெயித்து விடமுடியாது என்று கூறியதுடன் அவரையும் தன்னுடன் வந்து சண்டையிடுமாறு பகிரங்கமாவே வேண்டுகோள் விடுத்தான்.

வேறுவழியின்றிக் களமிறங்கினார் வயதான அந்தக் குரு. சிஷ்யனான அந்தப் பயில்வான் குருவை அலட்சிய மாக நோக்கினான். சண்டை ஆரம்பமானது. குருவானவர் முதல் விட்ட சாதுர்யமான குத்திலேயே இளைஞனான



RangaRakes
Tamilnavarasam.com

பயில்வான் சுருண்டு விழுந்தான். நோவினால் ஈனஸ் வரத்தில் குருவிடம், “நீங்கள் எனக்கு இந்தச் சண்டை முறையை ஏன் கற்பிக்கவில்லை” என்று பரிதாபத்துடன் கேட்டான். குருவோ புன்னகைத்தபடி உன்னைப் போன்ற வர்களால் எனக்கு இந்த நிலை ஏற்படலாம் என அறிந்தி ருந்தமையினால் தான் இந்த நுட்பமான யுத்த முறையைச் உனக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை என்றார்.

என்னதான் ஒருவன் தன்னைப்பற்றி அதீதமான, கற்பனைகளுடன், ஆணவத்துடன் பேசிக்கொண்டாலும், வல்லவனுக்கும் வல்லவன் என்றும் இருப்பான், என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தன்னம்பிக்கையில் ஒருவர் பேசுவதற்கும் தம்மைப் பற்றியே பெருமையாகச் சொல்வதற்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. மற்றவர்களைக் கௌரவமாக நோக்குபவனுக்கே தன்னை உயர்த்தும் தகுதியும் உண்டு. மற்றவர்களைக் கேலியாக நோக்குதலும், அவர்கள் பற்றிய பெருமைகளை மறைப்பது, கெடுப்பவர்களுக்கு, தங்கள் திறமைகளைச் சொல்ல எந்தவித தார்மீகத் தகுதிகளும் இல்லை.

உண்மையிலேயே நல்ல திறமைகளை வைத்திருப் பவர்களுக்கும் கூட பொறாமை, புகைச்சல், போன்ற கெட்ட குணங்கள் இருக்கலாம். ஏன் கற்றறிந்த பல அறிஞர்கள் கூடத் தம்மை விடப் படித்தவர்களைப் பகிரங்கமாகத் தாக்கிப்





பேசுகின்றார்கள். இந்தச் செயல் கற்ற கல்வியையே கேவலப் படுத்துவதாக அமையும். மேலும் கற்றறிந்த சிலர் தமது வித்துவத்தின் உயர்ச்சியால் நடந்து கொள்ளும் முறைகள் எரிச்சலூட்டுவதாகவும் அமையலாம்.

வித்துவக் கிறுக்கர்கள் என்று சிலரைப் பற்றிச் சொல்வார்கள். ஒன்றுமே தெரியாதவன் தன்னைப் பற்றிப் புளுகுகின்றான். நான் எதற்கு, மற்றவர்களுக்காக அடி பணிய வேண்டும், எல்லோருமே என்னிடம் வந்தாக வேண்டும் எனுமாற்போல் நடந்து கொள்வார்கள். பொது வாகப் புலவர்களிடம் இத்தகைய ஆணவ முனைப்புகள் இருந்ததாகப் படித்திருக்கின்றோம். படிக்காத பாமரர்களை விட படித்த பண்டிதர்களே சபையில் மோதுவதுண்டு. இந்தக் குணங்கள் எல்லாமே ஒரு மனித பலவீனம் தான்.

எல்லோருக்குமே பொது வாழ்வில் மக்களிடம் பழகும்போது கண்ணியக் குறைவாக நடப்பது தவறு என்பது தெரியாதா? இன்னமும் கூடத் தங்களிடம் எந்தவித தகுதியையுமே வளர்த்துக் கொள்ளாமல் தான் சார்ந்த சாதி பற்றிப் பெருமையாகப் பேசுவார்கள். மிகவும் கஷ்டப் பட்டுத்தான் அந்தச் சாதியில் வந்து அவதாரம் எடுத்தாரா என்ன? எந்த சாதி பற்றிப் பெருமையாகப் பேசிக் கௌர வத்தை எடுக்க எண்ணுதலும் அல்லது பெற்ற செல்வம், பதவியால் மற்றவர்களுடன் இறுமாப்புடன் உரையாடு வதால் அதைக் கேட்பவனுக்கு அதனால் என்ன லாபம் வந்து விடப்போகின்றது?



RangaRakes Tamilnavarasam.com

இந்த அறியாமையினால் எழுந்த பேச்சுக்கள், செய்யும் அகம்பாவ நடவடிக்கையினால் மற்றவர்களுக்குக் கோபம், குரோதம், வெறுப்பு அருவருப்புத்தான் தோன்றும்.

எவரையும் அலட்சியப்படுத்தி அவமானப்படுத்தித் தம்மை உயர்த்திவிடமுடியாது. தங்கள் பெருமை மிகு பேச்சுக்களை மற்றவர் செவிகளில் ஏற்றுதல் அடுத்தவனுக்கு எவ்வளவு சிரமம் தரும் என்பதை ஏன்தான் உணராமல் இருக்கின்றார்கள் ஐயா?

உண்மையான திறமைசாலிகள் கூடச் சில சமயம் குழந்தைகள் போல் நடந்து கொள்வதுண்டு. இவர்களின் வெளிப்படையான பேச்சும், போக்கும் வித்தியாசமாக இருப்பதுண்டு அவர்கள் தங்களைப் பற்றிச் சொல்லும் தகவல்களை மற்றவர்கள் நம்புவதுமில்லை. ஏதோ பொய் சொல்கின்றார் என்பார்கள்.

எவராவது தங்கள் திறமைகள், பெற்ற வெற்றிகளை தக்க இடம், சந்தர்ப்பங்கள் அறியாது வெளிப்படுத்துதலால் அவர்களைப்பற்றிப் பிறர் உணராத தன்மையை ஏற்படுத்தி விடலாம். ஒரு விஞ்ஞானி தனது கண்டுபிடிப்புக்கள், அதன் தாற்பரியங்களைச் சாதாரணமான, அது பற்றிய எந்த அறிவுமில்லாத பாமரனிடம் சொல்லி விட முடியாது. கலைகளை உணராத, ரசிக்க முடியாதவனிடம் அதுபற்றி விளக்கம் சொல்ல முடியுமா? இடமறிந்து எவரும் தங்கள் விடயங்களை எடுத்துரைக்க வேண்டும்.





ஊருக்குள் பெரிய பெயர் பெற்ற கனவானாக இருப்பவர், வெளியிடங்களில் அவர் பெற்ற கீர்த்திகளை அவராகச் சொல்லிட முடியாது. அதை எவரும் நம்பமாட்டார்கள். அவர்கள் பெருமையை வேறு யாராவது சொல்ல வேண்டும். மற்றவர்களாகப் பெருமைப்படுத்துதலும் கௌரவமளிப்பதுவுமே உண்மையான திருப்தியளிப்பதாகும். எங்கள் திறமைகளை எமது வாயினால் இழந்து விடக் கூடாது. பல திறமைசாலிகள் இதனையே செய்து வருகின்றார்கள்.

நாங்கள் பெற்ற நல்ல அனுபவங்களைப், பெற்ற கீர்த்திகளை, எவ்வித மமதையுமின்றி மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும். வெற்று வெளியில் ஒருவருமின்றி உரத்துச் சொல்வதனால் பயன்இல்லை. ஆயினும் ஆபத்துமில்லை. ஆனால், உரிய தகவல்களை உரியவர்களிடம் சேர்ப்பித்து விடுங்கள். காழ்ப்பு, குரோதம், மமதை, பொறாமை கொண்டோரிடம் உங்களைப்பற்றி நீங்கள் கூறுவதை அர்த்தம் திரித்து உங்களை ஒரு வீணராக உருமாற்றம் செய்து, இத்தகையவர்கள் வெளிப்படுத்தி விடுவர். ஜாக்கிரதை!

யாராவது ஒருவர் தங்கள் உண்மைத் தன்மையுடைய, செயற்கரியன செய்து விட்டால் அதைக் காது கொடுத்துக் கேட்பீர்களாக! எதைக் கேட்டாலும், எல்லாமே சுத்தப்பொய் என்று புறம்தள்ள வேண்டாம். இன்று ஏராளமான திறமைசாலிகளின் கூற்றுக்களை அவை தமது



RangaRakes
Tamilnavarasam.com

பெருமைக்காகச் சொல்லப்பட்டவை என்று சொல்லித் தூற்றி நிராகரித்தமையால் பல உண்மைக் கூற்றுக்கள் உலகிற் கும், புலப்படாமல் புதையுண்டு போயின. தற்பெரு மைக்கும், உண்மை வெளிப்படுத்துகைக்குமுள்ள வேறு பாடுகளைப் புரிந்து கொள்ளுங்கள்! எமக்குத் தெரியாத விஷயங்கள் மற்றவர்களுக்குத் தெரிந்தால் அதனை ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருப்போமாக.

மனிதர்கள் எல்லோருமே ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பவசமாகவோ, அல்லது வேண்டுமென்றோ தங்கள் பெருமைகளைச் சொல்லிக் கொள்வதுண்டு. ஆனால் இதே காரியத்தைமற்றவர் செய்யும் போது கேலி பண்ணு வார்கள். இது இயல்பு தம்மைப்பற்றிச் சந்தர்ப்பம் வரும் போது சொல்லிக் கொள்வதில் தப்பேதுமில்லை. பொய்யான செய்திகளைச் சொல்வது தான் தவறு.

மனிதனின் கீர்த்திகள் ஒரு வட்டத்திற்குள் பூட்டப்பட்ட தல்ல. அவனது ஆன்மாவின் தூய்மை உலகிற்கு அப்பா லும் பரந்துபட்டது. தூய வாழ்வு வாழ்பவனுக்கு எந்தப் புகழும், பெருமையும், தூற்றுதல், அவமானப்படுத்துதல் எல்லாமே அவனைப் பாதித்து விடுவது மில்லை.

சுய ஆரவாரம், வீண்படோபகாரம், பெருமை பேசுதல் எல்லாவற்றினையும் விட்டெறிந்து, சுய வலிமையுடன் ஆன்ம பலத்துடன்வாழ்பவன்நிலையானவனாவான். ஆன்மபலத்துடன் கல்வி, ஞானம், தன்னம்பிக்கை வீரம்,






வீரியம், நிதானம் உள்ளவர்களின் செயல்களில் குறைக ளைக் கண்டறிவது முடியாத செயல். அவர்களைக் குறை வாக மதிப்பிடுவதும் ஆணவம், அகம்பாவம் பிடித்தவர் என்று எடுத்த எடுப்பில் சொல்லிட முடியாது.

ஒருவரின் பெருமைகளைத் தக்கசமயத்தில் பாராட்டிக் கௌரவித்தல் மானிடப் பண்புமாகும். இன்று உரியவர் களுக்கு உரிய அந்தஸ்து, பதவி, கௌரவம் வழங்காமை யினாலேயே பல பெரியோர்கள், திறமைசாலிகள், வல்லுனர்கள் காணாமல் போவதுடன் பொய்யான, போலியானவர்கள் அந்த இடத்தில் நுழைந்து உலகை அசுத்தப்படுத்தி வருகின்றார்கள். உண்மையானவர்கள் உலகில் பூத்து எழுந்தால், சத்தியத்தின் அற்புதங்களைத் தரிசித்துக் கொள்ளலாம்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
07.09.2008



RangaRakes
Tamilnavarasam.com



# ரசனை

ரசனையுணர்வின்றி வாழ்ந்தால் மனம் மரத்துப் போகும். ரசனையுணர்வு புத்துணர்ச்சியூட்டும். மனதில் கிளர்வூட்டி மனிதனைச் சுறுசுறுப்பாக இயங்க இயற்கை பல கொடைகளை வழங்கியுள்ளது. ஒருவரின் இன்பங்களைக் கண்டு ரசிப்பதே நல்ல ரசனை. பிறர் துன்பங்களைக் கண்டு மகிழ்பவர்கள் உலகினால் இகழ்ச்சிக்குள்ளாவர். கலையுணர்வு மனிதனை என்றும் இளமையுணர்வுடன் இயங்க வைக்கும். ரசனை உயிர்க்குப் போஷனையூட்டும்.

ரசனை உணர்வின்றி வாழ்க்கை ருசிக்காது, ஜடம் போல் இருப்பது மாந்தர்க்கு உடந்தையானது என்று எவரும் சொன்னதில்லை. உணர்வுள்ளவன் மனிதன். துன்ப உணர்வுகளை நிர்மூலமாக்க ரசனை என்கின்ற ஔடதம் கட்டாயம் தேவைப்படுகின்றது.

என்றும் புத்துணர்ச்சியுடன் இருப்பவர்க்குக் குதூகலம் தானாகவே வரும். மனிதர்க்கு மட்டும் மகிழ்ச்சி சொந்த





மானதுமல்ல. சகல உயிரினங்களுமே தம்முள் ஒரு ரசனை உணர்வுடன் குதூகலத்துடன் வாழும்போது நாம் மட்டும் மௌனியாக, பற்றற்ற துறவிபோல், சும்மா இருக்க முடியுமா? கரும்திராட்சையெனக் கண்விரித்துக் குமிழ்ச் சிரிப்புடன் குழந்தை சிரித்து நோக்குகையில், முகம் திருப்ப எமக்கு மனம் வருமா?

மௌனமாக இருந்து ஆன்மாவை வளப்படுத்துதலும் ரசனை உணர்வுடன் தன்னைமறந்து, உலகோடு லயிப்பதும் வெவ்வேறான விஷயங்கள். ஆயினும் எல்லாமே ஆன்மாவை வசப்படுத்தும் இயல்பேயாம். உலகில் நடக்கும் இயற்கை நடப்புகளைப் பார்த்து நாம் என்னவெல்லாமோ நினைக்கின்றோம். நல்ல விஷயங்களில் மட்டும், எமது புலன்களைச் செலுத்திச் சந்தோஷம் காணவேண்டும்.

தவிர, யாரோ ஒருவர் நடக்கும்போது தவறி விழுவதைக் கண்டதும் உதவி புரிதலைவிடப் பார்த்து ரசிப்பதோ மனித நல்நடத்தையாகுமா? ஒருவன் துன்பங்களே துன்மார்க்கர்களுக்கு நல்விருந்தாகும்.முற்காலக்கதைகளில் மன்னர்கள் தங்கள் கேளிக்கைக்காக அடிமைகளை இம்சித்து அவர்கள் படும் இன்னல்களைக் கூடி இருந்து கை கொட்டிச் ரசிப்பதைப் படித்திருக்கின்றோம்.

சர்வாதிகாரிகளில் பலர் தம் எண்ணம் ஈடேறுவதற்காகச் செய்யும் செயல்கள் காலப் போக்கில் அதுவே சித்திரவதை செய்தலை ஒரு பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர்.



RangaRakes
Tamilnavarasam.com

அன்பு இல்லாதவர்கள் கூட ஏதோ துரதிஷ்டவசமாக பேரரசர்களாகி விடுவதுமுண்டு. எனினும் எமது முன்னோர் கள் எத்தனை இடர்கள் சூழ்ந்திடினும் தாங்கள் கலை, இலக்கியப் படைப்பினூடாகத் தாங்கள் சந்ததியினர்களுக்கு மனங்களைச் செம்மைப் படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிந்து கொண்டார்கள். இயற்கையுடன் இணைந்து வாழ்பவர்களுக்கு ரசனை உணர்வு தானாகச் சொரிந்து கொள்ளும். வானில் பறக்கும் புள் இனம், தரையில் தவழும் பிராணிகள் நீரில் நீந்தி விளையாடும் மீன் இனங்கள், அவைகளின் வனப்புக்கள் எல்லாமே இறை கொடைகள்!

எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றிப் பறந்து திரியும் சிட்டுக் குருவிகள், தன் அலகுகளால் கொண்டுவந்த உண வைத் தன் குஞ்சுகளுக்குத் தாய்மை உணர்வுடன் தாய்ப் பறவை ஊட்டிவிடும் அழகு, கன்றுக்குட்டி துள்ளி ஓடும் அழகை ரசிக்கும் தாய்ப் பசுவின் பெருமிதங்களை நாம் பார்க்கும் போது எமது மனம் எம் வசமிழக்கின்றது. வேட்டையாடும் கொடும் மிருகங்களேயாயினும் கழுகு போன்ற பொல்லாத பட்சிகள், சுறாக்கள், திமிங்கிலங்களின் ஆற்றல்மிகு உருவங்களிலும் அழகு உண்டு. கம்பீரம் உண்டு. ரசிக்க வேண்டுமல்லவா?

கொடும்வனத்தில் கூட, தங்கள் குட்டிகள் துள்ளி விளையாடுவதை சிங்கம், புலி என்ற எல்லா மிருகங்களுமே பாசத்துடன் பெருமித பார்வையுடன் நோக்குகின்றன. எந்த





நாளும் காணும் சூரிய உதயம், பௌர்ணமிச் சந்திரன், பிறை நிலவு சில் என்ற காற்று, பூத்துக் குலுங்கும் மரங்கள் இவைகளை நாம் நேற்றும் பார்த்தவை தானே,இதில் என்ன விஷேஷம் வேண்டிக்கிடக்கின்றது என்று சொல்லி ஒதுக்கி ஒதுங்க முடியுமா?

சின்னக் குரங்கு ஆட்டம் போட்டு ஓடினால் அதுவும் அழகு. கிளிகள் கொத்திக் கொத்திப் பழங்களைச் சுவைப்பது தனி அழகு. எத்தனை வர்ணங்களுடன் மேனி எங்கும் கொண்டு எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியபடியே நீந்தும் எல்லா மீன் இனங்களும் கொள்ளை அழகுதான்.

ரசிப்பதற்கும் கொடுப்பனவு வேண்டும். ஏன் என்றால், படுவேகமாக ஓடிக்கொண்டிருக்கும் அதிர்வு மிகு உலகத்தில் பலருக்கும் எதையும் பார்த்துச் சந்தோஷப்படவே நேரம் இருப்பதில்லை.

ஒரு பசு தன் கன்றை ரசித்துப் பாலூட்டி நாவால் நக்கி முகர்ந்துகொள்ளும் நேரத்தை சில மனித இனத்துத் தாய்மார்கள் செலவிட அவர்களுக்கு நேரம் வாய்ப்பதில்லை. பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகளைப்பார்க்கப் பல பெற்றோர் களுக்கு நேரம் கிடைப்பதில்லை. என்னதான் உழைக்க வேண்டியிருந்தாலும் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இயற்கை யை ரசிக்கத் தயங்கும் மனிதர்கள் இழந்து போகும் மகிழ்ச்சிகளின் அளவுகளை அளவிடமுடியாது.



RangaRakes

Tamilnavarasam.com

ஆயினும் எல்லா மனிதர்களுமே ரசனை உணர்வுக்கு முக்கியத்துவம் அளிக்காதவர்கள் அல்லர். இன்றுள்ள நாகரிக உலகில் கலை நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலமான கேளிக்கை விஷயங் களைப் பலரும் நேரம் போவது தெரியாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இயற்கையான நிகழ்வுகள், இயற்கைக் காட்சிகளை ரசிப்பதுடன் நாமாகப் கலைப் படைப்புகளை பயின்று கொள்வதும் நுகர்வதும் என்று பல வழிகளில் எங்கள் மனதைப் பண்படுத்தியேயாக வேண்டும்.

நல்ல ஒரு கலைஞனை உருவாக்குவதே பெற்றோர் மற்றும் அவரைச் சார்ந்தோருக்குமான பெருமைமிகு பணியுமாகும். சின்ன வயதிலேயே இயல், இசை, நாடகத் துறைகளில் மட்டுமல்ல, விளையாட்டுத் துறைகளில் புலனைச் செலுத்துவதால் எதிர்கால செல்வங்கள் வளம் மிக்க உலகைப் படைக்கப் புறப்படுவார்கள்.

இன்று, மிகவும் ஒப்பற்ற திறமைசாலிகளான கலை ஞர்களைப் பலர் இனம்கண்டு கொள்ளாமல் அவர்கள் ஒதுங்கி விட்டார்கள். நல்லறிவுடன் கூடிய பொழுது போக்கு அம்சங்களை விடுத்துக் கலை, கலாசாரப் பண்புகளை வேருடன் கழற்றுகின்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பதே கௌரவ மானது என்று கருதுபவர்கள்காலப்போக்கில் ஒரு வக்கிர புத்திக்காரர் களாகவே, மாறிவிடுவரன்றோ!

நல்ல இலக்கியங்களைப் படிக்கும் வாசகர்கள்





குறைந்து விட்டார்கள். மாறாக விரசமான விஷயங்களே தரமான முற்போக்கான எழுத்துக்கள் என்று சொல்லித் திரிபவர்களை என்ன செய்ய? நல்ல ரசனைகளை மழுங்கடிக்கச் செய்பவர்களைவிடக் கொடுமைக்காரர்கள் வேறில்லை.

முன்னைய இலக்கியங்களைப் போல் ஏன் இன்ன மும், எம்மால் படைக்க முடியவில்லை? முன்பு பார்த்த அதே கலைவடிவங்கள் சிற்பங்களையே இன்றும் பார்க்கின்றோம் ரசிக்கின்றோம். அவ்வண்ணமே உருவாக்க வல்ல முழுமை யான சிற்பிகளை நாம் இன்னமும் உருவாக்கவில்லையே? ஏன்?

தமிழ் இலக்கியத்திற்கான நோபல்பரிசை எந்த ஒரு தமிழரும் இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் உலகத்திலேயே அற்புதமான காவியங்களைப் படைத்த எம் முன்னோர்களின் படைப்புக்களைப் பார்த்தும், இன்னமும் உலகை ஈர்க்கும் வண்ணம் இலக்கியத்தை எதற்காகப் படைக்காமல் இருக்கின்றோம்? ரசிக்கின்ற நாம் படைக்கும் பிரம்மாக்களாகஉருவாக வேண்டும். எமது படைப்புக்களால் உலகம் மேன்மை பெருமையடைய வேண்டும்.

ஆனால் இன்று கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டிச் செலவு செய்து உருவாகும் தமிழ் திரைப்படங்கள் மக்களின் எண்ணங்களில் குப்பைகளையே கொட்டுகின்றன. ஒரு தனிமனிதன் சொத்துச் சேர்க்கும் இடமாக திரையு லகம் மாறிவிட்டதே ஒழிய நல்ல ரசனை வளர்க்கும் பூமியாக



RangaRakes Tamilnavarasam.com

இது இல்லை.

காடைத்தனமும், வக்கிரபுத்தியும், ஆபாச நடனமும் கோமாளிக் கூத்துக்களும் ரசனைக்கு உரியன அல்ல. வெளியில் சாமியார் வேடம் போட்டுச் சினிமாவில் நாயகனா கச் சண்டைபோட்டு அரைகுறை ஆடை அணிந்த நாயகியு டன் சரசமாடி ஆடிப்பாடி நடிப்பதைப் பார்த்தால் எந்த ஆத்மாவும் தூய்மைபெறுமா ஐயா....?

இளவயதினரை உருப்படி இல்லாத ஜந்துக்களாக்க முனையும் கலைஞர் என்று சொல்லிக்கொள்ளும் கேவலம் கெட்டவர்கள் பிடியில் இருந்துமீட்க நல்ல தெய்வீகக் கலைஞர்களை உருவாக்குவோம். பொழுது போக்கு என்பது எமக்குச் சந்தோஷத்தையும், அதேசமயம் எமது சிந்தனை க்கு விருந்தாகவும் அமைய வேண்டுமல்லவா?

இன்று, உலகில் உள்ள அரசியல், சமூக மாற்றங் களால் பல நாடுகளில் போர் முழக்கங்களே வலுவேற்றப் படுகின்றன. நாடுகளிடையே சுமூகமான உறவுகள் இன்மை யால் பொருளாதார வளத்தை மேம்படுத்தலை விடப் போருக்கான முனைப்புகளில் முந்திக் கொள்வதால் மக்கள் சிரிக்கவே மறந்து போகின்றார்கள். எந்தச் சூழலிலும் மனிதன் சிரிக்காமல் விட்டால் அவன் நித்திய அழுமூஞ்சி யாகி விடுவான். ஏன் சிலர் சிரிக்கவே பயப்படுமாற்போல் நடந்து கொள்கின்றனர்.





"சிரிப்பு" என்கின்ற உன்னத ரசனைக்குட்பட்டால், எந்தத் துயரும் எம்மை அணுகாது. அத்துடன் மனம் விட்டு வயிறு குலுங்கச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்றும் பெரியவர்கள் சொல்வர். நல்ல நகைச் சுவைப் பேச்சுக்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதே ஒரு இனிமையான சுகானுபவம் தான்.

வேடிக்கை அம்சங்கள் நிறைந்த கலை நிகழ்வுகளே மக்களின் மனங்களில் இடம்பிடிக்கின்றன. கோமாளி ஒருவன் குதித்து ஆடும்போது சின்னக்குழந்தைகள் கூடக் கைகொட்டிச் சிரிக்கினர். இயற்கையின் ஒவ்வொரு அசைவு களையும், பெரியவர்களை விடக் குழந்தைகளே அதிகமாக ரசிக்கின்றன.

நிலவை அசையும் மரத்தை எங்களை விடப் பிள்ளைகள் தானே ரசிக்கின்றனர். நிலவைக் காட்டினால் குழந்தைகள் உணவை உண்கின்றனர். ஆனால், பெரியவர் களோ மனம் சஞ்சலமடைந்தால் சாப்பிடமாட்டார்கள். அந்த நேரம் இயற்கையை ரசிப்பதே அவர்களுக்குச் சுமையா கின்றது. மனதை ஆசுவாசப்படுத்த நாம் இடம் கொடுக்க வேண்டும். நேரத்திற்குத் தகுந்த வண்ணம் சிலசமயம் எம்மை நாம் மாற்ற வேண்டியுள்ளது. மனம் சோர்வான வேளையில் சோர்வை போக்கிட தொடர்ந்தும் சோகமான விஷயங்களில் புலனைச் செலுத்தக்கூடாது.

இன்று பலரும் இரவு முழுவதும் சோகமான எண்ண



RangaRakes
Tamilnavarasam.com

ங்களை உண்டு பண்ணும் தொலைக் காட்சி நாடகங்களைப் பார்த்து உறங்கப் போகின்றார்கள். இரவுநேரத்தில் சந்தோஷமூட்டும் எண்ணங்களுடன் உறக்கத்திற்குச் செல்லுங்கள். உடலைச் சுத்தமாக வைத்து நல்ல இனிமை யான இசைகளைக் கேட்டபடியே கண் அயர்ந்து பாருங்கள். அந்த சுகானுபவத்தைவிட வேறென்ன வேண்டும். சிரித்துக் கொண்டே உறங்குக! அழுதபடி படுக்கைக்குப் போக வேண்டாம்!

மனதை ஆசுவாசப்படுத்திக் குடும்பத்தினர்களுடன் மன அழுத்தமின்றிச் சந்தோஷமாக உரையாடி மகிழ்வீராக! நல்ல ரசனைக்குரிய விஷயங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். நல்ல நூல்களை வாசித்தால் அதுபற்றிப் பேசுங்கள். இவைபோன்ற நூல்களையே திருமணம், பிறந்த நாள் வைபவங்களுக்குப் பரிசாகக் கொடுங்கள்.

இரவும் அழகே! பகல் பொழுதும் அழகே! ஒவ்வொரு பொழுதிலும் ஒவ்வொரு தோற்றங்கள்! அதனுள் புகுந்து எம்மை வசப்படுத்துவோம். பகலில் தோன்றும் ஒளியில் பல காட்சிகள் தெரியும் ரசிக்கின்றோம். எல்லா உயிர்களுமே விழித்தெழுந்து சப்தமிட்டுச் சம்பாஷனை செய்தபடியே இயங்குகின்றன.

ஓ... என் இறைவா! பகல் பொழுதினில் எத்தனை காட்சிகளை எனக்குக் காட்டுகின்றாய். நான் விழித்தபடியே உறங்குகின்றேனே. இவைகளை முழுமையாக ரசித்து





உணர அருள் செய்!.. தேவே! அதுபோல், இரவுப் பொழு தின் கருமைப்பிடிக்குள் உலகம் உறங்கிய படியும், விழித் தும் இயங்குகின்றதே? இறைவா....! எத்தனை அற் புதங்களைக் காட்டி நிற்கின்றாய். அழகான கோடிக் கணக்கான விண்மீன்கள், வானத்தில் மிதக்கும் நிலவு, ஓடும் மேகங்கள் எத்தனை அற்புதப்படைப்பு?

இருட்டுடன் போரிடும் மின் குமிழ்கள், நகரங்களை வீதிகளை, சகல வீடுகளையும் ஒளியேற்றுகின்றன. கேளிக் கைக் கூடங்கள், எத்தனை வசீகர மூட்டும் காட்சிகள் பலவும் இரவில்கூட காண்கின்ற பிரமிப்பூட்டும் காட்சிகள்! தூங்கும் போது தானே பலர் தம்மை மறக்கின்றார்கள்.

இரவு நேரத்து அமைதியை நன்கு ரசித்து அனுபவிப் பீர்களாக! இரவு நேரத்து இளம்காற்றும் மெல்லிய குளிரும் தேகத்திற்கு இதமானது.இந்த உணர்வுகளைக் கிராமத்தில் சஞ்சரித்து உணர்ந்தால் கோடி சுகம்! இயற்கைச் சுகங்களை இழப்பது, வென்றுவிட்ட அதிஷ்ட லாபச் சீட்டை வேண்டுமென்றே தொலைப்பது போலத்தான்.

மழைக்காலத்தில் அதனை இழக்காமல் அது தரும் குளிர்ச்சியில் நுளைந்து, நனைந்து கொள்வோமாக! மழைச் சாரலில் நுழைந்தால் தேகமே புது வடிவம் பெற்றது போலாகும். ஓடுகின்ற மழை வெள்ளத்தில், குழந்தை களுடன், குழந்தையாக மாறிக் காகிதக் கப்பல் கவிழாமல் செல்லும் அழகைப் பார்த்து ரசிக்க வேண்டும். அதை



RangaRakes

Tamilnavarasam.com

விடுத்து, மழைவந்தால் வெளியில் செல்ல முடியவில்லையே என அலுத்துக் கொள்ள வேண்டாம். மழையை ரசித்தபடியே குடைபிடித்தபடி நடந்து போவதும்கூடச் சுகமானதே! முழு உலகத்தையுமே குளிரூட்டிச் சிலிப்பூட்டுவது மழை அல்லவா? உயர்ந்த மலைகளுடாக வீச்சுடன் ஓடிவரும் நீர்வீழ்ச்சிகள், அலைகளை அள்ளி வீசும் பெருங்கடல், பெருமணல் பரப்புகள் அடர்ந்த காடுகள், சமவெளிகள், இவைகளைப் படங்களில் பார்ப்பதைவிட நிஜங்களாகவே நேரில் பார்த்து ஏறி நடந்து, ஓடிக்கிடந்து, நுகர்ந்து, புரண்டு எழுந்து ரசிப்பீர்களாக நண்பர்காள்! முழுமையாக ரசியுங்கள்.

வாழ்க்கை வாழ்வதற்கே! ரசிப்பதற்கே! எமது ஒவ்வொரு செயல்களுமே ரசனையுடன் அமைதல் வேண்டும். உண்ணும் உணவை ரசனையுடன் உண்ணுங்கள். வேண்டா வெறுப்புடன் உண்ணவேண்டாம். சந்தோஷமாக பரந்த எண்ணங்களுடன் சிந்தனைகளைப் பரவவிடுங்கள். நவரசம் என்பார்கள். அதனுள் சோகத்தையும் ஒரு ரசம் என்பர். அதனால் துன்பங்களையும் தூக்கித் திரியக் கூடாது. துன்பம் வந்தால் அழுது தீர்த்ததும் பின்பு எழுந்து துணிவுடன் உலா வாருங்கள்!

நீங்கள் அழுவது கூடச் சிலருக்குச் சந்தோஷமாக இருக்கலாம். அந்தச் சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்க வேண்டாம்.






நல்ல நகைச்சுவை உணர்வுடனும் அழகை ஆராதிக்கவும், கலைகளை நேசிக்கவும், குழந்தையுள்ளத்துடனும், ஒரு உணர்ச்சிபூர்வமான காதலர்களின் துடிப்புடனும் இயங்கினால் நல்ல ரசனை மிகு ரசிகனாக, உலகை நேசிக்கும் அன்பனாகவே என்றும் இருப்பீர்கள்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
31.08.2008



RangaRakes
Tamilnavarasam.com



# தனித்துவம்

ஆணவச் செருக்குடன் சனங்களுடன் சேராமல் வாழ்வது தனித்துவமல்ல. தனித்துவம் தனிமனிதனுக்கு மட்டுமானது அல்ல. சமூகம், இனம், மதம், நாடுகள் எல்லாவற்றிற்குமே தனித்துவமான இயல்புகள், கலை, கலாசாரப் பண்பாடுகள் உண்டு. எளிமை தூய்மை தோழமை, அன்புடைமையுடன் வாழ்பவர்கள் என்றும் புது மனிதனாகத் தனித்துவமாக மிளிர்வர். வேற்றுமை பாராட்டுபவர்கள் சமூகத்தால் விரட்டப்படுவர். அன்பு கொள்பவர் ஆற்றல் பன்மடங்காகும். ஒழுக்கத்துடனான தனித்துவம் புனிதத்துவமாகும்.

நற்பண்புகளுடன் இணைந்து மிளிரும் தனித்துவம் மிக்க சிறப்பு ஆளுமைகள் பிரமிப்பு ஊட்டுவன. நான் தனித்துவமானவன் என ஆணவச் செருக்குடன் சொல்பவர்கள் அவர்கள் என்ன குறிப்பிடத்தக்க கொடுப்பனவுகளை உலகிற்கு ஈந்தார்கள் என்பதனைத் தமக்குள் கேட்டுக் கொள்வார்களாக!





என்னதான் திறமைகள் வல்லமைகள் இருந்திட்ட போதிலும் கூட ஒருவன் ஒழுக்க சீலர்களாக வாழாமல் இருந்தால் அவர்களுடைய தனித்துவம் எவராலும் சிலாகித்துப் பேசப்படாது போய்விடும். "மனுஷனுக்கு, மற்றவர்களுடன் பேசப் பழகவே தெரியவில்லை. இவர் எல்லாம் என்ன மனுஷன்? என்ன படித்துக் கிழித்துவிட்டார்". என்று தான் சொல்லிக்கொள்வார்கள்.

ஆயினும், தனித்துவப் பண்புகள் தனி ஒரு நபருடன் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல. சமூகம், இனம், மதம், நாடு என வியாபகமானது. மனிதன் இவைகளுடன் இரண்டறக் கலந்து நிற்பதால் அவன் தான் சார்ந்து வாழும் சமூகத்துடன் மதம், மொழி, நாடு முதலானவற்றுடன் அவன் தனித்துவ இயல்புகள் கலந்து நிற்கின்றன. அவன் இவைகளில் இருந்துவிடுபட இயலாது. ஏன் விடுபட விரும்புவதுமில்லை.

ஆனால் தமது நாடுகளை விட்டு அந்நிய தேசங்களுக்குப் புலம் பெயர்ந்தோ, தற்காலிகமாகச் சென்று வாழும்போதோ அவர்கள் இனம் சார்ந்த தனித்துவங்களை இழக்கின்ற சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. சிலர் தமது நாடு, மொழி, கலாசாரங்களை மறந்து வாழ்வதையே பெரும் கௌரவமாகவும் கொள்கின்றார்கள்.

ஆனால், தமது, கலை, கலாசாரப் பண்புகளை, மத நம்பிக்கைகளைத் துறந்து வாழ விரும்பாதவர்கள் தங்கள்



RangaRakes
Tamilnavarasam.com

சந்ததிக்குப்பெரும் உபகாரங்களைச் செய்தே வருகின்றனர். ஒவ்வொரு நாட்டின் கலாசாரங்கள் அந்த நாட்டிற்குப் பெரும்பாலும் உகந்ததாகவே இருக்கும் பாரம்பரியமாகவே தத்தமது நாடுகளின் சூழல், சுவாத்தியங்களுக்கு ஏற்ப பழக்க வழக்கங்கள் ஏற்பட்டுவிடுகின்றது. இது இயற்கை நிகழ்வு. இவை எல்லாமே பத்தாம் பசலித்தனமானது என எடுத்த எடுப்பிலேயே சொல்லி விட முடியுமா?

மிக எளிமையான வாழ்க்கை முறையே எமக்கு உகந்தது. எமது மனவளத்தை உடல் ஆரோக்கியத்தினை மேம்பாடடையச் செய்வன. குளிர்பிரதேச மேற்கத்திய நாட்டின் வாழ்க்கை முறையுடன் எமது நாட்டின் நடைமுறைகள் ஒத்துவராது விட்டாலும் கூட அதுவே ஒரு நல்ல நாகரிகமானது, என விடாப்பிடியாகக் கைக்கொள்வது தமது இனத்தின் தனித்துவத்தை இழந்துவாழப் பிரியப்பட்டு, தனது இனத்துடன் பிரிந்து வாழப் பிரயத்தனப்படும் வருத்தத்திற்குரிய செயல்.

ஒவ்வாத பழக்கத்தை வேண்டுமென்றே கடைப்பிடிக்க எண்ணுதல் சௌகரியமான சந்தோஷ மூட்டும் கருமம் என எவராவது எண்ணி வாழ்ந்தால் அதன் பயன் அவன் தான் வாழும் சமூகத்தில் இருந்து அவனாகவே நழுவிச் செல்லும் கோழைத்தனமான முட்டாள் போக்குத்தான். உணர்க!

ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு ஒரு குறிப்பிட்ட, தனித்துவமான குண இயல்புகள் இருக்கத்தான் செய்யும். இவை





புதுமையோ, மற்றவர் இகழத்தக்கதுமல்ல. விஞ்ஞான ரீதியில் இவைகள் நிரூபிக்கப்பட்டு இருக்கின்றன. பரம்பரை இயல்புகள், ஒருவனைக் கட்டுப்படுத்துகின்றன.

ஆனால் எந்த ஒரு மனிதனும் நற்பண்புகளைக் கொண்டு இயங்குவதற்கு அவன் பரம்பரை இயல்புகள் தடையானவை என்று சொல்லிட முடியாது. நல் ஒழுக்க நெறியுடன் எத்தரத் தாரும் சிறப்புடன் வாழமுடியும்.

ஒரு இனத்தின் மதச்சடங்குகள், நடை உடை பாவனைகள், உணவுப்பழக்க வழக்கங்கள், பேசும் முறைகள் இன்னும் ஒரு இனத்தவர்க்கு வியப்பாகவும் இருக்கலாம்.

சீக்கிய சமூகத்தில் ஆண்கள் பெரிய தலைப்பாகை அணிவார்கள். இஸ்லாமியர்கள் தொப்பி அணிவார்கள், இந்துக்கள் தமது மத பாரம்பரியத்தைக் காட்டும் சின்னங்களுடன் தமது தோற்றத்தை வெளிப்படுத்துவார்கள். இவை அவர்களுக்கே உரிய தனித்துவ உரிமை. அப்படித் தோற்றத்துடன் திகழ வேண்டாம் என்று சொல்ல எந்த நாட்டுச் சட்டமும் தடைவிதிக்க இயலாது.

மேலும் தனிமனிதன் ஒருவனின் மேலான தனித்துவத்தைக் குந்தகப்படுத்துதல், அவற்றினை அகற்றி ஸ்தம்பிக்கும் நடவடிக்கைகளில், ஈடுபடுதல் அவனது தனிமனித சுதந்திரத்தை, சுயகௌரவங்களை பாதிப்புக்குள்ளாக்கும் நாகரிகமற்ற செயலுமாகும்.



RangaRakes
Tamilnavarasam.com

ஒவ்வொருவரும் தமக்குரிய தொழிலைச் செய்யும் போது அனுபவ முதிர்ச்சி காரணமாகவும்,செய்கருமத்தின் ஆர்வம் காரணமாகவும் விசேட திறமைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால் எல்லோருமே தமது பணியில் தனித்துவமான கீர்த்திகளைப் பெறுவதில்லை. அர்ப் பணிப்பு, கடமை உணர்வுமிக்கோரால் மட்டுமே எக் கருமத் திலும் விசேட தகுதிகளைப் பெற்றுக் கொள்ள முடிகிறது.

எல்லோரும் தான் உணவு விடுதிகளை நடாத்தினா லும் கூட சில உணவு விடுதிகளை மட்டும் மக்கள் நாடுவது ஏன்? குறிப்பிட்ட கல்வி நிலையங்களை மட்டும் மாணவர்கள் நாடி வருவதுமேன்? எவ்வளவு பெரிய கல்வி கற்றவர்களிடம் இருந்தும், பெற முடியாத அறிவைச் சில குறிப்பிட்ட ஆசிரியர்களிடம் மட்டும் பெறுதற்கு முக்கியமான காரணம் அவர்களது தனித்துவமான கல்வி கற்பிக்கும் ஆளுமை, செயல்திறன், சிரத்தையேயாகும்.

வித்தைகளைக் கற்பதைவிட அதனை உரிய முறையில் செயற்படுத்தலே மேலான வித்தையாகும். படித்த கல்வியை நல்ல உத்திகள் மூலம் மாணவர்களுக்குப் போதிக்க வேண்டுமல்லவா? தவறான கருத்துக்களையே பிடிவாதமாக ஏற்று நடப்பவர்கள் சிலர் தங்களை ஓர் தனி யான நபராகக் காட்ட முயற்சிக்கின்றார்கள்.

"நான் கண்டபடி நட்புக்கொள்வதில்லை, பொது வைப வங்களுக்குச் செல்வதும் இல்லை. இன்று எல்லோருமே சுயநலவாதிகளாக இருக்கின்றார்கள், எனவே நான்





ஒருவரிடமும் நட்புக்கொள்வதுமில்லை" என்று, கர்வமாகச் சொல்பவர்கள் தாங்களே எல்லோருக்கும் மேலான நியாயவான் என எண்ணிக் கொள்வதுமுண்டு. குற்றம் சொல்பவன், கேலி, ஏளனம் செய்பவன் தன்னை ஒரு அறிவாளி, அனுபவஸ்தன் என்று சொல்லிப் பெருமைப்பட இயலாது.

இத்தகையவர்கள் சமூகத்தினை அந்நியப்பட்ட நோக்கான பார்வையில் பார்த்து நின்று தங்களை அதி மேதாவியாக எண்ணி விமர்சனம் செய்வதே ஒரு வேடிக்கை தான். இந்த லட்சணத்தில் நாங்கள் எந்த வீண் வம்புக்கும் போவதில்லை. கேடு கெட்ட சமூகம், நாம் தான் என்றும் விலகி நிற்கும் உண்மை மனிதர் என்று தங்களது தனித்தன்மை பற்றிச் சொல்லித் திருப்திப்பட்டுக் கொள்ளுவார்கள்.

நாம் எந்த ஒரு உயிரினத்தில் இருக்கும் தனித்துவ பண்பை நோக்குவோம். கொடிய மிருகங்களில் இருக்கும் சிறப்பியல்புகளைப் பார்ப்போம். மனிதர் போல் அவை களின் குணம் இருக்காது விட்டாலும் கூட ஏதோ ஒரு தனித் துவ பண்புகள் அவைகளுக்கும் இல்லாமல் இருக்காது. கடவுள் சகல உயிர்களுக்கும் அவை வாழும் வாழ்வுக்கு ஏற்ற சூழ்நிலைக்கு ஏற்ப உடல் அமைப்பு, உணவு முறைகள், குணங்களை ஏற்படுத்தியுள்ளார். அணிலின் மென்மையான உடல் அமைப்பும், முயலின் வேகமும், சிங்கத்தின் கர்ச்சனையும், மிடுக்கும், பசுவின் சாதுவான குண இயல்பும், திமிங்கிலத்தின் விசால தோற்றமும், பலமும்



RangaRakes

Tamilnavarasam.com

அதேசமயம், கண்ணுக்குத் தெரியாத எத்தனை எத்தனை உருக்கள் அவைகளுக்கே உரிய தனித்தனி குண இயல்புகள்!

மனிதர்கள் மிகவும் சிரமப்பட்டு பெருமுயற்சி செய்து தமது ஆற்றல்களை வளர்க்க வேண்டியுள்ளது. ஆனால் மிருகங்களுக்கும், பறவை, நீர்வாழ் உயிரினங்களுக்கும், ஏனைய சிற்றுயிர்களுக்கு மான வியத்தகு ஆற்றல்கள் இயல்பாகவே இறைவனால் கொடுக்கப்பட்டுவிடும். ஆனால் மனிதன் தன் ஆளுமையை தன் முயற்சியால் வளர்த்துக் கொண்டாலும் கூட எல்லையில்லாத அறிவிருந்தும்கூட பூரண திருப்தியற்றவனாகவே வாழ்ந்து கொண்டிருக்கின் றான். இயல்பான திறன் கொண்டவன். தன் சுய உழைப்பி னாலேயே தன்னைப் புதுப்பிறவி எடுத்த புது மனிதனாக ஆக்க வேண்டியுள்ளது.

அதிகம் உண்ணுவதைவிடப் பல மடங்கு அறிவை சிரசிற்கு உவப்பாக அளிக்க வேண்டியுள்ளது. வாழ்க்கையில் எமக்குரிய நியதி இதுதான் என்று கண்டதையும் ஏற்றுக் கொண்டால் அவன் தனித்துவமான உன்னத மனிதனாகி விடமுடியாது. விதியை அமைக்கும் புதுவிதியைச் சமைக்கும், நவயுக மனிதனாகுவோம்.

சிந்தனை செய்யத் தயங்குபவன் முன் உதாரண புருடனாக முடியாது. இன்று உலகத்தில் பலருமே தங்கக் கூண்டினுள் வாழ்ந்து கொண்டு உள்ளத்திற்கு உவப்பான எல்லையில்லா ஆனந்தத்தை மறந்து வாழ்கின்றார்கள்.





தன்னைக் கட்டி முடங்கி வாழ்பவனால் உலகத்தை அன்புடன் நோக்குகின்ற சுய ஆதிக்க வலுக் கொண்டவனா கத் தன்னை மாற்றி அமைக்கவும் இயலாது. விசாலமான உலகில் சுற்றி வாழ இறக்கைகள் தேவையில்லை. தன்னை ஒரு புது மானுடனாக்கி எல்லை கடந்த ஆன்மாவாகிட தனித்துவம் மிக்க களங்கம் களைந்த இதயம் கொண்டாலே போதும்!

ஒரு எளிமையான வாழ்வினை வாழ்ந்து கொண்டி ருக்கின்ற தென் இந்திய குன்னூரை அண்மித்த, பழங்குடி இனத்தினரின் தனித்துவமான வாழ்க்கை பற்றி செய்தி ஒன்றை அறிந்தேன்.

அவர்கள் வீடுகளுக்குக் கதவுகள் இல்லை. அவர்களது வீட்டிற்கு எவராவது உறவினர்கள் வந்து செல்ல அனுமதி தேவையில்லை. ஒருவர் கூட பசித்திருக்க அவர்கள் அனுமதிப்பதில்லை. உணவு நேரத்தில் ஒரு வீட்டில் உணவு தயாரிக்க நேரம் சென்று விட்டால் தாராள மாக அடுத்த வீட்டிற்குச் சென்று உணவருந்தலாம். ஒருவருக் கொருவர் பண்டங்களைப் பரிமாறிக் கொள்வார்கள். சாதாரணமாக எமக்குள்ள கூச்ச, அகம் பாவ உணர்வு களுடன் தங்களுக்குள் பழக மாட்டார்கள். வெளிப்படையாக அன்புடன் பரிவுடன் பழகிக் கொள்வார்கள்.மேலும் குறிப்பிட வேண்டிய விஷயம் என்னவெனில், பகல் பூரா உழைத்த வர்கள் இரவு ஆனதும் எல்லோருமே ஒன்று கூடிவிடு வார்கள். முதியவர் இளைஞர் முழுக் குடும்பத்தினருடன்



RangaRakes
Tamilnavarasam.com

குழந்தைகள் உட்பட எல்லோரும் இணைந்து ஆடிப்பாடி மகிழ்ந்து கொண்டாடுவர். அவர்கள் மனதில் சுமைகள் இல்லை. பணம், பண்டம், செல்வம் இல்லையே என்ற ஏக்கம் சிறிதளவும் கிடையாது. எந்நாளும் அவர்களுக்குப் பண்டிகை, திருநாட்களே தான்!

மேலும் அவர்கள் பரந்த மனத்தினால் எதனையும் எதிர்பார்த்து ஏங்காத இயல்பினால் நோய்,நொடி இன்றி முழுமையான தேக ஆரோக்கியத்துடன் இருக்கின்றார்கள். மன மகிழ்வு பூரணமாக இருந்தால் நோய்கள் எம்மை வந்தடைந்து விடாது அல்லவா?

மன அழுத்தம், எல்லாவற்றையும் மூடி மறைத்தும் வாழும் முறைகளினால் மனிதன் சோர்வடைந்து தன்னிலை இழந்து தவிக்கின்றான்.

தனித்துவமான வாழ்வு என்பது, ஒரு முரண்பாடாக சமூகத்தில் இருந்து ஒதுங்கி இருப்பது அல்ல. மக்களோடு மக்களாக அதே சமயம் இதயத்தை அகல விரித்து, அதனுள் அன்பை மட்டுமே அடக்கிப் பல சாதனைகளைத் தன் மனோ வலிமையானால் செய்து கொள்ளும் அற்புதச் சாதனை நிலையுமாகும்.

சாதனை செய்ய விரும்புபவர்கள் தமக்குள் புது சக்தியை ஏற்படுத்தியேயாக வேண்டும்.மனித இதயங் களைப் புரிந்து கொள்ளாமல் நாம் எம்மை மட்டும் வளப் படுத்திட முடியாது. காரிய சித்தி பற்றிப் பேசுகின்றோம்.





ஒருவனது வெற்றிகளும், கிடைக்கும் புகழும் அவனது முயற்சியினால் கிட்டினாலும் கூட, கண்ணுக்குப் புலனாகாத பலரது ஆரோக்கியமான ஆசிகளும் அதனுள் இணைந்திருக்கின்றன.

நீங்கள் தூய ஆடை உடுத்து தெளிந்த மனதுடன் ஒரு காரியத்திற்குச் செல்கின்றீர்கள். வீட்டில் பெற்றோர் களின் ஆசி என்றும் உங்களுக்கு உண்டு. அதேசமயம் உங்களை பேருந்தில் கொண்டு செல்லும் சாரதி சிரித்த முகத்துடன் வழியில் கண்டு கொள்ளும் நண்பர்கள், இனம் தெரியாத அன்பு உள்ளங்கள், என எல்லா நெஞ்சங்களின் கூட்டு இணைப்பினால்தானே நாம் செய்கின்ற செயல்கள் திருவினையாகின்றது.

தொடர்ந்து கிடைக்கும் வெற்றிகளால் நாம் தனித்து வமான திறமைசாலிகளாகின்றோம். சமூகம் எம்மை பார்க் கின்றது. புனிதமான இந்த உலகம், எங்களை நேசிக்கின் றது. "நான் என்றும் "அன்பு" எனும் சிரஞ்சீவித் தன்மையை நுகர்ந்துவாழப் பிரியப்படுபவன்," என்று ஒவ்வொருவரும் எண்ணினால் தனி ஒரு மனிதனில் ஆற்றல் பன்மடங்காகப் பரிணமித்து, அவனுள் திவ்ய ஒளி புகுந்து அவனை மாமனிதனாக மாற்றிவிடும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
17.08.2008



RangaRakes
Tamilnavarasam.com



# உங்களை விரும்புங்கள்!

உங்களை நீங்கள் முதலில் விரும்புங்கள். தன்னம்பிக்கை இதனால் வலுப்படும். பயம், சந்தேகம், கோப உணர்வுகள், எமது சக்தியை மழுங்கடிக்கும். தன்னை விரும்புபவன், உலகையும் நேசிப்பான். தனது, குறை, நிறை, பலவீனங்களை அவன் ஒத்துக் கொள்வதால் உலகில் எவரையும் அன்பு பாராட்டும் இயல்பு தானாகவே வரும். உங்கள் அழகை, உங்கள் நம்பிக்கைகளை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ளுங்கள். மனித இனம் ஒன்றே. உங்களில் நீங்கள் அக்கறை கொள்வது போல பிறரிடமும் கரிசனை காட்டுவீர்களாக!

நீங்கள் உங்களை முதலில் விரும்புங்கள்! நீங்கள் விரும்பியபடியே செய்யும் கருமங்கள், உங்கள் மீதான நம்பிக்கைகளை வலுப்படுத்தி மேலதிக சக்தியூட்டி விழிப்பூட்டும்.





உங்கள் மீதான எண்ணங்களில் உண்மைத் தன்மைகள் உண்டாக்குதலே முதற் பணியாகிவிட்டால் அச்சம் என்பது ஏது? உண்மையின் அதீத சக்தியினால் உள்ளம் வியாபகமாகும். உண்மையான தூய வாழ்வு வாழ்பவர்களை உலகம் நேசித்து ஏற்றுக்கொள்வதால் நாமும் அவ்வண்ணமே தூய்மையுடன் இருந்தால் எம்மை நாம் விரும்புவது மிக இயல்பான தன்மையாகிவிடும்.

தன்னை விரும்பாமல், நம்பாமல் நாம் எப்படிப் பிறரை விரும்பமுடியும்? ஏற்றுக்கொள்ள இயலும்? எங்களிடம் இல்லாத ஒன்றுபற்றி நாம் பிறரிடம் எதிர்பார்ப்பதுண்டு. ஆனால் நாம் எதனை எதிர்பார்த்தாலும் அவைகளில் உண்மைத் தன்மை வேண்டும்.

பொய்யான விஷயங்களை அது பொய் என்று தெரிந்தும் விரும்புவதும் எவ்வளவு கோழைத்தனமான அக வெளிப்பாடு என்பதையிட்டு வெட்கப்படுவீர்களாக!

இன்று நிஜத்திற்குக் காட்டாத பரிவு, ஆர்வம், விருப்பங்களை வெறும் போலிகளுக்கும், நிழல்களுக்குமே காட்டுவதால் தான் பலரும் சஞ்சலத்திற்குள் ஆட்படுகின்றார்கள். எவர்கள் பின்னால் ஓடுகின்றோம் என்பதே புரியாமல் விழிக்கின்றோம்.

"மனம்" உள்ளவன் மனிதன் அவன் சிந்திக்கும், திறன் படைத்தவன். நினைப்பதற்கும் அதனைச் செயற்



RangaRakes
Tamilnavarasam.com

படுத்துவதற்குமான முழு ஆற்றலைக் கொண்டவன். நாம் நல்லனவற்றையும் செய்ய முடியும். கெட்டவைகளையும் சுலபமாகச் செய்யமுடியும்.

❁ "நீ எதனைச் செய்ய விரும்புகின்றாய், என உன்னையே நீ கேட்பாயாக! எதனைச் செய்தால் உன்னால் நீ கவரப்படுவாய்" அதனால் மற்றவர்களும் கவரப்பட்டுப் பயன் பெறுவார்களா என்றும் உணர்கின்றாயா?

❁ ஹே.... அன்பான இதயம் கொண்ட மனிதா! உன்னை ஒரு தூய ஆன்மாவாக எழச்செய்யவே இறைவன் விருப்பம் கொள்கின்றான். அவன் எல்லோரையுமே நேசிப்பதனால் அவர்களுள் ஒருவனாக நீ இருப்பதனால் நீ ஒன்றும் பயந்து உலகினில் ஒளிந்து வாழத் தேவையே இல்லை.

❁ அவர் விரும்பும் ஒருவனாக "நீ" இருப்பதனால் உன்னை நீ விரும்புவதில் தப்பேதுமில்லை, அதுவே சரியான சீவியத்திற்கு நல்ல வழியுமாகும். இதில் வெட்கப்பட என்ன இருக்கின்றது?

முதலில் உங்களை நீங்கள் ரசனையுடன் ரசிப்பீர்களாக! சிலர் சொல்வார்கள் "ஐயோ...என் முகம் காணச் சகிக்கவில்லையே" என்பார்கள். ஆனால் சிலர் தங்கள் அழகில் தாங்களே பெருமைப்பட்டும் கொள்வார்கள்.





பலரும் இதுபற்றி ஒன்றுமே அலட்டிக் கொள்ளாமல் இருப்பது முண்டு.

நண்பர்களே! நீங்கள், உங்களை கண்ணாடியில் பார்க்கும் போது அதனை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் நினைவுகளை உங்கள் உருவத்துடன் பிணைத்து ஒன்றாக்கி விடுங்கள். "எனது உருவம் என்றும் உண்மையை அன்பான உலகத்தையே நேசிப்பதாக, எனக்குள் எந்தவித அகம்பாவம் ஆணவம் இல்லாது இருப்பதாக! நான் உலகத்துடன் ஒன்றித்து வாழும் தூய ஆன்மாவாகின்றேன். இதுவே இறைவனின் சித்தமும் ஆக இருக்கின்றது." என உளமார எண்ணி கனிவான புன்முறுவலுடன் எவ்வித களங்கமும் இன்றிச் செயலை ஆரம்பித்துப் பாருங்கள்.

தன்னை விரும்புபவன் சுயநலம் மிக்கவன், ஆணவம், அகங்காரம் திமிர் பிடித்தவன் என்கின்ற வார்த்தைப் பிரயோகங்களால் சொல்லப்படுகின்றான். தன்னை நேசிப்பது வேறு, மமதையால் மற்றவர்களுடைய மனதைத் துன்புறுத்துதல் வெவ்வேறான விஷயம். ஏன் எனில், தன்னை நேசிப்பவர்கள் அதனை வெளியில் சொல்ல வேண்டிய தேவை, அவசியம் கிடையாது. எம்மை நாம் விரும்புவது எமக்கு நாம் விதிக்கும் அன்பான கட்டளை தான். மேலும் எமது இந்த எண்ணங்கள் எமது முன்னேற்றத்திற்கு மட்டுமல்ல, உலக மக்களை இதனூடு இணைப்பதற்குமான மேலான வழியுமாகும். உணர்க!



RangaRakes

Tamilnavarasam.com

பலரும் தங்களுக்குள் இருக்கும் உண்மையான பேராற்றலை உணராமல் தங்கள் புறத்தோற்றத்தை, தாங்கள் கற்ற சொற்ப கல்வித்தரம், வருமானங்களின் அளவு பற்றியே வைத்துக் கணக்கீடு செய்கின்றார்கள்.

மூடிய தோலை உரித்துப் பார்த்தால் எல்லா மனிதர் களின் உருவமும் ஒன்று தான். இங்கு நாம் அழகன், அழகிப் போட்டி வைத்தால் யார் ஜெயிக்கப்போகின்றார்கள்? மனிதனுக்கு மட்டுமே சாயம் பூச வேண்டியுள்ளது. உடை உடுத்த வேண்டியுள்ளது.

உலகில் மற்ற எல்லா ஜீவராசிகளும் எமது பாஷை யில் நிர்வாணமாக ஆனால் அழகாக உலாவருகின்றன. மனித நிர்வாண உருக்களை எம்மால் ஜீரணிக்க முடியாது, ரசிக்க முடியாது. எந்த ஒரு மனிதனுமே தனது வடிவத்தை நேரில் பார்க்க முடியுமா?

தனது முகத்தைக் கூடக் கண்ணாடி மூலம் தான் பார்க்க முடியும், முதுகை, பிடரியைப் பின்னே வைத்த கண்ணாடி மூலம் மிகச் சிரமப்பட்டுத்தான் நோக்க வேண்டும். இந்த லட்சணத்தில் வெறும் மேனியை வைத்து வண்ணம் தீட்டும் நாம் உண்மையான ஆன்மாவை தரிசிக்கத் தயங்குதல் எமக்குள்ள அறியாமையும், குறைபாடும் தான் நோக்குக!

எங்களை நாம் வசியப்படுத்துதல் வேண்டும். சுய வசியம் என்பது, எங்களை விரும்புதலேயாம். யாரையாவது





நாம் விரும்பி நட்புக் கொண்டால் சிலர் வாய் கூசாமல் "என்ன வசியம் செய்தாய்" என்று கேட்டு விடுகின்றார்கள்.

காதலர்கள் கொள்ளும் உறவை, அவர்கள் வசியப் பட்டு விட்டார்கள் என்கின்றோம். இன்று வசியம் என்ற சொல்லைக் கொச்சைப்படுத்திப் பேசுபவர்களும் உள்ளனர். மாந்திரீகத்தில் வசியம் செய்தல் என்கின்ற சொல் தாராள மாகப் பயன்படுத்தப்படுகின்றது.

உண்மையில் "வசியம்" என்பது முரண்பாடு அற்ற நிலையில் உடன்பாடு அடைவதாகும். முரண்பாடு தோன் றினால் உடன்பாடு வராது. ஆயினும் சில விஷயங்கள் மட்டும் உடன்பாடுகள் காணதவர்கள் தமக்குள் பரஸ்பரம், அன்பை நீக்காமல் இருப்பதுமுண்டு.இது அவர்களின் மேலான மனத் திண்மையைப் பொறுத்தவிடயம். திருமணப் பொருத்தம் பார்க்கும்போது வசியப் பொருத்தம் இருக்கின்றதா எனப்பார்ப்பார்கள். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் விட்டுப்பிரியாது என்றும் இணைந் திருப்பதை வசியமாக இருப்பதாகக் கொள்ளப்படுகின்றது.

தனது பணிகளைச் சுயநல நோக்குடன் முடித்துக் கொள்வதற்காக மட்டும் பிறருடன் அன்போடு பேசிக் காரியம் முடிந்ததும் அவர்களைக் கழற்றி விடுவது எல்லாம் கயமை த்தனமான செயற்பாடுகளேயாம். ஒருவரது தோற்றத்தைக் கொண்டும் நட்புப் பாராட்டப்படுவதும் உண்டு. அன்பு, அறிவு, ஞானம் உள்ளவர்களின் முகத்தில் "தேஜஸ்"



RangaRakes
Tamilnavarasam.com

ஏற்படுவது இயற்கையானது. எத்தகைய அழகுள்ளவர்கள் கூட இத்தகைய பெரியோர், ஞானிகளின், தேஜஸான தோற்றத்தின் முன் ஒப்பீடு செய்திடல் இயலாது. இந் நிலை அவர்கள் அக ஒளியுடன் சம்பந்தப்பட்டது.

எனினும் நாம் ஒவ்வொருவரும் எடுத்துக் கொண்ட தோற்றத்தைக் கொண்டு பெருமைப்பட்டேயாக வேண்டும். ஏன் எனின் உங்கள் தோற்றத்தினைப் போல் வேறு ஒருவருக்குமே அந்தத் தோற்றம் வந்துவிடாது. எனவே, என்னைப் போல் வேறு எவருமே இல்லாத ஒரு பிரத்தியேக வடிவைக் கொடுத்த இறைவனுக்கு நாம் நன்றியும் செலுத்த வேண்டுமல்லவா?

நீங்கள், உங்களைப் பரிபூரணமாக நம்பி உங்களை ஏற்றுச் செய்யும் காரியங்களை இறைவனின் செயலாகவும் இணைத்துச் செய்யும்போது ஏற்படுகின்ற அற்புதங்களை உண்மையாகவே அனுபவிப்பீர்கள். நேற்றையதை விட இன்று நான் எப்படிப் புதுப்பொலிவு பெற்றேன் என ஆச்சரியப்படுவீர்கள். என்னை நான் எப்படி முன்னைய நாட்களை விட வெற்றி கொண்டேன் என்பதையிட்டுப் புளகாங்கித மடையும் அந்த அற்புத நிகழ்வினைப் பூரணமாகப் பெறுவீர்கள் தோழர்களே!

இன்று பலருக்கும் உள்ள பெரும் பிரச்சனை தங்கள் பற்றிய கணிப்பீடுகளைப் பிறர் கண்ணோட்டத்தில் இருந்தும் நோக்காமையாகும். தன்னைப்பற்றிய சுய விமர்சனத்தைத்





தானே கண்டு கொள்ள முயற்சிப்படுதுடன் தன்னைப்பற்றிய பிறர் என்ன விதமாக நோக்குகின்றார்கள் என்பதை அறியாமல் செயல்படுவது பல பிரச்சனை களையும் துன்பங்களையும் ஏற்படுத்தி விடலாம் எல்லவா? எம்மைப் பிறர் விரும்பி ஏற்க வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களும் கூட கனிவுடன் மற்றவர்களுடன் பழகாமலே இருந்து விடுகின்றார்கள்.

முகம் மலரச் சிரித்தாலே போதும்! எந்த அழகும் இல்லை என்று எவரையாவது கருதினாலும் கூட,அவர்கள் உங்கள் முன் நின்று புன்முறுவல் பூத்திடப் பூரண அன்புடன் நோக்கினால் அவர் அழகுபற்றி நீங்கள் சிந்திக்கவே மாட்டீர்கள்.எனவே, சந்தோஷமுடன் வாழப், பழக அழகு என்கின்ற விஷயம் ஒரு பொருட்டேயல்ல. ஏனெனில், அழகு என்பது, வெறும் உருவத்துடன் தொடர்பு பட்டது அல்ல. ஜடப் பொருளில் அழகு உண்டு. மனித உள்ளத்தினுள்ளும் அழகு ததும்புகின்றது. முகமலர்ச்சியாக, சிரிப்பாக, புன்முறுவலாகச் செய்கின்ற நற்கருமங்களுடாக அது பரிணமித்து அவர்கள் உண்மை அழகை வெளிப்படுத்திவிடும்.

ஒருவர், புத்தம் புது ஆடையுடுத்து உங்களிடம் வருகின்றார். அவர் உங்களிடம் ரொம்பவும் பரிச்சம் அதிகம் இல்லாதவராகவும் இருக்கலாம். ஆனால் நீங்கள் அவரைப் பார்த்துச் சந்தோஷமுடன் "ஆகா....உங்கள் உடைகள் ரொம்பப் பிரமாதம் இது உங்களுக்கு மிகவும் பொருத்தமாக



RangaRakes

Tamilnavarasam.com

இருக்கின்றது" என்று சொல்லுங்கள். அந்த நேரத்தில் அவருக்கு ஏற்படும் உணர்வுகள் இரண்டு விதமாக இருக்கும்.ஒன்று தனது உடை தனக்குப் பொருத்தமானது என்று சொல்லப்பட்டதால் ஏற்படும் பெருமிதம். இரண்டாவது ஏற்படும் உணர்வு மிகவும் நுண்ணியமான விஷயமாகும். எனது உடையை மனம் உவந்து பாராட்டுகின்றாரே இவரது இந்த நல்ல பரந்த மனம் எவ்வளவு உயர்ந்தது என்பதுடன் உங்களைப் பற்றிய மதிப்பு அவர் உள்ளத்தில் நிரந்தரமாகவே நிலையாக இருத்திவிடும்.

யாரோ ஒருவர் நன்றாக, அழகாக வந்தாலே மனம் பொருமிப் பொறாமைப்படுகின்ற நபர்களும் இல்லாமல் இல்லை. ஒருவரிடம் நட்புக்கொள்வது ஒரு கஷ்டமான காரியமே அல்ல. மனம் திறந்து பாராட்டி அன்பு செலுத்துவது சிரமமான அல்லவே? பிறர் எங்களை நேசிக்க நேசிக்க எங்கள் மீது எங்களுக்கே பற்றுதல் அதிகரித்துக் கொண்டே வரும்.

பிறரிடம் காட்டும் அன்பையே நாம் எங்கள் மீது காட்டுவோமாக! எங்களிடம் நாம் வெறுப்பை இம்மியளவும் பதித்தல் கூடாது. இந்த நிலை உருவாகினாலே உடனே விரக்தி என்ற அரக்கன் உள்ளத்தில் குடியிருக்கத் தலைப்பட்டு விடுவான் ஜாக்கிரதை! இந்த விரக்திப் போக்கு, நாளடைவில் சமூகத்தின் மீதான வெறுப்பு உணர்வுகளை உமிழ ஆரம்பிக்கின்றது. இதனால் என்ன லாபம்? பிறர் தூற்றுதலுக்கும் கேலிப்பேச்சிற்கும் ஆளாவதுடன் ஒதுக்கப்பட்ட தனி மனிதராக நடமாட வேண்டிவரும்.





எங்கள் தவறுகளை ஏற்றுக்கொள்ளும் துணிவும் மற்றவர் தவறுகளை மறந்துவிடும் இயல்புகளும் இருந்தாலே சமூக வாழ்வில் நாம் பரஸ்பரம் மக்களிடம் ஒட்டுறவுடன், சங்கமித்துக் கொள்ளுகின்ற நிலைக்குள் வந்துவிடுவோம். ஆணவம் என்கின்ற மமதை எவ்வளவு கொடியதோ அவ்வண்ணமே நான் வீணானவன் பயன் அற்ற வன் என்கின்ற தாழ்வு மன இயல்பு மிக்க கொடிதேயாம். கனவுப் பூங்காவில் பூப்பறிக்க எண்ணுதலை விட நிஜமாகவே மக்கள் மனதில் அன்பு எனும் வாசனை விதைகளைத் தூவினால் அதன் பிரதி பயனாக முழு உலகையும் சுகந்தத்தில் அன்பு ஆழ்த்தும்.

நல்ல மகிழ்வூட்டும் கவிதை எழுதவேண்டுமா? உங்கள் முன் நிற்கும் சிறியோர்களையும் வாழ்த்துங்கள். அது ஆயிரம் கவிதைக்கும்மேலானது. மக்கள் முன் பிரசங்கம் செய்ய ஆசைப்படுகின்றீர்களா? மக்களோடு, மக்களாக உள்நின்று அவர்களையே பாசமுடன் உற்று நோக்கிப் பழகுங்கள். கோடி மேடைகளில் நின்று பிரசங்கம் செய்த திருப்தி உண்டாகும்.

யாரோ ஒருவர் பலர் போரிட்டுப் பெறும் கிரீடத்தைச் சூட்டிக்கொள்ள விழைய வேண்டாம். ஒரு சின்னக் குழந்தை பாசமுடன் தரும் ஒரு சின்ன மலருக்கு முன் இந்த புகழ் மகுடங்களுக்கு என்ன பெறுமதி உண்டு ஐயா?

நல்ல மனமுடாக வார்த்தைகளும், நற் செயல்களும்



RangaRakes

Tamilnavarasam.com

அமையவேண்டும். எம்மை நாம் வளர்த்தல் என்பது, எல்லோரையும் நேசித்தல், பாராட்டுதல் என்பது தான். இந்தப் பண்பான செயல்கள் மிகவும் சுவாரஸ்யமானது. "எல்லாமே நன்றாக நடக்கின்றது. அதுவும் எமக்காக" என்று எண்ணுதலே, உள்ளம் வலிமை காண்பதற்கான வழி

நாம் எம் முன் நடக்கும் நடப்புக்களை கிரகித்து ஏற்றுக் கொள்ளும் விதத்தில் தான் சந்தோஷம், துக்கம் எல்லாமே இருக்கின்றன. எதை நாம் தெரிந்து எடுக்கின்றோமோ அதுவே எம்மை ஆட்கொள்கின்றன. எனவே, நாம் நல்லனவற்றைக் காண்பதிலேயே புலன்களைச் செலுத்துவோமாக! எங்கள் வசமே எங்கள் நல்வாழ்வு. எங்களை நாமே குஷியாக வைத்திருந்தாலே எமது பணிகளும் மேல் நோக்கியதாக இருக்கும். எம்மை நாம் நேசித்தாலே எல்லா நலன்களும் எங்களைச் சேர சாத்தியப்படும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
14-09.2008







# மறதி

தீயவைகளை மறப்பதே சிறப்பு. எல்லா விஷயங்களையும் மூளையில் பதிவு செய்ய இயலாது. தேவையற்ற சங்கதிகளை மறந்தால் நல்ல விடயங்கள் மட்டுமே எஞ்சி நின்று எம்மிடம் நிரந்தரமாகிவிடும். மறதி பெறுமதிமிக்க பயன்களைத் துறக்கவைக்க நாம் அனுமதித்தலாகாது. நியாயமான காரணங்களுக்காகவே "மறதி"யை இறைவன், கொடுத்துள்ளான். கண்டதையும் போட்டு மூளையைக் குடையாமல் இருக்க "மறதி" எமக்குத் துணை செய்கின்றது. செய்யவேண்டிய காரியங்களை உடனே செய்தால் மறதியின் தாக்கம் அறவே அற்றுப்போகும். காலம் கடத்துதல் ஞாபக சக்தியை இழக்கச் செய்யும்.

மறதி பெறுமதிமிக்க பயன்களைத் துறக்கவைக்கும். நல்லனவற்றை மறக்காமலும், தீயவை எல்லாவற்றையும் மறந்து துறப்பதே சிறப்பு. வாழ்க்கையில் நடந்த எல்லா விஷயங்களையுமே மூளையில் திணிப்பது இயலாத விஷயம். அப்படி நல்லது நீங்கலாகப் பொல்லாத சங்கதிகளையே இரை மீட்டி வாழ்ந்தால் அதுவே புரையோடி மனதை வருத்தும் பிணியாகிவிடும்.



RangaRakes
Tamilnavarasam.com

எனவே, நியாயமான காரணங்களுக்காக எமக்கு ஏற்படும், “மறதி” கூட இறைவன் கொடையாகி விடுகின்றது. எல்லா விஷயங்களையுமே மனதுக்குள் போட்டுக் குழப்ப வேண்டிய அவசியமேயில்லை. பெற்ற கல்வி, செய்ய வேண்டிய பணிகளை நாம் மறக்கலாகாது. அத்துடன் எம்மைச் சுற்றி இருக்கின்ற அன்பான சீவன்களை மறத்தல் ஆகவே ஆகாது. செய் நன்றி மறத்தல் போல் கொடிய பாவம் வேறு யாது உண்டு?

எனினும், சிலர் தமக்கு பிறரால் பெற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்களையும் தனது வாழ்க்கைக்கு எது அவசியம் தேவையானது என்பதை மட்டும் கருத்தில் கொள்வார்கள். பிறர் நலன் மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள மாட்டார்கள். யாராவது அவரிடம் ஏதும் ஞாபகமூட்டிக் கேட்டால், “அடடா.... நான் மறந்து போய் விட்டேனே...” என்பார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் மறந்து போனதாக நடிப்பார்கள். தங்கள் அனுகூலத்திற்காக மட்டும் குடைந்து, குடைந்து வற்புறுத்திக் கேட்பவர்களுக்கு மறதி எப்படி வரும்?

பெரும் விஞ்ஞானிகள் அறிஞர்களுக்கு ஞாபக மறதி வருவதுண்டு. அவர்கள் தமது செயலில் கண்ணும், கருத்துமாக ஒரே சிந்தனையில் கண் துயிலாது தம் கடமைகளைச் செய்யும் போது புற சிந்தனைகளில் நாட்டம் கொள்வதில்லை. இத்தகையவர்கள் தமது உன்னத சேவை களை மறப்பதில்லை. மற்றப்படி நேரத்திற்கு உணவு





அருந்துவதையோ, சீராக உடை உடுத்துவதையோ கவனத்தில் கொள்ள மாட்டார்கள். சிந்தனைத் தெளிவும் கருமத்தில் கண்ணாக இருப்பவர்களின் உலகமே தனித்து வமானது. அவர்களோடு தம்மை இணைத்து “நானும் அப்படித்தான்” என எவராது சொன்னால் அது நகைப்பிற் குரியதே!

செய்ய வேண்டிய பணிகளை என்றும் மானசீகமாக நிலை நிறுத்துவோர்க்கு ஞாபகம் என்றுமே நிலைத் திருக்கும்.

திருமண வைபவம் கோவிலில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒரே ஆரவாரம். புரோகிதர், மணமகன் வீட்டாரிடம் மாங்கல்யத்தினைப் பூஜையில் வைப்பதற்காகக் கேட்கின்றார். அப்போதுதான் வீட்டில் உள்ள பெரியவர்கள் எங்கே, தாலி என்று கேட்டபடி கொண்டு வந்திருந்த பையை (சூட்கேசை) துழாவுகின்றார்கள்.அந்தப் பையினுள் தாலிக் கொடியினைக் காணாமல் ஒரே பரபரப்பாகின்றது. கல்யாண வைபவம்.

அப்போது இந்த வைபவத்தை வேடிக்கை பார்த்தபடி இருந்த சுட்டிப் பையன், “என்ன தேடுகின்றீர்கள்...” என்றுகேட்டு விஷயம் என்ன என்று தெரிந்து கொண்டான். தனது தாயாரிடம் வந்து, “அம்மா... அந்தச் சங்கிலியையா தேடுகின்றீர்கள், அதை நான் வீட்டில் ஒளித்து வைத்திருக் கின்றேன்” என்கின்றான்.



RangaRakes

Tamilnavarasam.com

எல்லோருமே பதட்டத்துடன் பையனை அழைத்து வீட்டிற்குச் சென்று பையன் மூலம் தாலியை எடுக்கின்றார்கள். திருமணம் இனிதே பதட்டம் நீங்கி நிறைவு பெற்றது. நடந்தது இதுதான்.

திருமணத்திற்கு முதல்நாள் எல்லோருமே திருமணத்திற்கு வாங்கிய பட்டுப் புடவைகள், நகைகளை ஆவலுடன் பார்க்கின்றனர். எல்லோருமே தாலிக் கொடியைப் பார்க்கும்போது அந்தவீட்டுச் சின்னப்பையன் தானும் அதனைப்பார்வையிட்டே தீர வேண்டுமென அடம் பிடிக்கப் பெரியோர்களும் அவ்வண்ணமே அவனிடம் கொடுத்து விட்டு மறந்துபோக, அதன் பின்னர் நடந்த கலாட்டாக் களைத்தான் நான் முன்னரே சொல்லி விட்டேனே!

எந்த ஒரு கருமத்தையும் செய்து முடித்த பின், அவை எல்லாமே ஒழுங்காக நடைபெற்றதுதானா எனச் சரிபார்க்க வேண்டும்.கூட்டு முயற்சியுடன் காரியங்களையும் ஒவ்வொருவருக்கும் ஒப்படைக்கப்பட்டாலும், எந்த ஒரு தனி மனிதரையும் முழுமையாக நம்பாமல் செய்கருமங்களை மீள ஆராய்ந்து சரி செய்தேயாக வேண்டும். எல்லோருமே ஞாபகமாக இருப்பார்கள் என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை.

எமது நாட்டில் முன்னாள் ஜனாதிபதி ஒருவர் வைபவத்தில் கலந்து கொள்கின்றார். விளக்கு ஏற்றி வைபவத்தை ஆரம்பித்து வைக்க வேண்டும். எல்லோருமே





ஆவலுடன் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்க விளக்கு ஏற்ற வந்த ஜனாதிபதி மெழுகுவர்த்தியைக் கேட்கின்றார். விழா நடத்துனர் திரு, திருவென விழிக்கின்றார்.

ஒளியேற்றப்பட்ட மெழுகுவர்த்தி அவரிடம் கொடுக்கப்படவில்லை. தீப்பெட்டியோ, மெழுகுவர்த்தியோ அங்கு வைக்கப்படவேயில்லை. உடனடியாக அங்குள்ள ஒருவரிடம் தீப்பெட்டி வாங்கி குத்து விளக்கு ஏற்றப்பட்டது. அன்றிலிருந்து எந்த வைபவத்திற்குச் சென்றாலும் விளக்கு ஏற்ற தீப்பெட்டி அல்லது (தீப்பற்றவைக்கும் உபகரணம்) லைட்டர் இன்றிச் செல்வதேயில்லை என ஜனாதிபதி சொன்னாராம். மேலே சொன்ன விஷயங்கள் எல்லாமே வெறும் நகைச் சுவைக்காகச் சொல்லப்பட்ட விஷயங்களே அல்ல.

மறதி காரணமாக அவமானப்படுதலை விட அவதானமாக இருப்பதில் என்ன சிரமம் உண்டு? வாக்குறுதி அளிப்பவர்களில், எத்தனைபேர் அதனை நிறைவேற்றுவதில் அவதானமாக இருக்கின்றார்கள்? ஏன் சொன்னபடி செய்யவில்லை என்று கேட்டால் “மறந்துவிட்டேன்” என்று சர்வ சாதாரணமாகச் சொன்னால் கேட்பவர் இத்தகையவர்களை ஒரு மனிதராக மதிப்பாரா?

கல்வி கற்கும் மாணவர்கள் கற்றதை எக்காலத்திலும், மனதில் பதித்திருக்க வேண்டுமன்றோ? உடல் நிலை, வறுமை காரணமாகப் பல இளம் சிறார்களுக்குக் கல்வியில்



RangaRakes
Tamilnavarasam.com

நாட்டமின்மையுடன் மூளையில் எதனையுமே உட்புகாத தன்மையும் ஏற்பட்டுவிடுகின்றன. இயற்கை வைத்திய முறையிலும் ஞாபக சக்தியை உண்டுபண்ண முடியும் என்றும் சொல்கின்றனர். மனதை ஒரு நிலைப்படுத்தும் தியான முறைகள், உடற்பயிற்சிகளால் உடலும், உள்ளமும் சீராவதனால் எமக்குத் திடசிந்தனையுடன்,தேகபலமும் தானாக வந்துவிடுகின்றது.

நல்ல திடமான நிலையானவர்களுக்கு பதட்ட மற்றநிலை உருவாகின்றது. பல கருமங்களை ஒரே சமயத்தில் கையில் எடுத்துப் பதட்டமுடன் செய்யும் வேலைகள் குழப்பத்தில்தான் முடியும். கருமத்தில் தெளிவும், ஆர்வமும் இருந்தால் “மறதி” எம்மைவிட்டுத் துறந்துவிடும்.

விருப்பமின்றி நாம் சொல்லும் சொற்களும், தொடுக்கும் கருமமும் அர்த்தமற்றுப் போவதுடன் சமூகத்தில் பொய் பேசும் ஒருவராக, நம்பிக்கையற்ற நபர் என்கின்ற அவப்பெயரையும் ஏற்படுத்தி விடலாம்.

திட்டமிடாமல் மற்றவர்களின் பாராட்டுதல்களை எப்படியாவது பெற்றால் சரி என்கின்ற அதீத ஆவலுடன் தொழில் எதுவெனத் தெரிந்து கொள்ளாமல் அதனுள் புகுந்து கொள்பவர்கள் தமக்குத் தெரிந்த ஆரம்ப அறிவைக் கூடப் பயன் படுத்தமுடியாது துன்புறுகின்றனர்.





மூளையை நொறுக்கி நாம் எக்கருமங்களையும், பொறுப்புடன் செய்ய முடியாது. படிப்படியாக எமக்குரிய விஷயங்களை செலுத்துவதுபோல் இலகுவானது வேறில்லை. எங்கள் கட்டளையை மூளை ஏற்கின்ற பயிற்சிகளை நாமே உருவாக்குவது கஷ்டமானது என்று ஒருபோதும் எமக்கு நாமே சொல்லிக் கொள்ளக் கூடாது.

சின்னக் குழந்தைகளைப் பாருங்கள், அவர்கள் தனக்கு வேண்டியதைப் பெற்றோரைக் கேட்டுப்பெற மறந்து விடுவதேயில்லை. ஒரு பொருளை எடுத்து விளையாடு வார்கள். எங்கேயாவது கொண்டு சென்று போட்டு விட்டும் வருவார்கள். நீங்கள் பொறுமையாக அந்தப் பொருள் எங்கே என்று கேட்டுப் பாருங்கள். உடனே அவர்கள் எடுத்துக் கொடுத்து விடுவார்கள். எப்போதோ ஒருவரைப் பார்த்தாலும் குழந்தைகள் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். குழந்தைகள் பெரிய குற்றவாளிகளைப் பார்த்த மாத்திரத்தே மனதில் பதித்து அவர்களை அடையாளம் கண்டு கொள்கின்ற சம்பவங்களைக் கதைகளில் படித்திருக்கின்றோம். இவை யெல்லாம் நம்பத்தக்க உண்மைகளேயாம்.

வயது குறைந்தவர்களின் ஞாபக சக்தியில் ஒரு சிறு பங்கு இருந்தாலே போதும். நாம் எவ்வளவோ சாதித்திட முடியும். மனிதர்கள் தமது மூளையின் சக்தியைப் பூரணமாகப் பயன்படுத்தினால் இந்த உலகத்தையே கைக்குள் அடக்கலாம். யோகிகளும், ஞானிகளும் தங்கள் சித்தத்தை யோகமார்க்க மூலம் விருத்தி செய்து கொண்



RangaRakes
Tamilnavarasam.com

டார்கள். எனவே முக்காலத்தையும் துல்லியமாக உணர்ந்து கொண்டார்கள் என அவர்கள் பற்றிய நூல்கள், எடுத்தியம்பு கின்றன.

சில முதியவர்களிடம் பேசிப்பாருங்கள். எப்பொ முதோ நடந்து சம்பவங்களையே திரும்பத், திரும்பச் சொல்லிக் கொள்வார்கள். தங்கள் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைச் சரியான நேரம், திகதி, வருடங்களைச் சுட்டிக் காட்டிச் சொல்வார்கள். ஆனால் எம்மில் பலருக்கும் காலையில் என்ன உணவு உட்கொண்டேன் என்பதையே மறந்து விடுவார்கள்.

நல்ல சொற்பொழிவுகளைக் கேட்கும் போது, அவற்றை உன்னிப்பாக, அவதானமாகக் கேளுங்கள். ஒரு மகாநாட்டுக்கு அதிதியாக நீங்கள் போய் அங்குள்ள குளிர் சாதனத்தின் கதகதப்பில் மெல்லிய குளிரில் உறங்கி விட்டு யாராவது தட்டி எழுப்பும் நிலைக்கு வரக்கூடாது. ஒரு விஷயத்தையுமே காதில் போடாமல் இறுதியில் பக்கத்து இருக்கையில் சுவாரஸ்யமாக, அவதானமாகக் கேட்டுக் கொண்டிருப்பவரிடம் அவர்கள் என்ன பேசினார்கள் எனக் கேட்டு நச்சரிப்பது நாகரிகமாகாது.

குறிப்பு எடுப்பது, கேட்பது எல்லாமே எமக்கு ஒரு புது விஷயத்தைக் கற்கின்ற அறிவை வழங்குவதுடன் நல்ல நினைவாற்றல்களைச் சுயமாக ஏற்படுத்துகின்றன. அவசரம் அவசரமாகக் கேட்கும் அறிவுரை, உபதேசங்கள், உரைகள்,





எமது புலனுக்கு உட்புகுந்து விடாது. இவைகளை அறிந்தும் தவறு செய்தால் ஞாபகம் எங்கே வரும் ஐயா?

காலையில் வீட்டைவிட்டுப் புறப்படு முன்பு செய்ய வேண்டிய காரியத்தைத் துண்டுக் காகிதத்தில் மனைவி எழுதிக் கொடுப்பதும் மாலையில் கணவன் வீட்டிற்கு வந்ததும், "என்ன நான் சொன்ன தெல்லாம் செய்து விட்டீர்களா" என்று கேட்டதும், "சே... சே நான் நீ கொடுத்த கடதாசியை மறந்தே விட்டேன்" என்று சொல்வதும் சாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சிதான்.

அரசாங்க தனியார் நிறுவனங்களில் திட்டமிட்டபடி எந்த வித அலுவல்களையும் கிரமமாகச் செய்து முடிக்க "நினைவூட்டல் தினப்பதிவேடு"என்கின்ற ஏட்டினை வழங்குவார்கள்.செய்ய வேண்டியபணிகளைக் காலையில் வந்ததும் ஏற்கனவே ஊழியர்கள் பதிவு செய்ததன் பிரகாரம் அதைப் படித்து மறக்காமல் தங்கள் கருமங்களைச் செய்து வருவார்கள்.ஆனால் பெரும்பாலான ஊழியர்களுக்கு அந்தப் பதிவேடு ஏன் வழங்கப்படுகின்றது என்பதைப் புரிந்து கொள்ளாமல் அந்த ஏட்டில் வீட்டுக்கணக்கு, அல்லது தனிப்பட்ட தினக் குறிப்பாகப் பாவித்துக் கொள்வது முண்டு. மக்கள் பல மைல் தூரத்தில் இருந்து அலுவலகங்களுக்கு வருகை தரும்போது அங்கு பணியாற்றுபவர்கள் "நீங்கள் சொன்ன விஷயங்களை மறந்து விட்டேன்" என்று பொதுமக்களிடம் சொல்வது நியாயம் தானா?



RangaRakes
Tamilnavarasam.com

மனிதனுக்கு வாழ்க்கையின் சுமைகள், அதிகரிக்க, அதிகரிக்க அவன் புதிய புதிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவனாகின்றான்.பழைய தீர்க்க வேண்டிய அத்தியாவசியமான விஷயங்கள் இருக்கப் புதிய முளைத்த பிரச்சனைகளுக்கு முன் உரிமை வழங்க எத்தனிக்கின் றான். ஆனால், மனம் சீராக இயங்காத காரணத்தினால் எல்லாக் கருமங்களையும்,முடித்துவிடாமல் அல்லல் படுவதுடன், ஏற்கனவே தீர்க்காமல் இருந்த விஷயங்கள் எல்லாமே நிரந்தரமாக அவனுள் ஒட்டிக்கொள்கின்றன. மறந்து போய் விட்ட விஷயங்களே மீண்டும் பூதாகாரமாக உருவெடுக்கும்போது அச்சப்பட்டு அதிர்ந்து உடைந்து போகின்றான். உடனுக்குடன் எமது கடமைகளை ஒழுங்கா கச் செய்துவரின் இந்நிலை வருமா?

காதலில் தோல்வி கண்ட காதலர் அதனை மறந்து மீண்டும், நல்லபடி வாழ மறதி அவசியமாகின்றது. தோல்வியுற்ற காதல், மரணங்கள்,நினைத்த எதிர்பார்த்த காரியங்களில் தடை, போன்றவைகளை மனம் மறக்க முடியாது அவதியுறுகின்றது.

துன்பப்படுபவன் முன் தத்துவம் பேசினால் அது எடுபடாது. விட்டுப்போன காதலை சட்டென மற என்றால் அவனால் நடைமுறையில் அது முடியாது. ஆனால், நாம் எமது கடமைகளை ஒழுங்காக தொடர்ந்து செய்துவரின் நெஞ்சின் நெருடல்கள் வந்து வருந்த நேரம் கிடைக்காது.





“துன்பம்” எனும் கொடும்குளிர் வாட்டுகின்றது. “கடமை” என்கின்ற ஆடைகொண்டு மூடுவதே குளிர் என்கின்ற துன்பங்களை நீக்க ஒரே வழியாகும்.

- ❁ மறக்க முடியாத துன்பங்களை மறக்க வேண்டு மெனில் மக்களுக்குச் சேவை செய்ய நேரங்களை ஒதுக்குங்கள்.
- ❁ மனதை ஒரு நிலைப்படுத்த வணக்க ஸ்தலங் களுக்குச் செல்வீராக!
- ❁ மனம் விரும்பும் பெரியோருடன் உள்ளம் திறந்து உரையாடுங்கள்!
- ❁ ஒரேவிதசூழல்களும்,துன்பங்களைஏற்படுத்திய சுற்றாடல்களும், ஒருவர்க்குப் பங்கத்தை வரவழைக்கு மாயின்சொற்பநாட்களுக்கு,எங்காவது சுற்றுலா விற்குச் சென்று வாருங்கள்
- ❁ கவலைகளையும், துன்பத்தையுமே தருகின்ற நபர்களிடம் இருந்து சற்று விலகி இருப்பீர்களாக!.
- ❁ நல்ல நூல்களைப் படியுங்கள்,பயன் தரும் பொழுது போக்குகளில் மனதார ஈடுபடுங்கள்.
- ❁ கள்ளம் கபடமற்ற குழந்தைகளுடன் நன்றாகச் சிரித்துப்பேசி மகிழ்வீராக!.

“காலம்” என்கின்ற கண்காணாத ஒன்று பல பிரச்ச னைகளைக் கரைக்கின்றது. அது எமக்கு வழங்குவது நல்ல அனுபவங்களைத்தான்.



RangaRakes
Tamilnavarasam.com

நல்ல இனிமையான, பசுமையான சம்பவங்கள் உங்களை என்றுமே இன்பமுடன் வாழவைக்கும். இந்த நல்ல ஞாபகங்கள் மனம் விரும்பாத விஷயங்களை மறக்கடிக்கும் மழுங்கடித்து முடிவில் இல்லா தொழித்துவிடும். ஞாபகங்களும், மறதியும் எம் தேவைக்கு ஏற்ப வாழ்க்கையைக் கட்டியெழுப்ப இயலும். கெடுதலை மறப்பதும், நல்லதை ஞாபகத்தில் இருத்தி வைத்தலும் எம் திறனாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
24.08.2008







# மனிதன் தான் உயர்ந்தவனா...?

ஆண்டவனுக்கு அனைத்துமே ஒன்று. சகல ஜீவன்களுக்கும் சக்தியுண்டு. மனிதனை விடப் புலனறிவு உள்ள ஓரறிவு உயிரினங்களின் இயக்கம் வியப்பூட்டுவன. அன்பு, பாசம் காதல் அனைத்து உயிரினங்களிலும் உண்டு. இயற்கையை மனிதனைவிட மிருகங்கள், பறவைகளும், கடல்வாழ் உயிரினங்கள் உட்பட சகல சிற்றுயிர்களும் இணைந்து நேசிக்கின்றன. மனிதன் தன் சுயநலத்திற்காக இயற்கையை வளைக்க முயன்று இளைத்துக் களைத்துப் போகின்றான். இயற்கையை, சகல உயிர்களை, நேசிப்பவனே உயர்ந்த மனிதன்.

மனித இனம்தான் உன்னதமானது. ஏனைய ஜீவராசிகள் எல்லாமே தாழ்ந்தது என்று எண்ணிக் கொள்வது உண்மையை மறைக்கும் பொய்மைக் கூற்று ஆகும். எல்லா ஜீவராசிகளும் ஒரே வினாடியில் மனிதனுடன் போர் தொடுத்தால் அடுத்து எம் கதி அதோகதி!சிந்திக்கவும் வார்த்தைகளைச் சிந்தவும் தெரிந்தவன் மனிதன். ஆனால்



RangaRakes
Tamilnavarasam.com

மனித இனம் தவிர்ந்த எல்லா உயிர்களாலும், பேசமுடியாது, சிந்திக்க முடியாது என்கின்றோம்.

வாயால் பேசுவது மட்டுமே பேச்சு. தம் புலனறிவினால் ஒலி, மின்காந்த அதிர்வுகளால், ஓரறிவுள்ள சீவன்கள் பரஸ்பரம் தங்கள் இயக்கங்களைச் சீராகவே நடத்திக் கொண்டிருக்கின்றன என்பதை மறுக்கமுடியுமா?

விலங்குகளின் ஓசைக்கு விளக்கம் சொல்ல எம்மால் முடியாது. அதற்காக அவைகளின் பரிபாஷைகளே தெரியாமல் அவைகளுக்கு எம்மைவிடப் புலனறிவு ஒன்றுடன் ஒன்றுகருத்துப் பரிமாறும் சக்தி இல்லை என்று எப்படிச் செப்பிட முடியும்? தமக்கிடையே ஏதோ ஒருவித தொடர்புகள் இல்லாத ஜீவன்களே இல்லை.

பூக்களுக்குள் நடக்கும் புனிதமான சேர்க்கையினால், பூமியில் புதிதாய் முளைக்கும் தாவரங்கள் எத்தனை கோடி? அவைகள் தமக்குள் மதுவைத்தேக்கி, வண்டினை அழைத்து, அணைக்கும் கலையை யார் கற்றுக் கொடுத்தது? தவளைகள் கத்துவது எமக்குப் பிடிக்காது. அவை தமது எத்தகைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றன என்பதை, எப்படி எமக்கு முழுமையாகச் தெரிந்து கொள்ள முடியும்?

ஓரறிவுக் கடல்வாழ் உயிரினங்கள் ஒன்றை ஒன்று துரத்தி, நழுவி, மனிதர்கள் போலவே நெளிந்து, வளைந்து





திரைப்படத்துக் காதலர்கள் போல் கடல் பூங்காவில் களித்து, மகிழ்வதை தொலைக்காட்சியில் கண்டு வியந்தே போனேன். காதல் கலை எமக்கு மட்டுமா சொந்தம்?

தமக்குள் பாஷைகள் இன்றிப் பேசுவதாகச் சொல்லலாமா? எங்கோ இருக்கும் பூவின் சுகந்தத்தை, நுகரும் திறனை வண்டு எப்படிக் கண்டு கொள்கின்றது? ஆயிரம் அடிக்கு மேலே பறக்கும் பருந்து தெருவில் சுற்றும் கோழிக் குஞ்சைக் கண்டறிந்து சட்டெனக் கீழே இறங்கி அலாக்காக எப்படிக் கௌவுகின்றது? எதிரிகளிடம் தப்பிக்க ஒவ்வொரு ஜீவன்களும் எப்படி எப்படியான உபாயங்களைத் தம் கூர்மையான புலன்களால் அறிந்து கொள்கின்றன!

எங்கள் உடம்பினால் கண்டம் விட்டுக் கண்டம் பாய முடியுமா? அரை அங்குல வெட்டுக்கிளிகளால் அது முடிகின்றதே! அவைகளுக்குப், பாதைகளைக் கொலம்பஸ் சும், வஸ்கொடகாமாவும் வந்து சொல்லிக் கொடுத்தார்களா?

பூமியின் சீதோஷ்ணகால மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் தங்கள் இருப்பிடங்களை மாற்றியமைக்க பட்சிகளால் முடியும். மனிதன் பக்கத்து நாட்டிற்குச் செல்ல, குடியகல்வு அனுமதி பெற்றுப் பல்லாயிரம் செலவு செய்து போய் வருகின்றான். பத்து அடி நகரப் பேரூந்து வேண்டும் என்கின்றான். பல்லாயிரம் மைல் பறந்து செல்ல பத்து அங்குல செட்டைகள் போதுமே என்கின்றன பறவைகள்.



RangaRakes
Tamilnavarasam.com

பூமிக்குள் வாழும் சீவன்கள் மூச்சை அடக்கியும், வெளியே விட்டும் சீவிக்க முடியும். உணவை எடுக்கும் உபாயங்களை வழியை இறைவன் கொடுத்துள்ளான். ஆனால், மனிதன் இயற்கைக் காற்றை இழந்து அடைபட்ட அறையில் குளிர்சாதனப் பெட்டியை நம்பி விறைத்து, உறைந்து வாடுகின்றான். குளிரும், உஷ்ணமும், மனிதனைத் தான் அதிகம் வாட்டும். இயற்கையோடு சரசமாடும் கலையை மிருகங்களும், பறவைகளும் நன்றாக அறிந்து வைத்திருக்கின்றன.

ஆனால், இந்த அப்பாவிச் சீவன்களுக்கு மனிதன் தான் முழு எதிரி. இவைகளால் அவன் அடையும் நன்மைகள் தான், எத்தனை, எத்தனை?. பெற்ற குழந்தைக்குப் பாலூட்ட அன்னை மறுத்தாலும் பசுக்களின் தயவினால் பல் கோடி குழந்தைகள் உயிரை வளர்க்கக் காரணமாகின்றன.

மரங்கள் மூலம் காய் கறிகளைப் பெற்றுக் கொள்வதும், உடலுக்கு ஊட்டம் தேடுவதுடன், அதையே அழித்துத், தனக்கு வீடு அமைப்பதும் மனித குணம். விலங்குகளை வேட்டையாடுவான், கடலில் புகுந்து, கடல் சீவன்களைக் கொன்று புசிப்பான். ஆனால் அவைகளின் இருப்பிடங்களை ஏன் ஐயா அசுத்தமாக்கின்றீர்களே? சுடுகாடு போல் பச்சை நிலங்களை உங்கள் இஷ்டத்திற்குப் பாலை வனமாக்குகின்றீர்கள்? எங்களுக்கே எல்லாம் தெரியும் என்று எண்ணுகின்ற ஹே... மானுடா, உன்னைப்பற்றி இந்தஜீவராசிகள்





என்ன எண்ணும் என்று சற்றேனும் நினைந்தது உண்டா? நாம் இப்படியும் சிந்தித்தால்தான் என்ன...?

ஒரு குஞ்சுப் பறவை சொல்லும்,"ஐயோ பாவம், இந்த மனுஷன்... ஒரு அடி உயரத்திற்கே பறக்க முடியாத பலவீனன். இந்த உடம்பை வைத்து என்ன செய்கின்றான்?. கொடுமைகள் தான் செய்கின்றான்...." என்றும் எண்ணலாம்.

வளைந்து, நெளிந்து நீந்தும் மீன்கள் சொல்லும். "ஒரு செக்கன் கூட நீரினுள் மூச்சைப் பிடித்து, நிற்கப் பயப்படும் இவன் எல்லாம் என்ன மனுஷன்? எங்களைப் போல் விரைவாக நீந்த முடியுமா? எங்கள் புலனறிவின் கோடியில் ஒன்று இவர்களிடம் உண்டா? குரல் எழுப்பாமலே வெறும் அதிர்வுகளால் உடல் அசைவுகளால் எங்களுக்குள் எத்தனை செய்திகளைச் சொல்கின்றோம், அனுப்புகின்றோம். எங்கள் சாகச வித்தைகளை மனிதன் பலகோடி வருஷம் பயின்றாலும் செய்வானா?" இப்படி மீன்கள் சொன்னாலும், அவைகளில் ஏதும் தப்பு உண்டோ... சொல்லுங்கள் நண்பர்களே....!!

விலங்குகளும், பறவைகளும் தான் கூட்டுக் குடும்பமாக வாழுகின்றன. மனிதர்களுள் மட்டும் தான் உறவுகள், சுற்றம் என்றெல்லாம் உண்டா? ஒருகாகம் இறந்து போனால் பல காகங்கள் ஒன்றிணைந்து பெரிய சத்தங்களைக், எழுப்பி, கரைந்து, தங்கள் துயரை வெளிப்



RangaRakes
Tamilnavarasam.com

படுத்துவதை நாம் பார்க்கின்றோம்.

தன்னுடன் இணைந்து வாழ்ந்த ஆண்பறவையோ, அன்றிப் பெண்பறவையோ இறந்து போனால் துயர் மிகுதியினால் மற்றயது செத்துப் போகின்றது. ஒரு பறவை இனத்துக்கு ஒரு தகவலைச் சொல்கின்றேன். பெண் பறவை இறந்துவிட்டாலோ அன்றி ஆண்பறவை இறந்து போனாலோ, அவைகள் சிறு, சிறு கற்களை உண்கின்றன. அவைகளின் இரைப்பை நிறைந்ததும் உயரிய ஒரு இடத்தில் இருந்து தன் செட்டையை மடக்கிக்கீழே விழுந்து இறந்து போகின்றன. எப்படியாவது தனது உயிரைப் போக்க காதல் பறவைகள் செய்யும் வழி எம் விழிகளில் இருந்து கண்ணீரை வரவழைக்கு மல்லவா?

மரணபயம், மனிதர்க்கே மிகையானது. மிருகங்கள் வாழும் காலம் வரை மகிழ்வோடு வாழும். கொடிய வனத்தில் மான்கள் துள்ளித்திரியும். மாடுகளும் மரைகளும், நரிகளும், பரிகளும், கிடைத்ததைச் சாப்பிட்டுக் களிப்புடன் வாழும்.

ஒரு வனத்தில்,சிங்கம் ஒன்று,மாடு ஒன்றைத் துரத்துகின்றது. அதனுடன், மேய்ந்து கொண்டிருந்த மாடுகள் சற்றுக் கலவரப்பட்டுப் பின்னர் அமைதியாகிப் பழையபடி தங்கள் பாட்டிற்குமேய்கின்றன. துரத்தப்பட்ட மாடு அகப்பட்டுச் செத்துப் போகின்றது. அவைகளின் உறவு களுடன் ஒன்றாய் சாப்பிட்டதும் தூங்க ஆரம்பிக்கின்றன.





ஆனால், சிங்கங்களுக்குப் பக்கத்திலேயே ஏனைய மிருகங்கள் தங்கள் பாட்டிற்கு மேய்ந்து கொண்டிருக் கின்றன. தங்களுக்கான அன்றை உணவு கிடைத்தால் போதும் அவைகள் பெரிதாக எதையுமே எதிர்பார்ப் பதுமில்லை. அதேபோல், தங்களை மற்ற விலங்குகள் பிடித்துச் சாப்பிட்டு விடும் என்று எண்ணித் தங்கள் இயல்பை, கருமத்தை ஏனைய எந்த ஒரு விலங்கும் மறந்து விடுவதுமில்லை.

ஆனால், இந்த மனிதனில் எவன்தான் கிடைத்ததை வைத்துத் திருப்திப்படுகின்றான்? மீதி உணவை உணவு கிடைக்காத ஏழைக்கு வழங்குகின்றானா? அடுத்த வேளைக்கு ஆகுமே என்று எண்ணிக் குளிர் சாதனப் பெட்டி யிலே பூட்டுகின்றான்.

கிடைத்த காசை வைத்துத் திருப்திப்படுகின்றானா? அடுத்தவனிடம் சுருட்டுவது எப்படி என்று, தினம் தினம் சிந்தித்துச், சிந்தித்து தனது தலையை மொட்டையாக்கு கின்றான் என்ன கொடுமை இது?

தேவைகளைக் கூட்டுகின்றான். ஆசைகளைப் பெருக்குகின்றான். முயற்சி செய்தல் என்பது, மற்றவனை இயங்காமல் செய்வதே என்று தப்பான கருத்தைத் தனக்குள்ளே தேக்கிக் கொள்கின்றான்.

மிருகங்களுக்கும், ஏனைய உயிரினங்களுக்கும்



RangaRakes

Tamilnavarasam.com

தங்கள் சக்தியில் அபார நம்பிக்கையுண்டு. வேட்டையாடு வது எப்படி என்று தாய் தன் குட்டிகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றனது. குட்டியாக இருக்கும் போதே பூனையும், புலியும், சிங்கமும், பறவையினங்களும் கொஞ்ச நாள் பயிற்சிகளைத் தங்கள் பிறப்புகளுக்கு வழங்கும்.

ஆனால், மனித இனத்திற்கு எத்தனை வருடங்கள் பயிற்சிகள் வழங்கினாலும், உபதேசங்கள் செய்தாலும் இவர்கள் நன்கு பயில்கின்றார்களா, கேட்கின்றார்களா? எத்தனை ஞானிகள், தீர்க்கரிசிகள், புவியில் அவதரித்துப் பாடம், உபதேசம் சொல்லிப் போனார்கள். செவிமடுத்தார் களா? மதச்சண்டை, மொழிச் சண்டை, நிலத்திற்காக, நீருக்காக என எத்தனை எத்தனை விஷயங்களை முன்வைத்துச் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

மனிதனைவிட வேறு எந்த ஜீவராசிகளும் உபதேச ங்களைக் கேட்டதில்லை. ஏனையவைகளுடன் சண்டை செய்வதற்காக அடக்கி ஒடுக்குவதாகப் பயிற்சிகளைச் செய்ததுமில்லை. ஆயுதங்களைக் கையில் எடுத்து ஆரவார மாக மோதியதுமில்லை.

மிருகங்கள் எதுவாயினும் கல்லால் எறிந்து, பொல் லால் தாங்கித் தம்முள் பொருதியது உண்டோ? அவை தங்கள் உடல் பலத்தை சுய மூளையைப் பயன்படுத்தியே வாழுகின்றன. அவைகளுக்குப் பிரத்தியேக ஆலோசகர்கள் இல்லை. ஒன்றன் மேல் ஒன்று அமர்ந்து சவாரி செய்த





துமில்லை. தங்கள் கால்களால் நடக்கின்றன. தமது இறக்கைகளால் பறவைகள் பறக்கின்றன. தட்டிச் சுற்றி அடுத்தவன் குடியைக் கெடுப்பதுபோல் ஒரு மிருகத்தை இன்னும் ஒன்று ஏய்த்து வாழ்வதுமில்லை.

அவை வாழும் நிலமும், வானும் அவைகளுக்கே சொந்தமாகின்றன. ஆனால் அவை எல்லாமே தமக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடியதுமில்லை. இன்று ஒரு நிலம், நாளைக்கு இன்னுமொரு நிலம், வானத்தில், பல்திசைகளையும் நோக்கிப் பறக்கும் பறவைகளுக்கு, ஏது எல்லைகள்? ஒரு வட்டத்திற்குள் வாழுவதில்லை. விலங்குகளும், பறவைகளும், மற்ற எல்லா சீவன்களும், எம்மைக் காணுமிடம் எல்லாம் கொத்திக் குதறி நோய் பிணிஉண்டாக்கி, யுத்தம் புரிந்து உலகைக் கைப்பற்ற வல்லமை இருந்தும் அதுபற்றி எண்ணுவதில்லை. அது இறை செயல், சந்தோஷப்படுங்கள்!

மனிதன் ஒரு வட்டத்திற்குள் வாழச் சித்தமாகின்றான். தனது குடும்பம் மட்டும் தான் பெரிது, அடுத்தவனுக்கும் குடும்பம் உண்டு. அவனுக்கும் பாசம், பரிவு பந்தம் உண்டு என்று, எத்தனைபேர் நோக்குகின்றார்கள்? அறிவை வைத்து, அடக்கியாளப் பிரயத்தனபடுகின்றார்கள். இயல்பாக, யதார்த்தமாக,அன்னியோன்யமாக அன்புடன் எல்லோரிடமும் வாழ முடியும் என்பதை ஏன் தான் உணராமல் நடிக்கின்றான் என்பது தான் புரியவில்லை!.



RangaRakes

Tamilnavarasam.com

ஆண்டவன் பார்வையில் அனைத்தும் ஒன்றே. காரணம் இன்றி எதுவுமே படைக்கப்பட்டதுமில்லை. அப்படியாயின் கிருமிகளை எதற்காக இறைவன் படைத் தான் என்று நீங்கள் கேட்கலாம். நோய், நொடி இன்றி எல்லாச் சீவன்களும் உயிர்வாழ முடியாது.

மரணம் இன்றேல் புவனம் தாங்குமா? இறப்பு, பிறப்பு எல்லாமே எல்லா உயிர்க்கும் வந்துபோகும். நோய் கிருமிகளைப் படைத்தவன் தான் அதை அழிக்கும் அறிவையும் படைத்தான். இறப்பும் பிறப்பும் இயல்பேயா யினும் பிறப்பின் நோக்க நிறைவேறப்படல் வேண்டும். இறைவன் படைப்பு அற்புதம். ஒவ்வொரு உயிர்களுமே தத்தமது பணிகளைச் செய்கின்றன.

மானுடப் படைப்பும் இவைகளில் ஒன்றாயினும், இதுவே என்றும் உலகை ஆட்சி செய்கின்றது. நல்ல வாழ்வு வாழ்ந்துகாட்டு என்பதற்காகவே அறிவைத் திறனைச் சிந்தனை வளத்தைச் சேர்த்து இறைவன் வழங்கினான். மனிதன், மனிதனாக வாழாதவரை அவன் பெருமை பேச முடியாது. எல்லா உயிர்களும் தமக்குரிய பணிகளைச் செய்து கொண்டிருக்க மனிதன் மட்டும் மாண்புடை தன்மையாய், தூய ஆன்மாவாக வாழாது விட்டால் இறைவன் படைப்பே அர்த்தமற்றதாகிவிடுமே!

தம்மைப் பற்றிப் பெருமை கொள்வோர் அவ் வண்ணம் வாழ்ந்து காட்ட வேண்டுமல்லவா? மனிதர்





புல்லாய், பூடாய், புழுவாய்ச் சீவிக்க முடியாது. மிருகம் போல் கருமமாற்ற முடியாது. அறிவால் உலகை ஆள எண்ணும் நாம், உலகை ரசிக்கவும், உலக அனைத்து உயிர்களை நேசிக்கவும், கருணை காட்டவும் முனைப்புடன் செயல்பட்டால்தான் அவன் மானுடம் போற்றும் மா மனிதன்!.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
17-08-2008



RangaRakes
Tamilnavarasam.com



# சிறார்களின் நலனை பாதிக்கும் விடயங்கள் (ஒரு பார்வை)

> சிறார்களைச் சுதந்திரமாய் இயங்க விடுக!
> பொறுமை காப்பது அனைவரின் பொறுப்பே!
> திறமையுமிகு பிள்ளைகளின் பெருமையறிந்து
> நிறை மாந்தராக்குதல் பெற்றோர் பெரும் கடன்.

ஒரு மாலைப் பொழுது எனது நண்பர் ஒருவரின் இல்லத்திற்கு சென்றிருந்தேன். அங்கு அவரது குழந்தைகள் மிகவும் கலகலப்பாகக் களிப்புடன் வீட்டினுள்ளேயும், வெளியேயும் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தனர். பார்ப்பதற்கே மிகவும் சந்தோஷமாக இருந்தது. எனது நண்பர் வீட்டில் இல்லை “ அவர் வரும் நேரம், சற்றே அமர்ந்திருங்கள்” என்றார் அவரது மனைவி.





ஓரிரு நிமிடத்தில் மோட்டார் சைக்கிளின் ஒலி கேட்டது. அவ்வளவு தான் அதன் ஒலியைக் கேட்டதுமே ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த அவரது பிள்ளைகள் எல்லோருமே வருவது தமது தந்தையார் என்று அறிந்ததும் விழியைப் பிதுக்கியபடி அவரவர் மேசையருகே சட்டென அமர்ந்து, அருகில் வைத்திருந்த பாடப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்து விட்டார்கள். மாலை நேரம் விளையாடும் வேளை தந்தையைக் கண்டதும் மருளும் மக்கள்! இது என்ன இராணுவ முகாமா?

வந்தவர் சும்மா இருக்க வில்லை விழிகளை உருட்டிப்பிள்ளைகளை நோக்கி “ என்ன விளையாடுகின்றீர்களா, அல்லது படிக்கின்றீர்களா” என மிரட்ட ஆரம்பித்து விட்டார். பிள்ளைகள் முகத்தில் கலவரம் பீதி! நான் அந்த வீட்டை சற்று நோட்டம் விட்டேன். வீட்டு சுவரின் ஓரத்தில் பளபளக்கும் பிரம்பு ஒன்று தொங்க விடப்பட்டிருந்தது.

“இது என்ன சர்க்கஸ் கூடாரமா” என எனது மனம் மீண்டும் கேட்டது. பிள்ளைகளைக் கட்டுப்பாட்டுடன் வளர்க்க வேண்டும் ஆனால் பெற்றோரைக் கண்டதுமே நடுநடுங்கும் அளவிற்குப் பயமுறுத்த வேண்டுமா என்ன?

அன்பு, பாசத்தை வெளியே காட்டினால் பிள்ளைகள் பயப்பட மாட்டார்கள் எனச் சொல்லும் பெற்றோர்கள் பிள்ளைகளின் எதிர்பார்ப்பு என்ன என உணர்வதே இல்லை.



RangaRakes
Tamilnavarasam.com

பாசத்தை உள்ளே மனதினுள் பூட்டி வைப்பது சரியானதே எனச் சொல்வதே தவறுதான். வெளிக்காட்டாத அன்பு குழந்தைகள் மனத்தைச் சென்றடைந்து விடுமா? காலப் போக்கில் அவர்கள் பெற்றோர்களை எதிரிகளாகவும் நோக்க இடமுண்டு.

கண்டிப்புடன் வளர்க்கின்றோம், அவர்களுக்குத் தேவையானதை வழங்குகின்றோம், நல்ல உணவு, கல்வி, உடை, உறைவிடம் எதிலே நாம் குறை வைக்கின்றோம்? நிறைவான வாழ்க்கை அமைக்க அவர்களுடன் கண்டிப்பாக நடப்பது தவறாகுமா என்றும் பல பெற்றோர் சொல்லு கின்றார்கள்.

தமது பிள்ளைகளை எந்த விதத்திலும் வளர்க்க எமக்கு உரிமையுண்டு எனச் சொல்லுகின்ற பெற்றோர் அவர்கள் மனதைச் சதா இம்சைப்படுத்துவதில் என்ன நியாயம் இருக்கின்றது? "முன்னர் இப்படித்தான் எமது தாய், தந்தையர் எம்மை வளர்த்தார்கள். நாங்கள் நல்ல நிலைக்கு வந்து விட்டோம். ஒழுக்கமாக வாழ நாம் சில வேளை இவர்களுக்குத் தண்டனை வழங்கினால் தப்பா என்ன என்றும் கேட்கின்றார்கள்.

நாம் முன்னர் வாழ்ந்த வாழ்க்கை முறையுடன் தற்போதைய நிலையை ஒப்பீடு செய்ய முடியுமா? இன்று பிள்ளைகள் கல்வி முறை, உணவு பழக்க வழக்கங்கள் பொழுது போக்கும் முறைகள், உடை என எல்லாமே மாறி





விட்டது. அத்துடன் சுதந்திரமாக வாழும் எண்ணம், சமூகத்தில் பழகும் முறைமை எல்லாமே மாற்றமடைந்து விட்டது.

வீட்டினுள் பூட்டி வைத்துப் பிள்ளைகளை வளர்க்க முடியாது. புற உலகைக் காட்டாது எவருடனும் பழக விடாமல் பார்த்துக் கொள்வது எல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய சமாச்சாரங்களும் அல்ல.

இன்று இல்லங்களில் சில பெற்றோர்கள் தமக்கு உள்ள உரிமை காரணமாகப் பிள்ளைகளை இம்சிப்பது கூட சிறார்களுக்கான வன்முறை போலத் தோன்றுகின்றது. தாய் தந்தையாரை இழந்த பிள்ளைகளை உறவினர்களோ, மற்றும் எவரோ அவர்களைப் பராமரிக்கும் போது ஏற்படும் குறைபாடுகளால் ஏற்படும் மன வடுக்கள் சொல்லும் தரமன்று.

அது போலவே சில பெற்றோர்கள் ஒரு பிள்ளை சாதுர்யமாகச் செயல்பட்டு நன்கு கல்வி கற்றால் பாராட்டி மகிழ்வதும், சற்றுத் துடுக்குத் தனமாகவும், படிக்காமலும் இருக்கும் தனது பிள்ளைகள் மீதே ஓர வஞ்சனை காட்டும் நபர்களும் இருக்கின்றார்கள். எனினும், அத்தகைய பெற்றோர்களால் நிந்திக்கப்பட்ட பிள்ளைகள் வாழ்க்கை சீரழிக்கப் படுவதுமுண்டு.



RangaRakes
Tamilnavarasam.com

அதே சமயம், இதே பிள்ளைகள் நாளடைவிலே மனம் மாறி நல்ல நிலைக்கு வந்த பின்னர் தம்மை ஒரவஞ்சனையுடன் வளர்த்த பெற்றோர்களையே தாங்கும் தயாள குணமுடைய சற்புத்திர, புத்திரிகளையும் நாம் கண்டதுமுண்டு.

எந் நிலையிலும் வீடுகள் ஒரு அடக்கு முறையின் கீழ் இயங்கும் சிறைக்கூடமாக மாறிவிடக்கூடாது.சிறார்கள் மீதான அடக்கு முறை வன்முறைகள் பல பாடசாலை களிலும் நடப்பது வேதனைக்குரியவொன்றாகும்.

சின்னஞ்சிறு குழந்தைகள் தவறு இழைத்து விட்டால் அல்லது படிக்காமல் விட்டால் வகுப்பு அறைக்கு வெளியே வெளியில் சில ஆசிரியர்கள் விட்டு விடுவதாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பிள்ளைகள் சிலர் ஒழுங்கினமாக நடந்து கொண்டால் அவர்களை இருத்தி எழுப்புமாறு கூறுவதுடன் " இச் செயலை நூறு தடவைக்கு மேல் செய்" எனவும் தண்டனை விதித்து விடுவார்கள்.

தொடர்ந்து இருத்தி எழுப்புவதால் அடுத்த நாள் மாணவர்கள் பாடசாலைக்கு வரமுடியாமல் போய்விடும் சந்தர்ப்பமும் உண்டு. அது மட்டுமல்ல ஒரு சஞ்சிகையில் நான் படித்த சம்பவம் இது. தொடர்ந்தும் இவ்வண்ணம் பயிற்சியின்றி இருத்தி எழுப்பினால் உடல் உறுப்புக் களுக்கும் கெடுதல் வரலாம் மேலும் சிறுநீரகப் பாதிப்பு போன்ற கெடுதல்களால். வேறு பல பின் விளைவு களையும் ஏற்படுத்தி விடக் கூடும்.





தலையில் குட்டுவது, நகத்தால் விரல்களை நகக் கண்களில் வைத்து அழுத்துவது, காதைத் திருகுவது போன்ற செயல்கள் பாடசாலைகளில் சர்வ சாதாரணமாக நடக்கின்றது.

மாணவர்களைப் பகிரங்கமாகவே அவமானப் படுத்துவது நிறுத்தப்பட வேண்டும். இவர்களுக்கு ரோஷம் வருமாறு தண்டனை வழங்கினால் தான் திருந்துவார்கள் எனச் சொல்பவர்களும் இருக்கின்றார்கள்.

தண்டனைக்குரிய குற்றம் என்பது வேறு. சாதார ணமான குறும்புத்தனங்கள்என்பது வேறு. குழந்தைகளை குழந்தைகளாகவே நடத்த வேண்டும். அவர்களை விரோதிகள் போலவா பார்பபது? எல்லை மீறிய துஷ்டத் தனம் செய்யும் பிள்ளைகளைக் கண்டிப்பது சிறு சிறு தண்டனை வழங்குவது போன்றன ஒரு வரையறைக்குள் அடக்கப்படல் வேண்டும்.

இத்தகையோர்க்கு அன்பான ஆலோசனைகளை வழங்குவதும், அவர்களின் திறமையைத் தட்டிக் கொடுத்து அவர்களை பாராட்டுவது போன்ற வழிகளையும் கையாள வேண்டும். சிறார்களின் மனதில் ஆழமான வடுக்களை ஏற்படுத்தவது படுபாதகமான செயல்!

இல்லம் நின்மதியற்று இருந்தால்அவர்களது பிள்ளைகளின் மன இயல்பு பாதிப்படைவதில் வியப்பு



RangaRakes

Tamilnavarasam.com

இல்லை. ஒரு பிள்ளையைக் பார்க்கும் போது அவர்களின் குடும்ப சூழலை ஆசிரியர்கள் நோக்க வேண்டும்.

சிறுவர்கள் மீதான வன்முறைகள் பற்றிப் பேசுகின்றோம். சமூக விரோதிகளிடம் அகப்பட்டு உழலும் இளைய சமுகத்தை மட்டுமே நாம் கேள்விப்பட்டு கவலைப்படுகின்றோம் ஆனால் சாதாரண சூழலில் வாழும் மக்களுடன் மக்களாக வாழும் அப்பாவிக் குழந்தைகள் படும் அல்லல்கள் எமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை.

தனது பிள்ளைகளைக் கொண்டே மதுபானம் வெண் சுருட்டு, பீடி போன்ற பொருட்களை வாங்கி வரச் சொல்லும் தகப்பனார் செய்யும் செயல்களை என்ன என்பது?

தவறான வழியில் பணம் சம்பாதிக்கும் பெற்றோரால் பிள்ளைகள் படும் அவஸ்தை, அவர்கள் எதிர் காலத்தை இருள் மயமாக்கி விடுகின்றது. சில விஷயங் களைச் சொல்லவும் நா கூசும் பெற்றோரின் துர் நடத்தை யினால் மனம் பாதிப்படைந்து சாதாரண நிலையிலிருந்து நழுவி ஒரு மன நோயாளிகளான சிறார்களும் இருக்கின்றார்கள்.

சின்னஞ் சிறு குழந்தைகளின் எதிர்பார்ப்பு என்ன? அன்பான பாசமுள்ள பெற்றோர்களை மட்டுமல்ல சுற்றியிருக்கும் நல்ல சூழலை, இயற்கையைக், கூடியாடிக் குலவ நல்ல தன் வயது தோழர்கள் எனப் பல விஷயங்களை இவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.






நிலவுடன் பேசி மகிழவும், பூக்களுடன், மரங்களுடன், பட்சிகளுடன் சதா சஞ்சாரம் செய்ய விளையும் சிறுசுகளை சுதந்திரமாக உலா வர வழி விடுங்கள். இவர்கள் உலகம் மிக விரிந்தது. இவர்களிடம் இழைந்து இணைந்து மிக அந்நியோன்யமாக உல்லாசமாக வாழ விழையும் விளை பயிர்களை வையகத்தில் உன்னதமான இடத்தை வகிக்க வைப்பதே எமது கடன். பொறுப்பு!

எங்கள் பிள்ளைகள் மட்டுமல்ல, அனைத்துப் பிள்ளைகளுமே மிக அவதானமாகப் பேணப்பட வேண்டிய பெரிய பொக்கிஷங்கள். சிறார்களுக்கான நலன்களை வழங்காமல் விடுவது அல்லது அதனைத் தடுப்பது உலக ஷேமத்தைத் தடுக்கும் நடவடிக்கை. எவரது மனத்தை, உடலை மாசுப்படுத்தல், வேதனைப்பட வைத்தல் எவருக்கும் வழங்கப்பட்ட உரிமையல்ல

தினக்குரல்
“ஞாயிறு இவள்” பகுதி
10-07-2011



RangaRakes
Tamilnavarasam.com



# காலப் பெறுமதியைக் கண்டு கொள்க!

> "காலம்" கண்ணுக்குத் தெரியாது, சரித்திரம் படைக்கும் வேலை செய்வது உனக்காய் அன்று, உலகுக்குமானதே பற் பல இன்பம், துன்பம் வந்து போகும், எழுந்து நில்! நிலைத்து நின்று அரும் பணி செய் !... செய்!... செய்!

நேரங்கள் யாவருக்கும் ஒரே மாதிரியானதாகவே வழங்கப்பட்டுள்ளன. ஒரு நிமிடம் ஒருவருக்கு ஒரு மணித்தியாலம் என்று இருப்பதேயில்லை. அதே போல் ஒரு மணித்தியாலம் ஒரு விநாடியேனும் குறுக்கப்படுவதுமில்லை.

ஆனால் ஒருவர் தான் செய்யும் காரியங்களை கால விரயம் செய்யாமல் இருப்பதே சிறப்பானதாகும்.





அஃதாவது நேரங்களைச் சிதற விடாது திட்டமிட்டு ஆற்றல் மிகு செயல்களைச் செய்வதே காலத்திற்கு நாம் கொடுக்கும் அதி உயர் கௌரவமாகும்.

ஒரு துளி வினாடிகளையும் வீணடிப்போர் வீணர்களாகும் சந்தர்ப்பமும் உருவாகலாம் ஒரு சிறு பொழுதுகளுமே பொன்னிலும் மேலானதே! கணப் பொழுது தாமதத்தினால் சொல்லொணா இழப்புக்களையும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

விழித்தலுக்கே நாம்மேலான நேரத்தினை ஒதுக்குவோமாக! உறங்கி வாழ்வதற்கான காலத்தை சுருக்கி ஆற்றலை மேம்படுத்த அரும் பாடுபடுக தோழர்களே!

உறக்கம் ஆகாதது அல்ல ஆயினும் பெற்ற ஓய்வுக்குப் பின்பு உழைக்கும் நேரத்தை விரயம் செய்தல் நோஞ்சானாக வாழப் பிரியப்படுவதாகவே அமையும். கடும் உழைப்பாளி காலத்தின் நண்பராகின்றார்.

கண்களால் காணாத நேரங்களே உயிர் உள்ள வஸ்துபோல் எம்மை ஆட்சி செய்கின்றன.

"ஒரு நாள் பொழுது" சாதனையாளர்களுக்குப் பல நூறு வருட பலாபலன்களைப் பெற்றுத் தந்து விடுகின்றன

ஆயினும் ஆண்டுகள் பல வாழ்ந்தும் ஒன்றுமே செய்யாத பிரகிருதிகள் ஒரு வினாடிப் பெறுமானத்திற்கு



RangaRakes
Tamilnavarasam.com

மான சேவை செய்யாத வாழ்வோடு கால விரயம் செய்த மாபாவியாகின்றான்.

எனவே கால நீட்சியுடன் வாழ்பவன் ஒன்றுமே செய்யாது வீணான ஜம்பட்டம் அடிக்க முடியாது. ஒரு புல் ஒரு புழு கூட ஒரு விதத்தில் ஜகத்திற்கு நன்மைகளை செய்த வண்ணம் இருக்கின்றன

ஆனால் காலத்தைக் கரைக்கும் நபர்கள் தங்கள் தன்மானத்தையும் கரைத்து விடுகின்றார்கள் இப்போது "நீ என்ன செய்கின்றாய்" என்று கேட்டால் அவர் கொடுக்கும் பதில்களில் இருந்து ஒருவரின் திறமை எனக்குத் தெரிந்து விடும்.

நேரங்களை நாம் உருப்பாடியாகச் செலவளிக் கின்றோமா என எம்மையே நாம் கேட்டுக் கொள்வோமாக!

எனது பணிக்காகச் செலவழித்த பொழுதுகள் சரியாகச் செலவிடப்பட்டுள்ளதா எனவும் தெளிவுடன் தெரிந்து கொள்வீர்களாக!

பதட்டமும் அதனால் ஏற்படும் சோர்வும் எனது பணிகளை ஆற்றுவதற்கான காலத்தை நீளமாக்கிவிடும். எனவே நாம் செய்யும் காரியங்களை விருப்புடன் செய்வது டன் நேர நிர்ணயம் செய்யும் கலையையும் தெரிந்தி ருக்கவும் வேண்டும்.





நேர முகாமைத்துவம் என்பது அரசாங்க தனியார் நிறுவன ஊழியர்கள் அதிகாரிகளுக்கு மட்டுமேயானதும் அல்ல.

சகல தரப்பினர்களும் தத்தமது பணிகளைச் செய்ய நேரங்களை ஒதுக்கிச் செய்யும் முறைமைகளை அனுபவமூடாகத் தெரிந்து கொள்ளவும் வேண்டும்.

செய் கருமங்களின் தாத்பாரியங்களுக்கு அமைய இயங்குதலே அழகு. தேவையற்ற செயலுக்காக நேரத்தைச் செலவிட எண்ணுதலே தனக்குத் தானே செய்கின்ற மாபெரும் துரோகம்.

உடல்களைப்பு அடைந்தால் ஓய்வு தேவை. நாம் பொழுதுபோக்கு அம்சங்களில் நாட்டமடைவது இயற்கை. ஆனால் எல்லாமே.. ஒரு வலையறையை மீறியதாக அமையக் கூடாது

ஒரு சின்னப் பிள்ளைகளுக்கும் கருமங்களை ஒழுங்காகக் கற்றுக் கொடுக்க வேண்டும். வயது வந்தவர்க ளெனக். கண்டபடி வாழ்ந்தால் சிறார்களுக்கான ஒழுங்கான செயல்களைச் சொல்லிக் கொடுப்பது எங்கனம்?

இன்று காலவிரயம் செய்யும் நபர்களாலேயே நாடுகள் நலிவடைந்து போகின்றன முறையாகக் காரிய மாற்றுபவர்களைவிட உபதேசம் செய்யும் மனிதர்களே அதிகமாகிவிட்டனர்.



RangaRakes
Tamilnavarasam.com

"நாட்டிற்காக உழை" என்று சொல்லுபவர்கள் உழைக்கத் தயாரில்லை. அதைக் கேட்பவர்கள் தான் கருமம் செய்யப் பிறந்தவர்கள் போல் பேசுகின்றார்கள்.

எல்லோருமே காலப் பெருமதியை அறிந்து உணர்ந்து தங்கள் வாழ்வை மேன்மைப்படுத்தியே தீர வேண்டியுள்ளது.உலக முதல் தர கோடீஸ்வரர் பில்கேட் ஒரு நாளில் உறங்கி விடும் நேரம் நான்கு மணித்தி யாலங்கள் என்றால் நம்ப முடிகின்றதா?

சோம்பேறிகளுக்கு உறங்குவதற்கான காலம் மேலும் அதிகமாகத் தேவைப்படுகின்றது. "கால அதிகரிப்பு" கரும மாற்றுபவர்களைவிட சிரமமின்றிச் சும்மா இருப்பவர்களே விரும்புகின்றார்கள். உறக்கத்துடன் உறவாடு வதை விடுத்து விழிப்புடன் காலத்தை உருவாக் குதல் மேன்மை.

நாம் செய்யும் மா பெரும் பணிதான் எமக்கான நற் காலத்தை அமைக்கின்றது.

காலம் எம்மை உருவாக்குவதை விட நாம் எமது செயல் திறனால் காலத்தை சிருஷ்டிப்போமாக! எதிர் காலம் எவரைப் பற்றிப் பெருமையுடன் பேசுகின்றதோ அவரே காலம் தோறும் வாழ்ந்து வருபவர்களாவர்.






மேலும் அவர்களே காலத்திற்கு பெருமை அளித்த வர்களுமாவர். எங்களால் பூமி பெருமை கொள்ள வேண்டி டும் எனின் உலக வேகத்திற்கு ஈடுகொடுத்து இயங்க வேண்டியவர்களாவோம்.

கடிதென ஓடும் காலம் எம்மை முதுமைக்குள் இட்டுச் செல்கின்றன. ஆனால் சாதனையாளர்கள் செய்யும் செயலினால் இவர்கள் நித்ய சிரஞ்சீவித் தன்மையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஞாலத்தை வென்றிட பொழுதுகளைப் புனிதமாக்குக!

தினகரன்
வாரமலர்
26.06.2011



RangaRakes
Tamilnavarasam.com



# தெரிதலும் தெளிதலும்

> தெரிதலும் தெளிதலும் வாழ்வின் நிலையுணர்த்தும்.
> வழி தெரிந்து நடத்தல் மானுட நெறியாம்.
> விதியைச் சொல்லி மதியை அடைத்து
> பழியை இறைவன் பெயரில் செலுத்தி
> விழி பிதுங்கும் வேதனை வேண்டாம்.
> அழிவற்ற ஆற்றல் தோன்ற எழுமின்!

தங்களது திறமைகளை தெரிந்து கொள்ளாமலே பலர் இருந்து வருகின்றார்கள். யாராவது ஒருவர் " என்ன இப்படி இருக்கின்றீர்கள்? என்னால் நம்பவே முடிய வில்லை. நீங்கள் செய்யும் காரியங்களை வேறு ஒருவருமே செய்ய முடியாது" என்று சொன்னாலும் இத்தகையவர்கள் நம்பவே மாட்டார்கள்.





சிலர் சர்வசாதாரணமாகச் செய்யும் வேலைகளைக் கண்டால் நமக்கு பெரு வியப்பாக இருக்கும்.

ஆயினும் பல திறமையுள்ளவர்கள் தங்கள் ஆளுமை பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ளாமலேயே இருந்து விடுகின்றனர்

விளக்கு எரியும் போது அதன் திரியைச் சற்றுத் தூண்டினால் அது பிரகாசமாகவே எரியும். விளக்கின் ஒளி எவ்வளவு பிரகாசத்தைத் தரும் என்பது அதற்குத் தெரியாது.

மௌனமாக இருப்பவர்களைக்கண்டதும் நாம் அவர்களைக் கண்டபடி எடைபோட்டு விடமுடியாது தன்னடக்கம் காரணமாகவும் சிலர்தமக்குள்ள ஆற்றல்களை வெளிப்படுத்துவதில்லை, இன்னும் சிலர் லஜ்ஜை காரணமாகத் தம்மை வெளிக்காட்டாமலே இருப்பதுண்டு

வல்லவர்களைஇனம் கண்டு அவர்களை வளர்ப்பது சமூகத்தின் பெரும் கடமையாகும்.

தங்கள் பற்றிய பலத்தைத் தெரியாமலும் அதனால் செய்ய வேண்டிய பணிகளை மேலும் செய்யப் பலர் அச்சப்படுவதுண்டு

பலரது முன்னேற்றங்கள் ஒரு சிலரால் துண்டிக்கப் படுவது உலகிற்கு உவப்பானது அல்ல, அது இழப்பு.



RangaRakes
Tamilnavarasam.com

ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தான் தெரிந்து கொள்வதும், தனது செயல்களில் தெளிவைப் பெறுதலும் அவசியமாகின்றது.

இந்தப் பூமி பொதுவானது. எல்லோருமே நல்ல செயல்களைச் செய்ய செய்து முடிக்க ஜெயித்துக் கொண் டேயிருப்பார்கள்.

யானைக்கு அதன் பலம் தெரிவதில்லை. தெரிந் தால் சின்ன அங்குசத்திற்கு ஏன் பயப்படவேண்டும்? ஆனால் அது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தனது வலி மையைக் காட்டியே விடும்.

நல்ல நுண்அறிவுகொண்ட அறிஞர்களைக் கலை ஞர்களை, தொழில் வல்லுனர்களை நாம் முழு மையாக இனம் கண்டு கொண்டிருக்கின்றோமா?

ஏன் உங்கள் வீட்டில் உள்ளவர்களின் விசேட திறமைகளை அல்லது எதிர் வீட்டில் கிராமத்தில் உள்ள நபர்களின் திறமையைக் கண்டு உணர்ந்திருக்கின்றீர்களா? அல்லது உணர்ந்தும் வெளி உலகிற்குச் சொல்லியிரு க்கின்றீர்களா?

நல்லதை கண்டு கொள்ளாமை போல் பலவீனம் வேறில்லை. சிலர் தமது அறியாமை காரணமாக மற்றவர்கள் திறமைகளைப் புரிந்து கொள்வதில்லை,





இன்னும் சிலர் வேண்டுமென்றே பொறாமை வஞ்சக உணர் வினால் ஒருவரின் திறமைகளைக் கண்டு கொள்ளாதது போல நடிப்பார்கள்.

சூரியனை உள்ளங்கைகளால் புதைத்துவிட இயலாது. திறமைகளை ஆளுமைகளை சூது, வாதினால் சுற்றிக் கட்ட முடியாது. எப்படியும் ஒருவரின் இயல்பான தனித்துவத்தை அல்லது மிகச் சிரமத்துடன் கற்றுணர்ந்த மையினால் பெற்றுக் கொண்ட புலமைகளை எவராவது தகர்த்திட எண்ணினால் அது அவர்களுக்கே எதிராக அமைந்து விடும். சந்தேகமே இல்லை.

சோம்பி இருக்க நேரத்தை ஒதுக்கினால் எவருமே சுபீட்சமாகத் தன்னை உணர்ந்து வாழ முடியாது

திறமைகளை தாமே உணர்ந்து கொள்ள உழைப்பு மிகவும் அவசியமானது எப்படி வாழ வேண்டும் என நல்ல முடிவை எடுப்பவனுக்கு இயல்பாகவே உழைக்கும தன்மை உள் நின்று அவனை எழும்பி நிற்கச் செய்கின்றது.

நல்ல திறமைசாலிகள் கூட ஒதுங்கி வாழப் பிரியப் படுவது உலகிற்கு அது இழப்பானதேயாம். மற்றவர்களின் தலையீட்டை அல்லது தங்களது சுதந்திரத்தில் குறுக்கீடு செய்வதை அறவே விரும்பாத பலர் தமக்குச் சேர வேண்டிய புகழை, பெருமைகளைக் கூட விரும்பாமல் இருப்பது ஆச்சரியமானதே!



RangaRakes
Tamilnavarasam.com

"அட எவ்வளவு பெரிய மனுஷன் ஆனால் எதனையும் கண்டு கொள்வதில்லை. தனது வித்தைகளைப் பெரிது படுத்துவதுமில்லை. அதனை எவருக்கும் சொல்லிக் கொடுக்கவும் இல்லை ஏன் இவ்வாறு கூச்சப்படுகின்றாரோ தெரியவில்லை" எனச் சிலரைப் பற்றிய விமர்சனங்கள் எழுவதுண்டு கூச்ச உணர்வு வந்து விட்டால் எப்படி ஆற்றல்களை வெளிப்படுத்த முடியும்? சொல்லுங்கள்? நான் எதுவுமே தெரியாத அறிவீனன். ஒன்றுமே எனக்குத் தெரியாது." என வல்லமையுள்ளவனே எண்ணினால் அவன் எதிர் காலம் என்னாவது?

உறங்கும் சிங்கத்திடம் எறும்பும் பயப்படாது. பாம்பு சீறாது விட்டால் அதன் ஆயுள் அணைந்து போகும் .

நாங்கள் சீவிப்பதைக் கூடப் பிறருக்குத் தெரியப் படுத்த வேண்டியுள்ளது.

எனவே தான் எங்களை நாம் இனங்காட்ட வேண்டியுள்ளது. ஆயினும் அது தற்பெருமை யாகவும் அகங்கார முனைப்பாகவும் அமையாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

தம்மைத் துதிபாடுபவர்களிடம் தன்னை இழக்காமல் இருக்க வேண்டும். தன்னிலை உணர்வதற்குப் பொய்யுரையாளர்களின் பேச்சில் மதி மயங்குதலாகாது. காரியம் பெறுவதற்காக அழகு மொழிகளை அள்ளி வீசுபவர்கள்





எவர்களுக்கும் நன்மை செய்பவர்களாகவும் ஆகமாட்டார்கள். நல்ல பெரியோர்கள் உற்ற தோழர்களின் விமர்சனங்களின் உண்மைத் தன்மைகளை ஏற்று ஒடுங்குதல் ஏற்புடையதாகும். எம்மை நாம் அறியாதவரை எதனையும் நாம் அறிய முடியாது நல்லவற்றைப் பெறவும் முடியாது உணர்ந்து தெளிக!

தினகரன்
வாரமலர்
03.07.2011



RangaRakes
Tamilnavarasam.com



# அஞ்சேல்! அஞ்சேல்!

அஞ்சுவதால் ஆதாயம் யாது? ஆதாரம் வேண்ட
நெஞ்சை நிமிர்த்தி வஞ்சகரை வேரறு!
கொஞ்சம் அச்சம் புகுந்து கொண்டால்
பஞ்சு எரிவது போலப் பற்றும் -அஞ்சாதே!
நஞ்சனைய அச்சத்தால் உனக்கு - நீ
வஞ்சனை செய்யாதே! வீரமே எவர்க்கும் தைரியம்!

பயப்படுதல் எதிரிகளுக்கு உகந்ததாகி விடுகின்றது. எதற்கும். அஞ்சுபவர்களிடம் இருந்து எல்லாமே பறிபோகின்றன. உடமைகள் மட்டுமல்ல அவர்களது தனித்துவங்கள்,உரிமைகள் கூட உரித்தெடு க்கப்படுகின்றன

அச்சப்படுபவர்கள் சந்தோஷமாக இருப்பதில்லை. அனைவரையும் நேசிப்பவன் மற்றவனை அச்சுறுத்துவதில்லை.





தன்னை நிலை நிறுத்த சுய ஆதிக்கம் தேவைப்படுகின்றது வீதியில் வாகன நெரிசலைக் காரணம் காட்டி நடந்து செல்வதற்குக் கூடப் பயப்பட வேண்டுமா என்ன?

எங்கு தான் இடையூறுகள் இல்லை? இடர்களைக் களைவது தான் சுவாரஸ்யமான வாழ்க்கையாகும். இறுதி மூச்சு இருக்கும் வரை உறுதியுடன் வாழ்க்கையை வளப்படுத்துக!

பலர் வீணான கற்பனையாலேயே தங்களைத் தாங்களே சுயமாக வருத்திக் கொண்டிருக்கின்றார்கள் இது கூடச் சுயமாகவே தம்மைத் தாமே சீண்டிக் கொள்வதாகவே அமையும்

விவேகம், வேகம், நிதானமுடன் செயல்பட்டால் பீதி ஏது? தன்னையறியாமலே தவறுகள் செய்து விட்டோமோ அல்லது எதனையும் தன்னால் செய்ய முடியாது என்கின்ற பதட்டமே பலரைச் செயல் இழக்கச் செய்து விடுகின்றது .

செயல்களில் மந்தம் ஏற்படும் போதே பயம் தொற்றிக் கொள்ள ஆரம்பித்துக் கொள்கின்றன. செய்யும் கருமங்களைப் பற்றிப் பெரிதாகக் கற்பனை செய்வதே பலருக்குப் பழக்கமாகிப் போய் விட்டது.

வெறும் கற்பனைக்குள் கொடுக்கும் கெளரவத்தை



RangaRakes

Tamilnavarasam.com

நிஜங்களுக்கும் மனிதன் அளிப்பதால் தான் பல பிரச்ச னைகளை இவன் எதிர் கொள்கின்றான்

சாதாரண தோல்வியை அனுபவித்தவனுமே தொடர்ந்தும் அப்படியே நிகழ்ந்து விடும் எனத் தினம் நொந்து நோவதுபோல் சுத்த அறிவிலித்தனம் என்ன இருக்கின்றது?

துன்பத்தின் தடங்களில் துவண்டு சுருண்டு தடம் மாறாது எழுந்து நிற்பவர்களுக்கே புதுவழி புலப்படுகின்றது. பலவீனங்களில் மிகவும் கொடியது மனம் சோர்வடைவது தான்.இந்த நிலை தான் தனது நிழலைக் கண்டு கூட மனிதரைப் பயப்படவைக்கின்றது.

ஒருவரின் புறத் தோற்றத்தை வைத்து மட்டும் நாம் அவர்களின் மனத் திண்மையினை எடைபோட்டுவிட முடியாது.

கட்டுடலுடன் செழித்து வளர்ந்த ஆஜானு பாகுவாகத் தோற்றம் கொண்டவர்கள் கூடக் கரப்பான் பூச்சியைக் கண்டால் அலறியடிப்பதுண்டு. ஆனால் மிக மெல்லிய நோஞ்சனாக இருப்பவர்கள் கூட ஓடும் பாம்பை விரட்டிப்பிடிக்கும் துணிச்சல்காரராக இருக்கிறார்கள்.

மனம் தான் ஒருவரை இயக்குகின்றதுடன் அவன் எதிர் காலத்தையும் தீர்மானிக்கின்றது. மனத்தின் ஸ்திரத்





தன்மையை உருவாக்கச் சலனமற்ற சிந்தனையை உருவாக்க வேண்டும். குழம்பியபடி இருக்க எவர்களு க்குமே பிடிக்காது. குழப்பத்துடனான தோழமையைத் தகர்த்து தெளிவுடன் இயங்குக! பயம் தொலைந்து போகும்.

சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் எல்லோருமே படு துணிச்சல்காரப் பேர்வழிகள் எனச் சொல்ல முடியாது. இவர்கள் பயமிகுதியினால் தினம், தினம் செத்துச், செத்து உயிர்க்கின்றார்கள். வெளிப் பார்வைக்கு இவர்கள் தங்களைப் பெரிய வீரனாகக் காட்டிக் கொள்வார்கள்.

பணம், பொருள் தேடும் வேட்கையினால் தகாத காரியங்களைச் செய்வதும், அச் செயல் மூலம் தண்ட னையில் இருந்து தப்பித்துக் கொள்ள மன நிம்மதி இழந்து தவிப்பதும், எதிரிகளின் பழிவாங்கும் செயல்களில் இருந்து மீளப்படுகின்ற அவஸ்தைகளும் கொஞ்ச நஞ்சமானது மல்ல

ஒருவர் ஓங்கிச் சப்தமிடுவதால்அல்லது உறுமுவ தால் இவர் வீரனாக பயம் ஒழித்தவராகக் கருத முடியாது

மௌனமாக இருப்பவர் எல்லோருமே வீர்யம் குறைந்தவர்களாகவோ அச்சமுடன் வாழ்ந்து வருபவர்களா கவோ கருதல் கூடாது ஆழமான கடல் அமைதியானது. எந்த பெரிய கப்பலை பெரிய உயிரினங்களைத் தாங்க வல்லது



RangaRakes
Tamilnavarasam.com

விசாலமான இதயங்கொண்டவர்களை எந்தப் பிரச்சனைகளுமே தாக்கி விடமுடியாது. எதனையும் தாங்கும் இயல்பினர் மனம் தளர இடமளிக்கப் போவதில்லை.

பசளையற்ற வரண்டநிலத்தில் எது தான் முளைக்கும்? ஆனால் வரண்ட மனதில் பயம்தான் படரும் நல்லன உற்பத்தியடையாது.

அதீத கோபம் பதட்டத்தினையும் உருவாக்கின்றது. மனம் தன்னிலை இழக்காது எதனையும் எதிர் கொள்ளும் திட சிந்தையினை எமது உடமையாக்குவோம்

பயம் கொள்பவர்கள் எந்தச் சுதந்திரத்தினையும் நுகர முடியாது. இவர்கள் சாதாரண சுகங்களையே இழந்து துன்புறுகின்றனர் பக்கத்தில் விளையாடும் குழந்தை சிரித்தால் பார்க்க மாட்டார்கள் . பசுமை கொண்ட மரங்கள் வெறுமையாகத் தோன்றும் தென்றல் தீச்சுவாலையாய் சுடும். சங்கீதம் கேட்கத் தோன்றாது.

இவர்கள் கொஞ்சம் தம்மை ஸ்திரப்படுத்தி நிதானமாகச் சிந்தித்தால் தனது செயல்கள் யாவுமே அர்த்தமற்றதாகத் தோன்றும்.

இருள் வேளை பசாசுப் பயம், பகலிலேயும் திருடர் பயம், யார் யாரோ தன்னை மட்டுமே தீண்ட வருவதாக





எண்ணினால் எப்படி ஐயா சீவிக்க முடியும்? அதீத அச்சம் கூட ஒரு மனநலப் பாதிப்புத் தான்.

தாழ்வு மனப்பான்மையின்றித் தற்துணிவுடன் காரியம் செய்பவர்கள் இரும்புக் கோட்டைக்குள்ளும் இலகுவாக உட்பிரவேசிப்பார்கள். ஒரு தெருவைத் தாண்ட ஒன்றரை மணிநேரம் யோசிப்பவர்களும் உளர். நடக்கப் பழகும் குழந்தைகளிடமிருந்தாவது துணிச்சலைக் கற்றுக் கொள்ள வேண்டும்

வெறும் காலுடனும் வேகமாய் உலகை வலம் வர முடியும். மனம் வலியது. அதை நைந்து போக நையப்புடைக்க வேண்டாம். உங்களை நீங்களே உற்சாகப்படுத்துக. அஞ்சேல்! அஞ்சேல்! அஞ்சேல்!

தினகரன்
வாரமலர்
10.07.2011



RangaRakes Tamilnavarasam.com



# முதியோரும் இளையோரும்

> முதியோர் இன்றி இளையோர் ஏது? இவர்கள்
> முதுமொழி ,அறிவுரை திறமையை வளர்க்கும்
> பெரியோர் பயன் தரு புதுமையை ஏற்றால்
> சிறிய பராயத்தினர் உறவு பெருகும், நிறைவே என்றும்!

இளைய தலைமுறையினர் முதியவர்களையும், முதியவர்கள் இளைய தலைமுறையினரையும் பரஸ்பரம் குறை கூறிவருவது புதுமையானது அல்ல. காலம் காலமாகத் தொடரும் விடயம்

காலம் இப்போது ரொம்பவும் கெட்டுப் போய் விட்டது. பண்பாடு, மரியாதையை தற்போது இளையவர்களிடம் காண முடிவதேயில்லை. என்ன படித்துக்





கிழித்து விட்டார்கள்? நாங்கள் எல்லாம் இப்படியா தறுதலைகளாய் திரிந்தோம்? தாய், தகப்பன் வயது போனவர்களை மட்டு மரியாதை செய்கின்றார்களா? "என்று பொருமும் முதியவர்களின் கடந்த காலத்தை யாரிடம் கண்டு கேட்பது?

ஆனால் இதே மாதிரியான பேச்சுக்களையும் குற்றச்சாட்டுகளையே தமது காலத்து முதியோர்களிடம் கேட்டுச் சலித்துப் போயிருப்பார்கள். பொதுவாக வயது முதிர்ந்த பின்னர் அறிவில் முதிர்ச்சி, அனுபவம் எல்லாமே வந்து விட்டால் சின்னத் தவறுகளும் பெரிதாகத் தான் தோன்றலாம்.

இதன் பொருட்டு நல்ல பொறுப்புள்ள இளைஞர், யுவதிகளையும் அதே தரத்தில் விமர்சித்தலாகாது. அது சரி, இளம் தலைமுறைகள் மீது குறை சொல்பவர்கள் அவர்களது நடத்தைகளுக்கு மூல காரணம் யார்.எவர் என ஆராய்ந்து பார்க்க வேண்டுமல்லவா?

இல்லங்கள் தோறும் பிள்ளைகள் தமது பழக்க வழக்கங்களைத் தாய், தந்தையினூடாகவே பழகிக் கொள்கின்றனர். அவர்களது பெற்றோர்களும் தத்தமது பெற்றோருடாகவே தங்கள் நடத்தைகளைக் கடத்து கின்றனர்.

தாயைப் போல பிள்ளை என்பார்கள் அதே போல் தந்தையே தனயனை உருவாக்குகின்றார். என்றும் கூறு



RangaRakes
Tamilnavarasam.com

கின்றார்கள். அத்துடன் பரம்பரையான இயல்பு பற்றியும் விஞ்ஞான ரீதியான விளக்கங்கள், மனித நடத்தைகள் பற்றியும் சொல்லப்படுகின்றது.

படிக்கும் பிள்ளைகள் வீட்டில் தந்தை குடித்து வெறித்தால் அதன் பாதிப்பு யாருக்கு? பொறுப்பில்லாத இல்லத் தலைவன் தலைவியரால் குடும்பம் இடும்பை யைத்தான் சந்திக்கும்.

இன்று தெருவோரத்தில் கேட்பாரற்றுச் சுற்றித்த திரியும் சிறார்களின் எதிர் காலம் கேள்விக் குறியானது. இவர்களில் பலர் சமூக வழிகாட்டலின்றிச் சிக்கிச் சீரழிகின் றார்கள். சமூக விரோதிகளாகி குற்றச் செயல்களில் ஈடுபடும் பயங்கரமான வெறுப்பூட்டும் மனிதர்களாகி விடுகின்றனர்.

மதுவை வாங்கப் பிள்ளைகளை அனுப்பும் பெற்றோரும் இருக்கின்றார்கள். சேரிப்புறத்தில் கணவன், மனைவி இருவருமே மதுபழக்கத்திற்கு அடிமையாக இருப்பது புதுமையுமல்ல.

பிள்ளைகளை ஒழுங்கான ஒழுக்கம் வாய்ந்த வர்களாக உருவாக்குவது பெற்றோருடைய கடமை மட்டுமல்ல, சமூகத்தினதும் பாரிய பொறுப்புமாகும்.

ஒருவர் நொடிந்து போனால் அவருக்குக் கை





கொடுப்பது மற்றவன் பொறுப்புமாகும். சமூகப் பொறுப் பிலிருந்து ஒருவருமே விலகிடக் கூடாது.

இன்று பலருமே தங்களுக்கான பொறுப்புக்களைத் தாம் சார்ந்த உறவுகளோ, அல்லது நண்பர்களோ சுமக்க வேண்டும் என எண்ணுகின்றார்களே ஒழிய தங்களுக்கான பங்களிப்புகள் எது எனப் புரியாதவர்கள் போல நடிக்கிறார்கள்.

சமூக அவலங்களுக்கு பிறரை மட்டும் குற்றம் சுமத்த முடியாது. அது போல் அனுபவம் குறைந்த இளைஞர்களின் சிற்சில அறியாமையுடன் கூடிய நடத்தைகளைப் பக்குவமாக எடுத்துரைத்து அவைகளை களைய முனைய வேண்டும்.

ஒரு இளைஞர் விரக்தியுடன் மது அருந்தி விட்டு இப்படிச் சொன்னதாக நேரில் கண்ட உறவினர் தெரிவித்தார். “நான் வைத்தியம் படிக்க விரும்பினேன் அழுது அடம் பிடித்து பள்ளிக்கூடம் அனுப்பி வை அப்பா.... என்றேன் அவரோ நீ படித்தது போதும் பக்கத்துச் சையிக்கிள் கடைக்குச் சென்று சைக்கிள்களுக்கு (துவிச்சக்கர வண்டி) வைத்தியம் பார்க்கப் பழகு...” என்று சொல்லி என் வாழ்க்கையையே கெடுத்து விட்டார். இவரது பிரலாபம் நகைப்பிற்குரியதன்று. அனுதாபத்திற்குரியது.

“படிக்க விரும்பும் பிள்ளையை குடிக்கத்



RangaRakes
Tamilnavarasam.com

தூண்டுமாற் போல் நடாத்தியது யார் குற்றம்" ? இந்த வேளைக்குரிய குமுறல்களை நான் பலரிடமிருந்து கேட்டிருக்கின்றேன்.

வசதியானவர்களின் பிள்ளைகள் உயர்ச்சி கண்டு பெருமையுறும் சமூகம் எளியவர்களை உயர்த்த மட்டும் மௌனமாகி விடுகிறதே!

இன்னும் சிலர் சாதி சமய வேறுபாடுகளால் தங்கள் சமூகம் சாராத பிள்ளைகளைத் தரம் தாழ்ந்தவர் களாகவே நோக்குகின்றனர்.வயது முதிர்ந்தும் அறிவு மழுங்கியவர்கள் போல நடந்து கொள்கின்றார்கள்.

"உங்களுக்கெல்லாம் படிப்பு எதற்கு ஏதாவது வயிற்றுப் பிழைப்பிற்குத் தொழில் செய்ய வேண்டியது தானே" எனச் சர்வ சாதாரணமாகச் சொல்லி விடுவார்கள்.

பாசத்துடன் வளர்த்தெடுக்கும் செல்வக் குழந்தை களை பொது நல நோக்கான சிந்தனைகளையூட்டி வளர்க்க வேண்டியது தலையான பெரும் கடமையாகும்.

அவ்வண்ணமே பணிவு, பெரியோர் சொற் கேட்டல், எவரையும் மதித்து கர்வம் கொள்ளாது பண்புடன் நடப்பதனை முதன்மைக் குணமாகக் கொள்ள வேண்டியது இளையோர் கடன்.





பெரியவர்களின் மேலான ஆசீர்வாதம் இளைய சமூகத்திற்கு அவசியமாகின்றது. இல்லங்களில் முதியோர் இன்றி நல்லவை பற்றி ஆலோசனை நல்க. அவர்களை விட எவருக்குமே தகுதி கிடையாது பெற்றுக் கொண்ட அனுபவங்களைச் சொல்லும் போது எள்ளி நகையாட வேண்டாம். இவை நல்லது அல்ல. கேட்பது சிறப்பு.

நல்ல பழக்க வழக்கங்களை எமது அடுத்த தலை முறைக்குக் கையளிக்க வேண்டிய முதியவர்கள், தாங்கள் முதல் கண் நல்ல படி வாழ்ந்து காட்ட வேண்டும். கிளிப் பிள்ளை போல் சொல்வதை உடன் சொல்லும் பிள்ளைகளுடன் ஒழுங்கான நல்ல வார்த்தைகளையே பேசி மகிழ்க!

குழந்தைகள் முன் தகாத எக் கருமங்களையும் அவர்கள் மூளையில் ஏற்றாதிருப்பீர்களாக! வரலாறு படைக்கவுள்ள பிள்ளைகளை துன்பம் பரவாமல் தடுத்து ஆரோக்கியமான உளவளத்துடன் களிப்புடன் வாழத் தியாக சிந்தனையுடன் செயல்படுக! இளய சமூகம் புது உலகை எழுப்பும் சிருஷ்டி கர்த்தாக்களாவார்.

தினகரன்
ஞாயிறு மஞ்சரி
17.7.2011



RangaRakes
Tamilnavarasam.com

# கணப் பொழுதேயாயினும்
# யுகப் பொழுதின் சாதனை செய்!

## பருத்தியூர் பால. வயிரவநாதன்

*வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 06*
*சிந்தனைக் கட்டுரைகள்*

RangaRakes
Tamilnavarasam.com

## நூலாசிரியர் பருத்தியூர் பால. வயிரவநாதன் எழுதி வெளியிட்ட "வாழ்வியல் வசந்தங்கள்" நூற் தொகுதிகள்


1. உண்மை சாஸ்வதமானது - பாகம் - 01
2. அம்மா - பாகம் - 02
3. சுயதரிசனம் - பாகம் - 03
4. கோழைகளாய் வாழுவதோ? - பாகம் - 04
5. ஞானம் - பாகம் - 05
6. கணப்பொழுதேயாயினும் யுகப்பொழுதில் சாதனை செய்! - பாகம் - 06
7. சும்மா இருத்தல் - பாகம் - 07
8. உண்மைகள் உலருவதில்லை! - பாகம் - 08
9. உன்னோடு நீ பேசு! - பாகம் - 09
10. நான் நானே தான்! - பாகம் - 10
11. வெறுமை - பாகம் - 11
12. காதலும் கடமையும் - பாகம் - 12
13. அக ஒளி - பாகம் - 13
14. உன்னை நீ முந்து! - பாகம் - 14
15. சுயபச்சாதாபம் - பாகம் - 15
16. மௌனம் - பாகம் - 16
17. மரணத்தின் பின் வாழ்வு - பாகம் - 17
18. சிந்தனை வரிகள் - பாகம் - 18








# எதிர்ப்பினை எரி! பகைவனை மதி!

பகைவர்களின் வஞ்சகச் செயல்களைத் தகர்ப்போம். இவர்களின் செயல்களை மட்டும் நிராகரிக்கும், நாம் அவர்களை ஏற்றுக் கொள்ளத் தயங்கக் கூடாது. மனிதனை மனிதன் வெறுக்கலாகாது. எந்த மனிதனும் திருந்தி வாழமுடியும். ஒருவரை நாம் வெறுத்து ஒதுக்கினால் அதனால் நாம் சமூகத்தில் ஒருவரைக் களைய முற்படும் பாவத்தைச் செய்தவராவோம். அத்துடன் நல்லவராகும் எவரையும் தடுத்ததாகவே கருதப்படும். அதே சமயம் தீவினையாளரைக் கண்டு அச்சமடைதல் கூடாது. களங்கமற்ற எண்ணங்களுடன் தீய பகைவர் செயல்களை அறுப்பது பாவமானது மல்ல. அதுவே மானுட தர்மமும், உலகின் மீதான கரிசனையுமாகும்.

எதிரிகள் என்போர், எம்மை உற்சாகமூட்டும் கருவிகள் எனக் கொள்வோம். இவர்களை எரிச்சலூட்டும் பிரகிருதிகளாக மட்டும் கொள்ளாது, எங்கள் வாழ்க்கையைச் சரிவர இயக்குதற்கு வல்லமையூட்டும் சக்திகளாகக் கொள்வோம்!



RangaRakes
Tamilnavarasam.com

எமக்குப் பிடிக்காத ஒரே காரணத்திற்காக, எதிரிகள் எனக் கருதப்படுவோர் துரோகிகளும் அல்லர். எனவே பகைவரை மதித்தலே நற்பண்புமாகும். ஆனாலும், எதிரிகளைச் சம்பாதித்துக் கொள் என்று சொல்ல வரவில்லை.தானாக உருவாகிவரும், தொல்லையூட்டும் எதிரிகளின் தரம் உணர்ந்து செயல்படுவோமாக

எதிரிகளைத் துரும்பெனக் கருதிப் பாரா முகமாகவும் இருந்திட முடியாது. அதே சமயம் அவர்கள் எங்களிலும் பார்க்கச் சாமர்த்தியமும், வல்லமையும் கொண்டவர்கள் என்று எண்ணி எம்மை நாமே வருத்தி எங்களைப் பலவீனப்படுத்தி விடக் கூடாது.

பலவீனங்களே துன்பங்களுக்குக் காரணமாகும். எங்களை நாம் சக்தியூட்டுபவர்களாக மனப்பூர்வமாக உணர்ந்து செயலாற்றிவிரின் எதிரிகள் துரும்புகளேயாவர். வரும் பகையை நட்பு உறவாகக் கொள்வது எங்கள் பலவீனமும் அல்ல. அது மானுட நேயமும் திறன் கொண்ட விசாலமான மனோ இயல்புமாகும்.

இன்று எத்தனையோ விதமான பலவீனர்கள் எம்முன்னே வீராப்புடன் உலாவருகின்றனர். எங்களை விட மிஞ்சியவர் யாருமே இல்லை என்பார்கள். ஆனால் இத்தகையவர்கள் தங்களை விட பலம் குறைந்த, வசதிகளேயற்ற,நொய்ந்து,நொடிந்தவர்களை மட்டுமே எதிரிகளாகக் கொள்வர்.ஆனால் வார்த்தையளவில், தாங்கள்





வலு குன்றியவர்களை நேசிப்பதாகவும், பலம் கொண்ட தமக்குச் சமமானவர்களை மட்டுமே எதிரிகளாகக் கொண்டிருப்பதாகவும் கூறிக் கொள்ளுவார்கள்.

தன்னைவிட, அல்லது தமக்குச் சமனானவர்களுடனேயே தங்கள் திறமைகளைக் காட்டுதலே, கௌரவமாகும். ஏழை, எளியவர்கள், நொந்தவர்களுடன், பொருதுவதும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டியவை களைத் தந்திரமாகவோ அன்றி நேரிடையாகவோ, பகைத் துப் பழிவாங்கிப் பலவந்தமாக பறிப்பதோ அடுக்காத கொடூரம் ஐயா!

கண்டபடி எவருடனும் பகை கொள்ளுதல் பண்பற்ற செயல். ஆயினும் வலியவரும் இடர்களை உடைத் தெறியாமல் விடுவதும் கோழைத்தனமானதே. ஒருவர் அநியாயமான முறையில் பகைமை பாராட்டித் தீங்கு செய்தால் அவரை ஒடுக்குதல் ஒரு சமூக நற்பணிதான்.

ஏனெனில் இத்தகைய துர் ஆன்மாக்கள் தொடர்ந்தும் தொந்தரவுகள் செய்து வருவதுடன் இதையே சாக்காகக் கொண்டு எல்லோரிடமும் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பிப்பார்கள். இதன் பொருட்டேயாயினும் தீயவர்களிடம் நாம் அடங்கிப் போகாது அவர்கள் திமிர்களை அடக்குவதில் தப்பேதுமில்லை. எனினும் மன்னிக்கும் பண்பும், விட்டுக் கொடுக்கும் இயல்புடையோர் எவரையும் எதிரிகளாகக் கொள்வதில்லை.



RangaRakes

Tamilnavarasam.com

தொடர்ந்து தமது எதிரிகளால் அல்லல் பட்டவர்கள் அதனால் பட்ட பட்டறிவினால் துணிச்சல் மிக்கோராய் வீரர்களாகிய சரித்திரங்களும் பலவுண்டு. சும்மா இருப்பவனைச் சுரண்டிப் பார்த்தால் விளைவு படுமோசமாக வேயிருக்கும். "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்பர். நல்ல ஒரு நண்பனைத் தேடுவது கடிமையானது. ஆனால் பலரையும் எதிரியாக்குவதோ சுலபமானதாகும். பகைவரின் அநாவசியமான கோப மூட்டல்களால் வீறுகொண்டு எழுந்ததால் பகைவர் துவம்சமாகிப் போய்விடுவர். எனவே சாமான்ய மனிதர் என்று எல்லோரையும் கருதி அவர்கள் மீது வீண் பகைமை கொள்வது அறிவிலித்தனமானதேயாம்.

ஒருவன் தன் முயற்சியால் முன்னேறிக் கொண்டிருந்தால் அதனைக் காழ்ப்புடன் நோக்கப் பல கண்கள் உண்டு. பற்பல சூழ்ச்சிகள் செய்து இவர்களைக் கவிழ்க்க எண்ணுவார்கள்.

எதிரிகள் என்போர் வெறுமனே சண்டைக்கு வருபவர்கள் என்றில்லை. கனிவாகப் பேசுவார்கள். சொந்தம் கொண்டாடுவார்கள். அது மட்டுமல்ல, நெருங்கிய உறவுகளுக்குள்ளேயே பகைமை கொள்வோர் அதிகமாகவும் இருப்பர். நேரிடையாகச் சொல்பவர்கள் அல்லது எதிர்ப்பவர்களை விட மறை முகமாகச் செயல்படும், பகைமை கொண்டோரும் அதிகமாக இருப்பார்கள். எனக்கு ஒரு பகைவர்களும் இல்லையென நீங்கள் கருதலாம். ஆயினும் உங்கள் தீவிர முயற்சியாலும், துன்பங்களைத் தாங்கியும்





உழைத்து முன்னேறினால் கூடச் சிலருக்கு அது பொறுக்காது. எனவே, வாழ்க்கையில் நாம் படிப்படியாக வெற்றிகளைக் குவித்துக் கொண்டு வரும் அதேவேளை, எம்மைச் சுற்றி என்ன நடக்கின்றன. என்பதையும் உணரும் ஆற்றல்களையும் வளர்க்க வேண்டும். அதாவது உங்கள் வளர்ச்சிக்குக்குந்தகமான சக்திகளை இனம் காண்பீர்களாக! எச்சரிக்கை என்பது, எம்மைப் பய மூட்டுபவையாக அமையாது. இவையெல்லாம் ஒரு தற்பாதுகாப்பு நடவடிக்கையுடன் எம்மை நாம் தொடர்ந்தும் வலிமைக்குள்ளாக்கும் தனித்திறமையும் தான் உணர்க!

பகைவர்கள் என்போர் மற்றவர் பலவீனங்களுக்கு நுளைந்து கொண்டு இன்னல் கொடுப்பவர்களாவர். காரியம் செய்பவர்களை விடக் கயமைத்தனங்களைச் செய்பவர்கள் மிக மிக விழிப்புடன் இயங்குகின்றார்கள்.

எல்லோருமே எங்களைப் போன்ற மனிதர்களே. நாம் எதற்கும் எதற்காகவும் பயப்பட வேண்டிய அவசியமேயில்லை. யாராவது ஒருவர் தமக்கு எதிராகப் புறப்பட்டால் மனம் சஞ்சல மடைந்து விடுகின்றது. அடுத்து என்ன செய்வது எனக் குழம்பி விடுவதும், சலனப்பட்டுக் கலவரமடைவதும் என மென்மேலும் பயமூட்டப்படுவதால் ஒருவரின் செயல்திறன் அருகி விடச் சந்தர்ப்பமளிப்பதாகவும் இருக்கின்றது.

எத்தகைய எதிர்ப்புக்களுக்கும் சலனத்துடன் மனம்



RangaRakes

Tamilnavarasam.com

குழம்புவதை பகைவர் நோக்கும் தன்மையை நீங்கள் உருவாக்குவது எவ்வகையிலும் உங்களுக்குத் துன்பங்களையே உண்டு பண்ணலாம். எதிரியை எதிர் கொள்ளும் போது எதிரியை எப்படி மடக்கலாம், அப்படிச் செய்யலாமா, அல்லது இப்படிச் செய்யலாமா எனத் தடுமாற்றம் ஏற்படுவது இயல்பே.

ஆனால் எக்காலத்திலும் எம்மிடம் நியாயத்தன்மை இருந்தால் எவர்க்கும் அஞ்சுகின்ற தேவை ஏற்பட வேண்டிய தேயில்லை. எங்களிடம் தவறுகள் இருந்தும், அது சரி என நிரூபித்தலுக்காக நாமாக ஒருவருடன் விரோதிப்பது என்பதே நீங்கள் உங்களின் முதலாம் தர எதிரியாவீர்கள் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

தவறான செயல்களைச் செய்பவர்கள் நியாயங்களைக் கற்பிக்க முயல்வது, இறைவனோடு போராடுகின்ற அதி முட்டாள்தனமும் தான். எனவே, தவறு செய்பவர்களை நோக்கிப் பிறர் சுட்டிக்காட்டினால், அந்தச் செயல் செய்பவர்களை நீங்கள் உங்கள் பகைவன் எனக் கருதுதல் தகாது. உணர்க!

எமக்குள் இருக்கும் அகம்பாவம், ஆணவம், கோபம், காழ்ப்பு போன்ற உள் நின்று வருத்தும் எதிரிகளை எதிர்ப்போமாக! இந்தத் துர்க்குணங்களால் ஏற்படும் மன நிம்மதியின்மை,சதாகலவரஉணர்வுகள், சஞ்சலங்கள், தவிப்புக்கள் சொல்லில் அடங்காத பெரும் சுமைகள்.





அறிவு, அனுபவங்கள், ஆற்றல்கள், பெரியோர் சொற்கேட்டல், ஆன்மீக நாட்டங்களால் எம்மை நாம் தூய்மையேற்றினால் எந்தவித இடையூறுகளும் வந்திடாமல் எம்மை நாம் காப்பாற்றிட முடியும்.

நல்ல மனிதர்களைத் துஷ்டர்கள் நெருங்கிடவே அச்சப்படுவார்கள். எத்தகைய நல்ல பழக்கங்களை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருந்தாலும் கூடக், "கோபம்" என்கின்ற இயல்பு தான் எமக்கு எதிரிகளை சம்பாதிக்கும் நிலைகளை உருவாக்கி விடுகின்றது.

நல்ல பெரிய மனிதர்கள் கூட அநாவசியமாகக் கோபம் கொள்வதால் தம் நிலை மறந்து பேசுவதால், கெட்டபெயர் எடுப்பதுடன் பிறர் தூற்றுதலுக்கும் ஆளாக நேரிடுகின்றது.

எத்தகைய நற்காரியங்களைச் செய்தாலும் கூட, எங்கே அவர்கள் ஒரு சிறிய தப்பைச் செய்தாலும் தேடிக் கண்டு பிடித்து, அதைச் சொல்லிக் காட்டிக் கவிழ்க்கத் தயாராக இருக்கும் நபர்களும் இருக்கின்றார்கள்.

இன்று பலரும் தங்கள் "பலம்" பற்றிச் சிந்திக்காமல் தங்கள் பலவீனம் பற்றியே சிந்தித்தபடி தங்களைக் குழப்பியபடி இருக்கின்றார்கள். தங்கள் வல்லமைகளை வளர்க்கத் தங்களைப் பூரணமாக்கியபடி முன்னேறினாலே போதும் பலவீனங்கள் தானே அருகிக் கருகிவிடும்.



RangaRakes

Tamilnavarasam.com

இல்லாததை இருக்குமாறு போல் கற்பனை செய்தல் கூடாது. எனவே,பலம் பொருந்திய சிந்தையும், நோக்கும், செயல் உடையாரைப் பகைவர் தேடமாட்டார்கள். நெருங்குதற்கும் அஞ்சுவர்.

இன்று மனிதர்கள், வெறும் சடப்பொருள்களைப் பெற்றாலே போதும் என்று கருதி ஜட வாழ்க்கை வாழுகின்றார்கள்.அனுபவிப்பதற்கு என்று வேண்டியன அல்லாததையும் பெற்றுக்கொள்ள மனிதன் விழைகின்றான். ஆனால் இவைகளுக்கு மேலாக, மனித இதயமூடாக, மனித ஆன்மாக்களின் இருந்து பெறும் தூயஅன்பு பற்றி எவ்வளவு தூரம் கரிசனைப்படுகின்றார்கள். என்பதைத் தங்கள் சுய சிந்தனை மூலம் உணர்கின் றார்களா? சற்றே யோசிப்போம்.எல்லா மாந்தர்களையும் பூரணமாக ஏற்றுக் கொண்டால் பகைமை வருமா, இல்லை, அதுவளருமா? அப்படியே தொலைந்து விடுமல்லவா?

இன்று பலரும் பிரச்சனைகள் என்று வந்தாலே, அது எமக்கு எதிரானது என்று கருதி விடுகின்றார்கள். பிரச்சனைகள் என்றால் அது எமக்குப்பாதகமானது என எண்ணுவது ஒருதவறான எண்ணமல்லவா? எங்களுடன் ஒத்துவராத விஷயங்கள் எல்லாமே எமக்குப் பாதகமானது என்று எண்ணுவது என்ன நியாயம்? நாங்களே செய்யும் காரியங்கள் எல்லாமே சரியானதுமல்ல.

எனவே, எந்தப் பிரச்சனைகளையுமே எமக்கு





எதிரானவை எனக்கருதாது, அவைகளின் உண்மைத் தன்மைகளை ஆராய்க! உண்மைகளைத் தெரிந்து, தெளிந்ததும் எந்தப் பிரச்சனைகளையும் எதிர் கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுவிடாது. ஆராயாமல் நாமாகவே ஏற்படுத்தும் சிக்கல்களால் வீணாக சஞ்சலப்படுதல் எம்மை நாமே வெறுப்பேற்றும் செயலாகவும் அமையக் கூடுமல்லவா?

நாங்கள் காட்டுகின்ற சீற்றம் எங்கள் ஆற்றல்களைக் குறைத்து விடுவதால், எதிரிகளுக்கு அது ஆயுதமாகப் போய்விடும். அமைதியுடன், இருப்பவர்களே நல்ல திட்டங்களை வகுப்பதற்கு ஏற்ற மதி நுட்பமானவர்களாக இருக்கின்றார்கள். கண்டபடி நடந்து பேசி உடல் குறுகி எவரிடமும் மன்னிப்புக் கேட்டு மறுகுதலைவிட ஆராய்ந்து, அன்புடன் நடந்து கொண்டால் எம்முன் எவருமே வேற்றுமை காட்டிப் பழகவே மாட்டார்கள்.

ஆயினும், நியாயபூர்வமான கோபங்கள், பகைவரைச் சிந்திக்க வைக்கும், அச்சம் கொள்ளவும் வைக்கும். ஏன் அவனைத் திருந்தி நடக்கவும் செய்திடும். பகைவருடன் பொருதுவது என்பது, கத்தி, பொல், துப்பாக்கியுடன் சண்டை செய்வது அல்ல.

இன்று சாதாரண கருத்து மோதல்களே முடிவில், ஆயுதம் கொண்டு போராடும் நிலைக்கே தள்ளப்படுவது முண்டு. உங்கள் கருத்தை ஏற்காதவர் உங்கள் எதிரிகளும்



RangaRakes

Tamilnavarasam.com

அல்லர். நல்லவர்கள் நியாயங்களைச் சொன்னால் கேட்க வேண்டும். ஆரம்பத்தில் உலக தலைவர்களில் ஒருசாரார் ஒரு நாட்டின் போக்குக்கு எதிராக ஒரு கருத்தைச் சொல்லுவார்கள். அதை அந்த நாடு மறுக்க, அதற்கு ஆதரவாக மற்றய நாடுகளிடையே பல வித அணிகள் உருவாகுவதும், பின்னர் அவையே பெரும் போராக முடிவடைவதும் சரித்திரம் கூறும் கதைகளே. சுயநலத்தை மட்டுமே தமது கருத்தாகக் கொண்டு மற்றயவர்கள் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் விட்டால் நடப்பவை எல்லாமே பாராதூரமான விளைவுகளையே ஏற்படுத்தி விடலாம்.

இன்று பகைவர்களைக் குறுகிய குறுக்கு வழியில், கொடூரமாக அழிக்க எண்ணுகின்றார்கள். இப்படியாக இவர்கள் தப்பாக எண்ணுகின்ற அதே சமயம் இவர்களுடைய பகைவர்களும் அதே எண்ணம் கொண்டு தம்மை அழிக்க லாம் என எண்ணுவதுமில்லை. அத்துடன் தனக்குத் தீங்கு விழைவிப்பவன் செய்வது மட்டுமே தவறு, தாம் எதுவும் செய்ய எல்லா வித உரிமையும் தமக்கு உண்டு எனக் கருதியும் விடுகின்றார்கள்.

உண்மையான வீரன் குறுக்கு வழியில் எதிரியை அழிக்கவும்மாட்டான்.வீரனுக்கு அழகு, மரணம் வந்திடினும் எதிரிகளிடம் சரணடையாத் தன்மையுமாகும். உண்மைகளை ஒத்துக்கொள்வதுமாகும்.





எவரையுமே மிரட்டி, அடிமை கொள்ள நினைத்தால் நாம் வென்று விட்டதாக அர்த்தம் கொள்ள முடியுமா? நியாயத் தன்மையற்ற வீரம் என்பது கூட ஒரு கோழைத்தனமான திமிர்தான். அறிக!

அன்பைக் காட்டுவதும் அதனை உணர்ந்து சகலருக்கும் அதனை அளிப்பதுமே "சமாதானம்" உருவாவதற்கான வழியதாகும். இதுவே கிடைத்தற்கரிய வெகுமானங்கள் என்று உளமாரக் கருதுவதே எதிரிகளற்ற சந்தேஷகரமான வாழ்க்கையுமாகும்.

நாம் வாழ்வது எமது சந்தோஷங்களுக்காக மட்டுமின்றித் தீமைகளைச் செய்யாதிருப்பதும் பிறருக்குத் தீமை செய்வோர் செயலைத் தடுத்து உடைப்பதுமேயாகும். இதனால் எல்லோருமே சந்தோஷமாக இருக்க வழிவகை செய்தவராவோம். எதிரியையும் அரவணைப்போம். "கருணை" சூர்ந்தால் எதிரிகளும் நண்பராவர். உறுதி!.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
29.06.2008



RangaRakes Tamilnavarasam.com



# கணப்பொழுதேயாயினும் யுகப் பொழுதின் சாதனை செய்!

எமது வாழ்நாளில் ஒரு கணப்பொழுதையேனும் வீணாக்கினால் மீட்க முடியாத பெறுமதிமிக்க காலத்தினை நாம் விரயம் செய்து விட்டோம் என உணர்க! கோடான கோடி மக்கள் ஒவ்வொருவருமே ஒரு வினாடித் துளியைக் கரைத்தால், அவைகளின் மொத்தப் பெறுமதியை இந்த முழு உலகம் இழந்ததாகக் கருதப்படும். ஒவ்வொரு கணப்பொழுதிலும் உலகில் என்னென்னவோ அதிசயங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. காலம் சரியாக இல்லையென்று வேலையே செய்யாமல் ஞாலத்திற்குப் பாரமாக இருப்பதே மகாபாவம்.

ஒரு கணப்பொழுதேயாயினும் கூட அக்கணத்தில் கூட யுகப் பொழுதின் சாதனைகள் நடந்தேறிவிடுகின்றன. சற்றே சிந்திப்போமாக! இந்த ஒரு கணத்தில் என்ன, என்னவெல்லாம் உலகம் பூராவும் எமக்குப் புரியாமல் எம்மைக் கடந்த விநாடிகளில் எத்தனை, எத்தனை சங்கதிகள் நடந்தேறி விட்டன. இனிவரும் கணங்களில் வேறு





என்னவெல்லாம் நடக்கப் போகின்றன! கற்பனைக்கு எட்டாத அற்புதங்கள், எதிர்பார்த்த நிகழ்வுகள், எதிர்பாராத நிகழ்வுகள் விஸ்வரூப தரிசனங்கள்! அடேயப்பா.... அப்பப்பா... இறைவா!

இந்த ஒரு கணம்! எத்தனை எத்தனையோ, கோடானு கோடி தீர்மானங்களை மக்கள் எடுத்துக் கொண்டிருப்பார்கள். நாடுகளுக்கிடையே ஒப்பந்தங்கள் நடந்து கொண்டிருக்கலாம். பல இலட்சம் புதுப் புது உயிர்கள் பிரசவிக்கப்பட்ட வண்ணமிருக்கும். மனித இனங்கள் மட்டுமல்ல அனைத்து உயிரினங்கள், மரம், செடி, கொடிகள் எல்லாமே தத்தமது வடிவங்களை உருவாக்கிய வண்ணமிருக்கும்.

அது மட்டுமா,அடுத்துவரும் சந்ததிகளில் இனப் பெருக்கத்திற்கான நெருக்கங்களும் ஒன்று கூடல்களும் அரங்கேறியபடி இருக்கும். மேலும் இந்த உலகிற்காக விஞ்ஞானிகள் கூட்டம் உலக ஷேமத்திற்கான ஆராய்ச்சி களையும் அதே சமயம், உலகத்தை ஒரே கணத்தில் எப்படி, எப்படி அழிக்க முடியும் என முடியைப் பிய்த்தபடியோ சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். முடிவுகளையும் கண்டு பிடிப்பார்கள்.புதிய, புதிய கண்டு பிடிப்புக்களும், மருந்துகளும், பொறியியல் சாதனங்களும் வந்து கொண்டேயிருக்கும். திருமணங்கள், விழாக்கள் நடக்கும். விளையாட்டுப் போட்டிகளும், புதிய அரசுகளும் அமைக்கப் படலாம். அல்லது கவிழ்க்கப்படலாம்.



RangaRakes

Tamilnavarasam.com

இதே கணத்தில்,எங்கோ ஒரு நாட்டில் பூகம்பங்கள் நடந்தபடியிருக்கும்.அரசியல் கொலை,தனிப்பட்ட குரோதங்களுக்கான பழிவாங்கல்கள், புயல்,கடல், கோள் அனர்த்தங்கள் போன்ற இயற்கைப் பேரழிவுகள் மட்டுமல்ல, மரணங்கள், போர் அவலங்கள், இடப்பெயர்வுகள், பூமி அதிர்ச்சிகள் போருக்கான முஸ்தீபுகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள், அரசியல் கழுத்துறுப்புக்கள் மறைமுக நடவடிக்கைகள், மழை, வெள்ளம், மின்னல் தாக்கம், கட்சிகள் மாற்றம், ஆட்கடத்தல், சந்தோஷமாகப் பேசிய படியே சுதந்திரத்தை நசுக்குதல் போன்ற கைங்கரியங்களும் நடந்து கொண்டேயிருக்கும் இவைகள் எல்லாமே தடைசெய்ய இயலாத அத்துமீறல்களாகவும், இயற்கை நிகழ்வுக ளாகவும், பெயர் பெற்றுக் கொள்ளலாம். அது உங்கள் சிந்தனைக்கே...!

காலங்களை நாம் வீணாக கழிக்கக்கூடாது, விழிப்பு டன் நோக்கி ஒவ்வொரு கணத்தையும் ஒரு பெரும் வரவுக் கான உழைப்பு ஆக்குக! எனவே காலம் என்பது ஒரு செல வேயல்ல. அது சகல பெறுமானம் மிக்க வரவுகளைக் கொடுப்பனவு களைக் குவிப்பதாக அமையட்டும்.

எல்லாப் பொழுதுகளும் எமக்காக, எமக்குள்ளே கலந்து இருக்கும், எமக்குமாக, என்கின்ற பொது நோக்கு டன் இயங்குவோமாக. உணர்க! சற்றே சிந்திப்போம். இந்த வினாடிப் பொழுது, நான் எனக்காகவோ, அன்றி வேறு எவருக்காகவோ என்ன செய்தேன். சரி போகட்டும், கடந்து





போன, கணத்தில் நான் என்ன உருப்படியான செயல்க ளைச் செய்தேன். மேலும் அடுத்த கணம் என்ன செய்யப் போகின்றேன்? சரி ஒன்றுமே... செய்யவில்லையா? வெட்கப் படுவோம். எங்களை மாற்றியமைப்போம். மனச்சாட்சியைத் தொட்டு, உங்களை நீங்களே கேட்பீர்களாக! அதேசமயம், நீங்கள் செய்த தீய செயல்களையும், தற்போது செய்த ஏதாவது தீய செயல்களையும் அறவே விட்டு விட எண்ணுவீர்களாக!

தெரிந்தோ தெரியாமலோ தீய செயல்களைச் செய்தால் அதற்காக நெஞ்சம் கசிந்துருகி கடவுளிடம் மன்றாடுங்கள். இந்தக் கணமே "என் தீய சிந்தனைகளை அறவே வெட்டிவிடு" என்று கேட்டுக் கொள்ளுங்கள். மேலும் நாம் புதிய மனித வடிவு எடுத்துப் புதுப்பொலிவுடன் நல்ல ஆத்மாவாக வேண்டுமெனக் உள்ளம் நெகிழக் கேட்டுப் பாருங்கள். அப்போது தெரியும் உங்கள் விழிப்பையும், முக மலர்வையும் நீங்களே தெரிந்து கொள்வீர்கள்.

நல்லவைகளை எண்ணுவோரும், அதனையே என்றுமே தமது முழு மூச்சான பணி என மேற் கொள் வோரின் வதனம் தேஜஸ் ஆக ஒளிபெருகி ஆனந்த மயமாகவே என்றும் துலங்கும். பெரிய, பெரிய மகான் களைப் பாருங்கள், அவர்கள் திருவுருவைத் தரிசியுங்கள். அவர்கள் பொன் வார்த்தைகளைப் படியுங்கள், கேட்டுப் பாருங்கள். அக்கணமே உங்கள் உடலின் இனிய அதிர்வு களை உளமார அனுபவித்தேயாகுவீர்கள். அனுபவம் தேட



RangaRakes
Tamilnavarasam.com

நல்லவர்களை நோக்குக! வல்லமை எல்லையின்றி வரும்.

இன்று மனிதர்களில் பலரும் சேவை என்றதுமே அது மனித இனத்திற்காக மட்டுமேயானதாகக் கருதுகின் றார்கள். உலகம் பூராவும் இந்த எண்ணத்தை நீக்க ஜீவ காருண்ய சங்கங்கள் உருவாகிவிட்டன. "உயிர்களை எப்பொழுதும் வதை செய்யாதே! அவைகள் மீது கருணை காட்டு" என்பதாகும். கருணைக்கு ஏது வேற்றுமை!

வேண்டுமென்றே அற்ப உயிர்களைக் கொல்லு வதைப் போல கொடுமை வேறு என்ன உண்டு. காட்டுக்குள் போய் சும்மா சுதந்திரமாகத் திரியும் விலங்கு, பிராணிக ளைக் கொல்கின்றார்கள். மனிதர்களின் பொழுது போக்குகள் விலங்குகளின் வாழ்க்கைக்கு வேட்டுவைப்பதாக அமையலாமா? எந்த வினாடியும், குரூர சிந்தனைகளைக் களையச் சித்தம் கொள்க! எமக்கு மட்டுமா, உணர்வுகள்? வலிகள்? இரக்க சிந்தையை நெஞ்சில் இருத்துக!

மனிதனை விட விலங்குகள், சின்னஞ்சிறு அற்பமான பிராணிகளுக்கே வலிகள் அதிகமானது. என்பதை அவை களின் அதிர்வுகள் மூலம் புரிந்து கொள்ளலாம்.

அண்மைய ஆராய்ச்சிகளில் ஒரே இனச் செடிக ளுக்கு நல்ல நீர், சூரிய ஒளி, மண் வளம் கொடுக்க ப்பட்டும், பின்னர் தகாத ஒலிகளும் கேட்கும் படியாகச் செய்யப் பட்டன. அன்பு, பரிவு காட்டாமலேயே இவைகள் வளர்க்கப்





பட்டு வந்து அவதானிக்கப்பட்டன. ஆனால், அதே இனத்து செடிகள் சிலவற்றிற்கு வசதிகளைக் குறைத்து நீர், வளி,ஒளி செல்வதற்கான முறைகளை ஓரளவு கட்டுப்படுத்தியும் வைத்தனர். ஆனால் நல்ல இசையையும், அன்பான சிந்தனையுடன், நீரையும் ஊற்றி வந்தனர். கருணையுடன் பார்த்தும் வந்தனர். இதன் பின்னர் அவதானிக்கப்பட்ட போது சகல வசதிகளையும் கொண்ட செடிகளைவிட அன்போடு நோக்கப்பட்ட செடிகளோ பிரமிக்கத்தக்க விதத்தில் சிலிர்ப்புடன் வளர்ந்தன. எனவே அன்பர்களே, எம்மால் கழிக்கப்படும் ஒரு வினாடிகளைக் கூட அன்பின் வழியில் அனைவர்க்கும் சகல ஜீவன்களுக்கும் வழங்குக!

எம்மை நோக்கிக் கடமைகள் விழிப்புடன் எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு கடமையை முடித்துவிட்டு அப்பாடா...! என்று நிமிர்ந்து கொள்ளும் போதே அடுத்த கருமம் எம்மைத் தட்டி நிமிரச் செய்கின் றது. அதனை எப்படி விட்டுவிடமுடியும்? அப்படியே, எமது பொழுதுகளைக் கடத்திச் செயலைச் செய்யாது விட்டால் வேலைப்பளு கூடிக் கொண்டே சென்றுவிடுமன்றோ! எனவே, குறித்த வேலைகளைக் குறித்த விநாடியில் ஆரம்பித்து விடுக. ஆரம்பித்ததுமே சடுதியாகத் தொடர்ந்தும் செய்து கொண்டே இருப்பீர்களாக!

உடனுக்குடன் செய்யாது விடுவதும் செய்ய முனை யாது தட்டிக்கழிப்பதும், அந்தக் கருமத்தை நிராகரிப்ப தாகவே கருதப்படும். வேலைகள் குவிவதற்கும், அவை



RangaRakes

Tamilnavarasam.com

ஸ்தம்பிப்பதற்கும், அவர்களே பொறுப்பாளிகளுமாவர். சிலர் சொல்வார்கள் நான் இந்த நிமிடமே வேலை செய்ய ஆரம்பித்தேன். நான் எண்ணியவாறு என்னால் செய்ய முடியவில்லை, தடைகள் வந்து குறுக்கிடுகின்றன என்பார்கள். எம்முன் உள்ள சோதனைகள் தடைகள்தான் எமது இயங்கும் வேகத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதை உணர்வீர்களாக!

ஓடும் நீரைத்தடுத்தால் அங்கு அழுத்தம் அதிகரிக்கும். வேகமான நீர் தடுப்பை உடைத்தும் பீறிட்டு ஓடியபடியே வீச்சாகத் தன் வலுவைக் காட்டும். எங்கள் ஆர்வம் தடைகளை ஏற்கமாட்டாது மேலான ஆர்வம், தடைகளுக்கு எதிரானது அல்ல. ஆர்வமிகுதியால் உணர்வின் வேகமும், இயங்கும் விசையையும் அதிகரிக்கும். எவராவது தமது செயலில் விருப்பமின்றிச் செய்யும் கருமத்திற்காக தடைகள் பற்றிப் பேசுவது அவர்களின் துணிவின்மையையும் ஏனோதானோ என்ற மன இயல்புகளையே எடுத்துக்காட்டும். தனது புலன்களை ஒன்றாகக் குவிப்பவர்களுக்கும் இயங்குபவர்களுக்கும் தடைகள் என்பது ஒரு பிரச்சனையாகத் தோன்றுவதேயில்லை.

தகுந்த ஆராய்வின்மையின்றியும், அனுபவங்கள் இன்றியும் ஒரு கணப்பொழுதில் தான் தோன்றித்தனமாக, எடுக்கின்ற தீர்மானங்கள், நடவடிக்கைகள் பாரதூரமாகப் போய் முடிவடையும். வேகமாகச் செல்லும் வாகனம்,





நூறில் ஒரு வினாடிப் பொழுதில் சாரதி கண் அயர்ந்தால் படுகுழியில் வீழ்ந்து விடும். மேலும் தீர்க்கமான ஓர் முடிவை எடுத்தபின்னர் கலவரப்பட்ட சிந்தனையுடன் தம்மை உட்புகுத்தி விடுதல் மேலும் பல சிரமங்களையும் சிக்கல்களையுமே ஏற்படுத்தி விடுகின்றன.அவதானமும் விழிப்பும் கவனமும் இன்றேல் காலங்கள் விரயமாகும், துன்பமேயூட்டும். அறிக!

ஆழமாகச் சிந்தியுங்கள் உங்கள் அனுபவங்களையும், கற்றறிந்த, அனுபவசாலிகளின் அனுபவங்களையும், இணைத்து எடுக்கும் தீர்மானங்களை வெளிப்படுத்தும் அக் கணத்திலிருந்து தொடர்ந்து உங்கள் இயக்கத்திலேயே குறியாக இருந்திடுங்கள்! நல்ல நோக்கமின்றி சிறந்த வாழ்க்கையுமில்லை கணப்பொழுதும் இமை சோராது வாழ்க்கையில் தேவையானவைகளைத் தகுந்த காலத்தினுள் எடுத்துக் கொள்வதே அறிவுடைமையாகும்.

“செய் அல்லது செத்துமடி” என்பார்கள்.எதனையும் செய்யாது செத்துப் போவது வாழ்க்கையேயல்ல. இந்தப் பூமி பல யுகங்களைக் கண்டிருக்கலாம்.ஆனால், நாம் வாழும் இந்த நொடி எமக்குப் பெரியது தான். யார், யாரோ எந்தப் பெரிய நிலையில் இருந்தாலும்,நீ வாழும் எளிய இந்த வாழ்க்கையே இனிமையானது என்று உளமார ஏற்றுக் கொள்வாயாக! இயங்குதலில் ஏது தயக்கம்?

கழிந்து செல்லும் நிமிடத் துளிகள் எம்மை ஒரு



RangaRakes
Tamilnavarasam.com

போதுமே கட்டிவைக்க எண்ணுவதில்லை நாமே தான் எழுந்து முன்வரல் வேண்டும். காலபலன் என்று நிமிர்த்தி கனிடம் (சோதிடன்) செல்லுமுன், "நாம் எங்களைப் பலப்படுத்தி வந்தோமா? என்று கருதாமல், கிரகங்களை வைத்துக் கணக்குப் பண்ணுவது சரியா? சரிவர இயங்கு வனையே கிரகங்கள் அனுசரிக்கும். சோம்பேறிகளை எந்த நவக்கிரகங்களுமே ஏற்றுக் கொள்ளாது. இவர்களைக் கண்டாலே அவை எதிர்த் திசையில் சுழல ஆரம்பிக்கும். அல்லது சாபமிட்டுத் தன்பாட்டிற்கு சுழன்று கொண்டிருக்கும்.

நல்லபடி வாழ்பவன் நொடிப் பொழுதுகளையும் காசு ஆக்குவான், கல்வியைத் தேடுவான், பல பெரியவர்களுடன் நட்புறவு கொள்ளுவான். ஏன், நல்ல பதவிகளையும் தனதாக்கிக் கொள்வான். "காலம் செய்த கோலம்" என்றும், "படைத்தவனே, எனக்குப் பழி செய்து விட்டான்" அல்லது "கூட இருப்பவன் குழி பறித்து விட்டான்", என்று மற்ற ஒருவரைப் பழிசுமத்திப் பாரத்தை எவர் மீதாவது ஏற்றுவது எமது பழக்கம்.உண்மையில் விரோதிகளாலும் துன்பங்கள் வருவதுண்டு. எங்கள் எண்ணங்களின் வீச்சும் செயலூக் கமும், நேர்மையான செயல்பாடுகளும், எமக்கான வெற்றிக் கதவுகளைத் திறக்க வைக்கும்.

ஒரு கணமாயினும் அது எமக்கேயானது. அதனை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டியதே. காரணங்களைச் சொல்வதைவிடக் காரியங்களை






ஆக்குதலே அதிக பயனைக் கொடுக்கவல்லது. நீண்ட பொழுதுகளைப் "பேசுதல்" எடுத்துக் கொள்கின்றது மௌன மாக இயங்குவதால் கணப்பொழுதில் நாம் ஆற்றும் செயல்கள், எங்களது வினை திறனை அதிகரிக்கிறது. கணப்பொழுதின் பெறுமதி, எம் அறிவுத் திறனாலும் கூறிட முடியாத அளப்பரிய செல்வம் அன்றோ நண்பர்களே!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
01.06.2008



RangaRakes

Tamilnavarasam.com



# கட்டுப்பாடுகள்

சுதந்திரமாகச், சந்தோஷமாகச் சீவிப்பதற்குக் கட்டுப்பாடுகள் அவசியம். கட்டுப்பாடு என்பது எம்மைக் கட்டிவைக்கும் ஒவ்வாதனவல்ல. நியாயத் தன்மையற்று, வாழ்பவர்களுக்கு, சட்டமும், சமூகமும் கட்டுப்பாடுகளை தண்டனைகளை விதிக்காது விடின் இந்தப் பூமி தள்ளாடிக் கவிழ்து போகும். நற்பண்புடன் வாழ்வதில் என்ன சிரமம் இருக்கின்றது? நல்லதைச் சொன்னால், முகம் சுழிக்கத் தேவையுமில்லை. அண்டசராசரங்கள் எல்லாமே ஒழுங்காகக், கட்டுப்பாடுடன் சுற்றி வரும் போது சாதாரண மனிதனாகிய நாங்கள் நேரிய வழியில் ஒழுங்காக இயங்கி வருகின்றோமா? சிந்திப்போம்!

"கட்டுப்பாடு" என்பது, ஒருவரை இயக்கமறக் கட்டிவைத்தல் அல்ல.சுதந்திரமாகவும், சந்தோஷ கரமாகவும் எண்ணியபடி செப்பனுடன் கடமைகளைச் செய்து முடித்திட வல்ல வலுவான, நிறைவான வாழ்க் கையை நடாத்திட வைக்கும் வழிமுறையாகும்.





கட்டுப்பாடான ஒழுக்கமின்றிக் கல்வி கற்றிட இயலுமா? நாங்கள் நினைத்தவாறே ஆசிரியர் உதவிகள் இன்றி ஒழுங்கு முறைகள் அற்றுப் பாடங்களைப் படித்திட முனைதல் அறிவினைக் குழப்பும் முயற்சி அல்லவா? கட்டுப்பாடு இல்லாது விட்டால் நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பராமரிக்க முடியாது. ஆட்சி நடத்தும் தலைவன் சொற்கேளாது விட்டால் ஸ்திரமான அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியாததுடன் அங்கு சதா குழப்பங்களும், அத்து மீறல்களும் தான் நடக்கும். நல்லன செய்யும் எவரது புத்திமதிகளுக்குக் கட்டுப்படுதலே மேலான அறமாகும். வீட்டிலாகட்டும் வெளியிலாகட்டும் ஒழுங்கு என்பது பொதுவானதேயாம்.

தெருவில் வாகனங்கள் செல்லுகின்றன. முச்சந்தியில் சிவப்பு விளக்குச் சமிக்ஞை வாகனத்தை உடன் நிறுத்துமாறு தெரிவிக்கின்றன. என்னால் வாகனத்தை நிறுத்த முடியாது, நான் அவசர அலுவலாகச் சென்று கொண்டிருக்கின்றேன் என எண்ணி வீதிப் பாதுகாப்புச் சட்டத்தை மீறி நடக்க முடியுமா?

கட்டுப்பாடு என்றதுமே சிலருக்குப் பிடிக்காமல் போய் விடுகின்றது. இளமைக் காலத்தில் கட்டுப்பாட்டுடன் நாம் வாழ்ந்தால்தானே எங்கள் எதிர்காலமும் பிரகாசமாகத் துலங்க முடியும்? ஆரம்ப காலத்தில் கட்டுப்பாடு ஒழுக்க நெறி சற்றும் பிடிக்காமல் கண்டபடி வாழ்ந்தவர்கள் காலப் போக்கில் தங்கள் இனிய வாழ்க்கையைத் தொலைத்து நிற்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள்.



RangaRakes Tamilnavarasam.com

தங்கள் மீது நியாயத் தன்மைகளை உணருபவன் சிறந்த கட்டுப்பாட்டு முறைகளைக் கண்டு அச்சப்படப் போவதில்லை. கட்டுப்பாடுகளுடன் ஒழுகுதல் தர்மம். எமது உடல் உறுப்புக்கள் சீராக இருந்தால்தான் நாம் நலமாகச் சீவிக்க முடியும். உடலில் ஒரு உறுப்பு ஆயினும் இயங்க மறுத்தால் முழு உடம்புமே செய்வதறியாது திகைத்து நின்றுவிடும். ஒழுங்கான குருதி ஓட்டமும், சீரான வெப்பம், காற்று, நீர், என்பன உடலுக்குக் கிடைத்தாலே கட்டுப்பாடான வரையறைக்குள் உடல் இயங்கும்.

இன்று பேசுவது எமது உரிமை என்று கூறிக் கண்டதையும் பேசுகின்றார்கள். ஒருவரைத் திட்டுவது சுதந்திரம் அல்ல. இது கட்டுப்பாடற்ற காடைத்தனம். தங்களைப்பற்றி விமர்சனம் செய்ய அனுமதிக்காதவர்கள் மற்றவர்கள் பற்றி எதுவும் பேசுதலை தங்கள் மனித உரிமை என்று வேறு சொல்கின்றார்கள். மனச்சாட்சி நலிவடைந்த வர்களிடம் கட்டுப்பாடு, கட்டுக்கோப்பான மனித நடத்தைகள் பற்றி எதுவுமே பேச இயலாது.

இறைவனால் அளிக்கப்பட்ட இயற்கை, முறைப்படி, ஒழுங்காகத்தான் நடக்கின்றது. பருவகால மாற்றங்கள், அதனோடு இணைந்த வெப்ப, தட்ப நிலைகள் காலம் மாறும் போது அவைகளிலும் மாறுதல்களை ஏற்படுத்து கின்றன. எனினும் இயற்கைக்கு விரோதமான போராட்ட ங்களில் மனிதன் தெரிந்தும், தெரியாமலும் ஈடுபட்டு வருகின்றான்.





அண்டசராசரங்கள் ஒழுங்காகவே சுற்றிவருகின்றன. கோள்கள், நட்சத்திரங்கள், உபகோள்கள் எல்லாமே தமக்கான ஒரு பாதையில், ஈர்ப்பில் ஒன்றை ஒன்று சுற்றி வருவதும் இவற்றுக்கும் மேலாக இவைகள் எல்லாமே ஏதோ ஒரு மகாசக்தியை நோக்கி நகருகின்றன.இவையெல்லாமே எமக்குள்ள எமது அறிவிற்குப் புலனாகாத சங்கதிகளாக இருக்கின்றன. எல்லாமே ஒழுங்காகக், கட்டுப்பாடாக இயங்குகின்றன, இருக்கின்றன. மனிதர்களாகிய நாம் ஒழுங்காக இயங்குகின்றோமா? சிந்திப்போம்!

பொதுவாழ்க்கையில் ஈடுபடும் பிரமுகர்கள் தமது சொந்த வாழ்க்கையில் தூய ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆயினும் எவர் எத்தகைய குண நலன்களைக் கொண்டவராயினும் அவர்களை அப்படியே முழுமையாக நம்பித் தங்களை அர்ப்பணித்துவிடும் அப்பாவிப் போக்கினால் மக்கள் அமிழ்ந்து போய்க்கிட க்கின்றார்கள். இதனால் ஏற்படும் பிரதிபலன்கள் எல்லாமே மக்களைப் பொறுத்ததேயாகும்.

கட்டுப்பாடற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிரு ப்பவர்கள் கூடத் தமது குற்றங்கள், தப்புக்களை எல்லாம் மற்றவர் மீதே திணிப்பதும், அதை அவர்கள் ஏற்றேயாக வேண்டும் என்கின்ற பாணியில் வன்முறையாகக் கட்டாயப்படுத்துவதும் யாவரும் அறிந்த ஒன்று தான்.



RangaRakes
Tamilnavarasam.com

குடும்பங்களில் குடித்துக் குட்டிச் சுவரான கணவன் தன் குறைபாடுகளை மறைக்க மனைவி பிள்ளைகளை இம்சிப்பதும் ஆடம்பரமாக, நவநாகரீக மோகத்தில் உழன்று கணவனை அவமதிக்கும் மனைவியும் இருக் கின்ற வீடுகளில் நிம்மதி எட்டிப்பார்த்திடுமா? இத்தகைய வர்களால் தங்கள் பிள்ளைகளை எப்படிக் கட்டுப்பாட்டுடன் வளர்த்து ஆளாக்க இயலும் ஐயா? நம்மை நாம் சுயகட்டுப் பாட்டிற்குள் வைத்திருத்தலே அரும் கலைதான். ஆன்மீக வாழ்வுமுறை எம்மை நாம் ஆள்வதற்கான முறைகளைச் சொல்லித்தருகின்றது. ஒழுக்கம் என்பதே கட்டுப்பாட்டான வாழ்வின் மூலாதாரம் அல்லவா?

தியானம், வழிபாடுகள் பற்றி தத்தமது மதங்களில் சொல்லப் பட்டவாறே மக்கள் கடைப்பிடித்திடினும் அவைகளின் முடிபு மனத்தைக் கட்டுப்படுத்தல்,அதனூடு நல்ல ஒழுக்கத்துடனும் வாழுதலும்,எக்கணமும் மகிழ் வோடும் சாந்தமுடன் வாழுதலுமாம். கட்டுப்பாட்டுடன் வாழ்பவனுக்கு உற்சாகம் தானாகவே பீறிட்டு எழும். புறத்தாக்கங்கள் கட்டியணைக்காதுவிடின் களிப்பு தானாகவே வந்துவிடுவதில் வியப்பு இல்லை.

இன்று கட்டுப்பாடு என்றதுமே எல்லோரது மனதில் "குடும்பக்கட்டுப்பாடு" தான் ஞாபகத்திற்கு வருகின்றது. உலக ஜனத்தொகைப் பெருக்கம் எல்லோரையும் அச்சம டையச் செய்கின்றது. மக்கட் பெருக்கத்தினால் வல்லரசு களே ஆடிப்போய் இருக்கின்றன. முக்கியமாகச் சீன





வல்லரசில் மக்கள் பெருக்கம் அங்கு தொழில், பொருளா தாரப் பிரச்சனைக்கே பிரதானமான காரணமாகி விட்டது. ஆனால், சில நாடுகளில் மக்கட் தொகையில் பெரும் வீழ்ச்சியும் கண்டுள்ளது. நீண்டகால யுத்தம், இயற்கைப் பேரழிவு, நோய்கள், காலநிலை, பருவகால மாற்றங்களில் ஏற்படும் பிரச்சனைகளால் மக்கள் படும் அவஸ்தைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

மக்கள் தொகை பெருகி வந்தாலும் இயற்கை அழிவுக ளுக்கும் குறைவில்லை. அண்மையில் பர்மா தேசத்தில் வீசிய "நர்கீஸ்" சூறாவளியால் ஒரு லட்சம் பேர் வரை மாண்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. சுனாமி, பூமியதிர்வு, நிலநடுக்கம், மண் சரிவுகளால் ஏற்படும் பொருளாதார அழிவுகள் கணக்கிலடங்காது.

ஆயினும், நாம் ஒன்றைக் கவனித்தேயாக வேண்டும். ஏற்கனவே சிறுபான்மையிராக உள்ள மக்களுக்கு இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டு முறை தேவையற்றதேயாகும். இயற்கை அழிவுகள், முற்றுப் பெறாத யுத்த சூழ் நிலைகளால் மக்கள் அழிந்து போயிருக்கின்றார்கள். இந்த நிலையில் குடும்பக் கட்டுப்பாடு முறைகளால் ஒரு சமூகமே இல்லாத சூழ்நிலை உருவாகும் அல்லவா?

மிகவும் சிரமப்பட்டு வாழும் மக்கள் எத்துணை இடர்கள் வரினும் மனத்திடத்துடனும், கடுமையான உழைப்புடனும் வாழ்ந்தேயாக வேண்டும் என்கின்ற நிலை.



RangaRakes
Tamilnavarasam.com

ஆயினும் தங்கள் முன் உள்ள துன்பங்கள் எல்லாமே தொலைந்துபோகும் என்கின்ற சிந்தனையை முன்வைப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தியாகமும், உழைப்பும், இன்றி நாம் உயர்ந்திட முடியுமா? குழந்தையைப் பெற்று, வளர்த்து ஆளாக்குவது என்பதும் தியாகத்துடன் கூடிய மாபெரும் உழைப்பிற்கு உட்படுத்தும் விஷயம்தான். உணர்வோம்!

மனிதர்கள் மேலதிகமாகவே தேவைகளை நோக்கி எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள். எப்படியாவது எல்லாவற்றையும் பெற்றுவிட வேண்டும் எனத் துடியாத் துடிக்கின்றார்கள். இந்தப் பேராவல் பலரையுமே, வரம்பு மீறிய செயல்களுக்குள் உட்படுத்தி விடுகின்றது. இதனால் தன் கட்டுப்பாட்டு வாழ்வு முறையையே உடைத்தெறியவும் சித்தமாகின்றான்.

பல குற்றவாளிகளிடம் சென்று ஏன் இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டாய் என்று கேட்கும் போது அவர்கள் சொல்லும் பெரும்பாலான பதில்கள் இதுவாகத்தான் இருக்கும். “எனக்கு வேறுவழியில்லை. நானாக விரும்பி இதைச் செய்யவில்லை. நான் நிர்ப்பந்திக்கப்படும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டேன்” என்பார்கள்.

களவு, கொள்ளை போன்ற எந்தக் குற்றச் செயல்களையும் செய்யும் ஒருவன், தன்னை உடைத்துக் கொண்டு எப்படியும் நினைத்ததைச் செய்ய வேண்டும் என்கின்ற





எண்ணத்துடன் தவறான காரியங்களையும், சுயகட்டுப்பாட்டை இழந்தபடியே செய்கின்றான்.எம்மைச் சுற்றியுள்ள ஆதரவற்றவர்கள் அல்லல்கள் பற்றி எத்தனை பேர் கரிசனையுடன் நோக்குகின்றார்கள். ஒரு தனி மனிதனோ, அல்லது ஒரு சமூகமோ, பாதிக்கப்பட்டும் அதனைக் கண்டு கொள்ளாத இயல்புகளால், அதனால் ஏற்படும் பாதிக்கப்பட்டவர்கள் செய்கின்ற எதிர்வினைகள் சிலசமயம் பெரு நெருப்பின் உஷ்ணத்தைவிட தகிப்பினை உண்டாக்கலாம். சமூகக்கட்டுப்பாடுகள் என்பது இன்னும் ஒரு வலுவிழந்த சமூகத்தினைக் கட்டிவைத்து இம்சை செய்வதும் அல்ல. இந்த அநியாயங்கள் எல்லாமே இன்று படிப்படியாக அள்ளுண்டு சென்றுவிட்டன.

எந்த ஒரு தனி ஒருவனது உரிமைகளையும், “எமது சமூகக் கட்டுப்பாட்டு விதி” எனச் சொல்லி அவனைக் கட்டிப் போட எண்ணக் கூடாது. எங்களுக்குச் சாதமாகவே புதிய ஒரு விதியைச் சமைப்பது என்பது சுத்த சுயநலம்தான் அறிக!

இன்று வசதிபடைத்த வல்லரசுகளில் இருந்து சாதாரண பொருளாதார வளம் குன்றிய ஆட்சி செய்யும் நாடுகள் வரை, தங்களுக்கு ஏற்ற விதிமுறைகளை வகுப்பதுடன் அதற்கு நீதி, ஜனநாயகம் என்கின்ற தோரணங்களைக் கட்டி விடுகின்றார்கள். அதனைத் தட்டிக் கேட்டால் ஒழுங்கு விதிகளை மீறுபவன் என்றும் சொல்லி விடுகின்றனர். சில நாடுகளின் கட்டுப்பாடுகள், சட்டங்கள்



RangaRakes

Tamilnavarasam.com

கூடக் கேலிக்குரியதாகத் தென்படும். எந்த விதிமுறைகளையும், கட்டுப்பாட்டுச் சட்டங்களையும் பணம் படைத்தவன் தனக்குச் சாதகமாக்குகின்றான். அல்லது அந்த விதிகளையே வளைத்தும் உடைத்தும் விடுகின்றான்.

கஷ்டப்பட்டவன், நொந்தவன், வசதி, வாய்ப்புக்களை இழந்து நின்று பலம் கொண்டவனிடம் கேட்டே சுவாசிக்க வேண்டி யிருக்கின்றது. சுவாசமே, சுமையாகிவிடும் சோகம்!

நேரிய வழி செல்பவர்களுக்கு சுய கட்டுப்பாடுகள், ஒழுக்க நெறி பற்றிப் போதனை செய்யத் தேவையில்லை. ஆனால் துரதிஷ்டவசமாக சாத்தான்கள் மொத்த வேதங்களையும் குத்தகைக்கு எடுத்தாற் போலப் பேசித் தீர்க்கின்றன.

வாழ்ந்து காட்டுவதே "வாழ்க்கை". சும்மா கேட்பதும், உபதேசம் செய்வதுமல்ல. இன்று உபதேசம் செய்பவர்கள் தொகைதான் கூடிவிட்டது. கேட்பதற்கு எத்தனை பேர்? பலரும் கடவுள்களாக வருவதற்கும் உபதேசம் செய்வதற்கும்தான் ஆசைப்படுகின்றார்கள். உண்மையான ஞானிகளைத் தேடப் பிரியப்படுபவர்கள் எத்தனை பேர் உளரோ? அறிமின்!

எல்லையற்ற பரம்பொருளை ஒரு எல்லைக்குள் வைத்து அதைக் கைப்பற்றி விட்டதாகச் சொல்லிச் சனங்களை நம்ப வைக்கின்றனர். எல்லோரிடமும், உறைந்துள்ள





இறைவனை, தங்களுக்கு மட்டுமே சொந்தம் கொண்டாடுவது என்ன நியாயம், ஐயனே!..அறிவை தேடுவ தற்காக நிறையப் படித்தும் மனதை மட்டும் குறைவாக வைத்திருந்தால் கட்டுப்பாடான நெறி முறைகளை எப்படி உருவாக்க முடியும்?

பலகோடி மாந்தர்க்கும் பல கோடி மனங்கள், அதில் கோடானுகோடி எண்ணங்கள். இவைகள் எல்லாமே பொதுவான நல்ல பாதையில் சீராகச் செல்லவேண்டியுள்ளது. சற்றுத் தடுமாறிய பாதையில்சென்றாலும்அவரவர் வாழ்க்கை கேள்விக்குரியதாகிவிடும். எறும்புகளை, தேனீக்களைப் பாருங்கள்! அவைகளின் கூட்டு வாழ்க்கை முறை எமக்கெல்லாம், "கட்டமைப்பு" என்றால் என்ன என்று கற்றுத் தருகின்றது. ஒன்றாக இணைந்து, ஒன்றாக உழைத்து வாழுகின்றன. அவைகளுக்கு என்று ஒரு கட்டமைப்பு உண்டு.

ஒரு குறிப்பிட்ட எறும்பு இனம் நேரான பாதையில் இரை தேடிப் பயணித்துக் கொண்டிருக்கும் போது ஒரு எறும்பு, தமது பாதையில் இருந்து விலகினால் அதன் பாதையைக் கண்காணிக்கும் எறும்பு அதன் தலையை வெட்டியும் விடுமாம். இப்படி ஒரு தகவலை நான் ஒரு சஞ்சிகையில் படித்தேன்.

தேனீக்களின் வாழ்க்கை முறைகள் மனிதனை வியப்பூட்டுவதாக இருக்கும். அவைகள் இருப்பிடம் அமைத்த விதம், அவைகளின் கூடுகளில் வெப்ப, தப்ப நிலைகளைப்



RangaRakes
Tamilnavarasam.com

பேண தங்கள் இறகுகளாலேயே விசிறியடித்து சுகமாக வாழ்வதற்கான வழிமுறைகளை செய்கின்ற பாங்கு. அப்பப்பா....சொல்லிட முடியாத வியப்பு...என்னே! இறைவனின் அற்புதக் கைவண்ணங்கள்!

இந்தச்சின்னஉயிரினங்களின் கட்டுப்பாடான, வாழ்வு முறை இயற்கையோடு இணைந்தது. ஆனால் மனிதனோ, பல்வேறு வசதிகளை, வாய்ப்புக்களைத் தன் பகுத்தறிவு, ஆய்ந்தறியும் சிந்தனையால் வளர்த்தும் கூட தான் கட்டுப்பாடு அற்ற விதத்தில் வாழ்வதே பெரும் கௌரவம் எனக்கருதுகின்றான். அவன் எண்ணுவது ஒரு தான் தோன்றித்தனமானது என்பதை உணர்வதேயில்லை. “சுதந்திரம்” என்பது தான் தோன்றித்தனமான, தன்னிச்சையான சுய நலத்துடனானதும் அல்ல.

காலங்கள் எப்படித்தான் கடிதெனக் கரைந்தாலும் மனித பண்புகள் அதை நெறிப்படுத்தும். கட்டுப்பாடுகள் அழியாமல் பாதுகாப்பதே மானுடதர்மமும் ஆகும். கட்டுப்பாடுகள் எமக்கு முட்டுக்கட்டைகள் அல்ல.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
08.07.2008







# சிந்தனையும்,செயலும்

செயல்களற்ற சிந்தனைகளால் ஏதுபயன்? எத்தரத்தாரினதும், நற்சிந்தனைகளை ஏற்றுக் கொள்வோம். சிந்தனைகளின் பரிணாம வளர்ச்சியினாலேயே இன்று அவனி அற்புதமாக அவதாரமெடுத்துள்ளது. சிந்தனையின் வெற்றி, துணிச்சல் மிக்க செயல்பாடுகளில் தங்கியுள்ளது. புலன்கள் வசமானவர்கள், சிந்தனைகளைச் சிதறவிடுகின்றனர். அறிவை பூட்டி வைக்காது அதனை அனைவர்க்கும் ஊட்டுவதே சிந்தனையாளரின் பணி. மன ஒடுக்கம், முயற்சி ஆகியன சிந்தனையும், செயலையும் நயம் படவைக்கும்.

சிந்தனை மாந்தர்க்குச் சொந்தமானது. சிந்திக்கத் தெரியாதவன் மந்தபுத்தியுடன் வாழ்க்கையில் பெறற்கரியனவற்றை இழப்பதுடன் தன்னைத் தன் ஆன்மாவை அது இருந்தும் அது இல்லாத நிலைக்கு உட்படுத்துகின்றவனாவான்.



RangaRakes Tamilnavarasam.com

அறிவோடு இணைந்துவரும் சிந்தனை வளர்ச்சிகள் மானுடவளர்ச்சியையும்இயல்பான,நேரிய ஒழுக்கத்தி னையும் வலியுறுத்துவதுடன் செயல்திறன்மிக்க, பூமியின் புதல்வர்களாகவும் மாற்றுகின்றது.

செயல்கள் அற்ற சிந்தனையால் ஏது பயன்? நல்ல சிந்தனைகளைப் பெற்றுக்கொள்பவன் அதை மற்றவர்க்குப் போய்ச் சேருமாறு செய்ய வேண்டும்.எக்கணமும் திரிபு அற்ற நல் எண்ணங்களுடன் வாழுபவனிடம் இருந்து புறப்படும் வார்த்தைகள்,ஆலோசனைகள் தனக்காக என்றில்லாமலும் தன்னைச் சார்ந்தோருக்கு மட்டுமின்றி பொதுவான தெளிந்த வெளிப்பாடாகவே அமைந்து நிற்கும்.

வயதில் குறைந்தவர்களிடம் இருந்தும் சொல்ல ப்படும் நல்ல கூற்றுக்களை நாம் செவிமடுப்போமாக! ஒருவர் எத்தரத்தினராயினும் கூட அவர்கள்அவர்களின் எண்ணங் களின் புனிதத்தன்மை வெளியுலகில் தகுதி உயர்ந்தவர் களாகக் கருதப்படுபவர்களிலும் பார்க்கக் குறைந்ததாகக் கருதிவிடமுடியாது.

உபதேசிக்கும் ஒருவர் வாழ்க்கையிலும் பிறர்க்கு வாழ்ந்து காட்ட வேண்டியவராகின்றார்.

சுதந்திரம், மனித உரிமைகள் பற்றி நிரம்ப மேடை யில் பேசுவார்கள். ஆனால் சொந்த வாழ்க்கையில் வீட்டில், மனைவி, பிள்ளைகளைப் பேசுவதற்கே அனுமதிக்க



RangaRakes



மாட்டார்கள். இன்னும் சிலர் வெளியில் மிகவும் பிரசித்தி பெற்றவர்களாக நல்ல கருத்துக்களைச் சொல்லி மக்களை விழிப்பூட்டுபவராக இருப்பார்கள். ஆனால் அவரது இல்லத்தில் மனைவி, மக்களால் வேண்டப்படாத நபராக அலட்சியப்படுத்தப்படும் அப்பாவியாக வாழ்ந்து கொண்டிருப்பார். வெறும் கற்பனைகள், நம்பிக்கையற்ற எண்ணங்களுடன் வாழ்பவர்கள் செயலளவிலும் துணிச்ச லின்றி வாழ்ந்தால் எந்தப் பயன்களையும் பெற்று விட முடியாது. தங்கள் அறிவு இருந்தும் துணிச்சலுடன் வாழாது விட்டால் செயலாற்றல் திறன், கௌரவம், புகழ் அடைந்திடவும் முடியவே முடியாது.

“பெரிய மலை” என்று ஒரு சமூகத்தினை நாம் எடுத்துக் கொண்டால் அதில் உள்ள ஒரு பாறை ஒருவனின் வாழ்க்கையாகும். தனது சீரிய சிந்தனை எனும் கருவி மூலம், பாறையைச் செதுக்கினால் சிறந்த அழகிய சிற்பம் உருவாகும். வெறும் பாறை சிற்பமாக உருவாகுவது மனித சிந்தனை வெளிப்பாடு மூலமே துலங்குகின்றது.

செயலில் ஆர்வமும் திருப்தியும் உண்டானால் இந்தச் சிற்பம் உயிர் பெற்று எழுந்து செயற்கரிய செயல்களைச் செய்ய ஆரம்பித்து விடும். மேலும் நாம் எந்த ஒரு சிறு விஷயத்தில் ஈடுபடும் போதும் எங்கள் கவனம் முழுமையான மன ஒடுக்கத்துடன் செய்தால்தான், அது பூரணமாகி எம்முள்ளே ஆனந்தத்தை உருவாக்கின்றது.



Tamilnavarasam.com

அறுகம்புல் தடக்கியே பெரிய யானையும் விழுந்து விடலாம் என்பார்கள். செயலின் பரிணாமம் சிறியதாக இருந்தாலும் எங்கள் கவனக் குறைவு எம்மைக் கவிழ்த்து விடலாம். ஒரு திறமை மிகு பொறியியலாளர் ஒரு துவிச்சக்கர வண்டியின் சின்ன திருகு ஆணியைப் பூட்டத் தெரியாதவராக இருப்பது வெட்கப்படத்தக்க விஷயம். வெறுமனே படித்து என்ன பயன்? எந்தச் செய்முறையிலும் ஈடுபடத் தெரியாமல் இருப்பதால் அவர்கள் இலகுவில் ஏமாற்றப்படக் கூடியவராக இருப்பதுடன் மற்றவர்களால் கேலிக்குட்படுத்துவராகவும் மாறிவிடுவார்கள்.

மிக ஆழமான தன்னம்பிக்கைதான் மனித சிந்தனை. ஆற்றலை வளப்படுத்துகின்றது. ஆரம்பத்திலேயே மனம் ஒடிந்து விட்டால் அடுத்து என்ன செய்வது என்கின்ற நோக்கத்தை எட்ட மனம் துணிந்து விடுமா?

எந்த ஒரு செயலையும் செய்யாத ஒருவன் நான் ஒரு தவறும் செய்வதில்லை என்று மார்தட்டமுடியாது. காரியங்கள் பல செய்யும் துணிச்சலுடன் இயங்குபவன், வெற்றிகளைக் குவிக்கும் போது சில தவறுகளும் உட்புகுந்துவிடுகின்றது. இவை இயல்பானது. தவறு ஏற்பட்டுவிடுமே என்று எண்ணிச் சும்மா இருப்பதுபோல் பயந்த நிலை வேறு என்ன ஐயா, உண்டு சொல்லுங்கள்? நன்றாகப் படிக்க வேண்டும், மற்றவன் போல் நல்ல வேலை தேடவேண்டும். ஏன் நம்மால் மற்றவர்கள் போல் வாழ முடியாது என்று எண்ணுதலை விடுத்து தமது கல்வி





முயற்சியையும், உழைக்கும் ஆர்வத்தையும் மேற்கொள்ளாமல் விட்டால் அதுவும் ஒரு கோழைத்தனமானதும், தன்னையே ஏமாற்றும் ஏய்த்தல் நடவடிக்கைதான். உணர்வோம்.

தன்னைத்தான் பலவீனப்படுத்துதலும், ஏமாற்றுதலுடன் வாழ்வதுபோல் பாவகரமான வேலை வேறு எதுவுமே கிடையாது. உனக்கு வேண்டியதை நீயே உண்டாக்கு!

நம்பகத்தன்மையுடன் வாழ்வது நம்பி வாழ்வது எங்கள் தூயசிந்தனையின் வெளிப்பாட்டுடன் சம்பந்தப்பட்டதாகும். நல்ல சிந்தனையுடன் வாழுபவன் தீய சக்திகளையும் எரிப்பவனாகின்றான். என்றும் உயிர்ப்புடன் எழுபவனுமாவான்.

நாம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மற்றவர்களை நம்பாமல் வாழ்ந்து விடமுடியுமா? எப்படியும் நாம் ஒருவர்க்கொருவரை நம்பித்தானே வாழ வேண்டும்? அங்காடிகளில் சாமான்களை வாங்குகின்றோம்.பொருட்களில் கலப்படம் செய்திருக்கப்பட்டிருக்கும். நல்ல பொருட்களும் விற்பனைக்காக விடப்பட்டிருக்கும் பொருட்கள் எல்லாமே கலப்படமானது எனச் சொல்லி அவைகள் ஒன்றையுமே வாங்காது விட்டுவிடலாமா? பார்த்து வாங்க வேண்டியதை விடுத்து வாங்காமல் இருக்க முடியுமா?



RangaRakes
Tamilnavarasam.com

விமானத்தில் ஏறினால் விமானம் செயல் இழந்து மோதிவிடும் என்று எண்ணிப் பயணம் செய்யாது விட முடியுமா? மனிதனை மனிதன் நம்பித்தான் ஆக வேண்டும் எந்த நேரத்திலும் சந்தேகமுடன் வாழ்பவர் களால் சந்தோஷம் இழக்கப்படும்.அத்துடன் இத்தகையவர் களால் சிந்தித்துச் செயல்களில் ஈடுபட மனம் ஒப்புதல் அளிக்கப்படுவதுமில்லை. இவர்களில் மனம் விடுதலை யடைவதுமில்லை.

அநாவசியமான சந்தேகங்களே மனத்தளர்ச்சி, தாழ்வுச்சிக்கலுக்குள் மனிதர்களை உட்படுத்தி விடுகின்றது. முடிந்த மட்டும். ஒரு குறிக்கோளுடனான சிந்தனையை ஒன்றுகுவித்து வலுமிக்கதாக்கினால் வீண்சந்தேக உணர்வுகள் செயல் இழந்து கழன்று விட வாய்ப்புமுண்டு.

இன்று மகிழ்ச்சியை நாமே மனக் கூண்டில் அடைத்துவிட முனைகின்றோம். மகிழ்ச்சி என்பதே, பரந்த வியாபகமான இனிய உணர்வுதான். இது சுருங்கி, அமிழ்ந்து, நொந்து, தொய்ந்து விடுவதுமில்லை. வருகின்ற மகிழ்வு கூடவே புதிதான, மனதுக்கு இதமூட்டும் இனிய நண்பர்களைச் சேர்ப்பதுபோல் மேலதிக இனிய உணர்வுகளையும் அழைத்துவரும்.

தனித்திருந்து சிந்தனையுட் கவரப்படுவோர் தம்முள் களிப்பெய்துகின்றார்கள். சிந்தனைவசப்படுபவன்,தன்னை மறந்தாலும் கூடப் புதுப்புது விஷயங்களைத் தன்னுள்





எடுத்துக் கொள்கின்றான். என் தரத்து திறமைசாலிகளும், சிந்தனை முதிர்ச்சியின்றி தன்னை வளப்படுத்தி விட முடியுமா? சிந்தனைதான் மனிதனை முழுமை யாக்கின்றது. அடுத்தவன் சிந்தனையை மட்டும் நம்பி வாழக்கூடாது. அடுத்தவர் சொல்வது நன்றாக இருந்தால் கேட்டேயாக வேண்டும். ஆயினும் சொல்வதைப் புரியும் ஆற்றல்களை நாம் வளர்க்க வேண்டுமல்லவா? கேட்கும் ஆவல்கள் எங்கள் சிந்தனை ஆற்றல்களை வளப்படுத் துகின்றது. நன்றாகச் சிந்திப்பவனால் மட்டும்தான் சிறப்பாகச் செறிவாகப் பேசவும் முடியும். இன்று பலர் சிந்தனைக்கு முன்னுரிமை கொடுக் காமல் கண்டபடி பேசுகின்றார்கள். செயல்களில் ஈடுபடுகின்றார்கள்.

வெறும் திரையில் தோன்றும் போலியான சமாச் சாரங்களை நம்புகின்றார்கள். கண்டபடி பேசும் கொச்சை வார்த்தைகளை மாமந்திரம் போலப் பல தடவைகள் உச்சரிக்கின்றார்கள். முன்பிருந்த முனிவர்கள், தபசிகள், வாழ்நாள் பூரா உச்சரிக்கும் மந்திர உச்சாடனத்தைவிட திரைப்பட நடிகர் கூறும் பேச்சுக்களே கேட்டற்றகரிய பெரும் கொடைபோல் அந்தச் சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லித் திரிகின்றார்கள்.

இதைவிட மோசமானது உலகை ஆண்ட மாவீரர் களை அழைப்பது போல் நடிகர்களைப் பொய்யாக வாயாலே முடிசூட்டிக்கொள்கின்றார்கள். ஒருவரது திறமைகளைப் புகழ வேண்டிய இடத்தில் புகழவேண்டும்



RangaRakes

Tamilnavarasam.com

தப்பேயில்லை. அதற்காக, தளபதி, மாவீரன், புரட்சியாளன் என்றெல்லாம் நடிகர்களைப் பற்றிச் சொல்கின்றார்கள். இந்த நடிகர்கள் எல்லாம் எந்த நாட்டை, கோட்டை கொத்த எங்களைப் பிடித்தார்கள்? எந்த நாட்டின் தளபதியாக, மாவீரர்களாக இருந்தார்கள்? புரியவில்லை. எமக்குச் சுத்தமாகவே புரியவில்லை.

பெற்ற தாயை மாலையிட்டு வணங்காதவர்கள் வீட்டில் கடவுள் படத்தினை வைக்காமல் நடிக, நடிகைகளின் படத்தை வைத்து வணங்குகின்றார்கள்.பிறந்த நாள் கொண்டாட்டங்களை இவர்களுக்கு நடாத்துவதுடன், நடிகர்களின் திரைப்படங்கள் வெளி வரும் நாட்களில் பெரிய விழா எடுத்து, இஷ்ட தெய்வங்களுக்கும் நேர்த்தி வைக்கின்றார்கள். நடிகர்களைப் பற்றிப் பூரணமாகத் தெரிந்து வைத்து இருக்கின்றவர்கள் தாய் தகப்பன், பெற்ற பிள்ளைகளின் பிறந்த நாள் எது வென்றே தெரியாமலும் இருக்கின்றார்கள். மேலும் உன்னதமான மகான்கள், தலைவர்கள், விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறே தெரியாமல் பலர் வாழுகின்றார்கள்.

ஆனால் இன்று இளைய தலைமுறையினர் மட்டு மல்ல, சகல தரத்தைச் சேர்ந்தவர்கள் கூடத் தேவையில் லாத விஷயங்களுக்கு, முன்னுரிமை கொடுக்கின்றார்கள். திரைப்படம் பார்ப்பது, ரசிப்பது, இனிமையான அனுபவம் தான். அதனூடு பல விடயங்க ளையும், நாம் தெரிந்து கொண்டு தான் இருக்கின்றோம். நல்ல விஷயங்களை





எங்கிருந்தாலும் புகுந்து ஓடித் தேடிக் கண்டுபிடித்துக் கற்றோராக வேண்டும். தெரிய வேண்டியவற்றைத் தேடாமலும், தகாதவற்றை மட்டும்நோக்குவதும், கிரகிப் பதுமே தவறான செய்கை யுமாகும்.தேனீர் தயாரிக்கும் போது நல்ல சுவையான தேனீரை வெளியேற்றி விட்டுச் சக்கையை மட்டும் தனக்காக ஏற்றுக் கொள்ளும் வடிகட்டியாக இருப்பது போல் மூடத்தனம் வேறில்லை.

பகுத்தறிவு என்பதுகூட ஒரு கூர்மையான வாள் போலத்தான். அறிவைத் தீட்டி அல்லாதவைகளை நீக்கி மனித மூளையைத் துலங்கச் செய்வதால் சிந்தனையும் அதன் பயனாக செயல்களைச் செய்யும் துணிச்சலையும் பகுத்தறிவு எமக்குப் புலனாக்குகின்றது.

நல்ல சிந்தனைத் தெளிவுடையோன் எவரையும் பகைக்க மாட்டான், மனம் நோகப் பேசமாட்டான். எதற்கும் நாணல் புல் போல் வளைந்து கொடுக்கின்ற இயல்பின னாய் வாழ்ந்து காட்டுவான். பெரிய, பெரிய மரங்கள்கூடச் சிறு புயல் அடித்தால் சாய்ந்துவிடும். நாணற் புல் எந்தப் புயலுக்கும் வீழ்ந்து மாயாது. காற்றின் திசைக்கு ஏற்றாற் போல சாய்ந்து, சாய்ந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் உடைந்து தெறித்து அழிவதை விட வளைந்து இயல்புக் கேற்றவாறு வாழ்ந்து காட்டுவது நல்லது அல்லவா? இது கோழைத்தனத்திற்கான வழியல்ல. எதிர்ப்பையும் மீறி நிற்கும் வாழ்க்கைக்கான வழி.!



RangaRakes

Tamilnavarasam.com

ஆராயாது கண்டபடிமோதி அழிவதைவிட இட மறிந்து, தன்னை வளப்படுத்தி, மேல் நோக்கி வாழுவதே விவேகமாகும். இப்படி வளர்ந்தபின் அவர்களை அழித்துவிட எவராலும் முடியாத வீரராகிவிடுவர்.

இசைந்து வாழ்பவர்கள் எவர்களையும், கவர்ந்தவர்க ளாகிவிடுவதை நீங்கள் உங்கள் அனுபவங்கள் மூலம் கண்டிருப்பீர்கள்.

சிந்தனை எங்களை விவேகமுள்ளவர்களாகின்றது. சிந்தனையாளர்கள் அதிகம் பேசுவதுமில்லை. பேசுகின்ற வேளையில் புதிதான சிந்தனை விதைகளை தங்கள் எண்ண ங்களுடாக எமக்கும் விதைத்து விடுகின்றார்கள்.தேவையற்ற விஷயங்களில் நாம் புலன்களைச் செலுத்துவதால் சிந்தனை ஆற்றல் செயல்கள் எல்லாமே ஸ்தம்பிக்கும் நிலைக்கும் வந்துவிட நேரிடும். எனவே, தெளிவான, உண்மையான நோக்கு எது என நாம் கண்டறிந்து அதன் வழி பின் தொடருவோமாக!

நாம் யாருடைய வளர்ச்சிக்கும் தடையாக இருக்கக் கூடாது. அதுபோல் எமக்கு எவருமே தடையாக வர அனுமதிக்கலாகாது. அத்துடன் எமக்கு நாமே தடையா கின்ற அவலத்திற்கு எம்மை ஆட்படுத்தவும் கூடாது. எமக்குள் இருக்கும் மாயத் தடைகளான சோம்பல், கவலை கள், போன்றவைகளுடன் கோபம், பொறாமை, ஆற்றாமை போன்ற குணங்களையும் நல் அறிவுடனான "சிந்தனை வளம்" நீக்கமற நீக்கியும் விடுகின்றது.






செயலற்ற சிந்தனையால் நாம் பயன் கண்டு விட முடியாது. எங்கள் அறிவு எந்த ஒரு நேரத்திலும் மற்ற வனுக்கு உதவிட தயார் நிலையில் இருக்க வேண்டும். சிந்தனை மூலம் உணர்ந்து செய்யும் செயல்கள் நமக்கும் எவர்க்கும் உதவுதலையே என்றும் செய்து கொண்டி ருக்கும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
25.05.2008



RangaRakes
Tamilnavarasam.com



# சந்தர்ப்பங்கள்

"நீ எந்நேரமும் விழிப்புடன் இரு" என்பதையே சந்தர்ப்பங்கள் எமக்கு உணர்த்துகின்றது. சோம்பித் திரிபவனுக்கு வலிந்து வழங்கப்படும் செல்வம் கை நழுவிப்போய்விடும். உரிய காலத்தில் உடன் கருமமாற்றுவதும் ஓர் அரிய சந்தர்ப்பங்கள் தான். நல்ல காலத்தைக் கோட்டைவிட்டு அது மீண்டும் வருமான எதிர்பார்த்தலைவிட தொடர்ந்து கருமமாற்றி வந்தால் எல்லாமே கிடைத்த வல்லவர்களாவோம். எமக்கு வருகின்ற நல்ல சந்தர்ப்பங்கள் மூலம் பிறர்க்கும் பயன்கிட்ட தயக்கமின்றி உதவிகள் வழங்குக!

நல்ல சந்தர்ப்பங்களை இழப்பது சிறப்பான வாழ்க்கையையே நழுவவிடுவது போலாகும். நல்ல சந்தர்ப்பங்களை இறுகக் கைப்பற்றித் தொடர்ந்து செயல்படுவதே எமக்குரிய திறமையும், புத்திசாலித்தனமானதுமாகும்.

சந்தர்ப்பங்கள் எல்லாமே சொல்லிக்கொண்டே





வருவதுமில்லை. எதிர்பாராத நிகழ்வுகளால் வருகின்ற வேளையில் கைப்பற்றிக்கொள்வதானது, "நீ எந்நேரமும் விழிப்புடனேயே இரு" எனத் தெரியப்படுத்துவதுமாகும்.

நல்ல வரவுகள் தேடிவரும் போது விழிகளை அயர விடுபவர்கள் ஈற்றில் நெடுந் துயில் கொள்ளும் சோம்பல் நிலைக்கே ஆளாக நேரிடும். அத்துடன், கிடைக்கின்ற "சந்தர்ப்பங்கள்", அடுத்து கிடைக்கின்ற இலாபகரமான வாழ்க்கைக்கு பெறுமதிமிக்க முதலீடுமாகும்.

சோம்பித்திரிபவனுக்கு வலியக்கிடைக்கும் செல்வங்களும் கைநழுவிப் போய்விடும். இவர்கள் தலையில் பொன்மாரி பொழிந்தாலும் இவைகளைப் பொறுக்கி எடுக்க வேறு ஆட்களைத்தான் தேடுவார்கள்.ஒரு அரசாங்கத்தில் புதிதாக ஆட்சேர்ப்பு நடவடிக் கைக்காகப் பரீட்சைக்கு ஒருவர் விண்ணப்பிக்கின்றார். இயல்பாகவே திறமையுள்ள அவர் பரீட்சை நாளில் ஒரு கேளிக்கை விழா ஒன்றில் கலந்து கொள்ள விருப்பப்பட்டு"அடுத்த தடவை இந்தப்பரீட்சையை எடுப்போம். இப்போது, என்ன வந்துவிட்டது. பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்தால் வேலை கொடுக்கப் போகின்றார்களா என்ன....?என்ற அசட்டுக் கேள்வியைத் தன்னுள் கேட்டு அந்தப் பரீட்சைக்குத் தோற்றாமலேயே விட்டுவிட்டார்.

பரீட்சை முடிந்ததும் பரீட்சை வினாத்தாள்களைப் பார்த்தவருக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. இவ்வளவு



RangaRakes

Tamilnavarasam.com

சுலபமாகவா கேள்விகளைக் கேட்பது? அடடா... நான் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் நிச்சயம் நான் சித்தியடைந்திருப்பேனே... என்னே... என் மதியீனம்... எனத் தம்மைத்தாமே நொந்து கொள்கின்றார். பரீட்சைப் பெறுபேறுகளும் வெளிவந்துவிட்டன. இதன்பின்னர் அவரது நண்பர்களில் பெரும்பாலானோர் சித்தியடைந்து அதற்குரிய தொழிலையும் தேடிக் கொண்டனர். அவரிலும் பார்க்கக் குறைந்த கல்வித் திறனுள்ளவர்கள்கூடப் பரீட்சையில் சித்திபெற்று விட்டனர். ஆனால் இவரோ கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை இழந்ததோடு இன்னமும் தொழில்தேடி அலைந்து கொண்டிருக்கின்றார். எல்லா நேரங்களிலும் சந்தர்ப்பங்கள் வருவதுமில்லை.

மிகுந்த பெருமுயற்சி செய்தும் கிட்டாத விஷயங்கள் கூட எதிர்பாராத நல்ல சந்தர்ப்பங்களால் எளிதில் ஒப்பேறி விடுகின்றது. வலிந்துவரும் அனுகூலங்களை இறைவன் தந்த பேறாகக்கருதி ஏற்பதுடன் தொடர்ந்து முயற்சி செய்து முன்னேறுவதே சிறப்பு. உயர் அதிகாரி ஒருவரைக் கட்டாயமாகத் தலைமை அலுவலகத்தில் சந்திக்க வேண்டியுள்ளது. போக்குவரத்துச் செலவுகள் ஒருபுறம் அவரைக் காண்பதற்கான நேரங்களையும் ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

இந்த வேளையில் அந்த அதிகாரியோ சந்திக்க வேண்டிய நபரின் ஊருக்கு வந்து விடுகின்றார். அவர் உடனே என்ன செய்ய வேண்டும்? நாளைக்குச் சென்றும்





பார்க்கலாமே என்று எண்ணிச் சும்மா இருந்தால் காரிய மாகுமா? வலிய வந்து கிடைத்த அனுகூலத்தைக் கருதாது சும்மா பாராமுகமாக இருந்தால் என்னாவது? சிலசமயம் அந்த அதிகாரியே உடன் தனது தலைமை அலுவலகத்திற் குத் திரும்பிவிடலாம் அல்லவா? சுமுகமாக, சாவகாசமாக, நேரில் உடன் சந்தித்தால் ஏற்படும் நட்புறவான சந்திப்பு எவ்வளவு மேலானது?

நாளைக்கு, நாளைக்கு என ஒத்திவைக்கும் எண்ணம் கொண்டோரால் எந்தக் கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்ள முடியாது.நல்ல"சந்தர்ப்பங்கள்"கூடவே நல்ல அதிஷ்டங்களையும் கொண்டுவந்து சேர்த்துவிடும். எனினும் நல்ல வேளைவரும் என்று காத்திருந்து, காத்திருந்தே, இருக்கின்ற காலத்தை வீணாக்குவது பேதமை. சிலர் எங்கள் ஜாதகம் இப்படிச் சொல்கின்றது, இன்னும் கொஞ்சக்காலம் சென்றால்தான் எதுவுமே சரியாக நடைபெறும் என்று சொல்லி எதுவுமே செய்யாது விட்டு விடுகின்றார்கள். தேவையற்ற பயம், மூடநம்பிக்கைகளால் வலிந்து வரும் நற்பயன்களை உதாசீனம் செய்யலாமா?

மேலும் காலபலன்கள் ஒருபோதுமே மனிதரை வாழ்க்கைக்குரிய காரியங்களைச் செய்யாது முடங்காதே என்றும் சொல்வதுமில்லை. நடைமுறைவாழ்வில் யதார்த்தமாக எழக்கூடிய முட்டுக் கட்டைகளை எல்லாமே, எமது விதி என்றும் சொல்லிக் காலவிரயம் செய்யலாமோ?



RangaRakes

Tamilnavarasam.com

"காலத்தைக் கைவிட்டால் ஞாலம் எமைப்பார்த்து நகைக்கும்".

சந்தர்ப்பங்களைக் கோட்டை விட்டவனை நல்ல தேட்டங்கள் கேட்டுக்கொண்டு வரவும் மாட்டாது. விடாமுயற்சி செய்யாதவனை ஆண்டவன் எட்டிப் பார்க்க மாட்டான். சிருஷ்டித்தவன் ஆணை என்பதே செயல் வீரனாக, எடுக்க வேண்டிய நற்கொடுப்பனவுகளை எனது ஆசிகளுடன் இந்த நொடி யிலேயே பெற்றுக்கொள் என்பது தான்.

மேலும் தன்னை நம்பி முழுமையான சிரத்தையுடன் உழைப்பவன் எதுவுமே செய்யாமல் கொடுக்கப்படும் தவறான கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்ளவும் பிரியப்படமாட்டான். நல்லசந்தர்ப்பங்கள் என்பது, தவறான முறையில் கிடைக்கும் அனுகூலங்கள் அல்லவேயல்ல. ஒருவர்க்குக் கிடைப்பதைத் தடுப்பதே கொடுமை!

ஒருவனைக் கவிழ்ப்பதற்காகச் சந்தர்ப்பங்களை எதிர்நோக்குவதுபோலக் கேவலமானது வேறில்லை. ஒருவன் நலிந்திருந்த காலத்தில் நகைத்துக் கேவலப்படுத்தி வாழ்வதும் ஒரு வாழ்வா? பனையால் விழுந்தவரை மாடு ஏறி மிதித்தாற்போல் ஒருவன் துன்பத்தின் மேல் துவளும் போது மேலும் இம்சிப்பது அடுக்குமா?

இயல்பாகவே மனிதன் சின்ன இடர்கள் வந்தாலும் ஆடிப்போகின்றான். இந்த வேளையில் எதிரிகள் புகுந்து





அட்டகாசம் செய்வது, அவர்களின் கேவலமான பலவீன நிலைதான். எல்லோருக்குமே எதுவுமே நடக்கலாம். துன்பங்களைப் பிறர்க்கு விழைவிப்போர்கள் சற்றுச் சிந்திக்க வேண்டும். துன்பப்படுவோர் நிலை சிலசமயம் தமக்கும் ஏன் ஏற்பட்டுவிடாது? என்று ஒருகணம் நோக்கவேண்டும் அல்லவா? துன்பம் ஒருவர்க்கு எய்திட்டால், அவர்களுக்கு உதவிகளை நல்குவதனால் அவர்களிடையே அன்புதான் பரிணமித்துவிடும்.

சாதாரணமான மனிதர்களிடையே உதவிகளை வழங்கினால் ஏற்படும் அன்புணர்வு, சந்தோஷங்களுடன், எமக்கு எதிரானவர்கள் என்று கருதப்படுவோர்க்கும், அவர்கள் வேதனை உற்ற வேளையில் உடன் பகை மறந்து உதவிகளை நல்கினால் பகை ஒடுங்கும். அன்புணர்வு நெடிதென ஓங்கும். எங்கே ஒருவன் துயருறுகின்றானோ அங்கே உடன்சென்று கரம் கொடுப்பதே சிரமேற்கொள் ளத்தக்க கடமையாகும்.

எனவே, நல்லதைச் செய்ய சந்தர்ப்பங்களைத் தேடு நன்நெஞ்சே! இந்த உலகிற்கும், உன்னுடன் இணைந்த வேறு எவர்க்குமாயினும், மனம், சொல், செயல்களால், அதி உச்சசேவை செய்தல் உனக்கு இறைவன் கொடுத்த "மா" வரம் ஆகும். சிலருக்கு ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் கிடைக்கரிய ஒரு அனுகூலம் ஒன்று கிடைத்து விட்டால் அதைப் பார்த்த மற்றவர்கள் எந்த வித லஜ்ஜையும் இன்றி அவைகளைத் தங்களுக்கு வழங்கிவிடுமாறு கேட்டுக்



RangaRakes
Tamilnavarasam.com

கொள்வார்கள். இது கூட பிச்சை கேட்பதற்கு ஒப்பானதே. இதைவிட மோசமானது, ஒருவருக்கு ஏதாவது சந்தர்ப்ப வசத்தால் செல்வம் வந்து சேர்ந்துவிட்டால் அது பற்றிப் பெரிதும் பொறாமைப்பட்டும் கொள்வார்கள்.

யார், யாருக்கு எது, எது கிடைத்திடினும் பிறர் அதனுள் புகுந்து நியாயம் கேட்பதும், பங்குகேட்பதும் பொறாமைப்படுவதும், கீழ்த்தரமான பலவீன நிலை. மேலும் இந்தப் பொறாமையினால் சதா தமக்குள் தாங்களே மனம் குமைந்து இருக்கின்ற நிம்மதியை அழிப்பது போலாகும்.

சந்தர்ப்பங்கள் இறைவனால் எமக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்களேதான்.இவைகளை மட்டும் தொடர்ந்தும் நம்புவதும்,சந்தர்ப்பங்களை எதிர்பார்த்து அவைகளைப் பெறுவதற்காகப் பிறரை ஏமாற்றுவதும், நடிப்பதும், குற்றங்களைப் புரிவதும், பாவகரமான கொடிய செயலாகும்.

மேலும், ஒருவர்க்குக் கிடைக்கும் புகழ் பதவிகளை மற்றயவர்கள் அவர்கள் எதிர்பார்த் திருந்த சந்தர்ப்பங்களில் உட்புகுந்து தட்டிப்பறித்து விடுவதுமுண்டு. மிகவும் உழைத்துப் பெற முயன்ற பதவிகளே கிடைக்காமல் போய் விடுவதுண்டு. இவை துரதிஷ்டமான நிலை தான். மரம் நிலையாய் நிற்கும். காற்று அதை அசை க்காமல் விடாது. எந்த எதிர்ப்புகளிலும் தன்னை நிலை நிறுத்தியவன் நிலை தடுமாறாது உயர்ந்தே நின்று கொள்வான்.

எமது வாழ் நாட்கள் மிக நீண்டதாக இல்லை.





ஆனால் எம்முன் உள்ள பணிகளோ ஏராளம். கழிக்கின்ற காலத்தைக் களிப்புடன் கழிக்க விழைகின்றோம். இந்தச் சிலபொழுது வேளையில், சில விநாடித்துளிகளில், சந்தர்ப்பம் வந்து ஓரிரு தடவைகளிலேயே எம்வாழ்க்கைக் கதவை வலிந்து தட்டி எம்மை விழிப்பூட்டுகின்றது.

எல்லோரது வாழ்க்கையிலும் ஏதோ ஒரு அனுகூலம் வராமல் விட்டதுமில்லை. ஆனால் சிலர் சலிப்போடு கூறுவார்கள். “எனக்கு அதிஷ்டமே இல்லை” என்பார்கள். அடுத்தவனுக்கே எல்லா நல்ல சந்தர்ப்பங்களும் குவிகின்றது என்பார்கள். எம்மைச் சந்தர்ப்பங்கள் வந்து சந்திக்காமல் விட்டால் என்ன? நாமே சந்தர்ப்பங்களைத் தேடி ஓடவேண்டியது தானே? வாய் மூடி மௌனியாக இருந்தால் காரியம் ஆகுமோ?

எதிரே தேடுவாரற்றுக் கிடக்கும் மரத்தில் தானாகக் கனி உதிரும் வரை பசியுடன் காத்திருக்க முடியுமா? ஏறிப்பிடுங்கி உண்ண வேண்டியதுதானே? ஓடிப்பழகினால் தானே, ஓட்டப்பந்தயத்தில் சேர்த்துக் கொள்வார்கள்? படித்தால்தானே, பரீட்சையில் சித்தி எய்தமுடியும்? விடைத்தாள்களைத் தந்து விட்டா பதிலை எதிர் பார்ப்பார்கள்?

போட்டி மிகுந்த உலகில் நாம் ஓடிக் கொண்டே யிருக்கவேண்டியதே! கிடைத்தவற்றைப் பெறுவாயாக! கிடைக்காது விட்டால் துக்கப்பட்டுத் துவண்டு விட



RangaRakes Tamilnavarasam.com

வேண்டாம். ஒடு...ஓடிக் கொண்டேயிரு! காலத்தின் பெறுமதி தற்கால உலகில் கூடிக்கொண்டே செல்கின்றது. மக்கட் தொகை, பொருளாதாரப் போட்டி, இயற்கை அனர்த்தம், போர் அனர்த்தங்களால், மக்கள் அழுத்தத்திற் உள்ளாகிக் கொள்கின்றனர்.

கொஞ்ச நேரத்தில் நிரம்ப வேலைசெய்ய வேண்டி யுள்ளது. அடுத்த பணி கேட்காமலேயே வந்து ஒட்டிக் கொள்கின்றது. இந்த நிலையில் எமக்கான பணிகளைச் செய்யாமலே வெறும் எதிர்பார்ப்புக்களை மட்டும் நம்பியே காலத்தை ஓட்டமுடியாது. மேலும் கஷ்டப்படாமல் இருந்து கொண்டே வாழ்க்கையை வீணடிப்பவர்கள் கடவுளால் கொடுக்கின்ற வெகுமதி களைக்கூட உராந்து பார்த்து அவை தரம் கூடியதா, குறைந்ததா எனப்பேரம் பேசுகின்றனர். சும்மா இருந்தவனுக்கு அதிர்ஷ்டலாபச் சீட்டில் இரண்டா வது பரிசாகப் பல லட்சம் அவனுக்குக் கிடைத்தாலும் கூட, “அடடா என்ன இந்தக் கடவுளின் வேலை? யாரோ ஒருவனுக்கு முதலாவது பரிசு கிடைக்கச் செய்து “விட்டானே” என்றும் புலம்பி அழுவான்.

உழைப்பினால் உண்டாகும் வலிகூட இதமானது. அது பல அனுபவங்களைச் சொல்லும். அதனால் பெறும் பெறுமதி மிக்க காசு, புது வாழ்வுப்பாதைக்கான வழிகளை எளிதாகக் காட்டி நிற்கும். சும்மா இருந்து சாப்பிட்டுவந்தால் உடல் பருத்து வளரலாம். ஆனால் நன்கு உழைத்தால் தான் உடல் அழகுடன் உள்ளமும் வலுப்பெறும். பரந்த ஆளுமையும், ஆழமும் நெஞ்சிலேற்படும்.





தற்போது குற்றச் செயல்களில் ஈடுபட்டுச் சிறைவாசம் அனுபவிப்பதற்குப் பதிலாக குற்றவாளிகள் திருந்தி வாழுவ தற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டு ஒத்திவைக்கப் பட்ட சிறைத் தண்டனைகளை நீதிபதிகள் வழங்கி வருவதை நீங்கள் அறிவீர்கள். தொடர்ந்து திருந்தி வாழாமல் அடாவடித்தனம் புரியும் பிரகிருதிகள் திருந்தமாட்டோம் என்றால் அவர்கள் கடுமையான வேறு தண்டனைகளுக்கு ஆளாகவேண்டியதே. வயதில் குறைந்த பால்யக் குற்றவாளி களைச் சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைகளில் சேர்ப்பித்து அவர்கள் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தினைப் பெற்று கல்வியில் பண்பில் மேம்பட்டு வாழ நல்ல சந்தர்ப்பங்களை ஒவ்வொரு நாட்டின் அரசுகளும் செய்தே வருகின்றன.

ஒவ்வொரு பிரஜைகளுமே சகல உரிமைகளுடன், வாழுவதற்கான வழிவகைகள் வழங்கப்பட்டேயாக வேண்டும். இது மானுடநீதி முறைமையுமாகும்.அரச தனியார்துறைகளில் பதவியில் அமர்த்தப்பட்ட எவரேயா யினும் அவர்கள் தமது கடமைகளில் பொறுப்புடன் பண்பில் எந்தவித கறைபடியாதவாராக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இதன்பொருட்டே அனைத்து ஊழியர்களுக்கும் தகுதி காண் காலம் எனக்குறிப்பிட்ட மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருடகால எல்லை வகுக்கப்பட்டுள்ளன.இக்கால எல்லையில் குறிப்பிட்ட பரீட்சைகளில் தேறினால் மட்டும் போதாது. செயல்திறன்,நன் நடத்தைகளைக் கடைப்பிடித்து



RangaRakes Tamilnavarasam.com

ஒழுக போதிய பயிற்சிகளும், நல்ல சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

நற்பண்புடன் வாழ்ந்து காட்ட கால எல்லைகள் தேவையில்லை. ஆயினும் வாழ்கின்ற காலத்தில் நாங்கள் கண்டு கொண்ட எமது அனுபவங்கள்,எம்மால் பிறருக்கு வழங்கப்பட்ட நன்மைகள், எமக்கான நல்ல இனிமையான பெறுமதிமிக்க சந்தர்ப்பங்களே!

தினக்குரல்
(ஞாயிறு)
15.06.2008








# தவம்

புலனடக்கம், தியானம், அதன் மூலம் பெறும் தவநிலை சகல மதத்திற்குமான பொதுவான உன்னத நிலை. டாம்பீக வாழ்விற்கும் தவ வாழ்க்கைக்கும் சம்பந்தமேயில்லை. இப்படி வாழ்பவர்கள் தபஸிகளுமல்ல. எதனையும் எதிர்பாராது உலகிற்காகவும், தமது ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் வாழ்பவர் ஞானி. கடமை செய்பவன் முனிவரிலும் மேலானவன். எல்லா உயிர்களையும் தம் உயிர் என நேசிப்பவனும்,பலர்க்கும் சந்தோஷங்களையே ஊட்டுபவனும் மேலான தவத்தின் அற்புத கொடுப்பனவுகளை அனுபவித்தவனாகின்றான்.

சகல உயிர்களையும் சமனாக மதித்து, எந்தவித எதிர்பார்ப்புகளுமற்ற பரோபகார சிந்தனையுடன் மனம், வாக்கு, தேகத்தினால் தீங்கு விளைவிக்காதவராய் மாறாத திட நோக்குடன் இருப்பதே தவத்தின் வடிவமாகும்.

குறித்தவொரு ஆற்றலை வளர்ப்பதற்காக மன ஒடுக்கம் அத்தியாவசியமாகின்றது. புலனடக்கத்தினைத்



RangaRakes Tamilnavarasam.com

தூய சிந்தனை உண்டாக்குகின்றது. இந்தப் புலனடக்கத்தை உருவாக்கின்ற வலுமிக்க ஆற்றலை "தவம்"ஏற்படுத்த ஏதுவாகின்றது. தவக் கோலத்தில் இருந்தால் மட்டுமே, இறைவன் கடாட்சத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதில்லை. சாதாரண நிலையில் உள்ள எந்த மனிதரும், தம் நல் இயல்புகள் மூலம் எல்லோரையும் போல படைத்த கடவுளால் ஆசீர்வதிக்கப்படுகின்றார்கள். இறைவனுக்கு எல்லோரும் சமன்.

ஆயினும் தவக்கோலத்தில் இருக்கும் அடியவர்கள் எம்மதத் தினரைச் சார்ந்தோராய் இருப்பினும் அவர்களை ஆதரித்தல் எம்போன்றோரின் தலையாய கடனாகும். மேலும், புலனடக்கம், தியானம், அதன் மூலம் பெறும் தவநிலை சகல மதத்திற்குமே பொதுவான உன்னத நிலை தான். ஆன்மீகவாதிகள், சாமான்ய மாந்தர்களை விடத் தம் மன ஒடுக்கத்திலான தவநிலையினால் மக்களைத் தம்பால் ஈர்த்து வருகின்றனர்.

ஆனால், இன்று வேண்டத்தகாத நபர்கள் தவ வேடமேற்று கோரமான, விஷமமான வேலைகளைச் செய்து பலரின் வாழ்க்கையைச் சிதைத்து வருகின்றனர். முற்றிலும் துறந்ததாகச் சொல்லிவரும் துறவிகளின் டாம்பீக வாழ்க்கையை அறிந்தும் அவர்களுக்கு கௌரவமளித்து அவர்கள் காலில் மக்கள் வீழ்வது மேன்?





இடுப்பில் ஒரு துண்டுடன், நடுக்காட்டில், அமைதியாகத் தவமியற்றிவரும் சித்தர்களை இன்னமும் நாம் மலையடி வாரங்களில், உச்சிமலைகளில் காணலாம் எனச் செய்திகள் கூறுகின்றன.

ஆனால், மக்களுக்கு ஞானோபதேசம் செய்வதாகச் சொல்லும் சில சாமியார்கள் ஐந்து நட்சத்திர விடுதியிலும் பார்க்க மிக வசதியுடைய மாளிகைகளில் வாகன, விமான வசதிகளுக்குச் சொந்தக்காரர்களாகச் சுற்றி வருகின்றார்கள். இவற்றில் குறிப்பிடத்தக்க உண்மை என்னவெனில், மிகவும் அந்தஸ்துள்ள அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர்கள், கல்விமான்கள் கூட இந்தச் சாமிமார்களைத் தரிசிக்கத் தவமிருக்கின்றார்கள். காசுகளை இவர்களுக்காக அள்ளி வீசுகின்றார்கள். கல்வியை, அறிவை, அந்தஸ்தை, செல்வத்தைப் மட்டுமே பெற்றால் சிலசமயங்களில் உண்மை எது, பொய்மை எதுவென்ற பேதமே புரிவதில்லையோ?

இன்று மிகவும் வேடிக்கைப் பொருளாக இருக்கின்ற ஒன்று என்னதெரியுமா?"உண்மை"தான்அது என்று கருத வேண்டியுள்ளது.உண்மை பேசுபவர்களைக் கேலியாக நோக்கு கின்றார்கள். அவர்கள் சொல்வதை எல்லோருமே நம்புகின்றார்கள் இல்லை.

ஒரு குடும்பஸ்தர் உண்மையாக வாழ்ந்து கஷ்டப் பட்டால் அவரது மனைவி மக்கள் பிழைக்கத் தெரியாத மனுஷர் என்று கடிந்தும் கொள்கின்றார்கள். உண்மையாகப்



RangaRakes

Tamilnavarasam.com

பேசினால் வியாபாரம் செய்யமுடியுமா? கீர்த்திமிக்க அரசியல்வாதியாக முடியுமா என்றும் கேட்பவர்கள் இருக்கின்றார்கள். யாவரது சந்தோஷங்களை உண்டு பண்ணும் பொய்களைச் சொன்னால்மட்டும் கேட்டு அதையே வேதவாக்காக ஏற்றுக்கொள்கின்றார்கள். உண்மைகளைப் புட்டுவைப்பவனை அடக்கி ஒடுக்கும் விஷயத்தில் முனைப்பாக இருக்கின்றார்கள். இந்த அநியாயமான எண்ணங்கள், செயல்களால் தான் இன்று உலகம் அல்லாடுகின்றது. நல்ல ஞானிகள், உண்மையாளர்களை நம்பாமல், வெளி வேடதாரிகளை அவர்கள் கபடம் தெரியாமல் அவர்களைச் சுற்றி வருவதனால் ஏற்படும் பலாபலன்களை பெறும் துன்ப அனுபவங்களால், உண்மை நிலையை இறுதியில் உணர்ந்தே தீருவார்கள்.

இல்லற வாழ்வின் மூலமும் நாம் இறைவனைக் காணமுடியும் என்றே எமது முன்னோர்கள் சொல்லி வந்தார்கள். மதங்கள் எதுவுமே இல்லறத்திற்கு எதிராக எதையுமே சொல்லியதுமில்லை இல்லறத்தின் மூலம் ஒருவர் உலகிற்கு ஆற்றவேண்டிய எத்தனையோ அரிய பணிகள் உண்டு. தனது குடும்பத்திற்கு மட்டுமல்ல வறியோர், உறவினர்கள் நண்பர்களுக்கு உதவுதலுடன் எல்லாவற்றிற்கும் மேலாக, துறவறத்தில் உள்ள மேன் மக்களையும் போஷிக்க வேண்டிய பெரிய பொறுப்பு இல்லறத்தானையே சார்ந்ததுமாகும்.

இவ்வுலகின், ஷேமத்திற்காகத் தம்மை வருத்தித் தவ





மியற்றும் துறவிகள் எதனையுமே எதிர்பார்க்காதவர்கள் என்பதனால் அவர்களைப் போலவுள்ளவர்களின் தொகை இன்று அருகிவிட்டமையை நாம் அறிவோம். தவஞான சீலர்களின் பக்குவநிலையினைச் சாமான்யமானோர் கண்டு கொள்ளவும் முடியாது. இன்றும் எம்முன்னே பல புண்ணிய ஆத்மாக்களைக் கண்டும் கூட எங்கள் அறியாமை காரணமாகப் பெரிதாகக் பொருட்படுத்திக் கொள்வது மில்லை.

இன்றுள்ள, எமது மிகப்பெரும் பலவீனம் என்பது. பல விதமான எண்ணங்களுடன் இருந்து கொண்டு அவைகளைச் சீரான வழி நடத்தல்களைச் செய்யாமையேயாகும். ஒரே நேரத்தில் பல வித சுமைகளைக் காவித்திரிய எண்ணுகின்றோம். எமக்கு எல்லாமே முன்னுரிமையாகத் தேவைப்படுகின்றது. மகனுக்கு வேலை தேடவேண்டும். மகளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். வீட்டைத் திருத்தியமைக்க வேண்டும் போன்ற ஏக குழப்பங்கள் ஒரே நேரத்தில் வந்து குவிகின்றது. “நற்பேறுகளைப் பெறுவதே ஒரு தவப்பேறு” என்று சொல்வார்கள்.பிரச்சனைகளை வைத்துக் கொண்டு இருப்பவர்கள் கஷ்டங்களுடன் சீவிக்கவா பிறந்தவர்கள் என்றும் கேட்கின்றார்கள். நல்ல நிலையில் இருப்பவர்களைக் கொடுத்து வைத்தவர்கள் என்றும் சொல்கின்றார்கள்.

நாம் மிகச் சாதாரணமான வாழ்க்கையில் துன்பங்களுடன் வாழ்ந்தாலும் பரவாயில்லை. எனது ஆன்மாவிற்



RangaRakes

Tamilnavarasam.com

குத் துரோகமிழைக்காமல், பிறர் ஆன்மாவை வருத்தாமல் இருப்பதே ஒரு தவப்பேறுதான். இத்தகை யோரின் துன்பங்கள் கால ஓட்டத்தில் களையப்படும் போதுதான் இந்த தவப்பேற்றின் உண்மையை உணர முடியும்.

தீயோரிடம் இணங்கி சொற்பசுகம் காண்பதைவிட நல்லவர்களுடன் இணைந்து வரும் தீயவைகளை எதிர்த்து வென்று வாழ்தலே முறையுமாகும். பத்து கெட்டவர்களுடன் கூடிக் கொட்டமடிப்பதைவிட ஓரிரு சான்றோரிடம் பழகி மௌனமாக வாழ்ந்து காட்டுதலே பேராற்றலை தவநிலை நோக்கிய நடையினை நோக்குவதாக அமையும்.

பொருட்கள் மீது, நிலம், வீடு என்கின்ற சொத்துக்கள் தான் வாழ்க்கை என்கின்ற அதீத ஆசை கொண்டவர்கள் துறவு தவநிலைக்கு உரித்தானவர்கள் அல்லர் என்று சொல்லு கின்றோம். நான், எனது என்று எண்ணும் போதே ஆசை மனிதனைத் தொற்றிக்கொள்கின்றது. உண்மையில் இந்த உலகில் வாழுகின்ற எமக்கு வசதிகளை எதிர்பார்ப்பதில் எவ்வித தவறுகளும் இல்லை. துறவு, தவநிலையை நோக்கி வாழ்கின்ற நிலையில் இருப்பதற்கு சாதாரண மனிதர்கள் தயாராவதுமில்லை. "சந்நியாசம்" என்பது, சாமான்ய மாந்தர்க்குப் பொருந்துவதுமல்ல. உண்மையான, மனக்கட்டுப்பாட்டுடன், ஒழுக்கமுடன், இறை அர்ப்பணத்துடன் துறவு நிலையில் வாழ்வது ஞானிகளுக்குரியனவாகும்.





சந்நியாசத்தை மேற்கொள்கின்றேன் என்று சொல்லி உலக ஆசாபாசங்கள், கேளிக்கைகளுள் மீண்டும் வர எண்ணுதல்போல சபலசிந்தை வேறில்லை. சபல புத்திக்காரர்கள் தவம் செய்ய முடியுமா? இத்தகையோர் தங்கள் சொரூபத்தை முழுமையாக மாற்றியமைக்காது விட்டால் சமூகத்தின் அசுத்தமான பிரகிருதிகளாகச் சீவிக்க வேண்டியதே!

தவ வலிமையுடையோர் தங்கள் துன்பங்களைச் சகித்துவிடுவதுடன் அதன் பொருட்டு அதுவே சிரமம் என்று மற்றவர்களுக்கான நற்காரியங்களைச் செய்யாது விட்டதுமில்லை. உலகில் தோன்றி மறைந்த மகான்கள் பலர் உடல் உபாதை நோய்களால் வாடி வதங்கியிருந்தாலும் தங்கள் சேவைகளை ஒருபோதுமே நிறுத்தியதில்லை. ரமண மகரிஷி, சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்ஸர் போன்றோர், தங்கள் உடல் நிலை பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்பட்டது கிடையாது. வரும் துன்பங்களை வெறுமனே சகிப்பது மட்டுமல்ல, அதனை எதிர் கொண்டு அழிப்பதும், தங்கள் கடமைகளில், முனைப்பாக செயல்படுதலுமே மேலான வீரமுமாகும். எந்த ஒருவருமே தீமைகளைத் தீமைகளால் வெற்றி கொண்டு விடமுடியாது. நன்மையான செயல் மூலமே வெற்றி கொள்ளவும் முடியும்.

மதம் கடந்த நிலையில் உள்ளவர்களே தவத்திற்கு உகந்தவராவர். தூய மெய்ஞானிகள், துறவிகள், எவருமே மத விரோதம் காட்டி மாந்தர்களை எதிர் கொண்டதுமில்லை.



RangaRakes

Tamilnavarasam.com

பல் ஆயிரம் கணங்களைக் கழித்துக் கொண்டே காலத்தைச் செலவளிக்கின்ற மனிதன் ஒரு கணமாயினும் தன் நிலை உணர்வதற்கான நேரத்தைச் செலவு செய்தாலே போதும் எல்லையற்ற "ஞானம்" என்கின்ற வருமதிகள் கிடைத்து விடும்.

கடமைகளைப் படிப்படியாக முடித்துக் கொண்டே வரும் போது எங்களிடையே புதியதான உற்சாகங்கள் பூத்திடும் பாக்கியம் பெற்றவராவோம். மாறாக, எமது ஆத்மாவிற்கு ஒவ்வாத பலவீனமான தேடல்களை நாமாகத் தேடுவதால் வாழ்க்கைப் பயணத்தில் சலிப் பேற்பட்டு விடும். வாழ்க்கையின் ஒவ்வொரு பராயத்திற்குமான குணாம்சங்களை விருப்புடன் ஏற்போமாக! இளவயதுக் குறும்புகளும், மத்தியதர வயதின் பொறுப்புக்களும், முதிய வயதின் ஆன்மீக நாட்டங்களும், இயல்பாக மனிதனை நாடிவரும். எனினும் வயது முதிர்ந்த பின்னரும் கூடப் புலனடக்கம், பொறுமையின்றிச் சீவிக்கும் மனிதர்களும் இருக்கின்றார்கள்.

ஒருதாய், பொறுமையாகத் தன் வயிற்றில் பத்து மாதங்கள் சுமந்து பிள்ளையைப் பெற்றுக் கொள்கின்றாள் அவள் வலியுடனும், மிகுந்த எதிர்பார்ப்புடன், பொறுமையுடன் இருக்கின்ற இந்தக் காலங்கள் எல்லாமே ஒரு தவநிலையன்றி வேறென்ன? புது உயிரை இந்த உலகிற்கு ஈந்தருளும்தெய்வமாகி இருக்கின்ற அன்னையர் களின், நிலைதான் "தவம்" என்பதற்கும், அதன் பெறுபேற் றின்





பெரும்பயன்,அவள் ஈந்தருளிய குழந்தை என்பதும் ஒரு சிறந்த உதாரணமாகும். ஒரு சிறந்த நல் மாணக்கனை நல்லாசிரியன் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் உருவாக்கு கின்றான்.இந்த ஆசிரியரின் சேவை ஒருதவம்.

எமது மக்கள் தங்கள் கருமங்கள் ஈடேறுவதற்காக தெய்வத்திற்கு "நேர்த்தி" செய்கின்றார்கள். இதன் பொருட்டு கடும் விரதங்களை மேற்கொள்கின்றார்கள். ஆலயங்கள் தோறும் பூஜை, வழிபாடுகளில் மக்கள் கலந்து கொள்கின் றனர். மக்களின் ஒன்றுபட்ட பிரார்த்தனை வழிபாடுகளால் தெய்வீக சக்தி மேலெழும்புவதால் எண்ணியவை நடக்கும் என்பது திண்ணம்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மக்கள் அனைவருமே ஒன்றாகத் திரண்டு அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த தியாகப் போராட்டம் ஆங்கிலேயரை அசைத்தது. பக்தியுடன் சேவையுணர்வு தியாகங்களால் ஏற்படும் அனுகூலங்கள் எல்லாமே ஒரே குறிக்கோளினால் வந்து எய்திய தவப்பேறேயாகும்.

தீவிர பக்தியினால் தவம் வலுவடைகின்றது. அன்புடனான கரிசனை, ஈடுபாடு, விடாமுயற்சி, நற்பண்புகள் எதனையுமே ஈகை செய்யும் தயாள சிந்தை, எத்தரத் தாரினதும் கஷ்டங்களையும் ஏற்றுக்கொள்கின்ற தியாக உணர்வு வந்தாலே அவர்கள் "தவம்" செய்த பெரும் பேற்றிற்கும் உரித்தானவர்களாகின்றார்கள். நிலைத்து



RangaRakes Tamilnavarasam.com

ஓரிடத்தில் தரித்துத் தியானித்தல் தவம் என்றாலும் இயங்கியபடியே அனைத்துக் கடமைகளையும் நிறை வேற்றியவர்களும், தவற் பேற்றினை இறைவன் மூலம் பெற்றுவிடுகின்றனர்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
18.05.2008







# கொடுத்தலும், இரத்தலும்

தேவையறிந்து ஒருவருக்கு கொடுத்து உதவ்துல் வேண்டும். வீம்புக்காகக் கொடுப்பது கொடையல்ல. பணம், பொருள்களை அளிப்பது மட்டும் கொடையல்ல. அன்பு காட்டுதலே பெரும் கொடை. எங்களால் முடிந்த பணியை நாங்களே செய்யாமல் பிறரை எதிர்பார்த்தல் இரத்தலாகும். வசதிகுறைந்தோர்க்குப் பொருள் கொடுக்க இயலாதோர், சேவைகள் மூலம் வழங்கல்களைச் செய்தாலே அது பெறுமதிமிக்கது. உழைக்காதவன் கோழை. அவனால் எதுவுமே வழக்க முடியாது விட்டால் அவனே ஏழை. உழைப்பதன் பயன் வழங்குத லேயாம்.

ஒருவரின் உண்மையான தேவையறிந்து பிரதிபலன் கருதாது கொடுப்பவர் கொடையாளியாகின்றார். உடல் வலு இருந்தும் தன்னை வருத்தப் பிரியப்படாமல் உதவிகளைக் கேட்பது “இரத்தல்”ஆகும்.இரத்தல் என்பது பணம்,பொருள்,நிலம் என்பது மட்டுமல்ல.தன்னால் செய்யக் கூடியதைப் பிறரிடம் கேட்கும் எந்தச் சேவை களுமே ஒரு யாசகம் போல்தான் கருதவேண்டும்.



RangaRakes
Tamilnavarasam.com

பொருள் கொடுக்க வசதியற்றவர்கள் தங்கள் மனத்தாலும், காயத்தாலும்,வாக்கினாலும் கூட எவர்க்கும் நல்லன செய்யப் புகுந்தால் அவைகள் கூட "கொடை" என்றே சொல்லப்பட வேண்டும்.

ஆலயம் புனரமைக்க ஒரு ஏழையிடம் ஆலய தர்ம கர்த்தாக்கள் வருகின்றார்கள். அந்த வசதியற்ற ஏழை பணம், பொருள் கொடுக்க முடியாது விட்டாலும் கூட மனமார அவர்கள் செயலை வாழ்த்தி ஒரு தொண்டனாக ஆலயப் புனரமைப்பிற்குத் தேவையான உடல் உழைப்பை நல்கினாலே அது பல கோடி ரூபாய்க்கும் மேலான பெறுமதி பெறும். பணத்தினால் மட்டும் சேவையின் அளவை, அளவு கோலிட்டு அளக்க இயலுமா?

மேலும், ஆதரவற்றோர்க்கு மனதார செய்கின்ற பேருதவிகள் ஏராளமுண்டு. அண்மையில் சுனாமி போன்ற பேரழிவின்போது, அங்கு அல்லல் பட்ட மக்களுக்கு தமது மேலான உடல் உழைப்பை நல்கி அவர்களுக்குத் தேவையான உதவிகளை தம்மால் இயன்றளவு வயது வித்தியாசம் பாராது செய்த புண்ணிய ஆத்மாக்களான கொடையாளிகளின் நற்செயலை நாம் வார்த்தைகளால் மட்டும் எங்ஙனம் பாராட்ட முடியும்.

வசதி குறைந்தோர்க்குக் கல்விக்கொடை செய்தல், கிராம, சமூக சேவைகள் மூலம், மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுதல் போன்று மேலான வழங்கல் சேவை ஏது





உண்டு? இப்படியாக, ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் யாருக்கு, எதனை நம்மால் வழங்க முடியும் என்று கருதிச் செயல்படுதல் ஒரு இறை பணியேயாகும். ஆயினும், இன்று சிலர் எதுவித சமூகப் பிரக்ஞையற்று எங்கே, எங்கே எவரிடம் எப்படிப் பிடுங்கலாம் என்று கருதியே வாழ்வதனால் முழு உலகமுமே நிம்மதியின்றி வாழ முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டு இருக்கின்றது. கஷ்டப்பட்டுச் சீவிப்பது மனதிற்கு உளைச்சலையும், உடலுக்கு உபாதையையும் தரும் என்ற தப்பான அபிப்பிராயத்தினால் உலகில் கொட்டிக் கிடக்கும் செல்வங்களை எப்படி ஏமாற்றி அபகரிக்கலாம் என்கின்ற எண்ணங்களுடன் வாழ்கின்ற வர்கள் எவ்வளவோபேர், சர்வசதாரணமாகச் சிரித்துக் கொண்டு காலத்தையோட்டுகின்றார்கள்!

எளிமையான நெஞ்சம்கொண்டோரின் ஆசை அபிலாசைகள் மிதமானதாயும் அவைகளை எளிதாக நிறைவேற்றக்கூடியதாகவும் அமைந்துவிடும். இவர்கள் யாரிடமும் சென்று கை நீட்டவேண்டிய அவசியமும் இல்லை. ஆரவாரமாக தங்களால் தான் எல்லாமே நடப்பதாகப் பாவனைகாட்டி, எல்லோரையும் நம்பச் செய்துவரும் பேர்வழிகள் மௌனமாகச் செய்யும் காரிய சித்திகள் பற்றி எதுவுமே தெரியாதவர்களாக இருக்கின்றார்கள்.

வீரத்துடனும், விவேகத்துடனும் செயல்படுபவர்கள் மௌனத்தை நேசிக்கின்றார்கள். தன்னால் எழும் வலுமிக்க எழுச்சிகள், அவனுள் ஆயிரம் படைவீரர்களிலும் மேலான



RangaRakes Tamilnavarasam.com

தெம்புடன் அவனை இயங்கச் செய்வதுடன் எவரையும் அண்டிப்பிழைக்கும் மன இயல்பற்ற நிலைக்கும் அவனை உறுதிபடச் செய்து விடுகின்றது.

இன்று பலரும் கேட்டுப் பெறும்யாசகம்மிகவும் நகைப் பூட்டுவதாகவும் இருக்கின்றது. எந்தவிதமான திறமையை யும், தகுதிகளையும் தன்னுள் வளர்க்காது "பதவி"ப்பிச்சை கேட்கின்றார்கள். சேவை மனப்பான்மையற்றவர்கள், மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்கின்றார்கள்.

சுய கௌரவம் உள்ளவன் தன்னையும், தன் திறமை களை மட்டுமே நம்புகின்றான். உழைக்காமல், ஊதியம் கேட்கமாட்டான். வேலைக்கு இணையவரும் போது மட்டும், அழுது தொழுது இரந்து வருவார்கள். தொழில் கிடைத்த பின்னர் தேவையற்ற கோரிக்கைகளைக் கேட்கும் அலுவலர்கள் மலிந்து விட்டார்கள். உண்மையான பிரச்சனைகள் இருக்கின்ற, உழைக்கின்ற, தொழிலாளர்கள் இருக்க, மேலதிகமான வசதிகளுக்காகப் பின் வாசல் வழியாகச், சாதுர்யமாக உள் நுழைந்து இரந்துகேட்டு வரங்கள் பெறுகின்ற ஒரு கூட்டம் இருந்து கொண்டு செய்கின்ற நியாயங்களுக்குச் சவால் விடும் கைங்கரியங்களைத் தடுப்பது எங்ஙனம்?

உலகில் பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களில் உழலும் தொழிலாளர், பாட்டாளி வர்க்கங்களின் உழைப்பு க்குரிய ஊதியங்கள் எல்லாமும் பரிதாபத்திற்குரிய





உழைப்போரின் வாழ்க்கை நலன்களும் ஓரிரு சுரண்டி வாழும் எத்தர்களால் கத்தரிக்கப்படுவதை அனுமதிப்பது மக்கள் எல்லோரினதும் தவறேயாகும். தவறு செய்பவர்கள் எவ்வித சஞ்சலமின்றி சஞ்சாரம் செய்வதைக் கண்டு கொள்ளாமல் இருப்பதே மிகப்பெரிய அறியாமையுமாகும். கொள்கை, நேர்மை என்று பேச்சளவில் சொல்லிக் கொள்பவர்கள் தமது "உள் உரு"வை மறைப்பதற்காகவா?

மேலும், உழைக்காத கோழைகள் கூட வரலாறு படைக்கப் புறப்படுகின்ற நடிப்பான அவலக்காட்சிகளையும் நாம் பார்த்து வருகின்றோம். கொடுக்கின்றவர்கள் கேட்பது மில்லை அவர்கள் கெட்டதுமில்லை. பெரும் தியாகிகள் தமது உடல், பொருள், ஆவியை இந்த பூமிக்கு அர்ப் பணித்தாலும் கூட அதற்காகப் பெரிய பதவிகளையோ கௌரவத்தையோ கேட்டுப் பெற்றதுமில்லை. நல்ல சேவை புரிந்தவர்களே, பெரிய அனுபவஸ்தராகவும் மக்கள் மீது இரக்கம் கொண்டவர்களாகவும் துலங்குகின்றார்கள். எல்லோருமே சகல சௌபாக்யங்களையும் பெற்று விட்டால் கொடுத்தலும் ஏது, இரத்தலும் ஏது?

ஒருவரது புத்திசாலித்தனம் என்பது, மற்றவர்களின் அறிவையும் செயலையும் மறைப்பதற்காகப் பயன்படுத்து வதாக அமைதல் ஒரு துரோகமான எண்ணமாகும்.

இந்த எண்ணமே நாளடைவில் அவரை விட்டேகாத துரோகக் குணமாகிவிடும். இன்று பல திறமைசாலிகளும், தொண்டர்களும் பலரது பார்வைக்குள் தெரியாமல்



RangaRakes Tamilnavarasam.com

மறைந்து கிடக்கின்றார்கள். யாரிடமாவது எடுத்துக் கொண்டே யிருப்பவர்கள் மற்றவன் புகழை, கீர்த்தியை அவருக்குச் சேரவேண்டிய அனைத்தையுமே மறைத்து விடப் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றார்கள்.

கொடுப்பவன் கொடுத்துக் கொண்டேயிருக்க எடுப்பவன் எடுத்துக் கொண்டே நாட்டை ஒட்டையாக்கிக் கொண்டு இருப்பதை சட்டம் ஒட்ட வெட்டியறுக்காமல் இருக்கக்கூடாது.

இன்று சனங்கள் பலர் தமக்குத்தாமே அறியாமை, தெரியாமை என்கின்ற தடைகளுக்குள் தாமே உட்பட்டுப் போகின்றமையினாலேயே தவறுகள் எல்லாமே, அனுமதிக் கப்பட்ட ஒன்றாகிவிட்டது. நற்கருமங்களால் தான், ஒரு மனிதன் தன்னை உலகிற்கு அடையாளப்படுத்த முடியும். பலவீனமான தந்திரோபாயங்களால் ஒருவர்க்கு அவமானமும், அபகீர்த்தியுமே உண்டாகிவிடும்.

நல்லன செய்தோர் நலிவடைவதுமில்லை. வழங்கியவன், நெளிந்து, சுருங்கி, ஒடுங்கிக் கிடந்தது மில்லை. ஈகை செய்தவன் சதா தோகை விரித்தாடும் மயிலின் களிப்புக்குள்ளாகின்றான். உறவுகளைப் பெருக்கிக் கொள்கின்றான். புதிதான வருமானங்களைப் பெற்றுக் கொள்ள, இறைவனின் பெரும் கருணைகளை பெறுபவ னுமாகின்றான்.





ஒருவரை அடிமை கொள்ளும் நோக்குடன், செய்யப் படும் உதவிகளைக் "கொடை" என்று சொல்ல முடியாது. இந்த வழிமுறைகள் உதவி பெறுபவர்களை வளைத்துப் படிக்கும், "வலை" என்று தான் இந்த உத்திகளைச் சொல்ல முடியும். இந்தக் குறுக்கு வழியைத் தந்திரமாகச் செய்பவர்கள் தமக்குரிய பயன்களைப் பெற்றுக் கொண்டதும் எந்தவித இரக்கமும் இன்றி இவர்களைக் கழற்றிக் கொள் வார்கள். மேலும் தாங்கள் ஏற்கனவே வழங்கியவற்றையும் பிடுங்கி இத்தகைய ஏமாளிகளை நடுத் தெருவிற்கும் கொண்டுவந்து விடுவார்கள்.

மேலும் சிலர் எவர்களிடத்தில் பதவி, பொருள் பெற்று முன்னேறினார்களோ கொடுத்தவர் மீதே நாளடைவில் பாய்ந்து அவர்களைச் செயலிழக்கச் செய்து விடுவார்கள். பொதுவாக அரசியலில், வியாபாரத்துறையில் தான் இந்த அநாகரிகம் தலை விரித்தாடுகின்றது. யாராவதுசெய்த உதவிக்குப் பிரதியுபகாரம் செய்யாது விட்டாலும் பரவாயில்லை. செய் நன்றி மறப்பது போல் துரோகம் வேறு ஏது? கூசாமல் கை நீட்டுபவர்களில் பலருக்கும் மற்றவனை மடக்கி அவர்களை ஒடுக்குதற்கு எவ்விதமான அச்சப்படு தலுக்கும் உட்படமாட்டார்கள் அவர்கள் வந்த வழியே அநா கரிகமானதால் தனக்கு மேலான ஒரு சக்தி புறப்படுவதை இத்தகையோர் ஜீரணிக்கவே மாட்டார்கள்.

மனித உணர்வுகளின் மென்மையை, அவைகளின் எதிர்பார்ப்புகள்,வெளிப்பாடுகள் பற்றி இம்மியளவும்



RangaRakes Tamilnavarasam.com

கவலைப்படாதவர்கள் மற்றவனுக்கு வேண்டிய உதவிகளை நல்க முனையாமல் இருப்பது ஒன்றும் பெரிய விஷயமாய் அவர்களுக்கு இருக்காது. "உனது வீட்டிற்கு நான் வந்தால், எனக்கு என்ன கொடுப்பாய், எனது வீட்டிற்கு நீ வந்தால் எதைக் கொண்டு வருவாய்" என்கின்ற நோக்கத்துடன் இருப்பவர்களுக்குக் கொடை வழங்கும் மனம் நித்திய தடையாகவேயிருக்கும்.

எமது நாட்டை நோக்கி இந்த முழு உலகை நோக்கிய எண்ணம் எதுவாக இருக்கவேண்டும்? "ஹே.... உலகமே, நான் உன்னிடம் எவ்வளவோ, எடுத்துவிட்டேன், இப்போது எதையெல்லாம் எடுக்க முடிகின்றதோ, அவைகளை நான் எடுத்துக் கொண்டேயிருக்கின்றேன். உனக்கு நான் என்ன வெல்லாம் செய்ய வேண்டி உள்ளேன்?

என்னிடம் வருகின்ற அனைத்து ஜீவன்களுக்கும் என்னாலான உதவிகளை பணிகளைச்செய்ய வேண்டியவ னாவேன், செய்தும் முடிப்பேன்". "அனைத்து இயற்கை வளங்களையும், பாதுகாப்பேன், நீ எனக்குத் தந்தவற்றின் ஒரு சிறு துளியையேனும் உன் படைப்பால் உயிர்த்த உயிர்களுக்கும் வழங்குவேன். இது எனது கடமையும், இறைவன் இட்ட கட்டளையுமாக ஏற்பேன்." கொடுப்பதும், ஏற்பதும் பின்னர் அனைவர்க்குமாகப் பகிர்வதுமாகத் தூய்மையான சிந்தனையுடன் செய்துவரின் இந்த உலகில் துன்பம், துயரேது? அன்பு எங்குமே, பொங்கி வழிந்து வையகம் பொலிந்து துலங்குமன்றோ!





கொடுத்துக் கொண்டெயிருப்பவனின் மனம் பக்குவப் படுகின்றது. இவனுக்கு இழப்புக்கள் பற்றிய துயர் இருப்பதில்லை. தான் காணும் மாந்தர்கள் எல்லோருமே, தனக்குரியவர் என எண்ணுபவனுக்கு தனக்குரிய செல்வம், தனக்குரிய பொருள் என்கின்ற தனி உடமை, சுயநலம் மட்டும் மனதில் தோன்றாது விடுமல்லவா?

மேலும், இல்லாத ஒருவர் ஒருவரிடம் பணம் பொருள் பெறுதல் என்பது தவறு என்று சொல்ல முடியுமா? ஆனால் இதுவே ஒரு வழி என எண்ணுதலும் தங்கள் வாழ்க்கை க்கான உழைக்கும் முயற்சியை இழக்குமாற் போல் நடப் பதும்தான் தவறானதாகும்.

கொடுப்பவரைக் கெடுப்பவர் உருப்பட்டதேயில்லை. யாராவது ஒரு ஏழை தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒருவரைச் சென்று உதவி கேட்கும் போது அவருக்குப் பக்கத்தில் இருப்பவர் எதுவித சம்பந்தமும் இன்றி "என்ன ஐயா... உதவி செய்வது, இவர்கள் எல்லாம் உழைத்துப் பிழைத்தால், என்ன" என்று இலவசமாகப் புத்திமதி கூறவும், இதனால் அந்த ஏழைக்கு உதவி கிட்டாமல் போகச் செய்வதில் இத்தகையோர் என்ன லாபத்தினைக் கண்டு விட்டார்கள்? சமூக சேவை செய்யப் போகின்றவர்களைச் சிலர் தேவையற்ற கதைகளைச் சொல்லி செய்ய விரும்பும் பணிகளையே செய்யாமல் செய்வதுமுண்டு.

"இவர்கள் எல்லாம், வேலை வெட்டியில்லாதவர்கள், என்ன சமூகசேவை... என்னத்தைக் கண்டுவிட்டார்கள்?



RangaRakes

Tamilnavarasam.com

என்று கூறி நல்ல காரியங்களை நாசமாக்க முனைபவர்கள் இந்தப் பூமியின் கீழ்த்தரமான தோஷங்கள்!

உலகின் மிகவும், உன்னதமான கொடைகளில், "அன்னம் பாலித்தல்" என்கின்ற உணவளித்தலே முதன்மையானது ஆகும். பசித்தோர்க்கு உணவளித்தலே பரமனுக்கும், விருப்பமான அறவழியுமாகும். பசியால் வருந்துதலே பிணி போல் என்பதால் "பசிப்பிணி" என்கின்ற சொற்பதம் உருவானது.

எந்த உயிர்களுமே தங்கள் இயக்கத்தினை உருவாக்குதலுக்கு, உணவு, நீர் காற்று என்பதே ஆதார மானவையாகும். இவைகளைப் பெறுவது உயிர்களின் உரிமையும் ஆகும். ஆடம்பர வாழ்விற்காக எவர்க்காவது உதவு தலைவிட, எவர்க்கு மிகவும் அவசியமான தேவை எது என அறிதலே நன்று. எங்களால் வழங்கப்படும், எந்த கொடையும் அன்புடன் கொடுப்பதாக இருத்தல் வேண்டும். பிறர் அறியும் வண்ணம், பிரபல்ய மடையும் நோக்கத்துடன் கொடுக்கின்றவைகள் மனதார விரும்பிச் செய்யும் கருமம் அல்லவேயல்ல!

எங்கள் பணிகளால் ஒருவரைத் திருப்தியடையச் செய்வது போல் ஒரு நிறைந்த திருப்தி நிலை வேறில்லை. பூரணமான மனநிலையில் வழங்கும் இயல்பே ஒரு "தவம்" தான்.

இரந்து கையேந்தாத நிலையும், எவ்வுயிர்க்கும் இல்லையென்று சொல்லாது கொடை வழங்கும் மனமும்,





பொருள் வழங்கும் திறனும், இருந்தால் அதுவே ஒப்பற்ற மானுடனாக, நாம் பிறந்ததின் முழுமையான பயனு மாகும். எமது உள்ளத்தினைப் பண்படுத்தினாலே போதும் கருணையுடன் எல்லா உயிர்க்கும் இரங்கி, நிறைவு கண்ட "ஆன்மா" ஆகிவிடுவோம்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
11.05.2008



RangaRakes Tamilnavarasam.com



# தெளிவு -II

என்றும் மாறாத உண்மை நிலை "தெளிவு" ஆகும். பரந்துபட்ட உலகில் எம்மால். எல்லாவற்றையும் படித்துத் தெளிந்து கொள்ள முடியாதுள்ளது. சாதார விஷயங் களிலேயே குழம்பித் தவிக்கும் நாம், எல்லையற்ற உலக தாத்பரியங்களைக் காண்பது எப்போது? உண்மையான. மன இயல்புடன் இருப்பவன். அகிலத்தையே தன்னுள் அடக்கியவனாகின்றான். களங்கமற்ற, நிர்ச் சிந்தனையுடன் வாழும் முறை இலகுவானதன்று. ஆயினும், ஆன்மீகம், பொது நலன்களில் எம்மை ஈடுபடுத்தினால், மனம் சஞ்சலம் நீங்கி தெளிவு நோக்கிய பாதையில் அவை இட்டுச் செல்லும். நெஞ்சத்தில் நெளிவு இன்றேல் தெளிவு தானாய் உருவாகும்.

" தெளிவு" என்பது, என்றும் மாறாத உண்மை நிலையாகும். ஏதோ ஒரு விடயத்திலாயினும் நாம் முழுமையான தெளிவு அடைந்து விட்டோமா? என்பது கூட ஒரு கேள்விக்குரிய விடயமாகும்.





ஏனெனில், இந்தப் பரந்துபட்ட பூமியில் சொல்லவொண்ணா விடயங்கள் எல்லையற்று விரிந்து பல உண்மைகளைக் கொண்டிருக்கின்றது. நாம் படிப்பதற்கும் தெளிவதற்கும் ஒரு குறிப்பிட்டவரையறை ஏது? இதற்காக நாம் தொடர்ந்தும் எமது அறிவிற்கு வேலை கொடுக்க வேண்டியவராகவுள்ளோம்.

அறிவு பெறுதல் ஒரு துன்பகரமான சுமையும் அல்ல. கல்வி கற்பதில் ஐயம் திரிபுஅற தெளிவதே சிறப்பு.

சாதாரண விஷயங்களில் கூட நாம் குழம்பிப் போய் விடுவது கூட சகஜமாக இருக்கின்றது. எனினும் உண்மை நிலை என்றுமே மாறாது இருப்பதனால் நாம் என்றுமே முரண்பாடான கருத்துக்களுக்காக மனம் பேதலிக்க வேண்டிய அவசியமே இல்லை. மனித இயல்கூட அடிக்கடி மாறிவிடும் நிலையில் உள்ளதால் தனக்கு வேண்டிய கருத்துக்களை மட்டும் ஏற்க விழைகின்றது.

ஒரு உண்மையான கருத்து என்பது, அதன் வடிவம் எப்போதுமே மாறுபடாது. ஆயினும், அதற்குரிய விளக்கங்கள், பலவாறாகத் தெரிவிக்கப்படுவதனால் இந்த மனித தேடல்கள், ஆய்வுகள், அறிவு முதிர்ச்சியினால் ஏற்படுவதனால் தேவையான நல்ல விளக்கங்களை, நாம் அறிந்தே இருப்பது ஆரோக்கியமானதேயாம்.

இந்த உலகில் நாம் தெரிந்து கொள்வதற்கு ஏராள



RangaRakes
Tamilnavarasam.com

மான விஷயங்கள் இருக்கின்றன. அவைகளை நாம் ஒவ்வொன்றாகக் கணக்கீடு செய்வதற்கு எமக்கு ஆயுள் போதாது என்பதை நாம் அறிவோம்.

இருப்பினும், நாம் எமக்கு அத்தியாவசியமாகத் தேவையான விஷயங்களை நாம் தெரிந்து கொள்ளவேண்டு மல்லவா? மிகவும் தெரிந்து, உணர்ந்து கொள்ளவேண்டிய கருமத்தைத் தெரிந்து கொள்ளாமல் அது மிகவும் சிக்கலானது என ஒதுங்கி இருப்பதை விட அதனைத் தெரிந்து கொள்ளச் சிறிதளவேனும் முயலாமல் இருப்பதை விட சுத்த சோம்பேறித்தனம் வேறென்ன இருக்கின்றது? எதனையுமே முயற்சி செய்யாமல் முடங்குவது கூட இயல்பான சின்ன விஷயங்களையும் செய்துமுடிக்காத நிலைக்குட்படுத்திவிடும். ஒதுங்கு பவர்களைப் பிரச்சனை கள் துரத்துகின்றன.

ஆன்மீகமும், விஞ்ஞானமும் உலக ஷேமத்தின் பொருட்டே எம்மை வழிநடாத்துகின்றது. அறிவின் மேலாம் ஞானமார்க்கம், ஆன்மாவை ஒளியூட்டுவதற்காக, ஞானிகள், யோகிகள் எமக்கு உப தேசம் செய்தார்கள். இவர்கள் சொன்ன சீரிய மார்க்கங்கள் எங்கள் மனம் ஊடாக தெளிவு நிலையை நோக்கியதாக அமைந்தன.

அறிவுடன் இணைந்ததான விஞ்ஞானம் என்பது, மனிதனின் அன்றாட வாழ்வை மிக இலகுவானதாக்கி, அதுவே எம்முடன் இரண்டறக் கலந்தேவிட்டது. விஞ்ஞானத்





தின் தேடல்கள் ஓயாதவரை இதன் முன்னேற்றங்கள் ஓய்ந்து விடப்போவதுமில்லை.

இதேபோல்,ஆன்ம விழிப்பு மூலம் இம்மைக்கும்,மறு மைக்குமான விமோசனத்திற்கான வழிகளை ஞானிகள், தமது உபதேசங்கள் மூலமும் தாங்கள் வாழ்ந்த வாழ்வு மூலமும் எமக்குக் காட்டியருளினார்கள். ஞானிகளின் தெளிந்துபட்ட ஞானத்தினால் எழுந்த வார்த்தைகளின் ஆழமும், அதிர்வலைகளும் இன்னமும் இந்த அவனியைச் சுற்றிய வண்ணமாய் எங்களை ஆகர்ஷித்தபடி எம்மை என்றுமே வாழ்வித்துக் கொண்டிருப்பது மறக்க இயலாத பேருண்மையாகும்.

மேலும் எமது அறிவுக்கும் மேலான ஞானநிலை என்பது சாமான்ய மாந்தருக்கு இலகுவில் வாய்ப்பது மில்லை. சிரஞ்சீவித் தன்மையுடன் நிரந்தரமான உண்மை கள் இதுதான் என்று தீர்க்கதரிசிகள் சொன்னதன் வண்ணமாய்தான் இந்த உலகம் இயங்கியும் வருகின்றது. உலக ஆசாபாசங்கள் மானுடர்களுக்கான துன்பங்கள பற்றியும் அதிலிருந்து “விடுகை” பெறுதல்பற்றிய தெளிந்த சிந்தனைகளை நாம் ஏட்டளவில்தான் படிக்கின்றோம் மனதினுள் நிறுத்தி நாம் உணர்ந்தால் இன்று இந்த உலகம், என்றுமே நிரந்தர அமைதி சமாதானத்தினுள் சஞ்சாரம் செய்யுமன்றோ! மேலான ஞானத்தின்பால் பெற்ற தெளிவின் மூலமான ஞானிகளின் வழங்கல்களை நாம் பெறுவதே வாழ்வின் கிடைத்தற்கரிய செல்வமும்



RangaRakes Tamilnavarasam.com

ஆகும் என்பதில் ஏது ஐயம் அன்பர்களே!

நாம் எவ்வித விளக்கமும் இன்றிச் செய்யப்படும் சிறிய கருமங்கள் கூடப் பூரணமின்றி எங்களைச் சிலவேளை அலைக் கழித்துவிடும்.செய்காரியங்களில் தெளிவு ஏற்படின் அவை சுலபமாக முடிவடைவதுடன் மேலதிகமான கருமங்களை நாங்கள் செய்து கொள்வதற்கான வழிகளும் புலப்பட ஆரம்பிக்கும். தெளிவற்ற செயல்களால் காலவிரயம்,மனக்குழப்பம் கோபம், தேக அசௌகரியங்கள் உண்டாவது மட்டுமல்ல, சிலசமயம் எங்கள் மீதே எங்களுக்கு வெறுப்பேற்பட்டுத் தாழ்வுச் சிக்கல்களுக்குள் எம்மை உள்நிறுத்திவிடும். உணர்க!

இன்று பெரும்பாலான அலுவலகங்களைப் பாருங்கள். அங்குள்ள பல ஊழியர்களுக்குத் தங்கள் கடமை,பொறுப்புக்கள் பற்றிய விளக்கத்தில் தெளிவற்ற வர்களாக இருக்கின்றார்கள். தங்களிடம் வருகின்ற மக்களுக்குச் செய்ய வேண்டிய ஊழியம் பற்றி எதுவுமே தெரியாமல் இருப்பதனால், மக்கள் மிகவும் சிரமப்பட்டுப் போகின்றார்கள். சில நிறுவனங்களில் உயர் அதிகாரிகளே மெத்தப் படித்திருந்தும் செயல்முறைகளில் தெளிவற்றி ருப்பதும் கண்கூடு. இந்தக் குறைபாட்டினை பலர் ஒத்துக்கொள்வதுமில்லை.

அலுவலகங்களுக்குப் பொதுமக்கள் எவ்வளவு சிரமத்துடன் சகல ஆதாரங்கள், ஆவணங்களை எடுத்துக் கொண்டு வந்தாலும் கூட தேவையற்ற விளக்கங்களையும்,





சட்டப்பிரச்சனைகள், அது, இதுவென்று செய்ய வேண்டிய காரியங்களை இழுத்தடிக்கின்றார்கள். தகுந்த வழி காட்டல் கள் பயிற்சிகள் உரியமுறையில் வழங்கப்பட்டால் இந்தத் தெளிவற்ற போக்கு விலகிப் பொதுமக்களுக்கான சேவைக ளும் உரியமுறையில் கிடைத்து விடுமன்றோ!

உலகம் எவ்வளவோ முன்னேறிவிட்டபோதும், தேவையான தகவல்களை அறிய பலவசதிகளைப் பெற்றி ருந்தும் கூட வாசிப்புப் பழக்கங்களுக்கான முயற்சிகளையும், இணையதள வசதிகளையும் பலரும் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதுடன், இதனால் என்ன பெரிய லாபம் வந்து விடப்போகின்றது எனக் கருதுவோரும் இருக்கின்றார்கள். இளையவர்கள் வாசிப்பை நேசிக்க வேண்டும்.

நூல்கள், சஞ்சிகைகளை வாசிக்காமல் பரந்துபட்ட அறிவை எப்படி வளர்க்க முடியும்? அன்றாட உலக விவகார ங்களை அறிய ஆவல் இல்லாமல் இருப்பவர்களில் பலரும் தேவையற்ற கீழ்த் தரமான களிப்பூட்டும் சமாச்சாரங்களில் காலத்தையும், காசையும், விரயமாக்க ஆர்வமுடன் இருந்தால் எங்ஙனம் உலகத்தின் வேகமான ஓட்டத்துடன் இணைந்து ஓடி வெற்றிகொள்ள முடியும்?

எல்லா மதங்களிடையேயும் கிரியை, வழியாடுகள் இருக்கின்றன. இவைகள் எதற்காக மேற் கொள்ளப் படுகின்றன என்பதை இளையசமூகம் உணரல்வேண்டும். "மத நம்பிக்கைகள்" என்பது, எங்கள் வாழ்க்கையைப் பண்



RangaRakes
Tamilnavarasam.com

படுத்துதலுக்காகவே, பாரம்பரிய வழிமுறைகளால் பேணப்பட்டு மனதுக்குள் ஆழமாகப் பதிந்துவிட்டதொன்றாகும்.

மத அனுட்டானங்கள் கிரிகைகள் போன்றவை பற்றிய விளக்கங்கள் தெளிவுடன் அறிவுறுத்தப்பட வேண்டியதாகும். எங்கள் தேக ஆரோக்கியம், என்பதை முன் நிறுத்திச் செய்யப்படும், கிரியைகளை அனுட்டானங்களை இளம்பராயத்தினர் வேடிக்கையுடன் பார்க்கின்றார்கள். வணங்கும் முறைகள், இறைவனை நினைத்து மௌனமாகத் தியானித்தல், எல்லாமே தகுந்த காரணங்களுக்காக ஏற்பட்டது என்பதைச் சரிவரப் தெரிந்தாலே போதும், ஒரு கட்டுப்பாடான புலனடக்கத்துடன் வாழ்கின்ற வாழ்வியல் நெறிமுறைகளை நாம் புரிந்தவர்களாகி விடுவோம்.

ஒவ்வொருவருமே தாம் சார்ந்த மத நம்பிக்கைகளுக்கு உரித்தானவர்களாகவும், அவை சொல்லிய வண்ணம் ஆழமான சிந்தனைகள், போதனைகளை கிரகிக்க முனைபவர்களாகவும் இருந்தால் எந்த ஒரு உயிர்களுக்கும் தீங்கு விளைவிக்க எண்ணாத இயல்பினராய் அன்பான உலகைச் சிருஷ்டிக்கும் காரணகர்த்தராக உருமாறிவிடுவர் அன்றோ!

எளிமையும், இதய சுத்தியும் எம்மைத் தெளிவு நிலைக்கு இட்டுச் செல்கின்றது. உள்ளத்தின் நிறைவு என்பதே, தெளிவுடன் கூடிய பரிசுத்த உணர்வுதான். கோபம், காழ்ப்பு, பொறாமை, வஞ்சகம், பொய்மை என்பன





அறவேயற்ற பேரின்ப நிலைதான் இது. உலக யதார்த்தத்தை ஏற்றுக்கொள்வதும், அனுசரித்தும் போதலும் அன்பினூடாக, எவரையும் வசியமாக்குவதும், தெளிந்த சிந்தையுடை யோர்க்கு இயல்பாகவே இணைந்து கொண்டு விடும்.

இருப்பதை வழங்குவதும், இருக்கின்றவைகள் "போதும்" என்று திருப்தி கொள்பவர்களும் மிகப்பெரிய கொடையாளியாகி விடுகின்றனர். மனம் என்பது ஒரு பெரும் அகண்டட் பெருவெளியாகும். இங்கு சகல உயிர்களையும் நாம் நேசிக்கும்போது, அவை எம்முள் இணைந்து கொள்கின்றது. மனவாசலை மூடி விட்டால் அதன் விஸ்தீரணம் சட்டென்று குறைந்து அது இல்லாதொழிகின்றது. உள்ளத்தின் நிறைவு என்று சொல்கின்றோம். அன்புடன் நாம் வாழ்கின்ற போதே, மனித இதய சங்கமம் இங்கு குடி புகுந்து கொள்கின்றது. தெளிந்த உணர்வுகளும், நீடித்த களிப்பு நிலையும் உருவாகும். எங்கள் உடல் இருப்பதற்குத் தான் வீடும், நிலமும் தேவைப்படுகின்றது. சந்தோஷங்களை உருவாக்கும் எங்கள் "நெஞ்சச்சிறுகூடு" இறைவனால் கொடுக்கப்பட்ட மாபெரும் சொர்க்கத்து மாளிகையுமாகும்.

அவா, ஆசை, ஆற்றாமை, பொறாமை போன்றவை, எக்கணமும் எம்மைத் தெளிவற்ற நிலைக்குட்படுத்துவதால் நிம்மதிக்கான புதியபாதையினைத் தேடவேண்டிய கட்டாயம் எமக்கிருக்கின்றது. மௌனமான சிந்தனைகள், பிரார்த்தனை, வழிபாடுகள் எங்களை நாம் விளங்கிக் கொள்ள வழிசமைக்கின்றன.



RangaRakes Tamilnavarasam.com

இயக்கமற்ற வாழ்க்கை சலிப்பையேற்படுத்துகின்றது. மௌனமாக இருப்பவர்கள் சுறுசுறுப்பான நிலையில் வாழ முடியாதவர்கள் என்றும் கருதிவிட முடியாது. தெளிந்த மனோநிலையில் அமைதியாக வாழ்பவர்கள்தான் செயற்த் திறன் மிக்கோராய் துலங்குவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். தூய்மையேற்றாத இதயத்தில் தெளிந்த உணர்வுகள் துளிர்விடாது.

உடலை மட்டுமே வளர்க்க எண்ணும் மனிதன், உள்ளத்தைச் செம்மைப்படுத்த எவ்வித செலவுகளும் செய்யவேண்டியதேயில்லை.

கரைகின்ற காலத்தை நாம் கணக்கெடுத்தால் சில சமயம் எமக்கு அச்சமேற்படுவது இயல்புதான். செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்க காலமோ கடுதென ஓடிக் கொண்டிருக்கின்றது.

ஓரிரு வினாடிப் பொழுதுகளை அமைதியாக இருந்து உங்களை, நீங்களே கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்வீர்களாக! சாதனை செய்வதற்கு நீண்ட காலங்கள் தேவை என்று பயப்பட வேண்டாம்.உங்களுக்கான சில நொடிகளை உங்கள் இதயத்திற்குச் சாந்தி ஏற்படுத்த அவகாசம் கொடுப்பீராக! இதனால் எல்லையற்ற கம்பீரம் உங்களுடன் இணைந்து பீறிட்டு எழுந்து, குறுகிய காலத்தில் நிறையச் சாதனைகள் புரிந்திட வழிபிறக்கும்.

நாங்கள் வாழ்க்கையில் எல்லாவற்றையும் பிறக்கும்





போதே கற்று முடித்து விட்டுப் பிறப்பதில்லை.வாழ்கின்ற காலப் பகுதியில் கற்கின்ற கல்வி, சுற்றாடல்களால் பெறுகின்ற அறிவு, அதனூடு பெறுகின்ற அனுபவங்கள் எல்லாம் சேர்ந்தே பல விஷயங்களைப் புரியவைக்கின்றன. இன்ப துன்பங்கள் சோதனைகள், வேதனை, தோல்விகள், விரக்தி எல்லாமே மனிதனுக்கு நல்ல அனுபவங்களைத் தான் கொடுக்கின்றன. இவைகளில் இருந்து விலகி நாம் ஓட முடியாது. ஆனால் நாம் இவைகளால் என்ன பெற்றோம், எதனைக் கைவிட வேண்டும் என்பதைப் புரிந்து தெளிய வேண்டுமல்லவா?

பிரசங்கங்கள், நாடகம், என்றெல்லாம் பொழுது போக்கும் நாம், அங்கு சொல்லப்படும் நல்ல செய்திகளை உள்வாங்குகின்றோமா? பெரியவர்கள் சொல்லும் நகைச் சுவைக் கதைகளைக் கேட்டுச் சிரிக்கின்றோம். அதனுள் பொதிந்துள்ள நல்ல தகவல்களை அகத்தினுள் செலுத்துகின்றோமா?

நிஜங்களை கிரகித்துப், பொய்மைகளைப் புறம்தள்ளி கௌரவமான மானுடப் பண்புகளை என்றும் போற்றி உள்ளத்தினைக், கலக்கியடியாமல் களங்கமற்ற தெளிவுடன் எம்மை நாம் நெறிப்படுத்தல் எமது தலையாய கடமை யாகும்.

மானுடராய் பிறந்தவர்கள் தான் மகானுபாவர்களாக மாறினார்கள். நாம் சாதாரணமான எளிமையான வாழ்வு



RangaRakes
Tamilnavarasam.com

வாழ்ந்தாலே போதும், உள்ளம் தெள்ளிய பளிங்காகத் தெளிந்து துலங்கிடும். இதற்குக் காசு, பணமோ, உடலை வருத்தி உடைக்க வேண்டிய தேவையுமல்ல நெஞ்சத்தில் நெளிவு இன்றேல் தெளிவு நிலை தானாய் உருவாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
27.04.2008







# பதவி

பதவியால் ஒருவர் பெருமை பெறுதலை விட அவரால் பதவி பெருமை பெறுதலே சிறப்பு பதவியால், மட்டும் ஒருவன் பெருமையடைய முடியாது. மக்கள் சேவை செய்ய பதவி ஒருகருவி, பதவி மூலம் ஒருவரை, சமூகத்தை அடக்கியாள முனைவது பேதமை. மக்களுக்குச் சேவை செய்ய வருபவர்கள் எஜமானர்கள் போல் நடப்பது பதவிக்கு இழுக்கு. தகுதியற்றவன் பெரும் பதவி, சமூகத்திற்குப் பிணி. இறைவன் கிடைத்தற்கரிய மனித பதவியை எமக்களித்துள்ளான். அதனை உரிய முறையில் பயன்படுத்தலே இறை ஆசியைப் பெறுவதற்கான உயரிய வழி.

"பதவி" என்பது, மக்களுக்கான சேவைகளைச் செய்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்காக ஏற்பட்டதேயாகும்.பதவியைப் பெறுதல் மூலம் ஒருவர் பெறுகின்ற கௌரவத்தைவிடப் பெற்றுக் கொண்ட பதவியைத் திறம்பட வகிப்பதால் அந்தப் பதவியே மிகுந்த பெருமைப்பட்டுக் கொள்வதே சிறப்பானதாகும். ஆன்மீக வள்ளல்களுக்கு இறையோன் "திருப்பாதம்" இணைதலே பெரும் பதவியாகக் கொள்ளப்படும்.



RangaRakes
Tamilnavarasam.com

தாம் வகிக்கின்ற பதவியின் பெயரைச்சொல்லிச் சொல்லியே சுயலாபம் தேடுவோரால் சமூகமும், நாடும் அடைகின்ற கஷ்ட நஷ்டங்கள் சொல்லில் அடங்காது. பதவி என்கின்ற வட்டத்துள் ஒளிந்து கொண்டிருக்கும் எத்தர்களை பல புத்திசாலிகள் கூடப் புரிந்துகொள்ளாமல் இருப்பதுதான் பொருத்தமற்ற பேதமை!

"பதவி" என்கின்ற மூன்றெழுத்தைப்பற்றிப் பல விதமான வியாக்கியானம் செய்வார்கள் "ப" என்கின்ற எழுத்துப் "பண்பு" என்பதையும் "த" என்பது தனித்துவ மானது என்றும், "வி" என்பது வினைத்திறன் மிக்க சேவை யினை நல்குதல் என்றும் சொல்லப்படலாம்.பதவிக்காக முயன்று எப்படியோ அதில் ஒட்டிக் கொண்டவர்களில் சிலர் பெற்ற பதவிக்கான கடமையினை நல்குவதில் மட்டும் கரிசனை காட்டாமல் இருப்பது பதவியினை அவமதிப் பதாகவே கருதப்படும்.

நான் இந்தப் பதவியிலே இருக்கின்றேன் என்று சொல்வதில் மட்டும் திருப்தி காணும் பிரகிருதிகள் மற்றவர் களை அடக்கி ஒடுக்குவதில் மட்டும் முனைப்பாக இருப் பதில் மட்டும் அருவருப்பான திருப்தியைக் கொண்டிருப் பார்கள்.

பதவிகள் பெற்றும் சேவை செய்யாதவர்களை உலகம் தூர எறிந்தேவிடும். என்னதான் மேலான உத்தி யோகம் பார்த்தாலும் கூட சமூக அந்தஸ்துப் பெறுவது அவர்களின் நடத்தை நெறியில்தான் தங்கியுள்ளது. பெரிய





அந்தஸ்தில் இருக்கும் உயரதிகாரிகள் தங்கள் வேலையில் இருந்து ஓய்வு பெற்றதும்தான் தமது உண்மையான அந்தஸ்து என்ன என்பதை உணர்ந்தும் கொள்கின்றார்கள்.

ஒரு அமைச்சில் உயர்ந்த அந்தஸ்தான பதவியில் இருந்தவர் ஓய்வு பெற்றுச் சிறிது காலத்தின் பின்னர் தான் பதவி வகித்த அலுவலகம் ஒன்றிற்குச் சென்றார். அங்கே பொதுமக்கள் பலர் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். அலுவலகப் பணியாளர்களுக்கு அவரை நன்கு தெரியும். எனவே, அவர் கம்பீரமான மிடுக்குடன் நேரே கரும பீடத்திற்குச் சென்றார். கருமபீட அலுவலர் அவரைக் கண்டு கொள்ளவில்லை. "நான், யார் தெரியுமா... இந்த அமைச்சிலேயே உயர் அதிகாரியாக இருந்தவர்"... என்றார். அதற்கு அந்த அலுவலரோ அவரைக் கேலியுடன் நோக்கி, சரி... சரி.. அதற்கு என்ன இப்போ... போய்.. வரிசையில் போய் நின்று கொள்ளும்" என்றாரே பார்க்கலாம்...!!

உண்மையில் அந்த முன்னாள் அதிகாரி, அன்பா கத் தமது ஊழியர்களை நடாத்தியிருந்தால், இந்த இழி நிலை அவருக்கு ஏற்பட்டிருக்காது.அவரைக் கண்ட மாத்தி ரத்தே வரவேற்று உபசரணைபுரிந்திருப்பார். பதவிவகித்த காலங்களில் ஆணவ முனைப்புடன் செயலாற்றுபவர்கள் பதவி இழந்ததும், பெட்டிப் பாம்பு போல் அடங்கும் பேர் வழிகள் எப்போது அனுபவம்மூலம் பெற்ற அடிகளால் திருந்துவார்களோ? நேர்மை, நாணயத்துடன் நடந்து கொண்ட பெரியவர்களை எந்த நிறுவனமும் கௌரவப் படுத்தாமல் விட்டதுமில்லை. சில திருந்தாத ஜனங்களைப் பற்றிய ஒரு சுவா ரஸ்யமான கதை இது.



RangaRakes

Tamilnavarasam.com

ஒரு அரசியல்வாதி இருந்தார்.அவர் செய்யாத தில்லு முல்லுகள் இல்லை. அவர் செய்த பாவங்களுக்காக மரண மடைந்ததும் அவரை நரகலோகத்திற்கு இழுத்துச் சென்றார்கள். அவருக்குப் பல கொடிய தண்டனைகள் விதிக்கப்பட்டன. ஆயினும் அவர் அதனைச்சிரமத்துடன் தாங்கிக்கொண்டார். அங்கு தண்டனை வழங்கிய யம தூதுவர்களுக்கோ ஒரே ஆச்சரியம், "என்னப்பா உனக்கு எவ்வளவு தண்டனை கொடுத்தாலும் அசையமாட்டேன் என்கின்றாயே அது எப்படி", என்று கேட்டார்கள். அதற்கு அவரோ,"நான் பதவியில் இருந்த காலத்தில் இதை விடப் பெரியதண்டனைகளைப் பொதுமக்களுக்கு வழங்கியிருக் கின்றேன்" என்று சர்வசாதாரணமாகச் சொன்னார்.

அவர் பேச்சைக் கேட்ட யம தூதுவர்கள், "சரி, சரி போகட்டும், நாங்கள் உனக்குத் தண்டனை வழங்கியே களைத்துப் போய் விட்டோம்.இனிமேல் நீயும் எங்களு டன் சேர்ந்து பாவாத்மாக்களுக்குத் தண்டனை வழங்கும் கருமங்களைச் செய்" என்றார்கள்.

வேலையை ஒப்புக் கொண்ட அவர் திடீர் என உணவு உட்கொள்ளாமல் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்து விட்டார். விடயம் யமதர்மனுக்குத் தெரியப்படுத்தப் பட்டதும், "ஏனப்பா என்ன விஷயம், உனக்கு உணவு உண்ணக் கொடுத்ததே பெரியவிஷயம், இதில்சத்தி யாக்கிரகம் வேறா எனக்கேட்க அவரும்,"பிரபோ.. எனக்கு எப்போதுமே ஏதாவது ஒரு பதவியில் ஒட்டிக்கொண்டே யிருக்க வேண்டும். அது என் இயல்பு, எனவே எனக்கு அங்கு





பணியாற்றும் உங்கள் தூதுவர்களின் தலைமைப் பொறுப்பை எனக்கு வழங்கி விடுங்கள். பிரச்சனை யேயில்லை. எனக்கு, அதுவே மிகவும் பிடித்தமான ஏற்கனவே செய்து அனுபவப்பட்ட வேலையுமாகும்". என்றார். நரகத்திற்குப் போனாலும் திருந்தவே மாட்டாத மனிதர், இவர்களைப் போற்றவர்கள் தான்!

பதவிவெறி, பதவிமோகம், என்றெல்லாம் நாம் சொல்கின்றோம். துஷ்டர்கள் மத்தியில், ஒரு தலைவனாக வருவதற்கும் பிரியப்படும் மாந்தர்களும் உளர். திரைப்பட ங்களில் அசுரத்தனமாக அடித்துக் கொலை செய்யும் கதாபாத்திரங்களைக் கூடச் சுவாரஸ்யமாக ரசிப்பவர்கள் இல்லையா? தவிர,கதாநாயகன் என்பவன் எந்தக் கொடூரங்களைச் செய்தாலும் அதனை ரசிக்க அவரது ரசிகர்கள் தயாராக இருப்பது என்ன கேவலமான ரசனை உணர்வு ஐயா?

அன்பு, கருணை, காருண்யம் இல்லாதவனுக்கு வழங்கப்படும் தலைமைப்பதவியோ அல்லது சாதாரண கருமங்களுக்கான வேலைகளுக்கோ அருகதையில்லாத இத்தகையவர்கள் தங்கள் மேலாதிக்க உணர்வினை மக்கள் மேல் செலுத்துவார்கள்.

நீதித்துறை, காவல்துறைசார் நீதிபதிகள் சட்ட வல்லுனர்கள், அதிகாரிகள் மக்களுக்கு எதிரான விருப்பிற்கு எதிராகப் புறப்பட்டவர்கள் அல்லர். சமூகத்துடன் இணைந்து வாழும் சட்ட விரோதக் கும்பல்களுக்கெதிரான நடவடிக்



RangaRakes
Tamilnavarasam.com

கைகளால் சில சமயம், சாதாரண அப்பாவிகள் கூட அல்லல்படும் நிலை உருவாகின்றது. மக்கள் நேயத்துடன் சில கருமங்களைச் செய்யும் போது பதவியில் உள்ள அதிகாரத்தினைச் செலுத்த வேண்டியுள்ளது.

"அதிகாரம்" என்பது கூட, தாம் வகிக்கும் பதவியினைச் சரிவரச் செய்ய குறித்த வரையறைக்குள் ஏற்படுத்தப்பட்ட ஒரு வழிமுறை தான்.அதிகாரங்கள் மக்களை வதைப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதற்காகவும் அல்ல. நெறிமுறைகளைப் பிறழவிடாது சரியான வழி நடத்தலுக்காகப் பிரயோகிக்கும் சீரிய வழிகாட்டலும், நடவடிக்கையுமாகும்.

சட்ட திட்டங்களை வழி நடாத்தும்போது கண்டிப்பும் அதிகாரமும் தேவைக்கு ஏற்ப கையாளப்படுதல் குறித்த பதவிக்கு ஏற்புடைய இயல்பேயாகும். சட்டவிரோதிகளைக் கடுமையாகத் தண்டிக்காதுவிட்டால் இந்த உலகம் நிம்மதியாகச் சீவித்துவிட முடியுமா?

இறைவன் இந்த உலகில் எல்லோருக்குமே ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு பதவியைக் கொடுத்த வண்ணமாயிருக்கின்றார். நாங்கள்தான் அதைக் கண்டு கொள்வதில்லை, முத்திரையிட்டுத் நியமனக் கடிதம் கொடுத்துக் கதிரையில் அமர்த்தினால் தான் "பதவி" என்பதும் அல்ல. நல்லவன், நாணயமானவன், பண்பாளன், பெரியோன் என்கின்ற பெயர்களைப் பெறுவதை விட என்ன பெரிய பதவி மனிதருக்கு வேண்டும் ஐயா?





குழந்தைச் செல்வத்தைப் பெற்ற அன்னை, "தாய்மை" என்கின்ற அதி உன்னத பதவியைப் பெற்றுக் கொள்கின்றாள். களங்கமற்ற அந்தக் குழந்தைக்குப் பலவிதமான நாம கரணங்கள் சூட்டப்படுகின்றன. இந்த அன்பான பெயர்கள் சொற்கள் எல்லாமே அதிக அன்புடையோரால் சூட்டி மகிழும் பட்டங்கள். இந்தப் பாசமிகு கனிவான சொற்களால் மகிழ்வடையும் குழந்தைக்குச் சூட்டும், கண்ணே, கனியமுதே.. செல்லமே... என்கின்ற பட்டங்கள் பல்கலைக் கழகப்பட்டங்களினால் கிடைக்கும் சந்தோஷங்களை விட மேலானவை.

பின்னர் குழந்தை பெரியவனாகி "இளைஞன்" என்கின்ற பெயரில் உலாவருகின்றான்.பொருத்தமான வேலை தேடுகின்றான்.அலுவலகத்தில்அவனுக்கு ஒரு பொறுப்பு வழங்கப்படுகின்றது. அதுவே அவனது பதவியுமாகின்றது. அலுவலகத்திலும் வெளியேயும் அவன் ஆற்றுகின்ற கருமத்திற்கான பதவியைச் சொல்லி அழைக்கின்றார்கள்.

ஒரு சாதாரண வேலையில் அமர்ந்து இருப்பவன் சும்மா இருப்பதில்லை. தனது நிலையை மேலே, மேலே உயர்த்த ஓடிக்கொண்டேயிருக்கின்றான். இத்தப் பதவிக்கான வேட்டை ஓயாமல் சென்று கொண்டேயிருக்கின்றது. சமூகத்தில் எந்த வேலைக்கு கௌரவம் அதிகமாக இருக்கின்றது? என்பதைத் தேடுவதிலேயே காலம் கழிகின்றது. சிலர் தமக்கு விருப்பமான பதவிக்கு எந்த விதமாகவும் தங்களை வளர்த்துக் கொள்ளமாட்டார்கள். ஆனால் தான் ஒரு பெரிய அதிகாரியாகச், சேவை ஏதும் செய்யாமலேயே



RangaRakes
Tamilnavarasam.com

அரசியல் தலைவராக வரவேண்டும் என்றும் பிரியப்படு பவர்கள் இருக்கின்றார்கள்.

தகுதிக்கு மீறிய ஆசைகளை வளர்ப்பதும், அதனால் ஏற்படும் மன உளைச்சலும் ஒருவர்க்குப் பாதகமான பின் விளைவுகளையே ஏற்படுத்தும். சில வேளைகளில் ஒருவருக் குத் தகுதிக்கு மீறிய பதவி கிடைத்துவிட்டால் அவருக்குப் பொருத்தமற்ற அந்த வேலையினால் பெருத்த அவமானப் பட வேண்டிய சூழ்நிலையும் உருவாகலாம். படிப்படியான வளர்ச்சிகள் தான் ஒருவரின் ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்ளும். தன்னால் இயலாத பதவியில் ஒட்டிக் கொள்ளு தலால் அடுத்தவன் கேலியாக நோக்குவது மட்டுமல்ல, தெரியாத பணிகளால், சில முறைகேடான சம்பவங்கள் அவருக்குத் தெரியாமலேயே நிகழ்ந்து விடலாம் அல்லவா? நல்ல அனுபவங்களை வளர்த்து ஆற்றல்களைப் பெருக்கிச் சிறந்த உயர் பதவிகளை ஏற்றுக்கொள்ளுதலே உத்தம மாகும்.

எல்லோருக்கும் உதவுகின்ற மனப்பான்மை உண்டா வதற்கும், உதவிகளை எந்தவிதமான எதிர்பார்ப்புகளு மின்றிச் செய்யும் நோக்கமுடையவர்களுக்கு அந்தஸ்தோ, பதவிகளோ இருந்தேயாக வேண்டுமென்கின்ற கட்டாய மில்லை.

நாம் பெறுகின்ற தொழில் மூலம் நியாயமாகக் கிடைக்கும் வசதி வாய்ப்புக்களால் வரக்கூடிய சாதகமான சூழ் நிலையைப்பயன் படுத்துதல் புத்திசாலி த்தனமானது.





குறுக்கு வழியில் தொழிலைப் பெற்ற அரசியல் வாதிகளில் சிலர் தாங்கள் இழந்த பணத்தை மீளப் பெறுவதற்காக அதே பாவச் செயல் மூலம் சாமான்ய மக்க ளிடம் உதவிகளைச் செய்வதாகச் சொல்லி, அன்பளிப்பு என்ற பெயரில் லஞ்சம் பெறுவதை நீங்கள் அறிவீர்கள்.தவிர, மிகவும் கண்ணியம் மிக்க கல்விக் கூடங்களில் உள்ள அதிபர்களே தங்கள் கௌரவமான தொழிலை எண்ணாம லேயே பொதுசனத்திடம் பணம் அறவிடுதல், இன்று சர்வ சாதாரணமான நடவடிக்கையாகிவிட்டது.

என்றுமே நல்ல இதயத்துடன் நல்லதையே எண்ணு பவர்கள், நேர்மையாக உழைப்பவர்கள், குறித்த லட்சியத் தையே நோக்கி விரைந்து ஓடிக் கொண்டே யிருப்பார்கள். எதிர்ப்படும் தடைகளைத் தகர்த்தெறிவதனால் அவர்கள் எண்ணிய எல்லாமே ஈடேறி விடுகின்றன.

உலகிற்கு ஒன்றுமே கொடுக்காது தங்களுக்கு எல்லாமே வேண்டும். நல்ல வேலை, நிலம், வீடு என்பதுடன் மேலதிகமான ஆசைகளுடன் சுயநலத்துடன் உலகத்திடம் கோருவது என்பது தான் பிச்சைக்காரத்தனமானதாகும். எதனையுமே வழங்காமல் கேட்பது “யாசகம்” என்பதைத் தவிர, வேறு ஏது அர்த்த முண்டு? உண்மையான முறையில் உழைத்துத் தொழில் தேடிக் கொண்டவர்களைப் பாருங்கள்! அவர்கள் வீண், பெருமை, பகட்டுகளுடன் தம்மைக் காட்டி நிற்பதில்லை. உயர் அந்தஸ்துடன், வாழ்ந்து கொண்டி ருக்கும் பலர் மிகவும் எளிமையாக வாழ்ந்து கொண்டிருப் பதைக் கண்டிருப்பீர்கள்.



RangaRakes Tamilnavarasam.com

"செய்யும் தொழிலே தெய்வம்" என்பார்கள் எமது தொழிலில் நாம் நேர்மையுடனும், கண்ணியத்துடனும் கண்டிப்புடனும், அதன் மீது பற்றுதலுடன் செபது வர வேண்டும். சில சமயம் நாம் எதிர்பார்த்ததைவிடப் பெற்ற தொழில் சிறியதாக இருக்கலாம். படித்த படிப்புக்த உகந்த வேலை கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவோர் அநேகர் இருக்கின்றார்கள். இருப்பினும், திறமையான ஆற்றலுடன் நாம் எமது காரியங்களையாற்றி வர்தால், நாம் எதிர்பார்த்ததற்கும் மேலான பெரும் பயனைப் பெற்றே தீருவோம். மிகவும் படித்துவிட்டுத் தனக்கு ஏற்றபதவி கிட்ட வில்லையே என, ஏங்கி ஸ்தம்பித்த நிலையில் நின்று உழலு வதைவிடக் கிடைத்த வேலையை ஏற்றுச், சிரத்தையுடன் முழுமையாகத் தம்மை அர்ப்பணித்துச் செபல்படுதலே கௌரவமானதாகும்.

இன்று, பலரும் சொல்கின்ற ஆதங்கம் இதுதான், என்னதான் பெரிய பதவி கிடைத்தாலும் கிடைக்கின்ற ஊதியம் குறைவாகவே இருக்கின்றது என்கிறார்கள். இதனால், பணம் புரட்டுகின்ற வழிதான் மேலானது, வெறும் பதவிகளுடன் ஒட்டிக் கொண்டிருப்பதால் ஒரு பிரயோச னமும் இல்லை எனக்கருதி, அரச, தனியார் நிறுவனங் களில் தொழில் தேடுவதை விடுத்துச் சுயதொழில் மூலம், தங்களை வளப்படுத்தப் பலரும் முனைகின்றார்கள். தற்போதைய விஞ்ஞான, தொழில் நுட்ப யுகத்தில் இவை யெல்லாமே சாத்தியப்படக் கூடிய ஒன்றுதான்.





மன உறுதியுடன் வாழ்பவர்கள் எதனையும் ஏற்பதற்கும், துணிவுடன் ஒரு செயலை முன்னெடுத்துச் செய்வதற்கும் தயங்கமாட்டார்கள். பதவியும், அதனால் கிட்டும் புகழும், மனிதர் விரும்புகின்றவொன்றேயாம். ஆயினும் எம்மை நாம் வளப்படுத்தியேயாக வேண்டும்.


நல்ல கல்விமானாக, கலைஞனாக, அரசியல் வாதியாக, ஆன்மீகவாதியாக, இலக்கியவாதியாக எனப் பலதரப்பட்ட விடயங்களில் ஈடுபட்டுப் புகழீட்டியவர்கள், மக்கள் மனதில் அழிக்க முடியாத நல்ல அடையாளத்தை உருவாக்கிக் கொள்கின்றார்கள். இந்த உன்னத நிலை கூட ஒரு பெரும் "பதவி" தான்.

நாம் எக் கருமங்களையும் எமக்காகவும், எங்களுடன் கூடிவாழுகின்ற நெஞ்சங்களுக்காகவும் செய்துவரின் அதன் மூலம் கிட்டுகின்ற "திருப்தி" என்பது எந்தப் பதவியிலும் கிட்டாத மேலான நிலை என்பதில் ஏது சந்தேகம்?

தினக்குரல்<br>ஞாயிறு மஞ்சரி<br>04.05.2008



RangaRakes
Tamilnavarasam.com



# நல்லன நல்கும் நம்பிக்கைகள்

> எண்ணங்களின் உறுதி மேவ நம்பிக்கை உருவாகும்.
> வண்ணமிகு குணங்களை உனதாக்கிக் கொண்டால்
> சந்தோஷ சாம்ராஜ்யம் சாத்தியமானதே!
> சிந்தையில் தெளிவும் சோர்விலா உழைப்புமே மேன்மை.

உறுதியான எண்ணத் தளத்திலிருந்து "நம்பிக்கைகள்" வேறுன்றி ஸ்திரமாகி விடுகின்றன. எனவே எண்ணும் எண்ணங்கள் யாவுமே நல்லனவாக அமையட்டும். அதுவே நிறைவேறும். எண்ணம் போல் வாழ்வு மறக்க வேண்டாம்!





நல்ல நம்பிக்கை உணர்வுகள் நற்காரியங்களாக மாறுவதால் ஏனையவர்களும் உங்கள் மீது நல்ல அபிப்ராயம் மிக்க மனிதராகி உங்களுடன் இணைந்து இயங்குவர்.

நம்பிக்கைகள் கூட ஒரு வித பற்றுதலாகவே அமைந்து விடுகின்றது. மதம் , மொழி, இனம் , நாடு எனப் பாகுபடுத்தப்பட்ட விஷயங்கள் மாந்தருடன் பின்னிப் பிணைந்துள்ளன. மனிதன் விலகிட முடியாத மிக இறுகிய கட்டினுள் அவை சங்கமித்துள்ளன.

எனினும் நம்பிக்கைகளுக்கும், பற்றுதல்களுக்கும் சில சிறிய வேறுபாடுகள் உண்டு. காலம் காலமாக எமது சமூகத்துடன் பின்னிப் பிணைந்துள்ள மதம்,மொழி, நாடு தொடர்பான இறுகிய பிணைப்புக்களை சாதாரண பற்றுதல்களுடன் ஒப்பீடு செய்ய முடியாது

எனினும் நாம் நாட்டுப் பற்று, இனப்பற்று, மொழிப் பற்று என்கின்றோம். சாதாரணமான பற்றுக்கள் விட்டுப் போகும். ஆனால் மதம் ,நாடு, இனம் தொடர்பான பிணைப்புகள் குருதி ஓடும் வரை தொடரும். அடுத்த பரம்பரையுடன் இணைந்து கொள்ளும்.

எனவே இவைகளின் அசையாத எண்ணங்களோடு ஜீவிதம் செய்யும் போது அவை இறுக்கமான நம்பிக்கையாகி விடுகின்றன.



RangaRakes Tamilnavarasam.com

எனவே நாம், எமது மொழி, இனம், கலாச்சாரங்களை பிறிதொரு மொழி, இனம், கலாச்சாரம் சார்ந்தவர்களால் தவறாக விமர்சனம் செய்தால் எம்மால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.

யாரோ எவரோ கண்டபடி உளறினால் அவர்கள் சார்ந்த இனத்திடம் வஞ்சகம், குரோதம் கொள்வதே மனித சுபாவம் ஆகி விட்டது. இந்த ஆரோக்கிய மற்ற மனவளம் குன்றிய நிலை தான் ஒன்றுபட்ட சமூகங்களைப் பிரித்துப் பந்தாடுகின்றது.

எவரது நல்ல நம்பிக்கைகளான நடத்தைகளை நாம் தேவையின்றி ஆராயக் கூடாது. நல்ல நண்பர்களை உருவாக்க வேண்டுமேயானால் அவரது தனித்துவமான நல்ல நம்பிக்கையினுள் நாம் பிரவேசித்து அவைகளை மாற்றி அமைக்க முயற்சி செய்வதாகாது.

ஒருவர் நேசிக்கும் மதக் கொள்கையினைத் தவறு எனச் சொல்ல நாம் யார்? எங்கள் இனம் சார்ந்து மட்டும் இந்த உலகு தங்கி இருக்கவில்லை. எல்லாமே பிணைந்து இயங்குவதே உலகம்.

எந்த மக்களின் நியாய பூர்வமான கருத்துக்கள் ஏற்புடையதாயின் ஏற்பதே சிறப்பு. தமக்கு என்ன தேவை என்பதே பலருக்குப் புரியாத நிலையில் அடுத்தவன் தேவைகளே அர்த்தமற்றது எனச் சொல்லலாமா?





எவரது நீதியான செயலுக்குப் புறம்பான ஆசைகளை எவருமே அனுமதிக்க முடியாது.

சமூக விரோதமான செயற்பாடுகளில் நம்பிக்கை வைப்பது ஒரு தற்கொலைக்கு சமமானது. அது மட்டுமல்ல, இவர்களால் ஏற்படும் விபத்துக்கள் கொடுஞ் செயலுக்கு ஆதரிப்பது, அவர் செய்யும் செயலைவிடக் கொடியது.

ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியான உன்னதமான கலாச்சார நெறிகள் உண்டு. ஆயினும் உலகம் முழுமைக்குமான கலாச்சாரமும் உண்டு அது நல்லன எல்லாவற்றையுமே, எவரிடமும் அறிந்து அவ்வண்ணம் ஒழுகுதலாகும்.

சிறந்தவைகளைப் பயில்வதே உன்னதமான உலக கலாச்சாரமாகும்.

எனவே சரியான, நியாயபூர்வமான வாழ்வு முறைகளின் மீதே நாம் கட்டுறுதியுடன் பெருநம்பிக்கை கொள்ள வேண்டும் இதற்கு மத,இன வேறுபாடுகள் என்பது இல்லவே இல்லை.

தன்னம்பிக்கை என்பது தனது செயல்களின் மீதான நம்பிக்கையாகும்.இது துணிவும் ஆளுமையுடன் சம்பந்தப்பட்ட தாகும். ஆனால் "நம்பிக்கை" என்பது மக்களின் பொதுமையான பண்பு.



RangaRakes

Tamilnavarasam.com

ஒருவர் தன்னை விஸ்திரப்படுத்தி ஆளுமைகளை வளர்த்துக் கொண்டால் தன் நம்பிக்கையும் கூடவே நற் செயல்களில் மட்டுமே கொண்டிணைந்தவர்களாக இயங்கி வரின் தேசம் இவர்களைத் தழுவிக்கொள்ளும்

துயரங்கள், புற தாக்கங்களால் ஒருவருக்கு தங்கள் மீது மட்டுமல்ல, சுற்றி இருப்பவர்கள் மீதும் வெறுப்பை உண்டு பண்ணலாம்.

"இந்த உலகில் எது ஐயா உண்மை? எல்லாமே பொய், எனக்கு எதிலுமே நம்பிக்கை கிடையவே கிடையாது. கடவுள், இந்த மனுஷர்கள் எல்லாமே எனக்குத் துரோகம் செய்கிறார்கள் நியாயங்களுக்கு இங்கு ஏது ஐயா காலம்" என மனம் வெதும்பும் மாந்தர்களின் பேச்சுக்களை நீங்கள் கேட்டிருக்கலாம்.

மாறுதல்களை ஏற்கமறுத்தால் எங்ஙனம் உண் மைகளைப் புரிந்து கொள்ள முடியும்? எமக்கு முரணாக நடந்தால் யதார்த்த நிகழ்வுகளைக் கரித்துக் கொட்டுவதால் பயன் இல்லை உயர்வு மிகு நம்பிக்கை களே வாழ்வை இனிமையாக்கும்.

உண்மையிலேயே நல்லோர் தமக்கு ஏற்பட்ட அவமானங்களைச் சந்திக்கும் போது மனம் மறுகி, உருகி அவதிப்படுதல் இயல்பே எனினும் இந்தத் துன்பம் தற்காலியமானது இவர்களைப் போன்றோர் மனம் பேதலித்தல் ஆகாது.





நல்லதே நிகழும் என நம்பிக்கைகளை மனதில் பொருத்துவதே சாலச் சிறந்தது. ஏற்புடைய சிறப்பான, நீதியானவர்களை மறுத்தல், ஒறுத்தல் வாழ்வில் நிகழப் போகும் வெற்றிகளைத் தாமாகவே குறைத்ததாக அல்லது அறுத்ததாக அமைந்து விடலாம்.

கற்றுக் கொண்ட சகலவைகளுமே நல் நம்பிக்கை யூட்டுவனவாக அமையட்டும். எமது புலன்கள் அதன் மீதேலயிக்கட்டும். நேரிய பார்வை உயரிய நோக்குள்ள நெஞ்சுறுதி இருந்தால் இறுதி வரை எமது வெற்றிகளை எவருமே தடுத்திடல் இயலுமோ?

தினகரன்
வார மலர்
24.07.2011



RangaRakes
Tamilnavarasam.com



## கொடை வழங்கல்

> கொடை வழங்குதலால் பெறும் லாபம் கோடி
> கடவுள் கொடுத்ததை ஏழைக்கும் வழங்கு!
> கல்வியை ,சரீர உழைப்பை, சிரிப்பை, பரிவை
> நல்லவை எதனையும் நல்குவோன் நெடிது உயர்வான்.

கொடை வழங்குதல் என்பது பணம் பொருளை மட்டும் எவருக்காகவும் கொடுப்பது அல்ல! கொடுத்தலை ஒரு வட்டத்தினுள் அடக்கி விட முடியாது.

தேவையறிந்து நல்க வேண்டும் என்பர். அதுவும் நல்ல நோக்கத்திற்காக வழங்குதல் அவசியம். வீம்புக்காக கொடை என்ற பெயரில் ஏதாவது கொடுப்பார்கள். கொடுத்த பின் சொல்லித் திரிவார்கள். கொடுத்ததைச் சொன்னால் தர்மம் சிரிக்கும்.





நீண்ட காலத்துக்குப் பின்னர் வெளி நாட்டில் இருந்து ஒருவர் தனது கிராமத்துப் பழைய நண்பரை வந்து சந்தித்தார். “உன்னைக் கண்டு எவ்வளவு வருடங் கலாச்சு. நீயும் நானும் சேர்ந்து மது அருந்தியும் கால ங்கள் பலவாகி விட்டன. நீ எனக்கு முன்னர் எவ்வளவு முறை இவைகளை வாங்கித் தந்திருப்பாய். அதற்கு நான் ஏதாவது செய்ய வேண்டுமல்லவா இந்தா...! பத்தாயிரம் ரூபாய், விரும்பியதைக் குடி” என்றவாறு காசைக் கொடுத்து, அவ்விடத்தை விட்டுக் கலைந்தார்.

ஏற்கனவே பெரும் குடிகார நண்பர்களுக்கு அவர் கொடுத்த வெகுமதி இது தான். இனியாவது குடியை விட்டு ஒழி! நல்ல வாழ்வை மேற்கொள், எனச் சொல்லி அதற் கான வழியைக் காட்டாமல் சென்று விட்டார். அவரை மோசமான வழிக்கே நட்பின் பெயரைச் சொல்லி வேறு திருப்திப்படுத்துகின்றார். இது ஒரு கொடையல்ல பாவத்திற்கே வழிகாட்டும் கொடிய கடை கெட்டவழி!

சந்தோஷங்களை சந்திக்க விரும்புபவர்கள் அது நல்ல வழியில் அமைந்ததா என எண்ண வேண்டும். நேர்மையான முறையில் வாழப் பிரியப்படுபவர்களுக்கு நித்ய இன்பம் கிட்டச் சில தடைகள் ஏற்பட்டாலும் அது விலகும். ஸ்திரமான களிப்பிற்குள் வாழ வழி கிட்டும்.

இன்று இலவசமாகப் பெற்ற வாழ்க்கை வசதிகளைப்



RangaRakes
Tamilnavarasam.com

பழுதாக்குபவர்கள் ஏராளம்! ஏராளம்! எனவே கொடை வழங்கும் வள்ளல்கள் அவை சேரும் இடங்க ளையும் நோக்க வேண்டும்.

இதனை உணர்ந்தே பல நிறுவனங்கள் ஏழைகள், அல்லது வசதி குறைந்தவர்களுக்கு பணம் வழங்காது அவர்கள் தொழில் செய்ய ஏதாவது கருவிகள் , உபகரண ங்களை வழங்குகின்றார்கள்.

வீடுகளை அமைக்க மூலப் பொருட்களை அரசு தொண்டு ஸ்தாபனங்கள் அளிக்கின்றன வெறுமனே காசைப் பெற்றுச் சும்மா இருக்காது உடல் உழைப்புடன் வழங்கும் பொருட்களைக் கொண்டு வாழ வழிகாணுதல் சிறப்பு அல்லவா?

எல்லோருமே சிரமப்பட்டுத் தான் உழைக்கின் றார்கள் யாரிடமாவது உதவி பெற்றவர்கள் சிலர் சொல்லும் கூற்று அருவருப்பானது.

"அவருக்கென்ன ஏராளமாக வைத்திருக்கிறார் கொடுத்தால் என்ன, குறைந்தா போய் விடுவார்" என்பார்கள் இன்னும் சிலர் சொல்வது இப்படி இருக்கும்.

"இவர் பெயருக்கும் புகழுக்கும் கொடுக்கிறார் செய்த பாவத்தைக் கரைக்கப் புண்ணியம் தேடும் வழி இது" என்பார்கள்.

இத்தகைய கிண்டல் கொச்சைப் பேச்சுக்களைச்





செவிமடுக்காமல் நல்லன செய்யும் உத்தமர்கள் பலரும் இருக்கின்றார்கள்.

தவறுகள் செய்பவர்கள் அதனை மறைக்கச் செய்யும் கொடைகள், இறைவனிடம் செல்ல செய்யும் தடைகள். திருந்திய ஒருவர் நடிக்க வேண்டிய அவசியம் இல்லை.

சமூகத்திற்கு எத்தகைய நற் சேவைகள் செய்தா லுமே அது பயனற்ற பழக்க வழக்கங்களாகி விடுகின்றன. கல்விக் கொடை என்பதே மிகவும் பிரதானமான உன்னத ஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமே இலவசமாக அனைத்து மாணவர் களுக்கும் கல்விச் சேவையை அளித்து வருகின்றது இருப்பினும் இன்று பல ஆசிரியர்கள் கல்வியைத் தனிப்பட்ட ரீதியில் பணம் பெற்று அளித்து வருகின்றனர். ஏழை மாணவர்கள் இவ்வாறு பணம் செலவழித்துக் கல்வியைப் பெற இயலாது

"ஆனால் எப்படியாவது எங்கள் பிள்ளைகளின் எதிர் கால நலன் கருதி வாயை, வயிற்றைக் கட்டி பிள்ளை களை பிரத்தியேக வகுப்புகளுக்கு மேலதிகமாகச் செலவு செய்து அனுப்புகின்றோம் " என வசதி குறைந்த பெற்றோர் சொல்லக் கேட்கும் போது பரிதாபமாக இருக்கின்றது.

இதே போலவே வைத்திய சேவை என்பது அரசாங்



RangaRakes
Tamilnavarasam.com

கத்தினால் மட்டுமே நடாத்தப்படுகின்றது. இன்று வைத்தியத் தொழில் பிரசித்த வாணிபத் தொழிலாகி விட்டது.

உயிர் காக்கும் சேவையினைப் பெற தனியார் வைத்தியசாலைக்குச் செல்ல சாமான்ய மக்கள்படும் சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல.

அரசாங்கம் செலவு செய்து சேவைகளை நல்கும் போது அதனை உணர்ந்து ஊழியர்கள் சேவை மனப்பான் மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

போக்கு வரத்து சேவை,சுகாதார சேவை என்று எல்லாமே அத்தியாவசிய தேவைகளாக இருப்பினும் அங்கு நிகழும் திடீரென நிகழும் பணிபுறக்கணிப்பு மக்கள் நலன் களையே மறுத்து ஒதுக்கும் நடத்தையல்லவா?

தன்னலம் பாராது கொடை வழங்கும் வள்ளல்கள் ஒரு புறம் இருக்க தங்களது கருமம் என்ன என்றே தெரியாமல் ஊதியம் பெற்றும் கடமைகளை செய்ய மறுக்கும் நபர்கள் மானுட நேயமற்றவர்களே!

மனம் வளர்ந்தால் வழங்கும் இயல்பு எளிதாய் மலரும். மானுடம் ஒன்றே எனும் நோக்கு பரிணமித்தால் ஒருவருக்கு ஏற்படும் வடு எல்லோர் இதயங்களிலும் பதியும் இதனால் துன்பம் துடைக்க அனைவரும் முன் வருவர்!

எல்லோருக்கும் “வலி” துன்பங்கள் வரலாம் அதன்





கொடிய வேதனையைப் புரிவதும், புரிந்து களைவதுமே பிறவியின் அர்த்தம் இருக்கின்றது.


அர்த்தம் இல்லாத வாழ்வு அலுப்புத் தட்டி விடும். கொடுப்பது இன்பம். உங்கள் வழங்களினால் பிறர் அடையும் திருப்தியோ நீங்கள் அனுபவிக்கும் பேரின்பமாகி விடும். உலோபித்தனத்தை உதறி எறிவதே இதயத்தைச் சுத்தமாக்க வல்லது. கொடை என்பது ஊதாரித்த னமானதும் அல்ல. தேவையறிந்து வழங்கும் தெய்வீகச் செயல். இதனைப் புரிந்திடுக !

தினகரன்
வார மலர்
31.07.2011



RangaRakes

Tamilnavarasam.com



# தாம்பத்தியம்

தாம்பத்தியம் சௌபாக்கியம் மெய்காதல் உறைவிடம்.
சம்பாத்தியம், இல்லற தர்மம் பேணினால் கிடைப்பதாம்.
நித்தியம், சத்தியம், போற்றிய தம்பதியர்க்கு
அத்தனை பேறுகளும் கூறாமல் வந்து சேரும்!
உத்தம இல்லறம் இதுவே பெரும்வரம்!

நல் நெறியுடனான தாம்பத்தியம் சௌபாக்கியம் என்றுமே மாறாத இயல்பினராய் கணவனும், மனைவியும் உள்ளத்தாலும், உடலாலும் இணைந்து வாழ்வாங்கு வாழ்வதே தாம்பத்திய உறவு ஆகும்.

வாழ்வாங்கு வாழ்தல் என்பது இல்லறத்தார்களுக்கு மட்டுமல்ல அனைத்து தரத்தினருக்குமான அற வாழ் வாகும்.





கணவன், மனைவியாக இல்லறத்தினை நடத்துவது அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவது மட்டுமல்ல, அதனூடாக அவர்கள் தமது பிள்ளைகள், உற்றார், உறவுகள் நண்பர்களுக்கான நற்பணிகளை மட்டுமே நோக்காது பரந்து பட்ட சமூகத்திற்காகவும் சேவைபுரிய வேண்டியவர்களாகின்றார்கள்.

எனவே இந்த உறுதி மிக்க செயல்களை ஆற்றத் தேவையான ஆளுமைகளைப் பெற அன்பான காதல் வாழ்வு தம்பதியினருக்கு அத்தியாவசியம் தேவையானது என்பதில் ஏது ஐயம்?

காதல் வாழ்வு என்பது இளமைக்கே உரிய அழகு என்பார்கள். ஆனால் கணவன், மனைவிக்கிடையே மாறாத காதல் என்பது முதுமையில் மெருகு ஏறும்.இளையோர்க்கு இது பாடமாகும். "அடடா இந்த வயதிலும் இத்தகைய பிணைப்பா..." என வியந்து நோக்கும் இளைஞர் இங்ஙனம் வாழ்பவர்களைக் கண்டு பொறாமை கொள்வதுமுண்டு

உடல் மீதான இச்சை நிச்சயமற்றது. வாலிபத்தின் மிடுக்கு வெளி அழகிற்கு இடமளிக்கின்றது. வாழ்வின் ஆழம் புரியாத பராயத்தில் "எப்படி ஒரே பெண்ணுடன் வாழ் நாள் பூராவும் வாழ முடியும்" எனச் சிலர் சொல்வதைக் கேட்டிருக்கின்றேன். இப்படிச் சொல்வது கூட ஒரு நாகரீக மானது என வீம்பாகவும்.சொல்லிக் கொள்பவர்கள் வெளி நாடுகளை இதற்கு உதாரணமாகவும் காட்டுகின்றார்கள்.



RangaRakes Tamilnavarasam.com

எல்லா நாட்டிலும் உள்ளவர்கள் எல்லோருமே கணவன், மனைவியின் புனிதமான உறவைப் புரியாதவர்களும் அல்லர். இந்த உறவு ஒரு பொழுதுபோக்கு அம்சம் இல்லவே இல்லை.

காலம் காலமாகவே எமது முன்னோர்கள் வாழ்வின் இறுக்கமான பிடிப்பினை உருவாக்க கணவன், மனைவி உறவின் புனிதம் பற்றித் தமது இலக்கியமூடாக போதனைகளைச் சொல்லியிருக்கின்றனர்.

மூடிய உடலுக்குள் உள்ளிருந்தவாறே சுற்றி சுற்றி ஓடிய வண்ணம் இந்த உடலை உயிருடன் இயக்குகின்றது "குருதி"

இதே போல சமூகக் கட்டமைப்பிற்குள் என்றும் விலகாது என்றும் இயங்கியபடி குடும்பத்திற்கும், உலகிற்குமாக உழைக்கின்றவர்கள் இல்லறத்தைச் செப்பமாகப் பேணும் கணவன் , மனைவி எனப்படுவோர்.

திருமண பந்தத்தினுள் இணைந்த ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் பிரியாதிருக்க வலுவான அன்பினைப் பகிர்ந்து கொள்ள வேண்டியவர்களாவர். உள்ளத்தால் இணைவதுடன் உடலாலும் இணைகின்றனர். தாம்பதியத்தில் உடல் சேர்க்கை அன்பை மேலும் வலுவாக்கின்றது. இது ஒரு அந்தரங்க ஆழ்ந்த உரிமையுடனான பரிமாற்றங்கள்.





"தனக்காக ஒருவன்" அல்லது "தனக்காக ஒருத்தி" எனும் எண்ணம் ஸ்திரப்படும் போது உடல் இன்பத்தை விட என்றும் இனிமை தரும் காதலே பெரிதென உணர்வார்கள்.

எக் காரணத்தைக் கொண்டும் தேவையற்ற வார்த்தையாடல்கள் மூலம் மனங்களைத் துளைபோடும் செயல்களில் இருவரும் ஈடுபடக் கூடாது.

எவர் பெரியவர் என்கின்ற வாதங்கள் தாம்பத்திய உறவைக் கெடுக்கும். நீண்ட கால இடைவெளியில் தேவையின்றிப் பிரிந்து வாழுதலும் கூடாது.

"ஊடல்" என்பது நீண்ட நேரத்தில் அமைதல் தகாது. பொய்க் கோபம் கொள்ளும் போது ஒருவனின் மனத்தைத் கெடுக்கும், நெரிடும் சொற்பதங்களை தமக்குள்ள உரிமை காரணமாக உளறி விடுகின்றனர்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தான் சார்ந்த குடும்பம், அவர்களின் உறவினர்கள், பிறந்த கிராமம், அல்லது நகரம் பற்றி அதீத ஈடுபாடுகள் உண்டு எவராவது தனது சொந்த ஊரைக் கேலி பேசினால் விட்டு விடுவார்களா?

எனவே சாதாரண சின்னச் சின்ன மனஸ்தாபங்களுக்கும் ஒருவர் புனிதமாக நேசிக்கும் எதனையுமே இழிவாகப் பேசுதல் ஏற்புடையதல்ல.



RangaRakes
Tamilnavarasam.com

பொது இடங்கள் வைபவங்களில் முதுமையுற்ற கணவர்,மனைவியர் ஒருவருக்கு ஒருவர் ஆதாரமாக இணைந்து வருவதைக் கண்டிருப்பீர்கள். திருமண நிறைவு விழாவினைகளிப்புடன் ஆண்டுதோறும் நடாத்துவது ஒரு இனிய நிகழ்ச்சியேயாகும்.

திருமண ஆண்டு நிறைவுகளை இருபத்து ஐந்து , ஐம்பது வருடங்கள் பூர்த்தி செய்யும் போது தான் தாம்பத்ய வாழ்வின் முழுமையை நாம் எம் கண்முன்னால் காணும் பாக்கியத்தைப் பெறுகின்றோம். இந்த பெருமைமிகு பெரியவர்களிடம் ஆசி பெறுதலேமேன்மை.

திருமணமாகி ஒரு சில ஆண்டுகளிலேயே மனம் திரிந்து மணமுறிவு பெறும் இளைய தலைமுறையினர் இவர்களை போன்றவர்களின் வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

வெறும் உடல் அழகை, பணம், பொருள் செல்வத்தை மட்டும் பெரிதென நோக்கி வாழ்வில் இணைவதும் பின்னர் தங்களுக்குள் உண்மையான அன்பு இன்மையால் விலகி மண வாழ்க்கையை இழக்க முனைவதும் இழிவு.

ஆரம்ப காலத்தில் மிகவும் அந்நியோன்யமாக வாழ்ந்து பின்னர் முதுமை வந்த பின்னர் மோதிக் கொள்வது பிறரை நகைக்க வைக்கும் செயல்.





எனினும், மனைவியின் பெருமையை முதுமையில் உணரும் ஆண்களே மிகுதி! இளமையில் தீய செயல்களில் தோய்ந்து புரண்டு நோய்கள் வந்த பின் மனைவியின் மடியில் விழும் பலரைக் கண்டிருக்கின்றோம்.

அது போல் அன்பான மனைவியின் ஆரோக்கியம் குன்ற, பெற்ற பிள்ளைகளும் கைவிட மனைவியைக் குழந்தை போல் போஷிக்கும் கணவன், மனைவி மீதான பிணைப்பின் பலத்தையும் பல சந்தர்ப்பங்களில் சந்தித்திருக்கின்றோம்.

காதல் பற்றிப்பெருமை பேசுவோர் தங்கள் இல்லற வாழ்வினை முழுமையாக அனுபவிக்கின்றார்களா? என நோக்க வேண்டும். ஒருவரை ஒருவர் புரிந்தாலே போதும் அவர்கள் ஒருவரை ஒருவர் அனுசரித்து நடக்கத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள கொண்டு விடுவார்கள்.

புரிந்து கொண்டே காதலித்தோம் இன்று முரண்பட்டு பிரிந்து விட்டோம். என்பது தாங்கள் தங்களாலேயே ஏமாற்றப்பட்டு விட்டதாகவே கருதப்படும்.

ஒருவரை ஒருவர் விரும்பி மணம் செய்யப் புற அழகு பிரதானமாகின்றது. இது இயல்பு. ஆனால் யாரோ எவருடன் பழகி, அவர்கள் இயல்பு பிடித்திருந்தாலும் புற அழகு தெரிவதில்லை. "உண்மை அன்பு" மேனி அழகைக் கண்டு கொள்ளாது கனிவே காதலுமாகின்றது.



RangaRakes

Tamilnavarasam.com

ஆயினும் சிலர் எந்த விடயத்திலும் தெளிவின்றி கலங்கியபடி இருப்பார், தேவதை போல மனைவி வாய்த்து அத்துடன் செல்வம் செல்வாக்கு உள்ளவளே ஆயினும் இவர்களுக்கும் குடும்ப உறவு திருப்தியாக இருப்பதில்லை. இதே போலவே நல்ல குண நலன்களும் பெரும் பதவி பலம் இருந்தாலும் அவனையே வெறுக்கும் பெண்களும் இருக்கின்றார்கள்.

இவர்கள் தேவைகள் எதுவாக இருப்பினும் அது எதுவென அவர்களுக்குப் புரிவதில்லை. ஆயினும் அடிப் படையான அன்பு பூரணமாக மலராது விடின் எல்லாமே குறைபாடாகவே புலப்படும்.

உடல் சார்ந்த உறவுகளில் பலவீனம், காதல் தோல்வி, எண்ணியவை போல் வாழ்க்கை அமையாமை போன்றவைகளால் மனதைக் கசக்கிக் கொண்டு வாழ்ந் தால் மணவாழ்வு கானல் நீராகவே தோன்றும்.

இதனால் குமுறி நொந்து போகும் சிலர் உளவளச் சிகிச்சைகளை நாடுகின்றார்கள் அனால் இவைஎந்த அளவிற்கு நல்லபலனை அளிக்கு மென்று கூறமுடியாது நல்லமனவள நெறியாளர்களைக் கண்டு பிடிக்க வேண்டும்.

மேலும் பலரும் தங்கள் பக்கத்து நியாயங்களையே சொல்லிக்கொண்டிருப்பார்களே ஒழிய தமக்கான பிரச்சனைகளை மன வடுக்களைக் களைவது பற்றி ஒன்றும் தெரியாமலேயே வாழுகின்றார்கள்.

எந்தப் பிரச்சனைகளையும் தீர்த்து விடலாம் ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் குடும்ப உறவைச்





செப்பனிடத் தயாராக இருக்க வேண்டும்.

எங்கள் முன்னோர்கள் தங்கள் எண்ணப்படி ஒரு வனை, ஒருத்தியிடம் இணைத்து விடுவார்கள். அவர்களின் வாழ்க்கையில் வரும் இடர்களை பொருட்படுத்துவதில்லை. கூட்டுக் குடும்பம் சமூகப் பிணைப்பு போன்றவற்றுடன் சங்கமித்த வாழ்க்கை இது! தத்தமது கலை, கலாச் சாரங்களின் மீதான பற்றுதல்களுடன் வலுவான தெய்வ நம்பிக்கையும் அவர்கள் இல்லறத்தை நல்லறமாக்கியது. முதுமை பற்றிப் புரிவதுமில்லை, அது பற்றி அக்கறையு மில்லை.

கணவன் வெளியே போனால் தண்ணீர் கொடுத்து கால்களை கழுவச்செய்வது, தாம்பூலம் கொடுப்பது, படுக்கை விரிப்பது போன்றவைகளை பாட்டிமார் முதுமைக் காலத்திலும் சந்தோஷமாகவே இவைகளைச் செய்வார்கள். கணவனுக்கு உணவைத் தானே பரிமாறுவார்.

இதே போலவே அவரும் மனைவியை ஜோடியா கவே பொது வைபவங்களுக்கு அழைத்துச் செல்வார் என்றும் புது மனைவி போலவே தாத்தா வாஞ்சையுடன் நோக்குவார்.

இன்று இத்தகைய தாம்பத்திய உறவை காணுகின் றோமா? இப்போது எல்லாம் மாறும் ஒருவரை ஒருவர் கவனிக்க நேரம் கிடைப்பதில்லை. உணவு தயாரித்து விட்டு மனைவி வெளியே சென்றால் கணவனே எடுத்து உண்ண வேண்டும், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப



RangaRakes Tamilnavarasam.com

வேண்டும். அவசியம் ஏற்பட்டால் இல்லத் தலைவனே உணவு தயாரிக்க வேண்டும். அல்லது உணவு விடுதியில் வாங்கி வரவேண்டும்

கால ஓட்டத்தில் எல்லாமே மாறும். ஓரிரு வினாடியும் சும்மா இருக்க முடியாது கணவன், மனைவி பிள்ளைகளுடன் உறவாடி மகிழும் நேரம் மழுங்கடிக்கப்பட்டு விட்டது.


எனினும் இருக்கின்ற பொழுதை இனிமையாக்க வேண்டும். பல குடும்பங்களில் வாழ்க்கைச் செலவைச் சரிக்கட்ட வாழ்வின் சுகங்களைக் குறைக்கின்றார்கள். எல்லோரும் ஒன்றாய் இருந்து வாழவே பிரிப்படுகின்றார்கள. ஆயினும், தற்கால வாழ்க்கை முறைக்கு இசைவாக இல்லை எனச் சொல்கின்றார்கள்.

நவயுகத்திலும் நாம் பழமையின் இனிமை, அதனுள் புதைந்த அமிழ்ந்தினும் இனிய வாழ்க்கை நெறியை என்றும் மறத்தலாகாது. கணவன், மனைவி உறவில் பூத்து நிற்பது புது உலகம். அன்பு, அறம், உள்ளத்தில் நிறைந்தால் துன்பம் என்பது ஏது? “நல்ல தாம்பத்தியமே சந்தோஷ சாகரம், சுகராக சங்கமம்”

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
24.07.2011







# ஆராய்வு இன்மை

ஆராயாமல் காரியம் புரிந்தால்
நேரிடும் இடர்கள், பெரும் தடையாய் போகும்.
அவசரம் என்பதே அநாகரிகமானதே!
சரிவரச் செய்ய பொறுமை காக்க!
தெரிந்த பணிகளிலும் கவனம் செலுத்துக!
விரும்பிய வேலையும் சுலபமாய் முடியும்!

அது ஒரு ஆரம்பப் பாடசாலை. அங்குள்ள வகுப்பு ஒன்றில் மாணவர்கள் எல்லோருமே ஆசிரியர் கற்பிப்பதைக் கவனமாகக்கேட்ட வண்ணம் இருந்தார்கள். கரும் பலகையில் ஆசிரியர் கணக்கை எழுதிவிட்டு, மாணவர்களை நோக்கி, என்ன தெரிகின்றதா........? எதேனும் ஐயம் உண்டா? எனக்கண்டிப்பான தொனியில் கேட்டார்.



RangaRakes
Tamilnavarasam.com

மௌனமாக இருந்த வகுப்பறையில் மெல்ல, மெல்ல சிறிது சத்தம் உருவானது. பின்னர் எல்லோருமே ஆம்....ஐயா... விளங்கிவிட்டது.... விளங்கிவிட்டது என ஒருமித்து குரல் எழுப்பினார்கள்.

ஆனால் வகுப்பறையில் ஒரு மாணவன் மட்டும், திரு..... திருவென விழித்துக்கொண்டு தலை குனிந்தபடி இருந்தான. அவன் நிலையை அவதானித்த ஆசிரியர் கோபமுற்று, "நான் என்ன சொல்கிறேன், நீ என்ன மாடு மாதிரி முழிக்கின்றாய்... நான் என்ன தமிழில்தானே சொன்னேன் எனக் கர்ஜித்து விட்டு, என்ன நான் படிப்பித்தது விளங்குகிறதா.... தெரிந்துவிட்டதா... சொல்" என மிரட்ட ஆரம்பித்து விட்டார்.

அவர் குரலின் உக்ஷ்ணத்தினால், உடல் கருகி னாற்போல் அந்தமாணவனும் கூனிக்குறுகி ஐயா..... எனக்குத் தெரியவில்லை..... தெரியவில்லை என்றான்.

அவ்வளவுதான் ஆசிரியர் கடுங்கோபமுற்றுத் தனது கையிலிருந்த வெண்கட்டியை எடுத்து அவன முகத்தின் மீது வீசி எறிந்தார். அதிர்ச்சியடைந்த அவன் நாக்குழற நடுநடுங்க எழுந்தான்.

மீண்டும் ஆசிரியர் அவனை நோக்கி என்ன.... உனக்குத் தெரியவில்லையா என்று மீண்டும் கேட்க, இல்லை ஐயா...எனக்குத் தெரியவில்லை எனறு மீண்டும்





கூற, என்ன...கொழுப்பா...எனச்சத்தமிட்டவர், அவனருகே வந்து தனது பிரம்பினால் கோபம் தீர, அடித்து, நொருக்கி "போ....போ... வகுப்பிற்கு வெளியெ போய் முழங்காலில் நில்..." எனக்கட்டளை வேறு இட்டு, உறுமியபடியே தனது இருக்கையில் வந்து அமர்ந்தார்.

அடுத்த வகுப்பு ஆரம்பமாக கணித ஆசிரியர் வெளியேறி விட ஆங்கில ஆசிரியர் உட்புகுந்தார் வகுப்பு ஆரம்பமானது. வழமைபோல் பாடப் புத்தகத்தை எடுத்தார். பாடங்களை விளக்கிவிட்டு, கரும்பலகையில் முக்கியமான சொற்பதங்களை எழுதி விட்டு, மாணவர்களை நோக்கி என புரிகிறதா.... எனக்கேட்டார். எல்லா மாணவர்களுமே புரிந்து விட்டது ஐயா... என்று சொல்ல, ஆசிரியர் திருப்திப்பட்டுத் திரும்பியவர் முன்னர் குறிப்பிட்ட அதே மாணவனை நோக்கினார். வழக்கம் போல அவன் விழிக்கலானான். ஏன் உனக்கு விளங்கவில்லையா என்ன தெரியவில்லை என்று அமைதியாகக் கேட்டார். "ஐயா......எனக்குத் தெரியவில்லை" என்று அவன் மீண்டும் சொன்னான்.

ஆசிரியர் மனதில் ஏதோ எண்ணம் பட்டது. "சரி... சரி... இங்கே வா... இப்போசொல்.... கரும்பலகையைப் பார்த்துவாசி.... தெரிகிறதா, விளங்காவிட்டால் சொல்லு" என்றார்.

மாணவனோ உடனடியாகக் கட,கட என வாசிக் கலானான். ஆசிரியருக்குப் புரிந்துவிட்டது. தம்மிடமிருந்த



RangaRakes
Tamilnavarasam.com

புத்தகத்தைக் கொடுத்து வாசிக்குமாறு கூறினார். அவன் அதனை வாசிக்கும் போதே "சரி... சரி... நிறுத்து, உனது அப்பாவை வந்து என்னைக் காணுமாறு சொல். நீ இனிவகுப்பின் முன்வரிசையிலேயே இரு", என்றவர், "உனக்குப் பார்வையில் பிரச்சனையுள்ளது, பாவம் நீ என்ன செய்ய முடியும் , உடனடியாகவே எனது கடிதத்தை உனது தந்தையிடம் கொடு உடனே இங்கே வந்து என்னைப் பார்க்கச் சொல்" என்றபடி, அவனை ஆதரவுடன் தட்டிக் கொடுத்தார்.

மேற்சொன்ன சம்பவங்களிலிருந்து நீங்கள் அந்த மாணவனின் நிலை பற்றிப் புரிந்திருப்பீர்கள். கணித ஆசிரியருக்கும், ஆங்கில ஆசிரியருக்கும் உள்ள ஆராயும் திறனையும், அறிந்து கொண்டிருப்பீர்கள்.

இன்று இல்லத்திலிருந்து முழு உலகம் வரையும் மக்கள் ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்கக் கால அவகாசம் கொடுக்காமலும் சிந்தித்துப் பார்க்கவே விருப்பமே இல்லாமல், நொந்து போய் இருக்கின்றார்கள்.

ஒருவரின் ஆராயாது நோக்கும் இயல்பு அவரை மட்டுமல்ல, அவரைச் சார்ந்தவரையுமே அவதிக்குள்ளாக்கின்றது. வீணான மன உளைச்சல், கால விரயம் போன்ற இழப்புகளை நாமாக விரும்பி வரவேற்குமாற்போல், நடந்து கொள்வது போல அறியாமை வேறு ஏது உள்ளது?





வ்)களில்தவறான முடிவை எடுக்கும் இல்லத் தலைவனும், தலைவியர்களும், ஆராயாது எடுக்கும் தங்களது முடிவே நியாயமானது எனச்சண்டித்தனமும் செய்வார்கள். "இந்தப் புத்தகத்தை இங்கே தானே வைத்தேன் நீதான் எங்கோ எடுத்து வைத்துவிட்டாய்". என மனைவி மீது பாயும் கணவன், அது தனது கைப்பையில் இருப்பதைக்கண்டதும் பேசாமல், தனது தவறை ஒப்புக்கொள்ளாமலும் உண்மைகளை அவர் என்றுமே ஒப்புக்கொள்ளவே மாட்டார். என்பதும் புரிகின்ற தல்லவா? இந்த இயல்பு மாறவேண்டும்.

மமதை காரணமாகத் திடீரெனக் கண்டு பிடித்த ஒவ்வாத முடிவுகளைப் பிறர் மீது திணித்தால் அதன் பாதிப்புக்களை யார் ஐயா சுமப்பது?

இன்று அரச, தனியார் நிறுவனங்களில் உயர் அதிகாரிகள் அறியாத விடயத்தில் மூக்கை நுழைத்துத் தங்களது முடிவுகளை ஊழியர்கள் மீது சுமத்தி அந்த நிறுவனங்களையே மோசமாக நடத்துவதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஆராயாமல் வாழ்வைத் தொலைத்த பேர்வழிகள் ஏராளம். நல்ல பெண்ணைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் நிச்சயமாகிப் பின்னர் யாரோ, எவரோ சொன்னார்கள் என்பதற்காக அதே திருமணத்தைக் கருணையின்றிக் கொய்த பிரகிருதிகள், மனதால் துரோகிகளே!



RangaRakes
Tamilnavarasam.com

"கல்வி" எனபதே தெளிந்து, துலங்கி உணர்ந்து தேட வேண்டிய ஒன்று. தெளிவு இன்றேல் அறிவு முழுமை பெறாது. கல்வி கற்பவன் தனது ஐயம் தெளியும் வரை கேள்வி கேட்க வேண்டும்.

ஐயம் தீர்க்கப்படாது விட்டால் எதனையும் ஆராயும் திறன் அறவே வராது. எந்தக் காரியங்களிலும் உடன் முடிவு எடுக்க முடியாது. ஆனால், கால விரயம் காரியத்திற்கு ஆகாது.

ஒன்றுமே புரியாதவர்கள் அறிந்தவர் போல் பேசுவார்கள். இத்தகையவர்களை நம்புபவர்கள் தங்கள் அறிவை நம்புவதேயில்லை.

கற்றவர்கள் கூடச் சில சமயம் தங்கள் முடிவே அறுதியும், உறுதியுமானது எனச்சொல்லி சின்னஞ்சிறு விஷயத்திலும் பொறுமையின்றித் தவறிழைத்து விடுகின் றனர்.

"அறிவு" எவர்க்கும் பொதுவானது. எவர் எதனைக் கூறினாலும் அதில் உண்மைகளை ஏற்கும் மனப்பக் குவத்தை நாம் உருவாக்கியே தீர வேண்டும். நல்லதை ஏற்பதற்குக் கௌரவம் பார்க்கலாமா? சில நொடி தாமதமாகு மென்பதால், ஏதாவது நடந்தேறினால் சரியென அவசர மான முடிவெடுப்பதும், விடை தெரியாத் துன்பங்களைத் தரும்.





வைத்தியம் செய்பவர்கள் ஒரு பக்கமாகவே சிந்தித்து வைத்தியம் செய்யக்கூடாது. பக்க விளைவுகள் நோயாளிக்கு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டுமல்லவா?

நிறைவான கருமங்களைச் செய்யும்போது அது நிரந்தரபலனை அளிக்கும். எமது கருத்துக்களில் மட்டும் புகுந்து உள் நின்று கொள்ள முடியாது.

அறிவோடு சஞ்சாரம் செய்யும் போது நல்லதைச், சரியானதைச் சிரசு என்றும் ஏற்கும். கரிசனமுடன் காரியமாற்றினால் அவசர உணர்வுகள், உருவழிந்து போகும்.

அமைதியான சுபாவம் கொண்டோருக்குப் பதற்றமும் இல்லை. இதுவே இவர்களைப் பாதுகாக்கும். வேகத்தினால் விவேகத்தினை இழக்கக்கூடாது. செயலில் வேகம் வேண்டும். எனவே ஆராய்ந்து அறிந்து முடிவு கண்டபின் உறுதியுடன் வேகமாய் இயங்குக !

நமது தூது
வார மலர்
02.09.2011



RangaRakes
Tamilnavarasam.com



# இளவயதுப் பெண்கள் எதிர்கொள்ளும் தடைகள்

இள வயது, எளிதில் புரியாத பருவம் வழிதவறி விடுவர் என்று இவர்கள் உணர்வைத் தளர்வாய் நோக்குதல், மனவளர்ச்சியை குறைக்கும். வாழ்க்கையின் நெழிவு சுழிவுகளை அறிதல் வேண்டும். நல்ல வழியில், நுட்ப உணர்வுடன், எழுந்திடும் , இவர்களின் வல்லமை ஒடுங்கத் தடைபோட வேண்டாம்!

உயர் கல்வி கற்கும் காலத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் சற்று வேறுபாடானவை. சமூகம் ஆண்பிள்ளைகளை ஒரு நோக்கிலும் வயது வந்த பெண்பிள்ளைகளை வேறு நோக்கிலும், பார்க்கும் பார்வைகள் எல்லாமே நியாய பூர்வமானதாக இருப்பதே யில்லை.





எம்முடைய முன்னோர்கள் விதித்த பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் தற்காலத்தில் தற்போது ஓரளவு கைவிடப்பட்டதாக அல்லது சற்று மிகையானதாகவே இருக்கின்றது.

பெண்களுக்கேயான மென்மைப் போக்கை விரும்பும் நாம், அதே சமயம் அதனையே சாதகமாக்கி அவளை அடக்கி, ஒடுக்குவது பொருத்தமானது அல்ல.

சின்ன வயதில் பெண்களின் நெஞ்சில் அடங்கி நடக்க வேண்டும் என்ற உணர்வைச் செலுத்துவது எமது நாட்டிற்கே உரிய பண்பு எனக்கருதுதல் ஆகாது. எல்லா நாடுகளிலும் வாழுகின்ற மக்கள், எல்லாச் சந்தர்ப்ப ங்களிலும் பெண்களைச் சமநோக்கில் கருதுவதாகக்கூற முடியுமா?

குறிப்பாகப் பெண்பாலார் இள வயதில் எதிர் கொள்ளும் சவால்கள், பிரச்சனைகளை நாம் அறியாததல்ல. இவை நாட்டுக்கு நாடு சற்று வித்தியாசமாக இருக்கும். அவ்வளவே.

ஒரு ஆண்மகன் போல் இவர்களால் வெளியே எந்நேரமும் சென்று வர முடியாது. ஆண்களுடன் தோழமை யுணர்வுடன் பேசிப்பழகவும் முடியுமா?



RangaRakes Tamilnavarasam.com

சில சமயம் பள்ளிக்கூடத்தில் தன்னுடன் படித்த ஒருவருடன் தெருவில் கண்ட போது ஒரு நிமிடம் சற்று அதிகமாக உரையாடினால் அவள் எதிர்கொள்ளும் விமர்சனங்கள் படு மோசமாளதாகவே இருக்கின்றது.

இன்னமும் எமது நாட்டில் ஆண்,பெண் இணைந்து கற்கும் உயர் வகுப்பிற்கான கல்லூரிகள் மிக அரிதாகவே இருக்கின்றன. கல்லூரிகளில் அனேகமானவை இருசாரா ருக்கும், தனித்தனியாகவே அமைந்து விட்டன.

முன்னர் பெண்கள் கல்லூரியில் நடக்கும் வைபவங்கள், விளையாட்டுப் போட்டிகளில் வயது வந்த ஆண்பிள்ளைகள் பார்க்கச் செல்வது கிடையாது. அனுமதிப்பதும் கிடையாது.

பெண்களுடன்சாதாரணமாக உரையாடவே மறுப்பது பெண்கள் மீதான அடக்குமுறை மட்டுமல்ல, களங்கமற்ற முறையில் நடந்து கொள்ள விழையும் ஆண் பிள்ளைகள் மீதும் விதிக்கும் கட்டாய கட்டுப்பாடுகளே! எல்லை மீறாதவரை ஒழுக்கம் நிலை நிறுத்தப்படும். உணர்ந்து செயல்படுக!

எனினும் இளம் பெண்கள் கல்வி கற்கும் காலத்தில் முழுமையான மன முதிர்ச்சியடையாமையினால், எவர், எவருடன் பழகுவது என்ற விபரம் புரியாமல், படும் துன்பங்கள் சொல்லில் அடங்காது.





மேலும் இளவயதிலேயே பாலியல் கல்வி முறைகளை வெளிநாடுகளில் கல்லூரிகள் அறிமுகப்படுத்திப் பல ஆண்டுகளாகிவிட்டன.

ஆண்,பெண் உறவுகள் பற்றி மட்டும் இக் கல்வியூட்டல் அமைந்தது அல்ல. சமூகப் பண்புகளை உளவியலுடன் இணைத்தே சொல்லிக் கொடுக்கின்றார்கள். முறையற்ற நட்பினால் உண்டாகும் விபரீதங்களுக்கு இன்றும் பெண்களையே முழுப் பொறுப்பாளிகளாக்கி விடுகின்றனர்.

“புருக்ஷ இலட்சணம் என்பதே மதுபானம் பாவிப்பதும், புகைப்பிடிப்பதும், அழகிய யுவதிகளுடன் சுற்றுவதுமே என்கின்ற எண்ணத்தில் பல இளைஞர்கள் வாழ்ந்து வருவது அறியாமை மட்டுமல்ல, ஆணெனும் அதிகார வெறி அல்லது மமதை என்றும் கொள்ளலாம்.

இதில் வேதனையான விஷயம் என்னவெனில் ஒழுங்காகக் கல்வி கற்கும் ஒருத்தியை அவர்களின் சகதோழிகளே வலுக்கட்டாயமாக அவளது மனநிலையை மாற்ற முனைவதுதான். எந்த விதமான இலட்சியம் பற்றி உணராத இளைஞன் மீது காதல் முடிச்சுப்போடுவதில் சக நண்பர்களுடன் தோழிகளும் இணைந்து கொள்கின்றார்கள். இன்று இயல்பாகத் தானாக மலரும் காதல் சமாச்சாரத்தை விட வலிந்து மேற்கொள்ளும், தரகர் முறை காதலர் இணைப்பே பலரை நரக வாழ்வில் இட்டுச்சென்று



RangaRakes
Tamilnavarasam.com

விடுகின்றது. உலகைச்சரிவரப் புரியாத இளமொட்டுகள் வாழ்க்கை களவாடப்படுவது, வளரும் பயிருக்கு வெந்நீர் செலுத்துவது போலத்தான்.

மேலும் நன்கு கல்வி கற்கும் ஆற்றல் உள்ள பெண் பிள்ளைகளை, உயர்கல்வி பெறுவதற்குத் தடை விதிக்கின்ற பெற்றோர்கள், தற்காலத்திலும் இருப்பது அதிசயம்தான். “சின்னவயதிலேயே மாமன் மகனுக்கும் அவளுக்கும் நாங்கள் நிச்சயித்து விட்டோம். இவள் படிப்பதை மாமன், மாமி விரும்பவில்லை.. எனவே பதினோராம் வகுப்போடு நிறுத்தி மேலே உயர் வகுப்பில் படிப்பிக்க விரும்பவில்லை” எனச் சர்வ சாதாரணமாகச் சொல்லுகின்றவர்களும் இருக்கின்றார்கள். உயர்கல்வி, அதன்பின்னர் கல்யாணம் என்கின்ற முறைமை ஆண்களுக்கு மட்டும்தானா? ஏன் இவள் படித்தபின் தொழில் தேடிப் பின்னர் அவளும் ஏற்கும் மணமகனைத் திருமணம் செய்து வைக்க ஏன் சில பெற்றோர்கள் விருப்பம் கொள்வதில்லை?

ஒருவரது நியாயபூர்வமான செயல்களை, ஆசைகளைத் தடை போட எவர்க்கும் உரிமை கிடையவே கிடையாது. முன்னேற்றத்தை முடக்குவதால் அவர்கள் மட்டும் முடங்கிவிடுவதில்லை. மாறாக இந்த பூமிக்குப் பாரிய துணைவர் ஒருவரின் சேவை வலிந்து பறிக்கப்படுகின்றது. தனி மனித உரிமை அனைவருக்குமானதே!. இதில் பெண் எனும் வேறுபாடு உண்டா?...





பாசத்தின் காரணமாகச் சிலர் சொல்லும் உபதேசங்கள் தற்கால நடைமுறைக்குச் சாத்தியமாகாது. “நாங்கள் அன்புடன் வளர்த்த மகள் படித்து உத்தியோகம் பார்க்கத் தேவையில்லை. எங்கள் குடும்பத்திற்கு இவையெல்லாம் ஒத்துவராது. இவள் ஏன் அநாவசியமாகப் படித்து உழைக்க வேண்டும்?” என்கிறார்கள்

கல்வி, பதவி என்பது பணம், புகழ் மட்டுமல்ல. இது ஆன்மார்த்த திருப்தி நிலை என்பதை இன்னமும் பல பெற்றோர்கள் புரிந்து கொள்கின்றார்களா?

நான் எனது சொந்தக்காலில் நிற்கின்றேன் என்பதில் உள்ள திருப்தியே அலாதியானது அல்லவா? இதில் ஆண், பெண் வித்தியாசங்கள் என்பதேது?

இள வயதின் துடிப்பான உணர்வுகளை, நல்ல செயல் வடிவத்தில் உருவாக்க வேண்டும். படிப்பதற்கும், உலகிற்கு நற்சேவை செய்வதற்கும் ஏற்ற வயது அல்லவோ? வயது முதிர்ந்து ஏக்கமுடன் வாழ்வதை விட எந்தவொரு பெண்ணும் இள வயதிலேயே தன்னை எதிர்கொள்ளும் தடைகளை உடைத்து நவ உலகில் தன்னைப் பூரணத்துவம் வாய்ந்த ஒருத்தியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இதுதானே சிறப்பு!

சின்னச் சபலங்கள், சஞ்சலங்கள் ஒருவரை ஆக்கிரமித்தால் அதுவே விஸ்வரூபமெடுத்து அவர்களை அரித்தெடுத்துவிடும்.



RangaRakes Tamilnavarasam.com

இளம் வயது மங்கையர் மனம் மழுங்கலாகாது. தவறான ஆண்களின் தப்புக்களை மறைக்க அல்லது காரணம் சொல்லி மழுங்கடிக்கச் சமூகம் பல மார்க்கங் களைக் கைவசம் வைத்துக்கொண்டுதான் இருக்கின்றது.

இந்தப் படுபிற்போக்கான வாதங்களைச் செவியிலே ற்றாமல், இளவயதிலேயே பெண்பாலார் தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதேசமயம் ஒவ்வொருவரும் தத்தமது கலாசாரப் பண்புகளை மறக்காது

தனித்துவ கலாகாரப் பண்புகளே ஒரு இனத்தை அடையாளப் படுத்துகின்றது.

அதன்படி நடந்து தமக்குரிய எதிர்காலத்தை சமைப்பது உலகிற்கு அமைவானதேயாம். விலங்குகளை நாமாகவே பூட்டிக்கொள்வது எழுச்சியை வலுவற்ற தாக்கி விடும்.

தினக்குரல்
(இவன் - பெண்கள் பகுதி)
05-06-2011







# கவிதை போல் வாழ்க!

ஒருவரை நாம் வாழ்த்தும் போது மனப்பூர்வமாக, உள்ளம் நெகிழ பேரன்புடன் வாழ்த்த வேண்டும். நல்ல கவிதை அதற்குரிய இலக் கணத்துடன் படைக்கப்படும். எமது வாழ்க்கையும் அவ்வண்ணமே, அற வாழ்வு, நீதிக்கு அமைய அமைதல் வேண்டும். கவிதைகள் சுருக்கமாக, மிக ஆழமாக கருத்துக்களில் விரிந்ததாக, ஓசை நயம் மிக்கதாக, கேட்க இனிமையாக, சிந்தையினை மகிழ்வூட்டுவனவாக இருத்தல் வேண்டும். இதே போல் வாழ்க்கையில் நாம் பேச்சில் சுருக்கமாக, செயலில் பெருக்கமாக, கட்டுப்பாட்டுடன் உலகம் மெச்சும் வண்ணம் வாழ வேண்டும். கவிதையில் ஜொலிக்கும் யௌவனம் போல் மனித வாழ்வும் அமைய வேண்டும் என்பதால், கவிதை போல் வாழ்க! என நாம் எல்லோரையும் வாழ்த்துவோமாக!

நாம் யாரையாவது வாழ்த்துவதென்றால், பரிபூரண மான அன்புடன், நெஞ்சார வாழ்த்த வேண்டும். எங்கள் பாராட்டுதல்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்குரியவரின் மனோநிலையில் புத்துணர்வுண்டாக்கி அவைமென் அதிர்வு களாகி இதமூட்டுவனவாக அழுத்தமாகப் பதியப்பட வேண்டும்.



RangaRakes
Tamilnavarasam.com

பெரியோர்கள் தமது வாழ்த்துக்களைப் பயனுள்ள சொற்களினூடாகத் தெரிவிப்பார்கள். ஔவையார் தான் சந்தித்த மன்னனை " வரப்புயர" என வாழ்த்தினர். வரம்பில் நீர் சேர்வதால் பயிர்கள் விளையும். அதனால் குடிமக்கள் உயர்வடைவர் என்பதே இதன் பொருளாகும்.

இன்று மக்களைப் பெருமளவு கவிதைகளே கவர்ந்திழுக்கின்றன. நல்ல தரமான, மக்களுக்குப் பயன் தரவல்ல கவிதைகள் ஒவ்வொரு தனி மனிதனையும் உயர்த்துவதால் முழுச் சமூகமும் பயனுறுகின்றது. எனவே உலகம் உய்ய நாம் ஒருவரை ஒருவர் வாழ்த்துவதற்கு நெஞ்சைக் குளிர்விக்கும் வண்ணம் " கவிதை போல் வாழ்க"! என வாழ்த்துதல் கூட சாலப் பொருத்தமானதேயாம்.

அது சரி "கவிதை போல் வாழ்க" என்றால் கவிதைக்கும், மானுட இயல்புக்குமுள்ள பொருத்தங்களை எப்படியாக இயம்ப முடியும் என்பதை இனிப் பார்ப்போம்

நல்ல கவிதைகள் காலத்தால் அழியாததாகும். எம் முன்னோர்கள் படைத்த காவியங்கள் யாவும் இயன்றளவும் பேசப்படுகின்றன. இவ்வண்ணமே ஒருவன் வாழ்வாங்கு வாழ்ந்தால் என்றும் அவன் கீர்த்தி மங்காது.

கவிதை என்றும் சுருக்கமாக அதே சமயம் அதன் கருத்துக்கள் மிக ஆழமாக விரிவாகச் செறிவாக அமைதல்





அவசியம்.

மனிதன் தனது சொந்த வாழ்வில் வெறும் பகட்டாவனாகக் காட்டி நிற்காது என்றும் எளிமையுடன் துலங்க வேண்டும். அதிகம் பேசாமல், செயலில் மட்டும் செறிவாக ஆக்க பூர்வமாகச் செய்து காட்ட வேண்டும்.

நற் கருமங்களை மௌனமாகச் செய்கின்றவன் ஜீவியம் யௌனமாகின்றது இவன் பணியினால், பூமி புனிதமடையும், ஆனந்தம் நிரந்தரமாகும்.

மேலும், எங்கள் பழைமையான இலக்கியங்களைப் பாருங்கள் அவை இலக்கணச் சுத்தமாக ஒரு வரையறையினுள் அமைந்திருக்கும். இஷ்டப்படி எழுத முடியாது. கண்டபடி எழுதினால் காவியம் நிலைத்திருக்குமா?

தெளிந்த கருத்துக்களைச் சுவைபட சொல் ஆட்சியுடன் நல்ல மொழி ஆளுமையுடன் கவிதைகள் உருவாகினால் தான் அதன் பலன் உலகைச் சேரும். கருத்துச் செறிவின்றி கவிதை உருவாக முடியாது பொருள் இன்றேல் "பொய்" தான் புரளும். கவிதையிலும் கட்டுப்பாடு வேண்டும். நாவில் நல் ஓசையுடன் தவழவேண்டும்.

அதே போல் எமது வாழ்க்கையும் கட்டுப்பாட்டுடன் அமைதல் அவசியமானது. நல்ல குறிக்கோள், மத நம்பிக்கை, அறக்கருத்துக்கள் மீதான நாட்டமுடையவராக நாம் வாழ்ந்தால் இங்கு எமக்குத் துன்பம் தர எவருமே முன் வருவார்களா?



RangaRakes
Tamilnavarasam.com

சிந்தையில் திரிபு ஏற்படுமிடத்து வருகின்ற எண்ணங்களும் வக்கிர புத்தியுடனேயே கருக்கொள் கின்றது. கெட்ட மதி தொற்றிக் கொண்டால் தப்பான தரங் கெட்ட வார்த்தை உரையாடல்களும் வெளிவரும். அது ஒருவரை அந்தகாரத்தினுள் தள்ளி விடுகின்றன.

மனம் கவருகின்ற நல்ல கவிதைகளைப் படிக்க வேண்டும். அவைகளின் அர்த்தம் புரிந்து படித்தாலேயே எமக்கு எமது எண்ணங்களில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும்.

இன்று புனையப்படும் பலரது கவிதைகள் எமக்குப் புரிவதே இல்லை. ஏன் அதனை எழுதுபவர்களுக்கே அது புரியுமோ தெரியாது.

இத்தகையவர்கள் ஏனையவர்களின் சிறந்த கவிதைகளைப் படிப்பதுமில்லை, ஏன் எமது இலக்கியங் களில் ஒரு சிறு பகுதியையாவது நுகர்ந்தால் இப்படி எழுத மாட்டார்கள்.

புதுமை இலக்கியம் என்றால் அவை மக்களுக்குப் புரியாமல் எழுத வேண்டும் என்பதல்ல. புரியும் படியாக எழுத வேண்டும் . புரியாமல் எழுதுவதே புத்திசாலித் தனமானது எனக்கருதுவது தவறு! அது போல் மனிதன் எவருக்கும் புரியாத புதிர் போல் வாழவும் கூடாது.





புரியாமல் வாழ்பவன் தன்னிலை அறியாமலே வாழ்ந்து கொண்டிருப்பான்.

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரியாமல் வாழக் கூடாது . ஒருவருக்கு ஒருவர் வினோதமான பிராணியைப் பார்ப்பது போல் இயங்க முடியுமா? புரிந்து வாழ்ந்தாலே வாழ்வில் நிரந்தர சந்தோஷம் உண்டாகும்.

நல்ல குடும்பத்திற்கேற்ப குல விளக்கு, குடும்பத் திற்கே இவள் ஓர் இலக்கணம் எனக் குடும்பத் தலைவியை பலர் வர்ணிப்பதுண்டு.

இதேபோல் நல்ல ஆண் மகனை உறுதியா னவன், எதையும் அச்சமுடன் நோக்காதவன் என்றும் நாம் பாராட்டுவதுண்டு . ஆணாயினும் சரி பெண்ணா யினும் சரி சமூக ஒழுக்கத்தில் சமனானவர்களே!

எனவே,

நல்ல வாழ்வு முறைமையை இலக்கணத்திற்கு ஒப்பீடு செய்கின்றோம். அறிவு மட்டுமன்றி, நல்ல ஒழுக்கம் பண்புகளோடு சமூகக்கட்டுப்பாடுகளை என்றும் மீறாதபடி நாம் ஜீவிக்க வேண்டும்.

நாடுகள் எதுவாயினும் சாதி, சமயங்கள் எதுவா யினும் அங்கிருந்து புறப்பட்ட விலைமதிக்க வொண்ணா



RangaRakes

Tamilnavarasam.com

மாபெரும் சொத்துக்களான கலை இலக்கியங்கள் எல்லாமே யாவர்க்கும் சொந்தமானதே. அவை எல்லாமே மனிதர் ஆற்றலை, அவர்கள் செய்ய வேண்டியவைகளைச் சொல்வதற்காகவே சிருஷ்டிக்கப்பட்டன. எமக்கெனத் தனித்துவமான, பாரம்பரியமான படைப்புக்கள் இருந்தாலும், அவை வேறு ஒரு இனங்களுக்கோ, நாட்டு மக்களுக்கோ உகந்தது அல்ல எனச் சொல்ல முடியாது.

மானுட வாழ்வோடு இணைவுபடுமாப் போலவே நல்ல இலக்கியங்கள் துலங்கி நிற்கின்றன. நாம் சோகமான சாத்தியமற்ற விஷயங்களை நோக்காது , நல்ல கவிதை போல் செழுமையாக வாழ்வை அமைத்தால் அது அமிழ்திலும் இனிதே !

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
12.12.2010



RangaRakes Tamilnavarasam.com

# சும்மா இருத்தல்

பருத்தியூர் பால. வயிரவநாதன்

*வாழ்வியல் வசந்தங்கள் – பாகம் 07*

*சிந்தனைக் கட்டுரைகள்*

RangaRakes Tamilnavarasam.com

நூலாசிரியர் பருத்தியூர் பால. வயிரவநாதன் எழுதி வெளியிட்ட "வாழ்வியல் வசந்தங்கள்" நூற் தொகுதிகள்


| | |
|---|---|
| 1. உண்மை சாஸ்வதமானது | - பாகம் - 01 |
| 2. அம்மா | - பாகம் - 02 |
| 3. சுயதரிசனம் | - பாகம் - 03 |
| 4. கோழைகளாய் வாழுவதோ? | - பாகம் - 04 |
| 5. ஞானம் | - பாகம் - 05 |
| 6. கணப்பொழுதேயாயினும் யுகப்பொழுதில் சாதனை செய்! | - பாகம் - 06 |
| 7. சும்மா இருத்தல் | - பாகம் - 07 |
| 8. உண்மைகள் உலருவதில்லை! | - பாகம் - 08 |
| 9. உன்னோடு நீ பேசு! | - பாகம் - 09 |
| 10. நான் நானே தான்! | - பாகம் - 10 |
| 11. வெறுமை | - பாகம் - 11 |
| 12. காதலும் கடமையும் | - பாகம் - 12 |
| 13. அக ஒளி | - பாகம் - 13 |
| 14. உன்னை நீ முந்து! | - பாகம் - 14 |
| 15. சுயபச்சாதாபம் | - பாகம் - 15 |
| 16. மௌனம் | - பாகம் - 16 |
| 17. மரணத்தின் பின் வாழ்வு | - பாகம் - 17 |
| 18. சிந்தனை வரிகள் | - பாகம் - 18 |




# பொருளடக்கம்


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01) | உற்சாகம் | 17 |
| 02) | மறைத்தல் | 27 |
| 03) | திட சிந்தனை | 38 |
| 04) | சுயநலம் | 48 |
| 05) | புரிந்துணர்வு | 58 |
| 06) | கருமை | 68 |
| 07) | சவால்கள் | 79 |
| 08) | சும்மா இருத்தல் | 90 |
| 09) | விதி | 100 |
| 10) | கண் முன்னே வாழும் மாதரசிகளைப் போற்றுங்கள்! | 111 |
| 11) | இனிமை தரும் எளிமையான வாழ்வு | 117 |
| 12) | குடும்ப உறவுகளை மட்டுமல்ல சமூக உறவுகளையும் வளர்த்திடுங்கள் | 123 |
| 13) | விவாகரத்துக்களும் ரணமாகும் மனங்களும் | 128 |
| 14) | சொர்க்கம் எங்கே ! | 136 |




RangaRakes

Tamilnavarasam.com



# உற்சாகம்

உற்சாகமாக இயங்காதுவிட்டால் "களிப்பு" நிலை உருவாகிவிடாது. எந்தக் கருமங்களையும் ஈடுபாட்டுடன் செய்துவரின் உற்சாகம் கரைபுரண்டோடும். விரக்தி விரட்டப்படும். சோர்வு சரிந்தேகும். சலிப்பு ஒழிந்து விடும். எமது கடமையைக் குறைவின்றிச் செய்ய உற்சாகம் ஔடதம். அச்சம், பதட்டம், செய்கருமங்களில் தெளிவின்மை போன்றவை, கருமங்களைத் தடைபோட்டு முடக்கும். தேவையற்ற கற்பனைகளால் மனம் பேலித்து உற்சாகத்தைத் தடை போடல் அடுக்காதசெயல், உற்சாகமான மனிதன் வெற்றி பெறுகின்றான்.

"உற்சாகம்" என்பது அற்புதமான ஆற்றல்களை நல்க வல்ல "மன உணர்வு" என்பதுடன் எழுச்சிமிக்க எண்ணங்களை வலுவேற்றுகின்ற இயல்புமாகும்.

உற்சாகமின்றேல் களிப்பு என்பது வெகு தொலைவில் சென்றுவிடும். அவ்வண்ணமே களிப்பு எம்மிடையே துளிர் விடாது போயின், சோம்பலுடன் சேர்ந்திணங்கி விடுவோம்.



RangaRakes Tamilnavarasam.com

எனவே, உற்சாகமும், களிப்பு இரண்டுமே பொருந்தி நின்றால் கிடைத்தற்கரிய பெரும்பேறுகள் தானாகவே வந்து குவியும். "உற்சாகமாக இரு" எனச் சிலரை வற்புறுத்த வேண்டியிருக்கின்றது.

எக் கருமங்களேயாயினும் மிகுந்த ஈடுபாட்டுடன் செய்யுமிடத்து உற்சாகம் பீறிட்டெழுந்து நிற்கும். ஏனோ தானோ என்கின்ற எண்ணங்களுடன் செய்கின்ற கருமத்தின் பெறுபேறுகளை விட செய்கருமங்களை லயிப்புடனும், ஆர்வத்துடனும் செய்தால் அதன் பெறுமதிகள் நாம் எதிர் பார்த்ததை விடச் சிறப்பாகவே அமைந்துவிடும். சலிப்புடன் இருப்பவர்கள் புல்லை வளைப்பதற்கும் பிரயத்தனப்படுவர்.

ஆரம்பத்தில் நாம் எதனைச் செய்ய விழைந்தாலும் பயமூட்டும் வீண் கற்பனைகளும், தேவையற்ற பய உணர்வுகளும் ஏற்படலாம்.நான் இந்த வேலையைச்செய்து முடிக்கலாயக்குள்ளவன் தானா? என்கின்ற அச்ச உணர்வு வந்தாலே எமது உற்சாகம் சற்று தளும்ப ஆரம்பிக்கும். இவையெல்லாம் என் திறனுக்கு முன் தேவையற்ற வீணான மனக்கிலேசங்களே என்று அவ்வெண்ணங்களை உதறி செய் கருமமே கண்ணாகச் செய்துவரின், பதற்றமும், பயமும் அதுவாக ஓடிப்போய்விடும். துணிச்சல் உள்ளோர்க்கு உற்சாகம் வெற்றிகரமான பயனைத்தரும்.

ஆரம்பத்தில் நாம் விருப்பமின்றிச் செய்யும் வேலைகள் கூடப் படிப்படியாக எம்மைக் கவர்ந்து அதுவே எம்மை





விட்டுப் பிரியமனமில்லாத வேலையாகி விடுவதுமுண்டு. சின்ன வயதில் குழந்தைகள் பள்ளிக்கூடம் போக அச்சப் பட்டுத் தன் தாயைக் கட்டிக் கொண்டு கதறியமும், பின்னர் குழந்தை தனது சகாக்களுடன் கூடி ஓடியாடி விளையாடி, படிப்படியாகக் கல்வி கற்றுவர அதற்கு வீட்டிற்குச் செல்லப் பிடிக்காமல் போகலாம். பிள்ளைகளை ஆர்வமுடன் கற்பித்த லுக்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் பெற்றோர்கள், அவர்களுக்கான வசதிகளை தம்மாலியன்ற அளவு செய்து வர அவர்கள் பொலிவுமிகு பிள்ளைகளாக மாறுவதுடன், கல்வியிலும் மேம்பட்டுவிடுவர்.

பிள்ளைகளை வல்லமையூட்டும் பணியில் பெற்றோ ரும், ஆசிரியர்களும் முனைப்பாக ஈடுபட்டு வரல் வேண்டும். ஒரு மாணவர் ஒருமுறை என்னிடம் பரிதாபமாக இப்படிச் சொன்னார் எனது வகுப்பில் ஒருவரும் செய்யமுடியாத கேத்திர கணித நிறுவல் கணக்கை நான் செய்து முடித்தேன். இதை நான் எனது வகுப்பு ஆசிரியரிடம் காண்பித்தேன். அவரோ என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "நாங்கள் ஒருவருமே இந்தக் கணக்கைச் செய்தும் சரிவரவில்லை. நீ அதனை யாரிடம் கேட்டறி ந்தாய், சொல் உன்னால் இது எப்படி முடிந்தது என்று கேட்டார் எனக்கு இது ரொம்பவும் மனக்கஷ்டமாக இருக்கின்றது என்றார்."

அதீத திறமைசாலியான மாணவர்களைச் சில ஆசிரியர்கள் ஊக்கப்படுத்தாமல் கண்டபடி பேசிவிடுவதால்



RangaRakes
Tamilnavarasam.com

அவர்களது திறமைகள் அமுக்கப்படுகின்றது. தவிர தங்களால் முடியாததை மற்றவர்கள் செய்தால் பாராட்டி யேயாக வேண்டும். பாராட்டாமல் சந்தேகக்கண் கொண்டு பார்ப்பதும் பேசுவதும் ஒரு காழ்ப்புணர்வுடனான போக்கு அல்லவோ?

எங்களுக்குரிய கடமைகளை நாம் செய்கின்ற போது ஏற்படும் சின்ன இடையூறுகளை பெரும் தடைகளாக ஆரம் பத்திலேயே எண்ணிவிட்டால் உற்சாகத்திற்கான உற்பத்தி எம்மிடம் எப்படிச் சுரக்கும்? தந்த வேலைகளை நாம் செய்து கொண்டு போக வேண்டியதே!

ஒரு ஆங்கிலத் திரைப்படத்தில் ஒரு காட்சி இது. நடுக்கடலில் கப்பல் சென்று கொண்டிருக்கின்றது. திடீரென இடி, மின்னலுடன், புயலும் புகுந்து கொள்கின்றது. அலைமேல் எழுந்து விழுந்து கப்பல் தத்தளிக்கின்றது. கப்பல் கவிழும் நிலை. கப்பலின் தலைமை அதிகாரியின் அறையினுள் சிப்பந்தி உள்ளே நுழைகின்றார். அங்கே அவர் ஆழ்ந்து யோசனை செய்தவாறே இருக்கவும் சிப்பந்தி தனது கையில் உள்ள தேனீரை அவரிடம் கொடுக்கின்றார்.

அவர் தேனீரைப் பருகியதும் அவர் நிமிர்ந்து நோக்கித் தன்னை ஆசுவாசப்படுத்தியவர் அடுத்த கணம் இயந்திர கதியில் இயங்கலானார். ஓரிரு நிமிடங்களுக்குள், கப்பலைச் சமநிலையில் கொண்டு வந்தார். எல்லோருமே நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர். கப்பல் தலைமையதி





காரியோ, மௌனமாக மீண்டும் தமது அறைக்குள் செல்கின்றார்.

எந்தக் கருமத்தைச் செய்யுமுன் பதட்டம், பயம் என்பதை விலக்கிவிடுதல் வேண்டும். தம்மைச் சுதாகரித் துத் ஸ்திரமான நிலைக்குள் நிலை நிறுத்தி நிலைமையை உணர்ந்து செயல்பட்டால் எந்தப் பிரச்சனையான செயல் களையும் வெகு சுலபமாகச் செய்து முடிக்கலாம் என்பது உறுதியாகும். பதட்டமும், அச்சமும், வேலையில் தெளி வானஅறிவின்மையும், செய்கருமங்களுக்குச் "சத்துரு" ஆகும். இந்தப் பலவீனங்களைத் தவிர்த்தால் மிக உற்சாக மான மன நிலைக்குள் நாம் உட்பட்டு விடுவோம். சுறுசுறுப் புடன் இயங்குவர்கள், சமயோசிதமான புத்தியுடனும், துணிச்சலுடனும் தொழிற்பட்டால் அவர்களால் ஆகாத கருமம் எதுவுமுண்டோ?

மனதை ஒரு நிலைப்படுத்துபவர்கள் தம் கருமத்திலே வைத்த இலக்கைத் தவற விடமாட்டார்கள். நிதானமான புத்தியுடன் இருப்பவர்களின் சுறு சுறுப்பான உழைப்பின் பயன்கள் ஒரு சிறிதளவு கூட வீண் விரயமாவ துமில்லை.

சின்ன விஷயங்களை நாம் உதாசீனம் செய்வதும் உண்டு. மிகவும் உற்சாகமாக மிகப் பெரிய வேலைகளைச் செய்யும்போது, ஒரு அற்பவேலை எம்மைப் பாடாய்படுத்து வதுமுண்டு. ஆரம்பத்திலேயே இவைகளைக் கண்ட



RangaRakes

Tamilnavarasam.com

றிந்தும்,பாராமுகமாக இருந்தமையினால் படும்சிரமங்கள் சிலவேளை சொல்லிமாளாது. மனிதர்கள் எதற்கும் தயார் நிலையில் இருந்தால் அவர்களை துயர்கள் தாக்குவ துமில்லை. "நான் உற்சாகமாகத்தான் தொழில் செய்தேன். இடிவிழுமாற்போல் இந்த இடையூறு வந்துற்றதே"! எனச் சங்கடப்படுபவர்கள் பலர் இருக்கின்றார்கள்.

வாழ்க்கையில் வரும் துன்பங்கள் கூட இயல்பானது தான். புதிதாகத் துன்பங்கள் வருவது, தனி ஒருவர்க்கு மட்டு மல்ல. சில வேளை நாம் எதிர்ப்பார்க்கும் இடையூறுக ளுடன், வேறு பல துன்பங்களும் ஒன்று சேர்ந்து தாக்கலாம். இவைகளால், எமது நடத்தைகள், மன இயல்புகள் பாதிப் படையலாம். இந்நிலையில் இருந்து நாம் விடுபடல் வேண்டும்.

நாம் ஒன்றை மட்டும் உணர்வோம். நாம் எப்போ துமே முடங்கிக் கிடக்கத் தயாரானவர்கள் அல்லர். எனவே இடையூறுகள், துன்பங்களுக்காக எத்தனை நாட்களுக்கு த்தான் வருந்தி அழுது கொண்டிருக்க முடியும்? சொல்லுங் கள்! எங்கள் கருமங்களை எப்படியும் நாங்கள் தானே செய்து முடிக்க வேண்டும்? தூக்கி நிறுத்தலுக்காகக் கையைத் தூக்கிக் கெஞ்சவேண்டாம். நீங்களாக எழுந்தால் எல்லாமே எளிதாகும் உணர்க!

"எமக்குக் கிடைத்ததே போதும்" என்கின்ற திருப்தியுள்ள மனப்பாங்குதான், எமது உற்சாகமூட்டும்





இயல்புகளுக்கான, முதல் படியுமாகும். மனக்குறைகளுடன் திருப்பதியாக எப்படி வாழ முடியும்? மனம் கிலேசம டைந்தால் உற்சாகம் எப்படி ஐயா, உருவாக முடியும்?.

மேலும், நற்கருமங்களைப் பிறருக்கு செய்வதிலிருந்து நழுவிச் செல்லும் மனப்பாங்கு உள்ளவர்களிடம் களிப்பு நிலை பொங்கிவராது. எப்போது தன்னை மட்டும் சிந்திப் பவர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து சிரித்து மகிழ்வதற்கு நேரத்தை ஒதுக்கமாட்டார்கள். வலிந்து எவராவது சந்தோஷத்துடன் சந்திக்க வந்தால், அவற்றில் கூட லாப, நட்டக் கணக்குப் பார்ப்பார்கள்.

"கொடுக்காதவர்க்கு எடுக்கின்ற உரிமையில்லை" மற்றவர்களை உற்சாகப் படுத்தத் தயங்குபவன் தானும் முழுமையாக உற்சாகமாக இருக்க முடியாது. பிறருக்கு இன்னல்களை விளைவித்து அடையும் குரூர திருப்தி, சடுதியில் சரிந்து அவர்களையும் அரித்து, உருத்தெரியாமல் ஆக்கிவிடும்.

இன்று விளையாட்டுப் போட்டிகளில் கூட சுறுசுறுப்பு டன் விளையாடுவதற்காக, விளையாட்டு வீரர்கள், ஊக்க மருந்து உபயோகிப்பதாகக் கூறப்படுகின்றது. மிகவும் திறமையான விளையாட்டு வீரர்கள்கூடத் தங்கள் பல மறியாது அநியாயமான வழிகளில் சட்டவிரோதமாக, ஊக்க மருந்தைப் பாவித்து, மிகவும் அவமானப்பட்டுப் போட் டியில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். அண்மையில் ஒலிம்பிக்



RangaRakes

Tamilnavarasam.com

போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற மாபெரும் வீரர் தனது பதக்கங்களை இழந்து பெற்ற கௌரவத்தையே இழக்கும் படியான காரியத்தைச் செய்து விட்டார். உளவியல் ரீதியாக வீரர்களை உற்சாகப் படுத்தப்பட்டும் கூட இத்தகைய தீயவழிகளை நாடுவது பரிதாபமான நிலைதான். பல வீரர்கள், போட்டி நேரங்களில் மனம் தளர் வடைவதால், உற்சாகம் குறைந்து செயல்படுவது, அவர் களை மட்டுமல்ல அவர்கள் சார்ந்த நாட்டு மக்களையும் வேதனையூட்டுவதாக அமைகின்றன.

பெரிய போட்டிகளில் பங்கு கொள்ளும் விளையாட்டு வீரர்களைத் திட்டமிட்டபடி, உளச்சோர்வு அடையுமாற்போல் பல கீழ்த்தரமான காரியங்களும் நடப்பதுண்டு. விளையாடும் வீரர்களின் மனம் நோகக் கண்டபடி கீழ்த்தரமான வார்த்தை களில் திட்டி, நையாண்டி செய்யும்போது அதனைக் கேட்டும் வீரர்கள் மனம் நொந்து, செயல் இழக்கும் சந்தர்ப்பங்களும் நிகழ்வதுண்டு. இயல்பாகவே திறமையுடனும் உற்சாகத்து டனும் விளையாடக் கூடியவர்களைத், திட்டமிட்டு தைரிய மிழக்கச் செய்பவர்களைச் சட்ட மூலம் தண்டிக்காதுவிடின் இந்த அவலநிலை மேலும் தொடர இடமுண்டு.

சூழ்ச்சி செய்பவர்களை விடச் சூழ்ச்சிக்கு இடங் கொடுப்பதே தவறான காரியமாகும். உடல் ரீதியான கோளாறுகளை நாம் மருத்துவர்களை அணுகி அவைகளை நிவர்த்திசெய்யமுடியும். அதேபோல், மன அழுத்தம், தேவையற்ற பயம் போன்றவைகள் இருப்பதாக அவர்கள்





கருதினால் தக்க உளநல மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது ஒன்றும் வெட்கப்படத்தக்க விஷயமல்ல.

பலர் தமக்குள்ள உளவியல் பிரச்சனைகளை ஒத்துக் கொள்ளத் தயங்குகின்றார்கள். மேலும் இத்தகையவர்கள், தங்களுக்குள்ளான பிரச்சனைகளால் தம்மைச் சார்ந்தவர் களையும் வருத்திக்கொள்ளுகின்றார்கள். வீட்டில் குடும்பத் தலைவர் மன அழுத்தம்,விரக்தி மனப்பான்மை, அல்லது உடல் உபாதைகளுக்குள்ளானால் வீட்டில் அவர், தனது மனைவி மக்களைச் சந்தோஷமாக வைத்துக்கொள்வாரா?

எனவே, ஒருவர் உற்சாகம் இழப்பதால், முழுக் குடும்பமே, துன்பத்தில், ஆழ்ந்து போகும் நிலை ஏற்பட லாம். எம்மைச் சுற்றியுள்ள திறமைசாலிகளை இனம் கண்டு, அவர்களை வெளி உலகிற்கு உற்சாகமுள்ள நபராக உருவாக்கி, வெளிக் கொணரல் வேண்டும்.

ஆரம்ப காலத்தில் கூச்சசுபாவமுடன் எவருடனும் பழகாத பலர் அவர்களது ஆசிரியர்களால் இனம் காணப் பட்டு அவர்களை முன்னுக்குக் கொண்டு வந்தமையையும் பின்னர் அந்த மாணவர்களே தேசத்தலைவர்களாக, விஞ்ஞானிகளாகத், தொழில் அதிபர்களாக மாறிய சரித்திரங் களும் உண்டு. சூழ்நிலைகளின் தாக்கங்களால் திசை மாறியவர்களும் பின்னர் தம்நிலை உணர்ந்து வளர்ந்த கதைகள் ஏராளம், ஏராளம்!

உற்சாகத்தை, விழிப்பு நிலையை உருவாக்கினாலே




RangaRakes
Tamilnavarasam.com

போதும், மனிதன் எதிர்பாராத எழுச்சி பெற்று மாமனிதனாகி விடுவான். சின்னப்பொறியினால் ஒருதீபம் ஒளிபெற்று, முழு வீட்டுக்கும் ஒளியை வழங்குகின்றது. திறமைகளை ஒருவன் வெளிக்கொணர, அவனை உற்சாகப் படுத்தல் ஒரு தெய்வீகப் பெரும்பணியாகும். உலகத்திற்குச் சேவைசெய்வது என்பது, எமது பரந்த இதயத்தினூடாக என்பதை முதற்கண் நாம் நோக்கு வோமாக! எல்லோரையும் சந்தோஷத்துடனும், முழு வல்லமை பெற்றிட வைத்திருத் தலே, பவித்திரமான எம் பணியுமாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
23.03.2008







# மறைத்தல்

மறைக்கப்பட வேண்டிய விஷயங்களும், மறைக்கக்கூடாத விஷயங்கள் பல இருந்தாலும், இவைகளின் தாத்பரியத்தை உணர்ந்து செயலாற்ற வேண்டும். கண்டபடி உளறுதல் ஏற்புடையதல்ல. உண்மைகளை மறைத்தல் பாவகரமானது. மறைந்துநின்று பிறருக்குத் தொல்லை கொடுப்பவர்கள், இறைவனின் கோபத்திற்காளாவர். சட்டவிரோதச் செயல்களைச் செய்பவர்களைப் பகிரங்கப்படுத்துதல் வேண்டும். தனிப்பட்ட ஒருவரின் அந்தரங்கங்களைத் துழாவுதல் அநாகரீகம். குழந்தை மனத்துடன், எவ்வித மறைத்தலுமின்றிக், களங்கமின்றி வாழ்வதே ஒரு கொடை.

மறைக்கக் கூடாத விஷயங்களை மறைத்து வைத்தும் மறைக்கப்பட வேண்டிய விஷயங்களை மறைக்காமல் பகிரங்கப்படுத்துவதாலும் ஏற்படுகின்ற விபரீதங்களும் எதிர் கொள்ளும் பிரச்சனைகளும் சொல்லிட முடியாது.

ஒவ்வொரு தனிமனிதன் வாழ்வில் மட்டுமல்ல பெரிய



RangaRakes
Tamilnavarasam.com

அரசு நிர்வாகத்திலும் கூட மறைக்கப்பட வேண்டிய விஷயங்கள் மறைக்கப்படாமல் விட்டால் தனிமனித வாழ்வும் தழும்பிப்போகும், அரசாங்கங்களும் ஸ்திரமற்ற நிலைக்குள் தள்ளுண்டு போய்விடும்.

இதேசமயம், மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டிய சங்கதிகளை மூடிமறைப்பதால் ஈற்றில் மக்கள் ஆட்சி செய்யும் அரசுகளில் சந்தேகம் கொள்வதும் எதிர்க் கட்சிகளின் கேள்விக் கணைகளுக்கு, முகம் கொடுக்க இயலாது தவிப்பதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆனால், எந்த ஒரு நாடோ, வல்லரசோ இராணுவ பாதுகாப்பு இரகசியம் சார்ந்த விஷயங்கள் அனைத்தையுமே பகிரங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை. தமது நாட்டுப் பாதுகாப்பு இரகசியங்களை மறைமுகமாக வேறு நாடுகளுக்குத் தெரிவிப்பதே இராஜ துரோகக் குற்றமாகிவிடும்.

நவீன கண்டு பிடிப்புகளின் பயன் முழு உலகத்திற்கும் பயன் தரத்தக்கதாயின் அவைகள் மக்களுக்குச் சேர வேண்டியதே. ஆயினும் இன்னமும் பல தொழில் நுட்ப ரகசியங்களை மறைத்து வைப்பதில் எல்லா நாடுகளும் முனைப்பாகவே இருக்கின்றது. இவையெல்லாம் தொழில் ரகசியங்கள். கொக்காகோலா குளிர்பானம், கணினிக்குரிய உதிரிப்பாகங்கள் போன்றவைகளை எப்படி உற்பத்தி செய்வது என்பதைப் பத்திரிகைகளில் போட்டு உடைத்தால் அப்புறம் இந்தப் பொருட்களைச் சந்தைப்படுத்துவது எப்படி?





சாதாரண சமையல் செய்யும் விதத்தைக் கூடப் பக்கத்து வீட்டிற்குச் சொல்லித்தரச் சிலர் சம்மதிப்பதில்லை. எமது நாட்டின் பண்டைய சுதேச வைத்திய முறைகள் பலவற்றை பகிரங்கமாக மற்றவர்க்குச் சொல்லித்தராமல் மறைத்து வைத்தமையால் இன்று எமக்கு இந்த அபூர்வமான வைத்திய முறை பற்றிப் பூரணமாகத் தெரியாமல் போய்விட்டது.

காலம் மாறி விட்டது. இப்போது மருத்துவக்கல்வி அனைவர்க்குமாகிவிட்டது. முன்னர் வைத்திய பரம்பரையைச் சார்ந்தவர்கள் மட்டுமே வைத்தியம் செய்து வந்தனர். இன்று இந்நிலை மாறி விட்டதால் சாதாரணமாக எல்லோருக்குமே இக் கல்வி பொதுவாக்கப் பட்டமையால் தான் நவீன சுகாதாரம் தொழிநுட்பங்கள் சம்பந்தமான கண்டுபிடிப்புகளின் பயன்களை நாம் பெற்று வருகின்றோம்.

இன்று ஒருவரை ஒருவர் பூரணமாக நம்புகின்ற நிலையில் இல்லை. இந்த லட்சணத்தில் நேச நாடுகள் கூட ஒன்றை ஒன்று உறவுடன் இருப்பதாகக் கூறி ஒன்றை ஒன்று கழுத்தறுக்கும் நிலையில் தான் காரியமாற்றுகின்றன. அதி புத்திசாலிகளான உளவாளிகளை சகல வல்லமையுள்ள வல்லரசுகளும் நியமித்து ஏனையநாடுகளின் மறைப்புக்களை, ரகசியமாக ஒட்டுக்கேட்டும், எங்கே திரைவிலகுகின்றது. அங்கே ஏதாவது தெரிகின்றதா என உன்னிப்பாகப் பார்த்து, இரைதேடுகின்றன. இந்த விடயத்தில் நியாய, அநியாயங்கள் பற்றிப் பேச எவர்க்குமே துணிச்சலும் இல்லை, தகுதியும் இல்லை.



RangaRakes Tamilnavarasam.com

தங்கள் நாட்டைப் பலப்படுத்தல் என்பது மற்ற நாடுகளை வலிமை குன்றப்பண்ணுதல் அல்லது நயவஞ்சமாக முதுகில் குத்துதல் என்பதே அரச நீதியாகிவிட்டது. கௌடில்யன் என்கின்ற சாணக்கியன் தனது அர்த்த சாஸ்திரம் என்கின்ற நூலில் அரசாங்கத்தை வலிமையாக்க அரசன் செய்ய வேண்டிய சூழ்ச்சிகள்பற்றியும், அதன் மீதான நியாயத்தன்மைகளை நன்கு விபரமாகக் கூறியுள்ளார். சூழ்ச்சி, வஞ்சனை, அடுத்துக் கெடுத்தல் போன்றவை முற்காலத்தில் இருந்தே அரச லட்சணமாகி விட்டது. இந்த பாரம்பரிய குணாம்சங்கள் படிப்படியாக வளர்ந்து இன்னமும் உலகை ஆட்டுவித்தபடியே இருக்கின்றது.

மறைந்து நின்று மறைத்துச் செய்யப்படும் கைங்கரியங்கள், நாடகங்களை யார் அறிவார்? அரசியல் தலைவர்கள், கல்விமான்களின் இழப்புகளின் மர்மங்கள் இன்னமும் உலகிற்குத் தெரியாத இரகசியங்கள் தான். சரி முடிந்து போனபின் ஆராய்ந்து என்னதான் செய்வது? இதன் பலாபலன்களைக் கூடிப்பேசி துக்கப்பட்டுச் சோர்ந்து போனால் எவ்வித லாபமும் இல்லை. எதிர் விளைவுகளை உலகம் அனுபவிக்க வேண்டியதே.

இன்று வீடுகளில் நடக்கும் சின்ன விஷயங்களைப் பாருங்கள். கணவனுக்குத் தெரியாமல் மனைவி தனது குடும்ப உறவினர்களுக்கு உதவி செய்வதும், மனைவிக்குத் தெரியாமல் கணவன் அதே பாணியில், தனது உறவினர், பெற்றோர்களுக்கு உதவிகள் செய்வதும் பின்னர் விஷயம்





வெளியே தெரியவர குடும்பத்தில் குழப்பம் சூழ்வதும் சர்வ சாதாரணமாகி விட்டன. உள் வீட்டுவிஷயங்கள் எல்லாமே அடுத்தவர்களுக்குத் தெரியப்படுத்துவதால் அக் குடும்பங்கள் கேலிக்குரிய ஒன்றாகிவிடும்.

கணவன், மனைவி வெளிப்படையாக பேசுவதில் இருந்து விலகுவதும் இருவரும் தங்கள் பிரச்சனைகளையே முதன்மைப் படுத்துவதும் விட்டுக் கொடுக்காத மமதையுடன் செயல்படுவதாலும், ஈற்றில் பெரும்துன்பங்களையே இவர்களுக்கு ஏற்படுத்தி விடுகின்றன.

வீட்டில் பிள்ளைகள் பெற்றாரின் பிரச்சனைகளுள் சிக்குண்டு போவதும் அவர்களும் பெற்றோர் போலவே எல்லா உண்மைகளையும் மறைத்துத் தமது இஷ்டம் போல் வாழத் தலைப்படுவதும் இயல்பாகிவிட்டது. ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கையீனமாக நடப்பதும் குற்றம் சுமத்துவதும் சந்தோஷமான வாழ்க்கையை அமைத்து விடுமோ?

கணவன்,மனைவி,பிள்ளைகளிடையே எல்லா விடயத்திலும் ஒளிவு மறைவு எதற்காக? பணவிடயத்தில் கணவனுக்குத் தெரியாமல் மனைவியும், மனைவிக்குத் தெரியாமல் கணவனும் சேமிப்பதாக குற்றச்சாட்டுதல் கூறி பல குடும்பங்களில் மனஸ்தாபங்கள் ஏற்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நம்பிக்கையீனம் என்பது எவர் மனத்துள்ளும் விதைக்கப்பட்டால் அப்புறம் நடக்கும் அனைத்துமே விபரீதமாகவே அர்த்தம் கொள்ளப்படும்.



RangaRakes
Tamilnavarasam.com

நான் வெளிப்படையாகப் பேசுபவன் என்று சொல்லிக் கொள்ளும் சிலர் "கோள்" சொல்லித்திரிவார்கள். எனது மனதில் ஒன்றும் இல்லை எனச்சொல்லி அடுத்தவன் பற்றி தான் அறிந் தவற்றை எல்லோரிடமும் சொல்லித்திரிய அவர்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது?

மேலும், எவரது சொந்த விஷயங்களை ஆராய்வது, அதன் பொருட்டு ஆராயப்படுபவர்களின் வாழ்க்கையே பாதிப்படைவது தெரிந்தும் கூட இத்தகைய செயல் புரிபவர்களை மன்னிக்கத்தான் முடியுமா? தனது சொந்த விஷயங்களை மறைத்து பிறர் விஷயங்களைப் பகிரங்கப்படுத்துபவர்களின் வாழ்க்கையோ மிகவும் கேலிக்குரியதாகவும் இருக்கலாம்.

தெரிந்த ரகசியங்களைச் சொல்லித்திரிந்து, அதனால் தேவையற்ற பிரச்சனைகளைச் சுமப்பதைவிட "மௌனம்" காப்பதே மேலானதல்லவா? சிலருக்கு ஏதாவது விஷயம் தெரிந்துவிட்டால் அதனை யாரிடமாவது சொல்லாது விட்டால், உறக்கமே வந்துவிடாது. வீட்டு விஷயங்களைக் கூட மற்றவரிடம் சொல்லியேயாக வேண்டும் எனத் துடியாய் துடிப்பவர்களும் இருக்கின்றார்கள்.

களங்கமில்லாதவர்கள், அப்பாவித்தனமாக, சொல்லக்கூடாத விஷயங்களைக்கூட உளறிவிடுவார்கள். அவர்களின் பேச்சையே தூக்கிப்பிடித்து ஆதாயம் தேட முயல்பவர்களின் செயல்கள் படுபாதகமானவையே.



RangaRakes



கூடிய வரை நாம் கேட்கத்தகாத பேச்சை பிறர் ரகசியங்களைச் கேட்காமல் தவிர்ப்பதே நாகரீகமானதாகும். கூட்டம், கூட்டமாக எவரையாவது கிண்டலடித்து அவமானப் படுத்தினால் அந்த இடத்தை விட்டு, விலகுதலே புத்திசாலித்தமானது. யாரைப்பற்றியாவது அவர்கள் இல்லாத போது அலசி ஆராய்வதே சுவாரஸ்யமான பொழுது போக்கு எனச்சிலர் கருதுகின்றார்கள். வேண்டு மென்றே பிறரை இனம் காண விழைவது குற்றங்களை அவர்கள் மீது புனைவது, எல்லாமே தன்னைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பாமல் மறைக்கும் ஒரு செயலாகவும் இருக்கலாம்.

மேலும், ஒருவர் பற்றிய மறைந்து போன பல இரகசியங்கள் புதையுண்டு அவர் சிக்கலின்றி நிம்மதியாகச் சீவித்துக் கொண்டிருக்கும் போது, மற்றய ஒருவர் எதுவித சம்பந்தமும் இன்றி, புதையுண்டு போன இரகசியங்களை மீண்டும் உயிரூட்ட எத்தனித்துத் திருப்திப்படுவதுமுண்டு.

சட்டவிரோதமான, சமூகத்திற்குக் குந்தகம் விழைவித்தோர் கண்டு பிடிக்கப்பட்டேயாக வேண்டும். ஆனால் கண்ணியமான சாதாரணமான ஒரு நபரின் கடந்த கால சோகங்கள், மறைத்து வைத்த விஷயங்களை,மீண்டும் உயிர்ப்பித்து அவரை மீண்டும் ஸ்தம்பிக்கச் செய்வது மிகவும் கீழ்த்தரமான கருமம்தான் அல்லவோ?

மிகவும் பிரபலங்களாக இருப்பவர்களின் அந்தரங்கங்களை வெளிச்சத்திற்குக்கொண்டு வரும் பணியினை



Tamilnavarasam.com

ஊடகங்களும், பத்திரிகைகளும் கணினி வலையமைப் பினூடாகவும் பல தகவல்களை தினசரிகள் வெளியிட்டுக் கொண்டேயிருக்கின்றன.

எனினும், தேவையற்ற அநாவசியமான, ஆபாசமான விஷயங்களும், ரகசியங்களை, அம்பலமாக்குகின்ற போர்வையில் வெளிக் கொணரப்படுவது அபத்தமானது. யாரோ ஒரு பெண் குளிப்பதையும், எவருடைய உடை விலகி இருப்பதையும் அப்படியே அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டுவது மனித நாகரீகமே வெட்கப்படும் செயலன்றோ!

குளிப்பதும், உடை மாற்றுவதும், சேலை விலகுவதும் என்ன அதிசயம்? இதுவெல்லாம் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகள். ஆபாசமூலம் பரபரப்பைக் காட்டிக்காசு தேடும் கருமம் தானே அன்றி, இது உலக நன்மைக்காகவா காட்டப்படுகின்றது?

மேலும் செல்லிடத் தொலைபேசிகளுடாக குறும் தகவல்கள் பலரால் கேட்பாரின்றி அநாவசியமாக ஆபாச மாக நோக்குடன் பரிமாறப்படுவதால், பலரினதும் வாழ்க்கை இதனால் பாதிக்கப்படுவதையும், நீங்கள் அறிவீர்கள்.

ஒருவரை வீழ்த்தி அழிப்பதற்காக மறைக்க வேண்டிய விஷயங்களை, அம்பலப்படுத்துவதன் மூலம் கீழ்த்தரமான திருப்தி காணுவது கொடூரமான வன்செயல்தான்.





ஒருவரின் சமூகசேவையுணர்வை, அரசியல் துறை வளர்ச்சிகளை, அல்லது அவர் தம் கலைத்துறைச் சேவை களுக்குக் குந்தகம் ஏற்படுத்துமாற்போல் கண்டபடி தகவல்களை பரகசியமாக்குவோர் தங்கள் வாழ்வில் இது போல் சம்பவங்கள் நடப்பதை கிஞ்சித்தும் அனுமதிப் பார்களா என்ன?

குழந்தை மனத்துடன் நாம் வாழவேண்டும் என்பார்கள். களங்கமற்ற சிரிப்புடன் உண்மையான மன உணர்வுடன் குழந்தைகள் போல எம்மால் சீவிக்கமுடியுமா?

ஒளிவு மறைவற்ற குழந்தைகளின் சாட்சியத்தை நீதி மன்றங்களே ஏற்றுக்கொள்கின்றன. சின்னக் குழந்தை களுக்குக்கூடச்சிலர் பொய்பேசக் கற்றுக் கொடுக்கின் றார்கள். வெளிப்படையாக பேசும் பிள்ளைகளிடம் எப்படிப் பொய்யாகப் பேசுவது, மறைத்துச் செயல்படுவது என்று துர்ப்போதனைகூறும் பெற்றார்களை நீங்கள் கண்டிருப் பீர்கள். விளையாட்டுக்காயினும் பொய்பேச, அல்லது உண்மைகளை மறைத்துப் பேச வாய்ப்பளிக்கவேண்டாம். தகாத காட்சிகளை அவர்களுக்குக் காட்ட வேண்டாம். தகாத பேச்சை அவர்கள் முன் பேச வேண்டாம். நல்ல சொற்க ளையே பேச வைத்து, அதைக் கேட்டு பேரானந்தம் அடை வீர்களாக!

தங்கள் நெஞ்சத்தில் உள்ள காதலை சொல்லாமல் மறைப்பதாலேயே பெரும்பாலான காதல் செத்து விடு



RangaRakes
Tamilnavarasam.com

கின்றன. காதலைத் தெரிவிக்காமல் உள்ளுக்குள் புதைத்து வைத்தல் போன்ற துன்பங்கள் வேறில்லை.

ஆண், பெண் இருபாலருமே தமக்கு ஒருவர்மேல் ஒருவர் பிரியம் ஏற்பட்டால் அதனை ஏற்பதோ அன்றி ஏற்காமல் விடுவதோ அது அவரவர் இஷ்டமாகும்.

உங்கள் காதலை என்னால் ஏற்கமுடியாது என்று கூறினால் எதுவித தப்புமில்லை. காதலை ஒருவன், அல்லது ஒருத்தி தெரிவித்தால் அது ஒன்றும் ஒருவரது கௌரவத்தைப் பாதிக்கும் விஷயமும் இல்லை. சொல்லாமல் கொள்ளாமல், மனதினுள் புளுங்கிச்சாவதும், சில சமயம் அதுவே வினையாகி வாழ்வே கசந்து, வீணாகிப் போவதுமுண்டு வெட்கப்பட்டவர்கள் காதலிக்க முனைவதே சாத்தியமற்றது. காதல் கொள்வது என்பது வெட்கப் படத்தக்கதும் இல்லை. நெஞ்சத்திற்கு மூடிமறைக்கத் தெரியாது. இவையெல்லாம் இயற்கையான நெஞ்சத்து உந்துதல்கள்.

மேலும், ஒருதலைப் பட்சமாகக் காதலித்துவிட்டு தாங்கள் ஒருவரையொருவர் காதலித்ததாகப் பிரசாரம் செய்வது ஒரு மோசடிச் செயல்தான். விடுபட்டது. எல்லாமே கிடைத்துவிடாது. கிடைக்காத விஷயங்களை விட்டு விடுதலே சாலச் சிறந்தது.

இன்று உலகின் பொருளாதாரத்தையே நாசமாக்கும் பெரிய பங்கினை கறுப்புப் பணம் வைத்திருக்கும்





பணக்காரக் கும்பல்கள் செய்து வருகின்றன. வேறு யாராவது பெயர்களில் பணத்தைச் சேமிப்பதும், வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை வைப்பீடு செய்வதையும் யாவருமே அறிவர்.

செல்வத்தை மறைத்து, அரசாங்கங்களை ஏமாற்றி விடுவது, ஒட்டு மொத்தமாக மக்களின் வாழ்க்கைத் தரத்தையே குறைக்கும் தவறான செயல்தான். இன்று கணக்கிட முடியாத பணங்கள் மறைத்து வைத்துச், சட்டத்தை ஏய்ப்பவர்களை இனம் கண்டு கொள்ளாதுவிடின் நாம் என்னதான் பொருளாதாரத் திட்டங்கள் தீட்டினாலும் அவைகளால் முழுமையான பயன்பாடு கிடைத் திடுமா? ஒவ்வொருவரின் வாழ்க்கைப் பாதைகள் சீராகச் சென்றால்தான், அனைத்து உலக ஷேமங்களுமே, எந்தவித முட்டுக் கட்டைகளுமின்றி, பிரகாசமாக மிளிரும்.

எங்களை மறைத்து விடுதலால், உண்மைகள் கவிழ்ந்து விடாது விழித்து எழுந்து, துணிந்து வாழுதற்கு மற்றயோர் எம்மிடம் குறைகாண விழையாதபடி நாம் வாழ்ந்து காட்டுதல் வேண்டுமல்லவா? குறைகள் இல்லாத மனுஷன் இல்லை. குறைகளை அறிந்து அதனில் இருந்து விடுபட்டு எழுதலே, மனித முயற்சியுமாகும். உறுதியுடன் வாழ எண்ணுபவர், மறைந்து, ஒளிந்து வாழவேண்டிய அவசியமும் இல்லை.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
09.03.2008



RangaRakes
Tamilnavarasam.com



# திடசிந்தனை

காரியசித்திக்கு நேரிய திடசிந்தனையுடன் கருமமாற்றுதல், எமக்கான பாரிய பொறுப்பாகும். நினைத்த காரியங்கள் உடன் முடிந்துவிடாதிடினும், திட சிந்தனையுடன், தொடர்ந்து முன்னெடுத்தால் நிச்சயம் வெற்றி கிட்டும். அற்புத ஆற்றல் எவர்க்கும் உண்டு. அவைகளைப் பயன் படுத்தாமல் இருப்பது எமது தவறு. நல் எண்ணங்களைக் கொண்டிராதவர்களின் "ஆன்ம சக்தி" வீண்விரயமாகின்றது. நல்ல கருமங்களைச் சந்தோஷமுடன் ஆரம்பிக்கும்போது சிந்தனை வலுப்பட்டு, முரண்பாட்டு எண்ணங்களே தகர்த்தெறியப்படுகின்றன. நற்சிந்தனைக்குச் சோர்வில்லை. திடநம்பிக்கையை அது ஊட்டும்.

எடுத்த கருமத்தை எத்தகைய இடர்கள் தொடரினும், அதை உடைத்து நியாயபூர்வ வழிகளில் முழுமையாகச் செயற்படுத்துதற்கு "திடசிந்தை"யினை எம்முள் பதிப்போமாக!

காரிய சித்திகளுக்கு, பாரியளவு உழைப்பிற்கான





தூண்டுதலை திடசிந்தனையூட்டாகப் பெற்றுக்கொள்வோம். தெளிந்த, திட சிந்தையுடன் உழைத்த பெருமக்களால் தான், இந்த உலகமக்கள் இன்னமும் அளப்பரிய பயன்களைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். உடல் உழைப்பை நல்காது, பயனற்ற போலியான கற்பனைகளை வளர்ப்பது நல்ல திட சிந்தனையுள் எம்மைப் புகுத்தி விடாது.

மேலும்,ஒவ்வொரு பிரஜையின் நலமூட்டும் செயல்பாடுகள் அவர்களது உடல் உழைப்பினால் மட்டுமல்ல, அவர்தம் உள்ளத்தின் ஆளுமைமிக்க எண்ணங்களின் வலிமையினாலும் ஸ்திர மாக்கப்பட்டன என நாம் உணர்வோமாக!

நாம் நினைத்த சகல காரியங்களுமே சுலபமாக முடிந்து விடுவதில்லை. சிலசமயம் அதிஷ்டவசமாக நாம் எதிர்பார்காமலேயே பெரிய கருமங்கள் சுலபமாகவும் மிகவும் சிக்கலற்ற சின்ன விஷயங்களும் அதனைச் செயலாக்கும்போது, எதிர்பாராத கஷ்டங்களை உருவாக்கி விடவும் கூடும். எந்த ஒரு கருமத்தையும் அதனுடன் தொடர்பு கொண்ட அனுபவஸ்தர்கள் மூலம் பகிர்ந்து கொண்டால், எமது சிந்தனைத்திறன் புதுப் பொலிவுடன் மிளிர்ந்துவிடும்.

"நான் எல்லாவற்றையும் செய்து முடிப்பேன்" என்கின்ற திடசிந்தனை வரவேற்கத்தக்கதே! அதன் பொருட்டு "எவரது பேச்சையும் அவர்களின் உதவியையும்



RangaRakes

Tamilnavarasam.com

பெற்றுக்கொள்ள மாட்டேன்" என அடம் பிடிப்பது, அவர்களது மனவிசாலத்தைக் குறுகியதாக்குகின்ற நிலைக் குட்படுத்தி விடும். நல்ல கருத்துக்களை ஏற்கமறுப்பதால் ஏற்படும் சிரமங்களும், அதனால் எடுத்தகாரியத்தில் பயனின்றி கடந்து வந்த பாதையின் பின்னே பல தூரம் பின்னடைய வைத்துவிடலாம்.

எந்த ஒரு விடயத்தைக் கையாளு முன்னர், அதுபற்றி நன்கு தெரிந்து தெளிந்த பின்னர் செயல்களில் ஈடுபட முனைந்தால் "திடசிந்தனை" எம்முள் கிளர்ந்து எழுந்து அசைக்க முடியாத ஒரு தன்னம்பிக்கையை ஏற்படுத்திவிடும்.

தவறான செய்கையைச் செய்ய முனைதலும், எவருக்காவது கேடுகள் விளைவிப்பதற்கான முயற்சிகளின் பொருட்டு, மனதைச் செலுத்தி அசட்டுத்தனமான வைராக்கியத்தை ஏற்படுத்துதல் அடுக்காத செயல். ஒருவனுக்குச் சேரவேண்டி யதைத் தடுத்தல், மற்றவர் குடும்பத்தைக் கெடுத்தல், உறவுகளைச் சிதைத்தல், உண்மைகளை மறைத்தல், பிறர் கௌரவங்களை அவமதித் தல் போன்ற செயல்களுக்காகத் திட சங்கல்பம் செய்யும் பிரகிருதிகள் ஈற்றில் உண்மை எனும் பெரும் ஜுவாலை க்குள் பஸ்பமாகிவிடுவர்.

சூழ்ச்சிகளும் உருட்டுப் புரட்டு நாசகார வேலைகளுக் குமாகத் தமது அறிவைக் கெடுத்து, ஆக்ரோஷமாகத் தீவிர முயற்சி எடுப்பது நல்ல திட சிந்தை அல்லவேயல்ல.

"மன உறுதியுடன் செயல்படுதல்" என்பது நல்ல





மனத்துடன், நல்லன செய்ய உறுதி பூணுதல் என்பது மட்டுமேயாம்.

நல்ல கருமங்களை நாம் செய்ய முற்படும் போது, ஏற்படுகின்ற தடங்கல்கள், முரண்பாடுகள் வேதனைகள், யதார்த்தமானவைகளே.மேலும் கருமங்களை நாம் விருப்புடன் செய்யும் போது அதன் மீது, வெறுப்புணர்வுகள், இயலாமை, மனப்பீதி, சஞ்சலம் என்கின்ற பேச்சிற்கே இட மில்லை. சும்மா இருந்தபடியே நாம் எல்லா பயன்களையும், பெற்றுவிட வேண்டும்எனஎண்ணுதல் நியாயமாகுமா?

ஒவ்வொருவரும் தமது அன்றாட கடமைகளை எவ்வித தடங்கல்கள், சோம்பல் இன்றிச் செய்து முடித்தாலே, அவரிடம் உற்சாகம், உத்வேகம் முகிழ்ந்தெழுந்து விடுகி ன்றது. இந்த நிலையே ஒருவரை, எக்காரியங்களையும் செய்து முடிப்பேன்! என்கின்ற திடசங்கல்பத்தை ஏற்படுத் தியும் விடுகின்றது.

சிலவேளை நாம் சகல கருமங்களையும் செய்து, பூரணப்பட்ட நிலையான மனோ நிலையில் இருக்கின்ற போதே, புதிதான ஒரு வேலை எம்முன்னே பூதாகரமாக உருவெடுப்பதுமுண்டு. இந்தவேளை நாம் எடுக்கும் வேலைகளைப்படிப் படியாக, ஒரு திட்டமிட்ட வடிவமைப்பில் செய்து வந்தால், எந்தவித சிரமமும் ஏற்படுவதில்லை. தவிர எடுத்த எடுப்பிலேயே உணர்ச்சி வசப்பட்டு, வேலையின் பளுபற்றி சிந்திக்காது நாமாக ஆத்திரப்பட்டு அவைகளைக் கண்டபடி கையாள எத்தனிக்கும் போது, செய்கருமங்களில்,



RangaRakes
Tamilnavarasam.com

பாரிய சிக்கல்களும் எழுந்து விடும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஒரு சாதாரண விஷயத்திற்காக, பெரிதாக அலட்டிக் கொள்வதாலேயே எமது மனோ நிலையில் தளர்வு ஏற்பட நாமே இடம் கொடுத்தவர்களா வோம்.

தனிப்பட்ட பிரச்சனைகள் தேக அசௌகரியங்கள், போன்றவை எமது பணிகளைப் பாதிப்படையச் செய்யலாம். எனவே இவைகளின் தன்மையறிந்து, இவைகளை தீர்க்க முயற்சி செய்ய வேண்டும். மேலும் தேகசுகம் பற்றிய கவனம் எடுக்காமல் நாம் எக்காரியங்களையுமே மன லயிப் புடன் செய்வது சாத்தியப்படாததொன்றாகும். சாதாரண தலையிடி, காய்ச்சல்கூட எம்மன நிலையைப் பாதிக் கின்றதே! எனவே. இதுவிடயத்தில் எம்மை முதலில் சுகதே கியாக வைத்துக் கொண்டே, கருமங்களைச் சிரத்தையுடன் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

“சோதனைகள் வந்தாலே வேதனை” என எண்ணிக் கொண்டால் மனிதன் சாதனை படைப்பது எப்போது? மனித வாழ் நாட்கள் சொற்பமானது என்று சொல்வார்கள். இந்த வாழ்நாட்களில், நாம் இன்றைய பொழுதிற்காக வாழ்வது மட்டுமல்ல, எதிர்காலத்திற்காகவும் நம்மை நம்பிய நம் உறவுகள், சமூகத்திற்காகவும் உலக ஷேமத்திற்காகவும் வாழ்ந்து சாதனைகள் படைக்க வேண்டி யுள்ளது.

எமது செயலை வலுவூட்ட திடமான மன உறுதியுடன் செயல் திட்டங்களை ஆய்ந்து ஒரே திசையில் மனதைச்





செலுத்தியபடி இருக்க வேண்டியது அவசியமாகின்றது. எமக்குள்ள காலத்தின் அளவைவிட, செய்கின்ற கடமைகள் பாரிய அளவினதாக அமைத்துக்கொள்ள எம்மை நாம் நெறிப்படுத்துவோமாக! மறைந்த பல தலைவர்கள், ஆன்மீக ஞானிகள், கலைஞர்கள்,கவிஞர்கள் பலரும், தமது இளவயதிலேயே பெரும் சாதனைகளை செய்துவிட்டுப் போயினர்.

காலத்தின் அளவை வைத்துச் சாதனைகளை அளவிடமுடியாது. எந்த வயதில் எத்தகைய சாதனைகளைச் செய்தாலும் உலகம் அதனைத் தலைவணங்கி ஏற்றுக் கொண்டேயிருக்கின்றது.

தனது இருபத்திநாலாவது வயதிலேயே, மகா அலெக்சாந்தர் மாபெரும் வெற்றித் தலைவனாகிவிட்டார். புரட்சிக் கவிஞர் பாரதியார் தமது முப்பத்து ஒன்பதாவது வயதிலேயே இந்த உலகிற்கான அற்புதக் கவிதைகளை ஈந்துவிட்டே சென்றார். துணிச்சலும் திட சிந்தனையும் இருந்தால் எந்தச் சாதனைகளை த்தான் செய்ய முடியாது ஐயா!

மிகச் சாதாரண குடும்பத்தில் பின்தங்கிய சிறு கிராமத்தில் பிறந்த அப்துல்கலாம் என்கின்ற சிறுவன் உலகம் வியக்கும்அணுவிஞ்ஞானியாகத் தன்னை உருவாக் கியது எங்ஙனம்? சோர்வு அற்ற உழைப்பு, நேரிய சிந்தனை, உண்மையான நடத்தை நெறிகள் எல்லாமே கூடியுள்ளமை

யினாலே அவர் விஞ்ஞானியாக, இந்திய உபகண்டத்தின் ஜனாதிபதியாகவும் அவரை மிளிர்ந்து உயரச்செய்தது நல்ல ஒழுக்கம் இன்றேல், நாம் நினைத்த வண்ணம், எச் செயல்களையும் செய்து முடிக்க இயலாது. ஒழுக்கம் என்கின்ற அத்திவாரத்தின் மேல் தான் எம்மால் உருவாக் கும் எதனையும் வல்லமையுடன் ஸ்திரமாக்கப்படும்.

எப்போதுமே உல்லாசமாக இருக்கவேண்டும் என்கின்ற நினைப்புடன் இருப்பவர்கள் முதலில் முழுமூச்சாக உழைப்பினை நல்கிடவும் தயாராக இருக்க வேண்டுமல்லவா? உயரிய நல்ல பழக்கங்களுடன் வாழ் கின்ற நல்லோரைப்பார்க்காமல் யாரோ ஒருவர் தீய வழியில், தகாத சம்பாத்தியங்களுடன், செல்வந்தனாக இருப்பதைக் கண்டு ஏங்குதல் சரியா?

மேலும், மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து உயர் நிலையை அடைந்தவர்களைப் பார்ப்பவர்கள், மற்றவர் வந்து தன்னைத் தூக்கியேயாக வேண்டும் என்று ஏன் எண்ண வேண்டும்? ஒருவருக்கு வழங்கும் ஆதரவு, அவருக்கான நல்ல வழிகாட்டலாக இருத்தலே சாலச்சிறந்தது.

சகல வளத்தையுமே இலவசமாகப் பெற்றுக் கொள்பவன் தூங்கிக்கழிப்பதற்கே தனக்கு வழி கிடைத்ததாக எண்ணிக் கொள்கின்றான். சோம்பி வாழுதற்கு காலத்தைத்தேடுதல் போல், அநாகரிகமானது வேறில்லை.சோம்பேறிகளுக்குச்சிந்தனை வளமும் இல்லை,முதுகு நிமிர்ந்து எழவாய்ப்பும் இல்லை. மனதால்





பக்குவப்படுதலுக்கு உடல் உழைப்பும், சத்தியம், தர்மம் மேல் பற்றுதலும் முதற்கண் அவசியமானது.

எந்த நல்ல நோக்கிற்காகவும் ஒருவர் செய்கின்ற காரியம் தோல்வியடைந்தாலும் அவர் கவலைப்படுதல் இயல்பே. செய்யப் புகுந்த கருமத்துடன் முழு ஊக்கத்துடன் செய்தும் கூட அது பயனளிக்கவில்லை எனில், துயரடையத் தேவையில்லை. தார்மீக ரீதியில் ஒருவர் தன் மனச் சாட்சி யின்படி முயன்று தோற்றாலும் கூட அது அவரை ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் உயர் நிலைக்கு இட்டுச் செல்ல வாய்ப்பு அளிக்கும்.

ஒரு விவசாயி பல முறை முயன்று விவசாயம் செய்தும் கூட அவருக்கு லாபம் எதிர்பார்த்த அளவில் கிடைக்கவேயில்லை. அவர் சற்றும் மனம் தளரவேயில்லை. பணம்தான் விரயமாயிற்று. திடீர் என அவருள் ஒரு சிந்தனை உதித்தது. "நான் ஏன் விவசாயச் செய்கையில் தோற்றுப் போனேன்" என எண்ணி அதற்கான காரணங் களை ஆராய்ந்தார். தனது அனுபவங்களைத் தொகுத்து பெரிய நூலாக்கி வெளியிட்டார். என்னே அதிசயம்!, அவரால் வெளியிடப்பட்ட நூலை விவசாயிகள் ஆர்வமுடன் வாங்கிப் படித்தார்கள். அவர் தமது விவசாயத்தின் மூலம் அடைந்த நஷ்டங்களை சற்றும் எதிர்பாராத வகையில் தமது நூல் விற்பனை மூலம் பெற்றுக் கொண்டார். முயற்சியுடைய வர்களுக்கு சாதனையாளர்களுக்குச் சோகப்பட நேரம் இல்லை. வேகமும் விவேகமுமே இவர்களுக்குத்துணை!... இவர்களுக்கு எதிராகப் புறப்படும் சவால்கள் எல்லாமே



RangaRakes
Tamilnavarasam.com

ஒதுங்கி வழிவிட்டேகும். துன்பங்களால பெற்ற வெற்றியின், பின்னர் ஏற்படும் களிப்புக்கு நிகரேது?

சில பேர்வழிகளைப் பாருங்கள்!. தங்களது தோல்விகளுக்கு ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆனால் சிலர் தமது காரியம் சரியோ, பிழையோ, ஏதாவது செய்து கொண்டே யிருப்பார்கள். இந்த நிலையில் வாழ்பவர்களால்தான் ஒருதிடமான எண்ணங்களைக் காலப் போக்கில் உருவாக்க முடியும். சும்மா படுத்துக் கிடப்பவரைப் பார்த்து ரசிக்க முடியுமா?

ஒருவரைப் பார்த்து அவன் "நிறைவானவன்" என்று சொல்லும்போதே, அவரது செயல், எண்ணங்களின் தூய்மைத்தன்மையால் எம்மையறியாமலேயே அவர் பால் நாம் ஈர்க்கப்பட்டு விடுகின்றோம். திட சிந்தனையுடன் செயல்படுபவனை நம்பிக்கைக்குரிய மனிதராக உலகம் ஏற்றுக் கொள்கின்றது.

சதா உழலும் மனசுடன் தேவையின்றி அலையும் பிரகிருதிகள், எவரையும் நிம்மதியாக இருக்க விடவும் மாட்டார்கள். ஞானிகள், பெரியவர்கள், அரசியல் மூதறிஞர்கள் உதிர்க்கும் ஒவ்வொரு சொற்களுமே, அவர்களது தூய, திடசிந்தனை மூலம் பெறப்பட்ட வைரத்தின் மேலாம் பொக்கிஷங்களாகும்.

நல்நோக்கிலான செயல்களுக்கும்,சிந்தனைக்கும்






உள்நோக்கமான களங்கமோ பிறழ்வுகளோ கிடையவே கிடையாது. கல்லைப்போன்ற உறுதியும்,மென்மையான மணம் கமழும் பூவைப்போன்ற இதயமும் எவரையும் வசீகரிக்கும், அரவணைக்கும். இயல்பான குணநலனுடன் இருப்பவர்கள், தாங்களும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்பார்கள். "திடசிந்தனை" என்பது, இரக்கத்திற்கும், கனிவிற்கும் உடன்பாடானதே! நல்நோக்கத்திற்கான, வலிமைமிகு எண்ணங்கள், முற்போக்கிற்கே வழிகாட்டும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
02.03.2008



RangaRakes

Tamilnavarasam.com



# சுயநலம்

சுயத்தை இழந்து ஒருவன் சீவிப்பது, தன்மானத்தைத் தொலைப்பதே யாகும். சுயநலமூடாகவும் பொது நலத்தைப் பேணமுடியும். ஒருவன் தன்னைப் பலப்படுத்தாமல் எப்படி உழைத்துச் சேவையாற்ற முடியும்? தன்நலமே பெரிதென்று பிறர் துன்பம் கருதாமல் வாழ்வது வீழ்ச்சிக்கான பாதையூடாகப் பயணிப்பது போலாகும். உலகம் பொதுவானது. அது எனக்கு மட்டுமல்ல, என்ற எண்ணம் வலுப்பட்டால் அதீத சுயநல எண்ணம் கழன்று சேவை மனப்பான்மை மனதில் பதியும். உலக ஷேமத்திற்காக எம்மைச் சீராக்கி வளமாக்குவோம்!.

சுயநலம் என்பது தனது நலனை மட்டுமே கொண்டதாகவும் மற்றயோரின் உரிமைகளைப் பறிப்பதும் அவர்தம் நலனை மறுப்பதும் கெடுப்பதும்தான் என்று அர்த்தம் கொள்வது சரியானது அல்ல. ஏனையவர்களுக்கு இடைஞ்சலின்றி தம்மை வளர்ப்பது சிறப்பானதே!





சுயத்தை இழந்து ஒருவன் சீவிப்பது அவரது தன்மானம், சுயகௌரவத்தைப் பாதிப்பதாகவே கொள்ளப்படும். எவரும் தான், தானாகவே இருக்க வேண்டுமே தவிர, மற்றவனாக இருக்க முடியாது. மற்றவர்களின் உயர்ச்சி கண்டு அவர்கள் போல், தம்மை உயர் நிலைக்கு மாற்றலாமே ஒழிய அடுத்தவன் போல் முழுமையாக தோற்றம் காட்டுவதும், நடிப்பதும் பொருந்தாத ஒன்று. சுயமாகச் சிந்தித்துச் சுயமாக வாழ்வது ஆன்ம திருப்தியூட்டும் நிலைதான் எனினும், அத்தகைய உன்னத நிலைக்குள் ஆட்படுத்தும் தன்மை எல்லோருக்கும் பொருந்தி வரக்கூடிய ஒன்றா?

சுயநலம் என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட உரிமைதான். இதுவிடயத்தில் ஒருவர் தன்னைக் காப்பாற்றுதலுக்கும் தன்னைச் சார்ந்தோரைப் பேணுதற்கும் உரிமையுடையவரே. ஆனால் இதன்பொருட்டு தமது கருமத்தை நிறைவேற்ற பிறர் முதுகில் சவாரி செய்வது அடுக்காத செயல். கொலை, கொள்ளைச் செயல்களைத் தமது நலனுக்காகச் செய்து கொண்டே அது மக்களுக்கு நீதி வழங்குதலுக்காகச் செய்கின்றோம் என்று வேறு மனச்சாட்சியின்றிப் போதனை செய்கின்றார்கள்.

ஒருவன் தன்னை வளர்க்காமல்விட்டால் அவன் மற்றயோரை எப்படி வளர்க்கவோ உருவாக்கவோ இயலும் சொல்லுங்கள்? தான் போக வழியில்லாத மூஞ்சூறு விளக்குமாற்றையும் காவ முயல்வது போல் முதலில் தன்னைத்



RangaRakes
Tamilnavarasam.com

தூக்க ஒருவன் முயன்று வெற்றி பெற்றேயாக வேண்டும்.

ஒவ்வொருவருமே தத்தமது வாழ்க்கைக்கான சகல ஆதாரங்களையும்,ஸ்திரமாக்கிக் கொண்டேயாக வேண்டும். ஏராளமான சொத்துக்கள் இருக்கும் செல்வந்தர் நான் பொது நலவாதி என்று சொல்லி, இருக்கும் அனைத்தையுமே ஒரு நாளில் சற்றும் சிந்திக்காது உற்றார், உறவினர், நண்பர்களுக்குக் கொடுத்துவிட்டால் அவரது எதிர்காலம் என்னாவது? வெறும் கதைகளில் இத்தகைய கற்பனைகளை உருவாக்கலாம். யதார்த்தத்தில் எவரேனும் தம் சுய நலத்தை மறந்து இத்தகைய ஈகை செய்ய முன்வந்து நடு வீதிக்கு வரச் சம்மதிப்பார்களா? சில விடயங்களை வாயளவில் சொல்வது எளிதன்றோ!

ஒருவனின் வளர்ச்சி என்பதுவே மற்றவரை முடக்குவது என்று கருதுவதாலேயே இன்று சந்தோஷம் சாதகமின்றித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது.

தனிமனிதனை, சமூகத்தை, நாட்டின் வளர்ச்சியை முட்டுக் கட்டை போட்டு இன்னும் ஒருவரோ அல்லது வேறு சமூகங்களோ இதர நாடுகளோ முன்னேறி விட எத்தனிப்பது தான், தகாத சுயநலனாகும். ஆனால், இந்த வழி நல்லன வற்றைக் காட்டிவிடும். எனத்தப்பு அபிப்பிராயத்தினால் முடிவில் எல்லோருக்குமே அது கெடுதல்களையே காட்டி நிற்கின்றது.





நாம், நாமாகவே உயர்ந்து கொண்டே போகும்போது பார்ப்பவர்கள் "இதோ போகின்றானே இவன் ஒரு சுயநலவாதி" என்று விமர்சிப்பது தகாது. எனினும், எங்களை மட்டுமே வளர்த்துக்கொள்ளும் நாம் எம் கண் எதிரிலும், மறைந்தும் துன்பங்களுடன் தங்கள் பலதரப்பட்ட பிரச்சனைகளுக்குள்ளும், மீள வழியின்றித் தத்தளிக்கும் ஜீவன்களையும் இரக்கத்துடன் நோக்கியேயாக வேண்டும். "எனக்கு நேரமில்லை, நானும் எனது குடும்பம் மட்டுமே வாழ்ந்தாக வேண்டும். எல்லோரையும் நோக்க எனக்கு என்ன அவசியம் வந்துவிட்டது" என எண்ணுதல் மானுடநேயத்திற்கு விரோதமானது. அன்றியும் "எனக்கு இவன் என்ன உதவி செய்தான். கெடுதல்தானே செய்தான்" என்று பாராமுகமாக இருப்பது கூட மன்னிக்கும், பண்பிற்கு ஒவ்வாதது.

நாம் பெரிதாக ஒன்றும் செய்ய முடியாது விட்டாலும் சின்னச் சின்ன உதவிகளை இந்த உலகிற்குச் செய்தாலே அது மகத்தானதுதான். இவை எமது சுயநலத்தைப் பெரிதாகப் பாதித்துவிடாது அல்லவா?

மறைந்த பெரியவர் காஞ்சிகாமகோடி சங்கராச்சாரியர் ஒரு தடவை இப்படிச் சொன்னார். "ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நாளைக்கு ஒரு பிடி அரிசியைக் கொடுங்கள், இந்த உலகத்தில் நிலவும் பஞ்சத்தையே போக்கிவிடுவேன்" என்றார். ஒருபிடி அரிசி கொடுப்பதால் நமக்கு ஒன்றும் குறைந்து விடாது. மாறாக எமக்கு "அருள்" என்ற செல்வம் எம் மனதை ஆக்கிரமித்துப் பெரும் களிப்பூட்டும் அல்லவா?



RangaRakes

Tamilnavarasam.com

தொண்டு ஸ்தாபனங்களும், பொது நிறுவனங்களும் மக்களிடம் கோரும் சிறுசிறு உதவிகளை மனம் கோணாது செய்தால் ஏதோ ஒரு பங்களிப்பு எம்மாலும் முடிந்ததே என்கின்ற திருப்தியே அலாதியனதன்றோ.

பெரும் உதவிகளைப் பிறருக்குத் தெரியாமலேயே செய்துவரும் பரோபகாரிகள் இருக்கின்ற இந்த உலகில் சின்னச் சின்ன விஷயங்களுக்கே அப்பட்டமான விளம்பரம் தேடி சுய நலத்தைக் காட்டுகின்ற பேர்வழிகளைக் கண்டால் ஆத்திரமும், அருவருப்பும் வரத்தான் செய்யும்.

பொது இடங்களில் சிலர் நடந்து கொள்ளும் செயல்களைக் கண்டால் வியப்பாகவும் கோபமுமாக இருக்கும். அங்காடிகளில், தட்டுப்பாடான பொருட்களை வாங்க பொதுமக்கள் வரிசையாக நிற்பார்கள். சிலர் எந்தவித கூச்சமும்இன்றி நிற்கின்ற வரிசையைப் பொருட்படுத்தாமல் முண்டியடித்துக்கொண்டு போவார்கள்.

புகையிரத நிலையத்தில் மக்கள் பொறுமையாக, நுழைவுச்சீட்டைப் பெற நிற்கும் போது எப்படியோ, அடுத்த ஒரு பக்கத்தின் வழியாக உட்புகுந்து நுழைவுச்சீட்டு வாயிலுக்குள் கையை நுழைத்துவிடுவார்கள். சரி இப்படி யான இடங்களில் மட்டுமா இந்த அடாத செயல்கள் நடக் கின்றன? கடவுளைக் கும்பிடும் கோவில்களில்கூட முன்னே நிற்கும் பக்தர்களை நோக்காது, மற்றவர்கள் பார்வையை மறைத்துக் குறுக்கே நுழைந்து முன்னே போய் கடவுளை





பிடித்துவிடுமாற்போல் நிற்பார்கள். இறைவனை எங்கே நின்று வழிபாடு செய்தால் தான் என்ன?

எல்லா வழிபாடுகளையும் இறைவன் எத்திசையில் இருந்தும் கருணையுடன் நோக்கியபடியே தன் அருளா ட்சியைச் செலுத்திக் கொண்டு இருப்பவன் அல்லவோ? அப்பட்டமான சுயநலத்தைச் சற்றும் வெட்கப்படாமலேயே காட்டி நிற்பவர்கள், பொது நலம் பற்றி எண்ணுதற்கே சந்தர்ப்பம் வழங்காதவராவர். சுயநலத்தோடு இணைந்த பொது நலன் என்னும் சில செயல்களை நாம் பார்ப்போம்.

வியாபாரிகள் பொருட்களை விற்பனை செய்து பணம் சம்பாதிக்கின்றனர். செய்யும் இத் தொழிலை நாணயமாக, எந்தவித கலப்படமும் இன்றிச் செய்தால் அதனால் அவரும், அவரிடம் கொள்வனவு செய்யும் மக்களும் பயன் பெறுகின்றார்கள். இது தனியே சுயநலம் காட்டும் தொழில் அல்ல. அவர்கள், தமது தொழில் மூலம் பணமீட்டும் அதேசமயம், நல்லமுறையில் நேர்மையாக மக்கள் சேவை புரிந்தால் அது மக்களின் நன்மதிப்பைப் பெற்றுவிடுகின்றது.

நாம் வேதனம் பெற்றுத் தான் சீவிக்க வேண்டி யுள்ளது. வேதனம் பெறுகின்றவர், செய்யும் வேலைகளில் கரிசனையுடன் செய்யாது விட்டால் கடமைக்குத் துரோகம் செய்தவராகின்றார். எமது நலனுக்காக வாழும் போது, எமக்குக் காட்டும் கரிசனத்தைப் பொதுச்சேவையிலும் காட்டுவதே மானுட மாண்புமாகும். எனவே, சம்பளம், அல்லது கூலி பெறுதல் சுயநலம் மட்டுமே என்று சொல்ல முடியுமா? அதன் மூலம் பெற்ற பணத்திற்கு வேலை



RangaRakes
Tamilnavarasam.com

செய்யாது விடுதலே துரோகமாகும். எல்லா சுயநலத்தினுள் ஏதோ ஒரு வகையில் பொதுநலன் கலந்திருந்தால் அது வரவேற்கத்தக்கதேயாம்.

நாம் எமது அறிவை, ஆளுமையை எம் பொருட்டு மட்டுமன்றிப் பொது நோக்கிற்காகவும் பயன்பெறச் செய்ய வேண்டும். எல்லா உயிர்களும் வாழ்வதற்காகப் போராடு கின்றது. மண்புழு தன் சீவியத்தையோட்ட நிலத்தைக் கிண்டியபடியே, தன் உணவைத் தேடிக் கொள்கின்றது. ஆனால் அதனுடைய செயல் விவசாயிக்கு உதவும் செயலாகின்றது. மரங்கள், பச்சைப்பசேல் என்று வளர்ந்து தன்னைப் பசுமையாக்கி தனக்கான உணவைத் தயாரிப் பதுடன் இந்த உலகைக் குளுமையூட்டுகின்றது எமக்கு மழையைப் பொழிய உதவுகின்றது, பிராண வாயுவை தருகிறது, மரங்கள் எமக்குத் தரும் வரங்களின் பெறுமதியை நாம் எவ்வாறு கணக்கிடுவது?

தானும் வாழ்ந்து, தன்னோடு இணைந்த சகல ஜீவ ராசிகளையும் வாழ்விக்கப் புழுக்களும், தாவரங்களும், மாந்தர்க்கு உதவுகின்றது. தான் மட்டும் வாழ எண்ணுதல் ஒரு வக்கிர புத்தியை ஏற்படுத்திவிடவல்லது என உணர்வாய்!

தன்னை மட்டும் கவனிப்போன் படிப்படியாக அடுத்த வனைக் கெடுக்கும் எண்ணத்திலும் தன் மனதை நுழைத்து விடுவான் தெரிந்து கொள்.

சுயபலம், பணபலம், ஆட்பலம் என எது எம்மைச்





சேர்ந்தாலும் இவையெல்லாமே, நாம் சமூகத்திற்குச் சேவை செய்கின்றோமா எனப் பார்ப்பதற்காக இறைவன் தரும் வழங்கல்கள் தான். அவர் தரும் செல்வங்கள் எல்லாமே உனது சுயநலத்திற்காக மட்டுமல்ல அதனூடு மக்களுக்கு உரிய விதத்திலும் கொடுத்து மகிழ்வாய்!

ஹே... மானுடா! .. நீ என்ன செய்யப் போகின்றாய் உன் பொருட்டு செய்யும் செயல்களுடன் மற்றவர்க்கும் இயன்றவரை ஒரு சிறிதாவது நன்மைகளையும் உழைப்பினையும் கொடு!

ஒவ்வொரு மனிதனும், தன் ஆத்மாவின் தூய்மைக்கு அதன் நலனுக்கு அவனே பொறுப்பாளியாவான்.

பிறரிடம் நாம் உதவிகள்ளைப் பெற்றுவிடலாம். ஆனால் எம்மைத் தூய்மைப்படுத்தலுக்கான பணி எமக்கேயானது. ஆயினும் நாம் மற்றயவர்கள் மூலம் பெறும் நல்ல அனுபவங்கள், பெரியோர்களின் வழிகாட் டல்கள் எமக்கான வழிகாட்டல்களாக அமைந்து விடுவதால், எமது ஆன்மாவும் தூய்மை யேற்றப்படுகின்றது. எமது சுய தேடல்கள்,

எம்மைப் பற்றிய சுய விமர்சனங்களை நாமே எமக்குள் செய்வதால் ஒரு பரந்த உள்நோக்கு எம்முள் படர்ந்துவரும். நாம் பொதுவாக எம்மைத்தேட, ஆராய முனைவதில்லை. எம்மைத் தேடுதற்கே அச்சப்படுகின் றோம். எம்மைப் பற்றிப் பிறர் விமர்சிப்பதை அங்கீகரிப் பதுமில்லை. ஆனால் எங்களை யாராவது மிகையாகப்



RangaRakes
Tamilnavarasam.com

புகழ்ந்தால் மட்டுமே அதனை ஏற்று மகிழ்கின்றோம்.

எம்மீது அதீத நம்பிக்கை வைக்க வேண்டியது அவசியமானதே. எனினும் கற்பனையாக, மிகையாக, எம்மைப் பற்றி கூற்றுக்களை சரி என்று நம்பிவிடுவது எம்மையே நாம், தவறான வழி நடத்தலுக்குட்படுத்துவது போன்றது அல்லவா?

எமது சுயத்தை மதிக்கும் நாம் எமது சுய வளர்ச்சியை எங்ஙனம் வளர்க்க வேண்டும் எனக் கருதாமல் இருப்பது முறையாகுமா? நல்ல நியாயங்களைக் கேட்கச் சம்மதிக்க வேண்டும். “கேட்க மறுக்கும் நியாயங்களைச் சொல்லிப் பிரயோசனமில்லை” என்ற கூற்றின் படி அடம் பிடிக்காது நாம் நல்லனவற்றை யாரும் சொன்னால் கேட்டேயாக வேண்டும் என உணர்ந்து எங்களை நாம் வளப்ப டுத்துவோம்.

தன்னை வளர்த்துக்கொள்ளாத நிலைகூட ஒரு சுதந்திரமற்ற நிலைதானே? பிறரை அண்டி வாழுதல், எதற்குமே தன்னை நம்பாமல், தான் செய்வது எல்லாமே தவறு என்று பயந்து சீவிப்பதும் ஒருவனைச் சுயமாகச் சிந்திக்க இயலாத தன்மைக்கு உட்படுத்திவிடும். துணிச்சல் இல்லாதவன் சுயமாகச் சிந்தித்ததைச் செயலுருவில் வாழ்ந்து காட்டமுடியுமா?

இன்று சிலர் யார் எக்கேடு கெட்டாவது போகட்டும், தங்கள் காரியம் முடிந்தால் சரி என்று குறுகிய மனப் பான்மையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். யாரிடமிருந்தாவது காரியமாக வேண்டும் என்றால் மட்டும் கெஞ்சிக் கூத்தாடிக்





காலில் விழுந்தாவது தமது காரியத்தை முடிப்பார்கள். ஆனால் தமது காரியம் ஆனதுமே செய்நன்றி மறந்து எதுவுமே நடவாதது போல் தன்பாட்டிற்குப் போய்விடு வார்கள்.

தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்கின்ற சுயநலப் போக்குள்ளவர்கள் கூடத் தம்மைப் பொதுநல நோக்குள்ள வர்களாகக்காட்டிக் கொள்வதுமுண்டு. உண்மையில் இவர்களது மனச்சாட்சி, பொதுநல நோக்குத்தான் சிறந்தது என உள்ளூரத் தெரிந்தும் கூட கௌரவமாக நடித்துவிட்டுப் போகின்றார்கள். தங்களது நடிப்பைப் பிறர் புரிந்து கொண்டிருப்பதை உணராமல் இவர்கள் இருப்பதே வேடிக்கையாகும்.

நாம் சந்தோஷமாக என்றும் இருக்க வேண்டுமாயின் எம்மால் யாராவது நிம்மதியும் சந்தோஷமும் கொண்டாலே அதைவிட எம்மால் பிறருக்கு வழங்கக் கூடியது வேறு என்ன உளதோ!

தம் சுயநலத்திற்காக ஏழைகளைக் கசக்கிப் பிழிவதும், சொற்ப வேதனத்தைக் கொடுத்து ஊழியர்களை மேலதிக வேலைகளை வாங்கும் ஸ்தாபனங்களும், இப்படிச் செயல்படுவது தமது திறமை என எண்ணலாம். பிறருக்கு இன்னல் விளைவித்துப் பூரணத்துவமான. வாழ்க்கையை வாழ்ந்துவிட முடியுமா? நாமும் வாழ்வோம், பிறரையும் குறைவில்லாது வாழ வழிவிடுவோமாக!


தினக்குரல் ஞாயிறு மஞ்சரி

17.02.2008



RangaRakes

Tamilnavarasam.com



# புரிந்துணர்வு

புரிந்துணர்வுடன் உலகத்தோரிடம் உலாவந்தால் பிரச்சனைகள் ஏது? பிறரிடம், கரிசனை, நேயம் கொண்டால் கரிப்புமனம் கௌவ எண்ணுமா?சந்தேகம்,காழ்ப்பு கொண்டால் புரிந்துணர்வு நெருங்கிவராது. தனி மனிதனின் தூய்மை அடுத்தவர்களையும், தொட்டு உணர்த்துகின்றது. விட்டுக் கொடுத்தல், ஆணவ முனைப்பு இன்மையுடன் வாழ்ந்தால், மாந்தர் எம் வசமாவர். சேர்ந்திணைந்து வாழ்வதே நிம்மதி. புரிந்துணர்வு மன விசாலத்தைக் காட்டி நிற்கும்.

"புரிந்துணர்வு" என்பது மனித மனங்களுடாக, கரிசனையுடனும், பரிவுடனும், தமக்குள்ள மேலாதிக்க யுணர்வை விட்டுக் கொடுத்தலுடன் அன்புணர்வுடன் பகிர்ந்தளிக்கப்படும் மனப்பக்குவப்பட்ட மானுட அதியுயர் பண்பு ஆகும்.

ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமல் தானே பிரச்சனைகள், மனத்தாங்கல்கள் விஸ்வரூபமாகக் கிளர்ந்து





எழுந்து மன நிம்மதியையே கணப்பொழுதில் இழக்கச் செய்கின்றது!. அமைதியை, நிம்மதியை,சமாதான வாழ்வை விரும்பாத மாந்தரில்லை. மற்றவர்க்கு அமைதியின்மையை ஏற்படுத்தி நிம்மதி காண விழையும் துர்நடத்தைக்காரர்கள் எங்குதான் இல்லை?

ஒரு பெரியகுடத்தினுள் ஏற்படுத்தப்படும் கடுகளவு துவாரம் அக்குடத்தின் முழு நீரையுமே வெளியேற்றிவிடும். ஒருசின்னச் சந்தேகமோ, அல்லது வேண்டாத நபர்களால் ஏற்படுத்தப்படும் துர்ப் போதனைகளும் மனிதனின் முழு வாழ்வையே அழித்து விடும். அமைதியின்மையை விரும் பாத ஒரு சிலரால் கூட மற்றவர் எண்ணங்களுள் வடுக்களை ஏற்படுத்தி "புரிந்துணர்வு" என்கின்ற புனிதமான, எண்ணத்தையே பூக்காமல் செய்யவும் முடிகின்றது. ஒவ்வொரு நபர்களுமே தம்மை ஆட்படுத்தும் நற்சிந்தனை களை மட்டும் உள்வாங்கச் சித்தமாகயிருக்க வேண்டும். போலியான அன்பைக் காட்டி மோதவரும் எத்தர்களால் பல அப்பாவிகள் அகப்பட்டுச் சின்னா பின்னமாக்கப் படுதலும் கண்கூடு.

ஒவ்வொருவருமே மற்றவர்களுடன் இணைந்து, சுமுகமாக வாழ்வேன் என உறுதிபூண்டு விட்டால், குரோத, வக்கிர எண்ணங்கள் தலைதூக்கி விடுமோ? மேலும், ஏதாவது சந்தேகங்கள், தப்பு அபிப்பிராயங்கள் தோன்றி னாலும் கூட, மென்மையுணர்வுடன் கூடிய நல்லவர்கள் தாமாகப்பேசியே சந்தேகங்களைக் களைந்து கொள்ளப்



RangaRakes

Tamilnavarasam.com

பிரியப்படுவார்கள். நாம் மற்றயவர் மனதைப் புண்படுத்த லாகாது என்கின்ற எண்ணம் தானாக உதயமானதுமே புரிந்துணர்வு, நேயப்பாடுகளும் பிறந்து விட்டதாக எண்ணிக்கொள்ள முடியும். எச்சமயத்திலும், நாம் சரியான முடிவுகளை எடுத்து விடமுடியுமா?

எமக்கு எதாவது சாதகமற்ற நிலை தோன்றுமிடத்து அது மற்றவனால் வந்தவினை என மனம் சாதிக்க விழைகின்றது. உண்மையில் நாம் நினைப்பதே தவறு என்று தெரியவரும்போது நாம் இயல்பாகவே, சங்கோஜப்பட வேண்டும்.

ஆனால் புரிந்துணர்வினை, நல்லனவற்றையே ஏற்காத நபர்கள் தமது தப்பான நினைப்புகளையே மேலும் வலுப்படுத்தும் எண்ணுதலுடன், அதுவே சரியென வாதிட்டு, மேலும் முனைப்பாக பாவப்பட்ட எண்ணங்களையே சுமக்கவும் தயாராகவிருப்பர். இந்த நிலை, முடிவில் இவர்களை அமைதி, நிம்மதியினை இழந்த நிலைக் குள்ளாக்கிவிடும்.

"என்னை எவருமே புரிந்துகொள்ளாமல் இருக்கின் றார்களே? நான் யாருக்கு என்ன கெடுதல் செய்தேன்"? எனப் பிரலாபிக்கும் மனிதர்களை அடிக்கடி பார்ப்பதுண்டு. இன்னும் சிலர் "எங்களுக்கு வேண்டப்பட்ட நண்பரே என்னை உதாசீனம் செய்து விட்டாரே!. நான் என்ன அவருக்குத் தீங்கிழைத்தேன்?" என்பார். ஆனால் இவர்





குறிப்பிடும் அந்த நபரிடம் போய்க்கேட்டால், அவர் வேறு விதமான பதிலைச் சொல்லுவார். "ஐயா அவர் தப்பாகப் பேசுகின்றார், நானாவது, அவரை உதாசீனம் செய்வதாவது, அவர் எனது நண்பர். ஏதாவது அவசிய கருமங்களின் பொருட்டு அவரை நான் கண்டு கொள்ளாமல் இருக்கலாம். மற்றப்படி அவருக்கும் எனக்கும் எந்தவித மனச் கசப்பும் கிடையவே கிடையாது" என்பார். மேலும் "அவர்தான் என்னைப் புரிந்து கொள்வதில்லை" என்றும் சொல்லிக் கொள்வார். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமலே எடுக்கின்ற முடிவுகள் தவறானவையல்லவா? "சமூகம் என்னைப் புரிந்து கொள்ளவில்லை" என்று பலர் ஆதங்கப்படுவதுண்டு.

உண்மையில் மிகச் சிறந்த திறமைசாலிகள்கூட மறைக்கப்படுவதுண்டு. வேண்டாத அரைவேக்காடுகள், அறிவிலிகள் கூட சமூகத்தில் நடித்து பெருமதிப்பைப் பெறும் சந்தர்ப்பங்களுமுண்டு. இந்தகையவர்களைப், புரிந்து கொள்ளாமல் மக்கள் ஏற்று மேடையேற்றுவது முடிவில் ஏதோ ஒரு சந்தரப்பத்தில் உண்மை நிலை உணரப்படும் போது, செய்த தவறுகளை ஏற்பதால், பயன் என்ன கிடைக்கப் போகின்றது? மக்கள் செய்கின்ற தவறுகளை மக்கள்தான் ஏற்கவேண்டும். தவறுகளுக்கான தண்டனைகளைக் கூட ஏற்க வேண்டியநிலை ஏற்படலாம்.

இன்று சாதாரணமாக இல்லங்களில் நடைபெறு கின்ற சம்பவங்களைப் பாருங்கள். கணவன், மனைவி,



RangaRakes
Tamilnavarasam.com

பிள்ளைகள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நடப்பதில்லை என்று குறைப்பட்டுக் கொள்கின்றார்கள். மனைவியின் விருப்பத்தை, இயல்பான, நியாயமாக அவளது ஆசைகளை கணவன் நிராகரிப்பது நியாயமாகாது. அதே வேளை, கணவனின் உண்மையான நிலை, அவனது பிரச்சனைகளை, மனைவி, பிள்ளைகள் உணராமல் செயல்படுதலும் முறையல்ல அல்லவா? குடும்பத்தின் பொருளாதார நிலையுணராமல் பிள்ளைகள் வசதிகூடிய குடும்பத்தின் வளங்கள் போல தமக்குக்கிட்டவில்லையெனப் பெற்றோரைச் நச்சரிப்பதும் பொருத்தமற்றது.

அண்மையில் ஒரு பேராசிரியர் சொன்ன தகவல் இது, ஒரு வீட்டில் தமது மகனைப் பெற்றோர் வன்மையாகக் கண்டித்துக் கொண்டிருந்தார்களாம். கேட்டதற்கு, "இவன் இம் முறை இரண்டாம் பிள்ளையாக வகுப்பில் வந்திருக்கின்றானே? வெட்கமில்லையா? ஏன் இவன் இம்முறை முதலாம் பிள்ளையாக வரவில்லை" என்றார்களாம். இவர்களுடைய பேச்சு அந்தப் பிள்ளையை எவ்வளவு பாதிக்கும் தெரியுமா? இரண்டாம் பிள்ளையாக வந்ததற்காகப் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை. இவ்வளவு தூரம் பையன் கஷ்டப்பட்டுப் படித்து இரண்டாம் பிள்ளையாக வந்திருக்கின்றானே என எண்ணித் திட்டாமலாவது இருந்திருக்கலாம். இந்தப் பெற்றோர்களின் இத்தகைய போக்குகளால் பிள்ளைகளுக்கு விரக்தியுடன், பெற்றார் மீதான வெறுப்பு, வன்ம உணர்வுகள் கூடத் தலை





தூக்கலாம் அல்லவா? மற்றவனின் மன உணர்வுகளை மதிக்காமல் அவர்களை உதாசீனம் செய்யுமாற்போல் பேசுவது, நடந்து கொள்வது போல அநாகரிகம் வேறு என்ன ஐயா?

பல்கலைக்கழகங்கள், பாடசாலைகளில் மாணவர் போராட்டங்களைப் பாருங்கள். மாணவர்களின் இயல்புகள், அவர்களது நியாயத்தன்மைகள் பற்றிய முகாமைத்துவங்களும், முகாமைத்துவங்களின் உண்மையான நிலைமைகளை, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை மாணவர்களும் புரிந்து கொள்வதில்லை. இதே போல நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்களில் தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர். ஏன் எமது நாட்டில் வைத்தியர்கள் கூட வேலை நிறுத்தம் செய்கின்றார்கள்.

வைத்திய சேவை ஒரு அத்தியாவசியப் புனிதப்பணி என்பது நாம் அனைவரும் அறிந்ததே, உண்மையில் எல்லாத்தரத்து அலுவலர்களுக்குமே பிரச்சனைகளுண்டு என்பதை ஏற்க வேண்டும். ஆசிரியர்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுகின்றார்கள். போக்குவரத்துச் சேவை ஊழியர்கள் கடமைக்குச் செல்லாமல் வீதிக்கு வந்து கோரிக்கை வைக்கின்றார்கள் எனச் செய்திகள் அவ்வப்போது வந்து போகும். எனினும் சம்பந்தப்பட்ட, பிரச்சனைகளை முற்ற வைத்துப், பல கோடி ரூபாய்களை இழக்கச் செய்து, மக்களை நோகடித்த பின்புதானா அவைபற்றிய பிரச்சனைகளை ஆராயக்குழு நியமிக்க வேண்டும்?



RangaRakes
Tamilnavarasam.com

இந்தக் கூத்து எல்லாம் வளர்முக நாடுகள் என்றில்லாமல், அனைத்து நாடுகளிலும் நடந்து கொண்டு தானிருக்கின்றது. பிரச்சனைகளைச் சுமுகமாகத் தீர்க்க எவராவது முதலில் முன்வருவதே ஒரு கௌரவக் குறைவாகக் கருதுகின்றார்கள். இழப்புக்குப் பின்னரே தீர்வு என எண்ணுதலே ஒரு இறுதித் தீர்வு எனக் கருதினால் துன்பப்பட்டேயாக வேண்டும் என்பதே தலை எழுத்தா என்ன? கொஞ்சமாவது சிந்தித்தால் தான் என்ன ஐயா? சமூக விரோதக் கும்பல்களுக்கு புரிந்துணர்வு, மனச் சாட்சி உறுத்தல் என்கின்ற விஷயங்களே அவர்களைப் பொறுத்தவரை அநாவசியமானது. அவர்களது தேவைகளை எந்த ரூபத்திலாவது செயல்படுத்தப்படல் வேண்டும். தர்மம், நியாய அநியாயங்களை நோக்க அவர்களுக்கு எங்கே நேரம் இருக்கப் போகின்றது?

புரிந்துணர்வுடன் பிரச்சனைகளைச் சுமுகமாகத் தீர்க்கமாட்டேன் என்கின்ற எண்ணத்துடன் வந்து போலியாகப் பேசினால் மனக்கசப்புகள் எவ்வாறு விலகிப் போகும்? நிரந்தரமான மனக்கசப்புதான் கௌரவத்தினைக் காப்பாற்றிக் கொள்ள வழிவகுக்கும் எனக்கருதித் தொடர்ந்தும் துன்பத்தில் மூழ்கிட எத்தனித்தால் எதுதான் சுமுகமாகிவிடப் போகின்றது?

இன்று உலக நாடுகள் எல்லாமே சமாதானம் சமாதானம்.... என்று சொல்லிக் கொண்டே சண்டைக்கு ஆயத்தங்கள் செய்துகொண்டும், அதற்காக ஆயுதங்களை





உற்பத்தி செய்வதும், பெருக்குவதும், தமது நேசநாடுகளுக்கு சுண்டல், அவல், பொரிபோல் ஆயுதங்களை வினியோகிப்பதும் கவலையூட்டும், கோபமூட்டும், அநாகரிகக்காட்சிகள்! மக்களின் எண்ணங்களை, அவர் தம் அபிலாசைகள், ஏக்கங்களை, நாடுகளை ஆளுகின்ற தலைவர்கள் புரிந்து கொள்வதேயில்லை.

உண்மையிலேயே பாரிய பிரச்சனைகளைத் தீர்க்க ஒரு தலைவர் புறப்பட்டால் இன்றும் ஒரு சில தீயசக்திகள் அவர்கள் எண்ணங்களை மழுங்கடித்துக் குழப்பிவிடுகின்றது.

சமாதானம் கொடுப்பது, அல்லது விட்டுக் கொடுப்பது தமது வீரத்திற்கு அகௌரவமானது என்கின்ற தப்பான கருத்தையே தீவிரமாகக் கடைப்பிடிப்பதே, தாம் சார்ந்த நாட்டிற்கே பெருமை என்று எண்ணினால், எந்த நாடு தான் நெடிது உயரமுடியும்? இன்றும் கூட, இந்த உலகம் இத்தகைய இழப்புகளை, கடந்த உலகமகாயுத்தங்கள் மூலம் சந்தித்தும், இழப்புக்களால் புரண்டும் கூட "புரிந்துணர்வின் மூலம் சமாதானம்" என்கின்ற பகுத்தறிவை நாம் பூரணமாக ஏற்றுக் கொண்டோமா? பலத்த போராட்டங்களின் மூலம் வெற்றியடைந்த நாடுகள் கூடத் தாம் கடந்து வந்த பாதைகளை மறந்து வலிமை குன்றிய நாடுகளை வதைப்பது மேன்? புரிந்துணர்வுகள் மூலம் இழப்பதற்கு ஒன்றுமேயில்லை. இதனால், அன்பு, பரிவு, நேயப்பாடுகள் தான் எம்மை வந்தடையும். இந்தப் புரிந்துணர்வு தனிப்பட்ட



RangaRakes

Tamilnavarasam.com

இரு நபர்கள், அல்ல பலபேர்கள் சார்ந்தது மட்டுமல்ல. சர்வ உலகத்து மாந்தருக்குமான ஒரு நேயப்பாடுடனான உறவினால், பரிமளிப்பதாகும்.

புரிந்துணர்வின் மூலம் பெறப்படும் பெறுபேறுகள் எல்லாமே தர்மத்திற்குக் கிடைத்த வெற்றி தான் எந்த நாட்டு மக்களும் தங்கள் முன்னேற்றத்திற்கான கரிசனை உணர்வை தாமாகவே உருவாக்க வேண்டும். மற்றவரை மட்டும் எதிர்பார்க்கலாமா? மதம் அல்லது இனம், மொழி சார்ந்தவர்களிடையே மோதல்களை ஏற்படுத்த அந்நிய சக்திகள் சுயநலநோக்குடன் புரிந்துணர்வுப் போர்வையில் அநியாயமான வழிகளில் தம் ஆட்சியைப் புகுந்த எண்ணிக்கொள்கின்றன. தான்வாழப் பிறரைவதைப்பது இறைவ னுக்கு அடுக்காத செயல்.

கொள்கைகளை கருத்துக்களை நற்சிந்தையுடன் போதிக்கப்படல் வேண்டும். உள்நோக்குடன் சித்தாந்தம் போதிப்பதும் அதைக் கேட்குமாறு தூண்டிவிடுவதும் உலகில் நடக்கின்ற அடாத செயல்கள்.

விட்டுக் கொடுப்பதும் புரிந்துணர்வுடன் பிறரை மதிப்பதுமே எங்களை நாம் மிஞ்சிக் கொள்ளும் வீரம் மிகு செயலாகும்.

புரிந்துணர்வுடன் மற்றவரை மதித்து வாழ்வதன் சந்தோஷங்களை அனுபவித்து உணர்ந்து பாருங்கள்,





அப்போதுதான் நாம் வாழுகின்ற வாழ்வின் அர்த்தமே புரியும்! தனி ஒருவனின் தூய்மை, அவனைச் சூழ இருப்பவர்களையும் படர்ந்து கொள்ளும். நாம் ஒருவனைப் பார்த்த மாத்திரத்தே அவர் என்னை ஒத்த மானுடன் என எண்ணினாலே போதும். பரிவும், பாசமும், நேயமும் தானே வந்து விடும்.

சீறிடும் கடல் அலை, கர்வமுடன் முழு மூச்சுடன் மோதிடும் பெரும்புயல், கொட்டும் பெருமழையின் வேகங் கள் எல்லாமே ஒரு சிறிது பொழுதுகளே! இவை அடங்கி விடும்.


ஆனால், அமைதியுடன் நிலைமைகளைச் சீர்தூக்குபவன் நிர்மலமான நீல மேகம் போல, அமைதியான ஆழ்கடல் போல், நிதானமாக, சௌகர்ய மாகச், சந்தோஷமாக, மற்றையவர்களுடன் அந்நியோன்ய மாகச் சீவித்துக் கொண்டிருப்பான். மனித மனங்களுடன் அன்புடன் உறவுகொள்பவன் ஆரோக்கியமானவன். என்றும் மற்றவர்களைப் புரிந்து வைத்திருப்பவன். இந்த உறவு நிலையே நிரந்தரமானது. ஆர்ப்பாட்டமற்ற அமைதி யானதுமாகும். புரிந்துணர்வு கொண்டவர்கள் சரிந்து போனதுமில்லை

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
24.02.2008.



RangaRakes

Tamilnavarasam.com



# கருமை

> பேரண்டப் பெருவெளி முழுமையும் கருமை. கருமுகில், பெரும்மலை, கருநீலப் பெரும் கடல் என உலகில் கருமையின் ஆட்சிபற்றி இயம்பமுடியாது. மனிதனின் அரைவாசிப் பொழுதும் இருளில் தான் முடிகின்றது. மனித உற்பத்திகள் இரவில் தான் உதயம். அவன் இமைக்கும் காலப் பொழுதுகள், பகலிலும், இருளைத்தேடும் காலங்களையும் இணைத்துப் பார்த்தால், கருமையின் பரிணாமங்களைக் சொல்லிடமுடியுமா? கருமையும் அழகுதான் ஒவ்வொரு வண்ணத்திற்கும் ஒவ்வொரு சிறப்பு. கரும் பலகையில் தான் கல்வி கற்றோம். கருமுகில்களால், புவி, குளுமை யேற்றப்படுகின்றது. கருமை பெருமைக்குரியதே.

கருமையின் பெருமைகள் அளப்பெரியன. கருமை பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் அதனைச் சிறுமைப்படுத்திக் கருதுவதும் பேசுவதும் பொருத்தமற்ற தேயாம்.

சூர்யப்பார்வைக்கு எட்டாத அண்டத்தினுள், சூன்யப் பெருவெளி முழுமையும் கருமை, கருமைதான்! கருநீலப்





பெருங்கடல், பெருமலைகள், கருமேகங்கள் எல்லாமே உலகின் இயக்கத்திற்கே அத்தியாவசியமான இறையின் கொடைகள். கருமேகத்தினூடு பாய்ந்தோடும் வெண் மின்னலால் ஏற்படும் இயற்கை மாற்றங்களை என்னென்பதோ! கருமேகத்திலிருந்து கொட்டும் மழை, உலகை முத்தமிடுவதால் தானே உலக உயிர்கள் விழித்தெழுகின்றன!

" கரியதாய் தெரிந்த கருவறையில் உருவாகிப் பிறந்தவன் தானே இந்த அரிய மனிதன்!"

இந்த அவனியில் மனிதன் தன் அரைவாசிக் காலத்தை இருளிலேயே கழித்துவிடுகின்றான். மிகுதி அரைப்பங்கு காலத்தை ஒளியில் கழித்தாலும்கூட பூட்டிய மண்டபத்தினுள்ளும், அறையினுள்ளும் செலவழிக்கும் இருளுடன் இணைந்து கொள்ளும், காலத்தையும் கணக்குப்பண்ண இயலுமோ?

மேலும் பலஉயிர்கள் மண்ணுக்குள்ளும்,கரும் பாறைக்குள்ளும், புதையுண்டபடியே உயிர் வாழ்வதும் புதுமையோ புதுமை!

மனிதனின் இன்பங்கள் சுகானுபங்கள் இந்த இருட்டுக்குள்ளே நடந்து கொண்டிருப்பதும், அதனாலேயே, புது உயிர்கள், புறப்படுவதும் தெரியாத இரகசியமோ?

கேளிக்கைகள், பொழுதுபோக்குகள், திரைப்படக்



RangaRakes
Tamilnavarasam.com

காட்சிகளுக்கு இரவுப் பொழுதுதான் உசிதமான இனிமை கூட்டும். இரவைப் பகலாக்கப் பல கோடி மின்குமிழ்கள் பொருத்தப்பட்டாலும் கூட இவையெல்லாமே ஒரு சூரியன் ஒளி முன் நின்றிடாது. ஆயினும், இருளில் மின்குமிழ் ஒளி பட்டால் பளிச்சென்று துலங்குமன்றோ! இரவின் அழகினை தான் செயற்கையாகத் தயாரித்த ஒளியூட்டும் கருவிகளால், உலகை அழகுபடுத்த மனிதன் விழைகின்றான். இரவின் அழகுகளை நாம் மேலும் அழகுபடுத்த முயன்று கொண்டே யிருக்கின்றோம்.

உழைத்துக் களைத்தவர்கள் தம் நிம்மதியை கருமை யழகுள்ள இரவுக்காலத்தின் பொழுதுபோக்கும் இடங்களில் அடைந்துகொள்ள விழைகின்றார்கள்.

கலை, கலாசார நிகழ்வுகள் உல்லாச விடுதிகள் பகல் பொழுதுகளில் இயங்கினாலும் கூட பெரும்பாலான, சந்தோஷமூட்டும் மண்டபங்களும், விடுதிகளும் இரவுக் காலத்திலேயே இயங்கிக் கொள்கின்றன. இவைகளை நாடுவோர் பகல்வேளைகளில் செல்ல,நேரம் கிடைப்ப துமில்லை.

மனிதன் மனோநிலைகூட பகல் பொழுதிலும் பார்க்க இரவுப் பொழுதினையே வேறுபட்டு நோக்குகின்றன. இருண்ட பொழுதில் ஓய்வைத்தேடி அனுபவிக்க விழைகின்றான். பேரின்பம் தேடும் ஆன்மீகவாதிகள் கூட சப்தமற்ற வேளையென இரவுக்காலத்தையே புலன்களை ஒடுக்க உகந்த நேரமாகக் கருதுவார்கள். நிம்மதியான





காலம் இரவுப்பொழுது, என்பதற்குக் காரணம், மேல திகமான உடல் உழைப்புகள் குறைவு என்பதனலாகும் எனக்கருதலாம்.

கல்வி கற்கும் மாணவர்கள் கற்றறிந்த பெரியோர்கள், ஆய்வாளர்களுக்குச் சப்தமற்ற சூழ்நிலைதான் தேவைப் படுகின்றது. சலனமற்ற, நிம்மதியான நிலையில்தான் புலன்களின் சேவை உரியபடி தீட்சண்யமாக எமக்குக் கிட்டுகின்றது. மனம் உறுதியுடன் நிலையாகக் கல்வியைக் கற்கவும், இரவு வேளையும், அதிகாலையில் சூரியன் உதிக்குமுன்னரே எழும்பித் தம் கடமைகளை நிறை வேற்றவும் இந்த பொழுதுபோல் சிறப்பானது வேறில்லை, தெரிந்திருப்பீர்கள்! நாம் பகல் பொழுதைவிட, இரவு நேரக் கடமை செய்யும் மனிதர்களின் சிரமங்களையும் நினைவு கூர்வோமாக!

காலையிலும் மாலையிலும் இறைவணக்கம் செய்வதுடன் நின்றுவிடாது உறக்கத்திற்குள் நுழையு முன்னரே, அடுத்த நாட் பொழுதுகள் இனிமையுடன் மலர இரவில் சிறிது நேரம் இறைநாமம் செய்து பிரார்த்தனை செய்வீராக! நல்ல உறக்கமும், நிம்மதியான மனசும் வந்திட இந்த இரவு நேரப் பிரார்த்தனைகள் உங்களுக்கும், உங்களது வழிபாட்டால், இந்த உலகமும் செழிக்கட்டும்!

சதா பகல் பொழுதுகளில் இரைச்சலுடனும், இரசாய னக் காற்றுடனும் வாழும் நாம் தேகத்தையும் சஞ்சலப் படுத்திக் கொண்டிருக்கின்றோம். இவைகளில் இருந்து



RangaRakes
Tamilnavarasam.com

விடுபட இரவுக் காலத்தை நல்ல முறையில் பயன்படுத்தத் தெரிந்து கொள்வோம்.

இறைவன், கருமையான இரவுப்பொழுதை இயற்கையாகவே ஏன் உண்டாக்க வேண்டும்? நிம்மதியாக விழிகளை மெதுவாய் மூடு! நல்ல மன உறுதியைத் தேடு!, நிம்மதியாகச், சாவகாசமாகப் படுத்து ஓய்வு எடு! பரபரப்பான பகல் பொழுதில் இருந்து விடுபடு! மேற்படி விடயங்களை இரவுக்காலத்தின் அமைதி மூலம் நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.

எனவே, இந்த நேரத்தின் ஓய்வுடன் கூடிய நிம்மதியால்தான் நீ அடுத்துவரும் காலத்திற்காக உன்னைச் செப்பனிடவழி சமைத்தவனுமாவாய்!

மேலும் சிலர் கறுப்பு என்றால் இளப்பமாகவே, சற்றும் சிந்திக்காமல் சொன்னாலும்கூட இவர்கள் தேடும் சுவை, சந்தோஷங்கள், எதிர்பார்ப்புக்கள் அங்கேதான் இருக்கின்றது என்பதை உணரல் வேண்டும்.

கறுப்புத் திராட்சை, கசக்குமா என்ன? கருநாவல் பழம், கருவிழி,அழகாக இல்லையா? கருகரு என நீண்ட கேசம் உரு ண்டோடியபடியிருக்கப் பாவனை காட்டிப் பேசும் கருமையுடன் கூடிய விழிகள், அதன் மேலமைந்த நீண்ட புருவக் கோடுகள், இவையெல்லாம் பெண்மைக்கே அழகூட்டும் கருமைச் சிருஷ்டிப்பன்றோ!





இந்துக்களின் முழுமுதல் தெய்வம் சிவனின் பத்தினி உமையவள், அவர் அண்ணன் திருமால் கறுப்பு வண்ணத்தினர். மேலும் மன்மதனில் மனைவி ரதி கூடக் கறுப்புத்தான். உலக அழகி கிளியோபத்ரா பளுப்பு நிறத்துக் கறுப்பு அழகி. இப்படியே சொல்லிக் கொண்டே போகலாம். பண்டைய கலை வடிவங்கள், கட்டிடங்கள் கோவில்களும், சிற்பங்களும் கருங்கல்லில் இருந்து தானே உயிர்த்தெழுந்தன! கறுப்பு நிறப்பலகையில், வெண் கட்டியால் எழுதித்தானே நாம் படித்து உயர்ந்தவராகின்றோம். கறுப்பும், வெள்ளையும் இணையும் போதுவரும் அழகே அழகு!

இன்று சகல துறைகளிலும் கறுப்பு இனத்தவர்கள் தானே முன்னே வந்து நிற்கின்றார்கள்! அரசியலாகட்டும், விளையாட்டு, கலைத்துறைகளில் அகப்படும் கறுப்பு இனத்தவர்களின் பாரிய பங்களிப்பை இந்த உலகம் மதிக்கின்றது.

முன்னர் ஒருகாலத்தில் அடிமைகளாக, மிருகங்களிலும் கேவலமாக மதிக்கப்பட்டவர்கள் இன்று உயர்ந்தோங்கி வளர்வது கண்டு முழு உலகமே விழித்துப், பாராட்டி நிற்கின்றதே! கறுப்பு இனத்து விடுதலைவீரர் மார்ட்டின் லூதர் சிங், நோபல் பரிசு பெற்ற அதிவண-பிதா-ருட்டு, முன்னாள் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்ட லிசா ரைஸ் அம்மையார், போன்ற பலர் கறுப்பு இனத்தின் கௌரவமிக்கஅடையாளங்களாக இருக்கின்றார்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

மேலும் வெள்ளை இனத்தவர்களுக்கு நாம் எல்லோரும் அவர்கள் பார்வையில் கறுப்பர்கள் தான். ஒரு காலத்தில் அவர்கள் எமது நாட்டை ஆண்டு வந்தமையினால் தம்மை உயர்ந்தோராகக் கருதி விட்டார்கள். ஆண்டு வந்ததால் உயர்ந்திட முடியாது. அடிமைகள் என்பதால் தாழ்ந்தவருமல்லர். காலமாற்றங்களால் எல்லாமே மாறும்.

இன்னமும் கூட வெள்ளையர்களின் நிறவெறி ஓய்ந்தபாடில்லை. ஆயினும் தமது தேசவளர்ச்சிக்கு கறுப்பர்களையும் நம்பித்தான் இருக்கின்றனர். இந்த மேலாதிக்க எண்ணங்கள் இனிமேலும் இவர்களுக்குச் சாதகமாக அமையப்போவது மில்லை.

ஒரு இனத்தை மாற்ற இனம் சார்ந்துதான் வாழ்ந்தேயாக வேண்டும். இந்த இன நிற மதவெறியுடன் வாழ்ந்துவிட முடியுமா? இப்போதைய நம் வாழ்வின் அர்த்தமே இனிவரும் எமது நல்வாழ்வை மேலும் மேம்படுத்துதற்காகவே. எனவே, குறுகிய எண்ணங்களும், தமது பரம்பரை பற்றிய அதீத கற்பனைகளும், வாதங்களும் எம்மை உயர்விக்க வழிசமைத்துவிடுமா?

தன் மனத்தைச் சதா காயப்படுத்தியும் பிறர் வாழ்வைச் சீரழிக்க முனைவோரையும் இருள் சூழ்ந்த மனத்தினர் எனச் சொல்வதுண்டு. சிலவிடயங்களை சிலர், புரிந்து கொள்ளாமல் இருக்கும்போது உன் மூளையில் என்ன களிமண்ணா என்று கேட்பதுமுண்டு. இருள் பொருட்களை





மறைத்து நிற்கும். உண்மைகளை ஏற்காமல் சதா பாவங்களைப் புரிபவர்களைபற்றிப் பேசும்போது நல்லதை உணராத்தன்மைக்காக இருட்டை ஒப்பீடு செய்கின்றார்கள். இதற்காக "இருள்" என்பதே கேடு என்று அர்த்தப்பட்டு விடுமா?

அதுபோல், தலைக்குள் களிமண்ணா இருக்கின்றது எனத்திட்டினால் களிமண் தரம் தாழ்ந்துவிடாது. களிமண்ணினால் அலங்காரப் பொருட்கள், சமைப்பதற்கு உதவும் பானை, சட்டி என்பன களிமண்ணினால் தானே! உருவாகின்றன.அதுமட்டுமா? களிமண்ணினால் தான் நவநாகரீகமான வீடுகளுக்குப் பதிக்கும் தரை ஓடுகளும் தயாரிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பொருளுமே அது இருக்கும் இடத்தில் இருந்தால் அழகுதான். வர்ணங்கள் எல்லாமே அழகுதான். அவை பொருத்தமாக அமைந்து நின்றால்அது லட்சணமாக இருக்கும் வெறும் அழகு நிறைந்தவர்கள் மட்டுமே நல்ல குணாம்சமானவராக இருப்பதாக அர்த்தம் கொள்ள முடியுமா? நல்ல பண்புகள் உடையவர்களை நாம் வெறும் புற அழகைக் கொண்டு எடைபோட்டு விடமுடியுமா? புற அழகினை முதன்மைப்படுத்தி தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் ஈற்றில் படும்பாடுகளைச் சொல்லிமாளாது!

அடிக்கடி பார்க்கும் இயற்கை அழகுள்ள பொருட்களையே நாம் ரசிக்கத் தெரியாமல் இருக்கின்றோம்.



RangaRakes

Tamilnavarasam.com

மழைகாலத்துக் குளிரில் நடுங்கியபடியே வெளியே வந்து மரம் செடிகளைப் பாருங்கள்! அவை கரும் பச்சை அழகுடன், சிலிர்த்தபடியே இருப்பதையும், புதிய துளிர் களை வெளியே காட்டி நிற்கும், சின்னப் புற்களைப் பாருங்கள் வெம்மையின் கொடுமையில் தப்பித்து, மப்பும், மந்தாரமுமாய் உள்ள சூழலில் மழையில் நனைந்து, ஆனந்தக் குளியலின், சுகமே, சுகம்!

எல்லா வர்ணங்களின் மொத்த அழகுகளையும் இயற்கை அன்னை வாரிவழங்கியிருக்கின்றாள். பஞ்ச வர்ணக் கிளிகளை, புள்ளிமான்களை, வீரம்மிகு சிங்கம், புலிகளின் கம்பீரத்தையும் ரசிக்கும் நாம் கருமை நிறத்து பலம் கொண்ட யானையையும், மென்மையுள்ள கீச், கீச் செனச் சிறகடித்துப் பறக்கும், குருவிகளை, சாம்பல் நிறத்துப் புறாக்களையும் ரசிக்காமல் விடுகின்றோமா?

நாம் அடிக்கடி பார்ப்பதால் காகத்தின் அழகை ரசிப்பதில்லை. காகத்தையே காணாதவர்க்குக், காகமும் அழகுதான் சந்தேகமில்லை. நாம் எந்த அழகியையும் தொடர்ந்து, பார்த்து ரசிக்க முடியுமா?

இயற்கை பொருத்தமான இடத்தில், பொருத்தமான வர்ணங்களைத் தோய்த்தெடுக்கின்றது. மரக் கிளையின் இலைகள் பச்சை நிறமாகத்தான் இருந்தால் சிறப்பு. இலைகள் வெளுத்துப்போனால், அது உதிரப்போவதைக் காட்டும். இளமையில் கேசம் கருமையாகவும், வயது முதிர்ந்த பின்னர் அது வெளுத்துப் போவது இயற்கை.





எம்மை நாம் கண்டுகொள்ள இறைவன் கொடுத்த சமிக்ஞை.

ஆண் ஆணின் உடல் அமைப்பிலும், பெண், பெண்ணின் உடலமைப்பிலும் இருந்தால் தான் அழகு. இவைகளை இயற்கை சரிவரச் செய்து கொண்டு இருக்கின்றது. வலிந்து பெண் ஆணாகவும் ஆண், பெண்ணாகவும் தமது தோற்றத்தை மாற்றினால் ரசிக்க முடியாது.

எனவே, நாம் வண்ணங்கள் பற்றிக் கண்டபடி விமர்சிப்பதும், குறைப்பட்டுக் கொள்வதும் பொருத்தமற்றது. எந்தப் பெரிய அறிஞர்கள் கூடப் புலன்வசப்படுவதுண்டு. நல்லது எது, கெட்டது எதுவெனத் தெரியாமல் மயங்கி வீழ்வதுமுண்டு. எல்லாமே அவன் படைப்பு என்கின்ற, அறிவின்பால் உண்டாகும் "நம்பிக்கை" வேரோடி எம்மை ஆக்கிரமித்தால் சகல படைப்புகள். அதன் அமைப்புக்கள் நிறங்கள் யாவையுமே சிறப்பாக அமைந்தனவே. எண்ணத்தில் கொள்க!

நாம், வெறுத்து ஒதுக்குதற்கு எத்தனையோ கெட்டவிஷயங்கள் இருக்கின்றன. இருப்பினும் எம்முடன் சிலசமயம் கூட இருந்து கொள்ளும் இந்தச் சில துர்க்குணங்களைக் கண்டு கொள்வதும் இல்லை. யாராவது இதைச் சுட்டிக் காட்டினால் கோபமும் வந்துவிடுகின்றது.

மறைபொருளாக இருக்கும் நல்லனவைகளை நாம்




RangaRakes
Tamilnavarasam.com

கண்டு கொள்ள முனையவேண்டும். வெளிப்படையாகத் தோற்றம் காட்டி நிற்கும் உண்மைப் பொருளைக் காணாமல் விட்டு விடுவதோ வேதனை! அறிய வேண்டியதை அறிவதும், தெரிவதும், தெளிவதும் எமது அரிய தேவைகள்! கருமைக்கும், வெண்மைக்கும் பேதம் காட்டாது. இவைகளின் சிறப்புகள் எங்கே, எங்கு உண்டு எனக் கண்டு கொள்ளும் போது பல உண்மைகள் துலங்கி நிற்கும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
10.02.2008







# சவால்கள்

சவால்களைச் சமாளிக்கக் கூடாது. அதை உடைத்தெறிந்து வெற்றி கொள்ள வேண்டும். எமது சவால்கள் உன்னதத் தன்மையுடன் இருக்க வேண்டும். வாழ்க்கையில் எல்லாமே சுலபமாகக் கிடைத்து விடுவதில்லை. தடைகளை உடைப்பது எமது வலிமைக்கான அங்கீகாரம். தோல்விகள், துன்பங்களைச் சொல்லி அழுது, மனத் தளர்சியடைவதை விட, எழுந்து இயங்குவது இயலாததுமன்று. சுவாரஸ்யமான வாழ்விற்குச் சவால்களை எதிர்கொள்வதே சிறப்பு.

வாழ்க்கையில் பிரச்சனைகள் உருவாகும் போது மனிதன், பல்வேறு சவால்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியுள்ளது. சவால்களைச் சந்தித்து அவற்றைச் சிதைத்து வெற்றிகொள்வதை விடச் சுவாரஸ்யமான அனுபவங்கள் பிறிது ஏது?

சும்மா இருந்து பெறுகின்ற அனுகூலங்களால்



RangaRakes
Tamilnavarasam.com

பெருமைப்பட என்ன இருக்கின்றது? "ஏதோ இவனுக்குக் குருட்டு அதிர்ஷ்டம்" என்றும் சொல்லிவிட்டுப் போவார்கள், அதே சமயம் உண்மையிலேயே, தனக்கு இந்த அனுகூலங் களைப் பெற என்ன அருகதை உள்ளதென அவனது மனச் சாட்சி கூட இடித்துரைக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம்.

ஆகவே வருந்தி உழைத்து, எதிர்ப்படும் சவால்களை உடைத்தெறிந்து வெற்றி கொள்வதே ஆத்மார்த்த திருப்தி நிலையுமாகும். கருத்தில் கொள்க! திறமையும், வலுவும், மன உறுதியும் மிக்கவனுக்கு எதிர்ப்படும் சவால்கள் எல்லாமே, துச்சமெனக் கருதிச் செயல்படுவான்.

சவால்களை எதிர்கொள்வது என்பது, மற்றவர் களுடன் அநாவசியமாக மோதுவதும் சண்டை செய்வது மல்ல. தனது தவறுகளை மறைத்து தனது சுயநலத்தின் பொருட்டு மறைமுகமாகவும், தந்திரமாகவும், மோசடியான வழிகளில் பழிவாங்கி வெற்றி கொள்வதுமல்ல.

சவால்களைச் சமாளிக்கக் கூடாது. அதை உடைத் தெறிய வேண்டும். நியாயபூர்வமாக உழைப்பவர்களுக்கு, சிந்தித்துச் செயல் படுபவர்களுக்கு அவரவர்க்கான கொடுப்பனவுகள் ஈசனால் அள்ளி வழங்கப்படும். சூரியனை உள்ளங்கைகளால் மறைத்துவிட முடியாது. விழிகளை மூடினால் விழிகளை மூடியவனுக்கு மட்டும் அதன் ஒளி தெரியாது, உலகிற்கு அது தெரியும்.





அதே போலவே உண்மைகளை மறைத்து, ஒளித்து வைக்க இயலவே இயலாது. வலிமை இருந்தால் மற்ற வனை ஒடுக்கி விடலாம் என எண்ணுதலும் தாம் நினைத் தால் எதனையும் அநியாயமான முறையில் வென்று விடலாம் என எண்ணுவதும் முட்டாள்தனமான எண்ணம் தான். "நான் திறமைசாலியாக இருக்கின்றேன் எனக்கு எதுவுமே கிடைக்கவில்லையே" என வேதனைப்படுதலை நிறுத்தி தன்பாட்டிற்கு ஒருவன் தன் கடமைகளைச் சரிவரச் செய்தாலே போதும், அவனை உலகம் புரிந்து கொண் டேயாக வேண்டிய நிலை உருவாகிவிடும். நியாய பூர்வமாக நாங்கள் எடுக்கும் முயற்சி தான். சவால்களை எதிர்கொண்டு சித்தியெய்தும் நல் உபாயமாகும். உணர்க!

கழுத்துக்கு எதிரே கத்தியை நீட்டுகையில் அதை எதிர் கொண்டு போராடாமல் நின்றுவிட முடியுமா? கோழை யாகச் சாவதே நமது விதி என்பதை ஏற்க முடியாது. உங்களுக்கு வேண்டப்படாதவர்களை உங்கள் தோல்வி களால் சந்தோஷப்படவைக்க உங்களுக்குச் சம்மதமா, சொல்லுங்கள்! எனவே, எதிர்கொண்டு வெல்வதுதானே நல்ல சவாலாகும்? அதே சமயம், பிறரை நோகடித்து வெற்றி காண்பதே ஒரு நல்ல சவால் என எண்ணுதலைத் தவிர்த்து விடுக!

நியாயபூர்வமான போராட்டங்களை நல்லோர் எவரும் எதிர்ப்பதுமில்லை, எள்ளி நகையாடுதலும் இல்ல வேயில்லை. உங்களது அலட்சியப்போக்கும், எந்தவொரு



RangaRakes

Tamilnavarasam.com

நல்ல விடயங்களைக் கண்டுகொள்ளாமையும், எதிரிகளை உற்சாகமடைய வைத்து உங்களை வீழ்த்த நீங்களே வழிசமைத்தவர்களாகி விடக்கூடாது. கதைகளில் கதாநாயகன் எதிரிகளை வீழ்த்துவதையும், வரும் சவால்களை வீறுகொண்டு அடக்குவதையும், வீரதீரத்துடன் முனைப்பாகச் சண்டை செய்வதையும் நெஞ்சை நிமிர்த்திப் பார்ப்பவர்கள் சொந்த வாழ்க்கையில் பிரச்சினைகளைக் கண்டு மனம் தொய்ந்து போகலாம். தன்னால் முடியாததை இந்தக் கதாநாயகன் செய்கின்றானே எனத்திருப்திப்படும் ஆத்மாவாக மட்டும் இருப்பதால் என்ன லாபம் தோழர்களே!

நீங்கள் சிறப்புற வாழ வேண்டும் என்றால் நீங்கள் தான் முனைப்புடன் காரியமாற்ற வேண்டும். அடுத்தவன் வந்து தூக்கி நிமிர்த்தும் வரை காலத்தினைச் செலவழிக்க வேண்டாம். பிறரை எதிர்பார்க்கும் நேரத்தில் எத்தனையோ நற்காரியங்களைச் சுயமாகச் செய்து நிறைவேற்றிடவும் முடியும். நிச்சயமாக முடியும். அறிந்து கொள்வோம்.!

வளர்ந்துவரும் எமது உலகில் விஞ்ஞான, தொழில்நுட்பக் கலைகள் நாம் எதிர்பார்த்ததை விட படு உற்சாகமாக வளர்ந்தோங்கி விட்டது. நவீன கண்டுபிடிப்புக்களால் மக்கள் ஈர்க்கப்படுகின்றார்கள். நவீன பொருட்களை நுகர்வோர் தொகை அதிகமாகிவிட்டதுடன் அட்டகாசமாக, டாம்பீக சொகுசு வாழ்க்கையுடன் தங்களை இணைத்துக் கொள்ளவே பலரும் பிரியப்படுகின்றார்கள்.





எந்த ஒரு சாதாரண பிரஜையும், வசதியுடன் வாழத் தலைப்படுதலில் தப்பேதுமில்லை. ஆனால், வசதிக்கு மீறிய வாழ்க்கைச் சொகுசைத் தேடுவதால், இருக்கும் நிம்மதியைக் கெடுப்பதால், தன்முன் தோன்றும் பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்க இயலாமல் தடுமாறுகின்றார்கள்.

இன்று நவீன பொருட்களைச் சந்தைப்படுத்தி மக்களை அதனுள் நுழைக்கச் சகல நாடுகளும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. வல்லரசுகளாகட்டும், சாதாரண நடுநிலை நாடுகள், ஏன் பொருளாதாரத்தில் நலிவுற்ற நாடுகள் கூட தமது உற்பத்திகளை அதிகரித்துச் சந்தைப்படுத்துகின்றன. இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், வளரும் நாடுகள் எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை வல்லரசு நாடுகள் சாதுர்யமாக அவைகளை வெற்றிகரமாக்கச் செய்யவிடாது, அவைகளை நசுக்குவதுதான்.

தேவையற்ற பொருட்களான மூன்றாந்தரச் சஞ்சிகைகளை, வெளியீடுகளை, மக்களிடம் கொடுத்து அவர்களை அடிமட்ட கீழ்நிலைக்கு இட்டுச் செல்கின்றன. தகவல் தொழில்நுட்ப இணைய தளமூடாக அநாவசியமான, தகாத தகவல்களால் பல இளைய சமூகம் கெட்டுக் குட்டிச் சுவராகின்றது. எதை, எதையோ சாதிக்க வேண்டிய இளைய சமூகம், மாயவலைக்குள் அகப்பட்டுக் கிடப்பதாகவும் தோன்றுகின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

வளர்முக நாடுகளை நிம்மதியாக வளரவிடச் சம்மதிக்காத வல்லரசுகள், போலிக் கண்ணீர் வடிக்கின்றன. வர்த்தகத்தை அபிவிருத்தி செய்கின்றோம் எனக்கூறி குப்பைகளைக் கொட்டும் இடமாக எமது நாட்டை மாற்றி விட்டார்கள். இந்த அவல நிலையை நீக்குவது எப்படி? எமது நாட்டினை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் என்று கூறுபவர்கள் இன்னமும் தமக்குள்ள உண்மையான சவால்களை இனம் கண்டு கொள்ளாமல் இருப்பது வேதனை. இன்றைய இளைஞன் முன் தோன்றியுள்ள முக்கிய பிரச்சினைகள் என்ன?

கற்க வேண்டிய காலத்தில் கல்விகற்க வேண்டும். கற்பவனுக்குத் தேவையான வசதிகள் இதன் பொருட்டு வழங்கப்படல்வேண்டும். படித்துவிட்டு வேலை வாய்ப்பு இன்றி எத்தனையோ இளைஞர்கள் படும்பாடு சொல்லும் தரமன்று.

எனினும், அரச வேலைகளை எதிர்பாராது தம் வாழ்க்கையில் சுயதொழில் மூலம் எதிர் நீச்சலடித்தும் பல இளைஞர்கள் முன்னுக்கு வரும் போது காதல் பிரச்சனை என்று சொல்லி, அதற்காக மனம் சோர்ந்து உயிரை விடுபவர்களைப் பார்க்கும்போது, வாழ்க்கையின் அர்த்தம் இதுதானா என ஏன் அவர்கள் உணராமல் இருந்து கொண்டார்கள் என்பது வியப்புக்குரியதே!.

வீட்டுக்கும் நாட்டுக்கும் கடமைப்பட்டு, அதற்கு ஒரு





சிறிதளவாவது பிரதி உபகாரம் செய்யாது தனக்கு வந்த சின்னப் பிரச்சனைகளை, சவால்களைக்களைந்து கொள்ளாது தன்னை இழப்பது மன்னிக்கக் கூடிய செயலாகுமோ!

- பார்வைக்கும் எட்டாத பரந்த வெளியிலும் புகுந்து விளையாடு தோழா! உன்னைப் பூட்டி வைக்காதே.

- சின்ன அணுவிற்குள், எத்தனை சக்தி புதைந்துள்ளதே! பென்னம் பெரிய மனுஷன் நீ உனக்குள் எவ்வளவு சக்தி, ஆற்றல் உண்டு தெரியுமா, தெரிந்து கொள்வாயாக!

- வலிமை கூடிய நாயுடன் கூட பூனை போராடுகிறது. பாம்பு கீரியுடன் போராடித்தான் சாகிறது. தன்னை வலிய மிருகங்கள் கொன்றுவிடும் என்பதற்காக வலிமை குன்றிய மிருகங்கள் இரைதேடாமல் முடங்கிக் கொள்வதில்லை. பிரச்சனைகளுக்குப் பயந்து, உள்ளேபடுத்து முடங்கிக் கிடக் கலாமா?

- போராடுவதும், எதிர்த்து எழுதலும் உனது ஜீவாதார உரிமை. நல்லது செய்ய எழு!

- வரப்போகும் நிச்சயமான மரணத்தின் பொருட்டு இருக்கின்ற, வாழ்நாள் முழுவதுமே மரண பீதியுடன் உலாவிட வேண்டாம். "பயம்" கூட மரணத்தின் மறுசாயல் தான். நீ எதற்காகப் பயப்பட்டாலும், அது கூட உன் ஆன்மாவை வதைத்ததாகவே அர்த்தப்



RangaRakes

Tamilnavarasam.com

படும். உணர்ந்து கொள்!

- ❋ சண்டை செய்யாது நட்புறவுடன் சாதிப்பது இரட்டிப்புப் பயனைக் கொடுக்கும், நட்பால் ஒருவனை வெற்றி காண்பதைவிட, சவால்களை எவரிடத்தும் அநாவசியமாகக் கோருவது புத்திசாலித்தனம் அல்ல. அறிவாய்!

- ❋ துன்பங்களும் தோல்விகளுமே சாஸ்வதமானது, என்கின்ற எண்ணத்தை நிரந்தரமாக மனதில் விதைத்தால் மகிழ்வுகளும், விரும்பும் வெற்றிகளும் கிடைக்காது என்பதை அறிந்து, உணர்ந்து, எதிர்மறையான,வாழ்க்கைக்கு ஒவ்வாத முரண்பாட்டுச் சிந்தனைகளைத் தகர்த்து எறி நண்பனே!

- ❋ நல்ல அனுபவங்கள், மேலான கேள்வி ஞானம், பணிவு, பெரியோர் அறிவுரைகள் எமக்கான வெற்றிகளுக்கான, உந்துசக்திகள்!

- ❋ இடர்களைக் களைவதற்கு, நம்பகமான துணைதேடு!

மேற்சொன்ன இவைகள் எல்லாமே, சவால்களை நாம் புரிந்து கொண்டு, அவைகளை வெல்வதற்கான சில வழிமுறைகள் தான். ஆயினும் நாம் எவ்வளவு தூரம் விடயங்களைப் புரிந்து கொண்டாலும் துணிச்சலின்றி எமது வாழ்க்கையைக் கட்டியாள முடியாது.





நாம் எதற்கெடுத்தாலும், சுலபமான காரியங் களுக்குக் கூடப் பெரிதாகக் கற்பனை பண்ணுகின்றோம். போட்டியில் கலந்து கொள்பவன் நிதானத்துடன் மட்டும் நின்று விட்டால் போதுமா? துணிச்சலுடன் செயல்படாமல் ஏதுபயன் கிட்டும்?

தன்னைப் புரிந்து கொள்ளாமலேயே பலரும் தோல்விகளைத் தேடிக் கொள்கின்றார்கள். இருக்கின்ற பலத்தைப் பயன்படுத்தினாலே போதுமானது. அதன்பின் கிடைக்கும் அனுகூலங்களால், புதிது புதிதான சக்திகள் பீறிட்டு எம்முள்ளே, எம்மை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

தோல்விகள் காரணமாக வருகின்ற மனத்தளர்ச்சி இயல்பானதே ஆயினும், இவைகளை நிரந்தரமாக மனதில் ஒட்டவிடாமல், பிரச்சனைகளை வரவேற்று, அதேசமயம் எமக்குச் சாதகமற்றவைகளை அடித்து வீழ்த்துவதுடன் அவை மூலம் எமக்கு அனுகூலமானவை, எவையேனும் இருந்தால் அவைகளை ஏற்போமாக!

எதையுமே தேடும்போது அது சுலபமாகவும் துன்ப மின்றியும் கிடைத்துவிடுவதில்லை. எளிதாகக் கைப்பற்றக் கூடியது என எண்ணும் விஷயங்களே சில சமயங்களில் மிகவும் எம்மை அலைக்கழிக்க வைத்து விடுகின்றது. எப்போதாவது இலகுவாகக் கிடைக்கும் நன்மைகள் கூட மிகச் சீக்கிரமாக எம்மைவிட்டு ஏகிவிடலாம்.

ஆனால், எதற்குமே முகம் கொடுக்கச் சித்தமான வனுக்குத் தோல்வி என்பதன் தாக்கமே தெரிவதுமில்லை.



RangaRakes

Tamilnavarasam.com

அதுபற்றி அலட்டிக்கொள்ள நேரம் கிடைப்பதுமில்லை. சாதாரண மான சின்னச் சின்ன விஷயங்களையே ஒரு சவால் எனச்சொல்லிச் சொல்லி பெரிதுபடுத்திக் கொள்ப வர்கள் தங்கள் திறனை, ஆளுமை வளர்ச்சியைத் தாமா கவே தாழ்த்துபவர்களுமாவர்.

ஒரு அங்காடிக்குச் சென்று வந்த ஒருவர், “ஐயா, இன்று நான் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குப் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. ஒரே சனக் கூட்டம். நான், என்றபடியால் பெரிய சிரமப்பட்டு சாமான்களை வாங்கி னேன். வேறு எவராது இப்படிச் சிரமத்தை எதிர்நோக்கி ஒரு சிறு துரும்பைத்தானும் வாங்க முடியுமா?” இப்படி ஒரு சின்ன விஷயத்தையே சாதனை என்று தமது செயல்களை உரைப்பவர்கள் எப்படி முன்னேற்றகரமான கருமங் களையும் சாதனைகளையும் செய்துகாட்ட முடியும்?

எந்த ஒரு விஷயத்தையும் செய்துமுடிக்க கொஞ்சம் சிரமம் எடுத்தால் தான் என்ன? எல்லா விஷயங்களையும் எமக்கு உவப்பாக வீடுவரை யாராவது கொண்டுவந்து கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கவும் முடியாது.

நாம் முழுநம்பிக்கை, ஆர்வம், ஆவல், விடா முயற்சியு டன் சவால்களை எதிர்கொள்வோமாக! இந்தக் குணாம் சங்களுடன் செயல்படுவோர்க்கு அவற்றின் பெறுபேறுகள் எதிர்பார்த்ததைவிட இரட்டிப்பு மடங்காகிவிடும் கொழுந்து விட்டெரிக்கும் தீச்சுவாலைக்குள்ளும், ஆழ்கடலின் ஆழத்தி லிருந்தும், பெரும் சூறாவளியில் இருந்தும் மீள வந்துவிடுவேன் எனத்திடமாக நம்பிக்கை கொண்டு விடுங்கள்.





இயற்கையுடன் சங்கமித்து வாழும் நாம் எதனைக் கண்டும் மிரளவேண்டிய அவசியமேயில்லை. எல்லாமே நமக்காக, எம்முடையதே. எம்முன் எதிர்ப்படும் பெரும் சவால்களை உண்மை உணர்வுடன் மிதிப்பேன், உதைப்பேன். என எண்ணுக! வீரியமான உணர்வு, விவேகமான ஆற்றல்களுடன் வாழ்பவனுக்கு சவால்கள் எதுவும் கவலைக்குரிய ஒன்று அல்ல.

எதிலும் விறுவிறுப்பு இல்லாத காரியங்களில் ரசனை இருப்பதேயில்லை. சாதாரணமான செயல்களில் புதுமை இன்றேல் அது சப்பென்று இருப்பதாகச் சொல்வார்கள்.

எதிர்புக்களை உடைப்பதே தமக்கும் பிடித்தமானது எனச் சாதனையாளர் சொல்வது முண்டு.

எனினும் வலிந்து வீணான வினை தேடாமல், வரும் இடர்களைக்களைவதே வீரமிகு, பெருமை!


சாதனையாளர்கள் எதனையும் சோதனை எனக் கருதுதேயில்லை! உணர்வோம்!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
27-01-2008



RangaRakes

Tamilnavarasam.com



# சும்மா இருத்தல்

ஒரு வினாடிப்பொழுதிலும் சும்மா, எம்மால் இருந்து விடமுடியாது. உடல் இயங்காது விடின் மனம் என்றும் அலை பாய்ந்தபடியே இருக்கும் வேலை செய்பவன்"களை" பொருந்திய வாழ்வை அமைக்கின்றான். கணப்பொழுதுகளை அவமாக்குபவனே, பூமிக்குத் துரோக மிழைத்தவனாகின்றான் கடமைதவறாது காரிய மாற்று பவனுக்கு கடவுள் கை கொடுத்து உதவுகின்றார்.சும்மா இருப்பவன் இம் மானிலத்தின், மன்னிக்க இயலாத கோழை.! எல்லா உயிர்களும் இயங்கிய வண்ணமிருக்க, மனிதன் மட்டும்,முடங்கி ஒடுங்கிக் கிடக்கலாமா?

"சும்மா இருத்தல்" என்பது சாமான்ய விஷயமன்று. அப்பப்பா! இந்த "நிலை" எம்மால் அடையக் கூடிய ஒன்றா...!! "சும்மா இரு சொல் அற" என்று ஞானிகள் சொன்னார்கள். ஆனால் பேச்சளவில் நாங்கள் சொல்லிக் கொள்ளும் இந்த வார்த்தையின் பொருள் கோடிபெறும்.

ஒரு வினாடிப் பொழுதே ஆயினும் எம் முன்னே





உறவினர், நண்பர்கள், பொதுமக்கள், எதிரிகள் எனப் பலவாறான நபர்களும், அத்துடன் பலதரப்பட்ட சம்பவங்களும், காட்சிகளும் வந்து கழிந்து கொண்டே யிருக்கின்றன.

சில பொழுது வீணான கற்பனைகளில் ஈடுபட்டு தேவையின்றிக் கலவரப்பட்டு சில சமயம் வெறும் கற்பனையிலேயே நடக்காததை நடந்ததாக மகிழ்வடை வதுமுண்டு. மனம் எம்மை வழிநடத்த வல்லது. சிலவேளை எமது புலனைத் திசை திருப்பி அலைக்கழிக்கவும் வல்லது. எல்லாமே நாம் மனதைக் கட்டியாளும் திறனில் தங்கியுள்ளது.

எனவே, மனம் எம்மைச் சும்மா இருக்க விடுவ தில்லை. சாதாரண நிலையில் உடல் அசைவற்று இருக்கும் போது மனம் அசைந்து எம்மை மகிழ்விக்கலாம், துன்புறுத் தல்களும் செய்யலாம். இவையெல்லாம் ஒருபுறமிருக்க, உறக்கத்தில் கூட மனம் மனிதனைச் சும்மா இருக்க விடுகி ன்றதா? கனவுகள் வந்து தொந்தரவுகள் செய்கின்றதே. இதற்கு என்ன செய்ய? நல்ல கனவுகளால் நிம்மதியடை பவர்களுமுண்டு.

நாம்தேவையுள்ள இடத்தில் பேசவேண்டும். தேவையற்ற விடத்தில் அமைதியாக இருக்கவேண்டும். பல இடங்களில் மௌனம் எம்மைக் காப்பாற்றி விடும். கதை கொடுத்தே எந்த இடத்திலும் கலவரம் ஏற்படுத்துவோரும் உள்ளார்கள்.



RangaRakes

Tamilnavarasam.com

ஒரு திருமண வீட்டுக்காட்சி இதோ, கலகலப்பான, மகிழ்ச்சிகரமாக ஒரு திருமண வைபவத்தில் பலரும் தமது உற்றார் உறவினர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கின்றார்கள். நல்ல சந்தோஷ வேளை, அப்போது அங்கு ஒருவர் வருகின்றார். சுற்று முற்றும் பார்க்கின்றார். எதிரில் உள்ள முதியவர் ஒருவருடன் பேச்சுக் கொடுக்கின்றார். இவர்களுக்குக் குளிர்பானம் வழங்கப்படுகின்றது. குளிர் பானத்தைப் பருகியவாறே அந்த முதியவருடன் பேச ஆரம்பிக்கின்றார்.

"இந்த மாப்பிள்ளைப் பையன் பரம சாதுவாகத் தெரிகின்றான். பரவாயில்லை. ஆனால் இவனது அம்மாக்காரியைப்பார்த்தால், அப்படித் தெரியவில்லை. பெரியவாய்க் காரியாக இருப்பாள் போலிருக்கின்றது. பாவம் இந்தப் பெண், என்ன செய்யப் போகிறாளோ!! மருமகளை என்ன பாடுபடுத்தப் போகின்றாளோ."

இப்படி அந்தப் பெரியவருடன் இவர் சொல்லி முடிக்கும்வரை அதை கேட்டவரோ மணமகனின் தாயாரின் சொந்த அண்ணன் என்பதை அறியாமல் இருந்ததுதான் பரிதாபம்! அப்புறம் என்ன, இதன் பின்னர் நடந்ததை எப்படிச் சொல்ல முடியும்? வாய் இருந்தால், கண்டபடி பேசலாமா? சுற்றுப்புறம் சூழல், யார் முன்பேசுகின்றோம் எனத் தெரியாமல் பேசிக் கொண்டேயிருக்கலாமா?

அத்துடன் ஒவ்வொருவரும் தமக்கான கௌரவத்தை தேவையின்றி குறைத்துக் கொள்வதற்கு தாமே காரணமாக





இருக்கலாமா? சந்தோஷமாகப் பேசி, உரையாடத் தெரியாமல், அல்லது சௌஜன்யமாகப் பழகத் தெரியாமல் இருப்பதுவே பெரிய பலஹீனம் அன்றோ!

சிலர் இருக்கின்றார்கள். வழியில் சும்மா போய்க் கொண்டிருப்பவர்களிடம் வலிய கதை கொடுப்பார்கள். "நீ என்ன பெரிய ஆளா நான் நிற்பது தெரியாமல், உன் பாட்டிற்குப் போய்க் கொண்டேயிருக்கிறாய்..." என்று சொன்னதும் அவர் விடுவாரா, பதிலுக்கு "நீ என்ன பெரிய இவனா, உனக்கு என்ன மனதில் இருக்கிறது. உன்னோடு நாம் பேசினேனா? சும்மா வலிந்து சண்டைக்கு இழுக்கின்றாய்" என்பார்.

தமக்கு எதிராக ஒருவன் துணிந்து பேசியதுமே இவரிடம் தனது ஆணவப்பேச்சு எடுபடாது என்றதும் அப்புறம் கெஞ்ச ஆரம்பித்து விடுவார், நான் "சும்மா" பேச்சுக்குச் சொன்னேன். இதுக்கெல்லாம் நீ கோபப் படலாமா? எனக்கு உன்னுடன் பேசக் கூட உரிமை இல்லையா" என்பார். இந்தக் கெஞ்சல் கதைகள் எல்லாம் தேவைதானா? சொல்லுங்கள். "வாயை வைத்து வேண்டிக் கட்டக் கூடாது" என்றும் கூறுவார்கள்.

எமது தகாத பேச்சுக்களால் இன்னும் ஒருவரை ஆக்ரோஷமான மனிதராகவோ, அல்லது எதிரியாகவோ ஆக்கிவிட நாம் சந்தர்ப்பம் வழங்கலாமா? ஆனால் சில நபர்கள், ரொம்பவும் மௌனமானவர்களாகக் காட்சி



RangaRakes
Tamilnavarasam.com

தருவார்கள். ஆனால் இவர்கள், செய்யும் காரியங்களோ வேறுவிதமாகவும் கொடூரமாகவும் இருக்கும். மௌனமாக இருந்து நல்ல பெரும் காரியங்களைச் செய்பவர்களும் இருக்கின்றார்கள்.

சும்மா அமைதியாக என்று இருந்து கொண்டே, சமூக விரோதச் செயல்களையும், எவரையும் நிம்மதியாகச் செயற்பட விடாமலும் இருப்பவர்கள், பெரும் ஆபத்தான நபர்கள் என்றே சொல்ல வேண்டும். பேசாமல் இருக்கும் இத்தகையவர்கள், எங்கே எப்போது, அடித்து வீழ்த்துவர்கள் என யாருக்குத் தெரியும்? நேருக்கு நேர் சண்டையிட முனையாமல் குறுக்குவழி, கோணல் புத்திக்காரருடன் என்றுமே எச்சரிக்கையாக இருக்க வேண்டுமல்லவா?

என்றாலும், கோபத்தை வெளிக்காட்டியும், செயலளவில் சாத்வீகமான அணுகுமுறைகளில், நல்லவைகளைச் செய்யும் நல்ல சீவன்களையும் நாம் பார்த்திருக்கின்றோம். எனவே சும்மா இருப்பவர்களைப்போல் பாசாங்கு செய்பவர்களையும் உண்மையிலேயே தான் உண்டு தன் கருமம் உண்டு என வாழ்பவர்களையும் நாம் இனம் காணல் வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுமே தனது வாழ்க்கையை, நன்கு நடாத்துவதற்காக ஏதாவது ஒரு தொழிலைச் செய்தேயாக வேண்டும். ஒவ்வொருவருமே தமது தகுதி, தராதரத்திற்கு ஏற்ப சிறந்த ஒரு தொழிலைச் செய்யாமல் பூமிக்குப் பாரமா





கச் சும்மா இருக்க முடியாது.செல்வத்தை ஈட்டுவதற்கு மட்டும் நாம் உழைக்கின்றோம் என்பதில்லை. நாம் சந்தோஷகரமாக எமது வாழ்நாட்களை உற்சாகமாகக் கழித்திடவும், உடலைச் சதா சுறுசுறுப்புடன் இயங்கச் செய்யவும் வேலை செய்தேயாக வேண்டியவராவோம். உடலை வளைக்காமல், உடலை அழகுபடுத்தி வெளியுலகில் சதா கஷ்டப்பட்டு உழைப்பவராகக் காட்டித்தம்மை தாமே ஏமாற்ற முடியுமா? வேலை செய்யாமல் இருக்கும் சோம்பேறிகளைக் கண்டால் எரிச்சல்படாமல் இருக்கவே முடியாது.

பொழுதுகளின் பெறுமதிகளை அறியாமல் சீவிப்பதில் அர்த்தமேயில்லை. வாழ்க்கையில் தமக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளைச் சரிவரச் செய்யாமல் சும்மாகவே காலத்தைத் தள்ளும் பிரகிருதிகள், தாமாகவே உலகத்தினால் ஒதுக்கி எறியப்படுவதற்கு ஆளாகி விடுகின்றார்கள். வெறும் வார்த்தை ஜாலங்களால், வாக்குறுதிகளை அள்ளி வீசி மக்களுக்கு இறுதியில் ஒன்றுமே செய்யாத அரசியல் வாதிகளை மக்கள் இனம் கண்டபின் ஏற்றுக் கொள்ளாமல் தூக்கி அப்புறப்படுத்தி விடுகின்றார்கள்.

கடமை தவறாது ஊழியம் செய்யும் எவரையும் கடவுள் கைவிட்டதுமில்லை. எவர்களுடைய முன்னேற்றமோ, அல்லது தாழ்ந்த நிலைக்கோ அவரவர்களின் செயல்கள்தான் காரணமாகின்றன.தேனீ ஒரு சொட்டுத்



RangaRakes

Tamilnavarasam.com

தேனுக்காகத் தன் சிறகை எத்தனை தரம் அடித்து அடித்துப் பறக்கின்றது. எத்தனை மைல்கள் சுற்றிச் சுற்றி பறந்து திரிந்து, மலர்களைத் தேடுகின்றது!

"படைத்தவன் படி அளப்பான்" எனச் சொல்லி அடுத்த வேளைக்கு உழைக்காமல் சும்மா இருந்துவிட முடியுமா? ஒருவன் தனக்காக மட்டும் வாழ்ந்து விடமுடியாது. ஒருவர் தானாகவே ஏற்றுக் கொண்ட பொறுப்புக்கள் என்றும், பிறரால், சமூகத்தினால் வழங்கப்பட்ட பொறுப்புகள் என்றும், எதிர்பாரா இயற்கையான நிகழ்வுகளால் வந்து சேர்ந்த கடமைகளும், எனப்பல வகையாக கருமங்கள் வந்து சூழ்ந்து நிற்கின்றன. இந்தப் பொறுப்புக்களில் இருந்து விலகிவிட எத்தனிக்க முடியாது.

திருமணத்தினை விரும்பி ஏற்று குழந்தை குட்டிகளைப் பெற்றுவிட்ட பின்பு கூட சாதுர்யமாக அவர்களுக்கான கடமைகளைச் செய்வதில் இருந்து ஒதுங்கி "சும்மா இருப்பதுவே சுகமானது ஆளை விடு" எனத்தப்பி ஓட முடியுமோ!

திருப்தியுடன் தன் கருமங்களைச் செய்யாதவர்கள் கோழைகள் என்பது மட்டுமல்ல காலப் போக்கில் இறுக்கமான மன நிலையில் வாழ்ந்து ஸ்தம்பிக்கப்பட்ட மரத்துப் போன ஆன்மா போலச் சடமாகிப் போகின்றார்கள். "இவன், இருந்தும் என்ன". என ஒருவர் சொல்லும் நிலைக்கு ஒருவன் ஆளாவது வெட்கம் கெட்ட சீவியம் தான் அல்லவா?





எமது வாழ்க்கையில் எல்லாமே மனதின் தூண்டுதல்களினாலேயே செய்யப்படுகின்றன.

- ❋ நான் இயங்குவதற்கு, கடமை செய்வதற்குப் பிறந்தவன். "நான் வாழப் பிறந்தவன்" கோழையாக அழியப்பிறந்தவன் அல்லன்.
- ❋ நான் இன்றைக்குச் செய்பவைகளை இன்றைக்கே செய்து முடிப்பேன்.மேலும் நேரம், வசதிகள், வாய்ப்புக்கள் இருப்பின் எதிர்கால நோக்கிற்காகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவேன்.
- ❋ நாம் சும்மா இருக்கும் ஒவ்வொரு பொழுதும் என் ஆயுள் காலம் குறுகுவதை அறிவேன்.
- ❋ எனவே காலப்பெறுமதியுணர்ந்து வேலைகளைச் செய்பவனுமாவேன்.
- ❋ சமுத்திரத்திலும் மேலான சுமைகள் சூழ்ந்திடினும் அவை எல்லாமே என் சீரிய முயற்சிக்கு முன் எம்மாத்திரம் என்கின்ற திடமான உறுதியுடன் என்னை நான் புத்தம் புதுப்பிறவி எடுத்த புது மனிதனாகவே ஆக்கி உலகை உருவாக்கும் பணியில் எனது பங்களிப்பினை நல்கியே தீருவேன்.
- ❋ வலிய வீண்தொல்லைகளுள் போகாமல் இருப்பதனால் என் ஆன்மா, வலுமிக்கதாக அமையும் என்பதனைஅறிவேன்.எனக்குள்ள ஆற்றல்களை மேலும்உற்பத்தி செய்வதற்காக பொறுமை,நிதானம்



RangaRakes
Tamilnavarasam.com

இவைகள் துணைகொண்டு இடையூறு அற்ற வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்பவனுமாவேன்.

மேற்சொல்லப்பட்ட உறுதிமிகு வாசகங்களை ஏற்று இயங்கும் மனிதனுக்கு, சும்மா இருந்து நொந்து, நைய வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

பயன்மிகு பொழுதுபோக்குகள், அறிவூட்டும் நூல்களை வாசித்தல், தாங்கள் வழிபாடு செய்யும் இடங்களைத் தரிசித்தல், நல்ல சொற்பொழிவுகள், சமய நிகழ்வுகள், கலை, கலாசார நிகழ்ச்சிகளில் பங்குபற்றினால் எமது வாழ்நாட்கள் இனிமையாகவும், பயன்கொண்டதாகவும் அமைந்துவிடும்.

தங்களது கருமங்களைச் செய்து முடிக்க காலம் முழுமையாகப் போதவில்லையென எத்தனையோ பேர் சொல்லிக் கொண்டிருக்க, பொன்னிலும் பெறுமதியான காலத்தை தமக்கும் தம்மைச் சார்ந்தோர் சமூகத்திற்கும் வழங்காமல் பயனற்றதாகக் கழித்து வீணடித்து விடலாமோ!

நாங்கள், எங்களையே எங்களிலும் வலுவுள்ளவராக்க முயன்றுவர வேண்டும்.

❋ நான் சாதாரணமானவன் அல்லன்,

❋ என்னையே வென்றுவிடுவேன் என்கின்ற உறுதிமிகு எண்ணங்களுடன் வாழ்பவன்,





❋ "சும்மா" இருந்து பொழுது போக்கமாட்டேன்.

❋ எனது சாதனைகளை நானே முறியடித்தேன் என்பதைவிடப் பெரிய நிறைவு ஏது!


உலகம் செழிப்பாக, வளமாக வேண்டும் என்று சொல்லும் நாம், எங்கள் தனிப்பட்ட திறனை வளர்த்தாலே போதுமானது. எங்கள் பெறுமதி மிகு திறன்கள் தானாகவே இந்த உலகைச் சேர்ந்துவிடும். கல்வி, ஞானம், அனுபவங்கள் பெற்றுக்கொண்ட மனிதன் சும்மா இருந்து சாகமாட்டான்.

தினம், தினம் நாம் உறங்கச் செல்லும்போது, இன்று நான் செய்து முடித்த பயன் தரு செயல்கள் என்ன, நாளைக்கு நான் என்ன காரியங்களைச் செய்து முடிப்பேன் என, எக்கணமும் எம்மைக்கேட்டு அதன் படி வாழுவோமாயின் எம்பணி முழுமையாகிவிடும். சும்மா வாழக்கூடாது எமது பணி எமக்காகக் காத்திருக்கின்றது. இதில் சுணக்கம் என்ன? சோம்பல் எதற்கு? சிங்கம் எனச் சிலிர்த்து எழுக!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
06.01.2008



RangaRakes
Tamilnavarasam.com



# விதி

> முயற்சி மூலம், புதிய விதிகளை உருவாக்குவோம். திடநம்பிக்கை நல்ல விதியை எமக்கு ஏற்படுத்தும். தலை எழுத்து என்று சொல்லி வாழ்வாதாரத்தை அழிக்கக்கூடாது. தோற்பது பலவீனமல்ல. விதியைச் சொல்லி தோல்வியில் இருந்து விடுபட முனையாமை தான் பலவீனம். பகுத்தறிவு கொண்ட நாம், துன்பங்கள், பிரச்சனைகளைக் கண்டறிந்து வெற்றிகொள்ளவேண்டும்.

இப்படித்தான், ஒருவர்க்கு எல்லாமே வாழ்க்கையில் நடக்கும் எனச் சொல்லப்படுவதை "விதி" என்றும் "தலை எழுத்து", என்றும் சொல்லிக் கொள்கின்றார்கள்.

மெய்ஞ்ஞானத்தில் நம்பிக்கை கொண்ட ஆன்மீகத் துறையிலும், விஞ்ஞானத்திலும் "விதிகள்" பற்றிக் கூறப்படுகின்றது. விஞ்ஞானத்துறையில் உண்மையின் உருவாக விதிகளை வகுத்திருக்கின்றார்கள்.



RangaRakes



எனினும், விஞ்ஞானத்துறை சார்ந்தோரால் விதிகள், தத்துவங்கள் கூட, ஆரம்பத்தில் நிறுவப்பட்டமையைப் பின்னர் வந்த விஞ்ஞானிகள் மறுத்துரைத்து அதனையே "புதியவிதி" யாக உருவாக்கி நிறுவி வருவதும் கண்கூடு.

ஆகமொத்தத்தில் விதிகள், கூற்றுக்கள்கூடச் சில சமயம் முடிவு அற்று, தற்காலிக உண்மைகளாக அவைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளாகத் தோற்றம் காட்டப்படுவது முண்டு ஆயினும் அந்தந்தக் காலங்களில் அவை தவிர்க்க முடியாத உண்மைகளே!

மனித சிந்தனைகள் காலத்திற்குக் காலம் விரிவடைந்து பரிணாம வளர்ச்சி அடையும் போது மனிதப் பார்வைகள் பல்திசைகள் நோக்கிப் பயணிப்பதும் ஆங்காங்கு புதுப்புதுச் சந்தேகங்கள் ஏற்பட்டுவிடுவதும், இதனால் பல உண்மைகள் வெளிக் கொணரப்படுவதும் கூட இறை சித்தமேயாம்.

விஞ்ஞானிகள், விஞ்ஞான அறிவுமூலம் கண்ட உண்மைகளை மெய்ஞானிகள் தம் அக உணர்வுகள் மூலம் வெளிப்படுத்துவதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இன்றைய விஞ்ஞானக் கூற்றுக்களை ஏற்கனவே ஆன்மீகவாதிகள் தமது மெய்ஞான அறிவினால் உருவாக்கி உலகிற்கு அளித்து விட்டனர். கிரக மாற்றங்கள், உடற் கூற்று சாஸ்திரங்கள் எல்லாமே வியத்தகு விதத்தில் எம் முன்னோர்கள் சொல்லிச் சென்றுவிட்டனர்.



Tamilnavarasam.com

என்றாலும், எம்மவர்களால் காலம் காலமாகச் சொல்லப்பட்டு வரும் "விதி" அல்லது தலை எழுத்து, தலைவிதி பற்றி மாறுபாடான, ஒத்த சிந்தனைகளின் கருத்துப் போராட்டம் இன்னமும் ஓய்ந்தபாடில்லை.

விதி என்பதே பொய்யான கூற்று, இது சோம்பேறிகளின் இயலாத் தன்மையுடனான கற்பனை. விதியைச் சொல்லியே தமது முன்னேற்றங்களை முடிவு கட்டிவிட்ட படுபிற்போக்கான, அறியாமைக் கருத்து என முற்போக்கு சிந்தனையாளர் எனச் சொல்வோரும், நாத்திகம் பேசுவோரும் வலியுறுத்துகின்றனர். ஒருவரின் அறிவினால் உணரப்பட்டவை, அல்லது அனுபவ ஞானத்தால் பெற்றவை அல்லது நிஜமாகவே நடந்தேறிய சம்பவங்கள் மூலம் கண்டறியப்பட்டவை கூட மற்றவர்களால் மறுத்துரைக்கப்பட்டும், பரிகாசிக்கப்பட்டவையுமாகக் கருதப்பட்டதுண்டு.

"நான், எனது கனவில் எனது இஷ்டதெய்வத்தைக் கண்டேன்" "மறைந்து போன எனது பெற்றோர் எனக்கு இன்னது தான் நடக்கும் என்று சொன்னார்கள்". மேலும் "நான் நேற்று இரவு, நான் வணங்கும் கடவுளையே கண்டு விட்டேன்" என்றும் பலவாறாகக் கூறுபவர்கள் உளர்.

"தங்கள் கிரக பலாபலன் படி, இன்னதுதான் நடக்கும் என சோதிடர் சொன்னது போலவே நடக்கின்றது" எனச் சொல்லுபவர்களும் இருக்கின்றனர்.





தவிர, சோதிடம் என்பதே பொய், அப்படி அதில் கூறப்படுவதில் ஒன்றுமேயில்லை என மறுத்துரைப்போரும் தாங்கள் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் மூலம் சொல்வதுண்டு. "இவை எல்லாமே மூடநம்பிக்கைகள், மனித முயற்சி என்பதுதான் உண்மை, வீணான கற்பனை உலகில் சஞ்சாரம் செய்ய வேண்டாம்" என்று சொல்பவர்களின் வாதம் அவர்கள் நிலையில் அது சரியானதே. மேலும் தமது சோதிடத்தில் சொல்லியபடி உள்ளவாறே சரியாக எல்லாமே நடந்து விட்டது எனக் கூறுபவர்களும் ஏராளம், ஏராளம்.

ஆயினும், ஒருவர் பெற்ற அனுபவங்களை நாம் பொய் என்பதும் அல்லது ஒருவரது நம்பிக்கைகளையே தவறு என்றும் நாம் வாதம் செய்வது எந்தளவுக்குச் சரியானதாகும்?

ஏன் எனில் நம்பிக்கை மூலமே தங்கள் வாழ்க்கையை மேம்பாடாக்கிய கோடானு கோடிபேர் இருக்கின்றார்கள். கடவுள் நம்பிக்கையுடன் திருப்தி கண்டு வாழ்வில் பூரணத்துவம் பெற்றவர்களை வெளியே இருந்து நோக்கும் சிலர் விமர்சித்துவிட முடியாது. அதேசமயம், எல்லாமே என் தலை எழுத்து, அதை மாற்ற யாரால் முடியும்?என்று சொல்லிச் சொல்லியே தம் வாழ்வை அலுத்துக் கொள்பவர்கள் உண்டு அவர்கள் கூற்றுக்களைச் சரி என்று கொண்டாடவும் முடியாது."விதி" என்பதைச் சரி என்றே ஏற்றுக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். இதன்



RangaRakes
Tamilnavarasam.com

பொருட்டுத் தொடர்ந்துவரும் துன்பங்களைத் தகர்த்திட எண்ணாது, அது இறைவன் இட்ட வழி, எனது ஜாதகத்தில் அப்படிச் சொல்லப்பட்டது எனக் கூறியே சீவியத்தை ஓட்டவேண்டியதுதானா?

கடவுள் மனிதர்க்கு நுண் அறிவை, பகுத்தறிவை ஏன் படைத்தான். நாம் எல்லோருமே வகுத்த விதி இது வெனக் கருதி வாழ்ந்து சாவதற்காகவா எமைப் படைத்தார்? எங்கள் முன்னே எத்தனையோ பேர் சொகுசாகச் சௌகர்யமாக வாழ்ந்து காட்ட நாம் மட்டும் எமது விதி இதுவென மனம் குமைந்து வாழ்வதைக் கடவுள் தான் அனுமதிப்பாரா?

ஒன்றை மட்டும் திடமாக மனதுள் இருந்துவீராக! எல்லோருக்கும், வாழ இந்த உலகில் பூரண உரிமை இருக்கின்றது. மனதினுள் சலனத்தை ஏற்படுத்தித் தாழ்ந்த நிலையில் மனிதன் தன்னையிட்டுச் செல்வதையும், எந்த மனிதரிலும் பார்க்கவும், எனக்கு எவ்விதத் தகுதியும் இல்லை எனச் சிந்திப்பதுவே கடவுளை நிந்திக்கும் செயல் ஆகும்.

விதி என்பதற்கும் மேலாகப் புதிதான ஒரு விதியைச் சமைப்போமாக! எமது வாழ்க்கையைச் செப்பனிடுவது பழைய விதி அல்ல, நாமாக உருவாக்கிய "புதிய விதிகள்" மூலம் எங்களைப் புதுப்பித்து, மாற்றியமைப்போம்.

நாம் புதிதான விதியை! வாழ்க்கைப் பாதையை அமைப்பதுகூட முன்னர் சொல்லிவைத்த நல்ல தலை எழுத்து இது என எண்ணி எங்கள் முன்தோன்றும் இடர்





களை உடைத்தெறிய முழுமூச்சுடன் முன்நின்று உழைப்பது தான் என்பதை முதற்கண் உணர்க!

இன்று மட்டும் அல்ல, என்றுமே புதிது, புதிதாகச் சாதனை செய்துவரும் ஒவ்வொரு சாதனையாளர்களுமே, புதிதான விதிகளை உருவாக்கியவர்களே!. இவர்களில் ஒருவராவது எனக்கு எதுவும் சரிப்பட்டு வராது, எனது பலாபலன்கள் சரியானதாக இல்லை என்று, மனதளவில் ஒருசிறு கீற்று, எதிர்மறைச் சிந்தனைக்குள் அகப்பட்டால் எடுத்த காரியங்கள் கைகூடிவிடுமோ?

- ❋ நான் செய்யப்போகும் செயல்கள் அனைத்துமே இறை ஆணையாகும்.
- ❋ நான் மனித குலத்திற்கு சேவையாற்றப் பிறந்தவன். எனவே என்பணி, மனித குலம் நடமாடும் இந்தப் பூமிக்கானதேயாம்.
- ❋ என் பொருட்டுச் செய்யப்படும் செயல்களால் கூட
- ❋ நான் மற்றவர்க்கு விரோதமற்றவனாகவும், இதனால் உலகிற்கு ஏதாவது ஒரு சிறிதளவாவது, பாதகம் ஏற்படாமல் பார்த்து நடக்கச்சித்தமாயுள்ளேன்.
- ❋ நான் விதியைச் சொல்லி மதியை இழக்கத் தயாரில்லாதவன். எனது விடாமுயற்சி, தன்னம்பிக்கை, சுய அறிவு என்பனவற்றுடன், எல்லாம் வல்ல இறை நம்பிக்கையுடன், மனத்திருப்தியுடன் பணிசெய்ய என்றுமே சித்தமாயுள்ளேன்.



RangaRakes Tamilnavarasam.com

மேற்கண்ட உறுதி மொழிகளால் நாம் எம்மையே வலுமிக்க மனிதனாக்குவோம். தலை எழுத்து இதுதான் என்கின்ற முரணான போக்கினால் எம்மை நாம் ஏன் வேதனைப்படுத்த வேண்டும்? வலிந்து வேதனைகளை உருவாக்குதல் போல பேதமை வேறில்லை. மனத் திருப்திக்காகச் சொல்லப்படும் சில சமாதானங்கள் எம்மை ஒரு பலவீன நிலைக்கு இட்டுச் செல்லலாம்.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், தற்செயலான சில சம்பவங்களால் எம்மை நாம் சாந்தப்படுத்திக் கொள்ளச் செய்யப்படும், அசாதாரணமான எண்ணங்களையே, தொடர்ந்தும் நாம் கடைப்பிடிக்க விழையாது, எதிர்ப்படும் சவால்களை விடாது எதிர்கொண்டு நாமே துரத்த ஆரம்பித்தால், எதிர்ப்புக்கள் எழுந்தோடி மறைந்துவிடும்.

“துரத்துகின்றவனைக் கண்டு ஓடவேண்டாம். நின்று எதிர்த்துப்போராடு”. அவன் வலிமைமிக்கவனாயின் உன் மதி நுட்பத்தினால் அவனை வீழ்த்து! ஆனால் தகாத சிந்தனையால் முறைகேடாக துன்பங்களில் இருந்து விடுபட எண்ண வேண்டாம். இது உனக்கு நீயே விடுக்கும் எச்சரிக்கையுமாகும். சறுக்குமரத்தில் ஏற விழைபவன், விழுந்து கீழ்நோக்கி வந்து, மறுபடி முயற்சித்துப் பின்னர் வென்றுவிடுகின்றான். யாரோ ஒருவன் முயன்று வென்றதைக் கண்டும் கூட அது என்னால் முடியாது என எண்ணுதல் தவறான நினைப்பு அல்லவா? எனினும் செய்யும்காரியத்தில் போதிய பயிற்சி பெற்று விடுதல் அத்தியாவசியமானது என்பதையும் எண்ணத்தில் கொள்க!





நாம் தோற்பது ஒரு பலவீனம் அல்ல. தோற்பதற்கான காரணத்தை அறிய விழையாமல் இருப்பதும், தெரிந்தும் அதனை உதாசீனம் செய்வதுமே அறிவிலித்தனமானதாகும். வாழ்க்கையே ஒரு போராட்டமாகவும் போட்டிகள் நிறைந்ததாகவும் இருக்கின்றது. என்றாலும் நாம் இதனை ஒரு யதார்த்தமானதாகவும், ஒரு இயல்பு நிலை, என்றும் ஏற்றுக் கொண்டுவிட்டால் சகிப்புத்தன்மை தானே வந்துவிடுகின்றது.

சிலவிடயங்களில் நாம் வாழ்க்கைப் பிரச்சனைகளை கடமையுணர்வுடன், அக்கறையுடன் அவதானமாக கவனித்துக் கையாள வேண்டியுள்ளது. எச்சரிக்கை உணர்வுடன் நோக்கத்தக்க விஷயங்களுமுண்டு. ஆனால், மிகச் சாதாரணமான விஷயங்களுக்குக்கூடப் பதட்டப்படும் மனிதர்கள், அதனையே பூதாகாரமாக்கி “எனது விதியைப் பார்த்தீர்களா” என அலறியடிப்பவர்களும் இருக்கின்றார்கள். எல்லா விஷயங்களைப் பெரிதாக நோக்கக் கூடாது, அதே சமயம் பாரதூரமான விஷயங்களைக் கண்டு கொள்ளாமல் இருக்கவும் கூடாது.

எச்சரிக்கையுணர்வுடன் வருமுன் தன்னைக் காத்துக் கொண்டவன், “விதி” என்று சொல்லும் விஷயத்திற்கே அப்பாற்பட்டவனாகின்றான். அத்துடன் சிரமம் பாராது கடமையே கண் எனப்போற்றி, இறைவன் செயலாகக் கருதி மனோதிடத்துடன் காரியமாற்றுபவனுக்குச் சகல வழங்கல்களுமே, இறைவனால் அருளப்படுகின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

மனிதனை ஆண்டவன் தனது கண்காணிப்பில், புனித மான சுற்றுச் சுழலுடன் அவனுக்குத் தேவையான சகல வளங்களை உள்ளடக்கியும், அவன் உணவுத் தேவைகளுக் கான மரம், செடியும் அதனூடான காய், கனி, கிழங்கு எனச் சகலதையும் வழங்கினான். குடிக்கத் தூயநீர், நீராடிமகிழ அருவி, ஓடி, நடந்து மகிழ பசும் புற்தரைகள், இயற்கையான குகைகள் குன்றுகள் என எல்லாமே கொடுத்து அவன் தன்னை அறிந்து, தன்னைக்காப்பாற்றிக் கொள்ள ஆறு அறிவையும் நல்கினான்.

ஆயினும், மனிதன் அறிவை வலுப்படுத்திய அதே வேளை, இயற்கையுடன் மட்டுமல்ல, தன்னோடு வாழ்ந்து வரும் தன் குலத்தினருடனும் மோதினான். மோதி, மோதி அல்லல்பட்டதும், செய்த தவறுகளுக்கான, பிரதிபலன்களை அனுபவிக்கும் போதுதான், விதியைச் சாட்டுதல் செய்தான்.

ஓ... மனிதா! உனக்கு விதி என்ன கொடுமை செய்தது? நீயாகச் செய்தாய், நீயாக நொந்து இளைத்துப் போகின்றாய், கொதிக்கின்றாய், அரற்றுகின்றாய் அது ஏன்? ஏதாவது உனக்கு அனுகூலமாக நடக்கும் போது பிரமாதமாகக் கூத்தடிப்பதும், ஒரு சின்னச் சலனம் ஏற்பட்டு துன்பம் ஏற்பட்டால், மனதை நீயாகவே அலட்டுவதுடன் அத்துடன் தன்னைச் சார்ந்தவர்களையும் துன்பத்தில் ஆழ்த்துவதும், உனக்குப் பலவீனமாகப் படவில்லையா சொல்? அதுமட்டுமல்ல, எனது தலை எழுத்து இதுவெனச் சொல்லி மற்றவர்களையும் உன்வழிக்கு இழுப்பது என்ன நியாயம் உண்டு சொல்!





எனவே, அன்பான மனிதா, நீ உன்வழியில் கண்டபடி சென்றால் அது மற்றவனையும் பாதிக்கும் என்பதை நீ சற்று யோசித்துச் சரியான புத்திசாலித்தனமான மார்க்கத்தில் நடந்தேயாக வேண்டியுள்ளது. "பகுத்தறிவு" என்பது, புது வாழ்க்கையை ஆய்ந்துணர்ந்து துணிச்சலுடன் அமைப்பதற் கேயாம். இது ஒன்றும் இறைவனுக்கு எதிரானதும் அல்ல.

சந்தர்ப்ப சூழ்நிலைகளால், கால மாற்றங்களால் கூட சிலவேளை மனிதன் முன்னேற்றமடைய சில தடைக் கற்களை அவனால் உடைக்க முடியாதுள்ளது, வேதனைக் குரியதே.

பத்துப்பேர் சரியானதைச் சொல்லும் போதும், முறை யாகக் கருமாற்றும் வேளையில் ஒருவன் வந்து கண்டபடி பேசுவதை கேட்கவும் ஆள் இன்னமும் இருக்கின்றார்களே?

எங்களது முயற்சிகள், ஆற்றல்களில் ஸ்திரத் தன்மை இருப்பின் தவறான வழியில் பிறரால் மூளைச் சலவை செய்யப்படல் இயலாத காரியமாகிவிடும்.

இறை நம்பிக்கையற்றவர்களே விதியைக் கேலி செய்வார்கள் எனவும் நாம் அறிகின்றோம். "விதி" என்பதற்கும், இறைவனுக்கும் ஏன் முடிச்சுப் போகின்றார் களோ தெரியவில்லை. அமெரிக்க விஞ்ஞானிகள் தமது விண்கலத்திற்கு தமது காத்தல் கடவுளின் பெயரான "அப்போலோ" வைச்சூட்டிக் கொண்டார்கள். இது அவர்களின் இறை பக்தி உணர்வைக் காட்டி நிற்கின்றது.



RangaRakes

Tamilnavarasam.com

விஞ்ஞானிகள் என்றால் அவர்கள் இறைவனுக்கு எதிரானவர்கள் என்று சொல்ல முடியுமா? நாம் எல்லோரும் கடவுளால் இரட்சிக்கப்பட்டவர்கள். அவரால் கணப் பொழுதும் காப்பாற்றுப்பட்டுக் கொண்டே இருப்பவர் களுமாவோம். தவறான கருதுகோளால், விதியைச் சொல்லி எங்கள் வாழ்வை ஸ்தம்பிக்கச் செய்வதுதான் கூடாது. நடப்பது நடக்கட்டும் அதை விதி எனச் சொல்லாமல், இறைவன் விட்டவழி "முயன்று முயற்சி செய்வதே பெறுமதி மிக்கது" எனச் செயல் மூலம் செய்து காட்டுவோம்.


நாம் எவ்வளவுக்கு எவ்வளவு, மும்முரமாக, கடமை களில் ஈடுபடுகிறோமோ, அம் முயற்சிக்கு ஏற்ப கழிக்கும் நாட்களில் முன்னேற்றமும் வேகமும் வந்தடையும். நற்பலன்களும் எதிர்பார்ப்புக்களுக்கு மேலதிகமாகவே கிடைத்துவிடும். தான்போவது எங்கே எனத் தெரியாமல் இருப்பவர்கள் விதியைப் பற்றி விஸ்தாரமாகப் பேசுவார்கள், ஆனால் கடமைகளை முழுமூச்சாக செய்பவர்களுக்கு எதைப்பற்றியும் பேச... எங்கே ஐயா, நேரம் இருக்கின்றது?

சரியானதைச் சிந்திப்பதற்கும் செய்வதற்கும் தைரியம் வேண்டும். வாழ்வோடு போராட பலவீனமான கருத்துக்களை ஏற்காமல், வீரியம் வாய்ந்த சிந்தனைகளை ஏற்று வாழ்வை நடாத்தவும், எம்மை என்றுமே தயார் நிலையில் வைத்திருந்தால், "விதி" எம் வசமாகும்.

தினக்குரல் ஞாயிறு மஞ்சரி 23.12.2007







# கண் முன்னே வாழும் மாதரசிகளைப் போற்றுங்கள்!

மக்கள் தொகையும் பொருளாதாரப் பிரச்சினையும் கூடிய இந்த உலகில், இன்னமும், தமது கலாச்சாரங்களை விட்டுக் கொடுக்காது, மிக இயல்பாகவே குடும்பத்திற்கும், உலகிற்குமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாதரசிகளைப் போற்றுங்கள்! குடும்ப கட்டமைப்பு குலைந்தால் நிம்மதி வெட்டப்பட்டுவிடும். என்றுமே உறவுகளை உரமூட்டி வளர்ப்பவர்கள் பெண்கள் அல்லவா? இலக்கியத்தில் காட்டப்படும் பெண்களை ஒத்த இன்றைய மாதரசிகளின் தியாகத்தை, இதயத்தில் ஏற்றிப் பாராட்டுக!

எமது கண்முன்னே தெரிகின்ற இயற்கை எழிலையும், அற்புதமான மனிதர்களையும் நாம் கண்டு கொள்வதில்லை. ஆனால் யாரோ சொன்ன கற்பனைச் சம்பவங்களையும், கதைகளையும் கேட்டு அதிலேயே லயித்துப்போய் விடுகின்றோம்.



RangaRakes Tamilnavarasam.com

எமது இதிகாசங்கள், புராணங்கள், காப்பியங்கள், இலக்கியங்களில் வருகின்ற பாத்திரங்களையே வியந்து போற்றித் துதிபாடுகின்றோம். இதில் எதுவித தப்பும் இல்லை.

ஏன் எனில் இவைகள் எமது கலை, கலாசார, பண்பாடுகளை எமக்கு வலியுறுத்துவதுடன், வாழ்வியல் நெறிமுறைகளையும் எமக்கு எடுத்தியம்புகின்றன. ஆயினும் பழைமையான கதைகளில் வரும் பாத்திரங்களின் நல் இயல்புகளின் வண்ணம் இன்னமும் எம்மவர்களால் வாழ்ந்துகாட்ட முடியுமா எனச் சிலர் ஐயுறவு கொள்ளலாம்.

சொல்லப்போனால் முன்னைய காலத்தில் ஒருவர் நல்லியல்புகளுடன் வாழ்வது சிரமமான காரியமே அல்ல. அக்கால பொருளாதார நிலை, சமூக உறவுகள், சமூக கட்டமைப்புகள் மிகவும் உன்னதமான நிலையிலேயே இருந்தன. அப்படியிருந்தும்கூட, தீயவர்கள் இருந்தார்கள். இவைகளை எதிர்கொண்டு போராடும் வரலாறுகளை நாம் படித்திருக்கின்றோம்.

ஆனால் இக்காலத்தில் முற்கால மாந்தர்கள் போல் அறவாழ்வு வாழ்பவர்கள் குறைவு எனச் சொல்கின்றார்கள். இக் கருத்தை நாம் முழுமையாக ஏற்கமுடியாது. முக்கிய மாகக் குடும்பங்களின் தலைவிகளை நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டால் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டி ருக்கும் இந்த மாதரசிகள் எவ்விதத்திலும், அவர்களிலும் பார்க்கக் குறைந்த தரத்தில் உள்ளவர்கள் அல்லர்.





மாறிவரும் இந்த உலகில் மக்களுக்குப் பிரச்சனை களின் தொல்லைகள் சொல்லில் அடங்குமா? மக்கள் தொகை பெருகி விட்டது. மேலும் கலாச்சார சீரழிவுகளை மென்மேலும் தூண்டும் வகையில் பொழுதுபோக்கு அம்சங்கள், நாகரீகம் எனும் போர்வையில் நடக்கும் அத்துமீறலான போக்குகள், மோகம் எல்லாம் இருந்தும் கூட, இன்னமும் குடும்பம் எனும் கோயிலில், ஒரு முக்கிய மான உயிர் பாத்திரங்களான எமது மாதர்குல மாணிக் கங்களின் சிறப்பியல்புகளை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது.

இதிகாச, புராண இலக்கியங்களில் காணப்படும் பெண் கதாபாத்திரங்களையே வியந்துபோற்றும் போது, எமக்காகச் சந்தனக்கட்டை போல் தேய்ந்து, மணம்வீசும் உங்களது அன்னையை, மனைவியை, சகோதரிகளை, அத்துடன் நீங்கள் நேரில் கண்டு கொண்டிருக்கின்ற உறவுக்காரப் பெண்கள், மற்றும் ஏனைய சாதனைப் பெண் களை ஏன் பார்த்து மெச்ச, புரிந்து கொள்ள மறுக்கி ன்றீர்கள்?

வசதிகூடிய சமூக அமைப்பில் வாழ்வது சுலபமே! ஆனால் இன்றைய சராசரி மத்தியதர சமூகத்திலும், அடிமட்ட பாட்டாளிவர்க்க, ஏழ்மை நிலையில் உள்ள சமூகத்திலும் வாழ்கின்ற திண்ணிய மனோநிலையில் வாழும் எமது பெண்கள், முன்பு வாழ்ந்து போய்விட்ட எந்தக் கற்பரசிகளிலும் குறைவுபட்டவர்கள் அல்லவே அல்லர்.



RangaRakes
Tamilnavarasam.com

அன்புடன் உணவுபரிமாறுவதை,வீட்டுவேலைகளைக் கரிசனையுடன் செய்வது மட்டுமல்லாது தனது குடும்பத்தையும், தனது கணவர் மற்றும் உறவினர்கள் நலனில் அக்கறையுடன் கவனிப்பதில் இன்றைய எமது அம்மாக்கள் எந்தளவும் குறைவுபட்ட தாகத் தெரிகின்றதா?

கற்பனையிலேயும், நிழல் உருவில் காண்பதையுமே நிதர்சனமான உண்மை எனக் கருதும் எம்மால், நிஜத்தில் வாழும் மக்கள் மேல் உண்மையான கரிசனைகள் எந்தளவுக்கு உண்டு?

ஒருவரின் திறமையின் வெளிப்பாடுகள், அவர் போராட்டங்களை முகம் கொடுத்து வெற்றி பெறுவதில் தங்கியுள்ளது. ஒரு வேளை ஒருவரின் முயற்சிகள் தோல்வியடைந்தாலும் கூட, அது தார்மீக ரீதியில் அதுவும் ஒரு வெற்றியே தான். பல பெண்களுக்குப் போராட்டமே வாழ்க்கையாகி விட்டது.

வாழ்க்கைப் போராட்டங்களை இன்று ஆண்களை விடப் பெண்களே அதிக அளவு சந்திக்க வேண்டியுள்ளது. எதற்கும் குறை கூறும் சில ஆண்கள், பெண்களே, தமது இனத்தைக் கொடுமைப் படுத்துவதுடன் கிண்டலடிப்பது, சமூக அறியாமை, என பல குறுக்கீடு களைப் பெண்கள் சந்தித்தேயாக வேண்டியுள்ளது.

கணவனுக்குப் பயந்து ஒடுங்குபவளே உத்தமி எனச் சிலர் கோணங்கித்தனமாகச் சொல்வார்கள். இன்று





எத்தனையோ பெண்கள் வழிதவறி நடக்கும் கணவர்மார்களை வெகு துணிச்சலாக பல சவால்களுக்கு மத்தியில் அவர்களைச் சமூகம் மெச்சும் நல்லவர்களாக, வல்லவர்களாக மாற்றியிருக்கின்றார்கள்.

வெறுமனே சவால் விடுத்தலை விடுத்துச் சாதனைப் பெண்களாக உலாவரும் இவர்களை மனதார மெச்சுங்கள் தோழர்களே! ஆண்களில், சிலர் தமக்குச் சாதகமான கொள்கையின்பால் செல்லும் நடக்கும் மாதர்களை மட்டும் "சரியானவள்" என்று சொல்வார்கள். உண்மையில் இவர்கள் பழைமையான பெருமைகளைப் புரியாதவர்கள். சமூக நடத்தை நன்னெறிகள் முழுமையாக அழிவதேயில்லை. பொதுவான நன்நடத்தை, அறக்கருத்துக்களுக்கும் புறம் பாக, எவரும் தமக்கான புறநடத்தைகளைச் சமூகத்தில் புகுத்திடமுடியாது.

எமது முன்னோர்கள் தமது வாழ்வில் கண்ட பாத்திரங்களை தாங்கள் முன்னரே அறிந்த சமூக அமைப்புக்கள் கலாசாரப் பண்புகளைக் கதையாக, காவியமாகச் சொல்லப்போனதை அதை நாம் போற்றிப் பேணுவதாலேயே, எமது முன்னோர்களின் கலைப்படைப்புக்கள் இலக்கியங்கள் இன்னமும் உயிருடன் பாதுகாக்கப்படுகின்றன. அவர்கள் தமது கடமையை செவ்வனே செய்துவிட்டார்கள்.

அவ்வண்ணமே பழைமையைப் பேணும் நாம், தற்காலத்து நன்மாந்தர்களின் சிறப்புகளைப் பதிவு செய்



RangaRakes

Tamilnavarasam.com

வோமாக! குறிப்பாக எமக்கு எமது குடும்பத்திற்கு நல்லவை செய்யும் மாதரசிகள் பற்றி உளமார ஏற்றுக்கொண்டு இப்படியும் எமது பெண்கள் வாழ்கின்றார்கள் எனச் சொல்லி இறும்பூதெய்துவோமாக!

எமது இலக்கியப் படைப்புக்களில் "எம்முன்னே வாழும் பெண்களை", அவர்தம் பெருமைகளை முதன்மை யேற்றுவதே செய்நன்றி மறவாத அதிஉயர் பண்பாகும். இருக்கின்ற, வாழ்வாங்கு வாழ்கின்றவர்களைப் போற்றினால் தான் எதிர்காலச் சந்ததிகளும் தாங்கள் இவ்வண்ணம் வாழத் திடசங்கல்பம் செய்து கொள்வார்கள் என்பதில் ஏது சந்தேகம் அன்பர்களே!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
14-03-2010







# இனிமை தரும் எளிமையான வாழ்வு

ஆடம்பரமான வாழ்வு ஆபத்தானது. எளிமை இழிவானது அல்ல. கஞ்சத்தனமானதும் அல்ல. சிக்கன வாழ்வு எதிர் காலத்தை வளமாக்கும். எளிமையான வாழ்வில் சந்தோஷம் கூடிவரும். கல்வி, சுகாதாரம், உணவு, உடை போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான செலவுகளைத் திட்டமிட்டுச் செலவு செய்ய முடியும். கற்பனையான கவர்ச்சிமிகு வாழ்க்கையில் மருண்டு இருப்பதை, இழப்பதைவிட செழிப்பான நிறைவை நோக்கி வாழ சிக்கனமான எளிமையே வலியது. செலவு செய்வது சந்தோஷமானது அல்ல. வசதியுடன் வாழ எண்ணுவதும் தப்பு அல்ல. அநாவசிய செலவுகளே ஆபத்தானது. எளிமையே ஒரு பெரும் வருமானம் வசதிகளையும் தானாகவே பெருக்கும். எளிமையே அழகுதான்.

எளிமை இழிவானது அல்ல. சிக்கனம் என்பது கஞ்சத்தனமானதோ அல்லது உலோபித்தனமானதும் அல்ல. சிக்கனமாக வாழ்வதே கௌரவக் குறைச்சலான விடயம் எனப் பல குடும்பத்தினர் இன்னமும் எண்ணிக் கொண்டிருப்பதாலேயே பெரும் பொருளாதாரச் சுமைகளால் அல்லாடிக் கொண்டிருக்கின்றனர்.



RangaRakes
Tamilnavarasam.com

இன்று நாட்டில் விலைவாசிகள் நாளுக்கு நாள் கற்பனைக்கு எட்டாத அளவு கூடிக் கொண்டே செல்கின்றது. ஆனால், இன்னமும் எம்மில் பலருக்குமே இதைச் சமாளிப்பதற்காகத், தங்கள் வாழ்க்கை முறைகளைச் சீராக மாற்றி அமைக்கத் தயாராக இல்லை. இன்னமும் கூட எந்தப் பிரச்சினை வந்தாலும் கூடத் திருமணம், 'வரவேற்பு', பிறந்தநாள், பாராட்டு விழாக்களுக்கென எத்தனை லட்சங் களை செலவழிக்கின்றார்கள்.

"மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்" எனச் சொல்லியே மிகவும்ஆடம்பரமாக வாழ்ந்து பின்பு,நொந்து வாழ்கின் றார்கள்.

எனினும், நாம் மிக இயல்பாக எளிதாக, சிக்கனமாக வாழ்ந்தாலே போதும் எமது விலைவாசி எனும் மலையான பிரச்சினையிலிருந்து மீண்டு வாழமுடியும்.

இன்றைய சூழலில் ஓரளவு பணவசதி உள்ளவர்களா லேயே, குடும்ப பாரத்தைச் சுமக்க முடியாமல் இருக் கின்றது.

நாம் செலவைச் சமாளிப்பது எப்படி எனச் சிந்திக்க வேண்டுமல்லவா?

எமக்கு எவை, எவை பிரதானமாகத் தேவை என்று நாம் எம்மையே கேட்டுக் கொண்டால், 'எல்லாமே எமக்குத்





தேவை' என்றுதான் முடிவில் எமக்குக் கிட்டும் பதிலுமாகும். உணவு, உடை, உறைவிடம், மருத்துவம், கல்வி என எதையும் நாம் விட்டுவிட்டு வாழ முடியுமா?

முக்கியமாக உணவு விடயத்தையே எடுத்துக் கொண் டால், இன்று நகர்ப்புற வீதிகளில் நடந்து சென்றால் இங்கு மக்கள் வீணடிக்கும் உணவுகளின் அளவைப் புரிந்து கொள்ள முடியும்.

தேவையற்ற உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் வெளிநாட்டுத் தயாரிப்புகளின் கழிவுகளான, குளிர்பான கொள்கலன்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், வெற்றுப் பாத்தி ரங்கள், பழவர்க்கக் கழிவுகள், மதுபான போத்தல்களை வீதி யோரம் குப்பைகளில் பார்க்கும் போது நாம் வறுமையோடு சீவிக்கின்றோம் என்று சொன்னால் அதனை எவர்தான் நம்பப் போகின்றார்கள்?

தினசரி வீதி எங்கும் தெரியும் விளம்பரச் சுவரொட்டி களில் நாம் மயங்கி, அங்கு காட்டப்படும் பொருட்களை எப்படியாவது வாங்கிவிடுவது என மனம் எமக்குக் கட்டளை யிட்டு விடுகின்றது.

தொலைக்காட்சியில் காட்டப்படும் விளம்பரப் படங்க ளைப் பாருங்கள்! வித, விதமான உணவுப் பொருட்கள், வண்ண வண்ண அட்டைப் பெட்டிகளில் வந்து மனதை மருட்டுகின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

அத்துடன் கற்பனைக்கு எட்டாதபடி பொய்யான காட்சிகளைக் கண்டு இவ்வளவு வல்லமையுள்ள பொருட்களா என நாம் ஆராயாமல் நம்பி விடுகின்றோம். ஒரு குவளை குறிப்பிட்ட ரக பானத்தைக் குடித்ததும் அடுத்த வினாடி தேகம் உயர்ந்து பருத்து விடுகின்றது. முகத்தில் பூச்சு மருந்தைத் தடவியதும் உடனே சருமத்தில், முகத்தில் உள்ள வடுக்கள், பருக்கள் சட்டெனா மறைந்து போய் விடுகின்றது.

இப்படியே மயக்கும் விளம்பரமுடான பொய்யான சமாச்சாரங்களால் கண்டகண்ட, பொருட்களைக் கண்ட உடனே கடனோ அல்லது சேமிப்பையோ எடுத்து வாங்கி விட்டே அடுத்த வேலையைச் செய்யும் நம்மவர்களை என்ன என்பது?

தேவைக்கு அதிகமாக உடைகளை வாங்கிக் குவிப்பதும், சற்று அது கிழிந்தாலோ ஏன் அதன் பொத்தான்கள் கழன்று விட்டாலோ, அதனை எறிந்து விட்டுப் புதிதான ஆடைகளுக்குள் புகுந்து கொள்வது என்ன நியாயம்? உடைகளுக்காக அதிகமாகச் செலவளிப்பது நாகரீகமானது என வீம்பாக வேறு சொல்லிக் கொள்கின்றார்கள்.

இதுவிடயத்தில் முன்னர் பெண்கள்தான் ஆண்களை விடத் தீவிரமாகச் செயல்பட்டார்கள். ஆனால், இன்று ஆண்கள்கூட தம்மை அழகுபடுத்துவதற்காக மிகவும் கஷ்டப்பட்டுத் தமது அழகைமாற்றி அலங்கோலமாகத் திரிகின்றார்கள்.





அழகு படுத்துவதற்காகப் பெண்கள் அழகு நிலையங்களுக்குச் சென்று முக அழகை மோசமாக்குவதும் கண்ட கண்ட களிம்புகளை வாங்கி அது பிரயோசனமற்றதாகி சரும நோய்வர, பின்னர் அரச தனியார் மருத்துவமனைக்கு ஓடுவதும் மிகச் சாதாரண விடயம்.

சாதாரணமாகச் சுத்தமாக வாழ்ந்தாலே போதும். அழகு தானாக வரும். இதைவிடுத்து உடலை வருத்தித், தேய்த்துத் தம்மைத் தாமே குரூரமாக்குவது வெட்கப்படத்தக்க விடயமே.

ஆரோக்கியமாக வாழ உடல் உழைப்புத் தேவை. நல்ல இயற்கை உணவை உண்ண வேண்டும். இவற்றை நாம் முறையாக மேற்கொள்கின்றோமா?

இன்று எமது நாட்டில் கிட்டத்தட்ட மூவாயிரத்திற்கு மேற்பட்ட சாதாரண கிராமங்கள் இருக்கின்றன. இங்கு வாழும் மக்கள் மிக எளிமையான வாழ்க்கையை சந்தோஷத்துடன் மேற்கொள்கின்றார்கள்.

இவர்கள், நகர வாழ்க்கையை விரும்பி நகர்ந்தால், நமது நாடு இன்னமும் படுமோசமான நிலையை எட்டிவிடும். நகரத்தின் டாம்பீகம் எந்த விதத்திலும் அவர்களுக்கு உதவப் போவதில்லை.

தேவையான கல்வி, சுகாதார பொழுது போக்கு வசதிகள் அங்குள்ள மக்களுக்கு சென்றடைந்தால்



RangaRakes
Tamilnavarasam.com

நகரத்தில் சீவிக்க யாருக்குமே ஆசை வராது. வீட்டு வாடகை, தண்ணீருக்கான செலவு, மின்சாரம், போக்குவரத்துக்கான செலவுகள் எனப் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கும் நகர மக்கள் இன்னமும் கிராமங்களை நோக்கி மீண்டும் செல்லத் தயாரில்லை.

ஆனால் வாழ்க்கைச் செலவு பற்றி மட்டும் மனம் நொந்து பேசுகின்றார்கள். கிராம வாழ்விலும் பிரச்சினைகள் உண்டு. எனினும், நல்ல மனித உழைப்பின் மூலம் இவைகள் தீர்க்கப்பட்டுவிடும். ஆயினும், சிக்கன வாழ்வு முறை எத்தரத்தாருக்குமே பொதுவானது.

செலவு செய்வது சந்தோஷமானது அல்ல. வசதியுடன் வாழ எண்ணுவதும் தப்பு அல்ல. அநாவசிய செலவுகளே ஆபத்தானது. இது சேமிப்புப் பழக்கத்தை அழித்து விடும். பிறர் மெச்ச என்றுமே உள்ளதைக் கொண்டு எளிமையாக வாழ்க! சிக்கனம், அதனூடான சேமிப்பு ஆகியனஅழியா சொத்துக்களையும் சந்தோஷங்களையும்வாரி வழங்கி வளமூட்டும்!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
14-11-2010









# குடும்ப உறவுகளை மட்டுமல்ல சமூக உறவுகளையும் வளர்த்திடுங்கள்

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தச் சமூகத்தை எக்காரணத்தைக் கொண்டும் வெறுத்தல் ஆகாது. நாம் ஒதுங்கி வாழ்ந்தால் ஒதுக்கப்பட்ட மாந்தராகி விடுவோம். தங்களைத் தாங்களே மேன்மைப்படுத்தி ஒருவித மேலாண்மையுடன் கர்வத்துடன் வாழ்வதும், பேசுதலும் சமூக உறவைக் கூறாக்கி, வேறாக்கி விடும். எங்களுடன் எமது உறவினர்கள் மட்டும் இந்த உலகில் வாழ்வது இல்லை. பலவித மாந்தர்கள் கூடிவாழும் ஒப்பற்ற சந்தோஷ பூமியாக நாம் மாற்ற வேண்டும். சமூக உறவுகள் வளர்ந்தாலே போதும், முழு உலகமும் படிப்படியாக ஒன்றிணைந்து விடும். பிணைப்புடன் இணங்கி வாழ்தலே அனைவருக்கும் உகந்தது.

எனது ஊருக்குச் சற்றுத் தொலைவில் உள்ள அந்தக் கிராமத்தை நான் மறக்க முடியாது. சின்ன வயதில் சனி, ஞாயிறு நாட்களில் துவிச்சக்கர வண்டியில் எனது நண்பர்களைப் பார்க்கப்போவதுண்டு.



RangaRakes
Tamilnavarasam.com

கிராமத்தின் அகன்ற பாதையின் ஓரம் இருந்த கல்வீடு. அந்தக் காலத்துக் கட்டிடம். காவி நிறம். தலை வாசல் உண்டு. நான் அந்த வீதிவழியாகப் போகும்போது, அந்த வீடு வரும்போது என்னையறியாமலேயே விழிகள் அந்த வீட்டின் தலைவாசல் பக்கம் நோக்கும்.

" உட் பிரவேசிக்க வேண்டாம்" என்கின்ற வாசகம் வீட்டின் தலைவாசலில் அழகாக எழுதப்பட்டிருக்கும். எனக்கு அப்போது ஏற்பட்ட ஆச்சரியத்திற்கு அளவே யில்லை. காலம் காலமாக வந்தவர்களை வரவேற்கும் பூமி எமது அல்லவா? போயும் போயும் வீட்டின் வாசலிலேயே அபாய அறிவிப்புப் போல இது என்ன வாசகம்? வீட்டில் நாய் ஏதும் வளர்க்கின்றார்களா என்றே அன்று எண்ணி னேன். "நாய் கவனம் உள்ளே வரவேண்டாம்" என்று அல்லவா எழுதியிருப்பார்கள். பின்னே என்ன தான் மர்மம் இது? அந்த ஊரின் எனது நண்பர்களிடமே மிக்க ஆர்வ முடன் கேட்டேன்.

அவர்கள் சொன்ன தகவல் இது, அந்த வீட்டில் உள்ளவர்கள் நல்ல மனுஷர்கள் தான். ஆனால், எவருட னும் பழக விருப்பம் அற்றவர்கள். மற்றப்படி அவர்களால் எவர்களுக்குமே பிரச்சினையில்லை. யாரிடமும் பழகுவதை விரும்புவதில்லை. எங்கும் கண்டபடி திரிவதுமில்லை. அது அவர்கள் குணம். தங்களுக்குள் வாழ்வதை நாம் ஒன்றும் குறை கூற முடியாது என்றார்கள்.





இது என்ன வினோதம்? இப்படியும் வாழ முடியுமா? எங்கள் குடும்பத்துடன் மட்டும் உறவுகளைப் பேணி எப்படிச் சந்தோஷமாகச் சீவிக்க முடியும்? சமூக உறவு இன்றிச் சந்தோஷம் முகிழ்க்குமா? இப்படியே வாழ்ந்து பழகினால் முடிவு என்ன ஆகும்?

நாங்கள் பகைமை பாராட்டாமல் ஒதுங்கி இருப்பது கூட வேற்றுமையை வெறுப்பைக் காட்டுவது போலிருக்கும். இது எங்கள் பழக்கம் என்று கூறக்கூடாது. இது ஒரு மனோவியாதி நிலையை ஏற்படுத்தியும் விடலாம்.

சிலரது வீடுகளில் பிள்ளைகள் சந்தோஷமாகச் சிரித்து விளையாடினால் இல்லத்தலைவர் சீறி விழுவார். பிள்ளைகள் 'உம்' என்று இருந்தால் வீடா.. அது? இன்னும் சில வீடுகள் கணவனும், மனைவியும் மட்டும் பேசிக் கொள்வார்கள். பிள்ளைகளிடம் அதிகார தொனியில் எச்சரித்தபடியே இருப்பார்கள்.

பிள்ளைகள் கெட்டுப்போய்விடுவார்களாம். அவர்களுக்குத் தாங்கள் புத்திமதி சொல்வதாக எண்ணி, அவர்களின் மீளாத வெறுப்பையே சம்பாதித்துக் கொண்டிருப்பார்கள். ஒழுக்கத்தில் தங்களை விட்டால் வேறு யாருமே இல்லை எனக்கூறிச் சமூகத்தைக் கரித்துக் கொட்டும் பிரகிருதிகளை நீங்கள் கண்டிருப்பீர்களே...! நிச்சயம் பலரை அறிந்திருப்பீர்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

சமூக உறவை வளர்க்கக் குறை கூறுவதை நிறுத்துக! மனதில் வஞ்சனையின்றிப் பழகுக!

தனது பையனை பெண்மணி ஒருவர் அடி அடி என அடித்துக் கொண்டிருந்தார். "ஏன் இவனுக்கு அடித்துக் கொண்டிருக்கின்றீர்கள். பையன் இப்படி அழுகின்றானே விட்டுவிடுங்கள் என்றேன்'.

'பக்கத்து வீட்டுப் பையனுடன் சேரக்கூடாது என்றுதான் அடிக்கின்றேன்' என்றார் அவர். "அது சரி இவன் அவனுடன் சேர்ந்து விளையாடினால் என்ன... நான் இவரை ஒரு பொழுதும் இணைந்தே பார்க்கவில்லையே..." என்றேன். பதிலுக்கு அந்தப் பெண்மணியோ "ஆமாம்... ஆமாம் எனது பிள்ளை அவனுடன் சேர்வது இல்லைதான். என்றாலும், நான் முன் எச்சரிக்கையாகக் கண்டித்து அடிக்கின்றேன்... எங்கள் பிள்ளைகளை நாங்கள் தானே கண்டித்து வளர்க்க வேண்டும்" என்றார்.

இது என்ன... கொடுமை... தவறு என்று செய்யாத பிள்ளையை முன் கூட்டியே அடித்துத் திருத்துகின்றாராம். இந்த அறியாமையை என்ன என்பது?

தொடர்ந்து பிள்ளைகளைத் தனிமைப்படுத்துவது அல்லது பிறருடன் தாங்கள் வேறாக வாழ்ந்து விடுவதால் காலப்போக்கில் எவரைக் கண்டாலுமே அச்சப்படும் நிலைக்கே இவர்கள் ஆளாகிவிடுவார்கள்.





தங்களைத் தாங்களே மேன்மைப்படுத்தி மற்றவர்களைச் சிறுமைப்படுத்தி ஒருவித மேலாண்மைத் தன்மையுடன் கர்வம் கொள்வதும் பேசித் திருப்திப்படுவது அறியாமையுடன் கூடிய குரூரத்தனமாகும்.

நல்ல பண்புகள், குணங்கள் எங்களுக்கு மட்டுமே உரித்தானது எனக் கருதுவதா? நற்பண்பு உள்ளவர்கள் இப்படி எண்ணவே மாட்டார்கள். சமூக உறவை வளர்ப்பவர்கள் பிறர் மீது குறை காணுவதை வெறுப்பார்கள்.

எமது குடும்பம், எமது நெருங்கிய உறவினர்கள் மட்டுமே தேவையானவர்கள் என்று எண்ணுவது எந்த விதத்திலும் சரியான எண்ணமேயல்ல. இரத்த சம்பந்தமான உறவுக்கு அப்பால் சமூக உறவுகளின் அன்பையும் புரிந்து கொள்ள வேண்டும். யார், யாரோ இரத்ததானம் செய்து உயிர்களைக் காப்பாற்றுகின்றார்கள். இந்தப் பந்தம் எப்படி வந்தது? கூடவந்த உறவுகளுடன் சமூக பிணைப்புகளையும் இறுக அணைத்திடுக!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
26.09.2010



RangaRakes Tamilnavarasam.com



# விவாகரத்துக்களும் ரணமாகும் மனங்களும்

மாறாக காதல், பொறுமை, பொறுப்புணர்ச்சி ஆகியன கணவன்,மனைவி இரு சாரார்களிடம் இருந்தால் விவாகரத்து என்கின்ற பேச்சிற்கே இடமிருக்குமா? ஓரிரு மணித்தியாலயங்கள் எம்முடன் அன்புடன் பேசி, அவர்கள் விடைபெறும் போது எமது மனம் எதனையோ இழந்தது போலிருக்கின்றதே? இப்படியிருக்க, ஒன்றாக வாழ்ந்து, கூடிக் குதூகலித்துக் குழந்தைகளைப் பெற்றெடுத்த பின்னர் மனம் முறிவு ஏற்பட்டு விவாகரத்துக் கோருவது சரியானதுதானா? விவாகரத்து பெறுபவர்கள் அதன் பின்னர் நிம்மதியாக வாழ்கின்றார்களா? மிகப் பெரிய இழப்பு குடும்ப வாழ்வை இழப்பதுதான். இருவரின் மணமுறிவிற்கு நியாயமான காரணங்களும் இருக்கலாம். திருமணங்கள் இறைவன் கொடுத்த பிணைப்பு. பிணைங்கி வாழ்வதால் அவர்களைச் சார்ந்த பிள்ளைகள் மற்றும் ஏனையவர்களையும் பெரிதும் பாதிக்கும். மனங்களை ரணமாக்கும் மணமுறிவு. இணங்கி வாழ்ந்தால் வாழ்க்கை இனிக்கும்.

நாம் சாதாரணமாக ஒருவருடன் ஓரிரு நாட்கள் பழகிய பின்னர், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட நபர் எங்களைக் கண்டும் காணாது போனால் எமது மனம் எவ்வளவு பாடுபடுகின்றது? அவர் ஏதாவது அவசர வேலை



RangaRakes



கருதிச் சென்றாலும் கூட, அவர் மீதுள்ள அன்பு காரணமாக எமது மனம் சஞ்சலமடைவது இயற்கை யேயாம்.

இது இவ்வாறு இருக்க கணவன், மனைவியாக சந்தோஷமாக வாழ்ந்து குழந்தைகளைப் பெற்றுவிட்டுப் பிரிந்து சென்று வாழப்பிரியப்பட்டு விவாகரத்துச் செய்பவர்கள் பற்றி எண்ணும் போது வியப்பாகவே இருக்கின்றது.குடும்பத்தில் பொறுமை இன்றேல் வாழ்க்கை வெறுமை தான்!

உண்மையில் விவாகரத்துப் பெறுவதற்கு ஆவலாக இருப்பதன் காரணம் தான் என்ன? இதற்கான நியாயமான காரணங்களும் சில கணவன், மனைவியர் வாழ்க்கையில் உண்டு என்பதும் மறுப்பதற்கில்லை. இருப்பினும் எந்த மதங்களும் குடும்பப் பிரிவினைகளை விரும்புவதில்லை.

மதுப்பழக்கங்கள், தீராத நோய்கள், பாலியல் பிரச்சினைகள், சந்தேகங்களால் ஏற்படுகின்ற விபரீதங்கள் போன்றவை பலரது வாழ்க்கையே விபரீதமான முடிவுகளுக்கு ஆளாக்குகின்றன எனலாம்.

எனினும் சில பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வு காண முடியும். ஆயினும் விட்டுக் கொடுக்காத போக்கு, தன் முனைப்பு போன்ற காரணங்களால் தவறான முடிவுகளையே நிரந்தரமாகக் கைப்பற்றிப் பெருமிதம் கொள்பவர்கள், ஈற்றில் என்றோ ஒருநாள் தமது தவறுகளை உணராமல் போவதுமில்லை.



Tamilnavarasam.com

பொறுப்புணர்ச்சி என்பது ஆண், பெண் இருசாரா ருக்குமே பொதுவானவொன்றுதான். எனினும் மதுப் பழக்கம், தகாத பாலியல் தொடர்பு, தீய நண்பர்களுடன் சேர்ந்து குடும்பத்தில் அக்கறை காட்டாத தன்மைகள் பற்றியே பல பெண்கள் ஆண்கள் பற்றி அதிகமாகக் குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. திருமணமான பின்னரும் தவறான வாழ்க்கையினை வாழ்ந்தவர்கள் திருந்தாமலேயே இருந்தால் சிரமம் தான்.

அதே சமயம் தமது மனைவியர் பற்றிக் கணவர் மார்களும் இவள் பொறுப்பு அற்றவள், தனது தாய், தகப்பனார், தனது உறவினர்கள் மட்டுமே முன்னிலைப் படுத்துவதாகக் குற்றம் சுமத்துவது சாதாரணமாகச் சொல்லும் விவாகரத்துக்கான காரணங்களாகும்.

கணவன், மனைவி உறவு என்பது தெய்வீகமான, புனிதமான ஒன்றாகும். புதிய உலகில் புதிய உயிர்களைப் புஷ்பிக்கும் ஆத்மாக்கள். அத்துடன் நற்பிரஜைகளை உருவா க்கும் சிற்பிகள். தங்கள் சுயவிருப்பங்களை முன்னிலைப் படுத்தி வாழ்வது வாழ்வு அல்ல.

ஆயினும் ஒருவர் விருப்பத்தினை அறவே உதாசீ னம் செய்வது ஆணுக்கும் அழகு அல்ல! பெண்ணுக்கும் பெருமை சேர்ப்பதாகாது.விட்டுக் கொடுத்தலால் நஷ்டமும் இல்லை. உறவு இதனால் இறுகும். இதுவே நிறைவு!

காதல் திருமணம் புரிந்து இளமையில் குதூகல த்துடன் சுகித்துக், களித்துப் பின்பு அதே திருமண உறவை





முறிப்பது என்பது இருசாராரிடமும் அடிமனதினுள் தேங்கி யுள்ள வன்மமான போக்காகவும் இருக்கலாம்.

கொடுமைக்காரக் கணவன் நெறி கெட்ட பெண் என இருசாரார்கள் பற்றிச் சொல்லுவதில் உண்மை தன்மை இருக்கின்றதா என்பது பற்றிச் சமூகம் சிந்திப்பதேயில்லை. எவர் என்ன குற்றம் சொன்னாலும் வேடிக்கை பார்ப்பதும் அதையே நம்பிக் கேலி செய்வதைச் சம்பந்தப்பட்ட விவாக இரத்துக்கோரும் கணவனும் மனைவியும் உணர்வதே யில்லை.

விவாகரத்துப்பெற்று அதன் பின்னர் சில வருடங்கள் கழித்துத் தனிமையில் வாழும் எந்த ஒரு ஆண்மகனோ, அல்லது பெண்களோ பின்னர் நிம்மதியாக வாழ்கின் றார்களா? மனம் வெதும்பி, புழுங்கி தவறு இழைத்து விட்டோமோ என எண்ணுவதுமுண்டு.

உண்மையிலேயே காமுகனாக, ஊதாரியாக, குடிகார னாக இருக்கின்ற பேர்வழிகளுடன் ஒரு அப்பாவிப் பெண் எப்படித்தான் வாழ முடியும்? கூடியவரை அனுசரித்துப் பார்ப்பாள். அப்புறம் தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் பாரிய இடையூறு விளைந்தால் என்ன செய்வது? இன்று நாம் தினசரிகளில் பார்க்கும் செய்திகளில் கணவன், மனைவி உறவுகளைக் கேவலப்படுத்தும் நபர்களைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

குடும்பத்தில் அடிதடி சண்டைகள் முடிவில் கொலை



RangaRakes

Tamilnavarasam.com

யில் போய் முடிவுறுவதை வாசிக்கும்போது நெஞ்சம் பதை பதைக்கின்றது.

திருமண வாழ்வை நிச்சயம் செய்யும்போது எந்த விதமான ஆராய்வுமின்றிப்பொருந்தாத கல்யாணங்களால் உள்ளங்கள் உடைக்கப்படுகின்றன.

மேலும், முதிர்ச்சியடையாத அறிவு நிலையில் பலர் கண்டதும் காதல் கொண்டு, திருமணமாகிப் பின்னர் பிரிந்து விடுவதும், அடுத்த துணையைத் தேடிக்கொள்ள ஆலாய்ப் பறப்பதும் வேடிக்கையான துன்பம். நிதானமில்லாத இல்வாழ்வில் சரியான பாதைகள் துலங்குவதில்லை. அழுந்தி வதைபட விரும்புவர்களை ஒன்றும் செய்ய முடியாது.

ஒன்றாய் உண்டு, ஒன்றாய் துயின்று அதன் பின்னர் வாய் கூசாமல் ஒருவர் அந்தரங்கங்களைப் பகிரங்கமாகச் சொல்லும் கணவர், மனைவியர் மனம் என்ன கல்லா? நல்ல வார்த்தைகள் பேசினாலே போதும். குடும்பம் ஒட்டி உறவாடிவிடும்.

சந்தோஷமாக வாழும்போது தவறுகள் புரிவதே யில்லை. பின்னர் குடும்பத்தில் குழந்தைகளைப் பெற்று அவை வளர, வளர பொருளாதாரச் சுமைகளும் பலர் மனங்களைச் சல்லடையாக்குகின்றன. அப்போதுதான் குடும்பங்களில் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டும் மன இயல்பு வந்து விடுகின்றது.



RangaRakes



துன்பங்கள் சூழும்கால் ஒருவரை ஒருவர் தாங்கு வதை விடுத்துத் தூக்கி எறிந்து பேசுவது தகுமா? பரஸ்பரம் ஒரே தவறுகளையே மற்றவர் செய்து கொண்டே தூற்றுவ தால் தனது தலையைத் தானே உடைப்பது போலாகும்.

இளவயதில் எதிர்காலத் திருமண வாழ்வு பற்றிய கனவு களில் காளையரும் கன்னியரும் திளைப்பதும் அதிலேயே சுகம் காணுவதும் மானுட இயல்பு எனினும் தங்களது கற்பனைக்கு ஏற்ப வாழ்க்கை அமையாதுவிட்டால் அது போல வேறு ஏமாற்றம் பிறிதில்லை.

"அதற்கென்ன செய்வது? பேசாமல் அனுசரித்துப் போக வேண்டியது தானே" என இலவசமாக ஆலோசனை செய்பவர்களுக்கு மனசின் வேதனைகள் புரிவதேயில்லை.

எமது கலாசார, மத பாரம்பரியங்களின் நெறி பிறழாது வாழவேண்டும் என்பதற்காகவே பலர் மிகுந்த பிரயத்தன துடன் பொருந்தாத கணவன், மனைவியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எனினும், காலப்போக்கில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டும் இரக்கப்பட்டுக் கொண்டும் தங்கள் வாழ்க்கை யைப் பொலிவாக்கி விடுவதுமுண்டு.

சமூக ஏற்றத்தாழ்வு, கல்வி, பதவிகளில் உள்ள இடை வெளிகளால் பல குடும்பங்களில் நிம்மதி பறிபோகின்றன. பணவசதியுள்ள இடத்துப்பெண், வசதி குறைந்த கணவனை மதிப்பதில்லை என்பார்கள். அல்லது சாதி வேறுபாடுகள் காரணமாக ஒருவரை ஒருவர் தாழ்வாக மதிப்பதும் அவர்



Tamilnavarasam.com

களின் சுயகௌரவத்தை மிதிப்பது போலாகும்.

ஒத்த கல்வி, பணம், பதவி செல்வாக்குகளே ஓரிடத்தில் முடங்கி வாழ்வது தான் குடும்ப உறவிற்கு ஏற்ற வழியாகுமா? ஏன் இல்லாதவர்கள் இருக்கின்றவர்களுடன் கூடி வாழ்வதில் கூட ஒரு சுவாரஸ்யம் இல்லையா? படிக்காத மனைவியைப் படித்த கணவன் பூப்போல ஏந்துவதை நீங்கள் பார்த்தது இல்லையா?

எத்தனையோ குடும்பங்களில் உயர் பதவி வகிக்கும் பெண்கள், சாதாரணமானவர்களைத் திருமணம் புரிந்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எதிலும் மாற்றமான காரியங்களை எடுத்துக் காட்டாகச் செய்வதிலேதான் எமது திறமை, வல்லமை; திருப்தி கிடைக்கின்றன. ஆனாலும், இதனைச் செய்யப் பலருக்கும் மனம் ஒப்புவதுமில்லை. துணிவும் இல்லை.

அன்பு, பாசம், காதல், பரிவு முன்னே எமது அகம் பாவம், ஆணவம், பஞ்சு என எரிந்து போகும். குடும்பத்தில் கணவனை உண்மையாக நேசித்தால் மனைவியின் ஸ்திரமான அன்பு அவனை முழுமையாக்கிவிடும். அவ்வண் ணமே, மனைவிமேல் மாறாத பற்றுக்கொண்டால் கணவனு க்காக எத்தகைய தியாகத்தையும் அவள் செய்திடுவாள்.

எக்காலத்திலும் குடும்பங்கள் பிளவுபடுவது தவிர்க்கப் படல் வேண்டும். இயற்கைக்கு மாறான நபர்களின் நடத்தை





பற்றிச் சட்டம் தனது கடமைகளை உரிய முறையில் செய்யும். பரிபூரண அன்பு பீறிட்டு எழுந்தால் எங்கும் இன்பம் தான். குடும்பம் என்பது என்றும் அணையாத அகல்விளக்கு. இதன் ஒளி மிக நீண்டு அடுத்த சந்ததிக்கும் ஒளியூட்டும். விவாகரத்துகளால் மனங்கள் ரணப்படுத்த ப்படுகின்றன. இது கூடாது. சுருதி பிசகினால் அபஸ்வரம் தான்!


தினக்குரல்

ஞாயிறு மஞ்சரி

24-10-2010



RangaRakes
Tamilnavarasam.com



# சொர்க்கம் எங்கே!

சொர்க்கத்திலாயினும் வேலை செய்யாமல் இருந்தால் பொழுதுகள் சலித்துப் போய் விடும். சும்மா இருந்து முடங்கி வாழுதல் ஒரு அடிமை நிலை தான். சேவை செய்வதே ஆனந்த நிலை, இதனால் துக்கப்படுவதற்கே நேரம் இருக்காது. மனிதர்களின் கற்பனையான சொர்க்கம் பற்றிய எண்ணங்களை விடுத்து நிஜமான நித்ய சந்தோசங்களை அடைய உலக உயிர்களுக்கான உயிர்ப்பூட்டும் சேவைகளை நல்குவீர்களாக! இறை கருணை நிச்சயம் கிட்டும். இது நாம் கருதும் சொர்க்க வாழ்வை விட அதி உன்னதமானது.

சொர்க்கத்தில கூட தொடர்ந்து வாழ முடியுமா? சும்மா இருந்தால் சலிப்பு மேலோங்கும். உழைத்தபடி இருந்தால் பொழுதுகள் என்றுமே புதியனவாகத் துலங்கும்.

சொர்க்கத்தில் வேலையற்றுச் சீவிப்பதும் , முடங்கி வாழும் ஒரு அடிமை வாழ்வு தான்.





அது சரி சொர்க்கம் என்பது மேல் உலக வாழ்வு என்று நாம் கருதி விடுகின்றோம். காணாத மேல் உலக வாழ்க்கை பற்றி அதாவது தேவர் உலக சொர்க்க வாழ்க்கை பற்றி நாம் படித்திருக்கின்றோம். இது பற்றிக் கற்பனை வசப் படுவதுமுண்டு. இது பற்றிய ஆய்வுகளுக்கு அப்பால் நாம் சற்றுச் சிந்திப்போமாக!

புண்ணியம் செய்தால் தேவருலக வாழ்வு கிட்டும் என்றும் சொல்வார்கள். நாம் வாழும் பூமியில் வாழ்வாங்கு வாழ்பவர்களுக்கு, இந்த உலகில் சேவை செய்வதே மேலான ஜீவிதமாகும். இதற்கு நிகராக வேறு உலகு எதற்கு? எமது சமய ஞானிகள் இதனைத் தானே செய்தார்கள். மக்களுக்காக தொண்டு செய்ய இந்த உலகம் வாய்ப்பு அளித்தமையே பெரும் புண்ணியப் பேறு அல்லவா? இதனை விட இன்பம் வேறு உண்டா சொல்மின்!

அத்துடன் தொண்டுகள் செய்ய இடமளிக்கும் இந்தப் புவனம் புனிதமானது. எமது தொண்டுகளால், ஏனையவர் பயன் பெற்று அவர்களும், இவ்வண்ணமே, எல்லோருக்கும் எல்லாமே அளித்தால் அமரர் கண்டு பொறாமைப்படும் புண்ணிய ஸ்தலமாகி விடுமன்றோ! நல்லதை எண்ணும் போதே அவன் ஒரு கொடையாளி ஆகிவிடுகின்றான். நல் எண்ணங்கள் வழங்குவதை ஊக்குவிக்கும் உணர்க!



RangaRakes Tamilnavarasam.com

நற்கருமங்களை நாம் செய்ய இடங்களின் தன்மைப்பற்றி சிந்திக்க வேண்டியதில்லை. துக்கப்பட நேரமிருக்காது. எவ்வுயிருக்கும், அவர்கள் மனிதர்களாக இருக்கலாம், மிருகங்கள் மற்றும் தாவர, உயிரினங்களேயாயினும் அவைகள் பொருட்டு எம்மால் செய்யும் காரியங்கள் அந்த பிரதேசங்களை வளமாக்கி விடும். உணர்க தோழர்களே!

இன்று சமூகத் தொண்டு ஆர்வலர்கள் வளம் கொழிக்கும் நாடுகளையா நாடி ஓடுகின்றார்கள்.? எங்கே மக்கள் துன்பப்படுகின்றார்களோ, அங்கே தான் மனித சேவை தேவைப்படுகின்றன. தொண்டு நிறுவனங்கள், வசதிகளை நோக்கினால் கேட்பாரற்றுக்கிடக்கும் மக்களின் எதிர்காலம் என்னாவது?

எனவே நாம் இது பற்றி யோசிப்போம். ஒவ்வொரு தனி மனிதனும் தான் எங்ஙனம் பூமியை வளப்படுத்த முடியும் எனத் தயங்க வேண்டியதில்லை. யாரோ ஒருவர் அல்லது பலர் சேர்ந்து செய்வதை வேடிக்கைப் பார்க்கும் மனிதனாக இருந்து எதனை உங்களால் வழங்க முடியும்?

தனக்குத் தெரிந்த எந்த காரியங்களாயினும் அது ஒருவனுக்குப் பயன் பெறுமாயின் அதனை உடன் வழங்கி விடுக! வீணான தயக்கம் எதற்கு? என்னால் என்ன செய்ய இயலும் என்பதே ஒரு தாழ்வு மனப்பான்மை மட்டுமல்ல, பிரச்சனைகளில் இருந்து தப்பிக்கும் ஒரு மார்க்கம் அன்றி வேறென்ன?





தெரியாது, முடியாது என்பது வெகு சுலபமான பதிலாகக் கொண்டு இயங்கினால் உங்களுக்காக, இன்னும் ஒருவர் செயலாற்றுவது மட்டும் சரியாகுமா?

நாம் எண்ணும் எண்ணத்தில் இருந்து தான் எல்லாமே உதயமாகின்றது. சொர்க்கமும், நரகமும் எம் கைகளில் என்போர் பெரியோர். நல்ல உள்ளத்தின் நீட்சி போலவே சகல சௌபாக்கியங்களும் வளர்ந்து கொண்டே செல்லும்.

எனவே பூலோக சொர்க்கத்தைக் கைப்பற்றுவது கூட, எங்களின் நற்சிந்தனையூடாக எடுத்துக் கொள்ளக் கூடியதேயாம்.

கைகளில் காசு இருந்தால் மட்டுமே முகம் மலரும் என்று இல்லை, என்றும் மற்றவன் முகம் மலருமாற் போல் அனுகூலங்களை நேரிய வழியில் செய்தாலே, எம்மையறியாமலே சிந்தை மகிழும். அதனால் வதனம் துலங்கும்.

எதற்காக மனிதர் துன்பமடைகின்றார்கள் என்பதற்கான உண்மைகளை ஒரே வார்த்தையில் சொல்லி விட முடியாது. சந்தோஷம் என்பதற்குக் கூட பலவிதமான வடிவங்கள் உண்டு. ஒருவன் சந்தோஷமடைவதே இன்னும் ஒருவனுக்குத், துன்பமாக இருக்கின்றது எனின் துன்பங்களின் வடிவங்கள் எத்தனை எத்தனை?



RangaRakes Tamilnavarasam.com

இதில் நல்லோர், தீயோரின் துன்பங்களுக்கும் வெவ் வேறான தோற்றங்கள்! நியாய பூர்வமாக நேர்மையாக வாழ்ந்தாலே போதும் அனைத்தும் வந்து விடும் என்று தான் மதங்கள் சொல்கின்றன. ஆனால் இதனை ஏற்று எல்லோ ருமே வாழ்கின்றார்களா? ஆயினும் தனக்கு எல்லாமே வழக்க இறைவன் ஏன் தயங்குகின்றான் என்று தானே, பலரும் கடவுளைக் குறை கூறுகின்றார்கள்.

தவறுகளை ஏற்றுப் புது வாழ்வில் புகுந்து கொள்ள முனையாமல் சொர்க்கம் அது, இது எனப் புலம்பு கின்றார்கள். கொடுமையான வாழ்வு வாழ்ந்து, தனக்கு நியாயம் கிட்டவில்லை எனத் துஷ்டர்கள் அழுகின்றார்கள்.

நல்லவர்களின் உண்மையான வேண்டுதல்களு க்கான வழி திறக்கப்படும், அவர்களுக்கான இறைவனின் வாசல் கதவுகள் என்றும் அகலத்திறந்தபடியே இருக் கின்றது. மனிதனின் கற்பனையூடான கனவுச் சொர்க் கத்திலும் மேலான, நித்ய அமைதியூட்டும் புண்ணிய ஷேத்திரமான பூமியில் எல்லாம் அவர்களுக்கு இறை வனால் அளிக்கப்படும். நற் சிந்தையூடாக மலர்வதே சொர்க்கம். அற்புதங்களின் கோர்வை இது. வெற்றியின் பரிசும் இது தான்!

தினகரன்<br>வாரமலர்<br>19.06.2011



RangaRakes

Tamilnavarasam.com

# உண்மைகள்
# உலருவதில்லை!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 08

சிந்தனைக் கட்டுரைகள்

RangaRakes Tamilnavarasam.com



# பொறுப்புக்கள்

கடமைகளை நிறைவேற்றல் எமது பொறுப்பு ஆகும். மனிதன் பிறந்து இறக்கும் வரை வாழ்நாள் முழுவதும் அவனுக்கென பொறுப்புகள் வந்து கொண்டே யிருக்கும். பொறுப்புக்கள் சுமைகள் எனக்கருத வேண்டாம். மிக இயல்பாக அவைகளை ஏற்றுக் கொண்டு கடமைகளை செய்வதே சுவாரஸ்யமாகும் எனக் கருதுக!. தனக்கு தனது குடும்பத்திற்கு மட்டுமல்ல, எமது சேவைகள் எல்லோருக்கும் போய்ச் சேரவேண்டும். தியாக உணர்வு விடாமுயற்சி, திட்டமிட்ட வாழ்வு முறைகளால் பொறுப்புக்களை நிதானமுடன் செய்வோமாக.

தமக்குரிய பொறுப்புக்களை விருப்புடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் செய்து வருபவர்கள் தமது வாழ்க்கையை முழுமையுடன் நிலைநிறுத்தி உதாரண புருஷர்களாகி விடுகின்றனர்.

தமக்குரிய கடமைகளை எவருமே உதாசீனம் செய்து தப்பிக்க எண்ணம் கொள்ளல் ஆகாது.



RangaRakes

Tamilnavarasam.com

கடமை என்கின்ற போதேஅதனை நாம் எப்படியாவது நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்களுக்கும் உள்ளாக வேண்டியவராவோம். பொறுப்புக்களைச் சரிவரச் செய் யாதோர் பூமிக்குப் பாரமான மாந்தராகக் கணிக்கப்பட்டு விடுவார்கள்.

மிகச்சிறிய வேலைகளைக்கூடச் செய்யமறுத்து "அது எனது வேலைஅல்ல" எனச்சொல்லும் பொது நிறுவன ஊழியர்களின் அசமந்தப்போக்கால் பொதுமக்கள்படும் அல்லல்களை நீங்கள் அறிவீர்கள்.

தேனீர்சாலைக்குச் செல்லும் ஒருவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது "குடிக்க நீர்கிடைக்குமா" என அங்கு கடமைபுரியும் உணவு பரிமாறுபவரைக் கேட்டால் அவரோ "இது எனக்குரியமேசை அல்ல உங்கள் மேசைக்குரிய வரிடம் தண்ணீர் கேளுங்கள்" எனச்சொல்பவர்களும் இருக்கின்றார்கள்.

பலமைல் தூரம் பயணித்து அலுவலகம் வந்த பொது மகன் அங்குள்ள ஊழியர் ஒருவரிடம் சென்று அலுவலகம் சம்பந்தமான தனது தேவைகளைகேட்டால் அவரோ சாதாரணமாக "இது எனது வேலை அல்ல நீங்கள் தேடிய அலுவலர் எங்கோ போய் விட்டார் போய் வாருங்கள்" என்று சொன்னால் வந்த மனிதரின் மனோ நிலை எப்படி இருக்கும்? சிலரின் பொறுப்பற்ற நடத்தை பேச்சுக்களால் மக்களின் உரிமைகள்கூட மறுக்கப்படும் அநியாயத்தை





என்ன என்று சொல்ல ஐயா? மக்களுக்காகச் சேவை செய்ய எனக் கடமை செய்ய வந்தவர்கள் பெற்றுக்கொள்ளும் வேதனத்திற்காக என்றாலும் வேலைசெய்ய வேண்டாமா? கடமையைச் செய்யாதது போல் வெட்கம் கெட்ட செயல் பிறிதுண்டோ?

மனிதன் பிறந்து இறக்குவரை அவன் வாழ்நாள் முழுவதும் அவனுக்கெனப் பொறுப்புக்கள் இருந்து கொண் டேயிருக்கும்.

குடும்பநிலை சந்தர்ப்பசூழ்நிலைகள் காரணமாக ஒருவர்க்கொருவர் பொறுப்புக்களின் சுமைகள் வித்தியாசப் படலாம். தமது வாழ் நாட்களில் உரிய நேரங்களில் கடமை களைச்சரிவர நிறை வேற்றுபவர்களின் பொறுப்புக்களும் படிப்படியாகக் குறைந்து வருகின்றன.

உடலில் வலு உள்ள காலங்களில் வாழ் நாட்களை அவப்பொழுதுகளாகக் கழித்துப் பின் உடல் நலிவுற்ற நேரத்தில் தம்முன் மலையளவு பிரச்சனைகளை எதிர் நோக்கும் போது வேதனையுற்று பயன் ஏதுமின்றி வாழ்வு முடிந்தும் விடுவதுண்டு. காலத்தே பயிர் செய்யாதவன் வாழ்வு கேள்விக் குறியாகிவிடுவது துன்பம் தான்துன்பமே தான்! இளமையிலேயே எதிர்காலத்திற்கான தேவை களையும் கருதி, சீரிய முறையில் தமக்குரிய பணிகளை நிறைவேற்றுபவனே பொறுப்புமிக்க மனிதனாவான்.



RangaRakes

Tamilnavarasam.com

ஒவ்வொரு பராயத்திலும் மனிதனின் பொறுப்புக்கள் பலவித வடிவங்களில் அவனை நாடி நிற்கும். கல்வி கற்கும் காலத்தில் நிறையப் படிக்க வேண்டும் பின்னர் தகுந்த வேலைசெய்ய வேண்டும். தனக்கு அளிக்கப்பட்ட பொறுப்பு மிக்க பணியை அவன் வெகுசிரத்தையுடன் ஆற்ற வேண்டும்.

திருமணமான பின்னர் அவன் தனது மனைவி மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றல் வேண்டும். நற்பிரஜைகளாகத் தமது பிள்ளைகளை உருவாக்கும் பொறுப்பு அவனையும் அவனது மனைவியையும் சார்ந்ததாகும். அது மட்டுமல்ல தனது குடும்பத்தை மட்டுமல்ல பெற்றோர், சமூகம், சூழ உள்ளோர்க்கான தனது கடமைகளையும் ஒருவர் செய்தேயாக வேண்டும்.

எல்லா கடமைகளையும் உரியவேளையில் உரியவாறு செய்து வருபவர்கள் தமது மனதிற்கும் சந்தோஷங்களை பெற்றுக் கொள்பவர்களாகவும் அடுத்தவர்களால் ஆசீர்வாதிக்கப்பட்டவர்களாகவும் மாறிவிடுவது வியப்பேதுமில்லை. உங்களால்தான் இந்த உதவியைச் செய்ய முடியும் என உங்கள் திறமையை அறிந்தவர்கள் கேட்கும் போது அந்த உதவிகளை நீங்களே ஆர்வமுடன் செய்து முடித்து அதனால் ஏற்கும் திருப்தியை விடவேறு இன்பம் உள்ளதா? பொறுப்புணர்வுடன் கடமை செய்து எங்களால் பிறர் எய்தும் நன்மைகள் தான். எங்கள் சந்ததிக்கும் நாம் விட்டுச் செல்லும் சொத்துக்களாகும்.





- தன்னம்பிக்கை
- திட்டமிட்ட வாழ்வு முறைகள்
- விடாமுயற்சி
- தியாக உணர்வு
- தன்னலமற்ற பணிகள்

மேற்கண்ட பிரதானமான விடயங்களில் கவனமெடுத்து வாழ்பவர்களின் வாழ்க்கை என்றுமே பிரகாசமானதாகவே இருக்கும். தவிர "சோர்வு" என்கின்ற நோய் இல்லாமல் வாழ்பவர்களுக்குக் "கடமை" என்பது என்றுமே சலிப்பூட்டுபவையாக அமைவதுமில்லை.

பணம் ஈட்டுதல் ஒன்றினையே பிரதானமாகக் கொண்டு இயங்கும் இந்தப் பரபரப்பான உலகில் எதனை முதலில் செய்து முடிப்பது என்று தெரியாமல் குழம்பிப் போய் இருக்கின்றார்கள். அடுத்தவரைப் பற்றியும் அவர்களின் பிரச்சனைகளைக் களைவதிலும் நேரம் இன்றி ஓடிக் கொண்டேயிருக்கின்றார்கள்.

மகளுக்கு ஏற்றவரன் கிடைக்கவில்லை திருமணத்தை முடித்து வைக்க என்ன செய்வேன் என ஏங்கும் பெற்றோர் ஒருபுறம், எப்படியாவது காணி பூமியை விற்றாவது வெளி நாட்டிற்கு ஓடிப்போய் விட வேண்டும் என எண்ணும் இளைஞர் ஒருபுறம் இந்த வருடமாவது விவசாயத்தில் லாபம் கிட்டுமோ கிட்டாதோ, மழை, வெள்ளம் வந்திடுமோ என ஏங்கும் விவசாயிகளின் பிரச்சனைகளுமாக ஆளுக்கு



RangaRakes

Tamilnavarasam.com

ஒருவர் தங்கள் பிரச்சனைகளுக்கு மனம் சலித்துத் துன்பப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இத்தகைய பிரச்சனைகள் தீர்ந்து நாங்கள் எப்போது பொறுப்புக்களில் இருந்து விடுபடப் போகின்றோம் எனப்பலரும் அங்கலாய்ப்பது, இயற்கை யான உணர்வுகள் தான்.

ஆயினும் ஒருவர்க்கொருவர் அதிகபட்ச உதவிகளை, ஒத்துழைப்புக்களை நல்குவதன் மூலம் அவர்களின் பொறுப் புக்களின் தாக்கங்கள் ஓரளவு அல்லது பெரும்பாலானவை குறைந்து விடுவதற்கான வழிபிறக்கும் என்பதை அறிவோ மாக!

பரஸ்பரம் மனிதன் மனிதன் மேல் இரங்குதல் என்பது தெய்வீகமான குணமாகும். எங்களால் முடியக் கூடிய உதவிகளைச் செய்தால் எமக்கு நஷ்டங்கள் ஏற்படப் போவதில்லை என அறிந்து அவைகளைச் செய்வதே மனித தர்மமும் ஆகும்.

"எனக்கு ஒரு வழி சொல்லுங்கள்" என்று ஒருவர் கேட்டால் அதற்குரிய மார்க்கம் உங்களுக்கு நன்கு தெரிந்தி ருந்தால் சொல்ல வேண்டியது தானே? ஒருவர் தன்னால் இலாபம் காண்பது தகாது என எண்ணுதலே குரூரமான புத்தி அல்லவா? மேலும் ஒருவர் பெறும் அனுகூலத்தால் இன்னும் ஒருவர் மனம் குமைதல் அடுக்காத மன எண்ணம் அல்லவா?





மேலும் தமக்குரிய பிரச்சினைகளுள் அள்ளுண்டு திசை தெரியாமல் தத்தளிப்பவர்களிடம் போலியான கரிசனை காட்டிப் பொய்யாக வாக்குறுதிகள் அளித்து உனக்குள்ள கஷ்டங்களைப்போக்குகின்றேன் எனச்சொல்லி ஏமாற்றுதலைச் செய்யும் நபர்கள் தங்களைத் தாங்களே அழிக்கின்றமைக்கு வழிதேடியவராவர்.

சுயமாகவே பொறுப்புக்களை எப்படியாவது நிறை வேற்றக்கூடியவர்கள், துன்மதியாளர் காட்டும் தவறான வழிகாட்டல்களால் அவர்களைத் திசைமாற்றுதலை விடக் கொடிய செயல் வேறில்லை.

"நான் சொன்னபடி கேள் இப்போது எவர்தான் நேர்மையாகத் தொழில் செய்கின்றார்கள். சொல், இப்படியே இருந்தால் உன் குடும்பம் நடுத்தெருவில் வந்துவிடும்" எனச் சொல்லிச் சட்டவிரோதமான வழிகளைச் சொல்லிக் கொடுப்பவர்கள், ஈற்றில் இவர்கள் சொல்கேட்டு தண்டனையை அனுபவிக்க நேரிடுகையில், இவர்களுக்குக் கை கொடுக்காமல், மற்றவர்களுடன் சேர்ந்து கேலி பேசுவார்கள்.

எமது வலிமைக்கும் திறமைக்கும் ஏற்ற வண்ணம் சுயமாகவே பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வெற்றி காண்பதுவே முழுமையான திருப்தியைத்தரும். ஒருவர் வீழ்வதும் மீண்டும் எழுந்து நடப்பதும் சாதாரணநிகழ்வு எனக் கருத வேண்டும். வீழ்ந்தால் நாம் வீழ்ந்தப்பட்ட



RangaRakes Tamilnavarasam.com

வர்களே என எண்ணுதலே மடமைச் சிந்தனையாகும். வாழ்க்கையில் தோல்வி காண்பது என்பது ஒரு வெட்கக்கேடான விஷயமும் அல்ல. தோல்விகளை அலட்சியப்படுத்தி மீண்டும் எழுந்து தன் கடமைகளை புதுஉற்சாகத்துடன் நிறைவேற்றுவதால் ஏற்பட்ட தோல்விகளின் வடு அழிந்து அதுவே ஒரு விலைமதிக்க வொண்ணா அனுபவ ஆபரணமாகிவிடும்.

"நான் ஒருசிறியவன் என்னால் பொறுப்புமிக்க இந்தச் சமூகத்திற்கு என்னஅளிக்க முடியும்?"எனச்சிலர் கேட்பதுண்டு. மேலும் "நான் மட்டும் பொறுப்பாக நடந்து இந்தப் பரந்த உலகை எப்படி நிமிர்த்திட முடியும்?" எனவும் சிலர் சொல்லிக் கொள்வார்கள்.

உலகில் உள்ளது உங்கள் இருகரங்கள் மட்டுமல்ல. உங்களைப்போல் சகலரதும் கரங்கள் இணைந்ததே இந்த உலகம் பெரும் காரியங்களைச் சமைக்கின்றன. எமக்குள்ள பணி எம்மால் முடிந்ததைச் செய்வதே. இந்த எண்ணங்கள் எல்லோர்க்கும் உள்ளதே எனக்கொண்டு எமது பணிகளை ஆரம்பிப்போமாக!

ஒருவன் செய்யும் நல்ல காரியங்களைப் பார்த்ததுமே அடுத்தவன் உதவுதற்கு முன்வந்து நிற்பான். பெரும் உலகத் தலைவர்கள் எல்லோருமே கட்டாயம் மக்கள் தன்னுடன் இணைந்து கொள்வார்கள் என்கின்ற திட நம்பிக்கையுடன் தான் தங்களது புனிதப்பணியை ஆரம்பித்து





வைத்தார்கள். அடுத்தவன் வரமாட்டான் என ஆரம்பத்திலேயே இவர்கள் கருதினால் இவர்கள் எடுத்த காரியத்தைத் தொட்டிருக்க முடியாது. நல்லது செய்வதற்கு அதிகமான வீண் ஆராய்ச்சிகள் தேவையில்லை.

தமது நாட்டிற்கான பெரும் பொறுப்புக்களை தனி ஒரு தலைவர் மட்டும் நிறைவேற்றி வைப்பதில்லை. அவருடன் கூட இருந்த ஒவ்வொரு பிரஜைகளுக்குமே இந்த வெற்றிகள் சமர்ப்பணமானதாகும்.

ஒரு சின்னஞ்சிறு தீச்சுவாலையால் ஒரு விளக்கு ஒளிபெற்று முழு அறையையும் ஒளியேற்றுகின்றது. பொறுப்புள்ள ஒருவனது சேவையால் முழுசமூகமே நன்மைகளைப் பெற்றுவிடும்.

பொறுப்புக்களில் இருந்து விடுபடுவதற்கு ஒரு வழி சாமியாராகிப் போவது தான் என எண்ணி வீட்டைவிட்டு ஓடுபவர்களும் இருக்கின்றார்கள். குழந்தைகளைப் பெற்று விட்டு வீட்டை விட்டு ஓடியவர்கள் தனது மனைவி, பிள்ளைகளைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல் வாழ்ந்துவிட்டு வயது முதிர்ந்தபின் தனது மனைவி பிள்ளைகளை நாடி வரும் கோழைகளும் இருக்கின்றார்கள்.

தவறுக்கு மேல் தவறுகளைச் செய்வதும் செய்த தவறுகளால் ஏற்பட்ட கடமை பொறுப்புக்களை, மற்றவர் மீது சர்வ சாதரணமாகச் தவறுக்கு மேல் தவறுகளைச் செய்யத்



RangaRakes
Tamilnavarasam.com

தொடங்கி செலுத்திவிடும் ஏத்தர்கள் சாமர்த்தியமாக வாழ்க்கையை ஓட்டுவதாக எண்ணிக்கொள் கின்றார்கள். எனினும் தாம் சமூகத்தில் ஒரு செல்லாக்காசு எனத் தீர்மானிக்கப் பட்டமையானது தனக்குஏற்பட்ட அவமானம் எனக் கருதாமல் வாழ்வதும் வெட்கம் கெட்டதனம்தான் அல்லவா? இருந்தும் இல்லாத, வாழ்ந்தும்வாழாத வீணர்களால் பூமி உயிர்ப்பிணங்களைக் காவிச் சுற்றும் அவலத்திற்காளாகி விடுவது அநியாயத்திலும் அநியாயமானதே!

இன்று பலரும், பதவியை எப்படியாவது கைப்பற்றி விடுவதே தமது இலட்சியம் என்ற நோக்குடன் செயல்பட்டு வெற்றியும் கண்டு விடுவார்கள். ஆனால் பதவியைக் கைப்பற்றி விடுபவர்களில் சிலர் தமக்கான பொறுப்புக்களை மட்டும் செய்யமாட்டார்கள். பெயருக்கும்,புக்ழுக்கும் மட்டும், தங்கள் பதவியைச் சொல்லிக் கொள்வார்கள்.

தமது பதவிக்கான பொறுப்புக்களைச் செய்யாமல் விடுவதும் தட்டிக்கழிப்பதும் ஒருதவறான செய்கை என்றும் இம்மியளவு கவலைப்படுவதும் கிடையாது. அரச பொது நிறுவனங்களின் அதிகாரிகள் மக்கள் பிரச்சனைகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள். ஆனால் நிறுவனங்களில் கடமை புரியும் ஊழியர்களின் அசமந்தப்போக்குகள் மக்களிடம் பராமுகமாக நடந்து கொள்வது தொடர்பாகத் திருப்திகரமான ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்கின் றார்களா?





மேலும் அதிகாரிகளே தாங்கள் செய்யும் பொறுப்பற்ற செயல்களை அப்பாவி ஊழியர்கள் மேல் சுமத்தி வீண்பழியேற்றி விடுவதுமுண்டு. பல அதிகாரிகளுக்குத் தமது நிறுவனங்களில் பணியாற்றுவோர் என்ன செய்கின் றார்கள் அங்கு என்ன நடக்கின்றது என்கின்ற பொறுப்புணர்வுமற்று காரியாலயங்களுக்கு வந்துபோய்காலத்தினைக் கடத்துகின்றார்கள். தகுந்தமேற்பார்வையின் றேல் பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றிடல் இயலுமோ?

மக்களுக்குச் சேவை செய்ய வருபவர்கள் தங்கள் பொறுப்புக் களின் தாற்பரியங்களை உணர்ந்து செயல்பட வேண்டும். பொறுப்புணர்வுடன் செயலாற்றும் அதிகாரிகள் கூட ஒருசில பொறுப்பற்ற ஊழியர்களினால் கெட்டபெயர் எடுக்கின்றார்கள். எதிர்கால சமூகத்தை உருவாக்கும் ஆசிரியர்கள் தங்களை நம்பி தமது எதிர்காலத்தையே ஒப்படைத்துள்ள மாணவர்களுக்காகத் தியாக மனப்பான்மையுடன் சேவை செய்ய வேண்டும்.

பொறுப்புக்களைத் தட்டிக் கழித்தால் கால விரயம் பொருட் செலவு, கெட்டபெயர் எல்லாமே கூடிவரும். ஒருவன் தன்னை தான் சார்ந்துள்ள சமூக நலனை உணர்ந்தாலே போதும் அவனிடம் அர்ப்பணிப்புணர்வுடனான நற்பண்புகள் பரிணமித்து விடும். "என்னை நம்பி இந்த உலகம் இருக்கின்றது. இதற்கு நான் ஏதாவது நற்பணிகள் செய்தேயாக வேண்டும். எனக்காக இந்தச் சமூகம் இந்த உலகம் எவ்வளவோ நான் தெரிந்து கொள்ளாமலேயே



RangaRakes Tamilnavarasam.com

செய்து கொண்டிருக்கின்றதே. இதற்காக நான் என்ன பிரதியுபகாரம் செய்தேன்?" எனத் தன்னைத் தான் கேட்டே யாக வேண்டும்.

பிரச்சினைகளில் இருந்து தப்பிக்கப் பொறுப்புக்களில் இருந்து விலகுவதே ஒரே வழி என எண்ணக்கூடாது. இப்படியே எல்லோருமே எண்ண ஆரம்பித்தால் முடிவு ஏது? இந்த உலகு இருள்மயமாகி இயக்கமற்றுவிடுமே!

எனவே எல்லோருமே தத்தமது கடமைகளை அதனை நிறைவேற்றும் பொறுப்பை துன்பம் நோக்காது இன்முகத்துடன் எதிர்நோக்குவோமாக! படிப்படியாகச் செய்யும் நற்கருமங்களால் பொறுப்புக்கள் வெறுப்பு அற்றுப்போகும்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
16-12-2007







# உண்மைகள் உலருவதில்லை

உண்மை என்றுமே மாறாதது வலிமை மிக்கது. தோற்றும் போகாதது. மனிதன் உருவாக்கிய சட்டங்கள் மாறலாம். இறைவன் உணர்த்தி நிற்கும் உண்மை நிலையானது உண்மை உறுதியாக நிற்பதனாலேயே பிரபஞ்சங்கள் இன்னமும் நிலைத்து நிற்கின்றன. நீதி பிழைத்தால் அவனி அழியும். தவறுகளுக்குக் காரணம் தேடாது உண்மை வழியில் நிற்பதே நல்லது. நெஞ்சகத்தே உண்மையை மட்டுமே இருத்துக!

உண்மைகள் உலருவதேயில்லை என்றுமே பசுமையை, சாஸ்வதமாய், தன் தரிசனத்தைத் தயங்காது காட்டி நிற்கும். உண்மைகளின் முன் பொய்யான ரகசிய ங்கள் தோற்றுப் போகும் என்றும் இதுவெளிப்படையாக இருப்பதனால் தன்னோடு கூட நிற்கும் நல்லவர்களை இரகசியம் கலக்காத நிர்மலமான மனிதர்களாகவே ஆக்கி



RangaRakes
Tamilnavarasam.com

வைத்துவிடுகின்றது. உண்மையான நல்ல மனிதர்களை களங்கமற்ற ஆன்ம சொரூபிகளாகக் காட்டி நிற்கின்றது. "வலிமை" என்பதே சத்தியம். நேர்மைக்கு மட்டுமே உரித்தான ஒன்றாகும். நேர்மையற்றவன் காட்டும் போலியான மூடி என்றுமே கழன்று வீழ்த்தி அவன் உருவத்தை உலகம் சிரிக்கப்பண்ணியே விடும். "உண்மை உபத்திரவமானது, அதனைப் பற்றினால், இந்த உலகில் தப்பிப் பிழைக்க முடியாது எனத் தப்புக் கணக்கு போட்டு உலகின் நட்புணர்வையே கத்தரிக்கும் கெடு மதியாளர், சுடு நீருக்குள் பனிக்கட்டியைத் தேடும் முட்டாள்கள்'

ஏட்டிக்குப் போட்டியாக எப்படியும் முன்னுக்கு வந்துவிடலாம் என எண்ணி, பொய்யுடன் கலந்து நின்றால் கிடைப்பது விடை தெரியா, சூன்ய வாழ்வு தான்.

ஒருவன் தன்னைத் தான் ஆட்சி செய்யத் தன் நெஞ்சத்தினுள் நேர்மையைக் கூர்மையாக்கி வைத்துக் கொள்ள வேண்டும். மடமைக்கு காருண்யம் இல்லை. எந்தக் மருமைத்தையும் கீழ்த்தரமாக செய்யத் தூண்டும். இதற்கு உண்மை விரோதி ஆகையால், அன்பை அகிம்சையை மனசில் இருந்து பிரித்து விட்டு விடும்.

எந்த ஒரு தனிப்பட்ட உயிருக்கும் ஊறு விளைவிப்பதை, உண்மையான எண்ணங்கள் அனுமதிப்பதேயில்லை. ஏன் எனில் உண்மை என்பது என்றும் மாறா தவைகளைச் சொல்லி நிற்பது, கெடுதல் செய்வது, தீய நோக்குடன் வாழ்வது தகாது என்பது மாறாத வாக்கியம்.





எனவே இந்த உண்மையின் படி உலகம் இயங்கியே ஆக வேண்டும் என்பது ஒரு நியதி, கட்டாயம்.

மனித சட்டங்கள் மாறலாம். இறைவன் உணர்த்திய உண்மை மாற முடியாது. எண் கணிதத்தில் சொல்லப்பட்ட கூற்றுக்கள், பிறழ்வதேயில்லை. ஒன்றும், ஒன்றும் இரண்டே தான். புதிதாக நாம் சொல்லும் விதண்டாவதம் ஏற்றுக் கொள்ள முடிவே முடியாது.

ஆன்மீகம் என்பதே இதயத்தினைச் சுத்திகரிப்பதற்கான வழிமுறைகளைச் சொல்வது தான். ஆன்மீக வாதிகள். வாழும் முறைகளைச் சொன்னார்கள். இங்கு திரிபு வாதங்கள் அறவே இல்லை, ஆன்மீகம் மட்டுமே என்றும் மாறாத உண்மைகளைச் செப்பி நிற்கின்றது. உலகின் எந்த மதமும் சொன்ன உண்மை என்றுமே மாறாது. வலிமை மிக்கது. தோற்றும் போகாது. மனிதன் உருவாக்கிய சட்டங்கள் மாறலாம். இறைவன் உணர்த்தி நிற்கும் உண்மை நிலையானது. உண்மை உறுதியாக நிற்பதனாலேயே பிரபஞ்சங்கள் இன்னமும் நிலைத்து நிற்கின்றன. நீதி பிழைத்தால் அவனி அழியும். தவறுகளுக்குக் காரணம் தேடாது உண்மை வழியில் நிற்பதே நல்லது. நெஞ்சகத்தே உண்மையை மட்டுமே இருத்துக! சத்தியங்கள் இன்றளவும் நிலைப்பதற்கு இதுவே காரணமாக அமைகிறது.

இன்று பலர் மிக்க பிடிவாதமாக பொய்களை, கல்வெட்டுக்களில் பதிப்பது போல இறுக்கமாக பேசுகின்றார்கள். இந்த பிரபஞ்ச வெயில், கலந்து நின்று



RangaRakes Tamilnavarasam.com

ஜீவிக்கும் சத்திய வசனங்களை எழுத காகிதங்களும், கற்பாறைகளும் தேவையே இல்லை. நீதி சஞ்சாரம் செய்யாத பிரதேசம் எதுவுமே இல்லை. இது சடப்பொருளுமன்று . ஆயினும் இதன் ஒளி, ஒலி பேரண்டத்தை விட வலுவானது. அகன்றது. ஆற்றல் மிகுந்தது, இயம்புதற்கு அரியது.

எனவே, உண்மைக்குள் பொய்யை விதைத்து அதை உடைத்துப், பிரித்து, விலைபேச முடியாது. ஒளியை, ஒலியைக் கைக்குள் கைப்பற்ற இயலுமா? மனித உணர்வுகள் என்றும் ஒளி பொருந்திய உண்மைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

வேண்டா வெறுப்பாகச் சத்தியத்தில் சந்தேகம் கொண்டு அதனை ஏற்பது போல், பாசாங்கு செய்வது பொய்மையை நம்பி அதனிடமே யாசகம் செய்வது போன்றதாகும். நிறைவான உண்மையை குறை கூறினால். அதன் நிறைவு குறைவதில்லை மாறாக மனம் தான் நிலை குலைந்து விடுகின்றது. அறிவீனத்துடன், அறிவை நிறுத்தி பேசுபவர்கள் அதுவே தமது ஆற்றல் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். நோஞ்சான்களால் ஒரு புல்லைக் கூட வளைக்க முடியாது. அசத்தியம் சத்தியதை எப்படி வெல்ல முடியும்? "கடமைகளைச் செய் பயனை அடைவாய்" என்பது உண்மை. கடமைகளை, பயன்களைக் குறுக்கு வழியில் அடைவேன் என்பது பொய். எனவே நல் வாழ்வுக்கு வழி உண்மை என்பதை ஏற்பதில் என்ன ஐயா தயக்கம் வேண்டியிருக்கின்றது?





ஒவ்வொரு நொடிப் பொழுதும் உண்மை தனது கருமத்தைச் செவ்வனே செய்து தான் வருகின்றது. ஆனால் தவறு செய்யும் மனிதன் அதன் எச்சரிக்கைகளைப் பச்சைப் பொய் எனச் சொல்லி மறுத்தலிக்கின்றான். இது இன்று உலக யதார்த்தமாகிவிட்டது.

ஆயினும் சத்திய தரிசனங்கள் சுலபமாக பலருக்கு கிட்டுவதில்லை. எனவே அனுபவங்களை இறைவன் நல்குகின்றான். அதனூடாக அடைகின்ற பெறுபேறுகள் ஒருவர் வாழ்வை நல்வழிப்படுத்துகின்றன.

ஆன்மீக வள்ளல்கள்,ஞானிகள் சொன்ன மாறாத வார்த்தை களின் தாற்பரியங்கள் அற்புதமானவை. என்றோ சொன்ன வார்த்தைகள் இன்று வரை நிலைத்திருப்பதே, உண்மைகளின் வலுவை எமக்கு உணர்த்துகின்றது. அல்லவா?

செல்வம், பதவி, புகழ்களால் கிடைக்க முடியாத ஆன்ம நிறைவுகளை சத்திய வாழ்வைப் பெற்றதனால் உண்டாக்க முடியும் என்பதை ஞானிகள் தங்கள் அக வாழ்க்கை, புறவாழ்க்கை மூலமாவும் நிரூபித்துக் காட்டி நின்றனர்.

உண்மை என்றுமே மனத்தை வெறுமை ஆக்குவதில்லை. நிறைவை நோக்கிய பயணத்தை மேற் கொள்பவர்களுக்கு இடையூறுகள் தடையுமல்ல, மேலும் துரித நடைபோட வலுவையேற்றும். மனிதன் மகிழ்ச்சியாக இருக்கவே விரும்புகின்றான். ஆயினும் சோதனைகளைக் கடக்கத்



RangaRakes Tamilnavarasam.com

தயாரில்லை எத்தகைய துன்பங்களுக்கும் துணைவன் நீதி, நியாயம் என்பதை மறந்தால் துன்பம் தீவிரமடைந்து விடும். சத்தியம் நசுங்குண்டு விடுவதுமில்லை. கடவுள் தமது அம்சமாக நியாயங்களையே சொரூபமாகக் கொண்டுள்ள மையினால், எங்ஙணம் சத்தியவான்களைக் கைவிட முடியும். சிந்திப்போமாக!

வாழும் காலங்கள் சொற்பமானவை. ஆனால் மனித சாதனைகள் பாரியவை. எது நிஜமோ அதுவே வாழ்க்கையின் அர்த்தத்தை சொல்லும். "உண்மைகள் புரியவில்லை" என்று ஒருவர் பசப்பு வார்த்தையுடன் சொன்னால் அது பொய்".

செய்கின்ற தவறுகளை நியாயப்படுத்த நடிப்பை தோழமையாக்கி விடுகிறார்கள். பொய் கூட கோழைத் தனத்தின் வெளிப்பாடு தான். உள்ளே நிற்கும் இதயத்துடன் ஒளிந்து வாழ்வதைவிட வெளிப்படையாக வாழ்வது சுலபமானது. இதனைப்பலரும் புரிந்து கொள்வ தேயில்லை.

தவறுகள் செய்வதற்குக் காரணங்களை தேடக் கூடாது. உண்மை சொல்கின்றேன் எனச் சொல்லி பொய் களை தூக்கிப்பிடிக்க கூடாது. அவர்களைச் சாட்சியங்களாக் முயல்வது தன்னை விற்கும் கயமைத்தனம்.

தினகரன்
வாரமலர்
24-04-2011







# குழந்தைகள்

குழந்தையின் மழலைப் பேச்சும் நகைக்கும் ஒலியும், ஆயிரம் கோடி வாத்தியக் கருவிகளின் இசைக்கும் மேலானது. இறைவன் தன்னைப் போல் காட்டி நிற்கும். ஓர் அழகு ஓவியமாக குழந்தையைக் காட்டி நிற்கின்றான். கடவுளும் குழந்தையும் ஒன்று. தாய் தன்கருவிலேயே நல் எண்ணங்களையே சிந்தித்தும் நல்ல நூல்களையும் இனிய பேச்சுக்களையுமே கேட்டு வந்தால் பிறக்கும் குழந்தை தன் வாழ் நாள் பூராவும் நற்பிரஜையாக உலகம் போற்றும் உத்தமனாக வாழ்ந்து காட்டும். கவலையில்லாத வாழ்வு வாழ குழந்தைகளின் கள்ளமற்ற மனசு போல நாமும் எம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும். எவர் பெற்ற ஏழைக் குழந்தைகளையும் போஷிப்பது ஒரு சமூகத்தின் மாபெரும் கடமையாகும்.

இறைவன் தன்னைப்போலவே ஒரு நிஜமான பாத்திரத்தைக் காட்டி நிற்கும் ஒரு சந்தர்ப்பத்தினை மனித குலத்திற்கும், இதர ஜீவன்களுக்கும் வழங்கிவருகின்றான். இந்த அரியசந்தர்ப்பமே குழந்தைப்பருவம் என்கின்ற களங்கமற்ற பருவமாகும்.



RangaRakes Tamilnavarasam.com

எல்லா ஜீவன்களுமே குழந்தையாக இருக்கும்போது அழகுதான். அதன் மாசு மறுவற்ற இதயம் அதன் தோற்றத்தில் ஒரு குறுகுறுப்பையும் யௌவனத்தினையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. குழந்தைகளின் மழலைப்பேச்சு ஆயிரம் கோடி வாத்தியக்கருவிகளின் இசைக்கும் மேலானது என்பதில் ஏது ஐயம்?

மென்மை உணர்வுகளும், கபடமற்ற தன்மையும், சதா குதூகலத்துடன் தோன்றும் இயல்பும், எப்போதும் பளிச்சென்ற முகவசீகரமும், ஒருங்கிணைந்திருப்பதால் குழந்தைகளைத் தெய்வீக அம்சமாகவே கருதுகின்றோம்.

துள்ளிக் குதித்தோடும் கன்றுக்குட்டி, குறு குறு பார்வையுடன் தளிர் நடைபோடும் சின்னப்பயல்கள் தாய்க் கோழியைச் சுற்றிச் சுற்றி மின் அலையென பாய்ந்தோடும் கோழிக்குஞ்சுகள், இவற்றின் செயல்கள் இயக்கங்களைக் கண்டு வசீகரிக்கப்படாதவர் யார் உளர்?

பன்றிக் குட்டியும் அதன் இளமைப் பராயத்தில் அழகுதான். தாயின் அன்பான அரவணைப்பு இன்மொழி மென்மையான இனிமையான அதிர்வினைத் தரும் இசை நல் ஓசைகள் குழந்தைகளின் மனவளத்தை மேன்மையேற்றுகின்றன என்று உளவள நிபுணர்கள் சொல்கின்றார்கள்.

எனினும் தாயின் கருவிலேயே குழந்தையின் உணர்வுத்திறன்கள் ஆரம்பமாகிவிட்டன என எமது புராண





இதிகாச கதைகளூடாகவே பல செய்திகள் கூறப்பட்டுவிட்டன. தாய் தன் கருவைச் சுமக்க ஆரம்பித்த காலத்திலிருந்தே நல்ல எண்ணங்களையூட்டும் நூல்களையும் இனிய பேச்சுகள் நல்ல இசைகளைக் கேட்கவேண்டும். மேலும் சுகந்தமான வாசனைகளை நுகர்வதும் என்றும் மனதினில் சலனமற்று நிர்மலமாக அமைதியுடன் இருப்பதும் பிறக்கவுள்ள பிள்ளைகளுக்கு நல்லது எனப் பெரியவர்களும் கூறுவார்கள்.

மனதிற்குப் பீதியூட்டும் எந்தவித தேவையற்ற செய்திகளில்புலன்களைச்செலுத்தாது, இறை சிந்தனையுடன் இருப்பது மிகவும் ஆரோக்கியமானது எனவும் தாய்மாருக்கு ஆலோசனைகள் வழங்கப்படுவதுண்டு.

தவம் இருந்து குழந்தையைப் பெற்றேன் எனக்கூறும் பெற்றோர் இருக்கின்றார்கள்.ஆனால் உண்மையில் எல்லாத்தாய்மார்களுமே பத்துமாதம் உடல் நோவுடனும் பொறுமையுடனும் குழந்தையைப் பெறுவதும் ஒரு மாபெரும் தவம் அன்றோ!

ஒரு சின்ன கோலிக் குண்டைக் கூட நாம் தொடர்ந்து எம் மடியில் சுமக்க முடியுமா? ஒரு தாய் எவ்வளவு சிரமப்பட்டுக் குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள்! இந்த அருங்கொடையைச் சிறப்பாகப் பேண வேண்டியமை எவ்வளவு பிரயத்தமான சீரியபணி என நாம் உணர வேண்டும். தனது இரண்டு வயதுக்குள்ளேயே தனது தாய்



RangaRakes
Tamilnavarasam.com

மொழியை அதாவது தனது பெற்றோர் பேசுகின்ற மொழியைப் புரிந்துகொள்ளுகின்ற ஆற்றல் ஒரு பிள்ளைக்கு வந்துவிடுகின்றது. இந்த வேளையில் நல்ல பேச்சுகளையே வீட்டில் கட்டாயமாகப்பெற்றோரும் அவர்களுடன்கூட இருக்கும் அனைத்துக் குடும்ப உறுப்பினர்களும் பேசுதல் வேண்டும். பேசும் மொழியின் கருத்து குழந்தைக்குப் புரியாது மேலும் வீடுகளில் உள்ள வானொலி தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும் கேட்கும் பிஞ்சுக் குழந்தைகள் நெஞ்சில் நஞ்சை ஊட்டுவனவாக சில நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இவைகளைத் தவிர்த்திடுக.

கொடூர சப்தங்களும் வன்முறைக் காட்சிகளும் பெரியவர்களையே அதிரவைக்கின்றன. பிள்ளைகள் ஒன்றும் ஜடமல்ல.அவைஉணர்வுபூர்வமான உயிர்ச்சிற்பங்கள். ஒருவர் பேசியதையே திரும்பவும் பேசும் அவர்கள் செய்தவைகளைத் திரும்பவும் தாங்களாகவே செய்துகாட்டும்.

பெரியவர்கள் சிலர் குழந்தைகளின் குறும்புகளை ரசிப்பதாகச் சொல்லிக் கொண்டு தேவையற்ற சங்கதிகளையும் சொல்லிக் கொடுப்பார்கள். அந்த அநாவசிய விஷயங்களை பிஞ்சுக் குழந்தைகள் செய்யும் போது ரசனையுடன் ரசிப்பார்கள். கெட்ட வார்த்தைகளைச் சொல்லிக் கொடுப்பார்கள் ஒரு தடியை எடுத்துக் கொடுத்து அடிக்கச் சொல்வார்கள். இன்னும் சிலர் இருக்கின்றார்கள் குழந்தைகளுக்கு ஈகைப் பழக்கத்தைச் சொல்லிக் கொடுக்கவே மாட்டார்கள்.





குழந்தையிடம் இனிப்பைக் கொடுத்து அவற்றைப் மற்றக் குழந்தைக்குக் கொடுக்கச் செய்யாமல் யாராவது கேட்டால் "நான் தரமாட்டேன்" என்று சொல்லு என்று வேறு சொல்லிக் கொடுப்பார்கள். நல் ஒழுக்கத்தை பிறவியில் இருந்து பழக்க வேண்டும் என்றுசொல்லக் கேட்டிருக்கின்றோம்.

குழந்தைகளின் குறும்பை ரசிக்காதவன் மனிதனேயில்லை. அவர்கள் செய்யும் சில குறும்புகளால் அவர்களின் உடலுக்குத் தீங்கு ஏற்படாமலும் பார்க்க வேண்டியுள்ளது. இயல்பாகவே சின்னவர்களுக்குத் துணிச்சல் சுறுசுறுப்புகள் அதிகமாகவே இருக்கும். நல்லவை எவை கெட்டவை எவை என அவர்களுக்குத் தெரியுமா? அன்பானஅணுகு முறைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தால் அவை புரிந்து கொள்ளும். குழந்தைகளை அடிப்பதும் திட்டுவதும் அடுக்காத செயல். இதனால் குழந்தைகளின் அடி மனதினுள் நீங்கா வடு உண்டாகிவிடும்.

விழுந்து எழுந்து மீண்டும் விழுந்து எழுந்து நடை பயிலும் குழந்தையின் துணிச்சலை நாம் அவர்கள் மூலம் கற்கவேண்டும். எதற்கும் பொய் பேசாமல் உள்ளதை உள்ளபடி தன் மனதுக்குப்பட்டதை உடனே சொல்லும் களங்கமற்ற தன்மையினை பெரியவர்கள் அவர்களிடம் இருந்து தெரிந்து கொண்டேயாக வேண்டும்.

எந்நேரமும் களிப்புடனும் உற்சாகத்துடனும் சதா புத்தம் புதுமலர் விரிந்தாற்போல சிரிக்கும் இயல்பை எல்லோருமே பெற்றிடத் துடிக்க வேண்டும்.



RangaRakes
Tamilnavarasam.com

கவலையில்லாத வாழ்வு மூலமே மனிதன் சுறுசுறுப்பையும் நிம்மதியையும் பெற்றுவிடுகின்றான். வயது ஏறஏற மனிதனிடம் தேவை கூடக்கூட துன்பங்களும் தானாகவே வந்து தொற்றி நிற்கின்றன.

என்றும் குழந்தையாகவே வாழ்ந்து விட்டால் துன்பங்கள் ஒன்றுமில்லை. இது உண்மை தான். ஆனால் இது நடைமுறைச் சாத்தியமானதுதானா?

எங்கள் பழக்கவழக்கங்களை என்றும் தூய்மையாக வைத்துக் கொண்டால் துன்பங்கள் தொற்றிக் கொள்ள வாய்ப்பேயில்லை.

- தன்னம்பிக்கை
- திட்டமிட்ட வாழ்வு முறைகள்
- விடாமுயற்சி
- தியாக உணர்வு
- தன்னலமற்ற பணிகள்

மேற்கண்ட விடயங்களில் நாம் தீவிரசிரத்தை எடுத்தால் மனம் பக்குவப்படுகின்றது. மிகவும் பெரிய பதவியில் அந்தஸ்தில் உள்ள பலர் இன்னமும் பழகுவதற்குக் குழந்தைகள் போலவே இருப்பார்கள். நாம் கேள்விப்பட்ட பல பெரியவர்களை நேரில் பார்த்தால் நம்ப முடியாதபடி அவர்கள் நடத்தை இருக்கும். குழந்தைபோல் பேச்சும் குதூகலமுமாக இருக்கும் இவர்கள் அறிவு நிலையில்





அவர்கள் நடத்தை இருக்கும். குழந்தைபோல் பேச்சும் குதூகலமுமாக இருக்கும் இவர்கள் அறிவு நிலையில் ஆன்மபலத்தில் முதிரச்சியடைந்திருப்பதால கள்ளம் கபடமற்ற இவர்கள் போக்கு இன்னமும் இவர்களைக் குழந்தை நிலையிலேயே வைத்திருக்கின்றது.

பாசத்தை அன்பை எங்களை விடக்குழந்தைகளே கூடுதலாக உணருகின்றன. யாராவது சிரித்தால் முகத்தைத் திருப்பிக்கொண்டு செல்லும் மனிதர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

ஆனால் எதிரில் நிற்பவரின் தகுதி தராதரம், பதவி எதனையுமே பார்க்காது அவர் பிச்சைக்காரன் என்றாலும் சரி குழந்தை அவர்களைக் கண்டதுமே தன் முகத்தை மலரவைத்துச் சிரித்து அவர்களை மகிழ்வூட்டுகின்றது. தன்மீது எவர் அன்பு செலுத்தினாலும் கூட அவர்களுடன் கூடவே ஒட்டிக்கொள்கின்றது. பலரும் காரணத்துடன் பேசுவார்கள் சிரிப்பார்கள். ஆனால் எந்த வித எதிர்பார்த்தலுமின்றிப் பிள்ளைகள் எல்லோரையுமே நேசிக்கின்றனர்.

இன்று மனிதர்களில் பலர் இயற்கையை நேசிப்பதாகத் தெரிவதில்லை. காற்றில் பச்சை மரக்கிளைகள் அசைவதை பூக்கள் விரிந்து அழகுகாட்டுவதை, புள்இனங்கள் சப்தமிட்டு வானில் சுற்றிப்பறப்பதை, பசு தன் கன்றுக் குட்டியை அம்மா என்று அழைப்பதை, அணில்கள் கிளைக் குக்கிளை தாவித்தாவி ஓடுவதை, காகம் கரைவதை, வண்ண



RangaRakes
Tamilnavarasam.com

த்துப் பூச்சி பறப்பதை இப்படிப் பலவிதமான இயற்கை வழங்கல்களை நாம் எப்போது ஆறுதலாக இருந்து ரசிக்கின்றோம் சொல்லுங்கள் பார்ப்போம்!

ஆனால் குழந்தைகள் இயற்கையோடு பேசுகின்றன. சிரிக்கின்றன. கைகொட்டி ஆரவாரம் செய்கின்றன. பறக்கும் பட்சிகளுடன் தாமும் பறந்து செல்வதாகக் கற்பனைகள் செய்து கைகளை விரித்துப்பரப்பி உயர, உயரத் துள்ளிக் குதிக்கின்றன. இயற்கை அழகை உதாசீனம் செய்யும் எண்ணங்களைக் கைவிடுவோமாக!

அழகை ரசிக்காதவன் இறைகொடையினை மதிக்காதவன் சலிப்புணர்வுடன் வாழ வேண்டியதே!

இன்றைய இளம் சிறார்களுக்கு நுண் அறிவுத்திறன் மிகையாகவே காணப்படுகின்றன. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குக் கற்றறிந்தவர்கள் கூடச்சரியாகப் பதில் சொல்லத் தெரியாமல் திணறுவதுண்டு.

பாலர் பாடசாலைக்குச் செல்லும் சிறார்களுக்குக் கூடக் கணனி பற்றிச் சொல்லிக் கொடுக்கின்றார்கள். இணையத்தளத்தில் இணைந்து கொள்ளவும், கணினி மூலமான விளையாட்டில் ஈடுபடவும் தெரிந்து வைத்திருக்கின்றார்கள். ஆனால் வயது முதிர்ந்தவர் பலருக்கு இன்னமும் கணினி பற்றி அறிவு தெரியாமல் இருக்கின்றது. வசதிகள், வாய்ப்புகள் தற்காலத்துக்குக் குழந்தைகளுக்கு



RangaRakes



அதிகமாகவே இருக்கின்றன. எந்த கஷ்டநிலையில் உள்ள பெற்றாரும் கூட பிள்ளைகளுக்கு மேலதிகமான வசதிகளை அளித்த வண்ணமாகவுள்ளனர். நவீனஉலகுடன் இணைந்து கொள்கின்ற கட்டாய நிலைக்கு நாம், வந்துவிட்டோம்.

எவ்வளவு தான் இந்த உலகம் நவீனமயமாக விஞ்ஞானத்துறையில் முன்னேறி நாகரீகமான பாதையினுள் சங்கமித்தாலும்கூட இன்னமும் நாகரீகமற்ற வழிகளிலும் செல்லாமல் இல்லை. இன்னும் சிறார்களுக்கான உரிமைகள் பூரணமாக வழங்கப்படவில்லை. நாடுகளில் ஏற்படும் வன்முறை குழப்பங்களால் மனித உரிமைகள் மீறப்படுவதால் ஒன்றுமே யறியாத குழந்தைகளுக்கான வசதிகள் பலவும் மறுத்து ஒதுக்கப்பட்டேவிடுகின்றன.

போதிய போஷாக்கான உணவுகள் இல்லை. நல்ல மருத்துவ வசதிகள் இல்லை. சுற்றாடல்கள் மாசடைவதால் நோய்கள் பெருகுவதால் சிசுக்களுக்கு நோய்கள் ஏற்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் இல்லிடம் இல்லாத பெற்றோரிடம் வாழ்ந்து வருகின்றன.

குறிப்பாக வறுமை நிலையில் உள்ள நாடுகளில் வாழுகின்ற குழந்தைகளின் துன்பங்கள் சொல்லில் அடங்காது. இந்த உலகம் எல்லோருக்குமே பொதுவானது என்கின்ற கூற்று வெறும் பேச்சளவில்தானா? என்று கேட்குமளவிற்கு வசதிபடைத்த நாடுகளின் குழந்தைகளுக்கான வசதிகள் ஒருபுறமிருக்க வளர்முக நாடுகளில்



Tamilnavarasam.com

உள்ள பிள்ளைகள் சாதாரணமான நிலையில் நிம்மதியுடனும் வாழ முடியாத நிலையில் அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். யுத்த சூழ்நிலைகள், அசாதாரண கால நிலை மாற்றங்களால் பேரழிவுகள், உணவுப்பஞ்சம், விவசாய, தொழில் நிலைகளினால் ஏற்படும் மந்த நிலைகளால், இறுதியில் பாதிப்படைந்து போவது இளைய சமூகம் என்பதை, இன்னமும் இந்த உலகம் உணர்வதாக இல்லை.

ஒரு நாட்டின் பெரு வளர்ச்சி நிலை என்பதை விடுத்து, சாதாரண சமூகங்களை நோக்குவோம். சமூக ஏற்றத்தாழ்வுகளால், ஏழைக் குழந்தைகளின், ஏக்கமான விழிகளில் தோன்றும் துன்பப் பார்வைகளை பலரும் உணராமல் போகின்றார்கள்.

யுத்த அனர்த்தம் காரணமாக தாய் தந்தையரை இழந்த குழந்தைகளைப் பல பொது நல அமைப்புக்கள் பொறுப்பேற்றுள்ளமை பாராட்டுதலுக்குரியது. ஆயினும் எம் கண்ணுக்குப் புலப்படாமல், பல இலட்சம் குழந்தைகளுக்கு அன்பான பராமரிப்பு கிட்டியுள்ளதானவும் கேட்கத் தோன்றுகின்றது. இன்னமும் ஆடம்பரமான முறையில் அனாவசியமான வழிகளில் செலவு செய்பவர்கள் வசதியற்ற குழந்தைகளுக்கு வழிசமைக்கும் கைங்கரியத்தில் தங்கள் பார்வையைச் செலுத்தினால் என்ன?

குழந்தைகளின் களங்கமில்லாத சிரிப்பில் இறைவனையே காணலாம் என்கின்றோம். எல்லாக் குழந்தை





களுமே இறைவன் படைப்பு என்றால் இன்பங்களின் நிழலே படாதபடி எம்முன்னே வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழ்மை நிலையில் உள்ள பிஞ்சுப் பாலகர்களுக்கு எம்மாலான உதவிகளை நல்குவோமாக!

பசித்து அழும் குழந்தைக்கு பால் உணவு அளிக்க இயலாத ஏழைத்தாய்மார்கள் படும் அவஸ்தைகளை உணர்வோமாக. ஏழ்மை என்பது இறைவன் கொடுத்த தண்டனை. முன்வினை எனச்சொல்லி நழுவிச் செல்லாது அல்லல் உற்றோரை அரவணைத்துக் கொள்க நெஞ்சங்களே!

தண்டனை வழங்க இறைவன் எங்களைப் படைக்கவில்லை. ஒருவர்க்கொருவர் ஆதரவுக் கரங்களை நீட்டவே மக்களுக்கு ஆறு அறிவைப் படைத்தான்.

சமய விழாக்கள் பண்டிகைக் காலங்களில், எல்லோருமே ஒன்றாய் இணைந்து ஈகை செய்து இன்புற்று வாழ வேண்டும் என்றுதான் சமயங்கள் கூறுகின்றன. பண்டிகைகளைக் கொண்டாடுவதன் நற்பயன் என்பதே இல்லாதவர்களுக்கு வழங்குவதேயாம். வறுமைப்பட்டு வாழும் குழந்தைகளைப் போஷிப்போமாக! உண்பதற்கும் படிப்பதற்கும், கல்வி கற்பதற்கும், விளையாடுவதற்குமான அனைத்து வசதிகளுமே குழந்தைகள் இளைய சமூகத்தினர் அனைவருக்குமே கிட்டுவதற்காக எமது பங்களிப்புகளை மனமுவர்ந்து செய்வோமாக!

திரைப்படங்கள், தொலைக்காட்சிகளில், ஏழைக் குழந்தைகளின், அவல நிலைகண்டு கண்ணீர் சிந்தும் நாம்'



RangaRakes
Tamilnavarasam.com

நிஜவாழ்வில் அல்லல்படுவோருக்காக என்ன செய்தோம்? என எம்மையே கேட்கவேண்டும்.

நாம் எவ்வளவு இழந்தாலும் சரி, எம்முன் இருப்பவர்களுக்கு அன்பு மீதூர வழங்கும் வழங்கல்களால் எதிர்கால சந்ததிகள் புத்துயிர்புடன் பூத்துக் குலுங்கி வளர்வதைக் கண்கூடாகப் பார்ப்பதைவிட வேறென்ன பேறு வேண்டும் கண்டீர் சொல்மின்! சொல்மின்!

அழகுக் குழந்தைகளின் இன்றைய நல்வாழ்வு தான் அதன் எதிர்கால வளர்ச்சியைத் தீர்மானிக்கின்றது. இளமையில் வறுமையே மிகக்கொடியது. துன்பத்தின் சுவடுகள் தெரியாமல் குழந்தைகளைப் பக்குவமாகப் பேணிக்காப்பது வளம் மிக்க உலகிற்கு நாம் வழங்கும் சந்தோஷகரமான நற்சேவையுமாகும்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
18-11-2007







# ஏமாற்றுதல்

ஏமாற்றி வாழ்பவர்கள் காலப்போக்கில் பிறரிடம் நம்பிக்கையற்றவர்களாகப், பொய்மையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டு விடுவார்கள். தாங்கள் பெற்ற கல்வியறிவினால் கூட மற்றவர்களை ஏமாற்றத் துணிதல் படுகேவலமான செயல். செய்த வினைகளுக்கு எதிர் வினை உண்டு. தனது ஆத்மா அனுமதிக்காத தீய செயல்களை செய்தால் நிம்மதியாக அவனால் வாழ்ந்திட முடியுமா? கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தவறுதல் நம்பிக்கை மோசடி செய்தல் எல்லாமே சத்தியத்திற்குச் சவால் விடும் முட்டாள்தனமான வேலை. கிடைத்த வாழ்வில் திருப்தி கொள்வதை விடுத்து, அடுத்தவன் குடியைக்கெடுப்பது அவருக்கே கேடு.

பிறரை ஏமாற்றுதல் என்பது தன்னைத்தானே தூற்றுதலுக்குள்ளாக்குவதும் தனது ஆத்மாவிற்கு நீங்காத வடுவை உண்டாக்குவதுமாகும். மேலும் ஏமாற்றுதலையே பழக்கமாகக் கொண்ட பேர்வழிகள் பிறரிடம் நம்பிக்கையற்ற



RangaRakes
Tamilnavarasam.com

நபராகவும் பொய்மையாளராகவும் அங்கீகரிக்கப்பட்ட ஒருவராகிவிடுவார்கள்.

ஒருவரை நம்பவைத்துக் கழுத்தறுப்பது என்பது எவரால்தான் ஏற்றுக் கொள்ள முடியும்? ஆரம்பத்தில் வேடிக்கையாகப் பொய் பேசி மகிழ்பவர்கள் காலப்போக்கில் இதுவே ஒரு நிரந்தரமான பழக்கமாக இவர்களிடமே ஒட்டிக் கொண்டுவிடுகின்றது.

நம்பிக்கையற்ற ஒருவர் என முத்திரை குத்தப்பட்டவர்கள் சமூகத்தில் மட்டரகமாக நோக்கப்படுபவர்களாகக் கருதப்படுவதால், அவர்கள் எவ்வளவு கல்வி செல்வத்தைக் கொண்டிருப்பினும் இவர்களைக் கண்டால் சமூகத்தினர் விலகி ஓடவே தலைப்படுவர்.

தான் பெற்ற கல்வியால் எப்படி மற்றவனை ஏமாற்றலாம் அல்லது தனது பணபலத்தினால் எல்லோரையும் ஏமாற்றி தன் காலடியில் கொண்டுவரலாம் என எண்ணுதல் பேதமையிலும் பேதமையான செயலன்றி வேறென்ன?

தொடர்ச்சியாகச் செய்யப்படும் திருட்டுக்கள் சமூகவிரோதச் செயல்களை மற்றவர் எப்போதாவது கண் விழித்துப் பார்க்கமாட்டார்கள் என எண்ணுவது மதிகெட்ட தனமல்லவா? மறைமுகமாக அடுத்தவனுக்குத் துன்பம் தரும் கருமங்கள் கூட ஒரு விதத்தில் பிறர்நலனைத் திருடிக் கொள்வது போல்தான். எனவே ஏமாற்றுதல், திருடுதல்





எல்லாமே ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள் ரகத்தை ஒத்தவைகள் தான். ஏமாற்றி வாழ்பவர்க்குத் திருடுதல் என்பது ஒரு குற்றமாகப்படாது. நம்பகரமான முறையில் நடந்து சாதுர்யமாகவே விவேகமாகக் கடின உழைப்புடன் வாழும் வாழ்வுதான் சாஸ்வதமானது. குறுக்கு வழியில் கோணங்கித் தனமாக பொய்மையை உண்மை போன்று தோற்றம் காட்டி பேசி ஏமாற்றி வாழும் வாழ்வில் கிட்டும் சுகம் அற்பமானதே என அறிக!

புத்திசாலித்தனமாகப் பேசி உண்மையை மறைப்பவர்களைப் புகழ்வது தன்னைத்தான் இகழ்வதாகக் கொள்ளவேண்டும்.

நீதிமன்றங்களில் எதிரிகள் செய்த தவறுகளைச் சாதுர்யமாக மறைத்துப்பேசி குதர்க்கம் செய்து வழக்கில் வெற்றி பெற்றால் வழக்கறிஞர் திறமைசாலியாகிவிடுவார் எனச் சொல்லப்பட்டாலும் நீதியின் கண்கள் உறங்குவது இல்லை. செய்த விளைவிற்கு எதிர் விளைவுகள் உண்டு. கற்றகல்வி மற்றவர்களை மட்டம் தட்டுவதற்கும் நீதிக்கு முரணான விஷயங்களை மூடி மறைப்பதற்கும் அல்ல. எங்கள் கண்முன்னாலே, ஏமாற்றிப் பிழைப்பு நடத்தியவர்கள், ஈற்றில் வாழ்ந்து வரும் அவல வாழ்க்கையைப் பார்க்கும் போது “சத்தியங்கள் சாவதில்லை” என்பதை நன்கு புரிந்து கொள்கின்றோம்.



RangaRakes

Tamilnavarasam.com

ஒருவரை மற்றவன் வஞ்சகன், போக்கிரி, துஷ்டன் என்று பேசுவதை கேட்கும்போது அந்த வார்த்தையின் வலியை நாம் அறிந்து கொள்ளமுடியும். ஒருவரால் பாதிக்க ப்பட்டவர்களின் பெருமூச்சும் அக்னியாகக் கிளர்ந்து எழும் வார்த்தைப் பிரயோகங்களும் அநியாயம் செய்தவரை அழிக்கும் வல்லமை பொருந்தியது.

தனக்கு நேர்ந்த அநியாயங்களால், மனம் கொதிப் பேறிய கண்ணகியின் கோபம் எத்தகைய சக்தி மிகுந்தது என்பதை நாம் படித்திருப்போம்.

ஒருவரது நியாயமான கோபங்களால் எனக்கென்ன என எண்ணிக் கண்டபடி நடப்பதுதான் தனக்குள்ள வழி என்று எண்ணுபவர்கள் பின்னர் பெறுகின்ற தாக்கங்கள், அவர்களது சாகின்ற காலத்தில் விழிப்பை ஏற்படுத்தினாலும் பயனற்றுப் போய்விடுமன்றோ!

தப்பான காரியங்களைச் சிந்திப்பதும் அவைகளையே செய்பவனும் முடிவில் ஒரு ஆன்ம நோயாளியாகி விடுகின்றான். நெஞ்சத்திற்குப் பொய்யை விதைப்பதை விடப் பொல்லாப்பும் பிறிதில்லை. அறிவோமாக!

ஒருவன் எவ்வளவு பெரிய கல்விமான் ஆகலாம், பெரும் செல்வந்தராகவும் மாறி விடலாம். ஆனால் தவறான வழியில் சீவிப்பவனை அவனது அந்தராத்மா என்றுமே ஏற்றுக்கொள்ள மாட்டாது. அவன் உள்ளே அது உள்ளிருந்து





ஓங்கிய குரலில் சத்தமிட்டு ஒலி செய்து அவனை உறங்க விடாது, நிம்மதியை அரித்தபடியே கரித்துக் கொட்டும். இந்த நிலைக்கு ஆளாவதைவிடச் சாமானியனாக வாழ்ந்து பிறர் போற்ற நடந்து கொண்டால் துன்பம் எங்ஙனம் தொற்றிக் கொள்ள முடியும்?

மனிதன் தன் ஆத்மா அனுமதிக்காத பல செயல் களைச் செய்து கொண்டிருக்கின்றான். ஏதாவது பிரச்சனை களுக்குள் அகப்பட்டு அதனில் இருந்து தப்பிக்க மார்க்கம் இல்லாது விட்டால் மனதிற்குத் தோன்றிய தகாத வழிகளி லும் செல்ல முனைகின்றான். சில சமயங்களில் தவறு களைப் புரியாமல் செய்பவர்களும் உளர்.

பிரச்சினைகளில் இருந்து விடுபட ஏதாவது வாக்குறு திகளை அளிப்பதும், அதை நிறைவேற்ற இயலாது திணறு வதும், இதனால் கெட்டபெயர் எடுப்பதும், சகஜமான நடவடிக்கைகளாகச் சிலரது வாழ்க்கையில் அமைவதுண்டு. அற நனைந்தவனுக்குக் கூதல் என்பது (குளிர்) ஏது? ஏமாற்றி யேயாக வேண்டும், எனத் துணிந்தவர்கள் அதன் பிரதி பலன் எவ்வாறு அமையும் எனக் கிஞ்சித்தும் எண்ணிப் பார்ப்பதில்லை.

ஆனால் சில அப்பாவிகள் தெரியாத்தனமாகக் கொடுக்கும் வார்த்தைகளே அவர்களுக்கு பெரும் வில்லங் கமாய் அமைவது முண்டு.



RangaRakes

Tamilnavarasam.com

கண்மூடித் தனமாகக் காதலில் கட்டுண்டவர்களே திடீர் என மனம்மாறி ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதும், நண்பர்கள் கூடச் சுய ஆதாயம் கருதி, தன்னோடு இணைந்தவர்களை வஞ்சனை செய்து ஏமாற்றிப் பிழைப்பதும், ஒருவரிடம் கடன்வாங்கிய பின் அதை எப்போது பெற்றேன் என வாய் கூசாமல் சொல்லும் எத்தர்களும் எம்மைச் சுற்றியிருப்பதை நாம் அறிந்தும் கூட ஏமாறாமல் இருந்ததில்லை.

தொழில் வாய்ப்புத் தருகின்றேன் வெளிநாட்டுக்கு அனுப்புகின்றேன் எனச்சொல்லிப் பல இலட்சங்களைக் கறந்து ஏப்பமிடுபவர்கள் இன்னமும் சட்டத்தின் முன் பிடிபடுவதாக இல்லையே.

குறுகிய வழியில் சம்பாதிக்கும் எண்ணம் கொண்டோரை ஏமாற்றும் பேர்வழிகள் எப்படியோ மோப்பம் பிடித்து விடுகின்றனர். இதில் மிகவும் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் ஒருவரால் வஞ்சிக்கப்பட்ட ஒருவன், தனக்கு ஏற்பட்ட துன்பங்களின் தாக்கத்தைப் புரிந்து கொண்டும் கூட அதே வழியில் மற்றவரையும் ஏமாற்றப் புகுந்து கொள்கின்றமையை மன்னிக்கத்தான் முடியுமோ?

"என்னை அவன் ஏமாற்றிவிட்டான் நான் பல விதத்திலும் எல்லாமே இழந்துவிட்டேன். நான் இருந்தவைகளை ஏமாற்றப்பட்டதன் மூலம் இழந்தவைகளை மீளப்பெற்றே யாக வேண்டும்" எனச்சொல்லித் தானும் தீய வழியில் விட்ட





இழப்புக்களை மீளப் பெறுதலுக்காகப் பாவச் செயல்களைத் தொட்டு விடுவதில் என்ன நியாயம் உண்டு? வெளிநாட்டில் சில வாலிபர்கள் தொழில் இன்றி அலைந்து திரிந்து முடிவில் தீய வழியில் செல்வதாகச் செய்திகள் வாசித்திருப்பீர்கள். துன்பங்களைத் தாங்குவேன் என்ற துணிச்சலில் புறப்பட்டு, சிறு துன்பங்கள் தன்னைத் தொடர்ந்தாலே மனம் நொந்து உலகத்தை வெறுத்து அடாவடித்தனமான செயல்களைச் செய்யும் போது தனது எதிர்கால வாழ்வை மலர வைப்பதற்குப் பதிலாக தானே, தனக்குக் கரும்புள்ளிகளைக் குத்திக் கொள்கின்றான்.

கஷ்டப்பட்டு வாழ்வது கௌரவக் குறைவு என்று பேசுபவர்கள், கௌரவக் குறைவான சான்றோர் பழிக்கும் செயல்களைப்புரிந்து தலைநிமிர்ந்து எங்ஙனம் வாழ்ந்து காட்ட இயலும்?

யாராவது ஒருவர் முன்பின் அறிமுகமில்லாத நபர்கள் சொல்லும் ஆசை வார்த்தைகளை நம்பி பெரிய முதலீடுகளைச்செய்து தெரியாத வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், அதனால் மீள முடியாத கடனாளியாவதும் பற்றிய பல சம்பவங்களை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

புதிது புதிதாக முளைத்த நிதி நிறுவனங்களில் ஏழைப் பாமர மக்கள் பணம் கொடுத்து ஏமாற்றப்பட்ட சம்பவங்கள் ஏராளம் ஏராளம்.!



RangaRakes Tamilnavarasam.com

இன்று வெளிநாடுகளில் இருந்து வருகின்றவர்களின் பகட்டு ஆடம்பரங்களைக் கண்டு மயங்கிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் திருமணம் செய்துவைப்பதும், பின்னர் திருமணம் செய்த நபர்களின் உண்மையான வடிவத்தைப்பற்றி அறிந்ததும், பெற்றோர் இதயம்படும் அவஸ்தைகளைக் கேட்டும் கூட பலர் இன்னமும் உணராமல் இருப்பது சுத்த அறிவிலித்தனமானதாகும்.

நிச்சயிக்கப்பட்ட திருமணமாகட்டும், காதலித்தே செய்த திருமணமாகட்டும் ஆரம்பகாலத்தில் சந்தோஷமாக வாழ்ந்துவிட்டுப், பின்னர் பேரன், பேத்திகளைக் கண்ட பின்னரும் கூடத், தாங்கள் ஏமாற்றப்பட்டேவிட்டோம், தெரியாத்தனமாகக் கல்யாணம் செய்துவிட்டோமே எனப் பரஸ்பரம் கணவன், மனைவியர் குறைப்பட்டு, ஆதங்கப் படுவது வேடிக்கையானதே!

கிடைத்த வாழ்க்கையில் திருப்தி கொள்ளாது அடுத்த வன் வாழ்வைப் பார்த்து ஏங்குவதால் தமது நிம்மதியை ஸ்தம்பிக்கச் செய்யலாமா? அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை என்று எண்ணுதலும் வீட்டுக்கு வீடு வாசல்படி என்ற உண்மையினை அறியாமலும் இருக்கலாமா? பிரச்சனை கள் எங்கே தான் இல்லை? தமக்கு என ஒரு சின்னப் பிரச்சனைகள் வந்துற்றால் அது அடுத்தவனால் நேர்ந்தது எனப் பழி சுமத்துவதும் தன்னை வேண்டுமென்றே பலர் வஞ்சித்துப் பழியேற்றுவதாகவும் சொல்லி சொல்லிச் ஆதங்கப்படுதலால் மனதில் திருப்தி நிலை தோன்றி விடப் போவதுமில்லை.





தான் செய்த தவறுகளை உணராமல் விடுவதும் பிறரைத் திட்டுவதாலோ கடிந்து கொண்டு காழ்ப்புணர்வு களைப் பாய்ச்சுவதாலேயோ எந்த நிலைமைகளும் சீர் செய்யப்படப் போவதுமில்லை. மாறாக மென்மேலும் அடுத்தவரின் கோபதாபங்களுக்கும், அவர்களின் மனக் குமைச்சலுக்கும் ஆளாக வேண்டிவருமே ஒழிய நன்மைகள் எதுவுமே கிட்டிவிடாது.

முக்கியமாகப் பின்வரும் காரணங்களால் ஒருவர் ஏமாற்றப்படுகின்றார்.

- தங்கள் சொந்தக் கண்ணோட்டத்தில் உலகைக் காணப் பிரியப்படாமை.
- சுயநம்பிக்கையீனம்
- செய்கருமங்களில், தெளிவின்மை, அனுபவமற்ற கருமங்களில் ஈடுபடுதல்
- எப்படியாவது காரியமாக வேண்டும் என்கின்ற அவா.
- அனுபவஸ்தர்களின் மதியுரைகளைச் செவி மடுக்காமை.

எவ்வளவுதான் படித்தறிந்தவர்கள் கூட, தமக்கென பிரச்சினைகள் வந்திட்டால் குழப்பமடைந்து ஆடிப்போ கின்றார்கள். ஒரு சிரேஷ்ட பொறியியலாளர் என்னிடம் சொன்னார், என்னிடம் இரண்டாயிரம் பேர்வேலை செய்கின்றார்கள். ஆனால் ஒரு சாதாரணமான நபர் ஏமாற்றி



RangaRakes

Tamilnavarasam.com

விட்டார். எனக்குள்ள பிரச்சினைகளுள் தீர விசாரிக்காமல் அவரை நம்பி மோசம் போனேன் என்றார். எச்சரிக்கையுணர்வுடன் வேலை செய்வதுகூட எல்லா நேரங்களிலும் சரிப்படாது போல் உள்ளது என்றார். உண்மையில் ஒருவர் தளர்ச்சியுற்ற நேரத்தில் அவர்களை நேரம் பார்த்து வீழ்த்துவதற்கென்றே துஷ்டர்கள் தயார்நிலையில் இருக்கின்றார்கள். அனுபவ ஞானம் மூலம் இவைகளை நாம் புரிந்து கொண்டு செயல்படுவோமாக!

பிறருடைய மன உணர்வுகளை மதித்துக் கௌரவப் படுத்துபவர்கள் எந்நிலையிலும் கனவில் கூட அடுத்தவர்க்குத் துன்பங்களைக் கொடுக்கத் துணியவே மாட்டார்கள்.

இன்றுள்ள விளம்பர யுகத்தில் மக்கள் எதனைத் தெரிவு செய்வது என்பதில் குழம்பிப்போய் இருக்கின்றார்கள். நிறுவனங்களில் சில போலியான வாக்குறுதிகளை அள்ளி வழங்குகின்றன. தரமற்ற பொருட்களுக்குக் கூட மக்கள் தலையில் கட்டியடிக்க விதம் விதமான யுக்திகளைக் கையாளுகின்றன.பொய்யானவாக்குறுதிகள், பரிசுத் திட்டங்கள், எனப் பலதரப்பட்ட முறைகளில் மக்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் செயல்பட்டும் வருகின்றன.

வியாபார நிலையங்களில் பொருட்களில் கலப்படம், செய்தல், எடைகுறைத்து விநியோகம் செய்தல், காலாவதியான பொருட்களை விற்பனைசெய்தல், பொருட்களைப் பதுக்கி விற்பனை செய்தல் போன்ற செயல்களைச்





செய்வோரைச் சட்டரீதியில் தண்டனை வழங்க எடுக்கும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. கேலியாகப் பேசி ஒருவரை ஏமாற்றுவதற்கு என்றே மேலை நாட்டினர் ஏப்ரல் முதலாம் நாளைக் குறிப்பிட்டு விட்டனர். எந்த விஷயத்திலும் ஜாக்கிரதையாக இரு என்பதன் பொருட்டே இந்த நாள் எமக்கு அறிவுறுத்துவதாக இருக்கலாம்.

கேலியான பேச்சுகள் விபரீதமாகப் போகுமிடத்து அவை பொய் என்றே அர்த்தப்படும். புளுகுதல் என்பதால் ஒருவருக்குப் பாதகம் ஏற்பட்டு விடக்கூடாது. புளுகும்போது அதனால் எவர்க்காவது தீங்கு ஏற்பட்டால் அதுவே பொய் என்கின்ற வடிவம் பெறுகின்றது.

கேலிக்காகவே பொய் பேசிப்புளுகிப்பழகினால் அது ஒருவர்க்கு நிரந்தரமான கெட்ட பழக்கமாகிவிடலாம். குழந்தைகளும் சரி,வயதுவந்தவர்களும் சரி, இது விடயத்தில் தவிர்த்துக்கொள்ள வேண்டிய எந்தத் துர்ப்பழக்கத்தையும் நிறுத்தியேயாகவேண்டும். பல சமயங்கள் விளையாட்டாகச் சொல்லப்படும் பொய்யுரைகள் ஏமாற்றுப் பேச்சுக்கள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துவதை நாம் எமது அனுபவரீதியாகவே அறிந்துள்ளோம். கேலிப் பேச்சுக்கள் கூட கெட்ட செயல்களைச் செய்ய ஒரு அனுமதி வழங்கல்களாகக்கொண்டு சிலர் செயல்படுகின்றனர்.

எந்தச் செயல்களாலும் எழுகின்ற பாதிப்புக்கள் தங்களை மட்டும் தாக்கிவிடக் கூடாது என்றே எல்லோரும்



RangaRakes
Tamilnavarasam.com

எதிர்பார்க்கின்றனர். அப்படியிருக்க நாம் ஏன் பிறர் மனதை நொருக்க முனைய வேண்டும். இவையெல்லாம் ஒரு நாகரீகமற்ற செயல் அல்லவா?

ஆன்மீக ஈடுபாடு உள்ள பாமர மக்களை, படித்த வர்களை, பெரும் பதவியில் உள்ளவர்களைக் கூடப் போலிச் சாமியார்கள் ஏமாற்றி விடுகின்றார்கள். இதேபோல சேவை மனப்பான்மையும், நாட்டுப்பற்று மற்ற பலர் அரசியல் வாதிகளாகப் பல வித வேடம் புனைந்து கொள்கின்றார்கள்.

அரசாங்கத்தை ஏமாற்றுவது என்பதே, மக்களை, அவர்தம் நலனை புறக்கணித்தல் என்றே அறிக!

இறைவனின் திருவருட் பிரசன்னத்தை விரும்பும் மாந்தர் தம்மை உயர் நிலையில் உருவாக்க, அவர் இட்ட கட்டளைகளை ஏற்று நடந்தேயாகவேண்டும். அவர் அருளை வேண்டி நிற்கும் நாம் எங்கள் நடத்தை நெறிகளில் தூய் மையைத் தவிர வேறெந்த வழிகளிலும் சிந்தையில் திரிவு ஏற்படாவண்ணம் அவதானமும் கரிசனையும் மிக்கோராய் திகழ வேண்டுமல்லவா?

நம்பிக்கைத் துரோகம் எளியோர்க்குத் துரோகம் இழைத்தல் காழ்ப்பு மிகுதியால் வக்கிர புத்தியாளராய் மாறுதல் என்பன வஞ்சனையாளரினது விருப்புமிகு பழக்கமாகும்.





பின்வரும் விடயங்களில் எங்கள் கவனத்தினை ஈர்ப்போ மாக!

- நல்லோர், பெரியோரிடம் உறவுகளைப் பேணல்
- தெய்வபக்தி/இறை அச்சம்
- நல்ல சுற்றாடல்களில் சஞ்சரித்தல்
- நல்லனவற்றையே சதாகாலம் எண்ணுதல்.

போன்ற குணாம்சங்களால் எமது அகம் எஞ்ஞான்றும் ஒளி பொருந்தியதாய், களிப்பு மிக்கதாய், வலுமிக்தாய் மாறி விடும். என்றும் சந்தோஷங்களை எதிர்நோக்கும் நாம் புலன் களைக் கண்டகண்ட வழிகளில் திருப்பிய பின்னர் இன்பம் தேடுதல் சாத்தியப்பட்டு விடுமா?


எவரையுமே நோகடிக்காமல் வாழும் முறைமைதான் பிறர் அன்பை எங்கள் மீது ஈர்க்க வைக்கும் நல் உபாய மாகும்.

அன்பைப் பகிர்வதால் துன்பங்கள் ஏதுமில்லை. பொறாமையோ, பிறரை ஏமாற்றும் எண்ணமோ எம்மிடம் வந்து அணுகிவிடாது, நியாயமான வழிகளில் கிடைக்கும் சந்தோஷகரமான சீவியம் தான் நிரந்தரமானதுமாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
11-11-2007



RangaRakes
Tamilnavarasam.com



# நாளைக்கு....!

நாளைக்கு நாளைக்கு எனப் பிற்போடப்படும் வேலைகள், அது நிறைவேற்றப்படும் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. ஒத்திவைத்தல் தப்பான காரியம். கால, பொருள் விரயங்கள், மனக்கஷ்டங்களை, சேர்த்து வைக்கும். நல்ல காரியங்களை உடனுக்குடன் செய்பவர்கள் இரட்டிப்புக்கு மேலான பயன்களைப் பெறுகின்றனர். அசமந்த போக்கினால் வாழ்க்கை மந்த கதியாகி சிந்தையை நொந்து போகச் செய்யும். காலத்தை மதிப்பவர் நாளைக்கு... எனச் சொல்லிடமாட்டார்கள்.

நாளைக்கு நாளைக்கு எனக் காலத்தைக் கடத்துவது இந்த ஞாலத்தின் வளர்ச்சிக்குத் தடையாகும்.

கடமைகளைச் சுத்தமாக, அற்புதமாய் செய்வதற்கு "ஒத்திவைத்தல்" ஒத்துவராது. நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று சுலபமான வேலைகளைக் கூடச்





செய்யாமல் விட்டு விட்டுப் பின்னர் எல்லா வேலைகளுமே குவிந்து போனபின்னர், திணறி நிற்கும் நபர்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். நாளைக்கு என்று பிற்போடப்படும் வேலைகள் நடைபெறும் என்பதற்கு எந்த உத்தரவாதமுமே இல்லை. இன்றைய அலுவல்களை இன்றே செய்வதே உறுதியான செயலுமாகும்.

மிகவும் அபூர்வமான. முக்கிய பிரதானமான அலுவல்கள் கூட, இத்தகைய ஒத்திவைக்கும் குணத்தினால் அவை முற்றாகவே நிராகரிக்கப்படும். இதனால் பலத்த இழப்புகளுக்கும் ஆளானவர்கள் இருக்கின்றனர். மேலும் குறிப்பிட்ட கருமத்தின் அவசியத்தை உணராமல் அதனைச் செய்யாமல் அவமானப்பட்டவர்கள் அதனால் நீங்காத மனவடுக்களைச் சுமந்தவர்களாயும் இருக்கின் றார்கள்.

ஒருவருக்குக் கிடைக்கவிருக்கும் வழங்கல்களை ஒத்தி வைக்கப்பட்டுக் கொண்டேபோனால் அது மறுக்கப் பட்ட உரிமைகள் என்றே கருதப்படல் வேண்டும்.

இன்று நீதிமன்றங்களில் வழக்குகள் அனேகமானவை உடனடியாக முடிவடைவதில்லை. வழக்குகள் அடிக்கடி ஒத்திவைக்கப்படுவது கூட பாதிக்கப்பட்ட சாராருக்கான உரிமைகள் இழக்கப்பட்டதாகவே கருதவேண்டியுள்ளது. அத்துடன் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களின் மனோநிலை பொருட் செலவுகள் போன்றவைகள் பற்றிச்சொல்லவும் தேவையில்லை. வழக்கின் சாட்சிகள்கூட



RangaRakes
Tamilnavarasam.com

காலதாமதங்களால் பல பிரச்சனைகளுக்கு உள்ளாவதால் முரண்பாடாகவும் ஞாபக மறதிகாரணமாக தடுமாற்றத்துடனும் சொல்வதால் உண்மைகள் வெளிக் கொணருவதற்குப் பலத்த சிரமங்கள் ஏற்படலாம்.

சில பிரச்சினைகளுக்குக் காலம் தான் நல்ல பதிலைச் சொல்லும் என்பார்கள். கணவன் மனைவி பிரச்சனைகளை எடுத்துக் கொண்டால் நீதிமன்றங்கள் அவர்களின் மனமாற்றத்திற்காக ஒரு நியாயமான கால எல்லைகளை வழங்குகின்றன. உடனடியாகவே கணவன், மனைவி உறவினைப் பிரிக்க நீதிமன்றங்கள் விரும்பவே விரும்பாது. இத்தகைய வழக்குகளை ஒத்தி வைத்தலால் பலசமயம் கணவன் மனைவி தம்மிடையேயுள்ள பிணக்குகளை மறந்து இணைந்து கொள்ளவும் வாய்ப்பு உண்டு.

இன்று தனியார் நிறுவனங்கள் எல்லாமே, பலத்த போட்டிகளின் மத்தியில் இயங்குகின்றன. ஒரு பொழுது கண் அயர்ந்தாலும் கூட அந்த நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பு கொஞ்ச நஞ்சமல்ல. காலதாமதங்களால் நிர்வாகக் கட்டமைப்பே குலைந்து போகலாம். நல்ல வேதனம் சலுகைகளை வழங்கி வருகின்ற நிறுவனங்கள் கடமைகளைப் பின்போடுதலை ஒரு போதும் அனுமதிப்ப தில்லை.

உயிர்காக்கும் சேவையில் உள்ள வைத்தியர் தமது அலுவல்களை ஒத்திவைக்க முடியுமா? மூச்சுவராமல் திணறும் நோயாளிக்குத் தக்க முதலுதவி அளிக்காமல்





அடுத்த நாள் பார்க்கலாம் எனச் சொல்ல முடியுமா? கடமைகளைத் தாமதப்படுத்துதலால் ஒருவரது வெற்றிகள் பாதிக்கப்படும். ஏன், எதிர்பார்க்கும் வெற்றிகள் இல்லாமலும் போகலாம். சிலர் சாதாரண விஷயத்திற்காகவும் கண்டபடி ஆராய்வதாலேயே நேரம் செலவாவதை அறியாமல் இருக்கின்றார்கள். எடுத்த சிறு கருமத்தை செய்வதற்காகக் கொஞ்ச நேரம் மட்டும் அவகாசம் தேவை என்றுசொல்லி தாம் மேற்கொள்ளும் வேலைக்குப் பொருந்தாத சிந்தனையினுள் புகுந்து கொள்வார்கள். நாய் துரத்துகின்றது வீதியோரத்தின் வீடொன்றின் வெளிக்கதவு திறந்து இருக்கிறது. எதிரேயுள்ள மரத்தில் தாவி ஏறலாமா, அல்லது வீட்டின் வளவில் உட்சென்று வெளிக்கதவைப் பூட்டலாமா, எனக்காலத்தைக் கடத்தக் கூடாது.

அவசரமாக முடிவு எடுக்க வேண்டிய விஷயத்தில் உடனடி முடிவை எடுக்குக! சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டிய விஷயங்களும் உண்டு. சந்தர்ப்பங்களுக்கு ஏற்பச் செயல்படுதலே புத்திசாலித்தனமாகும்.

வெற்றி பெற முடியவில்லையே என மனம் புழுங்குபவர்கள் தங்கள் பலவீனங்கள் இதுதான் என நம்பகமானவர்கள், பெரியவர்கள் சொன்னால் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பொதுவாகச் செய்ய வேண்டிய கருமங்களை செய்து முடிக்க ஆற்றல்கள் இருந்தும், பாராமுகமான மனப் போக்கு



RangaRakes
Tamilnavarasam.com

காரணமாகவே கிடைக்கும் சந்ர்ப்பங்களை நழுவவிட்டு விடுகின்றனர். எனது நண்பர் சொன்னார், "மிகவும் இலகுவாகச் சித்தியடையவிருந்த போட்டிப் பரீட்சையில் நான் தோற்ற முடியாமல் போய்விட்டது. என்னிடம் விண்ணப்பம் இருந்தது. அதனைப் பூரணப்படுத்தியும் விட்டேன். அன்று திடீரென வெளியூருக்குச் சென்று விட்டேன். பஸ் நிலையத்திற்கு அருகே தபால் நிலையம் இருந்தும் கூட நாளைக்கு அனுப்பலாம் என்று எண்ணி மறந்தே விட்டேன். விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் எப்படி அதனை அனுப்புவது? அன்று நான் பயணத்தின் முன்னரே அதை உரிய முறையில் சேர்ப்பித்து இருந்தால் எனது வாழ்க்கையில் ஒரு திருப்பமே ஏற்பட்டிருக்கும்" என்றார்.

கழிக்கப்படும் வினாடிகள் வெறும் வினாடிகளே அல்ல. அவை எமது வாழ்க்கையில், ஒவ்வொன்றும் கடந்து சென்ற அத்தியாயங்களே என்று உணர்க! காலத்தைக் கடத்துபவனுக்கும், உடன் கடமைகளைச் செய்து முடிப்பவனுக்குமான வாழ்க்கைத் தரம் மலைக்கும் மடுவுக்கு முள்ள வேறுபாடு போல இருக்கும்.

அடுத்தவனைப் பார்த்து நாம் மூச்சுவிடுவதில்லை. இவையெல்லாம், தானாகவே நடக்கும் நிகழ்வு. ஆனால் அடுத்தவன் என்ன செய்கின்றான், என்பதனைப்பார்த்தே, தமது கருமங்களை நிறுத்தி வைக்கும் பேர்வழிகள் இறுதியில் ஏமாற்றத்திற்குள்ளான நபர்களாகவே மாறிவிடு





கின்றனர். செய்ய வேண்டிய நற்செயல்கள் எல்லாவற்றையும் நாம் சுயமாக, இயல்பாகவே செய்யப் பழக வேண்டும்.

எங்கள் கடமைகளை முன்னோக்கிச் செய்யும் போது பார்வைகளைப் பின்னோக்கி நகர்த்தினால் காலம் விரயமாகும் எங்கள் கருமங்களில் வீணான சந்தேகங்கள் ஏற்பட்டு விட்டால், கடமையில் தொய்வு நிலை ஏற்பட்டு விடும். சுயமான இயக்கத்திற்கு, நாம் முட்டுக்கட்டை போடக்கூடாது. சின்ன சின்ன விஷயங்களுக்காகச் சுய சிந்தனையின்றிப் பிறரைப்பார்த்து செய்தேயாக வேண்டும் எனக் கங்கணம் கட்டினால் சுயபலமிழந்த வர்களாவீர்கள்.

எம்மையும் அறியாமலேயே காலம் விரைந்தோடி விடுகின்றது. இன்று இந்த வினாடி நான் இந்தக் கருமத்தை முடித்து விட்டேன். இனி அடுத்த வினாடியில் இருந்து என்ன செய்ய ஆரம்பிக்கப் போகின்றேன் என எண்ணி, அதனுள் தம்மை இணைத்துக்கொள்பவனே இயக்கத்திற்குரிய செயல் வீரனுமாவான்.

ஏதேனும் ஒரு கருமத்தினைச் செய்து முடிக்கக் கால அவகாசம் கோருவது சாதாரண வழக்கமாகும். ஒரு சின்ன விஷயத்தைச் செய்து முடிக்கவே பெரிதாகக் கற்பனை பண்ணி, விஸ்தாரமாக பேசி நீண்டகால அவகாசம் கேட்பவர்கள் இருக்கின்றார்கள். அப்படியாகக் கால அவகாசம் கொடுத்ததும் அதை நிறைவேற்றாத நபர்கள், மீண்டும் மீண்டும் கால அவகாசம் கேட்பதுண்டு.



RangaRakes
Tamilnavarasam.com

- ஆற்ற வேண்டிய கருமம் பற்றிய தெளிவின்மை
- சீரான திட்டமிடலின்மை
- அசமந்தப் போக்கு
- கடமைகளை எளிதாகச் செய்யாமல் நீண்ட வழிமுறைகளைக் கையாளுதல்
- குறிப்பிட்ட கருமத்தைப், பொறுப்பு ஏற்றபின்னர் வேறு கருமங்களை செய்வதற்கு இணங்கி, ஈடுபடுதலால் காலதாமதமாகுதல்.

தொழில் துறையில் காலதாமதம் ஆவதற்கும் முன் சொன்ன காரணங்களையும் அறிவோமாக! வேலைகளைச் செய்து முடிக்கத் திட்டமிடாமலேயே எந்தவித அனுபவ ஞானம் இல்லாமலே, பல வேலைகளைக் கையேற்று "நாளைக்கு.. நாளைக்குச்செய்யலாம்" எனச்சொல்லிக் கால த்தை வீணாக்குகின்றவர்கள். இறுதியில் எந்த வேலையுமே செய்து முடிக்காதவராகின்றனர். கடமை எதுவென்றே புரியாதவன் அதனைச் செய்து முடிப்பதாகப்பொய் வாக்குறுதி கொடுப்பது என்ன நியாயம்? காலத்தின் பெறு மதியை உணராத வீணர்களால் உலகத்திற்கான வரும திகள் பாழடிக்கப்படுவது வேதனை!

செய்கின்ற கருமங்களைப் பின்தள்ளிக் கொண்டே செல்லும் போது எமது ஆயுள் கூட அநாவசியமாக கழிந்து கொண்டே செல்கின்றதே? மேலும் ஒரு காரியம் துரிதமாகச்செய்தலினால் சித்தியினால்ஆயுள்காலத்தில் செலவிட்ட காலப்பெறுமதி பன்மடங்காகிவிடும். எனவே கழிந்த காலம் கூட இழந்துவிட்டதாகக் கருதமுடியாது.





பெறுமதிமிக்க செயலைச்செய்பவனின் ஆயுள் தேய்வடைவதில்லை. ஏன் எனில் அவன் மரணமடைந்த போதிலும், அவன் பேசப்படும் நபராகிப் போற்றப்பட்டு ஜீவனுள்ள நபராகிச் செத்தும் வாழ்ந்தவனாகின்றான்.

ஒரு செல்வந்தரிடம் ஒரு இளைஞன் சென்றான். தனக்கு பண உதவி செய்யுமாறு தயவுடன் கேட்டான். அவர், "நாளைக்கு வா, பார்ப்போம்" என்றார். அவனும் அடுத்த நாள், அவரிடம் சென்றான். சரி, "நாளைக்கு வா" என்றார். அவனும் மௌனமாகச் சென்று, அடுத்த நாள் வந்தான். செல்வந்தரும் வழமை போலவே, நாளைக்கு வா எனச்சொன்னதுடன் தொடர்ந்து நாட்களை நீட்டியவாறு நாளைக்கு, நாளைக்கு எனச்சொல்லிக் கொண்டே வந்தார்.

பொறுமை இழந்த இளைஞன், "என்ன.... ஐயா, நாளைக்கு, நாளைக்கு எனச் சொல்லிக்கொண்டேயிருக் கின்றீர்களே, பின்னே எப்போதுதான், எனக்குப் பணம் தரப்போகின்றீர்கள்" என்றார்.

செல்வந்தர், சொன்னார், "நான் நாளைக்கு என்று சொன்னேனே ஒழிய, எந்த நாளுக்கு எனச்சொல்ல வில்லையே? நாளைக்கு என்பது செய்யப்படும் காரியமே அல்ல. உணர்ந்து கொள் நீ என்னிடம் வந்து அலைந்து திரிந்த நாளில் சுயமாக உழைத்து இருந்தால் நீ கேட்ட தொகையைப் பிறர் உதவியின்றியே பெற்று இருப்பாய். இதனை உணர்த்தவே இவ்வாறு சொன்னேன். சரி, பரவா



RangaRakes

Tamilnavarasam.com

யில்லை உழைத்து ஊதியம் பெறுதலே பெரும் கௌரவமாகும். இனி என்னிடமே வேலை செய்து உனக்குரிய ஊதியத்தைப் பெற்றுக் கொள்" என்று புத்திமதி சொன்னார்.

நாளைய பொழுது என்பது ஒரு எதிர்பார்த்தலாகும். எனவே இன்றே, இப்போதே எமக்குரிய பணிகளைச் செய்தலே சிறப்பாகும்.

மேலும் இன்று தாம் செய்யும் ஒழுங்கான காலம் கடத்தாத பணிகளைச் செய்பவர்களே, நிதானமான புத்தியுடைய மனிதராகவும், பிறரால் மதிக்கப்படுவார்கள். நம்பிக்கையற்றுள்ள காலத்தை வீணடிப்பவர்களுக்கு எவர்தான் பண உதவியோ, பொருள் உதவியோ என எந்த உதவிகளைத்தான் செய்ய முன் வருவார்கள்?

வாக்குச் சுத்தமாய் உள்ள ஒருவர் பொய் பேசவே மாட்டார். ஒரு அலுவலைச் செய்வேன் என்று சொன்ன பின்னர். வாக்கு மாறி இன்னும் ஒருநாள் செய்யலாம் என்று நாக்குத் தடம் புரண்டதுமே அவரது நம்பகத்தன்மையில் சந்தேகம் வந்து விடுகின்றது. உடனடியாகச் செய்து முடிக்க இயலாமலும் சில அலுவல்கள் இருக்கலாம். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குறிப்பிட்ட அலுவல்களை செய்து முடிப்பது இயலாமல் போகலாம். எங்கள் சக்திக்கு அறிவுக்கு, அனுபவத்திற்கு ஏற்றவாறு கேட்கப்படும் வேலைகளைப் பொறுப்பேற்க வேண்டும். ஒருவர் முகத்திற்காக யதார்த்த நிலைக்கு ஒவ்வாத வாக்குறுதிகளை அளிக்கக்கூடாது.





மனச்சாட்சிக்கு ஏற்ப பேசுவதும், செய்வதுமே, எமக்கான இன்பமுமாகும். எம்மை நாடிவருபவருக்கு, எப்படிச் சாக்குப் போக்குச்சொல்லி அவரைத் திருப்திப்படுத்தி அனுப்பிக் காலத்தைக் கடத்தலாம் என்றும் அதுவே யுத்தி, புத்தி என்று எண்ணுவதும் சுத்த அபத்தமான செய்கையுமாகும். எங்களுக்கு மட்டும் காலம் பொன் போன்றது எனக்கருதி, மற்றயோரின் நேரங்களை வீணடிப்பதன் எதிர்விளைவுகளை நீங்களும், இதேபோல் பாதிப்படையும் போது உணரவேண்டி நேரிடலாம்.


எல்லோரதும் கடமைகளின் மொத்தப் பயன்பாடுகளும் இறுதியில், இந்த உலகிற்கே போய்ச் சேருகின்றன. எனவே எமக்கான பணிகள் உலகிற்கானவையே! அவைகளை நாம் உரிய நேரத்தில் காலப்பெறுமதி கருதி அன்றே. அக்கணமே ஆரம்பித்துச் சிறப்பாகச் செய்து முடித்துவிடுக!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
28-10-2007



RangaRakes

Tamilnavarasam.com



# சிறை

மனதினுள் இறுக்கத்துடன், வெறுமை உணர்வுடன் வாழ்வதே "சிறை." செய்கருமங்களை செய்யாது உறங்குபவன், மனச் சிறையினுள் மாண்டு போகின்றான். விழித்து உழைப்பவர்க்கு, ஏது சிறை? தாழ்வுச் சிக்கல்கள் ஒருவரைக் கட்டிப்போடும், சோகத்தைத் தூக்கி எறிபவர்கள் வீரர்களா கின்றனர். மனதில் களிப்பை என்றும் கொண்டவர்கள் சுதந்திர புருஷர்கள். சந்தேகம், நம்பிக்கையின்மை, பயம், போன்றவைகளை அகற்றியவர்கள், மனச்சிறை வாழ்வைத் தகர்த்து உலகத்துடன் ஒன்றித்த நபராக மாறிவிடுவர்.

பூட்டிய இரும்புக் கதவுகளுடன் இருக்கின்ற அறையில் இருப்பதுதான் சிறைவாழ்வா?

இத்தகைய அறையினுள் சிறைப்பட்டு இருப்பதை விட, மனதுள் இறுக்கத்துடன் விடுபட முடியாத சுமைகளுடன், வெறுமையாய்,விரக்தியாய் பொறுமையின்றி வாழ்வதுவே சிறைவாசமாகும்.





மனிதன் எந்தவிதமான குற்றங்களைச் செய்யாமலும் கூட மனதினுள் சிறைப்பட்டு வாழ்வது துன்பமோ துன்பம் தான். வாழும்வழி தெரியாமல், நெஞ்சம் நசுங்க, தீய்ந்து கருகுவது கூட அறியாமையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளும் என்பதுவே பொதுவான காரணமாகின்றது.

செயல் இழக்கும் போது நிம்மதி கெட்டுப்போகின்றது. இதனால் தன்னையறியாமலேயே கீழ்நோக்கிய பாதையில் இட்டுச் செல்வதனால் மனம் பேதலிக்கின்றது. நெஞ்சம் ஒருநிலைப்படாது போனால் சஞ்சலமும், கோழைத் தனமும், கௌவிக் கொள்கின்றன.

சிறைவாசத்தினால் ஒருவன்தான் பெற்ற அனுபவங் களாலும் மனச்சாட்சி உறுத்தனலினாலும், அவன் திருந்தி வாழ வழி ஏற்படலாம். ஆனால் சிறைக்குச் செல்லா மலேயே சதா மனக்குமைச்சல், சோர்வு, தாழ்வு மனப் பான்மைகள் காரணமாக ஒருவர் தன்னை வதைத்து தனக் குள் அடைபட்டு வாழ்வதும் ஒரு வாழ்வா? தாழ்வுச் சிக்கலி னால் சிலர் அதிலிருந்து மீண்டு கொள்ள வழியின்றி கூச்ச சுபாவமானவனாகவும், வெளியே தன்னைக்கொணர பயப்படுவனாகவுமே சீவிக்க முனைகின்றான். உலகின் முன் நடக்கப் பயப்படுபவர்கள், துன்பங் களை ஜெயிப்பது எப்படி?

மிகவும் புத்திசாலிகளாகக் காணப்படுபவர்கள் கூடத் தங்களைப்பற்றிச் சந்தேகம் கொள்வது எவ்வளவு மடமை



RangaRakes
Tamilnavarasam.com

யல்லவா? அதேசமயம் எந்த வித திறமையையும் வளர்த்துக்கொள்ள முனையாதவர்கள் கூட பெற்ற அனுபவ அடிகளால் மெல்லென எழுந்து, படிப்படியாக விஸ்வரூபம் எடுத்து முன்னேற்றத்தின் உச்சிக்கே சென்று விடுவதையும் நாம் கண்டு கொண்டிருக்கின்றோம்.

தன்னைக் கட்டியிருக்கின்ற தளைகள் என்ன என்பதை ஒருவன் உணரல் வேண்டும். நல்ல கல்வி, ஞானம், ஒழுக்கம், பணிவு, உழைப்பு இருப்பவனை மனச்சோர்வு அண்டுவதுமில்லை. இவனே உண்மையான சுதந்திர புருஷனுமாவான் அறிக!

வெளியே உள்ள சமூகத்தை மதிக்காது, தமக்குள்ளேயே ஒரு வேலி போட்டு வாழும் மாந்தரும் உளர். இவர்கள் தங்களது கருத்துக்களை மட்டும் மேலோங்கச் செய்ய முனைவதும், பிறரது மனஉணர்வுகளைப் பற்றிக்கிஞ்சித்தும் கவலைப்படாமல் நினைத்த தப்பான விஷயங்களை செயலாற்ற முனைவதால் இறுதியில் சமூகத்தில் ஒரு அந்நியப்பட்ட ஜீவனாக உருவாகுவதை உணராமலேயே குறுகிப்போகின்றார்கள்.

பிறர் மன உழைச்சலைப் புரிந்து கொள்ளாமல், அவர்கள் செயல்கள், நடவடிக்கைகளைக் கேலி, நையாண்டி செய்வதனால் எவருமே சமூகத்தில் முதன்மையான மனிதராகி விடமுடியுமா?





"திருப்தி" என்பது தமக்குள் குரூரமான செயலைச் செய்தமையினால் ஏற்பட்டுவிடாது. வக்கிர புத்தியுடன் அநியாயங்கள் பல புரிந்தவர்கள் அடைக்கின்ற சந்தோஷம் அவர்களைப் பொறுத்தவரை அது திருப்தியாக அமையலாம்.

ஆனால் இந்தத் திருப்தி என்கின்ற போலியான மனோநிலையே அவர்களை இறுதியில் மனச்சிறையினுள் அகப்படுத்தி உழலச்செய்துவிடும். இத்தகைய மனிதர் பட்டுவிடும் அவஸ்தைகளைக் கண்டும் கேள்விப்பட்டும் இருப்பீர்கள்.

சிலரது குடும்பங்களைப் பார்த்திருப்பீர்கள். அவர்களது இல்லங்களுக்கு உற்றார் உறவினர்களோ, நண்பர்கள் என்று எவருமே சென்றிருக்கமாட்டார்கள். ஏன் அவர்களது வீட்டில் ஒரு குவளை தண்ணீர் கூட எவருமே அருந்தியிருக்க மாட்டார்கள். ஆனால், இத்தகையவர்கள் வரட்டுக் கௌரவம் பார்ப்பார்கள், வீம்பான வார்த்தை பேசுவார்கள்.

எந்த ஒரு நபருக்கோ கனவிலும் கூட உதவி நல்காத, சமூகத்துடன் ஒட்டாதவர்கள் தங்கள் வீட்டிற்குள்ளேயே வாழும் கைதிகள் போலாவர். மக்களுடன் ஒன்றித்தும் வாழாமல், தனிமைப்பட்டே வாழ்ந்து வந்தால் புற உலகிற்கும், இவர்களுக்குமான தார்மீக உரிமைகள் காலப்போக்கில் அற்றே போய்விடும்.



RangaRakes
Tamilnavarasam.com

மற்றவர் மனம் நோக உரையாடுவதும் அவர்களுக்கு ஊறு விளைவிப்பதும்,"வீரம்" எனக் கருதிச் செயல்படுபவர்கள் கூட ஒரு மன நோயாளி போல்தான் கருதப்படலாம். ஆயினும், மனநோயாளிகள் தமது மனநோய் காலத்தில் தான்கண்டபடி நடந்து கொள்வார்கள்.அவர்களுக்குத் தகுந்த, சிகிச்சை வழங்கப்பட்டால் அவர்கள் பூரண குணமாகியும் விடலாம்.

சதாகாலமும், பிறரை வஞ்சித்துத் துன்பம் இழைப்பவர்கள் எப்போது தங்கள் இயல்பை மாற்றி தூய மனதனாக வாழமுற்படுகின்றார்களோ, அப்போதுதான் உண்மையான தெளிவுடைய மனிதனாகின்றான். உள்ளத்தில் தூய்மை தெளிவை உண்டாக்கும். இந்த உன்னத நிலைக்கு உட்பட நாம் எம்மை பரந்த அன்புணர்வுடன் வாழுகின்ற மன மகிழ்ச்சியுடன் சதா திகழ்கின்றவனாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

உண்மையான சந்தோஷகரமானவர்களுக்கு நெஞ்சில் பாரம் எப்படி இருக்கும்? சோகத்தையே துணை எனக் கருதுபவர்களுக்கு களிப்பு கனவாகிப் போகின்றது. சோக உணர்வு, விரக்தி எல்லாமே "கலைந்துபோகும் கனவு" என உண்மையாக ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். துன்பங்கள் நிரந்தரம் என எண்ணுவது போல் முட்டாள் தனம் வேறில்லை.





மேலும் சந்தேகம், நம்பிக்கையின்மை போன்றவைகளால் பல நல்ல குடும்பங்கள் கூட நலிவடைந்து போகின்றன. கணவன் மனைவி, பிள்ளைகளிடையே வலுவான அன்பில் கூட துரதிஷ்டமாகச் சந்தேக அலைகள் சுவீகரிக்கும் போது நெஞ்சங்கள் அழுத்தங்களுக்குள்ளாகின்றன. பேசித்தீர்க்க வேண்டிய பிரச்சினைகளைப் பேசாது தமக்குள்ளேயே அமுக்கி வைப்பதனால் கணவன், மனைவி மட்டுமல்ல இவர்களால் முழுக்குடும்பமே அதாவது பிள்ளைகள், அவர்களைச் சார்ந்தோர்களும் வேதனையுறுகின்றனர். மனக்கு முறல்களை உள்ளே வைத்திருந்து, வெளியே தீய வழியில் அதன் பிரதிபலிப்புக்களைக் கொட்டித்தீர்ப்பது படு கேவலமானது. நண்பர்களிடையே கூட அபிப்பிராய பேதம் ஏற்படுமிடத்து அவைபேசித் தீர்க்கப்படல் வேண்டும். நீண்ட நாள் தப்பு அபிப்பிராயங்கள் நிரந்தரமான பிரிவிற்கே இட்டுச் செல்லலாம் அல்லவா?

மனதில் உள்ள பாரத்தைக் கொட்ட வேண்டும். துன்பம் வந்தால் அழுது தீர்க்க வேண்டும் என்றும் சிலர் கூறுவார்கள். மனதின் பாரத்துடன் எப்படி நிம்மதியாக இருக்க முடியும், சிரிக்க முடியும்?

சில மன அழுத்தத்தற்குரிய விடயங்களைச் சம்பந்தப்பட்டவர்கள் உடனே வெளிப்படையாகப் பேசமாட்டார்கள். முதலில் அவர் சொல்லட்டும் பின்னர் நான் இது பற்றிப் பேசலாம் என எண்ணிக் கொள்வார்கள். இப்படியே சம்பந்தப்பட்ட இருசாராருமே கூச்சம், அல்லது மேலாதிக்க மனப்



RangaRakes

Tamilnavarasam.com

பான்மை, தன்முனைப்பு, தாழ்வுச்சிக்கல் போன்றவைகளி னால் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்காமலேயே இருந்து தமது மனச்சுமைகளைப் பெருக்கிக்கொண்டே போவது முண்டு. ஆரம்பத்தில் மனதைச்சிதைக்கும் சில விஷயங் களுக்காக நாம் அச்சப்படலாம் அன்றி கூச்சப்படலாம். ஆயினும் தொடர்ந்தும் நாம் எம்மை அலைக்கழிக்கும் பிரச்சினைகளுக்காகப் பயப்படுதலும் அதையிட்டு வில காமல் எதிர்த்துப் போராடாமல் இருப்பது பெரும் தீமையா கவே முடியும் அல்லவா?

மனம் சதா குறுகி மறுகி துன்பப்பட்டால் எம்மை விட்டுச் சந்தோஷங்கள் மட்டுமல்ல சுதந்திர உணர்வு கூடப் போய்விடும். கடன் பெற்றவன் கடன் கொடுத்தவனைக் கண்டு பயப்பட்டு ஓடி ஒளிவது எத்தனை நாட்களுக்கு? அவனது கடனைத் தீர்த்துச் சுதந்திரமாக நடமாட வேண்டு மல்லவா?

சில சமயம் தன்னால் மீளமுடியாத துன்பத்திற்கு ஆளாகுகின்றவன் தனக்குத்தானே உரிமையற்ற ஏதும் தெரியாதவன் போலாகிவிடுகின்றான். மனதில் பலசாலி யாக உள்ளவன் நியாயங்களைப் பேசப் பயப்படாதவனா கவும். அதர்மங்களை எதிர்ப்பவனாகவும் இருக்கின்றான்.

உள்ளத்தில் தூய்மையற்றவன் உடல் பலம் வாய்ந்த வனாகத் திகழ்ந்தாலும், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தனது சுயரூபத்தினை வெளிப்படுத்தியே தீருவான். இதுவே





இவனது உண்மையான பலவீன நிலையுமாகும். இவர்களைப் போன்றவர்களை உலகம் இனம்காணும் போதுதான் இத்தகையவர்கள் முகவரியற்ற மாந்தர்களாகி விடுவர்.

பணபலமும், செல்வாக்கும் இருந்தாலும் கூட உள்ள த்தில் கறைகளை நிரம்ப வைத்துக்கொண்டால் மனம் நிறை யாத மிகக்குறுகியளன மறியல் சாலைக்குள் வாழ்கின்ற நிலைக்குள் அவதியுறுவதே நிரந்தரமாகிவிடும்.

தேவைக்கும் அதிகமான ஆசைகளைக் குவித்துக் கொள்வதும், அதை எண்ணியே ஏங்குவதும் மனதைச் சஞ்சலத்தில் தள்ளிவிடுகின்றது. மனதினைப் பக்குவப் படுத்து என்று பெரியவர்கள் சொல்வார்கள். கட்டுக்கு அடங் காத எண்ணங்களை எம் வசமாக்கி அதை ஒரு ஒழுங்கில் கொண்டு வருதல் வேண்டும்.

புலன் வழிபுகுந்தால் அறிவுக்கு ஏது வேலை?

எல்லோருமே உடன் தெளிந்து, பக்குவப்பட்ட மனித ராக வாழமுடியாது ஆனால் நல்வழி வாழ்ந்த பெரியோர் காட்டிய பாதையில் செல்வதற்கான, பயணத்தினை உடனே ஆரம்பிக்க எம்மால் முடியும். எந்தவிதமான தெளிவை நோக்கிய சிந்தனையின்றி, இஷ்டப்பட்டபடி வாழ முனையக் கூடாது.



RangaRakes
Tamilnavarasam.com

இதனால், இந்தச் சின்ன இதயம் கடினமான எண்ணங்களை, தேவையற்ற துன்பங்களைச் சுமக்க இயலாது துன்பப்படும். அத்துடன் உள்ளத்திற்கு ஏற்படும் மேலான பளுவினால், உடல் வேதனையுடன், தேக ஆரோக்கியமும், பாதிக்கப்படலாம்.

எமக்கு முன்னே துல்லியமாகத் தெரியும் மகிழ்ச்சியைக் கண்டு கொள்வோம். பரபூரண அன்பு நிலை எம்மைக் களிப்பில் ஆழ்த்துகின்றது. மனித நேயம், உயிர் மேல் இரக்கம், கருணை, எங்கள் இதயத்தைச் சுத்தமாக்கி, சுதந்திர புருஷனாக்கின்றது.

உள்ளத்தை விரித்தால் சிறை வாழ்வு அறவேயில்லை.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
07-10-2007







# பொறுமை

எல்லையற்றது பொறுமை. ஒருவரை மன்னிப்பதே பொறுமையின் லட்சணம். மனிதாபிமானம் இரக்கம் உள்ளவர்களுக்கு பொறுமையினால் நிறைந்த வாழ்வுகிட்டும். தாம் சார்ந்த தொழிலில் கவனம், சிரத்தை இழந்தால் வாழ்க்கையே வீணாகிப்போகும். மனதை ஒரு நிலைப்படுத்தி, காரியமாற்றுபவர்கள் எதிலும் வெற்றி கொள்கின்றார்கள். தேக ஆரோக்கியம் குன்றினால் மனம் பேதலித்துப் பொறுமை குன்றலாம். உடலும், உள்ளமும் வளமானால், தானாகவே கருணையுணர்வு வந்து சேரும். அன்பு செலுத்துபவர்கள் பொறுமை இழப்பதில்லை. பொறுமையே நிறைந்த வாழ்வளிக்கும்.

சாந்தமான குணநலமுள்ளவர்கள் சகலரையும் தம்முள் சினேகித்துக் கொள்கின்றார்கள். மனதில் கலக்கம், கிலேசம், கோபதாபம் அற்றவர்களுக்குப் பொறுமை தானாகவே குடிகொண்டுவிடுகின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

பொறுமைக்கு எல்லையில்லை. தவறுகளை மன்னிக்கும் இயல்புடையோர் பொறுமையைக் கடைப் பிடிப்பதில் முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்கள். கடவுள் மீது நம்பிக்கை கொண்டுள்ள ஆன்மீகவாதிகள் இயல் பாகவே அமைதியானவர்களாக இருப்பார்கள் என்று நாம் அறிவோம். வாழ்வில் விரக்தி வேதனைகள் உருவானதுமே மனிதர் குழம்பி விடுகின்றனர். இந்நிலையில் தம் முன் நிற்கின்றவர்களுடன் சகஜமாகப் பழகிடமுடியாது தங்கள் உணர்வுகளை உடன் புறத்தே தள்ளி விடுவார்கள்.

இந்நிலையில் தமக்கு ஒவ்வாத நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருந்தால் பொறுமையிழந்தும் விடுவது இயற்கை. அநேகர் தமக்கு இசைவற்ற முரணான சங்கதிகள் நிகழுமிடத்து அதனைச் சகித்துக்கொள்ளாமல் தவிக்கின்றனர்.

சகிப்புத்தன்மை என்பது நிதானமான சிந்தனை யுள்ள மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்தவர்களுக்கு தானாகவே உருவாகும் மெல்லிய மென்மையான உணர் வாகும். மனிதாபிமானமும், இரக்கசுபாவமும் உள்ளவர்கள் தமக்கு முரணான நடவடிக்கைகளைக் கண்டு உணர்ச்சி வசப்படாமல் அன்புணர்வினால் எத்தகைய நிலைமை களையும் சமாளித்தேவிடுவார்கள்.

கோபம் கொள்பவர்களுக்குப் பொறுமை நிலை கூட வராது. எனினும் தமது முற் கோபத்தினால், பொறுமை





யிழந்து அதனால் அடைந்த துன்பங்களினால் பாதிப்படைந் தவர்கள் தங்கள் அனுபவங்கள் மூலம் தம் இயல்பை மாற்றியமைக்க முற்படுபவர்களும் உண்டு.

நல்லவர்கள் கூடச் சந்தர்ப்பவசத்தால் பொறுமை இழப்பதும் உண்டு. மனிதன் எல்லாச் சமயங்களில் ஒரே மாதிரியாக இருக்கமாட்டான். சில சந்தர்ப்பங்கள், சூழ்நிலை கள் எங்கள் அறிவை மறைத்தும் விடுவதுண்டு. பொறுமை காக்காது விட்டால் எந்தக்காரியம் தான் நிறைவேறப்போ கின்றது?

- சாலையில் வாகனம் செலுத்தும் சாரதி, பாதையில் வளைவுகள் அதிகம் என்று பொறுமை இழந்தால் என்ன கதி?
- வைத்தியர் சத்திரசிகிச்சை செய்யும்போது பொறு மையற்று விட்டால், நோயாளியின் விதி அதோகதி!
- பாடசாலை ஆசிரியர் மாணவர் சந்தேகங்களைக் கேட்டதும், தன்நிலை மறந்தால் கல்வி கற்பித்தலின் அர்த்தம் தான் என்ன?
- அரசியல் தலைவர்கள் தாம் வாக்களித்த மக்களிடமே பொறுமையிழந்து பேசினால், அடுத்த தேர்தலில் அவர்கள் அரச கட்டிலில் ஏறிடமுடியுமா?

எங்கள் பிரச்சனைகள் எங்களோடு போகட்டும். அதனை மற்றவர்கள் தலையில் சுமத்தி அவர்கள் பொறுமையைச் சோதிப்பது வேண்டாத செயல். நமது கருத்துக்களை மற்றவர்களிடம் எடுத்துரைக்கும் போது



RangaRakes
Tamilnavarasam.com

எங்கள் சமநிலை இழந்து உரக்கப் பேசுவதாலோ உஷ்ணத்துடன் கண்டிப்பாகப் பேசினால்தான் அது பிறர் காதுக்குள் புகுந்துவிடும் என எண்ணக்கூடாது. நல்ல கருத்துக்களைக்கூட நாங்கள் அதனை முன்வைத்துப் பேசும் போது சற்றுக் கண்ணியக் குறைவாக நடந்து கொண்டால் அது கூட எடுபடாது போகலாம். மேலும் தவறான கொள்கைகளையே சிலர் தேனொழுகப் பேசிக் காரியம் சாதித்து விடுவதுமுண்டு. மான, அவமான வேறுபாடு, வீணர்களுக்குப் புரிவதுமில்லை.

நினைத்த காரியம் முடிவடைந்தே தீர வேண்டும் என்பதற்காகக் காரிய சித்திகளை இலகுவில் பெற மௌனமாக இருந்தே அதில் வெற்றி பெற்றவர்களை நீங்கள் அனுபவ வாயிலாகத் தெரிந்திருப்பீர்கள்.

இல்லங்களில் கணவன், மனைவி, பிள்ளைகள் ஆவேசமாகப் பேசினால் வீடு காடு போல் ஆகிவிடுமே. எந்தக் குடும்பப் பிணக்குகள் ஆகட்டும், நண்பர்கள் உறவினர்கள் சச்சரவுகளாகட்டும் எல்லாமே பழகும் விதத்திலேயே பிணைப்பின் வலு தங்கியுள்ளது.

அலுவலகங்களின் முகாமைத்துவ அதிகாரிகள், ஊழியர்கள் பிணக்குறுவதால் வேலை நிறுத்தம், பகிஷ்கரிப்பு என்று வீதிகளில் இறங்கிப் போராடுகின்றார்கள். சமரசம் காணுதலுக்கான முழு முயற்சிகளை நிர்வாகம் எடுக்காத நிலையிலேயே பொறுமை இழந்து போகின்றனர்.





சேவையை நாடும் பொது மக்களிடம் அன்பாகப்பேசி அவர்கள் தேவையை நிறைவேற்றுவது எப்படி எனச் சொல்லிக் கொடுக்காமல் நிறுவனங்கள் இருப்பதுமில்லை. ஆனால் மக்களும் அவசரமேலீட்டின் பொருட்டும் அறியாமை காரணமாக சற்று முரண்பாடாக நடந்து கொண்டாலும் அலுவலர்கள் தம்நிலை மறந்து தாங்கள் பொது மக்கள் சேவையாளர், ஊழியம் செய்ய வந்தவர்கள் என்பதை மறந்து செயல்படக் கூடாது.

- புலனடக்கம்
- தெய்வ நம்பிக்கை, தியானம்
- நல் உபதேசங்களைக் கேட்டல்

போன்றவை மூலம் மனத்தை எமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும். மேலும் தேகாரோக்கியம் குன்றினாலும் மனிதர்க்குக் கோப உணர்ச்சி மேலோங்குவதாகச் சொல்லப்படுகின்றது. உடல்வளம் குன்றினால் மனவளம் குன்றும் என்பார்கள்.

உழைப்பு, உழைப்பு என்றே சிலர் ஓடிக்கொண்டேயிருப்பார்கள். தங்கள் தேகநிலைபற்றிச் சிந்திக்காது நல்ல உணவு, ஓய்வு என்பதேயில்லாது விடின் மன இயல்பு பாதிப்படைந்துவிடும் என்பதை உணரல் வேண்டும். எந்நேரமும் கருமம் ஆற்றும் போதும் கூட தமக்கான ஓய்வு நேரத்திற்கான இடைவெளி விட்டேயாக வேண்டும்.



RangaRakes

Tamilnavarasam.com

குடும்பத்தினருடன் ஓய்வு நாட்களில் சந்தோஷ கரமாகப் பொழுதைக் கழிப்பதுடன் நேரம் கிடைத்தால் வெளியிடங்களுக்குச் சுற்றுப்பயணங்களை குடும்பத்தினருடன் கழிப்பதும் உள்ளத்திற்குத் தெம்மை மன ஆறுதலைத் தரும். எம்மை நாம் எப்பொழுதும் களிப்பான ஒருவராகப் புதுமனிதராக வைத்துக்கொள்ள வேண்டும். மிக இயல்பான அன்பான நபராக இருந்தால் எம் எதிரேயுள்ளவர்களுடன் கடு கடுப்பானவராக இருப்பதற்குச் சந்தர்ப்பமே இருக்காது.

எவரையாவது எமக்குப் பிடிக்கவில்லை என்றால் அவருடன் சில நாட்கள் விலகியிருப்பது சிறந்தது. கோப, குரோதமாக, இருக்கின்றவர்களிடம் விலகியிருந்தால் எமக்குள்ள மன அழுத்த நிலையும் குறைந்துவிடும். மேலும் சில புரிந்துணர்வு அற்ற தன்மையுள்ளவர்களிடம் பேசிப் பயனில்லை எனக் கண்டால் விலகி இருப்பதில் தப்பில்லை. கால மாற்றங்களால் இத்தகைய பிரிவுகள் உண்மையான நல்ல அபிப்பிராயங்களை, நட்புணர்வினை வலுப்படுத்த ஏதுவாகிவிடும்.

எவரையும் வெறுத்து ஒதுக்கும் எண்ணங்களை விட்டு விடுங்கள். எமது தவறான இந்நடவடிக்கை பற்றிப் பின்னர் உண்மைகளை உணரும் போது நாம் வருத்தப்பட நேரிடும் அல்லவா?

பெண்களுக்கு மட்டுமே பொறுமை வேண்டும். ஆண்கள் வீட்டின் எஜமானர்கள் அதிகாரிகள் என





எண்ணுபவர்கள் இருக்கின்றார்கள். வீட்டிலும் சரி, வெளியுலகத்திலும் சரி ஒழுக்க இயல்புகள் உலகம் பூராவுமே பொதுவானது எனச் சகல பழமையான நூல்களும், வேதங்களுமே கூறிச்சென்றன.

தவறான விளக்கங்கள் வியாக்கியானங்கள் மூலம் நற்பண்புகளுக்கு தவறாக அர்த்தம் கொள்ளுதல் நாகரீகம் அல்ல. பண்பு விஷயத்தில் பழமை புதுமை என்கின்ற பேதம் பேசி சீரழிவான பாதையை நோக்கிச் செல்லக் கூடாது. "திரிபு" அற்றதே நற்பண்புமாகும்.

எதனையும் மன்னித்துப் பொறுமைகாப்பவர்களை தவறாகப் பயன்படுத்தும் அறிவிலிகளும் இருக்கின்றார்கள். பொறுமையாக இருப்பவரிடம் சுரண்டி வேடிக்கை பார்க்கலாம் என எண்ணுபவர்களும் இருக்கின்றார்கள். "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்பார்கள். மிகவும் பொறுமைகாத்த மன்னர்களைச் சீண்டியமையால் எதிர்த்து நின்ற அரசுகள் சின்னாபின்னமாக்கப்பட்ட வரலாறுகள் உண்டு.

பாரதப் போர், இராமாயணம் போன்ற இதிகாசங்களில் ஆள்வோரிடம் நியாயங்களைக் கேட்டும் அதுபற்றி உதாசீனம் செய்தமையினால் மாபெரும் யுத்தங்களே நடந்தன. இவைகளை நாம் சத்தியங்கள் போதிக்கும் வாக்கியங்களாக ஏற்றுக்கொள்வோம். எல்லாவற்றையும் கதைகள் எனக் கொள்ளாது, வாழ்க்கைக்கான நெறிகளை உணர்த்தும் பெரும் பாடங்கள் எனப்போற்றுவோமாக!



RangaRakes

Tamilnavarasam.com

எமது ஆத்மபலம் புலனடக்கத்தில் தங்கியுள்ளது. பொறுமை நிதானம், சாந்தம் எல்லாமே எங்கள் ஆன்மாவை வலுவேற்றித் தூய்மைப்படுத்துகின்றன. அளவு கடந்த துன்பங்கள் சூழ்ந்து நின்றாலும் தன் நிலை மாறாது அமைதி காப்பது இறுதியில் வாழ்வின் வெற்றியையும் நிம்மதியையும் அளிக்கும் என்பது உறுதி.

பொறுமை காப்பது ஒரு கௌரவக் குறைச்சலோ, எமக்கான இழப்புக்களோ எனக் கருதக்கூடாது.

இன்று கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் நாடுகள் தமக்கான இழப்புக்கள் கௌரவக்குறைவுகள் பற்றிக் கடுகளவும் சிந்திப்பதில்லை. யுத்தததில் பெற்றுக்கொள்ளும் கௌரவத்தைவிடப் பொறுமை காத்து பரஸ்பரம் நேயப்பாட்டுடன் இணங்குவதே இறைவனுக்கும் விருப்பமான வழியுமாகும்.

எப்படியும் காரியமாக வேண்டும் எனக் கடுகதியில் புறப்படுபவர்கள் நடுவழியில் திண்டாடுவதைவிட நிதானமாகப் பயணங்களை மேற்கொள்வதால் களைப்பு, சலிப்பு ஏற்பட வாய்ப்பேதுமில்லை.

மகிழ்ச்சியை எமது வழக்கமான குணமாக்குவோம். காலப் போக்கில் இதுவே ஒரு நாளாந்த ஏன் கணப்பொழுதும் நீங்காத கருமம் ஆகிவிடும். இதற்காக நாம் பெரிதாக அலட்டிக் கொள்ளத்தேவையில்லை.





அன்போடு அனைவருடனும் பழகுங்கள், குழந்தைகளுடன் குதூகலித்துக்கொண்டிருங்கள். பார்க்கும் எவருடனும், புன்னகையைப் பூக்களை விரித்துக் கொள்ளுங்கள். மன அழுத்தம் குறையும். பொறுமை, நிதானம் வசீகரம் தானாகவே உங்களைப் பற்றிநிற்கும்.

பொறுமையே நிறைவு!
பொறுமையினால் உறவுபெருகும்!
பொறுமையே நிறைமாந்தர் வடிவம்!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
23-09-2007



RangaRakes Tamilnavarasam.com



# கொள்கை

நல்ல குறிக்கோள்களை மனதில் இருத்துபவனே சிறந்த கொள்கைப்படி வாழவும் முடியும். பேச்சளவில் கொள்கை அது இது எனப் பேசுதல் தன்னையே ஏமாற்றும் செயல். பதவிகளைப் பிடிக்கக் கொள்கைகளைக் கோட்டை விடுகின்றவர்கள், தங்களை வளர்க்கத் தாம் சார்ந்தவர்களை வதைக்கின்றார்கள். தியாக உணர்வற்றவர்களுக்குக் கொள்கை ஏது? கருத்துக்கள், சிந்தனைகள் ஒருவருக்கு மட்டும் சொந்தமானது அல்ல. எவர் நல்லதைச் சொன்னாலும் கேட்டு ஒழுகுதல் மாந்தர்க்கு அழகு. மானுடத்தை நேசிப்பதாகவும், அவற்றின் நலன்களை வளர்ப்பதாகவும் அமைந்திடும் கொள்கைகளால் தான் மேதினி உயிர்ப்புடன் திகழும்.

அரசியல், சமூக, மதங்களுக்கிடையே, பல்வேறுபட்ட கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. எனினும் ஒவ்வொரு தனி மனிதனும் தனிப்பட்ட கொள்கைகளை வகுத்துக் கொண்டு வாழ்ந்து வருவதுமுண்டு.





எப்படியும் வாழாமல் ஒரு நல்ல குறிக்கோளுடன் வாழ்பவர்கள் ஒருபுறம், எப்படியும் வாழலாம் என்கின்ற கொள்கையில் உறுதியாய் இருப்பவர்களும் மறுபுறம் உளர்.

வெள்ளவத்தையில் உள்ள நடைபாதை அங்காடியில் ஒருவர் பலாப்பழத்தைத் துண்டு போட்டு விற்பனை செய்து கொண்டிருந்தார். அவரிடம் இரண்டே இரண்டு துண்டுகள் தான் மீதமிருந்தன. ஒருவர் அவ்விடத்திற்கு வந்து, வியாபாரியிடம் பேரம் பேசி துண்டு ஒன்றினை மட்டும் இருபது ரூபாய் கொடுப்பதாகக் கேட்க வியாபாரி ஒத்துக் கொண்டார்.

அவர் பணத்தைக் கொடுக்க முற்பட்ட சமயம் ஒருவர் திடீரெனப் பிரசன்னமானார். அதே பலாப்பழத்தின் விலையைக் கேட்டார். வியாபாரி விலை இருபது ரூபாய் என்று சொன்னார். வந்தவர் கம்பீரமாக, ஐம்பது ரூபாயை எடுத்து நீட்டியபடி "இந்த இரண்டு துண்டுகளையும் எனக்கே தா" என்றவர், பதிலுக்குக் காத்திரமால் தனது பையினுள் அவைகளை இட்டு நிரப்பியதுமல்லாமல், ஏற்கனவே பாலாப்பழம் வாங்க வந்தவர் மீது முறைப்புடனும் கேலியுடனும் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டுச் சென்றுவிட்டார்.

அந்த வியாபாரி தனக்கு எதிர்பார்த்ததைவிட அதிக லாபம் கிடைத்ததாகத் திருப்திப்பட்டுக் கொண்டார். அதனை வாங்கியவரோ தான் நினைத்ததைத் தப்பான மனச்சாட்சியற்ற விதத்தில் சாதித்ததையிட்டுக் குரூரத் திருப்திப்பட்டுக் கொண்டார்.



RangaRakes

Tamilnavarasam.com

நல்ல எண்ணணங்களே நல்ல கொள்கையுமாகின்றது. தீய விடயங்களை எப்படியாவது, எந்த வழியிலாவது, முறை கேடாக அமைத்துவிடுவது நல்ல கொள்கையுமல்ல. தான் நினைத்ததை அடைவதே தனது கொள்கை என்று சிலர் வீராப்புடன் கூறுவர்கள். நல்ல கொள்கைகள் நிலை பெற்று வாழும் கண்டபடி தனக்குச் சார்பாகக் கொள்கை வகுப்பது வெற்றிகளை ஈட்டித்தரவே தராது.

இந்த உண்மை உலகின் தனி மனிதனுக்கும் சரி, அரசியலுக்கும் பொருந்தும் இன்று சுய நலநோக்கோடு நாடுகளால் வகுக்கப்படும் கொள்கைத்திட்டங்கள் ஏனைய நாடுகள் பாதிப்படைய வேண்டும் என்ற நோக்கோடு அமைந்துவிட்டால். அதன்பாதிப்பு ஏதோ ஒரு விதத்தில் அவைகளுக்கே பாதிப்பாக அமையலாம்.

ஏன் எனில், இந்த உலகம் ஏதோ ஒரு விதத்தில் ஒன்றை ஒன்று சார்ந்துதானே இருக்கின்றன. ஒரு நாட்டில் உள்ள ஏதோ ஒரு வளம் மற்றைய நாட்டில் இருக்காது. அதனைப் பெற்றுக்கொள்ள வளம் இல்லாத நாடு குறுக்கு வழியில் பெற்றுக்கொள்ள முயல என்ன வெல்லாம் செய்கின்றன? இன்று பெற்றோலிய வளத்தை அந்த வளம் உள்ள நாட்டில் இருந்து சுரண்ட வல்லரசு நாடுகள் எடுக்கும் தந்திரோபாயக் கொள்கைத் திட்டங்கள் தான் எத்தனை?

இதன் பொருட்டு நடாத்தப்படும் அரசியல் காய் நகர்தல்களும், நடக்கும் போர்களும், மனித அழிவுகளும்





எல்லோருக்குமே நன்கு தெரியும். எனினும் நியாயங் களைத் தட்டிக்கேட்கத் திராணியற்ற சில நாடுகள் மௌன மாக கண்மூடி இருப்பதையே ஒரு "கொள்கை" யாக கொண் டுள்ளன. கொள்கைக்காக வாழ்வதா, அல்லது வாழ்க்கைக் காக கொள்கையா, என்பதே பலருக்குப் புரியாமல் உள்ளது. ஏன் எனில் மனிதன் தனக்குச் சோதனைகள் வரும்போது கொண்ட கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டு விடுகின்றான்.

தமது நாட்டின் விடுதலைக்காக உழைத்த தலைவர் கள் தாங்கள் கொண்டிருந்த புனிதமான கொள்கைகளைத் தொலைத்திருந்தால் அவர்கள் தமது குறிக்கோள்களில் வென்றிருக்க முடியுமா?

இன்று உலக நாடுகள் எல்லாமே தமக்கு என அரசியல் கோட்பாடுகள் சித்தாந்தங்களை வகுத்துள்ளன. தனிப்பட்ட அரசியல் கட்சிகளிடையே பலதரப்பட்ட கொள் கைகள் வகுக்கப்பட்டிருப்பினும். தமது நாடு என்று சொல்லப் பட்டதும் அதன் வளர்ச்சிக்காக ஓர் அணியில் திரண்டு விடுகின்றார்.

இன்று இந்தியா உட்பட வல்லரசு நாடுகள் பலம் வாய்ந்ததாக எத்துறையிலும் நிமிர்ந்து உயர்ந்து நிற்பதற்கு முக்கிய காரணம் அவைகள் தமது நாட்டின் வளர்ச்சிப்பணி, பாதுகாப்பு போன்ற விடயங்களில் ஒத்த கருத்தினையே கொண்டுள்ளன.



RangaRakes
Tamilnavarasam.com

அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள கட்சிகள் தங்களுக்கிடையே எத்தகைய முரண்பாடான கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் கூட அவைகளின் பாதுகாப்புக் வெளியுறவுக் கொள்கைகளில் பெரிய மாற்றங்களை கொண்டிருப்பதில்லை. அரசியலில் கொள்கை மாற்றங்கள் அவைகளின் தேவைகளுக்கு ஏற்ப மாறுதலடையக் கூடும்.

ஆனால் "மதங்கள்" எப்பொழுதும் தமது கொள்கைள் பாரம்பரிய சம்பிரதாயங்களை மீறிட அனுமதிக்கவே மாட்டாது. பண்டைய தமது வேதங்கள், சாஸ்திரங்களை பற்றுதியுடன் கடைப்பிடிப்பதனால் தான் இன்னமும் மக்கள் நம்பிக்கையுடன் கடைப்பிடிக்கும், "சமயங்கள்" எல்லாமே சாஸ்வதமாக ஜீவிக்கின்றன.

எனினும் பல்வேறு சமயங்களுக்கிடையேயும் உள்ள கொள்கை முரண்பாடுகள் காரணமாக சமயங்களுக்கிடையே பூசல்கள் ஏற்பட்ட துயரகரமான வரலாறுகளும் உண்டு. இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்ன வெனில் ஒரே மதத்தினுள்ளேயே பல பிரிவுகள் தோன்றி தமக்குச் சார் பான மக்களைத் தங்கள் பால் இழுத்தனர். மதப் பூசல்கள் அதனால் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக பல்லாயிரம் மக்கள் இறந்து பட்ட சோக சரித்திரங்கள் உண்டு. இன்ன மும் கூட மதப்பூசல்கள், உட்சண்டை சச்சரவுகள் இல்லா மல் இல்லை.





ஆனால் சமயங்களின் தனித்துவமான தத்துவங்கள் கோட்பாடுகள் மனித இனத்தின் ஆன்ம விழிப்பு உயிர்ப்புக் காகவே ஏற்பட்ட காரணங்களால் இவைகளின் உண்மைத் தன்மை காரணமாக இவை அழிந்துவிடப் போவதுமில்லை.

சிலர் தங்களை வளர்த்துக்கொள்ள மட்டும் அரசிய லையோ அல்லது மதங்களையோ கருவியாகப் பாவிப்பது முண்டு. சம்பாத்தியங்களைத் தேட ஏதாவது நிறுவனங் களுடன் இணைந்து கொண்டு பொய்மையாக நடிப்பவர்களு முண்டு. இந்த நபர்களால் இவர்கள் சார்ந்த நிறுவனங்கள் தான் பெரும் பாதிப்புக்கு உள்ளாக நேரிடும்.

- கொள்கைப்பற்று
- விடாமுயற்சி
- தியாக மனப்பான்மை / சுயநலமின்மை
- அச்சமின்மை
- உண்மையான சேவையுணர்வு

மேற் சொன்னவைகளைக் கொண்டுள்ளவர்களினால் நினைத்ததை எதனையுமே சாதிக்கும் மனோ உறுதி தானாக வந்துவிடுகின்றன.

நல்ல கொள்கைகளைச் செயலாற்றுதலுக்கு அதி காரம் தேவைப்படுகின்றது. அன்பினால் அதிகாரம் பெறு தலை விடுத்து அதிகாரம் செய்தே அதிகாரத்தினைக் கைப் பற்ற விழைகின்ற மனப்பான்மை பலரிடம் வந்து விடுகின் றமை துரதிஷ்டமே!



RangaRakes
Tamilnavarasam.com

நல்லன செய்ய விழைதலும்அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட முனையும்போது அதிகாரம் தானாகவே வருவதுண்டு. நயவஞ்சகர் சூழ்ச்சி மூலம் பல நல்ல கொள்கைவாதிகள், மக்கள் முன் நிலைக்காது போய் விடுவது முண்டு.

வல்லவர்களை, நல்லவர்களைக் கண்டு கொள்ளும் மனப்பக்குவத்தினை மக்கள் வளர்த்தேயாக வேண்டும். கொள்கைகளால் குழம்பாமல் குளப்பமற்ற தெளிவான சிந்தனைகளை எமக்குள் கொண்டு செல்ல வேண்டும்.

பழைமைச் சிந்தனைவாதிகளை ஏற்கும் நாம் புதிய, புதிய சிந்தனையாளர்களின் வரவுகளை ஏற்க பழக வேண்டும். கருத்துக்கள் கொள்கைகள் தனி ஒருவருக்கு மட்டும் உரித்தானது மல்ல.நல்ல கொள்கைகளை எவர் தெரிவித்தாலும், அதனை ஒரு வழிகாட்டியாக ஏற்பது எமது பரந்த மனப்பான்மையைக் காட்டுவதாக அமையும்.

கொள்கைகளைச் செயலாற்றும் போது மிதவாதம், தீவிரவாதம் என்கின்ற இரு பிரிவுகள் உருவாகின்றன. பல கருத்துக்களை நாம் மிக இயல்பான வழிகளில். அன்பாக தெளிவுடனேயே தெரிவிக்க வேண்டியுள்ளது. கொள்கைகள் எல்லாவற்றையுமே உடன் தெளிவாகப் புரிந்து கொள்ளும் நிலையில் எல்லோருமே இருக்கமாட்டார்கள்.





தீவிரமான வழியில் வற்புறுத்தலுடன் எந்தக் கருத்தையுமே மக்களிடம் புகுத்துதல் என்பது முடிகின்ற காரியமேயல்ல. காரியம் ஆகவேண்டும் என்பதற்காகத் தீவிரவாதம் மூலம் கொள்கைகளைப் பரப்புதல் என்பது எத்தனை வீதம் முழுமையாகச் சாத்தியப்படக்கூடியது என்பதை நாம் கண்டு கொள்ள முடியுமா?

இன்று மிதவாதம் பேசிக்கொண்டே தீவிரமான கெடுபிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வல்லரசு நாடுகள், மற்ற நாடுகளுக்கு ஆலோசனைகளை உதிர்ப்பது சர்வசாதாரண நிகழ்வுகளே!

கொள்கைகள் என்பது ஒருவரின் குரல்வளையை நசிக்கக்கூடாது. கோடானுகோடி மக்களை வழி நடத்தும் அரசுகளின் விழிப்பான நேர்மையான அணுகு முறைகளாலேயே உலகத்தின் நலன்கள் தங்கியுள்ளன.

தனி ஒரு நாட்டின் கொள்கை கோட்பாடுகள் அனைத்து நாடுகளையும் பாதிக்கவல்லது. அத்துடன் ஒரு வல்லரசு நாட்டின் தலைவன் ஒருவரின் கொள்கைகூடப் பல கோடி மக்களைப் பாதிக்கலாம் என்பதையும் உணர்வோமாக! சீரான ஒரு வழி முறைகளைச் சிந்தனைகளைக் கொண்டால் அதுவே புனிதமான கொள்கையாகின்றது.

ஒரு நாட்டின் செழுமை அந்நாட்டின் தலைமையில் தங்கியுள்ளது என்பார்கள் தலைமை என்கின்றபோதே



RangaRakes
Tamilnavarasam.com

தலைமைத்துவத்தின் கொள்கைகளைப் பின்பற்றும் முறைமைகளில் தங்கியுள்ளது. நியாயத்தன்மையுடன் கூடிய கொள்கை வகுப்பினால்தான் நிர்வாகக் கட்டமைப்பு சீராக நடைபெறுகின்றது.

மக்கள் தமக்கிடையேயான தனிப்பட்ட குரோதங்கள், கொள்கைகளை முதன்மைப்படுத்தாமல் தலைமைத்துவ கொள்கைகளின் நியாயத்தன்மையினை ஏற்று, நாட்டுப் பற்றுடன் பின்பற்றும் போது அந்த நாடு வளர்ச்சி அடைவது ஒரு புதுமையான சங்கதியுமல்ல.

இன்று பொருளாதாரத்தில் மக்கள் வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்த நாடுகளை எடுத்துக்கொண்டால். நாட்டினை முன்னேற்றுதல் என்கின்ற கொள்கை மட்டுமே முதன்மைப்படுத்தப்படுகின்றன. இந்த அரிய உண்மைகளை வளர்முக நாடுகள், அல்லது வறிய நாடுகள் என்று சொல்லப்படுபவை இன்னமும் அதனை ஏற்று தங்களை மாற்றியமைக்க இயலாது இருப்பது கவலைக்குரியதாகும். மேலும் இன்னமும் இந்த நாடுகள் வல்லரசு நாடுகளுக்கு அடிமைப்படுவது போல கடன் வாங்கிச் சீவிப்பதே பிரதான கொள்கைகளாகக் கொண்டிருப்பதை என்ன வென்று சொல்ல?

கடதாசியிலே கொள்கைகளை எழுதிப் பிரகடனப் படுத்தி அதனை வெறும் விளம்பரமாக வெளிப்படுத்துதல் ஒரு உண்மையான கொள்கைப் பிரகடனமேயல்ல.





செயல் முறையில் செய்யப்படாத கொள்கைகளால் என்ன பயன் வந்துவிடப்போகின்றது?

ஐந்து ஆண்டுத்திட்டங்கள் பத்து ஆண்டுத்திட்டங்கள் என்பதுடன் குறுகியகாலத்திட்டங்களும் போடப்படும் சில நாடுகள், அதனை நிறைவேற்றுதலைக் கிஞ்சித்தும் கருதாமல் இருந்த இடத்தில் இருந்து மேலும் நழுவி கீழே அதளபாதாளத்தில் விழுவது கொடுமை!

அமைதியான சூழலில் வகுக்கப்படும் கொள்கைத் திட்டங்களையும் பூரணமாகச் செயல்படுத்த முடியும். அன்பு, நேயம், கருணையுணர்வுடன் கூடிய மக்களின் புரிந்துணர்வினால் மட்டுமே சௌஜன்யமும், சுபீட்சமும் இணைந்த நாட்டினை உருவாக்க முடியும்.

போரும், குரோதமும், சூழ்ச்சியும் இணைந்து நின்றால், எங்குதான் வளர்ச்சி என்பது கை கூடிவரப் போகின்றது? எவரையும் ஏற்றுக்கொள்கின்ற தனி ஒரு ஜீவனையும் மதிக்கின்ற புனிதத் தன்மையை பேணிக் கொள்வோமாக! நாம் மட்டுமே மதிப்புக்குரிய தனியான மனிதர் அல்ல.

இந்த உலகமும், வானும், அங்குள்ள எல்லா ஜீவன்களும் வாழுதலுக்காகவே அவதரித்தன. உலகம் உய்ய நாம் ஏதாவது செய்தலே எமது பணி. அதுவே ஒரு நெறி முறையான கொள்கை என்பதை ஏற்போமாக!



RangaRakes


Tamilnavarasam.com

சகல உயிர்களையும், மானுடத்தையும் நேசிப்பதும், அவைகளுக்கான கௌரவத்தை வழங்குதலைவிடச் சிறந்த கொள்கை வேறு என்ன உண்டு நண்பர்களே!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
14-10-2007







# உயிர்

"உயிர்" பற்றிய மாயப் புதிர்கள், இன்னமும் விடுபடவேயில்லை என்றே, பலரும் சொல்கின்றார்கள். உயிருக்கு உருவம் இல்லை. செத்தவர்கள் மீண்டும் வந்து, கதை சொன்னதுமில்லை. ஆன்மா பற்றி ஆன்மீகவாதிகள் சொல்லும் அற்புத விளக்கங்களை விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டதுமில்லை. மனிதன் "தூய வழி" மூலம் வாழ்ந்து காட்டினால் உயிர் தூய்மையாகின்றது. நல்ல வாழ்வுமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், அனுபவ ரீதியாகக் காணும் அமைதி நிலையே, உயிர் வாழ்வின் உண்மையான அர்த்தமுமாகும். தன்னைத் தூய்மையேற்றுவதே ஆன்மாவின் ஈடேற்றமுமாகும். ஆன்மாவைப் புனிதப்படுத்து என்றே எல்லாச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. நல்லோர் மூச்சு அடங்கி ஒடுங்குவதில்லை. அது எல்லையற்றுப் பெரும் பிரகாசமாய் ஒளி விட்டு உலகை ஆட்சி செய்யும்.

உயிர் என்பது புரியாத ஒரு மாயப்புதிராகக் கருதப் படுகின்றது. ஆன்மா, ஜீவன் என்றெல்லாம் சொல்ல ப்படுகின்ற இதுபற்றி சகலமதங்களுமே பற்பல கருத்துக் களைத் தத்துவங்களை, அற்புதமாக அவனிக்கு உவந்த



RangaRakes

Tamilnavarasam.com

ளித்துக் கொண்டிருக்கின்றன. ஆன்மீகவாதிகளில் ஒரு சாரார், ஆன்மா அழிவற்றது என்றும் அது பல்வேறு பிறப்புக் களைப் பல வடிவங்களில் எடுத்துக்கொள்கின்றன என்றும், பிறிதொரு சாரார் இறந்த உயிர் மீண்டும் அவதரிப்பதில்லை உடல் அழிந்த பின் உயிருக்கு எந்த வித மறுபிறப்புக் களுமோ, செயல்களோ இல்லையென்றும் கூறுகின்றனர்.

ஆனால், மாண்டு போனவர்கள் மீண்டு வருவ தில்லை. செத்துப்போனவர்கள் திரும்பிவந்து செத்த சங்கதி களை விலாவாரியாகச் சொல்லியதுமில்லை. அப்படி யாராவது திடீர் என்றோ, அல்லது நோய் வந்து மரணமான பின்னர், பின்பு மீண்டும் வந்து, கதை பேசியதாக யாராவது சொன்னால் அது வெறும் கற்பனைதான். நோயின் மயக்கத்திலிருந்து மீண்டும் விழிப்பு நிலைக்கு வந்தவர்கள் உடல், மனக்கோளாறு காரணமாக காலன் என்பவனைக் கரிய நிறத் தோற்றத்துடன் கண்டதாகச் சொல்வதுண்டு. இது எல்லாமே வெறும் பிரமை, மனமயக்கம் என்றே அறிவிய லாளர்கள் சொல்கின்றார்கள்.

மனக்கிலேசம், நிம்மதியின்மை, புத்தி மாறாட்டம் காரணமாக உடல் நிலையில் பாதிக்கப்பட்டவர்கள், மரண பயத்தால் உளறிக்கொட்டுவதை எல்லாம் உண்மை என்று நம்புகின்றவர்களைப் பகுத்தறிவாளர்கள் கேலியுடன் நோக்குகின்றனர்.





மறுபிறப்பு பற்றிப் பற்பல சம்பவங்களைக் கதை, கதையாகப் பேசப்பட்டாலும் கூட இவை யாவும் வெறும் புதிரானது என்றும், போலிப் புனைகதைகள் என்றுமே பலரும் கருதினால் வியப்பு இல்லை.

ஆயினும்,"உயிர்" பற்றிய மாயப்புதிர் பற்றி நாம் முழுமையாகத் தெளிவடைந்து விடவும் இல்லை எனலாம். எமது முன்னோர்கள் கூறிய உயிர் பற்றிய தகவல்களுக்கு எந்தவித ஆதாரங்களும் இல்லை என்றே இன்னமும் அறிவியலாளர் தெரிவிக்கின்றனர். உயிருக்கு உருவமும் இல்லை, செத்தவர்எழுந்து நடமாடியதென அனுபவ யதார்த்தரீதியான உண்மைச் சம்பவங்களும் இல்ல வேயில்லை.

ஆன்மா பற்றிய மெய்ஞானிகளின் அற்புதமான விளக்கங்களை விஞ்ஞானம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத போதிலும்கூட உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கான "தூய வழி" என்பது வாழ்வியலில் வாழ்ந்துகாட்டும் ஒழுக்க நெறியே, என்பதும் அதனால் உயிர் தூய்மையாகின்றது என்பதனை ஏற்பதில் அபிப்பிராய பேதம் தேவையில்லை.

"ஆத்மாவைத் தூய்மைப்படுத்து" என்பது "ஒழுக்கமாக வாழு" என்று வலியுறுத்துவதற்கேயாம். எனவே சாதாரண மனிதனுக்கேற்ப நல்நெறிகளைப் போதிக்க "உயிர்" பற்றிய விளக் கங்களை முன்னோர் எமக்கு



RangaRakes

Tamilnavarasam.com

அருளிச்செய்த வாக்கியங்கள் எல்லாமே நல்ல அருளாளனாக வாழும் முறைகளை சொல்லித் தருவதற்கான படிமுறை வழிமுறைகளே என்பதனை உணர்க! உயிர் இல்லாத உடலுக்கு ஏது பெறுமானம் உண்டு? உடல் நல்லன செய்கையில் உயிர் தூய்மை பெறுகின்றதல்லவா?

சொல்கின்ற வழிகள் எல்லாமே புரிந்து கொள்ள முடியாது போனாலும் கூட முடிவில் அந்த வழிகள் எல்லாமே எங்கள் ஆன்ம விழிப்பின் பொருட்டேயாம். ஆன்ம விழிப்பேற்றல், விழிப்பூட்டல் என்பது அகவாழ்வின் தூய்மை பெறுவதால், எமது வெளியுலகத்தினூடான வாழ்வுப் பயணங்கள், சிரமங்கள், சிக்கலின்றிச் செல்வதற் கான நேரிய உபாயங்களுமாகும் என அறிக!

உடலின் கலங்கள் செயலற்றுப்போனதும், உடல் பாகங்கள் அனைத்தும் பயனற்றுவிட உடலை விட்டு உயிர் போய் விட்டதாகி விடுகின்றது. மூச்சுப்போன பின், அசை வற்ற உடலைப் பிணம் என்று அழைக்கின்றோம். இதன்பின் மனிதனின் வாழ்வு அற்றுவிட தேகம், மீண்டும் பஞ்சபூதங் களுடன் சஞ்சாரம் செய்யப்புறப்பட்டு விடுகின்றது.

உயிருடன் பிறந்த தேகம் பஞ்சபூதங்களால் ஆனது என்கின்றோம். இந்த மண் (நிலம்), நீர், வளி, ஆகாயமூடாக வரும் ஒளி, தீ(நெருப்பு) இவையின்றி மனிதன், மரம், செடி, கொடி எதுதான் வளரமுடியும்? இவைகள் தோற்றம் பெற்று





பின் அழிந்தாலும் மீண்டும் பஞ்சபூதங்களுடன் சங்கமிப் பதும், உடல்கள் மீண்டும் உருப்பெறுவதும், பிறந்து அழிவதும், இயற்கையின் நியதி. இவைகளை எம்மால் தடுக்க முடியுமா? உலகச் சுழற்சிக்கு இந்த நிகழ்வுகள் அவசியமாகின்றன.

துர்மரணங்கள், இயற்கை அழிவுகளான பூகம்பம், கடல் கொந்தளிப்பினால் எழும் பேரபாயங்கள், தொற்று நோய்கள், எல்லாமே இயற்கை சிருஷ்டிகளை இயற்கையே தானே அழித்துத் தனதாக்கிக் கொள்ளும் விந்தை அன்றோ!

இந்த மனித உடல் அழிந்தாலும் அதுவாழ்ந்து கொண்டிருக்கும் நிலை என்பது என்ன? தேகம் அழிவது ஒன்றும் புதினமானது அல்ல. ஆயினும் இந்தத் தேகத்தி னூடாகச் செய்த பணிகள் ஒருவரை இறக்காமல் வாழ வைக்கும் என்பதில் எவ்வித கருத்துவேறுபாடுகளுமே இல்லை.

- எவ்வுயிர்க்கும் கருணையைப் பொழிபவன்
- கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றுபவன்
- சத்தியத்தில் இருந்து, எக்கணமும் வழுவாதவன்
- சேவை செய்வதையே, உயிரிலும் மேலாகக் கருதுபவன்



RangaRakes Tamilnavarasam.com

மேற்சொல்லப்பட்ட குணாம்சங்களைக் கொண்டவனை மரணம் வென்றதில்லை. இந்த உடல் எடுத்ததன் பயன்படி வாழ்ந்திட்டால மரணம் என்கின்ற ஒன்று இல்லாமல் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலங்களுக்கு அப்பால் நின்று, காலங்களுக்கு அப்பால் பட்ட மகானுபாவனாக, நித்திய, சிரஞ்சீவித்தன்மையுடன் ஜீவித்துக் கொண்டேயிருப்பான்.

இந்தத் தேகம் அழிந்தே தீரும் என்கின்ற உண்மையை இன்னமும் தெரியாமல் புரியாமல் இருப்பதாலேயே எல்லாமே, நித்தியமானது என்கின்ற போலித் தனத்துள் அகப்பட்டு மனிதன் சதா பாவங்களைச் செய்தவனாகின்றான்.

உண்மையாக வாழுபவர்க்குச் சமயங்கள் பிறிதாகவோ, முரண்பாடுகளாகவோ, தோற்றம் காட்டுவதுமில்லை.

பேய்கள், பிசாசுகள், கெட்ட ஆவிகள் என்றும் சொல்லி பயப்படுத்தப்பட்டிருப்போம். இவையெல்லாம் பொய்யானவை என்று வலியுறுத்தப்பட்டே வருகின்றன. அப்படியே அவைகள் இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும் சரி, சமூகத்தில் நடமாடிக்கொண்டிருக்கும் கீழ்த்தரமான சமூகவிரோதிகள் கொடும்பாதகர்களைவிட இவைகள் என்ன செய்துவிட்டன?

கொலை, கொள்ளை, ஏமாற்றுதல், பித்தலாட்டங்கள், சூது, வாது, குடிபோதை, கற்பழித்தல், பொய்





பேசுதல் போன்ற அனைத்து அராஜகங்களையும் மனிதன்தான் செய்து கொண்டிருக்கின்றானே ஒழிய கண்ணுக்குப் புலனாகாத வெறும் கற்பனை உருவுடைய உருவங்கள் செய்வதில்லை.

உயிருடன், தலைக்கனத்துடன், ஆணவமிடுக்குடன் இருக்கின்றவன் தன்னைப்போல் உயிருள்ள உருவங்களை அழிக்க முற்படுகின்றான். எல்லாப் பிராணிகளுக்கும், தாவர இனங்களுக்கும் கூட உயிர் உள்ளது என உணர்ந்தும் கூட தனக்கு மட்டுமே தனது ஆத்மாமட்டுமே நிலையானது, நித்தியமானது எனக் கருதுவது சுத்த மடமையான எண்ணங்கள் அல்லவா?

ஆன்மீகவாதிகளின் கூற்றுக்களை பகுத்தறிவாளர்கள் அல்லது நாஸ்திகவாதிகள் என்றும் சொல்லப் படுபவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாத போதிலும் கூட ஆன்மீகவாதிகளின் கூற்றில் உண்மைத்தன்மைகள் உள்ளமையினாலேயே, உலகில் இன்னமும் மதங்கள் நித்தியமானவைகளாக, மக்கள் வாழ்வுடன் பிணைந்து நிற்கின்றன.

வெறும் கற்பனைகளால் நித்தியமான ஒன்று உருவாக முடியுமா? அனுபவஞானம், கல்வி அறிவு, சிந்தனை வளங்கள் மூலமாகவே சமயங்கள், மக்களிடம் நிலைபெற்று மிளிர்கின்றன. ஆன்மாவைப் புனிதமாக்கு! உள்ளத்தைத் தூய்மையாக்குவதே இதற்கானவழி என்று எல்லா மதங்களும் ஏககுரலில் சொல்கின்றன. இறைவனை விசுவாசிப்பதன் மூலம் உயிர், இந்தத்தேகம், தீவினை செய்வதனின்றும் தடுத்தாட்கொள்ளப்படுகின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

எனவே நல்லன செய்தலே அறம் என்பதையும் அதுவே உயிரை உன்னத நிலைக்கு இட்டுச் செல்ல வல்லது என்பதையும் ஆன்மீகம் எடுத்துரைப் பதைவிடுத்து எடுத்த எடுப்பில் எல்லாமே கற்பனைக்கூற்று என்று சொல்லிக் கடவுள், கொள்கைகள், நம்பிக்கைகள், ஏன் தோன்றின எனத் தெரியாமல் பொருதுவதும் பொருத்தமற்ற விடாப்பிடியான முரட்டுப் பிடிவாதமேயாகும்.

கடவுள் மீதான பற்றுதலும், நம்பிக்கையும் அறவே அற்றுப் போனால் இந்தப்பூமி என்றோ செத்துப் போயிருக்கும். பாவங்கள் பற்றியும், அதனால் உயிர்க் குண்டாகும் துன்பங்கள் பற்றியும் சமயங்களால் அறிவுறுத் தப்படாமல் விட்டால் மாந்தர் எல்லோருமே அறம் என்றால் என்ன? என்றே தெரியாமல் கண்ட படி வாழ்ந்து சீர் கெட்டழிந்து போகமாட்டார்களா? புரிந்துகொள்வோமாக!

சாதாரண நிலையில் வாழ்ந்தவர்களாயினும் சரி, மிகவும் உயர்ந்த அந்தஸ்தில் வாழ்ந்து கொண்டிருப்ப வர்களாயினும் சரி, உயிர் வாழ்தல் என்பது இந்தப் பூமியிலேயே நடந்து கொண்டிருக்கின்றது. இந்த உயிர் வாழ்வில் இன்ப, துன்ப நுகர்வுகள் எல்லாமே, எல்லோர்க் குமான பொதுவான அனுபவங்களே.

எத்தனை நூல்களைக் கற்றாலும், உயர் பதவியை வகித்தாலும் என்ன? அரசனேயாயினும் ஆண்டியேயா யினும், அவன் வாழும் காலம் இங்கே தான் ஆரம்பித்து





இங்கேயே நிறைவு பெறுகின்றன. இருக்கின்ற வாழ்வில் நிறைவு காண்பவன் எவனோ அவனே நித்த வாழ்வு பெற்ற புருஷனாகின்றான். உயிர் வாழ்வு என்பது வாழ்நாளின் காலங்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை.

இந்த மண்ணினுள் புதைந்து வாழும் மண்புழு தான் ஜீவிக்கும் ஓரிரு நாட்களில் இந்த நிலத்தை உழுது விவசாயிக்கு வியத்தகு உதவியை ஈந்துவிட்டுச் சாகின்றது.

சும்மா உயிர் விடுதல் கூடாது. இந்த மண்ணுக்கு ஏதாவது செய்து விட்டுப் புறப்பட்டால் புனித வாழ்வு பெற்று உயர்ந்த வராவோம்.

நெஞ்சத்தின் மாசு அற்றவனுக்குக் களிப்பு நிலை தானாக உருவாகிவிடுகின்றன. இந்நிலைதான் ஆன்மாவிற் கான உயிர்புள்ள உண்மையான பரிசுத்த விழிப்பு நிலையுமாகும்.

சத்தியத்தின் மீது விசுவாசம் வைத்துள்ளவனே சுதந்திரமாகத் தனது ஆத்மாவை வைத்திருப்பவனுமாகின் றான். புனிதத்தன்மையைத் தன்னுள் பூணாதவனால் உலகத்துடன் அன்னியோன்னியமாக ஈடுபாட்டுடன் வாழ முடியாத நிலைக்கு உள்ளாகின்றான்.

தெளிந்த சிந்தனை வளமும், பிறர்க்கான நன்மைகளை வழங்கலும் ஆன்மாவின் ஆற்றலை எண்ணங் களால் அளவிடமுடியாத அளவு வளர்த்துக்கொள்கின்றது.



RangaRakes

Tamilnavarasam.com

- மரணம் வந்து கதவைத் தட்டும், ஒரு வினாடிப் பொழுதிலும் கூட உயிர்ப்பறவை பறக்கும் வினாடிப் பொழுதிலும் மேலான ஒரு சிறு வழங்கலையாவது, அவ்வேளையிலும் செய்துகொள்வாயாக!

- எம்மைச்சார்ந்த அல்லது சாராத எவரேயாயினும். அவர் இந்த உலகின் மாபெரும் பொக்கிஷம் என்று உணர்ந்து கொள்ளும்பரந்த மனப்பான்மையை உன்னுள் வளர்ப்பாயாக! புல்லே ஆயினும் அது இறையோனின் புனித படைப்பு எனக் கொள்க!

- நான் செய்த நல்லகாரியங்களால் பிரதிபயன் எடுக்காமல் விட்டு விட்டேனே எனக்கருதாமல் எனது காரியங்கள் யாவுமே எனது உயிர் வாழ்வின் மேம்பாட்டிற்கு மட்டுமல்ல அனைத்து ஆன்மாவுக்குமானதே எனக் கருதுவாயாக!

- நான் செய்த தவறுகளுக்காக மனம் வருந்துகின்றேன். பிறர் எமக்குச்செய்த தவறுகள் அனைத்தையும் மன்னித்து விடுகின்றேன். அவர்களை முழுமையாகவே ஏற்றுக்கொள்கின்றேன் என்ற கொள்கையினைக் கொள் வாயாக!

- எம்மிடத்தே தூய்மையை வளர்க்கின்ற அதே வேளை பிறர் குற்றம் காண்பதையும், அவர்கள்மீது குரோதம் காழ்ப்பு பொறாமை வளர்ப்பதை உருவாக்கு தலை அறவே கைவிடுவாயாக!






- கட்புலனுக்குத் தெரியாத இந்த உயிர்தேகம் ஊடாக செய்கின்ற எல்லைற்ற காரியங்கள் எல்லாமே நல்லவை களாக இருக்குமிடத்து மனிதனின் உலக வாழ்வுகூட நித்தியமானதாக புனிதமாகி விடுமன்றோ! அழிதல் அழிவு என்பது உண்மை வாழ்வுக்கு ஏது? நல்லோர்க்கு மூச்சு அடங்கி ஒடுங்கு வதில்லை. அது எல்லையற்றுப் பெரும் பிரகாசமாக ஒளிவிட்டு உலகை ஆட்சி செய்யும்.

தினக்குரல்<br>(ஞாயிறு மஞ்சரி)<br>21-10-2007



RangaRakes
Tamilnavarasam.com



# தண்டனை

ஒருவனுக்கு அநியாயமாகத் தண்டனை வழங்குவது அவர்களின் ஜீவாதார உரிமைகளைக் கொள்ளையடித்து இம்சைப்படுத்துதலாகும். செய்த தவறுகளுக்காகத் தண்டனைகளை மனப்பூர்வமாக ஏற்பவர்களுக்கு இறைவனின் மன்னிப்புக் கிடைக்கும். திட சிந்தனையுடையவர்கள் தவறான வழியில் நடக்கச்சித்தம் இல்லாதவர்கள். தண்டனை வழங்குவதில் மனிதர்கள் தவறுகள் செய்யலாம். இறை தண்டனையில் குற்றம் சொல்வது கூடாது. அறநெறியில் வாழ்பவர்கள் தண்டனை பற்றி ஏன் பயப்படப் போகின்றார்கள்? மன்னித்தல் மூலம் ஒருவரை வாழவைக்க முடியும். அதை உணராதவர்கள் அதன் பலாபலன்களை அனுபவித்தேயாக வேண்டும். கண்டவனும் தண்டனை வழங்க முடியாது.

அநீதியற்ற, நியாயபூர்வமாக வழங்கப்பட்ட தண்டனையை எவ்வித முரண்பாடுமின்றி உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்பவனே திடசிந்தனையுடைய மானுடனாவான்.

தண்டனைகளைக் கண்டபடி தங்கள் இஷ்டம் போல





எவராவது ஒருவர்க்கு வழங்குவது தண்டனைக்குள்ளான வரது ஜீவாதாரஉரிமைகளைக் கொள்ளை யடிப்பதும் இம்சைப்படுத்துவதுமாகும்.நல்ல நோக்கம் ஒன்றிற்காக ஒருவரைத் திருத்தி மீண்டும் சமூகத்திற்கு ஏற்றவனாக வாழ வைக்கவே தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். எனினும் தண்டனைகள் வழங்குபவர்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது என்பது மிக முக்கியமான விஷயமேயாகும்.

எவரினதும் வாழ்வை அழித்துக் கெடுத்து மீளவும் எழுந்து கொள்ள இயலாதவாறு முடக்கி ஒடுக்குவதற்கு எவருக்குமே உரிமையில்லை. நியாயத்தைச் சட்டங்களை மீறித் தமக்கே என அதிகாரங்களைத் தாமே வகித்திட முன் வருபவர்களை மக்கள் விரும்புவதுமில்லை.

கண்டவர்களும் கண்டபடி தண்டனை விதிப்பது கடவுளைச் சீண்டும் செயல். எனினும் நீதியின்பால் இறைவன் பார்வையில் எல்லோருமே சமனாக நோக்கப் படுவதால் இயற்கையாக வழங்கப் படும் அவரது தீர்ப்பினை நாம் ஏற்றுக் கொள்ளாமல் விடமுடியாது.

இன்று உலகம் பூராவும் இயற்கை வீறுகொண்டு எழுந்து செய்கின்ற அனர்த்தங்களின் விபரிதங்களை என்ன செய்ய முடியும்? மனிதன் தன் மாண்பினை மறந்து விட்டமையினாலேயே துன்பங்களை அனுபவித்து வருகின்றான் என ஆன்மீகவாதிகள் ஆதங்கப்படுகின்றார்கள்.



RangaRakes

Tamilnavarasam.com

மக்கள் எல்லோருமே அறத்தின் கூற்றுப்படி வாழ்ந்து வருவதாகக் கூறமுடியுமா? எல்லோருமே தத்தமது நியாயங்களை விட்டுக்கொடுத்துப் பேசமாட்டார்கள். தவிர தங்கள் செயல்களின் சரியான அல்லது தவறான அம்சங்களைப் புரியாமலும் இருக்கின்றவர்கள் படும் இன்னல்கள் சொல்லுந்தரமன்று.

உண்மைகளை நியாயங்களின் வலுவைப் புரிய வைப்பது எப்படி? தெரிந்து 7செய்யும் தவறுகளும், தெரியாமல் செய்யும் தவறுகளுமாக மொத்தத்தில் விளைவுகளை ஏற்றுக்கொள்வது யார்? யார் யாரோ செய்கின்ற செயல்களுக்காக அப்பாவிகள் படும் துயர்கள் தான் பன்மடங்கு பன்மடங்கு...!

தவறு இழைத்தவனை அவன் திருந்த வழி ஏற்படுத்தாது விடுவதானது அவன் செய்த தவறுகளைவிடக் கொடுமையானது.

மன்னித்தல் என்பது பற்றி நாம் பேசுகின்றோமே ஒழிய நடைமுறை வாழ்வில் நெறிப்படுத்துகின்றோமா? மன்னிப்பு அளிப்பதற்கு எல்லையில்லை என்பார்கள். ஆனால் மன்னிப்புப் பெற்ற எல்லோருமே அதன் தாற்ப்பரியத்தை உணர்கின்றார்கள் இல்லை.

சிலரை ஒரு முறை மன்னித்து விட்டால், அந்த உயரிய சலுகையைத் தவறாகப் புரிந்து கொள்கின்றார்கள்.





சரி... போனால் போகின்றது அவரை இன்று விட்டுவிடுவோம் எனப் பெருந்தன்மையுடன் சொன்னால் மன்னிப்புப் பெற்றவர்கள் சிலர் வேறுவிதமாகவும் அர்த்தம் கொள்வதுண்டு. தங்களின் பலம் அறிந்து பயம் மேலீட்டினால் சும்மா தன்னை விட்டுவிட்டதாக ஜம்பமாகச் சொல்லிக் கொள்வார்கள். இந்த வீம்புப் பேச்சு ஒரு கோழைத்தனமான கோமாளிப் பேச்சு என இவர்கள் உணர்வதுமில்லை.

மன்னிப்பு வழங்குதல் என்பது தவறுகளை மென்மேலும் செய்தலுக்கான அங்கீகாரம் அல்ல.

குற்றம் செய்தவர்கள் சாதுர்யமாகத் தப்பித்துக் கொள்வதால் தொடர்ந்தும் அவ்வண்ணம் செய்வதற்கு எத்தனிப்பது பெரும் தவறு என்பதை பின்னர் கிடைக்கும் மீளமுடியாத தண்டனைகள் வாயிலாக உணர்ந்து கொள்ளத் தான் போவார்கள்.

கஷ்டப்பட்டு உழைப்பதற்கு விருப்பமின்றி எப்படியாவது பத்துப்பேர் மெச்சவேண்டும் என்பதற்காக குறுக்கு வழியில் சமூகம் வெறுக்கும் செயல்களைச் செய்பவர்கள் வாழ்க்கையில் சறுக்கி பிறர் முகத்தைப் பார்க் முடியாத பிறவிகளாகிவிடுவர்.

தெரியாத்தனமான காரியங்களை, குற்றச் செயல்களைச் செய்து, சிறைக்குச்செல்பவர்களை இந்தச் சமூகம் மீண்டும் சாதாரண மனிதனாக நோக்கத் தயங்குகின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

அவனை மீண்டும் மீண்டும் அதே தவறான வழிக்கே இட்டுச் செல்லத் தூண்டு மாற்போல் வெறுத்து ஒதுக்குவது என்ன நியாயம்? சமூக பொது அமைப்புக்கள், தொண்டு நிறுவனங் களுடன் அரசாங்கமும், தண்டனை பெற்றுத் திருந்தி வாழ ஆசைப்படுபவர்கள் விடயத்தில் தீவிர கவனம் செலுத்தாது விட்டால் அவனை மட்டுமல்ல, அவன் சார்ந்த குடும்பத்தை யும் பெரும் பாதிப்புக்குள்ளாக்கி விடுமன்றோ!

எத்தனை எத்தனையோ கல்விமான்கள், ஞானிகள் கூட பிழைகள் செய்து மீண்டும் உலகில் பிரகாசித்த வரலாறு கள் உண்டு. ஒரு நல்ல சமூக அமைப்பு உருவானால் எவரையும் நேயத்துடன்அணுகும் இயல்புகள் தானாகப் பரிணமித்துவிடும்.

எங்களுக்குத் தெரிந்துவிட்ட காரணத்தினால் குற்றவாளிகளை நாம் வேற்றுமை உணர்வுடன் பார்க்கின் றோம். ஆனால் எங்கள் கண்ணில் மண்ணைத் தூவித் தொடர்ந்தும் சட்டவிரோதமாகச் செயல்படுபவர்களை தூக்கி வைத்துக் கொண்டாடுகின்றோம். தெரியாமல் தப்புச் செய்ப வர்களை நிரந்தர கெட்டவர்களாக முத்திரை குத்திவிடுவது கடவுளுக்கே இஷ்டமில்லாத செயல்தான். எவரையும் விரத்திக்குள்ளாக்கி வேடிக்கை பார்ப்பது துர்க்குணம் என்றே நோக்க வேண்டும். உணர்வோமாக!

- அன்பான அரவணைப்பு, பராமரிப்பு
- சமய அனுட்டானங்களில் ஈடுபடச் செய்தல்





- தியானம், பயிற்சிகள்
- அறநெறிப் போதனை
- கல்வியூட்டல், நூல்களை வாசிக்கச்செய்தல்
- தகுந்த உளவள ஆலோசனை

  நல்ல முறையில் பொழுது போக்குகளை அமைத்துக் கொடுத்தல்

மேற்கண்ட முறைகள் மூலம் குற்றச்செயல்களினால் தண்டனைபெற்று மீண்டு வந்த மனிதர்களின் வாழ்வு சிறக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளை மேற் கொள்வோமாக!

ஒருவரைத் திருத்துவதற்காக ஆயுதங்களைத் தேட வேண்டிய அவசியம் இல்லை. அன்பு எனும் ஆயுதத் தினைத் தவிர மேன்மை பொருந்திய வருத்துதல் தராத எந்த ஆயுதமும் இல்லை. கண்டு கொள்வோமாக!

ஒருவர் செய்த காரியங்களுக்காக உரிய நீதிப்படி சிறை செல்வதாக இருப்பின் அவர்களது குடும்பம் படுகின்ற அல்லல்கள, நிர்க்கதிக்குள்ளாகும் பரிதாபநிலைபற்றி இந்த உலகம் சிந்திப்பதாயில்லை. குடும்பத் தலைவன் சிறைக் குத் தள்ளப்பட்டால் அவனது பிள்ளைகளின் ஜீவாதாரப் பிரச்சனைகளை யார் தீர்த்துவைப்பது? பிள்ளைகளுக்கான உணவு, கல்வி போன்ற அனைத்துமே வசதிகுறைந்த குற்றவாளிகளின் குடும்பங்களுக்குக் கிடைப்பதில்லை.



RangaRakes

Tamilnavarasam.com

இதனால் குற்றவாளியாகக் காணப்பட்டுத்தண்டனை பெற்றவனின் பிள்ளைகள் இல்லாமை, வறுமை காரணமாக, விரக்தியுற்று, செல்லும் வழிகள் மிகவும் மென்மேலும் படு பாதகமாகி விடுகின்றது. ஒருவர் செய்த தவறுகள் ஒட்டு மொத்தக் குடும்பத்தைச் சீர்குலைப்பதால் பாதிப்படைந்த குடும்பத்து அங்கத்தினர் தொடர்ந்தும் ஒரு சட்டவிரோதம் செய்கின்ற மட்ட ரகமான சிந்தனை வயப்பட்டு தவறான வழிகளில் தாவிச் செல்லும் வழியைத் தேடிச் செல்கின்றார்கள். சமூக அவலங்களைக் களைந்து போராடுவதற்குப் புறப்படுபவர்கள், நலிந்து கிடக்கும் பரிதாபச் சீவன்களை கைதூக்கி நிறுத்தல் வேண்டும்.

பால்யக் குற்றவாளிகளைச் நல்வழிப்படுத்தச் சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்புகின்றார்கள். சின்னஞ் சிறு சிறார்களுக்கான மனஅழுத்தம் உளைச்சல்களுக்கான பொறுப்பாளிகள் யார்? பெரியவர்களினால் ஏற்பட்டபெரும் பாதிப்புக்களால் சிறியவர்கள் சுமைகளை ஏற்றுக் கொள்கின்றார்கள். இங்கு சிறுவர்களைச் சீர்திருத்தி வருவதற்கான நடவடிக்கைகளை சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைகளில் எடுத்து வரும் நடவடிக்கைகளின்போது "அன்பு" என்கின்ற உன்னதப் பண்பே முன்னிறுத்தப்படல் வேண்டும்.

அன்பான அரவணைப்பின்றி எத்தனை லட்சோப லட்சம் சிறார்கள் அவதிப்படுகின்றார்கள் தெரியுமா? ஏழைகளின் பிள்ளைகளைவிடச் செல்வந்தர்களின் சிறார்களுக்கே பூரண அரவணைப்புக் கிட்டாமையினால் அவர்கள் ஈற்றில்





தண்டனைகளைத் தேடியடைந்து கொள்ளும் துர்ப்பாக்கிய சீவன்களாக மாற்றப் படுகின்றார்கள். முன்னாள் பிரித்தானியப் பிரதமரின் மகன் சின்ன வயதிலேயே மது அருந்தியமைக்காகத் தண்டனை பெற்ற போது பிரதமர் வருந்தி அழுதார். ஒரு நாட்டையே நிர்வகிக்கும் ஒருவரால் தனது மகனின் நடத்தைகளைக் கண்காணிக்க முடியாமற்போனது தவிர்க்க முடியாத துரதிஷ்டமாகிவிட்டதே!

உலகம் எல்லா நேரங்களிலும் உறங்கிக் கிடப்பதாகச் சிலர் எண்ணுகின்றார்கள். குற்றம் புரிந்தவர்களுக்கான தண்டனைகள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் கிடைத்தே தீரும் என்பதைப் பலர் உணராமல் இருப்பது தவறு என்பதை, இத்தகையவர்கள் வரப்போகும் தங்கள் அனுபவங்கள் மூலம் பெற்றே தீருவார்கள்.

செய்யாத தவறுகளுக்காகத் தண்டனை பெற்று விட்டேன் என்றும் பலர் மனம் குமைவதுண்டு. இது ஒரு துரதிஷ்டமான நிலை. ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளலாம் ஆனால் ஒரு நிரபராதி தண்டனை பெற்று விடக்கூடாது என்று சொல்லப்படுவதுண்டு.

ஆயிரம் குற்றவாளிகளைத் தப்பிக்கவிட்டால். அவர்கள் வெளியே வந்து இந்த உலகைத்து வைத்து விட மாட்டார்களா? எனவே ஆயிரம் என்ன ஒரு குற்றவாளியைக்கூட தப்புவிக்கச் செய்வதும் அவர்களை மறைப்பதும், சரிதான் தப்பிப் பிழைக்கட்டும் எனக்கடுகளவும் சிந்தனை செய்வதை



RangaRakes

Tamilnavarasam.com

விட்டு விடுக! எந்த ஒரு நிரபராதியும் அநியாயமாகத் தண்டனை பெற்று அவன் கண்ணீர் சிந்துவது இந்த சமூகத்திற்கு ஏற்படும் மாறாத வடு என உணர்க!

எல்லோருமே நல்லவர்களாக இருந்து விட்டால் சிறைச்சாலைகள் பூட்டப்பட்டுவிடும். தேவையற்ற சிறைச்சாலைகள் தொழிற்சாலைகளாகச் சமூக அபிவிருத்திக் கூடங்களாக மாற்றப் படுமானால் கற்பனை காணமுடியாத அற்புத உலகு சிருஷ்டிக்கப்பட்டுவிட்டது என்று நாம் குதூகலிக்கலாம் அல்லவா?

ஆனால் இன்று உலகம் அப்படியாகவா இருக்கின்றது? குற்றம் செய்பவர்கள் தொகை கூடிக் கொண்டு தான் இருக்கின்றது. அப்படி எனின் மனித நாகரிகம் என்பதன் அர்த்தம் தான் என்ன? காலம் செல்லச்செல்ல கருத்துக்கள் நடத்தை நெறிகளும் பண்பாடுகளும் வலுவடைந்து காணாமல் போவது மனிதன் தற்கால நாகரீகத்திற்கான கருகிய துரித பயணமா எனக்கேட்கத் தோன்றவில்லையா?

துன்பம் வந்துற்றால் அதற்கானபரிகாரம் தவறுகளைச் செய்து அதனை அழிப்பது தான் என எண்ணுதல் தகாத எண்ணமேயாகும்.

எங்களது பிரச்சனைகளை அழிக்கப்போக புதிதான பிரச்சனைகளை உருவாக்கி அதனை சமூகத்தின் தலையில் கட்டிவிடுதல் படுபிற்போக்கான தனக்குத்தான்





துரோகம் இழைக்கும் வன்மம் மிகு வக்கிரபுத்தியாகும். இன்று காணப்படும் சகல குற்றச் செயல்களுக்குமான முழுக்காரணமும் பொறாமை, கோபம், வஞ்சகம், பழிவாங்கல், இயலாமையினால் எழுந்த காழ்ப்புணர்ச்சிகளேயாகும்.

மனிதன் தனது ஆத்ம சக்தியினால் இத்தகைய இழிகுணத்தை எரித்து விடமுடியும் நிச்சயமாக முடியும். அதனை நீக்க அவன் தனக்கு எனத்தீர்க்கமான கட்டளைகளை இட்டு வந்தால் அவனது துர்நடத்தைகள் படிப்படியாக மாற்றமடைந்து வரும். மனம் புலன் வழிசென்றால் நடப்பது தன்னைச் சிதைப் பதாகவே அமையும்.

நல்ல வழிகளில் புலனைச் செலுத்தத் தயங்கினால் அவன் தன்னைமீறிய வழயில் தறிகெட்டு அலைவதை அவனாலேயே தடுக்கமுடியாது. ஆரம்பம் முதல் இறுதி வாழ்நாள் வரை தனக்கு ஒரு நல்ல குறிக்கோளுடனான எல்லையை அதனை மீறாமல் வகுத்துக் கொள்ள வேண்டும்.

வெவ்வேறு கலாசாரப் பின்னணியுடன் வாழ்ந்து வரும் மக்கள் அவர்கள் வாழும் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே வாழ்ந்து வருகின்றனர். எனினும் சம்பிரதாய பூர்வமான தேசவழமைக்கான சட்டதிட்டங்கள் அவர்தம் வாழ்க்கை முறைக்கான தனிப்பட்ட சமூக விதிமுறைகளும் உண்டு. இவைகளை அவ்வப் பிரிவினர் கௌரவித்தே வருகின்றனர்.



RangaRakes Tamilnavarasam.com


கட்டுக்கோப்பான வாழ்க்கையைக் கொண்டவர்கள் தண்டனை பிறர் தலையீடுகள் பற்றி அச்சமடைய வேண்டிய தேவையுமில்லை. நாம் நாமாக நல்ல மனிதனாக வாழ வேண்டும். எவருமே சரியாக வாழ்பவருக்கு எதிராக வாழ்ந்து விடுவோம் எனக் கருதுவதே, இறை தண்டனைக்குரிய காரியமுமாகும்.

தண்டனை பெறாத நல்வாழ்வு வேண்டும். கருணைக் கண் கொண்டு உலகை நோக்கினால் இறைவன் வெகுமதி தானாய் கிடைக்கும்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
25.12.2007







## ஏட்டிக்குப் போட்டியாகப் பேச வேண்டாம் !

ஒருவரின் சிறு தவறுகளை மீண்டும், மீண்டும் சொல்லிக் கிண்டலடிக்கக் கூடாது. மிகச் சாதாரண விஷயங்களைக் கூட ஒருவரின் மன இயல்பைப் பாதிக்கும் வண்ணம் பேசினால் பாதிப்புக்கள், விபரீதமாகவும், அமையலாம். கணவனும், மனைவியும் எதிர்வாதம் புரிவதால் ஏது பயனுமில்லை. மற்றவர்கள் குடும்ப விஷயங்களில் மூக்கை நுழைப்பவர்களுக்குச் சாதகமாக குடும்ப விஷயங்கள் அமையக்கூடாது. கோபங்களை உடனே மறந்துவிடுதலை விடுத்து அதனையே நெஞ்சில் உள் நிறுத்திச் சமயம் வரும்போது காட்டுதல் உறவு விருத்திக்கு ஊறு விளைவித்துவிடும். அறிக!

சின்னச் சின்னப் பலவீனங்களையும், தவறுகளையும் கணவன், மனைவியர் வேடிக்கையாகக் கூடப் பலர் முன்னிலையில் கூறிக்கொள்ளுதல் விபரீதமாகப் போய் விடுவதுமுண்டு. எல்லாநேரங்களிலும் மனிதர் ஒரே மாதிரியாக இருந்து விடுவதில்லை.



RangaRakes
Tamilnavarasam.com

நான்கு சுவர்களுக்குள் இருக்கும் குடும்ப இரகசி யங்களை, மனைவி காப்பாற்றியேயாக வேண்டும் என்பார்கள் கள். இந்தப் பொறுப்பு கணவனையும் சார்ந்தது தான். கணவனும் மனைவியும் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசிக் கொண்டிருக்க முடியாது.

உங்கள் குடும்ப இரகசியங்கள் உங்களாலேயே அம்பலத்திற்கு வரும்போது அதையே இரசித்துக் கொண்டு உங்களுக்கு உபதேசம் செய்வது போல்பேசித் திருப்திப் படும் சீவன்களும் இருக்கின்றார்கள்.

ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொண்டதன் பின் விளைவுகளை, நாம் சிலப்பதிகாரத்துக் காவியத்திலும் காணலாம்.

கோவலன் வசந்த விழாவில், யாழ் எடுத்து சிருங்கார ரசத்துடன் இசைத்துப்பாட இதனை வேறுவிதமாக அர்த்தம் கொண்டு மாதவி ஏட்டிக்குப் போட்டியாக, தானும் அவ்வண் ணமே பாட முடிவில் கோவலன், விபரீதமாக முடிவு எடுத்து மாதவியை விட்டுவிலகினான். இந்தச் சம்பவம் ஏற்பட்டிருக் காது விட்டால் சிலப்பதிகாரம் என்கின்ற மாபெரும் இலக்கியம் படைக்கப்பட்டிருக்குமோ என்னவோ?

இலக்கியங்கள் எல்லாமே குடும்பங்களுக்கு நல்ல உபதேசங்களையே சொல்லிக் கொண்டிருக்கின்றன. நாம் வெறும் வேடிக்கையாகச் சில விஷயங்களைக்கூறச் சிலர்





நன்றாக ஞாபகம் வைத்துக் கொண்டு அதையே பெரிய உண்மையாகக் கொண்டு வேண்டுமென்றே தமக்குக் கோபம் வரும்போது தக்க சமயத்தில் அவைகளை ஊதிப் பெரிதுபடுத்தி விடுகின்றார்கள் இந்த விஷயங்கள் பல குடும்பங்களிலும் நடந்து கொண்டிருக்கின்றன.

கணவன் செய்த சின்னத் தவறை வேடிக்கை யாகச் சுட்டிக்காட்ட அந்த நேரத்தில் கணவனும் அதை ஏற்றுக் கொண்டு சிரித்துவிட்டுப் பின்னர் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மனைவி மீண்டும், மீண்டும் அதுபற்றியே கிண்ட லடிக்கும்போது குடும்பத்தில் பெரிய விரிசல்களே உருவாகிவிடுகின்றது.

பொதுவாக கணவன், மனைவி வீட்டாரைக் குறிப்பிட்டுக் குறைகூறும்போதுதான் இந்த நிகழ்வுகள் நடக்கின்றன. மனைவியும் விட்டுவிடாமல் திரும்பத் திரும்பப் பேசினால் யாருக்கு என்ன லாபம்?

இந்தக் கோமாளித்தனமான சண்டை பெரிதாகப் போக, அக்கம் பக்கத்து வீடுகளுக்கு நல்ல இலவச தொடர் நாடகக் காட்சியைப் பார்த்த திருப்திதான் உண்டாகும்.

வாழ்க்கை என்பது நாம் இரசித்துச் சந்தோஷமாக இருக்கத்தான் என உணர்வோம்! மற்றவர்களின் மன உணர்வுகளை உணர்ந்து பேசுதல் வேண்டும். ஹாஸ்யம், கிண்டல்கள் எல்லாமே தேவையானவைதான்.



RangaRakes
Tamilnavarasam.com

ஆனால் இவைகளால் மனங்களில் ரணங்களை ஏற்படுத்தி விடக்கூடாது. குடும்பத்தலைவியின் நிதானமும் புத்தி சாதுர்யமும் எத்தகைய குடும்ப அங்கத்தவர்களையும் நல்வழிப்படுத்திவிடும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள் பகுதி"
15-02-2009









# காதல் திருமணங்களும் பெற்றோர் எண்ணங்களும்

இளவயதுக்காதல் இனிமையானது தான். ஆயினும் எந்தவித அடித்தளமும் இல்லாமல் காதலில் விழுந்து விடுவதை எவர்தான் விரும்புவார்கள்? பிள்ளைகளையே நம்பி வாழும் பெற்றோர் தங்களை விட்டுக் காதலால் காததூரம் சென்று விடுவார்களோ என அச்சப்படுவது இயற்கை. காதல் விடயத்தில் நிதானமுடன் பெற்றோரும் பிள்ளைகளும் நடந்து கொள்ள வேண்டும். தமக்குரிய கடமையை முடித்தால் பொருத்தமான காதலை விருப்புடன் எவருமே வரவேற்பார். காதலால் குடும்ப உறவு நொருங்கக் கூடாது. வருங்காலத்தை எவரும் அவசரப்பட்டு நெருப்பாக்கலாகாது,

காதல் திருமணம் செய்தவர்கள் கூட தங்களின், மிகவும் நம்பிக்கைக்குரிய மகனோ அல்லது மகளோ யாரை யாவது காதலிக்கின்றார்கள் எனக் கேள்விப்பட்டாலே போதும், உடனே குழம்பிப் போய் பதறிச் செய்வதறியாது திகைத்துப் போகின்றார்கள் இது இயல்பு. எங்காவது



RangaRakes
Tamilnavarasam.com

யாராவது ஓரிரு பெற்றோர் இது விடயத்தில் காதலுக்குப் பச்சைக்கொடி காட்டிவிடலாம். பொதுவாக சாதி, சமய, பொருளாதார பிரச்சினைகள், வேறுபாடுகளை வைத்தே பெற்றோர் காதல் திருமணங்களை விரும்புவதில்லை.

காதல் என்பது கசப்பான விடயம் அல்ல. ரம்ய மான, அன்புமிகு உணர்வு. செயலளவில் காதல் வாழ்வு என்பது, தங்களது கட்டுப்பாட்டை மீறிப் பிள்ளைகள் செய்யும் அத்துமீறிய அடாவடித்தனமான செயல் என்றே பல பெற்றோர்கள் கருதுவதுமேன்? இயல்பான காதல், உண்மையான இதயங்களின் பரிமாற்றம் என்று மனமார வாழ்த்தி, மனம் நெகிழ்பவர்களே, எதற்காகத் தமது பிள்ளைகள் விடயத்தில் கலவரப்படுகின்றார்கள்?

இவைகளுக்கு மூலகாரணம் ஒரு "எச்சரிக்கை" உணர்வுதான் எந்தவிதமான அடித்தளமும் இல்லாமல் தங்கள் பிள்ளைகள் எடுத்த எடுப்பில் எதிர்கால நலன்பற்றி எந்தவித சிந்தனையுமற்றுக் காதல் வலையில் சிக்கினால், எந்தப் பெற்றோராவது இதை ஜீரணிப்பார்களா? பிள்ளைகள் மீதான தமது உரிமைகள் பறிபோவதாகவும் கருதுகின்றார்கள்.

நன்றாகப் படித்த, பெரிய உத்தியோகம் கிடைத்த பின்னர் சிலர், தாங்கள் காதலிப்பவர்களின் குண இயல்புகள், பண்பாடுகள் பற்றி ஆராயாமல் உடன் எடுத்த முடிவினால், திருமணம் செய்து பின்னர் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல.





தங்களது அபிப்பிராயங்களையே என்றும் பிரியத்துடன் ஏற்கவேண்டும் என்பதே பெற்றோர் எதிர்பார்ப் பாகும். அதுவே மெத்தச்சரி என எண்ணிக்கொள்கிறார்கள். பெற்றோர் தாங்கள் விரும்பிய வண்ணம் பிள்ளைகளின் இஷ்ட மின்றி அவர்களுக்கு ஒவ்வாத திருமணம் செய்து வைத்து அவஸ்தைப்படும் சம்பவங்களும் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றது.

தங்களால் தெரிவு செய்யப்பட்ட மருமகன், அல்லது மருமகள் பண்பற்றவர்கள் எனத் தெரியாமல், அவசரம் அவரசரமாக மணம் முடித்துவைத்து, பின்னர் வாழ்நாள் பூராவும் மனம் குமைவதும் நாங்கள் அறியாததுமல்ல.

எங்கள் பிள்ளைகள் எங்காவது கண்ட கண்ட இடத்தில் ஆசைப்பட்டு எவனையாவது கட்டிக் கொண்டு வந்துவிடுவான் எனப் பயந்து, இந்தப் பெண்ணுக்கு மணம் செய்து வைத்தோம் எல்லாமே நினைத்ததற்கு மாறாகவே நடந்துவிட்டது. இப்போது என்ன செய்வது? என மனம் மறுகினால் இனி என்ன செய்யமுடியும்?

காதலிக்கும் காலத்தில் எல்லாமே இன்பமூட்டு வனவாகவே அமையும் அவன் பேசினால் அழகு அவன் நடந்தால் அழகு... அட அவன் எது செய்தாலும் அழகே அழகு... என்ன கம்பீரம்... அறிவு... ஆற்றல் எனப் பெண் கருதுவதும் அவனையே உலகின் உத்தமர்களுக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக கருதுவதும் அவ்வண்ணமே,



RangaRakes

Tamilnavarasam.com

"அட எனக்கு வாய்த்த அதிஷ்டம் வேறு எவர்க்குமே கிடைக்கப் போவதில்லை. அழகு மட்டுமா... என்ன பண்பாடு, அச்சம், மடம்..., நாணம், பயிர்ப்பு என எல்லாமே கூடியுள்ள இவளை நான் அடைய முற்பிறப்பில் என்ன தவம் செய்தேன்...!" என மனமார நெஞ்சு நெகிழப் பாராட்டி இறும்பூதெய்திய ஒருவன் காதல் போதையில் சொல்லிய தெல்லாம் மணம் முடித்த பின்னர் அப்படியே திசை மாறாமல் இருந்தால் நல்லது.

ஆயினும் எல்லோரதும் காதல் வாழ்வும் சிறப்பாக அமைந்தால், குடும்ப வாழ்வு மேலோங்கும். ஆனால் இன்று என்ன நடக்கின்றது?

வெறும் உணர்ச்சி மட்டும் காதல் ஆகுமா? இனக் கவர்ச்சி காதலுக்கு ஒரு ஆரம்பமாக இருக்கலாம். உடல் உறவுகள், பால் உணர்வுகள் மட்டும் ஒரு எதிர்கால குடும்ப நலனுக்கு முழுமையூட்டுவன அல்ல! அதற்கும் மேலான பெரிய சங்கதிகள் இவர்களுக்கு காத்திருக்கின்றன.

குடும்ப பொறுப்பு, உலகிற்கு ஆற்ற வேண்டிய கடமைகள், தங்கள் பிள்ளைகளுக்கு கல்வியூட்டல், உறவு களுடன் தங்கள் சந்தோஷங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், போன்ற பற்பல விஷயங்களை ஒரு குடும்பத் தலைவன், தலைவியிடம் இந்த உலகம் எதிர்பார்த்த வண்ண மாயுள்ளது.





எங்கள் காதலுக்காக மட்டும் இந்த வாழ்க்கையல்ல. உலகம் முழுமையையும் நாம் காதல் செய்ய வேண்டிய வர்களாவோம்.இன்றைய பொழுதுகள், இன்றைய வரவு களை மட்டுமா நாம் மையப்படுத்தி வாழ வேண்டும்?

திருமண முடிவுகளால் பெற்றோர், பிள்ளைகள் எதிரும், புதிருமாக இருக்க வேண்டியதில்லை. நல்லதைச் செய்யும்போதும் எதிர் விளைவுகள் சில ஜீரணிக்க முடியாமல் இருக்கும் இதற்கான மனஉறுதியை வளர்க்க வேண்டியவர்கள் நாங்களே! முரண்பாடுகளை உண்டு பண்ணாத காதலால் பிரச்சனைகள் எழுவதில்லை.

எனவே காதலுக்காக வாழ வேண்டும் என்பவர்கள் காதலுக்காக வாழ்க்கையை வீணாகக் கரைத்தல் ஆகாது. காதல் விஷயங்களில் சம்பந்தப்பட்டவர்கள், தங்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திக்காதுவிட்டால் அதுபோல் மடமை பிறிதில்லை.

பிள்ளைகளுக்கு ஏற்ற மணவாழ்க்கையை அமைத்திடப் பெற்றோரின் அனுபவரீதியான அணுகு முறை யிலும் மேலதிகமான நிதானம் தேவை. பிள்ளைகளின் விருப்பங்களைக் கேட்டறிவதில், பெற்றோர்களுக்கு எந்தவித கௌரவக் குறைச்சலும் ஏற்பட்டுவிடாது. எதிர்காலம் ஒரு தலைமுறை மட்டுமல்ல, பலதலைமுறைகள் சார்ந்த விடயம்!




RangaRakes Tamilnavarasam.com

தங்கள் காரியங்கள் முடிந்தால் சரி என எவரும் தப்பி ஓடமுடியாது. பாசத்தைப் பொழிவது மட்டுமல்ல, நல்ல நேயம் மிக்க வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தல் பெற்றவர்களின் பாரிய பொறுப்பு. பிள்ளைகளும் இதை உணர்ந்து பொறுமைகாப்பது சிறப்பு.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
03-10-2010







# அன்போடு இணைந்த கண்டிப்பு அவசியம்

பிள்ளைகள் பெற்றோரின் கரிசனையுடன் கூடிய கண்டிப்பை உணர்ந்து கொள்வதில்லை. சின்ன வயதிலேயே தங்கள் பிள்ளைகளைக் கண்டிப்புடன் வளர்த் தாலே அவர்களின் எதிர்காலம் வளமாகும் என எண்ணுவதில் தப்பேயில்லை. எனினும் பெற்றோரை மிரட்டும் செயல்களில் ஈடுபடும் பிள்ளைகளால் ஏற்படும் தொல்லைகள், மன உளைச்சல்களின் வலிகள் சொல்லும் தரமன்று. அன்போடு இணைந்த கண்டிப்பு அவசியமானது. எளிமையான வாழ்க்கை முறைகளைக் குடும்பத்தில் ஏற்படுத்துக! நல் ஒழுக்கத்தைப் பக்குவமாக ஊட்டுக!

முறையான கண்டிப்புக்கள் கூட கரிசனையுடன் செய்கின்ற செயற்பாடுகளே. ஆனால் இதனைப் பலரும் புரிந்து கொள்வதில்லை.

குறிப்பாக பிள்ளைகள் பலரும் பெற்றோரின் கரிச னையுணர்வை முழுமையாகத் தெரிந்து கொள்வ தில்லை.



RangaRakes
Tamilnavarasam.com

இதற்குப் பலவித காரணங்களுண்டு. பிள்ளைகளுக்குப் போதிய மனப்பக்குவம் இன்மை என்றே கூறப்படு கின்றது.

தங்களது பெற்றோர் ஏன் எதற்கெடுத்தாலும் அறிவுரை கூறிக் கொண்டேயிருக்கின்றார்கள், அப்படி நாங்கள் என்ன பெரிதாகத் தப்புகளைச் செய்துகொண்டா இருக்கின்றோம் என வளர்ந்த சிறார்கள் சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவர்கள் கூற்றிலும் சில உண்மைகள் இருக்கலாம்.

ஆயினும் தற்கால நடைமுறை வாழ்க்கை அனுப வங்களை நாம்பார்க்கும்போது, எமக்கு எம்மையறியா மலேயே பெரும் அச்சமடைவது இயல்பே. பெரும் குற்றச் செயல்களும், சமூக நல அக்கறையின்மை,தெய்வ நம்பிக் கையின்மை காரணமாக சமூகச் சீரழிவுகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாயுள்ளது.

இந்நிலையில் பெற்றோர் தங்கள் குழந்தைகள் செய்யும் சின்னத் தவறுகளைக்கூட பெரிதாக எண்ணிக் குழப்பமடைந்து, அவர்களிடம் கோபிப்பதில் ஒன்றும் புதுமையில்லை. உலகப் பிரச்சினை, சமூகக் குறைபாடுகள் பற்றிச் சின்னவர்களுக்குச் சொல்லியும் விளங்கப் போவது மில்லை. எல்லாமே யதார்த்தம், இதில் நாம் என்ன செய்ய முடியும் என்று நாம் ஒதுங்கி பிள்ளைகளின் நலனில் அக்கறையீனமாக நடப்பது மதியீனமேதான்.





இன்று சிறார்கள் மட்டுமல்ல வயதுவந்த பலரும், மற்றவர்கள்போல் பெரிய நிலையில் வாழ்வதற்கு ஆசைப் படுகின்றனர். இந்த ஆசை தவறும் அல்ல. ஆனால் தம்மை இந்த நிலையில் இருந்து உயர்ந்த நிலைக்கு உயர்த்த என்ன முயற்சிகளை மேற்கொள்கின்றோம் என்பதையிட்டுச் சற்றேனும் சிந்திப்பதேயில்லை.

இன்று எதிர்வீட்டுப் பிள்ளைகள் டாம்பீகமாக வாழ்வதைப் பார்த்துத் தமது பெற்றோரும் அவ்வண்ணமே தங்களுக்கும் மேலதிக வசதிகளைச் செய்தால் என்ன எனக் கருதிப் பெற்றோரை நச்சரிக்கின்றார்கள். இந்த விடயத்தைச் சம்பந்தப்பட்ட பெற்றோர் பக்குவமாகத் தமது பிள்ளை களுக்கு பொய் உரைக்காது உண்மைகளைச் சொல்ல வேண்டும்.

ஆனால் சொல்லப்படும் வார்த்தைகளால், அவர் கள் தாழ்வு மனப்பான்மைஅடையாது, உற்சாகமூட்டும் சொற்களாக, அன்புடன் அவர்கள் இதயத்தில் இருத்தி வைக்க முயலவேண்டும். அன்புடன் ஆதரவுடன் பேசப் படும் வார்த்தைகளுக்கு வலிமையுண்டு.

இன்று சில பெற்றோர்கள் பிள்ளைகள் எதைக் கேட்டாலும் வாங்கிக் கொடுக்கின்றார்கள். எதைப் பேசினா லும் ரசிக்கின்றார்கள். அவர்கள் தவறுகளை ஆமோதிக் கின்றார்கள். அப்படித்தவறு செய்யும் பிள்ளைகளைக் கண்டித்தால் அவர்களின் மனம் நொந்து போய்விடும் என அச்சப்படுகின்றார்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

எல்லாவற்றிலும் மேலாக பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு பயந்து வாழ்கின்றார்கள். தங்களிலும் மேலாகப் படித்த குழந்தைகள் இவர்கள், இவர்களிடம் போய்பேசினால், நாம்தான் வாங்கிக் கட்டவேண்டும் எனச் சில பெற்றோர் வெட்கத்தை மறந்து எம்மிடம் சொல்வதுமுண்டு.

குற்றங்களை உணரும் திறன் உள்ளவர்களுக்குப் புத்திமதி சொன்னால் ஏது பிழை உண்டு? தமது பெற்றோரின் மேலதிக வசதி வருமானங்களை அறிந்து வைத்துள்ள பிள்ளைகள் தங்கள் பெற்றோரை நச்சரிப்பதும் அவர்கள் மறுத்தால், பெரும் பிரச்சினைகளை உருவாகவதும் தற்போது சகஜமான சமாச்சாரங்களாகி விட்டன.

நாற்பது ஐம்பதாயிரம் பெறுமதியான செல்லிடத் தொலைபேசி வாங்கித் தந்தேயாக வேண்டும் எனப் பெற்றோரிடம் சண்டைசெய்யும் பிள்ளைகள், புத்தம் புது மோட்டார் சைக்கிள் வாங்கித்தராது விட்டால் ஓடிப்போய் விடுவேன் என மிரட்டும் பிள்ளைகள் என மனசைத் திருப்பி வாழும் இவர்களை எப்படிக் கண்டிப்பது எனத் தெரியாது பலரும் திணறித் தவிக்கின்றார்கள்.

அண்மையில் கூட செல்லிடத்தொலைபேசி வாங்கித் தரவில்லை எனப் பெற்றோரிடம் கோபித்து மாணவன் ஒருவன் தற்கொலை செய்த செய்தியை வாசித்திருப்பீர்கள்.





முன்னைய காலத்தில் பெற்றோர்கள் மட்டுமல்ல "ஒரு குடும்பத்துப் பையனை அல்லது பெண்ணை, உறவினர்கள் குறிப்பாக மாமன், மாமி, தாத்தா, பாட்டி, ஊரில் உள்ள பெரியவர்கள் அனைவருமே கண்டிக்கும் உரிமை அவர்களுக்கு இருந்தது. இது உண்மை உறவின் வெளிப்பாடு.

ஒவ்வொருவரும், இன்னும் ஒருவரிடம் கரிசனைகள் இருந்தன. ஆனால் இன்று இப்படியல்ல. ஒவ்வொரு உறவுகளும் ஒரே திசையில் நோக்கத் தயாராக இல்லை. நவக்கிரகங்கள் போல் ஒருவர் முகத்தைக் கண்டால் மறுபக்கமாகத் திருப்பிக் கொண்டு ஓடுகின்றார்கள்.

உறவின் பலம் அருகினால் அன்பு, பண்புகள் கூட அருகிப் போய்விடும். பிணைப்புக்கள் அறுந்தால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையாகச் சுருண்டு விழவேண்டியதுதான்.

இந்த உறவுக்கு ஆதார சுருதியான அன்பினையூட்டுவதற்கு, கரிசனையைக் காட்டுவதற்கு, அன்பான ஆலோசனைகள், கண்டிப்புகள் கட்டாயம் தேவையானதுதான்.

எல்லாப் பெற்றோருக்கும் தங்கள் குழந்தைகள் செல்லப் பிள்ளைகள் தான். அவர்கள் வாழ்வைச் செழுமையாக்கப் பெற்றோர்களே மேலதிகமான அன்பு, செல்லம்



RangaRakes


Tamilnavarasam.com

காட்டுவதால் மட்டும் குழந்தைகள் மன வளர்ச்சியடைவதில்லை. அன்போடிணைந்த கண்டிப்பான வழிகாட்டல்கள் அத்தியாவசியமான ஒன்றாகும். இதனைப் பெற்றோர்கள் கண்டிப்பாக உணர்வார்களாக! சின்னப் பிள்ளைகளில் களங்கம்இல்லை. நல்லதைச் சொல்லி உணர்த்துதல் எம் கடன்!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள் பகுதி"
05-09-2010







# அடங்கிப்போதல் அவமானப்படுதலை ஏற்பதைப்போலாகும்

பெண்ணின் அதீதமான மன்னிக்கும் சுபாவத்தையே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அவளை இம்சைக்குள்ளாக்கும் கணவனும் அவனது உறவினர்களும் குடும்ப உறவைக் கூறாக்குகின்றார்கள். அடங்கிப்போதல் அவமானப்படுதலை ஏற்பதைப் போலாகும். ஒருவரின் நற்குணத்தினைக் கௌரவமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். பெண்களும் தனது கணவனுக்கு விட்டுக்கொடுக்காது அடம்பிடித்தல் மடமை: கணவனும் மனைவியும் என்றும் நீங்காத காதலுடன் வாழ்ந்தால், இல்லம் இனிதாகும், புனிதமான கோவில் போலாகும்.

அதீதமான மன்னிக்கும் சுபாவம், பொறுமை, விட்டுக் கொடுத்தல் போன்ற குணாம்சங்களை, இயற்கையாகவே கொண்டிருக்கும் பெண்ணைக் கணவனும், அவர்களின் உறவுக்காரர்களும், தமக்குச் சாதமாகப் பயன்படுத்



RangaRakes
Tamilnavarasam.com

துகின்ற சந்தர்ப்பங்கள் சில குடும்பங்களில் காணப் படுகின்றன.

மனைவியின் நல்ல இயல்புகளைத் தாராள மனப் பான்மையைத் தனது அத்து மீறிய செயல்பாட்டிற்கு வசதியாக்கிக் கொள்ளும் கணவனும் அதே சமயம் விட்டுக் கொடுக்கும் கணவனை புரிந்துகொள்ளாத மனைவியரும் இருக்கின்றார்கள்.

ஒருவரின் நற்குணங்களை மற்றவர் பரஸ்பரம் கௌரவமாக பார்த்தாலும், அப்படியே அதனை ஏற்றுக் கொள்ளு தலைவிடுத்து, இத்தகையவர்களை ஏமாற்றுவது சிறந்த புத்திசாலித்தனமான செய்கை என்று கருதலாமா? இது போன்ற போக்கிரித்தனம் வேறு எது?

சில இல்லங்களில் பெண்கள் விதவிதமான துணி மணிகளை வகை தொகையின்றி வாங்கிக் குவிப்பார்கள். ஆனால் அந்த வீட்டின் இல்லத் தலைவனோ ஒரு பரதேசி மாதிரி உடை உடுத்திக் கொண்டு திரிவார். இவர் ஏன் இப்படித் தோற்றம் காட்டுகின்றார், ஏன் ஒரு வியாதி பிடித்தவர் போல் முகச்சவரம் செய்யாமல் சந்நியாசி போலத் தெரிகின்றார் என அவர் மனைவியிடமே கேட்டால் அவரோ சேச்.... சே.... அப்படி ஒன்றும் இல்லை அவர் எளிமையை விரும்புபவர், கண்டபடி நாகரீகமாக உடை களை விரும்புவதும் இல்லை.விலைகூடிய உடைகளை ஏன் உடுக்கவேண்டும் என்று கேட்கின்றார் என்பார்.





இது எல்லாம் ஏற்புடைய பேச்சு அல்ல. எளிமை என்பது தூய்மையாக அழகாக உலாவருவது தான். அழுக்குடன், முடங்கிக்கிடப்பது அல்ல. கணவனும் மனைவியும் பார்ப்பதற்கு லட்சண மான தோற்றத்துடன் வருவதற்கு காசு பணம் மட்டும் காரணமும் அல்ல. கணவன் நல்ல ஆடைகளுடன் வரும்போது மனைவி கசங்கிய, ஏற்றுக் கொள்ளச் சகிக்காத அலங்காரமுடன் வரக்கூடாது.

இன்று பல விஷயங்களில் பெண்கள் அவஸ்தைக்கு உள்ளாவதற்கு முக்கியமான காரணம் இவள் தனக்குரிய நியாயங்களை வெளிப்படுத்துவதை ஒரு எல்லை மீறிய செய்கை எனத் தனக்குள் எண்ணிக் கொள்வதுதான்.

இவளது தாயாரும் தகப்பனாரும் கூடப் பிறந்த வயது மூத்த சகோதரர்கள் கூட "லட்சணமாய், வாயை வைத்துக்கொண்டு சும்மா இரு, அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள், நீ பேசாமல் அடங்கி இரு" என்று சொல்லுவார்கள்.

அடங்கிப் போதல் என்பது அவமானப்படுதலை ஏற்பது போலாகும். கண்டபடி வார்த்தையாடல் நல்லது மல்ல. உரிமையினை விட்டுக் கொடுக்காத உறவுகளால் எழும் மன உளைச்சல்கள் அனேகமான குடும்பங்களின் நிம்மதியைக் கெடுக்கின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

ஒருவர் அன்பு செலுத்துவதை இன்னும் ஒருவர் அணைபோட எத்தனிப்பதுபோல மூடத்தனம் வேறு எது?

“நேற்று வந்தவள்” என ஒரு பெண்ணைப் புகுந்த வீட்டில் எவராவது சொல்வது சுத்த அபத்தமானது. நாங்கள் எல்லோருமே நேற்று வந்தவர்கள் தான். ஒரு கணம் பழகினும் அது சாஸ்வதமான அன்பாக, மாறாத காதலாகப் பரிணமித்துப் பிரவாகமெடுப்பது பூர்வ ஜென்ம புண்ணிய அருங்கொடை.

மனைவியின் மாறாத காதலைப் புரியாத கணவனும், கணவனின் எல்லையில்லாத காதலைக் கண்டு கொள்ளாத மனைவியும் நிகழ்காலச் சந்தோஷங்களைப் புறம் தள்ளி நிராகரிப்பவர்கள் ஆகின்றனர்.

மனைவி மேல் உரிமை இருப்பதால் அவள்மீது செய்யும் வன்முறைகளுக்கு நியாயம் கற்பிக்க முடியாது. அவள் என் மனைவி, இவளைக் கண்டிப்பது எனது கடமையும் உரிமையும் என்று சொல்லிய வண்ணம் பிறர் நகைக்கும் வண்ணம், அல்லது மற்றவர் மனம் பேதலிக்கும் வண்ணம் நடக்கவேண்டுமா?

ஒரு முக்கியமான விடயத்தை இத்தகையவர்கள் உணரல் வேண்டும். எந்த பழங்கால இலக்கியங்களிலுமே பெண்களை அடித்து, உதைத்துச் சித்திரவதை செய்ததான கதைகள் காட்டப்படவில்லை. இல்லறத்தின் சிறப்புக்களையே புலவர்கள் சொன்னார்கள். மாபெரும் இலக்கியங்களில் குடும்ப வாழ்வின் மேன்மை பற்றியே பேசப்பட்டன.





பெண்களின் சிறப்பு இயல்பு, ஆண்களுக்குரிய லட்சணங்கள்,அவன் குடும்பத்திற்கும் உலகிற்கும் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி உலகளாவிய இலக்கியங்கள் எமக்கு வலியுறுத்திச் சொல்லின.

பெண்மையை அடக்கி ஒடுக்கு என்று எவரும் சொன்னதேயில்லை. ஆயினும் பழம் பெரும் இலக்கியங்களுக்கு வேறான வடிவங்களை எமக்குச் சார்பாகப் புனைந்து, புதுக்கதை படைக்கின்றார்கள். இது ஒரு விரசமான, அத்துமீறல் நடவடிக்கைகள் என்பதை இவர்கள் உணரவேண்டும்.

இதே சமயம் இலக்கியத்தின், காவிய நாயகிகள் போல் தமக்கு மனைவி வரவேண்டும் எதிர்பார்க்கும் பேர்வழிகள், தாங்கள் இலக்கிய நாயகர்கள் போல் தம்மை உருவாக்கிக் கொள்கின்றார்களா?

இலக்கியக் கருத்துக்களைத் தமக்கு இசைவாக மாற்றி அதன் கருத்தைச் சிதைத்துப் பேசுபவர்கள் ஒரு போதும் உண்மைகளை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. இந்தக் கோழைத்தனமானவர்களின், செய்கையைச் சமூகம் ஆண்,பெண் பேதமின்றிப் புறம் தள்ளவேண்டும்.



RangaRakes
Tamilnavarasam.com

குடும்பம் என்கின்ற அற்புதத் தேன்கூடு வீண் கற்பனையான எண்ணங்களால், குதர்க்க வாதங்கள் பிறர் தலையீடுகள், அறியாமையால் குலுங்கி உடைபடல் தகாது. புரிந்து வாழ்ந்தால் இல்லம் தேவர் உலகிலும் மேம்படும்.

தினக்குரல்,
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
22-08-2010







# இளம் பராயத்துத் திருமணங்கள், பாதிப்புக்கள்

பால்ய விவாகங்களால் பாதிக்கப்படப் போவது பெண்களே! எமது முன்னோர் செய்த இக்காரியங்கள் தற்போதும் நடந்தேறுவது சமூகத்திற்கு உடன்பாடானதேயல்ல. சின்ன வயதில் காதலித்துத் திருமணம் செய்து சொல்லொவொண்ணாத துன்பங்களை சுமக்க வேண்டுமா? மனமுதிர்ச்சியற்ற வயதில், இனவிருத்தி செய்து, தேச ஆரோக்கியம் குன்றி நொந்து நோதல் மந்தபுத்தியன்றி வேறென்ன? காதலிப்பதே கௌரவம் என்று இளவயதினர் கருதி வீம்புக்காகவே பெற்றோரின் ஆசீர்வாதம் இன்றி மணம் முடித்து, ஈற்றில் குடும்ப பாரத்தால் இடுக்கண்பட்டு நலிவுறும் "வலி" கொடிது, கொடிது!

வயது முதிர்ச்சியடையாத நிலையிலேயே, இள வயதில் நடைபெறுகின்ற திருமணங்களால் உண்டாகும் பிரச்சினைகளை முன்கூட்டியே தெரிந்துகொள்வது மிகவும் அவசியமானதாகும்.



RangaRakes
Tamilnavarasam.com

எமது முன்னோர்கள் பால்ய விவாகங்களைச் செய்து வைத்தார்கள் என்பதை நாம் அறிவோம். இதனால் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களேயாவர். ஒன்றுமே அறியாத சின்னஞ்சிறுமிக்கு நெருங்கிய உறவு முறை என்கின்ற காரணத்தால் ஒரு சின்னப் பையனாகவும் விபரம் அறியாத ஒருவனுக்குத் திருமணமான நாளில் இருந்தே அடங்கி,ஒடுங்கி வாழ்ந்திடல் வேண்டுமென அன்றைய சமூகம் எதிர்பார்த்தது.

இந்தக் கொடுமையான நிகழ்வுகளில் இருந்து ஒருத்தி எப்படி வாழ்க்கையினை ஓட்டினாள் என்பதை எம்மால் ஜீரணித்தும் பார்க்க வியலாது. தற்செயலாக ஒரு இளம் சிறுமியின் கணவன் இறந்துபோனால், அந்தச் சிறுமி சமூகத்தில் ஒடுக்கப்பட்டவளாக, அதிஷ்டமற்றவளாகக் கருதப்பட்டாள். அதுமட்டுமா, இயற்கையாக நடந்த மரணத் திற்கு அந்தப் பெண்ணே காரணமாக்கப்பட்டுச் சிறை வைக்கப்பட்டதுபோல் வீட்டினுள் முடக்கப்பட்டாள்.

குறிப்பாக வட இந்தியாவில், பார்ப்பன குடும்பங் களில் பால்ய விவாகம் செய்த சிறுமியின், கணவன் திடீர் என இறந்துவிட்டால் அவளுக்கு மொட்டை அடித்து ஒதுக்கி வைக்கப்பட்டாள். மேலும் அவள் தனது இறுதிக்காலம் வரை இதே கோலத்தில், திருமணமாகாமல், எந்த நல்ல சுப காரியங்களிலும் கலந்து கொள்ளாமல் ஒதுக்கப்பட்டதுடன், அவளைப் பார்த்தாலே ஒரு வேண்டப்படாத பொருள் பண்டமாக நோக்கப்பட்டாள்.





இந்த சமூக அநீதிக்கு அவர்களின் பெற்றோர்கள் எங்ஙனம் உடன்பட்டார்கள். சமூகத்திற்குப் பயந்து வாய் மூடி மௌனியாகவே வாழ்ந்து, மறுகித் தேய்ந்தே தங்கள் வாழ்வை ஓட்டியிருப்பார்கள். மேலும் அவளது மாமன், மாமியார் எவ்வளவு கொடுமைகளை சித்திரவதைகளை, உடலாலும், உள்ளத்தைச் சிதைக்குமாற்போல் பேசியும் இருப்பார்கள்.

இவைகள் எல்லாம் நடந்து முடிந்த கடந்துபோன காலங்கள். ஆனால் இன்னமும் கூடச் சிலர் சின்னவயதில் திருமணம் செய்துபடும் அவஸ்தைகள் சொல்லும் தரமன்று. சின்ன வயதில் திருமணம் செய்வதைச் சிலர் கௌரவமாகவும் கொள்கின்றார்கள். பதினெட்டு வயதிற்கு மேலே உள்ளவர்களே தேர்தலில் வாக்குரிமை பெற்றவர்கள் மட்டுமல்ல அவர்கள், தாம் விரும்பிய வண்ணம் கணவன், மனைவியாகும் தகுதியையும் பெற்றுவிடுகின்றனர்.

ஒரு பெண், அல்லது ஒரு ஆண் தனக்கு விரும்பிய வர்களைப் பரஸ்பரம் தெரிவு செய்ய உரிமையுண்டு. இன்றும் கூடப் பல குடும்பங்களில் தங்கள் உறவுகள் விட்டுப் போய்விடக் கூடாது என்பதற்காக, எதிர்காலப் பின் விளைவு களை நோக்காது இளவயதிலேயே திருமணம் செய்து வைக்கின்றார்கள். குழந்தைப் பருவத்திலேயே "இதோ... இவளைத்தான் நீ திருமணம் செய்யப் போகின்றாய்" எனச் சொல்லிச் சொல்லியே வளர்த்து வருகின்றார்கள். ஆனால் பிள்ளைகள் வளர்ந்தபின், இவர்களின் மனோநிலை மாறி



RangaRakes
Tamilnavarasam.com

விடுகின்றது. சில சமயம் முறைப் பையன் அல்லது முறைப் பெண் வயது வந்தபின் பெற்றோர் கூறியபடியே திருமணம் நடைபெறுவதுமுண்டு.

ஆயினும், சிலசமயம் நிச்சயிக்கப்பட்ட இளைஞர் வயது வந்த பின் வேறு பெண்ணைக் கல்யாணம் செய்வதும், அவனையே இளவயதில் இருந்தே நம்பி, மாறாத அன்பு கொண்ட முறைப்பெண் ஏமாற்றமடைவதும் தற்போது நடைபெறும் சங்கதிகளாகும். இதேபோல் படித்த பெண் தனக்குப் பொருத்தமான வேறு ஒருவனை மணம் முடிப்பதும், கல்வி கற்காத, ஊரில் சாதாரண நிலையில் உள்ள ஒருவனுக்கு பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட முறைப் பெண் தான் விரும்பிய வேறு ஒருவனைத் திருமணம் செய்து கொண்டமையினால் வாழ்க்கையில் பேரிடி வீழ்ந்ததுபோல் மனம் துவண்டு நொந்து போவதுமுண்டு.

இன்று வாலிபக் கவர்ச்சியினால், எதிர்காலத்தை வளம்படுத்தும் முன்னரே காதல் வயப்படுவதால் ஏற்படும் தாக்கங்கள் மிகவும் பாரதூரமாக அமைந்துவிடுவதுண்டு. சின்ன வயதிலேயே திரைப்படங்களைக் கதைகளை வாசித்து காதல் செய்வதே தமது தலையாய கடமை எனுமாற்போல், பெற்றோரின் சம்மதமின்றியே திருமண பந்தத்தினுள் நுளைந்து கொள்கின்றார்கள்.

குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு வேலையும் இன்றி கல்வியை இடைநடுவில் கைவிட்டதனால் எந்த வேலையை





யும் பெற்றுக்கொள்ள முடியாமல் திருமணம் செய்தால் அடுத்து என்ன இவர்களால் செய்யமுடியும்?

தன்னையே காப்பாற்ற முடியாமல் பெற்றோர்களை நம்பிவாழும் ஒருவன்,திடீர் என ஒருத்தியை அழைத்து வந்தால் பெற்றோர் தான் என்ன செய்ய இயலும்? பெற்றோரின் ஆசீர்வாதம் இன்றி எப்படி நிம்மதியாக வாழ முடியும் என்பதை இவர்கள் உணர்வதேயில்லை.

உரிய முதிர்ச்சியடைந்த வயதில் ஒருவரை ஒருவர் விரும்புவதற்கும், வயது முதிர்ச்சியடையாத நிலையில் காதலிப்பதற்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. சின்ன வயதில் காதலிப்பதைச் சமூகம் கேலியாகவே நோக்கும். இத்தகையவர்களால் பெற்றோர்களுக்கு ஏற்படும் மனச் சுமை, உள்ளக் குமுறல்கள், பொருளாதாரச் சிக்கல்கள் சொல்லும் தரமன்று. மேலும் வயதிற்கு மூத்த பெண் சகோதரிகள் இருக்கும்போது, திடீரென வயது முதிர்ச்சி யடையாத இளம் பெண்பிள்ளையுடன் வந்து நின்று, “நான்இவளைத் திருமணம் செய்துவிட்டேன்” என்றால் எந்த தாய், தகப்பனுக்கும் அதிர்ச்சி ஏற்பட்டுவிடாதா?

இன்று பள்ளிக்கூடத்தில் தாங்கள் பெண்களுடன் பேசினால் அல்லது அவர்களுடன் சினேகிதம் கொண்டாலே பெருமை அல்லது கௌரவம் என இளவயதிலேயே பையன்கள் கருதிவிடுகின்றார்கள்.



RangaRakes

Tamilnavarasam.com

போதாதற்கு இளைஞர்கள் தமக்குள் ஒருவரை ஒருவர் சீண்டி அவர்களை வேண்டுமென்றே காதல் வலையினுள் சிக்க வைத்தும் விடுவதுண்டு. பெண்களின் நட்பை இளைஞர்களும், அவ்வண்ணமே இளைஞர்களின் நட்பை இளம் பெண்களும் வைத்துக்கொள்வதே நாகரீகமானது என்றும் எண்ணப்படுவதுண்டு.

மாறி வரும் புது உலகில் ஆண், பெண் வேறுபாடின்றி நட்புக் கொள்வதில் ஏதும் தவறு கிடையாது. ஆயினும் தமது பராயமறியாது, எதிர்கால நலன்களை உணராது, நட்பே காதலாகி, உடனே திருமணம் செய்வதால் பாதிப்படைவது யார்?

திருமண வாழ்விற்கு மனமுதிர்ச்சி அவசியம். அத்துடன் பொருளாதார நிலை ஸ்திரமாக்கப்படாது விட்டால், வாழ்வே அஸ்தமனம் போலாகிவிடுமன்றோ? கண்டபடி ஆலோசனைகளைக் கூறுவதும் வாலிப வயதில் அனுபவிக்க வேண்டியதை உடனே அனுபவித்தேயாக வேண்டுமென தவறான பாதைக்கு வழிகொள்பவர், சொல் கேட்டுத் திருமணம் புரிந்தவர்கள் திருமணம் முடிந்த பின்னர் படும் கஷ்டங்களுக்கு முன்வந்து உதவிடப் போவதுமில்லை. போசாமல் நழுவி ஓடி துன்பத்தையே வேடிக்கை பார்ப்பார்கள்.

மனம் முதிர்ச்சியடைந்த உரிய வயதில் முறைப்படி திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதே





சாலச் சிறந்ததாகும். இன்று பலர் மிகவும் சின்ன வயதில் திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்று அவர்களைக் கவனிக்க வழிதெரியாமல் தவித்துப் போகின்றார்கள்.

அதுமட்டுமல்ல சிறந்த போஷாக்கு இன்மையால் பிள்ளைகள் வாடிப்போய் நோய் நொடியில் தாக்குண்டு போவது முண்டு. சிறந்த கல்வியூட்டல் இன்றி எங்ஙனம் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக்க முடியும். "குலத் தொழில் செய்தால் சரி" என்று இனி வரும் காலங்களில் சொல்லமுடியாது. "கல்வியின்றேல் வாழ்வு இல்லை" என்றாகிவிட்டது.

சிறுவயதில் திருமணம் செய்த பலர் ஒரு சில ஆண்டுகளிலேயே வயதுவந்த முதியவர்கள் போலத் தோற்றம் காட்டி நிற்கின்றனர். மிகவும் வயது முதிர்ந்த பின்னர்தான் திருமணம் செய்ய வேண்டும் என்று கூறிட முடியாது.

எமது சமூக அமைப்பு இன்னமும் மாறிவிடவில்லை. சீதனம், சாதி அமைப்பு, தவறான கொள்கைப் பிடிப்புகளால் வயதான யுவதிகள் திருமணமாகாமல் இருப்பது வேதனையான விஷயம். ஆனால் நல்ல வழிகாட்டல் இன்றி மன விகாரப்பட்டு சின்ன வயதில் திசை மாறிப் போவது தடுக்கப்படல் வேண்டும். உரிய, உயரிய காலத்திலேயே உரிய பணிகளைச் செய்தல் சிறப்பு.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி - 11-04-2010



RangaRakes
Tamilnavarasam.com

# உன்னோடு நீ பேசு!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

*வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 09*

*சிந்தனைக் கட்டுரைகள்*

RangaRakes

Tamilnavarasam.com



# வீரம்

கோழைகள், தினம் தினம் செத்து எழுந்து மீண்டும் மீண்டும் மடிந்து எழுகின்றனர். இது ஒரு வாழ்வாகுமா? தனக்குரிய ஜீவாதார உரிமைகள் மறுக்கப்படும் போது, கோழைகள் கூட வீறு கொண்டு எழுவதுண்டு. சும்மா போகும் விலங்குகளை சீண்டினால் அவை சீறி எழும். துணிச்சலுடனும் வீரத்துடனும் வாழுவதை இறைவன் அங்கீகரிக்கின்றான். தன்னால் எதையுமே சாதிக்க முடியும் என்கின்ற உணர்வுகள் இன்றேல், இந்தப் போட்டிகள் மிகுந்த புவனியில் எப்படித்தான் வாழுவதோ? தேவையின்றி ஆணவம் கொண்டு மிரட்டுபவனை, அடிக்கத் தாக்க முற்படுபவனை, உருட்டி அடிப்பது தர்மம். தைரியமானவன் முரட்டுத்தனமானவனாக இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. வீரன், தன் ஆளுமையை எளியோர் வலிமை குன்றியோரிடம் காட்டமாட்டான். வீரத்துடன் விவேகம் இணைதலே சிறப்பு!

கோழைத்தனமான வாழ்க்கைதான் மிகவும் கஷ்டமான வேதனைக்குரிய, சாதனைகள் எதுவுமற்றதுமானதுமாகும். கோழைகள் தினம் தினம் செத்து, எழுந்து



RangaRakes Tamilnavarasam.com

மீண்டும் மீண்டும் மடிந்து எழுகின்றனர். இப்படி வாழ்வது ஒரு வாழ்வாகுமா? மிகவும் இக்கட்டான நேரத்தில், கோழை கூட வீறு கொண்டெழுந்து வீரனாக உருவெடுப்பதுமுண்டு. பிரச்சினைகளுக்கு ஆரம்பத்தில் முகங்கொடுக்க அஞ்சுப வர்கள், எப்படியும் இவற்றிற்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என்கின்ற கட்டாயம் ஏற்பட்டால் அவன் எதனையும் ஏற்கும் சித்தம் கொண்டவனாக வீரனாக மாறிவிடுவதும் இயற்கை யானதேயாம்.

தனது ஜீவாதார உரிமைகளை மனிதன் மட்டுமல்ல, விலங்குகள் கூட விட்டுக் கொடுப்பதேயில்லை. இந்த நிலை அனைத்து உயிர்களுக்கும் இறைவனால் அளிக்கப்பட்ட வரமுமாகும். எல்லா ஜீவன்களுமே சமத்துவமாக வாழ்ந் தேயாக வேண்டுமென்பதே இறை ஆணையுமாகும். எனவே, துணிச்லை வீரத்தை மனிதன் கொண்டு வாழ்வது என்பது கடவுளின் விருப்பமும் அங்கீகாரமும் என்றே அறிக!

தன்னால் எதனையுமே சாதிக்க முடியும் என்கின்ற உணர்வு இன்றேல் இந்தப் போட்டிகள் மலிந்த புவனியில் எப்படித்தான் வாழுவதோ? இதன் பொருட்டு மற்றவனை அடித்து வீழ்த்தி விட்டு வாழ வேண்டும் என்கின்ற தவறான எண்ணத்தைக் கொண்டால் அது அபத்தம். முற்றிலும் கேவலமான மனப்பான்மையுமாகும்.

சும்மா போகின்றவனைச் சுரண்டி, வேடிக்கை பார்க்க எண்ணினால், அவனிடமிருந்து கெட்ட வார்த்தைகளைக் கேட்டேயாக வேண்டும். பேச முடியாதவர்கள் ஏதோ ஒரு





வழியில் வன்மம் தீர்ப்பார்கள். எங்கள் துணிச்சலை, அநாவசியமாகக் கேலிக்குரிய விதத்தில் காட்டலாமா?

எங்கள் வீரத்தைப் பிறர் அறியவேண்டும் என்று காட்டு வதற்காக தேவையற்ற பலப்பரீட்சையில் ஈடுபட்டு மூக்குடை படக்கூடாது. இந்த அறிவிலித்தனமான போக்குகளால் அல்லல்படுவதும், அவமானப்படுதலும் தேவைதானா?

எங்களிடம் நியாயம், நீதி அஸ்தமித்துவிட்டால், வீரம் தானாகவே விடைபெற்றுவிடுகின்றது. "மனம்" என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. கண்ணுக்குத் தெரியாத "விஸ்வ ரூபி". இதன் வலு அபாரமானது. மனிதர் விடுகின்ற தவறுகளை அது நொடிப் பொழுதும் சுட்டிக்காட்டி நிற்கின்றது. மனச்சாட்சியைக் கொன்றுவிட்டுத் தன் வழி நடப்பவன், முடிவில் தன் வாழ்வையே வீண் நாளாக்கி விடிவு அற்ற நிலைக்குள்ளாகின்றான். மனச்சாட்சிப்படி நடக்காத பேர்வழிகள் வீண் விதண்டாவாதம் செய்வார்கள். காலப்போக்கில் மனம் மரத்தது போலாக மனச்சாட்சி ஒதுங்க, நடைப்பிணம் போலாவான். ஆனால் புறஉலகில் தன்னை ஒரு வீரன்போல் காட்ட முனைந்து தோற்றும் போவான்.

மாபெரும் வீரன் என்பவன் தன்னிடம் உள்ள தவறு களைப் பிறர் கண்டு சொன்னால் அதனைப் பணிவுடன் ஏற்றுக் கொள்வான். இதனால் இவன் வீர உணர்வு மேலும் வலுப்பெறுகின்றது. தோல்விகளைத், துயரை ஏற்பவன் தான்



RangaRakes

Tamilnavarasam.com

வீரன். தன்மானம் என்பது தமது தோல்விகளை மறைப்பதோ, மறுப்பதுமோ அல்ல. புரிந்து கொள்வோமாக! உள்ளதை உள்ளபடி ஏற்று பிறரிடம் கையேந்தாது வாழ்க்கையில் எதிர் நீச்சலடிப்பதே மேலான வீரமும் தன்மானமும் ஆகும்.

இன்று வீரத்திற்குத் தவறான அர்த்தங்களைக் கொண்டும் வாழ்பவர்கள் இருக்கின்றார்கள். ஆள், அடிமை, ஆயுதங்கள் மட்டுமே இருந்துவிட்டால்மட்டும் வீரன் ஆகி விடலாம் என நினைக்கின்றார்கள். நல்லது செய்வதற்கே வீரம் துணை நிற்க வேண்டும். தன் சுயநலத்திற்காகவும், தானும் தன்னைச் சார்ந்தவர்கள் மட்டும் வாழ்வதற்காகவும் போராடுவது வீரமாகுமா? இத்தகையவர்கள் பிறரை இம்சிப்பதால், நன்றாக வாழ்ந்துவிட முடியும் எனத் தப்புக்கணக்குப் போடுகின்றார்கள்.

பெரிய துணிச்சல்காரர்களாக வாழுபவர்கள் பெரும்பாலானோர் மௌனிகளாகவே காணப்படுகின்றனர். இவர்கள் அன்புள்ளம் கொண்டவர்களாகவும் இருப்பர். தனக்காக வாழுபவர்கள்தான் பயத்துடன் கோழைத்தனமாக, எங்கே யாராவது தமக்கு இடையூறு செய்து விடுவார்களோ என எண்ணி மனதைச் சித்திரவதைப் படுத்திக் கொள்கின்றார்கள்.

ஒருவனை அச்சுறுத்துவதனால் எவருமே கௌரவம் பெற்றுவிட முடியாது. இவர்கள் முடிவில் அஞ்சி அஞ்சி





ஒளிந்தே வாழ வேண்டியதுதான். எதிரிகளை இவர்கள் தாமாகவே சம்பாதித்துக் கொள்கின்றார்கள். பம்பாய் நகரில் பிரபல தாதா ஒருவர் பற்றி நான் படித்தேன். அவரது பேட்டி சுவாரஸ்யமாக இருந்தது. தன்னை அவர் காப்பாற்றிக் கொள்ள ஒரு பெரும் கூட்டத்தையே தன்னைச் சுற்றி வைத்துக் கொண்டார். அவரது பெரிய மாளிகை கூட ஒரு சிறைக்கூடம்தான். இந்த வாழ்வு முறையை வீரம் மிக்கது எனச் சொல்ல முடியுமா?

அவர் பார்வைக்கு ஒரு நோஞ்சான் போலவே இருந்தார் எனச் சொல்லப்பட்டது. அவர் சொன்னார், "என்னை எல்லோருமே தாதா, பெரிய சண்டைக்காரன் என்று சொல்கின்றார்கள். நான் யாருடனும் வீணாகச் சண்டைக்குப் போவதுமில்லை. நான் ஒரு அப்பாவி. இந்தச் சமூகம் ஏன்தான் இப்படிச் சொல்லிச் சித்தரிக்கின்றதோ தெரியவில்லை. என்னைப் பார்த்தால் பெரிய தாதா போலவா தெரிகின்றேன்? இது ஏன் என இன்னமும் விளங்கவில்லை" என்றார்.

உண்மையில் அவர்மீது ஏராளமான குற்றவியல் வழக்குகள், குற்றச்சாட்டுக்கள் குவிந்து இருந்தன. நகரில் மிகப்பெரிய செல்வாக்குள்ளவர். சகல பிரமுகர்களுக்கும் இவரது தயவு தேவைப்பட்டது. அரசியல் செல்வாக்கு வேறு. இப்படியிருப்பவர், வாழ்க்கையைச் சுதந்திரமாக இரசிக்கத் தெரியாமல், கோழைபோல் கல்லறைக்குள் அடைபட்டுக் கிடப்பதுபோல், கட்டிடத்திற்குள்ளேயே கிடந்து வெளியே



RangaRakes
Tamilnavarasam.com

வரமுடியாமல் வாழ்வதும் ஒருவாழ்வோ? மனத்துக்குள் பயந்தும் வெளியே வீரன் போல் காட்டி வாழ்வது, தன்னையும், தான் வாழும் சமூகத்தையும் ஏமாற்றுகின்ற எத்தர்களுக்குரிய செயல்.

செயல்களில் முழுமனதுடன் உழைப்பவர்கள், எதிர் வரும் எதிர்ப்புகளை உடைத்தெறிந்து முன்னேறி விடுகின்றார்கள். வெற்றிகளின் பொருட்டுச் செருக்கு அடையாது, மென்மேலும் எதை எதை எடுத்து ஆள்வது என்பதிலேயே குறியாக இருப்பவனே உண்மையான தைரியசாலியுமாவான்.

செயல்வீரன் சாந்தியுடன் வாழ்கின்றான். கோழை தைரியசாலி வேடம் போட்டாலும் அது அவன் ரூபத்தை இறுதியில் காட்டிவிடும்.

வெற்றி கொண்டவன் மட்டுமே வீரனாகிவிட முடியாது. தொடர்ந்து தோல்விகளைக் கண்டும் துவளாது தொடர்ந்து சென்று கொண்டிருப்பவனும் உண்மையான வீரன்தான்.

சிலவேளை சாதாரணமானவர்கள் மிகுந்த சிரம மடையா மலேயே வெற்றிகளைத் தொட்டு விட முடியும். ஆனால், கஷ்டப்பட்டும் உடனடியான பெறுபேறுகளைக் காணாது விடினும்கூட, முயல்கின்றவனைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? எனவே, தோல்வி கண்டவனைக் கேலி பேச வேண்டாம். அவர்கள் மனம் உடைந்துபோக உங்கள்





கண்டனங்களை, விமர்சனங்களைத் தவிர்த்துவிடுங்கள். உங்களால் தூஷிக்கப்பட்டவன் தன் முயற்சி காரணமாக எழுந்து நின்றால் அப்புறம் என்ன முகத்துடன் அவர்களைப் பார்த்திட முடியும் சொல்லுங்கள்!

வெற்றி பெற்ற ஒருவரைப் பாராட்டாமல்இருப்பதும், பொறாமை காரணமாக வக்கிரவார்த்தையாடுவதும் வீணாக பகையுணர்வை, எதிரிகளைச் சம்பாதிப்பதுமேயாகும். நல்ல முறையில் சாதனை செய்பவர்கள், தகாத செயல்களைச் செய்து தங்களது ஆன்ம பலத்தை வீண் விரயமாக்குவது மில்லை.

தங்களிலும் வலிமை குறைந்தவர்களிடம் மட்டுமே மோதிப்பார்ப்பதில் அலாதி திருப்திப்படுபர்களும் இருக்கின் றார்கள். இத்தகையவர்கள் சாதாரணமான அப்பாவிகளை மிரட்டுவதன் மூலம் பத்துப்பேர் தங்களுக்குப் பயந்தேயாக வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். "பார்த்தீர்களா.... அவன் எத்தனை பேர்களை அடக்கி ஆளுகின்றான். இவனுடன் பேசும் போதே நாங்கள் சர்வஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்று விலகி ஓடும் மனிதர்களை பார்த்துக் குரூர திருப்திப்படுபவர்களை என்ன செய்ய?

ஆனால், கண்டபடியாக இப்படிச் சண்டித்தனமாகப் பேசுபவர்கள், சில சமயம் எதிர்பாராதவிதமாக, தெரியாத் தனமாக நல்ல முரட்டு ஆசாமியிடம் அகப்பட்டு நசுங்கு வதும், பின்னர் சாஸ்டாங்கமாக விழுந்து கும்பிட்டு



RangaRakes

Tamilnavarasam.com

மன்றாடித் தப்பித்து ஓடுவதும், அதைக்கண்டு மற்றவர்கள் "அடடா.... இவனுக்கா நாங்கள் இவ்வளவு காலமும் பயந்து நடுங்கி வந்தோம்" என்று சொல்லி நகைக்கும் சம்பவங் களும் நடப்பதுண்டு. வஞ்சகமாக வம்பிற்கு இழுத்தால் பயந்தவனும் எழுந்து அடிப்பான்.

பலமிழந்தவனைத் தாக்குதல், துன்பப்படுத்துதல் ஒரு வீரன் செய்யும் செயல் அல்ல. உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்களை வாய்ப்புக் கிடைக்கும் போது எதிர்பார்த்து முதுகில் குத்துவது, தங்கள் மீது வலிமையில்லாத வெறும் சதி மூலம் செய்கின்ற மட்ட ரகமான வேலையேயாகும்.

பிடிக்காதவர்களின் குடும்பங்களுக்குள் புகுந்து குழப்பங்களைச் செய்வது, நண்பர்களைப் பிரித்துவிடுதல், பொது அமைப்புக்களில் நிர்வாகத்தினுள் கலவரங்களை ஏற்படுத்தல், சமூக இணைப்பினைத் துண்டாடும் சதிநாச வேலைகள் எல்லாமே கோழைகளின் வேலைதான். இங்கு உண்மையான "வலிமை" என்கின்ற பேச்சுக்கே இட மில்லை. ஆனாலும் இத்தகைய காரியங்களைச் செய்வோர் தங்கள் செயல்களை வீராப்புடன் சொல்லிப் பெருமைப் படுவதுமுண்டு.

கற்றறிந்த பெரியோர்களைத் துச்சமெனக் கருது வதும், தாங்கள் சாராத மதம் மொழி, இன, மக்களை தங்களை விட அந்தஸ்து குறைந்தவர்கள் என்று வீம்புடன்





பேசுவதாலும் அவன் தைரியசாலி ஆகிவிட முடியாது. பிறரைக் கவர்ந்து அவர்களது அன்பினைப் பெற்று, ஆட் கொள்வதைவிடப் பெரிய வலிமை ஏது உளது? மனங்க ளைக் கூறாக்கிப் பார்ப்பதை விடுத்து எல்லோரையும் ஒன்றாக நோக்கி, வேற்றுமைகளற்ற மானுடனாக வாழ்வதைவிட வேறென்ன பலம் உண்டு!

எல்லோருமே செயல்வீரர்களாக வேண்டும் என்றே ஆசைப்படுகின்றார்கள். ஆனால் அப்படி உருவாகமட்டும் சங்கடப்பட்டுக் கொள்கின்றார்கள். மனோதிடத்தை உருவாக்கவும், அதன் மூலம் உழைப்பினை நல்கவும், பூரணமான தயார் நிலையில் இல்லாததாலேயே சோம் பேறிகளும், கோழைகளும், மலிந்துவருகின்றார்கள்.

❖ நிதான புத்தி, பொறுமை
❖ தியானம்
❖ போதிய தேகப்பயிற்சி
❖ நல்ல நூல்களைக் கற்று அறிதல்
❖ சுகாதாரமாக வாழப் பழகுதல்
❖ நல்ல துணிச்சல் உள்ளவர்களுடன் பழகுதல்
❖ மன வைராக்கியத்தினை உடைக்கும் நபர்கள் உறவைக் களைதல்

மேற்கண்ட வழிமுறைகள் உள்ளத்தினைத் தெளிவு டன் வளமாக்கும். இதனால் வீரமுடன், எந்த துயர்கள், சோதனைகள், வந்துற்றாலும் அதனை எதிர்கொண்டு அதனை இல்லாதொழிக்கவும் முடியும்.



RangaRakes
Tamilnavarasam.com

நல்ல உடல் வளம் இருந்தால் தான், வாழ்வில் சந்தோஷமும் தெளிவும் பிறக்கும். உடல் ஆரோக்கியம் குன்றினால், மனதில் பயம், தெளிவு, இன்மை, சந்தேகம், கோபம், கோழைத்தனம் எல்லாமே குடிகொண்டுவிடும்.

“செயற்கரிய கருமங்களைச் செய்தேன் இன்னமும், இன்றும் செய்து கொண்டேயிருக்கின்றேன். இனிவரும் காலங்களிலும் சாதனைகளை வீறு கொண்டு செய்வேன்” என்று சதா மனதில் சொல்லிக் கொண்டேயிருப்போமாக!

வீரம் என்பது ஒருவனை ஒருவன் அடித்து வீழ்த்து வதுதான் அல்ல. திரைப்படங்களில் இதுதான் வீரம் என்று சின்னவர்களுக்கும், ஏன் பெரியவர்களுக்கும் காட்டப்பட்டு வருகின்றது. பொறுமை, அன்பு, மௌனம் இவைகளைக் காட்டுதல் என்பது எத்தகைய ஆன்மபலம் என்பதனை நாம் எப்போது உணரப் போகின்றோம்? வெறும் மன உணர்ச்சிக்கு அடிமையாகி, தடி, பொல்லு ஆயுதங்களுடன் மோதுவது என்ன கலாசாரமோ தெரியவில்லை. நிதான மான குணாம்சங்கள் மூலம் ஈட்டும் வெற்றிகள் பற்றி மக்களுக்குச் சொல்லப்படுவதில்லை.

பகையுணர்வை மிகைப்படுத்தி முறுக்கேறி, அராஜ கம் புரிவதில் என்ன கெட்டிக்காரத்தனமோ தெரியவில்லை. பழிவாங்குதலும், இடி முழங்குவது போலப் பேசுவதும், மனதைச் சல்லடையாக்கிச் செல்லாக்காசான பெறுமதி யற்ற காரியமாற்றுபவர்களை, அறவே மாற்றிவிடும் ஆன்





திகளுடன் பல அரசியல் தலைவர்களும் இருந்திருக் கள்.

உலகை வழிநடத்துபவர்கள் ஆன்மபலம் உள்ளவர் க இருந்தால்தான் எங்கும் அமைதி, சாந்தி பிரவா ம். அணுகுண்டின் வேகத்தை, அதன் உக்கிரத்தை, ஆன்மபலம் பெற்றவனின் பார்வையும் கனிவான சும் அழித்து ஒழித்துவிடும். எவர்க்கும் துன்பத்தைக் டுப்பவனை விட அதனை அழிப்பவனே வீரன். துணிந்த குத் தூக்குமேடை பஞ்சணை என்று சொல்வார்கள்.

சாவதற்கு அச்சமடையத் தேவையில்லை. ஆனால், ாவதற்காகவா பிறந்தோம்? இல்லை, துணிச்சலுடன் தீவிரமாக உழைத்து முன்னேறுவதற்கே பிறந்தோம். சாவு எப்போதாவது வரட்டும், இருக்கின்ற வாழ்வை வளமாக்கு! கலங்காது வாழ்வாய்! மற்றவர்களுக்கும் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டு. பிறர்க்கு வாழவழி சமைத்துக் கொடுப்பா யாக!

உண்டு உறங்குவது மட்டும் மிருகக்குணம். அது வேட்டையாடி உண்பதனால், அதனை வீரம் மிகுந்தது என்று கூறிப் பாராட்ட முடியாது. அது அதன் இயல்பு. மனிதன் உண்பதற்காகப் பிறந்தவனுமல்ல, மற்றவரை அடித்து ஒடுக்குவதற்காகவும் பிறந்தவனுமல்ல. மிருகம் செய்யும் வேலையை நாம் செய்யமுடியுமா? மானுட தர்மம் என்பது மனிதனாக இயல்பாக ஒன்றிணைந்து வாழ்வதே



RangaRakes
Tamilnavarasam.com

யாம். எங்கள் வல்லமை, வீரம், துணிச்சல், எவர்க்கும் தொல்லைகள் தராத, உலகிற்கு நல்லன செய்தலுக்கு மட்டுமேயாகும் என உணர்க!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
20-05-2007







# எதிரிகள் 1

நேரிடையாக தாக்கவரும் எதிரிகளை விட வஞ்சக நோக்குடன், சதி செய்து ஒருவரை ஒழிக்க முற்படுபவன், கோழைத்தனமான எதிரியாவான். வாழ்க்கையில் எதிரிகளை உருவாக்காமல் இருப்பது எமது புத்திசாலித்தனமாகும். நல்ல சிந்தனைகளுடன் அன்பினை ஊட்டுபவர்களுக்கு எதிரிகள் எதிர்ப்படமாட்டார்கள், இவர்களிடம் சரணடைந்தே போவார்கள். தமக்கு உகந்தவர்கள் அல்லாதவர்களுடன. விலகி இருப்பது நல்லது. கண்டபடி பேச்சை வளர்ப்பது, தீயோரிடம் உறவு பூணுவது, வலிந்து எதிரிகளை வளைத்து அணைக்கும் செயல். எந்தப் பலவானும் நியாயமற்ற முறையில், எவருடனும் போராடி வெல்ல முடியாது. எதிரிகளை உருவாக்குதலைவிட எவரையும் நேசித்து ஏற்றுக் கொள்ளுவதே மானுட தர்மமுமாகும். புதிது, புதிதாக நல்ல நண்பர்களைத்தான் சேர்த்துக் கொள்ள வேண்டும், எதிரிகளை அல்ல!

எதிரிகளை உருவாக்காமல், இருப்பது புத்தி சாதுர்யமான காரியமேயாகும். எங்கள் மீது எமக்குக் கரிசனம் சிரத்தை இல்லாதுவிட்டாலும், எதிரிகளோ எங்களது ஒவ்வொரு அசைவுகளையும் பதிவு செய்வதில் ஆர்வமா



RangaRakes

Tamilnavarasam.com

கவே இருப்பார்கள். அவர்களின் இந்த போக்குப் பார்ப்ப தற்கு கோபமூட்டுவதாக இருக்கும் அதே வேளை விபரீதமான பின் விளைவுகளுக்கும், இந் நடவடிக்கைகள் பிரதான காரணிகளாக அமைந்து விடுகின்றன.

சமயம் வரும்போது ஒருவரை வீழ்த்தி, மற்றவர் உயர்ந்து விடலாம் என்கின்ற எண்ணம் கொண்டால், முடிவில் இந்த மட்டரகமான சிந்தனையால் அவர்களே வீழ்வதும் திண்ணம். நல்லவர் போல் ஒட்டி உறவாடி அடுத்துக் கெடுத்தல் ஆகாத செயல். நம்பிக்கை கொண்ட வர் போல், நடித்துத் தமது எதிரிகளைப் பழிவாங்குதல் துரோகத்தனத்தின் உச்ச மிலேச்சத்தனமானது. பழிவாங் கும் இழிவுக்குணம் கொண்டவர்க்கு நல்ல நண்பர்கள் கிடைக்கமாட்டார்கள். இத்தகையவர்களே வலிந்து துன்பங்களை விலைகொடுத்து வாங்குபவர்கள்.

மற்றவர் செயல்களைக் கண்காணித்து அவர்கள் பற்றிய மிகத்தவறான தரவுகளைச் சேகரிப்பவர்கள், தங்கள் சொந்த வாழ்க்கையில் தெரிந்தே செய்கின்ற மாபெரும் தவறுகளை நினைந்தும் பார்க்காது எதிரிகளை எப்படியாவது வீழ்த்திவிடல் வேண்டும் என்று ஊண், உறக்கமின்றி இருப்பவர்கள். மனோநிலைகுன்றிய மனநோயாளிக ளேயாவர். இந்தத் தான்தோன்றித்தனமான செய்கையா ளர்கள், நிம்மதியாக உறங்கி விழிப்பவர்களுமல்லர். இத்தகையோர் தமக்கு மட்டுமல்ல, தங்கள் குடும்பம், பரம்பரையினர்க்கே மாபாதகம் செய்தவர்களுமாவர். வன்ம





உணர்வுகள் பன்மடங்கு துர்ப்பிறவிகளை எடுக்க வழிகோலும்.

அரசன் அன்று அறுப்பான், இறைவன் நின்று அறுப்பான் என்று முதுமொழி புகன்றிடினும், இன்றைய நிலை அப்படியாயில்லை. இறைவன்கூடக் கால அவகாசம் பார்ப்பதில்லை. கொடுமதியாளர்கள் உடனடியாகவே தண்டனை பெறுவதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். எதிரிகளுக்கு நல்லறிவூட்டி, அவர்களை எம்பால் ஈர்ப்பதே மானுடதர்மம். எதிரிகளுக்கோ, வேறு எவர்களுக்கோ தண்டனைகள் வழங்க நாம் யார்? புரிந்து கொள்வோம்!

பாவம் செய்தவர்கள், பாழ்குழியில் வீழ்வதைத் தடுக்க முடியாது. தவறு செய்தவன் தண்டனை பெற்றேயாக வேண்டும். விதை விதைத்தவன் பயிரின் பயனைப் பெறுதலும், வினை செய்தவர் அதன் பெறு பேறுகளை அடைவதும் இறை நியதி. எனவே, எதிரிக்கும் மனிதாபி மானமற்ற முறையில் அநியாயம் செய்தால், தண்டனை எவர்க்குமே பொதுவிதி என்கின்ற கூற்றுக்கு அமைய நிச்சயம் அதன் எதிரொலியான பலாபலன்களைப் பெற்றுக் கொள்வார்கள். அதன் முழுப்பொறுப்பும் அவர்களுக் கானதே!

இன்று நாம் நவீன காலத்தினுள் உலவி வருகின் றோம். தமக்குப் பிடிக்காதவர்களை, தங்கள் கருத்துக்களுக்கு மறுப்புச் சொன்னவர்களை, தமக்குப் பிடித்தவர்களுக்கு



RangaRakes Tamilnavarasam.com

எதிராக நடப்பவர்களை, தங்கள் இஷ்டத்திற்கு நொடிப் பொழுதில் அழித்தேவிடுகின்றார்கள். எனவே, பகைமையைச் சந்திப்பதும், அதனை உருவாக்குவதும் ஆகாத செயல்தான். கூடியவரை ஒருவர் பற்றிய விமர்சனங்களை இழிந்துரைப்பதைத் தவிர்த்தால் நல்லது தானே.

எந்தத் துர்க்குணத்தையும், அது எங்கள் உரிமை என்று கருதும் சிலருக்கு முன் எந்த நியாயங்களும் எடுபடாதிருப்பது துரதிஷ்டமானது.

ஆயினும், எவரும் தமக்கு உகந்தவர்கள் அல்லாதவருடன் விலகி இருப்பதில் என்ன சிரமம் இருக்கப் போகின்றது. தீயாரோடு, இணங்குவது, பேசுவது, பார்ப்பது எல்லாமே விபரீதமான முடிவினைத்தரும். எந்தவிதமான காரணமும் இன்றி எதிரிகளாகப் பிறரை நோக்குவர்களிடமிருந்து, நாம்தான் உணர்ந்து தெளிந்து, விலகிவிட வேண்டியதே. இது காலத்தின் கட்டாய தற்காப்பு நடவடிக்கைதான்.

அரசியலைப் பொறுத்தவரை இங்கு நிரந்தர நண்பர்களும் இல்லை. நிரந்தரமான எதிரிகளுமில்லை. எல்லாமே பதவியை மையப்படுத்தியே உறவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஓரிரு நபர்களைத்தவிர, அனைத்து அரசியல்வாதிகளுமே, உலகம் பூராவும் கொண்டுள்ள நிலைப்பாடு, எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றுதலேயாகும். இங்கு உண்மையான அன்பு நேயப்பாடுகள் எதிர்பார்க்கப்படுவதில்லை.





அப்படி இருந்தால் தங்கள் பதவிக்கு விட்டுக் கொடுப்புக்களை சந்திக்க வேண்டிவரும் எனக்கருதுகின்றார்கள். ஆனால் அரசியலில் புதியவரவுகளால் மேலதிக அனுகூலங்கள் வரும் எனக்கண்டால், உடனடியாகத் தோழமை உணர்வைக் காட்டவேண்டியதே. அரசியல்வாதிகளின் கோமாளித்தனமான, ஆனால் சுயநலம் மிகுந்த சண்டைகளைப் பாசமிகு நடிப்புக்களைக் கண்டு மக்கள் தான் திகைத்துப்போய் இருக்கின்றார்கள். இது உலக நடப்புத்தான். இதில் ஏதும் புதுமையில்லை. சர்வ சாதாரணமான விஷயம் தான். எதிர்பாராத வகையில் பழைய நட்புகளை உதறி புதிய நட்புக்களுடன் கைகோர்ப்பது அரசியல் நாகரீகமாகிவிட்டது.

தங்களுக்கு யாரிடமிருந்தாவது வரும் துன்புறுத்தல்களுக்குப் பரிகாரம் தேட சட்டமூலம் உதவிகோரும் நிலை அருகிவருகின்றது. எதிரியை வீழ்த்த அல்லது அவர்களைத் திருத்த நியாயபூர்வமான எண்ணங்கள் பயனற்றது என நம்புவது எவ்வளவு மதிகெட்டதனம் தெரியுமா?

- ❖ இறை அச்சம்
- ❖ தான் கொண்டுள்ள மதம் மீதான பற்றுதல்கள்
- ❖ நீதியின் மேல் அசைக்கமுடியாத நம்பிக்கை
- ❖ மனிதாபிமானம்
- ❖ உள் உணர்வு, மனச்சாட்சி

மேற்கண்ட நெறிமுறைகளால், நாம் மானுடத்தை நேசிக்கும் மனப்பான்மையினைக் கொண்டவர்களாக



RangaRakes

Tamilnavarasam.com

மாறிவிட முடியும். இதனால் காணும் மானுடர் எல்லாமே எமது உறவுகள் என்கின்ற உணர்வுகள் தான் மேலோங் கும். மேலும், தங்களுக்குச் சமனான அந்தஸ்தில் உள்ளவர்களுடன் மட்டும் அல்லது தங்களிலும் உயர்ந்த நிலையில் உள்ளவர்களிடம் மோதிப்பார்ப்பதுவே கௌரவம் என்று எண்ணுபவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் சாமாஞியமானவர்களைக் கண்டால் கேலிப் பேச்சோடு நோக்குவார்கள். "போயும், போயும்.. இந்த நோஞ்சானையா நான், எதிரியாகக் கருதுவது?" என்று கூறி விட்டு விலகிவிடுவார்கள்.

நியாயத்தின் பொருட்டு, அதனை நிலை நாட்டுவதற் காகப் போராடுவதும், அதற்காக எந்தவிதமான எதிர் விளைவுகளை சந்திக்கத் தயாராவதும் போற்றுதலுக்குரிய நல் இயல்பேயாகும். இதன் பொருட்டு தமக்கு எதிராகச் செயல்படுவோரை எதிர்த்து நின்று போராடுபவர்களைச் சமூகமே ஏற்றுக்கொள்வதால், இவர்கள் செய்யும் செயல் சமூக நோக்கானது என்கின்றபடியால் இங்கு எதிரிகளின் செயல்கள் நிர்மூலமாக்கப்பட்டே தீரும்.

நியாயபூர்வமான போராட்டம் என்பது, எதிரிகளை வேண்டுமென்றே உருவாக்குகின்றன என்று அர்த்தப்பட மாட்டாது. தீமைகளுக்காகப் போராடுவது, எதிரிகளைத் தேடுவதுமல்ல. எல்லோருமே மௌனமாக அநீதிக்காகப் போராடாமல் இருக்கும் போது, யாரோ ஒருவர் போராட முன்வந்தால், அதன் பின்னர் மக்கள் அவனுடன்





இணைந்து கொள்ளுதல் இயல்பான சங்கதியேதான். இன்றும், என்றும் ஓரிரு நல்லவர்களால்தான் பத்துப்பேர் பிழைத்துப் போகின்றார்கள்.

நியாயத்திற்கு அப்பால் எதிரியைச் சந்திக்க எண்ணி னால் இவர்கள் பலமிழப்பதும், நியாயபூர்வமாக அவர்களை ர் கொண்டால் பன்மடங்கு பலம் இணைதலும் தெய்வ சங்கல்ப்பம்.

சிலர் சொல்கிறார்கள் "எனக்கு எல்லாத் திசைகளில் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்புகின்றன. என்ன செய்யலாம்" என்பார்கள். சில சமயம் இவர்கள் பயந்தது போலவே, எல்லோருமே சேர்ந்து இவர்களைப் போன்றவர்களுக்கு எதிராக இயங்கினால் இவர்கள் நிலை என்னவாகும்? பல திசைகளுடான எதிர்ப்புக்களுக்கு முகம் கொடுத்தல் எவ்வளவு சிரமமானது என்று தெரியுமா? இவைகளை அனுபவித்தோருக்கே இதன் அழுத்தம் புரியும்.

- ❖ புத்திசாதுர்யம், சமயோசித யுக்தி
- ❖ வீம்பு பாராட்டாமல், சமரசமாகப் போதல்
- ❖ தவறுகளை எங்கள் மீது இருந்தால் ஒத்துக்கொள்ளல்

மேற்படி விடயங்களைக் கருத்தில் கொண்டால் எதிர்ப்புகளை எதிரிகளைக் குறைத்துக் கொள்ள முடியும். சமரசமாக இணங்கிப் போதல் கோழைத்தனம் அல்ல. வையெல்லாம் விட்டுக் கொடுக்கும் உயர்ந்த பண்புதான்.



RangaRakes
Tamilnavarasam.com

மேலும், உங்களுக்கு எதிரி என ஒருவர் தெரிந்தாலும் அவர்களின் சிறப்பு இயல்புகளைப் பாராட்டுங்கள். அவருக்கு என்னைப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் இவர் ரொம்பவும் படித்தவர். சொன்ன சொல்லைக் காப்பாற் றுபவர். அன்புமயமானவர் என உங்கள் நண்பர்களிடம் சொல்லிப் பாருங்கள். இதனை உடனே கேள்விப்பட்ட நபர்களும், உங்கள் மீது எத்தகைய கோபம் கொண்டிருந் தாலும், உங்களது தாராளமான பரந்த மனப்பாங்கினைப் புரிந்து, அவரே உங்கள் பக்கம் வர ஆரம்பித்துவிடுவார். புதிது, புதிதாக நல்ல நண்பர்களைத்தான் சேர்த்துக் கொள்ள வேண்டும், எதிரிகளை அல்ல!

திட்டுவதால், குறை சொல்வதால் எதனைத்தான் சாதிக்க முடியும்? நல்ல பண்புகள் எவரிடத்தும் இருந்தா லும், அதனை ஏற்று அவர்கள் முன், முகத்திற்கு நேரேயே அவர் பற்றி நல்வார்த்தைகளைச் சொன்னால், பகைமை பறந்து போய்விடுமல்லவா?

எல்லா எதிரிகளையும் ஒருங்கே எதிர்க்காமல், படிப்படியாக ஒவ்வொருவராக, அழிப்பதாக கதைகளில் நாயகன் செய்து வருவான். அநேகமான கதைகளில் எதிரிகளை அழிப்பது பற்றியே சித்தரிக்கப்படுகின்றன. அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்துவதாகக் காட்டப்படுவ தில்லை. எங்காவது ஒரு சில கதைகளில், வில்லன் திருந்துவதாகக் காட்டுகின்றார்கள். மன்னிக்கும் இயல்பை மறக்கடிக்கும் சுபாவங்களைச் சித்தரித்து மக்கள் மனசை





நசுக்கும் இத்தகைய சமூகவிரோதக் கருத்துள்ள திரைப் படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள் தங்கள் போக்கினை மாற்றியாக வேண்டும். இல்லாவிடின் குரூர எண்ணங்கள் வன்முறைக் கருத்துக்கள் என்பன தானாகவே மனித மனதுள் புகுந்து, எவரையும் இலகுவில் அடித்து வீழ்த்தி நொருக்கிவிட முடியும். கற்பனா உலகில் இளைய தலை முறைகளையும், ஏன் வயதுவந்தவர்களையும் உட்படுத்தும் வழிமுறைகள் சுத்த அபத்தமானது.

நகைப்புக்கிடமான முறையில் சிலர் நாட்டுத் தலைவர் கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள் போன்றோரைப் பக்கத்து வீட்டுக்காரனைத் திட்டுவதுபோல் “அவரை விட்டேனா பார்” என்பது போல் பேசுவார்கள். இவர்கள் எல்லாம் தனது எதிரிகள் என்பார்கள். எங்கோ ஒரு நாட்டின் தலைவரை, இராஜதந்திரிகளை, மதத்தலைவர்களைத் திட்டுவதால் கோபப்படுவதால் என்ன பயன் வந்துவிடப் போகின்றது?

சதா கோபாவேசம் கொள்வதால் பதட்டப்படுவதால் என்ன நீதி எமக்குக் கிட்டப்போகின்றது. எங்கள் உணர்வுகள் நியாய பூர்வமாக இருக்கலாம். நியாயங்கள் அஸ்தமனமா வதில்லை. இதனை நம்புங்கள்!

அசாதாரண நிலையில் உள்ளவர்களே தம் நிலை உணராமல் மனித தர்மம் இன்றி நடந்து கொள்கின்றனர். ரம்ப நிலையிலேயே மனிதன் தன்னைப் பக்குவப் படுத்தாது விட்டால், அவன் உயர்ந்தவனாக வர ஆசைப்



RangaRakes

Tamilnavarasam.com

படுவதில் என்ன நியாயம் இருக்கின்றது? அடிப்படையில் உள் உணர்வுகள் செப்பனாக உள்ளவர்கள் தலைவராக வந்தால்தான் அவர்களால் பகைமையினை வென்று, எதிரிகளை உருவாக்காமல், உலகைக் கட்டி எழுப்ப முடியும்.

எதிரிகளை அழிப்பது வீரம் அல்ல. எதிரிகளை நல்ல இதயமுள்ளவர்களாக உயிர்ப்பிப்பதுவே நல்ல மனோதிடமுள்ள வீரமாகும்.

கொலை, களவு, கற்பழிப்பு, வழிப்பறி என்பவைகளால் உலகம் தவித்துப்போய் கிடக்கின்றது. இந்த உலகில் எல்லோருமே எதிரிகளாகத்தான் தெரிகின்றார்களோ என்று கூடச் சொல்பவர்கள் உண்டு. நடக்கின்ற தகாத செயல்களுக்காக உலகை வெறுத்து ஒதுக்க முடியுமா? கருணை, பரிவு, இரக்கம் போன்ற பண்புகளைக் கரிசனையுடன் ஒருவர்க்கொருவர் ஈந்திட்டால் மற்றவர்கள் விரோதிகள் என்கின்ற எதிர்மறைச் சிந்தனைகள், மனிதருள் புகுந்திடுமோ? சந்தேகம், காழ்ப்பு, பொறாமை, ஆசைகளால் மற்றவர் முன்னேற்றம் கண்டு அவர்களை விரோதிப்பவர்கள் வருந்தி வினைதேடும் ஆத்மாக்கள் தான்.

மனதில் திடமும், ஆன்மீக நாட்டமும், அறிவும் இணைந்து கொண்டால் மனிதன் புனிதனாகின்றான். பிறக்கும் போதே தவறுகளைக் கற்றுக் கொண்டா பிறக்கின்றான்? இல்லையே, விரக்தி உணர்வுகள் கூட எதிரியாக மற்றவர்களைக் கருதிட வழிசமைக்கின்றது.





உள்ளத்தில் தெளிவு உள்ளவர்க்கு விரக்தி என்பது தான் ஏது? பாயும் சிங்கத்தைப் பரிவுடன் நோக்கு! இதய சுத்தியோடு வருபவனைக் கருணைக் கண்கொண்டு நோக்கு! அன்பினை உருவாக்கி எதிரியை இரக்கமுடன் பார்த்திடு! இந்த உலகை அன்பினால் தரிசிப்பவர்க்கு எங்கு சென்றாலும் எத்தகைய அந்தஸ்தில் உள்ளவர்களுக்கும் உள்ள நிகரான இடம் கொடுக்கப்பட்டுவிடும் நிச்சயம்!


எதிரிகள், எதிர்ப்புக்கள் சூழ்ந்தால் ஒருவன் சுதந்திரமற்ற பிரஜையாகின்றான். கடுமையான எதிர்ப்புகளுக்கும், கோழைத்தனமான தாக்குதல்களுக்கும் உள்ளாகுபவன் எப்படி நிம்மதியாகத் தூங்கமுடியும்!

சந்தோஷமாகச் சுதந்திரமாக வாழ்வதற்கு நாங்கள் பிறந்தோம். எவரையுமே எதிரிகள் எனக்கொள்ளாது அரவணைத்து "மெய்அன்பு" செலுத்தினால், வரும் எதிரிகள் கர்வம் குறைந்து உளம் நெகிழ்ந்து உண்மை நண்பர்களாகிக் கொள்வர் அன்றோ!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
13-05-2007



RangaRakes
Tamilnavarasam.com



# வேதனை

கழிகின்ற பொழுதுகள் அழுது வடிவதற்காக அல்ல. துன்பங்களுக்கு முக்கியத்துவம் அளித்தால் இன்பம் எங்கே எம்மை அணைக்கும்? மரண வேதனை பொல்லாதது. இது நிரந்தரப் பிரிவு. எல்லாமே இயற்கை நிகழ்வுகள் என மனதினுள் எண்ணத்தை வைராக்கியத்துடன் பதித்தால் பிரிவுகள், துயரமல்ல. துன்பப்பட்டு அழுவது சிலருக்கு இஷ்டமான பொழுதுபோக்குப்போல் கருதுகின்றார்கள். அழுது வடிப்பதை எவரும் ரசிப்பதில்லை. சோகத்தை ரசனை எனக்கருதாது, முகமலர்ச்சியுடன் எல்லோரிடமும் உறவாடுங்கள். நீங்கள் வேதனைப்படுவதை உங்கள் எதிரிகளைத் தவிர எவருமே விரும்ப மாட்டார்கள். இந்த நிலை மாற, வேதனைகளை எரிக்கும் அற்புத மனிதனாக வாழ முயற்சி செய்யுங்கள்! வேதனையுடன் வாழ்ந்தால், சாதனை செய்வது எப்போது?

உண்மையானதும், வாழ்வாங்கு வாழ்பவர்களுக்கு இன்பமூட்டுவதுமான இந்த வாழ்க்கையில் வேதனையில் வெதும்பும் மனிதர்களின் தொகைதான் மிகையானதென்று சொல்லப்படுகின்றது. இன்பம் எதுவெனக் கண்டுபிடிக்கும் கலையினை எதுவெனப் புரிந்து கொள்ள விருப்பமின்றிக்கூட





அநேகர் இருக்கின்றனர். கழிக்கின்ற பொழுதுகளை அழுது வடிக்காமல் வாழ்வது என்பதுவே ஓர் அரும் கலைதான். வாழும் நாட்களில் நாம் வேதனைகளை நீக்கி நோக்கினால் இருக்கின்ற காலங்களும், வருகின்ற பொழுதுகள் அனைத்துமே சந்தோஷகரமானது தான். அதாவது, நாம் பார்க்கும் நோக்கில் துன்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காது செய்கின்ற கருமங்களை ஆரவாரமின்றி அமைதியாக நிர்மலமான மனோநிலையில் ஆற்றி வருபவர்கள் கவலைகளைக் கண்டு கொள்வதில்லை.

வேதனைகளைப் பற்றினால் அது சும்மா விட்டுமா? கரடியைக் கட்டிப்பிடித்தால் அதுதான் விட்டுமா? தேவையின்றியும், தானாகவும் கூட வேதனைகள் சூழ்ந்துவிடுவது இயற்கைதான். பெற்றார் சொல்கேட்காது கண்டபடி சுற்றித்திரிந்து கல்வியைத் தொலைத்து வாழும் பிள்ளைகளைக் கண்டால் வேதனை வராதா? கணவனால் இம்சிக்கப்பட்டுத் தினம் தினம் குடித்துப் பிள்ளைகளைக் கவனிக்காமல், தொழில் இழந்து கடனாளியானவனைக் கண்டால் மனைவிக்கு வேதனை வராதா?

காதலனால் கைவிடப்பட்ட காதலி அல்லது காதலியால் ஏமாற்றப்பட்ட காதலனின் வேதனைகள், அவர்களுக்கே உரித்தான தனித்துவமான கொடிய வேதனை. நம்பிக்கைத் துரோகம் செய்த நண்பர்களால் அடையும் வேதனை, தொழிலாளர்களால் முதலாளி அடையும் வேதனை, முதலாளியால் தொழிலாளிபடும் அவஸ்தை என எண்ணிறைந்த



RangaRakes
Tamilnavarasam.com

வேதனைகளின் வடிவங்கள் அப்பப்பா.. சொல்லிமாளாது. இவை மனிதரை வறுத்தெடுத்தே விடுகின்றது.

இத்தனை வேதனைகளிலும் மிகக் கொடியது. ஒருவரின் மரணத்தினால், வரும் வேதனை தான். இனி மேல், மரணமடைந்தவர்களைச், சந்திக்க முடியவே முடியாது என்கின்ற எண்ணம் வரும்போதெல்லாம் இந்த மனம் அடையும் குமைச்சல், நெஞ்சத்தில் ஏற்படும் வெற்றிடம், எழுதிட முடியாத துன்ப சாகரங்கள்!

சதா எதைப் பற்றியாவது நினைந்து துன்பப்படுவது கூடச் சிலருக்குப் பிடிக்கும். "இதோ பாருங்கள், இன்று எனக்கு மனம் சரியில்லை, புறப்படும் போதே பாத அணியின் ஆணி கழன்று, வார்ப்பட்டை அறுந்துபோய் விட்டது. புறப்படும்போதே அபசகுணம்" போதாதற்கு இவர் மனைவியும் தன் பங்கிற்கு "உடை எல்லாம் அழுக்காகிவிட்டது, வர வர இவருக்கு வேலையில் பொறுப்பு என்பதே இல்லை. சரி, சரி எல்லாம் என் தலை எழுத்து". இப்படிச் சொல்லியதால் அன்றைய பொழுதை மனக் கொதிப்புடன் கழிக்கும் ஆத்மாக்களை கண்டால் எமக்கும் தான் தேவையின்றிக் கோபமும் சிரிப்பும் கூடவரும்.

இந்த உலகத்தின் அவல நிகழ்வுகளைக் கண்டு வேதனையுற்று நொந்து கொண்டிருக்கும் தூய ஆத்மாக் களும் உளர். தனக்காக அன்றிப் பிறர் பொருட்டு வாழும் உத்தமர்கள், மற்றவர் துன்பங்களைத் தாமே ஏற்பதுமுண்டு.





தியாக உணர்வு, பிறர் வேதனைகளைத் தாங்கி அதனை இல்லாதொழித்துவிடும். இத்தகைய அரும் செயலைச் ய்பவர்கள் தாங்கள் ஏற்கும் பொறுப்புக்களை வேதனை ானது, தேவையற்றது என எண்ணுவது கிடையாது. தனையும் ஏற்கும் நிலையில் உள்ளவர்களுக்கு, துன்பம் ன்பது பிரச்சனைக்குரிய விடயமன்று.

மற்றவன் சந்தோஷமாக இருக்கின்றானே என்பதை எண்ணி வேதனைப்படுபவர்களும் இருக்கின்றாரகள். "நான் ப்படி நல்ல நிலையில் இருந்தேன். ஆனால், முந்தநாள் ந்தவன் இன்று என்னைவிட உயர்ந்துவிட்டானே" என்று ' குள்ளும் ஏன் வெளியிலேயும் சொல்லிப் புலம்பும் மனிதர்கள் இல்லாமல் இல்லை. மேலும் எந்தவித கடமைகள், பொறுப்புக்களைப்பற்றிக் கிஞ்சித்தும் கருதாமல், "இந்தக் கடவுள் ஓரவஞ்சனை செய்கின்றார், எனக்கு எந்தவிதமான அதிஷ்டங்களும் இல்லை" என்று அறியாமையினால் வேதனைப்படுபவர்களை என்ன ாலல்?

எந்தப் பிரச்சனையிலும், கடவுளை நம்பினால் வேதனைகள் யாவும் பஞ்சாய்ப்பறந்து போம் என்று இறை நம்பிக்கை, விசுவாசமுடன் வாழும் ஆத்மாக்கள் பலர் தமது துயர்களுக்காக மற்றவர்மேல் பழியைப் போடாமல் இறை நேயத்துடன், "அவருக்கே, பாரம் அனைத்தும்" என்று தனைகளை வெல்பவர்கள் உள உறுதி மிக்கோர் ன்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.



RangaRakes

Tamilnavarasam.com

வேதனை தாளாமல் தற்கொலை செய்பவர்கள், தமது செயலால், பிறர்க்கு வேதனை அளித்துவிட்டுத் தப்பித்துப் போவதாகக் கருதியமை கொடிய வேதனை தான். எவரும் தங்கள் பிரச்சனையைத் தாமே தீர்க்க வேண்டும். இல்லாது விடின் ஏதாவது உபாயத்தின் மூலம் வேண்டப் பட்டவர்கள் வாயிலாகப் பிரச்சனைகளைக் களைந்து கொள்ள வேண்டும். எந்த விதத்திலும் தமது இன்னுயிரினை களைதலும் களைய முனைவதும் உயிரின் விலை அளவிட முடியாதென்பதை உணராதவர்களால் செய்யப்படும் கொடும்பாவச் செயலுமாகும்.

வேதனைகளைக் கொய்துகொள்ளும் வடிகால்களாகத் தகாத வழிகளில் புலனைச் செலுத்துபவர்கள், தங்கள் தேகத்தின் நிலையை, கௌரவத்திற்கு ஏற்படுத்தும் பங்கத்தி னையும் ஏனோ அறியாமல் இருக்கின்றார்கள். காதல் தோல்வி, வியாபார நட்டம், எண்ணிய கருமங்கள் கைகூடாமைக்காக குடிப்பழக்கம், போதை வஸ்துப் பாவனையில் அதீதமாகக் கவனத்தினைச் செலுத்துகின்றார்கள்.

தோல்விகள் காரணமாக தொடர்ந்து வரும் வெற்றி வாய்ப்புக்களை, வேண்டுமென்றே புறக்கணிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடலாமா? "நயவஞ்சகத்தனமாக, நண்பர்களால் ஏமாற்றப்பட்டுப் பொருள் இழந்து நடுத் தெருவிற்கு வந்துவிட்டேன்" என்று சொல்லி அதற்குப் பரிகாரமாக, சவாலாக வாழ்ந்துகாட்டுதலை விடுத்துச் சோர்ந்து, விழுந்து, நைந்து, பிறர் பழிக்க, எதிரிகள் கண்டு





தாஷமடையுமாற்போல் தங்களை வதைக்கும் குடிப் ம் இதர துர்ப்பழக்கத்திற்கும் அடிமையாதல் புத்தி தனமற்ற, அர்த்தமற்ற செயல் என ஏன் தான் உண ல் இருக்கின்றார்களோ தெரியவில்லை!

யாராவது தமக்குத் தீமைகளைச் செய்தால் ஏற்பட்ட தனைகள் உளப்பாதிப்பிற்குப் பழிவாங்குதலே னைக்கு மாமருந்து எனச் சிலர் கருதிச் செயல்படு றார்கள். தொடர்ந்தும் வேதனைகளைத் தொடர் களாக வளர்ப்பது ஆரோக்கியமான நடவடிக்கைகளே ல்ல. துன்பம் விளைவித்தோர் வியக்கும் வண்ணம் ழுவதே உகந்த பரிகாரமாகும்.

மேலும் எதிரிக்கு மன்னிப்பு அளித்தலை நாம் எமது ாகக் கொண்டால், எங்கள் மன அழுத்தங்கள் படிப்படி கத் தேய்ந்து, உள்ளம் விசாலமடைந்து எதிரியைக் கூடச் ரணடைய வைத்துவிடும். அறவாழ்வு நெறியை நாம் ப்பதால் மட்டும் பயனில்லை. அந்நெறி வழி வாழ்ந்து ாட்டுதலே சிறப்பு.

நியாயபூர்வமாக உழைத்தவர்களுக்குரிய பலாபலன் ட்டாதுவிட்டால் அவர்கள் வேதனையுறுவது தவிர்க்க டியாததாகும். நன்றாகப் படித்துப் பட்டம் பெற்றும் கூடத் குந்த வேலை கிடைக்காமலும் நன்கு படித்தும் துரதிஷ்ட கப் பரீட்சையில் சித்தியடைமாமலும் இருக்கும் பலரது அழுத்தங்கள் துன்பகரமானது தான்.



RangaRakes
Tamilnavarasam.com

இருப்பினும், காரியங்கள் அனைத்தும் அனுகூலமாக அமைந்துவிடாதுவிட்டால் அது பற்றியே சதா நொந்து கொள்வதை விடுத்து வெற்றிகரமான வழிகளை அடுத்து மேற்கொண்டேயாக வேண்டும். அதாவது எமது செயல் களின் தோல்விகளுக்கான தடைகள் எது என்பது பற்றிக் கண்டறிய வேண்டும். எங்கள் குறைகளை ஏற்று, அதற்கான மாற்றுவழிகளில் சிந்தனைகளை வெகு முனைப்புடன் திருப்பி, ஆற்றிவரின், நொந்த மனநிலையில் இருந்து மீண்டு, அவைபற்றிய மீட்டலில் தொடர்ந்தும் அழிந்துவிடாத தன்மையினை அமைத்திடல் முடியும்.

தொடர்ந்த உறக்க நிலையினை நாம் விரும்பி ஏற்க முடியுமா? இந்த உறக்கநிலை வாழ்வையே ஸ்தம்பிக்கச் செய்துவிடும் என்பதில் மனிதன் எச்சரிக்கையாக இருக்க வேண்டு மல்லவா? இயங்கா நிலை, வாழ்வை நித்திய பயமூட்டும் நிலைக்குள் தள்ளி விடும்.

வாழ்வின் அந்தத்தில், விளிம்பில் மரண வாயிலைத் தொட்டு நிற்கும் நோயாளிகள் கூட, வேதனை பற்றிய உணர்வின்றி சாதாரணமாக உரையாடிக் கொண்டிருந்த காட்சியைக் கண்டதும் வியந்துபோனேன். ஒருமுறை மகரகமை புற்றுநோய் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். ஒரு சிறுவன் அங்கு ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தான். அவனருகே ஒருவர் மிகுந்த கவலையு டன் அவனையே அவதானித்தபடி இருந்தார். அவரை நான் அண்மித்து விசாரித்தேன். அவர் சொன்ன விடயம், மிகுந்த கவலையை உண்டு பண்ணியது.





அவர் அருகே விளையாடிக் கொண்டிருந்த அந்தச் சிறுவனுக்குத் தலையில், புற்றுநோய் கட்டி இருந்தது. வும் ஆபத்தான நிலையில் இருந்தான். அவனுக்குத் ந்த சிகிச்சை மேற்கொண்டிருப்பினும், அவனது உடல் லயில் பெரிய முன்னேற்றமில்லை. எந்த வேளையில் வுமே நடக்கும் ஆனால் நோயின் தன்மைபற்றி னுக்குத் தெரியாது. அவனது தலைமயிர் உதிர்ந்து தாலும் கூடப் பையனை நோயாளி என்று எவரும் ன்னால் நம்பமாட்டார்கள் அழகாகவே காணப்பட்டான். ணத்தின் சிரமம் தெரியாதுவிட்டால் வேதனை, றாமை ஏக்கம் என்பது தான் ஏது?

மேலும், அங்குள்ள நோயாளிகள் பலரும் தமது நாள் வாழ்வு பற்றி அழுது ஆரவாரப்பட்டுக் கொள்ள லை. சிலரது முகங்களில், உடலில் நோயின் கடுமை, ாடூரம் தெரிந்தது. துன்பங்களின் உச்ச நிலையைக் டவர்களுக்கு ஒரு எல்லைக்கு மேல் எதுவும் நடந்தாலும் க்கு என்ன என்கின்ற துணிவு நிலையும் தோன்றிவிடுதல் சரியமன்று. இவர்கள் தம்மைச் சந்திக்க வந்திருந்த றவினர்கள், நண்பர்களுடன் அளவளாவிக் கொண்டி னர். நோயாளிகளின் துன்பங்களை விட அவர்களைப் ர்க்க வந்திருந்தவர்களின் முகங்களிலேயே துன்ப ரேகை பெரிதாகப் படர்ந்திருந்தது.

சில நோயாளாளர்களைச் சுற்றி உறவினர்கள் மே இல்லை. எந்தவித உறவுகளுமற்ற, அநாதைகளா



RangaRakes
Tamilnavarasam.com

கவும் சிலர் இருந்தனர். அவர்கள் முன் உள்ள நோயாளிக ளிடம் உறவினர்கள் வந்து போனபோது தங்களை எவருமே வந்து பாரக்கவில்லையே என்கின்ற உணர்வு மரண வேதனையை விடக் கூடுதலானதாகவே அவர்கள் பார்வை கள் சொல்லிக்கொண்டன.

அவர்களில் ஒரு நோயாளி சொன்னார் "எமக்குச் சில வள்ளல்கள், பரோபகாரிகள் உணவுப்பொருட்கள் இளநீர், குளிர்பானங்கள், பால்மா, பால் எல்லாம் வாங்கிக் கொடுப் பதுண்டு. எங்களை உறவினர் ஒருவரும் வந்து பார்ப்ப தில்லை. ஆனால், எவராவது எங்களைப் போன்றவர்களிடம் வந்து ஒரு முறையாவது, கரிசனையுடன் தேறுதல் சொன்னாலே போதும் எமக்கு மரணவேதனை என்பதே இல்லாது போய்விடும். எமக்கு இன்றைய பொழுதில் தேவையானது மனிதர்களின், சுற்றியிருப்பவர்களின் அன்பு ஒன்றேதான். நாங்கள் இன்று இருந்து, நாளை இறந்து போகலாம்" என்றார்.

"ஆனால் எங்களது துன்பநிலை கண்டு எமக்காகப் பரிவு கொண்டாலே எமது ஆத்மா சந்தோஷப்படும்" என்றும் பல நோயாளிகள் சொன்னார்கள். உண்மைதான், மனிதனை மனிதன் நேசிப்பதால், என்றும் நோயாளிகள் சொன்னார்கள். துயர்களிலும் இருந்து அவன் விடுவித்துக் கொண்டவனாகவே கருதிக்கொள்வான். தனக்கு உறுதுணையாக ஒரு சீவன் இருக்கின்றதே என்கின்ற உள் உணர்வு ஒன்றே அவனுள் புத்துணர்ச்சியை ஊட்டி,





ழ்க்கையில் நம்பிக்கையூட்டும் மாமனிதனாக மாற்றி ம். எந்த நோயும் நோவும் கூட நம்பிக்கை ஆதரவுகள் மே குணமாகி விடும் என்று தானே உளவள துவர்களும் கூறுகின்றார்கள். எனவே ஆதரவற்ற பமுற்றுள்ளவர்களுக்கு எமது இதய பூர்வமான தல்களை வழங்குவோமாக!

வேதனைகளைச் சோதனைகளைச் சந்திக்காத மே வீரம் பற்றியும், வெற்றிகள் பற்றியும் பெரிதாகச் ால்லித் திருப்திப்பட முடியுமா? பத்துப்பேர்களுடன் ஓடி ல்வதும், ஓடும் போது வீழ்ந்து எழுவதும் தான் உற்சாக ான போட்டியும், அதனை வென்றதனால் ஏற்படும் றவுமாகும். சோம்பேறிகளுடன் வாழ்ந்தால் சோர்வும் னையும் தான் மிகுதியாகும். உற்சாகமான போட்டி உடல் உழைப்புகள் எந்தத் துயரையும் எமக்கு அளிக் து. தொடர்ந்தும், தொடர்ந்தும் வேதனைகளில் அமிழ்ந்து டால் தாழ்வுச் சிக்கல்கள் மெல்லெனப் பற்றி இறுதியில் துவே எம்மை ஆக்கிரமித்துவிடும்.

எங்கள் பலமிக்க, தீட்சண்யமான உலகம் மீதான பார்வைகள், நோக்குகள், வாழ்வின் அர்த்தங்களை அதன் உண்மைத் தன்மையினைக் காட்டி நிற்கும். அதனை உணர்ந்தவர்கள், வேதனைகள் எல்லாம் பலமற்றவை ழிந்துபோவன என உணர்ந்து கொள்வார்கள்.

இன்பம், மகிழ்ச்சி, மட்டுமே மனிதனுக்கு முழு



RangaRakes Tamilnavarasam.com

அனுபவங்களைத் திருப்தியைத் தந்துவிடாது. ஆனால் அனுபவபூர்வமாகக் கண்டுகொண்ட, திருப்தியான, சந்தோஷங்களே உண்மையானதுமாகும். துன்பங்கள் கூட இன்பங்களுக்கான சமிக்ஞைகள் தான். எனவே "துன்பங்கள்" இன்ப அனுபவங்களைத் தரவல்ல ஒரு நல்ல அனுபவம் என்பதில் சந்தேகமில்லை. வேதனைகளில் இருந்து மீண்டு செயல்களை நாடினால்தான், அடுத்தகட்ட நுகர்ச்சிகளுக் கான பயணங்களை ஆரம்பித்தவர்களாவோம்.

இன்பங்கள் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவங்களைவிட துன்பநுகர்வினால் பெற்றுக் கொண்டவை வலுவானவை.

தனக்காக வேதனையுறுவது ஒருபுறம், குடும்பங்களுக்காக வேதனையுறுதல் ஒரு புறம் இருக்க உலகினரின் சில தகாத போக்குகளுக்காக வேதனைப்படும் மாந்தரும் உளர். ஆயினும் நாம் இவைகளைக் களைய என்ன நடவடிக்கைகளை எடுத்துவிட்டோம் என்று எம்மை நாம் கேட்கின்றோமா?

எவரும் பலமிழந்தவர்கள் எனத் தம்மைக் கருதுவதனைத் தவிர்த்தேயாக வேண்டும். எடுத்ததை எல்லாம் பிடித்தது எனக் கருதுவதும், எடுத்ததை எல்லாம் ஆராயாமல் பிடிக்கவில்லை எனக் கருதுவதாலும், மனிதன் தன் வசமிழக்கின்றான்.





தனது பலத்தை உணராமைக்கான காரணம் கூட வனது தீர்மானங்கள், செயல்கள் பற்றித் தீர்க்கமான டிவுகளைக் காணாத காரணம் தான் என்று உணருகின் ரன் இல்லை. இதேபோலவே, வேதனைகள் பற்றிக்கூடச் சமயம் குழம்பிய நிலையில், அதில்இருந்து மீள ப்பமின்றியும் விடுகின்றான். சிலவேளை தன்னையே ராய்ந்து பார்த்து "நான் வீணாக உடைந்து போய் டேனோ" என எண்ணிச் சுவீகரித்தாலும் கூட வேதனை வாட்டமுறாது சீவிப்பதும் நடைமுறைச் சாத்தியம் லை. படிப்படியாகத் தன்னைதான் ஒருவன் ர்த்தியேயாக வேண்டும்.

எம்மை நாம் மாற்ற வேண்டிய கட்டாயத்தில் ருக்கின்றோம். எங்கள் வேதனைகளை எத்தனை ருடங்கள் வரை தூக்கிவைத்துக் கொண்டாட முடியும்? கி அதை அழிக்க வேண்டாமோ? நாங்கள் கோழை ளாக வாழப் பிரியப்படக் கூடாது. வாழ்க்கை பல காயங் ள ஏற்படுத்தியே தீரும். உட்காயம் என்கின்ற மன வதனைதான், ஆற்றுதல் படுத்த அதிக காலங்களைக் காருகின்றது. இந்த நீண்ட கால இடைவெளிக்குள் எவ்வளவோ நல்ல விஷயங்களை நாம் கோட்டை விடலாமா?

அழுவதைவிடச் சிரித்து எழுவது வலிமை. ஏழ்மையை னைந்தோ, அன்றி எதிர்பாராத இடர்கள் குறித்தோ நாம் மைப்பட வேண்டிய அவசியமில்லை. எந்தத் தரத்தில் ள்ளவர்களுக்கும் துன்பம் என்று வரும்போது அது



RangaRakes
Tamilnavarasam.com

பொதுமை உணர்வாகின்றது. இவைகளை வென்று கொள்பவர்களே. அனைவரிலும் முதன்மையான பாக்கிய வான் ஆகின்றான். மானுட முதன்மைப்பேறு என்பது ஆத்ம சுத்தியிலும் அதன் துணையுடன் வேதனைகளில் இருந்து விடுதலை பெறுதலிலுமே தங்கியுள்ளது. வேதனைகளில் இருந்து விடுதலை பெறுதலைவிடச் சுதந்திரம் வேறு ஏது உளது?

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
15-04-2007







# இம்சைகள்

ற்றவர்களின் நிலைமை புரியாது தமது கருமம்மட்டுமே முக்கியமானது க்கருதிப் பிறர் பொழுதுகளைக் கரைப்பவர்கள் இம்சைகள் தரும் நலக்காரர்கள். தங்கள் குறைபாட்டினை மறைக்க வீம்பாகப் பேசி, னையோர் மனத்தை அரித்தெடுத்துத் தங்களை உணராமல் கின்றார்கள். எல்லோரும் ரசிக்கும் படியான நபராக வாழவேண்டும். சை தருவோரைக் கண்டாலே துன்பம். மனதை மருட்சிக்குள்ளாக்கி மடிக்கும் செயல்களைச் செய்பவர்களின் நடவடிக்கைகளைப் புறம்தள்ளுக! எமக்கு தீமை தரும் எதனையும் நோக்காது இருந்தால் ம்சையாளர் சையின் வில வர்.

ஒருவருடைய மனதை நெருடவைக்கக் கூடியதும், ள்ளத்தை உடைக்க வைப்பதும் அவர்தம் பொன்னான முதுகளைத் தெரிந்தோ, தெரியாமலோ வீணடிக்கக் ய கருமங்கள் எல்லாமே “இம்சைகள்” என்பதில் எதுவித தேகமும் இல்லை.



RangaRakes
Tamilnavarasam.com

தான் உண்டு, தன் கருமம் உண்டு எனத் தொந்தரவின்றி வாழ்பவர்களுக்குக் காழ்ப்புணர்வு மேலீட்டினால் அவர்களுக்கு தொல்லைகளைக் கொடுப்பது, மன உளைச்சலையும் கட்டுமீறிய கோபங்களையும் தாராளமாக வழங்குவது போலாகும்.

மற்றவர் உள உணர்வுகளைப் புரியாமல், அதனை மதிக்காமல், மதிகெட்டதனமாக வாழ்பவர்கள் சமூகத்தில் எப்படி ஒன்றிணைந்து நேயப்பாடுடன் வாழ முடியும்? தங்களது அலுவல்களைத் தவிர உலகில் வேறு ஒருவருக்கும் எந்தக் கருமமும் கிடையாது என்பது போல் நடப்பது வேடிக்கையானதும், அருவருப்புமானது என்பதனை இம்சைகளை வலுவாகத் திணிப்பவர்கள் உணர்கின்றார்கள் இல்லை. இந்த உலகம் முழுவதும் தனக்காக மட்டுமே இயங்குவதாகவும், தமது கருத்துக்கள், ஆசை, அபிலாசைகளுக்கு ஏற்பவே இயங்கவேண்டும் என எண்ணுவது உகந்தது இல்லை என ஏன்தான் கருதாமல் இருக்கின்றார்களோ தெரியவில்லை.

நீங்கள் அவசரம் அவசரமாக அலுவலகத்திற்குப் புறப்படத் தயாராக இருக்கின்றீர்கள். காலை வேளையில் நேரங்கள் கடுதென மறைவதாகவே தோற்றம் காட்டி நிற்கும். வேலைகளில் தீவிர கவனம் செலுத்தும் போது காலத்தின் ஓட்டம் புலனுக்குப் புரிவதில்லை. அலுவலக வேலைகள் தொடர்பான மன அழுத்தங்கள், போக்குவரத்து நெரிசல்கள், இடையிடையே தொலைபேசி அழைப்புக்கள் வேறு





லக்க வைக்கும். இந்தக் காலை வேளையில் பக்கத்து ட்டுத் தாத்தா வருகின்றார்.

"என்ன தம்பி... இன்றைக்குக் காலைப் பத்திரிகை து விட்டதா... என்ன செய்தி, நேற்றும் நான் உங்களிடம் திரிகை வாங்கவில்லை. இந்த நாடு போகின்ற போக்கே யில்லை. அது சரி... உங்கள் மாமா நேற்று ஊரில் ருந்து வருவதாகக் கேள்விப்பட்டேனே வந்து விட்டாரா.... ப்பலிலா அல்லது விமானத்திலா.. ஊரில் என்ன... னமாம்.. அட.. நான் கேட்டுக் கொண்டேயிருக் றன்... நீங்கள் பாட்டிற்குச் சும்மா நிற்கின்றீர்களே... ஷன், ஒருவன் காலை வேளையில் வலியவந்து பேசிக் ண்டிருக்கின்றேன்... நான் சொல்வது கேட்கின்றதா....!"

இப்படி ஒரு பிரகிருதி காலநேரம் தெரியாமல் த்தறுக்க வந்தால் வேலைக்கு அவசரம் அவசரமாகப் ப்படும் மனிதருக்கு எப்படி இருக்கும்? இவரது இந்த ச்சுக்கள் இன்று, நேற்று அல்ல, தினசரி தொடர்ந்தால் ப்படி ஒருவர் அதனைச் சகித்துக் கொள்ள முடியும்?

அலுவலகத்தின் முகாமையாளர் ஒருவர் தமது லத்தில் தனது நிறுவனம் தொடர்பான அறிக்கையினை வகு சிரத்தையுடன் தயாரித்துக் கொண்டிருக்கின்றார். ப்போது, அவரது மனைவி ஆக்ரோசமாக அவரது றக்குள் நுழைகின்றார். "இதோ பாருங்கள்... என்ன... ன் பேசுவது புரிகின்றதா... வர வர உங்களுக்குக் குடும்பம்



RangaRakes Tamilnavarasam.com

என்கின்ற உணர்வே இல்லை. எப்போ பார்த்தாலும் ஒரே எழுத்து வேலை... அல்லது படிப்பு... படிப்பு... இங்கே வீட்டு வேலையை யார் பார்ப்பது...! நான் ஒருத்தி இங்கே இருந்து அல்லாடு கிறேன். இங்கே வீட்டுச் செலவு, பிள்ளைகள் படிப்புப் பற்றி என்ன தெரியும்... நாளைக்கு உங்கள் சித்தி வீட்டில் கல்யாணம், மறுநாள் கோவில் திருவிழா, மின்சாரச் செலவுகளுக்குப் பணம் செலுத்த வேண்டும்..."

இப்படி, எல்லா வேலைகளையும் மனைவி அடுக்கிக் கொண்டே போகின்றார். கணவன் அமைதியாக இருக்கும் வேளையில் வீட்டுப் பிரச்சனைகளைச் சொல்லும் பழக்கம் சிலரிடம் காணப்படுவதில்லை. ஏதாவது அவசரமாக, அவசியமான பொழுதுகளிலேயே கண்டபடி பேச ஆரம்பிப் பார்கள் பதிலுக்குக் கணவன் வேலைப்பளு காரணமாக ஏதாவது சொல்லப்போக, வீடே களேபரமாகிவிடும். இந்தச் சண்டைகள், எப்போதோ ஒருநாள் நடந்தால் பரவாயில்லை. தினம், தினம் ஏதாவது ஒரு பிரச்சனைகளை உருவாக்கு வதும், பதிலுக்கு அவரும் எதிர்வாதம் செய்ய, வீட்டில் நிம்மதி வந்துவிடுமா? காலப்போக்கில் மனைவி, கணவன் இருவருமே ஒருவர்க்கு ஒருவர் இம்சை தரும் பாத்திரங் களாக உருமாறி, ஒருவரைக் கண்டால் மற்றவர்க்கு எரிச்சல், பய உணர்வு, ஆத்திரம் எல்லாமே கூடிவந்து விடலாம் அல்லவா?

எனவே சின்னச் சின்ன விடயங்களே, வீட்டில் அவை தொடர்கதையாய், ஆரவாரப்படும் அம்சங்களாய், இம்சை





ள் தருவனவாய் மாறிவிட வழிகோலுதல் நல்லதேயல்ல. வருடைய சிந்தனைகள், செயல்களைத் துண்டித்தல் சைகளை ஆரம்பிக்கும் மோசமான காரணியாகும்.

தெரியாத்தனமாக அசட்டுத்தனமாகக் கூடச் சிலர், றவர்களுடன் நடப்பதுண்டு. இவைகள் மன்னிக்கப்படக் டியதே எனினும், இத்தகையவர்களால் மேலும் ஏதாவது திப்பு நடந்து விடாமல் பக்குவமாக இத்தகையவர்களுக்கு த்துரைத்தேயாக வேண்டும். அறியாத்தனமாகக் ண்டபடி நடப்பவர்கள் கூட இறுதியில் இம்சைக்குரிய ராகச் சமூகத்தில் கருதப்படலாம் அல்லவா? வேண்டு ன்றே தவறாக நடப்பவர்களையும், அப்பாவிகளையும் ம் காணுதல் என்பது சிரமமானது அல்ல. முன்பு ப்பவோ, நடந்து போன சம்பவங்களைத் திரும்பத் திரும்ப து யாரிடமாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

"அப்போது எனக்கு வயது இருபது இருக்கும். யுத்த ாலம். எமது குடும்பம், பர்மாவில் இருந்தது. ஒரே குண்டு மழை. நாங்கள் எல்லோரும் தப்பிப்பிழைத்தது பெரிய ாரியம், எங்கோ ஓடி நடந்து... இந்தியா வந்து...."

இந்தப் பழைய கதைகளைத் தினசரி ஒருவர் ால்லிக் கொண்டிருந்தால் சொல்பவருக்குச் சந்தோஷம் அவருக்குச் சலிப்புத் தட்டாது. ஆனால் கேட்பவருக்கு...?? சரி... ஐயா... வேறு விஷயங்களைச் சொல்லுங்கள்" என்று ட்டால் போதும், அது கூட முன்பு பலதடவை கேட்ட ய்தியாகத்தான் இருக்கும். தங்களது தனிமைக்கு ஒரு



RangaRakes
Tamilnavarasam.com

வடிகாலாகவும், பேசுவதைக் கேட்க யாரேனும் ஒரு சீவன் அகப்படாதா என்கின்ற ஆதங்கத்துடனும் எதிரில் வருபவர்களைச் சிக்கெனப் பிடித்தால் அகப்பட்டுக் கொள்பவர் என்ன செய்வார், பாவம்...! பொதுவாக, தங்களிடம் உள்ள குறைபாடுகள், பலவீனங்களை அறிந்தும் கூட, அதனின்றும் விடுபட முடியாதவர்கள், மற்றவர்களிடம் வந்து தம்மைப் பற்றி மிகையாகத் தாங்களே சுய விமர்சனம் செய்வதுமுண்டு.

எந்தவித வசதிகள் அற்றும் எதுவித முயற்சிகளும் செய்யாமல் இருக்கிறவர்கள் யாரையாவது கண்டதும், தங்கள் பரம்பரை வரலாறு பற்றிக் கூற ஆரம்பிப்பார்கள். “நாங்கள் எவரிடத்திலேயும் கை ஏந்தும் பரம்பரையில் பிறக்கவில்லை. ஒன்றுக்கும் வழி இல்லாதவர்கள் எல்லாம் இப்போது ராஜாமாதிரி வேடம் போடுகின்றார்கள்” என்று கூறிவிட்டு, வழியில் காண்பவர்களிடம் இறுதியில் “கொஞ்சம் பணம் தாருங்கள். ஏதோ காலக் கஷ்டம், உங்களிடம் கூட நான் கைஏந்த வேண்டி இருக்கின்றதே” என்றும் குத்தலாக வேறு பேசுவார்கள். இந்த தொண, தொணக்கும் பேச்சை அடிக்கடி கேட்டும் நபர்களால் என்ன செய்யமுடியும்? வீம்பாகவும் பேசுவார்கள். கை நீட்டி உதவியும் கேட்பார்கள். கொடுக்காது விட்டால் வருகிற, போகின்றவர்களிடம் திட்டியும் தீர்ப்பார்கள்.

இன்னும் ஒரு ரகமானவர்கள் இப்படி இருப்பார்கள். பார்ப்பதற்கு அழகற்றவராக இருப்பார்கள். ஆனால்





அழகான பெண்களைக் கண்டால் போதும் “இவளைப் பாருங்கள். இவள் நடையைப் பார், பெண்ணா இவள் கொஞ்சமும் அடக்க ஒடுக்கமில்லை. எங்கள் முன்னோர்கள் எல்லாம் இப்படியாக இருந்தார்கள்?” என்பார்கள். அதுமட்டுமல்ல, எந்தவிதமான முன்னேற்றமுமின்றி வீதியோரம் திரிந்து கொண்டே இருக்கும் சிலர் எந்தவிதமான இரக்கம், பாவ புண்ணிய உணர்வின்றிப் பேசுவார்கள். “அதோ... அங்கே போகின்ற இந்த பெண், எப்பவுமே என்னையே பார்க்கின்றாள். நான் தான் அவளைக் கண்டதும் ஒழிக்கின்றேன். இப்படி எத்தனை, எத்தனை பெண்கள் தான் என்னைப் பார்த்தாலும் எனக்கு அவர்களைப் பிடிக்க வேண்டாமோ. வெட்கம் கெட்ட ஜன்மங்கள்” என நா கூசாமல் பேசுவார்கள். இத்தனைக்கும், தனது அழகை, அந்தக் கோரமுகத்தை அவர் தெரியாதவரும் அல்ல.

தங்கள் குறைபாட்டை மறைக்க மற்றவர்கள் மீது அபாண்டம் செலுத்தும் இத்தகையவர்கள் சமூக இம்சைப் பிரகிரு திகளே!

பிறர் நகைக்கவும், அவர்களை வதை செய்யுமாற் போல் பேசி நடந்து கொள்பவர்கள் காலப்போக்கில், முழுச்சமூகத்திற்கும் ஒவ்வாத மனிதராவர். எத்தனையோ குடும்பங்களில் கணவனின் இம்சை தாங்காத மனைவியும், மனைவியின் இம்சை தாங்காத கணவனும், பிள்ளைகளின் கேவலமான பேச்சைச் சகிக்க முடியாத பெற்றோர்களும், ஒருவரை விட்டு ஒருவர் அறவே பிரிந்து விடுவது நாம் கண்கூடாகப் பார்க்கும் சங்கதிகள் தான். ஒருவரின் தகாத



RangaRakes
Tamilnavarasam.com

நடத்தைகளை நண்பர்களாகட்டும், உறவினர்களாகட்டும் ஓரளவுதான் பொறுத்துக் கொள்ள முடியும். "வர, வர இவனது இம்சை தாங்க முடியவில்லை" என்று சொல்லும் நபர்கள் படும் அவஸ்தைகளை நாம் வேடிக்கையாகக் கேட்டு விட்டுப் போகலாம். ஒருவர் செய்கின்ற அடாத நடவடிக்கை களால் துன்பமடைபவர்களுக்கே அதன் பாதிப்புக்களும் தெரியவரும்.

தங்களுக்குத் தெரிந்த கருத்துக்களை வலுக்கட்டா யமாகப் பிறரிடம் திணிப்பதும் சிலருக்கு வழக்கம். ஆனால் இன்னும் ஒருவருக்கு, மற்றயவர் சொல்வது பிடிக்காமல் போகலாம். நல்ல விஷயங்களைக் கூட உடனே சொல்லிப் புரியவைக்க இயலாது. எல்லாவற்றையுமே உடனடியாக உபதேசிக்க முடியுமா? பக்குவப்படாத அறிவு நிலையில் உள்ள ஒருவரிடம், வேதபாடல்களைச் சொல்லிக் கொண்டே போனால் எப்படிக் கேட்பது? ஆரம்ப அறிவு நிலையில் இல்லாதவர்களிடம் கூடச் சில புத்திசாலிகள் பெரிய பெரிய விடயங்களைப் பற்றிப் பேசுவார்கள்.

"இது என்ன, இது கூட உனக்குத் தெரிய வில்லையா? சுத்த ஞானசூன்யமாக இருக்கின்றாயே" என்று வேறு கடிந்தும் கொள்வார்கள். எல்லோருமே படித்து முடித்து விட்டா அவரிடம் பேசப்போவது? ஒருவருக்குத் தெரிந்த விஷயம் மற்றவருக்குத் தெரியாமல் போகின்றது என்ன புதுமை, இது என்ன பெரிய குறைபாடா? இதனையே பெரிதுபடுத்தி இதன் பொருட்டுப் பகிரங்கமாக ஒருவரின்





இதயத்தை நெருடும் பேச்சுக்களை, மமதையாகச் சொல்லி விடலாமா?

ஒருவரை வேதனைப்படுத்துவதில் கூடக் பரம திருப்திப்படுபவர்களும், மற்றவர் குறைபாடுகளைத் தேடி அலைபவர்களும், சமூக சுதந்திர உணர்வுகளை கிரகிக்க மறுக்கும் குறை மதியாளர்களேயாவர். நாகரீகமான இந்த உலகில் நாமும் சேர்ந்து வாழ வேண்டியுள்ளது. தங்கள் வீடு வாசல், உடமைகளைப் பார்ப்பவர்களைக் கவரும் விதத்தில் வைத்துக் கொண்டேயாக வேண்டும்.

சில விசித்திரமான பேர்வழிகள் இருக்கின்றார்கள். இவர்கள் நல்ல வசதி படைத்தவர்களாக இருப்பார்கள். ஆனால் இவர்களது வீட்டைப் பார்த்தால் வினோதமாக இருக்கும். எங்கோ பாழடைந்த தொல் பொருட்காட்சிசா லையில் நுளைவது போல் இருக்கும். சுத்தம் பேணவும் மாட்டார்கள்.

அவரது தாத்தா காலத்து வாங்கு, கதிரை, மேசை, ஓடாத மணிக்கூடு இவைகளுடன் மான் கொம்பு, வகை யறாக்களை தூசிகளை அப்பிப் பிடித்த, பழைமையான சுவரில் மாட்டி விட்டிருப்பார்கள். மங்கிய, காலத்துப் புகைப் படங்கள் வேறு பயமுறுத்திப் பார்க்கும். சுவர் முழுவதும் உடைந்து, சுண்ணாம்பு பூசாமல் இருக்கும். பழைய காலத்துக் கட்டில் கால் உடைந்து கயிற்றால் கட்டப் பட்டிருக்கும். மின்சாரம் இருக்காது. மூன்று, நான்கு தலை



RangaRakes

Tamilnavarasam.com

முறை காலம், பரம்பரை பரம்பரையாகப் பாவித்த பித்தளை விளக்கு மெதுவாகக் கண்ணைச் சிமிட்டும்.

ஆனால் வீட்டிற்குவரும் நபர்களிடம் இப்படிச் சொல்வார். "இது எல்லாம் எங்கள் பரம்பரைச் சொத்து.நாங்கள் பாவிக்கும் வெண்கலக் குடம் வேறு ஒருவரிடமும் கிடையாது. என்றாலும் பழைய சாமான்களுக்கு ஈடு ஆகுமோ. நாங்கள் இன்னமும் பித்தளைத் தம்ளரில்தான் தண்ணீரே குடிப்போம்..." என்று சொல்லிக் கொண்டே போவார். இப்படி இவர் சொல்கின்றாரே. அந்தப் பொருட்களை, அழகாக அடுக்கி வைத்துக் கலைநயத்துடன் வீட்டை வைத்து இருக்கின்றாரோ, என்றால் அதுதான் இல்லை! இவர் தான் மட்டும் அனுபவிக்காமல், தனது மனைவி பிள்ளைகளுக்கும் எந்த வசதியையும் கொடுக்காது, தமது வீட்டையே ஒரு இருண்ட குகைபோலாக்கி தம்மைத்தான் இம்சைப் படுத்துவதில்லை, தனது குடும்பத்தையே இம்சைக்குள்ளாக்கும் விந்தை மனிதனாகவும் வாழ்ந்து என்ன பயனைக் காணப் போகின்றார்?

இன்று உழைக்கும் மக்கள் உழைத்துக் கொண்டேயிருக்கின்றார்கள். ஆனால் உழைக்காத தலைவர்கள் என்ன சொல்லி மக்களை அடிக்கடி இம்சைப்படுத்துகின்றார்கள்? "நாங்கள் ஒரு தவறும் செய்து விடவில்லை. முன்னைய அரசாங்கங்கள் தான் தவறுகள் பல செய்தன. இன்று எங்கள் ஆட்சியில்தான் பாலாறு, தேனாறு ஓடுகின்றது? எங்கள் நாட்டில் என்ன குறை, பிரச்சனைகள்





உண்டு? எல்லா நன்மைகளும் இங்கு உண்டு" என்று மட்டுமா சொல்கின்றார்கள்?

மேலும், "இன்று உலக வல்லரசுகளே எம்மைப் பார்த்துப் பொறாமைப்படுகின்றன. மூக்கில் விரல் வைக்கின்றன. அபிவிருத்திப் பாதையில் வீறு நடைபோடுகின்றோம். இவை எல்லாமே எமது சாதனைகள், படைப்புக்கள்" என்று மார்தட்டிப் பேசினால் சனங்களுக்கு எரிச்சல் வராதா? தினம், தினம் மக்கள் பொருளாதாரம், கல்வி, தொழில் எனப் பலவாறான நெருக்கடியில் சிக்கித்திணறி விழி பிதுங்கி நிற்கும் போது, இந்த அரசியல்வாதிகளின் வீம்பான பேச்சால் வெறுப்பேற்றி மன அழுத்தம், கோபங்களை உற்பத்தி செய்வது பெரிய இம்சை அன்றி வேறென்ன?

பொய்யுரைகளைக் கேட்பதை விட வேறென்ன கொடுமை உலகில் உண்டு ஐயா! ஒருவரை அடித்து, உதைத்துச் சித்திரவதை செய்தல் மட்டும் இம்சித்தல் என்று சொல்ல முடியாது. ஒருவரைச் சுதந்திரமாக செயலாற்ற விடாது முடக்கி வைத்தல் எவ்வளவு பெரிய கொடுமை! பெண்களுக்கான உரிமைகளை வீட்டிலும், வெளியிலும் அளிக்காமல் இருப்பதும் சின்னஞ் சிறு சிறுவர்களை முன்னேற விடாது அவர்களைத் துச்சமாக மதித்து அவர்களது ஆசை, அபிலாசைகளை அடங்கச் செய்வதும், அடக்குதலும், கூலிக்கு வேலைக்கு அமர்த்துதல் எல்லாமே சமூக இம்சை, கொடூரம் என்று சொல்லிக் கொண்டே போகலாம்.



RangaRakes

Tamilnavarasam.com

கருத்துச் சுதந்திரம் என்பது வெளியில் சொல்கின்ற கருத்துக்கள் பற்றியது என்றுதான் சொல்கின்றோம். நல்ல புத்திசாலிப் பையனின் கூற்றை ஆசிரியர் முடக்குவதும், நல்ல மனைவியின் கருத்தை ஏற்க கணவன் மறுப்பதும், கணவனின் நல்ல அறிவுறுத்தல்களை அப்படியே புறக்கணிப்பது கூட நல்ல விஷயங்களை ஏற்காத, தகாத குண இயல்களே. இதனால் பாதிப்படையும் எவர்களும் படும் மனக்குமைச்சல்கள் கொஞ்ச நஞ்சமன்று

சிலரது இம்சையூட்டல் குழந்தைகள் மேலும் பாயும். குழந்தைகளைச் சீண்டி அழவைத்து வேடிக்கை பார்ப் பார்கள். ரசிக்கத்தக்க விடயங்களை ரசிக்காமலும், ரசிக்க முடியாத மனங்களைக் கொய்யக் கூடிய விடயங்களை அதீதமாக ரசிப்பதும் வக்கிரமான கொடூர உணர்வு ஐயா? மனிதன் எந்நேரத்திலும் ஜாக்கிரதையாக இருந்துவிட முடியாது. ஏதோ ஒரு தருணத்தில் இடறி விழுந்துவிட்டால் அதை ரசிக்கும் ஜன்மங்கள் இருக்கின்றார்கள்.

இல்லாத விடயத்திற்கும் கை கால்களை ஒட்டவைத்து உயிரூட்டும் பரமாத்மாக்கள் இருக்கின்றார்கள். மீனை எண்ணையில் விட்டு சூடு ஏற்றும் போது அதன் விளைவாக எண்ணை குமிழ் ஏறி, சட்டியில் இட்டமீன் துள்ளினால் மீன் உயிருடன் துள்ளுவதாகச் சொல்பவர்களிடம், ஒன்றும் பேச முடியாது. பொய்யுரைக்கும் வீணர்கள், பொறாமைக்காரர், சூழ்ச்சி செய்வோர், எவரையும் தமது சொல்லால், செய லால் உடலை, மனத்தைக் காயப்படுத்தும் போது, அதன்





பொருட்டு நாம் மனம் வருந்தினால், அது தீவினை யாளருக்கு ஏற்படும் வெற்றி என்பதாகவே அவர்கள் கருதுவர். இந்நிலைக்கு எவரும் வழிசமைத்தல் கூடாது.

மிகவும் ஆச்சரியப்படத்தக்கதும், வெட்கப்படக் கூடிய துமான செயல் என்னவெனில், பிறருக்குத் தீங்கு இழைக்க எண்ணுதலும், அதன் பொருட்டு மகிழ்வு எய்துவதுமாம். ஒருவருக்கு எதிரான செயலைச் செய்யச் சித்தம் கொள்வதே வெட்கம் கெட்ட செயல் தான். தகாத கருமங்கள் செய்கின்ற நபர்கள் அதற்கான காரணங்களை, எப்படிச் சொன்னாலும், அதுபற்றிய வியாக்கியானங்களை அடுக்கிக் கொண்டே போனாலும், அவை எதுவுமே ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும். தாங்கள் கௌரவமானவர்கள், யோக்கியமானவர்கள் என்பதனை நிரூபிப்பதற்காகக் கொடுமையான கருத்துக்களை, மாயமான வழிகளில் புகுத்துவது தங்களையே ஏமாற்றும் செயல்தான்.

“நல்லவர்களுக்கான “புகழ் தானாகவே வந்து பூக்கின்றது” மற்றவர்களை இம்சித்து, போலி விளம்பரம் செய்து கீர்த்தியினை உருவாக்க முடியாது.

மற்றவர் மனம் அறிந்து நடப்பவர்களால் அடுத்த வர்கள் உளம் நிறை வெய்துகின்றார்கள். எந்த நேரத்திலும், எந்தத் தருணத்திலும், நாம் எவர்க்காவது எம்மால் குந்தகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வோமாக! எங்களை நாடி அன்புடன் வருவோர் தொகை மூலம் எங்களைப் பற்றிய



RangaRakes
Tamilnavarasam.com

கணிப்பீடுகளை நாம் தெரிந்து கொள்ளமுடியும். அன்பினை ஊட்டுபவர்கள், அதனை வகை தொகையின்றிப் பெற்று அனுபவிப்பவர்கள், என்றும் சந்தோஷ ஜீவிகள் தான்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
01.04.2007







# மனிதாபிமானம்

அனைத்து உயிரினங்களிலும் இரக்கம், கருணை கொண்டால் உலகில் வருத்தம்கொள்ளல் என்பது ஏது? ஆன்ம விசாலம் கொண்டவர்களால் எவரையும் நேசிக்க முடியும். மனிதன், மனிதன் மீது வைக்கும் அன்பை மட்டுமே மனிதாபிமானம் என்று சொல்ல முடியாது. ஆறறிவு படைத்த மனிதன், எல்லா உயிர்க்கும் பொதுவான இந்தப் பூமியைப் பூஜித்துப் போஷிக்க வேண்டியவனாகின்றான். எந்த உயிரினத்தின் உடலை மட்டுமல்ல, அவைகளின் உணர்வுகளையும் இம்சித்தல் மனிதாபிமானம் அல்ல. நல்ல மனிதாபிமானம் மிக்கோரின் ஆன்மா என்றும் சுகராகம் மீட்டியபடியே இருக்கும்.

மனிதன், மனிதன் மீது வைத்துள்ள மிக இயல்பான இரக்கம், அன்பு, தயவு போன்ற மென்மையான உணர்வுகளின் வெளிப்பாடாக, "மனிதாபிமானம்" என்கின்ற நேயப்பாடு அவனை உயர் நிலைக்கு இட்டுச்செல்கின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

மனிதன் எல்லா உயிர்கள்மீதும் இரக்கம் கொள்வதற்குச் சித்தம் கொண்டுவிட்டால் உலகில், வருத்தம் கொள்கின்ற உயிரினங்களே இருக்கமாட்டாது என்பதை அறிக! மனிதாபிமானம் என்பது மனிதர், மனிதர்மேல் அபிமானம் கொள்வது மட்டுமல்ல தம்மால் இயன்றளவு, உச்சபட்ச உதவிகளை அளிப்பதுமாகும். நல்லனவைகளை இதயம் முழுமையாக ஏற்கும்போது செயல்கள் தானாகவே சிறப்பாக உருவாக்கப்படுகின்றன. ஒருவனைத் "தியாகம் செய்" என வற்புறுத்த முடியாது. விரும்பிச் செய்யாத பணிகளில் முழுமையும் இல்லை, பெருமையும் இல்லை. தமக்கு இடையூறு விளைவிக்காத நற்கருமங்களைச் செய்ய ஏன் தயக்கம் காட்டவேண்டும்?

இன்று உலகத்தில் எங்கு பார்த்தாலும் மனித நேயப்பாடுகள் முழுமையாக ஏற்று நடக்கின்றன என்று கூற முடியுமா? தனக்கு வேண்டப்பட்டவர்களுடன் தவிர, ஏனையவர்கள் மீதும் அக்கறையுடன் அன்பு செலுத்தும் மாந்தர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். கொஞ்ச நாள் ஒருவருடன் பழகுவார்கள். பின்னர் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் விரோதித்துக் கொள்வார்கள். சிலர் சின்னச் சின்ன அபிப்பிராய பேதங்கள் வந்துவிட்டாலே அவர்கள் மீது அவதூறு செய்து, தங்கள் கோபதாபங்களை மிகையாக வெளிப்படுத்துவர். தங்களுக்கு.விரோதமானவர்கள் எனச் சாதாரண நபர்களைக் கூடக் கருதுபவர்கள, எந்தவிதமான இரக்கமின்றி வன்மம் தீர்த்தபடியும் இருப்பார்கள்.





மனிதாபிமான எண்ணம் கொள்கின்றவர்கள், தமக்கு உகந்தவர்கள், தம்மை நேசிக்காதவர்களைக்கூட மனிதன், மனிதன் மீது வைக்க வேண்டிய பற்றுதலை நிராகரிக்க வேண்டிய எந்த அவசியமும் அவர்களுக்கு ஏற்படப்போவதில்லை.

மனித சித்திரவதைகள், தனிமனித உரிமை மீறல்கள் பற்றி, ஐக்கியநாடுகள் சபையிலிருந்து, சாதாரண கிராமங்கள் வரை மிகவும் பரிதாபமாக குரல் கொடுத்த வண்ணமுள்ளன. ஆனால் இவைகள் பற்றிச் சம்பந்தப்பட்ட, சமூக விரோதக் கும்பல்களோ, ஏதேச்சார சர்வாதிகார போக்கிலான அரசுகளோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை. வல்லரசு நாடுகள்தங்கள் குறிக்கோள்களைக் கைப்பற்ற எதனையும் செய்யச் சித்தமாயிருப்பதே பெரிய கொடுமையிலும் கொடுமை!

அதிகாரங்களை நிலை நிறுத்த நடாத்தும் போரில், மனிதாபிமானமற்ற உயிர்பலிகள் இடம் பெறுவது இன்று மட்டுமல்ல, தொன்று தொட்டே நடந்துவரும் அடாவடித்தனமான ஆணவத்தின் வெளிப்பாடுகளே! உலகம் என்றுமே முழுமையாக, அமைதியாக, சமாதானத்துடன் இருக்கவில்லையா என நொந்து, நாங்கள் சும்மா அமர்ந்து விட முடியாது. பரஸ்பர நேயப்பாடுகளின் வலிமையை நாம் எல்லோர்க்கும் எடுத்துரைப்பதுடன், நாமும் எந்த ஜீவன்களையும் வெறுத்து ஒதுக்காத மனநிலையினை உருவாக்கிக் கொள்ளவும் வேண்டும்.



RangaRakes

Tamilnavarasam.com

இன்று சோமாலியா, சூடான், எதியோப்பியா போன்ற நாடுகளில் பஞ்சம், பசியினால் துயருறும் மக்களை அடிக்கடி படம் பிடித்துக் காட்டுகின்றார்கள். ஒட்டியுலர்ந்த வயிறும், குச்சி போன்ற கை, கால்களுடன் வெட்டவெளிகளில் சுட்டெரிக்கும் வெயியில் வீதியோரமாக செத்தும், சாகாமலும், ஏன் பிணங்களாகவும் விழுந்து கிடக்கின்ற அவலக்காட்சிகள் மனித இதயங்களைச் சிதைந்து விடுமாற்போல் துன்பங்கள் ஈட்டியெனக் குத்தி நிற்கின்றன.

தினம், தினம் பதினைந்து ஆயிரம் சிசுக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருப்பதாக அண்மையில் வெளியான சுகாதார நிறுவனம் ஒன்றின் குறிப்புக்கள் உள்ளத்தினைக் குதறும் வண்ணம் அமைந்துள்ளன. மனிதாபிமானம் பற்றி இந்த உலகம் பெருமைப்பட என்ன இருக்கின்றது எனக் கேட்கத் தோன்றவில்லையா? மிஞ்சுகின்ற உணவில், ஒரு கவளத்தினையாவது, ஒவ்வொருவரும் கொடுத்தாலே, பட்டினி என்கின்ற பேய் ஒட்டிக் கொள்ளுமா?

அண்மையில், பிராணிகளை வதை செய்யப்படுவது தொடர்பாக ஒரு திரைப்படத்தினைப் பார்க்க நேர்ந்தது. உணவுத் தேவைக்காக மிருகங்களான மாடு, பன்றி, முயல் என்பவை எப்படிக் கொலை செய்யப்படுகின்றன என்பவற்று டன், கோழிகள், வான்கோழிகள் என ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்படும் கொடூரக்காட்சி களையும், அவை களின் அலறல்கள், ஈனஸ்வர ஒலிகளைக் கேட்கும்போது





மனசில் ஏற்படும் வலிகள் சொல்லி மாளாது. இந்தக் கொலைகளுக்கு மத்தியில் ஒரு சோகமான காட்சியையும், பலத்த ஓலமுடன் காண்பித்தது நெஞ்சைப் பிசைந்தது. தாய்ப்பசுவை, இழந்த கன்றின் கதறல், அந்தக் காட்சியைக் கண்டதும் கன்று, அம்மா, "அம்மா... என கத்திக் கதறிய இந்தப் பரிதாபத்தை என்ன என்று சொல்ல...!!! இதனை எழுத்தில் வடிக்கமுடியாது.

ஆனால், நாம் இன்று காண்பதென்ன? மிருகவதைக் காக மனம் பதை பதைக்கின்றோம். ஜீவகாருண்யம் பற்றிச் சொல்லிக் கொண்டேயிருக்கின்றோம். ஆனால் ஒரு குடும்பத்திற்கு முன்னே, அவர்கள் பார்த்திருக்கப் பட்டப் பகலில் துப்பாக்கியால் சுட்டு, பின்னர் வெட்டி, படுவஞ்ச கமான முறையில் கொலை செய்யப்படும் சம்பவங்கள் சர்வசாதாரண முறையில் உலகமெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதே! அத்துடன், ஒரு குடும்பத்தில் மொத்த உறுப்பினர்களையும் அதன் வாரிசுகள் ஒருவரை யும், மிஞ்சவிடாமல் படுகொலை செய்கின்ற அநியாயங்கள் புரிபவர்களுக்கு மனிதாபிமானம் என்கின்ற நல்ல வார்த்தை கூட கேலிக்குரிய வார்த்தையாகவே படும்

இன்று உலகின் பலநாடுகளில் தூக்குத்தண்டனை விதித்தல், மனிதாபிமானமற்ற செயல் எனக் கருதிச் செயலைத் தடுக்கச் சட்டமியற்றி வருகின்றன. தண்டனைக் குரிய நபர் தப்பித்து தூக்குத்தண்டனை விதிக்கப்படாத வெளிநாடு ஒன்றிற்குச் சென்று, அங்குள்ள நாட்டில்



RangaRakes

Tamilnavarasam.com

பிடிபட்டாலும் கூட, அவர்கள் தமது தாய் நாட்டிற்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும் முன்னர், குறித்த அவர்கள் நாட்டில், தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட நபருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட மாட்டாது என்கின்ற உத்தரவாதத்து டனேயே, அவர்கள் தாய் நாட்டிற்கே திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். இது ஒரு மானுடநேயப் பிரச்சனை. உயிர்க்கொலை கூடாத செயல் எனப் பல நாடுகளின் தலைமைகள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டன.

எந்த ஒருவனையும் இம்சிக்கும் அதிகாரம் எமக்கு இல்லவேயில்லை. இது மானுட நாகரீகமும் அல்ல. காலம் ஓட ஓட மனிதன் தன்னைப் புதுப்பித்துப் புதுப்பித்துத் தூயவனாக, மனதில் களங்கம் அற்றவனாக, தமக்கு முன்பிருந்தவர்களை விட ஒருபடி முன்னேறியவனாக இருக்க வேண்டும். மாறாக முன்னேற்றப் படிகளில் இருந்து பின்தள்ளி, அதாளபாதாளத்துள் அறிவை புதைத்துச் செயல்களைக் கருகவைப்பது பெரும் வேதனையல்லவோ?

ஈராக்கிய நாட்டை ஆண்ட முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் அவர்களது தூக்குத்தண்டனை நிகழ்வு இந்த உலகையே உலுக்கியது. என்னதான் ஒருவரிடம் கோபம், காழ்ப்புணர்வுகள் இருந்தாலும் கூட தூக்குத்தண்டனை என்பதை ஒரு காட்சிப் படமாக, உலகின் கண்கள் துன்பமு டன் நோக்க வைத்த செயல், இந்த நாகரீக உலகமே வெட்கப்பட வேண்டிய விடயம் அல்லவா?





ஒருவருக்குக் கழுத்தில் கயிற்றினை மாட்டிவிடும் செயல் செய்வித்தவர்களின் வக்கிரப் புத்தியைப் பறை சாற்றித் தமது முகத்திலேயே சேற்றினை வாரிவீசச் செய்த கோழைத்தனம் தான். அதிகாரத்துடன் மனித நேயமின்றி செய்கின்ற காரியங்கள் வீரமும் அல்ல விவேகமும் அல்லவேயல்ல.

எத்தனை எத்தனையோ அதிகார அத்துமீறல்களை இந்தப் பூமி கண்டு, கண்டு துவைந்து அலுத்துப் போய் கிடக்கின்றது. இத்தகைய அத்துமீறல் பேர்வழிகளின் அதிகார வெற்றிகள் அல்லது வெறித்தன அடாவடிப் போக்குகள் என்றுமே நிரந்தரமானதும் அல்ல. புகழைப் பெருமையை ஈட்டித் தரப்போவதுமில்லை.

- ❖ தெய்வ நம்பிக்கை
- ❖ உண்மையான உழைப்பு
- ❖ கலாசாரத்தின் மீதான ஈடுபாடு
- ❖ கல்வியோடு இணைந்த ஞானம்

போன்ற விடயங்களில் தம்மை அர்ப்பணிக்கும் மனிதர்கள், பிறர் துன்பம் கண்டால் தம்மையறியாமல் கண்ணீர் மல்குவர். உதவிக்கரம் நீட்டுவர். இன்று கலாசாரம் பற்றி அதன் பெருமைபற்றி, இளைய தலை முறையினர் அதிகமாக அறியாமல் இருப்பது வேதனை யான விடயம்தான்.

ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான கலை, பண்பாடுகள் உண்டு. எமது முன்னோர்கள் கலாசார



RangaRakes
Tamilnavarasam.com

பாரம்பரியத்தின் பின்னணியிலும் தமது வாழ்வையும் பிணைத்துக் கொண்டார்கள். மேலும், ஆன்மநெறியில், உள்ள அதீத ஈடுபாடுகள் அவர்களை மென்மைப் போக்குள்ள அன்புசால் மாந்தர்களாக்கியது.

ஒரு தந்தை எனக்குச் சொன்னார். தனது மகன் முரட்டுத்தனமுடன், பிடிவாத போக்குடன் காணப்பட்டான். எவருடனும் அன்புடன் பழக மறுத்தான். அவனை நான் ஒரு மிருதங்க கலைஞரிடம் கொண்டு சென்றேன். அவர் எனது மகனைத் தனது சீடனாக ஏற்றுச் சிரத்தையுடன் மிருதங்கக் கலையைக் கற்பித்தார். இன்று எனது மகனின் இயல்புகள் அடியோடுமாறிவிட்டது. கலையில் மீதுள்ள ஈடுபாடு அவனை இரக்க குணமுள்ள, நல்ல ரசிகனாக மாற்றி விட்டது" என்றார்.

பொதுவாகக் கலைகளில் நாட்டம் உள்ள கலைஞர் கள், ரசிகர்கள் மனிதாபிமானப் பண்பு நிறைந்தவர்களாக இருப்பது, புதுமையான விடயம் அல்ல. நல்ல ஒழுக்கமுடன் ஒருவன் உருவாக வேண்டும் எனின், முதற் கண் அவன் தனது வீட்டில் இருந்தே ஒழுக்க நெறிகளை உணர்ந்து பயில வேண்டும். பெற்றார்களிடம் இருந்தே குழந்தைகள் அன்பு செலுத்தும் பண்பைத் தெரிந்து கொள்கின்றனர். சூழல் சரியான படி அமையாதுவிட்டால் ஒருவன் எப்படி இரக்க சிந்தனை உள்ளவனாக உருவாக முடியும்?





உளரீதியான தாக்கத்தினால் பலரும் விரக்தியுற்று மனிதாபிமான சிந்தனைகளையே கருவறுத்துச் சீவிக்கி ன்றார்கள். நான் இந்தச் சமூகத்திற்கு எவ்வளவோ செய்தேன். இருந்தும் என்ன, எனக்கு இந்தச் சமூகம் அநீதி இழைத்து விட்டது. எனவே இவை அழிந்தால் என்ன, வாழ்ந்தால் என்ன என்று சொல்லிக் கொள்பவர்கள், தாங்கள் இந்த உலகில் மற்றவர் தயவில் வாழ்ந்து கொண்டிருப்பதை உணர்கின்றார்கள் இல்லை. சமூகம் தனக்கு ஒன்றுமே செய்யவில்லை என மனம் குமைப வர்கள், அதன் பொருட்டு பழிதீர்த்தல் போல், தங்கள் ஆன்ம வலுவை இழக்கும் முயற்சியில் இறங்குவது அறியாமையிலும் அறியாமையே தான்.

ஒருவன் துன்பம் கண்டு இரங்குதல் என்பது "மற்றவன் எனக்கு உபகாரம் செய்வதால் மட்டும்தான்" என்ற தப்பான எண்ணங்களையே, நிரந்தரமாகக் கொள்வதும் அறிவீனமானதுமேயாகும்.

நாங்கள் மகான்களாக மாறவேண்டும் என்று எண்ணு வதன்முன் சராசரி மானுடனாக வாழப்பழகுதல் முதன்மை யானதாகும்.

எங்கள் பொழுதுகள், என்றுமே ஆக்க பூர்வமாக, உயிர்ப்புடன் திகழவேண்டும். மக்களுடன் ஒன்றிணைந் ததாக பயன்தரும் விதத்தில், உலகிற்கு உவப்பளிப்பதாக இருப்பின், மானுடநேயம் மிக இயல்பாகவே இதயத்தில் இருந்து உதயமாகும்.



RangaRakes
Tamilnavarasam.com

மக்களை விலக்கி, நாம் வெகுதூரம் சென்றுவிட முடியுமா? ஒருவரின் முகமலர்ச்சி மூலம் அவர்களின் இதய வெளிப்பாட்டினை உணர்ந்து கொள்ள முடியும். மனிதனால், மனிதன் ஆகர்ஷிக்கப்படும் போது வேற்றுமையுணர்வு, பழிதீர்த்தல், காழ்ப்பு எல்லாமே சூரியனைக் கண்ட பனி எனத்துறந்து போகின்றன.

நீண்ட வாழ்க்கைப் பயணங்களைத் தொடர்ந்து செல்லும் போது, வாழ் நாட்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்லும். ஆனால், நாம் ஆற்றுகின்ற செயல், மனிதப் பண்பாட்டிற்கு ஏற்ப, மனித நேயச் செயல்களினால் ஏற்படுத்தப்படும், கீர்த்தியின் அளவோ, எண்ணிறைந்து கூடிக் கொண்டே செல்கின்றன.

ஒரு நொடிப் பொழுதில் கூட, மனித நேயத்தால் பெற்ற நிம்மதி, கோடானுகோடி வினாடிகளுக்கான விழிப்பின் சுகானுபவத்தினை உண்டுபண்ணியே தீரும். சொர்க்கத்தைத் தேட நாம் எங்கேயும் ஓடி அலைய வேண்டாம். மனிதர் எம்முன் காட்டும் இன்முகத்தினை விடச் சொர்க்க சுகம் வேறு என்ன வேண்டும் ஐயா? சிரித்த முகங்கள், எம்மைப் பார்க்கும் போது அவை எமக்கு அளிக்கின்ற அதி உயர் கௌரவங்கள், "விருதுகள்" எனக் கொள்வோமாக.

என்றும் ஈரநெஞ்சுடன் உலா வரும் மனிதன்கரிய எண்ணங்களைத் தொலைத்தவனாகின்றான். தன் உருவம் தொலைப்பது என்பது, நல் இயல்புகளை மறுத்துப் பாவம்





சூழ்ந்த சூழலுக்குள் தம்மைப் புதைப்பதுவேயாகும். எமக்கு இந்தத் துர்ப்பாக்கிய நிலை வேண்டாம். என்றுமே புன்னகை பூத்த புத்தம் புதுமனிதனாக, மனிதனை நேசிப்பவனாக, அவர்தம் இன்ப, துன்பங்களைப் பகிர்ந்து கொள்பவனாக மாறி விடுதல்தான், மானுட தர்மமும் ஆகும். நாங்கள் மனிதனாகவே வாழப்பிரியப்படுவோம்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
22.04.2007



RangaRakes

Tamilnavarasam.com



# நட்பு

> அன்பு என்னும் அடித்தளத்தில் இருந்து நட்பு நெடிதுயர்ந்து வளர்கின்றது. தியாகம், புரிந்துணர்வு இல்லாது போயின் நட்பு நிலைக்காது. நல்ல நட்பு, மேலதிக சக்தியுமாகும். சந்தேகம் நட்பிற்குச் சத்துரு. பல திசைகளில் இருந்து நல்ல நண்பர்களைத் தேடுவதால் உலக வேற்றுமையுணர்வுகள் காற்றாய் பறந்து போகும். நல்லோர் நட்பை நாமாகத் தேடிப் போக வேண்டும். அன்பை, நட்புறவின் மூலம் பகிர்வதால்.மனம் லேசாகித் துன்பங்களில் இருந்து விடுபட்டுச் சுதந்திர உணர்வு பரிணமிக்கின்றது.

தனி ஒரு மனிதனிடம் ஒருவரோ அன்றிப் பலரோ ஈர்க்கப்பட்டு, அவர்தம் வாழ்க்கையில் ஓர் அங்கமாகி, ஆத்மார்த்தமாக ஒன்றிணைந்து கொள்ளும் ஓர் அதி உன்னத உறவு "நட்பு" எனும் தூய்மைப் பிணைப்பாகும்.

நட்பு பல திசைகளில் இருந்தும் புறப்பட்டு மனிதனை சுவீகரித்துக் கொள்ளும். நெருங்கிய உறவினர்களிடம்





இருந்து மட்டுமல்ல, உலகின் எத்திசையில் இருந்தும் மதம், மொழி, இன பேதமின்றித் தொட்டு நின்று, நீக்கமற ஒட்டி உறவாடி ஸ்திரமாகி நிலை பெற்றும்விடும் ஆற்றல் மிக்கது. அன்பு எனும் அடித்தளத்திலேயே, நட்பு நெடிதுயர்ந்து உருவாகின்றது. எனினும் நட்புணர்வு எம்முள் நிலைத்து நிற்கப் பின்வரும் உன்னத குணாதிசயங்கள் பிரதானமான வையாகும்.

- புரிந்துணர்வு
- விட்டுக்கொடுக்கும் இயல்பு, தியாகம்
- தன்னாதிக்க மேலாதிக்க குணங்களைச் செலுத்தாமை
- சுயநலமற்ற தன்மைகள்
- நட்பை விட்டுக் கொடுக்காத உறுதிநிலை

மேற் சொன்ன விஷயங்கள் முழுமையாகக் கொண்ட வர்கள் கிடைக்கும் நல்ல சினேகிதர்களால் தம் வாழ்வில் இணையற்ற ஒரு தொடர்பு மூலம் நிம்மதியும், அச்சமும் அற்ற சந்தோஷங்களை உருவாக்கிக் கொள்ளுவார்கள்.

குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே எங்களது வாழ்வில், சுக துக்கங்களில் உண்மையான அன்புணர்வுடன் பங்கு கொள்கின்றார்கள். எல்லோரையுமே நாங்கள் இணையற்ற நண்பர்களாக ஏற்றுக் கொள்வதுமில்லை. நாம் எங்கள் ஜீவியத்தில் பலருடன் பேசுகின்றோம் பழகுகின்றோம். எல்லோருமே எங்கள் மனதில் இடம் பெற்றுவிடாதுவிடினும்,



RangaRakes
Tamilnavarasam.com

பார்க்கின்றவர்களிடம் இன்முகத்துடன் பழகுதல் அவசிய மாகும். அன்பினைப் பகிர்வதில் நாம் பின்னிற்கக் கூடாது.

நாம் பழகுகின்ற ஒவ்வொருவரிடத்திலும் சினேக மனப்பான்மையினை உருவாக்குதல் வேண்டும். எவரையுமே அன்னிய முகங்களாகக் கருதாத இயல்பினை உருவாக்க முயலுதல் நல்லது. அனைவருமே எம்மோடி ணைந்த நண்பர்களாகத் தொடர்ந்து இருக்காதுவிடினும், காண்கின்ற மனிதரை மதித்து, அன்பு காட்டி நட்புறவு பாராட்டினால் அது எமது மனித மனதின் விஸ்தீரணத்தைக் காட்டுவதாக அமையும்.

ஆயினும், நாம் எம் முன் நடமாடிக் கொண்டிருக்கும், தகாத நடத்தையுள்ளவர்கள் பற்றியும் தெரிந்து கொண்டே யாக வேண்டும். தகாத நண்பர்கள் தொடர்பு, அறிமுகங் களைத் துண்டிக்கப்படாதுவிடின், நாம் சமூகத்தினால், கண்டிக்கத்தக்க மனிதர்களாகிவிடுவோம். சில தீயோர், மற்றவர்கள் யாராவது நல்ல அன்னி யோன்யமான நண்பர்க ளாக இருந்தால், அது அவர்களுக்குப் பிடிக்கவே பிடிக்காது. ஏதாவது பகை மூட்டிச் சூழ்ச்சி செய்து கோள்மூட்டிப் பிரித்தே விடுவார்கள்.

ஆனால், அசைக்க முடியாத நட்புறவு கொண்டவர் களை எவருமே பிரித்திட முடியவே முடியாது. சிலவேளை, சில சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நண்பர்கள் பிரிந்து இருக்கலாம். சில காலப் பிரிவுகளால் நண்பர்களின்





பிணைப்பு மேலும் இறுக்கமாகிவிடும் என்பதே உண்மையு மாகும். நல்ல நட்புக்குக் களங்கம் கற்பித்துக் குளிர்காயும் சில பேர்வழிகள் சில சுயநல காரணங்களால், தாங்கள் பெரும் பேறு பெற்றவர்களாகக் கற்பனை செய்யலாம்.

சில குடும்பங்களின் உறவு நிலை, சில தகாத இடையூறுகளால் பிரிந்துவிடுவதனால் அவர்கள்படும் அவஸ்தைகளை, கால ஓட்டத்தில் கண்டு கொள்வார்கள். மேலும் ஒருநபரின் வேண்டாத தலையீடுகளை உண்மை யான நண்பர்கள் கண்டு கொள்ளக் கூடாது. திடீர் என ஒருவன் நம்ப முடியாதபடி வந்து நின்று உறவு பாராட்டி னால் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. சில நீண்டகாலப் பகைவர் கூட, ஏதோ ஒரு நோக்கத்திற்காக வந்து, "பழை யதை மற, நண்பராவோம்" என்று சொன்னால் மனம் பயப் படத்தான் செய்யும். எனினும் சிலர் தாம் தெரியாத்தனமாக ஒருவர் மீது ஆத்திரப்பட்டுப் பகை கொண்டதன் விளைவினை உணர்ந்து கொள்வதுமுண்டு. இந்தச் செயல் களை மன்னிப்பது பெரும் தன்மையானதேயாம்.

சில குடும்பங்களைப் பார்த்தால் அதிசயமாகவும், பெருமைப்படத்தக்கதாகவும் இருக்கும். இவர்கள் ஜாதி, சமய, மொழி வேறுபாடுகளை களைந்து உறவு பாராட்டு வார்கள். இந்த உறவுமுறை பரம்பரை, பரம்பரை யாகத் தொடர்வதே விந்தையானதாகும். இன்று வெளி நாடுகளில் சென்று குடியேறிய அன்பர்கள் பலர் சொன்ன கதைகள் மனதில் நெகிழ்ச்சியை உண்டுபண்ணியது. எங்கோ பிறந்து,



RangaRakes
Tamilnavarasam.com

எங்கோ வளர்ந்து, கண்டு கொண்ட அந்நிய முகங்கள் குடும்ப உறவாகி, வீட்டில் ஒரு இனம் போல் எந்தவித வேறுபாடும் இன்றிப் பழகுவதாகச் சொன்னார்கள். உண்மையான விசாலமான அன்பின்முன், நாடு கடந்த நிலையிலும், மொழிவேறு இனம் வேறு ஆயினும், மனிதாபிமான உணர்வுகளே மேலோங்கி இருப்பது சந்தோஷமான ஆச்சரியமூட்டும் விஷயம்.

பிரச்சினை என்று வந்தால்தான் எம்மைச் சுற்றி இருப்பவர்களின் உண்மைச் சொரூபம் தெரியும். சில பேர் வழிகள் சற்று வித்தியாசமானவர்கள். கண்டபடி பேசிக் கொள்ளமாட்டார்கள். பழகவும் மாட்டார்கள். ஆனால் யாருக்காவது ஆபத்து என்று வந்துவிட்டால் உடன் வந்து கை கொடுப்பதில் முன்நிற்பார்கள். இன்னும் சிலர், நன்றாகப் பழகுவார்கள். எல்லோரிடமும் கடமைப் படுவார்கள். தாங்கள் யாரிடமாவது கடமைப் பட்டவர்களுக்கு ஏதாவது இன்னல் வந்தால், சாதுர்யமாக நழுவி விடுவார்கள். பின்னர் எல்லாப் பிரச்சனைகளும் துன்பப்பட்டவர்களுக்குத் தீய்ந்து போனதும் பழயபடி அவர்களிடமே வந்து ஒன்றும் நடக்காததுபோல் பேசுவார்கள்.

இதில் வேடிக்கையான, ஆனால் ஆத்திரமூட்டச் செய்யும் நபர்கள் சிலர். நண்பர்களாகப் பழகியவர்களுக்கு வெறும் வார்த்தைகளால் மட்டும் சாயம் பூசுவார்கள். துன்பத்தில் துவளும் போது களைய முனைய மாட்டார்கள். ஆனால், தாங்கள் தான் கஷ்டப்பட்ட பழகியவர்களுக்கு உதவியதாக வீம்புடன் பொய் உரைப்பார்கள்.





இன்று உள்ள பல பெரிய தனியார் தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் சில குடும்ப உறுப்பினர்களே பங்குதாரர்களாக இருப்பார்கள். ஆயினும், சில தனியார் நிறுவனங்கள், நண்பர்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்படுவதுமுண்டு. பல கோடி முதலீடுகளைத் தமது நட்பின் வலுமிக்க அத்திவாரத்தினைக் கொண்டே ஸ்தாபித்துக் கொள்கின்றார்கள்.

இளமைக் காலங்களில் உருவான நட்புகள் சிலர் வாழ்க்கையில் நிரந்தரமாகி விடுவதும், சிலரது நட்பு கலைந்து மறைந்து போவதுமுண்டு. வாழ்க்கையின் பாதைகள் வெவ்வேறு திசையில் உருமாறிச் செல்லும் போது புதிய பிரச்சினைகள், குடும்பப் பொறுப்புக்கள், பொருளாதாரப் பிரச்சனைகளால் மனிதரின் பழைய வடிவங்களே மாறி வேறு தோற்றத்துடனான எண்ணங்களுடன் தன்னை மாற்றிக் கொள்கின்றார்கள்.

எனவே, சூழ்நிலை சந்தர்ப்பவசத்தால், பழைய இனிய தொடர்புகள், பிணைப்புகள், களையப்படுவது, ஆச்சரியமானது அல்ல. ஆயினும் நீண்டகால உறவுகளை மீண்டும் காணும் போது, பழைய சினேகிதத்தை ஜீரணிக்க முடியாமல் போவதற்கு இவர்களது தற்போதைய பொருளாதார, வர்க்க வேறுபாடுகளும் காரணமாக அமையலாம். என்றாலும், நீண்டபொழுது பிரிவுகள் நீறுபூத்த பெருநெருப்பென மறைந்து கொள்வதும், அது மீண்டும் சுடர்விட்டு, வீச்சுடன் சுவாலை கொண்டு ஒளிர்வதன் மூலம் நட்பின்



RangaRakes
Tamilnavarasam.com

திண்மையினை நாங்கள் அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்ளமுடியும்.

ஆண், பெண் இருசாராரும் காதல் என்கின்ற உறவுக்கு அப்பால், சினேகிதர்களாக இருப்பது பற்றிப் பலரும் பல வேறுபாடான கருத்துக்களைச் சொல்லி வருகின்றனர். திருமணமாகாத ஆண், பெண் இருபாலாரும் எந்தவித களங்கமும் இன்றி நண்பர்களாக இருப்பதை, இன்னமும் எமது சமூகம் முழுமையாக ஏற்பதாக இல்லை. தொழில் செய்யும் இடங்களில், கல்லூரிகள், பல்கலைக்கழகங்ககளில் இருசாராரும் இணைந்தே வேலைபார்க்க அல்லது கல்வி கற்க வேண்டியுள்ளது.

தங்கள் மன அழுத்தங்களைக் குறைக்க இன்ப, துன்ப விஷயங்களைப் பகிர்ந்துகொள்ளக் கட்டாயமாக ஒரு ஆணும், ஒரு ஆணும் மட்டும் அல்லது ஒரு பெண்ணும், ஒரு பெண்ணும் மட்டுமே நண்பர்களாக இருந்து கொள்ள வேண்டுமா? சும்மா, எந்தவித சலனமும் இன்றி பழகு கின்றவர்கள் மீது கருமை பூசவேண்டுமா?

தற்காலத்தில் எங்குமே பெண்கள், ஆண்களுக்கு நிகராகச் சகல துறைகளிலும் ஆட்சி செய்து வருகின்றனர். பழகுகின்ற எல்லோருமே காதல் வசப்பட்டுத்தான் பழகுகின்றார்கள் என்று சொல்வது எவ்வளவு முட்டாள்தன மான பேச்சு அல்லவா? இவர்கள் ஒன்றாகப் பேசுவது காதல் என்று பகர்ந்தால், இங்குள்ளவர்களுக்குக் காதலிப்பது தான்





பிரதான வேலையா என்ன? எந்தவித சிந்தனையும் இன்றி, எல்லா விடயத்திற்கும் முடிச்சுப் போடுகின்றார்கள். மிகவும் வேதனையான விடயம் என்னவெனில், வயது வித்தியாசம் தெரியாமல், ஒருவரது எதிர்காலப் பின்விளைவு கருதாமல் மனித, புனித உறவுகளை விமர்சிப்பதேயாகும். சகோதர வாஞ்சையுடனும் தாய், தகப்பன் உறவு நிலை போலவும் மனம் விட்டுப் பேசுதல் தகாத ஒன்றா என்ன?

யாராவது சிலர் உள்நோக்குடன் பழகுபவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். சிலரது நட்பு காலப் போக்கில் காதலாகப் பரிணாமம் பெறுவதாகவும் சொல்லப்படுகின்றது. அப்படியானால் நட்பு என்ன, காதல் என்ன என்றும் சிலர் வியாக்கியானம் செய்வதுண்டு. ஒருவன் ஒருத்தியை அன்பு கொண்டு, அதுவே நிலையான காதலாக பரிணமிப்பது வியப்புஅல்ல. எல்லா சந்திப்புக்களிலும் காதல் உடன் உட்கொள்ளப் படுவதில்லை. நண்பர்களாக, சாமானிய நிலையில் பழகும் போது ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்தப் பழக்கம் "காதல்" ஆகலாம். எனவே எல்லோருமே நட்புடன் பழகுவது காதலின் பொருட்டே என்று ஏன் விதண்டாவாதம் செய்யவேண்டும்?

ஒருவரது துன்பநிலை கண்டு, பரிவால், கருணை மிகுதியால், அவரிடம் பழகும்நிலை வருவதுண்டு. மனிதனிடம் மனிதன் காட்டும், அளப்பரிய இரக்கம், வாஞ்சையுடன் கூடிய நட்பாக மாறுவது தனித்துவமான நல் இயல்புமாகும்.



RangaRakes

Tamilnavarasam.com

நட்புணர்வினைச் சிலர் வேண்டுமென்றே புறக்கணித்து நடப்பதுமுண்டு. இத்தகையவர்களுக்கு, மனிதர்மேல் நம்பிக்கை துளியளவும் கிடையாது. "எல்லோருமே, திருடர்கள், எத்தர்கள், நம்பிக்கைத் துரோகிகள், மோசடிக்காரர்கள்" எனச் சமூகத்தின் மீது சேற்றை அள்ளி வீசியபடி இருப்பார்கள். இந்த உலகில் தாங்கள் தான் மிகவும் உத்தமமான மனிதர் எனச் சொல்லிக் குரூரதிருப்திப்பட்டுக் கொள்வார்கள். இத்தகையவர்களைக் கண்டதும் சனங்கள் ஓடி ஒளிப்பதுமுண்டு. துஷ்டத்தனமான எண்ணங்களும் பழிவாங்கும் எண்ணமும் கொண்டவர்களிடம் நண்பர்கள் எவர்தான் சேருவார்கள்? இவர்கள் தனித்தே, தம்முன் குறுகி, தங்களைத் தாமே சித்திரவதை செய்கின்ற கொடுமைக்காரர்களாகவே சமூகத்தால் கருதப்படுவார்கள்.

சமூகத்தைத் திட்டி, வஞ்சித்து எவருமே நிம்மதியாக வாழ்ந்துவிட முடியாது. வெளிப்படையாகப் பேசாமல் உள்ளத்தில் குமுறி வாழ்பவர்களுக்கும், நன்மை செய்யாது வெறும் உதட்டி னால் தேன் ஒழுகப் பேசுபவர்களுக்கும் உண்மை நட்புக் கிட்டிவிடாது.

ஆனால், மக்களுடன் பழகத் தெரியாமல் எந்தவித தொடர்பையும் ஏற்படுத்தத் தெரியாமல், கூச்ச உணர்வுடன் வாழ்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்கள், திருமணமாகிப் பிள்ளைகளைப் பெற்றுப் பெரிய குடும்பஸ் தரானாலும் கூடத் தனித்தே தமக்குள் வாழ்ந்துவருவார்கள்.





இத்தகையவர்களால் எந்தப் பிரச்சனையும் இல்லாது விடினும், ஒட்டுறவு இல்லாமல் வாழுவது என்பது யதார்த்த வாழ்வில், பார்க்கின்றவர்களுக்குச் சங்கடமாக இருக்கும். நாங்களாகப் போய் பேசினால் சிலர் ஓரிரு வார்த்தைகளை முத்து உதிர்ந்தால் போல் பேசுவார்கள். ஆனால் அப்படியும் பேசாமல் ஒதுங்கி இருக்கின்ற நபர்களும் இருக்கின்றார்கள். இது, இவர்கள் சுபாவம் அவ்வளவே!

இன்னும் சிலரை நீங்கள் பார்க்கலாம். எடுத்த எடுப்பில் ஒருவருடன் பேசி நட்புப் பாராட்டமாட்டார்கள். எதற்கெடுத்தாலும் சந்தேகக் கண்ணுடன் குறித்த நபர்களுடன் பேசுவார்கள். ஒரு நபரிடம் கண்ட மாத்திரம் சாதாரணமாக உரையாடுவதற்கு, என்ன ஆராய்ச்சி வேண்டிக் கிடக்கின்றது? தொடர்ந்து ஒருவரிடம் தொடர்புகளை ஏற்படுத்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவர்கள் பற்றிய சாதாரண விபரங்களைத் தெரிந்து கொள்வதில் தவறேயில்லை.

வெறும் சந்தேக உணர்வுகள் நட்பினை ஏற்படுத்தும் தடைக் கற்கள்தான். ஒருவரைப் புரிந்து கொள்ள வேண்டுமாயின், நுட்பமான அணுகுமுறைகள் இருக்கின்றன. எங்கள் அணுகுமுறைகள் மற்றவர்களை வெறுப்பேற்றக் கூடாது. ஒருவரைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்துத்தான் நட்பினை ஏற்படுத்தி வளர்க்க வேண்டும் என எண்ணலாமோ? நல்லவர்களையும், வல்லவர்கள் போல் நடிப்பவர்களையும் அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்ள முடியும்.



RangaRakes Tamilnavarasam.com

முதலில் மற்றவர்கள் எங்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்காத நபர்களாக நாம் தெளிந்த நிலையில் உள்ள மனிதராக, உண்மையுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

நட்பு என்பது மனித மனங்களுக்கிடையே உள்ள ஒரு அன்புப் பாலமாகும். இது என்றும் நிரந்தரமாக, உலகளாவிய விதத்தில் பரந்துபட்டால், எம்மால் எதனையும் எளிதாகச் சாதித்துவிட முடியும். மனித குலத்தில் உள்ள வேற்றுமைகள் யாவும் களையப்பட்டுவிடும். இந்த அற்புத சக்தியைக் கொண்ட நட்புணர்வைப் புரிந்து கொண்டவர்கள் தங்கள் நட்புறவு அனுபவங்களைச் சொல்லும் போது, எமக்கு மெய்சிலிர்த்துக் கண்கள் பனிக்கும்.

இதயங்களின் கசிவினால் ஏற்படும் விசித்திரமான காந்த சக்திகளாக மேலான நட்பும், பாசமும், பரிவும், காதலும், நேசமும், இறைவனால் உருவாக்கப்பட்டதே. இந்த உலகைச் சிதைக்காமல் நிரந்தரமாக ஒட்டி வைப்பதற்காகவேயாகும். உணர்வோமாக! எங்கள் இன்பங்களையும், துன்பங்களையும், உடன் பகிர்ந்து கொள்வதனால் எல்லையற்ற சுதந்திர உணர்வு, ஆனந்தம் ஏற்படுவதை நீங்கள் உணர்வதில்லையா? கட்டாயம் உணர்ந்திருப்பீர்களே?

அன்புப் பகிர்வு போல் இனிமையான உணர்வுதான் ஏது? இது இளம் தென்றல், செழுமைமிகு விருட்சங்களின் குளுமை, நல் ஒளி, குளிர் அருவி நீர், போன்றதற்கு





மேலான உன்னத அனுபவம் அல்லவோ? கைக்கு எட்டிய நல்ல நட்புக்களைக் கெட்டியாகப் பிடித்திருங்கள் நண்பர்களே!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
18.02.2007



RangaRakes

Tamilnavarasam.com



# அதிஷ்டம்

எதிர்பாராமல் கிட்டும் அதிஷ்டத்தை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும். அதிஷ்டங்களால் தன்நிலை மறந்துபோய் விடக்கூடாது. பணம், பதவி, புகழ் சிலரிடம் தகுதிக்கு ஒவ்வாமலும் கிடைப்பதுண்டு. பரந்த மனப்பான்மை, கல்வியறிவு உள்ளவர்கள் வருகின்ற வருமதிகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுவர். அதிஷ்டம் வந்த பின்னராவது தங்கள் தகுதியை, குண நலன்களை உயர்த்தாது விட்டால், எதுகிடைத்தும் அவர்கள் இழந்த நிலையில் வாழ்ந்தவர்கள். எல்லாமே இலவசமாகக் கிடைக்க வேண்டுமென எதிர்பார்த்தலாகாது. தீவிர முயற்சிகளுடன் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தலே பன்மடங்கு வெற்றிகளை உருவாக்கித் தரும்.

அதிஷ்டம் என்பது, சிலசமயம் எமது இஷ்டத்தற்கும் மேலாகவும், எதிர்பாராத வரவுகளாகச் சுரந்தும், அதேசமயம், எவையுமே நிரந்தரமற்றவை என்கின்ற முரண்பாட்டு நிலைமைகளையும் உருப்பெருக்கிக் காட்டிக் கொள்கின்றது. அதிஷ்டம் என்பது வெறும்பணம், செல்வங்களின் வரவுகள் மட்டுமல்ல. இவற்றுடன்,





பின்வரும் முக்கிய விடயங்களையும் இணைத்துக் கொள்ள லாம்.

- பதவி, கௌரவம், புகழ், கீர்த்தி
- பயணங்கள், வெளிநாட்டு வாசம், அவை தொடர்பான தொடர்புகள், சுற்றுலாக்கள்.
- நல்லோர், பெரியோர் தொடர்புகள், அவர்தம் சேர்க்கை

அதிஷ்டம் வந்து சேர்ந்துவிட்டால் போதும் என்று எல்லோரும் கருதுகின்றார்கள். ஆனால் வந்த அதிஷ்டங் களால், மன உளைச்சல்களுடன், சஞ்சலப்பட்டவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். “தெரியாத்தனமாக, நான் இந்தப் பெரும் பதவியை வந்த பெரிய வரவு என ஏற்றுக் கொண்டேன். ஆனால் இன்று நான் படும்அவஸ்தைகள் கொஞ்ச நஞ்சமல்ல. நல்ல நல்ல உறவுகளை, நண்பர்களை இழந்துவிட்டேன். பேசாமல் ஆரம்பநிலையில் நிம்மதியாக இருந்திருக்கலாம்” எனச் சொல்பவர்களைக் கேட்டிருப் பீர்கள் தானே.

மேலும் சிலர் இக்கருத்தை ஒரு கௌரவப் பேச்சாக வும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், உண்மையிலேயே அரசியல், சமூக அலுவல்களில் ஈடுபட்டுப் பெரும் பிரச்ச னைகளுள் சிக்கித் தவிக்கும் நல்லவர்களும் இருக்கின்றனர். பதவி, புகழ் கூடச் சில சமயம் ஒரு சுமை யாகிவிடுகின்றன. ஒருவரது படிப்படியான வளர்ச்சி மூலம் தான்



RangaRakes
Tamilnavarasam.com

செய்கருமங்கள் சிறப்பாக வடிவமைக்கப்படுகின்றன. திடீரெனக் கிடைக்கும் பதவி உயர்ச்சிகள் தங்கள் சக்திக்கு மீறிய கட்டுப்பாடு அற்ற விதத்தில் தங்கள் ஆற்றலுக்குள் அடங்காமல் விடுவதாகச் சிலர் உணருகின்றனர்.

துணிச்சலுடன் எதற்கும் தம்மைத் தயார்படுத்தாத மன நிலையில் இல்லாதுவிடின் பெற்ற அதிஷ்டம் மனதைச் சங்கடப்படுத்தத்தானே செய்யும். மனதின் எடை என்பது கூட நாம் ஏற்றுக்கொள்ளும் பொறுப்புக்களில் தங்கியுள்ளது. அதிஷ்டம் மட்டும் வந்து பயனில்லை. திடீரெனப் பணப் பொருளைக் கண்டதும், மாந்தர் தம் இயல்பு மறப்பது இயல்பு. நிதான புத்தியும், பதட்டமற்ற இயல்பும் கொண்டோரால் மட்டுமே கிடைத்த எந்தச் செல்வத்தையுமே காப்பாற்ற முடியும். பின்வரும் இயல்புகளை மனிதன் தன்னுள் இணைத்துக் கொண்டேயாக வேண்டும்.

❖ பண்பு, அன்புடமை, உயிர்களை மதித்தல்
❖ பொறுமை, நிதானம் ஊக்கம், தன்னம்பிக்கை

நல்ல இல்லற வாழ்க்கைக்கு கணவன், மனைவியர் கருத்தொருமித்து வாழவேண்டும். நல்ல மனைவி கிடைத்தும் அவளது விலை மதிக்க வொண்ணா பெறுமதியைக் கணவன் கண்டு கொள்ளாது விட்டால், அல்லது நல்ல கணவனின் குணநலனை உணராது மனைவி அவனைத் துச்சமாக மதித்து நடந்தால் குடும்பம் உடைந்துவிடுமன்றோ! குடும்ப உறவே, நல் அதிர்ஷ்டம்.





பணம் கிடைக்கும் எல்லோருமே அதனை மதித்து, அதனை மென்மேலும் பெருக்குகின்றார்கள் எனக் கூற முடியுமா? எவ்வளவு தான் காய், கனிகள் என உணவிற்கான பண்டங்கள் குவிந்து இருப்பினும் அதனைச் சிறப்பாகச் சமைத்துத்தான் உண்ணவேண்டும்.

இறைவன் கொடுத்த வரத்தை சிரமேற்கொண்டு பெற்று அதனை உருத்தெரியாமல் கருவிலேயே சிதைப்பது அறிவீனம் அல்லவோ?

தன்னிலை மறந்து, தன்னைவிட வேறு ஒருவரும் தமக்கு ஈடு இல்லை எனத் திடீர் பணக்காரர்கள் கூறுவதாகப் பலர் விமர்சிப்பதுண்டு. இன்னும் சிலர், "கடவுள் கொடுத்துப் பார்க்கின்றார். இதைப் பூரணமாக உணர்ந்தால் சரி" என்றும் கண்டபடி நடக்கும் நபர்கள் பற்றிக் கூறிக்கொள்வார்கள்.

எல்லா மனிதர்களுமே தமது முந்தைய பழைய துன்ப வாழ்வை நினைந்து பார்ப்பதுவுமில்லை. இவை எல்லாம் மனிதப் பலவீனங்களே! ஒருவன் தனது பணத்தை முதலீடு செய்து உழைத்துக் கிடைப்பதால் இலாபம் பெறுகின்றான். ஆனால், முதலீடு செய்யாமலேயே கீர்த்தி, புகழ், செல்வம் என்பன சிலருக்குக் கிடைத்துவிடுகின்றது. உழைப்பு இல்லாமல், சும்மா இருந்தும் குறுக்கு வழியால் கிடைக்கின்றவற்றை, "அதிஷ்டம், கடவுள் கொடுத்தார்" என்றும் வியாக்யானம் செய்து வருவது எல்லாமே ஜீரணிக்க



RangaRakes

Tamilnavarasam.com

முடியாத விஷயங்கள் தான். ஏன் எனில், இன்று எத்தனையோ பிரகிருதிகள், எந்த விதமான தகுதி இன்றி முந்திக் கொள்வதும் அவர்களால் இந்த உலகம் எந்தவித பயன்பாடுகள் இன்றி பங்கமுறுவதும் நியாயமேயற்ற ஊடுருவல்கள் தான்.

தர்மத்தின் வழி வாழ்பவனுக்குக் கிடைக்கும் அனைத்து வளங்களுமே அது பொது மக்களுக்கு உதவுகின்றவை ஆகுகின்றன. ஆனால் இன்று செல்வாக்கு உள்ளவர்கள் அளிக்கும் வரங்கள்தான் பெறுதற்கரிய தேடல்கள் எனச் சிலர் நம்புகின்றார்கள். கொடுப்பவன் தகுதிபற்றிச் சிந்திக்க கிஞ்சித்தும் இடம் கொடுக்கப்படுவதேயில்லை.

"நான் எவ்வளவு தூரம் படித்தேன், ஆனால் பரீட்சையில் தேற முடியவில்லை. எனது சிரமங்கள் எல்லாமே அனர்த்தமாகிவிட்டன. இனி நான் என்ன செய்ய முடியும்? எல்லாவற்றிற்கும் அதிஷ்டம் வேண்டும் ஐயா" என உண்மையாகவே வேதனைப்படுவோர் உளர். ஆனால் மிகச் சாதாரண தரத்தில் உள்ளவர்கள் கூடப் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைவதுண்டு.மேலும் மிகச் சிறந்த கல்விச் சான்றிதழ்களைப் பெற்ற மாணவன் கூட தகுந்த பதவி கிடைக்காமல், தன்னுடன் படித்த சாதாரண கல்வித் தரம் உள்ளவர். உயர் பதவி வகிக்கும்போது, அவரது அலுவலகத்திலேயே அவரது அதிகார வரம்பினுள் கடமையாற்றிவரும் போது, "அதிஷ்டம்" என்பது பற்றி





எவருமே சற்றுச் சிந்திக்காமல் இருந்துவிட முடியுமா? "காலம்" பல எதிர்பாராத புதுமைகளைக் கூடச் செய்து விடுகின்றன.

பரீட்சையை மட்டும் கொண்டு ஒருவரது புத்திசாலித்தனம், தகைமைகள் பற்றி தகுந்த முடிவுகளைச் சொல்லி விடமுடியுமா? எத்தனையோ சிறந்த மாணவர்கள் துணிச்சல் இன்மை, பதட்டம் காரணமாகப் பரீட்சையில் சிறப்பாகத் தம் திறமையைக் காட்டமுடியாமல் போகின்றார்கள். மேலைநாடுகளிலும், வளர்ச்சியுற்றுவரும் நாடுகள் சிலவற்றிலும், பல முன்னனி நாடுகளில் ஒரு நாள் இறுதிப் பரீட்சையை மட்டும் கருத்தில் கொண்டு ஒரு சிறந்த மாணவனைத் தெரிவு செய்வதில்லை. வகுப்புகளில் காலம் தவறாது கலந்துகொள்ளல், பண்பு, சகஜமாகப் பழகும் இயல்பு, பொதுவிஷயம், பொது அறிவு, மதிநுட்பம் போன்றவைகளுடன் அன்றாட கல்வி கற்றலில் காட்டப்படும் உத்வேகம், கல்வியில் நாட்டம், தினசரி மாதாந்த முன்னேற்றங்கள் பற்றி ஒரு ஆய்வு ரீதியான கணிப்பீட்டின் மூலமே மாணவரின் பெறுபேறுகள் அமைகின்றன.

ஒரு நாள், இரு நாள் பரீட்சையில் அன்றைய எண்ணங்களில் தோன்றும் எழுத்துக்கள், சிந்தனைகள் மட்டுமே ஒருவனது வாழ்வை நிர்ணயிப்பது என்பது எந்த வகையில் நியாயமோ தெரியவில்லை.

எந்த விதத்திலும் மாணவர்கள் சோர்வடையும்



RangaRakes Tamilnavarasam.com

நிலைக்குள் தள்ளப்பட்டு விடக்கூடாது. மேலும் அதிஷ்டம் பற்றிய அபிப்பிராயங்களால், ஒருவரின் முயற்சிகளில் தடங் கல்கள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதையும் மனதில் நிறுத்து வோமாக!

அதிஷ்டத்தை, யோகம் என்றும் கூறப்படும். ஒருவனு க்கு நல்ல மனைவி, மக்கள், சுற்றம், நண்பர்கள் அமைவது யோகம். நல்ல குரு வந்து வாய்த்தால், சிஷ்யனுக்கு யோகம். இதே போல தான் விரும்பும் தொழில் கிடைப்பதே பெரும் பேறுதான் அன்றோ! எல்லாவற்றிற்கும் மேலாக, ஒருவர்க்கு நிம்மதியான வாழ்வு, அமைதியான மனநிலை, கல்விஞானம், இறைபக்தியு டனான நற்சிந்தனை இவைகள் யாவும் ஒருங்கே அமைந்தால் அவருக்கு இவை புண்ணியப் பெருநிதிகள்!

யாராவது ஆடம்பரமாக வாழ்வதைக் கண்டால், "அவனுக்கென்ன யோகக்காரன்" என்று கூறிவிடுகின்றார் கள். இப்படி டாம்பீகமாக வாழ்பவர்கள் எல்லோருமே வசதியாகவும், நிம்மதியாகவும் இருக்கின்றார்கள் என்று கூறமுடியாது. இவ்வாறு மிக மிக ஆடம்பரமாக, மற்றவர் கண்களுக்கு யோகக்காரன் என்று பெயர் எடுத்தவர்கள் தங்களுக்கு இறைவன் கொடுத்த கொடையை மறந்து, காலப்போக்கில் இடம் தெரியாமல் ஒளிந்து கொள்வது முண்டு. இன்று மட்டுமல்ல, முன்பு வாழ்ந்த பல குடும்பங்களில் அதிஷ்டம் பற்றிய சில மூடநம்பிக்கை காரணமாகத், தங்கள் குடும்ப அமைதி, ஒட்டுறவுகளைக்





கூடப் பாதிப்புக்குள்ளாக்கி விட்டமையை நீங்கள் அறிந்திருப் பீர்கள்.

அதாவது, குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தவுடன், அக்குடும்பத்தில் ஏதாவது துர்மரணங்கள் நடந்துவிட்டால் போதும், அந்தச் சின்னஞ்சிறு சிசுவை அதிஷ்டமில்லாதது, பிறந்ததுமே எல்லோரையும் வாரிக்கொண்டு போகின்றது என விஷமாக வார்த்தைகள் பேசிக் குழந்தையை ஒதுக்கியே விடுவார்கள். இதனால் எழும் பாதிப்புகள் எவ்வளவு தெரியுமா? பிஞ்சு மனதில் மாறாத வடு வக்கிர உணர்வு களைக் குடும்பத்தின் பெரியவர்களே ஏற்படுத்தி விடுகின்றனர். பிள்ளை பிறந்து ஏதாவது செல்வங்கள் வந்து சேர்ந்தால், கொண்டாடி மகிழ்வதும், தற்செயலாக நடக்கும் அசம்பாவிதங்களுக்காகக் குழந்தையை நொந்து கொள்வ தும் நீதியானதா சொல்லுங்கள்!

அதுமட்டுமல்ல திருமணமாகாது இருக்கும் வயது வந்த பெண்பிள்ளைகளை யோகம் இல்லாதவள் என்று தூற்றிவிடுகின்றார்கள். மேலும் கணவனை இழந்த இளம் பெண்ணின் துன்பங்கள் கண்டு இரங்குதலைவிடுத்து, இவளது நிலையைப் பார்த்தீர்களா அதிர்ஷ்டமில்லாதவள். திருமணமானதுமே கணவனை இழந்துவிட்டாள். இனிமேல் இவளை எப்படி நல்ல காரியங்கள் நடக்கும் போது அழைக்க முடியும் என்று நெஞ்சில் ஈரமே இல்லாமல் பேசியும் கொள்வார்கள். நல்லதும், கெட்டதும் எவர்க்கும் எப்போதும் வந்துபோவது இயற்கை. இந்த உண்மையைப் புரிந்தும்



RangaRakes
Tamilnavarasam.com

மாந்தர் கண்டபடி நாக்கை வளைப்பது போக்கற்றவர்க்குப் பிடித்தமான கருமமாக இருப்பது ஏற்புடையதன்று.

மேலும் எமது நாட்டில் மட்டுமல்ல மேற்கத்திய முன்னேற்றத்தின் உச்சியில் விஞ்ஞானத்தின் முடிவில் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் நாட்டினர்கள் கூட சகுனம் பார்ப்பதில் அதீத நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவித சகுனம் பற்றிய நம்பிக்கையில் அமிழ்ந்து போயிருக்கும் பலரைக் காணலாம்.

இவை எல்லாம் மூடநம்பிக்கை என, வெளிப்படையாகக் கூறிக் கொள்பவர்களில் பலர், மனதளவில் இவர்கள் அடிமனதில் மூடக் கொள்கை பற்றிய ஆழமான எண்ணங்களைக் களைவதாகவில்லை. அவர்களால் வெறுக்கப்படும் பொருட்களைக் கண்டால் அல்லது தும்மினால், செருமினால், தடுக்கி விழுந்தால், குறுக்கே ஏதும் பாய்ந்தால் என்று ஏதேதோ பற்பல சங்கதிகளைச் சகுனங்களாகச் சொல்லிக் கொள்வார்கள். ஒரு நாட்டினரின் துர்ச்சகுனம் வேறுநாட்டு மக்களுக்கு வேறுபாடாகவும், அங்குள்ள சகுனம் பற்றிய நடைமுறைகள் வித்தியாசமாகவும் கொள்ளப்படும். மனதிற்கு வேண்டப்படாத பதிவுகளை நாமாக ஸ்திரமாக நிறுத்திக் கொள்ளக்கூடாது. பழமையையும், புதுமையையும் சீர்தூக்கிப் பார்த்து வாழ்ந்து வருவதே சிறப்பான வாழ்வியல் முறையுமாகும்.





பல எதிர்பாராத நிகழ்வுகள் எமது வாழ்க்கையில் புதிய முழுமையான திருப்பத்தைக்கூட உண்டாக்கி விடுகின்றன. தற்செயலாக எங்கோ ஓரிடத்தில் ஒருவன், ஒருத்தியைக் காண்கின்றான். இந்தச் சந்திப்பு காதலாகித் திருமணம் செய்து கொள்கின்றார்கள். இவர்கள் அன்றைய பொழுதுவரை கனவிலும் மறக்கவெண்ணாச் சந்திப்பு பற்றி எண்ணியிருக்கவே மாட்டார்கள். ஒரு நாள், அந்த வினாடி கண்களின் சந்திப்புகள் திருமணத்தில் போய் முடிகின்றது. இதே போல், தற்செயலாகச் சந்தித்த இருவர் நண்பர்களாகிப் பின்னர் அவர்கள் தங்கள் குடும்ப உறவில், தொழில் விடயங்களில் ஒன்றாக இயங்குவது என்பவை சாதாரணமாக நாங்கள் பார்த்துவரும் விடயங்களாகும்.

ஒரு பொழுது சந்திப்புக்கள் பலருக்கு அவர்கள் வாழ்வின் திருப்பங்களையும், யோகங்களையும் தருவதுண்டு. ஆயினும் சில பேர்வழிகளை எதிர்பாராமல் சந்தித்தால் "ஏனடா இவரைச் சந்தித்தோம்" என்றும் ஆகிவிடுவதுண்டு. சில சந்திப்புகள் அவர்களின் வாழ்வின் துன்பங்களுக்கும் காரணமாக அமைவதுண்டு.

ஒருவர் துன்பத்தில் துவண்டு போயிருப்பதைக் கண்டு "என்ன கப்பல் கவிழ்ந்துவிட்டது போல் இருக்கின்றாய்" என்று கேட்பதுண்டு. இதே போல் ஒரு பெரும் துன்ப அனுபவத்தை ஒரு விமான உற்பத்தி நிறுவனர் அனுபவித்தார். அவரது விமான நிறுவனம் பெரும் நஷ்டத்திற்குள்ளாகிவிட்டது. மிகவும் நொடிந்து போன மனிதர் தமது



RangaRakes
Tamilnavarasam.com

தொழிற்சாலையில் உட்கார்ந்தபடியே யோசனையில் ஆழ்ந்துபோனார்.

அப்போது தொழிற்சாலையில் ஆங்காங்கே விமானத்தின் உதிரிப்பாகங்கள் பரவலாகக்கிடந்தன. அப்போது தற்செயலாக அவர் மனதில் ஓர் எண்ணம் பொறிதட்டியது. அங்கிருந்த விமானத்தின் சக்கரங்களைப் பார்த்தார். அவர் மனதில் ஒரு குட்டி விமானவடிவில், ஒரு இருசக்கர மோட்டார்வண்டி உதயமானது. அந்த சக்கரங்களை எடுத்துப் பொருத்தி புதிதாக ஒரு இருசக்கர மோட்டார் வண்டியை உருவாக்கினார். பார்வைக்கு ஒரு அடக்கமான, சின்னஞ்சிறு விமானம் போல் உள்ள அந்த வண்டிதான் பின்னர் "ஸ்கூட்டர்" எனும் பெயருடன் அவரால் தயாரிக்கப் பட்டதாகும்.

பெரும் நஷ்டத்தில் தமது நிறுவனம் சரிந்திருந்த வேளை அவரது தன்னம்பிக்கை, புத்திசாலித்தனத்தால் தமது நிறுவனத்தின் வீழ்ச்சியை உயர்த்தி நிமிர்த்திக் கொண்டார். அவரது ஸ்கூட்டர் வாகனம் உலகெங்கும் பிரபல்யமானது. இந்த முன்னேற்றமானது வெறும் அதிஷ்டம் மட்டு மல்ல. ஒதுங்கி அழுது புலம்பாமல் ஏதாவது செய்தேயாக வேண்டும் என்கின்ற வேகம் அவருள் கிளர்ந்து, மீண்டும் அவரை ஒரு உத்வேக மனிதராக்கியது. ஒருவர்க்கு ஒரு பாதை அடைக்கப்பட்டால் நிச்சயமாக வேறு ஏதோ ஒரு பாதை திறப்பதற்கு இறைவன் வழிவிடுவான் என்பது இயற்கை நியதியன்றோ! முயற்சியில்லாமல்





அதிர்ஷ்டத்தை எதிர்பார்ப்பது சுத்த சோம்பேறித்தன மானது. அல்பத்தனமானதும் கூட.

சூதும், வாதும் வேதனை தரும் என்பார்கள். ஆனால் இன்று உலகம் பூராவும் சூதாட்ட விடுதிகள் மலிந்துவிட்டன. அத்துடன் அதிஷ்டச் சீட்டுக்களின் விற்பனையும் பன்மடங்காகிவிட்டன. குதிரைப் பந்தய மூலம் பணம் புரட்டும் ஆவல் பலரையும் வாட்டுகின்றது. சூதாட்டம் என்பதே ஒரு வித வெறித்தனமான செய்கை என்பதை உணர்ந்தும் கூட இந்த வலையில் இருந்து வீழ்ந்துவிட மனமின்றி சிந்தை தொலைத்த மாந்தர் கோடி.

யோக பலன் உண்டு என யாரோ சொன்னதைக் கேட்டு குதிரைப்பந்தயத்திலும், சூதாட்டத்திலும் ஈடுபடும் காலத்தை, வருந்தி உழைக்க வேண்டும் என ஏன் எண்ணுவ தில்லை. யாரோ கோடியில் ஒருவர் பணம் பெறுகின்றார் என்பதால் ஒரு நப்பாசையில் பணத்தைக் கொட்டிவருந்த வேண்டும் என என்ன விதி உண்டு ஐயா!

இருக்கின்ற பணத்தை முதலீடாக வைத்து முன்னேற வேண்டும் என எண்ணாது, குறுக்குப் புத்தியில் பணத்தைப் பெருக்க வாழ்க்கையைக் கருக்கும், நொருக்கும் பேதமை யினை என் சொல்லி இயம்பமுடியும், அந்தோ!

அதிஷ்டம் நல்வழி வாழ்வோரை மயக்கி விடலாம். செல்வம் ஒரு நெருப்புப் போல் தான். அதனை உகந்த



RangaRakes Tamilnavarasam.com


வழியில் செலவு செய்யலாம். அதனை வளர்த்தும் கொள்ள லாம், தேவையின்றி அழித்தும் கொள்ளலாம். பணம் ஒருவனை அடிமை கொள்ளாமல், அவனைத் தன் நிலை கெடாமல் வைத்துக்கொள்ள, அவனே ஸ்திரமானவனாகத் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

அதிஷ்டம் வந்து மனிதனைக் கஷ்டத்திற்குள்ளாக்கக் கூடாது. இதன் பொருட்டுப் பேராசை, அவா என்பன தீண்ட அனுமதிக்கவே கூடாது. வாழ்வதற்கான வழிகள் அகலமாகத் திறக்கப்படும் போது எதிர்காலத்தை நினைந்தும் முன்யோச னையுடன் வாழ்வதே வாழ்வு.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
11.04.2007







# தெரியாத கருமங்கள்

தெரியாத கருமங்களைச் செய்தால் பொருள் விரயங்களுடன் உடல், உளச் சோர்வும் கூடவரும். எக்கருமங்களையும் எம்மால் செய்யமுடியும். பயிற்சி, ஆர்வமின்றி எப்பணியும் சித்தி பெறாது. சின்ன விஷயத்தையும், தெரிந்து தெளிந்து செய்க!. தெளிவு அற்றவன் அழிவு பற்றிச் சிந்திப்பதில்லை. முன் யோசனையற்றவன், தன்பாட்டிற்கு இழுத்துச் செல்லப்பட்டவன். காரிய சித்திக்கு, தன் முனைப்பினைக் களைக! பொறுமை சிரத்தை அறிவைக் கூர்மையாக்கும். தெரியாத கருமங்களைத் தெரிவதே அரிய முயற்சி !

பொருள் ஆதாரம் வரும் எனத் தெரியாத கருமங்க ளில் எல்லாம் தெரிந்தவர் போல் வருந்தி ஈடுபடுதல் சரிப்பட்டு வருமா?

அறியாத தொழிலில் வீணான பிடிவாதப் போக்கி னால் செய்தே பார்த்துவிடுவோம் எனப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்து, அதுவே விஷப்பரீட்சையாகி வினையாகிக்



RangaRakes

Tamilnavarasam.com

காசையும் உழைப்பையும் விழலுக்கு இறைத்த நீர் போலாக் குவது புத்திசாலித்தனமானது தானா?

பொருந்தாத கருமங்களில் ஈடுபடுவது சிலருக்குப் பொழுதுபோக்கு. அதுவே, அவருக்கும் அவரைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கும் எரிச்சலூட்டினால் அது புதுமையன்று!

"வர வர....இந்த மனுஷன் தொல்லை தாங்கவே முடியவில்லை. என்ன தெரியுமென்று இவர் இந்த வேலை செய்யப் புறப்பட்டார்? போச்சு...... போச்சு எல்லாமே போச்சு.... இருபதாயிரம் ரூபாய் பெறுமதியான தொலைக் காட்சிப் பெட்டியை இருபது நிமிடத்தில் பழுதாக்கி விட்டாரே...? .... இவரைத் திருத்திப் பார்க்குமாறு யார் கேட்டார்கள்....!"

மேற்படி பேச்சுக்கள் எனது நண்பர் வீட்டினுள் நுளையும் போது எனக்குக் கேட்டது. அவரது மனைவி மிகவும் மன வேதனையுடன் பொருமிக் கொண்டிருந்தார். எனது நண்பர் சற்றுப் பிடிவாதக்காரர். எல்லாமே தனக்குத் தெரியும் என்கிற கொள்கையுடையவர். வீட்டில் உள்ள எல்லா மின் பொருட்கள், தளபாடங்களைத் தானே செப்பனிட வேண்டும் என்கின்ற அதீத ஆவலினாலும், திருத்தி அமைக்க விடயம் தெரிந்தவர்களிடம் கொடுத்தால் வீண் செலவாகுமே என்கின்ற சிக்கன நோக்கினாலும், தேவையற்ற தெரியாத கருமங்களில் ஈடுபட்டுவிடுவார்.





அன்று அவரது தொலைக்காட்சிப் பெட்டியில் தொலைக்காட்சி நிலைய கோளாறு காரணமாக அதன் ஒளிபரப்புச் சரி வர இயங்கவில்லை.

மனிதர் விட்டுவிடுவாரா...? எதை எதையோ போட்டுத் திருகிக் கிண்டிக் கிளறி முடிவில் தனது மோட்டார் சைக்கிள் வண்டியின் சாவிகள் மூலம் பொருந்தாத உபகரணங்களால் தொலைக்காட்சிப் பெட்டியைக் குதறிவிட்டார். அது குற்றுயிரும் குறை உயிருமாக உருத்தெரியாமல், வீட்டின் சகல இடங்களிலும் பரவிக் கிடந்தது. பற்றாக்குறைக்குக் கோப மேலீட்டினால் பக்கத்திலிருக்கும் தன் குழந்தையை அது தனக்கு உதவிக்கு வரவில்லையே என்று ஏசி அதற்கு அடி உதை வேறு!

இவை எல்லாம் தேவைதானா? "உங்கள் நண்பரிடம் சொல்லி வையுங்கள், இப்படித்தான் போன மாதம் கூடப் புதிதாக வாங்கிய செல்லிடத் தொலைபேசியை ஏதோ சத்தம் குறைவாக வருகின்றதே எனச் சொல்லி, அதை நிரந்தரமாகவே சத்தம் இல்லாமல் செய்து குப்பையில் போடும்படி செய்து விட்டார். இப்படியே போனால், வீட்டில் ஒரு சாமான்களையும் விட்டு வைக்கமாட்டார். அத்துடன் இவற்றைத் திருத்தும் போது உடலில் காயங்கள் வேறு.!"

அவர் சொல்லிக் கொண்டே போனார். நண்பரோ பரிதாபமாகப் பேந்தப் பேந்த முழித்துக் கொண்டிருந்தார்.



RangaRakes
Tamilnavarasam.com

இப்படிப்பட்ட பிரகிருதிகளை நீங்கள் சந்தித்திருப்பீர்கள். ஏதாவது புத்தகக் கடைகளில் போய்,தொழில் நுட்பம் தொடர்பாக அல்லது உபகரணங்களை எப்படி செப்பனிடுவது போன்ற நூல்களை வாங்கி விட்டுக் கண்டபடி வீட்டிலுள்ள நல்ல கருவிகளையே உருக்குலைத்துக் கொன்று போடுவார்கள்.

புத்தகத்தைப் பார்த்து வைத்தியம் செய்து மொத்தமாய் உடலைக் கெடுத்தவரும் உண்டல்லவா?

தொழிலைக் கற்றபின், நல்ல பயிற்சி பெற்ற வல்லுனர்களிடம் அனுபவப் பட்டறிவைப் பயின்ற பின்னர் தான் ஒரு கருவியில் கைவைக்க வேண்டும் என்கின்ற அடிப்படை முன் அறிவு இல்லாதவர்களின் செயல்கள் நகைப்புக்குரியதன்றோ!

நவீன உபகரணங்களில் எல்லாவற்றிலுமே, எச்சரிக்கைக் குறிப்புகள் இருப்பதை எவர்கள் தான் வாசிக்கின்றார்களோ தெரியாது. பயிற்சி பெற்ற தொழில் நுட்பவியலாளர் மூலமே கையாளப்பட வேண்டிய உபகரணங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டுமல்லவா?

ஒரு சிறிய தொழிலேயானாலும் நாம் அதில் பயிற்சி பெற்றேயாக வேண்டும். குடைக்கம்பி முறிந்துவிட்டதே என்று ஒருவர் தானே திருத்த முயன்றார். உரிய உபகரணம் இன்றி செவ்வை பார்க்கப் புறப்பட்டதன் விளைவு, குடையின்





கம்பி அவரது விழியில் பட்டுவிட அவர் பட்ட சிரமம் அப்பப்பா... இவையெல்லாம் நாம் நேரில் பார்க்கின்ற சம்பவங்கள்தான்.

வீட்டில் சுண்ணாம்பு அடிக்க நண்பர் ஒருவர் சுவற்றின் மேல் ஏறினார். ஒரு ஏணியினைச் சாய்த்து நிறுத்தித்தான் ஏறினார். துணைக்கு ஒருவரும் இல்லை. வெள்ளையடித்தபடியே ஏணியில் கால் வைத்து இறங்க முயற்சிக்க ஏணி நழுவி அனைத்துச் சுண்ணாம்புக் கலவைகளும் உடல் முழுவதும் குளிப்பாட்ட அப்புறம் என்ன மனிதரின் உடம்பு முழுவதும் காயங்கள், முறிவுகள்....!!

வைத்தியசாலைக்கு நான் சென்று பார்த்த போது பரிதாபமாக என்னிடம் சொன்னார், "வெள்ளையடிக்கப் போனேன் வெள்ளைமாவுக் கட்டுப்போட்டு கட்டிலில் கிடத்திவிட்டார்கள்." எப்படியிருக்கிறது பாருங்கள்? நாங்கள் சிக்கனமாக வாழ்ந்தேயாக வேண்டும். எல்லாத் தொழிலையும் கூச்சமின்றிச் செய்ய வேண்டும்.

அதேவேளை, செய்கின்ற வேலையின் நுட்பம், அதன் பரிணாமம், தேவையான உபகரணம், தொழிலாளர் உதவிகள் போன்றவை கிடைக்க வேண்டாமோ? வரட்டுப் பிடிவாதத்தின் பொருட்டுக் கை, கால்களை உடைப்பதை விடுத்து எப்படி வேலைகளைச் செய்ய வேண்டும் என ஆராய முனைய வேண்டாமா?



RangaRakes
Tamilnavarasam.com

நாங்கள் செலவிடுகின்ற பொழுதுகள் வீண்விரயமாகக் கூடாது. உதாரணமாக நீங்கள் சாதாரணமாக ஒரு மணி நேரம் ஒரு கருமத்தைச் செய்யும் போதுஏற்படும் அனுகூலத்தை நோக்குங்கள். அதேநேரம், ஒரு அற்ப வேலைக்காக இந்த நேரத்தினைச் செலவு செய்தல் எவ்வளவு பொருளாதார விரயம் தெரியுமா?

ஒரு இலத்திரனியல் நிபுணருடன் உரையாடும் போது சொன்னார், பெறுமதி குறைந்த பொருட்களைச் செப்பனிடச் செலவழிக்கும் நேரம் வீணானது. அதன் பொருட்டு எவ்வளவு ஊதியம் பெற்றாலும் பணம் கொடுப்பவருக்கு எவ்வளவு நஷ்டம் தெரியுமா?;;

அத்துடன், "இந்த நேரத்தில் விலை உயர்ந்த கருவிகளைச் செப்பனிடும்போது ஊதியம் உயர்வாகக் கிடைப்பதுடன் மனத்திருப்தியும், தொழில் நுட்ப ஆற்றலும் மேம்படுகின்றன. எனவே எம்மிடம் இருக்கின்ற பொருட்களைப் பாவிப்பதில், சீர் செய்வதில் கூடிய கவனம் எடுத்தல் வேண்டும்" என்றார்.

நாம் ஒன்றினை அறிதல் வேண்டும். பழைய பொருட்கள் மீதுள்ள அளவுக்கு மீறிய ஆசையினால் அவைகளைத் திருத்திப் பாவித்தே தீரவேண்டும் என்கிற எண்ணத்தில் தீவிரமாக இருக்கின்றோம். பொருளாதார ரீதியில் இவைகளின் பராமரிப்புச் செலவுகள் பற்றிச் சிந்திப்பதேயில்லை. சரி, பொருட்கள் கருவிகளைக் கண்டபடி





கையாளுபவர்களை விடுத்து, அடுத்துத் தெரியாத சங்கதிகளுள் நுழைபவர்களைப் பார்ப்போம்.

நல்ல வசதியும் கல்வியறிவும் உள்ள நல்லவர்கள் கூட அரசியல், வியாபாரம் போன்ற துறைகளில் அவற்றின் நெளிவு, சுழிவுகளை உணராமல் போய் மாட்டிக் கொண்டு விடுகின்றார்கள். யாரோ, எவரோ சொன்னார்கள் என்பதற்காக வெறும் புகழ்ச்சி வார்த்தைகளை நம்பி அரசியலுக்குள் நுழைந்து கொள்பவர்கள் படும் அவஸ்தைகள் சொல்லி அடங்குமா? நல்ல கௌரவமான மனிதர்கள் அரசியலுக்குள் நுழைந்ததும் வேறு வழியின்றிப் பொய் பேச ஆரம்பிக்கின்றார்கள். எப்படியும் ஜெயித்தே ஆக வேண்டும் என்கின்ற நோக்கில் மாற்றானைக் குழி பறித்தல், நயவஞ்சகம் செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபட முனைகின்றார்கள்.

செய்கின்ற இத்தகைய வேலைகள் தவறு என அறிந்தும், கூடியிருக்கும் கும்பல்களின் சாதுர்யமான வலைகளினால் பின்னப்பட்டு அநாவசியப் பொருள் போலாகிக் கரைந்தே போகின்றார்கள். அரசியல்வாதிகள் எல்லோருமே இத்தகையவர்கள் அல்லர். ஆனால் அரசியலில் நுழைவதற்கு முன் மக்களுக்காக என்ன தியாகம் செய்ய வேண்டும்? ஏத்தகைய சேவைகளைத் தலைவர்கள் செய்தார்கள்? என்பதை அறியாமல், புரியாமல், எடுத்த எடுப்பில் தெரியாத அரசியலில் ,அரசியல் கொள்கையினுள் நுழைந்து கொள்ளலாமா?



RangaRakes
Tamilnavarasam.com

இன்று சரித்திரம், அரசியல், பண்பாடு, சமூகம் பற்றிய சிந்தனையற்றவர்கள் அரசியலில் புகுந்து கொண்ட மையினால் உலகம்படுகின்ற அவல நிலை அனைவருமே அறிந்தது தான்.

தெளிவு அற்றவன் வரும் அழிவு பற்றிச் சிந்திப்ப தில்லை. முன்யோசனை அற்றவன் தன்பாட்டிற்கு இழுத்துச் செல்லப்பட்டவன். அலைவழி சுழி அகப்படுபவன். எதில் போய் சங்கமிக்கிக்கின்றானோ யார் அறிவர்?

“கஷ்டப்பட்டு உழைத்து நாலு காசு சம்பாதித்தேன். யாரோ சொன்னார்கள் என்று ஏதோ ஒரு நிறுவனத்தின் பங்குகளை வாங்கினேன். நிறுவனத்தின் பொருளாதார நிலவரம் புரியாமல் புகுந்தேன். முடிவு பல இலட்சங்கள் நஷ்டப்பட்டுவிட்டேன்” என்று ஒருவர் சொல்லிப் புலம்பினார்.

சில நபர்கள் பரீட்சார்த்தமாகச் சில நூறு ரூபாய்களை முதலீடு செய்து பார்க்காமல் தமது முழு உழைப்பினையும் தெரியாத தொழிலில் முதலீடு செய்து முடங்கி ஒடுங்கிப் போகின்றார்கள். இது எவ்வளவு மனக்கஷ்டமான விஷயம் அல்லவா?

அநேகர் தங்கள் கௌரவத்தினை நிலைநாட்டுவ தற்காகவும் பல துறைகளில் புகுந்து கொள்ளத் தலைப்படு கின்றார்கள். எல்லாத் துறைகளையும் தெரிந்து கொள்வதில் தப்பு இல்லை. ஆனால் எமக்கென ஒரு துறையில் நிபுணத்துவம் பெற்றிருத்தல் சிறப்பு அல்லவா?





பணம் சேர்க்கும் ஆசையில் பல தொழிலைச் செய்து முடிவில் எல்லாவற்றிலுமே கூடிய கவனம் செலுத்த முடியாது அல்லற்படுபவர்களும் உளர். செய்து முடிக்கத் தக்க வேலையில் தான் வாக்குக் கொடுக்க வேண்டும். நானே அனைத்தையும் முடிப்பேன் என வாயளவில் கூறிச் செயலளவில் செய்து முடிக்காது விட்டால் எம்மீது நன்மதிப்பு வைத்திருந்தவர்களாலேயே அவமதிப்புப் பெற்றவர்களாகி விடுவோமல்லவா?

- ❖ மற்றவரின் தொழில் பற்றியே அவாவுறுதல்
- ❖ வெறும் கேள்வி ஞானம் மூலம் தொழில் விருத்தி செய்ய முனைதல்
- ❖ நாட்டின் நிலைவரம், சூழ்நிலைகளுக்குப் பொருந் தாத துறைகளில் கவனம் செலுத்துதல், ஈடுபடல்.
- ❖ தாம் சார்ந்த, விரும்பிய துறைசார்ந்த வல்லுனர் களின் துணை கோராமை
- ❖ வரட்டுப் பிடிவாதம்
- ❖ சேவை பற்றிய நோக்கின்றி, வெறும் பண இலாபத் தினை மட்டுமே குறியாகக் கொள்ளுதல்

- ❖ தமது தேக ஆரோக்கியம், வலு பற்றி அறியாமல் கருமங்களில் ஈடுபடல்
- ❖ பணத்தினைக் கண்டபடி செலவு செய்தல்

இவை போன்றவைகளும் தெரியாத கருமங்களை மேற் கொள்வதற்கான காரணிகளாகும். இளவயதில் நாம்



RangaRakes
Tamilnavarasam.com

துடிப்புடன் செய்கின்ற காரியங்கள் வயது முதிர்ந்த பின் செய்து கொள்ள முடிவதில்லை. பொதுவாக வீடுகளில் முதியவர்கள் சிலர் வயது முதிர்ந்ததை உணராதவர்களாக தமக்கு ஒவ்வாத வேலைகளைச் செய்ய முனைந்து துன்பப்படுவதைக் கண்டிருப்பீர்கள்.

- முடிந்த கருமங்களைச் செய்தேயாக வேண்டும்.
- தன்நம்பிக்கை என்பது கண்மூடித்தனமாக காரிய மாற்றுவதல்ல புரிந்து கொள்ள வேண்டும்.

செய்து கொள்ள முடியவில்லை என்பது ஒரு வெட்கப் படக்கூடிய ஒன்றல்ல. ஒவ்வொரு துறைக்கும் ஏற்றவாறே மனிதர்கள் இயற்கையாகவே உருவாக்கப்பட்டு விட்டனர். சிலர் தாமாக கற்றுக் கொள்கிறார்கள். எமக்குப் பொருத்த மானவைகளை நாம் தெரிந்து கொள்வோம்.

தலைசிறந்த தொழிலாளியாக, தொழில்நுட்ப வல்லு னராக, விஞ்ஞானியாக, வைத்தியனாக, சட்டத் தரணியாக, இப்படியாக எத்தனை, எத்தனையோ தொழில் துறைகள் உண்டு.

அனைத்துத் தொழிலிலும் நிபுணத்துவம், தேர்ச்சிகள் செய்கின்ற கால, அனுபவங்களால் பெறப் படும். தொழில் களில் ஏது பேதங்கள்? நாமாகவே உண்டு பண்ணு கின்றோம். அவ்வளவே! அறிந்தவர்களிடம் அறிவதே முறைமை. தெரியாததை தெரிந்ததாகப் பாசாங்கு பண்ணக்





கூடாது. தெரிந்தவைகளைத் தெரிந்ததன் வண்ணம் செய்தால் எதுவித பிரச்சினைகளும் இல்லை.

அதனை விடுத்து, அறியமுடியாமல், அறிந்து கொள்ள மறுத்து, அகங்கார உணர்வுடன் கருமமாற்றுதல் உருப்படாத முயற்சி தான். அறிக!

எனவே, தெரியாத கருமங்களைத் தெரிந்து கொள் வோம். தெரிந்த சங்கதிகளை பெற்ற அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்வோம். அப்படியானால் தான் செய் கருமம் சித்திபெறும் நிச்சயம்!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
06-11-2006



RangaRakes
Tamilnavarasam.com



# இரக்கம் சுரக்கட்டும்

இரக்கம் கொள்பவர்களுக்கு உலகமே உறவாகும். இருதயத்திலிருந்து உருவாகும், உணர்வின் உற்பத்தியான இரக்கம் உயிர்களுக்குத் தேறுதல்களை அளிக்கின்றது. இனிய இதயம் விரிவடைந்தால் சகல அண்டங்களை விட விசாலமானதும் பெருமையையும் கொண்டதாகிவிடும். இரக்கம், அவனியை இணைக்கும் கருவி, ஆணவத்தை உருக்கும் குளிர் அருவி. உயிர்களில் கரிசனையூட்டும் பரிதி. வேத, சாஸ்திரங்களின் மூல மந்திரம். அன்பின் அடிப்படையான யந்திரம்.

எவ்வித எதிர்பார்ப்புக்கள் இன்றி சகல உயிர்களிடத்திலும் அவைகள் நிலைகண்டு இதயத்தில் இருந்து சுரக்கும் உணர்வின் வெளிப்பாடு இரக்கமாகின்றது.

இறைவன், உயிர்களின்பால் கொள்வது கருணை என்றும் மனிதர், மனிதரிடத்தும் ஏனைய ஜீவன்களிடத்தும்





கொள்ளும் உணர்வினை இரக்கம் என்றும் சொல்லப்படுவதுண்டு.

எனினும், கருணை கொள்வது கடவுளின் குணம் என்பதால் இரக்கம் கொள்ளும் மனிதன் கூட, கடவுள் நிலையில் வைத்து கௌரவிக்கப்படுவதில் வியப்பில்லை. கருணைக்கு ஏது எல்லை?

இரங்கும் குணம் படைத்தவன் அன்பு கொண்டு எல்லோரையும் தன்னுள் அடக்குகின்றான்.

இரக்கம் கொண்டவர்கள் பிறருக்காகச் சிந்தும் கண்ணீர் இறைவன் நெஞ்சில் அதிர்வூட்டி சிந்திய கண்ணீருக்கும் பதில் கூறும்.

இரக்கம் ஆணவத்தை உருக்கும். ஜாதி, இன, மத வேறுபாடுகளைக் கடக்கும். நெஞ்சை நெகிழ வைக்கும்.

வஞ்சக உணர்வுள்ளோரும், இரக்க சிந்தனையாளரின் முன் காந்தமென நல்நெஞ்சமுடையோராக் கப்படுவர். மென்மையான இந்தச் சுபாவம் எதனையும் அசைக்கும் அன்பான அஸ்திரமாகின்றது. இரக்கமுள்ளவரைப் பார்த்துக் குறைகூற மனம் வருமா?

இந்தக் குண நலம் பற்றிக் கூறாத சமயங்கள் உண்டா? சொல்லாத வேதங்கள், நீதி நூல்கள் உண்டா?



RangaRakes Tamilnavarasam.com

அன்புதான் இரக்கத்தின் கருப்பொருள். இதன் பெருக்கத்தில்தான் உலகம் கரையாமல் இருக்கிறது.

கருணை சுரக்காது விட்டால் உலகம் சிறுத்துக் கறுத்து வரண்டே போகும்.

எனவே, நல்ல மனங்கள் கொண்டோரின் தயவு என்றும் அவனிக்கு அவசியமாகின்றது. ஒருவரின் பரிதாப நிலைகண்டு கசியாத மனம் கூட தனக்கு எனத் துன்பம் வந்தால் தாங்குமா? என்னை யாராவது தாங்குங்கள், தூக்கி நிமிர்த்தி ஆதரவு கொடுங்கள் என்றுதானே நினைப்பார்கள்.

சகல ஜீவன்களுமே ஒன்றுக்கொன்று ஆதாரம் என்பது தெரிந்த கூற்றுத்தான். மனிதன், மனிதனை மட்டுமா நேசிப்பது? பூமிக்கு எல்லாமே பொதுவானது. எனவே பூமியைத் தாய் எனக் கூறி மதிக்கின்றோம். அவள் பெற்ற செடி, கொடி, பறவைகள், மிருகங்கள் கூட இவள் பார்வையில் ஒன்றுதான். ஒரு மகன் வாழ்ந்து கொண்டு இருக்க இன்னொரு மகன் துன்புற்று வாழ்வதை எந்தத் தாயும் சகிப்பாளா? தாய் அழுதால் குடும்பம் தாங்காது. அது போலவே. பூமித்தாய் ஈன்ற எந்த உயிரும் கஷ்ட முறுவதையோ அல்லது அவை அழிந்து போவதையோ அவள் பொறுக்கமாட்டாள்.

மனிதன் தன் இனம் மீது மட்டும் இரக்கம் கொள் வதில் என்ன பெருமை இருக்கிறது. நாம் எல்லோரையும்,





எல்லா உயிரையும் நேசிப்பதில், ஆதரவு காட்டுவதில் தான் மனிதத்துவம் இருக்கிறது என்று உணர வேண்டும்.

ஏனெனில், மனிதன் உயிர்களிலேயே உயர்வான நிலையில் உள்ளவனாகக் கருதப்படுகின்றான். இவனிடம் கிடைக்காத நீதியை, பிற உயிர்கள் எங்ஙனம், எப்படிப் எவர் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்? மனிதன் தன்னைப் போன்ற மனிதனை மட்டும் நோக்குதல் மனிதாபிமானம் என்றாகி விட்டது. இந்நிலைக்கு மேலாக வாழ முயற்சிக்க வேண்டாமா?

முல்லைக்குத் தேரும், மயிலுக்கு போர்வையும் அளித்தமை வெறும் கதையல்ல. சும்மா போகின்ற ஓணானை, தேரையை, தும்பியைக் கொல்லுகின்ற மனிதரை நீங்கள் காணபதில்லையா? சுதந்திரமாகப் பறக்கும் பறவைகளைக் கூட்டில் அடைப்பதும், சுட்டுத் தின்பதும், மான்களைத் தேடுவதும், மரைகளை இரையாக்குவதும் என்ன ஐயா கொடுமை? நீர் அருந்த வரும் மிருகங்களை வதைக்கிறான் மனிதன். ஆனால் எந்த ஒரு மிருகமும் தேடியா கொல்ல வருகிறது? சிங்கம் கூட உண்டு, பசி அடங்கியதும் தன் முன்னே நிற்கும் புள்ளிமானை பார்க்காது திரும்புகிறது.

ஆனால், எல்லா மனிதரும் நல்லபடி நடப்பதில்லை. நல்ல வசதிகளோடு இருந்தாலும் எதிரில் இருப்பவனைப் பார்த்துச் சதி செய்ய நினைக்கின்றான். என்ன விசித்திர



RangaRakes

Tamilnavarasam.com

மனோ நிலை இவர்களுக்கு ஆண்டவா! என எண்ணத் தோன்றுகின்றதல்லவா?

சரி போகட்டும், ஒரு விஷயத்தை நன்கு நினைவு கூருவோம். இந்த வினாடிப் பொழுதில் சகல மிருகங்களும் அழிந்து, நீர் வளம் உட்பட பயிர் பச்சை இல்லாது போக, பறவைகளே இன்றி, எந்த ஜீவனும், மனிதனைத் தவிர அழிந்து போனால் எத்தனை நாட்கள் மனிதன் அவனியில் உருளுவான்?

இயற்கை பற்றி எல்லோருமே சொல்லியாகிவிட்டது. அழிவது, அழிப்பது மட்டும் இயற்கையின் நியதியல்ல வளர்வதும், வளர்க்கப்படுவதும் இயற்கையின் நியதியாக அமைதல் வேண்டும். எனவே அழிவு மட்டும் உண்மை எனக்கூறி, இருப்பதைத் தகர்க்கக்கூடாது. இரக்கமற்ற உணர்வுகள்தான் இன்று வளர்ந்து விட்டமையால் எல்லா உயிர்களையும் மதிக்கும் இயல்பு மறைந்து விட்டது.

யாரும் அற்ற தீவில் உங்களைக் கொண்டு சென்று விட்டால்தான் தெரியும். எமது உண்மையான இயல்புகளை அன்றுதான் உணருவோம். பறக்கும் பறவைகளுடன் பேசுவீர்கள், எங்கேயாவது சின்ன உயிரையும் துணையாக நோக்குவீர்கள். அன்பின் ஏக்கம், இரக்கத்தின் பரிணாமம் அப்போது நன்கு புரியும். இயற்கையுடன் இணைந்து பயணம் செய்வீர்கள்.





பயம் அதிகரிக்கும் போது, பிறர் ஆதரவு கோரப் படுகிறது. இரக்கம் காட்ட எவர் வருவார் என ஏங்குகின்றோம்.

சகல ஆத்மாக்களையும் உங்கள் இதயத்தினுள் பிரவேசிக்க அனுமதித்தால், கருணை கரை புரண்டோடி பேரின்ப உணர்வினைப் பெறுவீர்கள். இது உறுதி.

சின்ன வயதில் நாம் அணில், ஆடு, மரம், மாடு எனப் படிக்கின்றோம். படிக்கும் போது ஆனந்தத்துடன் அவை களை நோக்குகின்றோம். ஆனால் இந்த நோக்கு வயது வந்ததும் ஏன் வக்கிரமடைய வேண்டும்?

அணில், ஆடு, முயல், கிளி, செடி, கொடிகளை ரசிப்பது குழந்தைகள் மட்டும்தானா? என எண்ணும் போது நாங்கள் பெரியவர்கள் ஏன் அப்படி இல்லை என்று கருதியது உண்டா? இந்த நிலைக்காகக் கவலைப்படுவது உண்டோ?

இரசிப்பதை, இரக்கத்துடன் நோக்குவதை மறக்க லாமா?

மனம் இளகியவனுக்கு எல்லாமே வசீகரமாக இருக் கும். மனம் கறுத்தவனுக்கு எல்லாமே வெறுப்பு, கசப்பு. அவனுக்கு இரக்க சுபாவமே அர்த்தமற்றதாகத் தெரியலாம். ஆயினும்இரக்கம், இதயத்தின் திறவுகோல் என உணர்வதே சிறப்பு.



RangaRakes Tamilnavarasam.com

இருதயத்தை மூடிவிட்டு வாழ்க்கையை முழுமையாக இரசிக்க முடியுமா? புது மாறுதல்களைச் சமைக்க இயலுமா? நான் எப்படியும் நடக்க முடியும். அது என் உரிமை, இயல்பு என்று தயக்கமின்றி கூறுதல் சரியாகுமா?

தேவைகள் அனைத்தும் காசு கொடுத்தால் கிடைக்கும் என்று கருதினால் அன்பு, பரிவினை ஈந்து கொள்ள எப்படி முன் வருவார்கள்? இந்த எண்ணமே பொய் என்று உணர்ந்தேயாக வேண்டும்.

கரிசனையான அன்பு, இரக்கம், பரிவு இருந்தால் எந்தச் சொத்துக்கும் மேலானது, அரவணைப்பு என தெரிந்து கொண்டு விடுவோம். வனத்தில் கூட பிராணிகள் தமக்குள் கரிசனையுடன் உலாவுவதைக் குலாவுவதைக் காணலாம். இரக்கமும், பரிவும் இன்றி இவைகளாலும் வாழ முடிவதில்லை.

சர்வமும் அறிந்த மனிதன் முழுமையானவன் என்று எதை வைத்து இயம்புவது? இவன் அறிவு நேயப்பாட்டு உணர்வில் இருந்து விலகினால் எந்த உயிருடனும் ஒப்பிட முடியாத இழிவான ஆத்மாதான்.

இப்படியும் ஒரு ஜீவனா என்று சில மனிதர்களை மக்கள் இகழ்வதைக் கேட்டிருக்கின்றோம். மனிதனாக இருப்பதற்கும் ஒரு தகுதி தேவைப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொள்ளுவதற்கு பெரிதாக ஒன்றும் உடலை வருத்திக் கஷ்டப்படத் தேவையே இல்லை.





எமக்குள்ளே பிரவாகிக்கும் அன்பான, உணர்வுகளை நாம் எந்தச் சிரமமும் இன்றி பெற்றுக் கொள்ள முடியும்.


இருதய விசாலம் என்பது இந்த அண்டங்களை விட அளவில், பரிணாமத்தில் பருத்ததும், பெருமையுமுடையதாகும்.இதற்குள் எத்தனை அன்பான எண்ணங்களை, உயிர் உணர்வுகளை, பற்றுறுதியுடன் சுமக்க இயலும். இரக்கம் என்கின்ற பரிசுத்த உணர்வினை உங்கள் உள்ளே செலுத்தத் தயாரானால், அகில உலகமும் உங்கள் வசமாகும். இது கூட ஒரு தெய்வீக நிலை தான். உணர்வோம்.

எல்லையற்ற கரிசனையுடன் கூடிய இரக்கமே எங்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் மகா சக்தியாக உள்ளது. இதனாலேயே ஆன்ம விழிப்பு, சதா சந்தோஷ உணர்வு என்பன உருவாகி, புது ஒளி காட்டி எம்மை வழிநடத்தும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
15.01.2006



RangaRakes
Tamilnavarasam.com



# புலன்களும் நல் எண்ணங்களும்

மனம் வழி உடல் புகுந்து கொள்ளாது சாதக பாதகமானவைகளை ஆய்ந்து கருமமாற்றுக! மனத்திற்குக் கட்டளையிடும் அதிகாரத்தை நாமே உருவாக்க வேண்டும். உடலை வைத்துத் தகைமை பேச முடியாது. நல் உணர்வு, அறிவு ஞானத்தால் தான் மனிதன் மேன்மையடைகின்றான். வாழும்பூமியை நெசிப்பவனின் மனம், உடல் என்றும் புதிதாகவே இருக்கும். இயற்கையுடன் சேர்ந்து வாழும் போது புலன்கள் சாதகமாக எமக்கு அமையும். செயற்கையான வசதிகள் நீண்டகாலத்திற்கு சௌகரியம் தராது. புலன்களைக் கட்டுப்படுத்தி நல் எண்ணங்களை வளப்படுத்துவோம்.

புலம் வழி சென்று கொண்டால் உள்ளம் மெல்லென விலகி, நல்வழி பிறழ்ந்து வாழ்க்கை சுபீட்சமின்றிச் சபிக்கப் பட்டது போலாகிவிடும்.

ஐம்புலன்களுமே எமக்கு இறைவனால் அருளப்பட்ட





கருவிகளே. அதனை அறிவுத்திறன் கொண்டு சிறப்புடன் கட்டுப்படுத்துவதே முறையான நன்நெறியாகும்.

மனம் நினைத்ததை உடன் செய்யவிழையாது. அதன் சாதக, பாதகங்களை கண்டறிய வேண்டுமல்லவா? நல்ல மனம் கோணலாகிப்போனால், வாழ்க்கையில் இருக்க வேண்டியன ஒன்றுமே இல்லாதவர்களாகிப் பயனற்றுப் போவோம்.

தேவையில்லாதவற்றையே மனம் தூக்க நினைக்கி ன்றது. புலன்களை மனம் அசைக்கின்றது. கெட்டவை களைப் பார்க்க விழைவதும் கெட்டவைகளைப் பேச எண்ணுதலும் ஒவ்வாத பாஷைகளை காதுகள் கௌவ எண்ணுதலும், சிந்தனைகளை மந்தமாக்கும் வாழ்வை நோகவைக்கும் செயல்தானே? நல் அறிவின் ஆளுமைக்குள் மனசு செயல்பட்டால் புலன்களும் சிறப்பாகவே இயங்கும். எடுத்த எடுப்பிலேயே ஒன்றினை நுகர இச்சைப்படுவது என்பது, எம்முடைய அறிவிற்கு கொஞ்சமாவது இடம் கொடுக்கத் தயங்குவது போன்றதேயாம்.

மனதிற்குக் கட்டளையிடும் அதிகாரத்தினை நாம் உருவாக்கவேண்டும். இல்லாவிட்டால் நாம் எங்களுக்கு நாங்களே அடிமையானது போன்ற கொடிய வினையை அனுபவிக்க வேண்டியவர்களாவோம். தேவையற்ற வைகளைக்கத்தரித்து தேவையானவைகளை வைத்திரு க்கும் சிந்தனை உடையவர்களாக இருக்கவேண்டும்.



RangaRakes
Tamilnavarasam.com

இன்று துன்பங்களில் தங்கியே வாழ்கின்றோம் என்று கூறுபவர்களில் பலரும், தங்கள் மீதான நம்பிக்கையீனம் என்பதிலும் பார்க்க, தேவையற்ற விடயங்களில் கவனத்தை ஈர்க்கின்றனர் என்பது ஓர் முக்கிய பிரச்சினையாகவுள்ளது.

புலன்கள் வழி கவர்ந்திழுக்கும் நிலையினராய், இஷ்டப்படி வாழ்ந்து வந்தால் வாழ்க்கையில் எதிர்நீச்சல டித்துப் போராடி வெற்றிபெறும் நுட்பம் எம்மிடம் இருந்து வெட்டுப்பட்டு விடும். அறிந்து கொள்க.

"போராடுதல்" கஷ்டப்பட்டு கரையேறுதல் என்பதன் பொருட்டேயாகும். போராடிப் பெறுகின்ற வெற்றி அனுபவங்கள் கூட உண்மையில் சுவாரஸ்யமானவைகள் தான். வெற்றி கண்டவர்களிடம் கேட்டுப்பாருங்கள் அல்லது நீங்களே பிரயாசைப்பட்டு இஷ்டமானவைகளை பெற்றுப் பாருங்கள். அந்த அனுபவம், சுதந்திரம் தழுவிய சொந்தத் தேடலாக இருக்கும். கஷ்டப்படாதவனுக்கு எதிலும் உரிமை, உறவு கிடையாது. சும்மா இருக்கின்ற மனோ நிலையில் உள்ளவனுக்கு தேகம் இருந்தும் அது இல்லை. சித்தம் இருந்தும் அது அஸ்தமனம் தான் .

வெறும் உடலை வைத்து தகைமை பேச முடியாது. உணர்வு, அறிவு, ஞானம் கொண்டால்தான் உருவங்களு க்கே ஆளுமை கிடைக்கின்றது. தெளிவு அற்றவன் தான் தோன்றித்தனமாக நடப்பான்.



RangaRakes



அதுவே அவன் இயல்பு ஆகின்றது. நாம் எல்லா வற்றிற்கும் காரணம் கூறத் தெரியாமலும், ஆனால் அத னையே காவித்திரிய ஆசைப்படுவதும் வியப்புக்குரியதே.!

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். தெரு வில் நீங்கள் நடந்து கொண்டிருக்கின்றீர்கள் எப்பொழுது உங்களுக்கு மிகவும் பிரயோசனமற்றதானாலும் கூட ஆனால் உங்கள் மனசோ பரவாயில்லை அதனை எடுத் தால் என்ன என்று எண்ணி அதை உங்கள் சட்டைப் பையுள் எடுத்துப் போடுகின்றீர்கள்.

இவ்வண்ணமே, மீண்டும் தெருவில் தொடர்ந்து செல்லும் நீங்கள், இன்னும் ஒரு பொருளைக் கண்ணுற்றும் அதனையும் விட்டுவிட மனமின்றி எடுத்து வைத்திருக்கின் றீர்கள். பையினுள் அவற்றை திணித்துக் கொள்கின்றீர்கள்.

இப்படியே வழியில் காண்கின்ற தேவையற்ற, ஆனால் நீங்கள் தேவை எனக்கருதிய பொருட்கள் எல்லாவற்றையும் சுமக்க முடியாமல் சுமந்தபடி வீட்டிற்குள் வருகின்றீர்கள். வீட்டில் உங்கள் இல்லத்தரசி நீங்கள் கொண்டு வந்திருந்த பொருட்களைக் கண்டு துணுக்குற்று எதற்காக இவைகளைக் கொண்டுவந்தீர்கள்? இந்த வீட்டில் இவைகளை வைத்திருக்க இடம் இருக்கின்றதா? நாங்களே இருக்க இடம்போதாதவிடத்து எப்படி இவைகளைத் திணிக்க முடியும்? இப்படி மனைவி கூறினால் எந்தத் தப்பும் கிடையாது.



Tamilnavarasam.com

இந்த இடத்தில் தான் நாம் ஒன்றினைப் புரிந்து கொள்வோம். இங்கு அறிவு என்று சொல்லப்படுவது மனைவியின் கூற்று ஆகும். புலன்வழி கண்டதையும் இச்சைப்பட்டு, மூட்டை முடிச்சுக்களைக் காவித்திரிதல் மனித இயல்பாகி விட்டது. எமது அறிவிற்குத் தேவையான சங்கதிகளை செலுத்தவே இடம் அளிப்போமாக! மனித மூளை எதனையும் ஏற்க வேண்டும் என்றில்லை. நல்ல தைக் கொள்க! அல்லாதவைகளை கழைக!

மனது பூரணப்பட்டுப்போகும் போது அநாவசிய உணர்வுகள் திறன் அற்று மறக்கப்பட்டுவிடுகின்றன. பெரியோர், ஞானிகள் கண்டதையும் பேசுவதில்லை. காண, கேட்கப் பிரியப்படுவது மில்லை. இவை இவர்களது பண்பு. மனம் சௌகரியத்தைத் தான் நாடுகின்றது. ஆனால் இயற்கையோடிணைந்த வசதிகளை ஏன் ஏற்க மறுக்கின் றது? செயற்கைச் சௌகரியங்களின் மயக்கங்கள் தேகத்தை பாதிக்கும் என்பதை எப்போது நாம் உணரப்போகின்றோம்?

அன்னை பூமிக்கும் மனிதனுக்கும் உடலால் உள்ள தொடர்பு அருகிவிட்டது. அவள் ஈர்ப்பினில் லயிக்க நாம் மறுக்கின்றோம். அவள் எம்மை முத்தமிட விரும்புகின்றாள். நாம் மறுத்து முகம் திருப்புகின்றோம்.

எமது பாதங்கள் பூமியில் அழுந்தப் பதிக்கப்படுவ தில்லை இடையே ஒரு குறுக்குச் சுவராகப் பாத அணிகள் பதிக்கப்படுகின்றன. பூமியில் நிமிர்ந்து உருண்டுபடுக்கின் றோமா? கட்டிலில் சுதந்திரமின்றி முடங்கிப் புரள்கின்றோம்.





நிலத்தில் இருப்பதில்லை, கதிரையில் காலை தொங்கப்போட்டு நாள் முழுவதும் நேரம் போக்குகின்றோம். புவியின் அரவணைப்பு மனிதனுக்குக் கிட்டாமல் போய் விட்டது. எனினும் அன்னை பூமியின் வழங்கல்களைத் தயங்காமல் ஏழைகள் ஏற்றுக்கொள்கின்றனர்.

வெயில், மழை, குளிர், தென்றல் எல்லாவற்றையும் மனம் கோணாமல் இவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். மலையும் மடுவும் கட்டாந்தரையும் புல்லும் பூண்டும் காடும் பூவனவும் எல்லாம் இறைவன் கொடை என இவர்களால் இயல்பாகவே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆயினும் ஏன் ஏனையவர்க்கத்தினால் இயற்கையை அதன் வளங்களை கவர்ந்திழுக்க முடியவில்லை. "எல்லாமே மனம்" அது தேடும் வசதிகள் கவர்ச்சியான ஈர்ப்பான எண்ணங்கள் தானே காரணம்?

புலன்களுக்கு எம் மூளை கொண்டு நல்லதை மட்டும் புரிந்துகொள்ள சொல்லிக்கொடுக்க வேண்டாமா? எமக்கு நாமே எஜமானார்கள் என கௌரவமாக சொல்லிக் கொண்டால் மட்டும் போதுமா? உண்மையான ஆட்சி செய் பவன் தன்னைத், தன் எண்ணங்களை ஆட்சி செய்யாது விட்டால் புலன்களின் புரியாத சூழ்ச்சிக்குள் நாம் புகுந்து கொள்வோம் அல்லவா?

வசதிகள் இருப்பதால் மட்டுமின்றிச் சாதாரண மனிதர்கள் மனம் வழி நடந்து கொள்கின்ற சம்பவங்களைப் பார்க்க கேட்க நகைச்சுவையாக இருக்கும். இப்போது



RangaRakes

Tamilnavarasam.com

சொல்லப்படுகின்ற விடயங்கள் எல்லாமே சாதாரணமாக நடக்கின்ற நிகழ்ச்சிகள் தான் கேளுங்கள்.

பக்கத்து வீட்டுக்காரருடன் கூட தொலைபேசியூடாகவே பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அங்கு நடந்து சென்று பேசமாட்டார்கள். அடுத்த வீட்டிற்குள் போய் பேச முடிந்தாலும், கௌரவம் காரணமாகவும், வீட்டுத் தொலைபேசி எடுக்கச் சிரமப்பட்டுச் செல்லிடத் தொலைபேசியைத் தேடுவார்கள். செலவு பற்றிச் சிந்திப் பதில்லை. இளைய சமூகத்தைப் பாருங்கள். மணிக்கணக்காக செல்லிடத் தொலைபேசியில் சல்லிக்காசு பெறுமானம் பெறாத காரியங்கள் பற்றிக் கரிசனையுடன் கதைப்பார்கள்.

இதைவிட இன்னும் ஒரு வேடிக்கையான சங்கதிகளையும் கண்டிருப்பீர்கள். அடுத்த ஐந்து நிமிடத்திற்குள் அருகே உள்ள கடற்கரைக்குப் போய்விடலாம். நடந்தால் தேகப்பயிற்சி என்று வைத்தியர் சொன்னாலும் கேட்க மாட்டார். வாகனத்தில் கடற்கரைக்கு சென்று ஓரிரு நிமிடங்கள் மெதுவாய் நடந்து நண்பர்களுடன் பழங்கதை பேசிவிட்டு, அவசரம் அவசரமாக மீண்டும் மோட்டார் வாகனத்தில் முடங்கி ஒடுங்கி வீடு சேர்வார்கள். என்ன விந்தை மனிதர்கள் இவர்கள் கடவுளே!

உடல் அசைவதே, "பெரும்பாவம்" என எண்ணுகின்றவர்கள் எவ்வாறு மனம் பக்குவப்படப்போகின்றார்கள்?





உடலை வருத்தி உழைப்பது மனதிற்குக்கூட நல்ல பயிற்சி தான். புலன்களில் தெளிவான காட்சிகள் பதியப் படல் வேண்டும். நல்ல செய்திகளை மட்டும் எமது மனது வாசிக்க வேண்டும். இனிய நுகர்வுகள் எல்லாமே சிறந்த அதிர்வுகளாகி என்றுமே நிலைத்திருக்கும். பார்ப்பது, கேட்பது, பேசுவது எல்லாமே உணரும் ஆற்றலைத் தூய்மைப்படுத்துவதானாலேயே, அவை வல்லமையுடனான, ஆளுமைகளை எமக்கு தேடித் தரும்.

சில பொழுதுகளில் எமது சிந்தனைகளின் சஞ்சாரம் தொலைவு நோக்கியதாய், வருந்தித் துன்பம் தேடுதலாக அமைந்துவிடலாம். எனினும், நல்ல திசை நோக்கிய பயணங்களில் துன்பங்கள் என்பன சொற்ப காலமானதாகவே அமையும். புலன்கள் அற்ப சுகம் தேடவல்லன என்று உணர்ந்த கணம் விழிப்படைய வேண்டியவர்கள் கூட நாங்களே. எனவே மனதுக்குள் நல் எண்ணங்களைப் பதிப்பாய் என இறைவனை வேண்டுதல் செய் என்று பெரியோர் பகர்வர்.

புலன்களின் சீண்டுதல்கள் எல்லாமே சாதாரண நிகழ்வுகள் ஆயினும் இவைகளின் தூண்டுதலிலான சாதக, பாதகத் தன்மைகள் எல்லாமே மிகப்பெரிய தாக்கங்களை உருவாக்கலாம் நிலையற்ற வாழ்வு என்று நாம் வாழ்க்கை பற்றி சொல்லிக்கொண்டாலும் நிலையான அமரத்துவ சிரஞ்சிவித் தன்மையுடனான ஒழுக்கக் கோட்பாடுகள்



RangaRakes
Tamilnavarasam.com

உலகை விட்டு உருக்குலைந்து போகமாட்டாது. ஏன் எனின் ஒழுக்க நெறிமுறைகள் இறையோன் கட்டளை என அறிக!

கவலையற்ற நிர்மலமான வாழ்வு வாழ்வதற்கு பாரமற்ற மனோ நிலைக்குள் எம்மை உட்படுத்தல் வேண்டு மல்லவா?

பூரணத்துவமான மனத்தினாலேயே புலன்களின் குணங்களைக் கட்டுப்படுத்தவும் முடியும். கட்டுப்பாடுகளைத் தொட்டுக் கொள்ளவே மனிதன் அஞ்சுகின்றான். இதுவும் ஒரு வினோதமான இயல்பே. நல்ல கட்டுப்பாடான மனித னால்தான் சுதந்திரமான சந்தோஷங்களையும் அனுபவிக்க முடியும்.

எனவே புலன்களின் அதீத வரை முறையற்ற செயல்களின் உதயங்களைத் தகர்ப்பது எமது இதய தூய்மைகளுக்காகவே என அறிவோமாக.

தீண்டத் தகாத தீயோரைத் திருத்துக! மக்கள் முன் நிறுத்துக. மிகுதியை உலகம் பார்த்துக்கொள்ளும். உலக சக்தி விரயமாவது ஏன்? மக்களின் பலம், பலவீனமாவது எந்த வழியில்? என்று அறிவோமாக.

நல்ல வழியில் செல்வோர் கூட மடக்கப்படுகின்றார் கள். சுலபமான வழி சுருட்டும் வழியே என எண்ண வைக்கப்படுகின்ற அப்பாவிகளை என்ன என்பது? உழைப்பின் மகத்துவத்தினை உணராமல் பிழையான





வழிகளை இலகுவாக மக்களுக்குள் செலுத்துவோரை இனம் கொண்டு விழிப்பினை உண்டாக்குவோமாக.

மக்களின் செயல்திறன் முழுமையாக்கப்படல் வேண்டும். இதில் எந்த தடைகள் குறுகீடுகள் ஏற்பட்டுவிடக் கூடாது. விருப்புடனும் முயற்சியுடனும் ஆற்றும் செயல் வீழ்ச்சியடைவதில்லை. எல்லோரும் நேர்வழி நடந்தால் உழைப்பின் பயன் முழுமை பெற்றுவிடுமல்லவா? எனவே சமூகத்தின் புல்லுருவிகளைப் பூண்டோடு களைவது இன்று உலகின் அவசிய பணியாகவுள்ளது. கபட நோக்குடனான வேடதாரிகளை சமூகம் முனைப்புடன் வீழ்த்தாதுவிட்டால் சிரமப்பட்டு உழைத்தும் கூட கருமங்களை கருக வைத்தவர்களாவோம்.

நல்ல முயற்சிகள் வெல்லாததாக சரித்திரங்கள் சொன்னதில்லை. வென்றிடும் வழிகள் எமக்குள்ளே. எமக்குள்ளே.!!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
05-02-2006



RangaRakes

Tamilnavarasam.com



# கடவுளைக் காட்டுவதாகக் கூறி காசு பறிக்கும் சாமியார்கள்

கடவுள் போலவே தங்களைக் காட்டிக் கொள்ளும் போலிகள், எத்தர்கள் பற்றி சகல மதங்களிலும் ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளன. எல்லைகள் அற்ற, வியப்புதற்குரிய பரம்பொருளை விடுத்துக், காசு பறிக்கும் சாமியார்கள் பின்னே அலையும் பக்தர்கள் ஏமாளிகள் மட்டுமல்ல பரிதாபத்திற்குரியவர்கள்! "கடவுள் நானே" என்போரும் "கடவுளை இலகுவாகக் காட்டுகின்றேன்", "நிம்மதியூட்டுகின்றேன்" எனக் கூறியபடி டாம்பீகமாக வாழ்ந்து கொண்டு சுகபோகத்துடன் சனங்களைச் சுரண்டுவோரிடம் சரணடைவது உண்மையுணர்வற்ற செயல்! அன்பு, பக்தி, மெய்யுணர்வு, ஞானத்தால் உணரவேண்டிய இறைவனை நெறி கெட்ட சாமிமார்களா காட்டப்போகின்றார்கள்?

கடவுள் இருக்கின்றார் என்று கூறும் ஆன்மீக வாதிகளை நம்பலாம். கடவுளே இல்லை என்னும் நாத்தீகவாதிகளையும் நம்பலாம். ஆனால் தானே கடவுள்





எனச் சொல்பவர்களை நம்பக்கூடாது எனும் வாக்கியம் அழுத்தமான ஒரு உண்மையை எமக்குச் சொல்கின்றது.

கடவுள் என்பதும் அது பற்றிய தத்துவங்களும் இயம்புதற்கரியது. இந்துமத தத்துவங்கள் மற்றும் இஸ்லாமிய, கிறீஸ்தவ மத விளக்க நூல்களில் கடவுள் போல் தம்மைக் காட்டி நிற்கும் போலிகள் பற்றித் தெளிவா கவே சொல்லப்பட்டிருக்கின்றன.

இருப்பினும் கூட, எமது மக்கள் எல்லையற்ற கடவுளை விடுத்து, எதற்காக பல தோற்றங்களைக் காட்டி நிற்கும் போலிச் சாமிமார்களின் பின்னாலே ஓடுகின் றார்கள்? இது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

கண்ணால் காண முடியாத கடவுளைக் காட்டுவ தாகச் சொல்லிக் காசு பறிக்கும் ஒரு கூட்டம், நானேதான் கடவுள் ஆவேன் என்று சொல்லும் சில பேர்வழிகள் ஒரு பக்கம், மேலும் விளங்க முடியாத, அர்த்தமற்ற உளறல் களை வேதத்தின் சாராம்சம் என நம்பவைத்து, அதற்கும் விளக்கம் சொல்கின்ற சில கூட்டம் எனப் பலவாறான ஏமாற்றுக்காரர்கள் மலிந்ததே இந்தப் பூமியா எனக் கேட்கத் தோன்றுகின்றது.

இன்று பல சாமியார்களும் தங்களது ஆச்சிரமங் களூடாக மிகப் பெரிய விளம்பர மோசடிகள் செய்கின் றார்கள். ஒவ்வொரு சாமியார்களுக்குமே கூட்டம் கூடுகின்



RangaRakes
Tamilnavarasam.com

றது பல லட்சம் சிஷ்ய கோடிகள்! உலகமெங்குமே கிளை நிறுவனங்கள்! அப்பப்பா...!

பண்டைக் காலத்தில் குரு ஒருவருக்கு ஒரு சில சிஷ்யர்களே இருப்பார்கள். ஒருவருக்குப் பாடம் சொல்ல ஆசிரியர் பல சிரமங்களை மேற்கொள்வார். குருவிற்குத் தொண்டு செய்து கல்வி கற்பார்கள். மத நம்பிக்கை, கலாச்சாரங்களை முன்னிறுத்தியே கற்பித்தல் நடக்கும். அன்று பொருள் ஈட்டுதல் குருவின் குணமன்று.

இந்து மதத்தின் முழு முதற் கடவுள் சிவன், நான்கே நான்கு சீடர்களுக்குத்தான் வேதத்தை அருளினார். இது போலவே உலகின் தோன்றி பல தீர்க்கதரிசிகள் பக்குவப்பட்ட சீடர்கள் சிலருக்கே ஆன்மீக அருளுரையைப் போதித்தனர்.

ஆனால் இன்றோ, மிகவும் டாம்பீகமாகப் பகட்டுடன் ஒரு சாமியாருக்குப் பல லட்சம் சீடர்கள், இவர்கள் இவரைக் கடவுளின் அவதாரமாகப் போற்றி வழிபடுவதுடன், சும்மா இருக்கும் ஏனைய அப்பாவிகளையும் ஆசைகாட்டித் தமது பக்கம் இழுக்கின்றனர். இன்று பெரும்பாலான சாமிமார்கள் எவராவது எளிமையாக வாழ்கின்றார்களா?

மக்கள் கூட்டம் சேரச்சேர இந்தச் சாமிமாருக்கு தன்முனைப்பு மேலோங்கி எதனையும் தம்மால் செய்துவிட முடியும் என நம்புகின்றார்கள். பல அரசியல் பிரமுகர்கள்,





தொழில் அதிபர்கள், திரையுலக நடிக, நடிகைகள் எனப் பலரையும் தம்முன்னே எப்படியோ வரவழைத்துக் கொள் கின்றார்கள். பரஸ்பரம் இவர்களின் தொடர்புகள் மூலம், சுயலாபங்களையே சுலபமாகத் தேடிக்கொள்கின்றார்கள். ஒரு சாமியார் செய்யும் மாய வேலைகளை ஒரு மாயாஜால நிபுணர் எளிதில் செய்கின்ற போதும், அவர்கள் ஆன்மீக வழியில் மக்களை ஏமாற்றுவதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

பொருளாதாரச் சிக்கலினால் திருமணமாகாத பெண்கள், வேலையற்ற இளைஞர்கள், காதல் தோல்விக்கு ஆளானவர்கள், நிதி பொருளாதார சுமைகளுக்காளானவர்கள் எனப் பல்வேறு நெருக்கடிக்காக, ஏதாவது வடிகால் கிட்டுமா என ஏங்குகின்றார்கள். நல்ல வழிகாட்டல் இன்மையாலும், ஊடகங்கள் வாயிலாக, இந்தப் போலிகள் பற்றிய தகவல்களைப் பெருமைகளை முழுமையாக நம்புவதாலும், ஏதோ ஒரு பொய்யான ஆன்மீகம் பேசும் நிறுவனத்திடம் சரணடைந்து விடுகின்றார்கள்.

"மன அமைதி" என்பது கடையில் வாங்கும் சரக்கா? தேறுதல் எனும் போர்வையில் ஆன்மாக்கள் அடகு வைக்கப்படும் கைங்கரியமே பல இடங்களில் நடக்கின்றன.

மனம் என்பது மென்மையானது. அதை நாம் கசக்கக்கூடாது. வெறுமனே அலையவிடக்கூடாது. எங்ஙனும் கோயில்கள், வழிபாட்டு ஸ்தலங்கள் நிரம்பவே இருக்கும்



RangaRakes

Tamilnavarasam.com

போது இந்தப் போலி வேதாந்தம் பேசி மயக்கும் இடங்களுக்குப் போவதும் ஏன்?

சில உயர்தட்டு வர்க்கத்தினர்களும், மத்திய தர வர்க்கத்தினருமே இவ்வண்ணம் மனதை மடியவிட்டு கடிதென இத்தகையோரின் ஆச்சிரமங்களை நாடுகின்றார்கள் என்பது உளவளவியலாளர்களின் கருத்தாகும். சாதாரணமான, பாமரமக்கள் தங்கள் மதத்திற்குரிய தெய்வ வழிபாட்டினை மறப்பதுமில்லை. இவர்கள் என்றுமே தங்கள் பழைமையான பண்பாடுகள் சிந்தனைகளை இம்மியளவும் விட்டுக் கொடுப்ப தும்இல்லை.

இன்று வெறும் பணம் புரட்டுதல், வர்த்தக நோக்கிலேயே மனித மனங்கள் வேட்டையாடப்படுகின்றன. உண்மையான அறிவின் தேடல்களின் முதிர்வு நிலையினை எட்ட மனமின்றி, இடைவழியிலேயே முடக்கி ஒடுக்கப்படுவது வேதனை! ஆன்மீக அறிவை சரியாக புரிந்துணராமல் இருக்கின்றனர்.

ஞானத்தைத் தெளிவை தவறாகச் சொல்பவர்கள் பின் சென்று, அவரை வணங்கிப் பாதபூஜை செய்து பல இலட்சம் ரூபா செலவு செய்து எதனைப் பெற்றுக் கொள்ளப்போகின்றார்கள்? வெறும் சுவைபடப் பேசும் பேச்சுக்களால் மனதில் விஷமேற்றப்படுமேயன்றி, விஷயங்கள் பதியாது.





தமது தாய், தந்தையரைச் சேவித்து, அவர்கள் மனம் கோணாது வாழாதவர்கள் எப்படிப் பிறர் மூலம், "ஞானம்", தெளிவைத் தேட முடியும் சொல்லுங்கள்?

தங்களது தாய், தந்தையருக்குப் பிறந்த நாள், திருமண நன் நாளை நினைவு கூராதவர்கள், தாங்கள் வணங்கும் புதுப்புது வரவுகளாகும் சாமிமார்களுக்கு திருமண நாளைப் பல இலட்சம் ரூபாய் செலவளித்துக் கொண்டாடுகின்றார்கள். கேக் வெட்டிப் பிறந்த நாள் வைபவம் நிகழ்த்துகின்றனர். இவர்களில் சிலர் தமது மதத்தின் கோவில்களுக்கே செல்ல மறந்துபோய் விட்டார்கள். ஏன் இறந்துபோன பெற்றோர் மூதாதையருக்குச் சிரார்த்த தினத்தையே அனுஷ்டிக்க மாட்டார்கள்.

சமூகத்தில் தாமாக ஒரு அந்தஸ்தைத் தேடிக் கொள்ளவும், தங்கள் மற்றய எளிய மக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டவும், சாமிமார்களின் பெயர்களில் இயங்கும் சங்கங்களில் தம்மைப் பதிவு செய்கின்றார்கள். பெரிய தனவந்தர்கள், கல்விமான்கள், பெரிய பதவிவகிக்கும் பிரமுகர்களே இங்கு வந்து வழிபாடு செய்கின்றார்கள். அப்படியாயின் நாங்களும் சென்றால் என்ன என எண்ணும் ஏமாளிகளே அதிகமாகிவிட்டார்கள். சில சமயங்களில் அறியாமையின் முன் அறிவு இயங்குவதில்லை.

இன்று உண்மையான ஆன்மீக வள்ளல்கள் இன்றைய நிகழ்வுகளால் நொந்துபோய் இருக்கின்றார்கள்.



RangaRakes

Tamilnavarasam.com

சித்து வேலைகளுக்குள் அகப்படும் மக்கள் மீண்டுவர வேண்டும். சுவாமி இராமகிருஷ்ணர் சொன்ன கதை இது,

ஒரு மகானிடம் ஒருவர் வந்தார். தான் பல்லாண்டு நெடுந்தவம் புரிந்து சித்து வேலைகளைச் செய்யும் திறன் பெற்றுள்ளேன் என்றார். "அப்படியா... என்ன சித்து வேலை செய்வாய்" என மகான் கேட்க, "நான் நீர் மேல் நடந்து, இதோ இந்த ஆற்றைக் கடப்பேன்" என்றார். அதற்கு மகானோ, "அப்பனே இதற்கு நீ ஏன் கடுந்தவம் புரிய வேண்டும், ஒரு அணாவை, அந்த ஓடக்காரனிடம் கொடுத்தால் போதுமே, எவ்வித சிரமமுமின்றி கொண்டுபோய் சேர்த்து விடுவானே" என்றாராம்.

சித்து வேலைகளால் இந்தப் பூமிக்கு யாது பலன்? உலகின் வறுமை ஒழியுமா? நாட்டின் யுத்தம் தவிர்க்கப்படுமா? இனமத குரோதங்கள் தகர்க்கப்படுமா? இயற்கை அனர்த்தங்கள் இல்லா தொழிக்கப்பட்டுவிடுமா? இவை ஒன்றையுமே இவர்களால் செய்ய முடியாது.

உள்ளம் தெளிவான ஆன்மீக வள்ளல்கள் விளம்பரம் தேடுவது இல்லை. ஆன்மீகம் புனிதமானது. அகத்தில் ஒளியேற்றுவது. மத நம்பிக்கையின்றேல் ஒழுக்கம் நிலைபெறுமா? இறையு ணர்விற்குக் கட்டுப்படுவ தாலேயே இன்று உலகம் சமச்சீர்மையுடன் சுழன்று கொண்டிருக்கின்றது. எத்தனை போலி ஆன்மீகவாதிகள் வந்து போனாலும் மக்களின் இறை பக்தி குன்றிவிடாது.





எனினும் மக்களின் விழிப்புணர்வினால் மட்டுமே, தாம் சார்ந்த மத கோட்பாடுகள் மென்மேலும் ஸ்திரப்படுவதுடன், எதிர்கால சந்ததிக்கும் ஆன்ம அறிவு, ஞானம் பற்றிய தெளிவூட்டல்கள் தொடர்ந்து கொண்டு செல்லப் படும்.

மக்கள் தன்உணர்வு பெறப்படாதவரை, புல்லுருவிகளின் கொட்டம் தொடரும். இதனால் ஆதாயம் தேடும் சில ஊடகங்கள்! தற்போது நடக்கும் சுவாமிமார் பற்றிய சம்பவங்களின் உண்மையான பின்னணிகள் அறியப்பட வேண்டும். மதத்தினைக் கேவலப்படுத்தும் காரியங்கள் ஏன் யாரால் நடத்தப்படுகின்றன என்பது வெளிக்கொண்டு வரப்பட வேண்டும். முறைகேடுகளைத் தடுப்பதுடன் இந்த ஆபாசங்களை வர்த்தக நோக்குடன் காட்சிப்படுத்துவதும் நிறுத்தப்படவேண்டும். இதைவிடுத்து பொய்மையாளர்களைத் தப்பவிடுவதும், தவறுசெய்கின்றவர்களின் பின்னாலேயே சுற்றுவதும் இனியாவது நிறுத்தப்படுமா?

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
04.04.2010



RangaRakes
Tamilnavarasam.com



# பெண்கள் கண்ணீர் சிந்துதல் ஆகாது

காரணம் இன்றிப் பெண்கள் கண்ணீர் சிந்துவார்கள் என்றே பலரும் சொல்கின்றார்கள். சும்மா அழுவதனால் பெண்களுக்கான நியாயங்களின் "வலு" இழக்கப்படும். பெண்களின் மனஉறுதி வியப்பிற்குரியது. உலகினை உற்பத்தி செய்பவள் பெண். இவள் ஆட்சியின்றி அன்பு, பாசம் பிரசவிக்குமா? உலகின் இயக்க ஆதார சுருதியான பெண்கள் கண்ணீர் சிந்துதல், கலங்குதல் இழிவு! பெண்ணின் பெருமையை ஆண்கள் மட்டுமல்ல, பெண்களே தங்கள் சக்தி பற்றி புரிந்து கொள்ளாமல் இருப்பது எத்தகைய அறியாமை?

யார் எதைச் சொன்னாலும் உடனே கண்களைக் கசக்கிடக் கூடாது. குறிப்பாகப் பெண்களைத்தான் சொல்கின்றேன். காரியம் ஆவதற்கே இவர்கள் கண்ணீர் உகுக்கின்றார்கள் என எவரும் கருதிடக் கூடாது.





காரணம் இன்றிக் கடுகளவும் பிரயோசனமற்ற விஷயங்களுக்குப் பெண்கள் அழுது அவஸ்தைப்படலாமா? இதனால் பல பெண்கள் கேலிக்குரியவர்களாகின்றனர்.

ஏன் சில ஆண்கள் கூட உணர்ச்சிவசப்பட்டு அழுவதுண்டு. கவலைகள், மீளமுடியாத பிரச்சினைகளால் மனம் துவண்டு கண்ணீர் மல்குவது இயற்கையே!

எல்லையற்ற ஆனந்தம், பக்தி, அன்பு மேலீட்டினால் கண்ணீர் மல்குவது உடலுக்குக் கெடுதலானது அல்ல. அது எம்மை ஆசுவாசப்படுத்திக் களிப்பினை உண்டுபண்ணுகின்றது.

இன்னமும், அப்பாவிப் பெண்களிடம் ஆலோசனைகளை கூறும் தாய்மார், தோழியர் "நீ எப்படியாவது உனது கணவரிடம் அழுது, ஆர்ப்பாட்டம் செய்தாவது காரியத்தை நிறைவேற்றி விடு" என்பார்கள்.

ஒரு நற்குணம் குன்றிய கணவனை நல்வழிப்படுத்த, மனைவி அழுது புலம்பி அவனிடம் மன்றாடித் திருத்த முனைவதற்கும், வெறும் பணத்திற்காகவும், உறவுகளைப் பிரிப்பதற்காகவும் வேண்டுமென்றே அழுது ஆர்ப்பாட்டம் செய்வது மலைக்கும், மடுவிற்குமான வேறுபாடுகள் அல்லவா?

நியாயமான காரணங்களுக்காகப் போராடுபவர்கள்,



RangaRakes Tamilnavarasam.com

எக்காரணம் கொண்டும் மனத்தளர்வுடன் போராட்டங்களை ஆரம்பிக்கக்கூடாது. கண்டபடி அழுபவர்களின் செய்கையினால், நியாயமான காரணங்களுக்காக அழுவதன் “வலு” இல்லாது போய்விடும்.

அழுகையே ஆயுதமல்ல. உண்மையின் ஸ்திரத் தன்மையுடன், தமக்கு ஏற்பட்ட அநீதிக்காக, உண்டாகும் ஒருதுளி கண்ணீர் சிந்துகை, மிகப் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணிவிடும். இதற்குச் சான்றான சரித்திர, இதிகாச, இலக்கிய கதைகள் பலவுண்டு.

மேலும் எமது அனுபவங்களினூடாக எளியவர்கள் சிந்திய கண்ணீருக்கும் ஏக்கங்களுக்கும், தகுந்த விடை கிடைப்பதை நாம் பெரும்பாலாரினதும் வாழ்க்கையினூடாகக் கண்டிருக்கின்றோம்.

ஏழு சகோதர்களுடன் கூடப் பிறந்த பெண் ஒருத்தி, தனது தாய் மிகுந்த மன உறுதியுடன் தங்கள் எல்லோரையும் ஒவ்வொரு துறையிலும் எப்படி ஆளாக்கி முன்னேற்றினாள் எனும் கதையை தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் சொன்னபோது நம்பாமல் இருக்க முடியாது. பல பெண்களைப் பெற்றால் ஒருவர் ஆண்டியாக வேண்டும் எனச் சொன்ன காலம் ஒன்றிருந்தது. தென் இந்திய பிரபல திரைப்பட நடன இயக்குனர் கலா, திரைப்பட பிரபல பின்னணிப் பாடகி வாணி ஜெயராம் போன்ற பலரும் பல பெண் சகோதரிகளுடன் கூடப் பிறந்தது மட்டுமின்றி





எல்லோருமே, நடனத்திலும் ஏனைய ஒவ்வொரு துறையிலும் மிகப் பிரபலமாகிவிட்டனர். இவை போல் பல வசதிகுறைந்த, பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்ந்த குடும்பங்களில் கூட அனைத்து உறுப்பினர்களுமே ஒவ்வொரு துறைகளில் பிரகாசித்து ஒளிர்ந்த செய்திகளை நீங்கள் அறிந்தது இல்லையா?

பெரும் சவால்களை எதிர்கொள்வதே பெற்ற வெற்றியின் முழுமையான சந்தோஷமும் ஆகும். ஒரு தாயின் ஐந்து மகள்களும் மருத்துவர்களாகவும், மருத்துவ நிபுணர்களாகவும் எமது ஊரில் இருந்தமையை நான் அறிவேன். பழைமை பேசியபடி, “எமக்குப் பிறந்தவை எல்லாமே பெண்குழந்தைகளாகி விட்டனவே...” என மனம் நொந்து மறுகாமல், கலங்காமல் எதிர் நீச்சல் போட்டு வாழ்வை ஒளியேற்றிய இத்தகைய பெற்றோரை நாம் வியந்து பாராட்டாமல் இருக்க முடியுமா?

உலக இயக்கத்தின் ஆதார சுருதி பெண். இவள் ஆட்சியின்றி அன்பு, பாசம், பிரசவிக்குமா? இதை ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் உணரவேண்டும். பல பெற்றோர்கள் தாமாகவே கற்பனை செய்து, தங்கள் சமூகத்தின் மீது பழிபோட்டுத் தங்கள் பெண்பிள்ளைகளின் உயர்கல்வியைக் கெடுத்துக் கொண்டதுமுண்டு. பிள்ளைகள் அழுது கெஞ்சினாலும் உயர் கல்வியைத் தொடர மறுத்த தாய், தந்தையர் பின்னர் தமது செயல்களுக்காக மனம் வருந்தினால் ஏது பயன்?



RangaRakes

Tamilnavarasam.com


முன்னேற வழியிருந்தும்கூட வலிந்து தேடும் தவறான முடிவுகளால், செயல்களால், எதிர்காலம் அழுது வடிவதாக அமையக் கூடாது. இன்று பெரும்பாலான பெண்கள் கல்வி, கைத்தொழில் மற்றும் நவீனமான தொழில்நுட்ப துறைகளில் எந்தவிதமான இடர்களையும் உடைத்தெறிந்து அவைகளில் தனித்துவத்துடன் மிளர்கின்றனர். கால மாற்றங்கள் சாதனைகளை உருவாக்குகின்றன!

கலங்குவதும், விழிகள் சோர கண்ணீர் பொழிவதும் பெண்மைக்கு இழிவு. வீரப் பெண்களைக் கதைகளில் மட்டும் காண்பதில் பயன் இல்லை. நிஜவாழ்வுதான் நித்தியமானது. அந்த வாழ்வின் உன்னத செழுமையைக் காண, மனதில் கனிவு உள்ள அதே சமயம், கல்லினும் மேலான கனத்த உறுதி வேண்டும். "நவயுகப் பெண் அழுவது இழுக்கு. எழுதல் மேன்மை! அறிக".

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
28-03-2010







# இறையோனிடம் மட்டும் இறைஞ்சுக!

எல்லா மதங்களுமே இறைவன் மட்டுமே ஏகப்பரம் பொருள் என்கின்றன. இதை அறிந்தும் ஏன் பலரும் சிந்தை திரிந்து, கண்ட கண்ட சாமிமார்கள் முன் மண்டியிட்டுக் கொள்கின்றார்கள்? வேதங்கள், சாஸ்திரங்கள் என்றோ மக்களுக்காக ஆண்டவனால் படைக்கப்பட்டு உண்மைகளை எடுத்துரைத்த படி இருக்கின்றன. இப்படியிருக்க, போலிச் செப்படி வித்தைச் சாமிமார்கள் இனி என்ன சொல்லப் போகின்றார்கள்? ஆடம்பரச் சாமிமார்களால் ஞானோதயம் பெற்றுக் கொடுக்க முடியாது. வேதங்களில் சொன்னவற்றைத் தாமே சிருஷ்டித்தாகப் பேசியும், அவதாரம் எடுத்ததாகக் கூறி அரிதாரம் பூசி வேடம் போட்டு மயக்குகின்றார்கள். பொய்மைக்குள் முகம் புதைக்காது, உண்மையான ஏகப்பொருளையே சரணடைவோமாக!

சாமியார்களும், மனிதர்களே!

இருப்பினும் எம்மில் பலர் சாமியார்கள் எல்லோருமே கடவுளின் அவதாரம். ஏன் கடவுளுக்கும் நிகரான



RangaRakes
Tamilnavarasam.com

மாபெரும் கர்த்தா என எண்ணிக் கொள்கின்றார்கள்.

எல்லா மதங்களுமே இறைவன் ஏகம்பரம் பொருள் எனச் சொல்கின்றன. இதை அறிந்தும் ஏன் பலரும் சிந்தை திரித்து தடுமாறிச் செல்கின்றார்கள்?

வேதங்கள், சாஸ்திரங்கள் எல்லாமே மக்களுக்காக என்றே படைக்கப்பட்டு விட்டன. அப்படியிருந்தும் . அவற்றில் கூறாத எதனை இந்தச் செப்படி வித்தைச் சாமியார்கள் சொல்லப் போகின்றார்கள்.

உண்மையான ஞான விளக்கத்தை முழுமையாகக் கற்காமல், கற்றிட விரும்பாமல் அழகாக பேசி, அமைதி யாக நடத்து அலங்காரம் செய்வதுமேன்?

எல்லா விஷயங்களுக்கும் புத்தகங்களைப் புரட்டத் தேவையில்லை. அண்மையில் மிகப் படித்த ஓர் அம்மையார் " தியானமே மேலானது" என தாம் வணங்கும் ஒரு சுவாமியார் சொன்னதாக என்னிடம் சொன்னார். அப்போது நான் கேட்டேன் " எல்லோருமே அறிந்த உண்மையை உங்கள் சாமியார் சொல்லித் தான் தெரிந்து கொண்டீர்களா?" என்று கேட்டேன். அவர் மௌனமானார். சொந்தப் புத்தியை நம்பாத மந்த புத்தியான பேச்சு அல்லவோ இது...!

எதற்காக இவர்கள் இத்தகையவர்களுக்குக் கிரீடம்





சூட்டுகின்றார்கள். உண்மைகள் என்றுமே உண்மை யானது தான். அதைக் கண்டு பிடித்துத் தாங்கள் குருஜிகள் சொல்வதாகக் கூறுவது வேடிக்கையிலும் வேடிக்கை. பகவத் கீதை உபதேசங்களைப் பேசிவரும் சில சாமிமார் தாங்களே கூறுவது போல் சனங்களுக்கு உபதேசிக்கிறா ர்கள். சுதந்திரமான சிந்தனைக்கு அறியாமை முட்டுக் கட்டை என்பதை விட, அதுவே அறிவை நிறைவடையாமல் செய்யும் இருள் என்பதையும் தெரிந்து கொள்க!

மயக்கம் என்பது சந்தோஷமான உறக்கம் அல்ல.

சந்தோஷங்களை நிம்மதியைப் பெற்றுக் கொள்ள அடிமைத்தனமாக கருத்துக்களைக் கொண்டு ஒரு வட்டத்தினுள் விலகாமல் ஒடுங்கி வாழ்வது பெரும் துன்பம். நல்ல கருத்துக்களைச் செவி மடுத்தல் மூளைக்குச் சிரமமானது என எண்ண வேண்டாம்.

கோரிக்கைகளை கடவுளிடம் சொல்வதை விடுத்து கண்ட, கண்ட மனிதர்களிடம் முறையிடுவது, ஆன்ம விரோதச் செயல்!

- ஆன்மீகம் புனிதமானது.
- எமது பலம் அறிவைத் தெளிவாக்க வல்லது.

எம்மை அறிய எம்முள் உள்ளதை உள்ளவாறு உணர நாம் கேள்விகளை எம் சித்தத்துள் கேட்டும் நிலையை உருவாக்குவோமாக!



RangaRakes

Tamilnavarasam.com

தெரிந்த உண்மைகளை சொல்லத் துணிவு இல்லா தவரை பிறருடன் இவைகளைப் பகிர்வது எங்ஙனம்? கலங்கிய மனதுடன் வாழுவது விலக்கிட்ட நிலையை விட மிக மோசமானதே!

கொடும் சிறைக்குள் சீவிப்பதை விட, தவறான நம்பிக்கைக்குள் முடங்கிப் போதல், சுய அறிவுக்கு ஆணி அடிப்பது போலாகும்.

எவரோ சொன்னார்கள் என்பதற்காகவும் வேண்டப் பட்டவர் என்பதற்காகவும் வீணான பேச்சைக் கேட்கின் றார்கள். வெறும் மூலமிடப் பட்டவைகள் உதிரும், வெளிறும் எனத் தெரிந்தும் அதனையே நாடுவது போல் வாசனை யான இராசயனத் திரவத்தைப் பூசி மகிழ்கின்றவர்கள் செயல்களை என்ன வென்பது?

"ஞானம்" என்பது விற்பனை வஸ்து அல்ல. இலட்சோப இலட்சம் மக்களில் பலர் கோவில் பக்கம் தலை காட்டுவதேயில்லை. ஆனால் சாமிமார்கள் தலை தெரிந்தால் தங்களின் தலையை அவர்கள் காலில் பதித்து முத்தி நிலை வேண்டுமெனக் கோருகின்றார்கள். இது என்ன கொடுமை?

ஆன்மீகத்தின் அடிப்படை தன்னை உணர்தல், தெளிதல். இதன் பொருட்டு ஏக இறைவனைச் சரணாகதி அடைவதாகுமாம்.





முத்தி அளிப்பவர் கடவுள், மனிதன் அல்ல. நல்ல மனிதர் நல்வழிகளைக் காட்டுவர்கள். அவர்கள் சாதாரண சாமான்யமானவராக ஏன் ஏழ்மையுடன் புரண்டும் கூட விழிகளிலும், பார்வைகளிலும், வதனத்திலும் மட்டும் ஒளி காட்டுபவராக இருப்பார்கள். நல்லவர்களிடம் டாம்பீகம், பகட்டு இருப்பதில்லை. தெளிவடைந்தோர்களுக்கு இவைகள் எதற்கு?

உண்மை எளிமையானது. அழகு எளிமையானது. நற் கருத்துக்களும் அப்படியே. புரியாத மொழியில், தெரியாத கருத்துக்களை, முரண்பாடாகப் பேசினால் அவர் கள் அறிவாளிகளா? அல்லது மாந்தர்களை இரட்சிக்க வந்த உத்தமர்களா? புரிந்து கொள்க தோழர்களே!

இறைவன் எம் உள்ளத்தே நிறைந்து நிற்க, சுரண்டல் பேர்வழிகளிடம் சரணடைவது எதற்கு?

புனித நீராடப் புறப்பட்டு , இழிவான குழியினுள் சந்தனக் கிரீடை செய்ய இயலாது. வாழ்க்கை மிக நுட்ப மானது, ஆனால் மிக இயல்பாக எம்மால் வாழ முடியாது.

அன்பான எல்லோரையும் மதிப்பதும், அவர்களின் உள்ளே உள்ள இறைவனைத் தரிசிப்பதுமே மகான்களின் குணங்களாக இருந்தன. மகான்கள் கண்டபடி பேசியதாக சரித்திரமில்லை.



RangaRakes
Tamilnavarasam.com

மௌன மொழிகளால் வையகத்தை வாழ வைத்தவர்கள். ஓரிரு வாக்கியங்களேயாயினும் உள்ளத்தை நிறைத்தன. எப்போதும், எச்சந்தர்ப்பத்திலும் தம்மைக் கடவுள்களாகக் காட்டவோ அல்லது எவராவது தம்மை புகழ்வதையோ அனுமதித்ததும் கிடையவே கிடையாது.


எங்கள் மனம் எங்களை , எம்மைப் பற்றி எத்தகையவர் என இயம்பிய வண்ணமாய் இருக்கும். எனவே அதனை நல்ல வழியில் உருவாக்க புத்திக்கு வேலை கொடுங்கள். அன்பான ஒருவனாக்க எமக்கு நாமே சுய ஆணையிடுவோம். தன்னை உணர்ந்தால் தலைவனை அறியலாம். என்பார்கள். இங்கு தலைவன் என்பது கடவுள். நல்ல உணர்வுகளுக்கு ஒளியூட்ட, மனதைத் திறந்து வைத்துக் கொள்க! இதனுள் தேவையற்ற வஸ்துக்கள் சேரா வண்ணம் உள்ளத்தை ஒரு முகப்படுத்துக.

காலம் காலமாகக் கடவுளை நம்பிய சமூகம், இன்னமும் தன்னிலை மாறாது நம்பிக்கைகளைக் கரைய விடாமல் தன்னைத் தற்காத்து நிற்கின்றது. பொய்மைகளுக்குள் முகம் புதைக்காது. உண்மையான, ஏகனை மனமாரத் துதி செய்க! மாற்று வழி வேண்டாம்!.

தினகரன்
வார மஞ்சரி
20.02.2011







# "உன்னோடு நீ பேசு"

"தன்னேடு தான் பேசுதல்" என்பது தனது செயல்பாடுகள் குறித்த ஒரு சுயவிமர்சனம் என்றும் கூறலாம். முதலில் தன்னைத் தானே ஒருவன் சுய பரிசோதனை செய்தல் வேண்டும். தனக்குச் சாதகமாக அநியாயமான விஷயங்களை நியாயமாகக் கற்பித்து, நடித்து வாழ்வது வாழ்வு அல்ல. மனதோடு பொய் பேசக் கூடாது. சுய புத்திக்குச் சுதந்திரம் கொடுங்கள். அதை அடக்கி, ஒடுக்க வேண்டாம். மனதை வெறுமையாக்காது , பசுமை போல் ஆக்கிட முயல்வதே சந்தோஷங்கள் புகுந்திட ஒரே வழி. இயற்கை அழகு எவ்வளவு புனிதமோ, அவ்வண்ணமே எமது நெஞ்சமும் புனிதமாகப் பேணப்பட வேண்டும். எமக்கு நாமே கொடும் பகைவனாக மாறக் கூடாது. எம்மை நாம் தரிசிப்போம். குறைகளை அறவே களைவோம். உங்களோடு பேசி, நல்லவராக! வல்லவராகுக!

"தன்னோடு தான் பேசுதல்" என்பது, தனது செயற்பாடுகள் குறித்த ஒரு சுயவிமர்சனம் என்றும் கூறலாம். மனதை விட்டகலாத நிலையில் தான் மனிதன் இயங்குகின்றான். தனது நிலையை உணராமல் வெறும்



RangaRakes

Tamilnavarasam.com

கற்பனையுடன் கலந்து என்றுமே வாழ்ந்தால், நிஜ உலகில் எப்போது மீள்வதோ?

சந்தோஷகரமான கற்பனைகள் எம்மை மீண்டும், மீண்டும் ஒரு புது உலக மனிதனாக மீட்டு எழுப்ப வேண்டுமே ஒழிய மயக்க நிலையில் கற்பனையுடன் கலந்து கரைந்து எம்மால் வாழ முடியாது!

இன்று பலரும் தன்னோடு பேசக் கூட அச்சப்படு பவர்களாக இருக்கின்றார்கள். மனோ வியாதிக்காரர், சும்மா தன்னோடு பேசுகின்ற முறையானது வேறுபட்ட விடயம் இங்கு அவன் சுய நினைவுகளை, சம நிலைக்கு மீட்டு எடுக்க முடியாத பரிதாப நிலையில் உள்ளான். தவறு புரிந்தவன் தைரியம் இழக்கலாம். சும்மா இருப்பவன் பயப்படலாமா?

எதனையுமே தேடாமல் இருந்தால் அவனே முடிவில் தேடுவாரற்ற பொருளாகிப் போவான். எல்லோ ருமே தங்களை மதிக்க வேண்டும் எனக் கருதுவோர், மற்றவர்களுக்காக எதனைச் செய்தோம் எனத் தங்களைத் தாங்களே கேட்டுக் கொண்டதுண்டா?

முதலில் தம்மைத் தாங்களே பரிசோதனை செய்ய வேண்டும். தங்களை முடக்கி மற்றவரை ஆராய் வது எப்படி? எதுவுமே செய்யாமல் அடுத்தவரிடம் கணக்கு க்கேட்பது நியாயமாகுமா?



RangaRakes



எதிலும் அக்கறையில்லா வாழ்வு பொருத்தமற்ற கோழைத்தனம் தான். வீட்டில் கரிசனம் இல்லாதவன் குடும்பத்தை மற்றவன் வந்து காப்பாற்ற வேண்டும் எனக் கருதுவது எங்ஙனம்.?

தமக்குள் நியாயங்களைத் தாமே கேட்டு உணராமல், சிந்தை திரிந்து, பற்று அற்றவன் போல் நடிப் பது வெறும் பாசாங்கு தான்.

இன்று சிந்திக்க பலர் தவறுவதால் அடுத்தவன் இவர்கள் மூளையில் உட்கார்ந்து ஆரவாரிக்கின்றான். இது தேவையானது தானா? சொல்லுங்கள். உண்மை யைத் தரிசிக்கக் கபட சந்நியாசிகள் தேவையில்லை. உணர்க!

எவராவது வலிந்து வந்து நறுங்கனிகளைக் கொடுத்தால்மட்டும், சுவைப்பதே நாவுக்கு வேலை என நினைப்பவர்களும் உளர். கொடுத்தால் எடுக்கலாம். சொந்தமாய் சிந்தனைச் செயல்களைப் படைக்காது விட்டால் முன்னேறுவது எப்படி?

செப்படி வித்தையால் வாழ்க்கையைச் செதுக்கி விட முடியாது. சத்தியத்தினுள் சங்கமித்து உண்மைகளை உள்ளத்தில் நிறுத்தினால். அற்புத உணர்வுகளை நாங்கள் பெறுவோம். அது மட்டுமல்ல, எமது அனுபவங்களினால், இதே நல்ல வழிமுறையினால், அடுத்தவன் வாழ்விற்கான மலர்ச்சிக்கும் உதவுவனவாக அமையும்.



Tamilnavarasam.com

சுய புத்திக்கு சுதந்திரம் கொடுங்கள்! உங்களை நீங்களே பூட்டி வைப்பதா? எல்லாமே எமக்குள் உண்டு . ஆனால் அதை அனுபவிக்க, ஆட்சிப்படுத்தி வளர்க்காமல் இருப்பது எம்மை நாமே துண்டிப்பது போலாகும்.

காடும் , செடியும், நீர் அருவியும் மலையும், மடுவு மில்லாத பூமி போல், மனசை வைத்திருக்க வேண்டாம். மனதினுள் என்றும் துள்ளிடும் இன்ப அலைகள் பூக்க வேண்டும்.

(பூவிற்குள்ளும் புகுந்து மணம் வீசக் கற்றுக் கொள்க!)

மனம் என்பது சின்னக் கூண்டு அல்ல, இது வானத்தை விட மிகவும் விசாலமானது. அதனை கற்குகை களாக மாற்றுவது கொடுமையிலும் கொடுமை!

இயற்கை அழகு எவ்வளவு புனிதமானதோ அதனைப் போலவே எமது மனதைப் புனிதமாக்குவோம். சண்டை சச்சரவுகளுக்குள் மனதை வளர்க்க வேண்டாம்.

உங்களுக்குள் நீங்கள் எதைச் சொல்ல விழை கின்றீர்கள்? புனிதமான ஆன்மாவாக மனிதன் மிளிர வேண்டும். எமக்கு நாமே கொடும் பகைவனாக ஆக வேண்டிய அவசியமில்லையே.





தீய எண்ணங்கள் புகுந்தால் கொடுமையாளனாக மனிதன் உருவாகுவதுடன் செயல்கள் யாவுமே குரூரமாகி விடும். எல்லாமே மனிதர் வசமுண்டு. அதைத் தக்க வழியில், தார்மீக நெறியில் பிரயோகிக்காது விட்டால் எல்லாமே கழன்று வெற்று மனிதராகி விடுவார்கள்.

தூரத்தில் உள்ளதற்காக ஏங்கி, பக்கத்தில் உள்ள வாய்ப்புக்களை நழுவ விடுவதே நம்மவர்களுக்குப் பழக்க மாகி விட்டது. சரி பிழைகளை அறிய மனதுக்கு வேலை கொடுங்கள்.

அடுத்தவன் பேச்சைக் கேட்கலாம். சொந்தமான அறிவை அடக்கி ஒடுக்கி , எந்த உபதேசங்களையும் கேட்பதால் ஞானம் பிறக்காது. கேட்கும் முன் காதை, இதயத்தைத் திறந்து கொள்க.

அறிய ஆவல்படுங்கள்! அதனைத் தெளிந்து அறிய மூளையுடன் சங்கமாகுங்கள். உங்களை இழந்தா வாழப் போகின்றீர்கள்? சிந்தை திரிந்த பின், உள்ளம் உருப் படாமல் போவதுடன் அடுத்தவனையும் "அவலத்தினுள் பிரவேசம் செய்" எனப் பாடம் நடத்தும் துர்ப்பாக்கிய நிலையை உருவாக்குவதா?. இது வேண்டவே வேண்டாம்.

உங்களுடன் பேசி நல்ல முடிவை எடுங்கள். அது உங்களுக்கு மட்டுமல்ல முழு சமூகத்திற்கும், ஏன் இந்த முழு உலகிற்குமே நன்மை பயப்பனவாகவும் இருக்கும்.



RangaRakes
Tamilnavarasam.com

உலகில் எல்லா உயிர்களுமே அற்புதமானவையே! அதனை உணர்ந்து எம்மை நாம் வலுவூட்டுவோம். எம்மை நாம் முதலில் தரிசிப்போம். எங்களை முழுமைப் படுத்துதலே எமது பணியாகக் கொள்க! எங்கள் ஆன் மாவை நாமே நேசிக்கக் கற்றுக்கொள்வோம். எம்மை நாம் நேசிக்க ஆரம்பித்தால் எல்லா உயிர்களுமே சமன் என்றே உணர்வீர்கள்! "உன்னோடு நீ பேசு" என்பது எம்மை நாம் நேசிப்பதும், எமது குறைகளை அறவே அகற்று வதுமேயாம். இந்த வழியே சத்தியத்தின் தரிசனத்தைத் தேட ஆரம்பவழியுமாகும்.

தினகரன்
வார மஞ்சரி
13 .02.2011



RangaRakes
Tamilnavarasam.com

# நான் நானே தான்!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

வாழ்வியல் வசந்தங்கள் – பாகம் 10

சிந்தனைக் கட்டுரைகள்

RangaRakes

Tamilnavarasam.com

நூலாசிரியர் பருத்தியூர் பால. வயிரவநாதன் எழுதி வெளியிட்ட "வாழ்வியல் வசந்தங்கள்" நூற் தொகுதிகள்


| | |
|---|---|
| 1. உண்மை சாஸ்வதமானது | - பாகம் - 01 |
| 2. அம்மா | - பாகம் - 02 |
| 3. சுயதரிசனம் | - பாகம் - 03 |
| 4. கோழைகளாய் வாழுவதோ? | - பாகம் - 04 |
| 5. ஞானம் | - பாகம் - 05 |
| 6. கணப்பொழுதேயாயினும் யுகப்பொழுதில் சாதனை செய்! | - பாகம் - 06 |
| 7. சும்மா இருத்தல் | - பாகம் - 07 |
| 8. உண்மைகள் உலருவதில்லை! | - பாகம் - 08 |
| 9. உன்னோடு நீ பேசு! | - பாகம் - 09 |
| 10. நான் நானே தான்! | - பாகம் - 10 |
| 11. வெறுமை | - பாகம் - 11 |
| 12. காதலும் கடமையும் | - பாகம் - 12 |
| 13. அக ஒளி | - பாகம் - 13 |
| 14. உன்னை நீ முந்து! | - பாகம் - 14 |
| 15. சுயபச்சாதாபம் | - பாகம் - 15 |
| 16. மௌனம் | - பாகம் - 16 |
| 17. மரணத்தின் பின் வாழ்வு | - பாகம் - 17 |
| 18. சிந்தனை வீரிகள் | - பாகம் - 18 |





# பொருளடக்கம்


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01) | இயக்கம் | 25 |
| 02) | வேற்றுமை | 38 |
| 03) | விசுவாசம் | 48 |
| 04) | போராட்டங்கள் | 60 |
| 05) | வடிவங்கள் | 73 |
| 06) | நான் | 87 |
| 07) | பணிவு | 100 |
| 08) | மனம் எனும் மாயசக்தி | 113 |
| 09) | பெண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்! | 121 |
| 10) | பெண்மை தோற்கக் கூடாது! | 127 |
| 11) | மனைவிக்கு உதவுதல் வெட்கப்படக் கூடியதல்ல! | 130 |




RangaRakes

Tamilnavarasam.com



# இயக்கம்

காரணமேயற்று இயங்காதிருந்து அதற்காகப்புதிது புதிதான சோடனைக் கதைகள் புனைவது சுயமரியாதையற்ற வேலை. சதா இயங்குதல் சந்தோஷகரமானது. இதை ஏன் புரிந்து கொள்ளாமல் சங்கடப்பட்டு முடங்கி முனகுகின்றார்கள்? உழைப்பவனுக்கு இறைவனால் நற்சான்றுகள் வழங்கப்படுகின்றன. பணிகளைச் செய்யாமல் பரமன் பாதம் பணிவதால் பயனேது? ஏழ்மையையே தோழமையாக்காது தொடர்ந்தும் இயங்கிவந்தால், எதிர்பார்த்தமைக்கும் மேலான கருமத்தை நிறைவேற்றுவதுடன் நிம்மதியும் செல்வமும் சொல்லாமல் தேடிவரும்.

"சும்மா" இருப்பது என்பது சாமான்ய விஷயமா என்ன? அதாவது நிர்ச்சிந்தையுடன் மனதினுள் எதுவித சலனங்களுமின்றி எண்ணங்கள் அற்ற நிலையில் ஒரு வினாடிப் பொழுதே ஆயினும் எம்மால் இருந்திட முடியுமா?

நனவு நிலையில் தான் சும்மா இருக்க முடிவதில்லை. உறக்க நிலையில் கூட கனவுகள் எம்மைத்



RangaRakes Tamilnavarasam.com

துரத்துகின்ற னவே! பொழுதுகள் தோறும் நாம் சரியாக இயங்கிக் கொண்டிருந்தால் எவ்விதமான தொந்தரவூட்டும் மனப் பதிவுகள் எம்மை அலைக்கழிக்காது என்பதைத் தெரிந்து கொள்வோமாக.

"சும்மா" இருக்கும் தெளிவு நிலை ஞானிகளது நிலை. ஆனால் சும்மா இருந்து வெட்டிப்பொழுது கழிப்பவர்களின் நிலை முற்றுமுழுக்க வேறானது. மிகச்சாதுர்யமாகப்பேசி தங்களின் இயலாமைக்கு அழகான காரணங்களைச் சாயம் பூசி அனைத்தும் அறிந்தவர்கள் போல்காட்டி உலகிற்கு மெலிந்தோராய் சீவிப்பது சுயமரியாதை அற்றசெயல்! சும்மா இருந்து அரட்டை அடிப்பவர்கள் பற்றியும் ஒரு உண்மைச்சம்பவத்தைக் கூறுகின்றேன்.

எங்கள் பகுதியில் கடமையாற்றிய ஒரு காவல்துறை அதிகாரி கண்டிப்புக்குப் பெயர்போனவர்.அவருக்குச் சும்மா இருப்பவர்களைக்கண்டால் பிடிக்காது. தெருக்களில் வேலை இன்றி, காரணமின்றிச் சுற்றித்திரிபவர்கள் குடிபோதையில் சந்திகளில் கூத்தடிப்பவர்களைக் கண்டால் விட்டு விடமாட் டார். பொதுவாகச் சட்டம், ஒழுங்கு என்பனவற்றுக்கு வெட்டிப் பொழுதைப் போக்குபவர்களாலேயே பங்கம் ஏற்படுகின்றது.

ஒரு தடவை இரவு பதினொருமணி இருக்கும். மேற்குறிப்பிட்ட அதிகாரி தமது அலுவல்கள் சகிதம் தமது வாகனத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டி





ருந்தார். குறிப்பிட்ட ஒரு முச்சந்தியில் நான்கைந்து நபர்கள் ரொம்பவும் சுவாரஸ்யமாக நின்ற படி அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். இவர்களைக் கண்ட அதிகாரி வாகன த்தை நிறுத்தி" என்னசெய்து கொண்டிருக்கின்றீர்கள்" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "ஐயா, நாங்கள் சும்மா இருந்து கதைத்துக் கொண்டிருக்கின்றோம்" என்றார்கள். "அப்படியா, நல்லது, நீங்கள் என்னுடன் வாருங்கள் சும்மா பேசிக் கொண்டே போகலாம், என்றவர், அவர்கள் அனைவரையும் வாகனத்தில் ஏறச்சொன்னார்.

அனைவரும் ஏறிக்கொண்டதுமே வாகனம் புறப் பட்டது. குறிப்பிட்ட சந்தியில் இருந்து பன்னிரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வல்லைவெளி என்ற இடத்திற்கு வண்டி சென்றதும் அதனைநிறுத்தினார். சந்தியில் நின்ற அனைவரையும் இறங்கச் சொன்னார். பின்னர் பேசினார் "நீங்கள் நடு இரவு நேரத்தில் சந்தியில் நின்று சும்மா வேலைகள் எதுவுமின்றி மக்கள் உறங்கும் நேரத்தில் பொழுதைக் கழிப்பது நல்லதல்ல. நீங்கள் உங்கள் வீடுக ளில் இருந்து பேசினால் எவரும் கேட்கமுடியாது. பொது இடங்களில் அநாகரிகமாக பேசிக்கொண்டிருக்க முடியாது. எனவே, நீங்கள் சும்மா தானே இருக்கின்றீர்கள். இங்கிரு ந்து உங்கள், உங்கள் வீடுகளுக்கு நடந்து போய் சேருங்கள். "நடப்பது உடலுக்கு ஆரோக்கியமானது. வருகின்றேன்" என்றவர். உடனே அங்கிருந்து அகன்று விட்டார். சும்மா இருந்து பேசியதற்கான வெகுமதி உடனே கிடைத்தது. தங்களின் சந்தோஷத்திற்காக நிம்மதிக்காக மற்றவர்களின்



RangaRakes
Tamilnavarasam.com

சிரமங்களைக் கிஞ்சித்தும் கருதாதமனிதர்கள் தண்டனை பெற்றாலாவது திருந்துவார்களா?

மகிழ்ச்சி தரும் முயற்சியை விரும்பி ஏற்காதுவிடின் சதா காலமும் துன்பங்களும் தோல்விகளும் மனிதரை வறுத்தெடுத்துவிடும்.

ஹே...... மனிதா....!
நீ.... இயங்கு.... இயங்கிக் கொண்டேயிரு...!

அழகிய பரந்த பூமிக்குள் பரந்து விரிந்த நீலக்கடல். மேலே எல்லையற்ற வானம், அதில் ஓடிக்கொண்டிருக்கின்ற மேகங்கள், அது தரும் மழை, தரை எங்ஙனும் மனிதப் பயிர்கள், உயிர்களின் பவனி, மலைகள், அருவிகள், நீண்ட ஆறுகள், பச்சை வண்ணப் பசுமை விருட்சங்கள், பாலை நிலங்கள் அங்கும் எமக்காய் எண்ணை வளங்கள்!

குளிர்மையும், உஷ்ணமும் கலந்த கலவைகளை எமக்கென ஊட்டுகின்றான் இறைவன் எல்லாமே இலவச மாகவே கிடைக்கின்றன. இவைகளைப் பெற்று அதனூடு உனது உழைப்பினை ஈந்தால், கெட்டா போகப் போகின் றாய்?

அன்பான மனிதனே! இறை தந்த வரங்களைக் காப்பாற்ற நீதொடர்ந்தும் இயங்க வேண்டியவனா கின்றாய். சோர்வு உன்னைப் பற்றினால், நீ சோர்ந்து தீய்ந்து போய்



RangaRakes



விடுவாய்! சோர்வே, ஒரு பிணி கொஞ்சநாள் இயங்கிப்பார். அப்போது தெரியும் உன் இயக்கத்தின் தாத்பரியங்கள்! முயற்சி செய்யாதவன் மகிழ்ச்சியை இழந்தவனாகின்றான். பொழுதை வீணாக்கிக் காலை நீட்டிக் குறட்டைவிட்டு உறங்கி மகிழ்வதால் அப்போதைக்கு திருப்திப்பட்டுக் கொள்ளலாம்.

இயங்கும் தன்மையுள்ள உழைப்பாளனுக்கே இறைவனின் நற்சான்றுகள் வழங்கப்படுகின்றன. சும்மா இருப்பவர்களில் பெரும்பாலானோர் இறைவனிடம் அதைக்கொடு, இதைக்கொடு எனக்கேட்டு அவரைத் தொந்தரவு செய்து கொண்டேயிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல தமது கஷ்ட நிலைக்கு தங்கள் முயற்சியின்மையை உணராது பிறர் மீதே குற்றம் வேறு சுமத்திக் கொள்கின்றார்கள். மன எரிச்சல் புகைச்சல்களால் வேதனையுறுவதை விட எழுந்து உழைப்பதால் என்ன துன்பம் வந்துவிடப் போகின்றது ஐயா!

உழைப்பவன் புகழ்ச்சியை விரும்புவதில்லை. மற்றவர்களைச் சாராது தன் கரத்தையே உறுதியாய் பற்றியிருப்பதால் அச்சங்கள் இவனைப் பற்றுவதுமில்லை. மேலும், சதா இயங்கிக் கொண்டிருப்பவர்கள் புறசூழ்நிலைத் தாக்கங்களுக்கு எளிதில் உட்படுவதுமில்லை. தமது கருமமே கண்ணாயிருப்பவர்களுக்கு அடுத்தவனுடன் பேசி நேரத்தை வீணடிக்க ஏது நேரம் இருக்கப் போகின்றது? தனக்கு வெளியே எவராலும் தாக்கப்படுவதற்கு எதுவுமே அற்ற தன்மையினால் மற்றவர்களின் தகாத கேள்விக் கணைகளை, உராசல்களை எதிர்நோக்க வேண்டிய தேவை



Tamilnavarasam.com

களே வரமாட்டாது அல்லவா?

வேலை செய்யாதவர்களைச் சுற்றியே பிரச்சினைகளும் துரத்த ஆரம்பிக்கின்றன. கடமைகளைக் கண்ணியத்துடன் செய்பவனைச்சமூகமும் கௌரவத்துடனேயே பார்க்கின்றது.

சின்ன எறும்புகூடத் தன்னிலும் பத்து மடங்கு எடையைத் தூக்கிச் சென்று தன் தேவைகளை முன் கூட்டியே திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கின்றது. ஒரு துளி தேனைச் சேகரிக்க ஓராயிரம் மலர்களுக்கு மேல் தேனீயால் தேடவேண்டியுள்ளது. எல்லாச் சீவன்களுமே தமக்கென வாழ்க்கையைத் தமது உழைப்பின் மூலமும் வைராக்கிய சிந்தை மூலமும் இயற்கை வளங்கள் மூலமும் தேடியேயாக வேண்டும்.

இந்த அரிய முயற்சியினால் உயிரினங்களிடையே கழிகின்ற காலங்களும் பிரயோசனமாகவே உபயோகிக்கப் படுகின்றது. முயற்சியுடையோர்க்கு மட்டுமே ஒவ்வொரு காலத்துளிகளின் பெறுமதி தெரிகின்றது. காலம் இழுபட்டுக் கொண்டும், ரொம்பவும் சிரமமாகக் கழிக்கப்படுவதாக நாம் எப்போது உணருகின்றோமோ, அப்போதே எமது செயல்கள் வற்றிக் கொண்டே செல்கின்றது என்பதை நாம் உணரல் வேண்டும்.

சுறுசுறுப்பானவனுக்கு காலங்கள் கடுகதியாகச் செல்





தாகவே தெரியும். “காலங்கள்” என் தேவைக்கு மேலும் தேவை என்று தான் சொல்வானே ஒழிய நேரம் நகருவதில்லையே என அலுத்துக் கொள்ளவே மாட்டான்.

எந்த விதமான பணிகளைச் செய்யாமல் கடவுளை வேண்டுதல் செய்தாலே போதும் என எண்ணுபவர்களும் உளர். ஒரு சோம்பேறி தனக்குக் கடவுள் எந்தவிதமான உதவிகளுமே செய்வதில்லை என அலுத்துக்கொண்டான். ஒரு நாள் சற்றுக் கோபத்துடன் “ஹே.... இறைவா! எனது நிலைக்கு இரங்குதல் செய்யமாட்டாயா... ஏதாவது வரங்கள் தந்தால் என்ன” என்று கேட்டான்.

என்ன ஆச்சர்யம் திடீரெனக் கடவுள் அவன் முன்னே தோன்றினார். எந்தவித தவமும் செய்யாமல் “கடவுள் காட்சி தந்தது” உனக்கு என்ன வரம் வேண்டும் “அப்பா...” என்று கடவுள் கேட்டதுமே, “எனக்கு நிரம்பச் செல்வம் வேண்டும்” என அவசரம் அவசரமாகக் கேட்டுக் கொண்டான். வேறு எந்த வரமும் கேட்க அவனுக்குத் தோன்றவேயில்லை. கடவுள் அப்படியே தருவதாகக் கூறி மறைந்தார். அவனும் சந்தோஷ மிகுதியால், வீட்டினுள் நுளைந்ததும் அங்கு செல்வக் குவியல்களைக் கண்டு மலைத்தே போனான்.

காலங்கள் கடிதென மறைந்துபோயின. கஷ்டப்படா[illegible] கிடைத்த செல்வத்தைக் கண்டபடி செலவு செய்தான். [illegible]தியில் மீண்டும் ஒன்றுமற்ற நிலைக்கே தள்ளப்பட்டான். [illegible]ட இவ்வளவு சீக்கிரம் செல்வம் எப்படி மறைந்து



RangaRakes
Tamilnavarasam.com

செலவானதுபற்றி அங்கலாய்த்துக் கொண்டான். ஒன்றுக்குமே வழியற்ற நிலையில் மீண்டும் கடவுளைக் கேட்டுப்பெறலாம் என்ற எண்ணத்துடன் தனது தேவைகளை க்கேட்கலானான். ஆனால் கடவுள் நேரில் வருவதாக இல்லை.

எனவே மனமுடைந்தவன் தீவிர தவத்தில் ஈடுபடலா னான். எனினும் பிரயோசனம் இல்லவேயில்லை. திடீரென அவன் உள்ளத்தில் இருந்து ஓர் ஓசை கேட்டது. “நீ, யாம் தந்த செல்வத்தினை அதன் மேன்மை தெரியாது உல்லாச வாழ்விற்காகச் செலவழித்தே விட்டாய். இப்போது நீ அதைக் கொடு, இதைக் கொடு என என்னை நச்சரித்து வருகின் றாய்”. “தவம் இருந்து சிரமப்பட்டு, காலத்தை நீட்டிக் செல்வத்தைக் கேட்பதை விட, உழைப்பது மிகவும் மேலா னது. மறுமை விமோசனத் திற்காகத் தவம் செய்தலை விடுத்து, நீ உன் சுகபோக வாழ்விற்காகத் தவம் செய்யப் புகுந்தமை ஏற்புடையதன்று. உழைத்தல், முயற்சி செய்தல் சிரமமான பணியல்ல. கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவறவிட்ட நீ முயற்சி செய்து உன்னை நீ உருவாக்கு. அப்போதுதான் தெய்வ ஆசி என்றும் உனக்குக்கிட்டும்”.

இறைவன் குரல் கேட்டதும் அப்போதுதான், அவன் தன் நிலை உணர்ந்தான். சும்மா கிடைப்பதில் ஏது சந்தோஷம்? பொருட்களின் பெறுமதி உழைப்பவனுக்குத் தான் புரியும்.

இன்று பலரது இல்லங்களில் உழைப்பவர் ஒருவரா





க செய்பவர் பலருமாக உள்ளனர். பணத்தின் அருமை அறியாமல் பிள்ளைகள் வாழுகின்றனர். அதே பிள்ளைகள் உழைப்பில் கண்டபடி செலவு செய்யும் பெற்றோரும் உள்ளனர்.

இளமைக்காலத்தில் முயற்சி செய்யாமல் தமது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியே கருதாமல் வாழ்ந்த முதுமையில் தமது பிள்ளைகளாலேயே அவமானப் படுவதை பலர் வாழ்க்கையில் கண்டு கொள்ளலாம். சகல தடைகளையும் மீறி சுயமாக உழைத்து மையுற்ற பலரது வாழ்க்கை, ஏனையோர்க்கு நல்ல காரணமாகவும் அமைந்துள்ளமையினைக் கண்டு கொள்ளலாம்.

பணிவும், அமைதிப் போக்கும், சீரான வாழ்வை கிய பயணங்களும் எங்கள் முயற்சியைத் திருவினை க்கவல்லது.

இன்று உலகில் மாற்றங்களின் வீச்சுக்களில் அச்ச டைவோர் பணிசெய்யப்பயப்படுகின்றனர். இந்தக் காலத்தில் இதனைச் செய்தால் வென்று விடமுடியுமா எனக் கேட்கின்றார்கள். எந்தக் காலத்திலும் எதுவும் முடியும் வாழ்க்கைப் போராட்டம் வெளியில் இருந்து பார்த்தால் பயமாகத் தோன்றலாம். உள்நுளைந்து கொண்டால் எந்த விதமான சஞ்சலங்களையுமே எதிர்கொள்ளப் பழகி விடுவோம். வெற்றி கொள்வதையே இலட்சியமாக கொள்ள



RangaRakes

Tamilnavarasam.com

வேண்டிய நாம் வெற்றியை நோக்கிய பாதையில் செல்வது என்பது எவ்வளவு இன்பகரமானதும் இலாபகரமானதும் என்பதனை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்ள முடியும்.

போட்டியில் வெற்றி கொள்வதை விட போட்டியில் கலந்து கொள்வதே எமக்கான வெற்றியின் முதல்படி தான். "நான் எனக்குள் ஒரு தகுதியை உருவாக்கத் தகுதியுள்ளவனாக என்னை ஆக்கிக் கொள்வேன்" என எண்ணுக. இந்த எண்ணத்தைச் சதா மனதினுள் உருப்போட்டுக் கொள்வீராக!

நாம் எப்போதும் எம்மைச் சுற்றி நல்ல துணிச்சலை ஊட்டுபவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அநேகமானவர்களின் முயற்சிகள் ஆரம்பத்திலேயே முடங்கிப் போவதற்கு பக்கத்திலிருக்கும் பிரயோசன மற்றவர்களின் வலுவற்ற ஆலோசனைகளுமே முக்கிய காரணமாகின்றது. தாங்களும் இயங்காது பிறரையும் பயமுறுத்துவது சிலருக்கு கைவந்த கலை யேயாகும்.

பல இளம் சாதனையாளர்களின் வாழ்க்கையைப் படித்துப்பாருங்கள். நிச்சயமாக வளரும் இளம் பயிருக்கு உரமிட்டவர்கள் அவர்களைச்சுற்றியுள்ள அவர்களின் நலனில் உண்மையான அக்கறை கொண்டோராகவே இருப்பார்கள் நல்ல வல்லோரின் பக்கத்திலிருப்பதே நல்லது.

மிகவும் சிறப்பாக வளர்ந்து வரக்கூடிய பல சிறார்கள்





பராமரிப்பு, ஆலோசனை, வழிகாட்டல் இன்றி அவர் விசேட திறமைகள், ஆற்றல்கள் கண்டு கொள்ளப் படாமலேயே மொட்டில் கருக வைக்கப்படுகின்றார்கள். அண்மையில் இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் ஒரு ஏழைச் சிறுமி தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம் ஒன்றினைத் தெரிவித்திருந்தாள்.

ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்திருந்த இச்சிறுமி மாவட்ட, மாநில, தேசிய மட்டத்தில் ஜீடோ கலையில் பல பதக்கங்களைப் பெற்றிருந்தாள். அவளது திறமையை மெச்சி, வெளிநாடு ஒன்றில் மேலதிகப் பயிற்சிநெறிக்கு அழைப்பு வந்திருந்தது. எனினும் ஒரு குறிப்பிட்ட தொகை அங்கு செல்வதற்கான ஏற்பாடுகளுக்குத் தேவைப்பட்டது. உறவினர்களோ, வேறு எவருமோ அந்த நேரத்தில் உதவி புரியத் தயாரின்மையினால் குறிப்பிட்ட அந்தப் பயிற்சி நெறி அவளை விட்டுக்கை நழுவிவிட்டது.

யாரோ ஒருவரின் லட்சியக் கனவுகளைப் பற்றி எமக்கு என்ன என எண்ணினால் நாம் கஷ்டநிலையில் உள்ள திறமைசாலிகளின் திறமைகளை அறுத்த படுபாவத்தினைப் புரிந்தவர்களாவோம். எம்மால் முடிந்த ஒருசிறு உதவியை யாவது கல்வியின் பொருட்டு அல்லது வேறு ஏதாவது முன்னேற்றத்தின் பொருட்டு செய்தால் எவ்வளவு தூரம் ஒருவரின் எதிர்காலத்தினைக் கட்டியெழுப்ப நாம் துணை நின்றவர்களாவோம் என்பதை உணரல் வேண்டும்.

ஏழ்மை நிலை காரணமாகவே சிலர் வாழ்வில்



RangaRakes
Tamilnavarasam.com

முன்னேறமுடியாமல், கிடைத்த வேலையை எடுத்து படித்த படிப்பை முடிக்க இயலாமல்போன துரதிஷ்ட சாலிகளை நாம் அறிவோம். இருப்பினும் காலக்கிரமத்தில் தோல்விகளைச் சவால்களாக ஏற்று முயன்று முன்னேறியவர்களும் உள்ளனர். மனதில் முறிவு ஏற்படாதவரை வெற்றிகள் கிடைக்க முடியாத ஒன்று அல்ல.

சோம்பி இருப்பதற்கு நேரம் கேட்காத நிலையை நாம் உருவாக்க வேண்டும். மழைத் துமிக்குள் உள் நுளைந்து, லாவகமாகத் திரும்பிவரும் சுறுசுறுப்பைக் கற்கவேண்டும். மலையைக்கூட எலி குடைந்து வளை அமைக்கும். உஷ்ணத்திற்குப் பயந்து சமையல் செய்யாமல் இருக்க முடியாது. முயன்று கொண்டேயிருப்பவன் முட்டாள்தனமாக காரணங்களைச் சொல்லி தனது கைகளைத் தானே கட்டி வைத்துக் கொள்ளமாட்ட ான். முயற்சி செய்கின்றவனுக்குச் செய்கருமங்களில் சிரமம் தோன்றாது.

கஷ்டப்படாமல் பெறுகின்ற சம்பாத்தியங்கள் ஒரு வகையில் திருட்டுப் போலவும் லஞ்சம் போலவும் தான் என்பதைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். எம்மால் முடிகின்ற வலு உள்ளபோது, சோம்பல்பட்டு சோர்வுடன் யாரிடமாவது உதவி கேட்பது யாசகம் போல் தோன்றாதா? தன்னை வருத்தி உழைப்பவனுக்கு இறைவன் தன் வல்லமையினை, ஆசியினைப் பரிசளிக்கின்றான். உலகில் முழுமையான தூய்மையினை அதன் பசுமையை, செழுமையினை மனித குலம் பூரணமாக அனுபவிக்க





வேண்டும்.எங்களது மேலான முயற்சிகளுடன் தன்னலமற்ற சேவையுணர்வுடன் மட்டுமே பூமியின் புனிதம் பேணப்படும்.

எதையாவது மனிதன் நல்லவைகளுக்காகச் சாதிக்காமல் செத்துப்போவதில் என்ன பயன்? எமக்கு என ஒரு இல்லம். அங்கு அமைத்துக் கொள்ள நிம்மதியான வாழ்வு முறைமை. எங்களுடன் அன்பான சுற்றம் நண்பர்கள். அயலவர்கள் என வாழ்வின் சந்தோஷக் கனவுகளுடனேயே நாம் வாழ்க்கையை நாடிக் கொண்டிருக்கின்றோம். நல்லதை நாடினால், கிடைக்காது விட்டதுமில்லை.

எமது நல்ல கனவுகள் நனவாக வேண்டுமெனின் உள்ளத்தாலும் உடலாலும் முயன்று உழைக்கவேண்டியவராவோம். எங்கள் அடிப்படைத் தேவைகளுக்காக பெரிதாக நாம் அல்லல்படுமாறு இறைவன் ஒருபோதும் கட்டளை இட்டதில்லை. மிக இயல்பாக தூய்மையாக உழைத்தாலே போதும். எல்லாமே வலிந்து எம்மிடம் வந்தணைந்து கொள்ளும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
07-01-2007



RangaRakes
Tamilnavarasam.com



# வேற்றுமை

வேற்றுமைகளை உருவாக்கினால் எந்த உயிரினர்களும் பாதுகாப்பற்ற நிலைக்குள்ளாகிப்போகும். மிருகங்கள் பறவைகள் கூட்டம் கூட்டமாகவே வாழுகின்றன. இன்ப துன்பங்களை அவை ஒன்றாகவே பகிர்கின்றன. வேற்றுமைகளால் மனிதகுலத்தின் வலிமை துண்டாடப்படும். பாகுபாடு காட்டுவதால் பகை, வன்மம் வளரும். வேறு என்ன லாபம் வரப்போகின்றது? மனிதர் சக்தியை வீண்விரயம் செய்வதற்கு வேற்றுமைகளால் ஏற்பட்ட மனக்குமுறல், குமைச்சல்களே பிரதான காரணமாகும். ஒருவர்க்கொருவர் சந்தோஷங்களைப் பகிர்வதே மனித நாகரீகம்.

ஒற்றுமையின்றி வேற்றுமைப்பட்டே செயலாற்று வோம் என அடம்பிடிப்பவர்கள் ஈற்றில் சற்றேனும் முன்னே ற்றமின்றியே வாழ்க்கையில் தோற்றுப் போய் விடுவர்.

எந்த ஒரு உயிரினமும் தமக்கேயுரித்தான தனித்துவ தன்மையை உறவு நிலையை இழந்து அல்லது விலகி



RangaRakes



ால் அதனுடைய பாதுகாப்புக்கான உத்தரவாதத்தைத் ாகவே இழந்து தவித்து விடும். வனங்களில் வாழும் ரினங்கள், தத்தமது உறவுகளுடன் கூட்டங் கூட்டமாக க்கையினைக் களிப்புடன் கழிக்கின்றன. யானை,புலி, சிங்கம் என்கின்ற மிருகங்களாகட்டும், பறவை கட்டும், பட்சிகள், நுண்ணிய ஜீவராசிகள் அனைத்துமே ாக இணைந்தே வாழ்கின்றன. அப்படி வாழாது விடின் இனம் அழிவதுடன் இனப்பெருக்கமும் நடந்திடுமா? வகள் உணவிற்காக இடம் பெயரும்போதும், ாஷ்ண நிலை காரணமாக எங்குதான் செல்லவேண்டிய பந்தம் ஏற்படினும் தான்மட்டும் தப்பித்தால் போதும் க் கருதுவது கிடையாது. ஒன்றாகவே வாழ்ந்து தங்கள் க்கையைத் தமது இனங்களுடனேயே முடிக்கின்றன. இயற்கை விநோதம்.

ஆனால்,ஆறறிவு படைத்த மனிதனால் ஒற்றுமை னைக் காப்பாற்ற முடியவில்லை. ஒன்றாக இருப்பார்கள், ப்பார்கள், படுத்து எழும்புவார்கள். ஆனால் சந்தர்ப்பம் ரும் போது தன்னை மட்டும் காப்பாற்றிக் கொண்டு டமெடுப்பார்கள். பிரச்சனை என்று வந்து விட்டதும் ன்றாக இருந்து அன்பு பாராட்டுதலை விடுத்து, தைவளர்த்து வேற்றுமைகளை முன்னிறுத்துவதும் லருக்கு பழக்கமாகிவிட்டது. எப்போதோ மறந்துபோன காத சங்கதிகளை தனக்குப் பேசிக் காட்டச் சந்தர்ப்பம் டைத்துவிட்டால்அதனை ஊதிப் பெருக்கிப் புதுமெருக்கு ட்டுப் பேசித் தன்னை மட்டும் மேன்மைப்படுத்துவது



Tamilnavarasam.com

வன்மம் கொண்ட துர்க்குணம் தான். வேற்றுமை உணர்வினால் எங்கள் வலிமை துண்டாடப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலையை உணராமல் இருப்பது துரதிஷ்டமானதே.

மிருகங்கள் உணவுதேடும் போது அவை ஒன்றை ஒன்று பிடித்துண்ணுவது இயற்கை. ஆனால் அவை தமது பசி தணிந்ததும் சாதாரண நிலைக்கு வந்துவிடும். மேலும், சிங்கம் சிங்கத்தையோ, கரடி கரடியையோ வேட்டையாடி உண்பதில்லை. தங்கள் இனத்தின் மீதான ஈடுபாடு காரணமாக இருக்கலாம். இவைகளின் உடல்வாகு வேட்டையாடுவதற்கு ஏற்ப இறைவனால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் மனித உடல் மற்றவனைத் தாக்கியழிப்பது போல், சமைக்கப்படவில்லை. இறைவன் ஒவ்வொரு படைப்பிலுமே அவை அவை வாழும் சூழல், உணவினை அடையும் வழிவகைக் கேற்பவே சிருஷ்டித்துள்ளான். கூரிய பல்லும், நகங்களும், பலமான உடற்தசைகளுமில்லாமல் மிருகங்களால் காடுகளில் சீவிக்க முடியுமா?

ஆனால், மனிதன் மிகவும் மென்மையான உடற்பாகங்கள் கொண்டிருந்தும் கூட கடின சிந்தையும், விகாரமான நடத்தையும் கொண்டும் வேற்றுமையுணர்வுடன் தன் உறவுகளைக் கூட துண்டாட, தீங்கு செய்யத் தயங்குவது இல்லை.

வேற்றுமை என்கின்ற எண்ணமூடாகவே கொடும் பகை, குரோதம் பெருநெருப்பாகப் பற்றி எரிவதை ஏன்தான் உணராமல் இருக்கின்றானோ? சுயலாபம் கருதும் இயல்பு





டாலே இல்லாத பேதங்களை மாற்றாரிடம் விதைத்து ன்றான். பேதங்கள், தமக்குத் தாங்களே ஏற்றும் ங்களே!

எல்லோருமே தமது இனம் மொழிபற்றி பெருமை ங்கப் பேசுவதில் தவறு ஏதும் இல்லை. இந்த ானம் இல்லாதவன் மனிதனேயில்லை.

பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒரு காட்டு வாசியைக் ட்டுப் பாருங்கள். உலகிலேயே தங்கள் இனம் தான் ன்மையானது என்பான். அத்துடன் உண்மையிலேயே ரீக சமுதாயத் தில் உள்ள சில நம்பமுடியாத களும் அவர்களுக்குண்டு. அற்புதமான மூலிகை த்துவங்கள், தேக ஆரோக்கியம், தீர்க்கமான னாவசிய சக்தி, மோப்ப சக்தி, கடின உழைப்பு, தற்கான உடல்வாகு, எந்த சூழலையும் தாங்கும் ாதிடம் ஆதிவாசிகளுக்கேயுரியது. மிக முக்கியமான கதி என்னவெனில் அவர்களுக்கு வேற்றுமை, ரோத உணர்வுகள் இல்லை. சந்தோஷ மாகச் ார்கள். தங்கள் காட்டு வாழ்வைக் கஷ்ட ஜீவனம் எனக் ளவும் எண்ணுவதில்லை.

ஒரு தலைவனின் கீழ் ஒற்றுமையுடன், வேற்றுமைகள் றுக் கூட்டம் கூட்டமாக அலைந்து திரியும் இவர்களின் மதியைப் பெரும் மாடமாளிகையில் நவநாகரீகத்தில் மும் செல்வச்சீமான்கள் பெற்றுவிடுவார்களா? களங்க



RangaRakes Tamilnavarasam.com

மற்ற மாந்தரிடம் வேற்றுமைகள் தோற்றம் காட்டி விடுவதில்லை.

- நல்ல நட்புணர்வு
- ஒவ்வொரு இனத்தின் கலை கலாசாரம் மொழிகளை மதித்திடும் இயல்பு பரந்த மனப்பாங்கு.
- தாங்கள் சார்ந்த மதத்தின் தத்துவங்களின்படி உண்மையாக ஒழுகும் தன்மை.

இத்தகைய உணர்வுகள் வலுப்பெற்றவர்கள் வேற்றுமைகளை வெறுக்கும் மனிதராக இருப்பார்கள். இன்று உலகில் பெரும்பாலானவர்கள் தாங்கள் சார்ந்த மதங்கள், மொழிகளை மட்டுமே தெரிந்தவர்களாக இருப்பதனால் மாற்று மொழி மதங்கள் பற்றி அவைகளின் தன்மை பற்றி அறியாது வாழ்ந்துவருகின்றனர்.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. எல்லா மதங்களுமே நல்லதையே சொல்கின்றன. எல்லா இடங்களிலுமே பெரியோர்கள் அவதாரம் செய்தார்கள். இப்போதும் எப்போதும் பிறந்து கொண்டேயிருப்பார்கள் என்பதை நாங்கள் மனதார ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

வேற்றுமைகளை உருவாக்கும் தாகத்தை விடுத்து ஒற்றுமையாக வாழ்வது என்பதில் முனைப்பாக இருப்பதனால் ஏற்படும் வளர்ச்சிபற்றி ஒவ்வொருவரும் சிந்தித்தேயாக வேண்டும்.





சமூகநீதி, சமத்துவம் என்றெல்லாம் பேசும்போது வ எல்லோர்க்குமானது என்பதை அறியாமல் பேசுகி ர். பிறரிடமிருந்து பிடுங்கிக் கொள்வோர் கூடச் சமூக பற்றிச் சொல்கின்றனர். தங்கள் உடமைகளை மட்டும் பாற்றவும் இதற்காகவே வேற்றுமைகளைத் தூவி யம் தேடுபவர்களைக் கூட மக்கள் நம்புவது வேதனை.

மனிதனுக்கும் கடவுளுக்குமான உறவின் புனிதத் மை என்பது தனது படைப்பான மனிதன் வேற்றுமை ணமற்றவனாக இருப்பதுவேயாம். வேற்றுமைகளும் ாதிக்க முனைப்புப் போக்குகளும் கொண்டவர் உறவு இறைவன் துறந்து விடுவான். மகிழ்ச்சியாக இருக்கவே நும் சித்தமாயுள்ளவன் பிரிந்தோ,பிரித்தோ வுகளைக் கத்தரித்தே இருக்க விரும்புவானா? ாரணமான குடும்ப மட்டங்களிலேயும், கிராம களிலேயும் பேதம் காட்டி வாழ்கின்ற நபர்கள் ம் போது இந்தப் பெரிய உலகில் எல்லோருமே ங்களற்ற மாந்தராய் வாழ வைக்கின்ற முயற்சி ானதேயாகும்.

"வேற்றுமை களைந்து வாழ்க" என அனைத்து மதங் , இலக்கியங்கள் அறநூல்கள் புகல்கின்றன. சாதாரண ஒரு குடும்பத்திலேயே வசதிகூடிய அங்கத்தினர்க்கு , வசதிகுறைந்தவர்க்கு இன்னொரு நீதி வழங்கப் ன. சாதியை, குலத்தை, பணத்தை, மதங்களை வேற்றுமை பேசி வாய்கூசாது தூற்றுகின்றனர். நாம் ாருமே ஒரே உலகத்துப் பிரஜைகள் என்று உணர்வ



RangaRakes Tamilnavarasam.com

இன மத பேதம் பேசுபவர்கள், தங்களால் தூற்றப் பட்ட அல்லது தாங்களே தூற்றியோரிடம் சுயநலம் காரண மாக கைகோர்த்தும் கொள்வார்கள். செல்வம் படைத்த வர்கள் தங்களை ஒத்தபணம் படைத்தவர்கள் எந்த இனமாக இருந்தாலும் வேற்றுமை பற்றிப் பேசாது உறவு வைத்துக் கொள்வார்கள். ஏன் திருமணபந்தங்கள் வர்க்கம் சார்ந்த வையாகவே இருக்கின்றன. அதாவது செல்வச்சீமான்கள் தம்மோடு ஒத்தவர்களுடன் மட்டுமே தொடர்புகளை வைத்துக் கொள்வதையே பெரும் கௌரவமாக கொண்டி ருப்பார்கள். கீழ்த்தட்டு வர்க்கத்தினை மட்டமாகவே பார்த்து முகம் சுளிப்பார்கள்.

வர்க்கங்கள் ஒத்து இருந்தால் அவர்கள் தங்கள் நலனை மட்டுமே முன்னிலைப்படுத்துவார்கள். வர்க்க வேறுபாடுகள் இந்த உலகை ஆக்கிரமித்து அல்லல்படுத்து கின்றது. ஆனால், பரம ஏழைகள் பரந்த மனப்பான்மை யுடன் உடலை வருத்தி உழைத்துக் கொண்டே தேய்ந்து போகின்றார்கள். எனினும் "அரசியல்" இவர்களிடம் உள் நுளைந்து கொள்வதால் பேத உணர்வுகள் மேலோங்கவும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இன்று உலகின் சிறுபான்மை மக்கள் அல்லல்படுவதற்கும் இத்தகைய போக்கே முக்கிய காரணியாகி விட்டது.

வேற்றுமை உணர்வினால் உலகம் எத்தகைய இன்னல்களை அனுபவித்து வந்தாலும் மக்கள் தமது போக்கை மாற்றியமைப்பதாயில்லை. பண்டையகாலத்தில் எழுதப்பட்ட நூல்கள் எல்லாமே ஒழுக்கம் சார்ந்த





வையாகவே அமைந்தன. உலக இலக்கியங்கள் சமயங்கள் லாமே பண்பாடுபற்றி சொல்லிக் கொண்டே வந்தன. விஞ்ஞான யுகத்தில் சஞ்சாரம் செய்யும் நாம், பாட்டு இலக்கியங்கள் பால் எமது கவனங்களைத் புவ தேயில்லை. நல்ல சமய பிரசங்கங்களையோ, பேருரைகளையோ, செவிசாய்க்க நேரத்தை வதில்லை. உடன் களிப்பூட்டவைக்கும் வெறும் து போக்குகளை மையப்படுத்தியே வாழ்க்கையை மைத்து விட்டோம்.

"இந்நிலையில் சமூக கட்டுப்பாடு சமூக நியதிகளை ம் உருவாக்குவது? பேதமற்ற பொது நோக்குடன் ம் முறைமைகளை இதயத்தில் உள்நுளைக்க சம் வழங்குவதேயில்லை. எமக்குத் தெரிந்த நல்ல சாரங்களை அது எதற்காக சொல்ல வேண்டும் என்றே விடுகின்றோம். எல்லாமே எங்களுக்கு நன்றாகவே . "சொல்வதற்கு இவர்கள் யார்"? எனும் போக்கும் ரிடம் காணப்படுவதுண்டு. ஆனால் நாம் நல்ல ளைத் தினசரி மீட்டி நோக்க வேண்டியவர்கள் த நாம் உணர்ந்தேயாக வேண்டும்.

பொழுதுபோக்கு அம்சங்களில் கூட, நல்ல கருத்துக் செலுத்தவும் வேண்டும். மனிதன் தன் இயந்திரத் யான போக்கினை விடுத்து மனம் கசிவுள்ள பிமானம் மிக்க ஆற்றல் மிகு பேதமற்ற பொது டையவனாக. பிறர் உணர்வை அறிந்த மென்மைக் வாய்ந்தவனாக மெய்யானவனாக தன்னை உரு ம்.



RangaRakes
Tamilnavarasam.com

கஷ்டமுறும் எல்லோருமே தாங்கள் வசதியான இனத்தில். குடும்பத்தில் பிறக்கவில்லையே என அங்கலாய்க் கின்றனர். சமத்துவமான சமூக அமைப்பினை ஏற்படுத் தினால் இந்த எண்ணம் வந்திடுமா? அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குக் குடியேறிவிட்டால் பிரச்சனைகள் யாவுமே கழன்று விடும் என்று கற்பனை செய்கின்றார்கள். அங்கே போய் சென்றால், எங்கள் மனசு நிறைந்து விடுமா? உண்மையைச் சொல்லப்போனால், சொந்தப் பூமியில் வாழ்வதைவிட அந்நிய பூமியில் பிறர் ஏளனமாய் நோக்கினாலும் பரவாயில்லை. காசு சம்பாதித் தால் போதும் என எண்ணுவது சுயகௌரவத்தைப் பாதிப்பது போலாகும். தாய் நாட்டினைவிட்டு எங்கு ஏகிடினும் அங்குள்ளவர்கள் எங்களை வேற்றுமனிதராக நோக்கி விடமாட்டார்களா? எனினும் அகதிகளை ஆகாதவர்கள் என நோக்குதல் தகாது. இச்சொல் பொருத்தமற்றது.

துன்பங்களைக் கண்டு ஓடுதலை விடுத்து அதனை நீக்கிடும் பரிகாரங்களை நிவர்த்திக்க முனைப்புடன் ஆற்றுதலே சிறப்பாகும். மேலும் வேற்றுமை உணர்வுகள் என்பது சகல நாடுகளிலும் பீடித்துள்ள வேண்டத்தகாத துர்க்குணம் என்பதால் நாங்கள்தான் எங்களிடையே சமத்துவ உணர்வை மேலோங்கச் செய்ய வேண்டும். இன்று பலரும் தன்முனைப்பாக ஆண்டவன்விரும்பாத வேற்றுமைகளை உருவாக்க விரும்புவதானது உண்மை யான இயற்கை நீதியை அடக்கி ஒடுக்குவது போன்றதே.





ும் இயற்கையை அதன் இயல்பை, வெல்வது
மான . சரியானபடி, சரியான பாதையில் செல்லும்
மோதிப்பார்ப்பதில் என்ன லாபமோ, திறமை
க்கின்றது?

க "உற்பத்தி" செய்யும் படைப்புகள் அவை
வாழ்ந்துவிடும் என்கின்ற நோக்கிலேயே
படுகின்றன.


எனவே, "பேதங்களுடன் ஏற்றத் தாழ்வு மனப்
யை உண்டு பண்ணு" என்று அதனைப் படைத்த
ம்புவானா? தொண்றுதொட்டே அது அது அந்த
திலேயே இருக்க வேண்டும். வேறுபாடு காட்ட
டிய இடத்தில் வேறுபாடு காட்டியேயாக வேண்டும்
பழமைவாதிகள் என்று பெருமைப்படுபவர்கள்
ல்லிக் கொள்வதுண்டு. இக் கருத்து ஏற்புடையதன்று.

நல்ல கல்வியுடன் உயர் பண்புகளை எவர் கொண்டி
தாலும் அவர்களைச் சமூகம் ஏற்றுக்கொண்டு
ன்றது. ஒருவரது தகைமை என்பது அவரது பண்பின்
ரணத்தில் தங்கியுள்ளது. நல்லோர் வேற்றுமைகளைக்
அதனைப் போற்றுதல் செய்வதுமில்லை. இறைவன்
" "சமத்துவத்தைப் பின்பற்றி வேற்றுமை துறந்து
று வாழ்வாயாக" என்பதேயாகும்.

தினக்குரல் (ஞாயிறுமஞ்சரி) 30.03.2007



RangaRakes
Tamilnavarasam.com



# விசுவாசம்

வைராக்கியமான நம்பிக்கைகள் ஆன்மாமீது ஆளப்பதிந்து நின்றால், செயல்பாடுகள் யாவுமே சாமான்யமான ஒன்றாகி எளிதாகிவிடும். ஆண்டவனை விசுவாசிக்கின்ற ஆத்மாக்களுக்காக ஆண்டவனின் திருக்கதவுகள் என்றுமே திறந்து வைக்கப் பட்டிருக்கும். வெற்றி என்கின்ற மாவிருட்சத்தின் ஆணிவேராக நம்பிக்கையும் இறை விசுவாசமும் இணைந்திருக்கின்றன.

தன்மீதும், தான் வாழும் சமூகத்தின்மீதும் எல்லாவற்றுக்கும் மேலாம் இறைவன் மீதும் விசுவாசம் இல்லாதவர்கள் சந்தேகமும் துணிவுமற்ற வாழ்வோடு சிக்கிச் சுழன்று தம்மையே இழந்து சோர்வுற்றுப் போகின்றார்கள்.

நம்பிக்கை வைக்கத் தெரியாதவர்களிடம் "விசுவாசம்" எப்படி வாசம் செய்ய முடியும்?





குழந்தை தனது தாயாரை முழுமையாக ஏற்றுக் கின்றது. குழந்தைக்கு விசுவாசம் என்பதன் பொருள் ரது. ஆனால் தனது தாயாரே தனக்கு ஆதாரம் என முழுமையாக நம்புகின்றது. இந்த நம்பிக்கைதான் பிறரிடத்தே வைத்துக்கொள்ளும் தூய்மையான டுகள் தான் விசுவாச உணர்வாகப் பரிணமிக்கின்றது.

ாய் தன் எஜமானிடத்தே பணிவும் அன்பும் கையும் ஒருங்கேசேர அதுவிசுவாசம் காட்டிச் கின்றது. எனவே விசுவாசம் என்கின்ற செயல் டர்க்கு மட்டு மல்ல விலங்குகளுக்கும் சகல ரசிகளுக்கும் கூடப் பொருத்தமாகின்றது. சகல ரசிகளும் தமது இனங்களு டன் ஒருமித்து வாழ்வதற்கு றை ஒன்று ஆதாரமாகக் கொண்டு தானே வாழ யிருக்கின்றது.

"விசுவாசம்" என்கின்ற ஒரு சொல்லுக்குள் பல ள் அடங்கியுள்ளன.

- பொறுமை
- நன்றியுடைமை
- அன்பு, பரிவு, பாசம்
- பரஸ்பர நேயப்பாடு
- ஜீவகாருண்யம்
- தன்முனைப்பு இன்மை
- கடமையுணர்வு



RangaRakes
Tamilnavarasam.com

போன்ற உயர் குணங்களையுடையவன் சமூகத்தில் உண்மையான விசுவாசம் கொண்டவனாக அங்கீகரிக்கப்படுவான்.

தனது குடும்பத்திடம், எஜமானிடம், மக்களின் அரசாங்கங்களுடன், தான்பணிபுரியும் நிறுவனத்திடம், பெரியோர்கள் உற்றார் உறவினர்கள்,நண்பர்களிடம் போலியான அன்பு காட்டி வாழ்ந்து விடுதல் என்பது வாழ்வு முறைக்கு ஆரோக்கியமானதுமல்ல.

தீயோர் மறைமுகமாக தமது சுயலாபத்திற்காக தங்களை நம்பிக்கை உணர்வுள்ளவர்களாகக் காட்டிக் கொள்ளலாம். ஆனால் குற்றச்செயல்களில் ஈடுபடும் சில பேர்வழிகள்கூட தமது நண்பர்களுக்காகவும் பணத்திற்காகவும்கூட இயங்கும் தனது தலைவனுக்காகவும் தமது உயிரையே துச்சமெனத் துறந்துவிடுவது அதிசயமான உண்மைதான்.

வார்த்தை ஜாலம் காட்டுபவர்களிடம் மயங்கும் அப்பாவிகள் பலர் தீமைசெய்யும் இவர்களிடம் சிக்குண்டு மக்கிப்போவது வேதனைக்குரியதேயாம்.

உண்மையான இறை பக்தியுள்ளவர்கள் தெய்வத்தின் மீதான அதியுயர் விசுவாசமிகுதியால், அச்சம் இன்றி வாழ்கின்றார்கள். கேட்டால், எல்லாவற்றையும் அவன் பார்த்துக் கொள்வான் என்பார்கள்.





மனிதர்கள் தமக்குத் தெரியாமலே சில புறத்தாக்குள் உள்ளாவதை உணராமல் இருப்பதுண்டு.

தாங்கள் நேசித்த விசுவாசித்தவர்களே தங்களுக்குத் ரகம் இழைத்த கொடுமைகளைச் சொல்லி வருந்துவ . எங்கே இருந்து பாணம் தொடுக்கப்படுகின்றது ன உணராத நிலை, மனிதரைத் தாங்கொணாப் ள் தள்ளி விடும். எம்மீது எவர் உண்மையான காண்டுள்ளார் என்பதனையே கண்டு பிடிக்க துள்ளதாகவும் சிலர் கூறுவதுண்டு.

யார், யார் எப்படி இருப்பினும், எமது அன்பினைப் அளிப்பதில் பின்னிற்கக்கூடாது என்பதே மானுடராகும். மேலும் ஒருவர், இன்னுமொருவர் மீது அதீத னக் காட்டினாலும் கூட, அவ்வண்ணமே அன்பு தியவர் மீது, மற்றயவர் அன்போ, விசுவாசமோ ளாமல் இருப்பது துர்ப்பாக்கிய நிலைதான்.

வேண்டத்தகாத அன்பு என்று ஒன்றில்லை. இருப்பி சிலர் தாம் காட்டும் அன்பின் நிமிர்த்தம், மற்றவர்க்குத் லை கொடுப்பதும் சரியானதல்ல. சிலர் காட்டும் தொல்லைகள் சகிக்கமுடியவில்லை என்றும் ப்படுபவர்கள் உளர்.

ல்,

உண்மையாகவே, ஒருவர் காட்டும் விசுவாச



RangaRakes

Tamilnavarasam.com

உணர்வை நாம் கௌரவித்தேயாகவேண்டும். பரஸ்பர விசுவாச உணர்வுகள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வதாலேயே பெறப்படுவதாகும். இந்நிலையால் இரு சாராரும் ஒருவர்க்கொருவர் அந்நியோன்ய உணர்வினைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

"அறிவு" உற்பத்தியானது, இயற்கையாகவும், எமது முயற்சியாலும், பிறருக்கு வழங்குதல்களாலும் கிடைக்கப் பெறுகின்றது, அறிவின் செறிவை, அதன் பெறுமதியை. உணர்ந்தவர்கள்கூட மனிதப் பெறுமதியைச் சிலவேளை கண்டு கொள்ளாமல் இருந்து விடுகின்றார்கள்.

களங்கமற்ற பாமரர்களை படித்தவர்களில் சிலர் பொருட்படுத்துவதில்லை அவர்களைப் பாமரர்கள் நெருங்கி விசுவாசம் காட்ட முனைந்தாலும் அதுபற்றிப் பெரிதாக இத்தகையவர்கள் பெரிதுபடுத்துவதில்லை.சில பணக்கார வர்க்கத்தினர்கள் யாராவது ஏழை எளியோர் வந்து நின்று விசுவாசம் காட்டி நின்றால் அல்லது அவர்களுக்கு ஊழியம் செய்தால் எவ்வளவு தூரம் கழிவிரக்கம் கொள்கின்றார்கள் சொல்லுங்கள்!

தங்களிலும் தகைமை குறைந்தவர்கள் எப்படியும் விசுவாசம் காட்டியேயாக வேண்டும் என்றே இத்தகையவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

விசுவாசத்தைக் கேட்டு நின்றோ வன்முறை வழியில் நின்றோ பெற்று விட முடியுமா? பயந்த ஒருவன் மிரட்டுப





"ஐயா உங்களுக்கு நான் ஒரு விசுவாசி" ரப்பது அவன் குரல் வளையை நெரித்து க அவன் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்வது லவா?

இருந்து அவனது முழுப் பயன்பாடுகளை து வீடும், சமூகமும், நாடும் பெற்றுக் கொள்ள ம், தனது வீட்டிற்கு, சமூகத்திற்குப் பிறந்த கு விசுவாசம் கொள்ளாதவன் முழுமையாகத் ழைப்பை நல்குவான் என்று நாம் எதிர்பார்க்க ?

இன்று பலர் தமது தொழில் மீது அதன் நிறுவன மீது நம்பிக்கையும் அபிமானமும் வைத்துக் ளாமல் இருக்கின்றார்கள். முதலாளிக்குத் தன் லாளி மீது நம்பிக்கையில்லை. ஆசிரியர்களிடம் க்கு பணிவும், நல் அபிமானமும் இல்லை என்ற சாட்டுகள் முன் வைக்கப்படுகின்றது.

குடும்பத்தில் கணவன், மனைவியிடமும் மனைவி னிடமும், பிரியத்துடனான ஐக்கியம் இன்றேல் அக் நடுத்தெருவில் மற்றவர் நகைக்கும் நிலைக்கு ம!

அரச தனியார் நிறுவனங்களின், வளர்ச்சி மென் முன்னேற வேண்டுமேயானால் தம்மைத் தாங்கு



RangaRakes
Tamilnavarasam.com

கின்ற நிறுவனங்களின் மேல் அக்கறையையும் மேலான உழைப்பினையும் ஊழியர்கள் காட்ட வேண்டுமல்லவா?

ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்துவதும் வர்க்கபேதம் பேசுவதும், தொழில் ரீதியாகப் பாகுபாடுகளை வெளிப்படையாகக் காட்டுவதும் நிறுவனங்கள் மீதுள்ள விசுவாசமின்மையையே காட்டுவதாக அமையுமன்றோ! சேவை என்பது பொதுவான விஷயம் தான். இங்கு செய்யப்படும் தொழில் எதுவாயினும் அந்தத் தொழில் மீதான அபிமானமே முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும். பதவி அந்தஸ்துக் கூடியவர்கள் "சும்மா" இருந்து சுகப்பட முடியாது. இந்த மனோ நிலை கூட ஒரு தேசத்துரோகமும் தமது சொந்த ஆத்மாவிற்குத் தானாகவழங்குகின்ற துரோக முமாகும்.

சில விஷயங்களில் நாம் காட்டும் விசுவாச நிலைகளின் வடிவங்கள் வெவ்வேறானத தெரியும். உதாரணமாக நோயாளி தனக்குச் சிகிச்சையளிக்கும் வைத்தியரிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். அதே சமயம் வைத்தியர், தமது தொழிலில் விசுவாசம் காட்டியே நன்கு சிகிச்சையளிக்கின்றார். இந்த இடத்தில் வைத்தியர் நோயாளியிடம் காட்டுவது பரிவு, அன்பு, தமது தொழிலில் காட்டும் விசுவாசம் என்பனவாகும்.

ஆனால், நோயாளியோ பரிபூரணமாக வைத்தியரிடம் விசுவாசமுடன் தன்னை ஒப்படைக்கின்றான். இதே போல்,





பறக்கின்றது, விமானி தனது கருமத்தில் கண்
ரசமாக உழைக்கின்றார். அவர் பயணிகளைக்
சேர்ப்பதில் அக்கறையுடன் செயல்படுகின்றார்.
களில் பலரும் விமானம் ஒழுங்காகப் போய்ச்
டுமெனப் பிரார்த்திக்கின்றார்கள். எனினும்
ள் விமானியின் மீதும், அவன் சேவைமீதும்
யறியாமல் விசுவாசம் கொண்டு விடுகின்றனர்.
பயணிகள் மீது கரிசனை கொள்கின்றார்.
யை செய்கின்றார். ஆனால் பயணிகள் தங்கள்
ம் சிறப்பாக அமைய விசுவாச உணர்வுடன்
யுடன் பயணிக்கிறார்கள்.

எனவே, எப்போதுமே பார்க்காதவர்கள் மீது
வர்கள் சேவையினைப் பெறும்போது அவர்களிடம்
கை விசுவாசம் கொண்டு விடுகின்றோம்.

இறைவனிடம் பக்தன் தனது உடல், பொருள், ஆவி
னத்தையும் ஆத்மார்த்த ரீதியாக ஒப்படைத்தலைப்
ண சரணாகதி" நிலை என்று சொல்லப்படுகின்றது. "என்
லால் யாதொன்றுமில்லை, எல்லாமே நீதான்"
கின்ற அதி உன்னத நிலையிதுவாகும். தமது
ரனிடம், அல்லது தமக்கு மிக வேண்டப்பட்டவர்கள்
ம் எவராவது தங்களால் இயலாத கருமங்கள்
ருட்டும் அன்புமீதூர அவர்களையே சார்ந்து நின்று
குதற் பொருட்டும் பூரண சரணாகதியாக தங்களை
ப்பணிப் போரும் உளர். எனினும் "பூரண சரணாகதி"



RangaRakes
Tamilnavarasam.com

எனும் சொற்பதம் இறையுடனும் ஆன்மாவுடனும் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

ஆனால்,

ஒருவர் மீது விசுவாச உணர்வில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் தாங்களாகவே தமது செயல்களைச் செய்து கொண்டிருப்பர். ஒருவர் தமது விசுவாச உணர்வின் செயல்பாடுகளுக்கு அவர்தம் சுதந்திர உணர்வு, அன்பு, நம்பிக்கை என்கின்ற அம்சங்கள் பிணைந்து உள்ளது. ஆனால்,

"பூரண சரணாகதி" என்பதில் தம்மையே இறைவனி டம் பூரணமாக ஒப்படைப்பதனால் விசுவாசத்திற்கும், பூரண சரணாகதி என்கின்ற நிலைக்குப் சில வேறுபாடுகள் உண்டு.

ஒருவர் மீதான நம்பிக்கையின் தீவிர நிலை விசுவாச மாகின்றது. சந்தேகமுள்ள நிலையில் யாரிடமாவது விசுவா சம் கொண்டு விட இயலுமோ?

வைராக்கியமான நம்பிக்கைகள், ஆன்மாமீது ஆழப் பதிந்து நின்றால் செயல்பாடுகள் யாவுமே சாமான்யமான ஒன்றாகி எளிதாகிவிடும்.

ஆண்டவனை விசுவாசிக்கின்ற ஆத்மாக்களுக்காக ஆண்டவனின் திருக்கதவுகள் என்றும் திறந்தே வைக்கப் பட்டுள்ளது."வெற்றி" என்கின்ற மாவிருட்சத்தின் ஆணி





ாக நம்பிக்கையும், இறைவிசுவாசமும் இணைந் ன்றது.

விசுவாச உணர்வுகளை வெளியே எப்படிக் காட்டி ாலும் மனிதனின் ஆத்மாவிற்கு அதன் உள் வுகளுக்கு எது உண்மையான விசுவாசம் என்பதை த்திக் காட்டும் காட்டிவிடும்.

மிக நம்பிக்கையானவர்கள் என எண்ணி தமது ாக வைத்துள்ளவர்களாலேயே சிலர் கொடூரமாகக் ல செய்யப்படுவதும் சில ஆட்சித் தலைவர்களை சார்ந்தவர்களே பதவியில் இருந்து கவிழ்ப்பதும் மான சங்கதி அல்லவே!.

ஒருவன் மனதினுள் புதைந்துள்ள வக்கிரத்தைக் டு பிடிப்பது சுலபமான காரியமாகுமா? தமது தைகளை மறைத்து உலாவி வருபவர்களை நிறுத்து டபோடுவது எங்ஙனம்? பெரும் அனுபவஞானம் ளவர்களையே கண் இமைக்கும்பொழுதில் கழுத் கும் கலை தெரிந்தவர்களும் இல்லாமல் இல்லை. சி கூடப்போகாத துளைக்குள் ஊடுருவும் சாலிகளும் உளர். நல்ல விடயங்களில் காட்டும் றையை விட கண்ட கண்ட நெறிகெட்ட செயலுக்காக சுய ஆற்றலை விரயமாக்குவதை அவர்கள் உணராமல் பது துர்ப்பாக்கியமன்றோ!



RangaRakes
Tamilnavarasam.com

எங்கள் நோக்கத்திற்காக கண்டவரிடமும் போய் சரணடைவது எங்கள் ஆத்மாவை அசுத்தப்படுத்தும் செயல் தான். நீங்கள் எவரிடத்தே சென்று உதவி கேட்கின்றீர்களோ அவரின் நடத்தை நெறிகளை அவரின் உண்மைத் தன்மைகளை அறிவீர்களாக!.

ஏன் எனில் சில சமயம் நீங்கள் உதவி கேட்ட துர்மதி யாளர்கள், உங்களுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பிரதியு பகாரமாகக் கேட்கும் விலை அல்லது உங்களது சேவை மிகப் பயங்கரமானதாக இருக்கலாம். ஒருவனுக்குக் கடமை ப்பட்டுவிட்டதால் சில நல்ல மனிதர்கள் கூட அவர்பொருட்டு சில சில தகாதசெயல்களில் ஈடுபடு வதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எனவே,

காட்டவேண்டிய விசுவாசங்களைக் காட்ட வேண்டிய இடத்தில் காட்டுவீர்களாக!. பொருளற்ற, போலியான, வாழ்வு நிம்மதியீட்டித் தந்திடுமோ? சத்தியத்திற்குப் பயப்படாத வாழ்வு சரிந்திடும் அல்லவோ! ஒளிக்கும், இருளுக்கும் வித்தியாசம் தெரியாமல் வாழ்ந்துவிடல் முடியுமா?

எந்த இன்பங்களையும், துன்பங்களையும் வழங்கு தலும், பிடுங்குதலும் இயற்கையான உலக இயல்பே யாகும். ஆனால் உலகில் வாழும் நாம், வாழும் முறையில் நேர்மையைக் கூடைப்பிடித்து ஒழுகாதுவிடின் பிறரால் நம்பிக்கை வைக்கமுடியாத பிரகிருதிகளாகி விடுவோம்.





கள் முழு உலகிற்கும் விசுவாசம் மிக்கவர்களாக நிச்சயமாக எங்களை உலகம் ஏற்றுக்கொண்டு சித்துக் கொள்ளும். இந்தச் செயலைத்தான் எம்மிடம் எஞ்ஞான்றும் எதிர்பார்த்த வண்ண ㄷ.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
11-02-2006



# போராட்டங்கள்

'போராட்டம்" என்பது பகை வளர்ப்பதற்காக அமைந்து விடக்கூடாது. தமது உரிமைகளுக்காகத், தமக்குரிய பங்கினைக் கேட்பதை எதிர் தரப்பினரைச் சண்டைக்கே அழைப்பதாகக் கருதுதல் தகாது. கேட்கின்றவர்களை உதைத்துத் துரத்துதல் மனித நாகரீகமும் அல்ல. உரிமைகளைப் பிடுங்குதலை விடக்கொடுத்தல் தர்மம். எவரினதும் உரிமைகளைப் பறிப்பது கூட வன்முறைதான். நியாயபூர்வமாக போராடும்போது மதிநுட்பத்தைக் கூராகவும் எச்சரிக்கை உணர்வினை உச்சநிலையில் வைத்துக்கொள்ளும் திறனையும் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

மனிதன் ஏதோ ஒரு சந்தர்ப்பத்திலாவது, போராட்டங்களை சந்தித்துக் கொண்டுதானிருக்கின்றான். தவிர்க்க முடியாத வாழ்க்கைப் பிரச்சனை இது. சும்மா இருந்தாலும் போராட்டங்கள்ள சந்தோஷமாகச் சனங்களைச் சீவிக்க விடுவதில்லை என்று எல்லோருமே சதா குறைப்படுவதுண்டு.





மனிதனை எதிர் கொள்ளும் போராட்டங்கள் நிலைகளில் அவனைத் தாக்கி வருகின்றன. அவன் மனதோடு உணர்ச்சிகள்,உணர்வுகளுடன் கூடி மற்றயது புறச்சூழலின் தாக்கத்தினால் ஏற்படுவது . எல்லா உயிர்களுமே பெரும் போராட்டங்களுட ய சீவித்துக்கொண்டு தானிருக்கின்றன. பூச்சி, பூ, , செடி கொடிகள் எல்லாமே பூரண ஆயுளுடன் ந்துகொள்ள இயற்கை நிகழ்வுகள் அனுமதிப்பது ல. இவை வாழ்ந்து கொள்ள எதிரிகள் விடுவது ல. எதிரிகள் என்போர் மனிதர்களாகவும் இருக்கலாம்.

பூச்சிகள், புழுக்கள் ஒன்றை ஒன்று உண்பதும் மீனைப் பெரியமீன் கௌவுவதும், மிருகங்களையும் லது பறவைகளையும் மனிதன் வேட்டையாடுவதுமாக தால் எப்படி உயிர்கள் போராடி நீண்டகாலம் துகொள்ள முடியும்? இவைகளில் மிகவும் கவலை ம் விடயம் என்னவெனில் மனிதனை மனிதன் டயாடிக் கொண்டிருக்கின்றான். இன்று மனிதனில் து மனிதன் தப்புவதே பெரிய போராட்டமாக உள்ளது. க்கான போராட்டம் ஒரு புறம், மனிதன் தனது ல் இருந்து தப்பித்துக்கொள்வதே பகீரதப் பிரயத்த இருக்கின்றது.

கிருமிகள் சனங்களை அழிக்கும் தொகையைவிட த்தினாலும், தனிப்பட்ட குரோதங்களாலும், இறந்து ர்கின்ற ஜீவன்களே அதிகமாகிவிட்டது. விஷக்



RangaRakes
Tamilnavarasam.com

கிருமிகளின் வேலையை மனிதர்கள் கையேற்று விட்டார்கள்.

பூமியின் பாரம் குறைந்து கொள்ள யுத்தம், நோய்கள் ஒரு காரணம் என்கின்றார்கள். ஆனால் காலம் போகின்ற போக்கில் சகல ஜீவராசிகளும் தம்முள் போரிட்டு மடிந்து போகப் பூமி அந்தகாராத்தினுள் தானே தன்னைத்தான், சுற்றிக்கொண்டிருக்குமா என எண்ணத் தோன்றுகின்றது.

மனிதன் தன்னுள் உருவாக்கிக் கொண்டிருக்கும் மனப்போராட்டங்களால் அவன் குழப்பங்களையும் வேதனையையும் உருவாக்குகின்றான். ஆனால் அவைகளில் இருந்து மீளும்போது சந்தோஷியாகின்றான். பின்பும் மீண்டும், மீண்டும் துன்பம் கொள்ளும்போது உடலை மனதை உடைத்துக்கொள்கின்றான்.

இவ்வாறே, காலத்திற்குக் காலம் மனம் போராடிப் போராடி களைத்துப் போகின்ற நிலைக்குள் நாம் ஆட்பட்டுப் பழகியே போகின்றோம். போராட்டங்களே வழக்கமாகி விட்டால் தினசரி சலிப்போடுதான் வாழவேண்டி வரு மன்றோ! இதனுடன் பழகி அதனுடன் சங்கமிப்பதை விடுத்துப் போராட்டங்களை வெற்றி கொள்ளலே எமது தலையாய பணியாகும். கஷ்டப்பட்டுக்கொண்டே மனக் குமுறலுடன் வாழும் வாழ்க்கை வேண்டவே வேண்டாம். இதை மாற்றியமைக்க வேண்டும்.



RangaRakes



சிந்தனைத் தெளிவுள்ள அறிவாளிகள் எத்தகைய னகளுமே வாழ்க்கையில் யதார்த்தமானவை ர்ந்து மிக இயல்பாகவே இவற்றை ஏற்று வாழ்ந்து கள். பதட்டமும், பரபரப்புமான எண்ணங்கள் பிரவேசித்ததுமே, சாதாரண போராட்ட ம் பார்க்க துன்பங்களின் "வலு" தன் திறமையைக் ாக க்காட்ட ஆரம்பிக்கின்றது.

நாம் எம் நிலை தளர்ந்ததுமே கவலைகள் எல்லாம் ழக் கேட்காமலேயே உத்தரவின்று உட்புகுந்து கின்றன.

"செயல்திறன்" அற்ற மனிதனுக்கு கல்விஅறிவும் ம் இருந்து என்ன ஆகப்போகின்றது? வெறும் ம், அறிவும் மட்டும் வாழ்க்கைக்கு உதவாது தை அறிவோமாக! போராட்டங்களை வென்று காட்டத் சல், விடாமுயற்சி, தன்னம்பிக்கை அத்தியாவசிய யுமாகின்றது. வெறும் மேலோட்டமான அறிவினா துணிச்சல் இன்மையாலும், போராட்டங்களின் மைத் தன்மையை உணரவும் முடியாது.

நியாயத்திற்கான போராட்டங்களை ஆரம்பிக்கு துணிச்சல், விடாமுயற்சியைத் துணைக்கு எடுத்து விட்டால் எடுத்துக்கொண்ட போராட்டத்தில் வெற்றி றுவிட முடியுமா?



Tamilnavarasam.com

ஒரு தாய் ஒரு குழந்தையைப் பெற்று எடுத்து வளர்ப்பதற்குள் எத்தனை தியாகங்களை கஷ்டங்களை அனுபவித்து விடுகின்றாள். பிள்ளைகள் வளர்ந்து மாணவர் களானதும் அவர்களுடைய முயற்சிகள் வளர்ந்து வருகின் றது. மாணவர் தமது கல்வியின் பொருட்டு தமது அறிவுடன் போராடுகின்றார்கள். பரீட்சையில் சித்தி எய்தியதும் தொழிலுக்காகக் கடும் பிரயத்தனப்படுகின்றார்கள் சரி தொழில் தேடியதும் கருமங்கள் நின்று விடுவதில்லை. திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்றுக் கொள்கின் றார்கள். இந்த வாழ்க்கைச் சக்கரம் சுழலும்போது கூடவே எத்தனையோ அனுபவப் போராட்டங்களை அவர்கள் கண்டு கொண்டிருக்கின்றார்கள்.

சரியான இலக்கை நோக்கி நாம் நகராத வரை நாம் வாழ்க்கையில் வென்று விட முடியாது. அனுபவ அடிகளைப் பெற்றுத் தெளிந்தவன் அச்சப்படுவதில்லை. உணர்வோம்!

வாழ்க்கை என்பது ஓர் விபத்து அல்ல. எம்மைத் தினம், தினம், புத்தம் புதிதாக உயிர்ப்பிக்கும் அனுபவப் புத்தகம் ஆகும். இதன் ஒவ்வொரு பக்கத்து எழுத்துக்களும், வரிகளும் எம்மை மனிதனாக வாழச் செய்வதற்கான மா மந்திரங்கள் ஆகும்.

சிரத்தையுடன் வாழ்க்கையை ரசிப்பவன் முழு மனிதனாகின்றான். இதை நாம் வெறுப்பூட்டும் போராட்ட மாகக் கருதாது, இது இயல்பாக எம்மை வாழச் செய்யத் தூண்டுவது எனக்கருதுவோமாக!





வாழ்க்கையின் முன்னேற்றத்தின் பொருட்டு ஆரம்பத்தில் இருந்தே படிப்படியாக, காலடி எடுத்துவைத்து உயர் நிலையை எய்துபவர்கள் எத்தகைய போராட்ட ங்களுக்கும் முகம் கொடுத்து அதனை வெற்றியடைந்தும் கொள்கின்றார்கள். தீடீர் என உயர்வு பெறும் முயற்சியில் அகலக்கால் பதித்து இடறி விழுந்து துன்பப்படுபவர்களால் துன்பங்களைத் தாங்கிக்கொள்ளவும் முடிவதில்லை. பலர் முன்னேறும் வேட்கையில் எதிர்வரும் இடர்களையறியாது தீய குறுக்குவழியில் பாய்ந்து செல்கின்றனர். இதனால் ஏற்படும் பின் விளைவினால் ஏற்படும் பாரதூரமான கஷ்டங்கள் சொல்லும் தரமன்று.

தாழ்வு மனப்பான்மையும் சோர்வான மனப் போக்கும் துணையெனக் கொள்பவர்கள் எதிர்வரும் சிக்க லான பிரச்சினைகளில் கசங்கியே போகின்றார்கள்.

வண்டி குடைசாயாது சீராகச் செல்லவேண்டு மெனின் அதன் வடிவமைக்கு ஏற்பவே பாரங்கள் ஏற்றப்படல் வேண்டும். யந்திரங்கள் சக்கரங்கள் சீராக இயங்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அதனைச் செலுத்தும் சாரதி திறமை மிக்கவராக இருக்கவேண்டும். பாதையின் வளைவு, நெளிவுகள், மேடு, பள்ளங்களை அவதானித்து வாகனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

வாழ்க்கை எனும் வண்டியும் இத்தகையதே. நாம் எமது தனிப்பட்ட வாழ்க்கையை அமைக்கும்போது, எமது



RangaRakes

Tamilnavarasam.com

சக்தியை உணர்ந்து விவேகமாகப் பிரச்சினைகளைக் கையாள வேண்டும். தேவையற்ற பிரச்சினைகளை வலுவில் இணைத்துக் கொள்ளாது. திறமையுடன் எமது பணியினை மேற்கொள்ளவும் வேண்டும். எப்படித்தான் நாம் எச்சரிக்கையுடன் இருந்தாலும்கூட பிரச்சினை மிக்க போராட்டங்கள் எம்மை தொட்டு விடவே செய்யும். "வாழும் கலை" என்பது, மனத்திண்மையுடன் நாம் பெறும் கல்வி, அனுபவ ஞானமூலமும் பெற்றுக்கொள்வதாகும். இதனைப் பெரிய பாரம் எனக் கருதாது, எமக்கு அளிக்கப்பட்ட வீரத்தின் கிரீடமாகச் சூட்டிக் கொள்வோமாக!.

புற சூழ்நிலைகளை எடுத்துக்கொண்டால் மனிதர்கள் அரசியல் விவகாரங்களில் ஏற்படும் மாற்றங்களாலேயே பெரும் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். உள்ளூர் அரசியல் காரணங்களால் ஏற்படும் போராட்டங்களால் மட்டுமல்ல வெளிநாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற மாற்றங்களால் கூட உலகின் சாதாரண பொதுமகன் பல பிரச்சினைகளை ஏதோ வடிவில் எதிர் நோக்கிய படிதான் இருக்கின்றான்.

எங்கோ மத்தியகிழக்கில் நடக்கும் பிரச்சினைகள் காரணமாக இங்கு ஏற்படும் பொருளாதார மாற்றங்கள் களேபரங்களால் எண்ணை, எரிபொருள் விலை அதிகரிக்கின்றன. இவை ஒரு குடிமகனைப் பெரிதும் பாதிக்காதா? அத்தியாவசிய எரிபொருள் விலை கூடி வரும் போது போக்குவரத்து உணவுப் பொருள்களின் விலை கூடிவிடு





அல்லவா. அடுத்து உள்ளூர் அரசியல் விவகாரங் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பெரும் போராட்டங்கள் டித்து நிகழும் யுத்தங்களால் எத்தனை எத்தனை ள அனைத்து மக்களுமே சந்தித்து, நைந்து, து போகின்றார்கள் தெரியுமா? அரசியல் டிகளால் பின்வரும் பிரச்சினைகள் விஸ்வரூபமாக வருகின்றன.

- இனப்பிரச்சினை
- மொழிப்பிரச்சினை
- மதப்பிரச்சினை
- கலாசார உருமாற்றங்கள்
- பொருளாதாரச் சிக்கல்கள்

இந்த மேற்சொன்ன விஷயங்களை மையப்ப போராட்டங்கள் எல்லாமே தக்க தீர்வுகள் இன்றி நகர்த்தப்படுகின்றன. தீர்வுஅற்ற பின்நோக்கிய களால் நாட்டில் துர்மரணங்களும் மக்களிடையே கையீனமும் ஏற்பட்டு எதிர்காலத்தையே கேள்விக் க்கும் நிலையையே நிலைத்திருக்க வைத்திருக்

இந்தப் போராட்டம் என்கின்ற விடயத்தில் ஒரு க்கை என்னவெனில், பாதிக்கப்பட்ட ஒரு இனம் ரடிக்கொண்டு இருக்கும்போது எந்தவித சம்பந்தமும் பாதிக்காத இன்னும் வலிமை மிகு ஒரு சாரார் வேறு



RangaRakes
Tamilnavarasam.com

எதற்கெல்லாமே போராடிக் கொள்வதாகச் சொல்லிக் கொள்கின்றனர். துன்பப்படுவோர்க்குக் கிஞ்சித்தும் இரங்காமல் தங்கள் பங்கிற்கு ஏதாவது சுருட்டலாம் என எண்ணி கொடிகட்டி ஆர்ப்பாட்டம் செய்வது எத்துணை கோழைத்தனம் தெரியுமா?

"போராட்டம்" என்பது பகை வளர்ப்பதாக அமைந்து விடக்கூடாது. உரிமைகளுக்காகவும், தனக்குரிய பங்கினைக் கேட்பதனை எதிர் தரப்பினரைச் சண்டைக்கே அழைப்ப தாகக் கருதுதல் தகாது. கேட்கின்றவர்களை உதைத்துத் துரத்துதலும் மனித நாகரீகமும் அல்ல.

சாத்வீக போராட்ட ங்களை இன்று எவரும் கண்டு கொள்வதாக இல்லை. ஒருவர்க்கான உரிமையை வழங்குவதால் சொந்த இருப்புக்கள் குறைவடைவதும் இல்லை. உரிமையைப் பிடுங்குவதை விடக் கொடுத்தல் தர்மம். ஆனால் தனி மனிதனுக்கான எந்தப் பொருட்களையும் அபகரித்தல் மாபெரும் அவமானத் திற்குரிய குற்றமாகக் கொள்வதுடன் அவனது சுய மரியாதை க்குப் பங்கம் விளைவிப்பதுமாகும். எவரினதும் உரிமை களைப் பறிப்பது கூட வன்முறைதான். இக்கருத்தே ஒரு சமூகத்திற்கும், முழு உலகத்திற்கும் பொருந்து வனவாய் அமையும்.

சிறு விடயங்களில் ஒரு தனி மனிதனையே அன்றி இனத்தினையே வேறுபாடாக நோக்கி அவர்களுக்கான





பணவுகளை உதாசீனம் செய்யும் போதுதானே எண்ணங்களே கருக்கொள்கின்றன?

இவைகளை இன்னமும் புரிந்து கொள்ளாமல் ம், புரிந்தும் புரியாமல் நடிப்பதும், இந்த முழு கே வேதனை தரும் கருமமாக மாறிவிடும் ா?. மகாத்மா காந்தியடிகள் தமது அகிம்சைப் த்தின் மூலம், வெள்ளைக்காரர்களின் விழிகளைத் ல் திருப்பவைத்தார்.

போராடிப் போராடி ஜெயிப்பதில் நாங்கள் ப்பட்டுக் கொள்கின்றோம். சொந்த முயற்சியில் ஒரு ம்மைப் பெற்றாலும் அது அற்பம் அல்ல. முழு ர்களின் பரிபூரண அறவழிப் போராட்டம் மூலமே யா சுதந்திரம் பெற்றது. முறையான சத்தியம் சார்ந்த ாட்டங்களை முழு உலகமே ஏற்றுக் கொண்டேயாக டும்.

மேலும் எத்தனை எத்தனையோ போட்டிகளை ளின் ஊக்கத்தின் ஆக்கத்திறனை வளர்ப்பதன் ருட்டு நடாத்தப்படுகின்றன. இவைகளில் ஈடுபட்டு க்கும் போதுதான் அவர்களை எதிர்கொண்ட சவால் பெறுமதி உணரப்படுகின்றன. போராடும்போதே பத்தைக் கூராகவும் எச்சரிக்கை உணர் வினை உச்ச யில் வைத்துக்கொள்ளும் திறனையும் உருவாக்கிக் ண்டுவிடுகின்றனர்.



RangaRakes
Tamilnavarasam.com

துன்பங்கள் தோல்விகள் மூலம் கிடைக்கும் வெற்றிகள் தான் இனிமேல் தொடரப்போகும் பணிக்கான உந்துசக்தியுமாகும். உலகத்தின் இயக்கம் ஒரே மாதிரியா னதல்ல. எனவே நாங்கள் எதிர்கொள்ளும் போராட்டங் களின் வடிவங்களும் மாறுபாடான தாகவே இருக்கின்றன. பிரச்சினைகளை நாம் இலகுவாகத் தீர்க்க முனையும் போது அவைகளை எமது ஆராய்வின்மையினால் சிக்கலாக்க வேண்டிய அவசியமும் இல்லை.

தொழில்நுட்ப விஞ்ஞான உலகில் வாழும் முறைகள் எல்லாமே இலகுவாக்கப்பட்டு வருகின்றன. திறன்மிக்க ஆற்றல் உள்ளவன் கடுமையான தேவையற்ற முயற்சியில் தன்னை இணைத்துக்கொள்வதில்லை.

போராடுகின்றேன் என்பதற்காகத் தேவைகளை உணராமல் உள்ளத்தை உடலைக் குழப்ப வேண்டிய அவசியமில்லை. இன்று மனிதவலு, முயற்சிகள் அநாவசிய மாக வீணடிக்கப்படுவதை நாம் அனுபவவாயிலாக உணர்ந்திருக்கின்றோம்.

தமக்கான தேவைகளையும் உரிமைகளையும் பெறுவதற்காகவும் இதன்மூலம் நிம்மதியான வாழ்விற்கு மாகவே போராட்டங்கள் நடாத்தப்படவேண்டும். ஆயினும் போராட்டங்கள் என்பதே வெறும் பொழுது போக்காகவும், அடுத்தவர் உரிமைகளை அவர்கள் சுதந்திரங்களைப்





ம், ஒன்று கூடிக்கோஷம் எழுப்புதலும் மனித மீறும் செயல் அன்றோ?

ரா நடிகர்கள் பொருட்டும் அவர்களுக்காகச் மத்தும் கோஷம் போடுகின்ற கூட்டங்களை ? சங்கம் வளர்த்துத் தமிழ் வளர்த்த எம் தமிழ் று எந்த வித முற்போக்கான எண்ணமின்றி ாகிகளாகச் சித்தரித்தும் தனிநபருக்காக, வேறு ருக்காகவோ,பணம் பெறுதல் பொருட்டும் கருதி, பிறர்கருமங்களின் பெறுமதியறியாது எனும் போர்வையில் நடந்து கொள்ளும் செயல் ாமாளித்தனமல்லவா?

ன்று மேற்கத்திய நாடுகளில் கூடப்போராட்டம் நாகரீகமற்ற விதத்தில் நடந்து கொள்வதும் அற்ற நிலையில் அருவருக்கத்தக்க விதத்தில் திகளில் போராட்டம் என்று சொல்லி ஆர்ப் ள் புரிகின்றனர். நேரத்தின் பெறுமதி மக்களுக்கான என்ன என்பது பற்றிச் சற்றேனும் பொருட் மல் இவ்வாறு நடப்பதில் என்ன நியாயம் இருக்கி

மேலும் எங்கோ நடக்கும் பிரச்சினைகளுக்காக, ல் செல்லும் வாகனங்களைத் தீ மூட்டுவதும், சொத்துக்களைச் சூறையாடுவதும் ஒரு



RangaRakes
Tamilnavarasam.com

போராட்டமா? நாம் இன்று இருபத்தியோராம் நூற்றாண்டின் நவநாகரீக விஞ்ஞானயுகத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு வினாடிகளையும் பொன்னான பெறுமானம் மிக்க அடிகளாக எடுத்து முன்னேறியபடி சென்று கொண்டிருக்க வேண்டும்.

கணப்பொழுதில் யுகப்பொழுதிற்கான சாதனைகளைச் செய்தேயாக வேண்டும்.

எங்கள் சுதந்திர உணர்வுகளால் மற்றவர் சுதந்திர உணர்வும் அவர்கள் உரிமைகளும் பாதிப்படையக்கூடாது. போராட்டங்கள் மனித உரிமை. அதனை எவரும் மறுக்க முடியாது. எமது நியாயமான தேவைகளைப் புரியாதவிடத்து நாம் போராட்டங்கள் மூலமே வலுயுறுத்த வேண்டியுள்ளது.

புறச்சூழலும், எமது உள் உணர்வு, மனம் சலனமின்றிச் சுத்தமாகச் செம்மையாக இருப்பின் எந்த அநீதியான போராட்டங்களும் எம்மை உறுத்தப் போவதுமில்லை. ஒவ்வொரு தனிமனிதனுடைய அகவாழ்வும் புறவாழ்வும் சீராய் அமைந்து நின்றால், சந்தோஷ வாழ்வு நித்தியமாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
03-12-2006







# வடிவங்கள்

நாக்கும் எதனையும் ஆதாயம் கருதிச் செயல்படுபவர்கள் நொடிக்கொரு தடவை மாற்றிக் கொள்கின்றனர். ஒருவன் தன் னவிடுத்து மாறுபாடான சமூகத்திற்கு ஒவ்வாத மனுஷனாக போது அவனுக்குரிய சுய உருவத்தினை மீண்டும் வழங்கி ஜையாக வாழ வகை செய்தேயாக வேண்டும். பொய்யாகப் பேசி க் காட்டிலும் மெய்யாக வாழ்ந்து அதன் மூலம் பெற்ற மிகு வாழ்க்கையின் சுவையை அறிதலே மேலானது.

ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வடிவங்கள். ா...... முடிவில்லா மக்கள் கூட்டம்!. ஒவ்வொரு ம், வெவ்வேறாய் முகங்கள்!

பருவங்கள் மாறிட உருவங்கள் மாறும். எனினும் னை பேருக்குமே தனித்தனி வடிவங்கள், குண புகள்... ஆ... ஆண்டவா.... உந்தன் படைப்பில் த்துமே அற்புதம்! அற்புதம்!



RangaRakes
Tamilnavarasam.com

ஆனால்,

மனிதன் மட்டும் இறைவன் தந்ததையிட்டுத் திருப்திப்படாமல் தனக்கு எனச் சுயமாய் புதுப்புது வடிவங்களைப் பூட்டிக் கொண்டு அல்லலுடன் அவஸ்தையுடன் வாழுகின்றான்.

மனிதன் தனது குணங்கள் நடத்தைகளை மாறுபாடாக வைத்துக் கொள்வதற்காக பொய் முகங்களுள் புதைந்து நின்று செப்படி வித்தைகாட்டி முக்காலத்தையும் முழுதாய் மறைத்து நிற்கின்றான்.

நல்லோர் நடத்தைகள் மாறுவதில்லை. நடிப்பு என்பது சிறிதுமில்லை. சுயமாய், திறனாய் வாழ்ந்து வருகின்றான். காலச் சூழலை, தன்னைச் சுற்றிய மக்கள் பிரச்சினைகளை உணர்ந்து, தெளிந்தே வாழுகின்றான். எளிதில் எமக்கு இவர்தம் நடத்தை நெறிகளை புரிந்து கொள்ளாது போனமையால், "சத்தியம்" என்பது கூட அசாத்தியமாய் பலருக்குத் தெரியாமல் போவது வேதனை. ஆச்சரியமான உண்மைகளை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

நல்ல ஒரு மனிதனைப் பற்றிச் சொல்லுகின்றேன். எனது நண்பர் ஒருவரின் அனுபவம் இது.

எனது நண்பர் மேல் நீதி மன்றத்தில் சிற்றூழியராகக் கடமையாற்றி வந்தார். அக்காலத்தில் அங்கு பணியாற்றிய நீதியரசர் மிகவும் கண்டிப்பான நேர்மையான





ப் பெயர் பெற்று இருந்தார். பொதுவாக மக்களுடன் நேரிடையாகச் சந்திப்பது, பொது ல் கலந்துகொள்வது மிகவும் அரிதான தமது முழுநேரங்களிலும் வேலைப்பளு பிற நிகழ்வுகளில் கலந்து கொள்ளவும் மாட் ளவே பிறர் பார்வைக்கு அவர்கள் கண்டிப்பான னவர்களாகவே தோற்றம் காட்டிநிற்பர்.

சமயம் அவரது கொழும்பு வாசஸ்தலத்திற்கு க நிமிர்த்தம் சில நூல்களைக் கையளிக்கும்படி ம் ஒப்படைக்கப்பட்டன. இவர் வரும் தகவல் ருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. நண்பரும் ட முகவரியில் அவரது வாசஸ்தலத்திற்குச் ந்தார்.

இவர் அங்கு சென்ற சமயம் நீதியரசர் அங்கு ல்லை. காவல் துறையினரின் பலத்த காவல்கள் தியரசரின் இல்லத்திற்கு இவர் சென்ற தகவல் கப்பட்டதும் அவரது துணைவியார் உடன் வந்து துடன் நண்பரை வரவேற்றார்.

அவரை வீட்டினுள் அழைத்து குறிப்பிட்ட அறை ள் சென்று முதலில் ஓய்வு எடுக்குமாறு கூறி பானம் சிற்றுண்டிகளை அன்புடன் தானே றினார். அத்துடன் "ஐயா, அலுவலக கடமையினை க் கொண்டு மாலை தான் வீட்டிற்கு வருவார்.

எனவே தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். இங்கே எமது வீட்டில் எல்லா வசதிகளுமுண்டு. அவர் வந்ததும் பேசலாம்" என்று கூறியதுடன் "ஏதாவது தேவை என்றால் கேளுங்கள்" என்று அம்மையார் கூறிய போது நண்பருக்கோ வியப்பும், சங்கோஜமும் ஏற்பட்டு விட்டது. தான் ஒரு சாதாரண சிற்றூழியராக இருந்தும் கனிவுடன் எந்தவிதமான அகம்பாவமும் இன்றி இவர் பழகியதை அவரால் நம்பவே முடியவில்லை.

மாலையானதும் நீதியரசர் வந்தார். வந்ததும் நண்பர் வந்ததைத் தெரிந்ததும் அவரை அழைத்து சந்தோஷமாக முதுகில் தட்டி உட்காரச்செய்து "சற்றே இருங்கள்" என்றவர் பின்னர் தமது கடனை முடித்து ஆறுத லாக அவருடன் உரையாட ஆரம்பித்தார்.

ஒரு சின்னக் குழந்தைபோல் குதூகலத்துடன் ரொம்ப சுவாரஸ்யமாகப் பேசினார். அத்துடன் கலை, கலாசார, நிகழ்வுகள், திரைப்படங்கள் தொடர்பான விடயங் கள் உட்படப் பலதரப்பட்ட தகவல்களைப் பரிமாறிக் கொண்டபோது நண்பருக்கு ஒரே ஆச்சரியம்.

இதே நீதியரசர் தமது ஆசனத்தில் அமர்ந் திருக்கும் காட்சி அவர் மனத்திரையில் தனக்குத் தோன்றியதை எனக்குச் சொன்னார். "இந்த மனிதரா ஒரு சின்னப் பிள்ளைபோல தன்னுடன் பேசிக் கொண்டிருக் கின்றார். நல்ல நகைச்சுவை ததும்ப தன்னுடன் சமனாக





ம்போது அவர்பற்றிய எண்ணம் வானளாவாக றது. அத்துடன் "இன்று நாங்கள் ஒன்றாக ருந்துவோம்" என்று கூறியதுடன், தமது ருடன் இணைந்து உணவு உண்டு மகிழ்ந்தார்.

று இரவு நண்பருடன் பேசும்போது "நீங்கள் ஊருக்குச் செல்லும் போது எனது சாரதி புகையிரத கு அழைத்துச் செல்வார்" எனக்கூறி உறங்கச் மறுநாள் அதிகாலை அவர் பயணம் புறப்படு ல ஆகாரத்தினைப் பொதி செய்து கொடுத்து ணவியார் வழியனுப்பி வைத்தார்.

மேற்படி சம்பவம் பற்றி நண்பர் கூறியபோது ப் புரிந்து கொண்டேன். ஏற்றத் தாழ்வு அற்ற ல உண்மையான நீதி வழுவாத பெருமகன் இயல்பான சுபாவமாகும்.

அத்துடன் அவரைத் தொழில் சார்ந்த நோக்கில் ஒரு ாகவும், சொந்த வாழ்வில் பிறிதொரு முகமாகவும், ஏர்த்தால் அது எமது கோளாறு தான். ஏன் எனில் நேர்மையும், கனிவும் சொல்லித் தெரிவது அன்று. அவர் நடிக்க வேண்டிய அவசியமும் இல்லை. து காட்டும் நபர்கள் போலியைப், பகட்டை விரும்பு கிடையாது.

சுயநல நோக்கும், எதனையும் ஆதாயம் கருதிச் படுபவர்கள் தான் தம்மை நொடிக் கொரு தடவை



RangaRakes

Tamilnavarasam.com

மாற்றிக் கொள்கின்றார்கள் ஆயினும் நல்ல நோக்கிற் காகவும் சிலர் தமது சொந்த வடிவங்களை மாற்றவேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு ஆளாகின்றனர். நன்மை கருதி கருமங் களை இடையூறு இன்றிச்செய்து முடிக்க தம்மையே மாற்றி அமைக்கவேண்டிய கட்டாயத்தில் பலர் வாழ்ந்து கொண்டி ருக்கின்றார்கள்.

ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சென்றுவந்த எனது உறவினர் ஒருவர் அலுத்துக் கொண்டார். "நீங்கள் சொன்னதற்காக நேர்முகப் பரீட்சைக்குச் சென்றேன். இந்த நாடகம் எல்லாமே ஒரு ஒப்புக்குத் தான். இவர்களாவது வேலை தருவதாவது...? அந்த மனுஷர் சம்பந்தா சம்பந்த மில்லாமல் இடக்கு முடக்காகக் கேள்வி கேட்கின்றார். நானும் மிகவும் பொறுமையாகப் பல்லைக்கடிக்க வேண்டி ருந்தது. எப்படியோ சமாளித்து அந்த நேர்முகப்பரீட்சை வைத்தவரிடம் தப்பிப்பதே பெரும்பாடாகிப் போய்விட்டது" என்றார்.

அவர் என்னை மீண்டும் சில நாட்கள் கழித்துச் சந்தித்தார். முகத்தில் மகிழ்ச்சி களைகட்டியிருந்தது."நான் நினைத்தது எல்லாமே தப்பாகிப் போய்விட்டது. நேர்முகப் பரீட்டையில் எனக்குத்தான் அதிக புள்ளிகள் கிடைத்தன. எனக்கு வேலை கிடைத்து விட்டது. அந்த மனிதர் பார்வைக்கு ரொம்ப கோபக்காரரர் போலவும் என்னை எள்ளி நகையாடி யவர் போலவும் தோற்றம் காட்டினார். ஆனால் அவர் உண்மையிலேயே நான் எதிர்பார்த்தபடியான மனிதர் அல்ல."



RangaRakes



இப்படி அவர் கூறியதும் நான் சொன்னேன். மக்கு வேலைகிடைத்தது உமது கல்வித்தகைமை ட்டும் அல்ல. நீங்கள் அந்நேரத்தில் பொறுமையைக் டப்பிடித்துப் பதிலளித்தீர்கள். அவர் வேண்டுமென்றே ம்மைச் சீண்டி உமது சுயரூபத்தை அறியவிழைந்தார். தாழிலில் தகைமைகள் மட்டும் போதாது. எந்நேரமும் தானம்,பொறுமை,உமது ஆற்றுகை அதாவது ந்நேரத்தில் உமது செயல்திறனை நேரடியாகக்கண்டு காண்டமையினாலேயே வேலை சற்றும் நீங்கள் திர்பார்க்காமலேயே கிடைத்தது. ஒருவரை நாம் நேரில் ண்ட மாத்திரத்தே அவரை எடைபோடுதல் எமது ர்மானிக்கும் திறனையே தடை போடுதல் போன்றதே" என்றேன்.

கனிவாகத் தோற்றம் காட்டுபவர்கள் தமது செயலில் கொடூரமானவர்களாகவும் இருப்பதுண்டு. கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட சில குற்றவாளிகளைப் பார்த்தால் எவராலும் நம்பமுடியாத தோற்றத்திலும் காணப்படு வர்."அட அவனா இந்தக் கொலையைச் செய்தான்" என்று வியப்பு அடைவர். பின்னர் விசாரணைகள் மூலம் உண்மையிலேயே அவர்தான் கொலை செய்தமையினை நிரூபிக்கப் படும்போது எவரது தோற்றத்திற்கும் செய்கைக்கும் எவ்வித சம்பந்தமுமே இல்லாதது புலனாகிவிடும்.

சில பெரிய மனிதர்களின் சொந்த வாழ்க்கை எமக்குத் தெரியாதவரை அவர்களை நாம் கௌரவித்துக்கொண்டே



Tamilnavarasam.com

யிருப்போம். அவர்களின் வெளி உலக வாழ்விற்கும் சொந்த வாழ்விற்கும் உள்ள வேறுபாடு மிகவும் கொடுமையாக இருக்கும். நல்லவர்போல நடிப்பவர்கள், பிறரைக் கெடுப்பதற்கென்றே உருவானவர்களாக இருக்கின்றனர்.

எங்களால் எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள இயலாத சகிக்கவொண்ணா பிரகிருதிகள் இன்னமும் தமது சுய உருவை பிறர் தெரியவில்லை என்ற எண்ணத்துடனேயே சீவித்துவருவது வேடிக்கையிலும் வேடிக்கை அன்றோ!

இன்று சில எதிர்பாராத கசப்பான அனுபவங்களால் எத்தனையோ நபர்கள் தங்களை மாற்றிக்கொண்டு தீயவழியில் செல்ல முனைகின்றார்கள். கேட்டால் நல்லவனாக வாழ்ந்து என்ன பயன் எல்லோருமே என்னை ஏமாற்றுகின்றார்களே என்பார்கள்.

இத்தகைய தவறான கருத்துக்களைச் சமூகம் ஏற்குமா? ஒருவனுக்கு ஒரு தவறு இழைக்கப்படும் போது தவறுகளை அனுபவிப்பவன், எதற்காகத் தானும் ஒரு தவறு இழைக்கும் நபராக உருமாற வேண்டும்? இவை எல்லாமே பழி வாங்கும் முயற்சியுமல்லவா?

வாழ்க்கையில் அனுபவ அடிகளை வாங்கிய பலர் கசங்கிய கலங்கிய நிலையில் இருந்து மீண்டு தெளிந்த நிலைக்கு வந்து விடுகின்றனர்.மிகச்சிலரோ அனுபவ அடிகளை வடுக்களாக எண்ணி அவை தமக்கு நிரந்தர



RangaRakes



தலைக்குனிவு என எண்ணி சமூகத்தை வஞ்சம் தீர்ப்பதுபோல் தம்மை ஆக்கியும் கொள்கின்றனர். இதனால் தமக்கேயுரிய அழகிய முகத்தினை நீக்கி கரிய முகத்திரையினுள் புகுந்து மீளாத சுதந்திரமற்ற குற்றம் சுமக்கும் கைதியாகி விடுகின்றனர்.

கிராமத்து சூழ்நிலையில் வாழ்ந்த ஒரு அப்பாவிச் சிறுமி ஒருத்தி, தனது வாழ்க்கையில் பட்ட அவலங்களாலும் பின்னர் தொடர்ந்தும் அவள் வயது வந்த பருவப்பெண் ஆனபின் அவளுக்கு நேர்ந்த சமுதாயக் கொடுமையினால், சட்டவிரோத கும்பல்களின் சித்திரவதைகளால் ஒரு வன்முறை உணர்வு கொண்ட கொடூரப் பெண் ஆனாள். அவள் தான் பூலான்தேவி. அவள் தனது இயற்கையான தனது சுபாவத்தை நீக்கித் தனக்கு இழைக்கப்பட்ட அநீதி காரணமாகவே தான் மாறுபட்ட மனுஷியானதாகக்கூறிக் கொண்டாள். பின்னர் அவள் சட்டப்படி அரசிடம் சரண் அடைந்து மக்கள் பிரதிநிதியுமானாள். ஆயினும் துரதிஷ்டவசமாக மீண்டும் வன் முறைக்கே பலியாகி இறந்துபோனாள். இது ஒரு சோகக்கதை. பெண் விடுதலைக்காக ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தும் வந்த பூலான்தேவியின் முடிவு வேதனை க்குரியது.

ஆனால் ஒருவர் தனக்கு நேர்ந்த அவலங்களான அனுபவத்தினால் எடுக்கும் வேண்டப்படாத சமூக விரோதமான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளவே



Tamilnavarasam.com

முடியாது. சமூகம் அரசாங்கங்கள் தனி மனித உரிமைகளை அவர்களது எண்ண அபிலாசைகளைக் கண்டு கொள்ளாமையின் பிரதிபலிப்பினை உலகம் வெறும் பச்சாதாபத்துடனும் சில சமயம் வெறுப்புடன் கோபத்துடன் நோக்குதலால் என்னதான் பயன் வந்து விடப்போகின்றது?.

நடக்கின்ற துன்பியல் நிகழ்வுகள் எல்லாமே நிகழ்ந்து போனபின் வெறும் அனுதாப வார்த்தைகளால் ஔடதம் போட எண்ணுவதும் செய்தலும் வாடிக்கையான சமாச்சாரமாகிவிட்டது. ஒவ்வொரு தனிமனிதனும் இயல்பாகவே நல்லவர்களாக வாழ விரும்பும்போது அதற்கான வழியாக ஒட்டு மொத்தமக்களும் ஊக்கம் கொடுத்தேயாக வேண்டும்.

ஒருவன் தன் இயல்பினைவிடுத்து மாறுபாடான சமூகத்திற்கு ஒவ்வாத மனுஷனாகவிழையும் போது அவனுக்குரிய சுய உருவத்தினை மீண்டும் வழங்கி நற்பிரஜையாக வாழவகை செய்தேயாக வேண்டும்.

பொய்யாகப் பேசி நடிப்பதைக் காட்டிலும் மெய்யாக வாழ்ந்து, அதன் மூலம் பெற்ற சவால் மிகு வாழ்க்கையின் சுவையை அறிதலே மேலானது.

எம்மில் பலருமே செல்வந்தர்களாகவோ மேதைகளாகவோ இருக்கமுடியாது. பெரும்பாலான மக்கள்கூட்டம் எங்களைப் போன்ற சாதாரண நிலையில் உள்ளவர்கள்



RangaRakes



என்கின்ற உணர்வு இருந்தால், நாம் எங்களைத் தேவையின்றி மாற்றி நடித்து, வாழவேண்டிய அவசியமேயில்லை. மற்றவன் ஏதாவது சொல்லிவிடுவான் என்பதற்காகவே பலர் பொய்யாக வாழ்ந்து புத்தி பேதலித்தவன் போல நடந்து கொள்கின்றார்கள்.

ஒருவனைப் பார்த்து ஒருவர் நடந்துகொள்வது சர்வசாதாரண விஷயமாகிவிட்டது. தேவைகளை மீறி கௌரவம் பார்த்து வாழ்வது ஆரோக்கியவாழ்வு அல்ல. அறிவோமாக!

நாம் ஆடம்பரமாக வாழ முற்படுவதால் எமது உழைப்பு செல்வம் யார் யாருக்கோ, ஏதேதோ வியாபார நிறுவனங்களுக்கோ, மறைமுகமாகவும், நேரடியாகவும் சென்று கொண்டிருக்கின்றன. தமக்குத் தீமைதரும் மாயவலைகள் வீசப்படுவதைச் சனங்கள் உணர்வதாகத்தெரியவில்லை.

விளம்பரங்களுக்கும் காட்சிப்படுத்தலுக்கும் அடிமையாகும். மனோபாவத்தினால் அறிவைச் சிறை செய்து கொள்கின்றார்கள்.

எவ்வளவுதான் அறிவு,புத்திசாலித்தனம் இருந்தாலும் குறுக்கு வழி லாபமீட்டலுக்காக நற்பண்பை விரோதித்து தன்னை மாற்றிக்கொள்ள விழைபவர்கள் இழந்து பட்டவாழ்வைச் சம்பாதித்தவனாகின்றனர்.இன்றும் சிலர் ஒரு வெற்றியை எப்படியாவது கைப்பற்றி



Tamilnavarasam.com

விடுவதற்காகப் பரிசோதனையாகச் சில தகாத நடவடிக் கைகளில் ஈடுபடுவார்கள் இம்முயற்சி சாதகமாகிப் போனால், தொடர்ந்தும் தமது முன்னைய நல்ல இயல்பு களை, வாழ்ந்த முறைமைகளை அடியோடு மாற்றி, நிரந்தர மான மாறுதலான தோற்றத்தையே தம்முள் வைத்துக் கொண்டவராகின்றனர்.

இத்தகைய நபர்கள் இறுதியில் மக்கள் முன், சட்டத்தின் முன், நியாயங்களால் நிர்வாணப்படுத்தப்படும் போது நார் நாராய்க் கிழிந்து அழிந்தும் போவதுண்டு.

களங்கமின்றிப் பிறந்த குழந்தையை அதன் குண வடிவுடனேயே போஷித்து வளர்த்து அது கழிக்கும் ஒவ்வொரு வினாடிப் பொழுதுமே தன் நல்ல குணங்களு டனேயே வளர்க்கப்பட்டு வந்தால் எக்காரணத்திலும் குழந்தை தன்திறனில் தனது ஆளுமையையே நம்பிச் சிறப்புடன் வாழ்ந்துவரும். நற்குணங்களைக் கத்தரிக்கும் எந்த துர்ச் சக்திகளையும் எதிர்க்கின்ற ஆளுமைப்பண்பை இளமைப் பராயத்தினர்க்கு ஊட்டியேயாக வேண்டும்.

- உன்னை உன் உயிர்த் துடிப்புள்ள, நற் செய்கை களை முற்றிலும் நம்புவாயாக!

- என்னை நான் நம்புவதால், என் செயலை நம்பியே வாழுவதானால், எனக்குள் ஒரு கருமையைப் பொருத்த எச்சமயத்திலும் நான் உடன்பட வேமாட்டேன்!





- நல்லதைச் செய்ய நான் அச்சப்படாத காரணத் தினால். எனக்கு வேறு எந்த வடிவங்களும் தேவையில்லை. அச்சம் கொள்ளாதவன் தன்னையே முழுமையாக நேசித்தவனாகின்றான். தன்னை விரும்பாதவன் வேறு எவரையும் விரும்பமுடியாது. அப்படி விரும்பினால் அவனுக்குச் சுயமரியாதை, தன்னம்பிக்கை, என எதுவுமே குறைபாடாகவே அமைந்துவிடும்.

மேற்சொன்ன விடயங்கள் மூலம் நாம் சுயமாக, சிறப்பாக வாழவேண்டிய தன் அவசியங்களை உணர்ந்த வர்களாகின்றோம்.

வயது முதிர்ந்தவர்கள் எல்லோருமே பிற்போக்கான மனிதர்கள் அல்லர். இளவயதினர்கள் எல்லோருமே உணர்வு செயலில் துடிப்பானவர்களும் அல்லர்.

தமது மதிப்பார்ந்த செய்கைகள் மூலம் என்றும் புதியவடிவத்துடன் புத்தொளியுடன் கூடியஅக வெளிப் பாட்டினை உணர்த்தி, உலகில் தனக்கும், ஏனையவர் களுக்கும் முன் மாதிரியாக வாழுபவனே இளமை ததும்பும் நல்ல மனிதன். நாங்கள் என்றும், எப்போதும், புதிய



RangaRakes

Tamilnavarasam.com

தோற்றத்துடன், அதனையே நிரந்தரமான வடிவத்துடன் கொண்டு வாழ்வாங்கு வாழ்வதுவே சிறப்பாகும்.

அகவடிவம் தூய்மையாக இருப்பின் புறவடிவத்தை உற்று நோக்க வேண்டிய தேவைஇல்லை. அனைத்து வடிவங்களும் ஏக இறைவன் படைப்பிற்கு அடங்குவது. உணர்க!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
10-12-2006







# நான் நானே தான்

நீங்கள், நீங்களாகவே இருக்க விரும்புங்கள். அப்படியே வாழுங்கள். ஒவ்வொருவரின் தனித்தன்மையான சிறப்புக்கள் அவரவர்க்கே சொந்தமானது. கடவுள் உருவாக்கிய ஒவ்வொரு உயிர்ச் சிற்பங்களுமே மிக அற்புதமானவை. அவை ஒன்றுபோல் ஒன்றில்லை. அவைகளின் உருவங்கள் வேறாயினும் சேருமிடம் ஒன்றே. அவைகள் இறைவனின் திருவடியினைப் பெற்றே தீரும். மேலும் உங்களை நீங்கள் உணரும் போதே சுதந்திர புருஷர்களாக உங்களுள் உருவாகிக் கொள்கின்றீர்கள்.

"நான்", எனும் சொல், அகங்காரத்தின் வெளிப்பாடாகத் தோற்றம் காட்டி நிற்பதாகச் சொல்லப்படினும் "நான்" எனச் சொல்பவரின் தனித் தன்மையினை இது சுட்டி நிற்பதனை மறுக்க முடியுமா? அதாவது அவன்,



RangaRakes
Tamilnavarasam.com

அவனாகவே இருக்க முடியும். நான், நானாகத்தான் உள்ளேன், வேறு ஒருவனாக நாம் உருமாற முடியாது.

ஒருவனது வாழ்க்கைக்கு அவன் தான் கதாநாயகனும், தன்னுள் முதன்மையானவனுமாவான்.

நல்ல நோக்கமின்றிப் பிறர் விடயத்தில் அத்துமீறி உள் நுழைய அவனுக்கு ஆத்மார்த்த ரீதியில், அல்லது பிறர் தூண்டுதலில் உள்நுழைய எவ்வித அதிகாரமும் இல்லை.

நாம் நல்ல விஷயங்களைச் செய்ய முனையும் போது கூடச்சில சமயம் சம்பந்தப்பட்டவர்களிடம் முன் அனுமதி கோர வேண்டியுள்ளது. இது இன்றைய யதார்த்த நிலையாகிவிட்டது.

ஆயினும் நற்போதனைகளைச் செவிமடுங்கள் அன்பர்களே! என ஞானிகள் மக்களிடம் மன்றாட்டமாகவும் கேட்டார்கள்.

என்னை, நான் உணர்ந்து கொள்ள நானே சம்மதமளிக்காத நிலை பரிதாபகரமானதே. தன்னை உணர்ந்து கொள்ள பலர் அச்சப்படுகின்றார்கள். தீக்கோழி தான் தப்புவதற்காக நிலத்தினுள் தலையை நுழைத்தல் போல,அல்லது பூனை கண்களை மூடியபடியே பால் குடித்தல்போல, அதாவது செய்கின்ற காரியத்தைப் பிறருக்குத் தெரியாமலே செய்வது என்பது தன்னைத்தான்





ஏமாற்றும் செயலேயாகும். அதேவேளை தன்னைத் தேடாமல் பிறரைத் தேட விழைவது நகைப்பிற்கிடமான விடயமேயாகும்.

தன்னைப் பற்றிய கணிப்பீடுகளில் இருந்து நழுவித் தனக்குத்தானே சமாதானம் செய்வதும் அல்லது தன்னிடமே தன் உண்மை நிலையினை ஏற்காத தன்மையும் தன் ஆன்மாவையே குற்றமாக்கும் செயல் தான். ஆனால் நான் என்னைப்பற்றி அறிய வேண்டியவனாவேன். பின்வரும் விடயங்களை எம்முள் சொல்லிக் கொள்வோமாக!

- நான் நானேயாவேன்.
- நான் பிறராக ஆகமுடியாது.
- நான் இன்னும் ஒருவரின் நியாயபூர்வமான விருப்புகளுக்குள் தேவையற்று உள் நுழையும்போது அவர்கள் அதனை உளப்பூர்வமாக ஏற்பதுமில்லை.
- உன்னை உணரும்போதே, நீ சுதந்திர புருஷனாக உன்னுள் உருவாகிக் கொள்கின்றாய்.

எமது தவறுகளுக்குள்ளும், எம்மை அச்சுறுத்தும் துன்பங்கள், சவால்கள், பிரச்சனைக்குள்ளும் இருந்தும் நாம் எம்மை விடுவிக்க வேண்டும். தைரியமாக நாம் மேலே சொல்லப்பட்டவைகளுக்கு முகம் கொடுக்கப்பயப்படுவதனால் தொடர்ந்தும், பல விலங்குகளை வேண்டாமலேயே, எமக்குப் பூட்டிக் கொண்டிருக்கின்றோம். இது தேவைதானா?



RangaRakes
Tamilnavarasam.com

தெளிந்த மனநிலையில் உள்ளவர்கள், சந்தோஷகரமாகவும், சுதந்திரமாகவும் வாழுகின்றார்கள். மனிதனைப் புறச் சூழலும் தாக்கும் அதேவேளை, தன் உள்ளேயிருந்தும் ஒன்றுஅல்லது பல,எதிர்க்குரல்கள் எழுந்த வண்ணமாயுமிருக்கின்றன. இவை இயல்பான நிகழ்வுகளே. நாம் விரும்பியபடி எம்மைச் சுற்றி எல்லாமே சாதகமாக நடக்குமா? இவை புறத் தாக்கம் என்று கூறலாம். எனக்கு, என் நிறைவுக்கு ஏற்றபடி கிடைக்கின்றதா, உனக்கு நீ என்ன செய்து விட்டாய் என்று எம் இதயம் எம்மைச் சதாதட்டிக்கொண்டு, நச்சரிப்பது அகத்துள் எழும்பிரச்சினைகளாகும்.

இவை எல்லாமே களையப்பட்டு, "நான்" பரிபூரண சந்தோஷமுடையவனாக மாறுவது எப்போது? ஆனால், நிச்சயமாக இந்த இன்னல்களில் இருந்து "நான்" விடுபட, ஆத்மார்த்தமாக, முயற்சி செய்தேயாகவேண்டும். இந்த நிலையில் இருந்து மனிதன் மீள முடியும். கட்டாயமாக மீண்டேயாக வேண்டும்.

பலர் கற்பனை வாழ்வில் பற்பல சுகத்தினைக் காண முயற்சிப்பார்கள். நான் மட்டும் அந்த நாட்டின் ஜனாதிபதியாக மாறினால் என்ன? அல்லது நானும் நான் விரும்பும் கோடீஸ்வரர் ஆனால் எப்படியிருக்கும்? சிலர் வெளிப்படையாகவே சொல்வார்கள்"நான் அவரைப் போலவே மாறினால் சந்தோஷப்படுவேன்" என்பார்கள்.





ஒருவர் நடந்து கொண்ட நல்லவழியில் சென்று முன்னேறி நல்ல பதவிகளை பொருளைச் சம்பாதிக்கலாம். அந்த நினைப்பின்படி நடந்து சிறப்பாக முன்னேறினால் நன்று. ஆனால் அவராகவே, "நான்" ஆவது என எண்ணுவது அபத்தமானது. நீங்கள் ஒருவராக உருமாறினால் நல்லது என எண்ணிவிட்டீர்கள். அந்நபர் திடீர் என இறந்து விட்டார் என்றால், அவரது மரணம் உங்களுக்கும் ஏற்படுவதை விரும்புவீர்களா? அல்லது நீங்கள் குறிப்பிட்டு விரும்பிய அதே நபர் பற்பல பாவங்களைச் செய்தால் அதே பாவ வினைகள் உங்களைச்சார நீங்கள் அனுமதிப்பீர்களா? மேலும் உங்களது விருப்புக்குரியவர் பெறும் அவமானங்களை ஏற்றுக் கொள்வீர்களா?

எனவே,

நீங்கள் நீங்களாகவே இருக்க விரும்புங்கள், அப்படியே வாழுங்கள். ஒவ்வொருவரின் தனித்தன்மையான சிறப்புக்கள் அவரவர்க்கே சொந்தமானது. கடவுள் உருவாக்கிய ஒவ்வொரு உயிர்ச்சிற்பங்களுமே மிக அற்புதமானது.அவை ஒன்று போல் ஒன்றில்லை. அவைகளின் உருவங்கள் வேறாயினும் சேருமிடம் ஒன்றே அவைகள் இறைவன் திருவடியினைப் பெற்றே தீரும்.

கோழைத்தனமான முடிவுகளும் எண்ணங்களும் இருள் சூழ்ந்த அந்தகாரநிலை என்று சொல்வார்களே! அந்த சூன்யத்தினுள் செல்ல முனைதல் பொல்லாத வழியுமல்லவோ?

விழித்து எழுதல் என்பது உறக்கத்தில் இருந்து எழும்புதல் அல்ல. தூக்கத்தில் இருப்பதும் பின்பு துயில் எழுதலும் சாதாரண நிகழ்வு. எமக்குள் அறிவினை ஏற்றி சுய ஆளுமையினைப் பெறுவதே விழிப்பு நிலையாகும். அறிவும், ஞானமும் உள்ளவனே மனதின் உள்நிலையை உணரும் திறன் பெறுகின்றான். ஆன்ம ஞானம் என்பது எல்லாம் கல்லூரிகளில் சென்று கற்பது அல்ல.

"உன்னைத் தூய்மைப் படுத்து" என்பது, உன்னை நீ நல்நெறிக்குள் ஆட்சிப்படுத்துவாயாக!, உண்மையாக வாழு, அன்பினை, பக்தியினை, அற எண்ணங்களை நெஞ்சினில் நிறுத்து! என்பதுமாகும்.

மேலும் நான் என்னை அறிந்து கொள்ளல் என்பது என்து கடந்தகால வாழ்க்கை பற்றிய கலங்கிய துன்பங்களைத், தோல்விகளை உணர்ந்து விழித்து எழுதலுடன் என்னையே நான் புதுப்பித்தலுமாகும். இந்த ஆன்ம விழியினால் ஆன புதுப்பித்தல் என்பது தூய மனிதனாக என்னைப் பிரகாசிக்க வைப்பதுடன் நான் நானாக வாழ முடியும் என்கின்ற ஆளுமையை என்னுள் வலுப்படுத்துவதுமாகும்.

நான் உண்மையில் மீண்டும் உயிர் பெற்றவனானேன் என்பதன் அர்த்தம் என் பழைய சூன்ய நிலையில் இருந்தும் துன்பக்குவியல்கள், ஏக்கங்கள், தாபங்கள் முழுமையாக விடுபட்டு, "நான், நான் ஆகினேன்,





களிம்பும், களைந்த சொக்கத்தங்கம் போல் தனி மூலகம் ஆயினேன் என்பதுமாகும். தூய்மையுள்ளவனே, "நான்" எனும் நல்ல மனிதனுமாவான்.

உயிர் வாழுதல் என்பது சும்மா இருந்து காலத்தைக் கழித்தல் அல்ல. உண்மையாக வாழுதலேயாம். மனித மாண்புடன் இனிய நோக்குடன் புனிதமாகப் புவியில் வாழ்வதே வாழ்வாகும்.

காலம் எனும் மாவிருட்சம் பலகிளைகளை விரித்தபடி உள்ளது. இதனுள் இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் எல்லாமே அடக்கம். வாழ்ந்து முடிந்த காலங்கள் எல்லாமே அனுபவ பாடங்களாக மனிதனை உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

காலத்தின் ஒவ்வொரு பகுதிகளுமே அனுபவக் குவியல்கள். காலம் எமக்குப் பல ஆதாயங்களை நல்கியது. தோல்விகள் வெற்றிகள் எல்லாமே கால வீதியில் நாம் பதிந்து முன்னேறும் சுவடுகள். இதன் ஆட்சியில் இருந்து நாம் விடுபட முடியாது. விலகி ஓடமுடியாது.

எமது சிந்தனைகள் செயல்திறனில் திரிபுகள் ஏற்படின் வாழ்க்கை நிகழ்வுகளில் துன்பம், தெளிவின்மை ஏற்பட்டு எம்மை முடக்கிவைக்கின்றன.



RangaRakes
Tamilnavarasam.com

எமது கண்ணுக்கும் புலனுக்கும் புரியாத காரணங்களால் எமது உருவங்களே எமக்குப் பிடிக்காமலும் சுற்றி இருப்பவை துன்பத்தின் வடிவங்களாக, வடுக்களாக விஸ்வரூபமாகப் புலப்படும். இது ஒரு வரண்ட குருட்டு நிலைதான். சாதகமானவைகூடத் தெளிவற்றுப்போகும். கைத்தடியை எறிந்து கொடும் சர்ப்பத்தைக் கையில் ஏற்கின்ற நிலைதான் இது. இந்நிலை வேண்டவே வேண்டாம்.

தற்காலிக சுகங்கள் பொய்மையின் தோற்றத்தை நம்பியதால் ஏற்படலாம். எம் நிலை உணர்ந்து இது தான் உண்மை வாழ்க்கை என்பதை அறிந்த பின்னர் வருகின்ற எல்லா அனுபவங்களுமே உள்ளத்தில் ஒளி கூட்டும் ஒப்பற்ற நிரந்தரமான சுகங்களேயாம்.

ஆழம்மிக்க அன்பினுள் பயணிப்பதைவிடச் சுகானுபவம் பிறிதுண்டோ?

- எனக்குள் நான் ஆனந்த மயமானவனானேன்
- எனக்குள் நான் தூய்மையினை ஏற்றுக் கொண்டமையினால் காலம் எவ்வளவு கடப்பினும் ஆற்றல், கம்பீரம், துணிவு, வசீகரத்தில் பிரகாசமானவன் ஆயினேன்.
- நான் பிறர்பொருட்டு வாழ்ந்து கொள்ளத் தயாரான காரணத் தால் எனக்கு என எதுவும் இல்லை. எனது எல்லாமே, பிறர்க்கானது ஆயிற்று.



RangaRakes



இந்த ஆன்ம சங்கல்பம் எம்முள் உருப்போட்டுக் கொள்ளும் நிலைக்கு எம்மை உருவாக்குவோமாக!

தன்னைத் தானே நொந்து கொள்ளும் மனிதன் தன்னுள் ஒரு ஆனந்த சுரங்கம் உள் இருப்பதைத் தெரியாமலேயே வாழ்ந்து வருகின்றான். இது இங்கே இருக்கின்றது, எழுந்துநோக்கு! என உணராதவரை தெளிந்த ஆற்று நீர் அருகே ஒருவன் தாகத்தால் தொண்டை வரண்டு நிற்பது போலத்தான் அவதியுற்று வெறுப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

- நான் வைராக்கியமுள்ள மன உறுதிமிக்கவன்
- என்னால் நல்லன செய்ய, முடியும்.
- நான் இறைவனின் உன்னத படைப்பு, எனவே எனக்கு அச்சம், மனக்கிலேசம், சந்தேகம் என எதுவுமே இல்லை.

இந்த உறுதிமொழிகளை நாம் எம்முள் உள்செலுத்துவோம். எமது சிந்தனைகளைப் பல்திசைகளில் வழி தடுமாறிச் செலுத்தாது ஒரேதிசையில் புலனடக்கத்துடன் வழி நடத்தியே தீரவேண்டும்.

என்னை நான் தேடித் தெளிவுபெற்றதன் மூலம் எல்லையற்ற அன்புப் பிரவாகத்தினுள் பிரவேசித்தவனாகின்றேன். இந்த அகண்ட ஒளிபொருந்திய இன்ப சாகரத்தினுள் நான் நுழைந்த பின்பு “நான்” கரைந்து செல்கின்றேன். எல்லாமே “ஏகம்”, எல்லாமே “இறை” படைப்பு இறைவனின் சிருஷ்டியில் பேதமில்லை எவை



Tamilnavarasam.com

பொருட்டும் நான் அச்சப்படத்தேவையில்லை. அகங்கார உணர்வு என்னை விட்டு அகலுகின்றது. பணிவு மேலோங்குகின்றது.

நான், எனது என்கின்ற வேகம், ஆக்ரோஷம், அகம்பாவம் விலகிஓட "நாம் எமது சுற்றம் எல்லா உயிர்களும் என்னோடிணைந்தது. அவை மீது அன்பு செலுத்துகின்றேன்" என்ற தூய எண்ணமே இதயத்தினுள் நிறைந்து கொள்ளும்.

இத்தனை காலமாக என்னை நானே உணரா மையினால் "என்னை விட்டால் யார் உளர் எனக்கு எல்லாமே தெரியும், யாருமே எனக்குச்சொல்லித் தரவேண்டியதில்லை" என்ற மமதையினால் எத்தனை ஜீவன்களுக்குத் துன்பங்களை ஏற்றி இருப்பேன்.

இந்த துன்பவியல் வாழ்வுகள் என்னை நான் உண்மையாக தேடியமையினால் தெய்வீக ஆற்றலினால், ஆளுமையினால் தொலைந்து ஒழிந்தே போயிற்று.

மேலும்

இறை அருளினால் தன்னிலை அறிந்தவர்களின் பணி அனைத்துமே தெய்வீகக்கருமம் ஆகின்றது. வெறும் ஊதியம் கருதி உடல் தேவைக்கும், பதவிக்கும், அந்தஸ்திற்கும் தேடலுக்குமான புறவாழ்வின் புளகாங்கித



RangaRakes



உணர்வுகள் அற்று எல்லாமே தெய்வீகத் திருப்பணியாகக் கருதும் திறன் உருவாகின்றதே!

செய்கருமங்களில் அதீத லயிப்பு, ஈடுபாடு, சுற்றி இருப்போர் நாடி வரும்போது உதவி செய்யும் மனப்பாங்கு எல்லாமே தெய்வம் கொடுக்கும் அருள் கட்டளை என்ற உணர்வுடனேயே நான், எனது, என்ற மமதை அற்றவர்கள் கருமங்களை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

புதுப்பிக்கப்பட்ட ஒரு ஆன்மா எழுச்சி பெற்றதும் அது மீண்டும் துயில்வதற்குச் சந்தர்ப்பம் தேடுவதில்லை. அது இறை வசமாகின்றது. நல் எண்ணங்களை இதயத்தில் சதா பூக்கச் செய்தவன் அதன் திவ்ய புனித வாசனையினை முகர்ந்த வண்ணமேயுள்ளான். கடந்தகாலக் கசங்கிய நினைவுகளுக்கு பூரணமாகஇறை ஆசியுடன் விடை கொடுத்தபின்,எழும் எழுச்சி நிலையானது சொல்லிடற்கரிய பூரணமான திவ்ய ஞானநிலையேதான்.

சந்தேகங்களும், பொய்மைகளும், சூதும் உள்ள நிலையில் இருந்து அவை களையப்பட்டவன், பிறவி எதற்காக எடுத்தோம் என்கின்ற நல் அறிவினைப் பெற்று விடுகின்றான்.

நித்திய அமைதி பெறுதல் என்பது வெறும் பணம், பூமி, பொன்பெறுதல் அல்ல. மேலாம் இரக்கம், அன்பு, பக்தி, உயிர்கள் மீதான காருண்யம் என்பதனை அகத்தினுள் பாய்ச்சுதலேயாம். இனிமை, சுவை



Tamilnavarasam.com

பொருந்திய ஔடதமான இவை தருவது ஆன்மாவிற்கான அமிர்தமாம் ஞான மாமருந்தே என அறிக!

நாம் ஒருவர்க்குக்கொடுக்கும் களங்கமற்ற அன்பு அவர்களை எம் போல் அன்புமயமாக்கலுக்கு இட்டுச் செல்வதேயாம்.அதாவது நீ கொடுக்கும் அன்பினால் கட்டுண்டவர்கள் அதனையே அவ்வண்ணம் பிறருக்கும் அளிப்பார்கள்.

இவ்வாறே இந்நிகழ்வுகள் ஒருவர் மீது ஒருவராகப் பல்கிப்பெருகி இந்த ஊர், இந்த தேசம், இந்தக் கண்டம் என வியாபித்து சர்வ லோகங்களிலுமே அன்பு சஞ்சாரம் செய்ய ஆரம்பித்துவிடும். இது நாம் வாழும் பூமியை மட்டும் மையப்படுத்தும் ஒரு முயற்சி அல்ல.

அதற்கும் மேலாம் பிரபஞ்ச வெளியினுள் அன்பு சர்வசாதாரணமாக அதன் ஆட்சி செலுத்தப்பட ஆரம்பிக்கும். எனவே நீ உன்னில் இருந்து இந்த அரும்பணியை ஆரம்பிப்பாயாக!. உணர்ந்து கொள்வாய் நெஞ்சமே!.

இந்நிலை இந்த திவ்ய நிலை உருவானால் நான், எனது என்கின்ற உச்சஸ்தானத்தொனி எங்கிருந்து எழப்போகின்றது? நானே கரைந்தபின் என்னுள் எழுவது இறைவனின் திவ்ய அருட்பிரசாதமான அவன் அருள் பொருந்திய நல் எண்ணங்களான அன்பு மட்டும்தான்.






நாம் எம்மைஅன்பான திவ்ய இறைவனின் அதி விருப்பத்திற்குரிய நபராக ஆக்கிக்கொள்ளவேண்டும். எல்லாமே இறைவனின் அருட்கொடை என உளப்பூர்வமாக உணர்ந்தபின்,எனக்குள்ள தெல்லாம் அவனுடையதன்றோ! நயம்பட இதனை உணர்ந்தால், “நான்” என்பது ஏது?

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
06-11-2006



RangaRakes
Tamilnavarasam.com



# பணிவு

> "பணிவு" அற்றவன் தன்னிலை புரியாதவனாகின்றான். தன்னைப் பற்றிய மேலோங்கிய உணர்வினால், தவறான மதிப்பீட்டினால், தான் யார், தனது தகுதி என்ன என்பதையும் புரிந்து கொள்ள மறுக்கின்றான். அத்துடன் தன் முன்னே நிற்பவர் யார், அவரது செயல்திறன் என்ன? சமூகத்தில் அவரது அந்தஸ்து என்ன என்பது பற்றியே அறியாதும் விடுகின்றனர். பணிந்து நடக்கும் போதுதான் நாம் உயர்ந்து நிற்க முடியும் என்பதனை உணர்ந்து கொள்வோம். ஆயுதங்கள் செய்யும் அட்டகாசங்களை எல்லாம் சாதாரணமான அடக்கமான பணியும், பணிவும் அடக்கி, ஒடுக்கி விடும்.

"பணிவு" என்பது தலைகுனிவை ஏற்படுத்துவது அல்ல. செருக்கு நீக்கி எவரையும் மதிக்கும் இயல்பினைச் சுட்டி நிற்பதாகும். பணிவு ஒழுக்கத்தின் ஆணி வேர் போன்றது. ஆணவம் இல்லாத நிலை என்பது சாமான்யமான நிலையிலும் மேம்பட்டது அல்லவா?



RangaRakes



ஒருவரை மதிப்பது என்பது, அவர்களுக்கு நாம் வழங்கிக் கொண்டிருக்கின்ற உயர் கௌரவமும் ஆகும்.

என்னை விட வேறு ஒருவரும் உயர்ந்தவர் இல்லை என்கின்ற மமதையினால், சிலர் தாம் யாருக்குமே தலை வணங்குவதில்லை எனச் சொல்லிக்கொள்வார்கள். நல்லோரைப், பெரியாரை வணங்கிப் போற்றுதல் எம் கடன். துர்மதியாளரைப் போற்றித் துதி செய்யுமாறு எவரும் கூறுவதில்லை.

எனவே நாம் யார் யாருக்கு மதிப்புக்கொடுத்து வருகின்றோம் என்பதை முதற்கண் புரிந்து கொள்வோமாக. ஆயினும் மானுடர் எவரையும் வெறுத்து ஒதுக்குதல் எம் பணியல்ல. நல்லோர் அல்லாதோரையும், நல்லவர் வல்லவர் ஆக்குதலே மானுட தர்ம நெறியுமாகும். "பணிவு" துணிவினை நல்கின்றது.

பணிவு கொண்டவர்களை உலகம் ஏற்கின்றது. எனவே பணிவாக நடப்பவர்களின் நல் ஆசியினால் எமக்கு ஆத்மபலம் ஏற்படுகின்றது. பலரது அன்பான அரவணைப்பு, ஆசிகளினால், எமது செய்கருமங்களில் மனோவலிமை மேம்பட்டு நிற்பதனால் சித்தி உண்டாகின்றது. இந்நிலையே எமக்கு ஆற்றல், துணிச்சலை ஏற்படுத்துகின்றது.

பிறரிடம் உதவி கேட்பதற்காகவே சிலர் பணிவுடன் நடந்து காட்டுவது. இது உண்மையான நடத்தை அல்லவே அல்ல. வெறும் நடிப்பேயாகும். தன்னையும், பிறரையும்



Tamilnavarasam.com

ஏமாற்றும் செயல்பாடுதான். "இவரால் எனக்கு என்ன உதவி கிடைக்கப் போகின்றது. நான் ஏன் இவரை மதிக்கப் போகின்றேன்" என்று வெளிப்படையாகக் கூறுபவர்களும் உளர். காரியம் ஆவதற்கு மட்டும் கும்பிட்டு, தலைசாய்ப்பவர்கள் தான் மற்றவர்கள் பிறர்க்குச்செய்யும் கௌரவத்தையே கேலிபேசுவர். இத்தகையோர் யாருக்கும் தெரியாமல் ஒருவரிடம் உதவி கேட்கும் போது இவர்கள் நடந்து கொள்ளும் வழிமுறைகள் வெட்கக்கேடானவையே.

எல்லோருமே சமமானவர்கள் சமன் என்கின்ற பொது நோக்கு அற்றவர்கள் தான் பணிவு என்பதன் அர்த்தம் புரியாதவர் களாக இருக்கின்றார்கள். சிறு துரும்பும் பல்குத்த உதவும்" என்பது பழமொழியாகும்.

பெரியோரைப்பணிந்து நடத்தல் சிறியோரின் கடனாகும். அவ்வண்ணமே சிறியோருக்கும் உரியகௌரவம் அளித்தல் பெரியோரின் பண்புமாகும். நாம் சிறியோர் என வயதில் குறைந்ததன் காரணமாக எடைபோடுதல் நல்ல தல்ல. இன்றைய நவயுகத்தில் சின்னஞ் சிறு சிறார்கள் கூட மதிநுட்பத்தில் வல்லோராக இருப்பதை நாம் அறிவோம். அவர்கள் கேட்கும் கேள்விகள், சிந்தித்து அவர்கள் எம்மிடம் கேட்கின்ற சந்தேகங்கள், சிலவேளை எம்மைப் பொறுமை இழக்கச்செய்யும்.

ஆனால் நாம் சற்று எமது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி அவர்களது ஐயங்களை ஆராய்ந்து பார்த்தால் மிகப் பெரிய உண்மைகள் கூட எமக்கு வெளிச்சத்திற்கு





வந்துவிடும். சிறுவர்களின் புலனறிவு நுட்பமானது எதனையும் கிரகிக்கவல்லது.

நாம் நடந்து கொள்ளும் பழக்கவழக்கங்களில் திரிபு ஏற்பட்டு அவை சமூகத்திற்கு ஒவ்வாது எனத்தோன்றினால் நாம் அதனை விலக்கியேயாக வேண்டும். கண்ட கண்ட எதையாவது பார்த்த மாத்திரத்தே கிரகித்துவிடும் சிறார்களை நாம் ஒழுக்கமான வர்களாக நேர்வழியில் மாற்றி விட வேண்டும். பெரியோரை மதித்து நட, பெற்றோரை, ஆசிரியர்களைப் பணிந்து செயலாற்று எனச் சிறு வயதிலேயே அவர்களுக்குத்தெளிவுடன், அமைதியாக, அன்புடன் போதித்து வரல் வேண்டும்.

பணிந்து நடக்கும் போதுதான் நாம் உயர்ந்து வருவதாக அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்வோம். பணிவு அற்றவன் தன்னிலை புரியாதவனாகின்றான். தன்னைப் பற்றிய மேலோங்கிய உணர்வினால், தவறான மதிப்பீட்டினால் தான்யார், தனது தகுதி என்ன? என்பதையும் புரிந்து கொள்ள மறுக்கின்றான்.

அத்துடன் தன் முன்னே நிற்பவர் யார்? அவரது செயல்திறன் என்ன? சமூகத்தில் அவரது அந்தஸ்து என்ன என்பது பற்றியே அறியாதும் விடுகின்றனர். சில நபர்கள் கல்வி அறிவு அற்றவர்களாக இருக்கலாம். அல்லது பணவலு, உறவுகள் அற்றவர்களாகவும் இருக்கலாம்.



RangaRakes

Tamilnavarasam.com

ஆனால் எல்லோருக்குமே ஏதோ ஒரு விசேட தகுதிகள் எமக்குத் தெரியாமலே இருக்கலாம் அல்லவா? எனவே எவர் முன் நாம் நிற்கின்றோமோ அவர்களை மதித்து நடப்பதில் எமக்கு என்னகுறை வந்துவிடப் போகின்றது?ஆரம்பத்திலேயேகண்டபடி பலருடன்பழக த்தெரியாது முரண்பட்டு அவமானப்படுதலைவிடுத்து எவருடனும் கண்ணியமாகப் பழகுதலையே ஒரு பயிற்சியாக மேற்கொண்டால் என்ன?

இன்று அரச,தனியார்நிறுவனங்களில், நிர்வாக ங்களில் பணிவு இன்மையால் பல நிர்வாகச் சீர்கேடுகள் நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

நிர்வாகிகள் தமது நிலைக்குக் கீழ் பணிபுரியும் ஊழியர்களை மதிப்பதில்லை. அவ்வாறே ஊழியர்களும், நிர்வாக உயர் அதிகாரிகளை மதிப்பதில்லை. இதில் வேடிக்கை என்ன வெனில் ஊழியர்களில்கூட தமது பதவி நிலைத்தரத்தில் சிறு வேறுபாடுகள் தோன்றிடினும் தம்மோடிணைந்த சக அலுவலர்களை மதித்துப் பணிவுடன் நடப்பதில்லை. ஓரிரு வருடங்கள் தொழிலைச் செய்ததுமே தாம் முழுமையான அனுபவம் பெற்றுவிட்டதாகத் தவறாக உணர்ந்து, தாம் யாரிடம் பயிற்சிபெற்றார்களோ அவர்க ளிடமே பணிவாக நடப்பதுமில்லை.

இந்நிலை காரணமாகச் சில முதுநிலை அனுபவஸ் தர்கள். தமக்குக் கீழ் பணியாற்றும் கனிஷ்ட ஊழியர்களுக்கு தொழில்பற்றிய நுட்பமான விஷயங்களைச்சொல்லிக் கொடுக்கத் தயக்கம் காட்டிவருகின்றனர்.





பாடசாலையில் கல்வியில் மட்டும் குரு, சிஷ்ய முறை என்று நாம் கூறமுடியாது. நாம் எங்கு தொழில் செய்கின்றோமோ அங்கு நாம் பெறும் தொழிற்பயிற்சி காரணமாகவும் நாம் அங்கு பெறுகின்ற அனுபவத்திற்குக் காரணமானவர்களையும் குருவாகவே ஏற்றுக்கொண்டு, பணிவு டன் செயலாற்றுவோமாக!

அதேபோல் தமக்குக்கீழ் தொழில் புரிபவர்களைத் துச்சமாகக்கருதாது செயற்படுதலே அதிகாரிகளின் தலையாய கடனாகும். ஏனெனில் இருசாராரின் ஒத்துழைப்பு நேயப்பாடு இன்றேல் எந்த நிறுவனமும் உருப்பட்டுவிட முடியாது அல்லவா? பணிவு இன்மையால் ஏற்படும் கருத்து முரண்பாடுகள் எந்தவிதத்திலும் நிர்வாகத்தின் சுமுகமான செயல்பாட்டிற்கு உதவுவதாக அமைந்துவிடாது.

ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதுவே வாழ்க்கை. தங்களுக்கு எந்தவிதமான உதவிகளும் செய்துவிடவில்லை என்பதற்காக மனம் சலித்து பிறரைநொந்து சமூகத்தினையே பழிவாங்குவது போல் நடந்தும் தமது தவறுகளை உணராமலும் இருக்கின்றார்கள். இத்தகையவர்களை யாராவது வலிந்து சென்று பார்த்தாலும் கூட முகம் மலர வரவேற்க மாட்டார்கள். வெறுப்பாக நடந்து கொள்பவர்கள் ஈற்றில் சமூகத்தில் பொறுப்பு அற்றவர்களாகவே மாறிவிடுகின்றார்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

இன்றைய மாணவ உலகம் பணிவு என்கின்ற நற்பண்பினை மறந்து. விட்டார்களோ எனஎண்ணத் தோன்றுகின்றது. ஆசிரியர் மாணவர்கள் உறவுகளே வர்த்தக உறவுபோல் ஆகிவிட்டது. காசு கொடுத்தால் கல்விபெறலாம் என்றாகிவிட்டது. பாடசாலைகளில் மாணவர்கள் ஆசிரியர்களை மதிப்பதில்லை என்கின்ற குற்றச்சாட்டு வலியுறுத்தப்படுகின்றது. ஆசிரியர்களில் சிலர் கண்ணியக் குறைவாக நடக்கின்றார்கள், அவர்கள் மாணவர்களின் மன இயல்பு அறிந்து அவர்களின் திறனை வளர்ப்பதில்லை என்றும் குறை கூறப்படுகின்றது.

முற்காலத்தில் மாணவர்கள் தங்கள் குருவை நம்பியே பாடம் கேட்டுவந்தனர். இங்கு கீழ்படிவு என்கின்ற பண்பே முதன்மைப்படுத்தப்பட்டு வந்தது. மன்னரின் புதல்வர்களும் சாதாரண குடிமகனின் பிள்ளைகளும், ஆச்சிரமங்களில் குருவிற்குப் பணிவிடைசெய்தே கல்வி கற்றதாக நாம் படித்திருக்கின்றோம்.

ஆனால் இன்று பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலைகளை மட்டும் நம்பி இருப்ப தில்லை. வெறும் யந்திரமயமாகவே கல்வியை மூளையில் நிரப்புகின்றனர். ஆத்மார்த்தமாக, குருவான ஆசிரியர்கள் பாடங்களைப் போதிக்கின்றார்களா?

அனுபவ ரீதியிலான பாடம் புகட்டல் எங்கே நடக் கின்றது?அன்போடு இசைவாக மாணவர்கள்



RangaRakes



பராமரிக்கப்படுகின்றார்களா? எங்காவது பிரத்தியேக வகுப்பில் படித்துச்சித்தி எய்தினால் போதும் என்றாகி விட்டது. பசுமரத்து ஆணிபோல் நிலைத்திருக்கும் கல்வியை மூளையில் செலுத்தும் ஆசிரியர்தொகை அருகி விட்டது. ஆனால் கல்வி கற்றபட்டதாரிகள் தொகையோ பெருகி வருகின்றது. ஒழுக்கம் என்கின்ற அத்திவாரம் இல்லாத கல்வியால் என்ன பயன்?

பணத்தைப் பெற்றும் பாடங்களைத் திணிக்கும் கல்வி நற் பிரஜைகளை உருவாக்குமா? மேலும் கண்டபடி தண்டிப்பதே தன் கடன் என எண்ணும் ஆசிரியர்களால் கல்வியை எப்படி ஊட்ட முடியும்?

உண்மையாக தார்மீக ரீதியில், நல் உணர்வுடன் செய்யும் கடமைதான் ஏற்கக்கூடிய ஒன்றாகும். இந்த ஆசிரியரால் எனக்கு என்ன என எண்ணும் மாணவனிடம் பணிவை எப்படி எதிர்பார்க்கமுடியும்? தன்னையும், தன் மாணவர்களையும் உருவாக்குதலே நல் ஆசிரியர்களின் கடனாகும். நல்ல பண்பான, பணிவான மாணவர்களை உருவாக்கும் ஆசான்கள் மலை என உயர்ந்து உலகில் ஒளி வீசிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

இத்தகைய நல் ஆசான்கள் இன்னமும் இருப்ப தால் தான் மாணவர்கள் அவர்களைக் கடவுள்போல் போற்றியும் வருகின்றனர். பணிவான மாணவனை ஆசிரியர்கள் ஆசீர்வதிப்பதால் அவனது வாழ்வு பலபடிகள் மேலோங்குகின்றது. அத்துடன்அதே மாணவன் தன்



Tamilnavarasam.com

சந்ததியையும் தன்னைப் போல் வழிநடத்தியும் கொள் கின்றான்.

மேலதிக செல்வம் புகழ் சேர்ந்து வரும் போது மனிதன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியவனாகின்றான். சிலவேளை மனிதன் தன்னையறியாமலேயே தன்நிலை இழக்கும் சந்தர்ப்பமும் வந்துவிடுகின்றது. பணமும் புகழும் மிகுதியாக வந்து சூழ்ந்து கொள்ளும்போது இவர்களைச் சுற்றி ஒரு குழு வந்து சூழ்ந்தும் கொள்கின்றது.

இத் தருணத்தில் சிலர் பழைய முகங்களை மறந்து புதுமுகங்களைப் பெரிய உறவாகக் கருதுவதனால் பழைய நல்லவர்களை,உறவினர்களைக்கூடமறந்து அவர்களை க்கண்டாலும் பணிந்து நின்று வணங்கவும் மனம் இடம் கொடுக்காது நடந்து விடுகின்றனர்.

தாங்கள் நினைந்ததைச் சாதிப்பதற்காகவே முரட்டுப் பிடிவாதமும், மூர்க்க குணம் கொண்டவர்களால் "பணிவு" என்கின்ற நல் இயல்பையே சில சமயம் எதிர்பார்க்க முடியாமல் இருக்கின்றது. எதனையும் கண்டிப்பாக, பலாத்காரமாக, துச்சமாக ஏசியும் நடந்து கொள்வதும் மிரட்டும் பாவனையில் நடத்தையில் கொடூரமாக இருப்பதாலும் காரியங்கள் எல்லாமே வெற்றியாக அமைந்து விடாது. பணிவுடன் நடந்து கொண்டால் மிக இயல்பாக பிரச்சினைகள் ஏதுமின்றி எதனையும் சாதித்துவிட முடியும்.





எங்கள் கருமங்களை எங்கள் நலனுக்காக நாம் வெற்றிகரமாக ஆக்கிக்கொள்ள நாம் திமிருடன் தான் தோன்றித்தனமாக நடந்து கொள்ளலாமா? இந்த அத்துமீறிய அப்பட்டமான சுயநலமிகுதி,மற்றவர் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியே தீரும். இதனால் எழுந்த குரோத உணர்வால் எதிர்பார்க்கும் உதவிகள் அவை மிக எளிதாகக் கிடைக்க இருந்தாலும் அது கைநழுவியே போய் விடும ன்றோ!

"பணிவு செலுத்துவதானால்எதிரி உருவாகா மலேயே போகின்றான்". இந்தத் தன்மை எதிரியின் காலடியில் விழுவதுஅல்ல. உண்மை நிலையைத் தெளிவுபடுத்தவும் தேவையற்ற ஐயங்களை எவர்க்கும் உருவாக்காமல் இருக்க நாம் எம்மைப் பற்றிய சரியான தெளிவான நிலையை, எம்மை எதிரி எனக் கருது வோர்க்குத் தெரியப்படுத்தியே ஆகவேண்டும். எனவே எடுத்த எடுப்பிலேயே எம்முன் இருப்பவருடன் ஆக்ரோஷமாகப் பேசி என்ன பயன் வந்து விடப் போகின்றது?. கூடியவரை எதிரியை உருவாக்காமல் இருக்கப் பெருமுயற்சி எடுப்போமாக!

நீங்கள் யாரிடமாவது அன்புடன் பணிவாக ஏதாவது ஆலோசனை கேட்டுப்பாருங்கள். உங்கள் மீது அக்கணமே அவருக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டு விடும். பார்ப்பதற்கு சிங்கம் போல சற்று முரட்டுத்தனமாகத் தோற்றம் காட்டும் சிலருடன் பணிவாக அன்பாக உதவி கேட்டுப்பாருங்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

நீங்கள் நம்பமுடியாத அளவிற்கு அவர் மென்மையான நபராகிவிடுவார். எல்லா விடயங்களுமே நாம் அணுகும் விதத்திலேயே சாதக,பாதக விடயங்கள் தங்கி உள்ளன. புரிந்து கொள்வோமா?

நல்லவர்கள் பெரியோர் சிறியோரைப்பணிந்து அவர்களுக்குச் சேவைசெய்பவனே வீரன் ஆவான். ஆயுதங்கள் செய்யும் அட்டகாசத்தை சாதாரண அடக்கமான பண்பு அடக்கி ஒடுக்கிவிடும். தேவைப்பட்ட காரியங்களைத் தேவையான தருணத்தில் பொறுமையான பணிவு எமக்கு ஆக்கித்தரும்.

கீழ்ப்படிவின்மையால் எமக்கான வரவுகள் நிராகரிக்கப்படும். நிதான புத்தியுடையோரை வாய்ப்புக்கள் வீடு தேடிவந்து கூட்டிச் செல்லும். பணிவு உள்ளவன் தன்னையே வழங்குவதற்குச் சித்தமாயிருப்பதால் உலகம் அவனிடமே சேர்ந்துகொள்கின்றது.

திருமணம் பேசச்செல்லும் பெண் வீட்டாரோ மாப்பிள்ளை வீட்டாரோ தமது பேச்சில் இங்கிதமின்றி அதிகாரதோரணையில் நடந்தால் காரியம் சரிப்பட்டுவருமா? என்னதான் மேலதிக அந்தஸ்து பதவி, பணவசதிகள் இருந்தாலும் கண்டபடி வார்த்தைப் பிரயோகம் செய்தால் எந்த விடயமும் கெட்டுவிடும். ஆனால் காரியத்தில் குறியாக இருக்கும் அனுபவஸ்தர்கள் பணிவாக நடந்து எந்தப் பிரச்சினைகளையும் மிக எளிதாக வென்றுவிடுவர். எனவே தான் "நல்ல காரியங்கள் நடைபெறும்போது நல்ல





மனிதர்களையே துணைக்கு அழைத்துப்போ" என்கின்றார்கள். இவர்கள் பணிவு என்பதன் சக்தியை நன்கு உணர்ந்து நிதானமாக எதனையும் எளிதாகப் புரிய வைக்கும் திறமைசாலிகளுமாவர்.

தொழில் தேடி நேர்முகப் பரீட்சைக்குச் செல்லும் போது பரீட்சார்த்திகளின் பொறுமையைச்சோதிக்கும் பொருட்டும் பற்பல சம்பந்தமில்லாத கேள்விகளைக் கேட்பார்கள். நிதானமும், பணிவும் உள்ளவர்கள் கோபமின்றி பதில் வழங்குவர். "தெரிந்த சாதாரண கேள்வியை ஏன் கேட்கின்றீர்" என பரீட்சார்த்திகள் திருப்பிக் கேட்கலாமா? அப்படிக்கேட்டால் என்ன நடக்கும்? வாழ்க்கையில் எல்லை மீறிய கோப உணர்வுகள் அடக்கி ஆளப்படல் வேண்டும் இல்லாவிடில் கோபங்கள் எம்மை வென்றுவிடும். "பணிவு உள்ளவனிடம் கோபம் தங்காது."

வெறும் முகஸ்துதி செய்து பணிவானவர்போல் நடித்துக் காரியம் ஆனதுமே உதவி புரிந்தவர்களை உதறிவிடுபவர்களும்உளர்.இவர்களைப் போன்றோராலேயே உண்மையான உதவி நாடுவோரைப் பலரும் கண்டு கொள்ளாமல் உதாசீனம் செய்தும் விடுகின்றனர்.

ஆயினும், சாதாரணமாக எவராவது ஒருவரிடம் தேடிவரும்போது ஏதாவது உதவி கேட்கத்தான் வருகின்றார் என எண்ணி விலகி நடந்தால், காலப்போக்கில் இவர் நடத்தை கேலிக்குரியதாகி இவரிடம்பழகுவதை எல்லோரும் நிறுத்தியே விடுவர். தங்களைப் பற்றியே எந்நேரமும்



RangaRakes
Tamilnavarasam.com

பெருமையாக எண்ணும் சில பேர்வழிகள் யாராவது தம்முடன் பேசினால் கூட அது ஏதோ சுயநலத்துடன் தம்மை அணுகுகின்றார்கள் என்றே சொல்லிக்கொள் வார்கள்.

நாம் பகையை சதாஎண்ணி மனம் குமைந்து பகைமையை வளர்த்து வந்தால்.அந்தப்பகையை மறந்து எம்முடன் சேர எண்ணுபவர்கள் கூட நிரந்தரமாகவே விலகி விடுவர். நல்ல பெரியோரிடம் சந்தர்ப்பவசத்தில் மனக்கசப்பு ஏற்படின் உடன் எமது கசப்பு எண்ணத்தை மாற்றி அவர்களுடன் பணிவன்புடன் மீண்டும் பழகியே தீர வேண்டும். அன்புள்ளங்களை மறத்தலும், ஒதுக்கலும் நெஞ்சத்தில் நிலை நிறுத்தி வைக்கக்கூடிய பண்பேயல்ல.

நாம் பணிவினைக் காட்டுவதில் கூச்சப்படவோ, அச்சப்படவோ தேவையில்லை. இது பரந்த உள்ளத்தின் உண்மையான சுய வெளிப்பாடு.

“நான் எல்லோரிடமும் மதிப்பும் மரியாதையும் வைத்துள்ளேன்” என்பதே எமக்கு நாம் சூட்டும் மதிப்புமிக்க மகுடமும் ஆகும். இந்த எண்ணம் களங்கமற்று உண்மையான வெளிப்பாடாகவும் அமைய வேண்டும். எல்லோரையும் வென்று கொள்ளல்” என்பது அடக்கமான பணிவு எனும் பண்பினால் மேலான அன்பினால் அவர்களைப் பரந்த இதயச்சிறையினுள் ஆட்சிப் படுத்து வதேயாம். அன்பைக்கொடுத்து அகிலத்தை வளைத்துப் பிடிப்போமாக!

தினக்குரல் ஞாயிறு மஞ்சரி 19-11-2006







# மனம் எனும் மாயசக்தி

மனதை ஆட்கொள்ளத் தெரியாமல் புலன் வழி புகுந்தால் “வாழ்வு” என்பதே “தாழ்வு” நிலையாகப் போய்விடுமன்றோ? சாதனை படைக்க மனம் எம்முடன் இணைதல் வேண்டும். மனது ஒரு நிலைப்படுதல் அவசியம். “தாழ்வு மனம் , பய உணர்வினையும் சிந்தனைச் செறிவின்மையும் உண்டு பண்ணி விடும். இவை மனிதனது சுய இயக்கத்தினையே ஸ்தம்பிக்கச் செய்து விடும். தன்னால் எதுவுமே இயலாது எனத் தனக்குள்ளே தானே சொல்லுவது மீளமுடியாத தொல்லைகளை அள்ளி வீசும். மனம் எனும் மாய சக்தியை நாமே நல்ல முறையில் இயக்க ஆரம்பித்தால், அதுவே விஸ்வரூபமாய் கிளந்தெழுந்து எம்மைச் சாதனையாளராக மாற்றிவிடும். மலரனைய வாழ்விற்கு உரம் கொண்ட நெஞ்சு வேண்டும்.

“மனம்” ஒரு மாயக் கருவி போல் செயல் படுகின்றது என்பதில் உண்மையில்லாமல் இல்லை. மனம் மனிதனை முன்னிலையில் உயர்த்தும், வலுமிக்க, புலனுக்குப் புதிரான யந்திரம்தான். இது எண்ணங்களின் தொகுப்பு அல்லது குவியல்கள் என்றும் சொல்லலாம்.



RangaRakes
Tamilnavarasam.com

எனினும், மனதை ஆட்கொள்ளத் தெரியாமல் புலன்வழி புகுந்தால் வாழ்வு என்பதே தாழ்வு நிலையாகப் போய்விடுமன்றோ? திண்ணிய மனது இருந்தால் எண்ணிய கருமம் நிறைவேறும். இதில் எவ்வித சந்தேகமும் எமக்கு வேண்டவே வேண்டாம்.

மனசின் வேகம் சொல்லி அடங்குமோ? மனதை ஓரிடத்தில் நிறுத்தி எம் சக்தியைத் திரட்டி, எமது இயக்கத்தை ஆரம்பித்தால்,எமது அசுரபலம் அப்போது தான் விஸ்வரூபம் எடுப்பதைக் கண்டு கொள்வோம். உடல் பலம் குன்றினாலும் மனவளம் குன்றும். தேகத்தை வாடாமல் பார்த்துக்கொள்வது எமது கடமை.

தொடர்ந்து தேவையின்றி கண்டபடி பேசுவதால் எமது ஆன்ம சக்தி வலுக்குன்றும். வேண்டத்தகாத எண்ணங்களை நீக்கும் வல்லமையினை நாம் பெற்றேயாக வேண்டும். சாதனை படைக்க "மனம்" எம்முடன் இணைதல் வேண்டும்.

மன வலிமையுள்ளவர்களுக்கு இது கைவந்த கலையாக இருக்கின்றது. நல்லவைகளைக் களைந்து, பொல்லாதவைகளை இதயத்துள் செலுத்தினால், உருப்படியான செயலூக்கத்தை எவ்விதம் பெறமுடியும் ஐயா! மனித மூளையின் செயல், கிரகித்தல், பரிணாமம் விசாலமானதுதான். எனினும் ஒரு குடம் பாலுக்கு ஒருதுளி விஷத்தை ஏற்றிவிட்டு, எல்லாமே எனக்கு வெற்றியாக



RangaRakes



அமைய வில்லையே எனப் பிரலாபித்தால் என்ன பலன் வந்துவிடப் போகின்றது.

மேலும்,
எண்ணங்களில் ஏற்படும் திரிபு பற்றிச் சற்று நோக்குவோம்,

ஓட்டப்பந்தயம் ஒன்றில் வீரர்கள் ஓடுவதற்கு ஆயத்த மாகின்றனர். எல்லோரும் மிகுந்த ஆவலாகவும் எதற்கும் தயார் என்கின்ற நிலையில் உள்ளனர். ஓட்டப்போட்டி ஆரம்பமாகின்றது. இந்தக் கணத்தில் ஒரு திறமையான வீரர், ஏதோஒரு காரணத்தினால் தன் மனதை ஏதோ ஒரு திசையில் செல்லவிட, அவன் புறப்படும் நேரம், ஓட்டவேகம் தடைப்படுகின்றது. முடிவு என்ன? அதனை உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.

மனித மூளை சிலவேளை திடீர் என எதையோ நினைக்கப் புலன்களின் வேகம் செயல்கள், களவாடப் படுகின்றன. இந்த நிலை மிகவும் பரிதாபகரமானது. ஆனால் இந்நிலையை நாம் தவித்துக்கொள்ள முடியும்.

சிந்தனையில் தெளிவினை உண்டாக்கினால் புலன்களும் விழிப்படைந்து வலுவடையும், "நான் எவ்விதத்திலும் சலனப்பட மாட்டேன்" என்று, எமக்கு நாமே உறுதிமொழி எடுப்போமாக!. கடுகளவு எம் புலன்களில் ஏற்படும் வீணான சலனங்கள், சஞ்சலங்களையே ஏற்படுத்திவிடும்.



Tamilnavarasam.com

மேலும்,

- பய உணர்வுகள், பதட்டம்
- எதனையும், எம்மால் செய்யமுடியுமா எனச் சந்தேகப்படல்.
- தீர, எதனையும் ஆராயாது செயற்படல்
- பிறருக்கே, தன்னைவிட அதிக வலிமையுண்டு

தனக்கு அந்த வலிமை இல்லை எனச்சொல்லிச் சொல்லியே மாய்ந்து போதல் அதாவது அலுத்துக் கொள்ளுதல்.

- தனக்கே அதிக திறமை உண்டு. பிறருக்கு எந்தவித திறமையும் இல்லைஎனப் பொய்மையான, மாய நினைவுக்குள் ஆட்படுதல்
- தாழ்வு மனப்பான்மை
- நல்லவைகளைப் போற்றாத தன்மைகள்.

மேற் சொல்லப்படுகின்ற சில காரணங்கள் எங்கள் மனதின் பலத்தை புரிந்துகொள்ளாமலும் அதனை வளர்த்து நிலை நிறுத்தாமலும் செய்துவிடுகின்றது. நல்ல விடயங்களைச் செய்யுமாறு உங்களுக்கு நீங்களே கட்டளையிடுவீர்களாக!

இறைவன் படைப்பில் எல்லோருமே சமன் என்று வாயளவில் நாம் கூறிக்கொண்டு பின்னர் ஏதாவது தமது முன்னேற்றத்தில் இடையூறு ஏற்பட்டால் கடவுள் எமக்கு அநியாயம் செய்துவிட்டதாகப் பிரலாபிப்பதில் என்ன உண்மையுண்டு? உங்கள் எண்ணங்களால், வலிமையை





பெற விழையுங்கள். அறிவை வழங்கிய இறைவன் அதை அறுக்க விரும்புவதில்லை. உங்கள் முன்னேற்றத்திற்கு நீங்களே உரித்தாளர்கள். அதை முதலில் உணருங்கள்.

யாரோ ஒருவர் படித்துவிட்டால், அது என்னால் முடியாது என்று கூறுகின்றவர்களைப் பார்த்திருப்பீர்கள். ஏன் முடியாது என்று அவர்கள் தங்களைப் பார்த்துக் கேட்கவேண்டும். வெற்றி பெற்றவர்களில் நீங்களும் ஒருவராக ஏன் இருக்ககூடாது.

எல்லோருக்கும் படிப்பு, பட்டம், பதவி பொதுவானதே.எவரும் எதனையும் தேடிக் கொள்ளமுடியும். மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள், காலப்போக்கில் தலைவர்களாக கல்விமான்களாக செல்வந்தர்களாக, மாறுவதில்லையா? எதிர்ப்படும் இடர்கண்டு முடங்கிநின்று பயணங்களை நிறுத்தக்கூடாது. "உறுதி" உயரவைக்கும். மனவலிமை மிகுந்தவன் வருந்தி அழுவதில்லை.

- வீணான, நகைப்பூட்டும் சமாதானங்கள்
- பொய்மையான கற்பனைகள்
- சோம்பல், ஆற்றாமையுணர்வு

மேற்படி காரணங்களை தீவிரமாகக் கடைப்பிடிக்கும் பிரகிருதிகள் நம்மையே நெரித்துக் கொள்கின்றார்கள். "அவன் விதி அப்படி, நன்றாக வந்துவிட்டான். ஐய்யய்யோ



RangaRakes
Tamilnavarasam.com

நம்மால் முடியாது அப்பா! எவ்வளவு இடையூறு தொல்லைகள் வரும் தெரியுமா" என்கின்ற கற்பனைகள், சரி, சரி நாளைக்குப் பார்ப்போம் என்கின்ற சோம்பல் புத்தி. இவைகளை தமது மூளையினுள், புதைத்து வைத்தால் சித்தம் எப்படி சுத்தமாகும் ஐயா?

யார் யாரோ, எப்படி எப்படியெல்லாம் வாழுகின்றார்கள் என எண்ணி மனம் புளுங்காமல், நாம் நமது கடமையை தொடரல் வேண்டும்.அதைவிடுத்து எங்களையே நாம் வருத்தி, மனச்சோர்வடைதல் மிகவும் தவறுதலான போக்கு அல்லவா?

கடவுள் அடுத்தவனுக்கு ஒரு நீதி, உங்களுக்கு ஒரு நீதி எனச் சட்டம் வகுத்ததில்லை. சோம்பல்படுபவர்களைக் கடவுளுக்குப் பிடிப்பதில்லை. முயற்சியுள்ளவனைத் தெய்வம் அணைத்துக் கொள்ளும் கடவுள் நம்பிக்கை மனஉறுதியை உண்டு பண்ணுகின்றது.

நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு படிகளுக்கும், மேலாகப் பலபடிகளை, உங்கள் மனம் எடுத்து வைக்கத் துணைநிற்கும்.

உங்களை முன் சென்று, உயர்த்த இயற்கையான வலிமை தயாராகவே உள்ளது. எனவே பயணத்திற்காகப் புறப்படும் நீங்கள், அடுத்து வரும் சவால்கள் பற்றியோ, பிரச்சினைகள் பற்றியோ தெரிந்து, தெளிந்து, முகம் கொடுக்கும் துணிச்சலை ஏற்படுத்திக் கொள்வீர்களாக!



RangaRakes



எதையும் தெரியாது, செயலில் புகுவது முட்டாள் தனமானது. இதன்பெயர்துணிச்சல்அல்ல.மன உளைச் சலுக்கான வழி என்பதனைத் தெரிந்துகொள்க!

எந்தவித ஆரம்ப முயற்சி இல்லாமல் கடவுள் பார்த்துக்கொள்வான் எனச் சொல்லி தங்கள் மனதினை முடமாக்கும் அறிவிலிகள், எளிதில் திருந்திவிட இயலுமோ? இவர்களுக்கு செய்யும் உதவிகள் கூட அர்த்தமற்றது. ஏன் எனில் கொடுத்த பொருளைக் காப்பாற்ற முடியாதவர்கள், அடுத்தவரின் உழைப்பின் பெருமையையெப்படி உணர்வார்கள்?

உழைப்பின் பெருமையை உணர்ந்த வர்க்கே, உதவுதல் என்பது உசிதமானது. மனதைச் சோரவைத்து தன் கடமையை நழுவவிட்டவன், ஈற்றில் ஒரு சமூகச் சுமையாகி விடுகின்றான்.கடனைத்திருப்பிக் கொடுக்க மாட்டான் எனத் தெரிந்தால், எவன் தான், கடன் கொடுக்க முன்வரப்போகின்றான்?

மலரனைய வாழ்விற்கு உரம் கொண்ட நெஞ்சுறுதி வேண்டும். மனதினைத் திடமாகக் கொண்டு தெளிவுடன், சிந்தனையைச் செதுக்குவோம். அதனால் எங்கள் செயல்கள் அனைத்துமே காரிய சித்தியாகும். எங்களுக்கு நாமே இடும் வலிமையான, சரியான ஆணைகள் எங்களை வளப்படுத்துவனவாக அமைந்துவிடுகின்றன. சும்மா வாழ்ந்து பார்ப்போம் எனக் கருதல் வேண்டாம்.



Tamilnavarasam.com

ஆக்கபூர்வமாகச் சிந்திப்போம். அது எம்மை மட்டுமன்றி அனைத்து உயிர்களுக்குமே, விழிப்பூட்டுவதாக அமைந்தால் மானுடராகப் பிறந்ததன், நற்பயனைப் பெரும் பேற்றினைப் பெற்றவராக ஆகிவிடுவோம் அல்லவா?

கனவை நனவாக்கும் சக்தி உள் மனதிற்கு உண்டு. அனுதினமும் மன மகிழ்வுடன் எழுக! அனைத்து வெற்றிகளையும் " சித்தம்" மொத்தமாய் அள்ளித்தரும்.

"கூர்மதி"
கல்வி அமைச்சு
ஆண்டு மலர் 2006







# பெண்மையைப் புரிந்து கொள்ளுங்கள்!

அன்பு அதிகரிக்கும்போது தான் ஆதிக்க அதிகாரமும் மேலோங்கி நிற்கின்றன. மனைவி தனது எண்ணங்களுக்கு ஏற்ப தனது சொற்படியே நடந்துகொள்ள வேண்டுமென கணவனும் அவ்வண்ணமே கணவன் தனது இஷ்டப்படி நடந்துகொள்ள வேண்டுமென மனைவி எண்ணுவது இயல்பு. இதனை இரு சாராருமே புரிந்து எந்தச் சமயத்தில் எவ்வாறு நடக்க வேண்டுமென அனுபவபூர்வமாக உணருதல் அவசியம். எல்லையில்லா அன்பு கொண்ட "பெண்மை" அன்பு, உரிமையுடன் தம்மையே பரித்தியாகம் செய்தவண்ணம் இருக்கின்றது. பெண்மையாலேயே குடும்பம் எனும் விருட்சம் என்றுமே புஷ்பித்த வண்ணமாய் இருக்கின்றது.

ஒவ்வொரு நாடுகளினதும் இன,மத கலாசாரங்களுக்கு ஏற்ப பெண்கள் பற்றிய நோக்கு, அவர்களுக்கான கௌரவம் தொடர்பாகப் பல தரப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும்கூட உலகில் உள்ள அனைத்துப்



RangaRakes
Tamilnavarasam.com

பெண்களுமே, ஒரு குடும்பத்தின் அசைக்க முடியாத ஆணிவேராகவே கருதப்பட்டு வருகின்ற உண்மையை புறம்தள்ள முடியவே முடியாது.

குடும்பம் எனும் மா விருட்சத்தின் ஆணி வேராக பெண் உலக உயிர்ப்பிற்கு நல் வித்துமாவாள். ஆயினும் இந்த உயரிய பெண்மையினை நாம் அனைவருமே புரிந்து கொள்கின்றோமா?

பெண்களே தாங்கள் சார்ந்த பெண்களைச் சரிவரப் புரிந்துகொள்ளாத போது ஆண்கள் பற்றிச் சொல்லத் தேவையில்லை. ஒரு ஆண் தான் சார்ந்த கருத்துக்களையே பெண்களிடம் திணிப்பதுதான் அவனது வேலை எனப் பல பெண்பாலார் சொல்லிக் கொண்டிருக்கின்றனர்.

ஆயினும், தனக்கான உரிமை காரணமாகவும், தனது உள்ளத்தே புதைந்திருக்கும் காதல் காரணமாகவும் கூட தனது மனைவியில் அதிகாரத்தைச் செலுத்துவதை பலபெண்கள் மனதார விரும்புவதுமுண்டு. இவை யெல்லாம் கணவன் மனைவியிடத்தேயான புரிந்து ணர்வுடன் கூடிய சமாச்சாரங்களே!

அன்பு அதிகரிக்கும் போதுதான் ஈர்ப்புடனான ஆதிக்க, அதிகாரமும் சிலசமயம் மேலோங்குவது முண்டு. கணவன் தனது சொற்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென மனைவியும், அவ்வண்ணமே, மனைவி தன் ஆட்சிக்குள்அடங்கவேண்டுமெனக் கணவனும் எதிர்பார்ப்ப துண்டு.





மறைந்த பெர்னாசிர் பூட்டோ அவர்கள் பாகிஸ்தானின் பிரதமராக இருந்தவர். அத்துடன் அவரது தந்தையாரும் நாட்டின் பிரதமராக இருந்தவராவார். ஒரு சமயம் திருமதி பெனாசீர் பூட்டோவிடம் செய்தி நிருபர்கள், நீங்கள் எதற்காக திருமண வாழ்வை விரும்புகின்றீர்கள் எனக் கேட்ட போது, அவர் சொன்னார் "என்னை மணம் புரிபவர் என்னைப் புரிந்து கொள்ளவேண்டும். அதேசமயம் நான் எண்ணியவாறே நடந்து கொள்ளாமல் தகுந்த ஆலோசனை வழங்கும், என்னை தனது அன்பினால் கட்டுப்படுத்த ஒரு ஆண் துணை எனக்கு வேண்டும்" என்றார்.

அன்பின் மிகுதியினால் ஒருவர் மீது ஒருவர் காட்டுகின்ற அக்கறைகள் சிலசமயங்களில்அதிகார அடக்குமுறையாகவும் எமக்குத் தோற்றமளிக்கின்றன.

ஆயினும், எல்லா ஆண்களும், பெண்களும் அன்பு காரணமாக தங்கள் உரிமையைக் காட்டுவதாக அர்த்தம் கொள்ளல் ஆகாது.

கொடூர குணம் கொண்ட கணவன், மாமிமார்கள், மைத்துனிகள் இல்லாமல் இல்லை. நல்லவைகளைப் பற்றியே நாம் பேசிக்கொண்டிருக்கும் போது இவர்களைப் பற்றி இப்போது பேசத்தேவையில்லை.

எப்போதோ படித்த என் நெஞ்சைத் தொட்ட கதை! மிகவும் வாயாடிப் பெண் அவள். ஒரு அங்காடியில் காய்,



RangaRakes Tamilnavarasam.com

கறி விற்பவள். அவளது வாய்க்கு மொத்த அங்காடியில் உள்ள அனைவருமே பயப்படுவார்கள். அவளை மிஞ்சி ஒருவருமே அங்கு வியாபாரம் செய்ய முடியாது. ஆண்களே பயப்படும் விசித்திரப் பிரகிருதி.

இப்படிப்பட்ட இவளுக்கு ஒரு நோஞ்சான் கணவன். இதில் வியப்பான விஷயம் என்னவெனில், இவள் தனது அந்த அப்பாவிக் கணவனையே தெய்வமாகப் போற்றினாள். தினசரி தனக்குரிய இடத்தில் வியாபாரம் செய்யும் போது, வேறு எவராவது வியாபாரம் செய்யப் புறப்பட்டால் பேயாக உருமாற,இவள்கணவனோ ஒன்றுமே புரியாது விழித்த படியே இருப்பான். "என்ரை ராசா இங்கே இப்படி உட்காரப்பா"என்று சொல்லி ஒரு மரப் பெட்டியில் இருத்திவைப்பாள். அவனுக்கு அங்கேயே அடிக்கடி உணவு, தேனீர் எனக் கொடுத்தபடி இருப்பாள்.

இவளுக்குத் திடீர் என நோய் வந்துவிட்டது. வைத்தியரிடம் காண்பித்த போது, அவள் நிலை மோசமடைந்துவிட்டது. அவள் எதிர்பார்க்காத அதிர்ச்சி! தான் இனிப் பிழைக்கமாட்டாள் என அவளுக்குத் தெரிந்து விட்டது. அந்தச் சமயத்தில் அவள் தனது அப்பாவிக் கணவனை அழைத்து இறுதியாகச் சொன்ன வார்த்தை களை வாசித்தபோது எனது நெஞ்சம் கன கனத்துக் கண்ணீரை வரவழைத்துவிட்டது.

"என்ரை ஐயா...! உன்னை நான் உலகம் தெரியாமல் வைத்திருந்துவிட்டேன். உன்னை எனது





பிள்ளை போல, எனக்கு ஆறுதலூட்டும் நல்ல ஜீவனாகவே எண்ணிப் புருஷனாகக் கண்போலவே வைத்திருந்தேன். உனக்கு நான் ஒரு குறையும் வைக்கவில்லை. உனது ஆறுதலினாலேயே நான் அதிகாரத்துடன் வாழ்ந்து விட்டேன். இத்தனைக்கும் நீ உலகம் அறியாத அப்பாவிச் சீவன். நான் சாவிற்குப் பயப்படவில்லை, எனது கவலை எல்லாமே உன்னைப்பற்றியது தான். என் துரையே... நான் இறந்துபோகப் போகின்றேன். அப்புறம் இந்தப் பொல்லாத உலகில் எப்படி வாழப்போகின்றாய். நான் இறந்து போனாலும், உன்னைச் சுற்றித்தான் என்ரை உயிர் இருக்கும். என்னோடை ஆத்மா எப்படிச் சாந்தியடையப் போகின்றதோ..." எனச் சொல்லியபடி இருக்கும் போதே, அவளது உயிர் பிரிந்து விடுகின்றது.

ஒரு பொல்லாத பெண் இவள். ஆயினும் தான் வாழ்ந்த சமூகத்தில் என்றுமே பயந்து வாழவும் இல்லை. கணவனைத் தெய்வமாகக் கொண்டு இவள் வாழ்ந்ததே ஒரு நம்பவொண்ணா அற்புத வாழ்க்கையாகும். அவளை அறியாமல், அவள் ஆன்மாவுடன் இணைந்த தூய காதல் இது!

இத்தகைய தூய காதலோடிணைந்த பெண்கள் தான், தங்கள் குடும்பப் பொறுப்புக்களை எவ்வித மன உறுத்தல்களும் இன்றி விரும்பி ஏற்றுக்கொள்கின்றனர்.

எத்தகைய கணவன் வாய்த்திடினும் அல்லது தனக்குப் பிறந்த பிள்ளைகள் எப்படியான, நிலையில்



RangaRakes

Tamilnavarasam.com

இருந்தாலும் ஒரு தாயான இவள் போஷிப்பினால் உழைப்பினால்அக்குடும்பமே திருந்தித் தழைத் தோங்கு கின்றது.

பெண்களின் தியாக உணர்வுகளைப் புரிந்தாலே போதும், அவளுடன் இணைந்த முழுக் குடும்பமே புதுவாழ்வைப் புஷ்பித்துக்கொள்கின்றது. தூய பெண்மை யினைப்புரியாமல்,அவள் இதய அபிலாஷைகளை புறம் தள்ளுவது எத்தகைய தவறானது என்பதை அனுபவ பாடங்கள் உணர்த்தியே தீரும். குடும்ப உறவை வலுப்படுத்துவதும், அவர்களுக்காக வாழ்க்கையே பெருமையாகக் கொள்பவளைப் “பேதையர்” என்பதா?

தினக்குரல்,
ஞாயிறு மஞ்சரி
“இவள்” பகுதி
25-04-2010







# பெண்மை தோற்கக் கூடாது!

பெண்களில் பலர் சுயமான முடிவுகளை எடுக்கமுடியாத நிலையில் அமுக்கி வைக்கப்படுகின்றனர். வீட்டிற்கு வெளியே நல்ல பதவிகளைத் திறம்பட வகிக்கும் பெண்கள், தனது வீட்டில் கணவனாலும், அவர்களின் உறவினர்களாலும் அடக்கி ஒடுக்கப்படுதல் என்ன நியாயம்? மனைவியின் திறமைகளை கணவன் ஒத்துக் கொள்வதுடன் பாராட்டினால் என்ன குறை ஏற்பட்டுவிடப் போகின்றது? வல்லமை கொண்ட பெண்ணை வேண்டுமென்ற நலிவடையச் செய்தல் வளரும் செடியை வெட்டுதல் போலாகும். இது நல்லதல்ல! பெண்மை தோற்பது ஆண்மைக்கே இழுக்கு! உலக எழுச்சிக்கு இழப்பு!

பெண்கள் துணிச்சலுடனும் வீரத்துடனும் எதனை யும் எதிர்கொள்ளுகின்ற மனப் பக்குவத்துடன் வாழ வேண்டும் என்பதில் அவர்களில் எத்தனை வீதமானோர் உறுதியாக இருக்கின்றார்கள் என்பதை அவர்களே எண்ணிப்பார்க்க வேண்டும்.



RangaRakes
Tamilnavarasam.com

நன்கு படித்த, வசதியுள்ள, உயர்பதவி வகிக்கின்ற பெண்கள் நிலைபற்றி ஆராய்ந்தால், மனதினை நெருடும் விதமாகச் சிலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தங்களுக்குத் தாங்களே விலங்கிடும் முறையோ எனவும் எண்ண வேண்டியுள்ளது.

வீட்டிற்கு வெளியே தாங்கள் பதவி வகிக்கும் விஷயத்தில் மிகவும் சாதுர்யமாகவும், திறமையாகவும் தமது பணிகளைப் பலர் பாராட்டும் வண்ணம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால்,வீட்டில் கணவனின் கெடுபிடிக்குள், ஏன் அவரது ஆக்கிரமிப்பில், எந்த முடிவையும் சுயமாக எடுக்க முடியாத அடிமை போலவும் சிலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மனைவியின் திறமை, வளர்ச்சிகளை ஜீரணிக்க முடியாத கணவன்மார்கள், வெறும் போலியான, தங்கள் மனசாட்சியையே குத்திக் குதறிச் செயல்பட்டு வருகின்றமையை பலரும் அறிந்தேயிருப்பார்கள். கணவனின் வீட்டார்கள் கூட, திறமைமிக்க இவளின் செயலைப் பாராட்டத் தயங்குவதுமுண்டு. தாங்களே ஒதுக்கப்படும்போதும் எதற்கு வீண் பொல்லாப்பு என எண்ணி, பெண்களே மௌனிப்பது, ஆரோக்கியமும் அல்ல!

அதே சமயம் நல்ல செயல்திறன்மிக்க பெண்கள், தாங்கள் வேலைசெய்கின்ற இடங்களில், ஒடுங்கி, முடங்கி தங்களது கருமங்களை வெளிக்கொண்டு வந்து காட்ட பெரும் சிரமப்பட்டு வருகின்றார்கள். வீடுகளில்,





சுதந்திரமாகச் சந்தோஷமாக வாழ்கின்ற இவர்கள், ஏன் வெளியுலக வாழ்வில் தாங்கள், தங்களைப் பலவீனர் களாகக் காட்டவேண்டும்? எப்படியிருந்தாலும் திறமை சாலிகள் தோற்றுப்போனது கிடையாது.

சிலவேளைகளில் பெண்களே மற்றப் பெண்களைப் பலவீனப்படுத்தும் காரியங்களில் கனகச்சிதமாக ஈடுபடுவது எரிச்சலைத் தரும் வேதனையோ வேதனை! இது வெறும் பொறாமை என்பது மட்டுமல்ல தங்களை உணராமையுமாகும்.

பெண்கள் தாங்கள் வீடுகளில் வெளியுலக வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சீராகக் கையாண்டு நிலைமைக்கு ஏற்றவாறு மனோதிடத்துடன் தன்னை நிலை நிறுத்துதலே முழு உலகை உயர்த்துகின்ற முறைமையுமாகும். வல்லமை கொண்ட பெண்ணை வேண்டுமென்றே நலிவடையச் செய்தல் வளரும் செடியை வெட்டுதல் போலாகும். இது நல்லதல்ல.

பெண்கள் தாங்கள் எந்த நிலையில் இருக்கின்றோம் என்பதனைச் சுயபரிசோதனை செய்வார்களாக! உலகையே உற்பத்தி செய்யும் தாய் தனது படைப்புகளுக்கு முன் தோற்றுப் போவது தலைகுனிவதும் அடுக்காது. எடுத்துக் காட்டாக வாழ்வதே பெண்களுக்கு ஆண்டவன் கொடுக்கும் கட்டளையுமாகும். பெண்மை தோற்றுப்போதல் ஆண்மைக்கே இழுக்கு!

தினக்குரல் ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி 08-03-2009



RangaRakes
Tamilnavarasam.com



# மனைவிக்கு உதவுதல் வெட்கப்படக் கூடியதல்ல!

கணவன் மனைவிக்கு உதவக்கூடாது எனும் எண்ணமே ஆணவமிடுக்குடனான சுயநலமேயாகும். சில பெண்கள் கூட வீட்டுவேலைகளைக் கணவன் செய்வது அழகு அல்ல எனக் கூறித் தடுத்தும் விடுகின்றாள். மனைவிக்கு உதவுதலை எந்த சாஸ்திரங்களுமே தவறு எனச் சொன்னதுமில்லை. ஆயினும் மென்மைப் போக்குள்ள தயாள குணமுள்ள கணவனை அல்லல்படுத்தி வேலைவாங்கும் பெண்களும் இருக்கின்றார்கள். குடும்ப நலனுக்காக வீட்டிலும், வெளியிலும் உழைக்கும் பெண்களின் சிரமங்களை ஆண்கள் புரிந்துகொள்ள வேண்டும். மனைவிக்கு உதவுதல் வெட்கப்படக்கூடியதல்ல! மாறாக குடும்ப உறவில் நிறைந்த மாறாஇறுக்கமான இன்பம் கிட்டும்!

ஒருவர் தனது மனைவிக்குச் செய்கின்ற ஒரு சாதாரண உதவிகளைக் கண்டு, அவரது நண்பர்கள், உறவினர்கள், "பார்த்தீர்களா, எப்படி இருக்கு? ஒரு பெண்டாட்டி தாசனாக இவன் மாறிவிட்டானே என்று கேலி பேசுபவர்களை நீங்கள் சந்தித்திருப்பீர்கள்.





கணவனுக்கு மனைவி எவ்வளவோ பணிவிடை செய்கின்றாள். அவளுக்கு ஏதாவது தலையிடி, காய்ச்சல் வந்தால், கணவன் உதவி செய்வதில் என்ன கேலி கிண்டல் வேண்டியிருக்கின்றது? இப்படிப் பேசுபவர்கள் தமது சொந்த வாழ்வில் எப்படியிருப்பார்களோ; யார் கண்டார்கள்? மனைவிக்கு உதவாத செயல், ஆணவமிடுக்குடனான சுயநலமேயாம்.

திரைப்படத்தில் ஒரு காட்சி, மனைவிக்குச் சற்று சுகவீனம் வந்துவிட்டது. கணவன் சமையலறைக்குச் சென்று தேனீர் தயாராக்க முற்படுகின்றான். அப்போது மனைவி குறுக்கிட்டு " என்ன இது நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள், இது பெண்கள் சமாச்சாரம் போங்கள் நானே தேனீர் தயாரிக்கின்றேன்" என்கின்றாள்.

இப்படிப்பட்ட காட்சிகள் திரைப்படத்தில் காட்டப்படு கின்றமை சங்கடமாக இருக்கின்றது. தேனீர், உணவு தயாரிப்பது உட்பட வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் செய்வதுதான் ஒரு இல்லத் தலைவியின் வேலையா? கணவனுக்கு அதில் என்ன பங்கு உண்டு?

வீட்டு வேலை செய்வதில் என்ன வெட்கம் ஆணுக்கு வந்துவிட்டது? சில வீடுகளில் பெண்களே, கணவன் மீதுள்ள அதீத அன்பினால், அவனை இயங்கா மலேயே செய்து விடுகின்றார்கள். இதனால் அவளுக்குத் திடீர் என நோய் ஏற்பட்டுப்போனால் சுடுநீர் வைக்கத் தெரியாமலே அவன் திண்டாடிப் போகின்றான்.



RangaRakes Tamilnavarasam.com

குடும்பங்கள் சிலவற்றில் இல்லத் தலைவனின் உறவினர்கள்,தாயார் மற்றும் அவளுக்கு வேண்டப்பட்டவர்கள் ஏதோ ஒரு வழியில் அவரது நல் இயல்புகளை மாற்றமடையச் செய்ய தற்கால நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்கள் கொள்கைகளைக் கூறியே, அவர்களிடையே உள்ள பிணைப்பினைக் கத்தரிக்க அல்லது உறவில் நீண்ட இடைவெளியை உருவாக்க முயல்கின்றார்கள். சிலர் புரியாமல் பேசுவார்கள், பலர் வேண்டுமென்றே இப்படிப் பேசுவார்கள்.

வீட்டில் யாரும் உதவிக்கு இல்லை. மனைவிக்கு சுகவீனம். கைக்குழந்தை, அத்துடன் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் வேறு, இந்நிலையில் ஒருவன் என்ன செய்யமுடியும்?

“மனைவிக்குரிய வேலை இது” என வறட்டுப் பிடிவாதம் செய்ய முடியுமா? மனைவி, பிள்ளைகளுக்கு உடைகளைத் துவைப்பது, உணவு தயாரிப்பது, வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டியதை யார் செய்ய வேண்டும்?

ஒன்றை மட்டும் சிந்திக்க வேண்டும், வீட்டு வேலை செய்யும் கணவனைக் கிண்டலடிப்போர் அவர்கள் வீட்டின் எந்தப் பிரச்சினைக்கும் முகம் கொடுக்கப் போவதில்லை. இவர்கள் விமர்சனம் விஷமத்தனம்.



RangaRakes



ஆனால், ஓரிரு வீடுகளில் கணவனின் தயாள குணத்தைச் சாதகமாக்கி அவனை மென்மேலும் அல்லல்படுத்தும் பெண்களும் இருக்கின்றார்கள்.

வெளியே வேலைபார்க்கும் இல்லத்தரசிகளின் வேலைப்பளு மிகையானது. இவர்களது வீடுகளில் இருசாராருமே சிரமத்துடன் உழைக்க வேண்டியுள்ளது. ஆனால் இருவருமே கஷ்டப்பட்டு உழைக்கும் போது நாம் யாருக்காக உழைக் கின்றோம், எமக்காக பிள்ளைகளுக்காக எங்கள் உறவுகளுக்காக எனும் போது ஏற்படும் மன நிறைவு சொல்லில் அடங்காதது.

கணவனும் மனைவியும் இணைந்து தமது குடும்பத் திற்காகப் பரஸ்பரம் உணர்வு பூர்வமாக உணர்ந்து செயல்படும்போது அவர்களின் காதல் வாழ்வு சாஸ்வதமாகி, வியாபகமாகி இன்ப மூட்டுகின்றது.

நிகழ்கால உழைப்பினால் எதிர்காலம் ஒளிமயமாகின்றது. எத்தனையோ பேர் எதுவித பொருளாதார வசதி குறைந்தாலும்கூட, சிக்கனமாகவும், அதே சமயம் இருவரும் இணைந்து தொழில் செய்வதனால், தங்கள் வாழ்வினைச் செம்மைப்படுத்துவதைக் கண்டும் இருக்கின்றோம்.

அலுவலகப் பணி செய்ய போதிய கல்வித்தரா தரம் இல்லாத பெண்கள் கூட கணவன்மார்களின் பூரண ஒத்து



Tamilnavarasam.com

ழைப்புடன் சிறுசிறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு அதில் பூரணவெற்றி கண்டும் இருக்கின்றார்கள்.

ஆண் பெண் இணைப்பு உருவானதே, வெறும் உடல் சம்பந்தப்பட்டது அல்ல. இருவரும் ஒன்றாகி, உழைத்து முன்னேறுவதுமாகும்.இவர்களின் உழைப்பினால் மட்டுமே, சமூகத்தின்பொருளாதார பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கவும் இயலும். அதுமட்டுமல்ல தங்கள் பிள்ளைகளுக்கான கல்வியூட்டலுடன், நல்ல ஒழுக்கத்தினையும் பெற்றோர்களால் தான் தரமுடியும்.

எல்லோருக்கும் முன்மாதிரியானவர்கள் முதற்கண், பிள்ளைகளின் தாயும் தகப்பனாருமேயாவர். பெண்ணை ஆண் அடிமை கொள்ளும் எண்ணத்தையும்,ஆணைப் பெண் அடக்கி ஆள்பவள் என்ற கருத்தையும் புறம் தள்ள அன்பான பரஸ்பர ஒத்துழைப்பான வாழ்வு முறை நன்கு வழிவகுக்கும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
15-11-2009



RangaRakes
Tamilnavarasam.com

# வெறுமை

பருத்தியூர் பால. வயிரவநாதன்

வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 11

சிந்தனைக் கட்டுரைகள்

RangaRakes

Tamilnavarasam.com

# பொருளடக்கம்


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01) | கற்பனை | 21 |
| 02) | யாசகம் | 35 |
| 03) | ஓசை | 47 |
| 04) | கௌரவம் | 56 |
| 05) | பார்வை | 66 |
| 06) | வெறுமை | 77 |
| 07) | திருப்தி | 86 |
| 08) | கவர்ச்சி | 99 |
| 09) | குடும்ப அமைதி பெற பழங் கதைகளைச் சுரண்டாதீர் | 111 |
| 10) | குழந்தைகள் முன் வம்பளக்க வேண்டாம்! | 117 |
| 11) | கணவன் மனைவிக்கிடையே புரிந்துனர்வு அவசியம் | 122 |
| 12) | இல்லங்கள் தோறும் வீட்டுத்தோட்டங்களை அமைக்குக! | 127 |
| 13) | பொறுப்புக்களை கையளித்தல் | 132 |
| 14) | பேச்சுச் சுதந்திரம் | 138 |


RangaRakes







# கற்பனை

படிப்படியான சிந்தனை வளர்ச்சி மூலம் மனிதனின் கற்பனா சக்தி அற்புதமாக மெருகேறுகின்றது. கலைப்படைப்புக்கள் மட்டுமின்றி, விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களும் கூட மனிதமூளையின் சிறு எண்ணங்களே விஸ்வருபமாக உருப்பெருத்துப்பின்னர், தமது கற்பனை மூலம் கண்டவைகளை உண்மையாக்குவதில் விஞ்ஞானிகள் பலரும் வெற்றி கொள்கின்றார்கள். கற்பனை என்றும் பெயரில் நிஜவாழ்க்கைக்கும், நீதிக்கும் முரணான, குதர்க்கவாதங்களுடன் இயைபுபட்ட கருத்துக்கள் உலகிற்குச் சென்றடையக் கூடாது. எமது பழைய இலக்கியங்கள் போல அதி உன்னதமான சிருஷ்டிகளை இன்னமும் உருவாக்க முடியாமல் இருக்கின்றோம். நல்ல கற்பனைகளால் மனம் விசாலமடைகின்றது. சந்தோஷம் எம்மை ஆட்கொள்கின்றது.

உலக மகா இலக்கியங்கள், காப்பியங்கள் கலைப்படைப்புக்கள் போன்ற அற்புத சிருஷ்டிகள் எல்லாமே கற்பனை என்கின்ற வற்றாத நற்சிந்தனையூடாகவே காலம் காலமாக மாந்தர்க்கு வழங்கப்பட்டு வருகின்றன.



Tamilnavarasam.com

கற்பனையில்லாத மனிதர் எவராவது இருக்கின்றார்களா? தான் செய்ய வேண்டிய கருமங்களைப்பற்றிச் சிந்திப்பதும், அதனை எவ்வாறு முடித்து வைப்பது பற்றி நாம் தினம், தினம் மனதில் உருப்போட்டுக் கொண்டிருக்கின்றோம். செய்ய விரும்பி வெறும் கற்பனையோடு காலம் தள்ளுவது கனவோடு சீவிப்பது போலத்தான். நல்ல கற்பனை என்பது வேறு, மனக்கோட்டை கட்டுதல் என்பது வேறு, உருவகப்படுத்தும் ஆற்றல் இன்றேல் செய்யப்படும் கருமம் இலகுவாக்கப்படமாட்டாது அல்லவா? சில கருமங்களை அனுபவ ஞானம் மூலம் எவ்வித சிரமமும் இன்றி முடித்து விடமுடியும். எனினும் ஆரம்ப அறிவை வளர்க்க ஒருவன் எடுத்த கால அளவையும் பெற்ற சிரமங்களையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

படிப்படியான சிந்தனை வளர்ச்சி மூலம் மனிதனின் கற்பனா சக்தி அற்புதமாக மெருகேறுகின்றது. சிலர் இயல்பாகவே சின்னஞ்சிறு வயதிலேயே கவி புனைய வும், பிரமாதமாகச் சித்திரம் வரையவும், கலைப் பொருட் களை உருவாக்கவும் கற்றுத் தேர்ந்து விடுகின்றனர். “எப்படி இந்த வயதில் இந்தச் சின்னப் பையனுக்கு இசைஞானம் வந்தது” என்று நாம் இளம் இசைக் கலைஞனைப் பார்த்து வியந்து போற்றி இருக்கலாம்.

ஆர்வமும், முயற்சியும் உள்ளவர்க்கு நல்ல கற்பனை வளம் எளிதில் ஊற்றெடுத்துவிடுகின்றது. கற்பனை உலகில் சதா சஞ்சரிக்கின்ற கலைஞர்கள் உலகை மறந்த



RangaRakes



உணர்வுடன் புதுப்புதுப் படைப்புகளை உருவாக்கி உலகிற்கு வழங்கும் ஒரு கொடையாளியாகவே மாறி விடுகின்றனர்.

கலைப்படைப்பு மட்டுமல்ல விஞ்ஞானக்கண்டு பிடிப்புக்கள் கூட மனிதமூளையின் சிறு எண்ணங்களே விஸ்வரூபமாக உருப்பெருத்துப் பின்னர் தமது கற்பனை மூலம் கண்டவைகளை உண்மையாக்குவதில் முனைப்பாக நின்று விஞ்ஞானிகள் பலர் வெற்றி கண்டுமுள்ளனர்.

ஆரம்பத்திலேயே இதுவும் நடக்குமா? என்ற எண்ணம் கொண்டால் விடாமுயற்சி என்கின்ற சக்தி அவனிடம் இருந்து விடைபெற்று ஏகும். மனித சமூகத்திற்கு உகந்த எண்ணங்களை நாம் சதா எண்ணினால் தான், நாம் நிறைவேற்றக்கூடிய தெளிந்த கற்பனை ஊற்று எமக்குக் கிடைக்கும்.

“எனக்குக் காசு வந்துவிட்டது இதோ பெரிய மாளிகையைக் கட்டிக்கொண்டிருக்கின்றேன்” என்று தனக்கு சொல்லியபடியே அது நிஜம் என்று தனக்குள் கருதியே வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கும் பேர்வழிகள் கூட இருக்கத்தான் செய்கின்றார்கள். இன்று யதார்த்தத்திற்கு ஒவ்வாத உண்மை என்பதே அறவேயற்ற கற்பனை என்கின்ற பெயரில் கதைகளும், திரைப்படங்களும், பொய்மையான தகவல்களும் மக்கள் முன்னே நடித்துக் கொண்டிருக்கின்றன.



Tamilnavarasam.com

கற்பனை என்கின்ற பெயரில் நிஜ வாழ்விற்கும் நீதிக்கும் முரணான குதர்க்க வாதங்களுடன் இசைவுபட்ட கருத்துக்கள் மக்களிடையே பரப்பப்பட்டும் அதனையே சமூகமும் ரசிப்பதும் ஏற்பதுமாக இருப்பது எவ்வளவு கவலை தரும் விடயம் தெரியுமா?

சமூக நீதி செத்துப் போவதைக்கூடச் சிலர் ரசிக்கின்றார்களோ என எண்ணத்தோன்றுகின்றது. எல்லா கேவலமான நடத்தைகளையுமே அது இன்று உண்மையாகவே நடப்பதாக மாயா வாதம் செய்கின்றார்கள்.

"நாங்கள் சொல்வது வெறும் பொய்யான கற்பனை என்று சொல்கின்றீர்களே. அதில் உண்மையை அறியுங்கள் என்று சொல்லி இளைய தலைமுறையினரை நோக்கி வீசப்படும் ஆபாசமான, தகாத கற்பனைக் கதைகளும், இலக்கியம், கலை, என்ற பெயரில் பல தரக்குறைவான பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் நஞ்சாக அதிகரித்து விட்டன. இவை கழுகுபோல் உலகைச்சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றன.

நற்சிந்தனை அற்றுப் போனவர்கள் நல்ல கற்பனைக்கும் தூய்மைக்குக் கருத்துக்கும் பேதம் தெரியாமல் காசைச் சேர்ப்பதற்காக வேஷம் போடுகின்றார்கள்.

பரிணாம வளர்ச்சி பற்றி என்னதான் கூறிவந்தாலும் கூட பழைமையான கலை, இலக்கியபடைப்புகள் போல் எம்மால் இன்னமும் ஏன் சிருஷ்டிக்க முடியவில்லை?





இன்று எந்த நாட்டின் பழைய காலத்து சிற்பங்கள், கோட்டைகள், நீர்ப்பாசனக் கட்டுமானங்களைப் பாருங்கள். பாரிய விஸ் தீரணமான எத்தனை ஏரிகளைக் குளங்களை முன்னோர்கள் ஆக்கிச்சென்றார்கள்? உலகமகா அதிசயங்களில் ஒன்றைத் தானும் முன்னேற்றமடைந்து விட்டோம் என்று கூறும் நாம் அதை செய்துவிட்டோமா?

அத்துடன் பழையகாலத்தில் பெரிதாக வசதிகள் இல்லை என்று வாதிட்டு நாகரீக உலகில் கர்வமாகத் திரியும் எம்மவர்கள் முன்னைய கட்டிடங்கள் சிற்பங்களில் ஒன்றைத் தானும் அல்லது அதுபோலவே வேறு கலைப் படைப்புக்களை உருவாக்க முடியாமல் இருக்கின்றதே ஏன்? நல்ல இலக்கியவாதிகளும் அறிஞர் பெருமக்களும் இருந்து வாழும் இந்த உலகில் கற்பனை வளமிக்க முன்னைய பழங்கால இலக்கியம் போல் அதன் சிறுபகுதியின் தரத்திலாவது சிருஷ்டிக்க முடிகின்றதா?

அர்ப்பணிப்பும் சிரத்தையும், உறுதியான தூய மனோ நிலையுடன் மேலான இறை சக்தியினாலேயே இவ்வாறான கற்பனை நயம், வளம், மிக்க, இலக்கியப் பொக்கிஷங்களை முன்னோர் எமக்கு உவந்து அளித்துப் போயினர்.

மூடநம்பிக்கையும் முற்போக்கு சிந்தனையுமற்றவர்களே "முன்னோர்கள்" என்று ஒரு தப்பான அபிப்பிராயம் இன்னமும் உலவுகின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

ஒவ்வொரு காலத்திலுமே அக்காலத்து மாந்தர்களால் வாழ்ந்து வந்த காலமானது அப்போதைய பொற்காலம் தான். இருக்கும் காலத்தை மட்டும் எடுத்து எக்காலத்தின் தாற்பரியத்தையும் உணராமல் பழமையை எதிர்ப்பதும் அதன் பொருட்டு உண்மை நிலையை உணராமல் ஒரேகோணத்தில் உலகை உற்று நோக்குதலும் நல்ல வளர்ச்சி நிலைக்கு உவப்பானதல்ல. பழமையில் புதுமையை நோக்குதலும் புதுமைக்குள் புதுமையினை மெருகு சேர்ப்பதுமே அழகாகும்.

ஏன் எனில் சிந்தனை உருவாக்கல், கற்பனைகள் எல்லாமே எல்லாக் காலத்திலும் மனிதனால் கண்டு பிடிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இவை எவ்போது தான் ஓய்ந்து போயிற்று?

ஆயினும் பண்பாடு, கலாசாரங்கள் முழுமையாக அதன் வடிவம் முழுவதும் சிதையாமல் இருக்கின்றதா என்றும் கேட்கத் தோன்றுகின்றதல்லவா?

போரும் போராட்டங்களும், சச்சரவுகளும் எல்லாக் காலத்திற்குமான நிரந்தர பிரச்சினைகள் தான். மனித மனோநிலை அவனது எண்ணங்கள் எதிர்பார்ப்புக்கள் எல்லாமே அவன் வாழும் சூழல், வெளியார் வரவுகள், தாக்கங்களால் மாறுபட்டேவிட்டன.



RangaRakes



எனவேதான் காலத்திற்குக்காலம் தனிமனித கற்பனை ஆற்றல்கள் கூட அவைகளின் ஆழம் செறிவுகள் மாறுபாடாகவே தோன்றுகின்றன.

நிம்மதியுடன் வாழுகின்றவனின் கற்பனா சக்தியும், சதா துன்பத்துடன் அச்சத்துடன் சீவிக்கின்றவனின் யோசனைகளும் ஒன்றாக இருக்காது என்பார்கள். அனுபவங்களுக்கும் ஆற்றல்களுக்கும் ஏற்ப கற்பனைகள் மாறுபாடாக வித்தியாசமாக அமையும்.

ஆனால் துன்பத்துடன் வாழும் "கலைஞன்" அதீத ஆற்றல் வளம்மிக்க படைப்பாளியாக இருப்பது ஒன்றும் புதினமல்ல. சாதாரண மனிதனுக்கும் கற்பனை வளம் மிக்கவனுக்கும் நிறைய வேறுபாடு உண்டு.

எந்தத் துன்பங்களிலும் சோதனைகளிலும் பெரும் படைப்பாளி தன் படைப்புக்களை நிறுத்தி விடுவதுமில்லை, உலகிற்குஅருமருந்தாகவும்,படிப்பினையும், இனிமையூட்டும் இலக்கியம் படைத்தவன் செத்துப்போவது மில்லை.

தீர்க்கதரிசனமாகவே பின்னர் நிகழப்போகின்ற சங்கதிகளைத் தம் தெய்வீக அருள் மூலம் தன் கற்பனா சக்தியால் சொல்லிவிடும் ஆற்றல் கவிஞர்களுக்கு உண்டு. கனவாகத்தெரிந்த விஷயங்களை நம்பமுடியாது. ஆனால் தெய்வீக கிருபை பெற்றவன் சிந்திய சொற்கள் பிழைத்துப் போவதுண்டோ? சொல்லப்போனால் ஆன்மீகவாதிகள்



Tamilnavarasam.com

போல் படைப்பாளிகளான கலைஞரும் கவிஞர்களும் சொல்லிச் செய்கின்ற வேலைகள் யாவும் சித்து வேலையோ எனப் பிரமிக்க வைக்கின்றனவே?

எந்நேரமும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் அறிவாற்றல் மூலம் அவர் தம் அனுபவ வாயிலாகவும் ஆழ்மனதின் தூய்மை வாயிலாகவும், சொல்லப்படுபவைகள் கற்பனை போன்ற நிஜங்களே தான்!

இலக்கிய ரசனைக்காக சொல்லப்படும் வரி வடிவங்கள் எம்மைச் சந்தோஷ மூட்டவும் இயற்கையினை, மானுட இயல்பை கலையுணர்வை மேலோங்கச் செய்வதற்காகவே புனையப்பட்டுள்ளன. இவைகளைப் வெறும் பொய் எனக் கருதாது. இதயங்களைச் சுவீகரித்து இன்பங்களை, ஏன் பிறர் துன்பங்களைக்கூடப் பகிர்ந்து கொள்வதற்காகப் படைக்கப்பட்டதே என அறிக!

கரிப்போடும் வெறுப்போடும், உலகை நோக்காது விருப்போடு பார்ப்பவனே உண்மைக் கலைஞனாவான். மக்களை நேசிக்காதவன் தூய கலைஞனாகமாட்டான். எனவேதான் நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கின்ற கலைஞர்கள், கவிஞர்கள் எல்லோருமே மென்மையான உள்ளம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

எனினும் உலகில் நடக்கும் அத்துமீறல்கள் அநியாயங்களைக் கண்டுவிட்டால், அதனைச் செய்கின்ற எத்தரத்த





வராயினும் ஏன் மன்னர்கள், ஆட்சியாளர்க ளேயாயினும், கொதித்தெழுந்து விடுகின்றனர். அந்நேரத் தில் அவர்கள் சொல்கின்ற வார்த்தை அம்புகள் இறைவன் தொடுத்த பாணம் போலவே ஆழமாக, ஊடுருவித் தைத்து விடுகின்றனவே!

முற்காலத்தில் புலவர்களை மாமன்னர்கள் தலைமகன்களாகக் கௌரவித்தார்கள். அவர்கள் மன நிறைவுடன் வாழ்த்தினால் அந்நாடு வாழ்ந்து செழித்தோங்கும் என அனைவருமே முழு நம்பிக்கை கொண்டனர். புலவர்கள் அருள்கூர்ந்து தம்மைப்பாட வேண்டும் என அனைத்து மன்னர்களுமே எதிர்பார்த்து அவர்களுக்கு வேண்டிய பரிசில்களை அளித்தும் வந்தனர்.

தூய மாந்தரின் சொல் செயல் எல்லாமே களங்கமற்றது. எனவே அவர்கள் வாக்கு கற்பனையானது மாயையானது என எவரும் அதனைச் துச்சமென எண்ணியதும் கிடையாது.

இன்று எம்மத்தியில் உள்ள நல்ல படைப்பாளிகள் வெளி உலகிற்குத் தெரியாமலேயே வாழ்ந்து மறைந்து போவது வேதனையானது இவர்களது வளம் பொருந்திய ஆக்கங்களை உலகம் கண்டுகொள்ளாமலே விடுவது அவர்களை விட இந்த அவனிக்குத்தான் பெருநஷ்டமானது என்பதை மறுக்க முடியாது.



RangaRakes
Tamilnavarasam.com

எங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அற்புதமான கலைஞர்கள், கவிஞர்கள், புத்திஜீவிகளின், வியத்தகு ஆக்கங்களை மக்கள் முன்கொண்டுவர அனைத்துத்தரத்து மக்களும் முக்கியமாக பத்திரிகைகள், சஞ்சிகைகளும் முயற்சிசெய்ய வேண்டும்.

எங்காவது ஒரு மூலையில் யாருக்கும் தெரியாமல் அமைதியாகக் கலைப்படைப்புக்களை எழுத்து ஆக்கங்களை உருவாக்கும் பிரம்மாக்களை அரவணைப்பது என்பது இந்த உலகிற்குப் புது உருவம் வழங்கச்செய்தலுக்கு நாம் வழங்கும் பேருதவியுமாகும். கருமங்கள் ஆற்றுவோனைச் சிரமம் கருதாது, ஊக்குவித்தல் சமூகப்பணியுமாகு மன்றோ!

மனம் விசாலமானவர்களின் சொல், எழுத்து, கற்பனை அத்தனையுமே சுத்தமானது என்பது அவர் தம் செயல்மூலம் தெளிவாகிவிடும். நீங்கள் ஒரு சிறந்த கலைஞனிடம் அல்லது, கவிஞனிடம் பேசிப்பாருங்கள்! உங்கள் உள்ளத்தில் உள்ள சஞ்சலங்கள் அத்தனையும் உங்களை விட்டுப் போனது போன்ற உணர்வைப் பெறுவீர்கள். இவர்களின் அனுபவஞானம் சுவாரஸ்யமானது தான்.

எப்பொழுதும் சந்தோஷமாக கலகலப்பாக இருப்ப வர்களின் எண்ணங்கள் எங்கள் மீதும் தொட்டுக் கொள்வ தால் நாமும் அவ்வண்ணமே மாறிப்போவதில் வியப்பில்லை அல்லவா?





சிறந்த நுட்பமான கற்பனைகள் இல்லாதுவிடின் ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் எப்படி ஒருவரிடம் இருந்து பிரசவிக்க இயலும்? நன்கு திட்டமிடல்கூட கற்பனையின் ஒரு உருவம் தான். இப்படித்தான் செய்ய வேண்டும் என்கின்ற உருவாக்கல் என்பதே மனதில் எழும் ஒரு படம்தானே?

ஆரம்பத்தில் எழுந்த கற்பனை வடிவம் பிரகாசமாக உள்நின்று உருவாகி அது முழுமையாகும் போது நீண்ட சிந்தனை ஆராய்ச்சிகளே மக்கள் விரும்பும் தேவைப் படுகின்ற கண்டுபிடிப்புமாகின்றது.

எனவே, கற்பனை எனும் நல்வித்து சிறப்பாக உருவானால் எத்தனையோ நல்ல ஆய்வுகளை மக்களுக்கு நலம்தரும் புதிய தேடல்களை உருவாக்க முடியும் அல்லவா?

கனவையும் கற்பனையையும் ஒரே பார்வையில் சிலர் பார்க்கின்றார்கள். உண்மையில் இவையிரண்டிற்கும் இடையில் நிரம்ப வித்தியாசங்கள் உண்டு.

நாம் நினைத்தபடி கனவு காணமுடியாது. ஆனால் நினைத்தவாறு எப்படி வேண்டுமானாலும் கற்பனை உலகில் சஞ்சாரம் செய்யமுடியும்.



RangaRakes

Tamilnavarasam.com

மேலும் நாம் எம் அறிவுக்கும் ஆளுமைக்கும் உகந்தவாறு கற்பனையை ஒரு கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியும். ஏதாவது முடியாத வீண் எண்ணங்களில் லயிப்பதை சதா உருப்போட்டு எம்மை அது வசப்படுவதைக் கட்டுப்படுத்திவிடலாம். ஏன் அறவே அகற்றியும் விடலாம். ஆனால் நாம் கனவைக் கட்டுப் பாட்டினுள் கொண்டு வரமுடியுமா? மேலும் விழித்திருக்கின்ற வேளையில் கற்பனை உருவாகின்றது. உறக்கத்தில் கனவு வந்து மறைகின்றது.

நனவில் நிகழும் நிகழ்வுகள் எண்ணங்களே கனவாகச் சித்திரம் போடப்படுகின்றது என்றும் கூறுவர் எனினும் வெளிப்படையாகக் கனவு என்பது ஒரு மாயா ஜாலமானது. அந்தக் கணப்பொழுதில் அது எங்களை மயக்கிவிடுகின்றதே.

கற்பனை, நனவுடன், நனைந்து கொள்வதால், எமது சொந்த நிலையை, எந்தத் தருணத்திலும் எம்மால் உணர்ந்து கொள்ள இயலும் அல்லவா? சின்ன வயதில் நல்ல கற்பனையுடன் தன்னை வளர்த்துக் கொண்டவர்கள் காலப்போக்கில், நிஜமாகவே வாழ்க்கையில் உயர் நிலையை அடைந்து விடுகின்றார்கள்.

எவ்வித உழைப்பும் இன்றி தங்கள் வாழ்வின் உயர் நிலைபற்றி கனவுடனும் கற்பனையுடனும் வாழ்ந்தால் வாழ்க்கையின் சிறப்பான உயர்வினை எப்போது பிடிப்பது?





மனதை ஸ்திரப்படுத்தாத வாழ்வில் உழைப்பினைக் கொடுக்காத கற்பனை வாழ்வில் என்ன பயன் இருக்கப் போகின்றது? மேலும் தூய சிந்தனையற்றவர்களது கற்பனை எதிர்பார்ப்புக்கள், எல்லாமே மன அமுக்கத்தினையும் பழி உணர்வினையுமே ஏற்படுத்துவதனால் அந்நிலையில் இருந்து உடன் விலகாதவரை உள்ளத்தில் களிப்பேருவகை இவர்களைச் சென்றடைவதுமில்லை.

இன்று மனிதனின் கற்பனை வளத்தினால் உருவாக்கிய கருவிகளே மனித இனத்தையே இயக்கிக் கொண்டிருக்கின்றது. பிரபஞ்சம் பற்றிய அறிவைக்கூடத் தன் அதீத கற்பனைமூலமும் தான் பெற்ற கல்விமூலமும் காணத்துடிக்கின்றான்.

உண்மைகளைத் தேடக்கூடக் கற்பனை தேவைப் படுகின்றது.கேட்டல் படித்தலுடன், சுயமாக மனித இனம் பரந்த ஞானத்தைத் தன்னுள் தேடிக்கொண்டேயிருக்கின்றது. "இந்த ஆய்வுக்கு ஓய்வேதுமில்லை".

தாம் கண்ட ஒரே விடயத்தையே பலர் பலவிதமான வடிவில் எமக்குச் சொன்னாலும் கூட ஒவ்வொரு கருத்திலும் ஏதோ ஒரு புது மெருகு தோன்றுவதை நாம் மறுக்க இயலுமா? இதுதான் கற்பனைச் செறிவும் புதியன தேடமுனைதலுமாகும். ஆரம்பத்தில் சர்வசாதாரணமாகத் தோன்றும் விடயங்களே, முடிவில் மிகப்பெரிய உருவில் பிரமிக்கத்தக்க கண்டுபிடித்தலாகவும் மாறலாம்.



RangaRakes

Tamilnavarasam.com

ஒருவரது உருவாக்கல் திறனையும் கற்பனையின் அற்புத பெறுபேறுகளையும், மற்றவர்கள் மதிப்பு அளிக்க வேண்டும். எம்முன் இருக்கின்ற ஒவ்வொருவரின் தனித்துவத்தை ஆற்றல் வெளிப்படுத்துகையை காணாமல் கண்டு கொள்ளவிரும்பாமல் ஒளிந்து கொள்ளவேண்டாம்.

எங்களால் முடியும். அதேபோல் எம் முன்னே உள்ளோரும் பல்துறை ஆற்றல்களைச் செய்யவல்லவர் என்பதை உணர்வோம். எல்லோர்க்கும் எல்லாமே பொதுவாக ஈந்தான் ஈசன். எனவே பரந்துபட்ட சிந்தனையுடன் புத்தம் புது கற்பனைகளை உலக உருவாக்கலுக்காக படைக்க எண்ணுமின்! என்றுமே உயிர்ப்புடன் பூமியை பூக்கச்செய்வது அனைத்து உலக அங்கத்தவர்களின் ஒப்பற்ற கடமையுமாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
17-09-2006







# யாசகம்

சிக்கன வாழ்வு வாழ்பவன் கையேந்தி நிற்கமாட்டான். இருப்பதை வைத்துப் பொறுப்புடன் சேமித்து அடுத்த வேளை பற்றிச் சிந்திப்பவனே சிறந்த மனிதனாவான். தன்மானம் என்பது ஏழைகளுக்கும் சொந்தமானது. ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இவர்களுக்குச் செய்த உதவிகளைச் சுட்டிக்காட்டி எண்ணி நகையாடுதல் குரூர புத்தி. யாசகம் என்பது எல்லா நேரங்களிலும் மோசமானது என்று சொல்லக் கூடாது. இருப்பவர்களிடம் இருந்து பெற்று, இல்லாதவர்களுக்கும் வழங்குவதில் என்ன தப்பு? சும்மா படுத்துக் கிடப்பவர்கள் கூட தங்களைப் பல்லக்கு கொண்டு தூக்க வேண்டும் என்று கௌரவமாக யாசகம் கேட்கின்றார்கள்.

பணம், பொருள் கேட்டுக் கை நீட்டுதல் மட்டும் யாசகமாகுமா? உடல் வலு இருந்தும், மனவலு இன்றி, பிறர் தயவில், தொங்கி வாழுதல் கூட இங்கிதமற்ற யாசகம் அன்றி வேறென்ன சொல்வீர்!



RangaRakes
Tamilnavarasam.com

இருப்பவன், இல்லாதோர்க்கு வழங்குதல் அறநெறி யாகும். இயலாத நிலையில் உள்ள வறியோர்க்கு அவர் தம் நிலையுணர்ந்து செய்தலே தர்மம். சோம்பலை யும், சோர்வையும் வியர்வை சிந்தி உழைக்க வைக்காத நிலைமை யையும் எவர் உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்களோ அவர் இறைவனுக்கே துரோகம் இழைத்தோராகக் கருதப்படுவர்.

"இல்லாமை, இல்லாத நிலை வேண்டும் இறைவா" எனக் கோருபவர்கள், எல்லோரும் இறைவன் விருப்பப்படி மனதையும், உடலையும் நம்பி உழைத்தால் கடவுளின் கருணையைப் பெருவாரியாகப் பெற்றே தீருவர்.

அன்னை தெரஸா எனும் தெய்வத்தாயார் இருப்ப வரிடம் இரந்து பெற்று இல்லாதோர்க்கு வாரி வழங்கினார். அவரது கோரிக்கை யாசகம் அல்ல, சேவை என்பதை நாம் அறிவோமாக! பணம், பொருள் கொடுத்தல் மட்டும் தர்மம் அல்ல, தம் உடலினால் ஆதரவற்றோரைப் போஷிப்பது அவர்களை ஆசீர்வதித்துக் கருணை காட்டுவதுகூட மானுட தர்மநெறியேயாகும். இதனையே அன்னை தெரஸா அவர்கள் உலகிற்குச் செய்துகாட்டினார்.

ஒரு தடவை அவர் புகையிரத வண்டியில் பயணம் செய்தபோது பயணிகள் தாம் உண்ணும் உணவினை விரயம் செய்வதைக் கண்டதும் அவர் உணவை விரயம் செய்யாது மீதி உணவைப் பக்குவமாகப் பொதி செய்து





தருமாறு கேட்டுப்பெற்று உடனடியாகவே அதனை ஏழை வறியோர்க்கு வழங்கியும் விட்டார்.

இது விடயத்தில் எமது நாட்டின் திரு அருட் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பொது நலப்பணி போற்றுதற்குரியது. ஆதரவற்றவர்களுக்கு அம்மையார் செய்த பணி எந்நாளும் போற்றுதற்குரியது. இன்று உலகில் உணவிற்காக ஏங்கும் எத்தனை ஏழைகள் இருக்கின்றார்கள். அவர்களை புவியியல் ரீதியாகத் தாம் வாழும் நாட்டில் தொழில் செய்ய வாய்ப்பு இன்றி, வரட்சியால் தமது வாழ்க்கையையே இழந்து மிரட்சியுடன் இறப்பை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகையோர்க்குப் பணம் படைத்த நாடுகளின் மக்கள் தாம் வீண் விரயமாக்கும் பொருளில் ஒரு சிறு பங்கையாவது சேகரித்து வழங்கினால் வறுமை ஒழிந்து விடுமல்லவா?

ஒருவர் வறுமையால் வாடுவதைவிடக் கொடுமை வேறில்லை என்பர். உண்மையில் வறியோர்களை உருவாக் குவதே பெரிய பாவச்செயலாகும். இன்று தாம் சுரண்டப் படுவதை தமது உழைப்பு பிடுங்கப்படுவதை இழக்கப் படுவதை உணராத அப்பாவி ஜீவன்கள் யாசகம்கேட்டுப் பெறும் தனவந்தர்களை முதலாளிகளைச் சரணடைவது மனம் பொறுக்க இயலாத கொடுமையன்றோ!

உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுத்தாலே போதும் இன்றுள்ள பெரும்பாலான வறியோர் பிறரிடம் யாசகம்



RangaRakes

Tamilnavarasam.com

கேட்பது போன்ற கொடுமைகள் இல்லாது போய்விடும். முழுமையாக உழைக்காதவனுக்குப் பரிதாபப்பட்டுப் பிரயோசனம் இல்லை. மற்றவரின் இரக்க சிந்தனையினால் தனது வாழ்க்கையைக் கருவோடு ஜீரணம் செய்வது புத்தி கெட்ட சோம்பறிகளின் செயல்தான் என்பதை இத்தகை யோர் எப்போதுதான் உணரப்போகின்றார்களோ தெரிய வில்லை.

இன்னொருவரது உழைப்பைக்கொண்டு தான் வாழ எண்ணுதலும் பிறர் பணத்தைக் கூசாமல் கேட்பதும் ஒரு தன்மானமற்ற செயல் என்று யாசகம் கேட்பவர் உணர்வதும் இல்லை.

உலக ஷேமத்திற்காகத் துறவு மேற்கொண்டவர்கள் மக்களிடம் வந்து யாசகம் மேற்கொள்ளுதல் அவர்கள் தமக் காக செய்யும் பணியல்ல. ஞானிகள் தமக்காக உணவைத் தவிர வேறு எந்த விதமான ஆடம்பரங்களையும் கேட்பது மில்லை. ஆனால் இன்று பிச்சைகேட்டு வருபவர்கள் நவீன உத்திகளைக்கையாண்டு மக்களை மதி கெட்டவர்கள் என எண்ணி நடந்துகொள்கின்றார்கள். ஏதாவது பொது நிதி கேட்டு வருபவர்கள் போலவும் தமக்கு அல்லது குடும்பத்தி னர்க்கு நோய் வந்து அதன் பொருட்டு உதவி கேட்பதாகவும் பலர் வந்து மக்கள் முன் போலி யாசகம் கேட்கிறார்கள்.

சமூக நல நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் பெயரில் நிதி மோசடி பண்ணுகின்ற பேர்வழிகள் பற்றி





அவ்வப்போது செய்தித்தாள்களில் செய்திகளை நாம் படித்திருக்கின்றோம். என்றாலும் மக்கள் இதுவிடயத்தில் முழுவிழிப்பாக இருப்பதாகத் தெரியவில்லை. மக்களின் இரக்க சுபாவத்தைத் தமக்கு ஆதாரம் ஆதாயம் என்று கருதி இத்தகைய சமூக விரோதச்செயல்களை செய்பவ ர்களை சனங்கள் இனம் கண்டேயாக வேண்டும்.

"குறிப்பு அறிந்து தரம் உணர்ந்து வழங்கலைச் செய்" என்று பெரியவர்கள் சொல்வர். இன்று வசதிபடைத்த வர்கள்கூட இல்லாதவர்கள் போலவும், ஒன்றுமே இல்லாத வர்கள் கூட வசதிபடைத்த செல்வந்தர்களாகவும் தம்மைக் காட்டி நிற்கின்றனர்.

வெளியில் உள்ள பணக்காரனைப் பார்த்து அதே போல் தானும் வாழ ஆசைப்பட்டுத் தன்னிலை மறந்து வெளி ஆடம்பரத்திற்காக உல்லாச வாழ்வு வாழ்ந்து தமது கைப்பொருள் அனைத்தையும் இழந்தவர்கள் எத்தனையோ பேர்கள் உண்டு தெரியுமா?

முடிவில் இவர்கள் கையேந்தி பிறர் முன் நிற்பதும், அவர்களைப் பிறர் அவமதிப்பதும் எத்தனை துன்பக ரமானது என்பதை இவர்கள் ஆரம்பத்திலேயே ஏன் உணராமல் போனார்கள்? பிறரை எதிர்பார்க்காமலும் தன் நிலை அறிந்தும் வாழ்பவர்கள் எவருமே அவமானப்பட வேண்டிய சந்தர்ப்பமே எழுவதில்லை.



RangaRakes Tamilnavarasam.com

கௌரவமாக வெளித்தோற்றத்துடன் தம்மைக்காட்டி ஏமாற்றி எந்த உதவியைக் கேட்டாலும் அவர்களின் வேடம் களையப்படுவது மட்டும் உறுதியானதாகும்.

இன்று உலகு எங்கும் ஆட்சியைப் பிடிக்க அரசியல் வாதிகள் மக்களிடம் வாக்குகளைக்கேட்டு வாக்குறுதி அளிக்கின்றார்கள். ஆனால் இவர்களில் பலரும் தமது வாக்குகளை பதவிக்கு வந்த பின் அழித்து விடுகின்றனர். பொய்மையானவாக்கு அளிப்பதும் அதனைக் கேட்பதும் யாசகம் அன்றி வேறென்ன சொல்ல முடியும்? பணத்தை விட கொடுக்கும் வாக்கு எவ்வளவு பெரிது? என்பதை இருசாராரும் மறந்து போகின்றார்கள். தமது வாக்குகளை வேண்டப்படாத வேட்பாளர்க்குக் கொடுத்துப் பின்னர் வெட்கப்பட்டு வேதனைப்படும் மக்கள் பின்னர் அடைகின்ற பலாபலன்களை அனுபவித்துக்கொண்டேயிருப்பர். ஆனாலும் தொடரும் இந்த நாடகங்களின் அரங்கேற்றங்கள் முடிவில்லா துன்பியல் நிகழ்வுகளாகவே இன்னமும் நடந்து கொண்டிருப்பது அனுமதிக்கக் கூடாத அசிங்கமானதே!

கல்விக்காகப் பிச்சை எடுப்பதில் தப்பேதுமில்லை எனச் சான்றோரே கூறியுள்ளனர். ஆனால் கல்வி கற்பதற் காகச் செல்லும் மாணவர்களிடம் கல்வி நிறுவனங்கள், கல்விக் கூடங்கள் பிச்சை கேட்பது வெட்கக் கேடானது அல்லவா! சொல்லப்போனால் இதுகூட ஒரு வகை இலஞ் சம் தான். அரசாங்கம் எத்தனை திடீர், தீவிர நடவடிக்கைகள்





மூலம் இத்தகையோரைக் கையும் மெய்யுமாகப் பிடித்தும் கூட இன்னமும் இந்த சமூக விரோதச் செயல்கள் ஓய்ந்த பாடில்லை.

ஒருவன் வாழ்க்கையின் பெரும் இலட்சியமாகக் கருதப்படும் கல்விச்செல்வத்தை அளிக்கும் கல்விக்கூடங்கள் பொருட்செல்வத்தினைப் பலவந்தமாகக் கேட்கின்ற போது மனம் அருவருப்பு அடைவதில்லையா? தன்னால் இயன்றவரை கொடுத்தும் இருப்பவரிடம் கேட்டு இல்லாதவரிடம் கொடுத்து வாழ்தல் என்பது தாழ்ந்த நிலையில் உள்ளோரைத் தாங்கும் அறப்பணியாகும். இன்று பல அரசு சாரநிறுவனங்கள் பலவும் வசதி படைத்த நாடுகளில் இருந்தும் பொது அமைப்புக்கள் மூலமாகவும் நிதிகளைப்பெற்றுப் பல ஆக்க பூர்வமான பணிகளைச் செய்து வருகின்றன.

கஷ்டப்படும் மக்கள் எங்காவது சென்று கடன் கேட்கின்றார்கள். கடன் கேட்பது கூடச் சிலவேளை யாசகம் போலத் தெரிகின்றது. கடன் கேட்பவர் கூச்சப்பட்டு அவஸ்தை ப்படுவதும், கடன் கொடுக்கும் சிலர் அவர்களை அற்ப புழுக்களைப்போல் பார்ப்பதும் எவ்வளவு பரிதாபமான விஷயம் அல்லவா? கொடுப்பவன் கை உயர்ந்து அதனைப் பெறுபவன் கரம் தாழ்வதும் ஒருவரின் இயலாமை மூலம் கிடைக்கும் அனுபவங்களே!. இல்லாமை, இல்லாது ஒழிந்தால், புவனியில் ஏது துன்பம் ஐயா!



RangaRakes
Tamilnavarasam.com

மனதில் வரட்சியின்றி வாழ வேண்டும். சிக்கன வாழ்வு வாழ்பவன் கையேந்தி நிற்கமாட்டான். இருப்பதை வைத்துப் பொறுப்புடன் சேமித்து அடுத்த வேளைபற்றிச் சிந்திப்பவனே சிறந்த மனிதனாவான்.

தன்மானம் என்பது ஏழைக்கும் சொந்தமானது என்பதைத் தனவந்தர்கள் பலர் உணர்வதேயில்லை. ஏதோ சந்தர்ப்பத்தில் உதவிகள் செய்வதும் பின்பு அதனையே குத்திக்காட்டி எள்ளி நகையாடுவது குரூரபுத்தியன்றி வேறென்ன?

தங்கள் உழைப்பினை ஈந்து வரும் ஒரு பாட்டாளி தன் துன்பநிலை ஆற்றாமை காரணமாகத்தான் வேலை செய்யும் இடத்தின் உரிமையாளரிடம் உதவி கேட்கப் போகும் போது அவன் மூலம் பெற்றுக்கொண்டிருக்கின்ற பாரிய உடல் உழைப்பின் பெறுமதியைப் பலர் கண்டு கொள்வதேயில்லை.

ஒருவனது வேலை சேவைகளிலும் பார்க்கத் தாம் வழங்கும் பணமே முழுப்பெறுமானமானது என ஒருவன் எண்ணுவது அவனது மனச்சாட்சியே மாண்டு போய் விட்டதாகவே கருதப்படல் வேண்டும். சிலர் ஒருவர் செய்த தொழிமுக்காகக் கொடுக்கும் சம்பளத்தையே தாம் வழங்கும் பிச்சை எனக்கருதிக்கொடுக்கின்றார்கள். இத்தகையவர்கள் மற்றவர்களை இளைத்தவர்கள் எல்லோருமே தங்களுக்குப் பணி செய்ய வந்த ஏவலாளர் என்றும் எண்ணிக் கொள்கின் றார்கள்.



RangaRakes



உலகம் எவ்வளவோ நாகரீகமடைந்து அறிவியலில், முன்னேற்றத்தில், விசாலமடைந்த போதிலும்கூடச் சிறுமதி யாளரின் தொகை அருகியதாகத் தெரியவில்லை. ஏன் எனில் இன்னமும் சுரண்டப்படும் சீவன்கள் யாசகர்கள் போலவே நோக்கப்படுவது எமது நெஞ்சம் நோகும் நஞ்சான விஷயம் அல்லவோ இறைவா!

மிக இயல்பாக வழங்கப்படக் கூடியதும் அதனைப் பெறக் கூடியதும் அன்பு, பரிவு, பாசம் தான். அதனைப் பெறுதற்கு நாம் ஒவ்வொருவரும் நாடுவது இயல்பேயாகும். இதில் முக்கியமாகக் கருதப்பட வேண்டியது என்னவெனில் அதனை வழங்குபவர் பெறுபவர், பரஸ்பரம் பெறுதற்கரிய நிறைவினைக் காண்கின்றார். பொருளை வழங்குதல், பெறுதல் என்பது அவை கூடுவதும் இழப்பதுமாகும்.

ஆயினும் அன்பினை நாடுவது என்பதே தூய பெறுகையாகும். இங்கு இழத்தல் இல்லை. வரவுதான். அதுவும் இதயம் நிறைந்த புதையல்களேயாம்.

குற்றச்செயல்களைப் புரிந்து முறைகேடாகப் பொரு ளீட்டுவதை விடப் பிச்சை எடுப்பது மேலானது என்றும் நாம் சொல்வதுண்டு. அங்கவீனர்கள் கூட பிறரை எதிர்பாராது சுய முயற்சியால் தமது சுயகௌரவத்துடன் தம்மால் இயன்ற தொழில் செய்து பிழைப்பதை நாம் காண்பது உண்டல்லவா?



Tamilnavarasam.com

குனிவதற்கும் நிமிர்வதற்கும் இஷ்டப்படாமல், வாழ்வை இலகுவாக ஓட்டுவதற்கு கண்டபடி குறுக்குவழி உபாயங்களை விடுத்து எழுந்து, நிமிர்ந்து உழைக்க முன் வரல்வேண்டும். உடலும், மனமும் படைக்கப்பட்டது. உலகிற்கும் நமக்குமான நியாயபூர்வமான உழைப்பினை தேடுவதற்கே.

சும்மா படுத்துக் கிடப்பவன் தன்னைப் பல்லக்குத் துணைகொண்டு தூக்கிக் கௌரவிக்கவேண்டும் என எதிர்பார்க்கலாமா?

தன்னை பெற்று வளர்த்து உருவாக்கிய பெற்றோர் களையே வீதியோரத்திலும், முதியோர் இல்லங்களிலும் விட்டு விடுவதால் அநாதைகள் போல் அவர்கள் நிம்மதி யுடன் சீவிப்பதற்கு வழியின்றி அல்லல்படும் காட்சிகள். இந்த உலகில் நீதி செத்து விட்டதோ எனக் கேட்கத் தோன்றும்.

பிச்சைக்காரர்களை உருவாகுவதற்கு இந்தச் சமூகமும் ஒரு காரணம் என்பதைச் சமூகம் கட்டாயம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். இருப்பதற்கு வீடு இன்றியும் உணவு, உடை இன்றியும் வாழ நாம் அனுமதிக்கலாமா?

இன்று நல்ல நிலையில் வாழ்ந்த குடும்பங்கள் கூட இடப்பெயர்வு குடும்ப அங்கத்தினர்களின் உடல்ரீதியான மனரீதியான கோளாறுகளாலும், பெரும் பொருள் இழப்பி னாலும், யாசகர்கள் போல் வாழ்ந்துவருகின்றனர். திடீர் என



RangaRakes



னிதனுக்கு ஏற்படுகின்ற வாழ்க்கைத் தொய்வு ள் அவனை நிலைதடுமாறச் செய்து சரித்தே விடுகின்றன.

மக்கள் தமக்கு எதிரே அல்லுறுபவர்கள் தமது கோதர சகோதரிகள், உடன்பிறப்புக்கள் என மனதார ண்ணல் வேண்டும். தங்களை அவர்கள் நிலையுடன் டபிட்டு நோக்கினால் நோவின் தாத்பரியம் விளங்கும். ான் இந்நிலைக்கு ஆட்பட்டால் எனது நிலை என்ன, துதான் நிரந்தரம் என்கின்ற உள் உணர்வு உறுத்தி ின்றால் எமது கருணைக்கண் அகலமாக விரிந்து நாக்கும்.

இரப்போரைத் துரத்தாது, அவர்களின் நிலை ணர்ந்து மானுடதர்மத்தின்படி எமக்குள்ள கடமையின் மித்தம் உதவி நல்குவதால் நாம் தெய்வ ஆசீர்வாதத் னைப் பெற்றுக் கொள்கின்றவர்களாகின்றோம்.

ஏழைகள் இதயத்தில் குடியிருப்பவர் கடவுள் என்கின் றாம். அத்தகைய ஏழைகளை நாம் எமது செயலளவில் நசிக்கின்றோமா? எல்லா சமய வேதங்களும் இல்லாதவர் ளுக்காகவே பரிந்து அவர்கள் வாழ்வில் உலகில் நயம்பட வாழ வேண்டு மெனவே உபதேசிக்கின்றன.

"அவர் தன் புகழுக்காகத்தான் தான, தர்மம் செய்கின்றார்" எனச்சிலர் விதண்டாவாதம் செய்யலாம். நல்லன செய்ய முற்படும் வேளை பொல்லாப்பும் கேட்க



Tamilnavarasam.com

வேண்டிவரும் வில்லங்கமான வார்த்தைகள் விட்டுத் தள்ளப்பட வேண்டியதே!

எமது வாழ்க்கையின் கால எல்லையை எம்மால் வரையறை செய்ய இயலாது, இருக்கும் காலத்தில் செய்யும் சேவைகள் காலத்தின் விஸ்தீரணத்திலும் மேலானவை. உதவிகளின் அளவைக் கொண்டு அதன் தரத்தை நிர்ணயம் செய்யக்கூடாது. தினம் ஓரிரு ரூபாய்கள் உழைப்பவன் சில சதங்களைத் தான, தர்மம் செய்வதன் பெறுமதி எவ்வளவு மேன்மை பொருந்தியது தெரியுமா?


யாசகம் என்பது எல்லா நேரங்களிலும் மோசமானது என்று கருதமுடியாது. இன்று சந்தர்ப்பவசத்தால் பெருநிதி இழந்து வீடு, வாசல் இழந்தவர்க்காக நலிவுற்ற நாடுகள் செல்வந்த நாடுகளிடம் உதவிக்கரம் நீட்டுவது இயற்கை.

துன்பம் கண்டு துவண்டு படுத்து அடுத்தவன் என்றைக்கும் உதவுவான் என எண்ணுதலே பேதமை. “உன்னை ஒருவன் தூக்கி நிறுத்தியபின் நீ எழுந்து ஓடி ஆடிச்செயல்படு” இதுவே மானுட உதவுதலும் மீண்டும் செயல்பட வைப்பதற்குமான நெறிமுறையுமாகும். உன்னை நம்பினால் கை ஏந்துதலும் இல்லவே இல்லை.

தினக்குரல்
(ஞாயிறு)மஞ்சரி
24-09-2006







# ஓசை

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது தாய் மொழி ஓசை இனிமையானது. ஓசை, இசை, எல்லாமே இனம், மொழி, நாடு கடந்த விரிந்த ஒப்பற்ற சப்த சாகரமாகும். குயிலின் குரலும், பட்சிகளின் இறகுகள் பட படவென அடிக்கும் ஒலியுடன், அவைகள் தம்முள் பேசும் கீச்சிட்ட பேச்சுக்களும், சேவலின் கம்பீரமான கொக்கரக்கோ.... என்னும் கூவுதலும், பசுக்கன்றின் “அம்மா” என்ற அழைப்பும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வைப்பன. நல்ல அன்பான பேச்சே நல்ல ஓசைதான். இனிய நல் ஓசை எம் ஆன்மாவைத் தூய்மையேற்றும்.

நல்ல ஓசை, செவிகளை மட்டுமன்றி தேகத்தின் ஒவ்வோர் அணுக்களை, இருதயத்தைச் சுத்தம் செய்யும் அற்புத சக்திமிக்கது. பெருத்த சப்தமும் பேயிரைச்சலும் நெஞ்சத்தைத் துடிதுடிக்க வைத்து நம் ஆத்மாவைப் பரிதவிக்கவைக்கும்.



RangaRakes
Tamilnavarasam.com

மென்மை உணர்வு மிக்க பறவை இனமொன்று பெரும் சத்தத்தைக் கேட்டதுமே துடி துடித்துச்செத்தே போய் விடுமாம். நல்ல இசையின் ஒலி, அது பரப்பும் அலைகள் எம் ஆழ்மனதுள்ளும் ஊடுருவி சந்தோஷ சாகரத்தினுள் எம்மை நிறுத்தும். மனம் சந்தோஷமாகப் பறப்பதை உணர்ந்து கொள்ளப் பிரியப்படுகின்றீர்களா? இனிமையான மென்மை பொருந்திய மெல்லிய ஒலி அலைகளை எம் செவிகளுள் சேர்க்க இடமளியுங்கள். அவை நல்ல இசையாக மட்டுமல்ல நல்ல வார்த்தைகளாகவும் கூட இருக்கலாம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது தாய்மொழி ஓசை இனிமையானதே. இந்த அனுபவங்களை எல்லோருமே அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இருப்பினும் தாய் மொழியின் பூரண இனிமையை தங்கள் மொழி பேசப்படாத தூர இடங்களில் வசிப்பவர்களிடம் கேட்டுப் பாருங்கள். உதாரணமாக எங்கள் மொழி பேசப்படாத தேசம் ஒன்றில் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் போது அங்கு எங்கோ ஒருவர் எங்கள் மொழியைப் பேசிக் கொண்டிருந்தால் எப்படியான உணர்வுகள் ஏற்படும்?

உள்ளம் புளகாங்கிதமடைந்து எமது மொழியை பேசியவருடன் உரையாடி, உறவாட மனம் விரும்புமல்லவா? தமது மொழி மீதான ஈர்ப்பினை எந்தச் சக்தியாலும் தகர்க்க முடியுமா? தமது மொழியின் சப்த அலைகள் நிரந்தரமாகவே ஒவ்வொருவர் மனதிலுமே நீங்கா இடத்தைப் பிடித்துள்ளது என்பது நிதர்சனமான உண்மை தான்.



RangaRakes



தமக்கு வேண்டப்பட்டவர்களின் குரலும், விரும்பும் சையும் எவரையும் ஆட்கொள்ளவல்லது. தனக்குரிய பர்களின் குரல் வளம் இனிதாக இல்லாது விட்டாலும் கூட வர்களின் பேச்சை அழைப்பினை ஒருவருமே நிராகரிக்க ட்டார்கள்.அன்னையின் அழைப்பை, தகப்பனாரின் ட்டளையை, குருவின் ஆணையை மீறி உதாசீனம் செய்வது நல்ல மனிதரின் இயல்புமல்ல. குரல் ஓசை ஏதோ ரு மாயசக்தி போல் எம்மை ஆட்கொண்டே விடுகின்றது.

மரணத்தறுவாயில் இருக்கும் முதியவர்கள் கூடத் ம்மோடு தமது தாய், தகப்பன், உறவுகள் பேசி அழைப் தாகக் கூறிக்கொள்வார்கள் என்றோ இறந்தவர்களின் ரலோசை, மரணகாலத்தில் அவர்களுள் சஞ்சரிப்பது ந்தையன்றோ!

ஓசையின்றி உலகு இயங்குமா? எங்குமே ஒலி வியாபித்து எம்மை வழி நடத்துகின்றது. எவரது குரலையும் ாம் உடன் கேட்டு நுகர வழி பிறந்தும் விட்டது.விஞ்ஞான கத்தில் எமது கைக்குள்ளேயே, உலகத்தினரில் ஓசைகளை எத்திசையில் இருந்தாலும் கேட்க முடியும்.

நாட்டின் தலைவராகவோ, அல்லது மதத்தலை வர்களாகவோ இருப்பவர்கள் தங்கள் எண்ணங்களை பிறர் கவரும் வண்ணமே பகிர்ந்து கொள்வதாலேயே செல்வாக் குப் பெற்று வருகின்றனர். மகான்களின் குரலில் இருந்து எழும் சப்த அலைகள் மக்கள் உள்ளங்களில் உடன் வியா



Tamilnavarasam.com

பித்துப் பெருமாற்றங்களையே அவர்களுள் உருவாக்கி விடுகின்றன.

கடுமையான தொனிகள் எப்படியான மாற்றத்தை ஏற்படுத்திச் சித்திரவதைப்படுத்தும் சக்திவாய்ந்தது என்பது பற்றி ஒரு விஷயத்தைக் கூறுகின்றேன்.

உகாண்டாவின் முன்னாள் இராணுவ சர்வாதிகாரி இடி அமீன். தமக்கு எதிரான குற்றவாளிகளுக்கு இப்படியான விசித்திரமான தண்டனையையும் விதித்தார். அதாவது தமக்கு முன் நிறுத்தப்பட்டுள்ளவரிடம். உமக்குப் பிடிக்காத இசை எது எனக் கேட்பார். குற்றவாளி எனக் கருதப்பட்டவர் தமக்கு விரும்பாத ஒரு இசை பற்றியோ, பாடல்பற்றியோ கூறியதும், அந்த நபரை ஒரு தனி அறையில் அடைத்து விடுவார்கள்.

பின்பு என்ன செய்வார்கள் தெரியுமா? பலத்த ஓசையுடன் அந்தக் குற்றவாளிக்குப் பிடிக்காத இசையையோ, பாடல்களையோ கேட்கச் செய்வார்கள் இப்படியே தொடர்ந்தும் பல மணித்தியாலங்கள் கேட்கச்செய்வார்கள். எப்படி இருக்கும் அவரது நிலை? உடலும் உள்ளமும் சுக்கு நூறாவது போன்ற பிரமையுண்டாகும். தலையே வெடிப்பது போன்ற பெரும் அதிர்வுகளை அனுபவித்து முடிவில் சித்தப்பிரமை பிடித்து இறக்குமளவிற்கு உட்படுத்தப்பட்டு விடுவார்கள்.





இன்று இளவயதுப் பிரிவினர் ஆர்ப்பாட்டமான துள்ளல் இசையை நாடுவது வழக்கமாகிவிட்டது. சாஸ்திரீக சங்கீத நாட்டமுடைய இளைய தலைமுறையினர் எண்ணிக் கையில் குறைவாகவே உள்ளனர். மேற்கத்திய இசை எல்லாமே பெருத்த சப்தமுடன் கூடிய உஷ்ணமான சங்கீதம் என்று கூறிவிட முடியாது.

இன்று நாம் மேற்கத்திய நாடுகளில் உள்ளோரின் சாஸ்திரீய சங்கீதத்தின் அற்புதத் தன்மையினைப் புரியாமல் இருக்கின்றோம். மேலும் சீன, யப்பான் போன்ற ஆசிய நாட்டினரின் பழைமையான இசைக் கருவிகளுடன் அவர்களின் பாடல்களைக் கேட்க வாய்ப்பிருந்தும் கேட்க ஆர்வமின்றி இருக்கின்றோம்.

ஓசை, இசை, சப்தம் எல்லாமே இனம், மொழி, நாடு கடந்த விரிந்த ஒப்பற்ற சப்தசாகரமாகும். நல்ல பேச்சு, நல்ல பாட்டு, எல்லாமே மொழி வேறுபாடு கடந்த இன்ப நிலைக்கு எம்மை எடுத்துச்செல்லவல்லது.

இசைக்கருவிகள் இன்ன நாட்டினர்க்கோ, இன்ன மொழியினருக்கே உரித்தானது என்று கூறமுடியுமா? அதில் இருந்து புறப்படும் சுகராகங்கள் எமது ஆன்மாவினை மெல்லென ஸ்பரித்து நிம்மதியூட்டும் கலை வடிவங்கள் அல்லவோ?

முற்காலத்தில் ஒவ்வொரு இன நாட்டு மக்களால்



RangaRakes
Tamilnavarasam.com

உபயோகிக்கப்பட்ட இசைக்கருவிகள் எல்லாமே இப்போது சர்வ உலகின் பொதுச் சொத்தாகக் கருதப்படுவது நல் இசையின் வியாபகத் தன்மைக்கு நல்ல ஆரோக்கியமான விஷயம்தான்.

கீழைத்தேய, மேலைத்தேய சங்கீதங்களை இணைத்துப் புதுப் புது வடிவங்களைப் புகுத்தினாலும் அடிப்படையான சங்கீத ராகங்கள் ஒன்று அல்லவா?

எனவே,

ஓசையால் இறைவன் எல்லோரையுமே ஒருங்கே பிணைத்துள்ளான் என்பது அற்புதமான உண்மையுமாகும்.

அதிகாலையில் நாம் நல்ல ஓசையுடன் விழித்துக் கொள்ள வேண்டும். கிராமிய சூழலில் நாம் இந்த சுகானுபவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். குயிலின் குரலும், பட்சிகளின் இறகுகள் பட பட வென அடிக்கும் ஒலியுடன் அவைகள் தம்முள் பேசும் கீச்சிட்ட பேச்சுக்களும், சேவலின் கம்பீரமான கொக்கரக்கோ, எனும் கூவுதலும், பசுக்கன்றின் “அம்மா” என்ற அழைப்பும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வைப்பன.

சோம்பலுடன் படுத்திருக்கும் ஒருவனைக் கூட விழிப்பூட்டு ஓசையுடனான பாடல் அவனை முற்று முழுவதுமாக மாற்றியே விடுகின்றது. சூழ்நிலைக்கு ஏற்பவே இசைகளின் வடிவங்களும் மாறுபடும்.



RangaRakes



கோவிலில் பாடப்படும் பாடல்கள் பக்தியுடன் பவ்ய ணர்வுடன் இசைக்கப்படும். அதே வேளை யுத்தத்திற்குச் சல்லும் இராணுவத்தினருக்கான இசை, அவர்களை ழுச்சியூட்டி வீர உணர்வினை எழச்செய்யும் விதமாக மைக்கப்பட்டிருக்கும். குழந்தைப் பாடல்களுக்கும், தியோர் படிக்கும் கவிதைக்கும் வித்தியாசம் இல்லையா? ருவத்தினர்களின் வயது வேறுபாடுகள் அவர்களது ர்வம், விருப்பு, மனோபாவம், ரசனைக்கு அமையவே பாடல்கள் இசை அமைக்கப்படுகின்றன.

எந்தவித ரசனையுமற்றவன் ஓசைகளின் சுகங்களை உணரவேமாட்டான். கருவில் இருக்கும் சிசுவும், மிருகங்களும், தாவரங்களும்கூட இசையை, நல்ல மென் அதிர்வுகளை ரசிக்கும்போது முழுமனிதன் நல்நெறியோடு வாழ்வதற்கு ரம்யமான சூழலை, எண்ணத்தை, வளர்த்துக் கொள்வதற்கு செறிந்த சீரான சொற்களையே பேசுவதும், கேட்பதும் ரசிப்பதுமாக வாழ்ந்தால், வாழ்க்கையே என்றும் புது வசந்தமுடன் திகழுமன்றோ!

வாயில் இருந்து புறப்படுவது வெறும் காற்றோடு கலந்துவிடும் ஒலி அலைகள் அல்ல. இன்றும் கூட புத்தர், யேசு, நபிபெருமான் போன்ற புண்ணிய அவதார புருஷர்களின் உபதேசங்கள் இந்தப்பிரபஞ்சத்தில் இருந்து மறைந்து போய் விடவில்லை. அவர்கள் மூச்சுடன் மிதந்து வந்த ஒலி அலைகள் இன்னமும் அழியாத அலைகளாக எங்களை ஆட்கொண்ட வண்ணமேயுள்ளன.



Tamilnavarasam.com

நாங்கள் கண்டபடிபேசக்கூடாது. அப சகுனமாக பிறர் மனம் வருந்த இம்சை தரும் வார்த்தைகளைக் கொட்டக் கூடாது. இந்தச் சொற்களின் வெம்மை பாரதூரமானது. இவைகள் காற்றுடன் சங்கமிக்கும் போது உலகத்தையே அசுத்தப்படுத்திவிடும்.

நாம் எங்கள் எதிரியைத் தூஷித்தாலும் கூட அதனைச் செவிமடுக்கும் யாரோ ஒருவரின் மனம்கூட சஞ்சலப்பட வேண்டிவரும். "நான் எதைப் பேசினாலும் உனக்கு என்ன? என்று விதண்டாவாதம் பேசுவது கூடப் பிறர் நிம்மதியைக் கெடுப்பது போலத்தான். எனது வீட்டின் வானொலியை நான் எப்படியும் இயக்குவேன் என்றும் தனது தொலைக்காட்சிப்பெட்டியை தானே ரசிப்பதற்காக ஒலியைக் கூட்டினால், பக்கத்து வீட்டுப் பையன் படிப்பது எப்படி?

இதுபோலத்தான் மனதை நெருடும் விதமாக ஒலி, ஊடகத்தின் கீழ்த்தரமான பாடல்கள், இசைகள் மூலம் ரசிகர்கள் செவியினுள் புகுத்த விழைவிப்பது அத்துமீறலான வன்முறை போலத்தான் என்பதைச் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனங்கள் உணரல் வேண்டும்.

நாம் காலையில் விழித்துக் கடமைக்குச் செல்வதி லிருந்து உறக்கத்திற்குச் செல்லும்வரை, எம்முடன் நல்ல ஓசைகளையும் இணைந்து கொண்டால் என்றும் புத்தம் புது மனிதனாக மனம் பாரம் அற்றவராக, காண்பது எல்லாமே தூய்மை நிறைந்ததாக உணர்ந்து கொள்வோம்.





எங்களிடம் இருந்து மற்றவர்கள் எதிர்பார்ப்பது தலில் என்ன என்று புரிந்து கொள்வோம். நீங்கள் றிமுகம் இல்லாத எவரைக் கண்டாலும் அவரை நோக்கிப் பசும் இனிய சொற்கள்தான், அவர்களை உங்கள்பால் ஈகரிக்கச் செய்கின்றது. வார்த்தைகள் என்பது வெறும் சாற்கள் அல்ல. இவைகளை அன்புடன் ஊட்டப்படும் பாது தென்றலினும் மெல்லிய சங்கீதமாகவே மற்றவர் குக் கேட்கும்.

குழந்தை எப்படிப் பேசினாலும் அது பெரும் பாத்தியங்களைவிட நாம் பெற்ற அனைத்து சம்பாத்தியங் களை விடவும் இனிமையாகவே இருக்கும். அல்லவா? களங்கமற்ற இதயத்தில் பூத்து நின்று புறப்படுவதே அந்த மழலை மொழியாகும்.

எமது இதயத்தேரில் இனிமையை ஏற்றி புதுப் பொலிவுடன் நற்சொற்களை சிறந்த, தெளிந்த உணர்வுக ளுடன் ஊட்டிப் பவனி வந்தால், எம்மைச்சுற்றி நல் ஓசைகள் சூழ்ந்து நின்று எம் வாழ்க்கைப் பாதையை புனித வழியில் இட்டுச்செல்லும்.

தினக்குரல்
(ஞாயிறு)மஞ்சரி
01-10-2006



RangaRakes
Tamilnavarasam.com



# கௌரவம்

ஆணவ முனைப்புடையோர்க்குக் கௌரவம் கிட்டாது. மண்டைக்கனம் பிடித்தவர்களை வேண்டப்படாத சீவன்களாகவே மக்கள் கருதுகின்றனர். கௌரவம் வலிந்து பெறுதல் அல்ல. சேவை, திறமைகள் மூலம் அளிக்கப்படுவதாகும். போட்டிபோட்டுக்கொண்டு மரியாதை பெற விழைவது கேலிக்குரிய விடயம். உண்மையான திறமைசாலிகளை மூடிமறைப்பது, வளரும் சமூகத்திற்கும் தேசத்திற்கும் செய்யும் கொடுமை. எனினும் நல்லோர், பெரியோரைத் தேடி கௌரவங்கள் நிச்சயமாக வந்தேதீரும். வீண் பகட்டு வாழ்வு வாழும் மாந்தர்களிடம் பெறும் கௌரவத்தைவிடச் சாமான்யமாக வாழும், ஏழை எளியவர்களிடம் பெறும் கௌரவமே மேலானதும், இறை ஆசியுடன் கூடியதுமாகும்.

ஒருவரது நற்பண்பினாலும்,அவர்தம் நடத்தை நெறியினாலும், கல்வி, அனுபவ ஞானம் போன்றவைகளாலும், செய்யும் சேவையினால், பவ்யமாக எவ்வித எதிர்பார்த்த லின்றியும் பெற்றுக்கொள்வதே "கௌரவம்" ஆகும்.





ஆணவ முனைப்புடையவர்க்குக் கௌரவம் டாது. மண்டைக்கனம் பிடித்தவர்களை வேண்டப்படாத ன்களாகவே மக்கள் கருதுகின்றனர். எவ்வளவு திறமைகள் ருந்தும் பணிவு இன்றேல் வாழ்வின் பாதை சீராக ருக்காது,

"கௌரவம்", என்பது வலிந்து பெறும் ஒன்றல்ல. வை செய்தலின்றி மாற்று வழிகளில் கௌரவத்தைத் தேட னைபவர்கள் பரிகாசத்திற்குரியோராகவே ஈற்றில் கருதப் டுவர். இவர்களின் வாய்வீச்சும், வீண்பகட்டும், இவர்கள் ரவாரத்தன்மையும் மக்களிடம் இருந்து விலகி ற்பதற்கான மூலகாரணமாகும். உலகில் பெரும்பாலான னங்கள் மிகச்சாதாரண மானவர்கள் எளியவர்கள் தான்

எனவே மக்கள் தம்மோடு ஒத்தவர்களைத்தான் நேசிப்பார்கள். இந்த விடயம் புரியாமல் தம்மை மினிக்கி, ற்காரியங்களைச் சுருக்கும் வீணர்களை மனிதர் விரும்புவா களா? நிச்சயமாகப் புறந்தள்ளியே தீருவார்கள். இத்தகையவர்கள் இதனை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்களை மக்கள் முன் நிறுத்திக் காட்ட என்ன செய்யலாம் என ஆலோசனை செய்து பலவழிகளில் மரியாதையைத் தேடும் முயற்சியைச் சிலர் கைக்கொள்வ துண்டு. பிரதிபலனைப்பெறும் நோக்கோடு பணத்தைச் செலவு செய்து, பதவியைத் தேடுவதே முதல்



RangaRakes
Tamilnavarasam.com

நோக்கமாகவும் இருக்கின்றது. பாசாங்கு மூலம் செய்யும் தொண்டுகள் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப்போகின்றது?

தமது உடலால், மனத்தால், செய்யும் சிறு தொண்டுகள் கூட ஒருவருக்கு நல்ல கௌரவத்தினை அளிக்கக் கூடியதே. ஒருவர் செய்த உதவியின் அளவை வைத்து அவரை நிறுத்துப்பார்க்கக் கூடாது. அற்ப உதவியேயானாலும் பற்பல நன்மைக்கான வித்துக்கள் அவை. மனதில் நிறுத்துக! அறிவோமாக!

சும்மா கிடந்து சோர்வைத் தேடாது, நம்மால் முடிந்த வைகளைச் சமூகத்திற்கு செய்வோம். உழைப்பாளர்களை மக்கள் தமது பக்கம் இழுப்பர். உடலை வளைக் காதவர்களை, மக்கள் விழித்தும் நோக்கார்.

மற்றவனின் சேவையில் ஒட்டிநின்று கௌரவம் தேடுபவர்களும் உள்ளனர். இதுமிக வெட்கக் கேடானது. யாராவது பெரிய பதவியில் இருந்தால் கேட்காமலே அவர்களிடம் வலிந்து போய் சேர்ந்து கொள்வார்கள்.தமது கருமங்களைப் பெற்றுக்கொள்ள விழைவதுடன், மாற்றார் ஏதாவது உதவிகளைப்பெற்றுக் கொள்ள இருந்தால் அதனையும், தமது சாதுர்யத்தினால் தடுத்து நிறுத்தியும் விடுவர். போட்டிபோட்டுக் கொண்டு மரியாதை பெற நினைப்பது சிரிப்புக்குரிய விஷயம் தான்.

எந்தவிதமான அனுகூலமும் இன்றியே சிலர் பலரைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இந்தச்





கை மூலம் தமக்கு நல்ல பெயர் கிடைக்கும் எனத்தப்பு பிராயம் கொண்டு விடுகின்றனர். ஈற்றில் உண்மைகள் ளிவரும்போது ஏற்படும் அவமானங்கள் கொஞ்ச சமா? யாராவது புகழடைந்தவரைச் சுற்றி நிற்கும் சிலர், ரு கேடயம் போல் மனித வளையத்தைப் போட்டு ற்பர்.இவர்கள் உண்மையான நல்லவர்களுக்குக் கூட ரியான தகவல்களைச் சொல்ல விடுவதும் இல்லை.

பெரிய நிறுவனங்களில், அரசியலில், பொது மைப்புக்களில், நன்மைசெய்யும் பெரிய பொறுப்புள்ள களை இத்தகைய புல்லுருவிகள் மறைத்து நின்று தாமே ாயம் தேடிக் கொள்கின்றார்கள். உண்மையில் இது ஒரு மூக ஏன் தேசத்திற்கான கொடுமையும் கூட. கௌரவம் பற்ற பெரியவர்களை நிம்மதியாக உறங்க விடாத கூட்டம் பருகி விட்டது. ஆனாலும் பெரியோர்கள் இதனைப் ாருட் படுத்துவதில்லை. சாதனை செய்யப்புறப்பட்டவர்கள் எத்தகைய சோதனைகளையும் வென்றே தீருவார்கள்.

பயத்தைத் தேக்கியவன் பனிமலையில் ஏற முனை வானா? துணிவுள்ளவன் கிடைக்கவிருக்கும் கௌரவத் தமட்டும் நோக்காது. தன்பாட்டிற்குச் செயல்களிலேயே லு உள்ளவனாக ஓடிக் கொண்டிருப்பான்.

சில விசித்திரமான பிரகிருதிகள் இருக்கின்றார்கள். வர்கள் எதையாவது விமர்சித்துக்கொண்டிருப்பார்கள். இவர்கள் விமர்சனம் பல சமயம் பொருத்தமற்றதாகவே



RangaRakes
Tamilnavarasam.com

இருக்கும். நல்ல செயல்களை யாராவது செய்தால் அதற்குப் புதுவடிவம் கொடுத்து வேறு அர்த்தத்தினை ஒட்டி அது ஒரு தவறான செயல் என்று வர்ணம் தீட்டுவார்கள். இத்தகைய வர்களின் குரூர போக்கை நம்புபவர்களும் உண்டு.

எப்படியாவது தனது பேச்சு சனங்கள் மத்தியில் நல்ல பெயரைக் கொடுத்துவிடும் என்று நம்பும் இவர்களில் கோணங்கித்தனமான செய்கைகள் எவ்வளவு காலத்திற்கு எடுபடப்போகும் என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும்.

இன்னும் ஒருசாரார், எவ்வித கூச்சமும் இன்றி. பிறர் பெற்ற புகழ் தன்னால்தான் கிடைத்தது என்று கூறிப் பற்பல ஆதாரங்களைக் கோர்வையாகச் சொல்லிக்கொள்வார்கள். உண்மையில் நல்ல மனிதர்கள் தாங்கள் செய்த உதவிகளை வெளியே சொல்வது இல்லை.

மேலும் தமக்கு வர வேண்டிய நற்பெயரை மாற்றார் தட்டிச்செல்வதாகக் குறைப்பட்டுக்கொள்வார்கள். சில சமயம் குறுக்கு வழிப்பேர்வழிகள் யாரோ செய்த நற்காரியங்களைத் தாமே செய்ததாகப் பிரசாரம் செய்வதும், மக்கள் அதனை நம்புவதும் உண்டு. இத்தகைய சில வேண்டப்படாத சம்பவங்களின் உண்மைத் தன்மைகளைக் காலம் தான் தகுந்த பதிலளிக்கும். உண்மை நெறி வாழ்ந்த ஒருவனின் மனக்குமுறல் நல்ல பெறுபேறுகளை ஈற்றில்





தந்தே தீரும். பொதுப்பணிகளில் ஈடுபடுவோருக்கும் இத்தகைய பல பிரச்சனைகள் எழக்கூடும்.

எனினும் இலாப, நட்டம் பார்த்தால் சேவைகள் செய்ய முடியுமா? சேவை என்பது ஊதியம் கருதாது உழைப்பது. வேலை என்பது செய்த வேலைக்குச் சம்பளம் பெறுதலுமாகும்.

ஆனால் செய்யும் வேலையைக்கூட மனச்சாட்சிக்கு விரோதமின்றி. உடல் உழைப்பை, அறிவை நல்கியே செய்ய வேண்டும். அப்போது தான் தொழில் வழங்கியவன் எங்களுக்குரிய மதிப்பை அளிப்பான். நியாமான வழியில் சுயதொழில் செய்பவனும் மேலான கௌரவத்தை அனைவரிடமும் பெற்றுக் கொள்கின்றான்.

மேலும் நாங்கள் பிறருக்கு வழங்கிய சேவை மூலம் கிடைக்கின்ற திருப்திகூட ஒரு வருமானம் போலத்தான். இது நாம் உழைக்கும் பணத்தைவிடப் பெறுமதிவாய்ந்தது. எங்களால் செய்யும் கருமங்களை. மற்றவர்க்கு வழங்குவது ஒரு வாய்ப்பு என்பதால் யாராவது கௌரவம் தரவேண்டும் என்கின்ற எண்ணமேயற்ற பரந்தநோக்கு, எம்முள் வியாபித்துவிடும்.

சபை நடுவே நாம் பெறும் கௌரவம் மட்டும் கௌரவம் அல்ல. மிகவும் எளிமையான ஏழைகள், துன்பப் படும் சாதாரணமான மக்கள், வழங்கும் ஒரு வாய்ச்சொல்லே போதும். அது எங்கள் அகத்தினுள் உள்நுளைந்து தேகம்



RangaRakes Tamilnavarasam.com

எங்கும் பெரும் பூரிப்பினை உண்டு. பண்ணிவிடும். இந்தப் பாராட்டுக்கள் எமது தலைமுறைக்கே வந்து சேர்ந்த வண்ண மிருக்கும்.

பெரும்பாலானவர்கள் சொல்வதுண்டு. எனக்குச் சமூகத்திற்கு எவ்வளவோ செய்யச் சித்தம் உண்டு. ஆனால் அதை எங்ஙனம் செய்யலாம் என்று கூறுவார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று வேலை செய்பவர்களைப் பார்க்கின்றோம். இவர்களில் பலர் தாய் நாட்டை மறந்து தமது நாட்டிற்கு எந்தச்சேவையும் செய்யாமல் இருப்பதாகப் பலரும் குறைப்படுகின்றனர்.

ஆனால் அங்கு சென்ற நம்மவர்களில் பலர் இங்குள்ளவர்களுக்கும், சமூக நிறுவனங்களுக்கும் உதவி நல்குவது உண்டு. பல பொது நல நிறுவனமூடாக அரும் பணியாற்றும் பெரியோர்களும் இருக்கத்தான் செய்கின் றார்கள். கலை, இலக்கிய சமூகப் பணிகளைச் செய்து வருவதும் கண்கூடு. உதவி செய்வதற்கான சந்தர்ப் பங்களை நாம் தான் தேடிப்போகச் சித்தமாயிருக்க வேண்டும்.

தவிர மற்றவரிடம் இருந்து உதவிகளை நோக்குவதை விடுத்து நாமாகவே வலிந்து சேவைபுரிவதே கௌரவமான பணியுமாகும். மேலும் சமூகப்பணியாற்ற இயல்பாக விருப்பு உடை யோர்க்கு அதற்கான உபாயங்களை, வழிகளைக் காட்ட, பொது நிறுவனங்கள் உதவுவது அவைகளின் தலை யாய கடமையுமாகும்.



RangaRakes



நல்ல பணிகளை முன் நின்று செய்யும் உத்தமர் களை நாம் பாராட்டத் தயங்கவே கூடாது. மேலும் ஆர்ப் பாட்டம் இன்றி மௌனமாகக் கடமை புரிபவர்களை நாம் கண்டு கொள்ளல் வேண்டும்.

எந்த மனிதனையும் நாம் கௌரவிப்பது என்பது எமக்குள்ள பெருந்தன்மை என்று தெரிந்து கொள்ள வேண்டும். எவரையும் பாரா முகமாக இருப்பது நேரான குணமும் அல்ல. எங்கள் செய்கைகள் தான் எமது சுய உருவைக்காட்டி நிற்கும்.

எதிரிக்குக்கூடக் கௌரவம் வழங்கு! அவன் உன் வழிக்கு வருவான். இது எவருமே ஏற்றுக்கொள்ளும் கூற்றாகும்.

எங்கள் மனத்தினை எங்களின் மேலாதிக்க உணர்வும் விட்டுக்கொடாத தன்மைகளும் அரித்து விடக்கூடாது.

கருத்து முரண்பாடுகள், சாதாரண பிணக்குகள் எல்லாமே தீர்க்கக்கூடியவைதான். இதற்காக மனிதர்க்குரிய கௌரவங்களை நாம் எமது சொந்த முரண்பாடுகள் காரணமாகத் துண்டித்துக் கொள்ள விழையலாமா? பேதங்களை எமக்குச் சொந்தமாக்க வேண்டாம். அந்த உணர்வு வந்தால் நாமே நம்முடன் மோதி சிந்தனைகளைக் குந்தகமாக்க வேண்டிவரும். தெரிந்து தெளிவோம்!



Tamilnavarasam.com

"அவருக்கு வசதிகள் உண்டு, எனக்கு அது இல்லை, நானே திண்டாடித் தவிக்கின்றேன். நான் என்ன செய்ய முடியும்?" என்று வேதனைப்படும் மனிதர்கள் ஒன்றை உணரல் வேண்டும்.

எல்லாவற்றையும் பெற்று விட்டு, நாம் பொதுப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும் எனில், எப்போது எம் பணியை ஆரம்பிக்க முடியும் ஐயா! எல்லாமே, எல்லா நேரத்திலும், எவர்க்கும் முழுமையாகக் கிடைத்து விடுமா? இருக்கும் வளங்களைக் கொண்டு திருப்தியுடன் பணிசெய்தலே, சமூகத்திற்கு நாம் வழங்கும் வெகுமதி ஆகும்.

சாக்குப் போக்குச் சொல்லித் தப்பித்தல் கூட தனி மனித கௌரவத்திற்கு இழுக்கானது தான். நாங்கள் எவர்க்கும் சொல்லும் பொய்யுரைகள், அவை எமக்கு நாமே சொல்லிக் கொள்ளும் வஞ்சனை வரிகளாகும்.

மேலும் நல்ல மனிதர் நலிந்து போனாலும் அவர் தம் கௌரவம் தலை நிமிர்ந்தே நிற்கும். எந்த நிலையிலும் தமது வழங்கல்களை இவர்கள் தம்மால் இயன்ற அளவு அளித்துக் கொண்டேயிருப்பர். சிறிது கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படினும் இன்னுயிரை விடத் துணிபவர்கள் பற்றியும் படித்திருக்கின்றோம்.





அரிய பெரும் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற கௌரவத்திற்குரிய பெரியோர்கள், "எமது நாடே உனக்கு, நான் என்ன செய்யவேண்டும். தொடர்ந்தும் என்பணி செய்ய விருப்புடன் உள்ளேன். சகல சந்தர்ப்பங்களையும் எதிர்பார்த்துக் கொண்டேயுள்ளேன்" என்று தான் சதா மனதுள் உருப்போட்டுக் கொண்டிருப்பார்கள்.

நற்பேறு என்பது எம்மால் முடிந்த நல்லனவற்றை நிறைவேற்ற முயலுதலும்,அவைகளைச் செய்வதும் தான்.


இவ்வண்ணம் ஒழுகுபவர்கள் தாமாக கௌரவத் தைத்தேடி முன்னுக்கு வருவதில்லை. அனைத்து மக்களுமே அவர்களை தம் இதயத்துடன் பிணைத்து மக்கள் முன்னே உயர்த்தி நிற்பார்கள். உண்மையான தியாக நோக்குடைய வீரர்கள் பெறும் கௌரவம்கூட அவர்களுக்கான ஒப்பற்ற ஆபரணமாகும்.

மனித தேவைகளை அறிந்தவனே முழுமையான முதல்வனாவான். இந்த முழு உலகும் ஒரு கூடாரத்தில் தான் இருக்கின்றது. ஆனால் இது விசாலமான இறைவனின் கூடு. இதனுள் இருந்து விலகி வாழக்கூடாது, வாழவும் முடியாது. ஐக்கிய உணர்வுள்ள எவனும் கௌரவிக்கப்பட வேண்டியவனே. ஏன் எனில் இவனிடம் கோப, குரோத, சூழ்ச்சி எண்ணங்கள் இல்லை. அன்பு ஒன்று தான் சர்வ வியாபகமாக இவனுள் ஸ்திரப்பட்டு நிற்கும்.

தினக்குரல் (ஞாயிறு மஞ்சரி27-08-2006



RangaRakes
Tamilnavarasam.com



# பார்வை

எல்லோரையும் சமனாகப் பார்க்கவேண்டும். நல்லதையே நினைப்பவர்கள் மற்றவர்களின் குறைகளை மட்டும் நோக்கமாட்டார்கள். அன்பினை, பரிவினை, பாசத்தினை அவர்தம் அகத்தினூடாகப் புறப்படும் கருணை முகத்தினூடாகப் பார்க்க முடிகின்றது. கண்களால் பார்ப்பது மட்டும் பார்வை அல்ல. எண்ணங்களால் நோக்குவதும் பார்வைதான். நல்ல எண்ணங்களுடன் தீர ஆலோசித்து முடிவு எடுப்பவர்களின் நோக்கம் ஒருபோதும் பிறழ்வதேயில்லை. நாம் முதல் பார்வை மூலம் எடுக்கும் முடிவுகளை, உறுதியான முடிவு எனக்கொள்ளல் தகாது. அன்புடன் நோக்கினால் எவருமே எமக்குத் தீங்கு செய்யப்போவதுமில்லை. உங்கள் நல்ல பார்வை எல்லோரையும் உங்கள் வசமாக்கும்.

கண்களால் பார்ப்பது மட்டும் பார்வையல்ல, எண்ணங்களால் நோக்குவதும் கூட பார்வை என்றே கருதப்பட வேண்டும்.





அன்பினை, பரிவினை, பாசத்தினை, அவர்தம் அகத்தினில் இருந்து புறப்படும் கருணை முகத்தினூடாகவும், பளிச்சிடுகின்ற விழிகளுடாக் கசியும் மெல்லென வழியும் விழி நீருடனும், இதயத்தில் சப்திக்கின்ற மென் அலைகளுடாகவும் நாம் உணர்ந்து கொண்டிருக்கின்றோம்.

நவரசங்களை நாம் கண்களால் பார்த்தாலும்கூட பிறர் அக வெளிப்பாடுகளை எமது உணரும் திறத்தாலேயே அறிந்து கொள்ளமுடியும். எமது அனுபவ ஞானத்தால் பழகிய விதத்தால் பூரணமாகவே புரிந்துகொள்ள முடியுமா?

சிலருக்கு எல்லோரையும் பார்த்தால் கெட்டவர் களாகவே தெரியும், இன்னும் சிலருக்கு எல்லோரைப் பார்த்தாலுமே நல்லவர்களாகவே தெரியும். இத்தகைய நோக்கு அவரவர் மன இயல்பு, அறியும் திறனைப்பொறுத்த விஷயம்.

ஆனால் பார்த்த மாத்திரத்தே எல்லோரையுமே கெட்டவர்களாகவே நோக்குவது நிச்சயமாகப் புத்திகெட்ட மட்டமானசெயல்தான். எங்களை ஒருவர் எடுத்த எடுப்பி லேயே கெட்டவர் என்று முத்திரை குத்தினால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? நான் மட்டுமே உத்தமன், மற்றவன் அதர்மன் என்று எண்ணக்கூட எமக்கேது உரிமை ஐயா? சின்னச் சின்னத் தவறுகளைக் கண்டு பிடித்துத் தமது பெரிய தவறுகளை மறைத்துப் பிரமாதமாகக் குதர்க்கம்



RangaRakes
Tamilnavarasam.com

பேசும் கோமாளிகளை சனங்கள் கண்டால் சிரிப்புடன் ஒதுங்குவார்கள், ஒதுக்குவார்கள்.

நல்லதையே நினைப்பவர்கள் மற்றவன் குறைகளை மட்டும் பார்க்கமாட்டார்கள். அவர்களுக்குச் சேவை செய்வதே நோக்கமே ஒழிய, பிறர் தூற்றுதலைக் கண்டு கொள்ள எங்கே நேரம் இருக்கப்போகின்றது? இப்படிப் பலர் பேசுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள் "என்னவோ தெரிய வில்லை இந்த மனிதரைப் பார்த்தவுடனேயே நல்ல அபிப் பிராயம் ஏற்பட்டுவிட்டது. ஏதோ நெடுநாள் பழகியமாதிரி ஒரு எண்ணம் வருகின்றது. ஆனால் ஏன் என்றே தெரியவில்லை" என்பார்கள் உண்மைதான். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் நாம் சந்திக்கின்ற ஒரு சில மனிதர்கள் எம் நெஞ்சத்தைத் தொட்டு விடுகின்றார்கள். இவைகளுக்கான காரணம் புரிவ தில்லை.ஏதோபூர்வஜன்மபந்தம் என்று கூடச் சொல்வார்கள். இப்படிச் சந்திக்கி ன்றவர்களில் சிலவேளை, எம்மைச்சாராத வேற்று மதம், மொழிகளைச் சேர்ந்தவர் களாகவும் இருக்கலாம்.

இந்தச் சந்திப்பை இந்த உணர்வினை உங்களில் பலர் உணர்ந்திருப்பீர்கள். இப்படிப்பல சந்தர்ப்ப சூழ்நிலைகளில் உங்கள் அனுபவங்களை மீட்டிப்பாருங்கள். எல்லை கடந்த மனிதநேயம், ஆற்றல், அதன் பரிணாம த்தினால் எங்கோ ஒரு முறை தொட்ட நெஞ்சை ஏன் மீண்டும், மீண்டும் பார்க்க எத்தனிக்க வேண்டும்? ஒரு சின்னச் சம்பவத்தை உதாரணத்திற்கு கூறுகின்றேன்.



RangaRakes



பேருந்தில் நான் பயணம் செய்து கொண்டிருந்தேன் நல்ல சனக்கூட்டம். பேருந்தில் சேவை செய்துகொண்டிருந்த நடத்துனரான இளைஞர்ஒருவர் துரு து என்ற விழிகளுடன் பம்பரமாகக் கருமமே கண்ணாக இருந்தார்.

அந்த இளைஞன் தனது கட்டணத்தை என்னிடம் பெறவந்தான். வந்தவன் என்னையே பார்த்துக் கொண்டி ருந்து விட்டுச் சென்று விட்டான். நானும் அவனைப் பார்த்த தும் ஏதோ பழகிய முகம் போலவே தெரிந்தது. ஆனால் நான் நிச்சயமாக அவனைக் கண்டதோ, பேசிய தோ கிடையாது. அவன் மீண்டும் வந்து புன்னகைத்து என்னு டன் பேசினான். உங்களைப் பார்க்கச் சந்தோஷமாக உள்ளது என்றான். அப்புறம் அவனுடன் சிறிது பேசினேன். நான் எனது இடம் வந்ததும், அவனைப் பிரியமனமின்றிப் பிரிந்தேன். அவனும் கனிவுடன் சிரித்தவாறு என்னைப் பேரூந்தில் இருந்து இறக்கிவிட்டான்.

இத்தகைய பல அனுபவங்களை நிச்சயம் நீங்கள் பெற்று இருக்கலாம் அல்லவா? இந்த உலகம் பரந்து பட்டாலும் கூட நல்ல மனிதனின் சின்னப்பார்வை எல்லோ ரது நெஞ்சங்களையும் பிணைத்துவிடும். இது எல்லாம் இறை அற்புதமேயாகும்.

"கண்டதும் காதல்" என்று பேசுகின்றார்கள். இது பலருக்கு வேடிக்கையாகப்படும். பல வருடக் காதலையே புரிந்து கொள்ள முடியாத பிறவிகள் இருக்கின்ற உலகில் ஒரு கணத்தில் காதல் உதயமாவது எப்படி?



Tamilnavarasam.com

எந்த ஒரு விடயத்தையும், பரீட்சார்த்தமாகச் செய்து பார்ப்பதுண்டு. ஆனால் வாழ்க்கையில் எடுக்கப்படுகின்ற முடிவுகளை நாம் பரீட்சார்த்தமாக மனதில் எழுந்த வண்ணம் கைக்கொள்ள முடியுமா? தீர ஆலோசனை செய்யாமல் எடுக்கின்ற எந்த முடிவுகளுமே, இறுதியில் எத்தகைய பின் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை முதலில் உணரல் வேண்டும்.

இளமைவேகம், துடிப்பு, மனதினைக் கட்டுப்படுத்தாத தன்மைகள் எல்லாமே இயற்கைதான். இதனைப் பலர் இலட்சியம் செய்வதேயில்லை. உண்மையில் சில நல்ல விஷயங்களுக்கான அங்கீகாரம் கூட துடிப்பு மிக்க சில இளைஞர்களுக்குக் கிடைப்பதும் இல்லை.

எந்த முடிவும் தங்களுடாக எடுப்பதையே பெரும்பாலான பெற்றோர் விரும்புவது இயற்கை. பிள்ளைகளின் பார்வை நேரியதாகவும், முற்போக்கு உணர்வுடனும் இருப்பதை ஏற்றுக் கொள்ளச்செய்வது இலகுவானது அல்ல. உதாரணமாக, ஒரு இளைஞனோ, யுவதியோ, சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்து காதல் வயப்பட்டால் அது அவர்கள் நோக்கில் சரியானதாகவே இருக்கும். ஆனால் உற்றார் உறவினர் இவர்கள் தயவில், அல்லது இவர்களை எதிர்பார்த்திருக்கும் வேளையில் இத்தகைய காதலைப் பிணைப்பை அங்கீகரிக்கத் தயங்குவர்.





மேலும், பழைமையில் ஊறிப்போன பெரியவர்கள் சிலர் தமக்குப் பின்நாட்களில் சமூகத்தினால் எதிர் விளைவுகள் இந்த உறவுப்பிணைப்புக்களால் வரும் எனப்பயப்படுவதும் இயற்கை தானே? தங்கள் குடும்பத்தில் உள்ள அங்கத்தினர் தவிர வேறு தரப்பினர் செய்கின்ற இத்தகைய விடயங்களில் கேலி பேசுபவர்கள், தங்கள் குடும்பத்தில் இவ்வாறு காதல் கலப்பு மணங்களை எப்படி மனம் உவந்து ஆமோதிக்கப்போகின்றார்கள்?.

இன்னும் சிலர் தமது குடும்ப உறவுகளைத் தவிர ஏனையவர்கள் விடயத்தில் மட்டும். காதலை ஆதரித்துப் பேசுவார்கள். எது எப்படி இருப்பினும் பரந்த மனமும், தீர்க்கமான சிறந்த முடிவு எடுக்கும் திறனும், அனைத்து பெற்றோர், பிள்ளைகளுக்கும் இருந்தேயாக வேண்டும்.

குடும்ப சூழல், பொறுப்பு, கடமைகளால் நாம் பின்னப்பட்டு இருக்கின்றோம். இவைகளில் இருந்து நாம் விடுபடுவது சிறப்பும் அல்ல. எமது நோக்கம், பார்வை, எம்மை மட்டுமா சார்ந்து இருக்கின்றன? இல்லையே? பின் விளைவினை எதிர்பார்க்காத வாழ்க்கை எம்மை பின்னேதள்ளி முடக்க எத்தனிக்கும்.

மனித பலவீனங்களுக்கு அமையவே பார்வையின் தரமும் அமைந்திருக்கின்றது. உலகில் பலதரப்பட்ட தரங்களில், அந்தஸ்துக்களில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பணம் படைத்தவர்கள், படித்தவர்கள், பாமரர்கள்

எனப் பலவாறான தரத்தவர்களை இந்தப் பூமி வைத்துக் கொண்டிருக்கின்றது.

அனேகமானோர் தம்மோடு இசைந்தவர்களுடனேயே நட்புத் தொடர்புகளை வைத்திருப்பது சகஜம். பணக்காரர்கள் ஏழைகளைப் பார்க்கும் பார்வை ஒரு விதமாகவும், ஏழை பணம் படைத்தவர்களை வேறு கண்ணோட்டத்துடனும் பார்க்கின்றார்கள். இந்த வர்க்க வேறுபாடுகள் யதார்த்தமானவை தான். எனினும் சிலர் இந்நிலையில் இருந்து விடுபட்டுப் பரந்த நோக்குடன் சரிசமனாகப் பழகுவதுமுண்டு.

ஏழ்மை நிலையிலுள்ளோர் சிலர் தமக்குப் பணம் படைத்தவர்களைப் பார்த்தாலே பிடிப்பதில்லை எனவும் ,அதே போல் வசதி படைக்காதவர்களுடன் பார்த்துப்பேசவே கூச்சப்படுகின்ற செல்வந்தர்களும் இருந்தாலும் கூட, இந்நிலைமை களையப்பட வேண்டுமென்றே அறம் வளர்க்கும் பெரியோர் அறிவுரை பகர்ந்த வண்ணமுள்ளனர்.

இன்னும் ஒரு வியப்பான விடயத்தைக் கூற வேண்டும். மக்கள் கூடும் அங்காடிகளில், பேரூந்து நிலையங்களில், பொது இடங்களில் முன்பின் சந்தித்திராதவர்கள் ஏதோ ஒரு காரணங்களுக்காக வந்து போவார்கள். இவர்களில் ஒரு சிலர் பொருள் வாங்குதல், பேருந்தில் அனுமதி சீட்டுப்பெறுதல் போன்ற விடயங்களில் சம்பந்தமே இன்றிக் கருத்து மோதலை உண்டாகி, மோதிக்கொண்டு



RangaRakes



காவல்துறைக்கு முறைப்பாடு செய்யும் வரை விஷயங்கள் முற்றிப்போய் விடுவதுமுண்டு. ஒரே ஒரு தடவை பார்த்துப் பிரிந்து, அவரவர் கருமங்களுக்கு மீண்டும் செல்லும் மனிதர். ஏன் ஒருவரைக் கண்டவுடனே பகைமை உணர்வுடன் சண்டையிட்டு மற்றவர்கள் சிரிக்கும்படியாகவும், வேதனைப்படும் படியாகவும் நடந்துகொள்வது வியப்பு இல்லையா?

எவரையும் தோழமையுடன் நோக்கினால் என்ன குறைந்து விடும்? உனக்குக் கிடைக்காத பொருள், வசதி மற்றவனுக்குக் கிட்டினால் நீ ஏன் பதட்டமும், பொறாமையும் கொள்கின்றாய் "மனிதா," என்று கேட்கத் தோன்றவில்லையா?

எக்காரணமும் இன்றிச் சிலர் சொல்வார்கள். "அவனை எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. இவனைப் பார்த்தாலே பற்றிக் கொண்டு எரிகின்றது" என்பார்கள்.

ஒருவரிடம் பழகப்பழகத்தான் வேற்றுமைகள் களையப்படுகின்றன. பலர் மிகவும் எரிச்சலும், உதாசீனம் செய்தோருடனேயே பின்னர் இணைபிரியா தோழர்கள் ஆக்கிக் கொள்வது முண்டு. ஆனால் சிலர் ஆரம்பத்தில் நல்லவர்கள் போல் தம்மைக் காட்டிக்கொள்வதும், அதனைநம்பி அவர்களுடன் பழகியமையால் சிலா் மிகுந்த சிரமப்படுவது முண்டு.



Tamilnavarasam.com

எனவே முதல் பார்வை மூலம் பெற்ற முடிவுகள் அறுதியான முடிவு அல்ல. ஒருவரைப் பார்த்தமாத்திரத்தே, சிலர் அவர்களைப் புகழத் தொடங்கிவிடுவார்கள். புகழ்ச்சிமிகு சொல்லைக்கேட்டதுமே அதனை ஏற்பார்கள். வேறுசிலரோ, இவர் ஏன் இப்படி என்னைப் புகழுகின்றார்? எனச் சந்தேகப்பட ஆரம்பித்து விடுவார். எனவே நாம் பார்த்துப் பழகுபவர்களுடன் சர்வ ஜாக்கிரதையாக, அளவாக, மிகையான புகழ்ச்சி இன்றி அதே சமயம் அன்புடனும், ஆதரவுடனும் பழகுதலே சிறப்பானதாகும் உணர்வோமாக!

பார்வைகள் எல்லாமே ஒரு ஈர்ப்பு என்றெல்லாம் பேசுகின்றார்கள். குருவிடம் பக்குவப்பட்ட சீடன் அவர்தம் பார்வையாலேயே ஈர்க்கப்படுகின்றான். கடவுள் எங்கே? என்று சுவாமி விவேகானந்தர், சுவாமி இராம கிருஷ்ண பரமஹம்ஸரிடம் கேட்டபோது அவர் தம் தீட்சண்யமான பார்வையினால் அவரை நோக்க, அந்தக் கணப்பொழுதில் அவர் கடவுளையே தரிசித்ததாக அவர்களின் வரலாறு மூலம் காண்கின்றோம்.

எமது பார்வை அன்புடனும், அருள் கலந்தும் நோக்குமிடத்து எங்கள் விழி கருணை கொண்டுமிளிர் கின்றது.

விலங்குகள், பறவைகள் தமது இரையைத் தேட எதிரில் வரும் தம்மிலும். பலம் குறைந்த உயிரினங்





களைத்தம் விழியாலேயே நிலைதடுமாற வைத்து அவைகளை உடன் கவ்விக் கொள்கின்றன. ஆக்ரோஷமான புலியின் விழியும், இருட்டு வேளையில் ஆந்தையின் கண் களும் பயமூட்டும், அதே வேளை, மருளுகின்ற மானின் பார்வையும், குதித்தோடி விளையாடும் குறும்புச் சிறுவனின் கண்களும் எம்மைக் களிப்பில் ஆழ்த்துகின்றதல்லவா?

சூழ்நிலைக்கேற்ப பார்வைகளும் மாறுபடும். கோபத்தில் விழிகள் சிவக்கும். சாந்தநிலையில் விழிகள் மௌனமாகக் கனிவுடன்நோக்கும். நவரச பாவங்களின் பார்வைகளின் சஞ்சாரமே தனித்தனி உணர்ச்சிகளாய் பலகதைகள் பேசும். இலக்கியங்களில், கலைப்படைப் புக்களில் இந்தப் பார்வைகள் பற்றிய சமாச்சாரங்களை அற்புதமாகவே கலைஞர்கள் வடித்துள்ளார்கள்.

சதா குற்றச்செயல்களைச் செய்யும் சமூக விரோதிகளை அவர்கள் பார்வை மூலமே பலரும் கண்டு பிடித்து விடுகின்றார்கள். ஒருவரது உள்நோக்கை அவர்களது பார்வையே காட்டிக்கொடுத்து விடுகின்றது. விழிகளின் ஆழம், அது அவரவர் மனதின் விசாலத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. நல்லவர்களைக் கண்டால் எம்மால் விட்டு விட்டு ஏக முடிவதில்லை.

புலன்கள் தெளிவற்ற நிலையில் உள்ள பரிதா பத்திற்குரிய ஜீவன்கள் கூட, தம் உள்ளார்ந்த உணர்வு சிந்தனைகள் மூலம் உலகோடு உறவாடி தம் நிலைமறந்து



RangaRakes
Tamilnavarasam.com

வாழ்ந்து வருகின்றார்கள். இப்படி இருக்கும் போது சகல உறுப்புக்களும் முழுமையான முழுமனிதன் தனது அறிவை, உணர்வை, நல்நோக்குடன் பார்வைகளைச் சரிவர நற்திசையுடன் நோக்கி வாழ்ந்தால். இந்த உலகின் துன்பங்கள் சூழ்ந்திடுமோ சொல்வீர்!

முகம் இறுக, விழி பிதுங்க, மனம் வெளிற, உடல் வெட வெடக்க நாம் சமூகத்தின் கண் தோற்றமளிக்கக்கூடாது. துன்பம் வரும் போது அழுவதும், மேனிகுலுங்க வியர்க்க விறுவிறுக்கச் சோர்வடைவதும் இயற்கையான மனித மாற்றங்கள்.

ஆனால் சாதாரண நிலையிலே கனிவை எம்முன் கொண்டு வருவோம். பார்க்கின்ற எல்லாமே இறை தந்த அற்புதத் தோற்றங்களே!. இவைகளை நாம் துதிசெய்வோம். பரந்துபட்ட இவ்வுலகில் நெருங்கி வாழப்பிரியப்படுவோம். இதுவன்றோ சிறப்பு!. குரோதமும், வெறுப்புமற்று, பொறுமையும் புன்முறுவலுமாக எதிரில் தெரிபவன் நம்மவர், எவ்வுயிரும் இறைவன் தந்த உறவு எனத்தெளிந்த, நல் நோக்குதலுடன் பார்வையை எந்நேரமும் புத்தொளியுடன் வீசிடுவோமாக!.

தினக்குரல்
(ஞாயிறு)மஞ்சரி
03-09-2006



RangaRakes





# வெறுமை

சூன்யவெளியில் எத்தனை பிரமாண்டமான கோள்கள், நட்சத்திரங்கள், அவைகளின் தன்மைக்கேற்ப ஓர் ஒழுங்கில் சுற்றிக்கொண்டேயிருக்கின்றன. சூன்யத்தினுள்ளும் பல உண்மைகள் புதைந்து மறைந்துள்ளன. இருப்பதை இயன்றளவு முழுமனதுடன் வழங்குபவனுக்கு "வெறுமை" என்பதேயில்லை. கொடுப்பவன் இழப்பதில்லை. அவன் கெட்டு நொந்ததுமில்லை. மாறாக அவனுக்கு இறைவனின் அருட்கொடைகள், மிகத் தாராளமாகக் கிடைக்கின்றது. எல்லா வளங்களையும் இறைவன் அருளியமையால் வெறுமை, இல்லை, என்ற பேச்சிற்கே நாம் இடமளிக்கக்கூடாது. வழங்குபவன் ஆன்மா உறங்குவதில்லை. என்றும் விழித்தபடி, என்றும் நிறைந்த மனத்துடன் சதா களிப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பான்.

ஒன்றுமற்ற நிலை அல்லது சூழல் வெறுமையானது என்றும், வெற்றிடம், சூன்யம் எனப் பலவாறும் சொல்லப்படுகின்றது.



Tamilnavarasam.com

இந்தப் பிரபஞ்சம் எல்லைகள் அற்றது. வல்ல இறைவன் ஆட்சிக்குட்பட்டது. கருமை நிறம் கொண்ட அண்டப் பெருவெளி "சூன்யம்" என்று கூறப்பட்டாலும் அதனுள்ளே, அண்ட சராசரங்கள், நட்சத்திரங்கள், கோள்கள், துணைக்கோள்கள் என எல்லாமே சுற்றித் திரிகின்றனவே! சூன்ய வெளியிலும் எத்தனை பிரமாண்டமான கோள்கள், நட்சத்திரங்கள், அவைகளின் தன்மைக்கேற்ப ஓர் ஒழுங்கில் சுற்றிக்கொண்டேயிருக்கின்றன. சூன்யத்தினுள்ளும் பல உண்மைகள், புதைந்து மறைந்துள்ளன.

எனவே ஒன்றுமே இல்லாத சூன்யவெளியிலும் இருக்கின்ற பொருட்களின் விஸ்தீரணம் தான் என்னே! ஒன்றுமில்லாத் தன்மைக்கு எம்மால் எப்படி விளக்கம் கூறுவது?. இவை எல்லாமே பெரும் அற்புதமே! இருப்பினும் கூட வெறுமை பற்றி நாம் ஓரளவாவது புரிந்து கொள்ள த்தானே வேண்டும்!

ஒரு பணக்கார நண்பருடன் பேசிக் கொண்டிரு ந்தேன். அவர் சொன்னார். "எனக்கு எல்லாமே சூன்யமா கவே இருக்கின்றது. எல்லாமே வெறுமை வெறுமை, வெறுமைதான். எனக்கு எதுவும் அற்ற உணர்வே மேலோங்கி நிற்கின்றது. நான் தனித்தவன் போல் உணர்கின்றேன்" என்றார். எனக்கு அவர் பேச்சு வியப்பும், சிரிப்பையும் வர வழைத்தது. அவரை நான் நன்கு அறிவேன். எவருக்கும் அவர் கேடு விளைவித்தவரல்லர். எனினும் யாருக்கும் எதையும் கொடுத்தவருமல்லர்.





இவரது கூற்றின் பொய்மைத் தன்மை எனக்கு சற்று வருத்தத்தையும், ஏன் எரிச்சலையும் தந்தது. இந்த நபர் எதை, எதை இழந்தார்? யார், யாருக்கு எதை எவற்றை எல்லாம் வழங்கினார்? இவரிடம் பணம், சொத்து, பதவி என்று எல்லாவற்றையும் இன்னமும் நிரம்பவே வைத்திருக்கும் போது இவர் எப்படி வெற்று மனிதரானார்? உண்மையில் இருப்பதை இயன்றளவு முழுமனதுடன் வழங்குபவனுக்கு வெறுமை என்பதேயில்லை.

கொடுப்பதற்கும், முழுமையாக வழங்குவதற்கும், எதையுமே இழப்பதற்கும் சித்தமாயுள்ளவன் சித்தனாவான்.

அவன் வெறுமை, வேதனை, துன்பம், தோல்வி, சூன்யமான உணர்வு என்று எதுவுமே அற்றவனாவான். இவன் சந்தோஷ சாம்ராஜ்யத்தின் சொந்தக்காரன். முழுமையின் முழு மனிதன் ஒன்றுமில்லாத தன்மையிலும் எல்லாமே நிறைந்தவன். பணம், பொருள், பண்டம் ஆஸ்திகளைத் தம்மிடம் வைத்துக் கொண்டு அதை ஒருவருக்குமே வழங்காது, அல்லது உதவி நல்காது விடுபவன் இருந்தும் இல்லாதவனே. ஏழையாகவே வாழ்ந்து, ஏழையாகவே இறந்தும் போவான்.

ஆனால் அவனுள் இருப்பது எல்லாமே ஆசைகள், நிராசைகள், ஏக்கம், எதிர்பார்ப்பு, அவா, துன்பம், அங்கலாய்ப் புக்கள் தான். கொடுப்பவன் இழப்பதில்லை. அவன் கெட்டதுமில்லை. கொடுப்பவன் வறியவன் அல்லன். கொடுக் காதவன் செல்வந்தனாயினும், காய்ந்த புல்லினும்

பெறுமதியற்ற மெலிந்த வறியவனே எனப் புரிந்து கொள்வோம்!

இத்தகையவர்களுக்குத் துன்பம் வரும் போது வெறுமை நோக்கில் சுய பச்சாதாபத்துடனே தம்மை நோக்குவது கொடுமையிலும் கொடுமை ஐயா! உண்மையான அன்பு இவர்களுக்குக் கிட்டாது விட்டால் வாழ்வே வெட்டுண்டு போகுமல்லவா!

நாம் பூரண மகிழ்வினைத் தேட விழைவது என்பது பிறருடன் இணைந்து அதனைப் பகிர்தலே ஆகும். அப்போது தனிமை உணர்வு எப்போதுமே தலைகாட்டாது.

பெரிய கோடீஸ்வரர்கள் கூட விரக்தியுற்றுத் தற்கொலை செய்துகொள்கின்றார்கள். அத்துடன் பெரிய பதவியில் இருப்பவர்கள் கூட, மற்றவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கும்படி திடீர் எனத் தம் இன்னுயிரை மாய்த்து விடுகின்றனர். பெரிய செல்வாக்கு உள்ளவர்களைப் பார்க்கும் சாமான்ய மக்கள் அவர்களைப் போலவே தமது வாழ்வும் அமையாதா என அங்கலாய்ப்பது உண்டு. உண்மையில் இந்தப் பதவிகளும், செல்வமும் எல்லாமே வேண்டாம் என்று எதற்கு இவர்கள் மாய்ந்து போக வேண்டும்? இவர்கள் ஓடி, ஓடி உழைத்தது எல்லாமே யாருக்காக? எந்த ஒரு கணத்திலும் இத்தகையோர், வாழ்வின் நல்ல பரிணாமங்களைச் சிறப்புக்களைச் சிந்திப்பதேயில்லை.





இந்தப் பேர்வழிகள் உயிரைப்போக்கு முன் இந்த உலகில் பலர் எதுவுமே இல்லாதவர்கள் பற்றியும் தொல்லைகள் உள்ள ஏராளமானவர்கள் படும் துன்பங்கள் என்ன என்பது பற்றியும் சிந்தித்திருக்கமாட்டார்கள். தங்களை தங்கள் துன்பங்களை மட்டுமே முதன்மைப் படுத்துகின்றனர்.

உயிரின் பெறுமதி உணராத இவர்கள் சிறிதாவது சிந்தனைக்குச் சிறிது முன்னுரிமை அளித்து, இருப்பதை இல்லாதோருக்கு வழங்க எண்ணினால் என்ன? அந்த நல் எண்ணம் கொண்டாலே போதும், அவன் தன் உயிரை விடுத்தலை விடுத்து துன்பம் துறந்த இன்பமே சூழ்ந்த மனிதனாகி விடுவான். இத்தகைய நற்சிந்தனை வந்து, தற்கொலை உணர்வினைத் தகர்த்து, சுத்த ஆத்மாவாக உருக்கொண்டவர்களும் உண்டு.

“அடடா எனக்கு இதுவரை புலப்படாத உண்மைகளை இன்றுதான் புரிந்து கொண்டேன். சேவை செய்வதிலும், வழங்குவதிலும் இப்படி ஒரு ஆத்ம திருப்தி இருப்பதை அறியாமல் விட்டேனே” என்று உரைத்த பலரை நாம் கண்டு இருக்கின்றோம்.

சேவை புரிபவனுக்கு, வாழ்க்கையை வெறுக்கும் நிலை இல்லை. வெறுமை என்று ஒறுத்துப் பேசுதலும் இல்லை.



RangaRakes
Tamilnavarasam.com

வீணாக இந்த உடல் படைக்கப்பட்டதன்று. எமக்கு எல்லாவற்றையுமே வழங்க இந்தப் பூமி தயாராக உள்ள போது, நாம் ஏன் அதன் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளத் தயங்க வேண்டும்?

மனிதன் தன்னிலை உணராமல் இல்லாமை பற்றி வரட்டு, வாய்மொழிகளை உளறித் தீர்க்கின்றான். இந்தப் பேச்சுக்கள் கூட சுய கௌரவத்தை அழிக்கவைக்கும். "இல்லை" என்பதே தொல்லைக்குள் ஆட்படுத்தவல்ல "சொல்" தான்.

- ❖ எனக்கு யாவுமே இருக்கின்றது எல்லாமே கிடைத்துக் கொண்டேயிருக்கின்றது.
- ❖ இறைவன் தருகின்ற செல்வத்தை, வளங்களை இல்லை எனச் சொல்லவே மாட்டேன்.
- ❖ எந் நிலையிலும் தளர்வற்ற நிலையில் நான் இருப்பேன்.
- ❖ வெறுமை உணர்வும், வேதனையும், விரக்தியும் என்னிடம் இருந்து விடுபட்டு விட்டது.

என உங்களுக்குள் நீங்கள் அடிமனதூடான தெளிவுடன் உரை செய்வீர்களாக! இவை எல்லாமே உங்கள் அந்தராத்மாவைப் புனிதப்படுத்திவிடும். நீங்கள் மனதார





உங்களுக்கு இடுகின்ற கட்டளைகள், நிச்சயமாக உங்களை நல்வழிப்படுத்தும். ஒரு நம்பிக்கைக்குரிய நபராக, மன உறுதி, மனோவளம் மிக்க மானுடனாக மாற்றிவிடும்.

சந்நியாசம் என்பது வெறுமை உணர்வினால் விளைந்த நிலை என்றும் சிலர் கூறுவதுண்டு. உண்மையின் நிறைந்த நிலையில் எல்லாமே உணர்ந்த நிலையில், "ஞானம்" நோக்கிய பயணமே துறவு நிலையாகும்.

இங்கு கடமை மறந்து காடு ஏக முடியாது. எந்த ஒரு சந்நியாசியும், "கடமையை மறந்து என்னுடன் புறப்படு" என்று சொல்லமாட்டார்கள். "வாழ்க்கையை வெறுத்துச் சந்நியாசம் போகின்றேன்" என்று தற்காலிக மான வாசகத்தை உதிர்ப்பவர்கள் பின்னர் வாழ்க்கையில் சில விடயங்களை விட்டு விட்டு வந்து விட்டோமோ என ஏங்கித்தவிப்பதும், பின்னர் சொன்ன வார்த்தையை பின்னுக்குத் தள்ளுவதும் அன்றாட காட்சிகள் தான். மேலும் இத்தகையவர்கள் தெரியாமல் சாமியார்வேடம் போட்டு செய்கின்ற தப்புத்தண்டாக்கள் சொல்லிமாளுமா?

எனவே தன்னலமற்ற எண்ணங்களுடன் அதன் படியே நடந்துகொள்ளும் செயல்திறன் மிக்க நல்லோர்கள் வெறுமையைக் காணாத இறை தாசர்களேயாவர். மக்களுக்கான தொண்டுகள், இறைபணி போன்றது தானே?.

பழங்களை நல்கும் மரங்கள் அக்கனிகளைத் தாம் உண்பதில்லை. எங்கள் உழைப்பின் மூலம் பெறும் எந்த



RangaRakes

Tamilnavarasam.com

பொருட்களும் பிறருக்கும் வழங்கப்பட்டால், அதுவன்றோ நிறைவு! மரத்தை நட்டவனைவிட அதன் மூலம் பயன் பெறுபவர்களே அதிகம். தனது மரத்தின் கனிகளை உங்கள் அனைவருக்கும் வழங்குகின்றேன், என வழங்குபவன் வெறுமையற்ற பரோபகாரி.

வழங்குபவனின் ஆன்மா, உறங்குவதில்லை. அது எந்நேரம் பயணித்தபடியே மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது.

மனதளவில் நிறைவற்றவன் தான் முடம்போல் வாழ்ந்தும் வாழாது சாகின்றான். நிறைவு அற்ற வெறுமை பற்றியே பேசித் துக்கத்தையே தியானித்தல் போல கொடுமை வேறு என்ன இருக்கின்றது?

நறுமணத்தினையே முகர்ந்து மலர்களை ஸ்பரித்து கொண்டிருக்கும் போது, ஏதோ ஒரு திசையில் பார்வையை செலுத்தி அருகில் உள்ள விஷ விருட்சத்தின் முட்களைப் பிடித்து இழுத்து அது குத்துகிறதா, அதிலிருந்து துர் நாற்றம் வருகின்றதா என வீணான கற்பனை வயப்பட்டு,தம்மை மறந்து, அனுபவிக்கும் சந்தோஷங்களைப் புறம் தள்ள எத்தனிப்பது நல்ல வாழ்வாக அமையுமா?

வெறுமை வேதனை உணர்வுகள் கூட இப்படித் தான். மனிதன் பலதடவைகளின் தன்னுள் உள்ள ஆன்மா வை அதன் சுதந்திரத்தினை, அதன் வியாபகத்தை ஆராதிக்கபிரியப்படுவதில்லை.





சமூகத்தில் மற்றவர்களுடன் முரண்படுவதிலும் பார்க்கத் தன்னுடன் ஒருவன் முரண்படுவதே பெரிய துன்பமாகும்.

"அன்பினை வழங்கி ஆறுதலைத், தேறுதலைப் பெறு" என்பர் ஆன்றோர். எனவே எம்மைச் சுற்றிப் பலர் இருக்கின்றார்கள். நாம் அச்சப்படவோ தனிமையில் துன்புறவோ தேவையில்லை. பூரணதிருப்தியினை நாம் பெற்றுக்கொண்டிருக்கின்றோம். இனிமேலும் பெற்றுக் கொள்ளுவோம் என மனதார எண்ணுவோமாக!

இந்நிலையினை நம்புவதும், பூரணமாக அதனுள் ஐக்கியப்படுவதும் கூட ஒரு தவறுநிலைதான். செறிவான நிறைவுள்ள மனதினை நாம் பெற்றால் சூன்ய உணர்வு சேய்மையாய் மறைந்தே போகுமன்றோ!

தினக்குரல்
(ஞாயிறு)மஞ்சரி
10-09-2006



RangaRakes
Tamilnavarasam.com



# திருப்தி

இருப்பதில் திருப்தி காண்போம். இல்லாதது பற்றிப் பொல்லாப்பு ஏதுமில்லை. தங்கள் சொந்த திருப்திக்காக காண்பதற்காக ஏனையவர்களின் திருப்தி சந்தோஷங்களை, எதிர்பார்ப்புக்களைப் பறித்தல் அதர்மம். கடமைகளை ஒழுங்காகச் செய்தவர்களுக்கு என்றுமே திருப்திதான். திருப்தியுடன் உறங்கச் செல்பவன் மறுபடி விழிக்கும்போதும் நிம்மதியுடன் எழுந்து நிற்கின்றான். எளிமையும், இதய சுத்தியும் கொண்டவர்கள் திருப்தியின் முழுமையை அனுபவித்த வண்ணமாயிருப்பார்கள்.

திருப்தி காண்பதில் திருப்தியற்றவர்களாக இருப்பது வாழ்வின் முழுமையான சந்தோஷங்களை வலிந்து இழப்பதாகவே கருதப்படும்.

இருப்பதில் திருப்தி காண்போம். இல்லாதவை பற்றிப் பொல்லாப்பு எதுவுமில்லை என்றே எண்ணுக!





இந்நிலைமை எமக்குள்ளேயே உருவாக்க மனத்தைப் பக்குவப்படுத்த வேண்டுமென்று ஆன்மீகவாதிகள் சொல்லிக் கொண்டேயிருக்கின்றனர். எதுவுமே முடியாது என நாம் முன் கூட்டியே சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமோ?

திருப்தியுடன் வாழ்வது என்பது இருப்பதைக் கொண்டு அதனைப் பரிபூரணமாக ஏற்று வாழ்தலும், அதன் மூலம் எம்மை முழுமையான மனிதனாக ஆக்க முயல்வது மாகும்.

நான் நேரில் கண்ட ஒருவர் பற்றிச்சொல்கின்றேன். இவரை அடிக்கடி பேருந்துத் தரிப்பிடத்தில் காண்பதுண்டு. இவர் அனேகமாக ஒரு தினசரியைப் படித்துக் கொண்டிருப்பார். அழுக்கடைந்த மேனியும், அழுக்கான சட்டையுடன் எவர் பார்வையையும் லட்சியம் செய்யாதவராகவே காணப்படுவார். தெருவில் வருவோர் போவோர் யாராவது சில்லறை நாணயங்களைப் போட்டால் எல்லா நேரங்களிலும் அதனைப் பெற்றுக்கொள்ளமாட்டார். கொஞ்சம் காசு சேர்ந்ததும் அதை எடுத்த பின்பு அதன் பின்னர் யாராவது காசு போட்டால் வாங்க மறுத்து விடுவார். நான் ஒரு சமயம் அவரிடம் காசு கொடுக்க முனைந்த போது அதை ஏற்க மறுத்துக் கைகளால் சைகை செய்து, வேண்டாம் என்பது போல் உணர்த்திவிட்டார். இவர் ஏன் இப்படிச் செய்கின்றார் என நான் பின்னர் அவதானித்த போதுதான் உண்மையினைத் தெரிந்து கொண்டேன்.



RangaRakes Tamilnavarasam.com

தனக்குத் தேவையான பணம் சேர்ந்ததும் அருகில் உள்ள கடைக்குச் சென்று உணவு அன்றைய தினசரிப் பத்திரிகையை வாங்கிக் கொள்ளுவார். இவர் ஆங்கிலத் தினசரிகளையே படிப்பதை நான் கண்டிருக்கின்றேன் தெருவிலேயே உணவுப்பொதியை வைத்துச் சாப்பிடுவார். பின்னர் எங்காவது மௌனமாக முடங்கிக்கொள்வார்.

இவரது செய்கைகள் எமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் எல்லோராலும் இந்த நிலையில் வாழ முடியுமா? தனக்குத் தேவையானதில் மட்டும் திருப்திப்பட்டு எதிர்காலம் பற்றி எந்தக் கவலையும் இன்றி வாழுவது இயலுகின்ற காரியமா என்ன? இந்நிலை கூட ஒரு துறவு நிலை மாதிரியன்றோ! திருப்தி என்பது அவரவர் மன நிறை வினைப் பொறுத்தவிடயம் தான். எல்லை மீறாத ஆசைகள் இல்லாதவன், இருப்பதில் மகிழ்வினை, இதயத்தில் பூக்கச் செய்கின்றான்.

இன்னும் ஒரு அபூர்வமான மனிதர் பற்றி நான் சொல்லியேயாக வேண்டும். இவர் ஒரு சிகை அலங்கரிப்புத் தொழிலாளி. நல்ல மனிதர். அத்துடன் திறமையான தொழிலாளி. திருமணமாகாதவர். தமக்குள் தாமே ஏதோ பேசிக்கொள்வார், பாடுவார். ஊர் உலக நடத்தைகள் அரசியல் விவகாரங்கள் தெரிந்தவர். அக்காலத்தில் இவர் நன்று படித்தவர். வாசிகசாலைக்குச்சென்று அனைத்துச் செய்தித்தாள்களையும் படித்துவிடுவார்.



RangaRakes



ஒரு குறிப்பிட்ட நேரத்தில் காலை வேளையில் மட்டும் தனது தொழிலை ஆரம்பிப்பார். பல விடயங்களை என்னுடன் பேசிக்கொள்வதுண்டு. தினசரி அன்றைய பொழுதில் ஒரு குறிப்பிட்ட பணம் சேர்ந்ததும் தனது தொழிலை நிறுத்திக்கொள்வார். அவர் தனது கருமத்தினை முடித்த பின்பு எவர் வந்து கேட்டாலும் தனது தொழிலைச் செய்யவேமாட்டார். அப்படியாராவது அன்புடன் கண்டிப்பாக க்கேட்டால் மட்டும் சிகை அலங்கரிப்பினை கேட்ட நபருக்குச் செய்துமுடிப்பார் ஆனால் அவர் கொடுக்கின்ற பணத்தை வாங்க மறுத்து விடுவார். “இந்தா பிடி காசை” என்றால் “எனக்கு ஒன்றும் வேண்டாம் காசு வாங்கமாட்டேன்” என்ற படியே பதிலை எதிர்பார்காமல் போய் விடுவார். ஏன் இப்படிச் செய்கின்றீர் என்று நான் கேட்கும்போது “இதெல்லாம் எனக்கு எதுக்கு” என்றுதான் பதில் அளிப்பார், மேலும் யாராவது அன்புடன் கூலியைக் கொஞ்சம் அதிக மாகக் கொடுத்தால் கண்டிப்பாக அதனை ஏற்க மறுத்தும் விடுவார்.

தனது காணி, வீடு அனைத்தையும் உறவினர்க்க ளுக்குக் கொடுத்துவிட்டு வாழ்ந்த இந்த அற்புத மனிதர் இறுதிக் காலம் வரை திருப்தியுடன், மகிழ்ச்சியுடனேயே வாழ்ந்து சென்றார்.

இந்தக்காலத்தில் இந்தக் கதைகளை எல்லாம் எம்மால் நம்ப முடியாதுதான். நடைமுறை வாழ்விற்கு இவர் களைப் போல் நம்மால் வாழ்ந்துவிட முடியாது. ஆனால்



Tamilnavarasam.com

இத்தகையவர்கள் வாழ்க்கையிலும் அர்த்தம், நியாயம் இருப்பதை நேர்மையுள்ளவர்கள் கண்டாலே வியப்படைவர்.

வாழ்வில் கடைப்பிடிப்பது முடியாத விஷயம் எது என்பது, மனமார எதனையும் இழக்கச் சித்தமாயிருத்தல் என்பதாகும்.

தேவைகளை மட்டும் தொட்டு ஏனைய வைகளை விட்டு விடுதல் என்பது, பல பிரச்சினைகளில் இருந்து நாம் விலகுவதற்கும் ஏற்ற உபாயம் தான். மனித இயல்பு என்பது இதுவே போதும் என்று எண்ணுவதும் அல்ல.

ஆயினும் "இதுவே போதும், அதிகம் வேண்டாம்" என்று நினைக்கின்ற போது வாழ்வின் நாம் செய்யப் போகின்ற சாதனைகள் முடக்கி வைக்கப்படுகின்றன. இக் கூற்றில் என்ன தவறு இருக்கின்றது எனக் கேட்கத் தோன்றுகின்றதா?

மனிதனின் மேல் நோக்கிய பயணத்தில், இடை நடுவில் கிடைப்பதே போதும் என்றால் அவனது லட்சியங் களே, அவலட்சணமாகிவிடும். தொடப்போகின்ற எல்லை யைத் தொட்டு விட்டேயாக வேண்டும். மேலும் அந்த எல்லையைக் கண்டபின் விழிகளை உயர்த்தி மேலும் என்ன புதுவழி உண்டு எனத் தேட முனைபவனுக்குச் சோம்பலற்ற சுறுசுறுப்பு உணர்வு மேலோங்குகின்றது. "நியாயமான இலட்சியங்கள் பேராசை அல்ல"





எமது செயலூக்கத்தினால் பெறப்படும் பெறுபேறு களை எமக்கும் உலகத்திற்கும் நாம் அர்ப்பணிக்கும் போது நாம் நிறைந்த திருப்தி நிலையை அடைய வழி பிறக்கின்றது. அதை விடுத்து முயலுதல் இன்றி, இருப்பதை உண்டு, அடுத்தவனுக்கு கொடுப்பதும் அற்ற வாழ்வு என்ன வாழ்வு?

திருப்தியை உனக்குத் தேடுவதுடன் மற்றவர்க்கு ஊட்டு! எனக்குள்ள திருப்தி நிலையினை மற்றவரும் பெறுதல் வேண்டும் என எண்ணுக! எமது உழைப்பினால் இது சாத்தியமாக்கப்படக் கூடியதே. சாதனையாளர் தூங்கியிருந்தால் இன்றும் உலகம் வேதனையைத்தான் முகர்ந்து கொண்டேயிருக்கும். புரிந்து கொள்ளுங்கள்!

ஏதோ ஒரு விதத்தில் எமக்காகச் செய்யும் பணிக ளின் நன்மைகள் பிறரையும் போய்ச்சேருகின்றது. அதன் பொருட்டாயினும் நாம் எமது பணியினைப் பூரணத்துடன் நேர்மையுடன், விருப்புடன் செய்வோமாக!. பணிகள் நிறுத்தி வைக்கும்போது முன்னேற்றங்கள் முடக்கி வைக்கப்படும்.

இன்று அனேகமானவர்கள் தமது திருப்திக்காக ஏனையவர்களின் திருப்தி சந்தோஷங்கள் எதிர்பார்ப்புக் களைக் கண்டு கொள்ளாமல் இருக்கின்றார்கள்.

நாங்கள் எதிர்ப்பார்த்த சந்தோஷங்களை அனுப விக்கும்போது, எமது விருப்பங்களையே மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற எவ்வித கட்டாயமும் யாருக்



RangaRakes

Tamilnavarasam.com

கும் இல்லை. தமது விருப்பங்களுக்கு ஏற்ப சந்தோஷங்கள் வருவதுமில்லை என்கின்றார்கள். உங்கள் விருப்புக்கள் மற்றவர்க்கு ஒவ்வாமலும் இருக்கலாம்.

பொதுவாக பெற்றோர், கணவன், மனைவியர் தங்கள் விருப்பமே தம்மைச் சார்ந்தவர்கள் விருப்பமாக வேண்டும் என எதிர்ப்பார்ப்பதுண்டு. "நான் எவ்வளவு வசதிகளை எனது குடும்பத்திற்கு அளிக்கின்றேன். இருந்தும் கூட என்னை எனது குடும்பத்தில் கண்டு கொள்வதில்லை" எனப் பலர் வேதனையுடன் குறைப்படுவதுண்டு.

ஒருவரைக் கூண்டுக்குள் வைத்திருந்து நாம் அவர்களிடம் சந்தோஷங்களை எதிர்பார்க்க முடியுமா? அன்பினை அதிகம் காட்டி அவர்களை எமது கட்டுக்குள் கட்டிப்போட எத்தனிக்கலாமா? சிலவேளை சிலர் செய்கின்ற கட்டுப்பாடுகள் அன்பின் நிமிர்த்தமாக இருப்பினும் இது கூடச் சித்திரவதை தான். எல்லோரும் தமக்கே உரியவர் என்று எண்ணுபவர்கள் அப்பொருள் தம்மைவிட்டு விலகினால் எவ்வளவு அவஸ்தைப்பட வேண்டும் தெரியுமா?

எதையும் இழக்கச் சித்தமாயுள்ளவன் எப்பொழுதும் திருப்தி நிலையில் வழுவாத மனோநிலையில் இருப்பான்.

இருக்கும் வரை கடமையை ஒழுங்காகச் செய்தவன், தன்னால் முடிந்த வழங்கல்களைச் செய்தவன், எவ்வித எதிர்பார்ப்புக்களையும் கருதாதவன் தன்னை விட்டு எது விலகினாலும் நிர்சிந்தையுடனேயே வாழ்ந்து கொண்டி





ருப்பான். "இழத்தல்" என்பது, திருப்தி நிலை உள்ளவனுக்கு இல்லவேயில்லை. உணர்வோம்.

மிகையான காதல் எதிர்பார்ப்புக்களில் தீவிரமாக இருந்த ஒருவர் பற்றிச்சொல்லுகின்றேன். பெரும் செல்வந்தரான இவர் மிகவும் வாட்டசாட்டமான அழகானவர்.தமக்கு ஏற்ற அழகிய பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். வசதிகளைக் கொண்டிருந்த காரணத்தாலும், மனைவியிடம் அளவுக்கு மீறிய காதலாலும். எந்தவிதமான வசதிகளில் குறைவு ஏற்படக்கூடாது என்பதற்காகவும் மற்றவர்கள் பார்த்தால் வியக்கும் வகையில் மனைவிக்கு எல்லாச் செல்வங்களையும் அள்ளிக் குவித்தார்.

ஆனால்,

தனது மனவைிக்கு எல்லா வசதிகளையும் அள்ளிக் கொடுத்துவிட்டு அவரை ஒரு கூண்டுக்கிளிபோல் நடாத்தி வந்தார். தமது நண்பர்கள் உறவினர்களிடம் தனது மனைவி ஒரு அதிஷ்ட தேவதை, தனது அன்புச்செல்வம் என்று புகழ்ந்து தள்ளிய இவர், மனைவியை ஒரு இடங்களுக்கும் கூட்டிச் செல்வதில்லை. கோவில் குளம், நண்பர்கள் வீடு எங்குமே அழைத்துச் செல்லமாட்டார். தனது மனைவி மீதான அதீத பிரேமை காரணமாகவும், தனக்கே உரியவள், வேறு ஒருவருமே அவரைப் பார்க்கவே கூடாது என்கின்ற ஒரு எண்ணத்தை வளர்த்துக் கொண்டார். தமது மனைவி தனக்குக் கிடைத்த ஒப்பற்ற சொத்து என்று சொல்லிச் சொல்லித் திருப்திப்பட்டுக் கொண்டேயிருந்தார்.



RangaRakes
Tamilnavarasam.com

ஆனால் நடந்தது என்ன? அவர் சற்றும் எதிர்பாராதது நடந்து விட்டது. அவரது அழகிய மனைவி எந்த வித தோற்றப் பொலிவற்ற கணவரின் தோட்டத்தில் வேலை செய்த ஒரு ஏழைத் தொழிலாளியுடன் ஊரைவிட்டே ஓடிப்போனாள். எப்படி இருக்கும் அவருக்கு என்பதை எண்ணிப்பாருங்கள்! தனது திருப்திக்காக மனவைியின் எதிர்பார்ப்புக்களை அவர் லட்சியம் செய்ததேயில்லை. வீட்டிற்குள்ளே சுதந்திரமின்றி முடங்கிக் கிடந்தாள். செல்வத்தைக் கொட்டினால் சந்தோஷம் கிட்டிவிடுமா? பலாத்காரமான திணிப்புகளில் ஏது திருப்தி?

மிகவும் விரக்தியுடன் காணப்பட்ட அவர் எல்லாமே இருந்தும் எல்லாமே இழந்தவரானார். மற்றவரின் மன இயல்புகளை உணராதவர் எப்படித் தான் மட்டும் நிரந்தரமான திருப்தி நிலையை எய்த முடியும்? பாவம் செய்பவர்களின் நிலையைப் பார்த்தால், அவர்களது குரூர திருப்தி என்பது ஏனையவர்களை வதைப்பதாகவே இருந்து கொண்டிருக்கும். இந்த அல்ப சந்தோஷம் எல்லாம் இவர்களுக்கு நிரந்தரமன்று. எல்லாவற்றையும் இழந்து ஈற்றில் எய்துகின்ற அவஸ்தைகள் சொல்லும் தரமன்று.

தோல்வி, துன்பம், ஏமாற்றங்கள் வாயிலாக, அதன் மூலம் கிடைத்த அனுபவங்களால் தான் தெளிவு ஏற்படுகின்றது. எனவே துன்பம், ஏமாற்றம், தோல்வி என்பவைகூட எமக்கான கொடுப்பனவுகள் என்று கருத வேண்டும். எந்த





வித சோதனைகளையும் காணதவனிடம் முதிர்ச்சி நிலையை எதிர்பார்க்கலாமா?

அனுபவ அடிகள் பெறாதவன் வாழ்க்கையில் ஒரு அடி கூட முன்னேறி விடுவானா? ஏமாற்றங்கள் மூலம் பெற்ற தெளிவினால் எதனையுமே எதிர்பார்க்காத எண்ண வலுவை நாம் பெற்று விட முடியும்.

எனவே, வருகின்ற அவஸ்தைகளைப் பெற்றுத் தெளிந்த பின்பு கிடைப்பது "திருப்தி" தான். இதில் எவ்வித சந்தேகமும் வேண்டவே வேண்டாம். விரக்தி நிலையைக் கடந்தால்தான் ஒளி மயமான உலகு புலப்படும். விரக்தியுற்றோர்க்கு ஏது திருப்தி? எங்கே சூரியன் மறையப் போகின்றான் எனக் காத்திருந்து அது சற்று மறையும் போது இருள் கப்பென்று சூழ்வது போலத்தான். எம்மிடம் இருக்கும் தைரியம் என்கின்ற தன்னம்பிக்கை சற்றே தொய்வடைந்ததுமே மனக் குழப்பத்துடன் சூழ்ந்த திருப்தியற்ற நிலை எம்மை ஆக்கிரமித்து விடுகின்றது.

நிரந்தரமான ஒளிபோன்ற நம்பிக்கைகளில் வலுவாக நாம் பிணைந்து கொண்டால் தற்காலிக சுகங்களைக் காட்டும் சலசலப்புக்கள் எம்மை உலுப்பிவிட முடியாது.

இன்று தனிமனித திருப்தி நிலையைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் நாடுகள் எல்லாமே தன்னிறைவுடன் திருப்தியுடனா ஆட்சி



RangaRakes
Tamilnavarasam.com

செய்கின்றன? ஒரு நாடு நிம்மதியாக இருந்து நிம்மதியான ஆட்சி நடப்பதற்கு பக்கத்து நாடுகளும் வல்லரசு நாட்டின் தலைமைகளும் தயாராக இருப்பதில்லை.

தனி மனிதன் வாழ்வில் ஏற்படுகின்ற சலனங்கள் போலவே சுற்றியுள்ள தேசங்களும் குரோத வீம்பு எண்ணங் களுள் சுழன்று கொண்டிருக்கின்றன. இருக்கின்ற வளங்கள், ஆற்றல்கள் எல்லாமே தமக்கே உரிய தனித்துவமான சொத்து என எண்ணுவதால் வரப்போகும் எதிர்காலம் பற்றிச் கிஞ்சித்தும் உணராது பிற நாடுகளை வஞ்சிப்பதால், குரூர மான களிப்பில் திளைத்துக் கொண்டிருக்கின்றன.

அளவு கடந்த அறிவு மேல் நோக்கிய யுகத்தில் வாழும் நாடுகளில் ஒரு சின்னஞ்சிறிய நாடு கூட வல்லர சாகத் தோற்றம் காட்டிவிடக்கூடும். அது மட்டுமல்ல, வல் லரசு நாடுகளின் எதிர்பார்ப்புக்கள் கூட வினாடிப் பொழுதில் நொடிந்து உடைந்தும் போகலாம். ஏனைய நாடுகளை அரவணைக்காத நாடுகள் திருப்தியுடன் ஆட்சி செலுத்திவிட முடியாது. ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற ஒரு தனி மனிதன் விருப்பு வெறுப்புத்தானே ஒரு நாட்டை, ஏன் உலகத்தையே ஆட்டுவிக்கின்றது.

சர்வ அதிகார மமதை உள்ளவர்களுக்கு இறைவன் எதை வழங்கினாலும் அவன் திருப்திப்பட்டுவிடப் போவதுமில்லை. பெரிய நாடுகள் கூட இன்று தனி மனித செல்வாக்கினுள் நுளைந்திருப்பது வேதனையிலும் வேதனைதான்.!





நாட்டுப்பற்றுள்ள எந்தத் தலைவனும் வேற்று நாடு களை வெற்றுக் குடுவையாக்க முனையமாட்டான். வேற்று நாட்டவர்களைப் பகைமை பாராட்டும் தலைவர்கள் ஈற்றில் இருந்த இடம் தெரியாமல் தடம் தொலைத்த கதைகளை உலகம் நன்கு படித்துள்ளது.

வக்கிரம் பொறாமையற்ற சமூகத்தினுள் நாம் பிணைந்து நின்றால் எமது தனிப்பட்ட எண்ணங்களும் பவித்திரமாகவே விஸ்வரூபத்துடன் துலங்கி நிற்கும். இந்நிலையில் நாம் சஞ்சரிக்கும் போது எமது சமூகத்திற்கு எம்மாலான பங்களிப்பினை வரைவின்றிச் செய்து கொண்டேயிருப்போம். அப்போது எமக்கு ஏற்படும் நிம்மதி உணர்வே திருப்தியுமாகின்றது.

ஆன்மீகம் காட்டும் பாதை என்பது கூட தனிமனித ஆன்ம ஈடேற்றம் பற்றியது மட்டுமல்ல. ஒட்டு மொத்த சகல ஜீவன்களுக்குமான நிம்மதியை அளிக்க வழிசமைப்ப துமாகும்.

எளிமை பொருந்திய, இதயசுத்தியுடன் வாழுகின்ற ஒவ்வொருவருமே திருப்தியின் முழுமையை அனுபவித் தவனாகின்றான். காண்பது எல்லாவற்றிலும் இச்சையும், தனக்கு மட்டுமே எல்லாம் என்கின்ற உணர்வுகள் களையப் படாது விட்டால் நிம்மதி என்கின்ற வெகுமதியை அவர்க ளாகவே தொலைத்தவர்களாவர். தேவைகளைச் சுருக்கா தவர் திருப்தியைக் காணாதவர்களாகவே காலத்தை ஓட்ட



RangaRakes

Tamilnavarasam.com

வேண்டியது தான். வாழ்க்கைப் பாடங்களைக் கண்டு கொண்டும்கூட கவனத்தில் கொள்ளாது விட்டால் என்று தான் எம்மை நாம் கண்டு கொள்ள முடியும்?

என்றுமே திருப்தியுடன் உறங்கச் சென்று மறுநாள் காலை விழித்து அடுத்த நாள் பூரண திருப்தியுடன் கடமை புரிந்து மீண்டும் முழுத்திருப்தியுடன் உறங்குபவனே முழுமை மனிதன்.

தினக்குரல்
(ஞாயிறு)மஞ்சரி
06-08-2006







# கவர்ச்சி

எமது அறிவிற்கும், பார்வைக்கும் கசப்பானதாகத் தோன்றும் நல்ல விஷயங்கள் கூடப் புரியாமல் விடுவதுண்டு. இன்று விளம்பரக் கவர்ச்சியால் உண்மைப் பொருட்களைத் தவறவிட்டு விடுகின்றோம். நல்ல பொருட்களுக்குக் கூட விளம்பரம் செய்தேயாக வேண்டும். சிறப்பான விஷயங்களைக் கூட கவர்ச்சியாகப் பேசினால் தான் புரிகின்றது. எனினும் கவர்ச்சி காட்டிப் போலிகள் உருவாகுதல் துரதிருஷ்டமானதாகும். கவர்ச்சியினால் கவரப்படுதல் மானுடஇயல்பு. பொய்மைகளின் ஈர்ப்பால் எமது கலாசாரம், பண்பாடுகள் கெட்டழிய நாம் அனுமதித்தல் ஆகாது. மனோரம்யமான சௌந்தர்யமான உண்மை அழகை அதன் கவர்ச்சியினை ரசிப்பது அற்புதமான சுகானுபவமாகும்.

கவர்ச்சிக்குள் நுகர்ச்சியைத் தேடுபவர்களே அதிக மாக உள்ளனர். கவர்ச்சி விசையின் உண்மைத் தன்மை யினை அறியுமுன் தம் வசமிழப்பவர்கள் தொடர்ந்தும் அதன் ஈர்ப்புக்குள் இருந்து மீளாது இருக்கின்றனர்.



RangaRakes Tamilnavarasam.com

இருப்பினும் எல்லா கவர்ச்சி சம்பந்தப்பட்ட விடயங்களும் அருவருப்பானவையோ எமக்கு ஒவ்வாத ஒன்றோ அல்ல. கவர்ச்சிக்கும் சிறப்பு உண்டு. கொடுக்கும் தரமான பொருளுக்கும் கூட கவர்ச்சிச் சாயம் பூசாதுவிட்டால் சந்தையில் பொருட்கள் விலைபோகாது. யதார்த்தமான. உண்மை இதுவே.

ஒரு பொருளில், அல்லது ஒரு விடயத்தில் மிகையான ஈர்ப்பு ஏற்பட்டால், அல்லது ஏற்படவைப்பின் அது கவர்ச்சிகரமாகின்றது. கவர்தல் என்பதே கவர்ச்சி என்றும் கூறலாம்.

எனினும் இதன் ஈர்ப்பினால், எழும் மனச் சுழற்சியால் ஏற்படுவது,

- மன எழுச்சி, ஆவல், ஆசை
- மன உழைச்சல், குழப்பம் என்பன (ஒருவர் தன்மைக்கும் இயல்பிற்கும் ஏற்ப பல தாக்கங்களை இது ஏற்படுத்த வல்லது).

கவர்ச்சி என்பதே பல வகைப்படும்.

- பொருட்கள் மீதானது
- சொத்துக்கள் மீதானது





- பதவி, அந்தஸ்து,
- கண்களுக்குப் புலனாகாத அக உணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள்
- பாலினக் கவர்ச்சி

மனதில் தூண்டல் இன்றி எந்தக் காரியத்தையும் மனிதனாலோ எந்த விலங்கினங்களாலோ செய்து விடமுடியுமா? ஏன் தாவரங்கள் கூட இரசாயனத் தூண்டலினாலேயே அதன் வளர்ச்சிக்குத் தன்னைத் தானே உருவாக்கி வளர்ச்சி பெறுகின்றது. ஒரு கலம் கொண்ட ஜீவன்கள் கூட ஒன்றை யொன்று கவர்ந்து பிணைந்து கொள்கின்றன.

விருப்பு இன்றிச்செய்யும் காரியங்கள் முழுமை பெறுவதில்லை. ஒரு விடயத்தைப்பார்த்த மாத்திரத்தே மனம் தூண்டப்பட்டு ஆர்வப்பட்டு செய்து கொள்ளும் செயல்களிலேயே அதன் விஸ்தீரணம் அதிகமாகும் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஆயினும் பார்த்த கணத்திலேயே அதனைப் பற்றி நிற்க வேண்டும் என்று எண்ணுவது ஏற்புடையதன்று. பார்க்கின்ற காட்சிகள் பொருட்கள் பற்றி ஆராயாது விடுதலும், யாரோ ஒருவர் சொன்னதற்காக அதுபற்றி உடன் கவரப்படுவதும் எம்மை ஏமாற்றுதலுக்கு உள்ளாக்கிவிடும். எமது அறிவுக்கும் பார்வைக்கும், கசப்பானதாகத் தோன்றும். நல்ல விடயங்கள்கூடப் புரியாமல் விடுவதுமுண்டு. மறை



RangaRakes
Tamilnavarasam.com

பொருட்களைத் தேட நாம் காலத்தைச் செலவிடுவது எமது வேலையல்ல என்றே எண்ணு கின்றோம்.

அதீத ஆவல்கள் கூட அவஸ்தைப்பட வைக்கக் கூடும். இன்றைய உலகம் வர்த்தகமயமானது. எதனையும் கவர்ச்சியைக் காட்டியே மக்களுக்கு ஊட்ட வேண்டி யுள்ளது. விற்கப்படும் பொருளுக்கும் அதுபற்றிக் காட்ட ப்படும் படங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இருப்ப தில்லை. பிஞ்சுக் குழந்தைகளுக்கான பொருட்களுக்குக் கூடக் கண்ணைக் கூசவைக்கும் கவர்ச்சிக் கன்னியின் வண்ணப்படத்தைக் காட்டுகின்றார்கள். என்ன கொடுமை இது!.

எனினும் விளம்பரம் இன்றேல், வியாபாரம் இல்லை என்று ஆகிவிட்டது, மக்களுக்குத் தெரியப்படுத் தாமல் வியாபாரம் செய்ய முடியுமா? எப்படியாவது எந்த முறையிலாவது விளம்பரம் செய்ய வேண்டும் என்பதற் காகச் சட்ட விரோதமாகவும், சட்டப்படியும், சமூகநோக்கு இன்றியும் கவர்ச்சியாகவும் போலித்தனமுமாக மக்களு க்கு எதை எதையோ காட்டிக்கொண்டு இருக்கின்றார்கள். அசந்தால் வீதியில் நடந்து போவோர் வருவோர் முதுகிலும் விளம்பரங்கள் ஒட்டப்பட்டால் ஆச்சரிய மில்லை.

வானொலி, பத்திரிகைகளைப் பாருங்கள், அரசியல் வாதிகள் பொருட்களை விற்பனை செய்வதுபோல் தங்கள்





பற்றிய வீரப் பிரதாபங்களை செய்த, செய்யாத கருமங்கள் பற்றி விபரமாகச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். கடவுளால் சிருஷ்டிக்க முடியாத பல விஷயங்கள், பொருட்கள் இன்று போலியான எழுத்துக்களால், பேச்சுக்களால், படங்களால், உருக்காட்டப்படுகின்றன. எனவே எது, எவை சாத்தியப்படக் கூடியன என மக்கள் சிந்திப்பது இல்லை போலத்தெரி கின்றது.

பேசுகின்ற தாய் மொழி கூடக் கவர்ச்சி வலையில் விழுந்து அதன் மூலவேர் களையப்படுவது போல் தெரிகின்றது. எந்தவித மொழியும் சாராத பல மொழிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. காலம் போகின்ற போக்கைப் பார்த்தால் மொழிகளின் தனித்துவம் பழைமைச் சிறப்பு, அழகு எல்லாமே மாறி வேறு வடிவங்கள் சமைக்கப் படுமோ என எம்மை ஏங்கவும் வைக்கின்றது இறைவா...! மொழிக் கலப்புகளால் புரிதல் தன்மை குன்றும்.

உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவர்கள் கவர்ச்சிகரமாகவே பேசுகின்றார்கள். கவிஞர்கள் இவர்களிடம் சொற்களைக் கடன் வாங்கலாம். உண்மையான காதலர்களை விட, உடல் இச்சையாலும், காரண காரியத்து டனும் பழகும் காளைகளும், கன்னியரும் அழகாக, உண்மையான காதலர் போல் கவர்ச்சி மிகு வார்த்தைகளைப் பேசிக் கொள் கின்றார்கள்.



RangaRakes

Tamilnavarasam.com

நல்ல மொழியின் அழகு நடை மூலம் மேடைகளில் பொய்கள் புனையப்படுகின்றன. மனதை ஈர்க்கும்படி எப்படிப் பேசிடினும் அது கவர்ச்சிதானே? காரியம் கைகூடக் கண்டபடி பேச வேண்டியிருப்பதை ஓர் தர்மம் என்றே எண்ணுபவர் பலர் உளர்.

உண்மையான அன்புடன் பழகுபவர்களைப் பேசுபவர்களைக்கூடச் சில சமயம் சந்தேகக்கண் கொண்டு நோக்கத் தலைப்படுபவரும் உள்ளனர். ஏன் எனில் இவர்களில் பலர் ஏற்கனவே நல்ல அழகான பேச்சுக்களில் காட்டிய போலி அன்பினால் ஏமாந்த பேர் வழிகளாக இருக்கக்கூடும்.

தெளிந்த மனதுடனான கவர்ச்சியான பேச்சும், பவ்வியமான பழகும் திறனும் மனிதர்க்கு இருக்க வேண்டிய சிறப்பான பண்பு என்பதை நாம் அறிவோம். என்னதான் எமக்குச் சிறப்புத் தகுதிகள் இருப்பினும் பிறரைக் கவரக்கூடிய நடை, உடை, பாவனை இன்றேல் எம்மிடம் எவரும் அணுகவே அச்சப்படுவார்கள். புற அழகைவிட எவருடனும் பேதம் காட்டாது பழகும் திறன் மிக நுட்பமான விடயம் தான். இத்தகையவர்கள் மொத்தமாய் மக்களைத் தம் வசப்படுத்துகின்றனர்.

இன்று கவர்ச்சி என்று சொல்லப்படும் போதே அது பாலியல் பற்றிய விடயமாகவே நோக்கப்படுகின்றது. கலாசாரம், பண்பாடு என்று நாம் பேச்சளவில் விட்டுக்





கொடுக்காமல் கதைத்தாலும் பாலியல் தொடர்பான விடயங்களில் இவை தொடர்பான பிரச்சனைகளில் முன்னுக்குப் பின் முரணான விதத்திலேயே பலரும் செயல்படுகின்றனர்.

காமத்தை தேகத்தில் தேக்கிவைக்கும், கட்டிளம் கன்னியரின் கவர்ச்சிமிக வண்ணப் படங்களை பத்திரிகைகள், திரைப்படங்கள், விளம்பரங்கள், தொலைக்காட்சி மூலம் பலரும் பார்த்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

திருட்டு ரசனையில் இளையவர்களுடன் முதியவர்களும் இணைந்து நிற்கின்றார்கள். வீட்டுக்குள் ஆபாச பத்திரிகையைக் கொண்டு வரமுடியாது விட்டாலும், வீட்டினுள்ளே சதா எம்மை நோக்கி விழித்து நிற்கும் தொலைக்காட்சியை, அது ஊட்டும் திரைப்படங்களைப், பாடல் காட்சிகளை, விளம்பரங்களை எவர்தான் குழந்தைகளுடன் பார்க்காமல் இருக்கின்றார்கள்? அத்துடன் வானொலியில் இசைக்கப்படும் இசைப்பாடலின் வக்கிரமான வரிகளின் அர்த்தத்தைக் கேட்காமல் இருப்பது சிறப்பு. மொழிக் கொலையுடன் மனதைக் கலைக்கும் இவற்றிற்கு தடைகள் விதிக்கப்படுவதேயில்லை.

உண்மையில் சொல்லப்போனால் ரம்யமான, சௌந்தர்யமான அழகை ரசிப்பது என்பதன் அர்த்தம் பலருக்குப் புரியாமல் போய்விடக்கூடும். நல்ல சொற்களில் கவர்ச்சியான வசனம் கோர்ப்பது ஆபாசவார்த்தைகளால் அல்ல. எழுதுபவர்களுக்கு இது புரியாதா? அழகிய பெண்



RangaRakes

Tamilnavarasam.com

களை அழகிற்காக ரசிப்பது என்பது அவர்கள் உடைகளை விலக்கிய கோலத்தில் பார்ப்பதற்காக அல்ல. மூடிய அழகிலும், முழுமையான அழகு பளிச்சிடும். அழகை அசிங்கமாக்குதலானது அதை வெறுமையாக்கி வேட்கையுடன் நோக்குதல் என நாம் உணர்தல் வேண்டும்.

கவர்ச்சிப் பத்திரிகைகள் விற்பனையாகுதல் போல் சமூக எழுச்சிப்பத்திரிகைகள் விலைபோவதில்லை. நல்ல தரமான இலக்கிய நூல்கள், சஞ்சிகைகளின் பெயர்களைக் கூடப் பலருக்குத் தெரியாமல் இருப்பது என்ன துரதிஷ்டம்?

மக்கள் கூடும் சந்திகளில் ஒட்டப்படும் ஆபாச திரைப்பட விளம்பரங்கள் மிகப்பெரிய நிறுவனங்களின் இராட்சத அளவு கவர்ச்சிப் படங்களால் வீதி விபத்துக்கள் கூட ஏற்படுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இன்று நடக்கும் வன்முறை பலாத்காரம், கற்பழிப்புக் குற்றச்செயல்களின் முக்கியகாரணியாக, கவர்ச்சிமிகு சலனப் படங்களும், வீதியோரத்தில் சுதந்திரமாகக் கண்டபடி உடை உடுத்தி நடமாடும் இளம் பெண்களும் தான் என்று பட்டி மன்றத்திலும், பொதுக்கூட்டங்களிலும் பேசி வருகின்றார்கள். படித்தல், கேட்டல், பார்த்தல் எல்லாவற்றிலுமே கவர்ச்சி, விரசங்களில் தோய்ந்தபடி இளயதலைமுறையினர் தமது ரசனையைக் காட்டுகின்றார்கள். இது விடயத்தில் ஆண், பெண் என்கின்ற இரு





சாராருமே பண்பாடு பற்றிய தூய்மையின் மகத்துவத்தை முதலில் உணருதல் வேண்டும்.

திடீர் எனத்தோன்றும் உள்ளத்தின் கிளர்ச்சிகள் வந்த வேகத்தில் தளர்ந்து விடும், ஆயினும் இது நிலைத்து நின்ற ஓரிரு நொடிப்பொழுதில் மென்மையான மனதினைப் புண்ணாக்கிரணமாக்கும்.

எந்த விதத்திலும் பெண்களைக் கவர்ச்சி என்கின்ற பெயரில் களங்கப்படுத்தும், எல்லா நடவடிக்கைகளையும் உடைத்தேயாக வேண்டும். "கவர்ச்சி வியாபாரத்தைச் சட்ட மூலம் தடுக்க முடியாதா" என்று கேட்கின்றார்கள். மக்கள் விழிப்பு இன்றேல், சட்டம் எப்படி இறுக்கி வைத்தாலும் சமூகம் நல்லபயன் பெறப்போவதில்லை. கவர்ச்சியை மாறு கோணத்தில் அர்த்தப்படுத்தி அதை விரசமாக்கின்ற உத்திதான் இன்று வியாபார யுகத்தில் நடைபெறுகின்றது. விரசமான காட்சியை அந்தக் கவர்ச்சியைப் பார்த்துக் கூச்சப்படுபவர்கள், அருவருத்து வெட்கித்துத் தலை குனிபவர்கள் தொகை குறைந்து விட்டதோ என மனம் துக்கப்படுகின்றது. ஆரவாரத்துடன் மகிழ்வுடன் குறும்புடன் ரசிக்கும் ரசிகர்கள் இருக்கும் வரை கலாசார சீரழிவினைக் கண்டு நாம் துக்கப்படுவதைத் தவிர வேறு என்ன செய்ய இயலும்?

பொதுநல அமைப்புக்கள், சகல கலாசார அமைப்புக்கள், மகளிர் அமைப்புக்கள் எல்லாமே கலாசாரச்



RangaRakes

Tamilnavarasam.com

சீரழிவுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்த வண்ணமாயிருக்கின்றன.

காதல், பாலுணர்வு விவகாரங்கள் எல்லாமே ஒரு புதுமையான விஷயங்கள் அல்ல. இவை மானுட, விலங்குகள் உட்பட அனைத்து உயிரினங்களுக்கும் உள்ள அடிப்படை சமாச்சாரங்கள். அதற்காக இவைகளைப் பகிரங்கமாக கவர்ச்சி வியாபாரத்திற்காக மக்கள் முன் மேயவிடப்படுவது விரசம் அல்லவா?

எந்த ஒரு பொருளையும் ஒழுங்காக வைத்திருக்க வேண்டும். எமது வீடுகள், வியாபார நிலையங்கள், தொழில் செய்யும் ஸ்தாபனங்கள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், அழகாக சுத்தமாகப் பேணுதல் கூட கவர்ச்சியாக வைத்திருக்கும் நல்ல நடவடிக்கைகள் தான். இதுபோல தனது மேனியை அழகாக தூய்மை பேணி வைத்திருப்பதும் கூட அழகும் கவர்ச்சியுமான செயலேதான்.

எதையுமே நாம் செய்கின்ற போது கட்டுப்பாடு சமூக வரம்புகளைத் தகர்த்துச்செய்ய முடியுமா? மனித மனங்களை தீவிரமாகக் கசக்குவது கூட வன்முறைச் செயலுக்கு ஒப்பானதே.

மென்மை நோக்குடன் எதையுமே பார்க்க நாம் விழைய வேண்டும். இதனால் நாம் ஒன்றும் கெட்டுவிடப்





போவதுமில்லை. மாறாக தூய்மையான இதமான சுகந்த சிந்தனையே எம்மை ஆட்கொண்டு விடும்.

மக்கள் ரசனைகளைப் பக்குவமாக நெறிப்படுத்த வேண்டியது ஒவ்வொரு தனிமனிதனின் பொறுப்புமாகும்.குட்டையை உருவாக்கி அதனுள் மீனைப்பிடிக்க முயற்சிக்கலாமா?

நிர்மலமான இதயத்தினுள் களங்கம் ஏற்படுத்த முயல்வது எவ்வளவு பாதகமானது. அழகு, கவர்ச்சி, ரம்மியம், யௌவனம் என்று எல்லாம் கவிஞர்கள், கலைஞர்கள் வர்ணிப்பது, மனித மனங்களை வளப்படுத்த, சந்தோஷப்படுத்த, அதன் மூலம் உலகம் புத்துணர்ச்சி பெறுவதற்கே என அறிக!

கவர்ச்சிகூட மனதினை இதமூட்ட வல்ல முறையில் ஸ்பரிக்கப்பட்டால் வரவேற்கத்தக்கதே. இந்த நடைமுறைகள். ஒரு வரமுறைக்குள் கட்டமைப்பினுள் இருப்பது எவ்வளவு சிறப்பானது தெரியுமா? பகுத்தறிவு உள்ள மக்கள் பக்குவமாக வாழாதுவிட்டால் வாழ்வின் அர்த்தம் தான் ஏது? மிக இயல்பாக எளிதாக சுவைக்கக் கூடியதே வாழ்வு ஆகும்.

உலகின் எத்தரத்தில் உள்ளவர்களும் அவரவர் நாட்டிற்குரிய கலாசாரப் பின்னணியிலேயே வாழ்ந்து பழகியவர்களாவர். ஆனால் இன்று உலகம் சுருங்கிவிட்டது.



RangaRakes
Tamilnavarasam.com

பன்னாட்டுக் கலை கலாசாரங்கள் ஒவ்வொரு நாட்டினுள்ளும் புகுந்துவிட்டது.

எனினும் இவைகளின் தனித்துவம் பேணப்படல் வேண்டும். எமது நாட்டினைப் பொறுத்தவரை பழமையைப் போற்றும் நாம்,"பழமை" யுடன் "புதுமை" வாழ்வு நெறியினை ஏற்றுச் சிதைக்காமல் பார்த்துக் கொள்ளுதல் ஏற்புடையதே. எமது இதயத்தை அழகாக வைத்தல் மூலமே வையகம் எம்மைக் கவர்ந்து இழுக்கும் "கவர்ச்சி" என்பதுமாகும்.

கவர்ச்சி சர்ச்சைக்குள் ஆகக் கூடாது விரசம், ரசமானது அல்ல மனம் நற் குணத்தை விட்டேகக் கூடாது நல்ல கவர்ச்சியுணர்வு வேகத்தைப், புத்துணர்வை அதே சமயம் மன அமைதியையம் நல்கும்

தினக்குரல்
(ஞாயிறு)மஞ்சரி
13-08-2006







# குடும்ப அமைதிபெற பழங்கதைகளைச் சுரண்டாதீர்!

கணவனோ அன்றி மனைவியோ விரும்பத்தகாத பழைய சமாச்சாரங்களைக் கோபம் வரும்போது அதனை மீட்டு அஸ்திரமாக ஏவுதலால் குடும்ப விஷயங்கள் பிறர் நகைப்பிற்குள்ளாகிவிடும். மறக்க வேண்டியவைகளை மறந்தேயாக வேண்டும். சின்னச் சின்னச் சண்டைகளைக் கூட கணவன், மனைவி தொடரக்கூடாது. இதனையே சாதகமாக்கிப், பிறர் இவர்கள் குடும்ப வாழ்வில் புகுந்து கூறுபோட முனைந்திடுவர். குடும்ப அங்கத்தினரிடையே மமதை ஏற்பட்டால் மனங்கள் விகாரமாகி அந்நியர்களாகிவிடுவர். எவர் மீதும் துன்பங்களைத் திணிக்க வேண்டாம். அன்பு உள்ளோரிடம் வீம்பு எடுபடாது.

"சேச்சே... எல்லாம் போச்சு... நன்றாகவே நான் ஏமாந்துபோய் விட்டேன். எல்லாமே என் தலைவிதி... எனக்கு அப்பொழுதே சொன்னார்கள், உனக்கு இந்தச் சம்பந்தம் சரிவரவே வராது. சாதகம் பொருந்தாதவளைக்



RangaRakes
Tamilnavarasam.com

கல்யாணம் கட்டாதே என்றார்கள்... கேட்டேனா நான்...? விதி யாரை விட்டது? இவளைத் தெரியாமல் கட்டித் தொலைத்துவிட்டேன். இப்போது நான் படும் அவஸ்தை யாருக்குத் தெரியப்போகின்றது. என்னை ஏமாற்றி விட்டார்கள். இவளை ஏமாற்றி என் தலையில் கட்டியடித்து விட்டார்கள்....!"

இப்படி அலுத்துச் சலித்து, சபித்து, பிரலாயப்படு பவருடைய பேச்சைக் கேட்டீர்களா...! இவருக்கு இப்போது என்ன வயது இருக்கும் என நினைக்கின்றீர்கள். இவருக்கு ஒன்றும் அண்மையில் திருமணமாகிவிடவில்லை. ஒரு இளவயதுக்காரரோ அல்லது நடுத்தர வயது ஆசாமியோ அல்ல! அப்போது இவர் யார்...?

இந்த வாலிபருக்கு வயது அறுபத்து ஐந்துக்கும் மேல். ஏழு பிள்ளைகளின் தந்தை. இவருடைய ஐந்து பிள்ளைகளுக்கும் திருமணமாகி நல்ல நிலையில் இருக்கின்றார்கள். இளையவர்கள் கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டு இருக்கின்றார்கள். ஒரு வசதிக் குறைவும் இல்லை. பின் என்ன பிரச்சனை இவருக்கு வந்துவிட்டது?

இவருக்கும் மனைவிக்கும் ஒரு சாதாரண பிரச்சனை தான். சந்தையில் இவர் வாங்கிய காய்கறி சரியாக இல்லை. வீட்டில் சந்தோஷமாக வந்தவரை அம்மையார் இவர் வாங்கிய பொருட்களைக் கண்டதும் ஆக்ரோஷமடைந்து விட்டார். "நீங்கள் என்றைக்குத்தான்





ஒரு உருப்படியான காரியம் செய்து இருக்கிறீர்கள்? காசைக் கரியாக்குவதே உங்கள் வேலை... துப்புக்கெட்டதனமாகத் தினம், தினம் நடக்கின்றீர்கள். இதுவெல்லாம் என்ன காய்கறி... முற்றல் முருங்கைக்காய், வாடல்... சூத்தை குத்திய கத்தரிக்காய், உதவாத பயிற்றங்காய்... எல்லாம் என் தலைவிதி உங்களைக் கட்டி நான் மாரடிக்கின்றேன்...." என்று மனைவி சப்தமிட இவர் மட்டும் சும்மா இருப்பாரா? வார்த்தைகள் வெடிக்க, எதிரில் வயது வந்த பிள்ளைகள் பரிதாபமாக விழித்துப் பார்க்க, அக்கம் பக்கத்தில் உள்ளவர் களுக்கு ஒரே தமாஷ்தான்!

திருமணமாகிக் குழந்தை, குட்டிகள், பேரன், பேத்தி களைக் கண்ட பின்னரும் கூட இப்போதுதான், தனக்கும் மனைவிக்கும் சாதகப்பொருத்தம் சரியில்லை என்கின்றார். அதுமட்டுமா... பிள்ளைகள் நல்ல நிலைக்கு வந்த பின்னரும்கூட, சடுதியாகக் கோபம் வந்த பின்னர் மனம் திசை மாறுகின்றது! சிலர் சண்டை செய்வதற்கே பொருத்தமான வேளைகளுக்காகக் காத்துக் கொண்டி ருக்கின்றார்கள்.

கோபம் வந்தால் சாதகம் பொருத்தமில்லை, என்பதோடு எப்போதோ இறந்துபோன பெற்றோரைச் சபித்துச் சாபம் போடுகின்றார்கள். இவ்வளவு சந்தோஷமாக வாழ்ந்து பிள்ளைகள் பெற்றும்கூட மனம் இன்னமும் ஏன் சஞ்சலப்படுகின்றது? முன்பு குடும்பங்களில் நிகழ்ந்த கசப்பான நிகழ்வுகள் ஞாபக மூட்டப்படுகின்றன. இவை



RangaRakes
Tamilnavarasam.com

தேவை தானா?

எழுபது, எண்பது வயதிற்குப் பின்னர்கூட மேலை நாடுகளில் விவாகரத்துக் கோருகின்ற கணவன் மனைவியர் உள்ளர். சதா சண்டை போடுவார்கள் ஊரைக் கூட்டுவார்கள். ஆனால் குழந்தைகளைப் பெற்றுவிடுவார்கள் எனப் பலர், சில குடும்பங்களைப் பார்த்துக் கேலிபேசுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். தினம் தினம் மனஸ்தாபங்கள் அவசியம்தானா...? பிறரின் கேலியைச் சிலர் பொருட் படுத்துவதே கிடையாது.

சிலருக்கு இது பழக்கப்பட்ட ஒன்றாக இருக்கலாம். ஆனால் இந்த நடவடிக்கைகள், தங்களது உடல் நிலைகளைப் பாதிப்பதை உணர்ந்து கொள்வதேயில்லை. மன அழுத்தம், உழைச்சல்கள் மனிதனுக்குப் பாரிய பின் விளைவுகளைத் தரும். கணப்பொழுது கோபங்களைக் கட்டுப்படுத்தாது, கண்டபடி பேசித் தீர்க்கின்றார்கள்.

இன்னமும் கூட பழைய மறந்துபோன விரும்பாத சமாச்சாரங்களை மீட்டிப் பார்ப்பதால் ஏது பயன்? கல்யாணம் செய்யுமுன்பு யாரோ ஒருவர் கணவர் வீட்டார் பற்றிய தகாத செய்திகளைக் கேட்டு அதனை மனதில் பூட்டி வைத்துச் சமயம் வரும்போது அதனைச் சொல்லிக் கணவனை வதைக்கும் மனைவி. அதேபோலவே நண்பர்கள், உறவினர்கள் மூலம், மனைவியின் குடும்பம் பற்றிப் பொய்யான கதைகளையே நம்பித் தினம், தினம்





நச்சரிக்கும் கணவன். மேலும் இரு சாரார் வீடுகளில் உள்ள பெற்றோர், சகோதர, சகோதரிகள், மைத்துணர்களின் அடாவடித்தனமான பேச்சுக்கள் குடும்ப அமைதியைக் குலைத்தும் விடலாம். தங்களது குடும்ப பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக்கொண்டால் பிறர் தலையீடு எதற்கு..?

சந்தோஷமாக இருக்கும்போது சகலதையும் மறந்து போவதும், கோபம் வந்தால் எல்லாவற்றையும் மீட்டு, மனதை அலைமோத வைப்பதும் நியாயம்தானா? இது ஒரு வெட்கப்பட வேண்டிய விஷயம். சுவரில் தலையை அடித்தால், உடைவது சுவர் அல்ல! இதை இரு சாராருமே உணராதவரை ஏது நிம்மதி?

சாதாரண சின்னச் சண்டைகளைக் கூட வளரவிடக் கூடாது. உணர்க! யதார்த்தத்திற்கு ஒவ்வாத சிந்தனைகளை உள்ளத்தில் இருத்தி, அதற்கு தமக்கு ஆதாரமாகப் பிறரது வீண்பேச்சுக்கள்,சோதிட சாஸ்திரங்களை வேண்டுமென்றே துணைக்கு அழைத்துக் குடும்ப அமைதியை வீணாக்குவது அறிவீனம்.

உள்ளத்தில் அன்பு குடிகொண்டால் சாஸ்திர, சம்பிரதாயங்களை வேண்டுமென்றே தமக்குச் சாதகமாகக் கொள்ளவேண்டும் என்கின்ற அவசியமும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக உண்மை, நேர்மை, இறையுணர்வு கொண்டோரிடம் சாமானிய விடயங்களுக்கு வன்மம் சாதிக்கும் எண்ணங்கள் துளிர்விடாது.



RangaRakes
Tamilnavarasam.com

சுயநலமும், ஆண், பெண் இருசாராரிடமும் தோன்றக்கூடிய மேலாண்மை அல்லது தன்முனைப்பு ஆகியன எக்கணமும், குடும்ப கட்டுக்கோப்பை விரும்பு வோரிடமும் எழக்கூடாது அல்லவா?

அடிமனதில் நீங்காத அன்பை வைத்துக் கொண்டு சும்மா வீம்புக்காகக் கணவன் மனைவி தமக்குள் சிறுசிறு சச்சரவுகளில் ஈடுபடுதல் சகஜமே! எனினும் தமக்கிடையே உறவுகள் ஒருபோதும் உடையாவண்ணம் சுயகௌரவத்தை, அகௌரவப்படுத்துமாற் போல் தமக்குரிய அதீத உரிமை காரணமாக உரையாடுவதைக் கட்டுப்படுத்துதல் வேண்டும். உள்ளத்தே மிக அழுத்தமாக வரைந்து கொள்ளவேண்டிய நாகரீகம் இதுவேயாகும். இல்லங்களில் இருந்தே எல்லா பண்புகளும் பரிணமிக்கின்றன.

குடும்பத்தில் எல்லோருமே தம்மிடையே உரிமையுடனேயே பேசவேண்டும். அன்பை பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் எவர் மனங்களும் உடையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். எவர் மீதும் துன்பங்களைத் திணிக்க வேண்டாம்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
04-07-2010







# குழந்தைகள் முன் வம்பளக்க வேண்டாம்!

பெற்றோர்கள் எதனைச் சொன்னாலும் குழந்தைகள் அதனை நம்பி விடுவார்கள். எனவே பெற்றோர்கள், குழந்தைகள் முன் நல்ல வார்த்தைகளையே பேசுதல் வேண்டும். மேலும் பெற்றோர். இவர்கள் கேட்குமாற் போல தேவை அற்ற உரையாடல்களையும், வயது முதிர்ந்தவர்களுடன் பிரச்சனைக்குரிய பேச்சுக்களைத்தவிர்ப்பதும் குழந்தைகளின் மனவளத்திற்கு நன்மை தரும். விடயமாகும். பேச்சுக்கள் காற்றோடு கரைந்து போவதில்லை. பிஞ்சு நெஞ்சில் நல்லதை மட்டும் விதையுங்கள்! இனிமையாக, அன்பாக நடந்து கொள்ள நல்ல வார்த்தைகளே அவசியம். குழந்தைகள் முன் எதனையும் கண்டபடி பேச விழைய வேண்டாம்! அழகல்ல...! கள்ளமற்ற உள்ளங்களில் நல்ல வரைபடங்கயையே தீட்டுங்கள்.

குழந்தைகளிடையே பேசும்போது, பெற்றோர்கள் மற்றும் அவர்களுடைய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எவராயினும் சரி சர்வ ஜாக்கிரதையாகப் பேசல் வேண்டும்.



RangaRakes
Tamilnavarasam.com

முக்கியமாக வீடுகளில் பெற்றோர் உதிர்க்கும் வார்த்தைகளில் வல்லமையுண்டு. அந்தப் பேச்சுக்களை இன் சொல்லாக நன்மை பயக்கும் வண்ணம் அமைந்தால் சிறப்பானது அல்லவா?

பிள்ளைகளுக்குப் பெற்றோரே முதன்மையானவர்கள், ஆதலினால் இவர்கள் பேசுகின்ற வார்த்தைகளே மெத்தச் சரியென பிள்ளைகள் கருதுகின்றார்கள். எனவே இதுபற்றி விளங்காது வன் சொல் பேசுவதைக் கேட்கும் குழந்தைகள் அதுவே சரியான மொழி என எண்ணிக் கொள்வதில் வியப்பேதுமில்லை.

மேலும், அவர்கள் உதிர்க்கும் கருத்துக்கள் பிஞ்சு மனதில் நிலையாக வேரூன்றியும் விடுகின்றன. தமக்குப் பிடிக்காதவர்கள் பற்றிய கருத்துக்கள், வம்பு அளத்தல், கேலி, கிண்டலடிப்பதைக் குழந்தைகளின் செவிகளில் ஏற்றுதல் ஏற்புடையதன்று. ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன். ஆரம்பப் பாடசாலை ஒன்றில் நிகழ்ந்தது. இது வேடிக்கையானது மட்டுமல்ல சிந்திக்கவும் வைக்கி ன்றது.

ஆரம்ப வகுப்பு ஆண்டு இரண்டில் அவர்களது ஆசிரியர் தமது கற்பித்தலில் சிரத்தையுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது வகுப்பில் சிறு சலசலப்பு. ஒரு "சின்னஞ்சிறு குஞ்சு மாணவன் எழுந்து நின்று சேர்... சேர்... அங்கே பாருங்கள் சேர்... அவன் அந்த பிள்ளைக்கு (பெண்பிள்ளை) ஒரு கடிதம் கொடுக்கின்றான்.... என்ன





என்று பாருங்கள்" என்றான். வகுப்பில் சப்தத்துடன் சிரிப்பும் கேட்டது.

ஆசிரியருக்கு ஒன்றுமே புரியவில்லை. வகுப்பறையை நோட்டமிட்டு அந்தப் பையன் சொன்ன பக்கம் பார்வையைச் செலுத்தினார். அங்கே, அவர் பார்த்த திசையில் ஒரு சிறுவன் திரு, திரு என விழித்துக் கொண்டிருந்தான். அவன் படிக்கும் மேசையின் அடுத்த திசையில், சின்னஞ்சிறு சிறுமியும் விழியை விரித்தபடியும், பயந்தபடியும் இருந்தாள்.

ஆசிரியரும், சற்று வியப்புடன், சரி... சரி இங்கே வா... எனச் சற்று உரக்கக் கூறி அந்தப் பையனின் கையில் இருந்த கடித உறையை வாங்கிப் பிரித்துப் பார்த்தார். கடித உறையினுள் ஒரு வெள்ளைக் காகிதம் மட்டுமே இருந்தது. அதனுள் ஒன்றுமே எழுதப்படவில்லை. ஆசிரியருக்கு ஓரளவு விஷயம் புரிந்துவிட்டது. "என்னடா... என்ன செய்தாய், ஏன் இந்தக் கடிதத்தை இவளிடம் கொடுத்தாய்..." என்று கோபமாகவே கேட்டுவிட்டார். இதற்கு அந்த மாணவன் சொன்ன பதில் நகைப்பூட்டுவதாயும், பெற்றோர்கள் மீது சற்று வெறுப்பூட்டுவதாகவும் ஆசிரியருக்கு இருந்தது.

"எனக்கு ஒன்றும் தெரியாது சேர். வீட்டில் அம்மாவும், அப்பாவும் நேற்றுப் பேசிக்கொண்டார்கள். காதல் கடிதம் கொடுப்பது இப்படித்தானாம். யாராவது பொம்பிளை



RangaRakes
Tamilnavarasam.com

களுக்குக் கடிதத்தை மடித்துக் கொடுப்பார்களாம். நானும் இப்படியே செய்துபார்த்தேன். எனக்கு ஒன்றுமே தெரியாது! என்று சொன்னவன் பின்னர் அழ ஆரம்பித்தான்.

அந்தச் சிறு பாலகனுக்குக் காதல் பற்றி என்ன தெரியும். எங்கோ ஓரிடத்தில், யாரோ காதல் கடிதம் பரிமாறிக் கொண்டதை அவனது பெற்றோர் விஸ்தாரமாகப் பேசிக் கொண்டார்கள். இதை இவன் கேட்டுக் கொண்டு விட்டான். அப்புறம் என்ன தானும் இப்படியே செய்தால் என்ன என்று எண்ணிவிட்டான். அது மாத்திரமன்றி அவனுக்குச் சரியாக எழுதவும் தெரியாது. கடிதம் என்றால் உறையில் ஒரு காகிதத்தினையிட்டுக் கொடுக்க வேண்டியதே என எண்ணிவிட்டான். கடிதம் என்றால் எழுத வேண்டும் என்று அவனுக்குத் தெரியுமா? தாய், தகப்பன் சொல்லியதைக் கேட்டு அதன்படியே, விளையாட்டாக அதனைக் கொடுத்து விட்டான் அவ்வளவே!

இந்தச் சம்பவத்திலிருந்து ஒவ்வொரு பெற்றோரும், பிள்ளைகள் முன் எவ்வளவு ஜாக்கிரதையுடன் உரையாற்ற வேண்டும் தெரியுமா? இவர்கள் உரத்துப் பேசும்போது உள்ளேயோ, அன்றி வெளியேயோ பிள்ளைகள் இதனை மிக அவதானமாகக் கேட்கலாம். தவிர எதை, எப்படி பேசுதல் வேண்டும் என உணர்ச்சிவசப்பட்டுக் கோபாவேஷத்தில் பேசுபவர்கள் சற்று நிதானத்துடன் அக்கம் பக்கத்தையும், மிக அவதானமுடன் நோக்குதல் வேண்டும்.





பேச்சுக்கள் எல்லாமே காற்றோடு கரைந்து போவதில்லை. இவை இதயத்தில் நிலையாய் இருந்தும் கொள்ளும். நல்ல வார்த்தைகள் நிலையாய் இருந்தால் இவர்களின் எதிர்காலம் சுபீட்சமுறும். அன்பு நிறைந்ததான நல்ல சொற்களை, நல்ல கருத்துக்களையே என்றும் பேச வேண்டும். கள்ளமற்ற உள்ளங்களில் நல்ல வரை படங்களையே தீட்டுங்கள்.

மாறாக, மனதை நொறுக்கும் பேச்சுக்கள். உண்மைக்கு மாறான செய்திகள், தெரியாமை காரணமாக உதிர்க்கும் கருத்துக்களை மனதில் எழுந்தவண்ணம் வாயசைப்பது, உள்ளத்தினை நொறுக்க வல்லது. பெற்றோர், பிள்ளைகள் கண்டபடி பேசுவதைக் கேட்டுப் பாராமுகமாக இருப்பதும், சில பெற்றோர் அதனை ரசிப்பதும் விசனத்திற்குரிய விளைவைத் தரும். காலங்கள் எம்முடன் மட்டும் முடிந்துவிடுவதில்லை. எதிர்காலத்தை உருவாக்கும் தற்கால இளம் சமூகத்திற்குமானது. நல்ல பேச்சு மன வளர்ச்சியை மேம்படுத்தும்.

தினக்குரல்<br>
ஞாயிறு மஞ்சரி<br>
“இவள்” பகுதி<br>
28-02-2010



RangaRakes

Tamilnavarasam.com



# கணவன் மனைவிக்கிடையில் புரிந்துணர்வு அவசியம்

கோப உணர்வுகள் தோன்றுவது தவிர்க்க முடியாதது. ஆயினும் குடும்பங்களில் கணவன், மனைவி கண்டபடி கோபமிகுதியால் உரையாடுதல் கூடாது. கோபம் கேவலமானது. தங்களுக்குப் பிடிக்காத காரியங்களைச் செய்யும்போது, கணவனும், மனைவியும் பொறுமை இழக்கலாகாது. அன்பின் இறுக்கம் தளர்ந்து, வீடு வெறுமையடைய என்றும் இடம் கொடுக்கலாகாது. தவறுகளை ஏற்றுக் கொள்வதும், புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுத்தலுமே எந்தக் காலமும் சந்தோஷமாக இருக்கச் செய்யும் வழியுமாகும். பேசு முன் யோசித்தால் இருசாராருமே வருத்தம் கொள்ள வேண்டியதில்லை.

கோபத்தின் தாக்கம் ஊழிக்காலத்து உஷ்ணத்தை விடக் கொடியதாகும். ஒரு குடும்பம் நிலை குலையாது, தழைத்து ஓங்க தலைவனும், தலைவியும் கோபங்களை தவிர்ப்பது நல்லது.





எனினும்,

மனிதர்க்குக் கோப உணர்வுகள் வருவது, தவிர்க்க வியலாத ஒன்றேதான். தேவைப்படுமிடத்து ஓரளவு கோபத்தைக் காட்டுதலின் போது கோபிப்பவரிடத்தே ஒரு உண்மைத் தன்மை இருத்தல் வேண்டும். தங்கள் மீது தவறுகளைப் புதைத்து வைத்திருந்து பிறரிடம் கோபதாபம் கொள்ளுதல் ஏற்புடையதன்று.

இப்போது, நான் சொல்லும் கதை ரொம்பவும் பரிதாபகரமானதும் அதே சமயம் உங்களைச் சிந்திக்கவும் வைக்கும்.

ஒரு சின்னக்குடும்பம் இரண்டே இரண்டு பிள்ளைகள் இவர்களுக்கு. ஒரு ஆண் மற்றவர் பெண். கணவர் பரம சாது மனைவி பொல்லாதவர் என்றும் சொல்லமுடியாது. இவர்கள் அந்நியோன்யமாகவே வாழ்ந்து வந்தார்கள். மனைவி தனது கணவனைப் போல் அல்லாமல் சற்றுக் கோபித்துக்கொள்ளும் குணமும் எதிர்வாதம் செய்வதும் உண்டு. எதுவிதமான அபிப்பிராய ங்களையும் திணிக்கும் சுபாவம் அந்த இல்லத்தலைவரிடம் அறவேயில்லை. இதனால் சிலவேளை, கணவனின் அபிப்பிராயங்களை அதிகம் கேட்கும் பழக்கம் மனைவியிடம் இல்லை. இதற்காக அவரும் பெரிதாகக் கோபித்ததும் இல்லை. எனினும் இவர்களின் குடும்பம் சந்தோஷமாகவே இருந்து வந்தது.

இப்படியிருக்கையில் ஒருநாள் இவர்களின் உறவி



RangaRakes

Tamilnavarasam.com

னர்களின் இல்லமொன்றில், திருமண வைபவம் நடந்தது. எல்லா உறவினர்களுமே அங்கு இருந்தமையினால், வைபவம் களைகட்டியது. உறவினர்களும், நண்பர்களும் ஒரே கேலி கிண்டல் பேச்சுக்களைப் பேசிய வண்ண மிருந்தனர்.

அப்போதுதான் ஒரு சம்பவம் நடந்துவிட்டது. உறவினர்களிடையே ஏதோ மனஸ்தாபம் ஏற்பட்டு, பரஸ்பரம் வாதம் செய்துகொண்டார்கள். ஆயினும் இது ஒரு சாதாரண பிரச்சினைதான். மேலே நான் குறிப்பிட்டவரின் மனைவி ஏதோ சமரசம் செய்வதுபோல் பேச ஆரம்பித்து விட்டாள். இது கணவருக்குப் பிடிக்கவில்லை. நாம் ஏன் இங்கு வந்தோம். எதற்காக வீணான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும் என எண்ணி மனைவியை நோக்கிச் "சரி... சரி... விடும்... எமக்கு எதற்காகத் தர்க்கம்..." எனத் தடுத்து, அறிவுரை கூறினார்.

எனினும், கணவர் அந்த இடத்தில் வைத்து தனது செய்கையை தடுத்தது, ஏதோ ஒரு செய்யத்தகாத செயல் எனக் கருதிக் கொண்டார். தன்னிலை மறந்தார். பக்கத்தில் உறவினர்கள், நண்பர்கள் எல்லோருமே, சூழ்ந்திருப்பதை அறவே மறந்து "சரி... சரி... நீங்கள், சும்மா வாயைமூடி வைத்திருங்கள் எனக்கு எல்லாமே தெரியும், எனக்கு நீங்கள் சொல்லத் தேவையில்லை, உங்கள் பாட்டிற்கு உங்கள் வேலையைப் பாருங்கள், எனக்கு நீங்கள் என்ன புத்திமதி சொல்வது...!" என்று பொரிந்து தள்ளிவிட்டார்.





அந்த சமயம், திருமண வீட்டிற்கு வந்தவர்கள் அனைவருமே அதிர்ந்து போய்விட்டார்கள். சற்றுநேரம் சபை மௌனமாகியது. பின்னர் அங்கு கசா... முசா.. எனச் சப்தங்கள் கேட்கலாயின.

இதனை எதிர்பாராத அவரின் கணவர் சற்று ஸ்தம்பித்துப் போய்விட்டார். அவருக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை. சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது போன்ற பிரமை. எப்பேர்பட்ட அவமானம்! பலபேரின் முன்னே, தன்னை வாயை மூடச் சொல்லிவிட்டாளே" எனக் கருதிய வர், அருகில் இருப்பவர்களைப் பார்க்கவே கூச்சப்பட்டார். அவ்விடத்தை விட்டு ஒன்றுமே பேசாது அகன்றுவிட்டார். அவரது பிள்ளைகள் திருதிரு வென விழித்தார்கள்.

இச்சம்பவம் நடந்தது முதல் அவர் தமது மனைவியு டன் பேசுவதை அடியோடு நிறுத்திக் கொண்டார். மனைவி எவ்விதமான முயற்சிகள் எடுத்தும், மன்னிப்புக் கேட்டும் மனிதர் அசைந்து கொடுக்கவேயில்லை.

தனது பிள்ளைகளுடன் மட்டுமே பேசிக் கொண் டார். மனைவி சமைத்த உணவைப் பிள்ளைகளுடன் சேர்ந்து சாப்பிட்டார். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிப் போட்டார். தேவையான பணத்தைப் பிள்ளைகள் மூலம் கொடுத்தார். எக்காரணம் பற்றியும், வீட்டில் எதுவித பேச்சையும் பேசுவதற்கு வாய் திறக்கவேயில்லை. எதுவித மான அபிப்பிராயங்களைச் சொல்வதையும் நிறுத்திக் கொண்டார்.மனதை இறுக்கிக் கொண்டார்.



RangaRakes Tamilnavarasam.com

பிள்ளைகளுக்குத் திருமணவயதாயிற்று. இது சம்பந்தமாகத் தனது எண்ணங்களைத் தமது மனைவியுடன் பகிர்ந்து கொள்ளாமல் பிள்ளைகளுடன் மட்டுமே பேசிக் கொண்டார். இந்த நிலையில் இவர் தமது மனைவியின் மனோ நிலைபற்றிக் கிஞ்சித்தும் கவலை கொள்ளவே யில்லை. இவரது மனைவியோ தனது துன்பங்களை மனதினுள் மறுகியும் தமது பிள்ளைகள், நெருங்கிய உறவினர்களுடன் அழுதுதான் தீர்த்துக் கொண்டாள் இந்நிலை எவருக்குமே வரக்கூடாது அல்லவா?

பரம சாதுவான ஒருவரைச் சீண்டினால் ஏற்பட்ட விளைவுதான் இது. "சாது மிரண்டால் காடு கொள்ளாது" என்பார்கள். எனினும் அவர் செய்த காரியம் சரியானது அல்ல. குடும்பங்களில் இவையெல்லாம் சர்வ சாதாரண மானது என்ற உண்மையை இவர் ஏற்கப் பூரணமாக மறுத்துவிட்டார். மனைவியை பழிவாங்குவது போல், தன்னையும் உள்ளூர வதைத்துவிட்டார். "பேசுமுன் யோசிக்க வேண்டும்" கணவனைப் பற்றி மனைவியும், மனைவியைப் பற்றிக் கணவனும் ஆன்மார்த்த ரீதியாக அன்பு, காதல் கொண்டால் இந்த இழிநிலை வரவே வராது.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
21-02-2010







# இல்லங்கள் தோறும் வீட்டுத் தோட்டங்களை அமைக்குக!

நாங்களே உற்பத்தி செய்த காய், கனிகளை நாங்களும் உண்டு, அதனை மற்றவர்களுக்கும் அளித்து வருவதுபோல மனநிறைவு வேறு ஏது? விலைவாசி உயர்வின் தாக்கங்களில் இருந்து அனைவரும் விடுபட அனைவரும் இணைந்து வீட்டுத் தோட்டம் அமைத்தேயாக வேண்டும். உழைப்பதே இன்பம். அதிலும் குடும்பத்தினருடன் இணைந்து இத்தகைய வீட்டுத்தோட்டம் அமைத்தல் சொல்லவொண்ணா நிறைவைத் தரும். இது ஒரு எளிய வழி. வீட்டுப் பொருளாதாரத்தை உயர்த்தி நிற்கும் வலிமை மிகு பணி!

ஒரு முறை நீதிபதி ஒருவர் இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது அவர்கள் வீட்டின் பின்புற முற்றத்தில் கண்ட காட்சி என்னை வியப்பில் ஆழ்த்தியது. அன்று



RangaRakes
Tamilnavarasam.com

விடுமுறை தினம் அவரது குடும்பத்தினர் அனை வருமே மிக்க குதூகலத்துடன் அங்கு தோட்ட வேலை செய்துகொண்டிருந்தனர்.

அவர்கள் வீட்டின் சிறு தோட்டத்தில் கத்தரி, வெண்டி, மிளகாய், பயிற்றை எனப் பயிர்கள் செழிப்புடன் வளர்ந்திருந்தன. எல்லோருமே மிக உற்சாகமாக தமது கருமத்தில் கண்ணாக இருந்தனர். இதன் போது நீதிபதி அவர்கள் சிரித்தபடி "என்ன பார்க்கின்றீர்கள், எமது தோட்டம் எப்படி இருக்கின்றது" என்று என்னிடம் கேட்டார்.

நான் அவரையும் அவரது குடும்பத்தினரையும், பாராட்டியபோது அவர் பேசலானார். "இதில் என்ன பாராட்டும், புதுமையும் இருக்கின்றது? எமது நாட்டு மக்களின் பிரதான தொழில் விவசாயப் பயிர்ச்செய்கை தானே? முன்னர் நாங்கள் படித்துக் கொண்டே எமது பெற்றோருடன் சேர்ந்து விவசாயம் செய்து வந்தோம் இன்று இந்த நிலை இல்லை. அரசாங்க வேலை கிடைத்ததும் பலரும் தோட்டம் துரவு என்பதையே மறந்து விட்டார்கள். சிலர் இனியும் என்ன விவசாயம் என்றும் எண்ணித் தங்களின் பதவிகளே பெரிது என எண்ணிக் கொண்டார்கள். தோட்ட வேலை செய்வது போல் சந்தோஷம் வேறு என்ன இருக்கின்றது?" என்று சொன்னார்.

உண்மைதான் இன்று நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைகளை நாம் சொல்லித் தெரிந்து கொள்ள





வேண்டியதில்லை. சிறு பயிர்ச் செய்கையினால் கிடைக் கின்ற ஆதாயம் மிகப் பெரியது. இன்றைய சூழலில் ஒவ்வொரு குடும்பத்தினரும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுதல் அவசியமாகும்.

இது விடயத்தில் வீட்டுத் தோட்டம் அமைத்தல் பிரதானமாகிவிட்டது. ஏனெனில் இன்று சந்தையில் காய், கறிகளின் விலைகள் மலை போல் ஏறி எம்மைத் திணறடிக்கின்றது. எனவே ஒவ்வொருவர் இல்லங்கள் தோறும் சிறு தோட்டம் அமைத்தல் அவசியமாகின்றது.

எமது அன்றாட தேவைக்கான காய், கனி வகைகளை உடனுக்குடன் பறித்துச் சமையல் செய்யும் போதுள்ள ருசியே அலாதியானது. அதுவும் எமது முயற்சியால் உருவான மரம் செடிகள் வாயிலாகப் பறிக்கப்படும் போது ஏற்படும் மனநிறைவு சொல்லில் அடங்காது.

வீட்டுத் தோட்டம் செய்வது ஒன்றும் சிரமமான தேயல்ல. நல்ல இன தாவர விதைகளைக் கமத்தொழில் திணைக்களத்தின் கிளைகள் மற்றும் எங்கள் விவசாயிகள் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் உடன் பயன்தரக் கூடிய புதிய ரக தாவர இனங்களின் விதைகளையும் முறைப்படி வளர்த்து அவைக ளைச் சாடிகளிலும் வைத்து விற்பனை செய்து வருகின்றனர்.



RangaRakes Tamilnavarasam.com

நிலம் அற்ற குடும்பத்தினர் என்ன செய்வது என்றும் கேட்கலாம். முக்கியமாக கொழும்பு போன்ற நகர்புற வாசிகள், தொடர்மாடிக் குடியிருப்புகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு வீட்டுத் தோட்டம் அமைப்பது சாத்தியமானதா என்றும் நீங்கள் கேட்கலாம். இருக்கின்ற ஒரு அங்குல நிலத்தை வீணாக்குதல் பூமித்தாய்க்குச் செய்யும் துரோகமாகும்.

யப்பான் நாட்டு மக்கள் நகர்புறங்களில் வாழ்ந்து வந்தாலும், அங்கு நல்ல அகன்ற சாடிகளில், உணவுக்கேற்ற உடன் பயன் வழங்கவல்ல தாவர இனங்களை வளர்த்து வருகின்றனர். தாவரவியல் விஞ்ஞானிகள் விஞ்ஞான முறையில் பல அற்புதமான உணவு பயிர்களைக் கண்டு பிடித்த வண்ணமுள்ளனர்.

ஒரு சின்னச்சாடியினுள் மிகப் பெரிய தக்காளி உட்பட மிகச் செழிப்பாக வளரும் மிளகாய், பழவர்க்க இனங்களையும் கூட பயிரிட்டு வருவதைப் பார்க்கும்போது மிக வியப்பாக இருக்கும்.

தோட்டச்செய்கை போல் பயன்தரும் சிறந்த பொழுதுபோக்கு ஏது? இன்று பலரும் சாடிகளின் பூ மரங்களையே வைத்து அழகு பார்க்கின்றார்கள். இதில் தவறு இல்லை. இதைவிட உணவுக்கேற்ற தாவரங்களை உருவாக்குதல் சிறப்பானது. இதிலும் அழகுண்டு. தொடர்மாடியில் வசிப்போர் அளவான சாடிகளில் காய்கறி





வர்க்க தாவரங்களை வெளி விறாந்தையில் (பல்கனி) செழிப்பாக உண்டு பண்ண இயலும். நான் பார்த்த வரையில் தக்காளி, கத்தரி, கருவேப்பிலை உட்பட, உடன் வளரக்கூடிய கீரை வர்க்கங்களைச், சாடியில் வளர்த்துப் பயன் பெற்றிருப் பவர்களைக் கண்டுள்ளேன்.

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து தோட்டவேலை செய்வதால் அவர்களிடையே குடும்ப உறவு வலுப்படும். அத்துடன் தேக ஆரோக்கியத்துடன், நிறை வான திருப்தியும் ஏற்பட்டே தீரும். எனது உறவினர் ஒருவர் தாம் புதிதாக வாங்கிய நிலத்தில் சும்மா விவசாயம் செய்துதான் பார்ப்போமே என்ற எண்ணத்துடன், தமது கொஞ்ச நிலத்தில் ஒரு தடவை நெல் விதைத்தார். அவரால் நம்பவே முடியவில்லை. அந்த ஆண்டு முழுமைக்குமான நெல் கிடைத்தது. அடுத்து சிறு போகத்தில் உழுந்து பயிரிட்டு, நிறைந்த லாபம் பெற்றார். பெரியதாகச் செலவும் இல்லை. எம்மால் எதையும் நினைத்தால் திறம்படச் செயலாற்றவும் இயலும்.


பொருளாதார வசதி குன்றினால் குடும்ப உறவு பாதிக்கும். சகல பிரச்சினைகளும் கூட வரும். எம்மால் இயன்றவரை சிறுதோட்ட செய்கை மூலம் நாம் ஈட்டும் நலன்கள் பெரிது, மிகப் பெரிதே!

தினக்குரல்
ஞாயிறுமஞ்சரி
24-01-2010



RangaRakes

Tamilnavarasam.com



# பொறுப்புக்களைக் கையளித்தல்

> அநேகமான பெற்றோர்கள் பிள்ளைகளிடம் கூட தங்கள் அதிகாரங்களை விட்டுக் கொடுப்பதில்லை. வளர்ந்த பிள்ளைகளை என்றுமே சின்னக் குழந்தைகளாக கருதுகின்றார்கள். அடக்கு முறையில் பிள்ளைகளை வளர்த்தால் அவர்களுக்கு எப்போது பெற்றோர் பொறுப்புக்களை வழங்கப் போகின்றார்கள்.? பொறுப்பு இல்லாத பிள்ளைகளால் எதிர்காலத்தை உருவாக்க முடியாது. கணவன், மனைவிக்கு அவளுக்குரிய கௌரவத்தை வழங்காமல் விட்டால் வீட்டு நிர்வாகம் சர்வாதிகாரமாகும். எதுவும் சரிப்பட்டு வராது. இருவருமே ஒருவரை ஒருவர் முழுமையாக ஏற்று தமக்குரிய பொறுப்புக்களுடன் சமுகத்திற்காக ஆற்றும் கடமைகளையும் மறந்து விடலாகாது. பொறுப்புக்களைக் " கையளித்தல்" பரஸ்பரம் கை கொடுப்பது போலாகும். சுமைகுறையும், செயல் பெருகும்.

வயது வந்த பிள்ளைகளை எப்பொழுதுமே குழந்தையாகவே எண்ணிக் கொண்டிருப்பது பெற்றோரின் இயல்பு ஆகும். பிள்ளை பாசத்தினால் அக்கறையுடன் இப்படி எண்ணுவதில் தப்பு இல்லை. ஆனால் இந்த எண்ணத்தினால் அவர்களிடம் எந்தவிதமான பொறுப்புக்





களையும் வழங்காமல் இருப்பதுவே மாபெரும் தவறு ஆகும்.

அநேகமான பெற்றோர்கள் பிள்ளைகள் மீதான தங்கள் அதிகாரத்தை விட்டுக் கொடுக்க தயாராக வில்லை. "அவன் என்ன சின்னப் பையன். ஊர் உலக விபரம் அவனுக்கு தெரியுமா என்ன..." என்று சர்வ சாதாரணமாகச் சொல்லுவார்கள். ஆனால் நடப்பது என்ன?

சதா காலமும் ஒரு அன்பான அடக்குமுறையில் வாழ்ந்த பிள்ளைகள், வெளியுலகைப் பார்த்த பின்னர், அதனுள் புகுந்து பெற்றோர் கூறும் நல்ல விஷயங்களைக் கூட உதாசீனம் செய்து விடுகின்றார்கள்.

அது மட்டுமல்ல, தங்கள் திருமண விஷயங்களில் கூட தாங்களாகவே முடிவு எடுத்து விடுகின்றனர். சில வேளை இவர்கள் எடுக்கும் இந்த முடிவுகள் மிகவும் பாரதூரமாக அமைந்து விடுகின்றன.

"பொத்திப் பொத்தி வளர்த்த பிள்ளை, பெற்றோர் களை விட்டு விட்டு வந்தவளுடன் ஓடிவிட்டானே" என வருந்தி நெஞ்சம் புண்ணாகிப் போகின்றார்கள். அன்பை பாசத்தைக் காட்டுபவர்கள் புத்திமதி கூறத் தயங்குகின் றார்கள்.

ஆண் பிள்ளைகள் மட்டுமல்ல பெண் பிள்ளை



RangaRakes

Tamilnavarasam.com

களும் தாங்களாகவே முடிவு எடுப்பதுடன் எவருடனும் ஆலோசனை செய்யாது விடுவதும் புதுமையான விடயமற்றதாகி விட்டது. பிள்ளைகளுடன் பேச பெற்றோர் சிலர் அச்சப்படுகின்றனர்.

வலிமையுள்ள நெஞ்சுறுதியுடன் சமூகத்தில் நடந்து கொள்ள ஒவ்வொரு பிரஜையும் தனது பொறுப்பு மிக்க கடமையை அவர்களாகவே செய்ய அனுமதியளிக்க வேண்டும். அன்போடு கூடிய அறிவுரையுடன் பொறுப்புக்களை வழங்குக!

வீடுகளில் இல்லாத சுதந்திர உணர்வினை வெளியே பெற்றுவிட முடியாது. என்றுமே "அப்படி செய்யாதே, இப்படி செய்யாதே" என்று நச்சரிப்பது அவர்களை முடக்கும் முறையெனக் கருதும் நிலையை பெற்றோரும், அவர்களுடன் கூட இருக்கும் வயது முதிர்ந்த உறவினர்களும் ஏற்படுத்தலாகாது. எதற்கும் தாங்கள் முன்னைய கால வரலாற்றையே சுற்றிச் சுற்றிப் பேசுவதால் ஏதுபயன்?

நல் ஒழுக்கத்தை வலியுறுத்துவது என்பது அவர்கள் நெஞ்சை உறுத்து மாற்போல் அமைந்திடத் தேவையில்லை. பக்குவமாகப் பேசுவது வெளியுலகத்துக்கு மட்டுமென எண்ணுவதும் வீட்டில் இராணுவ அதிகாரி போல் நடக்க வேண்டும் என எவர் தான் சொன்னார்கள்?





கட்டுப்பாட்டை வளர்க்க திட்டித் தீர்க்க வேண்டுமா என்ன?

எனினும்,

இயல்பாகவே சில பிள்ளைகள் வயதிற்கு மீறிய, துடுக்குத்தனமான காரியங்களைச் செய்வதுண்டு. இள வயதில் அவர்களின் மிதமீறிய குறும்பையும், பெரியவர்கள் போல் பேசும் தகாத வார்த்தைகளையும் ரசிக்கும் பெற்றோர், பின்னர் பிள்ளைகளின் ஒழுக்கம், பிறழ்வதைக் கண்டு உள்ளம் வெதும்புவது அறியாமையினால் வந்த விளைவு!

கணவன், மனைவிக்குக் கூட வீட்டில் சாதாரண மான விடயங்களில் முடிவு எடுக்கும் அதிகாரத்தை வழங்குவதில்லை, இவர்களுக்கு விட்டுக் கொடுத்தால் எங்கே இவள் தன்னை மீறிச் செயல்படுவாளோ என்று எண்ணுவதுடன் வீட்டின் சகல அலுவல்களையும் தனது தலையில் ஏற்றுக் கொண்டு அல்லலுறும் பிரகிருதிகளை என்ன என்பதோ?

"உனக்கு என்ன தெரியும் நீ சும்மா இரு" என்று மனைவியை அதட்டி விடுவதுடன், தான் செய்யும் காரியத்தில் தவறு ஏற்படும் பட்சத்தில், அதற்கான முழுப் பொறுப்பையும் தனது மனைவி , மக்கள் மீது சுமத்துவது சுத்த அபத்தம் ஐயா.

கணவன் மட்டும் இந்தத் தவறான செயலைச்



RangaRakes

Tamilnavarasam.com

செய்து விடுவதில்லை கணவனுடைய சில பலவீனங்களைக் கையிலெடுத்து அதனைத் தான் பெற்ற பலமான ஆயுதமாக்கிக் கொண்டு கணவனைச் செயலற்றவனாக்கு வோரும் இருக்கின்றார்கள்.

"அவருக்கு ஒன்றுமே தெரியாது எல்லா வேலைகளையும் நான் தான் செய்கின்றேன். அங்காடிக்குச் சென்றால் ஒரு பொருளையும் உருப்படியாக வாங்க மாட்டார். கொடுக்கல் வாங்கல்களைகளையும் நான் தான் செய்ய வேண்டும். எதனையும் தப்பும் தவறுமாகத்தான் இவர் செய்வார். அது மட்டுமல்ல, இவரைப் போலவே தான் பிள்ளைகளும் இருக்கிறார்கள்" என்று சொல்லிச் சொல் லியே வீட்டுப் பொறுப்பை வேண்டு மென்றே சுமக்கும் இல்லத் தலைவிகளை நீங்கள் நிச்சயமாகக் கண்டிருப்பீர்கள்.

எல்லோருக்குமே பற்பல கடமைகள் காத்திருக்கின்றன. மிகச் சிறிய வேலையேயாயினும் அதற்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கும். எனவே நாம் ஒவ்வொருவர் கருமத்தையும் கௌரவப்படுத்தல் வேண்டும்.

ஒவ்வொருவர் கடமைகளை நாம் செய்ய அவர்களுக்கு வழி விட வேண்டும். இதனால் எவரது உரிமைகளும் பறிபோய் விடப் போவதில்லை. இல்லத் தலைவனும், தலைவியும் ஒருவருக்கொருவர் தமது பொறுப்புக்களை பரஸ்பரம் விருப்புடன் கையளித்தல் வேண்டும்.





கணவன் மனைவிக்காக பொறுப்புக்களையும், மனைவி கணவனுக்கான பொறுப்புக்களையும் பெருமையுடன் வழங்கி சந்தோஷப்பட வேண்டும். அவ்வண்ணமே, தங்கள் பிள்ளைகள் பொறுப்புடன் வளர அவர்களுக்காக கடமைகளைக் கையளிப்பதே மேலானது.

அரச, தனியார், நிறுவனங்களின் செயற்பாடுகள் மேம்பாடு அடைய அவர்களுக்கான பொறுப்புக்களை நம்பிக்கையுடன் அதிகாரிகளால் கையளிக்கப்படல் வேண்டும்.

வீடுகள் இப்படி நிர்வாகத்தில் சீராகச் செயற்பட்டால் தான். முழுச் சமூக கட்டமைப்பும் ஒழுங்காக அமையும். நாடு வேறு, வீடு வேறு இல்லை!

மேலாதிக்க உணர்வால் எவர்களுடைய ஆளுமைகளையும் பின்னோக்கித் தள்ளுவதும், முயற்சிப்பதும் கேவலமான செயலன்றி வேறென்ன? பரந்த மனப்பான்மையுடன் வாழுவதே சிறந்த மானுட நேயத்திற்கான வழியுமாகும். " கையளித்தல்" பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் கை கொடுப்பது போலாகும். சுமை குறையும். செயல் பெருகும்.

தினக்குரல்
ஞயிறு மஞ்சரி
-09 .01.2011



RangaRakes
Tamilnavarasam.com



# பேச்சுச் சுதந்திரம்

பேச்சுச் சதந்திரம் என்பது கட்டுப்பாடான, எவர் மனசையும் புண்படுத்தாத சுதந்திரமான ஓர் எல்லைக்குள் அமையலாம். ஒரு சின்னப் பையன் பேச்சுக்கும் கௌரவம் கொடுங்கள். நாங்கள் மட்டுமே பேசிக் கொண்டிருந்தால் அடுத்தவன் எம்மிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு விடுவான். மனித உறவை மேம்படுத்த எம்மிடையே உரையாடல் அவசியமாகின்றது. எனவே கேவலமாக பேசி உறவுகளை அசிங்கப்படுத்தினால் உலகம் அவர்களைத் தனிமைச் சிறையில் தள்ளி விடும் . நாவினால் நல்லதையே பேசினால் நானிலம் போற்றும். கருத்தோடு அளவாக அளவளாவினால் குடும்பம் குதூகலிக்கும், அனைவரும் கண்ணியமுடன் நோக்குவர்.

மேடையில் பேச்சாளர் ஒருவர் உஷ்ணமாகப் பேசிக் கொண்டிருந்தார் அவரது ஆவேசமான வார்த்தைகளின் வேகத்தால், வைரஸ் தாக்கத்தால் சுருண்டு விழும் கோழிபோல ஒலிவாங்கி மடிந்து போய்க்கிடந்தது.





இவ்வளவிற்கும் அவர் யாரைப்பற்றி வசைபாடுகின்றார்? அது அவருக்கே புரியாது யாரைப்பற்றியாவது காரணங்கள் இன்றித் திட்டித்தீர்க்க வேண்டும். பொது சனங்கள் போதுமடா சாமி எனுமாற் போல் தத்தமது தலைகளைச் சொறிந்து கொண்டிருந்தார்கள்.

ஒலி வாங்கி மட்டும் உணர்வுடன் கூடிய உயிர் இருந்தால், அவர் சிரசில் குட்டுக்கள் இறக்கியிருக்கும். இத்தகையவர்கள் எதையாவது பேசுவார்கள். மக்கள் அதைக் கேட்டேயாக வேண்டும். என்ன கொடுமையடா சாமி இது! எனக் கேட்கத் தோன்றவில்லையா?

பேச்சு உரிமை என்பது இதுதானா? எவரை எப்படியும், எந்த விதத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் கண்டபடி வசை பாடுவது தான் பேச்சுச் சுதந்திரமா? இப்படியாகப் பேசுவதே தமது உரிமை என்றல்லவா சிலர் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்.

வீட்டிற்கு வெளியே மட்டுமா இந்த நிலை? வீட்டுக் குள்ளும் இதே மாதிரி நடந்து கொள்ளும் குடும்பத் தலைவர், தலைவிகளை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

இல்லத் தலைவன், கண்டபாட்டிற்கு எதனையாவது தன் பாட்டிற்குச் கண்டனக் கணைகளாகத் தொடுத்த படியேயிருப்பார். “இங்கேயுள்ள எவருக்காயினும் பொறுப்பு



RangaRakes
Tamilnavarasam.com

இருக்கிறதா, நான் ஒருவன் மாடாக உழைக்கின்றேன். இங்கேயுள்ள கழுதைகளுக்கு எங்கே இது புரியப் போகின் றது." எனப் பொரிந்து தள்ளுவார். உண்மையில் இவரது கோபத்திற்கு பெரிதாக எந்தக் காரணமும் கிடையவே கிடையாது.

தனது பேச்சை எல்லோருமே கேட்டேயாக வேண் டும். அது தனது உரிமை. இங்கே எவருமே தனக்கு முன், தனக்கு முரணாகப் பேசக்கூடாது என்கின்ற மமதையுடன் பேசுவதில் என்ன நியாயமுண்டு?

தங்கள் மீது தங்கி இருப்பவர்கள் பெற்ற பிள்ளை மனைவியேயாயினும் அவர்களுக்கான நியாயபூர்வமான உரிமைகள் இருப்பதைச் சிலர் உணர்வதேயில்லை.

மனைவிமார் கூட தங்கள் கணவர் ஒரு அப்பாவி யாக இருந்தால், அவரைப் பேசவே அனுமதிக்க மாட்டார் கள். அதுவும் தனது கணவன் ஏதாவது ஒரு சிறு தவறு இழைத்து விட்டால் அதையே ஒரு சாட்டாக வைத்து அவரை மன்னித்து விடாது . தனது இஷ்டப்படி நடத்திக் கொண்டிருப்பார்.

வீட்டில் தான் எவரையும் அதிகாரம் செய்யலாம் வெளியே எவர் பார்த்து விடப் போகிறார்கள் எனச் சிலர் எண்ணிக் கண்டபடி மனம் நோகப் பேசுவதுண்டு.





உண்மையில் எவருக்காவது வீட்டிலேயே இல்லாத பேச்சுச் சுதந்திரம் வெளியே எப்படி கிடைக்கும்? சிலர் வீட்டில் வாய்மூடி மௌனியாக இருப்பார்கள்.

ஆனால் வெளியே தமது மொத்த ஆதங்க த்தையும் கொட்டித் தீர்ப்பது போல பிறரை அதிகாரம் செய்து துன்புறுத்துவார்கள். வீட்டிற்கு வெளியே ராஜாவாக உலா வருவதும் உள்ளே அடிமை போல் முடங்கிக் கிடப்பதும் ஒரு பலவீனமான நிலை தான்.

சில அதிகாரிகள் தமது பணிமனையில் தமது சக ஊழியர்களைப் பேசவே விடமாட்டார்கள். இவர்கள் ஆண் அதிகாரிகளாகவும் இருக்கலாம், பெண் அதிகாரிக ளாகவும் இருக்கலாம். ஆனால் தத்தமது வீடுகளில் ஒரு அடிமை வாழ்வையே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

அக உணர்வுகள் பாதிப்படையும் போது சிலர் முடங்கிப் போகின்றார்கள் சிலர் பழிதீர்க்கப் புறப்பட்டுப் போகின்றார்கள்.இதிலிருந்து மீள எண்ணுபவர்கள் எத்தனை பேர்?

பொது வாழ்வில் சிலர் நடந்து கொள்ளும் முரணான நடத்தைகளுக்கு உளவியல் ரீதியான பாதிப்புக் களும் ஒரு காரணமாகும்.



RangaRakes
Tamilnavarasam.com

பேச்சுரிமை என்பது ஒரு கட்டுப்பாடான சுதந்திர மான எல்லைக்குட்பட்டதே! சுதந்திரம் என்பதும் கட்டுப்பா டான சமூக முறைமையேயாம். இது ஒரு தனிமனிதருக்கு மட்டுமல்ல! நாங்கள் மட்டுமே பேசிக் கொண்டிருந்தால் அடுத்தவர் நம்மிடமிருந்து விடை பெற்றுக் கொள்வான். பேசுவதும், பிறருடன் நடந்து கொள்ளும் விதமும் நாகரீகமான முறையில் அமைந்தால் தான் சமூகக் கட்டமைப்பு சிதையாமல் இருக்கும்.புரிந்துணர்வுடன் பேசினால் உறவு பிரியாமல் இருக்கும்.

ஒரு சின்னப் பிள்ளையின் பேச்சுக்கும் கௌரவம் கொடுக்க வேண்டும். இன்று இளைய தலைமுறையினர் நியாயமாகப் பேசினாலும் கூட அது சிறு பிள்ளைத் தனமானது என உதாசீனம் செய்தல் கூடாது.

சரி, பிழைகளைச் சுட்டிக் காட்டுவது அனைவரி னதும் பாரிய பொறுப்பு எனினும் இவைகளை எங்ஙனம் வெளிப்படுத்துவதே பிரச்சனையாகவுள்ளது. எவருமே தங்கள் தவறுகளை ஒப்புக் கொள்வதில்லை.

எதனையும் பேசு முன், யோசித்துப்பேச வேண்டும். மனிதன் பேசாமல் வாழ முடியாது கொஞ்ச நேரம், கலகலப்பான மனிதர் சூழ்ந்த இடத்தில் முடங்கியிருந்து பாருங்கள். அவர்களோடு இணைந்து. பேசி மகிழ வேண்டும்





போல் இருக்கும். ஜன நடமாட்டம் அற்ற இடத்தில் மௌனமாக இருந்து தியானம் செய்வதும் எளிதல்ல. தியானம் என்பதே மன ஒடுக்கத்தினுடான பயிற்சி தான் . இதனால் உள்ளம் விரிவடையும். ஆயினும் மக்களோடு மக்களாக உறவாடுவது என்பது வேறு மௌனமாக இருந்து தியானம் புரிவது வேறு.

ஆனால் "மௌனமான வழிபாடு என்பது கூட இறைவனோடு உரையாடுவது" என்பதை நீங்கள் உணர வேண்டும். மௌனத்தை விட ஸ்திரமான மொழி வேறில்லை. மௌனம் என்றுமே யௌவனம்தான்!

மனித உறவை மேம்படுத்த உரையாடல்கள் தேவைப்படுகின்றது. பேசாமல் சும்மா இருந்தால் வாழ்வு சுவைக்காது. இதோ ஒரு சின்னக் கதை.

மிகவும் பாவச் செயல்களைச் செய்தவன் இறந்து போன பின், உடனே அவனை மேல் உலகத்திற்கு, மேல் உலககாவலர்கள், ஒரு பெரிய அரண்மனைக்கே அழைத்துச் சென்றனர்.

அவனால் நம்பவே முடியவில்லை. மகா பாவம் செய்த எனக்கு இந்த வாழ்வா? அங்கு நடப்பவைகளை அவனால் நம்பவே முடியவில்லை " இதோ பார், இங்கு உனக்கு ஒரு வேலையும் இல்லை. ஒன்றுமே பேசக் கூடாது.



RangaRakes
Tamilnavarasam.com

நல்ல விதவிதமான உணவு, பானங்கள் வழங்கப்படும். பேசாமல் இவைகளை அருந்துவதும் சாப்பிட்டு உறங்குவதுமே உனது வேலை. இங்கு எவருமே உன்னைத் தொந்தரவு செய்ய மாட்டார்கள். இங்கு எவருமே உன்னிடம் பேச்சுக் கொடுக்கப் பேவதில்லை புரிந்ததா" என்று அவர்கள் கூறிவிட்டு சென்று விட்டார்கள். அப்பாடா இது போதும் என்றவன், நன்றாகச் சாப்பிட்டான், தூங்கினான். ஆனால் எவருமே பேச வில்லை. உணவு அங்கு வைக்கப்பட்டிருக்கும். படுக்கப் பஞ்சு மெத்தை தயாராக இருக்கும்.

ஆயினும் எவ்வளவு காலத்துக்குத் தான் இப்படியே உண்டு, உறங்கிக் காலத்தை ஓட்ட முடயும்? ஒரே தனிமை, பேசுவதற்கு ஆளேயில்லை. அவன் மனம் நொடிந்து ஓடோடிச் சென்று அங்குள்ள காவலாளியிடம் "நான் இங்கிருப்பதை விட பேசாமல் என்னை நரகத்திற்கே அனுப்பிவிடுங்கள்" என்றான். ஒருவருக்கு வழங்கும் மிகப் பெரும் தண்டனை அவனைப் பேசாமல் சும்மா இரு எனக் கட்டளையிடுவதே தான்! அவனுக்கு வழங்கப்பட்டதும் நரக தண்டனையேதான் .

மனிதர் வாய் இருந்தால் கண்டபடி பேசக் கூடாது. நல்ல வார்த்தை பேச மட்டும் வாய் அசைய வேண்டும். உணவை உண்பதற்கும், எம்மை வளர்ப்பதற்கும், பயன்படும் வாயை புனிதமாக வைத்திருக்க வேண்டும்.





படித்ததைச் சொல்லிக் கொடுக்க, இறை புகழ் பாட, மற்றோரை, உற்றோரை வாழ்த்த நாம் தயங்கவே கூடாது.

உரிமை என்பது பிறர் வாழங்குவது அல்ல! ஒருவனை முடக்காமல் இருந்தாலே போதும். அவன் உரிமை பெற்று உயர்ந்து விடுவான். ஒருமுறை ஒருவரை நேசித்தாலே காழ்ப்பு எழாது, தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை அநாவசியாமாக உதிர்க்காது அளவோடு பேசி, மகிழ்வோடு வாழ்க! பேச்சுத் சுதந்திரமே மானுடத்தின் வேண்டுதல். நல் இயக்கத்தின் தூண்டுதல்.

தினக்குரல்
ஞயிறு மஞ்சரி
06-02-2011



RangaRakes

Tamilnavarasam.com

# காதலும் கடமையும்

பருத்தியூர் பால. வயிரவநாதன்

*வாழ்வியல் வசந்தங்கள் – பாகம் 12*
*சிந்தனைக் கட்டுரைகள்*


RangaRakes Tamilnavarasam.com

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
| --- | --- |
| 01) பரிபூரணத்துவம் | 23 |
| 02) காதலும் கடமையும் | 33 |
| 03) தர்மம் | 48 |
| 04) நிம்மதி | 60 |
| 05) பசி | 73 |
| 06) தூற்றுதல் ஏற்புடையதன்று | 86 |
| 07) துன்பங்கள் சொந்தங்கள் அல்ல இன்பங்களே நிரந்தரமாகட்டும் ! | 95 |
| 08) பெண் | 107 |
| 09) வேடதாரிகள் | 120 |
| 10) சோதனை | 129 |
| 11) எப்படியும் வாழ்ந்து விடலாமா? | 140 |
| 12) வயது வந்த பிள்ளைகளுடன் சினேகபூர்வமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளுங்கள் | 145 |
| 13) இல்வாழ்வில் இனிமை பொங்க...! | 150 |





# பரிபூரணத்துவம்

அறிவிற்கு எட்டாத மா வல்லமை பொருந்திய இறைவனே பரிபூரணத்துவமானவன். எம்மை என்றும் இயக்குவதுடன் உலகம் முழுமையையும் தன் ஆட்சிக்குள் வைத்திருக்கின்றான். "பாதை காட்டுகின்றேன்" என்பவரின் பாதையை புரிந்து கொள்ளும் பக்குவத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். நிச்சயமாக மனநிலையில் தெளிவுடன் தன்னைப் புதியவனாக எதிலும் வல்ல நல்லவனாக ஆக்கிக்கொள்ள நினைப்பது, முனைப்போடு இயங்குவது முடியாத கருமமும் அல்ல. நல்ல ஞானிகளின் சிந்தனையில் திரிபுவாதத்திற்கு இடமேயில்லை. நிகழ்காலச் சூழலில் தன்னை வருத்தி மாற்றியமைக்க விரும்பாதவர்கள் தொகைதான் அதிகரித்துக் காணப்படுகின்றன. மனிதனுக்கு அறிவு ஏற ஏறச் சந்தேகங்களும் வலுப்படுகின்றன. சந்தேகம் அற்ற நிலை வருவதற்கு பரிபூரணனான இறைவன் அருளை வேண்டி நிற்க வேண்டும்.

இறைவன் மட்டுமே பரி பூரணத்துவமானவன். சகல காரிய காரணங்களையும் அறிந்தவன், என்றெல்லாம் நாம் உரை செய்தாலும், அறிவுக்கு எட்டாத இறைபற்றி நாம் வரைவிலக்கணம் கூற இயலாது.



RangaRakes
Tamilnavarasam.com

மனிதன் பூரணத்துவமான நிலைக்கு வரமுடி யுமா என்று கேட்பவர்களே அதிகமாயுள்ளனர். மனிதன் ஏதோ ஒரு தருணத்தில் தன் உருவத்தை மாற்றி தன் சொந்தக் கருத்துக்களையே பின்பு கரைத்துக்கொள்கின்றான். இந் நிலையில் இவன் எப்படித்தன்னை முழு உருவமாக வரைந் திட இயலும் எனக்கேட்டிடத் தோன்றுகின்றதல்லவா? வாழ்வில் திருப்தி இன்றி வருத்தப்படுபவனிடம் வாழ்வின் முழுமை செழுமைபற்றி, உடனே புரியவைக்க இயலுமா?

மனிதன் இன்றைய வளர்ச்சி என்பது கூட ஒரு பரிணாம வளர்ச்சிதான். இதில் எதுவித சந்தேகமும் கிடையாது. தீடீர் என ஒருவன் துலங்கிட இயலுமோ?

நல்ல நினைவுகளே நற்கருமத்தைச்செய்யத் தூண்டுகின்றன. ஒருவன் தன்னை உருவாக்கிக் கொள்ளக் காலஅவகாசம் தேவைப்படுகின்றது. ஒருவன் தன்னை முழுமையாக்கிக் கொள்ள வரையறைக்குள்ளான காலத் தைக் கோருவது, நடைமுறைச் சாத்தியமானது தானா? கொஞ்ச நாள் பொறுங்கள் நான் முழுமை பெற்றுவிடுவேன் என்று கூறினால், சிலவேளை அது நகைப்புக்கிடமாகவும் தோன்றும் அத்துடன், சதாகுறை கூறும் பிரகிருதிகளிடம் “நிறைவு” எப்படி எனக்கேட்க முடியுமோ?.

எனினும்,

நிச்சயமாக, மன நிலையில் தெளிவுடன் தன்னை புதியவனாக, எதிலும் வல்ல நல்லவனாக ஆக்கிக்கொள்ள





நினைப்பது, முனைப்போடு இயங்குவது முடியாத கரும மும் அல்ல.

மேலும்

நிகழ்காலச் சூழலில் தன்னை வருத்தி மாற்றிய மைக்க விரும்பாதவர்கள் தொகைதான் அதிகரித்துக் காணப் படுகின்றது. ஏன் எனில் நடைபெறும் உலக நடப்புக்களை உற்று நோக்கினால் திருந்தி வாழ மனமாரச் சித்தம் கொள் வோர் எத்தனை பேர் உளர்? அப்படி நற்சித்தம் கொண்டால் பாவச் செயல்கள் என்றோ அஸ்தமித்து விடுமன்றோ?

சரி அடுத்துப் பார்ப்போம்,

“நான் நல்லபடி வாழ நல்லறிவு கொடு” என்று இறைவனிடம் உண்மையாக யாசகம் கேட்டோர் எத்தனை வீதம் இருக்கின்றார்கள்?

செய்வதெல்லாம் சரி என்று தம் சித்தத்திற்குக் கட்டளையிட்டுத் தமது தவறான நடத்தையை மாற்றாமல் இருக்கின்றவர்கள் உண்மை நிலைக்கே சம்மதம் தெரிவிக் காதவர்களாவர்.

மனிதனுக்கு அறிவு ஏற ஏற பணிவும் நலிந்து அகந்தை மலிந்து சந்தேகங்களே வலுப்பெற்று விடுகின்றது.

எல்லா விடயங்களிலும் நுழைந்து அது சரியா, இது சரியா எனச் சந்தேகப்பட ஆரம்பிக்கின்றான். தன்னைச் சூழ



RangaRakes

Tamilnavarasam.com

உள்ள உயிர்களையும் சடப்பொருட் களையும், அனைத்து மனித நகர்வுகளைக்கூடச் சந்தேகம் கொள்ள ஆரம்பிக் கின்றான்.

மனித தேடல்கள், ஆய்வுகள் என்பது "அறிவுநிலை" என்றாலும் கூட இது கூடச் சில பொழுது தேவையுள்ள சந்தேகங்களையும் தோற்றுவித்து விடுகின்றன.

இது சரி, இது பிழை எனக்கூறிட முடியாத, நிலைக்கு மனித ஆற்றல்கள் வலுவிழந்து விடுவதுமுண்டு. ஆயினும் இதன் பொருட்டு ஏதோ ஒரு தீர்மானம் எடுப்பதும், அதில் சிலவேளைகளில் வெற்றியும், சில வேளை தோல்வியும் அடைவதுண்டு. எனவே அறிவு கூட எம்மை அறுதியிட்டுச் செயலாற்ற விடாது எம்மை அல்லாடச் செய்வது ஒன்றும் புதுமையல்ல.

தன்னைச் சில சமயம் நம்புவதும், பிறரைப் பல தடவைகள் நம்புவதே மனிதரின் யதார்த்த நிகழ்வாகிவிட்டது. பிறரை நம்பாமல் இருக்க முடியாது.

எனினும்,

தன்னை இழந்து மற்றவரையே சார்ந்து இயங்குதலும் நம்புவதும் எல்லாச்சமயங்களிலும் பொருந்துவதாக அமைந்து விடாது. உணர்க!





பிறர் அறிவில் நம்பிக்கையைச் செறிவாக்கிக் கொள்கின்றான். சார்ந்து வாழ்வது மனிதர்க்கு மட்டு மல்ல. சகல ஜீவராசிகளுக்குமே உள்ள இயல்புதான். ஆனால் இவைகள் தமக்கென சில உரிமைகளை உழைப்புக்களை விட்டுக் கொடுப்பதில்லை.

இயன்றவரை அவை தாமே முயன்று இரைதேடும். பறவைகள் கூடுகள் அமைக்கும். பாதுகாப்பான புகலிடம் தேடும். ஆயினும் இவைகூடத் தம் இனத்தைச் சார்ந்தே வாழும். ஒன்றாக வாழுவது வேறு. ஒன்றுக்கொன்று அடிமைப்பட்டுச் சீவிப்பது வேறு. மனிதர்களைவிட, மிக நுண்ணிய ஜீவராசிகள் தமது ஆற்றல்களை முழுமையாகவே வெளிப்படுத்துகின்றன.

இதனாலேயே இவைகளின் சிருஷ்டிபற்றி நாம் வியந்து நோக்குகின்றோம். சின்னச்சிலந்திக்கும், தும்பிக்கும், தத்து வெட்டிக்கும் பறவைகளுக்கும் உள்ள சிறு அமைப்பை வைத்து நாம் அவைகளை மதிப்பீடு செய்ய முடியுமா?

இப்படி இருக்கையில் முழு மனிதன் தன் தேக பலத்தாலும் அறிவின் ஆக்கிரமிப்பாலும் பூரணத்துவமாக வாழ முனையாமல் இருக்கலாமா? சிந்தனைகளைத் தூய்மையுடன் முன்நிறுத்தி இயங்க முனைந்தால் பூரணத்துவத்தை நோக்கிய பயணம் இலகு ஆக்கப்படுமல்லவா?



RangaRakes

Tamilnavarasam.com

இன்றைய உலகில் தனிமனித ஆளுமைகள் கூட பலரை அவர்பக்கம் ஈர்க்க வைக்கின்றன. அரசியல் தலைவர் கள், மதத்தலைவர்கள் இத்தகைய ஆளுமைகளைப் பெற்று விடுகின்றனர்.இவர்கள் தமக்கென சிந்தனைகளை, சித்தாந் தங்களை மக்கள் முன் நிறுத்துகின்றனர். மக்களுக்கு ஏற்ற விதத்தில் பேசுகின்றார்கள். வாழ்ந்தும் காட்டுகின்றனர்.

ஆயினும்,

இத்தகையவர்கள் எல்லோருமே பெறுமதிமிக்க சிறப்பாம்சம் கொண்டவர்கள் என்றும் கூறமுடியாது. பல தலைவர்கள் மக்களின் பலவீனம் அறிந்து கொடுக்கும் தீனிகளின் பலாபலன்கள் காலம் கடந்த பின்னர் தான் வெளிச்சத்திற்கு வருகின்றன.

நல்ல ஞானிகளின் சிந்தனைகளில் திரிபுவாதத் திற்கு இடமேயில்லை. அவை என்றுமே சாஸ்வதமான நிலையில் மக்களோடிணைந்து விடுகின்றன போலியானவர் வெறும் சலசலப்புக் காட்டி திடீர் என முளைக்கின்ற "களை" போன்றவர்கள். சீக்கரமே முளைத்து, அதி சீக்கிரமே களை இழந்து அழிந்து போய் விடுகின்றனர்.

எனவே,

பாதை காட்டுகின்றேன் என்பவரின் பாதையைப் புரிந்து கொள்ளும் பக்குவத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். கண்களை மூடி கண்ட ஞானமும் பெற்றிடல் முடியாது.





நாம் பெறும் உலக அனுபவங்கள் இங்கு நடை பயிலும் உயிர்களிடத்தே இருந்து பெறப்படுகின்றன. இன்று நடப்பது என்ன என்கின்ற கருத்து ஏற்கப்படுவதும் பின்னர் அதுவே மறுக்கப்படுவதும், இவையெல்லாமே அறிவின் வெளிப்பாடு.

அறிவிற்கு எல்லைக்கோடு போடமுடியாத நிலை யில் நாம் இயங்குகின்றோம். இந்நிலையில் நாம் பூரணத் துவத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாகவும் இருக்க வேண்டியுள்ளது.

தனது குறைகளை மட்டுமே சதா நினைத்து அதனில் இருந்து மீளாத வாழ்வு எம்மை சூன்ய நிலைக்கு உட்படுத்தி விட்டு விடுமல்லவா? சந்தோஷ சூழலை எம்முள் ஆக்குவது எப்போது?

நல்லவைகளை நோக்கிய பயணத்தை நாம் ஆரம்பித்தேயாக வேண்டும். இதுவே எமது பூரணத்துவத் தைத் தேடும் முயற்சியுமாகும். நாம் இறை நிலைக்கு வர முடியாது எனச் சொல்லி ஒதுங்காது இறைவன் விரும்பும் பணிக்கு எம்மை இட்டுச் செல்வது உவப்பான செயல் அல்லவோ?

வாழும் காலம் சொற்பமானது என்று கூறுகின் றோம். ஆனால் வாழும் காலத்தில் நாம் செய்யும் பணிகள் சிறிதே ஆயினும் அதன் வியாபகம் விஸ்தீரணம் எவ்வளவு



RangaRakes
Tamilnavarasam.com

தெரியுமா? செய்கின்ற பணியின் அளவு பற்றிப் பேசுவதை விடுத்து, அதன் பொருட்டு ஒருவன் பெற்றிட்டபயன் சிறப்பு ஆயின், அதுதான் உயர்வானது.

செய்கின்ற சிறு கருமங்கள் மூலம் பெரும் பணியினை ஆற்றும் வல்லமை பெற்றவர்களாவோம். புரிந்து கொள்வோம்!.

மேலும் நாம் நல்லவை இது தான் என்று அறிந்தும் கூட அதனைச் செயலாக்க முனையாமல் இருப்பது என்பது எமக்கு நாமே செய்கின்ற தடைகள் என அறிவோமாக. எல்லாமே அறிந்து சிறப்புற வாழ நாட்டம் கொண்ட நாம் எமது வாழ்வுப்பாதையினை இயல்பாகவும், சிக்கலின்றியும் அமைத்திட எமது சுவடுகளை ஆழப் பதித்து வைக்கின்ற அடிகளை நீளமாக, சீரான வேகத்துடன் வைப்போமாக!.

அன்போடிணைந்த, நல்ல அறிவை அரவணைத்த நல் எண்ணங்களே, "சுவடுகள்" எனத்தெளிவோம்.

- மனத்தாலும்,
- காயத்தாலும்,
- வாக்காலும்,

தூய்மை நெறியினைப் பேணவிழையும் நாம் சகல உயிர்களிடத்து மட்டும் கருணை கொள்வதால் நாம் முழுமை பெற்றுவிட முடியாது. எம்மை வாழ்விக்கின்ற இயற்கையை நாம் பாதுகாத்துப் போஷிக்க வேண்டியவர்களா





வோம். இயற்கைக் கொடைகள் இன்றேல். இந்த உயிர்கள் தான் முடங்கி ஒடுங்கி அழிந்துவிடுமே?

நிலம், நீர், காற்று, தீ, வானம் எனும் பஞ்ச பூதங்கள் என்று கூறப்பட்டவைகளை மனிதர் மாசுபடுத்துதல் கொலை செய்யும் மாபாதகச் செயலைவிடக் கொடுமை யானது அல்லவா?

இயற்கையை அழிப்பவன், தன்னை மட்டுமல்ல, தான் சார்ந்த அனைத்தையும் அழிக்க முயல்பவன் ஆகின்றான். இன்று அறியாமை காரணத்தால் மட்டுமல்ல மிக அறிந்தவர்கள் கூட இயற்கைக்கு ஊறு விளைவிப்பதில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். 'மானுடன் வாழ்வது' என்பதில் அர்த்தம் என்ன? மானுடத்தை வாழவைக்கும் தோழமைக் கொடைகளான இறைவனின் அற்புதப்படைப் புக்களைப் பேணுதலுமாகும்.

நற்செயல் புரிபவனுக்குக் களைப்பு என்பது விளை யாது. எமது கருமங்களினால் ஏற்படும் நல் விளைவினால் எம்மை அது வியப்பூட்டிக் களிப்பூட்டிச் செயல் வீரனாக்கி விடும்.

இனிமையான பணிகளை உவந்தளிப்பவர்கள் கணப் பொழுதும் யுகம், யுகமாய் வாழ்ந்தவர்களாவர் வாழ்வதில் உள்ள நிறைவுதான் எம்மைப் பூரணத்துவத்தை நோக்கிய விரைவான பயணத்தினை உருவாக்கின்றன.



RangaRakes

Tamilnavarasam.com

இறைவனால் விரும்பப்படுகின்ற கருமங்களைச் செய்ய ஆரம்பித்ததுமே எமது உள்ளத்தில் அவருடைய ஆசீர்வாதம் உள் நுழைய ஆரம்பித்துவிடுகின்றது. கடவுள் பக்கம் சார்வது என்பது செய்கின்ற நல்ல சேவையினால் உருவாவதேயன்றி வேறில்லை.


பூரணத்துவம் என்கின்ற முழுமை நிலையினைக் கடவுளிடம் காண்கின்ற நாம், அவர் காட்டுகின்ற பாதையில் அவர் தடைகளை இட்டு வைப்பதுமில்லை. நல்ல ஒருங்கிணைத்த, வைராக்கிய சிந்தனையுடன், இருக்கின்ற பொழுதுகளை, முழுமையான நிறைவுடன் செய்வோமாக!.

பரிதிக்குப், புதுவெளிச்சம் காட்டத் தேவையில்லை. முழுமதிக்குக் குளுமையை நாம் கொடுக்க வேண்டியதில்லை. இயல்பாகவே, அன்புருவானவர்கள், கருணை மிகுந்தவர் தருகின்ற ஒளியை நாம் தான் தேடிச் செல்ல வேண்டும். ஞானிகள் வரவும், நல்லோர் உறவும், இறை, நற்கொடையாகும். இக் கொடை வழங்கல்கள் நிறுத்தப் படுவதில்லை. பூரணத்துவம் நோக்கிய நல்லோர் பயணங் களும் ஓயப்போவதில்லை.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
04-06-2006







# காதலும் கடமையும்

காதல் ஒரு மௌனக் கலவரம். காதல், யௌவனம், தினம், தினம் ஓதும் மந்திரம் சீண்டி விட்டு மனதைத் தோண்டி வேடிக்கை காட்டும். மனதுக்குள் மாயச் சக்கரமாய் சதிர் போடும். சில பொழுது கடமைகளை மறைத்தும், தன்னிறத்தை மட்டுமே நிலை நிறுத்தும். காதல் பிணைப்பினால் உலகம் சிருஷ்டிக்கப்படுவதாலேயே காதலுக்கு மகோன்னதமான இடம் கிடைக்கின்றது. மக்களைப் பெருக்குவதே மனிதனின் முதல் வேலை என்று சொல்வதே ஒரு யந்திரத்துடன் ஆறறிவு மனிதனை ஒப்பிடுவதற்குச் சமனாகும். கண்டபடி வாழ எண்ணுதலும் கடமையை மறத்தலும் காதலுக்கே ஒவ்வாதது. மாறாத காதல் இனிய வாழ்விற்கு ஆதாரம். தன் நிலை உணர்ந்து வாழாதவன், கடமைகளை மதிக்காதவன் காதலைக் கொச்சைப்படுத்துபவனாவான். காதலால் கடமையை இழத்தலாகாது.

காதல் பற்றிக் கதைத்தாலே பாவம் என்று சொல் பவர்களும் காதல் இல்லாமல் அது என்ன வாழ்வு என்று கனவிலும், நனவிலும் பேசும் காதல் விசுவாசிகளும் இது



RangaRakes Tamilnavarasam.com

பற்றிக்கூறும் வியாக்கியானங்கள், புயலாகவும், தென்றலா கவும் இருக்கின்றன.

இருப்பினும் காதல்பற்றிச் சார்பாகவும் அது ஒரு வாழ்வின் சவால், என்று வர்ணிப்பவர்கள் தொகை மட்டும் அருகிப்போவதில்லை. அது என்ன காதல், இது பற்றியே ஏன் பேசப்படல் வேண்டும்? அன்றும், இன்றும் என்றும் காதல் பற்றிப் பேசுபவர்களுக்கு வேறு வேலையே இல்லையோ என்றும் சில தடவை கேட்கத் தோன்றும்.

காதல் ஒரு மௌனக் கலவரம்

காதல், யௌவனம், தினம் கணம் ஓதும் மந்திரம். சீண்டிவிட்டு, மனதைத் தோண்டி வேடிக்கை காட்டும் மனதுக்கள், மாயச் சக்கரமாக, சதுர்போடும். சிலபொழுது கடமைகளை மறைத்தும் தன் நிறத்தை மட்டும் நிறுத்தும்.

இப்படிப் பற்பல விதமான கருத்துக்கள், உருவகிக் கப்பட்டு நெஞ்சத்தைச் சிலபொழுதுகள் ஈரமாக்கியும், சில பொழுது அக்னியை அரவணைப்பது போலவும் செய்து விடுகின்றமையை மறுக்க முடியாது.

காதல் பிணைப்பினால் உலகம் சிருஷ்டிக்கப்படு வதாலேயே காதலுக்கு மகோன்னதமான இடம் கிடைக் கின்றது என்று மட்டும் கூறமுடியாது.





மக்களைப் பெருக்குவதுதான் மனிதனின் முதல் வேலை என்று சொல்வதே, ஒரு யந்திரத்துடன் ஆறறிவு மனிதனை ஒப்பிடுவதற்குச்சமமானது.

துன்பத்திலும், இன்பத்திலும் இணைந்திருக்கச் செய்கின்ற ஆற்றல் அன்பினால் மட்டுமே சாதிக்க முடிகின்றது. ஆண், பெண் உறவிற்குப் பொருத்தமான சொல்லாகவே 'காதல்' என்கின்ற சொல் பயன்படுத்தப் படுகின்றது. மற்றப்படி அன்பு, பாசம், பற்று, உறவு என்கின்ற சொற்பிரயோகங்கள், மனிததொடர்புகளில், பல்வேறு தரங்களுக்கும் ஏற்ப மாறுதலாகச் சொல்லப்படுகின்றது.

தாய், பிள்ளை, சகோதர உறவு பாசம் என்றும், உலக உயிர்களில் தோன்றும் இரக்கம் கருணை என்றும் சொல்லப்பட்டாலும்கூட அன்பு என்கின்ற பதம் எல்லா வற்றிற்கும் ஒருமித்த கருத்துக்களை இணைக்கும் வலுமிக்க பிணைப்பாகியிருக்கின்றது. ஆனால் 'காதல்' என்பதனுள் எல்லாமே அடக்கம் கனிவு, பாசம், பரிவு இல்லாத காதல் அது காதல் அல்ல. அன்பு, பாசம், பற்று, உறவு என்கின்ற விடயத்தில் காதலுக்குள் ஒரு தனிப்பட்ட உறவும் ஒளிந் துள்ளது.

காதலுக்குள் காமமும், பற்றுதலும், ஏன் பாசமும் கூட உறைந்துள்ளது. ஆண்,பெண் உறவு என்பது இயற்கை தந்த மயக்கம் என்று சொல்லமுடியாது. உண்மைக் காதலின் முன்பு மாறுபாடான மனோபாவம் உருவாக



RangaRakes
Tamilnavarasam.com

முடியாது. எந்நிலையிலும் உடல் இன்பத்தை மட்டுமே கருதாது, அந்தஸ்து, சாதி, சமய வேறுபாடு களைந்த நிலையில், இயல்பாக ஒன்றிணைதலே காதலர் வாழ்வு என்று போற்றப்படுகின்றது.

சின்னப் பூவிற்குள்ளேயே சிருங்கார நாடகம் நடப்பதை நீங்கள் உணருகின்றீர்களா?

வண்ணப்பறவைகள், வாய் அசைத்துப் பறக்கும் போதே, ஒட்டி உராய்ந்து, மெத்தென்று கொத்தி, மெல்லிய சிறகினால் விசிறுவதைக் கண்டதும், உங்கள் தேகம் சிலிர்ப் பூட்டப்பட வில்லையா?

புலியும், கரடியும், சிங்கமும் கூடக்காதலின் நிமிர்த் தம் கனிவாகப்பார்த்தே இனிமை காட்டவைக்கும் சக்தி அதற்கு உண்டு. வெஞ்சமரில் வென்றிடும் வீரர்கள் சுட்டும் விழியழகின் முன் சோர்ந்தே போவதைச் சரித்திரம் கூறும்.

"வேங்கை நான். மங்கை முன் தூங்கும் சிறு துரும் பாயினேன்" என்று சொல்பவர்கள் எத்தனை பேர் உண்டு தெரியுமா? காதல் பலம் மட்டும் கொடுக்கின்றது என்று சொல்பவர்கள் உண்டு. ஏன் எனில், நல்ல வாழ்க்கைத் துணை இல்லாதவற்றை எல்லாமே அள்ளித்தரும் என்றும் கூறுவார்கள். வண்ணமயமான எழிலும் நற்குண இயல்பு டையவளை வாழ்க்கைத்துணையாகத் தேடியவன் அவளை வாழ்நாள் முழுவதுமே காதலித்துக் கொண்டி ருக்கின்றான்.





இன்று உள்ள இளைய தலைமுறையினர் ஒரு சிலர் கல்யாண வாழ்வின் முன்பு தான் காதலின் வேகம் பற்றியும், அதன் சுவாரஸ்யம் பற்றியும் மிகையாகப் பேசுகின்றார்கள். காலப்போக்கில் இல்லற தர்மம் மறந்து கடமை துறந்தும் போகின்றனர். காதல் என்பது இளமைக்கே உரியது என்கின்ற கருத்து வாலிபச் செருக்குடையோர் வாதம் என்றுதான் கூற வேண்டும்.

திருமணம் முடிந்தபின் அன்பு நிலை அறுந்து போகுமா? வாழ்வின் தேடல்கள் எல்லாமே நாம் கலைக்கக்கூடாத சொத்துக்களாகக் கொள்ள வேண்டும். வாழ்ந்து பார்ப்போம், வாழ முடியாது விட்டால் வெட்டி அறுத்து விலகிப்போவோம் என்பவர்களின் கருத்து எந்தவகையில் நியாயமாகும்.?

"இதுவரை வாழ்ந்த வாழ்வு இன்பம்மூட்டும் காதலாக இருந்தது. பொழுதுகளை இப்போது துன்பமாகப் போக்குகின்றேன்" என்பவர்கள். தாங்கள் இணைந்திருந்த போது என்ன, என்ன பேசிக் கொண்டிருந்திருப்பார்கள்? பேச்சும், உடல் இச்சைகளும் மட்டுமே உருவம் தந்திடுமா?

காதலிக்கு முன் உன்னை நீ ஒரு மனிதனாக நிறுத்து! அப்புறம் காதலிப்பது பற்றி யோசி! கண்டதும் காதல், இது முன் பிறப்பின் தொடர்பு என்று வீம்பு பேசுபவர்கள் சப்தம் போடாமல் காதலிகளை மாற்றிக்கொள்கின்றார்கள்.



RangaRakes

Tamilnavarasam.com

வீட்டிற்கு இவள், வாழ்விற்கு அவள் என ஒன்றுக்கு மேல் தேடுபவர்கள்கூட அன்பு பற்றி அரை மணித்தியாலம் பேசுவார்கள். அந்தஸ்து பற்றி முன்னரே பேசாது திடீர் ஞானம் பெற்று காதலைப் பாதியில் நிறுத்தும் கோமாளிகள் எத்தனை பேர்?

காசு இல்லாத காலத்தில் ஊர்ப்பையன் மீது ஆசை வைத்து கல்லூரி சென்றதும் மெல்லன மனசுமாறி மேல் தட்டு வாலிபனிடம் மேதினியில் பெரிய காதல் பூத்ததாக பேசினால் காதல் இவர்களைப் பார்த்துக் கண்ணீர் மல்காதா?

ஹே....... காதலே.....!

உன்னைப்பற்றி எல்லோருமே எதுவுமே பேசலாம். நீ எதுவுமே பேசாமல் மௌனமாக உன் யௌவனத் திரையூடாக எல்லாவற்றையும் பார்த்து ரசிக்கின்றாய். மன்மதன் இயல்புமாறாத இதயங்களுக்கு மட்டுமே உன்னைப் புகுத்துகின்றான். காதல் தெய்வம் கயவர்களுக் கானதல்ல!

கண்டபடி காதல் கொள்பவர்களை துரத்தியடிப்பது மன்மத பாணம் அல்ல அவர்களின் உள் எழுந்து வரும் நச்சு வெடி என்பதே உண்மையாகும். கள்ளமில்லா என் உள்ளத்தை அசைக்கின்றான் இக்கள்வன் என் செய்வேன் தோழி என்பது காதலியின் ரசம் மிக்க பேச்சுகள். உண்மை உள்ளத்தினூடாக இயல்பான தூயகாதலால் மட்டுமே இசைக்கப்படும் வார்த்தைகளாக அவை இருக்க வேண்டும்.





கண்டபடி வாழ ஆசைப்பட தம் இளமை வேகம் என்று அதன் மீது பழி போடுதல் காதலுக்குச்செய்யும் பச்சைத்துரோகம் எனக்கொள்க.! தூயகாதல் என்பது கூட நல்ல மனவளம் மிக்கவனுக்கே உரியதாகும். இதனாலேயே இத்தகையவர்கள் எத்தகைய வேறுபாடுகள், அந்தஸ்து, ஆதிக்கத்தை மீறி அன்புமீதூர வாழ்ந்து காட்ட முயல்கின்றார்கள். கனிவான காதலின்முன் வன்மம், வக்கிரம், ஆவேசம் வன்முறை, இழிசொற்கள் இல்லை.

எனினும் மாறாக் காதலின் பொருட்டான போராட்டம் நீதி கோருவதன் மீதான செயல் என்றே அறிக.!

இன்று காதலின் பொருட்டுக் காட்டப்படும், வன்முறைகள், போராட்டங்கள் பற்றியே சுவாரஸ்யப் பொழுது போக்குத்திரைப்படங்கள் வந்து குவிந்துவிட்டன. காதலர் சேர்க்கைக்காக இத்துணைப்போராட்டமா? எத்தனை இழிவு இது...? இந்த கேட்பாரற்ற வன்முறைகள், கேளிக்கை போலவே உருமாறி வருவது எவ்வளவு விந்தையானது? காதல் விருப்பப்படும் இணைப்பாகவும், விரும்பாத இருட்டாகவும் காலம் காலமாகவே கோலம் காட்டுவதாக முன்னைய சரித்திரங்களும் தற்கால நிகழ்வாகவும் காட்டினாலும் இதுபற்றி உலகம் இதுதான் முடிவு என்று ஒரே திசையில் சென்றது கிடையாது.

காதலில் ஜெயிப்பதும் தோற்பதும் சராசரி நிகழ்வு ஆகிவிட்டது. இதனால் வாழ்கையில் இழப்புக்களும்,



RangaRakes

Tamilnavarasam.com

மகிழ்வுகளும் காதலின் மேன்மையை எடுத்தியம்புகின்றதே ஒழிய இதன் இதம் தரும் திண்மையை குறைவாக மதிப்பிடப்பட்டதே கிடையாது.

இத்தகைய சிறப்பியல்புகள் பொருந்திய ஆண், பெண் இல்லறத்திற்கே தூய்மை சேர்க்கின்ற காதல் பல துன்பியல் நிகழ்வுகளாலும் காவியமாகிப்போனதால் 'காதல்' சாகாவரமாகி ஜீவித்துக் கொண்டிருக்கின்றது.

காதலின் பொருட்டுக் கடமையை மறந்து வாழுகின்றவர்கள் பற்றி சொல்லித் தீர்க்க முடியாது. காதலின் பொருட்டுக் கடமையை மறத்தல், துறத்தல், காதலைக் கொச்சைப் படுத்துவதாகும். இவர்கள் பேசுகின்ற பேச்சுக்களில் பரிதாபம் கலந்த உண்மைகள் இருந்தாலும் கூட, தம் முன்னேயுள்ள எதிர் காலம்பற்றி உணராது புதிரோடு கரைந்து புதைந்தே போகின்றார்கள்.

காதலுக்காக வாழ்ந்தவர்கள் கதைகளையும் கவிஞர்கள் பேசியதையும் உதாரணம் காட்டிப்பேசினால் வாழ்வின் நுனியை எப்படி எட்டிப்பிடிக்க முடியும். தோல்விகளால் மனமுடைவதும் அதன் பொருட்டு எதிர்கால கடமையை மறந்து உடலை உள்ளத்தை வருத்துவதும் பழிதீர்க்கும் எண்ணங்களை வளர்ப்பதிலும் என்ன ஆரோக்கியம் வந்து விடப்போகின்றது?





"நீ... என்ன அறிவுரை கூறுகின்றாயா.... நீ.. காதலித்தது... உண்டா.... அதன் ஆழம் கண்டதுண்டா..." என்று பேசி மடக்கும் சிலர் மற்றவனிலும் பார்க்கத்தான் காதல் கொண்டதால் தமக்குரிய அந்தஸ்து உயர்ந்து கொண்டதாகவும் கருதி கண்டவாறு பேசிக் கொள்வார்கள்.

இன்று பெரும்பாலான இளையவர்கள் தமது வட்டத்திற்குள் ஒரு கதாநாயகனாக அல்லது கதாநாயகி அந்தஸ்தினைத்தேட ஒரு கருவியாக ஒருவனை அல்லது ஒருத்தியைத் தேட முனைகின்றார்கள்.

ஆனால் இத்தகையவர்கள் காதலின் நுட்பமான இதமான தூய்மையினை அறிந்து கொண்டவர்களும் அல்லர். தமது புது நண்பர்களின் நடத்தை நெறிகளை அறிந்தவர்களும் அல்லர். ஆனால் இந்த நடவடிக்கைகளால் நடப்பது என்ன? வாலிபத்தில் கீறல்கள் ஆழமாகப்பதிவதை உணராமல் தப்பானவழிகளில் இஷ்டமாகவே போய் விடுகின்றனர்.

குடும்பம், சமூகம் என்கின்ற பொறுப்புக்கள் அறிந்து காதல் வருவதில்லை உண்மை தான். கண் எதிரே கடமைகள் காத்திருக்கின்றன. இவர்கள் நோக்குவதுமில்லை. அறிவுக்கு இடம்தராத மனோ நிலையில் கண்டதும் காதல் என்கின்ற உத்வேகத்தில் திரையில் பார்ப்பதை, மனத்திரையில் ஆழப்பதித்து புரியாத காதலில் அமிழ்ந்து அல்லல்படு கின்றனர்.



RangaRakes Tamilnavarasam.com

காதல் என்ன பொழுதுபோக்கா? வெற்றி பெற்றால் மகிழ்வதற்கும், தோற்றுப்போனால் மனம் இற்றுத் தாடி வளர்ப்பதற்கும் தான் வாழ்க்கை வழங்கப்பட்டுள்ளதா?

யார் யாரோ நண்பர்களின் சீண்டுதலினாலும் சுவாரஸ்யமான பொழுதுபோக்கிற்காகவும், விளையாட்டாக ஆரம்பித்து மனதோடு விளையாடும் இத்தகைய செயல்கள் முடிவில் வாழ்வின் நோக்கம் மறந்து அதனைத் துறந்து தறி கெட்டலையும் நிலைக்கு ஆளாகத்தான் வேண்டுமா? பல விடயங்களின் ஆழமோ அதன் பலாபலன்களோ தெரியாமல்தான் பல தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. மனிதர்களின் பராயங்களுக்கேற்ப கடமைகளும் வகுக்கப் பட்டு விட்டன. காலத்தின் மாற்றங்களுக்குள் பற்பல சம்பவங்கள் இடையூறுகளாக ஊடுருவதும் ஒன்றும் புதுமையுமல்ல.

ஆனால் உலக நியதிகளுக்கும் கடமைகளுக்கும் உட்பட்டு நாம் எம்மை வசப்படுத்தி வைத்தேயாக வேண்டும். மனதின் கிளர்வுகளை நாம் அறிந்தவர்களாவோம். அதுபோகும் பாதைகளை கட்டுப்படுத்துகின்ற வல்லமையை நாம் உள்ளத்தினுள் நிறுத்தி வைப்போமாக.

குடும்பம் எமக்குச் செய்த தியாகங்களை மட்டுமல்ல, இந்தச் சமூகமும் உலகமும் கூட ஒரு நல்ல பிரஜையை உருவாக்க எத்தனை எத்தனையோ மறைமுக உதவிகளைச்





செய்கின்றன தெரியுமா? கல்விக் கூடங்களை, சமூக நல நிறுவனங்களை மக்கள் பொருட்டு அரசும், பொது அமைப்புக்களும் உருவாக்குகின்றன. அதன் சேவைகளில் இருந்து ஒவ்வொரு தனிமனிதனும் உதவிகளைப் பெற்றுக் கொள்ளாமலா வாழுகின்றான்?

எனவே சமூகத்தை, உலகை, குடும்பத்தை உதைத்து எந்தத் தனிமனிதனும் தன்னை வருத்துதல் அல்லது வதைத்தல் எந்த வகையிலும் நியாயம் இல்லவேயில்லை. "எனக்குரிய காதல் பவித்திரமானது உண்மையானது, இனிமையானது அதனைப் பாதுகாப்பது எனது கடன். என்னைச் சார்ந்தவர்களையும் நான் போஷிக்கக் கடமைப்பட்டவன்" இப்படி ஒருவன் கூறியபடி தன் முன்னேயுள்ள நீண்ட பாதையையும் ஒருதடவை பார்வையிட வேண்டும்.

வயதிற்கும், வளர்ச்சிக்கும், வருமானத்திற்கும், ஒவ்வாத எந்தச் செயலும் அனுமதிக்கப்படுவதில்லை.

பொருந்தாத விஷயங்களை எடுத்துச் சொல்லும் போதும் சிலருக்கு வருத்தம் ஏற்படுகின்றன. என்றாலும். வருத்தம் தரும் சொற்கள்கூட வாழ்க்கைக்குப் பொருத்த மாகப்பட்டால் ஏற்க வேண்டியது இளையவர்களின் கடனே யாகும். மனைவி மக்கள் இருக்கும் போதே "என்னை ஒருத்தி விரும்புகின்றாள். இதுவும் ஒரு காதல் தான் மிகையான அன்புதான். எங்கள் காதலுக்குத் தடைபோட வேண்டாம்"



RangaRakes
Tamilnavarasam.com

என்று ஒருவன் கூறினால், இது நகைப்புக்கு இடமான செயல் அல்லவா?

இளவயதினர்கள் சிலர் படிக்கும் காலத்தில் தமது இளமை வேகத்தின் செயல்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்கின்றார்கள். இளவயது வேகம் என்பது தவறு இழைப்பதற்கு தரப்பட்டுள்ள உரிமையல்ல. இவைகளை சமூகமும், சட்டமும் மன்னிப்பதும் இல்லை. சமூக பாதிப்புக்களை சமூக அங்கத்தினர்கள் பார்த்து ரசிப்பதும் இல்லை.

வாலிப வயதினர்களின் செயல்கள் மற்றவர்கள் ரசிப்பதாக அமையவேண்டும். அவர்களின் ஒவ்வொரு செயல்களும் சமூக மேம்பாட்டினை அடியொற்றி அமைந்தால் எத்துணை சிறப்பாக இருக்கும் தெரியுமா? வெட்கப்படவைக்கவும், வேதனைப்பட வைக்கவும், வாழ்க்கையை அமைத்தால் இறுதியில், துக்கப்பட வேண்டியவர்கள் இவர்கள் தானே?

ஒன்றினை எதிர்பார்த்தே ஒன்று உருவாகின்றது. உருவம் சமைக்கப்படுமுன்னே அவை அழிக்கப்படக் கூடாது. வாழ்க்கை வரைபடம் துல்லியமாக வரையப்படல் வேண்டும். கேட்பாரற்ற வரன் முறையற்ற சீவியம் நட்ட மரத்திற்கு வெந்நீரைக் கொட்டுவது போலாகிவிடும். நல்ல வாழ்வை ஈந்த உலகை நாமாக, வலிந்து வேதனைப்படுத்துதல், மதியைக் கரைக்கும் செயல். சுதந்திர உணர்வு என்று கூறி எதிர்காலத்தைச் சிறை செய்யக்கூடாது. பிரச்சினை





களுக்குள் வலிந்து நுழைவதுகூடச்சிறைவாழ்வு தான். பிறர் நலம் நோகா வாழ்வே சுதந்திர வாழ்வின் சந்தோஷ வரவு ஆகும்.

காதல் சுதந்திரமானது, தூய்மையானது, கறை அற்ற காந்த சக்தி கொண்டது. இதன் புனிதத்தன்மையினை உணர்ந்து அதன் தன்மைகெடாது நோக்கல் வேண்டும். காதல் எல்லா ஜீவன்களுக்கும் உரிய பொதுமைக்கொடை. காதலை வழங்குதலையும் பெறுதலையும், தூய்மையுடன் நோக்கல் வேண்டும்.

கடமை மறந்த செயற்பாடுகள் "காதல்" என்ற புனிதத்திற்கே அவப்பெயர் கொடுக்க வல்லது. எமது வாழ்வினைப் பூரணப்படுத்தல் என்பது சகலதுறை சவால்களையும் சந்தித்து வெல்லுதல் என்பதேயாகும். எனவே காதலின் பொருட்டு மரணத்தை தழுவுதலும், வாழவிரும்பாது அடம் பிடித்தலும், காதலை அபகீர்த்திக்குள்ளாக்கும் செயலன்றி வேறென்ன? காதல் நிறைவேறாது போயின் செத்துப்போ என்று எந்தச்சாஸ்திரம் முத்திரையிட்டு சொல்லுகின்றது? தன்னம்பிக்கையற்ற சோம்பேறித் தனமான மிலேச்சத்தனமான செய்கையினால், காதலில் தோல்வி என்று கூறித்தன்னையும் தன்னைச்சுற்றியுள்ள சூழலையும் கொடுமைப்படுத்துகின்றான். எங்கள் சோகங்களால் பிறர் வாழ்வில் பங்கம் ஏற்படலாமா?

கணப்பொழுதின் முடிவினால் தினம், தினம் காதலால் சாவைத்தழுவும் காதலர்கள் பற்றிய கதைகள்



RangaRakes

Tamilnavarasam.com

நீண்டுவிடக்கூடாது. இந்தக் கதைகளைச் சுவாரஸ்யமாக படித்தும் கேட்டும் வருபவர்கள், அழுதுகொண்டே காதலை ஆராதிப்பதுடன் மனதையும் அவஸ்தைப்படுத்தி கொண்டிருக்கின்றார்கள். காதலித்தே கல்யாணம் செ வேண்டும் என்பதில்லை.

திருமணம் முடிந்த பின்னரும் கணவனும், மனையும் காதலித்துக் கொண்டே இருக்க முடியும் என்பதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

நிஜ வாழ்வில் சொந்தவாழ்வில் காதலுக்கு ஆதர கொடுத்து வாழ்த்துபவர்கள் எத்தனைபேர்? இந்த சமாச்சாரம் இதயத்தை நெருடும் விஷயமாக இருக் ன்றதே ஒழிய காதலைப் புனிதப்படுத்தும் செயலா அமைக்கப்படுவதுமில்லை.

காதலை ரசிப்பதும் பின்னர் அதனைத் தூற்றுவே பொழுது போக்காக அமைந்து விடுவது வேதனை அதைவிடக் காதலித்து பின்பு ஒருவரை ஒருவர் ஏமாற்றுவ கொடுமையோ கொடுமை!

கருமங்கள் கடமைகளின் புனிதம் என்பது அதை பயன்படுத்தும் விதத்தில்தான் அமைந்துள்ளது. கடமை களைப் பூரணமாகச் செய்பவன் தனக்குள்ள பணிகளி எதற்கு, எதற்கு முன்னிலை வழங்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டியவனாகின்றான்.






இந்தவகையில் காதலை மதிப்போம், கடமைகளைத் துதிப்போம். இரண்டையும் தரப்படுத்தி வாழக் கற்றுக்கொள்வோமாக!

எல்லாமே பொருந்தி, இணைந்து வந்தால் அதனை விட நிம்மதி வேறில்லை. எனினும் நாமாக சிருஷ்டிக்கும் ஆற்றலை கடமையுணர்வை மையப்படுத்தி உருவாக்க வேண்டும். இத்தகைய சலனமின்றி எடுக்கும் முயற்சிகள் தாமாகவே எம்மை நல்ல வழியில் இட்டுச்செல்ல வைக்கும். காதலும் எமது கடமையும் இயைபுபட்டு இயங்கின் எவ்வித மோதலும் இன்றி வாழ்வு இயைபட்டு பாதையும் சீராகச் செல்லும்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
07-05-2006



RangaRakes
Tamilnavarasam.com



# தர்மம்

**தர்மம் குன்றினால் அவனி உஷ்ணம் ஏறிப் பஸ்பமாகிவிடும். இறைவன் தர்ம வழியில் வாழுங்கள் எனக் கட்டளையிட்டுள்ளார். வசதிகள் வாய்ப்புக்களைப் பெறக் கண்டபடி வாழ வேண்டிய அவசியமேயில்லை. எதை, எவர்களுக்கு, எப்படி? எந்த நேரத்தில் வழங்கவேண்டும் என்று இறைவனுக்குத் தெரியும். நல்லனவற்றையும் நல்லோரையும் நாடுவதை விடுத்துப் பொல்லாத புல்லர்களிடம் சரணடைவதே மேல் என எண்ணுதல் அறத்திற்கு முரணானது. கேட்டு தர்மம் செய்யாது வலிந்து வழங்குதலே சிறப்பு. தர்மத்தை நிலை நாட்ட ஏற்படும் சோதனைகள் இறுதியில் வெல்லப்படும் உறுதி!**

தர்மம் என்பது “ஈகை” என்பதுடன் “நீதி” என்றும் சொல்லப்படுகின்ற அற்புதமான நல்ல சொல்லாகும். பண்பு, தர்மம் குன்றிப்போனால் அவனி உஷ்ணம் ஏறிப் பஸ்பமாகும் என்று நம் முன்னோர்கள் கூறிச்சென்றார்கள். <u>மனித உயிர்களும் பிற உயிர்கள் அனைத்துமே வாழ்ந்து</u>





செழிக்கவேண்டிய அழியாச் சொத்துக்கள். ஒரு உயிர் போயிடினும் இயற்கை அதே வடிவில் பல வடிவங்களை எமக்கு ஆக்கித்தந்து கொண்டேயிருக்கின்றது.

இறைவன் தர்மம் குன்றினால் அழிவு வரும் என உணர்த்தி நின்றாலும். அவன் அரவணைப்பினால் எல்லாமே வற்றிப்போக அனுமதிக்கப் போவதுமில்லை. ஒன்று அழிய இன்னும் ஒன்று அவன் பெயர் சொல்லி கருவாகி உருவாகி பூமியில் புரண்டு எழுகின்றது. எதை எவர்களுக்கு, எப்படி எந்த நேரத்தில் வழங்க வேண்டும் என்று இறைவனுக்குத் தெரியும்.

தர்ம வழி வாழ்ந்தவர்கள் தமது அனுபவங்கள் அதன் வெற்றிகள்பற்றிச் சொன்னாலும்கூடச் சுலபமான எந்த வழியிலாவது புகுந்துகொள்ள சிலரது மனம் நாட்டமடைவது கேட்டைத்தரும். நெறிபிறழ்ந்து வாழ்வது அறத்திற்குச் சவால்விடுத்து முடிவில் கவிழ்வதற்கேயாம்.

மனிதர்கள் ஏதோ ஒரு வழியில் பெரும் பேறுகள் பலவற்றை இயற்கையாகவே பெற்றுவருவதை ஏன் தான் மறந்து போகின்றார்களோ தெரியவில்லை. கிடைக்காததை மட்டும் நினைந்து புலம்பும் நாம் கிடைத்தவைகளைப் பற்றிப் பெருமைப்படுவது அரிதான இயல்பாகிவிட்டது.

※ நல்ல பெற்றோர் வாய்த்தமையை,

※ பெறுதற்கரிய நல் ஆசான்கள் வாய்த்தமை பற்றி,



RangaRakes

Tamilnavarasam.com

※ நல்ல மனைவி, மக்கள், நண்பர்கள், உறவுகள், எ லாமே கிடைத்தமை பற்றி,

இப்படி எல்லாமே சிலருக்குக் கிடைத்துவிடுகின்றது. ஆனால் வீதியில் ஒரு சிறுமுள் குத்தி விட்டாலோ இறைவன் ஏன் இந்த வேதனையைத் தந்தான் எனக் கடவுளைத்திட்டு கின்றவர்களை நீங்கள் காண்பதில்லையா? நன்றி மறப்ப தர்மம் இல்லை என எப்போது இத்தகையவர்கள் உணரப் போகின்றார்கள்?

ஒருவர் தர்மவழியில் வாழ்கின்றார்களா என அறிந்து கொள்ளும் சோதனைக் கருவியாகத் துன்பம் அவனைச் சூழ்ந்து கொள்கின்றது. இந்த வேளையில்கூட மனம் சிதை யாமல், பண்பு குன்றாமல், எப்படி வாழ்கின்றான் என்பதை கடவுள் மட்டுமல்ல, இந்த உலகமும் தன் விழிகளை அகலத்திறந்து நோக்குகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

உண்மைக்காக வாழ்ந்து அனைத்தையும் வழங்கிய அரிச்சந்திரன் கதையும், புறாவிற்காகத் தன் தசையை ஈந்த சிபிச்சக்கரவர்த்தி போன்ற வள்ளல்கள், நீதி வழுவாத மாந்தர்கள், வாழ்ந்த புண்ணிய பூமி இது. எதுவும் கதைதான் என நோக்காது அதிலிருந்து தர்மம் நீதிகளின்

※ உண்மைகளை நோக்குதலே சிறப்பு.

※ உண்மைக்காக வாழ்வது தர்மம்





※ பிறர் துன்பம் களைதல் தர்மம்

※ எவர்க்கும் கல்வியை ஊட்டுதல் தர்மம்

எல்லாவற்றிற்கும் மேலாக பாகுபாடற்ற அன்பினை எவ்வுயிர்க்கும் வழங்குதல் மேலான தர்மசிந்தையுமாகும். "ஆதரவற்றோர்க்கு ஆதரவுகொடு" என்று எல்லாச் சமயங்களும் சொல்கின்றன. ஆயினும் மதப்பூசல்களால், மொழி பேதங்களால், சாதியால், வர்க்க வேறுபாடுகளால், தர்மம் வெட்கப்படுமளவிற்குக் காரியங்கள் மிக கேவல மாகக் கணிக்குமளவிற்கு ஒவ்வொரு வினாடியிலும் உலகில் அரங்கேற்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

சூழ்ந்துள்ள சமூகத்தின் மீது கொண்ட காழ்ப் புணர்சி யினால் பொறாமையினால், அண்மையில் ஒருவன் துப்பாக் கியுடன் புகுந்து வெறித்தனமாக அநேகரைச் சுட்டுத்தீர்த்த கொடும் சம்பவத்தினை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். அமெரிக்காவில் நடந்த இந்தச் சோக சம்பவத்தின் பின்னணியில் பெரும் உண்மை புதைந்திருக்கின்றது. வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகளால் வந்த உளவியல் தாக்கம் மனிதனை மிருகங்களைவிடக் கொடூரமான நிலைக்கு ஆளாக்கிவிடுகின்றன.

இன்று பலர் எம்மத்தியில் இருந்து சொல்லும் ஒரு கருத்து இது. "என்னில் எவர்க்கும் அன்பு இல்லை. இந்த உலகில் இரக்கம், கருணை, நீதி, தர்மம் செத்தேவிட்டது" என்கின்றார்கள். "எவரையும் கருணையுடன் நோக்காத



RangaRakes

Tamilnavarasam.com

உலகில் வாழ்ந்துதான் என்ன" என்றும் கேட்கின்றார்கள். எனினும் சிலரது போக்கு விசித்திரமானதும், மகா தவறானதும் என உணர்கின்றார்கள் இல்லை. தர்மம் எங்கும் இல்லை என்பதற்காகத் தம்மை வருத்துதலும் பூமியை எட்டி உதைக்க முற்படுவதும் என்ன நியாயம் ஐயா?

கொடுத்தால் தான் கிடைக்கும் என்று ஞானிகள் சொன்னாலும் எடுத்தால் தான் கிட்டும் என்கின்ற புதிய குதர்க்க சிந்தனைகள் கோமாளித்தனமானது. அநியாயத்திற்கு எதிராகப் போராடிப் பயனை அடைவது என்பது ஒருவரிடம் இருந்து மிலேச்சத்தனமாக கவர்வது என்று பொருள்படாது.

ஆனால் இன்று தர்மம் என்பது எதுவெனப் புரியாது பிறர் கதறக்கதற அவர்கள் ஏங்க அவர்கள் உடமைகளை, உணர்வுகளைச் சிதைக்கின்ற கொடுமைகளைக் கண்டும் காணாமல் இருப்பதானது தர்ம தேவதைகளுக்கே விடுக்கின்ற அச்சுறுத்தலாகிவிட்டது. அந்தோ! சிலர் மற்றவர்க்கு உதவுவதுபோல் நடிப்பார்கள். முகமனுக்கு மட்டும் வேண்டப்பட்டவர்களுக்காக மட்டும் ஏதாவது செய்வார்கள். ஆயினும் தங்களுக்குத் துன்பம் என்று வந்தவுடன் அழுது அரற்றி யார் காலிலாவது விழுவார்கள். அந்த நேரத்தில் யாரிடம் முகமனுக்காகப் பல்லைக்காட்டி விழுந்து விழுந்து உபசாரம் செய்தார்களோ அவர்களாலேயே புறக்கணிக்கப்பட்டு ஈற்றில் எளிய மனிதர்களாலேயே காப்பாற்றப்படுவதும் சகஜமான நிகழ்ச்சிகளேயாகும்.





இன்று நல்லவர்களை நாடுவதை விடப்பொல்லாத புல்லர்களிடம் சரணடைவதே சாலவும் சிறந்த தர்மம் என எண்ணத் தலைப்பட்டுவிட்டமை வேதனை!

நல்ல புத்திமதிகளைவிட அராஜகக் கருத்துக்களைச் சர்வ சாதாரணமாக ஏற்பது கௌரவம் என்றும் நினைப்பவர்கள். ஈற்றில் சமூக நோஞ்சன்களாகி இயங்க முடியாத இயந்திரம் போல் சித்தம் சிதைந்து நொந்து அழிந்து போகின்றார்கள். தெரிந்தவர்களுக்கு மட்டும் தர்மம் செய்வேன் என்று அடம் பிடிப்பவர்கள், தமக்குத் தெரியாத தமக்கு வேண்டாத நபர்களுக்குத் துன்பங்களையாவது செய்யாது நிற்கட்டும்!

தர்மம், நியாயம் எனச்சிலர் அழகாகப் பேசிக்கொள்வார்கள். இவர்களது செய்கை பேச்சுக்களில் ஏதோ ஒன்றைக்கருத்தில் கொண்டு சுயநலநோக்கோடு நடித்துக் கொண்டிருப்பார்கள்.

ஒருவனை ஏமாற்றும் பொருட்டுச் செய்யப்படும் காரியங்களால் அவர்கள் யாரையெல்லாம் ஏமாற்றுகின்றார்கள் என உணர்வதேயில்லை.உண்மையில் பொய்மையை விதைத்தவர்கள், அந்த பொய்மையினாலேயே சீரழிந்து போகின்றார்கள்.

சூது, வாது, பொய்யுரைத்தல், ஏமாற்றுதல்களால் பாதிக்கப்பட்டவர்களின் ஆத்மாவின் துயர்தோய்ந்த எண்ண வெளிப்பாடுகளால் தீமைகளைப் புரிந்தோர் நிம்மதியாக



RangaRakes

Tamilnavarasam.com

வாழ்ந்துவிட முடியுமா? தமக்குப் பிரீதியானவைகளைப் பெற்றுக்கொள்ளத் தர்மவான் வேடம் போடுபவர்கள், பலர் முன்னிலையில் கேலிக்குரிய நபர்களாக தனிமைப்பட்டு வாழும் போக்கற்ற சீவன்களாகி விடுவதை ஈற்றில் உணர்ந்தேதீருவர்.

பாதையொன்றில் ஒரு வாகனம் சென்று கொண்டிருக்கின்றது. தற்செயலாக ஒருவர் மீது வாகனம் மோதி சிறு காயத்திறகுள்ளாகிவிடுகின்றார். இதுபோன்ற சம்பவங்கள் நகர்புறங்களில் நடப்பதுண்டு. உடனே திமு திமுவென ஒரு கூட்டம் கூடிவிடும். பாதிக்கப்பட்ட அப்பாவி பேசாமல் இருப்பார். விபத்தினை உண்டு பண்ணிய சாரதி திரு திரு என விழித்துக்கொண்டிருப்பார். எங்கோ இருந்து வந்த ஒரு கும்பல் சாரதியை மிரட்டுவதுடன் தர்ம நியாயங்களைப் பேச ஆரம்பிப்பார்கள்.

"இதோ விபத்தில் காயமடைந்தவர் ஏழை. அவரை நீங்கள் உங்கள் பாட்டிற்கு வாகனத்தினால் மோதிக் காயப்படுத்திவிட்டீர்கள். அவருக்கு நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள். அவர்கள் குடும்பத்தின் நிலை என்ன? கொஞ்சமும் ஈவு இரக்கமின்றி இந்தக் காரியத்தைச் செய்துவிட்டீர்களே. எனவே இவருக்கு நட்ட ஈட்டாக ஒரு தொகை தாருங்கள். இதுதான் தர்மம்" என்று கூறவும், சாரதி வேறு வழியின்றி உடன் இருந்ததைக் கொடுக்கவும் மேலும் பெரும் தொகை கேட்டு மிரட்டவும் எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி வெற்று மனிதராக ஆளைவிட்டால்,





போதும் என்று கேட்டபடி கொடுத்து அவர் தப்பி ஓடியே விடுவார். இத்தனைக்கும் பணத்தை கைப்பற்றிய பேர் வழிகள் தங்கள் பாட்டிற்குப் போய்க் கொண்டேயிருப்பார்கள். ஆனால் காயமடைந்தவர் அப்படியே பரிதாபமாக வீதியில் கைவிடப்பட்ட அநாதை போல் நொந்தே போய்விடுவார்.

பொது இடங்களில் இத்தகைய வலிந்து உதவி செய்ய வரும் அதர்மவான்களை நாம் பார்ப்பதுண்டு. பிழைப்பதற்கான வழி தர்மம் பற்றிப் பேசுவது அல்ல. பொது சேவை செய்கின்றேன் எனச் சிலர் வருவார்கள். ஆனால் இறுதியில் சனங்களிடம் விடும் கோரிக்கை கேட்கச் சிரமமாக இருக்கும். "எத்தனை சேவை செய்தேன். உங்கள் பொன்னான வாக்குகளை எனக்கு அளிக்கக் கூடாதா" என்பார்கள். நல்லோரை ஆதரிப்பதில் தவறு இல்லை. ஆனால் காரணத்தோடு எந்த விதமான உதவிகளையும் செய்வதற்கு ஏற்றவராக இவர் இல்லை என அறிந்தும் ஏமாறுவது புத்திசாலித்தனமானது அல்ல.

இன்று வசதியுள்ளோர்க்கு ஒரு நீதி, வசதியற்றோர்க்கு ஒரு நீதியையும் சமூகம் வழங்குகின்றது என்று பலரும் குறைப்பட்டுக் கொள்கின்றார்கள். உரிய நீதி கிடைக்காமல் ஏழை ஒருவன் அழுதால் அவன் குரல் இறைவன் செவிகளுக்குக் கடிதெனக் கிட்டிவிடும். அவனுக்கு இழைக்கப்படும் அநீதிக்கான பதில் அவனுக்கு இடர் இழைத்தோருக்கு கொடுங்கூற்றுவன் அளிக்கும் தண்டனைகள் சொல்லொண்ணா கொடூரமாக இருக்கும்.



RangaRakes
Tamilnavarasam.com

வஞ்சகத்தை நெஞ்சில் குடியிருத்தி வைத்தோர் "தர்மம்" பற்றிப்பேசிட அருகதையில்லை. இத்தகைடே ஆன்மா வலு இழப்பதுடன் வாழ்க்கையே ஏமாற்றுத குட்பட்ட சூன்ய சாகரமாகிவிடும்.

தர்மத்திற்குக் கட்டுப்பட்டு வாழ்வதன் மூலம் ம களில், சிலர் தமக்கு இழப்புக்களே அதிகமாகி வருவதா கூறுகின்றார்கள். சத்தியத்திற்குச் சோதனை ஏற்படு ஒன்றும் புதுமையானதன்று. காந்தியடிகளைப் போ எத்தனை எத்தனையோ பெரும் தலைவர்கள் சத்தியத் சோதனைக்குள் அகப்பட்டுப் புனிதர்களாகப் பரிணமித் வர்களேயாவர்.

நல்ல காரியங்களுக்காக இழப்புக்களைத் தாங்கி கொள்பவர்களுக்கு அது இழப்புக்களாகத் தெரிவதில்லை மானுடநேயம் கொள்தல் என்பது கிடைத்தற்கரி பெரும்பேறாகும். தர்மத்தை நிலைநாட்ட ஏற்படு வேதனைகள் இறுதியில் வெல்லப்படும் என்பது உறுதி!

மானுட நேயத்தினை பெறுதலால் எமக்கு ஏற்படும் சந்தோஷங்களால் இதுவரை கொண்ட சிரமங்கள் எல்லாமே உரு அழிந்துபோய்விடும். ஒரு பயனை நாங்கள் சுலபமாக அடைந்திடுதல் என்பது எல்லா நேரங்களிலும் மிக இயல்பாக வந்துவிட முடியாது. உடல் உழைப்பு, பொருள் விரயம் என்பதற்கு மேலாக தர்மத்திற்காக நான்





எதனையுமே தாங்கிக்கொள்வேன் என்கின்ற ஆத்மார்த்த திடசிந்தனை என்பது சாமான்ய விஷய மன்று.

தர்மத்தைக் காத்துச் செயல்படுவதை விட வேறு எந்த வீரமும் ஈடாகி விடமுடியாது. பாதிப்படைந்த ஒருவனின் சுமைகளை ஏற்றுக்கொள்வதை விட வேறு என்ன தைரியம் இருக்கப் போகின்றது சொல்லுங்கள்? எமக்காக நாம் போரிடுவதைவிட நாம் சார்ந்திருக்கும் சமூகத்திற்காக, நாட்டிற்காக, ஏன் உலகிற்காகப் போராடுதலே தர்மத்தின் வேண்டுதலுமாகும். புரிந்துகொள்வோம்!

அன்பினைக் கொண்டு வாழ்ந்தால்தான் தர்மத்தின் பூரணத்துவமான இயல்பினைப்புரிந்து கொள்வோம். அன்பினை வெளிப்படுத்தாமல் அதனைத்தெரிந்து கொள் ளாதுவிடின் நல்ல நீதியான உணர்வுகளை எப்படிப்பகிர்ந்து கொள்ள முடியும்?

நல்லபடி ஒருவரை வாழ்த்துதல் ஒருவரது சேவை களைக் கௌரவித்தல் நாம் செய்கின்ற உதவிகள் எதுவா யினும் அதனை உடன் நிறைவேற்றுதல் போன்றவைகள் எங்கள் மனதினை விசாலப்படுத்தும் நன்மார்க்கங்களு மாகும்.

எவர் மூலமும் பெற்ற சின்ன சின்ன உதவிகளைக்கூட நினைவு கூர்வதும் அதனை மதிப்பதும் மானுட தர்ம மாகும். சீரான நேரியபார்வை, அஞ்சாமை, அழுக்காறு



RangaRakes Tamilnavarasam.com

இன்மை, போன்ற குணாம்சங்களே நீதியான எண்ணக் கருவை எம்முள் நிலையாக நிறுத்திவைக்க உதவுகின்றன. பஞ்சமும் பட்டினியும் அநாவசிய துர்மரணங்களும் நடக்கும் இந்த உலகில் பராமுகமாகவும் "எனக்கு என்ன வந்து விட்டது அவையெல்லாம் யார் யாருக்கோ" எனவும் எண்ணுவது என்ன கொடுமையான சிந்தனை தெரியுமா?

எல்லோராலும் எந்த உதவிகளும் செய்திடல் முடியும். பாதையில் கிடக்கும் சிறு முட்களைக் குனிந்து எடுத்து குப்பையில் போட்டு அகற்றிட முடியாதா? பொதுக் கிணற்றில் தண்ணீர் அள்ளும் வாளி உடைந்துபட்டால் அல்லது கயிறு அறுந்துபட்டால் அதனைச் செப்பனிட எம்மால் முடியாதா? மழையில் ஒதுங்க வழியின்றிக் கிடக்கும் ஒருவரை, வீட்டுத் தாழ்வாரத்தில் இருத்திட உங்களால் முடியாதா?

குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டால், "அடுத்த வீட்டில் போய்க்கேள்" என்று சொல்லக்கூடாது. பக்கத்து வீட்டில் மரணச் சடங்கு நடந்தால் வீட்டினுள் முடங்கி அந்தத் துயரத்தினைப் பகிஷ்கரிக்கக்கூடாது. படிக்கும் பிள்ளைகள் எதிர்வீட்டில் படித்துக் கொண்டிருந்தால் உங்கள் வீட்டில் கூச்சல் கும்மாளமடித்து அவர்களை இடைஞ்சல்படுத்துதல் அடுக்காத செயல்!

இப்படிச் சில விஷயங்களைக் கவனத்தில் எடுப்பதை விடுத்து மனித தர்மம் பற்றிக் கனிவாகப் பேசி, பிறர் நலன் பேணாதவர் கோணல் புத்திக்காரர்





ஒவ்வொருவனும் மற்றவன் தன்னை விரும்ப வேண்டும் என்று கருதினால்-முதற்கண் எங்கள் பாதங்களை அவர்களை நோக்கி முன்னே பதிய வைப்போமாக! நீதியை விரும்புகின்றவன் எவருமே மனித இனத்தின் ஆசை, அபிலாசைகள், அவர்தம் உரிமைகளை நிராகரிக்க விரும்புவதில்லை. இவர்கள் எவருமே மனித இனத்தின் ஆசை அபிலாசைகள் அவர்தம் உரிமைகளை நிராகரிக்க, அபகரிப்பதுமில்லை.


தர்மம் வழங்கல் என்பது ஒருவனுக்கான உரிமைகள் நீதிகளை வழங்குவதும் அதனைப்பெறுதற்கான முயற்சி களை எடுப்பதுமேயாம்.

நேரிய நெஞ்சுறுதிக்காக எங்களை நாம் தூய்மைப் படுத்துவோம். உலகத்தினை வெறுப்போடு அன்றி உறவோடு நோக்குவோம். எங்கள் உறவுகளே அனைத்தும் என்கின்ற நிலை வந்துவிட்டால் தர்மம் உலகில் தழைத் தோங்க ஏது தடைகள் ஐயா!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
25-12-2007



RangaRakes Tamilnavarasam.com



# நிம்மதி

> அளவிற்கதிகமான எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்களைச் சுமக்க எத்தனித்தால் நிம்மதி கிட்டாது. நிம்மதியே மாந்தருக்கான ஒப்பற்ற வெகுமதி. கிடைக்க வேண்டிய சம்பத்துக்களை ஒரேயடியாக அள்ள எண்ணினால் மனிதசக்தி விரயமாகும். முயற்சியுள்ளவனுக்கு நிம்மதி எளிதில் கிட்டும். நாமாகக் கற்பனை பண்ணி மனதில் சுமைகளை ஏற்றுதல் நல்வாழ்விற்கு அமைவானதல்ல. எளிமையான வாழ்வு நிம்மதி. சின்ன இதயத்தினுள் பரந்த மனதை உருவாக்கினால் நிம்மதி. அழுக்காறு, அவா, இவைகளை களைந்தாலே பளிச்சென இதயம் துலங்கி அதனுள் நிம்மதி குடிபுகுந்து கொள்ளும்.

"நிம்மதி" என்பதே மாந்தர்க்குக் கிடைத்தற்கரிய "வெகுமதி"யாகும். நிம்மதி என்பது மனம் உடல் சம்பந்தப் பட்டதாகும். அத்துடன் புற சூழ்நிலை அழுத்தங்கள் குரோ தங்கள் அறவே இல்லாதவரை, வாழ்க்கை என்பது களி பேருவையுடன் அனுபவிக்கக் கூடிய ஒரு விஷயம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.





அளவிற்கு மீறிய எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்கள், அபிலாஷைகள் மனித மனங்களை இனம் புரியாத தவிப்பு நிலைக்குள் தள்ளிவிடுகின்றன. அடிக்கடி சுயகட்டுப்பாடு இன்மை, வேகம் கூடிய வீண் மன உளைச்சல்கள் என்பன நிம்மதியை எம்மிடமிருந்து சேய்மைப்படுத்திவிடுகின்றது.

இந்த மனமானது நல்ல விஷயங்களின் தன்மை யினைப் புரிந்தும்கூட நெருடும் பாதிப்பான விஷயங்களை மட்டும் சதா அசைபோட்டு அரைபட்டுப் பிசையுண்டு பேதலித்துக் கொள்வதும் துர்ப்பாக்கியம் அல்லவோ! மன வருத்தங்களை விருப்புடன் வரவேற்கும் இயல்பை மாற்றியே தீருவேன் என எண்ணாதவரை நிம்மதி என்பது எங்கே கிடைக்கும்?

தனக்கு எது தேவையானது, முதன்மைக்குரியது என்பதை அறியாமலேயே மனிதர் காலத்தை விரயமாக்கிக் கொள்கின் றார்கள். சதா சந்தோஷமாக இருக்க என்ன வழி என்பதில், "மேலான ஆசை" என்பதே ஒரு பெரும் முட்டுக் கட்டைபோல் வந்து முடக்கி விடுகின்றது. நியாய பூர்வமான ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் வாழ்க்கைக்கு முக்கியமான அம்சம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் எமக்குரியதைப் பெற்றுக் கொள்ள நாம் தயாராக இருக்கின் றோமா என்பதே முக்கிய கேள்வியாகும்.

- அளவான ஆசைகள்
- அதனை நிறைவேற்றுதலுக்கான முயற்சிகள்



RangaRakes

Tamilnavarasam.com

- கிடைத்ததில் திருப்தி
- தெய்வ நம்பிக்கை
- பிறரில் காழ்ப்பு, குரோதம், வெறுப்பு இன்மை.
- எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு, கருணை செலுத்தும் பண்பு.

மேற் சொன்ன விடயங்கள் பற்றிக் கவனத்தில் எடுத்துத் தம்மை முழுமையான மனிதனாக்கிக் கொள்பவனுக்கு நிம்மதி சொல்லாமலே அவனை ஆக்கிரமித்து கொண்டுவிடும்.

கிடைக்க வேண்டிய சம்பத்துக்கள் எல்லாமே ஒரே தடவையில் கிடைத்துவிட வேண்டும் எனப் பலரும்மே எதிர் பார்ப்பது வேடிக்கை அல்லவா? எத்தனை எத்தனையோ பரீட்சைகளுக்குத் தோற்றிச்சித்தியடைந்து, ஒருவன் இறுதிப் பட்டப்படிப்பில் தேறி, அதன் பின்னர் பொருத்தமான தொழில் தேடிக்கொள்கின்றான். எல்லாமே எம்மை வந்தடைய கால அவகாசம் தேவைப்படுகின்றன.

எங்களுக்குத் தேவையான எதனைப் பெற்றுக் கொள்வதற்கும் படிப்படியான வளர்ச்சி நோக்கிச்செல்லப் பொறுமை காப்பதில் பலரும் தயாராக இல்லை. கிடைக்கின்ற அரிய சந்தர்ப்பங்களைக் கூட மிதமிஞ்சிய பேரவா மூலம் கெடுத்துக் கொள்பவர்களும் ஏராளம் ஏராளம். படிப்படியான வளர்ச்சி வேகம், மேலதிக சக்தியை ஊட்டுகின்றது.





நாம் இன்று பார்த்துக்கொண்டிருக்கும் இந்தப் பூமி ரொம்பவும் பழையது. ஆனால் இங்கு தவழ்ந்து கொண்டிருக்கும் தாவரங்கள், புல், பூண்டு, பூச்சிகள் உட்பட மனிதர்கள் எல்லாமே புதியன. பழையனவற்றைப் பூமி வைத்துக் கொள்வதில்லை. ஒவ்வொன்றிற்கும் ஒரு ஆயுளை இயற்கை வகுத்துவிட்டது. ஒன்று மறைய இன்னொன்று பூத்துக் குலுங்கி மிளிர்கின்றது.

ஆனால் மனிதன் மட்டும் தன்னைப் புத்தம் புதிய மனிதனாக மாற்றாமல், எப்போதோ ஏற்பட்ட பாதிப்புக் களை, வடுக்களைச்சுமந்து வாழுதல் சரியா? இயற்கை கூடத் தன்னைப் புதுப்பிக்கின்றது. எனக்குப் பழைய கவலைகள் தொலையவில்லை. இதற்கிடையில் புதிது, புதிதான கவலைகள் என்னை வாட்டுகின்றன என்பார் உளர். புதுமையை விரும்பும் மனிதன் பழைய தொலைந்துபோன, கவலைகளை மட்டும் ஏன் புதுப்பித்து அழுதுவடிக்க வேண்டும்?

சோகத்திற்காகச் சோகப்பட்டு, இருக்கும் சுகங்களை இழக்கலாமா? துன்பத்தை நினைந்து, புதிய துன்பங்களை காவித்திரிவதால், அமைதி கிடைத்திடுமா? சொல்லுங்கள்!

பாம்பு பழைய செட்டையை உரித்துப்போடப் போட புதியதாக அதற்குப் போர்வை கிடைத்தே விடுகின்றது. எனது நண்பர் ஒருவர் தமது வெளிநாட்டு அனுபவம் ஒன்றினைத் தெரிவித்தார்.



RangaRakes
Tamilnavarasam.com

அவரது தாயாரை சுகவீனம் காரணமாக வைத்திய சாலையில் சேர்த்திருந்தார். அந்த அம்மையார் அனுமதிக் கப்பட்ட சில தினங்களில் நோய் காரணமாக இறந்து விட்டதாகத் தொலைபேசியில் அவர் அலுவலகத்தில் கடமைபுரியும் போதே செய்தி கிடைத்தது. உடனே அவர் அங்கு காரியாலயத்தில் இருந்தபடியே தமது வருகை பற்றி வைத்தியசாலைக்கும், மரணச்சடங்கு செய்யும் நிறுவனத் திற்கும் தகவல்களை தெரிவித்தார். வைத்தியசாலையின் அலுவலகத்துடன் இனிச் செய்ய வேண்டிய கருமங்களைப் பூரணமாகத் தெரிவித்தார்.

அன்றைய தினமே, மிக வேண்டப்பட்டவர்களுக்குத் தொலைபேசி மூலம் தகவல்களை அளித்தார். பின்னர் வைத்தியசாலைக்குத் தனது மனைவி, பிள்ளைகளுடன் சென்றார். உரிய முறையில் சம்பிரதாயமான அலுவல்கள் முடிந்ததும் அடுத்த நாள் ஈமைக்கிரியைகள் மத அனுட்டா னப்படி நடந்தது.

சொன்னால் நம்பமாட்டீர்கள் ! அதற்கு அடுத்த நாள் அவர் தமது காரியாலயத்தில் மிக இயல்பாக அமைதியாகத் தனது கருமங்களைச் செய்து கொண்டிருந்தார். அவருக்குத் தாய் மீது பாசம் இல்லை என்பது அல்ல. சலனமற்ற மன நிலையில் தம்மை வைத்துக்கொண்டார். துன்பங்களை அவர் எப்படித் தாங்கினார் என்பது எமக்குத் தெரியாது.





ஆனால் தமக்குரிய கடமையில் அவர் கிஞ்சித்தும் விலகவில்லை. காதல்தோல்விக்காக, வருடக்கணக்கில் தங்களை அவலட்சணப்படுத்தித் துன்பத்தில் உழல்பவர்கள் தமக்கு எதிரே உள்ள பிரகாசமான உலகை காண ஏன் விழைகின்றார்கள் இல்லை.

சோகத்தைக் காட்டுதல் ஒரு கௌரவமான செயலா? சதா அழுபவனை யாருக்கு ஐயா பிடிக்கும்? கழுவி வைத்த பாத்திரம் போல் பளிச்சென்று முகத்தை வைத்திருப் பவர்களைப் பார்த்தால் பார்ப்பவர்களுக்கும் உற்சாகம் வருமன்றோ!.

ஒரு பாத்திரத்தில் இவ்வளவுதான் கொள்ள முடியும். என்றால், நாம் அதனுள் பிரயோசன பொருட்களைத்தான் முதலில் இட்டு நிரப்ப முயற்சிப்போம். தேவையற்ற குப்பைகளை உட்செலுத்த விரும்பமாட்டோம். மனமாகிய பாத்திரத்தில் மட்டும் தேவையற்ற கோப, குரோத வன்மங் களையோ, தகாத வேறு சிந்தனைகளையோ நிரப்பி நல் எண்ணங்களான காருண்ய சிந்தை, அன்பு போன்றவை களை வெளியே வீசிட முனையலாமா?

அசுத்தங்களைச் சுமப்பதில் என்ன இன்பம் வந்து விடப் போகின்றது? வலிந்து பிறரைச் சண்டைக்கிழுப் பவர்கள் இல்லாமல் இல்லை. இதனால் அற்பசுகம் காண்பவர்களும் உள்ளார்கள். ஒருவரது சோகத்தைத் தூண்டிச் சுகம் தேட எண்ணுபவர்கள் இல்லையா? எல்லா



RangaRakes
Tamilnavarasam.com

பாவங்களையுமே கூசாமல் செய்து விட்டுத் தமது மனதில் ஒரு சிறு கீறல் வந்தால் மட்டும், அல்லோலகல்லப்பட்டுப் பிரலாபிப்பவர்களை என்ன சொல்ல? ஒரு குறிக்கோளுடன் வாழும் போது நாம் சிந்தையினை ஒரு நிலைப்படுத்தினால் வீணான சலனங்களைப் புலன்கள் நிராகரித்துவிடும். நிம்மதியாக வாழ எண்ணும் நாம் அற்ப சலசலப்புகளுக் காகக் காரணமின்றி அவைக்குத் தோரணம் கட்ட விழைவது எத்துணை தீங்கை விளைக்கும் என்பதை ஒருதரம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மனம் எனும் கருவி சீராக இயங்காது விடின், இந்த உடல்படும்பாடு கொஞ்சமா? இந்த விடயத்தில் தனி ஒரு மனிதனின் கசப்பான துன்ப அனுபவங்கள் எத்தனை எத்தனையோ நபர்களை நகராமல் செய்தும் விடுகின்றன. முகம் தெரியாத எந்த மனிதனும் கூட எங்கள் பொருட்டு மிரட்சி அடைந்துவிடக்கூடாது. சும்மா இருக்கும் சுவரைக் குத்திப்பார்த்தால் கைதான் வலிக்கும். வலிந்து வினை தேடுதலைத் தவிர்த்தல் நலமானது.

குடும்பத்தில் விட்டுக்கொடுத்தல் இன்றி வாழுதலா லேயே அமைதி அங்கு பரிணமிக்காது விடுகின்றது. குடும்பத்திற்குள் மட்டுமல்ல எவருடனும் நாங்கள் புரிந்து ணர்வு, விட்டுக்கொடுத்தல் இல்லாமல் இயங்க முடியுமா? வீட்டினுள் நடக்கும் பிரச்சனைகளை வெளியில் கொட்டித்தீர்க்கின்றவர்களால் நிம்மதியை எப்படிக் கண்டுகொள்ள இயலும்? இந்தப்போக்கிற்கு அறியாமை





மட்டுமல்ல ஆணவப்போக்கும், தாங்கள் செய்வதே சரி என்கின்ற பிழையான காரணங்களைத் தமக்குள் விதைப் பதும் காரணமாகும்.

ஒரு பெரியவர் மிகுந்த கவலையுடன் சொல்லிக் கொண்டார். “என்னை எனது வீட்டில் மனைவி, மகன், குழந்தைகள் எவருமே ஒரு பொருட்டாக எண்ணுவதே கிடையாது. நான் இந்தக் குடும்பத்திற்கு எவ்வளவு தூரம் உழைத்திருக்கின்றேன். இன்று என்னைக் கருவேற் பிலையைத் தூக்கி வீசுவது போல் வீசிவிட்டார்கள் என்ன செய்ய” என்றார். அதற்கு நான் “நீங்கள் சொல்வது சரியல்ல கடந்த வாரத்திற்கு முன்னரும் உங்கள் மகனை நான் சந்தித்தேன். அவர் உங்களை ரொம்பவும் உயர்வாகவே பேசினார். நீங்கள் வேறுவிதமாகக் கூறுகின்றீர்கள். குடும்பத்தில் சில வேளை வேலை அலுவல்கள், பிரச்சனை கள் காரணமாக கண்டு கொள்ள முடியாமல் இருக்கலாம். சரி விடுங்கள் எல்லாம் சரிவரும்” என்று கூறி அனுப்பி வைத்தேன்.

அடுத்த நாள் அவரது மகனைச்சந்தித்து, “உங்கள் தந்தையார் உங்கள் குடும்ப பொறுப்புகளை மிகவும் பாராட்டினார். நீங்கள் உங்கள் தந்தையாரிடம் மிகுந்த அன்பாக இருப்பதையிட்டு நான் சந்தோஷப்படுகின்றேன்” என்றேன். “அப்படியா.... அப்பா, பாவம் அவருக்கு வயது வந்துவிட்டது. முதுமை காரணமாக அவர் ஏதாவது குறைப்பட்டு விடுவார் என்று சிலசமயம் பயம் மரியாதை



RangaRakes
Tamilnavarasam.com

கருதி அவருடன் பேசாமல் கவனமாகவே நடந்து கொள்கின்றேன் என்று பதிலிறுத்தார். ஆனால் உண்மையிலே தகப்பனாரும், மகனும் மிகவும் நல்லவர்கள் தான். சிலசந்தர்ப்ப சூழ்நிலைகளால் புரிந்துணர்வு நிலையில் சற்று விலகி இருந்தார்கள். தற்காலிக "விலகல்கள்" கூடப் பிரச்சனை உண்டு பண்ணலாம்.

ஓரிரு வாரங்கள் இருக்கும். அந்தப் பெரியவரை மீண்டும் நான் சந்தித்தபோது அவர் மிகவும் மகிழ்ச்சியோடு காணப்பட்டார். அவரிடம் இருந்த தப்பு அபிப்பிராயம் அறவே களையப்பட்டு முகத்தில் இருந்த ஏக்கம், தாக்கம் என்பன அறவே களையப்பட்டு, முகத்தில் தெளிவு தென்பட்டது. அவர்கள் இருசாராரிடையேயும் நல்ல அபிப்பிராயங்களை ஏற்படுத்துவதற்காக நான் சொன்ன விஷயங்கள் நானாக உருவாக்கினாலும் அது நன்மையில் போய் முடியும் எனத் திடமாகவே நம்பினேன். எனது எண்ணம் சரியாகவே அமைந்து விட்டது.

எவரையும் சமாதனப்படுத்துதற்காக நல்ல உபாயங்களை, ஆலோசனைகளைச் சொல்வதில் தப்பேயில்லை. சமாதானம் இன்றேல் சந்தோஷம் வந்திடுமா? அது வீட்டினுள் ஆகட்டும், வெளியில் அல்லது அரசாங்கங்களிடையேயாகட்டும், சமாதான சௌஜன்யம் இன்றேல் நிம்மதி இன்றி மக்கள் தவித்திடல் வேண்டுமல்லவா?

தர்மசிந்தை சகிப்புத்தன்மை, இரக்க உணர்வின்றி





வாழ்வது எந்த விதத்திலும் மக்களை எம்பால் அன்பு காட்ட வைத்துவிடாது "நான்" "எனது குடும்பம்" என்று மட்டும் வாழுதல் நடைமுறைச் சாத்தியமற்றதே. சிலர் இவ்வண்ணம் வாழ்வதனால் சமூக பிணைப்பினைத் தாமாகவே கத்திரித்தும் கொள்கின்றனர். எத்தனை நாட்களுக்குத்தான் எங்களால் உலகைவிட்டு விலகி வாழமுடியும். வெறும் வீம்பினால், ஏதோ வஞ்சம் தீர்க்கும் மனோபாவத்தால் யாருடனும் பேசாமல் பழகாமல் இருந்தால் அதன் பாரிய தாக்கம் இவர்கள் உள் உணர்வை மனநிலையைச் சிதைத்துச் சீரழித்துவிடும். நல்ல உணர்வுகளை நாமாக வதைக்கலாகாது.

எதையாவது பெற்றால்தான் உதவி செய்வேன் என்ற எண்ணத்துடன் தர்ம சிந்தனை பற்றியே கிஞ்சித்தும் கருதாமல் வாழுபவர்களை நாங்களும் ஒதுக்கிவிடுதல் கூடாது. ஏதோ ஒரு நல்வழியில் சமூகத்திற்கான பங்களிப்பினை எல்லோருமே சேர்ந்து கூட்டு இணைப்பாகச் செயலாற்ற முயற்சி செய்தேயாக வேண்டும்.

இன்று பலர் தங்கள் தவறான செயல்கள் மூலம் உலகினால் ஒதுக்கப்பட்டுக் கிடக்கின்றார்கள். இந்த நடவடிக்கையினால் மக்களின் புறக்கணிப்பால் ஒரு பரம்பரையே பெரும் பாதிப்புக்குள்ளாகின்றது. எல்லோரும் நிம்மதி அடைய வேண்டும். இதில் எவருடனும் பேதமில்லை என்கின்ற எண்ணங்களை அனைத்து நெஞ்சங்களும் ஏற்றேயாக வேண்டும்.



RangaRakes Tamilnavarasam.com

ஒதுக்கி விடுதலும், ஒதுங்கி வாழுதலும் ம மதிப்பினைக் குறைக்கும் செயலே. குடும்பத்திலும் எம அருகே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதரிடையே பூரண அமைதி பேணாமல் வாழ்ந்தால், சந்தோ என்கின்ற சொற்களைக் கூட மறந்து போகும் நி உருவாகி விடுமன்றோ!

நான் கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் நண் ஒருவர் இல்லத்திற்கு அடிக்கடி செல்வேன். அந் குடும்பத்தின் வாழ்வு முறைகள் என்னை மிகவும் லயிப் உட்படுத்தியதாலேயே அங்கு செல்வதை வழக்கமா யிருந்தேன்.

மிகவும் வறுமைப்பட்ட குடும்ப விவசாயம் செ வர்கள். குடும்ப அங்கத்தினர்கள் ஐந்து பேர்கள். சின் குடிசை, குடிசைக்கு வெளியே ஒரு தாழ்வாரம். பனை யால் வேயப்பட்டு பசுவின் சாணத்தால் மெழுக பட்டிருக்கும். வெண்மாவினால் சுவர்களில் கூட கோ வடிவம் இட்டிருப்பார்கள். வீட்டின் வெளி முற்றத்தினருே கோலம் இட்டிருக்காத நாள் இல்லை. வீட்டு முற்றத்தி மல்லிகைப்பந்தல், மலர்ச்செடிகள் அத்துடன் சி வீட்டுத்தோட்டம், வாழை மரங்கள் என ஒரு அழகுச்சோ அந்த வீடாகும்.

அதிகாலையில் குடும்ப அங்கத்தினர் அனைவருமே தோட்டத்திற்கு நீர் பாய்ச்சச் சென்றுவிடுவார்கள்.





அக்காலத்தில் துலா மூலமே நீர் தோட்டங்களுக்குப் பாய்ச்சப்படும். காலையில் வேலை முடிந்ததும் தான் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வார்கள். எவ்வேளையில் மிக எளிமையான உணவை உண்பார்கள். தமக்குள்ளும் எவருடனும் நண்பர்கள் போலவே பேசிக் கொள்வார்கள். நான் அங்கு செல்லும் போதெல்லாம் பனங்கட்டி யுடன் தேனீரை அன்புடன் வழங்குவார்கள். அவர்கள் எவரிடமாவது எச் சந்தர்ப்பத்திலும், தங்கள் வறுமை நிலைபற்றித் துன்பப்பட்டதோ அல்லது குறைபட்டுக்கொண்டதோ கிடையவே கிடையாது.

அவர்கள் தமது வாழ்க்கையை மிகவும் ரசிப்புடன் ஏற்று வாழ்ந்தமையாலும் பிறரது படோபகாரமான டாம்பீக வாழ்வு முறைகள் இவர்களை எந்த விதத்திலும் பாதிக் காமையினால், கிடைத்த வாழ்வை மிக இனிமையாகவே கழித்து வந்தனர். இந்த மனோநிலையில் வாழ் பவர்களுக்கு இறைவன் கொடுத்த அனைத்துமே பெருவரமாகவே அவர்க ளால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

இருதயத்தை ஆண்டவன் சின்னத் தாமரைபோல அழகாகப் படைத்துள்ளான்.ஆனால் இதன் விசாலமோ பூமியை விடப்பல மடங்கானது. இதனைத்தூய்மையுடன் நாம் ஆக்கிக் கொண்டால் "நிம்மதி" என்பது சர்வசாதார ணமாக உள்ளே வந்து அன்புடன் ஆட்சி நடத்திக் கொள்ளும்.



RangaRakes

Tamilnavarasam.com

எங்களுடன் வாழும் ஒருவர் கூட மனித நிலையில் இன்றி நழுவிக்கொண்டால் உலகு அதனை ஜீரணிக்காது. அதுமட்டுமல்ல, இத்தகைய மனிதரால் ஏற்படும் பாதிப்புக் களை நாம் அனுபவித்தே ஆகவேண்டியும் இருக்கின்றது. பலர்சார்ந்த இயக்கமாக அதன் பலமாக "நிம்மதி" சார்ந்திருக்கின்றது. எனவே பிறர் பொருட்டாவது பொறுப்பு டன் இயங்க வேண்டியவர்களாவோம்.


எனக்குள் பரிணமிக்கும் நிம்மதி உணர்வு சகலர் க்கும் அருளப்படல் வேண்டும். இந்த நிம்மதி அளிப்பிற்கு எவருமே குந்தகம் செய்ய வேண்டிய தேவையோ அவசியமோ இல்லை. அமைதியை அள்ளி நுகர்ந்து கொள்ள இருதயங்களை விரித்து வைப்போமாக!

புதுக்காற்று, புதுவாசனை, புதிய ஸ்பரிசம், புதிய அழகுமிகு இடங்களில் நடை பயில்தல், அங்கேயே அறு துயில் கொள்ளல், விழிக்கும் போது பறவைகள், உயிரினங் களின் சப்த ஜாலங்களை ரசித்தல், எந்நேரமும் சுறுசுறுப் பாக இயங்கும் உயிர்களைக் கண்டு வியந்து மோகித்தல் போன்ற நற்பேறுகளை சதாநுகர்ந்து கொள்ள விழைந்தால், நாமும் நிம்மதிக்குரிய மனிதராவதுடன் எம்மைப் போலவே பிறரையும் எங்களுடன் இணைத்த வராவோம்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
31-12-2007







# பசி

ஏழையின் பசி இந்த அவனியில் இயலாமையின் தொனியாகும். பசி இல்லாவிட்டாலும் அது பிணி. வறியவனுக்கு வேண்டப்படாதது. பணக்காரனுக்குப் பசி, ஒரு கொடை உணவு இல்லாதவன் சுதந்தரமற்ற நோயாளி போல் தெரிகின்றான். உணவின்றி மடிந்து போதல் சாமானிய விடயம் அல்ல. ஒருவர் மடிவது அவன் சந்ததியையே முழுவதுமாகத் துடைத்தெறியும். பசித்தவர்க்கு இரங்காது உணவழிக்காது விட்டால், பூமித்தாயின் பெருத்த சீற்றத்திற்கு உலக மக்கள் அத்தனை பேருமே ஆளாகுவர்.

பசி உலகையே அசைக்கவல்லது. இதன் அசுர சக்தி இல்லாதவனின் குரலாக ஒலித்து இறைவனிடம் முறையிடுகின்றது. எல்லோருக்குமே பசி என்கின்ற விடயம் பொதுவானது எனினும், ஏழையின் பசி, இந்த அவனியின் இயலாமையின் தொனியாகும். பசி இல்லாவிட்டாலும் அது பிணி. வறியவனுக்கும் இது வேண்டப்படாத ஒன்று. பணக்காரனுக்குப் "பசி" ஒரு கொடை. பிறவிப்பயனை அவன் சாப்பிட்டே களிப்படைய இது ஒரு வழி. பசிக்கும்



RangaRakes
Tamilnavarasam.com

வறியவன் ஒருவேளை உணவை உண்பதற்குக் கூட வசதியில்லாமல் இருக்கின்றான். பணம் குவிந்தும் உணவைச் சுவைக்க இயலாத தன்மையுடைய செல்வந்தர்கள்தான் வறியவர்க ளிலும் வறியவர்களாவர்.

பசிப்பிணிக்கு எதிரான போராட்டமானது மானுட நேயத்திற்கும் நலிவுற்ற சகல உயிர்களுக்குமான உயிரூட்டல் தர்ம நடவடிக்கையேயாகும்.

பசித்துக் களைத்திருப்பவனைக் கண்டும், தான் மட்டும் சுவைத்து ருசித்துப் புசிப்பவன் மனுஷ வேஷம் தரித்த அதிசய ஜந்து என்றே கூறுதல் வேண்டும். மேலும் கொடுத்து உண்ணாதவன் அடுத்துப் பல் கோடி ஜன்மம் எடுத்தாலும் அவனுக்கு ஏது ஐயா விமோசனம்?

விரதம் இருப்பது என்பது தனது ஆத்ம விமோசனத்திற்கு மட்டுமல்ல சகல உயிர்களுமே ஷேமமாக வாழவேண்டும் என்கின்ற வைராக்கிய சிந்தையைத் தன்னுள் ஏற்றுவதுமாகும். எனவே விரதம் அனுஷ்டிப்பவன் விரத காலத்தில் தன் சுற்றம் சூழச் சாப்பிடுவதுடன், சற்றும் வசதியில்லாத ஏழைகளுக்கு அன்னமிட்டு அவர்களைக் கௌரவிப்பதே சிறப்பானதாகும்.

ராணி மங்கம்மா தனது ஆட்சிக்காலத்தில் வீதிகள் தோறும் அன்ன சத்திரம் அமைத்தாள். அத்துடன் ஏழை எளியவர்களுக்கும் அங்கு வரும்யாத்திரிகர்கள் வழிப்





போக்கர்களுக்காகவும் கிணறு, குளம், தங்குமடம் போன்ற ஜீவாதார நிலையங்களையும் தெருக்கள் தோறும் அமைத்ததாக வரலாறு பகர்ந்த வண்ணமாய் உள்ளது.

எமது முன்னோர்கள் தெருக்களில் சுமைதாங்கி ஆவுரஞ்சிக் கற்கள், மிருகங்கள் நீர் பருக நீர்த்தொட்டிகள், அமைத்தமையை இன்னமும் பழைய சின்னங்களாக நாம் பார்க்கலாம். ஆனால் இன்று வழிப்பயணிக்காகத் தங்கு மடமோ சுமைதாங்கி ஆவுரஞ்சிக்கல், நீர்தொட்டி அமைப்பதனைக் காணமுடிவதில்லை. மிருகங்கள் கூட வேதனைப் படக்கூடாது என்பதன் பொருட்டு அவை சொறிந்து கொள்ள ஆவுரஞ்சிக் கல்லை அமைத்தனர் என்பது அவர்களின் ஜீவகாருண்யத்தை எமக்கு நன்கு புலப்படுத்துகின்றன.

ஆனால் இன்றோ வீதியில் உள்ள பழைய தங்கு மடங்களிலும் கோவில்களின் அன்னசத்திரங்கள், சுமைதாங்கிக் கற்களில் திரைப்பட விளம்பரங்களும், காதலர் பெயர் முகவரிகளும் கேவலமான, தனிப்பட்ட குரோதத்தை வெளிப்படுத்தும். ஆபாசமான தூஷண வார்த்தைகளைப் பொறித்துத் தமது மொழி ஆளுமையை வெளிப்படுத்து கின்றனர். இவர்கள் புதிதாக எந்தத் தானதர்மமும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை இருக்கின்ற பொதுச் சொத்துக்களை எவரோ ஒரு புண்ணியவான்கள் செய்த கொடைகளை அநாகரிகமாக அசுத்தப்படுத்தல் அழகானதா? இதுபோல் ஒரு சமூக விரோதச் செயல்கள் வேறென்ன இருக்கின்றன?



RangaRakes
Tamilnavarasam.com

சரித்திரப் பிரசித்திபெற்ற கலை வடிவங்களில்கூடச் சில சமூகவிரோதிகள் கண்டபடி கீறியும், எழுதியும் சிதைப்பது பற்றி நாம் பல்வேறு செய்திகள் மூலம் அறிந்து கொண்டிருக்கின்றோம். தான தர்மம் என்பது மனப்பூர்வமாகச் செய்யப்படும் நற் கருமமேயாகும். இன்று பல அன்ன சத்திரங்களில் அன்னதானம் செய்யும் சிலர் நடந்து கொள்ளும்முறை நெஞ்சை நெருடுவது போல் இருக்கின்றது. உணவு உண்ணவரும் அடியார்களிடம் கண்டபடி தகாத உஷ்ண வார்த்தைகளைப் பிரயோகிப்பதும் ஏன் சில சமயம் அடிதடி கலாட்டக்களில் ஈடுபடுவதும் சகிக்க முடியாத காட்சிகளாகும்.

அன்னம் பாலித்தல் ஒரு உன்னதமான தெய்வீகப் பணி எனத்தெரிந்தும் பிறர் முகம் சுழிக்கும் வண்ணம் நடந்து கொள்ளக் கூடாது. அன்பில்லாதவர் இட்ட உணவு எமது அடுத்த பிறவியிலும் அது பாவமாகவே தொடர்ந்து வரும் என்று சொல்வார்கள். எல்லோரிடமும் சென்று அதாவது தீயோரிடம் சென்று நீர் அருந்துதல் உணவு புசித்தல் மனம் கூசும் செயல்தான். பசித்தவனுக்கு உணவு கொடுக்கின்றேன் எனக்கூறிப் புகழ்சேர்க்க ஏதாவது பிரதிபலன் நோக்கிச்செய்யும் செயல்களை இறைவன் விரும்பவேமாட்டான்.

நல்ல கல்வி ஞானம் உள்ளவர்களின் செயல் திறன்கள் அவர்கள் வறுமை காரணமாகத் தடைப்பட்டுப் போகின்றன. இன்று படிக்கக்கூடிய சிறார்கள் போதிய





போஷாக்கு இன்மையால் சாதாரண உணவை உண்ணக் கூட வசதியின்மையால், கல்வி கற்றல் தடைப்பட்டுப் போகின்றன. படிக்க வேண்டியகாலத்தில் சில வறுமையான பிரதேசங்களின் சிறார்கள் உணவுத் தேவைக்காகக் கல் உடைக்கச் செல்வதும், வீட்டு வேலைக்குச் செல்வதுமாகப் பல்வேறு பட்ட சிறு தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இது ஒரு சமூகக் கொடுமை. தொடரும் அடுக்காத நிலை!

மேலும் தொழில் ஏதும் கிட்டாத நிலையில் பல ஆயிரம் சின்னஞ்சிறு சிறார்கள் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவதும், ஈடுபடுத்தப்பட்டு வருவதும் அன்றாட சம்பவங்களாகிவிட்டன.

உலகின் முக்கிய தேவை உணவு. அந்த உணவை எல்லோருக்குமே வழங்க முடியாத உலகின் எந்த ஒரு அரசும் இருந்துதான் என்ன? ஆனால் பின் தங்கிய நிலையில் உள்ள மக்களில் சிலர் தமது இழிநிலையை உணர்ந்ததாக இல்லை.

உழைக்கும் காலத்தில் உழைக்காது, உழைத்த பணத்தைச் சேமிக்காது, செலவுசெய்து கண்டபடி வாழுதல்,என்பது தமது வாழ்க்கையைத் தாமே சிதைப்பதையறியாமல் அழித்துக் கொள்கின்றார்கள்.

மேலதிகமாக உழைத்தவர்கள் குடிப்பழக்கம், சூதாட்டம் போன்ற தீச்செயலில் ஈடுபட்டு தனது உடலையும்,



RangaRakes

Tamilnavarasam.com

குடும்ப நலனையும் குலைத்து, இறுதியில் நடுத்தெருவிற்கு வந்து ஒரு வேளை உணவிற்காக அலைவது எவ்வளவு பரிதாபம் அறியாமை அல்லவா?

ஏழ்மை இன்று ஒரு வெறும் காட்சிப் பொருளாகி விட்டது. ஏழ்மை மட்டுமல்ல கல்வி சமயம் எல்லாமே சேவை நோக்கு அன்றி விளம்பரமாகவே உள்ளது எனச்சிலர் ஐயப்படுகின்றனர். ஏழ்மை பற்றி வெளியே அனுதாபத்தைக் காட்டிச் சம்பாதிப்பவர்கள் தான் பெருகிவிட்டார்கள். உதாரணமாக ஒரு ஏழை படும்பாட்டினைத் திரைப்படமாக்கி அதன் மூலம் பலகோடி சம்பாதிப்பவர்கள் அதே பரிதாபத்திற்குரிய ஏழைகளுக்கு அவர்களின் பசிக்கு என்ன விதமான நிதி உதவிகளை அளிக்கப் போகின்றார்கள்?.

சமூகத்தில் ஒரு அந்தஸ்தைத் தேட முனைபவர்கள், ஏழைகள் முதுகில் சவாரி செய்வது போல் நடப்பதை நாம் காண்பது சர்வசாதாரணமான விஷயம்தான். ஆனால் இதன் பொருட்டு தம் சிரமம் பாராது, கஷ்டமுறும், பஞ்சப் பராரிகளுக்காக, சிரமப்படும் நல்ல ஜீவன்களின் பணிகளை நாம் சற்று நிமிர்ந்து நோக்க வேண்டும்.

ஏழைகளுக்கு, கல்வியூட்ட முனையும் அதேவேளை அவர்களின் ஜீவாதாரப்பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும். இன்று இருக்க வீடும், உண்ண ஒருவேளை உணவும், நம்பிக்கையாகக் கிடைக்கும் என்கின்ற நிச்சய





மற்ற வாழ்வில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மனிதர்களின் துயர் என்று துடைத்து எறியப்படுமோ இறைவா!

இன்று எத்தரத்தில் உள்ளவர்களும், உணவிற்காகக் கை ஏந்த வேண்டிய நிலை ஏற்படலாம் என்பதை மறுக்க முடியுமா? அதாவது, யுத்த சூழ்நிலைகளில் ஏற்படும் உணவுப் பஞ்சத்தினால் உணவுக்காக அல்லல் படாத ஆத்மாக்கள் உண்டா? இன்றும் ஏழைப் பச்சைக் குழந்தைகள் பால்மாவிற்கு அழுவதும் எங்குபோய் வரிசையில் நின்றால் அரிசி கிடைக்கும், என்பதிலேயே ஏழைகளின் காலம் போகின்றது.

பசி என்றால் எப்படி இருக்கும் என விரதத்தின் போது எல்லோரும் தெரிந்து கொள்வர். ஆனால் பசி என்கின்ற கொடுமையை வருந்தித் திணிக்கும் காலக் கொடுமையை என்ன என்பது? காசைவிடச் சோறு பெரிது. பசிக்கும் போது தங்கத்தைப் புசிக்க முடியாது. பசி வந்தால் உழைப்பவனும் படுத்துவிடுவான். எல்லாவிருப்புக்களும் அற்றுவிடும். செயலற்ற தன்மையினைச் செயற்கையாக உருவாக்கும் தேசங்களின் கையாலாகத்தன்மை இயலாமையை எப்படிச்சொல்ல?

இந்த லட்சணத்தில் வறியநாடுகளின் வயிற்றெரிச்சல்களில் துன்பக் குளியல்களில் அரசியல் லாபம் தேடும், வளம் மிகு வல்லரசுகளின் நடிப்பு நாடக அரங்கேற்றங்களை என்ன என்பது? மற்றவன் பசியில் அதன் கொடுமையில்



RangaRakes

Tamilnavarasam.com

தன் ஆத்மாவிற்குள் ருசியான அனுபவம் தேட முடியவே முடியாது. ஏன்னெனில் மாற்றான் இன்பங்களை சாதாரண எளிய வாழ்வைக் கொள்ளையடிப்பதும் ரசிப்பதும் இறைவனின் கோபத்திற்கு ஆளாகும் செயல் அல்லவா?

உணவு இல்லாதவன் சுதந்திரமற்ற நோயாளி போல் தெரிகின்றான். ஒரு பிச்சைக்காரன் உணவின்றிக் கெஞ்சிக் கொண்டிருந்தால், அவனை ஒரு மனித ஜன்மமாக எத்தனைபேர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கின்றார்கள். சரி, அவன்கூட, தான் இந்த நாட்டின் கௌரவமான பிரஜை என அவனும் உணர்வதாகத் தெரிவதில்லை. அப்போதைய பசிக்காகத் தற்காலிகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் நடைப்பிணமாகவே இருப்பதும் அதை நாம் பார்ப்பதும் இறைவனின் படைப்பில் எல்லாமே சமன் என்கின்ற உணர்வை மறுப்பது போல் தெரியவில்லையா? சற்றுச் சிந்திப்போம்!

பசிப்பவனுக்குக் கொடுப்பது எமது கடன் அதை விடுத்து அவன் பசிக்காக உணவு பெறுதலுக்காக உழைக்க வில்லையே என விவாதம் செய்தல் தகாது. ஒருவன் தன் வாழ்வை சிறப்பாகக்கொண்டு செல்லாமைக்குப் பல்வேறு அகக்காரணங்களும் புறக் காரணங்களும் உண்டு. இவை யெல்லாம் சமூகம் நன்கு உணர்ந்து தக்க பரிகாரம் கண்டே யாக வேண்டும். உணவு அளித்தல் மட்டுமல்ல, ஒருவனுக்கு வேண்டிய வாழ்வை நன்கு அமைக்கவும் நாம் ஏதாவது செய்தேயாக வேண்டும்.





சோமாலியா, சூடான் போன்ற நாடுகளில், பஞ்சத் தாலும், இடம் பெயர்வுகளாலும், உயிர் பெயர்ந்துபோன மனிதர்களின், எலும்புக் குவியல்களின் எடையைவிட அதனைப் பார்க்கும் மாந்தர்களின் மனச்சுமையினை விபரிக்க வார்த்தைகள் உண்டா?

எங்களது மக்கள் தமது வீடுகளில் நடக்கும் விசேட தினங்களில் தமது உறவினர்கள், நண்பர்களுக்கு விருந்து கொடுக்கின்றார்கள். தேவைப்படுகின்ற இடங்களுக்கே உணவு போய்ச்சேரவேண்டும். நாம் உணவில்லாது அவதி யுறும் மக்களுக்கு உணவு கொடுப்பது பற்றிச் சிந்திப்ப தேயில்லை.

இன்று எவ்வளவோ அநாதைச் சிறுவர் இல்லங்கள் நாடுபூராவும் இருக்கின்றன. அவர்களுக்கு ஒரு வேளை உணவினையாவது ஏதாவது ஒவ்வொரு இல்லங்களுக்கும் சென்று வழங்கினால் என்ன? அவர்களிடம் சென்று, அவர்களுடன் கூட இருந்து வழங்கி, நாமும் சாப்பிட்டால் எவ்வளவு ஆத்மதிருப்தி தெரியுமா?

சிரார்த்த தினம், ஞாபக தினம் என்றவாறு பல நிகழ்வுகளை பலரும் தமது உறவுகளுடன் மட்டும் நிகழ்த்து வதனால் ஏற்படும் செலவில் ஒரு சிறு பகுதியையாவது ஏழைகளுக்குச் செலவு செய்தால் என்ன குறைவு வந்துவிடப் போகின்றது?.



RangaRakes

Tamilnavarasam.com

நாம் வருந்தி வருந்தி வசதி உள்ளவர்களைத்தானே விருந்துக்கு அழைக்கின்றோம். வருந்தி வாழும் மக்களை நாம் பார்க்க ஏன் விழைவதில்லை?. சில விடயங்களை மக்கள் இன்னமும் புரியாமல் இருக்கலாம். நல்ல தர்ம சிந்தையுள்ளவர்களுக்குக்கூடச் சில வழிமுறைகள் அறியாமல் இருக்கலாம். இன்றைய சூழலில் எமது வழங்கல்கள் கட்டாயம் பசிப்பிணியைப் போக்க சென்று அடைய வேண்டும்.

உணவின்றி மடிந்துபோதல் என்பது சாமானிய விடயமா? ஒருவன் மடிவது என்பது அவன் சந்ததியே இல்லாமல் போவது அல்லவா? அவன் சார்ந்த இனமும் உலகும் இதனை உணரவேண்டும். இறப்பவனைவிட மரிப்பவனைப் பார்ப்பவனுக்கு ஏற்படும் மன உளைச்சல், துன்பங்கள் பற்றிப் பலர் சிந்திப்பதில்லை.

ஆயுதங்களைப் பயிரிடும் நாடுகள் நல்ல பண விளைச்சலைப் பெருகின்றன. அந்த பெருலாபத்தினை மேலும் பெருக்க, மென்மேலும் பல பாவகருமங்களையே சுமக்கின்றன. அவர்களது மேலான உணவுப்பயிர் உற்பத்தியினை வீணாகக் கடலில் கொண்டு வீசுவதாகவும் சொல்லப்படுகின்றது. இந்நாடுகள் அதனை வறிய நாடுகளுக்குக் கொடுக்காது பழுதடைந்த பின் அவைகளை ஒரு நாடுகளுக்கும் சேராமல் வீணடித்தும் விடுவதுண்டு.





எமது நாட்டில் கூட நல்ல களஞ்சியப்படுத்தல் முறையின்றி ஏழை மக்களுக்கான உணவுகள் வீண் விரயம் ஆக்கப்படுவதைக் கண்டும், கேள்விப்பட்டும் இருக்கின்றோம். பசியுள்ளவனுக்குள்ள பிரச்சினைகளை, பசியற்றவர்கள், வசதி படைத்தவர்கள், அரச சமூக நிர்வாகிகள் உண்மையாகவே உணர்ந்தால் இந்த அவல நிலை தொடர்ந்திடுமா சொல்லுங்கள்!

தினசரி ஒரு பிடி அரிசியை எடுத்து வைத்துப் பின்னர் அவற்றை தர்ம கைங்கரியங்களுக்காகப் பயன்படுத்தும் முறையை முன்னர் எமது மூதாதையினர் காலம் காலமாகச் செய்து வந்தனர். தினசரி அல்லது வாரம் ஒரு தடவையாவது, அடியார்களுக்கு உணவழித்ததாக எமது சமய இலக்கிய நூல்கள் வாயிலாகப் படித்திருக்கின்றோம்.

தமது வீட்டுத் திண்ணையில் மோர்ப்பானை, நீர்ப்பானை வைத்திருப்பதை அன்றாட கைங்கரியமாக அவர்கள் செய்தும் வந்தனர். ஆனால் இன்று ஒருவரது வீட்டிற்கு செல்லுமுன், முன் கூட்டியே, தெரிவித்துவிட்டே செல்ல வேண்டும். அவசர உலகில் இதுவே சகஜம். தவிர நகர வீடுகளில் அனுமதியின்றி உட்செல்ல முடியாது. கிராம மக்கள் ஒருவரோடு ஒருவர் உள்ள நம்பிக்கை, விசுவாசம் நகரப்பகுதியில் பெரும்பாலும் இல்லவேயில்லை.

தான தர்ம கைங்கரியங்கள் விடயத்திலும் கிராமத் துக்கோவில்களில் விழாக்களில் வீட்டு வைபவங்களில்



RangaRakes

Tamilnavarasam.com

உபசாரம் செய்யும் பண்பாடுகளை நாம் நகரத்தில் காண்பது அரிதுதான். இதற்குப் பல காரணங்கள் உண்டு. இவை யெல்லாமே சந்தர்ப்ப சூழ்நிலை, வசதியீனங்களைப் பொறுத்த விடயம், மற்றும் வாழ்க்கைச் செலவு நிதிப்பற்றாக் குறைவு போன்ற இதர காரணி களும் உண்டு.

எனினும் எம்மால் எமது சக்திக்கு உகந்தவண்ணம் ஏதாவது உதவிகளை நாம் ஆதரவு அற்ற ஜீவன்களுக்காக அளித்தே தீர வேண்டும். இது ஒரு கட்டாயக் கடமையாகும். துன்பம் வசதியீனம் என்பன பொதுவான இடையூறுகள் என்பதை நாம் அறிவோம். தொண்டு செய்யப் புறப்பட்ட வர்கள், கண்டு கொள்ளும் இடையூறுகளை தடைகள் எனக் கருதமாட்டார்கள்.

மிருகங்கள் கூட நன்றாய் இணைந்து அன்போடு உணவு உண்கின்றன. ஆனால் மனிதர்களில் சிலர் இருக்கும் உணவுப் பொருட்களை பதுக்கி வியாபாரம் செய்கின்றார்கள். உணவு என்பது ஒரு ஜீவாதாரமான விடயம் என்று உணர்ந்தும் கூட, மக்கள் பிரச்சனையில் ஆதாயம் தேடுபவர்களை என்ன செய்வது என்று விட்டு விட முடியுமா? கரிசனையற்றவருக்கு மனித உருவம் எதற்கு?

இன்று மக்களுக்கு ஆடம்பர உணவு வகைகளே வேண்டும் என்கின்ற நிலையை விடுத்து அனைத்து மக்களுக்கும் உரிய போஷாக்குள்ள, எளிய உணவு அளித்த லுக்கான நடைமுறைகள் பேணப்படல் வேண்டும். "பசி"





என்கின்ற சொல் இல்லாதொழிக்கப்படல் வேண்டும். பசியால் யாசிப்பது இனி வேண்டாம்.!

மிகப்பெரிய துன்ப வடுக்கள் என்ன? குழந்தையின் பசிக்கான "அழுகை". சிறார்களின் உணவைப் பார்த்தும் ஏங்கும் "கண்கள்". முதியோரின் உணவு தேடலுக்கான ஆற்றாமையினை வெளிப்படுத்தும் "முனகல்கள்" இவை எல்லாமே, பூமித்தாயை வருத்தும் வடுக்களாகும்.


நாம் கொடுப்பதன் பயன் எம் சந்ததிக்குப்போய்ச் சேரும் என்று முதியோர் சொல்வார்கள். நாம் செய்யும் சாதாரண வழங்கல்களை விட பசிக்காககொடுக்கும் கொடைகளே இன்றைய அவசியமான தேவையாகிவிட்டன. கொடுத்தவன் கெட்டதுமில்லை வழங்காதவன் வாழ்ந்தது மில்லை.வாழ்ந்தும் உயர்ந்தது மில்லை.

இயற்கை சீற்றமடைவதாகச் சொல்கின்றார்கள். மானுடதர்மம் நேயம் செத்தால்தான் இவை நடைபெறும் என்று சான்றோர் சொல்லி வலியுறுத்தியிருக்கின்றனர். பூமித்தாய் தன் பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்பட்டால் ஒட்டுமொத்த உலகையே உலுப்பியெடுத்துவிடுவாள். எவராவது பசியுடன் இருப்பதை அவள் அனுமதிக்கவே மாட்டாள்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
15-10-2006



RangaRakes
Tamilnavarasam.com



# தூற்றுதல் ஏற்புடையதன்று

> தூற்றுதல் என்பது, "பழி" சுமத்துதல் போன்றதாகும். தீயோரைக் கண்டால் விலகுதலே உத்தமம். அவர்களுடன் மனஸ்தாபப்பட்டுத் தூற்றித் திரிவதால் பயன் ஏதுமில்லை. பகைமைதான் வளரும். மற்றவன் பலஹீனத்தை அறிந்து அதனை ஆயுதமாகக் கொள்வது தமது சுய நலத்திற்காகக் கையாளும் தந்திரோபாயம்தான். "முகத்திரையைக் கிழிக்கின்றேன் பார்" எனக் கூறி தனது முகத்தையே கோரப்படுத்துதல் நகைப்பிற்குரிய முட்டாள்தனமானதாகும். பேச்சுக்கள் என்பது வெறும் சொற்கள் அல்ல. கூரிய வலிமை கொண்டது. "நா" எமக்கு சில சமயம் "நோ"வைத் தரும். நாம் இனிமையோடு பேச எண்ணினாலே நாம் நல்லன செய்ய அதுவே கட்டளையும் இடும். என்றுமே தூற்றுதல் ஏற்புடையது அல்லவே அல்ல.

தூற்றுதல் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்புடையதன்று. தூற்றுதலுக்குள்ளானவனைவிடத் தூற்றுபவனே ஈற்றில் வேதனைகளுக்கு வேண்டப்பட்ட விருந்தாளியாவான். எடுத்த எடுப்பிலேயே அடுத்தவனைப் பற்றித்தொடுக்கும் கணைகள், அதே வேகத்தில் தொடுத்தவன் மீது வீழ்ந்து வெடிக்கப்





படும். ஆனால் இது உடன் விளைவுகளை செய்யாது என நினைப்பது மடமை. உள் நின்று உடைக்கும். அடுத்தவனைத்தூற்ற எமக்கேது உரிமை?

தூற்றுதல் என்பது பழி சுமத்துதல் போலாகும் என்பார்கள். ஒருவன் கெட்டவன் என்று நாம் கருதினால் விலகிச்செல்லுதலே உத்தமமான செயலாகும். எமது பேச்சுக்களால் நாமே புதிய வினைகளை திணித்து ஏற்றுக் கொள்ளலாமா?

ஒருவரைக் கடிந்து பேச ஆரம்பித்ததும் சற்று நேரத்தில் எம்மை அறியாமலே நாம் எமது நிலையை மறந்து கோபத்தின் உச்ச நிலைக்கும் செல்லும் நிலை ஏற்படலாம். மனிதனைக் கோபம் ஆட்கொண்டதுமே பேசும் வார்த்தைகள் உண்மையின் பார்வையில் விலகிக் கண்ட, கண்ட சொற்பிரயோகம் செய்ய ஆரம்பிக்கப்படுகின்றன. இந்நேரத்திலேயே வார்த்தைகள் தூற்றுதலாக மாறி நேற்று வரை நண்பராக, உறவினர்களாக இருந்தவர்களையே மாற்று மனிதனாக, அவர்களாகவே ஏற்றுக் கொள்ளும் நிலையை ஏற்படுத்திக்கொள்ளுகின்றனர்.

எவரால் தூற்றுதல்களுக்கு உட்பட்டாலும் அது பற்றிச் சிரத்தை காட்டாதிருப்பது தூற்றுதலுக்குள்ளானவரின் மனோபலத்தைக் காட்டுவதாக அமையும்.



RangaRakes
Tamilnavarasam.com

- திட்டுதல்
- கடிந்து பேசுதல்
- விமர்சித்தல்

போன்ற அம்சங்கள் ஒருவரின் மீதான உரிமை காரணமாக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு செயல் உருப் பெறுகின்றன. பிள்ளைகளைப் பெற்றோரும், மாணவர்களை ஆசிரியர்களும், நண்பர்களிடையேயான பரஸ்பர உரையாடல்களும் "அவதூறு" என்கின்ற பதத்தினுள் அடங்காது. நல்நோக்கத்துடன் பேசுபவன் எவர் மனதையும் உறுத்தி வேதனையாக்கமாட்டான். சில உண்மைகளை உணரவைக்க வேண்டப்பட்டவர்கள் தொடுக்கின்ற சொல் அம்புகள் எம் செயல்களை நல் வழிப்படுத்துவதனால் அதனை நாம் ஏற்போமாக!

நல்ல விமர்சனங்கள் தூற்றுதல்கள் அல்ல. அவர்க ளின் செயல்பாடுகளை உயர்த்த வல்ல விமர்சனங்களைச் சம்பந்தப்பட்டவனே ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகும். காழ்ப்புணர்வு காரணமாக எழுதப்படும் சொல்லப்படும் கருத்துக்கள். விமர்சனம் அல்ல.

ஒருவர் "வசைபாடுதல்" என்பது, தனது இயல்பை வெளிப்படுத்துகின்றார் என்பதாகும். இவ்வார்த்தைகள் ஆழமாக வேரூன்றி விடுவதானால் ஏற்படும் வேதனைகள் சொல்லி அடங்குமா? என்னதான் ஆதாரங்களைக் கோர்த்து மற்றவர்களைச் சினமூட்டுவதனால் மட்டும் நியாயம் உடன் கிடைத்து விடுமா? சொல்ல வேண்டிய





வற்றைச் சொல்ல வேண்டிய விதத்தில் சொல்ல வேண்டும். உணர்க! மற்றவனின் வடுவை, பலஹீனத்தை அறிந்து அதனை ஆயுதமாகக்கொள்வது என்பது தமது சுய நலத்திற்காகவே கையாளும் தந்திரோபாயம் தான். "முகத்திரையைக் கிழிக்கின்றேன் பார்" எனக் கூறி தனது முகத்தையே அவலட்சணமாக்குதல் நகைப்பிற்குரிய முட்டாள்தனமேயாகும்.

சிலருக்கு எப்படிப்புத்தி சொன்னாலும் புரிய மாட்டேன் என்கின்றதே, ஒரு திட்டுத் திட்டினால்தான் மனுஷன் வழிக்கு வருவான் எனக் கூறுபவர்களும் உளர். "படி.... படி" என்றால் படிக்கமாட்டான் கடிந்து பேசினால் தான் எழுந்து வந்து படிக்கின்றானே" எனச்சொல்லும் பெற்றோரும், "கொடுத்த கடனை திருப்பி எடுக்க முடிய வில்லை நடந்து, நடந்து நொந்துவிட்டேன், கடிந்து பேசினேன் தந்து விட்டான்"என்று சொல்பவர்களையும் நாம் பார்த்திருக்கின்றோம். எல்லா நேரத்திலும் நாம் சொல்லும் வார்த்தைகளின் மென்மையைச் சிலர் உணர்கின்றார்கள் இல்லை. அதனைப் பலவீனமாகக் கொண்டு. மற்றவனை முட்டாள்கள் ஆக்குபவர்களும் உண்டு அல்லவா?

பேச்சுகள் என்பது வெறும் சொற்கள் அல்ல. கூரிய வலிமையுள்ளது. 'நா' சிலசமயம் எமக்கு நோவைத்தரும். அதுவே இனிமையோடு உரைசெய்தால் நாம் நல்லன செய்யக் கட்டளையும் இடும்.



RangaRakes

Tamilnavarasam.com

ஒருவனை, வெறுப்பேற்றி உருமாற்றுவது எம வேலையே அல்ல. சரியான பாதையில் செல்ல வலுவுட் சொற்களைப் பிரயோகிக்க நாம் பிரியப்படல் வேண்டு அவதூறு என்பதே; வீண்பழி, குற்றம் சுமத்துத என்பதனை அறிந்துகூட எதிரில் நிற்பவனின் மனஇயல்பு உடல் நிலை தெரிந்தும், விஷம் எனத் தீண்டும்ப பேசினால் என்ன நடக்கும்? கண்டபடி பேசுபவன் கஷ்டமு வான்.

நல்லவன் மீது சுமத்தப்படும் பழியினால், அ வெகுண்டெழுந்தால் அதன் பலாபலன், பெரும் மன யையே மடித்து எறியும் உக்கிரத்திற்கு ஆளாவான். இந்த கோபத்தினால், பழி சுமத்துவன் மட்டுமல்ல, அவனை சார்ந்த அப்பாவிகளும் பெரும் துன்பத்திற்கு ஆளா துண்டு. அநேகமான குற்றச் செயல்களை ஆராய்ந் தா அவை எல்லாமே அவதூறு பழிச்சொல்லால் எழுந்த எதிர் விளைவுகளே என அறிந்து கொள்ளலாம். உணர்க!

- வஞ்சகம்,
- காழ்ப்பு
- உள்நோக்கு.

இவைகளுடன் ஒன்றித்தவர்கள் பாவத்திற்கு அஞ்சு வதில்லை. எடுத்ததெற்கெல்லாம் கொடும் நஞ்சை ஊட்டத் தலைப்படுவார்கள். ஆனால் இவர்கள் கூறும் காரணங் களோ சமூகத்திற்குத் தாங்கள் செய்யும் மாபெரும் கடமை எனக்கூறிக் கொள்வார்கள்.





எனினும் உங்களைச் சீண்டி வேதனைப்படுத்த ஒருவர் முனைந்தால், எதிர்வாதம் செய்தால் மட்டும் நாம் அவரை வென்றுவிட முடியாது. எங்கள் செயல்களின் தூய்மைத் தன்மையினால் மட்டுமே சமூகத்திற்கு நல்ல பதிலை அளிக்க முடியும். உள்நோக்குடன் ஒருவன் பழகுவ தைப் புரிந்து கொள்ளும் பக்குவத்தினை நாம் பெற்றேயாக வேண்டும். தீயோரை ஆராயமல் கண்டபடி அவர்களைப் புகழ்ந்து பேசினால் அதனையே அவர்கள் துணை எனக் கருதி தொடர்ந்தும், இடர்மிகுந்த செயல் களிலேயே புலன் களைச் செலுத்துவார்கள் "ஐயாவே சொல்லிவிட்டார். நீ என்ன சொல்ல" எனச்சில சமூக விரோதிகள் தமது துர்ச் செயலுக்கு ஆதாரம் கோர்ப்பது சர்வ சாதாரண நிகழ்ச்சி யாகிவிட்டது.

அதேசமயம் நாம் ஆராயமலே யாரோ ஒருவர் சொன்னதை ஏற்று நல்லவர்களைக்கூடச் சந்தேகம் கொள்கின்றோம். ஒருவனைப் புகழும் போதும் அதே சமயம், ஒருவன் மீது எந்த அபிப்பிராயம் கொள்வதற்கு முன்பும் தீர ஆலோசித்த பின்னரே முடிவு காண வேண்டும். "அடடா இந்த நல்லவரை நான் கண்டபடி" பேசிவிட்டேனே... இதனால் அவர் மனம் என்ன பாடுபட்டிருக்கும்!.. "என்று மன வேதனையுடன் பேசுபவர்கள்" கொஞ்சம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

எமது கண்டனங்களால் ஒருவன் பட்ட வேதனை களை நாம் மீட்டு எடுக்க முடியுமா? பட்ட காயம் உடலில்



RangaRakes

Tamilnavarasam.com

மீது அல்ல. உள்ளத்தினுள்ளே ஊடுருவி விடும் அல்லவா? "பேசுமுன் யோசி" என்போர் பெரியோர். புரிந்துகொள்க! தாங்களே நேர்மையானவர்கள் எனக் காட்டுவதற்காகவும், சமூகத்தில் விசுவாசம் மிக்க ஒருவனாக தம்மை உயர்த்தி நிற்பதன் பொருட்டும் தூற்றுதலை ஒரு கருவியாகக் கொண்டுள்ள கொடியவர்கள் செயலை என்ன என்பது? மற்றவரைத் தாழ்த்தித் தரம் குறைத்து அடிக்கடி பேசுவதால், கொடு வினையைத் தேடுபவர்கள் அவர்களேயாவர். தங்கள் பதவியைக் காப்பாற்றுவதற்கும், ஏனையவர்களைக் கவிழ்ப்பதற்கும், காட்டிக்கொடுத்து நல்ல பெயர் வாங்க நினைப்பது ஈற்றில் ஆபத்தை இவர்கள் விலை கொடுத்து வாங்கியதாகவே அமையும்.

அரசியல்வாதிகள் பலரும் தூற்றியே கட்சியை வளர்க்கப் பிரியப்படுகின்றார்கள். உயர் பதவிவகிப்பவர்களும், தொழில் அதிபர்கள், ஏனைய நிறுவனங்களுக்கு அவப்பெயர் வழங்குவதிலேயே முனைப்பாக இருக்கின்றார்கள். பொய்யைக் கூறி மக்களை ஏய்த்துத் தலைவர்களாகலாம் என்றும், அதுவே நிரந்தரதீர்வு என எண்ணும் தலைவர்கள் என்று சொல்லப்படுவர்களால், எந்த நாடும் உருப்பட்டு வலுப்பெறப்போவதில்லை.

"நல்லன செய்யப்புறப்பட்டு அது தோல்வியில் முடிந்து விட்டது. எனவே நான் சமூக விரோதி ஆகிவிட்டேன்" என்று ஒருவன் சொன்னால் ஏற்றுக்கொள்ள முடியுமா?





நல்லவைகளைச் செய்ய ஒருபோதும் தீய வழியை நோக்க வேண்டிய அவசியமோ, தேவைகளோ இல்லவேயில்லை. நல்ல நோக்கத்தை அடையச்செய்ய, செய்யப்படும் வேண்டாத, அடாத செயல்களுக்கு எந்த நியாயமும் கற்பிக்க முடியாது. இவை நல்நோக்கத்தை களங்கப் படுத்திவிடும்.

தூற்றுதலைத் தமது ஆற்றுகை எனக் கொண்டவர்கள் ஈற்றில், துன்பச்சேற்றினுள் அமிழ்ந்துவிட வேண்டியது தான்.

"அட அவனா... இப்ப பெரிய மனுஷனாகி விட்டான்? இவன் முன்னர் இருந்த நிலை எனக்குத் தெரியாதா எப்பேர்ப்பட்ட கெட்டவன், இவன் செய்யாத அநியாயங்கள் உண்டா..." என்று மற்றவன் முன்னேற்றம் கண்டு அவதூறு செய்தால் இவர்கள் அதனால் கண்ட பயன் என்ன? இப்படிச் சொன்னால் கிடைக்கின்ற நன்மைகள் ஏதாவது உண்டா? சும்மா பேசிக்கொண்டே இருப்பவர்களைப் பாருங்கள். அவர்கள் ஏதாவது நல்ல செய்கையில் கிஞ்சித்து நாட்டம் கொண்டவர்களாக இருப்பதுவுமில்லை.

தெளிந்த மனமும், நல்நோக்கமும் நல்ல பேச்சும், மற்றவன் மன இயல்பு அறியும் திறனுடன் இருப்பவன், வாய் என்றும் பிறரை வாழவைக்க வாழ்த்துவதாகவே அமையும். கெட்டதை நினைக்க அவன் சிந்தையில் இடமேயில்லை.



RangaRakes
Tamilnavarasam.com


எம்மைச் சுற்றி உள்ளவர்கள் முகம் மட்டுமல்ல அகம்கூட சிரிக்க வேண்டும். இந்த மென்மையான அன்பினை நாம் மற்றவர்கள் மூலமும் எங்கள் அர்ப்பணிப் பான நடத்தைகள் மூலமும் வெளிப்படுத்துதல் வேண்டும். தெரியாமல் நாம் செய்கின்ற சிறு கீறல்கள் உராந்து பெருநெருப்பாக மாறிவிடக்கூடாது. அதாவது செய்கின்ற அற்பத் தவறுகள்கூட எங்களால் நடக்காது பார்த்துக் கொள்ளல் வேண்டும். எம்மால் ஒருவருமே பாதிப்படையக் கூடாது.

எங்கள் பேச்சுகள் எல்லோரையும் திருப்திப் படுத்தவும், நல்வழிப்படுத்தவுமேயாகும். நல்லதுசெய்ய எல்லா நன்மைகளுமே கூடிவரும். தூற்றுதலை எவருமே ஏற்றுக்கொள்வதில்லை. வாழ்த்துக் களையும் சகல உயிர் களைப் போற்றுதலையுமே இறைவன் தன் நெஞ்சில் நிறுத்திக்கொள்கின்றான்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
18-06-2006







# துன்பங்கள் சொந்தங்கள் அல்ல! இன்பங்களே நிரந்தரமாகட்டும்!

இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டு வாழ்வது இயலாத காரியமாக இருக்கின்றது. துன்பங்கள் நிரந்தரம் என்று மனிதர் மனம் நொந்து போகின்றார்கள். இன்பம் வந்தால் அதுவே நிரந்தரம் என்று ஆணவம் கொள்வதுமுண்டு. சஞ்சலம், சுதந்திர உணர்வைத் தகர்க்கும். வாழ்க்கையில் நடப்பவை எல்லாமே மாறி மாறி வரும் நிகழ்வுகள் யதார்த்தமானவை என்று பூரணமாக நம்புங்கள்! முயற்சி தன்னம்பிக்கையுடன் வாழ்ந்தால் துன்பங்ளை உடைத்தெறியும் மாவல்லமை பெற்றவர்களாவோம்.

துன்பங்களைக் கண்டால் ஏங்குவதும் இன்பங்களைப் பெற்றுக் கொண்டால் இறுமாப்பு கொள்வதும் வாழ்க்கை யைச் சமநிலையில் வைத்துக்கொள்ளாத நிலையை ஏற்படுத்திவிடும்.



RangaRakes
Tamilnavarasam.com

துன்பங்களை எவருமே விரும்பி ஏற்றுக் கொள்வதில்லை. தானாகவே ஒட்டிக்கொள்ளும். நாமாகவே, எங்கள் அறியாமையினாலும் துன்பங்களை விலைகொடுத்து வாங்குவதுபோல் வந்து சேர்வதுமுண்டு. இதேபோல் சந்தோஷங்கள் கூட எதிர்பாராத நிகழ்வுகளால் ஏற்படுவதுமுண்டு. மனிதன் தன் முயற்சியால் தன்னை உயர்த்துவதால் அடையும் மேன்மையாலும் இன்பமான வாழ்வை அடையலாம்.

எங்கள் வாழ்வில் சந்தோஷங்கள் எம்மை விட்டகலாது நிரந்தரமாகவே இருக்க வழி இல்லையா? தற்காலிகமாக வந்து போகும் இன்பத்தால் மன நிறைவு வந்துவிடுமா? சந்தோஷங்களையே கண்டவன் சற்றுத் தொய்வு நிலையில் துன்பம் வந்தாலேபோதும் அவன் உடைந்தே போகின்றான். தொடர்ந்தும் கஷ்டங்களைச் சந்தித்தவன் கூடச்சற்று இளைப்பாறுதல் பெறுவதுபோல் ஏதாவது நல்ல விஷயங்கள் நடந்தாலே போதும் தன்னையே மறந்துபோய் விடுகின்றான்.

மனிதன் தன்னை உணர்ந்து ஆன்ம வைராக்கியத்தில் நிலைபெற்றால் அவனை எந்த சக்தியாலும் அசைத்திட இயலாது. தனக்குள் களிப்பினை ஏற்படுத்தாதவன் புற உலகில் இருந்து தேடும் சலசலப் பான தோற்றங்களில் நிரந்தர அமைதியைக்கண்டு விட முடியாது.





"உங்களை நீங்கள் சந்தோஷ மூட்டுங்கள்" அதற்காக எல்லா மனித ஜீவன்கள், சுற்றுப்புறத்தில் உங்களை நம்பி வாழும் மிருகங்கள், ஊர்வன. பறப்பன எல்லாவற்றையும், ஏற்றுக்கொண்டு அன்பை வாரி வழங்குங்கள். அப்புறம் என்ன சந்தோஷங்கள் உங்களைத் திக்குமுக்காடவைக்கும்.

ஒரு சிறு பருக்கை உணவு கீழே சிந்தினால் அது எறும்புகளுக்குப் போய்ச்சேரும். மிகுதி உணவைக் காக்கைக்கும், குருவிக்கும் கொடுங்கள். பச்சை இலைகளைப், புற்களை, பசு, மாடு ஆடுகளுக்கு வழங்கு ங்கள். இன்பம் உங்களுக்குள் சுரக்கும். தாராளமாக அனுப வியுங்கள்.

நீங்கள் விரும்பாத விஷயங்கள் உங்களைச் சுற்றி நடந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஆனால் அவை பொது நீதிக்குப் புறம்பானதாக இருந்தால் தீரமுடன் போராடுங்கள். விரும்பாத விஷயங்களுக்கு நீங்கள் பயந்தால் அது உங்களைப் பலவந்தமாகக் கட்டியணைத்து முத்தமிடும். நீங்கள் எழுந்து நின்றால் விட்டோடிவிடும், இன்றேல் காலடியில் வீழ்ந்து மண்டியிடும்.

எதிர்பாராத துன்ப நிகழ்வுகளை ஏற்றேயாகவேண்டும். அதன்பின் அதற்கு மாற்று வழியைத்தேட வேண்டும். எமக்கு வேண்டப்பட்டவர்கள் மரணமடைந்தால் என்ன செய்வது? மரணத்தை நாம் தடுக்க முடியுமா? எவர் மரணத்தோடும் உங்கள் மனதை மடிந்து போகச்செய்யாதீர்கள்!



RangaRakes Tamilnavarasam.com

எமக்குப் பிடிக்காமலே ஒரு திருமணம் நடந்து முடிகின்றது. "எனக்கு இதில் இஷ்டமில்லை" என்றுசொல்லி திருமணமானவர்களின் கரங்களைப்பிரிக்க எத்தனிக்க லாமா? சில வேளை எங்களுக்குப் பிடித்தவைகூட பல தவறாக அமைந்து விடலாம். எங்கள் கூற்று எங்களுடையது அதுவே சரி என்றும், அல்லது பிழை என்றும் முடிவு செய்ய வேண்டியது "காலம்" தான். நாம் மட்டுமல்ல பிறர் கூற்றுக்களும் சரியாக அமையலாம். அத்துடன் "காலம்" தான்... பல முடிவுகளை அனைவருக்கும் தருகின்றது. விதண்டாவாதத்துடன் நடந்து கொள்வது, குழப்பத்தை உள்ளத்தில் ஏற்றும். இஷ்டத்திற்கு நாம் வாழந்தால் கஷ்டம் தான்.

நாம் எல்லோருமே உலகியல் யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளவேண்டும். இந்தக் காலத்து இளைஞர்களின் மனோ இயல்பு புரியாமல் இன்னமும் வயது முதிர்ந்தவர்கள் தங்கள் வயதுடன் அவர்களை இணைத்து ஒப்பீடு செய்ய முடியுமா?

"நான் இப்படியாக இருக்கின்றேன் என்னைப்போல் நீயும் இருந்தால் என்ன" என்று, சின்னஞ் சிறுவனுடன் தர்க்கம் செய்யலாமா? நல்ல விஷயங்களை ஏற்றுக் கொள்ளும்படி பேசுவதே புத்திசாலித்தனமானது. அவை களை எடுத்துச் சொல்லும்போது, நல்ல விடயத்திலேயே வெறுப்பு ஏற்படும்படி சொல்ல வேண்டாம். சொல்லும் விதத்திலேயே கருத்துக்கள் உட்புகும்





பக்குவ நிலையில்லாத முதுமையினால் ஏது பயன்? வயது கூடிய முதுமையை நாம் ஒரு உயர் தகைமையாகக் கொள்ள வேண்டும். நீண்ட காலம் வாழ ஆசைப்படும் மனிதர்கள், கிழவன், கிழவி என்று யாராவது சொன்னால் கோபம் கொள்ளக்கூடாது. பலருக்குத் தமது முதுமையைச் சுட்டிக்காட்டினால் கோபம் வருகின்றது. ஆனால் தமது அனுபவத்தை வயதை மட்டும் மற்றவர்கள் கௌரவித்தே யாக வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள்.

அத்துடன், நீண்ட காலம் வாழ விரும்புபவர்கள் கிழவன், கிழவியாக வர விரும்புவதுமில்லை, என்றும் இளவயதுடனேயே இருக்கப் பிரியப்படுகின்றார்கள். வயதைக் குறைத்தே சொல்லிவிடும் பலரை நீங்கள் பார்த்தி ருப்பீர்கள்.

எந்த வயதிலும் மனிதன் சந்தோஷமாக நிறைவுடன் வாழ முடியும் தங்கள் உடல் இயலாமை குறித்து, தங்கள் மீதே வெறுப்பு கொள்ளுதலை விடுத்து, தங்கள் நெஞ்சத் தை தளர்ச்சியடையாது வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் தேக நிலை பாதிப்படைந்தால் மன இயல்பும் பாதிப்படைவது இயல்பு. எனவே தமது வயதுக்கு உகந்த வண்ணம் தங்கள் தேகத்தை வைத்துக்கொள்ள சில கட்டுப்பாடுகள் வைத்தும் அதீத ஆசைகளை விட்டொழித்தே யாக வேண்டும். இவை யெல்லாம் சிரமமான காரியங் கள் என எண்ணற்க!



RangaRakes

Tamilnavarasam.com

இயற்கையாகவே இறைவன் வயது ஏற, ஏற பக்குவ நிலையைப் படிப்படியாக வழங்கிக்கொண்டுதான் இருக்கின்றான். வாலிபவயது எண்ணங்கள் பராயம்முதிர்ந்த பின்னர் வேறுவிதமாக அமைகின்றன. அப்போது இறை நாட்டம், பக்தி, அமைதி ஏற்படுவது இயற்கை. இந்த நல் இயல்புகளை மீறும் முதியவர்களை என்ன என்பது? தங்கள் வாழ்க்கைக்கான அமைதியைத்தேட அவர்கள் முனையாத வரை அவர்களே தமது சுகானுபவங்களை தகர்த்தவர்களாவர். அமைதி, சாந்தம், கட்டுப்பாட்டை, விஸ்தாரமாக்கி, புதிய இளைய உலகத்து மாந்தர்க்கு, புத்துணர்வு ஊட்டும் பணியில் முதியோர் ஈடுபட்டால், இன்ப வாழ்வு ஒவ்வொருவர் இல்லத்திலும் அரசோச்சுமல்லவா?

தினம் தோறும் அறுசுவை உண்டு வருபவன், மிக எளிமையான உணவில் இருக்கும் சுவையை என்னவென்றே தெரியாதவனாகின்றான். காலப்போக்கில் நன்றாக, உணவு உண்டு களித்தவன்கூட அந்த வாழ்க்கையில் கூடச் சலிப்பு ஏற்பட லாம்.

என்றுமே நிரந்தரமான இன்பம் எதுவெனத் தேடிப் பிடிக்க மனிதன் தயங்குகின்றான். எது சுலபமாகக் கிடைக்கின்றதோ அதைச் சிக்கெனப் பிடிக்கின்றான். மேலும் யாராவது ஒருவர் அனுபவிக்கும், அற்பமான சுகங்கள் எல்லாமே தனக்குக் கிடைத்ததை விட மேலானது என எண்ணுகின்றான். இந்த நிலையில் உண்மையான, நிரந்த சுகங்களை எங்கே தேடுவது? "எனக்கு மட்டும் ஏன் துன்பங்





கள் துரத்துகின்றது" என்று அடிக்கடி பலர் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள்.. முதியவர் ஒருவர் சொன்னார் "எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பிள்ளைகளை வளர்த்தேன். இப்போது வயது வந்த பெண் பிள்ளைகளுக்குத் தக்கபடி திருமணம் செய்து வைக்க வேண்டும். தொடரும், பிரச்சனைகளை எவ்வாறு சமாளிப்பேன்", என்று சலிப்புடன் கூறிக் கொண்டார்.

ஒருவரது பிரச்சனைகளை வெளியில் இருந்து பார்த்து விமர்சனம் செய்வதே எமக்குப் பழக்கமாகிவிட்டது. ஒருவர் கஷ்டம் அவருக்குத்தான் புரியும் உண்மைதான். குடும்பத்தைச் சுமக்கும் குடும்பஸ்தரின் கஷ்டமான பிரச்சினை எவ்வளவு வியாபகமானது?

வாழ்க்கையை ஒருவன் சுவைப்பதற்குக்கூட அவன் துன்பங்களுடன் சீவிக்க வேண்டியிருக்கின்றது.

மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ள பலர் சவால்களை சமாளித்து வாழ்ந்தமையால் கடைசிக்காலத்தில் களிப்புடன் வாழ்ந்து வருகின்றாரகள். மேலும் ஒருவன் பட்ட சிரமங்களின் பயன் அவன் இறந்து போனபின் அவனது வம்சத்தினால் அனுபவிக்கப்படுகின்றது. எனவே பட்டசிரமங்கள் என்றுமே சரிவைத்தராது, மாறாக வீறுடன் அவனை அவன் சந்ததியை வாழவைக்கும்.

நேர்மை நியாயத்தன்மையுடன் வாழ்ந்தவர்கள்



RangaRakes

Tamilnavarasam.com

தங்கள் கண் எதிரே தங்கள் குடும்பத்தின் மேன்மை க
அடையும் திருப்தி நிலை அவன் ஆன்மா காணும் இ
நிலைதான். ஒரு கணப்பொழுதிலாவது "உண்மையா
சந்தோஷம் என்பது "வாழ்ந்த வாழ்வில் சத்தியம் தூ
யுடன் வாழ்ந்த அந்தப்பொழுதுகள் தான்". இந்த
வினாடிகளே தொடர்ந்தும் அறவாழ்வில் ஒருவரை இட்
செல்கின்றது. நல்நெறியுடன் வாழ்ந்தமையினால் பெ
மகிழ்ச்சியை அனுபவித்த எவருமே தீய வழிக்குச் சென்
ஒரு பொழுதும் நாடமாட்டார்கள்.

எல்லோருக்குமே "காலங்கள்" பொதுவானவை
காலத்தைத் தனக்காகப்பயன்படுத்தாமலும் மற்றவர்க
உரிய முறையில் காலத்தைப் பயன்படுத்துவதைத் தடுப்
போல். கயமைத்தனம் வேறில்லை. தனது உயிரைவி
கழிக்கின்ற காலத்தின் பெறுமதி உயர்ந்ததே. நீண்ட கா
வாழ்ந்து வருவது எவ்வளவு கடினமானது என்கின்றே
ஆமையும் யானையும் திமிங்கிலங்களும் நீண்ட கா
வாழ்கின்றன. அவைகள் தங்கள் வாழ்நாட்களில் தங்
இனத்திற்குரிய இயல்புப்படி வாழ்ந்து மடிகின்றன. எ
உயிரினங்களுமே தேவையின்றி உருவாக்கப்பட்டதல்

மனிதனுக்குரிய இயல்பு என்ன என்று உணரா
வாழ முடியுமா? அடிமையாக வாழ்வதற்கே சிலர் மன
வந்து முன்வருகின்றார்கள். எஜமானாக வாழ்வதை
இந்த அடிமை வாழ்வே பரவாயில்லை என்று கருதி வா
ன்றார்கள். "நிஜமான நிலையான வாழ்வு" என்பது தன்





தான்கட்டி ஆளுவது என்பதாகும். தன்னை உணர்ந்து, தன் உணர்வுகளைச் சீராக்கி, ஒளியூட்டினால் எவர்க்கும் கிட்டாத பெரும் பேறு கிடைத்து விடும். வெளிப்பூச்சு ஆடம்பர வாழ்வு கூட ஒரு அடாவடித்தனமான கோமாளிக் கூத்துத் தான் உணர்வோம்!

"கஞ்சியைக் குடித்தாலும் காந்தர்வன் போல் வாழு" இந்த உல்லாசமான களிப்புநிலை நடிப்பாக அமைதல் கூடாது. இந்த வாழ்வில் நான் நிம்மதியாக இருக்கின்றேன். என உளப்பூர்வமாக உணர்ந்து, எம்மை நாமே நேசித்தால் வேறு சந்தோஷம் இல்லை. இதுவே நிரந்தரமான இன்பம் என்பதில் ஐயமும் இல்லை.

- சலனங்கள், சபலங்களைச் சிரசில் ஏற்றாமலும், வரட்டுக் கௌரவம், விதண்டாவாதத்தைப் பேசாமலும் இருந்து பாருங்கள். சுகம் தெரியும்.
- உங்கள் கொள்கைகளைப் பிடிக்காதவர்களுடன் வாதம் செய்யாதீர்கள்.
- பிடிக்காத பேச்சைக் கேட்க நேர்ந்தால், அந்த இடத்தை விட்டு விலகி விடுங்கள்.
- உங்களை மதிக்காத இடத்தில் கால் பதிக்காதீர்கள். பெரும் சபையில் முதல் ஆசனத்தில் இடம் தேடாதீர்கள்.



RangaRakes Tamilnavarasam.com

- கொடுத்ததைச் சொல்ல வேண்டாம். கொடுக் இயலாத விட்டாலும் நல்ல வார்த்தைகளைத் தொடுத் வாழ்த்துங்கள்.
- அடுத்தவன் வளர்ந்தால் ஆசீர்வதியுங்கள். உங்களை இறைவன் பிறரிடம் நீங்கள் யாசிக்க முடியா செல்வந்தனாக்குவான்.

என்றும் களிப்புடன் வாழ்ந்து கொள்ள எத்தனைே உபாயங்கள், மார்க்கங்கள் இருக்கின்றன. ஆனால் நாமே கிடைக்கும் சொற்ப சந்தோஷங்களுடன் இருக்கு வேலைகளை மறக்கின்றோம். சந்தோஷத்தினால் அதன் லயிப்பினால் களைத்து மீண்டும் அதிலிருந்து அடுத் பணிக்குச் செல்லாமையினால் தொடர்ந்தும் நிரந்த அமைதி ஆனந்தத்தை அடைவதில் உணர்வு அற்றவர்க கின்றோம்.

திருவிழாவிற்குச் செல்கின்றோம். விடியவிடிய ஒரே அமர்க்களம். அந்தக் கேளிக்கையுடன் புலன்கள் செல் கின்றன. அதே சமயம் கோவில்களில் சென்றும் வழிபாடு செய்தலை பலர் மறந்தும் போகின்றார்கள்.சரி விழாமுடிந்து வீடு சென்றவர்கள். அடுத்த நாள்பூராவும் தூங்கி வழிகின் றார்கள். புது மனிதனாக மீண்டும் இயங்க மறுத்து விடுகின் றார்கள். முக்கிய அலுவல்களைத் தாமாகவே முடக்குகின் றார்கள். இதுதான் சோம்பேறிச்சீவியத்தில் நடந்து கொண்டிருக்கும் மனிதப் பணியாகிவிட்டது. இவை யெல்லாம் சின்னச் சமாச்சாரங்களே அல்ல. எம்மை நாம் கீழே தள்ளும் விவகாரம்!





எந்த நிலைவரினும் அந்த நிலையுடன் மட்டும் புகுந்து விடாது துன்பத்தோடு துன்பமாய் சங்கமிப்பதும் இன்பமே கதியென செய்யவுள்ள கடமைகளை மறப்பதும், நிரந்தர நிம்மதியான வாழ்விற்கான வழியேயல்ல. உணர்க!

"கடமை செய்தலே வரம். அதுவே தவமும் கூட". சிலர் ஒழுங்காக நேர்மையாக நாலுகாசு சம்பாதித்து நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள். சிலருக்கு இது பொறுக்காது. சில ஆசாமிகள் வேண்டுமென்றே வந்து அவருக்குத் தெரியாத தொழிலில் ஆசை காட்டுவார்கள். இவரும் இவர்கள் பேச்சை நம்பி தெரியாத தொழிலில் இறங்கி முடிவில் எல்லாவற்றையும் இழந்து நடுத்தெரு விற்கே வந்து விடுவார்.

ஒருவருமே தங்களுக்குரிய பிரதான தொழிலை எக்காரணம் கொண்டும் கைவிட்டு விடக்கூடாது. புதிய தொழில்களை ஆரம்பித்தாலும்கூடத் தம்மை இதுவரை காலமும் காப்பாற்றிய மூலாதாரத் தொழிலை விட்டு விடுவது தமது வாழ்வின் மூலவேரையே கெடுத்தமாதிரித் தான் முடியும்.

வேகத்துடன் செயல்படுகின்றேன். என்று விவேகத் தைக் கைவிட்டு செயல்பட்டால் சோகத்துடன் வாழவேண்டிய நிர்ப்பந்தமே ஏற்பட்டுவிடும். தன்னை நம்பாமல் பிறர் விவேகத்தை சாதுர்யத்தை மட்டுமே நம்பி நாம் வாழ்ந்து விடமுடியுமா?



RangaRakes
Tamilnavarasam.com

"நான் யார்" என்று யாராவது சொல்லித்தான் தெ வேண்டியுள்ளது. பலருக்குத்தங்கள் பெருமை அருமைகளே புரியாமல் போய்விட்டது. "நீயார்" என்று கேட்டால் "என்னை அறிந்து என்ன ஆகப்போகின்றது" என்று கேட்பவர்கள் தா இருக்கின்றார்கள்.

தன்னை உணராமல் தன் சக்தியை அதன் செயல் திறனை உணராமல் இருக்கலாமா? எங்கள் வாழ்வின் நலன் எங்களால்தான் தீர்மானிக்கப்பட வேண்டும். அதுவே நித்ய சந்தோஷங்களுக்குச் சொந்தக்காரராக எங்களை அமைக்கும் அறிக!.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
17.07.2008







# பெண்

மனித குலத்தைத் தன்கருவிலே உருவாக்கி அதனைப் போஷித்துத் தன்னை வருத்தி அவனிக்கு அளித்திடும் புனித தெய்வம் பெண். புதுப்புது ஜடப்பொருள்களைக் கண்டுபிடிப்பது பற்றிப் பெருமை பேசுகின்றோம். அறிவும், உணர்வுமிக்க உயிர்களைப் படைக்க, இறைவன் தனது கருமத்தைப் பெண்மூலம் செய்வித்தபடியே இருக்கின்றான். மென்மையான, குளுமையான, மெல்லிய பூக்களாக இருக்கும் இவள், தீமைகளைக் கண்டு பொங்கும் போது அனல் கக்கும் எரிமலை ஆகக் குமுறுகின்றாள். பெண்களின் நியாயமான கோபம் அகங்காரம் அல்ல. மனத்திண்மையுள்ள மாதரசிகள் இந்த மேதினிக்கு ஆதாரம்.

பெண் மனம் ஆழமானது, என்பார்கள். அவள் அன்பு ஆழமானது, தியாக உணர்வு ஆழமானது. காதலும், பரிவும், பாசமும் மிக, மிக ஆழமானது. தனது குடும்ப நலனிற்கும், சமூகத்திற்குமான இவள் நல்லியல்புகள் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இருப்பினும், பெண்ணை, வலிந்து இம்சைப் படுத்தினால் துரோகமிழைத்திட்டால், சீறிடும் புயலாவாள்.



RangaRakes
Tamilnavarasam.com

பெரும் அலையாய் கொதித்தெழுவாள். ஆழமான இவள் மனவலிமை முன் ஆழ்கடலும் பெரும்புயலும் அடங்கி மண்டியிடும். கருணையும், மன்னிக்கும் இயல்புமுடைய பெண்ணே, அநியாயங்களைக் கண்டால் வெகுண்டெழு வாள், சுட்டெரிப்பாள். இது பெண்ணின் இயல்பு இதனைத் தப்பு எனச் செப்ப முடியுமா?

ஒரு பெண்ணின் நியாயமான கோபத்தை அகங் காரம், அல்லது கர்வம் என்று சொல்ல முடியாது. மெல்லிய உணர்வுள்ள பூப்போன்ற பெண் உள்ளத்தினுள்ளேயும் உருகாத தன்மையுடைய பெரும் கற்பாறை போன்ற தன்மையும் உண்டு என்பதைப் பல உலக மகா காவியங் களே எடுத்தியம்புகின்றன. இது இவள் பலம், பலவீன மேயல்ல.

மனித குலத்தைத்தன் கருவில் உருவாக்கி அதனைப் போஷித்து அவனிற்கு அளித்திடும் புனித தெய்வம் இவளே!

புதுப்புது ஜடப்பொருட்களை கண்டுபிடித்து பெருமை பேசும் நவ உலகம் உயிருடனும், அறிவுடனுமான உணர்வு களுடன் இணைந்து மனிதப் பிறவியைச் சிருஷ்டிக்கும் பணியைச்செய்யும் பெண் எனும் இதன் மகத்துவத்தை என்ன என்று இயம்பிட இயலுமோ?

எனினும் பெண்களின் தியாகத்தை இவர்களின் சிரமங்களை இன்னமும் உலகம் உள்ளபடி முழுமையாக





உணர்கின்றதா? உடல் வலிமையும் மிடுக்கும், துடிதுடிப் பும் தன்னகத்தே கொண்டதால் ஆண் வர்க்கம் பெண்ணை அடிமை எனக் கருதுவதாகச் சொல்வார்கள். பண்டு தொட்டே உலகம் பெண்களை ஆராதித்துப் போற்றிக் கௌரவித்ததாகக் கூறப்பட்டாலும்கூட இவர்களை அடக்கி ஒடுக்கும் விஷயங்களில் அன்றும் இன்றும் புதிதாக என்ன மாற்றம் வந்துவிட்டது என்பதே கேள்விக்குறிதான்!

ஆண் ஆதிக்கப்போக்கு காலாதி காலமாக, சகலரின் மனதினுள்ளும் உறைந்து நிறைந்து அதன் வழியே அந்த குறுகிய சிந்தனையும், தேய்ந்தழிந்து போகாமல் தொடர்கின்றது. அதே சமயம் எல்லா ஆண்களுமே பெண்ணை அடிமை கொண்டதாகச் சொல்லக் கூடாது.

நாகரிகமான இந்த யுகத்தில் கூட பெண்கள், பெண் களின் உதவியுடனேயே அவமதிக்கப்படுகின்றார்கள். வெறும் காட்சிப் பொருளாகச் சித்தரிக்கப்படுகின்றார்கள். போகத்திற்குரியவளே இவள் என்கின்றமாதிரி, மேலைத் தேய நாடுகளுடன் இணைந்து நமது நாடுகளின் மக்களும் நடந்துகொள்வதும் வேதனையோ வேதனை!

தானே அடங்கிப்போக தானே வழி சமைக்கும் துர் பாக்கிய நிலைக்குள் தள்ளப்படுகின்றாள். வீட்டில் மாமி யாரின் அடாவடித்தனத்தில் முடங்கும் பெண். தானும் ஒரு மாமியாராக மாறியதும், தனது மாமியார் வழியில் செல்ல முற்படும் பெண்களும் உளர். மாமிமார்களால் துன்பகர



RangaRakes
Tamilnavarasam.com

மான அனுபவம் பெற்ற பலர் மருமகள்மார்களிடம் அன் பாராட்டி நடப்பதையும் காண்கின்றோம்.

குடும்பத்தில் ஒளியேற்றி, அருள்கூட்டும் மனி உருவிலான தெய்வங்கள் எம் கண் எதிரே புலப்படுகின்ற போதும் கண்டு கொள்ளாமல் பழமைவாதம்பேசி, இவர்க திறமைகளை முடக்குவது என்ன நியாயம்? ஆண்டவனை எல்லோரும், எளிதாகப்பார்க்க இயலாது எனவே தன் பிரதி நிதியாகத் தாயைப்படைத்தான் என்பது ஒரு அற்புதமா கூற்று ஆகும். தாய்க்குக் கௌரவம் கொடுக்கும் உலகம் அவள் வடிவில் எந்தப் பெண்ணைக் கண்டாலும், அதே மாதிரியான மதிப்பைக் கொடுப்பதில் என்ன குறைவு வந்துவிட்டது?

எல்லாப் பெண்களுமே அன்புக்கும், இரக்கத்திற் அடிமையானவர்களே. எனவே நாம் எத்தரத்தாரையும் நோக்கும் விதத்தில்தான் எல்லாமே இருக்கின்றது. களங்க மற்ற எண்ணத்துடன் பார்க்கும் எல்லோருமே தங்கள் எண்ணங்களூடாக மேலான அன்பினையே பெற்றுக் கொள்கின்றார்கள். அனுசரித்து நடப்பதில் ஆண்களைவிடப் பெண்கள் மேலானவர்களாகக் கருதப்படுவதுடன் தமக் குண்டான சின்னச் சந்தோஷங்களையும் கூடப்பகிர்ந்து கொள்வதில் பரோபகாரத் தன்மையுடன் வாழுகின்றார்கள்.

தாயின் மடியில் தவழ்ந்து காதலியின் வளைக் கரத்தினுள் சிறைப்பட்டும் சுகம் காணும் காதலன், காதல் போதையின் வேகத்தில் அழகான வரிகளை அற்புதமாகச்





சொல்லிக்கொள்வான். இந்த அன்பு என்றுமே நீடிக்க வேண்டுமல்லவா? ஆரம்பகாலத்தில் உன் கரம்கொடு! இந்த உலகையே உன் கையில் கொடுப்பேன் என்றும் பேசுபவன், அதன் பின்னர் இவன் செய்யும் செயல்கள் எல்லாமே நன்றாகவா இருக்கின்றது?

“சீதனம் கொண்டு வா” என்பான், “நான் கேட்க வில்லை என் அம்மா கேட்டார்” என்று அவள்மேல் பழி சொல்வான். சரி சீதனம் கொடுத்துத் திருமணமும் ஆச்சு, அப்புறம் நடப்பது தான் என்ன? இரண்டு மூன்று பிள்ளைகள் பிறக்கும். வீட்டில் பணப்பிரச்சனை, நோய், நொடிவந்து விட்டால், கணவன் மனைவியரிடையே சச்சரவும் அதைத் தொடர்ந்து மனைவியைத் துன்புறுத்துவதும் கவலை என் கின்ற சாக்கில் குடிப்பழக்கத்தில் அடிமையாகிக் கட்டின அன்பு மனைவியை எட்டி உதைத்துத் துரத்துதல் என்ப தெல்லாம், சில வீடுகளில் நடக்கும் நிகழ்வுகள்.

எல்லா வீடுகளிலும் இப்படியா நடக்கின்றது? இல்லை யே. ஆனால் எந்தத் துன்பம் வந்தாலும், அவைகளின் முடிவில் அல்லாடுவது பெண்கள் தான். பெரும் செல்வந்தர் வீடுகளிலும் சரி, ஏழை வீடுகளிலும் சரி, எளிதாகக் குற்றம் சுமப்பதற்கு ஏற்ற வாய்ப்பாகப் பெண்தான் அகப்பட்டுக் கொள்கின்றாள்.

ஆனால் இதே வேளை குடும்பத்திற்கு ஆகாத ஆண் களும், பெண்களும் இருக்கின்றார்கள். நாகரீக மோகமும்,



RangaRakes
Tamilnavarasam.com

தகாத நட்புகளால் கெட்டுச்சீரழியும் பெண்கள் பற்றிய கதைகளைக் கேட்டிருப்பீர்கள். கலாசாரசீரழிவுகள் எங்கு தான் நடப்பதில்லை? முன்னர் நாம் எதற்கெடுத் தாலும் மேலைத் தேய நாகரீகத்தையே குறைசொல்லிக் கொண்டிருப்போம். ஆனால் இன்று கீழைத்தேச நாடுகள் கூட தங்கள் பண்பாடுகளை மதிப்பதாகத் தெரியவில்லை.

நடை, உடை, பாவனையில் இன்று மேற்கத்திய தேசத்தவர்கள் வெட்கப்படுமளவிற்கு ஆடைகளை உடுத்தியும் உடுக்காமலும், திரிகின்றார்கள். தமிழ்த் திரைப்படங்களைக் குடும்பத்தோடு பார்க்க முடியவில்லை. அரைகுறை ஆடையுடன் நடனங்களும், ஆபாசப்பாடல் வரிகளும் கேட்கச் சகிக்காது விடினும், அதனையே ரசனையுடன் பாடல் மெட்டுகளுக்காகக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர் இது என்ன கொடுமை ஐயா? மகளிர் அமைப்புக்கள் இந்தக் கூத்துகள் பற்றிக் கண்டனம் தெரிவித்தும்கூட செவிடன் காதில் ஊதிய சங்குபோல் நடக்கின்றவைகளைத் தடுக்க இயலாது உள்ளது.

பெண்களைக்காட்சிப் பொருளாகக்காட்டும் அவலம் எப்போது தீரும்? முச்சந்தியில் புரட்டிப்பார்த்தால் தினசரி, சஞ்சிகைகளில் நூல்களில், சவர்க்காரஉறைகள், வீசி எறியப்படும் விளம்பரத்துண்டுகள் என எல்லா இடத்திலும் பெண்களின் உருவங்களை அப்பட்டமாக ஆபாசமாகச் சித்தரிப்பதைத் தடுக்காமல் ரசிப்பது என்ன கேடுகெட்ட வக்கிரமான ரசனை ஐயா! இதைத் தவிர கணினி ஊடகங்





களில் இந்த ஆபாசங்களை ரசிப்பதற்கென்றே ஒரு கூட்டம் வயது வித்தியாசமின்றி உட்கார்ந்து பார்த்துக் காலத்தை யோட்டுகின்றது. பணம் புரட்டுவதற்காகக் கையாளப்படும் இத்தகைய அடாத வழிமுறைகள் பெண்களை அவமதித்து களங்கம் ஏற்படுத்துவதாக அமைந்துவிடாதா?

குடும்பத்தைக் கட்டமைத்து ஒழுக்கமுள்ள சமூகத்தை ஒரு தாய் ஏற்படுத்திக் கொள்கின்றாள். அவளது அரவணைப்பில், பாசத்தில் முழுகுடும்பமே சார்ந்து தங்கியுள்ளது. கணவன் என்னதான் உழைத்தாலும், மனைவியின் சிக்கனமான, கட்டுப்பாடான வழி முறைகளால் தான், குடும்பம் சந்தோ ஷமாக வாழ முடியும். வீட்டில் என்ன செலவு நடக்கின்றது என்று தெரியாமலேயே பல குடும்பத் தலைவர்கள் இருக்கின்றனர். வீண் ஆடம்பரத்திற்கு அடிமையாகாமல், பிள்ளைகளின் கல்வி, உணவிற்கு முன்னுரிமையளிக்கும் விடயங்களில் மனைவியின் கரிசனை உணர்வு அலாதியானது.

ஒரு பெண்ணிற்கு அவள் செய்யும் வீட்டு வேலைகளுக்காகச் சம்பளம் கொடுத்தால் கணவனின் மாதாந்தச் சம்பளத்திற்கு மேல் பெறுமானமான வேலைகளை அவள் செய்கின்றாள். அதே சமயம் பல மகளிர் இன்று வேலைகளுக்கும் சென்று சம்பாதித்துக் குடும்ப வேலைகளையும் கவனிப்பதால் இவர்களது கடமைப்பளு, மேலான தியாக உணர்வை நாம் சற்றுச் சிந்தித்தேயாக வேண்டும். இத்தனையும் செய்யும் பத்தினித் தெய்வங்களைப் பாரா



RangaRakes

Tamilnavarasam.com

முகமாக அவள் வலிமையில் குறைந்தவள், தங்களி லு கீழான அறிவுத்திறன் கொண்டவள் என்று ஒருவர் வீண்வீ சொல்வது சரியானது தானா?

மனிதர்கள் எவர்க்குமேயான பொதுவான பலவீனங்களான கோபம், குரோதம் சந்தேகம் எல்லாம் உண்டு. தனித்து இவை பெண்களுக்கு மட்டுமானது அல்ல. ஆனால் "சந்தேகம்" என்கின்ற விஷயத்தில் அது பெண்களுக்கே உரித்தானது என்கின்றார்கள். ஒருவர் மீது அதீதமான அன்பு பரிணமித்துவிட்டால் கூடவே சந்தேகமும் வந்து விடுகின்றது. கணவன் அல்லது காதலன் என்பவர்கள் விடயத்தில் தன்னை மட்டுமே நேயம் கொள்ள வேண்டும் என்று பிடிவாதமான போக்கில் மனைவியோ, காதலியோ இருப்பது புதுமையல்ல. ஆனால் இத்தகைய போக்கினால் மனம் குமுறுவது குமைவது தவிர்க்க முடியாத துன்ப அனுபவங்களாகிவிட்டன.

தவறுகளை இருசாராரும் ஏற்கும் பக்குவம் ஏற்பட்டாலன்றி குடும்பத்தில் சந்தோஷம் உருவாகி விடமாட்டாது.

எவரையும் எவரும் அடக்கியாள வேண்டும் என்கின்ற மேலாண்மை எண்ணம் வந்துவிட்டால் அமைதியான வாழ்க்கை வந்துவிடாது. என்றைக்குமே மற்றவரை எப்படி அடக்கி, ஒடுக்கலாம் என்கின்ற சிந்தனை மட்டும் மனதில் ஒட்டிக்கொண்டால், குடும்ப மகிழ்வுணர்வை வெட்டிக் கொண்டதாகவே அமைந்து விடும்.





இன்னமும் கூடப் பெண்கள் தாங்கள் ஒரு அடிமை என்பது போல் சுயபிரகடனத்தை தமக்குள் புதைத்து வைத்துச் செயல்படுகின்றார்கள். எதற்கெடுத்தாலும் அச்ச உணர்வும் சுயமாகச் சிந்தித்துச் செயல்படாமல், சுயமான தீர்மானம் எடுக்கின்ற எண்ணமேயன்றி வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

தனது வலிமையே இன்னதென்று அறியாத துர்ப்பாக்கிய நிலையில் பெண்கள் இருப்பது பல ஆண்களுக்கு சாதகமாகிவிட்டது. இரக்கப்படுதலும் விட்டுக் கொடுத்தலும் இயல்பான பண்பு என்பதால் அதுவே இவளது பலவீனம் எனக்கருதுதல் தகாது.

பெண்களால் தனித்து வாழ இயலாது என்கின்ற தவறான கருதுகோள்களால், சமூகநியதிகளால், அவர்கள் தற்துணிவையும், பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்கும் திறனையும் வளர்க்காமலேயே இருந்து விடுகின்றாள். சமூகம் புறக்கணித்து விடும் என்று பயமுறுத்தப்பட்டு, "ஒருவனுக்கு அடங்குவதே அழகு" என்கின்றபடி பெண் தன் மன இயல்பை உருவாக்கவேண்டும் என்பதிலும் சமூகம் குறியாக இருப்பது வெளிப்படையான உண்மைகளே. ஆண், பெண் இருசாராருமே தனித்து இயங்கலாம் என்றால் உலகம் இயங்குமா என்ன?

பரஸ்பரம் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து வாழு என்று பெயரளவில் சொல்லிச் செயலளவில் "எதற்குமே நீ



RangaRakes
Tamilnavarasam.com

அடங்கிப் போ, அவன் என்ன சொன்னாலும் பொறுத்து நட என்று போதனை செய்கின்றார்கள். "பொறுமை" என்ப நற்பண்பு. இது பெண்களுக்கு மட்டும் தானா? பெண்களு கான உரிமை இது விடயத்தில் வேறுவிதமாக நோக்க படுகின்றது. பொறுமை பற்றிப் பேசியே அவளைப் பேச மடந்தையாக்கி விடுகின் றார்களே!

மனைவியின் அன்புக்குள் ஆட்பட்டவனைக் கூட அவன் பெண்டாட்டிதாசன் என்கின்றார்கள்.உலகத் ஆண்ட மாமன்னர்கள்கூட மனைவியின் ஆகர்ஷித் அன்பினுள் அமிழ்ந்துதான் போனார்கள். கணவனி பலவீனமறிந்து அதனையே ஆயுதமாகப் பாவித் தன்னிஷ்டப்படி நடந்துகொள்வதே தவறு ஒழிய அன்புட இல்லறம் நடாத்தும் தம்பதியினரைக் காழ்ப்புணர்வுட நிந்திப்பது கேவலமானது.

மென்மை உணர்வுடன் தன் உள்ளக்கிடக்கைகள வெளிப்படுத்தும் தன்மைகள் பனித்துகள்களைவி குளுமையாகவும் மெல்லிய புஷ்பங்களைவிட ஸ்பரிப்பதி சுகானுபவம் கூட்டுவதாயும் இருக்கும். சின்னஞ் சிறுகு பெண்குழந்தைகளில் இருந்து பாட்டி வரை குதூகலமாக சிரிப்பதும், நாணப்படுவதைப் பார்க்கும் போது மெல்லி மழைச் சிதறல்கள் படுமாற்போல் சந்தோஷத்தையுண் பண்ணும் அன்றோ!

அமுக்கப்படும் உணர்வுடன் எந்த ஒருவராலும்





சுதந்திரமாகச் சீவிக்க முடியுமா? சிந்திக்கத்தான் அவகாசம் கிட்டுமா? பெண்களுக்கான சுதந்திரம் வழங்கப்படவில்லை என்கின்றார்கள். சுதந்திரம் என்பது என்ன கடைகளில் வாங்கும் பண்டமா? உரிமை சுதந்திரம் என்பதெல்லாம் ஒருவர் கொடுத்து இன்னொருவர் பெறுவது அல்ல அது யாசகம். இந்த சுதந்திரம், உரிமை ஒருவர்க்கான வாழ் வாதாரம்.

ஆண், பெண் என்பது இருவேறு ஜாதியுமல்ல, இரண்டுமே இணைந்து நிற்கும் ஜீவனுள்ள பொக்கிஷங்கள். உலகம் இந்த இருவரின் அந்நியோன்யமான இணைப்பு களால் உருவாகின்றது. தாய், சகோதரி, மைத்துனி எல்லாமே பெண்மையின் இனிய வடிவங்கள் இவர்களின் அன்பு இன்றி எந்த ஆண்மகனும் நிம்மதியாக வாழ்ந்து விட இயலுமா?

ஒழுக்கம் என்கின்ற "பதம்" பொதுவான மனித நடத் தையைக் குறிப்பதாகும். இந்த ஒழுக்கத்தினுள்ளே "கற்புநெறி"யும் அடங்குகின்றது. கற்பு பெண்களுக்கு மட்டுமே என்று சொல்லி ஆண்வர்க்கம் எப்படியும் வாழ லாம், என்பதற்கான அனுமதியைத் தானாகவே பிரகடனப் படுத்த முடியாது! ஆண், பெண் இருசாராருக் குமே ஒழுக்கநெறிகள் மேலானவை கற்பு என்ற சொல்லி னுள் வைத்துப் பெண்ணைச் சிறைசெய்வதுபோல் அடக்கிப் பேசுவதும் தாங்கள் சகலத்துக்குமே அப்பாற்பட்ட நீதியை வழங்குதற்கும், உரிமைகளைக் கொடுப்பவற்கும் முழு அதிகாரம் கொண்டவர்களாக, ஆண்கள் தம்மை கருதுவது



RangaRakes Tamilnavarasam.com

தவறான கொள்கைகளைத் தம்வசம் கைப்பற்றிக்கொள்வது போன்றதேயாம்.

தாய் அன்பைப் பெரிதென மதிப்பவர்களும், காதலிக்காக உயிரையும் கொடுப்பேன் என்று சொல்பவர்களும் கூட பெண்களுக்கான அந்தஸ்தை, அவர்களுக்கான கௌரவத்தை வழங்க மறுப்பதுமேன்? புரியவில்லை ஐயா!

மென்மையான குளுமையான, மெல்லியபூக்களை வெப்ப பூக்களாக, அனல் துண்டங்களாக, மாற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பெண்களை பேதை என் சொல்லாமல் "சாதனை செய்யப்பிறந்தவர்கள்" என் உளமாரச்சொன்னால் ஆண்களின் சுயகௌரவ பாதிக்கப்பட்டு விடுவதில்லை.

வெளிநாடுகள் என்றில்லாமல் உலகம் பூராவுே பெண்கள் எல்லாத்துறைகளிலும் முன்னேறிவிட்டார்கள் தலைமைத்துவ வேலைகளையும் சாதுர்யமாகச் செ வருகின்றார்கள். அரசியல், விஞ்ஞான, சமய சமூக, ந துறையிலும் ஆன்மீகப் பணிகளிலும் முன்னேற்றமா ஆக்கப்பணிகளினும் பெண்களுக்கான பங்களிப் மகத்தானது.

ஆனால், பெண்கள் தலைமைத்துவம் வகித்தநாடுக அல்லது சேவை நிறுவனங்களில்கூடப் பெண்களுக்கா கௌரவம் வழங்கப்படுகின்றதா? பெண் வர்க்கம் முழு துமே ஒரு கணப்பொழுது தங்கள் கடமைகளை நிறுத்





வைத்தால் முழு உலகுமே அஸ்தமித்து ஸ்தம்பித்துப் போய்விடும்.

"அம்மா" இன்றி வீட்டில் நல்லாட்சி நடக்குமா? பேச்சளவில் பெண்களைக் கிண்டலடித்தாலும் அவள் இன்றி எவரால் அன்பை அரவணைப்பைக் கண்டுகொள்ள முடியும்? தாயாய், தாரமாய், சகோதரியாய், மைத்துனியாய், மனம் விட்டுப்பேசும் சினேகிதியாய், இப்படிப் பல வடிவங்களில் எம்முன் நடமாடிக்கொண்டிருக்கும் அத்தனை பெண்களுமே உலகின் இன்ப துன்பங்களில் இணைந்து கொண்டு, அதேசமயம் தங்கள் குடும்ப மகிழ்ச்சி ஒன்றினையே குறியாகக்கொண்டு இயங்கும் "தியாக தீபங்கள்" என்பதை மனதிலேற்றுவீர்களாக!


குடும்ப மகிழ்வில் தான் குவலயத்தின் எழுச்சி தங்கியுள்ளது. வீட்டை மகிழ்விக்கும் பெண், உலக இயக்கத்திற்கான ஆரம்ப சுருதியுமாவாள். இவளிடம் இருந்து புறப்படும் வாழ்க்கையும், வாழ்வு அனுபவங்களும் எல்லோர் வாழ்விலும் இரண்டறக் கலந்து நிற்கும்.

"பெண்" என்பதை விலக்கி நின்று நோக்கிக் கற்பனை செய்து பார்த்தாலும் அது முட்டாள்தனமானதே! பெண்கள் வீட்டிற்கு மட்டுமல்ல, முழு உலகிற்குமே சக்தியூட்டுபவர்களுமாவார்கள்.

தினக்குரல் (ஞாயிறு மஞ்சரி) 16.06.2008



RangaRakes
Tamilnavarasam.com



# வேடதாரிகள்

வேடதாரிகள் கொடிய நோயிலும் மேலான வருத்தத்திற்க்குள்ளா தீயவர்களாவர். வேடதாரிகள் என்பது நடிகர்களைக் குறிப்பதல்ல பொய்மையான வேடம் பூண்டு நயவஞ்சகம் செய்யும் எத்தர்களேயா "பாவம் மலிந்தது இப்பூமி" என்று இந்த வேடதாரிகளே சொல்லி அ வேடிக்கை. நல்லவர்களையும், வல்லவர்களையும் இவர்கள் மடக்கி விந்தையான தந்திரவலையில் சிக்கவைத்து விடுகின்றார்கள். சூழ்நி சந்தர்ப்பங்கள் காரணமாக கல்வியறிவு பெற்றவர்கள், நல்லவர்கள் என கருதப்பட்டவர்களும் வஞ்சகநெஞ்சத்தினைக் கௌவ எண்ணுவ வேதனை. ஒருவரின் அழுகுரல் நடுவே ஆனந்த கீதம் இசைக்க இயலா வேடதாரிகள் கோடரிக் காம்புகள்.

வேடதாரிகளின் கபடம் புரியாதவரை இவர்க நடத்தைகள் சரியானதாகவே மக்களுக்குக் காட்டப்படும்.

இவர்களின் அழுங்குப்பிடிக்குள் வலுக்கட்டாயமா பிடிக்கப்படுவோர் கொடியநோயிலும் பார்க்க மேலா வருத்தத்திற்குள்ளாவராவர். இங்கு வேடதாரிகள் என கூறப்படுபவர்கள் நடிக்கும் நடிகர்களைப்பற்றிக் குறிப்பி சொல்லவில்லை.





வாழ்க்கையில் பொய்மை வேடம்பூண்டு நயவஞ்சகம் சுயநலத்தினையே குறிக்கோள்களாகக் கொண்டு வாழும் பயனற்ற எத்தர்களையே என்று அறிக!

"கலியுகத்தில் காண்பதெல்லாம் பொய்முகங்கள்" என்று விரக்தியுடன் இயம்பும் நல்லவர்களின் புலம்பல் மிகவும் துன்பகரமானது. எனினும் வேடதாரிகளாய் வேடம் போடுபவர்கள் கூட "பாவம் மலிந்து இப்பூமி" என்று அழுகின்ற விந்தையை என்ன என்பது?

நல்லவர்களையும் வல்லவர்களையும் மடக்கும் ஆற்றல் இவர்களுக்கு எப்படிக்கிட்டுகின்றது? எப்படியும் வாழ வேண்டும் என்கின்ற அதீத ஆவல்கள், பேராசைகள், குறுக்கு வழித் தந்திர உணர்வுகள் எப்படியெல்லாம் மாந்த ரில் சிலரை மாயமாய் ஆட்டுவிக்கின்றது தெரியுமா?

எல்லாவற்றையும் நம்பும் நல்லவர்களுக்கும், ஒரு சில விடயங்களில் மட்டுமே வல்லமை கொண்ட புத்திசாலிக ளுக்கும் கூடப் பரந்தவெளியில் உலவிக்கொண்டிருக்கின்ற பொய்மைகள் புலனுக்கு புரியாமலேயே போய்விடுகின்றது.

வீர விளையாட்டுக்கள் தேகபலம் எல்லாமே நிறைந்த ஒரு மனிதனை ஒரு சாதாரணமான புல்லினும் மெல்லிய ஒருவன் தந்திரத்தால் மடக்கிக் காலடிக்குள் கொண்டு வருவதே சகஜமான விஷயமாகிவிட்டது.



RangaRakes

Tamilnavarasam.com

சகல சாஸ்திரங்களையும் கற்ற அறிஞனை, வீண் குதர்க்கம் பேசுபவர்கள் பிறர் மெச்சக் கண்டபடி வினா எழுப்பி மடக்கிவிடுவது ஒரு புதுமையான விஷயமே அல்ல. இது இன்று உலகின் ஜதார்த்தமான சங்கதியாகிவிட்டது. என்ன செய்வது? ஆனால் இப்படியே நடிப்பவர்களை, ஏய்ப் பவர்களைப் புவனி பார்த்தபடியே சயனித்துக் கொண்டி ருப்பதா?

அழகிய வசியப்பேச்சுக்களும், அட்டகாசமான உறுதி மொழிகளும் கொண்டு, எதிரியை வீழ்த்துவது ஒரு அநாகரி கக்கலை. தீயவர்களில் சிலர் காரணமின்றி எளியவர் களையும், எதிரிகளைப்போல் பார்ப்பதுண்டு.

மக்களில் பலர் தெரிந்தும் கூட பொய்மைகளை நம்பு கின்றார்கள். தன்னை ஒருவன் ஏமாற்றுகின்றான் எனத் தெரிந்தும் வேறுவழியின்றி ஏமாற்றுபவர் சொல்படி ஆடுப வர்களை நீங்கள் கண்டு கொண்டதில்லையா?

கண்ணியமான தொனியில் மிரட்டுவது கூட கபட நாடகப் போக்குள்ளவர்களுக்குக் கைவந்த கலைதான்.

"இதோ பாருங்கள்.... நான் உங்களுக்காகத்தான் சொல்லுகின்றேன். எனக்கு இதில் ஒரு லாபமும் கிடையாது. ஏதோ எனக்குப் பட்டதைச் சொல்கின்றேன். பேசாமல் நான் சொன்னபடி நடவுங்கள் இல்லாவிட்டால் விடயம் விபரீதமாகிவிடும். அப்புறம் நான் ரொம்பவும்





கெட்டவனாகி விடுவேன்" மிகவும் கண்ணியமாகவே மிரட்டிக் காரிய மாற்றும் காருண்ணியமற்ற கசடர்களைத் திரைப்படங்களில் மட்டுமல்ல, நம்முன் வலம் வருகின்ற தெரிந்த முகங்களையும் நீங்கள் அறிந்திருக்கலாம்.

விளம்பரமும் பகட்டும் நிறைந்த இந்தப் பம்பர உலகம் அவசர கதியில் இயங்குவதால் யோசித்து முடிவு எடுக்க அவகாசம் இன்றித் திண்டாடுகின்றது. எதனையும் சுலபமாகச் சாதிக்க முயலுகின்றனர். இந்த எண்ணங்கள் வலுப்பெறுவதாலேயே புல்லுருவிகளின் பரிணாமம் விஸ்வரூபமாகி வருகின்றது.

எங்கே நமக்குச் சுலபமான வழி எனத் தேடு முன் னரே அழையா விருந்தாளிகளாக அறிமுகம் செய்யப் படுவர்கள் இந்த வேடதாரிகளேயாவர்.

அழையா விருந்தாளிகளாகச் சமூகங்களில் உள் நுழைபவர்கள் பின்னர் பங்காளிகளாகி அதன் பின்னர் மெல் லவே முழுமையாக அனைத்துத் தரப்பினர்களையும் தாமே உறிஞ்சி உள்வாங்கிச் சுவீகாரம் எடுத்துக் கொள்கின்றனர். இவர்களின் வருகை விதி அல்ல. நாமாகப் போட்ட வலை. எங்கள் மதியைப் பாவிக்காத காரணத்தினால் நாமாகப் போர்த்திக்கொண்ட "பழி" யே எனவும் கொள்ளலாம்.

"மந்திரி மகனுக்கே நான் வேலை வாங்கிக் கொடுக் கின்றேன். ஏன் சொல்லப்போனால் எனது ஆலோசனை இல்லாது போனால் இவர் எப்படி மந்திரி ஆவார்? அவருக்கு



RangaRakes
Tamilnavarasam.com

ஒரு காலம் அவ்வளவு தான் என்னை நம்புங்கள், இவர்க எல்லோரையும்விட உங்களுக்கு நான் நல்ல காட்டுகின்றேன்". என்று வாய் ஜம்பமாகப் பேசுபவர் தங்கள் சொந்த வாழ்க்கையில் என்ன சாதித்தார்கள் எ ஏன் ஏமாறுபவர்கள் சற்றும் புரிந்து கொள்ளாம இருக்கின்றார்களோ தெரியவில்லை.

இருப்பினும், நல்ல வசதியானவர்களும் நல் குடும்ப பாரம்பரியமும், கல்வியறிவும் உடையவர்கள் கூ சூழ்நிலை சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மனமாற்றம் கொள் ராகி வஞ்சக நெஞ்சத்தினராகி விடுவது வேதனை!

வெளி உலகில் நல்ல தோற்றத்தை எப்படி உ டாக்கிக் கொள்ள வேண்டும் என்கின்ற கலையினை புரிந்தாலே போதும், உலகம் பேசாமல் எல்லா நடத்தை களையுமே அங்கீகரித்துவிடும் என்கின்ற நோக்குக் கேவ மானது என ஏன் இவர்களுக்குப்படவில்லை?

உனது படிப்பு, உன் உழைப்பு, திறன் என்றென்று நல்லவையாகவே உனக்குள் உருவெடுத்தால், உன் எதற்காகவும் அற்பகாரியங்களுக்காக விற்க மாட்டாய் அல்லவோ? கீழ்த்தரமான தரங்குறைந்த செயல்கள் தன்னை, தனது ஆத்மாவை, அசூசைப்படுத்துகின்ற அதனை விற்று உழலுகின்ற கழிவான செயல் அன்றோ? தீமையாளர்கள் செய்யும் கயமைக்கு நியாயம் கோருப வர்கள் பொய்மையாளர்கள் சொல்லும் ஆதாரங்கள் வேதாளத்திடம் வேதம் கேட்பது போல தான்.





அத்தோடு இல்லாத பேய் ஒன்றிடம் மெய்ஞானம் கேட்கப் பிரியப்படும் ஆன்மாக்கள் உய்வது எப்போது என்றே கவலைப்படவும் வேண்டியுள்ளது.

காலத்திற்கொவ்வாத கருத்துக்களையும், புனை கதை களையும், திரிபுவாதங்களையும் முன் மொழிந்து அறிஞரா கக்காட்ட விழைபவர்களைக் கூடச் சிலவேளை உலகம் அங்கீகரித்தால், இதன் நிலைதான் என்ன ஐயா? மிகவும் ஜீரணிக்க முடியாத சங்கதி ஒன்று. நன்கு அறிமுகமில்லாத வரிடம் மாட்டிக்கொண்டு அவஸ்தைப்படும் வேதனையா ளர்களை விட நன்கு தெரிந்த நபர்களிடம் தம்மைச் சமர்ப் பணம் செய்து துவம்சமாக்கப்படும் அப்பாவிகளே இப்பா ரினில் அதிகம் என்பதை ஒத்துக்கொள்வீர்களா?

"அடடா இவன் இப்படிச் செய்துவிட்டானே எப்படி எப்படி நான் நம்பிக்கை வைத்திருந்தேனே. இப்படிச்செய்து விட்டானே....பாவி..." என்று துன்பக்குரல் கொடுக்கும் சாமான்யர்கள் எத்தனை பேர்?

இங்கு ஒன்றைச் சொல்லவேண்டும். ஏமாற்றப்படுப வர்களுள் எந்தப் பேதமும் இல்லை. சகல தரத்தவர்களுமே ஏமாற்றப்படும் விஷயங்களில் ஒன்றுபட்டுப் போய் விடுகின்றார்கள். எவ்வளவு படித்தாலும் பெரிய வர்க்கத்தினர் என்று பேசப்படுபவர்களும் கூட நன்கு தெரிந்த முகங்களா லேயே நாசமாக்கப்படுகின்றார்கள். இன்னும் ஒரு விடயம், இத்தகைய முகமூடியிலும்கூடப் பல ரகத்தினைச்சார்ந்



RangaRakes

Tamilnavarasam.com

தவர்கள் இருக்கின்றார்கள். எதிரில் இருப்பவன் உஷாராகி இத்தகையவர்களின் குட்டை உடைத்தால் உடனடியாகவே தடாலெனத்தரையில் விழுந்து மன்னிப்புக் கேட்பார்கள். ஆனால் தங்கள் கபட நாடகத்தினை வேறு வடிவத்தில் காட்ட ஆரம்பிப்பார்கள்.

இன்னும் ஒரு சாரார் தமது தவறுகளை ஒத்துக் கொள்ளவே மாட்டார்கள். பயமுறுத்தல் மூலம் தமது விடாப் பிடியான நடத்தைகளுக்கு ஆதாரம் கோர்ப்பார்கள்.

கெட்ட நோக்குடன் பக்குவமாகப் பேசுதல் கடிந்து பேசுதல், உறவுமுறைகொண்டாடுதல்,தம்மைப்பற்றிய தவறான சுயவிமர்சனங்கள் ஏனையவர்களை மட்டம் தட்டிப் பேசுதல் பிறரை மிதித்துத் தம்மை உயர்த்த எத்தனித்தல், கயமைவாதத்திற்கு வாய்மைச் சாயம் பூச எத்தனித்தல், சமயம், மொழி, பேதங்களை உருவாக்குதல், தெரியாத கருமங்களுள் உள்நுழைதல், மற்றவர்களைத் தூற்றினால் தான், தமது அந்தஸ்தை உயர்த்த முடியும் எனத் தப்பாக எண்ணிக்கொள்ளுதல் போன்ற குணாம்சங்களை இவர்கள் ஆபரணங்களாக அணிந்து கொண்டால் எவ்வண்ணம் சமூகத்திற்கான நற்பிரஜையாகத் தோற்றம் பெறமுடியும்? மேற்சொன்ன குணாதிசயங்களை சாதாரண மக்கள் புரிந்து கொள்வதுகூடக் கடினமாகவே இருக்கின்றது.

ஒரு காரியத்தினைக் கனகச்சிதமாகச்செய்து முடிக்கக் கையாளும் தந்திரோபாயங்கள் சொல்லும் தரமன்று.





நேரடியாகவே ஒருவரை அணுக முடியாது விட்டால் அணுகவேண்டியவர்களுக்கு வேண்டியவர் மூலம் அதாவது இரண்டாம் மூன்றாம் தரப்பினர் மூலம் ஏதோவழியில் கையைக், காலைப்பிடித்தோ, வேறு கீழ்த்தரமான வழிகளி னாலோ, காரியங்களைச் சாதிக்கும் போது நீதி நியாயங்கள் எங்கேபோய் ஒளிந்து கொண்டன என்று கேட்கத் தோன்றத் தானே செய்யும்?

பண்பாடு கலாசாரம் என்று சொல்லுகின்ற சகல உலக மக்களும் சட்டத்தினால் பிடிபடாத இத்தகைய மட்ட மானவர்களை இனம் காணுவது எப்போ? காணப்பட்ட தீயோரை மேன்மக்களாகக் காட்டி நிற்கும் இவர்களை தீண்டத்தகாத தகுதியுடையோர் பட்டியலில் இணைப்பது எப்போது?

உண்மைகளைக் காணவிழையும் நாம் உண்மைக் கான, உண்மையின் அழைப்புக் கிடைத்தும் துணிச்சல் இன்றி வாளாதிருந்து விடுகின்றோமே! வெட்கமாக இல்லையா?

நாமே எமக்கான குழியை வெட்டி விழுவதுதான் வழியா? விழி இருந்தும் பாதைதெரிந்தும் ஸ்தம்பிதமாக வெறும் கட்டைபோல் செயலற்று இருப்பது என்ன சாதுர்யம்? கீழ்நோக்கிலான பிரச்சனைகளைப் பிரசவிக்கும் பொல்லாதவர்க்கு வழிவிடல் இழிவான செயல் உணர்ந்து கொள்க! கபடதாரிகளின் கண்மூடித்தனமான சமூகத்தின்



RangaRakes

Tamilnavarasam.com

மீதான இந்தத்தாக்குதல்கள் சமூகத்தின் பலஹீனமா அனுசரணையுடனேயே நடக்கின்றது.

ஒருவரின் போலியான சமூக அந்தஸ்துக்களும், ப பலமும் மட்டுமே மற்றவர்களின் வாழ்வில் இடர் கே களாய் உருவாகக் கூடாது. பிறருக்குத் தீங்கு செய்யாமலு எண்ணாமலும் இருப்பதுதானே அறவாழ்வு ஆகும் மாற்றான் குரல்வளை நெரித்துச் சங்கீதம் கேட்க முடியா ஒருவன் அழுகுரல் நடுவே, ஆனந்த கீதம் இசைக்க இயலாது. “பொல்லாப்பு அற்ற வாழ்வு போலிகளுட சரணடையாது இருப்பதேயாம்”. தெரிந்து, உணர்ந் தெளிக!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
02-04-2006







# சோதனை

**சோதனைகளால் மனிதன் புதுவடிவம் பெறுகின்றான். சின்ன விடயங்களை எல்லாம் வென்றுகொண்டே வரும் போது படிப்படியாக எம்முன் தோன்றும் பெரிய தடைகளையே சுலபமாக வென்றுவிடும் மன உறுதியை நாம் பெற்றுவிடுவோம். எமது வெற்றிக்கான செயல் திறன்கள் வேறு எங்கும் உற்பத்தியாவதில்லை. அவை எம்முள் எம்முடன் கூடவே என்றுமே வியாபித்த வண்ணம் இருக்கின்றன. நாம் தான் அதனை உணர்ந்து எதிர்வரும் சோதனைகளில் வெற்றி கொள்ள வேண்டும். சோதனைகள் தான் நல்ல அனுபவங்களைப் படிப்பினைகளை உருவாக்கி எம்மை முழு மனிதனாக்குகின்றன.**

“சோதனை” என்றதுமே, அது எம்மைப் பாதிக்கச் செய்யும் ஒரு “காரணி”, எனப் பலரும் கருதுவதால் அது ஒரு வேதனை என மனதில் பதிந்துகொண்டு விடுகின் றார்கள்.

சோதனைகளைக் கடந்தால்தான் சாதனைகளைப் புரிந்து கொள்ளமுடியும் என்பதே பொது விதி. மேலும் சோதனைகள் மூலமே ஒருவன் தன் திறனை வலிமையைத்



RangaRakes Tamilnavarasam.com

தானே பரீட்சித்துப் பார்க்கும் நல்ல சந்தர்ப்பம் என ஏன் கருதக்கூடாது? புடம் போடுவதால் தங்கம் கெட்டுவிடாது. மீண்டும், மீண்டும் அது புதுப்பொலிவு பெறும் களிம்புகள் அகலும். தூய்மை துலங்கும்.

சோதனை என்றதுமே அது தாம் கற்றகல்வியைப் பரீட்சித்துப் பார்க்கும் ஒருவிடயம் மட்டும் என்று மாணவர்கள் கருதுகின்றார்கள். அதாவது தாங்கள் கற்றகல்வி ஞானத்தில் குறைகண்டு விடுவதற்காக வைக்கப்படும் பொறி என்று கூட எண்ணிக் கொள்கின்றார்கள்.

கல்வியில் மட்டுமா சோதனை ஏற்படுகின்றது? வாழ்க்கையில் கழிக்கப்படும் ஒவ்வொரு வினாடிகளுமே எங்கள் வாழ்வை சீரிய ஏற்படுத்தலுக்கான ஒவ்வொரு படிக்கட்டுகளாகும். இவைகளை நாம் தடைக்கற்களாகக் கருதிடக்கூடாது.

மாணவர்களும் பரீட்சை என்றதுமே உங்கள் குறைகளைக் கண்டறியும் சாதனம் என்றும் இது ஒரு விரும்பத்தகாத சோதனைக் காலங்கள் என எண்ணற்க! பரீட்சை என்றதுமே எங்களை நாமே பரீட்சிக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம் என எண்ணி இந்தச் சவால் எம்மாத்திரம் என வீறுடன் அச்சமின்றி எழுந்து இவைகளுக்கு முகம் கொடுப்பீர்களாக!

பரீட்சையில் பெரும்பாலான மாணவ சமூகம் அச்சம்





காரணமாகவே இவைகளில் மிக மோசமான பெறுபேறு களைப் பெறுகின்றமை ஒரு வேதனை தருகின்ற விடய மாகும். நன்றாகப் படித்தும் துணிச்சலை, பரீட்சை மண்ட பத்தில் கோட்டைவிடுவதை தவிர்க்க மனோபலம் மிக்கவர் களாகத்தம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் மனிதன் தன் பள்ளிப்படிப்பை முடித்து எதிர் கொள்ளும் சவால்களை விட கல்வி கற்றல் என்பது பெரிய அச்சுறுத்தலான விஷயமே அல்ல.

சொல்லப்போனால் இளமையில் கல்வி கற்றலை விடச் சந்தோஷகரமான விஷயம் பிறிதில்லை. இன்னமும் பல அறிஞர் பெருமக்கள் தம் இளமைக்கால கல்லூரி வாழ்வை எண்ணி எண்ணியே இறும்பூதெய்திக் கொண்டி ருக்கின்றார்கள். எனவே கல்விகற்கும் காலத்தில் கற்றலை ஒரு சுமை என எண்ணுதலை அறவே கைவிடுக!

சின்ன வயதிலேயே கற்றலை விருப்புடன் ஒரு பணி யாகச் செய்பவர்கள் தமது இறுதி வாழ்வுவரை அதனையே தொடர்ந்தும் ஆவலுடன் செய்து வருகின்றார்கள் என்னதான் பொறுப்புக்கள், அல்லது துன்ப அழுத்தங்கள் வரினும் இவைகளையும் மீறி கல்வியை தம் உயிர் மூச்சாகக் கொள் பவர்களை நீங்கள் கண்டும், கேட்டறிந்தும் இருப்பீர்கள் அல்லவா?

ஒருவன் ஒரு பதவியைத் தேடுதலுக்காக எடுத்த



RangaRakes

Tamilnavarasam.com

பட்டங்கள் அனுபவங்கள் எல்லாமே அவன் கடந்துவந்த சோதனைகளுக்கான அங்கீகாரங்களே. ஒரு நற்சான்றிதழ் தராதரங்களின் பின்னால் அவரது உழைப்பு மேலோங்கி யிருக்கின்றது. இவையெல்லாம் பெற்றுக் கொண்ட சோதனைகள் மூலம் கிடைத்த அதி உன்னத கௌரவங்க ளேயாகும்.

மனம் எதிலுமே திருப்திப்படாமல் இருக்கும் வரை சின்னச் சின்ன விஷயங்கள் கூடப் பெரிய சோதனைகளாக வேபடும். செய்யப்படுகின்ற நல்ல செயல்களின் எதிரொலியாகக் கிடைக்கின்ற வருமதிகளால் எதிர்ப்படும் சோதனைகள் யாவுமே வெல்லப்படுகின்றன. எனினும் வல்லவர்கள் நல்லவர்கள் கூட தாங்கள் விதியின் வலை க்குள் சில சமயம் அல்லல்பட்டுக் கொள்வதாகக் கவலைப் படுவதுண்டு.

"எல்லாமே எனக்குக் கைகூடும்போதே இறைவன் என்னைக் கைவிட்டுவிட்டான். வெண்ணை திரண்டு வரும் போதுதானா பானை உடைய வேண்டும்? இது எனது சோதனைக்காலம் என மெய்யுருகி அழுகின்ற மனிதர்கள் அதற்காகத் தொடர்ந்தும் முயற்சி செய்யாமல் விட்டு விடலாமா?

ஆற்றுகின்ற கருமங்களின் பயன்கள் சில பொழுது அனுகூலமின்றிப் போய்விட்டாலும், இவற்றின் தோல்விக ளுக்கான காரணங்களே அடுத்துக் கடக்கின்ற சோதனைக ளுக்கான வெற்றிகளைச் சுட்டி நிற்பதுமாகும்.





எத்தனையோ ஆயிரம் விஞ்ஞானிகள் ஒன்றிணைந்து விண்கலத்தை விண்ணிற்கு ஏற்றிய பின்னர்கூடச் சின்னஞ் சிறு தவறுகளால் அல்லது எதிர்பாராத இயற்கை அனர்த்தம் கோளாறுகளால், அம்முயற்சிகளில் பாரிய தடங்கல்கள் ஏற்பட்டு விடுவதில்லையா? இதன் பொருட்டு எல்லா விஞ்ஞானிகளுமே மனதைப் போட்டு உடைத்து விண்வெளி ஆய்வு நிலையத்தையே மூடிவிடப்போகின்றார்களா?

எனவே தனி ஒரு மனிதன் தனது தோல்விக்காக மனம் குமைவது சுத்த அறிவிலித்தனமானதே! மேலும் துன்பம் என்பதே சோதனையின் வடிவம் என்றும் சோதனைதான் துன்பம், துன்பம்தான் சோதனை என்றும் திடமாக எண்ணி மனதைக் கீழ்நோக்கிய பயணத்தில் சஞ்சரிக்கச் செய்வது ஆபத்தான விஷயமுமாகும்.

தனக்குள்ள கடமைகளை நிறைவேற்றுகின்றவன் அடுத்து வரும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்காமல் எங்ஙனம் மேல் நோக்கிப் பாதங்களைப் பதிக்க முடியும்?

வாழ்வின் எல்லாக் கட்டங்களுக்குமே சில வேளை களில் சுலபமான வழிகிட்டாவிடினும் சில விஷயங்கள் நாம் ஆச்சரியப்படும் வண்ணம் பெரிய பெரிய காரியங்கள் கூட மிகச் சுலபமாக எம் வழிக்குள் வந்து ஒப்பேறிவிடுகின்றன.

இந்த வேளையில் ஒருவன் தனக்கு முன்னர் ஏற்பட்ட சில விஷயங்களுக்காகப் பட்ட மனத் தொய்விற்



RangaRakes

Tamilnavarasam.com

காகக் கட்டாயம் வருத்தப்படவே செய்வான். அட போயும் போயும் இந்தச் சின்ன விஷயத்திற்கே மனம் ஒடிந்து நின்றேனே, இன்று நான் எவ்வளவு பெரிய காரியத்தை நேர்த்தியாக ஒழுங்காகச் செய்துவிட்டேனே எனப் பெருமைப்படும் நிலை கூட ஏற்படுவதுண்டு.

எனவே எங்களுக்கான வெற்றிக்கான செயற் திறன் ஊக்கம் வேறு எங்கும் உற்பத்தியாவதில்லை. அவை எம்முள் எம்முடனேயே என்றுமே வியாபித்திருக்கும். இந்த விசையை நாம் எமக்குள் தட்டிவிட்டால் போதுமானது. மூளை உடல் எல்லாமே தானாகத் தனது கருமங்களை ஆற்றத் தொடங்கிவிடும். அப்புறம் விதியாவது சோதனையாவது என நாமாகவே அந்த எண்ணங்களைத் துச்சமாகத் தூக்கியெறிந்து எம்பாட்டிற்கு முன் நோக்கிச் செல்கின்றவர்களாவோம்.

ஒரு ஒழுங்கான கட்டமைப்புக்குள் வாழ்க்கையினை அமைத்துக்கொள்ளும் போது கூடியவரை பெரிய பெரிய பிரச்சனைகள் மனிதனை வந்து மோதி வீழ்த்துவதில்லை. கடமைகளைச் சரிவரவும் பின்தள்ளாமல், அல்லது தட்டிக்கழிக்காமல் நாம் செய்துவரில், முட்டுக்கட்டையான சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்திடல் முடியும்.

ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் செய்யப்படுகின்ற அற்பத் தவறுகள் கூட எமக்குப்பெரும் சோதனையாக அமைந்து விடுவதுண்டு. இதையெல்லாம், பார்த்து மனம் துவண்டு





வருகின்ற இடர்களுக்காக தம் வாழ்க்கையில் இவை தொடர்கதையோ என எண்ணுதல் கூடாது.

நாள் எல்லாம் பாடுபடும் விவசாயி தான் பாடுபட்ட தன் பயனை அறுவடை சமய காலத்தில் எடுக்க விழையும் போது திடீர் என இயற்கை அனர்த்தம் போல் மழை வெள்ளம் ஏற்படுவதும் அதனால் அவன் மனம் ஒடிந்து போவதும் ரொம்பவும் பரிதாபகரமானதே. எனினும் தற் காலத்து விவசாயிகள் தாம் பெற்ற அனுபவவாயிலாக விஞ்ஞானம் மூலம் கண்ட நவீன வழி முறைகளாலும் பல சாதனைகளையும் செய்துவருவது கண்கூடு.

மேலும் திடீர் எனத் தமது இழப்புக்களை ஈடுகட்ட இவர்கள் காப்புறுதி போன்றவைகளில் ஓரளவு முதலீடு செய்து அதன் பயனாக தங்களது துன்பங்கள் இழப்புக் களில் இருந்து ஓரளவு நிவாரணமும் பெற்றுக்கொள்வது முண்டு.

ஒருவன் தன்னைத்தானே தற்காத்துக்கொள்ள வேண்டிய நடைமுறைகளை ஆரம்பகாலம் முதல் கைக்கொண்டு வந்தால் எதிர்ப்படும் எதிர்பாராத சோதனை களில் இருந்து மீள வழிபிறக்கும் என்பதையும் தெரிந்து வைத்துக்கொள்வோமாக!

ஒரு முதிய தமிழ் அரச அலுவலர் தமது அனுபவத் தைச் சொன்னார். "நாங்களும் இளவயதில் சிரமப்



RangaRakes
Tamilnavarasam.com

பட்டுத்தான் கல்வி கற்றோம். வீட்டு வேலைகளுடன், தோட்டத்திற்குச் சென்று அங்கு அதிகாலையில் இருந்து எனது தகப்பனார், சகோதர சகோதரிகளுடன் வேலை செய்து அதன் பின்பு பாடசாலைக்குச் சென்று படித்துப் பரீட்சையில் சித்தி பெற்று நல்ல அரச பணியிலும் இணைந்து கொண்டேன்" தொடர்ந்து சொன்னார்

"கஷ்டப்பட்டு வேலைதேடி அமைதியாக இருந்து பணி செய்யலாம் என்றால் பதவி உயர்வுக்காகப் படி, படி என்றார்கள். தொடர்ந்தும் அதன் பொருட்டுப் படிக்கலானேன். அப்பொழுது தான் பிரதான அரச கரும மொழியில் கட்டாயம் சித்தியடைய வேண்டும் என்றார்கள். அப்போது என்னுடன் கூட இருந்தவர்கள் வயது முதிர்வின் காரணமாக தமது தாய்மொழியைவிட சிங்கள மொழியில் படிக்கச் சிரமமாய் இருப்பதாகத் தெரிவித்து ஓய்வூதியம் பெற விண்ணப்பித்துக் கடமையில் இருந்து விடைபெற்றுக் கொண்டார்கள். அப்போது பதவி வகித்த தமிழ் அரச ஊழியர்கள் பட்ட சிரமங்கள் கொஞ்சநஞ்சமல்ல. இதனைவிடப் பெரிய சோதனை வாழ்வில் வேறில்லை. அரச சேவையில் உறுதிப்படுத்தக் கட்டாயம் இந்த சிங்களமொழிப் பரீட்சையில் சித்தியடைவதைத் தவிர வேறுவழி இல்லை. எனவே வாழ்க்கை பூராவுமே எதிர் நீச்சலடிப்பதுதான் ஒருவாழ்வா?" என்றும் கேட்டார்.

உண்மைதான் சில பிரச்சனைகள் உடன் விலகி விடுகின்றன. சில பிரச்சனைகள் சொல்லாமல்





கொள்ளாமல் தொடர்ந்தும் தொற்றிக் கொள்கின்றன. ஆயினும் நாம் இவைகளில் இருந்து விடுபட்டேயாக வேண்டும். எல்லோராலும் தொடர்ந்து பரீட்சைக்காகப் படித்துக் கொண்டேயிருக்க முடியுமா? குடும்பப்பாரம், பொருளாதார சுமைகள், எல்லோருக்குமே சாதகமாக அமைந்து விடுமோ?

மனத்தை தழம்ப விடாது துணிவைத் துணை எனப்பற்றி முன் செல்வதைத் தவிர நாம் எங்கள் சுமைகளை இறக்கிவிட முடியாது. கடமைகளை நிறைவேற்றிக் கொண்டுவர ஒவ்வொரு சுமைகளும் தானாகவே கழன்று போய்விடும்.

எவ்வளவுதான் நாங்கள் சிரமப்பட்டாலும்கூட அடைகின்ற சிறு வெற்றியால் துளிர்விடும் துணிவு சட்டெனப் பற்றிவிடும் பெரும் தீ சுவாலையாய் தொடர்ந்து பல வெற்றிகளை அள்ளிக் குவித்துவிடும். அப்போது நாம் பட்ட வலி வேதனைகள், பஞ்சாய் பறந்தே போய்விடும்.

துன்பங்களினாலும் இழப்பினாலும், நாம் அடைகின்ற அனுபவங்களும் அதனால் நாம் மெருகேற்றித் தூய்மையடைவது போன்ற பெரும் பேறு வேறு ஏது?

மலை உச்சிக்குப்போக வேண்டும் எனத்தீர்மானித்து விட்டால் ஏறி உயர நடக்க வேண்டியது தான். விடா முயற்சியுடன் உடல் நோக மலைஉச்சியை அடைந்தபின் அங்கு



RangaRakes
Tamilnavarasam.com

நாம் காண்கின்ற காட்சிகளின் லயிப்புணர்வினால் நாம் பட்ட சிரமங்கள் யாவுமே பறந்து போகின்றதே!

குழந்தையைப் பத்துமாதம் சுமக்கும் "தாய்" குழந்தையை ஜனித்ததும் அது அழும் ஓசையினுடே தன் வலிமறந்து படும் பேரின்பம் எல்லாமே இத்தனை நாட்களாகப்பட்ட கஷ்டங்களின் பின் கிடைத்த பெறற்கரிய வெகுமதியன்றோ!

எனவே மனிதன் இழப்பினும் மேலான பேறுகளைத் தன் முயற்சிகளுடாகப் பெற்றுக்கொள்வதே முற்றிலும் உண்மையான விதியுமாகும்.

சோதனைகளைப் புதைத்து வைத்துள்ள இறைவனே அதனுள் இருந்து வெளிவரும் மார்க்கத்தையும், அதற்காக அறிவையும் மனிதனுக்குக் கொடுத்து உழைக்கும் திறனையூட்டி, எதனுள்ளும் இருந்து சுதந்திரமாக விடுபடும் ஆற்றல்களையும் கொடுத்துள்ளான்.

மனசுக்குள் கலவரங்களையூட்டாமல் தெளிவான சிந்தனையுள் வசப்படுபவன் நிதானமான வழிகளில் சோதனைகளை வென்று, சாதனைகளைப்படைத்து விடுகின்றான்.

நாம் பலவீனமான ஒரு நிலையில் இருந்து முடிவினை எடுக்கமுடியாது. எம்நிலை அறிந்து எம்மை ஆசுவாசப்படுத்தி வெறும் உணர்ச்சிகளுக்கு மட்டும் இடம் கொடுக்காது செயல்பட்டால் காரியசித்திகள் நிச்சயமே!





பல் திசைகளில் இருந்து புறப்படும் தாக்கங்களின் தன்மைகளைப்புரிந்து கொள்வோம். எங்கிருந்து எமது செயல்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதை நிச்சயப்படுத்துவோம்.

எடுத்த எடுப்பில் பாராதூரமான பிரச்சனைகளுள் உடன்புகுந்திடாது, படிப்படியாக எமது செயல்களை விரிவுபடுத்துவோமாக! எங்கள் சகல செயல்களுக்கும் உள்ளமும், உடலும் ஒத்துழைத்தேயாக வேண்டும்.


எம்மை நாம் தயார் நிலையில் எதற்கும் அஞ்சாத உற்சாக நிலையில் வைத்திருந்தால் மனசும், தேகமும் சந்தோஷமாகச் செயல்பட ஆரம்பிக்கும். அந்த வேளையில் எந்த இடர்களுமே துச்சமாகத் தூக்கி எறியப்படும். அப்போது சோதனை என்ற பேச்சேயற்றுச் சாதனை செய்தலே மேலோங்கி நிற்கும்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
09-12-2007



RangaRakes

Tamilnavarasam.com



# எப்படியும் வாழ்ந்து விடலாமா?

> தவறான வழியில் பொருளீட்டினால் அடையும் விளைவுகள் பாரதூரமாகவே அமையும். செல்வம் வந்து சேர்ந்தாலே போதும் என எண்ணினால் "சந்தோஷங்கள்" விட்டுவிலகிச் செல்வதைத் தடுக்க முடியாது. பணத்தைப் பெருக்க பாவங்களைச் சேர்க்கும் முயற்சியில் முனைவது தங்கள் சந்ததிக்குச் செய்யும் குந்தகம்! பெற்றோர்கள் வாழ்ந்து காட்டவேண்டும். நல் ஒழுக்கம் எல்லா வல்லமையையும் நல்கும். பிஞ்சுப் பருவத்தே நஞ்சனைய விஷயங்களை பிள்ளைகள் நெஞ்சகத்தே விதைக்க வேண்டாம்! கல்வியூட்டி வாழ்க்கையை நெறிப்படுத்துக!

தனவந்தர் ஒருவர், அவருக்கு ஒரு மகன். இவர் தவறான வழியில் பொருளீட்டிருந்தார். இவருக்கு ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களால் தான் எப்படியோ வாழ்ந்து பொருளீட்டி விட்டேன்,தனது மகன் இந்த வழியில் நடக்க கூடாது என உணர்ந்தார்.





எனவே எப்படியாவது மகன் பெரிதாக உழைக்காது விடினும், அவன் ஒரு அரசாங்க அலுவலகராக வர வேண்டும். கௌரவமான மனிதனாக வாழவேண்டும் என எண்ணிக்கொண்டு தனது மகனை ஓரளவு படிக்க வைத்தார். மகன் அவர் எதிர்பார்த்த வண்ணம் அரசாங்கத்தில் சிறுபதவி ஒன்றைப் பெற்றுக் கொண்டான்.

ஆனால் நடந்தது என்ன? அவன் தனது வேலையைப் பொறுப்பேற்று ஓரிரு மாதங்களுக்குள், ஒரு தீர்மானத்தைச் சொல்ல தனது தகப்பனாரின் முன்னர் வந்து நின்றான். "அப்பா... இனி நான் வேலைக்குப் போகப் போவதில்லை" என்றான். தகப்பனார் அதிர்ந்து போனார். "ஏன் ஏன் இப்படிச் சொல்கின்றாய்,... உன்னை எப்படியும், கௌரவமான அரசாங்க அலுவலராகப் பார்க்க வேண்டும் என்றே கனவு கண்டேன். அப்படியிருக்க, நீ வேலை கிடைத்தும் இப்படிப் பேசுகின்றாயே. என்ன உனக்கு என்ன ஆயிற்று" என்று வேதனையுடன் கேட்டார். அதற்கு அவனோ,

"அப்பா... எனக்கு ஒருவரின் கீழ் அடிமைபோல் கருமமாற்ற விருப்பமில்லை" என்றான். அதற்குத் தந்தையாரோ, என்ன அப்படிச் சொல்கின்றாய், நீ இப்போதுதானே வேலைக்குச் சேர்ந்திருக்கின்றாய். நீ இன்னும் எவ்வளவோ முன்னேற இடம் இருக்கின்றது. அரசாங்க வேலையில் என்ன மகனே பேதம் இருக்கின்றது? எல்லோருமே அரசாங்க ஊழியர்கள் தானே, நீ வேறு ஏதோ



RangaRakes
Tamilnavarasam.com

எண்ணத்தை மனதில் வைத்துப் பேசுகின்றாய், என்ன சொல்? என்ன காரணத்தால் அரசாங்க வேலையே வேண்டாம் என்கின்றாய்" என்று அவர் கேட்டதும் மகன் சொன்ன பதில் அவரை அதிர வைத்தது.

"அப்பா, இன்று நான் பார்க்கும் வேலையில் பெறும் சம்பளம் எனது செலவில் ஒரு கிழமைக்குக்கூட போதாது. அப்படி என்னை சகல வசதியுடன் வளர்த்து விட்டீர்கள். மேலும் எனது செலவுக்கும், நான் மேலதிகமாக உழைக்க வேண்டும். அதற்காக நீங்கள் சென்ற வழியிலேயே சம்பாதிக்க விரும்புகின்றேன். இதில் சரி, பிழை பார்த்தால் சரிவராது. எனக்குப் பணம் வேண்டும். செல்லும் பாதை பற்றி எனக்குக் கவலையில்லை. நீங்கள் என்ன நினைத்தாலும் பரவாயில்லை. நான் நீங்கள் பொருளீட்டிய விதத்தில், நானும் ஒரு முதலாளியாக விரும்புகின்றேன். என்னை எனது வழியில் செல்ல விடுங்கள்" என்றான். இதைக்கேட்ட தந்தை வாயடைத்துப் போனார்.

இந்த உலகம் எங்கே போகின்றது? பழகிய பழக்கங்கள், நவீன போலியான வாழ்க்கையில் இருந்து விடுபட விரும்புகிறார்கள் இல்லை. இந்தச் சம்பவத்தி லிருந்து நாங்கள் தெரிந்து கொள்வது தான் என்ன? பெற்றோரைப் பார்த்துத்தான் பிள்ளைகள் நடந்து கொள்ள எத்தனிக்கின்றார்கள். அநேகமான பிள்ளைகள் தங்கள் பெற்றோரே தமக்கு முன்மாதிரியானவர்கள் எனத் திடமாக நம்புகின்றார்கள்.





இவர்கள் சின்ன வயதிலிருந்தே உலகத்தில் வலிமை மிகுந்தவர்கள் தாயாரும், தகப்பனாரும் என நினைப்பதால், அவர்களைப் பார்த்தே தமது செயல்களை அமைத்துக் கொள்கின்றார்கள். எனினும் சில பிள்ளைகள் வளர்ந்த பின், தமது நண்பர்கள், சுற்றாடல்களால் ஈர்க்கப்பட்டு தங்கள் சுபாவங்களை மாற்றி அமைப்பதும் உண்டு.

எனினும் பெற்றோர், பிள்ளைகள் அவதானிப்பில், நல்ல ஒழுக்கமுள்ள நபர்களாகத் தம்மை உருவாக்கி யேயாக வேண்டும். நல்ல கனிவான பேச்சு, அன்பு, பண்பு, கலாசாரங்களை முறையாகப் பேணுதலில் அதீத கவனம் செலுத்துதல் வேண்டும்.

இதை விடுத்து எப்படியும் வாழலாம் என பிள்ளைகள் முன் வாழ்ந்து காட்டினால் அவர்களின் வாழ்க்கையே விபரீதமாகிவிடும். நம்பிக்கைக்குரிய நல்ல மனிதர்களை உலகிற்கு அளித்தல் தாய், தந்தையரின் பொறுப்பு மிகு கடமையாகும். இப்பாரிய பொறுப்பில் இருந்து நழுவி, அப்போதைக்கு, அப்போது எப்படியும் வாழ்ந்தால் சரி என வாழ்ந்தால், அதைப் பார்க்கும், அவர்களின் குழந்தைகளும், இதுதான் உண்மையான வாழ்க்கை முறை எனத் தங்களையும் அவ்விதமே உருவாக்கிக் கொண்டு விடுகின்றனர்.

தமது சந்ததிக்காக எவ்வளவு செல்வங்களைத் தகாத வழியில் ஈட்டினால், அதனூடான பிரதிபலன்கள்



RangaRakes
Tamilnavarasam.com

நிச்சயமாகச் சாதகமாக அமைந்துவிடப் போவதில்லை. மேலதிகமான செல்வம், பலரையும் தவறான பழக்க வழக்கத்தில் உட்படுத்தி விடுகின்றன. இதனையே நாம் அன்றாடம், பலரது வாழ்க்கையில் கண்டு கொண்டிருக் கின்றோம்.

பணம் சம்பாதிக்க வேண்டும், படிக்க வேண்டும் எனப் பிள்ளைகளிடம் எதிர்பார்க்கும் பெற்றோர்கள், ஒரு நல்ல குணசாலியான பிள்ளைகளை உருவாக்குவதை முதற் பணியாக கொள்ளவேண்டும். குழந்தைகளை இயந்திரத் தன்மையுடன் வளர்ப்பதை விடுத்து உணர்வு மிகு, சமூக அக்கறையுள்ளவர்களாக, பாசம் மிகுந்தவர் களாக பிஞ்சுப் பருவத்திலிருந்தே அவர்களை ஆக்கிக் கொள்ள தீவிரமாக முனைதல் வேண்டும். பிஞ்சுப் பருவத்தே நஞ்சனைய சிந்தனைகளை, அவர்தம் நெஞ்சகத்தே விதைக்க வேண்டாம்.

மாறிவரும் சமூகத்தில் இன்று பொருளாதாரப் பிரச்சினைகள் பூதாகரமாக உருவெடுத்து விட்டது. படிப்பு எதற்கு பணமீட்டுதலே பிரதானமானது என ஒரு சாராரும், பணமும் தேவை கல்வியும் தேவையானது இன்னும் ஒரு சாராரும் கருதுகின்றனர். இவைகளுடன், நல்ல ஒழுக்கத்தை முதன்மைப்படுத்தினால் அனைத்துச் செல்வங்களுமே அவற்றுடன் இணைந்து கொள்ளு மல்லவா?

தினக்குரல் ஞாயிறு மஞ்சரி

" வள்" ப 2-01-201







## வயது வந்த பிள்ளைகளுடன் சினேகபூர்வமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள்

பிள்ளைகள் குழந்தைகளாக இருக்கும் போது உள்ள மனோநிலைக்கும், வயது வந்தபின்பு மாறும் இயல்புகளும் வெவ்வேறானவை. இதனைப் பெற்றோர் உணர்ந்து நடக்க வேண்டும். சின்ன வயதிலேயே நல்ல ஒழுக்கத்தையூட்டி வளர்த்தால் இயல்பாகவே பிள்ளைகள் உணர்ந்து நடந்து கொள்வார்கள். பிள்ளைகளுக்கு ஏதாவது பிரச்சினைகள் வந்தால் அவர்களுடன நல்ல நண்பர்களாக மாறிக் கலந்துரையாடுவதே சிறந்த வழி. பிள்ளைகளுடன் எதிரிகள் போல நடப்பது சரியல்ல. உங்கள் பிள்ளைகளை மட்டுமல்ல எல்லாப் பிள்ளைகளையும் சரி சமனாய் நோக்குக!

வயது வந்த பிள்ளைகளை வைத்திருக்கும் பெற்றோர்களுக்கும் பாரிய பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் குழந்தைகளாக இருக்கும்போது அவர்களின் மனோ நிலைக்கும் அவர்கள் இளைஞர்களாக, பருவம டைந்த பெண்களான பின்னர் உள்ள இயல்புகளும் வெவ்வேறானவை. பாலியல் உணர்வுகள், மனதை மயக்கும் சிந்தனைகளுக்குட்படுதல் வியப்பான ஒன்றல்ல.



RangaRakes

Tamilnavarasam.com

என்ன தான் பெற்றோர், ஆசிரியர்களின் புத்திமதி களைவிட தங்கள் உணர்வுள்ள அவர்கள் சார்ந்த வயதை ஒத்தவர்களின் நட்பையும் ஆலோசனைகளையே இவர்கள் பெரிதாக மதிப்பார்கள். இளைஞன், ஒருத்தியின் அன்பை நாடுவதும், அவ்வண்ணமே அவளும் நட்பைத் தேடுவதும் பெரிய தவறும் அல்ல. இதெல்லாம் இனக் கவர்ச்சியே! எல்லை மீறாத வரை பிரச்சினைகள் இல்லை.

ஏதாவது ஆலோசனை சொன்னால் "எனக்கு எல்லாமே தெரியும் உங்கள் சொல்படி நடந்தால் என் நண்பர்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்" என்று சொல்லும் பிள்ளைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

தங்கள் பிள்ளைகள் மீது எல்லையற்ற பாசமும் கரிசனையும் இருப்பதை பிள்ளைகள் உணர்வார்கள். ஆயினும், தற்கால மாற்றங்களுடன் வளர்ந்துவரும் இளைய சமூகம், தமக்கு முன்பு வாழ்ந்தவர்களின் கருத்துக்களை ஜீரணிக்க மறுக்கின்றார்கள். எவ்வித அனுபவமும் இல்லாத நண்பர்களையே பெரிதும் நம்புகின்றார்கள் எனப் பெற்றோர் ஆதங்கமுடன் கூறிக் கொள்வார்கள்.

வளர்ந்த பிள்ளைகளின் சுதந்திர உணர்வு தமது பிள்ளைகளைப் பாதித்துவிடுமோ எனப் பெற்றோர் அச்சப் படுவதும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தங்களின் நடத்தை களைக் கண்காணித்தாலும் பிள்ளைகள் எல்லையற்ற கோபம் கொள்கின்றார்கள்.





கெட்ட சகவாதத்தினால் நெறிகெட்டு அலையும் இளைஞர், யுவதிகளைப் பார்த்தால் எவருக்குத்தான் பயம் ஏற்படாது? நல்ல நண்பர்கள் சகவாசத்தையே விரும்பும் பெற்றோர், ஆரம்பத்திலேயே தங்கள் குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கத்தினைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். எந்த ஒரு பெற்றோரும், தீய பிள்ளைகளுடன் சகவாசம் வைத்துக் கொள்வதை விரும்புவதேயில்லை.

ஆனால் பாச மிகுதியினால், தங்களது பிள்ளை களின் தவறுகளை ஏற்கச் சிலபெற்றோர் மறுக்கின்றார்கள். தங்கள் பிள்ளைகளைக் கெடுக்க முனைவது வேறு நபர்கள் என்றே சொல்லிக்கொள்வார்கள்.

பிள்ளைகளின் தவறுகளை ஏற்க மறுக்கும் பெற்றோ ராலேயே இளைய சமூகம் மென்மேலும் கெட்டழிகின்றது. நல்வழிக்குப் பிள்ளைகளைக் கொண்டுவர உண்மைகளை ஏற்கும் மனப்பக்குவத்தை தந்தை, தாயார் தமக்குள் ஏற்படுத் திக் கொள்ள வேண்டும்.

பெற்றோரின் பலவீனத்தினைப் பிள்ளைகள் சாதக மாக்கிக் கொள்வார்கள் அல்லவா? நேரம் கழித்துவரும் மகளைத் தாயார் கண்டிக்கும்போது, தந்தையார் குறுக்கிட்டு "இது நாகரீகமான காலம், நீ உனது காலத்திலேயே இன்னமும் நிற்கின்றாய், பெண்களுக்குத் துணிச்சல் வேண்டும். இவள் நேரம் கழித்து வந்தால் என்ன? இதில் என்ன தவறு" என, ஆராயாமலே பாச மேலீட்டினால் அவர்



RangaRakes

Tamilnavarasam.com

தனது மகளுக்குப் பரிந்து பேசினால் பின்னர் என் நிகழும்?

இதே போலவே, கண்ட கண்ட கூட்டாளிகளுட படிக்காமல் குடித்து ஊரைச் சுற்றும் பிள்ளைகளின் தவ களை மூடிமறைத்தால் பின்னர் துன்பப்படுவது அவர்க அல்ல, பிள்ளைகளின் முழு எதிர்காலமும் தான். இந்நிலை மாற குழந்தைகளின் எதிர்காலம் சிறக்க என்ன செய்ய வேண்டும்?.

சின்ன வயதிலிருந்தே பெற்றோர்கள் தமது நேரத் தின் பெரும்பகுதியை, அவர்களுக்காகவே செலவிடுதல் வேண்டும். பிள்ளைகள் வளர்ந்ததும், மனம் விட்டு அவர்க ளுடன் பேசி மகிழ வேண்டும். தினசரி உணவு உண்ணும் நேரத்திலாவது ஒவ்வொரும் தத்தமக்கிடையே நடந்த சம்பவங்களை சினேகித பூர்வமாக உரையாடினால் பிள்ளை களால் மறைத்து வைக்கப்படும்அநாவசியமான அந்தரங் கங்கள் வெளிப்படுவதுடன் தங்கள் தாய், தகப்பனாரையும் அன்பான நண்பர்களாக ஏற்றுக்கொண்டு விடுவார்கள். இதனால் எவ்வளவு முரட்டுத் தனமான ஆண்பிள்ளை களும், துடுக்கான, பின்விளைவுகளை அறியாத பெண் பிள்ளைகளும் தங்கள் தவறுகளை ஏற்றுக் கொள்ளுகின் றார்கள்.

மேலும்,

நல்ல, நல்ல நூல்களை வாங்கிக் கொடுங்கள். கலை





யுணர்வு மிக்கவர்களாக ஏதாவது ஒரு கலையைப் பயிற்றுவிக் கவும். நேரம் கிடைக்கும்போது குடும்பத்தினருடன் ஒன்றா கவே சுற்றுப்பயணமோ அல்லது கலை, கலாசார நிகழ்ச்சி கள், மேலும் நல்ல அறிவூட்டும் பொது நிகழ்வுகளுக்குக் கூட்டிச் செல்வது சாலவும் சிறந்தது. முக்கியமாக ஒன்று, எச்சந்தர்ப்பத்திலும், தமது பிள்ளைகளுடன் கூட படிக்கும் மாணவர்களை நையாண்டி பண்ணியோ அன்றி கேவலமாக இவர்கள் முன்னிலையில் பேசவேண்டாம். இதனால் மன முடைந்து, பெற்றோரிடம் பழிதீர்க்கும் எண்ணமும் ஏற்பட லாம். இளம் பராயத்தினர் வளர்ந்துவரும் உயிர்ச்சிற்பங்கள். கவனமாக இவர்கள் பராமரிக்கப்பட வேண்டியவர்கள்.

தெய்வ பக்தியும், பெரியோர்களை மதிக்கும் பண்பையும், பெற்றோர்கள் மூலம்தான் கண்டுகொள்ள முடியும். ஒழுக்கம் என்பது திடீர் என நுழைவது அல்ல. அனுபவமூலம், நல்ல வழிகாட்டல் மூலமே பரிணமிக் கின்றது. எனவே நல்ல பிரஜைகளை உருவாக்குவது தங்கள் குடும்பத்திற்காக மட்டுமல்ல. இந்தப் பாரிய உலகிற்கு அளிக்கக் கூடிய விலைமதிக்கவொண்ணா பெரும் பொக்கிஷம் ஆகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்"
13-12-2009



RangaRakes Tamilnavarasam.com



# இல்வாழ்வில் இனிமை பொங்க...!

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒருவர் கருத்து, ஏனையவர்களுக்கு ஏற்புடையதாக அமைந்திடாது. கணவன், மனைவி கருத்து ஒருமித்து வாழ்வதே ஒரு பெரும்பேறு. இவர்கள் இருசாராரிடத்திலும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் முரண்பாடுகள் இருந்தாலும், அதுபற்றியே தீவிர பிரச்சினையாக உரு ஏற்றாது தமக்குள் அனுசரிப்பதே இல்லறவாழ்வின் வெற்றியுமாகும். உலகின் சகல மக்களுக்குமே தனிப்பட்ட எண்ணங்கள் விருப்பு, வெறுப்புக்கள் இருப்பது யதார்த்தமானது. அது அவரவர் உரிமையுமாகும். ஆனால் எண்ணங்கள் தூய்மையாக இருந்தால் பிரச்சினைகள் முளைவிடாது உள்ளம் வளைந்து நிலைகுலையாது.

"கருத்து ஒருமித்து வாழ்க" எனப் புதுமணத் தம்பதிகளைப் பெரியோர்கள் வாழ்த்துவதுண்டு. கருத்தொருமித்தவர்களாக, கணவன், மனைவி வாழ்வதே பெரும்பேறு.

கருத்துக்கள் எல்லோருக்கும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒன்றாக இருந்துவிட முடியுமா? ஏதோ ஒரு





விடயத்திலாவது நாம், மற்றவர்களினது கருத்துக்களில் இருந்து வேறுபடுகின்றோம்.

ஆயினும் கருத்துக்கள் வேறுபாடுகள் காரணமாக நாம் முரண்பட்டுக் கொள்ளவேண்டும் என்பதில்லை. இதே போல் ஏதோ சின்ன விடயங்களில் கருத்துக்கள் இருசாராரிடமும் ஒத்துவராமல் விடுவது ஒரு சாதாரண விஷயமாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். ஆயினும் எண்ணங்களில் தூய்மைத் தன்மை இருந்தால் பிரச்சினைகளே உருவாகாது.

உலகின் சகல மக்களிடமும் தனித்தனியான எண்ணங்கள், விருப்பு, வெறுப்புக்கள் இருந்தே தீரும். ஆனால் நம்மில் பலரும், தங்களுடன் இசைந்தே, தங்கள் கருத்தின்படியே அதனை ஏற்று வாழ வேண்டும் என்று எண்ணு வதைப் போல் முட்டாள்தனம் பிறிதில்லை.

வெளிநாடுகளில் கணவன், மனைவி பிரச்சினைகளில், பொருத்தமற்ற காரணங்களுக்காகவே முரண்பட்டுப் பின்னர் விவாகரத்துப் பெற முயற்சிக்கின்றார்கள். கணவன் உடுக்கும் உடை தனக்குப் பிடிக்கவில்லை என்றும் கணவர் குறட்டை விட்டுத் தூங்குவதே பெரிய தொல்லை எனக் குற்றம் சுமத்தி மனைவியர்கள் தத்தமது கணவன்மார் பற்றி நீதிமன்றில் விவாகரத்துக் கோரியபோது சொன்ன தகவல் இது. இந்தச் சம்பவம் உண்மையாக இருக்குமா என எம்மால் நம்ப முடியாது. இதேபோலவே மனைவிமீது



RangaRakes
Tamilnavarasam.com

வினோதமான குற்றங்களைச் சுமத்தும் கணவர்மார்களுமுண்டு.

தங்களது அந்தரங்கமான விஷயங்களைக்கூட வஜ்ஜையின்றி பகிரங்கமாக நீதிமன்றங்களில் சொல்வது பற்றி இவர்கள் கவலைப்படுவதுமில்லை. இதனால் இந்தக் கணவன், மனைவியிடையே சிக்கித் தவிக்கும் தமது பிள்ளைகள் பற்றியும் கிஞ்சித்தும் அக்கறை செலுத்துவதுமில்லை.

கணவன், மனைவி பிரிவினால், இவர்கள் குழந்தைகளின் உளநலம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர். தங்களிடையே ஏற்படும் சண்டை சச்சரவினால் குழந்தைகளில்கூடப் பெரிதும் அக்கறை காட்டுவதேயில்லை. அவர்கள் போஷாக்கு, கல்வி, விளையாட்டு போன்ற விஷயங்களைக் கவனத்தில் கொள்ளாது விடின், முடிவில் தாய், தந்தை மீதே பாசம் அருகி விடுவதில் ஏது வியப்பு?

பணம், பொருள் இல்லாது விட்டாலும் அக்கறை உணர்வுடன் தங்கள் விருப்புக்களை மட்டும் முன்னிறுத்தாமல், பிள்ளைகளுக்காக விட்டுக் கொடுப்புடன் வாழ்வதே வாழ்வு.

திருமண வாழ்வின் ஆரம்பத்தில் இருந்தே ஒருவர் கருத்தை ஒருவர் உணர்ந்து செயல்பட்டாலே பிரச்சினைகள் எழ வாய்ப்பே வருவதில்லை. கணவன் இயல்பு அறிந்து,





அவனுக்குள்ள பிரச்சினைகளை உணர்ந்து மனைவியும் அவ்வண்ணமே கணவன் இயல்பான ஆசைகளுக்கு மதிப்பளித்து முடிந்தமட்டும் தன் முனைப்பு இன்றி உளப்பூர்வமாக உவந்தளித்தால், மனைவியும் அதனைப் புரிந்து கொண்டு விடுவாள்.

மேலும் இயலாத காரியங்களைச் செய்யுமாறு கணவன், மனைவி ஒருவரை ஒருவர் நச்சரிப்பதை நிறுத்தியேயாக வேண்டும். கல்வியறிவு குறைந்த, அத்துடன் பொருளாதார வசதி குறைந்த இடத்தில் விவாகம் செய்த பலரும் சந்தோஷமாக மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து வருவதைக் கண்டிருக்கின்றோம்.

ஆனால் பெரும் பணம் படைத்த இல்லங்களில் கணவன், மனைவி சாதாரண விஷயங்களுக்காக முரண்படுவது அவர்கள் மன முதிர்ச்சியின்மையையே, எடுத்துக் காட்டுகின்றது.

பிள்ளைகள்அதிக வசதியுடன் வாழும் சிலருக்கு, விட்டுக் கொடுக்கும் இயல்பு அருகிக் காணப்படுவதாலேயே எதிரியுடன் மோதுவதுபோல் குடும்பங்களில் குரோதங்களை வளர்த்து வருகின்றனர். இன்று எளிமையாக வாழ்பவர்களே குடும்ப நாகரீகத்தைக் கட்டிப் பாதுகாப்பவர்களாக இருக்கின்றனர்.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் என்றுமே குடும்பத்தில் சலனங்களை பெரும் அச்சுறுத்தல்களான விளைவு



RangaRakes

Tamilnavarasam.com

களைப், பாதிப்புக்களை ஏற்படுத்த இடமளித்தலாகாது. தெய்வ, ஆன்மீக நம்பிக்கைகள் எமது மனதில் சாந்தியை ஏற்படுத்து வதுடன் தற்காலிகமாக ஏற்படும் மனக் கிலேசங்கள், பயம், கோபங்களை இவை தகர்த்து விடும். குழந்தைகளிடத்தே பயபக்தி, பெரியோரைக் கனம் பண்ணுதல் போன்ற நற்பண்புகளை நாம் வளர்த்து வருதல் வேண்டும்.

தேவையற்ற பிரச்சினைகளில் கவனம் செலுத்தித் தர்க்கம் புரிவது குடும்பத்திற்கு அழகல்ல. தங்கள் சொந்த வீட்டுப் பிரச்சினைகளை ஆராய்வதுபோல், தொலைக் காட்சித் தொடர் நாடகங்களைப் பார்த்து, மனம் குழம்பி பல குடும்பங்களில் வாய்த்தர்க்கம் ஏற்படுவது வேடிக்கை. வரும்காலங்களில் தொலைக்காட்சி நாடகங்களை விமர்சிப்பதால் குடும்பப் பிரச்சினைகள் மட்டுமன்றி அயல் வீட்டாருடன் மனஸ்தாபப்படுவதுடன், இவர்களிடையேயான உறவுகள்கூடப் பாதிபடைந்தால் அது புதுமையுமல்ல.

எல்லோரையும் நேசிக்கும் பண்பு வந்தால், இல்லத்தில் மட்டுமன்றி, வெளியிடங்களில் சமுகங்களில் நல்லுறவு தழைத்தோங்கும். கருத்து ஒருமித்து வாழ்வது என்பது பிறர் கருத்துக்களை மதித்தும் வாழ்வதாகும். கணவன், மனைவி இதையுணர்ந்தாலே போதும், இல் வாழ்வில் இனிமை பொங்கும்.

தினக்குரல் "இவள் பகுதி" - ஞாயிறு மஞ்சரி

14-07-2010



RangaRakes

Tamilnavarasam.com

# அகஒளி

பருத்தியூர் பால. வயிரவநாதன்

வாழ்வியல் வசந்தங்கள் – பாகம் 13
சிந்தனைக் கட்டுரைகள்

RangaRakes
Tamilnavarasam.com



# பக்தி

பக்தி, ஞானத்தை மோனத்தினூடாக வழங்கி ஆன்மாவைத் தூய்மைப்படுத்துகின்றது. பக்தி முத்திக்கு வித்து. பத்தியின்றேல் வித்தைகள் எதுவும் சித்திபெறாது. நம்பிக்கையற்ற பக்தியால் பயனில்லை. இளமைப் பருவத்தைவிட முதுமையிலேயே பக்தியுணர்வு ஓங்குவதாக விஞ்ஞானம் கூடச் சொல்கின்றது. அனுபவ அறிவு பக்தியை உண்டாக்கும். இளவயதிலேயே பெரியவர்கள் குழந்தைகளுக்கு இறையுணர்வையூட்ட வேண்டும். பக்தி வைராக்கியமானது. இறைபக்தியுடன் இந்த உலகையும் மாதா, பிதா, குருவையும் உள்ளன்புடன் நேசிப்பதே உகந்ததாகும்.

பக்தி முத்திக்கு வித்து என்று ஆன்மீகம் சொல்கின்றது. பக்தியின்றேல் வித்தைகள் எதுவும் சித்திபெறாது. இது அறிவு நிலைக்கு அப்பாற்பட்டது. நம்பிக்கையில் இருந்து உற்பத்தியாகின்றது என்று ஆன்மீகவாதிகள் அறுதியிட்டுச் சொல்வார்கள்.



RangaRakes

Tamilnavarasam.com

பக்தி ஞானத்தை மோனத்தினூடாக வழங்கி ஆன்மாவைத் தூய்மைப்படுத்துகின்றது. ஆன்மா இறைவன் மீது செலுத்தும் மன ஒழுக்கத்தினால் பக்தி சுரக்கின்றது. இளவயதில் இறைபக்தியில்லாமலும் பின்னர் காலப் போக்கில் வயது ஏற ஏற மனித மனம் இறைவனைத் தேடுவது இயல்பு. இதற்கு விஞ்ஞான காரணங்களும் உண்டு என்கின்றார்கள். மனித மூளை வயதின் முதிர்ச்சி காரணமாகப் பக்தியுணர்வை ஏற்படுத்துவதாக விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள்கூட வலியுறுத்துகின்றன.

எனவே பக்தி மனித வாழ்விற்குத் தேவையான தென்பது இயற்கையின் நியதியாகிவிட்டது. பக்திமான் களைக் கேலியுடன் நோக்கு வதும், பேசுவதும் ஒருபோதும் ஏற்கக்கூடியது அல்ல.

தனது இறை அன்புகாரணமாக ஒருவர் "பூரணதிருப் தியுடன் வாழ்கின்றேன்" என்றால் அதை எப்படி ஒருவர் தனக்கு அதில் உடன்பாடு இல்லை என்று விதண்டாவாதம் செய்ய முடியும்?

பக்தி உணர்வை விருப்பமின்றி ஒருவருக்குத் திணித்து விடமுடியாது. பக்தி இயல்பாக வருகின்ற உணர்வு. இதனால் உள்ளம் இளகுகின்றது. மனம் கசித்து இறைவனை வழிபட்டால் தனக்கு எண்ணியது நடக்கும் என்று நம்பிக்கை கொள்கின்றான். நம்பிக்கையும், அன்பும் இணைந்து கொண்டால், பக்தி வருகின்றது. இதனால்





தெய்வ அருள் கிட்டுவதாகப் பக்தன் உணருகின்றான். இது எல்லா மதங்களுமே ஏற்றுக்கொண்ட உண்மை.

மதங்கள் அன்பினை வலியுறுத்துகின்றன. எனினும் கடவுள் மீது நம்பிக்கையற்றவன் அன்பு அற்றவன் என்று சொல்லக்கூடாது. இறைவன் தன்னை நம்பினார்க்கும் நம்பாதவர்க்கும் உள்நின்று உள் ஒளி பெருக்குபவன். எனவே நாஸ்திகர் என்றாலும், அவர்களும் இறை அருள் பெற்றவர்கள்தான். அன்பு எவரிடத்தும் எத்தரத்தாரிடத்தும், புறப்பட்டாலும் அவர்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட வர்களே.

அன்பு, கனிவு, காருண்யம் இன்றிப் பக்தி என்கின்ற முகமூடி அணிந்தால் அவர்கள் கடவுள் கிருபையை எதிர் பார்ப்பது எப்படி? மனம் லயிப்புடன் சந்தோஷமாக இறை வனை வழிபாடு செய்வதே நிஜமான பக்தி நிலையாகும். மன இறுக்கத்துடன் வலிந்து ரொம்பவும் கஷ்டப்பட்டு கடவுளைக் கும்பிடுவது பக்தியுணர்வை ஏற்படுத்திவிடுமா?

என்ன தான் கடவுள் பற்றிய அக்கறையில்லாமல் இருப்பது போல் தம்மைக் காட்டிக்கொண்டாலும் கூட அவர் கள் உள்மனதில் "இறை" பற்றிய உணர்வு இருந்து கொண்டு தான் இருக்கும். ஏன் எனில் மதம் பற்றிய நம்பிக்கைகள், கடவுள் பற்றிய சிந்தனைகள், வழிபாடுகள் கலாசாரங்கள் மீதான நாட்டம், எல்லாமே பரம்பரை



RangaRakes
Tamilnavarasam.com

பரம்பரையாகத் தொடர்ந்தும் வருவன. பரம்பரைக் குணாதிசயங்களைச் சட்டென வெட்ட முடியுமா? மனிதர்கள் தாம் வாழும் சூழல், பண்பாட்டு நடைமுறைகளுடன் தனது வாழ்க்கையையும் அமைத்துக் கொள்கின்றான். எனவே மத உணர்வுகள், மொழி கலை கலாசார பாரம்பரிய பற்றுதல்கள் எம்முள் ஒட்டியவாறு இருப்பது ஒன்றும் புதுமையையேயல்ல.

மேலும் பக்தி என்பது இறை பக்தி மட்டும்தானா என்பதை நாம் கேட்டேயாக வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் எனப்படுவோர் எமது வணக்கத்திற்குரிய முதன்மைத் தெய்வங்கள் எனச் சிறுவயதிலேயே படித்திருகின்றோம். கடவுளுக்கும் மேலாகப் பெற்றோரே முதன்மை ஸ்தானத்தில் வைக்கப்படுகின்றனர். அன்னையும், பிதாவும், முன்னறி தெய்வம் என்று பாலர் வகுப்பில் படித்திருக்கின்றோம். அன்னையின் காலடியில் கிடைக்காத நிம்மதி வேறு எங்கு உண்டு என்பார்கள். அவள் இன்றி இந்த உலகை எப்படிக் கண்டுகொள்ள முடியும். எமக்குக் கடவுள் வழிபாட்டைக் காட்டியவள் அவள்தானே?

எம்மை இறைய ருளால் உருவாக்கிய தாயும், எம்மை வளர்த்தும் அவயத்துள் பெரியோனாக்கிய தந்தையும், பக்தி செய்ய வேண்டிய தெய்வங்களன்றோ! இவர்களால் நாம் ஆசீர்வதிக்கப்ப டாமல் தெய்வ ஆசிகள் கிடைத்துவிடாது. அன்பு பாசத்து டன் எம்மை அவர்கள் உருவாக்கியதால் தான் எமக்கும் அன்பு என்றால் என்ன, கனிவு பாசம்





எத்தகையது என்பதை உள்ளூர உணர்கின்றோம். இந்த நல் உணர்வுகள்தான் "கடவுள் பக்தி" என்கின்ற மேன்மை நிலைக்குள் எம்மை ஆட்படுத்துகின்றது.

இளமையிலேயே பிள்ளைகள் மேலான கனிவு பாசத்துடன் வளர்ந்துவரும் குழந்தைச்செல்வங்கள் தங்கள் வாழ்நாள் முழுவதுமே மனம் விரிந்த மேன்மக்களாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அடுத்து எமக்குக் கல்விச் செல்வத்துடன் பண்பு நெறிகளையும் அளித்த ஆசிரியர்கள் எல்லோருமே கண்ணெதிரே தோன்றிய தெய்வங்களாவர். நாம் எமது கல்வியறிவை ஒருவரிடத்தில் இருந்து மட்டும் பெற்றுவிடுவதில்லை. பல்வேறு துறைகளில் நாம் நாட்ட முறுகின்றோம். பலதரப்பட்ட கல்வி நெறிகளைக் கற்கின்றோம். நாம் எத்தரத்தாரிடம் கல்வி கற்றாலும்கூட அவர்கள் அனைவருமே போற்றுதலுக்குரியவராவர்.

இன்று பலரும் தமக்கு இளமைக் காலத்தில் கல்வியூட்டிய ஆசான்களை மறந்து விடுவார்கள். ஆனால் வயது வந்த பின் இறுதியாக யாரிடம் கல்வி கற்றார்களோ அந்த ஆசிரியர்களை மட்டுமே கௌரவித்துக் கொள்வார்கள். அதுபற்றியே பெருமையுடன் பேசிக்கொள்வார்கள். ஆனால் தமக்கு ஆரம்ப காலத்தில் கல்வியூட்டிக் கொடுத்த நல் ஆசான்களை மறந்தே போய்விடுகின்றார்கள்.

இளமைக் காலத்தில் எங்களுக்கு அறிவூட்ட அந்த ஆசான்கள் எவ்வளவு சிரமப்பட்டு இருப்பார்கள்? எங்கள்



RangaRakes
Tamilnavarasam.com

குறும்பான சேஷ்டைகள், செய்த அட்டகாசங்களைப் பொறுத்து நின்று பெருமைக்குரிய கல்வியை ஊட்டினார் களே. அன்று அவர்கள் சொல்லித்தந்த "அறம் செய்ய விரும்பு" "ஆறுவது சினம்" போன்ற அறத்தை வலியுறுத்தும் சொற்கள் தானே, இன்றளவும் எமக்கு ஞாபகத்தில் இருக்கின்றதே!.

இந்த உன்னத ஜீவன்களே எம் தெய்வங்கள் பக்தி செலுத்த வேண்டிய பெருமக்கள் அல்லவா? உங்கள் வீட்டு வைபவங்கள் ஊரில் நடக்கும் விழாக்களில் ஆசிரியர் பெருந்தகைகளுக்கு முதன்மை ஆசனங்களை வழங்குங் கள். அவர்கள் உங்களை வாழ்த்தும்போது அந்தப் பெறுமதி மிக்க இதயபூர்வமான அன்பின் ஸ்பரிச அலைகள் உங்கள் குழந்தைகளை ஏன் உங்கள் முழுக் குடும்பங்க ளையும் சென்றடைந்து நல்வாழ்வளிக்கும்.

எனவே பெற்றோரை, ஆசான்களை தெய்வங்களாகப் போற்றுதல் செய்தாலே அது தெய்வத்திற்குச் செலுத்தும் பக்திபோல் அமைந்துவிடும். கடவுள் ரூபத்தில்தான் நல்லோர்கள் ஆசிரியர்கள் இந்த வையத்தில் உலவிக் கொண்டிருக்கின்றனர். கடவுள் தன்பொருட்டே இவர்களைச் சிருஷ்டித்துள்ளார். நாம் எமது வாழ்வைச் சீராக நடாத்து வதற்கு எங்கள் கடமைகளில் சிரத்தை ஏற்பட வேண்டும். செய்யும் கடமையில் பக்தி செலுத்த வேண்டும். மன ஈடுபாட்டுடன் விரும்பிச்செய்வதே பக்தி என்பதால், எங்கள்





கடமைகளில் கூட பக்தி தோன்ற வேண்டும். தொழில் மீதான கரிசனம் என்பது உன்னத சேவையாகின்றது.

நற்சேவை செய்பவனை இறைவன் நேசிக்கின்றான். எனவே கடமை என்கின்ற விஷயம் எமக்காக மட்டும் எனக்க ருதாமல் அதுவே தெய்வசேவை எனக்கொண்டு எல்லா மாந்தர்களுமே இதனால் நன்மை பெறல் வேண்டும் என்று நாம் கருதிப் "பணி" செய்வோமாக! கடமைகளை உதாசீனம் செய்து கடவுளைத்தேட முனையலாமா? தத்தமக்குரிய பொறுப்புக்களைச் சரிவரச்செய்து உலகை வாழவைக்கவே மனிதர்களை ஆண்டவன் படைத்தான். பொறுப்புக்களில் வெறுப்புக்கொள்பவன் கோழை, இவன் அழுது தொழுதா லும் இறைவன் அருளை அள்ளமுடியாது.

இன்று பணத்தையே கடவுள் எனக்கருதி அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டி கடவுளுக்கும் மேலாக மதித்துத் தொழுகின்றான். காசு கடவுள் என்றால் நிம்மதியை எங்கே தேடுவது? பணம் வாழ்க்கைக்குத் தேவை என்பதற்காகவே எதனையும் இழக்கத்தயாரானவன், தான் பெற்றுக்கொள்ள வேண்டிய இறைவன் அருளை கண்டு கொள்ளாமல் விடுகின்றான். செல்வத்தைத் தேடுவது புறவாழ்விற்கானது.

பக்தியோடு வாழ்வை இணைப்பது இதயம் நித்ய அமைதி பெறுவதற்கேயாம். நாம் யாவருமே இறைவன் அருளாட்சிக் குள் தான் வாழ்ந்துவருகின்றோம். எமது



RangaRakes
Tamilnavarasam.com

"தொழுகை"என்பது கடவுளுக்குச் செலுத்தும் நன்றியுணர்வு தான் உணர்க!

பக்தி தொண்டு செய்யும் உணர்வை உண்டு பண்ணுகின்றது. ஈரமான இதயத்தில் தான் தொண்டு செய்யும் எண்ணங்கள் உதயமாகின்றன. தொண்டனே பக்திமானாகின்றான். அவனே மக்கள் அன்பனும் ஆகின்றான். அதீத கோபம், பொறுமையின்மை வஞ்சனை, காழ்ப்பு கொண்டோருக்குப் "பக்தி" உணர்வு வரவே வராது. ஆயினும் இத்தகைய குணங்களை உடையோர் தம்மைப் பக்திமானாகக் காட்டினால் கூட அது பயன் தராத முயற்சிதான். அதிகூடிய முயற்சிகள் தான் தக்க பயனை அளிக்கின்றன. புலனடக்கம் என்பது உடனடியாகக் கிட்டுவதுமில்லை. படிப்படியான பயிற்சிகளினால் எம்மை நாம் நல்ல முறையில் மாற்றியமைக்க இயலும்.

புலனடக்கம் உள்ளவன் கண்டபடி ஆசைப்பட மாட்டான். எவரிடமும் குரோதம் வஞ்சனை கொள்ளவும் மாட்டான். இவர்களிடத்தே இறைபக்தியுடன் சகல நல்ல இயல்புகளும் தானே குடிகொண்டு விடுகின்றது. மனமே கோயிலாக வேண்டும். அங்கு உறையும் இறைவன் மனிதரூடாகவே அருளாட்சி செய்கின்றான். நல்லவர்கள் செய்யும் பணிகள் எல்லாமே இறைவனால் உள்நின்று உரைத்து, உணர்த்திச் செய்யப்படுபவைகளே! நாம் என்றும் இறைவன் கருணையுடனும் அவன் ஈந்த அருள் கொடையாம் அறிவுடனும் வாழ்ந்து வருகின்றோம்.



RangaRakes



நம்பிக்கை நீங்கா அன்பு, அறிவு, பக்தி இவையாவும் சங்கமிக்கும் போது ஞானம் வந்தெய்துகின்றது. பக்தி இன்றி ஞானம் இல்லை. வெறும் அறிவு உலக வாழ்க்கைக்கு மட்டும் என்று சொன்னாலும், அது புறவாழ்வின் ஷேமத்திற்காக இறைவ னால் வழங்கப்பட்டதே!.

அறிவோடு இறை நம்பிக்கையைக் கலந்தவர்க்கு உயிர்ப்புள்ள சந்தோஷகரமான வாழ்க்கை கிட்டிவிடும். தீர்க்கதரிசிகளும் ஞானிகளும் பக்தி மார்க்கமூடாகத் தொண்டுகளைப் பாரபட்சமின்றி இந்த உலகிற்குச் செய்து காட்டினர். பக்திமானாகத் தம்மைக்காட்டி நிற்பவர்களில் சிலர் ஏழைகளுக்கு இரங்காமலும் குனிந்து நிமிர்ந்து சேவைகள் செய்வதே கௌரவக் குறைவானது என்றும், சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைக் காட்டுவதற்குப் பக்தி மார்க்கமே சிறந்த ஒருபோர்வையாக்கிக் கொண்டும் வாழ்வதால் தான் இளைய சமூகத்தில் "பக்தி" என்றாலே போலியான ஒன்று என எண்ணும் மனோபாவத்திற்கு வந்து விட்டார்கள்.

தெய்வ பக்தியுள்ளவர்களும் சரி, தங்கள் கடமைகளில் பக்தியுள்ளவர்களும் சரி, அவர்கள் எவர்க்குமே அச்சப் படுபவர்களாக இருப்பதில்லை. ஞானிகள் மன்னர்களுக்குப் பயப்பட்டதாகச் சரித்திரத்திலேயே இல்லை. உண்மையுள்ள இடத்தில் பயம் தங்கி இருக்கப் பயப்படும். நல்லோரைக் கண்டால் காலன் அவன் உயிரைக் கவரக் கவலைப் படுவான்.



Tamilnavarasam.com

பக்தி பரந்தது செறிந்தது. தெய்வ உறவுடன் கலந்தது நிறைந்து நின்று அருளை வழங்குவது.


வெற்று உடலுக்குள் பக்தியைப் பாய்ச்சுவதாலேயே அது செய்யும் கருமங்கள் சித்திக்கும். வெறும் நிலத்தில் பயிர்செழிக்க நீரும், வளியும் தேவை. அதுபோல ஆன்மா நிறைந்து ஒளிபெறவும், உலகின் பிறந்ததன் பயனை உலகிற்கு ஈந்திடவும், உண்மையுடன் வாழ்ந்தாலே அதுவே "பக்தி" எனும் ஆதார சுருதியாகி எம்மைச் சுவீகரித்துவிடும்.

தினக்குரல்
ஞாயிறுமஞ்சரி
03.08.2008



RangaRakes





# அறிவும் அனுபவங்களும்

அறிவைப் பெருக்கினால் மட்டும் வாழ்க்கை சிறப்பாக அமைந்து விடுமா? மானுட நேயமில்லாத அறிவினால் பயனில்லை. அன்பில்லாதவர் எதனைத்தேடினாலும் நிம்மதியான வாழ்க்கையை அமைக்க முடியாது. அறிதல் அறிவு, இதனைச் செறிவாக்குதல் சிறப்பு. அறிவுடன் பெற்ற அனுபவத்தினூடாக மானிலத்திற்கு நல்லன செய்க! அறிவு ஆணவத்தையுண்டு பண்ணினால் அது ஆபத்து. அனுபவங்களும் அறிவோடு இணைந்தவையே. ஏட்டில் படித்தவை, காலத்தால் உணர்ந்து பெற்றவை, மனிதனை வல்லவன் ஆக்கிவைக்கும். "பணிவு" அறிவை, அனுபவத்தைச் செறிவாக்கும்.

அறிதல், அறிவு இதனைச் செறிவாக்குதல் சிறப்பு. அறிவுடன் ஆணவத்தைத் கலந்தால் அது நிறைவான ஒன்றாக உருப்பெறாது. பெறுதற்கரிய அறிவைத் தேடிப் பெறுதலே ஆறு அறிவுடை மாந்தர்க்குப் பெரும் பேறும் ஆகும்.

இன்று மனிதன், தன் அறிவுக்குள் மட்டும் சிக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அறிவு மட்டும் வாழ்க்கை



Tamilnavarasam.com

யாக அமைந்து விடுமா? அதனிலும் மேலான ஒன்றுமே இல்லை என்று இறுமாந்து போவது சரிதானா? தன்னால் எல்லாமே ஆகும் என எண்ணுதல் "துணிவு" ஆனால், அறிவுடன் மட்டுமே மனிதன் முழுமையடைந்து விட்டான் என்று தீர்மானம் எடுப்பது சரியானதல்ல.

அறிவுடன் கூடிய மானுட நேயத்துடன் இணையாமல், மக்களுடன் அனுசரித்துக்கொள்ளாமல் "நான் கல்விமான் எல்லாம் படித்தவன்" என்று தன்னைத்தான் மார்தட்டிக் கூறி வாழ்ந்தாலும் அவன் ஒட்டுதல் இல்லாத காய்ந்த இதயத்துடன், வரண்டுபோன வாழ்வுடன் பாலைவனத்தில் பட்டுப்போன மரம்போல் தேடுவாரற்ற ஒடுக்கப்பட்ட ஒருவனாக இருக்க வேண்டியதே!

நல்ல அனுபவங்களை ஏற்றுக்கொள்பவன் பெற்ற அறிவைப் புனிதமாக்கிக்கொள்கின்றான்.

எமது வாழ்க்கையில் கழிந்து போன அனுபவங்களை வெறும் சம்பவங்களாவே அது போன சுவடு தெரியாமலே கழித்துவிடுவது எந்தளவில் எமக்கு உதவப்போவதுமில்லை. அனுபவங்கள் எமக்குச் சாதகமாக அமையாது விட்டால் அதனை மறக்கவே எண்ணுகின்றோம். கெட்ட சம்பவங்களை மறப்பது உத்தமம். ஆனால் எமக்கு அவை நல்ல அறிவூட் டுபவையாகத் தெரிந்துணர்ந்தால் அதுவே எமக்கு ஆசானாகி விடுகின்றது. நாங்கள் எமக்கு ஆகாத விஷயங்களைக் கெட்டவையாகவே நோக்கு கின்றோம்.



RangaRakes



தவறுகளைச் செய்தால் அது தவறு என்று உணரும் போதே அது நல்ல அனுபவமாகின்றது. நான் செய்தது தவறே அல்ல என்று விதண்டாவாதமாக மனம் வேண்டுமென்றே மறுதலிக்கும் போது, அந்த நேரமே நாம் எமக்கான அனுபவங்களை ஏற்றுக் கொள்ளவும், தவறுகளை மறைக்கும் கபட எண்ண மும் கூட வந்துவிடுகின்றது.

ஆனால் உண்மையில் எந்தவித தவறும் செய்யாத சந்தர்ப்பங்களில் ஏற்படும் துன்பங்களைக் கண்டும். அதனால் ஏற்பட்ட இழப்புக்களையிட்டும், தொடர்ந்தும் துவளாமல் எல்லாமே அடுத்து வரும் எமது இயங்குதலுக்குமான சக்திக்கு வழிகாட்டல் என நம்புவோமாக!

எமது நல் அறிவினூடாக எமது வாழ்வின் நிகழ்வுகள் சில எம்மால் ஜீரணிக்க இயலாது விட்டாலும்கூட, அவை ஏன் நிகழ்ந்தது, எதற்காக ஏற்படுகின்றது எல்லாமே எனது தவறினாலா அல்லது தெரியாமல் செய்தவைதானா என்று உணருதலும், அத்துடன் புறதாக்கங்கள் பற்றிய விஷயங்களை அறிவதாலும் எமக்கு அனுபவஞானம் பெற்றுக் கொள்ள முடியுமல்லவா! அறிவைப்பாவிப்பது என்பது, எமது பலத்தை மட்டுமல்ல, பலவீனங்கள் எங்கே எமக்கு உண்டு என்பதைக் கண்டுபிடித்துக்களைவதற்குமாகும். படித்தால் நல்ல வேலை தேடலாம், பணம், பொருள் தேடலாம், எல்லாவற்றிற்கும் மேலாக பிறரை அடக்கி ஒடுக்கலாம் என்று கருதுபவர்களும் இருக்கின்றார்கள். அறிவினால் எம்மை மட்டும் வளர்க்காமல் பிறரையும்



Tamilnavarasam.com

வளர்த்துப் போற்றவும் முடியும் என்று கருதுதலே பெற்ற கல்வியின் முழுப்பயனுமாகும்.

இன்று பலரும் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களால் பட்ட வலிகளைத்தான், பெரிதாகப் பிறருக்குச்சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்கின்றார்களே ஒழிய, மற்றவர்களின் துன்பங்களைப்பற்றி எதுவிதமான சிந்தனையுமின்றி, அதைக் கேட்கவே பிரியப்படாமல் நழுவிச்சென்று விடுவார் கள். "ஐயா எனக்குக்கடுமையான தலையிடி, அத்துடன் காய்ச்சல் வேறு என்னை வருத்துகின்றது எனக்கு விடுமுறை தாருங்கள் "என்று தனது எஜமானிடம் கேட்டால்" போ... போ... அது எல்லாம் என்னால் முடியாது, போய் நடக்க வேண்டிய வேலையைப் பார்" என்று சொன்னால் அந்த வேலையாள் என்னசெய்வான்?

ஆனால் அதே எஜமான் தனக்கு ஒரு தலையிடி என்றாலே பெரிய, பெரிய மருத்துவ நிபுணர்களை நாடு வதுடன் ஓய்வு எடுக்க எங்கோ உள்ள விடுதிக்குச் சென்று மறைந்துகொள்வார். இதுவெல்லாம் சர்வசாதாரணமாக நடக்கும் சம்பவங்களே! தனக்கான துன்பங்கள், அனுபவங் களே பெரிய சமாச்சாரங்கள், அதையெல்லாம் எல்லோ ருமே அனுதாபத்துடன் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் மற்றவன்படும் வேதனையைக் கேட்கவே விரும்பாது அதிலிருந்து விலகித்தனக்கென ஒரு சுயநல பாதையினைக் கொண்டிருப்பது என்ன வாழ்க்கை ஐயா!





இன்று சில இளவயதுக்காரர்களிடம் வயது முதிர்ந்த வர்கள் தங்கள் அனுபவம் காரணமாக எதையாவது கூறினால், உடனே அவர்கள் முதியவர்களைக் கேலியுடன் கிண்டலடிப்பார்கள். சில வீடுகளில் பாருங்கள் மிகவும் உயர் நிலையில் பதவி வகித்து ஓய்வு பெற்ற முதியவர்கள் தங்கள் பேரப்பிள்ளைகளுக்கு அனுபவ அறிவினால் புத்திமதிகள் சொன்னால் அதுபற்றி அந்த இளவட்டங்கள் செவிமடுப்பது மில்லை. அறிவு பூர்வமான வார்த்தைகளைக் கூட அலட்டல் என்றும் பழமையான கருத்து என்றும் சொல்லி விடுகின்றார்கள். "நவ உலகில் வாழும் நாம் உங்களது பத்தாம் பசலிக் கதைகளை, உபதேசங்களைக் கேட்கத்தயாரில்லை" என்கின்றார்கள்.

இளைய தலைமுறையினர் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். தேவையற்ற மூடக் கொள்கையைத் தவிர்க்க வேண்டிய அதே சமயம், இவர்கள் யாரிடம் கல்வி பயின்றார்கள் எப்படி அறிவு பெற்றார்கள் என்பதை அறிய வேண்டும். பாலர் வகுப்பில் நாம் பயின்ற அ, ஆ... என்ற எழுத்தை எம்மைவிட வயது கூடிய ஆசானிடம், படித்துப் பின்னர், கல்லூரிகளிலும், வயது முதிர்ந்து ஆசான்களிடமே கல்வி பயின்றோம். விஞ்ஞானிகளும், ஞானிகளும் கல்வி யறிவாளர்களும், எல்லோருமே இளையவர்களாக இருக்க முடியுமா? அவர்களிடமே படித்து, அவர்கள் வயதுடைய, அனுபவஸ்தர்கள் ஏதாவது நல்லவற்றைச் சொன்னால் மட்டும் அதை ஏற்க மறுப்பதுமேன்? இந்த எண்ண மெல்லாமே, ஒரு தன்முனைப்புத்தான்.



RangaRakes
Tamilnavarasam.com

மிகவும் வயதுகுறைந்தவர்கள்கூடச் சாதனைகள் பல புரிகின்றார்கள். இத்தகையவர்கள் வாழ்க்கையை ஆராய்ந் தால் அவர்களை ஆளாக்கிய பெரியோர்களின் அர்ப்பணி ப்பினை உழைப்பை நாம் நோக்க வேண்டும்.

இன்றைய அனுபவஸ்தர்களின் அறிவுரையை ஏற்க மறுக்கும் எவருமே தாங்கள் முதுமை எய்தியபின் தங்களது அனுபவங்களை எப்படிப் பகிர்ந்தளிக்கப் போகின்றார்கள்?

மேலும் ஏதோ சில நூல்களைப் படித்தும் பட்டம் பெற்றால், எல்லாமே எமது அறிவுக்குள் அடக்கம் என்று கருதிச் செயல்பட்டால் எதாவது பிரச்சனைகள் வந்து அல்லல்படுத்தும் போது புத்தகங்களுக்குள் புகுந்து பிரச்சனைகளைத் தீர்த்துவிட முடியுமா? மேலும் அதிகம் படித்தவர்கள் சிலர், தமக்குத் தேவையேற்படும் போதுகூட படிக்காத அனுபவம் உள்ளவர்களிடம் அறிவுரை கேட்கக் கூச்சப்படுவார்கள். தங்கள் கௌரவத்திற்கு அது இழுக்கு என்றும் எப்படி இவரிடம் போய் நான் என்ன கேட்பது என்றும் கருதுவதுண்டு.

அனுபவங்கள் கூட நல்ல அறிவுடன் கூடிய ஒன்று என்று உணரவேண்டும். அனுபவ ஞானத்தை நல் அறிவில் இருந்து பிரித்துக்கூறமுடியுமா? முற்காலத்து மக்கள் தங்கள் அனுபவ அறிவினால் சொன்னவற்றை நாம் இன்னமும் படிக்கின்றோம். அதன் பொருள் பற்றி இன்னமும் வியந்து நோக்குகின்றோம். படித்துப்பெற்றால்தான் அறிவு, அல்லது

RangaRakes





கல்லூரியில் பல்கலைக்கழகத்தில் படித்தால்தான் அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றில்லை.

படிப்பதற்கும் பல மார்க்கங்கள் உண்டு. பாடசாலை இல்லாத பழங்காலத்தில் குருகுலமுறை மூலம் மாணவர் பாடம் கேட்டனர். அதாவது குரு ஒருவர் தம் இல்லத்தில் வைத்து மாணவர்க்குப் பாடங்களைப் போதித்தார். இயற்கைச் சூழலில், காடுகளில் உள்ள குடில்களில் ராஜா வீட்டுப் பிள்ளையுடன் சாதாரண குடிமக்களின் பிள்ளை களுடன் கூடி ஒன்றாக படித்தார்கள் என்று நீங்கள் கதைகள் வாயிலாக அறிந்திருப்பீர்கள்.

பாகுபாடு அற்ற ஒரு சமூகத்தை உருவாக்க எல்லோரு டனும் ஆணவம் அற்ற நிலையில் பழக தமது பிள்ளைகளை மாமன்னர்கள் ஏனைய மாணவர்களுடன் இணைந்து கல்வி கற்பதற்கு ஒரே ஆசானிடம் அனுப்பி வைத்தார்கள். இந்த அரிய அனுபவ த்தினால் அரசிளங்குமரர்கள் சமூகத்தை, சமூக அமைப்பினை, பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டது. இந்த விஷயங்கள் எல்லாமே நாம் உணரவேண்டிய விஷயங்கள். அறிவை எப்படி எப்படியெ ல்லாம் தேட வேண்டும். மக்களை எப்படி நாம் நேசிக்க வேண்டும் என்பதனை எல்லாம் நம் முன்னோர்கள் எப்போதே சொல்லி விட்டுப்போய் விட்டார்கள்.

எங்கெங்கோ யார், யாரிடமோ, கஷ்டப்பட்டுப்படித்த பின் எல்லாவற்றையும் நானாகத் தேடிக்கொண்டேன்,



Tamilnavarasam.com

எல்லாமே எனக்குத்தெரியும் என்று மமதை கொள்வதுகூடக் கற்ற கல்வியை அவமதிப்பது போல் அன்றோ!

மனிதனிடம் பரிபூரணத் தன்மையை ஏற்படுத்துவதே கல்வியாகும். கல்வியை, நல்ல ஞானத்தை அளிப்பதனை சாதாரணமான வேலை என்று சொல்லக்கூடாது. கல்விப் பணி என்பது புனிதமான அறச்சேவைதான். கல்வி மூலம் பூரணத்துவம் பெற்றவன் ஞானமார்க்கத்திற்கான பாதையூடு பயணம் செய்யும் பாக்கியம் பெற்றும் விடுகின்றான். அறிவிற்கு அடுத்தபடி மேலே "ஞானம்" எம் ஆன்மாவை இறைவனுடன் இணைத்து விடுகின்றது. சாதாரண நிலையில் உள்ள மனிதனும்கூடத் தனது புனிதமான வாழ்க்கை முறையினால் அகத் தூய்மையினால் ஞான வழியில் செல்ல ஆரம்பிக்கின்றான். எனவே அறிவு நற்சேவை பட்டறிவு எல்லாமே சங்கமித்துவிட்டால் ஒருவனுக்கு இயலாத கருமம் என்று ஒன்றும் இல்லை.

இன்று அறிவாளிகளுக்கு உள்ள பெரும் பிரச்சனையே அதுவா, இல்லை இதுவா? என்பதில் முடிவு காணாது திணறிப்போகின்றமையாகும். அறிவு கூடும்போது சந்தேகங்களும் கூடிக்கொண்டே செல்கின்றது. சாதாரண கிராமவாசி தன் சுதந்திரமான அறிவு அனுபவத்தால் உடனே ஒரு முடிவைச்சுயமாக எடுத்துச் செயல்படுகின்றான். அவனுக்கு அச்சம் என்பது கிஞ்சித்தும் இல்லை.





அறிவு மேலதிகமாகச் சந்தேகங்களை ஏற்படுத்தினால் மனிதன் இயங்குவது எப்போது? தெளிவற்ற அறிவு குழப்பத்தையன்றோ ஏற்படுத்துகின்றது? எமது அறிவினால் மட்டும் முடிவுகள் அமைவதில்லை. நல்ல அனுபவஸ்தர்களிடம் சென்று தேடிப் பெறவேண்டியது எவ்வளவோ இன்னமும் உண்டு.

எதனைக் கண்டறிய வேண்டும் என்பதைப் பூரணமாக உணர்ந்தவன் அச்சமற்ற முடிவுகளை எடுப்பவனாகின்றான்.

ஆண்டவனால் அருளப்பட்ட ஆயுட்காலங்கள் பூரணமாகப் பயனுடன் செலவளிக்கப்படல் வேண்டும் இதற்காகத்தானே அறிவு. அவனால் தரப்பட்டது. பெயரும், புகழும், பணமும், செல்வமும் கிடைக்கவேண்டும். இதற்கான வழிகள் ஏராளமாக உண்டு. ஆயினும் இவைகளை அடைய முக்கியமாக "ஆன்மா" எம் வசப்படல் வேண்டும்.

அறிவைப்படைத்த இறைவன் அதனூடாக ஆன்ம பலத்தையும் வழங்குவதற்காகவே அனுபவ ஞானத்திற்கான சந்தர்ப்பங்களையும் வழங்கிய வண்ணமுள்ளான் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஆன்மாவை, அறிவுடன் இயைபு படுத்துவோமாக. யந்திரமயமான அறிவு எம்மை முழுமைப் படுத்திவிடாது. அதன் வழியில் வாழும் மனிதன் திருப்தியுடன் வாழ்ந்து விடமுடியாது.



RangaRakes
Tamilnavarasam.com

மனம், ஆன்மா, முரண்படாது வாழ்ந்தால் தான் எங்கள் அறிவும், அனுபவமும் எம்மை உயர் நிலைக்கு இட்டுச் செல்லும். எங்கள் எண்ணங்களைச் சிதறவிடாது குறிக்கோளுடன் லயிப்பதே பெற்ற அறிவின் முழுப்பய னுமாகும்.


சந்தேகங்களும், குழப்பங்களுமற்ற மனோநிலையில் வாழ்வதைவிட வேறு என்ன செல்வம் பெரிதாக உண்டு? அமைதியான சூழலுக்குள் எம்மை உட்புகுத்த வேண்டும். எமக்கு நாம் உண்மையான ஆற்றல் பூத்த எஜமானனாக எம்மை ஆக்கிக்கொள்ளவும் வேண்டும்.

மூளையை உடைத்து அதனுள் அறிவை வலுக்கட்டா யமாக திணிக்க வேண்டும் என்பதுமல்ல. அறிவு இயல்பாக ஆர்வம் இருந்து விட்டால் அறிவு சுரந்து வரும். அறிவுக்குள் அனுபவமும் அனுபவத்திற்குள் அறிவும் இருந்தால் மனிதன் பூரணத்துவ சிருஷ்டியாகின்றான்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
20.07.2008







# அர்ப்பணிப்பு

விருப்பமின்றி எக்காரியத்தைச் செய்தாலும் அது முழுமை பெறாது. மனதைச் சுழலவிட்டு உடல்மட்டும் இயங்கினால் அர்ப்பணிப்பான சிந்தை வந்துவிடாது. எண்ணங்களே எம்மை ஆக்குகின்றது. சிந்தையை ஒரே திசையில் குவித்தால் செய்கருமங்கள் திருப்தியாக அமைந்து வெற்றிப்பாதையில் இட்டுச் செல்லும். எல்லோருமே எங்களை ஆசீர்வதிக்கும்படியாக வாழ்ந்தால், எமது மனம் வியாபகமாகி உலகின் ஷேமத்திற்காக அர்ப்பணிப்புடன் கருமமாற்றுவோராகி விடுவோம். நல்ல ஆற்றலை வளர்க்க அர்ப்பணிப்புடன் செயலாற்றுக!

மனம், வாக்கு, காயத்தினால் எவ்வித களங்கமும் இன்றி, முழுமையான ஈடுபாட்டுடன் குறித்த செயலைச் செயல்படுத்தல், அர்ப்பணிப்புடன் கருமமாற்றுவதாகக் கொள்ளப்படும்.

விருப்பமின்றி ஏனோதானோ என்ற ரீதியில் மனம் லயிக்காமல் தேகம் மட்டும் இயங்கினால் அது அர்பணிப்



RangaRakes
Tamilnavarasam.com

பான செயலாக அமைந்து விடாது. உடலால் மட்டும் செய்யும் காரியங்கள் முழுமையான செயலாக இருக்க முடியுமா? மனம் பல்திசையாகக் கண்டபடி சுழன்றால் அது புனிதமான காரியங்களைச் செய்வதற்கும் தடையாகிப் போகின்றது. மனம் இயங்குகின்றது. அது ஸ்தம்பிப்பது மில்லை. எனவே மனதின் ஓட்டமும் ஒரு வேலை போல் ஆகின்றதே?

எம்மை எமது எண்ணங்கள் ஆட்டுவிக்கின்றது. இந்த எண்ணங்களை ஒரே இடத்தில் குவித்துச்செய்யும் காரியங் களில் நல்லதை மட்டுமே கருதிக் கடமை செய்யும் போது அங்கு எமக்கு அர்ப்பணிப்பு மனோபாவம் தானாகவே உருவாகி விடுகின்றது. கெட்டபணிகளை அர்ப்பணிப்புடன் செய்ததாக எண்ணுதலை விடுத்து நாம் கருதும் விஷயங்கள் எல்லாமே சிறப்பானதாக எண்ணி உருவாகி விட்டால், பெறுதற்கரிய அற்புத சக்திகள் எம்முள் பீறிட்டு எழுந்து எம்மை ஆக்கிரமித்துவிடும்.

இந்த அற்புத சக்தியை எம்முள் உட்புகுத்த நல்ல எண்ணங்களுடன் ஒரே நல்ல வழியில் சென்றாலே போதும் கிடைப்பனவெல்லாம் ஒழுங்காகக் கிடைத்துவிடும் எங்களுக்குள் எப்படி இந்த உன்னத சக்தி உட்புகுந்துள்ளது என நீங்கள் உங்கள் நிலையுணர்ந்து வியப்படைவீர்கள்.

நீங்கள் ஒருவரை நோக்கும் போதே உங்களிடம் இருந்து கண்ணுக்குப் புலனாகாத சமிக்ஞைகள் உங்களிடம்





இருந்து புறப்பட்டுவிடுகின்றன. ஒருவரை நீங்கள் வெறுப்புடன் இகழ்ச்சி செய்யும் மனப்பான்மையுடன் ஒரு வார்த்தை கூடப்பேசாமல், வெறும் பார்வையை மட்டும் வீசினாலே போதும், அடுத்த கணம் அவர் உங்களை மலர்ச்சியுடன் நோக்கவே மாட்டார்.

எங்களுக்கு அறிமுகமானவர், அறிமுகமில்லாதவர் என்றில்லாமல் எல்லோருமே எங்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்றே கருதுவீர்களாக! ஒருவர் எங்களை விரும்பு வதைவிட வெறுப்பதை நீங்கள் விரும்புகின்றீர்களா? மேலும் நீங்கள் ஒருவரை வெறுத்தும் ஒதுக்கியும் விட்டாலும் அவர்கள் உங்கள் காலடியில் வந்து கிடக்கவேண்டும் எனக்கருதுகின்றீர்களா? அத்தகைய குரூரமான நிலைக்குத் தள்ளப்படும் நபராக மாற நீங்கள் உங்களை மாற்ற விரும்பும் நபராக இருக்க விரும்புகின்றீர்களா?

மேலே சொல்லப்பட்டவைகளில் இருந்து விடுபட்ட எல்லோராலும் நேயம்மிக்க மாந்தராக இருந்து கொள்ள உங்களை நீங்கள் மக்களை நேசிக்கும் மனிதனாக உருவாக்கிக்கொண்டால் எல்லாம் வல்ல அற்புத சக்தியை உருவாக்கிய பெருமைகளைப் பெற்றவராகவும் அர்ப்பணிப் புடன் காரியமாற்றும் நுட்பங்களைப் பெற்றவராகவும் நிஜமான மனிதத்தோற்றத்தைப் பெற்றவராகவும், பூரணமாக மாறிவிட்ட புண்ணிய புருஷனாகியும் மாறி விடுவீர்கள். உணர்க தோழர்களே!



RangaRakes

Tamilnavarasam.com

பொய்யாக சிரிப்பவர்களை மற்றவர்களும் பொய்யான சிரிப்புடன் நோக்குவார்கள். இதனால் யாருக்கு என்ன லாபம்? தீமைதரும் குரூரபுத்திதான், இதனால் நிரந்தர மாகக் குடிகொண்டு விடும். தூசிகள் நிறைந்த கெட்ட ஜந்துக்கள் வீட்டில் வசிக்க எவர் தான் விரும்புவார்கள்? நீங்கள் இருக்கும் வீடு மிகப்பெரியதாகச் சகல வசதிகளை யும் கொண்டிருக்கலாம். ஆனால் இருக்கும் வீடு தூய்மை யற்றும், ஆபத்தான பாம்பு, பூரான், தேள், கொடுக்கன் வாழ்கின்ற இடமாக இருந்தால், அவைகளை அழிக்காமல் எப்படி நிம்மதியாகச் சீவிக்கமுடியும்?

வெளித்தோற்றத்தில் மட்டும் அழகாக டாம்பீகமாக வாகன வசதிகளுடன் உலாவந்தால் என்ன கௌரவம் வேண்டிக்கிடக்கின்றது? உள்ளத்தில் உள்ள ஒட்டடைகளை நீக்கித் தூய்மையாக்கி, உள் ஒளி சேர்க்காமல் விட்டால் எது பயன் வாழ்வில் உண்டு?

குறுகிய நோக்கம் கெட்ட எண்ணம் கொண்டவர் களால் நல்ல காரியங்களை அர்ப்பணிப்புடன் செய்யும் ஆவல் தான் வருமா? தனக்காக வாழுபவன் கூட மற்றவ னைச் சார்ந்துவாழாமல் இருக்க முடியாது ஆகையால் தான் வாழ்ந்து கொள்ளவாயினும் மற்றவனை மதித்து அன்பு செலுத்தியேயாக வேண்டும்.

மேலும் செலுத்தப்படும் அன்பு இயல்பாகவும் காரியம் பெறுவதற்கு மட்டுமானதாக இருக்கவும் கூடாது.





மனதால் அனுதினமும் நல்ல எண்ணங்களை எண்ணுதல் இந்த உடலுக்கு சிரமானது எனக்கருதக் கூடாது. அரை குறையாகச் செய்யும் அலுவல்கள் என்பதே ஒரு வேலை யில் இருந்து விலகி ஓட எத்தனிப்பது போலத்தான். மேலும் செய்யும் வேலையை அவமதிப்பது போலாகும் என நாம் கருத வேண்டும்.

ஒருவன் செய்யும் பணி அவர்கள் "அது தன்னிலும் உயர்ந்த" ஒன்றாகக் கருதிக்கொள்ள வேண்டும்.

விஞ்ஞானி ஒருவர் தீவிரமாக ஆராய்ச்சி செய்கின்றார் என்றால், அவர் முழு அர்ப்பணிப்புடன் தன் தேகம் இருப்பதையே மறந்து செயல்படுவதாகவே நாம் காண கின்றோம்.

குடும்பத்தலைவன் தன் மனைவி குழந்தைகளைப் பராமரித்தலுக்காக இயன்ற வரை தன்னை வருத்தி அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றான். இவன் தன் பணியில் சற்றேனும் பிசகினால் கடமையில் இருந்து வழுவினான் என்று சாமானியமாகச்சொல்லி விடமுடியுமா? பொறுப்பு களில் இருந்து விலகுதலால் எவருமே முழுச் சமூகத்திலிரு ந்தே தன்னை நிலை நிறுத்தத் தவறிவிடுபவன் ஆகின்றான். இது கோழைத்தனமான பலவீனத்தன்மை என்பதுடன் அவன் சார்ந்த பல உறுப்பினர்களை உயர்த்துதற்குத் தடையானவனுமாகின்றான்.



RangaRakes
Tamilnavarasam.com

எனவே எவராயினும் தன் கடமைகளில் இருந்து நழுவுதல் என்பது அவரது தனிப்பட்ட பிரச்சனை என்று சம்பந்தப்பட்டவர்கள் இம்மியளவும் கருதலாகாது. தங்கள் கருமத்தில் அர்ப்பணிப்புடன் செயல்படாமையால் எழும்பு கின்ற சகல பிரச்சனைகளும் முழுச் சமூகத்தையும் பாதிக் கலாம்.

பொறியியலாளர் பாரியகட்டிடத்தை நிர்மாணிக்கும் பணியில் முழுக்கவனத்தையும் செலுத்தாமல் விட்டால் அது மக்களைப் பாதிக்காமல் விடுமா? பாரிய கருமங்கள் என்றில்லாமல் மிகச் சிறிய கருமங்களையும் சிரத்தையு டன் செய்தேயாக வேண்டும்.

மிகப்பெரிய பேருந்தில் எல்லா இயந்திரங்களும் வேலை சரிவர இயங்குதற்காகச் செப்பனிடப்பட்ட பின்னர், அது புறப்படத் தயாராகின்றது. வாகனக் சாரதி பேருந்தைப் பொறுப்பேற்க வருகின்றார். அந்த நேரத்தில், தொழில் நுட்பப்பிரிவில் கடமை புரிந்த தொழில் நுட்பவியலாளர் வாகனச்சாவியை எங்கோ யந்திரத்தினுள் வைத்துவிட்டார். உரியநேரத்தில் மிகுந்த சிரமத்தில் செப்பனிடப்பட்ட அந்த வாகனம் சில மணி நேரதாமத்தின் பின் சாவி எடுத்த பின்னரே உரிய முறையில் அவர்களிடம் ஒப்படைக்க முடிந்தது. கவனக் குறைவு மிகச்சின்ன விஷயமேயா னாலும் அவைபாரிய பிரச்சனைகளை உண்ணு பண்ணு மல்லவா? அச்சாணியின்றேல் வண்டி புறப்படுமா? நான் இப்போது என்ன செய்கின்றேன் என்ற உணர்வே யின்றி

RangaRakes





வேலை செய்தால். செய்ய வேண்டிய பணி முடிந்து சரிவர ஒப்பேறிவிடுமா?

குறித்த “இலக்கு” இன்றி இயங்குபவன் துலக்கமற்ற பார்வையற்றவனாகின்றான். இத்தகையவர்கள் பயனற்ற கருமங்களையே, மீண்டும், மீண்டும் செய்து காலத்தைக் கரியாக்குகின்றார்கள். ஓரிரு வினாடிப் பொழுதில் செய்யும் வேலையை, ஒன்றரை நாட்களிலும் செய்துமுடிக்காமல் திண்டாடிக் கொண்டிருப்பார்கள்.

ஈடுபாட்டுடன் எதனைச்செய்தாலும் அதில் தவறுகள் ஏதும் ஏற்படாது என்கின்ற திடமனதுடன், அச்சமின்று விருப்பத்துடனும், மகிழ்வுடனும் செய்யக்கூடியதாகவே உணர்வார்கள். விரும்பிச் செய்யும் காரியங்களில் வெறுப்பு ஏது? காலத்தை விரயம் செய்தலும் நடக்காது.

குழந்தையைக் குளிக்கவார்க்கும் தாய், நீண்ட பாதையில் பிள்ளையைத்தோளில் சுமக்கும் தகப்பன், பசியுடன் கணவன் வருவானே என்கின்ற எண்ணத்துடன் அறுசுவை உணவுகளைத் தயாரிக்கும் மனைவி, மேலதிக நேரம் வேலைசெய்தாவது அன்பு மனைவி பிள்ளைக ளுக்காகப் பணம் சேர்க்கும் குடும்பத்தலைவன், இவர்கள் எல்லோருமே தங்கள் பணியைச் சுமையாகக்கொள்ள மாட்டார்கள். அன்பு, பரிவு, பாசம் ஏற்பட்டால் எவர்க்குமே தங்கள் கடமையே ஒரு சுகானுபவமாகவே இருக்கும். இவர்களுக்கான பொறுப்புக்கள் பற்றி பிறர் எதுவுமே

Tamilnavarasam.com

எடுத்துரைக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுவிடப்போவ மில்லை.

தமது வாழ்வின் அர்த்தமே இறைசிந்தையுடன் வாழ்ந்து உலகிற்குச்சேவை ஈந்து அவன் இணையடி சேர்ந்துவிடுதல் என்கின்ற குறிக்கோளுடனேயே ஆன்மீக ஞானிகள் தம்மையே ஆகுதியாக்குகின்றனர். இறை பேரின்ப நுகர்ச்சியானது இயம்பிட இயலாததாகும். ஆன் மாவை இறைவன்பால் அர்ப்பணித்துச் சரணடைவதிலும் பார்க்க மேன்மை வேறு ஏது உண்டு?

மக்களின் ஆன்மீக வெளிப்பாட்டினாலேயே உலகம் என்றுமே அவன் கருணையினால் தீட்சண்யமான பார்வை யினால் இயங்குகின்றது. பக்தர்களின் உள் உணர்வின் ஸ்திரத்தன்மையினால் எழும் பக்திமிகு எண்ணங்கள் ஓய்ந்து விடுவதுமில்லை.

காதலர்கள் எல்லோருமே தங்கள் காதல் புனித மானது, தெய்வீகமானது என்றும். தங்கள் உடல், பொருள், ஆவி, அனைத்தையுமே காதலுக்காக அர்ப்பணித்து விட்ட தாகவும் சொல்லித்திருப்திப்பட்டுக் கொள்வார்கள்.

காதல் என்பது வெறும் உடல் காமத்துடன் மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல. அழகைக்கண்டு ஆசைப்படுதல் புதுமையுமானதுமல்ல. நான் அவள் அழகைக்கண்டு ஆசைப்படவில்லை என்று சொல்லும் ஒரு சாரார்,





சிலசமயம் அவளது சொத்து, பணம், காசுக்காகவும் பிரியப் படலாம். இவை எல்லாவற்றையும் தவிர்த்து ஆன்மாவுடன் ஒன்றித்த காதலர்கள் எத்தனை பேருளர்?

உடலை மட்டுமே மையப்படுத்தாது மனத்துடன் சங்கமமாகி உயிருடன் கலந்த, களங்கமற்ற பவித்திர நிலையில் உருவாகும் காதல், ஊழிக்காலத்தின் பின்னரும் இந்த ஜகம் மீண்டும் மீண்டும் தோன்றி பல் உயிர்களுடன் மீண்டும் மீண்டும் அவை ஜனிக்கும் போது, இந்த உன்னத தெய்வீக காதலரின் ஆன்மாக்கள் தொடர்ந்தும் இணையும் பிணையும்.

இதயங்கள் சங்கமமாகி அவை ஒன்றுக்கொன்று அன்புடன் அர்ப்பணமாகி இணைந்து நின்ற உன்னதக் காதல் கிட்டியவர்கள் பாக்யவான்கள்.

நாம் விரும்பித் தேடும் எந்தப்பொருள் கிட்ட வேண்டு மாயின் எம்மை நாம் அர்ப்பணித்துச் செயல்படும் போது கிட்டாமல் விட்டதுமில்லை. எனவே தோல்வியற்ற நிலை வேண்டுமாயின் மனம் லயிப்போடு செயல்படும் உள்ளம் வேண்டும் அறிவோமாக!

ஆணவ முனைப்புக்கள் இருந்தால் அர்ப்பணிக்கும் சிந்தை வந்து விடாது. என்னால் முடியும் என்று எண்ணுவது ஆணவ முனைப்பு அல்ல. அதேசமயம் தாழ்மையுடன் பணிந்து உள்ளத்தை விரித்து அர்ப்பணிப்புடன் கடமை



RangaRakes
Tamilnavarasam.com

புரிதல் பலவீனம் என்று சொல்லக் கூடாது. பிறருக்கு ஒன்றுமே தெரியாது எனக்கு மட்டுமே அனைத்தும் புரியும் என்பது தன் முனைப்பு ஆகும். இந்த எண்ணங்களைத் தவிர்க்க! இது நற்செயலை உருவாக்காது.

இன்று வீரம், ஆணவம் என்கின்ற இரண்டினையும் ஒரே கருத்துடன் சிலர் தவறாக நோக்குகின்றார்கள். நல்ல காரியத்திற்காகப் போராடுவதும் தனது சுயநலத்திற்காக வீராப்புடன் பேசி மோதுகின்ற மேலாதிக்க ஆணவத்திற்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. இந்த மேலாதிக்க உணர்வு வீரம் என்று சொல்லவே கூடாது வெறும் அசட்டுத்தனம்தான்.

தாழ்மையாகப் பணிவுடன் தன்னை மாற்றுவதும் தன் முன் நிற்பவர்களைக் கௌரவப்படுத்துதலும் மனித நேயத்திற்கான பண்புமாகும்.


"அர்ப்பணிப்பு" என்பதே எம் ஆன்மாவின் வலுவான ஆரோக்கிய நிலைதான். யோகிகளும், ஞானிகளும், கற்று அறிந்த அறிஞர்களும் தங்களை நெறிப்படுத்துதற்கு அர்ப்பணிப்புடன் முழுமையாக இயங்கியமையினாலேயே உள் ஒளிபெருக்கி உயர்ந்தனர். ஆற்றலை வளர்க்க உள் உணர்வை ஒளி கூட்ட முழு அர்ப்பணிப்புடன் செயலாற்றுக!

தினக்குரல் (ஞாயிறு மஞ்சரி)

13.09.2008







# இல்லை

"இல்லை" என்று எண்ணுதலும், சொல்லுதலும் எம்மை, "வறுமை" நிலைக்குத் தள்ளிவிடும். ஆசை, கோபம், வன்மம், காழ்ப்பு பொறாமை போன்ற துர்க்குணங்கள் எம்மிடம் இல்லவே இல்லை எனுமாறு நாம் வாழ்ந்து காட்டுவோம். அறியாமை துன்பம் இல்லா வாழ்வு வேண்டும். இல்லையென்று சொல்லாத அன்பினை வழங்கினால் எல்லாமே எமக்குக்கிடைத்துவிடும். இல்லையெனாது மனம் நிறைந்தால் எட்டாத உலகத்தை எமக்குள் உருவாக்கி விடுவது ஒன்றும் புதுமையுமல்ல.

இல்லை இல்லையென்று சொல்லிச்சொல்லியே எதிலும் தப்பித்துக்கொள்வதால் தொல்லை இல்லை என்று எண்ணுதல் தம் வல்லமையையே இழந்து விடுகின்ற செயல் என்று உணர்வார்களாக!

"இல்லை" என்று எடுத்ததெற்கெல்லாம் சொல்லுகையில் அங்கு வறுமை இயலாத்தன்மை சூன்ய, உணர்வு



RangaRakes

Tamilnavarasam.com

சேர்ந்தே வந்து விடுகின்றதே? எனினும் தகாத சிந்தனைகளைக் கொய்ந்து இல்லா தொழிப்பதுவே மானுட உயர் பண்புமாகும். பொய்யான பேச்சுக்கள், நடத்தைகள், எமக்கு இல்லாது இருந்தால் அதுவே பெருமை, கருமையற்ற தூய்மையுமாகும்!

நீங்கள் ஒரு கடைக்குச்செல்கின்றீர்கள் உங்களுக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள் ஒன்றை வாங்குவதற்காகக் கேட்கின்றீர்கள். கடைச் சிப்பந்தியோ எடுத்த எடுப்பிலேயோ அது எம்மிடம் இல்லையென்று சொன்னால் உங்களுக்குக் கோபம், ஏக்கம் ஆற்றாமை வந்துவிடாதா? ஒரு பொருளைக் கேட்டதுமே கிடைக்க வேண்டும் என்றுதானே எல்லோரும் எதிர்பார்க்கின் றார்கள்? அடுத்த கடையிலும் போய் அலைந்து திரிந்து வாங்கலாம் என எண்ணுவது வேறு விஷயம்.

ஆயினும் சில வியாபாரிகள் இல்லை என்று சொல்லவே மாட்டார்கள். "அடடா நீங்கள் கேட்ட பொருள் நாளைக்கு நிச்சயம் எங்களுக்கு வந்துவிடும் பரவாயில்லை சற்றே அமருங்கள் என்று சொல்லித் தமது சிப்பந்தி மூலம் அடுத்த கடையில் வாடிக்கையாளர் கேட்டபொருளைத் தருவித்துக் கொடுப்பதுமுண்டு.

இல்லை என்றுகூறிப் பெறுமதிமிக்க ஒரு வாடிக்கையாளரை இழக்கப் புத்திசாலியான ஒரு வர்த்தகர் பிரியப் படவே மாட்டார்.





இல்லை என்று சொல்வதையே ஒரு பழக்கமாகக் கொண்டால் அவர் இல்லாதவராகி விடுவதும் உண்மையே.

நிறைந்த வாழ்வை விரும்பும் நாம், பின்வரும் சிந்தனைகளை எங்கள் மனதினுள் விதைப்போமாக!

- ❖ எந்நேரமும், எக்கணமும் கோபதாபம், பொறாமை, வஞ்சகம், காழ்ப்பு, போன்ற துர்க்குணங்களை இல்லா தொழிப்போமாக!

- ❖ எம்மிடம் உதவிகளைக்கேட்கவரும், எத்தரத்தினரைச் சார்ந்தோராயினும். அவர் எமக்கு வேண்டப்பட்டவர் என்கின்ற பாகுபாடு இன்றி எம்மால் முடிந்தளவு சேவைகளை நல்குவோமாக! மேலும் நாம் அளிக்கும் எந்த உதவிகளையும் கருதி அவைகளைப்பெற்றுக் கொள்வோரிடம் இருந்து கைமாறு கருதாத மன உறுதியுடன் இருப்போமாக!

- ❖ எனக்குத் துன்பங்கள் இல்லை என்றுமே நான் சந்தோஷமாகவே இருக்கின்றேன். நிறைந்த மனதுடன் வாழ்ந்து வருகின்றேன். என்னிடம் பூரணமான அன்பு உண்டு. கனிவான நல் இதயம் உண்டு. என்னைச் சுற்றி என்றுமே நல்ல மனிதர்கள் இருக்கின்றார்கள். என நான் பூரணமாக நம்புகின் றேன். இறை கருணையினால் எதனையும் பெறுப வன் ஆகின்றேன் என்பதை உள்ளத்தில் நிறுத்துக!



RangaRakes
Tamilnavarasam.com

நாம் பிறர்க்கு எதனையுமே கொடுக்கின்றவர்களாக இருந்தால், இல்லையென்று சொல்லாத நிறை மாந்தராகி விடுவோம் அன்றோ!

"மகிழ்ச்சி" என்கின்ற வரவை எதிர்நோக்குபவர்க்கு அது கிட்டியே தீரும் இத்தகையோர் எவர்க்கும் கொடுத்த படியே வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றனர்.

ஆசைகளை அபமிர்தமாகத் கொண்டுள்ளவர்கள் எல்லாவற்றையுமே தமதாக்க முனைகின்றார்கள். அவர்களிடம் எதையுமே எவரும் கேட்டுவிடமுடியாது. ஆசைகளில் மூழ்கிக்கிடக்கும் சிலர் தமது மனைவி, மக்களைக் கூடச் சந்தோஷமாக வைத்திருப்பதும் இல்லை. பிள்ளைகள் அவசியமான எந்த விதமான பொருட்களைக் கேட்டாலும் "அது அநாவசியமானது, இப்போது எனக்கு வசதி இல்லை" என்று கூறித் தட்டிக்கழித்து விடுவார்கள்.

சேர்த்து வைப்பதிலேயே குறியாக இருந்தால் எவர்க்கும் கொடுக்கும் எண்ணம் எங்கே வரப்போகின்றது ஐயா?

தயாள மனது உடையோர் ஆசை வலையினுள் விழாது தப்பித்துக்கொள்கின்றார்கள். ஆசை அசுரத்தனமானது. தேவையானதை மட்டுமே தெரிந்து கொண்டு ஆசைப்பட மனிதனுக்குச் சிரமமாக இருக்கின்றது. எல்லாவற்றையுமே வைத்துக்கொள்ள ஆசைப்படுபவனுக்கு



எதையும் ஏன் சகலதையுமே மறைத்துக் கொள்ளும் எண்ணமும் கூட வந்து விடுகிறது. பணம் படைத்த உலோபிகள் "இல்லை" என்று சொல்லிட வெட்கப்படுவதேயில்லை. "விரிந்த மனம் இரங்கும்", என்றும் அன்பு சுரந்தோடும். என்றும் நல்லவைகளை அளித்துக் கொண்டேயிருப்பவனுக்கு மற்றவன் நட்பை, அன்பை அழிக்கச் சித்தமிருக்காது.

எல்லோருமே, தங்களிடம் எதையாவது பெற்றுக் கொள்ள, அல்லது சுரண்டத்தான் வருவதாகச் சில கருகிய மனத்து உலோபிகள் கருதுவதுண்டு. தமது முகத்தினைக் காட்டுமுன்பாகவே, "எதுவும் கேட்க வேண்டாம் எதுவுமே யில்லை" என்று கேட்குமுன் சொல்லும் பிரகிருதிகளை நீங்கள் காண்பதில்லையா? அன்பில்லாதவர் எவரையும் அரவணைக்கத் தெரியாதவர்கள்.

மற்றவர்களுடைய பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்பவனுக்கு அவர்தம் சொந்தக்கவலைகள், மன அழுத்தங்கள் ஏதோ ஒரு வகையில் எதிர்பாராத வண்ணம் தெய்வாதீனமாகச் சுலபமாகவே தீர்ந்துவிடுகின்றன.

என்றுமே மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என எண்ணினால். நாம் அடுத்தவன் சந்தோஷத்தை வளர்க்கின்றவனாகவும், எத்தருணத்திலும் பிறர் நிம்மதிக்கு ஊறு நேரா வண்ணம் பார்த்துக்கொண்டாலே போதும்.

RangaRakes
Tamilnavarasam.com

செல்வத்தில் கிடைக்காத பெரும்பேறுகளை இல்லையெனாது அன்பு மீதூர பிறரைக் கவர்ந்தும், அவர்களுடன் சொந்தம் கொண்டாடி மகிழ்வதாலும் பெற்றுவிடுகின்றோம். விலகி வாழ்வதால் இலகுவில் மகிழ்வு வந்திடுமோ?

உண்மையான உழைப்பினால் கொடுக்கப்படும் "தானம்", இறைவனாலும் ஏற்றுக் கொள்ளப்படும். தவறான வழியில் தர்மம் செய்கின்றவர்கள் "நான், எவர்க்கும் இல்லையென்று சொல்லாமல் வழங்குகின்றேன்" என்று சொன்னால் அது ஏற்புடையன்று!

நேர்மையற்ற வழியினால் வழங்கிடும் எவையுமே, செய்த பாவத்தை பிறரையும் பங்காளியாக்க முனைவதுமாகும்.

நல்லதைச் செய்பவன் மட்டுமே பெருமிதம் கொள்ளும் பாக்கியம் பெற்றவனாகின்றான். அடுத்தவன் வீட்டைச்சுரண்டி பெற்ற பிள்ளையையும் வாழவைக்கக் கருதக்கூடாது. அறுசுவை உணவை இரந்து புசிப்பதிலும் பார்க்க, உழைத்து பெற்ற கூழேயாயினும் அதுவே திருப்தி!

மேலும் கோடானு கோடி செல்வங்களை நான் வைத்திருக்கின்றேன் என்று சொல்லுபவர்கள். தர்ம கைங்கரியங்களுக்கு யாராவது போய் உதவிகளைக் கேட்டால் மட்டும் பஞ்சப் பாட்டுப் பாடுவார்கள். டாம்பீகமான வாழ்வும், ஆணவ முனைப்புடனான பேச்சுமே பேசி வாழ்பவர்கள்





எதுவுமே இல்லாத தரித்திரர்களே தான். தமக்கு மட்டுமே என்று வைத்துக் கொள்பவர்கள் பெருமைப்பட ஒன்றுமேயில்லை. இத்தகையவர்களின் வாழும் நாட்கள் கூட வாழாத அர்த்தமற்ற நாட்கள் தான்.

நம்பிக்கை செயலூக்கம் மிக்கவர்களிடம், ஏழ்மை, துன்பம், இல்லாமை என்பது ஏதுமில்லை. தாங்கள் வழங்கும் அன்பில் எவ்வித குறைவும் இல்லாது மானுட உணர்வுகளுக்கு பதிப்பளிக்கும் பண்பாளர்களாகவும் இருப்பார்கள்.

கொடுக்காதவன் கைகள் மரத்தது போகும், ஈகையாளன் கரங்களோ கொடுத்துக் கொடுத்து உயிர்ப்புடன் சிவந்து அழகு காட்டும்.

இன்று எதுவுமே இல்லாது போகலாம் ஆனால் கல்விச் செல்வம் இல்லாது போகலாமா? என்னதான் பொருளீட்டினாலும் கல்வி இன்றேல் ஒருவனைச் சமூகம் முழுமையாக ஏற்றுக் கொண்டு விடுவதில்லை. சாதி ஒடுக்கு முறை, இன, மத பாகுபாடுகளை நாம் கண்டு வருகின்றோம். ஆனால் ஒருவன் கற்றறிந்த மேதையானால் அவனை எல்லா நாடுகளுமே வலிந்து வலிந்து அழைக்கின்றது.

கல்வி கற்றவன் எவனோ அவனைச் சமூகம் அவன் குலம், கோத்திரம் பற்றிக் கேள்வி கேட்பதுமில்லை.



RangaRakes
Tamilnavarasam.com

கல்வி கற்றவனிடம் இல்லாத செல்வம் எல்லாமே சேருகின்றது. கல்வி கற்காது விடுவதை விடவேறு என்ன வெட்கம் இருக்கின்றது? இன்று உலகம் கல்வித் தகைமை களை வைத்துத்தானே ஒருவனை எடை போடுகின்றது. செல்வந்தனை நோக்குவதைவிடக் கல்வியாளனைக் கௌர வத்துடன் நாம் பார்ப்பது புதுமையான சங்கதியும் அல்ல. அறியாமையை இல்லாமல் செய்யும் பணியினை, எமது சமூகம் கடின உழைப்புடன் மேற்கொள்ள வேண்டும். ஏனோ தானோ என்கின்ற மனப்பான்மையுடன் நவீன சமூகம் இருந்துவிட முடியுமோ?

அறியாமையை "இருள்" என்றும் இதுவே துர்ப்பாக் கியம் என்றும் சான்றோர் பகர்ந்து வருகின்றனர். ஏழ்மையை விட அறியாமை தான் பெரும் துன்பத்தை ஏற்படுத்த வல்லது. தன்னையே உணரவைக்காத தன்மையை விடக் கொடியது வேறென்ன உண்டு ஐயா?

"நீ எதுவாக இருக்க எண்ணுகின்றாயோ, அதுவாக மாறிவிடுவாய்". என்கின்ற கூற்று, மிக ஆழமான உளவியல் ரீதியான பேருண்மையுமாகும். "திருப்தியாக நான் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றேன்" என்கின்ற பூரண நினைப்பே எம்மை அதே நிலையில் வைத்திருக்கும் என்பதை நாம் நம்புவோமாக! வெறும் பேச்சளவில் மட்டுமல்ல இல்லாமை இயலாமைகளை வேரோடு களைந்தால் எம்முள் இருப்பது சாந்தியும், சந்தோஷமும் அன்றி வேறு எதுவுமே எம்மிடம் குடிபுகுந்திடுமோ?



RangaRakes



வெறுமை வாழ்வில் எம்மைக் கருக வைக்காது. எமக்குள் எம்மை மிஞ்சும் அழகிய புதுமுகங்களை உற்பத்தி பண்ண வேண்டும். நித்தம் நித்தம் புதிதான மலர்களின் குளுமையும் சிலிர்ப்பும் வனப்பும், சுகந்த மணமும், இறைவனிடமிருந்து உற்பத்தியாகின்றன. அதே போலத்தான், மனிதன் தினம் தினம் வாடாத புதுமலராக களிபபூட்டும் காந்தப்பூக்களாக அனைவரையும் வசீகரித்திட வேண்டுமன்றோ? வாடிய முகங்களை எவர்தான் தேடுவர்?

அழகிய தோற்றப்பொலிவுடன் இருந்தாலும் கூட உள்ளத்தில் கவலைகள், தாக்கங்கள் ஏற்பட்டால், அங்கு இயல்பான அழகு வெளிப்படுமோ? துன்பத்தில் புகுந்து கொள்ளுதல் இலகுவானது. "துன்பமாக இருக்கின்றேன், என்று சொன்னாலே போதும். அது வேண்டாத விருந்தா ளியாக எமக்குள்ளே ஒட்டிக்கொள்கின்றது. "இது வேண்டாம் இதன் வருகையை நான் பூரணமாக எதிர்க்கின்றேன். இதனுள் அமிழ்ந்திட நான் இனிமேலும் அனுமதிக்கவே மாட்டேன்" என்று உறுதி பூண்பவன், "சந்தோஷி" யாகின்றான்.

கள்ளமில்லா கருணையான அகவெளிப்பாடு உள்ள த்தில் திருப்திகாணும் இயல்பு, முழுமையான உழைப்பு இருக்கின்றவனுக்கு இல்லாத செல்வம் என்று சொல்லிட எதுவுமேயில்லை. வாழ்கின்ற காலத்தில் வாழ்க்கையை விரும்பி ஏற்போம். அதுவே ஒரு பாரம் எனக் கணக்குப் பண்ணலாகாது.



Tamilnavarasam.com

தப்பித்து ஓட வாழ்க்கை ஒரு சிறையோ அல்லது ஒரு குறுகிய பாதையோ அல்ல. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வித அனுபவங்கள் அதனைப் பரிபூரணமாக ஏற்போம். துன்பங்களும், தடைகளும், எம் முள் குடியிருக்க வருவதுமில்லை. ஒரு முறை வந்ததும் உங்களைச் சந்திக்கும். பின்னர் அது தன்பாட்டிற்கு விரைந்தோடிவிடும்.

“எமக்கு எட்டாத உலகத்தையே நாம் எட்டிவிட்டோம், ஏன் அடக்கியாண்டும் விட்டோம்” என்றே புது உலகவாசிகள் புகழ்கின்றார்கள். அப்படியாகப் பெருமைப்பட்டுக் கொள்ளும் நவ உலகினராகிய நாம் தீயவை எம்மிடம் இல்லை இல்லவேயில்லை, பூரண இன்பங்களும், வெற்றிகளும், எல்லாவற்றிற்கும் மேலான அன்பும், கருணைகூர் இதயமும் உண்டு, உண்டு என்று மனப்பூர்வமாக சாற்றுவோமாக!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
22.06.2008







# எதற்கும் தயாரா?

மனிதன் நற்செயல்களைச் செய்வதற்கு என்றும் தயாராக இருக்க வேண்டும். எதற்கும் தயாராக இருப்பவனைப் பயப்படுத்தவியலாது. அறிவு, செல்வம், புகழ் போன்றவைகள் மூலம் எதனையும் செய்துவிடலாம் என்று எண்ணுதல் ஆணவம். இவை மனித ஆற்றலை முடக்கும். எவரையும் எரிச்சலூட்டி வாழ்ந்துவிட முடியாது. துணிச்சலுடன் நற்காரியங்களைச் செய்பவர்களுக்குக் கடவுளின் உதவிகள் தாராளமாகக்கிட்டும். சோம்பல், உள்ளவன், தன்னைப் புதுப்பிக்கத் தெரியாதவன். தன்னை நம்பாதவன், தயார் நிலையில் இல்லாதவன். துணிச்சல் கருமங்களைப் பலமடங்காக்கும்.

எதற்கும் தயாராக இருப்பவர்களைப் பயப்படுத்த இயலாது. இவர்கள் செயலைத்தடுத்தி நிறுத்தி செயல் இழக்கச்செய்வது சிரமமானது ஆயினும், அசட்டுத்து ணிச்சலுடன் வீணான கருமங்களுக்காகத் தங்கள் புலனை ச்செலுத்துவதும் விவேகமான காரியம் அல்லவேயல்ல!



RangaRakes
Tamilnavarasam.com

மேலும் தகாத எண்ணங்கள் கொண்டு அதற்கு ஒரு வியாக்கியானம் கொடுத்து எல்லாமே சரி என்று தாங்களாகவே தீர்மானம் செய்து அதன் பொருட்டு மற்றவர்களை இம்சைகள் புரிவதை எவர்தான் அனுமதிக்கப் போகின்றார்கள்?

அறிவுக் கூர்மை மிக்கவராக இருந்தாலும் கூட சுய நலத்தின்பால், பற்றுறிதி மிக்கோராய் "எல்லாமே என் அறிவுக்குள் அடக்கம்" என்று கருதி "எதற்குமே நான் தயார் தான், வருவது வரட்டும்" என்று செயல்படுவது அங்கீகரிக்கத்தக்க விடயமும் அல்ல. இந்தக் குரூர புத்தி கொண்ட, அதி மேதாவிகள் எனத் தம்மைக் காட்டிக் கொண்டவர்களை, சாமானியமான, ஒருவன் தலைகுனிய வைக்கும் நிலை ஏற்படலாம்.

தமக்கு அனுகூலமான விஷயங்களுக்கு மட்டுமே முன்னுரிமை கொடுப்பதும், அதனால் சமூகத்திற்குப் பங்கம் ஏற்படுத்தப்படும் எந்தக்காரியங்களையும் முழுமூச்சுடன் செய்தாலும் கூட அது வெற்றி பெற்றிடப் போவதுமில்லை. எனவே நாம் செய்யும் காரியங்களைப் பொறுத்தே "நான் எதற்கும் தயாராகச் சுறுசுறுப்பானவனாக இருக்கின்றேன்." எனப்பெருமையுடன் சொல்லிக் கொள்ளவும் முடியும். எமது பணிகளை செய்வதற்கு நாமே முழு ஆதாரமாகக் கொண்டு இயங்கினால் அவை ஸ்தம்பிதமடையப் போவதில்லை. தன்னை நம்பாத ஒருவனால் எக்கருமத்தையும் திறம்படச் செய்து விடமுடியாது.





எவரையும் எரிச்சலூட்டி அதனூடு தனக்கான தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள விழைவதும், குறுக்கு வழியில் அழுத்தமாகச் செயல்பட்டால் எதனையும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று நம்புவதும் வாழ்வதற்கு ஏற்ற நல்லவழியுமல்ல.

மற்றவனை முந்தி ஓடுவது என்று கருதாமல் தனது முழு வல்லமையுடன் ஓடிஜெயிப்பதே பந்தயத்தின் பூரண திருப்தியுமாகும். ஒருவனை நான் விழுத்துகின்றேன் என்று எண்ணாமல், உங்கள் பாட்டிற்கு உங்கள் வழியில் நன்றாகப் பலம் கொண்டமட்டும் ஓடி வெல்வதே உத்தம நெறியுமாகும். எங்கள் பொழுதுகளில் பெரும்பாலும் மற்றவர்களைப் பார்ப்பதிலேயே கழிந்து விடுகின்றதே! இந்த லட்சணத்தில் தன்னைத்தான் வளர்ப்பது எங்ஙனம் ஐயா!

"அவன் ஏதோ செய்கின்றான். நான் அதைப் பார்த்துச்சும்மா இருப்பதா.... விட்டேனே பார்...." என்று மனம் கருதியபடி, "இதோ... நானும் தயார்தான் செய்து காட்டுகின்றேன்... அப்பனே..." என்றபடி, கண்டபடி சவால் விட்டே மண்கவ்வ எண்ணுதல் போல வேடிக்கை வேறென்ன உண்டோ?

எங்களால் சொல்லப்படும் "சவால்கள்" பொறாமை ஆற்றாமைகள் உள்ளக் குமுறல்களின் வெளிப்பாடாக அமைவது எம்மை நாமே இழிவுபடுத்துகின்ற காரியங்கள் தான். பிள்ளைகளிடம் படிக்கச்சொல்லி, அவர்களை

RangaRakes
Tamilnavarasam.com

ஊக்கப்படுத்துவது பெற்றோர் கடமை.ஆனால் அடுத்த வீட்டுப்பையனை ஒரு குறியீடாக்கி "நீ... அவனை முந்த விட்டுவிடாதே! அவனைவிடக் கூடப்படி" என்று சொல்லி ஒரு பகையுணர்வைக் குழந்தைகள் மனதினுள் விதைப்பது சரியா?

சிறுவன் ஒருவன் வழமையாகவே சிறந்த பெறுபேறு களைப்பெற்ற மற்ற மாணவனுடன் பேசுவதையே நிறுத்திக் கொண்டான். ஏன் என்று கேட்டதற்கு "அவன் என்னைவிட இரண்டு புள்ளிகள் (மதிப்பெண்) கூட எடுத்துவிட்டான். வீட்டில் எனது அப்பா அம்மா இதற்காகக் கண்டிக்கின் றார்கள். எனவே நான் அவனுடன் விளையாடுவதையும், பேசுவதையும் நிறுத்தி விட்டேன்" என்றான். பிஞ்சுநெஞ்சில் நஞ்சைக் கரைக்கும் பெற்றோர்கள். இதை உணர்வார்களா?

பிள்ளைகளைக் கல்வித்தரத்தில் உயர்த்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக பரீட்சையின் மேலதிக தயார் நிலைக்காக அவர்களை ஓட ஓட வைத்துப் படிப்பிக்கப் பெற்றோர் முனைகின்றார்கள். கல்வியை மேம்படுத்தப் பல விதமான உபாயங்கள் உண்டு. கல்வி கற்பதற்கான வலிமை யை தக்க சூழல் மூலம் உருவாக்க வேண்டு மல்லவா? குழப்பமான அறிவுரை என்ற பெயரில் உதிர்க்கப்படும் குத்தலான வாசகங்களைக் கடைப்பிடிக்கும் பிள்ளைகள். தங்கள் எதிர்காலத்தில் தங்கள் சந்ததிகளையும் இந்த விதமான பாணியில் வழிநடாத்தி சுயநலத்தையும் சமூகத் தில் ஒட்டாத ஒரு நிலையையும் ஏற்படுத்தி விடுவார்கள்



RangaRakes



அல்லவா?

எங்களால் நிறைவேற்றப்படவுள்ள எந்தக் காரியங் களிலும் கடினமான முயற்சிகளுடன் மென்மையான போக்குகளையும் இழையோட விடவேண்டும்.

மனம் மென்மையாய் இருந்தால் மட்டுமே மனிதன் தொடர்ந்து இயங்கும் வல்லமையைப் பெற்று விடுகின்றான். இதனால் மனம் சலிப்படைவதும் இல்லை அவசரப்படுவதும். உடலை அநாவசியமாக அலட்டிக் கொள்வதும், கண்டபடி கண்டவர் உபதேசங்களைச் செவிமடுப்பதும், நீங்கள் ஏற்கனவே தயார் நிலையில் தேக்கிவைத்த சக்தியைக் குழப்புவதாகவும் அமைந்து விடலாம்.

ஒரு குறிப்பிட்ட கருமங்களைச் செய்யும் ஒருவர் அக் கருமத்துடன், எல்லாக் கருமங்களுமே, முடிந்து விட்டதாகக் கருதுவது முண்டு. சாதாரணமாக எந்த ஒரு செயலும் ஒவ்வொரு படியாக வளர்ச்சியடைந்த வண்ணமேயிருக்கும்.

சாதனையாளர்கள் தங்கள் பயணங்களில் ஓர் எல்லை யை வகுப்பதுமில்லை. இவர்கள் சாதனை நிறைவு கொண்ட தாகக் கருதி விட்டால் தொடர்ந்து எங்ஙனம் புதியன படைத்திட இயலும்? "நான் தயார் நிலையில் உள்ளேன் என்பது நான் தொடர்ந்தும் தொடர்ந்து இயங்கியபடியே... வருகின்ற பணிகளை முடித்தபடியே..., இனி வரும்



Tamilnavarasam.com

கடமைகளை வரவேற்பவனாகவும் இருப்பேன்” என்பதேயாம்.

செயல்களை நிறுத்தியவன் பின்பு எழுந்து நிற்க நாழிகையாகிவிடும். இதுவே நல்ல தருணம் என்றவாறு “ஓய்வு” என்ற பெயரில் “சோம்பல்” ஒட்டி உறவாட வந்துவிடலாம் அல்லவா? எதற்குமே தயார் நிலையில் உள்ளவனைப் புதிய பிரச்சனைகளால் ஒன்றும் செய்ய முடியாது. துணிவுடன் வேலை செய்யத்தயார் என்றால் அடுத்த வேலைபற்றியும் அதனூடு தோன்றக்கூடிய பிரச்சனைகளைக் கண்டு எதற்கு அச்சப்படல் வேண்டும்?

கருமங்களை ஆற்றாதவனுக்கு எல்லாமே கஷ்டம் தான். சின்ன வேலைக்கே பெரிய பெரிய திட்டம் போடுவார்கள். தம்பட்டம் அடிப்பார்கள். அது பற்றியே வியாக்கியானம் செய்வார்கள். முடிவில் ஒன்றுமே செய்யமாட்டார்கள். ஆனால் ஏன் அதனைச் செய்ய வில்லை என்பதற்கான நம்பகரமான ஆதாரங்களைச் சுவைபட எல்லோரும் நம்பும்படி சொல்லிக்கொள்வார்கள்.

“தாங்கள் எதற்கும் தயார், எதையும் எவரது உதவியு மின்றியே செய்து முடிப்பேன்” என்று வீராப்புடன் பேசுப வர்கள். மற்றவர்க்குத்தெரியாமல் அடுத்தவனிடம் சென்று கெஞ்சிக்கூத்தாடி உதவிகள் பெறுவதுமுண்டு. எந்த ஒரு விஷயத்யையும் செய்து பார்க்கும் போது தானே அதன் உண்மைத் தன்மையும் செய்யும் போது உள்ள சிரமங்க ளும் புரிகின்றது. எனவேதான் வேலையை படி, பயின்றுபார்



RangaRakes



அப்புறம் செய் என்று பெரியவர்கள் தங்கள் அனுபவ அறிவினால் கூறுகின்றார்கள். மாடு மேய்ப்பது சுலபமானது என்று கருதி ஆசிரியர், மாணவரைப் பார்த்து “நீ படித்து ஏன் சிரமப்படுகின்றாய் பேசாமல் மாடு மேய்க் கப்போ....” என்பார். ஆனால் மாடு மேய்ப்பது ஒன்றும் இலகுவான வேலை அல்ல.

வெய்யிலிலும், மழையிலும், மாடுகளை ஓட்டுவதும் அவை திமிறி ஓடும்போது துரத்திப் பிடித்துக் கட்டுவதும், பின்பு மாலையில் அவைகளை ஒன்றாகச் சேர்த்துப் பட்டியில் அடைப்பதும் சுலபமானதா என்ன? இப்படியாக அவஸ்தைப் படுவதைவிட இளமையில் சுலபமாகச் சந்தோஷமாகப் படிப்பது எவ்வளவு வாழ்க்கைக்கு லாபகர மானது தெரியுமா?

தங்களைத் தாங்களே நெறிப்படுத்தும். வல்லவர்க ளுக்கு ஆயத்த நிலை என்று குறிப்பிடும் படியாகச் சொல்ல வேண்டியதேயில்லை. தமது பணிகளைக் கிரமமாகச் செய்யும் போது வேலைகளில் தேக்கம் இருக்காது அல்லவா? எனவே தொடர்ச்சியான பணிகளைச் செய்ப வர்கள் எந்தக் கணமும் தயார்நிலையில் தம்மை வைத்துக் கொள்கின்றார்கள்.

மனதில், வாக்கில், செயலில் உறுதி பூண்டோர்கள் எஞ்ஞான்றும் தங்கள் நிலைகளில் இருந்து வழுவாத திறன் கொண்டோராவர். சலன சபல புத்தி கொண்டோரிடம்



Tamilnavarasam.com

எப்படித் திடமான முடிவை வினைத்திறனை எதிர்பார்க்க இயலும். "இதோ இப்போதே வருகின்றேன் நீ அங்கேயே இரு.... நான் புறப்பட்டு விட்டேன்" என்று சொல்லியவர், அடுத்த கணம் புதிதான நண்பர் ஒருவரைக் கண்டதுமே வந்த வேலையை மறந்து, புதிய நண்பருடன் எங்கோ சென்று விடுவார். இவரை நம்பியவரின் கதி அதோ கதி தான்!

எங்களால் செய்து முடிக்கப்படும் காரியங்களுக்கு அடுத்தவரை நம்பினால் நாம் தயார் நிலையில் கருமங் களை முடிக்க முடியாது. மேலும் எம்மில் பலருக்கும் குறித்த வேலைகளைத் தங்களால் செய்து முடிக்கவியலாத பட்சத் தில் யாரிடம் அந்த வேலைகளை ஒப்படைப்பது என்பதில் கூடப் பிரச்சனைகள் எழுகின்றது.

வேலைகளை செய்து முடிக்கும் ஆற்றல்கள் என்பது வெறும் அறிவு சார்ந்தது மட்டுமல்ல, அனுபவம், ஒழுக்கம் கூட இணைந்துள்ள சமாச்சாரமாகும்.

ஒருவரின் மன இயல்பை மதிக்காதவன் அடுத்தவ னுடைய வேலைகளின் முக்கியத்துவத்தை உணரவே மாட்டான். திருமண வீடு ஒன்றில் படப்பிடிப்பிற்காக படப் பிடிப்புத் துறையில் வல்லுனர் ஒருவரை திருமண வீட்டார் நாடினார்கள். மிகவும் பிரபலமான படப்பிடிப்பாளரான அவர் பலத்த வேலைப்பளுவின் மத்தியிலும் பண ஆசை காரணமாக மேற்படி வேலையை ஒப்புக் கொண்டார். அத்துடன் அகம்பாவம் கொண்ட வரும் கூட.



RangaRakes




திருமண நாளும் வந்தது, குறிப்பிட்ட நேரத்திற்கு படப்பிடிப்பாளர் வரவேயில்லை. அவரது சொல்லிடத் தொலைபேசியினூடாக எந்தத் தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியாதவாறு அது நிறுத்தி வைக்கப்பட்டது. குறித்த நேரத்தில் படப்பிடிப்பாளர் வராமையினால் திருமண விட்டார் உடனடியாகவே வேறு ஒரு படப்பிடிப்பாளரை நாடினார்கள். அவரை மட்டும் நம்பாமல் தயார் நிலையில் தம்மை வைத்துக்கொள்ளும் திறனால் பிரச்சனை தீர்க்கப்பட்டது பின்னர் அவசரம் அவசரமாக முன்னர் வருகை தருவதாக ஒப்புக் கொண்ட படப்பிடிப்பாளர் அங்கு வந்தபோது அனைவராலும் கண்டிக்கப்பட்டதுடன், அவரிடம் ஏற்கனவே வழங்கப்பட்ட முற்பணமும் மீள வசூலிக்கப் பட்டது.

மிகவும் எதிர்பார்க்கப்படும் கருமங்களை நாம் செய்ய முற்படும் போது எங்களை முன் கூட்டியே தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். கோபம், பதட்டம், ஆவேசப் படுவதால், ஏற்கனவே திட்டமிட்டபடி கருமமாற்ற இயலாது போய்விடலாம். ஆயினும் தவிர்க்க முடியாத சூழ்நிலை களால் எமது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களுக்குப் பிரச்சனைகள் வரும் போது நாம் என்ன செய்வது? அதற் கான முன் ஏற்பாடுகளையும் செய்யும் திறனை நாம் கொண்டிருக்க வேண்டும்.

நாம் வாழும் போதே எதிர்காலத்திற்கான திட்டங் களை வகுக்க வேண்டியுள்ளது. கவலையற்ற சுபீட்சமான



Tamilnavarasam.com



# நம்பிக்கைகள்

நம்பிக்கைகளே வாழ்க்கைக்கான ஆதாரம். நல்ல நம்பிக்கைகளை நெஞ்சில் இட்டுக் கொள்ளும் கட்டளைகளாக்குக! மூடக்கொள்கைகளை நம்பிக்கைகளாகக் கொள்ளற்க! சந்தேகம் நம்பிக்கைக்கு எதிரானது எனினும் எதையுமே ஆராயாது எவை மீதும் அதீத பற்றுதல் வைத்தல் தகாது. நிச்சயமான விஷயங்களை நம்பாது அநித்தியமானவைகள் மீது லயிப்பு ஏற்படுவது உண்மைகளை ஏற்காத செயல். தன்னை நம்புபவனே உலகையும் நம்புவனாகின்றான்.

"நம்பிக்கை" தான் வாழ்க்கை என்பார்கள். நேற்று இருந்தவர்கள் இன்றைக்கு இல்லை, இன்று வாழ்பவர்கள் நாளைக்கு இருப்பதில்லை என்று சொல்லிக்கொண்டே எதிலுமே பற்று அற்றவர்களாக எல்லோருமே இருந்து விட முடியாது. வாழ்க்கையை நம்பிக்கையுடனும் பற்றுதலு டனும் வாழ்ந்தால்தான் அது உண்மையாகவும், களிப்பூட்டு



RangaRakes



வதாகவும் அமையும். நல்ல நம்பிக்கை என்பது நாம் எமது நெஞ்சத்தில் இட்டுக்கொள்ள வேண்டிய கட்டாயக் கட்டளை யுமாகும்.

எங்களது நம்பிக்கைகள் நிகழ்காலத்திற்கும், எதிர் கால நலன்களுக்கும் உகந்தாகவும், எந்த ஒரு தனிமனிதனு க்கும் சமூகத்திற்கும் குந்தகம் ஏற்படாமல் இருப்பதுடன், எமது மனதிற்கு வலிமையூட்டுவதாகவும் அமைந்தால், வாழ்க்கை ப்பாதை தடைகளின்றி இறைவனின் அளப்பரிய கொடைகளைப் பெற்றிட்ட நாயகர்களாகியும் விடுவோம். நம்பிக்கையுணர்வில் தளர்வு அரும்ப ஆரம்பித்ததுமே செயல்களில் தொய்வுகள் மெல்லெனப்பற்றி இறுதியில் செய்கருமங்களில் விருப்பமற்று ஸ்தம்பித்த நிலைக்குள் ஆளாகிவிடுவர்.

இன்று எத்தனை எத்தனையோ நல்ல விடயங்களில் பற்றுதல்களை ஸ்திரமாக்கிக் கொள்ள வேண்டிய பலர் தேவையற்ற மூடக்கொள்கைகளையும், கேலிக்குரிய விஷயங்களிலும் அதீதமான உறுதியுடன் கைப்பற்றி வைத்திருப்பது அவர்தம் முன்னேற்றத்தை விடுத்து பின் நோக்கி இழுத்து அடித்துச்செல்வது போலாகும். கால விரயம் பற்றிக் கவலைப்படாமலும், தேவையற்ற நம்பிக்கை களால் உந்தப்பட்டும், மனதை நோகடித்தும் பொருட்களை விரயம் செய்தும்கூட வாழ்க்கையின் இழப்புகளின் வலிமையினை இன்னமும் புரிந்து கொள்ளாமல் இருக்கின் றார்களே! இது என்ன கோமாளித்தனம் ஐயா!

Tamilnavarasam.com

இதோ கொஞ்சம் உதாரணங்களைப் பாருங்கள்! கடவுளைவிடத் திரைப்பட நட்சத்திரங்களை போலி ஆன்மீ வாதிகளை, பொய் பேசும் அரசியல்வாதிகளை நம்பி, நம்பிக்கை கொள்பவர்கள், தங்கள் இந்த முயற்சியை விடுத்து ஒருசில மணித்துளிகள், தன்மீது நம்பிக்கை வைத்தால் தான் என்ன? பெற்ற தாயை, தகப்பனாரை நம்பாதன், போலி வார்த்தை பேசும் போக்கிரி நண்பனை நம்புகின்றான். திரைப்படத்தில் வீரவசனம் பேசும், கதாநாயகன் பேச்சை, இறைவன் செப்பிய வேதம் எனச் சொல்கின்றான். ஆனால், ஏதாவது நல்ல கருத்துக்களை திரைப்படத்தில் சொல்லி விட்டால், அது ஒரு பொழுது போக்கிற்காகச் சொல்லப்பட்ட வாசகம் என்றும் எண்ணிக் கொள்கின்றான்.

இன்று சிலரின் கைப்பையைப் பாருங்கள். அதனுள்ளே இஷ்ட தெய்வங்களின் திருவுருவப்படங்கள் காணப்பட மாட்டாது. திரைப்படத்தின் அன்றைய நடிகர், நடிகைகளின் படங்கள் தான் இருக்கும். அடுத்த மாதம் வேறு ஒரு பிரபல நடிகர் நடிகைகள் உதயமானால் பழையபடம் குப்பைக்குள் சேர்க்கப்பட்டுவிடும். இந்த நடிகர்களே தங்கள் வாழ்க்கைக்கான வழிகாட்டிகள் என்று ஆவேசமாகப் பேசுவார்கள் இதைவிட என்ன அறியாமைக் கொடுமை வேண்டும்?

உலக ஞானம், ஆன்மீகம் போன்ற விடயங்களைப் புரிந்து அவைகளில் வைக்கும் நம்பிக்கைகளைவிட கண்டவர்





பேச்சைக் கேட்பதும் அதுவே ஞானோபதேசமாகக் கொள்வதும் வேடிக்கை! யார் எதனைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பிவிடுவது கூட சுயபுத்தியை நம்பாத இயல்புதான். ஒருவர் வந்து "இன்று நான் நண்பகல் சூரியனைப்பார்த்தேன் அதிலிருந்து ஒரு நறுமணம் வீசும் மெல்லிய பூ ஒன்று புறப்பட்டு என் கரத்தினில் வந்து விழுந்தது. இதோ பார்" என்று சொன்னால் அதை நம்பி பக்தியுடன் எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் நபர்களும் இருக்கின்றார்கள்.

மக்களின் நம்பிக்கை உணர்வை வைத்துப் பித்தலாட்டம் செய்யும் நபர்களால்தான் நாடு நாசமாகி விட்டதாக புதுமை விரும்பிகள் ஆதங்கத்துடன் சொல்லிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஒருவரிடம் நம்பிக்கை கொண்டு விட்டால் அவர் எதனைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் இயல்பு சாதாரணமாக எல்லோருக்குமான பொது இயல்பேயாகும். இதனையே சாக்காகக் கொண்டு ஒருவரை ஏமாற்றுவது, அவனைப் பலவீனப்படுத்துவது எவ்வளவு கேவலமானது அல்லவா?

மக்களில் பலருமே நம்பிக்கை கொள்கின்ற விடயங்களில் சில சமயம் குழம்பிய நிலையில் இருப்பது முண்டு. "இவர் சொல்வதை நம்பலாமா, அவர் சொல்வதை நம்பலாமா" என்று ஆராய்ச்சிகளையே செய்யும் அதேவேளை தனது சொந்த வலிமை தன்னுள் புதைந்திருப்பதை மறந்து போய் விடுகின்றார்கள். ஒருவரிடம் ஒரு கருமத்தை



RangaRakes
Tamilnavarasam.com

ஒப்படைத்ததுமே அவர்மீது நம்பிக்கை கொள்வ
தனக்கான கடமையையே கணக்கில் எடுத்துக் கொள்
மல் விடுவது சரியான செய்கையல்ல! தங்களது பிள்ளை
கான கருமங்களை அவர்களிடமும் ஒப்படைக்க வேண்
கூடவே பிள்ளைகள் செய்யும் செயல்களைக் கவனிக்கா
விட்டுவிடக்கூடாது.

அதேசமயம் எங்களது செய்கைகள் மற்றவர்கள
நம்பிக்கையீனமான எண்ணங்களைப் புகுத்திவிடக் கூடா
ஒருவர் எம் மீது கொண்ட நம்பிக்கைகளை எம
சந்தேகமான பார்வைகளால் அந்த உயரிய நம்பிக்கை
யினைச் சிதைக்க நாங்களே காரணமாகி விடக்கூடா
குடும்ப வாழ்க்கையில் கணவனும், மனைவியும், புரிந்
ணர்வு நம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்தாது விட்டால்
இனிய இல்லற வாழ்வாக அமைந்துவிடுமா? ஒருவர் மீ
நம்பிக்கை வைத்துப்பழகிவிட்டுத் திடீர் என தம
சுயநலத்திற்காக புதிதான ஒருவர் பக்கம் சாய்வதனா
நீண்டகால நட்பு பாதிக்கப்படுவதுமுண்டு. அடிப்படை
தூயமனதுடன் நாம் அன்பு செலுத்தி வந்தால் எவரு
எமக்குத்தீமை செய்யத்துணிய மனம்வராத நல்ல
மனிதராக உருவாகிவிடுவார்.

ஒருவரிடம் நன்மைகளைப்பெற்றும் நன்மை
செய்தவர்களுக்கே தீமை செய்வதைப்போல் துரோகம்
வேறில்லை. ஒருவர் தங்கள் மீதுவைத்த நம்பிக்கைக்கும்
குந்தகம் ஏற்படுத்துதலை நம்பிக்கைத் துரோகம்

RangaRakes





என்கின்றோம். பிரதிபயன் கருதாது நல்லகாரியம் செய்த வர்க்குத் தீமைபுரிதலும், நல்லவர் என எண்ணிய வர்களே சுயநலமாகச் செயல்பட்டுக் கெடுதல் செய்வது எல்லாமே நம்பிக்கைத்துரோகம் என்பதுமட்டு மல்ல, அவர்கள் இறைவனின் சீற்றத்திற்கும் ஆளாகவேண்டிய கீழ்மக்க ளுமாவர்.

ஒரு நிறுவனத்தில் நாம் சென்று பொருட்களை வாங்கும் போது ஒரு நம்பிக்கையில் தான் வாங்குகின்றோம். இந்த நம்பிக்கையைக் கெடுக்குமாற்போல் போலியான பொருட்களை விற்பதனால் அந்நிறுவனத்திற்கே கெட்ட பெயர் உண்டாகி விடு கின்றது.

இன்று புகழ்பூத்த பெரும் நிறுவனங்கள் பெற்ற நன்மதிப்புக்கு என்றே பெரியவிலை ஒன்று உள்ளது. இந்தக் கௌரவம் மிக உயர்ந்தது. அங்கு வாங்கும் பொருட்களுக்கு என்றே ஒரு கிராக்கி என்னும் இருக்கும். இந்த நன்மதிப்பு (Goodwill), பங்குச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெறுவதுடன் அதிகமான வியாபாரிகள் மேலதிகமாகப் பங்குகளை வாங்கவும் போட்டி போடுகின்றனர். மக்கள் நம்பிக்கையின் மூலம்தான் எந்த நிறுவனமும் உயர்ந்து வரமுடியும் என்பதற்கு இவையெல்லாம் நற்சான்று களேயாம். இறைநம்பிக்கை, பக்தி என்பதெல்லாம் எங்கள் மனதுடன் சம்பந்தப்பட்ட பவித்திரமான உணர்வுகளாகும். இவைகளைக் கிண்டலாகக் கேலியாக நோக்குதல் போல அறியாமை வேறில்லை.



Tamilnavarasam.com

பாரம்பரிய மதசம்பிரதாயங்கள் கலாசாரத் மீதான நம்பிக்கைகள் எல்லாமே மக்களை நல்வழிப்ப தலுக்காகவே ஏற்படுத்தப்பட்டன. மேலும் நமது உடல், வளத்தை மத அனுட்டானங்கள் கிரியை வழிபாடுக தியானங்கள் வலுப்படுத்துகின்றன.

வணக்கத்திற்குரிய திருத்தலங்களில் மக்கள் வழிப செய்தலும், உடலை வருத்திச்செய்கின்ற பணிக ஆரோக்கியமான மன வளத்தினைப் பேணுவதற்கேயா எல்லாச் சமயங்களிலும் வெவ்வேறான வழிமுறைகை கையாண்டாலும்கூட இவையெல்லாமே தேக, மன ஆரே கியத்துடன் தொடர்புபட்டமையினால் அந்த அந்த ம களைச் சாராதவர்கள் வேற்றுமையான, குரோ கிண்டல்செய்யும் எண்ணத்துடன், பேசுதலோ, கண்டி லோதகாத செயலாகும்.

இன்று மக்கள் மதநம்பிக்கைகளை விட விஞ்ஞா த்தின் மீதான நம்பிக்கையிலே ஈடுபாட்டுடன் இருக்கி ார்கள். விஞ்ஞானத்தின் கருத்துக்கள் கூட காலத்திற் காலம் மாறுபாடான கருத்துக்களைச்சொல்லி வருகின் ஆயினும் விஞ்ஞானத்தில் நம்பிக்கை வைக்காமல் அ துணையின்றி எம்மால் வாழ்ந்து விட முடியுமா? இன்று ந அனுபவிக்கும் சகல வசதிகளையுமே விஞ்ஞானம் தா ஆக்கித்தந்துள்ளது. இதனை நம்பியே உலகம் உயி வாழ்கின்றது. இயற்கையின் மாறுதல்களாலேயே சகல மா வ வதனால் மனித அறிவின் வியாபகம் கூ





இயற்கையினை எமக்கு அளித்த இறைவனாலேயே அருளப் படுகின்றது.

மகிழ்ச்சியுடன் எப்போழுதும் வாழ்ந்து விடவும் அதனோடு என்றுமே நீக்கமற நிறைந்து கொள்ளவுமே நாம் பிரியப்படுகின்றோம். அப்படியிருக்கும்போது வீணான குருட்டு நம்பிக்கைக்குள் சந்தேகங்களுக்குள் வாழ்ந்து கொள்ள எத்தனிப்பது புத்திசாலித்தனமாகாது. இதனால் மன அமைதி விடைபெறுவதுடன் மன அழுத்தம் வீணான கற்பனைகள் வந்து ஒட்டிக் கொள்வதுடன் எதிலுமே ஈடுபாடு கொள்ளாத நிலைக்கும் உட்படவேண்டிவரும்.

மேலும் சந்தேகம் என்கின்ற இயல்பு நல்ல நம்பிக் கைக்குச் சத்துரு என்றே கருதப்படும். தேவை. யேற்படும் போது சந்தேகப்படாமல் கண்டபடி நம்பிக்கை வைப்பதும் மிகவும் ஆபத்தான சூழ்நிலைக்குள் கொண்டுவிடும். ஆனால் நல்ல வழிகள் கூற்றுகளின் மீது நம்பிக்கை வைத்த பின் வேறு யாராவது குட்டையைக் குழப்புவது நெஞ்சத்தில் நஞ்சை ஊட்டுவதாகும். இந் நடவடிக்கைகள் அவர்கள் மீதான அக்கறையினால் அல்ல. எனினும் சிலர் அறியாமை காரணமாகவும் சில தவறான கருத்துக்களைச் சொல்வது முண்டு.

தவறான நம்பிக்கைகள் ஒருவரின் வழியை மறித்து அவர்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்தையே நிறுத்தி வைக்கின்றது. நெஞ்சினில் தவறான கருத்துக்களை



RangaRakes Tamilnavarasam.com

ஆழமாகப் புதைத்து வைத்தால் அதனில் இருந்து மீ டேயாக வேண்டும். வெளியே புறப்படும் ஒருவர் வழியி பூனையைக்கண்டால் தமக்குப் போகும் காரியம் தடை படும் என்று, தமக்குத்தாமே ஒரு தடையை ஏற்படுத் விடுகின்றார். ஒரு பிரபல நடிகர் சொன்ன தகவல் இது,

தமக்குப் பிடித்தமான ஒருத்தியை மணமுடிக் எண்ணித் தமது பெற்றோர்களிடம் சம்மதம் கோரினா நடிகரை மணமுடிக்க அந்தப் பெண் ஆவலுடன் காத் தார். திருமணப் பேச்சிற்காக நடிகரின் குடும்பம் வீட்ை விட்டுக்கிளம்ப ஆரம்பித்தபோது அவர்கள் விரும்பா சகுனங்கள் தென்பட்டதால் அந்த பெண்பார்க்கும் படல பாதியிலேயே தடைப்பட்டு முடிவில் அந்தத் திருமணே நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டது.

ஆனால் அதன் பின்னர் மேற்படி பெண்ணிற் மிகவும் உன்னத நிலையில் உள்ள ஒரு கோடீஸ்வர குடும்பத்தில் திருமணம் முடிந்து விட்டது. ஆயினும் நடிக தனது வாழ்க்கையில் இது ஒரு சோகமான எதிர்பார் முடியாத ஜீரணிக்க முடியாத நிகழ்வாகி விட்டதாக மிகவும் மன வருத்தத்துடன் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். தேவையற்ற குழப்பம் சந்தேகம், நம்பிக்கையீனம், ஒருவ வாழ்க்கை யையே திசை திருப்பிவிடுவது எவ்வளவு துன்பகரமானது தெரியுமா?

மனம் விசித்திரமானது சில பொழுது அது திடீர் என





ஒன்றின் மீது ஆசைகொள்ளும். பின்னர் விரும்பிய பொருள் மீதே வெறுப்பினை உமிழ்ந்து கொள்ளும். யாராவது நல்லதைச்சொன்னால் மறுத்துரைக்கும். மீண்டும் அதனையே ஏற்றுக்கொள்ளும். மனம் எப்பொழுது எதனை ஏற்றுக்கொள்ளும், எதில் இருந்து விடுபடும் என்பதே தீர்க்கமாகச்சொல்ல முடியாத விஷயமாகிவிடுகின்றது.

ஆயினும் ஸ்திரமான மனநிலையை நாம் உருவாக்கி விடுவோம் என நாம் எங்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். முதலில் தன்னை நம்பாதவன் எவரையும் நம்ப முடியாது. ஏன் தலைவனையும் நம்ப முடியாது. சிலர் தங்களை நம்பாமல் மற்றவர்களை மட்டும் நம்புவது கூட தன்னம்பிக்கையற்ற நிலைதான்.

உண்மையாக வாழுகின்ற ஒருவன் தன்னை நம்பாமல் வாழ்ந்து விடமாட்டான். மற்றவன் மீது நம்பிக்கையின்றி நாம் வாழ்ந்துவிடவும் முடியாது. ஆயினும் எதனை ஏற்பது, எதனை விட்டுவிடுவது என்பது எங்களது ஆரோக்கியமான எண்ணத்தின் வலுவில் தங்கியுள்ளது.

இன்று எத்தனையோ பேர் மரணம் என்பது நிச்சய மானது என்று சொல்லியபடியே கண்டபடி வாழ்ந்து வருகின்றார்கள். மரணம் பற்றித்தெரிந்தும் அதன் உண்மை நிலை, நிச்சயமான நிலையைக் கருதாமல் வாழ்வது யாருக்கு நஷ்டம்? இவர்கள் வெந்து நொந்து கொள்வதைத் தாமே உருவாக்குகின்றனர்.



RangaRakes
Tamilnavarasam.com

மரணத்தை வரவேற்கும் இயல்பு மன வலி போன்றனவற்றில் பரிபூரணமான "திருப்தி" நிை உருவானால். சாவு என்பதே ஒரு சராசரியான சின் சம்பவம் என்றே கருதிவிடுவார்கள். சாவை மனப்பூர்வமா ஏற்பவன் சரித்திரம் படைக்கின்றான். "வாழ்வு" என்ப எவ்வளவு நம்பிக்கைக்குரியதானது என்று சாதனை படை வர்கள் கருதும்போது, மனித வாழ்வின், வரவேற்கவே முடிவு சாவு என்பதையும் ஏற்றுக்கொண்டேயாக வேண் இதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய, நிலையி இல்லாதுவிட்டாலும் நடக்கின்ற மாற்றங்கள் நடக்காம போவதுமில்லை. மாற்றங்களை ஏற்பதே துணிவும் ஆகு

ஏன் எனில், எமக்குப் பின்னால் எத்தனையோ பே சாதனை செய்யப் பிறந்து கொண்டேயிருக்கின்றார்கள் மரணம் என்பது, புதியவர்களை உருவாக்கச் சந்தர் பங்களை உருவாக்குவதனால், மரணத்தை வரவேற்கு உணர்வினைப் பெறுவோமாக!

மிக உன்னதமான தெளிவு நிலையில் நல்ல நம்பிக்கைகளும் உதயமாகும். இயற்கையுடன் வாழ்ந்து வரும் நாம் அதன் மீது நம்பிக்கை வைத்து போற்றுதல் செய்யும் அதேசமயம், அதன் படைப்பான மனித உருவங்கள் உயிர்களை நேசிப்பதனால் நம்பிக்கை உணர்வுகள் தானே இயல்பாக உருவாகி விடுகின்றது.

"கடவுளை நம்பினேன் அவர் என்னைக் கைவிட்டு





விட்டாரே" என்று பிரலாபிப்பது சிலரின் துன்ப உணர்வின் வெளிப்பாடு என்றாலும் இவர்கள் கடவுள் நம்பிக்கைகளைக் கைவிடுவதில்லை. இன்று போரினால், இயற்கை அழிவ தினால், என்னதான் அனர்த்தங்கள் நடந்தாலும் கூட மனித னின் சாதனைகளும், முன்னேற்றங்களும், தடைப்பட்டு விட்டதா என்ன?

எல்லாமே நடந்து கொண்டேயிருக்கின்றன. இவைகளின் முன்னேற்றங்களை எவராலும் தடுக்க முடியாது என்பதே மனிதனின் அசைக்க முடியாத நம்பிக்கை உணர்வுமாகும்.

"காலத்தின் கட்டளைகள்" எல்லாமே மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன். நம்பிக்கையுடன், தரப்பட்ட வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு இயல்பாக எளிமையாக வாழ வேண்டும் என்பதேயாகும்.

எங்கள் "நம்பிக்கைகள்" துணிச்சலை பேராற்றல்களை வளர்க்கவேண்டும். இதன் மூலமே எமது எதிர்கால உலகை ச்சமைக்கின்ற பணிகளை எங்கள் சந்ததிகளுக்கும் விட்டுச் செல்லும் பாக்கியத்தைச் செய்தவர்களுமாவோம்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
20.04.2008



# வேற்றுமைகள் - II

ஆண்டவன் படைப்பில் ஒன்றுபோல் ஒன்று இருப்பதில்லை. தோற்றத்தில், குணத்தில், செயலில் எல்லாமே வெவ்வேறாக இருப்பினும் இந்த வேற்றுமைகளில் கூட இந்த உலகம் விழித்தபடி உடையாமல் உருளுவது அற்புதமோ அற்புதம்! வேற்றுமையில் ஒற்றுமையுடன் வாழ்வதே நியதி. வேற்றுமைகளைத் தோற்றுவித்தால் ஒற்றுமை சிதைக்கப்படும். தமது இனம் வாழ்வதற்காக பேதங்களை உருவாக்குவது அவர்கள் இனத்திற்கே அவமானமும் கேடுமாகும். அன்பினால் எதையுமே எம்மால் பெறமுடியும். வேற்றுமைகளை வளர்ப்பவர்கள் தூற்றுதலுக்கேயாளாவர்.

வேற்றுமைகளைத் தோற்றுவிப்பதால் ஒற்றுமை சிதைக்கப்படுகின்றது. ஒரு முழு சமூகத்தினரிடையேயான தோன்றும் வேற்றுமை உணர்வு ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்க்கைக்குமே ஊறு விளைவிக்கின்றது.

வேற்றுமை காரணமாக ஏற்படும் நாசகார நடவடிக்கைகள் சிலருக்கு வேடிக்கைக் காட்சியாகிவிட்டாலும்





இந்தப்பெரும் துன்பங்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட வாழ்வைத் தொட்ட பின்னர் தான் ஒற்றுமையின் அவசியம் உணரப்படும். பட்டபின் ஞானம் பெறுதலைவிட, துன்ப அவலங்கள் தொடரும் சிந்தையை நல்வழிப்படுத்தி, நல்லன செய்ய முந்துதலே சாலச் சிறந்த பணியாகும்.

ஆண்டவன் படைப்பில் ஒன்றுபோல் ஒன்று இருப்பதில்லை. தோற்றத்தில், குணத்தில், செயலில் எல்லாமே, வெவ்வேறாகவே எமக்குத் தெரிகின்றது. இந் வேற்றுமைகளில்கூட இந்த உலகம் விழித்த படி உடையாமல் உருளுவது அற்புதமோ, அற்புதம்!.

வேற்றுமைகளில் கூட ஒற்றுமை காண வேண்டும் என்கின்ற நியதி இருப்பதனால் மனிதன், எப்படியாவது மற்றவனுடன் சார்ந்தே இயங்குவதால், உலக இயக்கம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இருப்பினும், நாம் இன்று சமாதான சுபீட்ச வாழ்வை நோக்கி ஓடாது விட்டாலும்கூட நகர்கின்றோமா என்பதே பெரும் கேள்வியாகும். எல்லோருமே திசைக்கு ஒருவராய் தங்கள் மனத்தைத் திருப்பினால், உலக இயக்கம் இரசிக்கும்படி இருக்காது தேவையற்ற உராய்வுகளால் வெறுக்கும் நிலையே உருவாகிப்போகும்.

ஒவ்வொரு உயிர்க்கும் ஒவ்வொரு தனித்தன்மைகள், ஆளுமைகள் இருக்கத்தான் செய்யும். ஆயினும் இவைகளைப் புரிந்துகொள்வதும், அதனைக் கௌரவிப்பதும் எமக்குத்தெரியாத காரியங்களாகிவிட்டது. தெரிந்து



RangaRakes
Tamilnavarasam.com

கொண்டாலும் புரியாத மாதிரி சிரமத்தை வலிந் வாங்குகின்றார்கள்.

ஒவ்வொரு இனத்து உயிர்களுக்கும் தனித்துவமா வடிவமைப்பு இருப்பினும் கூட அவைகளுக்குள்ளேயும், ஏதோ ஒரு சின்ன வித்தியாசத்தை ஏற்படுத்தி அவைகளில் தோற்ற வேறுபாடுகளை இறைவன் புகுத்தியுள்ளது என் புதுமை! என்னே படைப்பின் விந்தை!.

உதாரணமாக மனிதனின் அடிப்படை உருவம் ஒன்றே. ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் அவரவர் நாட்டிற் குரிய ஒரு பொதுத் தோற்றம் இருக்கும். உடலமைப்பு, நிறம், போன்றவைகளால் பொதுவான வேறுபாடுகளைக் கண்டாலும் இன்னார் இவர் என்பதில் இனம் காணச் சிரமப்படுதல் இயற்கை.

சீன தேசத்தவர்களைப் பார்த்தால், இவர் சீன தேசத் தவர் என்று சொல்ல முடியுமே தவிர அவர்களைக் குறிப்பி ட்டுப்பேதம் காட்டுவது சிரமமாக இருக்கும். ஒரு இந்தியர் ஒரு சீனதேசத்தவரைப் பார்த்துக் கேட்டார். "உங்களை நாங்கள் வெவ்வேறான நபர்களாக இனம் காண்பது கஷ்டமாக இருக்கிறது நீங்கள் எப்படி உங்கள் நாட்ட வர்களை இனம் காண்கின்றீர்கள்" என்றதுமே, அந்தச் சீன தேசத்தவர் "எங்களுக்குக்கூட இந்தியர் எல்லோருமே ஒருவர் போலத்தெரிகின்றார்கள்" என்றாராம்.





எல்லோருக்குமே தமது தேசத்துமக்களை இனம் காண்பது சிரமமான காரியம் அல்ல. தங்கள் தேசத்துக்குள் ளேயே உள்ள இனங்களுக்குள்ளேயே உருவ வேறுபாடு களும் இருப்பதுண்டு. சிலர் மிக நுட்பமாக பல்வேறு பிரதேசங்களுக்குரியவர்களின் தோற்றம், நடத்தைகள், பேசும் மொழி வேறுபாடுகளைக் கண்டுபிடித்து விடுவதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவதுண்டு. உருவங்கள் வேறுபாடுகள் கொண்டாலும். நாம் மனிதர்கள், இறைவ னின் அரிய படைப்புக்கள் என்கின்ற எண்ணத்தை மறக்கலாகாது.

பேதம் காட்டி நடந்தால் அவரையே நிந்திப்பதாக அமையும். மனித வடிவங்களை வைத்து அவர்கள் தன்மைகளை, ஆளுமைகளை நிந்திப்பவர்களை நாம் காண்கின்றோம். ஒருவரது அழகை வைத்தும், பேசும் பாவனைகளை வைத்தும், கண்டபடி விமர்சிப்பது சிலரின் பழக்கமாகியும் இருப்பதுண்டு. பண்பை முன் நிறுத்தி ஒருவரைக் கௌரவிக்காது, வெறும் தோற்றத்தை வைத்து மட்டும் வேற்றுமை காட்டுதல் சற்றும் ஏற்புடையதன்று.

மேலும், நலிந்த மக்களின் இனத்தை, மொழியை, அல்லது அவர்கள் குடும்ப நிலைமைகளை வைத்தும் தவறான கணிப்பீடு செய்வதும் சகஜமாகிவிட்டது. வசதியான இனத்தில் பிறப்பது என்பது, ஒரு உயிர் விரும்பி ஏற்றுக் கொண்ட ஜனனம் அல்ல. எங்கோ ஓரிடத்தில் பிறப்பது எல்லாமே இயற்கை நிகழ்வு. இதையெல்லாமே



RangaRakes

Tamilnavarasam.com

ஒரு மாபெரும் தகுதியாகப் பீற்றிக் கொள்வது வீண் வேலையாகும்.

ஒருவன் மன்னனின் மகன் என்றால் அது பிறப்பினால் ஏற்பட்ட ஒரு இயற்கையான விஷயம் என்பதை எண்ணாது, கடவுள் படைப்பிற்கே தவறான வியாக்கியானம் புனைவதும், சாதாரண குடும்பத்தில் பிறந்தோரை தரத்தில் குறைவாக மதிப்பீடு செய்வதுகூட அறியாமை தான். துறவிகளுக்கு எல்லோருமே சமானமானவர்கள் என்பார்கள். இந்த நிலை ஒவ்வொருவரின் ஆன்மீக பக்குவ நிலையுடன் சம்பந்தப்பட்ட விஷயம். சாமான்ய மாந்தர்களை ஏற்றத் தாழ்வுக் கண்ணோட்டத்தில் நோக்குவது, தங்களைத் தாங்களே தரம் குறைப்பதாகவும், சுய கௌரவத்தையே இழக்கவைக்க வழிகாட்டிய செயலாகவே கருதவேண்டியுள்ளது. பேதங்களால் யாதென்றுச் கிட்டுவதுமில்லை.

ஆனால், நாம் வேற்றுமை காட்டக்கூடாது என்பதற்காக எமது தனித்துவத்தை இழக்க வேண்டுமென்பதுமில்லை. எமக்குரியநாடு, எமக்குரியமதம், மொழி மீதான பற்றுதலை எக்கணமும், விட்டு விலகிடவும் இயலாது. கலாசாரத்தின் மீதான கரிசனை, விருப்புக்கள் அவனது நல் நடத்தைக்கான காரணியாகும். ஒரு இனத்தின் கலாசாரத்தைச் சிதைப்பது, அல்லது வலிந்து,வேற்று இன, மத, கலாசாரங்களை உள் நுழைப்பதால், அந்த இனத்தின் தனித்துவம், பண்பாட்டு உணர்வுகளில், ஏற்படும் மாறுதல்கள் பாரதூரமான, எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.





ஒவ்வொரு நாட்டின் சூழல், புராதன நாகரீக மேம்பாடுகள், கட்டுப்பாடுகள், பழக்கவழக்கங்கள் மூலமாக கலாசாரங்கள் பேணப்பட்டு வந்தாலும் கூட, இவைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை எம்மால் தடுத்து விடமுடியுமா?

தங்கள் இனம், மொழி, மதம் தான் உயர்ந்தது என்று வேற்றுமைகாட்டி, தம்மை முதன்மைப்படுத்தி ஆதாயம் தேட முனைதல் போல மடமை வேறில்லை. இன்று உலகம் பூராவும் இந்த அடவாடித்தனமான விடாப்பிடியான போக்கினால் “மறப்போம், மன்னிப்போம்” என்கின்ற பரந்த சிந்தனையே அருகிவிட்டது.

யாராவது செய்த அறியாமை காரணமான தவறுகளையே தூக்கிப்பிடிப்பதும் அதே வேளை தங்களுக்குள்ள மேலாண்மை வசதி வாய்ப்புகள் மூலம் நலிந்தோரை மென்மேலும் உருத்தெரியாமல் ஒழிப்பவர்களும் அதே சமயம் இவர்கள் செய்யும் அநியாயங்களைச் சரி என ஒத்து ஊதும் ஆத்மாக்களும் இருக்கும் வரை வேற்றுமை உணர்வுகள் சற்றும் சளைக்காது முளைத்தெழுந்து ஓங்கிவிடும். கவலை தரும் விஷயம் அன்றோ இது!. வேற்றுமை பேசி வயிறு வளர்க்கும் வல்லூறுகள் பிறரை வதைத்தும் பெரிதாக அழுது ஆர்ப்பாட்டம் செய்வதும் ரசிக்க முடியாத கோமாளித்தனமே, தங்களைப் பற்றி மற்றவனின் மதிப்பீடுகள் பற்றி இன்னமும் தெரியாதவர்கள் போல் நடிப்பது தாங்களே ஒடுங்கிப் போவதற்கேயாம்!



RangaRakes
Tamilnavarasam.com

தங்களுக்குக் கிடைக்கும் அந்தஸ்து , உயர்ச்சி என்பதெல்லாம், தங்களால் வெளிப்படுத்தப்படும் துவேஷமான, வேற்றுமைகளைக் கூறும் தன்மையினாலேயே என்று கருதும் எத்தர்கள் எத்தனை நாட்களுக்குத் தான் எல்லோரையும் ஏய்த்து வாழ இயலும்? இதில் கவலைப்பட வேண்டிய விஷயம் என்ன வெனில் இன்னமும் மக்களில் சிலர் இவர்கள் பேச்சை வேத வாக்காக நம்பித்தொலைக்கின்றார்கள். எத்தர்களைச் சுத்தமானவர்களாக்குவதே கஷ்டமாக இருக்கின்றது.

"நாட்டுப்பற்று" என்பது தனது நாட்டில் பற்று வைப்பதும், மற்ற தேச மக்களை எள்ளி நகையாடுதலும் என்றே எண்ணுவது, உலக ஞானமற்ற எண்ணம் தான். இனத்துவேஷம் பேசுவோர் கடவுளால், ஆசீர்வாதம் செய்யப்பட்டவர்கள். தாங்கள் மட்டுமே எனத் தப்பு அபிப்பிராயம் கொள்வது, இறையச்சம் என்பதைப் பொருட்படுத்தாத, பொருந்தாத போக்குமாகும்.

இத்தகையவர்கள் வேற்றுமை நோக்குடன் சாற்றும் மொழியால், ஈற்றில், தம்மைத்தாமே தூற்றிக் கொள்வதாக ஏற்றுக் கொள்ளப்படும், நிலையினை உருவாக்கிக் கொள்வார்கள்.

வலையில் மீன்களைக் கௌவுதல் போல துவேஷ வலைகள் மூலம் அப்பாவிச் சனங்களை அலாக்காய் கௌவுதல், பொய்மை வேஷம்! தூஷணை வார்த்தைக





ளைவிட, துவேஷமான பேச்சு மனதிற்கு ஏற்காத கூச்சத்தை அளிக்கும். வேற்றுமைகளைக் காட்டி வேதனையூட்டிச், சூழ்ச்சிகள் செய்வதைவிட அன்பைக் காட்டி அரவணைப்பதே அருமையான வழியுமாகும்.

ஒரு நாட்டில், பலமத, இன, மக்கள் வாழ்ந்தாலும் கூட, அவர்களின் சுய கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படாமல் வேற்றுமையில் ஒற்றுமையாக வாழ முடியும். இதற்கு உதாரணமாக உலகில் பல நாடுகள் உண்டு. ஒரு நாட்டின் மூலவளங்களில் முதன்மையானது, மனித வளம் என்பதை நாம் அறிய வேண்டும். சகல மக்களும் ஒன்றிணைந்து, ஒற்றுமையாக இயங்கும்போது, இன, மத, மொழி பேதங்களை அறவே மறந்து போய்விடுவர். இன்று முக்கிய மான பணிகள் பல, எம்முன் விரிந்து கிடக்கின்றது.

இதைவிடுத்து ஒருவரை அடிப்பதும், முடக்குவதும் தான் பிரதான கருமமாகி விட்டதுபோலவும், அதுவே தமது சமூக முன்னேற்றத்திற்கான தங்களின் அளப்பரிய பணி எனவும் கருதித் தாம் சார்ந்த சமூகத்தைப் பெரும் பழிக்கே இட்டுச் செல்கின்றனர். சட்டத்திற்குட்பட்டு வாழும் சமூகம் மட்டம் தட்டப்படுவதுடன், சட்டத்தின் துணை தேடுமுன் பெரும் துன்பங்களால் நொருங்கிப் போகின்றார்கள்.

மனிதனை மனிதன் மதிக்காதவரை எவ்வாறு நிம்மதி மதியினுள் உட்புகுந்து கொள்ளும்? பலரும் ஆன்மீகம் பற்றிப் பேசுகின்றார்கள், நல்ல அரசியல் கருத்துக்களை அள்ளி வீசுகின்றார்கள், முற்போக்காகச் சிந்திக்கின்றார்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

தர்ம, நியாயங்களை, வார்த்தைகளாக அள்ளிக் கொட்டுகின்றார்கள். ஆனால், வேற்றுமையுணர்வும், காழ்ப்பும், கரவும், வஞ்சனைப் போக்கும் இன்னமும் ஏன் தொலைந்து ஏன் போகவில்லை? இவை யெல்லாம் செழித்து வளருகின்றதே! வேதனை ஐயனே! வேண்டி விரும்பி ஏற்கும், பழி, பாவத்திற்குக் கடவுளா காரணம்? சொல்லுங்கள்! சுதந்திரம் பற்றித் தந்திரமாகப் பேசி என்ன பயன்? இப்படித்தான் சுதந்திரம் என்றும் சொல்கின்றார்கள். அமைதியான சாந்தம் மிளிரும் வாழ்க்கை என்பது தான் என்ன? அது சுதந்திரம் என்கின்ற வாழ்க்கை முறையில் அமைந்துள்ளது.

நடுநிசியில், கன்னிப்பெண் நகைகளுடன் தன்னம் தனியே போய் வரும் நாளே, சுதந்திரம் பெற்ற நாள் என்று மகாத்மாகாந்தி சொன்னார். பட்டப்பகலில், பத்துப்பேர் கூடப் போனாலும் ஒருவனே கழுத்தில் கத்தி வைத்துக் காசு பறிக்கும் போதுமிகுதி ஒன்பது பேரும் ஓட்ட மெடுக்கும் அவனியில் அல்லல்படுகின்றோம்.

பக்கத்து வீட்டு நோஞ்சான் ஒருவன் வேலியில் உள்ள, பூக்களைக் கொய்தால் நெஞ்சத்தை வாள் கொண்டு அரிவதுபோல் வீர வசனம் பேசிச் சண்டை செய்யும் நபர்கள், தங்கள் வீட்டுக்குள்வந்து வலியவர் செய்யும் அக்கிரமங்களுக்கு, அடக்கிப் போவதுடன், அவர்களுக்கு ஆலவட்டமும் பிடிப்பதும் வெட்கம்! இரண்டு சண்டியர் களுடன் சினேகம் கொண்டால் பிறருக்குத் துன்பம் கொடுப்பதற்கான அனுமதி என எண்ணுபவர்களும் இருக்கின்றார்கள்.



RangaRakes



அன்பை, பரிவை, பாசத்தை வழங்கத் தயங்குபவர்கள் பின்னர் நடக்கும். கொடுமைகளைக் கண்டு பேதலிக்க வேண்டிதே! "அன்பை வழங்கிப்பார், எல்லாமே இன்ப மாகும்" இதனால் எவரும் எம்மைத் துன்புறுத்த விளைவார் களா? அடிக்க வருபவனுக்கும் அன்பைப் பொழிவது கோழைத்தனம் அல்ல. இழிந்தோரையும் மன்னித்துப் பார்த்தால் என்ன? கோபம் கொண்டவர்களை, அவர்களில் பேதம், வேற்றுமைகளைக் காட்டாது அன்பால் அவர்கள் மனத்தினுள் ஆதிக்கம் செலுத்துவது சாமானிய வீரத்திலும் மேலானது. "அடிக்க வருபவர்க்கு அன்பைக் கொடு, அடங்கிப் போவான்"! ஆனால், பொல்லாதவர்களுக்கு வழங்கப்படும், நல்ல சந்தர்ப்பங்களை அவர்கள் ஏற்காதவரை, ஈற்றில், மௌனமாக, இருப்பவர்களின், விஸ்வரூப எழுச்சியினால் நிச்சயம், எதிரிகள் துச்சமாகிப்போய்விடுவர்.

என்ன தான் நாம் வலிமை மிகுந்தவர்களாக, இருந்தாலும், எங்கள் எதிரில் உள்ளவர்கள், மிகவும் பலம்குறைந்த, வசதியற்றவராக இருந்தாலும், அவர்களிடம் பகைமை பாராட்டி வேற்றுமையுடன் நடந்தால், நாம் சுதந்திரமாக இயங்க முடியாத நிலை உருவாகி விடலாம். ஒரு சின்னத் தவறுகளை நாங்கள் செய்தாலும் ஒருவரும் மன்னிக்கவே மாட்டார்கள் "எங்கே, இவன் விழுவான், ஏறி மிதிப்போம்" என்கின்ற, பழி உணர்ச்சியினால் உந்தப்படுகின்றவர்களை நாமே உருவாக்கும் நிலையினால் தனிமைப் பட்டுப்பெரும் அவஸ்தைக்குள்ளாகும் சந்தர்ப்பங்களும் ஏற்படலாம்.



Tamilnavarasam.com

மனத்தை தனது இருதயத்தினை முழுமையாக இறைவனிடமும், அவரது பிரியத்திற்குரிய சகல ஜீவன்களுக்குமாக ஈகை செய்பவனுக்குள் பேதம் காட்டும் உணர்வுகள் கணப்பொழுதும் எழுந்து விடாது.

தங்கள் சமயத்தையும் அதன் பரந்த சாத்வீகக் கொள்கைகளையும் விட்டுக் கொடுக்காது பேசுவதே மனித சுபாவம். ஆயினும் சமயம் காட்டும் நற்போதனைகளைப் பேசுவதற்காக மட்டுமின்றிச் செயலில் காட்டுவதே மானுட மாண்பாகும். பரந்த இதயம் நிறைந்த சேவைகளைச் செய்ய வழிசமைக்கும். நற்சேவைக்கான முதற்படி வேற்றுமை களைந்த "நல் இயல்பு" ஒன்றே தான். உணர்க!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
30.03.2008







# கர்வம்

கர்வம் கொண்டால் சர்வமும் துயராய் அமையும். துணிச்சல், தன்னம்பிக்கை கொண்டால் அது கர்வமாகாது. மேலாதிக்க உணர்வு, தன்முனைப்பு, போன்ற குணங்களால் உண்மையான திறமைசாலிகளே அமுங்கிப்போகின்றார்கள். கர்வம் ஒரு வேலி என்று எண்ணித் தம்மை மறைத்து மேன்மைப்படுத்துபவர்கள் அறிவிலிகளாவர். கண்ணியவான்கள் கர்வம் கொள்வதில்லை. உலகம் என்றுமே மாறியபடியே இருக்கும். இது நிரந்தரமற்றது என எண்ணினால் எல்லாமே சாமான்யமாகி கர்வம் ஒழுங்கிவிடும்.

கர்வம் கொள்ளுதல் வாழ்க்கைக்கு ஒவ்வாதது. இதனால் சர்வமும் துயராய் முடியும் என்று சொல்லப்பட்டாலும் தன்னம்பிக்கையும், துணிச்சலும் மிக்கவர்களைக் கர்வம் கொண்டவர்கள் என்று முத்திரையிட்டுக் கொள்ளுதல் ஏற்புடையதன்று.



RangaRakes
Tamilnavarasam.com

எந்தவித திறமையும், ஆளுமையுமின்றித் தற்பெருமை கொண்டு மற்றயோரைத் தூற்றித் திரிகின்ற நபர்கள் வாழுகின்ற இந்த உலகில், நிறைகுடம் போல் அடக்க மாகவும் தெளிந்த நற்சிந்தனையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்களை நோக்கும்போது நமக்கு வியப்பு மேலிடுகின்றதே!

மேலாதிக்க உணர்வுடன் தங்களை வெளியுலகில் ஒரு புத்திசாலி செயல்வீரன் என்று காட்டி நடிப்பதும், தங்களை எல்லோரும் பாராட்டிப் புகழவேண்டும் எனக் கருதுதல் போல் பேதமை வேறு ஏது? இந்த எண்ணமே கர்வத்துடன் கூடிய, வெட்கப்படும் ஒரு நிலைதான்!

நியாயபூர்வமாக ஒரு செயல்வீரன் கர்வம் கொண்டாலும் கூட அதனை ஏனையோர் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்றுக் கொண்டே விடுகின்றனர். கர்வம் கொள்வதற்கும்கூட ஒரு தகுதி வேண்டும். காலிப் பாத்திரத்தினால் என்ன வழங்கிட முடியும்?

புகழேணியில் இருப்போர் எல்லோருமே கர்வம் கொண்டு செயல்படுவதில்லை. சாதாரண மனிதர்களை விட எளிமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பீடிகையாகப் பந்தாவுடன் பேசுவதால் உயர்ந்தோராய் காட்டி விட முடியுமா? ஒரு பொருட்காட்சிக்குச் சென்ற போது கண்ட சம்பவம் இது. ஒரு கிராமவாசி அங்குள்ள பொருட்கள் பற்றிக் கேட்டபோது அவரின் தோற்றத்தைக் கண்ட ஊழியர்கள்



RangaRakes



அவரைக் கேலி செய்து அனுப்ப முயன்றனர். அப்போது ஒருவர் அங்கு வந்தார். மிக எளிமையாகக் காணப்பட்டவர், அந்தக் கிராமவாசியை அணுகிப் பவ்யமாக அவர் என்ன கேட்டார் என்பதை அறிந்து கொண்டது மட்டுமின்றி, மிகவும் பொறுமையாக அவர் புரியும்படி தகுந்த விளக்கமும் அளித்தார்.

அவரது விளக்கத்தில் திருப்தியடைந்ததும் கிராமவாசி அவருக்கு நன்றி தெரிவித்து அகன்றார். ஆனால் இதுவரை இங்கு நடந்ததைக் கண்ட அலுவலர்கள் வெட்கப்பட்டுத் தலைகுனிந்தனர். காரணம் அங்கு விளக்கமளித்தவர் அந்தப்பொருட்காட்சிக்குப் பொறுப்பான பணிப்பாளரேயாவர்.

அகம்பாவ உணர்வு வந்தாலே மற்றவர்க்கு ஒன்றுமே தெரியாது என்கின்ற தவறான உணர்வு வந்துவிடுகின்றது.

பெரிய கோடீஸ்வர்கள் கூட வெளியே பார்ப்பதற்கு எளிமையாகத் தோற்றம் கொண்டவராக இருக்கலாம். அதே சமயம் டாம்பீகமான தோற்றத்துடன் இருந்தபடி மற்றவர்களை அலட்சியமாக நோக்கும் ஆசாமிகள் எந்தவிதமான ஆர்ப்பாட்டம் செய்தற்கும் லாயக்கற்றவர்களாகவும் இருக்கின்றார்கள். மக்களை மிரட்டும் பாவனையில் தங்களை அகம்பாவம் பிடித்தவர்களாகக் காட்டிக் கொள்பவர்களும் இருக்கின்றார்கள்.



Tamilnavarasam.com

மிகவும் பிரபல்யமாக இருப்பவர்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்கு ஒரு வேலியை அமைத்துக் கொள்கின்றார். என்ன தான் இவர்கள் எளிமையாக வாழ்ந்தாலும் கூட தம் நிலையினைத் தப்பவைக்கவும், கடமைகளை ஒழுங்காகச் செய்வதற்கும், சில சமயம் சற்று ஒதுங்கி அல்லது பாதுகாப்புடன் வாழ வேண்டிய நிலையுள்ளது என்பதை நாம் மறுக்க முடியுமா? ஒரு பிரபல்யமான கலைஞனை அல்லது அரசியல் தலைவரை எல்லோருமே எல்லாச் சந்தர்ப்பத்திலும் நெருங்கிவிட முடியாது. இவர்கள் சுதந்திரமாக சீவிக்க முடியாதுள்ளது. அவர்கள் விரும்பினாலும் கூட மக்களுடன் ஒன்றித்து வாழ முடியாத நிலையிலேயே வாழ்ந்து கொண்டிரு க்கின்றார்கள். இதனால் நாம் இத்தகையவர்களைக் "கர்விகள்" என்று சர்வசாதாரணமாகச் சொல்லிவிட முடியுமா?

எனினும் மக்களுடன் கலந்து வாழ்வதற்கான சந்தரப்பங்களை உருவாக்காது விட்டால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். பல பிரபல்யங்கள் மக்களை உதாசீனம் செய்தமையால் முகவரி இழந்து தவிக்கின்றார்கள். இது ஒரு அவல நிலை! மக்களைச் சந்திக்காமல் அரசியல் தலைவர்கள் தொடர்ந்தும் மக்கள் ஆதரவைப் பெற்றுவிட முடியாது. மக்கள் பிரதிநிதிகள் பலர் கர்வமுடன் தங்கள் பெருமை பற்றிப் பேசுவார்கள் அவர்களை உதாசீனம் செய்வார்கள். முடிவில் தங்களுக்கு என ஏதாவது தேவைகள் ஏற்பட்டால் கேவலமான முறையில் அவர்கள் காலில் விழுவார்கள்.

RangaRakes





கண்ணியமுள்ள நல்நடத்தையாளர்கள் கர்வம் கொள்வதுமில்லை இன்னும் ஒருவர் முன் தலைகுனிந்து கொள்ளும் தேவை இருப்பதுமில்லை. இன்று தன்னம்பிக்கையுடன் துணிவுடன் செயல்படுபவர்களை சிலர் காழ்ப்பு உணர்வு காரணமாக அவர்களை "இவன் அகம்பாவம் பிடித்தவன்" என்று சொல்லித் தவறான முத்திரை குத்தி விடுவார்கள். அநியாயங்களை எதிர்த்துக்குரல் கொடுப்பவர்களை சில அடிமைத்தனமான போக்குள்ள புல்லுருவிகள் இவர்களைப் பார்த்து "இவர் எதற்காகச் சத்தமிடுகின்றார் சும்மா இருக்க வேண்டியது தானே.. என்றாலும் இவருக்குத் திமிர் அதிகம்" என்று சொல்லிக்கொள்ளும் ஆசாமிகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.

வீரமுடன் வாழுதல், சுயகௌரவமுடன் சிந்தனை செய்து தம்மை வளப்படுத்தல் என்பது அகம்பாவம் என்று அர்த்தம் கற்பிக்கலாகாது.

எவர்க்கும் துயர் கொடுக்காது தனிமனித சுதந்திரங்களைப் பறிக்காது, தன் வழியில் சென்று வாழுபவனைச் சீண்டுதல் கண்டிக்கத்தக்கதேயாம். எவர்களுடைய முன்னேற்றத்தை ஆப்புவைக்கும் கைங்கரியங்களைச் செய்வோர் தங்களுக்கும் சமூகத்திற்குமான இடைவெளியை அதிகரித்துக் கொள்வதற்கும் சமூகத்தால் கேலிக்கும் வெறுப்பூட்டலுக்குமான நபராகக் காலப் போக்கில் மாற்றமடைவதற்குத் தாமே காரணியாகிவிடுவர்.

Tamilnavarasam.com

ஒரு துறை சார்ந்த வல்லுனர் ஒருவருடன் அது பற் ஒன்றுமே தெரியாத ஒருவர் வந்து ஆர்ப்பாட்டமுடன் தன கருத்தைத் தவறாக மொழிந்தால். அதனை மறுத் வல்லுனர் ஏதாவது பேசினால் உடனே "உங்களது பேச்சு தவறானது நீங்கள் அகம்பாவமுடன் கதை பேசுகின்றீர்க என்று சொல்பவர்களும் இருக்கின்றார்கள். "உங்களு இதுபற்றித் தெரியாது ஐயா" என்று சொல்லி விதாண்ட வாதம் செய்பவர்கள் தங்களுள் இருக்கும் மமதை அறியாமை பற்றித்தெரியாமலே இருந்து கொள்கின்றார்க புரியாததைப் புரிந்தமாதிரிக் காட்டிக்கொள்வதும், பேசு லும், முரணான நடத்தையுடன் தங்கள் சுய உருவை காட்டுதலும் தான் வீணான ஏற்க முடியாத ஆண முனைப்பும் அறியாமையுமாகும்.

எல்லோரையும் அனுசரித்து நடப்பவர்கள் சகலரது மன இயல்புகளைப் புரிந்தவர்களாகின்றனர். இவர்களிடம் அகங்காரமான எண்ணங்கள் எழுவதில்லை. மற்றவர்கள் இதயத்தை அறுப்பது போல் பேசுபவர்களால் எந்த வழியிலும் எவரது இதயபூர்வமான அன்பினையும் பெற்றுவிட முடியுமா?

தன்னை இழக்காமலும், தன்னை ரசிப்பவனாகவும், விரும்புவதுடன் உலகினையும் ரசனையுடன் நோக்குவதே ஒரு தவப்பேறுதான்.

எவராவது தன்னைத் தன் உணர்வை ஆன்மாவை





விற்கத்தானே தலைப்பட்டால் அத்தகையோரை எத்தகைய வர்களும் கண்டபடி கையாளத்தலைப்பட்டு விடுவர். "நான் நன்மைகள் செய்ய எண்ணும் நல்லவன், நான் எளிதில் தவறான வழியில் விற்கப்படும் விற்பனைப்பொருள் அல்ல தூய்மையான நல் எண்ணங்களை நேசிப்பவன்" என்கின்ற கூர்மையான சுய கர்வத்துடன் இயங்கினால் அவர்கள் செல்லும் நல்வழியை எந்தத் தீய சக்திகளும் அடைத்துவிட முடியாது. உணர்க!

நாம் பகுத்தறிவு பற்றிப் பேசுகின்றோம். "எங்களைப் பற்றி மற்றவன் என்ன கருதுகின்றான். நான் செய்வது நல்ல காரியங்கள்தானா, இதனால் சமூகத்திற்கு சாதகமானது அல்லாதவைகளை நான் செய்து கொண்டிருக்கின்றேனா என்கின்ற கேள்விகளை எம்முன் கேட்டேயாக வேண்டும். இதன் மூலம் எம்முள்ளே புதைந்துள்ள அறியாமை மமதைகள் வெளியே தெரிந்து அவைகளைக் களைவதற் கான வழிகளும் புலனாகலாம் அல்லவா?

சகல மக்களிடம் உள்ள எதிர்பார்த்தல் என்பது தங்களை எல்லோரும் விரும்ப வேண்டும் என்பதேயாகும். இந்த அன்பை எதிர் பார்க்கும் நாம் அவ்வண்ணமே நாமும் அன்பை வழங்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

அன்பு, நேயம், பாசம் கொண்டவர் முன்,எத்தகைய முரண்பாடான கர்வங்கள் இருக்கப்போவதில்லை. எதனை யுமே, அன்பின் மூலம் வழங்கச் சித்தமாயுள்ளவன், அற்ப



RangaRakes
Tamilnavarasam.com

சலுகைகள், பொருட்களுக்களைப் பெரிதென மதிக்கவும் மாட்டான்.

இன்று தங்கள் குலப்பெருமைகளைப் பேசி வலிமை குறைந்த தாழ்ந்த நிலையில் உள்ளவர்களை இறுமாப்புடன் நோக்குபவர்கள் அதே வசதி குறைந்தவர்கள் உயர் நிலை அடைந்தவர்களைக் கண்டுவிட்டாலோ, "இதோ அவனைப் பார்த்தீர்களா எவ்வளவு கர்வமுடன் போகின்றான்" என்று வாய் கூசாமல் சொல்வார்ர்கள்.

உலகத்தில் எல்லாமே நிரந்தரமானதும் இல்லை அதே சமயம் எதுவுமே எவர்க்கும் கிடைக்கக்கூடாது என்கின்ற நியதியும் கிடையவே கிடையாது. பணம், பொருள், கல்வி, அதிகாரம் எல்லாமே எவர்க்கும் கிடைக்க லாம். மாறி வரும் இந்த உலகில் எத்தனை எத்தனையோ புதுமைகளைக்கண்டு வருகின்றோம். ஒன்றுக்குமே வழியில்லாதவர்கள் உயர்வடைந்து மேன்மையடைவதும் பரம்பரை, பரம்பரையாகப் பணத்திலேயே புரண்டவர்கள் எல்லாவற்றையுமே எதிர்பாராமலே இழந்துவிட்ட சம்பவங்களையும் அறிந்திருப்பீர்கள்.

எனவே "நான் நல்ல பணம் சம்பாதித்து விட்டேன் எனது பிள்ளைகள் நல்ல கல்வி கீர்த்தி பெற்றுவிட்டார்கள்" என்று கூறி கர்வத்துடன் எவரையும் மதிக்காமல் வாழ்ந்து வருவது அழகல்ல! இறைவன் எல்லோர்க்கும் எல்லாமே





தருகின்ற வள்ளல். அவன் கொடுத்த கொடைகளை மதிப் பளித்தல் என்பது அகங்காரம் அற்ற நிலையில் தம்மை உருவாக்குவதுடன் தானும் செழித்து வாழுவது போல் ஏனையோரையும் கருணையுடன் நோக்குதலேயாம்.

நாங்கள் பெற்ற செல்வங்களால் தலைக்கனம் கொண்டு துச்சமெனப் பிறரை ஏளனத்துடன் நோக்குவது என்பது கடவுளையே அவமானப்படுத்துதல் போன்றது. எவரையும் வேண்டுமென்றே எரிச்சலப் பட வைப்பது கூட தங்கள் இதயத்தை இறுதியில் எரிக்கும் செயல்தான். மக்களை ரசிப்பவனும் மக்களால் ரசிக்கப்படுபவனும் துன்ப மேயற்றகளிப்பு நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். மனம் வாயிலாக உதிர்க்கப்படும் மொழிகள் பூவிலும் மென்மையாக சுகந்த மூட்டும் சந்தோஷங்களை நல்குவ தாக அமைய வேண்டும். வார்த்தையில் அக்கினியைத் தோய்த்து இறுமாப்புடன் உறுமுவதால் என்ன பயன் வந்துவிடப்போகின்றது?

தேவையற்ற கர்வத்தினால் உறவுகளிடையே விரிச ல்கள் ஏற்படுவதும் அதனால் இவர்கள் நிரந்தரமாகவே பிரிந்து விடுவதுடன் இவர்களின் பரம்பரைகளே கூறுபட்டு தங்கள் உறவுகள் யார் என்பதே தெரியாமல் போவதும் வேதனையான விஷயங்கள்.

மேலும் தனிப்பட்ட குரோதங்களால் கர்வத்துடன் நாடுகளின் தலைவர்களே பிற நாடுகளுடன் பொருதுவதும்



RangaRakes
Tamilnavarasam.com

பின்னர் அந் நாடுகளிடையே சண்டைகள் மூளுவதும் ஆயிரம்பேர் மாளுவதும், எழுத்தினால் வடிக்க இயலா அநியாய வரலாறுகள். இவை போன்ற சம்பவங்க இன்னமும் தொடர்வதும் எவருமே அறியாததுமல் ஆணவ முனைப்பு டன் ஹிட்லர் மேற்கொண்ட அடாவடி தனத்தினால் முப்பது லட்சம் யூதர்கள் மரணமடைந்த வரலாற்றின் இரத்தப்பதிவுகள்.

அன்னியோன்யமாக உறவுகளை வளர்த்தலும் அ பினை இதயத்தில் எந்நேரமும் பிரவாகித்தபடி அதனுட சரணமடைந்தவர்க்கு கர்வம் என்பதேது? ஜனனத்திலிரு மரணம் வரை சினத்துடன் எவரையும் நோக்காது எந் இனத்தின் மதம், மொழி சார்ந்தோரையும் அரவணைப்ப எம் வாழ்விற்குத் துணையான நீதியுமாகும். கனிவின் மு எவரும் பணிவார்கள்.

கர்வம் கொள்ளும்போதே கோபம் மேலாதிக்க உணர்வு பழிவாங்கும் இயல்பு, மனக்கொதிப்பு, ஆற்றாமை, என்பன கூடவே எழுந்து வருதனால் உடல் நிலையில் கூடப் பாதிப்பு ஏற்படலாம். மேலும் மனதில் அமைதி ஏற்படாத நிலையில் கூட எழும் வெற்றிகளோ எந்த வரவுகளோ முழுமையான திருப்திகளைத் தந்துவிடாது. நாம் அமைதி சாந்தம் காணுதலுக்கான வழிகளை நாமாகத் தேடிக்கொள்ள வேண்டும்.

மனதையும் உடலையும் உபாதைக்குள்ளாக்கி






வெறுமைப்பட்ட மனதுடன் வேற்றுமையுடன் நோக்கி மமதை கொள்வதாலும், எவருக்குமே விட்டுக் கொடுக்காமலும் வாழுவதால் இன்பம் முகிழ்த்து எழுந்திடுமோ? கனவினில் கூட எவரையும் இழிவாகப் பழிப்பதும் இடித்துரைப்பதும் பழிதீர்க்க எண்ணுதலும் கூடாது.

நல்லதை நினைக்கவும், நல்லதைச் செய்வதாலும் எந்தவித சிரமங்களும் ஏற்படப்போவதில்லை. கருணை யுடன் எவரையும் நோக்குக! கர்வத்தைக்களைக! "தர்மத்தின்" வழி கூர்மதியுடன் மானுடத்தை நோக்கி அரவணைப்பதேயாம்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
06.04.2008



RangaRakes
Tamilnavarasam.com



# அக ஒளி

நல்ல முறையில் அறவாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கண்டப தம் நிலையினை சுயபிரகடனம் செய்து தம்மை விளம்பரப் படுத்துவதில்லை. இதயசுத்தி என்பது சொல்லில் செயலில், தூய்மையுட செய்வதற்கான மேலான எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற மாபெ சத்தியுமாகும். அன்பு செலுத்துதலே இன்பமூட்டும் அனுபவம். இத வாசலை அன்புடன் அகலத்திறந்தால் அதனூடு பிரகாசமாக வியாபித் அக ஒளி நிரம்பி நிற்கும்.

வாழ்க்கையைச் செம்மையாகவும் எவ்வித சஞ்ச மின்றிக்கொண்டு செல்வதற்கு நெஞ்சத்தில் தூய்மை நிலை நிறுத்துதலே அற வழியின் ஆதார சுருதியுமாகும்

உண்மையுடன் இயல்பாக வாழுதல் என்ப சிக்கலான ன் மல்ல. பொய்யான வா ்க்கை என் றே





அதில் ஒரு நடிப்பு வந்து விடுகின்றது. இந்த பொய்யான வாழ்வின் வடிவம் எப்படியோ ஒரு சந்தர்ப்பத்தில் எங்களுக் கும் மற்றயவர்களுக்கும் துல்லியமாகத் தெரிய வந்து விடுகின்றது.முகமூடியுடன் மூச்சுத்திணறி அல்லல் படுவதை விடுத்து, அதனைக் களைந்து தெளிவாக உலகின் முன் சொந்த முகத்துடன் நடமாடும் சந்தோஷத்திற்கு எல்லை ஏது நண்பர்களே!

மனிதர் தம் வாழ்க்கையைத் தங்கள் இஷ்டப்படி வாழ எண்ணுதல் என்பதே ஒரு தான்தோன்றித்தனமான செயல்தான். அத்துடன் இது சுயநலத்தின்பால் இட்டுச் செல்வதுடன் தனது துன்பங்களைச் சுமைகளை பிறர்மீது இட்டுச் சுமத்துவதற்கான சந்தர்ப்பங்களைத் தேடுவதும் அப்படியே நடந்து கொள்வதுமாகும்.

சுயநல எண்ணமுடன் செயல்படுவது சில சமயம் அறியாமையினாலும் சில பொழுது வேண்டுமென்றே, செய்யப்படும் செயலாகவும் அமையலாம். தன்னை நல்ல வழிமுறைகளில் காப்பாற்றுவதற்காக சுயநலத்துடன் நடப் பது பெரிய தவறும் அல்ல. ஆனால், தன்மீது உண்மைத் தன்மையில்லாமல், வெறும் சுயநலத்தை மட்டுமே கடைப் பிடிப்பது கயமைத்தனம் அல்லவா?

“தன் உயிர் போல் பிற உயிர்களையும் மதித்து நட” என எல்லோருமே சொல்லிக்கொள்கின்றார்கள். ஆனால் செயல் முறையில் தனது உயிர் உடல் தான் மேன்மை



RangaRakes
Tamilnavarasam.com

யானது, மென்மையானது. துன்பங்களைத் தாங்கிக் கொள்ளாது என்று கருதி ஏனையவர்கள் பற்றி ஏன் என்று எண்ணாமல் இருப்பதும் ஏன்?

பிறரை மதிக்காமல் இருப்பதும் அவர்கள் மீது துன்பங்களை ஏற்றுவதும் மனித உரிமை மீறல்கள் தான். மனிதனின் உரிமைகளைப் பறிக்க எண்ணுவது தன் இதயத்தினுள் சுத்தமாக ஒளியைப் பாய்ச்சுதற்குத் தானே தடை ஏற்படுத்தும் பரிதாபத்திற்குரிய அவர்தம் சுய முயற்சியே தான். பெருமுயற்சி செய்து துன்பங்களைச் சுமந்து கொள்வதுபோல் அறிவற்ற தன்மைவேறு இல்லை.

எதுவெல்லாம் எனக்குக்கிடைக்கும்? அவைகளை மாற்றாருக்குக் கிடைக்கவே கிடைக்கக்கூடாது என்றும் அதனை அனுமதிக்கவே மாட்டேன் என்று எண்ணுதல் போல் கரியமனம் வேறு என்ன உண்டு சொல்மின்! "எனது மனம் சுத்தமானது" என்று அடிக்கடி சொல்லிக் கொள்பவர் களை பிறர் சந்தேகக் கண்கொண்டு நோக்குவதுண்டு. நல்ல முறையில் அறவாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கண்டபடி தமது நிலையினைச் சுய பிரகடனம் செய்து கொண்டு தம்மை விளம்பரப்படுத்துவதுமில்லை.

மிக எளிமையாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவருக்கு ஆசைகள் அதிகம் துளிர்விடுவதில்லை. ஆசைகள் தேவைகளை நோக்கிச் செல்வதனால் மனித நடத்தைகளில் மாறுதல்கள் ஏற்பட ஆரம்பிக்கின்றன.





அதிகமாக ஆசைகள் வேட்கைகள் இல்லாதபோது தீயநோக்கு சஞ்சலம், பொறாமை உணர்வுகள் அருகி அவை இல்லாமலே போய் விடலாம். பொதுவாகப் பலரும் ஆன்மீகவாதிகளாகக் கருதப்படுபவர்கள் மட்டுமே. அன்பு ணர்வு கொண்டவர்கள் நேரிய வழியில் செல்பவர்கள் என மக்கள் மத்தியில் பெருமதிப்பினைக் கொண்டவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்.

இறை நம்பிக்கையற்றவர்கள் என்றால் அவர்கள் மக்கள் நேயமற்றவர்கள் என்று கருதுவதே தகாது. மக்களால் ஏற்றக்கொள்ளப்பட்ட மக்கள் மீது நேயம் கொண்ட சேவை யொன்றே தங்கள் இலட்சியமாகக் கொண்ட நாத்தீக வாதிகளும் உளர்.

தெய்வ சிந்தனையுடன் சீரிய பணியினைச் செய்வ தும், மக்களை நேசித்து அவர்களுக்கான தொண்டுகளைச் செய்துவரும் ஆத்தீகவாதிகளின் பணிக்கும் நாத்தீக வாதிகளின் பணிக்கும் எவ்வித பேதமும் கிடையவேகிடை யாது.

"இதய சுத்தி" என்பது சொல்லால் செயலால் தூய்மையுடன் செய்வதற்கான மேலான எண்ணங்களை வெளிப்படுத்தும் மா பெரும் சக்தியுமாகும். நல் நோக்குடன் செயல்படும் உத்தமர்களின் இதயம் பக்குவப்பட்டே இயங்குகின்றது. மக்களை மதித்து, அவர்களுக்கான கடமைகளை அர்ப்பணிப்புடன் எவர் செய்திடினும் அவர்கள்

இறைவனின் மேலான அனுக்கிரகத்தையும் ஆசியையும் பெற்றுக்கொண்டவர்களேயாவர்.

"அகத்தில், ஒளி உண்டாகுதல்" என்பது நற்கருமத்தினை நிர்சிந்தையுடன் பலாபலன் கருதாது செய்யப்படுதலால் உண்டாகும் தெள்ளிய உணர்வு அலைகளேயாம். இந்த நல் எண்ணங்களில் மேன்மையான, இதமான, அதிர்வுகளால் ஏற்படுகின்ற பரந்த பக்குவநோக்கு சர்வ வியாபகமானதும் எல்லோர்க்கும் பொதுவாகச் சென்றடையக் கூடியதுமாகும். மனம், வாக்கு, காயத்துடன் தூய வாழ்வோடு ஒன்றித்த ஜீவன்களால் தான் இந்த ஜகத்திற்கு நித்ய சாந்தியை, சமாதானத்தை, அன்பை மழையெனப் பொழிந்திட இயலும்.

பகுத்தறிவின் துணைகொண்டு முன்னேறிச் செல்லும் நாம், எங்கள் இதயத்தை அன்பின் பெரும் புதையல்களாக்கி, அதனை எல்லோர்க்குமாக ஈந்திடின் அந்த விலை மதிப்பற்ற புதையல் எனும் பெரும் பொக்கிஷம், வற்றாத பெரும் ஊற்றாகப் பிரவாகித்து எம் நெஞ்சை நிறைந்து எம்மை ஆட்சி செய்யும். அன்பினால் ஆட்சி செய்யப்படுவதைவிடச் சிறந்த பேறு ஏது உண்டு ஐயா? எம்மைத் துரத்தி வரும் அற்ப ஆசைகளும் அவாவும், சுயநலப்போக்குகளும் அன்புக்கொடையினை நாம் நல்கும் போது ஆதவனைக் கண்ட பனி என துர்ப்பழக்கங்கள் விலகி விடுவதை எவரும் அனுபவபூர்வமாக உணர்ந்திட முடியும்.





மாயா உலகில் சஞ்சாரம் செய்பவர்கள் உண்மை உலகம் தான் போலியானது துன்பமயமானது என எண்ணிக்கொள்வதாக ஞானிகள் பகர்வர். போலியான சங்கதிகள் கூடச் சிலசமயம் இன்பம் தருவதாக தப்பாக உணரப்படலாம். "அறிவிற்கு வேலை கொடு உண்மை நிலை தெளிவாகும்" என்பதே உணரப்பட வேண்டிய மாபெரும் தத்துவமுமாகும்.

சிந்தையை மந்தமாக்க முனைந்தால் அந்தகாரத்தில் மூழ்க வேண்டிதே!

மனிதன் என்னதான் சாதுர்யமாகச் செயல்பட்டாலும் கூடச் சோதனைகள் அவனைத் துரத்தாமல் விட்டு வைப்பதுமில்லை. குடும்பப்பாரம், நோய், பொருளாதாரப் பிரச்சனைகளால் பலவித துன்பங்களுக்கு முகம் கொடுத்தேயாக வேண்டியுள்ளது. மனமும் உடலும் ஆரோக்கியமாக இல்லாதுவிடின் நிம்மதியாகச் சீவிப்பது எப்படி? நாம் தேக ஆரோக்கியத்தில் கூடிய கவனம் எடுக்காது விடில் மனோ நிலை ஸ்திரமாக இருந்து விடாது. தீராத நோயுடன் போராடினால் அவனால் நிம்மதியாகக் காலத்தைக் கழிக்க இயலுமா? நோயின் கொடுமைகளால் ஆற்றாமை, சினம், வெறுப்பு விரக்தி நிலை தானாகவே வந்து ஒட்டிக் கொள்கின்றன.

எனவே உடலும், மனமும் ஸ்திரமாக இருக்க வேண்டும். சித்தர்கள், யோகிகள், ஞானிகள் என்று பல



RangaRakes
Tamilnavarasam.com

வாறாகச் சொல்லி அழைக்கப்பட்டவர்கள், "தேகத்தினை பாதுகாத்துக் கொள்வாயாக!. இது இறைவனால் படைக்கப்பட்டது. இதனை நோகடிக்காதே. இதனைச் சிதைக்க நீயே உடந்தையாக இருக்காதே" என்றும் சொல்லி வந்தார்கள்.

மேலும் நன்நடத்தைகள் தான் தேக ஆரோக்கியத்துடன் இயங்க, உறுதுணையாக இயங்கப் பெரும் உத புரிவதனால் மனிதனின் சிந்தனை செய்யும் ஆற்றலும் அதனூடு அவன் தெளிவு நிலை அடைந்து கொள்ளவும் நற்பண்புகள் உற்ற துணையே தான். உள்ளத்தெ நன்நடத்தைகள் ஆகியன உடல் ஆரோக்கியத்துடன் இணைந்த தொடர்பு கொண்டவையாக இருப்பதனாலேயே எல்லாச் சமய நூல்களிலும் சடங்குகள், சம்பிரதாயங்கள், சுகாதாரத்தை மையப்படுத்தியே எடுத்தியம்புவதாக உள்ளன.

நாம் சில எதிரிகளை எம்முடன் கூடவே சுமந்து கொண்டு திரிகின்றோம். கொடும்பகை, கோபம், பொறாமை, ஆற்றாமை, அவா போன்ற எதிரிகளின் நாசகாரத் தன்மைகளைப்புரிந்தும் புரியாதவர்கள்போல் அதன் ஆட்சிக்குள் சிலசமயம் அடங்கிப் போகின்றோம். மனதை ஆட்டுவிக்கும் துர் நடத்தைகளின் கோரப் பிடியினை ஆர தழுவினால் பெருமரத்தின் ஆணி வேர் அறுபட்ட நிலைக்கே மனிதர் உள்ளாக வேண்டி வருமன்றோ!

சந்தோஷமாகச் சீவிப்பதற்கு இலகுவான வழிதான்



RangaRakes



என்ன? இருதயத்தை இருட்டாக்கி ஒளி சேர்ந்த உலகினுள் நுழைய முடியுமா? அகத்தினுள் ஒளி துலங்கியோர்க்குப் புறத்தே தோன்றும் வெறுத்தற்குரிய வேதனைகள் எல்லாமே சொல்லாமல் தொலைந்தேகும்!

நல்ல காரியங்களைச் செய்வதற்காக மனசை நெகிழ்ச்சித் தன்மையுடன் பேணும் அதேசமயம் "சரியானதைச் செவ்வையாக முடிப்பேன்" என்கின்ற நிலை வரும் போது "இரும்பை விட வலிமையான துணிச்சலுடன் கையாளுவேன்" என்று நாம் எம்மைத் தயார்படுத்துவோமாக!

அன்பு செலுத்துதலே இன்பமயமான அனுபவம் தான். உண்மையான அன்பு பரிணமிக்கும் போதே நேர்மையும் எவர்க்காகவும் தன்னை அர்ப்பணிக்கும் இயல்புகளும் தானே கிளர்ந்தெழுந்து விடுகின்றது.

குறிப்பிட்ட ஒருவரை அல்லது ஒரு சிலரை மட்டும் உறவுகள் என்று சொல்பவர்களை விட எல்லோரிடமும் அன்பைப் பொழிபவர்களுக்கு ஆயிரமாயிரம் உறவுகள் கேட்காமலே வந்து ஒட்டி நின்று உறவாடி வேண்டிய மன நிறைவினை அளித்துவிடும். இந்த சுகானுபவமான அன்புக்காக வாழ்ந்து மரணிப்பவன் சாகாமலே வாழ்ந்து சிரஞ்சீவித் தன்மையைப் பெற்று விடுகின்றான்.

இதயத்தை விரித்துவைத்து ஒளி சேர்ப்பவனுடன் காற்றும் வந்து கன கதைகள் பேசும். மலைகளும் கூட



Tamilnavarasam.com

அருகே வந்து குனிந்து கொள்ளும் ஆர்ப்பரிக்கும் கட அடங்கி ஏகும். பெரும் தீச் ஜுவாலை குளிர்ந்து வெள் பனிக்கட்டியாகும். நிலவு வந்து தலைக்கு மேலே கு பிடிக்கும், பச்சை மரங்கள் சாமரம் வீச தென்றலுக் பஞ்சம் வராது, கண்ணுக்குள் ஆனந்தம் பெருகி ஓட கசிந் நெஞ்சம் நெக்குருகும்.

இந்த இன்ப அனுபவம் உங்களுக்கும் வேண்டுமா எல்லோருமே இந்த இன்ப நுகர்விற்குள் உள்நுழைந் கொள்ளலாம். வாருங்கள்! உங்கள் இதயவாசலைத் திறந் கொள்க! அதனுள் உண்மை அன்பு தானாகவே வந்து உ நுழைந்து கொள்ளும்! இறைவன் அன்பானவன் அவ தன்னைப் போலவே உங்களை ஆக்கிட ஆர்வமுடன் உள்ளான். வாருங்கள் வந்து சேருங்கள் அன்பர்களே!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
13.04.2008



RangaRakes





# பெண்களுக்கு எதிரான உடல்ரீதியான வன்முறைகளும் வசைபாடுதலும்

பெண்களை அடித்து உதைத்துத் துன்புறுத்தல், பாலியல் ரீதியான வல்லுறவுகளுக்கு உட்படுத்துதல் மட்டும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எனப் பொதுவாகப் பேசப்படுகின்றன. அடாத நெஞ்சை நொருக்கும், கொடிய வார்த்தைகளைப் பிரயோகித்தல் கூட மிகக்கேவலமான மனித வன்முறைகள் தான்! தனக்குள்ள “சுய கௌரவம்”, பெண்ணுக்கும் உள்ளது என இத்தகைய கொடும் செயலைச் செய்வோர் உணரவேண்டும். பெண்கள் சந்தோஷகரமாக இருந்தால் தான் இல்லம் சிறக்கும். இன்றைய வாழ்வு சிறப்புற அமைந்தாலே நாளைய பொழுதுகள் பூரணமாய் அமையும்.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்பது அவர்களை அடித்துத் துன்புறுத்துவது, பாலியல் தொல்லை களுக்கும் அல்லது வல்லுறவுக்கு அவர்களை உட்படுத்து தல், முயற்சித்தல், மட்டுமல்ல அடாத நெஞ்சை நெருடும் கடும் வார்த்தைப் பிரயோகங்களும் பெண்களின் மனதைச்



Tamilnavarasam.com

தறுடிததுச னனா னனடப த , டததடட அவாக மனதளவில் ஒரு நோயாளி ஆக்குவதுகூட பெண்களு எதிரான மிகப்பெரிய வன்முறைதான்! எவரையும் தி வசைபாட எமக்கு ஏது உரிமை?

எடுத்த எடுப்பிலேயே கோபம் வந்தால் ஒரு டைய சுயகௌரவம் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாம பேசுதல் போல அத்துமீறல் வேறேதும் கிடையாது. அவர் பெண்ணாக இருந்தாலும் சரி ஆணாக இருந்தாலும் இரு சாராருமே மற்றவருடைய சுய கௌரவங்கை கௌரவப்படுத்துதல் வேண்டும். பெண் ஒருத்தி இன் ஒரு பெண்ணை வசைபாடுவதும் ஆண் ஒருவன் பெண் மீ அவதூறு பேசுதலும் பெண்களுக்கு எதிரான வன்மு விடயங்களில் ஒரே தன்மையுடையவைதான் உணர்க!

ஒருமுறை ஒரு நண்பரின் இல்லத்திற்குச் சென்றி ந்தேன். நண்பர் தமது இன்னும் ஒரு நண்பருடன் சுவார யமாகச் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார். அப்போ பக்கத்து வீட்டிலிருந்து பலத்த சப்தம் கேட்டது. என நண்பரோ அதுபற்றி அலட்டிக் கொள்ளவேயில்லை.

“என்ன இது ஒரு சப்தமாயிருக்கின்றதே, அத்துட ஒரு பெண்ணின் அழுகுரல் பெரும் ஓலமாகவு கேட்கின்றதே... நீங்கள் உங்கள் பாட்டிற்குச் சும்ம இருக்கின்றீர்களே... என அவர் வீட்டிற்கு வந்திருந்த நண்ப கேட்டார்.





இதற்கு வீட்டுக்கார நண்பரோ... இல்லையில்லை... அந்த வீட்டில் இது எல்லாம் சர்வ சாதாரணம்தான். தினம், தினம் இந்த குரல்களும் அடிதடியும் ஓயாமல் நடக்கும் சங்கதிகள்தான். எங்களுக்கு இதுவெல்லாம் பழகிப்போய் விட்டது என்றார். எங்களுக்கோ ஒரே ஆச்சரியம்! இந்தக் களேபரம் இவருக்குப் பழகிவிட்ட ஒன்றா... எப்படி ஐயா நீங்கள் அமைதியாக இருக்கின்றீர்கள்....:.:. என வியப்புடன் நான் கேட்டேன்.

“நாங்கள் என்ன செய்ய முடியும்? இது கணவன், மனைவி சமாச்சாரம் நாங்கள் இதில் எப்படி மூக்கை நுளைக்க முடியும்...” எனத் திருப்பி எங்களைக் கேட்டார்.

இதற்கிடையில் அடுத்த வீட்டில் இருந்து, ஒருவர் அடிப்பதும் தொடர்ந்து பெண்ணின் அலறலும் கேட்டது. நண்பரின் வீட்டிற்கு வந்தவருக்குப் பொறுக்கவில்லை. “நீங்கள் சும்மா இருங்கள் இதோ வந்து விடுகின்றேன்..” என்றவர், பதிலுக்குக் காத்திருக்காமல் சத்தம் வந்த அடுத்து வீட்டிற்கு ஓடிப்போனார்.

சற்று நேரத்தில் அந்த நண்பர் உரையாடுவதும் எமக்குக் கேட்டது. தொடர்ந்து இருவரிடையே வாக்குவாதம் புரிவதும் பெரிதாகக் கேட்டது. ஆயினும் அதனைத் தொடர்ந்து அந்த நண்பர் ஓடோடித் திரும்பி எங்களிடம் வந்துவிட்டார்.



RangaRakes
Tamilnavarasam.com

அரக்கப் பரக்க ஓடிவந்தவரால் பேச முடியவில்லை நாக்கு உளற பேச்சில் தடுமாற்றம் தெரிந்தது. நாங் அவரை ஆசுவாசப்படுத்தினோம். என்ன நடந்தது அங் சில நொடிகளின் பின்னர் அவர் பேச ஆரம்பத்தார்.

"நான் அங்கே போய் இருக்கக்கூடாது எனக் ஏற்கனவே அங்கு போனால் பிரச்சினைவரும் என் தெரிந்தும் போய் மாட்டிக்கொண்டேன். நான் அங்கு செ போது அந்த வீட்டுக்காரன் தனது மனைவியைத் தாறும் றாக அடித்துக் கொண்டிருந்தான். எனக்குப் பொறுக் வில்லை " இப்படியா ஒருத்தியை அடிப்பது என்ன... ஐ இது, நீங்கள் செய்வது நன்றாகவா இருக்கின்றது. ஒ பெண்ணை நீங்கள் இப்படி வதைப்பது சரியா? அவளா திருப்பி அடிக்க முடியாது என்கின்ற தைரியத்தில் இப்படி மோசமாக அடிப்பது...! இவள் தற்செயலாகச் செத் போனால் என்ன செய்வீர்கள்..? தயதுசெய்து அடிக்காதீ அப்பனே..." எனக் "கெஞ்சினேன் என்றவர் மீண்டு தொடர்ந்தார்.

அந்த கயவன் என்ன சொன்னான் தெரியுமா... நான் எனது மனைவியை அடித்தால் உனக்கு என்ன கோபம் வருகிறது. இது எங்கள் குடும்ப சமாச்சாரம், நீர் யார் ஐயா இதில் தலையிடுவது... அதுசரி... உமக்கு ஏன் ரோசம் வருகின்றது. எனது மனைவி மேல் உனக்கு என் அக்கறை... உமக்கும் இவளுக்கும் என்ன தொடர்பு..?! என்று கேட்டவன் "அடியே... இப்படிக் கண்டவன், நின்றவன்





வந்து என்னிடம் நியாய, அநியாயம் பற்றிப் பேசுகின் றானே.. நீயாடி இப்படி வந்து பேசச் சொன்னது...? இவன் உனக்கு யார்" என்று கேட்டு மறுபடி அவன் அவளை அடிக்க நான் தப்பினால் போதும் என்றபடி ஓடிவந்து விட்டேன்" என்றவர், தொடர்ந்து "இவனது அக்கினிப் பேச்சு, அந்த அப்பாவிப் பெண்ணை வதைப்பதைவிட மிகக் கேவல மானது" என்று மனம் வெதும்பக் கூறிக்கொண்டார்.

உண்மைதான் மனைவியை அடித்து உதைப் பதுடன் நின்றுவிடாது அதற்கான காரணங்களை கற்பித்து மேலும் தமது அடாத செயலுக்கு நியாயம் கற்பிக்கும் கசடர்கள் செயல்களை என்ன என்பது?

இத்தகைய வீணர்கள்தான் அவளது கணவன் என்கின்ற ஒரு தகுதியை மட்டும் வைத்துக் கொண்டு, அவளது இயலாமையை ஒரு கருவியாக வைத்து எப்படியும் பேசலாமா?

இன்னும் சிலர் மனைவியை கோபம் வந்தால் அடித்துத் துன்புறுத்துவதில்லை. மிகமோசமாக வசைபாடு வார்கள். இந்த இம்சைகள் எல்லையற்ற மனவடுவை ஏற்படுத்திவிடும். சாதாரணமான பேச்சு என்றால் பரவா யில்லை. அவள் நல்லவளாக இருந்தாலும் வேண்டு மென்றே அவள் நடத்தைபற்றிப் பேசுவார்கள்.

ஆயினும் கோபம் தணிந்ததும் "நான் கோபத்தில்



RangaRakes
Tamilnavarasam.com

ஏதோ உளறிவிட்டேன், இதையெல்லாம் நீ பொருட்படு வேண்டாம்" என்றும் சொல்லி விடுவார்கள். குடிபோதை உளறுவது ஒன்றும் புதுமையுமல்ல.

ஆனால் வேண்டுமென்றே மனதினுள் வக்கிரத் தைப் புதைத்து வைத்திருந்து, குடித்தபின் கண்டபடி பேசுவதும் போதை தெளிந்தபின், மனைவியிடம் சரணாக அடைந்ததுபோல் நடிப்பதும் பச்சை அயோக்கியத்த மேயாம்.

குடும்பம் சிதறிவிடும். பிள்ளை குட்டிகள் அநாதர வாகிப் போய்விடும் என்பதற்காகவே, அநேகமான பெண்கள் தமக்கு ஏற்படும் எல்லா வன்முறைகளையும் பொறுத்துப் போகின்றார்கள்.

ஆயினும் இத்தகைய பெண்களின் நிலைகண்டு அவள் சார்ந்த உறவினர்களால் ஒன்றுமே பேசமுடியாது திணறுகின்றனர். ஆனால் கணவன் வீட்டாரில் பல பெண்கள் அவனைத் திருத்துவதில் முனைப்போடு செயல்படுவதில்லையென்று தான் பெரும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

துன்பங்கள், பிரச்சினைகள் தமக்கென வரும்போது தான் அதன் தாக்கம் புரிகின்றது. தமக்கு ஒரு நியாயம் பிறருக்கு ஒரு நியாயங்களைக் கற்பித்தால் அதுவெல்லாம் நிரந்தரமான அமைதியை, வெற்றியைத் தந்துவிடாது.





பெண்கள் சந்தோஷமாக இல்லாதுவிட்டால் இல்லம் சிறக்காது. பிள்ளைகளின் எதிர்கால நலன்கள் பேணப்படடல் வேண்டும். மனைவியை இம்சிக்கும் கண வனும் அவருக்குத் துணைபோகும் அவரது உறவினர்களும் இதனை உணர வேண்டும். இன்றைய வாழ்வு சிறப்புற அமைந்தாலே நாளைய பொழுதுகள் பூரணமாக அமையும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
01-08-2010




RangaRakes

Tamilnavarasam.com

பருத்தியூர் பால. வயிரவநாதன்





# குழந்தைகளும் குறும்புத்தனங்களும்

உயிர்ச் சிற்பங்களான குழந்தைகள் இயல்பாகவே நுண் அறி கொண்டவர்கள். இவர்களே எதிர்காலத்தின் உயர்தலைவர்கள். குழ குறும்புத்தனங்களால் அவர்களது உடல்நிலை பாதிக்காம பார்த்துக்கொள்ள வேண்டும். குழந்தைகளின் அதீத திறமைகளை எ முடக்கி ஒடுக்கக் கூடாது. பெற்றோர்கள் குழந்தைகளுடன் இணைந்து போதிய நேரங்களை ஒதுக்க வேண்டும். பிள்ளைகளைத் தனிமை வளர்த்தல், அவர்கள் மென்மையான உள்ளத்தைப் பாதிக்கும். ஏழை பணக்காரர் என்ற பேதமின்றி சகல குழந்தைகளின் நலனிலும் செலுத்துதல் அனைவரினதும் பொறுப்பு.

குழந்தைகளே எமது உலகின் வருங்காலத்தி ஒப்பற்ற தலைவர்கள். இவர்களை மேன் மக்களா உருவாக்க வேண்டியது பெற்றோர்களின் பெரும் பொறு கடமையுமாகும்.



உயிர்ச் சிற்பங்களான குழந்தைகள் இயல்பாவே நுண்அறிவு கொண்டவர்களே. சில சமயங்களில் இவர்கள் பேச்சும், செயல்களும் எம்மை ஆச்சரியத்திற்குள்ளாக்கு கின்றன.

ஒருதடவை மோட்டார் வாகனத்தில் மூன்று வயதுச் சின்னச் சுட்டிப் பையன் தனது பெரிய தந்தையாருடன் பயணம் செய்துகொண்டிருந்தான். வாகனம் மிக வேக மாகச் சென்று கொண்டிருந்தது. வெளியே வானத்தில் ஒரு விமானம் பறந்து சென்றது.

உடனே பையன் “பெரியப்பா இந்த விமானம் எவ்வளவு வேகமாகப் பறக்கின்றது பார்த்தீர்களா” என்றான். உடனே அவனது பெரிய தந்தையார், பையனின் திறமை யைப் பரிசோதிக்க இந்த விமானத்தை விட அதிவேகமாகச் செல்வது எது எனக் கேட்டார்.

அவரது எண்ணம் அவன், சின்னப் பயல்தானே விண்கலம், றொக்கட் எனச் சொல்வான் எனக் கருதினார். இவர்கள் இருவருமே ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டிருந்தனர். சற்று நேரம் அவன் மௌனமானான். பின்னர் திடீர் என (Thought is Fast) “எண்ணங்களே வேகமானவை” என்றானே பாருங்கள்! பெரிய தந்தையார் மிகவும் அதிர்ந்து ஆச்சரியப்பட்டார். இது உண்மைச் சம்பவம்.



RangaRakes

Tamilnavarasam.com

இத்தகைய திறமை கொண்ட குழந்தைகள் இ பாகவே குறும்பு செய்வதில் வல்லவர்கள். இவர்க செய்யும் குறும்புகளை ரசிக்கலாம். ஆயினும் செய்யு சேஷ்டைகள் அதிகரிக்கும்போது பெரியவர்கள எரிச்சலடையவும் வைக்கும்.

சில பெற்றோர்கள் தங்களது குழந்தைகளி குறும்புகளை ரசிப்பார்கள். பக்கத்து வீட்டுக் குழந்தைக குறும்புகளை வெறுப்பார்கள். "சே... சே... இது என் பழக்கமோ... குரங்குச் சேஷ்டைகளை செய்கின்றார்கே இவர்களைக் கட்டுப்பாடாக வைத்திருக்க வேண்டாமோ என்பார்கள்.

குழந்தைகளைப் பெரியவர்கள் போல கட்டுப்பாடா இரு என்று சொன்னால் அவர்களுக்குப் புரியுமா? புரியும் சொல்ல வேண்டும். அன்புடன், கனிவோடு பேசவேண்டும்

இன்னும் சிலர் தங்கள் குழந்தைகளுடன் நண்பர் கள் வீடுகளுக்குச் செல்வார்கள். அங்குள்ள விலையுயர்ந் தொலைக்காட்சிப்பெட்டி, கண்ணாடிப் பொருட்கள், தளபாடங்களை தங்கள் பிள்ளைகள் அடித்து உடைப்ப கண்டுகொள்ள மாட்டார்கள். போகின்ற இடத்திலாவது பிள்ளைகளுக்குப் புத்திமதிகளை அன்புடன் சொல்லிக் கொடுத்து நல்வழிப் படுத்தவே மாட்டார்கள்.





இத்தகைய குடும்பத்தினரை எவர்தான் வரவேற்று உபசரிக்கப் போகின்றார்கள்?. குழந்தைகளை எப்படி வளர்ப்பது? போஷிப்பது பற்றி அனைத்துத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள், பத்திரிகைகள் வாயிலாகப் பலவித விடயங்களைச் சொல்லிக் கொண்டே வருகின்றார்கள். எத்தனை பேர் அவைகளை உள்வாங்கு கின்றார்களோ தெரியவில்லை.

குழந்தைகளின் குறும்புகள், விளையாட்டுகள் இயல்பானவை. அவைகளை நாம் அடக்கி ஒடுக்க முனையக்கூடாது. சுதந்திரமாக விளையாடும் சிறார்களை விளையாட வேண்டாம் எனச் சொல்வதே அடிமைத்த னமானது. இன்ன வேலையை, இப்படிச்செய் என, அவர்கள் புரியும்படி சொன்னால் புரிந்து கொள்வார்கள்.

குழந்தைகள் தமது இரண்டு வயதிலேயே எத்தனை எத்தனையோ பல நூறு சொற்களை உடனே கிரகித்துக் கொள்கின்றார்கள். நல்ல பழக்கவழக்க ங்களை நாம் சொல்லிக் கொடுப்பதுடன் நின்றுவிடாது, நாமும் அவர்கள் முன் அப்படியே வாழ்ந்து காட்ட வேண்டும்.

காலை, மாலை வேளைகளில் வழிபாடு செய்தல், நல்ல பாடல்களை பக்தியுடன் இசைத்தல், பாடங்களை படித்தல், நல்ல வார்த்தைகளையே என்றும் பேசுதல் எனப் பற்பல விஷயங்களை அன்பு பாச உணர்வுடன் சொன்



RangaRakes
Tamilnavarasam.com

னால், எந்தக் குழந்தைகளும் கேட்டே தீரும்.

காலையில் இருந்து மாலை வரை குறித்த நேரங்களில் குறித்த பணிகளைச் செய்யாது, வீண் வார்த்தையாடுதல், சதா எந்த நேரமும் கோபத்துடன் பேசுதல், வீட்டிலும் வெளியேயும் பிறருடன் சண்டை சச்சரவுகளில் ஈடுபடும் பெற்றோரைக் கண்டால் எப்படிப் பிள்ளைகள் நல்ல பிரஜைகளாக வளரமுடியும் சொல்லு ங்கள்?

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை எப்படி வளர்ப்பது என்பது பற்றி தாய்மார்களின் பலதரப்பட்ட கேள்விகளுக்குப் பிரபல குழந்தைகள் நல உளவளவியலாளர் சாலினி எனும் அம்மையார் தொலைக்காட்சியூடாகப் பதில் அளித்தார்.

பல தாய்மார்கள் தமது குழந்தைகளின் கட்டுப் படுத்த இயலாத குறும்பு, சேஷ்டைகள், குழப்படிகள் பற்றிக் கேள்விகளைக் கேட்டனர்.

பல தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் பெரும் தொல்லை தருவதால் அது ஒரு குறைபாடான நோயா எனவும் கேட்டனர். சொல்லமுடியாத, ஜீரணிக்க முடியாத படி ஏதேதோ குளப்படிகள் செய்கின்றார்கள். ஒரு வினாடி கூடச் சும்மா இருக்கின்றார்கள் இல்லையே எனச் சொன்ன போது உளவளவியலாளர் சொன்னதாவது,



RangaRakes



இத்தகைய பிள்ளைகளின் பெற்றோர்களுக்கே முதல் புதுமையான முறையில் முதல் கண் உளவியல் பாடங்களை விஞ்ஞான ரீதியில் சொல்லிக் கொடுக்கின்றோம். பாடநெறிகளுக்கான ஆலோசனை நூல்கள் சில உபகரணங்களையும் அனுப்பி வைக்கின்றோம். நூல்களில் சொல்லிய வண்ணம், பிள்ளைகளுக்கு சொல்லித் தருகின்ற கருவிகளைக் காட்டி மகிழ்வுறச் செய்தால் அவர்கள் தாமாகவே ஒரு ஒழுங்கில் வந்துவிடுவார்கள். குழந்தைகளின் நடவடிக்கைகளை வைத்து அதனை ஒரு குறையாகக் கருதிக் கொள்ள வேண்டவே வேண்டாம் என்றார்.

மேலும் இது தொடர்பாக இணையத்தளமூடாகப் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ள முடியும் என்றார்.www.salinistatkids.com.மேலும் உலகின் பலபாகங்களில், பலதரப்பட்ட பதவிகளை வகிப்பவர்களில் இருந்து சாதாரண பொதுமக்கள்வரை தம்முடன் தொடர்பு கொள்வதாகச் சொன்னார்.

குழந்தை வளர்ப்பு என்பதும் ஒரு அரியகலைதான். சாதாரண கல்வி கற்காத பாமரப் பெண்களே அற்புதமான குழந்தைகளைப் பெற்று இந்த அவனிக்கு அளித்த வண்ணமுள்ளனர். குழந்தைகளை பாசமுடன், நேயத்துடன் வளர்க்கவேண்டும். அன்புடன் கூடிய கண்டிப்பும், அரவணைப்பும் தேவையானதே. மேற்தட்டு வர்க்கத்தினர் குறிப்பாக இது விடயத்தில் பூரண கவனம் செலுத்துவ



Tamilnavarasam.com

தில்லை. பணம், வசதி வாய்ப்புக்களால் மட்டும் குழ
யின் எதிர்காலத்தை உருவாக்கிவிட முடியாது. இத்தகை
வசதிகள் உள்ள பெற்றோர் பல தியாகங்களைச் செ
யாக வேண்டும்.

குழந்தைகளுக்காக தமக்குரிய நேரங்களை வி
கொடுக்க வேண்டும். பாசத்தைப் பகிர்ந்துகொள்ள த
பிள்ளைகளுடன் பேச வேண்டும். எல்லாவற்றிற்கும் மேல
பணவசதி அந்தஸ்து நோக்காது சாதாரண குழந்தைகளுட
சேர்ந்து விளையாட, படித்து, மகிழ இடம் கொடுக்
வேண்டும். குழந்தை வளர்ப்பில் கணவன், மனை
இருவருமே சமபங்களிப்பை கொண்டிருத்தல் அவசிய
னதாகும்.

நாம் எங்கள் பிள்ளைகள் நலனை மட்டுமே
நோக்குகின்றோம். எத்தனையோ பிள்ளைகள் அநாதரவா
பெற்றோரின்றி வீதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்
அவர்களை நற்பிரஜைகளாக்குவது எப்படி? யுத்த
காரணமாகப் பெற்றோரை இழந்து அன்பான உறவுகளை
துறந்து அரவணைக்க எவருமேயற்று ஏங்கும் அந்த
பாலகர்களின் வாழ்க்கையினை ஒளியேற்றுவது எங்ஙனம்?

இவர்களின் பிரச்சினைகளுக்கு நல்ல முடிவைக்
கொடுக்க வேண்டியது ஒரு சமூகப் பொறுப்பேயாகும்.
அரசை மட்டும் நம்பியிருக்காது அநாதைச் சிறார்களின்



RangaRakes



எதிர்கால சுபீட்சத்திற்கு எம்மாலான உதவிகளைச் செய்தே
யாக வேண்டும்.

குறிப்பாக இன்று எமது நாட்டில் உள்ள அநாதை
குழந்தைகள் இல்லங்களில் வாழும் குழந்தைகள் ஏனைய
குழந்தைகள் போல் சந்தோஷமாகக் களிப்புடன் வாழ அர்ப்
பணிப்புடன், மனப்பூர்வமான உதவிகளை நல்குவோமாக!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
10-05-2010



Tamilnavarasam.com



# இவை தான் உண்மைகள்!

மாணவர்களின் கல்வியூட்டல் விடயத்தில் ஆசிரியர்களின் அக்கறையுடன் கூடிய சிறிய தண்டனைகளையும் மாணவர்களோ அல்லது அவர்களின் பெற்றோர்களோ ஏற்கத் தயாராக இல்லை. ஆயினும் சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நலனுக்காக, ஆசிரியர்கள் வழங்கும் தண்டனைகளை வரவேற்கின்றார்கள். முன்னைய காலத்தில் எல்லா பெற்றோர்களுமே ஆசிரியர்களுக்கு பிள்ளைகள் விடயத்தில் சகல உரிமைகளையும் வழங்கியிருந்தனர். அன்போடு கூடிய கண்டிப்புக்கள், சிறு தண்டனைகள் பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காயின் அவை ஏற்றுக்கொள்ளக் கூடியதே! நல்லாசிரியர்களைப் போற்றுக! பிள்ளைகளை வல்லவராக்க இவர்களுடன் பெற்றோர் இணைந்து செயலாற்றுக!

பிள்ளைகளுக்கு கல்வியூட்டும் விடயத்தில் பெற்றோர், ஆசிரியர்களுக்குப் போதிய உரிமைகளை அளிக்க வேண்டியவர்களாகின்றனர். இவர்கள் வழங்கும் சிறிய தண்டனைகள் கண்டிப்புக்களை எதனையுமே, எவருமே ஏற்பதற்கு தயாராக இல்லை. ஒரு மாணவன், தனக்குரிய தண்டனைகள் அல்லது கண்டிப்புகள் நியாய



RangaRakes



மானது என்பதை ஏற்றுக்கொண்டால் மட்டுமே அவனது கல்வி கற்றலின் தேவையை அவனால் உணரமுடியும்.

மேலும் இன்றைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஆசிரியர்கள் அல்லது பெரியோர்கள் கண்டிப்பதை விரும்புகின்றார்களா அல்லது ஏற்றுக் கொள்கின்றார்களா என்பது கேள்விக்குரிய விடயமே!

தொடரூந்தில் நான் பயணம் செய்த போது, என்னைச் சந்தித்த ஒரு ஆசிரியர் சொன்ன ஆச்சரிய மூட்டும் தகவல் இதோ!

"நான் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கல்லூரியில் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தேன். எனது வகுப்பில் ஒரு மாணவி இருந்தாள். வசதிபடைத்த குடும்பத்திலிருந்து வந்தவள். எனவே அவள் வீட்டின் செல்லப் பெண் ஆதலால், வகுப்பில் பொல்லாத பெண்ணாகக் காணப்பட்டாள். பாடத்தில் போதிய சிரத்தை காட்டவில்லை. நான் கணித பாடம் கற்பித்தேன். ஒரு நாள் அவள் கணித பாடத்தினைக் கற்பதில் அசிரத்தையாக இருந்தமையினால் சற்று கோபாவேசப்பட்டு அவளை பிரம்பினால் அடி கொடுத்துத் தண்டித்து விட்டேன்.

எனது செய்கை தவறானதுதான். நான் தண்டனை வழங்கியதால் கல்லூரியில் சற்று பரபரப்பு ஏற்பட்டுவிட்டது. சக ஆசிரியர்கள் வந்து "நீங்கள் எப்படி ஒரு வயது வந்த



Tamilnavarasam.com

பெண்ணுக்கு அடிக்கலாம். மேலும் அவளது தந்தையார் ரொம்பவும் பொல்லாதவர் என்று வேறு சக ஆசிரியர்கள் என்னைப் பயமுறுத்தினர். உண்மையில் நான் வேண்டு மென்றா தண்டித்தேன், அவளது முன்னேற்றத்திற்காகத் தானே தண்டித்தேன், எனக்கூறியும் எனக்காக எவரும் பரிந்து பேசவேயில்லை.

அடுத்த நாள் நடந்த சம்பவம் என் மனதை விட்ட கலாத விஷயமாகும். நம்ப இயலாததுமாகும். வாட்ட சாட்டமான மனிதர் கல்லூரியினுள் வந்து "எங்கே அந்த ஆசிரியர், உடனே வெளியே வரச்சொல்லுங்கள். எனது மகளை அடித்த அவர் யார் எனநான் அறியவேண்டும்". நான் அவர் குரல் கேட்டு அதிர்ந்தேன். எப்படியும் உண்மை வெளிவரத்தான் போகின்றது. அதைவிட அதனை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். இதற்காகப் பயந்து நடுங்க முடியுமா என எண்ணி, அவர்முன் வந்து, "உங்கள் மகளை அடித்தது நான்தான், அவள் பாடத்தில் கவனம் செலுத்த வில்லை, வேறுவழியின்றி அவளைத் தண்டித்து விட்டேன், வேண்டுமென்று நான் இதனைச் செய்யவில்லை "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றேன்.

நான் பேசியதையடுத்து அவரது செய்கை என்னைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியது. "சேர்... நான் உங்களைப் பெரிதாகப் பாராட்டுகின்றேன். நீங்கள் செய்த காரியம் மெத்தச் சரியானது. இவளுக்கு ரொம்பச் செல்லம் கூடிவிட்டது கண்டித்தால் தான் வழிக்கு வருவாள். எனது





மகளுக்குப் படிப்பு விஷயத்தில் என்ன தண்டனை வழங்கி னாலும் அதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இவளது நன்மைக்காகத் தயவுசெய்து எனது மகள் நன்கு படிக்க உங்கள் உதவியை நாங்கள் நாடுகின்றோம்" என்று அவர் சொன்னதுடன் நிற்காது எனது கரங்களைப் பற்றிக் குரல் தழுதழுக்க நன்றி உணர்வுடன் விடைபெற்றுக் கொண்டார்.

சொன்னால் நம்பமாட்டீர்கள், இந்த மாணவி என்னிடமே கல்விப் பொதுதராதர உயர்தரப்பிரிவில் படித்து திறமைச்சித்தியடைந்து, இன்று அவள் பொறியியலாளராகி விட்டாள். இன்றைக்கும் என்னைக் கண்டால் தனது குருபக்தியை வெளிக்காட்டியபடியே இருப்பாள்" என அந்த ஆசிரியர் சொன்னார்.

தற்கால நடைமுறையில் சின்னப் பையன்களுக்கும் கூட ஆசிரியர்கள் சிறிய தண்ட னைகளை வழங்க எந்தப் பெற்றோரும் இணங்குவதேயில்லை. உண்மையில் தற்கால நடைமுறையில் மாணவர் ஒருவரை அடிப்பதைக் கண்டபடி ஏசுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

எனினும் பழங்கால வாழ்க்கை முறையுடன் இன்னமும் ஒன்றிப்போன பெற்றோர்கள் பிள்ளைகளை அடித்து வளர்ப்பதில் ஏது தவறு எனக் கேடகிறார்கள்.

அன்பான கல்வியூட்டலே சாலச்சிறந்தது. மேலை நாடுகளிலும் என்றல்ல, சகல நாடுகளிலும் ஆசிரியர்கள்,



RangaRakes Tamilnavarasam.com

மாணவர்களுடன் நட்பு ரீதியில் கல்வி கற்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஆயினும் பிள்ளைகளை நல்வழிப்படுத்துதலில் பெற்றோர்கள், ஆசிரியர்களுடன் இணைந்து செயல்பட்டேயாக வேண்டும்.எத்தருணத்திலும் மாணவர்களின் மனம் உடையுமாற்போல் ஆசிரியர்கள் நாகரீகமற்ற முறையில் ஏசுதல் தகாத செயல்.

ஆனால் தமது பிள்ளைகளின் தவறான நடத்தைகளுக்காகப் பரிந்து பேசுவதும் கல்வியில் நாட்டமற்ற தமது பிள்ளைகளை ஆசிரியர் புத்திமதியோ அல்லது கண்டனங்களோ தெரிவித்தால், அவர்கள் மீது வரிந்து கட்டிச் சண்டைக்குப் போவதால் யாருக்கு நஷ்டம் வரும் என்பதை உணரவேண்டும்.

ஆசிரியர்கள் கௌரவத்திற்குரியவர்கள். பெற்றோர்களுக்குப் பயந்தே சில ஆசிரியர்கள் சில குறிப்பிட்ட மாணவர்களைக் கண்டு கொள்ளாமல் விடுவதுமுண்டு. கல்வி எமக்கு அரும்பெரும் சொத்து. எமக்கான வாழ்க்கையின் ஆணிவேர். ஒரு தாவரத்தில் பூச்சி, புழுக்கள் வந்தால் கிருமி நாசினி தெளித்து அதனைக் காப்பாற்ற வேண்டுமல்லவா?

அவ்வண்ணமே ஒரு பிள்ளை ஒழுங்காகச் சமூகத்தில் வாழ பெற்றோர், ஆசிரியர்களின் பங்களிப்பு மிக அளப்



RangaRakes



பரியது. இள வயதில் எல்லா ஆசைகளுமே நியாயமானது என்றே குழந்தைகள், வளர்ந்த பிள்ளைகள் கூடக் கருதுவார்கள். சரியானது எது, தவறானது எதுவெனச் சுட்டிக் காட்டுவதுடன் அவர்களது தோழர்களாகவும், அவசியமான தருணத்தில் கண்டிப்பான நபராகவும் தம்மை ஆக்கிக் கொள்ள வேண்டியவர்கள் பெற்றோரும், ஆசிரியப் பெருந்தகைகளுமேயாவர். நல்லாசிரியர்களைப் பெற்றோரும், மாணவர்களும் புரிந்து கொள்வார்களாக!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
“இவள்” பகுதி
22-09-2009



Tamilnavarasam.com



# அழகை மட்டும் முதன்மைப்படுத்தலாமா?

**அழகை எல்லோருமே விரும்புவது இயல்பு. ஆயினும் அழகிற்கு மட்டும் நாம் அடிமையாகலாமா? குடும்ப வாழ்விற்கு "அழகு" மட்டும் ஆதாரமானதும் அல்ல. திருமண வாழ்வில் கணவன், மனைவி பரஸ்பர ஒருவர்மீது ஒருவர் புரிந்துணர்வுடன் காதல் வாழ்வில் சங்கமித்தால், அவர் வாழ்வில் "அழகு" என்பது முன்னுரிமையாய் இருக்காது. இறைவன் படைப்பில் ஏற்றத்தாழ்வு இல்லை. அன்புடன் பழகினால் எல்லோருமே அழகாகத்தான் தெரிவார்கள். எளிமையே அழகு! உள்ளத்தின் களிப்பு அங்கேயே துலங்கும்.**

திருமண பந்தத்தினுள் இணையவிருக்கும் ஆண், பெண் இருபாலாருமே அழகிற்கே முன்னுரிமை கொடுப்பதை நாம் அறிவோம். ஒவ்வொருவருமே, தமக்கு மிக அழகான ஜோடியான பெண்ணையோ, ஆணையோ தேடிக் கொள்ள விழைகின்றார்கள். பதவி, பொருள், காணி,





வீடு என எந்தச் செல்வம் வந்தபோதும் அழகான மனைவி தனக்கு அமைய வேண்டும் என எதிர்பார்ப்பதும், அவ் வண்ணமே பலவித தகுதிகளையுடைய ஒருவனை விட தனக்கு வரவேண்டிய கணவன் அவன் அழகான ஆண்மகனாக வரவேண்டும் என எண்ணுவதும் வியப்பான விடயமும் அல்ல. அழகை விரும்புவதும் தப்பான எண்ணமும் அல்ல!

வெறும் அழகிற்கு மட்டும் நாம் அடிமையாகலாமா? ஆயினும் குடும்ப வாழ்வில் அழகு மட்டுமா முதன்மைப் படுத்தப்படல் வேண்டும்?

எனக்குத் தெரிந்த ஒருவரின் கதை இது. அவர் ரொம்பவும் அழகானவர். அத்துடன் அரசாங்கத்தில் உயர் பதவியிலும் இருந்தார். அவருக்குத் திருமண வயதானதால் பெற்றோர், அவருக்குத் தகுந்த மணமகளைத் தேடிக் கொண்டிருந்தனர்.

அவர் காலத்தில், பொதுவாக பெற்றோர் நிச்சயிக்கும் பெண்ணையே, ஆண்கள் எவ்வித மறுப்புமின்றி மணம் புரிவதும், பெண்களும், தாய், தகப்பன் முடிவு செய்த மணமகனிடம் கழுத்தை நீட்டுவதும் வழக்கமானதே.

இதுவிடயத்தில் ஆண் பெண் இருசாராரிடம் சுய விருப்பு பற்றிப் பெற்றோர் போதிய அபிப்பிராயம் கேட்கச் சித்தம் கொள்வதுமில்லை.



RangaRakes
Tamilnavarasam.com

இதேபோலவே முன்னர் குறிப்பிட்டவருக்குப், பெற்றோர் திருமணம் செய்து வைப்பதற்காகத் தங்கள் மகனுக்குத் திருமணம் நிச்சயித்திருந்த தகவலைத் தெரிவித்தார்கள். திருமண நாளுக்கு முன்னைய சில நாட்களின் தனது இல்லத்திற்கு வந்தார். அவர் மணமகளைப் பார்க்கவேயில்லை. பெற்றோரின் முடிவு சரியானது என மனதார நம்பியிருந்தார்.

குறித்த திருமணம் இனிதே நடைபெற்றது. மண மகளுக்குத் தாலி கட்டிய பின்னர்தான், முதன்முதலாக அவர் தமது மனைவியைப் பார்த்தார். அவருக்குத் தலை சுற்றியது. போயும் போயும் இவளா தனக்கு மனைவியாக வாய்த்தாள் என மனம் உடைந்தேபோனார்.

காரணம் மணமகள் அழகாகவேயில்லை. இப்போது என்ன செய்வது? திருமணம் முடிந்தாகி விட்டது. அடுத்து என்ன நடந்தது தெரியுமா? ஒருவருடனும் அவர் பேசவில்லை. தனது பெற்றோரிடமும் பேசாமல், கட்டிய மனைவியையும் பார்க்காது, திருமணச் சடங்கு முடியும்வரை பொறுத்திருந்து, வீட்டினுள் முடங்கிக் கொண்டார். எந்த உறவினர்கள், நண்பர்களுடனும் அவர் பேசத் தயாராகவில்லை.

இந்த நிகழ்வு முடிந்து சில நாட்கள் சென்றன. ஒருநாள் நான் அவரைச் சந்தைக்குச் செல்லும் வழியில் கண்டேன். தமது துவிச்சக்கர வண்டியில் பொருட்களுடன்





வந்தவர், என்னைக் கண்டதும் இறங்கிக் கொண்டார்.

அப்போது நான் எண்ணியதுபோல அவர் முகத்தில் எந்தவிதமான ஏமாற்றத்தின் ரேகைகள் பதிந்திருக்க வில்லை. மிகவும் குதூகலத்துடன் காணப்பட்டார். என்னால் நம்பவே முடிய வில்லை. "என்ன... எப்படி சுகமாக இருக்கின் றீர்களா? திருமண வாழ்க்கை எப்படி..." என்று சாதாரண மாகக் கேட்டுவைத்தேன்.

நான் கேட்டபோது அவர் அளித்த பதில் என்னை வியப்புக்குள் சஞ்சரிக்க வைத்துவிட்டது. "என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள். எனக்கு வாய்த்த அதிஷ்டம் வேறு ஒருவருக்கும் வாய்த்திருக்காது. என்ன தங்கமான மனைவி எனக்குக் கிடைத்து இருக்கின்றாள் தெரியுமா? என்னை, எனது அம்மா, ஐயாவை, மிக்க கரிசனத்துடன் கவனிக்கின் றாள். அதுமட்டுமல்ல வீட்டு வேலைகள், சமையல் காரியங்களில் இவள் போல நான் யாரையும் கண்டதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, என்மீது அளவு கடந்த பிரியம் வைத்திருக்கின்றாள். மனம் கோணாமல் புத்திசாலித்தன மாகவே காரியங்கள் அனைத்தையும் செய்கின்றாள். இதைவிட வேறு எனக்கு என்ன வேண்டும்? அன்பான மனைவியுடன் வாழ்வதைவிட வேறு என்ன பேறு ஐயா! என்று என்னிடம் கூறிக்கொண்டார்.

உண்மைதான் இன்று நாம் அழகு என்பதற்கு என்ன அர்த்தம் கொள்கின்றோம்? எமது ரசனை எல்லாமே



RangaRakes
Tamilnavarasam.com

வெறும் புற அழகுடன் நின்று விடுகின்றது. அக அழகுள்ள வர்கள் தான் எல்லோரையும் அன்புடன் அனுசரித்து அரவணைக்கின்றனர். எளிமையானவர்களே அழகாகத் தெரிகின்றார்கள்.

ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் பெண் வெறும் அலங்காரப் பொம்மை அல்ல. இவள் ஒரு குல விளக்காக, மிளிர்ந்து தனது கணவனைப் பிள்ளைகளைப் போஷிப்ப துடன் நின்றுவிடாது, தமது உற்றம், சுற்றம், நண்பர்கள் என்றில்லாமல் அனைத்து ஜீவராசிகளையும் கனிவுடன் நோக்கினால், அவளுக்குத் தெய்வ அனுக்கிரஹம் தானாகக் கிட்டும். அன்புடன் பழகினால் எல்லோரும் அழகாகத்தான் தெரிவார்கள்.

இறைவன் படைப்பில் ஏற்றத் தாழ்வு இல்லை. நாமாகவே பேதங்களைக் கற்பிக்கின்றோம். குடும்ப வாழ் ஒரு பரம்பரையுடன் முடிந்துவிடுவதில்லை. இவை தொடர்ந்து செல்லும். கணவனும் மனைவியும் இணைந் அன்புடன் நல்அறம் காத்திடல் வேண்டும். இதற்குப் பு அழகு மட்டுமே ஒரு காரணமாக அமைந்திடல் கூடாது.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சு
"இவள்" பகுதி
07-02-2010



RangaRakes





# உறவுகளைப் பிரிக்க முயலும் வஞ்சகர்கள்

குடும்ப உறவுகளை நண்பர்களைப் பிரித்து விடுவதில் சிலருக்கு அலாதி பிரியம். நம்பவே முடியாத பிரகிருதிகள் இந்த உலகில் உலாவந்து கொண்டிருக்கின்றார்கள். எங்கும், எவருடனும் பேசும் போது ஜாக்கிரதை உணர்வு அவசியமாகின்றது. சிலருடைய கரிசனை வார்த்தையில் நெருப்பு மனம் உருளுவது புரியவே புரியாது. அன்பிற்கும், வம்பிற்கும் பேதமறியா மனிதர்கள் பிறர் துன்பம் கண்டு மகிழ்வர். குடும்ப விவகாரங்களைக் கண்டவர் முன் பேசுதல் இல்லத்தினுள் சூறாவளியை ஏற்படுத்தி விடும் . மனம் செம்மையானால் வார்த்தைகளில் நறுமணம் கமழும். பிறர் உறவுகளை வளர்க்க இவை உதவும்.

உலகில் நாம் நம்பமுடியாதபடியான நஞ்சனைய நபர்கள் உலாவந்து கொண்டிருக்கின்றனர். எதற்கும், மனிதர் ஜாக்கிரதையுணர்வுடன் செயல்பட வேண்டியுள்ளது. குடும்ப உறவுகள், நண்பர்களைப் பிரித்துவிடுவதில் இவர்களுக்கு அலாதி பிரியம்.



Tamilnavarasam.com

தற்போது சிலர் செய்யும் மிகக் கேவலமான செயல்பற்றி நீங்கள் அறியவேண்டாமா? இத்தகையோர், யாராவது ஒருவருடன் தொலைபேசியில் உரையாடுவார்கள். "என்ன சௌக்கியமாக இருக்கின்றீர்களா" எனக் கரிசனமாகக் கேட்பதுடன் ஊரில் என்ன விசேடம் ஏதாவது புதினம், கிதினம் இருக்கின்றதா எனக் கேட்டு வைப்பார்கள்.

அவருடன் பேசும் அப்பாவி நபர், எதுவித வஞ்சக உணர்வின்றி யாரைப் பற்றியாவது சொல்லிவிடுவர். சிலசமயம் தமக்கு வேண்டாதவர் பற்றியும் சொல்லி பெரிய விமர்சனமும் செய்துவிடுவார். தமது நெருங்கிய உறவினர், நண்பர்கள் பற்றியும் ஏன் சிலசமயம் தமது மனைவி, மக்களின் குறை நிறைகளையும் உளறித்தள்ளி விடுவார். கோபம் மிகையாக வரும்போதே, கேலி கிண்டல் பேச்சுக் களைத் தற்செயலாகச் சொல்லும் போது பலர் தம்மை மறந்துவிடுவதுமுண்டு.

ஆனால் நடப்பது என்ன? நான் ஏற்கனவே குறிப்பிட்ட சில நபர்களோ சற்றும் எதிர்பாராத முறையில் நயவஞ்சகமாக அவர் தொலைபேசியில் பேசியதை அப்படியே குரல் பதிவு செய்து விடுவார். அதுமட்டுமின்றி தனது செயல்பற்றி மூச்சுவிடமாட்டார்.

தகுந்த சந்தர்ப்பம் வரும்போது, அவர் பேசியதை அப்படியே பிறருக்கு வெளிப்படுத்திவிடுவார். நவீன தொழில் நுட்ப முறைகள் அடுத்தவனைக் கெடுப்பதற்காக கண்டு பிடிக்கப்பட்டதல்ல.





கணவன், மனைவியைக் கோப மிகுதியால் பேசியதையும் பதிலுக்கு மனைவி கணவனைத் திருப்பி தனது நியாயங்களை, சற்று வன்மையாக வெளிப் படுத்துவதைப் பார்த்து ரசிக்க எத்தனையோ ஜீவன்கள் காவல் காத்துக் கிடக்கின்றன.

தங்கள் வீட்டு விஷயங்களை மறைத்து அடுத்தவன் வீட்டில் ஏதாவது சங்கதி நடக்கின்றதா என அறிவதில் அதீத ஆசைகள் சிலருக்கு உண்டு. மனஸ்தாபப்பட்டு குடும்பங்கள் பிரிவதால், இவர்களுக்கு என்ன ஆதாயம் கிடைக்கப் போகின்றது?

இரண்டு பெண்கள் தெருவில் வாக்கு வாதப்பட்டுக் கொண்டார்கள். இவர்கள் இருவருமே தாம் முன்பு ஒற்றுமையாக இருந்த காலத்தில் பேசியதைப் பகிரங்க மாகச்சொல்லிக் கொண்டார்கள். அதுமட்டுமல்ல இரு வருமே தத்தமது கணவர்மார் பற்றித் தமக்குள் பரிமாறிக் கொண்ட விஷயங்களை எவ்வித வஜ்ஜையுமின்றிச் சொல்லிக்கொண்டார்கள்.

இதனால், இவர்கள் வாயில் சிக்கிக்கொண்ட அப்பாவி மனிதர்கள் எதுவித சம்பந்தமின்றி மோதிக் கொள்ளும் நிலையை இவர்கள் தமது கோபமிகுதியால் உருவாக்கிக் கொண்டனர்.

தமது மனைவியர் தங்களைப் பற்றிய கருத்து க்களை தமக்கிடையே பகிர்ந்து சொன்னதால் அவர்களின் கணவர்மாரின் மனநிலை எவ்வாறு இருக்கும்?



RangaRakes
Tamilnavarasam.com

ஆண்களிடமும் இந்தப் பலவீனம் உண்டு. பொ வாக குடிபோதையில் இருக்கும் நபர்கள், தமது நண் களிடம் ஊர்வம்பு பேசிப் பேசி பல பிரச்சினைகளை உரு க்கிவிடுவார்கள். பொழுதுகளை வீணாகக் கரைத்தால் வீணாக வாய் அசையும். இதனால் பலரின் மனங்க நொந்து, நைந்து, வெந்து போய்விடும்.

மனங்களைச் செம்மையாக வைத்தால் வா கண்டபடி, கெட்டவார்த்தைகளைப் பேசமாட்டாது. நா தொடர்ந்தும் எவரிடமும் பகைமை பாராட்டி விடமுடியா இதையுணராமல் வீட்டிலேயே கணவன், மனைவியுட கண்டபடி வார்த்தையாடுதலைத் தவிர்க்கலாம் அல்லவா?

கணவனும் மனைவியும் தமக்குள் செல்லமா கடிந்து கொள்வதும் பின்னர் சமரசமாவதும் சகஜமானதே மேலும் எத்தருணத்திலும் திருமணமாகாத காதலர்க ளாட்டும் திருமணமான தம்பதியினராகட்டும் இவர்கள ஊடல்கள் நீண்டநேரம் தொடரக்கூடவே கூடாது. நீண்ட நேரப் பொய்க்கோபம் சிலவேளை இவர்களிடம் ஒரு வளையாத தன்மையை, தன்முனைப்பினை ஏற்படுத் திவிடலாம்.

கேலிக்காகவேனும் மனைவியைக் கணவன், கண்ட படி அவளின் குடும்பத்தை, உறவுகளைத் தரம் தாழ்த்திப் பேசுதல் தகாது. அவ்வண்ணமே மனைவி தனது குடும்ப அந்தஸ்து மேலானதாக இருப்பினும்கூட, புருஷனை





மட்டம் தட்டுமாற்போலத் தனிமையிலும், பிறர் முன்னிலை யிலும் ஏன் பிள்ளைகள் மத்தியிலும் பேசுதல் ஆகாது.

பல்லாண்டு காலம் இணைபிரியாது வாழ்ந்த தம்பதியினர்களைப் பாருங்கள். இவர்கள் தமது பராயங் களை மறந்து என்றும் புதிதான காதலர்கள் போல் சுகித்து இருப்பதைக் கண்டு அவர்கள் போல் அன்புணர்வுடன் வாழச் சித்தம் கொள்வதே உத்தமமானது.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
03-01-2010



RangaRakes
Tamilnavarasam.com



# "ஓடிப்போனவள்" பெண்கள் நிலைபற்றிய சமூகப் பார்வை

காலம் மாறிக் கொண்டே போனாலும் காதல், பெண்கள் விடயத்தில் சமூகத்தின் பார்வை பாரபட்சமாகவேயுள்ளது. தான் விரும்பியவனுடன் ஒரு பெண் வாழச் சென்று விட்டால் அவளுக்கு "ஓடிப்போனவள்" என்ற நாமத்தைச் சூட்டி விடுகின்றனர். ஆயினும் அவனைக் கூட்டிக்கொண்டுபோன ஆண்மகனை "ஓடிப்போனவன்" என அழைக்கப்படுவதேயில்லை. எனினும் காதல் திருமணங்கள் புதிதான ஒன்றுமல்ல. பெண்களை அவமானப்படுத்துதலும் புதிதானதல்ல. மனம், மொழி, வாக்கால் பெண்களுக்கு ஊறு விளைவிக்காது இருத்தலே மானுடதர்மம்!

ஒரு பெண் தான் விரும்பியவனுடன் வாழச் சென்று விட்டால் அவளுக்குச் சமூகத்தினர் "ஓடிப்போனவள்" எனும் நாமத்தைச் சூட்டி விடுகின்றார்கள். எனினும் அவளைக் கூட்டிச் சென்றவனை ஒருபோதும் "ஓடிப்போனவன்" என்று ஒருபோதும் சொல்லியதில்லை. சொல்லப்போவதுமில்லை.





ஆனால்,

சில சந்தர்ப்பங்களில் ஆண்களில் யாராவது தான் விரும்பியவர்களுடன் வாழச் சென்றால் நையாண்டியாகக் "கிளம்பிக் கொண்டு சென்று விட்டான்" என்று சொல்வதுண்டு. ஆண்கள் விடயத்தில் இவையெல்லாம் தற்காலியமாகச் சொல்லப்படுபவை தான்.

பெண் என்பவள் இவர்கள் சொல்வது போல் தனது காதலனுடன் விழுந்து, விழுந்து ஓடிப்போவதுமில்லை. அவ்வண்ணமே, ஒரு பாறாங்கல்லை கிளப்புவதுபோல். பெண் ஒருத்தியை ஒரு சடம்போலத் தூக்கிக் கொண்டு ஓடுவதுமல்ல.

காலம் மாறிக்கொண்டே போனாலும் கூட, காதல் விடயத்தில் பெண்கள்தான் பரிகாசத்திற்குரிய பொருளாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆண்கள் பலரும் இது விடயத்தில், பெரிதும் கிண்டல்களுக்குட்பட்டாலும்கூட காலப்போக்கில் சமூகம் அவன் கடந்த காலக் கதைகளை மீட்டிப் பார்ப்பதேயில்லை.

ஒரு பெண் காதலித்துத் திருமணம் புரிந்து குழந்தைகளைப் பெற்றுப் பலவருடங்கள் சென்ற பின்னரும் யாருடனாவது அல்லது உறவினர்களிடமாவது அவள் மனஸ் தாபப்பட்டுக் கோபப்பட்டாலே போதும், உடனே அவர்கள் "போ...போ... நீ என்ன... என்னுடன் பேசுவது, வீட்டிற்குத்



RangaRakes Tamilnavarasam.com

தெரியாமல் ஓடிப்போய் கல்யாணம் செய்து பிள்ளை பெ வள் தானே..." என்று சற்றும் மனம் கூசாமல் சொல் விடுகின்றார்கள்.

அதுமட்டுமல்ல,

தங்கள் சாதி, சமயத்தை விடுத்து வேறு எங்காவ காதல் மணம் புரிந்தால், ஏதுமறியாத அவர்கள் குழந்தை மீது வீணான பழியைச் சொல்லிக் குரூர திருப்திப்பட்டு கொள்கின்றார்கள். இது ஒரு சமூக அவலம்.

காதல் திருமணங்கள் இன்று மட்டுமா நிகழ்ந் கொண்டிருக்கின்றது? முற்காலத்திலும் தற்காலத்திலு எதிர்காலத்திலும் நிகழத்தான் போகின்றது. "காதல்" மனம் உணர்வு சார்ந்த விஷயம். வெளியில் இருந்து விமர்சனம் செய்யமுடியாது ,

எனினும்,

ஒரு பெண் தனது வாழ்க்கைத் துணையினை மனம் போனபடி அமைத்திடல் முடியாது. ஆண்களுக்கும் இக்கருத்துப் பொருந்தும். ஆண் மகன் கெட்டுப் போவதற் கான சகல உரிமைகளையும் விரும்பி வழங்கும் குடும்ப, சமூக நபர்கள் இருக்கின்றார்கள்.

பெண்களின் நிலை யதார்த்தத்தில் அவளுக்கான உரிமைகளை இந்தச் சமூகம் மட்டுமல்ல, அவள் பிறந்த





வீட்டிலும் பூரணமாகக் கிடைக்கின்றதா என நோக்க வேண்டும்.

ஒரு பெண்ணின் காதல் ஒரு தடவை முறிந்தாலே அதுபற்றியே பேசித் தீர்க்கப் பலரும் பிரியப்படுகின்றார்கள். ஆண் மகனுக்கு அதுவே வீரம் என்றும் சொல்லுபவர்கள் உண்டு. பல பெண்களுடன் கூடிக் குலாவுபவர்களைப் பார்த்து அவர்களது நண்பர் "அவனுக்கென்ன, அதிஷ்டக் காரன், நினைத்தவுடன், நினைத்த பெண்களுடன் சுற்றுகின் றான்" எனச் சற்றுப் பொறாமையுடன் அவனது செயலை மெச்சியும் பேசுவார்கள். இது போதாதா ஒருவன் தொடர்ந்து கெட்டலைவதற்கு? இதில் பெருமை வேறு!

பெண்ணுடன் கூடிப் பிறந்தவர்களுக்கும் பெண் ணாகப் பிறந்தவர்களுக்கும் கூட பெண்ணின் பெருமை புரிவதில்லை. "அவனுக்கென்ன அவன் ஆண் பிள்ளை, நீதான் கவனமாக, இருக்கவேண்டும்" என்று தாய்மார்களே தங்கள் மகளுக்குப் புத்திமதிகள் சொல்வார்கள். தமது ஆண்மகனின் சேஷ்டைகளைத் தாய்மார்களே அங்கீ கரிப்பதுபோல இவர்கள் பேச்சும் இருக்கும்.

என்ன இது அநியாயம்! ஆனால் தாய் ஒருத்தி இப்படிச் சொல்வதுகூட இந்த உலகிற்குப் பயந்துதான் சொல்கின்றாள். உண்மையும் அதுவே தான். இப்படியான உலகில்தானே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.



RangaRakes
Tamilnavarasam.com

பெண்களுக்கான உரிமைகள் பற்றி பேசும் போது செய்கின்ற செயல்விடயத்தில் நாம் பொய்களை மிகத் தாராளமாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். தாங்கள் பெற்ற மகளுக்கு அவளுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதைப் பல பெற்றோர்களும், கூடப் பிறந்த சகோதரர்கள், சகோதரிகளுமே உணரத்தயாரில்லை.

பெண்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவளுக்காகப் பரிந்து பேசுகின்றோம். ஆனால் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவளுக்கு அபகீர்த்தி வருவதுபோல பேசுவதை விட்டுவிடுகின்றோமா? பொய்யான உபதேசங் களும் நடத்தைகளும் ஒரு விடியலையும் தரப்போவது மில்லை.

ஆண்களுக்காயினும் சரி பெண்களுக்காயினும் சரி விசேடமான எந்த உரிமைகளும் வழங்க வேண்டும் என்றில்லை. எல்லோரையும் சமனாக நோக்கில் மனதால், வாக்கால், உடல்ரீதியாகக் காயப்படுத்தாமல் விடுதலே மானுடதர்மமாகும். இறைவனும் இதனையே எம்மிடம் நாடுகின்றான்.

தினக்குரல்
ஞாயிறு மங்சரி
“இவள்” பகுதி
10-01-2010







# முதுமையிலும் காதல் வாழ்வு

“காதல் வாழ்வு” என்பது இளையவர்களுக்கே தனியுடைமையானது அல்ல. திருமணமான பின்னரும் காதல் வாழ்வு தொடரவேண்டும். முதுமையிலும் தொடரும் அன்பான வாழ்வுதான் சாஸ்வதமானது. இளமைக்கால கவர்ச்சி, யௌவனம், துடிதுடிப்புகளால் தோன்றிய காதல் முதுமையில் முடங்கிப் போனால் அது உண்மையான காதலே அல்ல! மனதிற்கு வயது ஏது? எந்த வயதிலும் உற்சாகமாக வாழ முதுமையிலும் கணவன், மனைவி உறவு நிறைவாக அமைதலே சிறப்பு. உண்மைக் காதல் வாழ்வுக்கு வயது, வரம்பு ஏது? முதுமையிலும் நதி நீராய் பெருக்கெடுத்துப் பிரவாகமாய் ஓடும்.

காதல் வாழ்க்கை என்பது இளையவர்களுக்கே தனியுடமையானது என்றே பலரும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.இதற்கு ஏற்றால் போல திரைப்படங்களில் உண்மைக் காதலுக்கு பொருத்தமான வடிவம் கொடுக்கப்படுவதில்லை.

காதல் என்றால் யதார்த்தத்திற்கு ஒவ்வாத காட்சிகளையே படம் போட்டுக் காட்டுகின்றார்கள். தேவையின்றி



RangaRakes
Tamilnavarasam.com

வீதிகளில், மலைமுகட்டில், பள்ளங்களில் ஓடுவதும் பூங்காவில் பலர் முன்னிலையில் கட்டி உருளுவ துமா விரசமாகவே காதல் உணர்வுகள் சித்தரிக்கப் படுகின்றது.

காதல் வாழ்வின் ஆதாரமான குடும்ப உறவுகை தெளிவாகச் சொல்லத் தெரியாமல் வெறும் ஜனரக தன்மையுடன் காசு தேடல் தான் தங்கள் மேலான ப என படாதிபதிகள் எண்ணிச் செயல்படுகின்றனர்.

குடும்ப உறவுக்குக் காரணமான முதியவர்களின் காதல் வாழ்வின் மகத்துவத்தை நாம் இன்னமும் புரிந் கொள்ளவில்லை போல் தெரிகின்றது. சொல்லப் போனா இளமையில் நாம் அனுபவிக்கும் காதல் வாழ்வைவி கடிதென மாறுகின்ற கால ஓட்டத்தில் வயது முதிர்ந்தபி கணவன், மனைவியிடம் உள்ள இறுக்கமான அன்பி காரணமாக ஒருவர் மீது ஒருவர் காட்டும் அந்நியோ மான பரிவு, கரிசனைகளே போற்றுதற்குரியதாகும்.

கரும்பின் நுனிப்பகுதி உவர்ப்பாக இருக்கும். நா அதனை நுனிப்பகுதியிலிருந்து அடிப்பகுதி வரை சுவைத்துப்பார்க்கும் போது படிப்படியாக அதன் சுவை அதிகரிப்பது தெரியும்.

நாம் கரும்பை அடிப்பகுதியில் இருந்து அத நுனிப்பகுதி நோக்கிச் சுவைக்க ஆரம்பித்தால், ஆரம்பம் சுவையாகப் போகப் போக முடிவில் நுனிப்பகுதி சுவையற் றுப்போகும்.



RangaRakes



இதேபோல் நாம் ஆரம்ப கட்டத்தில் அடிக் கரும் பைச் சுவைத்துக்கொண்டு நுனிக்கரும்பை நோக்கிச் சுவைப்பது போல வாழ்க்கையை அனுபவிக்கத் தலைப்பட லாகாது. இதை எமக்கு உணர்த்தவே "பட்டினத்தார்" கரும்பைத் தனது கரத்தில் கொண்டு காட்சியளித்தார்.

இளவயதில் மிகவும் ஆடம்பரமாக வாழ்வதும், பின்னர் முதுமையில் தேடிவந்த கைப் பொருட்களைச் சேமிக்காது, துன்பப்படுதல் மடமையானதல்லவா? மேலும் இளவயதில் காதலித்து மணம் புரிந்த தம்பதியினர், மிகவும் அந்நியோன்யமாக வாழும்போது எதிர்காலம் குறித்துச் சற்றேனும் சிந்திக்காது மனம்போனபடி வாழ்ந்து, பின்னர் வயது ஏற ஏற பொருளாதார நெருக்கடி குழந்தைகளைப் பராமரித்தல் போன்ற செலவினங்களால் மனம் சோர்ந்து தம்மிடையே உள்ள காதல் அருகி முரண்பட்டு வாழ்வதுபோல் பேதமை வேறு ஏது?

ஆயினும் உண்மையான காதல் வாழ்விற்கு வயது, பொருளாதாரம் என்பது ஒரு தடையே அல்ல. இன்னமும் எழுபது எண்பது வயது தாத்தா, பாட்டிகள் கூட என்றும் புதுமணத் தம்பதிகள் போல வாழ்ந்து வருகின்றனர். இது உண்மைக் காதலின் கனதியான உறுதிமிகு பிணைப்பு. விலகிடாத இறுக்கமே மூல காரணமாகும். இதைச் சிலர் வேடிக்கையாகவும் நோக்கலாம்.

காதலின் பரிணாம வளர்ச்சியை நாம் புரிந்து கொள்ளவேண்டும். கல்யாணம் முடித்து குடும்ப



Tamilnavarasam.com

வாழ்க்கையை ஆரம்பித்ததில் இருந்து தம்பதியினரின் அன்பு சதா காலமும் வளர்ந்த வண்ணமாய் இருக்கப் பரஸ்பரம் தம்மிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும்.

குடும்பத்திற்கு வெளியே உள்ளவர்களின் அத்து மீறலான ஆக்கிரமிப்பான, தவறான உபதேசங்களைச் செவிமடுக்காது, குடும்ப நலனில் மேலான கவனம் செலுத்தி வந்தால் கணவன், மனைவி காதல் மென்மேலும் வளர்ந்தோங்கி வரும். உறவினர், நண்பர்களின் நட்பை பேணவேண்டிய அதேசமயம், தங்கள் குடும்ப உறவினை அவை பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். வெறும் உடல் உறவு மட்டும் கணவன் மனைவி உறவுகளாக அமைந்து விடுவதில்லை. அதற்கும் மேலாக எத்தனை எத்தனையோ விஷயங்கள் உள்ளன.

இளமைக் கால அழகு யௌவனம், துடிதுடிப்பு, கவர்ச்சி மட்டும் காதல் வாழ்வுக்கு முதன்மையானது, இதற்குமேல் இனி என்ன வேண்டிக்கிடக்கின்றது என இளம் வயதில் எண்ணுபவர்கள் பலர். முதுமை வந்ததும் தாமாகவே ஒதுங்கி, வெறும் அழகு மட்டுமே வாழ்க்கைக்கு இதம் தரும் என்று தங்கள் மனசுக்குள் ஆழமான எண்ணத்தை வைத்துக்கொண்டு கணவன், மனைவி ஒருவரை ஒருவர் நோக்கினால் எப்படி பழைய கால இனிமையை மீண்டும் கொண்டுவர முடியும்?





மனம் சோர்ந்தால் எல்லாமே சோர்ந்துவிடும். உடல் சோர்ந்துவிடும் நல்ல இனிமையான உணர்வுகள், சிரிப்பு, புன்முறுவல், தேஜஸ் எல்லாமே மெல்லென அகன்று போக எவரும் அனுமதித்தலாகாது.

மனதிற்கு ஏது வயது? எந்த வயதிலும் உற்சாகமாக வாழ சந்தோஷமான எண்ணங்கள் வலுப்பட்டால் இளமை விலகாது. புரிந்து கொள்ளுங்கள்! மேலைநாடுகளில் காதல் வாழ்விற்கு வயது ஒரு தடைக்கல்லாக அவர்கள் கருதுவதே யில்லை. நாம் அவர்கள் பற்றி இன்னமும் சரியாகப் புரிந்து கொள்ளவேயில்லை.

மேல் நாடுகளில் உள்ள நகர வாசிகளை விடுத்துச் சுற்றுப் புற நகர், கிராமத்து சூழலில் வாழும் அங்குள்ள மக்களில் பலர் இன்னமும் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர்.

தங்கள் பேரன், பேத்திகளுடன் மிக உல்லாசமா கவே வாழ்கின்றனர். ஒருவனுக்கு ஒருத்தி எனும் கலாசாரம் எமக்கு மட்டுமானதுமல்ல. அங்கேயும் இவ்விதமாக மிக அன்னியோன்யமாக வாழும் தம்ப தியினர் இருக்கிறார்கள்.

தேக ஆரோக்கியம், உழைப்பு விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவதாலேயே மேலைநாட்டினர் அழகாக, திடமாக வாழ்வதுடன் வயது போனால் முடங்கி ஒடுங்கி வாழ்ந்தேயாக வேண்டுமெனக் கருதுவதுமில்லை.



RangaRakes
Tamilnavarasam.com

பலவெளி நாடுகளில் உள்ள நிறுவனங்களில் எழுபது, எழுபத்து ஐந்து வயதுவரை கருமம் ஆற்றுகின் றனர். அங்கு ஓய்வூதிய விதிப்பிரகாரம் எழுபது வயதிற்கு மேலும் வேலை செய்கின்ற உரிமையுண்டு. எமது நாட்டில் இருந்து சென்ற எம்மவர்கள், அவர்கள் போல வேலை செய்ய தங்களால் முடியவில்லையே என அங்கலாய்ப்புடன் சொல்கின்றார்கள்.

உடல் உழைப்பு என்பது எமக்கு ஒரு பாரமாக, வேண்டப்படாத சிரமமாகக் கொண்டால் எப்படி உற்சாகம் கொப்பளிக்க முடியும்?

வயதுசென்று உடல் சோர்ந்தால் கணவன், மனைவியை வேண்டாத பொருளாக நோக்குவதும், அதே போல் மனைவிக்கு வயது போய்விட்ட காரணத்தால் அவள் யௌவனம் போய்விட்டதே என்று கண்டபடி மனசை வேறு வழியில் திசை திருப்பும் ஆண் வர்க்கத்தில் ஒரு பிரிவினர் தமக்கும் பராயம் பட்டெனக் கழிந்துபோய் விட்டதை மறந்துபோய் திரிகின்றனர். இளமை, முதுமை சகலருக்கும் பொதுவானதே. ஒருவரை ஒருவர் கேலி பேசமுடியாது.

இளமைக் காலத்தில் தம்மை மறந்து காதல் மொழி பகன்று, ஈருடல் ஓருயிர் என்பவர்கள், முதுமை வந்ததும் முட்டிமோதி வாழ்வது அழகா? ஏழு எட்டுப் பிள்ளைகளைப் பெற்றபின்னரும் விவாகரத்துக் கேட்கின்ற முதியோர் வாழும் காலம் இது, கொடுமை!



RangaRakes



நாற்பது, ஐம்பது வருடகாலத் தாம்பத்திய வாழ்வு வாழ்ந்த பின்னரும்கூட ஒருவரை ஒருவர் புரிந்து கொள் ளாமல் வாழ்வது என்ன வாழ்வோ எனக் கேட்கத் தோன்று கின்றதல்லவா?

மாறா அன்பு கொண்டுவிட்டால் நாம் நேசிப்பவர்கள் எமக்கு புத்தம் புது நண்பர்களாகவே என்றும் இணைந் திருப்பார்கள். திருமண பந்தம் புனிதமானது. இரு ஜீவன்களுக்கிடையேயும் அவர்களது எதிர்கால சந்ததிக்குமான பிணைப்பு. காதல் என்றுமே சிரஞ்சீவித் தன்மையுடன் கூடியதேயாம். இந்த உணர்வுகளுக்கு ஏது வயது? ஆண்டுகளால் அளவிடமுடியாத காதல் வாழ்வு முதுமையிலும் தளர்வுறாது, வளர்ந்துவிடும்.

தினக்குரல்
ஞாயிறுமஞ்சரி
"இவள்" பகுதி
06-06-2010



Tamilnavarasam.com

# உன்னை நீ முந்து!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 14
சிந்தனைக் கட்டுரைகள்


RangaRakes
Tamilnavarasam.com

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
| --- | --- |
| 01) பயணங்கள் | 21 |
| 02) புன்னகை | 33 |
| 03) உழைத்தல் | 44 |
| 04) வசீகரம் | 55 |
| 05) கருத்துக்கள் | 66 |
| 06) உன்னை நீ முந்து! | 77 |
| 07) விளம்பரங்கள் | 84 |
| 08) கரிசனை | 95 |
| 09) அற்புதம் | 105 |
| 10) அன்பான தம்பதியினரைப் புறத்தாக்கங்கள் பற்றுவதில்லை! | 115 |
| 11) ஆராயாது நடந்தேறும் திருமணங்கள் பாதிப்புக்கள் | 119 |
| 12) எல்லோரிடமும் ஆலோசனை கேட்க வேண்டாம்! | 124 |
| 13) நல்ல கணவனின் தெரிவுக்கு அவசியமானவை | 129 |
| 14) மாறிடும் மனதை மாற்றிச் சீராக்குக! | 135 |
| 15) உறவுகளை உதறக் கூடாது! | 141 |
| 16) இல்லங்கள் ஆலயங்களாக வேண்டும் | 147 |





# பயணங்கள்

சுற்றிச் சுழலும் பூமியில் நாம் அத்தனைபேரும் பயணிகளே. இறைவன் தந்த பூமிப்பயணம் ஆபத்தற்றது. பயணங்களை மேற்கொள்வதால் உலகமக்களுடன் அந்நியோன்யமான உறவை வலுப்படுத்தமுடியும். மனிதன், தனது நாட்டின் கலை, கலாசாரத்தை மட்டுமன்றி, உலக மக்கள் அனைவரதும் கலாசார பாரம் பரியத்தினை அறிந்து அதற்கு மதிப்பளிக்க வேண்டும். அனைத்து இன முகங்களைத் தரிசிப்பதால் வேற்றுமை களைந்த உலகை ப்படைக்க இயலும் என்பதே இறைவனின் விருப்பமுமாகும். பயணங்கள் சுக அனுபவங்களாகட்டும்!

நாங்கள் எல்லோருமே உலகம் என்கின்ற மிகப் பெரிய பேருந்தில் கட்டணம் எதும் இன்றி பயணித்துக் கொண்டிருக்கும் நித்திய பயணிகளாவோம். இந்தப் பேருந் தின் சாரதி இறைவன் தான். தன் அருட்பார்வையினால் இதனைச் செலுத்திக் கொண்டிருக்கின்றான்.

இந்தப் பயணத்தில்பயம்எதுவும்பயணிகளுக்கு இருப்பதில்லை காரணம் இதனைச் செலுத்துபவர் கருணை



RangaRakes

Tamilnavarasam.com

மிகு சக்தியும், ஆற்றலும் மிக்கவராவார்.

இந்தப் பூமிப்பந்து உருண்டோடிக் கொண்டு இருக்கும் போது எதனுடனும் மோதி வீழ்வது கிடையாது. அத்துடன் வேறு கிரகங்கள், நட்சத்திரங்களுடன் மோதி விபத்துக்குள்ளாவதுமில்லை. குறித்த நேரத்தில் குறித்த பாதையில் விலகாது வழுவாது இந்தப் பயணம் நடந்து கொண்டிருக்கின்றது. இந்தப் பாதுகாப்பான சுகானுபவ மான பயணத்தைவிடச் சிறந்த பயணம் பிறிதொன் றில்லை. வாழ்க்கையை ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு வாழ்க்கைப் பயணம் அலுப்புத்தராத என்றும் இனிமை துய்ப்பதாகவே இருக்கும்.

இந்த உலக வாழ்வில் நாம் ஒரே மாதிரியான மனோ நிலையிலா பயணித்துக்கொண்டிருக்கின்றோம்? ஒவ்வொரு வரது நடத்தைகள், பண்புகள், வாழ்க்கை அனுபவங்கள் இன்ப துன்பங்களின் தாக்கங்களுக்கேற்ப வாழ்நாட்கள் கழிந்து கொண்டேயிருக்கின்றன.

பரந்த இந்த உலகினுள்ளே எத்தனை நாடுகள். எத்தனை விதமான மக்கள் கூட்டம், சமுத்திரங்கள், மலை கள், நதிகள், வனாந்திரங்கள், காடுகள் அதனுள்ளே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஜீவன்களுமாக என எத்தனை எத்தனை படைப்புக்களை இறைவன் இட்டு நிரப்பி வைத்துள்ளான். எல்லாவற்றின் வாழ்வு முறைகளுமே வித்தியாசமானவை என்பதிலிருந்து இறை படைப்பின் விசித்திரத்தை நாம்





உணர்ந்து கொள்ளலாம் அல்லவா?

உயிர்கள் அனைத்துமே இறைவன் பார்வையினுள் இருப்பினும்ஒவ்வொன்றுமே தமக்கென ஆற்றல்கள், செயல்களை வகுத்து வாழ்கின்றன. இவைகளின் வாழ்வுக்கு ஏற்ற வழிகளை அவைகளின் புலனுக்கு ஏற்ப வடிவமைத்து முள்ளான். எனவே வாழ்க்கையை உண்டாக்கியவனே வாழும் வழியையும் சமைத்தான். நாமாக முரண்டு பிடிக்கா மல் எம் இஷ்டப்படி கண்டபடி வாழமுற்பட்டால் துன்பப் படுவதும், திசைமாறுவதும் தவிர்க்க முடியாததாகும்.

மக்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்கள் என்ன மதம், என்ன இனம், மொழி என்பதுக்கு மேலாக "நாம் மனித இனம்" என்பது மறுக்க இயலாதது. எனவே நாம் ஒவ்வொருவருமே மக்களை நேசிக்க, அவர்களுடன் பழகி உறவாட"பயணங்கள்" முக்கிய காரணியாக இருக்கின்றமை கண்கூடு.

நாம் ஒருவரை ஒருவர் புரிந்து அவர்களது கலை, கலாசாரம் மொழி, மதங்களைக் கௌரவிக்கப் பழகினால் அன்புணர்வு எம்மிடையே மேலோங்கி விடுமன்றோ! மேலைத்தேய நாடுகளைச் சார்ந்தவர்கள் தமது உழைப்பின் ஒரு பெரும் பங்கினை பயணங்களில் ஈடுபடுத்துதற்கே செலவிடுகின்றனர். அவர்களும் அவர்களின் நாட்டின் அரச அதிகாரிகளும், சகல நாட்டின் நிலவரங்களையும் நேரிடையாகச் சென்று பார்த்து வருவதும் அத்துடன்



RangaRakes
Tamilnavarasam.com

தொடர்பு சாதன வளங்கள் மூலம் ஏற்படுத்திக்கொண்ட பாரிய முயற்சிகளாலேயே தங்களையும், தமது நாட்டினையும், கல்வி, விஞ்ஞானம், கலை, இலக்கியத் துறையில் மேம்படுத்திக் கொண்டார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று சுற்றுலாவிற்கு வரும் உல்லாசப் பயணிகளில் பெரும் பாலானோர் மேலைத் தேசத்தவராகவே இருக்கின்றனர். உலகைச் சுற்றிப் பார்க்கும் வேட்கை என்பது நாட்டு வளங்களை மட்டும் பார்த்துக் கொள்வதற்காக அல்ல. மக்கள் மனங்களையும் அவர்களது கலாசாரப் பண்புகளையும் பார்த்து அறிவதற்கேயாகும்.

எம்மில் பலரும் உலக நாடுகளின் பண்டைய சரித்திரங்களைப் பார்க்க அவாவுறாது இருக்கின்றார்கள். எங்கள் முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள். அவர்கள் மூலம் கண்ட படிப்படியான சமூக வளர்ச்சிதானே இன்று நாம் நவநாகரீக உலகில் விஞ்ஞான, தொழில்நுட்பத்தில் மேம்பட்டு இருப்பதற்கான மூல காரணமுமாகும், என்பதனை உணர்ந்து கொண்டாலே போதும் உலகை வலம் வருவதற்கு ஆசைப்பட்டவர்களாகி விடுவர்.

நாம் ஒரு வட்டத்திற்குள்ளேயே சுழன்று, சுழன்று வாழ்வதால் முன்னேறிவிட முடியுமா? புராதனப்பெருமை பேசி மகிழும் நாம் எமது கலாசாரம் நாகரிக காலத்தின் பின்பு தோன்றி வளர்ச்சி கண்ட நாடுகள் எவ்வாறு அதீத





முன்னேற்றங்கள் கண்டன என்பதைச் சற்றுச் சிந்தித்தேயாக வேண்டும்.

இன்னமும் கூட நம்மில் பலர் தங்கள் பக்கத்துத் தெருபற்றித் தெரியாமல் இருக்கின்றார்கள். என்னிடம் ஒரு பெரியவர் கூறினார். "தனது கிராமத்தில் இருந்து பன்னிரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள தலை நகருக்கே கடந்த பதினைந்து ஆண்டுகளாகச் சென்றதில்லை" என்றார். இதனைப் பெருமையுடன் வேறு பேசிக் கொண்டார். இத்தகைய எண்ணம் கொண்டோர் தொலை தூரப் பயணம் மேற்கொண்டு உலகம் சுற்றிப் பார்க்கவா பிரியப்படப் போகின்றார்கள்!.

எங்களில் எத்தனைபேருக்கு இலங்கைத் தீவு பற்றித் தெரியும் சொல்லுங்கள்! மலை நாட்டைச்சேர்ந்த பலருக்கும் கடல் என்றால் என்னவென்றே நேரிடையாகப் பார்த்ததேயில்லை. அது போலவே கடற்பிரதேசங்களில் வாழ்பவர்களில் பலருக்கு மலைநாடு நீர்வீழ்ச்சிகள் அதன் வனப்புறு அழகு பற்றி அறவே தெரியாது. திரைப்படங்களை மட்டும் பார்த்துத் திருப்திப்படுவதுடன் சரி அனுபவபூர்வமான நேரிடையான களிப்புணர்வுக்கு முன் வெறும் நிழல் உருக்களைக் கண்டால் ஏது திருப்தி ஐயா?

இன்று எமது நாட்டில் ஏற்பட்ட, தற்போதும் உள்ள அசாதாரண நிலை காரணமாகப் பயணங்களை மேற்கொள்வதில் சில பிரச்சினைகள் உள்ளன. முன்னர் பாடசாலை



RangaRakes
Tamilnavarasam.com

களில் மாணவர், ஆசிரியர்கள் சுற்றுலாப் பயணங்களை பாடசாலை விடுமுறை காலங்களில் மேற்கொண்டு வந்தனர். தற்போது சுற்றுலா மேற்கொள்வதும் சற்றுக்கடினம். தவிர பயணச் செலவுகள் கட்டுக்கடங்காதபடி அதிகரித்து விட்டன.

எமது முன்னோர்கள் தல யாத்திரைக்காக பயணம் செய்வார்கள். உண்மையில் இவர்கள் இறை வழிபாட்டிற்குச் சென்றாலும் கூட செல்லும் தலங்கள் தோறும் உலக மக்கள் பலரையும் ஒருங்கே சந்திக்கும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். கோவிலைத் தரிசிக்கும் பக்தர்கள் பல்வேறுபட்ட ஊர் தலை நகரங்கள் பட்டினங் களை நேரிடையாகப் பார்ப்பதுடன் வழியில் உள்ள கோவில் கள், முக்கியமான சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் கண்டுகளித்தார்கள். தல யாத்திரையை முற்காலத்தில ஒருதடவை என்றாலும் தாங்கள் சென்று வந்தேயாக வேண்டும் என்ற வைராக்கிய சிந்தனையுடன் வாழ்ந்து வந்தார்கள்.

ஆனால் சிலர் பயணங்களை வெறும் கேளிக்கைக் காக மட்டும் எனக் கருதி வருகின்றனர். வெளிநாடுகளுக்கு உல்லாசமாகச் சென்று கேளிக்கை விளையாட்டுக்கள் பண்பாட்டிற்கு ஒவ்வாத சிற்றின்பத்தினுடனான மனதையும், தேகத்தையும் பாதிக்கும்செயல்களில் ஈடுபடுவது லஜ்ஜைக் குரியவொன்றாகும்.

முற்காலத்தில் பயணிப்பது என்பதே சிரமமான





காரியமாகும். தற்காலத்தில் இந்நிலை இல்லை உலகமே ஒரு சின்ன உருண்டை போலாகிவிட்டது. அதி சீக்கிரமாகவே நினைத்த இடத்திற்குச் சென்றுவர நவீன போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன.

உலக நாடுகள் சிலவற்றின் வருமானம் உல்லாசத் துறையிலேயே தங்கியுள்ளன. இங்குள்ள மக்களில் அனேகர் உல்லாசத்துறையை நம்பியே தம் சீவியத்தை யோட்டுகின்றனர். அங்குள்ள மக்களின் கணிசமான வருமா னங்கள் இப்பணிகள் மூலமே பெற்றுக் கொள்கின்றார்கள். இயற்கை அழகு மிளிரும் நாடுகள் வெகு சுலபமாக உல்லா சத்துறையை வளர்த்து பணம் சம்பாதிக்கும் திறனை கலையை வளர்த்து நிற்கின்றன.

மாறுதலான சூழ்நிலைகளை வாழ்க்கையில் மனித மனம் நாடுவதுண்டு. மன இயல்பு பாதிக்கப்பட்ட சிலருக்கு வைத்தியர்கள் எங்காவது நல்ல சூழ்நிலையில் இடம்மாறி இருந்து பாருங்கள் எனச் சொல்வதுண்டு.

சலிப்பு, வெறுப்புணர்வு என எமக்குள் ஒரு விரத்தி ஏற்பட்டால் எங்காவது நல்ல பொழுது போக்குகளில் ஈடுபட்டால் என்ன என நாம் எண்ணுவதில்லையா?தங்கள் குடும்பத்தினருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குப் பயணிப்பதனால் மன இறுக்கம் குறைந்து விடுவது இயற்கை. சதா தொடர்ந்தும் கடமையாற்றி வருபவர்களுக்கு உடல் உளரீதியாகத் தாக்கம் ஏற்படுவது இயற்கையாகும்.



RangaRakes

Tamilnavarasam.com

அரசாங்க நிறுவனங்களாகட்டும், தனியார் நிறுவனங்களா கட்டும், ஊழியர்களுக்கு ஓய்வு விடுமுறைகள் வழங்கப்படு வதன் நோக்கமே அவர்கள் தமக்குரிய விடுமுறைகளைச் சந்தோஷமாகக் கழிப்பதற்காகவேயாம். சில சந்தர்ப்பங் களில் நோய் காரணமாக அலுவலர்கள் ஓய்வு விடுமுறை களைக் கழிப்பதுண்டு எனினும் ஓய்வு விடுமுறை காலங்களி லேயே வெளிநாட்டினர் சுற்றுலாப் பயணங்களை மேற் கொள்கின்றனர். எம்மவர்களில் பலர் இத்தகைய ஓய்வு விடுமுறைகளைப் பயன்தரும் விதத்தில் கழிப்பதாகத் தெரியவில்லை.

குதூகலத்தை, மனநிறைவை, திருப்தியை நாங்களே உருவாக்க வேண்டும் ஒரே இடத்தில் முடங்கிச் சுருண்டு படுத்தால் எழுந்து நிற்க மனம் வருமா? எழுந்து உற்சாக மாக ஓடிப்பாருங்கள். சுறுசுறுப்பு தானாகவே வந்து விடுகின்றது.

ஒருதடவை வெளியூர்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து நல்ல அனுபவங்களைப் பெற்றவர்கள் தொடர்ந்தும பல ஊர்களை இடங்களைக் கண்டுகொள்ளவே பிரியப்படு வார்கள். எனினும் பயணங்கள், சுற்றுலாக்களைச் மேற் கொள்ள எல்லோருக்குமே வசதி வாய்ப்புக்கள் வந்து விடுமா? தமது உழைப்பின் ஒரு சிறு பகுதியையாவது நல்ல பயணங்களை மேற்கொள்ளுவதற்குச் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேயாக வேண்டும்.





"நீ எதற்காக பிறநாடுகளைச் சென்று பார்க்க விருப்பமின்றி இருக்கின்றாய்" எனச் சிலரிடம் கேட்டால் "எனக்கு எனது தாய் நாட்டை விட்டுச் செல்ல இஷ்ட மில்லை. எனது நாட்டைவிடச் சிறந்தது எதுவுமேயில்லை என்பார்கள். இவர்களது தாய் நாட்டுப்பற்றினைப் பாராட் டலாம் ஆனால் தாய் நாட்டுப் பற்றுக்கும் வெளி நாடுகளு க்கோ அல்லது தனது பிரதேசம் சாராத நாடுகளுக்கோ சென்று வருவதற்கும் எந்த சம்பந்தமுமேயில்லை.

மேலும் வெளிநாட்டினர் பயணம் செய்யும் ஆவலினா லேயே நாடுகள் கண்டங்களைக் கண்டு பிடித்தார்கள். கொலம்பஸ் வஸ்கொடகாமா போன்றவர்கள் கடல்வழிப் பாதையையே கண்டு சொன்னார்கள்.

ஒரு விடயத்தை அறிந்துகொள்ள விழைவது கூட ஒரு கல்வி தான். நேரிடையாகப்பெற்ற அனுபவ ஞானத்திற்கும் கேள்விப்பட்ட சமாச்சாரத்தினால் பெற்ற அறிவிற்கும் வேறுபாடுகள் உண்டு அல்லவா?உலகம் எவ்வளவோ முன்னேற்றமடைந்த இந்தக்காலத்தில்கூட அறிய வேண்டிய விஷயங்களை அறியமாட்டேன் என அடம் பிடிப்பது கேலிக்குரியவாதமாகும்.

இன்று சாதாரணமாகவே சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிடவும் , சமயப் பெரியார்களைத் தரிசிக்கவும், தமது நாடுகளை விட்டு பல ஆயிரம் மைல்கள் சென்று வரும் மக்கள் தொகை கூடிவிட்டது. மேலும்



RangaRakes

Tamilnavarasam.com

ஒவ்வொரு நாட்டின் அரசாங்கங்கள் தமது மாணவர்களை அயல் நாடுகளுக்குப் பல்வேறுபட்ட பயிற்சி நெறிகளுக்காக அனுப்பி வருகின்றன. அதுமட்டு மல்ல, தங்கள் நாடு களுக்கு நேயநாட்டு மாணவர்களையும் தமது நாடுகளுக்கு வருமாறு அழைப்புவிடுகின்றன. தமது நாட்டில் பல கல்வி வசதிகள் இருந்தும் கூட அரசுகள், பிறநாடுகளுக்குப் புலமைப்பரிசில் மூலம் செல்ல வாய்ப்பு அளிக்கின்றன.

இவைமட்டுமல்ல ஒரு நாடு,மற்ற நாடுகளிடம் அன்னி யோன்னியமாக நடந்து கொள்வதற்கான முறைமை களுடன் புதியன காண்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத் துவதற்கும் தான்... என அறிக! பிறநாடுகளிடையே கல்வி கலாசாரப் பரிவர்த்தனைகளால் நாடுகளிடையே மக்களி டையே "யுத்தம்" பற்றிய பீதியுணர்வும் சந்தேகமற்ற சௌஜன்யமான உண்மைத்தன்மையோடு இணைந்த நல்லெண்ணம் உருவாகலாம் அல்லவா?

பயணங்கள் மனித மனங்களைப் பண்படுத்துகின் றன. பயணங்களுடாக மகிழ்ச்சியை கண்டுகொள்ள விழை யும் நாம் அந்த மகிழ்வினூடாக பெற்றுக்கொள்ளும் வாழ்க்கை அனுபவங்களையும் சமூகத்திற்கு அளிக்க வேண்டும். அதே வேளை அல்லல்படும் நாடுகளையும் கண்டு, அவர்களது துன்பங்களின் வலியையும் உணரல் வேண்டும். ஆழமான துன்பங்களுடனேயே சதா சீவித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு நாம் என்ன செய்து விட்டோம்? இன்று நாம் செய்தித் தாள்களைப் படித்து முடித்து மடித்து எறிகின்றோம்.





நேரிடையாகப்பெற்ற அனுபவங்களால் பலர் தொண் டர்களாகவும் இத்தகையோர்க்குச் சேவை செய்கின்றார்கள். அல்லல்படுகின்றவர்களை நேரில் கண்டு சேவை செய்யவே பல தொண்டு ஸ்தாபனங்கள் தமது முழுமூச்சாகக் கொண்டு இயங்குகின்றன.

எங்கோ சொகுசாக ஜீவனம் செய்தவர்கள் தங்கள் பயண அனுபவங்களால் வாழ்வுப் பாதையை மாற்றியவர் களும் இருக்கின்றார்கள். தொண்டுள்ளம் கொண்ட அன்னை தெரஸா அவர்கள், இந்தியா வந்ததுமே தமது உண்மையான சேவை இதுதான் என்பதைத் தீர்மானித்து ஏழைகளை அரவணைத்தார்.

எமது ஒவ்வொரு செயலுக்குமே ஒரு நல்ல அர்த்தம் இருக்க வேண்டும். அரைமைல் தூரம்வரை பயணிக்கும் மனிதர் சிலர், அந்த சில நிமிடங்களில் பேரூந்தில் பயணி களுடன், பேரூந்து நடத்துனரிடம் சண்டை போடுகின் றார்கள். "மகிழ்வுடனே இரு" என்று சொல்லிக் கொடுக்க வேண்டியுள்ளது. பயணங்களில் சந்திக்கும் நல்ல நண்ப ர்களை உறவுகளை மறந்துவிடக் கூடாது.

மனித மனங்கள் விரிவடைய வேண்டும். எல்லோரும் எல்லோரிடமும் பழக வேண்டும். பேதமற்ற சிந்தனைகளை உருவாக்க வேண்டும்.

எங்கள் வாழ்க்கைப் பயணங்களின் காலம் முடிவ டைவதற்குள் எம்மோடு இருந்து எம்மோடு ஜீவிக்கும் ஜீவன்




RangaRakes
Tamilnavarasam.com

களை வேற்றுமையுடன் நோக்குதலால் என்ன பயன் உண்டு? போக்குவரத்தில் ஈடுபடுவது மட்டும் பயணங்கள் அல்ல. கழிக்கின்ற காலங்களுமே பயணம் போலத் தான் என அறிவோம். மனிதனை மனிதன் போய்ச்சந்திப்பதை, அவன் வாழ்விடங்களை தரிசிப்பதை விட நல்ல பயண அனுபவம் வேறு என்ன உண்டு?

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
13.01.2008







# புன்னகை

புன்னகை அன்பின் வெளிப்பாடாகும். முகமலர்ச்சி ஆன்மாவை என்றும் விழிப்பூட்டும். எங்கள் சந்தோஷங்களை எங்களுடன் மட்டும் வைத்துக் கொள்ளாமல் அனைவருடனும் அதனைப் பகிர்ந்து கொள்வோம்! அகத்தினுள் இருளைப்பூட்டி புறத்தே புன்னகைகாட்டினால் அது அவர்களுக்கே துன்பமூட்டும் நடிப்பு. சோகத்துடன் தோழமை கொள்ளாது வாழ்க்கையின் யதார்த்தமானவைகளை ஏற்றுக்கொண்டால் மனம் அமைதிபெறும். துன்பத்தை எரித்தால் என்றும் புன்னகை தண்ணொளியுடன் எம்மில் இருந்து பூத்துக்குலுங்கும்.

புன்னகையூடாக மனிதன் எல்லையற்ற அன்பினைப் பிறரிடமிருந்து, தன்வசமாக்கிக் கொள்கின்றான்.

புன்னகை மனிதப்பெறுமதியை உறுதியுடன் மேலதிகமாக்குகின்றது. பொன்னகையினைவிடப் புன்னகை அழகானதும் கவர்ச்சிகரமானது. மனதினைக் கௌவக் கூடியதுமாகும். மனதில் அழுத்தமும் துன்பமும் சேர்ந்து



RangaRakes
Tamilnavarasam.com

கொள்ளும் போது புன்னகை எம்மிடமிருந்து பயணிக்க மறுக்கின்றது.

அலுவலகத்திற்குப் புறப்பட்டுப் பேருந்திற்காகக் காத்திருக்கும் போது, வந்த பேருந்துகள் காத்திருந்தவரைக் கைவிட்டு மூச்சிரைக்க ஓடும் போதும், அலுவலகத்தினுள் சென்றபோது பயணத்தினால் ஏற்பட்ட வெறுப்புடன் இருக்கையில் அலுவலக மேலதிகாரி எந்தவித காரணமும் இன்றி இவருடன் காலையிலேயே கோபிக்கும் போது, புன்னகையையும் சந்தோஷத்தையும் எப்படி இவரிடம் எதிர் பார்க்க முடியுமா ஐயா!

எல்லாப் பிரச்சினைகளையும் மென்று விழுங்கி முகத்தை மலரவைக்கும் சாமர்த்தியம் எல்லோருக்குமே வந்துவிடுமா? சின்ன அதிர்ச்சியூட்டும் துன்பங்களைமே தாங்காது இந்த மனசு சதா அடித்துக் கொள்கின்றதே என் செய்ய? எல்லா விஷயங்களுமே யதார்த்தம் சர்வ சாதாரண ங்கள் என எண்ண மனம் சொல்லியும் கேட்காமல் கலங்கு வது மனித இயல்போ? ஆயினும் நாம் எந்த வேளையிலும் எதனையுமே எதிர்பார்க்காமல் எமது முகத்தை மலர்ச்சி யுடன் வைத்து மிக இயல்பாக எம்மைக் களிப்புக்குள் ஆளாக்க "புன்னகை"யை தயக்கமின்றிச் சிந்திவிடுக! மிக அற்புதமான ஆத்மாவை விழிப்பூட்டும் அபூர்வ ஔடதம் இதுதான், இதுவேதான்!

மருந்து என்பது உட்கொள்ளப்படும் ஒன்று என்றே





சொல்லப்படும். எமது மனத்தினுள் செலுத்தப்படும் அன்பான அதிர்வுகள் புன்னகையூடாகப் புறப்படும் போது அது எல்லோருக்குமே வழங்கப்படும் சுகானுபமூட்டும் அற்புத மருந்தாகின்றது என்றால் தப்பேதுமில்லை!

எங்கள் சந்தோஷங்களை எங்களுடன் மட்டும் வைத்துக் கொள்ளாமல் பார்ப்பவர்களையும் எங்களைப் போலவே ஆக்கிட முனைவோமாக. அகத்தினுள் இருளைப் பூட்டி வைப்போர் புறத்தே புன்னகையினை மீட்டிக் காட்டினால் அதில் அபஸ்வரம் தோன்றும். இது பிறரை ஏமாற்றும் வேலைதான். இந்தப்புன்னகை காட்டுதலில்தான் எத்தனை ரகங்கள் உண்டு தெரியுமா?

ஆணவ மிடுக்குடன் புன்னகைப்பார்கள் சிலர். எம் முன் நிற்கும் இவர்கள் எல்லோரும் "யார்" என்கின்ற தோர ணையில் உதட்டைச் சுளித்து விரிப்பார்கள். இவர்களின் முறுவல் மனித மனங்களையும் முறுக்கிவிடும். வஞ்சகப் பார்வையுடன் நோக்கித் தமது உதடுகளை மெல்லியதாக புன்னகைப்பது போல் காட்டுவோரும் இருக்கின்றார்கள். உள் ஒன்று வைத்து அதனை வெளியே காட்டாமல் தன் எண்ணங்களைப் பிறருக்குத் தெரியாது எனத் தப்பாக எண்ணி முறுவல் காட்டினால் அதனைப்புரிந்து கொள்ளும் திறன் உள்ளவர் புரிந்து கொள்வார்கள். ஆனால் அப்பா விகள் தான் அசட்டுத்தனமாக அவர்கள் கைப்பாவை களாகவும் மாறிவிடலாம் வஞ்சகநோக்கு எஞ்ஞான்றும் சித்தி பெற்றிடுமோ?



RangaRakes

Tamilnavarasam.com

ஏழை எளியவர்களைக் கண்டால் அவர்கள் மூலம் ஏதேனும் காரியமாக வேண்டுமெனக் கருதிச் சில பிரமுகர்கள் பெரிதும் சிரமப்பட்டுப் புன்னகையினை வெளிப்படுத்துவார்கள். ஆனால் இவர்கள் தமது மனதினுள் அருவருப்புடன் அவர்களை நோக்குவார்கள். போயும் போயும் இவர்களுக்கெல்லாம் பல்லைக் காட்ட வேண்டியிருக்கின்றதே எனத் தமக்குள் சொல்லிக்கொள்வார்கள். இது கூட ஒரு பாவனை காட்டும் முறுவல் தான். ஆனால் இது ஒருவனை அறுக்க ஏமாற்றச்செய்யும் ஒரு முன் முயற்சியேயாகும்.

அடுத்து கிண்டலடிக்கும் நோக்கில் புன்னகைப் போரும் உள்ளனர். எதிரில் நிற்பவர்களை ஏமாளிகள் அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று எண்ணி நமுட்டுச்சிரிப்புடன் முறுவலிப்பார்கள்.எனினும் சிலர் வெறும் நகைச் சுவையுணர்வுடன் எந்தவித குரோத அகம்பாவ எண்ணமின்றியும் இப்படிப் புன்னகைப்பதுண்டு.

மேலும் தமது கோபத்தைக் காட்டுதலுக்கும் புன்னகையைப் பாவிப்பவர்களுமுண்டு. இந்தப் புன்னகையை நம்பி மற்றவர்கள் அது தமக்குச் சாதகமானது என நம்பி ஏதாவது பேச ஆரம்பித்தால் வேறு வினையே வேண்டாம் ஐயனே! சோகம் கௌவும்போது ஒரு வரட்டு எண்ணம் சூழ உதடு காய்ந்த நிலையில் மெதுவாக விரித்து கண்களில் ஏக்கத்தைப் படர விட்டவர்களைப் பார்த்தாலோ துன்பம் தோய்ந்தெடுக்கும்.





புன்னகைக்கும்போது மனிதனின் விழிகளும் தனது பாவத்தைச் செய்து காட்டும். நாம் எந்த நிலையில் புன்னகையினைப் படரவிடுகின்றோமோ, அதே வேலையை கண்களும் காட்டி நிற்கும். முகத்தின் தசைகளும், விழிகளின் அசைவுகள், மெல்லிய தசைகளில் ஏற்படும் மாற்றங்கள் மனிதன் உள்ளத்தைப் படம் போட்டுக் காட்டிவிடும்.

மனதில் உள்ள வெளிப்பாடுகளுக்கு ஏற்பவே இதய அதிர்வுகள் உடல் இயக்கங்களுள் மாறுதல் அடைகின்றன. ஒருவன் உடல் நிலை இயல்பாகவும் ஆரோக்கியமாகவும் திகழ நல்ல மகிழ்வுடன் சீவிக்க வேண்டும். புன்னகை என்பதுகூட மன மகிழ்வின் வெளிப்பாடே. இந்த விடயத்தில் பொய்மையான வெளிப்பாடாக அது அமையக்கூடாது. நடிப்பாகப் புன்னகை வெளிப்படுத்துதல் தன்னையே போலியானவனாக்குகின்ற செயல் தான்.

கோபத்தை ஏற்படுத்தியும், மிரட்டியும் காட்டுதற்காக விழியாலும் உதட்டாலும் செய்கைகளைக் காண்பிப்பது மென்மையான புன்னகைக்கு களங்கத்தைக் காட்ட முயற்சிப்பது போலாகிவிடுமன்றோ?

சரி, இனி சந்தோஷகரமான புன்னகைகளின் வெளிப்பாடுகளைப் பார்ப்போமே!

- தனது தாயை அல்லது தனக்குப் பிரியமான



RangaRakes
Tamilnavarasam.com

வர்களைக் கண்டமாத்திரத்தே வசீகரமான தன புன்னகை மூலம் தன்னை அரவணைத்துக் கொள் மாறு கெஞ்சிக்கொள்ளும் குழந்தையின் அழகை என்ன என்பதோ? இதன் மனதை மயக்கும் இன்ப தை எழுத்தில் சொல்லில் இயம்பிட இயலாது.

- வயதுமுதிர்ந்த தாத்தா, பாட்டியர் தங்கள் வாரிசுகளான பேரன் பேத்திகளின் துடுக்கும், துள்ளலுமா கும்மாளங்களை விளையாட்டுக்களை அவர்தம் மலையைக் கேட்டுத் தங்கள் பொக்கை வாய் மூலம் காட்டும் புன்னகையின் அழகே அழகு!

- காதலர்கள் ஒருவர் திருட்டுத்தனமாக நோக்குவதை இருவருமே கண்ணுற்றதும் வெட்க மிகுதியினால் அவர்கள் சிந்தும் புன்னகை. மேலும் பேச முடியாத சந்தர்ப்பங்களில் காதலி தன் விழிகளைத் தாழ்த்தி நிலத்தை கால் விரல்களால் சுரண்டி இமைகளைப் பட்டுச் சிறகென படபடக்க விழித்து மூடித் தாழ்த்தி இதழ் விரிக்கும் புன்னகை நாணத்துடன் கலந்த அற்புதக் கலவை!

- தங்கள் குழந்தைகளின் மேன்மை கண்டும் அவர்களைப் பிறர் போற்றுகையில் பெற்றோர் எல்லையில்லா ஆனந்தம் கொள்கின்றனர். மேடையில் தங்கள் பிள்ளை பரிசில்களைப் பெறும்போதும், விளையாட்டுப் போட்டியில் முதன்மையான வீரனாக





வரும் போதும் அந்தக் கணம் அவர்கள் பேசுதற்கு வார்த்தையின்றி கணவன், மனைவி ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கி இதழ் விரித்து மலரும் புன்னகையின் பெருமிதம் தாம் பெற்றெடுத்த முழுப் பயனையும் அன்றே கண்டதாக இருக்குமன்றோ!

இந்தக் களிப்பின் பெறுமதி பல்கோடி, பல்கோடி செல்வத்திலும் மேலானதே!

இன்று பலரும், தமக்குத் தெரிந்தவர்களைக் கண்டால் தான் முகமலர்வினைக் காட்டிக்கொள்ள வேண்டும் என எண்ணிக் கொள்கின்றனர்.

மேலைத்தேயத்தில் உள்ளவர்கள் காலை வேளையில் எவரைக் கண்டாலும் முகமலர்வுடன் காலை வந்தனம் சொல்லியே தீருவார்கள். புதிதாக நாம் அவர்களைக் கண்டாலும் கூட மெத்தப் பழகியவர்கள் போலவே வந்தனம் சொல்வார்கள். மேலும் காலநேரத்திற்கேற்ப அவர்கள் சொற்களும் இருக்கும். நண்பகல் இரவு நேரங்களுக்கு ஏற்பவும் தமது வந்தனங்களைப் பரிமாறிக் கொள்வார்.

அவர்கள் வந்தனம் சொல்லி புன்முறுவல் பூக்கும் போது நாமும் அவ்வண்ணம் சொல்லாமல் விட்டால் அது அவர்களை அவமதித்ததாகவே படும்.

ஒருவரை நாம் கண்டமாத்திரத்தே காட்டும் இத்த



RangaRakes
Tamilnavarasam.com

கைய அன்புணர்வின் அலைகள் தொடர்ந்தும் அன்றைய
நாளை மகிழ்வூட்டுவனவாக அமைந்து விடுமல்லவா? காலை
வேளையில் வேலைக்குப் புறப்படும் கணவனை அன்புடன்
புன்முறுவலுடன் மனைவி வழியனுப்ப வேண்டும். கடு
கடுத்து முகம் சுளித்து இல்லாத பிரச்சனைகளைத் தேவை
யின்றி காலையிலே புறப்படும் போது சொல்லத்தான் வேண்
டுமா? அதேபோல் தொழிலுக்குச் செல்லும் கணவன்,
தேவையின்றி மனைவி பிள்ளைகளுடன் எரிந்து விழுந்து
புறப்படத் தேவையில்லை. தமக்குள்ள மனக் குமைச்சல்
களின் வடிகாலாக மனைவி பிள்ளைகளுடன் மனத்தாங்கல்
கொள்வதில் என்ன நியாயமுண்டு? மேலும் தமக்குள்ள
தங்கள் பிரச்சனைகளை அன்புணர்வுடன் நம்பிக்கையு
ணர்வுடன் ஆணவ முனைப்பின்றி விட்டுக்கொடுப்புடன்
சந்தோஷகரமான சூழ்நிலையை உருவாக்கிப் பேசிக்
கொண்டால் குறைவு ஒருபோதும் வந்துவிடாது.

நாம் எவர் மீதும் காட்டுகின்ற பரிவான பார்வைகளால்
ஈர்க்கப்பட்டவர்கள் எம்மைத் தம்மவர்களாகவும் நாம் அ
களை நம்மவர்களாக்கும் எண்ணம் சட்டென்று மனதினு
புகுந்து கொள்ளும் ஒருவரிடம் பேசி விடைபெறும் போ
சந்தோஷமாக, விடைபெற வேண்டும். கருத்து மோதல்
களால் இதயங்கள் பொருதிவிடக்கூடாது. எங்கள் கருத்
ஏற்காதவர்களை எமக்கு வேண்டப்படாதவர்களாக கருத
கூடாது. எந்நேரமும் மலர்ச்சியைக் காட்டுபவர்கள் மற்ற
களை இகழ்ந்து பேசத்துணியார். யந்திரம்போல சட
போல நாம் வாழ்ந்து விட முடியுமா? பரிவு, பாசம்





ன்பினைக் கலந்து, எம் உதடுகள் மூலம் வெளிப்
துவோம்!

எமக்குக் கீழ் பணிபுரியும் சிற்றூழியர்கள் மூலம்
மை நிமிர்தமான காரியம் செய்வித்தாலும் முகமலர்
வுடன் நன்றி தெரிவித்தல் வேண்டும். அவன் செய்த
வலைக்குச் சம்பளம் பெறுகின்றான். இதற்கு என்ன
"நன்றி" என்று துச்சமாகக் கருதிடல் கூடாது.

"அன்பைக் காட்டினால் அடங்கி வரமாட்டான்" என்று
சிலர் சொல்வார்கள். ஒருவர்க்கு அன்பைக் கொடுத்தல்
மானுட உயர் கௌரவம். எங்களைப் பிறர், "அன்பைக் காட்டி
கௌரவப்படுத்தக் கூடாது" என அவர்கள் கருதினால், எமது
மனசு எவ்வளவு பாடுபடும் தெரியுமா?

எங்களுக்குப்பிறர் செய்யும் உதவிகள் அது அவர்கள்
கட்டாய கடமை என எண்ணுதல் மடமையாகும். யாராவது
ஒரு அப்பாவி செய்யும் சிறு உதவிக்குச் சன்மானம்
அளிக்காது விட்டாலும் பரவாயில்லை அந்த நன்றியுணர்வை
சிறு புன்னகை மூலம் காட்டினால் என்ன குறைவந்து
விடப்போகின்றது? மனிதனை மனிதன் அவமானப்படுத்
துவது மானுடத்தையே இழிவுபடுத்துவதாகவே அமையும்.

எவரையும் தாழ்வாக எண்ணுதலும், அவர்களை
கணக்கில் எடுக்காது துச்சமாக கருதுவதாலும் எந்த
விதமான நல்ல பெறுபேறுகளையும் பெற்றுவிட முடியாது.



RangaRakes
Tamilnavarasam.com

அன்பு செலுத்துவதன் மூலம்தான் அவர்களது பெறுமதி தானாக உயர்ந்து பரிமளிக்கின்றது. ஆயினும் நாம் அன்பைக் காட்டிவிடுவதால் மட்டும் பிரயோசனமில்லை. அன்பினூடாக ஒருவருக்கு நம்பிக்கையான நம்பகத் தன்மை யுடன், உச்ச பட்ச உதவிகளை நல்குவதனாலேயே அன்பிற் கான பெறுமதியும் அவர்கள் இதயத்தை முழுமையாகத் தொட்டு நிற்கும். அன்பின் வெளிப்பாட்டிற்குப் "புன்னகை" என்பது அழகிய அடையாளமாகும்.நாம் செலுத்துகின்ற அன்பின் வெளிப்பாடுகள் இறைவனுக்கு எம்மால் இதய மூடாக அனுப்பிவைக்கப்படும் விசுவாசமான பக்திமிகு விண்ணப் பங்களேயாகும்!

அன்பு செலுத்துவதுகூட எமது பிரார்த்தனை வழிபாடு களுக்கும் மேலானதே. அன்பில்லாதவர்கள் செய்யும் வழிபாடுகள் சித்திபெறுவது கிடையவே கிடையாது. சிறு புன்னகை கூடச் சிந்தத் தெரியாமல் இருப்பவர்கள சந்தோ ஷத்தை ஒளித்து மறைத்து வைத்திருப்பதாகவே அடையா ளப்படுத்தப்படுவர்.

மனித ஆளுமைகள் உயர்வதற்கு நாம் பிறரை நேசிப் பவர்களாக இருந்தேயாக வேண்டும். நாம் உயர்வடைய வேண்டும் என்றால் மற்றவரை ஒடுக்கி அடக்கி முன்னேறு வது என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. மனித சமூகத்தை வெறுத்து ஒதுக்கியோ அல்லது வலுக்கட்டாயமாக எதையும் திணித்தோ மற்றவர்களைக் கவர்ந்துவிட முடியுமா? இயல் பாக வருவதுதான் அன்பு நேயப்பாடு ஆகும்.





ஈரமான நெஞ்சில் பெருக்கெடுத்தோடும் அன்பு பிரவாகத்தினுள் கட்டுண்டு போகப்பிரியப்படாதவர் எவர் உளர்? கண்ணுக்குப் புலப்படாத அன்பை உங்கள் உதட்டின் மூலம் வெளிப்படுத்துங்கள்.

எந்தவிதமான எதிர்பார்புகளுமின்றிக் குழந்தைகள் காட்டும் களங்கமற்ற புன்னகையை சிரிப்பைப் பாருங்கள் நாம் எதனையுமே எதிர்பார்க்கும் போது அது வியாபாரம் ஆகின்றது.


வரப்போகும் இன்னல்கள் துயர்களை தடுக்கும் பெரும் சுவராக எமது நெஞ்சத்தில் இருந்து சுரக்கும் பரிவு. அன்பு, காதல், பாசம் எனப்படுவன திகழ்கின்றன. இந்த சுரக்கும் கருவியை நாம் தான் இயக்க வேண்டும். மனம் எனும் நற் கருவி கொண்டு இதமான புன்முறுவல்களைப் பூக்கச்செய்வீர்! இந்த புன்முறுவல்கள் மூலம் மானுடம் என்கின்ற இறை சிருஷ்டியை அர்ச்சனை செய்வீராக!

மக்களை நேசிப்பது போல் பேரின்பம் வேறு உண்டோ தோழர்களே? என்றுமே சிந்திடும் புன்னகை வாயி லாக உங்களுக்கான அடையாளத்தினை உறுதி செய் வீராக!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
03.02.2008



RangaRakes
Tamilnavarasam.com



# உழைத்தல்

உழைக்காதவனை உலகம் மதிக்காது எமக்காகமட்டுமின்றி, உலகிற்காகவும் உழைத்திடுக! உழைக்கின்ற உழைப்பில் பேதமில்லை. ஏனெனில் அனைவரதும் உழைப்பு முடிவில் உலகின் நலனுக்கே போய்ச்சேருகின்றது. வர்க்கபேதம் ஜகத்திற்கு நாசம். மெய்வருந்தி உழைப்பவன் அதன் பிரதி பலனாக சந்தோஷியாகின்றான். பொறுப்புணர்ச்சியுள்ளவனுக்குஉழைப்பில் உறுதி, நாட்டம் தானாய் வரும். உழைத்தவன் வாழ்வில் இளைத்ததேயில்லை.

தனக்காகவும், தன்னைச் சார்ந்தவர்களுக்காக மட்டுமின்றி இந்த உலகஷேமத்திற்காகவும் மனிதன் உழைக்க வேண்டியவனாகின்றான். உழைக்காதவனை உலகம் மதிப்பதில்லை. ஊருக்கு உழைப்பவனை அவனி அரவணைத்துத் துதி செய்கின்றது.





உழைத்தல் என்பது, உடலை மட்டுமே வருத்திச் செய்வதுமட்டுமல்ல. இன்னும் ஒருவருக்காக மனதாலும் மொழியாலும் போற்றுதலும்,அவர்களை நன்கு வாழச் செய்ய வழிவகுத்தலும் கூட ஒருவரது நல்ல உழைப்பின் தூய வடிவமேதான். தானும் உழைத்துத் தன்னைச் சார்ந்தோர் தன்னிடம் தங்கி வாழாத எத்தரத்தாரையும் மதிப்போரை இந்தப் பூமி தன் நற்புதல்வராக ஏற்றுக் கனம் பண்ணும். இத்தகைய திறன் படைத்தோர் இருக்கும் வரை பூமியில் உழைப்போருக்குப் பஞ்சமே யில்லை.

பல தெரியாத கருமங்களை நாம் இன்னும் ஒருவர் மூலம் தெரிந்து கொள்ள வேண்டியவராகவுள்ளோம். உழைக்கும் வழியைப் பிறருக்குத் தெரியப்படுத்துபவன் உத்தமனாகின்றான். எந்தவித உதவிகளையும் மற்றவர்க்குவழங்காமலும் அடுத்தவன் உழைப்பைச் சுரண்டுபவன், உறிஞ்சுபவன் என்று சொல்லப்படுகின்ற "அதர்மன்" ஆகின்றான்.

ஒருவன் கருமத்திற்கு முட்டுக்கட்டை போடுவதால் எவர்க்குமே மிகையான ஆற்றல்கள் வந்துவிடப் போவதுமில்லை. அறியாமை காரணமாக ஒருவன் வளர்ச்சியைத் தடுத்தால்தான் தனது சம்பாத்தியம், சாத்தியப்படும் என எண்ணுதல் மடமை. பிறர்க்கு இடையூறுகளை உருவாக்காமல் அதுபற்றிய கருத்துக்களைத் தம் புலனுக்குள் செலுத்தாதவன் தானாகவே உயர்ந்து விடுகின்றான்.



RangaRakes

Tamilnavarasam.com

நல் எண்ணங்களால் சமைக்கப்படுகின்ற வாழ்வின் "நிம்மதி" சாஸ்வதமானது, திவ்யமானது இறைவன் அருட் பிரசாதத்தின் முழு வழங்கலுமானது என்பதை யாம் உணர்வோமாக!

இன்று எல்லோர்க்குமானது இந்த அவனி என்று சொல்லப்பட்டாலும் இந்தக்கூற்று முழுமையாக நடைமுறையில் சரியாகச் செயல்படுத்தப்படுகின்றதா? உழைத்தவன் உழைத்தபடியே..... புத்தியை வைத்துச் சுரண்டி வாழ்பவன் அற்ப வாழ்வில் மிதந்தபடியேதான் வாழ்ந்து வருகின்றான்.

கடுமையாக உடலை வருத்தி உழைக்கும் தொழிலாளி மோட்டார் வாகனத்தின் உரிமையாளனாக முடியுமா? அல்லது அதனை வாடகைக்கு அமர்த்திப் பயணம் செய்யத்தான் முடிகின்றதா? தொழிலாளி, என்றும் தொழிலாளியாகவே இருக்கும் அவல நிலை தொடரக் கூடாது. அவன் நிலை உயரவேண்டும். இது நடக்கின்றதா?

இன்று சாதாரண பேருந்தில் செல்வதற்குக் கூட சாமான்யன் செலவு செய்ய முடியாமலிருக்கின்றது. உழைப் பின் மூலமான வருமானம் தேய்ந்து போய்க் கொண்டிருக்கின்றது. வெறும் திரைப்படத்திலும் கதைகளிலும் உழைத்தல் பற்றிப் பிரமாதமாகப் பேசப்படுவதும் அங்கு கூலியாளாக நடிப்பவர் மட்டும் கோடி சீமானாக வாழ்வதும், அவர்களைக் காட்டிப் படாதிபதிகள் நல்ல வியாபாரிகளாக மாறுவதும் நிதர்சனம்.





உழைப்பவன் இன்று வெறும் காட்சிப்பொருளாகி விட்டான். ஒருவன் உழைப்பைச் சுரண்டுவது போல திருட்டுத் தொழில் வேறில்லை. இதில் ஜீரணிக்க முடியாத உண்மை என்னவெனில் மிகவும் பிரயத்தனப்பட்டு முன்னேறி முதலாளியானவனே தன்னோடு ஒத்த வேறு செல்வந்தருடன் மட்டும் இணைந்து கொள்வதும், அவன் தனது பழைய சங்கதிகளை மறப்பதுமாகும்.

வர்க்க பேத ஆட்சியில் இருந்துவிடுபட இன்னமும் பலரும் தயாராகவில்லை. ஒரே குடும்பத்தினுள்ளேயே பணம் படைத்தவர்கள், பணம் படைக்காதவர்களுக்கு என வேறுபாடுகளைக் காட்டாமல் விடுவதுமில்லை.

மனித முயற்சிகளை அவர்களது வினைத்திறன்களை உண்மையாகவே உலகம் மதித்தால் வர்க்கபேத குரோதங்கள் உருவாகுமா? செல்வத்தைத் திரட்ட முடியாதவர்கள் உலகில் தகுதி நீக்கம் செய்யப்பட்ட பிரகிருதிகளாகக் கணிக்கும் நிலை அற்றுப்போகும் நிலை எப்போது வரும் ஐயா!

எல்லாமே பேச்சளவில் தான் இருக்கின்றது உழைப்பவர்க்கே நிலம் சொந்தம், என்கின்ற சொல், ஒரு நையாண்டிக்குரிய வெறும் வார்த்தையாகிவிட்டது. உடல் உழைப்பு பரந்த மனப்பான்மை எதுவுமே அற்றவர்கள் நிலச்சுவாந்தாரர்களாக இருக்கலாம். இவர்கள் வசதியற்றவர்கள் மூலம் தங்களை மட்டும் வளர்த்துக்



RangaRakes
Tamilnavarasam.com

கொள்வதைத் தடுக்க எந்தச் சட்டத்தின் மூலமாவது வழி கண்டு பிடித்து அல்லல்படும் உழைப்பாளர்களுக்கு வலுச்சேர்க்க, வாழ்விக்க, வழி சமைக்க இயலாதா?

பணம் சம்பாதிப்பது தப்பு அல்ல. ஒருவன் பணம் சம்பாதிக்கும் வழிமுறைகளால் சமூகம் அதன் பொருட்டுப் பாதிப்படையச் செய்வதே மாபாதகமாகும். கஷ்டப்பட்டுப் பணத்தைச் சம்பாதிப்பது அவருக்கும் அவரைச் சார்ந்தவர்க்கும் மட்டுமல்ல அது ஏனையோர்க்கு ஒரு வழிகாட்டலுமாகும்.

- செய்கின்ற வேலைக்கு உரிய கூலி வழங்காமை
- ஒருவரிடமிருந்து முறை கேடாக நியாயமற்ற விதத்தில் ஒருவரின் அறிவை அவர் தம் வல்லமைகள் உழைப்பை எதிர்பார்த்தல்.
- சுயலாபத்திற்காக உழைக்கும் திறன் இருந்தும் மற்றவர்களிடமிருந்து வேலைகளை வேண்டி நிற்றல்.

இத்தகைய அடாத செயல்களைத் தம் வார்த்தை ஜாலங்களாலும் மறைமுக வழிகளாலும் சமயோசிதமாகவும், வஞ்சகமாகவும் செய்து ஒருவன் உழைப்பை கவர்வது தம் கூர்மையான யுத்தி என இவர்கள் எண்ணினாலும் இது கண்ணியமற்ற சுத்த கயமைத்தனமேயாம். உழைப்பு என்பதே மனித வாழ்வில் கிடைத்தற்கரிய பெரும் பேறாகும்.





எம்பொருட்டு நாம் வருந்தி உழைப்பதால். நான் உலகிற்குப் பாரம் இல்லாமல் சுயமுயற்சியுடன் வாழ்கின்றேன் என்பதை விடச் சந்தோஷமான இறுமாப்பு வேறு என்ன வேண்டும் ஐயா!

ஆயினும் இன்னமும் நம்மில் பலர் கஷ்டப்பட்டுச் சம்பாதித்ததைக்கூட விழலுக்கு இறைத்த நீர்போல செல விடுதல் எவ்வளவு கெடுதலானது எனச் சிந்திக்கின்றார்கள் இல்லை.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் ஒன்றாகச் சீவிக்கின்றார்கள். ஒரே சமையல் சாப்பாடு, தங்குமிடம் எல்லாமே ஒரே வீட்டில் தான். ஆயினும் அந்த வீட்டில் என்றுமே வறுமை தான். ஆனாலும் இவர்கள் அனைவருமே வேலைக்கும் போய்ச் சம்பாதிக்கின்றார்கள்.

இவர்கள் வீட்டிற்கு எதிர்வீட்டில் உள்ள குடும்பத்திலும் ஐந்து உறுப்பினர்கள் தான். கணவன், மனைவி மட்டும் வேலைக்குப் போகின்றார்கள். பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள் இவர்களின் எதிர்வீட்டுக்குடும்ப மொத்த வருமானத்திலும் பார்க்க இந்தக் குடும்பத்திற்கு வருமானம் குறைவுதான். ஆயினும் இவர்கள் சந்தோஷமாகவும், வசதியாகவும் வாழுகின்றார்கள் இது எப்படி?

உழைக்கும் பணத்தை எப்படிச் செலவு செய்வது என்கின்ற வித்தையறியாமலேயே பலர் வாழ்ந்து கொண்டி



RangaRakes

Tamilnavarasam.com

ருக்கின்றார்கள். எந்த இடத்தில் செலவு செய்ய வேண் எந்த இடத்தில் பணத்தை மிச்சம் பிடிக்க வேண் என்கின்ற மிகச் சாதாரண மதிநுட்பத்தைக் கூடப்புரி கொள்ளாமல் பலர் வாழ்ந்து அவஸ்தைப் படுதல் பரிதா திற்குரியதே. பணம் தேடுதலைவிட அதனைப் பே வதிலும் கவனம் செலுத்த வேண்டுமல்லவா? தன்னை நிலையாக உறுதிப்படுத்த ஒருவன் சம்பாதிக்கும் காலத் எதிர்காலம் பற்றியும் ஒரு தெளிவான அடையாளத் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தனது காலத்தி இன்ன இன்ன செய்வதற்கான படிமுறைகளை உண்டா யபடி தனது செயலை, ஆற்றல்களை வளப்படுத்தியபடிே முன்னேறிச்செல்ல வேண்டும்.

உழைத்தேன்,செலவழித்தேன், உறங்கி விழித்தே உழைத்தேன் என்று மட்டுமல்லாமல் பெற்ற பயன்கை நிலைத்து நிறுத்த என்ன செய்தேன், என்ன செய்கின்றே இனி வருங்காலங்களில் என்ன செய்வேன் என்று தன்னையே கேட்க வேண்டுமல்லவா?

ஒருவரது சீவியம், அவனை மட்டுமா சார்ந்துள்ள இல்லையே, ஒரு குடும்பம் சமூகம் எனப் பின்னி பிணைந்தே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த கடமைகள் பொறுப்புக்களில் இருந்து சுலபமாக கழன் கொள்ள இயலுமா?

உழைப்பவர்கள், உடைந்துபோகக்கூடாது தன்னை என் மே அவ கள் ப்பொலி டன் க்கிக்கொள்





வேண்டும். தான்பட்ட சிரமங்கள், ஏன் தற்போதும் ஏற்பட்டுவரும் சிரமங்களின் "வலி" அறிந்து தம்மை முன் மாதிரியான, தமது சம்பாத்தியத்தின் பெறுமானத்தை அறிந்தும் வாழ வேண்டியவர்களாகின்றனர்.

இன்னமும் பல குடும்பங்களில் ஒருவரைச் சோம் பேறிகளாக்கும் கைங்கரியங்களை அக்குடும்ப உறுப்பி னர்களே செய்து வருகின்றார்கள். இன்னும் ஒருவர் வந்து தன் குடும்பத்தை நிமிர்த்துவார் எனச்சிலர் நினைத்துக் கொள்கின்றார்கள். "அவருக்கென்ன அவர் வெளிநாட்டில் நல்ல தொழில் செய்கின்றார். எனக்கு உதவி செய்தால் என்ன" எனச்சிலர் எவ்வித சங்கோஜமும் இன்றிச் சொல்லிக் கொள்கின்றார்கள்.

ஒருவரைச் சார்ந்தே வாழ்வதும் ஒருவாழ்வா? தன் குடும்பத்தைக் காப்பாற்ற மற்றும் ஒருவரிடம் பலாத்கார மாகவே உதவி கேட்பதுபோல் நடந்து கொள்பவர்களை நீங்கள் பார்த்ததில்லையா? எந்த உதவிகளையுமே பிறருக் குச் செய்திடாது கௌரவக் குறைவான விதத்தில் மற்றவன் சம்பாத்தியத்தை நுகர எண்ணுவது தன்மானக் குறைவு என ஏன்தான் எண்ணாமல் இருக்கின்றார்கள் ?

வாழ்வதற்கு ஆசைப்படுகின்ற நாம் அதற்கான வழி சமைக்கும்போது ஏற்படும் அல்லல்கள் இடையூறுகளையும் ஏற்பதற்குச் சித்தமாக இருந்தால் மட்டுமே செய்கின்ற அலுவல்களுக்கும் முழுமையான பெறுமானமும் இருக் கும். உழைப்பு உழைத்தல் என்கின்றபோதே எமது வாழ்வில்



RangaRakes Tamilnavarasam.com

கடமை பொறுப்பு என்கின்ற அம்சங்களும் கூடவே இணைந்து கொள்கின்றன. கடமைகளைச் சரிவர நிறை வேற்றுதலுக்காக ஒருவர் கடினமாகக் கருமம் ஆற்ற வேண்டி யுள்ளது. எமது வாழ்வில் ஒளியூட்டவும் எம்மில் தங்கியுள்ள ஜீவன்களுக்கு வாழ்க்கைப் பாதையை அமைத்திடவும் பொறுப்புணர்வும் கடின உழைப்பும் அத்தியாவசியமானதா கின்றது.

எந்தவிதமான பொறுப்பு மற்றவர்களின் வாழ்க்கை திசை திரும்புவதற்கும் அவர்களே காரணமாகின்றனர். சும்மா இருப்பவன் சிலவேளை கேவலமான நடத்தை களுக்கும் ஆளான பிரஜையாகலாம். எத்தனையோ நபர்கள் ஆரம்ப இளமைக் காலங்களில் பொறுப்பற்றவர்களாக இருந்து பின்னர் அவர்களுக்கென குடும்பம் அமைந்து விட்டால் தமது மனைவி பிள்ளைக்ளுக்காக உழைப்பில் நாட்டம் உள்ள நல்ல மனிதனாகி விடுவது ஒன்றும் வியப்பு அல்ல. எனவே பொறுப்புணர்வு வந்தாலே உழைக்கும் ஆர்வம் தானாகவே வந்துவிடுகின்றது.

சோம்பல் எனும் கொடிய நோய்க்கு முழு விரோத மானதே நாம் முழுமனதுடன் ஆற்றுகின்ற கடமைகளு மாகும் சோம்பல்படுபவன் இருந்தும் செத்தவன் ஆகி றான். வாழ்நாட்களைத் தானாகவே குறைத்தவனும கின்றான். மேலும் ஆர்வமின்றிச் செய்யப்படும் கருமங் கூட திருப்திகரமாக அமைந்து விடப் போவதுமில்லை. மேலும் பொறுப்புக்களில் இருந்து நழுவுவதனால் தான் ஒ





த்திசாலி சாதுர்யமானவன் எனப் பலர் எண்ணினால் தன் எதிர் தாக்கம் பெரும் பாதகமாகவே இவர்களுக்கு துவிடலாம்.

தமக்குரிய வேலைகளைப் பிறர்க்குக் கட்டளை ட்டுச் செய்விக்க முனைவதால் ஏற்படுகின்ற விபரீத விளைவுகளை நாம் பொது நிறுவனங்களிலும், அரச தனியார் நிறுவனங்களிலும் அனுபவரீதியாகக் கண்டு கொள்ள முடியும். தமக்குரிய கருமங்களைத் தாமே ஆற்று தலில் உள்ள திருப்தியே அலாதியனதும் பூரணமானது மாகும்.

வாழ்க்கையில் அதிகம் முன்னேறியவர்கள் எப்படி உழைப்பால் உயர்ந்தார்கள் என்பதனைக் கட்டாயமாக இளைய தலைமுறையினர் அறிந்தேயாக வேண்டும். முன்மாதிரியாக ஒரு தலைவனை ஒரு படைப்பாளியை, அறிஞனைக் கண்டு அவர்கள் வழி செல்வதனாலும் பலர் தம்மைப் புதுப்பித்துப் பொலிவேற்றிக் கொள்வதுண்டு.

எதுவுமே முடியாததும் அல்ல கடமைகளை, பொறுப் புக்களை, சிரத்தையுடன் ஆர்வமுடன் செய்பவர்கள் என்றுமே சலிப்புடன் வாழ்ந்ததாக இல்லை. உழைக்காத வன் அடிமை நிலையில் உள்ளவன். பரம்பரைச்சொத்து இருக்கின்றது. எனக்கேன் உடல் உழைப்பு என்பவர்கள் தமக்குள்ளேயே தன் வலிமைக் குறைவினை ஒத்துக் கொள்ளாமல் விட்டாலும் கூட அவர்கள் ஒரு அங்கீகரிக்கப் பட்ட சோம்பேறிகளேயாவர்.



RangaRakes

Tamilnavarasam.com

உழைக்காதவன் தன்னுடைய சொத்துக்களைக் காப்பாற்றத் தெரியாதவனாகின்றான். வாழ்க்கையில் ஒரு ஒழுங்குமுறை அமைய வேண்டுமேயானால் உடலை வளைத்துக், களைத்துக் கருமங்களை செய்ய வேண்டிய வனாகின்றான். பொழுதுகளை எளிதாக சந்தோஷகரமான தாக்க நாம் ஆற்றும் பணிகள் தானே துணை செய்கின்றன வேலைவெட்டி இல்லாதவன் பொழுதுகளைக்கரைக்க ஏதேதோ கெட்ட வழிகளில் புலனைச் செலுத்துகின்றான்.

வேலை செய்யாது விடின் கால ஓட்டத்தில் மனித உறுப்பின் கலங்கள் அழிந்துகொண்டே போகும் என்கின்றார்கள். எமது ஆரோக்கியத்தை நாம் வலுவேற்றினால் உடற் கலங்கள் உறுதிபெறும் நாளாந்தம் தொழில் செய்வோர் இந்தப் பிரச்சனைகள் எழுவதேயில்லை.

எமது மனம் சதா களிப்புடன் திகழ வேண்டும் சோம்பல் தொட்டால் எல்லாமே சூன்யமாகத் தோன் ஆரம்பிக்கும். இந்த நிலையை எவர்தான் விரும்புவார்கள் எங்களுக்கான சந்தோஷ சாம்ராஜ்யத்தை நாங்களே தான் உருவாக்க வேண்டும் "உழைத்தல்" என்பதைத்தவிர இ சுகானுவம் வேறு என்ன இருக்கப்போகின்றது அன்பர்களே

தினக்குர
ஞாயிறு மஞ்ச
02.12.2







# வசீகரம்

சகல ஜீவராசிகளையும் இரக்கத்துடனும், அன்புடனும் நோக்கு பவர்களுக்கு "வசீகரம்" தானே வந்துவிடுகின்றது. இயற்கையை ரசிக்கத் தெரிய வேண்டும். நல்ல ரசனை உணர்வு களிப்பினை உண்டாக்கி ஒரு மலர்ச்சியை ஏற்படுத்திவிடும், "எல்லோருமே எமக்குரியவர்"என்கின்ற உன்னத நோக்குடனும் பரந்த உள்ளத்துடனும் எமது பார்வையைச் செலுத்தினால் எம்மை நோக்கி இந்த அகிலமே வந்து நிற்கும். இதனால் ஏற்படும் "மகிழ்ச்சி" நிலையே எமது ஆன்ம சக்தியுமாகும். இனிமேல் தான் சந்தோஷம் வரும் என்று நோக்காது என்றும் நாம் சந்தோஷமாக இருப்பவர்கள் என எண்ணினாலே வசீகரிக்கப்பட்ட மனிதராகிவிடுவோம்.

நல்லமனசுடனும் மாறாஅன்புடனும்மக்களை நேசிப்பவர்கள் "வசீகரம்" மிக்கவர்களாகப் பிரகாசிக்கின் றனர்.

ஒருவரைப் பார்த்த மாத்திரத்தே நாம் அவர்பால் ஈர்க்கப்பட்டால் அவரிடமிருந்து ஏதோ ஒரு சக்தி இருப்பதாக



RangaRakes Tamilnavarasam.com

உணரலாம். ஒரு ஆன்மீகவாதியாகவோ, அன்றி அரசியல், சமூக நல விரும்பிகளாயினும் சரி அவர்களிடம் மக்கள் எதற்காக ஈர்க்கப்படல் வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? சிலருடன் பேசும்போது அவர்களை விட்டு விலக மனம் ஒப்புதல் அளிப்பதில்லை அது ஏன்?

பொதுவாக நல்ல மனிதர்கள் எல்லோர் உள்ளங்களையுமே கொள்ளை கொண்டு விடுகின்றார்கள். பார்க்கும் உயிர்களிடத்தே அன்பினைக் காட்டினால் இயல்பாகவே அவர்களை அனைவரும் விருப்பத்திற்குரிய ஒரு நபராக ஏற்றுக் கொண்டு விடுவார்கள். ஆனால் பொய்யான நடிப்பை நம்பி ஒருவர் பின்னால் திரிபவர்கள் விடயம் வருத்தத்துக்குரியதே. கால ஓட்டம் இவர்கள் பற்றிய நிதர்சனங்களைக் காட்டிவிடும். ஆயினும் தப்பான மனிதர்களை நம்பி ஈர்க்கப்பட்டவர்களின் விரும்பத்தகாத அனுபவங்கள் அழிக்கப்படாத வடுக்களாகி விடுகின்றனவே. என்செய்ய? கல்வி ஞானம் மட்டும் இருந்தால் போதுமா?

- மேலான ஒழுக்கம்
- எவரையும் மதித்து நடக்கும் இயல்பு
- தன்முனைப்பு இன்மை
- சுயநலமற்ற போக்கு

இவை போன்ற குணாம்சங்கள் கொண்டவர்களால் மட்டுமே நல்ல மனிதன் என்கின்ற பெயரையும் தமதாக்கிக் கொள்ள முடியும்.





வசீகரம் என்பதில் "அழகு" மட்டுமே பிரதானம் என்று சொல்ல முடியாது. அழகானவர் என்று சொல்லிக் கொள்ள முடியாதவர்களைச் சுற்றியும் பலர் அன்புடன் பழகுவதை நீங்கள் பார்த்தது இல்லையா? மேலும் அழகானவர்கள் எனக் கருதமுடியாதவர்கள் தலைவர்களாக வந்துமிருக்கின்றார்கள்.

பண்பானவர்களைக் கண்டால் அழகுபற்றிக் கிஞ்சித்தும் எவரும் நோக்குவதில்லை. அழகானவர்கள் எனக் கருதும் எல்லோரும் மனம் கவரும் நல் நடத்தையுடையவர்கள் என்று சொல்லமுடியுமா?

திருமணமான ஆரம்ப காலத்தில் தனது மனைவி அல்லது கணவன் தாங்கள் கற்பனை செய்த அற்புத அழகியாக அல்லது அழகனாக இல்லையே என ஆதங்கப்பட்டவர்கள் கால ஓட்டத்தில் அவர்தம் நடத்தை நெறியினால் இணைபிரியாத தம்பதியர்களாய் ஒரு எடுத்துக்காட்டான குடும்ப வாழ்வை காட்டி வாழ்ந்த கதைகள் ஏராளம்.

எவ்வளவு தான் படித்துப் பட்டம் பெற்றுப் பொருள் ஈட்டி சமூகத்தில் உயர் அந்தஸ்தினைப் பெற்றுவிட்ட போதிலும் கூட நெஞ்சில் கனிவு இன்றேல் அவர்கள் மரத்துப் போன மனிதர்கள் தானே?

இயற்கையின் அரும் கொடைகளான சகல ஜீவராசிகளையும் இரக்கத்துடன் கனிவுடன் நோக்காதவர்களிடம்



RangaRakes
Tamilnavarasam.com

வசீகரத்தை எப்படி எதிர்பார்க்கலாம்? வானில் சந்தோஷமாக பறந்து திரியும் பட்சிகள், துள்ளியோடும் அணில்கள், மான்கள், முயல்கள், வர்ணம் காட்டி சிறகடிக்கும் வண்ணத்துப் பூச்சிகள், துறுதுறுவென ஓடித்திரியும் சிறார்கள், குழந்தைகள், குறும்புடன் சிரிக்கும் அழகு, இந்த அழகு மிகு உயிர்ச்சிற்பங்கள் எல்லாமே எங்களை மெய்மறந்து, ரசனையூட்டி, வசீகரிக்கின்ற நிகழ்வுகளை எப்படி எம்மால் வார்த்தைகளால் எழுத்துக்களால் வர்ணிக்க இயலும்? சொல்லுங்கள் பார்ப்போம்!

இரசிக்கத் தெரியாதவன் நல்லவற்றை விரும்பத் தெரியாதவன், "வசீகரம்" கொண்டவனாக இருக்க முடியுமா? ரசனை உணர்வு இல்லாதவன் கலைஞனாக முடியாது. கலைஞர்களை வசீகரமானவர்கள் என்று சொல்வதானது, அவர்களது ரசனை உணர்வும், மக்கள் பால் அவர்களைக் களிப்பூட்டுவதற்காக அவர்கள் மேற்கொள்ளும் நன் முயற்சியுமாகும்.

கள்ளமில்லா, வெள்ளையுள்ளம் கொண்டவர்கள் எத்தகைய காரியங்களையும் அப்பாவித்தனமாகச் செய்யும் போது அதனை ஏனையவர்கள் ரசிக்கின்றார்களே யொழிய அவர்களை வெறுப்பதில்லை. வயது முதிர்ந்தவர்களுடைய அனுபவரீதியான பேச்சு, செயல்கள்கூட எம்மை வசீகரிக்க வைத்து விடுகின்றதே!

எங்களைவிட ஆற்றல் மிகுந்தவர்களை நாம் இயல்





பாகவே கண்டு வியந்துவிடுகின்றோம். எமக்குப் பிடித்தவர்கள் உன்னத நிலையில் இருந்தால் அவர்களை எடுத்துக் காட்டான நபர்களாக இதயத்தில் குடியிருத்தி விடுகின்றோம். ஒரு நல்ல கலைஞனை, விஞ்ஞானியை, அரசியல் தலைவர்களைப் பற்றி நாம் தெரிந்ததுமே நாங்களும் அப்படி வந்தால் என்ன என்று கருதுவது இயல்பேயாகும்.

ஆயினும் இன்றைய இளைய தலைமுறையினர் திரைப்பட நடிகர்கள், பாடகர்கள், விளையாட்டு வீரர்களை மட்டுமே தமது விருப்பத்திற்குரிய உன்னத அந்தஸ்தில் உள்ளவர்களாகக் கருதிவிடுகின்றார்கள். அவர்களது உருவப்படங்களை வீடுகளில் பொருத்துவதும் அவர்கள் போலவே நடையுடை பாவனைகளை மாற்றுவதும் சர்வசாதாரணமான விஷயமாகிவிட்டது.

ஆனால் இந்த இளைஞர்களில் பெரும்பாலானோர் ஒரு விஞ்ஞானியை, ஒரு பேராசிரியரை, மிகப்பெரும் அரசியல் தலைவர்களை, எமக்கு வாழ்ந்து காட்டிய ஆன்மீக வாதிகளை, நல்ல முற்போக்கான சிந்தனை வாதிகளைத் தமது அதி விருப்பத்துக்குரிய மாந்தராகக் கருதாமல் விடுவதும் அவர்கள் வாழ்ந்த முறைகளைத் தெரியாமல் இருப்பதும் பெரிய வேதனையன்றோ! கொஞ்சம் இதுபற்றி இந்த இளையோர் கருதிச் செயல் பட்டால் என்ன?

எங்கள் எதிர்காலம் செவ்வனே அமைய நல்லனவற்றை மட்டும் நாடுவது என்பது எங்களை நாம் முழுமையானவர்களாக மாற்றியமைப்பதற்கேயாகும்.



RangaRakes

Tamilnavarasam.com

எந்த விதக் கொள்கையுமின்றி வெறும் நிழல் தோற்றங்களைக் கண்டு அதனால் எதிர்கால நலனுக்கு எந்தவித பயனுமின்றி கலைந்த அழகுடன் தம்மை அகத்திலும், புறத்தோற்றத்திலும் மாற்றியமைப்பதில் செழிப்பைக் கண்டுவிடப் போகின்றார்கள்? இத்தகையவர்களிடமிருந்து அறிவு விடைபெறுவதுடன் எதிர்கால நலனும் பிறர் விரும்பி நயக்கும் வசீகரமும் பேசாமல் போய்விடும்.

இன்று பலர் சொல்லும் வாக்கியம் இது தான். மிக விரக்தியுடன் சொல்வார்கள் "நான் வசதியில்லாதவன். எனவே என்னை ஒருவரும் நோக்குவதில்லை. பாரா முகமாகப் போகின்றார்கள்" என்பது தான். உண்மையில் வசதிக்குறைவு என்பதால் மற்றவர்கள் எங்களை நோக்குகின்றார்கள் இல்லையெனக் கருதுவது அவர்கள் தாழ்வுச் சிக்கலால் சொல்லப்பட்ட கருத்தாகும்.

பிறருடன் கரிசனையுடன் பழகுபவர்களை எவருமே நிராகரிப்பதுமில்லை. தாங்களாகவே கற்பனை செய்து சமூகத்தின்மீது பழியை அவதூற்றினை விதைப்பது தகாது. யாராவது உங்களைக் கண்டு முகத்தைத் திருப்பினால் அவர்களை நீங்களும் அவ்வண்ணமே கண்டு கொள்ளாமல் இருந்துவிட வேண்டாம். தக்க சமயத்தில் அவர்களுக்கு ஓடோடிச் சென்று உங்களால் இயன்ற உச்சபட்ச உதவிகளை நல்குவீராக! இதனால் உங்களைப்பற்றிய தெரியாத்தனமாகக் கொண்டிருந்தத்தவறான கணிப்பீடுகள் துண்டிக்கப்பட்டுவிடும். தங்களை எல்லோருமே விரும்ப வேண்டுமென எவர் தான் எதிர்பார்க்காமல் இருக்கின்றார்கள்?





சில விசித்திரமான நபர்கள் இருக்கின்றார்கள். தங்களை மட்டுமே தான் விரும்பும் நபர்கள் விருப்பம் கொள்ளல் வேண்டும். வேறுயாராவது தமக்கு விருப்பப்பட்டவர்களுடன் பேசிப்பழகினால் ஆத்திரப்பட்டு விடுகின்றார்கள். அதிகூடிய அன்பினால் விளைந்த இந்த விபரீத எண்ணம் தவறானது எனப் புரியவைப்பது கஷ்டமானது தான். பொதுவாக காதலர் நண்பர்கள் மத்தியில் இந்த உணர்வுகள் மேலோங்கி இருப்பதைக் காணலாம். பக்குவமாகப் பேசி இத்தகையவர்கள் இயல்பை மாற்றியமைக்க வேண்டும்.

மேலும் நாட்டின் பெரிய தலைவர்களை மக்களில் பலரும் அவர்களைத் தமக்கேயுரிய தலைவன் என்று சொந்தம் கொண்டாடுவதானது மக்கள் மீது இத்தகையவர்கள் கொண்டுள்ள ஈடுபாடு, உண்மை, நேர்மை, அன்பினைப் புலப்படுத்துவதுமாகும். இந்த உரிமை மிகு எண்ணமே அவர்களது வசீகர சக்தி என்பது சொல்லாமலே புரிந்து கொள்ளும் சங்கதியன்றோ!

"எல்லோருமே வல்லமை மிகு அன்புக்குள் உள்ளானவர்கள்"என்கின்ற உன்னத நோக்கை, பண்பாட்டை எம்முள் உருவாக்கிக்கொள்ள வேண்டுமல்லவா?

சிலஅப்பாவிச் சனங்கள் வசியம் , மந்திரம் என்று சொல்லித் தமக்கு வேண்டிய கருமங்களையாற்ற மாந்திரீகவாதிகளை நாடுவதுமுண்டு. ஒருவரை விரும்பவைக்க எங்கள் இதயத்தை விட வேறு என்ன சாதனம் வேண்டும்



RangaRakes

Tamilnavarasam.com

ஐயா? அன்பினைக் காட்ட என்ன செலவு வேண்டிக் கிடக்கின்றது?

விலை மிகுந்த ஆடை அணி கலன்கள், இரசாயனப் பூச்சுக்களால் மட்டும் வசீகரத்தினை உண்டு பண்ண முடியுமா? இயற்கைப் படைப்புக்களான பட்சிகளும், விலங்குகளும், மரம் செடி கொடிகளும் செலவு செய்து உடை டுத்தா எங்களை ஈர்க்கின்றன? அழகான சிங்கத்தை கூண்டிலிட்டு ஆடைகொண்டு மூடி ரசிக்கலாமா? பஞ்சவர்ணக் கிளிக்குப் பட்டாடை போர்த்தித்தான் அதனைப்பார்க்க வேண்டுமா? பச்சைப் மரங்களுக்குப் பச்சைக் கம்பளம் போர்த்தி அழகு பார்க்க முடியுமா? இவை எல்லாமே இயற்கையான அழகுடன் இயற்கைச் சூழலில் வளமாகச் சீவிக்கின்றன.

மனிதன், தன்மானத்தைக் காப்பாற்ற எளிய உடைகளே போதுமானது மேலதிகமான ஆடம்பரச் செலவுகள் நகை, ஆபாரணங்களை சதா விரும்புவது அதன் பொருட்டு மனதை அல்லாட விடுவதும் எளிமை மிகு நல்வாழ்விற்கு உகந்ததன்று எனத் தெரிந்தும் நாம் இந்த விருப்புக்களை உதறாமல் விடுவது ஏன் என்றும் புரியவில்லை.

உலகம் உங்களிடமிருந்து எதை எதை எதிர்பார்க்கின்றதோ அவைகளை நீங்கள் உங்கள் ஆற்றல், கல்வி, விடா முயற்சி வாயிலாக உற்பத்தி செய்து வழங்கி விடுங்கள். இத்தகைய செயல்களினால் அனைத்து மனிதர்களும்





உங்கள் பால் ஈர்க்கப்படும் உன்னத மனிதனாக உயிர்ப் புள்ள நபராக நீங்கள் உருவாகி விடுவீர்கள்.

வெறும் சடப்பொருட்களைக் கண்டு மோகிக்கும் நபராக சனங்கள் இருக்கின்றார்கள் என்று பெரியோர்கள் சொல்லிக் கவலைப்படுவதுண்டு. மனிதர்களைச் சம்பாதிப்பதை விடுத்து அசையாத சொத்துக்களையும், நவீன கவர்ச்சிமிகு பொருட்களை வாங்குவதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றனர் பொருட்களை மிதமாகச் சேகரிப்பதும் காலவிரயமானதே. வசதிகள், வாய்ப்புக்கள் கூடச் சிலவேளை எங்களை பிறரிடமிருந்து விலக்கி வைத்து விடுகின்றது. "எந்நிலைவரினும் தன்நிலை மாறாத வரம் தா" என நாம் இறைவனை வேண்டுதல் செய்வோமாக!

ஒருவரது அன்பான புன்முறுவலும் மலர்ந்த நோக்குகையும், எங்களை வசீகரிப்பது போல் நாமும் எங்கள் வதனத்தை சதா புது முழு நிலவுபோல் நிரந்தரமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். முக வசீகரம் என்பது உள்ளத்தினுள் இருந்து புஷ்பிக்கப்படுவதேயாம். அகத்தின் அழகு, எங்கள் புன்னகையூடு புலப்படுத்துவதாக!

மகிழ்ச்சியாக இருப்பவனிடம் கவர்ச்சியும், வசீகரமும் தானாக வந்து விடுகின்றது. துன்பம் மேலோங்கியுள்ளவனிடம் எப்படி நாம் இன்முகத்தை இயல்பான சந்தோஷங்களை எதிர்பார்த்திடல் முடியும்? எனவே மகிழ்ச்சியானவர்களாக இருக்க வேண்டும். உள்ளத்தில் பாரங்களைச்சுமந்து



RangaRakes

Tamilnavarasam.com

கொண்டிருப்பவர்களிடம், "நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க முயன்று பாருங்கள்" என்று சொல்வது சில வேளை அவர்களை ஆத்திரமடையச் செய்வதும் போலாகும். கனிவோடு பேசி அவர்கள் துயர்களைய முனைபவர்கள் ஆகுங்கள்!

நல்லோர் உறவு, நல்ல நண்பர்கள்,இனபந்துக்கள் ஆதரவுகள் இருந்திட்டால் எமது துயர்களைக் களைவது இலகுவாக இருக்கும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாகத் துணிவு, ஆற்றல், அன்புணர்வு இல்லாதுவிடில் எங்களது பிரச்சினைகளை எங்ஙனம் தகர்க்க முடியும்? எங்களை வலுப்படுத்தாது விடில் சுற்றி நிற்பவர்களது உதவிகளினால் பூரணமான பெறுபேறு கிடைத்திடுமா? நாங்கள் சந்தோஷத்திற்குத் தயாரான நபர்களாக அன்பைப் புரிந்தவராக அதனை முழுமையாக ஏற்பவராக இருக்க வேண்டுமல்லவா?

எதனையும் எதிர்மறையாக நோக்காமல் குரோதம், காழ்ப்பு அற்ற நினைப்பு அற்றவர்களே மற்றவர்களைத் தன் அருகே அழைக்கின்ற பக்குவத்தைப் பெற்றவராகின்றனர்.

மகிழ்ச்சி என்பதை நாளைக்கு என்று எண்ணாமல் இன்றைக்கே இதனை உருவாக்குவோமாக! தெளிந்த மனோ நிலையும் சீரான வாழ்வின் வளர்ச்சியும், பயனை மட்டும் பிறரிடம் இருந்து பறிக்க எண்ணாத பரோபகார சிந்தனையும் "அவர் என்னவர் எல்லோரும் நம்மவர்" என்கின்ற பரந்த அன்பினைக் காட்டும்திறன்வாய்ந்து





நின்றால் நாங்கள் எல்லோருமே வசீகரம் மிகுந்த ஆன்மாவாகிவிடுவோம்.

போலியாகத் தங்களை மறைத்து, மனதினுள் களிம்பை அழுத்தி, வெளியே சிரிப்பதனாலும் வசீகரம் புறப்பட்டு வந்து விடுமா?

மனித நடத்தைகளே வசீகரத்தைக் காட்டி நிற்கின்றன. அனுபவ ஞானமும், அறிவும் நல் இதயமும் கொண்டோரின் முகத்தில் "தேஜஸ்" மிளிர்வதை நீங்கள் கண்டதில்லையா?

இதுவே தூய்மையின்
அடையாளமுமாகும்

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
03.06.2008



RangaRakes
Tamilnavarasam.com



# கருத்துக்கள்

எனது கருத்து இது என நாம் கண்டபடி பேச முடியாது. உங்கள் நல்ல கருத்துக்கள் தானாகவே மக்களிடம் போய்ச் சேரும். அநாகரிகமாகத் கருத்துக்களைத் திணிப்பது மனித உரிமை மீறல்கள் தான். எமது மனம் விரும்பாமல்' எப்படி எதனையும் ஏற்பது? அந்தஸ்து உள்ளவர்கள் எதைச் சொன்னாலும் கேட்க வேண்டும் என்பதுமில்லை. எங்கள் சிந்தனையில் தெளிவு வேண்டும். கருத்துச் சுதந்திரம் எவர்க்கும் உரியது. அதனைத் தகுந்த முறையில் பிரயோகிக்க வேண்டும். அனுபவஞானம் உள்ளவர்களிடம் நல்ல கருத்துக்கள் உதயமாகின்றன. எவர் நாவில் இருந்து நல்ல விடயங்கள் சொல்லப்படுகின்றதோ அதனை ஆணவமனைப்பின்றிக் கேட்பது உத்தமம்.

கருத்துக்களை முரண்பாடுகளாக்கிக் கரைச்சல்பட்டுக் கொள்வதே உலக வழக்கமாகிவிட்டது. ஒருவரது எல்லாக் கருத்துக்களையும் கட்டாயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை.





அதற்காக இது எனதுகருத்து எனச்சமூக நாகரீகமின்றிக் கண்டபடி பேசுவதும், வன்முறையாக வார்த்தை யாடுவதும் தனிமனித சுதந்திரம் என்று சொல்லித்திரிய முடியாது. வாய் இருக்கின்றது என்ற காரணத்தினால் வாயாடித் தம்மைத் தாமே நாகரீகமற்ற மனிதனாக்கப் பிரயத்தனப்படுவது கண்டனத்திற்கும், கேலிக்குமுரிய சமாசாரமாகும். தேவையற்ற கருத்துக்களால் ஒருவர் மனதை நொருங்கச் செய்தல் சரியானது என எவர்தான் சொல்லுவார்கள்?

மற்றப்படி நல்ல கருத்துக்களை நாம் வரவேற்போம் செவிமடுப்போம். எமக்குப் பிடிக்காதவர் நல்லதைச் சொன்னால் வீண் விதண்டாவாதம் செய்யாமல் ஏற்றுக் கொள்வதுடன் அதனைப் போற்றுதலும் செய்வோமாக!

எங்கள் கருத்துக்கள் என்றாலும் சரி பிறரது கருத்துக்கள் என்றாலும் சரி அது அவரவர் எண்ணங்களூடாக உதிப்பது. இவற்றை நாம் எப்படி அழிக்க முடியும்? ஆயினும் நல்ல சிந்தனைகளை நாம் சிந்தித்துச் சொல்லும் போது அது மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

எங்கள் நல்ல கருத்துக்களைப் பிறர் செவிமடுக்கவில்லையே என ஏக்கப்படுவோர் ஏராளமாக இருக்கின்றனர். சமூகத்தில் ஏதாவது அந்தஸ்தினை ஒருவர் பெற்றுவிட்டால் போதும். அவர் எதனை உளறினாலும் உலகம் கேட்கின்றது. பாராட்டவும் செய்கின்றது. இந்த



RangaRakes

Tamilnavarasam.com

மாதிரியான நிலைபற்றிப் பெரியோர்கள் வருத்தப்படுவதுமுண்டு. முட்டாள்கள் பேசுவதைக் கேட்டவர்கள் அவர்கள் மூலம் ஏதாவது ஆதாயம் கிடைப்பதற்காக "ஆமாம்சாமி" போடுவார்கள். இவையெல்லாம் ஒரு பொய் நடிப்புத்தான்.

யாரோ ஒரு வசன கர்த்தா கதை வசனம் எழுதவும், ஒரு அற்புதக் கவிஞர் தனது அனுபவவாயிலாக பாடல் எழுதிடவும், திறமையான இசை அமைப்பாளரா இசை அமைக்கப்பட்ட அந்தப் பாடலை ஒரு நல்ல பின்னணிப் பாடகர் பாடிடவும் இவைகளை ஒரு நடிகர் பேசுவது, பாடுவது போல் வாயசைப்பதும், அவை அந்த நடிகரின் கருத்தாக ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பாராட்டப்பெறுவது என்ன நியாயம் ஐயா?

ஆனால் இன்று ஒருவரது வித்துவத்தைத் திருடும் பணிவலு நாகரிகமாக உலகில் நுளைந்துவிட்டது.இதில் வேதனையான அம்சம் என்ன வெனில் நல்ல ஆலோசனை கருத்துக்களைச் சொல்பவர்களைப் பிடிக்காத தலைவர்கள் அவர்களை நிராகரித்தும் விடுகின்றார்கள். ஒரு தோன்றாப் பொருளா கவே பல சிந்தனையாளர்கள் மறைக்கப்பட்டே விடுவதும் மறுக்கப்பட்ட பிரகிருதிகளாக உரு அழிந்து போவதும் வேதனையோ வேதனை!.

நல்ல கருத்துக்களை அள்ளி வீசுபவர்கள் சொல்லும் சொல்லில் ஒரு வீதத்தையாவது கடைப்பிடிக்க முன்வருகின் றார்களா? ஆனால் எதுவுமே பேசாது செயல்படும் வினைத்திறன் மிக்கவர்களை நாம் கண்டு கொண்டால்





அவர் வழி செல்வதும் அவரைப் போற்றுதலும் எம் தலையாய சமூகப்பொறுப்பு என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தகுந்த சந்தர்ப்பத்தில் இடத்தின் நிலை உணர்ந்து கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். எடுத்த எடுப்பிலேயே முன்னே நிற்கும் மூர்க்ககுணம் கொண்டோரிடம் "நான் உபதேசம் செய்கின்றேன்" என்று சொல்லப்போய் அவமானப்படக் கூடாது. எங்கள் பேச்சை மற்றவர்கள் ஏற்றுக் கொள் ளத்தக்க விதமாகவும், அவர்களின் மனதைத் தொட்டுக் கொள்ளும் சாமர்த்தியத்தை ஏற்படுத்திக்கொள்ள நாம் கற்காதவரை எங்கள் முயற்சி பயனற்றதாகவே அமையும்.

மேலும் உள்ளத்தில் வஞ்சக எண்ணத்துடன் பேசும் உபதேசங்களால் அதனை உதிர்ப்பவர்கள் ஈற்றில் பெரும் சிரமங்களையே எதிர்நோக்குவர் கபடமாகப் பேசுவதால், தமது கருத்துக்கள் நியாயமானவை என்று எவ்வளவு காலத்திற்கு பிறரை நம்பச் செய்யமுடியும் சொல்லுங்கள். அர்த்தமேயில்லாமல்! சப்தமிட்டுப் பேசுவதால் அவர்கள் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

அனுபவ ஞானமற்றவர்களுக்குச் சரியான பாதை காட்ட வேண்டியவர்கள் யதார்த்தத்திற்கு ஒவ்வாத புத்தி மதிகளைக்கூறி இத்தகையவர்களை மயக்கமுறச் செய்வதுமுண்டு. எனவே நம்பிக்கையற்ற கண்டவர்களிடமும் வாயைக் கொடுத்து பொய்மொழி புனை கதைகளைக் கேட்க வேண்டியதுமில்லை.



RangaRakes

Tamilnavarasam.com

கருத்துச் சுதந்திரம் என்று இன்று எல்லோரும் அதுபற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். எங்கள் பேச்சு எழுத்து என்பது எமக்குரியது. ஆயினும் பிறர் சுதந்திரம் நிம்மதிகளுடன் எமது தனிப்பட்ட சொல்லும் செயலும் உள்நுழைந்து அவர்களைச் சங்கடப்படுத்திவிடக்கூடாது.

ஒரு தனிமனிதனின் சுதந்திர உணர்வுகள் செயல்கள் ஒருவனை மட்டும் இன்று பாதிப்பதாகவில்லை. ஒட்டு மொத்த சமூகத்தினைக் கூடப் பாதிப்படைவதாகவே கருதப்படுகின்றது. நல்ல விதைகளை விட நச்சுவிதைகளுக்கே முளைக்கும் வீச்சு அதிகமாகிவிட்டது.

பாதிப்படைந்தவனைச் சீண்டிப்பார்ப்பதே சிலரது வழக்கமாகிவிட்டது. தர்மக் கருத்துக்களைவிடுத்து ஆவேசக் கருத்துக்கள் விலைபோகின்றன. இவை யெல்லாம் மனதை அரிக்கும் விஷயம் என்பதைக் காலம் அவர்களுக்குக் கற்பித்துவிடும்.

நல்ல விஷயங்கள் மழுங்கடிக்கப் படுவதாலேயே பொய்மைகள் புதிது புதிதாக அழகு தரும் தோற்றங்களைத் தாமே தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. பலமுள்ளவனுக்கே பேசும் சுதந்திரம் இருக்கின் றமை நல்லதற்கு அல்ல!

பத்துப்பேர் இருக்கின்ற இடத்தில் தங்களது வித்துவத்தைக் காட்டச் சிலபேர் எந்தவித தொடர்புமற்ற சம்பந்தமேயில்லாத பேச்சுக்களை அள்ளிவீசுவார்கள். இதனால்





அவரது தகுதியை அக்கணமே எல்லோரும் தெரிந்து கொண்டு விடுவார்கள். சபையறிந்து பேச வேண்டும் என்பார்கள். ஒரு கூட்டத்தில் பேச எழுந்தால் அங்குள்ள மக்கள் எப்படிப்பட்ட விடயத்தினை உள் வாங்கும் இயல்பு உள்ளவர்கள் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்.

குழந்தைகள் கூட்டத்தில் சமய, அரசியல், விஞ்ஞான தத்துவங்களைப் பற்றிய கருத்துக்களை அள்ளிவீசக்கூடாது. பெண்கள் கூட்டத்தில் எழுந்து மகளிரைக் கேலி செய்யும் கருத்துக்களைச் சொல்லித் தப்பித்துக் கொள்ளமுடியுமா?

விஞ்ஞானிகள் கருத்தரங்கில் கல்வியறிவில்லாத திரைப்பட நடிகரைப் பேசச் சொன்னால் என்ன பேசித்தீர்ப் பார்? எனவே பேச வேண்டிய இடத்தில் பேசுதற்குரிய நபர்களே தங்கள் கருத்துக்களைச் செவ்வையாகச் சொல்ல முடியும். சந்தர்ப்பம் அறியாமல் எங்கள் கருத்துக்களைச் சொல்ல முடியுமா?

தேர்தல் முடிவு அறிந்து தோற்றுப்போய்க் கலங்கிய நிலையில் உள்ள வேட்பாளர் முன் நின்று "உங்கள் தவறுகள் தான் உங்கள் தோல்விக்குக் காரணம்" என்று அந்த நேரத்தில் சொல்லக் கூடாது. கருத்துக்கள் புறப்படும் போது அதை வெளிக்கொணரமுன் அந்த நேரத்துச் சூழல் சூழ்நிலைகளைக் கவனிக்க வேண்டும். எங்களுக்கு ஒவ்வாத பழக்கமற்ற புதிய சூழலில் "துணிச்சலாகச் சொல்கின்றேன் எனச்சொல்லி அவமானப்படுதல் கூடாது.



RangaRakes
Tamilnavarasam.com

ஒன்றையுமே தீர ஆராயாமல் தெரிந்துகொள்ள விழையாமல் எங்கள் அபிப்பிராயத்தைக் கூறினால் வரும் விளைவு சொல்லும் தரமன்று. மேலும் பொது இடங்களில் கண்டபடி கருத்துக்களை வெளியிடல் பாதுகாப்பான விஷயமும் அல்ல. முதலின் மனிதர் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் கலையைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

மிகவும் பலம் வாய்ந்த அங்கத்தினர் எங்கள் பக்கம் இருந்தாலும் கூடச் சிலவேளை மிகச் சாதாரணமானவர்களால் மிகப்பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். எனக்கு என்ன? எவரும் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னவர்களைச் சந்தர்ப்பம் வரும்போது "வலு" அற்ற சாமான்யமானவனே காலைவாரி விடும் நிலை வந்தால் அது புதுமையல்ல.

எம்மை மற்றவர் ஏற்றுக்கொள்ளும் நிலையை நாம் உருவாக்க வேண்டும். ஆணவமுனைப்போடு எல்லாமே தெரியும் என்று அலட்சியமாக நோக்குபவர்களை எவர்தான் விரும்பி ஏற்றுக்கொள்ளப் போகின்றார்கள்?

நல்ல திறமைசாலிகள், அறிவாளிகளின் கருத்துக்கள் கூட உலகின் முன் துலங்காமல் போவதற்கு அவர்களின் மக்கள் மீதான அணுகுமுறைகளும் ஒரு காரணமாகும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.





உங்கள் கருத்துக்கள் சிறப்பானதாக இருக்குமிடத்து அதை மக்களிடம் சென்றடைவதற்கான முறைகளையும் தெரிந்து கொள்ளுங்கள்.

- அமைதியாக
- தெளிவாக
- நேயப்பாட்டுடன்
- எவ்வித திணிக்கும் முயற்சியின்றி

உங்கள் கருத்துக்களை வெளிக்கொண்டு வாருங்கள். உங்களை பிறர் ஏற்கும் பக்குவம் பெறுதற்குப் பொறுமை மிகவும் அவசியமானது. எமக்குத் தெரிந்த சீரிய நுட்பமான விஷயங்களை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துதல் ஒரு சமூக நல கைங்கரியமுமாகும்.

நல்ல விஷயங்கள் எங்கும் போய்ச் சேரவேண்டும். "நான் சொல்லும் நல்ல விஷயங்களைப் புதிய கருத்துக்களை எவரும் கேட்பதில்லை. எனவே நான் இனிமேல் எந்தவித உதவிகளையும் எவர்க்கும் செய்யப்போவதில்லை" எனச் சிலர் பிரதிக்ஞை செய்து கொள்கின்றார்கள்.

சிலவேளை அறியாமை காரணமாக நல்லவர்களை நாடாமல் மக்கள் இருந்தால் அதனை எண்ணி மனம் சோர்வடைந்து போகக்கூடாது சமூகத்தின்பால் எமக்கான அக்கறையில் பின்னடைவு சோர்வு பின்னிப்பிணைதற்கு அனுமதித்தால் உலகம் எங்களை மன்னிக்கவேமாட்டாது.



RangaRakes
Tamilnavarasam.com

உலகம் பல நல்ல தகவல்களைத் தாமதமாகவே பெற்றுக் கொள்கின்றது. கடுமையாக உழைப்பவர்கள் பிற விமர்சனங்களை தூற்றுதல்களை செவிமடுத்து செயலற்று போவதுமில்லை. நடக்கின்ற ஏதாவது சம்பவங்கள் தவறா முடிந்தபின் அவைபற்றிக் கண்டபடி பேசுவதும் விமர்சிப் பதிலும் பயனில்லை.

முன்பின் அறிமுகமில்லாதவர்களிடம் கூட தங்கள் கருத்துக்களைக் கூறிப் பொதுஇடங்களில் வாய்த் தர்க்கம் செய்து பின்னர் கைகலப்பில் ஈடுபடும் மோசமான பேர்வ களை நாம் அடிக்கடி காண்பதுண்டு. அடுத்த நிமிடம் பி போகும் மனிதரிடம் தங்கள் கொள்கைபற்றித் தாறுமாறாக சொல்வதும் தமக்குப் பிடிக்காத கட்சிகளை அல்லது நபர்களைத் திட்டி விமர்சனம் செய்வதும்இதனால் பலரின் முன் அவமானப்பட்டு வாங்கிக்கட்டும் கோணங்கிகளைக் கண்டால் அனுதாபம். தானே வரும்?

- தீட்சண்யமான நோக்கு
- கொள்கைப் பற்றுதல்
- ஆராயும் திறன்
- எதனையும் கற்றுக் கொள்ளும் விருப்பு
- தன்முன்னே உள்ளவர்களைப் புரிந்து கொள்ளுதல்
- நேயஉணர்வு.

இத்தகைய இயல்புடையவர்களின் கருத்துக்கள் சரியானதாகவே இருக்கும் என்பதனால் மக்கள் மிக இயல் பாகவே அவர்கள் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு விடுகின்





றார்கள். மேற்சொன்ன குணாம்சங்கள் ஒருவனது ஆளு மையை நன்கு விருத்தி செய்கின்றது.

சிந்திக்கத் தெரியாதவன் கருத்துக்களைக் கூற அரு கதையற்றவன். சும்மா ஏதாவது சொல்லிவிட்டுப் போவ தானது அறிவுடன் இணைந்து கொள்ளாது ஒரு வெற்று இடத்தைத்தேடிப் போகும் நிகழ்வுதான். "மௌனம்" கூடச் சொல்ல இயலாத கருத்துக்களைச் சொல்லி முடிக்கின்றது. பேசி அவஸ்தைப்படுதலைவிட பேசாமல் இருப்பதுவே உத்தமம்.

குடும்பங்களில் அமைதி நிலைத்திருக்க வேண்டுமே யானால் கண்டபடி பேசுதல், எதிலும் தலையிடுதல் மனம் வருந்த வார்த்தைகளைச் சொல்லுதலைத் தவிர்த்தல் உத்தமமானது. உரிமை இருக்கின்றது என்று மனைவி பிள்ளைகளுக்கு அவர்களுக்கு ஒவ்வாத தமது கொள்கை களைத் திணிப்பது என்ன நியாயம்? பாடசாலைகளில் சில ஆசிரியர்களின் கருத்து தவறு எனக் கண்டால் புத்திசாலி மாணவர்கள் கண்டு கொண்டு விடுகின்றார்கள். எனினும் மாணவனின் சரியான கணிப்பீடுகள் புத்திசாலித்தனத்தை எல்லா ஆசிரியர்களுமே ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவத்துடன் இருப்பார்களா,? என்பதுவே கேள்விக்குரிய விஷயமாக உள்ளது.

நம்பிக்கைக்குரியவர்களின் பேச்சைக்கேட்டே நாம் பழகிவிட்டோம். அது சரியோ அன்றித் தப்பானதோ எனச் சிந்திக்கவும் நாம் தயாரில்லை உள்ளதை உள்ளபடி அறிய



RangaRakes
Tamilnavarasam.com

அறிவுக்கு நாம் அவகாசம் கொடுப்போம்.

நல்ல கருத்துக்களைச் செவிமடுக்காதுவிடின் முக்கியமான விஷயங்கள் எல்லாமே, நாம் எதிர்பார்க்காத விதமாக நடந்தேறிவிடுகின்றது. நல்ல அனுபவஸ்தர்களின் அறிவுரைகள் எங்களுக்குத் தடைக்கற்கள் போல் தோற்றம் காட்டி விடுகின்றன. இதனால் எங்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் எல்லாமே, துன்பகரமாகப் பிரயோசனமற்றுப் போய் விடுகின்றன.

சகல விஷயங்களுமே எங்களுக்குத் தெரியும் என்கின்ற எண்ணத்தை விடுத்து எவரிடத்தும் ஐயம் தெளிவதே உத்தமமான பண்பு என உணர்ந்து நற்கருத்துக்களை செவிமடுப்பதுடன் அவற்றினை ஏற்று ஒழுகுதலே சிறப்பு என அறிவோமாக!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
17.06.2007







# உன்னை நீ முந்து!

உன்னை நீ முந்து எந்நேரமும் உன் பணியில்
மனம் நிறுத்தி ! எவர் செயலையும் வியந்து போற்று!
மாற்றோரை வீழ்த்துவது போட்டியன்று
போற்றும்படி வாழ, போராடி உன்னை நீ முந்து!

நாம் செய்யும் செயல்களில் ஈடுபாட்டுடனும், அதே சமயம் அதனை சரிவரவும் செய்தல் அவசியமானது.

எனவே எமது செயல்களில் பூரணத்துவத்தைப் பெறுத்தற்கான முயற்சியில் வெற்றி பெற்றாலும் அடுத்த இலக்கு நோக்கிய பயணத்தில் முன்னரை விடத் தீவிரமாக இருத்தலே சிறப்பு!



RangaRakes

Tamilnavarasam.com

எனவே எமது காரியங்களைப் பொறுத்தவரை "உன்னை நீ முந்து" என எமக்குள் ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

என்னை நான் முந்துவதானது எப்படி எனக் கேட்க லாம் எமக்கான பணியினை மென்மேலும் வளர்த்து அதி உன்னத மேன்மையையடைவதே இதன் பொருளு மாகும்.

"உன்னை நீ முந்து" என்பது
நான் நானாக இருந்து
நான் எத்துறையிலும் வென்றிட்ட
எனது சாதனைகளை நானே
முறியடிப்பவனுமாவேன்.

"நான் நானாக இருந்து வெகு சிறப்பான பணிகளை மேற்கொள்ளுபவனாவேன். நான் பிறருடன் போட்டி போட வேண்டிய அவசியமே இல்லை. எனது செயல்களில் நான் தீவிரம் காட்டி எனது சாதனைகளையே முறியடிப்பவனுமாவேன்"

பிறருடன் போட்டி போட்டால் தான் மேலும் வளர முடியும் என்றும் சிலர் கூறுவதுண்டு. இந்தப் போட்டி யுணர்வே பலருக்கும், பொறாமையுணர்வாக மாறிப் போவது முண்டு. காழ்ப்புணர்வு, மனக்கிலேசம், போன்றவைகளால் எவருமே நன்மைகளைப் பெற்றுவிடப்போவதில்லை தத்





தமது பணிகளைச் செவ்வனே செய்தலே போதுமானது. ஆனால் எவரது கருமங்களிலும் தடை போடல் என்பது அதாவது வாழ்க்கையையே விடை தெரியா அந்தகாரத்தில் அமிழ்த்தி விடும்.

தான் செய்த சாதனைகளையே தானே முறியடித்த விளையாட்டு வீரர்கள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

ஒருவர் கல்வி கற்று முன்னேறுதல் என்பது மற்ற வர்களின் தராதரத்திலும் தானே பெரியவன் என்பதைக் காட்டுவதற்காக அல்ல நீங்கள் சிரமத்துடன் படித்துப் பெற்ற பதவிளைப் பறிப்பதற்காகவே எனப் பொருள் கொள்ளற்க! அறியாமை, பொறாமை முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை. தெளிக!

ஆயினும் இன்றைய யதார்த்த நிலையில் சத்தியத் திற்குச் சவால் விடுவது போல் காரியங்கள் நடைபெறு கின்றன.

போட்டி போடுவது, குறுக்கு வழியில் நுழைந்து செருக்குடன் வாழ எத்தனிப்பதே சாதனையான வேலை எனக் கருதுகின்றார்கள். தவறாகக் கருதுவதே முறைகேடான சமூக விரோதம்.

வக்கிரபுத்தியுடன் ஒருவரை மோதி முன் எத்தனிப் பது அக்கிரமம்! தன்னை வளர்க்கப் பிறரின் வீணான



RangaRakes
Tamilnavarasam.com

தலையீடுகளை உடைப்பதே பெரும் பாடாக இருக்கின்றது. இதனால் கால விரயம், மனச்சோர்வு உட்பட பல பிரச்சனைகள் வருத்திச் சுடுகின்றது.

தைரியம் இல்லாதவர்கள் பிறர் தைரியத்தைப் பிடுங்க எண்ணுவதே வேடிக்கை. நோஞ்சான்கள் சாகசம் புரியத் திடமில்லாத காரணத்தால் வல்லமை, அற்றல் மிகுந்தவர்களை பின்னால் இருந்து புரளிகிளப்புகின்றார்கள் அல்லது கேலி பண்ணுகிறார்கள். அவர்களைப் புரட்டியெடுக்க விருப்பப்படுகின்றார்கள்.

இத்தகையோர் தங்கள் நிலையுணர்ந்தால் எவருமே தம்மை நிமிர்த்திக் கொள்ள முடியம். ஆனால் அதற்கும் இவர்கள் தயாராக இல்லை.

எங்களை நோக்கி வரும் பொறுப்புக்களுக்கு நாமே உரித்துடையவர்கள். ஆயினும் வரும் பொறுப்புக்கள் எமக்கும், சமூகத்திற்கும் நல்லவையாக இருக்க வேண்டும்.

தேவையற்ற விஷயங்களில் மூக்கை நுழைத்து, ஆற்ற வேண்டிய காரியங்களை கோட்டை விடுதல் எங்களை நாமே வெட்கத்தினுள் ஆழ்த்தும் வேலை தான்.

இயற்கை தன்பாட்டிற்கு ஒருவருமே சொல்லிக் கொடுக்காது இயங்குகின்றது. மனிதனுக்கு மட்டும் சாப்பிடுவது எப்படி, நடப்பது எப்படி, என்று கூடச் சொல்லிக் கொடுக்க வேண்டியுள்ளது.





மனிதனுக்கு வேண்டிய எல்லாவற்றையுமே, இயற்கை மூலம் ஆண்டவன் அள்ளிக்கொடுக்கின்றான் ஆனால் இவன் அதனைக் கிள்ளிக் எடுக்கக்கூட மனம் இன்றி இருக்கலாமோ?

* நீ உனது அவயங்களுக்கு வேண்டிய வேலை கொடு, உரிய முறையில் இயங்கச் செய்!
* உனது புலன்களில் தெளிவை உண்டாக்கு! இதனாலேயே அறிவின் வீச்சும் அதிகரிக்கும்.
* அறிவு மட்டும் இருந்தால் போதுமா மனிதாபிமானம் உள்ளவனாக இருந்து கொள்வாய்? இதனாலேயே மனிதப் பெறுமதிகளை அறிந்து கொள்ளப் பெரும் வாய்ப்பு உருவாகும்

மேலே சொன்ன விடயங்கள் ஒருவரது செயல்களில் புதிய தெம்பையூட்டும். எம்மை நாம் மெருகேற்றி உருக்கொடுக்க வேண்டும்.

தாயார் தந்த இந்தத் தேகத்தை விட,நாமாக எமது நற்சிந்தனை வாயிலாக பெற்றுக் கொள்ளும் விரிந்த இதயம் எடைகூடியது, வியப்பிற்குரியது.

சரிவரக் காரியங்கள் செய்வதே இலகுவானது எனப் புரிந்து கொள்ளுங்கள் கண்டபடி எதனையும் செய்வது சிரமமானது. ஆபத்தானது ஏன் அருவருப்புமானதும் கூட.



RangaRakes
Tamilnavarasam.com

தங்கள் செயல் மூலம் பிறரைப் பொறாமைப்படச் செய்ய வேண்டும் எனச் சிலர் கர்வமுடன் பேசுவார்கள். எந்த ஒரு செயலும் முற்றுப் பெறாமலே அது பற்றி வீம்பாக பேசுவதும் கூடாது. அதே செயலை வெற்றிகரமாகச் செய்து முடித்த பின்பு, பெரிதாக அலட்டிக் கொள்ளவும் கூடாது.

எத்தனை எத்தனையோ பேர் மிகப் பெரும் சாதனைகள் புரிந்தும் அது பற்றி பேசிக் காலத்தைக் கழிப்ப தில்லை. கௌரவம் எல்லாமே, காரியங்களை செவ்வனே செய்பவர்களுக்குத் தானாகவே கிட்டும்.

செயல் வீரனைச் செய்கையில் தெரியும் புளுகு பவர்களின் நிழல் கூட இவர்களின் கோமாளித்தனங்களைக் கண்டால் நகைக்கும்.

எங்கள் சாதனை மிக்க செயல்களுக்கான யாம் பெறும் வெகுமதி உரமேறிய நெஞ்சும் தொடர்ந்தும் புதியன படைக்கவல்ல ஆளுமையினைப் பெறுவது மாகும்.

மிக மிக நீண்ட பயணம் இது. ஆனால் வெகு சுவாரஸ் யமானது. அலுப்புத்தட்டாதது. எதனையும் ஆக்க முனைபவனுக்கு தூக்கத்திலும் புதிதான எண்ணங்களே உதயமாகும். தன்னை முந்தியபடியே சாத்தியமான நல்எண்ணங்கள் அவனுள் உதயமானபடியே இருக்கும் தன்னை முந்திய படியே இருப்பவனுக்கு எது தான் கிட்டாது? வலிமைக்கு ஏது எல்லை?





விஞ்ஞானிகள் தங்கள் கண்டு பிடிப்புக்களைத் தொடர்ந்த வண்ணமேயுள்ளனர். ஒரு புதிய விஷயத்தை மட்டும் கண்டு பிடித்தால் போது மென அவர்கள் ஓய்வு எடுப்பதுமில்லை

சர்வதேச விளையாட்டுப் போட் டியில் வெற்றியீட்டிய விளையாட்டு வீரர்களில் பலர் தமது சாதனைகளைத் தாங்களே முறியடித்துமுள்ளனர்.


"சாதனைகளுக்கு முற்றுப்புள்ளி
இல்லவே இல்லை"

எமது செயல்கள் தொடர்ந்தும் முன்னெடு க்கப்படுவதாக!

தினகரன்
வார மலர்
07.08.2011



RangaRakes
Tamilnavarasam.com



# விளம்பரங்கள்

விளம்பரங்கள் மக்களுக்கு நல்லதையும் அல்லாதவையும் தந்து கொண்டிருக்கின்றன. இதில் உண்மையும், பொய்யும் கலந்தே இருக்கின்றன. மக்களை ஏமாற்றுவது விளம்பரமாகாது. அதேசமயம் எமக்குத்தேவையான விஷயங்களை விளம்பரம் மூலமே அறிந்துகொள்ள முடிகின்றது. எனவே விளம்பரம் செய்பவர்கள் மக்கள் நம்பிக்கையைத் தகர்க்காத வண்ணம் செய்யவேண்டும். கவர்ச்சியாகவும் அதில் உண்மைத்தன்மையும் இருக்க வேண்டும். விளம்பர உத்திகளால் இன்று உலகம் மயங்கிப்போய்க் கிடக்கின்றது. பொருட்களைப் பெறுவதிலும் சேவைகள் வழங்கல்களிலும் விளம்பரங்களின் பங்கு மகத்தானது. விளம்பரங்களால் மக்கள் நலன்கள் சுரண்டப்படக்கூடாது.

"விளம்பரங்கள்" இன்று சகலரிடமும் சங்கமித்துக் கொண்ட அத்தியாவசியமான விஷயமாகிவிட்டது. சில விளம்பரங்கள் மக்களுக்கு அல்லலையும் ஆசையையும் பெருக்குவனவாயும் இருப்பினும் ஒருவர் தேவைக்கு உகந்த விளம்பரங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு மிக



RangaRakes



இலகுவாக இயல்பான வழிச்செல்லலுக்கும் கட்டாயமான உற்ற தேவையாக அமைந்தே விட்ட தென்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. விளம்பரம் இன்றி உலகம் எப்படி இயங்கும்? வர்த்தகம் வளருமா? அரசியலில் ஆட்சிசெய்ய இயலுமா? பெயரும் புகழும் பெற்றிட விளம்பரத்தினை விட வேறென்ன உன்னத வழிமுறைகள் இருக்கின்றன?

விளம்பரம் என்பதே ஒரு வெளிப்படுத்துகை முறைமைதான். பகிரங்கமாக ஒரு விஷயத்தைத் தெரியச்செய்ய பல உத்திகளை இன்று நவீன உலகம் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கின்றது. பார்த்தல், கேட்டல் மூலம் நவீன இலத்திரனியல் சாதனங்களும் பத்திரிகைகளும் இத்துறையினை வலுவான ஓர் இடத்தில் இட்டுச் சென்றுவிட்டது.

உள்ளதை உள்ளபடியே வெளிப்படுத்துதல் என்பது ஒரு புறமிருக்கப் பொய் முகம் மூலம் பேய் உருவினில் மறைந்து வெளியே நல்லவையாகத் தோற்றம் காட்டிடவும் விளம்பரத்தினைத் துணை தேடுபவர்களின் செயல்களால் உலகை இன்று இது வேதனைப் படுத்துகின்றது.

சோப்பு, சீப்பு, விளம்பரப்படங்களில் மனித முகங்கள் பல்வேறு கோணங்களில் படமாக்கப்பட்டு எல்லோருமே எங்களைப்பார்! எங்களின் சாகஸங்களைக் கேள்! எனுமாற் போல் மக்கள் முன் கெஞ்சிக்கொண்டிருக்கின்றன.

சுயவிளம்பரம் மூலம் தங்கள் சுயதரிசனத்தை



Tamilnavarasam.com

மறைத்து புதுமுலாம் பூசும் முயற்சிகள் கூட தற்போது தாராளமாக நடந்தேறுகின்றமை கொடுமை!

ஒன்றுமே நல்லன செய்யாமல் சுயவிளம்பரம் செய்தல் சுயமரியாதையற்ற செயல் என இவர்கள் உணர்கின்றார்கள் இல்லை. ஆனால் நவீன உலகின் போட்டா போட்டித் தன்மையில் வென்றிட விளம்பரத்தின் துணையை நாடுவது தவிர வேறுவழியில்லை.நற்சேவைகளை உலகம் பெறுவதற்கு அவை பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும். இன்று பல நல்ல விஷயங்கள் மக்களுக்கு மறைக்கப்பட்டு விட்டன. தெரியாமை காரணமாகவும் இன்னமும் செய்திகள் மக்களிடம் சென்றடையாமலே இருக்கின்றன. தெரிந்தவர்களும் சொல்லாமல் இருக்கின்றனர்.

விளம்பரம் மூலம் மக்களிடம் தகவல்களை சென்றடையச் செய்கின்ற வித்தை மிகநுட்பமானது. விஞ்ஞான ரீதியாக விளம்பரம் மனித மூளையில் எங்ஙனம் பதியப்படுகின்றது என்பது பற்றிய சுவாரஸ்யமான அதிசயமான தகவல் ஒன்று இதோ

திரைப்படமொன்றினை ஏராளமான ரசிகர்கள் ரசித்துக் கொண்டிருந்தார்கள். திரைப்படத்தில் இடைவேளை விடப்பட்டது பலரும் எழுந்து வெளியே சிற்றூண்டிச் சாலைக்குச் சென்றனர். அங்கு சென்றவர்களில் பெரும் பாலானோர் ஒரு குறிப்பிட்ட நிறுவன குளிர்பானத்தையே கேட்டு வாங்கி அருந்தினர். இத்தனைக்கும் அந்தக்





குளிர்பானம் பற்றிய விளம்பரம் திரையரங்கில் காட்டப்படவேயில்லை. அப்படியாயின் எப்படி அந்தக் குளிரபானத்தினை விரும்பிக்கேட்டார்கள்? இதுதான் ஆச்சரியம். ஆனால் நடந்தது இதுதான்!

மனிதனது கட்புல ஆற்றல் பதிவுகள் ஒரு குறிப்பிட்ட நேரக் கணக்கீட்டில் உள்ளது. திரைப்படத்தின் ஒரு காட்சிக்குப் பல நூறு படங்கள் எடுக்கப்பட்டு அவை தொடராக ஓடவிடப்படுகின்றன. ஒரு கை அசைவதற்கு பல படங்கள் தனித் தனியாக எடுக்கப்பட்டு அவை தொடர்ந்து ஓடும் போது நகரும் காட்சியாக எமக்குத் தோற்றமளிக்கும். இங்கு திரைப்படம் பார்க்கும்போது மிகவும் குறைந்தளவு நுண்ணிய காலப்பகுதியில் மேற்சொன்ன குளிர்பான விளம்பரம் திரையில்.காட்டப்பட்டாலும் எமது விழிக்கு அது தென்படாது. ஆனால் எமது மூளை அதனைக் கிரகித்து விடும் விழியில் படம் புலனாகக் குறிப்பிட்ட நேரம் தேவைப்படும். ஆனால் மூளையோ உடன் தகவலைப் பெற்றுவிடுகின்றது.

எனவே விழிக்குப் புலப்படாமல் மூளையினுள் மக்கள் அறியாமல் இந்த விளம்பரம் புகுத்தப்பட்டுவிட்டது. இது ஒரு விஞ்ஞான விந்தைதான்!

எனினும் தரம் குறைந்த பொருட்களைக்கூட அடிக்கடி விளம்பரப்படுத்துகையில் மக்களின் எண்ணமும் அதன் பால் ஈர்க்கப்படலாம். மேலும் “சரி, போனால் போகின்றது” எனக்கூறி வாங்கி விடுவோருமுண்டு.



RangaRakes

Tamilnavarasam.com

ஒரு தடவை என வாங்குபவர்கள் தொகை ஒரு லட்சம் என உயர்ந்தால் திடீர் என அவைகளின் பெறுமதியும் எப்படி அதிகமாகிவிட்டது? அல்ல. நல்ல பொருட்களை வாங்கியோர் மீண்டும் மீண்டும் அதனையே கேட்டு வாங்கி விடுகின்றார்கள். உண்மையான தரமான விஷயங்கள் தான் நிலைத்து நிற்கமுடியும். இது இயற்கையான ஒரு பாடமும்கூட. ஆயினும் போலியான மக்கள் சிந்தையைச் சீரழிக்கும் மயக்கும் கருத்துக்களை ஆரவாரமான சங்கதிகளைக்கூட சாதுர்யமான வெளிக் காட்டுகை மூலம் மக்களிடம் செலுத்தியும் விடுகின்றார்கள்.

இன்று இணையதளத்தின் ஆக்கிரமிப்பிலும் இளைய தலைமுறையினர் அமிழ்ந்துவிட்டனர். இங்கு பணமீட்டும் பகட்டு வியாபாரிகள் படுகீழ்த்தரமான வழிமுறைகள் மூலம் பொருட்களை மட்டுமல்ல மனித நாகரீகத்தினையும் விற்று விடுகின்றனர். காசு கொடுத்தால் எதைத்தான் வாங்க முடியாது என்று எல்லோரும் கருத ஆரம்பித்துவிட்டார்களோ என அச்சப்பட வேண்டியுள்ளது.

தனிமனித சுதந்திரம் என்பதுகூடக் கொச்சைப்படுத்தப்படுகின்றது. ஒருவனது அந்தரங்கம் அவனுக்கேயுரியது. இவைகளை அறிந்தும் ஒருவரது மனம் வெதும்ப, பலரும் அறிய இணையதளம் மூலமாக பரகசியமாக்கப்படும் அவலங்களைக் கேள்விப்படுகின்றோம்.

பொருட்களை விற்கப் பெண்களைக் கேவலப் படுத்து





கின்றார்கள். விற்கப்படும் பொருளுக்கும் பெண்ணுக்கும் சம்பந்தமேயில்லாது விட்டாலும் பெண்களைக் கண்டபடி சித்தரித்துப் பெண்மையினை அவதூறு செய்கின்றார்கள். இன்று மேற்கத்திய பத்திரிகைகளை மிஞ்சுமளவிற்கு கீழைத்தேய நாடுகளிலும் ஆபாசமான விளம்பரப்படங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. மேலும் மக்கள் கூடும் இடங்களில் சந்திகளில் பெண்களைக் காட்டாத விளம்பரங்களே இல்லை எனுமாற்போல் இருக்கின்றதே! இதுபற்றி மகளிர் அமைப்புக்கள் என்னதான் கொதித்து எழுந்து ஆர்ப்பாட்டம் செய்தாலும் கேட்டுவிட்டுச் சும்மா போய்க் கொண்டேயிருக்கின்றார்கள்.

நல்ல விஷயங்களை மனிதர் நாடிப்போவார்கள் அதற்காகச் சிரமப்பட்டுத் தெரியப்படுத்த வேண்டியதில்லை எனவும் சொல்வார்கள். உண்மையில் உள்ளூர் சந்தையில் மட்டுமல்ல, உலகின் எப்பாகத்திலும் தரமானவைகளுக்காக பெரிதாக விளம்பரம் செய்ய வேண்டியதில்லை என்கின்ற கருத்துச் சொல்லப்பட்டாலும் வளரும் உலகில் போட்டிகள் புதிதான கண்டு பிடிப்புக்களால் மிகப்பெரிய நிறுவனங்கள் கூட விளம்பரங்களுக்காக பல கோடி ரூபாய்களைச் செலவிட்டேயாக வேண்டிய நிலையில் உள்ளன. இதனால் நுகர்வோர் தாங்கள் வாங்குகின்ற ஒவ்வொரு பண்டங்களுக்கான விளம்பரங்களுக்காகச் செலவிடப்படுகின்ற செலவுகளையும் ஏற்றுக்கொள்கின்ற நிலைக்கே தள்ளப்படுகின்றனர். இலாபம் கருதும் வர்த்தகர்கள் எதனையுமே சும்மா செய்துவிடப்போவதுமில்லை.



RangaRakes
Tamilnavarasam.com

உலகின் சகல நாடுகளிலேயும் பண்டங்களுக்குத் தரக்கட்டுப்பாட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னரே அவை விற்பனைக்கு வரும். ஆனால்எந்தவிதமான பண்பும் இல்லாதவர்கள் பொதுவாழ்வில்அத்துமீறி நுழைந்தாலும் அவர்கள் இறுதியில் ஏதோவகையில் ஒரு முக்கிய நபராக உருமாறி விடுகின்றார்கள். இவர்கள் தங்களுக்கான சான்றாகப் பணம், செல்வாக்கு, குடும்ப அந்தஸ்துகளை ஒரு இலட்சினையாக்கி விடுகின்றனர்.

அதாவது இவைகள் கூட ஒரு விளம்பரத் தன்மை யான, வெளிப்படுத்துகைதான். நான் இன்னாரின் மகன், எனது குலம், கோத்திரம் உயர்ந்தது என் பிரதேசம் இத்தகையது எனப் பலரிடம் சொல்வதும் அல்லது சொல்லுமாறு கேட்டுக் வற்புறுத்துவதும் சமூக அவல நிலைக்கு ஒரு காரணியாகும் என அறிக! இன்னமும் எமது நாட்டில் மட்டுமல்ல, உலகம் பூராவும் குறிப்பிட்ட வர்க்கம் கோலோச்ச, மக்கள் அனுமதித்துக் கொண்டு தான் இருக்கின்றார்கள்.

தனி ஒரு மனிதனின் உழைப்பு நேர்மை பண்பு நெறி பற்றிக் கருதாது சிலவேளை கீர்த்தி மிக்க பரம் பரைபற்றிய மக்கள் உணர்வுகள் மேலோங்கியே காணப்படுகின்றன. பரம்பரை வாயிலாக பெற்ற பெருமைகளைப் பின்னர் வந்த சந்ததியினர் காப்பாற்றாது விடினும் ஏற்கனவே மக்களிடம் பெற்ற அங்கீகாரம் அடையாளம் நிரந்தரமாகியே விடுகின் றமை அதிசயமே! சிலர் சொல்லுவார்கள் "அவருக்கு என்ன





விளம்பரம் வேண்டிக்கிடக்கின்றது. அவரது குலப்பெருமை ஒன்றே போதுமே ஏழு தலைமுறைக்கும் அதுவே போதும்" என்பார்கள்.

ஆயினும் காலம் மாறிக்கொண்டேயிருக்கின்றன. நேற்றுப்போல் இன்று இல்லை. மிகப் பிரபல்யமாய் இருந்த நிறுவனங்கள் படுத்தும் மிகச்சாதாரண ஸ்தாபனங்கள் முன்னணிக்கும் வந்துகொண்டுமிருக்கின்றன. மனித வாழ்வும் இப்படித்தான் உழைக்காமல் வெறும் விளம்பரத் தால் உயர்ந்து விடமுடியாது.

யப்பான், சீன நாடுகளின் வளர்ச்சிகளை நாம் பார்த்து வருகின்றோம். அவர்களின் திறமை, உழைப்பு, உற்சாகத்தி னால் தான் இத்தனை முன்னேற்றத்தினை அந்த நாடுகள் உருவாக்கிக் கொண்டன. யப்பானிய உற்பத்திகளை உடமைகளாக்க மக்கள் முண்டியடிப்பது அந்நாட்டு தொழில் நேர்மைக்குச் சான்று தருவதாகும். நேர்மையான உண்மை யான மார்க்கத்தினூடான பகிரங்கப்படுத்தலே மக்களிடம் நிலையான இடத்தினைப் பெறும் வலுவுடையதாகும்.

அறத்திற்கு அப்பால் நின்று தம்மைப் பிரபல்யப்ப டுத்துவது பெறுமதியற்ற சடப்பொருள் ஒன்றை விற்க முனைவது போலன்றோ!

வஞ்சம், குரோதம், சூழ்ச்சி மூலம் எந்த அனு கூலத்தையும், இலகுவாகப் பெற்றுவிடவும் முடியாது. பத்துப்



RangaRakes
Tamilnavarasam.com

பேரைக் கைக்குள் போட்டுப் பிரபல்யமடையலாம் என எண்ணுதல் கண்ணியமான போக்குமன்று.இப்படி இவர்கள் விளம்பரப்படுத்தப்பட்டால் ஈற்றில் மழுங்கடிக்கப்பட்டு விடுவார்கள் என்பதே உண்மையாகும்.

மக்கள் தொடர்புசாதனங்கள் தம்மிடம் இருக்கின்ற விளம்பரதாரர்களின் உண்மைத் தன்மையையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். போலியான ஆசாமிகளை மக்களை ஏமாற்றும் நிறுவனங்களை வேண்டுமென்றே சுயலாபத் திற்காகப் புகழ் தேடித் திரியும் அற்ப ஜீவன்களின் செயல் களை அம்பலப்படுத்த வேண்டும்.

இன்று ஆசை வார்த்தைகளால் பொய்யான தகவல் களால் சில நிதி நிறுவனங்களில் பெருந்தொகை பணத் தைச் செலுத்தி ஏமாந்து அல்லல்படும் மக்கள் பற்றிச் செய்திகளை அறிந்திருப்பீர்கள். இலவசமாக "அதனைத் தருகின்றோம், இதனைத்தருகின்றோம்" எனச்சொல்லிக் கண்ட கண்ட குப்பைகளைத் தலையில் கட்டிவிடும் வர்த்தக நிறுவனங்களை இனம் காண்பது எப்போது? அநேகமான மக்கள் பணத்தைச் செலவழித்து நட்டப்பட்ட பின்னர் தான் ஞானம் பெறுகின்றனர்.

போலியான விளம்பரம் மூலம் லாபமடைபவர்களால் தரம் குறைந்த பண்டங்கள் உலகில் உலாவருவதனால் காலப்போக்கில் நாடுகளின் பொருளாதாரத்தில்கூட வீழ்ச்சி காணப்படலாம் உண்மையானவைகள் பற்றியே அறிய





வாய்ப்பின்றியும் வரலாம். இதுவே மெய்யானது என்று போலியை நம்பினால் அதுவே பழக்கமாகி விடுகின்றது. யாராவது இதுபற்றிப் பேசினாலும் கேட்பதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

எங்களுக்குச் சுதந்திரம் உண்டு என்று சொல்லி சந்தையில் பொய்கள் சொல்பவர்களைச் சட்டம் தான் கண்டு கொண்டு தண்டிக்க வேண்டும். தரம் தகுதிகளைக் கரங்களை அறிந்து தரங்குறைந்த பொருட்களை விற்பவர் களைச் சட்டத்தின் முன் நிறுத்தியும்கூட கவர்ச்சிமிகு விளம்பர உத்திகள் மூலம் பல வர்த்தகர்கள் மக்களின் கண்களில் மண்ணைத் தூவி விடுகின்றனர்.

இன்று பலரும் தங்களை விளம்பரப்படுத்துவதாக எண்ணித்தங்கள் முட்டாள் தனங்களையே வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். போலிச்சாமிகளும், போலி அரசியல் தலைவர்களும் மக்களை ஏமாற்றிச் செயல்படும் சமூக விரோதிகள். எப்படித்தான் தங்களைப் பகிரங்கப் படுத்திடினும் இறுதியில் அவமானப்படுத்தப்படுவதை நாம் அறிவோம்.

எனினும் இத்தகையவர்கள் மூலம் பட்ட துன்பங்கள் அவமானங்கள் வெறும் அனுபவங்கள் மட்டுமல்ல. மனித மனங்களில் விழுந்த பேரிடிகளாகவேயிருக்கின்றது. அறிவும், அனுபவமும் மனிதனுக்கான தற்காப்புக் கவசம் என்பதனை நாம் உணரவேண்டும்.எதனையும் உலகிற்



RangaRakes

Tamilnavarasam.com

காகச் சிறந்த முறையில் செய்வதற்காகவே பல வழிமுறைகளை மனிதன் கண்டறிந்து கொண்டே இருக்கின்றான். விளம்பரம் கூடத் தரம்மிகுந்த செயற்பாடானால் எமக்கான வசதிகளும் சிறப்பாகி விடுமன்றோ!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
09.09.2007







# கரிசனை

அன்பின் தரிசனம் எமக்குக் கிட்டவேண்டுமெனின் சகல ஆன்மாக்களிலும் எமது கரிசனை உணர்வுகள் மேலோங்க வேண்டும். இதனால் ஆன்மாவின் விழிப்பு நிலை மேலோங்கி பரிபூரணத்துவ நிலையினை அது எய்தும். எனவே அன்பிற்கு ஆதாரமாக "கரிசனை" துளிர்த்து உயிர்ப்புடன் பரிணமிக்க வேண்டும். இவ் உணர்வு வந்தாலே எவர்களது துயரங்களையும் துடைத்திடும் எண்ணங்கள் உதயமாகிவிடும். சுய லாபத்தின் பொருட்டு ஒருவனிடம் கரிசனை கொண்டுள்ளது போல் நடித்தல் தம்மையே ஏமாற்றும் காரியமாகும். உலகின் இயற்கை வஸ்துகள் அனைத்திலும் கரிசனையுடன் இருந்தால்தான் தற்போதைய சந்ததி மட்டுமல்ல எதிர்காலத்தின் பிரஜைகளும் இயற்கை வளமும் பாதுகாக்கப்படும். இந்த உணர்வு எம்மை நிதானப்படுத்தி மன ஆரோக்கியத்தையும் வரவழைக்கும்.

உயிர்கள் மீதான உண்மையான கரிசனை உணர்வுகள் எம்மிடம் உருவானால் அன்பின் தரிசனம் தீட்சண்யமாகத் துலங்கி நிற்கும்.



RangaRakes
Tamilnavarasam.com

"அன்பின் தரிசனம்" என்பது சகல ஆன்மாக்களையும் ஆகர்ஷித்து இணைத்துக்கொள்வதால் ஏற்படும் பரிபூரணத் துவமான "விழிப்பு" நிலையாகும்.

வேண்டா வெறுப்புடன் உயிர்களை நோக்கினால் அகத்தே ஒளி தூண்டப்படாத முயற்சி செய்யாத மாந்தராகி விடுவோம். எனவே கரிசனை உணர்வுடன் எவரது துயர் களையும் துடைத்திடும் மனஇயல்பைப் பெற்றிடுவீராக!

குழந்தைகள் கூட வேண்டுமென்றே அழுவது தனது தாய் தன்னைக் கரிசனையுடன் உடன் வந்து தூக்கி அரவ ணைக்கின்றாளா? எனநோக்குவதற்கே என்றும் உளவள வியலாளர் கருதுகின்றார்கள். "கரிசனை" என்பது அன்பின் வசமானவர்களுக்கான ஓர் நெகிழ்வூட்டும் இயல்புமாகும்.

"என்னை எல்லோருமே விரும்புங்கள்" என எம் உள் மனம் கேட்டுக்கொள்ளும். ஆனால் வீம்புக்காக "எனக்கு யாருடைய தயவும் தேவையில்லை. நான் சுயமாக எவர் தயவும் இன்றி வாழ்ந்துகொள்வேன்" எனச்சொல்லிக் கொண்டாலும் பிறர் ஆதரவை அவர் தரும் கரிசனையான அன்பின் வெளிப்படுத்துகையை விரும்பாதவர் எவர் உளர்?

ஆனால் தூய அன்பினை நிராகரிப்போர் அதன் தாக்கத்தினை உணராமல் போவதுமில்லை. அன்பு என்பது துன்புறுத்தல்அல்ல. அது சுமையும் அல்ல. மென்மையான சுகமூட்டும் நெஞ்சிற்கான ஒத்தடம்.





நடிப்பூட்டும் கரிசனையாளர்களால் வெறுப்பூட்டப் பட்ட பலர் நிஜமான உறவுகளை சரியாக நிறுக்கத் தெரியா மல் சமூகத்தில் துறவிகள்போல் பேசுகின்றார்கள். எவரிடத் தும் அக்கறையில்லாதவர்கள் சொந்த நலனுக்கு மட்டும் கரிசனை காட்டி தங்கள் பொய் உருவத்தை வரைந்து காட்டு வார்கள்.

வெளிப்படையாகக் கொச்சையாகப் பேசுவதிலும் பார்க்க மௌனமாக ஒருவரை அறுப்பது கீழ்த்தரமானது. அன்பு பூண்டவனைக் கண்டுபிடிப்பதுவே கஷ்டமாக இருப்பதாகச் சொல்லிக் கவலைப்படுவோர் பலர் உளர்.

எந்தத் தொழிலைச் செய்பவர்களாயினும் சரி அவர்கள் தமது தொழிலில் அக்கறை காட்டாதுவிடில் அது அவர்களுக்கு மட்டுமல்ல அவர் செய்யும் தொழிலினால் பயன்பெற எதிர்பார்க்கும் மக்களுக்குமே பெரும்பாதிப் பினை ஏற்படுத்தும். பெரியகப்பலில் ஒரு சிறிய துவாரத் தினைக் கண்டு பிடிக்கத் தயங்கினால் நிலைமை என்னா கும்? விமானம் தரையிறங்கும் சமயம் விமானி கரிச னையின்றிக் கண்ணயர்ந்தால் என்ன நடக்கும்?

இன்று அரச தனியார் நிறுவனங்களில் எல்லாம் பெரிய அதிகாரிகளில் இருந்து சாதாரண அலுவலர்கள் வரை முழுமையாகத் தம்மை அர்ப்பணித்துக் கடமை செய்கின்றார் எனச் சொல்லமுடியுமா? இங்கு வரும் மக்களின் தேவைகளின் முக்கியத்துவத்தினை உணர்வோர்



RangaRakes

Tamilnavarasam.com

எத்தனைபேர் இருக்கின்றார்கள்? கடமையுணர்வுள் அலுவலர்களின் பெரும் பங்களிப்பின் பயன், பெறுபே களை ஒரு சிலரின் அக்கறையற்ற போக்கினால் நிறுவனமே கெட்டபெயர் எடுக்க வேண்டிய நிலை உள்ள

எங்களுக்கு உரிய ஊதியம் கிடைப்பதில்லை. எப்ப நாம் முழுமையான பணிகளைச் செய்யமுடியும் எ விதண்டாவாதமாகப் பேசும் ஊழியர்களின் செயல் அரு ருக்கத்தக்கது. கடமை என்று வரும்போது எம்மை நாடு வர்களின் எதிர்பார்ப்புக்களுக்கும் வசதிகள், ஊதியம் என்ப போன்ற விடயங்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

உண்மையான குறைபாடுகள் பிரச்சனைகளைக் கையாளுவது வேறு வடிவத்தில் அமையவேண்டும். பக்க வீடு பற்றி எரியும் போது அதுபற்றிக் கிஞ்சித்தும் கவலைப் படாது பழைய கோபதாபங்களைப் பேசிக்கொண்டிருக்க லாமா? இதனால் ஏற்படும் நன்மை தான் என்ன? இதே துன்பம், அடுத்து உனக்கும் ஏற்படலாம் என ஏன் எண் ணாமல் இருக்கின்றாய்? எனத் தன்னுள் அவன் கேட்டேயாக வேண்டும்.

இன்று மாணவ சமூகத்தின் சிந்தனைகளைக் கலைக்கும் புறதாக்கம் அதிகரித்து வந்துவிட்டது. மது, போதைப் பழக்கத்துடன் அநாவசிய பொழுதுபோக்கு அம்சங்களால் கவரப்பட்டுத் தம் எதிர்காலத்தினை வீணடிக் கும் பல இளைய சமுதாயத்தினைப் பார்த்துக் கொண்டிருக்





கின்றோம். செல்லிடத் தொலைபேசியில் தலையைச் சாய்த்தபடி சதா கதை பேசுகின்ற நேரத்தினை விடக் கல்வி க்காகச் செலவிடும் நேரம் மிகக்குறைவாக இருக்கின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது. நிமிர்ந்து நடைபயிலும் இளம் சமுதாயம் தலை சாய்த்து வளைந்தபடி அல்லது தூணில் சாய்ந்தபடி இருக்கின்றார்கள். வைத்திய ஆய்வின் படி இவை போன்ற பழக்கங்கள் சதா இலத்திரனியல் பொருட்களின் பாவனை ஆபத்தானது எனச் சொல்லியும் கேட்கின்ற நிலையில் இவர்கள் இல்லை.வசதிகளைக் கட்டுப்பாட்டுடன் அனுபவிக்க வேண்டும்.

உண்மையான கரிசனை உணர்வுகள் கல்வியில் தோன்றினால் இந்நிலை வருமா? பொழுது போக்குகள் உடற்பயிற்சிகள் கலைத்துறை ஈடுபாடுகள் எல்லாமே எமது உளவளத்திற்கு உகந்தன. எனினும் நாம் எல்லாவற்றை யுமே ஒரு நேர வரையறைக்குள் அமைத்திடுவோமாக!

திட்டமிட்டுச் செயலாற்றும் போதே செய்கின்ற கருமங்களில் அதீத ஈடுபாடும் அக்கறையுணர்வும் தானா கவே வந்துவிடுகின்றது. கணினித்துறை வல்லுணர் பில்கேட் அவர்கள் தினசரி உறங்குவது நான்கு அல்லது ஐந்து மணிநேரம் மட்டுமேயாகும். அவர் செலவிடும் ஒவ்வொரு வினாடித் துளிகளின் பெறுமதி பல இலட்சம் ரூபாய்க்கு மேலானதாகும். இன்று உலகின் மிகப்பெரும் கோடீஸ்வ ரான இவர் செய்கின்ற ஒவ்வொரு கருமங்களையுமே மிகுந்த அக்கறையுடனும் சிரத்தையுடனும் ஈடுபாட்டுடனும் செய்து வருகின்றார்.



RangaRakes
Tamilnavarasam.com

எம்மீது நாம் காட்டும் கரிசனை என்பது எமது உடலை வருத்தி மெய்யாக நாம் உழைப்பது தான். உழைப்பவன் தான் ஓய்வு எடுக்க வேண்டும். உழைத்தல் இன்றி இருப்பவன் சதாபடுப்பவன் ஆகின்றான். உழைப்பவன் களைப்பு பற்றிக் கவலைப்படுவதில்லை. அதுவே அவனுக்குத் "திருப்தி".

சும்மா படுத்திருப்பது என்பது முடங்கும் நிலை. இது ஓய்வு நிலையல்ல. தலை சாய்வதற்கான வழி எனவே சோம்பேறிகளுக்கு கடமையுணர்வு பற்றியும் கரிசனைமிகு செயல் திறன் பற்றியும் எவ்வித கவலையும் கிடையவே கிடையாது. சோம்பல் சோகத்தையே உண்டு பண்ணும் உணர்க!

எனது நண்பர் தனது கவலையீனத்தால் அக்கறை இன்மையால் ஏற்பட்ட நஷ்டம் பற்றி தமது அனுபவத்தினைக்கூறினார். தனது மனைவிக்கும் தனது பிள்ளைகளுக்குமான மருத்துவக் காப்புறுதியைச் செய்திருந்தும் கூட அதற்குரிய தவணைப் பணத்தினைச் செலுத்தாமல் விட்டமையினால் தனக்கு ஏற்பட்ட மருத்துவச் செலவிற்கான பணத்தினைப் பெறமுடியாமல் போனதாகக் கவலையுடன் தெரிவித்தார்.

செய்ய வேண்டிய முக்கியமான பணிகளைச் செய்யாது விட்டால் நடக்கும் விபரீதங்கள் எத்தனை எத்தனை? மின்சாரம், தொலைபேசி, குடி நீர் கட்டணங்களை உரிய



RangaRakes



காலத்தில் செலுத்தாமல் விடுவதும் ஏற்கனவே அறிவித்த அறிவித்தல்களை உதாசீனம் செய்வதால் மேற்படி சேவை இடை நிறுத்தப்படுவதும் பலருக்கு அன்றாட பிரச்சனைகளாகி விட்டன.

வீட்டிலும் சரி அலுவலங்கள் பொது இடங்களிலும் சரி பாவனைக்குரிய பொருட்களுடன் நீர், மின்சாரம், போன்றவை வீண் விரயமாக்கப்படுவதைப் பற்றிக் எத்தனை பேர் உணர்கின்றார்கள்? அலுவலகத் தளபாடங்களும் கருவிகளும் சரிவரப் பேணப்படுவது மில்லை. தனி நபர்கள் செய்யும் வீண் விரயங்கள், தேசிய, உலக இழப்புக்களே. உணர்க!

உலகம் இன்று கொதித்துப் போய்க்கிடக்கின்றது. இயற்கை சிதைக்கப்படுகின்றது. அதுபற்றிய கரிசனை மக்களிடம் பெரிதாக இல்லை குளிர் பிரதேசங்களில், பனி அதிக வெப்பம் காரணமாக உருகி அதன் வளம் குன்றுகின்றது. இதனால் அங்குள்ள பறவைகள், பிராணிகள் தொகை குறைந்து ஈற்றில் மறைந்தேவிடும் அபாயம் உள்ளதாக புவியியல் விஞ்ஞானிகள் அபாய சமிக்ஞை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

புவி உஷ்ணமடைவதால், மரங்கள் அருகுவதால், குடிநீர்ப் பிரச்சனை எழுகின்றது. நல்ல மழை இல்லை மழை வந்தால் வெள்ளம் ஏற்படுகின்றது. அதைத் தடுக்க மரம், புல், பூண்டுகள் இல்லை. யுத்தத்தால் ஏற்படும் விஷ



Tamilnavarasam.com

வாயுக்கள், காடுகள் அழிப்பு, இரசாயனத் தொழிற்சாலைப் பெருக்கம், எல்லாமே சேர்ந்து பூமியின் மேல்சட்டை கிழிந்துபோய் அது ஆடையிழந்து போய்கிடக்கின்றது. ஓசோன் என்கின்ற போர்வையைக்களைந்த பாவிகளாகி மக்கள் இன்றுபெரும் குற்ற வாளிகளாகி விட்டார்கள்.

உலக ஆரோக்கியம் பற்றிய கரிசனையை இனி யாவது தெரிந்து கொள்வோமா? ஒரு தாய் தனது குழந்தை மீது கொள்ளும் கரிசனை போலவே எம்மைப் பெற்ற தாயினும் மேலாம் புவி மாதாவை கண்போலப் போற்று வோமா! அவளுக்கு இன்னல் இழைக்காமல் இருப்பதுவே பெரிய நற்காரியமும் ஆகும்.

தனது குடும்பம், ஊர் உறவுகள் எல்லாமே இன்றைய மன அமைதிக்கும் வாழ்வின் மேம்பாட்டிற்கும் மட்டுமின்றி எங்கள் எதிர்காலத் தேவைக்குமானவர்கள் என எண்ணிச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றோம். இந்த உறவுப் பிணை ப்பினால் எழுந்த அன்பு பாசத்தினால் காட்டும் “கரிசனை” என்பது ஒரு புதுமையல்ல. இது இயற்கையான உணர்வும் யதார்த்தமான நடத்தைகளும் தான்!

ஆனால் எங்கோ இருக்கும் ஜீவன்களுக்காவும் இயற்கையின் உற்பத்திகளான ஜடங்களுக்காகவும் கொண்ட பேரன்புதான் எங்கள் மனோ விசாலத்தினைக் காட்டுவதா கும். பெரியவர் ஒருவரது இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அவர் ஒருதட்டில் வைத்துத் தானியங்களைத் துப்புரவாக்கிக்





கொண்டிருந்தார். ஏன் இவற்றைத் துப்பரவாக்கிச் சமையல் செய்யவா போகின்றீர்கள் எனக்கேட்டேன். அதற்கு அவர் இல்லையில்லை. கோவில் புறாக்களுக்குப் போடப் போகின் றேன்” என்றார். அவைகளைச் சும்மா போட்டால் என்ன என ஆச்சரியத்துடன் கேட்டேன். அதற்கு அவர் சொன்ன பதில் இது நாங்கள் இவைகளை அப்படியேயா சாப்பிடுகி ன்றோம். இல்லையே எதையும் துப்பரவு செய்யாமல் எப்படிக் கொடுப்பது?” என்றவர் மற்றும் ஒரு தட்டைக் காண் பித்தார். அதில் தேங்காய் உடைத்து எடுத்து அழகாகச் சின்னச் சின்னச் சொட்டுக்களாக்கியிருந்தார். இவை களுடன் தானியங்களைக் கலந்து புறாக்களுக்குக் கொடுக் கப் போவதாகச் சொன்னார்.

சாதாரண மனிதர்கள் உணவைப் பக்குவமாகச் சேர்த்து உண்ணுவதுபோல் புறாக்களுக்கும் அவர் கொடுக்க எண்ணிய அந்த மென்மையான கரிசனை உணர் வினை என்னென்பது? கொடுக்கின்றது தானம் என்பதால் அதில் மனம் லயிப்பின்றிக் கொடுக்கலாமா? பெரிய அன்னதானம் செய்யும் போது வெட்டப்படும் காய்கறி வகைகளைஅதன் தரம்அறியாது சமையலில் சேர்க்கலாமா? யாரோ சாப்பிடுகின்றார்கள் என்பது போல் கண்டபடி சமையல் செய்யலாமா? செய்கின்ற காரியங் களைச் சீராகச் செய்தலும் சிரத்தையின் வெளிப்பாடுதானே!

நாம் எவ்வளவு பிறருக்காகச் செலவு செய்கின்றோம் என்பது பெரிதல்ல. செய்கின்ற காரியத்தை அன்புடன்,



RangaRakes


Tamilnavarasam.com

கரிசனையுடன் செய்கின்றோம் என்ற மன நிறைவுடன் செய்ய வேண்டுமல்லவா? சிறிய உதவிகளேயாயினும் நற் சிந்தனையுடன் செய்தலே உத்தமமான மேன்மைப் பண்பாகும். உணர்க! கரிசனையுடன் கூடிய பணிகளே நிதானமுடைய மனிதனாக்கி எம்மை முழுமைப்படுத்தும்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
02.09.2007







# அற்புதம்

இறைவன் படைப்பில் எல்லாமே அற்புதம் தான். மனிதப்பிறப்புகள் மட்டுமல்ல எல்லா ஜீவன்கள் ஜடப்பொருட்கள் எல்லாமே அற்புதமானவைதான். பணம், புகழ் மட்டுமே கொண்டவர்களையே நாம் அற்புதமான உயர்ந்தவர்களாகக் கொள்கின்றோம். ஆனால் நல்ல அறிவும் பண்பும் இன்றி வாழ்தல் அத்திவாரம் இல்லாத மாளிகையைக்கட்ட விழைவது போலவே அமையும். இறைவன் சிருஷ்டியினை எண்ணி ஆச்சரியப்படும் நாம், அவன் அளித்த அறிவை செறிவாக்கி உலகிற்கு எம்மாலான ஈகைகளைச் செய்வோமாக! சிறப்பாக வாழ்வாங்கு வாழுவதே ஓர் அற்புதக் கலைதான். வெறும் தேகத்தை வைத்துச் சீவித்தல் மட்டும் வாழ்க்கையல்ல. பிறருக்கும் சந்தோஷங்களை அளித்தலே இந்த ஜீவிதத்தின் ஆரோக்கிய நிலையும் அற்புதப் பணிகளுமாகும்.

இந்த உலகம் மிகவும் அற்புதமானது. இங்கு அசைகின்ற ஜீவன்கள் அனைத்துமே அதிசயமானவையே. இவைகளின் தோற்ற வேறுபாடுகள் குண இயல்புகள், நடத்தைகள் எல்லாமே வியப்புக்குரியன என்பதில் ஏது சந்தேகம்? நாம் காண்கின்ற மரம், செடிகள், புல்பூண்டுகள், சின்னஞ்சிறு



RangaRakes

Tamilnavarasam.com

உயிரினங்களில் இருந்து பெரிய விலங்குகள், கடல்வாழ் உயிரினங்கள் போன்றவை பற்றிச் சில கணம் சிந்தித்துப் பாருங்கள். மனிதரிடம் இல்லாத அற்புதக் கலவைகளாக உங்களுக்கு அவை தோற்றம் காட்ட வில்லையா? சொல்லுங்கள்!

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த அவனியை நிமிர்த்த வாழ்ந்து காட்டிய தீர்க்கதரிசிகள் மகான்களின் வாழ்க்கை, அவர்தம் வார்த்தைகள், அதன் பெறுமதிகள் எல்லாமே மேலான அற்புதத்திலும் அற்புதமன்றோ!

இந்த மகான்களை நாம் சாதாரண மனிதர்களுக்குச் சொல்லும் வார்த்தையான "பிறந்தார்" என்கின்ற சொற் பதத்தை நாம் பிரயோகிப்பதில்லை. அவதாரம் செய்தார்கள் என்று தானே சொல்லுகின்றோம். செயற்கரிய செய்த எவரா யினும் அவர்கள் அற்புத புருஷர்களேயாவர்.

சாதனை புரிந்தோர் சரித்திரங்களையும், இன்னமும் மக்களுக்காக உழைத்திடுவோரையும் கண்டும் காணாமல் போவோரை வெறும் ஜடங்களாகவே கருத வேண்டும். முற்போக்காக வாழ்ந்தவர்கள் மூலம் தானே மற்றவர்களும் அதைக் கண்டு தங்களையும் முழுமை யாக்குகின்றார்கள்.

எனவே எதிர்காலச் சந்ததியினரின் வளர்ச்சிக்காக நாங்கள் அவர்களுக்கு இட்டுச்செல்லும் வளங்களின் பொருட்டாவது எம்மை நாம் முழுமையானவர்களாக ஆக்கு





வோமாக! சும்மா வாழ்ந்து கொடுப்பனவுகளை ஈந்துவிடாது வெறுமனே செத்துப்போவது ஒரு வாழ்வாகுமா? பிறர் செய்யும் அற்புத கைங்கரியங்களை நாமும் உருவாக்கு வோமாக!

யாராவது ஒருவர் தந்தவைகளை மட்டுமே அனுப விக்க எண்ணாது நாங்களும் கொடுக்கின்ற கொடையா ளிகளாக நடைபயில்வோம். "வாழ்க்கையின் நெடுந்தூரம் பயணம் செய்துவிட்டேன்" என்று சொல்லும் நாம் வாழ்க்கை யில் தமது நலனைமட்டும் சாராது மற்றவர்களுக்காக எத்தனை அடிகள் முன்வைத்துச் சென்றாய் என எம்மை நாம் கேட்க வேண்டாமோ? எங்களை நாம் கேள்விகேட்கும் போதும்நடுவு நிலைமையுடனேயே எம்மையும் நோக்கிக் கேட்டாலே அற்புத புருஷர்களாக நாங்களும் மாறிவிட முடியும். அதைவிடுத்து எங்களுக்குச் சார்பாகவே நடுவு நிலை தப்பி எமக்கான வாதங்களை முன்வைத்து வாழக்கூடாது.

தங்களுக்காக வாழ்கின்றவர்கள் எல்லோருமே உலகில் இயங்கும் அன்னியப்பட்ட மனிதர்களாக மாறிவிடுகின்றார். இதன் பெயர் "சீவித்தல்" அல்ல வெறும் தேகத்தை வைத்து நாட்களை "ஓட்டுவித்தல்" என்பதுவாம். வாழ்தல் என்பது, பிறரை வாழ்வித்தலாம். மற்றவர்க்கு நிம்ம தியை, நல் உணர்வை, சந்தோஷங்களை கொடுத்தல் அல்லது கொடுப்பதற்கான பாதைகளை உருவாக்கி அளித்தலுமாகும். வெறுப்பு, வேதனை, விரக்தியுடன்



RangaRakes

Tamilnavarasam.com

வாழ்பவர்களைத் திருத்திஅவர்களை உருவாக்குவதைவிடச் மிகச் சிறந்த மானுட மாண்புமிக்க செயல் வேறென்ன உண்டு அன்பர்களே!

இன்று பணம், புகழ், செல்வாக்கு உள்ளவர்கள் மட்டும்தான் அற்புதமானவர்களாக மாறிடமுடியும் என்கின்ற எண்ணம் உருவாகிவிட்டது. நல்ல மனிதாபி மானம், அறிவு, பண்பு எல்லாமே மனிதனிடமிருந்து விலகினாலும் அது பற்றிச் சிந்திக்க எண்ணுவதில்லை ஏனெனில் பணம் வந்து விட்டாலே புகழ், செல்வாக்குகள் தானாகவே வந்து ஒட்டிக் கொள்கின்றன. எனவே இவைகளைப் பெற்றவர்களின் தயவு இன்றி ஒரு காரியமும் நடக்காது என எண்ணுபவர்களால் கண்டபடி வாழ்ந்து வரும் மனிதர்களைக்கூட அற்புதமான வர்கள் என எண்ணத் தலைப்படுபவர்களை என்னென்று சொல்லுவதோ?

நல்ல மனிதர்களிடம் மட்டுமே உதவிகளை ஆதரவு களைக் கோருவேன் என எத்தனைபேர் திடசங்கல்பம் பூண்டுள்ளார்கள்? எவ்வளவு தான் கல்வி, ஞானம், பணம், புகழ் இருந்திட்டாலும் மானுடநேயம் இல்லாதவனை அற்புதமானவன் எனச் சொல்லிட முடியுமா?

இன்று எங்களால் நம்புவதற்கே இயலாத அளவு புதிய புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இப்படியும் நடக்குமா என வியந்து நோக்கு கின்றோம் இமைப்பொழுதிலும் குறைந்த நேரவேகத்தில்





தகவல்களைப் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். விஞ்ஞான வேகத்தின் அற்புத சக்தியை என்ன வென்பது?

எனினும் இந்த விஞ்ஞானம் அதிவேகமாகப் பல வசதிகளை மக்களுக்கு உருவாக்கிக் கொடுப்பதனால் மனிதன் கடவுள் கொள்கையில் இருந்தே பிறழ்ந்து விடுவானோ என அச்சப்பட வேண்டியுள்ளது. ஆன்மீக விழிப்பூட்டல் என்பது மக்களுக்கு அவர் தம் வாழ்விற்குக் களிப்பூட்டாமல் விஞ்ஞானத்தினால் உருவாக்கப்பட்ட வெறும் சடப்பொருட்கள் மீதான மோகம்தான் தணியாத தாகமாகி விடுகின்றதே என ஆன்மீகவாதிகள் கவலைப்படக் காரணமாக இருக்கின்றது.

மேலும், இந்த விஞ்ஞானமும் அதன் பெறுபேறு களும்கூட இறைவன் பேரருளால்தான் கிட்டியது, கிட்டி வருகின்றது என்பதை எத்தனை பேர் ஒத்துக் கொள்ளப் போகின்றார்கள்? உண்மை என்கின்ற வித்து வழங்குகின்ற கனிகள் எல்லாமே ஒரே தன்மையது. இதுபோலவே, மெய்ஞானமும், விஞ்ஞானமும் கூட ஈற்றில் புகல்வது ஒன்றே என உணர்ந்து செயல்பட்டால் மனிதனுக்கு இவை யெல்லாம் பெரும் புதிருமல்ல.

விஞ்ஞானத்தை அல்லது மெய்ஞானத்தைத் திட்டிக் குறைகூறுபவர்கள் அது அர்த்தமற்றது என உணராது போனால் அது அவர்கள் இருந்த இடத்தில் சந்றேனும் அசையாது வானத்தைத் தொட்டுவிட எண்ணுகின்ற முட்டாள்தனம்தான்.



RangaRakes

Tamilnavarasam.com

நீங்கள் அற்புதமானவன் எனக் கருதுபவர்களை உற்று நோக்குங்கள். தனக்கு எனக் கருதாது தன்னை இழந்து வழங்குபவனே அற்புதமான மனுஷனாகத் தெரிகின்றான். கனவிலும்கூடப் பிறர் நலனை மட்டும் நோக்குகின்ற மனிதர்கள் இல்லாமல் இல்லை. எப்போதோ ஒரு தடவை பார்த்து அன்பு பாராட்டியமைக்காக என்றும் அவர்களுக்காகத் தங்கள் உதவிகளைத் தாராளமாகக் காட்டும் ஒருவர் அதிசயமான பிறவி தானே?

தெய்வ நம்பிக்கையுள்ளவர்கள் பலர் தமக்கு நேர்ந்த அற்புதமான அனுபவங்களைப் பரவசத்துடன் சொல்லிக் கொள்வார்கள். தாங்கள் எதிர்பாராத விதமாகபெற்ற தெய்வகடாட்சம் பற்றி உணர்வு பூர்வமாகச் சொல்லும் போது அதிசயமாகவே இருக்கும். இவர்களில் சிலர் தமது கனவுகள் மூலம் பல செய்திகளைப் பெற்றதாகவும் கூறுகின்றனர். கண்ணுக்குப் புலனாகாத இறை சக்தியை நெஞ்சினூடாக உள் உணர்வினூடாக கண்ட சுகானுபவங் களை நாம் யாராவது சொன்னால்அதுபற்றி நம்பமறுத்து விமர்சிப்பவர்களும் உளர். தங்களது வேண்டுகோளுக் கிரங்கி இறைவனால் வழங்கப்பட்ட வரப்பிரசாதத்திற்காக நேர்த்திக்கடன் செலுத்தும் பக்தர்களை நாம் கண்டு வியந் திருக்கின்றோம்.

உடலை வருத்தி உடலில் ஊசிகளை ஏற்றியும் காலில் முள்ளினாலான மிதியடிகளை அணிந்தும், தீயில் மிதித்தும், முட்களினால் தைக்கப்பட்டு ஏற்றப்பட்டு பறவை





போல் மிதந்தும் நேர்த்திக்கடன் செலுத்துபவர்களைப் பார்த்தால் வியப்புத்தான் வரும். கூடவே பார்ப்பவர்களுக்கு பக்திப் பரவசமும் கண்ணீரும் சொரியும்.

எல்லா மதத்தினருள்ளும் தெய்வசக்தி வரப்பட்ட பக்தர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் கூறும் செய்திகள் மெய்சிலிர்க்க வைக்கும் அற்புதத்தன்மை வாய்ந்தன. அவரவர் தங்கள், தங்கள் தெய்வங்களினூடாகப் பெற்ற இறை அனுபவங்களை அதன் மீது நம்பிக்கையற்றவர்கள் விமர்சனம் செய்வது அர்த்தமற்றதேயாகும். ஒருவர் பெற்ற அனுபவங்களை வெளியில் இருந்து நோக்குபவர் எப்படி விமர்சிக்க முடியும்? உணர்வுகள் நினைவுகள் அவரவர் நிலையோடு இணைந்தவை. அவர்கள் நிலையில் இருந்து நோக்கும்போது அவை சரியானவையே. ஒருவர் மனதோடு புகுந்து எவரும் விளையாட முடியாது.

என்றுமே சாதனைகளைச் செய்பவர்களைப் பாருங்கள். விஞ்ஞானம், அரசியல், பொதுநலத்தொண்டு, சமயம் என எத்துறைகளை நோக்கினாலும் அதில் ஈடுபட்டுள்ளவர்களில் சிலரால் தான் நன்கு பிரகாசித்துக் கொண்டு சகலரையுமே ஈர்த்துவர முடிகின்றது. இந்த அற்புத சக்தி எங்கிருந்து வழங்கப்பட்டது?

மனிதன் தன்மீதும் தனக்கும் மேலாம் இறைவன் மீதும் வைத்த அசைக்கமுடியாத நம்பிக்கையினால் எல்லாமே கைகூடுவதாகச் சொல்லப்படுகின்றன. மனித



RangaRakes

Tamilnavarasam.com

ரால் செலவழிக்கப்படும் ஒவ்வொரு கணப்பொழுதுமே பிரயோசனமாகக் கழிக்கப்பட்டால் அதன் பெறுபேறு எம்மால் நினைக்கவொண்ணா அளவு பெறுமதி மிக்கதாகி விடும்.

“கணப் பொழுதேயாயினும்
யுகப்பொழுதின் சாதனை செய்”
எனும் கூற்றை மனதினுள் நிறுத்துவோம்!

எனவே கடமைகளைத் தொடர்ந்து ஆர்வமுடன் செய்துவரும் போது பெற்ற அனுபவங்களுடாக ஒவ்வொரு கணங்களுமே ஆக்கபூர்வமாகி அவை விஸ்வரூபமான பெறுமதிமிக்க பெறுபேறுகளை அள்ளிக்கொடுத்து விடும்.

ஹே மனிதா....!! இந்த அற்புத ஆற்றல் உனக்குள் உண்டு. அதனை நீவளர்ப்பாயாக! முடிக்காத பணிகளை யிட்டுக் கவலைப்படுவதை விடுத்து எடுக்கும் கருமங்களை விடாது தொடர்ந்து செய்க! பின்னே திரும்பிப் பார்க்கும் போது மனக்குழப்பம் ஏற்படலாம். எனவே பார்வையை ஒன்றாக்கி முன்னே பதியவை! தொடர்ந்து விரைவாக முழுவேகத்துடன் ஆனால் மனம் மட்டும் நிதானமாக மிக நிதானமாக....! வெளியே தகாத குரல்களைக் கண்டனங் களைக் கேட்காதவனாக எடுத்த நல்ல முடிவை மட்டுமே குறிக்கோள் சிதறாமல் ஒரு நோக்காய் முன்னே சென்று உன் விழிகளை விரித்து நடந்து செல். பாதைகளில் உன் விழிகளை விரித்து நடந்து செல்...! பாதைகள் உனக்காக





வழிவிடும். மெல்லெனச் சோர்வுகள் விலகும். எல்லாமே வெளிச்சமாக துல்லியமாகத் தோன்றிட உன்வாழ்க்கைப் பயணமும் அதனோடு உன் இலட்சியங்களும் அற்புதமாக நிறைவேறிக் கொண்டேயிருக்கும்.

சாதனைகள் என்பது செய்ய முடியாதன அல்ல. மனிதன் ஒருவன் அவன் உங்களைப் போல் உள்ளவனே! சாதனை செய்யும் போது நீ மட்டும் விழி பிதுங்கி எனக்கு எதற்கு வீண் வம்பு எனக் கருதலாமா? ஒவ்வொருவனுமே தனக்கேயுரித்தான தான் விரும்பும் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டால் அவன் வியப்புக் குரிய அற்புத ஆற்றல் மிகு மாமனிதனாகி விடுவான்.

மனிதர்கள் என்றுமே களிப்புடன் வாழ வேண்டும் என்பதற்காகவே கலைகளும் இலக்கியங்களும் படைக்கப பட்டன. இவைகளின் ஆட்சியினாலேயே நாம் எங்கள் துன் பங்களை ஏக்கங்களைத் துறந்தும் மறந்தும் வாழுகின்றோம்.

இசை, நடனம், இலக்கியம் என்கின்ற விஷயங்களின் விற்பன்னர்கள் தங்கள் வெளிப்படுத்துகையினை மக்கள் முன் நிறுத்தும் போது நாங்கள் அடையும் புளகாங்கித உணர்வுகள் எத்துணை அற்புதமானது என்பதையும், இதனால் இதயம் அடையும் தெளிவுகள் அழியா இன்ப நுகர்ச்சியுமன்றோ!

மேலும் சகல மதங்களின் சம்பிரதாயச் சடங்குகள்



RangaRakes

Tamilnavarasam.com

கிரியைகள், விழாக்கள், வைபவங்கள் போன்றவைகளின் அர்த்தங்கள் எல்லாமே, அற்புதமான சங்கதிகளே!

நாங்கள் மக்களோடு மக்களாக ஐக்கியப்பட்டு இசைவுடன் பேதமற வாழுவதற்காக வாழும் முறைகள் எல்லாமே எங்களாலேயே உருவாக்கப்பட வேண்டியதே! சிறப்பாக வாழ்வதுவே அற்புதமான ஒரு கலை தான். அதனை நாங்கள் தான் கற்றுக்கொள்ள வேண்டும். மனதை வருத்தி அழுத்தி, அழுது வாழ்வது வாழ்வு அல்ல."நீ ஒரு அற்புதமான பிறவி" என்று சொல்வதானது "நீ இனிமையான, புத்தி சாலித் தனமான, பிறருக்கு உதவு பவனாக இருக்கின்றாய்" என்கின்ற அர்த்தத்திலேயே அமைய வேண்டும்.

மனதினுள் அதன் ஆழத்தினுள் புதைந்துள்ள அன்பினாயே மகிழ்ச்சி வெள்ளம் பொங்கி வெளியே பிரவாகித்தோடும். இந்த அன்பின் வெளிப்பாடுகள் பல சாதனைகளைச் செய்து கொண்டேயிருக்கும்.இந்த அற்புத சக்தியை நாங்களே சிருஷ்டிக்க இயலும். ஏன் முடியாது?

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
15.08.2007







# அன்பான தம்பதியினரைப் புறத்தாக்கங்கள் பற்றுவதில்லை!

கடந்த கால கசப்பான விஷயங்களை மீட்டு எடுத்து ஆராய்வது குடும்ப வாழ்வில் கசப்புணர்வையே தோற்றுவிக்கும். தகாத விடயங்களை மறந்துவிடுக! நல்லதை மட்டும் நெஞ்சத்தே நிறுத்துக! சந்தோஷங்களையே என்றும் தேடும் தம்பதியினர் துன்பங்களை தேட விழைவது அழகல்ல. குற்றம் பகர்வது தகாது. செய்த தவறுகளை நியாயப்படுத்துவதால் உறவுகள் நலிவுறும். குடும்பச் சண்டையை இரசிப்பவர்களுக்கு இடம் தரவேண்டாம். எத்தகைய புறத்தாக்கங்கள் இடர்கள் சூழ்ந்திடினும் அன்பான தம்பதியினர் அதற்குள் ஆட்படாது, தமக்குள்ள நீங்காத காதலால் வாழ்வில் களிப்பினையே முழுமையாக்கிக் கொள்கின்றார்கள்.

கணவன், மனைவி இருசாராரிடத்தே மிகவும் சிறிய பிரச்சனைகள் கூடப் பூதாகரமாக உருவெடுப்பதன் பிரதான காரணம் இவர்கள் இருவருமே எப்போதோ, நடந்துபோன கசப்பான சங்கதிகளைத் தூசி தட்டிப் புதுமெருகூட்ட எண்ணுதலேயாகும்.



RangaRakes
Tamilnavarasam.com

மறக்க வேண்டிய விஷயங்களை மனதிலேயே பூட்டி வைப்பதனால் ஏதுபயன்? மேலும் தகாத விஷயங்களைச் சட்டென மறந்துவிட முடியாது என இவர்கள் தமக்குத்தாமே எண்ணிவிடுவதனால் பிரச்சினைக்குள்ளேயே விருப்புடன், தாமாகவே அமுங்கிவிட எண்ணுகின்றார்கள்.

ஒருவரைக் குற்றம் சொல்வதனால் மட்டும் தமக்குரிய நியாயம் கிட்டிவிடும் என்பதுபோல் தவறான எண்ணம் வேறு என்ன இருக்கின்றது? தனது தரப்பு நியாயங்களை மட்டும் ஏற்குமாறு கணவன், மனைவியை நிர்ப்பந்திப்பதும் அவ்வண்ணமே மனைவியும், தனது நியாயங்களைக் கேட்டேயாக வேண்டும் என அடம் பிடிப்பதும் அவர்களுக்கும் ஆகாத விஷயம் மட்டுமல்ல, அவர்களது செயல்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகளையும் பாதிக்கும் செயல்தான்.

கணவன், மனைவி சந்தோஷமாக இருக்கும் பொழுது பேசப்படும் சீண்டுதல் கதைகளால் சிலசமயம் பெரிய சண்டைகள் மனஸ்தாபம் வந்துவிடுவதுமுண்டு. மேலும் எங்கே கணவன் அல்லது மனைவி ஏதாவது தெரியாத்தனமாக வாய் பிசகாய் சொன்னவற்றையே இவர்கள் ஒரு அஸ்திரமாக எடுத்துத் துரும்பான விஷயத்தைப் பெரிதுபடுத்த எண்ணுதல் லஜ்ஜைக்குரியதாகும்.

நல்ல விஷயங்களை மட்டும் மனதில் வைத்திருந்து அவைகளை சமயத்தில் பரஸ்பரம் இருசாராரும் தம்மி





டையே வெளிப்படுத்துவதால் இவர்களின் காதல் வாழ்க்கை மேலும் மெருகேறும். மனங்களின் கீறல்கள், ரணங்களாக மாற்ற இடமளிக்கலாகாது. பரஸ்பரம் இருசாராரும் நல்வார்த்தை, அன்பு, அரவணைப்பினால் முற்று முழுதாகப் புதுமணத் தம்பதிகளாகவே என்றும் வாழ்கையை மாற்றி வாழ்வில்வெண்மை பொலிய வைத்திடல் வேண்டும்.

தங்களைப் பத்துப்பேர் பார்த்துப் பெருமை கொள்ள வேண்டும் என்பதை விடுத்து தன்முனைப்புடன், தங்களது கருத்துக்களையே முன்னிலைப் படுத்த எண்ணுதலால், வாழ்க்கையில் எட்ட வேண்டிய எல்லையை பாதையை விட்டேகி தான்தோன்றித்தனமான, சுயநலமிக்க வாழ்வோடு எப்படித் தொடர்ந்து இருப்பது இயங்குவது?

குடும்பம் என்று வந்துவிட்டால் குடும்பத் தலைவனோ அன்றித் தலைவியோ, அல்லாத, தவறான கொள்கை, நடத்தைகளை ஜீரணித்தேயாக வேண்டும் என்பதில்லை. இருவருமே நட்புறவுடன், கனிந்த காதல் உணர்வுடன் மென்மையாகப் பக்குவமாகத் தங்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து தெளிதல், பெரிய சிரமமும் அல்ல.

இதை விடுத்து அதிகார தோரணையுடன் கணவனும், தனது குடும்ப அந்தஸ்து அல்லது பதவி, செல்வத்தை முன் நிறுத்தி மனைவியும் எதிர்வாதம் புரிதலும் அடுக்காத செயல்.



RangaRakes

Tamilnavarasam.com

இருக்கின்ற காலம் எமக்கு மட்டுமானதுமல்ல. குழந்தைகளுக்குமாக வாழவேண்டும். எனவே பிடிவாதம், எதிர்வாதம் பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் கூடவே கூடாது.

அன்பான தம்பதியினர் வாழ்க்கையைப் பாருங்கள்! சந்தோஷங்களை அவர்களாகவே உருவாக்குகின்றார்கள். இவர்களைப் புறத்தாக்கங்கள் ஒன்றும் செய்துவிட முடியவே முடியாது.

தினக்குரல்
ஞாயிறுமஞ்சரி
“இவள்” பகுதி
11-10-2009







# ஆராயாது நடந்தேறும் திருமணங்கள்: பாதிப்புக்கள்

அவசரம் அவசரமாக நடந்தேறும் திருமண பந்தம் அரைகுறை வாழ்க்கையாக முறிந்து போவது அறிவிலித்தனத்தால் நடக்கும் செயல். எப்படியாவது திருமணம் நடந்தால் சரி என எண்ணுவோர், அதன் தாத்பரியத்தைக் கடுகளவும் கருத்தில் கொள்வதில்லை. தங்கள் பெண்ணுக்கு வைத்தியர், பொறியியலாளர் அல்லது கணக்காளர் போன்ற உயர் பதவிகளில் உள்ளவர்களே மணமகனாக வரவேண்டும் எனக் கருதும் பெற்றோர் முதலில் ஒரு நல்ல குணசாலி மருமகனாக வரவேண்டும் எனக் கருதவேண்டும். பொருத்தமான மணமகள், மணமகனைத் தேடும் விஷயத்தில் எச்சரிக்கையுணர்வு நிச்சயம் தேவை.

“சொந்தக்காரன் என்பதால் நாங்கள் எங்கள் பெண்ணை இவனுக்குக் கல்யாணம் செய்து வைத்தோம். இவனை நம்பி வெளிநாட்டுக்கும் அனுப்பி வைத்தோம். ஆனால் நடந்தது என்ன? எங்கள் மகளைத் துரத்தியே



RangaRakes
Tamilnavarasam.com

விட்டான். அங்கே இவனுக்கு மனைவி பிள்ளைகள் ஏற்கனவே இருப்பது எங்களுக்கு அறவே தெரியவில்லை. இப்போது என்ன செய்வது?"

இப்படி அழுது புலம்பும் பெற்றோர் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். சொந்தக்காரப் பையன் என்றால், எதுவுமே விசாரிக்காமல் திருமணம் செய்துவைக்க முடியுமா? மேலும் இனசனம் என்றால், கொஞ்சமாவது பாச சம்பந்தம் இருக்கும் என்று தான் இனசன உறவுக ளுக்குள் திருமணம் செய்துவைக்கின்றார்கள்.

ஆயினும் ஒழுக்கம் கெட்டவர்களுக்கு உறவுகளின் இன்றியமையாத் தன்மை, அதன் வலு, அன்பு, பாசத்தின் இறுக்கம், அழுத்தம் பற்றிப் புரிவதேயில்லை. இதுபற்றிய பல செய்திகளைப் பெற்றோர் அறிந்த பின்னரும் கூட, உலகம் பற்றியே அறியாமல், அப்பாவிகளான, குழந்தைத் தன்மையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமது பெண் பிள்ளைகளை விசாரிக்காமலேயே, திருமண பந்தத்தினுள் கட்டியடித்து விடுகின்றார்கள். ஓர் உண்மைச் சம்பவத்தைக் கூறுகின்றேன். சாவகச்சேரியில் உள்ள கிராமம் ஒன்றில் நடந்தது.

வெளிநாட்டில் தொழில் பார்க்கும் நெருங்கிய உறவுக்கார பையனைத் தமது மகளுக்குத் திருமணம் பேசி, உடனேயே நிச்சயம் செய்துவிட்டனர். மணமகள் கல்லூரி யில் படித்துக் கொண்டிருந்தாள். கல்லூரிப் படிப்பிற்கும்





முடிவு கட்டப்பட்டது. நல்ல சீதனம். மணமகன் வெளி நாட்டில் வேலை பார்க்கின்றவர் என்பதால் பெற்றோர், உறவினர் மகிழ்ச்சியில் மிதந்தனர்.

திருமண நாள் அன்றே மணமகன் சற்றே சோர்வாக இருந்தான். ஏன் அவ்வாறு உறவினர்கள் கேட்டதற்கு, அவர் ஊர் மாற்றமாகையால் சீதோஷ்ண நிலை சரிப்பட்டு வரவில்லையென மணமகனின் தாயார் கூறிவிட்டார்.

மணமகன், மணமகள் கழுத்தில் தாலி கட்டியா யிற்று. மணமகன் சற்று பதற்றத்துடன் காணப்பட்டான். புதிய தம்பதிகள் இருவரையும் அம்மி மிதித்தல், சடங்கிற் காக மண மேடையைச் சுற்றி வருமாறு புரோகிதர் தெரிவித் தார். இருவருமே மணமேடையைச் சுற்றி வரும் போதே, மணமகன் மேலும் தள்ளாடித் தடுமாறினான். எல்லோருமே வியப்புடன் பார்த்துக் கொண்டனர். ஆயினும் திருமண வைபவச் சடங்குளில் பூரண சந்தோஷம் மணமகனிடம் காணப்படவில்லை.

ஏதோ ஒப்பிற்காக சடங்குகளைச் செய்து முடித் தான். எல்லாமே நிறைவு பெற்று முதல்நாள் இரவின்போது தான் மணமகளுக்கு எல்லாமே புரிந்தது. அவன் போதை வஸ்திற்குப் பூரணமான அடிமையானவன் மேலும் புது மனைவியிடம் சொன்ன செய்திகேட்டு அவள் அதிர்ச்சி யடைந்து விட்டாள்.



RangaRakes

Tamilnavarasam.com

"நான் எனது நாட்டிற்கு உடன் திரும்பிப் போக வேண்டும். எனவே நீ இன்னமும் ஆறு மாதமோ, ஒருவருடமோ" இங்கேயே இரு என்று சொன்னான். இந்த விஷயத்தை அவள் பெற்றோரிடம் சொன்னதும் அவர்கள் அதிர்ந்தே போய்விட்டனர். இனிமேல் என்ன செய்ய முடியும்? அவர்கள் அவனிடம் கெஞ்சிக் கூத்தாடினர். அவன் ஏதோ சொல்லிச் சமாளித்தான். பின்னர், விஸா எடுக்க வேண்டும் எனச் சொல்லி தனியாகவே சென்றவன், அதன் பின்னர் எப்படியோ தனது மனைவியை தான் இருக்கும் இடத்திற்கு அழைத்துவிட்டான். அந்த அப்பாவிப் பெண் கணவனிடம் சென்றபின்னர் நடந்த சம்பவங்கள் தான் மிகவும் கொடியதாகும்.

நித்தியமான போதைவஸ்திற்கு அடிமையான அவன், மனைவியுடன் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ள வில்லை. மொத்தத்தில் அவன் ஒரு சராசரி மனிதனாகவே நடந்து கொள்ளவில்லை. ஒரு நாள் அவள் திடீரென அங்குள்ள தனது உறவினர்களின் உதவியுடன், சொந்தக் கிராமத்திற்கே பெற்றோரிடம் வந்து சேர்ந்துவிட்டாள். அவளால் இதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

மேற்கூறப்பட்ட சம்பவத்தில் இருந்து பெற்றோரின் ஆராயாத தன்மை நன்கு புலனாகின்றது. மாப்பிள்ளை என்று ஒருவன் கிடைத்தால் போதும், உடனேயே அவளது எதிர்காலம் பற்றியே சிந்திக்காமல் உடன் முடிவு எடுப்பது எவ்வளவு துன்பகரமானது?





தங்களது பெண்ணுக்கு ஒரு வைத்தியர் அல்லது பொறியியலாளர், கணக்காளர் போன்றோரே மாப்பிள்ளை யாக வரவேண்டும் எனக்கருதும் பெற்றோர்கள், முதலில் வரப்போகும் மணமகன் நல்ல குணசாலியானவன் தானா என்பதைப் பற்றிய பூரணமான தகவல்களைப் பெறுவதில் எத்தனை பெற்றோர் ஈடுபடுகின்றார்கள்? ஏமாளித்தன ங்களாலேயே வாழ்க்கை கேள்விக்குறியாகின்றது.

மேலும் உண்மையான அவர்கள் குடும்பத்தில் அக்கறையுள்ள ஒருவர் "நீங்கள் பார்த்த மாப்பிள்ளை அவ்வளவு சரியானவராகத் தாங்கள் அறிந்தவரை தெரிய வில்லை" எனக் கூறிவிட்டால் போதும் அவர் கூற்றின் உண்மைத் தன்மையினை ஆராயாது தாம், தூம் எனக் குதித்து, அவர்பொறாமை காரணமாக அவ்விதம் கூறி விட்டார் என்று முடிவு எடுத்து விடுகின்றனர்.

இன்று உலகம் முன்பு போல் இல்லை. பெண் இனம் ஏமாளிகளாக இருப்பதில்லை. அவர்களும் நன்றாகப் படித்து நல்ல பதவிகளை வகித்து வருகின்றனர். இப்படியி ருக்கும் போது பெண் என்றால் பேதமையுடன் பேசாம டந்தையாக வாழவேண்டும் என்று எண்ணுவது படு பிற்போக்குத்தனமானது. எதற்கும் எச்சரிக்கையுடன் வாழ வேண்டியதும் தெளிந்த நல்ல முடிவு எடுப்பதும் அனைவரி னதும் பாரிய பொறுப்பாகும்.

தினக்குரல் - ஞாயிறுமஞ்சரி - "இவள்" பகுதி - 18-10-2009



RangaRakes

Tamilnavarasam.com



# எல்லோரிடமும் ஆலோசனை கேட்க வேண்டாம்!

உங்கள் மீது நீங்கள் நம்பிக்கை வைத்திருங்கள். தெரியாத விடயங்களில் ஆலோசனைகளைக் கேட்பதில் தவறு இல்லை. நல்லவர்கள், துறை சார்ந்த வல்லுனர்கள், அனுபவசாலிகளை அணுகி நல்ல ஆலோசனைகளைப் பெறலாம். துர்மதியாளரிடம் சரணடைய வேண்டாம். சுயபுத்தி, சுயசிந்தனையின்றி எப்படி வாழ்வது? குடும்ப சமாச்சாரங்களைக் கண்டவர்களுடன் பேசி கேலிக்குரிய நபராக மாறவேண்டாம். குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தீர அவைகளின் யதார்த்த உண்மைகளைப் புரிந்து, உணர்ந்து, பேசினால் தெளிவான முடிவு கிட்டும். பிறரது தலையீடுகளும் உடைபடும்

தங்கள் மீது நம்பிக்கைவைக்காது, பக்கத்து வீட்டுக்காரர்கள் மற்றும் உற்றார், உறவினர்களிடம் சாதாரண சின்னச் சின்ன விஷயங்களுக்குக் கூட ஆலோசனைகளைக் கேட்டு, கஷ்டப்படும் கணவர், மனைவியர் ஏராளம்! ஏராளம்!

இந்த விடயத்தில் முக்கியமாக நோக்க வேண்டியது என்னவெனில் நல்ல படித்த குடும்பஸ்தர்களே, சொந்த





புத்திமேல் நம்பிக்கை கொள்ளாமல் எதற்கெடுத்தாலும் யார் யாரிடமோ போய் ஆலோசனைகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

குடும்பங்களிடையே தோன்றும் சின்ன மனக் கசப்புகள் எல்லாமே, வல்லரசுகளிடையே ஏற்படும் மோதல் போலக் கருதுவதுபோல் இவர்கள் செய்கைகள் இருக்கும். சுயபுத்தி, சுயசிந்தனையின்றி எப்படி வாழ்க்கையை ஓட்ட முடியும்?

நாம் காணுகின்ற எல்லோருமே எம்மிடம் அக்கறை உள்ளவர்கள் எனச் சொல்ல முடியுமா? வெளிப் பார்வையில் பாசாங்கு செய்து நல்லது செய்வதுபோல் பேசுவார்கள். ஆனால் செய்கின்ற காரியங்களோ, அடாவடித்தனமாக இருக்கும். இத்தகைய பேர்வழிகளிடம் போய் ஆலோசனைகளைக் கேட்கலாமா?

இவர்களிடம் போய் குடும்ப சமாச்சாரங்களுக்குத் தக்க பரிகாரம் கேட்டால், கேட்கும் நபர்கள் பற்றியே வெளியே கண்டபடி விமர்சனம் வேறுசெய்து திருப்திப் பட்டுக் கொள்வார்கள். கேட்டால் ஒன்றுமே தெரியாது என்பார்கள், அல்லது குடும்பங்களிடம் இதுவெல்லாம் சர்வ சாதாரணம் எனச் சொல்லி தேறும், ஆறுதல், சமாதானம் சொல்பவர்கள் எத்தனைபேருளர்?

இன்றும் ஒரு சாரார் இருக்கின்றார்கள் இவர்கள்



RangaRakes

Tamilnavarasam.com

உண்மையாகவே அப்பாவிகளாக இருப்பார்கள். இவர்களிடம் போய் யாராவது ஆலோசனைகளைக் கேட்டால், தாங்கள் பெரிதும் தெரிந்தவர்கள் போல் பேசி, சாதாரண விஷயத்தையே தமது அறியாமை காரணமாகத் தவறான அறிவுரை கூறுவதுடன், தம்மிடம் வருவோர் போவோரிடம் மிகவும் பெருமையாகப் "பார்த்தீர்களா.. நான் எவ்வளவு பெரிய விஷயங்களை எனது அனுபவ ஞானமூலம் தெரிந்து வைத்திருக்கின்றேன். இன்றைக்கும் கூட எனக்கு வேண்டியவர்கள் என்னிடம் வந்தார்கள், நான்தான் நல்ல புத்திமதிகளைக் கூறி அனுப்பினேன்" என்று கூறியது மட்டுமன்றி, தம்மிடம் ஆலோசனை கேட்க வந்தவர்கள் பற்றிய சகல அந்தரங்கங்கள், அவர்கள் முகவரி உட்படச் சகல விஷயங்களையுமே விஸ்தாரமாகச் சொல்லி விடுவார்கள். இவர்கள் வேண்டுமென்றே இப்படிச் சொல்லாது விடினும்கூட, இதன் விளைவுகளோ மிகவும் பாரதூரமாக இருக்கும்.

எங்களை நோக்கி மிகவும் நல்லவர்களும் இருக்கின்றார்கள். கெட்டவர்களும் இருக்கின்றார்கள். எமது அனுபவம் மூலம்தான் யார் நல்லவர்கள், யார் கெட்டவர்கள் என உணரமுடியும். ஆயினும் சில சமயம் நாம் எவரையுமே புரிந்து கொள்ளவே முடியாமல் இருக்கின்றது.

எங்கள் நலனில் அக்கறையுள்ளவர்களைக் கூட நாம் கண்டு கொள்ளச் சிரமமாகவும் இருக்கலாம். எமது அறிவுக்குப் புலப்படாமலேயே நல்ல நண்பர்கள் மீது தப்பு





அபிப்பிராயங்களைக் கொள்ள நேரிடுகின்றது. எல்லா நேரங்களிலும் எம்மால் மிகவும் அவதானமாக இருக்க முடிவதில்லை.

எனவே

நாம் சுய சிந்தனை மூலம் எம்மை அறிவதுடன் எம்மைச் சுற்றி இருப்பவர்களையும் புரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்க வேண்டும். சதா எல்லோரிடமும் செல்வதும், அவர்கள் பொழுதை எம் பொருட்டு அவர்களுக்கு இடைஞ்சலை அளிப்பதும் தகாத செயல்கள்!

மேலும், நீங்கள் ஒருவரிடம் சென்று உங்கள் குடும்ப பிரச்சனைகளைச் சொல்லி நல்ல முடிவைச் சொல்லி விடுங்கள் என வற்புறுத்தும்போது, அதனைக் கேட்கும் நபரும் வேறு வழியின்றி ஏதாவது கருத்துக்களை, உளறி விடுவதுமுண்டு.

எனவே, அன்பான நண்பர்கள் யார் எவர் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். கணவன் தரப்பினர் செய்யும் தவறுகளை அவரது உறவினர்கள் ஏற்றுக்கொள்ள மறுப்பதும் அவ்வண்ணமே, மனைவியின் தவறுகளை அவரது உறவினர்கள் ஏற்க மறுப்பதும் இயல்பே. எனவே, இத்தகைய உறவினர்களிடமும் ஆலோசனைகளைக் கேட்கலாமா?



RangaRakes
Tamilnavarasam.com

எல்லா உறவினர்களுமே தவறான கருத்துக்களைச் சொல்வதுமில்லை. எனவே கணவனும், மனைவியும் தாங்களாகவே எந்த வித தன்முனைப்புமின்றி பிரச்சினைகளை எப்படியும் தீர்ப்போம் என்கின்ற திடசிந்தையுடன் ஒன்றிணைந்து பேசினால் எத்தகைய இடர்களும் குடும்பத்தில் நிகழப்போவது மில்லை. இது உறுதி. ஒருவர் கருத்தைக் கேட்க ஆர்வம் இருந்து அதனைச் செவிமடுத்தாலே போதும் குடும்பங்களில் ஏது பிரச்சினை?

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
01-11-2009



RangaRakes





# நல்ல கணவனின் தெரிவுக்கு அவசியமானவை

காதலித்துத் திருமணம் செய்தவர்கள், காலப்போக்கில் தமக்குள் முரண்பட்டுப் பிரிந்து வாழ்வது வேதனை. இளவயதில் காதல் புரியும்போது ஒருவரை ஒருவர் புரியாது திருமணம் செய்வதும், பின்னர் குழந்தைகள் பெற்றபின்னர் விலகி ஓடுவதும் என்ன நியாயம்? மன முதிர்ச்சியற்ற வயதில் இல்வாழ்வில் புகுவது தொல்லைதரும். காதலிப்பதே ஒரு கௌரவம் எனச் சிலர் எண்ணுகின்றார்கள். பெண்கள் தாங்கள் கற்க வேண்டிய வயதில் நிரம்பக் கற்று, சவால் மிக்க உலகில் தம்மைப் பாதுகாத்துக் கம்பீரமாக நடந்து கொள்ள வேண்டும். வாழ்க்கை என்பது ஒரு பரிசோதனைக் களமல்ல உணர்க!

காதல் புனிதமானது, தெய்வீகமானது. இனம், மொழி, மதங்களுக்கு அப்பாற்பட்ட அன்பு நிலை. ஆயினும் திருமணத்தின் முன்னர் வாலிப வயதில் ஒருவரை ஒருவர் சந்திப்பதனால் ஏற்படுவதே "காதல்" எனப் பலரும் தவறாக எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்.



Tamilnavarasam.com

புனிதமான காதல் வாழ்வு என்றும் இனியது. காதல் கொண்டு திருமணம் செய்த பின்பு அந்த வாழ்வு கசந்து வெறுப்பு ஏற்பட்டால் அவர்களது காதல் போலித்தனமான பொய்மையானதே!

காதலித்துத் திருமணம் செய்த எல்லோரதும் வாழ்வும் சுபீட்சமாக இருக்கின்றதா? ஆராயாது உடன் மனம் சலனப்பட்டுத் திருமணம் புரிவதும், இதன் பின்னர் சிலர் வாழும், வாழ்க்கை முறையும், எடுக்கும் கசப்பூட்டும் முடிவுகளும், பலரையும் யோசிக்க வைக்கின்றன.

தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் நான் கடமை புரிந்த வேளையில் என்னைச் சந்திக்க வந்த ஒரு அரச அலுவலர் என்னிடம் சொன்ன விஷயம் இது,

மேற்படி அலுவலர் எமது திணைக்களத்திடம் வீடு கட்டுவதற்குக் கடன் பெற்று இருந்தார். கடனுக்கான கொடுப்பனவுகளை மாதா மாதம் குறிப்பிட்ட கால எல்லைவரை செலுத்த வேண்டும்.

ஆனால் அவரோ பெற்ற கடனை முழுமையாகச் செலுத்தி, தனக்குரிய வீட்டு உறுதியைப் பெற வந்திருந்தார். நான் அவரிடம் "ஏன் ஐயா, நீங்கள் மிக அவசரமாக முழுப் பணத்தையும் ஒரே நாளில் கட்ட விழைகின்றீர்கள்" என்று கேட்டேன். அப்போது அவர் சொன்ன கதை மிகவும் பரிதாபகரமாக இருந்தது.





எனக்கு மூன்று பிள்ளைகள். மூன்று பேரும் பெண் பிள்ளைகள். மூத்த பெண் மருத்துவத் துறையில் பட்டம் பெற்றவள். அவள் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது, தன்னுடன் கூட கல்விகற்கும் மருத்துவ மாணவரைக் காதலித்தாள். அவள் தனது குடும்ப நிலை, பொருளாதாரம், சகோதரிகளது எதிர்காலம் பற்றிய விடயங்களை பூரணமாக ஒளிவுமறைவின்றி அவரிடம் சொல்லியிருந்தாள்.

அந்த நேரத்தில், "சே..சே.. இதுவெல்லாம் பிரச்சனையில்லை. எனக்குச் சீதனம் வேண்டவே வேண்டாம்" என்று என் மகளுக்கு வாக்குறுதி கொடுத்ததை அவள் நம்பிவிட்டாள். அதன் பின்னர், அவர்களது மருத்துவப் பட்டப்படிப்பு முடிந்ததும் நாங்கள் திருமணம் பேசி அவர்களது இல்லத்தற்குச் சென்றபோது தான் எமக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

தங்கள் மகன் மருத்துவர், எனவே அவருக்குரிய சீதனம் தரவேண்டும். அதில் குறை வைக்கக் கூடாது என அவரின் பெற்றோர் கண்டிப்புடன் கூறிவிட்டனர். அத்துடன் நிற்காது, நாங்கள் இருக்கும் வீட்டையும் உடனே சீதனமாக எந்தவித பிரச்சினையும் இல்லாமல் திருமணத்தின் முன்னரே அவர்கள் பெயருக்கு எழுதிவிட வேண்டும் என்றார்கள்.

"வீட்டுக்குரிய கடன் மாதா மாதம் செலுத்தவே



RangaRakes
Tamilnavarasam.com

சிரமப்படும் நான் என்ன செய்வது? வேறு வழியில்லை. பையன் வீட்டாரின் வற்புறுத்தலின் பிரகாரம் யார், யாரிடமோ கடன் பெற்று இன்று வீட்டை மீட்க உங்கள் திணைக்களத்திற்கு வந்திருக்கின்றேன். தயதுசெய்து வீட்டின் உறுதியை மீட்க உடன் நடவடிக்கை எடுங்கள்" என்று அவர் கேட்டார்.

"அதுசரி அப்போது வரப்போகும் உங்கள் மருமகன் இதுபற்றி என்ன சொன்னார். அத்துடன் உங்கள் மகளும் ஒரு மருத்துவர் அல்லவா? தொழில் அந்தஸ்தில் கூட என்ன குறை" என நான் கேட்டபோது,

"அதை ஏன் தம்பி கேட்கின்றீர்கள். அவர் எதுவுமே பேசவில்லை. ஆனால் எனது மகளிடம் உடன் தரவேண்டிய பணம் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து விடுங்கள், நான் என்ன செய்ய முடியும்" எனச் சொல்லி ஒதுங்கிவிட்டார் என்றார்.

இந்தக் கதை மூலம் நாம் பல விடயங்களை தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. காதலித்த பின்னர் சீதனம் கேட்பது சர்வ சாதாரண விடயமாகிவிட்டது. எமது சமூகத்தில் காதல் திருமணமாகட்டும் அல்லது பெற்றோரால் நடாத்திய திருமணமாகட்டும் சகிப்புத் தன்மையுடன் வாழவேண்டியவர்கள் பெண்கள்தான் என்கின்றார்கள். அவன் தீயவன் எனத் தெரிந்து அவனை மனைவி கைகழுவினாலும் கூட, அவளுக்கு ஏற்பட்ட பாதிப்பு பற்றிக்





கவலைப்படாமல், தொடர்ந்து அவளையே சமூகம் கேலி பேசித் திருப்திப்பட்டுக் கொள்ளும். ஆண்களுக்கு எந்த விதபாதிப்பும் ஏற்படுவதில்லை. இதுதான் எக்காலத்திலும் நடந்துகொண்டிருக்கின்றது.

எனவே ஒருவன் எப்படிப்பட்டவன் எனத் தெரியாமல், அவனை நம்பிக் காதலிப்பது எவ்வளவு பாதகமானது. திருமணம் ஒரு வியாபாரமல்ல. ஒரு சின்னப் பொருளை வாங்க நூறு கடைகளுக்கு ஏறி இறங்குகின்றோம். அப்படியிருக்க வாழ்க்கையில் முடிவு எடுக்க நிதானம் இழக்கலாமா? நல்ல கணவரைத் தேர்ந்தெடுக்க முன் பெண்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

இன்று காதலைக் கொச்சைப்படுத்துமாற் போல அதனை ஒரு சுவாரஸ்யமான பொழுதுபோக்காகக் கொள்கின்றார்கள். இதுவே உண்மை. படிக்கும் காலத்தில் நண்பர்கள் எல்லோருமே சேர்ந்து சும்மா குஷிப்படுத்துவதற்காக காதலிப்பதில் தப்பு ஏதும் இல்லை என்று சொல்லித் தூண்டிவிடுவார்கள். நல்ல மன முதிர்ச்சியற்றவர்களே நண்பர்களின் பேச்சை நம்பி, காதலிப்பதே ஒரு கௌரவமான வேலைஎன நம்பி விடுகின்றார்கள்.

உண்மையான காதல் மற்றவர்கள் பேச்சைக் கேட்டோ, வற்புறுத்துவதிலேயோ, கிளர்ந்து எழுவதில்லை. ஒருவரை ஒரு நொடிப் பொழுதில் அறிந்துவிட முடியுமா? திரைப்பட தொலைக்காட்சிக் காதல்களைப் பார்த்து



RangaRakes

Tamilnavarasam.com

ஏமாறக்கூடாது. ஆண்களைவிட இன்று பெண்களுக்கே குடும்ப பொறுப்பு அதிகமாகவுள்ளது. எந்த விடயத்திலும் ஆராயும் திறனை வளர்க்க வேண்டும்.

எமது சமூகம் பெண்கள் மீது திணிக்கும் முடிவு களில் போதிய நடு நிலமையில்லை இல்லவேயில்லை. பெண்களுடன் கூடிப் பிறந்தவர்கள் கூடப் பெண்களின் நிலை பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ளாத அவல நிலை.

பெண்கள் அறிவு, உணர்வு சார்ந்த விழிப்பு நிலையில் இருக்க வேண்டும். பருவத்தில் ஏற்படும் கவர்ச்சி, ஈர்ப்புகளில் அவதானமாக இருக்க வேண்டும். ஒருவரது பேச்சு, நடத்தைகளில் நடிப்பு எது நிஜம் எதுவெனக் கண்டறியும் நேரத்தை விடுத்துக், கல்வியில் மட்டும் பெண்பாலார் அதிகூடிய கவனம் செலுத்துதலே, சவால்கள் சூழ்ந்த உலகில், கம்பீரமாக நடந்து கொள்ள வைக்கும் வழியுமாகும்.

கல்வி கற்கும் காலத்தில் எந்த ஒருவருமே வேண்டப் படாதவர்கள் அல்லர். கூடப்படிக்கும் நண்பர்களாக ஏற்று சிந்தனையைக் கூர்மையாக்கி துணிந்து சென்றால் சகல ஐஸ்வர்யங்களும் மகளிருக்கு வந்தெய்தும். வாழ்க்கை என்பது ஒரு பரிசோதனைக் களமல்ல. உணர்க!

தினக்குரல் - ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி - 29-11-2009







# மாறிடும் மனதை மாற்றிச் சீராக்குக!

எங்களுடன் நாமே தொடர்ந்து நட்பாக இருக்க முடிவதில்லை. பல தடவைகள் எம்முடன் நாம் முரண்பட்டுக் கொள்கின்றோம். அப்படியிருக்கப் பிறருடன் எப்படித் தொடர்ந்து சினேகம் கொள்ள முடியும்? மனம் கண்டபடி ஓடும் மாய வஸ்து. இதனை அடக்கி ஒரே திசையில் திருப்புவதே கடினம். இதயம் சிந்திக்கக் கால அவகாசம் தேவை. எடுத்த எடுப்பில் எவரையும் நிந்தனை செய்யற்க! ஒருவரின் மனதைச் சீரழிப்பது ஆன்ம துரோகம். எமக்கு மட்டும் நாம் தேவையானவர்கள் அல்ல, நாம் எல்லோருக்குமே அவசியமானவர்கள். நல்ல மனதுடன் வாழ்ந்தால் "வெற்றி" சிங்கம் போல ராஜ நடைபோடும்.

உலகத்திலேயே மிகவும் சிரமமான விஷயம் என்ன வெனில், முட்டாள்களுடன் சினேகம் கொள்ளுவது தான். மேலும் எங்களுடன் நாமே தொடர்ந்து நட்பாக இருக்க முடிவதில்லை. இது கூட ரொம்பவும் சிரமமான காரியம் தான்.



RangaRakes
Tamilnavarasam.com

எதிலுமே, எப்பொழுதும் தீர்க்கமான நிரந்தரமான மனோ நிலையில் மனிதன் இருப்பதில்லை, ஒவ்வொரு சமயத்திலும் ஒல்வொரு வடிவம் எடுக்கின்றான்.

இதுவே சிறந்தது என ஒன்றை எண்ணி அதன் பின்னே சுற்றுவான். பின்னர் இதனைக் கண்டாலே பிடிக்க வில்லை எனத் தூர விலகி ஓடுவான்.

தன்னையே நம்பாதவன் எங்ஙனம், பிறரைத் தொடர்ந்து நம்பி வாழ முடியும்? என்றும் தன்னை, தன் எண்ணத்தை வடிவாக வைத்துக்கொள்ளாமல் ஒரு போதும் ஒரு குறிக்கோளை பற்றுதியுடன் வைத்துக்கொள்ள இய லாது.

சினேகம் என்பது மற்றவர்களுடன் மாத்திரமே வைத்துக் கொள்வது அல்ல. எல்லோரும் தங்கள் குடும்பம், நெருங்கிய உறவுக்காரர், நண்பர்களுடன், மட்டும் உறவுமுறை பாராட்டுகின்றார்கள். புதிதாக பார்க்கும் நபர் களை நட்புரீதியாக எல்லோரும் நோக்குகின்றார்களா?

மேலும், தானே தனக்கு நல்ல உறவினராக இருக் கின்றார்களா? இல்லை. தன்னோடு தான் முரண்படுதலே மனிதனின் பிரதானமான பணியாகி விட்டது.

கடவுளே என்னை ஏன் படைத்தாய்" என்று படைத் தவனைக் கேட்டு நொந்தும் கொள்கின்றான். வாழ்க்கை



RangaRakes



பிடிக்காமல் எப்படி வாழ்வது? அதனை நேசிக்காமல் விட்டால் எப்படி நல்ல படி இயங்க முடியும்?

அடுத்தவன் வாழ்வின் மேன்மையை விரும்பி ஏற்கும் போதே எங்கள் வாழ்விலும் செழிப்பு ஆரம்பித்து விடும். பிறரை விரும்பி ஏற்கும் போதே நாம் எங்களையும் விரும்பி ஏற்கும் நல்ல மனிதனாகி விடுகின்றோம்.

அதே சமயம்,

எங்களை நாம் விரும்பும் மனிதனாகவும் ஆக வேண்டும். என்றும் வெறுப்புடன் சங்கமிக்கும், முரண்பட்ட ஆசாமியாக வாழக் கூடாது. நல்லவற்றை, ஏற்று கெட்ட வற்றை அறவே விலக்கினால், எண்ணங்கள் எங்களை முழு மையான புதுமனிதனாக்கி விடுகின்றது. என்றும் சரியான பாதையை வகுத்து நடப்பவனுக்கு பாதைகள் கரடு முரடு அற்றதாகி விடுகின்றது.

தென்றல் அடிக்கிறது மெல்லிய குளிர் தேகத்தை வருடுகிறது. நல்ல ரம்யமான காட்சி கண்ணுக்குப் புலனா கின்றது. நல்ல வாசனையுடன் கூட வந்து கொள்ள, எல் லாமே பிரமிப்பூட்டும் விஷயங்கள் கண் முன்னால் நடக்க மனம் மட்டும் சஞ்சலமாக இருந்தால் யாது பயன்?

மனதைச் செதுக்கி அதனை மெருகூட்டி அழகூட் டாமல் விட்டால் புலன்களால், புலனறிவால் எந்தப் பிரயோ சனமும் இல்லை.



Tamilnavarasam.com

வெளியே ஒளி பரவிய உலகம் கூட இருள் சூழ்ந்த தான நிலையில் தோன்ற இடமளிக்கலாகாது. காட்சி களிலேயே ஐயுறவு கொள்ள வைக்கின்ற சக்தி மூடிய மனசுக்கு உண்டு.

எல்லாவற்றையும் வெறுப்பு உமிழ்வுடன் நோக்கி னால் எப்படி ஆரோக்கியமான முறையில் ஜீவிக்க முடியும்? எனக்குச் சாதகமாக இல்லாது விட்டால் அதை வெறுப்பது புத்தியாகுமா?

நாங்கள் எதை, அது எப்படிப்பட்டதேயாகினும் அதுவே சரியென முறையுற்ற விதத்தில் சாதிப்பது என்ன நியாயம் இருக்கின்றது? நல்லதை மட்டும் ஏற்கும் மனப் பக்குவத்தை எம் உள்ளத்தில் விதைப்போமாக!

விரைவாக உருவாக்குகின்ற எமது முடிவுகளால் இதயத்துக்கு சிந்திக்கும் வேலைகள் இல்லாமல் போய் விட்டது. இன்று சிலர் சிந்திக்காமல் பேசுவது, கருத்துக்களை விவஸ்தையின்றி வெளிவிடுவதால் அவர் மட்டும் இதனால் பாதிப்படைந்து விடுவதில்லை. கூட இருக்கும் அப்பாவிச் சனங்களின் நெஞ்சங்களையே குட்டையாக்கிக் கத்தரித்தே விடுகின்றார்கள்.

ஒருவரின் மனதைச் சீரழிப்பது சாதாரண விடயம் அல்ல. விஷமத்தனமானது. மனம் கழிவுகள் சேரும் இடம ல்ல, நல்ல சிந்தனைகள் உருவாகும் "புண்ணியஸ்தலம்" அதனைப் பவித்திரமாகப் பேணுவது பாதுகாப்பது எமது கடமையும், கண்ணியமானதுமாகும்.





எங்கள் பொழுதுகளில் அதிகமானவை , பயனு ள்ளதாக கழிகின்றதா? எது எதற்கோ நேரங்களைச் செல விடுகின்றவர்கள், சற்றும் பொறுமையாக பெரிய வர்கள் சொல்லுவதைக் கேட்கப் பிரியப்படுவதில்லை.

இமைப் பொழுதில் கூட நல்ல நல்ல செய்திகள் எமது செவியை விட்டுப் புறப்பட்டு விடலாம். அந்த ஒரு வினாடிப் பொழுதினால் இதயத்தை மூடுவது எவ்வளவு துரதிஷ்டமானது தெரியுமா? புலன்கள் நல்லதை ரசிக்கும் போது, அவைகளை மூடி விட வேண்டாம்.!

அதிஷ்டத்தை ஆர்வமுடன் எதிர்பார்ப்பவர்கள், சாதாரண அவதிக்கே பயப்படும் மனத்தைரியமற்ற நபர்களாகக், கைக்கு எட்டிய தூரம் வரும் போது தான் தூங்கிப்போகின்றார்கள்.

மனத்தை வசப்படுத்த முனையும்போது சலனங்க ளுடன் கை கோர்க்கலாமா? இயற்கை ஒழுங்காக இயங்கும் போது மனிதன் மட்டும் தேவையற்ற விதத்தில் மனசை வளைக்கின்றான்.

எமது செயலுக்கு, என்ன எதிர் விளைவு வரலாம் என்பதை புரிந்து கொள்ள பல தடவைகள் விழுந்து எழ வேண்டியுள்ளது. பலருக்கும் சொல்லித் தெரிவதைவிட அனுபவங்களினால் பெறப்படும் அடிகள் வலுவான வெற்றி களை உருவாக்கும்.



RangaRakes

Tamilnavarasam.com

எனினும்,

வேண்டுமென்றே பரிசோதனை முயற்சியில் காலத்தையும், செல்வத்தையும், பணயமாக வைப்பது எவ்விதத்திலும் சரியானது அல்ல. மூளைக்குச் சிரமமான காரியம் என முட்டாள்தனங்களை கையாளக் கூடாது.

“வெற்றிகள்” கம்பீரமான சிங்கம் போலக் காணப்படும். எனினும் மனம் இதனைத் தக்க முறையில் நேரிய வழியில் காப்பாற்ற வேண்டும். அடக்க முடியாத தவறான எண்ணங்கள், கிடைத்ததை நழுவி விடச் செய்து விடும் உணர்க. என்றும் சீரான மனோநிலையே வாழ்வை சுலபமானதாக்கும் மனம் உள்ளவன் மனிதன். தன்னை நல்ல வழியில் இனம் காட்டுவதே முறைமை. அறிக!

தினகரன்
வார மஞ்சரி
10.04.2011







# உறவுகளை உதறக் கூடாது!

எமது குடும்ப உறவுகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை உலகுட னான உறவிற்கும் அங்கீகாரம் வழங்குக!மற்றவன் அன்பைப் புரிந்து கொள்ளாத வாழ்வில் சிறப்பு என்பதேது? ஒட்டாத வாழ்வு மனத்தை வெட்டிக் கூறுபோட்டுவிடும். தனிமை வாழ்வு தேகத்தை, உயிரைச் சுட்டெரிப்பதைப் போன்றது. கோடிகள் இருந்தாலும் கூட இருப்ப வர்களுடன் கூடி சிரித்து உறவாடுவது போல் சந்தோஷம் கிடைத் திடுமோ? உறவுகள் உதறக் கூடியவைகள் அல்ல. இறுகப் பற்றி அன்பை உற்பத்தி செய்யக்கூடியவை.

தங்களது குடும்ப உறவுகளே உறுதியானது, ஏனையவர்களுடனான உறவுகள் வேறானது என ஒரு வட்டத்தினுள் வாழ்பவர்கள் தமது எதிர் காலம் பற்றி உணருவதே இல்லை.

தலை நகரில் வாழ்ந்து வரும் ஒருவர் சற்றும் இரக்க உணர்வின்றி சொன்ன வார்த்தைகளைக் கேட்கவே



RangaRakes
Tamilnavarasam.com

அருவருப்பாக இருந்தது. அவருக்குச் சொந்தமான வீடு கொழும்பிலே உண்டு. தவிர சொந்த ஊரில் காணி, பூமியுண்டு. பிள்ளைகள் எல்லோருமே வெளிநாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். இறுமாப்புடன், எவருமே அனாவசியமான பாரங்கள் என்பது போல் பேசினார். எதிர் காலமே இவர்களுடன் கூட இருந்து என்றும், இவர்கள் சொற்களைக் கேட்பது போல் ஒரு நினைப்பு.

“எனக்கு இந்த நகரம் பூராவும் இனம் சனம் இருக்கிறது” ஆனால் நான் ஒருவரையும் அண்டுவது கிடையாது. பெரிய கரைச்சல். ஊரில் கோயில்களிலும் கணிசமான உரிமை இருக்கிறது. திருவிழாக்காலங்களில் போய் வருவேன். ஆனால் இங்கே மட்டும் பெரிதாக நான் எவருடனும் பேசுவதில்லை. நான் உண்டு கூட எனது மனைவியுண்டு.” இவர் மேலும் சொன்னார் இப்படி.

“இருவருமே அடிக்கடி பிள்ளைகளிடம் சென்று வருவோம். எங்களுக்கு எல்லா நாடுகளுமே தெரியும். ஓய்வூதியம் எனக்கு வருகின்றது. காசுப் பிரச்சனைகளே இல்லை. இதனால் இந்த அமைதியை நான் விரும்புகிறேன். எனக்கு இன, சன உறவுகள் எதற்கு” என்றார். கணவன் மனைவி , பிள்ளைகள் இவர்கள் மட்டுமே தனி உலகமாக எப்படி வாழ முடியும்?

ஒருவர் நல்ல நிலையில் இருந்தால்,மற்றவர்களின் உறவு, தயவு தேவையில்லையா? அன்புடன் எல்லோரை





யும் நோக்காமல், அரவணைக்காமல் வாழ்வது தான் எப்படிச் சாத்தியமாகும்?

ஒரு சிலர் கடந்த கால அனுபவங்களை மறந்தே செயற்படுகிறார்கள். இளமைக் காலத்திலே வறுமையுடன் அல்லாடியதை அவர்கள் மறந்து போய் விடுகின்றார்கள்.. தங்கள் குடும்பம் வறுமையுடன் வாழ்ந்து படிப்படியாக சகல துறைகளிலும் முன்னேறியதும், பின்னர் அதனை அடியோடு மறந்து, தற்போதைய நிலையே சாஸ்வதம், எனவே எவர் தயவும் தேவையில்லை எனக்கருதுவது, வரண்டு போன உலர்ந்து போலிக் கௌரவத்தையே காட்டுகின்றது. போலித்தனங்களை உலகம் எற்றுக் கொள்வதுமில்லை.

நாம் என்ன தான் சுய முயற்சியுடன் உழைத்து முன்னேறினாலும் ஒரு சமுக உறவின் பக்க பலம், அல்லது தார்மீக ஒத்துழைப்பு இன்றி நல்ல நிலைக்கு வந்து விட முடியுமா? சுற்றி இருப்பவர்களை ஏற்றுக் கொள்வதே சிறப்பு.

குடும்ப உறவை வலிவுறுத்தி அன்புடன் தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்கள் சமூகப் பிணைப்பின் அவசியத்தையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

“நீ மட்டும் உனது பாட்டைப் பார். யாரிடமும் சினேகம் வேண்டாம். அவர்கள் உன்னிடமிருந்து எதை யாவது கேட்டு அபகரிக்கத்தான் வருவார்கள். எப்போதும் நீ உன்னை மட்டும் காப்பாற்றிக் கொள்” என்று சொல்லிச்



RangaRakes

Tamilnavarasam.com

சொல்லியே வளர்க்கும் பெற்றோர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சுய நலம் என்பதன் அர்த்தத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இவர்கள் இருப்பது வருந்தத்தக்கது. பொது நலத்தைப் பாதிக்காது தன்னை ஸ்திரப்படுத்தும் சுயநலத்தில் தப்பு இல்லை.

குடும்ப வாரிசாக ஒரே ஒரு பிள்ளையை பெற்ற பெற்றோர் இவ்வாறு சொல்லி வளர்த்தால் அவன் எதிர் காலம் என்னாவாது? எனக்குத் தெரிந்த பல பிள்ளைகள் கட்டுப்பாடு என்ற பெயரில் பெற்றோரால் , சுயநல உணர்வோடு வளர்க்கப்பட்டார்கள். பின்னர் அவர்களின் நிலையறிந்து கவலைப் படத்தான் முடிந்தது.

அண்மையில் எனது நண்பர் வெளிநாட்டில் இருந்து வந்திருந்தார். எமது உறவினர், நண்பர்கள் பற்றி விசாரித்த போது, அவர் சொன்ன விஷயங்கள் அதிர்ச் சியும், கவலையும் தந்தன. அவர் சொன்ன தகவல்கள் இவை!

இளமைக் காலத்தில் தங்கள், பிள்ளைகளே மிகவும் உயர்ந்தவர்கள், ஏழ்மையுடன் வாழ்ந்தவர்களின் பிள்ளைகளை "பரதேசிகள்" என ஏளனம் செய்து, சமூகத்தி னருடன் ஒட்டி உறவாடச் செய்யாதோரின் வாரிசுகள் அங்கே, திடீர் சுதந்திரம் பெற்றவர்கள் போல் நடந்து





கொள்கின்றார்கள். சொந்தக் குடும்பத்துடனேயே பாசமாக நடப்பதில்லை. குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி. விட்டார் கள். ஆனால் எல்லோரையும் அப்படிச் சொல்ல முடியாது.

ஆயினும் சின்ன வயதில் சமூகமாகப் பிறருடன் பழகாமல், தனித்தீவாக. இருந்தவர்களில் சிலர் இன்னமும் தங்கள் மூடிய திரையில் வெளிவர இயலாது திணறுகி ன்றார்கள். இதில் குறிப்பிட வேண்டிய விஷயம் இவர்களைத் தங்களில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ள ஏனையவர்கள் தயங்குகின்றார்கள். " அவரா.... அவர் ஒருமாதிரி, ஒருவரை யும் மதிக்கவும் மாட்டார், இவர்கள் வீட்டில் திருமணம் செய்வதே ஆபத்தானது"

மேலே சொன்ன விடயங்கள் சிந்திக்கத் தூண்டு பவை, நீங்கள் மற்றவரை நோக்கிச் சென்றால் தான் அவர் கள் உங்களை நோக்கி வருவார்கள்.

மமதை இருந்தால் அன்பு வருமா? உறவுகள் இன்றி நிறைவு பெறுவோமா? அரவணைக்காது விட்டால் சமூகத் தில் பெருமை ஏது கிட்டும்? உறவுகளைப் பாரமாக எண் ணிக் கூடி வாழாத இவர்களை சமூகம் தூர எறிந்து விடும். தனிமையுடன் வாழும் தவிப்பு தேகத்தையும் ஆன்மாவை யும் அவிப்பதை போன்றது.

எவ்வளவு தான் படித்துப் பட்டம் பெற்றுப், பதவி களை, அந்தஸ்தைப் பெற்று வாழ்ந்தாலும் ஊரில் உள்ள



RangaRakes

Tamilnavarasam.com

எம்மவர்கள், எம்மைக் காணுமிடத்து," என்னடா செய்கிறாய், சந்தோஷமாக இருக்கின்றாயா? என்று உரிமையுடன் பேசிப், பழையதை கூறிக் கேலி , கிண்டல் செய்யும்போது ஏற்படும் சந்தோஷங்களுக்கு எல்லை என்பதேது?

முதியவர்களுடனும் தங்களோடு இணைந்தவர்களான குழந்தைகள், மற்றும் , மகளிர்கள், இளைஞர்கள் என தங்கள் உறவுகளுடன் உறவாடுகையில். எல்லோருமே சின்னப் பிள்ளைகளாகின்றானர். இது குளிர்ந்த மெல்லிய மழைத்தூறலில் எல்லோருடனும் சேர்ந்து தம்மை மறந்து குதித்துக் குதித்து ஆடும் சுகம் போன்றது. பிரிந்து தனித்து ஆணவத்துடன் வாழ்ந்தால் கிட்டுமா இது. சொல்லுங்கள்! உறவுகளே நிறைவு!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
( இவள் பகுதி)
10.04.2011







# இல்லங்கள் ஆலயங்களாக வேண்டும்

வழிபாடுகள் செய்யும் ஆலயங்கள் மனிதர்களுக்கு எவ்வளவு முக்கியமானதோ, அவ்வாறே வாழ்விடமான இல்லங்களும் புனிதாமாகப் பேணப்பட வேண்டிய ஒன்றாகும். பலர் இணைந்து வாழும் இல்லம் இறைவன் விரும்பும் வதிவிடம் தான். சின்ன வயதிலிருந்தே எமது பழக்க வழக்கம், ஒழுக்கம், பண்பாடுகள் இங்கிருந்து தான் உற்பத்தியாகின்றன. எல்லோருமே தத்தமது வீடுகளை, சுற்றுப்புறங்களை தூய்மை நிறைந்ததாக ஆக்கினால் இவர்கள் இருப்பிடம் இறைவன் கருவறை போல் நிறைந்து ஒளியூட்டும். இல்லங்கள் எல்லாமே அறப்பணியாற்றும் இடங்களாக மிளிர்ந்தால், அவைகள் எல்லாமே. ஆலயங்கள் போல் தூய்மை மிக்கதாய் ஆன்மாவிற்கு அமைதியூட்டும்.

ஆலயங்கள் எங்கள் வாழ்வோடு இணைந்து நின்று எமக்கு நிம்மதியைத் தருகின்றன. ஒவ்வொருவருக்கும். தங்கள் சார்ந்த மதங்களின் வழிபாட்டு ஸ்தலங்கள் இன்றியமையாதனவாகும்.



RangaRakes
Tamilnavarasam.com

எங்கள் ஆன்மாவிற்கு அமைதியையும், அதனால், நல்லனயாவும் இனிதே நிகழ்ந்து விடும் என எண்ணியே செல்கின்றோம். ஆலயங்களின் புனிதத் தன்மையினை உணர்ந்து அங்கு மக்கள் சென்று வழிபாடு செய்யும் அதே வேளை, நோக்கம் புரியாது ஆன்ம துரோகம் செய்யும் ஆத்மாக்களை என்னவென்பது?

வழிபாடு செய்யும் கோயில்கள் மனிதர்களுக்கு எவ்வளவு புனிதமானதோ, அவ்வாறே எமது வாழ்விடமாகிய இல்லங்களும் புனிதமாகப் பேணப்பட வேண்டிய ஒன்றாகும். "காயமே கோயில்" எனப்படும் போது, பலர் இணைந்த நல்ல இல்லம் இறைவன் விரும்பும் வதிவிடம் தான்.!

தனி ஒரு மனிதனின் பண்பு, அவன் வாழும் வீடுகளில் இருந்தே பிறக்கிறது. "தொட்டிலில் பழக்கம் சுடு காடு மட்டும்" என்பார்கள். சின்ன வயதில் எமது பழக்க வழக்கம், ஒழுக்கம் ஆகியன இங்கிருந்து தான் உற்பத்தியாகின்றன.

எனவே எம்முடன் கூட இருக்கின்றவர்கள், தங்களை நல்ல முறையில் வளப்படுத்தாமல் தான் தோன்றித் தனமாக வாழக் கூடாது. தமக்கு சார்பாகவே சட்டங்கள் இயற்ற முடியாது .

எமக்குப் பின்னால் எதிர்காலத்தில் எப்படி வாழ





வேண்டும் என்பதை அறிந்து கொள்ள புத்தம் புதிய வார்ப்புக்கள் எங்களை நாடி நிற்கின்றன. நீங்கள் சொல்வதை. இன்று செய்து கொண்டிருப்பவைகளையே அவர்கள் மிக உன்னிப்பாகக் கவனித்த வண்ணமுள்ளனர்.

எங்களையே நம்பி எங்கள் சொற்களையே தினம், தினம் செவிமடுக்கும் இந்த புது மலர்களுக்கு இயல்பாகவே உள்ள அழகு, வாசனைகளைப் பெரியவர்கள் களங்கப்படுத்தலாகாது.

அவர்களுக்கு நல்ல காட்சிகளையே காட்சிப்படுத்துங்கள். நல்ல சொற்களை, நயம் மிகு கருத்துக்களை மட்டுமே ஊட்டுதல் எமது கடமை. வெள்ளை உள்ளங்களுக்கு வெளிச்சமூட்டுதல் எமது பணி.

ஆன்மாவை வயப்படுத்தி, இறைவனோடு ஐக்கியப் படுத்துகின்ற இடமாகக் கோயிலை நாம் கருதுகின்றோம். ஆனால் வீடு தான் எமது ஆரம்ப பல்கலைக்கழகமாக, இளம் வயதிலேயே நல்ல செயற்திறனைக் கூர்மையாக்குவதற்கும் மிகவும் பழக்கப்படும் இடமாகவுள்ளது.

எனவே பரந்த உலகை அறிய எமது சின்னஞ் சிறிய வீடு, புது உலகை கிருஷ்டிக்க உதவும் ஒரு "கேந்திர நிலையம்" என்றால் அது மிகையல்ல. தாய், தந்தையர் எனும் ஆசான்களே முதன்மைக் குருவாக விளங்குகின்றனர். மாதா, பிதா, குரு, தெய்வம் என வரிசைப்படுத்தி முதலிடம்



RangaRakes

Tamilnavarasam.com

கொடுத்து முதன்மைப்படுத்திய முன்னோர்கள், எமது குருவுக்கு முன்னோடிகளாகத் தாய், தந்தையை வைத்துக் கௌரவப்படுத்தினர்.

உலகைக் காட்டிய முதல் ஆசான்கள் பெற்றோர்கள் தான். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமது அருஞ் செல்வங்கள் தவழும் இடத்தைப் புனிதமாகப் பேண வேண்டியது ஒரு மாபெரும் பொறுப்பாகும்.

நற்பிரஜைகளை உருவாக்குதலே மாபெரும் தவம், கோயிலுக்குச் சென்று வேண்டுதல்கள் செய்கின்றோம் எமக்கு இது வேண்டும், அது வேண்டும் என்று கடவுளிடம் உரிமையுடன் எதை எதையோ கேட்ட வண்ணம் இருக்கின்றோம்.

எல்லோரும் தத்தமது வீடுகளில் மட்டுமின்றித் தங்களைச் சூழ்ந்துள்ள சூழல்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஜீவன்களின் நலன்களில் அக்கறை கொண்டாலே, அவர்கள் "இருப்பிடம்" இறைவன் "கருவறை" போல் நிறைந்த ஒளியூட்டி நிற்கும்.

நல்ல முறையில் வாழ்ந்து காட்டாதவர்களால், எப்படி நற்பிரஜைகளை உருவாக்க முடியம்? சில பெற்றோர்களைப் பார்க்கும்போது, அவர்களிடம் இருந்து விலகி வாழ்வதே, பிள்ளைகளின் எதிர் காலத்திற்கு உகந்தது போல் தோன்றுகின்றது.





இயல்பாகவே நற்குணமுடைய பிள்ளைகளை பெற்றோரில் சிலர் தவறான வழியில் கொண்டு செல்கின்றனர். வசதி வாய்ப்புகள் உள்ள பலர், தமது பிள்ளைகள் மிக எளிமையாக வாழ அனுமதிப்பதில்லை.

மேலும், பிறருடன் பிள்ளைகளை சகஜமாக பழக விடுவதில்லை. மேலாதிக்க உணர்வினையூட்டுவார்கள். எளிமையானவர்களை, இழிந்தவர்கள், தங்களிலும் அந்தஸ்து குறைந்தவர்கள் எனச் சொல்லிச் சொல்லியே வளர்ப்பார்கள்.

பரந்த மனப்பான்மையுடன் குழந்தைகளை வளர்க்க வேண்டியது பெற்றோரின் நற்பண்பாக அமைதல் வேண்டும். தெய்வ பக்தி, பெரியோர்களிடம் பணிவாகப்பழகுதல், இன்சொல் போன்ற நற்பழக்கங்களை பக்குவமாகச் சொல்லி கொடுக்க வேண்டும்.

கோயில்களில் அடியார்களுக்கு பிரசாதம், உணவு அளித்தல் போன்ற தர்ம காரியங்கள் நடப்பது நாம் அறிந்த ஒன்றேயாம். ஈகை, எளியோர்க்கு உதவுதல்களை எம் முன்னோர்கள் ஆலயங்களினுடாக செய்தனர் இப்பணி இல்லங்களிலும் செய்யப்படல் வேண்டும்.

இத்தகைய அறப்பணிகளைச் செய்வதால் உண்டாகும் திருப்தி எல்லையற்றது. ஏழைகளுக்கு உணவளித்தல் அவர்களின் கல்விப் பணிக்காக, இல்லறத்தார்,



RangaRakes

Tamilnavarasam.com

தங்களால் இயன்றளவு உதவுதலால், சமூகப்பணிகளைக் கூட தாம் வாழுகின்ற மனைகள் மூலம் செய்வதனால் இவை ஆலயப்பணி போல் சாலச் சிறந்ததல்லவோ!

வீணான ஆடம்பரங்களுக்கும், பகட்டான வாழ்க்கை முறையிலும் அமிழ்ந்து விடாது செய் கருமங்களை நேரிய வழியில் செய்தால் அதுவே இறைபணியாகி விடும். இப் பொழுதினில் செய்வதே மேல். அடுத்து வரும் காலத் திற்காக ஒத்தி வைக்கும் செயல் வீண்.

இந்த உலகில் ஒருவருமே தமக்கு எவருமே இல்லை என்ற உணர்வில் வாழக் கூடாது. "அதோ இந்த வீடு உள்ளது இவர்கள் எமக்கு ஆறுதல் அளிப்பார்கள்" எனுமாறு நம்பிக்கை ஊட்டுக. புனிதமாக்குக! எல்லோரது இல்லங்களுமே அனைவருக்கும் ஆதரவு நல்குவதாக இருப் பின் அங்குள்ள அங்கத்தவர்களுக்கும் கடவுள் பேராதரவு வழங்கியபடி இருப்பார். உங்கள் இல்லம் கோயிலாகி விடும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
(இவள் பகுதி)
20.02.2011



RangaRakes

Tamilnavarasam.com

# சுயபச்சாதாபம்

## பருத்தியூர் பால. வயிரவநாதன்

வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 15
சிந்தனைக் கட்டுரைகள்

RangaRakes
Tamilnavarasam.com

## நூலாசிரியர் பருத்தியூர் பால. வயிரவநாதன் எழுதி வெளியிட்ட "வாழ்வியல் வசந்தங்கள்" நூற் தொகுதிகள்


1. உண்மை சாஸ்வதமானது - பாகம் - 01
2. அம்மா - பாகம் - 02
3. சுயதரிசனம் - பாகம் - 03
4. கோழைகளாய் வாழுவதோ? - பாகம் - 04
5. ஞானம் - பாகம் - 05
6. கணப்பொழுதேயாயினும் யுகப்பொழுதில் சாதனை செய்! - பாகம் - 06
7. சும்மா இருத்தல் - பாகம் - 07
8. உன்மைகள் உலருவதில்லை! - பாகம் - 08
9. உண்னோடு நீ பேசு! - பாகம் - 09
10. நான் நானே தான்! - பாகம் - 10
11. வெறுமை - பாகம் - 11
12. காதலும் கடமையும் - பாகம் - 12
13. அக ஒளி - பாகம் - 13
14. உன்னை நீ முந்து! - பாகம் - 14
15. சுயபச்சாதாபம் - பாகம் - 15
16. மௌனம் - பாகம் - 16
17. மரணத்தின் பின் வாழ்வு - பாகம் - 17
18. சிந்தனை வரிகள் - பாகம் - 18








# வெட்கம்

மனித உணர்வுகளில் வெட்கமும் அடங்கும். மென்மையான, ரசிக்கத்தக்க வெட்க உணர்வு வெளிப்பாடும், கௌரவம் கலைந்து போனதால் ஏற்படும் துன்பமூட்டும் வெட்க உணர்வும் எனப்பல வகையுண்டு. முயற்சி செய்து உழைக்காமல் பிறரிடம் கைநீட்டி உதவி கோருதல் வெட்கம் கெட்ட செயல். காரணமின்றிக் கூச்சப்படுதல் கோழைத்தனம். நாகரீகத்தின் அர்த்தம் கண்டபடி வெட்கம் கெட்டு அலைவதல்ல. வெட்கம் கெட்டவனுக்கு எல்லாமே எளிது. வெட்கம் துறந்து வாழும் வாழ்வு அவலம். பிறர் பழிக்க வாழ்வது கேடு.

வெட்கப்பட வேண்டியதற்கு வெட்கப்படாமலும், வெட்கப்படக்கூடாதவைக்கு வெட்கப்படுவதும், வெட்கப்படக் கூடிய சங்கதிகளேயாம்.

மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளில் ஒன்றாக வெட்கம் என்கின்ற உணர்ச்சி தன்னை வெளிப்படுத்திக்



RangaRakes
Tamilnavarasam.com

கொள்ளும். வேண்டுமென்றே வெட்கப்படுவதுபோல் நடிப்பது, வேடிக்கைக்கும் ரசிப்பதற்மே ஒவ்வாத செயல்.

எனினும் இயல்பான, ரசிக்கத்தக்க வெட்க உணர்வுகளின் வெளிப்பாடுகள் சுவாரஸ்யமாகவும் சந்தோஷத்தை ஊட்டுவனவாகவும் அமையும்.

சின்னஞ்சிறு பிஞ்சுக்குழந்தை ஆடையின்றி ஓடித் திரியும் போது, பெரியவர்கள் சிரித்துக் கேலி செய்யும் போது, தன் சின்ன மேனியைக் குறுக்கி வளைத்து நெளிந்து மறைக்க வேண்டிய இடங்களை மறைக்கத் தெரியாது வெட்கமிகுதியில் முகத்தில் மெல்லிய குறுநகையுடன் மறைந்து ஓடி மறைய முனையும் காட்சி!.

பாட்டி, தாத்தா தங்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் பேசிக்கொண்டிருக்கும் போது, தாத்தா பாட்டியைப் பலருக்கு முன் தங்கள் கடந்த காலத் திருமண சமாச்சாரங்களை, ஊடல்களை சொல்லிச் சிரிக்கும் போது, அந்த நேரத்தில் பாட்டி முகத்தில் காணும், மகிழ்வுடன் கூடிய சங்கோஜம் அப்பப்பா... எவ்வளவு ரசனைக்குரிய காட்சி தெரியுமா?

புது மனைவியின் வளைக்கரத்தை முதல் தடவையாக வாழ்க்கையில் அவளை மட்டுமே ஸ்பரிக்கின்ற மணமகன் தொட்டு நுகர்கின்றபோது, அவளும் ஒரு ஆண்மகனின் தொடுகையை அன்றுதான் கண்டு கொண்ட அந்த வினாடிப்பொழுதில் சிலிர்புடன் ஏற்படும் நாணம்





சொல்லி முடியாத சந்தோஷ ரசனை ஐயா! இங்கு அவளது வதனம் மட்டுமல்ல, அவள் மேனியடங்கலுமே வெட்கத்தின் சிவப்புச்சாயம் உடல் எங்கும் தோய்ந்து பாயும் அன்றோ!

வெட்க உணர்வுகளை வெறும் வார்த்தைகள் கொண்டு, கோர்த்துச் சொல்லிட முடியாது. திரைப்படங்களில் வில்லன்களும், விலைமகள்களும் வெட்கப்படுவதாகக் காட்டுவார்கள். போலி வெட்கத்தை நம்பி பலர் மோசம் போவதுமுண்டு. தீயவர்கள் கூட மிகவும் பவ்யமாக வெட்கப்பட்டுக் குழைந்து நடிப்பதுமுண்டு. ஒருவன் சுய கௌரவம் குலையும் போது வெட்கப்படுகின்றான். படித்துவிட்டு வீட்டுக்குப் பாரமாக இருப்பது வெட்கம் என்கின்றார்கள். உழைக்காமல் வீட்டுக்கும் நாட்டிற்கும் பாரமாக இருப்பது மேலான வெட்கமேயாகும்.

எவ்வளவோ தொழில் இருந்தும் செய்யத்தெரியாமல் உணவிற்கு வழி இல்லை, பணம் இல்லை எனச் சொல்லித் திரியலாமோ? கூச்ச உணர்வேயின்றிக் கை நீட்டி வாழ்கின்ற கோழைகளை என்ன என்று அழைப்பது? தம்மைச் சுற்றி எல்லோருமே பம்பரமாய்ச் சுற்றி உழைக்க நான் மட்டும் ஏன் இப்படி இருக்கின்றேன் என ஒருகணம் எண்ணினால் என்ன? உழைப்பு இன்றேல் அச்சம் தானாய் வந்து ஒட்டிக் கொள்ளும். அப்போது பிறர் வந்து நகைக்கின்றபோது வெட்கமாக இருக்கின்றதே எனப் புலம்புவது சுத்த கோழைத்தனம அல்லவா?



RangaRakes

Tamilnavarasam.com

நியாயமான காரணம் இன்றிக் கூச்சப்படுவது கூட வீரமற்ற பயந்த வாழ்வை வலிந்து இழுப்பது போலாகும் புதுமையை விரும்பும் மாந்தர் தம் வழியில் சென்று கொண்டேயிருப்பர். ஆயினும், பிறர் கேலி செய்யும் வண்ணம் இவர்கள் நடந்து கொள்வது விவேகமாகாது. இன்று எவ்வித கூச்சமின்றிப் பண்பாடு மறந்து, உடை களைந்து தம் மேனி இழந்த நிலையில் நடமாடும் பெண்கள், ஆண்களை என்ன என்று அழைப்பது? என்ன தான் ஒருவன் எவ்வளவு படித்து பெரும் பதவி வகித்துப் பணம் செல்வம் தேடினாலும் பண்பாடு இழந்து வாழ்ந்தால் குணம் கெட்ட வெட்கக்கேடுதான்!.

நாகரீகத்தின் அர்த்தம் வெட்கத்தினைத் துறப்பது அல்ல. மேலான புதுமைக் கொண்டு வாழும் அதே சமயம் அறவாழ்விற்கான பாதையில் நெறி பிறழாது வாழ்வதுமாகும்.

கலாசாரத்தைச் சீரழித்தால் உலகம் கண் விழிக்காது. இன்று மிகவும் வெட்கக் கேடான ஒரு விடயத்தி னைச் சொல்லியேயாக வேண்டும். பெண்களே வெட்கப் படும் வண்ணம் பெண்களில் சிலர் உடை உடுத்தியும், உடுக்காமலும், திரைப்படங்களில், ஊடகங்களில், விளம்பரங்களில் காட்சிப்பொருளாகித்தோற்றங் காட்டித் தலைகுனிவை ஏற்படுத்துகின்றமையாகும்.

பெரும்பாலும் ஆண்களின் ஆடை அலங்காரம், அவர்கள் முழு உடலை மூடிக்காட்டி நிற்கின்றது. கை, கால்





போன்ற அவயங்கள் மூடப்பட்ட உடைகளையே உடுத்து கின்றார்கள். பொது இடங்களில் பெரும்பாலும் ஆண்கள், தங்கள் மேலாடைகள் விலத்தி தமது கால்கள் தெரிய நடந்து திரிவதில்லை. மேலும் கழுத்துப்பட்டியை அணிந்தும், மேல் சட்டைக்கு மேல் கோட்போட்டுப் பொது வைபவங்களில் ஆண்கள் கலந்து கொள்வதையே காண்கின்றோம். தேசிய உடை உடுத்துவோர் தூய வெண்ணிற வேஷ்டி, மேலாடைகளை பூரணமாக மூடியபடி அணிந்தே வெளியே செல்கின்றார்கள்.

ஆனால் நாகரீகம் என்கின்ற போர்வையில் தலை விரித்து, உடைகளைக் குறைத்து, கை, கால் முழுமை யாகத் தெரிய உடுத்து, நடமாடுவது என்ன சுதந்திரம் ஐயா? தங்களைக் கட்டுப்பாட்டுடன் வைத்துக்கொள்ளாத சுதந்திர உணர்வு “சுதந்திரம்” என்கின்ற சொல்லிற்கே இழுக்கான தாகும். எனவே, பெண்களைக் கொச்சைப்படுத்தும் எந்த நடவடிக்கைகளையும் அனைத்துத் தரப்பினரும் வன்மை யாகக் கண்டிக்க வேண்டும். வெட்கம் கெட்டதனமாக நடந்து கொண்டு அதற்கு நாகரீகம் என்று சொல்வதையும், பெண்க ளுக்கான உரிமை எனக் கூறலாமா? அது சுதந்திரம் என்றால் அது அப்படித்தான் எனக்கொள்வதை எவரும் அனுமதிக்கப் போவதுமில்லை.

இப்படியே போனால் தகாத கலாசார அழிவுகளை மேற்கொள்ளும் பெண்களுக்கெதிராகப் பாரிய போராட்டங் களைப் பெண்கள் தலைமையில் அனைவரும் ஒருமித்துத்



RangaRakes
Tamilnavarasam.com

தினசரி போராட்டம் நடாத்த வேண்டிய நிலை வந்தாலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை. மிகவும் வெட்கம் கெட்டத னமாகப் பெண்களை இம்சிக்கும் சில ஆண்களை, சில கணவன்மாரை குடும்ப உறுப்பினர் எவரையாயினும் அவர்களை சமூகத்தின் முன் கொணர்ந்து சட்டபூர்வமாகத் தண்டனை வழங்கியேயாக வேண்டும். தண்டனை வழங்காவிடின் இம்சைகள் தொடரும்.

திருமண வீடு ஒன்றிற்குச் செல்லும் பலர் இந்தக் காட்சியை மிக உன்னிப்பாக அவதானித்தால் தெரிந்து கொள்வார்கள். சீதனம் அதிகமாகக் கொடுத்த மத்திய தரக் குடும்பத் திருமண வைபவங்களிலேயே இந்த அனுபவ பூர்வமான மன உணர்வுகளை, உளைச்சல்களைக் காண முடியும். மிகவும் கொடூரமான முறையில் பெண்ணைப் பெற்றவர்களிடம் வலுக்கட்டாயமாகச் சீதனம் என்கின்ற பெயரில் பணம், நகை, வீடு வாசல் என்று அனைத்தையும் பிடுங்கிக் கொண்ட மாப்பிள்ளை வீட்டார், எந்தவித கூச்ச மும் இன்றி, மிகவும் கலகலப்பாக உற்சாகமாக திருமண வீட்டில் ஓடி ஆடிக் குதூகலமாக இருப்பார்கள். ஒரு அப்பாவி மனிதரிடம் கண்டபடி காசு பிடுங்கிய குற்ற உணர்வு எதுவுமின்றிக் கர்வமுடன் அதிகார தோரணையில் வேறு இருப்பார்கள். ஆணைப் பெற்றால், ஆதிக்கம் தேவையோ?

சில குடும்பங்களில் பெண் வீட்டார் சீதனமாகத் தரும் வீடு, பணம், நகையுடன் பிள்ளையின் தாய், தகப்பனாருக்கு "இனாம்" என்ற பெயரில் பெரும் தொகையினை அறவிட்டுக்





கொள்ளும் கொடுமையை என்ன என்று உரைப்பதோ? எல்லாச் சொத்தையும் மகளுக்காகத் தியாகம் செய்து இருக்கின்ற மற்றப் பிள்ளைகள் பற்றியும் அவர்களின் எதிர் காலத்தையும் நினைந்தால் தங்கள் செல்லமகளின் திருமணத்தில் கூட பூரண சந்தோஷமாக எப்படி நடித்துக் காட்ட முடியும்? சொல்லுங்கள்! இந்த தாய், தகப்பனார் களின் இதயத்தில் ஓர் மூலையின் எதிர்காலம் பற்றிய ஒரு ஏக்கம் தோன்றமாட்டாதா?

எனவே இருசாராரும் சந்தோஷமாக நடக்கும் திருமண வைபவம் தான் உளமாரத் திருப்தியானதாக இருக்குமன்றோ! துரதிருஷ்டமாக இன்னமும் எமது சனங்கள் இதுபற்றி, இந்தச் சீதனம் வலுக்கட்டாயமாகப் பெறுவது பற்றி வெட்கப்படுவதாக இல்லை. இருக்கின்றவன் கொடுக்கலாம் இல்லாதவன் என்ன செய்யலாம்? கொஞ்சம் சிந்திக்க வேண்டும். சிந்திப்பதாக இன்னமும் தெரிய வில்லை.

இன்று உலகின் பெரும்பாலான அரசியல்வாதி களைப் பாருங்கள். மக்கள் முன் வாக்குறுதிகளை அள்ளி, அள்ளி வீசுவார்கள். மக்களும் நம்பி இவர்களுக்கே வாக்களித்து அரசியல் அரியணையில் இவர்களை ஏற்றுவார் கள். ஆனால் ஆட்சிபீடம் ஏறியதும் தங்கள் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற மாட்டார்கள். இது பற்றி அவர்கள் எந்தவித கூச்சமும் அடைவதில்லை. மாறாக தொடர்ந்தும் அகம்பாவத்துடன் நடப்பது மட்டுமல்ல



RangaRakes
Tamilnavarasam.com

தங்கள் நல்ல திட்டங்களை நிறைவேற்ற எதிர் தரப்பினர் முட்டுக்கட்டை போட்டதாகக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி விடுவார்கள். அரசியல் வாதிகள் அடிக்கடி கட்சி மாறுவார் கள். ஆனால் இதன்பொருட்டு மக்கள் தங்களுக்கு வாக்கு அளிக்காதுவிட்டால் அவர்களைப் படுபிற்போக்குவாதிகள் என்று திட்டிச் சமயம் வரும்போது பழிதீர்த்தும் கொள் வார்கள்.

சொன்ன வார்த்தையைக் காப்பாற்றாதே! கூடு விட்டுக் கூடு மாறிவிடு! என்று மக்கள் சொன்னார்களா? உங்களை நம்பித்தானே மக்கள் தங்கள் விருப்புரிமையான வாக்கு களை அளித்தார்கள்?

மக்களை நேசிக்கும் மக்களே நாட்டிற்கு அதி தேவை யானவர்கள். தவறுகளைத் தெரிந்தே செய்பவர்கள் கூச்சப் படுவது கிடையாது. மனச்சாட்சியுள்ள நல்லவர்கள் சின்னப் பிழைகளைச் செய்தாலும் உள்ளத்தால் வெதும்பிக், கூச்சப்பட்டு மன்னிப்புக் கேட்டு நிற்பர். வாய் பிசகியவனுக்கு வாய்ச் சவடால் அதிகம்.

இன்று கள்ளச் சந்தைக்காரர்கள் பதுக்கல் பேர்வழி கள், அநியாய வட்டிகளை அறவிடுபவர்கள் எவ்வித வெட்க உணர்வின்றித் தைரியமாக மக்கள் முன் நுழைந்து உயர் கௌரவங்களைத் தாமாக எப்படியோ பெற்று விடுகின்றனர். திருடர்களைத் தூக்கிவைத்தல் சமூகத் தவறுகளே!





காசுக்காரர்கள் லேசுப்பட்டவர்கள் அல்ல. எனவே இவர்களின் திருக்கூத்துகளை நாம் பேசினால் வீணான பொல்லாப்பினை வருந்தி வாங்க வேண்டும் என மக்கள் அஞ்சுகின்றார்கள். இத்தகையவர்களிடம் ஏதோ ஒரு சந்தர்ப் பத்தில் மக்கள் செல்வதனால், அதனை ஒரு சாக்காகக் கொண்டே சட்டவிரோதிகள் எந்த வித கட்டுப்பாடுமின்றி நடந்து திரிவது உலகமே வெட்கப்படக் கூடிய சங்கதியே தான். இவர்களுக்கு உலகம், உருட்டப்படும் பந்தா?

சமூக சேவையாளர்கள் எல்லோருமே சுதந்திரமாகச் சேவை செய்ய அனுமதிக்கப்படல் வேண்டும். அரசாங்கம் என்ன நல்ல, நல்ல திட்டங்களைக் கொண்டு வந்தாலும் அதை நடைமுறைப்படுத்த இடையூறு செய்யும் சட்ட விரோதிகளின் செயல்களைக் கண்டறிந்து உரிய தண்டனை யளிக்க வேண்டும். குற்றம் செய்தவர்கள் குற்ற உணர்வின்றி வாழ்வது கூட வெட்கமான செயல் என்பதை இவர்கள் புரியா தவரை உலகிற்கு இத்தகையவர்களால் இன்னல்கள் தொடுக்கப்பட்டேயிருக்கும். உணர்க!

இன்று யாராவது தவறு செய்துவிட்டால் அதை எவராவது தட்டிக் கேட்டால் தவறு செய்தவர்கள் சொல்லும் பதில் பொதுவாக இப்படியாகவே இருக்கின்றது. "நான் என்ன புதிதாகச் செய்துவிட்டேன். யார் என்ன செய்யாமல் இருக்கின்றார்கள். அதோ அவனைப்பார், இவனைப்பார், இவர்களை என்ன மாதிரி முன்னுக்கு வந்தார்கள். நாங்கள் மட்டும் ஏதாவது பிழை செய்தால் பெரிதாகப்பேச வந்து



RangaRakes
Tamilnavarasam.com

விட்டீர்களே. முன்னுக்கு வந்த எல்லா தப்பானவர்க ளிடம் போய் கேட்க உங்களுக்குத் துணிச்சல் இருக்கின் றதா?" என எதிர்க்கேள்வி கேட்டு மடங்குகின்றார்கள்.

தப்பான செயலுக்குச் சப்புக்கட்டுப்பேசும் எத்தர்கள் எதைத்தான் பேசமாட்டார்கள். எல்லோருமே ஒருமித்த நிலையில் தவறுகள், குற்றங்கள் செய்யாதுவிட்டால் இந்த உலகு உய்வடையும் என்பதை இன்னமும் ஏன் உணரா மல் இருக்கின்றார்கள்.

எத்தர்கள், தர்க்கத்திலும் வித்தகர்கள்.

ஒருவன் செய்கின்ற நல்ல செயல்களை ஆதார மாகக் கொண்டு ஒழுகாமல் மற்றவர் செய்த தகாத வேலை களை முன் உதாரணமாகக் கொண்டு ஏற்று வாழுதலில் என்ன நியாயம் உண்டு சொல்மின்!

தாம் செய்த சாதாரண சின்னத் தவறுகளுக்காக ஏங்கி மனம் குமைந்து மாய்ந்து போகின்றவர்களையும் நாம் பார்த்திருக்கின்றோம். மனதில் துணிச்சல் இன்றி யாரிடமாவது தேறுதல் கேட்கச்சித்தமின்றி மிகவும் பரிதாபமாகத் தற்கொலை செய்து கொள்ளும் நபர்கள் இந்த உலகிற்குத் தங்கள் கடமைகளைச் செய்து முடிக் காமல் செத்துப்போகும் நன்றி மறந்த பேர்வழிகளு மாவர். தங்கள் செயலுக்காக வருந்தி வெட்கப்பட்டு உயிரை விட்டுவிடுதல் எவ்விதத்திலும் நியாயம் கூற இயலாத கோழைத்தனத்தின் வெளிப்பாடேயாகும்.





சகிப்புத்தன்மை, தன்னம்பிக்கை, விடாமுயற்சியுடன் மனதை ஸ்திரமாக வைத்திருப்பவர்களுக்கு சலனமான சிந்தனைகள் தொட்டுவிடுவதில்லை. பரீட்சையில் தோல்வி கண்டால் அது ஒரு வெட்கக்கேடான சங்கதி என எண்ணு தலும், இதேபோல காதலன் காதலியைத் திட்டினால் அல்லது காதலி தன்னை அவமதித்துவிட்டாள் எனக்கருதி வெட்கப்பட்டுக் காதலன் தப்பான முடிவு எடுத்து தங்கள் உயிரைப் பணயமாக வைப்பதும் ஜீரணிக்க முடியாத சோக ங்கள்! மிகச் சாதாரண விஷயத்திற்காக வெட்கப் படுவது எங்கள் மனதை மேன்மேலும் ஒரு பலவீன நிலைக்கே இட்டுச் செல்லும். வெட்கம், துன்பத்தைப் பிரசவிக்கலாகாது.

நாட்டிற்கும் முழு உலகிற்கும் எவ்வளவோ சேவை செய்ய வேண்டிய நிலையில் உள்ள மனிதர்கள் கூச்ச உணர்வினால் ஒதுங்கி வீழ்ந்திட்டால் இந்தப் பூமி எவ்வளவு பெரிய இழப்புக்களைச் சந்திக்க வேண்டி வரும் என்பதை நாம் உணர்ந்தேயாக வேண்டும். திறமைகள் முடங்கலாமா? ஒடுங்கிப் போகலாமா? "இன்று எவராவது வந்து எதையாவது செய்துவிட்டுப் போகட்டும். எமக்கு இது எல்லாம் சரிப்பட்டு வராது" என எண்ணி, முன்னுக்கு வந்து சேவை செய்யாது விடுதலானது ஆமை தன் ஓட்டிற்குள்ளேயே சதா முடங்கித் தனது தலையையும் அச்சமுடன் உள்ளே திணித்துக் கொள்வது போல் மனிதனும் சீவிக்கக்கூடாது. பார்த்து, நிமிர்ந்து, நோக்க வேண்டியவன் மனிதனன்றோ!



RangaRakes

Tamilnavarasam.com

காந்தியடிகள், ஆபிரகாம்லிங்கன், வீரத்துறவி சுவாமி விவேகானந்தர், புரட்சிக்கவி பாரதி போன்றோர் அடங்கி ஒடுங்கிக் கூச்சப்பட்டு உலகின் முன்வரத் தயங்கினால் இந்த அற்புத ஆத்மாக்களின், சேவை எமக்குக் கிடைத்திருக்குமோ சொல்மின்காள்!

ஆன்மிகத் தலைவர்கள், புத்திஜீவிகள், விஞ்ஞானிகள் கலைஞர்கள், அரசியல் மேதைகள் எல்லோருமே, எங்கள் முன், எங்களுக்காக சொல்லிக் கொண்டிருக்கும் உண்மைகள் தான் என்ன?

பின்வரும் கருத்துக்களை மனிதனுள் சதா உருப் போட்டுக் கொள்ளுங்கள். துணிச்சலுடன் போராடு! வெற்றி பெறு! அச்சம் அற்ற, கூச்சப்படாத, ஒதுங்கிச் செல்லாத வாழ்வை நீயாகத் தேடு! மனதை விரிவாக்கு! செயல்களைப் பெரிதாக்கு! செய்த தவறுக்கு வருந்து! இதன் பொருட்டு வெட்கப்படுவது வருந்துவது கூட மீண்டும் எழுவதற் கேயாகும். முடங்கிப்போய் மூச்சிழப்பதற்கு அல்ல. தவறுகளை ஏற்பது பெருந்தன்மை. இதற்காகத் தொடர்ந்தும் துன்பத்தில் அமிழ்வதும் சரியல்ல. வெட்கம் கெட்டதனமாகத் தொடர்ந்தும் தவறு செய்வதுதான் வெட்கம். மற்றபடி வெட்கம் நுட்பமான அற்புத உணர்வுதான்.

தினக்குரல்
(ஞாயிறுமஞ்சரி)
25.03.2007







# சாந்தி

இம்மைக்கும், மறுமைக்கும் ஆன்மாவினுள் "சாந்தி" சேர்ந்து இயங்க வேண்டும். இதுவே கிடைத்தற்கு அரிய பெரும் பேறு. எமது மனதை நாம் அடிக்கடி சீண்டிப் பார்ப்பதுண்டு. இதயத்தைக் குடைந்தபடி வாழ்ந்தால் அது உடன் நொய்ந்து, நைந்து விடாதா? நிதானமான செயல்பாடுகள் அமைதி நிலையைத் தொடர்ந்து வைத்திருக்கும். தியானம், புலனடக்கம், மேலதிக ஆசைகளைக் கொய்தல் மூலம் எங்களை நாம் என்றும் புத்தம் புது மனிதானாக சுத்த நெஞ்சினனாக கொண்டிலங்கிட முடியும். அமைதியும், நிதானமும் உடையவர்களின் அகமும் முகமும் பிரகாசம் பெற்றுவிடுகின்றது.

ஆன்மாவின் அதி உன்னத அமைதி நிலை "சாந்தி" யாகும். சாந்தி நிலைநின்று தூய்மை தழுவிய மௌனத்துடனான அற்புத பேரின்ப நிலைக்கு நிகரேது? இம்மைக்கும் மறுமைக்கும் ஆன்மாவினுள் "சாந்தி" சேர்ந்து இலங்கவேண்டும்.

மனிதர்க்கு நிம்மதியின்றி அமைதி நெஞ்சில் அமரப் போவதில்லை. அமைதியுடன் தொடர்புபட்ட "நிம்மதி"



RangaRakes
Tamilnavarasam.com

தானாகவே வந்து விடுவதில்லையே என எல்லோருமே அங்கலாய்க்கின்றார்கள். "ஏதாவது ஒரு பிரச்சனைகள் மனசைச் சதா அரித்துக் கொண்டேயிருக்கின்றதே ஒழிய இந்த அமைதி நிலை எங்கே ஐயா, வருகின்றது" என்று சதா அலுத்தும் கொள்கின்றார்கள்.

ஆயினும், நாம் எமது மனதை நாமே சீண்டிப்பார்ப் பதே வழக்கமாக்கிக் கொள்வதை நாம் உணர்வதாக இல்லை. எதற்கெடுத்தாலும் மனம் பயப்படுகின்றது. எங்கே ஏதாவது தொல்லைகள், தொந்தரவுகள் வந்து அடித்து விடுமோ என அச்சப்பட்டே வாழ்ந்து கொண்டு இருக்கின் றார்கள். இதயத்தைக் குடைந்தபடியே வாழ்ந்தால் அது உடன் நொய்ந்து நைந்துவிடாதா?

பூவைப்போல நெஞ்சமதை வைத்துக்கொள்வாயாக! ஆயினும் அது துணிச்சலுடனான வைராக்கிய சிந்தையுடன் இருக்க வேண்டும். இரக்கம் கொள்ள வேண்டியவிடயத்தில் மென்மையும், திடமான முடிவுகளை, நல்ல சேவைகளை, பெரும் உழைப்பினை நல்க வேண்டிய தருணத்தில் வலிமையான உறுதியுடனான நெஞ்சுடன் இலங்கி வாழு என்று தான் சான்றோர்கள் சொல்லிக் கொண்டேயிருக்கின் றார்கள். மனசைக் "கல்" போல வைத்திரு, என்பது எதற்குமே இளகிவிடாமல் இரு என்பது அல்ல. திடசங் கல்பம் கொள்ள வேண்டிய நல்ல, சிறப்பான சந்தர்ப்பங் களில் மனம் குலைபடாமல் வைத்திரு என்பதேயாம். கெட்ட விஷயங்களைச் செய்யும் போது மனதைக் கல்போல்





வைத்துச் செயல்படு என்று எவராவது சொன்னால் அது அபத்தமானது அன்றோ!

அமைதியாக இருப்பதற்குக் கஷ்டமாக இருக்கின்றது என்று கூறுபவர்கள், தமக்கு விரும்பிய ஆலயங்கள் அல்லது தனிமையில் பிரார்த்தனையில் ஈடுபடுதல் சாலச் சிறந்த தாகும். ஓரிரு நிமிடங்களாவது பிரார்த்தனை செய்யக் கற்றுக் கொண்டால் அதன் பெறுபேறுகளைச் சில நாட்களிலேயே நன்று புரிந்து கொண்டு விடமுடியும். இதில் எதுவித சந்தேக மும் வேண்டவே வேண்டாம்.

பிராத்தனை செய்யுமுன் நாம் தூய்மையாகவும் நமது எண்ணங்களையும் ஒரு நிலைப்படுத்துகின்றோம் என்கின்ற சிந்தையை எம் உள் நிலைநிறுத்திக் கொண்டேயாக வேண்டும். கோவிலில் சும்மா இருந்து மனதை வெளியே அலைபாயவிட்டு சில நிமிடம் என்ன, மணித்தியாலம் என்ன, நாள் பூராக அமர்ந்து கொண்டாலும் எதுவித பயனும் இல்லை. ஓரிரு வினாடித் துளிகளே யாயினும். களங்கமற்ற நிலையில் நிதானமாக, சுதந்திரமாகப் பிரார்த்தனை செய்வோமாக! இன்று உடலையும், உள்ளத்தையும் தூய்மை சேர்க்க சுவாசப்பயிற்சிக் கலையைக் கற்பித்து வருகின்றார்கள்.

ஆழமான, சீரான சுவாசத்தை உட்செலுத்தி வெளி விடும் போது மூச்சு வெளிவிடும் உட்செல்லும் செயல் முறைகள் அமைதியாக, மெதுவாக நடைபெறுவதால்



RangaRakes Tamilnavarasam.com

ஆயுள் ஆரோக்கியம் மேம்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இதில் இன்னுமொரு முக்கிய விடயம் என்னவெனில், இத்தகைய பயிற்சிகளை நாம் மேற்கொள்ளும்போது எமக்குப் புறச்சூழல் பற்றிய எந்தச் சிந்தனைகளுமே தொட்டுவிடுவதில்லை.

மேலும் இந்த அமைதியான பயிற்சியினால் மனத்தளர்வு, கோபம், அச்சம், பீதி, ஆவேச உணர்வுகள் படிப்படியாகக் குறைந்து இறுதியில் அற்றேபோய் விடுகின்றது. ஆத்மபலம் அதிகரிக்க, அதிகரிக்க தேகபலமும் அதிகரிக்கின்றது. எமது உடல் உள்ளுறுப்புகளுக்கு அமைதியை முதல் ஏற்படுத்த வேண்டும். உடம்பை நாம் எம் இஷ்டத்திற்கு ஒரு இயந்திரம் போலக் கருதிச் செயல்படக்கூடாது. சுறுசுறுப்பாக இயங்குதல் என்பது கண்டபடி உடலை வருத்துதல் அல்ல. நிதானமுடன் செயல்படுபவர்கள் தொடர்ந்தும் களைப்பின்றி வேலை செய்கின்றார்கள். தேவையற்ற சஞ்சல உணர்வுடன் இயங்கினால் நாம் நினைத்த இலக்கினை அடைந்துவிடவே முடியாது.

அமைதியும், நிதானமும் உடையவர்களின் அகமும், முகமும் பிரகாசம் பெறுகின்றது. இவர்களின் ஒவ்வொரு கருமங்களும் பிறரை வசீகரிக்கின்றன. அத்துடன் உணவு உட்கொள்ளும் பழக்கங்களும் ஒரு கட்டுப்பாட்டினுள் அமைந்து விடுகின்றது. மிகையான உணவு உண்ணும் பழக்கத்தனால் உடல் நிலை கெட்டு விடுவதால் உள்ளமும் பாதிப்படைகின்றது. காலையிலும், நண்பகல் வேளையிலும்





அளவான சத்துமிக்க உணவினை உட்கொள்ளும் நாம் இரவு உணவைக் குறைத்தேயாக வேண்டும் எனவும் யோகாசனம் பயிற்றுவிப்போர் கூறுகின்றனர். நடைப் பயிற்சி எமக்கும் கட்டாயம் தேவையானது. மேலும் இரவு உணவு உண்டதும் உடனே உறங்கச் செல்வது, உடல் குப்புறப் படுத்தல், வளைந்து நெளிந்து நடத்தல், இருத்தல், தவறானது எனவும் மருத்துவர் அறிவுறுத்துகின்றனர். உடல் சுகாதாரம் என்பது, உள்ளத்தினையும் பேண வல்லது என்பதற்காகவே மேற்சொன்ன விடயங்களைச் சொல்லப் பட்டுள்ளதனை அறிக!

அமைதியாக வாழ்வதற்கு அதனை வழங்க இறைவனும் அவனால் உருவாக்கப்பட்ட இயற்கையும் சித்தமாயுள்ளன. எங்களுக்கான வழிமுறைகளை நாம் கண்டு கொண்டும் கூட போதிய சிரத்தையின்மையான நடத்தைகளால் எம்மை நாம் தவறாக வழிநடத்திக் கொண்டு வருகின்றோம் என்பதனைக் கவனத்தில் கொள்வோமாக!

எமக்குத் தெரிந்த நாம் பெற்ற இனிமையான நல்ல அனுபவங்களை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்வோமாக! தாங்கள் பெற்ற அமைதியை சகல உயிர்களும் பெறுவதாக என்றே மெய் ஞானிகள் கருதிச் செயல்பட்டும் வந்தனர். இவர்கள் சொன்ன வழிகள் எல்லாமே கடும் சிரமானது என ஆரம்பத்திலேயே கருதிவிடக் கூடாது. படிப்படியான வழிமுறைகள், காலப்போக்கில் அவை எளியதாகவும், தொடர்ந்து செய்துவர சந்தோஷமூட்டுவனவாயும் அமைந்து விடும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.



RangaRakes
Tamilnavarasam.com

"மனிதாபிமானம்" என்பது எமது உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கும் பேரமுதப்பெரும் பண்பாகும். எனினும், மனிதன் மனிதனுக்காக மட்டுமின்றிச் சகல உயிர்களுக்கும் இரங்கும் எண்ணத்தை உள்ளத்தே ஏற்றினால் பிறவியினை நாம் எடுத்ததன் பெரும் பயனைப் பெற்றவர்களாவோம். மனிதன் தன்னை நேசிப்பது போலவே மனித குலத்தை யும், மனித குலத்துடன் இணைந்து வாழும் எல்லா ஜீவன்களையும் அன்புடன் நோக்காதுவிடில் எமக்குள் நாமே ஒரு வேலியை ஏற்படுத்தி அன்பு எனும் பெரு வெளிக்குள் நுழைய விரும்பாதவர்களாவோம்.

"எல்லோர்க்கும் சாந்தி நிலை பெறுவதாக!" என்று சொல்கின்றோம். இதன் அர்த்தம் இறைவனிடம் இந்த வாக்கியத்தினை மொழிந்து கொள்ளும்போது "உன்னத மான சாந்தி நிலைக்கான அன்பூட்டலை நாம் வழங்கிடச் சித்தமாயுள்ளோம்" என்பதாகும். எனவே எம்முடன் நீக்கமற நிலை பெற்ற அன்பு வெள்ளத்தினுள் அனைவர்க்கும் உனது திருவருள் மூலம் சாந்தியைப் பெறுதற்கு நாம் விழைகின்றோம் இறைவா! என்பதாம். இந்தத் திவ்ய எண்ணம் மூலம் சுயநலம் களைந்த முழுமுகமான தோற்றத்தினையும் பெற்றவர்களாவோம்.

சோதனைகளைக் கடந்து படிப்படியாக முன் செல்லும் போது தான் அமைதிக்கான அனுமதி தானாக க்கிட்டுகின்றது. உள்ளத்தில் கொந்தளிப்பு இருக்கும் போது இன்பங்களை எங்கே அள்ளிக் கொள்ள இயலும்?





சோதனைக்குள் முடங்கி இருப்பது அர்த்தமற்றது என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். முடங்கி இருப்ப தற்கு இடம் கொடுத்தவர், இடர்களை ஏற்க வேண்டியதே. இவற்றைக் கடந்து சென்று கொண்டேயிருப்பவன் அமைதி நோக்கிய பயணத்திற்கு உடன்பாடான மனிதனாகின்றான்.

விரும்பத்தகாத அர்த்தமற்ற கற்பனைகளில் கட்டுண்டு அதனை விட்டுவிடமுடியாத பலர் தமக்கான அனுகூலங்கள் எப்படியும் வரும் என எண்ணுவது சரியானதுதானா? நல்ல செயல்களில் முனைப்பாக இயங் காமல் இடையூறுகளை மட்டும் இதயத்தில் நிறுத்தினால் செயல் எம்முள் கருக்கொள்ளுமா? சொல்லுங்கள்! தடைக்கற்களை உணராத நிலை மிகவும் பரிதாப கரமானது.

சில வேண்டத்தகாத விஷயங்களே எங்களால் விருப்பப்படுகின்றன. துரதிஷ்டமான சில சம்பவங்களும் கூட வந்துவிடுகின்றன.

இவை என்ன எப்படிப்பட்டன, இவைகளின் வடிவம், இவற்றால் ஏற்படும் பிரதிபலன் விளைவுகள் என்பனவற்றை அறிந்து கொள்ள விளைதல் வேண்டும். இவற்றைத் தெரிந்து, தெளியாதவரை அமைதியான வாழ்விற்கான வழியினைக்காண, காலங்கள் தான் தேவையின்றிக் கரைந்தும் போகலாம் அல்லவா?



RangaRakes

Tamilnavarasam.com

நாங்கள் சந்தோஷமாக இருக்கின்றோம் என்கின்ற நினைப்பே எம்மை மெல்லெனத் தழுவும் பூங்காற்று போல சுகானுபவங்களை ஊட்டவல்லது. அமைதியின் ஆட்சிக்குள் நுழைந்த எவருமே சந்தோஷசாகரத்தில், அதன் புனிதத் தினை நுகர்ந்தபடி இருப்பார்கள் என்பதில் சந்தேகம் என்பதே இல்லை. நல்ல தூய நினைப்புக்கள் எங்களை அமைதியினுள் தானாக இட்டுச் செல்கின்றது. குழப்பநிலை மனதை அலைக்கழிக்கும் என்பது எங்களுக்குத் தெரியாததும் அல்லவே! பொறுமையற்ற, நிதானமற்ற போக்கினால் மனிதர் மனிதரைப் பகைத்த வண்ணமே யுள்ளனர். மிகச் சாதாரண விடயத்தில் அமைதி இழந்து தம் முன்னே உள்ளவர்களையும் முகம் அறியா மனிதர் களைக் கூடத் திட்டித் தீர்க்கின்றார்கள்.

தம்மையறியாமலேயே உதிர்கின்ற கெட்டவார்த் தைகள் குண்டு வெடிப்பிற்கே அஞ்சாத வலிமை கொண் டோரையும் உடைத்தெறிந்து அணு அணுவாக மனதைச் சிதைத்தும் விடுகின்றது. "வைதல்" என்பது வைது கொள்பவரின் வறுமைமிக்க மனதைக்காட்டுவதாகும்.

இவர்கள் தங்களை மட்டும் வதைப்பதில்லை ஒன்று மறியாத அப்பாவிகளுக்கும் துன்பங்களைக் கேடுகளை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

மனதில் இறுக்கமற்ற நிலையே சந்தோஷத்தி னையும் சுதந்திர உணர்வினையும் தரவல்லது. பாடசா லைக்குச் செல்லும் மாணவர்கள், அலுவலகத்திற்குச்





செல்லும் உத்தியோகத்தர் உட்பட தம்தம் கடமைகளில் ஈடுபடச்செல்லும் அனைவருமே அமைதி பொருந்திய நிலையிலேயே தமது நிலையங்களுக்குச் செல்கின்றா ர்கள் எனச்சொல்லமுடியுமா?

தமது வேலையின் சுமை பற்றிய பய உணர்வு, மேலதிகாரியின் நச்சரிப்பு, கண்டனங்கள் பற்றிய அச்ச உணர்வுடன் தொழில் புரியச்செல்பவர்கள் எங்ஙனம் கடமையினைப் பூரணமாகச் செய்துகொள்ள முடியும்? பாடசாலை மாணவர்களுக்குக் கல்வியில் பொருத்தமற்ற சந்தேகம் தோன்றினாலே வெறுப்புணர்வு, கல்வி கற்பதில் பயம், ஆசிரியர் முன் செல்லத் தயக்கம், சக மாணவர் களுடன் சரி சமனாக உலாவருவதற்குத் தயக்கம் எனப் பலதரப்பட்ட முட்டுக்கட்டையான உணர்வுகளுக்கும் ஆளாகிவிடுகின்றனர்.

எமது பொழுதுகள் என்றும் எந்நேரத்திலும் ஆனந்தமாகக் கழிக்கப்படல் வேண்டும். அது நாம் தொழில் செய்யும் இடத்திலாகட்டும், சென்று வழிபாடு செய்யும் ஆலயமாகட்டும், பொழுது போக்கும் இடங்களாகட்டும் எல்லாமே சமநிலையில் நாம் நோக்குவதற்கு மனசைக் குழப்ப நிலையில் இல்லாமலும் சந்தேகமற்ற, இறுக்கமற்ற சுதந்திர உணர்வுடனும் வைத்துக்கொள்ளப் பழகவேண்டும். எந்தப் பிரச்சனைகளையும் உள்ளே வைத்துப்பூட்டி, அழுத்தி அதனைத் தீர்க்காமல் இருப்பது சாந்தி நிலையை விரும்பும் மாந்தர்க்கு ஏற்புடையதன்று.



RangaRakes

Tamilnavarasam.com

நாங்கள் சந்தோஷமாக இருக்கின்றோம் என்கின்ற நினைப்பே எம்மை மெல்லெனத் தழுவும் பூங்காற்று போல சுகானுபவங்களை ஊட்டவல்லது. அமைதியின் ஆட்சிக்குள் நுழைந்த எவருமே சந்தோஷசாகரத்தில், அதன் புனிதத் தினை நுகர்ந்தபடி இருப்பார்கள் என்பதில் சந்தேகம் என்பதே இல்லை. நல்ல தூய நினைப்புக்கள் எங்களை அமைதியினுள் தானாக இட்டுச் செல்கின்றது. குழப்பநிலை மனதை அலைக்கழிக்கும் என்பது எங்களுக்குத் தெரியாததும் அல்லவே! பொறுமையற்ற, நிதானமற்ற போக்கினால் மனிதர் மனிதரைப் பகைத்த வண்ணமே யுள்ளனர். மிகச் சாதாரண விடயத்தில் அமைதி இழந்து தம் முன்னே உள்ளவர்களையும் முகம் அறியா மனிதர் களைக் கூடத் திட்டித் தீர்க்கின்றார்கள்.

தம்மையறியாமலேயே உதிர்கின்ற கெட்டவார்த் தைகள் குண்டு வெடிப்பிற்கே அஞ்சாத வலிமை கொண் டோரையும் உடைத்தெறிந்து அணு அணுவாக மனதைச் சிதைத்தும் விடுகின்றது. “வைதல்” என்பது வைது கொள்பவரின் வறுமைமிக்க மனதைக்காட்டுவதாகும்.

இவர்கள் தங்களை மட்டும் வதைப்பதில்லை ஒன்று மறியாத அப்பாவிகளுக்கும் துன்பங்களைக் கேடுகளை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

மனதில் இறுக்கமற்ற நிலையே சந்தோஷத்தி னையும் சுதந்திர உணர்வினையும் தரவல்லது. பாடசா லைக்குச் செல்லும் மாணவர்கள், அலுவலகத்திற்குச்





செல்லும் உத்தியோகத்தர் உட்பட தம்தம் கடமைகளில் ஈடுபடச்செல்லும் அனைவருமே அமைதி பொருந்திய நிலையிலேயே தமது நிலையங்களுக்குச் செல்கின்றா ர்கள் எனச்சொல்லமுடியுமா?

தமது வேலையின் சுமை பற்றிய பய உணர்வு, மேலதிகாரியின் நச்சரிப்பு, கண்டனங்கள் பற்றிய அச்ச உணர்வுடன் தொழில் புரியச்செல்பவர்கள் எங்ஙனம் கடமையினைப் பூரணமாகச் செய்துகொள்ள முடியும்? பாடசாலை மாணவர்களுக்குக் கல்வியில் பொருத்தமற்ற சந்தேகம் தோன்றினாலே வெறுப்புணர்வு, கல்வி கற்பதில் பயம், ஆசிரியர் முன் செல்லத் தயக்கம், சக மாணவர் களுடன் சரி சமனாக உலாவருவதற்குத் தயக்கம் எனப் பலதரப்பட்ட முட்டுக்கட்டையான உணர்வுகளுக்கும் ஆளாகிவிடுகின்றனர்.

எமது பொழுதுகள் என்றும் எந்நேரத்திலும் ஆனந்தமாகக் கழிக்கப்படல் வேண்டும். அது நாம் தொழில் செய்யும் இடத்திலாகட்டும், சென்று வழிபாடு செய்யும் ஆலயமாகட்டும், பொழுது போக்கும் இடங்களாகட்டும் எல்லாமே சமநிலையில் நாம் நோக்குவதற்கு மனசைக் குழப்ப நிலையில் இல்லாமலும் சந்தேகமற்ற, இறுக்கமற்ற சுதந்திர உணர்வுடனும் வைத்துக்கொள்ளப் பழகவேண்டும். எந்தப் பிரச்சனைகளையும் உள்ளே வைத்துப்பூட்டி, அழுத்தி அதனைத் தீர்க்காமல் இருப்பது சாந்தி நிலையை விரும்பும் மாந்தர்க்கு ஏற்புடையதன்று.



RangaRakes

Tamilnavarasam.com

எம்முன்னே எல்லோருமே எம்மைப்போல் மனித முகங்களே. எதற்காக அச்சப்படல் வேண்டும் ஐயா? தெரியாததைக் கேட்பதும் தெளிந்ததைப் பிறருக்கு உணர்த்துவதிலும் என்ன பயம் வேண்டிக் கிடக்கின்றது.?

அழுது வடிவதால் குழப்பம் தீர்வதில்லை. எழுந்து நின்று இயங்குவதால் துணிவு எம்முள் உற்பத்தியாகின்றது. மகிழ்ச்சிப் பிரவாகம் பெருக்கெடுக்கின்றது என்கின்றார்கள். இந்த நிலையிலேயே மனிதன் தொடர்ந்தும் சித்தத்தை, ஸ்திரமாக்கிக் கொண்டேயிருக்க வேண்டும். எம்மை எக்கணமும் இறைவன் ஆசீர்வதித்துக் கொண்டு இருக்கின்றான். அமைதி வழிக்கான பாதை எம்முன் துலங்கித் தெரிய, எங்கள் நெஞ்சத்தை விருத்தி செய்வோமாக. சுருங்காத விழிகளுடன், நிமிர்ந்த நோக்குடன் கனிவுடன் உலகை நேசிப்போமாக!

❖ முறையற்ற தேவையற்ற விதமாக எவரையும் கண்டிப்பதனைக் கண்டனம் தெரிவிப்பதைத் தவிர்க்க!
❖ எவரையும் சரிசமனாக நோக்க மனதிற்குப் பயிற்சி அளியுங்கள்.
❖ இரக்கத்தைக் கருணையை எக்காலத்திலும் எமது இருதயத்திலிருந்து அகற்ற வேண்டாம்.
❖ நீதி கிடைப்பதற்காக அநீதி வழியை ஆயுதமாக்க வேண்டவே வேண்டாம்.
❖ உங்கள் ஆசைகளை மட்டுமே முதன்மைப்படுத்தல் தகாது.





❖ உங்களது இலட்சியங்கள் சிறப்பானதாக இருந்தாலும் அதை நிறைவேற்றிக்கொள்ள இன்னும் ஒருவரின் பாதையை அவர்தம் இலட்சியங்களைப் பொடிப் பொடியாக்க எண்ணுதல் கண்ணியமற்ற காரியம்.


முழு உலகையும் மனிதனால் ஆகர்ஷிக்க இயலும். தூய அன்பை, அமைதியைப் பிறருக்கு ஊட்டுவதை எமது கருமம் எனக் கொண்டால். இது ஒன்றும் சிரமமானது அல்ல, உலகில் அனைவரும் தங்களை எல்லோருமே நேசிக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள்.

ஆனால் வார்த்தைகளால் சொல்லத் தெரியாமலும் மானுட நேயத்தைக் காட்டிக்கொள்ள வெளிப்படையாக விரும்பாமலும் இருக்கலாம். நாம் எல்லோரையும் நோக்கி முன்செல்வோம். அவர்கள் எம்மை நோக்கி வரும் வரை காத்திருக்க வேண்டாம். மமதையற்ற இந்தக் கரிசனையுணர்வு மேலான அன்பு நிலை எல்லோர் மனதிலும் அமைதியினை ஊட்டும். எங்கும் அமைதி வியாபித்து ஆட்கொண்டால் "சாந்தி" என்கின்ற தெய்வீக நிலை அகிலத்தை சமாதான வழியினுள் இட்டுச் சென்றுவிடும்.

தினக்குரல் (ஞாயிறு மஞ்சரி) 14.01.2007



RangaRakes
Tamilnavarasam.com



# பிராயச்சித்தம்

செய்த பாவத்தில் இருந்து ஒருவருமே தப்பித்துப்போக முடியாது. சுயநலம் கருதிச் செய்யும் அடாத செயலுக்கு எந்த விதமான குற்றவுணர்வின்றி அதுசரி என விதண்டாவாதம் செய்பவர்களுக்குக் காலம் தண்டனை வழங்கியே தீரும். பாவங்களைச் செய்துவிட்டு அதை மூடிமறைக்க ஏதாவது பிராயச்சித்தம் செய்து தப்பித்துவிடலாம் என்று எண்ணியவர்கள் மீண்டும், மீண்டும் தவறான காரியங்கள் செய்தால் தெய்வம் கூட மன்னிக்குமா? குற்றங்களை மனப்பூர்வமாக உணர்ந்து வருத்தி தகாத கருமங்களை தீண்ட எண்ணங்கள் இன்றி வாழ்வதே பிராயச்சித்தமுமாகும்.

பண்ணிய பாவத்தைப்போக்கலாம் என எண்ணி, கண்ணியவான்கள் போல் நுண்ணிய உதவிகள் சிலவற்றைச் சிந்தினால் பாவங்கள் துடைக்கப்படும் எனக் கருதுதல் அருவருக்கத்தக்க செயல் அன்றோ!

செய்த பாவங்களின் பலாபலன்களை அனுபவத்தே தீரவேண்டும். அவ்வண்ணமே புண்ணிய கருமங்களைச்





செய்தாலும் அதற்குரிய நற்பெறுபேறுகளை அடைந்தே தீருவர் என்பது ஆன்மீகவாதிகளின் கூற்றாகும்.

செய்த பாவத்திற்காகக் கொஞ்சம் புண்ணியம் செய்து சமன்படுத்திப்பார்ப்பதற்கு வாழ்க்கை ஒரு தந்திரோபாயமான வர்த்தக நடவடிக்கையும் அல்ல.

மனிதன் தான் செய்கின்ற காரியங்களில் சிலவேளைகளில் அவைகளின் பலாபலன்கள் பற்றி அறிந்தும் செய்கின்றான். சில பொழுது அறியாமலும் செய்துவிடுகின்றான். வேண்டுமென்றே செய்கின்ற அநீதியான செயல்பாடுகள் அவனது உள்ளத்தின் குரூர வெடிப்புக்களாவே கருதப்படும்.

சுயநலம் கருதிச்செய்யப்படும் தகாத செயல்களுக்குப் பரிகாரம் தேடச்சித்தம் கொள்வோர் தமது மனதினுள் தூய்மை ஏற்றாமல், செய்கின்ற போலித்தனமான எந்தக் காரியங்களுமே கடவுளை ஏமாற்ற எண்ணும் செயல்தான். கடவுள் ஏமாற்றப்படக் கூடியபொருள் அல்லர்.

“தெரியாத்தனமாகச் செய்துவிட்டேன், இனி என்ன செய்வது?” என வருந்துபவர்கள் ஒரு புறம் இருக்க, “நான் தொடர்ந்தும் தவறுகளை இறுதி மூச்சு அடங்கும் வரை செய்தே தீருவேன்” என உடும்புப் பிடியெனப் பிடித்து மடிந்து போனவர்கள் சமூகத்தின் குப்பை மேடுகளுக்கு ஒப்பானவர்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

புண்ணியம் செய்வது என்பது பாவம் செய்யும் ஆத்மாக்கள் தாம் தப்புவதற்காகக் கண்டு பிடிக்கப்பட்ட உத்தி இதுவெனக் கொண்டு ஒழுகுவதை ஒரு கோமாளித் தனமான கொடிய செயல் என்பதை ஏன் தான் உணராமல் இருக்கின்றார்கள்? தன்னைத்தான் சமாதானம் செய்வது என்பது கூட ஒரு நியாயத்தன்மையுடன் இணங்கப்படல் வேண்டும். சட்ட விரோதமான, நீதிக்குப் புறம்பான காரியங்களைச் செய்பவர்கள் தமக்குள் சமாதானங்களைச் சொல்லித் தம்மை ஏய்க்க முடியாது.

தவிர, நன் நோக்கத்திற்காக செயல்களைச் செய்யும் போது யாராவது எதிர்பாராத விதத்தில் பாதிப்படைந்தால் "நாம் என்ன செய்வது இப்படி நடந்துவிட்டது, என்னால் இது வேண்டுமென்றே செய்யப்படவில்லை"எனத்தனக்குள் துன்பப்பட்டும். பின்னர் மனதை ஆசுவாசப்படுத்திச் சமானப்படுத்திக்கொள்ளலாம். பாவம் செய்பவர்கள் சமாதானம், நிம்மதி பெறுதல் கடினம். அவர்கள் திருந்தா தவரை நற்பேறுக்கான தூரம் கண்டறிய முடியாத ஒன்றே தான்.

செய்யத்தகாத காரியங்களைச் செய்பவர்கள் கூட தாங்கள் சொல்கின்ற கூற்றைப் பிறர் ஏற்றேயாக வேண்டு மென்ற நோக்கில் வலுக்கட்டாயமாகத் தங்கள் பக்க குதர்க்கவாதத்தை மீண்டும் மீண்டும் உருவேற்றிக் கொள் வார்கள். இவையெல்லாம் தங்கள் பலவீனம் என்று எதிரில் நிற்பவருக்குத் தெரியாத விஷயம் என எண்ணுதல் மடமையன்றோ!.





தமது தவறான செயலின் பரிணாமத்தினை அதன் தாக்கத்தை உணராதவர்கள் மற்றயவர்கள் ஏதாவது சிறு இடைஞ்சல்கள் இழைத்தால் அல்லது தமக்கு எதிராக ஏதாவது காரியம் செய்யப்புகுந்தால், அவர்களை இத்தகை யவர்கள் அங்கீகரித்து விடுவார்களா? பூனை கண்ணை மூடிவிட்டால் பூலோகம் இருண்டு போவதில்லை. உங்கள் தவறுகளை நீங்கள் மற்றவர்கள் பார்வையில் படாமல் செய்வதாகக் கருதுவது முட்டாள் தனமான கற்பனையாகும். யாரோ ஒருவரின் விழிகளில் குற்றம் செய்பவர்களின் செயல்கள் பட்டுவிடாமல் இருந்து போகாது.

"தானம்" செய்தால் பாவம் போகும் என்றுதான் பலர் இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். எனக்குத் தெரிந்த ஒருவர் "தான் எந்தத் தானமும் பெறுவதுமில்லை, யாராவது பொது இடங்களில் உணவு அளித்தால் உண்பதுமில்லை" என்று கூறுவார். அதற்காக அவர் என்னிடம் சொன்ன காரணம் இதுதான். "யாரோ ஒருவர் செய்த பாவமூட்டையை நான் ஏன் சுமக்க வேண்டும்? அவர்கள் இடுகின்ற உணவை உண்பதன் மூலம் அவர் ஏற்கனவே செய்த பாவங்களை நானும் அங்கீகரித்தவனாக ஆகிவிடுவதால், நான் எதனையும் ஏற்பதில்லை" என்று கூறிவிடுவார்.

நாம் எம்மைத் தூய்மைப்படுத்தாமல் செய்கின்ற தர்மங்களை இறைவன் ஏற்கமாட்டான். இழுக்கான கரங்க ளால் உணவூட்டினால் உண்பவனின் முழுத் தேகமும்



RangaRakes

Tamilnavarasam.com

ஆன்மாவும் துன்புறும். உணர்வோமாக! இத்தகையவர்கள் செய்வது பிராயச்சித்தம் அல்ல. மரித்துப்போன சரீரத்திற்கு புதுக்குருதியூட்டும் செயலன்றி வேறென்ன? ஆன்மார்த்த ரீதியாக ஆழமாகத் தாம் செய்த துஷ்டத்தனத்தை எண்ணி வருந்துபவர்கள் மட்டும்தான் கடவுளால் மன்னிக்கப்படுவர்.

வாழ்க்கை என்பது வியாபார நோக்குடன் மட்டும் பார்க்கப்படுவதல்ல யாராவது எமக்குச் செய்தால்தான், நான் பிறருக்கு ஏதாவது செய்வது பற்றி யோசிக்க முடியும் எனக் கருதலாமா? இன்று உறவுகளுக்கும் மேலாகப் பிறர் மூலமே நாம் பற்பல நற்பயன்களைப் பெற்றுவருகின் றோம். ஆனால் நாம் பிரதியுபகாரமாக என்ன, என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதைச் சிந்திப்பதேயில்லை.

நாம் வாழும் இல்லத்தினுள் மட்டுமா வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இல்லையே! எங்கள் குழந்தைகள், சுற்றத்தவர்கள், நண்பர்களைவிட நாம் பார்த்துக் கொண்டிருக்கும் முகங்கள் எல்லாமே மிக மிக அதிகமானவை தான். அந்த முகங்களை நாம் கண்டு கொள்ளப்பிரியப்படுவதில்லை.

ஒருவர் தெருவில் நடந்து கொண்டிருக்கும் போது அவர் தமது உடமைகளில் ஒன்றைத் தவறிக் கீழே வீழ்த்தி விட்டார்அப்போது வழியில் வந்த ஒருவர் அதை எடுத்து அவரிடம் ஒப்படைக்கின்றார். இதுவிடயத்தில் நன்மை பெற்றவர் புன்னகையுடன் நன்றி செலுத்த, உதவி





செய்தவரும் அதனை ஏற்றுக்கொள்கின்றார். கூட்டத்தினுள் நீங்கள் சிக்குண்டு அவஸ்தைப்பட யாரோ ஒருவர், உங்களைக் கை பிடித்து ஆசுவாசப்படுத்தி தகுந்த இடத்தில் சேர்ப்பித்து விடுகின்றார். இவை போன்ற ஆயிரக்கணக்கான உதவிகளை எமக்கு இந்த மானுடத்தின் அங்கத்தினர்கள் செய்து கொண்டுதானிருக்கின்றனர். இந்த அனைத்து உதவிகளுக்குமே நாம் அன்புணர்வினைக் காட்டிச் சந்தோஷமடைகின்றோம். இவைகளுக்கெல்லாம் பிரதியுபகாரம் செய்துவிடவும் இயலாது.

மனிதராகப் பிறந்து உதவுதலை விடுத்து, மற்றவருக்குத் தெரிந்தே உபத்திரவம் கொடுப்பதும், பின்னர் பிராயச்சித்தம் என்று சொல்லி ஏதேதோ செய்ய விழைவதும் பாவக்குழியில் வலிந்து வீழ்வதற்கேயாம். பாவங்களை வியாபாரமாக்கினால் சோகங்களே சேரும்.

இன்று சும்மா இருக்கும் நல்லோரைச் சீண்டுவது கூடப் பொல்லாதவர்க்குப் பொழுது போக்காக மாறிவிட்டது. ஒரு பெரியவர் சொன்னார், "எந்தவித கெடுதலும் எண்ணாதவர்களின் மனதை கொல்வது எவ்வளவு கொடுமையானது தெரியுமா? ஒருவரின் உடலுக்குச் செய்யும் தீமையை விட மற்றவர்க்கு இழைக்கும் மன உழைச்சலைக் கொடுப்பவர்களுக்கு நல்லவர்கள் கூட ஒன்றுமே செய்ய முனையாமல் மௌனமாகவே இருப்பது கையாலாகாத்தனமல்லவா?" எனக்கவலைப்பட்டார்.



RangaRakes
Tamilnavarasam.com

ஆனால் உண்மையில் நல்லோர்களின் மௌனம் என்பது ஊழிக்காலத்து பெருஅக்னியை விட உஷ்ண மானது. திருந்தாத தீயோர்க்குப் பிராயச்சித்தம் என்பது கிடையவே கிடையாது. பிராயச்சித்தம் கேட்பவர்க்கும் ஒரு தகுதி வேண்டும்.

"நீ சும்மா இருந்தால் அவன் ஏன் உன்னிடம் சண்டைக்கு வரவேண்டும்" என்று எமது ஆசிரியர்கள் தங்களிடையே சண்டையிடும் மாணவர்களிடம் சொல்லிக் கொள்வார்கள். ஆணவ முனைப்பு உள்ளவர்களுக்கு நேயப்பாடு இருப்பதில்லை. இன்று வல்லரசு நாடுகள் என்ன செய்கின்றன? நியாயம், நீதி பார்த்தா நடந்து கொள்கின்றன? சுயலாபம் கருதி பொருளாதாரத்தில் சுருண்டு கிடக்கும் நாடுகளிடம் சுரண்டிச் சீண்டி சுதந்திரம் பற்றி அறிவுரை பகர்ந்து கொண்டுதானே இருக்கின்றன? இவர்களின் மயக்கும் வாதங்களைக் கேட்டும் இந்த நாடுகளின் பாதங்களைத் தொடும் நாடுகள் இல்லாமல் இல்லையே! இயலாமை காரணமாக பேசாமல் இருப் பதுவே உசிதமானது என வலிமை குறைந்தவர்கள் இருப் பது ஒன்றும் வியப்பு அல்ல. நியாயங்கள், நொந்து போனால் அழிவு வந்து வலியோரையும் மடக்கும்.

இவை எல்லாமே காலப் பிழை. சர்வமும் அலங் கோலமாகிவிட்டது என்று சலிப்புடன் வாழ்வது பழக்கப் பட்ட வாழ்வாக அமைந்து விடக்கூடாது. மக்களின் நியாயமான எண்ணங்கள் ஒரு முகமாகக் குவிக்கப்படல் வேண்டும்.





ஒத்துப்போன நல்ல உணர்வுகளுக்கு வலிமை அதிகம் என்பதை நாம் உளமார நம்புவோமாக. ஒரு நாட்டைச் சுரண்டிக்கொண்டு பிராயச்சித்தம் செய்யுமாற் போல், "உதவுதல்" என்று போலி இரக்கம் காட்டி வீசியெறியும் சில்லறைகளுக்காக ஏங்கிப் பொறுக்கும் நாடுகளின் பட்டியல் கள் நீண்டுபோவது வேதனையிலும் மகா வேதனை அந்தோ!

ஒருவர் எமக்குச் செய்த தீங்குகளுக்காக நாம் உளமார மன்னித்துவிட்டால் அவர் எந்தவிதமான பிராயச் சித்தம் செய்ய வேண்டிய தேவையும் இருக்காது. மன்னித் தலை விடப் பெரிய வழங்கல்கள் எதுவுமில்லை.

ஒரு அரசியல்வாதி தனது நம்பிக்கைக்குரிய நண்பருக்குச் சொன்னார், "நான் ரொம்பவும் சுயநலமாகப் பல பாவங்களைச் செய்துவிட்டேன். மக்களை வருத்தி எனது காரியங்களைச் செய்தும் விட்டேன். எனக்கு இதன் பொருட்டு பிராயச்சித்தம் செய்ய வழிகள் உண்டா? எந்தக் கோவில், பொது நல நிறுவனங்களுக்கு நான் தானதர்மம், பூஜை, புனஸ்காரம் செய்யவேண்டும் சொல்லுங்கள்" என்றார். அதற்கு அவர் நண்பர் சொன்னார். "நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாம். செய்த பிழைகளை உணர்ந்து அடுத்த தடவை தேர்தலில் நிற்காமல் விட்டாலே போதும். கடவுள் உங்களை மன்னிப்பதுடன் மக்களும் சந்தோஷப்படுவார்கள் என்றார்.



RangaRakes
Tamilnavarasam.com

உலகில் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேடிக்கையும், அதே சமயம் கவலையளிப்பதுமான விஷயம் என்ன தெரியுமா?

ஒருவர் மோசடிக்காரன் எனத்தெரிந்தும் கூட மக்கள் அவர்கள் பேச்சை நம்புவதும் விட்டில் பூச்சிபோல் அவர்களிடம் வீழ்வதும் தான். பலதடவைகள் ஏமாற்றப்பட்டவரிடமே தொடர்ந்து சனங்கள் இனம்புரியாத மயக்கத்தில் தீய்ந்துபோகும் நிலை என்று தான் ஓய்ந்து போமோ?

சிலர் செய்கின்ற விஷமத்தனமான துட்ட காரியங்களுக்கு மன்னிப்பு வழங்க முடியாதுள்ளதாக அனேகர் கூறுவதை நாம் கேட்டிருப்போம். ஒருவன், ஒருத்தியைக் காதலிக்கின்றான். பின்னர் அவளைத் தாயாக்கிக் கைவிட்டு விட்டான். இதனால் பாதிக்கப்பட்டபெண்ணுக்கு அது ஈடு செய்ய வொண்ணாத இழப்புத்தான். இத்தகைய பெண்ணிடம் அவளை ஏமாற்றியவன் வந்து "நான் செய்தது தவறாயினும் உன்னை நான் திருமணம் செய்ய இயலாது. ஆனால், நான் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக் கொள். இது எனக்குப் பிராயச்சித்தமாயிருக்கும்" என்று சொன்னால் எப்படி அவள் மனநிலை இருக்கும்?

இதே மாதிரி இன்னும் ஒரு சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். ஒருவன் இன்னும் ஒருவனைக் கொன்று விட்டான். மேற்படி கொலை செய்தவன், கொலையுண்டவனின் குடும்பத்திடம் சென்று, "ஏதோ நான் கோபமிகுதியால், இந்தக் கொலையைச் செய்துவிட்டேன். மன்னித்துவிடுங்கள்" என்று கேட்டால் அந்தக் குடும்பத்தினரின் உணர்வுகள் எப்படி இருக்கும்?





வெறும் வாயால் சொல்லும் உபதேசங்கள் எல்லாமே நடைமுறை யதார்த்த வாழ்விற்கு ஒத்துவருவதுமில்லை. வேண்டுமென்றே செய்யப்படும் குற்றங்களை மன்னிக்க வேண்டிய அவசியமில்லை. நீதி, சட்டம் இவர்களை விட்டு விடுவதுமில்லை. அறியாமல் செய்கின்ற தவறுகள் தான் மன்னிக்கப்படுகின்றன. தொடர்ந்து போக்கிரித்தனமாகக் குற்றம் இழைப்பவர்களைக் கண்டும் காணாமல் இருப்பதும் அவர்கள் செயலை ஊக்குவிப்பது போல் நடப்பதும் அவர்களை மன்னிக்குமாறு பிறரைக்கேட்டு நிர்ப்பந்திப்பதும் அல்லது இத்தகையவர்களுக்குச் சாதகமான எந்த ஒரு செயலைச் செய்து சமாளிப்பது என்பவை தவறு செய்தவன் செய்கின்ற செயலைவிட மிகமோசமானதே என அறிவோமாக.

தீங்குகள் செய்கின்றவர்கள் வெளியே சிரித்தும், வீம்புகள் பேசிடினும் உள்மனம் சிதைந்தவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மற்றவர்களின் உடமைகளை மட்டுமல்ல அவர்தம் மனங்களையும் உடைப்பவர்கள், கெடுமதியாளர்களே. அடாவடித்தனமான கருமங்கள் செய்வதுகூடச் சிலருக்கு உவப்பாக இருக்கின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

ஆன்மீக வாழ்வு முறைகளால்தான் உலகில் பெரும்பான்மையான மக்கள் உயிர்கள் மீதான துன்புறுத்தல்களை வெறுத்து ஒதுக்கி வாழ்ந்து வருகின்றனர். இன்றும், என்றும் இறைவன் தன் குரலான மனச்சாட்சியின் ஓசையை மக்கள் உள்ளே ஒலிக்கச் செய்யாது விடின், முழு உலகமுமே கொலைக்களமாகி விடுமன்றோ!

மன்னித்தல் மூலம் நாம் ஒருவருக்கு உதவிகள் செய்தபின்பு, அதனைக் கண்டபடி பகிரங்கப்படுத்துதல் நாகரீகமான காரியமல்ல. "அவர் எனக்குக் கெடுதல் செய்தார். பின்பு அவர் என்னிடமே வந்து தனது தவறைச் சொல்லி வருந்தி தனக்குப் பிராயச்சித்தமே இல்லையா எனக்கேட்டு மனம் நொந்தான். நான் எனது பெருந்தன்மையினால் மன்னித்துவிட்டேன்". இப்படியான விஷயத்தை தாம் செய்த காரியங்களை பலருக்கும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வது சரியானதுதானா? இந் நடவடிக்கையினால் சில சமயம் சம்பந்தப்பட்ட நபரே, "அட இது என்ன போயும் போயும் இந்த மனிதரிடம் நான் எனது மனச்சாட்சியின் உறுத்தலுக்காக மன்னிப்புக் கோரியும் கூட எனது தவறான செயல்களைப் பலர் அறியப் பகிரங்கப் படுத்துகின்றாரே" என எண்ணி அவர் மன உளைச்சலுக்கும் உள்ளாகலாம்.

சில நல்ல காரியங்களை மௌனமாகச் செய்வதே எமக்குப் பெருமை அளிப்பதாகும். செய்கின்ற உதவிகளைப் பறைசாற்றுவது கூட உதவி பெற்றவரை அவமானப்படுத்தும் செயல்தான் உணர்க!





மனிதர்கள் எல்லோருமே ஏதோ ஒரு சந்தர்ப்பங்களில் தெரிந்தும், தெரியாமலும் தவறுகள் புரிவதுண்டு. எனவே, மனித வர்க்கத்தினுள் வாழ்கின்ற நாம் ஒருவரையொருவர் மன்னித்து அனுசரித்தேயாக வேண்டும்.


தவறு இழைத்தவன் வருந்தி எம்மிடம் வரும்போது நாம் ஆறுதல் அளித்தேயாக வேண்டும். பிறிதொரு சந்தர்ப்பங்களில் நாமும் ஒரு தவறுசெய்யும் போது ஆதரவுக் கரங்களைத்தேடி நாம் பிராயச்சித்தம் தேட விழைவது ஒன்றும் புதுமையல்லவே! வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடித் துளிகளிலும் கடக்கும் ஒவ்வொரு அடிகளிலும் நாம் எத்துணை செயற்கரிய பணிகளைச் சிறப்பாகச் செய்து முடித்து விட்டோம் என எம்மை நாம் எடை பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஏதாவது பணிகளை விட்டுவிட்டோமா என அறிந்து செயலாற்றல் வேண்டும். அத்தகைய எண்ணங்கள் நெஞ்சத்தில் வலுப்பெற்றால் தகாத கருமங்களில் இருந்து நாம் துண்டிக்கப்பட்டவர்களாவோம். எவர்க்கும் இன்னல் விழைவிக்க எண்ணமில்லாமல் வாழ்வது எமது மானுடப் பெரும்பேறு அல்லவோ, உணர்மின்!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)



RangaRakes
Tamilnavarasam.com



# ஆசை

ஆசைகள் வந்து மோதாமல் எதுவுமே பிரசவிக்கப்படுவதில்லை. உலக இயக்கத்திற்கு ஆசை துணைபுரிகின்றது. நியாயபூர்வமான ஆசைகள் மூலமே வாழ்க்கையைச் சீராக்கமுடியும். பணம், பொருள் புகழ் சேர்ப்பதற்கு மட்டுமல்ல, கல்வி பெறுவதிலும் பிறர்க்கு உதவுதலிலும் ஆசை கொள்வீராக! தகுதிக்கு மீறிய ஆசைகளை விடுத்து படிப்படியான வளர்ச்சிகளுடன் தேவைகளை நிறைவேற்றுவதே உன்னதமான வழியுமாகும். பேராசையால் உடலையும், உள்ளத்தையும் வருத்துதலால் நயக்கத்தக்க பயன் எதுவும் ஏற்பட்டுவிடப்போவதில்லை.

ஆசைகள் இன்றி வாழ்க்கை அமையுமா?
ஆசைகள் இன்றியே விருப்பங்கள் முகிழ்க்குமா?
ஆசைகள் இன்றிச் செயல்கள்தான் அவதரிக்குமா?
ஆசைகள் இன்றிக் காதல் கருக்கொள்ளுமோ?
காதல் இன்றி உலகுதான் செழிக்குமா?





மொத்தத்தில் ஆசைகள் வந்து மோதாமல் எதுவுமே பிரசவிக்கப்படுவதுமில்லை.

மேலும், ஆசைபற்றி எவ்வளவோ சொல்லிக்கொள்ளலாம். ஆனால், ஆசை ஒழிமின்!, ஆசை ஒழிமின்! என்றுதான் ஞானிகள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஏற்கனவே உள்ளவர்களும் சொல்லி வலியுறுத்தினார்கள். இனிமேலும் இதுபற்றிச் சொல்லத்தான் போகின்றார்கள்.

ஆசை என்பது மனித வர்க்கத்திற்கு மட்டும் உள்ள உணர்வு அல்ல. எல்லா சீவன்களும் தமது இயக்கத்திற்கான உந்துதலை சொல்ல வொண்ணா ஈர்ப்பு மூலம் நிறைவேற்றிக்கொள்கின்றன. விருப்பம் இன்றிச்செய்யப்படும் எக்கருமங்களும் முழுமை பெற்று விடுவதுமில்லை.

நியாயபூர்வமான ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வது ஒன்றும் தப்பான காரியமேயல்ல.

ஆசைப்படு! வாழுவதற்கு ஆசைப்படு!
சத்தியத்திற்கு இயைபுபட்டே வாழ ஆசைப்படு!

நியாயபூர்வமான ஆசைகளை வைத்திருந்தால் மட்டும் எந்தவித பயனுமில்லை. அதனை நிறைவேற்ற என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதனைத் தமக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும். வெறும் கற்பனைக் கோட்டைகளைக் கட்டிக்கொள்வதால் மனம் தன்வசம்



RangaRakes
Tamilnavarasam.com

இழக்கின்றது. தீர்க்க முடியாத ஏக்கங்களுடன் வாழுகின்ற வாழ்க்கை கோழைத்தனத்தின் ஒரு வடிவம் தான். எண்ணியன எண்ணி முடிக்காமல் மனம் குமைவதும் ஆசைப்பட்டு ஆசைப்பட்டே சீவிப்பதும் ஒரு வாழ்வா? சின்ன சின்ன நல்ல ஆசைகளைக்கூட நிறைவேற்றாமல் ஆதங்கப் படுபவர்கள் பலரும் சமூகத்தையும் தன் அருகே இருப்பவர் களையும் குற்றங்கள் பகருவார்கள். பசிக்கும் போது தானே உணவை எடுத்து உண்பதை விடுத்து அடுத்தவன் வந்து ஊட்டியேயாக வேண்டும் என எண்ணுவது என்ன நியாயம் உண்டு!

சிலர் கை நிறையக் காசு வைத்திருப்பார்கள் ஆனால் அதைச் செலவு செய்து அனுபவிக்கமாட்டார்கள். யாராவது ஒரு ஏழை தன் வசதிக்கேற்பச் சந்தோஷமாக வாழ்வதைப் பார்த்தால் மனம் பொருமுவார்கள்.

ஆசைக்கு உதவாத செல்வத்தால் பயன்ஏது? இன்று எத்தனையோ பேர் தமது ஆசையை அடக்கித் தாமும் அனுபவிக்காமல், உலகிற்கும் ஈந்துவிடாமல் செத்தே போகின்றார்கள். சேமிப்பதில் ஆசைப்படுவது தவறில்லை. அதற்காக அதனைத் தகுந்த நேரத்தில், சிறந்த வழியில் செலவு செய்யாமல் சந்தோஷங்களைத் தொலைத்தே வாழ்வதும் ஒரு வாழ்வா? பத்திரிகைகளில் சில புதுமையான பேர்வழிகள் பற்றிப் படித்திருப்பீர்கள். பிச்சைக்காரர்கள் பிச்சை எடுத்தே பணம் சேர்த்து அதனைச்செலவு செய்யாம லேயே மரணமடைந்த செய்திகளை அறிந்திருப்பீர்கள்.





பணம் சேர்ப்பதில் மட்டும் ஆசைப்படும் பலர் எதற்காக இந்தப் பணம் படைக்கப்பட்டது என்பதை அறிந்து கொள் வதில்லை. அனுபவிக்க முடியாத ஆசைகளால் அர்த்தம் ஏது?

நிலையாமை பற்றி உணர்ந்தவர்கள், ஆசை பற்றி நன்கு அறிந்து தமது வாழ்வை சிறப்பாக அமைத்துக் கொள்கின்றனர். "வாழ்வு நிலையற்றது" என்றுசொல்லி வரண்ட வாழ்க்கையை அமைக்காமல் சிறந்த சந்தோஷ வாழ்க்கையை அமைப்பவனே புத்திசாலி. எல்லாமே பொய் என்று சொல்லிப் பொய்யாக வாழ முடியுமா? உள்ளத்தில் விருப்பங்களைத் தேக்கி வெளியே தத்துவம் பேசி எப்படி இவர்களால் வாழ முடிகின்றது?

ஆசையுடன் பொருள்களை ஈட்டும் போது பேராசை வந்து, தன்னை வசப்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வரையறையற்ற எண்ணங்கள் ஒருவனை தன்நிலை இழக்கச் செய்துவிடுகின்றது.

விரும்பாத ஒன்றை வலுக் கட்டாயமாக ஏற்றுக் கொள்வது என்பது வாழ்க்கையில் ஜீரணிக்க இயலாத ஒன்றாகின்றது. ஆசைப்பட்டது கிடைக்காது விட்டால் வாழ்வின் ஆதார சுருதியே கருகிவிட்டதாக மனிதர் சோர்வடைந்து போகின்றனர். கிடைத்தது இதுதான் என மனதிற்குச் சொல்லி ஏற்கின்ற இயல்பு எல்லோருக்குமே வந்துவிடாது.



RangaRakes

Tamilnavarasam.com

காதலர்கள் ஆசையுடன் கட்டிய காதல் கோட்டை எதிர்பாராமல் சரிக்கப்படுவது சகிக்கக்கூடியதல்ல. சில ஆசைகள் படிப்படியாக உள்ளத்தில் படிந்து நிரந்தரமாகிவிடுகின்றன. நீண்டகால விருப்பங்கள் நிராகரிக்கப்படுவதானால் ஏற்படும் "நோவு" என்ன என்பதை இழப்பினால் நொந்து போனவர்களுக்கே தெரியும். இன்று மற்றவன் " வலி"யை பலர் உணராமையாலேயே பலரது துன்பங்கள் கண்டு கொள்ளப்படாமல் தீர்க்கப்படாமல் போகின்றன. மற்றவன் விரும்பும் நியாய பூர்வமான ஆசைகளை நாம் கேலி பேசுவதோ தடைக் கற்களாகக் குறுக்கே எம்மை நிறுத்திக் கொள்வதோ நியாயமே அல்ல.

ஒரு சின்னக் குழந்தையின் உணர்வுகளுக்குக் நாம் மதிப்பளித்தே தீரவேண்டும். நடக்க விரும்பு குழந்தையைப் படுத்திவைத்து வேடிக்கை பார்க்கக் கூடா இளைஞர்களின் வீறுகொண்ட பணியினை அவர்த ஆசைகளை மடக்கி ஒடுக்குவதில் என்ன லாபம் வந்விடப்போகின்றது?

வயதிற்குத் தக்க விதத்தில் பருவ ஆசைகள் கிளர்ந் எழுவது தவிர்க்க முடியாதது. எனினும் இளவயது ஏக்கங்கள், பாலியல் உந்துதல்கள், இதுபற்றிய பரவச கவர்ச் தேடல்கள் கூடச் சகஜமான சமாச்சாரங்கள் தான். தம்மை மீறிய கட்டுப்பாடு அற்ற உணர்வுகளுக்கு அடிமையவதனால் எதிர்கால வாழ்வின் ஸ்திரத் தன்மைகள் முற்றாக குலைந்துவிடும் என்பதை உணர்ந்தேயாக வேண்டும். காலங்கடந்த பின் ஏக்கப்பட்டு ஏதுபயன்?





தவறான பழக்க வழக்கங்களே இளவயதில் இன்ப மூட்டல்களாகத் தோன்றும் சின்ன வயதினில் எல்லாவற்றையும் அனுபவிக்க ஆசைப்படுவதனால் வரும் எதிர் விளைவுகள் பாரதூரமாக அமைந்துவிடுகின்றன. பாலியல் தொடர்பான அனுபவங்களை இளவயதிலே தேட முனையாமல் தமக்குரிய காலம் வரும் வரை, வேறு வழிகளில் நல்வழிகளில் புலன்களைச் செலுத்துவது கடினமான ஒன்றுமல்ல புலன்வழி சென்றால் களங்கமே மிகுதி!

கல்வி, கலை, சமய விடயங்களில் நாட்டம் கொள்ளும் போது விகாரமான சிந்தனைகள் ஒட்டிக் கொள்ளமாட்டாது. என்ன தான் மனிதன் "வலு" கூடியவனாக இருந்தாலும் மனதை அடக்க முடியாதுவிடில் அவன் என்ன மனிதன்?

கல்வி ஞானமும், பணப் பெருக்கமும் உடல் பலமும் இருந்தும் மட்டரகமான சகவாசங்களைக் கெட்டியாகப் பிடித்தால் இகழ்ச்சிக்குரிய நபர் ஆகிவிடுவரன்றோ! ஒருவருக்குரிய முக்கிய தேவைகள் என்பது அவனது ஜீவாதார உரிமையாகும். மேலதிக செல்வத்திற்காக அவாவுறுதல், மற்றவர் பொருளைஅபகரிக்க எண்ணுதல், எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்கின்ற மன நிலையில் வாழ்வது என்பதெல்லாம் நியாயபூர்வமான ஆசைகளாகக் கொள்ள இயலாது.

ஒருவர் தமக்குரிய முக்கிய தேவைகளை எதுவெனப் புரியாது மற்றவர்களைப் பார்த்துத்தான் அவன் அவாவுறு



RangaRakes Tamilnavarasam.com

கின்றான் எனச் சொல்கின்றார்கள். எல்லாச் சமயத்திலும் இக்கூற்றுப் பொருந்தாது. அவன் தேவைகளுக்காக மற்றவர்களின் முயற்சிகளைத் தடுக்க எண்ணுதலும் தகாது. இன்றுள்ள முக்கிய பிரச்சனைகளின் மூல காரணமே மற்றவன் உயர்ச்சிபற்றிக் கண்டபடி கண்டனம் கூறுவதும், தாங்கள் செயலற்றவர்களாக இருந்தும் அடுத்தவர் ஊக்கம் கண்டு போக்கற்றவர்களாக இருந்தும் அடுத்தவர் பற்றி வெட்டிப் பொழுதுகளை கழிப்பதுவுமேயாகும்.

விமர்சனங்களை எல்லோருமே கரிசனமாகச் சொல்வதில்லை. அறிவு, ஞானம் அற்றவர்கள் இது விடயத்தில் சர்வசுதந்திரமாக உள்நுழைந்து கொள்வது வேதனை. நல்லமனதும் ஆரோக்கியமான கருத்துச் செறிவுள்ள அறிவுமுள்ள புத்திஜீவிகள் சொல்வது எல்லாம் நல்ல நோக்கத்தின் பொருட்டேயாம். இத்தகையவர்கள் சத்தியத்தினுள் வாழ்ந்துவரும் மாந்தரின் போக்கிற்கு வழிகாட்டியாக இருப்பார்களே தவிர இடையூறு கொடுப்பதுமில்லை.

கல்வி, செல்வம், புகழ் எல்லாமே மனிதர்க்குக் கிடைத்தற்கரிய பெரும் பேறாகும். மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசை கொடிது எனக்கூறுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அத்துடன் புகழ் ஆசை, பதவி ஆசையையும் சேர்த்துக் கூறிக்கொள்ளலாம். இவை யெல்லாம், முறைகேடாகச் சேர்ப்பவர்களுக்காகவே சொல்லப்பட்டன. வாழ்வதற்கான பொருள், இருப்பதற்கு இல்லம், நல்ல மனையாள் குழந்தை





களைப் பெறுதல் இல்லற தர்மமுமாகும். எனவே மண், பொன், பெண் ஆசைகள் பற்றி கண்டபடி பேசித் தீர்த்தல் ஒரு குதர்க்கச் சிந்தனையுமாகும்.

முட்டுக்கட்டை போடுகின்ற வரட்டுப் பேச்சுக்களைக் கேட்பது சோம்பேறிகளின் விருப்பமான பொழுது போக்காக இருக்கின்றது. "ஆசைப்படாதே" என்று சொல்லிச் சொல்லியே வீச்சுடன் செயல்படும் வீரர்களை சும்மா இருக்கச் செய்வது சரியானதுதானா?

சின்னக் குழந்தைகளின் ஆசை, அபிலாசைகளைக் கூடநாம் கௌரவிக்க வேண்டும் இன்று கல்வி கற்க விரும்பும் ஏழைச் சிறார்களின் உரிமைகள் புறக்கணிக்கப் படுகின்றது. குழந்தைத் தொழிலாளர்களாகச் சின்னஞ் சிறுவர்களை எந்தவித மனச்சாட்சியுமின்றி வேலைக்கு அமர்த்தி வேலைவாங்கும் சுயநலமிகள், அவர்களின் ஆசை, அபிலாசைகளைப் பற்றி எப்போதாவது கிஞ்சித்தும், சிந்தித்தும் பார்த்ததுண்டா? நாகரீகம், விஞ்ஞானம், முன்னேற்றம் என்று சொல்லிக் கொள்ளும் நவீன உலகு அடுத்தவன் ஈனஸ்வரத்தித்துடன் முனகுவதையும், பெரும் ஓசையுடன் கூவி அழுவதையும் கூட ஏறெடுத்துப் பார்ப்பதாக இல்லையே எனக் கேட்கத் தோன்றுகின்றதல்லவா?

என்னதான் பலம் உள்ள தகாத ஆசைகள் முட்டி மோதினாலும் கூட அதனை வென்றேயாக வேண்டும். "என்னை அது பற்றுகின்றது, நாம் என்ன செய்வது என்று



RangaRakes

Tamilnavarasam.com

புலம்ப வேண்டியதில்லை". சில நல்லவர்களைக்கூட தில் இருக்கும் பேர்வழிகள் வலுக்கட்டாயமாக வம்புக் மாட்டி விடுவார்கள். கிடைக்கக்கூடாத பொருள் மீது "தீயது" எனத்தெரிந்தும் கூட ஆசைத் தீயை மூட்டி விடு கள். துர்மந்திரிகளின் துர்ப்போதனையால் "அரசுகள் ஆட்டம் கண்டுவிடுமல்லவா?

சிலர் தமது மனைவி, மக்கள் சொற்கேட்டுத் தகா வழியில் வாழத் தலைப்படுவதுண்டு. "அங்கே பாருங்க அவர்கள் எவ்வளவு சீரும் சிறப்புமாக வாழுகின்றார் நாங்கள் மட்டும் ஏன் துன்பமுடன் துவளவேண்டும்" எ சதா நச்சரிக்க, வீட்டுத் தலைவனும் வேண்டாவெறுப்புட நியாயமற்ற ஒவ்வா வழியில் சென்று துன்புறுவ எல்லோரும் அறிந்துவரும் நிகழ்வுகள் தான்.

ஆசைகளை மிதமிஞ்சிக் கொள்ளாதவன், பூர சுதந்தர உணர்வுடன், சந்தோஷமாகச் சீவிக்கின்றா மனதில் பாரத்துடன் எந்நேரமும் கல்லைக் கட்டியபடி பறந்து திரிவது சுலபமானதுமல்ல, சரியான சீவி முறைமையும் அல்லவேயல்ல. நாம் செய்யும் செய பின்னரான எதிர் விளைவுகளைப்பற்றித் தெளிவில்லாம இருப்பதனால் பல தொல்லைகளுக்குள் அகப்படுவ முண்டு. எடுத்த எடுப்பிலேயே ஒரு விடயத்தில் ஈர்ப் உண்டாகி மனம் அதிலேயேலயித்துவிட்டால் அதன் சா பாதகமானவை பற்றி எவர் எடுத்துச்சொன்னாலும் புரிவே யில்லை. கால மாறுதல்கள் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் நா





ஆசைப்பட்டதை எல்லாமே நிறை வேற்றிக் கொள்ளாமல் செய்வதுமுண்டு. இவைகள் தோல்விகளும் இல்லை.

சூழ்நிலைக்கேற்ற வண்ணமே செய்தொழிலும் அமையவேண்டும். தொழில் பற்றிய ஞானம் இன்றி அதனுள் புகுந்துவிட முடியாது. படித்தவன்தான், தான் படித்த கல்வியைப் பிறருக்கு ஊட்டமுடியும். ஒன்றுமே தெரியாமல், தெரிந்து கொள்ளவே முயற்சி செய்யாமல், மனதின் வேகத்துடன் எம் செயலை ஆரம்பிக்க முடியுமா?

சின்னக் குடிலுக்குள் வாழ்ந்து கொண்டே மகிழ்வுடன் மிதமான வேகத்துடன் உலகின் சகல சவால்களையும் எதிர்கொண்டு எங்கள் தேவைகளைப் பூரணமாகப் பூர்த்தி செய்யமுடியும். சிறிது காற்றின் வேகத்தில் அசைந்து தகர்ந்துவிடும் சிறுகூட்டின் நிலைகண்டு குருவிக்கூட்டங்கள் அலறி ஓடுவதில்லை. மாறான அவை அடுத்த நொடியி லேயே புத்தம் புது வீட்டைப் பொலிவுடன் கட்டி முடிக் கின்றன.

நல்ல வீட்டில் இருந்து கொண்ட எமக்கு மாளிகை தான் வீடாகவேண்டுமென அடங்காத ஆசைகளுடன் மென் மேலும் அவாவுறுகின்றார்கள். எத்தகைய மாடி வீட்டுச் சொந்தக் காரனையும் கேட்டுப்பாருங்கள். அவர்கள் எல்லோருமே திருப்திப்பட்டுக் கொள்வதுமில்லை. அது பிழை, இது பிழை எனச் சொல்லிச் சொல்லி தங்கள் இருப்பிடத்தின் அளவை, மென்மேலும் விஸ்தீரணமாக்கிக்



RangaRakes
Tamilnavarasam.com

கொள்கின்றார்கள். எத்தனை பேர் தமக்குப் படுக்க சின்னப் படுக்கை போதும் என எண்ணிக் கொள்கின்றார்கள்? வீடு முழுக்கச் சடப் பொருட்களைக் கொட்டிக் குவித்துச் சங்கடத்துடன் காற்றுக்கு இடவசதி கொடுக்காமல் நடந்து போக நிலம் வைக்காமல் வீட்டில் அழகைமட்டும் ரசித்து உள்ளத்தை எங்கெங்கே பறக்க வைத்து விடுகின்றார்களே பரிதாபம் ஐயா!

ஆசைகளைக் கயிறு கொண்டு இழுத்துக்கட்டி வைக்க இயலாது. உயர்ந்த இலட்சியமும், ஆழ்ந்த அறிவும், உறுதியும் எம்மை எங்கள் சுயநிலையில் இருந்து நழுவி வைக்கச் செய்யாது. மேலும், எந்த விதத் துன்பமும், மன நோவும் தராதவரை எமக்குள் ஏற்படும் நியாயமான ஆசைகளால் எமக்கு எந்தப் பிரச்சனைகளும் ஏற்பட்டுவிடப் போவதுமில்லை. எங்கள் நிலையை உயர்த்தவல்ல ஆசைகளை நாம் வெறுத்து ஒதுக்கிடத் தேவையுமில்லை. பெறக்கூடிய, நல்லனவற்றைப் பெறுதல் சிறப்பு!

வாழ்க்கையில் வென்றுவிட என்ன சூட்சுமம் இருக்கின்றது என்று ஆய்ந்து, எம்மை நாமே குடைந்து, நெடும் காலம் காலத்தை அவமாகக் கழிக்க வேண்டிய தேவையுமில்லை. மிகச்சாதாரண எளிமை வாழ்வு வாழ்ந்து கொண்டாலே போதும் எல்லா இன்பங்களும், வெற்றிக ளும் படிப்படியாக வந்து சேர்ந்தே தீரும்.

ஒரு துறவி ஒருவர் வெளிநாடு செல்வதற்காக விமானத்தில் ஏறினார். அவரிடம் ஒரு துணிப்பொதி ஒன்று





மட்டும் அவரது தோளில் தொங்கியது. எந்த விதமான பெரிய பொதிகளும் இல்லை. எவ்வித பதட்டமும் இன்றிச் சந்தோஷமாகத் தமது ஆசனத்தில் இருந்தார். அவருக்குப் பக்கத்தில் இருந்த பயணி அவரைக்கேட்டார். உங்களின் பொதிகள் இவ்வளவு மட்டும்தானா என்றார். “ஆமாம்” இவ்வளவு மட்டும் தான் என்றார். அது சரி நீங்கள் யாரிடம் போகின்றீர்கள்?எங்கு தங்கப் போகின்றீர்கள்? யாரைத் தெரியும் என அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டார்.

துறவியாரும் புன்னகைத்தபடியே “எனக்கு யாரையும் தெரியாது. தற்போது எனக்கு உங்களை மட்டும் தான் தெரியும். நான் செல்லும் நாட்டின் முதல் நண்பர் தற்போது நீங்கள் தான்” என்றார்.

பயணியோ அதிர்ந்து விட்டார். என்ன தன்னம்பிக்கையான துணிச்சலான, பற்றற்ற வாசகம்! எதுவித சலனமும் இன்றி எல்லோரையும் விசுவாசிக்கும் இந்த ஆத்ம பலம் லேசுபட்டதா என்ன? எவ்வித ஆசைகள் எதிர்பார்ப்புக்கள் இன்றிச் சுதந்திரமாக ஜீவிப்பது துறவியின் மாந்தர்களுக்கு இயலுகின்ற ஒன்றா? சுவாமியாரின் அந்தப்பேச்சு, துணிவு அந்தப் பயணியை வசீகரித்து விட்டது. துறவியாரை அவரே தம்முடன் கூட்டிச்சென்றார்.

மிதமிஞ்சிய ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதவிடத்து மனிதர்க்கு தாழ்வுச்சிக்கல் நிலைகூடத் தோன்றலாம். எல்லாம் என்னால் முடியாமல் போய்



RangaRakes
Tamilnavarasam.com

விட்டதே என மனச்சோர்வுடன் வாழ்ந்து விடுவது துரதிஷ்டமான கருத்தினை உள்ளத்தில் வலுவூன்ற வைத்துவிடும். இந்தப் பலவீன நிலைக்கு நம்மை நாம் உட்படுத்த வேண்டிய அவசியமும் தேவையும் இல்லவேயில்லை.

பொறுமையுடன் கூடிய தொடர் முயற்சிகள், நம்பிக்கை உணர்வுகள், நியாயமான எதிர்பார்ப்புக்கள், கட்டுப்பாடான ஆசை அபிலாசைகளை வைத்துக் கொள்பவன் நிச்சயம் தன் தேவைகளை உருவாக்கவும் பெற்றுக்கொள்ளவும் உரிமை பெற்ற மனிதனாகின்றான். இந்த நிலை வரப்பெற்ற நிறைவுள்ள மனிதர்களே பூமியில் வாழும் சகலர்களுக்கும் உதாரண புருஷர்களுமான்றனர்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்ச
04-02-2







# சுயபச்சாதாபம்

தமக்குள்ள பலவீனங்களைக் களைய முனைவதை விடுத்துத் தமக்காக எல்லோரும் பரிதாபப்பட வேண்டும் என எண்ணுதல் தாழ்வுச் சிக்கலுக்குட்படுத்திவிடும். உடலில் வலு இழப்பதைக் காட்டிலும் மனதளவில் தளர்வுறுதலே ஆபத்தானது. உடலும், மனமும் ஒன்றுக்கொன்று இயைபுபட்டமையினால், மனத்தினைத் திடமாக வைத்தால் தேக ஆரோக்கியமும் வலுப்படும். தமக்குத் தாமே இரக்கப்பட்டு சுயபச்சாதாப நிலைக் குட்படுதலை விடுத்தும், தங்களால் ஒன்றுமே முடியாது என்ற கோழைத்தனத்தைத் தகர்த்தும், இந்த முழுஉலகிற்கும் தம்மால் நல்லவைகளை இயற்றிட இயலும் என எண்ணுதலே சாலச் சிறந்தது.

தங்களைப் பற்றிய பரிதாப உணர்வுகள் மேலோங்கி இருப்பது அவர்களையே தாழ்வான நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

எங்களைப் பற்றிய அபிப்பிராயங்களை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஏதாவது எமக்குரிய குறைகளைப் பலவீனங்களைக் களைவதை விடுத்து எனது



RangaRakes
Tamilnavarasam.com

நிலைக்கு எவருமே இரங்குவார் இல்லையே என மனம் உருகிக் கரைந்து கொள்ளுதல் ஏற்புடையதல்ல.

தன்னை வலுமூட்டிக்கொள்வதை விடுத்துத்தன் மனத்தைத் தளர்வுறச்செய்வது தனக்குத் தானே இழைக்கின்ற பச்சைத் துரோகமுமாகும். எம்மைத் தவிர எமது ஆத்மாவிற்குப் பலம் சேர்ப்பவர்கள் யார் உளர்? திடமற்ற மன நிலையில் தனக்குத் தானே பரிதாபப்பட்டுக் கொண்டு திரிவது "சுய பச்சாதாபம்" என்கின்ற இழிநிலை என உணர்வோமாக!

இப்போது நான் கூறுகின்ற மாதிரியான பேர் வழிகளை அடிக்கடி சந்தித்திருப்பீர்கள். நான் கூறுகின்ற நபர் என்னை மட்டுமல்ல எவரைக் கண்டாலும் இவ்வித மாகத்தான் பேச்சை ஆரம்பிப்பார்.

"இதோ பாருங்கள் தம்பி! இன்று காலையில் நான் எழுந்தேன். உடம்பு எல்லாமே ஒரே வலி. எழுந்திருக்கவே முடியவில்லை. அப்படியிருந்தும் நான் அதிகாலையிலேயே எனது வீட்டுவேலைகளை நானே செய்தேன். ஒருவருமே நித்திரை விட்டு எழும்பவுமில்லை. எல்லோரது வேலைகளையும் நான் தான் பார்த்தேன். எனக்குச் சுகயீனம் வேறு, என்னை வருத்துகின்றது. சரி நான் எழும்பியதும் வேலைக்குப் போக வேண்டும் என்று ஒரே பதட்டம் வேறு, சொன்னால் நம்பமாட்டீர்கள். எனது மனைவி, பிள்ளைகள் தங்கள் விருப்பப்படியே எழும்பினார்





கள். தங்கள் கருமங்களில் கண்ணாக இருந்தார்கள். தேனீர் பருகினார்கள், காலை உணவை மனைவி தயாரித்தாள். என்னை ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை. தேனீர் எனக்குத் தரப்படவில்லை. சரி காலை உணவையாவது சாப்பிடு என்று கேட்டார்களா, அதுவும் இல்லை. நான் மனதில் துயரைத் தாங்கியவாறு, வெறும் வயிற்றோடு அலுவலகத்திற்கு வந்து விட்டேன். எனது நிலைரொம்பவும் பரிதாபகரமானது. தம்பி... எனக்கு யார் ஆறுதல்...? என்னை எவர் கவனிக்கப் போகின்றார்கள். நான் நோயாளி, என் மீது இரக்கப்பட ஒருவருமேயில்லை" என்று சொல்லிக் கொண்டேபோனவர், சில வினாடிகளில் அழ ஆரம்பித்து விட்டார்.

சரி மேலே சொன்ன விடயத்தை ஆராய்வோம், குறிப்பிட்ட நபரின் செய்கை கூற்றுப்பற்றி என்ன கருதுகின்றீர்கள்? இவரது கூற்று சரியோ, பிழையோ என்பது அல்ல பிரச்சினை. எதற்காகத் தன்னை ஒதுக்கப்பட்ட நபராகக்கருதுகின்றார் என்பதே கேள்வியாகும். இத்தகைய வர்களின் பேச்சு, செயல்களில் சில நியாயங்களும் இருக்கலாம். ஆனால் இப்படியாக வேண்டுமென்றே பிறரைத் தூற்றுவதற்காகவும், தமக்கு அநியாயம் நடப்பதாகக் காட்டித் தன் மீது பிறரின் அனுதாபங்களைத் தேடுகின்ற பேர்வழிகளும் உள்ளார்கள். சாதாரணமாக வீட்டில் சந்தர்ப்பவசத்தால் மனைவி மறந்துபோய் நீங்கள் தேனீர் ஏன் பருகவில்லை எனக்கேட்காதுவிட்டால், அதையே ஒரு பிரச்சனையாகக் கொள்வோரும் இருக்கின்றார்கள்.



RangaRakes Tamilnavarasam.com

தனது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த குவளையில் உள்ள தேனீரை மனைவி சொன்னால்தான் குடிப்பேன் என்று வீம்புகொள்வது என்ன நியாயம் ஐயா! சாதாரண மாக குடும்ப சூழ்நிலையில் குழந்தைகளுடன் கருமங் களை, சிரமங்களுடன் செய்து கொண்டிருக்கின்ற இல்லத் தலைவிகள் தமது மேலான பொறுப்புகளின் காரணமாகக் கணவனைச் சில சமயங்களில் கவனிக்காமல் விட்டு விடலாம்.

அதே போல், கணவன் என்பவனுக்கு எல்லா வேளையிலும் வேலைகள் சீராக இருக்காது. வேலைப்பளு காரணமாக மன அழுத்தங்களுடன் அவன் இயங்க வேண்டிய சூழ்நிலையும் வரலாம். அந்த நேரத்தில் அவன் தனது வீடு வீட்டுக் கருமங்களை கண்டு கொள்ளாமல் இருக்கலாம். இதன் பொருட்டு "ஐயோ இந்த மனுஷன் எங்களை வெறுத்துவிட்டார். என்னைக் கவனிப்பதே கிடையாது" என்றும் "வாழ்க்கையே வெறுத்து விட்டது என்றும்" மனைவி புலம்பித்தீர்க்கலாமா?

ஒருவர் தமது மனோநிலைக்கு எதிராக இருக்கின்றார் என்கின்ற தேவையற்ற ஒரு காரணத்தைக் கண்டு பிடித்து மன உழைச்சலுக்கு ஆளாவதால் என்ன பயன் வந்து விடப்போகின்றது? சில விசித்திரமான நபர்கள் சும்மா "ஏதாவது வழியில் போகின்றவர்களை இடமறிந்து "ஒரு சோகக்கதையை, உண்மைச் சம்பவங்களை கூறுகின் றேன்" என்பார்கள். சரி சொல்லுங்கள் என்று கேட்டு





வைத்தால் ஏதேதோ சொல்லி, முடிவில் "இந்தப் பரிதாப சம்பவத்திற்குள்ளானவர், யார் என்று கேட்கத் தோன்ற வில்லையா? அவர் யார் என்று அறிந்தால் மேலும் நீங்கள் ஆச்சரியமும் வேதனையும் படுவீர்கள். அது நான் தான் ஐயா, இப்படி நான் படும் அவஸ்தைகளை வேறு ஒருவரும் படக்கூடாது ஐயா" என்று தன்னைத்தான் நொந்து கொள்வார்.

இதில் வேடிக்கை என்னவெனில் இத்தகைய சிலர் வாழ்க்கையில் ஏதாவது திடீர் திருப்பத்துடன், எதிர்பாராத வரவுகள் கிட்டினால் போதும் இவர்கள் மற்றவர்களை ஏறெடுத்தும் பார்க்கவே மாட்டார்கள். ஆக தங்கள் துன்பங் களைப் பிறரிடம் லாவகரமாகச் சுமத்தி அவர்களிடம் அனுதாப வார்த்தைகளைக் கேட்டுப் பெற்றுத் தன் பாட்டிற்குப் போய்விடுவார்கள், இத்தகையவர்களின் பேச்சை அப்படியே நம்பி, நீங்கள் அவர்கள் கூறிய துரோகம் இழைத்தார்கள் என்று அவரால் சொல்லப்பட்ட நபர்களுடன் இவருக்காகப் பரிந்து பேசப் புறப்பட்டால் அதனால் ஏற்படும் எதிர் விளைவுகளோ சொல்லிமாளாது. மனிதர்களை இனம் காணுவதே பெரும் கலை!

"அந்த மனுஷன் பேச்சை நம்பி நீங்கள் வேறு வந்து விட்டீர்களே... நாங்கள் ஒருவருக்கும் அநியாயம் செய்து விடவில்லை"... என்ற எதிர்ப் பாணங்களை நாம் தேவை யின்றித் தாங்கிக்கொள்ள வேண்டிவரும்.



RangaRakes
Tamilnavarasam.com

தொடர்ந்து தங்களைப் பற்றிய பிரச்சனைகளையே பெரிதாக உருப்போட்டு அது தீர்க்க முடியாத ஒன்று எனச் சொல்லிச் சொல்லியே இதயம் தீய்ந்து போகின்றவர்கள், முடிவில் மிகவும் பலவீனமான நிலைக்கே தள்ளப்படுகின்றனர். மற்றவர்களிடம் இரக்கம் சம்பாதிக்க எண்ணி சுய பச்சாதாப உணர்வு மேலோங்கினால் முடிவில் மன அழுத்த நோய்க்கும் ஆளாகின்றனர். இத்தகைய தாழ்வுச் சிக்கலில் உட்படுகின்ற நபர்கள், சாதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற எளிய மனிதர்களைப் பார்த்துப் பொறாமை கொள்ளும் நபராக உருமாறுவது கூட விரும்பத் தகாத சங்கதி அல்லவா?

"அதோ பாருங்கள் முன்பு இவன் என்ன நிலையில் இருந்தான், இன்று இவன் நிலையைப் பார்த்தீர்களா...? இன்று இந்த மனுஷன் என்னையே திரும்பிப் பார்க்கின்றான் இல்லை. எல்லாமே ஒரு காலம் ஐயா. இன்று நான் நிலைமை மாறி மற்றவன் சிரிக்கும் நிலைக்கு வந்து விட்டேனே.. என்னை எவன் கண்டு கொள்ளப் போகின்றான். நான் ரொம்பப் பாவப்பட்ட ஜன்மம் " என்று சொல்லிக் கரைபவர்களை என்ன என்பது?

தாழ்வு மனப்பான்மை என்கின்ற தாழ்வுச்சிக்கல் என்பது தனக்குள் மனப்பாதிப்பு என்றும் அதனில் இருந்து தான் விடுபட வேண்டும் என்பதை அவர்கள் உணராமல் விட்டால் அது எவ்வளவு கோரமாக நெஞ்சை நெருடிக் கொண்டேயிருக்கும் என்பதை அறிய வேண்டும். எத்தகைய





துயர்களையும் தாங்கிக்கொண்டு வாழ்க்கையில் எல்லாமே சாதாரண நிகழ்வுகளே என எண்ணிச் செயல்படும் துணிச்சல் மிக்கவர்கள் தமது துன்பங்களைவிடுத்து கடமைகளைச் செய்வதிலேயே நேரத்தைச் செலவழிப்பதால் எவ்வித மனத் தாக்குதல்களையும், தூக்கிப் பிடிக்காத நபராக வாழ்ந்து கொள்கின்றனர். "கடமை காலத்தை வெல்லும்"

பல வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தில் தனது இளம் மனைவியைப் பறிகொடுத்த நண்பர் ஒருவர் தனது இரு சின்னஞ் சிறுசுகளுடன் மறுமணம் செய்யாமலேயே பிள்ளைகளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். எந்த ஒரு உறவினர்களிடமும் தமது குழந்தைகளை ஒப்படைக்கவோ அவர்கள் மூலம் பராமரிக்கவோ மறுத்தும் விட்டார். இன்று தமது பிள்ளைகளுடன் நிம்மதியாக வாழ்ந்து வரும் அவர் எந்த ஒரு தருணத்திலும், "எனக்கு எவர் வந்து உதவுவார்கள், நான் என்ன செய்வேன்", எனச்சொல்லி இரக்கத்தைப் பெற விரும்பியதேயில்லை.

எங்களால் எல்லாமே முடியும். பிறரிடம் நாம் உதவி கேட்பது தவறு இல்லாவிட்டாலும்கூட நீண்ட காலத்தேவைகள் எமக்கு இருக்கின்ற போது, எல்லா நேரங்களிலும் தொடர்ந்து எப்படி உதவிகள் கேட்க முடியும்? தவிர எல்லோருமே தங்கள் குடும்பம், வீடு என்று யந்திரகதியில் இயங்கிக் கொண்டிருக்கும் போது நாங்கள் போய் அதனைச்



RangaRakes

Tamilnavarasam.com

செய்து தாருங்கள். இவற்றை முடித்துத் தாருங்கள் எனக்கேட்பதும் சரியானதும் அல்ல.

மேலும் உதவிகள் கேட்டே பழகிப்போனால் நாம் சுயமாக இயங்காத நிலையும் தோன்றிவிடலாம். சுய மரியாதை உணர்வுமிக்கவர்கள் சுயபச்சாதாபம் கொண்ட மனிதர்களாக இருக்கமாட்டார்கள். "நாம் எதற்கு எங்கள் கவலைகளை அள்ளிப் பிறர் முன் கொட்ட வேண்டும்" என்றுதான் எண்ணுவார்கள்.

சிலருடன் பேசிப்பாருங்கள் சற்று வித்தியாசமான மனிதர்களாகக் கூட உங்களுக்குத் தோன்றலாம். விடயம் இதுதான், "உங்களைப் பார்த்தால் ரொம்பப் பரிதாபமாக இருக்கின்றது. கடவுள் ஏன் தான் உங்களை வதைக்கின் றாரோ தெரியவில்லை. உங்களுக்காக நான் மிகுந்த அனுதாபப்படுகின்றேன்" என்று ஏதாவது பெரிய பிரச்சனைகள் காரணமாக அல்லல்படும் நபரிடம் உண்மையான கரிசனையுடனும் இப்படிப்பேசினால் அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு கோபாவேஷத்துடன் தமது கோலத்தை மாற்றியே விடுவார்.

"நீங்கள் யார் என்பொருட்டு அனுதாபப்படல் வேண்டும்? எனக்கு என்ன நடந்துவிட்டதாக இங்கு வந்து கதைபேசிக் கொண்டிருக்கின்றீர்கள். எனக்கு என்மீ அனுதாபம் காட்டுபவர்களைப் பிடிக்காது. எனது பிரச்சனை களை நானே தீர்த்துக் கொள்கின்றேன். எனவே தயவுகூர்ந்து என்னிடம் வந்து இப்படிப் பேச வேண்டாம்".





இவ்வாறு இவர்கள் பதில் சொன்னால் கேட்க மனசுக் குச் சங்கடமாகத்தான் இருக்கும். சிலரது சுபாவமே, மற்றவர் தயவினை அறவே நாடாமலும் அல்லது பிறர் உபதேசங்களைக் கேட்க விரும்பாமலும் இருக்கலாம். மிகவும் கஷ்டப்பட்டுக் குடும்பத்தைக் காப்பாற்றி வரும் ஏழைகள் கூட சுயமரியாதையுடன் பிறரிடம் தங்கி வாழ விரும்பாத குணாம்சங்களை இறுகப் பற்றியே வாழ்கின் றார்கள். எங்கள் பிள்ளைகள் நாங்களே வளர்ப்போம், நாங்கள் எதற்கும் கை ஏந்தமாட்டோம் என்கின்ற அதி தீவிர வைராக்கிய சிந்தையை நாம் நிச்சயம் பாராட்டாமல் இருக்க முடியுமா?

ஏழைகள் என்போர் தாழ்ந்தோர் அல்லர். பணவசதி, செல்வம் குறைந்தோரை, அவர்தம் மனதில் ஏழைகள் எனச் சுட்டிக்காட்டி அத்தகையதோர் எண்ணத்தை ஏற்படுத்தலே தவறான செய்கையாகும். சாதாரண மன நிலையில் நாம் செம்மையாகச் சிறப்பாக தர்மநெறியில் வாழ்ந்து வருவதை விட வேறெந்த செல்வம் வந்தாலும் கிடைத்தற்கரிய நிம்மதி ப்பெரும் பேறு வேறு உண்டா? சொல்லுங்கள்!

பத்துப் பேருக்கு முன்னால் "அதோ போகின்றாரே அந்த மனிதர் ரொம்பவும் கஷ்டப்படுகின்றார். இதற்கு முன்னர் இவர் மிகவும் வசதி வாய்ப்புக்களுடன் வாழ்ந்தார்! என்று சொன்னால் அதைக்கேட்கும் சம்பந்தப்பட்ட நபர் மனம் உச்சி குளிர்ந்து விடாது. ஆனால் இக் கூற்றை விரும்பும் மனிதர்கள் சிலர் இருக்கலாம். ஒருவர் நிலை



RangaRakes

Tamilnavarasam.com

களைப் பலர் முன் காட்டிப் பேசுவதை அநேகர் விரும்புவதில்லை. சில சமயம் இத்தகைய பேச்சுக்களால் சாதார நிலையில் உள்ள மனிதர்களும், இதயம் நலிந்து தங்க மீதே சுயபச்சாதாப நிலைக்குத் தள்ளப்படும் சூழ்நிலைக்கும் ஆட்படலாம்.

ஒரு மனிதனை சுயபச்சாதாப நிலைக்கு, இட்டுச் செல்லும் வகையில் "நான் இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு வந்து விட்டேனே" என அவனை எண்ண வைக்கும் கேவல நினைப்புகளுக்கு உண்டாக்கும் காரியங்களை எவர் செய்ய புகுந்தாலும் அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது எமது கட்டாய சமூகப்பொறுப்பாகும். ஒருவனைச் சீண்டி அவர்தம் நெஞ்சைக் குட்டையாகக் குழப்புவது கூடச்சிலருக்குப் பிடித்தமான பொழுது போக்காக இருக்கின்றது.

தன்னையே கடுகளவும் நம்பாமல் மாற்றாரிடம் போய் தமது துன்பங்களை விஸ்தாரமாகச் சொல்வதனால் சுயபச்சாதாபம் எனும் கொடிய தாழ்வுச்சிக்கலில் சிக்குண்டவர்கள் இறுதியில் தங்களில் இருந்தே விலகி துன்பங்களை மட்டும் துணை எனக் கருதும் துர்ப்பாக்கிவான்களாகவே மாறிவிடுகின்றனர். ஏமாற்றம், தோல்வி என்பவைகள் எல்லாமே வந்து செல்கின்ற நிகழ்வுகள் என்பதை எவர் சொன்னாலும் கேட்காத இவர்கள் தீவிர மனப் போராட்டங்களால், தங்கள் உழைப்பை மறந்து தேவையற்ற போலித் தனமான உரைகளை அள்ளி வீசுவதுடன் சமூகத்தையே





ஒரு எதிரியைப் பார்ப்பது போன்ற நிலைக்கும் தங்களை ஆக்கிக் கொள்வதுமுண்டு.

தோல்விகளை எதிர்த்துப் போராடாமல் வாழ்வது தான் வெட்கக் கேடானதே ஒழிய, மனிதனுக்குத் தோல்விகள் வருவது என்பது ஒரு வெட்கத்திற்குரியதன்று. சின்னச் சின்னத் தோல்விகளை இரைமீட்டு வாழ்வது மனிதர்க்கு அழகா என்ன? தமது வலிமையைக் குறைக்கும் நடவடிக்கைகளில் தாங்களே ஈடுபட முயல்வது சுயதுரோக சிந்தனையே என்பதை அறியாமல் போதல் விபரீதமானதேயாம்.

தோல்வியின் வடுக்களை தாங்கி எடுக்கும் ஒவ்வொரு கருமங்களுக்காகத் தொடுக்கும் முன்னேற்றங்களை நோக்கி எடுத்த பணியை நன்றாக முடிப்பவனே சாதனைச் சிகரத்தை எட்டிப்பிடிக்கும் முழுமையான மனிதனாவான்.

கடும் முயற்சியுடன் உழைப்பவனுக்குத் துன்பப் படவே நேரம் இல்லை என்பார்கள். தூய்மையினை மனதில் நிறைத்துக் கொள்ளும் போது துன்பம் எல்லாமே சாஸ்வதமானது என்ற நிலை அற்றுத் துணிச்சல், தன்னம்பிக்கை உணர்வுகளே மேலோங்குகின்றது. பதட்டமும், சலனமும், தன்நிலையை உணராமல் செய்கின்றதே என்கின்ற நிலையை உணர்ந்து இந்த நோய்களில் இருந்து தாம் விடுபட்டே தீருதல் வேண்டும் என்ற வைராக்கியத்தை ஏற்படுத்தாமல் விட்டால், மன நிலை பாதித்தவராக மாறும் நிலை உருவாகத்தான் வேண்டுமா?



RangaRakes Tamilnavarasam.com

சதா ஒருவன் தேவையில்லாமல் பஞ்சப் பாட்டுப் பாடுவதைக் கேட்க யாருக்குத்தான் மனம் வரும்? எம்மால் நியாயபூர்வமாக செவிமடுத்துக் கேட்க வேண்டிய அப்பாவிச் சீவன்களின் வேதனைகள் ஏராளமுண்டு. எவர்க்கும் சொல்லாமலேயே நெஞ்சில் உள்ளேயே அவர்கள் புதைத்து வெம்பி, நொந்து போகின்றார்கள் இவர்களுக்கு ஆறுதல் அளியுங்கள்.

மனிதராகப் பிறந்த நாம் இவர்கள் பொருட்டு கேட்காமலேயே எமது உள்ளத்தாலும், உடலாலும், பொருளாலும் உதவிகளைக் கட்டாயமாகச் செய்தே தீருதல் வேண்டும். "பாத்திரம் அறிந்து பிச்சையோடு" என்பார்கள். உள்ளபடி வருந்தும் எந்த உயிர்களையும் இரக்க உணர் வுடன் நோக்குதலே கருணையுடைய கடவுளின் இயல்பு மாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
24-12-2007







# ஜீவகாருண்யம்

நாம் உயிர்களை மனப்பூர்வமாக நேசிக்கும்போது எந்த உயிர்களுமே எம்மைக்கண்டு அஞ்சுவதில்லை. மனதில் வக்கிரபுத்தி கெட்ட நோக்கு உண்டானால் மனிதன், மனிதன் முன் செல்ல அச்சப்படுவான். ஒரு மிருகத்தை வதைத்தால் அதுபோடும் அவலச் சத்தம் எம் ஆத்மாவை வலுவிழக்கச் செய்யும். மனிதரின் அடாத செயல்களால் மிருகங்கள், பறவைகள் துடிதுடித்து இறக்கும் போது அவை சும்மா சாவதில்லை. வேதனையுடன் மனிதனைச் சபித்தே பூமியில் இருந்து விடைபெறும்.

சகல ஜீவன்களிடத்தே கருணை கொள்வது பரிபூர்ண நிறைவுள்ள இறைவனின் இயல்பேயாகும். மனிதர்கள், மனிதர்கள் மேல் வைக்கும் அன்பு, பரிவு, பாசம் மட்டும் புதிதானதோ, வியப்பானதோ, மேலான பாராட்டுதலுக்குரியதென்று நாம் பெருமை பேசிடல் முடியாது. ஏன் எனில் நாம் காட்டும் அன்பு என்பதே மிக இயல்பான வெளிப்பாடுதான். நாம் எல்லோருமே ஒரே இனமான மனித இனம்



RangaRakes

Tamilnavarasam.com

எனவே, எமது தேவைகளுக்காகவும் சிலவேளை பொது நோக்கிற்காகவும் ஒருவர் மீது ஒருவர் கரிசனை காட்டுதல் தமக்கான உரிமையாகவும் பெருமையுடன் சொல்லிக்கொள்வோம். ஆனால் எல்லா உயிர்களும் ஒரே சமனானது.அவைகளின் உடலுக்கும் உணர்வுகள் உண் பசி உண்டு, தாகம் உண்டு என எத்தனை பேர் உளமார எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்?

வீதியில் போகும் நாய்க்கு "ஐயோ.... அதற்குப் ப எடுக்குமே யார் வந்து உணவளிக்கப்போகின்றார்கள் "என கவலைப்படுபவர்கள் யார்? அல்லது வானத்தில் பறக்கும் காக்கை குருவிகளின் உணவுப்பிரச்சினை பற்றி நாம் கவலைப்பட்டு அவைகளில் ஜீவாதாரப் பிரச்சனைகள் பற் விவாதித்துக் கொண்டா இருக்கின்றோம்?.

நாம் நினைப்பது எல்லாமே மனிதகுலம் பற்றிய தான். எப்படியாவது நாம் போஷாக்கு மிகு சுகதேகியா உல்லாசமாக வாழ்ந்துவிடல் வேண்டும் என்பதேயாம் அதன் பொருட்டு எந்தப் பாவ கருமங்கள் செய்தாலுமே ஒன்றும் கெட்டு விடப் போவதில்லை எனவும் எண் வோரும் உளர்.

உணவிற்காக மிருகங்களை கடல் வாழ் உயிர் அநாவசியமாகத் தாவரங்களைக்கூட வெட்டி ஒழிக் மனிதன் தயங்குவதேயில்லை. உயிரினங்களில் ப காட்டுதல் என்பது எமது ஆத்மாவிற்கு நாம் அளிக்கின்





நல் வெகுமதியும் அதனூடாக நாமே பெற்றுக்கொள்கின்ற மன நிம்மதியுமாகும்.

எனவே நாம் உயிர்களிடத்தே காட்டும் இரக்கத்தின் மூலமான ஈகையானது செலவினம் அல்ல. அவைகள் மூலம் நாம் இறைவனால் வழங்கப்படும். ஆசீர்வாதமான அன்பளிப்புக்களையும் களிப்பினையும் மிக இலகுவாகப் பெற்று விடுகின்றோம்.

உலகில் உள்ள அனைத்துமே தனக்காகவே என மனிதன் தப்புக்கணக்குப் போட்டுவிடுகின்றான். இந்தச் சுயநலமான போக்கினால், கருணை, பரிவு என்பதனைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மறந்துபோய் விடுகின்றான்.

உல்லாசமாக ஓடித்திரியும் புள்ளிமான்களை முயல்களைப் பார்த்து ரசிப்பதை விடுத்து அவைகளை அடித்துச் சுவைத்துச் சாப்பிட்டால் என்ன என எண்ணுபவர்களும் உள்ளனர். வானில் பறக்கும் பட்சிகள் அவை காட்டும் வித்தைகளை எத்தனைபேர் ரசிக்கின்றார்கள்? மிக வேதனையான விடயத்தைக் கூறவேண்டும்.

பலநூறு மைல்களுக்கு அப்பால் இருந்து நல்ல சுவாத்தியம் தேடிவரும் பறவையினங்கள் இங்குள்ள சுற்றாடல்களின் மாசுபாட்டினால் மடிந்து போவதுமுண்டு. சுற்றாடல் தற்போது சீர் அற்றுப் போய்விட்டது. அத்துடன் இவை போதாதற்கு சில அல்பமான மனிதப் பிரகிருதிகள்



RangaRakes

Tamilnavarasam.com

பட் களைக்கூட ட்டு டுவதாக இல்லை. பட் க அதிகமாக உள்ள இடங்களில் கண்ணி வைத்துப்பிடித் வதம் செய்து விடுகின்றார்கள். வௌவால் இனங்கை மரங்களுக்கிடையே வலைபோட்டுப் பிடித்து வேட்டை டுவதை விருப்பமான கொடூரப் பொழுதாக செய்கிறார்க அருகிவரும் பிராணிகளை மென்மேலும் கொன்றொழித் விடுகின்றார்கள். உடும்பு போன்ற ஊர்வனப் பிராணிகளை கொல்வது சட்டவிரோதமாகும். இருப்பினும் இவைகை வீதியோரம், உயிருடனேயே கட்டிவைத்து விற்பை செய்வதை நான் கண்டிருக்கின்றேன்.

ஜீவகாருண்யம் பற்றி நாம் பேசிக் கொண்டிரு கின்றோம். ஆனால் பறவைகளைக் கூண்டில் அடைத் வைக்கும் குரூரச் செயலைக் கண்டும் காணாமல் றோம்.

தொட்டியில் வண்ண வண்ணமான மீன்கை வளர்த்து அழகு பார்க்கின்றார்கள். அவைகளில் பல த உணவு, போஷாக்கு, வளி, தூய்மையான நீர் இன்றி இறந் போவதும் சர்வ சாதாரணமான விஷயம் தவிர, செயற்கை உணவினை வலுக்கட்டாயமாக போடுகின்றார்கள். தம இயற்கையான சுதந்திரமான வாழ்வை வேறு உயிரினங்க மூலம் எவராவது சீரழிக்க விரும்பும் மனிதர்கள் விரும் வார்களா?





கடலில் சர்வ சுதந்திரமாக நீந்தித் திரியும் இந்த அழகுமிக்க ஜீவன்களைக் கட்டாயமாக அக்கிரமானவன் முறை வழியில் தொட்டில் சிறையில் அடைத்து வேதனைப் படுத்தி அழிப்பது என்ன நியாயம் ஐயா!

இயற்கையை ரசித்து உயிரினங்களைப் பார்த்து, அதன் வனப்புக்களில் லயித்து, கவிதைகள் பல புனைந்த அற்புதக் கவிஞரான ரவீந்திரநாத்தாகூர் அவர்கள் தோட்டத்தில் பறவைகளைப் பார்த்துப் பூரித்துப்போய் தம்மை மறந்து நிற்பாராம். அவரது கரத்தில் பட்சிகள் எந்தவித அச்சமும் இன்றி வந்து உட்காருமாம். தோளில், கரத்தில் முத்தமிடும் அவைகளைக் கருணைக்கண் கொண்டு நோக்குவாராம்.

நாம் உயிர்களை மனப்பூர்வமாக நேசிக்கும் போது எந்த உயிருமே எம்மைக்கண்டு அஞ்சுவதில்லை. மனதில் வக்கிரபுத்தி கெட்ட நோக்கு உண்டானால் மனிதன், மனிதன் முன் செல்லவே அச்சப்படுவான்.

இன்று உலகில் பல இடங்களில் ஆவினங்களுக்கு நோய் கண்டு விட்டதாகக்கூறி அவைகளைக் கொன்று புதைத்து விடுவதாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அண்மையில் பத்திரிகைகளில் இவைகளின் பரிதாபகரமான கொடூர முடிவுகளைப் படித்திருப்பீர்கள்.பல இலட்சக்கணக்கான கோழிகளை நோய்க் காவிகளாக



RangaRakes

Tamilnavarasam.com

உறுதிப்படுத்தி இல்லாதொழித்து விட்டனர். இந்தக் கோழியினத்திற்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை எதிர்த்து இவைகள் நீதி மன்றில் மேல்முறையீடு செய்யப் போகின்றனவா என்ன?

உண்மையில் ஒரு ஆய்வாளரின் கருத்து எம்மைச் சிந்திக்க வைக்கின்றன. பறவைகள் மூலம் மிருகங்கள் மூலம் நோய்பரவுவது உண்மைதான். எனினும் இவைகளுக்கு நோய்கள் உடன் பரவுவதற்கான உண்மைக் காரணம் என்ன? அதனை முதற்கண் உணரல் வேண்டும்.

பிராணிகளுக்கு அபரிமிதமாக உடல் பருமனை வளர்ச்சியடையச்செய்ய இயற்கை உணவுகள் அளிக்கப் படுவதில்லை. எமது ஊர்களில், கிராமத்தில் கோழிகள், வீட்டு மிருகங்கள் இயற்கை உணவைத் தாமே ஓடியாடிச் சென்று தேடிக் கொள்கின்றன.

ஆனால் கோழிப் பண்ணைகளில் கூண்டில் வளர்க் கப்படும் கோழிகள் ஓடித்திரிய அனுமதிக்கின்றார்களா? சிறைக் கைதிகள் போல் அவைகளை அடைத்துவைத்து ஏதேதோ இரசாயனம் கலந்து உணவையூட்டி அவைகளின் எடையைக் கூட்டும் நடவடிக்கைகளில் முனைப்பாக இருக்கின்றார்கள். ஆடு, மாடுகளுக்கும் இதே கதி தான்!.





பண்ணைகளில் வளர்க்கப்படும் உயிரினங்கள் தவறு செய்யாதவன் அனுபவிக்கும் கோரத் தண்டனையை அனுபவிப்பது போல்,அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

இயற்கையின் வனப்புக்களை அவைகளுக்குக் காட்ட மனிதன் அனுமதிப்பதில்லை. சும்மா திரியும் இவை களை மனிதன் உயிரினம் போல் மதிப்பதுமில்லை. காசு சம்பாதித்துத் தரும் யந்திரமாகவே பார்க்கின்றான். மனித னுக்கு மட்டுமா உணர்வு உண்டு? இல்லவேயில்லை. தாவர ங்களுக்கும் உணர்வு உண்டு, என்கின்ற விடயம் தெரியாத செய்தியல்ல.

இந்த மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் சரியான பராமரிப்பு இன்மையும் தவறான உணவுப்பழக்க வழக்கங் கள், இரசாயனப் பாதிப்புக் காரணிகளால் இவை விரைவில் தொற்று நோய்க்கு ஆளாகிவிடுகின்றன. இந்த உபாதை களை உருவாக்கிய மனிதன் தன் சுய நலத்தி னையே முதன்மைப்படுத்தி தன்னைக்காப்பாற்ற வேறு வழியின்றி இவைகளைக் கொன்றொழிக்கின்றான்.

முற்காலத்தில் எம்மவர்கள் நாக சாபம், பட்சிகளின் சாபம் பற்றி எமக்குச்சொல்லுவார்கள். நாம் ஜீவன்களுக்கு இம்சை செய்தால் அவை எமக்குச் சாபம் இட்டு விடுமாம்.

உண்மைதான் இன்று மனிதன், உயிரினங்களுக் குச் செய்யும் இம்சைகளால் அவை அழிந்து கொண்டிருக் கின்றன. அவைகள் தம்மை மனிதர்கள் அழிப்பதனை



RangaRakes

Tamilnavarasam.com

உணர்ந்து கொள்கின்றன. ஒரு தும்பியை வதை செய்தால் அதற்குத் துன்பம் விளையாதா?

வழியில் சும்மா போகும் பாம்பை அடித்தால் அது சரியா? அதன் உள் உணர்வுகள், "செயல் தன்மை" அற்றது அல்ல!. பறவைகளைக் கல்லால் அடித்தால் அவை எம்மைப் பாராட்டமாட்டாது. தமது நுண்ணிய உணர்வுகளால் வெறுப்புடன் எம்மை நோக்கும். ஒரு மிருகத்தைக் காரணமின்றி வதைத்தால் அது போடும் அவலச் சத்த எம் ஆத்மாவினை வலு இழக்கச் செய்யும். மிருகங்கள் பறவைகள் துடிதுடித்து இறக்கும்போது அவை சும்மா சாவது இல்லை. வேதனையுடன் மனிதனைச் சபித்தே பூமியில் இருந்து விடைபெறும்.

இந்த ஒட்டு மொத்த அவலச் சத்தங்கள் துடிதுடிப்புக்கள், கண்ணீர் வெளிப்பாடுகள், இதயத்தின் படபடப்டனான வேகத்தின் பின்னரான உயிர் அடக்கம், வெறுப்பான பிரிகைகள், உலகையே உறையச் செய்யும் ஆற்ற மிக்கன.

ஒரு பறவை மரண பயத்துடன் தன் சிறகுகளை படபட என அடித்து ஒருவனால் அதன் உயிர் இழக்கப்பமேயானால் அது பரிதாபகரமாக வெளிப்படுத்தும் உணர் அலைகள் உயிர் அலைகளாக உலகைச் சூழ்ந்து நின் வருத்தி விடும்.





ஜீவகாருண்யம் நேயப்பாடு இல்லாத வாழ்வு ஒரு வாழ்வு ஆகுமா? ஒரு வியப்பூட்டும் விஷயத்தினைச் சொல்கின்றேன் கேளுங்கள்,

எனது ஆசிரியர் ஒருவர் இக்கதையினை ஒரு புத்தி மதிக்கான கதைபோலச் சொன்னார். ஆனால் இது உண்மைக்கதை. ஒருவருக்கு வேட்டையாடுவதில் ரொம்பவும் இஷ்டம். அதுவும் குரங்கு வேட்டையாடுவதில் அலாதிப்பிரியம். குரங்குகள் காட்டில் மிகவும் சர்வ சாதாரணமாகத் திரிவதனால் அவைகளைக் கொல்வது மிக எளிதான காரியமாகும். ஆனால் இவர் குரங்குகளை மட்டும் அதிகமாகக் கொல்வது வியப்பான விஷயம் தான். குரங்குகளைக் கொன்றாலும் அவைகளைப் புசிக்கமுடியாது. ஆனாலும் சில கடைகளில் குரங்கு இறைச்சியைக் கூடக் சாதாரண மாமிசங்களுடன் கலந்து சமைப்பதாகக் கேள்விப்பட்டிருக்கின்றோம். இந்த நபர் தேவையின்றிக் குரங்குகளை வேட்டையாடிக் குரூர திருப்தியினை அடைந்தார். ஆனால் நடந்தது என்ன?

இவர் திருமணமானவுடன் குழந்தைகளைப் பெற்றார். என்ன அதிசயம்? எல்லாப் பிள்ளைகளுமே சாட்சாத் குரங்கு வடிவுடனேயே பிறந்தன. அதுமட்டுல்ல குழந்தைகள் வளர்ந்த போது அவைகளின் தோற்றம், செயல்பாடுகளைக் கண்ட மற்றக் குழந்தைகள், அவர்களை வேடிக்கைப் பொருளாகக்கண்டு கேலி செய்தும், இம்சை செய்தும் கொண்டனர். இச்செயல்களைக் கண்டால் பெற்றவர்கள் மனம் எவ்வளவு பாடுபடும் தெரியுமா? "முற்பகல்



RangaRakes
Tamilnavarasam.com

செய்யின் பிற்பகல் விளையும்” என்பர். இவை யெல்லா
அறிந்தும் மனிதர்கள் திருந்துகின்றார்களா? இதே வேளை
நெஞ்சை நெகிழச்செய்யும் இன்னும் ஒரு தகவல் இதோ.

தொடர்மாடி வீட்டில் வசிக்கும் அம்மையார்
சொன்ன தகவல் இது. நம்பவே முடியாத நல்ல தகவல்
தங்கள் வீட்டின் பக்கத்தில் அடிக்கடி நடக்கும் சம்பவ
என்றும் சொன்னார்.

தொடர்மாடி வளவை அண்மித்து இருக்கும் மர
தடியில் வெள்ளை வர்ண மோட்டார் வாகனம் குறிப்பிட்
நாட்களுக்கு ஒரு தடவை வந்து போவதுண்டு இங்கு ஏரா
மான கட்டாக்காலி நாய்களும், பூனைகளும் உண்டு. இவை
களுக்கு வேண்டிய உணவினை இவைகள் அங்கும் இங்கு
அலைந்து தேடிக் கொள்ளும். மேலே சொல்லப்பட்
மோட்டார் வாகனம் குறிப்பிட்ட மரத்தடியில் வந்தது
வாகனத்தில் உள்ள பெரியவர் வாகன ஒலியை எழுப்புவா
வாகன இயந்திர ஒலியையும், வாகன (ஹோர்ன்) ஒலியை
யும் கேட்டுப்பழகிய நாய்களும், பூனைகளும் குறித்
வாகனத்தினை நோக்கி ஓடிவரும்.

வாகனத்தில் இருந்து பெரியவர் ஒருவர் தம
மனைவியுடன் இறங்கி வருவார். வரும்போதே பெரி
பெட்டியையும் எடுத்து இறக்குவார். பெட்டியினுள் பொதி
செய்த உணவுப் பெட்டிகளைத் திறந்து தம்மைச் சூழ்
அனைத்து நாய்களுக்கும், பூனைகளுக்கும் தனித்தனியா





எடுத்து வைப்பார்கள். அவைகள், அவைகளை ஆர்வமுடன்
சாப்பிடும். இக்காட்சியை, மிகவும் ரசனையுடன் நெகிழ்ச்சியு
டன் தம்பதியினர் பார்த்து மகிழ்வர்.

அத்துடன் அவைகளுக்கான நீரை பாத்திரங்க
ளுக்குள் இட்டு வைப்பார்கள். இவைகள் சாப்பிட்டு முடிந்த
தும், அவர்கள் அங்கேயே உட்கார்ந்து இருந்து அவைகளை
அன்புமீதூர தடவி அணைத்து மகிழ்வார்கள். அவர்களுடன்
பழக்கப்பட்ட அந்த நாய்களை, பூனைகளை, எவ்வித
அருவருப்பின்றி தம் தோள்மீது சாய்த்துத் தடவி ஆறுதல்
அளிப்பது ஒரு பாசமிகு பெற்றோர் நடந்து கொள்வது
போலிருக்கும். அவைகளும் சர்வ சுதந்திரத்துடன் பிள்ளை
கள் போல் பழகிக் கொள்ளும். இதில் இன்னும் ஒரு
வேடிக்கை என்ன வெனில் குறித்த வாகனம் போல் சில
வேளை வேறு ஏதாவது வாகனம் வந்தால் அவை மரத்
தடியில் வந்து தாம் எதிர்பார்த்த வாகனம் அது அல்ல, அந்த
ஒலி தங்களின் பாசத்திற்குரியவர்களின் வாகனம் அல்ல
எனத் தெரிந்து கொண்டால் ஓடி மறைந்தும் விடும்.

இந்தச் சம்பவங்கள் மூலம் உங்களுக்கு தெரியப்
படுத்தும் உண்மை என்ன? கொலைகளும், வன்முறை
சம்பவங்களும் நடக்கின்ற உலகில், எந்தவித எதிர்பார்ப்பு
களுமின்றி ஜீவகாருண்ய மேலீட்டினால் மனிதன்
இப்படித்தான் வாழ வேண்டும் என்கின்ற கருணைமிகு
அரும் பெரும்செயல் அல்லவோ இது! பிரதிபலன்
கருதியே செயல்களைச் செய்யும் மனிதர்கள் நல்லவை



RangaRakes

Tamilnavarasam.com

செய்யாது விடினும் துர் நடவடிக்கையில் ஈடுபடாமல் இருப்பதுவே மேலான செயல் அல்லவா? பொருள் தேடும் இவ்வுலகு அருள் தேட முயல வேண்டும்.

பால் பெறுவதற்காகப் பசுவை வளர்க்கின்றான். முட்டையைப் பெறுவதற்காகவும், இறைச்சியைப் பெறுவதற் காகவும், கோழியை வளர்க்கின்றான். நோய் தீர்க்கும் விஷம் பெறுவதற்காகப் பாம்பைக்கூட வளர்க்கின்றான். மனிதன் ஒரு எதிர்பார்ப்புடனேயே இவைகளை வளர்க்கின்றான். எந்த வித பயனையும் எதிர்பார்க்காது விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் மேற் சொல்லப்பட்ட தம்பதியர் போல் நாமும் உணவழித்து அன்பு காட்டுதல் என்பது சொல்ல முடியாத அளப்பரிய அறத்தொண்டு. கண்டு கொள்க!

எமது உழைப்பு சகல உயிர்களுக்குமே பயன் அளிப்பதாக! "காக்கைகளுக்கும் உணவு கொடு", என்பதற் காக சனி விரத காலங்களில் இந்த உண்மையினை வலியுறுத்துவதற்காக இந்துக்கள் தாம் உண்பதற்கு முன்னரே, அவைகளைச் சிரமப்பட்டு அழைத்து உணவு அளிப்பார்கள்.

உணவு உண்ணமுன் சிறு பிடியை எடுத்து பசுவிற்கோ, பட்சிகளுக்கோ கொடுக்கும் காட்சியை இன்ன மும் கிராமங்களில் கண்டு கொள்ளலாம். எறும்பிற்கும் உணவு அளிப்பதற்காக அரிசிமா கோலம் இடுகின்றார்கள்.





எறும்புகள் வரிசையாகப்போகும் போது அவை களை மதிக்காமல் ஜாக்கிரதையாகச் செல்பவர்களும் உளர். ஓடித்திரியும் அணிலை, ஓணானை அடித்துப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்து மகிழ்பவர்களும் இருக்கின்றார்கள்.

ஒரு தடவை பெற்றாருக்குத் தெரியாமல் தமது குல வழக்கிற்கு மாறாக ஆட்டுக்கறி உணவை மகாத்மா காந்தியடிகள் உண்டாராம். ஆனால் இரவில் கனவில் தனது, வயிற்றினுள் ஆடு ஒன்று ஈனஸ்வரத்தில் கத்துவது போல் உணர்ந்ததாகச் சொல்லியிருக்கின்றார். உயிர் களுக்கு இம்சை செய்வது. தன் உயிர்க்கும் இம்சை செய்வது போல என எண்ணுக!

எம்மைச்சுற்றியுள்ள உயிர்கள் அனைத்தும் களிப்புடன் உலவி வரும் போது இவை அனைத்தும் இறை வன் படைப்புகளே என உளமார எண்ணுதல் நல்லது.

இறைவனே சகல உயிர்களையும் படைத்தான். எனவே உயிர்களை ஒரே உறவு முறையாகவே நாம் கொள்ளல் வேண்டும். ஒருவன் ஒருத்தியைத் திருமணம் புரியும்போது, பிறக்கும் குழந்தைகள் உறவு முறைகளைச் சொல்கின்றன. தாய், தகப்பனுக்குக் குழந்தைகள் எல்லாமே ஒரே வித்தியாசம் அற்ற ஒரே உறவு முறைகள் தானே.

எனவே

எம்மைப் படைத்து உருவாக்கிய இறையோன் பெற்ற குழந்தைகள் மனிதன், விலங்கு, தாவரம், பட்சிகள் எல்லாமேயாகும். எனவே நியாயப்படி இவை அனைத்துமே



RangaRakes

Tamilnavarasam.com

ஏக இறைவனின் சிருஷ்டிகள் என்பதனால் எல்லாமே எல்லோர்க்கும் உறவாய் அமைந்துவிட்டன. இக் கருத்தினை நாம் உளமார ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

சிருஷ்டிக்கும் போது உருவங்கள், அமைப்புகள், குண இயல்புகள் வெவ்வேறான போதும் படைத்தவன் ஒருவன் தானே? எல்லா உண்மையையும் அறிந்து கொண்டபோதும் நாம் செயலளவில் குணம்மாறி, குற்றங்கள் செய்வதும் ஏன்? ஆச்சரியமாக இல்லையா? ஜீவன்கள் அனைத்தினையும் சம நோக்குடன் நோக்க நாம் எம்மைப் பக்குவப்படுத்துவோம். ஜீவன்களை ஒன்றாக மதிக்கும் தன்மை ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் மட்டும் உரிய இயல்பு எனச்சிலர் சொல்லலாம்.

ஆனால் உயிர்க்கு இரங்குதல் இயல்பான மனித சுபாவமாக உருவாக வேண்டும். "உன்னைப் போல் பிறரையும் நேசி" என்பது பொதுவான வாக்கு ஆகும்.

இயற்கை காப்பாற்றப்படல் வேண்டும். இயற்கை என்பது இறைவனின் முழுப்படைப்புக்களுமேயாகும். இந்த உயிரினங்கள் எமது ஜீவகாருண்யத்தால் காப்பாற்றப்படாது விட்டால், உலகம் தன் சமநிலையை இழந்து விடும். நாம் அன்பைப் பொழியும் போது எம்மையே முழுமையாக வழங்கியவர்களாகின்றோம். அன்பு உணர்வு பற்றி நாம் கவலைப்படாது விட்டால் ஜீவகாருண்யம் பற்றிப்பேசவும் அருகதையற்றவர்களாவோம். வெறும் தத்துவம் பேசுதல் வாழ்க்கையாகாது. சொல்லும் தத்துவப்படி ஒரு சதவீதத்தினராவது செய்துகாட்ட வேண்டும். அன்பு பற்றி உரை





செய்வதை விடுத்து, பக்கத்தில் இருக்கும் பிச்சைக்காரனுக்கு அன்னம் போடு!

இறைவன் கண்கள் தீட்சண்யம் மிக்கது. ஒரு ஜீவனுக்கு ஒரு சிறு கீறலை நாம் உருவாக்கினால் எமது முழு உடலையும் வருத்திப்பார்க்க அவனுக்குத் தெரியும் ஜீவன்களைக் கொய்ய எமக்கு உரிமை இல்லை. அவைகளை ஆதரிப்பதுவே எமது கடமை, ஏன் தேவையுமாகும்.


காற்றும், ஒளியும், உஷ்ணமும், குளிர்மையும் பொதுவான சொத்து என ஆண்டவன் ஆக்கிவைத்தான். எனவே இவைகள் மூலம் நாம் எடுக்கும் செல்வத்தைச் சகல ஜீவன்களுக்கும் கொடுப்போமாக!.

நீண்டு கொண்டே செல்கின்ற கால வெள்ளத்தினுள், நாம் சஞ்சரிக்கின்ற காலம் மிக, மிகச் சொற்பமானதுதான். ஒவ்வொரு கணப்பொழுதிலும் எமக்குரிய பெறுமதி மிக்க காலத்தை விட்டு விலகிடாது எமது வாழ்வின் அர்த்தத்தை நோக்கியபடியே பயணித்துக் கொண்டிருக்க வேண்டும். எனவே வழியில் தெரியும் ஜீவன்களின் தேவைகளைக் கருணைமீதுரக் கண்டு உணர்ந்து கேட்டறிந்து, அவைகளுடன் ஒட்டி, உறவாடச் சித்தம் கொள்வோம். இந்த அனுபவங்கள் தான் ரம்யமான சுகானுபவத்தினை மானுடரான எமக்குத் தரவல்லது எனத் தெரிந்து கொள் வோமாக!.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
12-11-2006



RangaRakes Tamilnavarasam.com



# பிரிவு

பிரிந்து சென்றால் வாழ்வு நிறைந்து விடாது என்று இறைவன் உணர்த்தியபடியே இருக்கின்றான். மக்களுடன் பிரிந்து வாழாமல் நெருங்கி வாழ்ந்து கொள்க! இருதயத்தை விரிவாக்கிக் கருமை எண்ணங்களைப் பொசுக்குக! பசுமையான கருத்துக்களையே நெஞ்சில் பதித்துக் கொண்டால் சகல உயிர்களுமே உங்களுடன் நெருங்கி உறவு பாராட்டும். ஒன்றிணைந்து வாழ்பவர்களுக்கு விரக்தி உணர்வு வரவே வராது. பிரிந்து வாழாத உறவு முறைகளின் தாத்பரியங்களை மிருகங்கள், பறவைகளிடமிருந்து மனிதர் கற்றுக் கொள்ள வேண்டும்.

பிரிவு மனதை அரிக்கும். மரணம் என்பது நிரந்தர பிரிவு. எனினும் தற்காலிகமாக ஒருவரைப் பிரிந்து, மீண்டும் சந்திக்கும் நபராக அவர் இருப்பினும் அவர் பிரிந்து செல்லும் நேரத்தில் நாம் மனம் சோர்ந்து போகின்றோம்.

அன்பின் ஆழமும் விஸ்தீரணமும் பரந்து பட்டு நிற்கும்போது தான் பிரிவின் துயரும், ஏக்கமும், தாளா





மையும், மனத்தளர்வின் வேகமும் வீர்யம் அடைகின்றது. காலையில் பிள்ளைகளை, கணவரை வேலைக்கு அனுப்பி விட்டு அவர்கள் திரும்பி வரும் வரை காத்திருக்கும் தாய், உற்ற நண்பர் சொல்லியபடி சொன்ன நேரத்தில் வராத போது தவிக்கும் ஆத்ம நண்பர்கள், ஒரு நிமிடம் தாமதித் தாலும் ஓராயிரம் கேள்வி கேட்கும் கணவன், மனைவி, காதலர், எனப்பல தரப்பட்டவர்களிடையே, "பிரிவு" என்பது தாங்கொணா ஏமாற்றம், துன்பம், சொல்ல முடியாத ஆதங்க உணர்வே.

அன்பு கொண்டால் நாம் எல்லோரையுமே ஏற்றுக் கொண்டவர்களாகி விடுகின்றோம். எவருமே தனித்து தானே தனது பிரச்சினைகளைச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. தனது இன்ப துன்ப அனுபவங்களை மற்ற வருடன் பகிர்வது மனச்சோர்வை அகற்றும் என எல்லோரு மே உணர்கின்றார்கள்.

"பாசம், காதல், அன்பு, நேசம் கொண்டு விட்டாலே துன்பம் ஐயா!, இதோ பாருங்கள் எனது மகன் இன்னமும் எனக்கு ஒரு கடிதமும் அனுப்பவே இல்லை. எங்கள் துன்பம் இவனுக்கு எங்கே தெரியப்போகின்றது. கண்காணாத பூமிக்கு அனுப்பி இன்று இந்தப் பிரிவினால் படும் துன்பம் கொஞ்ச நஞ்சமா?" என ஏங்கித் தவிக்கும் பெற்றோர்க்கு பிரிவின் வேதனை நன்கு புரியும்.



RangaRakes

Tamilnavarasam.com

ஆயினும் "பிரிவு", பாசத்தை, நேயத்தை வளர்க்கும் என்ற கூற்றினை நாம் மறுக்க முடியுமா? கொஞ்சம் மனஸ்தாபம் கொண்ட நண்பர்களைச் சில நாட்கள் சந்திக்காமல் இருந்து பாருங்கள். எப்போது அவரைப் பார்ப்போமோ என்கின்ற ஏக்கம் நெஞ்சில் தூக்கமில்லாமல் எம்மை ஆக்கிரமிக்கும். ஆனால் "பிரிவு" என்பது தமக்கே உரித்தான துயர் எனக்காதலர் உரிமை கொண்டாடுவது சற்று வேடிக்கையானதே.

ஒருவருடன் சற்றுப் பிரச்சினைகள், மனத்தாங்கல்கள் ஏற்பட்டால் சற்று ஒதுங்கிப்பாருங்கள். அவர்கள் மீதான கோபம் வருத்தம் படிப்படியாகக் குறைந்து இறுதியில் முழுமையாக அவை அற்றே போய்விடும்.

"எனக்குக் காலம் பிழைத்து விட்டது. எங்காவ கொஞ்சக் காலம் கோவில், குளத்திற்குப் போய் வருகின்றேன்" எனச் சொல்லிச் செல்பவர்கள், இறுதியில் மனப்பாரம் குறைந்து மீண்டும் வரும்போது நீண்ட நாட்கள் பிரிவு காரணமாக முழுமையாக அவர் மாறிப் பழைய குதூகல உணர்வுடன் உறவினர், நண்பர்களை அவர் சந்திப்பார். அப்போது இவர்களிடம் காணும் மன மாற்றத்திற்கான காரணம் வியப்பூட்டி நிற்கும்.

மனம் நிம்மதியாக இருக்கும் போது எம்முள் உள்ள கோப தாபம் பழிஉணர்வு அழிந்தொழிந்துவிடும். மனத்தைச் சாந்தப் படுத்தும் மார்க்கங்களை நாம் தெரிந்து கொள்ள





வேண்டும். எமக்குப் பிடித்தமான பொழுது போக்குகள் கூட எம்மை அமைதிப்படுத்தி விடும். இன்று நாம் சாதாரணமாக குடும்பப்பிரிவு, நண்பர்கள் பிரிவு, காதலர் பிரிவுகள் பற்றியே பேசி வருகின்றோம். ஆயினும் உலகின் மிக முக்கியமான பிரிவுகள் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

- சமூக பிரிவு
- இனப்பிரிவு
- அரசியல் வாதிகளிடையே கொள்கைப் பிரிவு
- நாடுகளிடையே பிரிவுகள்
- சமயங்களுக்கிடையேயான பிரிவு

இந்தப் பிரச்சினைகள் இன்று முழு உலகையே ஆட்டுவித்துக் கொண்டிருக்கின்றன.

சந்தேகங்களும், புரிந்துணர்வின்மையும், காழ்ப்பும், குரோதமும், பழி உணர்வும் மிகுந்து வந்தால் ஒருவரோ, அன்றிச் சமூகமோ, அல்லது நாடுகளோ பிரிந்து அந்நியப் பட்டே விடும். இதனை எவர்களும் விரும்பவில்லை என்று சொல்லிக் கொண்டே பிரிவை நோக்கிய பாதையில் முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கின்றனர்.

- நியாயமான நீதி, கிடைக்காமை
- பிறர் பிரச்சனைகளை உணராமை
- தன்னாதிக்க, மேலாண்மை வலுவினால் பிறரை அடக்க முனைதல்.



RangaRakes

Tamilnavarasam.com

போன்ற விடயங்களை விலக்காத வரை சமூகத்தின் நாட்டின் பிரச்சினைகளும், பிரிவு உணர்வுகளும் விலகப் போவதில்லை. நியாயமான தீர்வுகள் ஏற்காத போது எழும் ஏக்கம். பலர் சிந்தனைகளை மாற்றி அமைத்தே விடுகின்றது.

எல்லாப் பிரச்சினைகளுமே சுமுகமாகத் தீர்க்கப்படலாம் என எல்லோருமே சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். செயல் உருப்பெற முனையும் போது ஏன் விலகி நிற்கின்றார்கள்? வேற்றுமைகள் தலைதூக்க இடம் கொடுக்கின்றார்கள்?

தற்காலிக கோபங்கள் காலப்போக்கில் நிரந்தர வடுக்களாகி அதுவே மக்களிடையே பற்பல பிரிவுப் பாதைகளை உருவாக்குதல் நல்லதாகுமா? குரோத உணர்வுகள் உலகைக் கூறுபோட்டேவிடும். வாழும் உலகு ஒவ்வொரு தனி மனிதர்க்கும் பொதுவானது என உள்ளபடி உணர்ந்து நின்றால் எந்தப் பிரச்சினைக்குள்ளும் மனித சமூகம் உள்நுளையாது.

சாதாரணமாக இன்னமும் நாம் இந்தக் காலத்திலும் இப்படியா? என விந்தையான காட்சிகளைக் கண்டு கொண்டிருக்கின்றோம். தனிமனிதன் தன் சுயலாபத்திற்காக மற்றவர்களைப்பிரிக்கும் சதிவேலைகளில் ஈடுபடுகின்றான். சாதியைச் சொல்லியும், அந்தஸ்துபற்றியும் பேசியும் பலர் மனதைக் குழப்புவதே சிலருக்கு வேலையாகிவிட்டது.





கிராமங்களுக்குள்ளேயே பிரிவினையை உண்டு பண்ணப் பல காரணங்களைக் கண்டு பிடித்து விட்டார்கள். மக்கள் கூடும் கோவில்களில், பொதுமன்றங்களில், ஏன் விளையாட்டு நிகழ்வுகளில்கூட சாதிச் சண்டை, குடும்ப ஆதிக்கம் பற்றிய விமர்சனங்களைச்செய்து கோமாளித்தனமாகச் சண்டை செய்யும் கும்பல்களை நாம் சந்தித்துக் கொண்டுதானே இருக்கின்றோம். கிராமங்களின் உள்ளே நடக்கும் பிரச்சினைகள் பின்னர் அயல் கிராமங்களுக்குப் பரவுதல் வியப்பில்லை.

இப்படியே சென்றால் மக்களிடம் அந்நியோன்னிய உறவு எப்போது வலுப்படையப்போகின்றது? ஒருவரது அல்லது பலரிடையே பிரிவுகளை ஏற்படுத்தி ஆதாயம் தேட முனைவது ஏற்புடையதன்று. இதுவே விஸ்வரூபம் எடுத்து சமூகப்பிரச்சினையாகி தேர்தல் காலத்தில் ஒருவரோடு ஒருவர் என்றில்லாமல் அதுவே கட்சிப் பிரச்சனையாகுவது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கல்ல. மக்களை இணைப்பதற்கு அன்றிப் பிரிப்பதற்காகவே அரசியல் துணை நிற்கின்றது.

இன்று உலகில் அரசியலே மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கின்றது. மனித குலத்தின் மாண்பு என்பதே அன்பினால் உலகம் ஒன்றுபடுதலேயாம். எல்லா நாடுகளுமே தம் நிலையை வலுப்படுத்த நாடுகளிடையே பிரிவுகளை ஏற்படுதலே சிறப்பானது எனக்கருதிச் செயல்பட ஆரம்பித்துவிட்டன.



RangaRakes

Tamilnavarasam.com

ஆன்மீக நம்பிக்கை அற்றுப்போகும் போது இத்தகைய செயற்கைத் தன்மையான தற்காலிக வீம்பு உணர்வும் ஆணவமுனைப்பும் மிகைப்படுதல் சகஜம். இந்த விடயத்தை நாம் பழைய காலத்து புராண இதிகாசக் கதைகள் வாயிலாகப் படித்து இருக்கின்றோம்.

சகோதரர்களிடையே ஏற்பட்ட பிரிவு மாபெரும் யுத்தமானது என மகாபாரதம் என்கின்ற இதிகாசம் எமக்கு உணர்த்தும் நீதி கிடைப்பதற்கான வழிகூட யுத்தம் மூலம் தான் என்று சொல்லுமளவிற்கு உலகம் செல்லுவது வேதனைக்குரியது. இந்நிலை தவிர்த்து ஏற்ற நல்ல வழிமுறைகளை உலகம் கண்டேயாக வேண்டும். உலக அனுபவ ஞானங்களை வரலாறுகள் மூலம் படிப்போமாக!

மிகவும் அதிசயமான விடயம் என்னவெனில் மிருகங்களும், பறவையினங்களும் இன்னமும் மனிதன் மூலம் வேண்டாத கீழ்த்தரமான குணாம்சங்களை இன்னமும் கற்றுக் கொள்ளாமல். அவை அன்போடு,தமது இனத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருதலாகும்.

ஆனால் மனிதர்கள், உலக மகா யுத்தங்களைச் செய்து அழிந்து பின்பு ஓய்ந்து, மீண்டும் ஒரு உலக மகாயுத்தத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றனர். கொடுமை இது போல் வேறு என்ன?

இதே போல் மிருகங்கள், பறவைகளும், தமக்குள் சண்டை செய்யப் புறப்பட்டால் இந்த உலகம் தாங்குமா?





அப்படி அவைகள் சண்டை செய்யாமல் அன்புடன் இருக்கும் போது அவைகளை நாம் ஆறறிவு அற்றவை எனக்கூறிக் கொள்கின்றோம். இவைகள் தமக்குள் ஒரு மொழியில் பேசுவதானால் அல்லது தமது அதீத உணர் வினால் விஷயங்களைப் பரிமாறும்போது நிச்சயமாக எங்களைப் பற்றிக் கேலியுடன் தான் பேசிக் கொள்ளும்.

மனிதன் மிருகமாக இருக்கக்கூடாது என்கின் றோம். மிருகங்கள் தமக்குரிய இயல்பான உணர்வுடனேயே சீவிக்கின்றன. இது ஆண்டவன் விதித்த விதி. ஆனால் மனிதனுக்கு ஆண்டவன் போதிய அறிவு, ஞானத்தினை நல்கியுள்ளான். அதன்படி வாழுதல் அவன் கடன். நல்ல குணாம்சங்கள் எங்கு உண்டோ அங்கு அதனைப் பார்த்து கேட்டு பயில வேண்டியதேயாகும். எந்த உயிரினத்தில் நல்ல பண்புகள் உண்டோ அதனைத் தெரிந்து கற்பதே சிறப்பாகும். எனவே மிருகங்கள் எனக்கேலி பேசுதலை விடுதலே நல்லது. காகத்தைக் கண்டு உறவுகளைப் பேணுதலையும் நாயைக் கண்டு நன்றியறிதலையும் பயின்றால் என்ன? அண்மையில் தொலைக்காட்சி ஒன்றில் சுறா மீன்கள் பற்றிய விவரணச் சித்திரம் ஒன்றினைப் பார்த்தேன்.

சுறா வேட்டையாடப்படுவதைக் காட்டினார்கள். அதனைப் பார்த்ததுமே நெஞ்சம் பதைபதைத்தது. ஜீவ காருண்ய அமைப்புக்கள் இத்தகைய செயல்களைக் காண்பதில்லையா என எண்ண வேண்டியிருந்தது. அந்த இராட்சத சுறாக்களை உயிருடனேயே குத்துவதும் வெட்டு



RangaRakes

Tamilnavarasam.com

வதுமாகக் காட்சி காட்டப்பட்டது. அத்துடன் அதன் செட்டை கோடரி போன்ற ஆயுதத்தால் வெட்டும் போது அத வாய், கண் படும்பாட்டினைக் காட்டினார்கள். இவையெல்லா பார்க்கக்கூடிய காட்சிகள் அல்லவேயல்ல. சரி அடுத்தகாட் காட்டப்பட்டது. பெரிய ராட்சதச் சுறாக்களை அழிவில் இருந் காப்பாற்றுவதற்காக விஞ்ஞான ஆய்வாளர்கள்படும் சிரமத்தையும் காட்சிப்படுத்தினர்.

மிகவும் வியப்பான சங்கதியை நான் பார்த்தேன். மிகப் பெரிய கடல் மீனை சுழியோடியான ஆய்வாளர் தொடர்ந்து சென்று அதனைத்தொட்டு அதன் உடலைத் தடவுகின்றார். அதன் முன்புறம் வாய் முகம் போன் அமைப்புக்களை அன்புடன் ஆரத் தழுவுகின்றார். மிகவும் ஆச்சரியப்படும் விஷயம் என்னவெனில், அந்த ராட்சத மீ அவர் அணைப்பினுள் கட்டுண்டு அவரது முகத்தினை தன் முகத்துடன் மெதுவாகத் தொட்டு உராந் நெடுஞ்சாணாக அவருக்கு இசைவாகப் பொருந்தி நின்ற இந்த அன்புணர்வுடன் கூடிய காட்சி என்னை மெய்சிலிர் வைத்தது. சுறாவை வேட்டையாடும் மனிதர் ஒருபுறம், அந் இனத்தை நேசிக்கும் மனிதர் ஒருபுறம் மீன் இனத்தி குழிபறிக்கும் மனிதர்கள் பற்றி இவைகள் வருத்தப்படுவ இல்லை. தன்னை அணைத்தவரை அதுவும் அணைந்து நிற்கின்றது. மிருகங்களைவிட கடல் வாழ் மீன் இனத்தி அறிவு நிலைகுறைவு என்பர். ஆனால் நாம் பார்க்கு காட்சியானது மீன் இனத்தின் பாச உணர்வு பற்றி எமக்குக்





காட்டி நிற்கின்றது. அன்பை வழங்கும்போது அவை நிராகரிக்கப்படுவதில்லை.

எமது நாட்டின் மிருகக்காட்சிச் சாலைகளில் கூடக் கடல் வாழ் உயிரினங்களின் சாகசக் காட்சிகளை கண்டிருப்பீர்கள். மனிதனை இவை நேசிக்கின்றன. டொல்பின் மீனுக்கும், மனித இனத்திற்குமான உறவுமுறை அனை வரும் அறிவர். கடலில் தத்தளிக்கும் மனிதர்களை அது காப்பாற்றியதாகப் பல செய்திகளைப் படித்திருக்கின்றோம். நல்ல பண்புகளை அன்பினை நாம் எத்தகைய உயிரினத்திலிருந்தும் கற்கவேண்டி இருந்தால் கற்றேயாக வேண்டும் என்பதற்காகவே மேற்சொன்ன விடயங்களைப் பகிர்ந்து கொண்டேன்.

ஒரு பசுவானது ஒரு சில வினாடிகள்கூடத் தன் கன்றினைப் பிரிந்து செல்லச் சம்மதிப்பதில்லை. கோழிதன் குஞ்சுகளைக் கணப்பொழுதும் விட்டுப்பிரிவதுமில்லை. ஆனால், குடும்பத்தைப் பாரம் என எண்ணிப்பலர் குழந்தைகுட்டிகளை விட்டு விட்டுச் சென்று விடுவதும். பின்னர் தவறான வழியில் அவர்கள் பிறிதான குடும்ப சாகரத்தில் உட்புகுதலும் நாம் அறியாததல்ல.

வெளிநாடுகளுக்குச் செல்வது உறவுகளை மறப்பதற்கு அல்ல. தங்கள் கலை கலாசாரத்தினைத் துறப்பதற்குமல்ல. பிரிவு என்பது எம்மை நாம் இழப்பதற்கும் எமது அன்புள்ளங்களிலும் பார்க்க புதிதான முகங்களும், இதர



RangaRakes

Tamilnavarasam.com

அந்நிய பழக்கங்களுமே சிறப்பானது என கருதுவதும் ஆகாது. நல்லனவைகளை ஏற்று அல்லனவைகளைக் கொய்து எறிக அறிவோமாக! பிரச்சினைகளில் இருந்து தப்புவதற்குப் பிரிந்து ஓடுதலே சரியான மார்க்கம் எனச் சிலர் கருதுகின்றனர். ஓட ஓட எம்மைப் பிரச்சினைக துரத்திக் கொண்டே வரும்.

எத்தனையோ பாச உறவுகள் இன்று ஏங்கிக் கொண்டிருக்கின்றன. தாய் தந்தையர் இருந்தும் கூட பிள்ளைகள் அநாதரவாகக் கைவிடப்படுகின்றனர். இந் சிறார்களே பின்பு நல்ல நிலைக்கு வந்த பின் மீண்டும் பெற்றோர் வந்து அதே பிள்ளைகளுடன் ஒட்டி உற பாராட்டுவதுமுண்டு.

ஒரு நாள் அன்பாகப் பழகிய முகத்தையே நம்மா விட்டுப்பிரிய மனம் ஒப்புவதில்லை. கோபமிகுதியினா பெற்ற பிள்ளையை மறக்கும் பெற்றோர், பெற்றோரை மறக்கும் புத்திரர்கள் இவர்கள் இருந்தும் இல்லா விசித்திரப் பிரகிருதிகளே! மனம் எல்லோர்க்கும் ஒரே மா யாக இல்லை. ஆனால் மனத்தினைப் பக்குவப்படுத் செம்மைப்படுத்த நாம் முனையாமல் இருக்கலாமா?

அடுத்தவன் சிறப்பாக இருப்பதைப் பார்த்தாவ தன் வாழ்வைச் சிறப்பாக்க விழையாமல் இருப்பே மாபெரும் தவறு ஆகும். ஆண்டவன் தேவையற்ற வித எதனையும் ஆக்குவதில்லை. என்றும் எப்போதும்,





அன்புடன், பாசத்துடன், நேயப்பாட்டுடன், இரக்க சிந்தனை யுடன் வாழாமல் பிரிந்து சென்றால் வாழ்வு நிறைந்து விடாது என்று இறைவன் உணர்த்தியபடியே இருக்கின்றான்.

இதன் பொருட்டுத்தான் நாம் பிரிந்து வாழக் கூடாது என்பதற்காகவே பிரிவினைத் தாங்காத பாச உணர்வை, அன்பினை ஈந்து இருக்கின்றான். எனினும் தீவினையாளரு டன் சேராது பிரிந்திருப்பதே உத்தமமாகும். எம்மை நாம், தற்காத்துக் கொள்ள இது ஓர் உபாயமல்லவா? அன்பு அற்றவன் வெறும் கற்பாறைக்கே ஒப்பானவன் என்பது ஏற்புடையதன்று. கற்பாறை வீடுகட்டவும், வீதி அமைக்கவும் உதவுகின்றன. அத்துடன் கற்பாறை மூலமே கலைப் படைப்புக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏன் இறைவனின் திவ்ய சொருபத்தினை கற்பாறை மூலம் சிற்பி செதுக்குகின்றான். கற்பாறையூடே நன்னீரை இறைவன் ஓடச் செய்கின்றான்.

ஓ... மனிதா! நீ கல்லினும் உறுதியான மனோ நிலையில் உன்னை வைத்திரு! ஆனால் பாறைக்குள் ஓடும் நன்னீராய் உன் நெஞ்சிற்குள் அன்பு எனும் நதியைப் பாய்ச்சு! வரண்டு போன இதயத்துடன் உறங்கி நிற்காதே! மக்களுடன் பிரிந்து வாழாது நெருங்கி வாழ்ந்து கொள். உலகம் சுருங்கி விட்டதாகச் சொல்லப்பட்டாலும் உன் இதயத்தை விரிந்ததாக வைத்துக் கொள்வாயாக!. கரிய நினைவுகளை எண்ணங்களை எரித்துப் பசுமையான கருத்துக்களையே நெஞ்சில் பதித்து வைப்பாயாக! இதுவே



RangaRakes
Tamilnavarasam.com

என்றும் உன்னுடன் சகல உயிர்களுமே நெருங்கி நிற்பதற்கான பேருபாயமுமாகும். தனித்து இயங்குவது வேறு பிரிந்து நின்று தனிமரமாக இருப்பது வேறு இதனை நீ உணர்வாயாக!

சுய உழைப்பு தன்மானம் என்பது எமக்குள்ள உரிமை. அதன் பொருட்டு மக்களுடன் விலகி வாழுதல் எவ்வகையிலும் பொருந்தாது முழு உலகையுமே கூட்டுக் குடும்பமாகக் கருதிச் செயல்படு!

எல்லாவற்றையுமே தானே அனுபவித்து விட வேண்டும் என்கின்ற நினைப்பினை விட்டு எல்லாமும் எல்லோர்க்குமாக என எண்ணுக! பிறருடன் பிரிவு எண்ணமற்ற தோழமையுள்ளவனாக உலகம் உன்னை ஏற்றுக்கொள்வதற்கு இதுவே சிறந்த வழியாகும்.

மனிதன் இன்று எதை எதையே தேடிக்கொண்டு இருக்கின்றான். தன்னுடனும் தன் அருகேயுள்ளவனுடனும் உறவாடினாலே போதும் அவன் தனிமையுணர்வற்ற கூட்டுச் சமூகத்துடன் இணைந்தவனாகிவிடுவான். ஆனால் தன்னுடைய நிலையை தனது மனதின் கனதியை தெரியாதுவிட்டால் சுற்றி இருப்பது எல்லாமே சூனிய மாகவே படும். தனது தவறுகளைத் தெரியாமலும் பிறர் மனதைப்புரியாமலும் வாழும் வாழ்வு. முடிவில் அவன் தன்னைத்தானே விரோதித்துக்கொள்ளும் இக்கட்டான நிலைக்கு உட்பட்டுவிடுவான். இது விரக்திக்கும் வித்தாகி விடும்.





மனம் கசிந்து கொள்ளாத வாழ்வு வாழ்வோரையும் இனிமையின் இதத்தினைப்புரிந்து கொள்ளமாட்டாத நெருங்கிவராத உறவுகளையும் மனப்பூர்வமாக வரவேற் போம்! ஏற்றுக்கொள்வோம்!. மனதில் கரிப்பு அற்ற விரோதமற்ற சூழலை எல்லோருமே கூட்டாக உருவாக்க வேண்டும்.


ஒருவருமே எனக்கு இல்லை என விரக்தியுடன் ஒரு ஜீவனும் சொல்லக்கூடாது. அன்புள்ள, களங்கத்தினைக் கடுகளவும் கொள்ளாதவர்கள் எம் அருகே எக்கணமும் உலா வந்து கொண்டு இருக்கிறார்கள் என்கின்ற எண்ணத் தினை கொண்டால் பிரிந்து நின்று வாழ்கின்றோம் என்கின்ற சிந்தனை கடுகளவும் இல்லாதொழிந்து விடுமன்றோ!

கால வேறுபாட்டினால் அதன் மாற்றங்களால் தவிர்க்க முடியாத சந்தப்பங்களால் ஒருவரில் இருந்து ஒருவர் பிரிந்தாலும் இருக்கின்ற ஏனையோர் மூலம் எம் மனத்துச் சஞ்சலங்களை ஏக்கங்களை துயர்களைக் களைந்து கொள்வோமாக! தனித்திருந்து வாழ நாம் பிறக்கவில்லை.

தினக்குரல் (ஞாயிறுமஞ்சரி)
22-10-2006



RangaRakes
Tamilnavarasam.com



# அனுபவங்கள்

வாழ்க்கையின் இன்ப துன்ப அனுபவம் எல்லாமே எமக்கான பாடங்கள். அனுபவங்களை நல்ல அனுகூலங்களாக ஏற்றுக்கொள்க. எமது முன்னோர் சொன்ன கருத்துக்கள், நம்பிக்கைகளை உதாசீனம் செய்யற்க! கால மாற்ற வளர்ச்சி எல்லாமே பழமையின் அனுபவமூடாகப் புறப்பட்டவை தான். பெற்ற அனுபவங்களை உதாசீனம் செய்து மீண்டும் அதே வழியில் செல்வது மதிகெட்டதனம். சாதனை செய்தவர்களின் அனுபவங்களைக் தெரிந்து உணர்ந்து எங்களை நாம் புது மனிதனாக்குவோம்.

வாழ்க்கையில் எமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் யாவுமே நாம் கற்றுக்கொண்ட, இனிமேல் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கான நல்ல பாடங்களே என்று உணர் வோமாக!

எனவே அனுபவங்களை நல்ல அனுகூலங்களாக ஏற்றுக்கொள்வோம். அனுபவங்களே ஒரு படிப்பினை யூட்டும் கல்விதான். எம் முன்னோர்கள் தாம் கண்ட





விடயங்களை அனுபவபூர்வமாக உணர்ந்து எமக்குச் சொல்லிச் சென்றார்கள். அவர்கள் காட்டிய வழியின் வளர்ச் சியாலேயே நாம் இன்று அறிவியல், ஆன்மீகத் துறை, அரசியல் எனப்பல தரப்பட்ட விடயங்களையும் எளிதில் புரிந்து கொண்டு இருக்கின்றோம்.

பெற்ற அனுபவங்களின் மதிப்பு, அதன் இன்றிய மையாத் தன்மையினை இன்னமும் பலர்புரிந்து கொள்கின் றார்கள் இல்லை. புத்தகங்களால் பெறும் கல்வி தான் கல்வி என்றும் பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள் மூலம் மட்டுமே அறிவைப் பெரிதாகப் பெற்றுவிடலாம் என எண்ணிக் கொள்கின்றார்கள். கட்டிடங்களில் கட்டுண்டு மனனம் செய்து படித்துப் பரீட்சையில் தேறிவிட்டால் மட்டும் கல்வி ஞானம் வந்துவிடுமா?

கல்விக் கூடங்களுக்கும் வெளியே ஒரு திறந்த ஞானக் கூடமாக இந்த உலகம் இருக்கின்றது. இங்குதான் நாம் ஏராளமாக கற்கவேண்டியுள்ளது. எம்முன் நடமாடிக் கொண்டிருக்கின்ற அத்தனை ஜீவன்கள் மூலமாகவும் தான் நிரம்பப் படிக்க வேண்டியுள்ளது.

நாம் சாதாரணமாகக் கண்டு கொண்டிருக்கின்ற ஒரு பாமரனைப் பார்த்ததும் அவனுக்கு என்ன தெரியும்? எனக் கணக்குப் பண்ணி விடுகின்றோம். அவனுக்குள் ஒளிந்திரு க்கும் ஆத்மபலம், ஞானம் பற்றி உணரத் தலைப்படுவ தேயில்லை. நாங்கள் ஏட்டில் படித்ததற்கும் மேலாக அவன்



RangaRakes
Tamilnavarasam.com

தன் வாழ்வில் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களை மிக உன்னிப்பாக அவதானித்தும் தன் முன்னோர்கள் சொன்னதை எள்ளி நகையாடாமல் உள்ளத்தே கிரகித்தும், தனது அனுபவ ஞானத்தை வளர்த்துக் கொள்கின்றான். வெளிப்படையாக அவனது பேச்சும் செயலும் நகைப்பூட்டு வனவாக அமைந்திட்டாலும் உண்மையில் நிம்மதியாக அவன் எப்படி வாழுகின்றான் என்கின்ற அருங்கலையை இவர்களைப் போன்றவர்களிடமிருந்தே நாம் படிக்க வேண்டியுள்ளது.

தாங்கள் பெற்ற அனுபவங்களை மற்றவர்க்கு வழங்காமல் இருப்பதும் எவராவது தாங்கள் பெற்ற நல்ல அனுபவங்களைச் சொல்லும்போது அதைக் கேட்காமல் நிராகரிப்பதும் நிச்சயமாக ஆரோக்கியமான செயலேயல்ல.

நாம் எதிர்பார்க்காமலேயே எமக்கு ஏற்பட்டு விடுகின்ற அசாதாரண சம்பவங்களாலும் எமது அறியாமை காரணமாக ஏற்படும் எதிர் விளைவுகளாலும் சிறு சிறு உராய்வுகளுக்கும் சிலசமயம் பாரதூரமான பாதிப்புக்ளுக்கும் ஆளாகி விடுகின்றோம்.

எமக்குத் தெரியாத சிறு விஷயத்தை மற்றவர்களிடம் சென்று தெளிவுபெற எமது அகம்பாவம் விடுவதில்லை. "எனது படிப்பு என்ன, வசதிகள் என்ன" என்று தமக்குள் எண்ணியே தனது அறிவை மடக்கி ஒடுக்கி வைத்துக் கொள்கின்றான். தனக்கு எல்லாமே தெரியும் என்பதைப்





போன்ற அறியாமை வேறு ஏது? இந்த மமதையினாலேயே மனிதன் தனக்குத் தானே தழும்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றான். மேலும் எத்தனை இடர்கள் வந்திடினும் எவரிடத்தும் சென்று ஆலோசனை கேட்கமாட்டேன் என்று அடம் பிடிப்பவர்களும் உளர்.

சில விடயங்களில் பெரியவர்களைவிடச் சின்னவர்கள் கூடப் பிரமாதமாகச் சிந்திக்கின்றார்கள். தவறான சில அறிவுரைகளைத் தமது அனுபவம் இதுவென அவர்கள் சொல்லும் போதும் இளைஞர்கள் தமது நுண்அறிவினால் அது தவறு என்று உறுதியாச் சொல்லுகையில் அதைக் கேட்கச் சில முதியோர் தயாராக இருப்பதில்லை.

காலமாற்றங்களின் வளர்ச்சியை சிலர் இன்னமும் ஏற்றுக்கொள்வதில்லை. இன்னமும் முரண்பாடான ஏற்றுக் கொள்ள இயலாத பழமைச் சிந்தனையில் மூழ்கிக் கிடக்கின்றார்கள்.

காலத்திற்குக் காலம் அக்காலத்திற்கு ஏற்பவே சில நடைமுறைகள் வகுக்கப்பட்டிருந்தன. சில நடைமுறைகள் பழக்க வழக்கங்களை தற்காலத்தின் சமூக அமைப்பு ஏற்றுக் கொள்வதாயில்லை. உதாரணமாக சாதி சமூக வேறுபாடுகளை முன்னோர் ஏற்றுக்கொண்டது போல் நாம் தற்காலத்திலும் ஏற்றுக்கொண்டு பாகுபாடான வழமைகளைப் பூரணமாக அனுசரித்தே தீருவேன் என்று தீவிரமாக வாழமுடியுமா? எமது முன்னோர் சொன்னதாகச் சொல்லப்



RangaRakes
Tamilnavarasam.com

படும் பழமை வாழ்க்கை சமூக அமைப்பு சரியானது என் விதண்டாவாதம் இனி மேலும் செய்ய முடியாது.

நன்மை தரும் பொது நோக்கான அனுபவ அறிவை பெற்றுக் கொள்வோம். சமூகத்திற்கு விரோதமான குரோ மனப்பான்மையைத் தூண்டும் அறிவுரை போல் சொல்லப்படும் பொல்லாத பேச்சுக்களைத் துச்சமென தூக்கியெறிவோமாக! ஆயினும் நாம் எமக்கு அனுகூ மானவர்களிடம் இருந்து மட்டும் வாழ்க்கையைப் படித்து முடியாது. எமக்கு எதிரிகளாக நீங்கள் கருதுபவர்க மூலமாகவும் பல விஷயங்களைப் புரிந்து கொள்வதுட எச்சரிக்கையுணர்வு, தற்காத்தல் போன்றவைகளையு அறிந்து கொள்ள முடியும்.

எனினும் எதிரிகளைச் சம்பாதிக்காத கலையை நா கற்றுக் கொள்ள வேண்டும். எல்லோரையும் நேசித் வந்தால் எதிரிகள் என்று எவர் முன்வரப்போகின்றார்கள் நல் ஒழுக்கம் பரந்த மனப்பான்மையுள்ளோரிட பழகுவதால் அவர்கள் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவங்களே எமக்கு நல் ஆசானாகி எம் வாழ்வில் ந ஒளியூட்டிவரும்.

இன்பத்தில் காணும் மகிழ்ச்சிகளால் எம்மை நாமே மறந்தே விடுகின்றோம். அத்துடன் துன்பத்தில் காணும் மனவடுக்களால் எம்மை நாமே இழந்து எம்மாலேயே எடுத்து எறியப்பட்டவர்களாய் தனித்து நிற்கும் மனிதர்





களாகும் சந்தர்ப்பத்தினை உருவாக்குகின்றவர்களாகி விடுவதுமுண்டு.

எம்மை நாம் இழந்துவிடாத வைராக்கிய உணர்வை தமது அனுபவஞான மூலம் எழுச்சி பெற்ற பெரியோர் களிடம் இருந்தும் கற்றுக் கொள்வோமாக!

ஏழ்மை காரணமாக இனபந்துக்களால் ஒதுக்கப்பட்டு தாய், தந்தையரை இழந்த பின்பும் தனது சகோதர, சகோதரிகளைத் தனது உழைப்பின் மூலம் வாழவைத்த சகோதரன் மூலமும், படித்துப் பட்டங்கள் பெற்றும் எதுவித உத்தியோகமும் கிடைக்காமல் ஊரவரின் கேலிக்கிண்டல் பேச்சுக்களாகி முடிவில் தற்கொலை செய்யும் முடிவில் இருந்தும் விடுபட்டு தனித்தே சுயதொழில் மூலம் இலட்சாதி பதியானவர்கள் மூலமும், அடுத்த வேளைக்கு உணவின்றி அலைந்து சுய முயற்சியால் கற்றுத்தேர்ந்து கொண்ட ஒரு இலக்கிய விற்பன்னர் ஒருவர் மூலமும் பெற்றுக் கொண்ட இவர்கள் போன்றோரின் அனுபவங்களை நேரில் சென்று கேளுங்கள்! இத்தகையோரின் வாழ்க்கை அனுபவங்களை உள்ளத்தில் இருத்தி உணர்ந்துகொள்வீர்!

இப்படி எத்தனை எத்தனையோ அனுபவஸ்தர்கள் விற்பன்னர்கள் வழிகாட்டிகளாக எமக்கு உதாரணமாக முன்மாதிரிகளாக இருந்தார்கள் தற்போதும் இருந்து கொண்டேயிருக்கின்றார்கள். எவ்வளவோ இன்னல்க ளுக்கும் மத்தியில் வாழ்ந்து முன்னேறியவர்களின் அனுப



RangaRakes
Tamilnavarasam.com

வங்களைக் கேட்டால் நாம் எம்மாத்திரம் என்கின்ற உணர்வும் ஏற்படலாம்.

படுத்துக்கிடப்பவனுக்குச் செயல்கள் என எதுவுமே யில்லை. எனவே அவனுக்கு எந்தவித அறிவோ அனுபவமோ கிடைப்பதற்கான சந்தர்ப்பங்களோ கிடைப்பது மில்லை. எழுந்து ஓடி உழைப்பவன் புதுச்சரித்திரங்களை உருவாக்குகின்றான். எவ்வளவுதான் வசதி வாய்ப்புக்கள் கிடைத்தாலும் கூட அதனைப் பேணுதற்கு நல்ல அனுபவ ஞானம் வேண்டும். ஒரு வயோதிபர் தனது பரிதாபகரமான கதையைச் சொன்னார்.

“எனக்கு ஐந்து பிள்ளைகள் நான் இளமையில் ரொம்பவும் கஷ்டப்பட்டு உழைத்தேன் உழைத்த வீடு பணம் எல்லாவற்றையுமே அவர்களின் திருமணம், கல்வி, உத்தியோகம் பெறுதற்காகச் செலவு செய்தேன். என்னிடம் தற்போது எதுவுமேயில்லை. மனைவியும் போய்ச் சேர வேண்டிய இடத்தில் போய்ச்சேர்ந்து விட்டாள். பிள்ளைகள் திருமணமானவுடனேயே என்னை மறந்துத் விட்டதுடன் என்னைத் தங்களுடன் வைத்துக்கொள்ள மறுத்துத் துரத்தியே விட்டனர். என்னிடம் இப்போது ஒன்று மேயில்லை. இருக்க வீடுவாசல் கிடையாது. நான் விட்ட பெரும் தவறினை இப்போது உணருகின்றேன்.

உழைக்கின்ற காலத்தில் எனக்கென்று ஒரு சிறு தொகையையாவது ஒதுக்கிக்கொள்ளவில்லை. எல்லோ





ரையும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் நம்ப முடியாது. பெற்ற பிள்ளைகள் மட்டும் இது விடயத்தில் விதிவிலக்கு அல்ல. எல்லாமே பொய், நிரந்தரமற்றவைகள்” என்று மனமுடைந்து கூறினார். இது அவருடைய அனுபவ பூர்வமான பேச்சுத்தான். அதே சமயம் எல்லா பிள்ளை களுமே இப்படி நன்றி கெட்டதனமாக நடந்து கொள்வது மில்லை. தற்பாதுகாப்பு முன்யோசனை, அவதானம் எல்லாமே மனிதருக்கு அவசியமாக இருக்க வேண்டிய தாகும். நல்லவர்கள் யார்? கெட்டவர்கள் யார்? யாரால் எமக்குக் கெடுதல்கள் உருவாகும்? நண்பர்கள் யார்? நண்பர்கள் போல நடிப்பவர்கள் எவர் என நாம் கண்டு கொள்ள வேண்டும்.

வீட்டில் பெரியவர்கள் சொல்லுவார்கள் “கண்டவர்களு டன் கூடாதே! கண்ட இடங்களுக்கும் செல்லாதே! தீய செயல்களைச் செய்யாதே” என்று சொன்னாலும்கூடப் பல இளையோர்கள் இவர்களது அனுபவரீதியான வார்த்தைக ளைக் கேட்டுக்கொள்வதில்லை. ஏதோ ஒரு சந்தரப்பத்தில் அவர்கள் புத்திமதிகளைக் கேட்காமையினால் வந்த பலாபலன்களை அனுபவிக்கும் போதுதான் புரிந்து கொள்வார்கள். இனிக்க இனிக்கப் பேசியவர்களால் அப்பாவிகள் ஏமாற்றப்பட்டுச் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டு அநியாயமாகத் தண்டனைகளைப் பெறுவதும் நாம் அறிந்த விஷயங்கள் தான்.



RangaRakes

Tamilnavarasam.com

ஒழுக்கமாகச் சீவிக்கின்றேன் எனப் பாசாங் செய்பவர்களை அறிந்து கொள்வது சுலபமானதல்ல. சில மௌனமாக இருந்தவாறே செய்கின்ற செயல்கள் யாவுமே படுபாதகமாக இருக்கும். இன்னும் சிலர் கண்டபடி பேசித் திரிவார்கள். ஆனால் செயலளவில் யாருக்குமே தீங் செய்யவே மாட்டார்கள்.

பொய்யான நடிப்பைக்காட்டி ஆன்மீகம் பேசுவதா லும், வேடம் போடும் அரசியல்வாதிகள் இருப்பதாலு உண்மையானவர்களை இனம் காண நல்ல அனுப ஞானம் தேவைப்படுகின்றன. ஆனால் பலருக்கும் கஷ்ட கள் பிரச்சனைகள் வந்து அனுபவித்த பின்னர்தா உண்மைகள் புலனாகின்றன.

தொழில் அனுபவங்களைப் பெற்றவர்கள் தமது தொழிலை மிக லாவகமாகச்செய்யும் போது பார்ப்பவ களுக்கு அது மிகவும் எளிதானதாகவே தோன்றும் தொழிலின் நுட்பம் என்பதும் அதனைக்கையாளுத என்பதும் பல வருட கடினமான பயிற்சியினாலேயே கை கூடியது என்பதை நாம் உணரல் வேண்டும்.

சாலையில் பயணித்த ஒரு மோட்டார் வாகனம் திடீர் என நின்றுவிட்டது. வாகன ஓட்டுனர் என்ன முயற்சி செய்தும் அது இயங்குவதாயில்லை. பின்னர் ஒருவாறு பக்கத்து ஊரில் உள்ள வாகனத்திருத்துனரை அழைத்து வந்து காட்டினார். அவரும் வாகனத்தினை உன்னிப்பாகப்





பரீட்சித்து இயந்திரத்தில் உள்ள கோளாறைக் கண்டுபிடித்து விட்டார். இரண்டு மின்கம்பிகள் துண்டிக்கப்பட்டிருந்தன. அதனை அவர் முடிந்து விட்டார். வாகனம் இயங்க ஆரம்பித்தது வாகன ஓட்டுனர் அவரது கூலி எவ்வளவு என்று கேட்ட போது, திருத்துனரும் இருநூறு ரூபாய் என்றதும் அதிர்ந்து போனவர் "என்ன இந்த கம்பிகளை இணைக்க இருநூறு ரூபாய் கூலியா" என்று கேட்டார். திருத்துனரோ அமைதியாக கம்பிகளை முடித்துவிட அல்ல இந்தக்கூலி, எனது தொழில் அனுபவத்தினால் இந்தக் கோளாறைக் கண்டு பிடித்த மைக்கே இந்தக் கூலி என்றார். இதுபோல் இன்னும் ஒரு சுவையான கதை இது.

பிரபலமான ஓவியரிடம் மாணவர்கள் ஓவியம் பயின்று கொண்டிருந்தார்கள். ஒரு மாணவன் மிக சிரமப்பட்டு ஒரு ஓவியம் வரைந்திருந்தபோது அது திருப்திகரமாக அழகாக அமையவில்லை. அப்போது அவனது குரு வந்தார் ஒரு நொடிப்பொழுதில் ஓவியத்தில் சிறு திருத்தம் ஒன்றைச் செய்தார். என்ன ஆச்சரியம் ஓவியம் உடன் அழகாகச் செம்மையாகிவிட்டது.

மாணவன் சற்று இறுமாப்புடன் "ஒரே ஒரு சிறுதிருத் தத்தையே தாங்கள் செய்தீர்கள். உடனே எனது ஓவியம் திருத்தப்பட்டு விட்டதே!" என்றான். அதற்குக் குரு சொன்னார் "நான் செய்த திருத்தத்தின் மூலமே கலை பிறக்கின்றது. இன்னமும் உனது ஓவியக்கலை ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளது. பயிற்சிசெய்" என்றார்.



RangaRakes
Tamilnavarasam.com

பலவருட அனுபவ மூலம் கைவண்ணம், செயல் திறன்கள் பரிணமித்துப் பிரகாசிக்கின்றன. தொடர்ந்து மேடையில் பேசிவந்தால் "நா" வண்ணம் மிளிரும். இதே போல் விரும்பும் கலைகளில் போதிய பயிற்சிகளைச் செய்து வந்தால் தான் அந்த அந்தத் துறைகளில் பிரகாசிக்க முடியும். பெரியவர்களின் சுயசரிதைகள் மற்றும் தலைவர் களின் வரலாறுகள், பயண அனுபவங்கள், மகான்களின் வாழ்க்கை நிகழ்வுகளைப் படித்துப் பார்க்கும் போது அவர்கள் தமது வாழ்க்கையில் பட்ட கஷ்ட நஷ்டங்கள், எதிர்நோக்கிய சவால்கள், இழப்புகள், பின்னர் இவைகளில் இருந்து மீண்ட செய்திகளைப் படித்து உணர முடியும். பிரச்சினைகளை எதிர்கொண்டு அதனை வெற்றி கொண்டாலேயே வாழ்க்கை சிறப்புற அமையும் என்பதையும் நாம் சந்தேகமறத் தெரிந்து கொள்ள இயலும்.

வயது முதிர்ந்தவர்கள் தமது வாழ்க்கை அனுபவங் களை இரை மீட்டி எமக்குச் சொல்லும்போது கேட்க அலு பாகச் சலிப்பாக இருக்கலாம். ஆனால் அவர்கள் பேச்சை உற்று நோக்கினால் பற்பல சுவையான அனுபவ உண்மை களைக் கேட்டு அறிந்து கொள்ள முடியும். எம்முன் வாழ்ந்து கொண்டிருக்கும் முதியோரிடம் அவர்கள் இருக்கும் காலத்திலேயே அவர்களிடமிருந்து அறிய வேண்டிய வற்றைத் தெரிந்து கொள்வோமாக!

நாம் வெறுமனே ஒரு கட்டுக்குள் எமது அறி வளர்த்துக் கொள்ள விரும்பாது சுயமாக எங்குமே வியா





கும் ஆற்றல்களை வளர்க்கும் வண்ணம் பலரிடம் கேட்க வேண்டியதைக்கேட்டும் தெளிந்து கொள்வதற்காக எமது அறிவை கூர்ந்து நோக்க அனுமதிப்போமாக!

நாம் முடங்கி ஒடுங்கி ஒரு வட்டத்தினுள் வாழப் பிறந்த வர்கள் அல்லர். ஒரு சின்னச் சாடியினுள் குறிப்பிட்ட நீரை அருந்தி சொற்ப மண்ணில் புதையுண்டு கொஞ்ச வளியை யும், மெல்லிய ஒளியையும் ஏற்றுக் குட்டையாகவே வளரப் பிறந்தவர்கள் அல்லர். கிளைகளைப் பரப்பிச் செழிப்பாக வளராமல் ஒரு "பொன்சாய்" மரம் போல் ஒடுக்கப் படக்கூடாது ஐயா!

பரந்து சென்று அனுபவ ஞானங்களைப் பெற்றிடுவீர்!. நல்மனதும் கல்வியறிவும் அனுபவங்களும் இணையும் போது மனிதன் பூரணமாகி உலகிற்கு உதவும் ஆன்மா வாக ஆகிவிடுகின்றான். நாம் இந்த உலகில் கற்க வேண்டியது எவ்வளவோ இருக்கின்றது. இயற்கையுடன் உறவாடி மனிதரிடம் மானுடத்தையறிந்து அனுதினமும் அனுபவங்களைப் பெற்று அனைவருடனும் பகிர்ந்து கொள்வோமாக!.

தினக்குரல்<br>
(ஞாயிறுமஞ்சரி)<br>
20.01.2008



RangaRakes
Tamilnavarasam.com



# கம்பீரம்

புறத் தோற்றத்துடன் மட்டும் கம்பீரம் அமைந்து விடாது. உள்ளத்தில் தெளிவும் நேர்மையும் உள்ளவிடத்தே 'கம்பீரம்' அஞ்சாமையுடன் நிமிர்ந்து நிற்கும். மனம், வாக்கு, காயம் ஆகியவை தூய்மையாக அமையாது விடில் பயம், மயக்கம் பற்றிக் கொள்ளும். தூய்மையான மனமுடைய உடைய நெஞ்சுறுதி கொண்டவன். தன்னைப் போல பல்லாயிரம் பிரஜைகளையும் கம்பீரம் மிக்கவனாய் மாற்றி அமைத்து விடுகின்றான். கம்பீரம் ஆண்களுக்கே சொந்தமானதல்ல. எந்தச் சவால்களையும் வென்றெடுத்து வரலாறு படைத்தமையில் மகளிருக்கும் பாரிய பங்குண்டு. கம்பீரம் மேலோங்கினால் களிப்பு களிநடனம் புரியும்.

ஒருவர் வெளித் தோற்றத்தில் அஜானுபாகுவாய், மிடுக்குடன், செருக்குடன் காணப்பட்டால் அவன் "கம்பீர மானவன்" எனச் சொல்ல முடியுமா?

"கம்பீரம்" என்பது வெறும் புறத் தோற்றத்துடன் சம்மந்தப்பட்டதல்ல. உள்ளத்தில் தெளிவும் நேர்மையும்





உள்ளவர்க்கே அஞ்சாமை எனும் நெஞ்சுறுதி தானே உருவாகும். இதுவே உண்மையான கம்பீரமாகும்.

இதை விடுத்து உள்ளத்தே அழுக்குடன், வெளியே மிடுக்குடன் திரிபவர்கள் சஞ்சலமும், குரோதமும்கொண்டு குறுகித் தேய்ந்த மாந்தராகவே கருதப்படுவார்கள்.

இன்று உலகத்தவர்கள் புறத் தோற்றத்தினுள் தன்னைப் புகுத்தி, அதனுள்ளேயும் உண்மை இருக் கின்றதா என மயங்கி காலத்தை விரயம் செய்கின்றார்கள். உள்ளதை உள்ளபடி நோக்கி வாழ முடியாமை கூட அந்தகாரத்தையே வரவேற்பது போலாகும்.

நல்ல பண்புகளை நாடுபவர்கள் உருவங்களை மட்டும் நல்ல தரிசனமாகக் கொள்வதுமில்லை. பரதேசி யாக வாழ்ந்தபடியே எதனையும் எதிர்பாராமல் வாழ்பவர் களுக்குள்ளிருக்கும் நெஞ்சுறுதி எமக்கு இருக்கின்றதா?

நேரம் தாழ்த்தி உங்கள் இல்லத்திற்கு வருகின் றீர்கள். வீட்டில் மனைவி வெளியே சென்று விட்டாள். வீட்டுச் சாவி உங்களிடமில்லை பசிவேறு வயிற்றைக் கடிக்கிறது. அப்போது மனைவி சொல்லிடத் தொலைபேசி யூடாகச் சொல்கிறாள். " நான் அம்மா வீட்டுக்குச் சென்று விட்டேன். திரும்பி வரப் பேரூந்து கிடைக்கவில்லை, நாளை காலை வருகின்றேன். சாவியை கையுடன் கொண்டு வந்து விட்டேன் மன்னியுங்கள். இன்றைய பொழுதை தெரிந்த நண்பர்கள் வீட்டுக்குச் சென்று கழித்து விடுங்கள் தயவு செய்து....".



RangaRakes

Tamilnavarasam.com

இவ்வாறு மனைவி சொல்லச் சொல்ல உங்கள் மன இயல்பு எவ்வாறு மாறுபாடு அடையும்? " அட... இன்று இரவு எங்கே நான் தங்குவது, எப்படிப் போவேன், எப்படி உடனே செல்வது, மழைவேறு.... சேச் சே.... பசிவேறு ..." இவ்வாறு நீங்கள் அவஸ்தைப்படுவது தெரிகின்ற தல்லவா?

ஒரே ஒரு இரவுப் பொழுதைக் கழிக்க இந்த மனம் எவ்வாறெல்லாம் அல்லலாடுகின்றது. அதே வேளை தினம், தினம் படுக்க இடம் இல்லாது , உண்ண உணவு இன்றி வீதியோரம் கிடக்கும் மக்களின் நிலை என்ன என எண்ணிப் பார்க்கின்றீர்களா?

ஒரு இரவில் உங்கள் துணிவு, நம்பிக்கை எங்கே போய்த் தொலைந்தது? எங்காவது போய் தங்க ஆயிரம் எண்ணங்கள், மனம் தவிக்கிறது !

எதையும் ஏற்கும் மனப் பக்குவம் தோன்றாது விட்டால் "கம்பீரம்" என்கின்ற திட சிந்தை எவ்வாறு அவதரிக்கப் போகின்றதோ?

மனம், வாக்கு, காயம் இவை மூன்றும் தூயதாக அமையாதுவிடின் பயம் தானாகவே பற்றி மனிதனை அறுக்கும். பேச்சில் தூய்மை, உடற் சுத்தம், நல்ல இதயம் மாந்தர்க்கு அழகோ அழகு!

போலிக் கௌரவம் பெற்றுக்கொள்ள அடிமை வாழ்வை வரவேற்கும் மனிதர்கள் இருக்கின்றார்கள்.





துன்பங்களை, எதிர்படும் ஆபத்துக்களைச், சவால்களை எதிர் கொள்ளாமல் எப்படி வீரன் என்ற சொல்லை மட்டும் நாம் விரும்ப முடியும்?

ஒரு நெஞ்சுறுதி கொண்டவன் பல்லாயிரம் மக்களைத் தன்னைப் போல் கம்பீரமுள்ள பிரஜையாக்கின்றான்.

கோழைகளுடன் வாழ்வது வீழ்ச்சிக்கு வழி மட்டுமல்ல, படுத்து இருந்தபடி விண்ணை எட்ட எண்ணும் தன்னைத் தான் ஏமாற்ற விழையும் வேலை!

இன்று பலரும் நாளைக்கு என்ன செய்யலாம் என எண்ணியபடி வாழ்கின்றார்களே தவிர, காரியங்களைச் செயலுருவாக்க முயல்வது இல்லை.

புத்தகத்தைப் படித்தும், யாரோ சொன்னார்கள் என்பதைக் கொண்டும், ஆராய்ச்சியில் காலம் கடத்துகின்றார்கள். கொஞ்சம் முயன்று பார்க்கலாம் என்பதை விடுத்து, பயந்து பயந்தே வெறும் எதிர்பார்ப்புடன் நொந்து போகிறார்கள்.

மேலான வீரம் இல்லாது விட்டால், எந்தப் பிரச்சினைகளையும் கடக்கும் ஆற்றல் வந்து விடுமா? நாளைய சிந்தையில் இன்றைய பொழுதுகளை நாசமாக்கும் சோம்பேறிகள் கூறும் காரணங்கள், மனக் கோட்டையிலும் வாசம் செய்யலாம் என்று கூறுவது போலாகும்.

கம்பீரம் மிக்கவர்கள் ஆணாகத் தான் இருக்க



RangaRakes
Tamilnavarasam.com

வேண்டுமென்பதில்லை. வீரம் மிகுந்த சாதனைப் பெண்கள் கோடான கோடி வாழ்ந்த பூமி இது. உங்களைப் பெற்ற தாய் எவ்வளவு சோதனைகளைத் தாங்கி உங்களை வளர்த்தெடுத்திருப்பாள்? கொஞ்சம் சிந்தியுங்கள்.

எனவே சவால்களைச் சமாளித்த வீரர்களைத் தேடி வேறு எங்கும் தேடத் தேவையில்லை, அவர்கள் உங்கள் இல்லத்தில் உள்ளவர்களாக, ஏன் உங்கள் சமூகத்தில் ஒரு அங்கத்தவர்களாகவும் இருக்கலாம்.


இவர்களது நல்ல நடத்தைகளைக் கண்டு கொள்வீர்களாக. எப்படி ஒருவர் உயர்ந்தார் என்பதை அறிக! அவ்வண்ணம் உங்களை நீங்களே செதுக்கிக் கொள்ள அப்பொழுதே, துணிச்சல் தானாகப் புறப்படும். என்றும் புது உற்சாகத்தில், புத்தம் புது பூக்களாகவே நித்ய அவதாரம் எடுப்பீர்கள். அது உங்களால் இயலும்!.

சந்தோஷமாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டுமா என்ன? சிறகை விரித்து அடிக்க அடிக்கப் பறவை மேலே எழுகின்றது. கைகளை, கால்களை அசைத்து உழைக்க, மூளைக்கும் புது விருந்து அளிக்கப்படுகின்றது. மனதில் கம்பீரம் தோன்றியதுமே சோகம், சோம்பல் செத்து விடுகின்றது. களிப்பு உள்ளத்தில் விதைக்கப்பட்டு, மா விருட்சமாகி விடுகின்றது.

தினகரன்
வாரமலர்
20.06.2011







## அவதானம், நிதானம் அவசியம்!

சிரத்தையுடன் பணியாற்றுபவர்கள் நிதானம் இழப்பதில்லை. அவதானமற்ற காரியங்கள் முழுமையடைவதில்லை. பூரணத்துவமாக காரியமாற்ற விரும்புபவர்கள் சிரமப்படாமல் பொறுமையுடன் செயலாற்றினால் தவறுகள் ஏற்படப் போவதில்லை. அவதானமின்றேல் சின்ன விஷயங்களே பாரிய விரும்பாத நிகழ்வுகளுக்குள் இழுத்துச் சென்று விடும். மற்றவனை முந்துவதற்காக விழுந்தடித்து ஓடுவதால் மனிதன் தன் பலமிழப்பான். அவசரமாக, நிதானம் இழந்து செயற்படுபவன், மற்றவர்களையும் பதற்றப்படவைக்கின்றான். நிதானம், அவதானம் நிம்மதியான வாழ்விற்கு ஆதாரம்.

எந்தக் காரியங்களையும் அவதானமாகச் செய்யாது விடின் அவை பெறுமானம் அற்றதாய் வீணாகப் போய் விடுவதுண்டு.

எமக்கு எல்லாமே தெரியும் என்கின்ற இறுமாப்புடன் செய்கின்ற கருமங்களால் தவறுகளை வருந்தி அழைக்கின்ற நிலை உருவாகலாம்.



RangaRakes
Tamilnavarasam.com

சிந்தித்துக் காரியமாற்றினால். எதிர்பார்த் வைக் கும் மேலான பலாபலன்களை ஈட்டித் தரும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. நிதானம் இழந்தவன், ஏனைய வர்களையும் பதற்றமடைய வைக்கின்றான்.

நாங்கள் செய்யும் காரியங்கள் எல்லாமே எங்களுக் கானவைகள் என்பதுமல்ல. எனவே எங்களது செய்கை களால் பிறர் அவஸ்தைக்கு உள்ளாகாமல் எம்மை நாம் பக்குவப்படுத்துதல் அவசியமானது அல்லவா?

எனவே அவதானமாகச் செயற்படுவது பொது நோக்குடன் கூடிய விஷயமாகும். எங்களது பணிகளில் நேர்த்தி, பூரணத்துவத்தையே ஏனையோரும் விரும்பு வதை நாம் உணர வேண்டும். "நிறுவனம் ஒன்றில் கடமை புரிபவர்கள் மட்டும் வேலைகளைக் கச்சிதமாகச் செய் தேயாக வேண்டும். சுதந்திரமாகச் செயற்படுபவர்கள் நாங்கள். எமக்கு என்ன?. எமது இஷ்ரம் போல் இயங்கு வோம்" என எகத்தாளமாகச் சிலர் பேசுவதைக் கேட்டிருப் பீர்கள்.

சமூக ஒழுங்கமைப்பு என்பது, பல அங்கத்தினர் ஒன்றிணைந்து சீராக இயங்குவதனாலேயே அதன் முன்னேற்றம் தங்கியுள்ளது. எறும்புக் கூட்டங்களை ஆய்வு செய்தவர்கள் சொல்லும் தகவல்கள் ஆச்சரியமாக இருக் கின்றன.





திட்டமிட்ட வாழ்க்கை முறை, உழைப்பு, கட்டுப் பாடுகள் எல்லாமே மனித சமூகம் எறும்புகளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியதாகும். ஏனோ தானோ என அவைகள் ஜீவனம் நடத்துவதில்லை.

திட்டமிடாமல் காரியம் செய்வதும், அதனால் கால விரயமாவதால் பலர் படும் சிரமங்கள் கொஞ்ச நஞ்ச மானதல்ல. செய்யும் பணிக்கான காலத்தைக் கோட்டை விட்டுப் பின்னர் அவசரம் அவசரமாகச் செய்யும் காரிய ங்கள் உருப்படியாக அமைந்திடுமா?

மிகவும் திறமைசாலியான மாணவர் ஒருவர், பரீட்சை முடிந்த பின்னர் சோகத்துடன் காணப்பட்டார். " "நீங்கள் தான் கெட்டிக்கார மாணவர்தானே, பின்பு எதற்காகப் பரீட்சை முடிந்ததும் கவலையாக இருக்கின் றீர்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர் "பரீட்சையில் நான் திறமையாகத் தான் எழுதினேன். இறுதி நாள் விடைத் தாளில் அவசரமாக எனது சுட்டெண்ணைச் சரியாக எழுதினேனோ தெரியவில்லை என்றார். விடை எழுதிய பின்னர் அதனைப் பரீட்சை அதிகாரியிடம் ஒப்படைக்கும் போது தான் எனது சுட்டெண்ணை எழுதினேன். அதில் ஏதும் தவறு வந்து விட்டதோ எனச் சந்தேகமாக இருக்கின்றது என்றார். பரீட்சை விடைத்தாளில் முதலில் சுட்டெண்ணைச் சரியாக எழுதிவிட்டு, அப்புறம் விடை எழுதிட வேண்டும் ஆனால் இறுதி விடை எழுதும்போது நேரம் பிந்தியதால் அவர் மனக்கிலேசமடைந்து விட்டார்.



RangaRakes
Tamilnavarasam.com

சில சந்தர்ப்பங்களில் அவசரமான அலுவல்களால் மனம் தடுமாறுவது இயற்கை.சாதாரண விடயங்கள் கூடக் கவனக் குறைவால் பெரிய விபத்துக்களை உண்டு பண்ணி விடுகின்றது.

இரவு இரவாக நீண்ட தூரம் பேருந்து ஓட்டிச் செல்லும் சாரதிகள், இடைஇடையே சற்று ஓய்வு எடுக்கலாம், பயண தூரத்தின் இறுதியில் சற்றுக் கண் அயர்ந்து விட்டமையினால் பெரிய விபத்தைச் சந்தித்த சம்பவங்களை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

சின்ன விஷயங்களுக்கே பதட்டப்படுபவர்கள் பெரிய சாதனைகளை சாதிப்பது எங்ஙனம்?

குழம்பி தவிப்பதால், எழுந்து இயங்கும் காலத்தை இழந்து நொந்து போகும் பலர் உளர். குழம்பித் தவிப்பவர்கள் நிதானத்தை ஏன் மறந்து போகின்றார்கள்?

மாடிப் படிக்கட்டுக்களைக் கடக்க முற்படுபவர்கள் அவசர அவசரமாக மூன்று படிகளை ஒரே எட்டில் கடக்க முற்பட்டுக் கால்களில் கட்டுப் போடுவது முட்டாள் தனம்.

அற்பக் காரியத்திற்காக முட்டி மோதி முந்தப் பார்க்கின்றார்கள். சுறுசுறுப்பான இயக்கம் என்பது மற்றவர் கேலியாக நோக்கும் தன்மையாக இருத்தலாகாது. தொடர் பேருந்தில் ஓடித் தொற்றி ஏறுவதும், இருக்கை இருந்தும், மற்றவர் தோளில் சாய்ந்து தொங்குவதும்





மந்திகளின் கூத்து. மந்திகள் தொங்கி வீழ்வதில்லை. மனிதனால் அது இயலாது. இயலாத முட்டாள் வேலையை மேற்கொள்ளுதல் இழிவு. நிதானம் இழப்பவன் வேதனையை விலைக்கு வாங்குகின்றான் .

இன்று பலரும் மற்றவனை முந்துவதற்காகவே, தனக்கு அது கிட்டி விட வேண்டும். எனக் கருதுகின்றான். தேவையற்ற ஒரு பொருள் இருந்தாலும் அது மற்றவருக்குக் கிட்டக் கூடாது என்பதில் சர்வ ஜாக்கிரதையாகப் பலர் இருக்கின்றார்கள்.

ஐந்து வினாடி சினத்தை அடக்க முடியாது, நிதானமிழந்து மிருகம் கூட வெட்கப்படும் காரியங்களை அருவருப்பின்றிச் செய்து முடிக்கின்றான். தனது பொருந்தாத அத்துமிறல்கள், குற்றச் செயல்களை வீரம் மிகுந்தது என்றும் சொல்லிக் கொள்கின்றான்.

கருணை, அன்பு, உள்ளத்தில் சுரந்தால் செய் கருமங்களில் நிதானம் வந்து விடும். அமைதியான இயக்கம், களைப்பு உண்டு பண்ணிவிடாது. அவசரம் அவசரமாக ஓடினால் , ஐம்பது அடி தாண்டு முன் நெஞ்சு படபடக்கும்.

சிலர் "ஜாக்கிரதை", "எச்சரிக்கை" என்கின்ற அறிவிப்புப் பலகையைப் பார்ப்பதேயில்லை. எமது காரியங்களுக்காக மட்டும் இந்த உலகம் இயங்குவ தில்லை. பல்கோடி மக்கள் வாழும் பூமி இது. மற்றவனும் இயங்க வழி விடுவோம்!



RangaRakes

Tamilnavarasam.com

எல்லோரும் சேர்ந்து பயணிக்கும் பெரிய பார ஊர்தி இந்தப் பூமி இதில் நாம் மட்டும் அவசரப்பட்டால் எப்படி ஒழுங்காகக் காரியங்கள் நடந்தேறும்? கொஞ்சம் சிந்தித்து நிதானத்துடன் நடந்தால் எந்தக் காரியங்களும் சிக்கலின்றிச் சுலாபமாக நிறைவேறிவிடும்.

நீ மற்றவனுக்கு வழி விட்டால் உனக்கான பாதை களை உன்னதமாக உண்டுபண்ணுகின்றாய்! நிதானமாக, அவதானமாகச், செயல்பட்டால் சுறுசுறுப்பு துணைக்கு வரும்.

தினகரன்
வார மலர்
12.06.2011







# உணர்ச்சி வசப்படுதல்

எதற்கும் உணர்ச்சி வசப்படும் செயற்பாடுகள் ஒடுக்கப்பட்டு விடும். தமக்கு ஒவ்வாத கருமங்களால் சினமடைந்து அடுத்தவர்களையும் உணர்ச்சி வசப்பட வைத்தலாகாது கட்டு மீறிய மனத்தினால் உணர்ச்சியை அடக்காது விட்டால். ஆத்ம தேக பலம் குன்றுவதுடன் பிறருடனான அன்பும் குன்றும் . அறிவுக்கு வேலை கொடு! மமதையை அடக்கு! ஆரவார உணர்வுகளுக்குள் அமிழ்ந்து விடாதே! ஆவேசத்தை அடக்கு! உணர்ச்சி வசப்படுவதால் கணக்கற்ற துன்பங்களே மிகுதி! கற்ற கல்வி அனுபவம் அர்த்தமற்ற தாக்கி விடும்.

எடுத்தற்கெல்லாம் கண்டபடி உணர்ச்சி வசப்படு தல், அடுத்துக் தொடுக்க வேண்டிய, மனதின் செயற் பாடுகளை ஒடுக்கும் செயற்பாடுகளாகவே அமையலாம்.

அறிவிற்கு வேலை செய்ய சற்றேனும் அவகாசம் கொடுக்காமல் வெறும் உணர்ச்சிகளுடன் சங்கமமானால் அங்கம் தான் துடிக்கும், செயல் மடிந்து விடும்.



RangaRakes
Tamilnavarasam.com

ஆயினும்;

தனது மன உணர்வுகளை வெளிப்படுத்தாதவன் மனிதனேயல்ல. ஏன் அனைத்து ஜீவராசிகளுமே தமக்கு ஒவ்வாத விஷயங்களுக்கு ஆத்திரப்படுவதும் இயைபு பட்டவைகளுக்காகக் களிப்படைவதும் இயற்கை.

பட்ட மரம் போல் சடமாய் இருக்க முடியாது. கட்டாயமாக எமது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டிய இடத்தில் வெளிப்படுத்தியே ஆக வேண்டி உள்ளது.

ஆனால்,

கட்டுமீறிய எண்ணங்களின் தாக்கத்தினால் நாம் எல்லை மீறுவது, தேகத்திற்கு ஆகாது. விவேகமல்ல. சஞ்சலம், துன்பம், வந்தால் வருந்துவது இயற்கை. எனினும் எம்மை நாம் சுவீகரிக்கவும் வேண்டியுள்ளது. எதனையுமே ஆராயாது. புலன்வழி புகுந்து கொள்வதால் எமது ஆன்ம வலுவை நாம் இழந்து போக வழிகோலியவர்களாவோம். கண்டபடி கலங்குவதும், சின்ன சிஷயங்களில் பெற்ற சாதாரணமான வெற்றிகளுக்காகத் தம்மை மறந்து ஏக களிப்பில் அமிழ்ந்தே விடுவது தற்பெருமைக்கே நம்மை நாம் இட்டுச் சென்று விடலாம்.

அனுபவ முதிர்ச்சியின்மையால் இளைஞர்கள் உடனே உணர்ச்சி வசப்பட்டு விடுகின்றார்கள். ஒரு பெரிய





அரசியல் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. தலைவர் மிகவும் ஆக்ரோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார். "எங்கள் கொள்கையே எமக்குப் பெரியது இதற்காக நாம் இரத்தம் சிந்தவும் தயாராக இருக்கின்றோம். வாருங்கள் தோழர் களே.......! எம்மோடு அணி திரளுங்கள். நாம் உயிருக்கு அஞ்சப் போவதில்லை...." இப்படியாக அவர் பேசிக் கொண்டிருக்கத் தொண்டர்கள் செய்த ஏற்பாட்டின்படி எல்லோரும் முண்டியடித்தபடி மாலைகளை மலையளவாக அள்ளிப் போட்டார்கள்

இதனைப்பார்த்துக் கொண்டிருந்தான் ஒரு அப்பாவி இளைஞன். அவர் தலைவரின் ஆவேசமான, உணர்ச்சி கரமான பேச்சுக்களால் தன் வசமிழந்தான். பலத்த சத்த மிட்டவாறே "தலைவா .... வாழ்க! வாழ்க! உனக்காக நாங்கள் உயிரையும் தருவோம், வாழ்க... வாழ்க.!" எனக் கோஷ மிட்டான், மேடையை நோக்கி ஓடி வந்தான்.

வந்தவன் ஒருவருமே சற்றும் எதிர்பாராத வண்ணம் தனது சட்டைப்பையில் உள்ள பேனாக் கத்தியினால் தனது மணிக்கட்டுக் கையினை வெட்டிக்கொண்டான். ஆயினும் அப்போது உடனே இரத்தம் விரவில்லை.

இதனைக் கண்ட தலைவனின் ஆதரவாளர்கள் இந்தச் செயலைக் கண்டு மேலும் உணர்ச்சி வசப்பட்டவர் களாக, "தலைவா! வாழ்க.....! உன் தியாகம் வாழ்க...!



RangaRakes
Tamilnavarasam.com

தொண்டர்கள் வாழ்க...! வாழ்க...!" என எந்தவிதமான எதிர் விளைவுகளையும் கருதாமல் கத்தித் தீர்த்தார்கள்.

இந்த ஆதரவுக் குரலால் மேலும் உற்சாகம் கொண்ட அந்த இளைஞர் , மேலும் ஒரு தடவை தனது மணிக்கட்டு அருகே வெட்டிக் கொள்ள அப்போது தான் வெட்டு மிக ஆழமாகப் பதிந்து கொள்ள உடன் இரத்தம் பீறிட்டு வந்தது. உடனே அவன் தனது விரல்களால் தலைவருக்குத் திலகமிட்டு உரத்த குரலில் வாழ்க! வாழ்க!, எனக் கோஷமிட்ட அடுத்த நொடியில் மேலதிக இரத்தப் போக்கினால் உணர்விழந்து மயங்கி மேடையில் வீழ்ந்தான்.

அப்புறம் என்ன , கூட்டத்தில் ஒரே குழப்பம் ஏற்பட, சுற்றியிருந்த தொண்டர்கள் ஏதேதோ செய்தும் கூட இரத்தப் போக்குக் கட்டுப்படாமல் முடிவில் அவனைத் தூக்கி வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலைக்கு இட்டுச் சென்றனர். அவனது கட்சியினருக்கு அதிர்ச்சி! இப்படியும் துணிவா இவனுக்கு? ஆனால் அதே அப்பாவி இளைஞன் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுத் தப்பிப் பிழைத்தான்.

உணர்ச்சிவசப்படுதல், அனர்த்தத்தை அழைக்கும்!

கேட்டீர்களா, இப்படியாக யாரோ ஒருவர் பேச்சில் தன்னிலை மறந்து உணர்ச்சி வசப்பட்டு செயற்படுவது விவேகமற்ற செயலன்றி வேறென்ன?





வெறும் ஆரவாரங்களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் மனிதர் மயங்கக் கூடாது. ஒரு வைத்தியர் கடும் நோயாளியைப் பார்த்து அழுது கொண்டிருந்தால் நோயாளிக்குச் சிகிச்சை அளிப்பது யார்? கண்டித்தல், அன்பைக் காட்டுதல், சினம் கொள்ளுதல் எல்லாமே மனிதனின் மிகச் சாதாரண செயற்பாடுகளே . ஆயினும் காரியமாற்றும் போது ஒரு வரையறையுண்டு.

பிள்ளைகள் தப்புச் செய்து விட்டால் நான் பெற்றவள் தானே எப்படியும் பேசலாம், தண்டிக்கலாம் என எண்ணி உணர்ச்சிப் பெருக்கால் கண்டபடி பேசி , அடித்து அவர்களை அவதூறு செய்ய முடியுமா? இவை யெல்லாம் இந்தக் காலத்திற்கு ஒத்துவருமா? இத்தகைய நடவடிக்கை களால் ஏற்படும் விபரீதங்களை நாங்கள் அறியாதது மல்ல.

காதல் தோல்விகளால் மனம் நொருங்கி உயிரை விடச் சித்தம் கொள்வதும், கோபம் வந்தால் எடுத்த எடுப்பில் பிடிக்காத பேர் வழிகளை வெட்டிச் சாய்ப்பதும் மனம்வழி செல்லும் பாவச் செயல்!

இன்று நல்ல முறையில் கற்கும் இளைஞர்களின் உணர்வைத் தூண்டி, பார்க்கக் கூடாதவைகளை அவர்களுக்குக் காட்டி போதையேற்றும் புல்லுருவிகளின் செயல்களை என்ன செய்வது?



RangaRakes

Tamilnavarasam.com

வாலிப மிடுக்கு எதனையும் செய்ய வல்லது. இந்த வயதில் தீய போதைப்பழக்கம், கெட்ட ஆண், பெண் சகவாசம் இவர்கள் சிந்தனையைக் கீழ்த்தனமான, சட்ட விரோத செயல்களுக்குள் உடன் இழுத்துச் சென்று விடும்.

பாலியலைத் தூண்டும் படங்கள் , திரைப்படங்கள், கதைகள், செய்திகள் புதிய மாயா உலகினுள், இளைஞர் களை வசீகரித்து குழிபறித்து விடுகின்றது. தன்னிலை மறந்து குற்றம் செய்வதால் சட்டம் இவர்களை மன்னித்து விடாது. யாரோ ஒருவரின் வாழ்வோடு விளையாட எவர் தான் அனுமதிக்கப் போகின்றார்கள்? ஒருவரின் வாழ்க்கை இன்னும் ஒருவருக்குப் பரிசோதனைக் களம் அல்ல. ஒருவரின் உணர்ச்சிக்கு மற்றும் ஒருவர் இரையாகவும் முடியாது.

தன்னை இழந்தவன் தனக்குத் தானே ஆன்ம விரோதியாகின்றான். மேலான பக்தி, அன்பு காரணமாக மட்டுமே மனிதன் பூரண விழிப்பு நிலையினை அடைந்திட முடியும். அறிவு மயக்க நிலையில் உள்ளவன் அவசரக் காரனாகவும் காரியங்களைக் கோட்டை விட்டவனாகவும் ஆகின்றான். இதோ ஒரு நகைச்சுவை.

அன்று காதலியைக் கண்ட காதலன் துணுக் குறுகின்றான். அட என் அன்புக் காதலி விழிகளில் நீரா?





என்ன இது, என்ன நடந்தது? மனம் பேதலித்துப்போனான். பெரிதாக ஏற்கனவே அவள் வீட்டில் இந்தக் காதலைப் பெரிதாக வரவேற்கவில்லை. என்பதை அவன் அறிவான்.

"என்ன சொல்.. ஏன் விழி நீர் சிந்துகின்றாய், உன் தகப்பனார் ஏசினாரா? அவர் யார் உன்னைப் பேச... கயவன், என்னை என்ன என்று எண்ணி விட்டான்.அல்லது உன் அம்மா எங்கள் காதலைக் கொச்சைப்படுத்து கின்றாரா? இந்த இரு பிசாசுகளையும் என்ன செய்கின்றேன் பார்.." என்று உணர்ச்சி வசப்பட்டுக் கத்தியவன் மேல் பாய்ந்தாள் காதலி !

"சும்மா கத்தாதே நிறுத்து! நீ என்ன என் அம்மா, அப்பா பற்றிப் பேச வந்து விட்டாய். அவர்கள் என்ன பிசாசா?, அவர்களை என்ன செய்ய முடியும் உன்னால்? என்ன கண்டபடி உன் பாட்டுக்கு வசைபாடுகின்றாயே உன்னை நம்பி நான் வந்தேன் பார். என்னைச் செருப் பால் அடிக்க வேண்டும். எங்கள் காதலுக்கு வெகுசிரமத் துடன் இன்று தான் ஒப்புக் கொண்ட இவர்களையா நீ ஏசுகின்றாய்? சும்மா கண்ணில் தூசி விழுந்தால் இப்படியா நடந்து கண்டபடி பேசுவது? இனி உன் சகவாசமே வேண்டாம். ஓடிப் போ." என்றவள் அவனை விட்டு விலகி ஓடினாள். ஆடிப்போனவன் அடங்கி நின்றான்.



RangaRakes

Tamilnavarasam.com

விஷயம் தெரியாது கண்டபடி உணர்ச் வசப்பட்டால் இது போல்தான் எல்லாமே நடக்கு வெண்ணெய் திரளும் முன் தாளியை உடைக்கலாம அறிவை அறியாமைக்குள் செலுத்தக் கூடாது. இதனா அவஸ்தைப்படவும் கூடாது. வல்லமை பெற உள்ளத்தை உறுதியாக்குக! உணர்ச்சிக்குள் நீங்கள் உட்புகுந் கொள்ளாது அதனை செல்லும் ஆளுமையைப் பெற் கொள்க!

தினகர
வார மலர்
15.05.2011



RangaRakes
Tamilnavarasam.com

# மௌனம்

பருத்தியூர் பால. வயிரவநாதன்

வாழ்வியல் வசந்தங்கள் - பாகம் 16

சிந்தனைக் கட்டுரைகள்


RangaRakes Tamilnavarasam.com

# பொருளடக்கம்

| தலைப்பு | | பக்கம் |
|---|---|---|
| 01) | சந்தர்ப்பங்கள் | 17 |
| 02) | பாசம் | 31 |
| 03) | தெளிவு | 46 |
| 04) | மௌனம் | 56 |
| 05) | எளிமை | 68 |
| 06) | குரோதம் | 76 |
| 07) | சலனம் | 85 |
| 08) | கணவன் | 94 |
| 09) | குடும்ப உறவு கற்பனையல்ல! | 106 |
| 10) | பெண்கள் உழைப்பைச் சுரண்டும் மத்திய கிழக்கு நாடுகள் | 111 |
| 11) | பாசத்தைக் காட்டி சுதந்திரத்தைப் பறிக்க வேண்டாம்! | 117 |
| 12) | முதியோர் இல்லங்களில் பெற்றோர்கள் | 122 |
| 13) | பேருந்து செலுத்தி வரும் அஞ்சலா | 128 |







# சந்தர்ப்பங்கள்

சும்மா இருந்தால், கிடைத்த சந்தர்ப்பங்கள் செயல் இழந்துவிடும். நல்ல சூழல்களே பொதுவாகச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகின்றன என்பார்கள். எனவே நாம் நல்ல சூழலை உருவாக்கிக் கொள்ள முனைய வேண்டும். யதார்த்த பூர்வமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்ற நிகழ்வுகளே வாழ்க்கையாகும். மாய மந்திரத்தினால் வாழ்க்கையை அமைத்து விட முடியாது. வெறும் யந்திரத் தன்மையானதும், வாழ்க்கையல்ல. இறை ஆசியுடன் கிடைக்கின்ற நல்ல சந்தர்ப்பங்களுடன், எமது முழு உழைப்பையும் இணைத்துக் கொண்டால் வாழ்க்கையில் எம்மால் வெல்ல முடியாதது எதுவுமேயில்லை.

"வாழ்க்கையை வென்று காட்டு" என்பதற்காக சந்தர்ப்பங்களை இறைவன் தந்து கொண்டேயிருக்கின்றான் என்பதை உணர்வோமாக.

முன்னேறுவதற்கான மார்க்கங்களைச் சுட்டிக்காட்டிச் சந்தர்ப்பங்களை தந்து கொண்டிருக்கும் போது மந்த புத்தியினாலும் சோர்ந்து போய் சும்மா இருப்பதனாலும் பலர்



RangaRakes
Tamilnavarasam.com

வருகின்ற நல் வாழ்க்கையை ஒளியேற்ற முனையாது வீழ்ந்துபட்டு நிற்கின்றார்கள்.

சின்னக் குழந்தைகூடத் தனக்குள்ள வலுவைக் கொண்டு துள்ளி ஓடி வருவதுடன் பின் விழுவதும், எழுவது மாய் விளையாடும் போது உழைக்கின்ற வயதில் மனத்தால் இளைத்துக் களைத்து இயங்காமல் இருப்பதும் ஏன்?

"அவனுக்கென்ன லட்சம் லட்சமாய் உழைக்கின் றான். இறைவன் அவன் பக்கம். எனக்குத் தெய்வம் கூடத் துணை இல்லை" என்று நொந்து முடங்கிக்கிடப்பதால் என்ன பயன்? வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் சந்தர்ப் பங்கள் எம்மைச் சந்திக்காமல் விட்டதில்லை அதிஷ்டம் உள்ளவனுக்கு மட்டுமே சந்தர்ப்பங்கள் கைகொடுக்கும் எனச் சிலர் விதண்டாவாதம் செய்வதுண்டு.

உழைப்பு இல்லாது விட்டால் வந்த அதிஷ்டம்கூடக் கை நழுவிப் போவதுண்டு. வந்த பொருளைக்கூடக் காப்பாற்றாத நபர்கள் நிறையபேர் நம்மத்தியில் விரக்தியுடன் தமது துன்பத்தைச் சொல்லிக் கொண்டு திரிகின்றார்கள்

அதிஷ்டலாபச் சீட்டிழிப்பினால் பல லட்சம் ரூபாய்களைப் பெற்றவர்களின் சிலரின் வாழ்க்கை மிகவும் கேவலமான நிலைக்கும் தள்ளப்பட்டதுண்டு. கிடைத்த பணத்தினால் எதிர்கால நலன் பற்றிக் கிஞ்சித்தும் யோசிக்காது கண்டபடி செலவு செய்வதும் கெட்டவழியில்





புலனைச்செலுத்தி உடலையும் உள்ளத்தையும் கெடுப்பதுடன் குடும்பத்தையே முன்பிருந்த நிலையைவிட மோசமான நிலைக்கு இட்டுச் செல்வோரும் உளர். உழைக் காதவர்கள் பணத்தின் அருமை தெரியாமல்தான் இப்படி நடந்து கொள்வதாக எல்லோரும் காரணம் சொல்வதுண்டு.

ஆனால் கிடைத்த பணத்தை மூலதனமாக்கி முன்னேறியவர்கள் பற்றியும் நாம் சொல்லித்தானே ஆக வேண்டும்? இளமைக் காலத்தில் கிடைத்த நல்ல சந்தர்ப் பங்களைப் பயன்படுத்தி முன்னேறியவர்கள் எல்லோருமே தமது உழைப்பு, அறிவு, திறமை, விடாமுயற்சியையும் வந்த சந்தர்ப்பங்களுடன் இணைத்துக் கொண்டே முன்னேறி னார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும். சும்மா இருந்தால் கிடைத்த சந்தர்ப்பங்கள் செயல் இழந்துவிடும் அறிவோமாக!

ஒரு குறிக்கோளை மனதில் ஆழமாகப் புதைத்து அதனைத் தினம் தினம் உருப்போடுபவர்கள் ஏதாவது சின்ன வாய்ப்புக் கிடைத்தாலே போதும் அதை நழுவ விட மாட்டார்கள். எந்த வித லட்சியம் இல்லாமல் அலட்சியப் போக்குடன் குதர்க்கமே பேசித் தன்னைவிட எவர்க்கும் எதுவுமே தெரியாது என்று ஆணவ மயமாகத் தோன்றுபவர்கள் தங்கள் முன்னேற்றத்தினைத் தாங்களாகவே மூடிக் கொண்ட வர்களாவர். எல்லோருக்குமே சொந்தப்புத்தி உண்டு என்பார் கள். அப்படி ஆயின் ஏன் கண்டபடி நடந்து கொள்கின்றார்கள்



RangaRakes

Tamilnavarasam.com

என்ற கேள்வி நியாயமானதே. எல்லாமே தெரிந்தும் அழிந்து போகின்ற மனிதர்கள் ஏன் நல்வழியில் செல்வதில்லை? தனது பாதை தவறானது எனத் தெரிந்தும் கூடப் பலர் தடம் மாறுகின்றார்களே!.

எதிர்காலம் பற்றிய அச்சமின்மையும் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்கின்ற அசட்டுத் தைரியமும் எவரும் தன்னைப் பற்றி விமர்சிக்கக்கூடாது என்று பலரும் கருதிக் கொள்கின்றார்கள். தவறுகளைச் சுட்டிக்காட்டும் போது கோபப்படுகின்றவர்கள். மென்மேலும் அதே தவறு களை வேண்டுமென்றே முனைப்புடன் செய்தும் வருவ துண்டு.

தவறான நட்பு, சூழல், பிழையான அணுகு முறை கள், புரிந்துணர்வின்மை போன்ற காரணங்களாலும் மேலே சொல்லப்பட்ட ஆணவ முனைப்புகளாலும் தவறுகளையே தொடர்ந்தும் செய்பவர்கள் தம் எதிரில் வந்து கொண்டி ருக்கும் நல்ல வாய்ப்புக்களைத் தாமாகவே தொலைத்துக் கொள்கின்றார்கள்.

“மற்றவனைப் பார்த்து மனம் குமைதலை விடுத்து உனக்கு வந்த சந்தர்ப்பங்களை நீ ஏன் உன் வசப்படுத்தத் தயங்குகின்றாய்” எனத் தன்னைத்தான் கேட்டுக்கொள்ள வேண்டும். எடுத்த எடுப்பிலே எல்லாமே முழுமையாக் கிடைத்து விடுமோ? படிப்படியாக வரும் லாபங்களே பின்னர் மாபெரும் முதலீடுகளாக எமது கைக்குவரும்.





திறமைசாலிக்கு ஒரு சின்னச் சந்தர்ப்பம் வழங்கப் பட்டாலே போதும், அதன் பின் அவன் தன்னை வளர்த்துக் கொள்கின்றான். சில திரைப்படக் கலைஞர்கள் தொழில் அதிபர்கள் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். ஆரம்பத்தில் மிகச்சின்னக் க்தா பாத்திரத்தில் தோன்றி நடித்துப் பின்னர் அவரே பிரமாதமான உயர்ந்த நடிகராக உருவான கதை களை அறிந்திருப்பீர்கள். தொழிற்சாலையில் ஒரு சாதாரண தொழிலாளியாக இருந்தவர்கள் கூடச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தித் தொழில் அதிபர்களாகத் தரம் உயர்ந்தவர் களாக மாறியது ஒன்றும் புதினம் அல்ல.

மற்றவனைக் கவிழ்த்துத் தனக்கான சந்தர்ப் பங்களை உருவாக்குபவர்களும் உளர். நீதிக்கு அப்பாற்பட்ட இத்தகையவர்களுக்கு உரிய தண்டனைகளைக் காலம் அவர்களுக்கு வழங்கியே தீரும்.

அரசியலில், பொது நிறுவனங்களில், இத்தகைய பேர்வழிகள் சுயமுயற்சியில் நம்பிக்கை வைக்காது எங்கே ஒருவன் மீது பழிவிழும், அதனைச் சாதகமாக்கலாம் என எதிர்பார்த்து இருப்பார்கள். அதுமட்டுமல்ல தாமாகவே அப்பாவிகள் மீது வீண்பழிகளை அபாண்டங்களைச் சுமத்தி சுய ஆதாயம் தேட முனைவர். தீய நோக்கிற்காகச் சந்தர்ப் பங்களைத் தேடுவதும் பொய்யான ஆதாரங்களை வீண் பழியாகச் சுமத்திக் கோர்ப்பதும் எக்காலத்திலும் பயன் விளைவிக்காது. ஆனால் இன்று சிலர் இதனையே பெரும் பிழைப்பாகக்கொண்டு வாழுவதும் என்றைக்காவது இந்தத்



RangaRakes

Tamilnavarasam.com

தீய முயற்சியால் வென்று விடலாம் என எண்ணுவது தெய்வத்திற்கே அடுக்காத செயல்!

தேடிவருகின்ற அரிய சந்தர்ப்பங்களை அச்சம் தெளிவின்மை, முடிவு எடுக்கத் தயங்கும் தன்மைகளா அவைகளைத் தவறவிடுபவர்கள் அனேகம் பேர் இருக்கி றனர். இந்த விஷயத்தினுள் உள்நுளைந்தால் தேவையற் பிரச்சினைகளுக்கு ஆளாகிவிடுவோமோ அல்லது பொ விரயங்கள் ஏற்படுமோ என எவரும் பயப்படுத்தலு புதுமையல்ல.

சில நல்ல காரியங்களில் முடிவு எடுக்கத் தயங் ன்றோம். மேலும் எமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களின் பலாபலன்களை விடயம் அறிந்த வல்லுனர்களின் ஆலோசனைகளையும் உடனே கேட்பதுமில்லை. யாரா வேண்டப்படாத நபர்களின் தவறான ஆலோசனைக மூலம் கிடைக்கும் வாய்ப்புக்களைக் கோட்டை விடுவது எவ்வளவு பெரும் கேட்டினை உண்டுபண்ணும் தெரியுமா ஒரு தரம் கிடைக்கும் வாய்ப்பு மறுமுறை கிடைக்க நீண்ட காலம் காத்திருக்கவும் நேரிடும். சில வேளைகளில் மீண்டும் உடனடியாகவும், தொடர்ந்தும் சில நல்ல வாய்ப்பான சூழ்நிலைகள் உருவாகிவிடுவது முண்டு. தனக்கு ஏற்பட்ட சந்தர்ப்பத்தை நழுவவிட்டமை பற்றி எனது தந்தையார் தமது அனுபவத்தைப் பின்வருமாறு தெரிவித்தார்.





அவரது நெருங்கிய நண்பர்கள் சிலர் ஒன்று சேர்ந்து ஒரு தொழிற்சாலையை உருவாக்கத் தீர்மானித்த போது வரையும் இந்த முயற்சியில் ஒரு பங்கு தாரராகுமாறு வற்புறுத்திக் கேட்டனர். இதுபற்றிய விடயங்களில் உடனடியாக முடிவு எடுக்க முடியாமையாலும், அதுபற்றிய விடயத்தில் தெளிவு இன்மையாலும், அவர்களுடன் இணைந்து பங்குதாரராக சேர்ந்துகொள்ள இயலாமல் போய்விட்டது. அக்காலத்தில் போதிய பணவசதி இருந்தும் கூட அந்நிறுவனத்துடன் இணையும் சந்தர்ப்பத்தினை இழந்துவிட்டார். அதே புதிய நிறுவனம் காலப்போக்கில் பெரிய தொழிற்சாலையை அமைத்துக் கொண்டு பிரகாசித்ததை அவர் நன்கு அறிந்து கொண்டார். உடனடி யாகவே நல்ல தெளிவான முடிவு எடுக்காமையினால் இந்நிலை தமக்கு ஏற்பட்டதாகக் கூறினார். எனினும் சிலர் இத்தகைய சந்தர்ப்ப இழப்புகளை எல்லாமே விதி என்று கூறிச் சமாதானம் கூறுவார்கள். ஆயினும் இதைத் தந்தை யார் இது விதியின் குற்றமல்ல. வலிய வந்த சந்தர்ப்பத்தில் நல்ல முடிவை எடுக்காதது தனது குற்றம் என்றே கூறினார்.

மேலும் கல்வி தொழில் விடயங்களில் பல இளைய தலைமுறையினர் பெரியோர்கள் சொன்ன முது மொழிக ளைக் கேட்பதாயில்லை "பருவத்தே பயிர்செய்" "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" போன்ற பழமொழிகள் என்ன சொல்கின்றன என்பதனை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.



RangaRakes

Tamilnavarasam.com

இளமைக்காலம் கல்விகற்பதற்கு ஏற்ற உக காலம். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து தொடர்ந்தும் கல்வி கற்றால்தான் முதுமையிலும் கூடவரும். நாம் கல்வி கற்கவேண்டிய பருவத்தினை கடந்துவிட்டால் இளமைக்காலம் போலவே ஞாபகச மீண்டும் வலுவாகத் தெளிவாக வருமா? இந்த உண்மை யைச் சகலருமே உணர்வர். ஏதோ இளமையில் கொஞ் காசைச் சம்பாதித்தால் போதும் என எண்ணிக் கல் கற்காமல் விட்டால் முதுமையில் கல்வி கற்காத வேத யை அனுபவித்தேயாக வேண்டும்.

மேலும்,

கல்வி கற்ற மாணவர்களில் சிலர் பரீட்சையில் சித் பெற்றதும் உடன் கிடைத்த தொழில்கள் தமக்குத் திருப் தரவில்லை என்று வலிந்து வந்த தொழிலைத் தூக்கி எறிந் விடுகின்றார்கள். கிடைத்த வேலையை விடுத்து வே தொழில் தேடும் இவர்களுக்குத் தங்களது பராய தாங்களாலேயே காணாமலேயே பறந்தோடி விடுவை அறிந்து கொள்வதில்லை. இப்படியாக வயது முதிர்ந் பின்னர் தொழில்தேடி அதில் அவர்கள் முன்னேறும்போ காலம் கடிதெனப் பாய்ந்தமையால் தொழிலில் பத உயர்ச்சிப் போட்டிகள், பொருளாதாரச் சிக்கல்கள் எ அவர்கள் முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்க தெரியுமா?





களை, நல் ஆசான்களை, மனைவியை, குழந்தைச் செல் வங்களை எல்லாவற்றையுமே அவரவர் தகுதிக்கு ஏற்ப, தேவைக்கு ஏற்ப இறைவன் கொடுத்துக்கொண்டுதானே இருக்கின்றான். இதில் என்ன சந்தேகம் உங்களுக்கு வந்துவிடப் போகின்றது ஐயா!

சந்தர்ப்பங்கள் எல்லாமே மிக எளிதாகத்தான் கிடைக்கின்றன. சாதாரணமாகக் கிடைக்கும் சின்னத் தேவைகளுக்காக நாம் எவ்வளவோ காலத்தைச் சக்தியைப் பணத்தைச் செலவு செய்கின்றோம். எதை எதை நாமாகத் தேடிப்போகின்றோமோ அவை எமக்குப் பெரிதாகவும் கிரமமாகவுமே கிடைக்கின்றன.

அப்படி இருக்கின்ற போது தேடிவரும் வாய்ப்புக் களை நாம் ஏன் தொலைக்க வேண்டும்?. அனுபவிக்க வேண்டிய காலத்தில் அனுபவிக்க வேண்டிய விதத்தில் முறைமையாகப் பிறருக்கும், தனக்கும், உலகிற்கும் இடைஞ்சல்கள் இன்றி வாழ்க்கையை முழுமையாக அனுபவித்துவிட வேண்டும்.

இன்றைக்கும் நாளைய முன்னேற்றத்திற்குமானதே வாழ்க்கை. வாழ்க்கையை இழப்புக்களுக்குள் தள்ளக் கூடாது.

கருமித்தனமான பிரயோசனமற்ற உலோபித் தன மான வாழ்வினால் என்ன பயன் வந்துவிடப் போகின்றது?



RangaRakes

Tamilnavarasam.com

தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் சேரவிடாமல் மற்றவர்களுக்கான வாய்ப்புக்களை மறுப்பதும் மறுக்க எத்தனிப்பதும் மாபாதகமான செயல் அன்றி வேறென்ன சொல்ல!.

நல்லபடி வாழ்வது என்பதே ஒரு தெய்வீக வாழ்வு முறைமைதான். இறைவனால் எவர்க்கும் வழங்கப்படும் கொடைகளைப் பிடுங்க எத்தனிப்பதும், மற்றவனுக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களினால் அவன் உயர்வடை தலைப் பார்த்துப் பொறாமை கொள்வதும் எள்ளளவும் ஏற்புடையதன்று.

நல்ல சந்தர்ப்பங்கள்கூட எமக்கு இறைவன் தந்து கொண்டிருக்கும் மாபெரும் கொடைகள்தான். பணத்தை, நிலத்தை, பொன்னை, பொருளைவிட, இறை ஆசீர்வாத மும் அவர் தந்து கொண்டிருக்கின்ற வாழ்வதற்கான வாய்ப்பு க்களும் மிகவும் அபூர்வமான அற்புதச் சொத்துக்களே யாகும். நல்ல சந்தர்ப்பங்களைப் பூரணமாகப் பயன் படுத்தினால் கிடைக்கக்கூடிய அனைத்தும் எம்முடன் இணைந்து கொண்டே வருமன்றோ!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
24-12-2006







# பாசம்

பாசத்தின் இதமான சுகத்தினுள் அமிழ்ந்து போக விருப்பமில்லாத உயிரினங்கள் உண்டோ? உறவு முறைகளால் பெற்றுக்கொள்ள முடியாத பேருதவிகளைக்கூட நாம் தெரியாத நபர்கள் மூலம் பெற்றுக் கொண்டி ருக்கின்றோம். எவரிடத்து அன்புள்ளம் நினைந்து இருக்கின்றதோ அவர்கள் யாவரும் எங்கள் உடன் பிறப்புக்களே. பாசத்திற்கு வேஷம் போடத் தெரியாது. பாசத்திற்கு வேலி இல்லை. இது பரந்துபட்ட மாபெரும் விஸ்தீரணப்பெருவெளி. விடுபட இயலாத ஜென்ம ஜென்மாந்தரமாகத் தொடரும் திவ்யமான பிணைப்பு.

பாசத்தின் வெளிப்பாடுகள் சாஸ்வதமானது. உண் மையான அகத்தின் சுயவெளிப்பாடான பாசத்தின் வலு சொல்லிவிட முடியாத திண்மையானது. ஆனால் இதுவே மென்மையான உணர்வுகளுக்கும் காரண மானது. பாசத்தி னுள் இதமான சுகத்தினுள் அமிழ்ந்து போக விரும்பாத உயிரினங்கள் உண்டா?



RangaRakes

Tamilnavarasam.com

பாசத்தினை விலக்கி வாழ்ந்தால் அது வேதனை யை வருந்தி அழைத்தல் அன்றி வேறில்லை.

தனிமையை விலக்கி எத் துன்பத்தினையும் தாங்கும் சக்தியை கொடுப்பது பாசத்தினைத் தவிர வேறு எதற்கு உண்டு சொல்மின்!

தூய அன்பினை நாம் வெளிப்படுத்தும் போது அது பல்வேறு சொற்களில் வடிவம் காட்டுகின்றது. அன்பு நேசம், பரிவு, பாசம், காதல், கருணை என்றவாறு நாம் உறவுக ளுக்கு ஏற்றபடி தக்க பெயர் சூட்டிக் கொள்கின்றோம்.

* உறவினர்களுக்கிடையே,
* நண்பர்களுக்கிடையே,
* எல்லா ஜீவராசிகளுக்கிடையே,

மேலே சொல்லப்பட்டவைகளிடம் காட்டப்படும் அன்பு ஒன்றேயாயினும் நாம் பாவிக்கும் சொற்பதங்கள் பழகும் நபர்களுக்கு ஏற்பவே அமையும்.

தாய், தகப்பன், சகோதர, சகோதரிகள் உட்பட எம உறவினர்கள் எம்மீது காட்டுவதும் நாம் அவர்களிடம் காட் வதும் பாசம் என்கின்றோம்.

கருத்து ஒருமித்து இல்லற வாழ்வில் புக எண்ணு ஆண், பெண் ஈர்ப்பினைக் காதல் என்கின்றோம்.





கருணை, பரிவு என்று நாம் சகல ஜீவன்க டம் க்கம் காட்டுவது எல்லாமே அன்பின் வெளிப்பாடுகளே. லா தூய உணர்வினதும் ஆதார சுருதி அன்புதான்.

ஆயினும் ஜென்மம் ஜென்மமாகத் தொடர்ந்து ற்பதாகக் கருதப்படும் பாசப் பிணைப்பு என்றுமே அணைந்து விடாத திவ்யச் சுடரேதான். நாம் உதட்டளவில் எப்படிச் சொல்லிடினும் எம் உணர்வு இதன் நாமத்தை அழுத்தமாகவே உச்சரித்து நிற்கும்.

உடன் பிறக்காத நபர்களோடு பழகும் போது கூட பாசம் பிறிடுவதை நாம் அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்ளலாம். அவர்கள் எத்தன்மை வாய்ந்தவராக தமது நிலையில் தன்னை அந்தஸ்தில் குறைந்தவராக அவராகவே கருதினாலும் நீங்கள் அவரிடம் பாசமுடன் பழகினால் அது வியப்பு அல்ல.

சில வேளை உறவு முறைக்கு அப்பால் மேல் நோக்கி பாசத்தினுள்ளே பலர் எம் இதயத்தின் வசம் சிக்குவதுண்டு. விலகிடமுடியா பிணைப்பாகுவதும் தெய்வசித்தமமே!

எனக்குத் தெரிந்த ஒரு பெரியவர் இருந்தார் அவர் முன்னர் ரொம்பவுமே வசதியாக வாழ்ந்தவர். இருப்பினும் காலத்தின் மாறுபாடுகளால் அவரது வாணிபம் முடங்கி அவர் நலிந்த நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார். இதனால் மனமுடைந்து போனவர் சற்றுச்சித்த சுவாதீன முற்றவ



RangaRakes

Tamilnavarasam.com

ராகப் போனார். ஆயினும் அவர் ஒன்றுமற்ற நிலைக்குத் தள்ளப்படவில்லை

உறவினர்கள் பலர் ஆதரவளித்தனர் அவரது பேச்சு சற்று வித்தியாசமாக இருப்பினும் எவரிடத்தும் கெட்ட வார்த்தைப் பிரயோகம் செய்ததே கிடையாது. தமக்குப் பிடித்தவர்களிடம் மட்டும் சற்றே உரையாடுவார்.

அவர் என்னிடம் சிலவேளை வருவார். நான் அவருடன் பரிவுடன் பேசுவதுண்டு. என்னை அவருக்குப் பிடித்துவிட்டது. தமது பழைய நிலையை அவர் விட்டுக் கொடுத்ததுமில்லை. ஏன் எனில் அவர் பெரிய தன வந்தராக ஒரு காலத்தில் வாழ்ந்தவர்.

திடீர் என அவர் என்னைக் காணவரும் போது ஏதாவது பேசுவார். அப்போது யாழ்நகரில் உள்ள பிரபல வர்த்தக நிலையங்களின் பெயரைச் சொல்லுவார். "நான் அவைகளில் ஒன்றை வாங்கி உன் பெயருக்கு எழுதி விடுகின்றேன்" என்பார். நான் நகைப்பதில்லை. "சரி, அப்படியே செய்யுங்கள்" என்பேன். வேறு ஒருசமயம் வந்து சொல்வார் "நான் உனக்கு முயற்சி செய்து மிகப்பெரிய உத்தியோகம் பெற்றுத் தருகின்றேன். சரிதானா....." என்றும் கேட்பார் அதற்கும் நான் "சரி.... அப்படியே செய்யுங்கள்" என்பேன். அத்துடன் அவர் அடிக்கடி சொல்வார் "நான் இறக்கும் முன்னர் இதனை விட நீ நன்றாக நல்ல நிலைக்கு வந்து குழந்தை குட்டிகளுடன் வாழ்வதைக் காணவேண்டும்" என்பார். எனக்கு அந்நேரம் இதயமே கசிந்துவிடும்.





இப்போது சொல்லுங்கள் இத்தகைய அன்புள்ளங்ள நாம் எப்படி அழைக்க முடியும்? இதனை நாம் அன்பு று சொல்லளவில் மட்டும் சொல்ல முடியும். வார்த்தை ல் அகப்படும் சொற்கள் இத்தூய இதயங்களுக்குப் பொருந்திடுமா? இத்தனைக்கு இவர்களுக்கு நான் எதைத் தான் செய்து விட்டேன்? அன்பு மீதூர சொன்ன எமது பேச்சுக்கள் தானே அவரை என்பக்கமும் என்னை அவர் பக்கமும் ஈர்த்தது?

மற்றவர்கள் துயரை அவர்கள் குறைகளை பொறுமையாகச் செவிமடுத்துக்கேளுங்கள். இது ஒன்றும் சிரமம் அல்ல. அவர்களுக்கு எங்களால் ஆறுதல் கிடைத்தால் அதைவிடப் பெரும் பேறு வேறு என்ன வேண்டும் ஐயா!

உறவு முறைகளால் கிடைக்காத பேருதவிகளை முகம் தெரியாத நபர்கள் மூலம் பலர் பெற்று வருகின்றார்கள். என்றோ ஒரு நாள் கண்ட பழக்கத்தினால் சிலர் தம்மை நாடியோருக்குப் பேருதவிகள் புரிந்து வருவதை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

ஒரு பெரியவர் சொன்ன தகவல் இது. ஒருமுறை ஒருவருடன் கோவிலில் தற்செயலாகச் சந்தித்துச் சில வார்த்தைகள் அவருடன் அன்புடன் சினேகபூர்வமாகப் பேசினாராம். கொஞ்ச நாட்கள் கழிந்து, ஒரு அவசிய தேவையின் பொருட்டு ஒரு நிறுவனத்திற்கு அதன் தலைவரைச் சந்திக்கப் போனபோது அங்கு தலைவருக்குரிய ஆசனத்தில் இருந்தவரைக் கண்டு வியப்பு அடைந்தார்.



RangaRakes
Tamilnavarasam.com

அன்று கோவிலில் சில வார்த்தைகள் உரையாடிய அதே நபர்தான் அங்கு இருந்தார். இவரைக் கண்டதும், மிகவும் சந்தோஷமாக இருக்கையில் அமர்த்தி உபசரித்து அவருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்தாராம். இந்த மறக்கமுடியாத அனுபவத்தைப் பெற்ற மைக்கான முழுக்காரணம் அந்த நிறுவனத் தலைவருடன் அன்புடன் பேசிய அந்தச்சில நிமிட நேர உரையாடல்கள் மட்டுமேயாகும்.

இதய பூர்வமாக அன்புடன் பழகினால் அதுவே மறக்க முடியாத ஒரு பாசப்பிணைப்பு போல் நிலைத்து நின்று விடுகின்றதே!

ஆனால் அதே சமயம் சுயநலநோக்கமும், காழ்ப்பு உள்ளவர்கள் தமது உறவினர்களுக்குக்கூட எந்த ஒரு உதவியையும் செய்ய முன் வரமாட்டார்கள். வெறும் வார்த்தை ஜாலங்களால் பந்தம், பாசம் என்று சொல்லிக் கொள்வார்கள். வசதி குறைந்த நிலையில் உள்ள தமது உறவுக்காரர்களை ஏறெடுத்தும் பார்க்க விழைய மாட்டார்கள். எனவே எல்லா உறவினர்களிடையும் நல்ல பாசத்தை எதிர்பார்க்க முடியாது.

ஒரு நல்ல நண்பனிடம் அல்லது உயர் நோக்கு டைய எவரிடமாவது நாம் எமது பிரச்சினைகளைக் குறைகளைச் சொல்லி தக்க பரிகாரம் காணமுடியும். "உறவுக்காரன் என நம்பி அவரிடம் சென்றேன். எனக்





கிடைத்தது ஏமாற்றம் மட்டுமே" எனப் புலம்பும் பரிதாப மான மனிதர்களை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

எவரிடத்து அன்புள்ளம் நிறைந்து நிலைத்து நிற்கின்றதோ அவர்கள் எங்களின் உடன்பிறப்புக்களே. இதில் என்ன சந்தேகம்?

சொத்துச் சுகங்களுக்காகக் குத்து வெட்டுப்பட்டுக் குடும்பத்தைக் கூறுபோட்டு விட்டு அண்ணன் தம்பி, மச்சான், மாமன் என்று பேசிக்கொண்டிருப்பதில் என்ன பயன்? ஒப்புக்காகப் பேசுவது ஒவ்வாத செயல்.

அத்துடன் பலர் தமது உறவுமுறைகளைப் பேசுவது டன் தங்கள் சாதி, சமயம் பற்றியும் பேசி ஏனையவர்களுடன் பேதம் காட்டுவதுமுண்டு சாதி, சமய உணர்ச்சி யைத் தூண்டி விடுவதற்காக தங்கள் உறவு முறைகளை ஆதாரம் காட்டி தம்மைப் பெரிய உயர்ந்த அந்தஸ்துள்ளவராகவும் காட்டி நிற்பார்கள்.

நல்ல உறவு முறைகளைப் பாச உணர்வினைக் கொச்சைப்படுத்தும் இத்தகையவர்களிடம் உண்மையான உறவு அதன் தூய்மைத்தன்மை என்ன என்பது பற்றிய பரந்த மனப்பான்மை அறவே கிடையாது. உறவு முறை பாசப்பிணைப்பு என்பது ஆத்மாவுடன் இரண்டறப் பிணைந்து, ஒருவர்க்கொருவரிடையே தூய்மையான பரஸ்பர ஈடுபாட்டினை நல் உறவை நம்பகத்தன்மையுடன்



RangaRakes
Tamilnavarasam.com

உதவுதலுடன் எவ்வித பிரதியுபகாரம் கருதாது செய்தலு செய்வித்தலுமாகும். புரிந்து கொள்வோம்.

- ❖ உண்மையான பாசப் பிணைப்பின் முன்னே.
- ❖ எங்கள் அகந்தை,
- ❖ விட்டுக் கொடுக்காத தன்மை,
- ❖ தேவையற்ற கோபம்,
- ❖ எல்லாமே அற்றுப்போகின்றன பாசத்தின் முன்டே யுள்ள தன்மைகள் தான் என்ன?

- ❖ தம்மிடம் உள்ள எதனையும் வழங்குதல்.
- ❖ கௌரவம், அந்தஸ்துபற்றி நோக்காத தன்மை
- ❖ பரந்த மனப்பான்மை
- ❖ உளரீதியான ஆதரவினை நல்குதல்
- ❖ பொருள் பண்டம் சொத்திற்கும் மேலாக த உயிரினையும் ஈந்திடும் மனோபாவம்

தம்மை நம்பியுள்ளவர்களுக்காகப் பலர் தம் உட வலி பார்க்காது உழைத்து உழைத்து ஓடாகி கற்பூரம் போலக் கரைந்து போகின்றார்கள். இந்த உழைப்பிற்கா இவர்களின் மனம் சோர்வதில்லை. உயிர், உடல் வாடி போதும் உள்ளம் பூரித்துப் போகின்றார்கள். பாசத்திற்காக உயிரையும் ஈந்திடும் தன்மை இது தான். பாசம் கொண்டவர் களுக்காகத் தம் கௌரவத்தையே இழந்து விட்டுக் கொடுக்கும் தியாகிகள் எவ்வளவோ பேர் இருக்கின்றார்கள். இவர்கள் பற்றிய கதைகளை நாம் அறிந்தவைதான்.





பாசம் என்பது ஒன்றேயாயினும் உறவுகளிடையே அதனை வெளிப்படுத்தும் போது அந்த அந்த உறவுகளின் தன்மைக்கேற்ப வெளிப்படுத்துகையின் முறைமைகளில் வித்தியாசங்கள் உண்டு.

- ❖ தாய், தகப்பன், பிள்ளைகளிடையே
- ❖ சகோதரன், சகோதரிகளிடையே
- ❖ நெருங்கிய உறவினர்களிடையே அதாவது மைத்துனர், மாமன், மாமி, சித்தப்பா, சின்னம்மா, என்ற முறைகளை எடுத்துக் கொள்ளல்.

மேலே சொன்னவர்களிடையே பாசங்களை வெளிப் படுத்தும் முறைமை வெவ்வேறாயினும் அடிப்படையான பாச உணர்வுகளில் பேதம் காட்டப்படுவதில்லை. எனினும் பெற்ற தாய், தகப்பன் பாசஉணர்வுக்கு ஈடாக எந்த உணர்வுமே இணையாக என்றுமே சொல்லப்பட்டது மில்லை. சொல்லப் படப் போவதுமில்லை.

ஆனால்,

குழந்தைகளைப் பெறாமலேயே வளர்த்து எடுத்த வளர்த்த பாசம் எந்த விதத்திலும் குறைவானதல்ல. தாய் ஒருத்தி பெற்ற பிள்ளையையே கைவிட்டபின் அதனை வேறு ஒரு தாய் வளர்ப்பதும், அதேபோல் மனமுவந்து தனது பிள்ளையைக் கொடுத்ததனால் குழந்தையை வளர்த்த தாயானவள் அவள் அதனைத் தான் பெற்றுக் கொள்ளா



RangaRakes

Tamilnavarasam.com

விட்டாலும் கூட போற்றுதற்குரிய தாய்மைப்பேறு பெற்ற வளாவாள்.

இத்தகைய தாய்மார்கள் எந்தத் தருணங்களிலும் தனது பிள்ளைப் பாசத்தைத் தனக்குள்ள மேலான உரிமையை விட்டுக் கொடுக்கச் சம்மதிக்கவே மாட்டார்கள். தன்னால் வளர்த்து ஆளாக்கப்பட்ட பிள்ளையை தன் ஆழ் மனதினுள் வேரூன்றி வளர்த்து விட்ட அந்தப் புனிதப் பிணைப்பினை அவளால் அதனை ஒரு அணுவளவேனும் விட்டுவிட முடியுமா?

சில தாய்மார்கள் பிள்ளைகளை வளர்க்க மனமுவந்து அளித்தபின்பு பிள்ளையின் வளர்ச்சி கண்டு மீண்டும் வளர்த்த தாயிடம் வந்து தன்து பிள்ளைமீது உரிமை கொண்டாடும் போது பெரும் பூகம்பமே வளர்ப்புத் தாயிடமிருந்து புறப்படுகின்றது. இந்த அநியாய சம்பவங்களைப் பல கதைகளூடாக நாம் படித்திருக்கிறோம்.

பாசத்தை வெளிப்படுத்தும் விடயத்தில் தகப்பன் பிள்ளைகளிடம் பாசத்தைத் தன் இதயத்தில் வைத்து வெளிப் பார்வைக்கு சற்றுக் கடும்போக்குடன் அதிகாரத்துடனேயே பழகுவது இயற்கை.

ஆனால் தாயாரால் அப்படி நடந்து கொள்ள முடியாது. பிள்ளைகளில் சிலர் தமது தகப்பனாரின் இச் செயல்களை விரும்புவதில்லை. அவர்களில் சிலருக்கு தகப்பனாரிடம் சற்று எரிச்சல் கூட எழுவதுண்டு. இத்தகைய





விடயங்களில் தாயானவர்தான் உண்மையான நிலையைப் பிள்ளைகளுக்குப் புரியவைக்க வேண்டும். நல் ஒழுக்கம், கட்டுப்பாடுகளைச் சிறுவயதிலேயே தமது குழந்தைச் செல்வங்களிடம் விதைப்பதற்காகப் பெற்ற தகப்பன் சற்று கடுமையான போக்குடன் நடந்து கொள்ளுதலை வயது வந்த பின்னர்தான் பிள்ளைகள் உணர்ந்து கொள்கின்றார்கள். கட்டுப்பாட்டினைச் சின்ன வயதில் கற்றுக் கொள்ளாது விட்டால் அதனால் எழும் நட்டம் அவர்களுக்கு அல்லவா?

எனினும் கட்டுப்பாடு கண்டிப்புக்களைச் சதா நச்சரிப்புடனும் வேண்டத்தகாத வார்த்தைகள் மூலம் பெற்றோர் பேசுவதும் பிள்ளைகளின் மனம் உடைந்து நொருங்கும் வண்ணம் நடந்து கொள்வதும் முறையல்ல. எந்த நடவடிக்கைகளுக்கும் ஒரு எல்லை வரையறை உண்டு. சில வேளை பிள்ளைகளின் புரிந்துணர்வு சரிவரப் பேணப்படாது விட்டால் குடும்பத்தில் ஏற்படும் பிளவு சொல்லொண்ணா இழப்புக்களை, விரிசல்களை ஏற்படுத்திவிடும். அன்போடு இணைந்த கண்டிப்பே ஆரோக் கியமானது. எவர் மனதையும் நோகடிக்க இயலாதது மாகும்.

பாசத்திற்கு வேஷம் போடத்தெரியாது குடும் பங்களிடையே பாசப்போட்டிகள் நடைபெறுவது சர்வ சாதார ணமான விடயமாகும். திருமணம் முடித்தபின்னர் மகன் மீது உள்ள பாசமேலீடு காரணமாக மருமகள் மீது கோபப் பட்டு ஏன் பொறாமைப்படுவதும் அதேசமயம் மருமகள் தனக்குள்ள உரிமையை நிலைநாட்ட முனையும் போது



RangaRakes
Tamilnavarasam.com

ஏற்படும் சண்டை, சச்சரவுகள் சிலசமயம் குடும்பங்களி டையே பல தாக்கங்களையே உற்பத்தி செய்துவிடுகின்றன.

மேலும் திருமணமானவுடன் தாய், தந்தை, சகோதர, சகோதரி உறவுகளை கத்தரித்துக்கொள்ள எத்தனி க்கும் பேர்வழிகளும் உளர். தனது பாசமிகு தங்கைகளு க்காகப் பாடுபடும் அண்ணன், தம்பிமார்கள் அவர்களின் சீதனத்திற்காக உழைக்க அயல்நாடுகளுக்குப் போய் அல்லலுற்று உழைப்பதும் தெரியாத சங்கதிகள் அல்லவே. பாசம் கொண்ட எத்தகையவர்களும் இத்தகைய தியாகமிகு உணர்வைவிட்டுக் கொடுக்கவோ, விலகி நிற்கவோ எச் சந்தர்ப்பத்திலும் இசைய மாட்டார்கள்.

பணம் பொருளை. சொத்தை விடப் பாசமே சிறந் தது. இந்த சுகானுபவத்தை பணம் கொடுத்து வாங்க முடியுமா? ஒரு கதையொன்றினைக் கேளுங்கள் ஒரு இளவரன் தனக்கு உள்ள வசதிகள் டாம்பீக வாழ்வினால் எந்த வித நிம்மதியும் கிட்டாமல். அரண்மனையை விட்டேகு கின்றான். எங்கோ ஒரு கிராமத்தில், ஒரு அழகிய இளம் பெண்ணை வழியில் சந்திக்கிறான். அவள் மீது கொண்ட அன்பினால் அவளது வீட்டிற்குச் செல்கின்றான். அங்கு தான் உண்மையான தூய்மையான பாசம் என்ன என்பதை அறிகின்றான். மேலும் அவளது கிராமம், அங்குள்ள மக்கள் அவர்களது களங்கமற்ற தூய அன்பின் வெளிப்பாடுகளைப் பூரணமாக உணர்ந்து, வயப்படுகின்றான்.





ஏழ்மை நிலையில் உள்ளவர்களிடம் எந்தவித எதிர் பார்ப்புமற்ற பாச உணர்வினைக் கண்டு அவள் வசமா கின்றான்.

மேலே சொல்லப்பட்டது நான் பார்த்த ஒரு ஆங்கிலத்திரைப்படமாகும். செல்வந்தர்களின் குடும்பங் களில் பாச உணர்வு வெளிக் காட்டப்படுவதில்லை. சதா பணம் புரட்டுதல், வியாபாரம், தொழிலை விஸ்தரிக்கும். இவர்கள் தமது குழந்தைச் செல்வங்களைக் கவனிக்க நேரம் ஒதுக்குவதில்லை.

இதனால் குடும்பத்தில் மன அமைதி குன்றுவதும் அவர்களின் பிள்ளைகள் தவறான வழிகளில் செல்ல முனைவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. இன்று மேல்தட்டு பணக்கார வர்க்கத்தில் உள்ளவர்களின் பிள்ளைகள் பெற்றாரின் அன்பு கிட்டமாமல் குடிப்பழக்கம், போதைவஸ்துக்களுக்கு அடிமையாவதைப் பற்றிப் பல்வேறு செய்திகள் மூலம் அறிந்துள்ளோம்.

என்னதான் வசதிகள் அந்தஸ்துகள் குவிந்தாலும் கூட கிடைக்க வேண்டிய நிம்மதி இன்றி என்ன வாழ்வு ஐயா!

நல்ல இனிய சந்தோஷகரமான வாழ்வின் அனு பவங்கள் எமக்குக் கிடைக்க வேண்டுமாயின் எம்மைச் சூழ்ந் துள்ளோரின் அன்பு, பாசம் பரிபூரணமாகக் கிடைத்தேயாக வேண்டும். இந்தப் பாச உணர்வினை நாம் ஏனைய வர்களுடனும் சூழ உள்ளவர்களுடனும் பொழிந்தால் இயல் பாகவே அனைவருமே எம்மை நேசிக்கத் தொடங்கி விடுவர்.



RangaRakes

Tamilnavarasam.com

பாசம் என்பது இயல்பாகவே சுரப்பது இதை நாம் அணைபோட முடியாது. எனினும் பாசம் காட்ட வேண்டிய நேரத்தில் கட்டாயம் அதனை வெளிப்படுத்தியேயாக வேண்டும்.

இதயத்தில் பூட்டிவைக்கும் எதுவும் தெரியாமல் இதயத்தினுள்ளே அமிழ்ந்து போய்விடும். அதன் பிரதி பலிப்பை நாம் காட்டியேயாக வேண்டும். பாசத்தை ஊமை யாக்கினால் தீமைகள் சூழவும் கூடும் தெரிந்து தெளிவோ மாக!

நிர்மலமான அன்பு இதயத்தைச் சுத்தமாக்கும். ஆறுதலை அளித்துப் பிறவியைப் புனிதமாக்கும்.

உலகம் என்கின்ற மாவிருட்சத்தின் ஆணிவேர் பாசம் தானே! துன்பத்தைத் தாங்குதலும், எமது இன்பங் களைப் பகிர்தலும் பாசத்தின் பெரும் பொறுப்பு அல்லவா? எமக்கு ஏற்பட்ட இழப்புக்கள், பிறரது நலனுக்காக எனின் அதன் பொருட்டும்கூட பெறும் சந்தோஷத்தினை நாம் செலுத்தும் பாச உணர்வு மூலம் பெறுகின்றோம்.

"பாசத்திற்கு வேலி இல்லை" அது பரந்து பட்ட மாபெரும் விஸ்தீரணப் பெருவெளி எமக்காக அன்றி எம்மைச் சூழ்ந்த எல்லோர் பொருட்டும் இதயத்தில் சதா கசிந்து உருகி நிற்கும் பாச வலையில் நாம் விரும்பியே உள் நுழைந்து நிற்கின்றோம். விடுபட விரும்பாத ஜென்ம ஜென்மாந்தரமாக மனித உயிர் தோன்றிய பொழுதில்





இருந்தே பாசம் எமக்கு இன்ப ஊற்றாக ஆன்மா ஈட்டும் குளுமைப்பேரருவியாக நிலைத்தே என்றும் நிற்கும்!

பாசம் என்பதே இதயங்களின் சங்கமம். இதில் மென்மையான சங்கீத ஸ்வரங்கள் ஒலித்த வண்ண மேயிருக்கும்.துன்ப ரேகைகளைத் துடைத்து எறியும். வன்முறையாளரை வசைபாடுவோரை, துன்மதியுடன் துன்பம் தருவோரின் வக்கிரம் அழித்து சுத்தமாக்கும். சத்திய நோக்கில் பாசத்தை அரவணைத்தால் நித்திய நிம்மதி வெகுமதியாய் கிட்டும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
08-10-2006



RangaRakes
Tamilnavarasam.com



# தெளிவு

அறிவின் முதிர்ச்சியால் ஏற்படும் ஞானத்தினால் தெளிவு பிறக்கின்றது என ஞானிகள் பகர்வர். அஞ்ஞானச் சுவடுகளின் வழி செல்பவர்கள் தெளிந்த சிந்தையுடையோர் பகன்ற வாசக வரிகளின் சிதறல்கள் நெஞ்சைத் தொட்டாலே போதும். போகும் வழி துல்லியமாக ஒளி தெரிய வழிகாட்டும். நல்லனவற்றையே நோக்குதல் கற்றுக்கொள்ளுதல், நல்லோர் உறவினையே நாடுதல், அவர் சொற்களைக் கேட்பதனால் படிப்படியாக எமது நெஞ்சில் கூரிய சக்தி பரிணமிக்கும் தெளிவை நோக்கி எமது பயணம் தொடரும்.

'தெளிவு' என்பது சந்தேகமற்ற நிலை என்று சொல்லப்படுகின்றது. எமது ஆன்மாவிற்கும் புலன்களுக்கும் பொருந்தாத விடயங்களில் அவை தீயது என்று உணர்ந்தும் அதனுள் நுழையப் புகுதலானது தெளிவு நிலைக்கு உகந்தது அல்ல.





கண்ட கண்ட தீய நோக்கிற்காக அறிவின் துணை நாடுதல் எமது மனதின் விசால நிலையை குறுக்கி அதனை இல்லாதொழித்து விடும். நல்ல அறிவின் முதிர்விற்கு ஒவ்வாத விகற்பமான குழப்பமான விகார எண்ணங்களில் புகுந்திட முனைதல் தெளிவிற்கு முரணான அழிவுப்பாதை என்பதில் சந்தேகமில்லை.

சிலர் கேட்பதுண்டு "நாம் தீய விடயங்கள் எது என்று அறிவதில் என்ன தவறு இருக்கப்போகின்றது" என்பதே பொதுவான இக் கேள்வியாகிவிட்டது. பகுத்து அறியும் முதிர்ச்சியற்றவர்கள் பலரும் கெட்ட பழக்கம் எதுவென ஆராய முற்பட்டு அதனுடனேயே சங்கமித்தும் கொள்கின்றார்கள். வெளியில் இருந்து பார்க்கும் அறிவு என்பதற்கும் அனுபவ ரீதியாக அதனை நுகர முற்படுவதற்கும் வித்தியாசம் இல்லையா? வெண்சுருட்டினைப் புகைத்து மதுவை ருசித்து, கண்டபடி தீயோருடன் பழகித்தான் அனுபவங்களைப் பெறமுடியும் என்பது எவ்விதத்திலும் பொருத்தமற்ற கருத்தேயாகும்.

ஏதோ சந்தர்ப்பவசத்தால் சில குற்றங்களைச் செய்வதும் பின்னர் திருந்தி வாழ முற்பட எண்ணுதலும் மன்னிக்கத் தக்க விடயம் எனக்கொள்ளலாம். ஆனால் வலிந்து சென்று துர்நடத்தைக்குள் உட்பட எத்தனித்தல் சரியான காரியங்கள் ஆகுமோ?



RangaRakes

Tamilnavarasam.com

அறிவின் முதிர்ச்சியால் ஏற்படும் ஞானத்தினால் தெளிவும் பிறக்கின்றது என ஞானிகள் பகர்வர். "அறிவைத் தேடமுனையுங்கள்,அதற்கான தடைகளைக் களையுங்கள்" என்பதே பெரியோர் வாக்கும் ஆகும்.

வாழ்க்கையின் நெளிவு சுழிவுகளை அறிந்து கொள்ள அனுபவ அறிவும், படித்த கல்வி அறிவும் தேவைப் படுகின்றது. எனினும் கல்வியறிவு அற்றவர்கள் கூட இயல்பான சமூக நோக்கோடும் மக்களுடன் பழகிடும் விதத்தாலும் மன விசாலத்தாலும் வாழ்க்கையின் நுட்பங்களைத் தெரிந்து கொள்கின்றார்கள். பலர் கல்வியில் பெறாத அறிவை அனுபவம் மூலம் காண்கின்றார்கள். ஆனால் 'ஞானம்' என்பது அவனது அகவுணர்வுடன் கூடிய ஆன்மீக எழுச்சியினால் தூய தெளிந்த அன்பின் ஆழத்தினாலும் முளைவிட்டு வளர்வது ஆகும்.

வெறும் அறிவு என்பது மட்டும் உள்ளத்தை வளமாக்கும் என்று சொல்ல முடியுமா? மனிதாபிமானம், சமூக சிந்தனை, ஜீவகாருண்யம் மிக்க சிந்தனை அற்றவனின் அறிவினால் தனக்கான பொருளினை மட்டும் ஈட்டலாம். மனித இதயங்களைத் தன்னுடன் பிணைக்க அவனால் முடியுமா? தனித்த அறிவு மட்டும் உள்ளவனின் ஆய்வுகள் ஒரு பக்கமாக சார்ந்து ஓடுகின்றது. இவை புதிது புதிதான எண்ணங்களைக், கருத்துக்களைச், சந்தேகங்களை உற்பத்தி பண்ணிக்கொண்டு இருக்கின்றது. இது ஒன்றும் தவறு அல்ல.





ஆனால் தனது அறிவு நிலையுடன் புலனுக்கு அப்பால் தெய்வீக ஆளுமை நோக்கிய பயணத்தினை அவன் ஆரம்பித்தேயாக வேண்டும்.

சட்டம் படித்த நீதிபதிகள் சட்டப் புத்தகத்தை மட்டும் புரட்டிப்பார்த்து தீர்ப்பு வழங்கினால் மானுட தர்மம் என்கின்ற பெரிய விஷயம் காணாமல் போய்விடும். கருணை அன்பை கடதாசியில் உணரமுடியுமா? தனிமனித தேவைகள், ஏக்கங்கள், துன்பங்கள், எதிர்பார்ப்புக்கள், வெற்றிகள், தோல்விகள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் இவைபற்றி உணராது நாம் எப்படி ஒருவனுக்கு நியாயம் கூற முடியும்?

எழுத்தில் பேச்சில் கூறமுடியாத உண்மைகள் கூட வெளியே வர முடியாது முடங்குகின்றன. அவை தயங்கித் தயங்கியே சில சமயம் புறப்படும். அவைகளை உடன் வெளியே நிறுத்தவும் முடியாது சில உண்மைகளை உள்நின்று கண்டு கொண்டே நியாயம் தேடவேண்டும். எல்லா உண்மைகளையும் பகிரங்கப்படுத்த முடியாது. அப்படிச் செய்யவும் கூடாது.

ஒரு மனிதனுக்குள் சில உண்மைகள் புதைந்து இருக்கலாம். வெளிப்பட்டால் அது அவன் வாழ்க்கைக்கே வேட்டு வைப்பதாகவும் அமையலாம். மற்றவர்க்குத் துன்பம் விளைவிக்காத அவனது மூடிய உண்மைகளை நாம் திறந்து பார்க்க விழையலாமா?



RangaRakes
Tamilnavarasam.com

அறிவின் முதிர்வு நிலையில் ஆன்மீக சிந்தனை உள்ளவனால் சாதக பாதகங்களைத் தன் உள் உணர்வினால் பெறுகின்றான். அவனது முதிர்வு நிலை ஞான நிலையினுள் இட்டுச் செல்கின்றது. அறிவினால் பெறும் ஆராய்வுகள் காலத்திற்குக் காலம் முரண்பாடுகளைக் காட்டி நிற்கும். ஆனால் ஞான நிலையினால் ஏற்பட்ட தெளிவின் பின்னர் மாறுபாடு அற்ற சாஸ்வதமான உண்மை நிலையினை அந்த ஆத்மா பெற்றுவிடுகின்றது.

தீர்க்கதரிசிகளின் நிலைகூட இத்தகையதே. ஞானத் தேடலின் முழுமை பெற்ற ஞானிகளின் தெளிவு என்றைக்குமே மாறுவதில்லை. இதனால்தான் இவர்களால் அருளப் பட்ட கூற்றுக்கள் நிரந்தரமாக நின்று உலகை வழிநடத்தி வலுவூட்டுகின்றது. ஞானிகள் உபதேசங்களில் கால வேறுபாடு பேதமும் இல்லை என்றைக்கும் பொதுவானது. எவர்க்கும் உகந்தது இவர்கள் சிந்தனைவயப்பட்ட செழுமைமிகு கருத்துக்கள் புதுமைக்கும் புதுமையாகவும் பழமைக்குப் பழமையாகவும் சிரஞ்சீவித்தன்மை பொருந்திய மாமருந்தும் மந்திரமுமாகும். இவர்கள் பகர்ந்த கருத்துக்களை எதிர்வாதம் செய்திடவும் முடியாது.

எந்த மதத்தைச்சார்ந்த ஞானிகளாயினும் செப்பிய வார்த்தைகள் மதிப்பிட முடியாத அரு முத்துக்கள். எந்த நாட்டில் இனத்தில் அவதரித்த இந்த உத்தமர்கள் உலகிற்கு தேவையற்ற சங்கதிகளைச் சொன்னதுமில்லை. மனிதன் அகவாழ்விற்கும் புறவாழ்விற்குமான சிந்தனைக்





கருத்துக்களை இவர்களைப் போன்றோர் காலம் தோறும் அவதரித்து மானுட தர்மத்தினை மேலோங்கச் செய்த வண்ணமேயுள்ளனர்.

உள்ளத்தின் தூய்மை நிலை இன்றி எதையுமே மனிதன் சாதித்துவிட முடியாது. தூய்மை நெறியில் வாழாதவன் பெற்ற கல்வி வீரம், செல்வம் எல்லாமே தக்க தருணத்தில் அதன் சுயரூபம் காட்டி, அவனை அதல பாதாளத்தில் அமிழ்த்தி விடும். ஏதாவது சில அற்ப காரியங்களில் வெற்றி பெற்றவரின் திருப்தி என்பது தன்னையே அவர் ஏமாற்றியதால் பெற்ற வெற்றி எனக் கருத வேண்டியதே! இந்த தவறான முறையில் பெற்ற வெற்றிகளால் படும் துன்பத்தின் வியாபகத்தினால் அவன் ஆன்மா சுடுபட்டுத் துடிப்பதை காலம் கடந்தபின் உணர்ந்தேயாக வேண்டும்.

எனவே பண்பு நெறி களைந்து பெற்ற அறிவு, செல்வம் எல்லாமே உள்ளத்தின் ஒளி மேவிய பாதைக்கு இட்டுச் செல்லாது. இந்த வாழ்வு தனக்குள் நிம்மதி, திருப்தி காணாத நிலையிலேயே அவனை வைத்திருக்கும். நாம் பெறுகின்ற அறிவை தூய சிந்தனையுடனே பெறுதல் வேண்டும். கலங்கிய, களங்கம் நிறைந்த சிந்தனையுடன் மேல் நோக்கிய அறிவைத் தேட முனைதல் பயனற்றது. வெறும் பிழைப்புத் தேடுவதற்கு மட்டும் படிக்க வேண்டுமா? பிழைப்பிற்காக மட்டும் படித்தல் என்பதே ஒரு விதத்தில் நடித்தல் என்றே ஆகிவிடும். எல்லாமே வர்த்தக நோக்கோடு வாழ்க்கையைப் பார்க்கும் காலமாகிவிட்டது. ஆத்மார்த்த



RangaRakes Tamilnavarasam.com

சிந்தனையுடன், எமது கல்வி, ஞானத்தால் அனைத்து மக்களுக்குமான வழங்கல்களைச் செய்வேன் என்கின்ற மனோ நிலையினை மனிதன் வளர்க்க வேண்டும்.

அன்பு நிலை உள்ளோர்க்கு ஞான நிலை தானாய் வரும் என்போர் பெரியோர். ஏன் எனில் அன்பு செலுத்து பவர்கள், எதையும் இழக்கச் சித்தமாயிருக்கின்றார்கள். உலக நிலையாமை அதன் ஆரவாரத்தன்மை பற்றிச் சலனமற்றுச் சிந்திக்கும். இவர்களுக்குத் தோன்றுவது எல்லாமே தெளிவான உண்மைகளே அன்றி வேறில்லை. அஞ்ஞானச் சுவடுகளின் வழியே செல்பவர்கள் தெளிந்த சிந்தையுடையோர் பகன்ற வாசக வரிகளின் சிதறல்கள் சில நெஞ்சைத் தொட்டாலே போதும். போகும் வழி துல்லியமாக ஒளி தெரிய வழிகாட்டும்.

அழுக்கு உடலுக்கு ஆடம்பர உடை உடுத்தி என்ன பயன்? தன் நிலை கண்டு அவனே அருவருப்பு அடைவான். பண்பினை இறுகப் பற்றாமல் படித்து என்ன பயன்? தூய வாசனையை எம்மீது தூவுமுன் நாம் முதலில் எம்மைத் தூய்மைப்படுத்துவோமாக!

உண்மையின் தேடலைத் தேடிப் புறப்படுபவர்கள் பல முரண்பட்ட கருத்துக்களுக்குள் ஆட்பட்டுத்திசை தெரியாது அல்லல்படுகின்றனர்.பலரும் பல புதிய புதிய ஆன்மீக குருமார்களிடம் ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். இந் நிலை இன்று மட்டும் அல்ல தொன்று தொட்டே இருந்து





வருகின்ற நிலைதான். காலத்திற்குக் காலம் தமது ஞானகுருவை மாற்றிக்கொள்கின்றார்கள்.

ஆனால்,

இதில் வியப்பு என்னவெனில் பற்பல விதமாகப் புரியாத முறையில் ஞானம் பற்றி பேசுபவர்களுக்கும் கூட்டம் சேர்கின்றது. பருவ காலத்தின் மாற்றம் போல ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொருவருக்கும் கூடும் அடியார் தொகை சந்தை வியாபாரம் போல் ஏற்ற இறக்கமாக இருக்கின்றது.

மக்களின் இந்த ஆன்ம ஈடேற்ற வேட்கையைப் சில சங்கங்கள் நிறுவனங்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கின் றன. ஞானம் தேடுவது என்ன கடைச்சரக்கா? எவரிடம் எவர் போய் பெறுவது? போதாதற்குப் பாமரமக்கள் பலரும் இவர்கள் பிடியினுள் அகப்பட்டதும் அகப்பட்டுக் கொண்டே யிருப்பதும் அகப்படப் போவதும் ஆச்சரியமல்ல. மிகப் படித்தவர்கள் பெரும் செல்வந்தர்கள். அரசியல் வாதிகள் என்று பலதரப்பட்டவர்களும் இத்தகைய ஆன்மீகம் பேசுபவர்களிடம் சரணாகதியாகின்றனர்.

ஆனால் சில சமயம் இது போன்றவர்களின் நடவடி க்கைகள் அம்பலமாகி அவலட்சணப்பட்டு நீதி மன்றத்தின் முன் மேடையேற்றப்படுவதுமுண்டு. ஆன்மீகம் என்பது ஒரு விற்பனைப்பொருளும் அல்ல. ஆன்ம விழிப்பைத் தெளிவை பெறுவதற்கான ஆயத்தங்களை நாம் செய்ய எவ்வளவு தியாகங்களை மன வைராக்கியங்களை உருவாக்க



RangaRakes

Tamilnavarasam.com

வேண்டும் தெரியுமா?. சபலம், சஞ்சலம், ஆசைகளையும், கபட நோக்கையே குறியாகக் கொண்டவர்கள், தமக்காகத் தாம் தப்பிக்க ஆன்மீக வாழ்வைப் போர்வையாகப் போர்த்திக் கொள்ள உலகம் வசதி செய்து கொடுக்கக் கூடாது.

நெஞ்சில் சுமையுடன் வருபவர்கள் அதை எங்கா வது இறக்கலாமா என ஏக்கத்துடன் இருக்கின்றா ர்கள். இத்தகையவர்களுக்கு ஞானமார்க்கம் காட்டுகின்றோம். ஒளியூட்டி வைக்கின்றோம். தேவையான தெளிவை, அள்ளி அள்ளிக் கொடுக்கின்றோம் என்று எவராவது விளம்பரம் செய்து அதை வினியோகம் செய்துவிட முடியுமா?

தன்னை எவ்விதத்திலும் தயார்ப்படுத்த எண் ணாத ஜீவன்கள், காசு, பணத்தை விட்டெறிந்து, அமைதி தேடுவது எங்ஙனம்? வழிபாடு, தியானம் மட்டும் நற் சிந்தனைகளை உற்பத்தி பண்ணி விடுமா? இதயத்தில், புனிதத் தன்மையினைப் புகுத்தாமல் எமது எந்தச் செயலிலும் பூரணத்துவம் கண்டு விடமுடியுமா?

ஆசாபாசங்கள் துன்ப இன்பங்களுள் அல்லாடும் மனிதர்கள் எடுத்ததெற்கெல்லாம் வளைந்து இழுபடும் நிலையில் இருப்பதைத் தாமே உணரத் தலைப்படல் வேண்டும் விகுபடா இந்நிலையில் இருந்து விடுதலை பெறாமல் முடங்குவதை விட எழுந்து இயங்குவதே மேன்மை.





நல்லோர் உறவு நல்லவற்றையே படித்தல், அவை களையே கேட்டல், நல் வார்த்தைகளையே பேசுதலை முக்கிய பயிற்சியாகக் கொண்டேயாக வேண்டும். இவ்வண்ணம் நாம் ஒழுகிவரின் படிப்படியாக எமது சிந்தனை யில் ஒரு கூரிய சக்தி உருவாகுதலை உணர முடியும். சிந்தனைத்திறன் கொண்ட பெரியோரைப் பாருங்கள். அவர்கள் முகத்தில் உள்ள அமைதியை அருள் வீச்சைக் கண்டு கொள்ளுங்கள்!.


அனைத்து உயிரினங்களுமே கடவுளின் குழந் தைகள் என்பது வெறும் பேச்சு அல்ல. முழுமையான உண்மை தான். இறைவனின் ஆசியால் எவருமே எதனையும் சாதித்துவிட முடியும். மிகச் சாதாரண நிலையில் உள்ளவர்களே ஞான நிலையை அடைவதன் மூலம் இந்த உண்மை நிரூபணமாகின்றதல்லவா?

மனிதன் மனிதனாக வாழ்ந்தாலே போதும், அவனைச் சகல செல்வங்களும் வந்தடையும். அத்துடன் அவனே பெறுதற்கரிய ஞானத்துடனான மேலான தெளிவையும் பெற்றே விடுகின்றான்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
20-08-2006



RangaRakes Tamilnavarasam.com



# மௌனம்

மௌனம் உள்நின்று ஓதப்படும் மாமந்திரம். ஒரு தியான நிலை. பேசாமொழி. பேச்சு அற்ற மௌனநிலை. பெரும் ஓசையை, பெரு நெருப்பை, இயம்பவொண்ணாக் குளுமையை ஊட்டவ்லல மகா சக்தி உடையது. பேசவேண்டிய நேரத்தில் மௌனம் காப்பது புத்திசாலித் தனமல்ல. மௌனத்தால் பல உண்மைகளை உணர்ந்து கொள்ள முடியும். பிறருக்கு உணர்த்தவும் இயலும். தூய்மையற்ற எண்ணத்துடன் மௌனமாய் இருப்பது அவர் ஆன்மாவிற்கே இழுக்கானதும் தம்மையே வதைப்பதுமாகும். உலக ஆரவாரங்கள் ஓயப்போவதில்லை. இதனுள்ளும், தன்னை உணரவும், தன்னைக் காப்பாற்றவும், மௌனம் எம் ஆன்மாவிற்குத் தேவையான உன்னத நிலையுமாகும்.

மௌனம் ஒரு அமானுஷ்ய மொழி. இதன் தரிசனம் பல தாக்கங்களுக்கான உதயம். எனினும் நிர்மலமான சிந்தனையூடான மௌனம் வாழ்க்கையின் சுகங்களுக்கான ஆதாரம். இது உள் நின்று ஓதப்படும் மாமந்திரம். ஒரு தியான நிலை, பேசா மொழி எனவும் கூறலாம்.





அமைதியாகச் சும்மா இருப்பதாகக் காட்டிக் கொள்வ தெல்லாம் மௌனம் அல்ல. பயத்தையும் மேலான பீதி உணர்வினைக் கொடுக்கின்ற அமைதியான நிலையை எவர் தான் நல்ல நிலை என்று சொல்லிக் கொள்வார்கள்? எனவே,

சப்தம் செய்யாமல் மனதினுள் கறுவிக்கொள்வது அதர்மத்தைச் செய்வதற்கான உச்சநிலையன்றி வேறில்லை. நல் எண்ணங்களுடன் உள்ளத்தினை வளப்படுத்த வலுப்படுத்த எமக்கு நாம் அளிக்கும் கட்டுப்பாடான உள்ளத்தின் தெளிவான நிலைதான் மௌனம். இங்கு பதற்றம், பயம் இல்லை. இது கூட மனிதனுக்கான பூரணத் துவம் நோக்கியபுறப்பாடு. அதாவது பயணம் என்று சொல்லலாம். நல்ல நோக்கத்திற்கு அன்றி பிறரை வருத்த மனதைப் பிசைய ஏற்படுத்துகின்ற மென்மை போன்ற வன்மை நன்று அன்று!

தேவையற்ற ஒரு மௌனத்தினால் விளைந்த ஒரு கதையைக்கூறுகின்றேன் இது புரிந்துணர்வின்மையை தெளிவின்மையை எடுத்துச் சொல்லும்.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இருந்தார். அவரை நான் முதன் முதலின் கண்டதுமே அவரது நடத்தைகள் மாறுபாடாக இருப்பதை உணர்ந்தேன். அவரது கதையை எனது நண்பர் ஒருவர் மூலம் தெரிந்து கொண் டேன். திடீர் எனச் சில சமயம் எமது நண்பர்களிடம் வருவார்.



RangaRakes Tamilnavarasam.com

சோதிடம் சொல்வதாகச் சொல்லி வலிந்து அவர்களுக்குச் சோதிடம் கை ரேகை பார்ப்பார். அவர்களிடம் சோதிடம், சொல்லி முடிந்ததும் ஒரு தொகையைக் கறாராகக் கேட்பார். எல்லோரும் அவர் நட்பு ரீதியில் கேட்கின்றாரே என நினைத்தாலும், கேட்ட தொகையை கண்டிப்பாகக் கேட்டுப் பெறுவார். இத்தனைக்கும் சோதிடம் பற்றி அவருக்குச் சரிவரத் தெரியாது ஏன் இப்படி நடக்கின்றார்? நல்ல படித்த மனிதர். அவருக்கு என்ன நடந்தது? எதற்காகக் கேலிக்குரிய மனிதராகத் தோற்றமளிக்கின்றார்? சரி அவரது சோகக் கதைக்கு வருவோம்.

திருமணமாகித் தமது மனைவியுடன் இருபது வருடங்களாக மிகவும் அந்நியோன்யமாகத் தாம்பத்திய வாழ்வு நடாத்தி வந்தார். அவர்கள் குடும்பம் ஒரு எடுத்துக் காட்டான வாழ்க்கையை வாழ்ந்து காட்டிக் கொண்டிருந்தது. அரச பணியில் உயர் பதவியில் இருந்தார். மனைவியுடன் ஒரு வேளையும் கோபித்துப் பேசாத மென்மையான மனிதர். மனைவியும் அத்தகைய மென்மை உணர்வுள்ள பெண்மணியாவர்.

ஒரு நாள் இவர் வீட்டிற்கு வருவதற்கு நேரமாகி விட்டது. நள்ளிரவுக்கு முன் கூட்டியே மனைவிக்குத் தகவல் தராமலேயே சென்று, பின்பு காலம் தாமதமாக அன்று வீட்டிற்கு வந்தார். அவர் வந்ததும் மனைவி அன்றுதான் சற்றுக் கோபமாக ஏன் வீட்டிற்குக் கால தாமதமாக வந்தீர்கள் என்று கேட்டுவிட்டார். இவர் பதில் எதுவுமே பேசவில்லை.





பேசாமல் வீட்டினுள் சென்று படுத்துவிட்டார். அடுத்த நாள் ஒன்றுமே பேசாமல் காலையில் வேலைக்குச் சென்று விட்டார். மாலையில் வீடு திரும்புமுன் அவருக்கு அந்த அதிர்ச்சிச் செய்தி தெரிவிக்கப்பட்டது.

ஆம், அவரது மனைவி வீட்டில் தற்கொலை செய்து கொண்டு விட்டார். தனது அன்புக்கணவர் ஒன்றும் பேசாமல் மௌனமாகப் புறப்பட்டதும், அன்று வீட்டில் உணவு அருந்தாமல் சென்றதும் அவர் மனதை மிகவும் வாட்டி விட்டது காரணத்தை எழுதித் தனது வாழ்க்கையை முடித்துவிட்டார்.

வாழ்க்கையில் இத்தனை வருடங்கள் இவ்வளவு அந்நியோன்யமாகச் சீவித்தும் கூட தனது கணவனின் அன்பு நிலையை அரவணைப்பினை உணராமல் தனது கணவனின் மௌனத்தைச் சகிக்காமல் இந்தப் பரிதாபகரமான முடிவை எடுத்து விட்டார். மனைவியின் பிரிவினையடுத்து சித்த சுவாதீனமின்றி நடைப்பிணமானார். தனது அரச வேலையைப் புறக்கணித்துக் கைவிட்டார் குடும்பத்தின் உறவினர்களின் உதவிகளால் தமது காலத்தை ஓட்டி வந்தார்.

சாதாரண ஒரு சம்பவத்தினைப் பேசித் தீர்க்காமல் உள் மன வெடிப்புக்களால் தணலாகி, நொந்து, மௌனம் காப்பது நல்லதா? துன்பங்களே வாழ்க்கையில் தெரியாமல் இருப்பதும், மனோ தைரியங்களை வாழ்க்கையில் ஏற்படுத் தாமல் இருப்பதும் வாழ்க்கைக்கே ஊறு விளைவிப்பது போல் அல்லவா ஆகின்றது?



RangaRakes

Tamilnavarasam.com

பேச்சு அற்ற மௌனநிலை பெரும் ஓசையை, பெரு நெருப்பை, இயம்பவொண்ணாக் குளுமையை ஊட்டவல்ல மகா சக்தி உடையது. ஆனால் பேசவேண்டிய நேரத்தில் மௌனம் காப்பது என்பது புத்திசாலித் தனமல்ல. இதனால் விபரீத விளைவுகள் நாங்கள் எண்ணியவைக்கு மாறான எதிர்மறைச் சம்பவங்கள் நிகழலாம்.

❖ காதல் சமாச்சாரங்கள்.
❖ நண்பர்களிடையேயான கருத்து முரண்பாடுகள்.
❖ உடனடியாகத் தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சனைகள்.
❖ கொடுக்கல், வாங்கல்கள் போன்ற பிரச்சனைகள்.

இத்தகைய விடயங்களை மௌனம் காத்துப் பேசாமல் இருந்தால் காரியங்கள் நடக்குமா? மௌனம் என்பதன் அர்த்தம் மூடிமறைத்தல் அல்ல. பல உண்மைகளுக்கான தேடலும் பல தேவையற்ற பிரச்சனைகளுக்குள் ஆட்படாமையும் எமது ஆன்ம சக்தியினை வளர்ப்பது மாகும்.

சும்மா இருப்பது சுலபமான காரியமா? மன உறுதி இல்லாதவனிடம் இது சாத்தியப்படுமா? நிர்ச்சிந்தனையுடன் மௌனமாக இருப்பது தவநிலைதான். இதற்காகத் தம்மைத் தயார்படுத்தலுக்காக அகத் தூய்மையுடையோர் வாழும் வாழ்க்கை முறைமைகள் சமானியர்களுடன் ஒப்பீடு செய்ய முடியாததாகும்.





நினைவுகளைக் கட்டுப்படுத்தியும் கடல் அனைய உடலின் விருப்பங்களைச் சுருக்கியும் அலையும் மனதை நிலை நிறுத்துவது உன்னதமான சாந்தநிலை அல்லவா? மௌனம் மென்மையானது. ஆனால் அதன் வேகம் ஆற்றல் அளப்பரியது அறிக!.

கணினியில் பதிவு செய்யப்பட்ட பதிவுகளை ஒரு விரல் அசைவில் அதன் பதிவுகள் அனைத்தையும் அழிப்பதுபோல் எமது பழைய புதிய தேவையற்ற எண்ணங் களை நொடிப்பொழுதில் துடைக்க முடியுமா? ஆனால் ஒரு சில வினாடிப் பொழுதில் நாம் செய்யப் போகின்ற வேலைகளில் மனம் குழப்பமடைந்தால் அவை செயலற்றுப் போகின்றன.

ஆக்கத்திறன் மிக்க கருமங்களில் ஈடுபட விழையும் போது மனம் களைப்படைவது மிகவும் வேதனைக்குரிய தேயாகும். ஆன்மபலம், தேகபலம் இவைகளை ஒருங்கு சேர இணைத்துச் செயலாற்றுதலுக்கு நிர்மலமான மௌன நிலை எம்மை வழி நடத்தும் திறனைக்கூட்டி நிற்கின்றது.

எம்மை நாம் ஆசுவாசப்படுத்தலின்றி உடன் ஒரு விடயத்தில் குதிக்கும் போது எங்கள் வலிமைகூடச் சில வேளை மழுங்கடிக்கப்படுவதுண்டு. மன உறுதி என்பது எமது தேக வலிமையினைப் பன்மடங்காக உயர்த்துகின்றது. தேவையற்ற சக்தி விரயங்களை மௌனநிலை தடுத்து விடுகின்றது.



RangaRakes
Tamilnavarasam.com

அதிகம் பேசுபவன் அவஸ்தைப்படுகின்றான். மௌனம் மேன்மைப்படுத்துகின்றது.

ஒரு சிறந்த பேச்சாளன் மேடையில் நன்மை தரும் கருத்துக்களை மட்டும் தான் பேசுவான். எவர்களும் கண்டபடி பேசினால் அவரது கூற்றை எவரும் நம்ப மாட்டார்கள்.

சிந்திக்காமல் சின்ன வார்த்தையும் சிந்தக்கூடாது. மௌன நிலை எம்மைச் சிந்தனைக்கு இட்டுச்செல்வதால் எமது செயல் திறன்கள் அனைத்துமே கடைந்து எடுக்கப்பட்ட நற்சாறாக எம்மிடம் இருந்து சுரக்கப்படும்

புலன் வழி புகும் போது தெளிவிற்கும் குழப்பத் திற்கும் வித்தியாசம் தெரிவதில்லை.

மிகப்பெரும் பதவிகளிலும் பொறுப்புக்களிலும் இருக்கின்ற பலர் தமது கருமங்களில் எவ்வித சிக்கலு மின்றிச் செய்து முடிக்கின்றார்கள். ஆனால் அதிகம் பொறுப் பில்லாத கருமங்களைச் செய்கின்ற சிலரோ தமது வேலைகளைப்பற்றிப் பெரிதாகச்சொல்லி அலுத்துக் கொள்வார்கள். எல்லா வேலைகளையும் ஒரே நேரத்தில் எடுத்துப் போட்டுக் குழப்பியடிப்பார்கள்.

கிரகிக்கும் திறன் குறைந்ததால் எந்தப் பணியையும் நாம் சரிவரச் செய்யமுடியுமா? ஒருவர் சொல்லும் போதும் நாம் கேட்கும் போதும் படிக்கும் போதும் எமக்குக் குரல்





தேவையில்லை. மூளையை மட்டும் விரித்து மௌனமாக அவதானித்தலே போதுமானது.

தெளிவான கிரகித்தலால் செய்யப்படும் பணிகள் இலகுவாக்கப்படுகின்றது. குழப்பமான மனநிலையில் எம்மால் கிரகிக்க முடியாது. அத்துடன் பலரும் சத்தமிட்டுக் குறுக்கீடு செய்தாலும் எதைக் கேட்பினும் வெறுப்புத்தான் மிஞ்சும். எனவே பலர் கூடி ஒருவிடயத்தினை அறிய முற்படும் போது சகலருமே தமது நோக்கம் நிறைவு பெற கேட்கும் விடயத்தில் புலனைச் செலுத்திலயிப்புடன் மௌன மாக உள்ளத்தில் விடயங்களை நிறுத்துதல் சிறப்பானது. அறிக!

மனதின் ஆராவாரங்கள் ஒடுங்கினால்தான் சிந்தனா சக்தி சரிவர இயங்கும் காட்டிற்குச்சென்று முனிவர்கள் தவம் இயற்றியதாகப் படித்திருக்கின்றோம். புற உலக ஆரவாரங் களில் இருந்து விடுபட இவர்கள் விரும்பினார்கள் பெரிதான புலனடக்கத்தினால் ஆன்ம விழிப்புப் பெற்றவர்களுக்கு சீறிடும் புயலும், பெரும் தீச்சுவாலைகளும், அனல் வீச்சும், பெரும் இடியோசையும், பிரவாகித்து வரும் புனல் ஒன்றும் அவர்களைப் பாதிப்படையச் செய்வதில்லை.

சின்ன அமளிகளுக்குள் பெரும் கலவரத்தை மனதுள் உருவாக்குபவர்கள் நிலையற்ற விசாரங்களுள் விலக விருப்பமில்லாதவர்களேயாவர். உலக ஆரவாரங்கள் ஓயப்போவதில்லை. ஆனால் எங்கள் மன இயல்பின்



RangaRakes
Tamilnavarasam.com

அதிர்வுகளை கட்டுப்படுத்த எம்மால் முடியும். கண்ட கண்ட வேண்டாத அல்லல்களுக்குள் எல்லோருமா மாட்டிக் கொள் கின்றார்கள்? மிகச் சிலர்தான் அங்கு முடங்கி ஒடுங்கிப் போகின்றார்கள். நன்றாக அவதானித்து உற்று நோக்குங் கள்! தெளிந்தவன் அழிந்ததில்லை. எதனுள்ளும் அமிழ்ந் ததுமில்லை.

வீண் சலசலப்பு உணர்வுகள் எமது பலவீனமான எண்ணங்களால் கருக்கொள்கின்றன. நீண்டகாலம் பயின்ற கல்வியும், கலையும், ஒரு சின்னச் சஞ்சலத்தினால், சலனத் தினால், சபலத்தால் எம்மை விட்டு நழுவுகின்ற உணர் வினைக்கூட நாம் பெறுவதுண்டு. நிதானமாகச் சிந்தித்து இயங்கச் சில கணப்பொழுது மறுத்து விடுகின்றோம். இந்தச் சிலபொழுது சிந்தனைதான் நல்ல மௌனநிலை என்று கொள்ளப்படும்.

எந்த நேரமும் விவாதமும் எதிர் கோஷங்களும் கட்டளையிடும் தொனிகளும் நாம் எட்டிப் பிடிக்க எண்ணும் எல்லைகளைத் தொட்டுவிடாது.

எமக்குள் நாம் சும்மா இருந்து மௌனம் காக்கப் பழக வேண்டும். எம்மிடம் இருந்து புறப்படும் உண்மை வீச்சு ரொம்பவும் பரிணாமம் கூடியதாகும். சில நேரம் பிள்ளைகள் குழப்படி செய்தால் தகப்பனார் அவர்களை விறைத்துப் பார்த்துப், பின்னர் மௌனித்தால், அதன் எதிர் விளை வினைப் பிள்ளைகள் உணர்வார்கள் இல்லையா?





எங்கள் வலு உண்மையான கருமங்களை நோக்கிச் செல்லும் போது நாம் கொள்ளும் மௌனத்தின் அர்த்தமும் விசாலமும் முழுதாக பிறருக்கும் உங்களுக்கும் புரியும்.

ஒரு சில வினாடிகள் கூட மனம் தனது செயல் பாட்டினை நினைக்கும், அதிர்வுகளை நிறுத்துவது இல்லை. ஆனால் எமது நினைப்புக்களை நிறுத்த முடியாது விட்டாலும் நல்ல நினைப்புக்களாக உயர்த்த எமது மனசுக் குக் கட்டளையிட நிச்சயமாக இயலும்,

நல்ல செயல்கள் எம்மிடமிருந்து புறப்பட ஆரம்பித்ததும் சித்தம் சுத்தமாய் எம் கட்டுப்பாட்டினுள் புகுந்து கொள்ளும்.

அத்துடன் எந்த வேளையிலும் தேவைப்படும் காலங் களில் எம்முடன் நாம் பேசி முடிவு எடுக்கும் திறனும் வளர்ந்து விடும். உங்களுடன் நீங்கள் பேசாமல் பிறருடன் மட்டும் பேசி என்ன பயன்? மனதோடு பேசு! மனச் சாட்சியை மதி! இவைகளை நாம் மறக்கக்கூடாது.

மௌனம் மனச்சாட்சியைத் தூய கண்ணோட்டத் துடன் நோக்குகின்றது. அவசரப் புத்திக்காரருக்கு மனச்சாட்சியுடன் பேச நேரம் கிடைப்பதில்லை. வெறும் உணர்ச்சிகள் மட்டும் எம்மை வாழவைக்காது. நல்உணர் வினூடான உணர்ச்சிகள்தான் வாழ்வைச் செழுமையாக்கும். இதுவே தெளிவு நிலையும்கூட. மௌனத்தின் மேல்



RangaRakes

Tamilnavarasam.com

நம்பிக்கையும் அந்நிலை மூலம் பெற்ற தெளிவினால் தன்னையே ஒருவன் தற்காத்துக் கொள்வ துடன் முழு உலகையுமே ஆகர்ஷித்துக் கொள்கின்றான்.

தன்னை அறியாமலே தன்னைத் தொலைத்த ஆத்மாக்கள் தான் அதிகமாக இருக்கின்றார்கள். தன்னை விட்டுத் தான் அதிக தூரம் செல்வதை உடன் நிறுத்த வேண்டும். தன் மனதோடு உறவாடி உண்மை நிலையை உணரல் வேண்டும். உள் உணர்வுகள், உடல் உணர்ச்சிகள், உள்ளக் குமுறல்கள், தீவிர ஆற்றல்கள், சக்தி வெளிப் பாடுகள், இவை எல்லாவற்றையும் பகுத்து ஆராய்ந்து தன்னைச் செப்பமாக்க முயலுதல் வேண்டுமன்றோ?

அக உணர்வுகளை விழிப்படையச் செய்வதற்கு நாம் மௌனத்தின் அவசிய தேவையை உணர்ந்தேயாக வேண்டும். சும்மா சாப்பிட்டு உறங்கி எழுவதால் என்ன சாதனைகளை நாம் பெற்று விடப்போகின்றோம்?

வாழ்க்கைப் போராட்டத்தின் எத்தகைய சவால் களையும் சந்திக்க, எம்மை நாம் வலுவூட்டி வைக்க வேண்டும். உலகம் மோசமானது என்று நாம் கருதக் கூடாது.

எம்மை நாம் தயார் நிலையில் வைத்திருத்தல் என்பது நல்லோர், வல்லோர் உலகத்துடன் நயம்பட திறன்பட வாழ்வதற்கேயாம். இதனால் இடர்கள் தொடராது. இன்பவாழ்வே இணைந்து கொள்ளும்!






நற்சிந்தனையைச் செதுக்குதலே வாழ்வின் நற்பேறு மாகும். மௌன நிலையில் பேசாது இருப்பது என்பது நற்சிந்தனையை உள்ளீர்க்கும், புகுத்தும் முழு முயற்சியே யாகும். இதன் மூலம் பெறப்படும் ஆற்றல்கள் எமது வாழ்விற்கான வலுமை மிகு பெரும் கொடைகள் என உணர்வோம். "மௌனம்" எமது ஆத்மாவின் "யௌவனம்" எனக் கொள்வோமாக!.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
02-07-2006



RangaRakes

Tamilnavarasam.com



# எளிமை

தோற்றத்தில் மட்டும் எளிமை காட்டுவது ஏமாற்று வேலையாகும். வாழ்வின் நடத்தை நெறியிலும், தூய்மை இலங்கினால் தான் எளிமை நளினமாகக் கவரப்படும். "ஈகை" இல்லாத "எளிமை" எனது ஆன்மாவை வலுப்படுத்தாது. உலோபித்தனமாக வாழ்வது எளிமையாகாது. சிக்கனமாகச் செம்மையாக வாழ்வதே எளிமை. இதுவே தூய்மையான வாழ்வு முறைமையுமாகும். தேவைக்கு ஏற்றபடி வாழுங்கள். அடுத்தவன் ஆடம்பரத்தினுள் நாம் நுழையக்கூடாது. சிக்கனமாக வாழ்ந்தாலும் சந்தோஷமாக வாழமுடியும். எளிமையாக வாழ்ந்து பார்த்தால் தான் அதன் பூரணத்துவம் நன்குபுரியும்.

எளிமை என்பது உலோபித்தனமானது அல்ல. வாழ்வின் எந்நிலையிலும் எம்மைத் தயார் நிலையிலும் அமைதியாகவும் சிக்கனமாகவும் நிலைபெற்று இருக்க வைக்கும் சீரிய பண்பு நெறியாகும்.

இந்த வாழ்வியல் முறைமை நிரந்தர மகிழ்விற்கும், ஏனையவர்களுக்கும் வழிகாட்டி நிற்கும் கட்டுப்பாட்டுக்





கலாச்சாரமுமாகும். வாழ்வியல் பண்பே உலக கலா சாரமும் ஆகும். உணர்வோம்!

வெறும் தோற்றத்தில் மட்டும் எளிமை காட்டுவது ஏமாற்று வேலையாகும். வாழ்வின் நடத்தை நெறியிலும் தூய்மை இலங்கினால்தான் எளிமை நளினமாகக் கவரப்படும்.

ஒருவரின் பரந்த மனப்பான்மை என்பது அவர் வாழு கின்ற சாதாரண வாழ்விலேயே துலங்கித்தெரியும். வசீகரம் என்பது கூட அவர்தம் நடத்தையினால் நயம் பெறுகின்றது. உண்மைதானே! சேருகின்ற மிதமிஞ்சிய பணமும், பதவியும், புகழும் எளிமையான போக்கிற்குச் சிலசமயங்கள் சவால் விடுவதுண்டு. இயல்பாகவும் ஆரம்ப காலம் முதல் எவ்வித படோபகரமான சூழலுக்குட்படாதவன் தனது பரந்த ஆளுமைத் திறனால் தன்னைச் சுருக்கி தன் ஆன்ம விழிப்பை உயர்த்தி விரித்து நிற்கின்றான்.

அழகு மிகு வாழ்க்கை என்பது எளிமையான ஏற்றம் மிகுந்த வாழ்க்கைதான். சந்தேகம் வேண்டாம். பகட்டு வாழ்வு பம்பரமாக எம்மைச் சுழற்றிக் களைப்படைய வைக்கும். சீரான வேகத்தில் சென்றால் பாரினைக்கூடச் சுற்றுவது பெரிதல்ல.

பெருஞ் செலவு செய்து வாழ்ந்தால்தான் சகல சுகங்களுக்கும் சொந்தக்காரர் ஆகலாம் என எண்ணுவது



RangaRakes

Tamilnavarasam.com

மடமையாகும். இதனால் உடலும் உள்ளமும் காலப் போக்கில் நலிந்துவிடும்.

- ❖ சுகாதாரச் சீர்கேடுகள்.
- ❖ உடல் உழைப்பு விரயம்.
- ❖ பணச் செலவு.
- ❖ மற்றவர்களின் தேவையற்ற விமர்சனங்கள்.
- ❖ கால விரயம்.
- ❖ தனிமனித செல்வ விரயத்தினால் நாட்டிற்கு ஏற்படும் நட்டங்கள்.

மேற்படி காரணிகள் எளிமையாக வாழ்ந்து கொள்ளா மையினால் ஏற்படுகின்ற எதிர்விளைவுகளாகும்.

வெறும் கௌரவத்திற்காகக் கால் நடைப் பயணத்தினைக் கூட மோட்டார் வண்டியில் செல்லப் பிரியப் படுகின்றார்கள். சுத்தமாக இருக்கவேண்டும் என்பதற்காக இயற்கை வழிமுறைகளைத் தவிர்த்து தேவையற்ற இரசாயனப் பொருட்களை வாங்கித் தேய்கின்றார்கள். இயற்கைப் பொருட்களை மனிதன் உபயோகிக்க மறந்தே விட்டான். ஒன்றரை மணிநேரம் பேருந்திற்குக் காவல் நிற்பவன் ஒன்றரை நிமிடத்தில் உடல் விருத்திக்காகவாவது நடந்து போக மனம் இடம் கொடுக்க மறுக்கின்றான். வியர்வை சிந்தினால் அவலட்சணம் என்கின்ற காலமாகி விட்டது.





யார் யாரோ என்னவோ சொல்வார்கள் என்பதற்காக கையில் இருந்ததை கை நழுவ விடுவதுதான் வாழ்க்கையா? தன்னாலே கெட்டவன் தன்னைத் தூக்கி நிறுத்த எவராவது வருவார்கள் என எதிர்பார்ப்பது இழிவு! துன்பப்பட்டும் எழுதலே நல்லது.!

பொருளீட்டுவது என்பது பெரியவிடயம். வலிமை உள்ள காலத்தில் அதைத்தேடுவதும், முதுமை வந்துற்ற போது அதன் பயனைப் பெறுவதுமே முறைமை. ஆனால் சிலர் பேசும் கருத்துக்கள் மிகவும் விந்தையாக இருக்கும் “என்ன ஐயா அற்பத்தனமான வாழ்க்கை வாழுகின்றீர் இருக்கும்பொழுது அனுபவித்து விடல் வேண்டும். செத்தால் எமக்கு என்ன தெரியப் போகின்றது செத்தபின் தேடியது எல்லாம் கூடவருமா” என்று சொல்வார்கள்.

எளிமையாக வாழ்வதற்கும் இத்தகைய கூற்றுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை நாம் என்னதான் பொருள் ஈட்டினாலும் எமது உழைப்புக்கள் எமக்கானது மட்டுமல்ல எம்மைச் சார்ந்தவர்களுக்கும் முழு சமூகத்திற்குமானது எனப் பரந்த மனப்பான்மையுடன் எல்லோரும் கருதுவதில்லை.

எத்தனையோ வள்ளல்கள் பார்வையில் மிகச் சாதாரணமாகக் காணப்படுகின்றனர். ஆனால் அனைத்துப் பொதுக் காரியங்களுக்கும் தம்மால் ஆன விதத்தில் உதவுவதில் முன் நிற்பார்கள். எளிமையானவர்களை மக்கள்



RangaRakes
Tamilnavarasam.com

நேசிக்கின்றார்கள். பகட்டானவர்களைப் பார்த்தால் பயந்து விலகுகிறார்கள்.

- ❖ எனக்கு,
- ❖ எனக்கு மட்டும்,
- ❖ எனது குடும்பத்திற்கே,

என்று வாழுபவர்களும் இருக்கின்றார்கள். தமது சம்பாத்தியம் பொதுமையானது என்று நினைப்பவர்களும் இருக்கின்றார்கள். இது ஒவ்வோருவர் மனப்பான்மையைப் பொறுத்த விடயம்.

ஆனால் "ஈகை" இல்லாத "எளிமை" எமது ஆன்மாவை வலுப்படுத்துமா? இவர்கள் தான் அனுபவிக்கத் தெரியாதவர்கள் எனக் கொள்க!.

நல்ல வழியில் இல்லாதோர்க்கு அளிப்பது தனிச் சுகமல்லவா? நாம் வாழும் காலத்தில் இதனைச் செய்து விடல் வேண்டும். எம் கண்முன்னே எங்களால் பிறர் அடையும் களிப்பினை கண்டு களிப்படைய வேண்டும். "இதுவே இருக்கின்ற போது அனுபவி" என்பதன் முழு அர்த்தமுமாகும்.

மேலும் சிக்கனம் என்பதற்கும் எளிமை என்பதற்கும் வித்தியாசம் உண்டு. சிக்கனம் பணம் பொருள் விடயத்தில் அதைக் கண்டபடி செலவு செய்யாமல் பேணும் நல்ல உபாயம் ஆகும்.





ஆனால் எளிமை வாழ்வு என்பது ஆத்மார்த்தமான தூய வாழ்வோடும் இணைந்தது ஆகும். சிக்கனமாக வாழ்பவர்கள் எல்லோருமே எல்லாச் சந்தர்ப்பத்திலும் எளிமையாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்பதில்லை.

அண்ணல் மகாத்மா காந்தியடிகள் தென்னகத்துக் காந்தி காமராஜர் அவர்கள் தங்கள் தோற்றத்திலும், வாழும் முறைகளிலும்,சிக்கனத்துடன்கூடிய எளிமை வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார்கள்.மனத்தூய்மை உள்ளவர்கள் என்றும் எளிமையினையே நாடுவார்கள். காந்தியடிகள் தூய பருத்தியிலான கதர் ஆடையை உடுத்தினார். இது சுகாதாரத்திற்கு அந்நாட்டின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ற ஆடையாகும். எனவே தேவைக்கு ஏற்பவே வாழுவது முறைமை மற்றப்படி ஆடம்பர உடைகள், ஆடம்பர உண்வு வகைகள் எல்லாமே தேவைக்கு ஒவ்வாதது என எண்ணல் வேண்டும்.

இன்று வெறும் வியாபார உத்தியை நம்பி ஏமாந்து கண்ட கண்ட உணவுப் பழக்கங்களுக்கும் மக்கள் ஆளாகின்றனர். ஒவ்வொரு நாட்டின் கலாசாரங்களுக்கும் அந்நாட்டின் பூகோள சீதோஷ்ண நிலைக்கும் பொருத்தமான பழக்க வழக்கங்களை நம் முன்னோர் கண்டு பிடித்து விட்டனர். இவை அனுபவ ரீதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட எளிய வழிகள். இதை விடுத்து நாகரீகம் என்று சொல்லிக் கொண்டு வேற்று நாட்டைப் பார்த்து எளிமை வாழ்வினைப் புறக்கணிப்பது நல்லது அல்ல.



RangaRakes
Tamilnavarasam.com

மனித வாழ்வு நிரந்தர மற்றது. தாழ்ந்த நிலையில், வாழ்பவர்கள் கால மாற்றத்தால் உயர் நிலை அடைவதும் உயர் நிலையில் வாழ்ந்தவர்கள் சரிவடைந்து போவதும் இயற்கைதான். எந்நிலையிலும் நாம் வாழப்பழக வேண்டும் என வெறும் பேச்சளவில் கூறினால் மட்டும் போதுமா? எதிலும் கூடிய மிகையான ஆர்வத்தினைக்காட்டி வாழ்கின்ற வர்கள், திடீர் என ஏற்படும் வாழ்க்கைச் சுழற்சியில் சிக்குண் டால் பெரும் அவஸ்தைக்குட்பட்டு விடுகின்றார்கள். எக்காலத் திலுமே மனதளவிலும் வெளித் தோற்றம் செயல்பாடு களிலும் சாமான்ய சீவியம் செய்பவர்களுக்கு இடையூறுகள் தடைக்கற்கள் எல்லாமே பெரிதெனத் தோற்றம் காட்டி விடாது.

மேலும் சாதாரண வாழ்வு வாழ்பவர்கள் சுதந்திரமாக வாழுகின்றார்கள். எல்லா வசதிகளையும் வேண்டுமென்றே தேவையற்ற போதும் திணித்துக் கொள்பவர்கள் அந்த நினைப்புகளுடனே சொல்லொ வொண்ணா ஒரு அழுத்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தேவைகளைச் சுருக்கும் போது நிம்மதி தானாக கருக்கொண்டு விடுகின்றது. வியர்க்க விறுவிறுக்க, அழகுமிக்க கனத்த ஆடைக்குள் மூச்சுமுட்ட முடங்கி ஒடுங்கிக் கிடப்பதை விட காற்று உள் நுழைய வசதி கொடுத்து மூச்சிற்கு இதமளிக்க நாம் ஏன் தயங்க வேண்டும்?

வசதிகள் வாய்ப்புகள் எங்கள் இயல்பான எளிமை உணர்விற்கு, வாழ்வியல் முறைகளுக்கு இடையூறு வர





சம்மதிக்கலாமா? துரதிருஷ்ட வசமாகச் சிலர் எளிமையான வாழ்வில் நுழையவே முடியாமல் போகின்றார்கள். சத்துமிக்க வாழ்க்கையை அனுபவிக்காமல் சக்கையைத் திணித்து சப்புக் கொட்டிக் கொள்ளலாமா?

எதிலும் கூடிய மிகையான ஆர்வத்தினைக் காட்டி வாழ்கின்றவர்கள் திடீர் என ஏற்படும் வாழ்க்கைச் சுழற்சியில் சிக்குண்டால் பெரும் அவஸ்தைக்குட்பட்டு விடுகின்றார்கள். எக்காலத்திலுமே மனதளவிலும் வெளித் தோற்றம் செயல்பாடுகளிலும் சாமான்ய சீவியம் செய்பவர்களுக்கு இடையூறுகள், தடைக்கற்கள் எல்லாமே பெரிதெனத் தோற்றம் காட்டிவிடாது.

எளிமையாக வாழ்ந்து பார்த்தால் தான், அதன் பூரணத்துவம் நன்கு புலனாகும். எம்முன்னே அத்தகைய பெரியோர்களைப்பற்றிக் கேட்டும் அறிந்தும் இருக்கின் றோம். எமது முன்னோர்கள் இப்படித்தான் வாழ்ந்தார்கள். அவர்கள் இயற்கையை ரசித்தார்கள். அதனோடு பழகி ஒன்றிணைந்து வாழ்ந்தார்கள்.

எனவே அவர்களுக்கு எளிமை வாழ்வு ஒன்றும் புதுமையாகத் தோன்றவில்லை. அதனைச் சிரமம் மிக்க வாழ்வு முறையாகக் கடுகளவும் அவர்கள் கருதவில்லை. எளிமையை, எமது இயல்பு ஆக்கி வலுவான வாழ்வை அமைப்போமாக!.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
09-07-2006



RangaRakes
Tamilnavarasam.com




# குரோதம்

> நீண்டகால பகையுணர்வினை வேண்டுமென்றே தொட்டு அதனை விட்டுவிட முடியாத பேர்வழிகளுக்குக் குரோதம் கசப்பு அல்ல. இனிப்பு. மன்னிக்கும் மனப்பாங்கு ஆன்ம நேயம் அன்பு உணர்வு கொண்டவர்களுக்கு மனதை அரிக்கும் குரோதம் தொட்டு விடாது. திருந்துவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள். துர்ச் செயல் செய்பவர்கள் அதனைச் செய்வதற்கு அனுமதியளிக்க வேண்டாம். மேலான எமது அன்பான வழிகாட்டல்களால் அவர்களின் குரோதங்கள் கரைந்தே போய்விடும். கோபங்கள் மறையலாம். குரோதம் உள்நின்று உராய்ந்து மாறாதரணமாகி "வடு" ஏற்றும். குரோதம் களைதல் உள விருத்திக்கு உகந்தது.

குரோதம் இருதயத்தை அரித்து நல் எண்ணங்களை நொருக்கி நிரந்தரமாய் தரித்து நிற்கமுனையும் நீறு பூத்த பெரு நெருப்பாகும்.

நீண்ட கால பகையுணர்வினை வேண்டுமென்றே தொட்டு அதனை விட்டுவிட முடியாத பேர்வழிகளுக்கு,





குரோதம் கசப்பு அல்ல. இனிப்பு. ஏன் எனில் சிலருக்குப் பகை உணர்வு பிடிக்கும். நட்புணர்வு கடிக்கும். சண்டையை விரும்பும் மண்டைக் கணம் பிடித்த இவர்கள் முடிவில் பகையை முடிக்கத் தம்மையே கெடுக்கும் விடாக் கண்டன் களாவர்.

மேலதிக அவா.
ஆற்றாமை.
பொறாமை, காழ்ப்பு.
தவறான புரிந்துணர்வு.
விட்டுக் கொடுக்காமை.
ஆணவ முனைப்பு, மேலாதிக்க எண்ணங்கள்.

போன்ற காரணங்களால் மட்டும் குரோத உணர்வுகள் தோன்றுவது என்பதில்லை. புரிந்துகொள்ள முடியாத மறைந்து நிற்கும் சில சங்கதிகளும்கூட ஒருவர் மற்றவர் மீது குரோதம் கொள்வதற்குக் காரணமாக அமையலாம்.

தவிர குரோத உணர்வுகள் தனிமனிதனுடன் மட்டும் தொடர்புபட்டதல்ல. சமூக, இன, நாடுகளிடையேயும் இவ்வுணர்வு வலுப்பட்டு நிற்கின்றது. பழைய கதைகளையும் பகைகளையும் மீட்டுப் பேசிக் குரோதத்தை மென்மேலும் தீயிட்டு வளர்ப்போர் தொகை மிகைதான்.

தங்கள் கோப தாபங்களை தமது பரம்பரைக்கே அரிய சொத்தாக விட்டு விட்டுச் செல்லும் விசித்திரப் பிரகிருதிகளும் ஏராளமாக இருக்கத்தான் செய்கின்றனர்.



RangaRakes
Tamilnavarasam.com

குரோத உணர்வின் விளைவு பற்றியே பெரும்பாலான கதைகள் பின்னப்படுகின்றன. புராண இதிகாசக் கதைகளைப் படித்தவர்கள் எல்லோருக்கும் இது புரியும். இதன் தன்மையைப் படித்தும்கூடத் தங்களைக் கெடுக்கும் மனிதர்களை என்ன செய்வது?

கதைகள் என்பது வெறும் பொழுது போக்கிற்கும் சுவாரஸ்யத்துக்கும் மட்டுமே என்றாகி விட்டது. கதைகளின் தாக்கத்தினால் எவ்வளவு பேர் மனம் திருந்தினார்கள் என்பது கேள்விக்குரிய விடயம் தான்.

இருப்பினும் நியாயபூர்வமான கோபங்களைக் காட்டியும் எவ்வித பலாபலன்களும் கிடைக்காத பட்சத்தில் நல்லோர்கள் கூட வெஞ்சினம் கொண்டு கோபங்களை நீண்ட நாள் புதைத்துக் குரோத உணர்வோடு இணைவது வேதனை தான்.

நியாயபூர்வமான உள வெளிப்பாட்டுக் கோபத்தினைக் காட்டுகையில், நியாயத்திற்கே சத்துருவானவன் இவன் என யாராவது சொன்னால் நீதி நெறியுள்ளவன் கூட நோகாமல் இருக்க முடியுமா?

இதயத்துள் பூட்டிவைக்கும் மனஸ்தாபங்களை வெளிக்கொணர இயலாதவர்கள் உள்ளுக்குள் வெந்து குரோதத்தை குருவாகக் கொள்கின்றனர். அதன் வழி புலன் செலுத்தி திறன் அழிந்து போகின்றார்கள்.





மேலும் பலவீனமானவன் நீதி கேட்க முடியாமல் மனம் துவண்டு போகும் போது சமூகத்தை சினமுடன் நோக்குகிறான். பெரிய பலசாலிகளுடன் மோதி நியாயம் கேட்க முடியாத நிலையில் வெளியே சிரித்து உள்ளே குமைந்து போகின்றவர்கள் மலிந்துபோய் விட்டார்கள்.

அமைதி பேணுதல் என்பது உள் மனதுள் மனம் குமுறுதல் அல்ல. பகை மறந்து உள்ளத்தைத் தெளிவாக வைத்து இருத்தலாகும். வேறு வழியின்றித் தன்னை வருத்தி பொய்யாகப் புன்னகை செய்யக்கூடாது. இந்தச் செய்கை சதாகாலம் உள் நின்று மாறா தரணமாகி விடுமன்றோ? இது பழியுணர்வை மேலோங்கச் செய்துவிடும். எதிரியை மடக்கத் தருணம் வரும் போது பேயாக உருக்கொண்டு தாக்கும் போது மனிதன் மனிதனாக இருப்பதேயில்லை.

- மன்னிக்கும் மனப்பாங்கு
- ஆன்ம நேயம், அன்புணர்வு,

போன்ற இயல்புடைய மாந்தர் வாழ்வில் குரோதம் வக்கிரப்பட்டுவிடும். அதாவது இல்லாது அற்றே போய் விடும். ஒரு சிறிதளவு பகையுணர்வுகூட ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மனித இயல்பை மாற்றவல்லது. அறிந்து கொள்வோம்!

ஆயினும் தீயவர்கள் செய்யும் செயல்களுக்காக அவர்களை ஒடுக்கி உண்மையை நிலைநாட்ட எடுக்கும் முயற்சிகள் வன்மமோ குரோதமோ அல்ல.



RangaRakes
Tamilnavarasam.com

சில தீயோரை உடன் ஒடுக்க முடியாது போனால் காலம் காத்திருந்தே அவர்களைத் திருத்த முடியும். இந் நடைமுறைகளைக் கையாளும் போது அதைப்பக்குவமாக படிப்படியாகக்களைய முனைதல் வேண்டும்.பொதுவாகச் சத்தியத்தைப் புரட்ட எண்ணும் எத்தர்கள் தங்களை மற்றவர்கள் நியாயபூர்வமாகப் பாடம் புகட்ட எண்ணினாலும் அது அடாத செயல், வன்மம், பழைமைப் பகை என்றுதானே பிரசாரம் செய்கின்றார்கள்?

திருந்துபவர்க்குச் சந்தர்ப்பம் அளிக்கும் காலத்தையே தமக்கு மேலும் துர்ச்செயல்களைச் செய்வதற்கான அனுமதி என எண்ணுபவர்களும் உளர். அடித்து விட்டு அழுகின்ற குற்றவாளிகளும் இருக்கின்றார்கள்.

பொதுவாகப் புரிந்துணர்வு இல்லாதபோது இரு சாராரிடத்தே சந்தேகம் வலுப்பட்டு முடிவில் பகையாக மாறி விடவும் இடமுண்டு. நீண்ட காலத்து நண்பர்கள், உறவினர்களிடையே பழகும் போதுகூட சில எதிர்பாராத நிகழ்வுகளால் சந்தேகம் துளிர்விட ஆரம்பித்து விடுகின்றன.

எப்போதாவது அந்நிலை எமக்குத் தோன்றியதும் உடன் அதுபற்றிச் சம்பந்தப்பட்டவரிடம் பக்குவமாகக் கலந்து பேசி விட வேண்டும். மேலும் இது பற்றிய பிரச்சனைகளை உங்களால் தீர்க்க முடியாத பட்சத்தில் இது விடயத்தைப் பகிரங்கப் படுத்தாது நம்பிக்கையானவர்கள் மூலம் தொடர்பு கொண்டு பிரச்சினைகளை களைந்தேயாக வேண்டும்.





வெறுமனே நாம் மௌனமாக இருந்தால் எங்கள்மீது தப்பு அபிப்பிராயம் கொள்பவரின் எண்ணங்கள் தவறாக மாறுபட்டு, வீண் மனஸ்தாபங்கள் தான் மிஞ்சும். முடிவில் அது பகையாக மாற இடமுண்டு அல்லவா?

எங்கள் மௌனத்தால் பிறர் சித்திரவதைப்படக் கூடாது. கோபத்தைக் காட்ட நீண்ட நேர மௌனத்தைத் தவிர்த்து விடுங்கள். ஒருவரை எமது வழிக்குக்கொண்டு வரல் என்பது மௌன வன்முறை எண்ணங்கள் அல்லவே அல்ல. இன்னுமொரு விடயம் கோபம் வேறு, குரோதம் வேறு. எமக்குப் பிடிக்காத விடயத்தை பார்க்கும் போது அல்லது எமக்கு வேண்டப்படாத வேலைகளை மற்றவர்கள் செய்யும் போது இயல்பாக எழும் உணர்ச்சி கோபம் ஆகலாம். இந்த உணர்வு கூட எல்லோர்க்கும் உடனடியாக வர வேண்டும் என்பதுமில்லை.

ஆனால் குரோத உணர்வு வன்மஉணர்வு, மிகையான, வேண்டத்தகாத பழைய பகையுணர்வு பொறாமை, வக்கிரபுத்தி போன்ற ஏற்கனவே எம்மால் சொல்லப்பட்ட காரணிகளாலும் உண்டாவதாகும். ஆத்திரம், கோபம் என்கின்ற சாதாரண தற்காலிக நிலை உணர்ச்சிகளை நாம் குரோதத்துடன் இணைத்துப் பேச முடியாது.

ஆயினும் நீண்டகால பகை கோபத்தின் சிறு எரியூட்டலால் எழுவதும் உண்டு. எனவே ஆரம்பத்தில் இருந்தே எமக்கு நாமே உள் இருத்திக்கொள்ள வேண்டியது



RangaRakes
Tamilnavarasam.com

"மனத்தை நாமே வசம் செய்யும் பக்குவத்தினை வளர்க்கப் பழக வேண்டியதேயாகும்". விரும்பும் கலைகளில் ஈடுபடல், பிரார்த்தனைகளில் ஈடுபடல், தியானம், அமைதியான இடங்களில் மௌனநிலை சிறந்த நூல்களைப் படித்தல் போன்ற விஷயங்களில் புலனைச் செலுத்தினால், அநாவசியமான பிரச்சனைகளில் நுளைந்து கொள்ள, உள்ளம் இடம் கொடுக்காது.

தீராப்பகை, போராய் முடியும் என்பர். இந்நிலை விரும்பத்தக்க ஒன்றா? இருசாராரிடம் பகை வளர்ப்பது நல்லது என எண்ணுபவர்கள் இவர்களைப் பிடிக்காத எதிரிகளே, என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் முதலில் புரிந்து கொள்ளல் வேண்டும்.

"பகை" மனித தகைமைகளைக் குறைக்கும், சில சமயம் இழக்கவும் வைக்கும்.

தேவையற்ற காரணங்களைக்கூறிக் கோபங்களைக் கிளறி வளர்த்தல் வளமான வாழ்விற்குக் குழிபறிப்பது போல் அல்லவா? வஞ்சகம், அடுத்துக் கெடுத்தல், அநியாயம் புரிதல் என்ற சொல்லே ஒருவருக்கும் பிடிப்பதில்லை. ஆனால் அச்சொல்லைச், செயலைத் தீயவை என அறிந்தும் மனக்குரோதம் காரணமாக இத்தகைய குறுக்கு வழி நெறி கெட்ட செயலைச்செய்வது மனச்சாட்சிக்கு விரோதமான செயல் என ஏன் புலப்படுவதில்லை? மதயானையைக்கூடச் சின்னஞ்சிறு எறும்பு அலற வைக்கும்.





சிறுகுரோத உணர்வு மனதுள் புகுந்தாலும் நிம்மதியின்மை மனிதனை முடக்கும். மலர்ப்படுக்கையே ஆயினும் சிறு துரும்பு உறுத்தினால் உறக்கம் உவப்பாக அமையுமா?

எனவே சின்னக் குரோதங்களையும் சம்பாதித்தல் வேண்டாம். அன்பு எனும் சுகந்த வாசனையைத் தேட முனையும் நாம் கந்தக வாசனையை முகர்ந்து கொள்ள முனையக்கூடாது.

விரோதம், சரீரத்திற்கு எதிரி!

மனதை எரித்து, பழிச் செயலுக்கு அழைத்துச் செல்லும் கருமைக் கருவி!

மன்னித்தலும் மறத்தலும் தீவினையாளரையும் சிந்திக்க வைக்கும். ஒரு தடவையாவது பரீட்சார்த்தமாக ஒருவரையும் எதிரி எனக்கருதாது அவர் செயலை மன்னித்துப் பாருங்கள். கொடுமதியாளரும் கூடப் படிப் படியாகத் திருந்த உங்கள் கருணை மனம் வழி கொடுக்கும்.

இருக்கும் காலத்தில் மற்றவரைச் சந்தோஷமாக வாழ வைப்பதும் நாமும் அவ்வண்ணம் சமூகத்துடன இணைந்து மகிழ்வுடன் வாழ வேண்டியதே வாழ்வின் நற்பேறு ஆகும்.

மலரை விட மனித மனம் மென்மையானது. தனக்கு எனத்துன்பம் வரும்போது அது தவிக்கின்றது. எனவே பிறர் இதயத்தில் உறுத்தலை ஏற்படுத்து முன் தன்



RangaRakes
Tamilnavarasam.com

நிலை அறிவது மானுட தர்மம் என நோக்கல் வேண்டும். அன்பினைப் பகிர்ந்து கொள்ளப் பிரியப்படுபவர்கள். இதயத்தை இரும்பாக்கிக் கொள்ள விரும்புவார்களா?

நன்நெறிகளைக் கடைப்பிடிப்பதில் நல்வைராக்கி உணர்வும், பிறரை மதிக்கும் விடயத்தில், நோக்கும் பாங்கில், வானிலும் பரந்த அன்பு நிலையில் எம்மை உருவாக்கினால் குரோத உணர்வுகள் சரிந்து சாம்பராகும்!

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
30-07-2006







# சலனம்

இளவயது சலனங்கள் முதுமையைப் பாதிக்கின்றன. பால்ய வயதில் தமக்குரிய இளவயது பருவமாற்றத்தின் காரணமாக இனக்கவர்ச்சி வசமாவதுமுண்டு. தம்மோடு ஒத்த இளம் வயதினரின் சேர்க்கையால் தூண்டுதலால் பல வேண்டத்தகாத செயல்களில் ஈடுபடுவதுமுண்டு. அந்நேரங்களில் இவை தவறாகத் தெரிவதுமில்லை. பெரியவர்கள் பெற்றோர்கள் இவர்களின் நடத்தைகளைக் கண்டறிந்து களைதல் வேண்டும். பண்பு என்பது பொதுவான உன்னதநிலை. ஆண், பெண் என்ற இருபாலாருமே பண்புடன் வாழுதல் வேண்டும். பண்பு நெறி பிறழ்தல் ஆண்களுக்குரிய உரிமையுமல்ல. ஆனால் பெண்கள் செய்யும் சிறுதவறுகளே பெரிதாகப் பேசப்படுகின்றன. சலனம் இல்லாது உள்ளத்தை நிலை நிறுத்தல் சிறப்பு!

ஒரு கணப்பொழுது சலனம் ஏற்படுத்துகின்ற விளைவு, பல ஆண்டுகள் வாழ்ந்த வாழ்வின் பெருமையைக் கருமையாக்கி விடும்.



RangaRakes
Tamilnavarasam.com

உறங்கிக் கிடக்கும் விகார ஆசைகள் திடீர் என விழிப்புற்று எழுப்பி விடுகின்ற பேரதிர்வுகள் பரிதி முன் பஞ்சாக எரித்துவிடும் ஆற்றல் மிக்கது.

சலனம் சபலம் வேண்டப்படாத ஒன்றுதான். இவை சாமான்யரின் அறிவு நிலைக்குச் சவால் விடுகின்றது. தேவையற்ற ஆசைகள் அபிலாசைகளுக்காக மனம் சலனப் பட்டு அலைபாயத் தேவையில்லை.

முறையற்ற விதத்தில் தேவைகளைத் தீண்ட நினைக்கும் போது அது சலனமாகின்றது. தகாத எண்ணங்களின் பலாபலன் நச்சு மழையே பொழிவது போலத்தான். எதையும் அனுபவித்து விட வேண்டும் என எண்ணுபவர்கள் அதற்கான முயற்சியில் ஈடுபடும் போது குறுக்கு வழி ஆசைகளால் நெறி பிறழும் விதத்தில் தம்மை ஆட்படுத்திக் கொள்கின்றனர்.

நல்ல மனிதர்கள் வாழ்வில் சோதனைகள் தொடர்ந்தும் அல்லல்படுத்துகின்றபோது தமது மனோதிடத்தினால் தங்களை ஆசுவாசப்படுத்தி விடுகின்றனர். "வேண்டாம் எந்த நிலையிலும் நான் சிந்தனை தடுமாறாதவனாக எந்தச் சோதனையையும் எதிர்கொள்வேன்" எனத்திட சங்கற்பம் பூண்டு விடுகின்றபோது வரும் துன்பங்களை வெறும் சம்பவங்களாகத் தூக்கி எறிந்தே விடுகின்றனர்.

எனினும் விதிவிலக்காக சிலர் "எவ்வளவு நேர்மையாக வாழ்ந்தேன். எனக்கு எதற்கு இந்தச் சோதனைகள்.





இனிமேலும் பொறுக்க முடியாது. என்னைச் சார்ந்த, என்னையே நம்பிய குடும்பத்தினர்க்காகக், கண்டபடி நடந்தால் தான் என்ன"என்று சலனப்படுவோரும் உளர்.

தொடர்ச்சியான மன உளைச்சல்கள் மனிதர்களைப் பாதிப்படைய வைப்பது ஒன்றும் புதுமையுமல்ல. இது ஒரு துர்ப்பாக்கிய நிலைதான். உறுதியான நிலையில் உள்ளவன் சலனங்களைச் சந்திக்கச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தவே மாட்டான்.

கொஞ்சம் மது அருந்திப் பார்த்தால் என்ன? பணத்தை ஈட்டுவதற்கு திருட்டுத் தொழில் செய்தால் என்ன? மனதுக்குப் பிடிக்காதவர்களைத் தந்திரமாக அழித்தால் என்ன என எண்ணுபவர்கள் ஆரம்பத்தில் இத்தகைய செயல்களைச் செய்ய அச்சப்படுவார்கள். எனினும் அரை குறை மனதுடன் தீய செயல்களை செய்ய ஆரம்பித்து அது சிலசமயம் வெற்றி பெற்றதும் தொடர்ந்து தமது காரியங்களை மெதுவாக விரிவுபடுத்துவார்கள். முடிவில் அதுவே அவர்களின் முழுநேரத் தொழிலாகி ஈற்றில் அழிந்து போவார்கள்.

பால்ய வயதினர் தமக்குரிய இளவயது பருவ மாற்றத்தின் காரணமாக இனக்கவர்ச்சி வசமாவதுண்டு. இதனால் தம்மோடு ஒத்த வயதினரின் சேர்க்கையால் தூண்டுதலால் பல வேண்டத்தகாத செயல்களில் ஈடுபடுவதுண்டு. இவையெல்லாம் அந்த வயதில் ஒரு தவறாகவே



RangaRakes
Tamilnavarasam.com

தெரிவதுமில்லை. அவர்கள் அதைப் பொருட்படுத்துவது மில்லை. எவராவது அவர்கள் செயலைத்தட்டிக் கேட்டால் பெற்றோர், உற்றார், பெரியோர் எவரையுமே உதாசீனம் செய்தும் விடுகின்றனர்.

இளவயது சலனங்கள் முதுமையைப் பாதிக் கின்றன. இதில் குறிப்பிடத்தக்கவிடயம் என்னவெனில் வயது முதிர்ந்தவர்களில் சிலர் இன்னமும் பாலியல் பலவீன சேஷ்டைகளில் இளவயதினரைவிட மோசமான தீவிர வாதிகளாக இருக்கின்றனர்.

- ❖ சின்னவயதில் இருந்தே கட்டுப்பாடான வாழ்க்கையை வாழ்ந்து கொள்ளாமை.
- ❖ நிறைவேறாத பாலியல் ஆசைகள்.
- ❖ மிதமிஞ்சிய உணவு, குடிப் பழக்கம்.
- ❖ முதுமை வயதிலும், தன்னை ஒரு கதாநாயகனாகக் காட்டிக் கொள்ள எண்ணும் கோணங்கித்தனமான எண்ணங்கள்.

இத்தகைய மோசமான பேர்வழிகளைப் பொது இடங்களில்கூட நீங்கள் சந்தித்திருக்கலாம். இத்தகையவர் களாலும் மற்றும் வேறு சாதாரண இள வயதினராலும் பாலியல் உணர்வு தொடர்பான சலனங்களால் ஏற்படும்



RangaRakes



விளைவுகளால் நடக்கின்ற குற்றச்செயல்களை உலகம் நன்கு அறியும். கொலை, களவு, கற்பழிப்பு, ஏமாற்று மித மிஞ்சிய மதுபோதையின் தாக்கங்கள் பல ஆரம்பத்தில் சிறிதளவாகவே மனதுள் துளிர்விட்டு அது நச்சு மரமாக வளர்ந்து கொடும் பாதகர்களாக அவர்களை மாற்றி விடுகின்றது.

உளரீதியான எண்ணங்கள் பின்பு உடல் ரீதியாகவும் ஒருவனை மாற்றி விடுகின்றது. தகாத உறவுக ளால் நிகழ்காலத்தின் தேவைகளை மட்டும் பிரதானமாக முன் நிலைப்படுத்துபவர்கள் முடிவில் நிகழ்காலத்தை மட்டுமல்ல, தமது எதிர்காலத்தையும் தம்மைச் சார்ந்தோரின் எதிர்காலத்தினையும் கேள்விக் குறியாக்கி விடுகின்றனர். இல்லையில்லை, நிர்க்கதிக்கே ஆக்கிக் கொள்கின்றார்கள்.

பண்பு என்பது ஒரு பொதுவான நிலை. ஆண், பெண் இருபாலர்க்கும் இது விடயத்தில் வெவ்வேறான கொள்கைகள் இல்லவேயில்லை. ஆண் பாலார் சபலப்பட்டு தப்புச் செய்தால் அவன் ஆண் எனவே பெரிதுபடுத்தத் தேவையில்லை. ஆனால், தெரிந்தோ தெரியாமலோ ஒரு பெண் சந்தர்ப்பவசத்தால் அவள் கற்புக்குப் பங்கம் ஏற்படும் போது அவள் சோரம் போனதாகக் கூறிவிடுகின்றனர். அவள் விரும்பாமலே காமுகனால் கற்பழிக்கப்பட்டால் அவளைக் கற்பிழந்தவளாகக் கூறுதல் தகாது. கொடுமை இழைக்கப் பட்டவர்க்கு பரிதாபப்படாமல் அவர்கள் நெஞ்சங்களை



Tamilnavarasam.com

நெரிக்கலாமா? இவர்கள் விடயத்தைக் கருணையுடன் நோக்குதலே மானுடதர்மம் ஆகும்.

அதே வேளை இன்று கண்டபடி நடக்கும் ஆண்கள், பெண்களுடன் முறைதவறி நடந்தால், அதன் பெயர் என்ன? அவனும் சோரம் போனவனாகவே கருதப்படுவான். அதாவது கற்பிழந்தவன் என்பதேயாகும். எனவே சோரம் போதல் என்பது கூட ஒழுக்கம் பிறழ்ந்த ஆண், பெண் இருசாராருக்கும் பொதுவானதே!.

அவலத்திற்குட்பட்ட பெண்ணைப் பற்றிக் கரிசனைப்படாமல் கண்டபடி நடக்கும் ஒருவனுக்காக ஆதாரங்களைக் கோர்ப்பது என்ன நியாயம் ஐயா?

எனினும் முறைகேடான இச்சைகள் மிலேச்சத்தனமானதும் வெட்கப்படத்தக்கதுமாகும் ஒரு தனிமனிதனின் சபலங்களும் முறைகேடான எண்ணங்களும் உலக சரித்திரத்தையே மாற்றியிருக்கின்றன. புராண இதிகாசங்களில் கூட அற்ப சலனங்களால் மன்னர்கள் தமது நாட்டையே கலங்கடித்திருப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது. நிதான புத்தியைக் கொண்டிராதவர்களின் போக்கு சமூக நடைமுறைகளைக் கூடக் கேலி பண்ணுவதாகவே அமையும். தமது சலன புத்தியால் வேளைக்கு ஒரு கதையும் கொள்கையுமாக வாழ்ந்து தம்மையும் பிறரையும் அவலத்திற்காளாக்கின்றனர்.





சலனம் என்பது எமக்கு ஏற்படும் மனசின் சலசலப்பு என உடன்புரிந்து அதனை வெட்டிக் கொள்ளுங்கள். சிலநேரம் ஒரு விடயத்தை எப்படிக்கையாளுவது என்பதில் கூட மனம் சஞ்சலப்படுவதுண்டு. இது முடிவு எடுக்கும் விடயத்துடன் தொடர்புபட்டது.

சலனமும் சபலமும் மனித நடத்தையுடன் தொடர்புபட்டதாகும். நிர்மலமான நீரில் கல்லை விட்டு எறிந்தால் அது கலங்குவது போல நல்ல மனதற்குள் தீய சபலத்தை உள்நுளைத்தால் மனம் கலங்கிவிடும். நாம் தொடர்ந்தும் கற்களாகிய தீய எண்ணத்தினைப் புகுத்தாது சற்று நேரம் மௌனமாகி நிதான வசப்பட்டால் நீர் மீண்டும் அமைதியாகித் தெளிந்து விடுவது போல் மனமும் நிர்மலமாகிவிடும்.

எனவே தெளிவு நிலைக்கு வர உங்களை அனுமதியுங்கள். மனதை அலைக்கழிக்கும் நிலை வரு முன் நிதான புத்திக்கு இடம் கொடுங்கள். எந்நேரமும் அமைதியான, திடமான, நிதான புத்திக்காரரை கண்ட கண்ட விடயங்களும் உடன் தொட்டுவிடுமா?

காதல் பற்றிப் பலர் கூறுவார்கள். கண்டதும் காதல் ஏற்பட்டதாகப் பெருமையாகச் சொல்லிக்கொள்வர். இன்னும் சிலர் நான் வருடக்கணக்காக முயன்று தான் காதல் கொண்டேன் என்பார்கள். எனினும் யார், எவர் காதலில் வெற்றி பெற்றுத் திருமணம் செய்வது ஒன்றும் பெரிது அல்ல. இவர் தமது சொந்த வாழ்வில் இதே அன்புடன்



RangaRakes Tamilnavarasam.com

இன்புற்று வாழ்கின்றார்களா, கருத்தொருமித்து எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றார்களா என்பதே முக்கியமான விடய மாகும் வெறும் சபலத்தினால் மனம் உந்தலினால் இரு சாராரும் நொடிப் பொழுதில் காதல் வசப்படுவது எல்லாத் தருணத்திலும் சரிப்பட்டு வருமா?

தெய்வீகக் காதல், இலட்சியக்காதல் என்பது எல்லாம் மனம் பொருந்துதலில் உள்ள வல்லமையில் உள்ளதே! புரிந்து கொள்வார்களா! ஆழ்கடலுக்குள் மூழ்கி எழுவது சுலபம். கருமனதுடன் உருவான சபலத்துடன் வாழ்வில் எழுவது கடினம். ஏன் முடியவே முடியாது. அவர்கள் திருந்தினால் ஒழிய.

தீயைப் பற்ற வைத்த பின் எதில் அதைப் பொருத்துவது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். எமது சக்தியைக் கண்ட இடத்திலும் பிரயோகித்து விடக்கூடாது. சலனத்தினுள் சஞ்சாரம் செய்வது சதா காலமும் மன அழுத் தத்துடன் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் உட்படுத்தி விடும். சீரான பிரச்சினைகள் அற்ற சுமுகமான வாழ்க்கை யைத்தான் தேடிக்கொள்ளல் வேண்டும். அதை விடுத்துக் குழப்பத்தையும், சபல சலனங்களுக்குள் ஏன் வலிந்து விழவேண்டும்?

சுழலாத மனமும், நிலையான குறிக்கோளும் உள்ள வாழ்வுதான் வாழ்வு. துன்பப் பிரியர்களாகக் கண்ட தையும் கண்டு இச்சைப்படுதல் அவர்களை வாழ்வின் உச்ச நிலைக்கு இட்டுச் செல்லாது.





விதிவிலக்கான இயற்கை நிகழ்வுகளையும் மனித பலவீனங்களையும் சாக்காகச் சொல்லியே மனிதன் வாழ்ந்து விட முடியுமா? கட்டாயம் தப்பித்தேயாக வேண்டும். எதிர் நீச்சல் போட்டுத்தான் ஆக வேண்டும். வில்லங்கமான எண்ணங்களை மெல்லன வெட்டாது சட்டெனக் கத்தரித் தலே மேலானது. சிறு பொறியைப் பெரும் தீயாக்கி அதனுள் பிரவேசித்தல் தகாது. மலரனைய வாழ்விற்கு உரம் கொண்ட நெஞ்சுறுதி கொண்டால் சலனங்கள் சிதறடிக்கப்படும்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
16-07-2006



RangaRakes Tamilnavarasam.com



# கணவன்

"கண்" அவன் என்பதே "கணவன்" என்பதாயிற்று. பொறுப்புக்களை வெறுப்பின்றித் தன்னால் இயன்ற முழுச் சக்தியுடனும் தூய சிந்தனையுடன் செய்து முடிப்பவனே நல்ல கணவன் என்கின்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொள்கின்றான். ஒரு "வீடு" என்பது உலகின் குட்டி ராஜ்ஜியம் தான். இங்கிருந்துதான் நல்ல பிரஜைகள் பிரசவிக்கப்படல் வேண்டும். கணவனும் மனைவியும் சம பங்காளிகளாக உலகிற்கு நல்ல சற்புத்திரர்களை உருவாக்குவதுடன் முன்னோடிகளாகவும் வாழ்ந்து காட்ட வேண்டியவர் களாயுள்ளார்கள். மேலாதிக்க உணர் வின்றித் தன் குடும்பத்தினைப் பொறுமையுடன் தாங்குபவனே அன்பான கணவனுமாவான்.

கணவன் என்பவன் குடும்பத்தின் கண் போன்ற வன். கண் அவன் என்பதால் கணவன் என்று கூறப்படு கின்றான். மனைவி மக்களிடம் பூரண உரிமைகளைக் கொண்டவனாகவும் அவர்களின் இன்ப துன்பங்களில் அன்போடு பங்கு கொள்பவனாகவும் இவன் இருக்கின் றான்.





குடும்பத்தின் தலைவனாக இருந்தால் மட்டும் ஒருவன் சிறந்த புருஷனாக இருக்க முடியாது. பெயரளவில் தலைவனாகவும் செய் கருமங்களில் நல் வாழ்வில் நுழையாதவனாகவும் இருந்தால் அவனுக்குக் குடும்பம் கொடுமையாகிவிடும்.

பொறுப்புக்களை வெறுப்பின்றித் தன்னால் இயன்ற முழுச்சக்தியுடனும் தூய சிந்தனையுடன் செய்து முடிப்ப வனே நல்ல கணவன் என்கின்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொள்கின்றான்.

குடும்ப விளக்கான மனைவிக்கு எண்ணை போல் அவளுடன் சேர்ந்து ஒளியூட்டுவதால் அவர்கள் குடும்பம் மட்டுமல்ல எதிர்கால புதுச் சமூகத்தினருக்குக்கூட நல்வழி காட்டுகின்றனர். கண்டிப்பும் திண்மை நெஞ்சும் நிறைந்த வனே ஆண்மகன் என்று கருதப்பட்டாலும் அவன் உள்ளே அன்பும், பண்பும், அனுசரணை உணர்வும் வலுப்பட்டாலே குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்றவனாக அங்கீகரிக்கப் படுவான்.

குடும்பம் ஒரு கோவில் என்று நாம் கூறுகின்றோம். எனவே சிறந்த முறையில் பேணப்படாத இல்லத்தின் நடை முறைகளால் உடைபடுவது அங்குள்ள அனைத்து ஜீவன்களும் என்பதை பாதிப்படையும் உறுப்பினர்கள் உணரல் வேண்டும்.



RangaRakes

Tamilnavarasam.com

ஒழுங்கமைப்பு என்பது ஒரு நிறுவனத்திற்கோ அன்றி அரசாங்கங்களுக்கோ மட்டும் அல்ல. ஒரு வீடு உலகின் குட்டி ராஜ்யம் தான். இங்கிருந்து தான் நல்ல பிரஜைகள் பிரசவிக்கப்படல் வேண்டும். இங்கிருந்துதான் நல் ஆசான்களான கணவனும் மனைவியும் புத்திஜீவிகளை ஆரம்பத்திலிருந்தே படைத்து உலகிற்குக் கொடுக்க வேண்டும்.

எனவே இதுவிடயத்தில் மனைவியை விடக் கணவன் தன் பங்களிப்பினை கூடுதலாகச் செய்ய வேண்டியவன் ஆகின்றான். சதா வீட்டுவேலைகள், குழந்தை குட்டிகளுடன் உழைக்கும் மனைவிக்கு வெறும் கட்டளையிடும் அதிகாரியாக மட்டும் நின்றுவிடாது. தன் முனைப்பு அல்லது ஆணவ நிலை கடந்து பொறுப் பாற்ற வேண்டியது கணவனின் பெருங்குணமாக அமைதல் சிறப்பானதாகும்.

பொதுவாகத் தாயைவிட தகப்பனாரிடமே பிள்ளைகள் பயப்படுவதும் கீழ்படிவதும் சகஜமானது ஆகும். வீட்டின் தலைவன் தனக்குரிய பாசத்திற்கு அப்பால் நின்று எதிர்காலம் பற்றிச் சிந்திக்க வேண்டியவ னாகின்றான். அன்னையர்களுக்குக் குழந்தைகளின் எதிர்காலம் பற்றி எவ்வளவு தான் கற்பனை இருந்தாலும் பிள்ளைகளின் நடத்தைகளை சற்று இறுக்கமாகக் கண்டிக்கும் திறன் அவள் பாசமேலீட்டினால் வலு இழந்தே காணப்படுகின்றது.





இது ஒன்றும் தவறு அல்ல. தாங்குகின்ற தாய் பிள்ளைகள் மனம் சோர்ந்து விடுதலைப் பொறுப்பதில்லை. கணவனின் அதட்டல்கள் மிரட்டல்களைக் குடும்பநலன் பற்றியதாகவே என அவள் அறிவாள். இன்று எல்லை மீறுகின்ற கண்டிப்பினால் பிள்ளைகள் அப்பாக்களை வெறுப்பது நாம் பார்க்கின்ற சாதாரண நிகழ்வுகள் ஆகிவிட்டன.

வயது முதிர்ந்த பலருடன் பேசியபோது அநேகர் சலிப்புடன் இப்படிக் கூறினார்கள். எனது பிள்ளைகள் எல்லோருமே தாயாரின் பக்கமே சாய்ந்திருக்கின்றனர். எனக்காகப் பேச ஒருவருமே இல்லை. என்னுடன் இவர்கள் பேசுவதுமில்லை. இந்த வார்த்தைகளை நீங்கள் அடிக்கடி கேட்டிருப்பீர்கள். பிள்ளைகளைச் சதா மிரட்டி ஒடுக்கியே வாழ்ந்தவர்கள், முதுமைக்காலத்தில் அவர்களுடன் இசைந்தும் சற்று வளைந்தும் கனிவுடன் பேசி வாழ முடியாதவர்களாகி விடுகின்றார்கள். எப்போதுமே கடு கடுவென விடாப்பிடியாக தங்கள் குணங்களை ஆக்கிக் கொண்டவர்களைக் குழந்தைகள் ஆரம்பத்தில் இருந்தே வெறுத்திடவும் கூடுமல்லவா?

தனது உடல் உழைப்பினைக் குடும்பத்திற்காகவே செலவழித்த குடும்பத் தலைவனுக்கு காலம் கடந்தபின் பிள்ளைகளின் பிரதிபலிப்பான செயல்முறைகள் எத்துணை வருத்தத்தைத் தரும்?



RangaRakes
Tamilnavarasam.com

ஆயினும் வளர்ந்து அறிவில் முதிர்ச்சியடைந்த பலர் இன்னமும் இப்படிக் கூறுவதையும் நீங்கள் கேட்டிருப்பீர்கள். "அப்பா என்னை எவ்வளவு கட்டுப்பாடாக வளர்த்த தன் பயனை இன்று நான் உணர்கின்றேன். அன்று நான் அவரது செய்கைகளுக்காக எரிச்சல்பட்டதுண்டு. இன்று எனது மேன்மையான வாழ்விற்கு அவர் கற்றுக்கொடுத்த கட்டுப்பாடு நிறைந்த வாழ்வு முறைதான் காரணம்". இப்படிக் கூறும் பலரையும் நாம் கண்டு இருக்கின்றோம்.

தனக்கும் மனைவிக்கும் எந்தவிதமான இடைவெளி இன்றி அவளுக்குரிய விருப்பு வெறுப்புகளை உணர்ந்து சரி எனப்பட்டதைக் கூறவும் பிழையான கருத்துக்கள் செயல்களைப் பக்குவமாகக் கண்டிக்கும் ஆண்களின் ஆளுமையினால் தான் குடும்பம் எந்தக் கடும் சவால்களையும் வென்று முன் மாதிரியான குடும்பமாகத் திகழும்.

மனைவிக்குள்ள சுதந்திரத்தையும் பிள்ளைகளுக்கு வழங்கக்கூடிய உரிமைகள் விருப்பங்களையும் மனக்கிலேசம், ஆணவ சிந்தனை இல்லாமல் தன்னால் இயன்ற வரை வழங்கக் கூடிய கணவனை எந்த இல்லத்திலும் இகழ்வார் இல்லவே இல்லை.

அனேக வீடுகளில் கணவன், மனைவி, பிள்ளைகளுடன் மட்டும் வீட்டு நிர்வாகம் அமைந்து விடுவதில்லை. கணவன் மனைவியரின் உறவினர், நண்பர்கள் என விரிந்து பல்திசைகளிலும் இவர்களால் நன்மைகளும் சில





பிரச்சனைகளும் வருவது இயல்பு. சமூக பிணைப்பு பற்றியும் அதன் தாத்பரியம் பற்றியும் அறிந்து கொண்டு நாம் ஊர் உறவுகளை விலக்கித் தனியாகவே நிம்மதியாக வாழ்ந்து விட முடியுமா?

இன்று ஆண், பெண் இருசாராருமே வெளியுலகில் பேதமின்றி கடமை செய்து வந்தாலும் கூட கணவனிடமிருந்து பல எதிர்பார்ப்புக்களை மனைவி விரும்புகின்றாள். அன்பான பரிவான மனைவியின் அணுகுமுறைகளால் ஈர்க்கப்பட எந்தக் கணவனும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்தே வாழ்ந்து காட்டுகின்றான். இவ்வண்ணமே கணவன் பொருட்டுத் தனக்கு இசைவில்லாத சில விஷயங்களுக்கும் விட்டுக் கொடுத்து மனைவி தன் தியாக சிந்தனை மூலம் அவன் வழி நடக்கின்றாள்.

ஆரம்ப காலத்தில் மிகவும் அகம்பாவ உணர்வுடன் மனைவியின் உறவுகளை வெறுத்த ஆண்கள் கூடக் காலப்போக்கில் மனைவியின் அன்பினால் முழுமையாக மாறிவிடுவதும் உண்டு. இன்று தனது குடும்பத்தைப் போலவே மனைவியின் சகோதரிகளை அதாவது மைத்துனி மைத்துணர்களின் நல்வாழ்விற்கும் தம்மையே அர்ப்பணித்துத் தியாக வாழ்வு வாழும் மனிதர்கள் எவ்வளவோ பேர் உண்டு தெரியுமா?

நல்ல நம்பிக்கை ஊட்டத்தக்க ஒருவனாக இல்லாது விட்டால் குடும்பம் என்கின்ற கட்டமைப்புக் குலைந்தே



RangaRakes
Tamilnavarasam.com

போகின்றது. சைனியம் பின்னே செல்ல முன்னே செல்லும் தலைவனால்தான் படையை வழிநடத்த முடியும்.

- ❖ நம்பிக்கையீனமான பேச்சுகள்.
- ❖ சந்தேகம், கரவு எண்ணங்கள்.
- ❖ மிதமிஞ்சிய அச்ச உணர்வுகள்.
- ❖ தாழ்வு மனப்பான்மை.
- ❖ மிகையான கோபம்.
- ❖ குடும்பத்திற்குள்ளேயே பொறாமை உணர்வு.

போன்ற குணங்கள் அமைந்து விட்டால் குடும்பத்தினை ஒழுங்காக வழி நடத்திட முடியாது. தன்னை மட்டுமே அதிபுத்திசாலியாக எண்ணி குடும்பத்தில் தான் கூறிய கருத்துக்களை மட்டும் புகுத்தி இம்சைப்படுத்தினால் ஆணுக்குரிய வலுவை அவனாகவே இழந்த வனாகக் கருதப்படுவான். தவிர தான் எந்த உயர் பதவி களை வகித்தாலும் அதே அதிகாரங்களை வீட்டில் காட்டுவது முட்டாள்தனமான செயல் தான்.

இன்று பல குடும்பங்களில் ஆண்கள் குடித்துக் கூத்தடிப்பது கண்டபடி வார்த்தையாடல்களை தமக்குரிய உரிமைகளாக எடுத்துவிடுகின்றனர். வீட்டிற்குள் குமுறும் குழந்தைகள், மனைவியின் கெஞ்சல்களை இவர்கள் பொருட்படுத்துவதுமில்லை.

எத்தகைய அந்தஸ்தினைச் சமூகத்தில் எவர் பெற்றிருந்தாலும் குழப்பம் மிகுந்த குடும்பத்தில் அவன் வாழ்ந்தால் எல்லா அந்தஸ்துக்களுமே இருந்தும் அஸ்த





மனமான மனோ நிலையிலேயே வாழ வேண்டியது தான். இந்நிலை, சுதந்திரமற்ற, தன் சந்தோஷங்களைப் பூட்டி வைத்திருக்கும் சிறை வாழ்வு தான்.

மிகவும் விசித்திரமான மனிதர்களைப் பார்த்திருப் பீர்கள். குடும்பத்தினுள் வாழ்ந்துகொண்டே விரக்தியுட னேயே பேசுவார்கள். ஒட்டி வாழமாட்டார்கள். வெட்டிப் பேசுவார்கள். சில வேளை தாம் சந்நியாசம் பெற்று ஓடிப் போகவுள்ளதாகவும் கூறுவார்கள். ஏன் அப்படியே குடும் பத்தை விட்டு ஓடியவர்களும் உண்டு.

ஆன்மீகம் என்பதன் அர்த்தம் புரியாமல் குதர்க்க சிந்தனையுடன் தம்முள்ளே மோதும் இந்த ஜீவன்களை என்ன என்பது? கடமை என்பதன் அர்த்தம் விளங்காமல் தப்பிப்பது என்பது தனக்குள்ள தந்திரம் என்ற குறிக்கோளு டன் இவர்கள் நடிப்பது இவர்களுக்குப் புரியாதா?

கடமை முடிக்காதவனைக் கடவுள் ஏற்பதில்லை. அவர்களைக் கடவுளுக்கே பிடிப்பதும் இல்லை. பிரச்சனை களுக்கு முகம் கொடுப்பவனே மனிதன். ஆணோ, பெண் ணோ, எவராயினும் சரி குடும்பம் என்கின்ற பிணைப் பில் ஒன்றுபட்ட பின் இரண்டு வித மனோ நிலையில் சஞ்சரித்து வாழ இயலுமோ?

தொழில் புரிகின்ற கணவனும் மனைவியும் சம பங்காக வீட்டு வேலைகளைச் செய்து வருவதை நாம் நன்கு



RangaRakes

Tamilnavarasam.com

அறிவோம். மாறிவரும் உலகத்தில் பழமைவாதம் பேசித் தற்போதைய கணவன்மார்கள் பிணக்குற்று வாழ்வதுகூட அரிதாகி விட்டது. வீட்டில் குழந்தைகளுக்கான அவசிய பணிகளுக்காக கணவன் மனைவி ஒருவர் மாறி ஒருவர் அலுவலக விடுமுறை பெற்று குழந்தைகளைப் பராமரிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்களே!

எனினும் மனைவியரைக் கொடுமைப்படுத்துகின்ற கணவர்மார்கள் பற்றிய செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பவர்கள் சில இல்லங்களில் கணவர்மார்களைக் கஷ்டப்படுத்தும் மனைவியரை ஏன் கண்டு கொள்வதில்லை எனவும் ஒருசாரார் சற்றுக் காட்டமாகவே கேட்பதுண்டு.

செய்கின்ற செயல்களுக்கான பலாபலன்களை எத்தரத்தாரும் அனுபவித்தேயாக வேண்டுமென்பதே இயற்கை விதியாகும். இன்று எதிர் விளைவுகள் காலதாமதமின்றியே கிடைக்கப்படுகின்றன. குடும்பத்தினை கோணலாக்கும் எவருமே நியாயவாதம் பேச முடியாது. இவர்கள் செயல் தமக்குத்தாமே செய்கின்ற கொடு வினையன்றி வேறில்லை. இவர்கள் இதனைப் புரியாமல் இருக்க முடியாது.

வீட்டின் தலைவன் எத்தரத்தில் உயர் பதவி வகித்தாலும் கூட வீட்டில் அவன் அன்பான கணவனாக பாசமிகு அப்பாவாகப் பிள்ளைகளிடத்தே நடந்து கொள்ளல் வேண்டும். கடமைப்பளு காரணமாக வீட்டில் செலவிடும் நேரத்தைக் குறைத்துக் கொள்வதனால் அந்த வீடே பெரும் பிரச்சனைக்குள்ளாகின்றது.





பிள்ளைகளின் கட்டுப்பாடற்ற தன்மையும் மனைவியின் தேவையற்ற வீண் சந்தேகங்களுக்கும் கணவன் உள்ளாக்கப்படுவதன் முதல் காரணம் வீட்டில் போதிய நேரங்களைச் செலவிடுவது இன்மையே என குடும்ப நல ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பாசம், காதல், பரிவு என்கின்றவைகள் எவருடனும் நெருங்கிப் பழகும் தன்மையினால் மட்டுமல்ல இயல்பான நம்பிக்கைகளை மற்றயவர்களின் இதயங்களில் வைப்புச் செய்வதுமாகும். இந்த முதலீடுகள் கரைவதில்லை. வளருவதுமாகும்.

வீடுகளின் உள்ளேயே விலகி அந்நியப்பட்டு வாழும் குடும்பத்தலைவன் ஈற்றில் அவன் வெளியில் இருந்து நோக்கும் பார்வையாளனாகவே கருதப்பட்டு பலவீனப்பட்டு விடுவான். உரிமைகளை அவன் தானாகவே இழந்து இறுதியில் வீட்டில் உள்ளவர்களைக் குறைகூறி வெறுப்பேற்படுத்துவனாகவும் மாறி விடுகின்றான். “எங்களிடம் அக்கறையில்லாதவர் எங்கள் விஷயங்களில் தலையிட என்ன உரிமையிருக்கின்றது”, எனத் தந்தையைக்கேட்கும் பிள்ளைகளால் மனமுடையும் நிலை உண்மையில் பரிதாபகரமானதுதான்.

நியாயபூர்வமான கணவன் நிலைபற்றி தெளிவான கருத்துக்களை நல்ல அபிப்பிராயங்களை மனைவி உருவாக்காமல் விடுவதும் கூட குடும்பத்தின் விரிசல்களை பெரிதுபடுத்தலாம்.



RangaRakes Tamilnavarasam.com

என்றாலும் குடும்ப விஷயங்களில் கருத்து மோதல் என்பது ஒரு சர்வதேசப் பிரச்சனைபோல் குடும்ப அங்கத் தினர் எடுத்துக் கொள்ளக்கூடாது. புருஷனின் மேலான குணங்களையே அதிகமாகக் கிரகித்து ஏற்று அற்பபலவீன மான விஷயங்களைப் பக்குவமாகவே இருவரும் பரஸ்பரம் பேசிக்கதைத்தால் என்ன? இதில் என்ன கௌரவ இழப்பு வந்து விடப்போகின்றது?

எந்த விதத்திலும் கணவன், மனைவியரிடத்தே ஒளிவு மறைவு கூடாது என வாயளவில் கூறாது ஆணவம், பொறாமை, சந்தேக, குரோத எண்ணங் களைக் களைந்து வாழ்வதே சிக்கலற்ற களிப்பூட்டும் வாழ்க்கையாகும்.

ஆண் என்கின்ற மேலாதிக்க நிலையில் தன்னை நிலை நிறுத்த முயலும் எவரும் பாசமும், அன்பும், பரிவும் கசிய ஆரம்பித்ததுமே இந்த இறுக்கமான வைராக்கியமான எண்ணங்களையே மெல்லெனக் களைந்து விடுகின்றான். குடும்ப நிர்வாகத்திற்கு மென்மைப்போக்கும் கடின சித்த முள்ள பக்குவம் மிகுந்த குணாம்சமும் கட்டாயம் தேவைப் படுகின்றது.

உஷ்ணத்தையும் குளிர்ச்சியையும் தேவையின் நிலைக்கேற்ப நாம் நாடுகின்றோம். கணவனின் கண்டிப்பை மனைவி வெறுப்பது எல்லா நிலையிலும் உகந்தது அல்ல.





உரிமையுடன் அவன் கண்டிப்பதையிட்டு மனைவி பெருமைப்படல் வேண்டும். அத்துடன் அவனைச் சுற்றி யுள்ளவர்களும் பாசத்தின் வலு என்ன என்பதையும் புரிந்து கொள்ளல் வேண்டும்.

அன்போடு பிணைந்த தம்பதியினருக்குப் பேதங்கள் என்றால் என்ன, எது என்பதே புரியாமல் இருக்கும். மனித குலத்தில் மட்டுமல்ல சகல ஜீவராசிகளும் தமக்குள் ஒரு பிணைப்பினை உண்டாக்கிக் கொண்டேயிருக்கின்றன. சிங்கம், புலி, பறவைகள், என அனைத்திலும் மனிதனிடம் இல்லாத விசேட குணாம்சங்களும் உள்ளன. தாயிடம் இருந்து மட்டுமல்ல தன்னை உருவாக்கிய தந்தையிடம் இருந்தும் இந்த உயிரினங்கள் தகுந்த பாதுகாப்பைப் பெறுவதை நீங்கள் அறிந்தது இல்லையா?

எனவே கணவன், மனைவி என்கின்ற அற்புத இணைப்பினுள் உள்ள புதுமைகளை இயம்பிட இயலாது. கணவன் மனைவியரிடையே உள்ள குணாம்சங்களின் இயல்புகள் கூட உலக இயக்கத்திற்கு ஏற்பவே இறைவன் உருவாக்கிவிட்டான். இதில் ஆணுக்கு மட்டும் சலுகை காட்டியதாக எண்ணவேண்டாம்.

தினக்குரல்
(ஞாயிறு மஞ்சரி)
25-06-2006



RangaRakes

Tamilnavarasam.com



# குடும்ப உறவு கற்பனை அல்ல!

குடும்ப உறவு கற்பனையல்ல. தெய்வீகமானது, அதே சமயம் இயல்பான, யதார்த்தமான சுகானுபவத்தை ஊட்டுபவையுமாகும். ஒருவரிடம் ஒருவர் அன்பு கொள்வது ஆன்மாவுடன் ஒன்றித்த தூய விடயமாகும். வெறும் கற்பனை காதல் வாழ்க்கை யதார்தத்திற்கு ஒத்துவராது. அன்புடன் கூடிய கண்டிப்பு, சின்னச்சின்ன சண்டை சச்சரவுகளும் கூடவரும். திரைப்படத்துக் காட்சிகள் போல வாழ்க்கையும் அமையும் எனச் சிலர் நம்பி ஏமாறுகின்றார்கள். மாறாத காதலுடன் வாழும் தம்பதியினர் இயம்புதற்கரிய இன்பத்தையே சாஸ்வதமாக்கிக் கொள்ளுகின்றார்கள்.

குடும்ப உறவுகள் தெய்வீகமானதும், அதேசமயம் மிக இயல்பான யதார்த்தமான சுகானுபவத்தை உண்டு பண்ணக் கூடியதுமாகும்.





எனினும் சிலர் குடும்ப உறவு பற்றி உண்மை நிலையினைத் தெரிந்துணர்ந்து கொள்ளாமல் வெறும் கற்பனையுடன், உண்மைக்கு ஒத்துவராத விஷயங்களை உள்நின்று உரைப்பதனால் ஒரு செயற்கைத் தன்மையினை உறவுக்குள் புகுத்தி உறவுகளில் குந்தகத் தன்மையை ஏற்படுத்தி விடுகின்றனர்.

ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துதல் என்பது ஆன்மாவுடன் ஒன்றித்த தூயவிடயமாகும். அப்படியிருக்க வெறும் கற்பனையோடு பின்னிப்பிணைந்த நிழல் படங்களை, கதைகளைப் பார்த்து இதுதான் குடும்ப வாழ்வு என்று கற்பனை பண்ணி விட்டார்கள்.

ஒரு அப்பாவி இளைஞர் திருமணம் செய்தார். அவர் திருமணத்தினைப் பற்றிய கற்பனைகள் எல்லாமே முழுக்க முழுக்கத் திரைப்படத்தை ஒத்ததாகவே அமைந்திருந்தது. திருமண விடயத்திலும் திரைப்படத்தில் காண்பிக்கும் காட்சிகள் தான் உண்மையான திருமண முதல்இரவு என எண்ணிக் கொண்டார்.

மனைவி பட்டுப்புடவை நகைகள் சகிதம் மெல்ல அசைந்து நடைபயின்று வளைக்கரத்தில் பால் குவளையுடன், நாணத்துடன் வருவாள். வந்ததும், கணவனின் கால்களைத் தொட்டு வணங்குவாள். அப்படியே மெல்லெனத் தனது மார்பில் பூங்கொத்தென சாய்ந்து அவள் வெட்கப்பட, ஏதேதோ வார்த்தைகள் மெல்லிய முனகலுடன் அசை



RangaRakes
Tamilnavarasam.com

போட... என்றவாறே தான் அந்த இளைஞன் எண்ணினான்.

அதுமட்டுமல்ல திரைப்படங்களில் காட்டுவது போல் மெல்லிய பின்னணி இசையுடன் அன்பு மனைவி காதல் ரசனையுடன் பாட்டு இசைப்பாள் என்றவாறு எல்லாம் கற்பனை செய்தான். ஆனால் அப்படி எதுவும் நடக்கவே யில்லை. திருமணம் செய்த முதல் நாளிலேயே மனைவி, வெட்கப்படாமல் பாட்டுப் பாடமுடியுமா என அவன் சிந்திக்க வில்லை. சற்றுக் கோபத்துடன் உடனே ஒரு பாட்டுப் பாடு என வற்புறுத்த அவள் திரு, திரு எனச் சங்கோஜத்துடன் விழிக்க மணமகனுக்கு எல்லாமே வெறுத்துப் போய்விட்டது. எப்படியோ முதல்இரவு முடிந்தாகிவிட்டது.

அடுத்த நாள் வந்தாயிற்று. அவனை, அவனது நண்பர்கள் சந்தித்தார்கள். எப்படியடா.... உனது முதல் இரவு எனக் கிண்டலடித்தார்கள். அப்போது நண்பர்கள் கேட்டகேள்வி அவனை எரிச்சலடைய வைத்துவிட்டது. "போங்கடா போங்கள்... போயும் போயும் உங்கள் பேச்சை நம்பித் திருமணம் செய்ததே நான் செய்த தப்பு. எல்லாமே போச்சு. நான் நினைத்த மாதிரி ஒன்றுமே நடக்கவில்லை. பேசாமல் யாரையாவது காதலித்துத் திருமணம் செய்திருக் கலாம். அவளாவது எனது இஷ்டத்திற்கு நடந்திருப்பாள்" என்று ஆதங்கத்துடன் கூறிமுடித்தான்.

அப்புறம் நண்பர்கள் துருவித்துருவி விசாரித்து, அவனது அறியாமையை எண்ணி நகைத்து, உண்மையான





காதல் திருமணம்பற்றி சற்று உறைக்கும்படி சொல்லி அவனைத் திருப்திப்படுத்த முனைந்தனர். இவையெல்லாம் நடந்து முடிந்து இந்த ஜோடி தற்போது குழந்தை குட்டிக ளுடன் குதூகலமாக இருப்பது வேறுவிஷயம்!

இந்தக் கதை மூலம் நீங்கள் திரைப்படங்கள், தொலைக்காட்சிகள், மற்றும் சிறுகதை, நாவல்களில் ஜதார்த்தத்திற்கு ஒவ்வாத விடயங்களை வெறும் கற்பனை என்று பெயரில் உருவாக்குவதால், பலரின் மனங்கள் மாறு படுவதை நீங்கள் உணர்ந்து கொள்ளமுடியும்.

படித்து நிறைய சாதிக்க வேண்டிய வயதில் மாயத் தோற்றங்களில் மதிமயங்கி, அறிய வேண்டியதை அறியா மல், தெளியாமல், அல்லது தெரிந்து, தெளிந்து கொள்ளவே பிரியப்படாமல் இருந்தால் எதிர்கால வாழ்வு என்னாவது?

வெறும் பணம் புரட்ட எத்தனிக்கும் பிரம்மாக்கள், பொய்யான உலகைச் சிருஷ்டிக்க விழைகின்றார்கள். மனம் முதிர்ச்சியடையாத பலர் இந்த மாயக் கற்பனையே நிஜமா னது என நம்புகிறார்கள்.

கல்வி கற்ற மகா மேதைகளை பலரும் உடன் தங்கள் மனதுள் புகுத்துவது கிடையவே கிடையாது. ஒரு விஞ்ஞானி அல்லது சிந்தனையாளர் பேராசான்களுடன் இணைந்து புகைப்படம் எடுப்பதை, விரும்புவதை விட ஒரு திரைப்பட நடிகை, நடிகருடன் சேர்ந்து புகைப்படம் எடுக்க



RangaRakes

Tamilnavarasam.com

விரும்புகின்றார்கள். இவர்களது கிறுக்கலான ஒப்பத்துடன் கூடிய வண்ணப்படங்களை வீதியோரம் வாங்கி, வீட்டில் வைத்து அழகுபார்க்கின்றனர். நடிக, நடிகர்களின் படங்கள் உள்ள அளவு பெரியார்கள் படங்கள் வீடுகளில் காணப்படுவதேயில்லை.சில இல்லங்களில் ஆன்மீகம் தொடர்பான எது வித அடையாளங்களும் காணப்படுவதேயில்லை.

ஆன்மீகம் வேம்பாகக் கசந்தால் வாழ்க்கை துன்டம் தான். உணர்வோம்!

அன்பு, தியாகம், அர்ப்பணிப்பு ஆகிய இந்தப் பண்புகள் இணைந்தால் ஒவ்வொரு தனிமனிதனும் உயர்வு அடைவான். அப்போதுதான் குடும்ப உறவின் மகத்துவம் புரியும். இதனாலேயே அவனி அன்பு, காதல். பரிவு, பாசத்துடன் ஸ்திரமாக சாஸ்வத நிலையினை அடைந்து கொள்ளும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
“இவள்” பகுதி
14-02-2010







# பெண்கள் உழைப்பைச் சுரண்டும் மத்திய கிழக்கு நாடுகள்

தங்களது உழைப்புச் சுரண்டப்படுவதையே உணராமல் பல அப்பாவிப் பெண்கள் அவலப்படுவதை இனிமேலாவது தடுக்க முடியாதா? எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தாலும் கூட, மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுவரும் பெண்கள் தங்கள் இலக்குகளில் வெற்றி பெறுவதுமில்லை. பெண் இனம் மேலான கல்வித் தகைமைகளைப் பெற்று அதியுயர் ஸ்தானங்களில் வைக்கப்படுவதை விடுத்து, மிகச் சாதாரணமான பணிகளில் சொற்ப வேதனத்தில் வேலை செய்வது அவர்கள் உடல் நலம், மனவளம் பாதிப்பது மட்டுமல்ல, இவர்களின் எதிர்காலச் சந்ததியுமே மேலோங்க முடியாது. இதனால் எமது நாடு மனித உழைப்பு வளமிழந்து நிற்கும்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் பயணிகள் வந்துசேரும், நீண்ட பொதுமக்கள் பிரிவில் உறவினர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.



RangaRakes
Tamilnavarasam.com

விமானங்கள் வந்துசேரும், புறப்படும் அறிவித்தல் பலகையைப் பார்த்தேன். முழு உலகையும் இணைக்கும் பாலமாக விமானங்கள் இருந்தும், பக்கத்து நகரங்கள்கூடத் தெரியாத பிரகிருதிகளும் எம்முள் இருக்கின்றார்கள் தான். விமானங்கள் எமது நாட்டிற்குச் செல்லும் நேரங்களும், அதேபோல் அங்கிருந்து எமது நாட்டிற்குத் தரையிறங்கும் நேரங்களும் குறிப்பிட்டிருந்த வண்ணம் நேரம் காட்டி அட்டவணை அடிக்கடி நகர்ந்து காட்டியது.

நான் நின்றிருந்த சற்று நேரத்திற்குள் மத்திய கிழக்கு விமானங்களில் இருந்து பயணிகள் திமு, திமுவென வந்து கொண்டிருந்தனர். எனது பார்வை பயணிகளை நோக்கியது. என்றுமே உறங்காத இடம் எது, இந்த சர்வதேச விமான நிலையங்கள் தானே?

பயணிகளில் பெண்பாலானவர்கள் தான் அனேக மாகக் காணப்பட்டனர். பொருட்கள் ஏற்றும் வண்டியில், தாங்கள் வேலை செய்த நாடுகளில் இருந்து கொண்டு வந்திருந்த பொருட்களுடன், விமான நிலையத்தில் வரிச் சலுகையற்ற கடைகளில் வாங்கிய சில பொருட்களுடன் அவர்களை நான் கண்டபோது மனம் நெகிழ்வுற்றது. எத்தனை வருடங்களின் பின்னர் தமது உறவினர்களிடம் ஆவலாக வருகின்றார்களோ?

அநேகமான யுவதிகளின் கண்களிலும் பளபளப்புத் தென்படவேயில்லை. உற்சாகமற்ற நிலை. சிலபெண்கள்





மெலிந்தும், தளர்ந்தும் காணப்பட்டனர். தமது மெல்லிய கரங்களால் பொருட்கள் அடங்கிய வண்டியைத் தள்ளியபடி வந்த போது போதிய வலு அவர்களிடம் இன்மையால் வண்டி தள்ளாடியது. அங்கும், இங்குமாய் ஓடிப் பின் நகர்ந்தது. பொதி ஒன்றிற்கு முப்பது ரூபாய் கூலி கொடுத் தால் விமான நிலைய வாசல்வரை இதற்கான ஊழியர்கள் தள்ளிக் கொண்டு வந்து கொடுப்பார்கள். வசதி வேண்டுமே!

அடுத்து நான் கண்ட காட்சி என்னைக் கவலை யடைய வைத்துவிட்டது. ஒரு மெலிந்த இளம்பெண் தனது பொருட்களுடன் வெளிவாசலை அண்மித்ததுமே, தூரத்தே தமது தகப்பனார் போன்ற ஒருவரை கண்டதும், தமது பொருட்களையே மறந்து ஓடோடி வந்து மிகவும் நோயாளி போலக் காணப்பட்ட அந்த முதியவரைக் கட்டிப்பிடித்தவள், அழ ஆரம்பித்துவிட்டாள். அந்த முதியவரும் உணர்ச்சி வசப்பட்டவராய் மகளைத் தேற்றத் தெரியாது திணறினார். இவர்கள் அருகே இவர்களின் உறவினர்களில் ஒரு சிலர் காணப்பட்டனர்.

நடையுடை பாவனைகள் மூலமும் அவர்களது தோற்றங்களின் மூலமும் இவர்கள் எல்லோருமே கிராமத்த வர்கள் என இலகுவாக என்னால் இனம்காண முடிந்தது. உறவினர்கள் அனைவரும் பாசத்துடன் ஒருவர் ஒருவராகக் கட்டியணைத்து உச்சிமோந்தனர். இப்படிப்பல காட்சிகள். உறவுகளைக் கண்டதுமே அணைப்புகள், ஏக்கத்துடன் விசாரிப்புகள்!



RangaRakes
Tamilnavarasam.com

இத்தகைய காட்சிகள் தினசரி நடந்து கொண்டிருக்கும். தொழில் நிமித்தம் சென்று திரும்புகின்ற எமது நாட்டுப் பெண்களிடம் விசாரித்தால் ஒவ்வொருவரிடமிருந்தும் நீண்ட கண்ணீர் கதைகள், புதைந்திருக்கின்றன.

ஒட்டியுலர்ந்த தேகம், குழிவிழும் கண்கள், இவர்கள் இளவயதினர் என்று சொன்னால் நம்பமுடியாது. ஆயினும் எல்லோரும் இதே தோற்றத்தினர் என்றும் சொல்ல முடியாது. இளவயது யுவதிகள், நடுத்தரமான வயது தோற்றங்களுடன் எனப் பலதரப்பட்ட எல்லாப் பெண்களையும் கண்டேன். வெள்ளைக்காரர்களுக்கும், மத்தியகிழக்கு வாசிகளுக்கும் நாம் என்ன கூலி ஆட்களா? என எண்ணி மருகினேன்.

ஆயினும் இவர்கள் சுபீட்சமாக வாழ்ந்து சம்பாதித்துக் கொண்டு இங்கு வந்திருக்கின்றார்கள் எனச் சொல்ல முடியாது. குடும்பபொறுப்பு, வறுமை காரணமாகத் துன்பங்களை வெளியே காட்டாமல், உள்ளுக்குள் வெதும்பி வெளியே தமது உறவினர்களுடன் சிரித்து மகிழ்ந்து தமது தாய் நாட்டிற்கு வந்ததும் தங்களை மறப்பது இயல்பு.

தங்கள் உழைப்பை தமது நாட்டிற்கு வழங்குவதை விடுத்து எதற்கு எந்த நாட்டிற்கோ தானம் செய்து கொண்டிருக்கின்றார்கள். தமது உழைப்பு சுரண்டப்படுவதை உணர்ந்தும், உணராமல் இருக்கின்றனர். மாதக்கணக்காய் வேலை செய்து, ஊதியம் பெறாமல் ஏமாற்றப்பட்டு





அவலப்பட்டு நாடு திரும்பும் பெண்கள் பலரின் நிலையினை நாம் அறிகின்றோம்.

இளம் பராயத்துக் கனவுகளைப் பொசுக்கி குடும்ப நலனுக்காகத் தாய் நாட்டை விட்டுச் சென்ற இவர்களின் இலட்சியங்கள், நோக்குகள் குறித்த இலக்கினை அடைகின்றனவா?

இவர்களைச் சம்பாதிக்கவிட்டுச் சும்மா இருக்கும் கணவர்களும் இருக்கின்றனர். ஏன் சில பெற்றோர்கள், தாங்கள் பெற்ற பிள்ளைகளின் பெரும் சுமைகளை, வயது வந்த இளம் மகள்மார்களின் தலையில் ஏற்றிவிடுகின்றனர். இந்தக் கொடுமைகளைப் பலரும் நேரிடையாகக் கண்டும் இருப்பீர்கள்.

பெண் இனம் கல்விகற்று மேன்மையடைய வேண்டும். உயரிய பதவிகளை ஆண்களுக்குச் சமனாகப் பெற்றிடல் வேண்டும். ஆனால் எந்த நாட்டிற்கும் சுரண்டப்படும் தொழிலாளியாகப் போவது வேதனைதரும் விஷயம். பெண்களைக் கண்போல் கட்டிக்காத்த பெற்றோர்கள் பலர் வேறு வழியின்றியே தொழில்செய்ய மத்தியகிழக்கு நாடுகளுக்கு அனுப்புவதாகச் சொல்கின்றார்கள்.

என்ன வளம் எமது நாட்டில் இல்லை? இனிவரும் காலத்திலாவது, எமது பெண்கள் கௌரவமாகக் கைநிறையச் சம்பாதிக்கும் நிலையை நாம் உருவாக்கியே தீர



RangaRakes

Tamilnavarasam.com

வேண்டும். எமது கல்வி, அந்தஸ்தினை உயர்த்தி அதன் பின்னர், தூரதேசம் செல்வதும், மேலதிக அனுகூலங் களைப் பெருமையுடன் சேர்ப்பதும் தவறு அல்ல. நாடு தன்னிறைவு அடைந்தால் மட்டுமே வெளிநாடு சென்று அல்லல்படும் அவல வாழ்வு அகலும்.

எவரினதும் கண்ணீருடன் உழைப்பு உருவாகக் கூடாது. சந்தோஷகரமாக உழைப்பது தான் தொடர்ந்தும் உழைக்கும் ஆர்வத்தை மென்மேலும் வளர்க்கும். உடலை, உள்ளத்தை உருக்கிக் கருக்கி வெளிநாடுகளில் தொழில் செய்வது, எமது நாட்டிற்கு வடுவை ஏற்படுத்தும். ஏன் தேசிய இழப்புமாகும். வாழ்வையும், நாட்டையும் துறந்து எதனைப் பெறமுடியும்?

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள் பகுதி"
02-05-2012







## பாசத்தைக் காட்டி சுதந்திரத்தைப் பறிக்க வேண்டாம்!

பிள்ளைகளிடம் காட்டும் அதீத பாசத்தினால், சில பெற்றோர்கள் அவர்களைச் சுதந்திரமாக இயங்கவிடாமல் செய்து விடுகின்றனர். பாசம் காரணமாகப் பிள்ளைகளின் உரிமைகள் பறிபோகச் செய்தல் தகாது. துணிச்சல், தன்னம்பிக்கையுடன் குழந்தைகள் வளர தன்னம்பிக்கையுடன் அவர்களை முழுமையாக இயங்கவிடுங்கள். கடுமையான கட்டுப் பாடுகள், ஆலோசனைகளால் பெற்றோரைப் பிள்ளைகள் வெறுப்புடன் நோக்குவர். விரிந்த இந்த உலகில் பரந்த அறிவைப் பெற, நற் பழக்கங்களூடாக நிறை மாந்தராக்குக! பாசத்தால் பூட்டி அவர்கள் வேகத்தை நீக்க வேண்டாம்.

எப்போதோ கேட்ட வெளிநாட்டு நாடகத்தின் தமிழ் மொழிமூலம் இது! பக்குவமாக யதார்த்தமாக பின்னப்பட்ட கதை.



RangaRakes

Tamilnavarasam.com

கணவனை இழந்த பெண் ஒருத்தி அவளுக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவர்கள் இரண்டு பேரும் பெண் கள். இளையவன் ஆண். எப்போதுமே தன் கூடவே பிள்ளை கள் இருக்கவேண்டும் என்கின்ற பாசவெறி அவளுக்கு. எனவே சமூகத்தைப் பற்றி மிகையாகவே பயமுறுத்தி வந்தாள்.

"நீங்கள் அங்கே போக வேண்டாம், இங்கே போக வேண்டாம்! இந்த உலகம் மிகவும் பொல்லாதது, கெட்டவர் கள் மலிந்த பூமி, எவரையும் நம்பவே வேண்டாம். பிள்ளை களே! ஜாக்கிரதையாக இருங்கள் எங்குமே செல்லாதீர்கள். இந்த உலகம் சுத்தப் போலியானது. என்னுடனேயே எப்போதும் இருங்கள்" உங்களை நான் எங்குமே செல்ல அனுமதிக்கவே மாட்டேன்.

இவ்வாறு பிள்ளைகளிடம் தாயார் சொல்லியபடி இருந்தாள். பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவைக்க அவள் பிரியப்படவேயில்லை. எங்கே பிள்ளைகள் திருமணம் செய்தால், அவர்கள் தன்னை விட்டுப் பிரிந்துபோய் விடுவார் களோ என்ற அச்சம் அவளுக்கு. ஆனால் இவளது பிள்ளை களுக்கோ தாயாரின் நச்சரிப்பான புத்திமதிகள் பிடிக்க வேயில்லை. ஆனால் தாய்க்கு எதிராக எதுவுமே பேச முடியாத நிலை. அவளது மேலான பாசம் பிள்ளைகளைக் கட்டிப்போட்டுவிட்டது. இதனால் இவர்கள் மிகவும் மனக் குமைச்சலுடனேயே வாழ்ந்து வந்தார்கள். வெளியில் பிள்ளைகள் செல்வதை, உறவினர்களுடன் பேசுவதைப்





பழகுவதைத் தாயார் அனுமதிக்காததையிட்டு உள்ளுக்குள் மனம் மிகவும் வெந்துபோயினர்.

ஆனால், நடந்தது என்ன? மூத்த பெண் யாரோ ஊர்பேர் தெரியாதவனுடன் ஓடிப்போய்விட்டாள். தனக்குச் சுதந்திரம் வேண்டும் என்கின்ற நோக்கில் இந்த முடிவை எடுத்தாள். அடுத்தபெண்ணோ வீட்டை விட்டுச் சொல் லாமல் எங்கோ போனாள். தகவல் எதுவும் கிடையாது. இயற்கையிலேயே நல்ல அறிவுள்ள நன்கு படித்து வந்த இளைய மகனுக்கு திடீர் என மனநோய் ஏற்பட்டுவிட்டது. அவன் எதுவுமே இயங்க முடியாத நிலைக்கு ஆளாகி விட்டான். இறுதியில் தாயார் தனித்துவிடப்பட்டாள்.

இந்தக் கதையானது உங்களுக்கு என்ன கருத்தைச் சொல்ல விழைகின்றது? குடும்பங்களில் கணவன், மனை வியர் பலரும் பிள்ளைகளில் உள்ள அதீத பாசத்தினால் அவர்களைச் சுதந்திரமாகச் சிந்திக்கச் செயல்படவிடாமல் இருந்தால் இறுதியில் பிள்ளைகள் இயங்கியும் இயங்காத மனோநிலையில் உள்ளவர்களாக மாறிவிடலாம் அல்லவா?

குழந்தைகளின் ஒழுக்கத்தில் கவனமாக இருக்க விரும்பும் பெற்றோர் அவர்களைச் சுதந்திரமாக இயங்க விடாமல் செய்வது விபரீதமான பின் விளைவுகளையே உண்டு பண்ணும்.

மேலும், பெற்றோரைக் குழந்தைகள் வெறுப்பதுடன்



RangaRakes

Tamilnavarasam.com

தாங்கள் பெரியவர்களானதும், பழைய சம்பவங்களை நினைத்து அவர்களைப் பழிவாங்குவது போல் அவர்களிடம் பாராமுகமாகவும் நடந்து கொள்ளலாம்.

பிள்ளைகளைக் கட்டுப்படுத்துவதிலும் ஒரு வரை முறை உண்டு அல்லவா? நல்ல ஒழுக்கமானவர்களாக உருவாக்குவதற்காக அவர்களின் ஆசை அபிலாசைகளைச் சுட்டுப்பொசுக்குவது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.

தங்கள் பிள்ளைகள் மட்டுமே உயர்வானவர்கள். பிறரது பிள்ளைகள் சகல அந்தஸ்து, அறிவில் குறைந்தவர்கள் என எண்ணும் பெற்றோர்களும் இருக்கின்றார்கள். குழந்தைகள் செய்யும் தவறுகள் எல்லாமே அடுத்த வீட்டுப் பையன் மூலம் தெரிந்து கொண்டதுதான் என்று பலமாக நம்புபவர்கள், சாதிப்பவர்கள் ஏராளம்.

கண்டிப்புடன் குழந்தைகளை வளர்க்கும் அதே நேரம் அன்புடன் சமூக உறவுகளையும் வளர்க்க உதவுதல் வேண்டும். உறவினர், நண்பர்களிடமிருந்து, குழந்தைகளைப் பலவந்தமாகப் பிரித்தால் அவர்கள் தனிமைப்பட்டுப் போவார்கள்.

குறிப்பிட்டவர்கள் எனத் தாங்கள் கருதுவோரிடம் மட்டும் பழக விடுபவர்களும் உண்டு. ஆனால் குழந்தைகளிடம் பேத உணர்வு சிறிதும் இல்லை. எனவே அந்தஸ்தில் சற்றுக் குறைந்த நிலையில் உள்ளவர்களின் குழந்தைகளிடம் நட்புக் கொள்வதில் என்ன தவறு வந்துவிடப் போகிறது.





எனவே நல்ல பிள்ளைகள் எத்தரத்தைச் சேர்ந் தாலும் அவர்களிடம் நட்புறவு கொள்ளச் செய்வதில் பெற்றோர் பிள்ளைகளிடம் முரண்டு பிடிக்கலாமா? ஆலயங் களுக்கு, பொது இடங்களுக்கு, வைபவங்களுக்கு, களியாட்ட நிகழ்வுகளுக்கு அவர்களை அழைத்துச் செல்லவேண்டும். அவர்களைச் சமூகத்தில் இருந்து பிரித்துவிட எத்தனிக்க வேண்டாம். பிள்ளைகளின் கல்வி பாதிப்பு அடையாத வண்ணம், ஒரு நேர வரையறைக்கு எதனையுமே செய்து வந்தால், கண்டிப்பாக அவர்கள் இவைகளைஒரு பழக்கத் தினுள் கொண்டு ஒழுகி வருவார்கள்.


விரிந்த உலகினில், பிள்ளைகளது மனமும் நன்கு விரிவடையச் செய்வது, பெற்றோர் கடமையாகும். "பிள்ளைகளைப் பூட்டிப் பூட்டி வளர்த்தேன்அவர்கள் இப்படியாக மாறி விட்டார்களே"எனசொல்லி மறுகுதலை விடச் சுதந்திரமாகச் சிந்தித்துச் செயல்பட விடுக!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள் பகுதி"
08-11-2009



RangaRakes

Tamilnavarasam.com



# முதியோர் இல்லங்களில் பெற்றோர்கள்

பெற்றோர் முதுமையடைந்ததுமே, அவர்களை முதியோர் இல்லங்களில் ஒப்படைத்து விடுதல், ஒரு நாகரீகமாகவே போய்விடுமோ என அச்சமடைய வேண்டியுள்ளது. இத்தகைய பெற்றோரின் பிள்ளைகள் தங்களுக்கும் முதுமை வரும் தாங்களும் முதியோர் இல்லத்திலேயே தஞ்சமடையலாம் என்று கடுகளவும் எண்ணிப்பார்ப்பதேயில்லை. பெரும் தியாகம் செய்து வளர்த்தெடுத்த தாய், தகப்பனைத் தனிமைப்படுத்துதல் மிக அநியாயமான மௌனக்கொலை! வயசு வந்த காலத்தில் பேரன், பேத்திகளுடன் சந்தோஷமாக இருக்கத்தானே எல்லோரும் பிரியப்படுகின்றார்கள். ஊர்கள் தோறும் ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள், நூலகங்கள் போல, ஊர்கள் தோறும் முதியோர் இல்லங்கள் இனி அமைந்தால் ஆச்சரியமில்லை. பாசமில்லாப் பிள்ளைகள் மிக மோச மான பேர்வழிகள்.

அண்மையில் வடபகுதிக்குச் சென்று திரும்பிய நண்பர் ஒருவர்,அங்குள்ள முதியோர் இல்லங்களுக்கும், குறிப்பாக வன்னிப் பகுதியில் உள்ள முகாம்கள், ஆதரவற்றோர் இல்லங்களுக்கும் சென்றுபார்த்ததாகச் சொன்னார். அவர் முதியோர் இல்லம் ஒன்றில் தாம் சந்தித்த நபர்





ஒருவர் பற்றிச் தெரிவித்த தகவல் என்னை வியப்பிலும், அதேசமயம் மனதில் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

மிகவும் வசதிபடைத்த, நல்ல உயர்ந்த தொழில் செய்யும் ஒருவரின் தாயார் பிள்ளைகளின் ஆதரவற்ற நிலையில் முதியோர் இல்லத்தில் காணப்பட்டார்.

பெற்றோருக்கு வயது வந்ததும் உடனே அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்துவிடுவது ஒரு நாகரீகமாக மாறி விடுமோ என எண்ணி அச்சமடைவதில் வியப்பு இல்லை.

அதுவும் எமது பாரம்பரிய கலாசாரங்கள், பாசப் பிணைப்புகள் எல்லாமே சிலருக்கு மறைந்தே போய்விட்டது. எமதுபெற்றோர்கள் அனைவருமே சுய மரியாதையுடையவர்கள். ஒவ்வொரு தாய், தந்தையர் எவ்வளவு கஷ்டப்பட்டு இவர்களை படிப்பித்து ஆளாக்கியதை எப்படி மறந்து போகின்றார்களோ? பெரும் தியாகம் செய்து வளர்த்தெடுத்த தாய், தகப்பனை தனிமைப்படுத்துதல் மிக அநியாயமான மௌனக்கொலை!

குடும்ப உறவு விடயத்தில் எமது முன்னோர்கள் கூட்டுக்குடும்பமாக, ஒத்த நோக்குடைய, சமூக கட்டமைப்பில் வாழ்ந்து வந்தார்கள். சமய நம்பிக்கைகள், மொழி, இனப்பற்று இவற்றில் எவ்வித விட்டுக்கொடுத்தலின்றி



RangaRakes

Tamilnavarasam.com

மிகுந்த உறுதியுடன் தங்கள் குடும்பங்களை தாம் சார்ந்த சமூகத்தை நிலை நிறுத்தி வந்தார்கள்.

காலங்கள் மாறிடினும் பண்பாடுகள் மாற வேண்டும் என்கின்ற அவசியமில்லை. நாகரிகம் என்பது முன்னைய காலத்தைவிட தற்போது வாழும் வாழ்வு முறையில் முன்னேற்றமாக இருக்க வேண்டுமேயொழிய, கண்டபடி வாழ்தலில் என்ன நாகரீகம் உண்டு ஐயா?

மேலைத் தேயத்தவர்கள் குடும்ப உறவில் தங்களை விடத் தாழ்ந்த நிலையில் இருப்பதாகவே எம்மவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொள்வதுண்டு. பிள்ளைகள் வளர்ந்த பின்னர், பெற்றோரிடம் இருந்து வேறாகித் தமக்கு இஷ்டமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதாகக் கேலியுடன் எம்மவர்கள் சொல்வதுமுண்டு.

ஆனால் இன்று நடப்பது என்ன? பெற்றோரை முதியோர் இல்லங்களுக்கு அனுப்புபவர்கள் தாங்கள் செலவுக்கு அந்த இல்லங்களுக்குப் பணம் செலுத்துவதாகச் சொல்கின்றார்கள். சில பிள்ளைகள் அதனையும் செய்வதில்லை. வெளிநாட்டில் வாழ்கின்ற நண்பர் சொன்னார்.

அங்கு வாழ்கின்ற வெள்ளையர்கள் சிலர் தங்கள் தாய், தந்தையை முதியோர் இல்லங்களுக்கு அனுப்புவதைத் தவறாகக் கொள்வதில்லை. மிகவும் வேடிக்கையான சமாச்சாரம் என்னவெனில் வருடாவருடம், அன்னையர்





தினம், கிறிஸ்மஸ், புதுவருடங்களுக்கு வாழ்த்து மடல்களை மட்டும் தவறாமல் அனுப்பி விடுவார்களாம். ஆயினும் எல்லோரும் இப்படியானவர்கள் எனத் தப்புக்கணக்கு போடுதல் ஆகாது.

மேலும் அன்னையர் தினம் விசேட நாட்களில் மட்டும் தமது பெற்றோரை ஒரு விருந்தாளிகள் போல் சென்று பார்த்து வருவார்களாம். ஒன்றை இத்தகையவர்கள் உணரவேண்டும்.

இவர்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியங்களையும், இவர்களின் குழந்தைகள் கவனித்துக் கொண்டேயிருக்கின்றார்கள். நாளைக்கு அவர்கள் செய்யப்போவது என்ன? இதுதான் வாழ்க்கை முறை. எமது அப்பா, அம்மாவையும் இந்த முறையில்தான் வருங்காலத்தில் கவனிக்க வேண்டும் என்கின்ற எண்ணம்தான், அந்தப் பிஞ்சுகள் எண்ணங்களில் வலுப்படும் அல்லவா?

இந்த வாலிபமிடுக்கு, இந்த வாழ்வுதான் சாஸ்வதமானது. எமக்கு முதுமை என்பதே கிடையாது என்கின்ற அசட்டு எண்ணத்தில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்தால் என்றுமே மகிழ்வுதான். மாறாத இளமைதான்! இதை நாம் அனைவரும் உணரவேண்டும்.

பெற்றோரிடம் முரண்படும் சிலரிடம் கேட்டுப் பாருங்கள். நீ ஏன் உனது தாயாரைப் பிரிந்து இருக்கின்றாய் எனக் கேட்டால், எனக்கு ஒன்றும் பிரச்சினையில்லை. எனது



RangaRakes
Tamilnavarasam.com

மனைவிக்கும், அம்மாவிற்கும் ஒத்துப் போகாது எனச் சொல்லி மனைவியின் மீது பழியைப் போட்டு விடுவார். அடிமனதில் பாசம் கொஞ்சமாவது இருந்தால் இப்படிச் சொல்லவே மாட்டார்கள்.

மாமியார், மருமகள் சண்டைபோல மாமனார், மருமகன் சண்டை நடப்பது இல்லை. ஆனால் வயது முதிர்ந்தவர்கள், இளையவர்களிடம் அனுசரித்து வாழாமல், அதேபோல வயது போனவர்கள்தானே கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் என்ன என இளையவர்களும் எண்ணாமல் இருந்தால் குடும்பங்களின் பிளவு என்பது நிரந்தரமாகவும் போகலாம்.

பெரியவர்கள் விட்டுக் கொடுத்தலுடன் அனுசரித்தும் போவதுமில்லை. எந்தக் காரணத்தினாலும் அவர்களிடம் வெறுப்பை உமிழலாமா? வயது செல்லச் செல்ல தங்க ளைத் தனிமை வாட்டுவதாகச் சிலர் கருதுவதுண்டு. என்றுமே கலகலப்பாகக் குற்றம் காணாத மனோநிலையில் இருந்தால், தனிமை எண்ணங்கள், விரக்தி, வெறுமை உணர்வு என்பன உருவாகவே மாட்டாது. ஆன்மீகம், இலக்கியம், கலைகளில் நாட்டம் கொண்டால் விரக்தி நிலை வரவே வராது!

ஓய்வு பெறும் போது தாம் வேலைசெய்த நிறுவன ங்களிடம் பெற்ற பெரும் தொகைப்பணத்தைப் பெற்றோரிடம் சாமர்த்தியமாகப் பிடுங்கி அவர்களை நடுத்தெருவில் விடும் பிள்ளைகள் மன்னிக்க முடியாத எத்தர் கூட்டங்கள்!





முதியவர்களில் பலர் தங்கள் வருங்காலம் பற்றி இளமையில் சிந்திக்காது தமக்கென எதனையுமே வைத்தி ருக்காது, தங்கள் பிள்ளைகளின் குணங்களைப் புரிந்து கொள்ளாமல் கைப் பொருளைக் கொடுப்பதுகூட மடமையிலும் மடமையே!

ஊர்கள் தோறும் ஆலயங்கள், கல்விக்கூடங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள் என்பது போல், ஊர்கள் தோறும் முதியோர் இல்லங்கள் தோன்றுவது இனி ஆச்சரிய மல்ல. ஆனால் மானுடம் வெட்கப்படும் நிலை இது. செய்நன்றி மறந்த பிள்ளைகளை ஆண்டவன்கூட மன்னிக்க மாட்டான். உணர்வார்களா இவர்கள்?

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
28-02-2010



RangaRakes
Tamilnavarasam.com



## பேருந்து செலுத்தி வரும் அஞ்சலா

நெருக்கடிமிக்க காலங்களில் பெண்கள் துணிச்சலுடன் செயலாற்ற வேண்டும். விண்வெளி ஓடங்களையே பெண்கள் செலுத்துகின்றார்கள். அஞ்சுதல் மடந்தையர்க்கு அழகல்ல! குடும்ப நலன் மேலோங்க பெண்கள் சகல துறைகளிலும் மேலான உழைப்பை நல்க வேண்டியவர்களாவர். எந்தப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கத் தயாராகப் பெண்கள் இருந்தால் “பெண்மை”யின் சமூக விழிப்பை எல்லோருமே நன்குணர்ந்து கொள்வார். எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் துணிச்சலான பெண்களைக் கண்டு கொள்ளாமல், வேறு எங்கோ திசைகளில் உள்ள பெண்கள் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறோம்.

வவுனியாவை நோக்கி கிடாச்சூரியில் இருந்து புறப்படும் நான் எதிர் பார்த்தபடியே பேருந்து வந்துவிட்டது. சனக்கூட்டம் அதில் நிரம்பி வழிந்தது. அத்துடன் என்னைப் போல் ஓரிரு பயணிகள் வேறு அதனுள் புகுந்துகொள்ளத்





தயார் நிலையில் நின்றிருந்தோம்.

ஒரு வழியாகப் பேருந்தினுள் முண்டியடித்துச் சாமர்த்தியமாக உள்ளே நுழைந்து கொண்டேன். வண்டியின் சாரதியின் இருக்கையில் இருந்து கம்பீரமான ஒரு இளம் பெண்ணின் குரல் என் விழிகளை உயர்த்திப் பார்க்கத் தூண்டியது.

“எல்லோரும் தயவு செய்து உள்ளே வாங்கோ... முன்னுக்கு வாங்கோ... வாறவையளுக்கு வழிவிடுங்கோ”... என்ற குரலுக்குரியவரை நோக்கியபோது நான் ஆச்சரிய மடைந்து போனேன்.

பேருந்தின் ஆசனத்தில் அமர்ந்து வண்டியினைச் செலுத்தியவர் ஓர் இளம் பெண்மணியாவார். அழகிய குடும்பப்பாங்கான தோற்றத்துடனும், விரல்களில் பளபளக்கும் மோதிரங்களுடனும், கழுத்தில் கனமான தங்கச் சங்கிலியுடனும், பளிச்சென்ற சிரிப்புடன் கலகலப்பாகக் காணப்பட்டவரைக் கண்டதும் உண்மையிலேயே நான் வியந்து போனதில் என்ன புதுமை எனக் கேட்க இயலுமா?

ஏற்கனவே வவுனியா நகரில் மக்கள் கூட்டத்திற்குப் பஞ்சமேது? அதுவும் தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து அகதிகளாக வந்திருக்கும் உறவுகளைப் பார்க்க வந்திருக்கும் மக்கள், வாகன



RangaRakes
Tamilnavarasam.com

நெரிசல்கள் என எந்நேரமும் சாலைகளில் மொய்த்தி ருக்கும் "நெருக்கடிகள்" மத்தியில், ஒரு இளம் பெண் துணிச்சலாக, வெகு லாவகமாக, பேருந்தை எவ்வித சஞ்சலமும் இன்றி ஓட்டி வந்தால் அவரது திறமையினைப் பாராட்டாமல் இருக்க முடியுமா?

பேருந்து வவுனியாவை நோக்கிச் செல்லுமுன்பே அவருடன் பேச்சுக் கொடுத்தேன். அவரது பெயர் திருமதி. கோகிலகுமார் அஞ்சலா. திருமணமாகித் தமக்கு ஏழு வயதில் ஒரு பெண் பிள்ளை இருப்பதாகவும் தெரிவித்தார். வண்டி வவுனியாவை வந்தடைந்ததும் பயணிகள் அனைவரும் இறங்கிய பின்னர் ஆறுதலாகப் பேச ஆரம்பித்தேன்.

"உங்களை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. எம்மவர்கள் பயந்தபடியே வாழும் இந்தச் சூழலில் படு துணிச்சலாகப் பொது போக்குவரத்துப் பேருந்து ஓட்டுவது எங்கள் பகுதியில் நீங்களாகத்தான் இருக்க வேண்டும் என எண்ணுகின்றேன்" என்றேன்.

நான் கூறியதும் சற்று நாணம் அவர் முகத்தில் தென்பட்டது. "நீங்கள் என்னைப் பற்றிச் சொல்வது சந்தோஷமளிக்கின்றது. ஆனால் நாங்கள் எதற்காகப் பயப்பட வேண்டும்? ஆண்கள் செய்கின்ற வேலைகளை எல்லாம் தற்போது பெண்களும் செய்கின்றார்கள் தானே? பயப்பட்டால் ஒன்றும் சரிவராது..." என்றவரிடம் நீங்கள் எதற்காக இந்த சாரதி வேலையைத் தெரிவு செய்தீர்கள் என்றேன்.





"எனது கணவருக்குச் சொந்தமானதே இந்த வாகனமாகும்.அவர் தற்போது கனடாவிற்குச் சென்றுள்ளார். விடுமுறை நாட்களில் இங்கு வந்து செல்லுவார். அவர் ஓட்டிய இந்த வாகனம் அவர் கனடா சென்ற பின்னர் சும்மா இருப்பதை விட நான் ஓட்டினால் என்ன என்று எண்ணினேன்" என்றவர் தொடர்ந்தார்.

"மேலும் எனது கணவர் ஏற்கனவே இந்த வண்டியை எனக்கு ஓட்டப் பழக்கியிருந்தார். எமக்குச் சொந்தமான வண்டியை வேறு சாரதிகள் மூலம் செலுத்தித் தொழில் செய்தால் நஷ்டம்தான் வரும். அவர்களால் எங்கள் வாகனத்தைத் தகுந்த முறையில் பராமரிக்கவும் முடியாது. அவர்கள் தமது தொழிலில் நியாயமாக நடந்து கொள்வார்கள் என் பதில் என்ன நிச்சயம் உண்டு? எனவே வண்டியை நானே ஓட்டுவது என்று முடிவு செய்தேன்" என்றார் அஞ்சலா.

"அப்படியானால் உங்கள் தொழிலால் குடும்ப அலுவல்களில் கஷ்டங்கள் வராதா? என்று நான் கேட்டபோது, அவர் கூறியதாவது, "எனக்கு கிடாச்சூரியில் இருந்து வவுனியா வரைக்குமான போக்குவரத்துச் செய்ய மூன்று தடவைகள் மட்டும் சென்றுவர அனுமதியுண்டு. காலை ஏழு, எட்டு மணிக்குப் புறப்பட்டால் மாலை ஏழு, எட்டு மணி வரைக்கும் ஒரே வேலைதான். பொறுமையாக வண்டியை ஓட்ட வேண்டும். வண்டி செல்வதற்கான முறை வரும்வரை காத்திருக்க வேண்டும். சனங்களைப் பக்குவமாக கொண்டு சேர்க்க வேண்டும். பொறுமையில்லாதவர்களால் சாரதி வேலை செய்ய முடியாது"



RangaRakes Tamilnavarasam.com

உங்கள் குடும்பத்தைப் பற்றிச் சொல்லுங்கள் என்ற போது, "எனக்கு மூன்று ஆண் சகோதரர்களும் மூன்று பெண் சகோதரிகளும் இருக்கின்றார்கள். எனக்குத் தற்போது இருபத்தி எட்டு வயதாகின்றது. திருநாவற்குளத்தில் சொந்தமாக வீடு இருக்கின்றது. கஷ்டமான நிலையில் எனது குடும்பம் இல்லாது விட்டாலும் வீட்டில் சும்மா இருப்பதைவிட உழைத்து முன்னேறுவது நல்லது தானே" என்று கேட்டார்.

உண்மை தான் இன்று உலகம் பூராவும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக எவ்வளவோ முன்னேறிவிட்டார்கள். விண்வெளிக்கே விண்கலங்களைச் செலுத்தும் போது, சாதாரண சாலையில் ஓட்டுவதற்கு ஏன் அச்சப்பட வேண்டும் என்றேன்.

வவுனியா - இலுப்பையடிச் சந்தியில் இருந்து கிடாச்சூரி வரைக்கும் செல்லும் பயணிகள் மட்டுமல்ல, இங்கு வதியும் பலருக்கும் அஞ்சலாவை நன்கு தெரியும். மிகவும் இனிமையாகப் பழகுகின்றார்.

"ஓ.. பஸ் ஓட்டுகின்ற... அந்த அக்காவா" என ஒரு சிறுமி என்னிடம் சொன்னதில் இருந்து அவரைப்பற்றி பலரும் அறிந்துள்ளமையைத் தெரிந்து கொண்டேன்.

இந்தத் துன்பம் மிகு நெருக்கடிக்குள்ளான கால கட்டத்தில் பெண்கள் துணிச்சலை இழந்தால் குடும்ப வாழ்வு





அமைதியிழந்து விடும். ஆண்களுடன் இணைந்து துணிவுடன் பெண்கள் செயலாற்றுவது காலத்தின் கட்டாயமாகும். அஞ்சலாவின் அச்சமற்ற செயலாற்றுகையை நாமும் பாராட்டுவோம்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
"இவள்" பகுதி
30-08-2009



RangaRakes
Tamilnavarasam.com

# மரணத்தின் பின் வாழ்வு

பருத்தியூர் பால. வயிரவநாதன்

வாழ்வியல் வசந்தங்கள் – பாகம் 17
சிந்தனைக் கட்டுரைகள்

RangaRakes

Tamilnavarasam.com

# பொருளடக்கம்


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01) | தனிமை | 17 |
| 02) | கனிவு | 24 |
| 03) | கடவுளும் மதங்களும் | 30 |
| 04 | சந்தர்ப்பவாதிகளும், சந்தர்ப்பவாதங்களும் | 38 |
| 05) | கோபம் | 47 |
| 06) | மரணத்தின் பின் வாழ்வு | 56 |
| 07) | புகழுடன் திகழு! | 63 |
| 08) | இயல்பு | 75 |
| 09) | கௌரவம் | 84 |
| 10) | எதிரிகள் | 94 |
| 11) | ஒப்பீடு செய்வதை தவிர்த்திடுக! | 105 |
| 12) | பிறர் துன்பம் களைதலே நாம் அடையும் இன்பம் | 112 |
| 13) | ஒட்டுக் கேட்டல் கெட்ட பழக்கம் | 119 |
| 14) | வெற்றிகள் போலவே தோல்விகளும் அற்புதமானவை! | 125 |
| 15) | தாய்மை | 132 |
| 16) | சமையல் கலையில் கைதேர்ந்தவர்களாகப் பெண்கள் விளங்குவதன் இரகசியம்? | 140 |
| 17) | குரு சிஷ்யன் | 148 |




## நூலாசிரியர் பருத்தியூர் பால. வயிரவநாதன் எழுதி வெளியிட்ட "வாழ்வியல் வசந்தங்கள்" நூற் தொகுதிகள்

1. உண்மை சாஸ்வதமானது - பாகம் - 01
2. அம்மா - பாகம் - 02
3. சுயதரிசனம் - பாகம் - 03
4. கோழைகளாய் வாழுவதோ? - பாகம் - 04
5. ஞானம் - பாகம் - 05
6. கணப்பொழுதேயாயினும் யுகப்பொழுதில் சாதனை செய்! - பாகம் - 06
7. சும்மா இருத்தல் - பாகம் - 07
8. உண்மைகள் உலருவதில்லை! - பாகம் - 08
9. உன்னோடு நீ பேசு! - பாகம் - 09
10. நான் நானே தான்! - பாகம் - 10
11. வெறுமை - பாகம் - 11
12. காதலும் கடமையும் - பாகம் - 12
13. அக ஒளி - பாகம் - 13
14. உன்னை நீ முந்து! - பாகம் - 14
15. சுயபச்சாதாபம் - பாகம் - 15
16. மௌனம் - பாகம் - 16
17. மரணத்தின் பின் வாழ்வு - பாகம் - 17
18. சிந்தனை வரிகள் - பாகம் - 18



RangaRakes

Tamilnavarasam.com





# சமர்ப்பணம்

மேலான ஏகப்பரம்பொருளாம்
இறைவனுக்கும்
பிரபஞ்சங்கள் அனைத்திலும்
வாழ்ந்துகொண்டிருக்கும்
அனைத்து ஜீவராசிகளுக்கும்
எனது ஆக்கங்கள் சமர்ப்பணம்











# தனிமை

நீண்ட தனிமையை எவரும் தீண்ட விரும்ப மாட்டார்கள் அமைதியான தனிமை ஒருவன் தன்னையறிந்து கொள்ள தன்னை வலுப்படுத்த உதவும். தொடர்ந்து ஆரவாரம் சலசலப்புகளில் இருந்து விடுபட்டு சாந்தியை நல்கும். "தனிமை" இனிமையானதே எனினும் சமூகத்துடன்ஒட்டுறவின்றி வாழ்வது இயலாது. "தனிமை" எமது ஆத்மாவோடு இணைந்த எமது பிரத்தியேக உரிமை. இதுவே சிந்தனைத் திறனை வளர்க்கின்றது. தனிமை சமூக உறவிற்கு விரோதமானதும் அல்ல.

தவத்திற்குத் தனிமை உகந்தது. ஆனால் சாமான்ய மனிதரக்குத் தனிமை உணர்வு, அசாதாரணமாகத் மனிதர்க்குத் தோன்றும்.

நீண்ட தனிமையை எவரும் தீண்ட விரும்ப மாட்டார்கள். இந்த நிலை சிலவேளை நெஞ்சைத் தோண்டி ரணப்படுத்தியும் விடுவதுண்டு. பிரச்சினைகளில் இருந்து



RangaRakes
Tamilnavarasam.com

விடுபடத் தனித்து இருக்க விரும்புபவர்களும் சிலவேளை இது முடியாத விடத்து, எவரிடமாவது போய் ஆறுதல் தேட நினைப்பதும் புதுமையுமல்ல.

அமைதியான தனிமை துணிவைத் தருகின்றது. மனது ஆறுதலாக, அமைதியாகத் தனிமையில் இருக்கின்றபோது எதனையும் செய்து முடிக்கலாம் என்கின்ற உணர்வு கூட வருகின்றது. புறச் சூழல் தாக்காதவரை மனித மூளை அச்சங்களுக்கு வழி விடுவதில்லை. அமைதியான முடிவு எடுப்பவன் தனிமையில்தான் இவற்றைத் தேடிக் கொள்கின்றான்.

கூடி முடிவு எடுப்பது தொல்லை கூடியது என்று அல்ல. ஆயினும், குழப்பம் இன்றி பல் திசைப் பார்வைகளை உற்று நோக்கி, எண்ணங்களைக் குவித்துத் தனிமையில் சிந்தித்தால் நல்ல திசை துல்லியமாகத் தெரியும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லோரது பேச்சும் எடுபடாது. தனிமையில் நிரம்பச் சாதிக்க முடிகின்றது.

அலைபாயும் மனதைக் கட்டுப்படுத்த, நல்ல எண்ணங்களை எமது வசமாக்க, பிறரது வீண் அலட்டல்கள், துன்புறுத்தும் நெருடலான தலையீடுகளில் இருந்து விடுபட என்று பல விடயங்களுக்கு தனிமை துணை போகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக மனிதன் தனது நிலை உணரவும், இதன் மூலம் நிர்மலமான சுயதரிசனம் பெற்றுக் கொள்ளவும் தனிமை வேண்டப்பட்ட நிலையாக உள்ளது.





பிறரை அறிந்துகொள்ள முற்படும் எல்லோருமே தமக்குள் தம்மை ஆராய அச்சப்படுவதுண்டு. நேர்மையாகச் சிந்தித்தால் தானேதனக்கு விரோதமாக இருந்து கொண்டதான சம்பவங்களையும் தெரிந்து கொண்டு விடுவான். தன்னை உணராமல் தவறு செய்பவன், தனிமையில் தன்னுடன் பேசியேயாக வேண்டும். எமது தவறான செய்கைக்கு நாமே பயப்படாது விட்டால் சமூகத்தின் பார்வைகள் அருவருப்புடனேயே எம்மை நோக்கும்.சிந்தனை என்பது தனிமைக்குச் சொந்தமானதே!

சுயதரிசனம், விழிப்பு என்பதெல்லாமே தனித்து எம்மை நோக்கி நாமே கேட்கும் கேள்வி மூலம் உணரப்படுவதாகும். இதன் மூலம் தெளிவு, ஞானம் பிறப்பதால் அச்சம், மடமை, துன்பம் என்பன தூக்கி எறியப்படுகின்றன. எனினும் எல்லா நிலையிலும் தனிமை ஒத்து வருமா?

- காதலர்க்குத் தனிமை வெப்பம், குழந்தைக்குத் தனிமை தவிப்பு,
- இளைஞர்களுக்குத் தனிமை கசப்பு.
- பழங்கதை பேசி மகிழும் முதியோர்க்குத் தனிமை வேம்பு.

மனிதன் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப பலரோடு ஒன்று கூடவும் தனித்து இருந்து செயல்படவும்



RangaRakes
Tamilnavarasam.com

விரும்புகின்றான். நாம் சிலவேளை பிறர் குறுக்கீடுகள் இன்றி இருக்க வேண்டியுள்ளது. எல்லா வேளைகளிலும் எங்கள் மீது நம்பிக்கை வைக்காது எமக்கு நாமே துன்பங்களை உண்டாக்குவதுண்டு.

நாம் நல்ல சிந்தனைகளைச் சீராகச் செலுத்த நேரங்களை ஒதுக்குவது இல்லை. எனக்கு, நான் இன்றியமையாதவன் ஆகின்றேன். எனது நல்லது கெட்டவைகளை அறிய வேண்டியவனாகின்றேன். சில பொழுதுகளில் எம்மைச் சிந்திக்கப் பிறர் அனுமதிப் பதில்லை. எமக்குப் பிரியமானவர்கள் கூட நான் நானாக இயங்கவிடாமல் தடுப்பது எவ்வளவு கொடுமை? வேறு ஒருவர் சிந்திக்க அல்லது அவ்வண்ணமே தீர்மானம் எடுக்க நாம் அதையே ஏற்றுக் கொள்ள வேண்டுமா?

எமக்கு எனச் சரிப்பட்டு வருகின்ற எண்ணங்களை இடையூறு செய்வது பொருத்தமானதா? இத்தகைய காரணங்களால் வதைபடும் போதுதான் தனிமையின் இன்றியமையாத தன்மை,தேவைகள்எமக்கு வேண்டப் படுகின்றது. "கொஞ்சம் என்னைத் தனிமையில் விட்டுவிடுங்கள். எனக்குச் சிந்திக்க சற்று அவகாசம் தாருங்கள்" என பலர் கெஞ்சுவதை அறிந்திருக்கின்றீர்கள் அல்லவா?

தனிமையை நாடுவோர் கூறும் பல காரணங்கள் ஏற்கக் கூடியவையே. இதன் தாத்பரியம் திண்மையானது. ஆனால், சோம்பல்பட்டு ஒருவருடனும் பேசாமல் முடங்கிக் கிடப்பது ஆரோக்கியமான தனிமை அல்ல. இந்நிலை





முடிவில் சித்தத்தை மந்தமாக்கிக் கலங்க வைக்கும் பரிதாபத்திற்கு ஆளாக்கிவிடும்.

சும்மா தனிமையில் நின்று பிதற்றுவதற்கும், அறிவு நிலையில் நின்று தனது ஆத்மாவோடு முனைப்புடன் இரண்டறப் பிணைந்து பேசுவதும் வெவ்வேறான விடயங்கள்.

அறிஞர்கள், இலக்கியவாதிகள் மக்களோடு பேசுவதில் செலவிடும் காலத்தைப் போலவே தம் உள் உணர்வுகளுடனும் உரையாடியதனாலேயே அறிவு சார்ந்த படைப்புக்கள் குவியல்களாக வெளிப்பட்டன. பலருடன் சகஜமாகப் பழகுதல் என்பது நல்ல விஷயம்தான். கூடி இருந்து அந்நியோன்யமாகப் பழகி வாழும் வாழ்வு இன்பகரமானதே. ஆயினும் பிரத்தியேகமான பல கருமங்கள், விஷயங்களை நாம் மட்டுமே ஆராய்ந்து முடிவு செய்ய கட்டாயமாக்கப்பட்டுள்ளோம். இந்தப் போக்கு நாம் மற்றவர்களிடமிருந்து அறவே விலகி ஓடுகின்ற நிலைக்கு இட்டுச் செல்வதுமல்ல. பொருத்தமான விடயங்களை அர்த்தமுடன் செய்வதற்குமாகும்.

பிரச்சினைக்குரிய சில விடயங்களைக் கூடியிருந்து பேசித்தீர்க்கலாம். ஆனால் தீர்க்கமுடியாத சில விடயங்க ளைத் தெளிந்த உணர்வோடு தனியே இருந்து சிந்தித்த லும் நல்ல வியக்கத்தக்க பலன்களைக் கண்டு கொள்ளவும் முடியும்.



RangaRakes
Tamilnavarasam.com

"தனிமை" எமது ஆத்மாவோடு இணைந்த பிரத்தியேக உரிமையாகின்றது. இங்கு அந்நிய ஆளுமைகளைக் கண்டபடி பிரவேசிக்க விடக்கூடாது. ஒத்த நல்ல கருத்துக்கள், சிந்தனைகள் எவர் மூலம் வந்தாலும் எமது சிந்தனைகளுடன் பொருத்திப் பார்ப்பதில் தவறேதுமில்லை.

எமக்கு நாம் கட்டளையிட தனிமையுணர்வு சாதகமாகின்றது. புதியன படைக்கவும், நல் எண்ணங்களைக் குவிக்கவும், சுயமான விருப்புடன் வாழ்ந்து கொள்ளவும் ஏற்புடையவர்களாக எங்களை ஆக்குவோமாக!. எங்களுக்கு நாங்களே நல்ல நண்பர்கள். அதாவது எனக்கு நான் நல்ல நண்பன். எனக்கு நானே ரொம்பவும் பரிச்சயமானவன் எனக்கு நானே நல்ல உறவினன். எனக்கு நானே விசுவாசமானவனுமாவேன்.

தனிமை இத்தகைய திடமான உணர்வை உண்டாக்கினால் நாங்கள் எடுக்கின்ற முடிவுகள் கூடத் தீர்க்கமானவையேயாகும்.

தனிமையினால் உண்டாக்கப்படுகின்ற துணிச்சலே ஆன்ம பலத்தையும், உலகிற்கும் எங்களால் முடிந்தளவு உபகாரங்களைச் செய்ய முடியும் என்ற உறுதியையும் பெற்றுத் தருகின்றது.





எனவே, தனிமையையும் துணைகொள்வோம். அனைத்து உறவுகளையும் இணைத்தே வாழ்வோம். இதனால் கனத்த இதயங்களும் பூ வனமாய் பொலிவுறும்.

தினக்குரல்
வார மஞ்சரி
31.07.2005



RangaRakes
Tamilnavarasam.com



# கனிவு

நெஞ்சத்தின் பரிவுடனான மென்மையின் வெளிப்பாடு "கனிவு". அனைவருமே ஒருவர்க்கொருவர் கனிவுடன் நேயம் கொண்டால் "அந்நியம்" என்ற ஒன்று இல்லை. பார்த்தமாத்திரத்தே ஒருவரை ஏற்றுக்கொள்வதுடன் அன்புடன் பழகினால் உலகமே அன்புமயமாகும். துன்பம் கொண்டோரைத் தனிமைப்படுத்தாது கனிவுடன் நோக்குங்கள். இதயம் பொலிவானால் எதனையும் சாதிக்கலாம். பிறவியின் பூரணத்துவம் கரிசனையான கனிவுடன் அகிலத்தை அரவனைப்பதேயாம். நீங்கள் சந்தோஷியாக இருக்க எல்லோரையும் மகிழ்வூட்டுங்கள். "கனிவு" அன்பினுள் அடக்கம்.

"கனிவு" என்று சொல்லும் போதே ஒரு மென்மையின் வெளிப்பாடு தோற்றமாகின்றது அல்லவா?

பேசும் போது கனிவு,
பார்வையில் கனிவு,
பழகும் விதத்தில் கனிவு.

இப்படிக் கனிவு, பல் வடிவங்களில் மனிதனை மட்டுமல்ல அனைத்து உயிர்களையும் ஈர்க்கின்ற பண்பு





ஆகின்றது.எல்லோருமேகனிவாகப்பழக ஆரம்பித்துவிட்டால் மக்கள் எவருமே அந்நியம் இல்லை என்றாகிவிடும். பலவித உடல் வேதனையால் நீங்கள் ஒரு வைத்தியரை நாடுகின்றீர்கள். வைத்தியரோ கடுகடுப்பான முகத்துடன் எள்ளும் கொள்ளும் வெடிக்கு மாற்போல் வார்த்தைகளை பொரிந்து வீசியபடியே தமது வைத்திய விசாரணைகளை ஆரம்பித்தால் அடுத்த தடவை அவரை நாட உங்களுக்கு இஷ்டம் வருமா? நோய் தீருகின்றதோ இல்லையோ கனிவான இயல்புடைய வைத்தியரை மக்கள் நாடுவதில் வியப்பு இல்லை. பொருட்கள் வாங்க வரும் வாடிக்கையாளரிடம் "போ" என விரட்டுமாற் போல் உரையாடினால் வருந்தி அவரிடம் பொருள் வாங்க எவர்தான் விரும்புவரோ? சந்தோஷமாக இருப்பவர்களால் தான் கனிவாக உரையாட முடிகின்றது.

எனவே உங்களை களிப்பான மனிதனாக மாற்றினால் பேச்சிலும் செயலிலும் "கனிவு" தானாகவே பிறக்கும். கனிவு, பனித் துளி போன்றது. குளிர்ச்சியான இதத்தை தண்ணீரும், பன்னீரும், சுவை தரு பானங்கள் மட்டும் அளிப்பதில்லை. அருள் மிகு பார்வையே போதுமானது.

எல்லோருமே அன்பை எதிர்பார்க்கும் சீவன்கள் தான்.வெளிப்புறத்தே ஒருவருமே எனக்குத் தேவையில்லை என வாயளவில் சொன்னாலும் உள்ளுக்குள்ளே இனிய தேறுதல் வார்த்தைகள் ஸ்பரிக்காதா என மனம்



RangaRakes
Tamilnavarasam.com

அங்கலாய்த்தே தீரும். வெறுப்பான உணர்ச்சிகள் என்பது கூடத் தன்னை ஒருவரும் லட்சியப்படுத்தவில்லையே என்ற ஏக்கத்தின் வெளிப்பாடே என்பதை உணர்க. தொடர்ச்சியாக மனிதர் எவரையாவது புறம் தள்ளினால் முடிவில் அன்பிற்காக ஏங்கியவன். கனிவு உணர்வு அற்ற வன்முறையாளனால் அதில் வியப்பு இல்லை.

எனவே கூடியவரை எவரையும் தனிமைப்படுத்திப் புறந்தள்ள வேண்டாம். எதிர்ப்படுபவனுக்குப் பொருள் ஈந்துவிட்டால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா? உண்மையான நேயத்துடன் மற்றவரை நோக்க வேண்டும். பணம் உள்ளவன் கூட விரக்தி வயப்படுவது எதற்கு? குழைவான கனிவு இன்றேல் துன்பம் தான். இறுமாப்பு, அகங்காரம் ஏளனம் இவைகளை விடுத்து மனித நேயத்தை பவ்வியமாக ஏற்றில் இதமான கனிவு எம்முடன் கூடவரும். தங்களின் சுமைகளான துன்பங்களைச் சொல்வதற்கு, ஆறுதல் தேடுவதற்கு, அவதிப்படும் மக்கள் கோடி?

- பிறர் துன்பங்களைத் தாங்குவதற்கு இஷ்டப்படுங்கள். கனிவானநோக்கு,உங்களுக்குள் ஒரு மென்மையுடன்கூடியகம்பீரத்தை ஏற்படுத்துகின்றது.
- இனிமையாகப் பழகும் இயல்பை உடையவனாலேயே தலைவனாக வரமுடியும்.

கொஞ்சம் சுற்றிப் பாருங்கள்!





சிரிப்பவனை, சிரிக்க வைப்பவனைச் சுற்றிப் பத்துப் பேர். சிடு முஞ்சியை, வார்த்தைகளால் வசை பாடுபவனுக்காக எத்தனை பேர்?

வழியில் கண்டவருக்கு "வந்தனம்" சொன்னால் சந்தோஷமடைவான். அதே நேரம் சிரிக்காமல் போனால் மனதுக்குள் சினந்து நோக்குவான். வசீகரம் என்பது இதயத்தின் வெளிப்பாடு. பழகும் தன்மையினால் பேச்சினால் வருவது.

இதயம் முகத்தில் அழகை வரைந்து கொள்ளுகின்றது. "கனிவு" , "பரிவு" கரையாது. ஆனால் துன்பத்தைக் கரைக்கும் தூயவஸ்து. துர்ச் சிந்தனையாளனும் பிறர் பற்றிய கசிவு அற்றவனும் கூட பரிவான பார்வையின் முன் சரணாகதியாகி விடுவான்.

தீர்க்கதரிசிகள், ஞானிகளது அருட் பார்வைகள் இந்த ஜகத்தைக் குளிர் ஜலமாகக் குளிப்பாட்டி புனிதமாக்கின. அன்பை தேக்கியவன் சகல பாக்கியங்களும் பெற்றவன். ஏன் எனில் அவன் அனைவரையும் தனதாக்கிக் கொள்கிறான். கனிவு கொண்ட தாயினால் இல்லம் இனிமையாகுதல் போல் பூப்போன்ற இதயங்களால் தான் பூமியை அசைக்க முடியும். அணைத்து மகிழவும் முடியும்.

இதயம் பொலிந்தால்,



RangaRakes

Tamilnavarasam.com

※ மலையை மடக்கலாம்.
※ சிலைக்கும் உயிரூட்டலாம்.
※ பெரும் புயலை நிறுத்தலாம்.
※ பெரு வெளியை எமக்கு ஆக்கலாம்.

எங்கள் மனப்பாரம் குறைய வேண்டும் என்றால் இளகிய மனத்துடன் இனிமையாக நோக்கிப் பாருங்கள். எங்கள் குறைகள் வற்றுவதை அனுபவ ரீதியாக உணர ஆரம்பிப்பீர்கள்.

பிறவியின் பூரணத்துவத்தை மனிதன் பெற்றாக வேண்டும். அழுபவனுக்கும் வலு இழந்தவனுக்கும் தேறுதல் கிட்டாது விட்டமையினாலேயே இந்த அவனியில் கல்லான மனிதர்கள் தொடர்ந்து பிரசவிக்கப்பட்ட படியே இருக்கின்றனர். ஏன் எனில், பிரச்சினைக்குட்பட்டவனிடம் கரிசனை காட்டப்படாது விட்டால் எதிர்காலப் பிரஜைகள் கூட இதுதான் இயல்பான மனிதப் பண்பு என்று தனது இயல்பான குணமாக்கியே கொள்ளுவார்கள். தாய், தகப்பன் சிரிக்க மறுத்தால் குழந்தை சிரிப்பதை இவர்கள் ரசிக்கவே மாட்டார்கள்.

குழந்தைக்குச் சிரிப்பூட்ட வேண்டும். வெறுப்பூட்டியே வளர்க்கப்பட்டால் அது கனிவை, விஷக் கனியாகவே நோக்கும். கனிவு இல்லாதவன் பிணியாளன். அவன் பிணி அகற்றி, புண்ணியவானாக புனிதனாக்க வேண்டியது சமூக கடனாகும். நாங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும்





என்பதற்காகவே மாற்றாரை மகிழ்வூட்டப் புறப்படல் வேண்டும். இது கூட ஒரு நல்ல சுயநலமாகவே படுகின்றது.


"பிரதிபலிப்பு" என்பது வெறும் ஒளித்தெறிப்பு என்பது மட்டுமல்ல, எமது நல்ல வலுவான எண்ணங்கள் எதிர்ப்படுவோரிடமும், அவர்களது எண்ணங்களும் அவ்வாறே பரஸ்பரம் வெளிப்பட்டு சங்கமிக்கும் உடன்பா டான அன்புள்ளமே அதுவாகும். இவையெல்லாம் இனிய இதயங்களுக்கே சாத்தியமாகும். அனுபவ பூர்வ உண்மை. நல்ல நண்பர்கள், குரு சிஷ்ய உறவு,தலைவன் தொண்டர் உறவு முறைகள், கணவன் மனைவி உறவு எனப் பல உதாரணங்கள் கூறலாம்.

காதல் சமாச்சாரங்கள் மட்டுமல்ல உலகை உறுதி யாகக் கட்டி வைக்கவும் கனிவே இனிய வாகனமாகின்றது. ஓரறிவு முதல் ஆறறிவு ஜீவன்கள் வரை பற்றுதல் இன்றேல் புவி இற்றுப் போகுமல்லவா? காதல், பற்று, பரிவு, பாசம், கருணை எல்லாமே கனிவுடன் இணைந்து கொண்ட குணங்கள் என்பதனைப் புரிந்து கொள்வோமாக. உலக இனிய பண்பு இதுவெனக் கொள்வோம்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
13.11.2005



RangaRakes
Tamilnavarasam.com



# கடவுளும் மதங்களும்

எல்லா மதங்களும் நல்லதையே சொல்கின்றன. கடவுளை வைத்து மதங்கள் உருவாகின. எனவே மதத்தின் பெயரால் மோதுவது கடவுளுக்குப் பிடிக்காது. மத நம்பிக்கையுள்ளவர்கள் பாவம் செய்யத் தலைப்படமாட்டார்கள். மானுடநேயம்மிக்கவனே இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவன். ஒவ்வொரு நாட்டின், இன மக்களின் பண்பாடுகளுக்கேற்ப மதக்கொள்கைகள் உருப்பெற்றாலும் உயிர்களுக்கு அன்பு செலுத்தும் கொள்கையில் சகல மதங்களும் ஒன்றாகின்றன. மத, இன, மொழி, குரோதங்களை, கரைத்து அழிப்பதே இறை தரிசனத்திற்கான வழியாகும்.

மதம், மனித மனத்தினுள் உள் நின்று நோக்கும் மாய வஸ்து என்கின்றார்கள். வஸ்து என்பது ஒரு பொருளே எனப்படுவது. ஆயினும், இது தொட்டு நுகர முடியாத அகத்துடன் தொடர்புடைய நம்பிக்கையின் இறுக்கமான கொள்கை.





மதங்கள்உன்னதமானவைஆயினும், மதங்களைத்தொட்டு நிற்பவர்கள் சிலரோ அது காட்டும் நெறியில் எட்டி விலகி நிற்பது விந்தை. மற்றவர் மதங்களைச் சுட்டி நின்று வெட்டிப்பேச்சு, தர்க்கம், குதர்க்கமாகப் பேசுவதே வேலையாகிவிட்டது.

கட்டாயம் இவர்கள் கடவுளைக் காணப்போவதுமில்லை, உணரப்போவதுமில்லை. முட்டி மோதுகின்ற துஷ்டப்பேர்வழிகள். கடவுளின் விரோதிகள். கிஞ்சித்தும் திருந்த வொண்ணாத மந்த புத்திக்காரர்கள். கருணைமிகு கடவுளை கண்டபடி விமர்சிக்கலாமா? இறைவன் மனிதனையும் சகல உயிரினங்களையும், புல் பூண்டுகளையும், அண்டசரா சரங்களையும் படைத்தான்.

ஆனால் மனிதன் மதங்களைப்படைக்க ஆரம்பித்தான். இறைவன் நம்பிக்கையின்றி மனிதன் இறுமாப்புடன் வாழ்ந்துவிட முடியாது. அப்படி வாழ முனைந்தால் அது குறை நிரம்பிய கறை படிந்த திறன் அற்ற வாழ்வாக அமைந்துவிடும்.

முற்று முழுதும் தெரியவொண்ணா பரம் பொருளுக்கு வரைவிலக்கணம் சொல்லவிழைவது பொருத்தமற்றது. இவர்கள் இஷ்டத்துக்கு கஷ்டம் இல்லாது கடவுளைப் படைக்க முனைந்து கொண்டிருக்கிறார்கள். அவர் பெயரால் சமய, சாதி பேத முலாம் பூசி மயக்கமூட்டி புதிய புதிய விஷ விதைகளை புதைக்கவும் செய்கின்றார்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

தெரியாத சங்கதிகளில் குழம்புவதைவிட, சொல்ல எத்தனிப்பதைவிட சும்மா இருப்பதே 'சிறப்பு'. தெளிவை நோக்கி நடை பயில்வதை விடுத்து, அழிவுச் சிந்தனையுடன் ஆரவாரிப்பது நல்லதா?

கழிவான சிந்தனைகள் புலனைத் திருப்பும். மலிவாக சந்தைக்கு வரும். ஏக இறைவன் இதயத்துள் புகுந்தால், புதுப்புது பொய்மைகள் உருக் குலைந்தே போகும். பூமி பொலிவானது, அழகானது. மனிதனின் தெளிவற்ற சிந்தனையால் அதனை அழிக்க முயல்வது, மதங்கள் பெயரால் மனித மனங்களைக் கசக்க முயல்வதுமாகும்.

மதங்கள் எவ்வளவுதான் மலிந்துபோனாலும் அதனுள் இருப்பவன் ஒருவன்தான் என உணர்ந்தால் பேதம் ஏது? குரோதம் ஏது? எல்லா மதங்களும் நல்லவை களையே சொல்லுகின்றன. "கெட்டழிந்து போ" என எந்த மதமும் சொன்னதில்லை. மக்கள் எல்லோருமே கடவுளின் பிள்ளைகள் என வாயாரச் சொல்லுபவர்களே தங்கள் மதம், தங்கள் இனம் என்று வந்துவிட்டால் வலிந்து கட்டி மல்லுக்கு நிற்பது ஏன்?

புது உலகம் படைப்போம். முற்போக்கு சிந்தனை களைவளர்ப்போம் என முழக்கமிடுகின்றார்கள். முற்போக்கு, நாத்திகம் என்றால் இறைவனுக்கு முரணான கொள்கை என்று கூடச் சொல்லுகின்றார்கள். முற்போக்கு





என்பது இறைவிரோதக் கொள்கை என்று கருதுவது எவ்வளவு முட்டாள்த்தனமானது. காலத்திற் கொவ்வாத மூடநம்பிக்கைக்கு எதிரான ஒவ்வொரு காலத்திலும் முற்போக்குவாதம் எழுந்தே வந்துள்ளது.

முற்போக்கு கொள்கையை கடைப்பிடிப்பவர்கள் கடவுளை வணங்கக் கூடாது என்பதில்லை. மூடக்கொள்கை யையும், இறை நம்பிக்கையையும் முடிச்சுப் போட்டுப் பார்க்கக்கூடாது. அதேபோல் நாத்தீகவாதம் பேசினால் அவர்கள்தான் அறிவுசார் கொள்கையில் வலுவானவர்கள் என்பதுமல்ல.

நாத்தீகவாதிகள் மக்கள் விரோதிகளுமல்ல, இவர்கள் மூடக்கொள்கையின் பலவீனங்களால் அதன் பலவீனகளை உணர்ந்து அதன் காரணமாக இறைபக்தி, கடவுள் கொள்கைக்கு முரணாகப் பேசிவருகின்றார்கள்.

கடவுள் பெயரால் கண்டபடி நடப்பவர்களுக்காக கடவுளை வணங்குபவர்கள் எல்லோருமே முட்டாள் எனத்திட்டமுடியுமா? அதேபோல் கடவுளை வணங்கியபடி இஷ்டத்துக்கு வேஷம் போடுபவர்களை பக்திமான் எனப் பெயரிடலாமா?

பக்திமானாக இருந்த வண்ணமே முற்போக்கான மனிதனாக வாழமுடியும். நாத்திகனாக இருந்து கொண்டே மனிதநேயம் மிக்கவனாக இறைவனால் நேசிக்கத் தக்கவனாக இருக்கவும் முடியும்.



RangaRakes
Tamilnavarasam.com

மனிதனால் நேசிக்கத்தக்கவனே மனிதன். இவன் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவன். மக்கள் சேவை மகேசன் சேவை என்றுதான் சொல்லுகின்றார்கள். அப்படி இருக்க மக்கள் விரோதப் போக்காக வாழ்ந்து கொண்டு பக்திமானாக வாழமுடியாது. நடிக்க அனுமதிக்கவும் கூடாது.

கடவுளுக்கு காணிக்கை செலுத்துவதற்குமுன் பக்கத்திலிருக்கும் ஏழைக்கு உள்ளதைக் கொடு. ஏழைக்குக் கொடுக்கும் ஒரு பிடி உணவேயாயினும் அது இறைவனுக்கு நல்கும் பெருவிருந்து.

எளியோருக்கு இரக்கம் காட்டு என்றே இறைவன் கோருகின்றான். இன்று பணம் சேர்க்கும் உபாயமாக, ஒரு சிலரால் ஆத்மீகம் கையாளப்படுவது கவலைக்குரியது. பாமரமக்கள் என்றில்லை, படித்தவர்களும் கடவுள் பெயரால் பயமுறுத்தப்படுகிறார்கள். உழைக்கும் நோக்கத்துடன் இறைவன் பெயரால் பணம் உறிஞ் சப்டுவது வேதனை.

காசைச் செலவு செய்தால் கடவுளைக் காணலாமா? அப்போதுதான் அவன் வாசல் திறக்கப்படுமா?

கபடம் மேவிய புத்திசாலித்தனமாக உழைப்ப வர்கள் மலிந்த தனாலேயே இன்று மதத்தின் மீதான வெறுப்பு எல்லோர் இதயங்களில் நிறைந்து விடுமோ என





அச்சப்பட வேண்டியுள்ளது. இப்படியே போனால் ஒரு சிலரது தவறான போக்கு காரணமாக இறை உணர்வை அருகச் செய்து கருக வைத்து விடுமல்லவா?

ஒவ்வொரு நாட்டிற்கும் கலாசாரங்கள், பழக்க வழக்கங்கள், தனித்துவமாகப் பேணப்பட்டு வருகின்றன. ஆனால் மனிதப் பண்பு ஒன்றே தான். மத நம்பிக்கைகள், தெய்வ வழிபாடுகள் ஒவ்வொரு நாட்டினதும் பண்பாடு களுக்கு ஏற்ப தோற்றம் பெற்றாலும் அரசியல் பெருமாற்ற ங்களால் சகல சமயங்களுமே உலகம் முழுவதும் வியாபிக்கத் தொடங்கின.

ஒவ்வொருவரும் தமக்கு எளிதான ஒத்துவரத்தக்க மதங்களை அனுசரிக்கலாயினர். இது அவரவருக்கே உரிய சுதந்திரமும் கூட உலகம் முழுமைக்குமே ஒரு பொதுவான சமயம் என்று கடைப்பிடிப்பதும் முடியக்கூடிய விஷயமும் இல்லை. அனைத்து மக்களுமே ஒரே நிலைக்கு ஒத்துப் போக இயலுமா?

ஆனால் மக்கள் அனைவருமே இறைவன் பெயரால் ஒரே நோக்கில் பண்பில் மக்களை நேசிக்கும் விதத்தில் ஒன்று பட முடியும். மதம், மொழி, கலாசாரங்களைக் காட்டி பேதம் பேசிவந்தால் நாம் பேசிக்கொண்டே இருக்க வேண்டியது தான். இதனால் உலகம் உடைபடுவதை நடைமுறைபடுத்த அனுமதிப்பது போலாகுமல்லவா?



RangaRakes

Tamilnavarasam.com

அடிப்படை மனித தர்மத்தை உணராத வரை தெய்வமும், மனிதனுக்கு அனு கூலமாக இருக்குமா? கடவுள் கொள்கையில் தீவிரமாக உள்ள மனிதன் அறப்பண்பில், மனித நேயத்தில், பேதம் காட்டுதல் முரணான இயல்பாகத் தோன்றவில்லையா?

மத உணர்வு புனிதமானவை என்று கொள்கை யளவில் ஏற்கின்ற நாம் செயல்முறையில் எதிரான போக்கினைக் கொள்வது சரிதானா?

அன்பு, தூய்மை, வாய்மை, பேதமற்ற தன்மை என்பன இதயத்தில் ஆக்கிரமித்தாலே தெய்வம் அங்கு குடிகொண்டுவிடுகிறது. இந்த தெய்வத்திற்கு மனிதர்களால் பேதம் நோக்கிய மதம் என்று ஒன்றில்லை

எனவே மதம் பொதுவானது. மனித முயற்சியால் அற வாழ்வு வாழ முடியும் மதத்திற்கு அளிக்கும் பெரும் கௌரவமும் இதுவேயாகும்.

மதம் பொதுவான தர்மம். இறைவனை நோக்கியது. மதங்களை நம்புவதை விட இறைவனை நம்புவதும், அவன் சித்தப்படி நடப்பதுவும் மேலானது. இறைவன் சித்தப்படி நட என்றுதானே எல்லா மதங்களும் சொல்லுகின்றன.






இறைவனைத்தவிர வேறொன்றில்லை என்பவர்கள், அவன் நினைப்பதைத்தவிர கண்டதையும் கருத முடியுமோ?

தெய்வத்திற்கு, மக்கள் மீது பேதமில்லை. மக்கள் தெய்வங்கள் மீது பேதம் காட்டலாமா? அன்பு, கருணை யுடனான நோக்கு மத பேதங்களைக் கடந்த உன்னத நிலைக்கு எம்மை கொண்டு செல்லும். இந்த நிலையைக் காண விழைவோமாக!

தினக்குரல்
வாரமஞ்சரி
04.12.2005



RangaRakes
Tamilnavarasam.com



# சந்தர்ப்பவாதிகளும், சந்தர்ப்பவாதங்களும்

> சந்தர்ப்பவாதிகள் சுயநலமிகள். இவர்களுக்குக் கூச்சமுமில்லை. கொள்கைகளுமில்லை. சந்தர்ப்பமாகச் செயல்படுவது தப்பில்லை. ஆனால் எவர்க்கும் தீங்கு விளைவிக்காத நல்லவற்றை மட்டுமே சிந்தித்துச் செயலாற்றும் போது எதிர் வரும் சவால்களை ஏற்போமாக! சந்தர்ப்ப வாதம் பேசும் சந்தர்பவாதிகளான அரசியல்வாதிகளால் உலகம் சிக்கித் தடுமாறுகின்றது. குதர்க்கம் தர்க்கமாகாது. இதற்கு நியாயம் எனும் வர்ணம் தீட்டவியலாது. தோல்வி துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் நல்லோர் தங்களை இழப்பது மில்லை, பொய்மைக்குள் நுளைவதுமில்லை.

சந்தர்ப்பவாதம் செய்தலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொய்மையாக முகமூடி அணிந்து செயல்படுவதும், சூழ நிற்பவர்களின் சிந்தையை மந்தமாக்க முயல்வதுடன் அவர்களின் அறிவைச் சிறை செய்ய எத்தனிக்கும் கீழ்த்தரமான நடவடிக்கையுமாகும்.





சந்தர்ப்பவாதம் எந்த நேரத்திற்கும் எடுபடாது. க்கநேரத்தில் காலை வாரி மற்றவரின் கேலிக் யதாக்கிவிடும். அதுமட்டுமல்ல ஒருவரை எரிச்சலூட்டச் செய்வதும், உண்மையை நல்ல வண்ணம் போலத் திரிப்பதும், சொந்தஆதாயங்களுக்காகத்தாம் சார்ந் தோரையும்காட்டிக் கொடுக்கின்றமையும் துஷ்டத் தனமாகும்.

தமது சுயரூபத்தைப் பிறர் காணாவண்ணம் சித்திரிக்க முயல்பவர்கள் இறுதியில் தங்கள் முயற்சியில் தோற்றுப்போய் தாம் கையாண்ட ஆயுதத்தாலே குத்துண்டு அவலப்படுவதும் உண்டு. பிறர்மேல் சவாரி செய்து கருமமாற்றுவது இவர்களுக்கு ரொம்பவும் பிடிக்கும். சந்தர்ப்பவாதிகள் என்போரே இலாபத்தை நல்ல நோக்கமின்றி அடைய முற்படுபவர்கள் என்றும் கூறலாம். ஆனால் நல்ல சந்தர்ப்பத்தினை நழுவவிடாமல் சமூகத்திற்கு நல்லது செய்பவர்களைச் சுயநலவாதிகள் என்றோ சந்தர்ப்பவாதிகள் என்றோ ஒருவரும் சொல்வ தில்லை.

மற்றவர்களின் தோளில் சாய்ந்தால் சொந்தக் கால் வலு இழந்து போய்விடும். உணர்வார்களா?

கொஞ்சப் பேர்வழிகள் இருக்கிறார்கள். தங்கள் திறமையை பிறர் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடிப்பார்கள் அல்லது



RangaRakes
Tamilnavarasam.com

பேசுவார்கள். உகந்த காரியங்களை உலகிற்கு ஆற்றுபவனுக்கு மற்றவர் அங்கீகாரம் தானாகவே கிடைத்து விடும். இதில் ஐயம் எதற்கு?

❖ தோல்விகளை ஒப்புக் கொள்ள மறுப்பவன் சந்தர்ப்பவாதம் செய்கின்றான்.

❖ குதர்க்கம் தர்க்கமாகிவிடாது.

❖ சந்தர்ப்பவாதம் சொந்தப் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்த்துவிடாது. உண்மையான நியாயவாதி, கண்டபடி பேச வேண்டிய தேவை இருக்காது.

எனினும் பொய்யைப் பேசுபவன் முன் மௌனித்தால் மெய் பொய்யாகி விடும். எனவே பேச வேண்டிய இடத்தில் பேச வேண்டும். சந்தர்ப்பவாதமாகச் சாயம் தீட்டுபவர்களின் சாயம் அகற்றப்பட்டேயாக வேண்டும். பச்சோந்தி தான் தப்பிக்கவும், தனக்குரிய இரையை தேடிக்கொள்ளவுமே தனது வர்ணத்தினை நிலைமைக்கு ஏற்ப மாற்றுகிறது. ஆனால் சந்தர்ப்பவாதிகள் எந்தவிதமான காரணமும் இன்றிக் கூட சவடால்த்தனமாகப் பேசி தம்மை உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களாக் காட்டிக்கொள்வர். தம்மை மேம்படுத்த எண்ணி மற்றவர்களைக் காயப்படுத்த முயலலாமா?'சுத்துமாத்துச்செய்யாதே' என்று சொல்லப்படுவதுண்டு. சிலர் பேசுவது அரிச்சந்திரன் பேசுவது போல



. ஆனால் கொஞ்ச வினாடித் துளிகளில் மழையில் கழுவிய சாயம் போல உருமாறி சுயதரி சனத்தைத் தாமாகவே வெளிப்படுத்தி விடுவர்.

நன்றாகப் பொய் பேசுவதே சந்தர்ப்பவாதிகளின் தகைமையாகும். நடிப்புத்திறன், பேசும் ஆற்றல், சூழலை நன்றாகப் புரிந்து வைத்திருத்தல் ஆகியவைகளை உணர்ந்து சந்தர்ப்ப வாதிகள் ஆட்சிபீடம் ஏறுகின்றனர். ஆயினும் எவ்வித சுயலாபம் கருதாமலும், உள்நோக்கமின்றி நன்மைகளின் பொருட்டு பக்குவமாக சந்தர்ப்பமறிந்து பேசுவது நடப்பது சந்தர்ப்பவாத செயல் என்று கொச்சையாகச் சொல்லிவிட முடியாது.

பொதுச் சேவை செய்பவன் காரியங்களைக் கனகச்சிதமாகச் செய்து முடிக்க நடிக்கவும் செய்கின்றான் நன்கு பேசுகின்றான்.

"ஆடுகிற மாட்டை ஆடிக்கற ,பாடுகிற மாட்டைப் பாடிக் கற" என்பர் பெரியோர் முடிக்க வேண்டிய நல்ல காரியங்களைச் சாதுர்யமாகச் செய்தல் தப்பு அல்ல தப்பு அல்ல. இது நல் வித்தையாகும் என்று அறிக.

இன்று எங்குதான் சந்தர்ப்பவாதிகள் இல்லை என்று கேட்கிறார்கள்?

❖ அரசியல்வாதிகள்,
❖ வியாபாரிகள்,
❖ சமய பொது நலத்தலைவர்கள்,



RangaRakes
Tamilnavarasam.com

இப்படி பலதரப்பட்ட வர்க்கத்தினர் சந்தர்ப்ப வாதிகளாகச் செயற்பட்டே வருகிறார்கள். அரசியல்வாதி சந்தர்ப்பம் வரும்போது இருக்கிற ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சிபீடம் ஏற முனைகிறான். வியாபாரிகள் தமது பொருளின் தரத்தை உயர்த்துகின்றார்களோ இல்லையோ மற்ற வியாபாரிகளின் வியாபாரத்தை தன் மூளை வளத்தினால் சிதறடித்து முடக்க முனையாமல் இருக்கமாட்டான்.

இதுபோலவே பொதுநலம் பேசும் தலைவர்களும் சந்தர்ப்பம் வரும்போது தம்மை வளப்படுத்தாமல் விட்டு விட்டால் தாங்கள் குட்டையாகிப் பட்டுப்போவார்கள் என எண்ணி மற்றவரை முடக்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். "கண் இமைப் பொழுதில் பிறர் கண்ணுக்குள் புகுந்து குத்தும் அசகாயச் சூரர் உள்ள பூமி இது" என அவர்களே கூறிக் கொள்வது வேடிக்கை தான்! சாதாரணமாக இன்று உலகில் நடக்கும் அரசியல் சமூக விஷயங்க ளைப் பாருங்கள்.

ஒரு அரசு அமைக்க பல உதிரிக் கட்சிகள் ஒன்றாக இணையும். இணையும் போது சந்தர்ப்பவாதம் பேசும் ஏன் ஒன்றுபட்டோம் என்று காரணத்தை சரளமாகப் பொய்கள் மூலம் நம்பவைப்பார்கள். முரண்பட்ட கட்சிகளை மக்கள் வேறுவழியின்றி ஆதரிப்பார்கள். முடிவில் இவர்களுக்கே சாதகமாக அமைந்து ஆட்சிபீடம் ஏறுவார்கள்.





நடப்பது என்ன?

எல்லோருமே முட்டிமோதிக் கொள்வார்கள் ஒன்றானவர்கள் பல துண்டாவார்கள். திட்டியவர்கள் மற்றவர்களுடன் கைகோர்ப்பார்கள். முன்பு திட்டியவர்கள் இணைந்து கொள்ள முடிவில் மக்கள் முட்டாள்களாவர்.

மீண்டும் நடப்பது என்ன?

சந்தர்ப்பவாதம் பேசுவார்கள் ஏன் பிரிந்தோம்? யாருக்காகப் பிரிந்தோம் எல்லாம் மக்களுக்காகவே என்று கூறி விடுவார்கள். மக்கள் அதனையும் அந்த சந்தர்ப்பவாதத்தையும் நம்புவார்கள்.

முடிவு?

ஆட்சிமாறும் கொள்கைகள் கோட்டை விடப்படும் இவர்களில் ஒருவர் ஏதோ இருக்கிற காலம் வரை தலைவர் களாகச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி , மக்களின் தோள் மீது ஏறி நாற்காலியில் உட்கார்ந்து விடுவார் இது எல்லாமே பழகிப்போன சாதாரண அவலம். இன்று எல்லாமே வழமையான நடைமுறைகள். இது எல்லாம் இயல்பான கருமங்களாக உலகம் ஏற்றுக்கொண்டு விட்டது. இது மீண்டும் தொடர்கதை போல சந்தர்ப்ப வாதிகளின் சந்தர்ப்பவாதம் சரித்திரத்தையே மாற்று கின்றதல்லவா?



RangaRakes

Tamilnavarasam.com

இவை எல்லாமே நிரந்தரமல்ல ஆனால் மக்களுக் குண்டான துன்பங்கள் அவலங்கள் எல்லாமே நிரந்தரமாகி விடுகின்றன.

எனவே சந்தர்ப்பவாதிகளை இனம் காணாதவரை உலகம் உய்வு அடைய முடியுமா? பொருள்கள் விலை கூடினால், உலக சந்தை நிலைவரம் என்பார்கள். அதே காரணத்தை மாற்றுக் கட்சிக்காரன் தனது ஆட்சியின் போது கூறினால், அதை ஏற்காது போர்க்கொடி எழுப்புவார்கள், சந்தர்ப்பவாதிகளுடன் உறவே வைத்திருக்கக்கூடாது என்பார்கள். ஏனெனில் காட்டிக் கொடுப்பதே இவர்கள் தொழில். சந்தர்ப்பவாதிகளிடம் விட்டுக்கொடுக்கும் இயல்பேயில்லை. இவர்களின் குறிக்கோள் தாம் செய்வது தவறாயினும் குறித்த இலாப இலக்கை அடைவதேயாகும்.

இந்த குணதிசயங்களால் நண்பர்களிடமும் முரண்பாடுகள் தோன்றுவதுண்டு. எல்லா நண்பர்களிடமும் தப்பான அபிப்பிராயம் தோன்றி விடுகின்றது.

"எவ்வளவு நல்ல சினேகிதர்களாக வாழ்ந்தீர்களே, ஏன் உங்களுக்குள் பிரிவு" என்று கேட்டால், "அவன் என்னைக் காட்டிக் கொடுத்து சிக்கலில் மாட்டிவிட்டான்" என்று கூறுபவர்களை அன்றாடம் கண்டிருப்பீர்கள். நண்பர்களுக்கிடையில் உள்ள உண்மை நட்பையும் வேண்டாத சிலர் அது சந்தர்ப்பத்திற்கானது என்று முத்திரை குத்தப்பட்டு ஒருவரை ஒருவர் சந்தேகக்கண்





கொண்டு பார்க்கச்செய்தும் விடுவார்கள். போலியாக வாழ்பவர்களுக்கு நல்ல நண்பர்களே கிடையாது. நல்ல நண்பன் கண்டபடி வாதம் செய்யவும் மாட்டான். பிழைகளைச் சுட்டிக்காட்டுவது அதன் பொருட்டுச் சண்டையிட்டு விவாதிப்பதும் வெவ்வேறான விஷயங்கள். அறிந்து கொள்க!

நியாயம் கேட்பதற்கும், வாதாடி மனஸ்தாபம் கொள்வதற்கும் தொடர்பேயில்லை. உள் நோக்கமின்றி நியாயங்கள் பேசப்படல் வேண்டும். இங்கு குதர்க்கங்கள் விலக்கப்படும். தர்ம நியாயங்களே கோர்க்கப்படும். வக்கிரபுத்திக்கும் அதிகார தோரணைக்கும் இடமே யில்லை. நல்ல நியாயம் உள்ள இடத்தில் சந்தர்ப்பவாதம் எடுபடப்போவதேயில்லை. பிழைகள் பல ரூபமெடுத்து அழிந்துவிடும். சரியானவைக்கு ஒரே ஒரு வழிமட்டும் தான், அது ரூபத்தை மாற்றுவதில்லை.

சில விஷயங்கள் எல்லா நேரத்திற்கும் பொருந்து வனவாக அமைவதில்லை. மாற்றங்கள்வரும். சூழலை உணர்ந்து, செயற்படுவதில் தவறில்லை. ஆனால் உண்மைகளே முதன்மைப்படுத்தப்படல் வேண்டும். காலமாற்றத்தால் சரியானவைகள் தவறாகிச் சரிந்தது போலிருக்கும். நெளிவு சுழிவுகளை அறிந்து கொள் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். எச்சரிக்கை உணர்வு வலுக்குன்றினால் எமது தளர்வு நிலையில் அது பற்றிக் கவனம் எடுக்காது விட்டுவிடுகின்றோம்.



RangaRakes

Tamilnavarasam.com

எனவே, காலம், நேரம் அறிந்து போராடுபவ எந்த சந்தர்ப்பவாதியாலும் ஒன்றும் செய்து விடமுடியாது.

சோர்ந்த நிலையில் நாம் இருந்தால் சந்தர்ப்பவாதி முந்திக் கொள்கின்றான். பலவீனமாக நாம் இருந்தால் இவன் பாசாங்கு பலித்துவிடும்.

பச்சோந்திகள் பலமடைவது, மற்றவன் தன் நிலையை உணராமல் விடுவதன் பொருட்டேயாகும்.

சாதுர்யம் என்பது, பொய்களைப்போதிப்பதாக அமையக்கூடாது. சுயநலமற்ற நோக்கு, உண்மையின் தரிசனத்தையே நோக்குபவர்கள் என்றுமே சந்தர்ப்ப வாதியாக மாற இடமேயில்லை!

தினக்குரல்
ஞாயிறுமஞ்சரி
11.12.2005







# கோபம்

தமது எண்ணங்கள் ஈடேறாது விட்டாலும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், தனது இயலாமையை வேறு விதத்தில் செய்கை மூலம் உணர்த்த இயலாத வேளையிலும் தங்கள் முன் நடக்கும் அநியாயங்களைக் கண்டு பொறுக்க இயலாமையினாலும் கோபம் பொதுவாக உண்டாமைக்கான காரணங்களாகும். கோபத்தினைக் கண்டபடி வெளிக்காட்டுதல் பலவீன நிலையைக் காட்டும். சினம் மனத்தை வதைத்து தேகத்தைச் சுருக்கும். அழகைக் கெடுக்கும். எவரிடமும் வெறுப்பை உமிழாமல் நல்ல நோக்கத்திற்காக கோபத்தை வெளிக்காட்டுதல் தவறு அல்ல. சினம் கொள்வோரை மனிதர் ரசிப்பதில்லை.

ஆரவாரப்போக்கற்ற அப்பாவி மனிதர்கள் கூட சிலவேளை தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் கடும் கோபத்திற்குள்ளாவதுண்டு.

நியாயபூர்வமான தமது எண்ணங்களை கருமங் களை ஏனையவர்கள் உதாசீனம் செய்யும் போதும்



RangaRakes
Tamilnavarasam.com

அல்லது அதற்குக் குந்தகம் ஏற்படுமாற்போல் நடக்கும் போதும் தவிர்க்க முடியாத நிலையில் கோபம் எற்படத்தான் செய்யும் . கோபம் வேண்டப்படாத ஒரு உணர்ச்சி வெளிப்பாடல்ல. மனதின் தூண்டலால் செயல் பிறக்கிறது. செய்கின்ற செயலுக்கும், எங்கள் மன உணர்வுக்கும் ஏற்ப காரியங்கள் நடைபெறாவிட்டால் சாதாரண நிலையில் இருந்து நாங்கள் விடுபட ஆரம்பிக்கின்றோம்.

ஆயினும், எங்கள் கோபங்கள் நியாயபூர்வமாக இல்லாது விட்டால் பிறர் கண்டனங்களுக்கு உட்பட்டாலும் அதனை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். வேண்டாத கோபங்கள் மனத்தாங்கலாகி மற்றவர் இதயங்களில் வேம்பாகி உதாசீனப் பொருளாகவும் உருமாறலாம். எனவே, ஆத்திரப்படுமுன் சீக்கிரம் எமது நிலையை உணர்வதற்கு அறிவுக்கும் அவகாசம் கொடுத்தேயாக வேண்டும்.

சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப கோபங்களின் தன்மை வேறுபடும். ஆத்திரம், சினம், சீற்றம், வெகுளி எனப் பலவாறு கோபத்திற்கு நாமங்கள் சூட்டப்பட்டாலும், மனதுக்கு ஒவ்வாத நிலையில் ஏற்படும் உணர்வு இது என்பதில் இது பொதுவானதே! ஒருவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், தனது இயலாமையை வேறு விதத்தில் செய்கை மூலம் உணர்த்த இயலாத வேளையிலும் தங்கள் முன் நடக்கும் அநியாயங்களைக் கண்டு பொறுக்க இயலாமையாலும் கோபம் பொதுவாக உருவாகக் காரணங்களாகும்.





சாதாரண நிலையில் இருப்பவன் கோபம் கொண்டால் குரூரமாகின்றான். வெளித்தோற்றம் மட்டுமல்ல உள் உறுப்புக்கள் கூட முறுக்கேறி இவர்களைத் துன்புறுத்தும். கோபம் கொண்டால் ஆத்மசக்தி விரயமாகும். தங்களை வீரனாகக் காட்டுவதற்குக்கூட கோபத்தினை சினேகமாக்கிக் கொள்கின்றனர்.

தொடர்ந்து ஆத்திரப்படுபவன் புத்தி மட்டுமல்ல, அவன் முகம் கூட அவனிடம் இருந்து விலகி புதுத்திரை போட்டுக் கொள்ளும். ஆத்திர முற்றவன் முகம் அவனுக்கே பிடிக்காது. சினம் கொண்டிருப்பவர் தமது நிலையறிய விரும்புவதில்லை. மென் மேலும் தம்மை வருத்துவதுடன் உயிருள்ளஉயிரற்ற பொருள்களையும் காயப்படுத்துகின்றான்.

தான் ஒன்றும் செய்யவில்லையே என்று சொல்லிச் சொல்லி

- தப்பான அபிப்பிராயம்,
- சிந்திக்க அவகாசம் கொடுக்காமை,
- நான் என்கிற முனைப்பு,
- மேலதிக அதிகார எண்ணம்,
- இருக்கிற வாய்ப்பை உடனே காப்பாற்ற முனைதல்,

போன்ற காரணங்கள் சினத்துடன் உறவை உண்டாக்கின்ற கருப்பொருட்களாகும்பெரும் பாலானவர்கள் தாங்கள் சொல்லுவதைப் பிறர்கேட்க வேண்டும் என



RangaRakes

Tamilnavarasam.com

எதிர்பார்க்கிறார்கள். சகல அதிகாரம் கொண்டவர்க மட்டுமல்ல சாதாரண மனிதன்கூடத் தன் நிலைமை வலுப்படுத்தி தனது அறிவுக்கு நிலைக்கு தன்னா நேசிக்கப்படுபவர்கள் கட்டுப்பட்டேயாக வேண்டும் எ எதிர்பார்க்கிறான்.

ஒரு பாடசாலை ஆசிரியர் என்ன எண்ணுகிறார் பெற்றோர்கள் என்ன நினைக்கிறார்கள்? அலுவல மேலதிகாரி, வீட்டில் கணவன், மனைவி இவர்கள் கூட என் எதிர்பார்க்கிறார்கள்? தமது அதிகார வரம்பினுள் இருப்பவர்க தமது எண்ணத்திற்கு மாறுபாடாக இருப்பதாகக் கருதினா ஆத்திரப்படுகின்றனர். இவர்களுடைய ஆத்திர வெளிப்பா சரியானதா? பிழையானதா? என்பதை நிச்சயிக்க விரும்புவ கிடையாது. கேள்வி கேட்டால் கோபம் வருவது இயல்பு. சரியானதா? அல்லது பிழையானதா? என்பது வேறு விடய சாமான்ய மனிதன் தனது உரிமைகள் மறுக்கப்படும்போ அல்லது குறைக்கப்படும்போது சினம் கொள்வதி தவறில்லை.

ஆனால் சில விடயங்களைக் கோபங்களாலும் சி சங்கதிகளைச் சாந்தமாகவும் சாதித்துக் கொள்ள முடியும் சில முகாமையாளர்கள் "சந்தோஷமாகக் காரியமாற் முனைகின்றோம், ஆனால் முடியவில்லையே" என்பார்கள்

"கோபித்துக் கண்டபடி திட்டினால் தான் காதுக்குள் எல்லாமே நுளைகிறது. என்ன மனுஷர்கள் இவர்கள்" என்





அலுத்துக் கொள்பவர்களை நீங்கள் பார்ப்பதுண்டு தானே. எனவே இந்தக் காரணங்களால் சினம் சிங்காரமான இயல்பு என்று கூறிவிட முடியுமா? அழ வைத்தா அழகு பார்ப்பது?

சாதாரண நிலையில் யாராவது அமைதியாக இருந்தால் அது கூடப் பிடிக்காதவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். வேண்டுமென்றே சீண்டி இவர்களை ஆத்திரம் கொள்ளச்செய்து விடுவார்கள். ஒரு நபரைத் திருத்தி நல்வழிப்படுத்தும் நோக்கில் கோபப்பட வைத்த லுக்கும் காரணமின்றி கோபப்படவைப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டு?

- ❖ பெற்றோர், பிள்ளைகளை
- ❖ ஆசிரியர், மாணவர்களை
- ❖ அதிகாரி, ஊழியர்களை

இந்த நோக்கில் திருத்த முனைவது முண்டு. மற்றவர் நலனில் அக்கறை கொண்டவர்களுக்குக் கண்டிக்கவும் கோபிக்கவும் உரிமையுண்டு. நல்லவர்கள் ஒருவர் மீது கோபம் கொள்வார்களே ஒழிய அவர்கள் மீது வெறுப்புக் கொள்ளவே மாட்டார்கள். கோபம் வேறு வெறுப்பு வேறு, வெறுப்பு உதாசீனப்படுத்தி எங்களைத் தூரவிலக்கி வைத்துவிடும். நீண்ட கால கோபம் ஈற்றில் வெறுப்பாக வளர விட்டுவிடக்கூடாது. பெரியோர்கள் ஏனையவர்களை அன்புடனேயே நோக்குவதால் வெறுப்பை உமிழ்வது கிடையாது. சாதாரணமானவர்கள் ஆரம்பத்திலேயே மற்றவர்



RangaRakes Tamilnavarasam.com

மீது வெறுப்புற்று பின்னர் கோபித்து அதனை மறக்காது மனதுக்குள் பூட்டி வைத்து விடுகின்றார்கள்.

கோபப்பட உரித்துடைய நாங்கள், மன்னித்து மறப்பதற்கும் கடமைப்பட்டவர்கள். ஒரே திசையில் பார்ப்பதால் நியாயங்கள் கூடச் சில பொழுது அநியாயமாகத் தென்படலாம் அல்லவோ? பயமுறுத்தவும் கேலிக்காகவும் தரக்குறைவாக எண்ணி மட்டம் தட்டவும் எங்கள் உணர்வுகளைப் பயன்படுத்துதல் எந்த வகையிலும் நியாயமாகாது. எங்களில் ஒருவர் தங்கியிருக்க நேரிட்டால் அவன் தாழ்ந்தவன் எனக்கருதி எமது இஷ்டத்திற்கு சினம்கொண்டு வைது துன்புறுத்தல் அழகாகுமா?

பெரும் முனிவர்களும் ஞானிகளும் நீதியை நிலைநாட்டுவதற்காகக் கோபம் கொண்டு நடந்ததாகக் கதைகளில் படித்துவிட்டுப்பெரிய தோரணையில் எல்லோருமே சீற்றம் கொண்டவராகத் தம்மை மாற்றுவது வேடிக்கைதான். நியாயமற்ற தன்மையை வலுக்கட்டாயமாகத் திணிக்க சீற்றமான தோற்றத்தை ஆயுதமாக்க முனைவது காரியசித்திக்கு உதவாது.

கற்பனைக் கதாபாத்திரங்கள் மூலம் மிகவும் வக்கிரமான கோபாவேஷம், ரௌத்திரமாக துள்ளிக் குதிப்பது, ஜனரஞ்சகமாகக் கருதப்படுவது நிறுத்தப்பட வேண்டும். துர்க்குண வெளிப்பாடுகளை ரசனை என ரசிப்பது, முடிவில் வளர்ந்துவரும் சிறார்களின்





நினைப்புகளையே வேறாக மாற்றிவிடக்கூடும். வில்லன் சிரிப்பதை, பற்களை நற நற....... எனக் கடிப்பதை, முகத்தை அஷ்டகோணலாக்கி திருகி, வதைத்து, அசைப்பதை நடிப்பு என ரசித்தாலும், இந்த ரசனைகள் கூட நெஞ்சத்தில் சிறுசிறு கீறல்களை உராய்ந்து கொள்ளும்.

கோபம் கூட நவரசத்தில் ஒன்றுதான். அதுவே குணமாகக் கருதலாமா? இதுவே மனதில் இடம்பிடிக்கலாமா? மக்களைச் சீண்ட திசைதிருப்ப வன்முறைகளுக்கு வித்திட்டு வளர்க்க கோப உணர்வினைஅரசியல்வாதிகள்ஆயுதமாக்கிக் கொள்ளுகிறார்கள். அதர்மங்களுக்கு நியாயம் என்கின்ற சாயம் போட்டு கோபத்திற்கான காரணங்களுக்கு விளக்கம் சொல்லக்கூடாது.

மனதினுள் குமைந்து இருக்கும் புழுக்கமான எண்ணங்களைப் புலனடக்கம் மூலம் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும். எவர் தனது தேவைகளை முழுமையாகவும் திருப்தியாகவும் பெற்றுக் கொள்ளுகிறார்கள்? எல்லாமே கூடி வரும் போது களிப்படைவதும் இல்லாவிட்டால் ஆத்திரப்படுவதும் சராசரி இயல்பேயாயினும் இந்நிலையில் இருந்து நாம் தேறுதல் காண விழைய வேண்டும்.

எங்களுடைய உணர்வுகளை மதிக்கும் நாம், மற்றவர் இயல்புகளைப் புரிந்து கொண்டால் எவர் மீதும் ஆதங்கப்படத் தேவையில்லை. சில சமயம் எங்களது கருமங்களால் எம்மீதே கோபம் சர்ப்பமாகப் படமெடுக்



RangaRakes

Tamilnavarasam.com

கிறது. தன்மீதும், சுற்ற உள்ளவர்கள் மீதும் ஆத்திரமுற்றுப் பாமரரும், கற்றாரும் கூட பழிதீர்க்க எண்ணுவதுண்டு.

மிதமிஞ்சிய கோப உணர்வினால் பிறரைப் பழிதீர்த்து, அவப்பெயரை உண்டாக்கித் தங்களது உயிரையே தற்கொலை மூலம் பறித்து எறிகின்ற நபர்களை என்ன என்பது? எல்லாமே கூடி வராதுவிட்டால் காரணங்கள் கண்டறியப்பட வேண்டும். வெகுண்டெழுந்து ஆவேசம் கொள்ளக் கூடாது.

ஒரு நொடிப்பொழுது அடங்காத ஆத்திரம் பல ஆண்டு வாழ்க்கையை தோண்டி மூடிவிடும். தன்னைத் தானே பண்படுத்த முனைய வேண்டும். பண்படுத்தியே ஆக வேண்டும்.

ஆவேசமும்அடங்காதபுத்தியும்,சண்டமாருதமாகி கண்டபடி வெகுளிக்குள் ஆட்படுவதும் யாருக்கு நஷ்டம்? தான் சார்ந்த குடும்பம், சமூகம் என்ற எதுவித பிரக்ஞையுப்மின்றி மனம் போன வழியில் குணம் மாறிக் கோபத்தினை நல்ல ஆபரணமாகப் புனைய விரும்பலாமா? திடீர் எனத் தோற்றம் எடுக்கும் ஆத்திரம் காரணமாகக் குடும்ப பிரிவு,நண்பர்களின் விலகல் என்பன பாசங்களைக் கூறு போடும் நிலையைத் தோற்றுவித்து விடுகிறதல்லவா?

சிறுபொழுது தன்னிலை இழத்தலால், பலவருட இழப்புக்கு உள்ஆகலாமா? சினம் இயல்பான போக்காக





மாறக்கூடாது. முன் கோபத்தால் முட்டாள்களாகவும் கூடாது.சினம் என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும் இதன்அடிப்படைக்குணம் ஒன்றே தான்.

எம்மை நாம் தளர்ச்சியான நிலைக்கு இட்டுச் செல்லக் கூடாது. முறுக்கேறிய நெஞ்சுரம் கொண்டவர்களுக்கு சலனம்,கோபதாபம் கிடையாது. எவ் வேளையிலும் அமைதி, சாந்தம் உகந்ததேயாகும். துன்பம் தோல்வி ஆதங்கம் இவர்களுக்கு இல்லவே இல்லை!

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
27.11.2005



RangaRakes

Tamilnavarasam.com



# மரணத்தின் பின் வாழ்வு

மரணத்தை ஏற்கும் மனப்பக்குவம் வேண்டும். வாழ்வாங்கு வாழ்ந்தவன் மரணிப்பதில்லை. உலகிற்காக, உழைத்தவர்கள், இளைத்துக் களைத்து ஓய்வடைவதில்லை. இவர்கள் மரணத்தின் பின்னரும் இறைவரம் பெற்றவர்களாகின்றனர். மக்கள் உள்ளத்தில் நிரந்தரவாசியாகி விடுகின்றனர். சொர்க்கமும், நரகமும் இந்தப் பூமியில்தான். நல்லவர்கள் சொர்க்கத்தை உருவாக்குகின்றார்கள். இவர்களின் நிழலில்தான் உயிர்கள் இளைப்பாறுகின்றன. பூரண வாழ்வு வாழ்ந்தவர்களுக்கு மரணம் சிரமமானது அல்ல. நிறைந்த மனதுடையவர்கள், இறந்தபின்னரும் தொடர்ந்தும் இயங்குபவர்கள்.

மரணத்தின் பின்னர் என்ன, என்ன, நடக்கும் எ புதிது புதிதாகக் கதைகளைப் பலர் பின்னிக் கொண்டிரு தைக் கேட்க கேட்க சுவாரஸ்யமாக இருக்கும். சிலர கதைகள் பயமூட்டுபவையாகவும் சில கதைக விநோதமாக வியப்பூட்டு பவையாகவும் இருக்கும்.





என்றாலும் மாண்டவர்கள் மீண்டும் வந்து சொல்லா வகளாக இருப்பதால் அவை அனைத்துமே சாத்தி மற்ற கற்பனை வளமான கட்டுக்கதைகள் என்றே படுகின்றது. செத்தவர்கள் மீண்டும் வந்து சொல்லாது வது கூட நல்லதுதான். அப்படி மீண்டும் வரலாம் என ண்ணிவிட்டால் செத்துப் பார்த்தால் என்ன என்று எண்ணி உயிரை விட எத்தனிக்கும் மனிதர் மலிந்து விடுவர்.

மரணித்தால் என்ன நடக்கும் என்ற ஆராய்ச்சியில் மனநோயாளிகள்போல்ஆகித் தற்கொலைசெய்து கொள்ப வர்களும் உண்டு. இறந்து போனால் என்ன நடக்கும் என்று கண்டபடி பேசுபவர்களை நீங்கள் கண்டு இருப்பீர்கள் அல்லவா? உண்மையில், உலகில் வாழ்வாங்கு வாழ்ந்த உத்தமர்கள் மரணத்தின் பின்னரும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இவர்களது எண்ண அலைகள் இன்னும் வண்ணக் கோலங்களாக உலகை ஈர்த்துக் கொண்டே இருக்கின்றன. நல்லவர்கள் வல்லவர்கள் மரிப்பதில்லை என்பது நிதர்சனமான சத்தியவாக்கு.

சும்மா இருப்பவன் வாழும் போதே மரணித்தவன் போல் இருக்கின்றான். தொண்டு செய்தவன் அண்டம் இருக்கும் வரை இருந்து நிலைக்கின்றான். காலப் புத்தகத்தில் உன் பெயரை ஆழப் பதிவு செய்! அதற்காக உன் வாழ்வு இருக்கும் காலத்தில், குவலயத்தை கோவிலாக்குவது உனது பொறுப்பு என்றே நினைத்துக் செயல்படு! இக் கருத்தை ஏற்பதே சிறப்பு!



RangaRakes
Tamilnavarasam.com

பொழுதுகள் தோறும் வளர வைக்க விழுதுகள் த
தாய் மரத்தைச் சுமப்பது போல் எம்மை உருவாக்
மண்ணை எங்கள் சிறு கரங்களாலேயே தாங்கிக்கொள்
முடியும்.

வல்லவன் கரங்கள் பத்துப் பூமியைச் சுமக்கவல்லன

நல்ல சேவைகள் பேசப்படாமல் போனதில்லை.
விரட்டப்பட வேண்டிய சோம்பலும் வீண்வீம்பும் தறித்
எறியப்பட்டால் செய்கிற காரியங்கள் சரிவராமல் போகாது.

சொர்க்கமும் நரகமும் இந்தப் பூமியில் என்பார்கள்
கற்பனையில் நாம் காணுகின்ற சந்தோஷமான உலகை
ஏன் நம்மால் சிருஷ்டிக்க முடியாது என கேள்வி கேட்கா
வரை நாம் இன்னமும் அடிமட்ட வாழ்வுடனேயே ஓட்டிக்
கொண்டிருக்கின்றோம் என்றே பொருள்படும்.

இன்று எதைத்தான் மனிதனால் சிருஷ்டிக்க
முடியாது என்றே கூறுகின்றார்கள். இந்தக் கூற்று
இறைவனுக்குவிடுக்கப்படும்சவால்என்றும் கருதப்ப
டுவதுண்டு. உண்மையில் ஒன்றை நாம் புரிந்துகொள்ள
வேண்டும். மனிதப் படைப்பே விந்தையானது. இந்த
சிருஷ்டிப்பு இறைவனுடைய கட்டுப்பாட்டினுள் அமைந்து
விட்டமையினால், மனித சிந்தனை வெளிப்பாடுகள்
கண்டுபிடிப்புகள் நிச்சயமாக இறை நிந்தனை என்று கருதல்
தகாது. தனது எண்ணக் கிடக்கையை இறைவன் தனது
சிருஷ்டிகள் மூலம் வெளிப்படுத்துகின்றான்.





குழந்தை பிறக்கத் தாய் தேவைப்படுகிறாள். மழை
வதற்கும் கடல், மலை, மரங்கள், முகில்கள் சம்பந்தப்
ன்றன. இவைஎல்லாமே நேரடியாக எமக்குக் கிடை
தில்லை.அது போலவே, கடவுள் தனது உருவத்தின்
லாகத் தியாகிகளை,தொண்டர்களை நல்ல வல்ல
ர்களைப்படைத்து இவர்கள் மரணத்தின் பின்பும்
முகின்ற அருளைப் பொழிந்தும் வருகின்றனர்.

ஒரு முறை வரும் மரணத்தைப் பொருட்படுத்தி
சுபவன் பல முறை மரணிக்கின்றான்.

'சாகா வரம்' என்பது கூட மரணத்தின் பின்னரும்
அவன் ஏற்கனவே நல்வாழ்வு வாழ்ந்து விட்டதனால் ஏற்பட்ட
மங்காத கீர்த்தியின் மறுநாமம் ஆகும்.

சேவை நலம் விரும்பும் பரோபகாரிகள் வருகின்ற
இறப்புப் பற்றி சிந்திக்க நேரமின்றி, சொந்தம் என்று
எல்லோருக்காகவும் உரை கல்லாகத் தேய்ந்தும் உயர்
கின்றான்.

ஆயுள் வரையறை என வாழ்நாளைக் கணக்கீடு
செய்வது சரிதானா? ஆயுள் நீளத்தின் சிறப்பு செயலின்
விளைவினால் கருதப்பட வேண்டும். பாதிப்பொழுது
தூக்கத்திலும், மீதிப் பொழுது விழிப்பிலும் கழிவதுதான்
வாழ்வா?



RangaRakes

Tamilnavarasam.com

சரி விழிப்பு நிலையிலும் உறங்கும் மனிதர்கள் எவ்வளவு பேர் தெரியுமா? அதே சமயம் உறக்க நிலையிலும் சதாகாலமும் நித்திய இயக்கத்தில் இருப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். மெய்ஞானிகள், ஆன்மிக வாதிகள் என்றில்லை. சாதாரண நிலையில் வாழ்கின்ற எத்தனையோ பேர் உடலாலும் உள்ளத்தா லும் ஓய்வின்றி இந்த உலகிற்காக வாழ்ந்து வருகின்றார்கள்.

விழித்தபடி உறங்குவது சமானியரின் நிலை. விழிப்பிலும் உறக்கத்திலும் விழிப்பு நிலையில் எழுச்சியுடன் துலங்குவது அறிவு நிலையில் உள்ள ஞானிகள் நிலையாகும்.

மறுபிறப்பிலாவது நல்ல பிறப்பு எடுக்க வேண்டும். இருக்கும் காலத்தில் புண்ணியம் செய்தால்தான் பாவவினை அகலும் என்று மனிதன் நல்லன செய்ய விரும்புகின்றான். ஆனால் மறுபிறப்பு, பாவபுண்ணிய வினைப்பயன்கள் உண்டோ? இல்லையோ? என்கிற நம்பிக்கை நம்பிக்கையீனம் ஒருபுறமிருக்க செய்யப்படுகின்ற நற்கருமங்களால் ஏற்படுகின்ற திருப்தி இருக்கின்றதே அது கோடி சொர்க்கத்திற்கும் மேலானதே!

மனம் நல்ல விஷயங்களுக்கே திருப்திப்பட்டுப் பழக வேண்டும். இதனாலேயே நாம் வாழ்ந்த திருப்தி எமக்குப் பூரணமாகக் கிடைக்கும். இம்மை, மறுமை, பாவம்,புண்ணியம் ஆகிய நம்பிக்கைகள் எல்லாமே





நல்லவைகளைச் செய்தே தீரவேண்டும் என்பதை அறிவுறுத்தவே என எண்ணினால் ஒருவருக்குமே கெடுதல் நினைக்க விருப்பம் உருவாகாது அல்லவா?

வாழ்க்கையின் நோக்கம் கிடைத்ததை உண்டு களித்து, உடுத்தும், படுத்தும் சுகிப்பது மட்டுமா? அக்கம் பக்கத்து நிலைகளையும் கருணை கொண்டு நோக்க வேண்டும். எமது எதிர்கால நிம்மதிகளுக்கு இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கும் நிரம்ப தொடர்பு உண்டு. மனித உயிர்களை மட்டுமின்றி தாவரம் உட்பட சகல ஜந்துக்களும் கூட பூமியின் மதிப்பு மிக்க பொக்கிஷங்கள் என்பதை உணர்வோமாக.

ஆதவன் உட்பட அதனைச் சுற்றும் நவக்கிரகங்களும்தனி உயிரை மையமாகவைத்துப் படைக்கப்பட்டதல்ல வைத்துப் இவைகளின் ஈர்ப்பில் முழு உலகமும் சமநிலையில் இயங்குகின்றது இதை உணர்ந்தால் ஒவ்வொரு தனிமனிதனும் பொது நோக்குடனே வாழத் தலைப்படுவான் என்பது உறுதி.

புதிது புதிதாக சிந்தனைகள் வளர்ந்து வருகின்ற உலகம். தனது எதிர்கால சிறப்புகளை நிலைநிறுத்தியே ஆகவேண்டு மல்லவா? ஒருபொழுது வாழ்ந்து மறைவதல்ல வாழ்வு இந்த வாழ்வு கூட பலயுகப் பரிணாம வளர்ச்சி தான். திடீர் என முளைத்தவன் மனிதன் அல்ல. பண்பு, கலாசார, வளர்ச்சி என்பது எல்லாமே படிப்படியாக



RangaRakes

Tamilnavarasam.com

உண்டானவை என்பதை அறிக. எனவே இத்தகைய வளர்ச்சி மானுட தர்மத்தினைத் தொடர்ந்து பேணும் நோக்குடன் மென்மேலும் உயிர்ப்புடன் வளரவேண்டும்.

ஒவ்வொரு தனிமனிதனின் நாமமும் அவனது மரணத்தின் பின்னரும் பெயர் சொல்லி அழைக்கப்படல் வேண்டும். இந்த உலகில் எல்லோரும் சம பங்காளிகளே!


எனவே இங்கு எனக்கு மட்டுமே இந்தப்பணி, உனக்கு மட்டுமே இந்தப்பணி எனச் சொல்லிக் கடமைகளை பிறர் தலையில் சுமத்தக் கூடாது.

உலகில் வாழ்வதற்கு உரிமை பெற்ற மனிதன், எல்லா உயிர்களையும் வாழ்வித்தலுக்கும் உரிமையும் கடமையும் உள்ளவன். இவ்வண்ணம் வாழ்ந்தால் மனிதன் மரணத்தின் பின்னரும் சிரஞ்சீவியாக வாழ்ந்து வருவான்.

தினக்குரல்
வாரமஞ்சரி
14.08.2005







## புகழுடன் திகழ்!

"புகழ்" பெறுதலுக்கு எல்லை இல்லை. இது விரிவடைந்து செல்வதுடன், பலருக்கு இது ஒரு போதையாகவும் இருக்கிறது. உண்மையான பணியாற்றுவோருக்கான தேடிவரும் அங்கீகாரமாகவே புகழ் கருதப்படுகின்றது. தன்னலமற்ற சேவை செய்பவனின் புகழ் நிலைக்கின்றது. குறுக்குவழியில் கீர்த்திகளைப் பெற்றுவிட முடியாது. தகாத வழியில் பெறும் அனுகூலங்கள் பின்னர் அவமானங்களையே அளிக்கும். புகழ் பெறுதலினால் பெறும் திருப்தி தொடர்ந்தும் மனிதனை இயங்கவைக்கும். பெற்ற புகழ் மேலும் ஒருவரை சாதனையாளராக நிலைத்து வைத்திருந்தால் அது பெரும் பேறு!

புகழ் கிடைத்தல் என்பது எமது வாழ்வில் நாம் ஆற்றுகின்ற பணியினை மென்மேலும் தொடர்ந்து செய்வதற்கான அங்கீகாரமேயாகும்.

எனவே புகழடைந்ததும் ஒதுங்கி விடுதல் சிறப்பன்று. புகழடைவதை விட பெற்ற கீர்த்தியைப் பேணுவதும் சேவைகளைச் சலிப்பின்றி விருப்புடன்



RangaRakes
Tamilnavarasam.com

செய்வதே சிறப்பானதாகும். புகழ் பெறும் நோக்குடனேயே செயலாற்றப் புகுந்தாலும் கூட நோக்கங்கள் வெறும் சுயநலத்திற்கு அப்பாற்பட்டதாயும், சமூகத்திற்கான அர்ப்பணிப்பிற்குமாய் அமைதலே சாலச் சிறந்தது எனக் கொள்க!

தூய்மையும் வாய்மையும் நிறைந்தவர் வாழ்வில் புகழ் பூப்பது புதுமையே அல்ல. எனினும், பலர் இதனைச் சுலபமாகச் சேர்க்கப் பிரியப்படுவது வேடிக்கையானதும், வினோதமானதுமாகும். இதன் பொருட்டு புகழ் சேர்க்க மார்க்கம் புரியாமல் நேர்மை, உண்மைகளை சேய்மை யாக்கிப் பிறரிடம் எதனைப் பிடுங்கலாம் எனக்குறியாக நோக்குவது மன்னிக்கக் கூடிய செய்கையல்ல.

மற்றவன் முதுகில் பயணம் செய்ய விரும்பினால், சொந்தக் கால் சோர்ந்து போய் நடக்க மறந்து நடைப்பிண மாவார்கள். கீர்த்தியைத் தேடி ஓடி அலையாவிட்டாலும், அது கிடைக்க வேண்டிய நேரத்தில் கிடைக்கும் என்று பேசுபவர்களும் உண்டு.

ஆத்ம சாந்தியும் அமைதியான சுபாவமும் நேர்மை வழியில் உள்ளவர்களுக்கு செல்வாக்கும் நற்பெயரும் தானாகவே கைவரும் என்பதைத் தெரிந்து கொள்வோம்.

கிடைக்கின்ற அனைத்தும் முறைப்படி வழங்கப்பட்டு வரும் போது புகழ்பற்றிச் சான்றோர் அலட்டிக் கொள்ளவே





மாட்டார்கள். செய்கின்ற கருமங்களுக்கு ஏற்ப எல்லோருமே அவரவர் பங்கினைப் பெற்றுக்கொள்வார்கள். இது இயற்கையின் நியதி. கொடுப்பதைத்தான் பெற முடியும் கொடுக்காதவைகளை எடுக்க முனைதல் பாவம்.

பதவியில் அந்தஸ்தில் ஒருவன் ஒருநிலையில் இருந்து அடுத்த நிலைக்கு உயர விரும்புவதில் எந்த விதமான தவறும் கிடையாது. இது மனிதருக்குள்ள உரிமையுமாகும். ஏன் கடமையும் கூட ஒரே நிலையில் அப்படியேஉட்கார்ந்து கொள்ள நினைத்தால் முன்னேற்றம் என்பதே முடங்கி விடுமல்லவா?

முயன்று கொண்டிருப்பவனை உறங்கிக் கொண்டி ருப்பவன் முட்டாள் என்று கூற முடியுமா? படிப்படியான வளர்ச்சியின் மூலமே நிலைத்து நிற்கக் கூடியதான உயர்ச்சியைக் காணமுடியும். நாம் தொடர்ந்தும் என்றும் முயன்று கொண்டிருக்க வேண்டியவர்களே!

எனினும் அடுத்தவனை விமர்சிப்பது இஷ்டமான பணியாகி விட்டது. கெட்டவனையும் நல்லவனையும் எதிர்மறைக் கருத்துக்களால், கண்டபடி தூற்றியும், ஏற்றியும் பேசுதல் நாங்கள் எதிர்பார்க்காத நிகழ்ச்சிகள் அல்லவே?

உடலை வருத்தி உழைத்து வேலை செய்வதும் அறிவு பெறுவதற்காக கல்வி கற்பதும் மற்றும் பணிகளை இயன்ற வரை எல்லோராலும் செய்து விட முடியும்.



RangaRakes
Tamilnavarasam.com

நோயாளர், அங்கவீனர்கள், இயலாதவர்கள் ஆகிய இவர்களை விடுத்து சகல விதமான தேக ஆரோக்கியம் உள்ளவர்கள் போதிய மனவளம் இருந்தும் சமூக அந்தஸ்தில் தம்மை உயர்த்திக்கொள்ள முனையாதது ஏன்?

இருப்பினும் தன்னால் முடிக்கக் கூடியவைகளைத் தானே செய்யாமல் அடுத்தவன் அதனைச் செய்து புகழடைந்தால் மனம் பொருமுகின்றான்.

"என்னோடு ஒன்றாகப் படித்தவன் ஒன்றுமே தெரியாதவன் இப்போது பாருங்கள் அவன் என்ன மாதிரி பெரிய மனுஷனாகி விட்டான். ஹும்.... எல்லாம் ஒரு நேரம் விதி...! அவன் பக்கம். எங்களைக் கடவுள் எங்கே பார்க்கின்றார். நல்லவனுக்குக் காலமில்லை." என்று அநாவசியமாகப் பேசிக் காலத்தைக் கரியாக்கி மனத்தை உருக்குலைப்பவர்கள் தங்களைப் பற்றிய சுயதரிசனம் பெற விரும்பாதவர்கள் என்பதே உண்மையாகும்.

விதியைப் பேசி வளைவதும், பழியை அதன் மீது நுளைப்பதும் கையாலாகாத்தனம் என்று உணராத வரை இத்தகைய பேச்சுக்களைத் தொடர்ந்தும் பேசிக் கொண்டேயிருப்பார்கள். தடைகளை உடைத்து, பாதை அமைத்துப் புதுப்பாலம் போட்டுத்தான் முன்னேறியவர்கள் புகழைக் குவித்தார்கள். வேலைசெய்தால்உடல்களைக்கும்





ரவியர்வை வரும், உடல் நலம் பெறும். வெறுமனே சும்மா இருப்பவனுக்கு உஷ்ண காலமின்றியே வியர்வை வந்தால் அது ஏதோ நோயின் அறிகுறியாகும்.

மற்றவன் புகழ்கண்டு வெறுப்புற்று மனம் களைப்பது, சும்மா இருப்பவனுக்கு உண்டாகும் வியர்வை போல் தான். அடுத்தவர் நேர்மை கண்டு துணுக்குறுவதும் துன்பப்படுவதும் ஒரு மனநோய் தான். பொறாமை கூட மன நோயின் வடிவமா?

அதனால் நல்லெண்ணங்களைப் பாய்ச்சினால் மனம் பூவனமாகிவிடும் அல்லவா? ஆனால் அநீதியைக் கண்டு மனம் வெதும்புதல் என்பது தீமைகளைக் கண்டு நாம் தொடுக்கப் போகின்ற போரின் நல்ல சமிக்ஞை யாகும். இந்த உள்ளக் குமுறலினூடாகவே எமது இலட்சியப் பயணங்கள் ஆரம்பமாகின்றன.

இத்தகைய சத்திய உணர்வினால் உந்தப்பட்டு உழைத்த தலைவர்களினாலேயே உலகம் விழித்தபடி இருக்கின்றது. அண்ணல் மகாத்மா காந்தியடிகள், அடிமைத் தளையறுத்த ஆபிரகாம் லிங்கன் போன்ற தேசபிதாக்கள் புகழ் பெறும் நோக்கத்துடன் உழைக்கப் புறப்பட்டவர்கள் அல்ல. இவர்களின் ஒரே சிந்தனை மக்கள் பற்றியதே!

எத்தனையோ பலத்த போராட்டங்கள், தோல்வி கள், சவால்கள் மூலமே உலக உத்தமர்களாக போற்றப்



RangaRakes
Tamilnavarasam.com

பட்டார்கள். இவர்களின் வரலாறுகள் எமது வாழ்விற்கும் ந
பெறப்போகும் கீர்த்திகளுக்கும் வழிகாட்டும் உரமேற்று
ஒருவரது உழைப்பிற் கேற்ற பணம் கிட்டாது போனா
"என்னடா வாழ்வு இது" என மனம் வெதும்பிப் போகிறது
அவனுக்கு வாழ்க்கையே பிடித்தமில்லாமல் போகின்றது.

ஏதாவது ஒரு வெற்றிச் சுவடு தென்படும் போ
வாழ்க்கையின் வெற்றி ஆரம்பமானதாக தெரி
ஆரம்பிக்கின்றது. இந்தத் தூண்டல் உணர்விை
எதிர்பார்த்தே மனிதன் இயங்க விரும்கின்றான். கிடைத்
தீரும் என்கின்ற வைராக்கியமே வேண்டும். இதனால் ஆர
கால சோதனைகளில் மனது களைப்படையவே மாட்டா
தொடர்ந்து வெற்றிக்கான சில அறிகுறிகள் துலங்கப்பட்ட
பயணத்தின் வேகமும் துரிதப்பட்டு விடும்.

இது பற்றிப் பல சிந்தனையாளர்கள் வலி
வந்துள்ளார்கள். தடைக்கதவுகளில் ஒன்று விலக்க
பட்டதும், அதனூடாகப் பயணம் செய்ய உட
புறப்படுங்கள். எதிர்ப்படும் சவால்கள் தங்கள் தோல்
களை ஒப்புக் கொண்டு ஓடி மடிந்து விடும்.

எனவே,

- ஆரம்ப கால அசட்டுச் சந்தேகங்கள்,மாய உணர்வுக
எதிர்மறைக் கருத்துக்கள், விமர்சனங்களில் போதியள
கவனமெடுத்து முன்னேறுங்கள்.





- தடைகளின் சாதக, பாதகத் தன்மையை அறியாமல், அதன் பின் ஓடுவதுவிவேகம் அல்ல! அனுபவ ஞானம் பெற்று அறிவுள்ளவர்களின் ஆற்றல் பற்றிய விஷயங் களை அறிந்து கொள்க.

புகழ் வந்து கொண்டிருக்கும் போது வாழ்க்கையில் மனிதனுக்கு ஒரு ஒட்டுதல் உணர்வும் மேலோங்குகின்றது. நல்ல பெயரை நியாயமான வழியில் எடுப்பதுதான் புகழ் என்பதன் அர்த்தமாகும்.

எனக்கு வாழ்க்கை பிடித்தமாகிவிட்டது. எல்லாமே கிடைக்கின்றது என்ற நிலையுடன் வாழ்ந்து கொண்டிரு க்கும் போது பல செல்வங்கள் தானாகவே சேருகின்றன. இதனூடே புகழ் எனும் கீர்த்தியும் சேர்ந்திணைந்து விடுகின்றது.

தனக்கென்ற செல்வம் தனிப்பட்ட நலனுக்காக பொருளீட்டுவதற்காகவே பெற்றுக் கொண்ட கல்வி மட்டும் புகழைத் தந்துவிடுமா? உனக்கு பணம், கல்வி இருந்தும் நீ என்ன அடுத்தவனுக்குச் செய்தாய்? என உலகம் கேட்டால் என்ன சொல்ல முடியும்?

இந்தக்கேள்வியை நாம் உணர்ந்து விட்டால் போதும். பொது நோக்கும் அதற்கான உழைப்பும், செயலாக்கமும் நற் பெயரை எமக்குப் பெற்றுத் தந்துவிடும். தியாக உணர்வுடனான பணியே மேன்மையானது.



RangaRakes Tamilnavarasam.com

நல்ல கருமங்களினூடாக சமூகத்திற்கு எதுவு செய்யாமல் எனக்கு இந்தப் பெயர் புகழ் கீர்த்தி எதுவு வேண்டாம் என உதட்டளவில் கூறி குறுக்கு வழியி காரியம் பண்ணுவதும் ஒரு வாழ்வா? இந்தஉல குறுக்குவழியில் காரியமாற்றத்தான் எத்தனையோ வ இருக்கின்றனவே? அரசியல் வாதிகளின் கால்களைப் பிடித்தல் யாராவது சமூகத்தில் பெரிய மனிதராக இருந்தா அவர் பின்னே சுற்றித் திரிதல் ஏதாவது மன்றங்க நிறுவனங்களில் சலுகைகள் கிடைப்பதற்காக மட்டு இணைந்து கொள்ளுதல் போன்ற கருமங்களில் சிரம பாராது உள்நோக்கத்துடன் சேர்ந்து கொள்பவர்கள் சொற்ப காலத்தில் சொகுசாக வாழ்ந்து விடலாம். நிரந்தரமில்லை.

வேதனையான விடயம்என்னவெனில், மிகவு படித்த நல்ல மனிதர்கள் கூட தங்கள் இயலாத் தன் மையினால் இவை பற்றி நன்கு தெரிந்து கொள்ளாமல் போவதும் சிலவேளை அதனுள் உட்புகுதலும் வருத் த்திற்குரியதே. சொன்னபடி கேட்டால் சொர்க்க வாழ் என்பதற்காககுறுக்கு வழியில் செல்வதை நியாயம் கற்பி முடியாது. குறுக்குவழிப் பாதைகள் கத்தரிக்கப்படல் வேண்டும்.

கீர்த்தி பெறுவதே ஒரு புனிதமான யாத்திரை போல நல்ல மனதுடன் ஆரம்பிக்க வேண்டும்.





அத்துடன் புகழ் வரவர மனிதனுக்கு அவதானம் வப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பணிவு றியமையாததாகும்.

புகழ் பெற்றவனைப் பார்த்துப் பொறாமை, சூழ்ச்சி வர்களும் உருவாகும் சந்தர்ப்பங்கள் உண்டு. எங்கே ர்கள் தப்புச் செய்கின்றார்கள்? என்று கண்ணில் ணையை விட்டாற் போல் விழித்தபடியே, பார்த்துக் ண்டிருப்பார்கள். எங்காவது ஒரு துரும்பு பிழையினைக் டுபிடித்ததும் கறுப்பு வண்ணம் பூசி விடுவார்கள். ழ்ப்புணர்வினால் செய்யப்படுகின்ற அகழ்வு வேலைகள் ாளம். இவர்களில் பலர்நேரில் தெரியமாட்டார்கள். மாய ருவம் கொண்ட மாயாவியை விட வல்லவர்கள்.

கூட்டம் போட்டுப் பேசி நேரில் வாதிட்டால் பரவாப் ல்லை. ஆனால் எச்சரிக்கையின்றி நுளைந்து தைத்துத் ன்புறுத்தும் இவர்களிடம் கீர்த்தி பெற்றிட்ட நேர்மை யாளரும் படும் அவஸ்தைகள் அநேகம். அத்துடன் யாராவது நல்ல மதிப்பும் மரியாதையும் ஒருவருக்குக் கிடைத்துவிட்டால் அவர்களைச் சுற்றி நல்லவர்களும், பொல்லாதவர்களும் சூழ்ந்து கொள்வார்கள். இந்தப் பொல்லாத பேர் வழிகள் காரியமாற்றுவதற்குச் செய்கின்ற தொண்டுகள் ஏராளம்!. யார் மூலம் எவர் புகழ் வசதிகளைப் பெற்றார்களோ அவர்கள் பற்றியே மட்டமாகப்பேசி படிப்படியாக நல்ல மனிதர்கள் மனதிலும் விஷ விதையினை விதைத்து விடுவார்கள். முகஸ்துதிக்காக அவர்



RangaRakes

Tamilnavarasam.com

சம்பந்தப்படாத விஷயங்களில் ஈடுபடுத்தியும் அவர்களை அவமானப்படுத்தியும் விடுவார்கள்.

அதுமட்டுமின்றி, உண்மையான அக்கறையுள்ளவர் போல் நடித்துச் சுரண்ட வேண்டியவைகளைக் கால, நேரம் அறிந்து கறந்து விடுவார்கள். மனசை மறுபக்கம் திருப்பும் இவர்கள் விஷயங்களில் நல்ல பெயர் எடுத்த நல்லோர்கள் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகும். புகழ் ஒரு போதையானது என்பார்கள். சாதாரண நிலையில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத நிலையில் மேன்மைகள் உடனே கிடைத்துவிட்டால், மனம் சலனமடையச் சந்தர்ப்பங்கள் வந்துவிடுகின்றன. யாராவது நன்றி செய்தால் பிரதியுபகாரமாக ஏதாவது செய்துவிட மறந்துவிடவே எண்ணுகின்றனர். கூடிய வரை இவர்கள் பிரதியுபகாரம் செய்தலை நிராகரிக்கும் எண்ணமுடன் நடக்கின்றார்கள்.

திடமான மனம், நல்இலட்சிய நோக்கு, சேவை அச்ச உணர்வின்மை, செய்யும் செயல்சார்ந்த அறிவு, கல்வி, நல்லவர்களைப் பெரியோர்களைத் துணையாக வைத்திருத்தல், தேவையற்ற விடயங்களுக்காக அவாப் படாமை, திட்டமிட்ட எதிர்காலப் பணிகள், காலத்தை விரயம் செய்யாமை போன்ற குணாம்சங்கள் நாம் கீர்த்தி பெறுவதற்குரிய பூரணமான காரணியாகும். ஆற்றல்களை எமதாக்கினால் புகழும் பெருமையும் தானாகவே கிடைத்து





விடுகின்றது. பகுத்துணராத செயல்களினால் நாம் பூரணப்பட்டு விட முடியாது.

பல்திசைக் கருத்துக்கள், சிந்தனைகளைக் கேட்போம். எமக்கு வடிவம் கொடுக்க வேண்டியவர்கள் நாங்களேயாவோம். உலக ஞானஅனுபவம் மூலம் முதிர்ச்சி காணமுடியாமல், அதற்காக முனையாமல் விட்டால் உலகம் எம்மைக் கண்டுகொள்ளுமா?

பரந்த உலகைப் பார்க்க விழைய வேண்டும். அதனூடாக எம் சேவைகளைப் புகுத்த வேண்டும். அப்போது தான் கீர்த்தியும், கௌரவமும் தானாகவே இணைந்து மணம் மிகு வாழ்விற்கு அழைத்துச் சென்றுவிடும்.

உழைப்பதும் உண்பதும் உறங்குவதும் மட்டும் வாழ்வாகுமா? மற்றவர் மெச்சும் படியாக, எவருக்காவது எங்கள் மூலம் நல்லவனவற்றைக் கொடுக்கப்படும் படியாக வாழ வேண்டாமோ?

- சிரத்தையுடன் கூடிய சிரமத்துடனும் ஆற்றுகின்ற பணிக்கு எம்மை இயங்கச் செய்வோமாக! ஒரே விதமாக வாழ்ந்து போக, உங்களுக்கு சலிப்புத் தட்டிவிடாதா?
- கொஞ்சம் விறுவிறுப்பான, உத்வேகத்துடன் புதிதாக எதையாவது செய்ய விருப்பப்பட வேண்டாமா?



RangaRakes

Tamilnavarasam.com

புதியவைகளை, புதிய சிந்தனைகளை புதிய இளைய உலகம் எதிர்பார்க்கின்றது.

- கொஞ்சம் வேகமாக அதுவும் விவேகமாக, புதிதாகச் சிறப்பாக!

அதனை முறைப்படி ஒழுங்காக பணிவாக ஏற்புடையதாகச் செய்தால் புகழுடன் திகழுவீர்கள். அதனூடாக ஏனையவர்களையும் உங்களுடன் இணைத்துக் கொண்டவர்களாவீர்கள்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
30.10.2005







# இயல்பு

மனிதனை அவனது எண்ணங்கள் ஆளுகின்றன. ஒருவரது வாழ்க்கைத்தரத்தை அவர்களது "இயல்புகள்" இயம்பும். தூய மனக்கட்டுப்பாடுகள் செயலில் ஒழுக்கத்தை உருவாக்கும். தவறுகளை ஒப்புக்கொள்ளாதவன் பொய்க்குத் துணை நிற்பவன். தூயவனாக வாழும்போது இறை சித்தத்துடன் நாம் இயைவுபட்டவர்களாவோம். அகங்காரம் அலங்காரமான இயல்பு என்றும் எண்ணலாகாது. ஆணவமுனைவு அகன்றால் அன்பான இயல்பு அரவணைத்துக் கொள்ளும்.

ஒருவருடைய வாழ்க்கைத் தரத்தை அவருடைய "இயல்புகள்"இயம்பும். எவர் ஒருவர் சிறப்பாக வாழ்வதும் அன்றி ஏதாவது கண்ணியக் குறைவாக வாழ்வதும் அவர்தம் சொந்த இயல்புகளின் தாக்கத்தால் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. "இயல்பு" இயற்கையான குணம் என்றும் சொல்லப்படுவதுண்டு.

மனிதனை அவனது எண்ணங்களே ஆளுகின்றன என்றுதான் பெரியவர்கள் அடிக்கடி கூறிக்கொள்வார்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

எங்கள் இயல்புகளை மனக்கட்டுப்பாட்டுடன் ஒழுங்குபடுத்தி செயல் உருவில் ஒழுக்கத்துடன் இயைபு படுத்தினால் எங்களால் சாதிக்க முடியாதது எதுவுமே யில்லை.

ஒழுக்கம் என்பதே ஆன்ம பலத்தை உண்டு பண்ணி விடுகின்றது. எமது உள் மனத்தை பிறர் கண்டு கொள்ள முடியாது. ஆனால் எம்மால் வெளிப்படுத்தும் நடவடிக்கை கள் எல்லாமே எங்களை இனம் காட்டி நிற்குமல்லவா?

எனவே எமது நல் இயல்புகள் எம்மை வெளிக் காட்டும் நல்ல ஆடை அணிகள் போலத்தான் என உணர்க! உள்ளே அழுக்கான உள்ளத்துடன் கவர்ச்சிக மான அலங்காரத்துடன் அகங்காரமாக நடமாடுவதனா எமது உண்மையான இயல்புகளை மற்றவன் கண் கொள்ளமாட்டான் என எண்ணுதலே தப்பானதுதான்.

மனிதர்கள் எல்லோருக்கும் உருவவேறுபாடுக இருந் தாலும்கூட அனைத்து மாந்தர்களுமே நற்குணவா களாகினால் அவர்கள் ஒருவராகி அன்பினால் பிணை வராகி விடுவர். எனவே நாடுகள் இனங்கள் சாதி சமயங் என்கின்ற பிரிவுகள் எல்லாமே நல்ல இயல்பு உள் மாந்தர்க்கு ஒரு பிரச்சனையாகத் தெரிவதே யில்லை.

பேதமறவே எல்லோரையும் நோக்குவார்கள்.





இயல்பாகவே நல்ல பண்புள்ளவர்களையும் பார்க் கின்றோம். ஆனால் எந்நேரமும் தீய சிந்தனையுடன் கீழ்த்தரமானவர்களையும் கண்டு கொண்டிருக்கின்றோம். நாம் பொதுவாக ஒருவரின் நடத்தைக்கு அவர்கள் பரம்பரை இயல்பு சுற்றாடலின் தாக்கம் வளர்ப்பு முறை சமூக அமைப்பு போன்றவைகளே காரணம் எனச்சொல்லி விடுவோம். ஆனால் நல்ல ஒழுக்கமுள்ள தாய் தந்தை யர்க்கும் தறுதலையான பிள்ளைகள் பிறப்பதுண்டு. "என்னதான் புத்திமதி சொன்னாலும் அவன் கேட்பதில் லையே" எனக் குமுறி அழும் பெற்றோரைக் கண்டிருக்கின் றோம். ஆனால் இதற்குக் காரணம் அந்தப் பிள்ளையின் கூடாத நட்பு என்றும் காரணங்கள் கூறப்படுவதுண்டு.

மிகவும் படித்த அறிவாளிகள் கூட எவ்வித ஆராய்வுமின்றி இன்னும் ஒருவரை நம்பி அவரிடம் தம்மை ஆட்படுத்திக்கொண்டு விடுகின்றார்கள். இது கூட ஒரு சரணாகதிபோல், அவரே கதி என்று நம்புவதுடன் தமது சொந்தப் புத்தியை சந்தடியின்றித் தொலைத்தே விடுகின்றனர். இத்தகையவர்கள் யார் என்ன உண்மை யைச் சொன்னாலும் அவர்கள் செவிக்கு எல்லாமே கேட்காது. ஆனால் தான் ஏற்கனவே நம்பிக்கை கொண்டவர் பேச்சை மட்டும் கேட்கும், இயல்பினராய் மந்த புத்தியில் மதிமயங்கி நிற்பார்கள். பாரதூரமான விஷயங் களைக் கூட ஆராயமல் மற்றவர் சொல்கேட்டுப்பெரும் பழிக்கும் ஆளாகிவிடுவதால் சில சமயம், நகைப்புக் கிடமானவர்களாக, நிரந்தர தோற்றம் கொண்டு விடுவர்.



RangaRakes
Tamilnavarasam.com

தன் புத்தியை மறப்பதே இயல்பாகக் கொண்ட வர்கள் ஒருபுறம் இருக்க இன்னும் ஒருசாரார் தமது தவறு களை ஒப்புக் கொள்ளாத இயல்பினராக இருப்பதுடன் அதுவே சரியானது என விதண்டாவாதம் செய்வார்கள். சில சமயம் நல்லவர்கள் சிலர் கூடப் பெரும் தவறு செய்யும் பட்சத்தில் ஏன் “ஐயா இப்படிச்செய்தீர்கள்” என்று கேட்டால் தான் செய்தது தமக்குத் தவறாகத் தெரியவில்லை என்பார்கள். இது ஒரு பரிதாபகரமான நிலை.

ஆனால் பலர் இன்று தங்களது செயல்கள் இன்னது என்று தெரியாமலேயே தவறுகள் எது சரியானது எது எனத்தெரியாமல் குழம்பியபடி ஏதேதோ செய்கின்றார்கள் ஆயினும் வேண்டுமென்றே தவறுகளை ஒருவர் செய்திட் டாலும் கூட அவரால் பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்ட வர்களே!

அதிகமான நபர்கள் கூறும் வாசகம் இதுதான் “என்னைப் பொறுத்தவரை இது தான் சரி” என்பார்கள். தங்கள் இயல்பை மாற்றியமைக்க ஒப்புக்கொள்ளாமல் அதே சமயம் செய்கருமத்தில் போதிய விளக்கம் அனுபவம் அதன் பாதிப்பு பற்றிப் புரிந்து கொள்ளாமல் எனது மனச்சாட்சிப்படியே நடக்கின்றேன் என்று ஒருவர் சொன்னால் அதை நாம் எப்படி ஐயா ஏற்றுக்கொள்ள முடியும்? சிலருக்குச் சில விஷயங்களைப் புரிய வைப்பதே சிரமம் தான்.





பரந்த ஞானம் உள்ள ஆன்மீக வாதிகள், ஞானிகள், தம்மை நாடி வருபவர்களின் நிலையறிந்து அவர்கள் இயல்புக்கேற்ப உபதேசங்கள் செய்வார்கள். ஒரு துடிப்புள்ள இளைஞனின் இயல்புகள் வயோதிபர்களுக்கு இருக்குமா? ஒவ்வொரு வயதிற்கும் ஏற்ப பக்குவ நிலைகள் மாறுபாடாகவே இருக்கும். எங்காவது ஓரிருவர் இள வயதில் முதியவர்கள் போல நடப்பதும் முதியவர்கள் வாலிபர்கள் போல் அவர்கள் செய்கைகளையே மேற்கொள்வதுமுண்டு.

ஒரு ஆன்மீக ஞானியிடம் ஒரு அன்பர் தமது மகனை அழைத்து வந்தார். வாலிபனான அந்த இளைஞனை ஞானி முன் நிறுத்தி வணங்கி “சுவாமி இவன் என் மகன் எங்கள் சொற்களைக் கேட்பதில்லை படிப்பதுமில்லை சதா நண்பர்களுடன் கூடிச் சகல கெட்ட பழக்கங்களையும் பழகி விட்டான். இன்று இவனை நான் கெஞ்சிக்கூத்தாடி உங்களிடம் அழைத்து வந்துவிட்டேன். நீங்கள்தான் தயவு கூர்ந்து இவனுக்கு நல் வழிகாட்ட வேண்டும்” என்றார்.

அந்த ஞானியோ அருள் கூர்ந்த பார்வையுடன் அந்த இளைஞரை நோக்கினார். “அப்பா, உமது தந்தை யார் சொல்வதை நான் ஏற்கவில்லை நீ இயல்பாகவே நல்ல வனாகவே பிறந்திருக்கின்றாய் உன் குறை என்ன” என்று கேட்டவாறே அவன் தலையை வருடியபடி பேச லானார். அவ்வளவு தான் அக்கணமே அந்த இளைஞன் அவர் வசமானான். அவரது உபதேசங்களைச் செவிமடுக்க



RangaRakes
Tamilnavarasam.com

லானார். மேலே சொன்ன சம்பவங்கள் போல சகல மதத்தலைவர்கள் ஞானிகள் தமது அருள் நோக்கினால் ஒருவரது தவறான குண இயல்புகளையே மாற்றிய மைத்ததாக நாம் படித்திருக்கின்றோம்.

பொதுவாக ஒருவரது குணங்களில் தீய குணங்கள் குறைந்தும் நற்பழக்கங்கள் மேலோங்கியும் இருந்தால் அவர் தன் தவறுகளை உணர்ந்து எப்படியும் மேல் நோக்கி வந்துவிடுவார். ஆனால் துஷ்டபழக்கங்கள் மேல்நோக்கி நற்பழக்கங்களை அரிதாக்கி அதை ஒரு பொருட்டாகக் கருதாதவர்களோ சமூகத்தில் குற்றச் செயல்களைச் செய்யும் நபராக மாறிவருகின்றனர்.

உண்மைகளை நாம் நேசிக்க ஆரம்பித்ததுமே குரூர சிந்தனைகள் சூரியனைக் கண்ட பனி எனக் கழன்று விடுகின்றன. ஒழுக்கமாக வாழுபவனால்தான் நல்ல வசனங்களைப்பேச முடிகின்றது.

பிரார்த்தனைகள் செய்யும் போது நாம் பாடல்களை வசனங்களை உச்சரிக்கும்போது எமது இதயத்தின் ஓட்டைகளை அடைத்து அதனுள் இறை ஒலியை மட்டுமே அடைத்துப் புகுத்தி நிலை நிறுத்தினால் எம் உள்ளே சகல நற்பண்புகளும் தானாக உற்பத்தியாகும்.

- எனது தகாத இயல்புகளை நீக்கிட எனக்கு வல்லமை தா! என இறைவனிடம் விண்ணப்பிக்க!





- நாம் அனைவருமே இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட மேன்மை தகு உற்பத்திகளே என மனதார நம்புங்கள். இந்த நம்பிக்கையே எல்லா வல்லமை யையும் நல்ல சிந்தனைகளையும் வளர்க்கும்!

- "வாழ்க்கை", என்பது, சுவர்க்கத்தை நோக்கிய பயணம் என்று எண்ணுங்கள். சுவர்க்கம் செல்லும், நாம் தீய நோக்கங்களைச் சுமந்து செல்ல வேண்டிய அவசியமில்லை அல்லவா? எனவே "நல்ல வாழ்வை அமைக்க, தீய எண்ணங்களை இல்லாதொழிக்கும், இயல்பினை அருள், தேவா" என இறைவனிடம் இறைஞ்சுவீர்களாக!

- எங்கள் கடமைகளை நாம் ஒழுங்காக நிறைவேற்று வதற்காக நாம் எம்மை திருத்தியமைத்த பிறவியாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதால் எமது குணங்க ளை இனம்கண்டு நல்வழி சார்ந்த ஆன்மாவாக்க முனைவோமாக!

மேலும் நாம் எதற்கெடுத்தாலும் தர்க்கம் செய்வது வாதிடுவது என்று எதிர்மறையாகவே சமூகத்துடன் போராடுவதும் நல்லதல்ல. பலபேர்கள் ஒன்று சேர்ந்து ஒரு நல்ல காரியம் செய்யும்போது ஒரு சிலர் இடையில் எழுந்து எந்த சம்பந்தமும் இன்றிக் கண்டபடி எதிர்க் கருத்துக்களை வேண்டுமென்றே சொல்வதுண்டு. இப்படிப்பட்ட பேர்வழிகள் தங்கள் முரண்பட்ட கருத்துக்களையே



RangaRakes
Tamilnavarasam.com

சொல்வதைத் தமது இயல்பு என்று உணராமல் அது தமக்கான உரிமை திறமை என்று தப்பான எண்ணத்தைத் தம்மகத்தே வைத்திருக்கின்றார்கள். இத்தகையவர்களில் சிலர் தங்கள் வீடுகளில் மட்டும் வாய்மூடி மௌனிகளாக இருப்பார்கள் இன்னும் சிலர் எங்கும் எப்போதும் கண்டபடி பேசுவதே தம் தங்களது வாழ்நாளின் இலட்சியம் என்று கருதிச் செயல்படுவார்கள். எதிர்க்க வேண்டியதை எதிர்த்தும் ஆதரிக்க வேண்டியன வற்றைத் தட்டிக் கொடுத்து ஊக்குவிப்பதும் அவசியப் பணியாகும்.

நாம் மட்டும் உலகில் தனித்துவமானவன், எவர் சொல்லுக்கும் நான் ஆட்பட்டவன் அல்ல எனச்சொல்லி எம்மால் வாழ்ந்து விட முடிவதுமில்லை சரியாக ஆராய்ந்து பார்த்தால் மனிதன் வெற்று உடம்புடன்தான் இருக்கின்றான். கடவுள் தந்த உணவும் உடையும் அறிவும் அவனது நிர்வாண நிலையை நீக்கி ஓர் இயங்கும் ஒரு பொருளாக யந்திரமாகச் சீவிக்கச் செய்கின்றது. இந்த லட்சணத்தில் தங்கள் மெய் அறிவு ஞானத்தை வளர்த்து நல் இயல்பினராக வாழாது விட்டால் எமது பிறவிக்கு ஏது அர்த்தம் உண்டு நண்பர்களே!

விலை கொடுத்து வாங்க முடியாத இறைவன் சாம்ராஜ்யத்தினுள் நாம் ஜீவித்துக் கொண்டிருக்கின்றோம். இங்கு அன்பு, கனிவு என்கின்ற நறுங்கனிகள் பூத்துக் குலுங்குகின்றன. தெய்வீகப் பேராற்றின் குளுமையில் இவை வளருகின்றன. அருட்காற்றின் சிலுசிலுப்புடன்






குளிர்ந்த அருள் நீரைப் பருகுகின்றோம். தேகங்கள் இறை ஒளி, உஷ்ணத் தினால் பளபளக்கின்றன. இந்தக் கடவுள் கடாட்சத்தை உணர்வீர்களாக தோழர்களே!

ஒவ்வொரு தனிமனிதனும் தூயவனாக வாழும் போது இந்த ஜகம் முழுமையும் ஆண்டவன் எண்ணங்களு டன் இயைபுபடுகின்றன. தர்மம் நியாயம் கோலோச்சும் போதுதான் ஒவ்வொரு தனிமனிதனும் சுதந்திரம் பெற்றவனாகின்றான். நாம் எல்லோருமே, ஒரே காற்றைச் சுவாசித்து ஒரே ஒளியினுள் பிரவேசித்து ஒரே தண்ணீரைப் பருகியவராக இருப்போம். அந்த நல் உணர்வு பரிணமித் தால் ஏகமாய் நல் இயல்பு நற்சிந்தனையுள் எல்லை யில்லா பெரும் களிப்புடன் இறை அருள் கூடிவரப் பெற்ற வர்களாகி விடுவோம்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
09.11.2008



RangaRakes
Tamilnavarasam.com



# கௌரவம்

தகுதியின்றித் தந்திரோபாயங்களால் கௌரவம் பெறுதல் நிரந்தரமனதன்று. தூய வாழ்வின் அடையாளம் அவர் பெறுகின்ற கௌரவங்களேயாம். சேவை செய்பவர்கள் தமக்கு மதிப்பு அளிக்கப்படவேண்டுமென எதிர்பார்ப்பதுமில்லை. தகுதியுள்ள வர்களைப் போற்றாமல் விடுவது அழகல்ல. துன்மார்க்கர்களைத் துதி செய்து கிடைக்கும் கௌரவம் வெட்கப்பட வேண்டியது. திறமைசாலிகள் மறைந்து இருப்பது சமூக வளர்ச்சிக்குக் குந்தகமானது. மனிதனின் அதிஉயர் அடையாளம் உயர் பண்பினால் கிட்டும் கௌரவமாகும். "சதி" செய்து மதிப்பு பெறவிழைந்தால் விதி வீழ்த்தும்.

ஒருவர் தமது சுயமுயற்சியால் தூய வாழ்க்கை முறையின் அடையாளங்களால் "கௌரவம்" பெறுதலே அரும் கொடை.

ஆயினும் ஒருவர் தாம் சார்ந்த குடும்பப் பின்னணியி னாலும் மறைமுகமாகவும் தந்திரோபாயங்களாலும் குறை நிரம்பிய மனிதர்களும் கௌரவம் பெறுதல் ஒன்றும்





அரிதான விஷயங்களே இல்லை என்னுமாற்போல் தகாத காரியங்கள் எல்லாமே அரங்கேறிக் கொண்டிருப்பது தரம் கெட்ட செயல்.

தனக்கு எப்படியாவது மதிப்பு அளிக்கப்பட்டேயாக வேண்டும் என்பதில் குறியாகவும் அதீத தாகமாகவும் கொண்டிருப்பவர்கள் பலரும் தங்கள் தகுதி தராதரம் பற்றிக் கிஞ்சித்தும் நினைத்துப் பார்க்கத் தங்களுக்கே அவகாசம் கொடுப்பதில்லை. யாராவது "உங்கள் தகுதி என்ன" என்று துணிந்து கேட்டால் கேட்டவர்களையே துவம்சம் செய்யுமாற்போல் கேள்வி கேட்பதுடன் அவர்களுக்கு என்ன என்ன கெடுதல் செய்ய முடியுமோ அத்தனையும் செய்வதற்குத் துணிந்து விடுவார்கள்.

ஆனால் எவருமே, ஒருவர் குறைபாடுகளை அவர்கள் மனம் உடைந்து போகும் வண்ணம் கேட்டு விடுதல் மனித நாகரீகமும் அல்ல. மனித பலவீன ங்கள் எல்லாமே பெரும் குற்றங்கள் அல்ல தங்கள் பலவீனங் களை ஒத்துக் கொண்டவர்கள் தங்களைத் திருத்திய மைக்கலாம். எனினும் பெரும்பாலானவர்கள் தமது குறைபாடுகளை ஒத்துக் கொண்டாலும் தொடர்ந்தும் தங்களை மாற்றியமைக்க முன் வருவதுமில்லை.

இதில் குறிப்பிடவேண்டியது என்னவெனில் சிலர் தமது சின்னச் சின்ன தவறுகளை ஒத்துக் கொள்வதை தமது நேர்மையைக் காட்டும் அடையாளம் என்று



RangaRakes
Tamilnavarasam.com

நிருபிப்பதற்காக ஒரு வீம்புக்காகப் பகிரங்கமாகத் தம குறைபாடுகளை ஒத்துக் கொண்டு செயலளவில் "பழை குருடி கதவைத் திறடி" என்னுமாற்போல் நடந்து கொள்வ சமூகத்தை ஏமாற்றும் வேலை அல்லவா? எந்நேரமு பொய்பேசி உலகில் கௌரவம் தேட விழைவது தங்க ஆன்மாவிற்குத் தாங்களே கருமை பூசிக் கொள்வது போல் ஆகும்.

நாம் எமக்குரிய பங்கு எதுவோ அதனை உலகில் இருந்து பெறமுயல்கின்றோம் ஆனால் நாம் எந்த விஷயத்திலும் சமூகத்தில் எமக்கான உரிமைகளை எதிர்பார்க்கும் போது கூடவே மற்றவர்களை விட உயர்ந்த கௌரவம் கிடைத்தேயாக வேண்டும் எனக்கருதுதல் கூட ஒரு அப்பட்டமான சுயநலம் அல்லவா?

சேவை செய்தவன் இருக்க தங்கள் சுயநலத்திற் காகக் கஷ்டப்பட்டதையே ஒரு பொது நலத்திற்கான உழைப்பு என மார்தட்டிப் பேசி அதன் பொருட்டு பெருமதிப்பை எதிர்பார்ப்பது பொருத்தமற்ற அடாவடித் தனமல்லவா?

"நான் அரசியலுக்கு வந்ததே மக்களுக்குச் சேவை செய்வதற்குத்தான்" என்பார்கள் சிலர். "நான் இப்போது எடுத்த பதவிகூட எனக்காக அல்ல நலிந்து போயிருக்கும் ஏழை எளியவர்களுக்குத் தான்" என பெரிய பதவிகளைப் பெற்றவர்கள் சொல்லிக் கொள்வார்கள். யார் எவர் எதைச்





சொன்னாலும்கூட அவர்கள் தங்கள் பணியைச் சிறப்பாகச் செய்யாமல் தங்களை வளர்ப்பதற்காகச் செய்யும் காரியங்களுக்காக மக்களிடம் இவர்கள் கௌரவத்தை பகிரங்கமாகவோ அல்லது மறை முகமாகவோ கோருவது நியாயமாகுமா?

ஒருவருக்குக் கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்களை உயர்ச்சிகளைப் பிடுங்குவது குறுக்கு வழியில் ஒருவர்க்குக் கிடைக்கவிருப்பதைத் தாங்களே அபகரிப்பதுடன் பாதிக்கப் பட்டவர்களுக்கான வருமதிகளைப் பெரும் கௌரவத்தைப் பெறுவதையே முனைப்பாகக் கொண்டவர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

ஆயினும் கௌரவம் பெறவேண்டிய அருகதை யுள்ளவர்கள் பலரையும் இந்தச் சமூகம் கண்டு கொள்ளாம லேயே இருக்கின்றது. புகழ் பெறும் வித்தை பெரும் திறமை கொண்ட விற்பனர்களிடம்கூட இருப்பதில்லை. நிறை குடத்தை விட குறை குடங்கள் தாங்கள் இருப்பதை வெளி உலகிற்குக் காட்டிநிற்கும்.

மேலும் திறமைசாலிகள் பலர் தாங்கள் கௌரவம் பெற்றேயாக வேண்டும் என எதிர்பார்ப்பதேயில்லை. ஏன் எனில் தங்கள் திறமைக்கேற்ப பட்டம் பதவி வந்தே தீரும் என்பதில் இத்தகையவர்கள் எல்லையில்லாத நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருக்கின்றார்கள். எனவே எதற்கும் தேடி ஓடவேண்டிய அவசியமே இல்லை அல்லவா?



RangaRakes
Tamilnavarasam.com

உழைப்பவர்களும் பெரும் தியாகிகளும் மௌனமாக இருக்க எவரோ ஒருவர் எந்த சம்பந்தமும் இன்றி சபை நடுவே கனவான் வேடமிடுவது சமூகத்தால் தடை செய்யப்பட வேண்டியதே!

இன்று நாம் காண்கின்ற பொய் முகங்கள் முன் அப்பாவிச் சனங்கள் தெரியாத்தனத்தாலும் வேறு வழியின்றியும் கும்பிடு போடுவது துன்பம்!

மன்னனிடம் பணிபுரியும் சேவகனுக்குக் கூட பணிய வேண்டிய இடத்தில் பணிந்தேயாக வேண்டும். அவர்களுடன் முரண் பிடித்தலாகாது. முரண்பட்டால் அந்த நடவடிக்கை காரிய சித்தியுமாகாது எனச் சாணக்கியர் தனது அர்த்த சாஸ்திரத்தில் கூறியுள்ளார். நாம் வேண்டுமென்றே முரண்படுதலுக்கும் நியாயத்திற்காகப் போராடுவதற்கும் நிரம்ப பேறுபாடுகள் உண்டு. எம்மைக் காப்பாற்றக் கண்டபடி வாயைத் திறக்காமல் இருப்பதுகூடச் சாலச் சிறந்தது என்பதில் ஏது சந்தேகம்?

முகஸ்துதி செய்தால்தான் பெரிய அந்தஸ்தில் உள்ளவர்கள் எவருக்காவது ஏதாவது உதவிகள் செய்கின்றார்கள். தங்களைப் புகழாதவர்களை வேண்டப் படாதவர்களாக நோக்குபவர்களே ஏராளமாக இருக்கின் றார்கள். நாம் ஒருவர் திறமை அவர்தம் தகுதிகளைக் கண்ணுற்றால் புகழ்வதில் ஏதும் தவறு இல்லை. ஆனால் எமது புகழ் மொழிகள் ஒரு காரணத்தை ஒரு தேவையை



RangaRakes



உள்நோக்கமாகக் கொண்டிருந்தால் அச் செய்கை தமது மனதிற்கே விரோதமான செயல் அல்லவா?

கெட்டவர்களுக்குக் கிடைக்கும் கௌரவம் பல தகாத காரியங்களுக்கே வழிசமைக்கின்றன. கெட்டவர்கள் விரிக்கும் மாயவலைக்குள் சாமானியர்களும் உயர் நிலையில் உள்ள பிரமுகர்களும் வீழ்ந்துபோய் கிடக்கின் றார்கள். “அந்தப்பெரிய மனுஷனே இவரிடம் போய் உதவி கேட்கின்றாரே உண்மையிலேயே இவர் ஒரு பெரிய மனுஷன்தான்” எனக் கண்டவர்களுக்கும் நற்சான்றி தழ்களை வழங்கும் மனிதர்களும் உளர்.

ஆனால் துன்மார்க்கர்களிடம் உதவி பெற்று அவர்களுடாகக் கௌரவங்களைப் பெறுவதைவிட வருவது வரட்டும் என்று துணிவுடன் எந்தப் பிரச்சனைகளையும் முகம் கொடுத்தலே வீரமும் புத்திசாலித்தனமுமாகும். உணர்வோம்! வலிந்து வரும் பாவவினைக ளில் இருந்து நாம் தப்பித்தேயாக வேண்டும்.

தான் கற்ற கல்வியைப் பிறர்க்கு ஊட்டுபவர்களுக்கு, தான தர்மம் செய்யும் அறப் பணியாளர்களுக்கு, கலைகளை வளர்க்கும் கலை ஞானிகளுக்கு உரிய பெருமைகள் கிடைக்காமல் விடுமா? ஆயினும் ஒருவர் திறமைக்கேற்ப கௌரவத்தை அவர் வாழும் காலத்தி லேயே சமூகம் கொடுத்துவிடல் வேண்டும்.



Tamilnavarasam.com

இன்றும் கூட பல ஒப்பற்ற கலைஞர்கள் உயிருடன் இருக்கும் போது ஏறெடுத்தும் திரும்பிப்பார்க்காத சமூகம் அவர் மரணமடைந்ததும் விழா எடுத்துக் கௌரவம் செய்கின்றார்கள். செத்தவர்களுக்குத் துதிபாடுவதால் அவருக்கு அதனால் என்ன பயன் கிடைத்து விடப் போகின்றது?

நலிவுற்ற கலைஞர்களுக்கு அறிஞர்களுக்குப் பாராட்டுப் பத்திரங்களும் பொன்னாடை போர்த்தி மகிழ்வதை விட அவர் சீவியத்தினையோட்ட என்ன நாம், செய்து கொண்டிருக்கின்றோம்? தினசரி பாவிக்க முடியாத பொன்னாடையை விட உடுத்திக்கொள்ள வேஷ்டி சட்டை கொடுத்தாலும் பரவாயில்லை போல் தோன்றுகின்றது.

ஏதாவது அனுகூலம் பெறும் நோக்கில் வசதி படைத்தவர்களுக்குக்கூடப் பொற்கிழி வழங்கி மகிழும் கூட்டம் தங்கள் செயல்களை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு ஏதாவது வழங்கினால் அது திரும்பக் கிடைக்காது என எண்ணுபவர்களும் இருக்கின்றார்கள்.

திடீரெனப் பணக்காரர்களாக உருவெடுத்தவர்களைக் கேலி பேசியவர்கள்கூட அவர்களைச் சுற்றித் துதிபாடிக் கௌரவிப்பது எல்லாமே மரத்தில் பழம் கனிந்தால் வௌவால்கள் வட்டமிடுவது போலத்தான்.





இன்று பலரும் தங்கள் உயர்ச்சிக்கும் கீர்த்தி பெறுதலுக்கும் வேண்டிய மூலகாரணங்களைத் தெரியாமலும் இருக்கின்றார்கள். முயற்சியால் தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினாலும் தமது நடத்தை நெறி பற்றியும் ஆராயாது வாழ்ந்து வருகின்றனர். பெரும் சம்பாத்தியத்தை தங்கள் உழைப்பினால் உயர்த்திவிட முடியும். ஆனால் தமக்குள் மக்களைக் கவரும் ஆளுமை த்திறனை வளர்க்காமல் வெளியுலகில் எவரையும் தமது பால் ஈர்த்துவிட முடியாது.

எங்கள் சந்தோஷங்கள் எல்லாம் நான், எனது குடும்பம் என்கின்ற ஒரு வட்டத்தினுள் அமைந்து விடுவதில்லை. அப்படி வாழ்பவர்கள் சுய நலம் மிக்கவர் அல்லது ஒதுங்கி ஏதோ ஒரு அந்நியமாகப் பூமிக்குள்ளேயே தங்களைப் பூட்டி வைத்தவர்களாகவே கருத படுகின்றனர்.

தங்களுக்குள்ளேயே இருக்கும் தனிமைச் சிறையினுள் அவர்களால் களிப்புடன் வாழ்வது கடினம். தனித்திருத்தல் மனதைஒருமுகப்படுத்தி வாழ்தல் என்பதும் எல்லோரையும் இணைத்து வாழும் முறைமையையும் வெவ்வேறு பார்வையில் நோக்க வேண்டும். எல்லோருமே தனித்து அதனுள் அமைதி பெற்று விடலாம் என்றால் நாம் ஒருவருடன் ஒருவர் பேசாமல் இருக்க வேண்டும் என்கின்ற பொருள் அல்ல. மனதைப் பக்குவப்படுத்த வேண்டும்.



RangaRakes Tamilnavarasam.com

அவ்வண்ணமே உலகை நேசித்தும் வாழ்ந்தால் மக்கள் எல்லோருமே எம் பக்கமாக இருப்பார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லவேயில்லை.

சாதாரணமான ஒருவர் இவ்வுலக வாழ்வைவிட்டேகி விட்டால் மேலைத் தேசத்தவர்கள் கொடுக்கும் கௌரவம் வியப்புக்குரியது. இறுதிச் சடங்கு ஊர்வலம் தெருவீதியில் வரும்போது மரணமடைந்தவர்கள் எவரேயாயினும் ஊர்வலத்தைக் கண்டமாத்திரத்தே சிலையென நின்று தமது தொப்பிகளைக் கழற்றி அஞ்சலி செய்வார்கள். ஆனால்நாம் எமக்கு வேண்டப்பட்டவர்களின் மரணத்திற்கு மட்டும் கௌரவமளிப்பதுடன் தெரிந்து கொள்ளாத எந்த மனிதரது மரண ஊர்வலத்தைக் கண்டால் வெறுமனே வேடிக்கை பார்ப்போம் அல்லது விலகிச் சென்று விடுகின்றோம்.

மேலும் சிலர் ஒருவர் உயிருடன் இருக்கும் போது தான் அவருடன் கொண்டாடி மகிழ்வார்கள். அவர் இறந்து போனால் அவர்கள் வீட்டுப்பக்கமே திரும்பிப்பார்க்கவே மாட்டார்கள். கேட்டால் தங்களது சொந்த வீட்டுப் பிரச்சனைகளைப் பற்றிச் சுய புராணம் பாடுவார்கள்.

எங்களிடம் இருக்கின்ற திறமைகளை விட அதையும் விட மேலான திறமைகள்மூலம் எம்மை நாமே மிகப் புதிதான மனிதனாக உருவாக்கினால்தான் உலகம் எங்களைக் கண்டு கொள்ளும். யாரோ ஒருவர் செய்ததை நாம் செய்தால் அதில் என்ன புதுமை இருக்கப் போகின்றது?





வெறும் அதிஷ்டம் மட்டும் இருந்தால் மட்டும் ஒருவர் சகல பெருமைகளையும் பெற்றுவிடலாம் எனக் கருதுதலை விட்டுவிடுக! இந்த எண்ணம் வலுப்பெற்றால் எமது சுய முயற்சி ஆர்வத்தை இவை பெரிதும் பாதிப்படைய வைக்கும். ஒருவருடைய கீர்த்திகளை வெறும் வார்த்தைகளால் மட்டம் தட்டிப் பேசுதலைவிடுத்து தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். அவர்கள் எப்படி உயர்வடைந்தார்கள் என்பதை நல்ல மனதுடன் நோக்க வேண்டும்.


மிக அமைதியாக வாழ்ந்து ஆரவாரம் இன்றிச் சாந்தமுடன் உலகை விட்டு நிம்மதியுடன் மறைவதுதான் பிறவிப் பெரும் பயன். ஆனால் நாம் இங்கு இருக்கும் வரை தூற்றலுக்கும் பழிக்கும் ஆளாகாமல் வாழ்தல் ஒரு சாதனைதான். சாத்வீகமான நல் நடத்தையுடன் நற்சிந்தனையுடன் சீவித்தால் எத்தனை இடர்களுமே பொடிப் பொடியாகும். கீர்த்திகள் யாவும் எதிர்பார்த்ததை விட நேர்த்தியாய் அமையும்.

மனிதன் அடையும் அதிஉயர் "கௌரவம்" அவன் மனிதர் மீது நேயங்கொண்ட "தூய ஆத்மா" எனச் சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவன் என்பதனாலாகும். ஏனைய புகழ் யாவும் இதன் முன் ஈடாகாது.

தினக்குரல்
ஞாயிறுமஞ்சரி
16.11.2008



RangaRakes Tamilnavarasam.com



# எதிரிகள் II

> கொள்கை முரண்பாடுகளால் எதிரிகளை உற்பத்தி செய்ய வேண்டியதில்லை. எல்லோருக்குமே ஒவ்வொரு எண்ணங்கள் பல பிரச்சனைகள். அவர்கள் கோணத்தில் அவை சரியானதாக இருக்கலாம். பூரணமான அன்பு நிலையில் எவர் கருத்துக்களையும் ஏற்கும் பக்குவம் வரும். கருத்துக்கள் ஏற்கப்படாது விட்டாலும் கூட அவர்களை முழுமையாக ஏற்பீர்களாக! எதிரிகள் உருவாகமல் இருக்க இதுவே வழி. "பகை" ஒருவர் தகுதியை இழக்கவைக்கும்.

எதிரிகள் என்பவர்களையே உருவாக்கிக் கொள் ளாத உவப்பான நிலையை நாம் ஆக்கிக் கொள்வோமாக!

எதிரிகள் எமது வாழ்வில் புகுந்திடாத நிலை சாமான்யமான விடயம் அல்ல. பரந்த விசாலமான எதிர்பார்ப்புகள் அற்ற அன்பு நிலை எம்முள் பதிந்திட்டால் "எதிரிகள்" என்ற எண்ணங்கள் கருக்கொண்டு விடுமோ? பகைவர்கள் ஏன் தோன்ற வேண்டும்? என்கின்ற காரணங்





களை நாம் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

- ❖ கொள்கைகளில் முரண்பாடுகள்.
- ❖ எந்த விடயங்களிலும் எதிர்மறை எண்ணங்கள்
- ❖ எமது எண்ணங்களுக்கும் ஆசை அபிலாஷைக ளுக்கும் மட்டுமே முன்னுரிமை வழங்குதல்.
- ❖ அடுத்தவர்களின் நியாயபூர்வமான பிரச்சனை களைக் கண்டு கொள்ளாமை
- ❖ மற்றவர் வளர்ச்சிகண்டு பொறாமைப்படுதல் அவாவுறுதல்
- ❖ தாழ்வுச் சிக்கல், அதனால் ஏற்படும் காழ்ப்பு உணர்வு
- ❖ சகிப்புத்தன்மையின்மை.
- ❖ எதனையுமே ஆராயாத தன்மை.
- ❖ எல்லாவற்றிற்கும் மேலாக மிதமிஞ்சிய கோப உணர்வு, கோபாவேசம்.

மேற்கூறப்பட்ட காரணங்களுள் அமையாத இன்னும் ஒரு விசேட காரணம் சற்று வியப்பூட்டுவதாகவும் இருக்கின்றது. அதாவது எந்தவித காரணமும் இன்றிச் சிலர் சிலரை வெறுத்து ஒதுக்குகின்றார்கள். காரணம் கேட்டால் "என்னவோ தெரியவில்லை அவரை எனக்குப் பிடிக்கவில்லை" என்று சொல்லி விடுகின்றார்கள். ஆனால் ஒருவரால் வெறுக்கப்பட்டவரை நாம் அவர் உங்களை எதற்காக விரும்பவில்லை என்று கேட்டால் "சேச்...சே அப்படி ஒன்றுமில்லை எனக்கு அவர் மீது எந்தக் கோபமும் இல்லையே. எதற்காக அவர் என்மீது கோபம் கொள்கின் றார் என்று தெரியவில்லையே" என்றும் கூறிவிடுவார்.



RangaRakes
Tamilnavarasam.com

காரணம் இன்றி ஒருவரிடம் பகைமைகொள்வது எவ்வளவு தவறான காரியம் தெரியுமா? எவரையும் நேசிக்கும் மனப்பான்மையை உண்டு பண்ணினால் இந்நிலை தோன்றாது. தங்களது முன்னேற்றத்திற்குக் குந்தகம் விளைவிக்க எண்ணுவோர் மீது அல்லது அவர்களுக்கு எதிரான கருமங்களில் சதி நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது வெறுப்பு ஏற்படுவது வியப்பு அல்ல. இன்று பகையுணர்வுக்குப் பிரதான காரணமாகப் புரிந்துணர்வு இன்மை தப்பான அபிப்பிராயங்கள் என்பனவே உள்ளதாகப் பலரும் அபிப்பிராயப்படு கின்றனர். யாரோ சொன்னார்கள் என்பதற்காக உடனே ஒருவர் மீது வெறுப்புணர்வு கொள்வதுபோல் என்ன முட்டாள்தனம் இருக்கின்றது?

எதனையுமே ஆராயாமல் யாராவது ஒருவர் இப்படிச் செய்வாரா என்கின்ற எந்தவிதமான எண்ணமின்றி அவசர முடிவுகள் எடுப்பதானால் ஏற்படும் எதிர்விளை வுகள் பாரதூரமாகவே அமைந்து விடுகின்றது. தீராப் பகைதானே போராய் உருவெடுக்கின்றது?

நீதித்துறை சார்ந்த பெரியவர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது நான் சொன்னேன் "எனக்கு எந்த விதமான எதிரிகளும் இல்லை. எனவே எனக்கு எதுவித அச்சமும் இல்லை. எதிரிகள் ஏற்படுவதற்கான காரணங் களும் இல்லை." என்றேன். அப்போது அந்தப் பெரியவர் சொன்ன வார்த்தைகள் என்னைச் சிந்திக்க வைத்தன.





"நீங்கள் சொல்வது நன்றாகத்தான் இருக்கின்றது. எதிரிகளைச் சம்பாதிக்காமல் இருப்பதுவே பெரும் பாக்கிய மாகும். ஆயினும் நீங்கள் நினைப்பது போல் எல்லா எதிரிகளுமே நேரிடையாக வருவதுமில்லை. கண்ணுக்குப் புலப்படாமலே சிலர் கேடுகெட்ட கருமங் களைச் செய்து விடுவார்கள். நேருக்கு நேர் மோதிக் கொள்பவர்களைப் பற்றி அச்சமடையத் தேவையில்லை. அவர்களுடன் சமாதானமும் செய்து கொள்ள முடியும். ஆனால் முதுகுக் குப் பின் இயங்கிக் கொண்டிருக்கும் பகைவர்களை எங்ஙனம் இனம் கண்டு கொள்ளமுடியும்? எமது அனுபவ அறிவினால் மட்டுமே கண்டுபிடிக்க முடியும்" என்றார் உண்மைதான். மேலும், எதுவித காரணங்களுமின்றியே ஒருவர் மீது காழ்ப்புணர்வினால் கொள்வோருமுண்டு.

எமக்கு எதிரான நடவடிக்கைகளை எவராவது நன்கு திட்டமிட்டுச் செய்வதற்காக வதந்திகளைச் சொல்வோரும் உளர். எனவே காரண காரியங்கள், நம்பகத் தன்மையை முதலில் அறிய வேண்டியவராக நாம் இருக்க வேண்டும். மேலும் சந்தர்ப்ப சூழ்நிலையை வைத்தும் நாம் நிரபரா திகள் மீது குற்றம் சாட்டிவிட இயலாது. கண்ணுக்கு முன் உத்தமர்களாகவும் முதுகில் குத்திடும் எத்தர்கள் பற்றி எந்நேரமும் விழிப்புடன் இருத்தல் சாத்தியமானதுதானா?

நாம் பலரிடம் வைக்கின்ற அதீதமான நம்பிக்கை களே சில சமயம் எங்களை ஏமாளிகளாக்கிவிடவும் கூடும். பகை வளர்த்தலும் தேவையற்ற குரோதங்களை மனதுள்



RangaRakes

Tamilnavarasam.com

மூடிமறைத்தலும் ஆபத்தான சங்கதிகளாகும். சிலருடன் நாம் கொள்ளும் சின்னச் சின்ன மனஸ்தாபங்களை நாம் கடிதெனக் களைந்து கொள்வோமாக! சின்ன விஷயம் தானே என நாம் விகற்பம் இன்றி எண்ணியதைப் பெரும் பூகம்பமாக பூதாகரமாகவே சிலர் எண்ணி தமது மனதினுள் பகைமை யை வளர்த்துக் கொள்கின்றார்கள்.

நாங்கள் எவரிடத்தும் கொள்கின்ற வீணான சந்தேகங் களைக்களைந்தேயாக வேண்டும். நீங்கள் மறந்து போன கசப்பான விஷயங்களைப் புதுப்பிக்கச் சிலர் விரும்பினாலும் அதை முற்று முழுதாகக் களைந்து கொள்ள முழுமுயற்சி எடுப்பீர்களாக! சொந்த வாழ்வில் கூட நடிப்பதே சிலருக்கு இயல்பாகி விட்டது. ஆனால் எந்தத் தருணத்திலும் போலியான அன்பு காட்டல் மனித இதயத்தை விரிவுபடுத்தாது. மாறாகக் களங்கமுள்ள இதயங்கள் கனத்த இதயமாகவே இருந்து கொள்ளும்.

எதிர்பார்த்த ஒன்று நிறைவேறாது போனால் அதன் பொருட்டு அந்நிலைக்கு யார் மீதாவது பழி போட்டு விரோதத்தை வளர்க்கும் நபர்களும் இருக்கின்றார்கள். ஒருவரது தமது திறமை, முயற்சிகளுக்காகவே பயன்கள் கிட்டுகின்றன. இதனை இவர்கள் முதற்கண் உணரல் வேண்டும்.

"எனக்கு எவ்வளவோ பிரச்சனைகள் எவருமே வந்து உதவுகின்றார்கள் இல்லை. எத்தனை உறவுகள் எத்தனை





நண்பர்கள் எல்லோருமே இன்று கைவிட்டு விட்டார்களே" என்று உளமாரத் துன்புறுபவர்கள் ஏராளம். உண்மையில் துன்ப மூட்டும் எதிரிகளும் துன்பங்கள் வந்துற்றபோது உதவாத நண்பர்கள், உறவினர்கள் எல்லோருமே ஒரே தரத்தைச் சார்ந்தவர்களே!

ஒருவரின் துன்பங்களைக் களைய வலு இருந்தும் அவர் நிலை கண்டு இரங்காமல் துன்பங்களைஅகற்ற விரும்பாதவராக இருப்பின் அவரும் துன்பங்களை வழங்கியவராகக் கருதப்படுவார்.

எனவே காரணமின்றி பொருதுபவர்களும் நியாய ஈனங்களைக் கண்டும் மௌனிப்பவர்களும் பகை யுணர்வைத் தூண்டி விடுபவர் களும் மனித நேயத்திற்கும் மானுட தர்மத்திற்கே முரணான வர்களாவர்!

சதா ஒருவருடன் சண்டையிட்டும் வீண்பழி சுமத்திக் கொண்டு இருக்கும் ஒருவர் திடீர் எனப் பாசம் கொண்ட வராக அணுகும்போது எச்சரிக்கையுணர்வுடன் இருக்க வேண்டியுள்ளது.

நாம் நம்பிக்கையுடையவராக இருக்கின்றமை யானது உளமார ஒருவருடன் களங்கமின்றிப் பழகுவதே யாகும். நம்பி நடப்பது என்பது தங்கள் சக்தியில் திறமையில் சிறிதும் நம்பிக்கை வைக்காது கண்டபடி பிறரை மட்டுமே நம்புவதாகும். எனினும் தம்மை நாடிவரும்



RangaRakes
Tamilnavarasam.com

ஒருவரது அப்பாவித் தன்மையினை ஏற்று அவர்களை அன்புடன் நேசிப்பவர்களும் இருக்கின்றார்கள். ஒருவரது களங்கமற்ற அப்பாவித்தன்மையினை உணராது இவர்களுக்குக் கடுகளவு ஆயினும் துன்பம் கொடுப்பவர்கள் போல் துர்மதியாளர் வேறில்லை.

நண்பர்கள் யார், எதிரிகள் யார் என்று உணராமல் தங்கள் வாழ்க்கையைக் கெடுத்துவிட்டதாகச் சிலர் சொல்வதுண்டு. பொதுவாக செல்வம் சேரும்போது துணைக்கு நான் , நீ எனப்பலர் சுற்றிக்கொள்வதும் அதே நபர்கள் நொடிந்து ஒடிந்து போனவர்களைக் கண்டதும் கடிதென மறைந்து ஏகுவதும், புதுமையல்ல.

பாசம், பரிவு, கருணை, காருண்யம் கொண்டோரால் பணம் பெரிதென நோக்கப்படுவதில்லை. என்றுமே உறவுகளுக்கு வெளியே மட்டும்தான் குரோதம் பகை உருவாகின்றது என்பதல்ல. உறவினர்களுக்குள்ளேயும் பகைமையுணர்வு நீறுபூத்த பெருநெருப்பாக இருப்பது வேதனை தரும் உண்மை தான். உடலுக்குள் நோய் வரும் போது அதனைக் குணப்படுத்துதல் சாதாரண விஷயம் தான். ஆயினும் பகையை வேருடன் பிடுங்கச் செய்தல் என்பதே சிரமமாக இருக்கின்றதே என வேதனையில் புழுங்குபவர்கள் ஏராளம் ஏராளம்.

மிகவும் சக்திமிக்க அந்தஸ்தில் உயர்ந்து நிற்பவர்கள் தங்களிலும் தாழ்ந்த நிலையில் உள்ளோரிடம்





பகைமை கொள்வது மிகவும் கீழ்த்தரமான செயல்தான். தங்கள் செல்வாக்கு பணபலத்தினால் இத்தகைய சாதாரண நிலையில் உள்ளவர்களைப் பழிவாங்குவது மனித நீதிக்கே எதிரானதல்லவா?

ஆயினும் சில செல்வாக்கு மிக்கவர்கள் தமக்கு நிகரானவர்களுடன் மட்டுமே மோதிக்கொள்வார்கள். தமக்கு நிகரான அல்லது தம்மிலும் மேம்பட்டோரிடம் சவால் விடுத்து முரண்படுவது தான் தங்களுக்குக் கௌரவமானது என எண்ணுபவர்களும் இருக்கின்றார்கள். சரித்திரத்தில் சொல்லப்பட்ட ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன்.

இந்தியாவில் படை எடுத்த மகா அலெக்சாந்தர் மன்னன் ஒருவனைச் சிறைப்பிடித்தான். மிகவும் மமதையுடன் அலெக்சாந்தர் "நீ என்னுடைய கைதி உன்னை நான் என்ன செய்யவேண்டும் என எண்ணுகின்றாய்" எனக்கேட்டான் அவனது எகத்தாளமான பேச்சைக் கேட்ட மன்னன் "நான் ஒரு மன்னன். நீ என்னைச் சிறை செய்தாலும் நான் மன்னனே தான். அரசனான என்னை அரசனாகவே நடத்து" என்று வீரமுடன் அவன் சொன்னதைக் கேட்டு வியந்துபோன அலெக்சாந்தர் அவனை விடுதலை செய்ததுடன் தான் பிடித்த அவனது நாட்டையும் மீளக்கொடுத்து அவனுடன் நட்புப் பாராட்டிக் கொண்டான்.

பகைமையை மறந்தும் மன்னிக்கவும் அன்புணர்வினால் மட்டுமே முடியும். மன்னிப்பதற்கு எல்லை இல்லை.



RangaRakes
Tamilnavarasam.com

பகையை வளர்ப்பதால் ஏற்படுகின்ற தீமைகளைவிட நட்புறவினால் கிடைக்கும் வரவுகள், சொல்லொண்ணாத வையன்றோ! ஒருவனை நசுக்குவது ஒன்றே குறிக் கோளாகக் கொண்டு பகை வளர்த்து எதிரியாக விரும்புவது வெட்கங்கெட்டசெயல் மட்டுமல்ல, இது ஒரு தெய்வ விரோதச் செயலுமாகும். ஏன் எனில் இறைவனின் "பண்பு" என்பதே உயிர்களை ரட்சிப்பதும் அவைகளுக்கு இரங்குதல், மன்னித்தல் என்பதுமாகும். எனவே தெய்வத்திற்கு விரும்பிய பண்பை நாங்கள் ஏற்காது எமது இஷ்டப்படி வாழுதலை எப்படி இறைவன் ஏற்றுக்கொள்வான் என்பதைச் சற்று சிந்தனைக்கு எடுப்போமாக!

உலகிற்காகத் தன்னையே வழங்கத்தயாராக உள்ளவர்க்குப் பகைமை என்கின்ற உணர்வு உருவாகுவ தேயில்லை. சுயநலம் மட்டுமே நோக்காகக் கொள்பவர்கள் தங்களிடமிருந்து யாராவது எதையாவது திருடிவிடுவார்கள் என ஐயமுடன் வாழ்வது போல வாழ்ந்து வாழ்நாட்களை இழக்கின்றார்கள். எல்லா நன்மைகளும் தமக்கு மட்டுமேயானது பிறர்க்கு எதுவும் கிடைத்தலாகாது என எண்ணி நடப்பதுபோல் முட்டாள்தனம் வேறு உண்டா? இந்த அப்பட்டமான சுயநலம் காரணமான நடத்தைகளா லேயே புதிய புதிய எதிரிகளை இவர்கள் உருவாக்கு வதுடன் தாங்களே சமூகத்தில் எதிர்ப்புக்களையே வரவேற்கும் நபராக நடந்தும் கொள்கின்றார்கள்.

உண்மையில் சுயநலம் என்பது பிறரிடம் இருந்து எதனையும் பிடுங்குதல் அல்ல.தம்மைத் தமது திறமை





யினால் வளர்த்துக் கொள்வதைச் சமூகம் எதிர்க்கப் போவதில்லை. எம்மை நான் வளர்க்க உரிமையுள்ள வராவோம். ஆனால் எமது வளர்ச்சிக்காகப் பிறரை இம்சிப்பதும் பகை பாராட்டுவதும் ஒருவரை அழிப்பதே இலட்சியமாகக் கொள்வதில் எந்தவித நியாயங்களு மில்லை. ஒருவரின் நியாயபூர்வமான ஆசைகள், எதிர்பார்ப்புகள், சத்திய வாழ்விற்கு உட்பட்டதாயின் அவை வரவேற்கத்தக்கதே.

பிறரைப் பகைத்தால் தான் இந்த உலகில் வாழமுடியும். என்றோ அல்லது யாரையாவது அச்சுறு த்தினால் தான் உலகில் எம்மை வாழவிடுவார்கள் என எண்ணுவதும் முட்டாள்தனமான எண்ணமேயாகும். சிலர் சொல்வதுண்டு "கொஞ்சம் அடக்கியாண்டால் தான் இங்கு பிழைக்க முடியும்" என்பார்கள். இந்த நினைப்பு முளைவிட்டாலே, அது விஷக்கிருமிபோல் சிந்தனையை மந்தமாக்கி வாழ்க்கையை வீழ்த்திவிடும்.

பகைமைக்குக் கோபமே மூலகாரணம் என்று சொல்லப்படுவதால் கோபத்தை முழுமையாக இழப்பத ற்குத் தயாராகுங்கள். நியாயமான கோபங்கள் வரும்போது கூட உங்களைக் கட்டுப்படுத்தத் தயாராகுங்கள். எல்லோரும் எல்லா நேரங்களிலும் ஒரே மாதிரியான மனநிலையில் இருக்கமாட்டார்கள். எங்கள் கோபங்களால் மற்றவர்களைக் கோபமூட்டக் கூடாது. நாமாகவே ஒருவரின் வேகமிகு உணர்ச்சிகளுடன் பயிற்சி செய்தலாகாது. உணர்மின்!



RangaRakes
Tamilnavarasam.com

எனவே எதிரிகளை நாம் மடக்க வேண்டும் என எண்ணினால் கோபத்தினை விடுத்து அன்பு எனும் பாணத்தைச் செலுத்திப் பாருங்கள். இதன் குளுமை வேகத்தால் எவருமே கட்டுண்டு உங்கள் வசமாவார்கள். அப்புறம் எதிரிகள் எம்மைப் புரிந்து நட்புடன் நெருங்கிவருவர் அன்றோ!

"கூர்மதி"

கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்

பிரிவின் ஆண்டு மலர்

2008







# ஒப்பீடு செய்வதை தவிர்த்திடுக!

நாம் எமது வாழ்வினை சீரும், சிறப்புடனும் வாழ, அடுத்தவர்களுடன் ஒப்பீடு செய்து தான் வாழ வேண்டும் என்பதில்லை. இருப்பதை வைத்துத் திருப்தியடைய வேண்டும். எம்மை நாம் வளப்படுத்த, நாமே முயற்சி செய்ய வேண்டும். பெரியோர் முதுமொழிகள், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். ஆனால் பிறர் பெருமை கண்டு ஏக்கமடையாது அவரைப் போல் நாம் வளர முடியவில்லை என மனம் புழுங்க வேண்டியதில்லை. போலியான வாழ்க்கை மேற்கொள்பவர்களின் வாழ்க்கை முறையே உண்மையானது என நம்பி, அவர்களை தம்மோடு ஒப்பீடு செய்வது துன்பத்தை வலிந்து தோழமை கொள்வதாக அமைந்து விடும். நல்லபடி வாழ்ந்தால் எல்லோருமே எம்வழி நோக்கி வருவார்கள்.

மிகவும் அழகான குடும்பம் அவர்களுடையதாகும். இல்லத் தலைவன் அரசாங்க உத்தியோகம் பார்த்து வந்தார். நல்ல மனைவி, அழகான ஆண், பெண் பிள்ளைகள் இருவரும் பாடசாலையின் திறமையான மாணவர்கள். வரவுக்கேற்ற செலவு செய்து நிம்மதியாக வாழ்ந்து வந்தார்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

இது இவ்விதம் இருக்க. அவர்கள் வீட்டிற்கு எதிர்ப்புறமாக புதிதாக ஒரு குடும்பம் குடியேறியது, மிகவும் வசதியான அவர்களிடம் முன்னர் நான் குறிப்பிட்ட குடும்பத்தலைவி எதிர் வீட்டுக்குப், புதிதாக வந்திருந் தார்கள் என்பதனால் உடனே சென்று பார்த்தார். அவர்களிடம் பேச்சுக் கொடுத்தார்.

அவர்களது பேச்சைக் கேட்டதுமே இவர் ஆச்சரியப்பட்டு விட்டார். "அடேயப்பா எவ்வளவு விளையுயர்ந்த பொருட்கள் இங்கு குவிந்து கிடக்கின்றன. மோட்டார் வண்டி, இரண்டு பிள்ளைகளுக்கும் கணினி, உட்பட அது இதுவென ஏராளம் ஏராளம்!!

திகைத்துப் போய்விட்டார். அத்துடன் எதிர் வீட்டுக்காரி தங்கள் வீட்டுப் பெருமைகளையும் அடுக்கிக் கொண்டே போனார். கணவன் பெரிய வியாபாரி. தலைநகரில் சொந்தமாக வியாபார நிலையம் , இந்த வீட்டையும் தாங்கள் விலைக்கு வாங்கியதையும் மறக்காமல் சொல்லிக் கொண்டார்.

இதுவரை எவ்வித சலனமுமற்று சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்தவர்களுக்கு எதிர் வீட்டுக்காரியின் வசதிகள், வாய்ப்புக்கள் பற்றிச் சொல்லிக் கேட்டதுமே குளத்தில் கல் எறிந்த மாதிரி சலனங்கள் சற்று ஏற்படலாயிற்று.





இவர் மனம் ஒப்பீடு செய்யத் தொடங்கி விட்டது "அட நாமும் தான் இருக்கிறோம் எவ்வளவு சிக்கனமாக இருந்தும் பத்துக் காசு சேமிக்க முடியவில்லை. எப்படித்தான் சேமித்தாலும் ஒரு பொருளையாவது இவர்கள் போல் வாங்க முடியுமா...? வாழ்க்கை பூராவும் நாங்கள் இப்படித்தான் வாழ வேண்டும்." மனம் அங்கலாய்க்கத் தொடங்கியது.

அடுத்த ஓர் இரு நாட்களில் எதிர் வீட்டு வசதி படைத்த அம்மாள் இவர்கள் வீட்டிற்கு வந்தார். வீட்டினுள் பிள்ளைகள் படித்துக் கொண்டிருந்தார்கள் வீட்டு மேசை பீரோ மீது பிள்ளைகள். கல்வி, விளையாட்டு, கலை நிகழ்வுகளில் வாங்கிய பரிசுப் பொருட்கள், கோப்பைகள், கேடயங்கள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வீடு அழகாகப்பளிச் சென்றிருந்தது. உள்ளே சுவாமி அறையில் ஊதுபத்தியிலிருந்து நறுமணம் வந்து கொண்டிருந்தது.

வீட்டிலிருந்து வந்த இல்லத் தலைவர் தனது மனைவியை "அம்மா....இதோ பார்! பக்கத்து வீட்டு அம்மா! எங்களைப் பார்க்க வந்திருக்கிறார், மகன் உங்களைத்தான், மகள் இங்கே வாருங்கள் எனத் தனது குழந்தைகளையும் மிக அன்புடன் அழைத்தவர் இன்முகத்துடன் வரவேற்றார். இதற்கிடையில் அவரது மனைவியும் வந்து விட இவர்கள் பேச ஆரம்பிக்க, பிள்ளைகள் இருவரும் வீட்டுக்கு வந்தவரை பணிவுடன் குனிந்து வணங்கி எழுந்தனர்.



RangaRakes
Tamilnavarasam.com

"இன்றைக்கு எனக்கு விடுமுறை மனைவி, பிள்ளைகளுடன் கோயிலுக்குப் போய் வர வேண்டும், மேலும் இன்று குழந்தைகளுடன் எங்காவது சந்தோஷமாக சுற்றி வர வேண்டும்" என்று சொன்னவர். மனைவியை நிமிர்ந்து நோக்கினார்.

இவரது பேச்சைக் கேட்டவர்களுக்கு தங்கள் வீட்டுச் சமாச்சாரங்கள் பற்றிய எண்ணங்கள் அலை மோத ஆரம்பித்து விட்டது. "நான் என்ன தான் பெருமை பேசினாலும் இவர்களைப் போலவா வாழுகின்றோம்? என்ன அன்பான கணவன், மனைவி, பிள்ளைகள். எந்நேரமும் வீட்டுக்காரர் அருகிலேயே இருக்கிறார். எனது வீட்டில் எனது கணவரைக் காண்பதே அரிது. ஆனால் இவரோ எந்நேரமும் அன்புடன் பேசுகின்றார். பிள்ளைகளை அரவணைக்கிறார் எனது கணவர் சதா எப்போதுமே " டென்ஷன்... டென்ஷன் என்று கத்துகிறார். அது என்னவோ எனக்குப் புரியவில்லை. எப்போதுமே உழைத்தால் மட்டும் போதுமா, அன்பு , ஆதரவு, வேண்டாமோ......... என்றைக்காவது ஆற, அமர்ந்து எங்களிடம் கூட இருந்து உணவருந்தினாரா எனது பிள்ளைகள் இவர்கள் போல சமர்த்தாகவா இருக்கிறார்கள். ?

இவ்வாறு மிகவும் வசதி படைத்த அந்த அம்மணி தன் நிலை பற்றி ஓப்பீடு செய்து மனம் குமைய ஆரம்பித்துவிட்டார்.





பார்த்தீர்களா? மேலே சொன்ன விடயங்கள் வெறும் கற்பனையல்ல. இன்று யதார்த்தமே இப்படித் தான் என எண்ணத் தோன்றுகின்றது அல்லவா? மற்றவர்களைப் பார்த்து ஒப்பீடு செய்து ஒவ்வாத எண்ணங்களால் அல்லல் பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிற இவர்கள் நிலை மிகவும் பரிதாபமும் அறியாமையும் வேடிக்கையுமானதாகும்.

இருப்பதைக் கொண்டு திருப்தியடைவதே மேலானது என மனதார எண்ணும்வரை வாழ்க்கை சிக்கலாக, மனம் நிம்மதியிழந்து போவதை எவரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

மற்றவர்களைப் பார்த்து ஒப்பீடு செய்து ஏக்கப்படுவது, ஈற்றில் பொறாமை என்கின்ற மனோ பாவத்தில் மனிதரை இட்டுச் சென்றுவிடும்.

குடும்பங்களில் நடக்கும் குழப்பங்களைப் பாருங்கள். பலரது குடும்பப் பிரச்சனைகளில் பெரும்பாலும் அடுத்தவர்களைப் பார்த்தமையினால் ஏற்பட்ட எதிர் விளைவுகளால் விளைந்தவையாகவே இருக்கின்றன.

ஒருவரது வளர்ச்சியைக் கண்டு நாமும் அவ்வண்ணமே வாழ எண்ணுதலில் தப்பு இல்லை. அதை விடுத்து மனம் வெதும்பி அது போல் முயன்று காரிய சித்தி அடையாமல் இருப்பது ஏற்புடையது அல்ல! ஒவ்வொருவருமே தமக்கென ஒவ்வொரு விதமாக



RangaRakes

Tamilnavarasam.com

வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றார்கள்.

எவ்வண்ணம் நாம் எமது வாழ்க்கையை அமைத்திடினும் அவை சீராக, செப்பமான அற வழியின் அடித்தளத்திலிருந்து கட்டி எழுப்பப்படல் வேண்டும்.

தத்தமது கலாச்சாரத்தை மீறாது ஆடம்பரத்தையே, இலக்காகக் கொள்ளாது வாழ வேண்டும். மிகவும் பகட்டுடன் வாழ்பவர்கள் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். இத்தகைய வாழ்வு முறை அவர்களை மட்டும் பாதிப்பு அடைய விடுவதில்லை.

மாறாகச் சாதாரண மக்கள் இதுவே நிஜம் எனக் கருத அரம்பித்து விடுகின்றார்கள். குடும்ப அமைதி என்பதே எளிமையான வாழ்வில் தங்கியுள்ளது. வீண் செலவு செய்து சந்தோஷங்களை விலை கொடுத்து வாங்க வியலாது.

இன்று குற்றச் செயல்கள் பெருகிய வண்ணம் இருப்பததற்கு பிரதான காரணம் என்ன? சாதாரண குடும்பத்தலைவன் எதற்காகக் குறுக்கு வழியில் புகழ், பிரபல்யம், கௌரவம் போன்றவைகளை ஏன் நாடி ஓட வேண்டும்?

இவர்கள் பணம் பெருகிய, புகழ்படைத்த மற்றவர்களுடன் தம்மை ஒப்பீடு செய்வதும், ஆனால்





இதன் பொருட்டு நியாயமான வழியில் உழைக்க விரும்பாமையுமே முக்கியமான முதற் காரணங்களாகும்.

கணவன், மனைவி, பிள்ளைகள் எவராயினும் அடுத்தவர்கள் பற்றியே சிந்திக்காது, உங்கள் எண்ணங்களை நற்சிந்தனைக்குள் உட்படுத்துங்கள். எல்லாமே நன்றாக அமையும், நினைத்தது கிடைத்து விடும்.! குடும்பம் குதூகலமாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
21.11.2010



RangaRakes
Tamilnavarasam.com



# பிறர் துன்பம் களைதலே நாம் அடையும் இன்பம்

ஒருவரின் துயர் களைய நாம் அவர்கள் சுமைகளைத் தாங்குவது சாமான்யமானதல்ல. ஆயினும் இன்னொருவருக்காக இரக்கப்படுவதும், அவர்களுக்காக எம்மால் இயன்ற உதவிகளை நல்குவதும், இறைவனை வேண்டி அவர் பொருட்டு பிரார்த்தனை செய்வதும், எங்களால் முடிந்த காரியமேயாம். மானிட நேயமுடன் வாழும் மாந்தர்களை ஆண்டவன் இரட்சிப்பதுடன், அவர்கள் தொடர்ந்தும் பணியாற்றும் மாவல்ல மைகளையும் கொடுத்து விடுகின்றான். கடமையை ஒழுங்காகச் செய்தால் மனோ வலிமை தானாகவே சுரந்து வரும். நீங்கள் எல்லோரையும் வெறும் வாயால் உபசரிப்பதிலும் பார்க்க உங்கள் நெஞ்சங்களால் உபசரித்து மகிழ்க! பிறர் துன்பம் களைவதால் எமக்கு இன்பம் வழங்கப்படுகின்றது.

"நான் அழுதால் பிறர் அது கண்டு சிரித்தால், அவர்கள் சிரித்து மகிழ நான் தொடர்ந்தும் அழுது கொண் டிருப்பேன்"





அண்மையில் நான் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய போது, எனது இல்லத்தில், நான் மாணவப் பருவத்தில் இருந்த போது கண்டெடுத்த அப்பியாசக் கொப்பியில், எழுதியிருந்த வரிதான் மேலே எழுதப்பட்ட வையாகும்.

பிறருக்காக அவர்கள் பொருட்டு அவர்களின் துன்பங்களைத் துடைப்பது தவிர வேறு என்ன கருமம் எமக்கு வேண்டியிருக்கிறது?

பிறர் துன்பங்களை நீ களைய முற்படும் போதே, உனது துன்பங்கள் களன்று போய்க் கொண்டிருக்கும்.

பிறர் சிரிப்பினுள் உனது மனம் பதிந்து அதனுள் நுழைந்து நீயும் சிரித்து மகிழும் போதே உனது துயர்கள் துடைத்து எறியப்படும். துன்பங்கள் யாவும் வறுமையாகி, வெறுமையாகும் .

எவராவது இன்னுமொருவர் துயரங்களில் இன்பம் எய்துவது கூடாது. அப்படி எண்ணிச் சில பொழுது மகிழ்வுற்றால், அது வெறும் மாயை! ஆசூசை!

ஒருவருக்காக நாம் அவர்கள் சுமையைத் தாங்குவது என்பது சாமன்ய விடயம் அல்ல . நல்ல மனப்பக்குவம் வேண்டும்.



RangaRakes

Tamilnavarasam.com

எல்லோராலும் அடுத்தவனுக்கு உதவுவதற்கான வசதிகளும் இருப்பதில்லை. நெஞ்சம் விரிவடைந்தால், கஞ்சத்தனத்திற்கு இடமேயில்லை ஆயினும்.

ஒருவரின் துன்ப நிலை கண்டு இரக்கப்படுவதும், அவர்கள் தேறுதல் பெற இரண்டொரு இனிய நல் வார்த்தைகளைச் சொல்வதும், ஆண்டவனிடம் வேண்டுதல் செய்வதும் சிரமமானதும் அல்ல! வருமானம் பெறுதலுக்காக மட்டும் வாழ்வதும் கொடை வழங்காதிருப்பதும் இறை விருப்பத்திற்கு முரணானது.

கிண்டலும், கேலியமாகப் பேசியபடியே யதார்த்தமாக இங்கு நடக்கும் சமாச்சாரங்களைப் பற்றியே இம்மியளவும் சிந்தையிலேற்றாமல் நடக்கும் மனிதர்களின் அந்தகப் போக்கு வெட்கத்திற்குரியது.

ஒருவரின் உணர்ச்சி கண்டு மனம் பூரண திருப்தியடையும் போது, எமக்குரிய நல்ல கொடுப் பனவுகள் இரட்டிப்பாக்க இறைவன் சித்தமாக்குகின்றான்.

வசதியும், வாய்ப்பும், பணமும், புகழும் உடையவர்களையே தாங்கித் தூக்கி ஏற்றுபவர்கள் ஏன் தாழ்ந்தவனைத் தூக்கி நிறுத்தப் முன் நிற்பதில்லை?

சுய ஆதாயம் மனிதனால் தான் கிட்டும் என எண்ணுபவர்கள், தங்கள் தன்னலமற்ற சேவையினால்





எல்லாமே வலிய வந்து சேரும் என்பதைப் பலர் நம்புவதில்லை.

உடனடித் தேவைகளையே மனித மனம் நாடிக் கொண்டிருக்கின்றன. அவை கிடைக்கும் இடங்கள் நீதிக்குப் புறப்பான இடங்கள் எனத் தெரிந்தும் அது பற்றி எவரும் கவலைப்படுவதுமில்லை. நீதியைப் புறம் தள்ளி அநீதிக்கான காய்களை நகர்த்துகின்றார்கள்.

சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்ஸர், மகரிஷி ரமணர், இராமலிங்கவள்ளலார் போன்றவர்களின் வாழ்க்கையைப் படித்தால் நமக்கு ஆச்சரியமாக இருக்கும்.

பிறர் துன்ப துயரங்களை தமது சிரசில் ஏற்றிக் கொண்ட இவர்கள் அதற்காகவே தம்மை முழுமையாக அர்ப்பணித்தார்கள்.

பிரார்த்தனை, வேண்டுதல்கள் என்பது சாமான்ய விஷயமல்ல. அக்பர் சக்கரவர்த்தியின் தகப்பனார் தனது அருமைச் செல்வன் அரியணை வாரிசு, கடும் சுகயீனமுற்று மரணத் தறுவாயில் இருக்கும் வேளை இறைவனிடம் வேண்டுதல் செய்தார்.

"இறைவா... எனது மகன் உயிர் பிழைக்க வேண்டும் அதன் பொருட்டு எனது உயிரை நீ எடுத்துக்



RangaRakes

Tamilnavarasam.com

கொள்!" என்ற படியே உளம் கசிந்து பிரார்த்தனை செய்தார். என்ன அற்புதம் ! சக்கரவர்த்தியின் உயிர் பிரிந்த அக்கணமே, அவர் மகன் நோய் அகன்று பிழைத்துக் கொண்டான்.

ஒருவரின் மனோ வலிமைக்கு இச் சம்பவம் ஒரு சான்றாகும். எமது பிரார்த்தனையில் தூய்மையும், நேர்மையும் இருக்க வேண்டும். எமது ஆன்மாவின் ஓசைகளை இறைவன் கேட்க எமது வேண்டுதல்களில் ஸ்திரத் தன்மை இருக்க வேண்டும்.

எனவே நாம் பிறர் துன்பம் களைவது எனும் விடயத்தில் எம்மால் அது முடியும் என்பதை நாம் மறுக்க முடியாது.

செய்கின்ற பணிகளில் தூய்மை மேலோங்கும் போது அது இலகுவாக்கப் படுகின்றது.

தமது கல்வியையும், அனுபவங்களையும், ஈட்டிய செல்வங்களையும் தங்களது சொந்தங்களுக்காகவும், தமக்காகவுமே மனிதன் செலவிடுகின்றான், சேமித்து மேலும் மேலும் வசதிகளை வாய்ப்புக்களைப் பெருக்கு கின்றான்.

பிறருக்காக எத்தனை சதவீதம் தமது நேரத்தை யும், செல்வத்தையம் செலவிடுகின்றான்?

உபதேசங்களைப்,பேருரைகளை நாம் கேட்பதற்கு





மட்டுமே நேரத்தை ஒதுக்குகின்றோம். செயல் வடிவில் வாழ்வை உருவாக்க எத்தனை நபர்கள் முன் வருகின்றார்கள்?

சாதனைகள் பல செய்வதற்காகச் சக்தியைச் செலவிடும் நாம், சாதாரண சாமான்யனின் சோகத்தை சீவி ஏறிவதே பேராற்றல் மிக்கது என உணர்வதேயில்லை.

கனத்த கல்வியை பயின்றும் கூட மற்றவன் ரணத்தை மாற்றும் குணத்தைக் கொண்டுள்ளோமா? தோளில் சுமையோடு உள்ளவனுடன் வார்த்தையாடு வதைவிட அவன் பாரத்தை பகிர்வது மேலானது.

மனித மனப் பாரங்களாலே இந்தப் பூமியின் பாரங்கள் பன்மடங்கு அதிகரித்து விட்டது. மக்கள் மனம் துண்டுபட்டு அல்லலாடினால், பூமியும் தள்ளாடும்! மனித நடத்தைகளே உலகை நடாத்துகின்றது.

ஒரு யானையையும், ஒருவன் சுமக்கலாம்ஆனால், ஒரு சின்ன சோகம் சேர்ந்திருந்தால் சித்தம் சிதறி, ஸ்தம்பித நிலையடைந்து ஒரு சின்ன பலூன் கூட மலை போன்ற சுமை எனக் கருதுவான்.

எனவே,

எல்லோருமே, ஒருவரை ஒருவர் தூக்கி நிறுத்த வேண்டியவர்களாவர். உலகத்திற்கு நம்பிக்கைக்குரிய பங்குதாரர்களாக்க சகலரும் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.



RangaRakes Tamilnavarasam.com

மனிதர் தமக்குத் தாமே வைக்கும் உண்மையான நம்பிக்கை மற்றவர்கள் மீதான களங்கமற்ற ஈடுபாடுகளாலேயே அமைகின்றன. பூமியும், தன்னை நிலை நிறுத்திக் கொள்ள பரஸ்பரம் அனைவரும் இணைக. வியாபாரச் சரக்கு என வாழ்க்கையை எண்ணல் வேண்டாம்!

இந்த மாசற்ற நம்பிக்கை, எதையுமே தாங்கி நிற்கும் புலனறிவுக்கும் எட்டாத மகா சக்தி! நீங்கள் எல்லோரையும் வெறும் வாயால் உபசரிப்பதிலும் பார்க்க உங்கள் நெஞ்சங்களால் உபசரித்து மகிழுங்கள்!

இந்த எண்ணங்களே அடுத்தவன் துயரைத் தாங்கும் வல்லமையைத் தந்துவிடும். ஒருவருக்குத் துயரங்களை வேண்டுமென்றே புகுத்திவிட்டு சாமர்த்தியமாகத் தப்புவது தான் தனது துன்பங்களை நீக்குவதற்கான வழி எனத் தப்பான அபிப்பிராயம் கொள்ளக் கூடாது.

ஒருவர் மனிதாபிமான பணிகளைச் செய்வதற்கு வழிவிடுவதும் அவர்களோடு இயங்குவதுமே மேலான ஆன்மீக உயிர்ப்பூட்டலுமாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
28.11.2010







# ஒட்டுக் கேட்டல் கெட்ட பழக்கம்!

அடுத்தவன் செயலை சதா ஆராய்வது அநாகரீகம். தங்கள் செயல்களை முடி மறைத்து அடுத்தவர் பற்றி அறிந்து கொள்ள காலத்தை விரயம் செய்வது சந்தோஷங்களை கரைக்கும் வேலை. ஒருவரைக் குறை காண்பதிலேயே குறியாக கொள்பவர்களே ஒட்டுக் கேட்கும் குணங்களுடன் இணைங்கி நிற்கின்றார்கள். இது கூட ஒரு திருட்டு முயற்சி தான். அத்துடன் மனித உரிமை மீறல். ஒருவர் அந்தரங்களுடன் நாம் பிரவேசிப்பது அவர்கள் சுதந்திரத்தைக் கூறு போடுவதாக அமையும். எம்மை நாம் ஆய்வு செய்யலாம். ஆனால் மற்றவர்கள் எம்மை ஆய்வு செய்வதை விரும்புகிறோமா? ஒட்டுக் கேட்டும் துஷ்டத்தனத்தால் உறவுகள் கெடும் . ஒட்டுக் கேட்டல் குணத்தை வெட்டிப் போடுதல் உத்தமம்.

ஒட்டுக் கேட்டல் கெட்ட பழக்கம். அடுத்தவர் என்ன சொல்கின்றார், அதனால் ஏதாவது அனுகூலம் இருக்கிறதோ, இல்லையோ கேட்டேயாக வேண்டும் என்கிற அவா, வெட்கம் பட வேண்டிய செயல்.



RangaRakes
Tamilnavarasam.com

நீங்கள் யாரிடமாவது தனிப்பட்ட முறையில் பேசுகையில், அடுத்தவர் அதைச் செவிமடுக்க விரும்பு வீர்களா?

அப்படியாயின் எப்படி பிறிதொருவர் பேச்சை நாம் அவர்கள் அனுமதியின்றி, எவ்விதமான கூச்சமும் இன்றி இரகசியமாகத் தகவல்களை சேகரிக்க முயல்வது சரியாகுமா?

எவர், எவர்களோ எத்தனை, எத்தனை விதமாகப் பேசுவார்கள், செயற்படுபவர்கள். அவைகள் எல்லாவற்றி லுமே எமது புலன்களை உள் நுளைப்பது, சிரசுக்குப் பாரங்களை சுமத்தும் அடாவடித்தனமான காரியம் தான்.

சில சமயம் எங்களைப் பாதிக்கும் விடயங்களை வெகு சாமர்த்தியமாக யாராவது இரகசியமாக மேற் கொண்டால் என்ன செய்வது என்பது கூட நியாய பூர்வமான கேள்வி தான். உங்களை அறிவதற்காக அவர்கள் மேற்கொள்ளும் நடை முறைகளை, எந்த வழியிலாவது தெரிந்து கொள்ள முனைவது தற்காத்துக் கொள்ளும் வழி எனலாம்

நாம் அநாவசியமாக ஒருவரைச் சந்தேகிப்பதும், வீண் பழி சுமத்துவதும் அடுக்காத காரியம். எமது சிந்தையாலும் எவரைப்பற்றியும் வீணான களங்கம் கற்பிப்பதே பாவங்களை உற்பத்தி செய்வது போலாகும். ஆராயாது எவர் மீது பழி போடலாகாது.





மேலும் நாம் வார்த்தைகளை உதிர்க்கும் போதும் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். போலியான அன்பைப் பொழிவது போல் பொழிந்து காலை வாரி விடுபவர்களை எப்படிப் புரிந்து கொள்வது?

என்றும், எப்பொழுதும் எவரையும் எம் சித்தத்தி னால் கடுகளவும் வெறுப்பை உமிழும் காரியத்தைச் செய்யாதவிடத்து எம்மை எதிரிகள், எனக் கருதுபவர்கள் எம்மிடமே வந்து சரணடைந்து போவார்கள்.

எதிலும் சந்தேக மனப்பான்மையுடன் பழக நேர்ந்தால், மற்றவர்கள் நடத்தைகளைக் கண்காணிக்கும் இயல்புகள் கூட வந்து விடுகின்றன.

இன்று உலக நாடுகளில் வல்லரசுகள் எல்லாமே தங்கள் நாட்டின் மீது, பிறநாடுகள் மூக்கை நுழைத்து விடுமோ என்கின்ற அச்சத்தினால் ஒற்றர்களை அனுப்பி வேவு பார்க்கின்றன.

வல்லரசுகள் பிற நாடுகளை ஆக்கிரமிக்கும் எண்ணங்களைத் தம்மகத்தே கொண்டிருப்பதனால் அடுத்த நாடுகளை சுரண்ட விழைவதும் அவைகளைக் கவிழ்க்க ஒற்றர்களை அனுப்புவதும் சகஜம். ஆனால் எல்லா நாடுகளுமே இது விடயத்தில் ஒன்றின் மீது , ஒன்று பழி சுமத்தியவாறே தத்தமது காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றன. இது இராஜதந்திர நடவடிக்கை. இதில் குற்றம் என்பதே இல்லையாம். ஆனால் அவைகள்



RangaRakes

Tamilnavarasam.com

தங்களைக் காப்பாற்ற எதுவும் செய்வார்கள்.. ஏனைய நாடுகள் தங்களைக் காப்பாற்ற எந்த நடவடிக்கை எடுப்பதையும், குறிப்பாக வல்லரசு நாடுகள் விரும்பு வதில்லை. என்ன தாராள மனசு இவைகளுக்கோ தெரியவில்லை! இந்த மேலாதிக்க பேராசையினால் உலக மகாயுத்தம் தான் நிகழும் என்பதை இன்னமும் உணராமல் இருப்பது விந்தை!

இன்றைய விஞ்ஞான உலகில் ஒற்றர்கள் போய் ஒட்டுக் கேட்கத் தேவையேயில்லை. நவீன கணினி யுகத்தில் எல்லாமே நடக்கும். உட்கார்ந்து இருந்தபடியே சர்வதேச வலைப்பின்னலூடாகத் திருட்டுத்தனமாக எல்லா தகவல்களையும் கனகச்சிதமாகக் கைப்பற்றுகின்றார்கள். இதனை கணினி யுத்த முறை என்றும் சொல்லலாம்.

உல்லாசப் பயணி வேடங்களில், தொழில் அதிபர்களாகச், சுவாமிமார்களாக, பொது நல தொண்டு நிறுவன ஊழியர்களாகச், சமயபிரசங்கிமார்களாக, பல்துறை ஆற்றல் பெற்ற வீரர்களாகக், கலைஞர்களாகப் பற்பல வடிவங்களை எடுத்தவாறு ஒவ்வொரு நாடுகளின் உளவு ஸ்தாபன உளவாளிகள் எங்கும் பரந்து வியாபித்த வண்ணமாயுள்ளனர்.

இவையெல்லாம் இரகசியங்களை சேகரிக்கும் ஆவல் மட்டுமல்ல, மனிதனை மனிதன் அடக்கி ஒடுக்கும் பேராசையும் இச்சதி நடவடிக்கைகளில் அமிழ்ந்திரு





க்கின்றன. ஆனால் அப்பாவி மக்கள் எல்லோருக்கும் இந்தச் சங்கதிகள் பெரிதாகத் தெரிவதும் இல்லை.

தனி ஒரு மனிதனின் அத்து மீறிய ஒட்டுக் கேட்டல், பிறர் விடயங்களில் அதீத ஆசை கொள்வதால் பல குடும்பங்கள் பிரிந்து, சிதறிச் சின்னா பின்னமாகிப் போகின்றன, "என்னைப் பற்றி என்ன அந்தரங்கமாகப் பேசினாய், விட்டேனாபார்!"எனச் சொல்லி ஆக்ரோ ஷமாகச் சண்டையிட்டுப் பிரிந்து போகும் குடும்பங்கள் எத்தனை எத்தனை!

தகாத பேச்சுக்களைச் செவிமடுக்காது விடுவதே உத்தமமானது. பிறர் அந்தரங்கங்களைச் சுரண்ட ஆரம் பித்தால் அவர்கள் சொந்த வாழ்க்கை தான் சோகமாகப் போகும்.

கனிவான நோக்கும், பேச்சில் இங்கிதமும், நட்பை வேண்டி நிற்கும் குணங்களும் இருந்தால் எங்களைப் பற்றி பேசி, தூஷிப்பதற்கு என்ன இருக்கின்றது?

பொறாமைக்காரர்களையும், அருட்கண்ணுடன் நோக்குக! அவர்கள் தங்கள் செயலுக்காக வருத்தப்ப டுவார்கள். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதே. ஆனால் அந்த உணர்வுகளால், மற்றவர்கள் மனம் காய ப்படாமல் பார்த்துக் கொள்க! சந்தேகத்தை பிறர் கொள்ள நாம் காரண கர்த்தாவாக இருக்கக் கூடாது.



RangaRakes
Tamilnavarasam.com

இதனாலேயே மற்றவர்கள் எம்மைத் தேவையற்ற விதத்தில் ஆய்வு செய்யும் நிலையை ஏற்படுத்தி விடும். திறந்த மனசுடன் பழகுபவர்களுக்குத் துரோகம் செய்ய யாருக்கு மனசு வரும்?

நாம் வாழும் வாழ்வின் எதிரொலி தான் எங்கள் எதிர் காலத்தைத் தீர்மானிக்கிறது. களங்கம் கற்பிக்க எவர் வாழ்வையும் ஆராய்ச்சி செய்வது மகா துரோகம். அன்பான மாந்தர்கள் சிந்தை நோகப் பேசமாட்டார்கள். பிறர் துன்பம் கண்டால் பொறுக்கவே மாட்டார்கள். எப்போதும் மற்றையவர் துயர் களைபவர்கள் அடுத்தவர்கள் அந்தரங்கங்களை எட்டிப் பார்க்கவே மாட்டார்கள்.

தினகரன்
ஞாயிறு மஞ்சரி
20 .03. 2011







# வெற்றிகள் போலவே தோல்விகளும் அற்புதமானவை!

பெற்ற வெற்றியின் மேன்மை தெரிய வேண்டுமெனில் ஏற்கனவே தோற்ற எவரிடமாவது கேட்டுப் பாருங்கள். தனது அனுபவங்களைச் சொல்லுவார். நியாய பூர்வமாகப் போராடிப் பெற்ற வெற்றிகளே நிரந்தரமானது. அப்போது பட்ட அவஸ்தைகள் எல்லாமே நல்ல அனுபவமாகி வெற்றிக்கு வழிகோலுகின்றன. ஒரு தனி மனிதனின் தோல்வியைக் கண்டு எவருமே எள்ளி நகையாடத் தேவையில்லை. அவர் நல்ல நோக்கத்திற்காக கண்ட முயற்சிகள் முழு உலகத்துக்குமானது தான். ஆயினும் தோல்வி என்பது நிரந்தர இழப்புமல்ல. நல்ல விஷயங்களை பெற நாம் எடுத்த முயற்சியிலான வெற்றி அற்புதமானவை. அது போல இவற்றைப் பெற உதவிய தோல்வியினாலான அனுபவங்களும் நல் ஆசானாகின்றது. எனவே தோல்விகளும் அற்புதமானதே!

வெற்றிக்கு எதிர்பதம் தோல்வி என்கின்றோம் ஆயினும் ஒருவருக்கு ஏற்பட்ட தோல்வி என்பது, அவருக்குப் பல அனுபவங்களை நல்கும் வருமானங்களை வழங்குவதால் அதனைத் தோல்வி என்று சொல்லலாமா?



RangaRakes
Tamilnavarasam.com

எதிர்ப்புக்களை சகிப்புத் தன்மையுடன் போராடியும் கண்டதோல்வியினால் சற்றேனும் மனம் துவளாது மீண்டும் மோதிப் பெற்றுக் கொண்ட வெற்றியின் பெருமிதம் அலாதியானதே.

சும்மா கிடைத்தால் அது சுவைக்காது கஷ்டப்பட்டு உழைத்த உழைப்பினால் குடிக்கும் கஞ்சி அமிர்தத்திலும் மேலானது. எனவே பெற்ற வெற்றியின் மேன்மை தெரிய வேண்டுமாயின் ஏற்கனவே தோற்ற எவனிடமே கேட்டுப் பாருங்கள். இந்த அனுபவத்தை நீங்களும் பெற்றிருக்கலாம்.

எதையும் நியாயபூர்வமாகப் பெற்றுக் கொள்ளாமல் பலாத்காரமாகக் கொய்ந்து கொள்ளுவது சாமர்த்தியமானது அல்ல, மானக்கேடானது. அவமானத்தையே வெகுமானம் எனக் கொண்டு தன்னைத்தானே அலங்கரிப்பது போலாகும்.

வசதி படைத்தவர்கள் பெரிதும் கஷ்டப்படாமல் உழைப்பதைப்பார்த்து எவருமே ஏங்கிடத் தேவையில்லை. சாஸ்வதமான சந்தோஷத்தை இவர்கள் அனுபவிப்பதேயில்லை. ஓட்டைக் குடிசையில் வாசம் செய்பவர்களின் சுவாசம் சுதந்திரமானது. அது சந்தோஷமாக மூச்சை உள் இழுத்து வெளியே விடும். நல்ல உறக்கம் நிறுத்தாமல் நடக்கும் விழித்த பின் உழைப்பு, சிரிப்பு, ரசனை, இயற்கையுடன் இணைதல் இப்படியாகப் பல சுகானுபவங்கள் கிடைக்கும்.





செல்வம் இல்லை என்பது ஒரு தோல்விக்குரிய சமாச்சாரம் அல்ல, எனினும் செல்வம் மட்டுமல்ல, அதனுடன் கல்வி, ஞானம், வீரம் எல்லாமே மனிதனுக்கு வேண்டியதே.

என்றும் வறுமையுடன் போராடுவதே தொழில் அல்ல. மேலான வாழ்க்கையைத் தேடி ஓட வேண்டியது மானுடப் பணியுமாகும். ஏன் எனில் ஒவ்வொரு பிரஜைக்குப் பின்னால் பல சக்திகள் உண்டு.

முழு உலகமே ஒவ்வொரு தனி மனிதனின் உழைப்புடன் இணைந்து இருக்கின்றது. எனவே ஒவ்வொருவரும் உலகில் அதிவுயர் கௌரவப் பிரஜைகளே.

எனவே ஒரு தனி மனிதனின் தோல்வி இந்த முழு உலகிற்குமான இழப்பு அல்லது தோல்வி என்பதை மனதார எண்ணி அவனை முழு மூச்சுடன் மீளவும், இயக்கி முன்னேற வழிசமைத்திடுக தோழர்களே!

உனது பிரயாசைகள் எனக்குமானது எனது உழைப்பு உனக்கும் உரியது என எண்ணுக. நம்பிக்கையுடன் ஒருவரை ஒருவர் கை தூக்கி விடுக!

அர்த்த முள்ள துணிவுடன் மட்டும் செயலாற்றினால், அசட்டுத்தனங்கள்நிகழாது. வாழ்க்கைப் பாடங்கள் காலக் கணக்கினுள் அடங்குவதில்லை. சில சமயம் ஒரிரு



RangaRakes

Tamilnavarasam.com

வினாடிகளிலேயே, ஓராயிரம் கோடி பெறும திக்கும் மேலான அனுகூலங்களைப் பெற முடியும்.

தற்செயலாகவே எல்லாமே சாதகமாக நடக்க வேண்டும் என எண்ணுவதைப் போல முட்டாள்தனம் வேறில்லை.

ஆக்ரோஷமுடன் போராடுபவன் முன் துரதிஷ்ட ங்கள் விலகி ஓடும்.கொடுப்பதை வாங்குவதைவிட நாங்களே கொடுப்பவர்களாக மாற வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் ஆரோக்கியமான துணிச்சல் வேண்டும், கடும் உழைப்பு வேண்டும் ஆனால் அறிவுக்குச் சற்றும் பொருந்தாத அசட்டுத் துணிச்சல் வேண்டவே வேண்டாம்.

நாம் எல்லோரும் கடவுளின் பிரதிநிதிகள் தான். எனவே கண்டவனிடம் கை கட்டி நிற்க வேண்டியதில்லை. அஞ்சி, அஞ்சி சேவகம் புரிவதோ, தலை வணங்கு வதையோ இறைவன் விரும்புவதில்லை.

தங்களுக்குள் ஆன்மா இருப்பதையே பலர் உணர்வதில்லை. ஆனால் உயிர் பற்றி நிறைய பேசுகி றார்கள். அது என்றும் தூய்மையாக இருக்க வேண்டும், அதுவே நித்ய ஜெயம் பெற வழி என்பதைப் புரிந்தால் ஏது துன்பங்கள் அன்பர்களே!

வெறுமனே நாம் இயங்குவதற்கு மட்டும் ஆன்மா தேவை என எண்ணுகின்றோம் உண்மையுடன் துலங்கி





வாழ்ந்தால் தான் அது ஆன்மீக வாழ்வு ஆகின்றது. இதனையே எம் உள்ளே இருக்கின்ற உயிர் விரும்பு கின்றது. இதனை மீறுதல் ஆன்ம துரோகம்.

பாதக முறையில் அடையும் வெற்றிகளால் ஆன்மா துன்புறுகின்றது. இந்த அவலத்திற்குள் அதனை உட்படுத்துதல் கூடாது. இரகசியமாகத் தவறுகள் செய்வது சாமத்தியமானது என எண்ணுவது, தனது கண்களை மூடியபடி பூனைபால் குடிப்பதைப் போலானது. உலகம் உறங்குவதில்லை உணர்க!

உடல் உறுப்புக்களின் துன்பங்களை விட, உள் உணர்வுகளுக்கு ஏற்படும் ஊறு, தாங்கொணாத்துன்பங் களைத் தந்துவிடும்.

எனவே நற்செயல்களைச் செய்தால் மட்டும் மனம் ஏற்கும் பக்குவ நிலையை நாம் ஏற்படுத்தல் வேண்டும்.

கரிய மனதுடன் செய்யும் காரியங்கள் வெற்றி பெற்று விடுவதுபோல் தோற்றம் காட்டலாம் தீய நோக்குடன் திருப்தி காண்பதும் அதனை மனம் ஏற்குமாறு கட்டாயப்படுத்துவதும் தன்னைத் தானே ஒடுக்கி வதைக்கும் செயல்.



RangaRakes

Tamilnavarasam.com

உறுதியான வெற்றி பெற பலவீனமான எண்ணங்கள், குரோதங்களை நண்பர்களாக்குவது காலில் இரும்பைக் கட்டிச் சமுத்திரத்தை நீந்திக் கடக்க முனையும் முட்டாள்த்தனம்

பல விடயங்களில் அறியாமை காரணமாக, நீண்ட பயணம் செல்ல கோழைத்தனத்தையும் சினேகம் கொள்வதால் ஆரம்ப கட்டத் தூரத்திற்குச் செல்வதே தடைப்பட்டு விடுகின்றது.

சரியான காரியங்களில் இறங்கி விட்டால் வீண் கணக்குப் பார்ப்பதும், மற்றவர் விமர்சனங்களை உள் வாங்குவதும் செய் கருமங்களை கருமையாக்கி விடும்.

பலம் கொண்ட விலங்குகள் பல்லிக்குப் பயப்படுமா? நல்ல கருமங்களை நியாயமின்றி நிறுத்த முயல்பவன் தனக்குத் தான் துரோகியாகின்றான்.நல்லது என்றும் நடந்தே தீரும்.நிறுத்தி வைக்க இறைவன் விடுவதில்லை.

கெடுதல்களைப் புரிபவர் வெற்றிக்கு விரோதிகள். துரோகத்திற்குத் துணைவர்கள், துணிவு இல்லாதவர்கள், கலக்கம், மனக்கிலோசங்களுக்கு உறவினராகின்றனர் வெற்றி, தோல்விகள் எல்லாமே வாழும் வாழ்வு முறைகளுடன் தொடர்புபட்டவை. எங்களை நாம் செப்பனிட வேண்டும். எதனையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவ நிலையை உருவாக்க வேண்டும்.





நாம் ஈட்டும் வெற்றிகள் அற்புதமானவை, அது போல் தோல்விகளும் அற்புதமானவை தான். எம்மிடம் துணிவை, நல் ஆற்றலை தோல்வியாலும் உருவாக்க முடியும். நாம் துவண்டு போனால் எப்படி ஆற்றல்களை வளர்க்க முடியும்? சொல்லுங்கள்! எழுந்து நின்றால் இன்னல்கள் பணிந்து தொலையும் எழுக!

தினகரன்
ஞாயிறு மஞ்சரி
06 .03.2011



RangaRakes

Tamilnavarasam.com



# தாய்மை

பெண் பிறக்கும் போதே, தாய் எனும் பெருமையைப் பெறுகின்றாள். சாதனை படைத்த சக்கரவர்த்திகளும், சகலதும் கற்ற பண்டிதர்களும், ஞானிகளும், விஞ்ஞானிகளும் தாயின் முன் சரணாகதியடைந்து விடுகின்றனர். ஒரு பெண் குழந்தையாக, குமரியாக, அல்லது திருமணமாகிக் குழந்தை பெற்றாலும், அல்லது குழந்தைகளே பெற்றுக் கொள்ளாவிடினும் அவள் “தாய்” எனும் கருணைத் தெய்வமாகி விடுகின்றாள். பிறர் துன்பங்களைக் கண்டால் உடன் கண்ணீர் சிந்துவது பெண்கள் தான். பெண்களை இழிவுபடுத்தும் செயலில் ஆண்களில் சிலர் மட்டுமல்ல பெண்களே கூட தமது இனத்தையே அவமதிப்பது போல் நடப்பது வேதனை. மனித மனதில் நுட்பமான இயல்புகளை உணர்ந்து. சாதுர்யமாகப் பெண் இயங்குகின்றாள். தாய்மையிடம் மட்டுமே பூரண தேறுதல்களை உலகு வேண்டி நிற்கின்றது.

பெண் என்பவள் பிறக்கும் போதே “தாய்” எனும் பெருமையைப் பெற்றுவிடுகின்றாள். பெண்ணெனும் இனியாள் அன்புக்கும், பாசத்திற்குமே அடிமையானவள் மட்டுமல்ல, உலகம் எனும் கோட்டையைச் சமைக்கின்ற,





வீரமிகு ஆளுமையைத் தன்னகத்தே கொண்டவளு மாகின்றாள்.

சாதனை படைத்த சக்கரவர்த்திகளும் தாயின் முன் தனது மமதையை அவித்துவிடுகின்றான்.

இயல்பாகவே பெண்கள் அனைவருக்குமே தாய்மை உணர்ச்சியுண்டு. அரவணைத்தல், அனுசரித்தல், மன்னித்தல், ஏற்றுக் கொள்ளல் என்பது மனதின் விசாலத்தைப் பொறுத்த விஷயம்.

மென்மைப் போக்கும், குழந்தைத்தனமும் உள்ள ஒருத்தி எங்ஙனம் சூழலுக்கு ஏற்றவாறு நீதிக்காகப் போராடுகின்றாள் என்பதே பெரிய ஆச்சரியம்!

ஒரு பெண்ணின் தனிப்பட்ட சுதந்திரங்களைக் கட்டிப் போட எத்தனிப்பவர்கள், அவள் தாய்மை உணர்வின் முன் தோற்றும் போகின்றார்கள்.

பெண் குழந்தையாய் இருந்தாலும் சரி, ஒருத்தி திருமணம் புரிந்து குழந்தைகளைப் பெற்றாலும். அல்லது அவள் திருமணமாகாமலே இருந்தாலும், அன்றில் குழந்தைச் செல்வம் இல்லாமலே இருப்பினும் அவளுக் கேயான இரக்க உணர்வு உயிர்களை நேசிக்கும் பாங்கு தனித்துவமானது.



RangaRakes

Tamilnavarasam.com

இல்லற வாழ்வில் புகுந்தும், தமது கணவர் சுவாமி இராமகிருஷ்ணரால் தாயாக வணங்கப்பட்டதுடன் தமது ஆன்மீக வாழ்வில் அனைத்து உலகினர்களையும் தமது குழந்தைகளாகக் கொண்ட அன்னை சாரதா தேவியார், கன்னியாஸ்திரியாகத் துறவு பூண்டு முழு உலகத்தின் ஷேமத்திற்காகப் பணியாற்றிய அன்னை தெரஸா போன்ற மகராசிகள் பலர் உளர். அத்தகைய பணிகளில் முழுமையாகத் தங்களை அர்ப்பணித்த திருவருட்செல்வி - தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்களின் அருட்பணி களை நாம் அறிவோம்.

குடும்பத்துக்காக மட்டுமன்றி முழு உலகத்தி ற்காகவும் இரங்குவதே தாய்மை யாரோ எவரோ ஒருவர் அவஸ்தைப்படும் போதும் கண்களில் பரிவினைப் பிரசவித்து விடுகின்றாள் பெண்.

தாய்மையில் அந்நியத்தன்மை அறவேயில்லை அந்நியோன்னியமே துலங்கும்.

கதைகளைப்படிக்கும்போதும், திரைப்படங்களைப் பார்க்கும் போதும் கண்ணீர் சிந்துவது பெண்களாகவே இருக்கின்றார்கள்.

எனினும்,

பெண்கள் இதயத்தை கசக்கிப் பிழிதலில் ஆண்களோடு போட்டி போட பல பெண்கள் முனைவது நாம் காண்கின்ற துன்பியல் காட்சிகள்!



RangaRakes



குழந்தைப் பேறு இல்லாவிட்டால், அல்லது திருமணமாகிய ஒரிருமாதத்தினுள் கர்ப்ப காலம் தாமதித்தால், மாமிமார்கள் செய்யும் அடாவடித் தனங் களே, தற்போதைய கதைகளின் மூலப் பொருளாகி விட்டது. உயிர் அற்ற கருவி போல் இவளை நடாத்துவது கொடும் விலங்கையே கண்கள் கலங்க வைக்கும் நிகழ்வுகள்!

தாய்மையின் மென்மையுணர்வினை முதற் கண் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும். அன்பினைப் பகிர்வது விருப்பமே இல்லாவிடத்து, கொடுமை புரியும் உணர்வுடன் கூடவே பிறபோக்கான சிந்தனைகளும் உதித்து விடுகின்றது.

அடிமைத்தனத்தின் கொடுமைகளை உணர்ந்த வர்களே தங்களை ஒத்த பெண்ணுக்கு எதிரான துன்பங்களுக்கு தாங்களே ஒரு காரணம் என்பதை உணர மறுப்பது வேதனை தரும் விஷயமேயாம்.

தாய்க்குரிய பண்புகள் எதுவெனில் தனது பிள்ளைகள் அனைவருக்குமே வழங்குகின்ற அதே சகல உரிமைகளையும், தமது வீட்டுக்கு வந்தவளுக்கும் வழங்க வேண்டும். ஆயினும் இது விடயத்தில் ஒருவர் மீது ஒருவர் சாட்டும் குற்றப்பத்திரிகையால் குழம்பவது முழுக் குடும்பமும் தான்.



Tamilnavarasam.com

தாய்மை என்றுமே அமைதியானது.தான் இயங்கு வதே உலகத்துக்குத் தெரியாமல் இயங்கு கின்றாள். கணவன், பிள்ளைகள், கணவனின் உறவுகள், தமது உறவுகள் எனப் பின்னப்பட்ட உறவு வலைகளுக்கு ஏற்றபடி இவளால் எவ்வாறு லாவகமாகச் சுற்றிச் சுழல முடிகின்றது?

அன்பானஒருத்தியிடம்பெறுகின்ற நற்பிரசாதங்களான் பரிவு, பாசங்கள் எந்த விதமான தோல்விகளால் ஏற்படும் துன்பங்களை விரட்டியடிக்கவும், மீண்டும் எழுந்து நடை போடவும் வைத்து விடுகின்றன.

மனித மனத்தின் நுட்பமான இயல்புகளை அன்பானவர்களாலேயே கண்டு கொள்ள முடியும். ஏன் எனில் தன்னுடன் சீவிக்கின்ற உறவுகளின் உணர்வைப் புரியும் அதி நுட்பமான அறிவு தாய்மைக்கேயுரியது.

தாயிடம் இரகசியத்தை சொல்லாத பிள்ளைகள் இல்லை. அதே போல், ஒருவன், சகோதரியாக அல்லது, சினேகிதியாகக், காதலியாக உள்ளவர்களிடம் ஒரு பிரச்சனைகளைச் சொல்லும்போது அவர்கள் அதனைக் கரிசனையுடன் நோக்குவதை நீங்கள் அனுபவபூர்வமாகக் கண்டிருப்பீர்கள்.

ஒரு ஆண் பிரச்சனை என்று வரும் போது தன்மீது அன்பு கொண்டவர்களைத் தேடி ஓடுகின்றான். அதிகம் பழகாத பெண்களிடம் கூடக் கூச்சப்படாமல்





தங்கள் கதைகளைக் கூறி தேறுதல் பெறும் சகல வயதுத் தரங்களையுடைய ஆண்களே ஏராளம், ஏராளம்! "இது தாய்மையைத் தேடுகின்ற ஆண்களின் இயல்பு.

கரிசனைகளும், அன்பும் ஆண்களிடம் இல்லை என்பது அல்ல. வீட்டில் பெண்பிள்ளைகளோ, அல்லது ஆண்பிள்ளைகளோ, தகப்பனிடம் பாசம் இல்லாமலா இருக்கிறார்கள்? ஒரு தகப்பனின் தியாகத்தை இவர்கள் உணராமல் இல்லை. தாயிடம் ஏன் எல்லாவற்றையும் சொல்லிக் கொள்கின்றார்கள்.?

கனிவான அன்பை எல்லோருமே பெண்ணிடம் நாடுவது இயற்கையான நிகழ்வு தான். பெண்கள் சிருஷ்டிக்கப்படும் போதே அவள் எல்லோருக்கும் தேறுதலூட்டும் தேவதையாக்கப்பட்டு விட்டாள்.

அண்மையில் தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லம் ஒன்றினை நடத்தி வரும் தம்பதியினரிடம் நிருபர் இவ்வாறு கேட்டார். " நீங்கள் இந்த இல்லத்தை சிரமத்துடன் நடத்தி வருகின்றீர்களா? என்றார்.

அதற்கு அதனை நடாத்திவரும் இல்லத் தலைவி கூறினார் " எனக்கு எதுவித சிரமமும் இல்லை நிரம்ப மன அமைதியை இதனை நடாத்துவதன் மூலம் பெறுகின்றேன். எங்களுக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லை. எனவே



RangaRakes

Tamilnavarasam.com

நூற்றுக் கணக்கான ஆதரவற்ற குழந்தைகளை நாங்கள் பொறுப்பெடுத்தோம். இப்போது இந்தக் குழந்தைகள் எல்லோருமே என்னை "அம்மா" என்று அழைக்கின்றனர். நாங்கள் பெரிய குடும்பமாகி விட்டோம். இதைவிட வேறு என்ன சந்தோஷமிருக்கப் போகின்றது? ஒரு வேளை எமக்குக் குழந்தைகள் பிறந்திருந்தால்,அவர்களுடன் மட்டுமே வாழ்ந்திருப்போம். ஆனால் இப்போது எல்லாமே எமது குழந்தைகள் என்றாகிவிட்டது. முழு நிறைவான வாழ்வு இது" என்றார்.

ஒருவர் வாழும் நல்ல இலட்சியமான வாழ்வில் தான் சந்தோஷம் முழுமையாகத் தங்கியுள்ளது முழு உலகத்தையே குடும்பமாக எண்ணும் நிலை வந்து விட்டால் உலகில் சண்டை சச்சரவுகள் என்பது ஏது?

தாய்மை உணர்வு எனும் இரக்கம் பெண்களுக்கு மட்டுமல்ல, அவரவர்களூடாக எல்லோருக்குமே வியாபகமாக வேண்டும். உயிர்களுக்கு இரங்குதலில் ஆண், பெண் வேறுபாடுகள் என்பது ஏற்கக் கூடியதுமல்ல.

"பெண்மையைப் போற்றுதல்" என்பது அவளிடமிருக்கும் நல்ல குணாம்சங்களை நாம் முழுமையாக, எவ்வித தன்முனைப்புமின்றி ஏற்றுக் கொள்வதும் அவளிடம் இருக்கின்ற அன்பினைப் புரிந்து, உலகிற்கும் நாம் பரிபூரண இரக்கத்தைப் பொழிதலுமாகும்.

வெறுமனே அவர்களைப் போற்றுதலை மட்டும்





விடுத்துத் தாய்மைச் சின்னமான இவளுக்கு ஏற்ப புனித ஆசனத்தை வழங்குவது பூமியைப் புனிதமூட்டும் கருமமாகும்.

கேலிக்கும் கிண்டலுக்குமான கருப்பொருளாக மாதர்களை எண்ணுவது தாய்மையை களங்கப்படுத்தவதேயாகும்.


நாம் யாரிடம் இருந்து பிறந்தோம், எவரிடமிருந்து உலகை பார்த்தோம். இன்று ஒரு மனுஷனாக உலாவி வருகின்றோமே என்பதை கடுகளவும் சிந்திக்காது, கண்டபடி தூஷிப்பதும், சதா கண்டனங்களையோ சொல்லித் திருப்திப்படுவதும் நன்றி மறந்த செயல்!

ஏன் எனில் நாம் எந்த ஒரு தாய் வயிற்றில் பிறந்தாலும் ஏனைய பெண்களும் தாய்க்கு நிகரானவளே என்பதைச் சிந்திக்க வேண்டும். அதனை ஒப்புக் கொண்டேயாக வேண்டும். தாய்மையின் " மேலான அன்பு" கிடைக்கவே நாம் விரும்புகின்றோம். எனவே எம்மை ஆதரிக்கும் அனைத்துத் பெண்மை எனும் பெரும் கொடைகளைக் கௌரவித்து, வாழ்த்துதலே இறைவன் எங்களைப் பெருமைப்படுத்தும் செயலாகும்.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
-13 .03.2011



RangaRakes
Tamilnavarasam.com



## சமையல் கலையில் கைதேர்ந்தவர்களாகப் பெண்கள் விளங்குவதன் இரகசியம்?

பெண்களின் சமையல் பக்குவமே மிக அற்புதமானது. தாய் கையினால் சாப்பிடுவது போல் நிறைவு வேறு ஏது? அவள் கைப்பக்குவத்தினால் மட்டும் உணவு ருசிப்பதில்லை. அவள் உணவோடு தனது மேலான அன்பையும் கலந்து எமக்கு ஊட்டுகின்றாள். இன்று உலகம் பூராவும் உள்ள உணவுச்சாலைகள், மிகப் பெரிய நட்சத்திர விடுதிகளில், சமையல் சங்கதிகளில் ஆண்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். வெறும் ருசிக்காக மட்டும் உணவு அல்ல, நல்ல போஷாக்காகவும் அவை அமைய வேண்டும். தனது சிக்கன வாழ்க்கை முறையினால் இருக்கிற காய், கறிகளைக் கொண்டு மிக நேர்த்தியாகச் சமைப்பதில் பெண்கள் வல்லவர்கள். காலம் காலமாக இயற்கையான முறையில் பண்டைய கலாச்சாரத்தின் வழி நின்று சமையல் கலையை வளர்ப்பதில் அன்னையரின் பணி அலாதியானது.

"என்ன தான் தேவலோகத்து அமிர்தத்தை சாப்பிட்டாலும்அவை யெல்லாம் எனது அம்மாவின் கைப்பக்குவச் சமையலுக்கு ஈடாகுமா?"





எனது வயது முதிர்ந்த தாத்தா, பாட்டிகள் கூட என்றும் மாறாத சுவைமிகு அனுபவத்தினை வாயூறி, சப்புக் கொட்டியபடி சொல்லிக் கொள்வார்கள்.

அது என்ன, அம்மா கைபட்டாலே சமையல் இந்த அளவிற்குச் சுவையேறுகின்றது. அம்மா எல்லோரும் சமைப்பது போலவா உணவு தயாரிக்கின்றாள்?

மிக எளிய உணவை அவர் தயாரித்தாலும், அதனுடன் தனது பூரண பாசம், அன்பைக் குழைத்து அல்லவா எமக்குக் கொடுக்கின்றார்! தாய் உணவை வழங்குவதில்லை, "அன்புடன் ஊட்டுதல்" என்பதே பொருத்தமான வாசகமாகும் மிக வலிந்து ஊட்டி ஊட்டி வளர்த்தெடுப்பாள் "தாய்" என்னும் பெரும் தெய்வம்.

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவராயினும் சரி, வறுமையான நிலையில் உள்ளவராயினும் சரி, அந்த காலங்களில் கிடைக்கும் மலிவான காய், கறிகள் மூலம் எவ்வளவு பிரமாதமாக, அமிர்தத்திலும் மேலாகத் தந்து விடுவது அவர்களுக்கேயுரிய அரும் கலை.

முன்பெல்லாம் எம்மவர்கள் முருங்கைக் காய், கீரை வகைகள், கிழங்கு வகைகளைக் காசு கொடுத்து வாங்குவதில்லை. வீட்டின் கொல்லைப்புறம், கிணற் றடியின் வாய்க்கால் வரப்புப்பக்கம் பக்கங்களில் தாமாகவே மிகச் செழிப்பாக வளரும். மேலும் வீட்டுத்



RangaRakes

Tamilnayarasam.com

தோட்டம் அமைப்பதில் அவர்களுக்குச் சிரமம் தோன்றுவதுமில்லை. எனவே வீடுகளில் காய்கறி, முல்லை, முசுட்டை, சண்டி, தூதுவளை என எல்லாமே கிடைக்கும். அல்லாது விடின் அக்கம் பக்கத்து உறவுகளிடமிருந்து தாராளமாகவே காய், கறி, கீரை வகைகள் கிடைத்தே தீரும்.

ஆனால் இன்று இந்த நிலை அருகி வருகின்றன. அன்றாடம் உணவிற்காக செலவிடும் பணம் அதிகரித்த வண்ணமாக இருக்கிறது. கிராமங்களில் , நகர்புறங்கள் போல் மரக்கறி வகை தட்டுப்பாடு அவ்வளவாக இல்லை உடலை வளைக்காமல் விட்டால் உற்பத்தி அருகிப் போகும்.

இருப்பதை வைத்து செப்பமாகச் சமைக்கும் கலையை இல்லத்தரசிகள் தமது மூதாதையரூடாகத் தெரிந்து வைத்திருந்தாலும் கூட நகர்புற வாழ்க்கை மோகம், இந்தச் சிக்கன வாழ்க்கையைத் துறந்து செலவு செய்தலே கௌரவமானது என்கிற எண்ணத்தில் அமிழ்ந்துபோகச் செய்து விட்டது.

உணவு தயாரிப்பதில் பெண்கள் மட்டுமா வல்லவர்கள்? இன்று சமையல் கலையில் பெண்களை விட ஆண்களே வல்லவர்கள் எனச் சொல்லப்படுகின்றது. நகரப்புறம் எங்குமுள்ள உணவுச் சாலைகளில் சமையல் வேலை செய்வது பெரும்பாலும் ஆண்களே!





பெரிய நட்சத்திர விடுதிகள், விருந்து வைபவங்களில் ஆண்பாலரின் சமையல்தான். நூற்றுக்காணக்கானோருக்கான சாப்பாடு தயார் செய்தல். சுலபமான காரியம் அல்ல. திருமண வைபவம், விழாக்களுக்கு உணவு தயார் பண்ணுவது கடினமான பணி அல்லவா?

உணவு தயாரித்தல் முறைக்கான கல்வித்துறை உலகம் எங்கும், பயிற்றுவிக்கப்படுகின்றது. வீடுகளில் செய்கின்ற சாதாரண உணவுப் பண்டங்களிலிருந்து. மேற்கத்திய, கீழைத் தேய நாடுகளின் உணவுமுறைகளை எம்மவர்கள் ஆர்வமுடன் பயின்று வருகின்றனர். நட்சத்திர விடுதிகளில் சமையல் வேலையில் ஈடுபடுகின்றவர்கள் கௌரவத்துடன்நடத்தப்படுவதுடன் அதிகூடிய வேதனமும் பெறுகின்றார்கள்.

பெண்கள் தான் அடுக்களைக்கு ஏற்ற இயந்திரம் எனும் நிலைமாறிவிட்டது. இன்று மனம் ஒத்த தம்பதியினர் மனைவியுடன் கூட இருந்து உணவு தயாரிக்கின்றார்கள் இது ஒரு அன்புப் பரிமாற்றம்.

மனைவிக்கு உடல் நிலை சரியில்லாது விட்டால் பிள்ளைகளின் சாப்பாட்டிற்கு என்ன செய்வது? உணவுச் சாலைகளில் இருந்து எவ்வளவு நாட்களுக்கு வாங்கி உண்பது? தவிர இவையெல்லாம் தேக நிலைக்கு ஒத்து வருமா?



RangaRakes

Tamilnavarasam.com

எனவே ஆண்களும் சமையல் கலையினைத் தெரிந்து கொள்வது வெட்கப்பட வேண்டிய ஒன்றல்ல. தங்களுக்குத் தான் சமையல் செய்யத் தெரியும் என பெண்கள் கர்வம் கொள்ள முடியாத அளவிற்கு காலம் மாறிவிட்டது. மேலும் ஆண்களேயாயினும் தங்களது உணவைத் தாங்களே செய்ய ஏது தயக்கம்!

மனைவி சதா காலமும் அடுக்களையில் இருந்தால். கறுத்துச் சுருங்கி விடுவாள் எனக் கருதி அவர்கள் பணியில் தாங்களும் பங்கு கொள்ளும் கணவர்மார்கள் மனைவியின் அன்பைப் பூரணமாகப் பெற்று விடுவதும் வியப்பில்லை.. இதே சமயம் தேனீர் தயாரிக்கத் தெரியாத ஆண்களும் இருக்கிறார்கள்.

என்ன தான் ஆண்கள் உணவு தயாரித்தலில் விற்பன்னராகினாலும் கூட பெண்கள் கைபட்ட உணவு ஏன் பிரமாதமாக இருக்கின்றது?

ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி, பிள்ளைகள் மட்டுமின்றி மாமன், மாமி போன்ற வயது கூடிய அங்கத்தினர்களும் இருக்கின்றார். ஒரு பெண்ணுக்குத் தனது கணவன் விரும்பும் சுவை என்ன, பிள்ளைகள் எதனை விரும்புகிறார்கள். வயோதிபமான மாமா, மாமி, தாய் தந்தையாரின் உடல் நிலைக்கேற்ற சாப்பாடுகள் என்ன, என்ன என்பதை அவளால் தான் உணர முடியும்.





எனவே ஒவ்வொருவருக்கும் ஏற்ற விதமாக கரிசனையுடன் உணவைத் தயார் பண்ணுவதில் ஒரு பெண்ணுக்கு நிகர் யாருளர்?

பொறுமையும் கரிசனையான அன்பும் இல்லாது விடில் உணவைப் பக்குவமாகத் தயாரிக்க முடியாது . கோப தாப மேலீட்டினால் உருவான உணவு மருந்து போல் கசக்கும். அவிந்தும், கரைந்தும், அல்லாது விடின் அரை குறை அவியலுடன் தயாரித்தால் அது ஒருவரின் சரிசனைக் குறைவு அல்லவா? பெண்ணுக்கு புற அழகு மட்டுமல்ல, செய்கருமங்களை ரசிக்கும் படியாகச் செய்வதை விட வேறேது அழகு இருக்க போகின்றது?

எந்த ஒரு முரட்டுக் கணவனையும், தனது உணவு வழங்கலால் , தனது பக்கம் மனைவியால் கட்டிப் போட முடியும் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். "அவனுக்கென்ன அன்பான மனுஷி, விதம் விதமாகச் சமைப்பாள் இதைவிட வேறென்ன வேண்டும்" என்று பலர் பேசுவதை நாங்கள் கேட்டிருக்கிறோம்.

"இவர்கள் வீட்டின் அருகே சென்றாலே சமையல் வாசனை தூக்கிப் போடும், எப்படி இவ்வாறு சமையல் செய்கின்றார்கள்". எனச்சில பெண்களின் விசேட திறமைகளை வியந்து பேசுபவர்கள் உண்டு, சமையலின் ருசிக்குக் காரணம் அவர்களின் "கனிவான மனம்" சம்மந்தப்பட்டது என்பதும் நிதர்சனமான உண்மை.



RangaRakes Tamilnavarasam.com

எந்தக் கலையையும் முறையோடு ஒரு வரையறையினுள் பயில வேண்டும் கண்டபடி எந்தக் கலையையும் கற்றுவிட முடியாது. மிளகாய் தூளுடன் சர்க்கரையைக் கலக்க முடியுமா? ரொட்டியைக் கருக்க வைத்துச் , சட்டியை எரித்துச் சுவையைத் தேட முடியாது. விலை கூடிய உணவு பொருட்களால் மட்டும் சாப்பாட்டைச் சுவைபடச் செய்து விட முடியாது.

சமையல் பாகம் என்பதே ஒரு பெரிய கலை. முறையுடன் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமானது. பாவிக்கும் பொருட்களின் அளவு , நல்ல பாத்திரங்கள் தரமான காய், காறிகள், எண்ணை வகைகள், எனப்பல விடயங்கள் அடங்கியுள்ளன. சுத்தம் மெத்த அவசியம்.

மேலும் எரி பொருட்களைக் கையாளும் விதம், நல்ல நீர் இவைகள் எல்லாவற்றையும் விட நிதானமுடன், பதற்றமற்றுக்காரியங்களைச் செய்ய வேண்டும். உணவுகள் சுவையாகஇருந்தால் மட்டும் போதாது. அவை சத்துமிக்கதாக, உடலுக்கு எவ்விதமான தீங்கு இழையா வண்ணமிருத்தல் வேண்டும்.

இன்று உணவு ருசியாக இருக்க உடலுக்கத் தீங்கு விளைவிக்கும் சுவையூட்டிகள் அங்காடிகளில் விற்கப்படுகின்றது. கவர்ச்சியாக அவையிருக்க நிற மூட்டிகளும் விற்பனையாகின்றன.





உணவின் அழகு, வாசனைக்காக வாங்குகின்றார்கள். அதனை உண்பது ஆரோக்கியமற்றது எனத் தெரிந்தும்கூட வாங்கிவிடுகின்றார்கள். சமையல் செய்யச் சிரமப்பட்டு சோம்பேறித் தனத்துடன் சாப்பாட்டுக் கடைகளுடன் சங்கமிப்பவர்கள் அனேகர்.நல்ல குடும்பத்திற்கு இது அடுக்காது.

உணவுச்சாலைகளில் தனித்தனியாக ஒவ்வொருவரின் உடல் நலத்திற்கு ஏற்ற வண்ணம் உணவுகள் தயாரிக்கப்படுவதே இல்லை. செயற்கை முறையிலான இராசாயனக் கலவைகள் மிகவும் மலிவான கலப்பட பதார்த்தங்கள் கொண்டு இவைகளைக் காட்சிப்படுத்துகின்றார்கள்.

இல்லங்கள் தோறும் எமது மாதராசிகள், இயற்கையான முறைகளில், தமது அன்பான கரங்களால், ஆசையுடன், பாசத்துடன் பாரம்பரிய முறையில் புதுமைகளைக் கலந்து சமைக்கும் சமையலுக்கு ஈடு இணை ஏது? இது தலைமுறை தலைமுறைகளாகக் கற்றுக் கொண்ட அனுபவ பாடங்கள். அன்பான குடும்பம் வளம் பெற ஆரோக்கியமான சமையல் அவசியமானது.

தினக்குரல்
ஞாயிறு மஞ்சரி
08 .05.2011



RangaRakes
Tamilnavarasam.com



# குரு சிஷ்யன்

எமக்குத் தெரியாத நல்ல விஷயங்களை எவர் மூலம் நாம் பயில்கின்றோமோ
அவர் எமக்குக் குரு ஆகின்றார். எனவே நாம் மற்றவர்களுக்குப் புதிய நல்ல
விஷயங்களைச் சொல்லிக் கொடுக்கும் போது "குரு" ஆகவும், மற்றவர்களிடம்
பயில்கின்ற போது சிஷ்ய நிலையிலும் இருப்பதால், எல்லோருமே குரு சிஷ்ய
நிலையில் உருவெடுக்க முடிகின்றது. எல்லா உயிர்களிடமும் ஏதோ ஒரு விடயம்
எமக்குத் தெரியாமல் புதைத்துள்ளது. அறிவது அறிவு, அறிவினைப் பெற மமதை
அகல வேண்டும், எல்லாமே தெரிந்தவர் எவர் உளர்? பரந்த பிரபஞ்சத்தில்
தெரிந்ததைவிட தெரியாததே அதிகம். இயன்றவரை நல்ல அறிவை தேடுதல் திருப்தி

குரு , சிஷ்ய உறவு என்பது நாம் கற்கின்ற கல்வியினால் மட்டும் ஏற்பட்டதல்ல. வாழ்க்கைப் பாடத்தில் எப்பொழுதும், கல்வி, அனுபவம் முதலான தேட்டங்களை பெற்ற வண்ணமாகவேயுள்ளோம்.





எனவே நாம் "அ" முதல் இந்த உலக அறிவு, ஆற்றல்களைப் பெற்றுக்கொள்ள ஒரு வரையறை என்பது அறவேயில்லை.

எமக்குத் தெரியாத நல்ல விஷயங்களை எவர் மூலம் நாம் பயில்கின்றோமோ அவர் எமக்குக் "குரு" ஆகின்றார்.

அவ்வண்ணமே எம்மிடம் இருந்து எந்த அந்தஸ்தைச் சார்ந்தோராயினும் அவருக்குத் தெரியாத சங்கதிகளைக் கற்றுக் கொண்டால் அவர் எமது சிஷ்யராகக் கருதப்பட வேண்டியவரேயாம்.

எனவே நாம் அனைவரும் எதோ ஒரு சந்தர்ப்பத்தில் மாணவர்களாகவும், ஆசிரியர்களாகவும் தோற்றம் காட்டியவாறே இருக்கின்றோம். வெளிப் பார்வைக்குக் கற்றவர்கள் மட்டுமே குரு ஸ்தானத்தில் வைத்துப் போற்றப்படுவதுவே அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ள உண்மைமாகும். ஆயினும் உலக ஞானத்தைத் தேடி அலைபவர்கள் இந்தக் கருத்திலிருந்து விலகி நிற்பார்கள்.

எங்கே உண்மைகள் புதைந்து இருக்கின்றதோ, அதைத் தோண்டி எடுப்பதில் படுதீவிரமாக இருப்பவர்கள் அவைகளை எவர் சொல்லிக் கொடுத்தாலும் ஏற்றிப் போற்றுவார்கள்.



RangaRakes

Tamilnavarasam.com

புறத் தோற்றம், அந்தஸ்து பணம் செல்வாக்கு என்பதைக்கருதாது, அனுபவ ஞானம் உள்ள ஞானிகள் உண்மைகளைக் கண்டறிய, ஒரு குறிப்பிட்ட வலைய மைப்பினுள் சிக்கிக் கொள்ளவே மாட்டார்கள்.

மெத்தப் படித்த ஒரு அறிவாளி சங்கீதம் கற்க வேண்டுமேயானால், தன்னை ஒத்த தன்மை தகைமை அல்லது இத்துறை அறியாத ஒருவரிடம் சென்று அதனை எப்படிக் கற்றுக் கொள்ள முடியும்? எனவே ஒரு சங்கீத வித்துவானிடம் சென்று முறைப்படி, அவரைக் குருவாக ஏற்று இசையை ஆரம்பம் முதல் கற்றுக் கொள்ள வேண்டும்.

மமதையுடன் கல்வி, ஞானம் கற்க முனையக் கூடாது. அநேகமானவர்களை, நாம் அனுபவரீதியாகவும் கண்டிருக்கின்றோம். இளவயதில் ஒருவரிடம் பயின்று பின்பு தாங்கள் பெற்ற அறிவினால், நல்ல நிலையை அடைந்த பின்னர் தமது குருவிற்கே கல்வி கற்பித்த மாணவர்கள் இருக்கின்றார்கள். கற்றல், கற்பித்தலில் மமதை என்பதேது?

சக வயதில் ஒன்றாகப் படித்தவர்கள் வயதில் முதிர்ந்தவர்கள் போன்றோர்களுக்குக் கூட தமது திறமை காரணமாக நல் ஆசானாக முதிர்ச்சியடைந்து அவர்களு க்கே பாடம் சொல்லிக் கொடுத்தவர்களின் பட்டியல்கள் மிக நீண்டதாகும். மேலும் தமது தந்தைக்குக் குருவாக





விளங்கியவர்களையே மாணாக்கனாகப் பெற்ற பெரியோர்கள் வரலாறும் உண்மை.

கல்வி என்பது பாடப் புத்தகங்களுடன் கட்டுப் பட்டது அல்ல. கலை ஞானம் என்பன சிறுவயதிலிருந்தே பெறப்படுகின்ற அரிய வித்தையுமாகும்.

நடனம், நாட்டியம், சிற்பம், ஓவியம் என்பன தனித்துவமான பிறவிக் கலைகள் என்பார்கள். இது பிறவிகள் தோறும் தொடர்வனவும் என்பர். எல்லை வரையறையற்ற கலைகளைப் பவ்வியமாகப், பணிவுடன் கற்றுக் கொள்ள வேண்டும்.

அக்காலத்தில் குரு,சிஷ்ய முறைகள் என்பத னைத் தெய்வீகத் தொடர்பாகவே கொண்டார்கள். நாடாளும் அரசனின் மகனுடன் சாதாரன பிரஜையின் பிள்ளையும் ஒன்றாகக் காட்டில் ஆச்சிரமத்தில் குருகுல வாசத்தில் கல்வி பயின்றார்கள்.

அன்றியும்,குருவிற்கும்,அவர் தர்மபத்தினிக்கும் அன்றாடம் சேவை செய்தும், சுற்றுப் புறங்களை சுத்தம் செய்தல், பூ மரம் நாட்டுதல், விறகு வெட்டுதல், காய், கனி வளங்களை உண்டாக்குதல் போன்றவைகளைச் செய்வது மாணவர்களுக்கே உரிய கடமையாக இருந்தன.

இம்முறையினால்பேதம்என்பதே புரியாது, ஆணவம் அற்று எல்லோருமே சமன் என்ற நிலையில்



RangaRakes
Tamilnavarasam.com

மாணவர்களுக்கு தெளிவுபடுத்தும் சமூக அமைப்பு அன்று இருந்தது. இன்று அந்த நிலை இல்லை. கல்வியூட்டல், வர்த்தகமாகி விட்டமையினால் கல்வி அளித்தவர்கள் காசு பெறுவதானால் அங்காடியில் பொருள் வழங்கும் வர்த்தகராகக் கருதப்படும் நிலையில் உள்ளனர்.

நாம் எந்த நோக்கத்துடன் கல்வி கற்கின்றோம் என்று எவரையாவது கேட்டுப் பாருங்கள். நல்ல வேலை கிடைப்பதற்கு மட்டும் என்பதே சகலரதும் அபிப்பிராயமாகி விட்டது.

பணியுடன்கூடிய கல்வி கற்கும் மாணவர்க ளாலேயே தமது மனதின் விசாலத்தை மேலும் அதிகரிக்க முடியும்.

ஆன்மீகம் என்பதே உள்ளத் தூய்மையுடன், நெஞ்சத்துக்கு வலுவூடுதல். குரு, சிஷ்யர் தொடர்பு என்பது இருவர் மனதும் ஒன்றித்த நிலையில் கற்பிக்கப் படுதலும், அதனைச் சிஷ்யன் ஏற்றுக் கற்கின்ற முறையு மாகும். படிக்கும் இடம் கோயில் போன்றது இங்கு பணிவு, பய பக்தியே இன்றியமையாததாகும். கல்வி தவிர வேறு சிந்தனைகளற்ற, நிர்மலமான நெஞ்சில் பாடங்களை புகுத்தாலே இங்கு நடைபெற வேண்டும். ஆன்மார்த் தமான குரு, சிஷ்ய உறவு நிலையே கல்வியை மேம்படு த்தும் .

இவ்வண்ணம் ஆத்மார்தமான உறவு நிலை





சாராத இயந்திரங்களுடன் சங்கமிக்கும் மனிதராகிப் பயிற் றுவித்தால் குருவிற்கும் மாணவனுக்கும் ஒருமித்த சிந்த னையோட்டம் மந்தமாகி விடும். அறிவுடன் சஞ்சாரம் செய்யவே செய்யாது.

படித்தல், கேட்டல் என்பது கல்வி பெறுதலில் முக்கிய அம்சம் என்பார்கள். இதில் கேட்டல் என்பது நாம் அனுபவ மூலமாகக் கேட்டு அறிவதும் உணர்வது மாகும். படித்தல் என்பதனை நாம் அறிவோம்.

நாம் சாதாரணமாகப் படிக்கும் போது ஒரு குறிப்பிட்ட கொள் அளவினுள் நிரம்பப் படித்து அறிந்தது எவ்வளவு? அறிந்ததைத் தெளிந்தது எவ்வளவு? முழுமையாகத் தெளிந்து விட்டோமென எம்மால் பிரகடன ப்படுத்த இயலுமா?

எனவே, பல்துறை சார்ந்தோர் தாம் கற்றவை களைச் சொல்லும் போது ஆழ்ந்து கேட்டறிந்து சிந்திக் கவும் வேண்டும். பன்னெடுங் காலம் தாம் கற்றவை களைச் சுருக்கித் தமது பிரசங்கத்தினூடாக ஒருவர் சொல்லும் போது எவ்வளவு சிரமங்களுடன் எமக்குத் தமது கல்வி ஞானத்தை பகிர்ந்து கொள்ளுகின்றார். என்பதை நாம் நோக்குவோமாக!

ஆயிரம் புத்தகங்களில் சொன்னவற்றினைச் சான்றோர் எமக்கு ஒன்று திரட்டிச் சாறாகப் பிழிந்து தருவதை ஏற்பதைவிட வேறு என்ன பெரும் பேறு எமக்கு



RangaRakes

Tamilnavarasam.com

உளதோ? பரந்த பிரபஞ்சத்தை விடக் கல்வி ஞானம் அகண்டது. கண்களால் நோக்கமுடியாத ஆன்மா வோடிணைந்த எமது ஞானம் மனிதர்களுடன் மட்டுமேந் தொடர்புடையதுமன்று.

சகல உயிர்களிடத்திலிருந்தும் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பல விஷயங்கள் உண்டு. இயற்கை யின் உற்பத்திகளில் இருந்து கோடிக்கணக்கான ஜீவன் களை இறைவன் அளித்துள்ளான்.

எமக்கும் எல்லா ஜீவராசிகளுக்குமான சம்பந்தம் இந்த பிரபஞ்ச உற்பத்திகளுடாகக் கிடைக்கின்றது. சகலதுமே எமக்கான அனுபவ ஞானத்தை, ஊட்டவல்லன. நாம் இன்னமும் கற்றுக்கொள்ள அறிவை நாடி ஓடியபடியே இருக்க வேண்டும். தேடல்கள் இன்றி உண்மைகளும், புரிதல்களும் நாடி நம்மை வந்தடையாது.

குருவாக நாம் காணும் திருப்தி நிலை போலவே சீடனாகக் கற்றுக் கொள்ள விழைவதால் உண்டாகும் வேட்கையும் ஆரோக்கியமான சந்தோஷகரமான நிலையே தான்! உணர்வோம் அன்பர்களே!

தினகரன்
ஞாயிறு மஞ்சரி
29.05.2011



RangaRakes Tamilnavarasam.com

# சிந்தனை வரிகள்

பருத்தியூர் பால. வயிரவநாதன்

*வாழ்வியல் வசந்தங்கள்*


RangaRakes

Tamilnavarasam.com

## நூலாசிரியர் பருத்தியூர் பால. வயிரவநாதன் எழுதி வெளியிட்ட "வாழ்வியல் வசந்தங்கள்" நூற் தொகுதிகள்

1. உண்மை சாஸ்வதமானது - பாகம் - 01
2. அம்மா - பாகம் - 02
3. சுயதரிசனம் - பாகம் - 03
4. கோழைகளாய் வாழுவதோ? - பாகம் - 04
5. ஞானம் - பாகம் - 05
6. கணப்பொழுதேயாயினும் யுகப்பொழுதில் சாதனை செய்! - பாகம் - 06
7. சும்மா இருத்தல் - பாகம் - 07
8. உண்மைகள் உலருவதில்லை! - பாகம் - 08
9. உண்னோடு நீ பேசு! - பாகம் - 09
10. நான் நானே தான்! - பாகம் - 10
11. வெறுமை - பாகம் - 11
12. காதலும் கடமையும் - பாகம் - 12
13. அக ஒளி - பாகம் - 13
14. உன்னை நீ முந்து! - பாகம் - 14
15. சுயபச்சாதாபம் - பாகம் - 15
16. மௌனம் - பாகம் - 16
17. மரணத்தின் பின் வாழ்வு - பாகம் - 17
18. சிந்தனை வரிகள் - பாகம் - 18





# சிந்தனை வரிகள்

- அன்பு இன்பம் அளிக்கும்.
- அன்புக்கு முன் ஆணவம் ஒடுங்கும்.
- அன்பினுள் உலகே அடக்கம்.
- அறியாமை நீக்க, அறிவைத்தேடு!
- அறிந்ததைத் தெளிவதே, சிறந்தது.
- அறம், செய்வோர்க்கு அகங்காரம் இல்லை.
- அமைதியின்றேல், துன்பம் தொடரும்.
- ஆயிரம் கோவிலிலும், மேலாம் அன்னை உள்ளம்.
- ஆசையை உடைத்தவன் ஆனந்த ரூபி.
- "ஆனந்தம்" ஆண்டவன் திருவடி!
- ஆயிரம் பொய்களிலும், ஒருபொய்யும் பெரும்பாவம்.



RangaRakes
Tamilnavarasam.com

* இயன்றதைக் கொடு! ஆண்டவன் கொடுப்பான்!
* இன்று வழங்குவதை நாளைக்கு ஒத்திவைத்தல் தப்பு.
* இயல்பாய்ச் சிந்திக்க! வருந்திச் சிந்தனை வளர்ந்திடாது.
* இன்றைய பணி, நாளைய முதலீடு.
* இன்றைக்கு மட்டும் என்று ஒரு பாவம் செய்யாதே!
* இயலாது என்று சொல்லி, உன்னை இகழாதே!
* இயலாமை பயன்தராது. முயற்சி முன்னேற்றும்.
* "இகழ்ச்சி" செய்து, இதயத்தை கருக்காதே.
* இறைவன் இல்லம் தொண்டன் இதயம்.
* இறைவன் படைப்பை, நிந்திக்காதே!
* ஈதலுக்கு அளவே இல்லை, ஈசனுக்குப் பிடித்தது இதுவே!
* ஈகை செய்தவர் சாவதே இல்லை
* ஈன்ற தாய் தான் ஈசனிலும் பெரியவள்.
* ஈசன் அருளினால் தாய் உயிரைப் படைக்கின்றான்.
* உலகை நோக்கு! உண்மையைத் தேடு!
* உலகம் உனக்காக, அதற்காக உழை!
* உலகம் என்றும் புதிதாய் இருக்க, புதியன செய்!
* உண்மை உன்னைக் காட்டும்.
* உண்மையை விட்டால் துன்பம் அணைக்கும்.
* உயிரை விட உண்மையை மதி.
* உண்மையாய் வாழ்ந்தால், உயிர் உயிர்க்கும்.
* ஊரோடு உறவாடு மக்களுக்காய் போராடு!
* ஊருக்கு ஞானி, வீட்டினுள் அஞ்ஞானியா?
* ஊருக்கு ஊன்று கோலாகு! பாரமாய் இருக்கவேண்டாம்.





* எளிமையான வாழ்வில், ஆனந்தம் அதிகம்.
* எல்லாமே இறைவனுள் அடக்கம்.
* எல்லாமே தெரியும் என்போர், அறிவதில் விருப்பு அற்றோர்.
* "எமக்கு என்ன" என விலகி வாழ்ந்தால் உலகம் அவரை விலக்கி வீழ்த்தும்.
* "எனக்கு", "நான்", "எனதே" என்றால் அடுத்தவனுக்கு எங்கே இடம்?
* ஏதுமற்றவர்க்கு இறைவன் கொடை கிடைத்தே தீரும்.
* ஏன் என்று கேட்பவனால், கேட்காதவனும் பயன் பெறுகின்றான்.
* ஏமாற்றுபவன் வாழ்வு இழிவாய் தோற்றுப் போகும்.
* ஐக்கியப்பட்டவர் அழிந்ததேயில்லை.
* ஐயப்பாட்டின் அன்பினுள் நுளைக்காதே!
* ஐயப்பட்டால் எல்லாமே பொய்தான்
* ஒரு பொழுதும் இறை நாமம் மறவாதே!
* ஒரு சிறு தவறுக்கு வருந்தித் திருந்து.
* ஒப்பனை செய்தால், உள்ளம் திருந்துமா?
* ஒருவன் கூட அழக்கூடாது.
* ஒருவர் துயரையும் உலகு ஏற்பதாக!
* ஒவ்வொருவர் உழைப்பும் உலகை உயர்த்தும்.
* ஓரவஞ்சனை தன் நெஞ்சிற்கே வஞ்சனை.
* ஓராயிரம் எண்ணங்கள் இருந்தாலும் வருந்தி உழை!
* ஓ.. இறைவா உன் எண்ணம் என்றும் நிலைக்க வை!
* ஓசையில் இசையே வேண்டும். வசை வேண்டாம்!



RangaRakes

Tamilnavarasam.com

* ஓசைகள் மாசின்றி அமைந்தால் மனித மனம் இசைந்து பாடும்.
* ஔடதம் இன்றி வாழ்வதே சந்தோஷம்.
* தூக்கிய ஏணியை தூர எறியாதே!
* தாக்கிய எதிரியை தயவுடன் நோக்கு!
* பழகிப் பார்த்தால் பார்த்தவை அலுக்கும்.
* அழகியும் கிழவியாவாள். அழகுக்கு ஏது நிரந்தரம்?
* அழகிற்கு அடிமைப்பட்டால் நல்லதையும் நழுவவிடுவாய்.
* உள்ளத்தைத் தேடினால் நல்லதைக் காண்பாய்.
* பள்ளிப்படிப்பு வாழ்க்கையைப் பண்படுத்தும்.
* கள்வனுக்கு இரும்புக்கோட்டை மணல்திட்டு!
* உலகிற்கு வெளியே ஆயிரம் உலகங்கள்.
* உலக வாழ்வு அனுபவம் பல யுகங்கள் நிலைக்கும்.
* கனவை நம்பிக் கரைந்தே போகாதே!
* நனவின் துன்பம் நற் கனவில் தீரட்டும்.
* கனவில் கூடச் சுகங்கள் உண்டு.
* வாழ்வே கனவு, நிகழ்வுகளே நிஜங்கள்!
* வாய்விட்டுக் கேள், இறைவன் தடையின்றித் தருவான்.
* கடுமையான தவம் சிரமம், மென்மையான அன்பு அமிர்தம்.
* பொருந்தாத மார்க்கங்களைவிட இயல்பான அன்பு மேன்மை.
* படிப்படியாக வளர்வது இலகு.
* மனசின் விசாலம் வானிலும் பெரிதே





* குழப்பத்தைத் தன்னுள் வைத்து உலகத்தைக் குறை பேசேல்!
* எமக்குள் அமைதி, அது உலகத்திற்கே பரவும்.
* பொருந்தாத உடுப்பு, செருப்பு, தூக்கி வீசு!
* ஐக்கியப் படாதவன் சமாதானம் பேசக்கூடாது.
* உலகம், ஜீவிதம், மரணம் எல்லாமே அற்புதம்! அற்புதம்!
* உண்மையை ஏற்றுக் கொள்ளாதவரை நியாயம் கிட்டாது.
* கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்தபின் குப்பை போடுதல் மனித வழக்கம்.
* நல்ல உடையுடுத்தி,நறுமணப் பூச்சுப்பூசி பன்றியை அணைக்கலாமா?
* சோறு சாப்பிடு முன் அதை அளித்தவனை ஞாபகப்படுத்து!
* படுக்கைக்குப் போகும்போது பழைய பிணக்கை நினையாதே!
* கிடைத்த வெற்றிகளால் அடுத்தவனை அமுக்காதே!
* தோல்விகளை எதிர்கொள்ளு! பின்னடைவைப் புறம் தள்ளு.
* கோபமான வேளையில் முடிவுகளை மேற்கொள்ள வேண்டாம்.
* காதலில் காமம் ஒளிந்திருக்கும்.
* காமம் காதலை வலுவூட்டும்.
* காலம் புதிய புதிர்களை தானாய் பூக்கவைக்கும்.
* காதலே இன்பம், காதலே துன்பம்.



RangaRakes
Tamilnavarasam.com

* காதலிப்பவன் தைரியசாலி, அதனுள் வசப்பட்டவன் கோழையாகின்றான்.
* வங்கியில் காசைப் போடு, நிலத்தில் விதையைப் போடு.
* திரைப்படங்களால் அரைக்கிறுக்கனாகாதே!
* சரியான பாதைதான் சுருக்கமான வழி.
* பிரச்சினைகளைத் தீர்த்துவை, அதனை உருவாக்கி முதலீடு செய்யாதே.
* இறைவனைக் காண்பதற்கு "பொய்" உறையைக் கழற்று!
* அவசரத்தின் பெயர் சுறுசுறுப்பு அல்ல!
* அவசரம் புத்தியை அஸ்தமனமாக்கும்.
* இயற்கையுடன் சீவிப்பதும் கஷ்டமாய்த் தோன்றும்.
* காரிய சித்திக்கு நிதானம் அவசியம்.
* அவசரம் அநாகரீகம்.
* ஆசை, வேட்கை, அவா, துன்பத்தின் உறவுகள்.
* கிடைத்த வீட்டிற்கு வெள்ளையடிக்கக் காசு இல்லை.
* அடுத்தவன் பேனாதான் எழுதும் என எண்ணவேண்டாம்.
* தெரியாதவனுக்கு எதைக் கொடுத்து எழுதச்சொல்ல?
* ஒப்புக்கொள்ளப் படாதவையெல்லாம் புறக்கணிக்கப்பட்டவையல்ல.
* பாவிகள் ஆலோசனை சொல்கிறார்கள்.
* தற்காலிக சந்தோஷங்கள் திருப்தியானது அல்ல.
* மற்றவர்களைப் பற்றிப்பேசி குப்பைகளைச் சேர்க்காதே!
* நிர்ப்பந்தத்தில் ஏற்கப்படும் கருத்துக்கள் அநாதரவற்றுப் போகும்.





* காசு கொடுத்து ஆலோசனை பெறுகின்றோம், தெய்வக் குரலைக் கேட்கநேரமில்லை.
* நடிப்புக்கூட நிஜத்தை வென்றுவிடுகின்றது.
* கல்லூரிக்குப் போகாதவன் அதன் "வழி"யையே மறந்து விடுகின்றான்.
* மது மயக்கத்தைவிட அறியாமை மயக்கம் கொடியது.
* துணிச்சலைக் காட்டப் பாம்பைப் பிடிப்பதா?
* அசட்டுத் துணிச்சல் வீரம் அல்ல.
* மனப்பக்குவம் வாழ்க்கைக்கு உயர்ச்சி.
* உடைகளைக் குறைத்து நாகரிகம் தேடுகின்றார்கள்.
* தேவைகளைக் குறைத்தால் தொல்லைகள் ஏது?
* குரங்குடன் நட்புக் கொண்டால் சொறிவதும், இளிப்பதும் பழக்கமாகும்.
* அழகானது என்றாலும் சிங்கத்தைத் தழுவமுடியாது.
* கறுத்த வானம்தான் மழையைப் பொழியும்.
* அழகிய மின்னலையும் பார்ப்பது கூடாது.
* பொய் எதுவெனப் புரிய வேண்டும்.
* மெய் எதுவெனத் தெளிதல் வேண்டும்.
* அறியாமைக்கு பல்ஆயிரம் குணங்கள்.
* "தெளிவு" ஒன்றே உரக்கச் சொல்லும்.
* பொருந்தாதார் இல்லத்தில் நீர் கூட அருந்தவேண்டாம்.
* பரந்த உலகில் படுக்க இடமில்லையா?
* லஞ்சம் பெற்றவர் நொந்து கெடுவர்.
* கஞ்சனிடம் கறவைப்பசு கேட்க முடியுமா?



RangaRakes
Tamilnavarasam.com

* நாகரிகமாகப் பேசி நயவஞ்சகம் கலப்பவர் உண்டு.
* பார்வைக்கு முரடரும் பண்பாளராய் இருக்கலாம்.
* சாதனையாளர் ஓய்வடைவதில்லை.
* சும்மா உறங்குபவர் காலத்தின் சத்துரு.
* தன்னை விரும்பாமல் அவனியை அரவணைக்கவியலாது.
* உன்னைத் தெரிந்துகொள்வதே உயர்ந்த பாடம்.
* கண்ணீரைக் காட்டினால் உண்மையாகுமா?
* உப்புக் கண்ணீர் உலகையே ஆட்டும்.
* தவிப்பவர் கண்ணீரை துடைத்தல் தர்மம்.
* கண்ணீருக்குள் கன கதைகள் அடக்கம்.
* உண்மைக் கண்ணீரால் பெற்றபயன் நிலைக்கும்.
* தியாகிகள் கண்ணீர் தேச சுதந்திரம்.
* ஒருவர் தியாகம் ஓராயிரம் நன்மை ஜனனம்.
* உள் நோக்குடன் வைக்கும் நட்பு நிலைக்காது.
* ரோசம் கெட்டவனுக்கு எல்லாமே எளிது.
* முரண்பாடு அற்ற நிலையில் சகலரும் வசியமாவர்.
* பேதங்கள் உள்ளவரை பிரச்சினைகள் தீர்வதில்லை.
* கோபத்தினை உள் நிறுத்தி வெளியே சிரிக்காதே!
* வக்ர புத்திக்காரனின் புன்னகை, செந்தணல்.
* பாதகம் செய்பவனும் இறைவனைத் திட்டுவான்.
* கத்தியால் குத்திக் கொலைசெய்பவனும், முள் குத்தினால் அழுவான்.
* கல்வியைத் திணிக்கவியலாது, மனமுவந்து ஏற்க வேண்டும், நிலைக்கும்.





* சத்தியத்தைச் செல்வம் கொடுத்து வாங்கமுடியாது.
* எத்தனை தரம் செப்பிடினும் பொய் பொய்தான்.
* சத்தம் போட்டுப் பேசினால் "பொய்", "மெய்" ஆகாது.
* ஒருதரம் சொல்லப்படும் உண்மையும் நிலைக்கும்.
* உண்மை அமைதியானது, வேகமானது, உள்நின்று உணர்த்தும்.
* ஏன் என்று கேட்காது விட்டால் எதையும் செய்து விடுவார்கள்.
* வேண்டப்பட்டவர்களுக்காக வேண்டப்படும் உண்மையை இழக்க முடியாது.
* தூண்டப்படாத திரியும், தெளிவிலா கல்வியும் ஒளிபெறுமா?
* கண்டிப்புக்குள்ளும் அன்பு உள் இருத்தல் வேண்டும்.
* வேண்டப்படாதவனையும் விரும்பி அன்பு செலுத்து, திருந்துவான்.
* பாதிக்கப்பட்டவன் உதிர்க்கும் கண்ணீர் தண்டனை கொடுக்கும்.
* பிறரைச் சோதனைப்படுத்தும் அதிகாரம் மனிதர்களுக்கு இல்லை.
* தண்டனை கொடுப்பதால் தலைவனாக முடியாது.
* வலிந்து திணிப்பதால் கொள்கைகள் ஏற்கப்படுவதில்லை.
* மெலிந்தோரையும் இளப்பமாகக் கருதேல்!
* வலிமை கொண்ட தோற்றம் கொண்டால் மனவலிமை பெற்றவர்களா?
* கோவில் எலிக்கு உணவுப் பஞ்சமில்லை.



RangaRakes

Tamilnavarasam.com

* பொய் முகங்கள் கூட அழகாக உலா வருகின்றன.
* செய்கின்ற தவறுக்குச் சாட்டுதல் கூற வேண்டாம்.
* குற்றத்தை வருத்தமுடன் ஒப்புக்கொண்டவன், மன்னித்தல் கேட்க அருகதை உள்ளவன்.
* அனுபவ அடிகள் இறைவன் கொடைகள்.
* நியாயங்களை எடைபோட்டு அளவிட முடியாது.
* நியாயங்களை நிறுத்தி வைக்க இயலாது.
* உனக்கு நோய் தீர்வதற்குப் பிறருக்காகப் பிரார்த்தனை செய்.
* உண்மையை உன்னுள் ஏற்காதவரை உனக்கு நியாயம் கிட்டாது.
* விரும்பாததை வலுக்கட்டாயமாக ஏற்பது கடினம்.
* உன்னால் முடிவதை பிறர் மூலம் செய்வித்தல் தகாது.
* "முடியாது" என்பது எம்மை நாமே வேதனைப்படுத்தலாம்.
* தனக்கே பிரச்சினை ஆயிரம். பிறர்க்கு என்ன ஆலோசனை?
* தமக்குப் புரியாததை உபதேசம் செய்கின்றார்கள்.
* கஷ்டப்படுகின்றோம், நல்ல முடிவு கிடைக்கும் தருணம் தூங்குகின்றோம்.
* இறைவனிடம் கேட்பதற்கு என்ன கூச்சம் ஐயா?
* நிஜத்தை விட நடிப்பு பெரிதல்ல.
* நல்லதை எண்ணும்போதே நல்ல காலம் பிறந்துவிட்டது.
* துன்பத்தை இன்பங்களில் வேர்களாக்க வேண்டாம்.
* சந்தேகம் நீங்க அனுபவப்படுங்கள்.





* நல்ல நோக்கங்கள் உங்கள் அந்தரங்க ஆன்மாவைச் சுத்தப்படுத்தும்.
* நல்ல எண்ணங்கள் இன்றி மக்கள் முன் அரங்கேற முனைய வேண்டாம்.
* ஞானம் மாயையை அசைக்கும், முடிவில் வீழ்த்தும்.
* கோழைகள் தமக்குள் செத்துப் பிறரையும் சாகவைக்க முயலுகின்றார்கள்.
* பொய்யான வாழ்வுக்கோட்டை, கனவுகளால் தோரணங்கள்.
* நனவு வாழ்வில் நிஜமாய் வாழ்ந்தால் வாழ்வு சாஸ்வதம்.
* சஞ்சலம் தவிர்த்து நின்றால் நிர்மல வாழ்வு நிச்சயம்.
* மலிந்த பொருளில் மருண்டு விடாதே.
* விலை உயர்ந்த பொருளிலும் ஏமாற்று உண்டு.
* கண்ட பொருளிலும் ஆசைப்பட்டால் சேமிப்பு சேதமாகும்.
* ஒளிந்து வாழப் பழகிக் கொள்ளாதே.
* நிமிர்ந்து நின்று பேசப்பழகு.
* குனிந்தவன் கோழை, அழுபவன் ரோகி, சிரிப்பவன் உல்லாசி.
* "ஏன் இந்த வாழ்வு" என்று வேதாந்தம் பேசாதே, வாழ்ந்து பார்!
* கலையாத உறுதியை நெஞ்சில் நிறுத்து!
* சிலை போல் நிற்காதே, சீறி எழு, நட, ஓடு!
* கறையான் கூட உறவுடன் வாழும்.
* அறியாமல், தேடாமல், கேட்காமல் வாழாதே!



RangaRakes
Tamilnavarasam.com

* தன் குறையினை உணராமல்
  பிறரை விமர்சனம் செய்யாதே!
* தேவையானதைத் தெரிந்து தேவையறிந்து எடு!
* நிலையற்ற வாழ்வு என்று சிலைபோல நிற்காதே.
* கடல் அலைகளை எண்ணலாம்.
  மன அலைக்குக் கணக்கு இல்லை.
* தொலைந்த பொருளுக்காய் துன்பம் தேடாதே!
* தெரியாத விஷயத்தைத் தெளிவின்றிப் பேசாதே!
* முறையான கல்வியை முழுமூச்சுடன் படி.
* தெரியாத விஷயத்தைத் தேர்ந்து படி!
* எடுத்த கடனைக் கொடுக்க வேண்டும்.
* படுத்துக் கிடந்தால் மண்புழுவும் மிதிக்கும்.
* கொடுப்பவர்களைத் தடுப்பது அடுக்காத செயல்.
* மௌனம் பேசா மொழி, கேட்க இயலாத கீதம்.
* அநீதியைக் கண்டும் மௌனம் காப்பதே அநீதி!
* மௌனம், தெரிந்தமையைக் காட்டும்,
  தெரியாமையையும் காட்டும்.
* மௌனமாய் பேசினாலும் பத்துப்பேர் பார்ப்பார்கள்.
* மௌன அதிர்வுகள் முனிவன் விழியை அசைக்கும்.
* மௌனத்தால் வேதனையை வழங்கலாம்.
  கோபத்தைக் காட்டலாம்.
* சம்மதம் சொல்லும் மௌனங்கள்,
  வாசகங்களிலும் வலியது.
* பெண்களின் மௌனத்தில் அர்த்தம் தேடாதே!





* கண்கள் மௌனத்தின் நண்பன்.
* விழிகள் பேசினால் வாய்கள் மூடிக்கொள்ளும்.
* மௌனம், காதலர்க்குப் பாடம் சொல்லும்.
* மௌனமே காதலை வளர்க்காது, வாயால் சம்மதம் கேள்.
* எல்லாவேளையும் மௌனம் பயன்தராது.
* பேச்சின் தெளிவிற்கு நெஞ்சில் உறுதி வேண்டும்.
* பிச்சை கேட்பவனுக்கும் ஏற்ற தோற்றம் வேண்டும்.
* இச்சைப்பட்டு ஏங்குவது பிச்சைக்காரத் தனமானதே!
* அளவான ஆசைகளை அடைவதில் தப்பில்லை.
* ஆசைகளை அடையத் தகுதியை உயர்த்து!
* சட்டம், நல்ல மனிதரைச் சாப்பிட்டுவிடக் கூடாது.
* சட்டங்கள் மாறும், மனித நீதி நிலையானது.
* சட்டங்கள் மனித வாழ்வுடன் ஒட்டியதல்ல.
* சட்டத்தை மதி, மனித நீதியைத் துதி.
* சட்டத்தை வைத்து மனிதனை மட்டம் தட்ட எண்ண
  வேண்டாம்.
* சட்டத்தின் துணை ஏழைக்கும் எட்ட வேண்டும்.
* படித்ததன் பெருமை பண்போடு பழகுதல்.
* அடுத்துக் கெடுபவனை அயராது துரத்தி அடி!
* உடுக்க வழியில்லை, படுக்க பஞ்சணை கேட்பதா?
* படிப்படியாக முன்னேறினால் இடையூறு பொடியாகும்.
* கல்லால் எறிந்து நாயுடன் விரோதம் எதற்கு?
* நல்லோரைக் கண்டால் வாழ்த்தி வழிபடு!
* கெட்டவரைக் கண்டால் ஒதுங்கி வழிகொடு!



RangaRakes
Tamilnavarasam.com

* படித்த படிப்பை பிறருக்கு கொடுத்து மகிழ்.
* அழித்தல் என்பது தீயதைத் தொலைப்பதாம்.
* பிறரைப் பழித்து, மகிழ்வடையாதே!
* நல்லோரைப் பழித்தல் கவலையைக் கொடுக்கும்.
* அநீதியைக் கண்டால் நழுவி ஓடாதே!
* கலையைக், கலைஞரை, விலைபேசல் தகாது.
* கலைகளை ரசித்தால் கவலைகள் ஏது?
* பல்கலை பயில்வதால் ஆன்மா துயில் எழும்.
* கலை, ஞானம், ஞாலத்தை ஒளியாக்கும்.
* வயசான காலத்தில் இளையோரை வெறுக்காதே!
* தீய பழக்கம் கலைஞர்க்கு விரோதி.
* கயமை கண்டு மிரண்டு ஓடாதே, விழித்து ஒடுக்கு!
* மூலையில் படுத்து முடங்குவது அழகா?
* பழிக்கு அஞ்சியவன் பாவம் செய்யான்.
* தெரியாதவனும் விமர்சனம் செய்வான்.
* தொழிலில் தோற்றவனும் விமர்சனம் செய்வான்.
* ஒருவனை அழிக்க ஒத்து ஊதாதே!
* பொல்லாத மனிதனை உருவாக்க வேண்டாம்.
* இதயம் மரத்தவர்க்குப் பாவம், புண்ணியம் என்ன?
* சோர்வு அடைந்தால் நல்லது நழுவும்.
* சோம்பல் சுற்றினால் சுற்றம் வெறுக்கும்.
* சோம்பலை பற்றினால் சேர்ந்தபொருள் கரையும்.
* சோம்பேறியை சிற்றெறும்பும் மதிக்காது.
* சோம்பேறிக்கு அவமானம் அலங்காரம்.





* சோம்பேறிக்குத் தூக்கம் சொர்க்கம், அதனால் நரகம்.
* சொகுசாய் வாழப் பிறரைப் பிழியாதே.
* யாசகம் பெற்றுச் சொகுசைத் தேடாதே!
* காசைக் கண்டால் ஆசைகள் கோடி.
* குரைக்காத நாய், கதைக்காத மனிதர், பார்த்து விலகு!
* அரை வேக்காடுகளும் அறிஞராய் நடிக்கும்.
* தயவு, தாட்சண்யமே அருட்கடாட்சம்.
* நியமம் தவறாது இறைவனை வழிபடு.
* கருமங்கள் செய்கையில் கண் அயராதே!
* சுய விளம்பரம் பிறர் விமர்சனம் பெறும்.
* சகலமும் தெரிந்ததாக, காட்டிக்கொள்ளாதே,
  மாட்டிக்கொள்வாய்.
* மிருகத்திற்கும் ஆற்றல் உண்டு. மரத்திற்கும் வைரம்
  உண்டு.
* எல்லாப் பொருளும் இறைவன் சொத்து,
  உனக்குச் சொந்தம் என்ன உண்டு?
* நலிவாய் எண்ணினால் நசிந்தே போவாய்.
* வறுமை என்பது தகுதியின்மை அல்ல.
* மலையைப் போல உறுதியாய் நில்.
  கடுகைப் போல காரம் கூட்டு!
* சிந்தனை என்பது மாந்தர்க்கு அருங்கொடை
* சிந்தனையின்றி நொந்து வாழாதே!
* கொஞ்சம் கூட அதிர்ந்து பேசேல்!
* உந்தன் துன்பத்தை உலகிற்குச் சொல்லாதே!



RangaRakes

Tamilnavarasam.com

* நல்ல கனிபோல் இனிக்கப் பேசு.
* கனிவாய் பழகினால் குவலயம் உன்னிடம்.
* உறுமுதல், சீறுதல், கறுவுதல் மிருகச் செயல்.
* புன்முறுவல், கனிவோடு நோக்கல் சிறந்த செயல்கள்.
* கண்களில் கனிவைத்தேக்கு, இதழ்களில் முறுவல் காட்டு.
* குருவிபோல் சேர்த்துவை, வளமாக வாழ்ந்து காட்டு.
* அருவி போல் அன்பைக் கொட்டு!
* உன்னை உன் பண்பால் உயர்த்து!
* அனைத்து இயற்கையை அரவணைக்க வேண்டும்.
* வனமும், கடலும், மலையும்,
  வளமும் இருந்தும் எதற்கு வருத்தம்?
* ஒரே குடையின் கீழ் உலகை அடக்கலாம்.
* குணமும், கொள்கையும் கோணாமல் பேணுக.
* பணத்தைப் பெருக்குதலே வாழ்க்கையாகாது.
* சினத்தைத் தணித்துச் சீராக வாழ்வோம்.
* செத்த பிணத்திற்கும் செலவுகள் அதிகம்,
  கௌரவம் உண்டு.
* துடிப்பான உழைப்பே உலகிற்கு வேண்டும்.
* கொள்கை இழந்தவன் தன்னை விற்றவன்.
* பள்ளத்தில் வீழ்தல் இயல்பு, எழுதலே சிறப்பு.
* எழுவதற்குப் பயந்தவன் உயர்வுக்கு ஆகாதவன்.
* துணிந்து எழுந்தால் குவலயம் தூசு.
* உள்ளதைக் கொண்டு உவகையாய் வாழு.
* பலதையும் பார்த்து அள்ள எண்ணாதே.





* உணவைப் பகிர்ந்து அனைவர்க்கும் ஊட்டு.
* மனத்தைக் கடிக்கும் செயலை மறப்போம்.
* செய்கையில் தூய்மை, பயன்கள் மிகுதி.
* இருக்கும் போதே கொடுக்கும் குணத்தைக் காட்டு.
* துணிவு என்பது சும்மா மோதிச் சாவது அல்ல.
* துணிந்தவன் முன் அனலும், புனலும் கரைந்து போகும்.
* ஒழுக்கம் கெட்டவன் வேதம் ஓதலாமா?
* கழுத்தில் கத்தி ஏறுமுன் துணிந்து எழுந்து தாக்கு.
* நிலத்தின் மேல் நிமிர்ந்து நட, பார்வையை நேரே வை.
* குலப் பெருமை பேசி கண்டபடி நடவாதே.
* கலவர நேரத்தில் குதூகலமாய் பார்ப்பது தப்பு.
* விரியாத குடை, அறுந்த செருப்பு, இருந்து என்ன?
* கீழ்ப்படிவில்லா மாணவன் தோற்பது நிச்சயம்.
* சிரத்தையுடன் செய்யும் செயல்கள் இரட்டிப்பு வருமதி.
* கருத்து மோதலால் அடுத்தவனைப் பகைக்காதே.
* கோபித்துக் கொள்ளலாம், அதற்காக வெறுக்காதே!
* எந்த மனிதனும் விரோதி அல்ல, நீ விரோதிக்காதவரை.
* ஒருவர் செயல்கள் தவறு எனினும் அவரை ஒதுக்காதே!
* கனிவாகப் பேசினால் கெட்டவனும் திருந்துவான்.
* இனிக்கப் பேசு, இழிவாக நடக்காதே.
* பழி எனத் தெரிந்தும் பாவம் செய்பவன் பாவி.
* கழிவுப் பொருட்களையும் காசாக்க முடியும்.
* மதியாதவருடனும் மோதுவது பேதமை.
* அதிகம் படித்தவர் அடங்கி நடப்பர்.



RangaRakes
Tamilnavarasam.com

* போதையில் உள்ளோருடன் வாதம் புரிவதா?
* கதைகளைப் படித்துக் கலங்குதல் உள்ளத்திற்குக் கெடுதல்.
* செடிகளை நட்டால் தண்ணீர் ஊற்று.
* அரைகுறை வேலை, ஆரவாரம் எதற்கு?
* கற்பனைக் கதைகளில் கருத்தினைப் புகுத்தி வெறுப் பேற்ற வேண்டாம்.
* அற்புதமான கற்பனை ஆற்றல், புதியன படைக்கும் திறனை வளர்க்கும்.
* குருவிக்கும் அருவிபோல் பாசம்,
* தாய்மை, அன்பு எவ்வுயிர்க்கும் பொதுவே!
* பயந்தவன், துணிந்து இயங்கத் துணைசெய்க!
* தொழிலாளிக்கு வியர்வை அழகு!
* படித்தவன் போதிப்பது சிறப்பு.
* உடைந்த உள்ளத்தை அன்பு ஒட்டவைக்கும்.
* கடிந்து பேசிடினும் காரணத்துடன் பேசு, வெறுப்பை நீக்கு!
* உள்ளக் கோவிலில் உண்மையே கடவுள்.
* கள்ளமில்லா உள்ளத்தில் கடவுள் சஞ்சரிப்பார்.
* பிள்ளை மனது எல்லோரையும் விரும்பும்.
* நல்லோர் ஒருவர் நாலுகோடி பேர்களின் பலம்.
* வல்லமை பெருக உள்ளத்தில் கள்ளம் நீக்கு!
* உன்னிலும் பார்க்க உயர்வைத் தேடு!
* உன்னை நீ வெல்க!





* இன்றைக்கும் நாளைக்கும் என்றென்றும் புது மனிதனாய் இரு!
* புதுப் பொலிவை மழுங்க விடாதே!
* இதைவிட இன்னும் முடியும் என எண்ணுக!
* கண்ணீரோடு கரைந்து போதல் சிறப்பா என்ன?
* துன்பத்தில் அழுதாலும் எழுதல் வேண்டும்.
* அழுது தீர்ந்த பின் உள்ளத்துப் பாரம் போகும்!
* அன்புக்கு ஏங்காதோர் எங்கே உண்டு?
* துன்பம் வந்ததேயென்று துன்பப் படாதே.
* கவலை வலை போன்றது, விலகி வீழ்த்து!
* நல்ல காரியங்களை இளப்பமாக நோக்குதல் பலவீனம்.
* பெண்கள் பேதைகள் அல்லர், சாதனை செய்பவர்.
* மனம் கலையும், இழுத்து நிறுத்துக!
* தலை போனாலும் துணிச்சலும், தூய்மையும் பெரிது.
* பணத்திற்கே அடிமைப்பட்டால் சுகத்தைக் கெடுக்க வேண்டும்.
* இனத்தோடு வாழா விட்டால் தனித்தே சாகவேண்டும்.
* நற்குணத்தை இணைத்தவன், இறையோடு அடிமைப் பட்டவன்.
* மருந்து கசந்தாலும் உடலைத் தேற்றும்.
* எரிக்கும் மது "குடிக்கே" கேடு.
* விஷம் இனிப்பேயாயினும் உயிரைக் குடிக்கும்.
* எடுத்த எடுப்பில் கண்டதும் பேசேல்.
* தொடுத்த சுடுமொழியை திருப்பி எடுக்க இயலுமோ?



RangaRakes
Tamilnavarasam.com

- அடுத்தவன் துன்பத்தைக் களைவதே இன்பம்.
- நாடி, ஓடி, நல்லதைச் செய்.
- குடிப்பழக்கம் வாழ்க்கைக்கு முடிவிடம்.
- எடையில் அளவாக உடம்பைப் பார்த்துக்கொள்.
- கடை, கடையாய் கடன் கேட்காதே.
- உடையில் எடுப்பு, மனசில் கறுப்பு, தப்பு.
- நடை பாதையில் நளினமாய் நடந்து செல்.
- புதுக்குடை என்பதால் பெட்டியில் பூட்டலாமா?
- கால் செருப்பைக் கைப்பைக்குள் செருவலாமா?
- நாய் வால்கூடப் பல தொழில் செய்யும்.
- மீசையை வளர்த்தால் வீரனாக முடியுமா?
- ஆசையை வளர்த்துச் சாமி வேஷமா?
- ஆசையை அடக்கினால் அனைத்தும் அடங்கும்.
- பேசாமல் இருப்பவன் பயந்தவன் அல்ல.
- வேசி என்பதால் கூசாமல் கை நீட்டாதே!
- உடலை வளர்க்கக் கெடுதல் புரிதல், கேடு.
- கடை தெரியாமல் கண்டதை உண்ணேல்.
- நடக்கும் பழக்கம் தினசரி செய்க!
- நன் நடத்தையே உன் உடமை.
- கொடுக்கும் பழக்கத்தினால் கோடி கிடைக்கும்.
- பிறர் பொருளை எடுத்தவன் நடுத்தெருவிற்கு வருவான்.
- நடப்பது விதி எனச் சோர்ந்து போகாதே!
- கொடுப்பான் இறைவன், நம்பினால் நல்லது.
- அசைக்க முடியாத நெஞ்சம் வாழ்வைப் பிழைக்க வைக்கு





- நடிப்பாகக் கூடப்பொய் பேசாதே.
- துடிப்பின்றி இருந்தால் மனிதன் நடைப்பிணம்.
- இரக்கமற்றவன் அருள் சுரப்பை விரும்பாதவன்.
- முழுமை இன்பம், துன்பத்தைக் கண்டவனுக்கே தெரியும்.
- விருப்பப்படு, அதை அடைவதற்கு முயற்சி எடு.
- தர்மம் செய்யக் கடன் கேட்கக் கூடாது.
- உழைத்துக் கொடுப்பதே தர்மம்.
- அற்புத அமுதமேயாயினும் மொத்தமாய் சாப்பிடவேண்டாம்.
- உனது விருப்பை பிறரிடம் திணிதல் அருவருப்பு.
- கனவில் கண்ட காசு காரியத்திற்காகுமா?
- கனவு வாழ்வே கனவாகிப் போகும், நிலையானதை நோக்கி வாழ்வாய்.
- கீழ்ப்படிந்தவனுக்கே தலைமைப்பதவி பொருத்தம்.
- பணிதல் என்பதே பெரிய வீரம்.
- தன் முனைப்புடன் வாழ்தல் வீழ்தலாகும்.
- அறிவும், மனமும் இசைந்தால் நல்வாழ்வு.
- அறிவும், ஆன்மாவும் இறையுடன் கலந்தால் ஞானம்.
- மனத்துடன் ஆன்மா ஒத்திசைய வேண்டும்.
- எதிர்மறை உணர்வுகள் ஆன்ம விரோதம்.
- கொடுத்தவனுக்கே பெறுகின்ற உரிமை.
- பெற்ற உதவியை நிறுத்து நோக்காதே!
- நூற்றுக்குநூறு, தெரிந்தவர் இலர்.
- அளவான ஓய்வு, மிகையான பயன் அளிக்கும்.
- கலைகள் கற்றால், உனக்கே முதலிடம்.



RangaRakes

Tamilnavarasam.com

* அழிவு என்பது, தீயதைத் தொடுவது.
* அநீதியை அழிக்க, நாட்களை எண்ணேல்.
* இடர்கள் எதனையும், உடைத்திட இயலும்.
* "கொள்கை" என்பது, நல்லன புரிதல்.
* அள்ளக் குறையாதது, அன்பும், கல்வியும்.
* குணத்தை இழந்தோர், பிறர் சினத்தை ஏற்பர்.
* நரித்தனமான நயவஞ்சனை, குரூரமாக அவரையே தாக்கும்.
* பல்லியை, பாம்பை வருத்தித் திருப்திப்படுவதா?
* கருமம் இன்றி, உட்பிரவேசிப்பதா?
* தெரிந்ததாய் காட்டினால், சுயஉருவம் கருகும்.
* உள்ளதைப் பேசினால், நம்பிக்கை மேலோங்கும்.
* நல்லதைச் செய்ய, நாள் பார்க்காதே!
* தொல்லைகள் கொடுப்பதை, இல்லையென்று ஆக்கு!
* எல்லா உயிர்க்கும், வல்லமையுண்டு.
* எதையும் ஏற்கும், இதயத்தை உருவாக்கு!
* கதையில் கேட்டதை, நிஜத்தில் எதிர்பார்க்காதே!
* புதுமை, பழமை எல்லாமே இயற்கை.
* மாறுதல் என்பதே சாஸ்வதமானது.
* நிரந்தர இருப்பிடம், இறைவன் திருநிழல்.
* சுதந்திர ஜீவனம், பேரின்பம் எதுவெனச் சொல்லும்.
* கல்லுக்குள்ளே, கலைகளைப் படைக்கலாம்.
* "புல்" என, இகழவேண்டாம், நெல் புல் இனம்தான்.
* உதவாத பேச்சை, உதறித்தள்ளு!





* செய்வதன் முன் சிந்திக்க வேண்டும்.
* சிந்தித்த பின்னர், சொல்லுதல் நன்றே!
* கருணையாய் பார்த்தால், கல்லும் கரையும்.
* எதற்கும் தயாரானவனை பயப்படுத்த இயலாது.
* தோற்கத் தயாரானவர்க்கு, வெற்றி நிச்சயம்.
* "ஆற்றாமை" காரணமாக பிறரைப் பழி வேண்டேல்!
* கோழையை, அடித்தே வந்தால், வீரனாகிப் போவான்.
* சாதனையாளன், ஓய்வு எடுப்பதில்லை.
* மாடு மேய்ப்பது எளிதுமல்ல, இழிவுமல்ல.
* "திருப்தி" கண்டோர்க்கு, மரணபயம் ஏது?
* பேனா முனை, நாட்டின் விதியை வரையும்.
* பேனா அழுதால் துன்பம், சிரித்தால் அவனி வாழும்.
* பேனாவின் கூர்கள், நெஞ்சைப் பிளக்கும்.
* பேனை பிடிப்பவர், நேர்மையுடன் வாழவேண்டும்.
* கருமங்களை ஆற்றாவிட்டால், சிரமம்.
* விரும்பிய பொருளை இழந்தால் துன்பம்.
* இழக்கத் தயாரானால், அழுகை ஏது?
* துளையாத இடத்திலும், வதந்தி உலாவரும்.
* வதந்திகள் வாழ்வை முடிக்கலாம்.
* வதந்திச் சிலந்தியிடம் வதைபடாமல் தப்ப வேண்டும்.
* வதந்தி, பொய், அதனால் பல முகங்கள்.
* கலியுகத்தில் காண்பதில், பல பொய்முகங்கள்.
* பொய் முகம் போட்டால் அதுவே நிரந்தரம்.
* "சுதந்திரம்" பேசியே தந்திரமாய் வாழலாமா?



RangaRakes
Tamilnavarasam.com

* எதனையும் செய்வது சுதந்திரமல்ல.
* தேசத் துரோகிகள் பாசமுடன் "சுதந்திரம்" பேசலாமா?
* மண்ணை மறந்தவர் பெற்ற அன்னையைத் துறந்தவர்.
* எல்லாமே மண்ணுக்குள் என்னத்தைத் தேடுகிறாய்?
* எல்லாமே எனக்கு என்றால் மண் என்ன நினைக்கும்?
* மண்ணுக்குரியதை மனிதன் எடுக்கின்றான்.
* தாய் மண்தான் சுதந்திர பூமி.
* வரண்ட மண்ணை வெறுக்காது வளமாக்கு, போற்று!
* மண்ணுக்கு உதவுதல் மரங்களைக் வளர்த்தல்.
* பிள்ளை பெறுதல்விட விருட்சங்களைப் பெறுதல் பேறு.
* இளமைப் பருவத்தில் எல்லாமே அழகு!
* குழந்தை மனத்தோடு வாழ், கோடி சுகம்!
* குழந்தைபோல் மனதை வைத்திரு, குழந்தைத்தனமாய் நடந்து கொள்ளாதே!
* பிறரை ஏமாற்றுதல் தன்னைத் தூற்றுதலாம்.
* நோகடிப்பவன் நொடிந்து போவான்.
* கிடைத்த வாழ்வில் திருப்தி கண்டால் அடுத்த உயர்வு தானாய்க்கிட்டும்.
* எளிமையான வாழ்வு பல கோடியிலும் பெறுமானம்.
* உள்ளம் செல்லும் வழியில் உலா வராதே!
* நல்லது செய்மின்! நட்டம் வராது!
* கள்வர் என்றும் பிச்சைக்காரனிலும் இழிந்தோன்.
* இரப்பதும் பிறர் பொருள் கவர்வதும் அவர் ஆன்மாவை வருத்தும்.





* பொறுப்புக்களை வெறுப்புடன் நோக்காதே!
* பொறுப்புக்கள் வலிமையைக் கூட்டும்.
* பொறுப்புக்களை நிறைவேற்றியவன் தன்னை நிலை நிறுத்துகின்றான்.
* பொறுப்புகளை அறுத்தவன் வாழ்க்கையை நிறுத்தியவன்.
* கறுப்பு மனதுடையோர் தனது பொறுப்பை பிறர் தலையிலேற்றுவர்.
* கொடுத்தல் இன்பம், பறித்தல் தன்குடி கெடுத்தல்.
* பொய்யான நடிப்பு மெய்யாக வருத்தும்.
* நடிப்பு வாழ்வு நீடிக்காது.
* நடிப்பான குணத்தை நீடிக்கக் கூடாது.
* கெட்டவர் நல்லோரிடம் நடிப்பதில் சிரத்தை காட்டுவர்.
* நெருப்பும் அழகே அணைக்க முடியுமா?
* தங்கக் கத்தி என்றால் தேகத்தைக் கீறலாமா?
* பசிக்குத் தங்கம் உணவாகாது.
* தங்கத்தைச் சேர்த்தால் உள்ளம் வெள்ளையாகுமா?
* காரியத்திற்காக கனம் பண்ணாதே!
* காரியம் பெற வளைந்து நெளிபவன் காரியம் முடிந்தால் காலை வாருவான்.
* சரீரம் உள்ளவரை தைரியம் தேவை.
* சரீரம் பொருந்தாத வேலை எதற்கு?
* கருத்தே இல்லா கவிதை எதற்கு?
* மனப்பொருத்தம் இல்லா தாம்பத்தியம், தொந்தரவு.



RangaRakes

Tamilnavarasam.com

* உயிரிலும் மேலாம் வைராக்கியம்.
* சரித்திரம் படைக்கும் ஆற்றலை வளர்த்திடு!
* கரித்துக் கொட்டிப் பேசுதல் கெடுதல்.
* உணவு பரிமாறித் திட்டுதல் கெட்டசெயல்.
* ஊதாரித்தனம் உனக்கே கெடுதல்.
* கதையை வளர்த்துக் காரியம் ஆற்றேல்.
* நோய் கண்டு அஞ்சினால் அதுவே கொல்லும்.
* காயத்தை வளர்ப்பதே காரியமாகாது.
* சாயம் தீட்டினால் தேகம் வெளுக்காது.
* நியாயம் கேட்பவர், அநியாய ஆதாயம் கேட்கலாமா?
* கோபம் நியாயத்தை மறைக்கும்.
* அதர்மத்தைக் கண்டும் அடங்கிப் போகாதே!
* உபாயமின்றி உள் நுளையாதே!
* சபலப்பட்டு வாக்குக் கொடுக்காதே!
* கவலைப்பட்டுக் காரியத்தைக் கெடுக்காதே!
* உரிமையின்றி தலையைக் காட்டாதே.
* எடுத்தெறிந்து பேசுதல் தலைக்கனத்தைக் காட்டும்.
* கடுகடுப்பானவரை கடவுளும் நோக்கார்.
* தொடர்ந்துவரும் இன்பத்தினை அமுத்தமாய் நம்பாதே.
* ஒரு பருக்கை உணவையேனும் குருவிக்கும் கொடு.
* நீதிக்குப் புறம்பானால் தீரமுடன் எதிர்கொள்க!
* சுற்றி நடக்கும் சலசலப்புக்கு முக்கி மூழ்குதல் கூடாது.
* விரும்பாத விஷயத்தில் ஒதுங்கு!
* தீராத பிரச்சினைக்கும் காலம் பதிலிறுக்கும்.





* எந்த வயதிலும் சந்தோஷமாய் வாழலாம்.
* வெறுப்புணர்வு இன்பத்திற்கு வேட்டு.
* வாழ்வைச் சுவைக்க துன்ப அனுபவம் அவசியம்.
* அடிமையாய் வாழ என்ன தகுதி வேண்டும்?
* கஞ்சியை அருந்தினாலும் காந்தர்வனாய் வாழு!
* பொய்யாய் நடித்தால் களிப்பு வராது.
* சலனம், சபலங்களைச் சிரசில் ஏற்றால் கவலை.
* மதிக்காதவரைத் துதிபாடி நடிப்பது கோழைத்தனம்.
* பெரும் சபையில் முன் ஆசனம் தேடாதீர்.
* விவேகத்தைக் கைவிட்டு வேகத்துடன் இயங்க முடியாது.
* தேகநிலை மன இயல்பைப் பாதிக்கும்.
* ஆதாரத் தொழிலை அந்தரத்தில் கைவிடுதல் கூடாது.
* பிடிக்காத உரையாடல் மனத்தைக் குடையும், வேண்டாம்!
* உயிரை விடக் கழிக்கும் காலம் பெறுமதி.
* உனக்கு நீ எஜமானன்,
  அடுத்தவன் அடக்க உரிமை கொடுக்காதீர்.
* படைத்தவனை விட நடிப்பவனை நம்புபவன், முட்டாள்,
* கொடையாளிடம் பெற்றதைக் கேளிக்கைக்கு ஆக்காதே!
* நன்மை செய்யாதவன் நடைப்பிணம்.
* எமக்குப் பிடித்தவைதான் நல்லன அல்ல.
* பிடிக்காத எதுவும் கெட்டவையல்ல.
* பாம்பு சீறாது போனால் சும்மா போனவன் துரத்தியடிப்பான்.
* வீம்புக்கான வீண்சண்டை தண்டனையாகும்.
* கண்டனம் செய்தவன் மண்டியிடுவதா?



RangaRakes
Tamilnavarasam.com

* தொண்டுகள் செய்தோனை இறைவன் அண்டுவான்.
* அதிர்ந்து மிரட்டினாலும் உண்மை சரிந்திடாது.
* உண்மைக்கு ஒரே முகம் தெளிவே அதன் வடிவம்.
* ஒருநாள் வாழ்வையும் உவப்புடன் களிப்போம்.
* சுயமாய் வளர்ந்தவன் சுயபுராணம் பேசமாட்டான்.
* தன்னை வளர்க்காதவன் குலப்பெருமை பேசுவான்.
* பழம் பெருமையினால் உன் குலம் தளைக்குமா?
* எல்லோரும் உயர்ந்தோரே,
  உன்னை மட்டும் உயர்த்த வேண்டாம்.
* தள்ளாத வயதிலும் தாழ்வாய் எண்ணல் தகாது.
* புல்லும் வாழ்ந்தே தீரும்.
* கல்லின் கீழும் தண்ணீர் ஓடும்,
  பொல்லாதவனிடமும் பாசம் பற்றும்.
* தொல்லை கொடுப்பவர் தோற்றுப் போவர்.
* இல்லை என்று சொல்லாதவன் செல்வந்தன்.
* இருந்தும் ஈகை செய்யாதவன், ஏழை.
* நல்ல சந்தர்ப்பங்களை அள்ளு முன், கண் அயரேல்!
* தேவைகள் ஆசைகளாகி மனிதனை இயக்கும்.
* ஆசையின்றி வாழ்தல் அரிது.
* வெறுப்பின் மத்தியில் வாழ்வது எப்படி?
* ஆசையைத் துறத்தல் வெறுப்பினால் அல்ல,
  உள் உணர்த்தலால்.
* வெறுப்பு உணர்வு ஞானம் நல்காது.
* நிறைந்த களிப்பினால் ஞானம் மல்கும்.





* எல்லோருக்கும் வல்லமை உண்டு.
* இன்று நான் என்ன செய்தேன், முடித்தேன்,
  உன்னையே கேள்.
* கனவும் கூட வாழ்வின் திசை திருப்பும்.
* உள்ளதை வைத்து வாழ்ந்தால் என்ன வெட்கம்?
* களவு செய்து வாழ்வதை விட
  கஞ்சி குடித்து நிம்மதியாய் வாழு.
* பொழுதைப் போக்காதே நல்லதாய் ஆக்கு!
* காதலும், காமமும் இணைந்து இயங்கும்.
* தெரியாமை தவறு அன்று, அறியாமை,
  அறிய முற்படாமை தவறு.
* கருணை கடவுள் தரும் அமிர்தம்.
* சமய ஒற்றுமை சமாதானம் நல்கும்.
* கடும் சொற்கள், கொடும் கூற்றுவன்.
* வன் சொற்களை நீ பேசினால் உன்மனம் ரணமாகும்.
* கண்ணீரை மட்டும் சொரிந்தால் காரியமாகுமா?
* ஏழ்மை உணர்வே ஏழையாக்கும்.
* தாய்மையின் தூய அன்பை அளவிட எண்ணேல்.
* தனிமையை நன்கு பயன்படுத்து.
* இயலாது எனும்போதே விரக்தி துரத்த ஆரம்பிக்கும்.
* கனிவாகப் பேசிக் கவிழ்க்க எண்ணுபவர் கவிழ்ந்தே போவர்.
* அதிக இனிப்பும் போதை.
* கனவில் பொய் பேசினாலும் வருந்து.
* தேறுதலை அளிப்பவன் தனக்கும் இன்பம் அளிப்பவன்.



RangaRakes
Tamilnavarasam.com

* ஊரைக் கூறுபோட்டால் உன் வீட்டில் உலை பொங்குமா?
* இன்பமே என்றும் என்று எண்ணுதலே இன்பம்.
* சகலதும் தெரிந்ததாய் காட்டுதல் பேதமை
* மரத்திற்கும் உணர்வு உண்டு, அதை வருத்த வேண்டாம்.
* எல்லாமே இறையோனுக்கே அர்ப்பணம்.
* சொர்ப்பனத்திலும் சோர்வு காட்டாதே!
* நலிவாய் வாழ்ந்து நசிவது அழகா?
* பொலிவாய் தோற்றம் காட்டினால் போதுமா?
* சிந்தனை மாந்தர்க்கு அழகு.
* சொந்தம் என்பதால் "சொந்தம்" அல்ல.
* அறிமுகம் இல்லா நல்லோர் பெறுமதி வாய்ந்த பயன்களை நல்குவர்.
* சருகும், பசளையாகும்.
* சருகாய் உலராது பசுமையாய் உயிர்த்திரு!
* குருவிக்கும் கூடு உண்டு, மனிதர் எல்லோர்க்கும் வீடு உண்டா?
* அருவியெனக் கொட்டி சிலிர்த்து எழில் காட்டு.
* அனைத்து இயற்கையை அரவணைப்பாய் தோழா?
* புனலும், அனலும், பூமியும் நமதே!
* தனமும், வளமும், காட்சியும் நமதே!
* குணமும், கொள்கையும் பேணுதல் சிறப்பே!
* பழம் கதை பேசுதலைப் பழக்கமாக்காதே!
* நிலத்தைச் சும்மா வைத்திருந்தால் நிலம் வளம் இழக்கும்.





* பணத்திற்கு அடிமைப்பட்டவன், மன அமைதியைக் கெடுத்துக் கொண்டவன்.
* உள்ளத்தோடு உரை செய்யும் போது தனிமை வேண்டும்.
* நீரிலும் சிறந்த அமிர்தபானம் இனிமேலும் கிட்டாது.
* காழ்ப்பை நீக்கின் சகலதும் கிட்டும்.
* மோட்சம் தேட கடவுளுக்கு லஞ்சம் கொடுக்க முடியாது.
* தாட்சண்யம் பாராது துரோகிகளை ஒதுக்கு!
* போரை விலக்கினால் நாடு சிறக்கும்.
* சோர்வை அகற்றினால் வாழ்க்கை சிறக்கும்.
* படித்தும் பயன்பெறா கல்வி எதற்கு?
* கொடுத்தலே மனதுக்கு நிறைவு.
* மனத்தைக் கெடுத்தலால் அவருக்கே அழிவு.
* சோடனைப் பேச்சு நல் வாழ்க்கையாகுமா?
* சின்னச் செயலையும் விருப்புடன் செய்வாய்.
* பாரிய, வேலைக்கும், பயப்படல் வேண்டாம்.
* படிப்படியான வேலை அளப்பரிய ஆற்றல்.
* பொடிப் பொடியாக மண் எடுத்தாலும் நிலம் பெரும் குழியாகும்.
* அடிமேல் அடி எடுத்தும் உலகை அளக்கலாம்.
* நடைபெற்ற நிகழ்விற்கு வேதனை எதற்கு?
* கடைசியில் இருந்தவரும் முதலிடம் எடுக்கலாம்.
* தொடை நடுங்கிகள் தலைமைக்கு ஆசைப்படக்கூடாது.
* அடிவருடிகள் எடுக்கும் பதவி எவர்க்கும் கேடு.
* சுவையான உணவையும் அளவோடு அருந்துக!



RangaRakes

Tamilnavarasam.com

* கசப்பான உணவிலும் நல்ல மருத்துவம் உண்டு.
* பொறுப்பில் விலகுதல் வீரயம் அல்ல.
* பொறுப்பை ஏற்றல் தியாகம்.
* தியாகம் செய்தலே யோகம்.
* தனக்காய் வாழ்பவர் தனிமைப்படுவர்.
* குரோதம் கொண்டோர் தமக்கே விரோதி.
* சரீரம் சோர்வடையினும் இரத்தல் இழிவு.
* தயை புரிதல் தர்மம்.
* சோம்பேறிக்கு தினசரி இருட்டு.
* சந்தோஷம் பெற பொய்பேசிச் சிரிக்காதே!
* காரியம் முடிந்தபின் அனுபவங்களை மறவாதே.
* சிறு துரும்பு உதவி பெற்றாலும் பெரும் உதவி உடன்செய்.
* அறியாதவனின் அலட்டல் அசிங்கம்.
* அதிகம் தெரிந்தால் பேச்சுக் குறையும்.
* அறிந்தவன் சொன்னால் கேட்க வேண்டும்.
* சரிந்தவன் எழுந்தால் அவன் விஸ்வரூபி.
* படுத்துக் கிடந்தால் எதை எடுப்பாய்?
* துடுப்பைத் தொலைத்து படகு ஓட்டலாமா?
* விடுப்புப் பேசினால் வீட்டில் சமையல் நடக்குமா?
* கடுகடுப்பான மனைவி, வெறுப்பூட்டும் கணவன், வீடு வேதனை.
* ஒத்திவைத்தல் செய்தொழிலை நிறுத்திவைத்தல்.
* ஒத்தி வைத்தல் மறுக்கப்பட்ட கருமம்.





* கருமங்களைப் பின்போடலால் சோம்பல் முதிர்வடையும்.
* இலகுவான செயல்களை ஒத்தி வைக்க வேண்டாம்.
* நற்கருமத்தை ஒத்திவைத்தல், அதைத் தடுத்து வைத்த பழியைச் சேர்க்கும்.
* அவசர முடிவு எடுத்தலை ஒத்திவைத்தல் தடுக்கும்.
* காதலர் பாதையில் இடைநிறுத்தம் ஏது?
* தேடிய பொருளைக் காப்பாற்றத் தெரிய வேண்டும்.
* சந்தோஷமான அனுபவங்களே சௌக்கியமானதல்ல.
* ஏழ்மை நிலை இழிவானதல்ல.
* செல்வந்தர்கள் எல்லாமே பெற்றவர்கள் அல்லர்.
* முன்னேறும் சந்தர்ப்பங்களில் முடங்காது விழித்து இயங்கு!
* "தத்துவம்" பேசினால் சாப்பாடு கிடைக்குமா?
* உணராதவன் தத்துவத்தில் விற்பன்னர் ஆகமுடியாது.
* உணர்ந்த ஒருவன் பேசுதலைக் கைவிடுவான்.
* வாழத் தெரியாதவர்களும் தத்துவம் பேசுகிறார்கள்.
* கோழைகள் கூட வீரனாக வழி சொல்கிறான்.
* பழைய பொருட்களால் வீட்டை நிரப்பாதே!
* முதியோருக்கே வீட்டிலும், நாட்டிலும் முதலிடம் கொடு!
* முதியோர் பேச்சுகள் அனுபவக் காட்சிகள்.
* முதுமையைப் பழித்தவர் பின்பு பழிக்கப்படுவார்.
* முதுமையின் பலம் அனுபவத்தினால் மிளிரும்.
* முதுமையுடன் வாழ்வது பலருக்கும் கிடைக்காத சந்தர்ப்பம்.
* முதியவர் இன்றிப் புதுமை உலகு உதிக்காது.
* இப்போது கற்றவை எப்போதும் தொடரும்.



RangaRakes

Tamilnavarasam.com

* விதியை நம்பி மோசம் போகாதே!
* விதியை வெல்வது மனித முயற்சி.
* விதியும், மதியும் இரட்டைக் குழந்தைகள்.
* விதியை வெல்லவே மதி உருவானது.
* விதி துரத்துகிறது, மதியைக் காட்டு, அது பின் வாங்கும்.
* நல் நடத்தை மனிதனுக்கான உடமை.
* விரும்பியபடியே இருந்தால் பெறுவது எப்போது?
* மரணம் சின்ன விஷயம், வாழ்வதே பெரிய விஷயம், நன்றாய் வாழ்.
* என்றோவரும் இறப்பிற்காய் இன்றைய வாழ்வை இழப்பதா?
* பயம் மரணத்தை விடக் கொடியது.
* சிந்தனையைத் தூய்தாக்கு, செயல் சிறக்கும்.
* பயப்படும் விஷயங்கள் உங்களைக் கண்டு பயப்படட்டும்.
* பயப்பட்டால் செயல் சுருங்கும்.
* நல்ல மாற்றங்களை, ஏற்கப்பழகு! அதை உருவாக்கு!
* வருந்தி உழைத்த செல்வம் நிலைக்கும்.
* சும்மா எடுத்த பொருள் சொல்லாமல் போகும்.
* மதியாதவர் வீட்டில் செல்வம் தங்காது.
* பிறர்க்கு நீ கொடுக்கும் கௌரவம், மனிதனாக இருப்பதற்கான சாட்சியம்.
* கௌரவத்தைக் கேட்டுப் பெறுதல், தகுதியற்றவனின் யாசகம்.
* கௌரவம் கிடைக்கலாம், பெற்றதை பேணுதல் சிறப்பு.





* கற்றதைக் கொண்டு வீரியம் பேசற்க.
* பொறுமையாய் இருப்பவன் பலவீனன் அல்லன்.
* சுதந்திரம் எமக்கு மட்டுமல்ல எல்லோருக்குமானது.
* அடுத்த நாட்டு அவலங்களுக்கு மகிழ்வெய்தல் தகாது.
* சுரண்டும் நாடுகளும் "சுதந்திரம்" பேசும்.
* ஆயுதம் விற்றுப் பிழைப்பது தேசத்தை விற்கும் பரத்தைத் தொழில்.
* அதிகார வர்க்கம் கௌரவம் பார்ப்பதில்லை.
* அதிகார வல்லரசுக்கு அழித்தல் இலகுவானது, ரசனைக்குரியது.
* அழிக்கும் கொடுங்கோல் அரசும் "ஞானம்" பேசும்.
* பழிக்கு அஞ்சுபவன் அரசியலுக்குள் உட்பிரவேசிப்பானா?
* அரசியலுக்குள் அஞ்ஞானிகள் அதிகம்.
* உழைத்தல் மக்கள் லட்சணம், பதவி பிடித்தல் இழிந்தோர் இலட்சியம்.
* வளைந்து நெளிந்து பொய் புனைந்து ஆடும் அரங்கம், அரசியல்.
* சேமித்தல் சிரமமாயினும் கடைசிக் காலத்தில் வருமானம்.
* மௌனம் கூட உண்மையை உணர்த்தும்.
* இல்லாதவனை ஒன்றும் செய்ய முடியாது.
* "இருக்கிறவன்" பிரச்சினைகள் ஓயப்போவதுமில்லை.
* எழுந்தவனைத் துன்பம் துரத்துவதுமில்லை.
* பரதேசிகள் கூடப் பாக்கியவான்களே.



RangaRakes

Tamilnavarasam.com

* பிச்சைக்காரனும் கடன் கொடுப்பான், உலோபிகள் ஈவதில்லை.
* பிச்சைக்காரர்களின் மொத்தப் பிரதிநிதி ஏழ்மை அரசுகள்.
* தெருவில் இருப்பவனுக்கு நுளம்பே உறவு.
* தனிமையில் திரிபவனை கெட்டவன் நண்பனாக்குவான்.
* கற்பனையில் கூடக் கெட்டதை நினைப்பவன் கெட்டழிவான்.
* சத்தியத்திற்குச் சோதனை அதிகம், வெற்றியும் மிகுதி.
* அத்தனை உயிரும் வளரவே நினைக்கும்.
* அரசியல்வாதி திருந்தி வாழ லஞ்சம் கேட்பான்.
* கொஞ்சநாள் திருந்தி வாழ்ந்தால் மிகுதிநாட்கள் நல்லோனாய் மாற்றும்.
* கழுகுப் பார்வையை விடக் கள்வர் பார்வை, தீட்சண்யம்.
* அழுது பழகினால் ஆனந்தம் தெரியாது.
* அடிமைப்பட்டே வாழ்ந்தால், சுதந்திரத்தின் சொர்க்கம் புரியாது.
* நுளம்பை அடிக்க வாளைத் தூக்கலாமா?
* கனவில் அடித்தவனை நனவில் கண்டு தாக்கலாமா?
* குழந்தைகளுடன் போட்டியிட்டு தோற்பதும் சந்தோஷம்.
* அழுதலும் தொழுதலும் ஆண்டவர்க்கு மட்டும்.
* தொழுதலில் சில நொடியாயினும் சிறப்பாக்கு!
* யாகம் செய்தாலும் பாவத்தைக் கழுவ இயலாது.
* யோகம் உள்ளவன், பாதாளத்தில் விழுந்தும் செல்வம் அள்ளுவான்.





* சோகத்தைச் சொல்லியே யாசகம் கேட்பது பலவீனம்.
* வரவைச் செலவை எழுதி எண்ணிச் செலவு செய்க!
* அறியாத அறிவு அநேகம், அறிந்ததை உணர்வதே பெருமை.
* புகழ் இறுமாப்பைக் கொடுத்தால் துன்பம் ஆரம்பம்.
* புகழைப் பெறுபவர் சவால்களைச் சந்திக்கலாம்.
* பருவத்தே திருமணம் செய்.
* இறக்கும் தறுவாயில் பேசும் ஞானம், சூன்யமானது.
* நல்லோர் நட்பைக் கெட்டியாய் பற்றுக!
* விட்டுக் கொடுத்தால் நட்பு நிலைக்கும்.
* அடுத்தவன் அழுதால் சிரிக்காதே!
* கட்டளை இடுபவர் கனம் பண்ணத் தெரியவேண்டும்.
* உற்பத்தி பெருகினால்தான் எலிகளுக்கும் நன்மை.
* களை ஒன்றும் முளைக்காமல் நெல் முளைக்காது.
* விளை நிலத்தில் விதைக்காதவன், துரோகி!
* உழைத்து முன்னேறியவன் களைப்படைவதில்லை.
* நோயைக் காட்டி அனுதாபம் தேடற்க!
* பயப்படுபவனுக்கு, மண்புழு நாகபாம்பு.
* துயரப்படுபவர்க்குத் துயரங்கள் உதவாது.
* உடலும் மனமும் நிமிர்ந்து நிற்பதாக!
* பணிவு என்பது தலைகுனிவு அல்ல.
* துணிவு உள்ளவனின், பணிவு மேன்மையளிக்கும்.
* பணிவு கூட வீரம் தான், ஆணவம் இல்லை என்பதால்.
* பயத்தினால் உருவாகும் பணிவு மனிதரைத் தாழ்த்தும்.



RangaRakes Tamilnavarasam.com

* ஜெயம் கொண்டோர் மனித இதயத்தில் இணைய வேண்டும்.
* அடக்கி ஒடுக்கி அன்பு காட்ட முடியாது.
* பண்புள்ளவர்க்கு அன்பு தானாய் சுரக்கும்.
* வேண்டப்பட்டவர்க்கு மட்டும் ஈந்திடும் அன்பு சுயநலம்.
* அனைவர்க்கும் கருணை கூர்தல் இறை குணம்.
* தண்ணீர் கொடுக்காதவன் தான தர்மம் செய்வானா?
* அன்புக்கு உரிமை அதிகம்.
* நூல்களைப் படிக்காமல் நூல் விமர்சனம் செய்யலாமா?
* கயவர்கள் பிறர் துன்பம் அறியார்.
* பகைவன் நட்பு நோக்கி வரும் போது யோசித்து முடிவெடு!
* அடுத்துக் கெடுப்பது பகைவர் குறிக்கோள்.
* கோபப்படலாம் எவரையும் வெறுக்காதே!
* அறிவுள்ளவனுக்கு நூறு கண்கள், அனுபவசாலிக்கு ஆயிரம் கண்கள்.
* அனுசரித்துப் போதல், அடங்கிப் போதல் அல்ல.
* உரிமை கொண்ட உறவுகளை உதாசீனம் செய்ய வேண்டாம்.
* நல்லதைச் செய்யாது விடுதலே கேடு.
* எல்லா உண்மையையும் சொல்ல முடியாது.
* உண்மை பேசியதால் நல்லோர் பங்கமடையக்கூடாது.
* பிறர் பசிக்குதவாத பெருஞ்செல்வம் இருந்தென்ன சொல்?
* நண்பனால் வரும் துன்பத்தை ஏற்றுக்கொள்!





* வெந்நீரும் தீயை அணைக்கும், தண்ணீரும் மூச்சை நிறுத்தும்.
* தேவையற்ற கண்ணீருக்குப் பெறுமதியில்லை.
* நியாயமான ஆசைக்கு ஏங்காதே, அடைந்தே விடு!
* பசுவைக் கூட மிரட்டாதே சுருண்டு விழுவாய்.
* ஆசை உறங்குவதுபோல் காட்டும். பின்பு எழுந்து வருத்தும்.
* கொடுக்கும் போது உனக்கும், வைத்துக்கொள்.
* நல்லவன் குறைகள் பெரிதாகத் தோன்றும்.
* பொல்லாதவன் நல்லது செய்தாலும் நம்புவாரில்லை.
* கள்ளிச் செடியும் மருந்துக்குதவும்.
* இனிப்பான மருந்தும் தேகத்தைக் கெடுக்கலாம்.
* பல் இல்லாதவனுக்கு முறுக்கைக் கொடுக்காதே!
* படித்தவன் உண்மையை இடித்துரை செய்யாதுவிடின் படித்தவை வீண்.
* மறதி பகையை மறக்கும்.
* கல்விக்கு மறதி எதிரி.
* நல்லதை நினை, அல்லாதவை மற.
* நன்றி மறத்தல், அறத்தை வெறுக்கும் செயல்.
* துன்பங்களைத் தூக்கித் திரியக் கூடாது.
* சோகத்தை உள் அழுத்தி வைக்காது அழுது தீர்த்து எழுந்து வெல்க!
* சோகத்தைப் பாரமாக்காதே! எரித்து நீறாக்கு!
* சோகத்திற்குப் புதுவர்ணம் தீட்டாதே!
* எல்லா ஜீவனும் உலகின் சொத்து.



RangaRakes

Tamilnavarasam.com

- உபகாரம் செய்பவர்க்கு ஊரெல்லாம் நட்பு.
- உபகாரம் செய்பவர் தம் வறுமை உணரமாட்டார்.
- கடிந்து கொள்ளும் பெரியோரையும் விட்டு விலகாதே!
- பெரியவர்கள் கோபத்தை, எள்ளி நகையாட வேண்டாம்.
- கொஞ்ச வயதில்தான் நிறையப் படிக்க முடியும்.
- கல்வி கற்கும்போது கூச்சம் வேண்டாம்.
- ஐயம் தெளிந்தாலே அறிவு வளரும்.
- தெளிவற்ற அறிவு மனக்குழப்பத்திற்கு வழிகாட்டும்.
- விளங்காததை விளங்கினால் பேரின்பம்.
- கருதிய பணியை உடன் செய்ய விழைக!
- இயற்கை இலவசமாகக் கொடுக்கும்.
- குடிக்கும் நீருக்கும் காசைப் பிடுங்குவான் மனிதன்.
- உயர்ந்த மாந்தரை எளிதினில் புரிந்திடலாம்.
- நயவஞ்சகர் நடிப்பைப் புரிதல் கடினம்.
- நட்பைத் தேடின் விரக்தி இல்லை.
- நடந்த தவறுக்கு சமாதானம் பூசாதே!
- அறிவு மட்டுமல்ல செய்த தவறுகள் கூட அனுபவம் நல்கும்.
- கோழைகள்தான் வீரமாகப்பேசி, நடிக்கிறார்கள்.
- ஏழைகளுடன் தோழமை கொள்பவன் பரோபகாரி.
- நடிக்கத் தெரிந்தால், நல்ல கணவன் என்ற பெயர் எடுக்கலாம்.
- காதலும், காமமும், பிறவித் துன்பம்.
- கருத்தைச் சொல்பவர் பிறர் கருத்தையும் கேட்க வேண்டும்.
- உள்ளம் விரும்பிடின் எல்லாமே அழகு.



RangaRakes



- முதுமைக் காலத்தில் முதிர்ச்சியும் அழகு.
- பண்பு இல்லா அழகியும் அசிங்கம்.
- "நான்" எல்லோருக்குமானவன் என எண்ணுக!
- உலோபியிடம் பணம் பெருக இதயம் சுருங்கும்.
- நல்ல கலைஞனை விலைக்கு வாங்கினால் கலை அழும்.
- படுக்க இடமில்லா ஏழை. நாடு அவனுக்கு அந்நியம்!
- வாழ்கின்ற வாழ்வும் நிஜம், வருகின்ற மரணமும் நிஜம்!
- மரணத்தினாலேயே பல நல்லவை நடக்கின்றன.
- தெரிந்து கொண்ட பின்னரும் மரணபயம் அநாவசியம்.
- மரணம் கருணையோடு எம்மை அணைக்கின்றது.
- மூச்சு நின்ற பின் வேந்தனாவது பரதேசியாவது.
- பல லட்சம் உயிர்களை அழித்தவன், தன் உயிர் காக்க அழுது அரற்றுவான்.
- மரணத்தை உணர்ந்தவன் நல்லவனாகி விடுவான்.
- பலசாலிகளின் பேச்சே நீதியாகி விடுகின்றதே!
- வலிமையற்றவன் சொல்லும் நீதியைக் கேட்க ஆளில்லை.
- நீதியை வளைக்க, ஆயுதங்கள் உதவுகின்றன.
- ஒருவர்க்குச் செய்யும் அநீதி உலகிற்குச் செய்யும் துரோகம்.
- பயமற்றவனே நீதி வழங்கத் தகுதியுடையவன்.
- நீதிக்குக் குறுக்குப் பாதை கிடையாது.
- காலம் தாழ்த்தி நீதி வழங்கேல்.
- பெண்கள் பேச்சை நம்புவதுபோல் நடி, தப்பில்லை.
- பலமும் இனிமையும் கொண்டவனை துணிவற்றவன் ஆக்குதல் துரோகம்.



Tamilnavarasam.com

* கண்ணிமைக்கும் பொழுதில் கரையும் உலகம், வே வீண் பெருமை?
* காசுக்காரன் தன் வீட்டு நாய்க்குப் பிறர் வாலாட்ட வேண்டுமென்பான்.
* பணக்காரனைக் கண்டால் படித்தவனும் பல் இளிக்கின்றானே?
* சுணைக் கெட்டவனுக்கு அகௌரவம், கௌரவம்.
* பெருங்கடலை அள்ளலாம் மனம் ஒப்பா பெண் இதயத்து இறங்க இயலாது.
* ஒருவரையும் அறியாமல் இருப்பதைத் தெரியாமல் வாழ்பவன், எதிரிகளற்ற மனிதன்.
* ரோசம் கெட்டவனுக்கு எல்லாமே எளிதுதான்.
* பாசம் உள்ளவன் பலதையும் யோசிப்பான்.
* காதல் விலை கொடுத்து வாங்கும் இன்பச் சுமை.
* பணத்தைத் திட்டிக்கொண்டே அதைப் போற்றுகிறார்கள்.
* கூலிக்கு வேலை செய்து கோட்டை கட்ட முடியாது.
* புழுதியில் புரண்டாலும் குழந்தை அழகுதான்.
* கரிசனையுடன் விசாரியுங்கள், பொல்லாதவனும் புல்லரித்துப் போவான்.
* ரசனையற்றவனுக்கு நிலவும், பூவனமும் வெற்றுக் காட்சிதான்.
* ரசனை உணர்வு இன்றி வாழ்வு ருசிக்காது.
* அழகை ரசிக்கத் தெரியாதவனுக்கு அழகிய மனைவி எதற்கு?





* குதிரை கனைப்பது குதிரைக்கே புரியும்.
* எலிக்குப் பயந்தவன் புலியோடு பொருதினானாம்.
* பெரும் பகையை எதிர்ப்பது சுலபம், குள்ளநரிகளைப் பகைத்தல் துன்பம்.
* கரும் குரங்கும் தன் இனத்திற்கு அழகு.
* சிங்கம், "சுண்டெலியைப்" பிடிக்க முடியாது.
* மனிதனுக்குள்ள பெருமையைவிட சின்னக் குருவி தரம் தாழ்ந்தது அல்ல.
* தன்னை வைத்துத் தரம் நோக்குபவனிடம், நியாயம் கேட்க முடியுமா?
* திருமணம் என்கின்ற சந்தோஷத்தில் இருந்து துன்பம் என்கின்ற உறவுகள் முகிழ்கின்றன.
* பெரும் துன்பங்களைக் கண்டவனுக்கு மனைவி ஒரு பிரச்சனையே அல்ல.
* உழைத்து வைத்தவன் பிள்ளைகளுக்கு அஞ்சான்.
* குடிக்கக் கூழ் இல்லாதவன் முன் கோட்டை விருந்து பற்றிச் சொல்லக்கூடாது.
* அழகைத் தேடி தம்மை மாற்றி அவலட்சணமாகிறார்கள்.
* பக்கத்துவீட்டுச் சண்டையால் வீட்டுச் சண்டையை மறந்தார்கள்.
* எதிர் வீட்டுச் சத்தம் மட்டும், பெரியதாய்க் கேட்கும்.
* அருவியின் நீரை யார் கொடுத்தது? வருகின்ற நீரை யார் தடுப்பது?
* ஏழ்மையிலும் தன்னை இழக்கலாகாது.



RangaRakes
Tamilnavarasam.com

* வருந்தி இழுக்கும் நட்புப் பொருந்த வருமா?
* சீதனம் வாங்கியவன் சீதனம் கொடுக்க வேண்டும்.
* பெண்ணையும் கொடுத்து, பொன்னையும் மண்ணையும் கொடுப்பது என்ன நீதி?
* திருமணச் சந்தையில் ஆண் ஆதிக்கம் அடாவடித்தனம்.
* திருமணத்தில் சீதனத்ததைக் கொடுத்தவள் அதிகாரியாகிறாள்.
* பயந்தாலும் மரணம் விட்டு விடுமா?
* மரணத்தை நினைத்து மரணிப்பதா?
* இயற்கை வழங்கும் நித்திய ஓய்வு மரணம்.
* மரணத்தினால் புவனம் புதுமனிதரைப் புது இளமையைச் சந்திக்கும்.
* வாழ வழியற்றுச் செத்த ஏழைக்கு மரணம் வாழ்வளிக் கின்றன.
* வாழத் தெரியாமல் சாக எண்ணுபவன் மரணத்தை இழிவு படுத்துகின்றான்.
* மரணங்கள் எல்லாமே மாந்தர்க்குத் துரோகமிழைப் பதில்லை.
* எம்மை அணைக்கும் கடைசிக் காதல் "மரணம்"
* மரணம்... எமக்காகப் பொறுமை காக்கின்றது.
* மரணமே நிஜம் என்பதால் துணிவு தானாக வரவேண்டும்.
* நாக்கினால் நோக்கமறிந்து பேசு.
* பேச்சை சுவையை நாக்கினால் கட்டுப்படுத்து.





* நயமாய் பேசும் நாவினை சுயமாய் பேசவிடாதே!
* சயனிக்கும் போதும் பயமின்றித் தூங்கு.
* குழப்பத்தை மனதில் கொண்டால் எல்லாமே தவறாய்த் தோன்றும்.
* தெளிவற்ற நிலையில் முடிவெடுக்க வேண்டாம்.
* படிக்காதவனிடமும் அனுபவ அறிவைப் பெறலாம்.
* "அனுபவங்கள்" நல் அறிவாகும்.
* புத்தகத்தைப் படித்தால் மட்டும் புத்திமான் என்பதா?
* உணராத கல்வியால் ஏது உபயோகம்?
* உதவி புரியாதவன் புதையல் காத்த பூதம்.
* கள்வர்களுக்கு களவு காலனாகும்.
* சொற்ப கால வாழ்விலும் சாதனை படைக்கலாம்.
* வாழ்வதற்கே காதல், சாவதற்கு அல்ல.
* காதலில் தோற்கலாம், வாழ்க்கையில் தோற்கலாமா?
* இளமைக் காதலில் தோற்றதை எண்ணி முதுமை நினைந்து சிரிக்கும்.
* சில காதல் தோல்விகள் அதிஷ்டத்தைத் தருகின்றன.
* தொண்டனாக இருக்கத் தயங்குபவன் தலைவனாக முடியாது.
* வார்த்தைகளில் வாலிபமும் இருக்கும், முதுமையும் தொனிக்கும்.
* ஒரு வார்த்தையையும் உலர்ந்து சொல்லாதே!
* ஒரு வார்த்தை போதும், பல மாற்றங்களைக் கொண்டு வர.
* நல்ல பல செயல்களை தீய ஒரு சொல் மறக்கடிக்கும்.



RangaRakes
Tamilnavarasam.com

* நல்ல சொற்கள் வஞ்சனை செய்வோரை மாற்றும்.
* துர்மதியாளர் உதிர்க்கும் வசனம் விஷம்.
* காலத்தைப் பொருளை இழந்தும் அனுபவம் கிடைக்கின்றது.
* அனுபவம், துன்பம் கொடுத்து வருமதியை நல்கும்.
* அழகான குடைதான் தொலைந்து போகிறது.
* பழஞ்சோறும் பழைய கறியும் உடலுக்குத் தென்பு.
* தினம் தினம் அழுகின்ற பெண்ணுடன் வாழ்வதெப்படி?
* புழுவிற்குத்தான் புரியும் அதன் வலியின் தாக்கம்.
* காற்றை கைக்குள் அடக்கலாம். வீண்பேச்சை அடக்குதல் சிரமம்.
* நோஞ்சானையும் சீண்டினால் ஆபத்து.
* காதல் பேச்சு என்றும் எடுபடுமா?
* நண்பன் என்பதால் சவாரி செய்யக்கூடாது.
* கதைப்பதால் மட்டும் கடமை நிறைவேறாது.
* கடிக்காத பாம்பை அடிப்பது எளிது.
* அழுது தீர்க்காத சோகம் நிலைத்து விடுகிறது.
* உறக்கத்திலும் விழிப்புடன் இருப்பவன் ஞானி.
* விழித்தபடியும் உறங்கியபடி இருப்பவன் சாமான்யன்.
* கவலைக்கு மருந்து அழுகையாகாது.
* வேலை செய்தால் கவலை விலகும்.
* துகூஷ்டர்களுடன் முரண்படவும் வேண்டாம். உடன்பாடும் வேண்டாம்.
* அழகிய பெண்ணிடம் விலகுவது நல்லது.





* கெட்டவன் நிழலும் மனிதனை அரிக்கும்.
* கோழைகள் சந்தோஷங்களை இழக்கிறார்கள்.
* அறிவு சந்தேகங்களை சந்திக்கின்றது.
* ஞானம் தெளிவோடு ஒளிர்கின்றது.
* கல்விக்கு இழுக்கு கற்றதை மறத்தல்.
* நல்ல மனைவி ஒப்பீட்டுக்கு அப்பாற்பட்டவள்.
* பொல்லாதவனுக்குப் பூமி எதிரி.
* தங்கத்தில் மோகம் திருடனுக்கு யோகம்.
* வாழ்த்துங்கள் நன்றே வாழ்வீர்கள்!
* நயம் பட நேரத்தை பயன்படுத்துக.
* ஒரு பொழுது அசைவிலும் ஓராயிரம் சாதனை செய்!
* காசுக்காரன் லேசுப்பட்டவன் அல்ல.
* ஆற்றல் உள்ளவனிடம் கூற்றுவனும் அஞ்சுவான்.
* எத்தர்கள் தர்க்கத்தில் வித்தகர்கள்.
* எத்தர்கள் உலகின் சத்துருக்கள்.
* சந்திச் சண்டியன் சக்கரவர்த்தி போல் பேசுவான்.
* எடைபோடும் போது தராசைக் கவனி !
* நைந்த உடலுக்குள்ளும் வர்மம் இருக்கும்.
* அடைத்து வைத்து அழகு பார்க்கவேண்டாம்.
* கொடுக்காதவனுக்கு எடுக்க அதிகாரம் இல்லை.
* எடை போடத் தெரியாமல் கடை போட முடியாது.
* வேலியில்லா வீடு ஆடையில்லா தேகம் போலிருக்கும்.
* கிண்டலுக்கும் கேலிக்கும் ஓர் எல்லையுண்டு.
* தொண்டு செய்பவர்க்குச் சிரமம் தோன்றாது.



RangaRakes

Tamilnavarasam.com

* கண்டதையும் உண்டு களித்தால் தேகம் ரோகம்.
* காசு இல்லாமல் கடைப்பக்கம் போகாதே.
* கனவுக் கோட்டைக்குள் வாழமுடியாது.
* சினத்தை அடக்காமல் சீவிக்க இயலாது.
* பணத்தைக் காட்டி மருட்ட எண்ணாதே !
* நற்குணங்களே அபார சக்தி !
* வெற்றுப் போத்தலிலும் காற்று குடியிருக்கும்.
* நேற்றைய கனவுகள் இன்றைய யதார்த்தங்கள்.
* காந்தியை ஹிட்லரைக் கடவுள்தான் படைத்தார்.
* காரணம் இன்றிப் உயிர்கள் உற்பத்தியாவதில்லை.
* பாசமேலீட்டாலும் தவறுகள் அனுமதிக்கப்படுகின்றன.
* நீதியாளன், பெற்ற மகனுக்கும் பக்கம் சாரமாட்டான்.
* ஏளனம் செய்பவர் எதனையும் செய்யாதவர்.
* விரும்பி செய்யும் பணிக்கே நிரம்பப் பயன்கள்.
* வைக்காத இடத்தில் தான் பொருட்களைத் தேடுகிறார்கள்.
* கொடுத்த கடன் கிடைத்தாலே லாபம்.
* கசப்பை விரும்புபவனுக்கு இனிப்புக் கசக்கும்.
* நடிப்புக்குச் சொன்ன பொய்கூட கடித்துக் குதறி விடும்.
* அதிகம் படித்தவர்களும் தடுமாறி தடம் மாறுகின்றார்கள்.
* உட்கார நிலமில்லை ஊர் நிலத்தை விலை பேசலாமா?
* பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களும் படிக்கின்றார்கள்.
* நேரம் தவறுபவனுக்கு கடிகாரம் எதிரி.
* அரை நிமிட வீண்தூக்கம் பலகோடி ஆக்க இழப்பு.
* ஆசைப்படு, அதற்கு முன் தேகத்திற்கு வேலைகொடு.





* கூசாமல் யாசகம் கேட்பவன் நன்றாக பேசுவான்.
* வேசியிடம் போவது யாசகத்தை விட மோசம்.
* வெட்கத்துடன் கடன் பெற்று திருப்பிக்கேட்டால் வாய்வீச்சு !
* ஊர் மேய்பவனுக்கு அரண்மனையும் சிறைதான்.
* நோயாளி சாகும்போது, வைத்தியன் அனுபவம் பெறுகின்றான்
* மதுப்போத்தலுக்குள் குடிகாரன் குடித்தனம்.
* மிருகங்கள் அழுவதில்லை சவால்களுக்கும் அஞ்சுவதுமில்லை.
* கருமேகங்கள் அழுவதை மனிதன் எதிர்பார்க்கிறான்.
* மனிதன் அழுவதை விதி பார்த்து சிரிக்கும்.
* உடலுக்குள் ஆன்மா வசிப்பதை மனிதன் மறக்கின்றான்.
* பாவம் செய்யமுன் உயிரை உற்று நோக்கு.
* கருமம் செய்ய பிறர் மீது பாரம் ஏற்றாதே.
* அழுவதற்காக வாழ்க்கையை இழக்கிறார்கள்.
* தொழுது அழுது இறைவனை வேண்டிட ஆலயத்தினுள்ளே இடித்து நுழைவதா?
* பாவங்களைச் செய்து சமாதானம் வழங்க முடியாது.
* பல்வலி வரும் போதுதான், பற்கள் இருப்பது தெரிகின்றது.
* வலிமையுள்ள ஆண்களும் அன்பான பெண்கள் முன் அடிமையாகின்றார்கள்.
* உணவுவிடுதிக்குப் போகு முன் பணத்தை எண்ணிப்பார்.
* நல்ல உடை உடுத்தினால் நாட்டாமை செய்யவேண்டுமா?



RangaRakes Tamilnavarasam.com

* எடையைக் குறைக்க நடையை கூட்டு.
* சுருக்கமாக பேசினால் செறிவு அதிகம்.
* வெறுப்புடன் நோக்கினால் நல்லவை புரியாது.
* பிறப்பும் இறப்பும் பெறுமதி மிக்கது.
* கடவுளிடம் நடிப்பவர் மூடர். பாவிகள்.
* இயற்கையுடன் போராட முடியாது. இணைந்து இயங்கு.
* எதிர்ப்பினை எரி ! பகைவரை மதி !
* சென்ற நாளை மட்டும் பேசேல்! இந்நாளில் வாழ்ந்து காட்டு.
* வருந்தி நொந்து நோயை வரவழைக்கிறார்கள்.
* அடங்கிப் போதல் அவமானப்படுத்துதலை ஏற்பதுபோலாகும்.
* புரிந்து வாழ்ந்தால் இல்லம் தேவர் உலகிலும் பெரிது.
* அறியாமையின் முன் அறிவு இயங்கத் தயங்குகிறது.
* மது அருந்தினால் மன்மத நினைப்பு.
* காலம் செய்யும் அற்புதங்கள் கோடான கோடி.
* பகைவனை உருவாக்காதவன் வீரன்.
* துரோகம் இராஜதந்திரமாகிவிட்டது.
* இறையோன் சந்நிதி என்றுமே நிம்மதி.
* இல்லறம், துறவறம் இரண்டுமே இறைவரம்.
* உறவுகளை உதறி நிறைவு பெற முடியுமா?
* இறைவன் எண்ணுவதை மனசாட்சி சொல்லும்.
* வெறுப்பை சிரிப்பால் மறைக்க முடியாது.
* மலையை அளந்தவனும் தாழ்வாரத்தில் தடுக்கி விழுவான்.





* அழுது நொந்து கிடப்பதை விட எழுவது சுலபம்.
* நிலையான வாழ்விற்கு உலகோடு உறவாடு.
* பழகிப் பார்த்தால் சிங்கமும் சிறு குழந்தையாகும்.
* இளகிய நெஞ்சம் இறைவனிடம் சாஸ்வதம்.

வீரகேசரி

"சங்கமம்"

தொடராக வெளிவந்தவை



RangaRakes

Tamilnavarasam.com